490
திராவிடநாடு
5—1—58 | வார வெளியீடு | விலை 16 காசு

OFFICE OF THE REGISTRAR ... 30 JAN 1958 MADRAS
490 1-58
... 600 008. 14356.

சட்டம் பறக்கும்!

[கலைச்செல்வன் அண்ணாமலைநகர்]

வான்முட்டும் மாளிகையின் கொம்பர் நின்று
வளமார்ந்த செந்தமிழை இசைக்க எண்ணி
நான்மட்டும் நனிபெரிதும் ஆவல் கொண்டேன்
நாவின்றி மொழி வெளியில் வருதலுண்டோ?
ஊன்கட்டுக் கொண்டவர்கள்; உணர்வே யில்லார்;
ஒருங்குள்ள பெருங்குழுவில் யாது செய்வேன்?
தேன்சொட்டும் மலர்ச்சோலை நாடித் தேடித்
தீச்சுடரில் வீழ்ந்திட்ட சுரும் பரானேன்!

"ஆனாலும் உளம்தளரேன்! தமிழை எந்தன்
ஆவியது போகும்வரை இசைப்பேன்" என்றேன்.
"வீணாகப் பிதற்றாதே எங்கள் இந்தி
விண்போற்றும் மொழி" என்றார் வீணர், நெஞ்சம்
தானாகக் கொதித்தெழுந்து தணிந்து, "என்ன
தறுதலையே வெறியடுக்கா" தென்றேன். "என்ன
தேனாகப் பருகிடுவாய் ஒருமைக்" கென்றால்
சிரம்வறண்ட நிலையன்றி என்ன' வென்றேன்.

"சிறுபிள்ளைத்தனம்" என்றார்; "தேவபாஷை
தெரியாதார் ஒன்றினையும் அறியார்" என்றார்.
கறியுண்ணும் நரிஆடு நனைதல் கண்டு
கதறிஉளம் பதறியதாம்! "கசடர் உங்கள்
'வரி'க்கணைகள் புகுந்துழக்கும் நெஞ்சம் இந்த
வஞ்சகத்தையும் உணர்ந்து எழுந்து விட்டால்
'சரி'ப்படுத்தல் எதனாலும் முடியாதுங்கள்
சட்டமெலாம் பட்டமெனப் பறக்கும்" என்றேன்.

நாஞ்சில் மாநாட்டு முக்கிய தீர்மானங்

—○○○—

மத்திய அரசாங்க ஊழியர்களின் பஞ்சப்படியாக ரூ. 5 கொடுக்க, அதற்கென நியமிக்கப்பட்ட குழு சிபாரிசு செய்திருப்பதை, மிகவும் குறைவானது என இம்மாநாடு கருதுவதுடன், விலைவாசி உயர்வுக்கேற்ப ஊழியர்களின் பஞ்சப்படியை உயர்த்தாது பிடிவாதம் காட்டிவரும் மத்திய அரசாங்கத்தை இம்மாநாடு கண்டிக்கிறது.

*

மத்திய அரசாங்க ஊழியர்களின் சம்பள விகிதத்திற்கொப்ப சென்னை மாநிலப் பதிவு பெறாத அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தையும் உயர்த்தவேண்டும் எனப் பலகாலமாகக் கோரிவந்தும், அக்கோரிக்கையை இதுவரை அலட்சியப்படுத்தி வரும் சென்னை அரசாங்கத்தையும், மத்திய அரசாங்கத்தையும் இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

—தலைவர்

*

உணவு நெருக்கடியைச் சமாளிக்க தென்னாட்டினர் அரிசி உணவுப் பழக்கத்தைக் கைவிட்டு கோதுமை உணவுப் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசு கூறுவது, தென்னாட்டினருக்கு இழைக்கப்படும் அநீதியாகும் என்றும், வடவருக்கு எப்படி வெளிநாடுகளிலிருந்து கோதுமை இறக்குமதி செய்யும் பொறுப்பை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறதோ அதேபோல், நமக்கும் அரிசி பெற்றுத்தரும் பொறுப்பினையும் மேற்கொள்ள வேண்டுமென்றும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

—தலைவர்

*

இந்தியத் துணைக்கண்டத்தின் வாய்ப்புகளையும் வசதிகளையும் முன்கூட்டியே ஆராயாமல், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நடத்தமுடியாத அளவில் அமைத்து, அதனால் ஏற்பட்டசிக்கல்களைச் சமாளிக்க முடியாமல், திட்டத்தின் 'அடிப்படை' என்ற பெயரால் வடநாட்டிலுள்ள பெரிய திட்டங்களை மட்டுமே அமுலாக்க முயற்சிக்கும் இந்தியப் பேரரசின் போக்கை இம்மாநாடு கண்டிப்பதுடன், உடனே தென்னகத்தின் இயற்கை வளத்தை நாட்டு மக்களின் நன்மைக்காக முற்றிலும் பயன்படுத்தும் வகையில் தொழிற்சாலைகளை நிறுவுவதன் மூலமும், வேண்டிய நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலமும், திராவிட மக்களுக்கு நீதி வழங்கும் வகையில், நாட்டின் பொருளாதார நிலை தொடர்ந்து சீர்குலையாது பாதுகாக்கப்படும் முறையில், திட்டத்தைத் திருத்தி அமைக்கும்படி இம்மாநாடு அரசியலாரை வற்புறுத்துகிறது.

முன்: செழியன்
வழி: வி. பி. இராமன்

*

நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகக் கூறிக் கொண்டு பல கோடி ரூபாய்களைப் பாழ்படுத்தி நடத்தப்படும் தேசிய அபிவிருத்தித் திட்டம் பயனற்றதாகவும், ஊழல் நிறைந்ததாகவும், வெறும் கண்துடைப்பு வேலையாகவும் இருந்து வருகிற தன்மையை திராவிட முன்னேற்றக் கழகம் முன்பு எடுத்துக் காட்டி வந்திருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் பல்வந்த்ராய் குழுவின் அறிக்கை இருப்பதை அரசியலாரின் கவனத்திற்குக் கொண்டுவருவதுடன், வெறும் கண்துடைப்பு வேலையாக மட்டும் இருப்பதை மாற்றி, மக்கள் அனைவருக்கும் பயன்தரும் விதத்தில்—கட்சியின் ஆதிக்கத்திற்குப் பயன்படுத்தாமல் எல்லாப் பகுதிகளுக்கும் உதவும் வகையில் திட்டத்தைத் திருத்தி செம்மையாக—நடத்துமாறு மத்திய அரசாங்கத்தை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

முன்: கே. இராசாராம்
வழி: ஆர். மாணிக்கம்

*

(அ) புதிய ஸ்தல ஸ்தாபன மசோதா மக்களாட்சியையும், கிராம அரசையும் வளர்ப்பதற்குப் பதிலாக ஏற்கனவே மேற்படி அமைப்புகளுக்கு உள்ள உரிமைகளையும், அதிகாரங்களையும் பறித்து அதிகார வர்க்கத்திடம் ஒப்படைத்து, மக்களாட்சி முறையையே கெடுப்பதாக இருக்கிறதாகையால், இம்மாநாடு இந்தப் புதிய முறையினை வன்மையாகக் கண்டிக்கிறது.

(ஆ) பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தல் நடத்துவது என்ற கருத்தை சென்னை அரசாங்கம் சொல்லிவருவதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், ஏற்கனவே பொதுமக்களால் பஞ்சாயத்துத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டுவந்த சனநாயக முறையையே கடைப்பிடித்து வரவேண்டும் என்று சென்னை அரசாங்கத்தை வற்புறுத்துகின்றது.

முன்: ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.,
வழி: எம். குழந்தைவேலு எம்.சி.,

*

தமிழகத்துடன் இணைக் திட்டத்தில் டெல்லி ஏகா[illegible]திய ஆட்சியினரின் அதிகார பலத்தாலும். தமிழ் மாநில அரசியலாரின் கவலையற்ற போக்கினாலும் விடுபட்டுப் போன பகுதிகளான நெய்யாற்றின் கரை. தேவிகுளம், பீர்மேடு சிற்றூர் வட்டங்களையும், செங்கோட்டை வட்டத்தின் பிற பகுதியையும் தமிழ் மாநிலத்துடன் இணைக்கவேண்டிய முயற்சியில் தீவிரமாக இறங்குமாறு தமிழ் மாநில அரசினரை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

முன்: தூத்துக்குடி ஜோசப்
வழி: நாஞ்சில் அன்பெழில்

*

இதுகாறும் கைத்தறி நெசவாளர்களுக்கு உதவித் தொகையாக ரூபாய்க்கு ஒன்றரை அணா என்ற அளவில் கொடுத்து வந்ததை 1957-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் ஒரு அணாவாகக் குறைக்கப்பட்டிருப்பதுடன், இன்னும் ஓராண்டுக்குள் அந்த உதவித் தொகையை அறவே நிறுத்திவிடப் போவதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கின்ற மத்திய அரசினரின் உத்தரவை வன்மையாகக் கண்டிப்பதுடன், ஏற்கனவே நசிந்துவரும் கைத்தறித் தொழிலை மேலும் சிதறடிக்காமல் அத்தொழிலில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான மக்களுக்கு வாழ்வளிக்க உதவித் தொகையை ஒன்றரை அணாவாகவே கொடுத்து வரவேண்டுமென்று இம்மாநாடு வற்புறுத்துகிறது.

முன்: மதுரை சந்தானம்
வழி: டி. ஆர். சுப்ரமண்யம்
,, அலமேலு அப்பாதுரை

*

இந்தியத் துணைக்கண்டத்தில் ஓர் பகுதியாக இன்று திராவிடம் பிணைக்கப்பட்டிருப்பினும் திராவிடக் கூட்டாட்சி எனும் தனி அரசுக்காகப் பாடுபட்டு வரும் திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியாவுக்கு ஒரு பொது மொழி தேவை என்ற தத்துவத்தை மறுக்கிறது.

இந்தியாவுக்கு ஒரு பொது மொழி வேண்டும் என்ற போலித் தத்துவத்தைக் காட்டி இந்தி ஆட்சி மொழியாக ஆகவேண்டும் எனக் கூறிவரும் டெல்லி ஆதிக்கத்தின் போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

(16-ம் பக்கம் பார்க்க)

நேருவுக்கு கருப்புக் கொடி!

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [5-1-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 25

நேரு வருகிறார்! வருகிற 6-ந் தேதி, சென்னைக்கு வருகிறார்!!

அவர் வருவதிலும் போவதிலும் வியப்புமில்லை—நமக்கு ஆட்சேபணையுமில்லை. ஆனால், ஒவ்வொரு தடவை வரும்போதும், அவர் தென்னாட்டை, ஏளனமாகவும் எரிச்சலாகவுமே மதித்துப் பேசுகிறார்.

உலகத் தலைவர்களுள் ஒருவராகி விட்டவர் நேரு! ஆனால் அவர், தென்னாட்டுக்கு வரும்போதெல்லாம், அந்தப் பெருந்தன்மையைக் கொஞ்சம் ஒதுக்கியே வைத்துவிடுகிறார்—இங்கேயிருப்பவர்களையெல்லாம், ஏனோதானோக்களென்றும், இவரது எடுபிடிகள் போலவும் எண்ணிக் கொண்டே பேசுகிறார்.

தோழர் ம.பொ.சி.யின் எல்லைப் போராட்டம் நடந்தபோதும் சரி, நமது உரிமைப் போராட்டம் நடந்த பிறகும் சரி, பெரியார் அவர்களின் சாதி ஒழிப்பைக் குறித்தும் சரி, நேரு அவர்கள் சிந்திய வார்த்தைகள் இன்னும் காற்றோடு போய்விடவில்லை. இவை போதாதென்று, ஆச்சாரியாரும் அவர்போன்ற முதுபெரும் அரசியல் பெரியவர்களும் இந்தியை எதிர்ப்பதைக் கண்டதும், கொஞ்சங்கூட மதிப்பின்றி, தனது 'வசை புராணத்தை'ப் பாடியிருக்கிறார்.

தென்னாட்டைப் போல வடநாட்டிலும் பல விதமான கிளர்ச்சிகள் நடந்திருக்கின்றன—நடக்கின்றன. பஞ்சாபில் இந்திமொழி எதிர்ப்பும், மராட்டியத்தில் உரிமைக் கிளர்ச்சியும், மிக மிக உத்வேகமாக இருந்து வருகிறது. அங்கு 'விஜயம்' செய்யும்போதெல்லாம் நேருவுக்கு அவ்வளவு ஆத்திரமும், ஏளனமும் பிறப்பதில்லை. குழைகிறார்! வளைகிறார்!! ஆனால், தென்னாட்டில், எந்தவித கிளர்ச்சியென்றாலும், கிளர்ச்சியிலீடுபடுபவர்கள் யாரானாலும், தோள் தட்டுகிறார்! சொல்லொணா வார்த்தை அம்புகளைத் தொடுக்கிறார்!!

சின்னாட்களுக்கு முன் திருச்சிக்கு வந்து அவர் பேசியபோது, பெரியார் அவர்களை நாட்டைவிட்டே துரத்திவிடவேண்டும் என்றார். பெரியாரைப் போல நேருவின் ஆட்சியையும், இந்திக் கூட்டத்தையும் தாக்குகிறவர், பஞ்சாப் தலைவர் தாராசிங்! அவரை, இப்படியொரு போதும் பேசியதில்லை, நேரு. மாறாக, அழைத்துப் பேசி, குலவியதுண்டு. காந்தி கிராமத்துக்கு வருவதற்கு முன், மராட்டியத்தில் சிவாஜி சிலையைத் திறக்கப்போயிருந்தார்-மராட்டிய மக்கள், பல்லாயிரக் கணக்கில் கூடியிருந்து, கருப்புக் கொடி காட்டினர், அவருக்கு. அப்போதுகூட அவர், 'நான்சென்ஸ்','காட்டுமிராண்டித்தனம்', 'பைத்யக்காரர்கள்', 'முட்டாள்கள்' என்று ஏசவில்லை! மாறாக, மராட்டிய மக்களின் வீரத்தையும் தீரத்தையும் மிகமிகப் புகழ்ந்து பேசினார்!!

மராட்டியர்களைவிடவோ, பஞ்சாபியர்களைவிடவோ, வீரத்திலும் தீரத்திலும் குறைந்தது அல்ல, தென்னாடு. அங்கெல்லாம், கிளர்ச்சிகள் என்றால், கொடுமையும் கோரமும் நர்த்தனமாடும். சாவுப் பட்டியலும், நடைபெற்ற கலவரங்களும் பெரிதாக வரும். தென்னாட்டிலோ, எந்தக் கிளர்ச்சியும், சாந்தமாகவும் அமைதியாகவுமே நடக்கும்-எனினும் அவருக்குத் தென்னாடு என்றால்தான் எரிச்சலும் ஆத்திரமும் அதிகமாகிறது. ஏசுகிறார்! கடுமையான சொற்களை வீசுகிறார்!!

தமிழ்மண், வீரத்திற்கு மட்டுமல்ல, அன்புக்கும் பெயர்போன மண். வடவரைவிட எல்லா வளங்களிலும் சிறந்த பூமி, இது. வீண் வம்பும், வேண்டாத கிளர்ச்சியும் விரும்பாதவர்கள், நாம். இங்கு துவக்கப்பட்ட எந்தக் கிளர்ச்சிக்கும் ஒரு அனுதாபப் பார்வைகூடக் காட்டியதில்லை, நேரு. எல்லைப் போராட்டம், நடந்தது! ஏசினார், பேசினார். பீர்மேடும், தேவிகுளமோ, இழந்தோமேதவிர, நீதி தரவில்லை, அப் பெரியவர். 'தமிழ்நாடு', கேட்டோம் — திமிர்க் குரல் கிளம்பிற்றே தவிர, உரிமை கொடுக்கவில்லை, அவர். டால்மியாபுரம், பெயர் மாற்றம் கேட்டோம்; பற்களை நற நற வென்று கடித்தாரே தவிர, நீதி தரவில்லை. பெரியார், சாதிகளை ஒழிக்கவேண்டும் என்கிறார்; பரிசு, பைத்யக்

காரப்பட்டம் அளிக்கப்பட்டதே தவிர, அந்த ஒப்பற்ற பணியாளரின் குரலுக்கு மதிப்புத் தரவில்லை, அவர். இவ்வளவும் போகட்டும் — நாமெல்லாம் எதிர்க்கட்சிக்காரர்கள் என்பதால் இவ்வளவு ஆத்திரமும் அலட்சியமும் காட்டுகிறார் போலும் என்று நினைத்திருந்தோம். ஆனால், 'அது தவறு. எனக்கு தென்னாடு என்றாலே, ஏளனம்தான் எப்போதும்' என்று காட்டுவதைப்போல, ஆச்சாரியாரையும் அவர் கூட நிற்கும் சர். சி. பி. போன்றவர்களையும் சாடியிருக்கிறார். ஆச்சாரியார், இந்திய உபகண்டத்தின் கவர்னர் ஜெனரலாக இருந்தவர்! ஒப்பற்ற விவேகி என்று வெளிநாட்டவரால் கூடப் போற்றப்படுபவர்!! அவரும், பைத்யக்காரர் — பெரியாரும் பைத்யக்காரர் — உரிமை கோரும் தி. மு. க. வினரோ சிறுபிள்ளைகள்—தமிழ்நாடு கேட்போர் 'நான்சென்ஸ்'கள்—என்றால், அவர் நம்மை எப்படி மதிக்கிறார் என்பது விளங்கும்.

இவர்கள் எல்லாம், கொடி தூக்கியும், மில் துணிகளை எரித்தும், உப்பு எடுத்தும், இரயிலையும் தபாலாபீசையும் கொளுத்தியும், 'சுதந்திரப் போர்' நடத்தியபோதெல்லாம், இவர்கள்தம் கோரிக்கைகளை அவ்வளவு எளிதில் ஏளனம் செய்துவிடவில்லை வெள்ளையன்! மக்களின் குமுறல்கள் என்கிற அளவுக்கு மதிப்புக் கொடுத்தான்!!

இதே மதிப்பை, வடக்கில் நடைபெறும் கிளர்ச்சிகளுக்குக் காட்டமுடிகிறது நேருவால். அஸ்ஸாமியருடைய எண்ணெய்ப் போராட்டத்திலிருந்து மராட்டியரின் மனக் கிளர்ச்சி வரையில் அறிவதற்கு ஆவல்காட்ட முடிகிறது நேருவால்—ஆனால், தென்னாட்டின் பிரச்னைகள் என்றால்தான்,—அது ஆச்சாரியாருடைய கூற்றானாலும், தமிழரசு கழகத்தின் முயற்சியானாலும், ஜனநாயக காங்கிரசின் (கா. சீ. க.) கோரிக்கையானாலும், பெரியாரின் பேச்சானாலும், நம்முடைய கோரிக்கையானாலும் — அலட்சியமும், அநாவசியமான வார்த்தை வீச்சுகளும் காட்டப்படுகிறது நேருவால்!!

அமெரிக்காவை மதிக்க முடிகிறது அவரால்—சிறு நாடு ஜப்பானை மதிக்கத் தெரிகிறது அவருக்கு—உதைக்கும் ஆப்ரிகாவுக்கு ஓடோடியும் அன்பு காட்டுகிறார் — விரோதியாக விளங்கிய வெள்ளையனுக்கு அரவணைப்புத தர இயலுகிறது—காந்தியடிகளின் உயிரைப் பொசுக்கிய கட்சியிடமும் 'கருணை' காட்ட முடிகிறது-ஆனால், அன்பும் பண்பும் விளங்குமிடம், அகிம்சையின் சொந்த இடம், குறளும் சிலம்பும் ஒலிக்குமிடம், குன்றாத வளங்கள் கொண்ட இடம், அறிவு மணிகள் வாழுமிடம், உலகுக்கே நாகரிகம் போதித்த இடம், உன்னதக் கலைகள் சிறந்த இடம், உத்தமத் தியாகிகள் வாழ்ந்த இடம், நமது தென்னகத்தை மட்டும் மதிக்க மறுக்கிறார்! ஏதோ, இவரது காலடியில்கிடக்கும்'காளான்'களைப்போலநம்மைமட்டுமல்ல—ஆச்சாரியார் உள்பட அனைவரையும் நினைக்கிறார்—நான்சென்சுகளா! காட்டுமிராண்டிகளா! சிறுபிள்ளைகளா! முட்டாள்களா! பைத்தியக்காரர்களா! என்றெல்லாம், ஏதேதோ ஏசுகிறார். பெரியார் போன்றவர்களை நாட்டைவிட்டே விரட்டவேண்டும் என்கிற அளவுக்குப் போகிறார்.

அவர் உலகத் தலைவர்! நிச்சயமாக நாம் அவரை மதிக்கிறோம்!!

தியாகங்கள் பல புரிந்தவர் நேரு! நிச்சயமாகத் தலைவணங்குகிறோம்!!

ஆனால், அவர் இதுபோல, நம்மை, ஒருமுறையல்ல, இருமுறையல்ல, தொடர்ந்து ஏசுவதையும பேசுவதையும் மட்டும் நாம், இனியும் அனுமதிக்கத் தயாரில்லை.

சொல்வது யார் என்பதைவிட, சொல்லப்படும் குறைகளைப் பற்றிக் கவனிக்கவேண்டியது, ஒரு அரசியல் தலைவனின் கடமையாகும். நேரு அரசியல் தலைவர் மட்டுமல்ல, உபகண்டத்தையாளும் பொறுப்பிலுமிருப்பவர். இட்லர் — முசோலினி — பிராங்கோ போல, சர்வாதிகாரியோ எனில், தன்னை ஒரு ஜனநாயக வாதியென்றும் கூறிக்கொள்கிறவர். இப்படிப்பட்டவர், தென்னாட்டின் எந்தப் பிரச்னைகளையும், கேவலமாகவும் அலட்சியமாகவும் கருதுகிறார் என்றால், அவருடைய தவறான பாதையை யாராவது எடுத்துக்காட்டத்தான் வேண்டும்!!

எனவேதான் நாஞ்சிலில் கூடிய தி. மு. க. **வரும் 6-ந்தேதியன்று நேரு சென்னைக்கு வரும்போது, கருப்புக் கொடி காட்டி அதிருப்தியையும் கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்வதென்றும் — அன்று மாநிலம் முழுவதிலும், கண்டனக் கூட்டங்கள் நடத்துவதென்றும் முடிவு செய்திருக்கிறது.**

சென்னையில் கருப்புக்கொடி காட்டுவதில், நமது மாநிலத்தின் சட்டசபையில் தி. மு. க. சார்பில் வீற்றிருக்கும் சட்ட மன்றப பிரதிநிதிகளும்—டில்லிப் பாராளுமன்றத்தில் தி. மு. க. பிரதிநிதிகளாயிருப்பவர்களும் கலந்துகொள்வார்கள்.

சென்னை, அன்று 'கருங்கடலாக' காட்சியளிக்கும் என்பதில், நமக்கு ஐயமில்லை.

அமைதியும், சாந்தமும் விளங்கும் வகையில் இந்தக் கண்டனம் நடைபெறும்.

மதிப்பளிக்கத் தெரியாதவர்களுக்கு, அரசியல் கண்ணியம் இழந்தவர்களுக்கு, பாடம் புகட்ட வேண்டிய பொறுப்பும் கடமையும் நமக்கு இருக்கிறது.

புண்ணின்மேல் ஈட்டிகள் வீசப்பட வீசப்பட, பொறுத்துக்கொள்ளத்தானா நாம் பிறந்தோம்? 'மானம்' ஒன்றே நல்வாழ்வெனக்கொண்டு வாழ்ந்த தமிழ் மரபு, தருக்கர்தம் ஆதிக்கத்தால் தரைமட்டமாகித் தவிக்கிறது, என்றால், இப்படி ஏளனத்துக்கும் கேலிக்கும் ஆளாகி, அவதிப்படையவா, நாம் பொதுப்பணியிலீடுபட்டோம்.

தவறியவருக்கு, உணர்த்தும், நற்பணி இது. வீரர்காள்! வழக்கம்போல், வெற்றியாக்குங்கள்—வீரத் திருமரபின், புகழ் காட்டுங்கள் — தி. மு. க. தனக்கு வரும் இழுக்கை மட்டுமின்றி, தன்னவருக்கு—அவர்கள் எந்தக் கூடாரத்திலிருந்தாலும்—வரும் தாக்குதலையும் கண்டிக்கத் தயங்காது, என்பதையும் நிலைநாட்டுங்கள்!!

★

பெரியார் அவர்கள், சிறைக்குள்ளே கிடக்கிறார்: பல்லாயிரக் கணக்கான நாட்டு மக்கள் நெஞ்சம் வேகின்றனர் தள்ளாத வயது, தடியூன்றிடும் கட்டம், எண்பதை நெருங்கும் பருவம்; இந்த நிலைமையில் அவருக்கு, சிறைவாசம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது. "நீதிமன்றத்தில் பதில் அளிக்கும்போது அவர் உடல் ஆடிக்கொண்டேயிருந்தது", என்று குறிப்பிடுகிறார், செஷன்ஸ் நீதிபதி. அவ்வளவு வயதானவர், பெரியார். வயதானால் என்ன, சட்டம் தன் கடமையைச் செய்துதானே ஆகவேண்டும் என்பார்கள் சட்ட நிபுணர்கள்.

சிறை, பெரியாருக்குப் புதிதல்ல; "இதயத்தில் ஏற்றிருக்கும இலட்சியத்துக்கு நாம் கொடுக்கும் 'விலை'" என்று எத்தனையோ தடவை கூறியிருக்கிறார், அவர்.

நீதிமன்றத்தில் எதிர் வழக்காடவோ, குறுக்கு விசாரணை செய்யவோ அவர் விரும்பவில்லை. இதுவே போதும், அவர் உள்ள உறுதியை விளக்க.

தீர்ப்புப் பெறுவதற்கு முதல் நாள் சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றில், சில பார்ப்பனர்களைக் கொல்வதாலோ, ஒரு சில அக்கிரகாரங்களைக் கொளுத்துவதாலோ, சாதியை ஒழித்துவிட முடியாது என்று அவர் தெளிவாக எடுத்துச் சொன்னதாகத் தெரிகிறது. ஏடுகளும், அதை வெளியிட்டிருக்கின்றன.

சட்டம், தன் பாதையில் சென்று விட்டது. இப்போது, நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்து, ஆவன செய்யவேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சேர்ந்தது. அமைதியையும், நல்லாட்சியையும் விரும்புவோர், இதுபற்றிச் சிந்திக்காமலிருக்க முடியாது.

கம்பிகளுக்குப் பின்னால், பெரியார் அவர்கள் கிடப்பதைக் கண்டு 'அப்பாடா!' என்று பெருமூச்சு விடும் சிலரும் இருக்கிறார்கள். அவர்கள், பெருந்தன்மைக்கு மதிப்புக் கொடுக்காதவர்கள். வெறியைத் துணைக்கழைப்பவர்கள். மனித இதயம்துறந்தவர்கள்.

பெரியாருக்குஅளிக்கப்பட்ட தண்டனை போதாது என்று கூறும் சிலரும் இருக்கிறார்கள்! இவர்கள், ஆத்திரத்தால், அறிவுக்குத் திரையிட்டுக் கொண்டவர்கள; குரோதத்தையும், தோல்வி மனப்பான்மை தந்த ஆத்திரத்தையும் மனதிலே வளர்த்துக் கொண்டிருப்பவர்கள்; சிந்திப்பதற்குப் பதில் 'சின்னப் புத்தி'யைக் காட்டுகிறவர்கள். சுற்றி வளைத்து, வார்த்தைகளை எண்ணி, வாய் 'ஜாலம்' பேசினாலும், அவர்களது இதயத்தில் கிடக்கும் 'இருள' பிறருக்குத்தெரியாமற் போகாது!!

"கிளர்ச்சிக்காரரை"ப் பிடித்து அடைத்துச் சிறையில் போடும படி செய்துவிட்டோம் என்று "மேலிடத்திலிருப்பவர்கள்" பெருமூச்சு விடக்கூடும்! பேரானந்தமும் காணக்கூடும்!!

அவர்களெல்லாம் ஒன்றை மறந்துவிடுகிறார்கள்—சென்னைக் கூட்டமொன்றில், தள்ளாத கிழவர் வெளியிட்ட தெளிவான வாசகங்களுக்குப் பின்னும், சிறைக்குள் போட்டு மூடப்பட்டிருப்பது கண்டு கொதிக்கும் உள்ளங்கள் பல்லாயிரக்கணக்கில் உள்ளன என்கிற உண்மையை!!

விளக்கம் கொடுத்தார்-தெளிவு அளித்தார்—மனதாரப் பேசினார், என்று எந்தப் பெயரிட்டு வேண்டுமானாலும் சொல்லட்டும். தன்னுடைய நோக்கம் பலாத்காரம் அல்ல என்று தெளிவாகப் பேசியிருக்கிறார், பெரியார். பார்ப்பனரைக் கொல்வதாலோ, அவர்கள் குடியிருக்குமிடங்களைக் கொளுத்துவதாலோ தன்னுடைய இலட்சியமான சாதி ஒழிப்பு நிறைவேற முடியாது என்றும் விளக்கமாக வெளியிட்டிருக்கிறார்.

சட்டத்தின் ஷரத்து, அதற்குள்ளே பொதிந்து கிடக்கும் அம்சம், ஆகியவைகுறித்துச் சட்ட நிபுணர்களுக்கு சிரத்தையிருக்கக் கூடும். ஆனால், மக்கள், தங்கள் மனப்போக்கை, தத்தமது தலைவர்கள் தரும் "விளக்கம்" கொண்டே அமைத்துக் கொள்வார்கள. பெரியாரின விளக்கம, யாவருக்கும் திருப்தியளிக்கும் விதத்தில் இருக்கிறது. ஆனால், 'குரோத மனம் கொண்டோர்' தவிர்த்து, மற்ற எல்லோரும், இதற்குப் பின்னும் பெரியார் ஏன் சிறைக்குள் அடைபட்டுக் கிடக்க வேண்டும் என்றே கேட்பார்கள்.

மக்களின் குரலையும் மன நிலையையும் மதித்து, உடனடியாகப் பெரியாரை விடுதலை செய்வதே விவேகமானதாகும் என்று ஆள்வோருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம.

அரசியல் சட்டத்தை எரித்தது இனி தொடர்ந்து நடக்காது—அதிருப்தியைக் காட்டும் அடை

யாளமாகச் செய்யப்பட்டதுதான் அது—ஒரு நாள் மட்டுமே நடத்தப்பட்டது — என்று பெரியாரே சொல்லியிருக்கிருர். அதோடு, தனது கழகத்தவரை, பலாத்காரத்துக்குத் தூண்டும் நோக்கமும் தனக்கு இல்லையென்று உறுதி மொழி அளித்திருக்கிருர். இதோடு மட்டுமின்றி, பார்ப்பனர்களைக் கொல்வதாலோ, குடியிருக்கு மிடங்களைக் கொளுத்துவதாலோ சாதியை ஒழித்துவிட முடியாது என்பதையும் வெளியிட்டிருக்கிருர்.

பெரியாரின் இந்த மொழிகள், வரவேற்கப்பட வேண்டியதாகும்; இந்த வார்த்தைகளை ஏற்று பெரியாரையும்; அவரைப்போல, கொண்ட கொள்கைக்காகச் சட்டத்தை மீறிச் சிறைக்கோட்டம் சென்றிருக்கும் ஆயிரக்கணக்கான தோழர்களையும், தோழியர்களையும் உடனடியாக விடுதலை செய்து, தனது பெருந்தன்மையையும், புத்திசாலித்தனத்தையும், இச்சமயத்தில் அரசாங்கம் காட்டிக் கொள்ளவேண்டும்.

ஆள்வோர், இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தக்கது செய்யாவிடில், எரியும் நெருப்புக்கு எண்ணெய் ஊற்றுகிருர்கள் என்றே பொருள்படும். மக்கள் மன்றம், ஆள்வோரின் பிடிவாதம் கண்டு, கண்டித்தெழும் நிலை ஏற்படக்கூடும். மக்களின் குரல், சட்டத்தின் முன்னல் எப்படிக் கருதப்படினும், நாட்டின் வாழ்வில் சாதக பாதகங்களை ஏற்படுத்தும் தன்மைவாய்ந்தது என்பதை ஒருபோதும் மறக்கக்கூடாது.

பெரியாரையும் அவரது தொண்டர்களையும் சிறைக்குள்ளேயே வைத்திருப்பதால், யாருக்கும் பயனுமில்லை; பலனுமில்லை. ஏதோ சில பார்ப்பன குல "பெரியவர்கள்", ஆபத்து, ஆபத்து என்று எழுப்பிய கூச்சலுக்காக, அம்முதுபெரும் கிழவரைக் கொண்டுபோய்ச் சிறையில் போட்டிருக்கிருர்களே! — என்றுதான், மக்கள் எண்ணுவர்; பேசுவர். இது, வகுப்பு ஒற்றுமையை வளர்க்க வழி செய்யாது.

பார்ப்பன குல "பெரியவர்கள்", மிரட்டி, தூண்டி, இதுபோன்ற நிலைமைகள் ஏற்படுமபடி செய்வதற்குப் பதில் சந்தித்தும், தொடர்பு கொண்டும், சமரசமாகப் பேசியும், விளக்கம் விரும்பியும், நல்லெண்ணமும் நம்பிக்கையும் மலரச் செய்திருக்கலாம். இது, பலனும், ஒற்றுமையை மலர்விக்கும் சூழ்நிலையையும் உருவாக்கப் பெரிதும் உதவியிருக்கும். இது போல, "அந்தப் பெரியவர்கள்," நடந்துகொள்ளவில்லையே, என்று பெரிதும் நாம் வருந்துகிறேம்! இவ்வளவுதூரம் நிலைமை வளரக் காரணம் அவர்கள்தான் என்றும் குற்றம் சாட்டுகிறேம்.

ஆச்சாரியார் அவர்கள், இந்திப் பிரச்னையைப் பற்றி விவாதிக்க, பலதரப்பட்ட அரசியல் கட்சிகளையும், அவைகளின் தலைவர்களையும் அழைக்கவில்லையா—அணுகவில்லையா? முன்பு இப்படியோர் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றபோது பெரியார் இராமசாமிகூட அழைக்கப்பட்டு, கலந்துகொண்டாரே! பெரியார், அப்போது எப்படி நடந்துகொண்டார்? ஆச்சாரியார் அவர்களிடம், அன்போடும், நட்போடும் நடந்துகொண்ட காட்சியைக் கண்ணாரக் கண்டோமே! எனவே, பலதரப்பட்டவர்களையும், ஒரு நல்ல நோக்கத்துக்கு ஒன்று திரட்டும் சக்தி பெற்ற ஆச்சாரியார், ஏன் பெரியாரைப் பதப்படுத்தவும், அவரது நம்பிக்கையைப் பெறவும் இயலாதவரா? என்னுல் முடியாது — இது வெளி மாகாணத்து விவகாரம்— என்று சொல்ல முடியும் அவர்? பெரியாரைக் காணவும் பேசவுமான பொறுப்பையேற்க ஆச்சாரியாரே மறுத்தால், யார்தான் இருக்கிருர்கள் பிறகு? இருவரும் வயதானவர்கள் என்பதோடு, ஒருவருக்கொருவர் எவ்வளவு மரியாதையும் மதிப்பும் அன்பும் வைத்திருக்கிருர்கள் என்பது, எல்லோருக்கும் தெரியுமே!!

இப்படியொரு "கட்டம்" ஏற்படுவதை விட்டுவிட்டு, சிக்கலான சூழ்நிலை உருவானதும், அந்தச் சூழ்நிலையையே காட்டி வாய்மூடி மௌனியாவதும், வம்பை வளர்ப்பதும் நல்லதா.

ஆச்சாரியார் போன்றவர்கள், பார்ப்பன குலத்தின் முன்னேடிகளாக விளங்கும் மற்றவர்களோடும் சேர்ந்து, பெரியாரைக் கலந்து பேசி, சாதி ஒழிப்புச்சம்பந்தமாகத் திடமும் தீவிரமுமான வழிவகைகளைக் காணும் முயற்சியிலீடுபட்டால், இப்படியெல்லாம ஏன வரப்போகிறது? ஆச்சாரியார் போன்ற பேதைகள், சாதி ஒழியக்கூடாது என்ருவது சொல்ல முடியுமா! ஒரு வேளை, இந்த முயற்சியால் ஏற்படும் குழப்பங்கள், தலைகீழ் மாற்றங்கள் அதிர்ச்சியைக்கொடுக்கக் கூடும். அந்த அதிர்ச்சியையும், கூடிப்பேசி, ஒரு திட்டம் வகுத்து தவிர்த்துக்கொள்ள இயலுமே. ஏதோ, தத்தமது விருபபு வெறுப்பைக் காட்டிக் கொள்ளும் ஒரு 'கட்டம்' எனக் கருதக்கூடாது. பெரியவர்கள் அன்பும், அனுதாபமும் கொண்டு அறிவுத் தெளிவோடு கவனிக்க வேண்டிய பிரச்னையாகும் இது.

கத்தியின் மூலமோ அல்லது தண்டனைகள் பெற்றுத் தருவதன் மூலமோ தீர்க்கக்கூடிய பிரச்னையல்ல, இது. இரண்டும, இந்தத் தீராத் தொல்லையைத் தீர்க்கும் வழிகளல்ல. வேதனையை, இது வளர்க்குமே ஒழிய தீர்க்காது.

சிலர் நினைப்பதுபோல இந்தப் பிரச்னை, இரண்டு வகுப்புகளுக்கு இடையே மட்டும் இருக்கிற பிரச்னையல்ல. நாட்டின் மொத்தப் பிரச்னை.

தாழ்த்தப்பட்டவர்களின் உணர்ச்சித் தீ, கொழுந்துவிட்டெரிகிறது! "வலுத்தோர்" அதை அணைக்கவும் அடக்கவும் முனைகின்றனர்!! — இப்படிப்பட்ட பிரசனையை, கிண்டல் செய்வதாலோ, கார்ட்டூன் போட்டுக் காட்டியோ, தீர்த்துவிடமுடியாது. இவை, எரிச்சலை அதிகமாக்கவே செய்யும். 'தடி'யின் மூலம் இந்த எழுச்சியை அடக்க முயல்வதென்பதும் நிச்சயமாக முடியாது.

நல்லெண்ணத்தின் மூலம், அறிவைத் துணைக்கொண்டு, ஒரேயடியாகத் தீர்த்து ஒரு முடிவுகாண வேண்டிய பிரச்னையாகும் இது. இயலுமா எனின், நிச்சயமாக முடியும் என்போம்! பெரும் பொறுப்புகளையும் சேவைகளையும் செய்தவர்களால், இதைத்தான், சாதிக்கமுடியாது!!

திருக்கோவிலூரில் நமது ஏஜண்டு

*

எம். முல்லைவேந்தன்
12. ஆறுமுகம் சோடா கடை,
பஸ் ஸ்டாண்ட்
திருக்கோவிலூர்.

சிக்கல் தீராது—பலன் கிடைக்காது என்று பயமும் பராமுகமும் உருவாகிக் கிடந்த நாட்களிலே, முன் யோசனையும், விவேக புத்தியும் கொண்டு, "பாகிஸ்தான் கொடுத்துத் தீரவேண்டிய ஒன்றுதான்!", என்று துணிவோடு சொன்னவர் ஆச்சாரியார். திகைத்தனர் பலர் இவரே இப்படிச் சொல்கிருரே, என்று! எனினும், பிரச்னையை நுட்பமாகவும், தெளிவாகவும் உணர்ந்து, வருவதை முன்கூட்டியே உரைத்தார். அவர் உரை, இன்று கனவாகவில்லை!! அன்று காட்டிய அந்த உறுதியும், வருமுன்னுரைக்கும், கூர்த்த மதியும், இன்றும் அவரிடமிருக்கின்றன என்பதில் நமக்குச் சிறிதும் ஐயமில்லை. இருந்தும், நாட்டை அலைத்துக் குலைக்கும் பெரியதோர் பிரச்சினையில், அவர் காட்டும் அலட்சியமும், வேற்றுமையும், அவருக்கும் சரி, நாட்டுக்கும் சரி நல்லதல்ல என்று பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

இப்போது, பொறுப்புச் சுமைகளோ, அதிகார பீட வேதனைகளோ அற்ற நிலையிலிருக்கிருர் அவர். நிச்சயம், முன்வரலாம், இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேட. நண்பரும் சகாவுமான பெரியாருடன் பேசி, வழிதேடலாம்! இதைவிட்டு, பேசாதிருந்தால், சாதி ஒழிப்பில் ஆச்சாரியாருக்கு அக்கரை கிடையாது என்கிற முடிவுக்கே மக்கள் வந்து சேர நேரும்.

கம்பிகளுக்குப் பின்னல், பெரியார் நிற்கிருர்! ஆனல், மக்கள் மன்றத்தின் முன்னல் பலர் இருக்கின்றுர்கள்!! பெரியாரையும், சிறையில் வாடும் ஆயிரக்கணக்கானவர்களையும் விடுதலை செய்யுமாறுவற்புறுத்தும் கடமையுண்டு அனைவருக்கும். குரலை ஏற்கும் பொறுப்பும் ஆள்வோருக்கு இருக்கிறது. அக்கட்டம் ஏற்பட்ட பிறகு, எல்லோருமாக ஒன்றுகூடி சாதி ஒழிப்புப் பற்றிப் பேசி, ஒரு உன்னத முடிவுக்கு வரவேண்டும். அந்த நல்ல நாள், உதயமாகும் போதுதான், நாட்டின் எதிர்காலம் நல்ல சூழ்நிலைக்கு வந்துள்ளது என்ற நம்பிக்கை பிறக்கும்.

★

அன்னையின் கண்ணீர்!

(சுப. கோ. நாராயணன்)

'வையகத்தை வென்று வான்புகழ் பெறுவேன்' எனச்சூளுரைத்து, சுழலும் பம்பரமெனப் பல நாடுகளின மேல் படையெடுத்து பெரும் வெற்றி கண்ட மனனன, மாவீரன் அலெக்சாண்டர்! இவன் அரசியல் கற்றதோ, அறிவுக் களஞ்சியமென அவனி போற்றும் அரிஸ்டாட்டிலிடம்! வீரமும், விவேகமும் இணைந்தால், வெற்றியன்றி வேறு என்ன காண முடியும்?

அத்தகு தீரனின் அன்னைதான், ஒலிம்பியஸ் என்பாள். அரசியல் சூழ்ச்சிகளை நன்குணர்ந்தவள்; அதிகார மோகங்கொண்டவள்; எனவே, அரசியல் விவகாரங்களில் அனுவசியமாகத் தலையிட்டாள். செந்தேள் கூடச் சில சமயங்களில் கொட்டாமலிருக்கலாம்! ஆனல் அதிகாரம் செலுத்திப் பழகிய அரசியல் மனிதர்கள், அதிகாரம் செய்யாமல் சும்மாயிருக்க இயலாதே! தன் தாய் இப்படி அரசியல் விவகாரங்களில் நுழைவது, அலெக்சாண்டருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை; என்ன செய்வது? அன்னையிடம் 'தாயே, தாங்கள் சற்று ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். வீணுக இந்த அரசியல் சேற்றிலே சிக்கி வருந்துகிறீர்கள்' என ஆயிரம் முறை வேண்டிக் கொண்டான். பலனேதும் இல்லை. பழையபடியும், அவள் இந்த அரசியல் சதுரங்க விளையாட்டிலே புகுந்து மனம்போல் ஆடினள்.

மாவீரன், மாதாவிடம் மட்டற்ற அன்புகொண்டவன். அதற்குச் சான்ருக ஒன்றினைக் கூறலாம். அவன் சென்று, போரிடும் வெஞ்சமரிலே, வெற்றி பெறுவானல்லவா? அந்தச் சமரில் வென்ற அற்புதப் பொருள்களை எல்லாம் அன்னைக்கு, அன்பளிப்பாக அளிப்பானும்! அத்தகு கருணையுள்ளங்கொண்டவன் கடுமொழி கூறி, தாயின் இதயத்தை சுட வைப்பானு?

அலெக்சாண்டரின் ஆட்சியில், ஆண்டிப்பேட்டர் எனும் அஞ்சா நெஞ்சமும், ஆண்மையும் கொண்ட ஓர் கவர்னர் இருந்தான். இவன், மன்னன் மற்ற நாடுகளுக்குச் செல்லும்போதெல்லாம், நாட்டின் நிர்வாகத்தை நனமுறையில் அரசனுக்கு பதிலாக நிர்வகித்து வருவான. இவனுக்கு, மன்னனின் அன்னை அரசியல்விவகாரங்களில் நுழைவது சற்றும் பிடிக்காது.

ஒருசமயம் காவலன் வெஞ்சமர் புரிய வேறுநாடு சென்றிருந்தான். அங்கு சென்றவுடனே, மாதாவுக்கு 'தாயே, தயை செய்து இந்தச் சமயம் நாட்டின் நிர்வாகத்தில் குறுக்கிடாதே' எனக் கேட்டுக் கொண்டு மடல் தீட்டினன். மைந்தனின் பேச்சை பெற்றவள் மதிக்கவில்லை. மாருக இன்னும் அதி தீவிரமாக ஈடுபட்டாள் அரசியலில்! ஆண்டி பேட்டர் பொறுமை இழந்து, வேந்தனுக்கு 'அவனுடைய தாய் அனுவசியமாக, நிர்வாகத்தில் ஈடுபட்டுத் தொல்லை தருகிருள்' எனக்குற்றஞ் சாட்டி ஒரு கடிதம் வரைந்தான். அதற்கு பதிலாக மன்னர் மன்னன், மாதாவைத் திட்டி எழுதி இருப்பான் என்றுதானே, நினைக்கிறீர்கள்? இல்லவே இல்லை! அது ஓர் அன்பு மகனின், இதயக்குமுறலின், எதிரொலியாகும்! அவன் ஆண்டி பேட்டருக்கு, "ஆண்டி பேட்டர்! நீ அறுநூறு கடிதங்களை, என் அன்னையைப் பற்றித் தூற்றி வரைந்தாலும், என் அன்னையின் ஒரு துளி கண்ணீர் அத்தனை கடிதங்களையும் அழித்து விடுகிறது" என மறு பதில் எழுதினன்.

★

"பிரிவாற்றாமை"

—[வேலூர்—குழலன்]—

காதலியைப் பிரிந்து காட்டு வழியில் தனி நடை நடந்து, பொருள் சேர்க்கச் செல்லுகின்றான் அவன்.

முகிலைத் தொடும் அகில் மரங்களும், விண்ணை முட்டும் தென்னை மரங்களும், நீண்டு பருத்துப் பல விழுதுகளைக்கொண்ட ஆலமரங்களும், பழுத்துத்தொங்கும் பெரிய பெரிய பழங்களைக்கொண்ட பலா மரங்களும், கொய்யாவும், பிறவும் அந்த காட்டுவழியில் நிறைந்து காணப்பட்டன.

ஒன்றை ஒன்று துரத்தும் பாம்புகளின் கூட்டமும், கட்டிப் புரண்டு சண்டைசெய்து இரத்த துளிகளுடன் காணப்படும் பாம்புகளும் கீரிகளும், முட்களும் கற்களும் நிறைந்து கிடக்கின்றன.

முல்லை மலர்களைக் கொத்துக் கொத்தாகச் சூடியுள்ள முல்லைக் கொடிகளும், பூத்துத் தொங்கும் செண்பக மலர்களை அணிந்துள்ள செண்பக மரங்களும் நிறைந்து மணம் பரப்பிக்கொண்டு இருந்தனவாம்.

அருவிகளில் நிறைந்துள்ள நீலோற்பல மலர்களும், செவ்வாம்பல் மலர்களும், இடையில் ஒற்றைக் காலில் நின்று வாளை மீனைகளைக் கொத்தித் தின்னும் வெண் நாரைகளும், கரையில் ஏறி விளையாடும் நீர்நாய்களும், அவைகளைப் பிடிக்கவரும் பருந்துகளும் இன்னும் பலவும் நிறைந்து இருந்தன.

வழி நடப்பவர்கள் இவைகளைக் கண்டு கருத்தை அவைகளிற் பதித்துப் பயணத்தின் அலுப்பை மறந்து நடப்பராம்.

ஆனால், அவனோ வேதனை ரேகை படர்ந்த முகமும், துன்பம் உமிழும் கண்களும், சோர்ந்த நடையும், தளர்ந்த உடலும்கொண்டு, அடிக்கு அடி நிற்பதும் பிறகு நடப்பதுமாக இருந்தான்.

அழகிய மயில் ஒன்று தன் தோகையை விரித்து களிநடம் புரிந்துகொண்டு இருப்பதை அவன் கண்டான்.

அந்த மயிலின் மினுமினுப்பும் பளபளப்பும் அதன் இறகுகளில் காணப்படும் வர்ண ஜாலங்களின் கூட்டும் அவன் கண்ணைப் பிளந்து கருத்தில் பதிந்தன.

அந்த மயிலின் ஆடல் கண்டதும் அவன் உள்ளம் "பக்" என்றது, கண்கள் 'குரு' குரு!' என்று விழித்தது, உடல் பர! பர! வென்று துடித்தது.

காரணம்?

அந்த மயிலின் ஆட்டம்!

தன் காதலியிடம் பிணக்குக் கொண்டு துள்ளி ஓடும்போது காணப்படும் அவள் கால்களின் துடிப்பு இந்த மயிலின் ஆட்டத்தை அப்படியே ஒத்து இருந்தது.

அதுமட்டுமா?

இந்த மயிலின் சாயல் தன் காதலியின் சாயலைப் பொருந்தி இருப்பதையும் கண்டவுடன், அவன் உள்ளம் தன் காதலியை நினைக்கத் தொடங்கியது.

ஆசைக் கண்ணாளன் தன்னைப் பிரிந்து பொருள்தேடக் காட்டு வழியில் தனிநடை நடக்கின்றானே, அவனுக்கு எவ்விதமான தீங்கும் அண்டக் கூடாதே என்று அவள் நினைந்து நினைந்து உருகுவதைபபோல், அவன் நினைந்தனன்.

அவன் கண்கள் கலங்கின.

அசைவற்று நின்றான்.

அச்சமயத்தில் அவன் மீது முட்டி மோதிக்கொண்டு மான்கள் நடந்தன.

அந்த அதிர்ச்சியில் விழித்தான், கண்டான் மான்களை.

அல்ல! அல்ல! அதன் விழிகளை.

கொண்டான் மறு அதிர்ச்சியை.

அடே! காதலியின் துரு! துரு! வென்ற கண்ணின பார்வை இங்கு எப்படி வந்தது. அவளா தான் மயிலாகவும் மானாகவும் வந்து தன்னை ஏய்க்கிறாளபோல் உள்ளது என்று எண்ணி அதைப் பிடிக்க நடந்தான்.

ஆனால்!

தன் காதலியின் இனிமையான குரல் அவன் காதில் கேட்டது.

திடுக்கிட்டான்! நின்றான்! திரும்பினான்.

அங்கு அவன் கண்டது என்ன?

பாடும் குயில்!

ஆம்! அவன் அந்தக் குயிலின் இனிமையான குரலைக் கேட்டுத்தான் தன்காதலியின் குரலென்று மயங்கினான்.

சீ! சீ! எல்லாம் வெறும் பித்தலாட்டம். அவளையே உள்ளம் எண்ணிக்கொண்டு இருப்பதால் தோன்றும் பிரமை.

இனிமேல் அவளை நினைக்கக் கூடாது. நன்றாகப் பொருள்சேர்த்துக்கொண்டு சென்று அவளுக்குக் காட்டி மகிழவேண்டும் என்று உள்ளம் துணியக் கால்கள் வேகமாக நடந்தன.

பொன்னும் மணியும், முத்தும் மாணிக்கமும் சேர்த்து, சந்தனக் கட்டிலில் உட்காரவைத்து, முத்து மாலையை மாட்டி, முல்லை மலர் தனைக் சூட்டி, கட்டி அணைத்து அவள் பவள உதட்டில் ஆயிரம் முத்தங்களை ஈந்து மகிழும் அந்த நாளை நினைந்து அவன் உள்ளம் களிநடம் புரிந்தது.

கால்கள் மறுபடியும் நடக்க சக்தி அற்று நின்று இருப்பதைக் கண்டான்.

அவன் வெட்கப்பட்டான்; இனிமேல் வேகமாக நடக்க வேண்டுமென்று எண்ணி வேகமாக நடந்தான்.

தன் காதலியை இப்பொழுது மறக்க எண்ணிச் சுற்றுப்புற இயற்கை அழகில் தன் உள்ளத்தை பறிகொடுத்து நடந்தான்.

அச்சமயத்தில் அங்கு ஒரு அருவியின் ஓரம் அழகிய வெண்மை நிறம் பொருந்திய அன்னங்கள் சில நடப்பதைக் கண்டான்.

அவன் உள்ளம் திடுக்கிட்டது.

தன் காதலியின் நடையும் அந்த அன்னத்தின் நடையும் ஒத்து இருப்பதைக் கண்டதும் அவன்மனம் பழையபடி காதலியை நினைக்கத் தொடங்கியது.

முதலில் அவன் உள்ளத்தில் தன் காதலியின் கண்கள் இரண்டு தென்பட்டன.

அந்தக் கண்கள் கருவண்டோ? அல்லது வேற்படையோ? இப்படி ஒரு சந்தேகம்.

கருவண்டின் பளபளப்பும் வேலின் கூர்மையும் ஒத்து இருப்பதையும், ஆயினும் ஆடவரை நோக்கும்போது அவள் கண்கள் வேலின் கூர்மையைவிட அதிகமான கூர்மையுடன் ஆண்களைத் தாக்குவதையும் உணர்ந்து இது வேற்படைதான் என்று துணிந்தான்.

இப்படி அவள் எழிலில் மறுபடியும் மூழ்கி நடப்பதையும் மறந்தோம் என்று உணர்ந்து அவன் வெட்கப்பட்டான்.

அவன் உள்ளத்துக்குக் கூறுகின்றான், இப்படி கண்டவைகளுக்கெல்லாம் தன் காதலியை ஒப்பிட்டு ஒப்பிட்டு, மனம் அவளை எண்ணிப்புண்பட்டு, நடப்பதையும் தவிர்த்து இப்படி நடுக் காட்டில் அவதிப்படுவதைவிட அவளைச் சென்று அடைவதே மேல்போல் உள்ளதே என்று.

மயில்கண்டால் மயிலுக்கே
  வருந்திட ஆங்கே
மான்கண்டால் மானுக்கே
  வாடி மாதர்
குயில்கண்டால் குயிலுக்கே
  குழைதி யாகில்
பொருள்வயின்போக் கொழிநெஞ்சே
  கொழுங்கண் என்னும்
அயல்கொண்ட படையாரை
  அன்னப் பேடும்
அதிசயிக்கும் நடையாளை
  அணையல் உற்றே.

இது "நந்திக்கலம்பகத்தில்" காணப்படும் ஒரு அழகுமிக்க மயக்கம் பொருந்திய காதலனின் வேதனைக் காட்சியை விளக்கும் பாட்டு.

★

சொல்

[அன்பு]

நம் எண்ணத்தைப் பிறருக்கு ஒலி வடிவில் அறிவிக்கும் மொழியே சொல் என்பது. சொல் சாதனமேயன்றி இலட்சியமன்று. கருத்தைக் கூறுவதே நம் நோக்கம். அதற்குரிய சாதனமே சொல்.

நாம் சொல்லும் சொல் நா அசைவதன்மூலம் உண்டாகிறது. ஆகவே நாம் பேசுவதற்கு மூல காரணம் எண்ணம், அதை ஒலி வடிவில் அறிவிப்பது நா.

நாம் சொல்லும் சொல் வன்மையுடையதாக இருக்க வேண்டும். அதேபோது பிறரைப் புண்படுத்தாமல் இருக்கவேண்டும். "வாள் தரும் புண்ணினும் நா தரும் புண்ணே கொடியது."

சொல்லம்பு பட்டபுண் மறையாது' இதனாலேயே வள்ளுவர்.

யாகாவா ராயினும்
  நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப்
  பட்டு.

என்று, சுருங்கிய சொல்லால் விரித்துக் கூறினார்.

சொல்லும் சொல் பயனுள்ளதாக இருக்கவேண்டும். அறிவுடையோர் பயனில்லாத சொற்களை ஒருபோதும் சொல்லமாட்டார்கள். அவர்கள் சொல்லுகின்ற ஒவ்வொரு சொலலிலும் அவர்களது அறிவின திட்பம் வெளிப்படும். பயனில்லாத சொற்களைக் கூறுபவனை மனிதன் என்றே சொல்லக்கூடாது. மனிதப் பதர் என்று கூறவேண்டும் என்று கூறிய வள்ளுவர்.

சொல்லுக சொல்லிற்
  பயனுடைய, சொல்லற்க
சொல்லிற் பயனில்லாச்
  சொல்

என்று சொல்லின் இலக்கணத்தை வரையறுக்கிறார்.

சொல்லுகின்ற சொல் இனிய சொல்லாக இருக்கவேண்டும். "இன்சொல் பேசுவதால் நாக்கு காயமுறுவதில்லையே?" என்று இன்சொல் பேச அஞ்சுபவர்களை நோக்கி ஓர் அறிஞர் கேட்கிறார்!

ஒரு மனிதனை நாம் மதிப்பிடுவதே அவனுடைய சொல்லின் மூலம்தான.

பானை கீறலா அன்று? ஒலியால் அறியலாம். அறிவாளியா அறிவிலியா? பேச்சால் அறியலாம்.

சொற்களை நாம் அளந்து உபயோகிக்க வேண்டும். கூடுமான வரையில் சுருங்கிய சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லுதல் வேண்டும். அதிகப் பேச்சு அறிவுச் சூன்யத்தையே காட்டும் என்பது ஒரு பழமொழி.

இதுபோலவே நாம் உபயோகிக்கும் சொல் பொருளுடையதாக இருக்கவேண்டும். மொழிகள் என்பவை அறிவு உபயோகிக்கும் நாணயங்களேயாகும். சர்க்காரிடத்தில் பொருளில்லையெனில் நாணயங்கள் செலாவணியாகா. அதுபோல் பொருளில்லாத மொழிகளும் பயன்படா. அறிஞர் சில மொழிகளில் பல கூறிவிடுவர், மூடர் பல மொழிகளில் சிலவே கூறுவர்.

நாம் பேசுவதைவிடக் கேட்பது தான் அதிகமாயிருக்க வேண்டும். அதற்கு சாதனம் மௌனம் ஒன்றே. மௌனத்தின் மூலம் நம் குறைகளை மறைக்க முடியும். பிறர் குறைகளை அறிய முடியும். இரண்டு காதிருந்தும் ஒரு நாவே நமக்கு இருக்கிறது. இதன் மூலம் நாம் என்ன அறியவேண்டும்? நாம் பேசுவதைவிடக் கேட்பதே அதிகமாயிருக்க வேண்டும். நாம சொல்லாத சொல் உறையிலுள்ள வாள். பேசிவிட்டால் வாளைப் பிறன் கையில் கொடுத்தது போலாகும். சொல்லாத சொல் நம்மை ஒருநாளும் தீங்கு செய்வதில்லை.

(12-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியர் பணி

ந. கோவிந்தன்

ஒரு நாட்டின் எதிர்கால வாழ்வு வளம் கொழிப்பதாகவோ அன்றி வறுமை மீதுற்றதாகவோ ஆவது அந்நாட்டின் எதிர்காலச் செல்வங்களாகிய மாணவர்களால் என்பதை நாம் நன்கறிவோம். ஆனால் அம்மாணவச் செல்வங்களைப் படைத்தளிக்கும் பொறுப்பினர் யார்? ஆசிரியரன்றோ! எல்லா வகையிலும் துவண்டு கொடுக்கும் தன்மையது சிறுவர் உள்ளம்: அத்தகு இளம் உள்ளங்களைச் செம்மை நிறைந்த பாங்கில் பக்குவப்படுத்தி நாட்டிற்கு நல்லபணி செய்ய, உலகம் நல்வழிப்போந்து உய்ய, மன்பதைக்கு உதவுவோர்கள் ஆசிரியச் சான்றோர்கள் என்பதை நாம் நெஞ்சார உணர வேண்டும். ஒரு நாட்டில், ஒரு நூற்றாண்டில் வாழும் மக்கள் உள்ள நிலை, அதுபோகும்போக்கு, அதனால் ஏற்பட்ட விளைவுகள், பொதுவாக அந்நாட்டின் நிலை ஆகியவை அதற்கு முந்திய நூற்றாண்டில் அப்பொழுதைய ஆசிரியர்கள் நல்கிய பணியினைப் பொறுத்தனவாம்.

இல்லத்தில் தாயன்பு உண்டு திளைத்த சிறுமகவு, வயது வந்ததும் கல்வி பயிலப் பள்ளிக்குச் செல்கின்றது. தாயன்பு ஒரு மகவிற்கு எங்ஙனம் இன்றியமையாததோ, எவ்வளவு எண்ணரிய வளஞ் சொரிந்து பயன்விளைக்கின்றதோ, அதுபோன்றதே பள்ளியில் அச்சிறுவனுக்கு ஆசிரியர் அன்பு. அவரது அன்பினைப் பயிருக்கு மழை எனவாரோ அவ்வாறென மொழியலாம். தாயினும் அன்பு செய்வோர் உலகினில் எவருமில்லை; அவள் அன்புத் தேக்கம். ஆனால் பள்ளியில் அதே அளவான, தரமான அன்பைப் பொழிய முயற்சிக்கின்றார் ஆசிரியர்.

பயிற்றுவதின் நுண்மையுணர்ந்து தெளிந்த ஆசிரிய நல்லார், பயிற்றுங்கால் தன்னை ஒரு தாயாக ஆக்கிக்கொள்ளுகின்றார். தன் முன்னிருக்கும் மாணவனைத் தாய் நோக்குமாறு போல நோக்குகின்றார். அந்நோக்கின் பயனாய்த் தன்னிலை முற்றிலுந் திரிந்து கண்களில் தாயருள் சுரக்க நா அன்புச் சொற்கள் பொழிய, கைகள் அணைக்கும்வழி நீள, பாடங்களைத் தெளிவுற விளக்குகின்றார். அந்நிலையில் அச்சிறுவன் செய்பிழைகள் புல்லெனப் படுகின்றன; சினஞ் சிறிதுங்கொள்ளாது, பல தடவை சொல்லவேண்டியிருப்பினும் தயங்காது சொல்லிப் புகட்டுஞ் செவ்வியபாங்கு உன்னி உன்னி வியக்கற்பாலது! மாணவனும் அவர்காட்டும் அன்பிலே மயங்கி, பன்னிப் பன்னித் தெளிவுறப் புகன்றிடும் பாடங்களில் கருத்தினை நிறுத்தி, தாயிடம் உணவுகொள்தலைப்போல ஆசிரியர் தரும் அறிவுணவை உண்ணுகின்றான். தாய் மகவிற்கு அன்புடன் சோறூட்டுங்கால், அம்மகவு அடம்பிடித்திடின் சினங்கொள்ளாது, "கண்ணே! தமிழே, மணியே!" என்று அன்புற அழைத்து, மதிமுகங்காட்டி, காக்கையைக் கூவி, கிளியினைக் கூட்டித் தான் கொண்ட பணி நிறைவு பெற இயற்கையைத் துணைக்கழைப்பாள்; குழவியின் சிந்தை இனிய காட்சிகளில் பதியுங்கால் சிறிது சிறிதாக உணவினை ஊட்டிவிடுவாள். அதுபோன்று ஆசிரியர் சிறுவன் உள்ளத்திற்கியைந்த எழில்தரு மேற்கோள் காட்டி, மாணவனின் எண்ணத்தையும் மேற்கோள்களில் நிலைக்க விட்டு, அம்மேற்கோள்வழி அறிவுக் கருத்துக்களை உள்ளத்தில் செலுத்துகின்றார். குழைசோறு முழுதும் ஊட்டிய நிலையிலே குழவியின சிறு வயிற்றைத் தடவி, எழில் வழி விழிகளைக்கண்டு, குழியிடுங் கன்னத்தைச் சுவைத்துத் தாயுள்ளம் எவ்வளவு உவக்குமோ, அவ்வண்ணமாக ஆசிரியர்தான் புகட்டி முடித்த அறிவுக் கருத்துக்களை அம்மாணவன் திரும்பச் சொல்லக்கேட்டு, தான் விளக்கியவெல்லாம் அவன் உள்ளத்தில் பதிந்துவிட்டன என்றறிந்ததும் உள்ளம் மகிழ்வினால் விம்மிப் பொங்க, உடலெல்லாம் உவகை மேலீட்டால் மயிர்க்கூச்செரிய அன்போடு தட்டிக்கொடுத்து மாணவனது நினைவு நலத்தைச் சுவைக்கின்றார்; அதன் வழி அவனுக்கு ஊக்கமூட்டுகின்றார். அந்தப் பொழுதினில் ஆசிரியர் பார்வையும் மாணவன் பார்வையும் கலந்து இருவரது உள்ளத்திலும் அன்பினைப் பாய்ச்சுகின்றன. மாணவனின் அன்புப்பார்வை ஆசிரியர் உள்ளத்தே பாய்ந்து தனியான ஒரு அன்பை, சிறப்பான ஒரு பற்றுதலைத் துளிர்க்கச் செய்கின்றது! ஆசிரியரின் அருள் நிறை அன்புப் பார்வையினை மாணவனின் உள்ளந்தாங்கமாட்டாது நிறைந்து தணிகின்றது.

அந்நிலையில்தான் பணிவென்னும் ஒழுக்கத்தின் அச்சாணி உருப்பெறுகின்றது. ஆசிரியரிடம் பணிவாக நடக்கவேண்டுமென்று சொல்லக்கேட்ட மாணவன், இந்நிலையில்தான் பணிவுணர்வைத் தானாகத் தன்பாங்கில் பெறுகின்றான். அப்பணிவின் மாண்புதான் என்னே! அந்தப் பணிவுதான், ஆசிரியரின் பழுதற்ற அன்பும், அருளும் நல்ல பொறுப்புணர்வும் ஒன்றி, ஈன்று தந்த பணிவுதான் ஆசிரியர் மாணவர் கூட்டுறவை வளர்க்கின்றது. அக் கூட்டுறவு வலுவில் குன்றம்; வளத்தில் மருதம்; வண்மையில் பாரி தன் உள்ளம் என இயம்பற்பாலது. இதுதான் ஆசிரியர் மாணவர் நற்றொடர்பின் நுட்பம்.

பொறுமைதனில் தாய் முதல்வள் எனறால், ஆசிரியர் இரண்டாவது. குறும்பும் தவறும் அளவு மீறின் ஆசிரியர் கடிந்து கொள்ளத்தான்செய்வார். ஆனல் அவர் கடிந்துகொள்ளும் முறை சேயினைத் தாய் கடிந்து கொள்வதுபோல்வதே! தவறுகள் நிறைந்துவிடின் தறுதலையாவது ஒரு தலை. தன் மகனைச் சான்றோன் என்று கேட்கத்தானே ஒரு தாய் உள்ளம் விழையும்; தன் மாணவன் எதிர்காலச் சமுதாயத்திற்கு அருந்தொண்டாற்றும் அறிஞனாகத் திகழ வேண்டுமென்றுதானே ஒவ்வொரு ஆசிரியரும் அவாவுவர். ஆகவே குற்றஞ் செய்யுங்கால கண்டித்துத் திருத்துவது ஆசிரியரின் அரும் பொறுப்பாகின்றது. அப்பொறுப்பு தனக்கல்லாது மாணவனின் நன்மைக்கே; மேலும் அது இன்றியமையாததாகும்.

நிலத்தினை உழுது பண்படுத்தி, பொறுக்கி விதைகளை விதைத்து, நீர்பாய்ச்சி, களையெடுத்து, செழிப்புற வளர்த்து பயனீட்டி இப்பாருக்கு அளிக்கும் உழவனைப் போன்றவர் ஆசிரியர்! ஆசிரியரைச் சமுதாய உழவன் எனல் சாலப் பொருத்தமாகும். உழவன் உழைப்பை நுகர்வது உலகம், மக்கள். இளம் உள்ளங்களை அறியாமையென்னும் கனல் கருக்கிவிடாமல், அன்பு கொண்டு பண்படுத்தி, ஒழுக்கமெனும் உரமிட்டு அறிவு விதைத்து; ஒன்றுக்கு நூறாகப் பயன்தரச் செய்பவர் ஆசிரியர். அந்தப் பயனை நுகர்வது மன்பதை, சமுதாயம். எனவே உழவனும், ஆசிரியரும் சமுதாயத் தொண்டர்கள். உழவினால் உலகம் வலுவுற்று இயங்குகின்றது என்பதை நாம் அறிவோம். ஆனால் அவ்வியக்கம் நேர் வழிப்பட்டு, அன்பு வழிப்பட்டு, அறிவு வழிப்பட்டு இயங்குவது ஆசிரிய நல்லாரால் என்ற பேருண்மையை நாம் மறந்து அவர்தம் இழிவு நிலை களைய முனையாதது ஏனோ? குற்றமெனும் இருள் நீக்கித் தெற்றமெனுந் தெளிவு தருதலாலேயே — அறிவொளி நல்குதலாலேயே ஆசிரியர் என்ற அருந்தமிழ்ப் பெயரிட்டழைத்தனர் தமிழ் மாந்தர். (ஆசு. குற்றம், மாசு; இரியர் போக்குவோர்) ஆசிரியத் தொண்டு செய்வோரினும் விரிந்து பரந்த உள்ளங்கொண்டோர் புவிதனில் யாருமில்லை; இருக்க முடியாது. ஆசிரியரைத் தெய்வம் என்று நாம் அழைத்து மகிழ்வது இந்தப் பொருளில் தான். ஆசிரியர் சமுதாயத்தின் சிற்பி; பொதுநலத் தொண்டர்; அன்பின் மாட்சியுணர்ந்த அண்ணல். பள்ளி மாணவர்களே தன் மக்கள், அவர்களின் இன்ப துன்பங்களே தன் இன்ப துன்பங்கள் என்று இயங்குபவர். தன் வீடு, மனைவி என்ற எண்ணமே எழுவதில்லை! அவ்வெண்ணந் துறந்த துறவிகள் அவர்கள்.

அவ்வாறு எல்லாவற்றையுந் துறந்த அருளாளர்களின் நிலையை இன்றையத் தமிழகத்தில் காணுவோம்வாரீர்! ஐயகோ! கொடுநிலை! கொடுநிலை பாரீர்! வறுமைப் பேய் பிடித்து ஆட்டி அலைக்கழிக்கின்றது அவர்களை! தங்களின் வாழ்வுத் தேவைகளை நிரப்பிக்கொள்ள வழியின்றி மிடிப்புற்று வாடிய முகத்துடன் நடமாடுகின்றனர்; அந்த நடமாட்டத்தில் உயிரில்லை. வறுமைப் பிணியால் துன்புற்றுழலும் ஆசிரியர் உலகு அருமையான சமுதாயத்தை உருவாக்க எங்ஙனம் இயலும்? ஊழியம் செய்யவேண்டும உலகளவு; ஊதியம் பெறவேண்டும் கடுகளவு என்னும் போக்கு எவ்வாறு நேர்மையின்பால் படும்? பகலவனின் திறம் விளக்கும் பாலை நிலத்தின் கண், வேலிக்கு ஆயிரங் கலம் விளைவிக்க எண்ணினும் ஒரு மேதாவி! ஆட்சிப் பீடங்களில் அமர்ந்திருப்போர்தம் போக்கு இதைப போன்றதே! ஆசிரியர் பணியை வானளாவப் புகழுகின்றனர். எல்லையே இல்லை அவர்கள் பணியின் மாட்சிக்கு என்கின்றனர்! ஆனல் அவர்தம் இழிநிலை நீக்க ஏதாவது உருப்படியான நடவடிக்கை எடுத்திருக்கின்றனரா? இல்லையே! பொதுவாக இந்தியத் துணைக்கண்டத்தின் நிலையேஇதுதான. அவர்கள் தீனிபோடாது கறக்க நினைக்கின்றனர். அதன் முடிவு அம்மாட்டின் இறுதிக் காலம் நெருங்குகிறதென்பதே! அதன் விளைவு அப்பசு வழங்கிய இனிய தீம்பாலின் பயனையே இழப்பதாகும்.

உலகில் உள்ள பெரும்பாலான நாடுகளில், செழித்துக் கொதித்த நிலையில் இலங்கும் நாடுகளில் ஆசிரியர்நிலை எவ்வாறிருக்கிறது? நம நாட்டினின்றும் அந்நாடுகள் போந்து மீண்ட நல்லறிவாளர்களின் அறிவுதுலங்கு சொற்பொழிவுகள் இதற்கு விடை கூறும். "ஆசிரியர் நிலை அந்நாடுகளில் சாலச் சிறப்புற்றிருக்கிறது. அங்குள்ள ஆட்சிப் பொறுப்பாளர் எல்லாம், தங்கள் தங்கள் நாட்டின் வாழ்வும் வளமும், வீழ்வும் வறுமையும் ஆசிரியர் பணியுடன் பேரளவில் தொடர்பு கொண்டிருக்கிறது என்பதை நன்கு உணர்ந்து, ஆசிரியர் நிலையில் கவனஞ் செலுத்திக் கல்வித் துறைக்காக நிறையச் செலவு செய்கின்றார்கள். ஆசிரியர் வாழ்வின் அளவினையும் தரத்தினையும் ஒத்ததுதான், கல்வியின் அளவும் தரமும். கல்வியின் நிலையை ஒத்துத்தான் நாட்டின் முன்னேற்றத்தின் வலுவும் செழிப்பும் என்ற உண்மையை அவர்கள் உள்ளத்திருத்தி அதன் வழி இயங்குகிறார்கள்" இது அவர்களின் உரைகளினின்றும் நாம் பெறும் செய்தியாகும்.

இவ்வாறு எண்ணிச் செயல்படும் நாடுகளின் கல்வி வளத்தில் எங்ஙனம் குறை இருக்கும்? வளமான வாழ்வு நுகரும் ஆசிரியர்கள் மாணவர்கட்கு அறிவு கொளுத்துகிறார்கள்; கருத்துக்கள் பூக்கின்றன; கலைகள் பெருகுகின்றன! ஆராய்ச்சி அறிவு செம்மையுற்றுச் சிறக்கிறது; அதனால் விளையும் பயன் சிறிதோ! புதுப் புதுக் கண்டுபிடிப்புக்கள் பல்கிப் பெருகுகின்றன. மக்களின் வாழ்வுநிலை உயர்கின்றது. மக்கள்

மக்களாக வாழும் நீர்மை மொட்டவிழ்க்கின்றது. அந்நாடு வளநாடாகின்றது. உண்டது போகக் கண்டதைப் பிற நாடுகட்குக் கொடுத்துதவும் மேம்பாடு பெற்றுத் திகழ்கிறது. பொருளியல் துறை, அறிவியல் துறை, அரசியல் துறை என எல்லாத் துறைகளிலும் தன்னிறை பெற்று வழியும் அந்நாடு, அத்துறைகளில் பின் தங்கிய நாடுகட்குக்கைம்மாறு செய்ய முன்வருகிறது. இவ்வாறு தானும் உயர்ந்து பிறரையும் உயர்த்தும் அளவிற்கு அது பெற்றிருக்கும் வளம் ஆசிரியர் பணியால் இயன்றதே யெனல் பொருந்தச் சொல்லினதாகும்.

இன்றையத் தமிழகம் அதன் சங்க கால நிலையுடன் ஒப்பிடுங்கால் மடுவிற்கும் மலைக்கும் உள்ள உறவினதாகத் தென்படுகிறது. ஏதாவது இக்காலத்தில் நல்லவை காணப்படுகின்றனவெனின், அது காலமென்னும்கொடும்புயலுக்குத் தப்பிய மரவேர்களினின்றும் துளிர்விட்ட கொழுந்துகளாகும். ஆனல் அவ்வாறு துளிர்ப்பதற்கு இயற்கையின் தண்ணருளாம் மழை எங்ஙனம் இன்றியமையாததோ அதுபோல மாண்ட தமிழகப் பண்பாட்டின் சிறு சிறு சிதறல்கள் காணப்படுவதற்கு காரணமாவார் தமிழகஆசிரியர்கள். அவர்களின் சலியாத உழைப்பே பெருமுயற்சியின் விளைவே நாம் நன்னிலை காணலாம் என்ற நம்பிக்கையைத் தருகிறது.

ஆசிரியர் யார்? அவர்கள் உழைப்பினல் கிட்டும் பயன் எவ்வளவு? அது எங்ஙனம் இன்றியமையாதது? அவர்களின் உழைப்பு எந்தெந்த நிலைகளினின்றும் அரும்பி மலர்கின்றது? அந்த மலர் சமுதாயமென்னும் இளநங்கையின் கூந்தலைச் சார்ந்து, இன் மணம் பரப்பி, அவள் அழகினைக் கூட்டிப் பண்பாடென்னும் கட்டழகனின் உள்ளத்தை எவ்வண்ணம் கொள்ளை கொள்கிறது? ஆனல் அவ்வின்றியமையாப் பணியாற்றும் தொண்டர்களின் நிலையென்ன? இந்நிலை நீடித்தால் தமிழகம் ஈடேறுமா? நாம் காண, தணியா வேட்கை கொண்டிருக்கும் சங்கத் தமிழ்ச் சமுதாயம் உருவாகுமா? அடித்தளம் வலுவாக அமைக்கப்பெற்ற கட்டிடமே உறுதியுடன் நீண்டகாலம் நிலை பெற்றிருக்கும்! அவ்வடித்தளம் போன்றதே ஆசிரியர் பணி.

இனி, அரசினர் கடமையென்ன? தமிழகத்தின் நலனில் நாட்டங் கொண்ட பேரறிஞர் பலரும் பல்வேறு வழிகளில் "ஆசிரியர் சமுதாயம் உயரவேண்டும். அதன் வாழ்க்கை வசதிகளும், வாழ்வுத் தேவைகளும் நிறைகொள வழங்கப் பெறுதல் வேண்டும். ஆட்சியாளர்கள் நாட்டின் நிலையை நன்குணர்ந்து ஆசிரியர் நிலையைத் தெளிவாகக் கருத்திற்கொண்டு உருப்படியான திட்டங்கள் போட்டு, ஆசிரியர் நலனில் உள்ளம் ஒன்றிய அக்கறை கொண்டு நிறைவேற்ற முயலவேண்டும். தங்களின் பொறுப்பை உணர்ந்து பாடுபட வேண்டும்" என்று நயந்தும், கண்டித்தும் எடுத்துரைத்து வரும் சொற்களுக்கு அரசினர் மதிப்புத் தரல் இன்றியமையாததாகும். கல்வித் துறைக்கு நிறையப் பணம் ஒதுக்கவேண்டும். ஆசிரியர் உள்ளம ஒடிந்துவிட்டால் அரசினர் எதிர்பார்க்கும் அளவு நாட்டில் முன்னேற்றம் இராது. "ஆசிரியர் தொழிலைப் போல, அரசாங்கத்தால் கேவலமாக நடத்தப்பெறும் தொழில் வேறு எதிலுமில்லை" என எனது பெருமதிப்பிற்குரிய ஆசிரியர் ஒருவர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அப்பொழுது அதுபற்றி ஒன்றும் தெளிவாகத் தெரியவில்லை. ஆனல் அது எவ்வளவு உண்மையெனபதை நான் இப்பொழுது உணர்கிறேன். அவரது சொல் பல தடவை தங்கள் இழி நிலைபற்றி அரசாங்கத்திடம் எடுத்துக் கூறி, தங்கள் நிலை உயர உதவிகோரித் தீர்மானங்கள் நிறைவேற்றி, ஒருமுறையேனும் தங்களின்பால் அவ்வருளாளர்களின் கடைக்கண் பார்வை விழும் என்று நம்பி, அந்நம்பிக்கை ஈடேறுமையால் வருத்தமேலீட்டு ஏங்கி ஏங்கி வெளிப்பட்ட பெருமூச்சின் விளக்கமேயல்லாது வேறென்ன?

ஆயினமையின், மக்களுடைய அரசாங்கம் என முழங்கும் ஆட்சியாளர்கள் மக்களின் ஒருபகுதியினராக, மக்களின் நாகரிகத்தினை உருவாக்கும் ஆசிரியர்களின் நலனில் நாட்டங்கொண்டு விரைவாக விரிவாகத் திட்டமியற்றி ஆசிரியர் நிலை உயர்த்த முனையவேண்டும். மக்கள் தலைவர்களாக இருக்கும் அறிஞர் பெருமக்களின் வேண்டுகோள்களைப் புறக்கணியாது ஏற்றுக்கொண்டு சீர்படுத்த முயல வேண்டும். நமது மாநில கல்வித் துறை யமைச்சர் திருவாளர் சுப்பிரமணியம் அவர்கள் இதற்கான வழிவகைகளை ஆராய்ந்து, வீணுக விரயமாகும் தொகையையாவது தடுத்து எடுத்து ஓரளவாவது பயன்பெறப் பாடுபட்டால் ஆசிரியர் உலகே அவரைப் போற்றும்.

★

9-ம் பக்கத் தொடர்ச்சி

மேற் கூறிய அத்தனை இலக்கணங்களோடும், கேட்டார் பிணிக்கும் பண்புகளோடும், கேளாதவரும் கேட்க விரும்பும் ஆற்றலோடும் கூறப்படுவதே சொல்வன்மை என்பது. திறனறிந்த சொல்லைச் சொல்லுதலைவிட அறமும் பொருளும சிறந்ததல்ல என்கிருர் வள்ளுவர்! இவ்வாறு சொல்வன்மைமிக்க நாவலர்களைச் சரித்திரம் பல இடங்களில் கண்டிருக்கிறது.

நாவன்மை ஒருவனுக்கு இல்லாதிருத்தல் அவனுக்கு பெரிய இழபபாகும. நா தான் மனிதனிடமுள்ள நல்ல அம்சம். கெட்ட அம்சமும் அதுவேதான். நாம் நாவின வசமானல் அதைவிடத் தீய பொருளில்லை. அது நம்வசமானல் அதைவிட உயர்ந்த பொருளில்லை.

ஒருவனுக்கு அமைந்திருக்கும் நலங்களிலெல்லாம் நா நலமே சிறந்தது, அத்தகையவனே சொல்வன்மையுடையவன். என்பது வள்ளுவர் கருத்து. வில்லை ஏராக உடைய உழவராகிய வீரருடன் பகைகொண்டாலும் கொள்ளலாம். சொல்லை ஏராக உடைய உழவராகிய அறிஞருடன் பகை கொள்ளக் கூடாது, என்று சொல்வன்மையுடையாரின் திறமையைப்பற்றி புகழ்ந்து கூறி, அது அற்றவர்களை எச்சரிக்கிருர் வள்ளுவர்.

வில்லேருழவர் பகை
கொள்ளினும் கொள்ளற்க
சொல்லேருழவர் பகை.

★

123-5: ஒரு வேதனைக்கதை!

பணமில்லை! பணமில்லை!'—என்கிற பல்லவி, காங்கிரஸ் பீடமேறிய நாள் முதல் இன்றுவரை கேட்கப்படுகிறது.

பணமில்லை! பரதவிக்கிறோம்!! — என்று உள்நாட்டில் சொல்வது மட்டுமல்ல, வெளிநாடுகளுக்கும போய், டில்லியினர் ஓலமிடுகின்றனர், திருவோடு தூக்கிக் கெஞ்சுகின்றனர்.

அமெரிக்கா உதவுமா, ருசியா ஏதாவது தருமா, ஜெர்மனி கடன் கொடுக்குமா, ஜப்பான் நல்ல மனது வைக்குமா, என்று ஒவ்வொரு நாட்டையும் அண்ணந்து பார்க்கிருர்கள் — ஆலாய்ப் பறக்கிருர்கள்.

"என்ன செய்யுமப்பா நேரு சர்க்கார்? மக்களுக்கு எவ்வளவோ செய்யவேண்டுமென்றுதான் நேருவும் படாதபாடுபடுகிருர். அணைக்கட்டுகள் இல்லை, ஆலைகள் இல்லை என்று இந்த தி. மு. க.-வினர் அலறுகிருர்களே. இது எங்கள், மனித குல மாணிக்கமாம் நேருவுக்கு மட்டும் தெரியாதா என்று நினைக்கிறீர்கள்? தெரியும். தெரிந்து என்ன செய்வது? பணமில்லையே!", என்று பரிதாபச் சிந்து பாடுவோரும் உண்டு.

பணமில்லை!—என்கிற பரிதாப நிலையை நாமும் மறுக்கவில்லை. டில்லி பீடத்திடம், போட்ட திட்டங்களை நிறைவேற்றக்கூடிய அளவுக்குப் பணமில்லாமலிருக்கலாம்.

பணமில்லாதபோது என்ன செய்யவேண்டும்? — "எமக்குத் தெரியாதா! செலவைக் குறைக்க வேண்டும். இதை உணர்ந்ததால் தான், எமது அகில உலக சோதி, சமாதானக் காவலர், சாந்த சீலர் நேரு, செலவைக் குறைக்கவேண்டும் என்று தினம் தினம் சுற்றறிக்கைகள் அனுப்புகிருர். மந்திரிகள் வசிக்கும் வீடுகளில் அதிகப்படி மின்சாரம் உபயோகிப்பது உள்பட சிக்கனம் செய்யும்படி விடுத்த வேண்டுகோளைக் கவனிக்கவில்லையோ? எந்தெந்த விதங்களில் பணத்தை மிச்சப்படுத்தி, திட்டங்களை நிறைவேற்ற முடியுமோ, அந்த வகைகளில் எல்லாம் முயற்சிக்காமலா யிருக்கிருர் நேரு", என்று கேட்போருண்டு.

உண்மைதான்! அடிக்கடி நேரு அவர்கள், சிக்கனச் சிந்து பாடுகிருர்—அப்போதுதான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு வேண்டிய பணத்தைத் திரட்ட முடியும் — வெளிநாடுகள் உதவும் என்று எதிர்பார்த்துப் பயனில்லை—தன் கையே தனக்கு உதவி என்று சரமாரியாகப் பேசுகிருர்! சண்டமாருதமெனக் கர்ச்சிக்கிருர்!!

இதோ ஒரு செய்தி :- 1956-ம் ஆண்டில் ஆயுத தளவாடங்கள் மட்டும் பிரிட்டனிடமிருந்து 47·29 கோடி ரூபாய்களுக்கு வாங்கப்பட்டது.

47 கோடி ரூபாய்க்கு 1956-ல் ஆயுத தளவாடங்கள் வாங்கப்பட்டதாம்! அதுவும் பிரிட்டனிலிருந்து!!

கோதுமையோ, இயந்திரமோ, துணியோ அல்ல வாங்கப்பட்டது —துப்பாக்கிக் குண்டுகள்! பீரங்கிகள்! போர் விமானங்கள்!!— அதுவும், ஒருகோடி இரண்டு கோடிக்கு அல்ல, 47 கோடி ரூபாய்க்கு!!

ஆயுத உற்பத்தியைக் குறைக்க வேண்டும் — போர் முயற்சிகளில் எந்த நாடும் இறங்கக்கூடாது— சமாதானமே எமது இலட்சியம்— குண்டுகளுக்கு விரயமாக்கும் பணத்தை கோதுமையும் அரிசியும் உற்பத்தியாவதற்குச் செலவழிக்கலாம—மனிதர்களை அழிக்க ஏன் முயல்கிறீர் — வாழ்விக்கப் பாடுபடலாகாதா! என்று, வானதிரப் பேசுகிறவர், நேரு. வண்ணப் புருக்களையும், சமாதானத்துக்கு அறிகுறியாகப் பறக்கவிடுகிருர்.

அகில உலக சமாதான 'நோபெல்' பரிசு யாருக்குக் கொடுக்கப்படலாம் என்று கேட்ட போது, ஸ்வீடனில், நேருவுக்கு அளிக்கப்பட வேண்டும், அதற்குரியநபர் அவரே, என்று வெளியிட்டார்களாம். அந்தளவுக்கு, சமாதானம் பற்றி, முழககமிட்டு வருகிருர்.

அப்படிப்பட்டவரது சர்க்கார், 47 கோடி ரூபாய்களை, துப்பாக்கிக்கும் பீரங்கிக்கும் கொட்டிக் கொடுத்திருக்கிறது! போர்க் கருவிகள் வாங்க, 47 கோடி ரூபாய்களைப் பிரிட்டனுக்குக் கொடுத்திருக்கிறது!!

"உன் தி. மு. க. வேலையைக் காட்டிவிட்டாயல்லவா? 1956-ம் ஆண்டில் வாங்கியது பற்றி, இப்படி அங்கலாய்க்கிருயே. 1957 வரவு செலவில், நேரு சர்க்கார், அப்படி ஏதாவது செய்ததாகக் காட்டமுடியுமா? 1956ல் செய்திருக்கலாம்! பிறகு, நிலைமை மோசமானதைக் கண்டு, நிச்சயம் எமது காங்கிரஸ் சர்க்கார் இதுபோன்ற செலவினங்களைத் தவிர்த்திருக்கும். 1957ல் தானே, செலவினங்களில் சிக்கனம் பார்க்கும்படி, தாக்கீதுகளும் நோட்டீசுகளும், அனுப்பினுர்", என்று சொல்லக் கூடும்!

தவறு செய்வது மனித இயற்கை! ஆனல், அதைத் தவறென உணர்ந்தபோது, திருத்திக் கொள்ள வேண்டும்—அவன்தான் உண்மையான மனிதன். அதுவும் நாட்டை நிர்வகிக்கும் அரசு, அப்படிச் செய்தால்தான், அரசை நம்பிவாழும் கோடிக்கணக்கான மக்களுக்கு நீதியும சுகமும் மலரச் செய்யமுடியும்.

1956ல் 47 கோடி செலவிட்ட டில்லி, பணமில்லாத நிலைமையில் அடுத்த ஆண்டு, இந்தச் செலவைக் குறைத்திருக்கும் என்றே எதிர்பார்ப்பர்! ஏனெனில், இப்போது இந்திய உபகண்டத்துக்குத் தேவையானது தோட்டாக்களல்ல—சோறு!!

பார்லிமெண்டில் கடந்த 17ந் தேதி டி. சி. எம். மேனன் என்பார், இதுபற்றிக்கேள்வியொன்று கேட்டாா. அப்போது, பாதுகாப்பிலாகாவின உதவிமந்திரியான சர்தார் சுர்ஜித் சிங் எனபார் சொன்னுர் — 1956ல் 47 கோடி செலவிட்டோம, உண்மைதான என்று!!

1957ல் அந்தச் செலவு என்ன வாயிற்று? — என்று கேட்டார், உறுப்பினர்! அமைச்சர், கலக்கம் ஏதுமின்றி பதிலளித்தார், அதிகமாயிற்று என்று!!

1956ஐ விட 1957ல் அதிகமான குண்டுகளையும், தோட்டாக்களையும், டில்லி சர்க்கார் வாங்கியிருக்கிறார்கள், பிரிட்டனிடமிருந்து; அதுவும் எவ்வளவு ரூபாய்க்குத் தெரியுமா? **123-06 கோடி ரூபாய்களுக்கு!!**

கடந்த ஆண்டைவிட, இந்த ஆண்டு 76 கோடி ரூபாய்க்கு மேல் அதிக ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள்! 1956ம் ஆண்டில் 47 கோடியாக இருந்தது, 57ல் 123 கோடியாக உயர்ந்திருக்கிறது!!

குறைந்திருக்கிறது — என்கிற சொல்லையே, எதிர்பார்ப்பர். ஏனெனில், பணமில்லை, பணமில்லை என்று பாடப்பட்டு வரும் சிந்து, அதிகம். ஆனால், நேருபண்டிதரின் சர்க்கார், போர்த் தளவாடங்களுக்கென்று 76 கோடியை அதிகமாக்கியிருக்கிறது.

எக்கட்சியினராயினுஞ் சரி, இந்த இடத்தை மட்டும், தயவு செய்து உற்று நோக்கும்படி வேண்டுகிறோம். இவ்வளவு கோடி ரூபாயை ஆயுதத் தளவாடங்களுக்கென கொட்டி அழவேண்டிய அவசியம் என்ன ஆண்டாண்டுதோறும், போன ஆண்டைவிட அதிகமாக்குமளவுக்கு என்ன ஆபத்து ஏற்பட்டிருக்கிறது இந்தியாவுக்கு? கோதுமையும் அரிசியும்தானே மக்கள் கேட்கிறார்கள்; அவர்கள் குண்டையும் துப்பாக்கியையுமா கேட்கிறார்கள்!!

123 கோடி ரூபாய்!—*ஏ, அப்பா!! என்று திடுக்கிட வைக்கிறது, நம்மை. கொஞ்சங்கூட மனம் கூசாமல், நாட்டிலே கண்ணீரும் கம்பலையுமாய் அலையும் மக்களைப் பற்றிய கவலையுமில்லாமல், கொட்டித் தொலைக்கிறார்கள். இந்த இலட்சணத்தில், பணமில்லை, பணமில்லை என்று சொல்லிக் கொண்டு திருவோடு தூக்கிக் கொண்டும் ஓடுகிறார்கள்! 'உம்' மென்று முகத்தை வைத்துக் கொண்டு, ஏமாற்றத்துடன் திரும்பியும் வருகிறார்கள்!!*

இன்னொரு செய்தி: **திட்டம் வெட்டப்படக்கூடாது என்பதற்காக நிதியமைச்சர் சுப்பிரமணியம் மிகுந்த பிரயாசை எடுத்துக்கொண்டார். ஆனால், விவசாய சம்பந்தப்பட்டவை தவிர ஏனைய திட்டங்கள் அனைத்தையும் திட்டக்குழுவினர் வெட்டி விட்டனர்.**

போர்த் தளவாடங்களுக்கென 123 கோடி ரூபாய்களை அழிக்கும் டில்லியிலிருந்துதான் இச் செய்தியும் கிடைக்கிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், எதையும் வெட்டக்கூடாது, எங்களுக்கு ஏற்கனவே அளிக்கப்பட்டதே கொஞ்சம், ஆகவே அப்படியே நிறைவேற்ற வேண்டும் என்று அண்மையில் டில்லி போயிருந்த நமது சுப்பிரமணியம் கெஞ்சினாராம்; டில்லி பீடம், ஏற்கவில்லையாம்? இதை! மறுத்துவிட்டதாம்!

சுப்பிரமணியம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், சென்னை மாநிலத்துக்கு 400-கோடியாவது ஒதுக்க வேண்டும் என்று கேட்டார் முதலில்—400-கேட்டதற்கு, "முடியாது 200-கோடி தருகிறோம்" என்றது டில்லி—பரவாயில்லை என்று சென்னை வந்து சேருவதற்குள் 200-கோடியையும் 176-கோடியாக்கிவிட்டார்கள் என்று செய்தி வந்தது--அந்த 176-கோடியாவது நிலைத்ததா என்றால், கொஞ்ச நாட்களுக்கெல்லாம் 152-கோடியாக்கி விட்டோம் என்று தகவல் வந்தது; இப்போது அந்த 152-கோடியிலும் வெட்டு வந்திருக்கிறது.

400
200
176
152

என்கிற இந்த 'தேய் பிறை'க் கணக்கிலேதான் திராவிட நாடு திராவிடருக்கே எனும் முழக்கம் புதைந்து கிடக்கிறது! தென்னாடு, முதல் 5-ஆண்டுத் திட்டத்தில் வஞ்சிக்கப்பட்ட பூமி; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது ஏதாவதுகிடைக்கும் என்றே 400-கோடி ரூபாய்க்குத் திட்டம் தீட்டினார்கள் சென்னை சர்க்கார். 400-லிருந்து 200-ஆகி, 200-லிருந்து 152-ஆகி, இப்போது இன்னும் வெட்டப்படும் கட்டத்தில் நிற்கிறது!!

இப்படி டில்லி செய்யும் என்பதால் தான், தேர்தலின்போது — நாம் சொன்னோம்—இரண்டாவது 5-ஆண்டுத் திட்டத்தில் 6000-கோடிபோய் தருவதாக டில்லி வாக்களிக்கட்டும். நாங்கள் தேர்தலில் போட்டியிடாமல் விலகிக்கொள்ளுகிறோம் என்று!

நாமறிவோம், டில்லியிலிருந்து தென்னாட்டுக்கு எப்போதும், சமநீதி கிடைக்காது என்கிற உண்மையை.

400—200—176—152 என்கிற கணக்கு உரைக்கும் இந்த உண்மையை. இந்த 152-கோடி என்கிற உறுதியைவைத்து, இந்த ஓராண்டுக்கு **35-கோடி** *ரூபாய்க்குத் திட்டம் போட்டுக்கொண்டு சென்றிருக்கிறார் நிதியமைச்சர் சுப்பிரமணியம்! இதாவது இடைக்கட்டும் என்கிற பெருமூச்சோடுதான் அவர் சென்றிருக்க வேண்டும்!! இந்த 35-கோடி ரூபாயைக் குறைத்துக்கொள்! — என்று டில்லி சொல்லிவிட்டதாம்.*

மிகுந்த பிரயாசை எடுத்துக் கொண்டாராம், சுப்பிரமணியம்.

போய்யா, போ! —என்று சொல்லிவிட்டதாம், டில்லி.

வடக்காவது! தெற்காவது!! —என்று இங்கு எக்காளமிடும் நண்பருக்கு, வேதனையும் கண்ணீரும் ஏற்பட்டு இருக்கக்கூடும், டில்லியில்.

5-கோடி ரூபாய்! — *மிகப்பெரிய தொகையல்ல, டில்லிக்கு! ஆனால் சென்னைக்கு 5-கோடிரூபாய் சாதாரணமான தொகையல்ல!*

ஆண்டுக்கு 123-கோடி ரூபாய் போர்த்தளவாடங்களுக்கு அழிக்க முடியும் டில்லியால்.

ஆண்டுக்கு கேவலம் 5-கோடி ரூபாய் கூட சென்னைக்குத் தர முடியாது டில்லியால்.

57-ஐ வெகுசுலபமாக 123-ஆக்க முடியும் டில்லியால்! 35-ஐ 40-ஆக்க மனம் வராது, 30-ஆக்குவதென்றால் ஆனந்தம் டில்லிக்கு!

இந்த அலங்கோலத்தை எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம்.

*

விற்பனையாளர்களுக்கு முக்கிய அறிவிப்பு

டிசம்பர் பட்டியல் பாக்கி முழுவதும், மலருக்குரிய தொகையும் 10—1—58 க்குள் அனுப்பாத ஏஜண்டுகளுக்கு மலர் கண்டிப்பாக அனுப்பப்பட மாட்டாதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி.

இந்தி-ஆட்சிமொழியா?!

நானும், எதிர்க் கட்சியினர் வேறு சிலரும் கலந்துகொண்ட மொழி ஆய்வுக் கமிட்டியில், இந்தி ஆட்சி மொழியாவதற்கு நான் சம்மதம் அளித்ததாகத் தெரிவிக்கும் பத்திரிக்கைச் செய்திகள் என் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டன.

தப்பர்த்தம் தரக்கூடிய வகையில் அமைந்துள்ள அத்தகைய அறிக்கைகளால் தவறான எண்ணங்கள் எழக்கூடுமாகையால், இந்தி ஆட்சி மொழி ஆவதற்கு நான் சம்மதம் அளித்துவிட்டேன் என்ற கூற்றினை, இதன் மூலம் மறுக்கிறேன்.

உண்மையைக் கவனிக்குமிடத்து, அந்தக் கமிட்டி, இந்தி, ஆட்சி மொழியாக இருக்கலாமா என்பது பற்றி விவாதித்து முடிவு எடுக்கக் கூட்டப்பட்டதல்ல.

1965-ல், ஆங்கிலத்தை நீக்கி விட்டு, இந்தியை ஆட்சி மொழி ஆக்குவதற்கான வழி வகைகளை எடுத்துமகூறும் கேர் கமிட்டி அறிக்கை பற்றி, சென்னை சர்க்கார், இந்திய சர்க்காருக்கு தமது கருத்தைத் தெரிவிக்க விரும்பினர்.

இந்த அம்சத்தைக் கவனித்து, பலரும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் ஒரு யோசனையைக் காணவே, கமிட்டி கூட்டப்பட்டது —இந்தி ஆட்சி மொழி ஆக இருப்பதா என்பதுபற்றி எமது கருத்தினை அறியவோ, ஆதரவு பெறவோ அல்ல.

அரசியல் சட்டத்தில், இந்தி ஆட்சி மொழி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது; சட்டத்தின் படி கிடைத்துள்ள இந்த நிலையை, நடைமுறைக்கு எப்படிக் கொண்டு வருவது என்பதுதான் கேர் கமிட்டியினரின் அறிக்கையின் சாரமாகும்.

அரசியல் சட்டத்தைத் தயாரித்தவர்கள், இந்தியை ஆட்சிமொழி அந்தஸ்துள்ளதாகச் செய்தது மாபெரும் தவறு என்று கருதியும், கூறியும், இந்தியைத் திணிக்கும் முயற்சியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தும், அரசியல் சட்டத்திலேயே பல திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்று வலியுறுத்தியும் வருகிற ஒரு கட்சியைச் சார்ந்தவன் நான்.

நான் கமிட்டிக்கு அழைக்கப்பட்டது, இந்த என்னுடைய கட்சியின் கொள்கையை விட்டுக் கொடுத்துவிடவோ, அல்லது அதைக் கவனியாமல் இருந்துவிடவோ, அல்ல.

கேர் கமிட்டி அறிக்கையின் விளைவாகக் கிளம்பிய பிரச்சினை குறித்துக் கருத்து அறியவே எங்கள் உதவி நாடப்பட்டது. பல்வேறு கட்சியினர், வெவ்வேறான பல கருத்துகளை, விவாதித்தான பிறகு,

ஆங்கிலம் தொடர்ந்து மிக நீண்ட காலம் ஆட்சி மொழியாக இருந்து வர வேண்டும் என்றும்;

இதற்கான முறையிலே பார்லிமெண்டு சட்ட—சம்மதம் தரவேண்டும் என்றும்—

இதனை எப்பொழுது மாற்றுவதாக இருப்பினும், மாநில சட்டசபையின் சம்மதம் பெற்றாக வேண்டும் என்றும்

இந்திய சர்க்காருக்கு எடுத்துக் கூறும் திட்டத்தைச் சென்னை சர்க்கார் தீட்டிற்று.

எல்லா எதிர்க்கட்சிகளும், ஆங்கிலம் தொடர்ந்து மிக நீண்ட காலம் (Prolonged Period) ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற கருத்துக்குச் சம்மதம் தெரிவித்தன. இந்தி ஆட்சி மொழி ஆவதற்கு நான் சம்மதம் அளிக்கவில்லை. அதிலே பொருத்தமும் இல்லை; ஏனெனில் அரசியல் சட்டம் இந்தியை ஆட்சி என்று குறிப்பிட்டிருக்கிறது; என் கட்சியும், வேறு சில கட்சிகளும் (இந்தி ஆட்சி மொழி என்று சட்டம் கூறுவதை) எதிர்த்துக் கிளர்ச்சி செய்து கொண்டு வருகின்றன.

கமிட்டியில், ஒன்றுக்கொன்று மிக வேறுபட்ட கருத்துகொண்ட கட்சிகளெல்லாம் இருந்தன. 'ஆங்கிலத்தை அகற்றியே தீர வேண்டும்-இந்தியைப் புகுத்தியே ஆகவேண்டும்' என்று உறுதியாகக் கூறிடும் பிரஜா-சோஷலிஸ்டு கட்சியும் இருந்தது; 'இந்தி எந்த முறையிலும், வடிவிலும் புகலாகாது' என்று கூறும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நானும் இருந்தேன். உடனடியாக வர இருக்கும் விபத்து குறித்து எங்கள் கருத்து அறிய விழைந்தனர்; அனைவரும் ஆங்கிலம் தொடர்ந்து நீண்ட காலம் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பதற்குச் சம்மதம் அளித்தோம்.

தத்தமது கட்சியின் கருத்துக்களைக் கொண்ட — மாறுபாடான கருத்துக்கொண்ட அறிக்கைகளையும் சர்க்கார் அறிக்கையுடன் இணைத்து அனுப்பலாமா என்று கேட்டபோது, கனம் சுப்பிரமணியம் அவர்கள், 'எந்தக் கட்சியும் அதனுடைய கொள்கையை விட்டு விட்டதாக எண்ணத் தேவையில்லை; வர இருக்கும் நெருக்கடியைச் சமாளிப்பதற்கு —கேர் கமிட்டியின் விளைவுகளைக் கவனிப்பதற்குத்தான் ஒன்றுபட்ட கருத்தை அறிகிறோம்—பெறுகிறோம்' என்று சொன்னார்.

எனவே, எல்லா எதிர்க் கட்சிகளும், ஆங்கிலம் தொடர்ந்து மிக நீண்ட காலம் ஆட்சி மொழியாக இருப்பதற்குச் சம்மதம் அளித்தன.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து, திட்டவட்டமாகக் கூறப்பட்டாகி விட்டது — (1) இந்தி ஆட்சி மொழி என்று தி. மு. க. ஏற்க மறுக்கிறது; (2) தனி அரசு காணவேண்டும் என்று பாடுபட்டு வரும் கழகமாதலால், அந்த அரசு அமையும்போது, 'அகில இந்திய பாஷை' என்ற பேச்சுக்கே, அவசியமோ அர்த்தமோ இல்லை என்று கருதுகிறது.

எனவே, தி. மு. கழகத்தையோ அதன் சார்பில் என்னையோ அழைத்து, 'இந்தியை அகில இந்திய பாஷை என்று ஏற்கச் சம்மதமா?' என்று கேட்பதிலே பொருள் இல்லை.

கேர் கமிஷன் அறிக்கையின் விளைவாகத் தோன்றி, நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்சினையை

திராவிடநாடு

பொங்கல் மலர்-1958

அணா 8

—நெருக்கடியை எவ்விதம் சமாளிப்பது என்பதுதான் கமிட்டியின் முன்பு இருந்த பணி. இதிலேதான் ஒருமித்த கருத்து தேடப்பட்டது; அடிப்படைத் தத்துவங்கள் பற்றி அல்ல.

தி. மு. கழகம் கொண்டுள்ள கொள்கைகளை நான் திட்டவட்டமாகவே தெரிவிக்க விரும்புகிறேன்—(1) இந்தி ஆட்சிமொழியாக இருத்தல் கூடாது; (2)தனித் திராவிட நாடு பெறும் நிலையை எதிர்பார்த்து இருக்கும் நாங்கள், அகில இந்தியாவுக்கு ஒரு ஆட்சிமொழி வேண்டும் என்ற தத்துவத்தையே, பொருளற்றது—தேவையற்றது என்று கருதுகிறோம்.

பத்திரிகையில் வெளிவந்த செய்திகளால், ஏதேனும் தவறான எண்ணம் ஏற்பட்டிருக்குமானால், அதனை நீக்கிட விரும்புகிறேன்.

இந்தியை ஆட்சிமொழியாக்குவதற்கு சம்மதம் தரச் சொல்லி என்னை அழைக்கவும் இல்லை; நான் சம்மதம் தரவும் இல்லை.

கேர் கமிட்டி அறிக்கையின் விளைவாகக் கிளம்பிய பிரச்சினை குறித்தே கலந்தாலோசிக்க நேரிட்டது; அதில், அனைவரும், 'ஆங்கிலமே தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்' என்று கூறினர்.

இந்தவிஷயக்தில்தான் எல்லாக் கட்சிகளும் ஒருமுகமான சம்மதம் அளித்தன.

அந்தந்தக் கட்சிகளின் அடிப்படைத் தத்துவங்கள், அந்தந்தக் கட்சிகளின் தனி உரிமை.

எங்களைக் கலந்தாலோசித்து, எமது சில கருத்துக்களை இணைத்து சென்னை சர்க்கார் ஒரு 'மனு' தயாரித்தனர்; நடந்தது அவ்வளவுதான்.

அது எல்லாக் கட்சிகளும் கூடித் தயாரித்த அறிக்கை அல்ல.

அதிலே, நாங்கள் கையெழுத்து இடவுமில்லை; அதில் காணப்படும் யாவும் எங்களுக்கு முழுக்க முழுக்க ஒத்தவை என்றும் கூறுவதற்கில்லை.

1965-க்குப் பிறகும், தொடர்ந்து நீண்டகாலம் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்பதிலேதான் பொதுவான சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

எனவே இந்தி ஆட்சி மொழியாவதற்கு நான் சம்மதம் அளித்தேன் என்று கூறுவது உண்மையைத் திரித்துக் கூறுவதாகும்.

அண்ணாதுரை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தி மொழியை ஆட்சி மொழியாக்கும் நோக்கத்தில் வானொலி. தபால்--தந்தி, படக்காட்சி, நாணய முறை, அரசாங்க அறிவிப்புகள், கல்வித் துறை போன்ற அரசாங்க நிர்வாகத்திற்குட்பட்ட எல்லா அமைப்புகளிலும் இந்தியை நேரடியாகவும், மறைமுகமாகவும் திணிக்கும் முயற்சிகளை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

திராவிடத்தில் அந்தந்தப் பகுதிகளில் தாய் மொழி ஆட்சி மொழியாகவும், ஆங்கிலம் தொடர் மொழியாகவும் இருந்திட வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்கெனவே வலியுறுத்தியிருப்பதை மீண்டும் வலியுறுத்துகிறது.

1965-ம் ஆண்டுக்குள் இந்தியை ஆட்சி மொழியாக்க முயற்சிக்கும் டெல்லி ஆட்சியாளரின் போக்கைக் கண்டித்துத் தென்னகத்திலுள்ள எல்லா கட்சிகளும், எல்லா தலைவர்களும், சென்னை அரசியலாரும் திட்ட வட்டமான கண்டனத்தைத் தெரிவித்திருந்தும், அவற்றையெல்லாம் அலட்சியப்படுத்தி, இந்தியைத் திணிகக அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளைக் கண்டிப்பதுடன், இம்முயற்சி தொடர்ந்து நடைபெறுமேயானல் அதைத் தடுத்து நிறுத்துவதற்காக இறுதிவரை போராடத் தயாராகுமாறு தென்னக மக்களை இம்மாநாடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறது.

—முன்: அண்ணாதுரை
—வழி: என். வி. நடராசன்
,, இரா. செழியன்
,, வி. பி. இராமன்
,, ஏ. கோவிந்தசாமி
எம். எல். ஏ.

★ நாஞ்சில் ★

இக்கட்டுகள் ஏராளம் வந்திடினும், முட்டுக்கட்டைகள் பல முளைத்து எழுந்தாலும், அவைகளையெல்லாம் தாண்டித் தள்ளிவிட்டுச் செல்லும் விடுதலை இயக்கம்—என்கிற முதுமொழிக்கு இலக்காக, இன்றைய தினம் வளர்ந்து வருகிறது, திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்த வளர்ச்சியைக் காட்டும் வகையில் கடந்த கிழமை நாஞ்சில் மாவட்டத்தின் மாநாடு, நாகர்கோயிலில் சீரும் சிறப்புடன் நடந்திருக்கிறது. நாட்டுக்குக் கலையையும் தன் வருவாயின் பெரும் பகுதியையும் அளித்த நல்லவராம் கலைவாணரின் நினைவையும், கொள்கைவீரன் — குன்றாத மனமுடைய சேரன் கே. வி. கே. சாமியின் அருந்தொண்டினை நினைவூட்டும் வகையிலும், அமைந்த அம்மாநாட்டுக்கு, நமது குரலை டில்லி ஏகாதிபத்தியம் உணரும் வகையில் பணியாற்றிவரும் சொல்லின் செல்வர் ஈ. வே. கி. சம்பத் தலைமை வகித்தார். படித்ததும், பட்டம் பெற்றதும் பணம் பெறவே ஒழிய வேறு எதற்குமல்ல என்று எண்ணிடுவோரைப் போலன்றி, தாயகத்தின் விடுதலைக்குப் பயன்படுத்தும் ஆர்வம் கொண்ட மதுரை டாக்டர் அருணசலம் மாநாட்டைத் திறந்துவைத்திருக்கிறார். மாணவப் பருவ முதல் கொள்கைக்குத் தன் வாழ்வை அர்ப்பணித்துவிட்ட தோழர் மனோகரன் எம். ஏ.-வின் தலைமையில், தோழர்கள் பி. சாம், பி.ஏ; பி.எல்; ஏ. இராமசாமி ஆகியோரைச் செயலாளர்களாகவும் கொண்ட வரவேற்புக் குழுவினர், சிறந்தமுறையில், மாநாட்டினை நடத்தி கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளித்திருக்கின்றனர். இசைவல்லுநர் எம்.கே.கோவிந்தராச பாகவதரின் தமிழிசையும், கழக மணிகளின் நாடக ஓவியமும், சிறப்பாக நடைபெற்றிருக்கிறது.

நாஞ்சில் மாவட்டம், நமக்கும் கேரளத்துக்குமிடையே தொடர்பு உண்டுபண்ணும் ஒரு இடத்திலிருப்பதாகும். அது, டில்லிபீடத்தின் வஞ்சனையின் காரணமாக பெற்றுள்ள இழப்புகள் பல! ஏனைய இடங்களைப் போலவே தொழில் துறையிலும், ஏனைய வகைகளிலும், மிகவும் பிற்போக்கான நிலையிலிருப்பதாகும். ஆனால், தமிழர்களுக்கே உரித்தான நல் மனதும், வீர உருவும் பெற்று விளங்கும் நல்லவர்களும், வல்லவர்களும் உலவும் மாவட்டமாகும் அது. அங்கே, வளர்ந்து வரும், நமது குரல் கண்டு மகிழ்கிறோம்! குரல், ஒவ்வொரு குடிலுக்கும் புகவும்-புகாத மனந்தோறும் புகவுமான வகையில், நமது தோழர்கள் பணிபுரிவார்கள் என்கிற நம்பிக்கையையும் மாநாடு, நமக்களிக்கிறது!!

நம்பிக்கை வளரட்டும், நாஞ்சில் பெருமை பெறட்டும், நாடு புதுவாழ்வு பெறட்டும், என்று நாஞ்சில் மாவட்ட கழகத்தினருக்கும், கொள்கை வீரர்களுக்கும், நமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பொதுச் செயலாளர் வாழ்த்து

இன்று பொங்கல் விழா! தமிழகம் முழுவதும் திருவிழாக் கோலம் பூண்டு திகழும்!

தமிழர்களின் இல்லங்கள் தோறும் பொங்கல் பொங்க, அவர்களின் உள்ளங்கள் தோறும் இன்பம் பொங்கும்!

பொங்கல் விழா, அறுவடைத் திருவிழாவாகும். மனிதன் முதன் முதல் கண்டுபிடித்த விழாவும், கொண்டாடிய விழாவும் உணவைப் பொங்கி உண்டு களித்த திருவிழாவே யாகும். உலகம் முழுவதும் போற்றிக் கொண்டாடப் பெறும் அறுவடை விழா, தமிழகத்தில் தொன்றுதொட்டுச் சீரோடும் சிறப்போடும் பொங்கல் விழா என்ற பெயரில் வழங்கி வருகிறது.

பொங்கல் விழாத்தான் தமிழர்க்குரிய ஒரு பெரும் விழாவாகத் திகழ்ந்து, புதுமைகொள் விழாவாகவும், புத்தாண்டு விழாவாகவும், வேடிக்கை விழாவாகவும், விளையாட்டு விழாவாகவும், கவின் கலை விழாவாகவும், கருத்தளிக்கும் விழாவாகவும் காட்சியளித்து வருகிறது.

தமிழகம்—திராவிடம், வாழ வேண்டிய வகையில் இல்லாமல், வட நாட்டுக்கு அடிமைப்பட்டு, வளம் குன்றி, அல்லலுற்று, இழிநிலையில் வைக்கப்பட நேரிடினும் தமிழர்கள் பொங்கல் விழாவைப் பொலிவோடும் வலிவோடும் போற்றிக் கொண்டாடத் தயங்குவதேயில்லை. தொல்லை துயரங்களுக்கிடையே பொங்கல் விழா பொலிவோடு கொண்டாடப் பெறுகிறது என்றால், திராவிடம்—தமிழகம் விடுதலை பெற்று, தன்னாட்சி நிறுவி, வளம் பல பெற்று, நலம் பல எய்தி, ஈடும் எடுப்பும் அற்று, ஓங்கு புகழ் எய்தி உயர்ந்து விளங்கும்போது எப்படிப்பட்ட முறையில் பொங்கல் விழா நடைபெறும் என்பதை நாமே எண்ணிப் பார்த்து இறும்பூதெய்தலாம். அந்த நாளை நாம் நம்பிக்கையோடும், ஆர்வத்தோடும்' விரைவில் எதிர்பார்ப்போமாக!

பொங்கல் நாளில் நம் சிந்தையை மணக்கவைக்க "திராவிடநாடு" வண்ண அழகோடும், கருத்து வளத்தோடும் நம் கைகளில் வந்து தவழ்கின்றது!

"வாழ்க "திராவிட நாடு!" வளர்க அதன் புகழ்! வெல்க அதன் தொண்டு!" என்று நாமெல்லாம் வாழ்த்துவோமாக!

என் உள்ளங்கனிந்த பொங்கல் வாழ்த்துகளைத் "திராவிட நாடு" மூலம் திராவிடப் பெருங்குடி மக்கள் அனைவருக்கும் உவகையோடு தெரிவித்துக்கொள்கிறேன்!!

இரா. நெடுஞ்செழியன்.

கொட்டடி எண்-9

முடுகு முரசொலி
முடுகு முழவொலி
முடுகு முருடொலி
முடிவிலாக்
கடுகு பறையொலி
கடுகு கலமொலி
கனிவெழாத்
தொடுகு குழலொலி
தொடுகு குரலொலி
தொடுகு துதியொலி
தொடுதலாற்
படுகு முகிலொலி
படுகு கடலொலி
படுதலில் மணமாயதே!

உடன்பிறந்தோரே! தமிழகத்தைக் காட்டுகிறார் கவி! ஆங்கு எழும் ஒலிகளைக் கேட்கச் சொல்கிறார்.

இன்றையத் தமிழகத்தில் நித்தநித்தம் கேட்டிடக் கிளம்பிடும் 'ஒலி', அனைவர் உள்ளத்தையும் வாட்டுவதாக உளது. ஒரோவழி, பழந் தமிழகத்தைப் புலவர் பெருமக்கள் காட்டிடக் காண்பது, பயனற்றதாகிவிடாது; பெருமூச்சும் புன்னகையும் கலந்திடும் ஓர் நிலை தரும்.

அந்நிலையில் தானே, உள்ளோம்! இருந்ததையும், இனிக் காண விழைவதையும் எண்ணிடுங்கால புன்னகை; இருப்பதையும் இழப்பதையும் எண்ணிடும் போதோ, பெருமூச்சு!

பொங்கற் புது நாள், என்றுவரும் என்று வரும், என்று ஆவலுடன் வரவேற்கும் நிலையுடையார், அதிகம் இல்லை; வருமே! என்று அஞ்சுவோரின் தொகையே அதிகம்; எனினும் எப்பாடு பட்டேனும் எவ்வளவு தொல்லையைத் தூரத்தியபடியேனும், தமிழர் உளமெலாம் மகிழ்ச்சிபொங்கக் கொண்டாடிக் களித்திடுவது, இந்தத் திருநாளைத் தான்!

இந்தத் திருநாள், இவ்வாண்டு, "இரத்தப் பொங்கலோ?" என்று கூறத்தக்க வகையிலே, நடைபெற்ற அடக்குமுறை அலங்கோலத்தை, நாடு கண்டு, நடுக்கம் கொண்டுள்ள நேரத்திலே வந்துளது.

நாலாயிரவருக்குமேல் எனலாம், நாடாள்வோரால், வேட்டையாடப்பட்டவர்கள்.

ஆயிரவருக்கு இருக்கும் என்கின்றனர், அடிபட்டோர், படுகாயமுற்றோர்.

சிறை சென்றோரின் தொகை கணித்திட இயலவில்லை.

வழக்குகள் பல, வாய்பிளந்தவண்ணம் உள்ளன.

இவற்றினுக்கிடையே, பொங்கற் புதுநாள் வருகிறது—எங்ஙனம் நாம் மகிழ்ச்சி அடைவது? கண்ணீர் பெருக்கியும், செந்நீர் சிந்தியும் செந்தமிழ் நாட்டார் இருக்கையிலே ஐயயோ! அம்மவோ! என்றலறி, கை உடைந்தது கால் முறிந்தது, துவைத்துவிட்டனர், தூரத்தித் தாக்கினர், எலும்பு நொறுங்கிற்று, இரத்தம் கொட்டிற்று, என்றெலாம், பதறிக் கதறிப் பலரும் இருந்திடும் வேளையில், "பொங்கலோ பொங்கல்!" என்று கூறிக் கொண்டாட நாவும் எழாதே, என்றெண்ணி நானிருந்தேன்.

எனினும், நாள்பலவில் திருகாணுதிருக்கிறோம், விழா பலவும் வீணுட்டம் என வெறுத்தொதுக்கி, வேண்டாம் வெற்றுட்டம் என்றே கூறிவிட்டோம், ஆண்டுக்கோர் நாள், அருமை மிகு பொன்னுள், பொங்கற் புது நாள், புது வாழ்வு மலரும் நாள், என்றே இதனை நாம், நன்றெனக் கொண்டாடி வருதல், நாடு கண்ட முறை அல்லவோ, என்றெண்ணி எப்படியும் விழாவினை நாம் ஏற்றமுடன் நடாத்துதல்தான், அடிப்போம் குடல் அறுப்போம், என்றே ஆர்ப்பரிக்கும் ஆணவக்காரருக்கும் அரும் பாடம் தானளிக்கும், என்று உறுதி கொண்டு, ஏற்புடைய விழாவினை எவ்விதத்தும் நடத்துதலே சால் புடைத்து என்று கண்டோம்.

இந்த நிலைகூட வந்திடுமோ, வாராதோ, என்று எண்ணிடும் வகை ஒன்றும், என்னையும் என்போன்ற நமதருமைத் தோழரையும், வந்து கைப்பற்றிற்று.

சிறையில் சென்றிருந்தோம்; சில நாட்கள்!

விரைவிலே வெளிவருவோம் என்ற நிலை அல்ல அது.

இந்த ஆண்டு பொங்கற் புதுநாள், உடன் பிறந்தோரே! உம்மிடமெல்லாம் அளவளாவும் வாய்ப்புக்கிடைக்குமோ மறுக்கப்படுமோஎன்ற ஐயப்பாடு என்னை வாட்டிக்கொண்டிருந்த நிலையில், சென்ற கிழமை, நான் 9-ம் எண்ணுள்ள கொட்டடியில் அடைபட்டுக்கிடந்தேன்.

துளியும் எதிர்பாராத நிகழ்ச்சி—அதிலேயும் ஒரு வேடிக்கை இழைந்திருந்தது. அதே 9-ம் எண்ணுள்ள கொட்டடியில், நான் இருபதாண்டுகளுக்கு முன்பு ஒருமுறை அடைக்கப்பட்டிருந்தேன். இருபதாண்டுகள் உருண்டோடிவிட்டன! இந்த இருபதாண்டுகளுக்குள், நாட்டிலே, உலகிலே, என்மன நிலையிலே, என்னென்ன மாறுதல்கள்! எத்துணை வளர்ச்சி!

திட்டமிட்டு நடத்தப்படுவதுபோல, அதே கொட்டடிக்குள், இருபதாண்டுகளுக்குப் பிறகு, நான் சென்றேன்!!

அப்போது — இருபதாண்டுகளுக்கு முன்பு — 1938-ல் நான் ஒரு நாள் 'அந்தி சாயும்' நேரத்தில் அங்கு இழுத்துச் செல்லப்பட்டேன். கட்டாய இந்தியை எதிர்த்து நடத்தப்பட்ட கிளர்ச்சியில், நான் 'மறியலை'த் தூண்டிப் பேசியதாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டேன். வழக்கு விசாரணைக்காக, என்னை அந்தக் கொட்டடியில் அடைத்து வைத்தார்கள். இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியிலே 'பிடிக்கப்பட்ட' நாற்றுக்கணக்கானவர்கள், சென்னை மத்திய சிறையில் இருந்தனர். என்னை மட்டும், தனியாக, அழைத்துக்கொண்டு போனார்கள் — 9-ம் எண் கொட்டடிக்கு—சைதாப்பேட்டை சப்ஜெயிலில்!!

அதே சிறை! அதே கொட்டடி! அப்போது, உள்ளே பூராவும் 'கருப்பு' சாயம் பூசப்பட்டிருந்தது! —இப்போது 'வெள்ளை' அடிக்கப்பட்டிருக்கிறது!

அறை மட்டுமா? நானேகூடத்தான்!! அப்போது கருத்த மீசை! இன்று வெளுத்துக் கிடக்கிறது! அப்போது காளை! கல்லூரி முலாம் கலையாத பருவம்! இப்போது, கட்டுத்தளர்ந்து, கல்லூரி முலாம் குலைந்து, 'பட்டிக்காட்டான்' என்பார்களே, அந்த 'உருவம்' பெற்றுவிட்டிருக்கிறேன். அப்போது 'சிறை' என்றால், ஏதோ ஓர் இனம் அறியாப் பயம்! இப்போது? சிறையிலிருப்பதற்கும் வெளியில் இருப்பதற்கும் அதிக மாறுபாடு காணமுடியாத, மனப்பக்குவம் பெற்றுவிட்டேனல்லவா? அப்போது, நான், தனியாகச் சென்றேன்! இப்போது, என்னுடன் எழுபது தோழர்கள்! அப்போது, நான் பெரியாரின் 'புதிய கண்டுபிடிப்பு'!! இப்போதோ பெரியாருக்குத்தான் என் பெயர் என்றாலே கசப்பாமே!!

அந்திசாயும் வேளையிலே, அன்று, உள்ளே என்னை அழைத்துச் சென்ற போலீஸ்காரர், சிறைக் 'காவலர்' முன் நிறுத்தினர்.

முதியவர்! நாட்டு நடப்புப்பற்றி அதிகம் ஏதும் அறியாதவர்—அறிந்துகொள்ள வேண்டுமென்ற நினைப்பும் கொள்ளாதவர்.

இப்போது, சைதாப்பேட்டை 'சப்-ஜெயில்' உள்ளே, நான் அழைத்துச் செல்லப்பட்டபோது, என் மனக்கண் முன்னால், அந்த முதியவர் தெரிந்தார்; அவர் 'உரையாடல்' ஒலித்தது!

ஒரு 'உம்', போட்டபடி என்னை ஏற இறங்கப் பார்த்தார் அந்த முதியவர்!

சிறை என்றால் இப்படித்தான் பார்ப்பது வாடிக்கைபோலிருக்கிறது, என்று எண்ணிக்கொண்டேன். நாமாகப் பேசுவது கூடாது — அது ஒருவேளை, சிறையிலே, குற்றமென்று கருதப்படக்கூடும்; நமக்கேன் வீண்தொல்லை என்று நினைத்துக்கொண்டு, சிலையாக நின்றேன். முதியவர், சிரிக்கவில்லை—ஆனால் புன்னகைக் கோடுகள் முகத்திலே காணப்பட்டன.

"மணி ஆறுக்கு மேலாகிவிட்டது! இந்த நேரத்திலே, வந்தால் சோறு ஏது" என்றார் சிறைக் காவலர்.

நான் சோறு கேட்டுத் தொல்லை தருவேன் என்று எண்ணிக்கொண்டார்போலும்.

நானோ, சோர்ந்துகிடந்தேன்; ஓயாத பயணம்; பலநாட்களாக, இன்று பிடித்துவிடுவார்கள், இதோ வருகிறார்கள், அதோ 'வாரண்டு' — என்றெல்லாம் பலர் கூறக் கேட்டுக் கேட்டு, மனக் குடைச்சல் ஏற்பட்டிருந்தது. சிறைக்கு! — என்ற செய்தி, எனக்கு ஒருவகையில், செந்தேனாகிவிட்டது—ஏனெனில், என்ன செய்வார்களோ? எப்போது வருவார்களோ? என்றெல்லாம் எண்ணி எண்ணி, மனதைப் புண்ணாக்கிக் கொண்டிருந்தேனல்லவா? அந்தத்தொல்லை தீர்ந்தது—சிறை! என்ற செய்தி, செந்தேனாயிற்று. எனவே, 'சோறு' கிடைக்காவிட்டால், என்ன செய்வது என்று எண்ணும் நிலையோ, ஏங்கும் நிலையோ இல்லை!

ஒரு 'அத்தியாயம்' முடிந்தது!—என்ற திருப்தி.

சிறைக் காவலரிடம், கைதிகள், 'சோறு' கேட்டுத் தொல்லை தருவது, வாடிக்கையாக இருந்திருக்க வேண்டும்; எனவே தான், "ஆறுமணிக்குமேல் வந்ததால், இன்று சோறு இல்லை!" என்ற செய்தியை, விளக்கமளிக்கும் முறையில், சிறைக்குக் காவலராக இருந்த முதியவர் கூறினார்.

அடக்க ஒடுக்கத்துடன் அவர் எதிரே, நின்ற என்னைக் கண்டதும், அவருக்கே ஒரு 'பரிவு' ஏற்பட்டிருக்கும் என்று எண்ணுகிறேன்; எனவேதான், சோறு இல்லை! என்று கூறியதுடன், ஒரு வாழைப் பழம் தருகிறேன் — ஒரு பொட்டலம் தின்பண்டம் தருகிறேன்—என்றார். அவர் பரிவுக்கு என் மகிழ்ச்சியைத் தெரிவிக்க வேண்டுமல்லவா! பற்களை வெளியே தெரியச் செய்தேன்! காவிபடிந்திருப்பது கண்டார்—சிறிதளவு கண்டிப்புடன், 'வெற்றிலை கிற்றிலை' எதுவும் போடக்கூடாது — கிடைக்காது — என்றார்!

மேற்கொண்டு, 'உத்தரவுகள்' மளமளவென்று புறப்பட்டன.

கிட்டே, வா! துணியை உதறு! சோக்காயைக் கழற்று! அரைஞாணை அறுத்தெறி !

ஒழுங்காக, பரிசோதனைக்கு உட்பட்டேன்.

மெல்லிய குரலிற் கேட்டார், "ஏதாவது அபினி கிபினி, கஞ்சா கிஞ்சா, பீடி கீடி, இருக்கா?"

"அதெல்லாம் கிடையாதய்யா! அப்படிப்பட்ட பழக்கமெல்லாம் கிடையாது."

"ஆமாம்! இங்கே வருகிற எந்தப் பயதான், அந்தப் பழக்கமெல்லாம் இருப்பதாக ஒப்புக் கொள்கிறான்"

"நான் அப்படிப்பட்டவனல்ல"

"நீ பெரிய யோக்கியன்தான் — சரி—அதோ, பார் மூலையில்; சட்டிகள்; இரண்டு எடுத்துக்கொள்; ஒன்று குடிக்கத் தண்ணீர் வைத்துக் கொள்ள; மற்றொன்று இரவிலே சிறுநீர் கழிக்க......... நிற்காதே...... எடுத்துக் கொண்டு போய் அறையிலே, வைத்துக் கொள்; கம்பளி இருக்கும், விரித்துக் கொள்; தொந்தரவு கொடுக்காமல் படுத்துக் கொள்.!"

படுத்துக்கொண்டேன்! அந்தக் கொட்டடிதான், 9-ம் எண்! அதே கொட்டடிதான், இந்த ஜனவரித் திங்கள் நாலாம் நாளில்!

இம்முறை, என்னுடன், நாவலர், அவர் தம்பி, நடராசன், அன்பழகன்!!—அதே கொட்டடியில்.

இதிலென்ன பெருமை! — என்று கூட, அவர்கள் எண்ணிக் கொண்டிருந்திருப்பார்கள்; நான் அந்தக் கொட்டடியைக் காட்டி, இதோ, என் அறை! இருபதாண்டுகளுக்கு முன்பு, நான் இருந்த இடம்! மீண்டும் இங்கு வந்திருக்கிறேன்',—என்று சொன்னது கேட்டு.

இருபதாண்டுகளில், நாட்டிலே ஏற்பட்டிருக்கும் மாறுதலை விளக்கிட வேறெதுவும் காட்டத் தேவை இல்லை; அன்று, சிறைக் காவலர், அடைந்த திகைப்பையும், இன்று எங்கு உள்ள சிறைக்காவலராயினும், கொண்டுள்ள தெளிவையும் ஒப்பிட்டாலே போதும்.

அன்று, உள்ளே சென்று, கம்பளியை விரித்துக் கொண்டு, 'ஒழுங்காக' நான் படுத்தேன்; பக்கத்து அறைகளிலே, 'கைதிகள்' கானம் பாடினர், கைத்தாளமிட்டனர், சிறைக்காவலரை நையாண்டி செய்தனர்— எல்லாம் எரிச்சலூட்டும் முறையில். நான் இருந்த நிலை கண்டு, அந்தக் காவலருக்கே, ஒரு வியப்பு!

அருகே வந்தார் — கம்பியைப் பிடித்தபடி, "ஏன் வந்திருக்கிறாய்?" என்று கேட்டார். "இந்தி எதிர்ப்பு!" என்று சற்றுக் கெம்பீரமாகச் சொன்னேன்!! முகத்தில் அறைந்ததுபோலப் பதில் பிறந்தது, "அப்படின்னா?" என்று கேட்டாரே, காவலர்!!

துக்கம் துளைத்தது! வேதனை பிய்த்தது! வெட்கம் கொட்டிற்று! கோபம்கூட, மெள்ள மெள்ளக் கொப்பளித்தது!

தமிழ் நாடெல்லாம், சுற்றிச் சுற்றிப் பேசி வருகிறோம். இந்தி ஆதரவாளர் காட்டும் காரணங்களை எல்லாம் சுக்கு நூறாக்கிவிடுகிறோம். நாகையில் தஞ்சையில், அய்யம்பேட்டையில் ஆற்காட்டில், வேலூரில் சூலூரில்—காட்டூரில், மோட்டூரில், நெல்லையில் தில்லையில், சென்னையில் கோவையில், எங்கும் 'ஈரோடு செய்தியை'ப் பரப்பி வருகிறோம்—சென்னைக்கு அருகே உள்ள சைதையில், இந்தி எதிர்ப்பு என்றால் என்ன? என்று கேட்கிறாரே, என்பதை எண்ணியபோதே, நெஞ்சம் 'பகீர்' என்றது!

கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு —என்பார்களே; சுற்றியதன் பலன் சைதை வரை கூட எட்டவில்லையே! அதுவாகவன்றோ இது இருக்கிறது. செச்சே! இவ்வளவுதானா, நமது 'பிரசாரம்'? இந்தச் சிறைக் காவலருக்குக்கூடச் 'சேதி' எட்டவில்லை; நாமோ, நாள் தவறாமல் பேசுகிறோம்!!— என்று எண்ணி வெட்கப்பட்டேன்.

இந்தி—அதனை ஏன் எதிர்க்கிறோம் என்பதற்கான காரணங்கள், இவைகளை விளக்குவது எளிதல்ல; அவ்வளவு மூடுபனி படர்ந்திருக்கக் கண்டேன்; எனவே இயலாததை முயற்சிக்க வேண்டாமென்று தீர்மானித்து, சிறைக் காவலர், எளிதிலே, புரிந்துகொள்ளக்கூடிய முறையில் பேசினேன்.

> "சர்க்காருக்கு விரோதமான காரியம் செய்ததற்காகக் கைது செய்திருக்கிறார்கள்,"

என்று சொன்னேன்; அவர் விளக்கம் கேட்கவில்லை; புரிந்ததாகத் தெரிவித்தார். ஒரு பத்து நாட்களுக்குப் பிறகுதான், அவர், விளக்கம் பெற்றார். அது, இருபதாண்டுகளுக்கு முன்பு! இப்போது? ஒவ்வொரு அதிகாரியும் தமது மகனை 'நமது' 'வலையில்' விழாது தடுத்திட வேண்டுமே, என்றல்லவா, தவியாய்த் தவிக்கிறார்கள். நமது நோக்கம், எங்கும் நிறைநாதமாகி விட்டிருக்கும் நேரமல்லவா?

எனினும், இருபதாண்டுகளுக்கு முன்பு, நான், எந்தச், சைதாப்பேட்டை சப் - ஜெயிலில், சிறை வைக்கப்பட்டேனோ, அதே இடத்தில், அதே 9-ம் எண் கொட்டடியில், கொண்டுபோய்ப் பூட்டப் பட்டேன்!!

எனக்கு, சிரிப்புப் பீறிட்டுக்கொண்டு வந்தது. "சம்பத்து!" என்றேன். "என்னண்ணே!" என்றான்! "ஒரு வேடிக்கை பார். இப்படி, சப்-ஜெயிலிலும், ஜெயிலிலும் அடைபட்டுக் கிடந்தவர்கள், எம். எல். ஏ.-க்கள் ஆனார்கள், எம். பி.-க்கள் ஆனார்கள்; ஆனால் நாமோ, எம். எல். ஏ., எம். பி. - எல்லாம் ஆன பிறகும், சப் - ஜெயிலில் தள்ளப்பட்டிருக்கிறோம்" என்றேன்.

என்னுடன், இரண்டு எம். பி. - க்கள்—சம்பத்து —தர்மலிங்கம்; ஒரு டஜன் எம். எல். ஏ. - க்கள்! பல கவுன்சிலர்கள்! பல வணிகர்கள்! பல பட்டதாரிகள்!! எல்லோரும், சப்-ஜெயிலில்தான்!! சப்-ஜெயிலில், சாதாரணக் கைதிகளாக! சாதாரணக் கைதி என்றால், சிறை விதியின்படி, 4 அவுன்சு அரிசி; 4 அவுன்சு கேழ்வரகு, 4 அவுன்சு காய் கறி! இவைகளைக் கேட்டுப் பெறவும், கடப்பைக் கல்லில், எரிச்சலூட்டும் கம்பளியை விரித்துப் படுக்கவும், ஒரு மூலையில், 'மூத்திரச் சட்டி' உடனிருக்க, உள்ளே உறங்கவும், 'உரிமை' பெற்றவர்கள்!!

எம். எல். ஏ. - க்களுக்கு, சட்டசபை நடைபெறும் நாட்களில், 'படிச் செலவு' — ஒரு நாளைக்கு — 12 - ரூபாய் தருகிறார்கள்!! எம். பி. - க்களுக்கு இதைவிட அதிகம்!!

இவர்கள் யாவரும், சைதை சப்-ஜெயிலில், 'மூத்திரச் சட்டியை' மூலையில் வைத்துக்கொண்டு, கம்பளிமீது படுத்து உறங்கும், 'கைதிகள்' ஆக்கப்பட்டனர்.

'கோடை' கொளுத்தும்போது, சட்டசபையைச் சென்னையில், நடத்தினால், தாங்கமாட்டார்கள், எனவே 'ஊட்டி' சென்று கொலு இருக்கவேண்டுமென்று, காங்கிரஸ் சர்க்கார், எங்களிடம் பேசுகிறது, சைதைச் சிறையில், கேழ்வரகுக் கஞ்சியும் கம்பளியும், மண் சட்டியும், எங்களுக்கு!!

சென்னை மத்திய சிறையில், 'வகுப்புகள்' உண்டு. —நாங்கள் வகுப்புபேதம் ஒழியவேண்டும் என்று கூறுகிறோம் அல்லவா! அதனால், இருப்பதிலேயே, எது கீழ்த்தர வகுப்போ, அதிலே தள்ளி, அழகு பார்த்தனர் போலும்.

பரவாயில்லை! அதனால், எங்கள் இலட்சியம் பட்டுப்போய் விடாது, உடல் கெட்டாலும், உள்ளம் பழுதுபட்டு விடாது! கோடிக்கணக்கான மக்கள், இந்த 'அளவு' வாழ்க்கைத் தரமும் பெறமுடியாது வேதனைப்படும், நாடல்லவா இது! நாட்டினை இந்த நிலையில் வைத்திருக்கும் நாயகர்கள், எங்களை மிகக் கேவலமான வகுப்பில் தள்ளியதில், ஆச்சரியப்படவோ, ஆயாசப்படவோ தேவையில்லைதான்!

'சைதை'ச் சிறையிலாவது, இரவில், அறையில், சிறுநீர் கழித்திடச் 'சட்டி' தந்தனர்; அங்குகொண்டு செல்லு முன்னம், நாங்கள் அடையாறு போலீஸ் லாக்கப்பில் அல்லவா, தள்ளிப்பூட்டப்பட்டிருந்தோம்; அங்கு, இந்தக் கம்பளியும் கிடையாது, சட்டியும் இல்லை; மேல் துண்டை உதறிப்போட்டுப் படுத்துக் கொண்டு உறங்கினோம், என்றல்லவா, எண்ணிக் கொள்கிறீர்கள்; நாங்கள் எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள் ஆயிற்றே, 17 இலட்சம் வாக்காளர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான கழகத்தவராயிற்றே, எங்களை அந்தக் கேவலத்துக்கா, ஆளாகவிடுவார்கள்; மேல் துண்டுகளை ஒன்றுவிடாமல், எடுத்து வைத்துக் கொண்டனர்!! வெறும் கல்லிலேதான் படுத்தோம்!!

அமைச்சர் பக்தவத்சலம், எங்களைச் சாடினார்— பொறுப்பற்றவர்கள், போக்கிரிகள், என்பதாகவெல்லாம். சீறுமிவும் வன்செயலும் கண்டிக்க, நாம தயங்கோம்; கயவர் செயலெல்லாம் கழகத்தைக் காய்வதற்குப் பயன்படுத்தல் முறையல்ல.

எங்களை நாடு அறியும்; நல்லோர் எமது நோக்கம் அறிவர்; ஆனால், எங்களை இந்த ஆட்சியாளர் நடத்தியதை, நாடு அறியாதல்லவா? அதற்காக, 'அடையாறு' சம்பவம் கூறினேன்!! வேறு, யாரையும் குறைகூற அல்ல.

நடுநிசி! நா வரண்ட நிலையில், தர்மலிங்கம் எம்.பி. தண்ணீர் கேட்டார்; தர இயலாத போலீஸ்காரர், கண்ணீரைச் சொரிந்தார்!!

அடையாற்று லாக்கப்புக்கு, சைதை சப்-ஜெயில், 'அரண்மனை' போலத்தானே!! மூத்திரச் சட்டியாவது, தந்தார்கள்! லாக்கப்பில், அறையில் ஒரு மூலையைத்தான் காட்டினார்கள்!

நாங்கள்தான், சட்டசபையில் உட்கார்ந்து, சட்டங்கள் பற்றிப் பேசுகிறோம், திட்டங்களைக் குறித்து விவாதிக்கிறோம்!!

எங்களைப் போட்டடைத்ததோ, சாதாரணக் கைதிகள் தங்கிடும், கொட்டடியில்தான்.

எனினும், அந்த 9-ம் எண் கொட்டடியில், நாங்கள் தங்கி இருந்தோமே தவிர, எங்கள் எண்ணம், சிறகடித்துக்கொண்டு தமிழகத்தையே ஒரு சுற்றுச் சுற்றிவிட்டது!

கழகம் அடைந்துள்ள வளர்ச்சியைக் கண்டறிய இயலாதார், எம்மைக் கேவலமாக நடத்துகின்றனர்; ஆனால், எமது கொள்கையின் நேர்த்தியை அறிந்து, கொண்டாடிப் போற்றுபவரின் தொகையோ, வளருகிறது, வளருகிறது, வளர்ந்த வண்ணம் இருக்கிறது —என்பதை எண்ணிடும்போதே, அந்த இருட்டறையே, ஒளிப்பிழம்பாகத் தெரிந்தது!

தண்ணீர் கேட்கிறோம், தர மறுக்கிறார்கள்! இவர்கள் அறியார், நாங்கள் சிறைப்பட்டோம் என்ற செய்திகேட்டு, கண்ணீர் உகுத்தோரின் தொகையை!!

பெற்றவர் காட்டிடும் பரிவினும் மிக்கதான அன்புகாட்டி, உறவுகாட்டி, உற்சாகமூட்டி, நம்மை ஆதரிப்போர், 'ஆலெனத் தழைத்து, அறுகுபோல் வேர்விட்டு, வளர்க, வளர்க! என வாழ்த்துவோர், எண்ணற்றவர்', என்பதனை அறிந்துகொள்ளும் கண்ணற்றவர்கள், கஞ்சிக் கலயத்தை எமது கரத்தினில் தருகின்றனர்; கேவலம் என்று எண்ணிக் கவலைப்படுவோம்!!

தமிழகம் தாழ்நிலை நீக்கிக்கொண்டு, தன்மானம் பெற்று வாழ்ந்திட உழைத்துவரும் நமது கழகத்தின் மாண்பு கண்டு! இதனை உணர்ந்து உவகை பூத்திடும் உளத்தினராகிப் பணியாற்றி வரும், நம்மைச் சிறையிலே, சீரழிவாக நடத்தினால், இரத்தம் சிறிது சுண்டிவிடும், உடல்சற்றே இளைத்துவிடும், வாலிபருக்கும் வயோதிகம் மேலிடும், இஃதேயன்றி, வேறென்ன நட்டம்?

சிறையிலே, தகுதிபற்றியும், பொதுமக்களிடம் பெற்றுள்ள ஆதரவு பற்றியும், அலட்சியம் காட்டி, அருவருக்கத்தக்க விதத்தில் நடத்துவதனாலேயே, நாட்டிலே, நமக்குகிடைத்துள்ள நன்மதிப்புக்குன்றிப் போகுமா, குறைந்து போகுமா! வரலாறும் வீரக்காதையும் அறியாதாரே அங்ஙனம் எண்ணுவர்; துளியேனும் அவை அறிந்தோர், அரைபடும் சந்தனம் மணத்தல் போல, சிறை தரும் இன்னல், கழகத்தின் புகழைத்தான் பெருக்கும் என்பதனை அறிந்து அகமகிழ்வர். அவ்விதத்தில், உடன்பிறந்தோரே! நீவிர், மகிழ வேண்டும் என்பதற்கே, சிறையில் நாங்கள் பெற்ற சீரழிவைக் கூறினேன்—சிந்தைநொந்துமட்டுமல்ல, உமது சிந்தை நொந்திடச் செய்யவுமல்ல.

அதோ, உமது உள்ளம் வென்றாள், குத்திப்புடைத்தெடுக்கும் செந்நெலைப் பயிரிட்டோன், முழங்காலளவு சேற்றிலே இறங்கினான். இன்னல் முதலில், பிறகே கன்னல்! முத்து முத்தாக வியர்வை உதிர்த்திடும், முல்லை, வாழை பரப்பி, வண்ணச் சேலை புரள, வகைவகையான உண்டி நிரப்பி, நீ உண்ணும் போது, கண்ணால் கொத்திடத்தானே போகிறாள்! முத்து முத்தாக வியர்வை—முதலில்! பிறகு, முத்தம், முத்தம், முத்தம்— உனக்கல்ல — பெற்றெடுத்த மகவுக்கு!!

கொட்டடி, எண் 9-ல் நாங்கள் தள்ளப்பட்டால், என்ன? அதனினும் கொடிய இருட்டறையில் அடைக்கப்பட்டால்தானென்ன, கருவில் உருவான போது, கண்டது கதிரவனை அல்லவே! இருள் மயம் தானே! பிறந்த பிறகோ? அஃதே போலத்தான், கொட்டடியில் பூட்டி வைக்கப்படும் கொள்கை வீரர்கள், இன்னலைத் தழுவிக்கொள்கின்றனர்; ஈன்றெடுக்கப்போகும் செல்வத்தை எண்ணி மகிழ்கின்றனர், என்பதனைத்தான் நீவிர் அனைவரும் எண்ணிடல் வேண்டும்.

உறுதி வளர வேண்டும்! உழைக்கும் திறன் ஓங்க வேண்டும்! இடுக்கண் கண்டு அஞ்சாமை மிகவும் வேண்டும்! இன்னல் செய்வாரை வெறுத்திடாத தூய்மை வேண்டும்! மறந்தும் தீச்செயலை நாடாதிருத்தல் வேண்டும்! தமிழ் மரபென்பதனை மனதிலிருத்த வேண்டும்! தன்மானம் நாட்டினிலே தழைத்திட உழைக்கும்போது, நம் மானம் பறித்திடவே மாற்றார் செய்யும் கொடுமைதனைத் துச்சமென்று தள்ள வேண்டும்! இச்சகம் பேசிடினும், ஏசிடினும், இடித்திடினும், இகழ்ந்திடினும், மனம் உடைந்திடாமல், என் நாடு பொன்னாடு, இஃதோ மற்றவர்க்கு அடிமைக் காடு? என் முன்னோர் மாப்புகழை மறந்து நானும், நத்திப் பிழைத்திடவோ, நானென்ன எத்திக்கும் கொடி கட்டி, எவருக்கும் திறை கட்டா, ஏற்றமிகு தமிழ் இனத்தில் உதித் ஏற்புடைக் கொள்கை கொண்டு, உழைத்திடவே வேண்டும்!

நாடு பல உள, நாமறிவோம்! காடும் மேடும் கொண்டனவாய், கழனி நலமற்றதுவாய், பொன்னும் மணியும் காணாது, கரும்பும் இரும்பும் கிடைக்காது, கனல் கக்கும் மலையும் நிலநடுக்கமும் கொண்டதாய், உள்ள நாடுகளும் உள்ளன. பாறை மீது தூவிய விதையாகும், அத்தகு நாடுகளிலே, பாட்டாளி தரும் உழைப்பு என்று எண்ணத்தக்க விதத்தில், இயற்கை வளமற்று, உள்ள நாடுகள் பல.

நாமிருக்கும் நாடு அஃதல்ல! இயற்கை கொஞ்சும் எழிலகம்! இங்கு இல்லாத பொருள் இல்லை; எவர்க்கும் ஈந்திடத்தக்க அளவு கண்டிடலாம். இந்நாடதனில், காடு காட்டும் கனிவுங்கூட பல்வேறு நாடுகளில் காண இயலாதென்பது கட்டுக் கதை அல்ல; கணித்துரைப்போர் கூறுவது.

உடன் பிறந்தோரே! இத்தகு திருநாட்டில் வந்துதித்தோம், இருந்து வருகிறோம்;

நாமிருக்கும் நாடு நமதல்ல என்ற நஞ்சினும் கொடியதோர் நிலை நம்மைப் பிடித்தாட்டுகிறது.

ஏடெல்லாம், நம் நாட்டின் புகழ் பாடுகின்றன!

புலவர் தரும் சொல்லோவியத்தில், பூம்புகார் காணுகின்றோம், பூரிப்படைகின்றோம்; அல்லங்காடி செல்கின்றோம், ஆடலரங்கம் நுழைகின்றோம்; சுங்கம் கொள்வார் காண்கின்றோம், அங்கம் தங்கம் என்று அகமகிழ்ந்து கூறிடத்தக்க அரிவையர் தெரிகின்றனர்! பழமுதிர் சோலைகள் — பாங்கான வயல்கள்! களிறு உராயும் சந்தனக் காடுகள்! வாளை துள்ளும் வயல்கள்! தேன்சொரியும் தேமாங்கனிச் சாலைகள்! சிற்பக் கலையின் சிறப்புகள்! அம்மவோ! தமிழகத்தை இந்தப் 'பொல்லாத' புலவர்கள் காட்டும் போது, தெரிந்திடும் திருவுடன், நம் கண்முன், தோன்றிடும் தமிழகத்தின் 'உருவினை' ஒப்பிட்டுப் பார்க்கும்போது உள்ளம் வெதும்பாதிருத்தல் இயலுமோ?

எலும்புருக்கிக்கு ஆளாகி நாம் காணும்போதே இளமையும் எழிலும், குன்றியும் குறைந்தும்போகும், மனையாட்டியையும், மணக்கோலத்துடன் காட்சி தரும் அம்மங்கை நல்லாளின் ஓவியத்தையும் மாறி மாறிப் பார்த்திடும், மணவாளன் மனம் என்ன பாடு படும்!

நாட்டுப்பற்றுடையார், இன்று பெறும் வேதனை அத்திறத்தது; ஐயமில்லை.

ஊரில் இருக்கும் துள்ளு நடையுடன் கூடிய ஆண் குருவி, கருப்பம் முதிர்ந்திருக்கும் பெண் குருவிக்குப் பிரசவிக்கும் இடம் ஏற்பாடு செய்வதற்காக, இனிமை பொருந்திய கரும்பின் வெள்ளிய பூவைக் கோதி எடுக்கிறதாம்! புலவர் கூறுகிறார்!!

ஊர்ச் சிறப்பு, ஊராள்வோன் சிறப்பு, வீரம் ஈரம், காதல் கவிதை, வளம் கொடை, அறம் அன்பு, போர்முறை பொருள்தேடுமுறை, எனும் எத்துறை பற்றிய தாயினும், புலவர் தீட்டிடும் ஓவியம் காண்போர் உள்ளத்தைத் தொடுவதாகவே இருந்திடக் காண்கிறோம்.

வளம் நிறைந்து, வாழ்க்கைத் தரம் சிறந்து, ஆட்சி முறையில் அன்பும் அறமும் தழைத்து வீடெல்லாம் மகிழ்ச்சிக் கூடங்களாகி இருந்த திருநாடு, நம்முடையது.

இங்கு, யானைகொண்டு போரடித்தனர்; முத்துக்கொண்டு கழலாடினர்; சந்தனம்கொண்டு நெல் குத்தினர்; தந்தம்கொண்டு 'இருக்கை' அமைத்தனர்; கரும்புகொண்டு கூரை வேய்ந்தனர்; அறிவுகொண்டு ஆண்டுவந்தனர்; ஆற்றல்காட்டி வெற்றி கண்டனர்; புலவரைப் போற்றிப் பெருமை பெற்றனர்.

அத்தகைய நாடு, இன்று பழுதுபட்ட சித்திரமோ, பழங் கதையோ, என்று நினைத்திடத்தக்க கோலம் கொண்டுளது; மக்களிற் பெரும் பகுதியினர் ஓலமிட்டு உழல்கின்றனர்; ஆட்சியாளர், 'ஏனென்றால் சிறைவாசம், இம்மென்றால் வனவாசம் என்பார்களே, அந்நிலைக்கு வேகமாகத் தாவிக் குதிக்கின்றனர்.

இந்நிலை மாற, நமக்கெனத் தமிழ்ப் பண்புடன் கூடியதோர் அரசு வேண்டும் என்கிறோம்; ஆர்ப்பரிக்கின்றனர், அரசுக் கட்டிலில் அமர்ந்திட அனுமதிக்கப்பட்டுள்ள அடிவருடிகள்.

கிடைக்கும் இன்பத்தைக் கொண்டு, மகிழ்ந்திருக்கும் இத் திருநாளன்று, நாடு வாழவும் கேடு தீரவும் பாடுபடும், நமது கழகத்தவர் அனைவருக்கும், அறிவாற்றல் வளரவேண்டும், என்ற வாழ்த்துரையை வழங்குவோமாக!

அறிவாற்றல் மிகுந்து, அது மிகுந்தோர் தொகை வளர்ந்து, அதற்கேற்ப அறமும் திறமும் வளர்ந்து, நமது குறிக்கோள் ஈடேறினால்......! பாலை சோலையாகும், பைங்கிளிகள் கொஞ்சும், பங்கப் பழனத்து உழும் உழவர் பலவின் கனி பறித்து, தெங்கு திருகிடும் மந்தியைச் சாடுவர்; மலரை வாளை தாக்கி, தேனினைச் சொரியச்செய்யும்; தேமதுரத் தமிழோசை கேட்டுப் பல தேயத்தார், தருக! தமிழ்! தருக! என்று, வருவர்! இல்லாமை இல்லாது ஒழியும், இடுக்கண் எனில், என்ன என்று கேட்பர் மக்கள். தொழிலெலாம் துலங்கும், தொல்லை அகலும்! பகலென ஒளி பரவி, பேத இருளினைப் போக்கி வைக்கும், அறநெறி நிலைக்கும், அன்பு அரசோச்சும், இன்பநிலை எவ்வெவர்க்கும்; இதிலே அட்டியில்லை, என்று எடுத்தியம்பும் காலம் காண்போம்.

மின்னிடும் பொன்னினைக் காண, எலும்பு நொறுங்குமோ என்பது குறித்து எண்ணாது, உழைப்பாளி குடைந்து சென்றிடக் காண்கிறோம்! சுறாவும் சுழலும் கண்டு அஞ்சாது, மூழ்கித்தான், முத்துக் கொணர்கின்றனர்!

அவரையும் துவரையும், இஞ்சியும் மஞ்சளும், வாழையும் தெங்கும், வரகும் தினையும், சேமையும் பிறவும், கிடக்கும் இடம்பார்த்து எடுத்து வரப்பட்டன அல்ல! நிலம் திருத்தி, நீர் பாய்ச்சி, காத்து வளர்த்த பின்பு, கண்டோர் கை சிக்கிடாமல், விழிப்பாக இருந்து, பின்னர், கொண்டுவரப்பட்டவை!

படர்வனவும், வளர்வனவும்கூட, உழைப்பின் துணை பெற்றாக வேண்டும் எனில், பட்ட மரம் துளிர்த்திடும் பான்மைபோல, எந்தையர் நாட்டிலே இன்றுள இழிநிலை போக்கி, இடர்களை நீக்கி, மிடியினைத் தாக்கி, சுடர்தனைக் காணவேண்டுமாயின், நாம் ஒவ்வொருவரும், எத்துணை அளவுக்குப் பாடுபட வேண்டும், தொல்லைகளைத் தாங்கிக்கொள்ள வேண்டும், என்பதனை எண்ணித் துணிவுகொள்ள வேண்டாமோ?

அதனை எண்ணிடும்போது, கொட்டடி ஒன்பதும், அதிலே நாங்கள் பெற்ற கொசுக்கடியும், சகதியும், சட்டியும் அவை பரப்பிய கெடுநாற்றமும், அழுலும் அதட்டலும், அவை தரும் அல்லலும் அருவருப்பும், ஒரு பொருட்டாகா!!

எனவே, கடினமான உழைப்புக்கு, கண்ணிய மிக்க தொண்டினுக்கு, கண்டோர் வியக்கும் கட்டுப்பாடுணர்ச்சிக்கு, ஏற்றவர்களாக, நாம் ஒவ்வொருவரும் ஆகவேண்டும். திருநாள் தரும் தித்திப்பு, இந்தப் பயனை நாம் பெற உதவவேண்டும்.

சுற்றிலும் காணும், பொருள் ஒவ்வொன்றும், வினையின் விளைவு — மதியுடன் கலந்த வினையின் விளைவு! உழைத்துப் பெற்றது! சுவை கண்டு மயங்கி, பொருள் வந்த விதம் மறத்தலாகாது!! மறந்திட மாட்டீர்!! மரபறிவீர், நானறிவேன் !!

எனவே, இன்று மகிழ்ந்திருப்பீர், எனினும், நாட்டுக்குழைக்கும் கடமையினை மறவாதீர்! வீட்டிலே இன்று காணும் பாட்டொலி, வளைகூட்டொலி, பேச்சொலி, 'இச்'சொலி, இவை யாவும் நலிவில்லை என்று நாட்டிலோர் நல்லொலி எழ வேண்டும், அதற்கான செயலினிலே புக வேண்டும், அச்செயலில் அறமும் திறமும் இணைந்திருத்தல் வேண்டும், என்ற கருத்தினைக் கெடுத்திட அல்ல; வளர்த்திட!—என்பதனை, காணும் சுவையுடனே, நான் அளிக்கும் தேனெனவே கலந்து உண்பீர்!!

நாட்டுக்கு நாம் உழைத்து, பாட்டு மொழியாம் தமிழ் பாரெல்லாம் மணம் பரப்பும் பாங்கு கண்டு, பழம் ஏடதனில் பார்த்திடும் ஓர் சீரும் சீலமும், துலங்கிடவும் விளங்கிடவும், காண்பதுதான் திருநாளிற் திருநாள் — தீதெலாம் தீந்தொழிந்த திருநாள்!

அதற்கான ஆவலை எழச் செய்ய வருவதுதான், ஆண்டுக்கு ஒரு நாள், ஆன்றோர் காலந் தொட்டு அகமகிழ்வுதானளிக்கும் அறுவடைத் திருநாள், பொங்கற் புது நாள்!!

இதனை உமக்குக் கூறிடவும், இவ்வாண்டு இசைவு பெற இயலாதோ என்றெண்ணி, இருட்டறையில், கொட்டடியில், முடங்கிக் கிடந்திட்டேன்! உமது விருப்பம் உணர்ந்தார்போல், ஊராளும் பேறு பெற்றோர், உனை விடுத்தோம்! என்றல்ல, வெளியே சென்றிரு, விளிப்போம், வந்து சேர்! என்று கூறியே எனை அனுப்பினர்! வந்தேன்—செந்தேனென இனித்திடும் திருநாளில், நலமெலாம் பெருக! என்று என் நல்லெண்ணந்தனைத் தந்தேன். இருந்துவிட்டுவந்த, எண் ஒன்பது கொட்டடியைக் காட்டினேன்—மீண்டும் அஃதோ, வேறோ, நானறியேன்! எங்கு எனைக் கொண்டு செல, இன்று ஆட்சியிலுளார் எண்ணம் கொண்டிருப்பினும், என்றென்றும், உமது நெஞ்சில் எனக்கோர் இட முண்டன்றோ! இச்சிறப்புப் பெற்ற பின்னர், இருட்டோ இடரோ, இழிவோ பழியோ, எதுவந்து தாக்கிடில் என், எதையுந்தாங்கும் இதயம் உண்டு, என்னினும் ஆற்றல் மிக்கார் எண்ணற்றோர் உண்டு. எனவே, நாடு நன்னிலை அடையப் போவது உறுதி! நமது இலட்சியம் வெற்றி பெறப்

போவது திண்ணம். பால் பொங்கும்! பொங்கிட, தழலிலிட விறகு வேண்டும்!! நாட்டிலே நல்லாட்சி எனும் பால் பொங்கிட, தழலில் நாம் விறகாக்கப்பட்டால், அதனினும் சிறந்ததோர் பேறு வேறில்லை அல்லவா!!

சிறை புகுதலும் அங்கு சிறுமை காணுதலும், ஒவ்வொரு நாட்டு விடுதலைக்காகப் பலர் பட்ட இன்னலுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, மிகச் சாதாரணமானவை!

ஆனால், இவைகளைத் தாங்கித் தாங்கி, நெஞ்சுரம் கொண்டு, பின்னர் காவியம் புனைவோனும், ஓவியம் தீட்டுவோனும், கருத்திலே கொண்டிடத்தக்க, 'வீரத் தியாகி' ஆகிடும் வாய்ப்பைப் பெற வேண்டும்.

கேட்டுப்பாருங்கள், உழவனை! முளைவிட்டு, பச்சைப் பசேலென்று வளர்ந்து, முனையில் கதிர் காட்டி, குலுங்கிக் கூத்தாடி, முற்றிச் சாய்ந்தது தான், இன்று முனை முறியா அரிசியாகி, ஆவின் பாலுடன் கருப்பஞ் சாற்றுடன், அடுக்கலை ஏறி, உமது அன்புக்குரிய அல்லியோ அஞ்சுகமோ, அன்னமோ, சொர்ணமோ, மலர்க்கொடியோ செல்வியோ, "ஒரே ஒரு பிடி! என் கையால்! இந்த ஒரு முறை மட்டும்" என்று கொஞ்சிப் பேசி, உமக்கு வட்டிக்கும் பொங்கலாகிறது!!

சிறுவிரலாற் துழாவி, வாயிலிட்டு மீண்டும்வழித்தெடுத்து இலையிலிட்டதை வாள் நுதலாள் கண் காட்ட எடுத்துண்ணுகின்றீர்; அல்லது மீண்டும் செல்வத்திற்கே ஊட்டுகின்றீர்!

நமக்குப் பிறகு இங்கு வாழ்ந்திடும் வாய்ப்பினைப் பெற இருக்கும், வழித் தோன்றல்களுக்கு, முக்கனி பிழிந்து வடித்து ஒன்றாகக் கூட்டி ஊட்டினால் மட்டும் போதாது, நாவுக்கு மட்டுமே சுவை கிடைக்கும்; நாட்டுக்கோர் நல்ல நிலை நாம் கண்டு தந்திட்டால், வீட்டுக்கு வீடு, விழாக்கோலம், என்றென்றும், அறிந்திடுவீர் இவ்வுண்மையினை, அதற்கேற்பச் செயல்படுவீர்!

இன்றல்ல! இன்று, திருநாள்! காளை களிக்க, பேனை பேருவகை கொள்ள, நாணம் கொண்டாளின் நல்லிதழில் ஒளி ஏற்ற, வீணை மொழிகேட்டு வியர்த்திருக்க, பாணன் துணை தேடாமல் பாவையரின் பரிவு பெற, இன்புற்றிருக்க ஏற்ற நாள்!

இந்நாளில், நீவிர் கொள்ளும் இன்பம், எந்நாளும் எங்கெங்கும் இருந்திடத் தக்கதான, 'திருநாடு' நாம் காண்போம், திறமெல்லாம் அதற்களிப்போம், என்ற உறுதிபெற்று, எழுவீர் விழா முடித்து.

விழா நாளன்று, உடன்பிறந்தோரே! என் மகிழ்ச்சியை, நல்லெண்ணத்தை அளிக்கிறேன்; பெறுவதிலே நீவிர் அடையும் மகிழ்ச்சியினும், தருவதிலே நான் பெறும் பெருமிதம் அதிகம்.

அன்பன்,

அண்ணாதுரை

உறுதிகொள்வீர்!

[ச. சிவப்பிரகாசம், புதுவை]

அறியாமை எனுமிருளே உலகு தன்னில்
அரசோச்சி ஆர்ப்பரித்த முற்கா லத்தில்,
திறனுரும் அறிவொளியைத் துணையாய்க் கொண்டு
சீரியநன் னெறிகண்டு பண்பு கொண்டு
விறலாரும் வீரர்களாய் நாக ரீக
மேம்பாடு மிக்கவராய்த் தமிழர் என்போர்,
இறவாத வரலாற்றுப் புகழை ஏற்றே
எழில்பெற்று வாழ்ந்திட்டார் வியக்கும் வண்ணம்!

அத்தகைய சிறப்புடைய தமிழர் வாழ்வில்
அறிவார்ந்த ஒருதிருநாள் அமைந்த துண்டு!
பித்தரது செயல்போன்று விளங்கு கின்ற
பீடழிக்கும் இந்நாளின் விழாப்போ லன்றி,
எத்திறத்தா ரும்அதனின் சிறப்புக் கண்டே
இயம்புகின்ற புகழ்மணக்கும் பெருமை நன்னாள்!
இத்தரையில் 'தைப் பிறந்தால் வழி பிறக்கும்'
எனஉரைக்கும் பழமொழியும் கொண்ட தந்நாள்!

புதுமையெழில் வளர்விக்கும் அந்தப் பொன்னாள்
பொங்கலெனும் தனித்திருநாள்! தமிழ ரில்லம்,
வதுவைகொண்ட கோலமதாய்க் காட்சி கொள்ளும்!
மகிழ்ச்சிநிறை யுள்ளத்தால் மாந்த ரெல்லாம்
புதியஉடை விதவிதமாய் அணிந்தே இன்பப்
புத்தமுதை வருபவருக் கன்பாய் ஈந்து,
மதுரமொழி யால்உறவின் நலம் உசாவி,
வளர்த்திடுவார் சமுதாய உயர்வை மேலும்!

சிந்தனைக்குக் காரணமாய் அமைந்த பொங்கல்,
சிறுநெறியைப் புறமொதுக்கிப், புதுமை சேர்த்து
விந்தையுறு வாழ்வுதனை மலரச் செய்யும்
மேலான ஒருதிருநாள்! இந்த நாளில்,
நிந்தனைக்குக் காரணமாய் அமைந்த தீய
நெடுஞ்சாதி பேதங்கள் பிறவும் போக்கிச்,
செந்தமிழைக் காத்திடவும், உரிமை வாய்ந்த
திராவிடத்தை மீட்டிடவும் உறுதி கொள்வீர்!

டில்லி நடப்புகள்

ஈ.வெ.கி. சம்பத், எம்.பி.,

இரண்டாண்டுகளுக்கு முன்பு வடநாட்டுச் சுற்றுப் பிரயாணம் சென்றிருந்தபோது டில்லியில் ஆறு நாட்கள் தங்க நேரிட்டது. அது சமயம் பாராளுமன்றத்தையும் அங்கு வளரும் அரசியல் சூழ்நிலைகளையும், நடப்புகளையும் ஓரளவு கண்டறிய முடிந்தது. உலகின் கண்கள் இந்தியத் துணைக்கண்டத்தை அறிய டில்லியின்மீது பார்வையைச் செலுத்திக் கொண்டிருப்பதையும் உணர்ந்தேன். நமது கழகத்தைப் பற்றி அங்குள்ளோரும், வந்துபோவோரும் அறியவொட்டாமல் அரசும் பத்திரிக்கைகளும் முழு இருட்டடிப்புச் செய்வதில் வெற்றி கண்டிருந்தன. ஏகாதிபத்திய எண்ணங் கொண்ட வடநாட்டுத் தலைவர்கள், உலகோர் உள்ளங்களில் இடம் பெற, உரிமை, விடுதலை, குடிஅரசு ஆகியவை குறித்து உரத்த குரலில் முழக்கிக் கொண்டிருந்தனர். தமது பிடியில் அகப்பட்டுள்ள இப்பரந்த பூமியில் உள்ள அனைவரும் ஓரின மக்களென்றும், அவர்களனைவரும் உரிமை பெற்று, விடுதலையடைந்து குடிஅரசு முறை கண்டு வாழ்வில் இன்பம் துய்க்கின்றனர் என்றும் பலபடக் கூறிக்கொண்டிருந்த செய்தி விளம்பர இலாகா வானொலி, வெளியீட்டு நடப்புகளையும் கண்டேன்.

எனதுள்ளத்தில், நமது கழகப் பணி சிறு அளவிலேனும் இப்பெருநகரில் நடைபெற வேண்டுமென்ற எண்ணம் பிறந்து வலுப்பட்டது. இந்தியப் பேரரசு என்பது நடைமுறையில் வடவராதிக்கமேயன்றி வேறல்ல என உலகுக்கு மெய்ப்பிக்க டில்லி தக்கதொரு அரங்காகப் பயன்படும் என்றும் பட்டது.

நமது கழகம் தேர்தலில் ஈடுபடுவது என்று முடிவெடுத்தவுடன், இந்நிலைமைகளை நமது தோழர்களுடன் விளக்கி விவாதித்தபோது பாராளுமன்றத் தேர்தலிலும் நாம் ஈடுபடவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. தேர்தல் முடிந்தது. திருவண்ணாமலை தோழர் தர்மலிங்கமும், நானும் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றோம். திராவிடத்தின் விடுதலை கோரும், மாபெரும் கழகத்தின் தூதுவராக டில்லி செல்லும் பேறுபெற்றோம். இருவர் மட்டுமே செல்கிறோம் என்பதிலும், நமது தோழர்களைப் பிரிந்து நெடுந்தொலைவு சென்று, அடிக்கடி பல நாட்கள் தங்க நேரிடுமே என்று அறிந்தபோதும் எனக்குப் பெரும் வேதனையாக இருந்தது.

டில்லிக்குப் புறப்படும் நாளன்று அண்ணா அவர்களும், பொதுச்செயலாளர் அவர்களும் ஏனைய கழகத் தோழர்களும் இரயிலடிவரை வந்து எங்களுக்குத் தைரியம் சொல்லி, அனுப்பியபோது உள்ளம் நெகிழ்ந்தது. சென்ற வண்டி 'குளுகுளு' வண்டியே தவிர உள்ளம் 'குளுகுளு' என்றிருக்கவில்லை. எங்களுடன் வழக்கறிஞர் இராமன் அவர்களும், கரூர் மாணிக்கம் அவர்களும் வந்தனர். கனத்த உள்ளத்தோடு நமது பகைப் புலத்தின் ஆதிக்கபுரியான டில்லியில்போய் இறங்கினோம். அங்கு பத்துப் பதினைந்து தோழர்கள் எங்களை வரவேற்றபோது, டில்லியிலும் நமது வருகையை விரும்பும் உள்ளங்கள் இருப்பதையறிந்து ஒருவகை ஆறுதல் ஏற்பட்டது.

டில்லி! எட்டாவது டில்லி! ஆம், இதற்குமுன் ஏழு டில்லிகள் இருந்து அழிந்து போயிருக்கின்றன என்ற வரலாற்றுக் குறிப்பு, டில்லியைச் சுற்றிப்பார்ப்போருக்குத் தரப்படுகிறது. டில்லியில் இதற்குமுன் எத்தனையோ வல்லரசுகள் இந்தியா முழுமையும் கட்டி ஆளும் வெறி எண்ணத்துடன் கோட்டை கட்டி வாழ்ந்திருக்கின்றன. ஒவ்வொரு அரசு அழியும்போதும் நகர் தரை மட்டமாக்கப்பட்டதும் இரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோடியதும், வரலாற்று வாழ்க்கை என மற்றொரு குறிப்புக் கூறுகிறது. 1947-ல் வெள்ளையரிடமிருந்து வடவரிடம் ஆட்சி மாறிய போதும் டில்லியில் கொலை வெறியாட்டம் நிகழ்ந்து இலட்சக் கணக்கானவர்கள் படுகொலைக்காளாகி பிணமலைகளும், இரத்த ஆறுகளும் தோன்றி, கடைசியில் உத்தமர் காந்தியாரின் உயிர் குடித்த பிறகே வெறியாட்டம் ஓய்ந்தது என்ற குறிப்பு மட்டும் ஏனோ ஏனைய குறிப்புகளோடு தரப்படுவதில்லை. அது சமயம் டில்லி மக்கள் ஆடிய வெறியாட்டத்தை நேரில் கண்ட தமிழர்கள் கதை கதையாய்ப் பல நிகழ்ச்சிகளை என்னிடம் கூறியபோது செங்கிஸ்கானும், தைமூரும், கான்களும் மாண்டு போன மனிதர்களே தவிர, மாண்டுபோன உள்ளங்களல்ல, உணர்ச்சிகளல்ல என்பதை உணர்ந்தேன். இன்றும், அதுசமயம் இருபது பேரைக் கொன்றவன், அந்த வகுப்பாரின் குழந்தைகள் படிக்கும் பள்ளியில் புகுந்து, குழந்தைகளைக் கொன்றவன், இத்தனை பெண்களைக் கொன்றவன் எனத் தனது 'அரசியல்' சுயசரிதம் கூறித் தனது நண்பர்கள் மத்தியில் பெருந் தேசியத் திருப்பணிக்குரிய பாராட்டுதலைப் பெறும் 'வீரர்'களை, டில்லியில் சர்வசாதாரணமாகக் காணலாம். டில்லியில் சுதந்திர தினத்தன்று, தேசியக் கொடியை ஏந்திப் பவனிவரும் இலட்சக் கணக்கான கரங்களில் பல, படுகொலை புரிந்தவை. பாதகம் புரிந்தவை. இவை அங்கு திடுக்கிடும் உண்மைகளாகக் கருதப்படவில்லை. பெருமைக்குரியவையாகக் கருதுவோரும், வெளிப்படையாகக் கூறி மகிழ்வோரும் பலர் உண்டு என்பதை நேரில் கண்டுணர்ந்தபோது திடுக்கிட்டுப் போனேன். ஆனால் மறுகணம் இத்தகைய இடத்திலிருந்து, இத்தகைய மக்களால் நாம் ஆளப்படு

கிறோம் என்பதை எண்ணியபோது வெட்கத்தால் நான் குன்றிப் போய்விட்டேன்.

மக்கள் சபை தொடங்கியது. ஆர்ப்பாட்டங்களுக்கும் ஆரவாரங்களுக்கும் பஞ்சமில்லை, ராஷ்டிரபதியின் ராஜாங்கப் பவனியை கண்ணும் கருத்துமாக, மிக ஆடம்பரத்துடன் நடத்துகிறார்கள். பஞ்ச சீலப் பண்டிதர் எதிர்க் கட்சியினரைத் துச்சமென மதிக்கிறார் என, அடிக்கடி அவருடன் கருத்து மாறுபாடு கொண்டோரைக் கண்டிக்க அவர் கையாளும் இழி மொழிகளிலிருந்து நாம் அறிந்திருந்தாலும், சபையின் உயர வீற்றிருக்கும் உலகத்தின் கண்முன், தான் உலகிலேயே அதிதீவிர ஜனநாயக வாதி எனக் காட்டிக்கொள்ளப் பண்டிதர் கையாளும் முறைகள் எவரையும் மலைக்கவைக்கும். சபைத் தொடக்க நாளன்று துள்ளிக் குதித்து எதிர்க் கட்சியினர் வீற்றிருக்கும் வரிசைக்கு ஒவ்வொருவரிடமும் புன்சிரிப்புடன் கைகுலுக்கும் காட்சியைக் காணும் வெளிநாட்டவர், 'ஆகா எத்தகைய குடியரசுப் பேரொளி இந்த நேரு' என்றே வியப்பர்.

கல்லூரிகளிலும், நூல் நிலையங்களிலும் குடிஅரசு தத்துவம் பற்றியும், மக்கட் பேரவை நடைமுறை விதிகள், வழக்கங்கள் ஆகியவை குடிஆட்சிக்குக் காப்பாக விளங்கும் சிறப்பினையும், எவ்வளவு கற்றாலும், இவைகளின் பெயராலேயே, இவைகளை மாய்க்கும் கயமை முறைகளையும், அவைகளைத் திறமையாகக் கையாளும் 'விற்பன்னர்' களையும் நேரில் பார்த்தால் மட்டுமே நாம் அறிந்து கொள்ள முடியும். தாம் பெருந்தொகையினராக இருக்கிறோம், தாம் விரும்பிய எதனையும் சட்டமாக்கும் வாய்ப்பிருக்கிறது என்பதோடு திருப்தி அடையாது, சிறுபான்மைக் கட்சியினரின் கருத்து சபையில் எவ்வளவுக் கெவ்வளவு கூறப்படாமல் இருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு திருப்தி கொள்ளும் உள்ளம் படைத்தோரே ஆளும் கட்சியினராக வீற்றிருக்கின்றனர்.

குறை கூறுவோரை விலை பேசுவதும், மசியாதவரை அச்சுறுத்தி அடக்கப் பார்ப்பதும், டில்லியில் வளர்ந்துள்ள நவீன ஜனநாயக நடைமுறைகள்.

ஐந்நூறுக்கு மேற்பட்டவர்களைக் கொண்ட மக்கள் சபையில் திராவிட முன்னேற்றக் கழகம் இருவரை மட்டுமே அனுப்பியிருக்கிறது. எனினும் கழகக் குறிக்கோள்களில் உள்ள நியாயத்தின் திண்மை அனைவரையும் அதன்பால் ஈர்க்கின்றது. வெறுப்புடனாயினும், முகச் சுளிப்புடனாயினும் கழகத்தினைப் பற்றி அறிந்தாகவேண்டுமென்ற உணர்வு எவரிடமும் தலைதூக்கி நிற்பதைக் காணலாம். சபையில் பேசும் வாய்ப்புகள் மிகக் குறைந்து இருப்பினும், சபை உறுப்பினர்களும், பத்திரிக்கையாளரும் நாளும் கழகத்தைப் பற்றி நிறையச் செய்திகளை அறிவதில் பெரும் ஆர்வம் காட்டுகின்றனர். வங்கத்தைச் சார்ந்த சில உறுப்பினர்களும், மராட்டியத்து உறுப்பினர் சிலரும், ஒரிஸாவைச் சேர்ந்தவர்கள் பலரும் மிக அனுதாபத்துடன், நாம் மேற்கொண்டிருக்கும் தனி நாடு பிரச்னையை அணுகி ஆராய்கின்றனர். அரசின் இந்தித் திணிப்புக் கொள்கை, நமக்கு அவர்களுடைய ஆதரவைப் பெருமளவுக்குப் பெற்றுத் தந்துள்ளது. மக்கள் சபையிலும், அதன்மூலம் ஆட்சியிலும், உத்தரப்பிரதேசமும் பீகாரும் வகிக்கும் ஆதிக்கம், இந்த அரசியல் சட்டப்படி என்றுமே நீடிக்கும் ஒன்று என்பதை நம்மைத் தவிர பிறரும் உணரும் நிலை வளர்கிறது. வெள்ளையன் வெளியேறிய மகிழ்ச்சி மயக்கத்தில் இந்த ஆபத்தை உணர்ந்திருந்தோரில் மராட்டியரும், வங்க மக்களும் மிக முக்கியமானவர்கள். அவர்கள் இன்று விழிப்படைந்து வருகின்றனர்.

> கற்பனை உலகமே ஒரு தனி உலகம் தான். அதில் பல இன்பங்களையும் ஏக காலத்தில் அனுபவிக்கலாம். பல்வேறு பருவங்களும் கற்பனையுலகிலே சந்திக்கும்; எந்த மலரையும் எந்தக் கனியையும், எந்த நிலையிலும் சந்திரனையும் சூரியனையும் நினைத்த உடனே சந்தித்து இன்புறலாம்; கவிஞன் உலகமே கற்பனை உலகம்தானே!

உத்தரப் பிரதேச, பீகார் அரசியல்வாதிகள் அனைவரும் இந்தியா ஒன்றாய் இருக்கவேண்டும் என்பதைவிட, இந்தியா தம் வசம் இருக்கவேண்டும் என்பதிலேயே கண்ணும் கருத்துமாய் உள்ளனர். இனி, மற்றவர்கள்தான், ஒன்றாய் இருக்கும்இந்தியர் எனின், அவர்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட இந்தியாதானா என்பதைப்பற்றி முடிவு செய்து கொள்ளவேண்டும், என வங்கத்தினரும், மராட்டியரும், ஒரியர்களும் எண்ணுகின்றனர்.

பல ஆண்டுகளுக்கு முன்பே நமது கழகம் இதனை எண்ணி, இந்தியா ஒன்றாய் இருப்பதெனில் அதன் ஆட்சி வடவர் வசமேதான் இருக்கும் என்பதைக் கண்டுணர்ந்து, பெரிய தேசத்துக்குடிகள் என்பதைவிட நமது தேசத்தின் குடிகள் என்ற நிலையேதான் நமக்கு வாழ்வளிக்கும் நிலை என்ற முடிவுக்கு வந்தது. அதனை ஒப்புக்கொள்ளும் உணர்ந்துகொள்ளும் திராவிடர் தொகை நாளும் வளர்ந்து வருவது கண்கூடு. இன்று திராவிடர்க்கு மட்டுமேயன்றி மராட்டியருக்கும், வங்க, ஒரிய மக்களுக்கும் வழிகாட்டும் பெரும்பணியைக் கழகம் ஆற்றப்போவது உறுதி.



விழித்துக் கொண்டான்!

அல்லி

அன்று ஊர்க் காவல் நிலையத்தில் ஒரே பரபரப்பு. அன்றாடம் சாராயம் காய்ச்சியவர்கள், இரவில் சூதாடியவர்கள் போன்றவர்களையே விசாரித்துச் சலித்துப்போன இன்ஸ்பெக்டரின் முகத்தில் ஒரு தனிக் களை குடிகொண்டிருந்தது. தூங்கி வழிந்த பலரும் எழுந்து உட்கார்ந்துகொண்டு சோம்பல் முறித்துக் கொண்டிருந்தார்கள். மொத்தத்தில், அங்கிருந்த யாவருமே ஒரு சுறுசுறுப்புடன் காணப்பட்டனர். இதற்கெல்லாம் காரணம் என்ன? அன்று அவர்களுக்கு மேலிடத்திலிருந்து அறிக்கையொன்று வந்தது. அந்த வட்டாரத்தில் முற்போக்குக் குழுவினர் மொழிப் போர் நடத்தப் போவதாகவும், அப்போர் நடைபெறாதவாறு போலீசார் பாதுகாக்க வேண்டும் என்றும் அறிக்கையில் கண்டிருந்தது. அதனால்தான் எப்போதும் தூங்கிக் கிடக்கும் அந்த அலுவலகத்தில் அன்று அத்தனை பரபரப்புக் காணப்பட்டது.

மாணிக்கம் மட்டும் மிகவும் கவலை தோய்ந்த முகத்தவனாகக் காணப்பட்டான். அன்று காலை வந்திருந்த கடிதத்தின் மூலம் அப்போரினைப் பற்றி முன் கூட்டியே அறிந்திருந்தான் அவன். மேலிடத்தினின்று இத்தகைய கட்டளை வரும் என்பதையும் அவன் எதிர்பார்த்திருந்தான். ஆகவே மற்றவர்களைப்போல் அவன் பரபரப்படையவில்லை. அமைதியாக இருந்தான். ஆனால் அவன் உள்ளத்தில் பெரிய சூறாவளி அடித்துக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில் அவன் நெஞ்சை அரித்துக்கொண்டிருந்த துன்பத்தை யார் அறிவார்!

கான்ஸ்டபிள் கந்தப்பன் மாணிக்கத்தின் முதுகில் அறைந்து, "நல்ல சான்ஸ் அப்பா நமக்கு! இந்தப் போராட்டத்தில் நாம் சாமர்த்தியமாக நடந்துகொண்டால் நல்ல பலனை அடையலாம்" என்று சொன்னபோது மாணிக்கம் ஒரு வறட்டுப் புன்னகை புரிந்தான். அதன் காரணம் அப்போது கந்தப்பனுக்குப் புரியவில்லை.

மாணிக்கத்துக்கு, தான் அலுவலகத்திற்குப் புறப்படும்போது தன் மனைவி கூறியது இப்போது நினைவு வந்தது. "என்னங்க, இன்னிக்கு மாப்பிள்ளைக்கு ஒரு கடுதாசி எழுதிடுங்க. மாப்பிள்ளைக்குத்தான் இப்படிப் புத்தி போச்சுதுன்னா எழில்மணியாவது அவரைத் தடுக்கக்கூடாதா? அவளும் அவரோடே சேர்ந்து கூத்தடிக்கிறது கொஞ்சமும் நல்லாயில்லை. என்ன போராட்டமோ என்ன எழவோ! உசிரைக் கொடுத்துக் கெட்ட பெயர் வேறே வாங்கிக்கிறது! ரெண்டு பேரும் உடனே இதிலிருந்து விலகி விடணும்னு எழுதிடுங்க" என்று சொன்னாள் மாணிக்கத்தின் மனைவி மணியம்மை.

மாணிக்கத்துக்குத் தன் தங்கை எழில்மணியைப் பற்றித் தெரியாதா? கரிகாலன் சற்றே சோர்ந்திருந்தாலும் அவனைத் தட்டி யெழுப்பிப் போராட்டத்திற்கு அனுப்பும் வீரமங்கையல்லவா அவள்? அவள் கரிகாலனை மணந்து கொண்டது இன்ப வாழ்க்கை நடாத்துவதற்கல்ல. நாட்டை மீட்கும் பணியிலே ஒரு துணை கிடைத்தால் நல்லது என்று எண்ணியே அவனைத் திருமணம் செய்துகொண்டாள். அவளுக்குக் கிடைத்த துணையும் அவளுக்குத் தக்கபடியே இருந்தது. இருவரும் கூட்டங்களுக்கும், மாநாடுகளுக்கும் செல்வதோடு தங்கள் நாட்டுப் பற்றை நிறுத்திக் கொள்ளாது, கிளர்ச்சி, அறப்போர் முதலியவற்றில் கலந்துகொண்டு உண்மையாக நாட்டுக்கு உழைத்தார்கள். தடியடி, கண்ணீர்ப் புகை, சிறைவாழ்க்கை அனைத்தையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்கள்.

மாணிக்கத்துக்கு எழில்மணியும் கரிகாலனும் சேர்ந்து நடத்திய பல போராட்டங்களின் நினைவு வந்தது. இந்தி எதிர்ப்புப் போரின்போது எழில் மணியும், கரிகாலனும் விளைத்த வீரத்தினை எண்ணினால் இப்போது கூட உடல் சிலிர்க்கும். மாணிக்கம் கண்மண் தெரியாமல் தடியடிப் பிரயோகம் செய்து

கொண்டிருந்தான். கரிகாலன் இடத்தைவிட்டு அசையாமல் இருந்ததால்' மாணிக்கம் அவனது முழங்கையில் தடியால் பலமுறை அடித்துவிட்டான். கரிகாலன் தன் முழங்கையிலிருந்து பெருகும் குருதியைச் சிறிதும் பொருட்படுத்தாமல் தன் தோழர்களை ஊக்கிக் கொண்டிருந்தான். இதனைத் திகைப்போடு பார்த்துக்கொண்டிருந்த மாணிக்கம் தன் மனத்தைக் கட்டுப்படுத்த வேறு இடம் நோக்கிச் சென்றான்.

○

மாணிக்கம் தன் கண்களில் பெருகிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டான். யாராவது பார்க்கிறார்களா என்று நாற்புறமும் நோக்கினான். அந்த அமர்க்களத்தில் அவனை யார் பார்க்கப் போகிறார்கள்!

"சீ! என்ன பிழைப்பு!" அவனது வாய் அவனையும் அறியாமல் முணுமுணுத்தது. 'எழில்மணியின் சொல்லில் எத்தனை உண்மை இருக்கிறது!' என்று எண்ணினான்.

கல்லக்குடிப் போராட்டத்திற்கு முன் எழில்மணி ஒரு கூட்டத்தில் பேசினாள்; "தாய் நாடு, தாய் மொழி, தாய் நாட்டு மக்கள்—இவை நம் உயிரைவிட உயர்ந்தவை. இவற்றில் எதற்குத் தீமை நேர்ந்தாலும் உயிர் கொடுத்தேனும் அதனை நீக்க முற்பட வேண்டும். வடநாட்டான் பெயரால் திராவிடத்தில் ஒரு ஊர் அழைக்கப்படுகிறது என்பது எதைக் காட்டுகிறது? நாமனைவரும் ஏமாளிகள், உணர்ச்சியற்றவர்கள் என்பதையல்லவா காட்டுகிறது? தோழர்களே! உயிர் வாழ்வதுதான் முதன்மையானதா? விலங்குகள் கூடத்தான் உயிர் வாழ்கின்றன. எது முக்கியம்? சோறு மானமா? மானம்தான் பெரிது. அதுதான் மனிதனுக்கும் விலங்குக்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் காட்டுகிறது. சில மனிதர்கள்கூட விலங்குகளைப்போல் பிழைப்பின் பொருட்டு இழிதொழில் செய்கிறார்கள். போராட்டத்தின்போது குறுக்கே புகுந்து நம்மை அடக்க முயலும் 'ஊர்க் 'காவலர்'களைத்தான் எடுத்துக்கொள்வோமே. அவர்கள் மனிதர்கள் இல்லையா? அவர்களுக்கு உணர்ச்சி இல்லையா? இருக்கிறது; ஆனால் அதை அடக்கி வைத்திருக்கிறார்கள், வயிற்றுப் பிழைப்பின் பொருட்டு! இதுவும் ஒரு வாழ்க்கையா? அன்பர்களே! நாம் வாழ்வது நமக்காக அல்ல, நாட்டுக்காக!......"

கூட்ட நடவடிக்கையைக் காண வந்திருந்த மாணிக்கத்தின் உள்ளத்தில் இந்தச் சொற்கள் 'சுரீ'ரெனத் தைத்தன. அது முதலே அவன் எண்ணத் தொடங்கிவிட்டான், 'சீ! இதென்ன வாழ்வு' என்று. கல்லக்குடிப் போராட்டத்தின்போது ஒருவருக்கும் தெரியாமல் பெயர்ப் பலகையில் 'கல்லக்குடி' என்ற பெயரை மறைவாக ஒட்டியவர்களில் மாணிக்கமும் ஒருவன்.

○

ஒரே செடியில் வெவ்வேறு நிறங்கொண்ட மலர்களைப் பார்ப்பது அரிது. ஆனால் மனித சமுதாயத்திலே இத்தகைய நிகழ்ச்சிகள் மிகச் சாதாரணமானவை. ஒரே தாய் வயிற்றில் பிறந்த மாணிக்கத்திற்கும் எழில்மணிக்கும் எத்துணை வேறுபாடு! தந்தையார் இறந்தபோது அக்குடும்பத்தைக் காப்பாற்ற ஏதேனும் ஒரு தொழிலைச் செய்தே ஆகவேண்டும் என்ற நிலை ஏற்பட்டது மாணிக்கத்துக்கு. நகர்க் காவலன் ஆவதற்கு வேண்டிய தகுதிகள் யாவும் அவனிடம் பொருந்தியிருக்கவே, அவ்வேலை அவனுக்கு எளிதில் கிடைத்தது. எழில்மணி வளர்ந்தாள். அவள் வளர வளர அவளது உள்ளத்திலே முற்போக்குக் கருத்துக்கள் இடம் பெறலாயின. பள்ளிப் படிப்பை முடித்தபோது அவள் ஓர் புதுமைப் பெண்ணாக நின்றாள். சீர்திருத்தவாதிகள் பேசும் கூட்டங்களுக்குச் செல்லலானாள். மாணிக்கம் தடுத்தான்; அவள் மதிக்கவில்லை. மணம் செய்விக்க அவன் எண்ணியபோது முற்போக்காளனைத் தவிர வேறு யாரையும் மணக்க முடியாது என்று கூறிக் கரிகாலனை மணாளனாக ஏற்றுக்கொண்டாள். அடிதொழுதேத்தும் மாணிக்கத்தின் தங்கையாகத் தன்மான எழில்மணி தோன்றியதேன்? விந்தைதான். 'சோறு — மானமா?'—எழில்மணி கேட்டாள். அதே கேள்வியைத்தான் மாணிக்கமும் கேட்டான். ஆனால் இருவரது விடைகளில்தான் வேற்றுமை இருந்தது. 'மானம்!' என்றாள் எழில்மணி. மாணிக்கத்தின் பதில்: 'சோறு!'

இத்தொழிலை ஏற்றுக்கொண்ட புதிதில் மாணிக்கம், தான் நாட்டுக்கு நன்மை செய்யும் வேலையில் ஈடுபட்டிருப்பதாகவே எண்ணினான். ஆனால் கரிகாலன் - எழில்மணி இவர்களின் பேச்சுக்களைக் கேட்கக் கேட்க 'நாம் நாட்டுக்குத் தீமை செய்யும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறோமா? நாட்டை மீட்கப் போரிடும் சக்தியை அடக்க முற்பட்டிருக்கிறோமா?' என்ற ஐயம் தோன்றலாயிற்று.

மணிமங்கலத்திலே கரிகாலன் — எழில்மணி பேச்சுக்கு நல்ல வரவேற்பிருந்தது. அவ்வூரார் அடிக்கடி அவர்களைப் பேச அழைப்பார்கள். அச்சமயங்களில் அமைதி காக்க அங்கே மாணிக்கம் அனுப்பப்படுவான். இவ்வாறு அவர்கள் சொற்பொழிவுகளை விடாது கேட்கும் வாய்ப்பு அவனுக்குக் கிடைத்து வந்தது. அதன் விளைவு, முன்பெல்லாம் தான் நாட்டுக்குத் தொண்டு செய்வதாகக் கருதிய மாணிக்கம், இப்போது 'சீ! இதென்ன பிழைப்பு!' என்று வெறுத்துக் கொள்வான். வேலையை விட்டால் குடும்பம் தவிக்குமே என்ற ஒரே நோக்கோடுதான் அவன் அந்த வேலையை இப்போது செய்துவருகிறான்.

"என்ன அண்ணே, அப்படி உட்கார்ந்திட்டே?" என்ற குரல் கேட்டுத்திடுக்கிட்டு நிமிர்ந்தான் மாணிக்கம். கந்தப்பன் முகம்மலர நின்றுகொண்டிருந்தான். அவன் ஒரு வெறி நாய். விடுதலைப் பட்டாளத்தைச் சிதைத்துச் சீரழிப்பது அவனுக்குப் பிடித்தமான வேலை. அதிகாரிகள் 'த' என்பதற்குள் தடியடிப் பிரயோகத்தில் இறங்கிவிடுவான். எதற்காவது 'து' என்று சொன்னால் கூடத் துப்பாக்கியை எடுத்து நான்கு முறை சுட்டுத்தீர்க்கும் இயல்பினன். கல்லக்குடிப் போராட்டத்தின்போது காவியமணி பட்ட துன்பத்திற்காக உண்மையான மகிழ்ச்சி அடைந்தவன் இவன் ஒருவன்தான். வெள்ளையர் ஆட்சியின்போது கிளர்ச்சி செய்த காங்கிரசாரை ஆத்திரம் தீர அடித்து நொருக்கிய இவன், காங்கிரசார் ஆளும் இந்நாளில் அவ்வேலையை விடாது தொத்திக்கொண்டு, இன்று விடுதலை வீரர்களின் உடலைப் பதம் பார்த்துக்கொண்டிருக்கிறான். இந்த அடித்தல், உதைத்தல் எல்லாம் அவர்களுடைய உடலைத்தானே தாக்கும்! உள்ளத்தை என்னசெய்ய முடியும் இவனால்! எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்களல்லவா அவர்கள்!

கந்தப்பனின் வெறி நிறைந்த மகிழ்ச்சியைக் கண்டு வெறுப்படைந்தான் மாணிக்கம். 'உஸ்,......' என்று நீண்ட பெருமூச்சு விட்டுக்கொண்டே எழுந்தான் அவன்.

○ ○ ○

தங்களுக்காக அமைக்கப்பட்ட அந்த விடுதியில் ஊர்க்காவலர் கூடிக் கும்மாளமடித்துக் கொண்டிருந்தனர். ஒவ்வொருவரும் முற்போக்குக் குழுவினரைத் தம் வயிற்றெரிச்சல் தீரத் திட்டிக்கொண்டும் கிண்டல் செய்துகொண்டும் இருந்தனர். மாணிக்கம் மட்டும் கவலை தோய்ந்த முகத்தினனாய் ஒரு ஓரத்தில் உட்கார்ந்திருந்தான். அவன் உள்ளத்திலே பெரிய போராட்டம் நிகழ்ந்துகொண்டிருந்தது. இவனது கவலையைச் சற்றும் அறியாதவர்களாக மற்றவர்கள் கொட்டமடித்துக் கொண்டிருந்தார்கள்.

அதே நேரத்தில் மற்றோர் இடத்திலே கிளர்ச்சி வீரர்கள் குழுமியிருந்தனர். யாவரது உள்ளத்திலும் உவகை பொங்கி வழிந்துகொண்டிருந்தது. அன்று நடக்கவேண்டிய போராட்டத்தைக் குறித்து அனைவரும் களிப்பு நிரம்பிய குரலில் பேசிக்கொண்டிருந்தனர்.

அடுத்த இதழ்

பொங்கல் விடுமுறை காரணமாகத் "திராவிட நாடு" இதழ் நிறுத்தப்பட்டு, **1—2—58**-ல் மீண்டும் வெளிவருகிற தென்பதை விற்பனையாளர்களுக்கும் வாசகர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பொறுப்பாளர்.

இங்கே விடுதலை வீரர் பட்டாளம்; அங்கே விடுதலை உணர்ச்சியைத் தட்டியடக்க முயலும் ஊர்க்காவலர் கூட்டம்; இங்கே அன்பு நிறைந்த கலகலப்பு; அங்கே ஆணவம் நிறைந்த கலகலப்பு! இங்கே வீரச் சிரிப்பு; அங்கே வெறிச் சிரிப்பு!

'அமைதிகாக்க'ப் புறப்படும்போது மாணிக்கத்தின் முகத்திலே தெளிவு. ஆம்; அவன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டான்.

போராட்டம் மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. அதனை அடக்கப் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்துகொண்டிருந்தனர். ஆனால் வீரர்கள் சிறிதும் அசையவில்லை. தங்கள் மேல் விழும் அடியை அவர்கள் பொருட்படுத்தவேயில்லை. 'ஆணவம் சீறலாம்; இராணுவம் பாயலாம்; சீற்றத்தைக் கண்டு சிதறாதே' என்று அவர்கள் தலைவர்கள் அறிவுரை கூறியிருக்க, அவர்களா இதற்கெல்லாம் அஞ்சி அடங்கிவிடுவர்? அவர்கள் அங்கிருந்து அசையவுமில்லை; அடக்கவந்த காவலரைத் தாக்கவும் இல்லை. ஆனால் போலீசாரால் 'நிலைமையைச் சமாளிக்க' இயலவில்லை!

அதிகாரிகள், ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். "'காலிகள்' போலீசாரைக் கல்லாலடித்ததால் வேறு வழியின்றித் துப்பாக்கிப் பிரயோகம் செய்யநேரிட்டது" என்று செய்தி வெளியிட்டுத் தப்ப அவர்களுக்கா தெரியாது? இரத்த தாகம் ஏற்படும்போதெல்லாம் அவர்கள் கையாளும் தந்திரமாயிற்றே அது! அவ்வளவுதான்; அடுத்த கணம் 'சுடு!' என்ற உத்தரவு பிறந்தது.

மாணிக்கம் துப்பாக்கியை எடுத்தான்; கண்களை இறுகமூடிக்கொண்டான். கிளர்ச்சி தீவிரமாக இருந்த இடத்தை நோக்கித் துப்பாக்கியை நீட்டினான்.

'டுமீல்! டுமீல்!'

'ஆ' என்ற குரல்! கரிகாலன் குருதி பெருகும் மார்பை ஒரு கையால் அழுத்திக்கொண்டு, 'வெற்றி! வெற்றி! வெற்றி நமக்கே! அஞ்சாதீர்கள்; அசையாதீர்கள்! நன்கு போராடுவோம்; நாட்டை மீட்போம்!" என்று எழுச்சியோடு கூறினான். அடுத்த கணம் தடாலென்று கீழே விழுந்தான். 'கரிகாலன் வாழ்க! வாழ்க!' என்ற குரல் எங்கும் நிறைந்து ஒலித்தது.

பிறந்த நாட்டின் மீட்சிக்காகப் போரிட்டு, அது மீளுகின்ற இன்பக்காட்சியினைக் காணுமலே மறைந்து விட்டான், பாராண்ட திராவிடர் வழித்தோன்றல் கரிகாலன். எழில்மணி கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள், "வீரமரணம்! அன்பரே, தாங்கள் வீர மரணம் அடைந்துவிட்டீர்கள்!" என்று கூவினுள்.

திறந்த கண்களை மீண்டும் மூடிக்கொண்டான் மாணிக்கம்.

"தோழர்களே!"—வீரர்கள் நிமிர்ந்து நின்றனர்.

"தோழியர்களே!"—பெண்களனைவரும் வரிசை வரிசையாக எழில்மணியை நோக்கி வந்தனர்.

"அடிமை நாட்டிலே தோன்றிய அறிவு மணிகளே! நமது படைத் தளபதி கரிகாலன் அவர்கள் விடுதலைக்குப் போரிட்டு வீர மரணம் அடைந்துவிட்டார். அவர் விட்டுச் சென்ற பணியை நாம் பொறுப்புடன் ஏற்று முடிப்போமாக. தோழர்களே! 'தேனெனனும் வாழ்வே தேளாய் மாறும், போர் முனைச் சாவே பொது வாழ்வில் இன்பம்' என்ற நமது போர்ப்பரணியைச் சற்றே நினைவுக்குக்கொண்டு வாருங்கள். நம் வாழ்வு இப்போது தேளாய் மாறியுள்ளது. போர்முனைச் சாவு நம்மை அழைக்கிறது. எழில்மணி பாய்ந்துவந்தாள் கரிகாலனிடம். அவன் தோள்களைப்பற்றி அசைத்தாள். அடிமை நாட்டிலே கரிகாலனைச் சுட்டுத் தன் தாகத்தைத் தணித்துக் கொண்டு விட்டதிந்த அரசாங்கம். 'வானத்தை நோக்கிச் சுட்டால் அங்கிருக்கும் முப்பத்து முக்கோடி தேவர்களுக்குத் தொல்லை ஏற்படுமோ' என அஞ்சுபவர் நம் அரசாங்கத்தார். ஆளைக் குறித்துச் சுடும் விந்தையை இங்கேதான் கண்டோம். தோழர்களே! நம் கரிகாலர் மறைந்துவிட்டார். ஆனல் நம்மிடையே இன்னும் ஆயிரமாயிரம் கரிகாலர்களும் செங்குட்டுவர்களும் இருக்கையிலே 'கவலையேன்? தோழியர்களே! சீறி வந்த சிறுத்தையை முறத்தால் அடித்து விரட்டிய மறத்தியர் வழி வந்த நாம் இந்தச் சுண்டெலிகளுக்கா அஞ்சுவோம்? 'நாட்டை மீட்கப் போராடி உயிர் கொடுப்போம் வாரீர்! வாரீர்!!"

மாணிக்கம் தன் உடுப்புகளைப் பரபரவென்று கழற்றினுன்; தொப்பியை எடுத்தான்; துப்பாக்கியையும் அவற்ருேடு வைத்து அதிகாரிகள் இருந்த பக்கம் வீசினுன். உள் சட்டையுடனும் அரைக்கால் சட்டையுடனும் தோன்றி அவன் கிளர்ச்சிக் குழுவில் பாய்ந்து அவர்களுடன் கலந்தான். யாவரும் வியப்போடு பார்த்துக்கொண்டிருக்கையிலே மாணிக்கம் கூவினுன், **"திராவிட நாடு திராவிடருக்கே!"**

"தங்கைக்கு"

[சொ. அடைக்கலம்]

வெள்ளி முளைத்தவுடன் எழுந்து — வீட்டு
வேலைகளைச் செய்வோம் தங்காய்
எள்ளிப் பிறர் நகைக்கத் தூக்கம் — நீ
ஏற்றுப் படுத்திராதே தங்காய்.

பள்ளிப் படிப்புனக்கு வேண்டும் — வேலைப்
பழக்க வழக்கங்களும் வேண்டும்
துள்ளி விளையாடு தங்காய் — எவரிடமும்
தோழமை கொண்டிடு தங்காய்.

தாயை வணங்கிடு தங்காய் — உந்தன்
தந்தை சொல்லை மீருதே தங்காய்
வாயைப் பெரிதாக்கித் தங்காய் — வீண்
வம்பு சண்டை செய்யாதே தங்காய்.

கூட்டிப் பெருக்கி மெழுகி — அடுப்பை
மூட்டிச் சமையல்செய்யப் பழகு
ஏட்டில் தமிழ் மறை குறளை — என்றும்
ஏற்றுப் படித்ததுபோல் ஒழுகு.

நாட்டுக்குப் பெருமதிப்பு உன்போல் — பிறர்
நாடும் படித்தஇளம் பெண்கள்
வீட்டு விளக்காகித் தங்காய் — சான்ருேர்
விருப்பம் நிறைவேற்று தங்காய்.

கண்ணை இமைகாத்தல் போல — குடும்பம்
கட்டிக் காக்கும் பெண்களாலே
மண்ணில் தமிழ்மாதர் பெருமை — இமய
மலையிலும் உயர்ந்தது தங்காய்.



அமெரிக்காவில் அறுவடைத்திருநாள்

பயிர் விளையத் தன் உடலளித்து இடமளித்த நிலமடந்தையை நினைக்கும் நாளே பொங்கல் நாள்; பருவம் பொய்க்காது பெய்தளித்த மாரியையும் போற்ற மறந்ததில்லை; இவ்வளவுக்கும் மேலாக செந்நெற்பயிரைத் தன் செங்கதிர்க்கரங்களால் அணைத்து வளர்த்து அன்பொளி வீசிய ஞாயிற்றை வாழ்த்தத் தவறியதில்லை. இந்த நன்றி மறவாக் கடப்பாடு தமிழரிடம் தொன்று தொட்டு வந்த பண்பு. இத்தகைய ஓர் உன்னதமான கருத்தின் அடிப்படையில்—உயிரனைய பயிர் விளைய தனக்கு ஆண்டு முழுதும் துணை நின்ற இயற்கைக்குத் தமிழர்கள் தம் நன்றியைத் தெரிவிக்கும் நன்னுளே பொங்கற் புது நாள்.

○ ○ ○

இதே பெயரில், அதாவது "நன்றி தெரிவிக்கும் நன்னுள்" என்ற பெயரில், புதிய உலகம் என்று வழங்கப் பெறும் அமெரிக்கக் கண்டங்களுள் ஒன்ருன வட அமெரிக்காவில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது. அந்நாட்டு அரசாங்கம் விழா நாட்களில் விடுமுறை அளிக்கிறது. பெருவாரியான மக்களால் கொண்டாடப் பெறும் இவ்விழா எந்த மத அடிப்படையிலும் தோன்றியதல்ல; தனி ஒரு மனிதர் போற்றுதலுக்காகவும் தோற்றியதல்ல, ஆனல் இந்தப் பெரும் விழா தமிழர் கொண்டாடும் பொங்கல் திருவிழா கொண்டாடப்படும் அதே நெறியின் அடிப்படையில் அமைந்திருப்பதுதான் விந்தையாகும்; சிந்தனைக்குரியதுமாகும்.

முகவை:

மீ. மனேகரன்

○ ○ ○

கி. பி. 1585-ல் சர்வால்டர் ராலே என்பவர் எலிசபெத் அரசியாரின் சார்பில் வட அமெரிக்காவில் வர்ஜினியா குடியேற்ற நாட்டை உருவாக்கிய நாள் முதல், ஸ்பானியர், போர்ச்சுக்கீசியருடன் ஆங்கிலேயரும் புதிய உலகத்தில் குடியேறத் துவங்கினர். அது முதல் அமெரிக்கா ஐரோப்பியருக்குத் திறந்த வீடாயிற்று.

கி. பி. 1620-ல் இங்கிலாந்திலிருந்த தூய மதவாதிகள் என்போர் அங்கு தமக்குச் சமய விடுதலை கிடைக்காததால் சமய விடுதலை வேண்டி அமெரிக்க மண்ணில் தஞ்சம் புகுந்தனர். இவர்களே வரலாற்றில் யாத்ரீகத் தந்தையர் என்று அழைக்கப்படுகின்றனர். வட அமெரிக்காவில் காட்முனையில் இறங்கிய இவர்கள் ஏற்கனவே அங்கு வாழ்ந்த பழங்குடிகளைத் துன்புறுத்தும் கயமையில் இறங்கவில்லை. அமெரிக்க மண்ணிலும் தம் உழைப்பிலும் நம்பிக்கை வைத்து நிலங்கிள்ளிப் பயிரிட்டனர், பாடுபட்டனர்; ஆண்டு இறுதியில் பலன் கிடைத்தது. நன்றி பெருக்கெடுத்தது.

முற்றிலும் புதிய மண்ணிலே தாங்கள் பெற்ற அறுவடை எனும் பெரு வெற்றிக்கு அறிகுறியாக அதனை ஓர் விழாவாகவே கொண்டாட எண்ணினர். புதியதாக விளைந்த சோளத்திலே களி சமைத்தனர். பூசனிப் பழத்திலே பணியாரம் செய்தனர். வான்கோழிப் புலால், இன்னபிற படைக்கப்பட்டன. விருந்துண்டு, ஆட்டமும் கூத்தும் நடத்திக் களிப்பெய்தினர்.

கி. பி. 1621ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் திங்கள் நான்காவது வியாழக்கிழமையில் "நன்றி தெரிவிக்கும் நன்னுள்" எனும் இப் பொன்னுன விழா கொண்டாடப்பெற்று நாளடைவில் பொலிவுபெற்று, இன்று அது ஒரு பெரிய "தேசீயத் திருநாள்" ஆகச் சிறப்படைந்துள்ளது.

○ ○ ○

அமெரிக்காவின் அறுவடைத் திருநாளைப் பற்றி ஆராய்ச்சியாளர்கள் தரும் விளக்கங்களோ வேறு விதமாக இருக்கின்றன. நன்றி தெரிவிக்கும் கடப்பாடு இயற்கையாகவே பழங்குடி மக்களிடம் காணப்படும் சிறப்பியல்புகளுள் ஒன்று. இன்றைய மேலைநாட்டு நாகரிக மக்களிடம் இப்பண்பு உதட்டளவில்தான் உண்டு. உலக விழாவெடுத்துக் காட்டும் உணர்ச்சி—எண்ணம்—இங்கிலாந்திலிருந்து குடிவந்த ஐரோப்பியருக்குத் தாமாகவே உதித்த ஒன்ரு? அல்லது அந்நாட்டில் ஏற்கனவே இருந்த பழங்குடி மக்களிடமிருந்து கடன் வாங்கிய ஒன்ரு?" என்ற கேள்வி ஆராய்ச்சியாளரின் உள்ளத்தில் எழுந்தது. அதற்குக் காரணம் இருந்தது. ஏனெனில் ஏற்கனவே அங்கு வாழ்ந்த செவ்விந்தியர்கள் மயா, அஃச்தெக் போன்ற சிறந்த பண்பாடுகளைப் பெற்றிருந்தவர்கள். அவர்கள் இது போன்ற பல விழாக்களைக் கொண்டாடிவந்தனர் என்று வரலாற்றுச் சான்றுகளிலிருந்தும் தெரிய வருகிறது.

○ ○ ○

1956ம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் நம் நாட்

டுக்கு வந்த டாம்டு ஏரோசு என்ற செவ்விந்திய நடனக்காரர், நமது பொங்கலைப் போன்ற திருநாளை அவரது இனத்தவரும் கொண்டாடுவதாகவும் ஞாயிற்றையும் மாரியையும் போற்றி சடங்குகள் நடத்துவது உண்டெனவும் தெரிவித்துள்ளார்.

இது எவ்வளவு உண்மையென்பது செவ்விந்தியர்கள் நடத்திய 'மழை நடனம்' பற்றி வரலாற்றுசிரியர் குறிப்பிடுவதிலிருந்து தெரியவருகிறது. அவர்கள் மிகச் சிறப்பாக நடத்தி வந்த 'ஞாயிற்று நடன விழா' கி. பி. 1884ல் ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தால் சட்டபூர்வமாகத் தடை செய்யப்பட்டது.

பழைய பெருவியப் பேரரசை ஆண்ட 'இன்கா' எனப்படும் அரச பரம்பரையினர் ஞாயிற்றுக் கடவுளுக்கு கோவில்கள் கட்டினர். அவைகளின் இடிபாடுகள் இன்றும் காணப்படுகின்றன.

தவிரவும், செவ்விந்தியர்களது மிகச் சிறந்த நாகரிகங்களை வளர்த்ததும் அழித்ததும் அவர்களது பிரதான உணவாகிய மெயிஃச் எனப்படும் சோளம் என்பர் வரலாற்றுசிரியர்கள். அவர்கள் தாங்கள் பயிராக்கி வந்த நிலம் வரண்டுவிட்டால் உரமிடுவதில்லை உடனே தாம் சீரும் சிறப்புமாக வாழ்ந்த நகரங்களை விட்டுவிட்டுக் கூட்டங் கூட்டமாக வேறு இடங்களை நோக்கி நகர்ந்தனர். இவ்வாறு பாழான பல நாகரிக நகரங்கள் மத்திய அமெரிக்காவிலுள்ள யுகாடன் காடுகளில் அகழ்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே இத்தனைச் சிறப்பு வாய்ந்த சோளப்பயிரை அறுவடை செய்யும் ஒவ்வொரு முறையும் அவர்கள் விழாக் கொண்டாடியதில் வியப்பில்லை.

இவ்வாறு செவ்விந்தியர்கள் கொண்டாடி வந்த விழாவினைத்தான் வட அமெரிக்காவில் குடியேறிய ஐரோப்பியர்கள் கடன் வாங்கினர் என்று திரு. டெஸ்மான்ட் என்ற ஒரு அமெரிக்க ஆய்வாளர் கருதுகிருர்.

செவ்விந்தியரிடை பல விழாக்கள் இருந்தபோதிலும் இந்த அறுவடைத் திருநாளை, அது அமைந்திருக்கும் அடிப்படையின் கருத்துயர்வினை எண்ணித் துணிந்துதான் மற்ற விழாக்களை விடுத்து — அதனை மட்டும்—ஐரோப்பியர் ஏற்றுக் கொண்டாடி வருகின்றனர். இத்தகைய விழா தமிழரிடையேயும் செவ் விந்தியரிடையேயும் தான் சிறப்பாகக் காணப்படுவதால் இவ்விரு இனத்தவரிடமும் உள்ள ஒருமைப்பாடுகள் ஆராய்ச்சிக்குரியனவாகும்.

○ ○ ○

பழந் தமிழரும் அறுவடைக் காலத்தை விழாக் காலமாகக் கருதி வாழ்த்தினர். பழந் தமிழர் நல்ல அறுவடையைப் போர்க்களத்திலே காணும் பெரு வெற்றிக்குச் சமமாகக் கருதினர் என்பது முத்தொள்ளாயிர வரிகளால் தெரிகிறது :-

காவல் உழவர்
 களத்(து) அகத்துப் போர்ஏறி,
நாவலோ ஓ! என்றிசைக்கும்
 நாளோதை, காவலன்தன்
கொல்யானை மேலிருந்து
 கூற்றிசைத் தாற்போலுமே,—
நல்யானைக் கோக்கிள்ளி
 நாடு.

வீரர்கள் செந்நீர் சிந்தும் போர்க்களத்திலே கொட்டும் வீரச் சொற்களும் சோழநாட்டுச் செந்நெல் வயல்களிலே எழும் அறுவடைக் கால வாழ்த்தொலியும் ஒன்ருக மதிக்கப்பட்டன.

பழந் தமிழ் வேந்தருள், சிறப்பாகச் சோழ வேந்தர்கள் கோவில்கள் பல கட்டினர். இது போன்றே தென்அமெரிக்காவில் பெருநாட்டின் செவ்விந்திய அரச பரம்பரையினரான இன்காகர் ஞாயிற்றுக் கடவுளுக்கு தங்கத்தால் இழைக்கப்பட்ட பல கோவில்கள் கட்டினர். இன்கா என்ற செவ்விந்திய அரச பரம்பரையினருள் "சோலா' என்ற ஒரு குழுவினர் உண்டு.

மெக்சிகோ நாட்டில் காணப்படும் பழைய கோவிற் கோபுரங்கள் சோழர் கோவிற் கோபுர அமைப்பினைப்பிரதிபலிப்பதாக திரு. டானல்லி என்பார் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிகிறது.

○ ○ ○

இலங்கைத் தமிழறிஞர்கள் டாக்டர் திரு. சேவியர் தனிநாயக அடிகளாரும் திரு. ந. சி. கந்தையா பிள்ளையவர்களும் இத்துறையிலே பல உண்மைகளைத் தமது நூல்களில் வெளியிட்டுள்ளனர்.

எனவே புதிய உலகத்துப் பொங்கல் விழாவாகிய 'நன்றி தெரிவிக்கும் நாள்' ஆதியில் தமிழரிடமிருந்து சென்றது என்பதில் நமக்குப் பெருமிதப் பொங்கல் ஏற்படுவது இயற்கையே.

★

கலை வழி

சி·என்·ஏ

கலைத்துறை இன்று செழிப்புடன் வளர்ந்து கொண்டு வருகிறது; சிறப்புடன் என்று கூருமல் செழிப்புடன் என்று கூறுவது, பொருளாழத்துடன் தான். செழிப்பான வளர்ச்சியே, சிறப்பு என்று கொள்ள விரும்புகின்றவர்களை நான் தடுக்கவில்லை!

கலைத்துறையுடன் மக்களுக்கு உள்ள தொடர்பு வளர்ந்த வண்ணம் இருக்கிறது. 'நடை உடை பாவனை'யில் கலையின் 'வண்ணம்' அறிந்தோ அறியாமலோ ஏறி இருந்திடக் காண்கிறேன்.

அழகுக் கலையிலிருந்து அடுக்களைக் கலை வரையில், ஒரு புதுமையும் வளமையும் மின்னிடக் காண்கிருேம். மின்னுவதெல்லாம் பொன்னல்லதான்; ஆனல் மங்கிக் கிடப்பதுதான் மாண்புக்கு அடையாளம் என்றும் தீர்ப்பளித்துவிட முடியாதல்லவா?

கலைத்துறை குறித்து எண்ணுவதும் பேசுவதும், ஆய்ந்தறிவதும் எழுதுவதும், வளர்ந்து வருகிறது. ஏராளமான ஏடுகள்! இதழ்கள்! மலர்கள்! துண்டு வெளியீடுகள்! எல்லா இதழ்களுமே, கலைக்காக ஒரு இடம் அமைத்துக்கொண்டுள்ளன; கலைக்காக என்றே உள்ள இதழ்கள் பல வெளிவருகின்றன. இந்த இதழ்கள், கலை குறித்துஎண்ணிட உதவுகின்றன; மக்கள் கலைபற்றி எண்ணுவதைத் துணைகொண்டு இதழ்கள் பயன் பெறுகின்றன; ஒருநல்ல தொடர்பு ஏற்பட்டுக்கொண்டு வருகிறது.

கலை, சமுதாயத்தின் நிலையை உயர்த்துகிறது என்பார் உளர்; இல்லை, சமுதாயத்தின் நிலையைக் கலை தாழ்த்தி வருகிறது என்று கூறுவார் உளர்; இருசாரார் கூறுவதினின்றும், நிலையை மாற்றும் வலிமை கலைக்கு இருப்பது புலனுகிறது; அதிலே ஒரு மகிழ்ச்சி ஏற்படத்தான் செய்கிறது; ஏனெனில், கலையின் வலிமை போயே விட்டது என்றும், கலையின் மூலம் காணக் கிடைத்த பலனகளை இன்று காணமுடிவதில்லை என்றும் கூறிக் கவலையைக் காட்டுகிருர்களே, சிலர், அவர்தம் உரை உண்மை அல்ல என்பது விளங்குகிறதல்லவா! கலை, வலிவுள்ளதாக இருக்கிறது, பொலிவு வளருகிறது, மக்களிடம் உள்ள தொடர்பு வேகமாகப் பெருகிவருகிறது, செழிப்பாகவும் இருக்கிறது.

வலிவும் பொலிவும், மக்கள் தொடர்பும், செழிப்பும் கொணடதாகக் 'கலை' இருக்குமபோது, அந்தத் துறையை அலட்சியபபடுத்துவதோ, அதன் 'வளர்ச்சியையும் வகையையும்' இயற்கைக்கு விட்டுவிடுவதோ, அதன் மூலம் பெறப்படவேண்டியவைகள் எவை எவை என்பது குறித்துப் பொறுப்புக் காட்டாதிருப்பதோ, நல்லதல்ல.

மலடிக்கு மகவுடன் கொஞ்சத் தெரிகிறதா இல்லையா என்பது பற்றி அதிகக்கவலை கொள்ளத் தேவையில்லை; பெற்ற 'செல்வத்தை'ப் பேணி வளர்த்திடும் ஆற்றல் அன்னைக்கு இருக்கிறதா என்று அறிந்தாகவேண்டுமல்லவா?

கலை, மலடி அல்ல; படக்காட்சி 'பாஷை'யில் கூறுவதானல், கலை, "மக்களைப் பெற்ற மகராசி!" எனவே, கலை மூலம் கிடைப்பது கிடைக்கட்டும், பெறுவோர் பெறட்டும் என்று இருந்துவிடக் கூடாது. மக்களைப் பெறக்கூடிய மகராசி என்று தெரிந்தான பிறகு, சீராட்ட, பாராட்ட, சிறப்புடன் வளர்த்திட வழிவகையுடன் 'மகராசி' இருந்திடத் தக்க ஏற்பாடு இருந்தாக வேண்டுமே.

நல்லதங்காள் கூடத்தான் 'மக்களைப்பெற்ற மகராசி'-ஆனல் பாபம், கிணற்றில் போட்டல்லவா குழந்தைகளைக் கொல்லவேண்டி நேரிட்டது.

அதுபோலத்தான், கலை, பல்வேறு 'பலன்களை' ஈன்றெடுக்கும் வளமுள்ளது என்பது உணரப்பட்டான பிறகு, அதன் போக்குக் கவனிப்பாரற்றதாக, இருந்துவிடச் செய்வது கூடாது, என்கிறேன்.

கலை, வலிவுடையதுதான்; ஆனல் அந்த வலிவு, அழிவு வேலைக்கா? ஆக்க வேலைக்கா?

கலை, பொலிவுடையது; மறுப்பாரில்லை; ஆனல்

அந்தப் பொலிவு, உள்ளத்திலே ஆசாபாசங்களை மூட்டிவிடவா? அல்லது தூய்மையைத் தழைத்திடச் செய்யவா?

கலை, மக்களிடம் நெருங்கிய தொடர்புடையது தான்; ஆனால் அந்தத் தொடர்பு ஆசான், மாணவன் என்ற விதமாகவா? போலீஸ்காரன் குற்றவாளி என்ற வகையிலா? தோழர்கள் என்ற போக்கிலா? தொடர்பு எங்ஙனம் இருத்தல்வேண்டும்?

கலை, செழிப்புடையதுதான், ஆனால் அந்தச் செழிப்பு, மக்களின் வளத்தை—உடல்—உள்ளம்—பொருள்—பண்பு—ஆகிய எல்லா வளங்களையும்—பெருக்கும் விதத்தில் இருத்தல் முறையா? அல்லது, ஈடுபட்டோரைச் செழித்திடச் செய்வதுடன் மட்டும் இருந்திடல் போதுமா?

இன்னோரன்ன கேள்விகள் எழுகின்றன.

எவரும் இதுபோல எழுப்புதல் காணோமே, என்கிறீர்கள்; கலைத் துறையிலே ஈடுபட்டவர்களுக்குள்ளே அடிக்கடி காணப்படும் 'சச்சரவுகள்' கலைத் துறையினருக்கும் மற்றத் துறைகளில் உள்ளோருக்கும் உள்ள வேறுபாட்டுணர்ச்சிகள், இவையாவுமே, மேலே குறிப்பிட்டுள்ள 'கேள்விகள்' உள்ளத்திலே ஊசலாடுவதன் விளைவுதான்; வேறென்ன?

முறைப்படுத்தி, பக்குவப்படுத்தி, விளக்கம் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன், இந்தக் கேள்விகளை அணுகாததால், அணுகுவது கடினமாக இருப்பதால்தான், எளிதான வேறோர் வழியைக் கையாண்டு, கலை உலகிலுள்ளோர் ஏளனம்——ஏச்சு — பழித்தல்—சபித்தல் — என்பன போன்ற கணைகளை ஒருவர்மீதொருவர் ஏவிக்கொள்கின்றனர்.

சச்சரவுகளாகிவிடுகின்றன, இயற்கையாக எழுந்துள்ள பிரச்சினைகள்.

கலைத்துறையினர் எவரும் இந்தப் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் முடியாது; இந்தப் பிரச்சினைகளுக்குப் "பரிகாரம்' ஒருவருக்கொருவர், 'வசை' வழங்கிக்கொள்வதுமல்ல.

கலை, வலிவும் பொலிவும்கொண்டது; மக்களிடம் அதற்கு உள்ள தொடர்பு வளர்ந்தவண்ணம் இருக்கிறது; அதன் செழிப்பும் பளிச்சிடுகிறது. உண்மை! இந்த 'வாய்ப்பு' எவ்வழி செல்லல்வேண்டும்?

ஈதென்ன கேள்வி? எவ்வழி செல்லவேண்டும் என்றால், நல்வழி செல்லவேண்டும்—என்று பதிலளிப்பீர்கள்; பதிலளிக்கிறார்கள்; எளிதாகவும் நம்பிக்கையுடனும் பதிலளிக்கிறார்கள்; பதிலிலே பாகு கலந்தும் அளிப்பவர்களைக் காண்கிறேன், நாராசத்தைக் கலப்பவர்களையும் பார்க்க நேரிடுகிறது.

இவ்வளவு எளிதான ஒரு பதில் இருக்கும்போது, கேள்வியில் ஏதோ கடினம் இருப்பதுபோல ஏன் காட்டிக்கொள்கிறீர்? என்று என்னைக் கேட்க எண்ணுவீர்கள். தொடுக்கும் கேள்வியில் அல்ல; கிடைத்திடும் பதிலில்தான், நான் கடினம் ஊடுருவி இருந்திடக் காண்கிறேன்.

எவ்வழி செல்லவேண்டும் என்றால், நல்வழி என்கிறார்கள். மெத்த மகிழ்ச்சி.

நல்வழி, எது?

நல்வழி கூற வல்லார் எவர்?

நல்வழி என்பது, நம் காலத்துக்கு மட்டும் பொருந்துவதா, என்றென்றும் நிலைத்து நிற்பதா?

நல்வழி இஃது என்று கூறுபவர், கூறிடத் தகுதி படைத்தோர்தான் என்று ஏற்றுக் கொள்வது எங்ஙனம்?

இவைகள், நீங்களும் நானும், எண்ணி எண்ணிப் பார்த்துப் பதில் தேடித் தீரவேண்டிய கேள்விகளிலே சில.

"மலேரியா காய்ச்சல் இது; கொயினா தந்திருக்கிறேன்"—

என்று மருத்துவர் கூறும்போது, இவருக்கு எப்படி இது தெரிந்தது? இவர் கூறுவதை நாம் எங்ஙனம், சரியானது என்று ஏற்றுக்கொள்வது? என்று எவரும் ஐயப்பாட்டுக்கு ஆளாவதில்லை; 'ஆம்' என்கின்றனர். பணமும் தருகின்றனர்.

அஃதேபோல, குறிப்பிட்ட சிறப்பறிவுத் துறைகளிலே ஈடுபட்டிருப்பவர்களின் 'கருத்துகள்' மற்றவர்களால், ஏற்றுக்கொள்ளப்படுகின்றன; மறுப்பார், ஐயறுவார், வழக்காடுவார் அதிகம் இரார்.

ஆனால் எது நல்வழி? என்பதற்கு, இன்னின்னவர் பதிலளிக்கும் தகுதி பெற்றார், பிறர், கேட்டு இசைவு அளிக்கும் கடமையுடையார், என்று அறுதியிட்டுக் கூறிவிடமுடியாது, கூடாது; தேவையுமில்லை.

எனவேதான், எது நல்வழி என்பதற்கு, அளிக்கப்படும் பதில், வழக்கை முடிவுபெறச் செய்வதாக இல்லை, புது வழக்குகளுக்கு வழி செய்கிறது.

இதற்கு முடிவுதான் என்ன?

உண்டு! நல்வழி, எது என்பதைப் பிறர் கூறக் கேட்டு, எண்ணிப் பாராமல் ஏற்றுக்கொள்வதோ, அல்லது மறுத்துப் பேசி மாச்சரியங்களை மலியச் செய்வதோ, உண்மையான பலனைத் தராது.

வெற்றி, பெற்றவர்களையே வீழ்த்திவிடுவதுண்டு, வாதியே பிரதி வாதியாகிவிடும் விசித்திரமும் எழக்கூடும்.

எனவே, 'நல்வழி' என்பதற்குப் பொருள், பிறர் கூறுவதைக் கொண்டும், நாமே எண்ணிப் பார்ப்பதைக் கொண்டும் மட்டுமல்லாமல், நாம் எங்கு செல்ல விரும்புகிறோம்? நமது சமுதாயம் எங்கு செல்ல வேண்டுமென்று நமக்கு உறுதியாகத் தோன்றுகிறது? என்பது பற்றி ஒரு 'முடிவு கண்டு' பிறகு, அந்த இடம் செல்ல, எவ்வழி சிறந்ததோ அது நல்வழி என்று கொள்ள வேண்டும்.

இதிலே இன்னல் அதிகம்; ஆனால் இந்த முறையில் தேர்ச்சி ஏற்பட்டால், இனிமையும் கிடைக்கும்.

இனி, எங்கு செல்ல வேண்டும்? என்பதைத் தகுந்த முறையிலே காண வேண்டுமானால், இன்று எங்கு இருக்கிறோம் என்பதனை அறிந்தாகவேண்டும்; இன்றுள்ள கேடுபாடுகள் யாவை என்பதையும் தெரிந்துகொண்டாக வேண்டும்.

வெயிலில் இருந்தவனுக்கல்லவா, நிழலின் அருமை தெரியும்?

இன்று, நாமும், சமுதாயமும் 'எங்கு' இருந்து வருகிறோம்?

ஜாதியும் அதனாலாய பேதங்களும், மூட நம்பிக்கைகளும் அவைகளால் மூண்டு விடும் நாசங்களும், பொருளாதார பேதங்களும், அவைகளால் கொதித்து எழும் குரோதங்களும், ஆட்சி முறை அலங்கோலங்களும், அவைகளால் ஆர்த்தெழும் ஆவேச உணர்ச்சிகளும், அருவருக்கத்தக்க நடவடிக்கைகளும் — தன்னம்பிக்கையற்ற தன்மையும், பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் போக்கும், சலிப்பும் —குழம்பிக்கிடக்கும் இடத்திலே இருக்கிறோம்.

சேற்றிலுள்ள செந்தாமரையைக் காட்டினால், மலருக்குப் பெருமையே தவிர, சேறு சிறப்படைந்து விடாது. அதேபோல, இவ்வளவு இழி தன்மைகளுக்குமிடையிலே, காணப்படும் கருத்துத் தெளிவுள்ளோரை, அவர் தம் பேச்சினைக் காட்டிவிடுவது, சமுதாயம் சிறந்த நிலையில் உள்ளது என்று காட்டுவதாகாது.

இந்த 'இழி தன்மைகளை' நீக்கிக்கொண்டு, இவை ஒழிந்த, பண்புகள் நிறைந்த ஓர் 'நல்லிடம்' செல்ல வேண்டும்.

அதற்கான வழிதான், நல்வழி!

காசிக்குச் செல்ல எண்ணிக்கொண்டு, காஞ்சிபுரம், பஸ்ஸில் ஏறிப் பயன் என்ன?

பம்பாய் போகும் வண்டி பளபளப்பாக இருக்கிறது என்பதால், அதிலே ஏறிக்கொண்டு, பாபநாசம் எங்ஙனம் போய்ச் சேர முடியும்?

அதுபோலத்தான், செல்லும் இடம் எது என்று ஏற்படுத்திக்கொள்ளுகிறோமோ, அந்த இடத்துக்குக் கொண்டு செல்லும் பாதை, எதுவோ, அதுதானே நம்மைப் பொறுத்தவரையில் நல்ல பாதை!

இந்த முறையிலே, ஒரு 'பக்குவம்' ஏற்படுத்திக் கொள்ளுங்கள்; பிறகு பாதையும் புரியும்; பயணமும் எளிது.

ஏடெடுத்துப் படித்திடும் போதும், பாடலைக் கேட்டு இன்புறும் வேளையிலும், ஆடலைக் கண்டு அகமகிழும்போதும், படக்காட்சி கண்டு பரவசப்படும் வேளையிலும், ஓவியத்தைக் கண்டு உள்ளத்தில் இளர்ச்சி எழும்போதும், பேச்சுக் கேட்டுப் பேரின்பம் பெறும்போதும், அழகு கண்டு ஆனந்தமடையும் போதும், இந்த 'ஒரு நோக்கம்' அளவு கோலாகவும், துலாக் கோலாகவும், உரை கல்லாகவும், இருந்திட வேண்டும்; இந்தக் கலை நிகழ்ச்சிகளை ஆக்கித் தருவோருக்கும், இது முழுதும் தேவை.

இந்த வகையிலே 'கலை' கவனிக்கப்பட்டால், அதன் மூலம் செழிப்புக் கிடைக்கும்; அந்தத் துறையும் செழிப்புடன் இருந்திடுவது மட்டுமல்லாமல், சிறப்புடன் திகழும்.

★

> அழுக்கான உடைகளிலோ, ஆடம்பரங்களிலோ, திருநீற்றிலோ, தலை மொட்டை அடித்துக்கொள்வதிலோ, கொம்பு, தப்பட்டை முழங்குவதிலோ பக்தி இல்லை.
>
> —குரு நானக்

அவனே அவள்!

Aykan

மாலை!

பகலவன் தன் வேலையை முடிக்கின்ற நேரம்! அணையப்போகும விளக்கு ஒளிவிட்டுப் பிரகாசிப்பது போல் அந்திவானம் அழகுடன் காட்சி அளித்தது. இசையுடன் ஓசை கிளப்பியது ஆற்றில் ஓடும் நீர். ஆற்றில் உள்ள மீன்கள் நீர் மட்டத்திற்கு வந்து அந்திவான அழகை இரசித்துக்கொண்டிருந்தன! உறுமீன் வருமளவும் வாடியிருந்த கொக்கும், வந்திருந்த மீன்களைப் பார்க்காமல் அந்திவான அழகை இரசித்துக்கொண்டிருந்த நேரம்!

ஆற்றில் நீராடிவிட்டு, அவிழ்ந்த அளகாபாரம் முதுகில் புரள, பச்சைப் புல் பாதத்தைக் குத்தும் மெய்வருத்தம் பாராமல் பூ தொடுத்துக்கொண்டிருந்தாள், அந்நாட்டு இளவரசி பூங்கொடி. தேனை உண்டு கொண்டிருந்த வண்டுகள், மலரை விடுத்து, அவள் கூந்தலில் உள்ள மணத்தை முகர்ந்து கூந்தலைச் சுற்றிவந்து, இன்பகீதம் பாடி, வண்டுமனம் என்று உலகத்தார் சொல்வது உண்மை, உண்மை எனப் பறைசாற்றின. ஓசைகேட்டு நிமிர்ந்து பார்த்த பூங்கொடி கண்டது, கட்டழகன் ஒருவனை.

அ. பரிமளம்

தலைவன் தன்னைநோக்குவதைக் கண்ட தலைவி, தன் தலையைத் தாழ்த்தி நிலம் நோக்கினள் எனும் வள்ளுவர் வாய்மொழி அங்கு செய்கையானது. அவனும் பேசவில்லை, அவளும் பேசவில்லை. தவறு, தவறு! அவர்களால் பேசமுடியவில்லை.

அந்தக் காளையும் சென்றுவிட்டான். அவளுக்கோ கன்னிப்பருவம். கண்டதோ கட்டழகனை. அவள் மனதில்......?

கன்னியின் மனத்தில் பதிந்த அந்தக் காளையின் உருவத்தைப் படமாக எழுதிவிட்டாள் அந்தக் கலை அரசி.

தோழி! எனக் கூப்பிட்டாள்; கனிமரச் சோலை அதிரவில்லை; ஆனால் அந்தச் சொல், சோலை முழுவதும் எதிரொலித்தது. அந்திவானத்து அழகு மறைந்து இருள்சூழ ஆரம்பித்ததும், இன்ப மயக்கத்தில் இருந்த மீன்களும், கொக்கும் இவள் குரல்கேட்டு விழிப்புற்றன.

நிலவு வானில் எழும்பியது. பூங்கொடி தலை நிமிர்ந்து பார்த்தாள். நிலவுப் பெண் "நானல்ல உன் தோழி! அதோ வருகிறாள் அமிர்தம்" எனச் சொல்லாமல் சொல்லிற்று.

"அழைத்தீர்களா இளவரசி"

"இல்லையடி!...... பறந்துவரச் சொன்னேன்".

"என்ன அவ்வளவு அவசரம்" எனக் கேட்டுக் கொண்டே பூங்கொடியின் பட்டுக் கைகளுக்குள் சிறைபட்டிருக்கும் அந்தச் சிங்காரனின் உருவப் படத்தைப் பார்த்தாள்.

"யாரம்மா இவர்"

"அதைக் கேட்கத்தான் உன்னை அழைத்தேன்"

"நீங்கள்தான் இதயச் சிறையில் பூட்டிவிட்டீர்களே"

"அமிர்தம், அவரின் உள்ளம் மட்டும்தான் என் இதயச் சிறையில் இருக்கிறது. அறிந்து வாடி இவர் யாரென்று?"

"தோழிகளின் வேலையே இதுதானம்மா"

இருவரும் சிரித்தனர்.

○ ○ ○

நிலவுப் பெண் இதுவரை ஐந்து, ஆறுமுறை வான வீதிக்கு வந்து நடைபோட்டுப் போய்விட்டாள். பூங்கொடி பஞ்சணையில் அனலிட்ட புழுப்போல் நெளிந்து கொண்டிருந்தாள், மருத்துவர்கள் வந்து போனபடி இருந்தனர். மருத்துவம் பார்க்கப்பட்டது. மருந்து கொடுக்கப்பட்டது. நோய் தீரவில்லை!! அடுத்து வந்த ஒரு முதிர்ந்த மருத்துவர் தன் அனுபவத்தினால் இது மனநோய் எனக் கூறிச் சென்றுவிட்டார். அரசனும் அரசியும் துடித்தனர் மனநோய் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள!

○ ○ ○

"அமிர்தம்"

"அரசே!"

"பூங்கொடியின் மனநோய்க்குள்ள காரணத்தை நீ அறிந்திருக்கலாம் என நம்புகிறேன்."



"மன்னா, இளவரசி, நந்த வனத்தில் ஒரு கட்டழகனைக் கண்டார்கள். ஆகையால் இது காதல் நோய் என்கிறேன் நான்" என்று சொல்லிவிட்டாள் அந்தக் காதல் மருத்துவச்சி.

"யார் என்று நாம் கண்டோம், அமிர்தம்?"

"அரசே அவரின் உருவப்படத்தை நான் பார்த்திருக்கிறேன். இன்னும் சில நாட்களில், அவரைப் பற்றி விசாரித்துச் சொல்லுகிறேன்."

மன்னன் மனதிற்கு ஒரு ஆறுதல் ஏற்பட்டது.

○ ○ ○

அமிர்தம், தன் அடுத்த வீட்டுத் தோழி சுந்தரியைக் காண அவள் வீட்டின் உள்ளே சென்றாள். சுந்தரி அங்கு இல்லை. ஆனால்...? அந்த உருவப்படம்! மன்னன் மகளின் மனக்கலக்கத்திற்குக் காரணமான படம் அங்கு மாட்டப்பட்டிருந்தது.

தோழி திகைத்தாள். ஆம், அமிர்தம் திகைத்து நின்றாள். சுந்தரியின் தாயார் அங்கு வந்தார்கள்.

"அம்மா இந்தப்படத்தில் இருப்பவர் யாரம்மா? நம் சுந்தரியின் முகச்சாயல் இருக்கிறதே! அவளின் அண்ணனா தம்பியா?

"ஏம்மா, அவரை உனக்குப் பிடித்திருக்கிறதா?" சுந்தரியின் தாயார் பேச்சில் கேலி கலந்திருந்தது.

"போங்கம்மா......இல்லை, அவர்......"

"அமிர்தம் நீயும் ஏமாந்துவிட்டாயே. இது சுந்தரிக்கு ஆண்வேடம் போட்டு எழுதப்பட்ட படம்."

அமிர்தத்திற்கு வியப்பு மேலிட்டது.

அந்தப் பட்டு மேனியாள் சிட்டெனப் பறந்தாள், பட்டத்து அரசனிடம்—செய்தியைச் சொல்ல.

அரசனுக்கும் வியப்புத் தாங்க முடியவில்லை செய்தி அறிந்ததும்.

அமிர்தாவின் காதில், ஏதோ விடயத்தைச் சொல்லி அனுப்பிவிட்டான் மன்னர் மன்னன்.

அமிர்தம் ஓடிவிட்டாள்.

மன்னன் மனத்திற்குள் சிரித்தான்

காதலின் விசித்திரத்தைக்கண்டு!!

அன்று மாலை, அரசன் பூங்கொடியை அழைத்துக்கொண்டு, மலர்த் தோட்டத்தை அடைந்தான். மன்னன், மகளைத் தனியே விடுத்துச் சென்றுவிட்டான்.

அவளின் வாடிய முகத்தைக் கண்ட இயற்கையும் அவளுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முறையில் அவளுடைய துன்பத்தில் பங்குகொண்டு வாடியது. சோலையின்கண் உள்ள மலர்கள் மணம் பரப்ப மறந்து அவளின் துன்பத்தை நினைந்து வருந்தின; நம்மைப்போன்ற மலர் மேனியாள் என்ற காரணத்தாலோ என்னவோ வண்டுகள் இவளைச் சுற்றிக் கொண்டு இசைபாடின. உன்னால் துன்பமடைந்த எங்கள் காதலியர், எங்களை, மனம் மகிழ்ந்து அழைக்கவில்லை. இதற்குக் காரணம் நீதான் எனக் குற்றப்பத்திரிக்கை படிப்பதுபோல்இருந்தது அவைகளின் ரீங்காரம். பூங்கொடியின் மென்மையான தோள்களின்மேல் யாருடைய கையோ படுவதை அறிந்த பூங்கொடி துள்ளி எழுந்தாள். எதிரே! அவளின் இன்பம்—எதிர்கால மணாளன் தன்கைகளை நீட்டி அவளை அழைத்தான். காந்தத்தால் கவரப் பட்ட இரும்புபோல், அவள் ஓடி அவனை அணைத்துக்கொண்டாள். தந்தையின் சிரிப்பொலி கேட்டு, காதலனின் அணைப்பில் இருந்து விடுபட்டுச் சற்றுத் தள்ளி நின்றுகொண்டாள். 'அப்பா இவர்தான்' என்று அவள் முடிப்பதற்குள், மன்னன் குறுக்கிட்டுப் பேசினான். "பூங்கொடி உன் காதலனின் தலைப் பாகையை கையில் எடம்மா!"

பூங்கொடி தலைப்பாகையைக் கையில் எடுத்தாள். திகைத்தாள்!!

அவள் காதலித்தது ஒரு பெண்ணை என்பது தெரிந்ததும், வெட்கித் தலைகுனிந்து நடந்து சென்றாள்.

சுந்தரி தன்னுடைய விசித்திர அனுபவத்தைக் கண்டு பயந்து நடந்து சென்றாள்.

அரசனும், அமிர்தமும் சிரித்தனர்,

இந்தக் காதலைப் பார்த்து!!

வேலையில்லாத் திண்டாட்டம்

"கவிஞர் வாணிதாசன்"

வானின் செம்மை வளர்ந்து மலிந்து
காளுறு போலக் காட்சி யளித்தது!
செம்மேட்டு வெள்ளத் தேக்கம் போலவும்,
அம்மேட்டு மருங்கு வயல்வெளி போலவும்,
செங்கடல் திசையெலாம் சீறிப் பாய்ந்து
பொங்கி மோதும் புதுமை போலவும்,
சிந்திய சுடரொளி சிரிப்பால் அழைக்கும்
அந்தி வான அழகு முகில்கள்
புந்தியை மயக்கின; புதுப்புது ஒவியம்
தந்து மறையும் செந்தீத் தொடுவான்
இடையில் மலையின் இடையில் பரிதி
உடைந்த தட்டென ஒளிமங் கியதே!

கடற்கரை யோரம் காற்றுட வந்த
நடைபயில் நிலவுகள் நகரக் கன்னியர்
இடையில் இடையில் எழிலோ டிறுக்கிய
உடையில் உடலில் ஒளிசேர் விழியில்
கடற்கரை மணலில் கரைதவழ் அலையில்
படரும் இருளொடு படரும் செம்மை,
செக்கர் சிந்திய செவ்வொளிச் சிறுசுடர்
இக்கரை காட்டும் எழில்மது மாந்தி
இருந்தான் 'இளைஞன்'; மனம்எங்கோ இருந்தது.
பெருவெளி வானப் பிறையும் மீனும்
பூந்தாழை மடலும் பித்தளைப் பொடியுமாம்!
சிந்துவா ரற்றுக் கிடப்பதைப் போலக்
கிடந்தான்; சோர்ந்து கிடந்தான் இளைஞன்.

○

படர்ந்தோடி ஆடும் பைங்கிளிச் சிறுரும்
மின்னல் அசையப் பேசிச் சிரிக்கும்
கன்னல் மொழியார் கடைக்கண் தேனும்
எங்கோ அலறும் வானொலி இசையும்
பொங்கு கடலின் புதுத்தமிழ்ப் பாட்டும்
வெறுப்பே தந்தன. விரிவான் பரப்புக்
கறுத்தது; மெல்லக் காரிருள் படர்ந்ததே.

எழுந்தான்; நடந்தான்; ஏதேதோ எண்ணினான்
தொழுநோய்ப் பசியின் தொல்லை தாங்காது
காற்றுடு வோர்முன் கையை நீட்ட
ஆற்றாது அமர்ந்தான் ஓர்பால்.
வறுமையா தெரியும் வயிற்றுப் பசிக்கு?
பொறுமையாய் இருவெனப் புகன்றால் கேட்குமா?
ஒருநா ளல்ல இருநாள் பட்டினி;
பொருளும் இல்லை; புகலிடம் இல்லை;
ஏங்கித் தவித்தான்; எதிர்ப்படு வோர்முன்
தாங்காப் பசியின் தகைமை கூறினான்.
பரிகசச் சிரிப்பே பரிசாய்க் கிடைத்ததே.

எரியும் வயிற்றை இறுக்கவா முடியும்?
நின்றான்; ஏங்கினான்; நீள்மூச் செறிந்தான்.
சென்று திருடெனச் செப்பிய துள்ளம்
நன்றல இச்செயல் என்றது நுழைபுலம்
நின்றான்; பசியே வென்றது. தொலைவில்
வருவான் ஒருவனின் வழியினைப் பார்த்து
தெருவின் முடக்கில் இருளில் மறைந்து
சுண்டெலி தொடரும் பூனையைப் போல
ஒண்டி இருந்தான் ஒதுக்கிடம் பார்த்தே.

"திருடன்! திருடன்!" சுவர்எதிர் ஒலிக்க
அருகில் வாழ்நகர் அங்குள மக்கள்
ஒருவ ரேனும் உடன்வர வில்லை,
தெருவில் நிகழும் சிறுசண் டைக்கே
வருவதும் பார்ப்பதும் வாடிக்கை இல்லை;
பட்டின வீரப் பண்புஇப் பண்பாம்!

○

பட்டினம் பார்க்க 'வந்தவன்' திருடனை
எட்டிப் பிடித்தே இரண்டறை கொடுத்தே
கையும் களவுமாய்க் காரிருள் இல்லா
மைய்ய விளக்கின் மருங்கில் வந்தான்.

இருவரும் விளக்கில் ஒருவரை ஒருவர்
அருகில் பார்த்தனர்: "அப்பா சாமியா"?
என்றான் வந்தவன் இருவரும் திகைத்தனர்.

"பொன்னா என்னை மன்னித்து விடடா;
என்நிலை வறுமை என்செய்கோ நான்?
ஒன்றிய நட்போ(டு) உயர்நிலைப் பள்ளியில்
படித்து முடித்தோம்; பட்டமும் பெற்றோம்;
நடுத்தரக் குடும்ப நலிவைப் போக்க
அலைந்தேன் பட்டினம் முழுமையும் அலைந்தேன்;
தொலைந்தது கைப்பொருள் தோழா" என்றே
நடந்ததை அப்பா சாமி நவின்றான்.
அடங்காப் பசிவந் தவர்களை அலைக்கச்
சென்றனர் இருவரும் சிற்றுண் அருந்த
"இன்றைய செயல்ஒன் றென்றிட மில்லை;
நாளைக் கெதுவோ? நான்சொல மாட்டேன்;
தோளை, நம்பியும் தொழில்பல கற்றும்
வாழும் நிலையோ வகுத்துள தரசியல்?
சூழும் பஞ்சம் தொலைவ—தெக்நாளோ?
வாழ்க்கை உயர வழிசெயாப் படிப்புப்
பாழா கட்டும்; படித்தது போதும்"
என்று நொந்தே இரவெலாம் பேசிச்
சென்றனர் இருவரும் வெவ்வேறு திசையில்.

○

கப்பிய குளிரில் கந்தையு மின்றி
அப்பா சாமி அலைந்து திரிந்து
வேலை தேடி வெறுங்கை யாகிச்
சோலை இடையில் தோன்றும் மிருகச்
சாலை வந்து தன்னிலை கூறினான்.
காலையில் செத்த, சாலைக் குரங்கின்
கவலையில் இருந்த காட்சிச் சாலையோர்
கவலை போக்கும் வழியினைக் கண்டார்!!

"எந்தத் தொழிலும் இழிதொழில் அல்ல!
இந்தக் குரங்கின் தோலை ஏற்று
சிந்தை களிக்கச் செய்வாய் ஆனால்
வந்தது புதிய குரங்கென மகிழ்வோம்,—
கூலியும் கூடுதல்; கூறெ"னக் கேட்டார்.
வேலை இலாதான் வேறென்ன செய்வான்?
குரைத்துப் பெற்ற செல்வம் குரைக்குமா?
உரைத்தான் இணக்கம் உயிர்வாழ லானான்.

○

மிருகக் காட்சிச் சாலையில் கூட்டம்
பெருகி இருந்தது; பேரூர் வாழ்நர்
பந்தி பந்தியாய் வந்து குவிந்தனர்.
தொந்தி பருத்த மந்திக் குரங்கின்
கூண்டிற் கருகில் கூண்டொன் றிருந்தது.
நீண்ட வெளியில் கம்பிகள் நிறுத்தி
வேண்டும் போழ்து விளையாட் டயர
ஆண்டு சமைத்த அழகிய கூண்டுள்
ஒருபுறம் புலியொன் றுலவித் திரியும்;
ஒருபுறம் மனிதக் குரங்கொன் றிருக்கும்.

குரங்கைப் பற்றிக் கூறுர் இல்லை;
வருவோர்க் கெல்லாம் வணக்கம் செய்யும்;
வாழைப் பழமும் வட்ட முறுக்கும்
கூழைவால் குரங்கு கொடுஎனக் கேட்கும்,
ஓடும்; ஆடும்; உயர்மரம் ஏறிக்
கூடினார் களிக்கக் குப்புற வீழும்.

ஒருநாள் குரங்கின் ஒப்பிலா ஆடலை
வருவோர் கண்டே வாழ்த்துரை நல்கினர்;
பழம்பல தந்தனர்; பண்ணியம் தந்தனர்;
அழகிய குரங்கின் ஆடலை வியந்தனர்.
மீண்டும் ஏறித் தாண்டிக் குதிக்கையில்
கூண்டில் வாழும் கொல்புலி அருகில்
வீரிட் டலறி விழுந்தது குரங்கும்.
கூர்நகப் புலியும் கொல்லப் பாய்ந்து
குப்புறக் கிடக்கும் குரங்கின் காதில்
"அப்பா சாமி! அஞ்சேல்!" என்று
புலித்தோல் போர்த்த பொன்னன் உரைத்தான்.
ஒலித்தது சிரிப்பொலி ஒலித்தது நீடே!!

இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கைக்கு மேற்கு திசையில், சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன், நடந்ததாகப் பேசப்பட்டு வரும் ஒரு காதல் கதையின் சாரம் இது, சுருக்கித் தரப்பட்டிருக்கிறது.

ஊரின் நடுவிலே உள்ள சாவடிப் பொட்டலில் பாவைக் கூத்து நடந்துகொண்டிருந்தது. தெற்குச் சீமையில் பேரும் புகழும் பெற்று விளங்கிய அந்த வேடிக்கையைப் பார்க்க, கிராமத்து மக்கள் அனைவருமே மைதானத்திற்கு வந்திருந்தார்கள். வெளியிலே வரக்கூடாத பருவமடைந்த பெண்கள்கூடத் தலையிலே முக்காடிட்டுக்கொண்டு கூத்தை இரசித்தார்கள். நடந்தது சந்திரமதி கதை. எங்கேயுமே சந்திரமதி நாடகத்திற்கு ஆண்கள் அதிகம் வருவதில்லை. பெண்கள்தான் முட்டி அடித்துக் கொண்டு மாலையிலேயே கொட்டகைக்கு முன்னால் பாயை விரித்து வைப்பார்கள்—இடம் பிடித்துக் கொள்வதற்காக! அன்றைய தினம் திருப்பாச்சேத்திக் கிராமத்திலேயும் பெண்கள்தான் அதிகம் வந்திருந்தார்கள்.

○

தமிழர் நெஞ்சு இரக்கமுள்ளது. எந்த அளவு காதலை மதிக்கிறதோ, அந்த அளவுக்கு சோகத்தைக் கண்டு கண் கலங்கி நிற்கிறது. சந்திரமதியை, யார், எந்த-நாட்டுக்காரி என்று அவர்கள் பார்ப்பதில்லை. அவளுக்குத் துயர் என்றால் தங்கள் வீட்டில் தீப்பற்றிக்கொண்டதாகவே தமிழ்ப் பெண்கள் நினைக்கிறார்கள்; அழுகிறார்கள்.

வேந்தன் மனைவியாக வாய்த்த சந்திரமதி, வேற்றாள் ஒருவனிடம் அடிமையாகி வேலைக்காரியாக வந்து வீடு கூட்டும் கட்டம் நடந்துகொண்டிருக்கிறது. மைதானத்தின் பெருமூச்சு மேக மண்டலத்தைக் கலக்கிறது. அப்போது கூட்டத்தின் நடுவே இருந்து ஒரு வாலிபன்—இரும்புக் குண்டைப்போல் உடற்கட்டுடையவன் எழுந்து நடந்துகொண்டிருந்தான். அவனைத் தொடர்ந்து ஒரு பெண் நடந்தாள். அவளுக்கு அவன் வயதுதானிருக்கும். இருவருக்கும் நல்ல பொருத்தம், அவர்களின் தோற்றம் அகநானூற்றுக் காதலர்களையே நினைவூட்டியது. ஆடை அணிகலன்கள் அதிகமில்லை. கழுத்தில் கருமணி மாலை. அதில் ஒரு பொன்வில்லை. காதுகளில் பூடி—அது ஒருவித அணி. கைகளில் ஒற்றைக் காப்பு. வாரிக் கலைத்த தலை. மல்லிகைப் பூ சொருகியிருந்தாள்.

அவன் சாய வேட்டிகட்டி இருந்தான். இடது கையில் பவளவேர்க்காப்பு அணிந்திருந்தான். இடுப்பில் ஒரு பிச்சுவா கத்தி, தொங்கியது. தலையில் எண்ணெய் சத்து இருந்தது; ஆனால் வாரிவிடப்படவில்லை. அவனுக்கு அந்தச் சிகை அலங்காரத்தில் பற்று இருப்பதாகவே தெரியவில்லை, உழுந்துக்கு எண்ணெய் தடவி வெயிலிலே உலரவைத்தால் எப்படி மின்னுமோ அப்படி மின்னியது அவன் மேனி, அவரைக்காய் அளவு படர்ந்த — அழகிய கருமீசை அவனுடைய கம்பீரத்தைப் பறைசாற்றியது.

○

சந்திரமதியின் துக்கத்தில் பங்கு கொண்டு கேட்டுக் கொண்டிருந்த பொது மக்களின் கவனம், இவர்கள் பக்கம் திரும்பியது, எல்லோரும் இவர்கள் இருவரைப்பற்றியே ஒருகண நேரம் பேசினார்கள்.

அவளுக்கு வெட்கம்—வாயை மூடிக்கொண்டாள். அவளுடைய நடையுடை பாவனையெல்லாம் அந்த வாலிபன் எது சொன்னாலும் கேட்கும் தோரணையில் இருந்தது.

அவர்கள், கூட்டத்தைத் தாண்டினார்கள். ஊரைத் தாண்டினார்கள். அடுத்து கண்மாய்க் கரை! வீடு அந்தபபக்கம்தானிருந்தது! அவன் வேகமாக நடந்தான். அவள் ஓடினாள். அவனைத் தொடர்ந்து அவளால் நடக்க முடியுமா?

கரையிலே நின்றுகொண்டு கிராமத்தைப் பார்த்தான். லோகிதாசனுக்குப் பாம்பு கடிக்கும் கட்டம் நடந்துகொண்டிருந்தது—கூத்தில்!

"அத்தான் இன்னிக்கி இருட்டு அதிகம்! பாதையே தெரியல்லையே!"

"ஆமாம், இருட்டு அதிகம்தான். பழகிப்போன எனக்கே பாதை மட்டுப்படவில்லை!"

"பாத்துப் போங்க! நாளைக்கி வேலை ரொம்ப இருக்குது! படுத்துக்கிட்டா, அவ்வளவுதான்! கழுத்துக்குள்ளே சிரிக்கிறவங்க கைதட்டிச் சிரிப்பாங்க!"

"நீ ஒன்னு! முத்தாயி, ஒன்னையே நெனைச்சேன்; நீ கெடைச்சுட்டே! இனி நான் செத்தா என்ன!"

"அத்தான்!"—என்று கதறினாள் முத்தாயி.

வேலியோரத்தில் பதுங்கியிருந்த இருவர் திடீரென்று வாலிபன்மீது பாய்ந்து தாக்கினார்கள். மையிருட்டு! யார், யாரை அடிக்கிறார்கள் என்று அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை.

"டேய் செந்தட்டி! நீயும் ஒரு ஆம்பிளைதானா? ஈரல் செத்தவனே! ஒழிஞ்சிருந்தா வெட்டுறாய்? ஒத்தைக்கு ஒத்தை வந்து பாருடா? அப்போ தெரியும்!" என்று அந்த வாலிபன் சத்தம்போட்டுக் கொண்டே சண்டை போட்டான். கல்லை உடைப்பதுபோல் மூவரும் பல்லைக் கடித்துக்கொண்டு யுத்தம் புரிந்தார்கள். ஆனால் அந்தச் சண்டை அவ்வளவு விரைவில் முடிந்து விடுமென்று அவள் நினைக்கவில்லை. தாக்கியவர்கள் இருவரும் ஓடிவிட்டார்கள். வாலிபன் மட்டும் கீழே கிடந்தான். முத்தாயி ஓடிப்போய் அவனைக் கட்டிப் பிடித்தாள். அவள் உடம்பெல்லாம் ஈரப் பசை தட்டுப்பட்டது.

'ஐயோ! இரத்தம்!'—என்று புலம்பினாள். முகத்தைப் பார்ப்பதற்கு அவன் உடலைப் புரட்டினாள். உடலைத்தான் அவளால் புரட்ட முடிந்தது. முகத்தைப் பார்க்க முடியவில்லை—ஆமாம், தலையையே காணோம். அவன் பிணமாகக் கிடந்தான்.

2

திருப்பாச்சேத்தி என்பது சிற்றூர்; இராமநாதபுரம் மாவட்டத்தில் மானாமதுரைக்கு அருகாமையில் இருக்கிறது. வாள் வீச்சுக்காரர்கள், சிலம்பாட்டக்காரர்கள் நிறைந்த வட்டாரம் அது. அந்தப் பகுதியிலேதான் இன்றும் பண்டைத் தமிழகத்தின் வாடையைக் காணலாம். ஆடவர்கள் கொண்டை போட்டிருப்பார்கள். வைதிகக் கொண்டையல்ல! அன்றையத் தமிழர் வைத்திருந்த வீரமுடி! மீசையில்லாத ஆடவரைப் பார்க்கமுடியாது. எல்லோருமே கொத்து மீசைக்காரர்கள்தான். பாளையக்காரர் காலத்திய வாட்ட சாட்டமான உருவங்களைப்போல் இருப்பார்கள். இன்றைக்கும் அப்படித்தான்!

செந்தட்டிக் காளை என்பவன் செல்வாக்குப் பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவன். அவன் நான்கைந்து வெற்றிலைக் கொடிக்கால்களுக்குச் சொந்தக்காரனாக இருந்தான். அதை வைத்து, பல குடும்பங்களுக்கு அவன் வேலை கொடுத்துக்கொண்டிருந்தான். இத்தனைக்கும் அவன் இருபத்தைந்து வயது இளைஞன்தான். திருமணம்கூட ஆகவில்லை.

முத்தாயி அவன் தங்கை. ஒரே தங்கை, அடுப்புக் கரியைக் காட்டிலும் அவள் கருப்பு. ஆனால் கடைந்தெடுத்த உடற்கட்டு. எல்லோரும் அவளை நினைத்தார்கள். அவர்களில் சிலர் அவளைப்பற்றிப் பேசித் தீர்த்துக்கொண்டார்கள். ஆனால் யாரும் அவளை நெருங்கவில்லை. பாதிப் பேர், அவள் எரிந்து விழுவாளே, ஏசித் தீர்ப்பாளே என்பதற்காக அஞ்சினார்கள். மிகுதிப் பேர் அவள் அண்ணன் செந்தட்டிக் காளைக்குப் பயந்தார்கள். சேம்பர்லினும் குடையும்போல், சர்ச்சிலும் சுருட்டும்போல் எந்த நேரமும் வெட்டு அரிவாளை அல்லவா அவன் கையிலேயே வைத்துக்கொண்டிருந்தான்!

○

பணக்காரன் குரலில் அர்த்தமில்லாத அதிகாரம் தொனிக்கிறது; திறமைசாலியின் பேச்சிலே சர்வாதிகாரம் இழையோடுகிறது; அழகியின் பார்வையில் அலட்சியம் நர்த்தனம் புரிகிறது. முத்தாயிக்கு, தான் கருப்புத்தான் என்று அவளுக்குத் தெரியும்; தன்னைக் காட்டிலும் சிவப்பானவர்கள் அவளோடு தண்ணீர் எடுக்க வருவதையும் அவள் உணர்வாள். அவர்களுக்கெல்லாம் இல்லாத 'ரப்பும்', 'அரங்கத்தனமும்' முத்தாயிடம் இருந்தது என்றால், வாலிபர்கள் மத்தியில் அவளுக்கொரு 'மார்க்கெட்' இருப்பதை அவள் நனகு உணர்ந்திருக்கிறாள் என்றுதானே பொருள்.

பலபேர் ஒருத்திமீது குறிவைப்பதைக் கதைகளில் படிக்கிறோம்; நாடகங்களில் பார்க்கிறோம். திரையிலும் திரும்பத் திரும்ப அந்தக் காட்சிகளே வருகினறன. ஆனால் பல பெண்கள் ஒரு ஆடவன் மேல் குறிவைப்பதுண்டா? உண்டு; யாரும் அதை மிகைப்படுத்துவதில்லை. திருப்பாச்சேத்தியில் அது வெளிப்படையாகத் தெரிந்தது. முத்தாயியைப் பலர் விரும்பினார்கள. அதற்காக 'கர்ணம்' போட்டார்கள்; காசைக் காட்டினார்கள்; அதைப்போல் பல முத்தாயிகள் ஒருவனுக்காகக் காத்துக் கிடந்தார்கள். **கருமுயல்** அவன பெயர்! கீாத்திபெற்ற சிலம்பாட்டக்காரன். அவன்தான் உண்மையான சிலம்புச் செல்வன். பெண்ணுக்கு எவ்வளவு போட்டியிருககிறதோ, அந்த அளவுக்கு ஒரு ஆணுக்கும இருக்கத்தான் செய்கிறது ஆடவர்கள் காதலை - பெண்ணாசையை — தற்பெருமையாகக் கருதுகிறார்கள் — பறையடிக்கிறார்கள். பெண்கள் அப்படியல்ல; காதலைத் தங்கள் வாழ்க்கையோடு பிணைத்து விடுகிறார்கள்—இரகசியமாகவே வைத்துக் கொள்ளுகிறார்கள். மனம், பருவம், எண்ணங்கள்—இவை இருபாலாருக்கும் ஒன்றுதானே! ஆடவர்கள் சுரைக்கூடுகள்—பெண்கள் நிறைகுடங்கள்!!

○

அண்ணன் வரும்வரை அவள் சாப்பிடமாட்டாள். காத்திருப்பாள். பத்து மணிக்குமேல் செந்தட்டிக் காளை வீட்டுக்கு வருவான். அவனுக்காகச் சாப்பாடு பரிமாறி இருப்பதையும், அதற்குப் பக்கத்தில் முத்தாயி தூங்கிக்கொண்டிருப்பதையும் பார்ப்பான். பாசம் வளர்ந்தது. அவளை எப்படியும் வைரஊசிக்குக் கொடுத்துவிட வேண்டும் என்று எண்ணியிருந்த ஆசையை ஊர்ஜிதப்படுத்தி விட்டான். இந்த எண்ணத்தை அவளிடம் எப்படியாவது தெரிவித்து விட அவன் பலதடவை முயற்சி செய்தான். முடியவில்லை. தமிழினத்திற்கும், பிற இனத்திற்கும் இங்கேதான் விரிந்த வேறுபாடு உண்டு. எதை எப்படிச் சொல்லவேண்டுமோ, யார் யாரிடம் கூறவேண்டுமோ அதைத்தான் தமிழர்கள் சொல்லுவார்கள். முத்தாயியை அதிகாரம் செய்வதற்கு உரிமை படைத்தவன்தான் செந்தட்டி; எத்தனையோ காரியங்களுக்கு அவளை மிரட்டியிருக்கிறான், பயம் காட்டியிருக்கிறான், அடிக்கக்கூடக் கையை ஓங்கியிருக்கிறான்; ஆனால் அவளுடைய மணவினைத் தகவலை

அறிவாளி ஒரு மனிதனை, நீ எந்த இனத்தான், எந்த ஜாதியான் என்று கேட்க மாட்டார். நீ செய்திருப்பது என்ன என்றே கேட்பார்.

அவளிடம் நேரடியாகச் சொல்லத் தயங்கினான். பயம் அல்ல! பண்பாடு அத்தகையது.

ஒருநாள் செந்தட்டி திடீரென்று ஒரு கட்டளை பிறப்பித்தான்.

"முத்தாயி, இன்னக்கி நீ கொடிக்காலுக்குப் போய்ப் படுத்துக்க. ஆடு மாடுகள் அழிச்சிடப் போகுது!"

"ஒத்தையிலேயா?"

"வைர ஊசியை வரச்சொல்லியிருக்கேன்"

"உஹூம்! பயமாயிருக்கு! நா மாட்டேன்."

"பயமா இருக்கா? ஊரிலே இருக்கிற பயலுகளெல்லாம் ஒன்னைப் பேய், பிசாசுங்கிறானுக, நீ என்னடான்னா, பயமா இருக்குதுங்கிறியே"— என்றான் செந்தட்டி கொஞ்சம் குறும்பாக!

செந்தட்டியின் கட்டளை, அவளுக்குப் பயத்தைக் காட்டிலும், கவலையைத்தான் அதிகமாகத் தந்தது. ஏனென்றால், அன்று இரவு பன்னிரண்டு மணி அளவில் ஆற்றுப் படுகையில் கருமுயலைச் சந்திப்பதாக அவள் அவனுக்கு அறிவித்திருந்தாள்!

மனித இனம் தனக்கு விருப்பமான முடிவுக்கு எதிராக எத்தகைய பயங்கரக்கட்டளைகளையும் மதிப்பதில்லை. அதிலும் பெண்கள் பொருட்படுத்தவே மாட்டார்கள். போட்ட திட்டத்தை நிறைவேற்றுவதில்—ஆடவரிலும் பெண்கள் கைதேர்ந்தவர்கள். காதலர்களைச் சந்திப்பதில், வெள்ளைக்காரர்களைக் காட்டிலும் நேரத்தைத் துல்லிதமாகக் கையாளுவார்கள்; காதலன் பேச்சின் பல்பொருள் விளக்கத்தை அவர்களிடம் கேட்டால் சுவை மிகுந்த விரிவுரையாளர்களின் சொல்லோவியங்கள்கூடக் கசக்குமாம்—அனுபவசாலிகள் கூறுகிறார்கள்!

○

தலையிலே முக்காடிட்டுக்கொண்டு ஒற்றையடிப் பாதை வழியாக முத்தாயி ஆற்றங்கரைக்குப் போனாள். பனி கொட்டியது. அவள் கால் விரலில் போட்டிருந்த வெள்ளித் தண்டை, அந்த அமைதியான வேளையில் ஒரு இனிய நாதத்தை ஒலித்துக்கொண்டிருந்தது. காரிருள் வேளையில் காட்டுப் பாதையில் போகும்போது கருகல் வாடை வீசும். பாம்பு அடை காத்திருந்தால்தான் அப்படி மணக்கும் என்று கிராமத்தார் சொல்லுவர். முத்தாயிக்கு அது தெரியும். ஆனாலும் குறிப்பிட்ட இடத்தில் வீசிய அந்த வாடையை அவள் பொருட்படுத்தவில்லை. தாழம் புதருக்குப் பக்கத்தில் அவள் உட்கார்ந்திருந்தாள். அந்த இடம் பயங்கரமான இடம். ஐந்தாண்டுகளுக்கு முன அந்த இடத்திலேதான் உள்ளூர் நாட்டாண்மைக்காரர் மகள் தற்கொலை செய்துகொண்டாள். அதனால் அந்த இடத்தைப் பேய் பிடித்த புதர் என்று அழைத்தார்கள்.

நடுநிசி! கருமுயல் தலையிலே சிகப்புத் துண்டு கட்டிக்கொண்டு அங்கு வந்தான். முதலிலே என்ன பேசுவது என்று இருவருக்கும் யோசனை! அவளுக்கு வெட்கம்! அவனுக்கோ பயம்! அவள் பொல்லாதவள் என்று பெயர் பெற்றவளாயிற்றே! அறிமுகமில்லாதவர்களுக்கு எழுதும்கடிதத்தைப் போல் உரையாடல் தொடங்கியது.

"வந்து வெகுநேரமாகிவிட்டதோ?"

"உ.........ம்!"

"வீட்டில் கோபித்துக்கொள்ள மாட்டார்களா?"

"துணிஞ்சாச்சு! வருவதை ஏத்துக்கத்தானே வேணும்!"

"இப்போது உன் அண்ணன் செந்தட்டி வந்தால் என்ன செய்வாய்?"

"நான் செய்வதிருக்கட்டும்! நீங்கள் என்ன செய்வீர்கள்?"

"எனக்கென்ன பயம்? உன் வீட்டுக்கு வந்தால் அவன் கேட்கலாம். இது ஆற்றங்கரை! செந்தட்டிக்கு அதிகாரமில்லை!"

"அடேயப்பா! ஒரே முறுக்கா முறுக்குறீங்களே!"—இப்போதுதான் அவள் வாழ்நாளில் ஒரு ஆடவனிடத்தில் மனம் விட்டுப் பேசுகிறாள்.

கருமுயல், உலகம் தன் கையில் சிக்கிவிட்டதாகவே நினைத்தான். திருப்பாச்சேத்தியில் விக்டோரியா மகாராணியைப்போல் யாருக்கும் பணியாமல் எவர் சொல்லையும் கேட்காமல் நடமாடியவள், தன்னைப் பார்க்கவந்திருக்கிறாள், தன் சொல்லைக் கேட்கத் தயாராக இருக்கிறாள் என்றால், மகிழாதிருப்பானா?

அன்று முதல் காலைக் கதிரவன் அவனுக்குப் பணியாளாகத் தெரிந்தான். சந்திரிகை பணிப் பெண்ணானாள். "நாட்டாண்மைக்காரர் மகன் இருக்கிறான், அம்பலகாரர் பேரன் இருக்கிறான், அவர்களையெல்லாம் விரும்பாமல் என்னை விரும்பினாள் என்றால்—பெண்மைக்கு எதில்தான் அன்பு சுரக்கிறது"—இப்படித் தன்னை அவன் பல முறை கேட்டுக்கொண்டிருக்கிறான். அவள் மனம் அவனுக்குப் புதிராகவேபட்டது.

அன்றிலிருந்து அவள் வரச்சொன்ன இடத்திற்குப் போனான்; சந்திக்கச் சொன்ன இடத்தில் சந்தித்தான்.

"முத்தாயி!"

"ஊ...ம்!" — குரலிலே கர்வமும், குழைவும் பின்னிக்கிடந்தன. ஆண் — பெண் இருவருக்குமுள்ள உறவு, காதல் நிலையில் இருக்கும்வரை பெண்தான் எசமானியாக இருக்கிறாள். காதல்கடமையாகிக் கழுத்திலே தாலி ஏறிய பிறகு, அந்த எசமானி வேலைக்காரியாகிவிடுகிறாள். இப்போது எசமானியாக இருந்தாள் முத்தாயி.

நாம் எத்தனை நாளைக்கு இப்படி இருட்டு வேளையில் சந்தித்துக்கொண்டிருப்பது?"

"காலம் கனியும் வரை!"

"நம்பிக்கையில்லை முத்தாயி! செந்தட்டியின் மனம் ஒருபோதும் கரையாது! அவன் மதயானை. கர்வம் வைத்தால் எத்தனை யுகம் தாண்டினாலும் பலி வாங்காமல் விடமாட்டானே!"

"அப்படியின்னா என்னை மறந்திடுங்க!"

"உஹூம்! அதுக்கா சொல்கிறேன்! நிலைமையைச் சொன்னேன். புரிந்துகொள்."

○

கோடை காலம் முழுவதும் அவர்கள் சந்திப்பு இரகசியமாகவே இருந்தது. மாந்தோப்பு, கருவேலங்காடு, கண்மாய்க்கரை — இவைகளே அவர்களுக்கு உத்தியா நந்தவனங்களாகவும் உப்பரிகைகளாகவும் மாறின.

"புரியாது உனக்கு! புரியவைக்கிறேன்" என்று அடக்கத்தோடு சொல்லிவிட்டு வெளியே போய்விட்டான்.

அன்றைய தினம்தான் கிராமத்திலே பாவைக் கூத்து. மழை முகத்திற்காக ஊரார் ஏற்பாடு செய்திருந்தார்கள். மாரியம்மனுக்குப் பாவைக் கூத்து என்றால் அளவுகடந்த பிரியமாம்! அப்படி ஒரு நாளைக்கு கூத்தை ஏற்பாடு செய்தால் அந்த வருஷம் பஞ்சம் வராதாம்! தென்மாவட்டங்களில் இப்படி ஒரு நம்பிக்கை.

முத்தாயியும் கூத்துப்பார்க்க வந்திருந்தாள். கருமுயலும் வந்திருந்தான். வழக்கம்போல் அவர்கள் சந்திக்கும் நேரம் வந்தது. அவன் எழுந்தான். அதைப் பார்த்துக்கொண்டிருந்த அவளும் எழுந்தாள். பின் தொடர்ந்தாள். தாழம்புதரை நோக்கி நடந்தார்கள். அப்போதுதான் கருமுயல் கொல்லப்பட்டது.

○

3

கருமுயல் கொலை வழக்கு — அந்த வட்டாரத்தில் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது. மதுரையில் வழக்கு நடைபெற்றது.

முத்தாயி வாக்குமூலம் தெரிவிக்கும் அன்று, மதுரை நீதிமன்றத்தில் கூட்டம் வழிந்தோடியது.

பனிக் காலம் ஆரம்பமாகியது. உழவுத் தொழில் மும்முரமாக நடைபெறத்தொடங்கிற்று. முத்தாயி பெரும்பாலும் வீட்டில் இருப்பதில்லை. வயற்காட்டிலேயே திரிந்தாள். கருமுயலைச் சந்திப்பதற்கு அதுவே அவளுக்கு பெரும் வாய்ப்பாக இருந்தது.

○

ஒரு நாள்!

செந்தட்டி முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக்கொண்டிருந்தான். முத்தாயி அவன் முகத்தைப் பார்க்கவே பயந்தாள். குனிந்தபடியே வீட்டுக்குள் நடமாடினாள்.

"முத்தாயி!"

"என்ன!"

"செந்தட்டி ஜெயிலுக்குப் போகப் பயப்படுறவனில்லே! ......தெரியாதா உனக்கு?"

"என்னண்ணே சொல்றீங்க!...புரியல்லியே!"

முன்னர் எந்த மனிதனும் தன்னுடைய உழைப்பினாலேயே முன்னுக்கு வருவது வழக்கம். ஒருவருடைய தயவையும் அவன் எதிர்பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதில்லை. இந்தக்காலத்திலோ, நல்ல செல்வாக்கு உள்ளவர் எவரையேனும் தொத்திக்கொண்டு மேலேற வேண்டியிருக்கிறது. அங்ஙனம் தங்களுக்கு சிபாரிசு செய்யக்கூடியவர் எவரேனும் ஒருவர் கிடைத்தால் அதுவே பெரிய அதிர்ஷ்டமாகக் கருதப்படுகிறது.

கண்ணீரும் கம்பலையுமாக நீதிமன்றத்திற்கு வந்திருந்தாள் முத்தாயி. அவள் அதிகம் பேசவில்லை.

என் மச்சான் கடைசியாகப் பேசியது இது: "டேய் செந்தட்டி! நீயும் ஒரு ஆம்பிளைதானா? ஈரல் செத்தவனே! ஒழிஞ்சிருந்தா வெட்டுறாய்? ஒத்தைக்கி ஒத்தை வந்து பாருடா?"

—கூடியிருந்தோர் அழுதார்கள். அவளும் கண்ணீர் வடித்தாள். எதிர்க் கூண்டிலே விலங்கு பூட்டி நிறுத்தப்பட்ட செந்தட்டியின் கண்களும் கலங்கத்தான் செய்தன. வழியும் கண்ணீரைத் துடைக்க அவனுக்கு மார்க்கமில்லை. கரங்களில் இரும்புச் சங்கிலி!

நீதிபதி தீர்ப்பை வாசித்தார். மன்றத்தில் அனல் காற்று நிறைந்தது. செந்தட்டிக்கு ஆயுள் தண்டனை! யார், யாருக்காக அழுவது? தங்கையை வாழ்விக்க நினைத்தான்; ஆனால் தங்கையின்

வாக்குமூலமே அவனைக் காராக்கிரகத்திற்கு அனுப்பி வைத்தது.

அவள் அண்ணனை மதித்தாள். ஆனால் அத்தானின் கடைசிப் பேச்சு அவளை உருக்கி விட்டது. அதை அப்படியே வழக்கு மன்றத்தில் சொன்னாள். அவளுடைய வாக்குமூலத்தின் ஒவ்வொரு எழுத்துக்கும் அண்ணனுக்குத் தண்டனை கிடைக்குமென்று அவளுக்குத் தெரியுமா?

○

பதினைந்து ஆண்டுகள் ஓடிவிட்டன. பலர் சிறைக்குப் போகிறார்கள்; அதில் சிலபேர் உணர்ச்சி மழுங்கிப்போய் வெளிவருகிறார்கள். மிகுதிப் பேர் கூர்ப்படுத்தப்பட்டு 'பழிக்குப் பழி' என்ற எண்ணத்தில் வெளியேறுகிறார்கள்.

சூழ்நிலை சில நேரங்களில் சுத்தமானவர்களையும் தண்டித்து விடுகிறது. கருமுயல் கொலைக்கும் தனக்கும் தொடர்பில்லை என்று வழக்குமன்றத்தில் பன்முறை சொன்னான் செந்தட்டி. ஆனாலும் தண்டிக்கப்பட்டான். என்ன செய்வது! வாதிக்கு நீதி எப்போதும் கொஞ்சம் வளைந்துதான் கொடுக்கிறது.

திருப்புவனம் ரயில் நிலயத்தில் இறங்கித் திருப்பாச்சேத்திக்கு நடந்தான், செந்தட்டி. வழியிலே அந்தக் கரை—கருமுயல் சொல்லப்பட்ட கரை வந்தது. அந்த இடத்தில் ஒரு கல்லறை கட்டப்பட்டிருந்தது. அந்தக் கல்லறை கருமுயலுடையது என்று தெரிந்துதான் செந்தட்டி அதன்மேல் குந்தியிருந்தான்.

"எப்படியும் இந்தப் பக்கம் அவள் வந்துதானே ஆகவேண்டும்! சதக்! ஒரே வெட்டு! இன்னொரு பதினைந்து வருஷம்! அவ்வளவுதானே" — பைத்தியக்காரனைப்போல் தானாகப் பேசிக்கொண்டான் செந்தட்டி.

இருட்டு வந்தது. ஒரு நாடோடிப்பாடல் ஊருக்குள்ளிருந்து மிதந்து வந்தது. செந்தட்டி, பாட்டைக் கூர்ந்து கவனித்தான். அது அவனைப்பற்றிய பாடல் தான். யாரோ மாடோட்டி பாடிக்கொண்டு போயிருக்கிறான். செந்தட்டி அந்தக் கீதத்திலே மெய்மறந்து போயிருந்தான்.

யாரோ அவன் அருகில் வந்து அதட்டினார்கள்.

"ஏய் பைத்தியம்! இதென்ன மதகடியின்னு நெனைச்சே! கருமுயலின் புதைகுழி!"

"கருமுயல்! அவன் யாரவன் கருமுயல்! மானங்கெட்டவன்!" என்று கரகரத்த குரலில் கேட்டான் செந்தட்டி.

மனம் ஒரு அமைதியற்ற பறவை போன்றது. எவ்வளவுக் கெவ்வளவு அதற்குக் கிடைக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு அதன் ஆசை மிகுதிப்படுகிறது. பின்னும் திருப்தியற்ற நிலையிலேயே இருக்கிறது. நாம் நமது மனோவிகாரங்களுக்கு எவ்வளவு மிகுதியாய் இடம் கொடுக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு மிகுதியாய் அவை கட்டுக்கு அடங்காதனவாய் விடுகின்றன.

வந்த ஆள் நடுக்கத்துடன் கையிலிருந்த தீப்பெட்டியைத் தீட்டிப் பார்த்தான்.

"ஆ! செந்தட்டி! மச்சான்! மச்சான்!" என்று கூவினான் அந்த ஆள்!

செந்தட்டி கண்களை அகலவிரித்துப் பார்த்தான். எதிரே நின்றவன் வைர ஊசி!

"மாப்பிள்ளை! சௌக்கியமா? நான் சொன்ன வாக்கை நிறைவேற்ற முடியல்லே! முத்தாயிக் குட்டியை உசிரோடு தரமுடியாவிட்டாலும் இன்னும் கொஞ்சநேரத்தில் பிணமாகத் தருகிறேன், மாப்பிள்ளை, அவள் வரட்டும்" என்று பொடுபொடுத்தான்.

வைரஊசியின் கண்களில் நீர் துளித்தது. என்னை மன்னிச்சுக்க செந்தட்டி! அதோ வருகிறான் உன் மருமகன். அவன் பெயர் சின்னச் செந்தட்டி! என்மகன்! ஆமாம் முத்தாயியின் மகன். முத்தாயி இப்போது என் மனைவி செந்தட்டி!

"டேய் ஊசி!!"

"ஆமாம் செந்தட்டி! நான்தான் கருமுயலைக் கொன்றேன். மறுநாளே அந்தமானுக்கு ஓடிப்போய் விட்டேன். வழக்கு முடிந்த பிறகுதான் எனக்கு எல்லா விபரமும் தெரிந்தது. காலம் எப்படியோ என்னையும் முத்தாயியையும் சேர்த்துவைத்துவிட்டது. இப்போது அவள் நிறைமாதக் கெர்ப்பம்! வீட்டில் இருக்கிறாள். உன் ஆணையை அவள் நிறைவேற்றிவிட்டாள் வா போவோம்" என்று கூறி மறுபடியும் தீக்குச்சியை பற்றவைத்துப் பார்த்தான் வைரஊசி. அந்த இடத்தில் செந்தட்டியைக் காணவில்லை. அவன் கரையில் வேகமாக நடந்துகொண்டிருந்தான்.

அவன் நடைக்கு ஒத்தாப்போல் மாடோட்டியின் பாடல் மறுபடியும் ஒலித்தது. அந்தப் பாடலும் செந்தட்டியின் புகழைப் பற்றிய பாடல்தான்.

கார்த்திகை பிறந்துவிட்டாலே வயல்களில் களையெடுப்பு ஆரம்பமாகிவிடும்! நன்கு களையெடுத்து நீர்பாய்ச்சிப் பயிர்களைப் பாதுகாத்தால்தான் அந்த ஆண்டு பொங்கல் விழாவைச் சிறப்போடு கொண்டாட முடியும் கிராம மக்களால்!

கிராமிய இலக்கியம்!

பொங்கல் திருநாளை எண்ணும்போதெல்லாம் அவர்களது இதயங்கள் மகிழ்ச்சியால் பூரிக்கும்.

சாதாரணமாகக் கிராமங்களில் வாழும் மக்கள் எப்போதுமே சுறுசுறுப்பாக இருப்பார்கள். அந்தச் சுறுசுறுப்புடன் சற்றுமகிழ்ச்சியும் சேர்ந்துவிட்டால் அவர்களுடையஉள்ளத்திலிருந்து பாடல்கள் கிளம்பிவிடும்! கவிதைகளுக்குரிய இலட்சணங்களான இலக்கணம், யாப்பு, மோனை போன்ற தடைகளைத் தாண்டியதாகவும் அது இருப்பதுண்டு! இவ்வகைப் பாடல்களைத்தான் "நாட்டுப்பாடல்கள்" அல்லது "நாடோடிப் பாடல்கள்" என்கிறோம். ஆனால் இவைகள் கிராமியக் காதலையே அடிப்படையாகக் கொண்டிருப்பவை என்பதும் குறிப்பிடத் தகுந்தது!

தனது வயலிலே களையெடுக்கும் பெண்களில் தன் அத்தை மகள் இரத்தினத்தைப் பார்த்துவிடுகிறான் ஒரு காளை. அவன் பெயர் பொன்னுசாமி. உடனே பாடல் பிறந்து விடுகிறது:—

"களையெடுக்கும் பெரியகுளம்,
கணக்கெழுதும் ஆல்மரம்
கொத்தடிக்கும் கொட்டாரம்
கூறுவைக்கும் களத்துமேடு!"

அத்தை மகள் இரத்தினம் சும்மா இருப்பாளா? அவள்தான் முறைப் பெண்ணாயிற்றே. பதிலுக்குப் பாட ஆரம்பிக்கிறாள்:—

"வாய்க்கா வரப்புச் சாமி
வயக்காட்டுப் பொன்னுச்சாமி
களையெடுக்கும் பெண்களுக்குக்
காவலுக்கு வந்தசாமி!"

எப்படியிருக்கிறது? களையெடுக்கும் பெண்களுக்குக் காவலுக்கு வந்திருக்கிறானாம் அவன்! காவலுக்கு மட்டுமா வந்திருக்கிறான்? அவளுடன் காதல் பேசிப் பேசி மகிழவும் அல்லவா வந்துள்ளான்?

அவள்மீது அவனுக்கு ஆசைதான். காதலை விட அவனுக்கு காரியம்தான் முக்கியம்! தனக்குப்போட்டிப் பாட்டுப் பாடிக்கொண்டே அத்தை மகள் வேலையில் பின்னடைந்தாள். அதைத் தந்திரமாகப் பாட்டு மூலமாகவே சொல்கிறான்:—

"கண்ணாடி வளைவி போட்டு
களையெடுக்க வந்தபுள்ளே!
கண்ணாடி மின்னலிலே உன்
களையெடுப்புப் பிந்துதடி!"

அதுகேட்ட அவள் வெட்கத்தால் தலைகுனிந்து கொண்டாள். இதைப் பார்த்த மற்றப் பெண்கள் 'கொல்'லெனச் சிரிக்கின்றனர். பொன்னுச்சாமிக்கு மேலும் 'குஷி' பிறந்துவிடுகிறது.

"வெள்ளிப்பிடி வளைவிநல்ல
விடலைப்புள்ளெ வளைவிகையி
சொல்லியடிச்சவளை நல்லா
சுழட்டுதில்லை நெல்களையை!"

என்று பாடுகிறான். இந்தக் காதல் ஜோடிகளை இப்படியே விட்டுவிட்டு இன்னொரு ஜோடிகளைப் பார்ப்போம்.

○

தன் அத்தை மகனைப் பற்றிய நினைவிலேயே மூழ்கிக் கிடக்கிறாள் ஒரு குமரி. அவளுக்கு அத்தை மகன் செய்யும் தொழில் எல்லாம் இனிக்கிறது! எப்படி? சர்க்கரையைப்போல இனிக்கிறதாம். அவன்மீது அவளுக்கு எத்தனை அன்பிருந்தால் இப்படிச் சர்க்கரையாக இனிக்கும்? இதோ பாடுகிறாள் கேளுங்கள்:—

"செடியோரம் கிணறு வெட்டி
செவலக்காளை ரெண்டு கட்டி
அத்தை மகன் ஓட்டும் தண்ணீர்
அத்தனையும் சர்க்கரையே!"

"மலையோரம் கிணறு வெட்டி
மயிலைக்காளை ரெண்டுகட்டி
அத்தைமகன் ஓட்டும் தண்ணீர்
அத்தனையும் சர்க்கரையே!"

○

ஆற்றுக்கு அக்கரையிலுள்ள தன் தென்னந்தோப்பைக் காண் ஒரு இளங்காளை போகிறான். அவன் அக்கரை சென்றதும் ஆற்றிலே பெரு வெள்ளம் வந்துவிடுகிறது. திரும்ப வழியின்றித் தவிக்கிறான். புறப்படும்போது தன் ஆசைக் காதலியிடம் உடனே திரும்பிவிடுகிறேன் என்று சொல்லிவிட்டு வந்தான். என் செய்வது?

இருவரது இதயக் குமுறலும் இங்கே ஒலிக்கிறது!

கோவை இரத்தினம்

அவன் :—

" ஆற்றிலே தண்ணீர்வர
ஆளிறங்காத் தண்ணீர்வர
நீச்சலிலே நான்வருவேன்
நீலக்கிளி தூங்காதடி !"

தன் ஆசைக்காதலி காத்திருந்து பார்த்துவிட்டு தூங்கப் போய்விடுவாள் என எண்ணினான் காதலன். ஆனால் அவளோ காதலன் வரவுக்காக வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கிறாள். வழியில் வருவோரை யெல்லாம் விசாரிக்கிறாள். துயரத்துடன்.

அவள்:

" ஆற்றுக்கு அந்தப்புறம்
ஐந்தாறு தென்னைமரம்
வச்சமரம் பார்க்கப்போன
மச்சான் வரக் கண்டீர்களா?"

○

இன்னொரு காதலன், தன் காதலியிடம் குறியிடம் கேட்கிறான்:

" புள்ளிபோட்ட ரவிக்கைக்காரி
புளியங்கொட்டைச் சேலைக்காரி
நெல்லறுக்கப் போகும்போது—நான்
நெல்லிமரக் காவலடி!
கஞ்சிக் கலையங் கொண்டு
கருக்கு வாளைத் தோளிலிட்டு
அறுப்பறுக்கப் போகும்போது—உன்
இருப்பிடத்தைச் சொல்லிடடி!"

○

நகர்ப்புறத்திலே அழகான சிமெண்ட் ரோடுகள் போட்டு அழகு பார்க்கும் சர்க்கார், கிராமப் பகுதிகளில் சாதாரண மண் பாதைகூடப் போட முயலுவதில்லை. அதனால் கிராம மக்கள் படும் தொல்லைகள் கொஞ்சமா? நாட்டுப்புற மக்களின் வாழ்வைப் போலவே, அங்குள்ள பாதைகளும் மேடுபள்ளம் நிறைந்ததாகவே இருக்கிறது! அப்படிப்பட்ட பாதை ஒன்றிலேதான் புதிதாகத் திருமணமான இளந் தம்பதிகள் இருவர் வில்வண்டி ஒன்றில் செல்கின்றனர். வண்டியில் அவர்களைத் தவிர வேறு யாருமில்லை. விளையாட்டுகளுக்குக் கேட்கவேண்டுமா என்ன?

இடையே ஒரு சிற்றாறு. ஆற்றில் நீர் அதிகமாக இல்லாவிட்டாலும் சேறு அதிகம். வண்டியின் ஒருபுறச் சக்கரம் சேற்றில் சிக்கிவிடவே, வண்டி நின்றுவிடுகிறது. உதவிக்கு ஆளில்லாததால் கணவனை வண்டி மீது இருக்கச் சொல்லிவிட்டு மனைவி இறங்கிச் சேற்றில் பதிந்துள்ள சக்கரத்தைத் தள்ளுகிறாள்! இப்போதுதான அவனுக்குப் பாடல் கிளம்பவேண்டும்?

"ஆற்றுக்குள்ளே போன வண்டி
சேற்றுக்குள்ளே நிற்கையிலே
கொண்டை போட்ட குமரியிவள்
மண்டிபோட்டுத் தள்ளுறுளே!"

இருவரும் சிரிக்கின்றனர். வண்டியும் சேற்றைக் கடந்து விடுகிறது! இருவரின் காதல் விளையாட்டுகள் மீண்டும் துவங்குகின்றன!!

○

அவனுக்கு அவள் முறைப் பெண். அவளை அவன் நேசித்தான். ஆனால் அவளுக்கோ அவனைக் கண்டாலே பிடிக்கவில்லை. முகத்தை வேறுபுறம் திருப்பிக்கொள்ளுவாள். இப்படிப்பட்ட அவளை எப்படி வாழ்க்கைத் துணைவியாக ஏற்பது என்பது அவனின் ஓயாத சிந்தனை. மலைப் பூப்போல அழகு நிறைந்தவள். என்றாலும் அதிலுள்ள சுகந்த மணம் இவளிடம் இல்லையே!

"மாமி வீட்டிலே
மலரொன்று பூத்திருக்கு
ஆய்ந்து முகர்ந்தேன்
அழகொளிய மணக்குதில்லை!',

என்றான் அவன், அவளைப் பார்த்து. அவளோ சுட்டெரித்து விடுவது போலப் பார்த்தாள். அவள் ஒரு மணமில்லா மலராம். இந்த அழகு சுந்தரன் கூறுகிறான் என்று எண்ணினாள். பதிலுக்குச் சுடச்சுடக் கொடுத்தாள். அதில் கேலியும் கிண்டலும் நிறைந்திருந்தது.

" அத்தர் புனுகுகளாம்
அழகான (!) பவுடர் மணம்
இஞ்சிதின்ற குரங்குபோல
இவருக்கென்ன வந்த பசி!"

என்றாள். மாமியார் வீட்டுக்கு வருவதற்கென்றே பூசிய அத்தர், புனுகு நறுமணமா என்று அவள் அவனைப்பார்த்துக் கேட்கிறாள். "இஞ்சி தின்ற குரங்குபோல" என்று கூறி, கண்ட பெண்களை முறைத்துப் பார்க்கும் ஆண் இனத்துக்கே சவுக்கடி கொடுக்கிறாள்! அவமானம் தாளாத அவனோ,

" இடுப்பு சிறுத்த பொண்ணே
இருகாலும் நீண்டவளே !
கொக்குக் கண்பொட்டே—உனக்கு
கோபமென்ன என்னோட ?"

என்கிறான். பதிலுக்குப் பதில்தானே!

அவள் ஒல்லியாகவும், சற்று உயரமாகவும் இருந்ததை எப்படிப் பொருத்தமாகக் கூறிவிட்டான்! கோபம் வந்துவிட்டது அவளுக்கு. சும்மா இருந்தால், ஆணுக்குப் பெண் அடங்கிவிட்டவள் என்றல்லவா நினைக்கவேண்டி வரும்?

" சுட்ட கட்டைபோலே
சுடுகாட்டுப் பேய்போலே
அட்ட முகமே — நீ
அடுப்படிக்கும் ஆகாதடா !"

அவன் கொஞ்சம் கருப்பாக இருந்தான். இதைத்தான் அவள் "சுட்டகட்டைபோல" என்ற உபமானத்தைத் தேடிப்பிடித்துக் கூறுகிறாள். அவனுக்கு இருபற்கள் முன்னால் சற்று நீண்டபடி இருந்தது. அதற்குத்தான் "சுடுகாட்டுப் பேய் போல!" என்கிறாள். அட கறுமி! நீ என் அடுப் படிக்கும் ஆகாதடா!" என்கிறாள், எப்படி?

எல்லாம் ஒன்றுபடாத இரு உள்ளங்களின் வினை! அடுத்து ஒன்றுபட்ட இரு உள்ளங்களைக் காணலாம் வாருங்கள்,

○

ஒரு காதலி, தன் காதலனுடன் வெளியூர் போய்விடத் தீர்மானிக்கிறாள். செல்லும் வழியிலுள்ள இடைஞ்சல்களைக் கூறி அவள் தன்னுடன் வர வேண்டாம் எனக் கூறுகிறான் காதலன்.

" ஈதி இடைஞ்சலிலே
இடிவிழுந்த கானலிலே
பாறை இடைஞ்சலிலே
பயமும்மெத்த ஆகுமடி! "

தலைவன் எவ்வழியோ அவ்வழி நிற்கும் தலைவி, அதுதானே தமிழ்ப் பெண்களின் உன்னதப் பண்பாடு! அவளா இதற்கெல்லாம் பயப்படுகிறவள்?

"இருட்டை இருட்டடிக்க
இந்திரனைப் பேயடிக்க
சாமவழிதனில் நடக்கச்
சம்மதமே எந்தனுக்கு!"

நம் உடல் நலத்துக்காகப் பிறர் பாடுபடுவது முடியாத காரியம். நமக்கு நாமே துணை. நம்மைப்பற்றி பூரணமாக அறிந்து கொள்ளவும், அந்த அறிவை நம் ஒவ்வொருவரின் தேவைகளுக்கும் ஏற்றவாறு பயன்படுத்தவும் முயலவேண்டும். இதற்குச் சுய முயற்சியும் ஒழுங்கும் உண்மையைக் கடைப்பிடிக்கும் உயரிய பண்பும் அவசியம்.

வேறு என்ன பேச்சு வேண்டிக்கிடக்கிறது? இருவரும் புறப்பட்டுவிட்டனர். காட்டு வழியில் நடந்துகொண்டிருந்தனர். கடுமையான வெயில். மெல்லியலாள் மெய் சோர்ந்துவிட்டாள்.

அவன்:— "கையோடு கைசேர்த்து
கானல் வழி நடக்கையிலே

மெய் சோர்ந்து விழ்ந்ததென்ன
மென் குயிலே கண்ணுட்டி?"

மெய் சோர்ந்துவிட்ட மெல்லியலாள் கூறுகிறாள்:—

"கையோடு கை சேர்த்து
கானல் வழி நடக்கையிலே

கண்டேன் உனத ழகை
கட்டழகா சோர்ந்து விட்டேன்"

எப்படியிருக்கிறது பார்த்தீர்களா? இத்தனை நாளாகத் தன் காதலனுடன் பழகும் இவளுக்கு அப்போதெல்லாம் தன் காதலனின அழகு தெரியவில்லையாம்! தன்னந்தனியாக—மனித சஞ்சாரமற்ற கானகத்தில் தன் மனதுக்குகந்த மணாளனோடு கைகோர்த்துக் கொண்டு செல்லும் போது தான் அவனுடைய அழகு அவளுக்குத் தெரிந்ததாம்!

அலர் தூற்றிய ஊரைத்தாண்டி நீண்ட தொலைவு வந்து விட்டனர். இனி இவர்களிடையே மகிழ்ச்சிக்கு என்ன குறை?

அவள்:— கண்ணாடித் தலையழகா!
காக்காயி மூக்கழகா!
அவன்:— எண்ணெய்த் தலையழகி!
எழுத்தாணி மூக்கழகி!

இவ்விதமாக இருவரும் பேசிமகிழ்தபடியே நடந்தனர்!!

★



அலங்காரக் கலை

மா.கி. தசரதன்

அன்று பிற்பகல் மூன்று மணியிலிருந்தே 'காந்தள்' உடைப்பெட்டியைத் திறப்பதும் மூடுவதுமாக இருந்தாள். எப்படியோ ஒருவகையாக, ஏதோ ஒருவாறு உடையணிந்து கொண்டு, புறப்படுமுன் கடைசியாக ஒருமுறை நிலைக்கண்ணுடிக்குள் தலையை நீட்டி நெற்றியில் இருந்த சாந்துவட்டத்தை அழுத்தி விட்டுக்கொண்டு சின்னக் குழந்தையை ஒரு கையில் பிடித்து 'மெல்ல மெல்ல' என்று சொல்லிக் கொண்டே படியிறங்கிப் போனாள். தலைமறையும் வரை அவளையே பார்த்துக்கொண்டிருந்த மாமியார் 'காலம் கெட்டுப்போச்சு' என்று முணுமுணுத்துக் கொண்டே உதடுகளை மடித்து 'அழகு' காட்டினாள்.

"கமலம், உன் மருமகள் எங்கோ சிங்காரித்துக் கொண்டு கிளம்பிவிட்டாளே, என்ன சிறப்பு?" என்று கேட்டுக்கொண்டே எதிர்வீட்டு அன்னம்மாள் வந்தாள்.

"ஐயோ அதையேன் கேட்கிறே—போ—பக்கத்துத் தெருவில் அவள் தோழி இருக்கிறாளே, அவள் குழந்தைக்கு இன்று பெயர் சூட்டுகின்றார்களாம்—அதற்குத்தான் இந்த ஒப்பனையும் அலங்காரமும்" என்று தன் வெறுப்பை வெளியிட்டாள்.

கமலம் மட்டும் அல்ல அப்படி. எல்லா மாமியார்மாரும் அப்படித்தான் தங்கள் மருமகமாரைக் கருதுகின்றனர். இரண்டு குழந்தைக்குத் தாயாயிற்றே—இவளுக்கு எதற்கு இனமும் அலங்காரம் என்று குறைபட்டுக் கொள்ளுகின்றார்கள்.

மாமியாரையாவது விட்டுவிடலாம். ஆனால் கொண்ட கணவன் என்ன சொல்லுகின்றான்? திருமணம்ஆன கையோடு ஒரு இரண்டு ஆண்டுகள்வரைகூட மனைவி செய்துகொள்ளுகின்ற அலங்காரங்களை ஆசையோடு பார்த்துக் கொண்டிருக்கின்றான். "இன்னும் கொஞ்சம் மாவு போட்டுக்கொள். உதட்டுச் சாயம் போடவில்லையே! இல்லை என்றால் சொல்வதுதானே. வாங்கிவரமாட்டேனா நான்—இதென்ன முரட்டுப் புடவை. மெல்லியதாக எடுத்துக்கொள் அடுத்த முறை — இதோ பார் இதுதான் நகத்திற்குத் தீட்டும் வண்ணம்" என்று ஒவ்வொரு வகையில், புதிய புதிய முறையில் தன் மனைவியை அழகுபடுத்திப் பார்க்கின்றான்.

"ஐய!—இதெல்லாம் வேண்டாமே — உங்கள் அம்மா பார்த்தால் என்னவாவது சொல்லுவார்கள்" என்று மனைவி தடுத்தாலும் "அவர்கள் கிடக்கின்றார்கள் விடு. இப்படிக் காட்டு விரலை" என்று தானே வண்ணம் தீட்டிவிடுகின்ற கணவனும் இருக்கின்றான்.

எல்லாம் ஒரு சில ஆண்டுகள்வரையில்தான். பிறகு பாலும் புளித்துப் போகின்றது—ஆசையோடு அதையும் இதையும் வாங்கிக் கொண்டுவந்து கொடுத்து அலங்காரம் செய்துகொள்ளச் சொன்ன அதே ஆள் "என்ன சின்னப் பெண் என்ற நினைப்போ? இதெல்லாம் என்ன வேடம், சினிமாக்காரியைப்போல?" என்று எரிந்து விழுகின்றான்.

மகனுக்குப் பெண் பார்க்கப் போகும் தாய், "பெண் நன்றாக இலட்சணமாக கண்ணுக்கழகாக இருக்கிறாள்" என்று சொல்லித்தான் தன் மகனை திருமணத்திற்கு இசையவைக்கிறாள். 'மூக்கும் முழியுமாக இருக்கிறது' என்று அழகுக்கு இரண்டு பிரதிநிதிகளையும் ஏற்படுத்துகின்றாள்.

ஆனால் பின்னரோ, "இந்த வயதில் கண்ணுக்கு என்னடி மை உனக்கு?" என்று அதே பெண்ணைத் திட்டுகினறாள்.

மையிட்ட கண்ணைக் கண்டு மயங்கிப்போன கணவன் "பூனைக் கண்போல் இருக்கிறது. போய் முதலில் கண்ணில் பூசியிருக்கும் கரியைத் துடைத்துக்கொண்டு வந்து சோறுபோடு போ" என்று விரட்டுகின்றான்.

இதெல்லாம்கூட வியப்பில்லை. அந்தப் பெண்ணின் நிலைதான் பெருவியப்புக்கு உரியதாகும். திருமணம் ஆகும்வரை அவள் எப்போதும் கண்ணாடியும் கையுமாக, எண்ணெயும் சீப்புமாக, சுணவும் மாவுமாகத்தான் இருக்கின்றாள். நொடிக்கு நொடி

விதவிதமான ஒப்பனைகள் செய்து கொண்டு ஒய்யார நடை நடந்துகொண்டிருக்கின்றாள். திருமணம் ஆனபின் மெல்ல மெல்ல அலங்காரம் செய்துகொள்ளுவதைக் குறைத்துக் கொள்ளுகின்றாள். குறைத்துக்கொள்ளுவது மட்டுமல்ல 'என்ன புடவையில் ஒரே கரியாக இருக்கிறதே' என்று கேட்பவர்களிடம் "ஆமாம் நான் இருக்கிற இருப்புக்கு இது போதாதா?" என்கிறாள். "இதென்ன எண்ணெய் வடியும் முகத்தோடு......" என்று கேட்டு முடிப்பதற்குமுன் "எல்லாம், இருக்கிற முகத்திற்குச் சோறு கிடைத்தால் போதும்" என்று சலித்துக் கொள்ளுகின்றாள்.

பெரும்பாலும் எல்லார் இல்லங்களிலும் இந்த நிலைதான் இருக்கிறது; ஒவ்வொருவர் நிலையும் இப்படித்தான் இருக்கிறது. அலங்காரம் செய்து கொள்ளுவதை ஏதோ தீயநெறியில் செல்லுவதைப் போல் நினைக்கின்றார்கள். அழகுபடுத்திக்கொள்வதை ஆடம்பரம் என்று எண்ணிவிடுகின்றார்கள். அதனால்தான் அழகுபடுத்திக்கொள்ளுகிறவர்களைக் கண்டால் 'மினுக்கிக்கொண்டு' திரிவதாகக் கூறிக் கண்டிக்கின்றனர்.

அப்படியானால் எப்போதும் 'வேடம்' போட்டுக் கொண்டுதான் இருக்கவேண்டுமா என்று கேட்கக் கூடாது. வேடம் போடவேண்டாம். அழகு படுத்திக் கொள்ளவேண்டும்.

வேடம் போடுவது என்பது வேறு; அழகு படுத்திக் கொள்வது என்பது வேறு. இல்லாததை இருப்பதுபோல் காட்டுவது வேடம். இருப்பதை எடுத்து விளக்குவது அழகுபடுத்துதல்—காகிதத்தில் பூவைப்போல் கத்தரித்து மாலையாகச் செய்துவைப்பது வேடம். கட்டிய மலர்மாலையை சரிகையால் சுற்றிவைப்பது அழகு படுத்துவது.

எந்தப் பொருளையும் அழகு படுத்தினால்தான் அதன் அருமை புலப்படும். இல்லை எனில் அதை விரும்புவார் இல்லாமல் போய் விடுவர்.

சுவையான பண்டங்கள் செய்யும் கடையைவிட அழகாகச் செய்யும் கடையில் வியாபாரம் மிகுதியாக நடைபெறுகின்றது. இதில்தான் உண்மையின் விளக்கம் இருக்கிறது. சுவையாக இருப்பது அழகாகவும் இருந்தால் அது 'பொன் மலர் நாற்றமுடைத்து' என்பதைப்போல சிறப்புபெறும். அழகு இல்லை எனில் அங்கே சிறப்புப்பெறுதல் இல்லை; சீர் அழிதல்தான் நடக்கும்.

நம்முடைய இல்லங்களில் நடக்கும் பெரும்பாலான 'சச்சரவு'களைக் கூர்ந்துபார்த்தால் இந்த உண்மையை விளங்கிக்கொள்ளலாம். ஒன்றுமில்லாததற்கு 'ஓ' என்ற இரைச்சல் போட்டு சண்டை நடைபெறும். ஏன்? காரணம் எதுவும் இருக்காது. "அன்பாகத்தானே இருக்கிறேன், நான். இவர் என்னமோ, 'ஆகாயத்துக்கும் பூமிக்குமாக' குதித்துக் கொதிக்கின்றாரே, என்னவோ தெரியவில்லையே" என்று மனைவி புழுங்குகின்றாள். ஏன்?

எங்கோ அலைந்து திரிந்து அவரையும் இவரையும் பார்த்து அதுவும், இதுவும் நாடி, எவரும் உதவாமல், எதுவும் கிடைக்காமல் திண்டாடி வீட்டிற்கு வருகின்றான் கணவன். வீட்டிலாவது கொஞ்சம் மன நிம்மதி பெறலாம் என்று எண்ணி வருகின்றான். வீடு என்ற சொல்லுக்கே அதுதானே பொருள்! விடுதலை — வெளியில் உள்ள தொல்லைகளுக்கு விடுதலை—தரும் இடம் வீடு என்று சொல்லுகின்றனர். அந்த நிம்மதி நிலையத்திற்கு வந்தவுடன என்ன நடக்கின்றது? வந்ததும் வராததுமாக எண்ணெய் வழியும் முகம், காற்றில் அலையும் கூந்தல், கறைபடிந்த புடவை, என்று இந்தக் கோலத்தில்—கோலத்தில் அல்ல 'கோரத்தில்'—வந்து நிற்கும் மனைவியைக் கண்டதும் அவனுக்குக் கோபம் முன்னே வந்து நிற்கின்றது. வாயைத் திறப்பதற்கு முன்னே வம்பு பிறக்கினறது.

ஆனால், பெண்கள், என்ன, ஆண்களின் கண்களுக்கு விருந்து தரும் பாவைகளா என்று கேட்டுப் பயன் இல்லை. பெண்கள் மட்டுமல்ல, நம்முடைய நண்பர்கள் எப்படி இருக்கவேண்டும் என்று விரும்புகின்றோம்? தூய்மையாக உடை உடுத்தி 'அழகாக' விளங்கவேண்டும் என்று விரும்பவில்லையா? அழுக்கேறிய உடையுடன் உடன் வருகின்றவனிடம் "ஏன் கொஞ்சம் நன்றாகத்தான் வருவதுதானே" என்று கேட்கின்றோமே, அந்தக் கேள்வியைத்தான் மனைவியிடம் கேட்பதாகக் கொள்ள வேண்டுமே யன்றி 'அலங்காரப் பாவை'யாக இருக்கச் சொல்லுகின்றோம், பெண்ணுரிமை பேணவில்லை என்று சொல்லக்கூடாது. 'இருக்கலாம், ஆனால் பணம்?' என்று கேட்கத் தோன்றும். பணம் ஒன்றுமட்டுமல்ல இதற்குத் தேவை; மனமும் இருக்கவேண்டும். மனம் இருந்தால் கந்தையும் போதும், அழுக்கு போகக் கசக்கி, அழகு விளங்க மடித்துக் கட்டலாம்.

இது ஏதோ சின்னச் செயல் போல் நமக்குத் தோன்றுகின்றது. பெரிய பெரிய பிரச்னைகள் இருக்கின்றபோது இந்த அழகுக் கலைதானா அவ்வளவு முக்கியமாகி விட்டது என்றுகூடச் சிலர் நினைக்கலாம்.

அப்படி எண்ணுகின்றவர்கள், குடும்பத்தில் இந்தக் கலை இல்லாத காரணத்தினால் எவ்வளவு 'கொதிப்பு' உண்டாகின்றது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். குடும்பத்தில் இருக்கும் நிலைதான் பரவலாக நாட்டிலும் இருக்கும். நாடு என்பது வேறு ஒன்றுமில்லை, பல குடும்பங்களின் தொகுப்பின் வளர்ச்சிதான். 'ஒரு நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்' என்பதனை உணரவேண்டும்.

இந்தக் காலத்திலே மட்டுமல்ல நெடுங்காலமாகவே தமிழ் நாட்டில் குடும்பத்தில் 'அழகுக்கலை' இருந்திருக்கிறது என்பதையும்; அது இல்லாததினால் குடும்பத்தில் பல கோளாறுகள் ஏற்பட்டன என்பதனையும் நமக்கு இலக்கியங்கள் சொல்லுகின்றன.

கோவலன் கதை போதும், எடுத்துக்காட்டுக்கு.

கண்ணகி பேரழகு வாய்ந்த பெருமாட்டிதான். அவள் அழகை நுகர்ந்த கோவலன் 'தீராக் காதலின் திருமுகம் நோக்கி' 'உலவாக் கட்டுரை பல பாராட்டினன்' என்று இளங்கோவடிகள் சொல்லுகின்றார். அந்த அழகு அவனை என்றும் தன்வயத்திலேயே வைத்திருக்கப் பயன்படவில்லை.

மாதவியின் ஆடல் கண்டவுடன் 'நூறு பத்து அடுக்கி எட்டுக்கடை நிறுத்த; (1008) பசும் பொன் கொடுத்து மாலையை வாங்கிக்கொண்டு மாதவியின் இல்லம் சென்று 'விடுதல் அறியா விரும்பினன் ஆயினன்.'

எப்படி இந்த விருப்பு அவனுக்கு வந்தது? அதுமட்டுமா, தன் மனையையும் மறக்கச் செய்தது? அங்குதான் ஆசிரியர் இளங்கோவடிகள் சொல்லாமல் விட்ட செய்தி ஒன்று ஒளிந்திருக்கிறது.

கண்ணகி அழகு மிக்கவள்தான்; ஆனால் அழகு படுத்திக்கொள்ளும் பணியில் ஈடுபட்டதில்லை.

மாதவியும் அழகுமிக்கவள். அந்த அழகை மேலும் அழகுபடுத்திக்கொள்ளுவதிலும் வல்லவள்.

இருவரும் பொன் மலர்தான். அதில் கண்ணகி வெறு மலர்; மாதவி நறுமலர். இந்தச் சின்ன வேறுபாடுதான் கோவலன் வாழ்க்கையில் பெரும் பங்கு பெற்றிருக்கின்றது.

கொண்ட மனைவியை விட்டு மாதவி மனையில் இருப்பது தவறு ஆகாது, கூடாது, என்று யாராவது ஒரு நண்பன் கோவலனுக்கு இடித்துக் கூறி அவனை வீட்டிற்கு அழைத்து வருகிறான் என்று வைத்துக்கொள்ளுவோம். அப்படி வருகின்றபோது அவனை வா என வரவேற்கின்ற கண்ணகி எப்படி இருக்கின்றாள்?

எவ்வகை ஒப்பனையும் இன்றி, செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்ப, பவள வாணுதல் திலகம் இழப்ப, தவள வாள்நகை கோவலன் இழப்ப, துன்பமே உருவானவளாக இருக்கிறாள். இன்பமே உருவானதுபோல் இருந்த இடத்தைவிட்டு வந்தவன் எப்படி இந்தத் துன்பமே உருவானவளுடன் உளம் கலந்து பழகுவான்? அணி வேண்டாம், அலங்காரம் வேண்டாம், முறுவலுமாகூடாது. அதுவும் இல்லை என்பதைப் பாட்டு கூறுகின்றது. இந்த நிலையில் இருக்கும் கண்ணகியைக் கண்டு வெதும்புவதைவிட மாதவியின் இல்லமே மேல் என்று அவன் கிடந்திட்டான்.

இதேபோல் மறுபுறம் மாதவியின் நிலையைக் காணுவோம். ஒரு முறை மாதவியின் மீது கோபம் கொண்டுவிடுகின்றான் கோவலன். உடனே அவனிடம் போய் 'கோபம் தீது, தாபம் விடும்' என்றெல்லாம் அவள் சொல்லி உருகவில்லை. கோவலன் கோபம் தணியும் வழி நாடினாள். தன் மேனியை அழகுபடுத்திக்கொள்ளத் தலைப்பட்டாள்.

பத்துத் துவரினும் ஐந்து விரையினும்
முப்பத்து இருவகை ஓமா லிகையினும்
ஊறின நன்னீர் உரைத்த நெய்வாசம்
நாறிருங் கூந்தல் நலம்பெற ஆட்டி
புகையில் புலர்த்திய பூமென் கூந்தலை
வகைதொறும் மான்மதக் கொழுஞ்சேறு ஊட்டி-

இவ்வாறு கூந்தலை முதலில் அழகுபடுத்திக் கொண்டாள். பின்னர் கால் விரல்களில் அலங்காரம் நடக்கிறது; அதன்பின் நீலஆடையின்மீது முத்துக்களின் அணி; தோளுக்கு அணி; கைகளுக்கு வளையல்கள்; அதிலே பலவகை; பின் கை விரல்களுக்கு மோதிரங்கள், தலையில் பல அணிகள் இவை எல்லாம் செய்து கொண்ட பின் கோவலனின் கோபம் எங்கோ போய்விடுகிறது. அதற்குப் பின் மாதவி கோவலனிடம் கோபம் கொள்ளுகின்றாள்.

கூடலும் ஊடலும் கோவலனுக்கு அளித்தாள் என்று மாதவியைப் பற்றிச் சொல்லுகின்றார். இந்த உரிமையைப் பெறுவதற்கு அவள் செய்துகொண்ட கடமைகளைப் பற்றி—அலங்காரங்களைப் பற்றி— இளங்கோவடிகள், முப்பத்து மூன்று வரிகள் எழுதுகின்றார்.

கண்ணகியுடன் கோவலன் ஆண்டுக் கணக்கில் நடத்திய இல்வாழ்க்கையை 'ஆண்டு சில கழிந்தன' என்று மூன்று சொற்களில் சொல்லிப்போகும் இளங்கோவடிகள் முப்பத்து மூன்று வரிகளில் என்றோ ஒருநாள் கோவலன் கொண்ட கோபத்தைத் தணிக்க மாதவி செய்துகொண்ட அலங்காரங்களைப் பற்றி மட்டும் சொல்லுகின்றார்.

கோவலனுக்கு மட்டும் அல்ல அந்த மனநிலை. நமக்கு எல்லோருக்கும்தான் இருக்கிறது. அதனால் தான் பெரும்பாலான இல்லங்களில் கணவனும் மனைவியும் கலந்து பேசுவதில்லை. நண்பர்களோடு எவ்வளவு நேரம் பேசுகின்றோமே, அவ்வளவு நேரம் மனைவியோடு பேசுகின்றோமா? வெளியில் எங்கேனும் அலையும் கண்கள் அகத்தில் அலைகின்றனவா? இல்லைஎன்றால் ஏன்? இதுதான்விடை; அழகு படுத்திக் கொள்ளும் கலை.

பெண்கள் மட்டும்தான் இப்படி எனறு இல்லை. ஆண்களின் நிலையும் இதுவேதான். நாம் வெளியில் போகின்ற போது மட்டுமே' அழகாக' செல்ல வேண்டும் என்று நினைக்கின்றோம். வீட்டில் 'எப்படி வேண்டுமானாலும்' இருக்கலாம் என்று எண்ணுகின்றோம்.

துணி எடுக்கும் போதே 'சும்மா வீட்டில் இருக்கும் போது கட்டிக் கொள்ள' என்று சொல்லிக் கொண்டே இரண்டு முரட்டு வேட்டிகளை வாங்குகின்றோம். பலர் வெளியில் போய்வந்ததும் வேறு

ஏழை சொல் அம்பலம் ஏறிற்று

தில்லை வில்லாளன், எம்.ஏ

"ஏழை சொல் அம்பலம் ஏறாது" என்றுதான் சொல் இருர்கள். ஆனால் எல்லா நேரத்திலும், எல்லா இடத்திலேயும் சரியாக இருப்பதில்லை, இந்த மூதுரை.

இங்கு குறிப்பிடப்படுகிற ஏழை, சொல்லி வந்த சொல் ஒரு நாள் அம்பலம் ஏறிவிட்டது.

ஏழை சொல் அம்பலம் ஏறிற்று--அதற்கு விளக்கமாக அமைந்துள்ள சம்பவத்தைக் குறிப்பிடுகிறேன்.

ஏழை

அம்பலவாணன் மிகவும் ஏழை—ஏழையா, பிச்சைக்காரன்! பொன்னூர் முருகர்கோவில் வாசற்படியிலே அமர்ந்து பிச்சை ஏற்பதுதான் அவனது பழக்கம்.

பிச்சை யெடுப்பதிலேயே அவன் புது ரகம்— வருகிற பிச்சையில் தனக்குப்போக மிகுதியை அன்றன்றுடம் மற்றப் பிச்சைக்காரர்களுக்குப் பிரித்துக் கொடுத்துவிடுவான்.

மாலையானால் கோயிலைச் சுற்றிவருவான்— முருகனைத் தரிசிப்பான். ஆனால் திருநீறு அணிய மாட்டான்.

பாடுவான்—ஆடுவான்—ஆனால் கடவுள் பெயர் கூறி கயமைத்தனம் புரிபவரைச் சாடுவதாகவே அவன் பாடல்கள் இருக்கும். சிலருக்கு அவனைக் கண்டாலே எரிச்சல் —வேறு சிலருக்கு உள்ளூர மகிழ்ச்சி—எப்படியோ, அவன் பிச்சைக்காரப் பிழைப்பு நடந்துவந்தது.

சொல்

அந்த ஊர் முருகர் கோயில் அந்த வட்டாரத்திலே சக்திவாய்ந்த கோயில் எனப் பாராட்டுவர். தீராதவினை யெல்லாம் தீர்த்துவைத்துவிடுவான் எனக் கார்த்திகைதோறும் ஆயிரக்கணக்கான மக்கள்

அழுக்கு ஆடையை எடுத்து உடுத்திக் கொண்டு, முன்னதைமடித்து வைத்து பின் வெளியில் போகும் போது அதை அணிந்து கொள்ளுகின்றார்கள். வீட்டில் ஆண்கள் எப்படி வேண்டுமானாலும் இருக் கலாம் என்பதை விட்டு இப்படித்தான் இருக்க வேண்டும் என்று வைத்துக் கொள்ளட்டும், பிறகு பெண்களும் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொள்ளுவர்.

இந்த உண்மையை உணர்ந்து உணர்த்திய ஒரு புலவர் பாடிய பாட்டு புறநானூற்றில் இருக் கிறது. என்ன, இந்தக் கருத்து புறநானூற்றிலா என்று திகைக்க வேண்டாம்.

பகைவன் போர்ப் படையுடன் வந்து தாக்க வெளியில் முற்றுகை இட்டிருந்த போது கோட்டைக் குள் அடைந்து இடந்தான் நெடுங்கிள்ளி. அதனால் மக்கள் எவ்வாறெல்லாம் துன்பமுற்று வருந்து கின்றனர் என்பதனை எடுத்துச் சொல்லிடும் போது

பாலில் குழவி அலறவும் மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவும்......

என்று பாலில்லாமல் குழவி அலறுவதும் மகளிர் பூ இன்றித் தலை முடிப்பதும் பொறுத்தற்கரிய துன் பங்கள் எனக் காட்டுகின்றார். தலையில் பூ முடிப்பது என்றால் வாழ்க்கை நிறைவு எய்தியதோடு மட்டுமல் லாமல் அவர்கள் ஒப்பனைக் கலையில் தேர்ந்தவர்கள் என்பதனை விளக்குவதாகும்.

குழந்தைகளுக்குப் பால்—மகளிர்க்கு ஒப்பனை— இருந்தால் வாழ்க்கை நிறைந்தது எனப் புறநானூறு புகலுகின்றது.

இந்தப் பின்னணியைக்கொண்டு இப்போது அலங்காரக் கலையைக் காணுவோம். அலங்காரக் கலை அவசியமானது என்பதனை உணருகின்றோமே யன்றி ஆடம்பரம், பொழுதுபோக்கு என்று ஒதுக்கி விட இயலவில்லை.

ஆனால் எதுவும் அளவுக்கு மிஞ்சினால் நஞ்சு தானே? அதைப்போல ஒப்பனைக் கலையும் குறை யாது கூடாது வேண்டிய அளவுதான் இருக்கவேண் டும் என்பதனை உணர்ந்தால் நன்மை.

பொங்கற் புதுநாளில் இந்தப் புதிய கோணத் தில் நின்று அலங்காரக் கலையைக் காணுவோம்; பொலிவு பெறுவோம்.

★

கூடுவர். சந்தனக் குழம்பு வாங்கிப் பூசிக்கொள்வர். குழந்தைகளுக்கு இங்குதான் மொட்டையடிப்பது பழக்கம்—காதும் குத்துவர்.

முருகன் கோயில் பூசாரி முருகாண்டிக்கு அமோகமான செல்வாக்கு. அவன் அந்தக் கோயில் பூசாரியான பிறகுதான் சொந்த வீடு கட்டினான். நான்கு காணி நஞ்சையும், இரண்டு காணி புஞ்சையும் வாங்கினான். சாதாரண உருத்திராக்கமாலை, தங்கத் தகடு வைத்த மாலையாயிற்று.

முருகாண்டிக்கு இவ்வளவு 'மவுசு' வந்ததற்குக் காரணம் என்ன? அவன் முருகன்கோயில் பூசாரியானவுடன் குழந்தைகளுக்கு மொட்டையடிப்பதில் ஒரு புதுத் திட்டம் போட்டான். அதாவது நாலு சக்கரம் போட்ட ஒரு வண்டி செய்தான். அந்த வண்டியில் மொட்டையடிக்கவேண்டிய குழந்தையை வைத்துத் தள்ளிவிடுவான். கற்பக்கிருகம் பக்கம் ஓடும். குழந்தை காணாமல் போய்விடும். அரை மணிநேரம் கழித்து, குழந்தைக்கு மொட்டையடித்து, சந்தனம் பூசி, காது குத்தவேண்டுமென்றால் காதும் குத்தி, கையில் வேலும் கொடுத்து, குழந்தை வரும். இந்தத் திட்டத்தினால்தான் முருகாண்டி அவ்வளவு செல்வாக்குப் பெற்றான்.

விசித்திர பிச்சைக்காரன் அம்பலவாணன், இந்த திட்டத்தைக் கிண்டல் செய்தே பாட்டு பாடுவான். அதனாலேயே முருகாண்டி, அவனை அந்த ஊரைவிட்டே துரத்திவிட முடிவுசெய்தான்.

ஊரைக் கெடுக்க வந்தான் ஓர் ஆண்டி
அவன் பேரு முருகாண்டி
மொட்டை யடிக்கிறாண்டி—அவன்
மூலை அறையிலே ஆளைவைத்து
காது குத்தறாண்டி அவன்
காசுக்குப் பத்தனை அடிமையாக்கி
கேடுகெட்ட இந்த ஜனங்களுக்கு
கேட்கிற புத்தி இல்லே, இல்லே
இந்த ஏழையின் சொல் அம்பலம்
ஏறும் நாள் எந்த நாளோ?

இந்தக் கருத்தில் அவன் பாடுவான். ஊரார் முதலில் அலட்சியமாக நினைத்தனர். பிறகு யோசிக்க ஆரம்பித்தனர்.

அம்பலம்

பெயர்தான் அம்பல வாணன். ஆனால் அவன் சொல்லுக்கு எந்த அம்பலத்திலும் மதிப்பில்லை. அம்பலம் என்றால் அவை என்று தானே பொருள் கூறுகின்றனர். முன்பெல்லாம் அம்பலத்தில் நிறைந்திருந்தவர்கள் வைதீகப் பிடிப்பும், மூட நம்பிக்கையில் முரட்டுத் தொடர்பும் கொண்டவர்களே. காலம் தான் மாறி வருகிறதே — எவ்வளவு சிற்றூராக இருந்தாலும், பகுத்தறிவு வாடையடிக்கும் ஒரு வாலிபன் இல்லாமலிருப்பதில்லையே! பொன்னூரிலும் அத்தகைய வாலிபன் இருந்தான். அவன் பெயர் அறிவரசன் அவன் மணமாகி இரண்டாண்டுகளுக்குப் பிறகு ஒரு அருமைக் குழந்தையைப் பெற்றெடுத்திருந்தான். அவன் மனைவி மலர்விழிக்குத் தன் குழந்தை மணிக்கு மொட்டையடித்து, காதுகுத்தி விழாக்கொண்டாட வேண்டும் என்ற ஆசையை அவளுடைய தாயார் தூண்டிக்கொண்டிருந்தாள். அறிவரசனிடம் இது பற்றிச் சொல்ல ஆரம்பித்தாள்.

பிச்சைக்கார அம்பலவாணன் மீது அறிவரசனுக்குத் தனிப்பிரியம்—அவன் என்றாவது ஒருநாள் இலை போட்டுச் சாப்பிட வேண்டுமென்றால் நேராக அறிவரசன் வீட்டிற்குத்தான் வருவான். அப்படி அன்றும் வந்திருந்தான். அப்பொழுது தான் கணவனும், மனைவியும் குழந்தைக்கு முடியிறக்கி, காது குத்துவது சம்மந்தமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். அம்பலவாணன் குறுக்கிட்டுப் பேசினான்.

'தம்பி, நல்ல சந்தர்ப்பம் — உங்கள் குழந்தையின் முடியிறக்குகிற நாளிலேயே இந்த ஊராரின் மூட நம்பிக்கையின் முடியும் இறக்கப்படட்டும். அதற்கு நான் ஒரு வழி சொல்லுகிறேன். அதன் படி நடந்தாயானால் எல்லாம் நினைத்ததுபோல் முடியும் என்றான்.

அறிவரசனுக்கு அம்பலவாணன் கூறியது மிகவும் பொருத்தமாகப்பட்டது. உடனே, அவன் கூறிய திட்டப்படி நடக்கச் சம்மதித்தான்.

ஏறிற்று

பொன்னூர் மக்கள் அனைவருமே அன்று முருகன் கோயிலில் கூடிவிட்டனர். அதுவும் நாத்தீகம் பேசி வந்த அறிவரசன், அறிவு தெளிந்து தன் குழந்தை மணிக்கு முருகர் கோயிலில் மொட்டை அடிக்கிறான் என்றால், ஏன் கூடமாட்டார்கள்? எப்பொழுதுமே, முருகாண்டி ஏக அமர்க்களமாக இருப்பான்—அன்று அவன் ஆர்ப்பாட்டங்களுக்கு அளவே இல்லை. அவன் தனக்கு ஒரு பெரிய வெற்றி நாளாகவே அன்றைய தினத்தை எண்ணிக்கொண்டான்.

முருக பூசை வெகு தடபுடலாக நடந்தது — குழந்தையை வாங்கினான் — சகடத்தில் வைத்தான். 'ஏ முருகா, பழனியாண்டவா, செந்தில் வேலா, குழந்தையைக் கைலாயத்திற்குக் கொண்டு போடா' என்று பெருங்குரலெடுத்துக் கூறினான். சூடம் எரிந்தது — சாம்பிராணி புகை 'கம்'மென்று எழுந்தது. சகடம் உருண்டது.

கால்மணி நேரந்தான் கழிந்திருக்கும். என்ன விந்தை! என்ன ஆச்சரியம்! ஒரு சகடத்தில் குழந்தை மணி கை கொட்டிச் சிரித்துக்கொண்டிருந்தான். மற்ற இரண்டு அடியாட்கள் கை கால்கள் கட்டப்பட்டு, வாயில் துணியும் கொடுக்கப்பட்டிருந்தனர்--மூன்று சகடங்களையும் ஏழை அம்பலவாணன் இழுத்து வந்தான்.

கூடியிருந்தோர் வியப்பால் வாயடைத்துப் போய்விட்டனர். முருகாண்டி ஓடுவதற்கு எத்தனித்தான்—அம்பலமா விடுபவன்? அவனையும் பிடித்துக் கட்டிச் சொல்லி விட்டான்.

'பொன்னூர் பெரியோர்களே, தாய்மார்களே, ஏழை அம்பலம் பேசுகிறேன். கேளுங்கள்—பிச்சைக்காரன் பேச்சு என்று இத்தனை நாள் தள்ளிவிட்டீர்கள்—இன்று தள்ளிவிட மாட்டீர்கள் என நம்புகிறேன்.

எனக்கு பூசாரி முருகாண்டியின்மீது, வந்த நாளிலிருந்து நம்பிக்கையில்லை. அதுவும் குழந்தைகளுக்கு மொட்டையடிக்க கைலாசத்திற்கு அனுப்புகிறான் என்பது சுத்தப் பித்தலாட்டம் என்று எண்ணினேன். அதனால் அதனை நிரூபிக்க வேண்டும் என்றும் உறுதியெடுத்துக் கொண்டேன்.



மாலையானதும் கோயிலை வலம் வர ஆரம்பித்தேன்.

மூலை அறையொன்றில் பேச்சுக் குரல் கேட்டது. அதையும் கவனிக்க ஆரம்பித்தேன்.

இரவு நேரங்களில் அங்கேயே படுக்கவும் தொடங்கினேன், இந்த இருவருக்குமிடையே ஏற்பட்ட சச்சரவுகளெல்லாம் என் காதில் விழுந்தது.

இதோ, இருக்கிறானே, இவன், கொலைகார நாகப்பன். இவன், முகக்ஷவரம் செய்வதுபோல் நடித்து இரண்டு வருடங்களுக்கு முன் பிச்சையாண்டித் தேவரைக் கொலை செய்தவன். கொலை நடந்த நாளிலிருந்து இவன் கிடைக்கவே இல்லை. கொலை நடந்த இரவே பூசாரியிடம் அடைக்கலம் புகுந்தான். அவனுக்கு ஏற்ற வேலை குழந்தைகளுக்கு மொட்டையடிப்பது எனமுடிவு செய்தான்.



இதோ, நிற்கிறானே, தங்கந் திருடி தானப்பன், இவன் கள்ளத் தங்கம் கடத்திய வழக்கில் கைதாகித் தப்பியோடி வந்தவன். இவனும் பூசாரியிடம் அடைக்கலமாய் வந்து சேர்ந்தான். இவனுக்கு ஏற்ற வேலை குழந்தைகளுக்குக் காது குத்துவது என்று அந்த வேலையைத் தந்தான்.

இவனுடைய சூது வேலையை அவர்கள் சொல்ல முடியாது— அவர்களுடைய குற்றங்களை இவன் சொல்லக்கூடாது—இந்தக் கூட்டு ஒப்பந்த நிலையில் இந்த மொட்டையடிக்கும் திட்டம் நடந்து வந்தது. அதிலேயும் பூசாரிக்குத் தெரியாமல் திருட்டு பாருங்கள். தானப்பன், இங்கிருந்து அனுப்பப்படும் குழந்தைகள் அணிந்திருக்கும் நகைகளைப்போல் பித்தளையில் செய்து, தங்க நகைகளை உருவிக்கொண்டு, பித்தளை நகைகளைப் போட்டு வந்தான். இந்தத் திருட்டு வெளிப்படாது என்று அவன் நம்பினான். ஏனெனில், கைலாயத்திற்குச் சென்று வந்த நகையை யாரேனும் அழிக்கவோ, மாற்றவோ விரும்புவரா?

ஏழை அம்பலம இதைக் கண்டுபிடித்து எத்தனையோ நாட்களாகிவிட்டன. ஆனால் என் சொல்லை ஏற்பார்யாருமில்லை.

ஊரைக் கெடுக்க வந்தான் ஓர் ஆண்டி
அவன் பேரு முருகாண்டி
மொட்டை அடிக்குறாண்டி அவன் ஊரை
மூலையறையிலே ஆளை வைத்து
காது குத்துறாண்டி அவன்
காசுக்குப் பத்தனை அடிமையாக்கி
கேடு கெட்ட இந்த ஜனங்களுக்கு
கேட்கிற புத்தி இல்லை, இல்லை
இந்த ஏழையின் சொல் அம்பலம்
ஏறிய நாளும் இந்த நாளே!

ஊரார் அம்பலவாணனை வாயாரப் புகழ்ந்தனர். முருகாண்டியை அடித்துத் துன்புறுத்த எல்லோரும் நெருங்கினர். அம்பலவாணன் அனைவரையும் தடுத்து நிறுத்தினான்.

ஊரை ஏமாற்றிப் பிழைக்காதே--உழைத்துப் பிழை' என்று அறிவுரை கூறி அனுப்பிவைத்தான், முருகாண்டியை. அறிவரசன், மலர்விழி, அவள் தாய், மணி, ஆகியோர் அம்பலவாணனுக்கு நன்றி தெரிவித்துத் திரும்பினர்.

கூட்டம் கலைந்தது- அன்று முதல் பொன்னூரில் பகுத்தறிவியக்கம் தலையெடுத்தது.

★

திருட்டுத் தாலி

க. அன்பழகன் MA, MLA

LR. ARTS

இந்தியத் துணைக்கண்டத்தின் பேரரசு 'சுதந்திரம்'—பெற்றதன் விளைவாக ஆட்சித் துறையில் பலப்பல மாற்றங்களை, அரசியல் நிர்ணய சட்டத்தின் மூலம் இடம்பெறச் செய்து நிறைவேற்றி வருகிறது. அவைகளுள், மிகவும் முக்கியமானதும், எல்லா மக்களுடைய கவனத்திற்கு உரியதுமாக இருப்பது 'ஆட்சிமொழி' மாற்றமேயாகும்.

சுதந்திரம் பெறும்வரை ஆட்சிமொழியாக இருந்தது ஆங்கிலம். சுதந்திரம் கிடைத்ததன் பயனாக அதில் ஒரு மாற்றம் காணவேண்டாமா? என்ற எளிய ஆசையினாலேயே பலப்பல மொழியினரும் ஒரு புது ஆட்சி மொழி வருவதுதான் சுதந்திரத்தின் அடையாளம் என்ற கற்பனையில் ஆட்பட்டனர்.

அந்நியர் ஆட்சியில் ஏற்பட்ட வெறுப்பு அந்த ஆட்சியுடன் வந்து சேர்ந்த மொழியிலும் பாய்ந்தது. ஆங்கில மொழி அக்காலத்தில் ஆதிக்க மொழியாக இருந்தது என்பதும், ஆங்கிலத்திடம் பொதுமக்கள் வெறுப்படையக் காரணமாயிற்று.

உத்தமர் காந்தியடிகளோ அந்நியர் ஆட்சியை ஆதிபத்தியத்தைத்தான் எதிர்க்கிறோமே தவிர, அந்நிய மக்களை அல்ல என்றார் — என்றாலும் எதிர்ப்பு 1942 ஆகஸ்டு மாதப் போராட்டத்தில்— ஆங்கிலேயர்கள் முகத்தில் திராவகம் கொட்டுமளவிற்குச் சென்றது. அந்நியன் சுரண்டலைத்தான் எதிர்க்கிறோமென்று சொன்ன தேசியத் தலைவர்கள் —கிளாஸ்கோ மல்லுக்கு நெருப்பை வைக்கத்தானே செய்தார்கள்? அப்படியே ஆதிக்க வெறுப்பு— ஆங்கில வெறுப்பாகவும் பரவியது. அதனால் ஆங்கிலமொழியின் சிறப்பினையும் — மேன்மையினையும்—நன்மையினையும்—பயனையும் பலரும் மறந்தனர்.

அவரவர் தாய்மொழியின் இடத்தை ஆங்கிலம் பிடித்துக்கொண்டிருந்ததால் — ஏற்பட்ட பகை நோக்கு, ஆங்கிலத்தினை விரட்டுவதிலேயே பதிந்துவிட்டது. பகைவனொருவனுடன் சண்டையிட்டுக் கொண்டுள்ள நேரத்தில் — மூன்றாவது வீட்டான் ஒருவன்—வீட்டிற்குள் நுழைந்து அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு போவதைப்போல-ஆங்கிலத்தை விரட்டும் வெறிநோக்கு வளர்ந்த சமயத்தில் நமக்கு அந்நியமான இந்திமொழி நுழைந்து அந்த ஆதிக்கப் பீடத்தில் ஏற வழிதேடிற்று. உத்தமர் காந்தி அடிகள் போன்றார்—ஒற்றுமையாக ஆங்கிலேயரை எதிர்த்துப் போராட ஒரு தேசியமொழி, பொது மொழியாக வேண்டுமென்று பேசியதும்—அவரிடத்தில் மக்களுக்கிருந்த மதிப்பும்—நம்பிக்கையும் அக்காலத்தில் வளர்ந்திருந்த தேசியக் கனலும் அவர் சொன்ன கருத்தை—வலுப்பெறச் செய்தன. ஆனாலும் இடையே எத்தனை தடுமாற்றங்கள்? காந்தியடிகள் தேசியப் பொதுமொழியாகத் தக்கது என்று கருதியதும்-கூறியதும் இந்துஸ்தானிதான். இன்று ஆக்கப்பட்டிருப்பதோ இந்தி! இந்துஸ்தானி அல்ல.

இந்தியில் சமஸ்கிருதச் சொற்கள் நிரப்பப்பட்டு—பாமர மக்களிடம் இருந்து விலகி நிற்கும் பண்டிதர்கள் மொழியாக வளர்ந்து வருகின்றது.

இந்தியாவின் தேசியப் பொது மொழியாக இந்தியைத் தீர்மானித்ததுங்கூட மக்களால்—தமது ஆட்சியை நடத்துவதற்கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் அல்ல. காங்கிரஸ் தலைவர்கள் பொறுக்கி எடுத்துக்கொண்ட பிரதிநிதிகளைக் கொண்ட கான்ஸ்டிடியூஷனல் அசெம்பெளி (பொறுக்கப்பட்டோர் குழு)யிலேயே—இந்தி ஆட்சி மொழியாகுந் தகுதியை அரசியல் நிர்ணய சட்டத்தால் தேடிக்கொண்டது. அந்தச் சட்டமும் அரசியல் நிர்ணய மன்றத்தில் இயல்பாக — நேரடியாகக் கொண்டுவரப்பட்டு, எவரும் தம் விருப்பம்போல் வாக்களிக்கும் நிலையில் நிறைவேற்றிய ஒன்றன்று. கட்சிக் கட்டுப்பாட்டினாலேயே சட்டமாக நிறைவேறும் வாய்ப்பினைப் பெற்றது. அரசியல் நிர்ணய மன்றத்தில் முற்றும் நிரம்பியிருந்த காங்கிரஸ் கட்சியினரின் தனிக் கட்சிக் கூட்டத்தில் இந்தியை ஆட்சி மொழியாக்குவது பற்றிய தீர்மானம் விவாதிக்கப்பட்டு—அதில் தோல்வியடைந்த பின்னர், தலைவராக இருந்த இராசேந்திரரின் ஒரு வாக்கால் நிறைவேற்றப்பட்டு — அதனாலேயே—முதலில் எதிர்த்தவர்களின் அவ்வளவு வாக்குகளையும் அரசியல் நிர்ணய மன்றத்தில் ஆதரவாகுமாறு செய்துகொண்ட பிறகே சட்டமாக்கப்பட்டது.

அரசியல் நிர்ணய மன்ற காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் பெரும்பாலோர் வடநாட்டினரே — இருந்தும் ஆதரவாக 78-வாக்குகளும். எதிராக 78-வாக்குகளுங் கிடைத்ததென்றால், என்ன பொருள்? வடநாட்டிலேயே பலர் — காங்கிரஸ்காரர்கள்கூட இதற்கு உடன்படவில்லை என்பதுதானே? ஒன்று இயல்பாக ஏற்றுக்கொள்ளப்படுவதானால் இந்த நெருக்கடி விளைந்திருக்காதன்றோ? நெருக்கடியைத் தவிர்க்க மறுமுறையும் — கட்சியைக் கூட்டி வாக்கு

எடுக்கப்பட்டபோதும் அதே முன்னைய 'சமநிலை' தோன்றியதெனில் ஆட்சி மொழி பற்றி 'இந்திக்கு' ஆதரவு இல்லை என்பதுதானே பொருளாகும்?

ஆடவன் ஒருவன், ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள விரும்பி வெறிகொண்டு அலைகிறான்—அவளோ அவனை அடியோடு வெறுக்கிறாள். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒரு புரோகிதனைத் துணை வைத்துக்கொண்டு ஒரு தாலிக் கயிற்றை அவள் கழுத்தில் கட்டிவிட்டால் மட்டும் அவள் மனைவியாகிவிடுவாளா? அது 'திருட்டுத் தாலி தானே?' தாலி கட்டப்பட்டது என்பதற்காக மட்டும் எவள்தான் தாரமாகிவிடுவாள்? அதுபோன்றே 78—78 ஆகப் பிரிந்து நின்ற கட்சிக் கூட்டத்தில்— தலைவர் இராசேந்திரபிரசாத் — தமது வாக்கை— இந்திக்கு ஆதரவாகத் தந்து அந்த மொழி "ராஷ்ட்ர பாஷை"யாக வழிவகுத்தார். பிரசாத் ஒருவர் வாக்கு—இந்தி மொழியை ஆட்சி மொழியாக்கும் வல்லமையை அவர்கட்கு அளித்துவிட்டது. 'தாழ்ப்பாள் திறந்திருந்தது — அதனாலேதான் உள்ளே நுழைந்தேன்' என்று கள்ளன் சொல்வதில்லை; அதைப்போன்றே என் வாக்கால் நிறைவேற்றும் வாய்ப்பிருந்தது — எனவேதான் 'நிறைவேற்றினேன் என்று ராஷ்டிரபதி—பிரசாத் கூறவில்லையே தவிர—உண்மை அதுதானே?

தனியொரு மனிதரின்—விருப்பத்தால்—ஆசையால்—வாக்குரிமையால்—ஒரு பெருந்துணைக் கண்டம் கொடியதொரு தொல்லைக்கும், துன்பத்திற்கும் ஆளாகியுள்ளது. இந்தி—இந்தியாவின் 'ராஷ்டிர பாஷை!' அதைச் சாதித்தவரோ இந்தியாவின் ராஷ்டிரபதி. இந்திய ஆட்சி மொழியாக இந்தி வருவதுபற்றி—ஒரே கட்சி ஆதிக்கம் வளர்ந்திருந்தும்—வடநாட்டவரே—பெரும்பாலோராய் இருந்தும் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்திலேயே ஆதரவிற்கு ஈடான எதிர்ப்பு இருந்ததென்றால்,—அக்கட்சிக்கு வெளியில், பொதுமக்களிடத்திலும், நல்லறிஞர்களிடமும்—தென்னாட்டிலும், வங்கத்திலும்—மராட்டியத்திலும், எவ்வளவு எதிர்ப்பு இருந்திருக்கும் என்பதைச் சிந்திப்போர் உணரலாம்.

வல்லவன் கையில் இருந்ததாலேயே—அந்த இரண்டு சாண் கயிறு ஒரு நிமிடத்தில் தையலின் கழுத்தில் தாலியாகி விடவில்லையா?-அதுபோன்றே — சந்தர்ப்பவசத்தால் — சதியால் — சர்வாதிகார மனப்போக்கால்—இந்தி, அந்த மேலான இடத்தைப் பிடித்துக்கொண்டது.

ஒரு தனி மனிதரின் ஆசைக்காக—32 கோடி மக்களைக் கட்டுப்படச் செய்யும ஒரு திட்டம சட்டமாக்கப்பட்டுளது. ஒரு மனிதரின விருப்பத்தால் 14 மொழி வழி இனமக்களை — இந்தி மொழிக்கு அடிமைப்படுத்தும் அதிகாரம்—சதிகாரச் சட்டமாகக் கப்பட்டுள்ளது.

இந்தி மொழி பேசும் மக்கள் அந்த மொழியை ராஷ்டிர பாஷையாக்கும வெறியில் அலைந்தனர், அலைகின்றனர். ஆனால் அவர்களோ அன்றும் இன்றுங்கூட எண்ணிக்கையால் பெரும்பான்மையினரல்ல. எண்ணிக்கையைப் பெருக்கிக் காட்ட, சேராத மொழியினரை எல்லாம் சேர்த்துக் கூட்டி, இந்திப் பட்டியலில் அடைத்துக் கணக்கெடுத்தாலும் —மொத்தம் 14 கோடியேதான். பிறமொழி பேசுவோரோ 20 கோடி! எனினும் இந்தியாவில் பேசப்படும் மொழிகளுள்—பெருந்தொகையினரால் பேசப்படுவது என்று காரணங் காட்டி—பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெறாமலேகூட இந்தி ஆட்சிப் பீடத்தில் ஏற்றப்பட்டுவிட்டது.

இந்தியாவிற்கோ தேசிய மொழிகள் ஒன்றல்ல—பதினான்கு. தேசிய மொழி ஒரு நாட்டு மக்களை ஆளும் மொழியாக இருக்கமுடியும். அவரவர் தாய் மொழிதான் அவரவர் வாழும் நாட்டிற்கு ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்ற கொள்கையை—அந்தந்த வட்டார மொழிகளே நிறைவேற்ற முடியும். தமிழ் நாட்டில் தமிழும், ஆந்திர நாட்டில் தெலுங்கும்போல — அவ்வந்நிலத்து மொழியே—அவ்வந்நாட்டு மக்களின் உரிமையை — இலட்சியத்தைப் பூர்த்திசெய்ய முடியும். அதே முறையில் இந்தி பேசப்படும் வட்டாரத்திலும் இந்தியே தேசிய மொழி. அதுவே அங்கு ஆட்சி மொழியாக இருப்பதும் நியதி. ஆனால் அனைத்து மொழி வட்டாரத்தினரும் தேசிய மொழிகளுள் ஒன்றான இந்தியைச் சட்டப்படி ஆட்சி மொழியாக ஏற்கவேண்டும் என்பது அவசியமுமன்று—நீதியுமாகாது.

பல தேசிய மொழிகள்—14 மொழிகள் அரசியல் சட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அப்படியானால் ஒவ்வொரு தேசிய மொழியும் வழங்கும் இடத்தில் மற்றொரு தேசிய மொழி எப்படி இடம் பெற முடியும்? ஒவ்வொருவருக்கும் பெற்றெடுத்த அன்னை ஒருத்தியாகத்தானிருக்க முடியும். ஒருவருக்கு மேற்பட்டு உண்மைத் தாயார் இருக்க முடியாது—அதுபோன்றே ஒவ்வொரு குடிமகனுக்கும் மகளுக்கும்—தேசிய மொழி—நாட்டு மொழி ஒன்றுதானிருக்க முடியும். தாய் மொழி தவிர்த்த மற்றொரு மொழி தேசிய மொழியாக முடியாது. எந்தத் தேசியத்தைக் காக்கவும் அது பயன்படாது. ஆனாலும் இந்தி இப்பொழுது புகுத்தப்படுகின்றதே, ஏன்? இன்றே இந்தியைப் புகுத்திவிட்டால்தான் அந்தந்த வட்டார தேசிய உணர்ச்சி வளர்ந்து, அவரவர் மொழி வழி உரிமை வாழ்வில் வேட்கை பெறுவதற்கு முன், அந்தந்தத் தனி மொழி வழி இன அடிப்படைகளை மறைத்தும் — குலைத்தும் சீரழித்தும் — இந்தியாவின் முழுப் பரப்பிலும் — இந்தி மொழி தேசியத்தை நிலைபெறச் செய்து— இந்தி மொழியினரே ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்ற பேராசையினாலேயே யாகும்.

எனவே இந்தி தேசியம் என்றும் அதுவே இந்தியாவின் இயல்பான தேசியம் என்று பிறநாட்டவரை மயங்கச் செய்யவுமே இம்முயற்சி. பிற மொழிகளின — தனி வாழ்வுரிமைகளை — இந்தி வெள்ளத்தில் ஆழ்த்திடலாம என்பதே அவர்தம் நோக்கம். இது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைத்துவிடச் செய்யும் முயற்சி. ஆனால் முடியுமா? ஒரு

போன். 55,116

மத்திய ஆட்சி மொழி வேண்டுமெனில் — அவற்றுள்ளே ஒரு மொழிக்கு மட்டும் அங்கிலே எப்படிப் பொருந்தும்?

ஆகவே மத்திய ஆட்சி மொழியாக இருப்பதற்கு வேண்டிய தகுதி—தேசிய மொழியென்ற ஒரு காரணத்தாலேயே ஒரு மொழிக்கு வழங்கப்பட முடியாது. அது இந்தியாவிலுள்ள எல்லா மொழிகட்கும்—மக்கட்கும் சமமாகப் பயன்படும் சிறப்புடைய பொதுமொழியாக இருக்கவேண்டும்.

தேசியம் என்ற பெயரில் நடத்தப்படும் மத்திய ஆட்சியின் கற்பனைத் தேசியத்திற்கு ஆற்றல் அதிகமா என்பது சோதனைக்கு ஆளாகியே தீரும். கற்பனைத் 'தேசியம்' நிலைகுலையாமற் போகாது.

ஆங்கிலம் — இயல்பாகவே — இந்தியாவில் கற்றவர்களிடையே பொதுமொழியாக நிலவி வருவதாலும் 'விஞ்ஞான' வளர்ச்சியுடன் இயைந்து வளரும் மொழியாக உள்ளதாலும் — நல்லாட்சிக்குத் தேவையான வளப்பம் அனைத்துங்கொண்ட மொழியாக இருப்பதாலும் — ஏற்கனவே இந்தியாவில் ஆட்சிமொழியாக நின்று இன்றும் நிலவி வருவதாலும், மேலும் பலமடங்கு சிறப்பான உரிமை பெற்றதாகின்றது. இந்தியாவைப் பொறுத்த வரையில்—பொது ஆட்சிமொழியாக இயங்க ஆங்கிலத்திற்குள்ள இயல்பான வாய்ப்பும்—சிறப்பான தகுதியும்—வேறு எம் மொழிக்குமே யில்லை.

அந்நிய மொழி என்போர் — அந்நியர் நம்மிடையே பரவவிட்டதை எல்லாம் விலக்கிவிட்டோமா? என்று எண்ணிப் பார்க்கவேண்டும். தபாலும் தந்தியும்—வானொலியும்-தொலைக் காட்சியும்—காரும் — ரயிலும் — கப்பலும் —:வான ஊர்தியும்—அலோபதியும்—ஹோமியோபதியும்—ஒலி பெருக்கியும்—அச்சுப் பொறியும் பாராளுமன்ற நெறியும்—ஆட்சிமுறையும் மற்றும் எண்ணிறந்தவுமான அந்நியர் கண்டுபிடித்து நம்மிடம் சேர்க்கப்பட்டவையே என்பதை ஏனோ மறந்துவிடுகின்றனர்? கிராப்பும்--காலர் சட்டையும் அந்நியர் நாகரிகமாகக் கருதப்பட்டவை தானே? விதவை விவாகமும், பெண்ணுரிமையும் ஆங்கில அறிவால் விளைந்தவைதானே? ஏன் இன்றைய சுய ஆட்சியைப் பெறவே அந்த அந்நிய ஆங்கிலந்தானே வழி வகுத்துத் தந்தது என்பதை எவரே மறுக்கமுடியும்?

ஆயினும் ஆங்கிலத்தை எதிர்ப்பதுதான் ஏனோ? எதிர்ப்பவர்கள் என்ன நம்மைப்போல் பைத்தியக்காரர்களா? காட்டுமிராண்டிகளா? அல்ல—அல்ல—இந்திக்கு முடிசூட்டினால்தான் தமது—ஏகாதிபத்தியம் — 'சூரிய சந்திரர்'கள் உள்ளளவும் ஏனென்று கேட்பாரற்று நிலவும் என்று கருதியே அவ்வாறு வலியுறுத்தி எதிர்க்கின்றனர். அவர்கள் அதிகார வாதிகள் — ஆட்சிபீடகர்த்தாக்கள் அல்லவோ? ஆனால் இந்திய தேசங்கள் பலவற்றிற்கும் தேசிய மொழிகளுள் ஒன்றான இந்தியே ஆட்சி மொழியானால் இந்தியர் சில காலமும் நிலைக்க முடியாது என்பதை அவர்கள் ஏனோ உணரவில்லை? ஆதிபத்திய ஆசை கண்ணையும் கருத்தையும் மறைக்குமன்றோ?

இங்கிலேயில் இந்தியை எல்லாத் தேசிய இனங்களுக்கும் ஆட்சி மொழியாக்குவது-'திருட்டுத் தாலி' கட்டும் செயலே யாகும். மாபெருந் தலைவரான இராசேந்திரர் செய்ததனாலேயே—வாய்ப்பைப் பயன்படுத்தி ஜனநாயகத்தைக் கொன்று — இந்தியை ஆட்சி மொழியாக்கும் சட்டத்திற்கு வழி வகுத்த செயல் நியாயமாகிவிடாது. அவர் அரசியலில் கண்ணியம் கருதுபவரானால் தன்னால் விளைந்த தவறை அவரே திருத்தி மாற்ற முன்வரவேண்டும். சட்டத்தை மாற்றி அனைவர்க்கும் சமசந்தர்ப்பம் அளித்து மக்கள் விருப்பத்திற்கேற்ப ஆட்சி மொழியை அமைத்துக்கொள்ள இடம் தர வேண்டும்.

கூட்டத் தலைவர் இராசேந்திரர் ஒருவரின் வாக்காலேயே ஒரு மொழி ஆட்சிமொழிப் பீடமேறிற்றென்றால் மத்திய அரசியலிலேயே கூட—அது கட்டாயத் திணிப்பு தானே? அதனாலே தான் இந்திக் கட்டாயத் திணிப்புக்கு எதிர்ப்புப் பல வகையிலும் தோன்றிவிட்டது. கட்டாயத் திணிப்பு-"திருட்டுத் தாலியேதான்"? இராசேந்திரர் கட்டியதேயானலுந் 'திருட்டுத் தாலி' அறுந்தே தீரும்.

★

அழகு முகம்

-இராதா மணாளன்-

"வாங்கம்மா!" என்று கடை முதலாளியே எழுந்து வந்து அவளை வரவேற்றான்.

"ஏதாவது புதிதாக......"

"பொங்கலாயிற்றே, உங்களைப்போன்றவர்களுக்கு நல்லதா, பிடித்தமானதா தானுமேன்னு, காஞ்சிபுரத்திற்கும் ஆரணிக்கும் போயிட்டுக் காலையில்தான் வந்தேன்! கொளளேகாலம் பட்டுப் புடவைகளும், ஸ்பெஷல் கிரேப் சில்க் ரகங்களும் வந்திருக்கின்றன! உட்காருங்களம்மா!" என்று ஜவுளிக்கடை முதலாளி நெளிந்து குழைந்து பேசி, நாற்காலியை இழுத்துப்போட்டான்.

அதற்குள் கடைப் பையன் ஓடிப்போய், குளிர்பானம் வாங்கிக்கொண்டு வந்தான்!

சிவகாமி கடைக்குள் அடியெடுத்து வைத்துவிட்டாள் என்றால், அன்று குறைந்தது ஐந்நூறு ரூபாய்க்காவது வாங்காமல் போக மாட்டாள் என்பது முதலாளிக்கு உறுதியாகத் தெரியும்—ஆகவே உபசாரங்கள் பலமாக இருக்கக் கேட்கவா வேண்டும்?

சிவகாமியின் கழுத்திலிருந்த வைர நெக்லேசும், காதிலிருந்த வைரத்தோடும் லோலாக்கும் மின்சார விளக்குகளின் ஒளியில் அவளது செல்வ நிலையை ஆடம்பரச் சிரிப்போடு பறைசாற்றிக் கொண்டிருந்தன. ஒய்யாரமாக அவள் நாற்காலியில் அமர்ந்து ஒரு கையிலிருந்த கற்கள் பதிக்கப்பட்ட தங்க வளையல்களை மேலே தள்ளிவிட்டு, மற்றொரு கையிலிருந்த கடிகாரத்தைப் பார்த்தாள்.

"மூன்றாகி விட்டதா?" என்று முணுமுணுத்தபடி, கடைக்காரன் பிரித்துப்போட்ட புடவைகளைப் பார்த்தாள்.

நான்கைந்து புடவைகள் இன்று செலவழியும் என்று எதிர்பார்த்தான் கடைக்காரன். அதைப் போல் இருமடங்கு அவள் தேர்ந்தெடுத்து விடவே, அவன் முகமெல்லாம் பல்லாகிவிட்டது!

கடையைவிட்டு இறங்கியவளை, "அம்மா! பசியாயிருக்கு! ஓரணாக் கொடுங்கம்மா!" என்ற பிச்சைக்காரியின் குரல் தடுத்து நிறுத்தியது.

சிவகாமியின் கண்கள் அவளை உற்றுப்பார்த்தன. வயது பதினேழு பதினெட்டுத்தான் இருக்கும். கட்டான உடல், கவலை மேகங்களுக்குப் பின்னால் மதி முகம், கிழிந்த புடவை, வாராத தலை...... பரிதாபமான தோற்றம்!

"ஓரணுவுக்கு என்னம்மா சாப்பிடுவாய்?" புன்னகையோடு சிவகாமி கேட்டாள்.

"உங்களைப்போல நாலு பேரு ஒவ்வொரு அணு கொடுத்தா......"

பிச்சைக்காரி கூறியது அதற்குமேல் கேட்கவில்லை—அவள் சிந்தனை எங்கோ ஓட ஆரம்பித்து விட்டது.

"என் வாழ்க்கையில் எதையாவது புதுமையாகச் செய்ய வேண்டுமென்று நினைக்கிறேன்! ஆனால் எதைச் செய்வது என்றுதான் புரியவில்லை!" என்று தன் கணவன் அடிக்கடி சொல்வது, இப்பொழுது அவள் கவனத்திற்கு வந்தது.

"அவருக்கு முன் அதை நான் செய்து காட்டுகிறேன்!" என்ற இதய முணுமுணுப்போடு, பிச்சைக்காரியைப் பார்த்தாள்.

"நீ என்னோடு வருகிறாயா, சோறும் போடுகிறேன், காசும் தருகிறேன்!" என்றாள்.

"எங்கேயம்மா?"

"என் வீட்டிற்கு!"

"வேண்டாம்மா, ஓரணாக் கொடுங்கம்மா போதும்!"

"என்னோடு நீ வந்தால் நான் மகிழ்ச்சியடைவேன்—வரமாட்டாயா?" என்று பரிவோடு பேசியவளை, உதட்டிலே விரலை வைத்தபடி ஆச்சரியத்தோடு பார்த்தாள், பிச்சைக்காரி.

"வா!" என்று அவள் கையைப் பிடித்துக்கொண்டு, காரை நோக்கி நடந்தாள் சிவகாமி.

ஓடிய காரில் உட்கார்ந்திருந்த பிச்சைக்காரிக்கு ஒன்றுமே புரியவில்லை.

"ஒருவேளை..." எதையோ நினைத்துக்கொண்டு "அம்மா! அம்மா!" என்று கத்தினாள்.

"என்ன?"

"என்னைப் போலிஸ் ஸ்டேஷனில் கொண்டு போய் விட்டுவிடப் போறீங்களா அம்மா?" பிச்சைக்காரி அழவே ஆரம்பித்துவிட்டாள்.

"என்னைப் பார்த்தால் அத்தகைய கொடூர நெஞ்சம் கொண்டவளாகவா உனக்குத் தெரிகிறது? பயப்படாதே! உன் பெயர் என்னம்மா?"

"சாமந்தி!"

"சொந்தக்காரர்கள் உனக்கு யாருமே இல்லையா?"

"அப்பா மட்டும் இருக்கிறாரு! ஏதாவது கூலி வேலை செய்து நாலணா எட்டணா கொண்டு வருவாரு! குடிசையைவிட்டு என்னை வெளியே போக விட மாட்டாரு! அப்பாவுக்கு ரெண்டு நாளா காய்ச்சல்-அதனாலே..."

தேம்பிக் கொண்டே அவள் கூறியதைக் கேட்டதும், சிவகாமியின் மெல்லிய உடல் சிலு சிலுத்தது — இளகிய மனம் கவலையில் விழுந்து அழுந்தியது.

"வருந்தாதே சாமந்தி! இன்று முதல் உன் வாழ்க்கையே மாறிவிட்டதென்று நினைத்துக் கொள்! நீ புது வாழ்வு பெறப்போகிறாய்!"

ஒன்றும் புரியாமல் பிச்சைக்காரி ஏறிட்டுப் பார்த்தபோது, கார் பெரிய பங்களாவினுள் நுழைந்தது.

காரை விட்டு இறங்கியதும் பங்களாவிற்குள் நுழையத் தயங்கிய சாமந்தியைப் பார்த்து, சிவகாமி சிரித்தாள்.

"உள்ளே வா, சாமந்தி!"

"வேண்டாம்மா, இப்படியே இருக்கிறேன்!"

"பணக்காரர்களுக்கும் இதயமுண்டு — எல்லாப் பெண்களும் சகோதரிகள் என்ற எண்ணமுண்டு — சுயநலத்தைவிடப் பிறர் நலத்தில் நாட்டமுண்டு— என்பதை உலகத்திற்குக் காட்டப் போகிறேன் நான்! உன்னைப்போல நானும் பெண்தானே—பயப்படாதே வா, சாமந்தி!" என்று கலக்கத்தோடு நின்றவளின் கையைப் பிடித்து, பங்களாவுக்குள் அழைத்துச் சென்றாள்.

மாடி அறையினுள் நுழைந்ததும், "உட்கார் இப்படி!" என்று நாற்காலியைக் காட்டினாள்.

"அதுபோலெல்லாம் உட்கார்ந்து பழக்கமில்லை அம்மா!" என்று நாணத்தோடு தயங்கித் தயங்கிக் கூறியவளைப் பார்த்து, சிவகாமி கலகலவென்று சிரித்தாள்.

சாமந்தி தன்விழிகளை உயர்த்தி, அந்த விசாலமான அறையில் நோட்டம்விட்டாள், வெளிர் பச்சை நிறச் சுவர்கள், சுவர்களில் மாட்டப்பட்டிருந்த தங்க நிறச் சட்டம் போட்ட வண்ண ஓவியங்கள், ஜன்னல்களில் அசைந்தாடிக்கொண்டிருந்த பட்டுத்திரைகள், மேலே சுற்றும் விசிறி, வெல்வெட் விரிப்புக் கொண்ட தாழ்வான கட்டில், மேஜைமீது விதவிதமான பொருள்கள், ஆள் உயரத்திற்கு முகம் பார்க்கும் கண்ணாடியோடு கூடிய பெரிய பீரோ......அவளுக்கு மயிர்க் கூச்சல் எடுத்தது!

ஏதோ ஓர் அச்சம் அவள் உள்ளத்தில் விழுந்து கவ்வியது.

"எனக்குப் பயமாக இருக்கிறது! நான்போய் விடுகிறேன் அம்மா! வெளியேபோய் விடுகிறேன்!" என்று கை கால்கள் நடுங்க அவள் கூறினாள்.

"ஏன் இப்படிப் பயப்படுகிறாய், சாமந்தி?"

"என்னமோ எனக்குப் பயமாக இருக்கிறது! என்னை விட்டுவிடுங்களம்மா, நான் போய்விடுகிறேன்!" அவள் அழவே ஆரம்பித்துவிட்டாள்.

அவள் தோள்மீது கைவைத்து அழைத்து வந்து கட்டிலில் உட்காரவைத்து, தானும் பக்கத்தில் அமர்ந்தாள், சிவகாமி.

"சாமந்தி! ஏன் இப்படி நடுங்குகிறாய்? வறுமையிலே பிறந்தோம், வறுமையிலே வளர்ந்தோம், வறுமையிலேயே புரண்டுகொண்டிருந்தோம்— அந்த வறுமை நம்மை விட்டுவிட்டு ஓடிவிடப் போகிறதே என்று அலறுகிறாயா? பைத்தியக்காரி! பயப்படாதே! என்னை நீ இன்று கண்டது, உனக்கு எவ்வளவு பெரிய அதிருஷ்டம் தெரியுமா?"

"உங்கள் பேச்சே எனக்குப் புரியவில்லையே, அம்மா?" என்று கேட்பதைப் போலச் சாமந்தி விழித்தாள்.

"மாலை ஒன்றை ஏந்தி யானை வரும்—தெருப் புழுதியில் ஓடி விளையாடிக்கொண்டிருக்கும் பஞ்சைச் சிறுவன் ஒருவனின் கழுத்தில் அந்த மாலையை அதுபோடும்—உடனே அந்தப் பையனைக்கொண்டு போய் சிம்மாசனத்தில் உட்காரவைத்து அரசன் ஆக்குவார்கள் —. என்று கதைகளில் படித்திருக்கிறேன்! ஆனால் அத்தகைய திடீர் அதிர்ஷ்டம உண்மை வாழ்க்கையில் யாருக்கும் ஏற்பட்டதாக நான் கேள்விப்படவில்லை! அத்தகைய அதிருஷ்டம் இப்பொழுது உனக்கு வந்திருக்கிறது!......ஆச்சரியமடையாதே சாமந்தி — உண்மையாகத்தான் சொல்கிறேன்!.........வாழ்க்கையில் எதையாவது புதுமையாகச் செய்யவேண்டுமென்று என் கணவர் சொல்வார். அவருக்கு முன் நானேர் புதுமை செய்து காட்டப்போகிறேன! என் தந்தை வைத்துவிட்டுபோய் இருக்கும் சொத்து ஏராளம்! இதைபோன்ற பெரிய பங்களாக்கள் பல! சிறியதும் பெரியதுமான வீடுகள் அநேகம்! பாங்கிலோ இலட்சக்கணக்கில் பணம்! இவ்வளவும் இருக்கும்; நான்—ஒரு ஏழைப் பெண்ணுக்கு ஏன் புதுவாழ்வு அளிக்கக் கூடாது? ஏன் முடியாது?.........உனக்கு ஒரு பங்களா தரப்போகிறேன்—பணம் தரப்போகிறேன்—செல்வந்தனாகவும் நல்லவனாகவும், உன் கண்ணுக்குப் பிடித்தவனுமாக இருக்கும் ஒருவனுக்கு உன்னைத் திருமணம் செய்து தரப்போகிறேன்! கடைத்தெருவில் நின்று, "ஓரணாக் கொடுங்கம்மா!' என்று கேட்ட பிச்சைக்காரி அல்ல நீ இப்பொழுது—இந்த நொடி முதல் நீ என் சகோதரி!" என்று மூச்சுவிடாமல் பேசியவளை, கண் சிமிட்டாமல் ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டிருந்தாள் சாமந்தி. ஏதாவது கனவு காண்கிறோமா என்ற சந்தேகம் கூட அவளுக்குத் தோன்றியது.



"சாமந்தி எழுந்திரு! குளித்துவிட்டு வேறு புடவை கட்டிக்கொள்!"

இருவரும் அந்த அறையைவிட்டு வெளியே சென்றனர்.

"இதோ இருக்கிறதே சோப்பு, இதில் கொஞ்சம் கூட மீதம் வைக்கக் கூடாது-அப்படித் தேய்த்துக் குளி! இதோ புடவை! புதுப் பட்டுப்புடவை! இதைக் கட்டிக்கொண்டு வா!" என்று சிரித்துக் கொண்டே கூறிவிட்டு, குளிக்கும் அறையை விட்டு வெளியே வந்தாள் சிவகாமி.

"இரண்டு ஓவல் கொண்டுவா!" என்று சமையல்காரியிடம் கூறி விட்டுத் தன் அறைக்குச் சென்றாள்.

சிறிது நேரம் கழித்து' பட்டுப் புடவையைச் சுற்றிக்கொண்டு உள்ளே வந்த சாமந்தியைப் பார்த்துப் புன்னகை செய்தாள்.

"புடவையைச் சரியாகக் கட்டத் தெரியவில்லையே — நான் கட்டிக் காட்டுகிறேன்!" என்று அவளுக்கு நாகரிகமான முறையில் புடவைகட்டி, சரிகை இழைகள் ஓடிய வெல்வெட் சோளி போட்டு, தலைவாரி பூ வைத்து, முகத்திற்குப் பவுடர் அடித்து, திலகம் வைத்தாள்.

"இப்பொழுது எவ்வளவு அழகாக இருக்கிறாய் பார்!" என்று அவளை இழுத்துப்போய் நிலைக்கண்ணாடியின் முன் நிற்கவைத்தாள்.

கண்ணாடியில் தெரிவது தன உருவமதானா என்பதை சாமந்தியால் நம்ப முடியவில்லை.

"இது உண்மை அல்ல! நான் ஏதோ பயங்கரமான கனவு காண்கிறேன்!" என்ற சந்தேகத்தோடு தன்னைக் கிள்ளிப் பார்த்துக்கொண்டாள்.

"இந்தா ஓவல் சாப்பிடு!" என்று சிவகாமி கொடுத்த வெள்ளிக் கோப்பையைப் பேசாமல் வாங்கிக்கொண்டாள்.

"சிறிது நேரத்திற்கு முன்புவரை நீ பிச்சைக்காரியாக இருந்தவள் என்று சொன்னால், இப்பொழுது யாருமே நம்பமாட்டார்கள்! ஆடை அலங்காரம் உனக்கு எவ்வளவு எடுப்பாக இருக்கிறது!" என்று அவளைச் சிவகாமி அணைத்தபடி கட்டிலில்கொண்டு போய் உட்காரவைத்தாள்.

"இங்கேயே இரு சாமந்தி, இதோ வந்துவிடுகிறேன்!" என்று சிவகாமி மான்போல் துள்ளி அறைக்கு வெளியே ஓடினாள்.

ஒன்றுமே சரியாகப் புரியாமல் திக்குமுக்காடிக் கொண்டிருந்த சாமந்தி, பெரிய தலையணை மீது சாய்ந்து கட்டிலின் தலைப்பக்க விளிம்பின்மேல் தலை வைத்தவாறு, ஒருக்களித்துப் படுத்தாள். அப்படியே தூங்கியும் விட்டாள்.

"பாருங்கள் அத்தான்—நான் சொன்னால் நீங்கள் நம்பவில்லையே?"

அந்த அறையினுள் நுழைந்ததும் தன் கணவனிடம் சாமந்தியைச் சுட்டிக்காட்டி இவ்வாறு சிவகாமி கூறினாள். செயற்கரிய செயல் செய்து விட்டவளைப்போல அவள் முகத்திலும் குரலிலும் ஒருவித பெருமிதம் தாண்டவமாடியது.

"இவளா பிச்சைக்காரி?" என்று அவள் கணவன், கட்டிலில் சாய்ந்து படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தவளின் அருகில் வந்தான்.

வாட்ட சாட்டமான உடலும், வட்டமான முகமும், வசீகரமிக்க கண்களும் கொண்ட அவன், "நம்பவே முடியவில்லையே!" என்றான், சாமந்தியின் முகத்தைப் பார்த்தபடி.

"புதுமைசெய்து காட்டுவதில் உங்களை நான் முந்திக்கொண்டேன் அல்லவா?" என்று குறும்போடு கூறிப் புன்னகை செய்தவள், சாமந்தி மீது வைத்தகண் வாங்காமல் ஆர்வத்தோடு அவன்

பார்ப்பதைக் கண்டதும், புருவங்களை உயர்த்தினுள்.

"கள்ளங் கபடமில்லா அழகு முகம்! வளமான உடல்! இவள் உலவினுல் இந்தப் பங்களாவே ஒரு தனி அழகைப் பெறும்!"

மனதில் தோன்றியதை அவன் வெளியில் கொட்டிவிட்டான்.

"நல்லவனுக ஒருவனைப் பார்த்து முதலில் இவள் திருமணத்தை முடித்துவிட வேண்டும்!"

"ஏன், நான்தான் கட்டிக்கொள்கிறேனே!"

குறும்புக்காகத்தான் இப்படி அவன் கூறினுன் என்ருலும், அவள் முகம் மாறத் தொடங்கியது! இதயத்தின்மீது சாட்டையடி விழுந்தவளைப்போலத் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

"ஐயாவைப் பார்க்க யாரோ வந்திருக்கிருர்கள்!" என்று அந்த நேரத்தில் வேலைக்காரி வந்து கூறவே, அவன் வெளியே சென்ருன்.

சிந்தனையோடு சாமந்தியைத் திரும்பிப் பார்த்தாள் சிவகாமி.

"கள்ளங் கபடமில்லா அழகு முகம்! இவள் உலவினுல் இந்தப் பங்களாவே ஒரு தனி அழகைப் பெறும்!"

கணவனின் இந்தச் சொற்கள் அவளைச் சுற்றி வட்டமிட்டன.

"இவள் அழகு முகம் என் அத்தானின் நெஞ்சைப் போதைகொள்ளச் செய்துவிட்டால்?"

அவள் பெண் மனதில் இருட் கோடுகள் பின்னலிட்டன.

பேதைப் பெண்ணின் சிந்தனை கொந்தளித்தது. களைத்து ஓய்ந்த கண்களுக்கு எவ்வாறு, எல்லாம் இரண்டாகத் தெரியுமோ, அவ்வாறே அவள் உள்ளத்தில் சகல விஷயங்களும் வாதமும் எதிர்வாதமுமாக, இரண்டு இரண்டாகப் பிரிந்து நின்றன.

"இவள் வாழ்வை வளர்பிறை ஆக்கப்போய், என் வாழ்வைத் தேய்பிறையாக்கிக்கொள்வதா?" என்ற உள்ளுணர்ச்சி அவள் நெஞ்சில் அலைமோதியது.

நிலைக்கண்ணுடியின் முன்பு போய் நின்ருள். அவளையும் தன்னையும் மாறிமாறிப் பார்த்தாள்.

"இவள் உலவினுல் இந்தப் பங்களாவே ஒரு தனி அழகைப் பெறும்!" யாரோ கடகடவென்று கர்ணகடூரமான குரலில் கெக்கலி கொட்டிச் சிரிப்பதைப்போன்ற பேரலைச் சப்தம், அவள் தலையைச் சுற்றச் செய்தது.

கண்ணை மூடியபடி ஒரு கணம் மௌனமாக நின்ருள். மறு கணம் பீரோவைத் திறந்து பத்து ரூபாய் நோட்டுகள் ஐந்தை எடுத்தாள். எடுத்ததில் நான்கைத் திரும்பவும் வைத்துவிட்டு, ஒன்றைக் கசக்கி உள்ளங் கையில் மூடிக்கொண்டு கட்டிலின் அருகில் வந்தாள்.

"சாமந்தி!"

"சாமந்தி!"

"சாமந்தி! சமாந்தி! ஏ, சாமந்தி!"

உரக்க அழைத்தும் அவள் விழிக்காததினுல், உலுப்பி எழுப்பினுள்.

சாமந்தி திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள்.

"இந்தா!" என்று பத்து ரூபாய் நோட்டை வெறுப்போடு அவளிடம் கொடுத்தாள்.

அதைப்பிரித்துப்பார்த்தபடி "இதென்னம்மா?" என்ருள் சாமந்தி.

"உனக்குப் பிச்சை!" கடுகடுத்த முகத்துடன் கோபமும் வெறுப்பும் கலந்த குரலில் சிவகாமி கூறினுள்.

"பிச்சையா?"

சாமந்தியின் முகத்தில் கவலையும் பரபரப்பும் நிழலாடின. கையிலிருந்த நோட்டுத் தரையில் விழுந்தது.

"இந்த வீட்டில் இனி ஒரு நொடிகூட நீ இருக்கக் கூடாது! வெளியே போய்விடு!" சிவகாமி உறுமினுள்.

"சரியம்மா!"

"இதை எடுத்துக்கொள்!" என்று புருவத்தை நிமிர்த்தித் தரையில்கிடந்த பத்துரூபாய் நோட்டைச் சுட்டிக்காட்டினுள், சிவகாமி.

"வேண்டாம் அம்மா!" என்று வார்த்தைகளால் அல்ல, தலை அசைவால் கூறிவிட்டுக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள், சாமந்தி.

வாயிற்படியை நோக்கி நடந்து சென்றவளைப் பார்த்தபடி கட்டில் மீது உட்கார்ந்த சிவகாமி, நீண்டதொரு பெருமூச்சு விட்டாள்.

★

நீங்கள் எங்கிருந்தாலும் சரி, எந்த நிலைமையிலிருந்தாலும் சரி, மக்கள் சமுதாயத்தின் வளர்ச்சியை வளர்த்துக் கொண்டிருங்கள். ஒற்றுமையின் தூதுவர்களாக விளங்குங்கள். இன்று உலகமும் அறிவாளிகளும் உங்களிடமிருந்து இதைத்தான் கேட்கின்றனர். அதிகமான எதையும் செய்ய முடியாவிட்டாலும், மக்கள் சமூகத்தின் பிரச்சாரகர்களாயிருங்கள். அதுவே எவ்வளவோ நன்மையைச் செய்ததாகும்.

அறுந்த சங்கிலி

ராமலிங்கம் M.A.

கப்பல்போல் மிதந்துவந்த கார், பங்களாவின் காம்பவுண்டிற்குள் திருமபிப் போர்டிகோவில் நின்றது. உடனே டிரைவர் இறங்கிக் காரின் கதவைத் திறக்க, இராமாமிர்தம் ஐயர் காரிலிருந்த பொட்டளத்தை எடுத்துக்கொண்டு இறங்கி "முனுசாமி காரை நன்னு துடைச்சி நாளைக்குத் திருத்தணிக்குப் போவதற்குத் தயார் செய்து வை — காலையிலே 10 மணிக்கு வந்து சேரு" என்று சொல்லிக்கொண்டே ஹாலில் நுழைந்தார். முனுசாமி காரை ஷெட்டில் விடப் போய்விட்டான். ஹாலில் யாரும் இல்லாததால், ஐயர் "அலமு......அலமு... என்னடி செய்திண்டிருக்கே? இங்கே வா......எங்கே இந்த வாண்டுப் பயலையும் காணோம்......டேய் சுந்துமணி" என்று கூப்பிட்டார். அலமேலு அம்மாள் உடல் வளப்பத்தின் காரணத்தால் ஓடிவர முடியவில்லை, என்ருலும், தத்தி நடக்கும் தன் பேரனோடு ஒருவாறு அசைந்துவந்து "என்ன சமாசாரம்... இதென்ன பொட்டளம்" என்றுகேட்டாள். இராமாமிர்தம், சாவகாசமாக, மேல் அங்கவஸ்திரத்தை மற்ருெரு சோபாவின்மேல் போட்டுக்கொண்டே "நம்ம மந்திரி இன்றைக்கு ஒரு ஓட்டல் திறந்தாரே தெரியுமோ! அந்த ஓட்டல் ஸ்வீட்சு ரொம்ப நன்னுயிருக்குடி...டேய் சுந்துமணி இங்கே வாடா... நோக்கு ஜாங்கிரி வேண்டாம்" என்று சொல்லிக்கொண்டே ஒரு ஜாங்கிரியை எடுத்துக் கொடுத்துவிட்டு, மிகுதி பொட்டளத்தை அம்மாளிடம் கொடுத்துவிட்டார். சுந்துமணி அதைச் சுவைத்துக்கொண்டே வாசல் பக்கம் பார்த்துக் கை காட்டி "பாம்...பாம்" என்று மழலை மொழி பேசினுன். அலமேலு திரும்பிப் பார்த்து "அட நம்ம முனுசாமி வந்திருக்கான்; அதைச் சொல்ருன்......முனுசாமி, ஜாக்கிரதையாய் திருத்தணி போய்விட்டு வாங்கோ! நான் உன் பெண்டாட்டி அலங்காரம் கிட்டே சொல்லியிருக்கேன், அவளை மூன்று நாளைக்கு இங்கேயே படுத்துக்கொள்ள" என்ருள். அதற்கு முனுசாமி "சரிங்கம்மா, நல்லது. நான் கவனிச்சுக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு நகரும்போது "என்னங்க அருணுசல முதலியார் இருக்காரே, அவர் நாளைக்கு வடிவுடை அம்மன் கோவிலுக்குக் கும்பாபிஷேகம் செய்யப் போகிருராம் உங்களைக் கட்டாயம் வரச்சொன்னுர்" என்று ஐயர் அம்மாள் சொல்ல, ஐயர், தன்னை நாளைக் காலையிலேயே வரச் சொல்லுவாரோ என்று திரும்பினுன் முனுசாமி.

இதுவரை பாதி ஜாங்கிரியை ரசித்து சாப்பிட்டுக்கொண்டிருந்த சுந்துமணி திடீரென்று ஹாலின் கதவண்டை ஓடி "தாயி...தாயி..." என்று கத்தினுன். எல்லோரும் திரும்பிப் பார்க்க, ஐயர் சிரித்துக்கொண்டே "ஏது? இவன் பெரிய சிக்னலர் போலிருக்கே! ஆள் வருவதற்கு முன்பாகவே இவன் கத்திடருனே...யாரு அலங்காரம் வராளா" என்றதும் "ஆமாங்க சாமி" என்று சொல்லிக்கொண்டே உள்ளே வந்தாள். உடனே சுந்துமணி அவளிடம் ஓடி அவள் மடியைக் காட்டி "த்ச...த்ச..." என்று சப்புக்கொட்டினுன். தினமும் தான் வாங்கிவரும் சீப்பான பிஸ்கட்டை யாருக்கும் தெரியாமல் அவனுக்குக் கொடுக்கும் பழக்கம்; இன்று அவன் கேட்டான். இதைத் தெரிந்துகொண்ட அவள், ஒன்றும் கண்டுகொள்ளாமல் "என்னடா வேண்டும் நாம் காரிலே போலாமா" என்று சமாதானம் செய்ய அவன் ஓவென்று கத்தி அவள் மடியைக் காண்பித்து அழுதான். "என்னடி வச்சிருக்கே மடியிலே —அவனுக்குத்தான் காட்டேன்" என்று அலமேலு அம்மாள் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, சுந்துமணி வேகமாக அவள் மடியைப் பிடித்திழுக்கவே, தொப்பென்று விழுந்தது ஒரு அறுந்த சைக்கில் சங்கிலியும் ஒரு பொட்டளமும் "ஹை..." என்று 'சுந்துமணி' கையைத்தட்டி அந்தப் பொட்டளத்தை எடுத்துக்கொண்டான். ஐயர் "என்னடி இது அறுந்த சங்கிலி ஏது? தெருவிலே இருக்கிற ஒரு தும்பு தூசியைக்கூட விடமாட்டே போலிருக்கே! முனுசாமி நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி! பார்த்தியோ அறுந்த சங்கிலி எதுக்காவது உபயோகப்படுமன்னு கொண்டு வந்திருக்கா" என்று சொல்லிக்கொண்டே சிரித்தார். அவர் சிரிப்பு அவன் உள்ளத்தைக் கிளறிவிட்டது "எத்தனை தடவை சொல்லியும் இந்தப் பழக்கத்தை இவள் விடமாட்டேங்கிருளே என்று நினைத்துக்கொண்டே சிறிது கோபத்துடன் ஷெட் நோக்கி நடந்தான். அலங்காரம் முகத்தில் அசடு வழிய அந்தச் சங்கிலியோடு வீட்டினுள் நுழைந்தாள்.

○ ○ ○

காரைக் கழுவிவிட்டு, சில கருவிகளை எடுத்து வைத்துவிட்டு ஷெட்டைப் பூட்டி, முனுசாமி வீட்டிற்குப் போகும்போது பங்களாவில் மணி ஒன்பது அடிக்கும் சப்தம் கேட்டது. தன் பெண்டாட்டி இப்படிக் கண்ட பொருள் எல்லாம் எடுத்து வந்து சேர்க்கும் பழக்கத்தை ஒழித்துவிட வேண்டும் என்ற எண்ணத்துடன், அதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண்டே வீட்டை நெருங்க, வெளியிலேயே கதவின்மேல் சாய்ந்தபடி செப்புச் சிலைபோல் ஏக்கத்தோடு நின்றுகொண்டிருந்தாள் அவள்.

"என்ன அலங்காரம் எனக்காகவா, காத்துக் கொண்டிருக்கே, நீ சாப்பிட்டுடக்கூடாது" என்று முனுசாமி கேட்டான்.

"இல்லிங்கோ மச்சான், இன்னும் என் தங்காச்சி வரலே! சாதாரணமா ஏழுக்கெல்லாம் வந்திடுவா; மணி ஒன்பதாச்சு" என்று பெருமூச்சோடு அலங்காரம் சொல்ல "சிங்காரிதானே, அவ எசமான் தான் நாளைக்குக் கும்பாபிஷேகம் செய்யப்போகிறாரே, ஏதாவது வேலையிருக்கும்" என்று சொல்லிக் கொண்டே படிக்கட்டு ஏறினான். "என்னங்க மச்சான்! நாளைக்கு அம்மன் கோவிலில் கும்பாபிஷேகம் என்றால் இன்றைக்கு வீட்டில் என்ன இருக்கு, போய்ப் பார்த்துவிட்டு வாங்க மச்சான்" என்றாள். அவன் சிறிது கோபமடைந்து "அதுக்குத் தான் ஆயிரம் தடவை சொல்கிறது, இப்படி இரண்டுங் கெட்டானை இருப்பதாலே தானே நான் எல்லாவற்றிற்கும் போகவேண்டியிருக்கு! அவளுக்கு ......" என்று சொல்லிகொண்டிருக்குபோதே, அலங்காரம் குறுக்கிட்டு "மச்சான் அதெல்லாம் அப்பாலே பேசிக்கலாம், முதலில் போய்ப் பார்த்துவிட்டு வாங்க" என்று சொன்னதும் அவன் அப்படியே கிளம்பிவிட்டான்.

○ ○ ○

"என்ன சிங்காரி நாளைக்குக் கும்பாபிஷேகத்துக்கு தவறும உங்க அக்காவோடவந்திடு தெரியுதா..."

"சரிங்க எசமான்; நான் போகட்டுங்களா, மணி ஆகுது"

"இரு போகலாம், சிங்காரி, உனக்கு யாரு இந்தப்பேரு வச்சுது? பொருத்தமா இருக்கே"

"என்னங்க எசமான் கிண்டல் பண்றீங்க! குழந்தைகளுக்கு அப்பா அம்மா தானே பேர் வைப்பாங்கோ"

"அது தெரியும், ஒரு சமயம் உன் புருசன் வச்ச ஆசைப் பேரோன்னு பார்த்தேன்"

"சிங்காரி இதைக் கேட்டதும் கண்களில் கண்ணீர் ததும்ப "எசமான் அவரோடு நான் பேசினதுகூட இல்லையே — காலையிலே கலியாணம் ஆச்சு — சாயங்காலம் தோட்டம் பக்கம் போகும்போது பாம்பு கடிச்சு இறந்துட்டாரு" என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே அவளால் துக்கம் பொறுக்க முடியவில்லை. தன் முந்தானையால் முகத்தை மூடி, விசித்து விசித்து அழ ஆரம்பித்துவிட்டாள். திடீரென்று அவள் முதுகின் மீது, முரடான கை படவே திடுக்கிட்டுப் பார்த்து "எசமான்........" என்று ஒதுங்கினாள்.

"சிங்காரி... வருத்தப்படாதே திக்கற்றவருக்குத் தெய்வமே துணை-உன்னைப் போன்றவர்களுக்கு நாங்கள்தானே துணை" என்று சிறிது நெருங்கினார்.

"எசமான் என்ன இது அக்கிரமம்! இதுதானா உங்கள் தெய்வ பக்தி?"

"தெய்வபக்திக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? ஆண்டவன் செய்யாததை நான் செய்கிறேன். சிங்காரி! இதோ பார், எனக்கு இருக்கும் இவ்வளவு சொத்தும் ஏன் வீணாகவேண்டும்? வேண்டுமென்றால் உன் எடைக்கு எடை தங்கமே தருகிறேன்...... நீ மாத்திரம்......

"இது என்ன துலாபாரமா! பணம் எங்களுக்குப் பிரதானமில்லை. எங்களுக்கு மானம்தான் முக்கியம்"

"நான் உன் கற்பைச் சூறையாடவில்லையே...... நீயே இசைந்து என் ஆசைநாயகியாக இரு" என்று சொல்லிக்கொண்டே அவள் கைகளை எட்டிப்பிடிக்க, கண்ணாடி வளையல்கள் நொருங்கின.

○ ○ ○

வழியெல்லாம் முனுசாமிக்கு, எப்படியாவது அந்த அறுந்த சங்கிலியை வீட்டைவிட்டு வெளியே எறிந்துவிட வேண்டும். எப்படியாவது இவளையும் கண்டதை எடுத்துச் சேர்க்காதவாறு திருத்த வேண்டும் என்ற எண்ணம் அவன் மனதை அரித்துக்கொண்டிருந்தது. இதற்குத்துணையாகச் சிங்காரியைத்தான் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று நினைத்துக்கொண்டு, எப்படி அவளை ஏளனம் செய்வது என்ற யோசனையில் ஆழ்ந்தான். யோசனை வரவில்லை என்றாலும், அருணாசல முதலியார் வீடு வந்துவிடவே திரும்பினான். பங்களாவைக் காவல் காக்கும் கூர்க்கா "க்யா... தங்கச்சி... உள்ளே இருக்குது... போ" என்று அவனை உள்ளே அனுப்பிவிட்டான். முனுசாமியும் அவனுக்கு நன்றி தெரிவிக்கும் தோரணையில் புன்னகை புரிந்து பங்களாவில்

நுழைந்ததும் "சிங்காரி... சிங்காரி எங்கே ஓடறே" என்ற சப்தம் மாடியிலிருந்து கேட்கவே, மாடிப்பக்கம் திரும்பினான். எதிரே சிங்காரி அலங்கோலமாக கையில் இரத்தக் கறையுடன் ஓடிவந்தாள்.

"மச்சான்..."

"சிங்காரி...என்ன இது...ஏதாவது..."

"உஷ்...பேசாதிங்கோ......வீட்டிற்குப் போய்ப் பேசிக்கொள்ளலாம்"

"என்ன சமாசாரம் சொல்...கையிலே இரத்தம் ...ஏதாவது..."

"வாங்க மச்சான், நான் விபரமாகச் சொல்கிறேன்" என்று மச்சானை இழுத்துக் கொண்டு சிங்காரி வெளியேறினாள்.

அருணாசல முதலியார் முகத்தில் கீறல்களுடன், "சிங்காரி... ......அடிப்பாவி! முகமெல்லாம் வளையல் துண்டுகளால் கீறி விட்டாளே, நாளைக்கு எந்த முகத்தோடு கும்பாபிஷேகத்திற்குப் போவது? வடிவுடை அம்மனே! அகிலாண்டநாயகியே! உன் திருவருள் இதுதானா? இதற்குத்தானா உனக்குக் கும்பாபிஷேகம்" என்று சொல்லிக்கொண்டே மெதுவாகத் தரையிலிருந்து எழுந்து குளியலறை நோக்கிச் சென்றார்.

○

"சிங்காரி ஏன் இதை அங்கேயே சொல்லியிருக்கக் கூடாது? அவனை உயிருடன் விட்டு வைக்கலாமா"

"மச்சான் உனக்குக் கோபம் வந்து ஏதாவது அவசரத்திலே செஞ்சிடுவேன்னுதான் நான் சொல்லலே"

"இதற்குத்தான் வெளி வேஷம் போடுகிறான் போலிருக்கு. திருநீறுக்கும் குங்குமத்துக்கும் குறைச்சலில்லை. நாளைக்குக் கும்பாபிஷேகம் செய்யும் பக்தன செயலா இது! விதவை என்ன புறம்போக்கு நிலம் என்று நினைத்துவிட்டானா? இனி நீ வேலைக்குப் போகவேண்டாம்"

"சரிங்க மச்சான்; எனக்குப் பயமா இருக்கு. பணத் திமிர் பிடித்தவன் ஏதாவது செய்வான்"

"என்ன செய்வான் என்பதை நான் ஒரு கை பார்த்துடறேன் — சிங்காரி! அதோட எனக்கு இப்போ ஒண்ணு ஞாபகம் வந்தது; உங்க அக்கா கண்டதைக் கொண்டு வந்து வீட்டில் சேர்க்கிறாளே அந்தப் பழக்கத்தை விட்டுவிடச் செய்யணும்........ சிங்காரி......நீ கலியாணம் செய்துண்டா இந்தத் தொந்தரவே வராது வேலியில்லா தோட்டமனா கண்டதும் நுழையத்தான் செய்யும்"

"போதும் மச்சான், அறுத்திட்டவளை எவனாவது கட்டிக்குவானா?"

○

அடுத்த வாரம் பொங்கல், திராவிடர் திருநாள். —சிங்காரி அடுக்களையில் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தாள். முனுசாமி ராந்தல் விளக்கு வெளிச்சத்தில்சாமான்களை ஒழுங்குபடுத்தி அடுக்கிக் கொண்டிருந்தான். திடீரென்று அந்த அறுந்த சங்கலி ஞாபகம் வந்தது. எப்படியாவது சிங்காரிக்கும் தெரியாமல் எடுத்து எறிந்துவிட வேண்டும் என்று தேட ஆரம்பித்தான்! இருட்டிலே பெட்டியில் துழாவும்போது ஒரு தகரத்துண்டு இவன் விரலைப் பதம் பார்த்துவிட்டது. அதையும் சொல்லிக் கொள்ளாமல் ஒரு ஈரத்துணியை விரலுக்கு கட்டிக் கொண்டு தேடினான். கடைசியாக அறுந்த சங்கிலி பிப்பாயின் சந்தில் பாம்பைப்போல் இருந்ததைக் கண்டு முதலில் பயந்து, பிறகு எடுத்துக்கொண்டு மெதுவாக வீட்டைவிட்டு வெளியே வந்துவிட்டான். பங்களாப் பக்கம் போனால் ஒரு சமயம் அலங்காரம் பார்த்துவிடலாம் என்ற எண்ணத்துடன் பங்களாவின் பின்புறமாகச் செல்லும் ஒரு சந்தில் வீசியெறிந்து திரும்பினான். "ஐயோ" என்ற அலறல் கேட்டதும், தான் போட்டது யார் மேலேயோ விழுந்துவிட்டது என்ற எண்ணத்துடன் பங்களாவின பின்புறக்கதவை மெதுவாகத் திறந்துகொண்டு ஓடினான். இருட்டில்ஓர் உருவம் மதில் ஓரமாகச் சாய்ந்துகொண்டு முனகிக் கொண்டிருந்தது. ஓடிப் போய் அருகில் பார்த்த போது பயந்து அவனை தூக்கி வந்து தெரியாமல் தன் வீட்டில் படுக்க வைத்து "சிங்காரி இதோ இந்தத் தம்பியைப் பார்த்துக்கோ! கொஞ்சம் சூடா டீ போட்டுக்கொடு, நான்போய் டாக்டரை அழைத்துக் கொண்டு வரேன்" என்று சொல்லிக் கிளம்பினான்.

"யார் மச்சான் இது! ஐயோ. ரத்த வெள்ளமா இருக்கே இவர் தலை! அடபடுபாவிங்க......"

"சிங்காரி, நீ ஒண்ணும் தொந்தரவுபடுத்தாதே. அப்படியே ஒரு கட்டு கட்டி, டீ போட்டுக் கொடு" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அவனை உணர்வின்றிக் கட்டைபோல் படுத்திருந்தான். இவள் சுடச் சுட டீ போட்டுக்கொண்டு வந்து, எப்படிக் கொடுப்பது என்று யோசித்தாள்; முதலில் அவனைத் தட்டிப் பார்த்தாள். ஸ்பரிசம்

பட்டவுடன் இவள் உடம்பெல்லாம் சூடேறி இவளுக்கு வியர்வை கொட்ட ஆரம்பித்துவிட்டது. கடைசியாக வெட்கமும் ஊற்றுணர்ச்சியும் போட்டியிட மெதுவாக அந்த அரும்புமீசைக்காரனை சுவரில் சாயவைத்துவிட்டு, சூடான தேநீரை அவன் வாயருகில் கொண்டுபோனாள்......இரண்டு மூன்று விழுங்குகள்......அவன் மெதுவாகக் கண் திறந்து சுற்றுமுற்றும் பார்த்தான். யாரோ ஒரு பெண் தனக்குத் தேநீர் கொடுப்பதைக் கண்டவுடன், அவனுக்கு தான் எங்கே இருப்பது என்று தெரியவில்லை.

"நான் எங்கே இருக்கிறேன்......நீ யார்? வெட்கம் பிடுங்க, அவள் அங்கிருந்து எழுந்து கதவின் பின்னால் போய் நின்று கொண்டு "என் பெயர் சிங்காரி......என் மச்சான் உங்களைக் கொண்டுவந்து படுக்கவச்சுட்டு டாக்டர் வீட்டுக்குப்போயிருக்காரு, நீங்க யாரு?.........எப்படி அடிப்பட்டது?"

"உம்......தெரிய வேண்டுமா! என் பெயர் சிங்காரம் "திருவள்ளுவர்" என்ற ஒரு வார இதழில் வேலை செய்கிறேன்!" நான் போய் வருகிறேன்."

"வீட்டிற்குத்தானே? டாக்டர் வரட்டும்"

"வீட்டிற்கில்லை, அலுவலகம் போகவேண்டும்."

"இந்த நேரத்தில் அலுவலகத்தில் என்ன வேலை? மணி ஒன்பதடிக்கப்போகிறது"

"அடுத்த வாரம் பொங்கல் — பொங்கல் மலர் தயாராகிக்கொண்டு இருக்கிறது."

"என்ன இருந்தாலும், டாக்டர் வரட்டும். அதோட இந்தக் காயம் ஆறும் வரை நீங்கள் இங்கேயே இருப்பது நல்லது. உங்களுககுத்தான் யாருமில்லையே.........

"யாருமில்லைத்தான்...ஆனால்...என்று அவன் அவளைப் பார்கக, அவள் வெட்கத்தால் தலை குனிந்து கால்விரலால் தரையைக் கீறிக்கொண்டிருந்தாள்.

○

நாளை பொங்கல், எங்கும்கோலாகலம், முனுசாமியின் வீட்டில் மாத்திரம் குறைவா! சிங்காரி அடுக்களையில் சமையல் செய்து கொண்டிருக்க, முனுசாமியும் அலங்காரமும் தங்கள் முதல் பொங்கல் அனுபவத்தை நினைத்து ரசித்துக்கொண்டிருந்தார்கள்.

"அண்ணு"

"யார் அது சிங்காரமா...வா...வா..இதென்ன பெரிய பொட்டளம்."

"அண்ணு, சிங்காரிக்கு பரிசம் போட வேண்டாமா"

"சிங்காரிக்கா...அவள் விதவை"யென்று...

"அண்ணு, எல்லாம் தெரியும்! அவளே ஒரு நாள் என்னிடம் எல்லாம் சொன்னாள். தெரிந்துதான் செய்துகொள்கிறேன். என்னைப்போல் ஒருசில இளைஞர்கள்முன்வந்துவிதவைகளைத் திருமணம் செய்து கொண்டால்தான், பெண்களின் துயரம துடைக்கப்படும். அண்ணு! நீங்கள் இல்லை என்ருல் நான் சிங்காரியைப் பார்த்திருக்க முடியுமா? உங்களுக்கு நான் என்றும் கடமைப் பட்டவன்"

"அடேடே! எனக்கு இல்லே! எல்லாம் உன் அண்ணிக்குத்தான். அவள் அந்த அறுந்த சங்கிலியைக் கொண்டு வரலேன்னு நீ வந்திருக்க முடியாது" என்று முனுசாமி சொல்ல...

"என்னுலே என்ன இருக்குது? எல்லாம் அந்த அறுந்த சைக்கல் சங்கிலியால்தான் தம்பி; அதன் நினைவாகச் சிங்காரி கழுத்திலே ஒரு சைக்கில் செயின் மாதிரியில் தங்கச் சங்கிலி போட்டுடு" அலங்காரம் குறுக்கிட்டுச் சொன்னாள்.

"அப்படியே ஆகட்டும் அண்ணி! நான் இது வரை சேர்த்திருக்கிற பணத்திலே செய்துபோட்டுடறேன்" என்று சொல்லிக் கொண்டே அவர்களிடம் "திருவள்ளுவர்" பொங்கல் மலரைக் கொடுத்து அவர்களை இன்புறச் செய்துவிட்டு, வீட்டிற்குள் சென்றான் சிங்காரம்.

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

திராவிடநாடு

2—2—58 | வார வெளியீடு 898 | விலை 16 காசு

இயற்கையே, எழு!

——[கதி]——

வாவிசூழ் தமிழகத்தின் வலிவெலாம் சிதைந்ததுவே!
வண்டமிழை அழித்திடவே வகுத்திட்டார் திட்டம்பல;
பூவிதழின் நறுமணத்தைப் புழுக்கூட்டம் அறிந்திடுமோ?
புரிந்திடுமோ வடவருக்குச் செந்தமிழின் இனிமையெலாம்?
தேவிகுளம் பீர்மேட்டைப் பறிகொடுத்து உளந்துடித்துத்
திகைத்தநமைப் பார்த்தரசு தேற்றவில்லை; தூற்றியது!
தாவியோடும் காவிரியின் தண்புனலே! தகித்தெழுந்து
தறுக்கர்தமை அழித்தவாறே தமிழர்களை வாழ்விப்பாய்!

நிலைகெட்டு வீதியிலே உணவின்றி உடையின்றி
நித்தமிங்கு அலைந்தலைந்து சோர்வுற்று மக்களெலாம்
தொலைதூரம் கடந்தேகித் துடிக்கின்றார் கொடுமையினால்!
துய்க்கின்றார் எவரெவரோ நம்நாட்டின் இன்பங்களை!
விலைமதிக்க வொண்ணாத நல்வாழ்வு போனபின்னும்
வீணர்களாய் வீற்றிருத்தல் நம்மவர்க்கு அழகாமோ?
அலையெழுப்பும் திரைகடலே ஆர்த்தெழுந்து சினமுடனே
ஆதிக்கந் தனையறுத்து அமைந்திடுக நன்கடலாய்!

தென்னகத்தைச் சிறிதேனும் ஏறிட்டு நோக்கிடாது
தின்றுஉடல் கொழுக்குமொரு கும்பல்வாழ விட்டுவிடின்
இன்னல்பல நமைவந்து அடுக்குமென உணர்ந்துநீவிர்
இணைந்துகூடி முழக்கமிட்டு வென்றிடுவீர் வடவர்களை!
கன்னலிளந் தமிழ்மொழியைக் காத்திடவே இயற்கையெலாம்
கடுகிவந்து முன்னிற்கக் காதலினால் அழைக்கின்றேன்!
தென்பொதிகைத் தென்றலேநீ சீறியெழு நீக்காற்றாய்த்
தினவெடுத்து நமைநசுக்கும் தீயர்களை வாட்டிடவே!

கேட்டீரா! சேதி!

"என். ஜி. ஓ."க்களுக்கு சம்பள உயர்வு தருவது பற்றி நிதியமைச்சர் சுப்ரமணியம் இந்தக் கிழமை வெளியிட்டிருக்கிறார். எவ்வளவு? எப்போது முதல்? — என்று, ஆவலோடு கேட்கக்கூடும். இனிமேல்! — அதுவும் நிதி நிலைமை சரியாகயிருந்தால் !!-செய்யப்படலாம் !!! எப்படி உறுதிமொழி? என். ஜி. ஓ.-க்கள், ஆண்டாண்டு காலமாக, தங்களுக்கும் மத்திய சர்க்கார் சிப்பந்திகளைப்போல் சம்பள உயர்வு தரப்பட வேண்டும் என்று போராடி வருகிறார்கள். அவர்கள் குறைகளைத் தீர்க்க, வழக்கம்போல் பாடப்படும் 'பணமில்லை' என்கிற பல்லவியையே இம்முறையும் நிதியமைச்சர் பாடியிருக்கிறார். நிதி நிலைமை சரியானால், சம்பள உயர்வு பற்றி, வரும் ஆண்டில் கவனிக்கும் உத்தேசமும் அவருக்கு உண்டாம்!! தெரிவிக்கிறார் !!

*

"பணமில்லை," என்று பாடுகிறார்கள். ஆனால், ஆண்டு ஒன்றுக்கு "பத்து லட்சம்" கொட்டி அழும கவர்னர் பதவி, அநாவசியமாக இன்னும் இருக்கிறது! ஜான் இறந்துபோனதால், அஸ்ஸாமில் முதல் மந்திரியாயிருந்த விஷ்ணு ராம மெகதி, இங்கு கவர்னராகியிருக்கிறார்!! முதலமைச்சர் பதவியை இவர் விடுவதற்குக் காரணம, உடல்நலக் குறைவாகயிருப்பதுதான் என்று கூறினார்கள். இப்போது நேரு, "அதெல்லாமில்லை. அவர், திடகாத்திரமாகவேயிருக்கிறார்,' என்று அறிக்கை விட்டுள்ளார். மெகதி, நல்லவரா புத்திசாலியா என்பதல்ல நமக்குக் கவலை. பத்து லட்ச ரூபாய் விரயமாகும் ஒரு வீண் பதவி, எதற்காக. இதனால், யாருக்கு என்ன பிரயோசனம்.

*

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நடைபெறுகிறது !— என்று சொன்னால், உங்களில் பலர், 'எங்கே?', என்று கேட்பீர்கள். அவ்வளவு அழகில் நடைபெறும் 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டில் அதாவது சென்ற ஆண்டில் 750 கோடி ரூபாய் செலவிட்டார்களாம். நடக்கும் இந்த ஆண்டில் 850 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டு 50 கோடி ரூபாய் மிஞ்சிவிட்டதாம். மூன்றாவது ஆண்டான அடுத்த நிதி ஆண்டில் 950-கோடி செலவிடப் போகிறார்களாம். இதில் மத்திய சர்க்காரின் திட்டச் செலவுகளுக்காக 500 கோடி ரூபாயும், மாநில சர்க்கார்களின் செலவுகளுக்காக 450 கோடி ரூபாயும் செலவிடப் படுமாம்.

*

சோஷியலிஸ்டுத் தலைவர் லோகியா, நாகபுரியில் ஒரு கல்லூரிக்குப் பேசப் போயிருந்திருக்கிறார் சென்ற வாரம்! அங்கு இருக்கும் பெரும்பாலோர் லோகியா, ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்றனராம். முடியாது — நான் இந்தியில் தான் பேசுவேன் என்று லோகியா பிடிவாதம் செய்ய, மாணவர்கள் கூட்டத்தை விட்டே வெளியேறினராம்! நாகபுரி தமிழ்நாட்டிலிருப்பதுஅல்ல! இதேபோல, கௌகத்தி காங்கிரஸ் மாநாட்டிலும் நடந்ததாம். பலர் இந்தியிலேயே பேசினராம். அதைக் கண்ட மக்கள், எழுந்து போய்க்கொண்டேயிருந்தனராம். ஏற்கனவே, கூட்டம வேறு குறைவு. இருப்பதும் போய்விட்டால்......? எனவே, நேரு, அசாம் மொழி தெரிந்த இருவரைக் கூப்பிட்டுப் பேசச் சொல்லி, சமாளிக்க முயன்றாராம் !!

கருப்புக் கொடிகாரருக்கு வெற்றி — வெற்றி — வெற்றிமேல் வெற்றி—வீர வெற்றி! என்றுதான் சொல்லவேண்டும்.

ஏன், எப்படி?

ஒரு நாட்டுப் பிரதம மந்திரி 'வணங்காமுடி மன்னன்' சர்வாதிகார சிகாமணி எப்படிப்பட்டவர்களையும்

'நான்சென்ஸ்'

'காட்டுமிராண்டி'

'கண்டெம்டு மேன்'

'கிழட்டுப்பிண்டங்கள்'

'இருந்தால் அடங்கிக் கிட; இல்லா விட்டால் வீட்டைவிட்டு ஓடு'

"யாரானாலும், எப்படிப்பட்ட பெரியவரானாலும், மன்னிக்க முடியாது; போடு ஜெயிலில்! அனுப்பு பைத்தியக் கார ஆஸ்பத்திரிக்கு!"

என்றெல்லாம் பேசும் 'வீரப் பிரதாப தீர புருஷர்' ஆயிரக்கணக்கான போலீசு பாதுகாப்புடன் தொடங்கிய பவனி கலைந்து ஓட்டம் பிடிக்கவேண்டியதானது மாத்திரமல்லாமல், இத்த நிலைமையையெல்லாம் தெரிந்தும் அதிகாரிகள் பல ஆயிரக் கணக்கான பல நாட்டுப் போலீசுப்படைகளைக்கொண்டு வந்து நிறுத்தியும் கைசலிக்க லத்தி சார்ஜ் தடியடி அடித்து மக்களின் கைகால்களை முறித்துத் தள்ளியும், பலரைச் சாகடித்தும், கண்ணீர்ப் புகை வெடிகளை சரமாரியாக வெடிக்கச் செய்யப்பட்டது, உலகம் புகழும் வீர ஜவகர்லால்பண்டிதர் தனிப்பட்ட முறையில் அல்லாமல் 35-கோடி மக்களுக்கு இணையற்ற சர்வாதிகாரியான 'பிரதாப சிம்ம' முதல் மந்திரியாக எழுந்தருளி திக் விஜயம் செய்யும்போது நிகழ்ச்சிக் குறிப்புப்படி ஏற்பாடு செய்திருந்த இடத்திற்குப் போய்ச் சேர, நிகழ்ச்சிக் குறிப்புப்படி ஏற்பாடு செய்திருந்த ராஜபாதை வழியில் செல்லாமல் செல்ல முடியாமல் கொல்லை வழியில் போய்ச் சேரவேண்டி வந்ததென்றால், இது அதிகாரிகளுக்கு வெற்றியா? கொடி பிடித்தவர்களுக்கு வெற்றியா?

"விடுதலை"

11—1—58

'பொங்கலு'க்குப்பிறகு!

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [2-2-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 29

சிறையில் பூட்டு! தேடிப் பிடித்து, வா! கண்ணீர்க் குண்டுகளைப்போடு! உள்ளூர் போலீஸ் போதாதென்றால் ஆந்திரப் போலீசைக் கூப்பிட்டுக்கொள்! எம். எல். ஏ. க்களானாலும் எம். பி. க்களானாலும் கொட்டடியில் பூட்டு! சந்தேகப்பட்டவரையெல்லாம் இழுத்துவந்து அடை! அதிகாரம் இருக்கும்போது நம்மை யார் என்ன செய்துவிட முடியும்? நேருவின் கண்ணெதிரே ஒரு கருப்புக் கொடி கூடத் தெரியக்கூடாது !!— என்கிற தீர்மானத்தில், சென்னை அரசு அவிழ்த்து விட்ட அடக்குமுறைகளையும், தடியடி தர்பார்களையும் கண்ட பிறகும்கூட, திராவிடப் பெருங்குடி மக்கள் உள்ளம் தளராது பொங்கி வரும் வீர எழுச்சியை உணர்த்தும் வகையில் "நேருவுக்குக் கண்டனம்" காட்டிய பிறகு, நாட்டில் எழுந்துள்ள நிலைமைகளை, தோழர்கள் அறிவர். இரண்டு உருவங்கள், மிதிபட்டுச் செத்தன! ஆயிரக்கணக்கானவர்கள் அடி தடிக்காளாகி, தழும்புகளோடு உலவுகின்றனர்!! அரசினர் மூட்டிய ஆத்திரத் தீயின் காரணமாக, கழகத்தவர் மட்டுமல்ல, பொதுமக்களும் தாக்கப்பட்டனர். மவுண்ட்ரோடு வட்டாரமே கண்ணீர் சிந்து மளவில், வீட்டுக்குள் புகுந்தும், எதிர்ப்பட்டோரையெல்லாம் தாக்கியும், கொடுங்கோன்மைகள் நிகழ்த் தப்பட்டன. இந்தப் பொல்லாச் செயலால், ஆத் திரத்துக்கு ஆளாகிய மக்கள் 'அடாவடி'ச் செயல் களில் ஈடுபடும் அலங்கோலமும் நிகழ்ந்திருக்கிறது !!

சென்னையின் 'கௌரவம்' போய்விட்டதே என்று சிந்து பாடுகிறார் ஒரு அமைச்சர்—நேருவின் 'தயவு' போய்விடும் போலிருக்கிறதே, என்று கலங்கி இன்னொரு அமைச்சர்—பத்திரிகை நிருபர்களைக் கூட்டிவைத்து தனது வீரப்பிரதாபத்தினை வெளிப்படுத்திக் கொண்டாராம். முதலமைச்சர்! சேதிகள் பல வருகின்றன—சென்னைப் போலீஸ் அதிகாரிகூட 'அறிக்கை' விடுகிறார் பத்திரிகைகளில் — செல்லுமிடந்தோறும், அமைச்சர்கள், ஏதேதோ பேசுவதாக ஏடுகள் சொல்லுகின்றன.

நேருவுக்குக் கருப்புக் கொடி! — ஏன் காட்ட முடிவு செய்தோம் என்பதை, நாடு அறியும். தென்னாட்டுத் தலைவர்கள் என்றாலே, எடுபிடிகள் போலவும், ஏனோதானோ என்றும் எப்போதும் பேசிவரும் நேருவின்போக்கைக்கண்டிப்பதே,நாம் கருப்புக்கொடி காட்ட முடிவு செய்ததின் முதல் நோக்கமாகும். அதை விளக்கப் போடப்பட்ட பொதுக் கூட்டத்துக்கு அனுமதி வழங்க மறுத்தனர். அடாது' என்பதால் மீற முடிவு செய்தோம். கைது செய்து, வழக்கும் போட்டிருக்கின்றனர்!! கூட்டத் தடையை மீற முயற்சித்தவர்கள் மீது மட்டுமல்ல, சாதாரணமாகச் சென்றோர், ஆரும் தேதியன்று தடியடிக்கு ஆளாகி ஆசுபத்திரிக்குக் கொண்டு போகப்பட்டோர் மீதுகூட வழக்குகள் போடப்பட்டுள்ளன !!

அமைச்சர் குழு, நேருவின் அன்பைக் காப்பாற்றிக்கொள்வதற்காகவும், பெரியாரின் எடுபிடியே சென்னை சர்க்கார் என்று டில்லியில் உலவும் கருத்தை, 'இல்லை' என்று காட்டிக்கொள்ளவுமே, இவ்வளவு 'கடுமையாக' நடந்துகொண்டதாக ஒரு புறம் கூறப்படுகிறது. காமராசரின் ஆட்சி பற்றி, டில்லியில்தவறுதலான கருத்துக்கள் உள்ளனவாம்! அத் தவறினைப் போக்கிக்கொள்ளவே, தடியையும் தடைகளையும் நாடினாராம், காமராஜ். இரண்டு உயிர்கள்! ஏராளமான அண்ணன் தம்பிகளின் உடல்களிலே, காயங்கள்!! — இவ்வளவு தூரம் நடத்தி, நேருவின் அன்பினைப் பெற, அரும் பாடுபட்டிருக்கிறார்கள். கிடைத்தது அன்பா! கேலியா!! என்பது ஒருபுறமிருக்க, இவ்வளவு அலங்கோலத்துக்கும் காரணமான அமைச்சர்கள், ஆங்காங்கு செல்லுமிடந்தோறும் பேசும் பேச்சுகள் சிந்தையைக் கிளறுவதாயிருக்கின்றன்.

பதவியின் ருசி, பலரைக் கொடுங்கோலர்களாக்கியிருக்கிறது! மணிமுடிகளைப் பெறுவதற்காக, தந்தையைக் கொன்ற தனயர்கள்—பிள்ளைகளைக் கொன்ற பெற்றவர்கள்—உற்றவர்களை உதைத்துத் துரத்தியவர்கள்—அக்கிரமங்களைச் செய்ய அணுவளவும் அஞ்சாதவர்கள்,எத்தனையோ விதத்தில் இருந்திருக்கின்றனர், என்பதை சரிதங்கள் சொல்லும். நமது மாநிலத்தில்கூட, பதவியின் காரணமாக, காங்கிரஸ் கட்சி, யாரரை ஓட ஓடத் துரத்தியிருக்கிறது —

என்னென்ன சாகசங்களைச் செய்திருக்கிறது—ஆடிய சதிர்கள் எத்தனை யெத்தனை என்பதை நன்றாக அறிவோம், நாம். நேருவுக்கு நல்ல பிள்ளைகளாக நடந்துகொள்ளவேண்டும், அப்போதுதான் மேலிடத்துத் தயவு நீடிக்கும் என்கிற ஒரே காரணம் தான், இங்குள்ளவர்களின் பாசத்தை மறைத்து நேசத்தைக் கொன்று, இவ்வளவு அடக்குமுறைகளை அள்ளிவீசச் செய்திருக்கிறது என்பதை அனைவரும் அறிவர். இல்லாவிடில், கருப்புக்கொடி காட்டிட அனுமதித்திருக்கும், சென்னை அரசு—கடற்கரையில் கூட்டம் நடத்தவும் செய்திருக்கும்.

நேருவுக்காகவே, இவ்வளவு தூரம் அடக்குமுறைகளை மேற்கொண்டோம்!—என்பதை, அன்பர் பக்தவத்சலம், ஒளிவு மறைவின்றி உரைத்திருக்கிறார். அவர் வரும்போது, கருப்பக் கொடி காட்டலாமா?—என்று கேட்டிருக்கிறார். நேரு, உலகத் தலைவர்!—அவருக்குக் கருப்புக் கொடி காட்டுவதை எங்களால் சகிக்கமுடியுமா? என்று, கேள்வி கிளப்பியிருக்கிறார். நேரு, இந் நாட்டின் பிரதம மந்திரி! அவரைக் கண்டிக்கப் பொதுக்கூட்டம் போடுவதா—ஐயகோ, அதை நாங்கள் எப்படி அனுமதிப்போம்—என்றும் அலறியிருக்கிறார். பக்தவத்சலனாருக்கு நேரு, 'கண்கண்ட தெய்வமாக' இருக்கலாம்! அண்மையில் கூடத் தேர்தலில் தோற்ற அளகேசனாருக்கு நேருவின் 'கிருபை' கிடைத்திருப்பதை நாடு அறியும்!! அதற்காக, எல்லோரும் பக்தவத்சலனாருடன் கூடிக்கொண்டு நேருவின் பாதாரவிந்தங்களைச் சேவிக்கவா முடியும்? "மாடுமனை போனால் என்ன, மக்கள் சுற்றம் போனால் என்ன, மந்திரிப் பதவி போதுமடி!", என்கிற பல்லவி, பொருத்தமாகயிருக்கக் கூடும் அவருக்கு. அந்தப் பதவியை வழங்கும் நிலையிலுள்ள நேருவின் தயவும் கிருபையும் பெரிதாக இருக்கலாம்! மானம் போனாலும், தமிழ்நாடு எனும் பெயர் போனாலும், தேவிகுளம் பீர்மேடு போனாலும், தெற்குத் தேய்வதானாலும், சிறந்த பெரும் தலைவர்களின் கீர்த்தியை இகழ்ந்துரைத்தாலும், 'பதவிக்காக' விட்டுக்கொடுக்கும் 'பெருந்தன்மை' இருக்கக்கூடும் அவருக்கு!! அந்த அவசியம் பிறருக்கு ஏன்? தேய்ந்தும் காய்ந்தும், வயிறு ஒட்டியும் வேலை கிடைக்காமலும், வாடியும் வதங்கியும், வளர்த்த மொழிக்குக் கேடு விளைக்கப்படுவதைக் கண்டு கொதித்துக் கிடக்கும் மக்களுக்கு, "ஜே" போடவேண்டிய அவசியம் என்ன? காமராஜர் சென்னையை ஆள்கிறார்—அங்கு போனால் வசந்தம் வீசுகிறது என்று நேரு கருதி ஆனந்தமடைந்தால், 'இலாபம்' அவர்களுக்குண்டு. அதனால், மக்களுக்கென்ன!! மராட்டியம் சென்றால் கருப்புக் கொடி காட்டுகிறார்கள் — சீக்கிய நாடு சென்றால் சினம் காட்டுகிறார்கள் — நாகர் குன்றுகளுக்குப் போனால் எதிர்ப்புக் காட்டப்படுகிறது — வங்கத்திலும் ஆத்திரம் தென்படுகிறது — இவையாவும், நமது ஐந்தாண்டுத் திட்டத்தால் பலன் பெறும் பாகங்கள்! பலனும் காணாத, நமது ஆதிக்கத்துக்கு வேட்டைக்காடாகவும் விளங்கும், சென்னையிலோ—இந்தியைப் புகுத்தினாலும், தமிழ்நாடு எனும் பெயர் வழங்க மறுத்தாலும், தமிழருக்குரிய இடங்களைக் குறைத்தாலும், தமிழர்தம் தலைவர்களை ஏசினாலும், —மாலையும் மரியாதையும் கிடைக்கிறது, இதற்குக் காரணம் காமராஜரும் பக்தவத்சலமும்தான் என்று நேரு கருதினால், பரிசும் புன்சிரிப்பும் நிறையக் கிடைக்கக்கூடும்! 'கௌரவமும்' நீடிக்க வாய்ப்புண்டு ஆள்வோருக்கு!! அதனால், நாட்டுக்கு என்ன பலன்? நாட்டில் வாழும் மக்களின் மானமும் நல்வாழ்வும் காப்பாற்றப்படும் என்பது என்ன நிச்சயம்?

கருப்புக்கொடி காட்ட வேண்டாம் — நாங்களும் தமிழர்கள்தானே — தமிழர் தம் தலைவர்களை இகழ்ந்துரைப்பது கூடாதென நேருவிடம் எடுத்துரைக்கிறோம் — கார்டு கவர்களிலுள்ள இந்தியை நீக்குங்கள் என்று உடனே டில்லிக்குச் சொல்கிறோம் —தமிழ் நாடு என்கிற பெயர்தானே வேண்டும், சரி, ஏற்பாடு செய்கிறோம்—நீங்கள் கருப்புக்கொடி காட்ட வேண்டாம்!! என்று கேட்டிருந்தால், அதிலே பொருளும் உண்டு, நியாயமும் உண்டு.

இதையெல்லாம், இவர்கள் கேட்க மாட்டார்கள்! பசித்தாலும் துடித்தாலும் மக்கள் மட்டும் அவதியடைய வேண்டும், ஆனால் பாராளும் பிரதமருக்கு மாலைகளையும் 'ஜே'களையும் போட்டு வாழ்ததுப் பாடி அனுப்ப மட்டும் யாவரும் ஒன்றுபட வேண்டும் என்றால் என்ன பொருள்? அதனால், இலாபம் நாட்டுக்கு உண்டென்றால், சரி! அப்படியில்லையே!!

பிரதமருக்குக் கருப்புக் கொடியா! அவரை எதிர்த்துக் கூட்டம் போட அனுமதிப்பதா!! — என்கிற பக்தவத்சலனாரின் கூற்று, ஜனநாயகம் பற்றிப் பேசப்படும் இந்தக் காலத்தில், எவ்வளவு மட்டரகமானது என்பதை யாவரும் அறிவர். கருப்புக் கொடி பிடிப்பதும், கூட்டம் போட்டுக் கண்டனங்களை எடுத்துக் காட்டுவதும்தான், ஜனநாயகத்திலுள்ள சிறப்பு மிக்க அம்சங்களாகும். ஜனநாயகமா? சே! அதெல்லாம், பேச்சுக்கு. காரியத்தில், எங்களோடு, ஒத்தூதுவதுதான் எல்லோரும் செய்ய வேண்டியது!! — என்கிறார் அமைச்சர். இலாபம் அடைந்துகொண்டிருப்பவர்! என்ன பதிலைச் சொல்ல முடியும் அவருக்கு!!

உணர்ச்சிப் பொங்கலுக்குப்பிறகு, காமராஜரும்; தமது வாய் திறந்து, நம்மைப்பற்றிப் பேச ஆரம்பித்திருக்கிறார். இன்னொரு சகாவான சுப்பிரமணியமும்,

(13-ம் பக்கம் பார்க்க)

திணிப்பதில்லை என்று கூறிக்கொண்டே
திணிக்கப்படுகிறது

அகில - இந்திய ஆட்சிமொழி
விஷயமாக மேற்கொண்டு என்ன
செய்ய உத்தேசம் என்பதைப்
பற்றி அதிகார பூர்வமாக அறி
விக்க வேண்டியது இந்திய சர்க்
காரின் பொறுப்பு. 1965-ம்
ஆண்டுக்குப் பிறகும் ஆங்கிலம்
ஆட்சிமொழியாக நீடிக்கலாம்.
எல்லோருடைய இணக்கத்தின்
பேரில்தான் ஹிந்தி - ஆட்சி
மொழித் திட்டம் அமலுக்கு வர
வேண்டும் என்று பொருள்பட
கௌஹாட்டியில் நிறைவேறி
யுள்ள தீர்மானத்தில் புதுநிலைமை
எதுவும் ஏற்படவில்லை. அரசியல்
சட்டம் கூறியிருப்பதும், காங்
கிரஸ் காரியக் கமிட்டி முன்னர்
முடிவு செய்திருப்பதுந்தான்
அதில் சேர்ந்து காணப்படுகின்
றன. இந்தத் தீர்மானம் நிறை
வேறியது ஹிந்தியைத் தாய்
மொழியாகக் கொள்ளாதவர்களுக்
குப் பெரியதோர் வெற்றி என்று
நினைப்பது அசட்டுத்தனம். தீர்
மானத்தில் கூறியிருப்பதைவிட
சொல்லாமல் விட்டிருப்பதுதான்
அதிக முக்கியத்துவமுள்ளது.
ஆங்கிலத்தின் உபயோகத்தில்
மாறுதலும், இந்தியைப் புகுத்து
வதும் எப்படி, எவ்வாறு, யாரைக்
கொண்டு முடிவாகி, எந்த வகை
யில் அமல் நடத்தப்படும் என்பது
தான் முக்கியம். சென்னையில் குடி
யரசு தினக் கூட்டத்தில் பேசிய
நமது ராஜ்ய மந்திரிகள் இதைப்
பற்றி எதுவும் பேசவில்லை. காங்
கிரஸ் விஷயாலோசனைக் கமிட்டி
யில் இத்தகைய பிரச்னைகளை
ஸ்ரீ. சுப்ரமண்யம் எழுப்பினர்.
பிறகு தமக்குத் திருபதி ஏற்பட்டு
விட்டதுபோல காங்கிரஸ் மகா
சபைக் கூட்டத்தில் பேசினர்.
ஆனால் விவாத விவரங்களி
லிருந்து, திருப்திகரமான விளக்
கம் எதுவும அவருககுக் கிடைத்
ததாகத் தெரியவில்லை. தனிப்பட
நேருஜி என்ன கூறினரோ, அது
யாருக்கும் தெரியாது. ஆனால்

பொதுமக்கள் சம்பந்தப்பட்ட
வரை, மேல் நடவடிக்கைகள் எப்
படி உருப்பெறும்எனபதைப்பற்றி
சம்பந்தப்பட்ட எல்லோருமே
மௌனம் சாதிக்கிருர்கள். இது
நல்ல நிலையல்ல.

இந்தி எதிர்ப்புக்குரிய காரணங்களை
விளக்கி, அது, ஒருபோதும் நாட்டின்
பொதுமொழியாக ஆகமுடியாதென்று,
இன்றல்ல நேற்றல்ல, இருபதாண்டு
களுக்கு மேலாகவே நாம் கூறிவருகி
ரேம். இப்பொழுதும் கூறுகிரேம்.
ஆனல், நாம் கூறுவதைக் காதால்
கேட்டு கருத்தில் இருந்த மறுத்தோ
ரெல்லாம் இன்று இந்தி எதிர்ப்பில்
நம்மையும் மிஞ்சி நிற்கின்றனர் என்ப
தைக் காணும்போது, நம்முடைய
பணி பழுதானதல்ல — பயனுள்ளது
தான் என்று எதிர் முகாமில் இருப்போர்
கூறுவதைக் கேட்கும்போது, களி
பேருவகை அடைகின்ருேம். நாம்
குறிப்பிடக் கூசிய சொற்களை யெல்
லாம் அவர்கள் பயன்படுத்தி இந்தி
எதிர்ப்பு முழக்கம் செய்கிருர்கள் —
**அசட்டுத்தனம், மந்திரி
களின் பசப்பல், பிரதம
மந்திரியின் மழுப்பல்,
சுதந்திரத்துக்கே
ஆபத்து, இது ஒரு தலை
வரின் விவகாரமல்ல,**
என்ற இன்ன பிற சொற்களையும்
சொற்ருெடர்களையும் உள்ளடக்கிய
ஒரு தலையங்கத்தை 29—1—58ல்
"தினமணி" தீட்டியிருக்கிறது. அத்
தலையங்கத்தை அப்படியே இங்கு
வெளியிட்டிருக்கிரேம்.

ஹிந்தி திணிக்கப்படமாட்டாது என்று
சொல்லிக்கொண்டே தபால் இலாகா உள்
பட பல துறைகளில் அதன் உபயோகம்,
பிற மொழிப் பகுதிகளில் விஸ்தரிக்கப்
பட்டிருப்பது நல்லெண்ணத்தைக் காட்ட
வில்லை; எதிர்காலத்தைப் பற்றி
நம்பிக்கையைத் தருவதாக இல்லை.
எனவே இதுவரை மத்திய சர்க்காரது
உத்தரவின் பேரில் எடுத்துக்கொள்ளப்
பட்ட அத்தகைய நடவடிக்கைகளையெல்
லாம் உடனடியாக நிறுத்திவிடுவதுதான்
இன்றைய நிலைமையின் தேவைக்கு ஏற்ற
சமிக்ஞையாக இருக்கும். அடுத்த
படியாக, பிற மொழியினரின்
இணக்கத்தையும் ஒத்துழைப்பை
யும் பெறுவது பற்றிச் சிந்தித்து,
தக்க வழிவகை வகுத்து, எல்லா
ராஜ்யத்தினரையும் ஆலோசனை
கலந்து ஒரு திட்டத்தை உரு
வாக்கி, படிப்படியாக ஏற்றம்
காண முயற்சிக்க வேண்டும்.
இந்த நடவடிக்கையில் நிர்ப்பந்த
அம்சமே சிறிதும் இருக்கலாகாது.
இந்தத் திட்டத்தின் இணைபிரி
யாத உட்பகுதி பள்ளிக்கூடங்
களில் ஹிந்தியின் போதனை.
அதைத் தனியாக கவனிப்பதற்
கில்லை. இத்துடன் சேர்த்தே
கவனிக்கவேண்டும். பரிசீலித்
தாக வேண்டிய மூன்ருவது அம்
சம் ஹிந்தியை வளப்படுத்துவது.
அது முதலில் நான்கு ஹிந்தி
ராஜ்யங்களில் ஆட்சிமொழியாகச்
செயலாற்றட்டும. அவற்றில்
முதற்படியாக ஒருமுகமான
ஹிந்தி உருவான நிலையில்தான்
அதன் அகில-இந்தியத் தகுதி
வெளிப்படும். இதற்கிடையே
இந்தியாவெங்கும், எல்லா ராஜ்
யங்களிலும் அத்தகைய ஹிந்தி
யைக் கையாளக்கூடியவர்களின்
தொகை கணிசமாக ஏற்படக்
கூடிய போதனை நடக்கும. அந்
நிலைமை வரும் வரை ஹிந்தி அகில-
இந்திய ஆட்சிமொழியாவது தள்ளிப்
போடப்படுவதுதான் நியாயம். அப்படி
வளம்பெறும இந்திகூடச் சிறுகச்
சிறுகத்தான் ஆங்கிலத்துக்குப்
பதிலாகப் பயன்பட முடியும்.

இதுபோன்ற அபாயம் வேறு கிடையாது

மொழி வளம், தேசமெங்கும் பரவலாக மக்கள் அறியும் வகையில் அகில - இந்தியத் தகுதி, ஆகிய இரண்டும் இந்திக்கு ஏற்படுவது எப்பொழுது சாத்தியம் என்று எவராலும் சொல்ல முடியாது. மொழி வளர்ச்சி இயற்கையானது. தானுகக் கனிய வேண்டும். தடிகொண்டு பழுக்க வைக்க முயன்றால் பயன் பூஜ்யந்தான். அகில - இந்தியத் தகுதியின் வளர்ச்சி இரண்டாவது கட்டத்தைச் சேர்ந்தது. படிப்புத் திட்டம், ராஜீய சூழ்நிலை, பொருளாதார மாறுதல்களின் வேகம், தேசத்தில் இனி ஏற்படக்கூடிய பல மொழித் தொழில் பகுதிகளின் செல்வாக்கு முதலியவற்றையே அதன் அபிவிருத்தி பொறுத்திருக்கும். எந்த மொழியினருக்கும் பாதகம் இல்லாதபடி இவ்விரு தகுதிகளும் ஏற்படுவது இரண்டு அல்லது மூன்று தலைமுறைகளில் நடக்கவேண்டிய விஷயம். **காங்கிரஸ் தீர்மானமோ, மந்திரிகளின் பசப்பலோ, பிரதம மந்திரியின் மழுப்பலோ இந்த உண்மைகளை மறைத்து விட முடியாது.** இந்தியின் இயற்கையான வளர்ச்சிக்கும் வியாபகத்துக்கும் உழைக்க வேண்டியது அவசியம் என்றாலும், அதை அவ**சரப்பட்டு அகில - இந்திய ஆட்சிப் பீடத்தில் ஏற்றிவிடப் பார்ப்பதைப் போன்ற அபாயம் வேறு இருக்க முடியாது.**

ஆங்கிலத்தின் உபயோகத்தை வேகமாகக் கைவிட்டால்தான் ஹிந்தி பரவுவதற்கான சூழ்நிலை ஏற்படும் என்று ஹிந்தி மொழியினரில் சிலர் நினைக்கிறார்கள். நல்லாட்சி தேச ஒற்றுமை, ஐக்கிய உணர்ச்சி, பாதுகாப்பு, சுதந்திரம், நல் வாழ்வை நோக்கி வேகமான முன்னேற்றம் ஆகியவை தாம் பிரதானம். இன்று ஆங்கிலத்தின் மூலந்தான் இந்தப் பொறுப்புக்கள் அகில இந்திய நடவடிக்கைகள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இதைத் திடீரென மாற்ற முடியாது. மேலே நாம் குறிப்பிட்டபடி, அகில-இந்திய இணக்கத்தின் பேரில், காலக்கிரமத்தில், ஹிந்தி சிறுகச் சிறுக வரச்செய்வதுதான் நியாயம். ஹிந்தியுடன் ஆங்கிலத்தையும் சிறிது காலத்துக்குச் சகித்துக்கொண்டு இருக்கலாம் என்ற அடிப்படையில் ஆட்சி மொழிப் பிரச்னை கவனிக்கப்பட்டால், தேசத்திற்குப் பெரிய தீங்குதான் நேரும். தேச ஒற்றுமைக்காக ஹிந்தி வேண்டுமென்பவர்கள், அதே ஒற்றுமைக்காக ஹிந்தி தகுதியடைந்து பிற மொழியினருக்கு முழுத் திருப்தி ஏற்படும் வரை இப்பொழுது போலவே ஆங்கிலம் நீடிப்பதற்கு இணங்குவதுதான் அறிவுடைமை.

ஆங்கிலம் போய்க்கொண்டே இருப்பதாகவும் அதை யாராலும் காப்பாற்ற முடியாதென்றும் சென்னைக் கூட்டத்தில் முதன் மந்திரி ஸ்ரீ காமராஜ் கூறினாராம். ராஜ்யத்தில் ஆட்சி மொழியும், காலேஜில் போதனா மொழியும் தாய் மொழியாக இருக்க வேண்டும் என்று முடிவான நிலையில் ஆங்கிலத்துக்கு இடமேது என்று அவர் கேட்டாராம். அவரே சற்றுச்சிந்தித்திருந்தால் இப்படிக் கேட்டிருக்க மாட்டார். தாய் மொழி ராஜ்ய ஆட்சி மொழியாவது முழுமை காண்பதற்கு பல ஆண்டுகளாகும். காலேஜ் படிப்புப் பற்றி இன்னும் எவரும் முடிவு செய்யவில்லை. தாய் பாஷை போதனா மொழியாவது அவசியமே. ஆனால் அதில் ஏற்றம் காண்பது மிக மெதுவாகத்தான் இருக்க முடியும். இதில் எழும் எண்ணற்ற பிரச்னைகள் நெககுவிடுவது சுலபமல்ல. இவ்விரண்டும இயற்கையான வளர்ச்சிகளே. ஓரளவுக்கு ஆட்சியாளர் துணை புரியலாம். ஆனால் மக்களுக்குப் புரியக்கூடிய ஆட்சி மொழியும், கருத்துச் செழுமையுள்ள போதனா மொழியும் பருவத்தினாலன்றிப் பழா என்பதை மறுப்பதற்கில்லை.

இடைக்காலத்தில் மட்டுமின்றி, எக்காலத்திலுமே அறிவு வளர்ச்சிக்காக ஆங்கிலத்தில் நல்ல பரிச்சயம் இன்றியமையாதது. இதை உணர்ந்துதான், நமது ராஜ்யத்தில் ஆங்கில போதனையை இனி 5-ம் வகுப்பில் தொடங்கப் போகிறார்கள். ஹைஸ்கூலில் ஆங்கிலப் படிப்பின் தரத்தை உயர்த்தத் தேசமெங்கும் திட்டமிடப்பட்டுள்ளது. பாடப் புத்தகங்களைச் சிரமப்பட்டுத் தாய் மொழியில் ஏதோ ஒரு மாதிரி தயாரித்து விட்டாலும், அறிவு வளர்ச்சிக்கான உப-நூல்களை நிரந்தரமாக ஆங்கிலத்தில்தான் படிக்க வேண்டியிருக்கும். ஆகையால்தான் ஆங்கிலத்தைப் புரிந்துகொண்டு, கையாளும் தகுதி இந்தியாவெங்கும் அதிகமாக வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டுள்ளது. படிக்க வருகிறவர்கள் அதிகரித்து வருவதால், இனி, ஆங்கிலம் தெரிந்தவர்களின் எண்ணிக்கையும் வீதா

அன்பு

அன்பில் எத்தனையோ விதம் உண்டு. தாய் சின்னஞ்சிறு குழந்தையை மடியில் வைத்து அணைத்துக் கொள்ளுகிறாள்; குழந்தை வளரும்போது அதைக் கட்டிக் கொஞ்சி முத்தமிடுகிறாள்; குழந்தை பெரியவனாகித் தனக்குமேல் உயரமாய் வளர்ந்துவிடும்போது கண் குளிரப் பார்க்கிறாள். அன்புதான் இத்தனை விதமாகவும் வெளிப்படுகிறது. அன்பு எவ்வளவோ சிக்கல்களைத் தீர்க்கிறது; சிக்கல்களே ஏற்படாவண்ணமும் தடுக்கிறது. பெற்றோர்களின் பரிபூரண அன்புக்குரிய குழந்தை சந்தோஷமாய் வளர்வதுடன், வேறு சங்கடத்துக்கு ஆளாகாமலும் இருக்கும்.

—பேரெண்ட்ஸ் மாகஸின்,
(சிக்காகோ)

இந்தி எப்போது வளம்பெறும் என்று எவராலும் கூறமுடியாது

சுதந்திரத்துக்கே ஆபத்து

சாரமும் போகப் போக உயர்ந்து கொண்டே இருக்கும். ஆங்கிலம் 100 - க்கு 99·5 சதம் பேருக்குக் கட்டாயப் படிப்பு மொழியாக இருக்குமாகையால், சில ஆண்டுகளுக்குப் பின் அது தனிப் பெரும் மொழியாக விளங்கக்கூடும். சிந்தித்துப் பார்த்தால் இவை திரு. காமராஜ்-க்கு தாமே புலப்படும் என்று நினைக்கிறோம்.

ஆங்கிலத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற மோகம் எவருக்குமில்லை. அப்படியிருப்பதாக அவர் நினைப்பது தவறு. அகில - இந்திய அடிப்படையில் இன்று ஆங்கிலம் நல்ல முறையில் செயல்படுவதுபோல் இனியும் நெடு நாளைக்கு இருக்கச் செய்வது இன்றியமையாதது. **உணர்ச்சி வசப்பட்டு அதைக் கைவிட்டு, அரை குறை இந்தியைத் திணித்து, தேசத்தின் ஒற்றுமையைச் சிதைத்து, நிர்வாகத்தை நிலைகுலைத்து, சுதந்திரத்துக்கு அபாயத்தை விளைவித்துவிடக் கூடாதே என்பதுதான் விஷயமறிந்தவர்களின் கவலை. இதை திரு. காமராஜ் புரிந்துகொள்வது அவசியம். நேருஜிக்குத் தெரியாதா என்று கேட்பதால் பயனில்லை. நேருஜி இவ் விஷயமாக என்ன செய்யப் போகிறார் என்பதுதான் முக்கியம். தவிர இது ஒரு தலைவருடைய விவகாரமல்ல.** எனவே, தாம் வாக்களித்து வரும் அகில — இந்திய இணக்கத்தையும் ஒத்துழைப்பையும் உருவாக்க அவர் என்ன செய்யப் போகிறார் என்பது தான் முக்கியமாகிறது.

★

சேலம் மாவட்ட **தி. மு. க. 3-வது மாநாடு**

1958 பிப்ரவரி 15, 16 சனி ஞாயிறு நாட்களில்

வேலூர் (சேலம்) 'அழகிரி பந்தலி'ல் நடைபெறும்.

தலைவர்: **கலைஞர் மு. கருணாநிதி, எம். எல். ஏ.**

திறப்பாளர்: **நடிப்பிசைப் புலவர். கே. ஆர். இராமசாமி**

அண்ணாதுரை, நாவலர் இரா. நெடுஞ்செழியன்

கழக முன்னணிச் சொற்பொழிவாளர்கள் கலந்துகொள்வர்.

இருநாட்களிலும் கலை நிகழ்ச்சிகள் உண்டு.

இரு நாட்களுக்கும் நுழைவுக் கட்டணம்:—
ஆண்களுக்கு ரூ. 5, 3, 2, பெண்களுக்கு ரூ. 1.

பி. எம். குப்புசாமி பொருளாளர் — **ப. இராமலிங்கம்** செயலாளர் — **ஜி. பி. சோமசுந்தரம்** வ. கு. தலைவர்

இரா. தாண்டவன்—தொண்டர் படைத் தலைவர்.

குறுந்தொகை அளிக்கும் நகைச்சுவை விருந்து

—[கோ. கோதண்டராமன்]—

அகத்துறை நூல்களில் ஒன்றா கிய 'குறுந்தொகை' என்னும் தொகை நூல் கருத்தாழமும் சொல் வளமும் விரவி, கற்போ ரின் நெஞ்சையள்ளும் பெற்றி யுடைத்தாதலை நாம்காண்கிறோம். குறுந்தொகைப் பாடல்களில் கொழிக்கும் அருஞ்சுவையில் மாந் தித் திளைத்த காரணத்தாலேயே பண்டைத் தமிழ்ப் புலவர் பெரு மக்கள் அதனை, 'நல்ல குறுந் தொகை' என்று போற்றிப் புகழ லாயினர் போலும்! குறுந் தொகைப் பாடல்களில் துள்ளும் தமிழ்க்கவினும், அப் பாடல்களில் பரந்து செறிந்து காணப்படும் காதல், கனிவு, நகை, அவலம் போன்ற பல்வகைச் சுவைகளும் நம்மையெல்லாம் வெறிகொள்ளச் செய்யும் தகை மைத் தாகலின், குறுந்தொகை, புலமை மணம் கமழும் சிறந்த ஓர் கவிதை நாடகமெனில் மிகையா காது. குறுந்தொகைப் பாடல் களை நாம் கற்க முனைகின்றபோது, அப்பாடல்களில் வரும் பாத்திரங் களுடன் இயைந்து விடுகிறோம். நம்மை அறியாமல் நம்முள்ளம் பெருமிதத்தால் சிறகடித்து எங்கோ பறந்து செல்கிறது. என்னே அக்கவிதைகளின் அருந் திறம் இருந்தவாறு!

நெய்தல் நிலத்துத் தலைமகன் ஒருவனுக்குப் பரதவர் குலத்துப் பூங்கொடியாள் ஒருத்திமீது மட்டி லாக் காதல். அந்த மீனவர் குலத்துத் தேன்மொழித் தோகைக்கும் அத் தலைமகன்பால் அளவிறந்த காதல். இவர்களின் காதல் நாடகத்துக்கு உறுதுணை யாக நின்றாள் ஒரு தோழி! தலைவி யின் வேண்டுகோளுக்கிணங்க, ஓர் நாள் தலைமகனிடம் தோழி சென்று, அவனை மறுநாள் பகற் பொழுதிலே, அருகிருந்த கடற் கரை மருங்கர் அமைந்த இருண்ட புன்னைமரச்சோலை ஒன்றின் பக்கத் தில் இருந்த வெண்மணற் பரப் பில் வந்து தங்கியிருக்கும்படியும், தான் அங்கு தலைவியுடன் வருவ தாகவும் கூறிச் சென்றாள். தோழி கூறியவாறே, மறுநாள் பகற் பொழுதில் தலைமகன், அவள் குறித்த கடற்கரையின் அருகிற் பொருந்திய புன்னைமரச் சாரலில் தலைவியைச் சந்திப்பதற்காகக் குறித்த நேரத்திற்குச் சற்று முன் னரேயே வந்து தலைமகளின் வரு கைக்காகக் காத்திருந்தான். சிறிது நேரத்தில் அவன் ஆவலு டன் எதிர்நோக்கியிருந்த தலைவி, தன் தோழியுடன் வந்துகொண் டிருப்பதைக் கண்டான். அவன் உள்ளம் உவகையால் துள்ளிற்று. தான் முன்னரே அங்கு வந்திருப் பதை, அவர்கள் உணர்ந்திலராத லால், அவர்களைச் சிறிது அசதி யாடி மகிழ்வோம் என நினைத்தவ னாய், அருகிருந்த புன்னைமரச் செறிவிற் சென்று மறைந்து கொண்டான்.

தலைவியோடு வந்த தோழியோ பலே கைகாரி! தலைவன், தான் குறித்தபடி கடற்கரைக்கு வந்துள் ளான் என்பதை அறிந்தபின்னரே, தலைவியை அழைத்துக்கொண்டு புன்னைமரச் சோலையை நோக்கி அவள் வந்தாள். ஆனால், தான் குறித்த இடத்தில் தலைவனை அவள் கண்டிலள். எனினும் சற்று முன்பே கடற்கரையை நோக்கி வந்த தலைவன் வேறெங் கும் சென்றிருக்க முடியாது என்ப தையும், தலைவியின்பால் அவன் கொண்டிருந்த காதலின் ஆழத் தையும் நன்கு உணர்ந்தவளாகிய அந்தத் தோழி, தலைமகன் நம்மை அசதியாடிக் களிக்கும் பொருட்டு எங்கேனும் மறைந்திருத்தல் உறுதி என எண்ணியவளாய், "நன்று! நம்மை அசதியாடி மகிழ நினைத்த இத்தலைமகனை, யானே அசதியாடி நகைப்பேன்" எனத் தனக்குள் கூறிக்கொண்டு ஒரு சிறிய சூழ்ச்சித் திட்டத்தைத் தன் நெஞ்சத்தில் வகுத்துக்கொண் டாள். உடனே அருகிருந்த ஓர் மணற்றிட்டின் மீதேறி, தலைவியை நோக்கி, "அன்னாய்! புன்னைமரப் பாங்கருற்ற விரிமணற் சாரலில், யான் குறித்தபடி இன்னும் நம் தலைவரோ வந்திலர். இவ்வெண் மணல் பரப்பு அவர் வாராததால் வெறிச்சென்றிருக்கிறது. நான் என் செய்வேன்? காலமோ கடந்து கொண்டிருக்கிறது. மீன் பிடித் தற்குக் கடல்மேல் சென்ற நம் தமையன்மார்களின் மரக் கலங் களோ கரையை நோக்கி விரைந்து கொண்டிருக்கின்றன" என்று கூறுகிறாள். அந்தப் பாடல் இதோ:-

"இருள் திணிந்தன்ன ஈர்ந்தண் கொழுநிழல்
நிலவுக்குவித் தன்ன வெண்மணல் ஒருசிறைக்
கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழில் புலம்ப
இன்னும் வாரார் வரூஉம்
பன்மீன் வேட்டத் தென்னையர் திமிலே"

(குறுந்தொகை—123)

குறிப்பு:- வேட்டத்து — என்னையர் என்பது வேட்டத்தென்னையர் என மருவியது, திமில்—படகு அல்லது மரக்கலம்; கோடு—கொம்பு அல் லது கிளை.

தலைமகன் - தலைவி-இவர்களின் இந்தச் சந்திப்பு களவின்பால் நிகழ்வதொன்றாகலின், கடல்பால் சென்ற தலைவியின் தமையன்மார் கள் திரும்பிவிட்டால் களவொழுக் கம் நிகழ முடியாது என்ற கருத் தைத் தோழியின் வாயிலாக ஆசி ரியர் ஐயூர் முடவனார் கூறுமாற் கூறி விளக்குகிறார். இவ்வாறு தமையன்மார்கள் வருகிறார்கள் என்று கூறின், மறைந்துள்ள தலைமகன் அச்சத்தால் உடன் வெளிவருவான் என்பதே அந்தத் தோழியின் அரிய திட்டம். தன்னை அசதியாடற் பொருட்டு, தலைவியை நோக்கித் தமையன் மார்கள் வருகிறார்கள் என்று தோழி கூறுகிறாளோ என்று தலைமகன் ஐயுறாத வண்ணம், அருகிருந்த ஓர் மணற் றிட்டின் மேலேறி, கடலிடைக் கலங்கள் விரைந்து வருவதை உண்மை யாகக் காண்பவளைப்போல் நடிக் கிறாள். இந்தச் சுவை கெழுமிய நாடகம் எவ்வளவு இயற்கையாக அமைக்கப்பட்டுள்ளது பாருங் கள்!

* * *

மேற்குறித்த அசதியாடல் நிகழ்ச்சியைப் போன்ற பிறிதொரு நிகழ்ச்சி நற்றிணைப் பாடல் ஒன் றில் வெகு அழகாகச் சித்தரிக்கப் பட்டுள்ளது. குறுந்தொகைப் பாடலில், தலைமகன் புன்னை மரச் செறிவில் மறைந்து தலைமகளை அசதியாட நினைத்ததைக் காண் கிறோம். நற்றிணைப் பாடலில், அதன் ஆசிரியர் அம்மூவனார் தலைமகனை அசதியாடி மகிழ எண்ணும் தலைவியொருத்தி "புன்னை மரச் செறிவில் சென்று நாம் மறைந்துகொள்வோம் வா" என்று தன் தோழியை அழைக் கும் நிகழ்ச்சியைத் திறம்பட நமக்கு அளித்துள்ளார்.

பாய்ந்து வரும் புரவிகள் பூட்டப் பட்ட தேரூர்ந்து தலைமகன் ஒரு வன் தன் தலைவியைக் காணுதற் பொருட்டு விரைந்து வருகிறான். புன்னை மரச் சோலையொன்றின் அருகே அவர்கள் சந்திப்பதாக அவர்களுக்குள்ளே முன்னேற் பாடு. அதற்கிணங்க தலைவியும் தோழியும் குறியிடத்தே முன் னரே வந்து தங்கி இருந்தனர். தலைவியைக் காணுதற் பொருட்டு, தலைமகன் ஊர்ந்துவந்த தேரி னின்று எழுந்த மணியோசையும், தேர்ஊர்ந்து வருவதை அறி வித்து ஏவலாளர்கள் எழுப்பு கின்ற ஒலியும் தலைவியின் செவி களில் வந்து புகுகின்றன. காத லன் வரவறிந்த தலைவி களிப் பெய்துகிறாள். தலைவனைச் சிறிது நேரம் அசதியாடி அவன் படும் அல்லலைக் கண்டு அக மகிழ எண்ணுகிறாள். உடனே தோழியை நோக்கி, "அம்ம! நமது தலைவரின் வருகையை அவர் ஊர்ந்து வருகின்ற தேரிடைப் பொருந்திய மணியோசையும், அத்தேர் வருவதை அறிவிக்கும் ஏவலாளர்களின் ஒலியும் நமக்கு உணர்த்திவிட்டது கண்டாய்! என் உள்ளங் கவர்ந்த கள்வராகிய என் தலைவர் நம்மைக் காண்ப தற்கு முன், இவ்வெண் மணற் பரப்பில் உயர்ந்து விரிந்த புன்னை மரச் செறிவில் சென்று நாம் மறைந்து கொள்வோம் வருவா யாக! நாம் அவ்வாறு மறைந்து கொண்டால் இப்பொழிலிடத்து நம்மைக் காணாது அவர் மிகவும் வருந்துவார். அவ்வருத்தத்தினைக் கண்டு சற்று நாம் மகிழ்வோ மாக" என்று கூறுகிறாள். அந் தப் பாடல் பின்வருமாறு:-

இவர்பரி நெடுந்தேர் மணியும் இசைக்கும்
பெயர்பட இயங்கிய இளையரு மொலிப்பர்
கடலாடு வியலிடைப் பேரணிப் பொலிந்த
திதலை யல்குல் நலம்பா ராட்டிய
வருமே - தோழி! வார்மணற் சேர்ப்ப
னிறைபட வாங்கிய முழவுமுதற் புன்னை
மாவரை மறைகம் வம்மதி பானாட்
பூவிரி கானற் புணர்குறி வந்துநம்
மெல்லிணர் நறும்பொழிற் காணா
அல்ல லரும்படர் காண்கநாஞ் சிறிதே.

(நற்றிணை - 307)

இப்பாடலில் ஆசிரியர் பெண் மையின் உள்ள உளைச்சலை ஒரு புதுக்கோணத்தில் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார். காதலன் படும் துயர் கண்டு களிகொள்ள விரும்புகிறாள் அந்தக் காதல் காரிகை. அதிலே அவளுக்கு ஓர் அலாதியான இன்பம். இக் கவிதையில் ஊடல் உவகையை ஒரு புது முறையில் நமக்கு ஆசிரி யர் அளித்துள்ளார். சாதாரண மாக, பண்டை இலக்கியங்களில் எல்லாம், தலைவியும் தலைவனும் இணைந்துள்ளபோதே ஊடல் நிகழ் தலையும், அவ்வூடல் பின்னர் கூடல் இன்பத்தைப் பெருக்கும் ஆற்றலையுமே நாம் வெகுவாகக் காண்கிறோம். தலைவன் அறியாத வண்ணம், தலைவி அவனை அல் லல் அரும்படருறச் செய்து, அது கண்டு களிகூர எண்ணும் இந்தப் புதிய ஊடல் முறை உண்மையி லேயே சுவைத்து இன்புறற்பால தாகும்.

ஒருவன் தான் இழந்த பொரு ளொன்றினைத் திரும்பக் கிடைக் கின்றபோது, அப்பொருளை அவன் முதற்கண் அடைந்த போது பெறும் இன்பத்தினும் பன்மடங்கு இன்பத்தினைப் பெறு வது கண்கூடு. அதைப்போலவே காதலியைத் தேடிவந்த காதலன், தான் குறித்த புன்னைமரச் சோலை யருகில், அவ்வேந்திழையைக் காணாது ஏமாற்றம் கலந்து நிற் கும்போது, சிறிது நேரத்தில் அவள் அந்த இடத்திலேயே இருப்பதைக் காண்கின்றான் என் றால், அவன் பெறுமின்பமும் மட்டிலடங்காததொன்றன்றோ?

மேற்குறித்த செய்யுள்கள் இரண்டிலும் 'அங்கதம்' என்று சொல்லப்படும் ஒருவித சுவை துளிர்ப்பதை நாம் காணலாம். இது ஆங்கிலத்தில் 'செடயர்' என்ற சொல்லால் குறிக்கப்படும். இவ்வங்கதத்தின் இலக்கணத் தினை தொல்காப்பியர் பின் வரு மாறு கூறுகிறார்.

"வசையொடும் நசையொடும் புணர்ந்தன் ருயின்
அங்கதச் செய்யு ளென்மனார் புலவர்"
"அங்கதந் தானே அரிதபத் தெரியின்
செம்பொருஇ கரந்த தெனவிரு வகைத்தே"
"மொழிகரந்து சொல்லினது பழிகரப்பாகும்"

அங்கதம் ஒருவனின் குறை யையோ அல்லது சமூகத்தின் குறையையோ, உறுத்தும்படி கூறுவது. அது செம்பொருள் அங்கதம், பழிகரப் பங்கதம் என இருவகைப்படும். ஒரு பொருளை வெளிப்படையாக நகைச்சுவை தோன்றக் கூறுவது 'செம் பொருள் அங்கதம்' எனப்படும். நகைச்சுவை தொக்கி நின்று பொருளுணர்த்துமேல் அது 'பழி கரப் பங்கதம்' எனப்படும். இக் கட்டுரையில் குறுந்தொகைப் பாடல் செம்பொருள் அங்கதத் திற்கும் எடுத்துக்காட்டாக உள் ளன. கலைவாணரின் நகைச்சுவை பழிகரப்பு அங்கதத்தின் பாற் படும். 'செடயர்' அல்லது அங்க தம் எனும் சுவை சொற்பொழி வுக்கு இன்றியமையாத பல பண்பு களில் ஒன்றாகும். இப்பண்பு நாவன்மை மிக்க சொற்பொழி வாளர்களான எட்மண்ட் பர்க் போன்றவர்களின் சொற்பொழிவு களில் மிகுதியாகக் காண லாம். அங்கதம் சொற்பொழிவுக்கு மட்டுமன்றி கவிதை, நாடகங்கள் இவற்றிற்கும் இன்றியமையாத ஒரு கூறெனில் அது மிகை யாகாது.

சுவையும் மணமும் கெழுமிய சொன்மலர்கள் மண்டிக்கிடக்கும் தமிழ்ப் பூங்காவில், சிறிது சிறி தாக முளைத்து, அந்த நறுவிய தமிழ் மலர்களை அரித்திட முய லும் வேற்றுமொழிக் காளான் களையும் கள்ளிகளையும் வேரோடு களைந்தெறியத் தமிழ் மறவரும் மகளிரும் தளராது உழைக்க முன் வராவிட்டால், இன்பத் தேன் பிலிற்றும் எழில் மலர்க் காடாகிய தமிழகம், கள்ளிக் காடாக வன்றோ ஆகிவிடும்?

★

" திக்கற்றோரின் தேற்றரவாளன் "

[இரா. மாணிக்கம்]

அவர்!......ஓர் ஆசிரியர். ஆம் அவர் ஓர் பள்ளியாசிரியர்தான். பிற்பகல் பள்ளி முடிந்தது. கதவுகளைப் பூட்டினார். தன் இல்லம் நோக்கி ஏகினார். பள்ளிப் பிள்ளைகளின் நல்வாழ்வைப்பற்றி எண்ணியவாறே நடந்தார். கந்தலாடையும் கலைந்த முடியும் கொண்டவனாய்த் தெருவின் ஓரத்தில், ஓர் மூலையில் ஆழ்ந்து தூங்கும் ஓர் சிறுவன் அவரின் சிந்தனையைத் தன்பக்கம் இழுத்தான். அவரும் அவன் அருகில் சென்றார்.

தம்பி...எழுந்திரு. ஏன் இங்கு தூங்குகின்றாய்? உன் அன்னையிடம் செல்வதுதானே!

ஐயா! எனக்கு அன்னை இல்லையே!

தந்தை!

அவரும் இல்லை.

உன் வீட்டிற்காவது செல்லக்கூடாதா?

அதுவும் எனக்கில்லையே!

உன் நண்பர்கள் வீட்டிற்காவது செல்லலாமே!

நண்பர்கள் கூட எனக்கு இல்லை ஐயா......

தாயுமில்லை! தந்தையுமில்லை! நண்பர்களும் இல்லை! இருக்க இல்லமும் இல்லை! ஒருவேளை இவன் பொய்யுரைக்கின்றானோ? இவ்வாறு எண்ணிய ஆசிரியர் தன் அனுபவத்தில் இத்தகைய சிறுவனைச் சந்தித்ததேயில்லை என அவருக்குள் கூறிக்கொண்டார்.

அச்சிறுவன் கூறியது அத்தனையும் உண்மையென்பதனை ஆசிரியர் சிறிது நேரத்தில் அறிந்துகொண்டார். ஆசிரியரின் உள்ளம் எல்லையில்லாத் துன்பமடைந்தது. அவன் பெயர் 'ஜிம் ஜார்விஸ்'. இலண்டன்மாநகரத்தின் தெருக்களில் இரந்தும், திருடியும், மூட்டை தூக்கியும் தன் துன்ப வாழ்வினைக் கழித்து வந்தான். குப்பைத் தொட்டிகளும், தெருவின் ஓரங்களில் நிற்கும் சீரழிந்த வண்டிகளுமே அவனது உறைவிடம். படிப்போ, பாதுகாவலோ இல்லாத அவன் ஒளிவிடும் கண்களுடனும், சுறுசுறுப்புடனும் இருந்தான். பத்து வயதினையடைந்த அவன் தொல்லை பல கண்டுவிட்டவன். அரசாங்கக் காவலரின் கண்களில் மண்ணினைத் தூவித் தன் காலத்தினைக் கழித்து வந்தான்.

ஆசிரியர் அச்சிறுவன் அவல நிலையினைக்கேட்டு, "ஓ! என்னாடே! இச்சிறுவனைப் போன்று இன்னும் எத்தனை சிறுவர்களைத் தன்னில் அடக்கி வைத்திருக்கின்றாயோ?" என்று கேட்டார். 'ஜிம்'மின் உதவியால் அவனைப்போன்று அல்லலுறும் சிறார்களைக் கண்டுபிடித்தார். ஏன்? சல்லடைபோட்டாற்போல் சலித்து எடுத்தார்.

அன்றே அவரது உள்ளம் அனாதைப் பிள்ளைகளின் அவல வாழ்வினைப் போக்கும் அரிய பணியினைத் துவக்கும்படி தூண்டியது. துவக்கினார் தன் பணியினை. ஆயிரமாயிரம் சிறுவர்களின் கண்ணீர்த் துளிகளைப் போக்கினார். கவலையை நீக்கினார். அவர் பெயரால் ஆங்கில நாடு பூராவும் அனாதை இல்லங்கள் பல தோன்றின. சிறுவர்களின் வாழ்வினைச்செம்மைப்படுத்திய அச்செம்மல் அந்நாட்டுக்கு நல்ல பல மருத்துவர்களையும், வழக்கறிஞர்களையும், பேராசிரியர்களையும், புலவர் பெருமக்களையும், கலைஞர்களையும், ஆளும் அமைச்சர்களையும் ஆக்கித்தந்துதவினார்.

அத்தகைய தூய உள்ளங்கொண்ட ஆசிரியரின் பெயர் **டாக்டர் தாமஸ் ஜான் பர்னார்டோ.** 1845-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4-ம் நாள் அயர்லாந்து நாட்டினைச் சேர்ந்த டப்ளினில் பிறந்தார். இளமையிலேயே ஆழ்ந்த அறிவும், மாற்றார்க்குப் பணிபுரியும் ஆர்வமும் கொண்டவராயிருந்தார். பள்ளிப் படிப்பிலே நாட்டமில்லாத அவர் தனியாகப் பயனுள்ள நூல்கள் பலவற்றைத் தெளிவுறக் கற்றார். ஏதேனும் தொழில் செய்ய எண்ணிய அவர் அதனையும் விட்டார். மக்கட்குத் தொண்டுபுரிய எண்ணினார்.

அன்றோர் நாள் சீனா சென்று மதத்தொண்டு செய்யமதகுருவிடமிருந்து அழைப்பு வந்தது. அழைப்பினை ஏற்று இலண்டனுக்கு விரைந்தார். மதக்கல்வி தவிர்த்த நேரங்களில் அனாதைப் பிள்ளைகளின் பள்ளியில் ஆசிரியப் பணி புரிந்தார். தன் முயற்சியால் தானே ஓர் அனாதைப் பள்ளி ஆரம்பித்தார். சீனா சென்று தொண்டாற்றுவதைவிட "நாட்டு மக்கட்கு ஆற்றும் தொண்டே சிறந்த தொண்டு" என்பதனை நன்குணர்ந்தார். ஓர் நாள் மாபெரும் பொதுக்கூட்டமொன்றில் சொற்பொழிவாற்றும் வாய்ப்புக் கிட்டியது. வாய்ப்பினை நழுவவிடாது, "வளமில்லா, வறண்ட சிறுவர்களின் வாழ்க்கையைச் சீர்திருத்துவதே உண்மையான மதத் தொண்டெனக் கூறி" ஆங்கு குழுமியிருந்த மக்களைத் தன்வயப்படுத்தினார். மக்கள் திரளோ பர்னார்டோ சொல்லுவது அத்தனையும் உண்மை உண்மை என ஒலி முழக்கினர்.

கூட்டம் முடிந்து அவர் வீடு திரும்பினார். மதக்குருக்களின் பணிக்காக மாற்றார் குடும்பங்களில் பணியாற்றி வந்த ஓர் வேலைக்காரி பர்னார்டோவின் கையில் பணமுடிச்சு ஒன்றினைக் கொடுத்துப் பறந்தோடிவிட்டாள். அம்முடிச்சில் இருபத்தேழு பார்த்திங்குகள் இருந்தன. அதுவே அவரது புனிதப் பணிக்கு அளிக்கப்பட்ட முதல் காணிக்கை.

நாட்கள் பல நகர்ந்தன. சூது மதியினர் சூழ்ச்சி வலை வீசினர். "அனாதைப் பிள்ளைகள் இன்னும் நம் நாட்டில் ஏராளம் பேர் உள்ளனர் என்று பர்னார்டோ கூறுவது அத்தனையும் பொய்" எனக் கதை கட்டினர், நல்ல பணிக்கு எங்கும் எதிர்ப்பு இருப்பது இயல்புதானே! அதுபோழ்து சுரங்கங்களிலும், தொழிலகங்களிலும் பெருநகரங்களிலும் பணியாற்றிய எத்தனையோ ஏழைச் சிறுவர்களின் வாழ்க்கையை வளம் கொழிக்க வைத்த ஷாப்ட்ஸ்பரி பிரபு என்பார் டாக்டரைக் கூப்பிட்டு அம்மாதிரி அனாதைக் குழந்தைகளை எனக்குக் காட்ட

முடியுமா? எனச் சற்றுக் காட்டத்துடன் கேட்க — அதற்கென்ன இப்போதே தயார்! புறப்படுவோம் வாரீர்! போவோம்! என அனாதைக் குழந்தைகளின் இருப்பிடத்துக்கு இட்டுச் சென்று அல்லலுறும் வருங்கால இளைஞர்களின் எழிலற்ற வாழ்க்கையினைக் காட்டினார். ஷாப்ட்ஸ்பரி பெரிதும் வருந்தி பர்னார்டோவின் பணிக்குத் தன்னாலான உதவியனைத்தும் அளிப்பதாகக் கூறி டாக்டரை மேலும் உற்சாகப்படுத்தினார்.

ஆரம்பத்தில் பயனற்ற கழுதைக் கொட்டகையில் ஆரம்பித்த அனாதை இல்லமானது பின் இரண்டு குடிசைகளில் குடியேறிற்று. இடம் போதாத காரணத்தால் இன்னுமோர் கட்டடத்தை வாடகைக்கு வாங்கினார். அனாதைகளின் நல் வாழ்வுப் பணிக்காக அவர் யாரிடமும் கடன் பெறவில்லை. நல்ல உள்ளம் படைத்தோர் கொடுத்த நன்கொடையைக் கொண்டே திறம்பட நடத்தினார் தாம் மேற்கொண்ட பணியினை. யாரையும் சோம்பேறியாய் விடாது அனைவர்க்கும் விருப்புமான கல்வியும், தொழிலும் கற்பிக்கப்பட்டது. இல்லத்துக்கு உதவுவோரைவிட, உதவி நாடி வந்தோரே ஏராளம். இதற்கிடையில் சிறுவர்களின் உடல் நலத்தைப் பேண மருத்துவத் துறையிலே தேர்வு எழுதி 'டாக்டர்' பட்டமும் பெற்றார்.

ஓர் நாள் 'காரட்ஸ்' என்னும் சிறுவன் அனாதை இல்லத்தில் சேர விரும்பினான். இட நெருக்கடியால் இன்னும் ஒருவாரம் கழித்து வரும்படி டாக்டர் அவனிடம்கூறி அவனது ஒருவாரச் செலவுக்குச் சிறிது பணமும், ரொட்டியும் கொடுத்தனுப்பினார். ஆனால், அந்தோ! அச்சிறுவன் ஒரு வாரத்துக்குப் பின் குளிராலும், நோயாலும்தொல்லைபட்டு இறந்துபோன செய்தியைக் கேள்விப்பட்ட டாக்டர் ஆழ்ந்த கவலையுற்று, அன்றே அவரது அனாதை இல்லத்தின் முன் "உதவி நாடி வரும் எந்த அனாதைக்கும் எச்சமயத்திலும் இனி உதவி மறுக்கப்படமாட்டாது" எனக்கொட்டை எழுத்துக்களில் விளம்பரம் செய்தார் என்றால், என்னே அவரது தொண்டு. சிறுவர்களின் அவலநிலையைப் போக்கிய டாக்டர் சிறுமிகளின் வாழ்க்கையையும் செம்மைப் படுத்தினார்.

டாக்டரின் சீரிய தொண்டுகள் அவருக்குப் பல எதிரிகளைச் சம்பாதித்துக் கொடுத்தது. சிலர். "அனாதைகளுக்காகக் கொடுக்கப்படும் நன்கொடைகளைத் தனக்காக வைத்துக் கொள்ளுகின்றார்" எனக் கதை கட்டினர். சிலரோ "அனாதைப் பிள்ளைகட்கு அரை வயிற்றுக் கஞ்சியே கொடுக்கப்படுகிறது" என்றனர். இன்னும் சிலரோ "பொது விசாரணை" தேவை என்றனர். பொது விசாரணையும் நடந்தது. கணக்குகளும் தணிக்கை செய்யப்பட்டன. கணக்குகள் யாவும் சரியெனத் தணிக்கையாளர் தீர்ப்புக் கூறினார். நீதிவென்றது! நேர்மைநிலைத்தது! தொண்டு துரிதமாக முன்னேறத் தீர்ப்பு வழிகோலியது. வன்சொல்லாளரின் வாய்கள் பூட்டப்பட்டன.

இருப்பினும் தொல்லை கொடுப்பதே தொழிலாகக் கொண்டோர் பர்னார்டோ குழந்தைகளைத் திருடுகிறார் எனக் குற்றஞ் சாட்டி கொடுமை பல கொடுத்தனர். நீதிமன்றம் ஏறினர். என்றாலும் வெற்றி டாக்டருக்கே. இதனையெல்லாம் ஆய்ந்த ஆங்கில நாட்டுப் பாராளு மன்றம் பெயர் பெற்ற "பர்னார்டோ சட்டம்" என்பதனை 1891-ஆம் ஆண்டு இயற்றி பர்னார்டோ போன்றார் நடத்தும் பள்ளிகளுக்கு எவ்விதத் தொல்லையும் கொடுக்கக்கூடாது எனப் பாதுகாப்பளித்தது. டாக்டர் தம் வாழ்நாள் பூராவும் அறுபதாயிரம் சிறுவர்களின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி, இன்றும் உலகின் நாலு பக்கங்களிலும் பர்னார்டோவின் இல்லத்தைச் சேர்ந்தோர் பலர் இருக்கக் காணும்படி சிறந்த தொண்டாற்றிய அப்பெம்மான், பெரியோன் 1905-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

வாழ்க அவர் பணி! வளர்க அவரது தொண்டு !!

★

" நீ, என்றேன் நான் "

அன்பும் அறமும் உடைய இல்லறத்திலிருந்து வழுவித் தலைவன் திடீரென ஒருநாள் பாணனது உதவியின் மூலம் பரத்தைவீடு சென்றுவிடுகிறான். தலைவி, தலைவனது பிரிவால் சொல்லொணாத்துயருறுகிறாள். நீரைப் பிரிந்த மீனைப்போல் துடிக்கிறாள்.

தோழி அவ்வப்போது 'எப்படியும் தலைவன் திரும்பிவிடுவான்' என்ற நம்பிக்கையைத் தலைவிக்கு ஊட்டி வருகிறாள்.

சில நாட்களில், பாணன்தான் தலைவனை இவ்வாறு பரத்தையர் சேரிக்கு அழைத்து சென்றிருக்கிறான் என்ற உண்மை தோழியின் மூலம் தலைவிக்கும் தெரிந்துவிடுகிறது.

இத்தகைய இழி செயலைச் செய்த பாணனுக்குத் தக்க பாடம் கற்பிக்க வேண்டுமெனத் தலைவியும் தோழியும் எண்ணித் திட்டமிடுகின்றனர். திட்டம் உருவாகிறது. பாணனது வருகையை எதிர்பார்க்கின்றனர்.

இதற்கேற்றாற்போல், பரத்தையின் வீட்டிலிருந்த தலைவன், பாணனைத் தன் வீட்டுக்குத் தூதாக அனுப்புகிறான். அவ்வாறே பாணனும் தூதுவனாகத்தலைவியின் வீட்டை அடைகிறான். தலைவியும் தோழியும் தயாரித்து வைத்திருந்த திட்டம் செயல்படத் தொடங்குகிறது!

தலைவி, பாணன் மீதிருக்கும் சினத்தையெல்லாம் வெளிக்குக் காட்டாமல் மறைத்து அவனிடம் பேசுகிறாள்;

"புகழுடைய பாண! நீ தினந்தோறும் எம் சகோதரியின் (பரத்தையின்) வீட்டிலிருந்துகொண்டு பாடுகிறாய். அவ்வாறு பாடும் உன்னையும் உன் பாட்டின் ஒலியையும், விடிவளவும் காட்டிலழும் பேயொலி என்று என் அன்னை கூறுகிறாள்! மற்றவர்கள் ஊளையிடும் நரியென்று கூறுகிறார்கள்! என் தோழியோ நாய் என்கிறாள்!! ஆனால் நானோ, அவைகளெல்லாம் அல்ல, பாடுவது நீதான் என்றேன்!"

தலைவி தன்னைப் பற்றி வெகுவாகப் புகழப் போகிறாள் என்று எதிர்பார்த்த பாணனின் முகம் வேறுபடுகிறது!

பரத்தையின் வீட்டிலிருந்த தலைவனால், தூதாக அனுப்பப்பட்ட பாணனைத் தலைவி புகழ்வதுபோல் இகழ்ந்து கூறுவதாகப் பாடப்பட்ட இவ்வெளிய பாடல் நந்திக் கலம்பகத்தில் உள்ளது. இப்பாடலின்நகைச்சுவைப் பன்முறை எண்ணிப் போற்றுதற்குரியது.

ஈட்டு, புகழ்நந்தி பாண! நீ எங்கையர்தம்
வீட்டிலிருந்து பாட விடிவளவும் - காட்டிலழும்
பேயென்றாள் அன்னை! பிறர் நரியென்றார்; தோழி
நாயென்றாள்! நீ என்றேன் நான்.

—அன்பு.

இத்தாலி நாட்டுக்கு அருகே, மத்தியதரைக் கடலில் உள்ள ஒரு சின்னஞ்சிறிய "குட்டித்தீவு" மால்டா. அது தான் உலக வல்லரசான பிரிட்டனை எதிர்த்து சுதந்திரக் கொடி உயர்த்தியுள்ளது!

"பிரிட்டன் பிடியிலிருந்து வெளியேறுவோம். எங்கள் விடுதலை வேட்கையை எவராலும் தடுத்து நிறுத்திவிடமுடியாது. அணுகுண்டு போட்டாலும் சரி, ஹைட்ரஜன் குண்டுகளை வீசினாலும் சரி, எங்கள் விடுதலை முழக்கம் ஓயாது! மால்டாவை அடக்கி ஆள எவரேனும் எண்ணினால் அவர்கள் தோல்வியைத் தழுவுவது நிச்சயம்!"—இப்படிப் பேசியிருக்கிறார் குட்டித்தீவு மால்டாவின் பிரதமர் 'மின்டோப்' என்பவர்!

மால்டாதீவு தற்போது பிரிட்டனின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாக இருந்து வருகிறது. இதற்கு ஒரு தனி சர்க்கார் இருக்கிறது. இது பிரிட்டனின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டு இயங்கிவந்தது! அந்தச் சர்க்காரின் பிரதமர் தான் மின்டோப்! அவர்தான் இன்று மால்டாவின் சுதந்திரத்தில் தலையிட எவருக்குமே உரிமையில்லை என வீரமுழக்கமிடுகிறார்!

மால்டாதீவின் நிலப்பரப்பு 122-சதுரமைல்களாகும். அங்கு வசிக்கும் மக்கள் தொகை மூன்று இலட்சத்து இருபதினாயிரம்பேர். அதாவது நமது சென்னை நகர மக்கள் தொகையில் நான்கில் ஒருபகுதி, மதுரை நகர் மக்கள் தொகையில் பாதி!

மூன்றே லட்சம் மக்கள் வாழும் மால்டா, அன்னியன் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளப் போராடுகிறது! ஆனால் மூன்றரைக் கோடி மக்களைக் கொண்ட நமது தமிழகம் தனி நாடாகப் பிரிந்தால் வாழுமா என வினவெழுப்புகின்றனர் சிலர் இங்கு! அழுவதா இல்லை சிரிப்பதா?

மால்டாவாழ் மக்களுக்கு மிகப் பெரிய தொழில் அங்குள்ள பிரிட்டிஷ் கப்பற்படைத்தளத்தில் கூலியாக வேலை செய்வதுதான்! பல்லாயிரம் மக்கள் அங்கு வேலை பார்க்கின்றனர். அந்தக் கப்பல் தளத்தை பிரிட்டன் மூடிவிடப் போவதாக அறிவித்தது. அது கேட்டு மால்டா வாழ் மக்கள் பெரும் அதிர்ச்சிக்குள்ளானார்கள். வேலையிழந்து தவிக்கும் ஆயிரக் கணக்கான மக்களுக்கு வேறு வழி என்ன என மால்டா சிந்தித்தது!

வேலை இழக்கும் தொழிலாளர்களுக்கு வேறு வேலை தரவேண்டும என மால்டா சர்க்கார் பிரிட்டனைக் கேட்டது. ஆனால் பிரிட்டன் மறுத்துவிட்டது.

விளைவு......?

பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்வது என மால்டா முடிவு செய்தது. இந்த முடிவை அறிவித்து மாபெரும் தொழிலாளர் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் பிரதமர் மினடோப், "பிரிட்டிஷ் ஆட்சியைவிட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை......பிரிட்டிஷ் சர்க்கார் அணுகுண்டு, ஹைட்ரஜன்குண்டுகளை வீசினாலும் எங்களை அடக்கிவிட முடியாது!" என்று முழக்கமிட்டிருக்கிறார்.

"வேலையிழந்து, பட்டினிகிடந்து சாவதைவிடப் பிரிட்டனை எதிர்த்து, விடுதலைக்காகப் போராடிச் சாவோம்! வேண்டாத ஆட்சியை எதிர்ப்பதில் நாங்கள் அஞ்சவில்லை" என்று கூறுகிறார் மின்டோப்?

"பிரிட்டிஷ் ஆட்சி ஒழிக!" என்ற குரல் இன்று மால்டா முழுதும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பிரிட்டிஷ் ஆட்சிமீது தங்கள் வெறுப்பைக் காண்பிக்க ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

"பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து மால்டா தீவு விடுதலை பெறவேண்டும்!" என்று மால்டா சட்டசபை ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது! அதுகண்டு பிரிட்டிஷ் சர்க்கார், வெளியேறும் தீர்மானத்தைக் கண்டித்து மால்டா சர்க்காருக்கு ஒரு அவசரச் செய்தி அனுப்பியுள்ளது!

"பிரிந்தால் வாழுமா?" என வினவெழுப்பும் "பெரிய மேதைகள்" இதை எண்ணிப் பார்ப்பார்களா?

ரப்பர் தொழிலை மட்டும் நம்பியே 60-இலட்சம மலேயர், சுதந்திர வாழ்வு வாழ்கின்றனர்!

அண்மையில் விடுதலை பெற்ற "கானா" என்ற ஆபபிரிக்க நாடு 37-இலட்சம் மக்களைக்கொண்டது தான!

மற்றும் அல்ஜீரியா, மால்டா போன்ற பல நாடுகள் விடுதலைப் போர் புரிந்து வருகின்றன.

தனிநாடாக சுதந்திரத்துடன் இதுபோன்ற சிறு நாடுகள் எல்லாம் இருக்கும்போது, எல்லா வளமும், செல்வச் சிறப்பும் கொண்ட நம்நாடு ஏன் சுதந்திர நாடாக வாழமுடியாது? துருக்கியைவிட தமிழ் நாடு இருமடங்கு பெரியதாயிற்றே!

அந்த நாடுகள் எல்லாம் இன்று உலக வல்லரசுகளின் கழுகுப் பார்வையில்பட்டு அழிந்துவிடவில்லையே! மாருக வல்லரசு நாடுகளை விரட்டியடித்த காட்சிகளைத் தானே கண்டு வருகிறோம!

வெல்க விடுதலை முழக்கம்!

— கோவை க. இரத்தினம்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்லுமிடந்தோறும் பேசுகிருர். இவர்கள் யாவரும் பேசும் தொனியில், வழக்கம்போல் ஆத்திரமும் வேகமும் காணப்படுகிறது! தெற்கைக் காட்டிக் கொடுத்து, அந்தக் 'கவுரவத்தின்' மீது, டில்லியின் புன்சிரிப்பையும் ஆதரவையும் பெற்று வருகிறவர்கள் இப்படித்தான் பேசுவார்கள் — டில்லியால், இலாபம் பெறுகிறவர்களல்லவா!!

கொட்டடியில் பூட்டிஞலும், தடியடிகளை வீசிஞலும், வழக்குகளைப் போட்டாலும், வம்புக் குரல் எழுப்பிஞலும், யார் செய்வது நியாயம் என்பதை அறிந்து கொள்ளாமலில்லை, மக்கள். சென்னையில் நடைபெற்ற அட்டகாசங்களைக் கண்டு, " தூ! தூ!! இதுவா, அகிம்சா சர்க்கார்?", என்று, எல்லோரும் பேசுகிருர்கள். அடக்கு முறைகளும், ஆத்திரத் தர்பாரும் நடக்க நடக்க, ஆட்சியின் பலம்தான் சரியும் என்கிற பழைய உண்மை, மக்கள் மன்றத்திலே நிலைநாட்டப்பட்டிருக்கிறது. கொள்கைக்காக—நாட்டுக்காக—மொழிக்காக, செந்நீரும் கண்ணீரும் சிந்துவோர்பால், மக்கள் அனுதாபம் காட்டத்தான் செய்வார்கள்! நமக்குக் கூட்டம் நடத்த அனுமதி மறுத்ததையும் — சென்னையில் தடியடி தர்பார் நடத்திய அக்கிரமப் போக்கையும் — ஆளும் கட்சி தவிர, ஏனைய எதிர்க்கட்சிகள் யாவும் கண்டித் திருப்பதிலிருந்தே, நாம் எடுத்த முடிவின், நியாயம் விளங்கும், கொடுங்கோலைக் கண்டிக்க முற்படும் கொள்கை வீரர்கள்பால் அன்பும் அனுதாபமும் வளரச் செய்திருக்கிறது, தென்னகம் காட்டிய உணர்ச்சிப் பொங்கல்! சொந்த மக்களைவிட, பதவி தான் பெரிது என அதிகாரத் தர்பார் நடாத்திடும் ஆள்வோரின் போக்குப் பற்றி, 'செச்சே!' என கூருதோரெல்லாம் கூறும்படியான நிலைமையையும் உண்டு பண்ணியிருக்கிறது!!

★

வாழ்க நடராசன்-சோதி

26-1--58 ஞாயிற்றுக்கிழமை காலை ராஜா பஸ், ராஜா டாக்கீஸ் உரிமையாளரும், நமது அருமை நண்பருமான டபிள்யூ. கே. தேவராசன் அவர்களின் திருமகன், டி. நடராசனுக்கும் வேலூர் திரு. வி. கே. எம். நடராசஞர் அவர்களின் திருமகள் சோதிக்கும் சென்னை பச்சையப்பன் கல்லூரித்தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசஞர் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது.

திருவாளர்கள் டபிள்யூ. டி. மாசிலாமணி பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை, டி. புருஷோத்தமன் எம். எல். சி. காஞ்சி நகர மன்றத் தலைவர் வி. என். பெருமாள், ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., ப. உ. சண்முகம், எம்.எல்.ஏ., சி. வி. இராசகோபால், டி. சண்முகம், எம். எஸ். இராமசாமி, கலைஞர் கருணாநிதி, எம்.எல்.ஏ., அ. பொன்னம்பலஞர், என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன், கே. கே. நீலமேகம், இராம. அரங்கண்ணல், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் வழக்கறிஞர் வி. பி. இராமன், இரா. செழியன், பா. வாணன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., டாக்டர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ., பேராசிரியர் க. அன்பழகன் எம்.எல்.ஏ., நடிகமணி டி. வி. நாராயணசாமி, அன்பில் தர்மலிங்கம், திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், திருமதி அலமேலு அப்பாதுரை, எஸ். விஜயலட்சுமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்கள்.

டாக்டர் மு. வரதராசஞர் அவர்கள் தமிழ்த் திருமணங்கள் நாட்டில் நடைபெறவேண்டிய அவசியத்தை வலியுறுத்தி, இந்தத் திருமண விழாவில் பல சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டிருக்கின்ற காரணத்தால், தமிழ் வாழ்த்துதலோடு நடத்தப்பெருத திருமணங்களை செல்லாதவைகளாக்க சட்டம் இயற்ற முயற்சிப்பார்களென்று எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

மாநில முதலமைச்சர் காமராசர், திருவாளர்கள் சி. சுப்ரமணியம், எம். பக்தவத்சலம், எஸ். எஸ். வாசன், எஸ். ஏ. அய்யாசாமி பி. டி. இராசன், எம்.எல்.சி., பி. ஆர். இராசரத்னம், சி. டி. நடராசன், வி. கே. இராமசாமி ஆகியோர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர். மணமக்களுக்கு ஏராளமான பரிசுகளும், வாழ்த்துரைகளும் வழங்கப்பட்டன.

அன்று பிற்பகல் திரு. எம். கே. கோவிந்தராச பாகவதர் அவர்களின் இசையரங்கும், நடன இளவரசி ஈ. வி. சரோஜாவின் நடனமும், இரவு காருக்குறிச்சி அருணசலம் அவர்களின் நாதசுரக் கச்சேரியும் இனிது நடைபெற்றது.

25—1—58 அன்று இரவு காருக்குறிச்சி அருணசலம் அவர்களின் நாதசுரத்துடனும், வேலூர் வி. கே. குப்புசாமி அவர்களிள் பாண்டு வாத்யத்துடனும், தஞ்சாவூர் டி. வி. பாபு அவர்களின் பொய்க்கால் குதிரை நாட்டியத்துடனும் மணமகள் அழைப்பு நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு வந்து மணமகள் அழைப்பையும், திருமண விழாவையும் சிறப்பித்தார்கள்.

அண்ண அவர்களது நன்றி கூறலுடன் திருமண விழா இனிது முடிந்தது.

ஒருநாள் முன்னதாக!!

—[W]—

நேரு வந்தார்

தலைவர்கள் அனைவரும் கூடினர்

பெரிய பந்தல்கள் உண்டு

சிறு நகரமே நிறுவப்பட்டது.

இலட்சக்கணக்கான ரூபாய் செலவு

ஆனால்

மாநாடு ஒரு நாள்

முன்னதாகவே முடிவுற்றது·

காரணம்

மக்கள் இல்லாதது!!

*

உனக்கென்ன வேலை! இப்படி, காங்கிரசென்றால் ஏதாவது இழித்தும் பழித்தும்தான் பேசத் தெரியும்!—என்று தேசியத் தோழர்கள், கோபம் கொள்ளக்கூடும். உண்மை நண்பர்களே, உண்மை—நாம், கௌகத்தி போகவில்லை—நமது நிருபரையும் அனுப்பவில்லை—காங்கிரஸ் ஏடுகளே இவ்விதம் கண்ணீர் சொரிய வெளியிடுகின்றன.

"பிரதிநிதிகள் சார்பில் வரவேற்புக் கமிட்டிக்கு நேருஜி நன்றி கூறினார். சங்கடங்கள் இருந்தபோதிலும், மகாசபைக்கு நன்றாகவே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாக அவர் பாராட்டினார். நேருஜி அவ்விதம் புகழ்ந்தபோதிலும், மகாசபையை ஒட்டிய வழக்கமான உற்சாகம், ஜனத்திரளைக் காணோம்"

என்கின்றன ஏடுகள்! இந்த மாநாட்டினைப் பற்றியும் அங்கு செய்யப்படும் ஏற்பாடுகளைப் பற்றியும், வானளாவப் புகழ்ந்தார்கள்—இந்தியத் துணைகண்டத்திலுள்ள ஏடுகளிலெல்லாம், விளம்பரங்கள் வந்தன — விளக்கக் குறிப்புகள் தரப்பட்டன.

63-யானைகள் ஊர்வலம் சென்றனவாம்!

அலங்காரமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தனவாம்!

இந்தியத் தலைவர்கள் எல்லோரும் வருவார்கள் என்று விளம்பரம் செய்யப்பட்டிருந்ததாம்!

இருந்தும், மக்கள் வரவில்லை—இதுபோல மோசமாக நடைபெற்ற மாநாடே காங்கிரஸ் சரிதத்தில் இல்லை என்று தலைவர்களே கூறுமளவுக்கு விநோதமாகயிருந்திருக்கிறது, மாநாடு. தப்பித் தவறி வந்தவர்களும் எங்கே இருந்தார்களாம் தெரியுமா? கனல் கக்கப் பேசும் நேரு, தலைமைப் பிரசங்கம் செய்யும் தேபர், வெளி மாகாணங்களிலிருந்து வந்திருப்பவர்களின் பேச்சுகள், இவைகளைக் கேட்க வரவில்லை! மாறாக, பக்கத்தில் கொண்டு வந்து வைக்கப்பட்டிருந்த "மிருகக் காட்சி சாலையில்" வேடிக்கைப் பார்த்துக்கொண்டு நின்றனராம்!!

அந்த மிருகக் காட்சியும் ஏற்பாடு செய்யப்படாமலிருந்திருந்தால், வந்த கூட்டத்தில் பெரும் பகுதி, வந்திருக்காதுபோலும்.

மாநாட்டில், ஏதாவது வசதிக் குறைவுகளோ என்றால், கிட்டத்தட்ட கால்கோடி ரூபாய் செலவானதாகக் கூறப்படுகிறது! சிறியதோர் நகரமே அமைத்திருந்தார்களாம்!! இருந்தும், மக்கள் செல்லவில்லை, மாநாட்டுக்கு. இதன் காரணமாக, ஒரு நாள் முன்னதாகவே, மாநாட்டினை முடித்துக்கொண்டு அவரவரும் கிளம்பியிருக்கிறார்கள்.

ஒருநாள் முன்னதாக! மக்கள் இல்லாமையால்!—உண்மையில், இது ஒரு பெரிய சோகச்சம்பவம் என்போம். நாடாளுகிறது, காங்கிரஸ்-அதனை ஆட்டிவைக்கும் நேருபிரானின் புகழ் அகில உலகத்திலும் பரவியிருக்கிறது—எங்கு சென்றாலும் அவர்புகழ்பாடப்படுகிறது இப்படியிருக்கும்போது, காங்கிரஸ் மகாசபை கூடுகிறது, மக்கள் சரிவர வராததால் ஒரு நாள் முன்னதாகவே கலைகிறது, என்றால், இதைவிட திகைப்பான ஒரு சம்பவம் இருக்கமுடியாது.

டிக்கட் கட்டணம் அதிகம்! மாநாடு கூடிய சுற்று வட்டாரத்தில் இலட்சக்கணக்கில்தான் மக்கள் தொகை!!—என்று காரணம் காட்டப்படுகிறது. இதெல்லாம், மிகமிகச் சாதாரணக் காரணங்கள். கட்டணம் கட்டக் கவலைப்படும் காத்தானும் முத்தனுமா இன்று காங்கிரசில் இருக்கிறார்கள். ஒரு இலட்சம் பேருக்கு டிக்கட் வாங்கிக் கொடுத்து உள்ளே அழைத்து வரக்கூடிய டாடாக்கள் உண்டே!!

இது ஒருபுறமிருக்க, தப்பித் தவறி வந்தார்களே அந்த மக்களும், தீர்மானங்களும் தீப்பொறி பறக்கும் பேச்சும் நிகழும் இடத்திலா இருந்தார்கள். அல்ல! அல்ல!! வேடிக்கை பார்க்கும் மிருகக் காட்சிசாலையில் இருந்திருக்கிறார்கள்.

என்ன பொருள்? மக்களுக்கு காங்கிரஸ் மகாசபை மீதும், அது செய்திடும் காரியங்கள் மீதும், முன்புபோல ஆர்வமும் ஆசையும் இல்லை! வரவர, அது குறைந்து கொண்டே வருகிறது!!

வட்டாரக் கமிட்டிகள் அமைக்கலாம் — பிரசாரகர்களை நியமிக்கலாம்—எதிர்க் கட்சிகளை கண்டபடி ஏசலாம்—இதனாலெல்லாமா, காங்கிரஸ் வளர்ந்துவிட முடியும்.

காண்கிறோமே, **சுதந்திர நாள் — குடியரசுத் திருநாள்**—என்பவை எவ்வளவு சோபிதமற்று உள்ளன. அலுவலகங்களிலும், சர்க்கார் காரியாலயங்களிலும்தான், விழாவின் அறிகுறியாக வெளிச்சமும் அலங்காரமும் உள்ளதே ஒழிய மக்கள் மன்றத்தில் மகிழ்ச்சியும் ஆனந்தமுமா இருக்கிறது? எப்படியிருக்கும்?

தேர்தல்கள் வந்தால், எப்படியோ பணநாதன் அருள் தனக்கிருப்பதைக் கொண்டு, வெற்றி பெறுகிறார்கள்! சிண்டு முடித்துவிட்டும், எதிர்க் கட்சிகளுக்கு வாய்க் கட்டுப் போட்டும், எப்படியாவது தேர்தலில் வெற்றி கொள்ள முயற்சிக்கிறார்கள். அது தவிர, முன்போல, மக்களின் இருதயங்களில் காங்கிரசுக்கு இடமுண்டோ! ..தில்தான், கௌகத்தி காங்கிரஸ் !!

★

சண்முகசுந்தரனார்

ஏணியின் கீழ்ப்படியிலிருந்து ஒவ்வொன்றாக ஏறி உச்சிக்குப் போவதற்குப் பெருமுயற்சி தேவை, உறுதி தேவை, உழைப்பு தேவை., இவையெல்லாம் நிரம்பப் பெற்று வாழ்க்கையில் உயர்வை அடைந்தவர் **பேராசிரியர் ம. சண்முக சுந்தரனார்** அவர்கள் ஆவார்கள்.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் எம்.ஏ. பட்டம் பெற்ற இவர் முதன் முதலில் முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர்க் குழுவில் சேர்ந்து பதினைந்து ஆண்டுகள் பணியாற்றினார். அங்கிருந்து, தான்கல்வி பயின்ற பச்சையப்பன் கல்லூரியிலேயே ஆங்கிலத் துறையில் துணைப்பேராசிரியராகச்சில ஆண்டுகள் பணியாற்றினார். அந்தக் காலத்தில் சென்னைப் பச்சையப்பன் கல்லூரிப் பள்ளி (உயர்நிலைப் பள்ளி)யின் தலைவராய்த் தக்கார் ஒருவரை அமைத்துப் பள்ளியின் தலைவராய்த் தக்கார் ஒருவரை அமைத்துப் பள்ளியின் வளர்ச்சிக்கு வழிகோல வேண்டும் என்ற நிலைமை தோன்றியதும் அறநிலையப் பாதுகாவலர்கள் பேராசிரியர் சண்முகசுந்தரனாரை ஆண்டனுப்பி நிலைமைகளைச் சீர்செய்து பள்ளியின் வளர்ச்சிக்குப் பாடுபடுமாறு தலைமையாசிரியராய் அனுப்பினர். அந்தப் பதவியில் ஐந்து ஆண்டுகள் இருந்து பின் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலேயே ஆங்கிலத் துறைப் பேராசிரியராக உயர்த்தப்பட்டு வந்து சேர்ந்தார். அந்தப் பதவியிலிருந்து *1951*-ஆம் ஆண்டு காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியின் முதல்வராய் வந்திருந்து *1958*-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் *22*-ஆம் நாள் இயற்கை எய்தும்வரை கல்லூரியின் வளர்ச்சியில் தன் உழைப்பைச் செலவிட்டு வந்தார்.

தனிப்பட்ட முறையில் ஆசிரியராக இருந்த ஒருவர் பேராசிரியராகி, கல்லூரித் தலைவராக விளங்கினர் என்பதோடு மட்டுமல்லாமல் அவரிடம் குடிகொண்டு விளங்கிய பல பல பண்புகள் அவரை நன்மணிதராக்கின.

நெடுநாட்களுக்கு முன் பாடங்களைப் பயிற்றும் மொழி தமிழாக இருக்க இயலுமா என்ற ஐயம் இருந்தது. ஆங்கிலத்திற்குத்தான் அந்தத் தகுதி இருக்கிறது, தமிழுக்கு இல்லை எனச் சிலர் வாதிட்டுக் கொண்டிருந்த நேரத்தில், ஆங்கிலப் பேராசிரியராக இருந்த சண்முகசுந்தரனார் உயர்நிலைப் பள்ளிகளுக்கான, வரலாறு சமூகம், விஞ்ஞானம், நிலவியல், ஆகிய துறை நூல்களைத் தாமே தமிழில் புதியதாய் எழுதியும், ஆங்கில நூல்களை மொழி பெயர்த்தும் தமிழில் பயிற்றுதல் தகைவுடைத்தே என நிறுவிக் காட்டினார்.

தமிழ் மொழியினிடத்தில் மிக்க பற்றும், தமிழ் வளர வேண்டும்

> காஞ்சிப் பச்சையப்பன் கல்லூரி முதல்வர் பேராசிரியர் **சண்முக சுந்தரனார்** 22-1-58 இரவு 10 மணிக்கு இயற்கை எய்தினார். கல்லூரியின் வரலாற்றில் சிறந்த இடத்திற்கு உரியவரான அந்தப் பேராசிரியரின் பண்புகள் சிலவற்றை இக்கட்டுரை கூறுகின்றது.

என்ற பெருவேட்கையும் பேராசிரியர் அவர்களிடத்தில் மிகுந்திருந்தது. தமிழ் இலக்கணத்தைச் சிறுவர் உளங்கொளுமாறு இனிய எளிய நடையில் வினாவிடைகளாக அமைத்து எழுதியதோடு, தமிழ் இலக்கிய உலகில் என்றும் தம் பெயர் நிலைக்குமாறு அரிய பணி ஒன்றினைச் செய்துள்ளார். தமிழ் மொழிக்கு அணி செய்யப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய 'மனோன்மணீயம்' என்ற நூல் செய்யுள் வடிவான் ஆயது. அந்தச் செய்யுள் நூலைப் பலரும் படித்தறியும் வகையில் அதனை ஒட்டி—அதனையே—உரைநடை நூலாக்கியதன் மூலம் ஒரு நல்ல இலக்கியம் எல்லோர் கைக்கும் எட்டச் செய்திருக்கின்றார்.

நூல் எழுதினால் மட்டும் போதாது. எழுதிய நூல்களை அழகுற அச்சிட்டு வெளியிட வேண்டும். அந்தத் துறையிலும் பேராசிரியரின் பணி சென்றிருக்கின்றது. ஆசிரியர்களின் கூட்டு முயற்சியான ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம் தோன்றக் காரணமாக இருந்தவர் இவரே.

இவ்வாறு பல வகையிலும் சிறப்பியல்புகள் கொண்ட பேராசிரியரோடு நான் கொண்டிருந்த தொடர்புகளை எண்ணிப் பார்க்கின்றபோது அவருடைய ஆற்றல்களை வியந்து பாராட்டுகின்றேன்.

நான் சென்னைப் பச்சையப்பனின் மாணவனாக இருந்தபோது இவரைப்பற்றிக் கேட்ட அளவினன் தான். ஆனால் காஞ்சிபுரம் கல்லூரியில் பணியாற்றத் தொடங்கிய நாள் தொட்டு நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்தமையின் மேலும் பல உண்மைகளை அறிந்தேன்.

இளைஞர்களிடம் காணப்படும் சின்னஞ்சிறு திறமையையும் தூண்டி, அதனை வளர்க்கவேண்டும் என்ற பேரவா இவரிடம் குடிகொண்டிருந்தது. மாணவர்கள் வெறும் கல்லூரிப் படிப்போடு சொல்லாற்றல் எழுத்தாற்றல் முதலியன பெறுதல் வேண்டும் என விரும்பியவர். அதற்காகத் தன்னாலான வகைகளில் எல்லாம் உதவியையும் ஒத்துழைப்பையும் நல்கிவந்தார்.

எந்தச் செயலையும் எண்ணிய உடனே செய்யத் தொடங்கிவிடமாட்டார். அதைப்பற்றி நன்றாக எண்ணிப் பார்த்து, அதனால் வரும் விளைவுகளை சீர்தூக்கிப் பார்த்து ஒரு முடிவுக்கு வந்து, பின்னரே அதனைச் செயலாக்கத் தொடங்குவார். இதனால் சில நேரங்களில் காலம் தாமதமாவது போல் தோன்றினாலும், அவர் செய்வது எவ்வளவு உறுதியாக நிலைக்கின்றது என்பதனைப் பின்னரே உணர இயலும்.

வருந்துகிறோம்

நமது நண்பரும், கழகத் தோழரும், வழக்கறிஞருமான **வி. பி. இராமன்** அவர்களின் அருமைத் தந்தையார் **ஏ. வி. இராமன்** அவர்கள் 30ந் தேதியன்று சென்னையிலுள்ள தனதில்லத்தில் காலமான செய்தி அறிய திடுக்கிட்டோம். நல்லதொரு மகனை, நமக்கும் நாட்டுக்கும் அளித்ததோடு மட்டுமின்றி, பார்ப்பன குலத்தில் பிறந்தும், முற்போக்குக்கு முட்டுக்கட்டை இடாமல், வளரும் புதுமைகளுக்கு வாழ்த்துரைகள் வழங்கிய பெரியவர் அவர். நம்பால் அவர் காட்டிய அன்பும், நல்ல பண்பும், நினைக்க நினைக்க நெஞ்சை உருக்குகிறது. அறிவியக்கம் என்றாலே அஞ்சிடும் பார்ப்பனகுலப் பெரியவர்களுக்கு ஒரு வழி காட்டி எனலாம் அவரை. நண்பர் வி. பி. இராமன், நமது கழகத்தில் ஏற்று வரும் பொறுப்புகள் கண்டு, உள்ளபடியே மனமகிழ்ந்துகிடந்த அவரை, காலம் கொண்டு சென்றுவிட்டது. கலங்கும் தோழர் இராமனுக்கும், அவரது குடும்பத்தாருக்கும் நமது அன்பு கலந்த ஆறுதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கல்லூரியின் வளர்ச்சிக்காக எந்தெந்தத் துறைகளில் பாடுபட இயலுமோ அந்தந்தத் துறைகளில் எல்லாம் தன் முயற்சியைச் செலுவிட்டு வந்தார் என்பதனை எண்ணும்போது உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்புகின்றது.

அவரிடம் நான் பெருமதிப்பு கொள்ளக் காரணமாக இருந்த ஒரு பண்பு இருக்கிறது. சீர்திருத்த நோக்கமும், புதுமை ஆர்வமும் மிகவும் படைத்தவர் பேராசிரியர் அவர்கள். ஒரு முறை கல்லூரி ஆசிரியர்க் கூட்டத்தில் நடந்த சொற்போரில் மதம் மனிதனின் வளர்ச்சிக்குச் செய்த கேடுகளைப்பற்றி நான் விளக்கிப் பேசினேன். இரண்டொருவர் என்னை மறுத்துப் பேசினர். அவர்களுக்கு நான் விடையிறுககும் முன தலைவராய் இருந்த சண்முகசுந்தரனார் அவர்கள் எழுந்து மதத்தால் இதுவரை மனித சமுதாயம் உற்ற கேடுகளை எடுத்துச் சொல்லி மறுப்பாளர்களுக்கு விடை பகன்று வென்றார். அந்த நேரத்தில் நான் அவரைப்பற்றி எண்ணிய எண்ணங்கள் பல. கல்லூரி முதல்வர் பணியில் இருக்கும் ஒருவர் இவ்வளவு சீர்திருத்த நோக்கம் உடையவராய் இருபபது எவ்வளவு நல்லது—சிறப்பு—அருமை எனப் பாராட்டிக் கொண்டேன்.

1939-ம் ஆண்டில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியிலும் பங்குகொண்டு இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பாடுபட்டுவந்த கல்வித் துறையாளர்களின் சண்முகசுந்தரனாரும் ஒருவர். இறுதி வரையில் இந்தி எதிர்ப்பாளராக விளங்கியது பாராட்டக் கூடியதாகும். வெளியில் இந்தி எதிர்ப்பு இயக்கம் நடைபெறும் போதெல்லாம் எங்கள் கல்லூரியில் இந்தி எதிர்ப்பு வாதங்கள் நடக்கும். சண்முகசுந்தரனார் முக்கிய பங்குகொண்டு இந்தியை எதிர்ப்பார்.

அவரும் மனிதர்தான். அதனால் சில குறைகள அவர் வாழ்க்கையில் இருந்திருக்கக் கூடும். ஆனால் அந்தக் குறைகள் எல்லாம் மனதிலே தோன்றிவிட்ட சில எண்ணங்களின் விளைவு என பதனை அறியவேண்டும். அவரிடம் இருந்த நற்பண்புகளையும், நல்ல எண்ணங்களையும் கணக்கிடும்போது குறைகள் சிலவே. சாவு அந்தக் குறைகளைத் தின்றுவிட்டது. எனவே இன்று அவர் நிறைகள் மட்டுமே காணத்தக்கன.

உழைப்பு, ஊக்கம் உறுதி, தமிழ் ஆர்வம், சீர்திருத்த நோக்கம், புதுமை காணுவதில் ஒரு வேகம் — இவை நிரம்பியிருந்த ஒருவர்தான் மறைந்த பேராசிரியர் சண்முகசுந்தரனார்!

வாழ்க அவர் பெயர்!

"...அமளிகளுக்கும், 2-பேர் உயிர் நீத்ததற்கும் தி. மு. க-வினர் குற்றவாளியா அல்லது சர்க்கார் குற்றவாளியா என்பதுதான் இன்றுள்ள கேள்வி. நம்மைப் பொறுத்தவரை, சர்க்கார்தான் இதில் மன்னிக்க முடியாத குற்றத்தை செய்திருக்கிறார்கள் என்று அறிகிறோம். கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் சம்பந்தமாக பொதுக் கூட்டம் நடக்க ஏற்பாடாகி இருந்ததை போலீசார் தடுக்காதிருந்தால் இக் கலவரம் நிச்சயமாக ஏற்பட்டிருக்காது. அண்ணாதுரையோ, மற்ற தலைவர்களோ வெளியே இருந்திருந்தால் இந்த அளவுக்கு கலவரம் ஏற்படச் செய்யாது என்பதை குழந்தைகூட அறியும்.

"பேரிகை" 13—1—58

"திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் தங்கள் கட்சித் தோழர்களுக்கு அமைதியான முறையில் ஆட்சேபக் கொடிகள் காட்டவேண்டும் என்று வற்புறுத்தவே சென்னைக் கடற்கரையில் கூட்டம் கூட்ட விரும்பியதாகத் தெரிகிறது. ஏற்கனவே நகரில் தடைஉத்திரவு இருந்ததால் காரணத்தை விளக்கிக் கூட்டத்துக்கு அனுமதி கோரினார்கள. இது தரப்படவில்லை. உத்திரவை மீறிக் கூட்டம் நடத்துவதற்கும் ஏற்பாடுகள் நடைபெற்றன. சர்க்காருடைய அவிவிவேகத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டது. தி. மு. க. தலைவர்களைக் கைது செய்துவிட்டு, அந்தக் கட்சி பாமரர்களுக்கு வழி காட்டவும், அமைதியைப பாதுகாக்கவும் தலைவர்கள் இல்லாமல் செய்துவிட்டார்கள் ..."

"கல்கி" 19—1—58

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

திராவிடநாடு

899
1-5-58

9—2—58	வார வெளியீடு	விலை 16 காசு

அன்னையின் காலில் விலங்கோ?

[இரா. வேங்கடபதி]

கூண்டுக் கிளியல செந்தமிழா—நாம்
குகைப்புலி என்றுணர் பைந்தமிழா!
தூண்டும் விளக்கெனக் கிளம்பிடுவோம்—தென்
தாய்தமிழ்த் தோள்வலி சேர்த்திடுவோம்.

சேரன் வடபுலம் வென்றதுவும்—அவன்
செந்தமிழ் ஆற்றலாய் நின்றதுவும்
வீர மறக்குல வாழ்வலவோ?—அது
வீழநாம் வாழுதல் தாழ்வலவோ?

அந்நியர் தாள்நிழல் தங்குவதோ?—அவர்
ஆள அடங்கிநாம் மங்குவதோ?
அன்னை விடுதலை நாடுகிறாள்—அவள்
ஆருயிர் சேய்நமைத் தேடுகிறாள்.

கூடித் திரண்டெதிர் போரிடுவோம்—வெற்றிக்
கோபுரம் மீதினில் ஏறிடுவோம்.
பாடிக் களித்துயிர் வீறிடுவோம்—பச்சைப்
பைந்தமிழ் பேசியே தேரிடுவோம்.

பொன்னைப் பெறும்வளம் கூட்டிடுவோம்—துயர்
போக்கப் பசிப்பிணி ஓட்டிடுவோம்
அன்னைத் திருவெலாம் தேக்கிடுவோம்—தமிழ
ஆற்றல் உறும்வழி ஊக்கிடுவோம்.

அன்னைத் தமிழினைப் போற்றிடுவோம்—அவள்
அன்பின் திருச்சுடர் ஏற்றிடுவோம்.
முன்னைப் பெருமைகள் கூறிடுவோம்—அவை
மூள, இவண்புகழ் ஏறிடுவோம்.

வருக!

வியட்நாம் குடியரசுத் தலைவர், விடுதலை புரிப் பயணம் நடத்தி வெற்றிகண்ட தீரர் ஹோசிமின் இருதினங்களுக்கு முன், டில்லி வந்திருக்கிருர். ஒரு வாரம் தங்கியிருந்து, இந்திய உபகண்டத்தின் பல பாகங்களையும் சுற்றிப் பார்ப்பதற்காக வந்திருக்கிருர்.

*

டாக்டர் ஹோசிமின் — இப் பெயர் இன்றைய தென்கிழக்கு ஆசியப் பகுதியிலே மிகப் பழகிப் போன பெயர். அவர் ஒரு நாட்டு மக்களின் உரிமைச் சிலை.

ஹோ, இளமையிலே படிப்பிலே நாட்டம் செலுத்திஞர். இந்தோ சீன அரசியல் புயலில் அவரது வீட்டாரும் மாட்டித் தவித்த பொழுதுதான் அவர் மனதிலே ஒரு திடீர் மாற்றம் ஏற்பட்டது. பிரஞ்சு ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிஞர்கள், அவரது தந்தையும் தனயனும் என்று சந்தேகப்பட்டு, சிறைப் பறவைகளாகப் பிடித்தபொழுது தான் ஹோ, 'ஓகோ, இந்த ஆதிபத்ய வெறி ஆபத்தானது. அடக்கப் படவேண்டும், இந்த ஆணவ வெறியாட்டம்......" என்று எண்ணிஞர்.

நாடோடியாக, இங்கிலாந்திலே; அமெரிக்காவிலே, ரஷ்யாவிலே வாழ்ந்தார். ரஷ்யப் பொதுவுடமை மணத்திலே அவருக்கு அதிக நாட்டமிருந்தது.

கி. பி. 1919-ல் பிரான்சில் நடந்த சமாதான மாநாட்டிலே, பங்கு கொண்டார். அவர் வாழ்விலே, அது ஒரு குறிப்பிடத்தக்க திருப்பமாகிவிட்டது. அவர் தன் நாட்டு மக்களின் விடுதலைப் போரில் தன் உயிரை, உடலை, உடைமையை இழக்கத் தயாராஞர். ஏடெழுதிஞர், கூடாது என்று தடுத்து விட்டது, பிரஞ்சு சர்க்கார். அவர் பேஞவைப் பிடுங்கிவிடப் பெரும்பாடு பட்டது, அந்தப் பிடிவாத மிக்க பிரஞ்சு ஆட்சியாளர்!

ஹோவைப் பிடிப்பவர்களுக்குப் பரிசில் உண்டு என்று அறிவித்தவுடன், பிரான்சைவிட்டு, சைஞவிற்குச் சென்றுவிட்டார். இப்பொழுது ஓடியொளிந்து கிடக்கும் சியாங்கே - ஷேக்கிடம் அறங் கூறுவோராக அமர்ந்தார்.

சீஞவிலிருந்தாலும், தனது தாயகமாம் இந்தோ சீஞவின் நல்வாழ்விற்கான திட்டங்களைத் தீட்டியபடியே இருந்தார்.



இரண்டாம் உலகப் போர் தொடங்கியது. ஹோ, புதியதோர் புனை பெயரில், புகுந்துவிட்டார், தான் பிறந்த மண்ணின் விடுதலைப் போராட்டத்தில்! ஜப்பானை எதிர்த்துப் போராடும் கொரில்லா வீரர்களுக்குத் தலைமை பூண்டு, திடீர்த் தாக்குதல்களை நடத்தி வந்தார். அமெரிக்காவிற்கு, பெருந்துணையாஞர்.

வியட்நாமின் சுதந்திரக் குடியரசை அவர் நிலைநாட்ட படைபடையாக, குவிந்து வந்த எல்லா இடையூறுகளையும, இன்னல்களையும் எதிர்த்துப் போராடியிருக்கிருர்.

அவர் ஐந்தடி உயரம்—ஒல்லியான சரீரம்—படாடோபம் எதுவும் இல்லாதவர்-சாதாரணகாக்கியுடை—சீவப்படாத சிகை, கோதிவிடப்படாத தாடி......இப்படித்தான் அவரை வர்ணிக்கமுடியும். அவர் எளிய வாழ்வு வாழ்கிருர். எனினும் இந்த உலகத்தின் கண்களில் ஒரு "இமயமாகத்" தெரிகிருர்.

அவரை எதிர்த்திடும் மாற்றுக் கட்சியினரும் அவரைப் புகழ்வர்—அவரின் பெருங்குணத்திற்காக எளிய வாழ்விற்காக, அவரது உள்ள உறுதிக்காக, மக்களின் இதயத்திலே தவிந்தாடும் சாதாரண 'ஆசாபாசங்களை' அறிந்திருக்கும் நுண்ணறிவுத் திறத்திற்காக, அவரது உண்மையான நாட்டுப்பற்றிற்காக, உரிமைப் போராட்டத்திலே அவருக்குள்ள திட நம்பிக்கைக்காக! ஆம், அவர் உருவில் சிறியவர்—ஆஞல் செயலில் பெரியவர்! புத்தகத்தை, அதற்கு மாட்டப்பட்டிருக்கும் அட்டையைக் கொண்டே மதிப்பிட்டுவிடாதே என்பார்களே, அப்படித்தான், டாக்டர் ஹோவின் உருவை, எளிய தோற்றத்தை முதலாகவைத்து அளந்துவிடக் கூடாது.

என்னுடன் பிறந்தவர் எத்தனையோ பேருக்கு உடுத்த உடையில்லையே என்று 'ஒப்பாரி'யிடும் பாழ் நிலை மாருதவரை, அலங்காரமாக அணிகிறவர்களையே சமூகத்தின் அவமானச் சின்னங்கள் என்றுதான் கருதுவேன்...என்று கூறுவாராம்.

டாக்டர், ஹோ, இந்த அவனிக்கு ஒரு அதிசயப் பிறவி! அவரது ஆற்றலுக்கு அலங்காரப் பட்டுத் திரையில்லை! அவரது பொன் குணங்கள, பூட்டில்லாத இரும்புப் பெட்டியிலே உள்ள வைரங்களைபோல!

அவரிடம் உலகு கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு பெரும் பண்பு - ஆடம்பரமின்மை, அடக்கமுடைமை, அதே நேரத்தில் ஆற்றலுடைமை! அதஞல்தான் படிக்காத ஒரு மக்கள் கூட்டத்தை படையாகத் திரட்டி, ஒரு பெரிய வல்லரசோடு போரிட முடிந்தது. அந்தப் பாமரருக்குப் புரியும் கொச்சை மொழியிலே பேசி அவரது குருதி கொதிப்படையச் செய்து, உணர்ச்சியிலே கொந்தளிப்பை விதைத்து, கொண்டு வந்து நிறுத்திஞர். போர்க்களத்தில்!-ஆம, விடுதலைப் பட்டாளத்திற்குக் கொட்டு முரசமாஞர் ஊதும் வெற்றிச் சங்குமாஞர்!

★

நொண்டியும் ராஜநடையும்!

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [9-2-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 30

இலட்சக் கணக்கான இதயங்கள், சிந்துபாடும் காட்சியைத் தினசரி காண்கிருேம்—ஆஞல், சிலர் ஒருவா, அறை கூவல்விடுத்திருக்கிருர்!! கிராமங்கள் — மலைநாட்டுப் பகுதிகள் — கல்லூரிகள் — பள்ளிகள்—தொழிற் கூடங்கள்—பெரியவர்கள் மனமெலாம் நிறைந்து, மங்காத புகழ் பெற்று வருகிறது திராவிட முன்னேற்றக் கழகம். மாநில தொழில் அமைச்சர் வெங்கட்டராமனே, "தேர்தலுக்கு நின்று பாருங்கள். நிச்சயம் இன்னும் இருபது இடங்கள் அதிகமாகக் கிடைக்கும் காங்கிரசுக்கு" என்று தெரிவிக்கிருர். திராவிடநாடு எனும் பிரச்னைமீது தேர்தலுக்கு நிற்கவேண்டுமாம்—நின்ருல் இருபது இடங்கள், அதாவது இப்போது நாம் பெற்றிருக்கும் 15-இடங்களும் போக இன்னும் அதிகமாக ஒரு 5-இடங்களும் காங்கிரசுக்குக் கிடைக்குமாம்!!

எப்படி இக்கணக்குப் போட்டார் அமைச்சர், என்று தெரியவில்லை. ஓராண்டுக்கு முன்தான், பொதுத்தேர்தல் நடந்தது நாட்டில். இந்தப் பாரதசீலர், அப்போது, கடல் தாண்டிச் சென்றதாகக் கவனமில்லை, நமக்கு. கண்ணாரக் கண்டார், தி. மு. க. நாட்டில் எத்தனை இலட்சம் வாக்காளர்களின் மதிப்பைப்பெற்றது என்பதை! 17-இலட்சம் ஓட்டுகள் பெற்ருேம்!! உச்சி மாகாளியின் சீடர்கள், உத்தமராம் காமராஜின் அன்பர்கள், என்று சொல்லியல்ல—திராவிடநாடு திராவிடருக்கே! வடக்கு வாழ்கிறது—தெற்கு தேய்கிறது!! எனும் முழக்கங்களை மேடைகளில் முழக்கியும், அறிக்கைகள் மூலம் வெளியிட்டும், அதற்குப் பிறகே இந்தஓட்டுகளைப்பெற்ருேம். தஞ்சைமண்ணில் பிறந்தவர் ஆதலால், ஒருதடவை மூளையில் ஏற்றிய விஷயம், அவ்வளவு சீக்கிரம் பட்டுவிடாது என்கிற நம்பிக்கையுண்டு நமக்கு!! எனினும், நாடு அறிந்த ஒரு விபரத்தை மறந்துவிட்டு, திராவிடநாடு பிரச்னை மீது தேர்தலுக்கு நின்ருல், இன்னும் இருபது இடங்கள் காங்கிரசுக்குக் கிடைக்கும் எனகிருர்.

எடுத்த எடுப்பிலேயே காங்கிரஸ் கொடி கட்டி ஆளக் கிளம்பவில்லை! வெள்ளையனை எதிர்த்துப் போர் முழக்கம் எழுப்பி, 50 ஆண்டுகளுக்குப் பிறகுதான், அவர்களால் மக்களின் கவனத்தைக் கவர முடிந்தது என்பதையும் நாம் மறந்துவிடவில்லை!! "ஏ! அரைநிர்வாணப் பக்கிரி", என்று காந்தியடிகளை, இகழ்ந்துரைக்கும் அளவுக்கு ஒரு போது, காங்கிரசை சாதாரணமாகக் கருதிய சர்ச்சில் இருந்ததையும் அறிவோம் நாம். ஏதோ ஒரு சிலர்—இங்கு மங்குமாக ஒரு சிலர்—உப்பு எடுக்கிருேம் என்கிருர்கள்—துணிகளை எரிக்கிருேம் என்கிருர்கள்—என்று இறுமாப்போடு வெள்ளையர்கள் காங்கிரசைப் பற்றி, கணித்த ஜாதகம், கவனமிருக்கிறது நமக்கு. 'தூ! தூ!! நீங்களா?", என்று இன்று துரைத்தனம் நடாத்திடும் இந்தச் சிங்கார புருடர்களை, எவ்வளவு அலட்சியமாகக் கருதிஞன் வெள்ளையன் என்பதும், அறிவோம் நாம். ஏடுகள் பல, பணக்காரர்கள் பலர், படித்தவர்கள் ஏராளம், தேசிய இயக்கத்தில் சேர்ந்திருந்தும், சுமார் அரை நூற்ருண்டு வரையில், மக்கள் மன்றத்தைச் சந்தித்து ஓட்டு வாங்க காங்கிரஸ் கட்சி, எவ்வளவு தயங்கியது என்பதை உலகம் அறியும். அந்தளவுக்கு வசதிகளற்றவர்கள், அன்னக் காவடிகள், தன் கையையே நம்பியவர்கள், தகரக் குவளைகளைக் கொண்டவர்கள், சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னரே அரசியல் மேடையை அமைத்துக் கொண்டவர்கள், பல முனைகளிலும் எதிர்ப்பைச் சமாளிப்பவர்கள், தன் கையையே நம்பியவர்களான, நாம், இன்று 17-இலட்சம் வாக்குகளைப் பெற்றிருக்கிருேம்! 15 எம். எல். ஏ. -க்களைப் பெற்றிருக்கிருேம்!! காங்கிரஸ் காத்துக் கிடந்ததுபோல, ஒரு அரை நூற்ருண்டு இல்லை—பத்தே ஆண்டுகளில், இவ்வளவு பலமும் சக்தியும் பெற்றிருக்கிருேம். இதஞல், அபரிமிதமான செல்வாக்கும், எல்லாருடைய இருதயத்திலும் புகுந்துவிட்டோம் என்று முரசொலிக்க நாம் தயாரில் இல்லை. ஆஞல், அறுபது ஆண்டுகளுக்கு மேற்பட்ட காங்கிரஸ்! அதற்கு அடுத்தபடியாக நிற்கக் கூடியது என்று ஓட்டு வாங்கியதன் மூலம் நிரூபித்திருக்கிறது, உதயசூரியன் பெட்டி!! இருந்தும், அமைச்சர், அறைகூவல் விடுக்கிருர். அன்று, வெள்ளையன் குரலில், எந்தளவுக்கு அழுத்தமும் ஆணவமும் இருந்ததோ அதே அளவுக்குக் காண்கிருேம், அமைச்சரின் குரலில்.

தொழிலமைச்சர் அறைகூவல் விடுக்கிருர்! அதே சமயத்தில், நிதியமைச்சர் பழியினைப் போடுகிருர்! பக்தவத்சலம், நெற்றிக் கண்ணைத் திறப்பேன் என்கிருர்! காமராசரோ, இரத்தினச் சுருக்கமாக, சபிக்கிருர்!! நம்மை எதிர்த்து முகாம் அமைக்கும் கட்டத்துக்கு வந்திருக்கிறது, தமிழ் நாட்டுக் காங்கிரஸ்! அமைச்சர்கள் இப்போது, ஐந்தாண்டுத் திட்டத்தை மறந்துவிட்டார்கள், காந்தியடிகளின் திருநாளை மறந்துவிட்டார்கள், சதாநேரமும் நம்மைப் பற்றிச் சிந்தித்தவண்ணம் கிடக்கிருர்கள். ஆங்காங்கும் ஓடி ஓடி, நம்மைத் தாக்க எண்ணுகிருர்கள். அப்படித் தாக்கும்போது, குற்றப் பட்டியல்களை

யாவது. கூறலாமன்றோ? தி. மு. க. சொல்வது இன்னின்ன விதத்தில் தவறு என்று நேர்மையோடு கூறலாமன்றோ? கிடையாது! சட்டியிலிருந்தால் அல்லவா, அகப்பையில் வரும்!! அதனால், சவால் விடுக்கிறார், அமைச்சர்—பழி போடுகிறார், நிதியமைச்சர்.

பாருக்கே தெரியும், இந்தியை எத்தனை காலமாக, திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்து வருகிறது என்கிற உண்மை! ஆனால் அமைச்சர் சுப்பிரமணியம், புதியதொரு உண்மையைச் சொல்லப் புறப்பட்டிருக்கிறார், இந்தியை நாமும் ஏற்றுக் கொண்டோம் என்று!! நம்மை வெட்டித் துண்டு துண்டாக்கினாலும், அந்தத் துண்டுச் சதைகூட "இந்தி வேண்டாம்" என்று உரைக்குமே ஒழிய; நமது இரத்தத்தின் ஒரு துளிக்குப் பேசும் சக்தியிருந்தால், அந்த ஒரு துளி இரத்தம்கூட "வேண்டாம் இந்தி" என்று முழக்கமிடுமே ஒழிய, ஒருபோதும் தலை வணங்காது. இந்த உண்மையை, நாடு அறியும். ஆனால், நண்பர் சுப்ரமணியம், வேறேதும் கூற வக்கு வழியில்லாததால், பிரமாதமாகச் செல்லுமிடந்தோறும் ஏதேதோ செப்புகிறார்!

இவர்களின் பேச்சுகளிலிருந்து ஒன்று புரிகிறது நமக்கு. திராவிட முனனேற்றக் கழகம என்கிற பெயர் இவர்களுக்கெல்லாம் கிலி பிடித்த ஒனறாகியிருக்கிறது, இன்று! 104-டிகிரி காயச்சல் — ஈளை கட்டிவிட்டது—சளி, இழுக்கிறது—ஜனனி கண்டு விட்டது, எனகிற நிலைமை வந்திடுமபோது, பிதற்றலும் பேச்சும் அதிகமாகத்தானிருக்கும். அந்தக் கட்டத்துக்குக் காங்கிரஸ் மந்திரி சபை, இன்றைய தினம் வந்திருக்கிறது. ஆதனாலேயே அறைகூவல், பழி சொல்லுதல் போனற படலங்கள் ஆரம்பமாகியிருக்கின்றன.

*

"திராவிட நாடு" பற்றி ஓட்டு எடுக்கலாம் என்றாரே, தொழிலமைச்சர்! அவருடைய கவனத்துக்கு ஒரு நிகழ்ச்சியினை இச்சமயத்தில் கொண்டுவர விருமபுகிறோம. சென்ற பிப்ரவரி முதல் தேதியன்று சென்னையில் கைத்தறி கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள்கூடி ஒரு மாநாடு போட்டார்கள், டில்லி இழைத்திடும் அநீதியைக் கண்டிக்க. அங்கே, பேசியிருக்கிறார் ஒருவர்:-"மத்திய மந்திரிகளுடன் 'ரிபேட்' விஷயமாக நான் விவாதித்தேன். கைத்தறித்தொழில் செயற்கையான முறையில் தூக்கி நிறுத்திவைக்கப் பட்டு வரும் தொழிலாக இல்லாமல், தன் சொந்தக் காலிலேயே நிற்கும் தொழிலாக இருக்க வேண்டுமென்றும், அதற்காக 'ரிபேட்'டையே ஒழித்துவிடப் போவதாகச் சொன்னார்கள். இது, நொண்டியை ராஜ நடை நடக்கச் சொல்லுவதைப்போலிருக்கிறது......"

நொண்டி எப்படி ராஜ நடை நடப்பான்! சொல்கிறது, மத்ய சர்க்கார்!! — என்று, வேதனையோடு வெளியிட்டிருக்கிறார், ஒருவர் அம்மாநாட்டில். இது மட்டுமல்ல, "கைத்தறிப் பிரச்னை ஒவ்வொரு ராஜ்யத்திலும் ஒவ்வொரு விதமாக இருக்கிறது. இதை உணராமல் சகல ராஜ்யங்களையும் ஒன்றாகச் சேர்த்துக் கூட்டு சராசரி பார்த்து முடிவு செய்கிறது மத்ய சர்க்கார். இது ஆற்றின் ஆழத்தைச் சராசரி கணக்கெடுத்து அதில் இறங்கின புத்திசாலியைப் போலிருக்கிறது!!"

இப்படிப் பேசியது யார் தெரியுமா? புத்திசாலி! நொண்டியை ராஜநடை போடச் சொல்லுபவர்கள!- என்றெல்லாம் மத்ய சர்க்காரைத் தாககிப் பேசியிருப்பது, வேறுயாருமல்ல; யார் நமக்கு அறைகூவல் விடுக்கிறாரோ, அதே தொழில் அமைச்சர் தோழர் வெங்கட்டராமன்தான், இபபடிப் பேசியிருக்கிறார்.

தி. மு. க. வுக்கு அறைகூவல் விடுகிறார்! தறியாளர்களின் தவிப்பைப் பார்க்கும் போதோ, டில்லி மீது, தாவுகிறார்!!

தொழிலமைச்சர் மட்டுமல்ல, ஒவ்வொரு அமைச்சரும், கொட்டும் போதுதான வடக்கைப் பற்றிப் பேசுகிறார்கள் — நேருவின் தயவும், நமது வளர்ச்சியையும் காணும்போது, உடனே அதையெல்லாம் மறந்துவிட்டு, தாக்கவும், பழிககவும் முற்படுகிறார்கள். தாசர்கள்தானே! வேறென்ன செயய இயலும்!!

அறைகூவலுக்கு அஞ்சியதல்ல, தி. மு. க! வெங்கட்டராம் உள்ளபடியே, "ஒருகை" பார்க்க விரும்புவாரேயானால், தயார் நாம. அவர் எப்படி 20 இடங்கள் அதிகமாகக் காங்கிரசுக்குவரும் எனறு நினைக்கிறாரோ, அதேபோல மேலும 20 புது இடங்களை இப்போது நாம் பெற்றுககாட்ட முடியும. இப்படி அறைகூவல் விடுமளவுக்கு ஆத்மாக்கள் இருப்பதையும், நமது தோழர்களின் பார்வைக்குக் கொண்டுவருகிறோம. தோழர்கள் வெங்கட்டராம், சுப்ரமணியம் போன்றோர், அறிந்தோ அறியாமலோ, நமக்கு ஒரு உதவியைச் செய்துவருகிறார்கள். இப்போது பழி போடும சுபரமணியம், "பத்து ஆண்டுகள்" தவணை கேட்டது, பலருக்குக் கவனமிருக்கலாம்! ஒரு பக்கம் பயம் மோத, இனனொரு பக்கம தி. மு. க. வைப் பார்க்கும்போது ஏற்படும் மிரட்சி மோத, ஏதேதோ பேசுகிறார்கள். இந்தப் பேச்சுகளைக்கண்டு நமது தோழர்கள, புத்துணர்ச்சி பெறவேண்டும். **ஐயகோ! தாயகத்தில் இப்படிப்பட்டவர்களுமா, இருக்கிறார்கள். தாயகமே! மன்னியம்மா, இவர்களை!!** —எனறு எண்ணிவிட்டு, நமது காரியத்தில் கண்ணும் கருத்துமாயிருககவேண்டும். நாள்தோறும், கழக வளர்ச்சிக்கான, பணிகளில் ஈடுபடவேண்டும். அறைகூவல் விடும் அமைச்சரே, நொண்டி என்று ஒப்புக்கொள்கிறார், தென்னகத்தை! இந்த நொண்டியும் ராஜநடை போடும் காலத்தை உருவாக்கும் பொறுப்பு, நம்மிடமே உள்ளது—தாயகத்தில் இவர்களின் அடக்குமுறைகளால் நொண்டியான சகோதரர்கள் உண்டு—இவர்களின் காட்டிக்கொடுக்கும் போக்கால் அரசியல் வாழ்விலும் நாடே நொண்டியாகியும் கிடக்கிறது. நொண்டியைவிட மோசமான நிலையிலுள்ள நாடுகள்கூட, இன்று ராஜநடை போட்டுக்கொண்டுள்ளதை நாம் பார்க்கிறோம்!! எனவே, முடமாகிக் கிடக்கும் தாயகம் மீள, சகோதரர்காள், நினைப்பையும் நேரத்தையும் கழகத்துக்காக்குங்கள் என்று தெரிவித்துக்கொள்கிறோம் —வம்பர்களுக்கு வாயால் அல்ல, செயல் மூலம் பதில் காட்டவேண்டும். அப்போதுதான், புத்தி வரும். தவறு, புரியும்.

★

வெற்றிக்குரியவன்

[மலர் மன்னன்]

1356-ம் ஆண்டு செப்டம்பர் மாதப் பிற்பகுதியில் ஒருநாள். மேற்குப்பிரான்சில் **பாய்ட்டியர்** என்னும் இடம்; பகல் கழிந்து இரவு துவங்கிவிட்ட நேரம்; எங்கும் மயான அமைதி இருளுடன் இரண்டறக் கலந்து காட்சி தருகின்றது. புயலுக்குப் பின்னர் அமைதி நிலவுவது இயற்கை தானே! சில நாட்களுக்கு முன்னர் தான் அந்த இடத்தில் பெரியதொரு புயல்—ஆம்; மாபெரும் போராட்டம்—பேயாட்டம் போட்டது. ஆங்கிலப் படைகளும் பிரெஞ்சுப் படைகளும் அங்கே ஒன்றோடொன்று மோதிக்கொண்டன.

பிரான்சின் அரசுக் கட்டிலில் அமர்ந்திருந்த பேரரசன் **ஜான்** எவராலும் வெல்லப்பட முடியாத பெரும் படை பலம் கொண்டு வல்லரசு அமைத்த ஜான் மன்னன்—அவனை எதிர்த்திடச் சிறு படையுடன் வந்திருக்கும் "கறுப்புடை வேந்தன்" என அழைக்கப்படும் எட்வர்டோ வயதிலும் சிறியவன்; அரசின் அளவாலும் ஆற்றலாலும் கூடச் சிறியவன்!

'அந்தோ பரிதாபம், "இளங்கன்று பயமறியாது" என்பது உண்மையாகிவிட்டதே! பேரரசன் ஜானையா இந்தச் சிறு வேந்தன் வெல்லக்கூடும்? உலகமே படை திரட்டி வந்திடினும் பிரெஞ்சுப் படையை வெல்லுதற்கியலாது என்பதை எட்வர்டு மறந்து போயினனோ? அல்லது பிரெஞ்சு மண்ணில் சாவை அணைத்துக்கொள்ளும் ஆசை கொண்டனனோ?' என்றுதான் பிரெஞ்சு நாட்டவர்—ஏன், ஆங்கிலேயரும் கூடப் பேசிக்கொண்டனர்.

ஆனால் என்ன விந்தை! பேரரசன் ஜானின் பெரும்படை, தோல்வியைத் தழுவிக்கொண்டது! சாவை அணைத்துக்கொள்ள வந்த எட்வர்டுக்கு எதிர்பாராத விதமாக வெற்றியின் அணைப்புக் கிட்டியது! 'இது தற்செயலாகக் கிடைத்த வெற்றிதான்' என்பதை எட்வர்டும் உணர்ந்தான். ஜான் மன்னனைக் கௌரவக் கைதியாய் ஓர் மாளிகையில் வைத்துவிட்டு, தான் மட்டும் தாயகம் திரும்பினான் கறுப்புடைவேந்தன்.

எழிற் கூடத்திலே சிறை வைக்கப்பட்ட பேரரசன் ஜான் சின்னஞ்சிறு படையிடம் தான் தோற்றுப் போனதை எண்ணியெண்ணி மனம் வெதும்பினான். வேதனையால் பொருமினான்.

இருளை விரட்டியடிக்கும் ஏராளமான விளக்குகள் ஒளியை வாரியிறைக்க, எழிலுடன் விளங்கும் ஒரு பெரிய மாளிகையிலேதான் ஜானரசன் சிறைவைக்கப்பட்டிருக்கிறான்.

மாளிகையின் உப்பரிகை—ஆடம்பரமாக அமைக்கப்பட்ட அலங்காரக்கூடம். ஆனால் ஜான் மன்னனின் கருத்தை எதுவும் கவரவில்லை; கூண்டிலடைபட்ட சிங்கமென அவன் முன்னும் பின்னுமாக உலவுகின்றான்.

ஜான்:- (மெல்லிய குரலில்) அனைத்தும் போயின; இத்தனை நாள் சேர்த்த புகழனைத்தும் ஒரு நொடியில் போய்விட்டன. பெருமை தொலைந்தது; சிறுமை வந்துற்றது; 'பேரரசா ஜானா? எவராலும் வெல்லப்பட முடியாத பெரும்படையுடன் பிரான்சின் அரியணையில் வீற்றிருக்கும் மாமன்னரல்லவா, அவர்!' எனப் பேசிவந்த உலகம், 'ஜான் என்பவனா? யார், அந்தச் சிறுவனை எட்வர்டிடம் தோற்றுப் போனானே, அவனா?' என்று இனி எள்ளலுடன் பேசும்; 'வல்லரசு கட்டியாண்டானாமே ஜான் மன்னன்! தன் படைகட்குச் சிறப்புறப் போர்ப் பயிற்சி யளித்தானாமே! கடைசியில் சின்னஞ்சிறு ஆங்கிலப் படையிடம் தோற்றானாமே! இதுதானோ இவன் வீரம்!' என்று, வாய்திறந்து பேசக் கற்றுக் கொண்ட பச்சிளங் குழந்தைகளுங் கூடப் பேசிக்கொள்ளும். 'பிரான்சைத் திறம்பட ஆண்டு வந்த மன்னர் மன்னன் ஜான் சிறுபடையுடன் வந்த இளைஞன் எட்வர்டிடம் தோல்வியுற்றான்' என்று வரலாற்றில் குறிக்கப்படும். ஐயோ, இதற்காகவா நான் பிறவியெடுத்தேன்! இந்த இகழைப் பெறுவதற்காகவா, பல போர் முனைகளில் வெற்றிக்கொடி நாட்டிப் பெரும் புகழ் திரட்டினேன்! இந்த அவலமொழிகளைச் செவியாரக் கேட்பதற்காகவோ, நான் களத்தில் மடியாமல் சிறை பிடிக்கப்பட்டேன்! அந்தோ! நான் செத்து மடிந்திருந்தால் இந்த அவல ஒலிகளைக் கேட்காதிருக்கவாவது முடிந்திருக்குமே!

[வேதனையின் வெம்மையைத் தாங்கமாட்டாதவனாய் இருகைகளாலும் முகத்தை மறைத்தவண்ணம் அருகிலுள்ள மஞ்சத்தில் அமர்ந்துவிடுகிறான். யாரோ வரும் காலடியோசை கேட்கின்றது. பேரரசன் திரும்பிப் பார்க்கிறான்.]

ஜான்:- யார் அங்கே?

[ஆங்கில வீரனொருவன் எதிரில் வந்து நின்று வணங்குகிறான்.]

வீரன்:- மாமன்னரே, தங்களை எங்கள் நாட்டிற்கு அழைத்து வருமாறு எம் அரசர் ஆணை அனுப்பியுள்ளார். நாளைக் காலையில் பயணம். அதனை அறிவிக்கவே வந்தேன்.

[வணங்கிவிட்டுச் செல்கிறான்.]

ஜான்:- "பேரரசன் ஜானை எவராலும் வெல்ல முடியாது என்று கூறினோரே, இதோ, அந்தப் பேரரசனை என் கைதியாக நிற்பதைப் பாரீர்! எவராலும் வெற்றி கொள்ளமுடியாது ஜான மன்னனை எனப் பேசி வந்தோரே! இதோ, அந்த ஜான் மன்னனை நான் அடிமைப் படுத்தி விட்டதைக் காணீர்! பேரரசன்—மாவீரன் எனப் புகழப்பட்ட பெருவேந்தன் என்னெதிரில் விலங்கொடு நிற்கும் காட்சியினைப் பாரீர்!" என்று எட்வர்டு பெருமை பேசிக்கொளவதன் பொருட்டு என்னைக் கொண்டு வருமாறு கட்டளை பிறப்பித்துள்ளான் போலும்! சிங்கத்தைத் தற்செயலாகச் சிறை பிடித்து விட்ட சிறு முயல் எல்லோர் முன்னிலையிலும் சிங்கத்தைக் கொண்டுபோய் நிறுத்தி, 'எனது சாதனையைப் பாரீர்!' என்று கொக்கரிக்கத்தானே செய்யும்!

பெருமையுடன் ஆட்சிப்பீடத்தில் கொலுவிருந்த என் வாழ்வு, பிறனொருவன் பெருமை பேசிக் கொள்ளுதற்குரியதாகவா, மாறவேண்டும்!

[நெடுமூச்சுடன் உலவுகின்றான்.]

* * *

[இங்கிலாந்தின் எல்லைப்புறம், பிரான்சிலிருந்து அழைத்து வரப்படும் ஜான் மன்னனை எதிர்கொண்டழைக்கக் கறுப்புடைவேந்தன் எட்வர்டே நேரில் வந்துள்ளான். தோரணங்களும், வரவேற்பு வளைவுகளுமாக எல்லைப் பகுதி முழுவதும் விழாக்கோலம் பூண்டிருக்கிறது. தலைநகரமான இலண்டனுக்குச் செல்லும் அரசபாட்டையும் நன்கு அலங்கரிக்கப்பட்டு விளங்குகின்றது. படைவீரர்கள் புடைசூழ, அழகிய இரதமொன்றில் அமர்ந்துள்ள ஜான் மன்னன் இங்கிலாந்தின் எல்லைக்குள் நுழைகிறான்.]

எட்வர்டு:- மன்னர் மன்னரே, வருக வருக!

[வேந்தனுக் கருகில் நின்றுள்ள அரசவைப் பிரமுகர்களும் மக்களும் அவ்வாறே ஒலியெழுப்புகின்றனர்.]

எட்:-(இரதத்தை அணுகி) மன்னர் மன்னவா, வரும் வழியில் ஒரு குறைவும் நேர்ந்திருக்காது என்றே நம்புகிறேன். நானும் கூட இருந்து தங்களை இங்கிலாந்திற்கு அழைத்துவரலாம் என்றுதான் முதலில் கருதினேன். ஆனால் ஒரு விருந்தாளியை வீட்டிலிருந்தபடியே வரவேற்பதுதானே வீட்டுக்காரனுக்கு அழகு? மேலும், தங்களை வரவேற்பதற்கான ஏற்பாடுகளை நானே முன்னின்று செய்தால்தானே எனக்குப் பெருமை?

[பேரரசன் ஜான் விழிக்கிறான், ஏதும் புரியாமல்; எட்வர்டு வேறொரு இரதத்தில் ஏறிக்கொள்ள, இரு இரதங்களும், படைகளும் தலைநகரை நோக்கி விரைகின்றன. செல்லும் வழியெல்லாம், "கறுப்புடை வேந்தர் வாழ்க!" என்ற ஒலி முழக்கத்துடன், "பேரரசன் ஜான் வாழ்க! மாமன்னரே வருக, வருக!" என்ற வாழ்த்தொலிகளும் கேட்கின்றன. இந்தக் கோலாகலமான வரவேற்பையெல்லாம் கண்ட பெருவேந்தன் ஜான் ஒரு வியப்புக் குறியாகவே மாறிவிட்டான்!]

* * *

[அரண்மனை நடுமன்றம். மாமன்னன் ஜானுக்கும், இங்கிலாந்துப் படைகளால் கைது செய்யப்பட்ட மற்றப் பிரெஞ்சுப் படைத் தளபதிகட்கும் பெருவிருந்து படைக்கிறான், கறுப்புடை வேந்தன். ஜான் மன்னன் அமர்ந்துள்ள ஆசனத்தின் பக்கவாட்டில் நின்றுகொண்டு, தானும் சிப்பந்திகளுள் ஒருவனாக ஜானுக்குத் தேவையான

உணவு வகை என்னென்ன என்று பார்த்து, அவற்றைப் பரிமாறும்படி பரிசாரகரிடம் கூறிக்கொண்டிருக்கிறான், அவன். எட்வர்டின் இந்த உயரிய போக்கினைக் கண்டு திகைத்துப்போன ஜான்வேந்தன், உணர்ச்சி வயப்பட்டவனாக வாய் திறந்து பேசவும் இயலாது திணறுகிறான். அன்பு ததும்பும் விழிகளால் எட்வர்டின் முகத்தையே நோக்கியவாறிருக்கிறான்.]

எட்வர்ட்:- (ஜான் தன்னையே நோக்கியபடி இருப்பதைக் கண்டு) என்ன வேந்தே, என்ன வேண்டும்?

ஜான்:- (கரகரத்த குரலில்) இங்கிலாந்தின் மணிமுடி தரித்த மன்னா! இதைவிட வேறென்ன வேண்டும் எனக்கு? நின்றபடி

"காஞ்சிச் செய்தி"

காஞ்சி நகரும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் முன்னேற்றமடைந்து முழு வளம் பெறுவதற்கான சூழ்நிலைகளை உண்டாக்கும் எண்ணத்தோடு தோழர் **சி. எஸ். பூஞ்சோலை** அவர்களை ஆசிரியராகக் கொண்டு நடத்தப்பட்டு வரும் **"காஞ்சிச் செய்தி"** எனும் கிழமை இதழ், காஞ்சித் தொகுதியிலுள்ள செய்திகளைமட்டும் வெளியிடுவதோடு நின்று விடாமல், நல்ல கருத்துக் கருவூலமாகவும் விளங்குவதுகண்டு களிப்படைகிறோம்.

பொதுநலத் தொண்டில் ஆர்வம்கொண்டுள்ள தோழர் பூஞ்சோலை அவர்களின் இப்முயற்சி வெற்றிபெற காஞ்சி நகரின் நலன்கள் பாதுகாக்கப்படுவதில் ஆர்வம்கொண்டுள்ள அனைவரும் நல்ல ஆதரவு நல்கிக் 'காஞ்சிச் செய்தி' நல்லமுறையில் நடைபெற ஊக்கமும் உற்சாகமும் அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

—ஆ-ர்.

என்னை உபசரிக்க வேண்டாம், எட்வர்ட்; என்னருகில் அமர்ந்துகொள். அதுவே எனக்குப் பெருமை.

எட்:- இல்லை, அரசர்க்கரசே, நான் சாதாரண மன்னன், தங்களுக்குச்சமதையாக அமர்வதற்கான தகுதி எனக்கு இன்னும் உண்டாகவில்லை...

ஜான்:- என்னை வெற்றி கொண்டபிறகுமா, இவ்வாறு கூறுகிறாய்?

எட்:- எனக்குக் கிடைத்த வெற்றி எத்தன்மையது என்பதை நன்கு புரிந்துகொண்டுதானிருக்கிறேன பேரரசே. பாய்க்டியர் போரின் முடிவு, தங்களுக்குத்தான வெற்றியைத் தந்திருக்க வேண்டும்; ஆனால் எதிர்பாராத விதமாய் அந்த வெற்றி எனக்குக் கிட்டியது; அது உண்மையான வெற்றி ஆகாது வேந்தே ...வீதியிலே செல்கையில் தற்செயலாகக் கீழே இருந்து கிடைக்கும் பொருளைப் போன்றதுதான, அந்த வெற்றி; அதனைக் கொண்டாட எனக்கு விருப்பமில்லை; பேரரசர் ஜானை வென்றுவிட்டோம் என்று பெருமை பேசிக்கொள்ளும் ஆசையும் எனக்கில்லை; மன்னர் மன்னவா, உங்களுக்குக் கிடைப்பதற்குப் பதிலாகத் தற்செயலாய் எனக்குக் கிட்டிய அந்த வெற்றியை வைத்துக்கொண்டு தங்களை இழிவாக நடத்தும் சிறுமதியாளனல்ல நான்!

ஜான்:- எவருக்கும் இல்லாத உயர் குணத்தைப் பெற்றவனே எட்வர்ட்; உண்மையில் நீதான் வெற்றி கண்டாய்; எனனை வெற்றி கொண்டாய்; நீ என்னை வென்றுவிட்டது உண்மைதான் எட்வர்ட்; உண்மைதான் ......

[கலங்கியதன்கண்களினின்று கண்ணீர் சொரியவும், தலையைத் தாழ்த்திக் கொள்கிறான், ஜான் வேந்தன்]

எட்:- மன்னர் மன்னவா, எஃகு நெஞ்சம் படைத்த தாங்களா, கண்ணீர் வடிக்கின்றீர்கள்? அரசர்க்கரசனாய் அரசுக் கட்டிலில் அமர்ந்து ஆட்சி செலுத்திய எனக்கு, அந்தோ, ஒரு சிறு வேந்தனாலா தோல்வி இட்ட வேண்டும்? மலையெனக் குவிந்த புகழ்யாவும் மண்ணோடு மண்ணாகவா போகவேண்டும்? என்றெண்ணியா கண்ணீர் சொரிகின்றீர்கள்? பெரும் புகழுக்குப்பங்கம்விளைந்ததேஎன்று சித்தங் கலங்குகின்றீர்கள்?

ஜான்:- (மெல்லச் சிரித்தபடி) இல்லை எட்வர்ட்; சித்தங் கலங்கியதால் சொரிந்த கண்ணீரல்ல இது; சிந்தை நெகிழ்ந்தமையால் சிந்தப்பட்டது. எட்வர்ட், ஆயுதத்தால்தான் என்னை வென்றுவிட்டாய் என்று எண்ணியிருந்தேன; அன்பினாலும் அல்லவா என்னை வென்றுவிட்டாய்? உன்னிடம் தோல்வியுற்றதால் என் புகழுக்கு ஒரு சிறிதும் பங்கம் ஏற்பட்டுவிடவில்லை, எட்வர்ட்; மாறாக முன்பிருந்ததைக் காட்டிலும் பனமடங்காகப் பெருகிவிட்டது. உனைபோன்ற உத்தமனிடம் தோற்பதே ஒரு பெரும புகழல்லவா, நண்பனே! அத்துடன், உன் பெருந்தன்மையின் காரணமாக வெல்லப்பட்டாலும், நனகு கௌரவிக்கபபட்டான ஜான் மன்னன், அந்த அளவுக்கு அவன் பெருமை ஓங்கியிருந்தது என்றுதானே வரலாற்றில் எழுதபபடும்?

[அன்பு மிகுதியால் சூழ்நிலையினையும் மறந்து கருப்புடை வேந்தனை இறுகத் தழுவிக்கொள்கிறான், மாமன்னன் ஜான்.]

பெயர் சூட்டல்

26—1—58 ஞாயிற்றுக்கிழமை இரங்கூனில் இருக்கும் நண்பர் கே. எம். கணபதி அவர்களின் பெண் குழந்தைக்கு, அகில பர்மா தமிழர் சங்கத் தலைவர் திரு. எஸ். லெட்சுமணன் அவர்கள் தலைமையில் பெயர் சூட்டு விழா நடைபெற்றது. குழந்தைக்கு **மணிமேகலை** என்று பெயரிட்டார். தோழர்கள் க. சேரன், நாரா. நாச்சியப்பா ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். தோழர்கள் டி. செல்லம், பி. கே. கிருஷ்ணன், ஜெயராமன் ஆகியவர்கள் இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

*

காஞ்சிபுரம் ஆலடிப்பிள்ளையார் கோயில் தெரு, மா. நாராயணசாமி அவர்களின் பெண் குழந்தைக்கு கலைச் செல்வி என்ற பெயர், நகரமன்ற உறுப்பினர் திரு சி. வி. எம். அண்ணாமலை அவர்களால் 22—1—58 அன்று சூட்டப்பட்டது.

நூல் அரங்கு

வள்ளுவரும் - மார்க்சும்

திருவள்ளுவரின் அறிவுரையை வெறும் இலக்கியமாகப் பார்ப்பதோடு, தமிழ் மொழியின் சிறப்பு மிளிரும் நூலாகக் காண்பதோடு வாழ்க்கை வழிகாட்டியாகவும் காண வேண்டுமானால் புதிய புதிய கோணங்களில் நின்று திருக்குறளை ஆராயவேண்டும். நித்த நித்தம் வளரும் வாழ்க்கைக் கலையின் ஒவ்வொரு துறைக்கும் வள்ளுவர் ஏதேனும் வழிகூறியிருக்கிறாரா எனக் கண்டு பயன் பெறுதல்தான் நல்ல பயனை அளிக்கக் கூடியதாகும்.

தோழர் **க. திருமாறன்** அவர்கள் இந்த நோக்கத்தை மனத்துள் கொண்டு பொருளாதார வள்ளுவரைக் கண்டிருக்கிறார். பொருளாதாரம் என்ற கலை மேற்கு நாடுகளில் மிக அண்மையில் நல்ல வளர்ச்சியைப் பெற்று வாழ்க்கை முறைகளில் புரட்சிகரமான மாறுதல்களை விளைத்திருக்கிறது, அந்தக் கொள்கைகளில் 'உடைமை பொது' என்ற கொள்கையை உருவாக்கியவர் காரல் மார்க்சு ஆவர்.

அவர் வாழ்ந்து கண்ட உண்மைகளைக் கொண்டு கண்ட முடிவுகளையும், வள்ளுவர் சொல்லில் உள்ள முடிவுகளையும் இணைத்து இணைத்து இரண்டினையும் சீர்தூக்கி வள்ளுவரின் வழி எவ்வாறு சிறப்புடையது என்பதனை ஆசிரியர் இந்த நூலில் விளக்கியுள்ளார்.

பொருளாதாரத் துறைச் சொற்றொடர்களை நன்கு விளக்கியிருப்பது பாராட்டற்குரியதாகும்.

நூல் அளவில் சிறியது எனினும் உள்ளடக்கியுள்ள கருத்தில் பெரியது என்பதனை ஒருமுறை ஏடுகளைத் திருப்பிடுவோர் உணரலாகும்.

நல்ல முயற்சி, வெல்க!

வள்ளுவரும் மார்க்சும்: க. திருமாறன்: மலர் விழிப் பதிப்பகம், 3, தெற்குப் பெருமாள் மேத்திரி வீதி, மதுரை. 52 பக்கங்கள்: விலை அணா 6.

★

அன்றும்-இன்றும்

—[அன்பு]—

வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி பாவும் சோழவள நாடு. அதன்கண் வளம் கொழிக்கும் பல சிற்றூர்கள், பாக்கங்கள், ஊர்களைச் சுற்றிலும் இடையறாது விளைந்து கொண்டிருக்கும் பசுமை பொருந்திய வயல்கள்.

வயல்களில் விளையும் செந்நெற் கதிர்களை வயிறு புடைக்கத் தின்ற எருமைகள் ஆங்காங்குள்ள நெற்கூடுகளின் நிழலில் உறங்கிக் கொண்டிருக்கின்றன. முதிர்ந்த பசுமையான கரும்பின் சாற்றைக் தொட்டியில் இட்டு உழவர்கள் காய்ச்சுகின்றனர். எனவே அதனின்றும் நறுமணம் எழுகிறது. காய்ச்சுவதனின்றும் நெருப்பின் புகை அருகிலுள்ள வயலோரங்களில் மூளைத்திருந்த நெய்தல் மலர்கள் வாடி நிற்கின்றன.

குலைகளையுடைய தென்னையும் இலைகளையுடைய வாழையும், பாக்கையுடைய கமுகும், மணம் வீசும் மஞ்சளையும், சோம்பு, இஞ்சி முதலிய கொடிகளையும் உடைய தோப்புகளும், சோலைகளும் ஊரைச் சுற்றிலும் அடர்ந்தும் செறிந்தும் காணப்படுகின்றன.

ஊரின் நடுவே வரிசை வரிசையாக வீடுகள் அமைந்திருக்கின்றன. அவ் வீடுகளின் முற்றங்களில் நெல் உலருகின்றது. அவைகளைத் தின்ன கோழிகள் வருகின்றன. காவல் புரியும் சிறுமியர் கோழிகளை விரட்டுவதற்காகத் தங்கள் காதிலிருக்கும் பொன் மகரக் குழைகளை கழற்றி எறிகின்றனர். அவ்வாறு வீசியெறியப்பட்ட குழைகள் முற்றங்களில் சிதறுண்டு பரவிக் கிடக்கின்றன. சிறுவர்கள் இழுத்து விளையாடும் சிறு தேர் செல்லும் வழியை அந்தப் பொற்குழைகள் தடை செய்கின்றன.

ஊரின் நடுவே பல அட்டிற்சாலைகள் அமையப் பெற்றிருக்கின்றன. அவைகளில் வறியவரும் அயலூராரும் வந்து உணவு பெற்றுச் செல்லுகின்றனர். அட்டிற்சாலையின் கதவுகளில் சோழனது முத்திரையாகிய புலியுருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. உள்ளே அடுக்களையில் சோற்றை வடித்தலால் ஒழுகிய கஞ்சி வெளியே தெருவில் ஆறுபோல் பெருக்கெடுத்து ஓடுகிறது. அதனைக் கண்ட எருதுகள் ஒன்றோடொன்று போட்டி போட்டுக்கொண்டும் சண்டையிட்டுக் கொண்டும் கஞ்சியினைப் பருகுவதோடு சேற்றையும் புழுதியையும் கிளப்பி விடுகின்றன. அதன்மீது புரவிகள் பூட்டிய தேர்கள் ஓடுவதால் கஞ்சி படிந்த அந்தச் சேறு புழுதியாக மேலே கிளம்பி அரண்மனையின் சுவர்களிலெல்லாம் படிகிறது. அதனால் அச்சுவர்கள் பார்ப்பதற்கு வெண்ணீற்றில் புரண்ட களிற்று யானையைப்போல் தோற்றமளிக்கிறது.

கனவா, கற்பனையா என்று கேட்கிறீர்களா? அல்ல, அல்ல. உண்மை! கடியலூர் உருத்திரங் கண்ணனாரால் மெருகேற்றப்பட்ட உண்மை! ஆம். பட்டினப் பாலை தரும் சோழ நாட்டு நிலவளமும் ஊர்வளமும் தான் நீங்கள் மேலே கண்டது.

சோழ நாட்டு மருத நில வளத்தை,

'விளைவரு வியன்கழனிக்
கார்க்கரும்பின் கமழாலைத்
தீத்தெறுவிற் கவின்வாடி
நீர்ச்செறுவின் நீணெய்தற்
பூச்சாம்பும் புலத்தாங்கண்
காய்ச்செந்நெற் கதிரருந்தும்
மோட்டெருமை முழுக்குழவி
கூட்டுநிழல் துயில்வதியும்'

என்றும், அகன்ற மனைகளின் செல்வச் சிறப்பை,

'வியன் முற்றத்துச்
சுடர்நுதல் மடநோக்கின்
நேரிழை மகளி ருணங்குணக் கவரும்
கோழியெறிந்த கொடுங்காற் கனங்குழை
பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டும்
முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்
விலங்கு பகையல்லது கலங்கு
பகையறியாக்
கொழும்பல்குடிச் செழும் பாக்கத்து
குறும்பல்லூர் நெடுஞ் சோணாட்டு'

என்றும், சோறிடும் அட்டிற் சாலைகளின் நிலையை,

'புகழ் நிலைஇய மொழி வளர
அற நிலைஇய வகனட்டில்
சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி
ஏறுபொரச் சேருகித்
தேரோடத் துகள்கெழுமி
நீறாடிய களிறுபோல
வேறுபட்ட வினையோவத்து
வெண்கோயில் மாசூட்டும்,'

என்றும், உண்மையொடு சிறிது கற்பனை மெருகையும் கூட்டித் தந்து இன்று 'இந்த நிலை'யிலிருக்கும் நம்மையெல்லாம் அன்றொரு நாள் அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு அரசாண்ட தென்புலத்து மன்னர்கள் வளத்தோடு வாழ்ந்த காலத்துக்கு இப்புலவர் பெருமான் இழுத்துச் செல்லுகிறார். தமிழ் பாடும் புலவரல்லவா, ஆதலால் அவருக்கு இச் சக்தி இயற்கையாகவே அமைந்திருப்பதில் நமக்கெல்லாம் வியப்பொன்றுமில்லை.

எங்கே, இன்னுமோர் முறை புலவரோடு சோழவள நாட்டிற்குச் சென்று வாருங்கள். வந்தால் தான் இன்றைய நிலை தெரியும். புலவர் அன்றைய உண்மை நிலையை சொல்லோவியமாகச் சித்தரித்திருப்பது இன்றைய நிலையிலிருக்கும் நமக்கு ஏதோ கனவு போன்றும் கற்பனை போன்றும் தோன்றுகிறதல்லவா!

எதிர்காலத் தமிழகம் மேற்கண்ட வளங்களையெல்லாம் அனுபவிக்காது என்று எண்ணிதானோ என்னவோ புலவர் நூலாகப் பாடிச் சென்றிருக்கிறார்.

நெல்லைத் தின்ன வரும் கோழிகளை சிறுவர்கள் தங்கள் பொற்குழைகளால் விரட்டினராம் — இன்று? மாதாவின் முகத்தைக்கூடச் சரிவரத் தெரிந்திராத மழலைகள் விலை பேசப்படுகின்றன.

அட்டிச் சாலைகளில் சோறு வடித்தலினின்றும் ஒழுகிய கஞ்சி ஆறாக ஓடிற்றாம்—இன்று? மக்கள் வடிக்கும் வியர்வை ஓடுகிறது! சிந்தும் கண்ணீர் ஓடுகிறது! கொட்டும் இரத்தம் ஓடுகிறது! தமிழகத்தில் மட்டுமல்ல— இலங்கை பர்மா முதலிய இடங்களில் கூடத்தமிழனது கண்ணீரும்வியர்வையும் ஆறாக ஓடுகிறது!

அன்று தமிழகத்திலிருந்து விலை மதிக்கவொண்ணாத அரும் பொருள் ஏற்றுமதியாயிற்றாம். இன்று தாயகத்தில் கூலி வேலைகூடக் கிடைக்காமல் தமிழர்கள் வெளி நாடுகளுக்கு 'ஏற்றுமதி'யாகின்றனர்!

அன்று தமிழ் மன்னர்கள், வாகை சூடிய நாடுகளிலிருந்து பல அரிய பொருள்களைத் தங்கள் வெற்றியின் அறிகுறியாகக்கொண்டு வந்தனராம். இன்று தமிழகத்திற்கு வெளிநாடுகளிலிருந்து விரட்டப்படும் தமிழர்கள் வருகின்றனர்! இவைகள்தான் இன்றைய தமிழகத்தின் "பெருமை"கள்!

அன்று வளத்தோடும் தன்னுரிமையோடும் வாழ்ந்தவர்களும் நாம் தான். இன்று வளமிழந்து, உரிமையிழந்து, வறுமையில் உழல்பவர்களும் நாம் தான். மீண்டும் அந்நிலை பெறுவதென்னாளோ? இன்றில்லை! இனி என்றுமே இல்லை என்னும் ஏக்கத்தைப் போக்க வழியே, இல்லையா? உண்டு; ஒன்றுபட்டால் உண்டு. திராவிடர் அனைவரும் ஒன்றுபட்டால் நிச்சயம் உண்டு.

★



மயிலாப்புரம் புல்லாக்காளே!

பரபரப்பு நிறைந்த நகரங்களில் வாழ்பவர்கள் சற்றுக கிராமத்திற்குச் சென்றால் மனதிற்கு அமைதியையும் இன்பத்தையும் நிச்சயம் அடைவார்கள். மனிதனது உடலுழைப்பைக் குறைக்கக் கருதி இயந்திரங்கள் வந்துள்ள நாளிலும் கூட, மனிதன் தனக்கு 'ஓய்வே இல்லை, கலையைப் பற்றிப் பேச எங்கேஐயா நேரமிருக்கிறது?' என்று கூறிவிட்டுத் தலை தெறிக்க ஓடுகிறான். ஆனால் இயந்திரங்கள் பெருகாத உடலுழைப்பை நம்பி வாழும் உழவர் பெருமக்கள் வாழுகின்ற கிராமங்களிலே இத்தகைய பரபரப்பைக் காண்பது அரிது. குறைந்த மக்கள் தொகை— நிறைந்த பனத்திநபதி. நகரத்திலோ பெருவாரியான மக்கள் நெருக்கமாக வாழுகின்றனர். அடுத்த வீட்டுக்காரரிடம் கூட அன்பாக இரண்டொரு சொற்கள் பேசமுடியாத அவ்வளவு அவசரம். ஆம், நகரத்திலே மனிதன் இயந்திரத்தினும் மேம்பட்ட இயந்திரமாகவே மாறிவிட்டான். இயந்திரமாக மாறிவிட்ட காரணத்தினால் கலையின்பால் அவனது உள்ளம் அவ்வளவாக ஈர்க்கப்படவில்லை. ஆனால் கிராமத்தில் வாழும் உழவர் பெருமக்கள் இயந்திர மனம் உடையர்களல்ல. தங்களையறியாமலேயே கலையின்பால் ஈர்க்கப்பட்டிருந்தார்கள். கிராமப் புறங்களில் வழங்கி வரும் நாட்டுப் பாடல்களே தக்கதோர் சான்று:-

நண்பகல் வேளை. ஆற்றிலே தண்ணீர் மெதுவாக ஓடிக்கொண்டிருக்கிறது. பகலவன் தன் வெப்பத்தைக் கடுமையாக வெளியிட்டுக் கொண்டிருக்கும் வேளை. பக்கத்திலே வயல். அவ்வயலிலே அங்கொன்றும் இங்கொன்றுமாக சில மாடுகள் நின்றுகொண்டிருக்கின்றன. தலையில் முண்டாசு கட்டிக்கொண்டு முறுக்கிய மீசையுடன் சிலர் வேலை பார்க்கிறார்கள். கவலை இழுத்தவண்ணம் ஒருவன் பாடிக்கொண்டிருக்கிறான் தன் காதலியைப்பற்றி. தன் காதலி அருகில் இல்லை என்ற நினைப்பில் தன்னையும் மறந்து பாடுகிறான்.

கோவிற்பட்டியான்

ஆனால் அவன் காதலியோ இருட்டுத்தனமாக, அதோ! அந்த மரத்தின் மறைவிலிருந்து அவன் பாடுவதையும் கவலை இழுப்பதையும் கவனித்துக்கொண்டிருக்கிறாள். தன்னைப்பற்றிப் பாடியவுடனே அவள் முகத்தில் ஏன் குங்குமச் சிவப்பு ஏறவேண்டுமோ? நாணம் போலும். தூரத்தே தெரியும் சாவடியிலே வெயிலின் கொடுமையால் ஆடுகளெல்லாம் ஒதுங்கியிருக்கின்றன. அந்தப் பூவரச மரத்தடியிலே தன் அருமை மச்சானுக்கு 'கஞ்சி' ஊற்றிக்கொண்டிருக்கிறாள் குடிக்க. பக்கத்திலே ஒரு தோப்பு! அந்தத் தோப்பிலே ஒரு கயிற்றுக் கட்டில், அக்கட்டிலிலே இளைஞன் ஒருவன் கையிலே புத்தகத்தை விரித்து வைத்தபடியே தூங்குகிறான். உண்மையிலேயே தூக்கமா? அல்லது பாசாங்கோ, யார் கண்டது? உண்மைத் தூக்கமாக இருப்பின் திருட்டுத்தனமாகத் தன் கையிலிருந்து புத்தகத்தை எடுக்கும் வளையலணிந்த தளிர்க் கரங்களைப் பிடித்திருக்க மாட்டானே உணர்வு பெற்று? பொய்த் தூக்கம் தூங்குபவன் எப்படித் திடுக்கிட்டு விழிப்பான்? இந்த இன்பக் காட்சிகளெல்லாம் இருக்க,

அதோ! பாருங்கள். அந்த ஆற்றங்கரை மேல் இருக்கிறதே 'வேப்பமரம்' அவ் வேப்பமரத்தடியிலே துண்டைக் கீழே விரித்துப் போட்டு அதன்மேல் உட்கார்ந்திருக்கிறானே சோகமே உருவாய்! அவன் யார்? என்ன கவலை வந்துவிட்டது அவனுக்கு? ஓ! பாண்டியனா? என்ன இப்படி உட்கார்ந்திருக்கிறான்? காரணம் புரியவில்லையே! உம், என்னவாயிருக்கும். இதோ! இவன் யார்? ஏன் இப்படி வியர்க்க விறுவிறுக்க ஓடி வருகிறான்? என்ன தலைபோகிற அவசரமோ? ஆ! கந்தசாமி! ஆமாம்! பாண்டியனிடம் என்னமோ கூறுகிறானே!

"மயிலாப்புரம் புல்லாக்காளே"

மயிலாப்பூரில் வாங்கிய புல்லாக்காளையாம். வெண்மையும் சிவப்பும் கலந்த நிறமுள்ளதே புல்லாக்

காளை! இவ்வளவுதானு! இல்லை இல்லை,

"மாடக் கொம்பு சிவலக்காளை"

நன்கு உயர்ந்து வளைந்த கொம்பை யுடைய சிவப்பு நிறக் காளையாம். ஆமாம்! இப்பொழுது இந்த இரண்டு காளைகளுக்கும் என்ன வந்துவிட்டது

"மாடு ரெண்டும் தப்பிப்போச்சே
மலையிலே
அடடா மதிகுறைவா"

மலையிலே மேயப்போன மாடுகள் இரண்டும் எப்படியோ தப்பிக் காணுமற்போய்விட்டதே! அடடா! உன் மதி என்ன கெட்டா போய் விட்டது. அதுவும்

"இப்போ இருக்கிற விலையிலே
அடடா மதிகுறைவா!"

இப்பொழுதிருக்கும் உயர்ந்த விலையிலே இந்த மாதிரி மாடுகளை உன் கவனக் குறைவால் தப்பவிட்டு விட்டாயே! நமமால் பிறகு உயர்ந்த விலையில் இத்தகைய நல்ல மாடுகளை வாங்கத்தான் முடியுமா? என்று கேள்வி மேல் கேள்வி கேட்கிருன். பாண்டியனே பேசாமல் மௌனமாகவே உட்கார்ந் திருக்கிருன. பேசாது உட்கார்ந் திருப்பதைக்கண்ட கந்தசாமிக்குக் கோபம வந்துவிடுகிறது. அக் கோபத்தின் எதிரொலியாக,

"உன் மண்டையிலே மூளையில்லே
தலையிலே"

ஓங்கியடித்தாற்போல கூறுகிருன் கந்தசாமி. தன அறிவைச் சரியான வழியில் உபயோகிக்காததினல் அல்லவா மாடுகள் இரண்டும் தப்பிப்போய்விட்டது என்று சுட்டிக் காட்டுகிருன் கந்தசாமி. தன்னைப் பார்த்து "மூளையிலலை" என்று கூறுவதா? பாண்டியனுக்கோ பொறுக்கவில்லை. எப்படியும்கந்தசாமிக்குப்பதில் கூறத்



தான் வேண்டும். கூறியும் விடுகிருன்.

"மாமரமாம் மல்லிகைத் தோப்பாம்"

மாமரங்கள் பணம் வீசிடும் மல்லிகை மலர்கள் நிறைந்த ஒரு அழகிய தோப்பாம்! அந்தத் தோப்பினிலே

"மயிலாடும் மஞ்சண மேடையிலே—நான்
மறந்தாப்பலே உறங்கிட்டேன் நிழலிலே"

வண்ண மயில் ஆடுவதறகென்றே கட்டப்பட்ட மேடை, இறுதியில் தூங்குவதற்குத்தான பயன்பட்டது. அதுவும் நண்பகலிலே வெயிலின் கொடுமைக்கு ஆற்ருது நிழலிலே மேடையிலே படுத்தால் தூக்கம் வராமல் என்ன செய்யும்? அந்த ஆழ்ந்த நித்திரையின்போதுதான்



"இந்த மாடு ரெண்டும்
தப்பிப்போச்சு வயலிலே"

உயர்ந்த வம்சத்து மாடுகள் இரண்டும் வயலிலே இருக்கும் பொழுது தப்பிச்சென்றுவிட்டன. தப்பிச் சென்றுவிட்ட மாடுகள் மீண்டும் கிடைக்கவில்லை! ஐயம் எழலாம். அதையும் பாண்டியனே கூறுகிருன்.

"இங்கே புடிச்சிக் கொண்டு
மாட்டிட்டானே பவுண்டு
ரோட்டுச் செயிலிலே"

கடைசியில் மாடுகள் இரண்டும் 'பவுண்டில்' அல்லவா அடைப் பட்டிருக்கின்றன. தப்பி வந்த கால் நடைகள், அடுத்தவர் பொருளை நாசம் செய்யும் கால் நடைகள் முதலியவைகளை அடைத்து வைப்பார்களே 'பவுண்டு' என்ற இடத்தில். நல்ல வேளை வேறு எங்கேயும் காணுமறபோய் விடவில்லை. பவுண்டில் தானே அடைபட்டிருக்கிறது. பணம் கொடுத்து மீட்டு விட்டால்போகிறது. கந்தசாமியின் கோபம் ஓரளவு தான் தணிந்தது. பண்டியனின் கவலைக்குக்காரணம்தான் புரிய

வில்லை? யோசிக்கிருன். மாடுகளை மீட்கப் பணத்திற்கு என்ன செய்வதென்ற யோசனையா? பாண்டியனிடம் எதையோ சுட்டிக்காட்டிப் பேசுகிருன். அவ்வளவுதான் கவலை தோய்ந்த முகத்தில் களிப்பல்லவா பொங்குகிறது. ஆம! பாண்டியனின் உளளங் கவர்ந்தவள! வடிவு! தூரத்தே துணி துவைத்துக் கொண்டிருக்கிருள். நிச்சயம் அவளிடம் பணம் இருக்கும், பாண்டியனுக்கு என்ருல் நிச்சயம் கிடைக்கும். ஒன்றுபட்ட மனத்தினர் அல்லவா? தீர்மானித்ததுதான் தாமதம. கீழே விரித்திருந்த துண்டை தரையில் ஒரு உதறு உதறிவிட்டு தலையில் முண்டாசு கட்டிக்கொண்டு வேட்டியை மடித்துக் கட்டியவாறே வடிவு இருககுமி இடத்திற்கு ஓடுகிருன. அதோ! பாருங்கள் அவன் தன் 'இனியவளிடம். பேசிக் கொண்டிருப்பதை!

கந்தசாமி:—

மயிலாப்புரம் புல்லாக் காளை
மாடக் கொம்பு சிவலக்காளை
மாடு ரெண்டும் தப்பிப்போச்சு
மலையிலே அடடா மதிகுறைவா!
இப்போ இருக்கிற விலையிலே
அடடா மதி குறைவா
உன் மண்டையிலே
மூளையில்லே தலையிலே

பாண்டியன்:—

மாமரமாம் மல்லிகைத் தோப்பாம்
மயிலாடும் மஞ்சண மேடையிலே-நான்
மறந்தாப்பலே உறங்கிட்டேன்—
நிழலிலே
இந்த மாடுரெண்டும தப்பிப்போச்சு—
வயலிலே
இங்கே புடிச்சிக் கொண்டு
மாட்டிட்டானே பவுண்டு
ரோட்டுச் செயிலிலே

களளமற்ற உள்ளத்திலிருந்து வெளிவரும் இனிய எளிமையான பாடல் எத்தகையதாய் அமைந் திருக்கிறது.? இலக்கணத்திற்குக் கட்டுப்படாமல், எளிமையோடு விளங்குவது கிராமீய இலக்கியம். மக்களதம உளபபாங்கினை நாட்டுப பாடல்களின் மூலம் நாம அறியக் கூடும. மேற்கண்ட பாடல் கிராமங்களில் பாடப்படுகிறது. விடுமுறையிலே கிராமத் திறகுச் சென்றபொழுது, ஒரு இளைஞன் மேற்கண்ட பாடலைப் பாடியதன் விளைவே இச்சிறு விளக்கம். மாறி வரும் காலத்திற்கேற்ப நாம கிராமிய இலககியஙகளுக்கு ஆதரவு கொடுத்து வளர்க்க முறபட வேண்டும். வளர்க கிராமிய இலக்கியம்.

"......சட்டசபைக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை, சாதாரணக் கைதிகளைப் போல் நடத்தாமல் மரியாதையோடு நடத்த வேண்டுமென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. திருடர்களையும் கொள்ளைக்காரர்களையுமே மனிதத் தன்மையுடன் நடத்த வேண்டும் என்ற கருத்து நிலவும் காலம் இது. எதற்கெடுத்தாலும் இப்பொழுது மரியாதை வாரங்கள் வேறு நடத்தப்படுகின்றன. அப் படிப்பட்ட இந்நாளில், எதிர்க் கட்சி அரசியல் தலைவர்களுக்கு மதிப்புக் கொடுக்கவில்லை என்பது வருந்தத்தக்க காரியம்தான்.

ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் மாஜிஸ்டிரேட்டுகள் விசாரணையின் போது காங்கிரஸ் தலைவர்களுக்கு ஆசனங்கள் அளித்து உட்காரச் சொல்லியிருக்கிருர்கள். காங்கிரஸ் ஆட்சியில் அந்த மரியாதைக்குக் கூட இடமில்லாமல் போய்விட்டதா?

'ஆனந்த விகடன்'
26—1—58

ஆஸ்திரேலியா

[கோ. கோதண்டராமன்]

ஆஸ்திரேலியா, பிரிட்டிஷ் காமனவெல்த்நிற் குட்பட்டடொமினியன் நாடுகளில் ஒன்ருகும். இதன் பரப்பு 29 74,581 சதுர மைல்கள். இந்நாட்டின் மொத்த மக்கள் தொகை 7,400,000-பேர். பரப்பில் இந்நாடு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அளவினதாகும். பரப்பில் விரிந்த நாடாயினும் தட்ப வெப்ப நிலைகளினல் பெரும் பாகம், மக்கள் குடியேற்றத்திற்கு ஏற்றதாக இல்லை. இத்துடன் நாட்டின் உட்பகுதிகள் கரம்பு நிலமாக உள்ளன. இதனல், பெரும்பாலும் மக்கள் தென்கிழக்குப் பகுதிகளிலும், பாதிக்கு மேற்பட்டவர்கள், சிட்னி மெல்போர்ன, பிரிஸ்பேன், அடிலெய்ட், பெர்த், ஹோபர்ட் என்ற ஆறு மாநிலத் தலைநகர்களிலேயே வாழகிருர்கள். அங்கு வாழும் மக்களில் பெரும்பாலானவர்கள் ஆங்கிலேயர்கள். மிகுதி மக்களில் மற்ற ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்கள போக, சுமார் 60 000 பேர் அந்நாட்டின பூர்வீகக் குடிகளாவர். ஆஸ்திரேலியா மிகச் செழிப்பு வாயந்த ஒரு நாடாகும. முயற்சி செய்தால் இன்னும அதிகமான மக்கள் அங்கு குடியேற முடியும். வறுமையில் உழலும தென்கிழக்கு ஆசிய மக்களில் பலர், அஙகு கூலிகளாக உழைப்பதற்குக் கிடைப்பதால் ஆஸ்திரேலியா தன் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் கட்டிக் காகக முடிகிறது அணமையில் வெள்ளையர்களின குடியேற்ற நாடாக மாறிய ஆஸ்திரேலியா, வகுப்பு வேற்றுமைகளையும், சர்வாதிகாரப் போக்கையும் அறவே ஒழித்து, எல்லோப்புற ஜனநாயகம் போன்ற ஒன்றினைக் கொண்டு இலங்குகிறது.

இரண்டாவது உலகப்போருக்கு முன்வரை, ஆஸ்திரேலியப் பொருளாதாரம் பெரும்பாலும் கம்பளி, கோதுமை உற்பத்தியையே ஒட்டி இருந்தது. போர்த் தளவாடங்களை உறபத்தி செய்யும் தேவை ஏற்பட்ட உடனே, சிறிது சிறிதாக இந்நாட்டின் பொருளாதாரம் தொழிற் றுறையின் பக்கம் சாய்ந்தது. போர்க் காலத்தில் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களின் எண்ணிக்கை முன்பை விட ஏழு லட்சம் அதிகரித்தது.

இப்பொழுது டாஸ்மேனியா என்றழைக்கப்படும் வான் டைமன்ஸ் லாண்ட் என்ற பகுதியில் குடியேறியதற்குப் பின்னரே, அதாவது பததொன்பதாம் நூற்ருண்டின் தொடக்கத்திலேயே வெள்ளையர்கள் ஆஸ்திரேலியாவில் குடியேறிஞர்கள.

முதன் முதலில் மாநில சுயாட்சி 1842-ம ஆண்டில் புதிய தென் வேல்ஸில் கொண்டுவரப்பட்டது. இதைத் தொடர்ந்து 1855-ம் ஆண்டில் பொறுப்புள்ள அரசாங்க முறை வேறு மாநிலங்களிலும் புகுத்தப்பட்டது. 1901-ம் ஆண்டில் நிறைவேற்றபபட்ட குடியரசு அரசியலமைபபுச் சட்டத்தின்படி, ஆஸ்திரேலியாவில் ஒரு கூட்டாட்சி மலர்ந்தது. இன்றைய ஆஸ்திரேலிய அரசாங்கம் ஆறு மாநிலங்களைக் கொண்டதாகும. அவையாவன:—புதிய தெனவேல்ஸ், விக்டோரியா, தெற்கு ஆஸ்திரேலியா, டாஸ்

மேனியா, குயின்ஸ்லாந்து, மேற்கு ஆஸ்திரேலியா. இதுதவிர வேறு சில பிராந்தியங்களும் சிற்சில சிறு தீவுகளும் உள்ளன.

ஆஸ்திரேலிய அரசியலமைப்புச் சட்டத்தை ஆக்கியவர்கள், அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா இவ்விரு அரசியலமைப்புச் சட்டங்களின அடிப்படையையே துணைக்கொண்டனர். மேற்குறித்த இருநாட்டு அரசாங்கங்களைப் போலவே, ஆஸ்திரேலியாவில் முன்னரேநிலவிய மாநிலங்களை இணைத்து ஒரு மத்திய சர்க்காரைத் தோற்றுவிபபது அவசியமாயிற்று. ஆழ்ந்த சிந்தனைக்கும் பரிசீலனைக்கும் பின் அமெரிக்க மாதிரி கூட்டாட்சி முறை இந்நாட்டிற்கு ஏற்றதெனத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இம்முறையில் பெடரல் அரசாங்கத்திற்கு உயர்ந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டன. எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டன. ஆஸ்திரேலியப பெடரல் அரசாங்கத்திற்கு, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பெடரல் அரசாங்கத்திற்கு அளித்திருப்பதை விட, அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக, திருமணம், திருமண ரத்துப் பற்றிய சட்டங்களை இயற்றும அதிகாரங்களும் பெடரல் அரசாங்கத்துக்கு உண்டு.

கூட்டாட்சி முறையைப் பொறுத்தவரை ஆஸ்திரேலியா, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைபபை ஒட்டியது. கீழ்ச் சபையின் ஆதிக்கத்துக்குட்பட்டு, பிரதம மந்திரி தன மந்திரி சபையை நடத்திச் செல்வார். பிரதிநிதிகள் சபை என றழைக்கப்படும பாராளு மனறக் கீழ்ச்சபை 74 உறுபபினர்களைக் கொண்டதாகும. இந்த உறுபபினர்களைத் தெரிந்தெடுககும் தேர்தலில், வயது வந்தவர்கட்கெல்லாம் வாக்குரிமை உண்டு. மக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பிரிக்கப்பட்ட மாநிலத் தொகுதிகளில் இருந்து இவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். செனட் என்றழைக்கபபடும மேல் சபை 6 உறுபபினர்களைக் கொண்டது. இவ்வுறுப்பினர்களின் ஆயுட் காலம் ஆறு ஆண்டுகளாகும. அதற்குப பின, ஒரு உறுபபினர் அங்கம வகிக்க வேண்டுமெனறால் மூன்று மூன்று ஆண்டுகளாக அவ்வுறுப்பினரின் ஆயுட் காலம் நீடிககபபடும.

எல்லா மாநிலங்களின் ஒப்புதலைப் பெற்றதும், ஆங்கிலப பாராளு மன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்று, ஆஸ்திரேலிய அரசியலமைபபுச் சட்டம 1900-ம ஆண்டில் அமுலுக்குக் கொணடு வரபபட்டது. கனடாவில் அரசியல் அமைபபுச் சட்டத்திற்குத் திருத்தம வேண்டுமெனறால், பிரிட்டிஷ் வட அமெரிககச் சட்டம் பிரிட்டனில் முதலில் திருத்தப்படவேண்டும். ஆனல் ஆஸ்திரேலியாவில் பிரிட்டனின தலையீடு இனறியே அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படலாம். ஆனல் அதற்குச் சில நிபந்தனைகள் உண்டு. பாராளு மன்றச் சபைகள் இரண்டிலும் மெஜாரிட்டி இருக்க வேண்டும. இதனறியும பெருவாரி மாநிலங்களில் வாக்காளர்களின் ஒப்புதலையும் பெறவேண்டும. அரசியலமைப்புச் சட்டத்திற்குத் திருத்தங்கள் கொண்டு வரும முறை எளிதுதான் என்ருலும. அரசியல் அமைபபுச் சட்டத்தில் குறிபபிடத்தக்க மாறுதல்கள் ஏதும கடந்த ஆண்டுகளில் நிகழவில்லை.

ஆஸ்திரேலியாவின் அரசியல் கட்சிகளில் மிகவும் பலம் வாய்ந்த தேசியக் கட்சி தொழிற் கட்சிதான். 1941-முதல் 1945-ஆண்டு வரை பிரதமராக இருந்த ஜான் கார்டின் எனபவருடைய தலைமையில் அது இயங்கியது. அதற்குப் பின் ஜோசப். பி. சீபளி எனபவரின் தலைமையில் இயங்கியது. முதன் முதலில் எதிர்க் கட்சிகளிடையே ஒற்றுமை நிலவச் செய்வது மிகவும கடினமாக இருந்த போதிலும 1944-ம ஆணடில் இருந்து முனனாள் பிரதமரான ராபர்ட் கார்டன மெனசிஸ் எனபவரால் லிபரல் கட்சி எதிர்க்கட்சியாக இயங்கியது. இப்பொழுது மறுமுறையும் ராபர்ட் கார்டன மெனசீஸ் கட்சியே ஆட்சி செய்கிறது.

இரண்டாவது உலகப்போருக்கு முன் தொழிற்கட்சி செனட் சபையில் 22-இடங்களையும் கீழ்ச்சபையில் 49-இடுங்களையும் பெற்றுத் திகழ்ந்தது.

அடிப்படைத் தேவைப பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் யாவும அரசாங்கத்தின் கையிலேயே உள்ளன. ஆஸ்திரேலியத தொழிற் கட்சி இன்னும் விரிந்த முறையில் தொழில் ஸ்தாபனங்களைத் தேசிய மயமாக்க வேண்டும் எனறு கருதுகிறது. சமூக இன்ஷுரன்ஸ் திட்டத்தையும விரிவுபடுத்த வேண்டும் என்றும அதுவிரும்புகிறது. தொழிற் கட்சி அரசாங்கத்தின மிகச்சிறந்த சாதனை எனனவெனறல், தொழிற் பிரச்னை சமபந்தமான வேலைநேர நிர்ணயிப்பு, தொழில்களின் நிலைமை, கூலி பற்றிய தகராறுகளை சுமுகமான முறையில்தீாத்துவைக்க, காமனவெல்த் தொழிற கோர்ட்டுகளைத் தோறறுவிபபதாகும ★

"......லட்சம் பேர் கூடி தக்கதொரு தலைவரின்கீழ் நேருவுக்கு கருப்புக்கொடி காட்டியிருப்பினும் ஒன்றும் குடிமுழுகிப் போய் விடாது. அதைவிட மோசமான அளவில் பஞ்சாபில் சீக்கியர் கோயிலிலும், ஆமதாபாத்தில் மாணவர் கூட்டத்திலும், பம்பாய் ராஜ்யத்தில் மராத்தியரிடையிலும் நேருவுக்கு எதிரே ஆர்ப்பாட்டங்கள் நடந்திருக்கின்றன. ஆனல் காமராசர் ஆட்சி, முன்ஜாக்கிரதையென்ற பெயரால் தி. மு. க. தலைவர்களைக் கைது செய்து அராஜக செயல்களுக்கு அழைப்பு விடுத்தது......வெளி ஜில்லாக்களிலும் தி. மு. க.-க்கள் அணி அணியாகக் கைது செய்யப்பட்டிருககின்றனர். இதுவும் தேவையற்ற நடவடிக்கை என்றே நாம் கருதுகிறோம். அடக்குமுறையின் மூலம் ஒரு கட்சியை அல்லது கிளர்ச்சியை அடக்கிட முடியுமானல், பிரிட்டிஷ் ஆட்சியின் அடக்குமுறையால் காங்கிரஸ் அழிக்கப்பட்டிருக்கலாம்......"

"செங்கோல்" 12—1—58

*

"...... அமைச்சருடைய கைவசமுள்ள அரசியல் வேதத்திலே, பஞ்சமா பாதகங்களோடு சேர்த்து எண்ணப்பட வேண்டிய ஆறுவது பாதகம், பிரதம மந்திரிக்கு எதிராகக் கறுப்புக் கொடி பிடிப்பது போலும்! அதைக் காட்டிலும் பயங்கரமான குற்றம், கூட்டம் போட்டுப் பிரதம மந்திரியைக் கண்டிப்பது போலும்!

......பிரதம மந்திரியைக் கண்டிப்பது அனுமதிக்கப்படாதென்றல அப்புறம் தேர்தல் எதற்கு, ஓட்டுரிமை எதற்கு, பேச்சுரிமைக்கு உறுதியளிக்கும் அரசியல் சட்டம் எதற்கு, இந்தியக் குடியரசு என்கிற ஆடம்பரப் பெயர்தான் எதற்கு? "குமுதம்" 1-2-58

ஒலிபெருக்கி வைத்து!

பணாதிக்கம் உள்ள சமூகத்தில், செல்வர்கள் வைத்ததே சட்டம். அவர்கள் வசமே, வியாபாரமும், பாங்குகளும் இருப்பதால், எப்படி வேண்டுமானாலும், சமூகத்தை ஆட்டிப் படைக்க முடியும்.

வியாபாரம் கெடவும், பணப் புழக்கம் தடையாகவும், சமூகம் எதிர்பாராத நெருக்கடிக்கு ஆளாகும்படியும், இன்றுள்ள பணாதிக்கக்காரர்களால் செய்ய முடியும். அவர்கள் நினைத்தால், ஆலைகளைத் திடீரென்று மூடலாம்—வியாபாரத்தை யாருக்கும சொல்லாமல் நிறுத்தலாம். ஒரு ஆலை மூடப்பட்டால் பல்லாயிரக் கணக்கான மக்கள் வீதிகளிலே அலைய நேரும்! வியாபாரம், மூடப்பட்டால், பொருள்கள் முடக்கப்பட்டு பொதுமக்கள் அல்லாடக்கூடும்!!

இப்படித் தனிப்பட்டவர்கள் வசம், ஆலைகளும், வாணிபமும் இருப்பதால், அவர்களுக்குத் தக்க பாதுகாப்புத் தரவேண்டிய அவசியம், ஒரு அரசுக்கு ஏற்படுகிறது. எங்கே ஆலைகளை மூடிவிடுவார்களோ, அதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் நமது ஆட்சிக்கு நிம்மதியற்ற நிலையை உண்டுபண்ணுவார்களோ, வாணிபம் நிறுத்தபபடுமோ, அப்படியாயின் கப்பல்களில் வந்த பொருள்கள் இறக்கப்படாமல், கடைகளை நாடிச் செல்லும மக்கள் சாமான் கிடைக்காமல் திண்டாட நேருமோ, என்கிற அச்சம், முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தில் நிச்சயம் ஏற்படும்.

கிஷின் சந்த், பெரிய ஆலையரசர்! அவர் பெரிய பெரிய இயந்திரங்களை வரவழைக்கிறார்-பணம் போதவில்லை; அப்போது, என்ன செய்கிறார். பாங்கில். 'ஓவர் டிராப்ட்' பணம் பெறுகிறார். பணம் கொடுக்க பாங்கு மறுத்தால், அவர் ஆலைகளை மூடிவிடுவார்! ஆலைகள் மூடப்பட்டால் உற்பத்தியும குறையும் உழைப்பாளர்களும் அவதியடைவர். ஆகவே, பாங்கு, கடன் கொடுக்க முன்வருகிறது. இவ்வளவுதான் கொடுக்கலாம். இப்படித்தான் கொடுக்கவேண்டும், என்கிற விதிகளை அரசு வைத்திருக்கலாம். ஆனால், சங்கடமான நேரத்தில், கடன் கொடாமல் ரிசர்வ் பாங்கைக் கட்டுப்படுத்தினால், ஆலையரசர் முறைத்துக் கொள்வார்? விளைவுகள் விபரீதமாகும்!!

[அண்ணல்]

ஆகவே, அரசு, பல்வகையிலும் - ஆலையரசர்களையும், பெரிய வியாபாரிகளையும் தட்டிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்கான உதவிகளையும் செய்து தரும் அவசியம் ஏற்படுகிறது. பாங்குகள் மூலமும், ஏற்றுமதி இறக்குமதித் துறையிலும், அவர்கள் பலனடையும் வாய்ப்புகளைச் செய்துதர நேருகிறது.

பணம் படைத்தவர்களும், இந்த வசதிகளை அரசிடமிருந்து பெற வேண்டியவர்களாயிருப்பதால், அரசுக்கு ஒத்தூதவும், குல்லாப் போடவுமான அவசியத்துக்கு ஆளாகிறார்கள்.

உதாரணத்துக்கு, எங்கும் போகவேண்டியதில்லை! செட்டிநாட்டு முத்தையா போன்றவர்களே, போதும். எந்த அரசு வந்தாலும், இவர்கள், வேண்டியவர்களாவார்கள. முதலாளித்துவ அடிப்படையில் முகிழ்க்கும் எந்த அரசானாலும், இவர்களை, வேண்டியவர்களாகக் கொள்ளவே செய்யும்.

டாடாக்களும், பிர்லாக்களும், கோயங்காக்களும, இன்று கோலேந்தியவர்களின் சகாக்களாக ஏனிருக்கின்றனர் என்பது நன்கு விளங்கும். கோலேந்தியவர்களும், இவர்களைக் கூட்டிவைத்துக்கொண்டு குலவுவதன் நோக்கம் இதுதான்.

சீமான்கள் நினைத்தால், 24 - மணி நேரத்தில், இந்த அரசுக்குப் பல இடையூறுகளைச் செய்துவிட முடியும், ஏனெனில், வாணிபமும், பாங்கும் அவர்கள் வசமே இருக்கிறது. இன்றைய பொருளாதார அமைப்பில், ஒரு நாட்டின் செல்வவளம், இந்தத் துறைகளைப் பெரிதும் சார்ந்தே இருக்கிறது.

வியாபாரம் - வியாபாரத்துக்குத் துணையாகப் பாங்கு - பாங்குக்குத் துணையாக இன்சூரன்ஸ் அமைப்பு. இந்த மூன்றும் ஒன்றையொன்று சார்ந்தவை! ஒரு நாட்டின் செல்வத்தை வளைக்கவும்; நிமிர்க்கவும் கூடியவை!!

இன்சூரன்ஸ் கம்பெனிக்கு 7- ரூபாய் கட்டுகிறான், ஏழுமலை. பாங்கில், மாதம் 10 - ரூபாய் போடுகிறாள் பத்மா. இவர்கள் போடும் பணம், பாங்கிலும் இன்சூரன்ஸ் கம்பெனியிலும், அப்படியே தூங்குவதில்லை! நாட்டிலிருக்கும் பல்லாயிரக்கணக்கான ஏழுமலைகளும், பத்மாக்களும் இலட்சக் கணக்கான ரூபாய்களை, இந்த இரு நிறுவனங்களிலும் போடுகிறார்கள். பாங்கில் 'டெபாசிட்' செய்தால், போட்ட பணத்துக்கு மூன்று சதவிகிதம், ஐந்து

சதவிகிதம், என்று "வட்டி" தருகிருர்கள். இன்சூரன்ஸ் கம்பெனிகளும் ஆண்டு முடிவில், வந்த "இலாபம்" இவ்வளவு, அதைப் பங்குதாரர்களுக்கு இப்படியிப்படி பகிர்ந்துகொடுத்தோம் என்று சொல்லுகிருர்கள். பாங்குக்கு, வட்டிகொடுக்க ஏது பணம்? இன்சூரன்ஸ் கமபெனிக்கு, இலாபம் கொடுக்க எங்கிருந்து பணம் வந்தது?

ஏழுமலைகளும் பத்மாக்களும் செலுத்தும் பணத்தை, டாடாவோ, பிர்லாவோ "ஓவர் டிராப்ட்" கேட்டால் கொடுக்கிருர்கள். அதற்கு வட்டி வாங்கி, பிரித்துக்கொடுக்கிருர்கள். ஏன், அவர்களுக்குக் கடன் கொடுக்கப்படுகிறதென்ருல், வாணிபமும் உற்பத்தியும் செழிக்க!! இப்படியொரு சங்கிலித் தொடர்பு இருப்பதாலேயே பல சீமான்கள், சொந்தப்பொறுப்பில் பாங்குகளை அமைத்து நடத்தி வருகிருர்கள் — கொஞ்சக் காலத்துக்கு முன்புவரை இன்சூரஸ் கம்பெனிகளையும் நடத்திவந்தார்கள்.

டால்மியா நடத்திவந்த பாரத் இன்சூரன்ஸ் கம்பெனி, ஏழுமலைகளும் பத்மாக்களுமாகச் சேர்ந்து போட்டிருந்த மூன்று கோடி ரூபாயை, மனம்போன போக்கில் தன் சொந்த உபயோகங்களுக்குப் பயன்படுத்திக்கொண்டது. திடீரென, அரசு, அதைக் கண்டு பிடித்தபோது, தனிப்பட்ட முதலாளிகள் வசமிருக்கும் பல இன்சூரன்ஸ் அமைப்புகள், இப்படியே செய்கின்றன என்கிற உண்மை புலப்படவே, டில்லி அரசு, "தனியார் வசம், இன்சூரன்ஸ்கள் இருக்கக் கூடாது. அரசே, ஏற்று நடத்த வேண்டும்" என்று திட்டம் போட்டனர். தேசிய மயமாக்கினர். இன்சூரன்ஸ் தொழில் தனியார் கையிலிருந்து பிடுங்கப் பட்டது.

இப்படிச் செய்த அரசு, மற்ற துறைகளான, உற்பத்தி—வாணிபம், பாங்கு முதலியவைகளையும் தன் வசமாக்கியிருக்க வேண்டுமல்லவா? இன்னும் செய்யவில்லை! பாங்குகளைப்பற்றிக் கேட்டால் தனியார் எத்துணை பாங்குகளை— இந்தியன் பாங்கு, இண்டோ கமர்ஷியல் பாங்குபோல—நடத்திலும், அவைகள் எமது கண்காணிப்பிலேயே உள்ளன. ரிசர்வ் பாங்க், ஸ்டேட் பாங்க் மூலம், அவைகளைக் கண்காணித்தே வருகிருேம் என்று சொல்லுகிருர்கள். ஆனல், உற்பத்தியும் வாணிபமும்? அது, பிரபுக்களின் வேட்டைக் காடாகவேயிருந்து வருகிறது! இந்தப் பிரபுக்கள் நினைத்தால், வாணிபத்தை வளமும் ஆக்கலாம்—வற்றவும் செய்யலாம்!!

*

சரோஜாமில், நல்ல துணிகளை நெய்கிறது — ஜப்பானிலிருந்து பேனக்கள் வருகின்றன. இரண்டையும், மக்களுக்குக் கிடைக்கும்படிச் செய்பவை, வியாபாரத்திலிடுபடும் கமபெனிகள். இது போன்ற பெரிய கம்பெனிகள் ஏராளம் உள்ளன.

வெளிநாட்டுப் பொருள்களை வரவழைக்கவும், உள்நாட்டுப் பொருள்களை விற்கவுமான பொறுப்புகள் இந்தக் கமபெனியின் வசமே உள்ளன. இவைகளை நடத்துவோர், பெரிய பெரிய பிரபுக்களாகும்! இந்தக் கம்பெனிகளில் பல, லிமிடெட் கம்பெனிகளாகும். ஒவ்வொரு கம்பெனியிலும், பல பங்குதரரர்கள் இருப்பார்கள். அந்தப் பங்குதாரர்களின் சார்பில், டைரக்டர்கள் இருப்பார்கள். டைரக்டர்களுக்கு மேல், மானேஜிங் டைரக்டர் இருப்பார். ஒரு கம்பெனியில், இலட்சம் பங்குகளிருப்பதாக வைத்துக்கொள்வோம்! 60,000 பங்குகளுக்கு உரியவர், மானேஜிங் டைரக்டராக இருப்பார். மீதிப் பங்குகளில் 20,000; பத்தாயிரம்; 5000 என்று வழங்கியவர்கள் டைரக்டர்களாயிருப்பார்கள். கம்பெனிக்கு ஆண்டு தோறும் நல்ல இலாபம் வருகிறது! நிறைய மிச்சம் வருகிறது—என்ருல், இந்தக் கம்பெனியின் மதிப்பு உயரும் போது அந்தக் கம்பெனியிலுள்ள 'பங்கின்'மதிப்பும் உயரும். ஒரு பங்கின் மதிப்பு 10-ரூபாய் என்ருல், இலாபம் அதிகம் வந்த பிறகு 10-ரூபாய் மதிப்புள்ள ஒரு பங்கு 15-ம் ஆகலாம், 50-ம் ஆகலாம்!!

பெத்தாச்சி செட்டியாரிடம், பணம் இருக்கிறது. அவர், ஏதாவது 'பிசினஸ்' செய்ய ஆசைப்படுகிருர். மார்க்கெட்டில் ஒரு கம்பெனி, நன்ருகப் பிசினஸ் செய்து வருவது தெரிகிறது. அதில் தன் பணத்தையும் போடும் ஆசை, அவருக்கு வரலாமல்லவா? புரோக்கர்களைப் பிடிக்கிருர்! கம்பெனியிலுள்ள பங்குகளை, வாங்க விரும்புகிருர். பேரம் நடத்தப் படுகிறது--பங்கு, கைமாறுகிறது. பெத்தாச்சியின் பங்கை இன்னும் கொஞ்சக் காலம் கழித்து ஹீராசந்த் வாங்க முனைகிருர். பங்குக்கு இலாபம் வருகிறது! கம்பெனி எங்கேயோ இருக்க, அங்கே பாடுபடுபவர்கள் யாரரோ இருக்க, அதன் பங்குகள் இப்படியெல்லாம் நாடு முழுவதும் ஒவ்வோர் நாளும் விலை பேசப்படுகின்றன!! கம்பெனிகளுக்கு மட்டுமல்ல, பொருள்களை உற்பத்திசெய்யும் ஆலைகள் உள்ளனவே — அவைகளின் பங்குகளை வாங்கவும், இப்படிப் போட்டிகள் நடந்து கொண்டே உள்ளன. இதனைச் செய்யவே, 'பங்கு மார்க்கெட்' என்பது இருக்கிறது. ஷேர்களின் மதிப்பின பேரில், வெறும் சூதாட்டம் நடக்கிறது.

இருந்த இடத்தைவிட்டு எங்கும் போகாமல், டெலிபோனை மட்டும் வைத்துக்கொண்டே, இந்தப் பங்குகளின மீது "பேரம்" நடத்தி, இலாபம் காணும் இலட்சாதிபதிகள் உண்டு.

இப்படிப்பட்ட பேரங்களையும், வியாபார முறைகளையும், இந்தக்கிழமை நேரு அவர்கள் பம்பாயில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில், கண்டித்திருக்கிருர். உண்மையான செல்வம், இப்படி 'பங்கு மார்க்கெட்' பேரம் செய்வது அல்ல/ உழைப்பில் இருக்கிறது/! பங்கு மார்க்கெட்டுக்கு ஓடுவதும்; அதன் மூலம் இலாபம் தேட நினைப்பதுமா, செல்வம்? அல்ல! அல்ல/! உழைப்பே, செல்வம். உற்பத்தியே செல்வம் என்று முழக்கமிட்டிருக்கிருர்.

நேரு அவர்கள் கூற்று நூற்றுக்கு நூறு உண்மை! செல்வம், பங்கு மார்க்கெட்டில், இல்லை. ஆனல், இன்று செல்வம் கொழிக்கும் இடமாக "பங்கு மார்க்கெட்" விளங்கக் காரணம் என்ன? வாணிபமும், உற்பத்தியும் தனியார் வசமிருப்பதுதான்! இலாபமும், வருவாயும் பெற்றுச் சீமான்களாக விரும்புவோர், இந்த மார்க்கெட்டுகளையே தேடி ஓடுகின்றனர்!! அப்படிப்பட்ட சீமான்களுக்கு, நேருவின் அரசு, அடைக்கலமும் ஆதரவும் தரக் காத்துக்கொண்டிருக்கிறது—"ஓவர் டிராப்டா", "ஷேர்களை வாங்கிக்கொள்ள வேண்டுமா?", என்றெல்லாம், ஓடோடியும் செய்கிறது.

இந்தப் போக்கின் காரணமாக விளைந்த ஒரு விபரீதம்தான், முந்திரா ஊழல். முந்திரா, பல கம்பெனிகளுக்கு மானேஜிங் டைரக்டர். ஒரு கம்பெனியின் முதலை எடுத்து, இன்னென்றுக்குப்போடுவதும், அதிலிருந்து இன்னொரு புதுக் கம்பெனியை அமைப்பதுமாகப் பல திருவிளையாடல்களை செய்துகொண்டிருந்திருக்கிருர்.

அரிச்சுவடி மட்டுமே படித்த முந்திரா, ஒரு அரசே அல்லாடுமளவுக்குச் செய்திருக்கிருர்!!

அவருக்குப் பணமுடை ஏற்பட்டது—என்ன செய்யலாம் என்று பார்த்தார். அவருடைய கம்பெனிகள் நன்ருக நடந்தும், அவரது திருவிளையாடல்கள் காரணமாக, பணம வைத்திருக்கும் பெத்தாச்சி செட்டியார் போன்றவர்கள் அந்தக் கமபெனியின் 'பங்கு'களை வாங்க அஞ்சினர்கள். பங்குகளை விற்பதன் மூலம், இன்னொரு கம்பெனிக்கு அதிபதியாக விரும்பிய முந்திரா, இந்திய அரசை நாடினர்! பண உதவி செய்யுங்கள் என்ருர்! -இல்லாவிடில், என் கம்பெனிகள் முறியும்—அது நாட்டின் வாணிபத்தைப்பாதிக்கும் என்ருர். டில்லியும், அவருக்கு, ஏழுமலைகளும் பத்மாக்களும் கட்டிய தன் மூலம் சேர்ந்திருந்த இன்சூரன்ஸ் கம்பெனிப பணத்தை எடுத்து, "உதவி"யிருக்கிருர்கள். ஒன்றரைக் கோடிக்கு அவரது கம்பெனியின் "ஷேர்"களை இன்சூரனஸ் கம்பெனியார் வாங்கினர்கள்!! உண்மையில், அந்த ஒனறரைக் கோடி ரூபாய் மதிப்புண்டா,அந்த "ஷேர்"களுக்கு என்று பார்த்தால், ஏமாற்றம் கிளம்பியது. ஊழல் நடந்திருப்பதாகத் தெரிய வந்தது-இபபோது, யார் முந்திராவுக்கு உதவ முன்வந்தது என்பதைக் கண்டுபிடிக்க விசாரணை நடக்கிறது.

நிதி மந்திரி கிருஷ்ணமாச்சாரி, டில்லி நிதிக் காரியதரிசி படேல, இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் சேர்மன் காமத், ரிசர்வ் பாங்க் கவர்னர் அய்யங்கார்—இப்படி, யார் இந்தியாவின் "நிதி"யை நிர்வகிக்கிருர்களோ, அவர்கள் தலையெல்லாம் உருளுகின்றன! இன்சூரன்ஸ் கார்பபரேஷன்காரர்கள், தவறு எங்கள் மீதில்லை, நிதிக்காரியதரிசி மீதுதான் என்கின்றனர்-அவரோ, நிதி மந்திரியின் சொற்படிதான், நடந்தேன் என்கிருர். நிதி மந்திரியோ, "முந்திராவின் திருவிளையாடல்களை முன்னமே அறிவேன். ஆயினும், வாணிபம் கெடாமலிருக்க, என் இலாகா இந்த முடிவுக்கு வந்தது", என்கிருர். இப்படி, வழக்கு, நடக்கிறது பம்பாயில்.

வழக்கைக் காணத் தினசரி ஏராளமான மக்கள் கூடுகிருர்களாம் பம்பாயில்! நீதிமன்றம் நிரம்பி வழிவதால், வெளியிலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் நிற்கிருர்கள். வழக்கின் நடவடிக்கைகளைக் கேட்பதற்காக, ஒலி பெருக்கி ஏற்பாடுகளும் செய்யப் பட்டிருக்கிறதாம்!!

"ஒலிபெருக்கியா வைப்பது?", என்று பம்பாயில் பேசிய நேரு தெரிவித்திருக்கிருர்! டி. டி. கே. யின் மானமும், நிதியை நிர்வகிப் போரின் தாராதரமும், ஒலிபெருக்கி மூலம் வெளியாகிறதே என்கிற வேதனையும் — மக்கள் இவ்வளவு பரபரப்பும் ஆர்வமும் காட்டுகிருர்களே, நமது மானமன்ருே பறக்கிறது என்கிற சங்கடமும் தென்படுகிறது அவரது பேச்சில்!

ஆலையரசர்களை ஒருபுறம் வளர்த்துவிடவும், இன்னொரு பக்கம் சோஷியலிசம் பேசவுமான 'மாடல் சோஷியலிசம்' பேசப்படும் வரையில், இதெல்லாம் நடக்காமலிருக்காது.

அரசு. எல்லாத் துறையிலும் ஒரேவிதமான கொள்கையைப் பின்பற்ற வேண்டும். இன்சூரன்ஸ் கம்பெனியைத் தேசீய மயமாக்கியதுபோல், நாட்டின் பொருளாதார வளத்தைப் பெருக்கும் வகைகளையும் தன்வசமே வைத்துக் கொள்ள வேண்டும். ஆலைகளையும், பொருள்களை விநியோகிக்கும் கம்பெனிகளையும், சர்க்காரே ஏற்று நடத்தவேண்டும்.

அதுதான் சோஷியலிசம் — மக்களாட்சி.

அதைவிட்டு, ஆட்டுக்கும் தோழன் நரிக்கும் நண்பன் என்கிற கொள்கை யிருப்பதால்தான் கோளாறுகள் முளைக்கின்றன.

"முந்திரா ஊழல்", விசித்திரமானது; பிறகு, விளக்குவோம் அதனை.

அடிப்படையினைச் சரியாக வைத்துக்கொள்ளாது, இப்போது மானம் கப்பலேறுவதைக் கண்டு, குழப்பமும் கோபமும் கொண்டு என்ன பயன்?

தொழில் சாம்ராஜ்யம் ஏற்படுத்த முயன்ருராம், முந்திரா! துணிச்சலுடன் தெரிவித்திருக்கிருர் !!

அதற்குத் துணைபோயிருக்கிருர்கள், நிதியை நிர்வகிப்பவர்கள். அடுத்த கிழமைக்குள், யார் தவறுக்குக் காரணம் என்பது தெரியக்கூடும்.

நம்மைப் பொறுத்தவரையில், இப்படிப்பட்ட ஊழல்கள், இன்றுள்ள அமைப்பு நீடிக்கும்வரை, ஏற்படவே செய்யும். இன்று முந்திரா! இன்னொரு நாளைக்கு ஒரு சந்திரா ஏற்படமாட்டார் என்று யாரும் உறுதி கூற முடியாது !!

ஒலிபெருக்கியா!!—என்று கேட்பதைவிட, ஒலிபெருக்கி மூலம் ஒரு விசாரணையில் கவனம் செலுத்துமளவுக்கு, மக்களின் பார்வை ஆட்சியின் மீதுள்ளது என்பதை உணரவேண்டும்.

அதற்குத் தக்கபடி, சமூக அமைப்பை மாற்ற முயற்சிக்க வேண்டும். உழைப்பே செல்வம்! — எனச் சண்டமாருதமாக முழக்கமிடுவதும், உண்டு கொழுப்போருக்குப் பண வாய்க்கால்களைத் திறந்து விடுவதும், ஊழல்களைத்தான் வளர்க்கும்.

கௌகத்தியில் இந்த ஆண்டு இந்திய காங்கிரசின் மாநாடு நடைபெற்றதல்லவா? இந்த மாநாட்டுக்கு மொத்தம் கால் கோடி ரூபாய் அதாவது 25 - இலட்சம் ரூபாய் செலவாகியிருக்கலாமென்று ஒரு சேதி கூறுகிறது! இது தவிர, இம் மாநாட்டுக்கென அம்மாநில அரசாங்கம் சுமார் அரை கோடி ரூபாய் செலவழித்திருக்கக்கூடுமாம்!! காங்கிரஸ் சரித்திரத்திலேயே கூட்டம் மிகவும் குறைவாக வந்த மாநாடு, இது. மாநாடு முடிவதற்கு ஒரு நாள் முன்னதாகவே, வந்தவர்களில் பெரும்பாலோர் மூட்டை கட்டிக் கொண்டு கிளம்பி விட்டார்கள்.

சேலம் மாவட்ட
தி. மு. க.

3-வது மாநாடு

1958 பிப்ரவரி 15, 16 சனி ஞாயிறு நாட்களில்
வேலூர் (சேலம்) 'அழகிரி' பந்தலில்
நடைபெறும்.

தலைவர் :	திறப்பாளர் :
கலைஞர் மு. கருணாநிதி எம். எல். ஏ.	நடிப்பிசைப்புலவர் கே. ஆர். இராமசாமி

அண்ணாதுரை, நாவலர் நெடுஞ்செழியன்
கழக முன்னணிச் சொற்பொழிவாளர்கள் கலந்துகொள்வர்.

இரு நாட்களிலும் கலை நிகழ்ச்சிகள் உண்டு.

இரு நாட்களுக்கும் நுழைவுக் கட்டணம்:—
ஆண்களுக்கு ரூ. 5, 3, 2, பெண்களுக்கு ரூ. 1.

பி. எம். குப்புசாமி — பொருளாளர்
ப. இராமலிங்கம் — செயலாளர்
ஜி. பி. சோமசுந்தரம் — வ. கு. தலைவர்
இரா. தாண்டவன்—தொண்டர் படைத் தலைவர்.

காஞ்சீபுரம், ௯௫, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

திராவிடநாடு

16—2—58 | வார வெளியீடு | விலை 16காசு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 FEB 1958
MADRAS

வெகுநாட்களில்லை!

[கே. சி. முல்லைவழுதி]

நஞ்சூறும் பல்லுள்ள நாகத் திற்கும்
நலிவின்றி உயிர்வாழப் புற்று உண்டு;
நடுக்காட்டில் உறைகின்ற சிங்கத் திற்கும்
நடுக்கும்புலி சிறுத்தைக்கும் குகைக ளுண்டு.

எஞ்சாது எப்பொழுதும் எவ்வி னைக்கும்
எள்ளளவும் பிறழாமல் மறந்தி டாமல்
பஞ்சாங்கம் பற்றுகின்ற 'புனிதா!' நீயேன்
படுத்திடவும் இடமின்றி உழலு கின்றாய்?

அஞ்சாது எண்ணிப்பார்! நினைப்பில் கூட
அடிமைக்குணம் ஏனுனக்கு? உன்றன் முன்னோர்
வெஞ்சமரில் வீரத்தை விளைத்தார்; நீயோ
விழித்திடவும் உயிர்த்திடவும் அஞ்சு கின்றாய்!

பஞ்சாகிப் போனதுவோ உன்றன் வீரம்?
புகையாகிப் போனதுவோ உன்றன் வாழ்வு?
பண்பாடு தமிழருக்கென் றொன்று உண்டு;
பண்பட்ட சிலமொழியுள் தமிழ்தான் முன்னே!

இனியேனும் விழித்தெழுந்து வீரம் காட்டு!
இளிக்குமொழி இந்தியைநீ விரைந்து ஓட்டு!
கனியமுதாம் கற்கண்டாம் தமிழின் முன்னே
கரட்டுக்காய் இந்திமொழி காண்பதா? சீ!

காகிதப்பூ மணத்ததில்லை; எட்டிக் காய்கள்
கடுகளவும் இனித்ததில்லை; அலறும் ஆந்தை
கோகிலமாய் இசைத்ததில்லை; இந்திப் பாடை
கவின்தமிழ்முன் காணிடினும் பிணத்தின் வாடை!

தமிழ்மொழியை நம்பினவர் தாழ்ந்த தில்லை;
தரங்கெட்டு இகழ்ந்துரைத்தோர் வாழ்ந்த தில்லை;
இமிழ்செய்து எக்களிக்கும் இந்திப் 'பூதம்'
இடிப்பொடிந்து ஓடவெகு நாட்க ளில்லை!

கேட்டீரா! சேதி!

வெள்ளையன் போன பிறகு இந்திய உபகண்ட மக்களுக்கு சுதந்திரம் கிடைத்ததோ கிடைக்கவில்லையோ, இரயில்களுக்கு அபரிமிதமான சுதந்திரம் கிடைத்திருக்கிறது என்பது மட்டும் நூற்றுக்கு நூறு உண்மை. அப்பப்ப! எத்தனை இரயில் விபத்துக்கள்—எவ்வளவு ஆபத்துக்கள்!! இது போன்ற விபத்துக்களை முன் கூட்டியே எச்சரிக்க, ஒரு புதிய கருவியைக் கண்டுபிடித்திருப்பதாக, டில்லியிலுள்ள இரயில்வே ஆராய்ச்சி நிலையம் அறிவிக்கிறது. அதன் பெயர் "டெலிசின்டிகேடராம்" இதைப் பொருத்திவிட்டால், அபாயம் வருகிறதென எச்சரிக்க, இரயில் என்சினில் ஒரு மணி ஓயாது அடித்துத் தெரிவிக்குமாம்.

*

பஸ் வண்டிகள், கார்கள் முதலியவை மனிதனுக்கு உதவி செய்யும் சாதனங்கள். ஆனல், அவைகளைப் பலர் அப்படிக் கருதாமல், தைரியத்தைச் சோதிக்கும் கருவிகளாகப் பயன்படுத்துகிருர்களல்லவா? 60 மைல், 50 மைல் என்று ஓட்டுவதால், ஏராளமான விபத்துகள் ஏற்படுகிறதல்லவா? இதைத் தடுக்க சென்னை அரசு ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறது இந்த வாரம். அரசாங்கத்தின் எல்லா இலாகாக்களையும் சேர்ந்த 'கெஜட்' பதிவு பெற்ற அதிகாரிகள், மிதமீறிய வேகத்தில் செல்லும் பஸ்-கார்-லாரி முதலியவைகளின் நம்பரைக் குறித்து ஆங்காங்கே உள்ள போக்குவரத்து அதிகாரிகளுக்குப் புகார் செய்ய வேண்டும் என்றும், அந்த அதிகாரி இந்தப் புகார்களின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. இந்த உத்தரவைச் சர்க்கார் அதிகாரிகள் ஒழுங்காக நிறைவேற்றத் தொடங்கினல், சென்னையில் ஓடும் சர்க்கார் பஸ்களில்தான், ஏராளமான வழக்குகள் கிடைக்கும்!!

*

எகிப்து நாடும், சிரியா நாடும் ஒன்ருக இணைந்து வாழுவது என்கிற முடிவுக்கு வந்திருக்கின்றன. இந்த இரண்டு நாடுகளும், இஸ்லாமியர்கள் அதிகம் உள்ள நாடுகள். மத ஒற்றுமையின் காரணமாக, மத்திய கிழக்கில் இந்த அதிசயம் நிகழ்ந்திருக்கிறது. இது, எந்த அளவுக்கு வெற்றியளிக்கப் போகிறது என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

*

பத்மவிபூஷண், பாரதரத்னம் போன்ற பட்டங்களை ஒவ்வோராண்டும் இந்தியக் குடியரசுத் தலைவர் அளிக்கிருரல்லவா? இந்த ஆண்டு பத்மவிபூஷண் என்கிற பட்டம் காங்கிரஸ் சேவாதளத்தைச் சேர்ந்த சர்திகர் என்பவருக்கு வழங்கப்பட்டது! அவர், அப் பட்டத்தை, "இந்தக் கௌரவத்துக்குப் பாத்திரமாகும்படி நான் செய்யவில்லை என்று என் மனச்சாட்சி கூறுகிறது. ஆகவே, இந்தாருங்கள்" என்று திருப்பி அனுப்பியிருக்கிருர்.

*

தோழர் சி. பா. ஆதித்தன் எம். எல். ஏ. இன்னும் சிலரும் சேர்ந்து "தமிழர் கட்சி" என்று ஒரு புதிய கட்சியை அமைத்துள்ளனர். வடவர் ஆதிக்கத்திலிருந்து, தமிழ்நாடு பிரியவேண்டும் என்பது, இக்கட்சியின் கொள்கையென்று தெரிய வருகிறது. பிரிவினைக் கீதம், இக்கட்சியின் முக்கிய நோக்கம் என்பது கேட்டு, அனைவருக்கும் மகிழ்ச்சியே பிறக்கும். சட்டசபையிலும் இக்கட்சி, தனித்து இயங்குமென்றும் மொத்தம் 4-எம். எல். ஏ.-க்கள் உள்ளனர் என்றும் தெரிய வருகிறது.

சம்பத் - தாராசிங் சந்திப்பு

பார்லிமெண்டு உறுப்பினரான நமது ஈ. வெ. கி. சம்பத், பிப்ரவரி 3-ந் தேதி, டில்லியில் சீக்கியர் தலைவர் மாஸ்டர் தாராசிங்கைச் சந்தித்திருக்கிருர். இந்து மத வெறியையும், வடநாட்டு இந்தி வெறியையும் எதிர்த்துப் போராடிவரும் முதுபெருங் கிழவரான தாராசிங், நமது சம்பத்தோடு உரையாடுவதற்குப் பெரிதும் மகிழ்ந்தாராம். நமது கழக வளர்ச்சிகளைப் பற்றியும் நோக்கங்களையும் எடுத்துச் சொன்னபோது, ஆர்வத்தோடு, கேட்டாராம் தாராசிங். "உங்கள் கழக நடவடிக்கைகளைப் பற்றிக் கொஞ்சம் கொஞ்சம் எனக்கு, ஏடுகளில் கிடைப்பதுண்டு." என்று கூறிய தாராசிங், உங்கள் தலைவர்கள் பஞ்சாபுக்கு வரவேண்டும் என்று தெரிவித்துக் கொண்டாராம். பார்லிமெண்டு கூடியிருக்கும் சமயத்தில், இதுபோன்ற பல தலைவர்களையும் சந்தித்தும், பிறருடன் உரையாடியும், நாம் யார் - நமது இலட்சியம் என்ன என்பதை விளக்கி வருகிருராம் சம்பத். வெளிமாகாணங்களிலுள்ள எம். - பி. - க்கள், சம்பத் மூலம் நம்மைப்பற்றி அறியப் பெருத்த ஆவல் காட்டுகிருர்களாம். அதன் காரணமாக டில்லியில் நமது ஆங்கில ஏடான "ஹோம் லண்டு"க்கு, நல்ல கிராக்கியும், பார்க்கவேண்டுமெனும் ஆசையும் அதிகரித்து வருகிறதாம்.

"கவர்னர்"

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [16—2—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 31

ஆண்டு ஒன்றுக்குப் பத்து இலட்சம் செலவழிக்கப்பட்டு 'கவர்னர்' ஒருவர் அமர்த்தப்படுகிருர்! அவருக்கென, ஏதாவது முக்கிய வேலைகள் உள்ளனவா, என்ருல் கிடையாது என்பதை எல்லோருமே ஒப்புக்கொள்ளுகின்றனர்!!

"இதென்ன வேலை, டீ பார்ட்டிக்குப் போவதும், விழாக்களுக்குச் செய்தி அனுப்புவதும் தவிர, என்ன இருக்கிறது இவ்வேலையில்" என்று முன்னள் சென்னைக் கவர்னரான பிரகாசாவே, கூறியிருக்கிருர். கவர்னர் நிர்வாகத் தலைவர் என்று குறிப்பிடப்படுகிருர், அந்தத் தலைவர் செய்கிற பணியினையோ, வேலைகளையோ யாரையாவது கேட்டால், தக்க பதில் தர இயலாது.

"மாகாண மந்திரி சபை, மத்யசர்க்காருக்கு எதிராகப் போனல், அப்போது கவர்னர் குறுக்கிட்டு, நிர்வாக ஆட்சியை ஏற்பார்' என்று கூறப்படுகிறது. இந்தக் காட்சியினை கேரளத்தில் கண்டோம். எப்படி, வெள்ளையன் காலத்தில் தன்னுடைய பிரதிநிதிகளாக 'கவர்னர்'களை அனுப்பினரோ, அதுபோலவே, இப்போதும் டில்லிசர்க்கார் தனது 'தூதர்களாக' இந்தக் கவர்னர்களை நியமிக்கிறது.

ஆரம்ப முதலே இக்கொள்கையினைக் கண்டித்து வருகிருேம், நாம். வேண்டுமென்றே தனது பிடியினை, மாநிலங்களில் செலுத்த டில்லி செய்துகொண்ட ஏற்பாடு என்றும் எடுத்துரைத்து வருவது அனைவருக்கும் தெரியும். அதனை ஒட்டியே, சட்டசபைக் கூட்டத் தொடர் பின் முதல் நாள் நிகழ்ச்சியன்று, தி. மு. க. சட்ட சபையினர், சபைக்குப் போகாமல் தங்களது எதிர்ப்புணர்ச்சியைக் காட்டிக்கொண்டிருக்கின்றனர்.

பணமில்லை, பணமில்லை என்று சதா பாடிக்கொண்டிருக்கும் ஒரு அரசு, பத்து இலட்சம் ரூபாயை ஒரு பதவிக்காகக் கொட்டி அழிக்கிறதென்ருல், அது கொடுமையினும் கொடுமையாகும். அதிலும், அப்பதவி உப்புச்சப்பற்றது, உருவான காரியங்களுக்காக இருப்பதல்ல என்று கூறிக்கொண்டே, இவ்வளவு ரூபாயையும் வீணடிப்பதென்ருல், பெரிய வெட்கக் கேடன்ருே அது!!

கவர்னர், சட்டசபையைத் துவக்கிவைத்து நிர்வாகத் தலைவர் என்கிற முறையில் பேசியிருக்கிருர். அந்தப் பேச்சைப் படிப்போருக்கு "இதற்கு ஏன் ஒரு கவர்னர்?" என்று நிச்சயம் கேட்கவே செய்வர். யாரோ அதிகாரிகள் தயாரித்துக் கொடுத்ததை, அப்படியே அவர் படித்திருக்கிருர். ஆகவே, மேதி அவர்கள்மீது குறை சொல்லவில்லை, நாம்! ஆயினும், அப்பேச்சு, எப்படியிருக்கிறது — என்ன புதுமையைச் சொல்லியிருக்கிருர் — என்று எண்ணிப் பார்த்திடின், விந்தையும் வேதனையும் எழும்.

மக்களாட்சி—குடியரசு—மக்களின் தீர்ப்பே நாட்டின் சட்டம், என்றெல்லாம் பேசிக்கொண்டு, அதே சமயம் இதுபோன்ற கவர்னர்களையும் நியமிப்பது என்பது ஜனநாயகத்தின் அம்சங்களைக் கேலி செய்வதாகும். இந்தக் கருத்தினை நாம் மட்டுமல்ல பலதரப்பட்டவர்களும் எடுத்துச் சொல்லியே வருகிருர்கள். எனினும், விடாப்பிடியாக, டில்லி இப்பதவிகளை வைத்திருக்கிறது. டில்லிக்குத் தாளம் போடும், மாநில ஆட்சியும், தனது வரிப் பணத்தில் பல இலட்ச ரூபாய்களைக் கொட்டி அழுது, இப்பதவியைக் காப்பாற்றி வருகிறது.

ஏனே, இது!—என்று, மக்கள் சிந்திக்காமலில்லை. அதனல்தான், மக்களின் தூதர்களான நமது உறுப்பினர்கள், தங்கள் எதிர்ப்புணர்ச்சியை, சட்டசபைக்குப் போகாததன் மூலம் காட்டிக்கொண்டுள்ளனர். ★

தறி வளர!

நாடெங்கும் கைத்தறி வார விழா நடைபெறுகிறது.

கூட்டுறவு சங்கங்கள், தத்தமது வாய்ப்பு வசதிக்கேற்ற வகையில், இதனைக் கொண்டாடுகிருர்கள்.

அரசியல் தலைவர்களும், அமைச்சர்களும், இவ்விழாக்களில் கலந்துகொண்டு உருக்கமாகப் பேசுகிருர்கள்.

டில்லி அமைச்சர்களும், அன்பும் ஆதரவும் கனிய, செய்திகள் விடுத்துள்ளார்கள் மக்களுக்கு.

இது மட்டும் போதாது என்று நாம் பல காலமாக வலியுறுத்தி வருவது, அனைவருக்கும் தெரியும். வேட்டி - சேலை - போன்ற சில ரகங்கள், தறித் தொழிலுக்கென ஒதுக்கிட வேண்டும் என்றும் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகிறோம்.

இது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இந்நிலையில், வழங்கப்பட்டு வரும், "ரிபேட்டை"க் குறைச்சுவும், டில்லி நடவடிக்கை எடுத்து வருகிறது.

இது கூடாதெனச் சொல்லப் போவதாக, சென்னை அரசும் சொல்லி வருகிறது.

ஆதரவு, உதட்டு அளவோடா! செயலாகுமா!! —என்பதைப் பொறுத்தே, தறி வளர்வதும் சாவதும் இருக்கிறது.

ஆண்டுக்கொரு முறை கைத்தறி வாரம் என்று கொண்டாடுவதும், அதில் அதிகாரிகளும் அமைச்சர்களும் கலந்துகொண்டு கைத்தறியின் அருமை பெருமைகளைப் பற்றிப் பேசுவதும் கைத்தறி வளர்ச்சிக்கும் அதில் ஈடுபடும் நெசவாளர்களுக்கும் வழி வகுத்ததாகி விடாது.

காலம் முழுவதும் கைத்தறியே கதி என்று வாழும் நெசவாளி கட்டக் கந்தைக்கே வழியின்றி வாடுகிறான் — குடிக்க அரை வயிறு கஞ்சிகூடக் கிடைக்கவில்லையே என்று கலங்குகிறான். ஒண்டக் குடிசை இல்லையே என்று ஓலமிடுகிறான். கைத்தறி நெசவாளியின் இந்த அவலநிலைகள் மாறக் கைத்தறி வார விழா நிகழ்ச்சிகள் பயன்பட வேண்டும்—வழி காண வேண்டும். வறிதே வார விழாக் கொண்டாடி வாழ வகையுள்ளோர் வரவேற்பும் வாழ்த்தும் பெற்றுவிடுவதால் நெசவாளியின் குறை குறைந்து விடாது—தீர்ந்துவிடாது. இதனை ஏழைபங்காளர் நாங்கள்தான் என்று கூறிக்கொள்ளும் ஆள்வோர் உணர்ந்து செயலாற்ற வேண்டுமென்பதே எமது விருப்பமும் வேண்டுகோளுமாகும். ☆

உருவகம்

'சிலையும் சிற்பியும்'

கல்:- ஐயா! ஐயா!

சிற்பி:- யாரது......கல்லா.....என் சிரிக்கிறாய்?

கல்:- சிரிக்காமல் என் செய்வது ...உம்மைப் பார்த்தால்......

சிற்பி:- பரிதாபமாயிருக்கிறதா...? என் மீண்டும் சிரிக்கிறாய்?

கல்:- ஆமாம், உலகத்திலுள்ளோர் அனைவரும் 'கல்' என்றாலே இரக்கமற்ற, பண்பற்ற, பொருள் என்று இழிவாகவே எண்ணிக்கொண்டிருக்கும் என்னை, உயிர் கொடுத்து —உயர்ந்த பொருளாக்கி, காவியமே பாட வைப்பது யார்? அழகாடும் வண்ணச் சிலை, செந்தமிழ்ச் சிந்து பாடும் பொற்பாவை, வில்லெழுதி — கயல் எழுதி—நுதல் எழுதி—எள்ளுப் பூ எழுதி — வள்ளைத் தண்டு எழுதி — கொடி எழுதி — வாழைத் தண்டெழுதி கழுகெழுதி...அப்பப்பா!......

சிற்பி:- ஏன் மேல் மூச்சு...சொல்; ...பேசு...பேசு......

கல்:- சிற்பியே! உமது திறமையால் நாவலரும், பாவலரும், அறிஞரும், கலைஞரும் போற்றும் என்னைப் பாமரரும் மயங்கும் படி செதுக்குகிறீர்......; ஆனால்......புகழ்? என் புருவத்தை நெரிக்கிறீர்?

சிற்பி:- கல்லாயிருந்த உன்னைப் பேசும் சிலையாக்கி உயிர் கொடுத்தவன் நான். எனக்கில்லாத புகழ் உனக்கு என்கிறாயே ...அதைக் கேட்டுத்தான் புருவத்தை நெரித்தேன்! பேதையே! கவியாத்த புலவனுக்கில்லாதபெருமை, அதைக் கேட்டு ரசிக்கிறவனுக்கு உண்டென்கிறாயே? சரியா? பாடுபடும் உழவனுக்கில்லாத உயர்வு நிலைச் சொந்தக்காரனுக்கு உண்டென்கிறாயா......?

கல்:- அவர்கள் தொழிலும், நிலையும் வேறு! உங்கள் நிலை வேறு! சிற்பியே! வேண்டுமானால் நாளை என்னைப் பிரதிஷ்டை செய்யும் கோயிலுக்கு வாரும், நீங்கள் எழுப்பிய வினாக்களுக்கு விடை கிடைக்கும்.

சிற்பி:- சிரிப்பு வேண்டாம்; நாளை சந்திப்போம்...!

கல்:- நாளைக்கா......; பரிதாபம்! என் அருகில் நெருங்க முடியாதே உம்மால்...! சரி, சரி வருகிறேன் வணக்கம்!

•

சிற்பி:- ஐயா, உம்மைத்தான்...... இதுதானே "குமரிக் கோயில்"

பக்தன்:- ஆமாம், நீர் யார்?

சிற்பி:- அதோ நீங்கள் தெய்வமாக வழிபடுகிறீர்களே, அந்தப் பத்தினித் தெய்வத்தை வடித்தெடுத்த சிற்பி நான் தான்...!

பூசாரி:- யாரது? யாரய்யா...நீ...

சிற்பி:- நான்...நான்தான் நீங்கள் வணங்கும் அருள் மங்கையைச் செதுக்கியவன்...பெயர்...

பூசாரி:- சரி சரி! வெளியே போய் நில்!

சிற்பி:- என்ன அநீதி! கேட்பாரற்றுக் கிடந்த கல்லுக்கு உயிர் கொடுத்து, பேசும் பதுமையாக்கிய எனக்கு அருகில் நெருங்க உரிமையில்லையா? எவ்வளவு கொடுமையான உலகம்! பொருளுக்கு உரிமையாளன் கதற, கன்னக்கோல் கொண்டு பறித்துக் கொண்டவனைப் பார்த்துப் பரிந்து பேசுவது போலல்லவா இருக்கிறது!

[கூட்டம் கலைகிறது. ஆளுக்கு அருகில் நின்றிருந்த சிற்பி சிலையருகே செல்கிறான்.]

சிலை:- என் தெய்வமே, என் கண்ணீர்?

சிற்பி:- சிலையே! நீ செப்பியது முழுதும் உண்மை!

சிலை:- உண்மைமட்டுமல்ல, உலக நியதியும் அப்படித்தான் போலும்! முதலில் எல்லாச் சிற்பிகளையும் ஒன்று சேர்த்து "மாநாடு" கூட்டும்!

சிற்பி:- எதற்கு மாநாடு? பூசாரிகளை விலக்கவா!

சிலை:- இல்லை, விளக்கம் தா! சிலையைச் செதுக்கின சிற்பிகளும் சிலையருகே நெருங்கலாம் உரிமையாக்கலாம், என்ற எண்ணத்தை ஊட்டிய, உலகறிய முழக்கம் செய்யுங்கள்! முரசு கொட்டுங்கள்!! உயர்வு உங்களுக்கே! உரிமை உங்களுக்கே! புகழ் உங்களுக்கே! வெற்றி உங்களுக்கே!

சிற்பி:- அருமை! அருமையான திட்டம்! நான் படைத்த சிலையே! தான் பெற்ற குழந்தைக்குச் சிறுபருவத்தில் தாயே மரியாதை செய்வதுபோல், உன் யோசனைக்கு நானும் நன்றி கூறுகிறேன்! வருகிறேன்!

—கோபி. கலிங்கன்.

வடிவுக்கு வாய்த்த மணாளன்!

"இரமணி தூங்கிவிட்டாளா?" என்று தன் கடைக்குட்டியைப் பற்றி கேட்டுக்கொண்டே வீட்டிற்குள் நுழைந்தார் சோமசுந்தர முதலியார். வழக்கப்படி கையிலே ஒரு கட்டு 'ஆபீஸ் பைல்' இருந்தது.

"உம்......அவளும் தூங்கிவிட்டாள்; சின்னவளும் தூங்கிவிட்டாள். நீங்க வாங்க, ஊரடங்கிற வேளைக்கு. குழந்தைகள் முழிச்சிகிட்டு இருக்கும்!" என்று கடுகடுத்த மூஞ்சியோடு கூறினாள் அவருக்கு வாய்த்த அருமை மனைவி உருக்குமணி அம்மாள்.

முதலியாருக்கு அவள் கோபத்தின் காரணம் விளங்கவில்லை. காலையில்தான் செலவுக்குப் பத்து ரூபாய் பணம்கூடக் கொடுத்துப் போனார். இருந்தும் உருக்குவுக்கு ஏன் கோபம்?

"ஏன் ஒரு மாதிரியா பேசுறே? பெரியவன் எங்கே?"

"பெரியவனா...அதான் பெரிய விளையாயிற்றே! நீங்க ஒன்பது மணிக்கு வரீங்க. அவன் பத்து மணிக்குத்தான் வருவான். அப்பாவுக்கு பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கே!"

"என்னடியம்மா அவ்வளவு கோபம்? இபபோ என்ன நடந்திடுத்து?"

"என்னத்தை நடக்கணும்? இனி ஒன்றும் நடக்க வேண்டியதில்லை. நானுந்தான் தினம் கிளிப்பிள்ளைக்குச் சொல்றமாதிரி சொல்லிக்கிட்டு வரேன். காலாகாலத்திலே நடத்த வேண்டியதை நடத்தணும். பையனுக்கு வயசாயிண்டு வருது. அவனோடொத்த பிள்ளைக்கெல்லாம் கால்கட்டு போட்டாச்சு. எதையாவது ஒன்றைப் பார்த்து முடியுங்கோண்ணு; நீங்க நான் சொல்றதை காதாலாவது வாங்கிக்கிறீங்களா? உம்......உங்களைச் சொல்லி என்ன பலன். இருக்கிற வகையோட நான் இருந்திருந்தா என் பிள்ளைக்கு இந்தக் கதி வருமா?"

"ஏய்...இரு...இரு...என்னமோ நீ பாட்டுக்குப் பேசிக்கொண்டே போனால் என்ன அர்த்தம். இப்போ என்ன சொல்றே? கந்தசாமி கல்யாணத்திற்கு இன்னைக்கு என்ன திடீர் அவசரம் வந்துடுத்து?"

"என்ன அவசரமா? அதோ மேஜை மேலே பத்திரிகை கிடக்கு......" என்று கூறிக்கொண்டே சமயலறைக்குள் போய் விட்டாள் உருக்கு.

ப. வாணன்

அவளுடைய திடீர் தாக்குதலிலே வாயடைத்துப் போன சோமசுந்தர முதலியார் மேஜை மேல் கிடந்த பத்திரிகையை எடுத்துப் பார்த்ததும்தான், அவளுடைய கோபத்திற்கான காரணத்தைத் தெரிந்துகொள்ள முடிந்தது.

தஞ்சாவூரிலே இருக்கும் அவருடைய சகபாடி மகனுக்கு அடுத்த வெள்ளிக்கிழமை திருமணமாம். அதற்கு வந்த அழைப்பிதழ் அது. அவருடைய பெரிய பையன் கந்தசாமிக்கு ஒரு வயது இளையவன்தான் இப்போது திருமணமாகப் போகிறவன். உருக்குவிற்கு கோபம் வராமல் என்ன செய்யும்? தன் தங்கச்சி பையனுக்கு முதலில் கல்யாணம். அதுவும் கொஞ்சம் முயன்றிருந்தால் கந்தசாமிக்கே கூட அந்தப் பெண்ணை முடித்திருக்கலாம்! ஆகவேதான் ஆத்திரம் பொங்கி வந்தது அவளுக்கு.

"வீட்டிலே இருக்கிறவ ஏதாவது சொன்னால், அதைக் கொஞ்சமாவது மதிக்கிற ஆம்பளையாயிருக்கணும்; பேசலாம். நாம் எதைச் சொன்னாலும் அசை கொடுத்துக் கொண்டே இருந்தால் என்ன செய்வது? நாளைக்கு நாலு பேர் என்ன சொல்வார்கள். தெரிஞ்சவங்க அறிஞ்சவங்க முகத்திலே எப்படி விழிக்கிறது. அப்பா இருக்கிறதுக்கு மேலே பிள்ளை இருக்கு. குடித்தனத்திலே யாராவது நாம்சொல்வதைக் கேட்டால்தானே?

போன வருஷம் மேட்டூர் சாமிநாத முதலியார் வந்தாரே. அவர் ஆவடி காங்கிரஸ் பார்க்கவா வந்தாரு. அப்படின்னா அவர் மாத்திரம் வந்திருப்பாரே! கூட அமிர்தத்தையும் எதுக்கு அழைத்து வரணும்? ஏதோ பிள்ளை பொண்ணை பார்க்கட்டும்; பொண்ணு பிள்ளையைப் பார்க்கட்டும் என்றுதானே அழைத்து வந்தார். பொண்ணோ இலட்சணமாகத்தான் இருந்தாள். அப்பவே ஒரு வார்த்தை பேசுங்கள் என்றேன். "பையன் படிக்கிறான், பார்க்கலாம்" என்று தட்டிக் கழித்தீர்கள். இப்படி இருந்தால் குடித்தனம் எப்படி விளங்கும்?" என்று சரமாரியாகப் பேசிக்

கொண்டிருந்தாள், சமையலறையிலிருந்தபடியே.

பத்திரிகையைப் பார்த்தது முதல் முதலியாருக்கும் கொஞ்சம் மன ஆட்டம்தான். உருக்கு கூறுவது முழுவதும் தப்பல்ல. ஊரிலே நாலு வீட்டிலே நடக்கிற மாதிரி காலாகாலத்திலே ஒரு முடிச்சைப் போடவேண்டியதுதான். ஆனல் போன ஆண்டு அதைப் பற்றி நினைக்க அவருடைய நிலைமை இடம் கொடுக்கவில்லை. அதோடு பையன் காலேஜ் படிப்பை முடித்தவுடன்தான கல்யாணப் பேச்சை எடுக்க வேண்டும் என்பது அவருடைய எண்ணம். அரசாங்க உத்தியோகத்திலே, அதிலும் குமஸ்தாவாகவேலை பார்க்கும் எவன்தான் தன் குழந்தைகளைக் கல்லூரிச் சுவருக்குள் அனுப்ப முடியும்? ஏதோ அதிர்ஷ்டவசமாக நான்காண்டுகளுக்கு முன் அவருக்கு ஹிந்து மத பரிபாலன இலாகாவில் 'ஹெட்கிளார்க்' ப்ரேமோஷன் கிடைத்து, சென்னைக்கு மாற்றினர்கள். அந்த நேரத்தில் கந்தசாமியும் எஸ்.எஸ்.எல்.சி., பாஸ் செய்துவிட்டு காலேஜ் படிப்புக்கு ஆவலோடு இருந்தான். தனக்குத்தான் அந்தப்பாக்கியம் கிடைக்காவிட்டாலும் அவனுக்காவது கிடைக்கட்டுமே என்று அவனைக் கல்லூரியில் சேர்த்துவிட்டார், ஹெட்கிளார்க்கானதில் கிடைத்த கொஞ்சம் அதிக வருவாய் இந்த விதத்திலே செலவானது. இருந்தாலும் உருக்கு வருத்தப்படவில்லை. உற்சாகமாகவே குடித்தனத்தை நடத்தி வந்தாள்.

ஆனல் ஓரிரு ஆண்டுகளுக்குள்ளேயே அந்த உறசாகம குறைந்துவிட்டது. அவளேடொத்த பிளளைகளுக்குக் கல்யாணக் கடுதாசி வர ஆரமபித்ததே அதற்குக் காரணம. கந்தசாமி இணடர் பாஸ் பண்ணியதுமே, உருக்கு அவன் திருமணப் பேச்சை துவககிவிட்டாள. சோமசுந்தரமும அவளுக்கு ஏதாவது சமாதானம் சொலலிக கொணடே வந்தார். ஆனல் இனி மேல் சமாதானம சொல்ல வேண்டிய அவசியமில்லை எனறே, அன்று அவருக்கும் பட்டது. பையன இந்த ஆண்டு பி. ஏ., பரிட்சை எழுதபபோகிருன; மே மாதத்தில் முடிவு வந்துவிடும்; ஜூன மாததில் திருமணத்தை முடித்துவிடலாம்என்றுகணக்குப் போட்டார். ஆகையினலேதான் சாப்பிடும்போது "இப்போதாவது சொல்லுங்கள். தஞ்சாவூருக்குப் போயிட்டு வரும்போது அப்படியே திருவாருக்கும் போய், பார்வதி வீட்டுக்குப் போய்வரலாம், அவள் பெண் இலட்சுமியை பார்த்துவிட்டுவரலாம்'' என்று உருக்கு கூறியதற்கு அவர் சரிஎன்று ஒத்துக் கொண்டார்.

தன் யோசனையை அவர் ஒத்துக் கொண்டதுமே உருக்குவின் பேச்சே மாறிவிட்டது.

"நான் ஏதேதோ உளறினேன்னு நினைச்சுச்சிகாதீங்க, நீங்க ஆபீஸ் வேலையிலே எல்லாத்தையும் மறந்துடுறீங்க'' என்று பரிவோடு பேசி, பாலை ஆற்றிக்கொடுத்தாள். சோமசுந்தரத்திற்கு அவள் மாற்றத்திற்குக் காரணம் தெரியும். "உருக்கு! நீ எதுக்குக் கோபப்படுகிறேன்னு எனுக்குத் தெரியாதா? எல்லாம் இந்த ஆனி, ஆவணியிலே முடிச்சிடலாம! கவலைப் படாதே!'' என்று அவள் மனதில் பாலை ஊற்றினர். கணவனும, மனைவியும் அனைபைப் பரிமாறிக் கொண்டிருக்கும நேரத்திலேதான் கந்தசாமி வந்து சேர்ந்தான.

"ஏம்பா, நம்ப நாயர் டென்னிஸ் விளையாடிக்கொண்டே 'ஜஸ்டிஸ்' பத்திரிகைக்கு தலையங்கம் சொல்லுவாராமே!'' என்று உள்ளே நுழையும்போதே தன் கழக ஆர்வத்தைக் காட்டிக் கொண்டு வந்தான் அவன். அவர் வேலைக்குச் சேர்ந்த நாளிலேயிருந்தே ஜஸ்டிஸ் கட்சியிலே ஆர்வம் கொண்ட சோமசுந்தரம் பையனின் பற்றுதலைக் கண்டு மகிழ்வோடு,

"அது பெரிதில்லை அப்படி அவர் சொல்லும தலையங்கத்தை படித்துப் பார்க்கணுமே! ஆகா! எவ்வளவு அருமையான கருத்துக்கள்; அழகான நடை! இந்தக் காலத்திலே எழுதுகிறுனுங்களே. இது இங்கிலீஷா? சேச்சே...''

"நீங்க நாயர் பேசிக் கேட்டிருக்கிங்களா?''

"ஒரு தடவை கேட்டிருக்கிறேன. அபபொழுதுதான நான வேலைககு சேர்ந்த சமயம. எழுமபூரில் இபபோது டி. பி. ஆஸ்பத்திரி இருககிறதே, அந்த இடத்தில், என்ன தெளிவாகப் பேசினர் தெரியுமா? அப்பொழுது இருந்த செட்டே வேறே. தியாகராய செட்டி, நாயர், இவர்களைப்போல இந்தத் திராவிட சமுதாயத்திற்கு உழைக்க யாரால் முடியும்? அவுங்கபோட்ட அஸ்திவாரத்தில் தான் இன்று நாமெல்லாம் நிற்கிறோம். முப்பது ஆண்டுகளுக்கு முன்னல் இவர்களெல்லாம் உழைக்காமல் இருந்திருந்தால், நம்மையெல்லாம் இன்றைக்கு உண்மையிலேயே நாட்டை விட்டு துரத்தி இருப்பானுங்க!'' அது சரி. ஏனப்பா இவ்வளவு நேரம்?''

"இன்றைக்கு ஒரு புதிய வாக்குவாதம். தாலி கட்டுவது அவசியமா (?) அது தமிழர் பண்பாட்டுக்குகந்ததா (?) எனபதுபற்றி. தாலி அடிமையின் சின்னம். பெண்களின சுதந்தரத்தைதப்பறிக்கிறது என்பது என் வாதம. சில பேர் பழந்தமிழா்கூடத் தாலிகட்டினர்; தாலி இல்லாவிட்டால் மணமானவள எனபது எபபடி தெரியும் என்று வாதிட்டனர். மணமஞல் ஒரு போர்டு கூடக் கட்டி கழுத்தில் தொஙகவிடச் சொல்வார்கள் போலிருககிறது!'' என்ருன் கந்தசாமி.

> கடன்படுவது வறுமை காரணமாக என்று கூறுவதற்கில்லை. பெரும்பாலான கடன்காரர் செல்வர்களே என்னலாம். அவர்கள் தம்மைச் செல்வர்களாகக் காட்டிக்கொண்டு சமூகத்தின் கண்முன் தம் மதிப்பை காக்க எண்ணியே வருவாய்க்கு மேற்பட்டுச் செலவு செய்து கடன்படுகின்றனர். மக்கள் பண்பு இப்பகட்டால் அளக்கப் படுவதால் இப்போலி அளவைப் பெறப் பலரும் பணத்தைக் கடன் வாங்கிச் செயற்கை வாழ்வு வாழ்கின்றனர். அதன் காரணமாக அவர்கள் குற்றவாளிக் கூண்டுகளில நிற்க நேரிடுகிறது.

"சுவாரஸ்யமான வாதம்தான். அதிகம் கூறினல் உங்கம்மாவிற்கு கோபம் வரும். போய் படியப்பா!'' என்ருர் சோமசுந்தரம். பையன் நல்ல முறையிலே தேர்ச்சி பெற்றுவருகிருன் என்று எண்ணிப் பூரிப்பு அடைந்தார். இவர்கள் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டு ஒரு பக்கத்தில் அமர்ந்திருந்த உருக்கு "சரி சாப்பிட்டுப்பேசலாம் வாடா தபபி!'' என்று எழுந்தாள். பையன் சாப்பிடப் போகுமுன, "அடுத்த வாரம் தஞ்சாவூர் போகவேண்டும. பரமுவுக்குக் கல்யாணம்!'' என்று தஞ்சைப் பயணத்தை கூறினர் தந்தை.

"நான் கூடவாப்பா, வரவேண்டும்?'' என்று கேட்டான் கந்தசாமி,

"ஏண்டா, அப்படிக் கேட்கிறே?'' என்று அவசரமாகக் குறுக்கிட்டாள் அவன் தாயார். "ஏன் அப்படி கேட்கிருய்?'' என்ருர் சோமசுந்தரம். எதையோ சொல்ல வாயெடுத்த கந்தசாமி பேசாமல் சாப்பிடப் போய்விட்டான்.

காலேஜில் சேரும்வரை கந்தசாமிக்குக்கழகம் என்ருலே என்னவென்று தெரியாது. சு. ம. க்கள் என்று தமிழ் வாத்தியார் கோபாலகிருஷ்ணய்யர் கிண்டல் செய்வதைத்தான் பள்ளிக்கூடங்களில் அவன் கேட்டிருக்கிருன். ஆனல் கல்லூரியில் சேர்ந்த ஆறுமாதங்களில் அவன் தமிழ்ப் பற்றும், நாட்டுப் பற்றும் அதிகமாகியது. புதிய புதிய புத்தகங்கள், வரலாறுகள், கழக ஏடுகள் இவைகளைப்படிக்க ஆரம்பித்தான். பையனின் ஆர்வத்தை வரவேற்ருர், அந்தக் காலத்திய ஜஸ்டிஸைட் சோமசுந்தரம். ஆகவே வெகு சீக்கிரத்தில் மாணவர் கழக நடவடிக்கைகளில் பெரும்பொறுப்புகளை ஏற்க ஆரம்பித்தான் கந்தசாமி, 'விபூதி அணிவது ஜாதிக் குறி' என்று அவன் மறுத்தபோது உருக்குமணி அம்மாளுக்கு ஆத்திரம் வந்தது. சோமசுந்தரம் மெல்லவும் முடியாமல் தள்ளவும் முடியாமல் "ஏதோ, சிறுபயல். அவனிஷ்டப்படி இருந்துபோகிருன், நீ போ!'' என்று மனைவியை சமாதானப்படுத்திவைத்தார். இப்படி முழுக்கழக வீரனுக மாறிவிட்டான் கந்தசாமி. பேச்சோடு மட்டுமல்ல செய்கையாலும் "நான் கழகம்!'' என்று பெருமையாகப் பொதுப் பணி செய்து வந்தான். படிப்பது, கழகப்பணி புரிவது இவைகளைத் தவிர உலகத்தில் வேறெதுவும் இருப்பதாக அவனுக்குத் தோன்றியதே இல்லை. ஆகவேதான் அன்று தஞ்சாவூருக்குப் போகவேண்டும் என்றவுடன் "நானுமா......?'' என்று கேட்டான்.

சாப்பிட்டு வந்தவுடன் சம்பாஷணை தொடர்ந்தது. "திருமணமென்ருல்...எல்லாம் சடங்கோடுதான் நடக்கும். நிறையச் செலவு செய்வார்கள்!'' என்ருன் கந்தசாமி. அவன் பேசி முடிப்பதற்குள், "அவங்களுக்கென்னடா செலவு செய்ய, இரு வீட்டிலும் ஆளுக்கு ஐயாயிரமாவது ஆகும்!'' என்றுகூறினள் உருக்குமணி அம்மாள். பையன் பேசியதில் இருக்கும் சூட்சமம் சோமசுந்தரத்திற்குத்தானே தெரியும். "ஆமாம்! அவர்கள் 'சீர்திருத்தம்' என்ருல் வீசை என்ன விலை என்று கேட்பார்கள். முழுச் சடங்கோடுதான் நடக்கும்'' என்ருர் அவர்.

"எவ்வளவு நஷ்டம்! அர்த்தமற்ற சடங்குகள். அனுவசியச் செலவுகள், அந்தப் பணத்தைப் போட்டு நம்ப பையன் யாராவது ஒருவனைப் படிக்கவைக்கலாம்!'' என்று அலுத்துக்கொண்டான் கந்தசாமி.

அவன் தாய் ஏதோ பேச வாயெடுத்தாள். அதற்குள் சோமசுந்தரம் "அதற்கு நாமென்ன செய்வது? என்று அவள் வாயை அடக்கினர்.

"நாமென்ன செய்வதா? இப்படிப்பட்ட கல்யாணங்களைப் பகிஷ்கரிக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுக்குப்புத்திவரும்'' என்று ஆவேசமாகக் கூறினன் கந்தசாமி. அவன் தாய்க்கு ஒன்றும் புரியவில்லை. இந்தக் கழகக் கட்டிடத்திற்குப் போக ஆரம்பித்ததிலே இருந்தே அவன் பேசும் பல விஷயங்கள் அவளுக்குப் புரிவதில்லை. சோமசுந்தரத்திற்கு அதற்குமேல் பேச விருப்பமில்லை.

"அந்த நிலைமை வர இன்னும் சில ஆண்டுகள்போகவேண்டும்!'' என்று கூறிக்கொண்டே எழுந்தார். எல்லோரும் படுக்கச் சென்றனர். அன்றிரவெல்லாம் திருமணம் என்ற பெயரால் இந்த நாட்டிலே நடத்தப்படும் அர்த்தமற்ற சடங்குகளைப் பற்றியே ஆராய்ந்து கொண்டிருந்தான். நினைக்க நினைக்க அவன் மனம் வெதும்பியது. தமிழ் நாட்டின் கதி இப்படியானதே என்று வருத்தப்பட்டுக்கொண்டே நித்திரையில் ஆழ்ந்தான்.



> மனிதனுக்குக் கவலையைக் கொடுத்து அவனை அறியாமையில் வீழ்த்தும் எதிரிகள் பல. இவற்றை எதிர்த்து போராடுகிறவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. பகைவனை எப்படியாவது தட்டிக் கழிப்பதும், போராட்டத் தொல்லையிலிருந்து தப்பித்துக்கொள்வதுமே சாமானிய மக்களின் வாழ்க்கை வழி. இந்த முறைகளினல் பகைவன்ஓடிப்போவதில்லை. அவன் ஒவ்வொரு சமாதானத்தின்போதும் அதிகச் சலுகைகள் கேட்கிருன். இதற்காகப் பணம் மட்டுமல்ல; உயிரையும் வீரத்தையும் சுதந்திரத்தையும் கூட விலை கூற வேண்டி வருகிறது.

அவசரப் பிரச்சினைக்கு.....

[M. S. வெங்கடாசலம், M. A.,]

கௌகத்தி திருவிழா, ஏதோ ஒரு விதமாக முடிவுற்றது.

அங்கு பேசப்படாத பிரச்னையில்லை! வராத தலைவர்களில்லை!

நிறைவேற்றப்பட்டிருக்கிற தீர்மானங்கள் பற்பல — அவற்றில் ஒன்று நிலச் சீர்திருத்தம் பற்றியது!

"இந்தியா விவசாய நாடாக இருப்பதாலும்; விவசாய உற்பத்தி போதுமான அளவு பெருகவில்லை என்பதாலும் அத்தகைய பெருக்கம் நாட்டின் மற்றத் தொழில்களின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமையும் என்பதாலும், நிலச் சீர்திருத்தங்கள் மிகமிக அவசியமானவை —தாமதமின்றி நிறைவேற்றப்பட வேண்டியவை"

இது நிலச் சீர்திருத்தங்கள் பற்றிய தீர்மானத்தின் ஒரு பகுதி.

கவலை மறைந்தது இனி, என்று களிப்போடு எழுதின ஏடுகள் பல!

காங்கிரசு ஆட்சியாளர்களின் முதற்பணியே அதுவாகத்தான் இருக்கும் என்று ஆரூடம் கணித்தவர்கள் பற்பலர்!

அவ்வித எண்ணம் தோன்றியதற்கு, தீர்மானத்திலுள்ள வாசகங்கள் மட்டுமல்ல, காரணம்!

எந்தெந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன என்று கோடிட்டுக் காட்டிட வேண்டிய மாநாட்டுத் தலைவர் தேபரும், எந்தப் பிரச்னையை நழுவவிடாதுபேசிப்பேசித் தனது ஆசையைப் பூர்த்தி செய்து கொண்ட பண்டிதரும், தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய தலைவர்கள் பலரும், அந்த அளவு வலியுறுத்திப் பேசினர், நிலச் சீர்திருத்தம் பற்றியும், அதன் அவசியம் பற்றியும்.

நிலச் சீர்திருத்தத்தின் மூலம், உணவுப் பொருள் உற்பத்தியை இப்போது இருப்பதைப்போல், மூன்று அல்லது நான்கு மடங்கு பெருக்கிட இயலும் என்ற, வெளிநாட்டு நிபுணர் ஒருவரின் கூற்றை துணைக்கழைத்து வாதாடினர், காங்கிரசுத் தலைவர் தேபர்!

வளர்ந்துள்ள விஞ்ஞான சாதனங்கள், வகையாக, வேண்டிய அளவு நாட்டில் பயன்படுத்தப்படவில்லையே, ஐயகோ! ஏனிந்த நிலை என்று ஏக்கத்தோடு பேசியவர் பற்பலர்!

அத்தகைய இழிநிலைக்குக் காரணம் யாரென்று, அவர்களில் யாரும் திட்டவட்டமாகக் கூறிட முன்வரவில்லை, என்ற ஓலும், அத்தனை பேரும் அரசாங்கத்தைக் குற்றம் சாட்டியதாக நினைத்துக் கொண்டோ, என்னவோ, அதற்குக் காரணம் அரசாங்கமல்ல— விவசாயிகள்தான்! அவர்களிடத்தில் ஊக்கம் இல்லை என்று குற்றம் சாட்டினர், உணவு அமைச்சர் ஜெயின்!

இவை எல்லாவற்றையும்விட, நாட்டு நிலையை நல்ல முறையில் படம் பிடித்துக் காட்டியது, வங்கத்துக் காங்கிரசுக்காரரின் பேச்சுதான்! அவர் பெயர் டாக்டர் நளினச சயால்......

அவர் சொன்னாராம்; **"நம்நாட்டில் நடுத்தர வகுப்பார் வீட்டுப் பெண்களுக்கு வாரத்தில் ஐந்து நாட்கள் உணவு இருப்பதில்லை"** என்று!

கூறியது மட்டுமல்ல—கதறியழுதிருக்கிறார் அவர்!

வாரத்தில் ஐந்து நாட்கள் பட்டினி!

அந்த நிலையிலுள்ள பெண்கள் தொகை, இந்நாட்டுப் பெண்கள் தொகையில் பாதிக்கு மேலிருக்கும்!

இத்தகைய திடுக்கிட வைத்திடும் உண்மைகளை — மனிதாபிமானம் உள்ள எவரது உள்ளத்திலும் ஆற்றொணாத் துயர் ஏற்படுத்துகின்ற அலங்கோலத்தை— ஆட்சியில் அமர்ந்திருப்போர் வெட்கித் தலைகுனிந்திட வேண்டிய அவலத்தை — அவர் எடுத்துரைத்திருக்கிறார்!

இவ்வளவும் பேசப்பட்ட பிறகுதான், நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் பற்றிய தீர்மானம், காங்கிரசு மாநாட்டிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று அறிகிற எவருக்கும், காங்கிரசாரின் முதல் வேலைத் திட்டமே நிலச் சீர்திருத்தமாகத்தான் இருக்கக் கூடும் என்ற எண்ணம் இயற்கையாகவே எழும்!

ஆனால்...? நினைத்தாலே நெஞ்சு திடுக்கிடுகிறது! இவ்வளவு நெஞ்சழுத்தக்காரர்களா காங்கிரசார் என்று ஆச்சரியத்தோடு,-ஆனால் ஆத்திரத்தோடு—கேட்கத் தோன்றுகிறது!

முதற்பணி — மிக மிக முக்கியமானதென்று அவர்களாலேயே வேதனையோடு, ஒரு முகமாக, ஒப்புக்கொள்ளப்பட்ட பணி—எப்போது நிறைவேற்றப்படும் என்று, காங்கிரசுக் கட்சியின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற சத்திய நாராயண ராஜு என்பவர் கூறிடும்போது நாடே திடுக்கிடுகிறது!

அவர் சொல்லுகிறார், நிலச் சீர்திருத்தம் 1962ல் நிறைவேற்றப்படும் என்று?

அவசரமான பிரச்சினைக்கு விடிவு காலம் 1962ல்!

நாட்டு மக்களில் 70 சத விதத்திற்கு மேலிருக்கின்ற, உழவர்களின் வாழ்க்கைப் பிரச்சனைக்கு விடிவு காலம் 1962ல்!

வாழ்வதா—சாவதா, என்றிருக்கிற வினாவுக்கு விடை, 1962ல்!

நாடு ஏதாவது தவிர்க்க முடியாத ஆபத்தில் சிக்கியிருந்தால் —பகைவர்களால் தாக்கப்பட்டு, உரிமைக்காகப் போராடவேண்டிய சிக்கலான நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தால்—நான்கு ஆண்டுகளல்ல, நாற்பது ஆண்டுகள் கூடப் பொறுத்திருக்கலாம்!

அப்படிப்பட்ட நிலை இல்லையே இன்று!

சுதந்திர நாளிலும், குடியரசு தினத்திலும், ஜனாதிபதிக்கும், மற்ற அமைச்சர்களுக்கும் மரியாதை செலுத்தவேண்டிய சமயங்கள் தவிர, மற்ற எந்தச் சமயத்திலும், நமது படைவீரர்களுக்கோ படைக்கலங்களுக்கோ வேலையில்லாத நிலை!

இருந்தும் நான்கு ஆண்டுகள் பொறுத்திடுங்கள் என்று, பொறுப்பான தலைவர், பொறுப்பற்ற முறையில் பேசிடக் காரணம் என்ன?

அவரது அடுத்த வாசகம், அந்தக் காரணத்தைத் தெள்ளத் தெளிய விளக்கிடுகிறது நமக்கு! இதோ, அந்த வாசகம் :-

"1962-ல் தேர்தல் சமயத்தில் நிலச் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்படும்!"

வாழ வகையற்ற வனிதை, ஆற்றிலே இறங்கியாவது உயிரை மாய்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில், ஆற்றில் மெள்ள மெள்ள, தயங்கித் தயங்கி, இனியாவது வாழ்ந்திட ஏதேனும் வகையிருக்கிறதா என்று அந்த நேரத்திலும் சிந்தித்துக்கொண்டு, தண்ணீரில் இறங்கிக்கொண்டிருக்கிற சமயத்தில், ஒரு வாலிபன் பார்த்துவிடுவதாக வைத்துக் கொள்வோம். அவன் மனிதாபிமானம் உள்ளவனாக இருந்தால், உடனே ஓடிப்போய் அவளைத் தடுத்து நிறுத்தி, அவளுக்கு தன்னாலான உதவியைச் செய்வான். மாறாக, அவள் தண்ணீரில் இறங்குகிறவரை, இறங்கட்டும் இறங்கட்டும் என்று பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, அவள் மூச்சுத் திணறி மூழ்குகிற நேரத்தில் ஆற்றிலே குதித்து அவளைக் காப்பாற்றி, அதன் மூலமாகத் தனது வீரத்தை வெளிக்காட்டி, அவள் மயக்கமாக இருப்பதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, அவளை வீட்டிற்குக் கொண்டு செல்ல நினைப்பவனைக் களங்கமற்றவன் என்று சொல்ல இயலும்?

வனிதையைக் காப்பதற்கு உயிரைத் துச்சமென மதித்தான் என்று அவனைப் பாராட்ட இயலும்?

ஆற்றிலே குதித்து, அந்தப் பெண்ணைக் காப்பாற்றியவனது நோக்கம், அவளை உண்மையாகவே காப்பாற்றுவதற்கல்ல!

அதைப்போல், "தேர்தல் காலம் வரை பொறுத்திருங்கள், நன்மை செய்கிறோம்" என்பவரது நோக்கமும் மக்களுக்கு நன்மை செய்வது அல்ல!

"தேர்தல் காலத்தில்" என்று அவர் சொல்லுகிறார்—"தேர்தலுக்காக" என்று நாம், அதனைக் கொள்ளுகின்றோம்!

அவசரப் பிரச்சினைக்கு விடிவு காலம் 1962-ல் அதுவும் தேர்தலுக்காக! மக்களின் முக்கியப் பிரச்சினையாக உள்ள நிலச் சீர்திருத்தம் செய்யுங் காங்கிரசுக்கே நமது வாக்குரிமைகளை வழங்குவோம் என்று நினைத்து மக்கள் காங்கிரசுக்கே 'ஓட்' அளிப்பார்கள் என்பது இவரது நோக்கம் போலும்! பாவம், இனியும் மக்களை ஏமாற்றலாம் என்று நினைக்கும் இவரது போக்கைக் கண்டு நாம் பரிதாபப்படுகிறோம். மக்கள் இத்தகைய சாகசங்களில் மயங்கும் காலம் மலைஏறி விட்டதென்பதை எடுத்துக் கூற விரும்புகிறோம்.

★

மலை வளம்

[அன்பு]

கடற்கடம் பொறிந்து இமயத்தில் தங்கள் இலச்சினையைப் பொறித்த சேரர் குல வழித் தோன்றல்-வாய்வாள் மன்னன்-சேரன் செங்குட்டுவன் தன் துணைவி வேண்மாளுடன் மலைவளங்காணச் செல்லுகிறான். பல்வகைப் படையினரும் ஆய் மகளிரும் அவனைத் தொடருகின்றனர்.

வஞ்சிமா நகரை விட்டு நீங்கி, பெருமலையினின்றிழியும் பேரியாற்றின் கரையில் ஓர் மணற்றிட்டில் தங்குகிறான். கோங்கம், வேங்கை, கொன்றை, சுரபுன்னை, மஞ்சாடி, சந்தனம் போன்ற மரங்களினின்றும் உதிர்ந்த மலர்கள் நிறைக்கப்பட்டு மலையினின்றும் இறங்கியோடுகிறது பேரியாற்று நீர்! மதுரகம், ஞிமிறு, வண்டு முதலிய கூட்டங்கள் ஆற்று நீரைச்சுற்றி இசை பாடுகின்றன!

செங்குட்டுவன் தங்கியிருக்கும் மலையின் சுற்றுச் சூழல்களினின்றும் பல்வேறுபட்ட ஒலிகள் கிளம்புகின்றன. குறவைக் கூத்தும், கொடிச்சியர் பாடலும், வெறியாடலும் தினை குற்றுவோரது உலக்கைப்பாட்டின்ஒலியும், புனத்து எழும் விளியும், தேன் கூட்டை உடைத்த குறவர் ஓதையும், அருவி இழியும் பறையொலியும், புலியொடு பொருதும் யானையின் பிளிறலும், பரண் மேல் நின்று பகை விலங்கைக் கடிதலும், குழியில் வீழ்ந்த யானையைப் பிடிக்கும் பாகர் ஒலியும், எங்கும் திரிகின்ற செங்குட்டுவனது சேனையொலியுடன் கூடி மலைப் பகுதி எங்கணும் அதிர்கிறது!

மலைவளங் காண வந்த மன்னனைக் காண, குன்றக்குறவர், தாங்கள் அன்பின் காணிக்கையாகக் கொண்டு வந்த பல்வேறு வகை மலைபடு பொருள்களைத் தலையில் சுமந்துவந்து நிற்கின்றர்.

யானைத் தந்தங்கள், அகிற் கட்டைகள், மான் மயிர்க் கவரிகள், மதுக் குடங்கள், சந்தனக் கட்டைகள், சிந்துரக் கட்டிகள், நீலக் கற்கள், கத்தூரிகள், ஏலக்கொடிகள், மிளகுக் கொடிகள், கூவைக் கிழங்கின் மா, கவலைக்கொடிகள், முதிர்ந்த தேங்காய்கள், இனிய மாம்பழங்கள், பச்சிலை மாலைகள், பலவின் பழங்கள், வெள்ளுள்ளிகள், கரும்புகள், பூமலிந்த கொடிகள், கொழுதாள் கமுகின் செழுகுலை தாறு, பெருகுலை வாழையின் இருகனி தாறு, யாளிக் குட்டிகள், அரியின் குருளை, வாள்வரி புலிக்குட்டிகள்; யானைக்குட்டிகள், குரங்குக் குட்டிகள், கரடிக் குட்டிகள், மான், மான் குட்டிகள் கத்தூரிக் குட்டிகள், கீரிப்பிள்ளைகள் பீலி மஞ்ஞை, (தோகையுடைய ஆண் மயில்) புனுகுப் பூனைக் குட்டிகள், கானக் கோழிகள்' தேன் மொழிக் கிள்ளைகள் முதலிய பொருள்களை மலை மிசைக் குறவர் தலை மிசைக் கொண்டு வந்து செங்குட்டுவன் முன் நின்றனர்.

யானைவெண் கோடு மகிலின் குப்பையும்
மான்மயிர்க் கவரியு மதுவின் குடங்களும்
சந்தனக் குறையுஞ் சிந்துரக் கட்டியும்
அஞ்சனத் திரளு மணியரி தாரமும்
ஏல வல்லியு மிருங்கறி வல்லியும்
கூவை நூறுங் கொழுங்கொடிக் கவலையும்
தெங்கின் பழனுந் தேமாங் கனியும்
பைங்கொடிப் படலையும் பலவின் பழங்களும்
காயமுங் கரும்பும் பூமலி கொடியும்
கொழுந்தாட் கமுகின் செழுங்குலைத் தாறும்
பெருங்குலை வாழையி னிருங்கனித் தாறும்
ஆளியி னணங்கு மரியின் குருளையும்
வாள்வரிப் பறழு மதகரிக் களபமும்
குரங்கின் குட்டியுங் குடாவடி யுளியமும்
வரையாடு வருடையு மடமான் மறியும்
காசறைக் கருவு மாசறு நகுலமும்
பீலி மஞ்ஞையும் நாவியின் பிள்ளையும்
கானக் கோழியுந் தேமொழிக் கிள்ளையும்
மலைமிசை மாக்கள் தலைமிசைக் கொண்டு

(சிலம்பு : வஞ்சிக் காண்டம், காட்சிக் காதை.)

'செங்குட்டுவன் மலைவளங் கண்டான்' என்பதைக் கூறவந்த இளங்கோவடிகள் சேரநாட்டின் மலைவளத்தை அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறார்.

செங்குட்டுவன் தங்கியிருந்த மலைப் பகுதியைச் சுற்றிப்பல்வகை ஒலிஎழுவதாக விவரிக்கிறார். அவ்வொலிகள் மலைவாழ் மக்களின் வாழ்க்கையையும், அவர்தம் தொழிலையும் நமக்கு நன்குணர்த்தி நிற்கின்றன.

குன்று வாழ் குறவர்கள் கொண்டு வந்த மலைபடுபொருள்கள், சேரன்பால் அம்மக்கள் கொண்டிருந்த அன்பின் திட்பத்தை வெளிப்படுத்துவதோடு சேரநாட்டின் கொழுத்த வளத்தையும் வெளிப்படுத்துகிறது.

★

உலக சமுதாயம்!

[நாஞ்சில், செ. அன்பெழில்]

முதன் முதலில் ஏற்பட்ட சமுதாயம் குடும்பம், உலக வாழ்க்கை என்னும் வண்டியை ஒழுங்காக ஓட்டிச் செல்ல ஆணும் பெண்ணும் மிகமிக இன்றியமையாதவர்கள் என்ற கட்டாயம் ஏற்பட்ட காரணத்தால் குடும்பங்கள் பல உருவாயின, ஆண்மை என்ற மரத்தைப் பெண்மை என்ற கொடி தழுவி வளர்ந்தது. அக்கொடியிலே பூத்த மலர்கள்தான் குழந்தைகள். இவர்களின் சேர்க்கைதான் குடும்பம். குடும்பங்கள் பல சேர்ந்து ஓர் இனமாக மாறியது. பிறகு ஊர்களும் நாடுகளும் உருவாயின. ஒன்றி வாழத் தலைப்பட்ட மக்கள் தங்களை ஒழுங்காக நடத்திச் செல்ல ஒரு தலைவன் தேவை என்று உணர்ந்தனர். 'யாரைத் தலைவனாக எடுப்பது' என்ற கேள்வியைக் கிளப்பிவிட்டுப் பதில் காணச் சிந்தித்துக் கொண்டிருந்த வேளையில் 'நானே தலைவன்' என்ற ஒரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தார்கள் மக்கள். உடல் வலிமை மிக்க ஒருவன் தன்னை ஊருக்குத் தலைவன் என்று அறிவித்துக்கொண்டான். 'தலையெடுத்தவன் தண்டல்காரன்' என்ற பழமொழிக்கேற்ப உடல் வலிமை உள்ளவன் ஊராள்வோனானான். எதிர்க்கத் திறனற்ற மக்கள் அவனுக்குப் பணிந்து, அவனோடிணைந்து வாழ ஒத்துக்கொண்டார்கள். அவன் ஆள்வோனானான். இவர்கள் அவனுக்கு அடிபணிந்து வாழ்வோரானார்கள். ஊர்கள் பல ஒன்று சேர்ந்து நாடாக, நாடுகள் பல சேர்ந்து கண்டங்களாக, பிறகு உலகமாக உருவெடுத்தது.

இந்த நேரத்தில்தான் 'நான்' என்ற சொல் உருவானது. நான்! இந்த இரண்டு எழுத்துச் சொல் இந்த உலகிலே ஏற்படுத்தியிருக்கும் கொடுமைகள் எண்ணத் தொலையாதன. 'நான்' என்ற ஆணவத்தின் மரண மண்டபத்தில் இன்னொரு சொல் அரும்பியது. அதுதான் 'நாம்'! இச்சொல் தேம்பிக்கிடந்தவர்களுக்கு இன்பத் தென்றலாக இருந்தது. இந்தச் சொல்லை அரியணையில் ஏற்றுவதற்குத் துடித்துக்கொண்டிருந்தவர்களின் முயற்சி சில இடங்களில் வென்றது, ஆனால் பல இடங்களில் தோல்வியைத்தான் முத்தமிட்டது நான்! இந்தச் சொல்லின் விளைவால்தான் போரும் பூசலும், கொலையும் குழப்பமும், தொல்லைகளும் தொந்தரவுகளும் ஏற்பட்டன. உலகப்போர் ஆரம்பத்திற்கே இச்சொல்தான் அடிப்படை.

தன் அதிகாரத்திற்கு உட்பட்ட எல்லைக் கோட்டை விரிவுபடுத்த முயன்றதன் விளைவுதான் இது.

அந்த உலகப் பெரும் போர்கள் இந்த உலகிற்கு ஒரு எச்சரிக்கைப் பலகை. இன்றும் உலகம் அந்தப் பாதையில்தான் அடியெடுத்து வைக்கப்பார்க்கிறது. இது தடுக்கப்பட வேண்டும், தடுக்கப்பட்டே ஆக வேண்டும். அந்தப் பாதை ஆபத்து நிறைந்தது மட்டுமல்ல, அழிவைக் கொடுப்பதும்கூட. அழிவின் ஆரம்ப கீதம் இப்போது ஆங்காங்கே ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. துருக்கியில் ஆர்ப்பரிப்பு, காஷ்மீரில் கடும் புயல், பொதுவுடைமைச் சீனாவில் போரின் புகைச்சல், பார்மோசாவின் பதைபதைப்பு நீங்க அமெரிக்காவால் பல மூட்டப்படுகிறது. இரஷ்யா இவைகளையெல்லாம் பார்த்துவிட்டு இதழோரத்தில் மென் சிரிப்பை வரவழைக்கிறது. அந்தச் சிரிப்பின் பொருள்............?

இந்த நிலைமை மாறவேண்டுமானால் சமுதாயத்தின் இன்றைய அமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும். மாற்றியமைப்பது என்றால் மதிற்சுவர்களின் பூச்சுக்குப் புது வர்ணம் கொடுப்பதல்ல. அதன் அடிப்படையையே அடியோடு மாற்றியமைக்க வேண்டும். புதிய முறையில் பொன்னான தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும் சமுதாயம். மனித உரிமை என்னும் அடித்தளத்தில் அமைக்கப்படவேண்டும் அந்த அழகு மாளிகை. அந்தச் சமுதாய அமைப்பானது இன்றுள்ளது போல ஏற்றங்கொண்டோர்க்கு இன்பச்சோலையாகவும், ஏழைகளுக்கு எரிமலையாகவும் இருக்கக் கூடாது. விண்ணிலே ஓரினம் மண்ணிலே மற்றோரினம் என்ற நிலைமையை ஏற்படுத்தக் கூடாது. அந்த அமைப்பு, அரிஸ்டாட்டல் என்ற கிரேக்க நாட்டு அறிஞன் தனி வாழ்வு சமுதாய வாழ்வு, நல்வாழ்வு என்று வாழ்க்கையை மூன்று வகையாகப் பிரித்து ஒவ்வொரு அரசாங்கமும் மக்களின் நல்வாழ்க்கையையே தங்கள் கொள்கையாகக் கொள்ள வேண்டும்மென்று வலியுறுத்துகின்றார்.

இந்த இடத்தில்தான் 'அரசாங்கம் என்றால் என்ன?' என்ற கேள்வி நம் சிந்தனையைத் தொடுகிறது. கூட்டுவாழ்க்கையையே தங்கள் கொள்கையாகக் கொண்டு ஒன்று சேர்ந்த மக்கள் தங்கள் வாழ்க்கையை வளமுள்ளதாக அமைத்துக்கொள்ள ஏற்படுத்திய அமைப்புத்தான் அரசாங்கம். ஆனால் சூழ்நிலைக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப அது பல இடங்களில் பல மாதிரியாக அமைந்துகொண்டது. இதைத்தான் பேராசிரியர் லாஸ்கி, "சமுதாயத்தின் வாழ்க்கையை மேலும் மேலும் வளமுள்ளதாக மாற்றியமைப்பதற்காக மக்கள் ஒன்றாகத் திரளும் அமைப்புத்தான் அரசாங்கம்" என்று குறிப்பிடுகிறார்.

அரசாங்கம் சிங்காதனப் பதுமைகளுக்கு சிங்காரப் பூஞ்சோலையாகவும், அதிகார பிம்பங்களுக்கு அலாவுதீனின் அதிசயவிளக்காகவும், சீமான்களுக்கும் பூமான்களுக்கும் தித்திக்கும் செங்கரும்பாகவும், கடவுளைக் காட்டி காசு பறிக்கும் கயவர்களுக்குக் கதவில்லாக் கருவூலமாகவும், இளைத்துப்போன ஏழைகட்கு எத்தர்களின் குகையாகவும், இறை செலுத்தும் மக்களுக்கு எதிர்த்தடிக்கும் புயலாகவும், புதுமை விரும்பிகளுக்குப் புதை குழியாகவும் இருக்கக்கூடாது. சமுதாய அமைப்பை அடியோடு மாற்றிப் புதுமை நிறைந்ததாக ஏற்படுத்த வேண்டும் அரசாங்கம். கிரேக்க நாட்டறிஞர் அரிஸ்டாட்டல் "சமுதாய வாழ்க்கையை மிகச் சிறந்த வாழ்க்கையாக மாற்றுவதுதான் ஒரு சிறந்த அரசாங்கத்தின் நோக்கமாக இருக்க வேண்டும்" என்ற சொற்களின் வாயிலாக அரசாங்கத்தின் தலையாய கடமையை அறுதியிட்டுக் கூறுகிறார்.

கி. பி. பத்தாவது நூற்றாண்டின் முன்னைய நாட்களெல்லாம் இருண்ட நாட்கள் என்று அழைக்கப்பட்டன. பத்தாவது நூற்றாண்டில்தான் விஞ்ஞானத்தின் விடிவெள்ளி வேகமாகக் கிளம்பியது. பொற்காலம் பேரொளி பரப்பிப் பூரிப்போடு அடியெடுத்து வைக்க ஆரம்பித்தது. சிந்தனைப் புரட்சி உலகைச் சிதற அடித்தது. மன்னர் மகுடத்தைத் தாங்குகின்ற மதத் தலைவர்களின் ஜபமாலைகள் அறுந்து விழுந்தன. அரசாங்க இலகான் தங்கள் கையில் கிடைத்துவிட்டது என்ற அதிகார வெறியால் அத்துமீறி ஆனந்தக் கூத்தாடிய ஆணவக்காரர்கள் அழிவுப் பாதையிலே அடியெடுத்து வைக்கத் துவங்கினார்கள். அரசிருக்கைப் பதுமைகளும் அரண்மனைத் தூண்களும் அலறின. 'ஆண்டவன் பிரதிநிதி நான்' என்று ஆணவத்தோடு கூறிவந்த அரச பரம்பரை மாண்டவர்கள் பட்டியலிலே இடம் பெற்றது. மன்னன் தலையிலே இருந்த மணிமுடி மண்ணை முத்தமிட்டது. ஆதிக்கவெறியர்களுக்கு அபாய அறிவிப்பு முழங்கியது. பொற்காலத்தின் உதயகீதமே மக்களின் இதய கீதமாக ஒலித்தது.

பதினைந்தாவது நூற்றாண்டிற்குப் பிறகுதான் விஞ்ஞானம் ஒளிவிட்டு வளரத் துவங்கியது. இருட்டறையினுள்ளே பொன்னொளி பாய்ந்ததும் காரிருளைத் தேடிக் கதிகலங்கி ஓடும் வௌவால் கூட்டம்போல பொற்காலத்தின் புதுமைக் கீதத்தைக்கேட்ட புரட்டர்களும், போக்கிரிகளும், மதத் தலைவர்களும், மன்னர் பரம்பரையினரும், செல்வச் சீமான்களும், சீறிவிழும் பூமான்களும், அதிகார வெறியர்களும் ஆணவக்காரர்களும் இருள் எங்கே கிடைக்குமென்று தேடித் தேடி ஓடினர். பதினாறாவது நூற்றாண்டில் விஞ்ஞானம் வெடி மருந்தைத் தந்தது. காலச் சக்கரம் வேகமாகச் சுழன்றது. நான்கு நூற்றாண்டுகள் ஓடி மறைந்தன. விஞ்ஞானம் வளர்ந்தது, வளர்கிறது, வளர்ந்துகொண்டே இருக்கிறது. அணுகுண்டையும் அதனினும் ஆற்றல் மிக்க நீரக்குண்டையும் விண்வாணங்களையும் குழந்தைத் திங்களையும் இன்று உலகிற்கு அளித்திருக்கிறது விஞ்ஞானம். அழிவுக் கருவிகளினும் அதிகமாக ஆக்கக் கருவிகளையே விஞ்ஞானம் தருகிறது, தந்திருக்கிறது விண்ணில் பறந்து செல்லும் ஊர்தி, கடலைக் கிழித்துச் செல்லும் கப்பல், வெளிஉலக நிகழ்ச்சிகளைக் காட்டும் தொலைக் காட்சி, விண்கோள்களை அருகில் காட்டும் தொலைநோக்கி ஆடும் நிழற் படம், பாடும் வானொலி, செயற்கை உறுப்புக்கள், சிங்காரப் பொருட்கள் இன்னும் எண்ணிக்கைக் குள்ளடங்காத அளவற்ற புதுமைகளை உலகிற்குத் தருகிறது விஞ்ஞானம்.

இந்த இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞானம் தனது உச்ச நிலையை அடைந்துவிட்டது. மக்களைப் படைத்தான் மகேஸ்வரன் என்றால், அந்த மகேஸ்வரனையே கட்டியிழுத்து வந்து மக்களின் முன்னே வேடிக்கைப் பொருளாக விளையாட்டுக் காட்டும் அளவிற்கு வளர்ந்திருக்கிறது. இன்றைய சமுதாய நிலையை ஆல்பாட் ஐன்ஸ்டீன் என்ற விஞ்ஞான மேதை சுவைபட ஆனால்சுருக்கமாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்:-

"நாம் வாழும் இந்த இருபதாம் நூற்றாண்டு விஞ்ஞானத்தின் உச்ச நிலையை அடைந்திருக்கிறது. விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்கள் காலத்தையும் நேரத்தையும் மிகமிகக் குறைத்துவிட்டன. ஆகாயத்தில் பறக்கிறோம், ஆழ்கடலைக் கடக்கிறோம். சந்திரமண்டலத்தை எட்டிப்பிடிக்கத் தாவிக்கொண்டிருக்கிறோம். சிதைந்துபோன உறுப்புகளுக்குப் புது உறுப்புகளைச் சேர்க்கிறோம். வெகுதூரத்தில் நிகழும் நிகழ்ச்சிகளை வீட்டிலிருந்தபடியே கண்டு களிக்கிறோம். இவை மட்டுமல்ல, இன்னும் எண்ணிறந்த நன்மைகளை மின்சக்தியைப் பயன்படுத்தி நாம் அடைகிறோம்-அடைந்துகொண்டும் வருகிறோம். அமெரிக்காவில் நடக்கும் செய்திகளை ஆப்பிரிக்காவிற்கு அரைநொடியில் அனுப்பிக் கொடுக்க முடிகிறது இன்று. அறிவுத் துறையில் நம்மிடம் இவ்வளவு முன்னேற்றம் இருந்தும்கூட உலகத்தின் பொருளாதார நிலை சீர்படவில்லை. பொருட்களை உற்பத்தி பண்ணுவதிலும் அவைகளை உபயோகிப்பதிலும் இன்னும் ஓர் ஒழுங்கு, நியதி, நேர்மை ஏற்படவில்லை. உலகில் ஏற்றத் தாழ்வுகள் ஏராளம் இருக்கின்றன. இல்லாதவன் இருக்கின்றவனைப் பார்த்து ஏங்குகிறான். இந்த ஏக்கம் எத்தனையோ தொல்லைகளை, துயர்களை, புரட்சிகளை இடர்களை உலகத்தில் உண்டுபண்ணிக் கொண்டிருக்கிறது. எனவே உலகத்தில் கொந்தளிப்புக் கூடுதலாக ஏற்பட்டுக் கொண்டிருக்கிறதே ஒழிய, கொஞ்சங்கூடக் குறையவில்லை. இருக்கின்றவர்கள் இல்லாதவர்களைத் தங்கள் எடுபிடிகளாக மாற்றிக்கொண்டு காலாலிட்ட வேலைகளைத் தலையால் செய்யுமாறு கட்டாயப்படுத்துகின்றனர். இதன் விளைவு மிக மிக ஆபத்தானது மட்டுமல்ல, அழிவைத் தருவதும்கூட. இந்தப் புயல் தடுக்கப்படாதவரை உலகில் போரின் புகைச்சல் எழுந்துகொண்டேயிருக்கும். இந்தப் புகைச்சல்தான் உலகின் அழிவிற்கு முன்னறிவிப்பாகத் திகழ்கிறது. இனிமேல் போர் ஒன்று ஏற்படுமானால் உலகமே பூண்டோடு அழிந்துவிடும் என்பது மறுக்கமுடியாத உண்மை. இதனால் எதிர்காலம் என்ன நிலையிலிருக்கும் என்பதைப் பற்றி எண்ணி எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கிற ஒவ்வொருவரும் அளவற்ற அச்சத்துடனும் நடுக்கத்துடனுமே வாழ்கின்றனர்." இந்த விஞ்ஞான வித்தகரின் சொற்கள் உலகின் நிலையை அப்படியே பிரதிபலிக்கும் கண்ணாடியாகத் திகழ்கிறது. இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டியது உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்குமுள்ள மறுக்க முடியாத கடமையாகும்.

உலக சமுதாயம் இதுவரை எத்தனையோ துறைகளில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. உலகத்தில் எத்தனையோ மாற்றங்கள், எண்ணச் சுழலுக்குள் அடக்கிவிட முடியாத நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. கொடிகட்டி வாழ்ந்த அரசுகளெல்லாம் அடிச்சுவடு தெரியாமல் அழிந்துபோயிருக்கின்றன. உலகத்தையே அடக்கியாண்ட மன்னாதி மன்னர்களெல்லாம் ஒருபிடி சாம்பலாகமாறி அவர்களின் முடிகளெல்லாம் மண்ணை முத்தமிட்டுப் பொடிப் பொடியாகச் சிதறி மறைந்திருக்கின்ற செய்திகளை வரலாறு கூறுகிறது. எத்தனையோ அரசுக் கட்டில்களும், ஆள்வோர்முடிகளும் பொருட்காட்சிச் சாலையினுள்ளே மக்களின் பார்வைக்குப் பத்திரமாகப் பூட்டிவைக்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் கடந்துபோன நிகழ்ச்சிகள் நமக்குக் கற்பிக்கும் பாடம். ஆனால் இன்றைய நிலை ஓரளவுக்கு உயர்ந்திருக்கிறது. உலகத்தின் எதிர்கால நிலைமையை நிர்ணயிக்கும் துறையில் உலகின் ஒவ்வொரு நாடும் முக்கிய இடம் பெற்றிருக்கின்றது. வல்லரசுகள் சில சேர்ந்துகொண்டு 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்ற பழமொழிக்கேற்ப நாட்டை வேட்டைக் காடாக்கலாம் என்ற எண்ணம் இப்போது இடம் தெரியாமல் மறைந்துவிட்டது. சின்னஞ்சிறு நாடுகளும் இன்று சிங்கார நடைபோட முடிகிறது. இருந்துங்கூட இன்று செஞ்சீனாவை ஒரு நாடு என்று ஒத்துக்கொள்ள மறுக்கிறது பொருளாதாரத்தில் உயர்ந்து, அகிலத்தையே ஆட்டிப் படைக்கத் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கும் அமெரிக்கா. ஒரு உலகப்பெரும் போரை இந்த நிகழ்ச்சி உற்பத்தி பண்ணிவிட்டாலும்கூட நாம் ஆச்சரியப் படுவதற்கில்லை. உலக நாடுகளின் இடையே ஒற்றுமையை ஏற்படுத்தி, அரசியல் கொந்தளிப்புகளை அடக்கி, சண்டைகளை ஒழித்து, சமாதானத்தை நிலைநிறுத்த வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் எத்தனையோ பல நிறுவனங்கள் தோன்றிப் பிறகு நிலைபெறாமல் அழிந்துபோனதுண்டு. இன்று இருக்கிற நிறுவனமும் கோல் எடுத்தவனுக்குக் குனிந்துகொடுக்கும் தன்மையுடையதாகத்தானிருக்கிறதே தவிர, உலகப் பொது நன்மைக்கு உழைக்கிறோம் என்ற நல்லெண்ணத்தோடு நடப்பதாகத் தெரியவில்லை. அதன் அங்கத்தினர்களும் அகில உலகத்திலும் அமைதி தவழவேண்டும் என்ற அதன் அடிப்படைத் தத்துவங்களை மறந்து சொந்த நாட்டைப் புகழ்ந்து பேசி அடுத்த நாட்டோருக்கு ஆத்திரமூட்டி வருகிறார்கள். வீட்டைப் பேசி முடித்துத் தன் பெயரில் விலை வாங்கப் போகிறவர் ஐந்தாவது மாடியின் மேல் ஏன் ஆறாவது மாடி கட்டவில்லை என்ற ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு முன்னதாக அடித்தளம் பலமுடையதுதானா என்பதை அறிவுக் கண் கொண்டு ஆய்ந்தறிந்துகொள்ள வேண்டும். அடித்தளம் பலமாக இருந்தால் கட்டிடமும் ஆட்டம் கொடுக்காது. புலி வேட்டைக்குப் போனவன் எலியைத் துரத்திச் சென்றால் கேட்டவர் நகைப்பார்.

இன்றும், "விஞ்ஞானம், உலகத்தார் அத்தனை பேருக்கும் உரியது.

அளக்கமுடியாத அளவிற்கு வளர்ந்து விரிந்துள்ள அறிவிற்கு வரம்பிட்டுத் தங்கள் அதிகார எல்லைக்குள்-அரசியலுக்குள் அதை அடிமையாக்கக் கூடாது. அறிவு அனைவருக்கும் பொது. அதனைப் பகிர்ந்து கொள்ளவோ பயன்படுத்தவோ உலகில் தோன்றிய மனிதர்கள் அத்தனை பேருக்கும் உரிமையுண்டு.” என்ற எண்ணத்தில் வல்லரசுகளின் அங்கத்தினர்கள் அறிவை அரசியலுக்கு அடிமைப்படுத்தவும் தவறுவதில்லை. இக்குறைகளெல்லாம் நீக்கப்படாத வரை உலக ஒற்றுமை நிறுவனம் சரியாக மனித உரிமைகளுக்குப் போராட முடியாது.

சென்ற உலகப்போர் எத்தனையோ இழப்புகளை ஏற்படுத்தி யிருந்தாலுங் கூட, சில உண்மைகளை உலகிற்கு உணர்த்திக்கொண்டு சென்றிருக்கிறது. அந்த உண்மைகளை நன்றாக உணர்ந்து உரிய வழியில் நாம் பயன்படுத்திக் கொண்டால் உலகத்தில் ஒற்றுமையும் உயரிய பண்பும், சாந்தமும் சமாதானமும், அமைதியும் அன்பும் நிலவுவது உறுதி. “போர் முழக்கம் செய்து உலகைப் புதைகுழிக்கு இழுத்துச் செல்லும் புன்மைக் குணம் அகலவேண்டும். எங்கும் எப்போதும் சாந்தமும் சமாதானமும் நிலவவேண்டும் !என்ற எண்ணமும், நாம் மனித குலத்தைச் சார்ந்தவர்கள் என்ற மறக்கமுடியாத உண்மையும் உலகத்தில் வாழும் மனிதர்கள் அத்தனை பேரின் இதயங்களிலும் இடம் பெற்றிருக்க வேண்டும். வல்லரசுகளின் ஆதிக்கத்திற்குக் கீழே சின்ன நாடுகளையும் சிக்கவைக்கலாம் என்ற எண்ணம் அழிந்துவிட்டதோடு, சின்ன நாடுகளும் இன்று உலக அரங்கில் சிங்கார நடைபோட்டு உலவ முடிகிறது. இன வழிப்படி, கலாசாரப் பண்பாட்டின் அடிப்படையில், இயற்கை அமைப்புக்கும் பேசும் மொழிக்கும் மதிப்பளித்து, நாடுகளை அமைத்து, அப்படி அமைக்கப்பட்ட நாடுகளெல்லாம் மனித குலம் என்ற ஒரு வழி நின்று, உலக ஒற்றுமை மன்றத்தை நிறுவி, உலகில் போரையும் பூசலையும் ஒழித்து அமைதியைப் பேண வேண்டும்” இந்த நிறுவனம் ‘எள்ளாத எண்ணிச் செயல் வேண்டும்’ ‘புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும்’ இத்தகைய மன்றம் ஒன்று மிக விரைவில் அமைக்க உலகத்தார் அத்தனை பேரும் முயன்று உழைக்க வேண்டும், இன்றைய நிலையில் இது ஒன்றே உலக சமுதாய உய்வுக்கு வழி வகுப்பது.

★

இராமநாதபுரம் மாவட்ட

தி. மு. க. 3-வது மாநாடு

22, 23-2-58-ஆம் (சனி ஞாயிறு) நாட்களில்

தேவகோட்டை---வள்ளுவர் திடல்

மஜீத் அரங்கில் நடைபெறும்.

தலைவர்:	திறப்பாளர்:
க. அன்பழகன் எம்.ஏ., எம்.எல்.ஏ.	**எஸ். எஸ். இராசேந்திரன்**

அண்ணாதுரை, பொதுச் செயலாளர் **நெடுஞ்செழியன்**

மற்றும் கழக முன்னணித் தோழர்கள் கலந்துகொள்வர்.

முதல் நாள்:	இரண்டாம் நாள்:
22—2—58 சனி இரவு	23—2—58 ஞாயிறு இரவு
தோழர் மு. கருணாநிதி அவர்கள் நடிப்பதும், புதுமை நாடகமன்றத்தார் அளிப்பதுமான	தோழர்;
“உதய சூரியன்”	**நாகூர் அனீபா**
நாடகம்	அவர்கள் குழுவினரின் இசை விருந்து

இருநாட்களுக்கும் நுழைவுக் கட்டணம்:— ரூ. 5, 3, 2, பெண்களுக்கு அணா 8

இ. ல. ம. சவுந்தரபாண்டியன்,
வ. கு. தலைவர்.
நவமார்க்கண்டேயன்,
பொருளாளர்.

இராம. வேள்ளையன்,
மா. குருசாமி,
செயலாளர்கள்.



“எழுந்து நில்லுங்கள்!”

ஒருவரல்ல. இருவரல்ல; ஓராயிரமல்ல, ஈராயிரமல்ல; இலட்சக் கணக்கான மக்கள், எழுந்து நின்றனர்.

“நாம் உடையணியாத போலீஸ்காரர்கள் என்பதை இந்த அரசுக்கு உணர்த்த வேண்டும். கட்டுப்பாட்டுக்கு அடங்கியவர்கள் என்பதை இவர்களுக்குக் காட்ட வேண்டும். எங்கே, எல்லோரும் எழுந்து நில்லுங்கள்”

எல்லோரும் எழுந்து நின்றனர்! அமைதியோடு, எழுந்துநின்றனர்!

தளபதி கட்டளை பிறப்பிக்க, விரல் நீட்டிய இடத்தில் அம்புகள் போல் பாயும், பண்பு நமது பரம்பரைச் சொத்து என்று படித்திருக்கிறோம் ஏடுகளில். படித்த காட்சியைச் சென்னைக் கடற்கரை காட்டிற்று! எந்த அரசு, நம்மால் அமைதிக்குப் பங்கம் வரும் என்று ஜனவரி 3ந் தேதியன்று கூட்டம் நடத்த அனுமதி மறுத்ததோ, அதே கடற்கரையில், ஜனவரி 14-ந் தேதியன்று இக்காட்சி நிகழ்ந்தது.

ஏதோ பெரிய அமர்க்களம் நடைபெறப்போவது போலவும், கூட்டத்துக்கு வரும் மக்கள் எல்லாரும் கத்தி கம்பு எடுத்துக்கொண்டு கலவரம் செய்யப் போவது போன்றும், பயமுறுத்தலை உருவாக்க முனைந்தனர் ஆள்வோர். திருவல்லிக்கேணி நோக்கிச் செல்லும் எல்லாச் சர்க்கார் பஸ்களையும், திடீரென நிறுத்தினர். ஏன்—ஏன்—என்று மக்கள் கேட்கும்போது, பயமும்பதட்டமும் பரிமாறிக்கொள்ளப்படும் எனக் கருதினர் போலும். திருவல்லிக்கேணி வட்டாரத்திலுள்ள கடைக்காரர்களிடமும், தொழிலாளர்களிடமும்கூட, எச்சரிக்கைகள் எழுப்பப்பட்டதாக அறிந்தோம். தி. மு. க. என்றாலே ஒரு பயமும் பதைப்பும் மக்களிடம் உருவாக்க, ஆள்வோரும் அவர்தம் அம்புகளும் பெரிதும் முயன்றனர். ஆனால், அந்தோ, எல்லாம் வீணாயிற்று! வெள்ளமபோல் மக்கள் கூட்டம் விரைந்து வரத்தான் செய்தது,

அண்ணால்

கடற்கரைக்கு. சாரிசாரியாக எறும்புகள் ஊர்ந்து செல்வது போல், இலட்சக்கணக்கான மக்கள்-தடையுத்தரவு போடப்பட்ட இடத்தை நோக்கி, எச்சரிக்கைகளும் பயமுறுத்தல்களும் செய்யப்பட்டும், கூடினர்.

இதுவே போதும், மக்கள் மன்றத்தின், அனுதாபமும் ஆர்வமும் யார் பக்கம் இருக்கிறதென்பதை விளக்க! எவ்வளவு பயமுறுத்தல்கள் செய்யப்படினும், தி.மு.க.வின் குரல் கேட்டிட, மக்களுக்குள்ள ஆசையின் அளவினை இதுவே சொல்லும்!!

இப்படிக் கூடியிருந்த மக்களைப் பார்த்துத்தான், தி. மு. க. வின் முன்னாள் பொதுச் செயலாளர், சொன்னார், “நாம் எவ்வளவு கட்டுப்பாட்டுக்கு அடங்கியவர்கள் என்பதைக் காட்ட, எழுந்து நில்லுங்கள்”, என்று.

எழுந்து நின்றது மக்கள் வெள்ளம்! அந்தக் காட்சி, இறும்பூதெய்தும் வகையில் இருந்தது என்கின்றனர், கண்டோர்!! மாற்றுக்கட்சி ஏடாம், ‘தினமணி’ கூட, மறக்கவில்லை, இச்செய்தியைத்தர. ஆள்வோரின் அம்புகள், எவ்வளவோ பரபரப்பை உருவாக்க முயற்சித்தும், திருவல்லிக்கேணியிலிருக்கும் கடைகள் யாவும் கூட்டம் முடியும் வரையில், திறந்தே இருந்தன.

சிறுகலாம், மிகச் சிறிய கல்வீச்சு, சின்னஞ்சிறு தகராறுகூட ஏற்படவில்லை.

இந்த அமைதிதானே 3ந் தேதியன்று இருந்திருக்கும். அன்றைய தினம் பொதுக்கூட்டம் நடாத்த அனுமதி தரப்பட்டிருந்தால், இதுபோலத்தானே அக்கூட்டமும் நடைபெற்றிருக்கும். இன்று, நேற்று!! இதுவரை, எத்தனை கூட்டங்களை நடத்தியிருக்கிறோம், சென்னையில். கடற்கரையில் மட்டுமா, சின்னஞ்சிறு சந்துகள் உள்பட, வாரத்துக்கு ஒன்று இரண்டு என்று, இதுவரையில் எத்தனை கூட்டங்கள் நிகழ்ந்து வருகின்றன! எங்காவது ஒரு குழப்பம், தகராறு, பூசல் ஏற்பட்டதாகச் சொல்ல முடியுமா? நிச்சயமாக, எதிரிகள்கூடக் கூற முடியாது. அவ்வளவு அமைதியையும், கண்ணியத்தையும், நமது மக்கள் கடைபிடித்து வருகின்றனர். இருந்தும், காமராஜர் அரசு, 3-ந் தேதி கூட்டம் நடத்த அனுமதி மறுத்தது. அதன் மூலம், தனது ஆதிக்கத்தின் வேகத்தை, நமக்கும் நாட்டுக்கும் உணர்த்த நினைத்தது. பேசச் சென்ற நம்மையும் பிடித்தடைத்தது! பேச்சைக் கேட்க வந்த மக்களையும், தடியால் அடித்து, கண்ணீர்க் குண்டுகளைப் போட்டு, கலைக்க முயன்றது! காலிகளும், கூலிகளும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு கூட்டத்துக்குச் சென்றவர்களை, கற்களால் தாக்கியிருக்கிறார்கள். விளைவு, விபரீதமாகி, அடிதடியும் அமர்க்களமும் நிகழ ஏதுவாயிற்று.

கூட்டம்தான் இப்படியாயிற்றே கருப்புக் கொடி காட்டவாவது, அனுமதித்திருக்கலாமன்றோ? குமாரசாமியார் ஆட்சியிலும், ஆச்சாரியார் ஆட்சிக் காலத்திலும், கருப்புக்கொடிகள் காட்டி

யிருக்கிறோம். ஜனநாயக உரிமையான அதை, நமது அதிருப்தியை காட்டிக்கொள்ள, பயன்படுத்தியிருக்கிறோம். அமைதியும் கண்ணியமும் நிரம்பிய வழி அந்த நிகழ்ச்சிகளை நடத்திக்காட்டியிருக்கிறோம். நேரு பண்டிதர் வந்த அன்று, அதுபோலக் கண்டனத்தைக் காட்டிக்கொள்ள மக்கள் அனுமதிக்கப்படவில்லை. எப்படியாவது, ஒரு கருப்புக்கொடிகூட நேருவின் கண்ணில் படாமல் செய்துவிட வேண்டும் என்கிற 'வெறி'யுடனேயே வேலை செய்திருக்கிறார்கள், ஆள்வோர். அன்றைய தினம் பறங்கிமலையிலும், மாலையில் மவுண்ட்ரோடிலும் நடைபெற்ற போலீஸ் தர்பார்களைப் பற்றிக் கேட்கக் கேட்க நெஞ்சு நெகிழுகிறது. மீனம்பாக்கம் விமான நிலையம் சென்று, வெற்றிகரமாகக் கருப்புக்கொடி காட்டிவிட்டுத் திரும்பிய மக்களை, அடி அடி என்று அடித்திருக்கிறார்கள் ரிசர்வ் போலீசார். தப்பித்து ஓட முயன்றவர்களை ஓடிப்பிடித்து அடித்திருக்கிறார்கள்! "என்னடா கையில், கருப்புக் கொடி?" என்று கேட்டுத் தாக்கியிருக்கிறார்கள்! கண்ணீர்ப் புகை போட்டு, அது தாங்காது அங்குமிங்கும் ஓடிய மக்களை வளைத்துக்கொண்டு அடியடி என்று அடித்திருக்கிறார்கள்! பக்கத்திலே வெட்டப்பட்டிருந்த பள்ளங்களிலே அகப்பட்டுப் படாத பாடு பட்டனராம் மக்கள். கட்டிடத்துக்குள் குதித்தாவது தப்பலாம் என்று ஓடி, சுவர் ஏறும் போது, அடிபட்டதால் பிரக்ஞை இழந்து கீழே விழுந்திருக்கிறார்கள். இப்படி அலங்கோலத் தர்பார் நடத்தப்பட்டு இருக்கிறது, பறங்கிமலையில்! அன்று மாலை மவுண்ட்ரோடிலே கடை வைத்திருப்போரையும், டாக்சி வண்டி ஓட்டுபவர்களையும் என்ன நடந்தது என்று கேட்டுப் பாருங்கள். விழிகள் குளமாக அவ்வளவு வேதனையுடன் சொல்வர். வரிசையாக நின்ற மக்கள் மீது போலீசார் பாய, மக்கள் பயந்து அங்குமிங்கும் ஓட, அந்த வேகத்திலே பலர் மிதிபட்டு விழ, ஆயிரக்கணக்கான கால்கள் அவர்களைத் துவைக்க, அப்பப்பா, அங்கு நடந்த கோலம் வர்ணிக்கக் கூடியதல்ல. இலட்சக் கணக்கான மக்கள் மீது, கண்ணீர்ப்புகையும் தடியடியும் தாக்க, வடித்த கண்ணீர் மிகப் பெரிது. சைகிளை வைத்துக்கொண்டு நின்றோர் கலவரத்துக்குப் பிறகு தமது சைகிள் 'அப்பளம்' போல ஆகியிருப்பதையே கண்டனராம்! இரண்டு உயிர்கள் — கூட்டத்தில் நசுங்கியே செத்தனர் என்று போலீசாரே கூறுகின்றனர் என்றால், எவ்வளவு தூரம் அன்று போலீசார் மக்களைத் துரத்தியிருக்கவேண்டும்? ஒடிந்த கால்கள் பல, உடைந்த மண்டைகள் ஏராளம், கிழிந்து தொங்கியதாம் சதை, உடம்பெல்லாம் வாங்கிய அடிகளால் 'கன்னி'ப் போனவர்களாக இன்றும் உலவுகிறார்கள் ஆயிரக்கணக்கில். இவ்வளவு தூரம், வெறியாட்டம் நடத்தியிருக்கிறது? இதனைக்கண்டு ஆத்திரமடைந்திருக்கின்றனர் மக்கள். இது போதாதென்று, அன்றெல்லாம் போலீசார் காக்ஸ்சேரி போன்ற ஆதித்திராவிடச் சேரிகளிலெல்லாம் புகுந்து, குடிசைக்குள்ளிருந்தோரையெல்லாம் வெளியே இழுத்து வந்து, அடித்து, இழுத்துக்கொண்டு போயிருக்கின்றனர்.

நேரு, வந்தது சென்னைக்கு! தடியடி—கண்ணீர்ப்புகை—கைது யாவும் சென்னையில், நிகழ்ந்தது!! சரி, மாநில முழுதும், அன்றும் அதற்கு முதல் நாளும் ஒரு இடமல்ல, எல்லா ஊர்களிலும் மொத்தம் 4700-தோழர்களைக் கைது செய்தனரே — ஏன், அது? செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், கோவை, திருச்சி, தஞ்சை, திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, நாஞ்சில் போன்ற மாவட்டங்களிலெல்லாம் எதற்காகக் கழகத் தோழர்கள் கைதுசெய்யப்பட்டனர்? என்ன காரணம்?

கூட்டத்துக்கு ஏன் அனுமதி மறுத்தாய்?

கருப்புக் கொடி வைத்திருந்தவர்களையெல்லாம் ஏன் போலீசை விட்டு அடித்தாய்?

இருவர் சாகவும், பலர் காலொடிந்தும் கையொடிந்தும், கிடக்கும்படி ஏன் செய்தாய்?

சென்னையில் மட்டுமின்றி, எல்லா வெளியூர்களிலும், ஏன் தோழர்களைக் கைது செய்தாய்?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதிலளிக்கவேண்டிய காமராஜ் அரசு, எங்கே மக்கள் இந்தக் கேள்விகளையெல்லாம் எழுப்பிவிடப்போகின்றனரோ, அர்த்தமில்லாமல் நாம் மேற்கொண்ட அடாவடித் தர்பாரைப்பற்றிப் பேசுவார்களோ, என்கிற அச்சத்தில், மக்களின் கவனத்தை வேறு வழியில் திருப்ப முயற்சிக்கின்றனர். தங்களது தவறை மறைக்க, ஏசலையும் பழியையும் எடுத்து வீசுகின்றனர்! "தி. மு. க என்ன செய்தது தெரியுமா — தி. மு. க. தலைவரே, இந்தியை ஒப்புக்கொண்டார், அறிவீரோ, நீங்கள்" என்று ஆங்காங்கும் பேசத் தலைப்பட்டிருக்கின்றனர். திருவிழாக் காலங்களில் கூடியிருப்போர் கவனத்தை மறைக்க "அதோ ஒரு பாம்பு!" என்று அலறுவார்களாம், எத்தர்கள். கூட்டம் வந்த வேலையை மறந்து அலறியடித்துக்கொண்டு ஓட முயற்சிக்கும்போது, தங்கள் வேலையை செவ்வனே முடித்துக் கொள்வார்களாம் முடிச்சு அவிழ்ப்பவர்கள். அதேபோல, ஆதிக்கத் தர்பார் நடத்தி, தமது முகத்தில் கரி பூசிக் கொண்ட இந்த சர்க்கார், மக்களின் மனதிலே நிறைந்துள்ள பிரச்சினையை மறைக்க, நம்மீது பழியைத் தூக்கிப் போடுகின்றனர். இப்படிச் செய்வது, ஆதிக்கக்காரர்களின் பழைய தந்திரம் என்பதை நாம் அறிவோம். ஏதாவது ஒரு புதிரை எடுத்துப் போட்டு, மக்களின் கவனத்தை அந்த வழியில் திருப்பிவிட முயல்வது, எத்தர்களின் விளையாட்டு என்பதையும் மக்கள் அறிவார்கள்.

இரண்டு உயிர்கள் செத்தன! ஏராளமானோர், தடியடிக்கு ஆளாகினர்! பல இடங்களிலும் கைது !!

ஏன் இதெல்லாம்? கேட்க வேண்டும் மக்கள்! அப்படி மக்கள் கேட்டால், என்ன பதிலைச் சொல்வது நாம் என்கிற அச்சத்தாலேயே, அமைச்சர்கள் அங்குமிங்கும் ஓடி, நம்மீது 'பிரமாதமாக'க் குற்றம் சாட்டிட முயற்சிக்கிறார்கள் !!

இரண்டு உயிர்கள் செத்தன! காமராசரின் ஆட்சியிலேயே, இருவர் பிணமாயினர் !!

இது, சாதாரணமானதா? யார் அவர்கள்! ஏன் இப்படி அலங்கோலமாகச் சாகவேண்டும்?

(16-ம் பக்கம் பார்க்க)

ஒய்யாரக் கொண்டையாம்...!

ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம் உள்ளே இருக்குமாம் ஈரும் பேனும்!- என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அதற்கு, நல்லதொரு உதாரணமாக அமைந்திருப்பது, டில்லி காங்கிரஸ் ஆட்சியாகும். நேரு அவர்களைப் பற்றி, வெளிநாடுகள் யாவும் போற்றுகின்றன. புதியதொரு பாதையில், இந்தியா போய்க்கொண்டிருப்பதாக வானளாவப் பேசுகிறார்கள். "ஆகா! ஊகூ! எங்கள் பெருமை என்ன தெரியுமா? அவர் போற்றுகிறார்! இவர் பாராட்டுகிறார்!!", என்று காங்கிரஸ்காரர்களும் கர்ச்சிக்கிறார்கள். ஒய்யாரக் கொண்டை மட்டுமே வெளிக்குத் தெரிகிறது! உள்ளே, எவ்வளவு ஈரும் பேனும் உள்ளன தெரியுமா?-என்று விவரிக்கிறார், பார்லிமெண்டு உறுப்பினரான **ஆச்சார்ய கிருபளானி**. கிருபளானி, காங்கிரஸ் தலைவராக இருந்தவர்—காந்தியடிகளிடம் பல காலம் இருந்தவர். அவரது இந்தக் கருத்துக்களை, அகில இந்தியப் புகழ்பாடுகிறவர்கள், சிந்தித்துப் பார்க்க வேண்டும்:-

மத்திய அரசாங்கத்தில் பணம் வீணாக்கப்படுவதைப் பற்றிச் சில உதாரணங்களைப் பட்ஜட் உரையில் நான் குறிப்பிட்டேன். புதுடில்லி நகரம் "ஆபீசுகள் நிறைந்த ஒரு காடு" என்று நமது பிரதம மந்திரியே கூறினார். யுத்த காலத்தில் காரியாலயங்கள் பல மடங்கு பெருகிவிட்டன. அதற்குப் பின் சுயராஜ்ய அரசாங்கம், மாஜி சமஸ்தானாதிபதிகளின் அரண்மனைகளையும் மற்ற பெரிய பெரிய கட்டிடங்களையும் அரசாங்க காரியாலயமாகவோ அல்லது வேறு காரியங்களுக்காகவோ எடுத்துக்கொண்டுவிட்டனர். இருந்தாலும்கூட, பத்து ஆண்டுகளாக நடந்துவரும் இந்தக் கட்டிட வேலைகளுக்கு இன்னும் ஒரு முடிவு காணவில்லை. மற்ற நாடுகளில் பார்த்தால், மிகப் பெரிய திட்டங்களை வகுத்து, அதற்கு வேண்டிய பணம் பற்றாக்குறையாகிவிட்டால் கிடைக்கின்ற வசதிகளோடு மக்கள் வாழ்வதையும் அந்த நிலையிலேயே தங்கள் வேலைகளை ஒழுங்காகச் செய்வதையும் காணலாம். உலக யுத்தத்திற்குப்பின் மேற்கு ஜெர்மனியில் மக்கள் சின்னஞ் சிறு குடிசைகளிலே வசித்தனர். அரசாங்க காரியாலயங்களைக்கூடச் சிறு இடங்களில் வைத்துக்கொண்டனர். கட்டிட நிர்மாண வேலையனைத்தும், மில்களும் தொழிற்சாலைகளும் கட்டுவதற்காக செய்யப்பட்டது. ஆனால் டில்லியில், அரசாங்கத் தலைமைக் காரியாலயமான செக்ரடேரியட்டில் ஒவ்வொரு அறைக்கும் ரூ. 5000 செலவழிக்கப்படவிருக்கிறது. அனாவசிய அலங்காரம் செய்ய! ஒவ்வொரு கட்டடமாக 'ஏர் கண்டிஷன்' செய்து வருகின்றனர். இப்போது கட்டப்படும் கட்டிடங்களும் 'ஏர் கண்டிஷன்' வசதியோடு கட்டப்படுகின்றன. புதியதாக அணைகட்டவோ அல்லது வேறு ஏதாவது திட்டம் போடப்பட்டு, வேலை துவங்கும்போதோ, முதன்முதலில் கட்டப்படுவது அதிகாரிகள் வசிப்பதற்காகப் பெரிய பெரிய பங்களாக்களும், வசதிமிக்க கட்டிடங்களுந்தான்!

ராஜ்ய அரசாங்கங்களிலும் இப்படித்தான் நடக்கிறது. கிராமப் புறங்களிலும், நகரப் புறங்களிலும் மக்கள் குடியிருக்கின்ற நிலையைப் பற்றி, "நாகரிக வளர்ச்சி பெற்றது என்று உரிமை பாராட்டிக் கொள்ளுகின்ற எந்த ஒரு சமுதாயத்திற்கும் இது ஒரு பெருத்த அவமானம்" என்று நமது நிதியமைச்சர் கூடக் குறிப்பிட்டார். ஆயினும், மக்கள் நிலை ஒருபுறம் இப்படியிருக்கும் அதே சமயத்தில், மற்றொருபுறம் புதிய புதிய காரியாலயங்களும், புதிய புதிய தலைநகரங்களும் பல ராஜ்யங்களில் எழுப்பப்படுகின்றன. சந்திகார் (பஞ்சாப்) என்று புதியதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நகரம் நவீன காலத்திய சிற்பக் கலையிலே அலாதியானதோர் சாதனை என்று கூறப்படுகிறது. உண்மைதான்! கவர்னர் மாளிகைக்கு மட்டும் 40-இட்சம் ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்படுகிறது. பெப்சு (பாடியாலா கிழக்கு பஞ்சாப்) ராஜ்ய யூனியன் ராஜ்யம் ஏற்படுத்தப்பட்ட பின்னர், ஏற்கெனவே அங்கு கட்டப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டுவந்த சட்டசபைக் கட்டிடம் அதற்குமேல் உபயோகிக்கத் தகுதியற்றது என்று கருதி 68-இலட்ச ரூபாய் செலவில் புதியதாகச் சட்டசபைக் கட்டிடம் கட்டப்படுகிறது. 92-இலட்ச ரூபாய் செலவழித்து செயற்கை ஏரி ஒன்று கட்டப்பட்டுள்ளது.

சந்திகாரில் வேலை செய்த பிரான்சு தேசத்தைச் சேர்ந்த இரண்டு சிற்பிகளுக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்ற கேள்வி பஞ்சாப் சட்டசபையில் கேட்கப்பட்டபோது, அதுவரையில் ஒருவருக்கு 9 லட்ச ரூபாயும் மற்றொருவருக்கு இரண்டரை லட்சம் ரூபாயும் கொடுக்கப்பட்டதாகப் பதில் வந்தது. மத்திய பிரதேசத்தின் கோடைகாலத் தலைநகரான பச்மாரியில், ஒரு விடுதி கட்டுவதற்காக 12 இலட்ச ரூபாய் செலவிடப்படுகிறது. இதைத் தவிர,

பிரமுகர்கள் வந்தால் தங்குவதற்கெனத் தனியாக வேறொரு விடுதியும் கட்டப்படுகிறது. பிஹார் கோடை வாசஸ்தலமான ராஞ்சிக்கு ஒவ்வொரு ஆண்டும் கோடை காலத்திற்கு அரசாங்கத் தலைவர்களும், அதிகாரிகளும் செல்வதற்காக, நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் தங்குவதற்காக ஆகும் செலவுக்குமேல் பத்து லட்ச ரூபாய் செலவாகிறது. "சர்க்யூட் ஹவுஸ்" என்ற விடுதி ஒன்று ஏற்கனவே இருந்தும். மற்றொன்று கட்டப்படுகிறது. இதைப் போலவே மற்ற ராஜ்ய சர்க்கார்களும் கோடை காலத்தில் மலை வாசஸ்தலங்களுக்குச் செல்லும் ஆடம்பரப் பழக்கத்தில் ஈடுபடுகின்றனர்.

சுதந்திரம் பெறுமுன் அந்நிய ஆட்சியாளர்கள் இத்தகைய ஆடம்பரங்களில் ஈடுபட்டபோது, அவர்கள் இந்திய சீதோஷ்ண நிலையின் வெப்பத்திற்குப் பழக்கப்படாதவர்கள் என்ற போதிலும் கூட நாம் தீவிரமாகக் கண்டித்தோம். இப்போது, நமது சுதேச ஆட்சியாளர்களே இந்த ஆடம்பரத்தை தாங்களும், தங்கள் குடும்பத்தினரும், நண்பர்களும் அனுபவிப்பதற்காக வேண்டி நீடிக்கச் செய்துள்ளனர். முன்பெல்லாம் மலை வாசஸ்தலங்களில் ஊருக்குள் செல்லும் சாலைகளில் வைசிராய், சேனாதிபதி, கவர்னர் ஆகியவர்கள் தான் காரில் செல்ல முடியும். இப்போதோ மந்திரிகளின் கார்களும், அரசாங்கக் காரியதரிசிகளின் கார்களும் மலைகளிலுள்ள ஊர்களின் குறுகிய பாதைகளில் பாதசாரிகளுக்கு அசௌகரியமும், உபத்திரவமும், ஆபத்தும் உண்டாக்கும் வகையில் ஓடிக் கொண்டிருக்கின்றன. ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் மலை வாசஸ்தலங்களில் நடந்துஉலாவித் தேகப் பயிற்சி பெற்று நன்றாக அனுபவித்தனர். ஆனால் நமது இந்திய அதிகாரிகளோ உள்ளத்திற்கு குதூகலம் அளிக்கும் இந்தத் தேகப் பயிற்சியைக்கூட செய்ய முடியாத "மிருதுத் தன்மை" படைத்தவர்கள்! வீட்டு வாசற்படி வரைக்கும் காரில் வந்து இறங்குவார்கள்!!

*

நமது ஆட்சியாளர்களின் திறமைக்குச் சில உதாரணங்களைப் பார்ப்போம். அஸ்ஸாம் ராஜ்யத்தில் 1957 மார்ச் 31உ முடிந்த பட்ஜட்டின் மொத்தத் தொகையான 47·10 கோடி ரூபாயில் 13·47 கோடி ரூபாயை அரசாங்கத்தின் பல்வேறு இலாக்காக்கள் செலவழிக்காமல் அந்த நிதி வருடத்தின கடைசி நாளன்று திருப்பிக் கொடுத்துவிட்டனர். செலவழிக்கபபடுவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் 28·6 சதவீதம் செலவழிக்கப்பட முடியவில்லை. பற்றுக்குறை பட்ஜட்டுகள் பற்றிப் பிரதம மந்திரி சமபத்தில் குறிப்பிட்டார். தேவைக்கதிகமாகக் கணக்கிடுவதுதான் இதற்குக் காரணமாகும். சென்ற ஆண்டில் ஐந்தாண்டுத் திட்டத்திற்காகச் செலவிடப்பட்டதில்கூடச் சரிவு ஏற்பட்டது சுமார் 8 சதவீதம் என்று கணக்கிடப்படுகிறது. வழக்கமாகப் பட்ஜட்டில் சேர்க்கப்பட்ட பணத்தில் பெரும்பகுதியை நிதி வருடத்தின் கடைசி மாதமான மார்ச் மாதத்தில் எப்படியாவது செலவழிக்கப்படுவது உண்டு. அவசரமாகச் செலவழிக்கப்படும் இந்தத் தொகையில் பெருமளவு வீணாகிறது. பஞ்சாப் ராஜ்யத்தில் உணவு தானிய விநியோக திட்டமொன்று லாபமோ, நஷ்டமோ இல்லாத வகையில் நடத்தத் திட்டமிடப்பட்டது. ஆனால் 1954 - 55ல் ரூ. - 18,84318 நிகர நஷ்டமானதாக ஆடிட் ரிப்போர்ட்டில் குறிப்பிடப்பட்டது. இந்த நஷ்டத்திற்கு உணவு தானிய விலையில் சரிவேற்பட்டதும் சரியான நேரத்தில் விற்காததால் தானியங்கள் கெட்டுப் போனதும் காரணமாகும்.

கிருபளானி அவர்களின் இந்த உரையை இன்னொரு முறை படியுங்கள் - காங்கிரசாட்சியின் ஆடம்பர அனாவசியச் செலவுகள் நன்கு கப் புரியும்.

*

திருமணம்

"திராவிட நாடு" ஏஜண்ட், தோழர் ஜி. எம். ஆறுமுகத்திற்கும் தோழியர் எஸ். ஏ. சாரதாம்பாளுக்கும் திருவள்ளூர் மணமகள் இல்லத்தில் வாழ்க்கை ஒப்பந்த விழா சிறப்பாக நடைபெற்றது.

14-ம் பக்கத் தொடர்ச்சி

என்ன காரணம் இதற்கு? தி. மு. க. அப்படியென்ன, மாபெரும் கலவரமா செய்ய இருந்தது? 14-ந் தேதி நடைபெற்ற கூட்டம் காட்டுமே; நம்மிடம எவ்வளவு கட்டுப்பாடும் ஒழுங்கும் உள்ளது என்பதை. இந்த ஒழுங்கு குலையும் படியாக நடந்து கொண்டது யார்? ஆட்சியாளரன்றோ! ஏன், அவர்கள் இப்படி அடக்குமுறைப் பாதையை மேற்கொண்டனர்? இதற்குப் பதில் சொல்லவேண்டும், மக்கள் மன்றத்தில்!!

ஆள்வோர், மமதைப் பாதையில் சென்று, மாறாத பழியைத் தேடிக்கொண்டிருக்கின்றனர். அதை மறைக்க, ஏதாவது செய்ய வேண்டுமேயென்று, ஏதேதோ கூறித் திரிகின்றனர். இரண்டு உயிர்கள்! அடிதடி! கூட்டத்துக்குத் தடை! — ஏன், இவ்வளவு அடக்குமுறை? அமைதியையும் கண்ணியத்தையும் தமது வழிகாட்டியாகக் கொண்டியங்கும் கழகத்தினர்மீது, இவ்வளவு ஆத்திரத்தையும் எடுத்து வீசவேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது? இதற்குப் பதிலளிக்க வேண்டும், ஆள்வோர்.

பதிலளிக்கப் பயந்தே, பிரச்சினையை மாற்றுகின்றனர்! திசையைத் திருப்பிவிட முயல்கின்றனர்!! தாம் செய்தது தவறு— மக்கள் மனதில் இத்தவறு உறைத்தால் நமது ஆட்சியைக் கண்டிப்பார்கள் என்பதாலேயே, இப்படிச் செய்கின்றனர்.

ஆட்சி செய்த தவறை, எடுத்துக் காட்டி, அகிம்சா ஆட்சி எந்த வகையில் நடக்கிறது என்பதை மக்களிடம் சொல்லவேண்டியது நமது பொறுப்பு என்பதைத் தோழர்கள் மறந்துவிடக்கூடாது. இரண்டு உயிர்கள்! தடியடி! தடை!— இதற்குத் தக்கப் பதில் பெற முயற்சிக்க வேண்டும்; மக்கள் மன்றத்தில், ஆட்சியின் வெறியாட்டத்தை, உணர்த்த வேண்டிய கட்டம் இது.

★

445/2.88

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 APR 1958
MADRAS

நற்றமிழானை-நாடடைவோம்!

[கலைவாணன்]

★

அந்தித் தென்றல்விளை யாடுமெழிற் சோலையிலே
அகன்றோடு மருவியது கரைமணற் பரப்பினிலே
சிந்தனை மிக்கவனாய்க் குந்திநா னிருக்கையிலே
சின்னஞ்சிறு நெருப்பை முழக்கிடு மெண்ணெய்போலே
வந்துவந் தெந்தனகத் திடைதோன்றும் எண்ணம்பல,
வாய்திறந் துரைக்கவொண்ணா வகையென்னை வாட்டியதை
சிந்தையிலே வைத்திருக்கச் செந்தனாலா யிருப்பதனால்,
சிங்காரப் பெருமகனே! செப்புகிறேன் கேட்டிடுவாய்;

அன்றைநாட் காலைமணி ஐந்தோடு ஆறிருக்கும்
அகந்தேடி வழக்கமாக வந்ததொரு தமிழேடு!
தென்னைதரு மிளநீரைத் தேடிவந்து கோடையிலே
தேடினா மோர்சொட்டு நீர்கிட்டாப் பாதையிலே
அன்புநெஞ் சாளொருத்தி அகமலர்ந் தருகுவந்து
அருந்துங்க ளெனக்கொடுக்கி னாவலோ டடைவதேபோல்,
புன்னகை யோடேட்டை வாங்கினேன்! நோக்கியதும்,
புத்தக சாலைபோந்தேன்! பத்துப்பிற வேடுங்கண்டேன்!

ஏட்டுக்கு ஏடுகோலம்! எப்படித்தா னியம்பிடுவேன்!
"ஏதிவர்க்குத் தனிநாடு, தனிமொழியு மில்லையில்லை—
நாட்டுடைக் காளையரே நம்புவீரோ இவர்களைத்தான்—
நாடகம் திரையாடிகள் நாடாளுஞ் சிரமறியார்—
காட்டமாய் நேற்றிப்படிக் கர்ஜித்தா ரமைச்ச"ரென்று
கண்டகண்ட ஏடெல்லாம் சாற்றியதா லுரைக்கின்றேன்:
நாட்டுடைக் கலையேசி எமையேசி வாட்டினாலும்
நற்றமிழானை ஐயா! நாடடைந்தே தீருவோம்!

பேசட்டும்! பேசட்டும்!!

நாட்டுப் பிரிவினைபற்றி இப்போது காங்கிரஸ் அமைச்சர்கள் அதிகமாகப் பேசத் தொடங்கியுள்ளார்கள். நாட்டுப் பிரிவினை என்பது ஒரு "வியாதி" போன்றதென்று கூறும் அளவுக்கு அவர்கள் பீதி அடைந்துள்ளார்கள். அதிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய நாம் திராவிட நாடு தனியாகப் பிரிந்து ஆக வேண்டிய ஒன்று என்று கூறுவதைக் கேட்கும்போது அமைச்சர்களுக்கு ஆத்திரமும் ஆவேசமும் உண்டாகிவிடுகிறது. தி. மு. க.-வின் நாட்டுப் பிரிவினைக் கோரிக்கை ஒரு "வியாதி" "மாயை" என்று மந்திரிகள் தங்கள் வேலையைக், கடமையைக்கூட மறந்து, இது ஒன்றுதான் தாங்கள் பேசவேண்டிய பிரச்சினை என்று பகிரங்கமாகவே கூற ஆரம்பித்து விட்டார்கள். "தி. மு. க. நோய் மக்களைப் பிடிக்காது தடுப்பதே சர்க்காரின் கடமை" என்று சட்டசபையிலும், பொதுக் கூட்டங்களிலும், பிற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும்போதும் நாள் தவறாது பேசி வருகிறார்கள்.

இந்த நாட்டு மக்களுக்குத் தீமை விளைவிக்கக் கூடியது ஒன்று இருக்குமாயின், அது, தி. மு. க-வினரின் நாட்டுப் பிரிவினைக் கோரிக்கைதான் என்று தாராளமாகவும் வெளிப்படையாகவும் பேசுகிறார்கள்.

இப்படி அமைச்சர்கள் பேசுவதை நாம் தவறாகக் கருதவில்லை. மாறாக, அவர்கள நமக்கு—நமது கோரிக்கைக்கு மறைமுகமான உதவியே செய்து வருகிறார்கள் என்றுதான் கருதுகிறோம்.

நாட்டு மக்களிடம் நாள் தவறாது நாம் கூறிவரும் நாட்டுப் பிரிவினைக் கொள்கையை அவர்கள் மறுத்துப் பேசுவது உண்மையிலேயே நமக்கு அவர்கள் செய்யும் மறைமுக உதவியென்றே நாம் கருதுகிறோம். ஏனென்றால் அவர்கள் இப்படியெல்லாம் பேசுவதால்தான் நாம் கோரும் திராவிடநாடு கிடைக்கிறதென்ற பொருளில் நாம் கூறவில்லை. தமிழனுக்கென்று தனியாக அமைந்திருக்கும் நன்றி மறவாப் பண்பின் காரணமாக, அவர்கள் எந்தக் கோணத்தில் எப்படிப் பேசினாலும்—ஏசினாலும், அவர்கள், நம்முடைய கோரிக்கையை எடுத்து வைத்துக் கொண்டு பேசுவதால் — பொது மக்கள் இருசாரார் பேசுவதையும் கேட்கும் வாய்ப்புப் பெற்று, உண்மை எங்கே — யார் பேசுவதிலே இருக்கிறதென்பதை உணர முடிகிறதே என்பதால்தான் அவர்கள் பேசுவதையும், நமக்கு அவர்கள் உதவி செய்வதாகக் கருதுகிறோம்.

அடிகள்

நாட்டுப் பிரிவினைக்கு நாம் காட்டும் காரணங்கள் பலவற்றையும் அவர்கள் — அமைச்சர்கள் எடுத்து வைத்துக்கொண்டு, "இதோ பார்த்தீர்களா, இவர்கள் கூறும் காரணங்களை; இவையெல்லாம் இன்னின்ன குறைகளையுடையன" என்று விளக்கம் தந்தா மறுக்கின்றனர்? இல்லவே இல்லை. நாம் கா—க்காரர்கள்; அவர்கள் தி. மு. க.க்காரர்கள். எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய இவர்கள் கூறும் காரணங்களைக் காங்கிரசுக்காரராகிய நாங்கள் கண்ணையும் கருத்தையும் மூடிக்கொண்டு மறுக்க வேண்டியதுதான் நம்முடைய — தற்காலச் சர்க்காராகிய நம்முடைய கடமை என்ற போக்கில் நடந்து கொள்கிறார்கள்.

ஆனால், நாட்டு மக்கள் இருசாரார் பேசுவதையும் கேட்கிறார்கள்—எழுதுவதையும் படிக்கிறார்கள். யார் கூறுவதிலே உண்மை இருக்கிறது; யார் காரணங்காட்டிப் பேசுகிறார்கள்; யார் "வெத்து வேட்டு" அடிக்கிறார்கள் என்பதைக் கவனித்துக்கொண்டுதான் வருகிறார்கள்.

நாம் நாட்டுப் பிரிவினைக்காக எடுத்துக்காட்டும் காரணங்கள் எதனையும் எந்த மந்திரியும் தனது மதிகொண்டு இதுவரை மறுத்துப்பேசவில்லை — காரணம், நாம் கூறும் காரணங்கள் உண்மையானவை, ஒளிவு மறைவு அற்றவை என்பது மட்டுமல்ல, நேர்மைக்கும் நீதிக்கும் கட்டுப்பட்டு நடக்கக்கூடிய எவராலும் ஒப்புக் கொள்ளக்கூடியவையுமாகும்.

நாடு பிரிந்தால் நாம் வாழ முடியாது— அதற்கு இன்னின்ன காரணங்கள் என்று எடுத்துக்காட்டினாலாவது, அவற்றில் நேர்மையும் நீதியும் இருக்கிறது — எனவே நாம் நாடு பிரியவேண்டுமென்று இதுவரை கூறிவந்தது தவறு என்று ஒப்புக்கொள்ளலாம். ஆனால், அவர்கள் எந்தக் காரணமும் கூறுவதில்லை — கூற முடிவதில்லை. வறிதே, "வியாதி" "தீமை" "மாயை" "வலை" என்ற வார்த்தைகளில் அவர்கள் கூறும் காரணங்கள் எல்லாம் மறைந்து கிடப்பதாக மனப்பால் குடித்துக்கொண்டு பேசிவருகிறார்கள்.

மாணவர்களே! அவர்கள் வலையில் விழுந்து விடாதீர்கள்!

இளைஞர்களே! அவர்கள் மாயையில் சிக்கிவிடாதீர்கள்!

பெரியவர்களே! அவர்கள் கொள்கை வியாதியுள்ளது, நெருங்காதீர்கள்!

பொதுமக்களே! அவர்களின் பேச்சு தீமைகளை விளைவிக்கும், நம்பாதீர்கள்!

(15-ம் பக்கம் பார்க்க)

நமது கீதம்!

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [6-4-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 3

ஆரியமாவது! திராவிடமாவது!! — என்று பேசுவார்களே, அந்தக் கட்டம், வெகு வேகமாக மறைந்து வருகிறது.

திராவிடம் என்ற சொல்லையே உச்சரிக்கக் கூசியோர்கூட, இன்று சரளமாகவும் சந்தேகமின்றியும் பேசத் தலைப்பட்டிருக்கின்றனர்.

பேசத் தலைப்பட்டது மட்டுமல்ல, திராவிடம்— திராவிடன் என்கிற வார்த்தைகளையும் ஒப்புக்கொண்டு உபயோகிக்கவும் முற்பட்டுள்ளனர்.

மார்ச் 19-ந் தேதி வங்காள சட்ட சபையில் இந்தி கூடாது என்று கர்ச்சித்த வங்கப் பிரதமர் பி. சி. ராய், தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்......"ஆரிய, திராவிட, மங்கோலிய மொழி இனங்களைச் சேர்ந்த பல்வேறு பண்பாடுகளும், மரபுகளும் உள்ள பல வகை மக்கள் வாழும் பன்மொழி நாடு இந்தியா" என்று. பன்மொழி நாடு! பல்வேறு இனங்களைச் சேர்ந்தோர் வாழும் நாடு, என்கிறார் பி. சி. ராய்!!

மார்ச் 8-தேதி, பெரோஸ்பூர் எனுமிடத்தில் பேசிய, வி. கே. கிருஷ்ணமேனன் தெரிவித்திருக்கிறார், "எங்கேயோ திராவிடனின் தலையில் அடி விழுகிறதென்றால் ஒவ்வொரு சீக்கியனின் மீசையும் துடிக்கவேண்டும்" என்பதாக. சீக்கியர், மராட்டியர் என்றால் இதுவரை ஒப்புக்கொண்டவர்களின் உதடுகள் 'திராவிடன்' என்பதையும் எடுத்துக்கொள்ள ஆரம்பித்திருக்கின்றன.

காலம், உண்டாக்கி வரும் பெரிய மனமாற்றத்தின் ஒரு கட்டம் இது! பிறருக்குச் சாதாரணமாகத் தோன்றலாம்—ஆனால், இதனை, இவர்கள் எல்லாரும் ஒப்புக்கொள்ளச் செய்ய, நாம் பட்டபாடு நமக்கன்றோ தெரியும்!!

வி. கே. கே. மேனன் உலகம் சுற்றி வருகிறவர்—நேருவின் பிரிய நண்பர். அவரும், பி. சி. ராயைப் போல, இந்தியா ஒரே நாடு, ஒரே விதமாகத்தான் குமரி முதல் இமயம் வரை வாழ்கிறார்கள் — என்று சிலர், உண்டாக்க முனைகிறார்களே — "ஐக்கிய உணர்ச்சி" இதுபற்றி குறிப்பிட்டிருக்கிறார்.

"இந்திய மக்களுக்கு ஒரு பொது மொழி கிடையாது, ஒரு பொதுச்சித்தாந்தம் கிடையாது, பொது உடைகிடையாது, இந்திய தேசத்தில் பிறகென்ன இருக்கிறதென்றால் நாம் எல்லோரும் இந்தியர் என்கிற உணர்ச்சிதான். இதுதான் நம்மை இந்தியர்களாக்கியிருக்கிறது."

*

ஒரு தாயின் வயிற்றில் பிறந்தவர்கள் — ஒரே பண்பாடு கொண்டவர்கள் — ஒரே கூட்டில் வாழ வேண்டியவர்கள்—ஒரே மொழியைப் பேசவேண்டியவர்கள்—ஒரே மாதிரி வாழ வேண்டியவர்கள்—என்கிற ஒரு மயக்கம், பன்னெடுங்காலமாகப் பலருக்கு இருந்து வருகிறது. அதனாலேயே, அவர்கள் காதுகள், திராவிடம், தனிமொழி, தனிக்கலை என்று சொன்னால் கேட்க மறுத்தன. ஏதோ இந்தியா பூராவும் ஒரே விதமாக வாழ்வோரின் நாடெனக் கருதி, இன்னமும் பேசி வருகிறார்கள். இமயமுதல் குமரிவரை, அப்படியே ஒன்றாகவே இருக்கவேண்டும் என்னும் ஆசை கலந்த ஒரு மனமயக்கத்தையும் வளர்த்துக்கொண்டு வருகிறார்கள்.

அந்த மயக்கத்துக்கு, பி. சி. ராயிடமிருந்தும், கிருஷ்ணமேனனிடமிருந்தும் விளக்கம் வருகிறது! பன்மொழி இனங்கள் வாழும் நாடு—என்கிறார், ராய். நாம் எல்லோரும் இந்தியர் என்கிற உணர்ச்சிதான் நம்மை இந்தியர்களாக்கியிருக்கிறது என்கிறார் கிருஷ்ணமேனன்.

நேரு போன்றவர்களுக்கு நன்றாகத் தெரியும், இந்தியா ஒரு சர்க்கஸ் கூண்டு என்கிற உண்மை! எனினும், அவர்கள் 'இந்தியர் என்கிற உணர்ச்சியை' எல்லோருக்கும் உண்டாக்கிவிட முயற்சிக்கின்றனர்!! தங்களது காலத்திலேயே, இந்த உணர்ச்சியை காத்தானிலிருந்து முத்தன் வரை உண்டாக்கிவிட்டுப் போய்விடவேண்டும் என்ற ஆவலையும் ஆசையையும் அதிகமாக்கிக்கொண்டிருக்கிறார்கள். அதனால் தான் அடிக்கடி, இமயமும் குமரியும் ஒன்று, எல்லோரும் இந்தியர் என எண்ணுங்கள் என்று பேசி வருகிறார்கள், இந்தியைப் பொதுமொழியாக்கவும் பிடிவாதம் செய்கிறார்கள்.

*

உண்டாக்கிவிடும் உணர்ச்சி! தானாகவே ஏற்படும் உணர்ச்சி!! — என்று இரண்டு வகையிருக்கிறது. கட்சிபேதமிருந்தாலும், மனவேற்றுமைகள் இருந்தாலும் டில்லியில் நம்மவர்கள் இருவர் சந்தித்தால், இயற்கையாகவே அவர்களுக்குள் 'நம்மவன்' என்கிற உணர்ச்சி, உருவாகிறது. பிறகுதான், "இந்தியன்" என்கிற உணர்ச்சி ஏற்படுகிறது. அதுகூடச் சந்தேகம்தான்!!—எப்போதும், இயற்கையாகவே உள்ளத்தில் எழும் உணர்ச்சிதான் வெல்லும். தானடா விடினும் தன் சதையாடும் என்பது இதுதான். பிறரால், உண்டாக்கிவிடப்படும் உணர்ச்சியிருக்கிறதே, அது அந்திநேரத்து வானம் போல, மாறிவிடக்கூடியதாகும்.

நாம் எல்லோரும் இந்தியர் என்கிற உணர்ச்சிதான் நம்மை ஒன்றுபடுத்துகிறதே ஒழிய, வேறு ஒன்றும் இல்லை என்று ஒப்புக்கொள்கிறார், வி. கே. கே. மேனன்.

இப்படி ஒப்புக்கொள்வதும் சாதாரணமான கட்டம் அல்ல, நமது விடுதலை வரலாற்றில்! உண்டாக்கப்படும் உணர்ச்சி தவிர, அடிப்படையில் ஒன்றுக்கும் அம்சமில்லை என்கிறார் மேனன், மொழியைக் காட்டினார், ராய்! மேனன், இன்னும் ஒருபடி சென்று உடை—உணவு—சித்தாந்தம் வரையில் ஆராய்ந்து உரைக்கிறார்—உணர்ச்சி தவிர, வேறேதும் இல்லையென்கிறார்!!

இந்த உணர்ச்சி வெல்லுமா, ஒரு ஐக்கியத்தை உண்டுபண்ணி விடுமா என்பதுபற்றிச் சிந்திக்கும் கட்டத்துக்குத்தான் அடுத்தபடி காங்கிரஸ் தலைவர்கள் வரவேண்டும். நட்பு என்பது வேறு!! ஒருவருக்கொருவர் ஏற்படும் இன்பதுன்பங்களைப் பரிமாறிக் கொள்வதும், விரோதமின்றிப் பழகுவதும், அன்பு காட்டி வாழ்வதும் நட்பாகும். ஐக்கியம் என்பது, குடும்ப விவகாரம் போல! இந்த ஐக்கியம் ஒருமொழி—ஒரு உடை—ஒரு கலை—ஒரு இனம்—என்கிற நிலைமையில் வாழ்பவர்களுக்குள்தான் ஏற்பட இயலும். திராவிடநாடு கேட்கும் நாம் இதனையே, விரும்புகிறோம். தாயகத்தில் ஐக்கியமும், பிறருடன் நட்பும் கொண்டு வாழ விரும்புவதுதான், நமது தனியரசின் கோட்பாடு. நண்பர்களாக, உலகிலுள்ள ஒவ்வொரு நாடும் வாழ ஏற்படுகையில், அருகிலுள்ள ஏனைய இந்தியப் பகுதிகளுடன், திராவிடமும் வாழ முடியும்! வெளிநாடுகளைவிட இன்னும் ஒருபடி அதிகமான உறவுகொண்டே வாழமுடியும்!!

அந்த நட்புத்தான் நீடிக்க இயலும்—வளரும்—வாழவும் செய்யும். அந்த நட்பு ஏற்படச் செய்வதை விட்டு, யாவரையும் வலிந்துஒன்றுக்கும்உணர்ச்சியை வளர்க்க, நேரு போன்ற தலைவர்கள் முயலுகிறார்கள். அந்த முயற்சி ஒருபோதும் வெல்லாது—இனத்துக்கொரு அமைப்பு ஏற்படத்தான் செய்யும் என்பதையே—நேருவின் அந்தரங்க நண்பர்களான ராய், மேனன், போன்றவர்களின் கூற்று மெய்ப்பிக்கிறது. காலம், இவர்களை, அடுத்த கட்டத்துக்கு விரைவில் அழைத்து வரவே செய்யும்—அந்த நம்பிக்கையிருக்கிறது, நமக்கு! ஏனெனில், "இந்தியா", அநாதி காலத்தது அல்ல—இடையில் உருவாக்கப்பட்டது தானே!!

★

அ' நகரில்.

தடியடி—இருவருக்குக் காயம்—25 பேர் கைது, என்கிற வேதனையான செய்திகளைப் பெறுகிறோம், கலையூரான அண்ணாமலை நகரிலிருந்து! சம்பவங்களின்போது, அங்கேயே இருந்த அமைச்சர் சுப்பிரமணியம், சட்டசபையில் விரிவான விளக்கம் ஒன்றும் அளித்துள்ளார். அண்ணாமலை நகரிலிருந்து வரும் தகவல்கள், அமைச்சர் கூறாத பல செய்திகளைச் சொல்லுகின்றன.

கோரிக்கைகளை எழுப்புவோரின் கூற்றுக்குப் பதிலளிப்பதும், அதன் முக்கியத்தைக் குறைத்துக் கூறுவதும் காங்கிரஸ் அரசு கடைப்பிடித்து வரும் வழியாகும்.

ஆகவே, மாணவர்களுக்குப் போதனை புரியும் வகையில் அமைச்சரது கூற்று, அமைந்திருப்பது கண்டு நாம் வியப்படையவில்லை. நமக்கு ஏற்படும் ஆச்சரியமெல்லாம், கல்வி வளர்க்கும் அமைச்சர் அங்கே போயிருந்தும், இந்தளவுக்கு நிலைமை வளர்ந்ததே என்பதுதான். அது ஏன்?—என்று சட்டசபையில் கேட்கப்பட்டதற்கு, "நிர்வாகிகளும் சரி, மாணவர்களும் சரி என்னைத் தலையிடுமாறு கேட்கவில்லை. நான் தலையிடவில்லை", என்று சொல்லியிருக்கிறார். இது தக்க பதிலல்ல! வேண்டுகோள் விட்டால்தான் எதையும் கவனிப்பது என்பதல்ல அமைச்சுத் தொழில்!! நிர்வாகிகள் பக்கமாயினும் சரி, மாணவர்களிடையாயிலும் சரி, யார் பக்கம் தவறு இருப்பினும், தடியடி அளவுக்குச் செல்லாமல் நிலைமையைச் சரிசெய்து வந்திருந்தால், அமைச்சர் கடமையுணர்ந்து செய்த காரியமாக ஏற்கலாம். அடிதடியும், போலீஸ் எதிர்ப்பும், ஏற்பட்டபோது அமைச்சர், துணைவேந்தரின் மாளிகையில்தான் தங்கியிருந்திருக்கிறார்! துணைவேந்தரும் அமைச்சரும் இதுபற்றிப் பேசாமலா இருந்திருப்பார்கள்—அமைச்சர் கூறுமலா, தஞ்சையிலிருந்தும் திருச்சியிலிருந்தும் விசேஷ போலீசார், அந்தச் சிற்றூருக்கு விரைந்திருப்பார்கள்!!

ஒழுக்கமும் நல்வாழ்வும் மாணவர்கள் மத்தியில் மலரவேண்டுமென்பதில் எவருக்கும் கருத்து வேற்றுமை கிடையாது. ஆனால், அரும்பு நிலையிலிருக்கும் மாணவர்கள் மத்தியில், அவைமலர அன்புதான் பயன்படுமேயொழிய, அடக்குமுறையும் சொல் வீச்சும், திசையைத்தான் திருப்பிவிடும். துடிப்பும், வருவதை முன்கூட்டி உணரும் சக்தியும் வளரும் பருவத்திலுள்ளவர்கள்தான் மாணவர்கள். பெரிய அரசியல் தலைவர்கள் என்பவர்களிடமே, விருப்பு வெறுப்புக் காட்டும் பண்பு இருக்கின்றபோது, மாணவர்கள் மத்தியில் அன்பு காட்டுவோர்மீது பரிவும், எரிச்சலைத் தெளிப்போர் மீது ஒருவகைக் கோபமும் ஏற்படுவது இயற்கைதான். அப்படி எரிச்சல் ஏற்படாத அளவில் பார்த்துக்கொள்வதும் — கோபமும் கொந்தளிப்பும் ஏற்படும்போது சமாளிப்பதும்தான் நிர்வாகத்திற்கு அழகு. இந்தப் பெருந்தன்மை இல்லாத காரணத்தாலும், தடியையும் துப்பாக்கியையும் நாடுவதாலும், அரசுக்கே இழுக்கு ஏற்பட்டு வருகிறது! துணைவேந்தராக விளங்குபவர் பெரிய விவேகி, எனினும், ஏனோ இந்தளவுக்கு நிலைமை மோசமாகி இருக்கிறது!

"அதிகமாக நடவடிக்கை எடுத்துவிடாதீர்கள்", என்று போலிசாரிடம் சொன்னாராம், சுப்பிரமணியம். குறைவாகப் போலிசார் எடுத்த நடவடிக்கைதான், தடியடி! கைது!! இந்த நடவடிக்கை எடுக்கச் சொன்னவர், அங்கேயே இருந்து, சிக்கலைத் தீர்த்துவிட்டுவர முயற்சித்திருந்தால், 'நவகாளியில் நடந்து காட்டிய காந்தியடிகளின்' பாதையில் நடப்பவர் என்கிற பெருமையைத் தேடித்தந்திருக்கும். அமைச்சர், சென்னை வந்துவிட்டார்! அந்த அறிவாலயம் மூடப்பட்டுவிட்டது!!

கைது — வழக்கு — தண்டனை, என்பது சாதாரணமாகப் பழக்கப்பட்ட செயல், ஒரு அரசுக்கு. இந்த முறைகளில், மாணவர்கள்தம் பிரச்னைகளை அணுகாமல்; வீம்புக்கு பலரது வாழ்வைப் பலியிட விடாமல் அறிவாலயத்தின் கதவுகள் திறக்கும்படி செய்ய வேண்டுகிறோம். அன்பால், மாணவர்களை நிச்சயம் கட்டுப்படுத்த இயலும். அண்ணாமலை நகரில், அந்த 'அன்புக்கு' பஞ்சம் ஏற்பட்டது ஏனோ என்று தெரியவில்லை.

★

வரலாற்று நாடகம்:

முதலாவது குற்றவாளி!

[மலர் மன்னன்]

நிலைமை விளக்கம்:

"உலகமெங்கிலும் பரவியிருக்கும் கிருத்துவ மதம் என் விருப்பத்திற்கேற்பவே இயங்கும். கிருத்துவ மதத்தைப் பின்பற்றுவோர் உலகத்தின் எந்தக் கோடியிலிருப்பினும், அவர்கள் எனக்குக் கட்டுப்பட்டேயாக வேண்டும்; என்னால் இடப்படும் கட்டளையே கடவுளால் இடப்படும் கட்டளை; எனது விருப்பப்படியே அனைவரும் நடந்தாக வேண்டும்" எனக் கொக்கரித்தவாறு ரோமாபுரியில் கோலாகலமாகக் கொலுவிருந்த போப்பாண்டவரின் ஊழலைப் பகிரங்கமாகப் பறை சாற்றி மதச் சீர்திருத்தம் புரிந்த மார்டின் லூதரின் கொள்கைகள் ஐரோப்பிய நாடுகளில் வேரூன்றத் தொடங்கிய காலம்.

தந்தை மறைந்தமையால் இங்கிலாந்தின் அரசுக் கட்டிலில் சின்னஞ் சிறுவனை ஆறும் எட்வர்ட் அமர நேர்ந்தது. அவனது பிரதிநிதியாகப் பதவியேற்று ஆளும் பொறுப்பை ஏற்றுக்கொண்டவன் லூதரின் கொள்கைகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டு, மதச் சீர்திருத்தம இங்கிலாந்து முழுவதும் பரவுவதற்கான வழிவகைகளைச் செய்துவந்தான்.

சிறுவனை எட்வர்ட், அரியணையில் அதிக நாட்கள் அமர்ந்திருக்கவில்லை; மழலைப் பருவம் முதலாகவே உடல் நலம் குன்றியவனாயிருந்த அவன், தனது பதினாறுவது வயதிலேயே நிரந்தரத் தூக்கத்தில் ஆழ்ந்துபோனான். எனவே அவனுக்கு முன் அரசாண்ட எட்டாம் ஹென்றியின் முதல் மனைவிக்குப் பிறந்தவளான மேரி ஆட்சிப்பீடமேறினாள். மேரி, மதச் சீர்திருத்தத்தை வெம்பென வெறுப்பவள்; பழமையிலே நாட்டங் கொண்டவள். சீர்திருத்தவாதிகளின் ஆதிக்கத்தை அகற்றி, பழைய வழிபாட்டு முறையினைத் திரும்பவும் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் அவள் ஈடுபட்டாள்.

அரசியின் ஆதரவு தமக்குக் கிட்டும் என்று தெரிந்ததும், பழைமைவிரும்பிகள் ஒன்றுதிரண்டனர். அருணன் மறைந்து இருள் பரவியான பிறகு அவர்கள் கூடிக் கூடிப் பேசிப் பலப் பல சதித் திட்டங்கள் வகுத்தனர். சீர்திருத்தவாதிகளனைவரையும் வஞ்சகமாகக் கொலை செய்யத் துவங்கினர். விரைவிலேயே மடாலயங்களும், கோயில்களும் அவர்கள் வசமாயின; சீர்திருத்தவாதிகள் பகிரங்கமாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கொலையுண்டனர். மதவாதிகளின் வெறி பிடித்த நடத்தையால் இங்கிலாந்து மண் சிவப்பாயிற்று!

பழமையாளர் நிரம்பிய அரசவையில் மதச் சீர்திருத்தவாதிகள் குற்றவாளிகளாக நிறுத்தப்படுவர்; அவர்கள் தாம் கொண்ட கொள்கை தவறென ஒப்புக்கொண்டு எல்லோர் முன்பாகவும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டால் விடுதலை இடைக்கும் — சொற்ப தண்டனை விதித்தும், பலவாறு அவமானப்படுத்தியுமான பின்னர் தான்!

மன்னிப்புக் கேட்க மறுப்பவர்கள் உயிரோடு தீயிலிடப்படுவார்கள். அரசி துணை இருக்கவே பழைமையாளர்களின் வெறியாட்டம் எல்லை கடந்தது; மதச் சீர்திருத்தம் தேவையெனப் பேசுவோர்களையெல்லாம் பலவாறு கொடுமைப்படுத்தி, அவர்களிடமிருந்து 'பழைய மதாச்சாரமே நீடிக்கவேண்டும்' என்ற ஒப்புதலைப் பெறுவது பழைமையாளரின் தினசரி நடவடிக்கையாக இருந்து வந்தது.

இந்த அவல நாட்களிலேதான் கிரான்மர் என்ற மதச் சீர்திருத்தவாதி புதுமைக் கருத்துக்கள் நிரம்பி வழியும் நெஞ்சினனாய் இங்கிலாந்தில் உலவிக்கொண்டிருந்தான். கிரான்மர் நல்லவன், நாட்டோர் நலத்தில் நாட்டங் கொண்டவன், ஒழுக்கம் வழுவா உயர் பண்பாளன் என்றெல்லாம் நாட்டு மக்களால் கருதப்பட்டு வந்தவன். பழைமையாளர் குழாமில் செல்வாக்கும், அரசியின் பெருமதிப்பும் பெற்று விளங்கியோருள் குறிப்பிடத் தக்கவர்கள், கார்டினர், பொன்னர் என்போர். பின் வரும் காட்சிகளில் இம்மூவரே குறிப்பிடத்தக்க உறுப்பினர்கள்.

1

[கார்டினரின் ஆடம்பரமான அறை; கார்டினரது கூட்டாளிகளுள் முக்கியமானவனை பொன்னரும், வேறு சிலரும் அறையில் குழுமியுள்ளனர். அனைவரும் கார்டினரையே நோக்கியவாறிருக்க, அவனோ தன் செக்கச் சிவந்த விழிகளை எங்கேயோ பதித்திருக்கிறான்.]

பொன்னர் :- ஏன சிலையாகி விட்டாய், கார்டினர். உள்ளத்தில் உருவாகும் அற்புதத் திட்டங்களைவெளியிட்டு எங்களைச் செயலாற்றத் தூண்டும் உனது வாய் ஏன் இப்போது மௌனம் சாதிக்கின்றது? எந்நேரமும்

பலப் பல திட்டங்களை உருவாக்கிக்கொண்டிருக்கும் உன் உள்ளம் செயலற்றுப் போய்விட்டதா? உள்ளம் சூன்யமடைந்துவிட்டது என்பதைத்தான் உதடுகளால் இறுக மூடப்பட்டுவிட்டிருக்கும் உன் வாய் கூறாமல் கூறுகின்றதோ ஒருவேளை?

கார்டினர்:- (மெல்லச் சிரித்து) ஆதவன் தன் செயலை மறந்தாலும் என் சிந்தை செயல் மறக்காது நண்பனே... இரண்டு நாட்களுக்கு முன்பு நம்மால் கைது செய்யப்பட்ட அந்தச் சீர்திருத்தக்காரன் எதற்கும் மசிபவனாகத் தோன்றவில்லை; அவனை வழிக்குக் கொண்டு வருவது பற்றித்தான் எண்ணியபடியிருந்தேன், பொன்னர்; எத்தனையோ சித்திரவதைக்காளானபோதிலும், அவன், தான் கொண்ட கொள்கைக்கு மாறுபடச் சம்மதிக்கவில்லை...

பொன்:- யார், அந்தப் புல்லறிவாளன், கிரான்மரா?

கார்:- ஆமாம், பொன்னர்; என்ன பாடுபடுத்தியும் அவன் இணங்குபவனாக இல்லை; கிட்டி போட்டு வாட்டியும், நகக் கண்களில் ஊசியைப் பாய்ச்சியும், இன்ன பிற வேறு முறைகளைப் பிரயோகித்தும்கூட, அந்தப் பகுத்தறிவாளன் பணிய மறுக்கிறான் நண்பா. அவனைப் பாவமன்னிப்புக் கேட்கச் செய்வதற்கான மார்க்கம் எதுவென்பது இன்னும் புலப்படவில்லை; தேடிக்கொண்டிருக்கிறேன்...

பொன்:- கார்டினர், எனக்கொரு நல்லயோசனை தோன்றுகிறது; நேர்மையாளர் எவனும் தனது நேர்மைக்குப் பங்கம் நேரிடும்படியான குற்றம் சாட்டப்பட்டால் மனம் பொருமுவானல்லவா? கிரான்மர், மக்களால் நல்லவன் எனக் கருதப்படுபவன்; 'நேர்மையாளன்; ஒழுக்கக்கேடான செயல்களைக் கனவிலும் கருதாதவன்' என்றெல்லாம் புகழப்படுவன். மிகமிகக் கீழ்த்தரமான செயல்களைப் புரிந்ததாக அவன்மீது குற்றம் சாட்டினோமானால், அவன் வேதனையால் துடிதுடித்துப் போவான்; அத்தகைய குற்றம் சாட்டப்படாதிருக்க வேண்டுமானால் தனது சீர்திருத்தக் கொள்கையையும் விட்டுவிட அவன் சம்மதிக்கக்கூடும்; ஏனெனில், "அவன் மானஸ்தன்; ஒழுக்கசீலன்; தீயன கண்டால் தீயைக் கண்டதுபோல் விலகுபவன்" என்று எந்த மக்களால் போற்றப்பட்டானோ, அதே மக்களால் "இழி செயல் புரிந்தவன்" எனத் தூற்றப்படுவதை அவனால் சிறிதளவும் பொறுத்துக்கொள்ளவியலாது; இல்லையா?

கார்:- நீ கூறுவதும் சரிதான், பொன்னர்; உடலை வருத்தும்படியான செய்கைகளையெல்லாம் செய்து பார்த்தாயிற்று; அனைத்துமே விழலுக்கிறைத்த நீராயின. இனி உள்ளத்தை வருத்தும்படியான நடவடிக்கைகளை மேற்கொண்டால், ஒருவேளை பயன் கிடைக்கக்கூடும் நண்பா; கிரான்மர் சிறந்த அறிஞன்; மக்களது பெரு நம்பிக்கைக்குரியவனாக இருப்பவன்; 'மதச் சீர்திருத்தம் தீதானது, தேவையற்றது; ஒரு சிலரது சுயநலத்திற்காகவே துவக்கப்பட்டது' என்று அவனாலேயே ஒரு அறிக்கை வெளியிடப்படுமானால், அது நம்மவர்க்கு மாபெரும் வெற்றியாகும்; கிரான்மரைச் சாகவிடக்கூடாது; அவனை உயிரோடு வைத்திருந்து, மதச் சீர்திருத்தத்திற்கு எதிரான அறிக்கையை அவனிடமிருந்தே பலவந்தமாக வாங்கிக்கொள்ளவேண்டும்...

குழுமியுள்ளோர்:- (உரத்த குரலில்) அதற்குப் பொன்னர் கூறிய முறையினைப் பின்பற்ற வேண்டும்!

கார்:- ஆமாம், நண்பர்களே; பொன்னர் முறையைத்தான் நாம் கடைப்பிடிக்கப் போகிறோம்!

பொன்:- இருட்டறையில் கிடக்கும் அந்த நீசனைக் காணப் புறப்படுவோம் வாருங்கள்!

[அனைவரும் கைதாக்கப்பட்டுள்ள மதச் சீர்திருத்தவாதி கிரான்மரைக் காணச்செல்கின்றனர்.]

2

[சீர்திருத்தவாதி கிரான்மர் உடம்பெங்கும் குருதிவடியும் காயங்களுடன், விலங்குகளுடன், சங்கிலியால் பிணைக்கப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கிறான். அவனெதிரில், இரத்தவெறி பிடித்த விலங்குகளாக கார்டினர் கூட்டம் நிற்கின்றது.]

கார்டினர்:- பாதகனை நீ விடுதலை செய்யப்படவேண்டுமானால் ஒரேயொரு வழியிருக்கிறது...

கிரான்மர்:- (ஏளனப் புன்னகை இதழ்களில் மிளிர) விடுதலையடைய வேண்டுமென்பதில் விழைவிருந்தாலல்லவா, வழியைப்பற்றிக் கவலைப்படவேண்டும்?

பொன்னர்:- மூடனே, கார்டினர் பெருமானின் கருணையுள்ளம், பாவியான உன்னை மன்னித்துவிட நினைக்கிறது. இதுவரை நீ பரப்பிவந்த கொள்கைகள் தீதானவை என்பதை ஒப்புக்கொண்டு, அதனை உலகோர்க்கும் உணர்த்துவதாக இருந்தால் நீ விடுதலை செய்யப்படுவாய்; இல்லையேல்...

கிரான்:- கொல்லப்படுவேன்! அவ்வளவு தானே? செத்துப்போக நான் என்றைக்கோ சித்தமாகிவிட்டேன்!

பொன்:- கொல்லப்போவதில்லை முட்டாளே, உன்னைக் கொல்லப்போவதில்லை; உன் உள்ளத்துக் கொள்கைகளை நீ மாற்றிக்கொள்ளாவிடில் பெரியதொரு குற்றச்சாட்டுக்கு நீ ஆளாவாய்!

கிரான்:- 'நாத்திகன்—நாசகாரன்' என்ற குற்றச்சாட்டுத்தானே? அதற்காக நான் எனது பாதையிலிருந்து வழுவிவிடப் போவதில்லை!

பொன்:- நீ எண்ணுவதுபோல் அம்மாதிரியான குற்றச்சாட்டு அல்ல, கிரான்மர்! குடிபோதை தலைக்கேறி நீ விலைமாதரோடு சுற்றியதாகவும், நடுத்தெருவில் அலங்கோலமாகக் கிடந்ததாகவும், உயர் குடும்பத்துப் பெண்களிடம் தகாத முறையில் நடந்துகொண்டதாகவும் உன்மீது குற்றம் சாட்டப்படும்; அத்துடன் அரசாங்கத் தொடர்புள்ள இரகசியங்களை உளவறிந்து கூறுவதற்காக அந்நியனொருவனிடம இலஞ்சம்வாங்கியதாகவும் உன்மீது குற்றம் சாட்டப்படும்; அதுமட்டுமல்ல, கிரான்மர்; நீ எங்கள் வழிக்கு வராவிட்டால் உன் கண்ணெதிரிலேயே உன் குடும்பத்துப் பெண்கள் இழிவு படுத்தப்படுவார்கள்!

கிரான்:- (நெஞ்சம் பதறி) பாவிகளே, என்னைச் சாகடியுங்கள்!

தயவுசெய்து என்னைக் கொன்றுவிடுங்கள்! எந்த மக்களால் நான் 'ஒழுக்க சீலன்' எனப் பாராட்டப்பட்டேனோ, அதே மக்களால் தீயவனெனக் கருதப்படுவதை என்னால் பொறுக்கவியலாது; என் நெஞ்சுக்குச் சரியென்று பட்டதை மறுத்துப் பேசுவதற்கும் என்னால் முடியாது; எனவே என் உயிரைப் போக்கிவிடுங்கள்! தயவுசெய்து எனக்கு இந்தச் சிறு நன்மையினையாவது செய்யுங்கள்!

[அவன் படும் வேதனையைக் கண்டு கார்டினர் கூட்டம் குரூரமாக நகைக்கிறது.]

பொன்:- அது மட்டும் முடியாது கிரான்மர்! நீ மதச் சீர்திருத்தத்திற்கு எதிர்ப்புத்தெரிவிக்க வேண்டும்; அல்லது மேற்சொன்ன குற்றங்களைச் செய்தவனாக எல்லோராலும் கருதப்பட வேண்டும், குடி வெறியில் நீ வீதியில் கிடந்தாயென்பதற்கும், அயலானிடம் இலஞ்சம் வாங்கினாயென்பதற்கும் சாட்சியங்கள் ஆயிரக்கணக்கில் எம்மால் படைக்கப்படும் என்பதை மறந்துவிடாதே!

[உரக்கச் சிரிக்கிறான்.]

கிரான்:- (நடுங்கும் குரலில்) வேண்டாம்.........வேண்டாம்; மக்களுக்கிருக்கும் என் ஒழுக்கத்தைப்பற்றிய நம்பிக்கைக்கு எவ்வித ஊறும் விளைய வேண்டாம்......அவர்கள் என்னிடத்தில் நிரம்ப நம்பிக்கை கொண்டுள்ளார்கள்; அவர்களது நம்பிக்கையை நானே சீர்குலைக்க வேண்டாம்! 'ஒழுக்கம், நேர்மை' என்று பேசுவோரெல்லாம் 'கபட வேடதாரிகள்' என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட வேண்டாம்...மதச் சீர்திருத்தவாதிகள் எல்லோரும் வாயளவில் மட்டுமே ஒழுக்க சீலர்கள் என்ற கருத்து அவர்களிடம் தோன்றிவிட வேண்டாம்...... அதைவிட நான் என் உள்ளத்துக் கொள்கையை மறைத்துக் கொள்வது எவ்வளவோ மேலானது......வெளியுலகுக்கு நான் பழைமையாளனாக மாறினாலும் உள்ளத்தால் சீர்திருத்தவாதியாக இருப்பேன். "உயிர் மீதுள்ள ஆசையால்தான் கிரான்மர் பழமையாளனானான்" என்று நாடு பேசும்; சீர்திருத்தவாதியான கிரான்மர் ஒழுக்கங்கெட்டலைந்தவன் என்று பேசப்படுவதைக் காட்டிலும் அப்படிப் பேசுவது தவறாகாது...நிச்சயமாகத் தவறாகாது......!

கார்:- கிரான்மர், நீ உண்மையிலேயே புத்திசாலிதான்; எங்கே உன் கைப்பட "மதச் சீர்திருத்தம் என்பது ஒரு சிலரது சுயநலத்திற்காக உருவாக்கப்பட்டது; அது இறைவனுக்குத் துரோகமிழைப்பதாகும் என்பதை நான் உணர்கிறேன்; ஏற்கனவே இருந்து வந்ததும் புனிதமானதுமான வழிபாட்டு முறையை ஏற்றுக்கொள்வதுடன் கடவுளின் பிரதிநிதியாக ரோமாபுரியில் கொலுவீற்றிருக்கும் போப்பாண்டவரின் தலைமையையும் ஒப்புக்கொள்கிறேன்; பாவியான என்னைக் கருணையே வடிவான அவர் மன்னித்தருள இறைஞ்சுகின்றேன்; அத்துடன் அரசவையில் மதச்சீர்திருத்தம் தீதானது; பழைய வழிபாட்டு முறையே நீடிக்க வேண்டும்' என்ற பொருள்பற்றி நீண்டதொரு சொற்பெருக்காற்றவும் முடிவெடுத்துள்ளேன்" என்று எழுதிக் கையொப்பமிட்டுக் கொடு பார்க்கலாம்!

[கிரான்மரின் கைவிலங்குகள் அகற்றப்படுகின்றன, எழுதுகோலும் தாளும் அவனிடம் தரப்படுகின்றன; கிரான்மர் ஏக்கத்துடன் அனைவரையும் நோக்குகின்றான்; வேதனை படர்ந்த அவன் விழிகளினின்று கண்ணீர் பெருக்கெடுத்து வழிகின்றது. சில விநாடிகள் சிந்தித்தபடியிருந்த அவன் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாய் எழுதத் துவங்குகிறான். கார்டினர் கூட்டத்தினர் வெற்றிப் பெருமிதத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்கின்றனர்.]

கார்:- பொன்னர், நாங்கள் முன்னால் போகிறோம்; நீ கிரான்மர் எழுதிக்கொடுப்பதை வாங்கிக் கொண்டு வா; கிரான்மர் அறிக்கையை நகலெடுத்து நாடெங்கும் பரப்புவது உன் பொறுப்பு; கிரான்மர் அரசவையில் பேசுவதற்கு ஒரு நாளையும் குறித்து விளம்பரம் செய்துவிடு; கிரான்மர், அரசவையில் பேசும் நாள்

பட்டியல்

ஐந்தாண்டுத் திட்டம் பற்றி, பேசுகிறார்கள்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி, எடுத்துப் பரப்ப ஏதேதோ செய்ய இருப்பதாகவும் சொல்லுகிறார்கள்.

தலை எப்படி என்று தெரிந்து கொண்டால், ஆள் எப்படி என்று புரிந்து கொள்ள முடியுமல்லவா? இந்தத் திட்டங்களையெல்லாம் போடும் திட்டக்கமிஷன் எப்படிப்பட்டது என்று ஆராய்கிறார், ஒருவர்!

டாக்டர் டி. ஆர். காட்கில் எனும் அவர், திட்டக் கமிஷனுக்கு ஆலோசனை கூறும் பெறுப்பிலிருப்பவர், சிறந்த பொருளாதார அறிஞர். அவர் கூறுகிறார்.

பொருத்தமான திட்டங்களைப் போடுவதில்லை.

விரிவான ஆராய்ச்சி நடத்துவதில்லை.

எப்படிச் செய்வதெனும் ஒழுங்கு கிடையாது.

திட்டம் எப்படி நிறைவேறியது என்கிற கண்காணிப்பும் கிடையாது.

சரியான பாதையைக் காட்டத் தவறி வருகிறது.

"குறைகள் பட்டியல்", தெரிவிக்கிறார் அவர்! பிரதமர் நேருவுக்கும், நிதி அமைச்சராயிருப்பவருக்கும் திட்டக் கமிஷனில் இடம் இருக்கக் கூடாது என்றும் அவர் தெரிவிக்கிறார். இதனால், ஒழுங்கான திட்டம் கிடைப்பதற்குப்பதில், குழப்பமான திட்டங்களே கிடைக்கின்றனவாம்!!

அவர் கூறுகிற இன்னொரு தகவல், புதுயுகத்தை உருவாக்கும் இதுபோன்ற காரியங்களில் 55 வயதுக்கு மேற்பட்டோரே இருக்கலாகாது என்பதாகும். நேரு, ஒரு உறுப்பினராகக் கூட இருக்கலாகாது என்கிறார் இவர். ஆனால் திட்டக் கமிஷனுக்குத் தலைவராக இருப்பவரே நேருதானே!!

★

வரை அவன் எங்கள் பாதுகாப்பிலேயேதான் இருப்பான்; ஆனால் இதுவரை இருந்து வந்ததைப் போலல்ல; கவலைப்படாதே!

[ஆணவத்துடன் நகைக்கிறான். கிரான்மர் வெறுப்பை உமிழும் விழிகளால் அவனை நோக்குகிறான்.]

பொன்:- நல்லது கார்டினர்; நீங்கள் எல்லோரும் செல்லுங்கள்; நான் பின்னால் வருகிறேன்.

[அனைவரும் செல்கின்றனர். பொன்னர் மேற்பார்வையிட, கிரான்மர் எழுதுகிறான்.]

3

[அரசவை கூட்டப்பட்டிருக்கின்றது. அறிஞனும், மக்கள் ஆதரவைப் பெற்றவனுமான மதச் சீர்திருத்தவாதி கிரான்மர் மனம் மாறிப் பழைய மதக்கோட்பாட்டை ஆதரித்துப் பேசப்போவதாகப் பறைசாற்றப்பட்டதால் மக்கள் அனைவரும் திரண்டு வந்துள்ளனர். மதச் சீர்திருத்தம் விரும்புவோரும், நெஞ்சுரமற்ற கிரான்மர் என்ன கூறுகிறான் என்று கேட்பதற்காகக் குழுமியுள்ளனர். அரசி மேரி, அரியணையில் வீற்றிருக்கின்றாள். அவளுக்கெதிரில்—மன்றத்தின் நடுமையத்தில் போடப்பட்டுள்ள ஆசனத்தில் — கிரான்மர் அமர்த்தப்பட்டிருக்கிறான். கார்டினர், பொன்னர் முதலானோர் ஆணவமும், பெருமிதமும் தவழும் முகத்தினராய் அரசியைச் சார்ந்து அமர்ந்துள்ளனர். நிகழ்ச்சி துவங்குவதற்கான அனுமதி அரசியிடமிருந்து அளிக்கப்பட்டதும், கார்டினர் தனது இருக்கையினின்று எழுகிறான்.]

கார்டினர்:- மதிப்பிற்குரிய அரசியாரே, மற்றைய பெரியோரே! இதுவரை தீதான பாதையில் சென்றுகொண்டிருந்த கிரான்மர் பழைய முறைதான் புனித முறை என்பதை உணர்ந்து மனம் திருந்தியுள்ளான்; நமது பாதைக்குத் திரும்பியுள்ளான்; அன்பும் இரக்கமும் மிக்க போப்பாண்டவர் இதுநாள் வரை பாவியாயிருந்த அவனது தவறுகளை மறப்பாராக — மன்னிப்பாராக! 'மதச் சீர்திருத்தம் புரட்டர்களின் போதனை' என்பது பற்றி இனிக் கிரான்மரே விளக்கமாகச் சொற்பொழிவாற்றுவான். சீர்திருத்தம் பேசிய அவனது வாயினின்று சீர்திருத்தம் தீதானது என்பதற்கான விளக்கங்கள் வருவதை நாட்டவர் யாவரும் கேட்டறிய வேண்டுமென்பதற்காகவே மக்களுக்கும் அரசவையில் அகன்ற இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது; கிரான்மரின் சொற்பொழிவைக் கேட்டபின்னராவது பழைய வழிபாட்டு முறையே சிறந்த வழிபாட்டு முறை என்பதை எல்லோரும் உணரட்டும்!

[கிரான்மர் பேசுவதற்காக எழுந்திருக்கிறான். மக்களிற் பெரும்பாலோர் அவனை ஏளனத்தோடும் அருவருப்போடும் நோக்குகின்றனர்.]

கிரான்மர்:- பேரன்புடையோரே! 'மதச் சீர்திருத்தம் புரட்டர்களின் போதனை' என்பதுபற்றி நான் பேசப்போவதாக நீங்கள் எதிர்பார்த்து இங்கே குழுமியிருக்கிறீர்கள்; எடுத்த எடுப்பிலேயே உங்களை ஏமாற்ற வேண்டியவனாயிருப்பதை எண்ணிப் பெரிதும் வருந்துகிறேன்; எனினும் இந்த ஏமாற்றம் உங்களிற் பெரும்பாலோருக்கு மகிழ்ச்சியினை உண்டாக்கும் என நம்புகிறேன்......

[கார்டினர், பொன்னர் முதலியோர் ஏதும் புரியாது ஒருவரையொருவர் பார்த்துக்கொள்கின்றனர்; கிரான்மர் தொடர்ந்து பேசுகின்றான்.]

கிரான்:- 'மூடப் பழக்க வழக்கங்கள் அகலவேண்டும்; மதத்திலுள்ள பகுத்தறிவுக்கொவ்வாத கொள்கைகள் புறக்கணிக்கப்பட வேண்டும்; மத நூல் எல்லோராலும் நன்கு ஆராயப்பட வேண்டும்; எனவே அது எல்லா மொழிகளிலும் எழுதப்படவேண்டும்; தனிப்பட்டவர்களது ஆதிக்கம் மதத்துறையிலிருந்து அகற்றப்படவேண்டும்' என்ற உயர்ந்த கொள்கையையல்ல; 'மத நூல் எல்லோராலும் படிக்கப்படலாகாது; அப்படிப் படிப்பதால் அதன் புனிதத் தன்மை கெட்டுவிடும்; எனவே மதநூல் இலத்தீன் மொழியில் மட்டுமே இருத்தல் வேண்டும்' என்று கூறி, இல்லாததையும், பொல்லாததையும், தமக்குச்சாதகமானதையும் மத நூலில் இருப்பதாகப் போதிக்கப்பட்டதைத்தான் "புரட்டர்களின் போதனை" எனக் கூறவேண்டும்!

மதச் சீர்திருத்தம் தீதானது என்று ஒப்புக்கொள்ளுமாறு நான் வற்புறுத்தப்பட்டேன்; சித்ரவதைக்காளாகியும் நான் சித்தம் தளரவில்லை. எனவே என் மனத்தை மாற்றுவதற்கு வேறொரு முறை கையாளப்பட்டது; எனது நேர்மையிலும், ஒழுக்கத்திலும் மக்களுக்குள்ள நம்பிக்கையைத் துணையாக வைத்துக்கொண்டு என்னை வலுக்கட்டாயமாக மதச் சீர்திருத்தத்திற்கு எதிர்ப்பாளனாக்கினார்கள்; மதச் சீர்திருத்தத்தைக் கைவிட்டு, மன்னிப்பும் கேட்டுக்கொள்ளத் தவறினால், குடிபோதையில் விலைமாதரோடு திரிந்ததாகவும், அரசாங்க இரகசியத்தை அம்பலப்படுத்துவதற்காக அயலானொருவனிடம் இலஞ்சம் வாங்கியதாகவும் என்மீது குற்றம் சாட்டப்படும் என எச்சரித்தனர். "சீர்திருத்தம் பேசிய கிரான்மர் ஒழுக்கக் குறைவானவன்" என்று நாட்டு மக்களால் பேசப்படுவதைக் காட்டிலும், 'உயிர்மீதுள்ள ஆசையால் கிரான்மர் பழைமையாளனானான்' என்று பேசப்படுவது தவறல்ல எனக்கருதினேன். 'மதச் சீர்திருத்தம் தீயது; தேவையற்றது' என்று என் கைப்பட எழுதிக் கையொப்பமிட்டும் கொடுத்தேன். ஆனால் அப்போதே அரசவையில் பேசும் வாய்ப்புக் கிட்டுகையில் உண்மையினைக் கூறிவிட முடிவு செய்தேன்; கூறியும்விட்டேன், இனி எனக்கு என்ன நேர்வதாயினும் கவலையில்லை!

[திடுக்கிட்டுப்போன கார்டினர் குழாம் செயல் மறந்து திகைக்கிறது. கலவரக்களை படிந்த அவர்கள் முகத்தை அரசி உற்று நோக்குகிறாள்; பழைமையாளர் பரபரப்புடன் காணப்படுகின்றனர். சீர்திருத்தவாதிகள் சிந்தை மகிழ்கின்றனர்; "கிரான்மர் வாழ்க!" என்ற வாழ்த்தொலி அரசவையினையே அதிரவைக்கிறது.]

அரசி:- (சீற்றத்துடன்) இந்த நீசனைத் தீயிலிடுங்கள்!

[அரியணையிலிருந்து எழுந்து சினத்துடன் தன்னிருப்பிடம் நோக்கி விரைகிறாள். சிறிது நேரத்திற்கெல்லாம், கிரான்மர் கொலைக்களத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறான். மக்கள் கூட்டமும் அவனைப் பின் தொடர்கின்றது.]

4

[கொலைக்களம்; கொழுந்துவிட்டெரியும் தீக்குழிக்குக் கிரான்மர் அழைத்துச் செல்லப்படுகின்றான். தீக்குழியை அணுகியதும், கிரான்மர் இருமருங்கிலும் தன்னைப் பிடித்தபடி நிற்போரை நோக்குகிறான்.]

கிரான்மர்:- தயவு செய்து கொஞ்சம் இருங்கள், ஒரே ஒரு செயலைச் செய்ய எனக்கு அனுமதி அளியுங்கள்; பழிக்கு அஞ்சி மதச் சீர்திருத்தத்திற்கு எதிர்ப்பாக நான் அறிக்கை எழுதிக் கையொப்பமிட்டது மகத்தான குற்றம்தான்; எத்தகைய இடுக்கண் வரினும் உள்ளத்துக் கொள்கையை அடகுவைக்கலாகாது; எத்தகு பழி வரினும் தயக்கமுறாது, கொண்ட கொள்கையைக் கைவிடாதிருப்பதல்லவோ இலட்சியவாதியின் கடமை? எனவே கொள்கையை அடகு வைத்த குற்றத்தைப் புரிந்த எனது வலது கரத்தை நான் முதலில் தண்டித்தாக வேண்டும்; இரண்டாவது குற்றவாளியான நான் வெந்துபோவதற்கு முன்னதாகவே முதற் குற்றவாளியான எனது வலக்கரம் வெந்துபோகட்டும்!

[துணிவுடன் தன் கரத்தைத் தீயினுள் நுழைக்கிறான். அவன் 'செயல் கண்டு, கார்டினரும் பொன்னரும் கூடச் சிலிர்ப்புடன் கண்களை மூடிக்கொள்கின்றனர்; கண் விழித்துப் பார்த்தபோது, அச்சீர்திருத்தச் செம்மல் வெந்துக் கருகிக் கொண்டிருப்பதையே அவர்கள் கண்டார்கள்.]

இரப்பாரை இரக்கும் வள்ளுவர்!

—[அன்பு]—

வறுமைக்கு ஈடு வறுமையே என்னும்படியான வறுமையின் கடைசி முடிவெல்லையில் உழன்றது அந்தக் குடும்பம். 'நேற்று கொலைசெய்ததுபோல் துன்புறுத்திய வறுமை இன்றும் என்னிடம் வருமோ' என்று தினம் தினம் செத்துப் பிழைத்துக் கொண்டிருந்தான் அந்தக் குடும்பத் தலைவன்.

அக்குடும்பத்திற்குக் கிடைத்த ஒரே இலவசஉணவுகாற்றுத்தான். அதற்காக அக்குடும்பம் யாரையும் இரக்கவில்லை! 'பரந்து கெடுக உலகியற்றியான்' என்று அவன் அதுவரையில் நம்பிக்கொண்டிருந்த கடவுளைச் சபித்தான். அதனாலும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை!

அவன் மனைவி அடுப்பு எப்படியிருக்கும் என்பதையே மறந்தவளானாள். பேசத் தெரிந்த குழந்தைகள் 'அம்மா பசிக்கிறது' என்று பேசக்கூடச் சக்தியில்லாமல் மயங்கித் தாயின் முகத்தை மட்டுமே நோக்கிக் கிடந்தன! பால் அருந்தும் பருவத்திலிருந்த சிறு மழலை தன் தாயிடமிருந்து பால் உணவு கிடைக்கப் பெறாததால் கதறியழுதது! தாய் கணவன் முகம் நோக்கினாள்!

அவனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு இழிவு வந்ததாகக் கருதுபவன் அவன். வறுமையிலும் தன் சால்பை இழத்தலை அவன் விரும்பவில்லை!

ஆனால், அவன் தன் பண்பை இழந்து பிறரை அண்டி உணவு கேட்கும் நிலைக்குத் துரத்தப்பட்டான். அப்படி அவன் இரக்க அஞ்சுவானேயானால் தன் குடும்பம் பசியால் இறத்தலைத்தான் காண நேரிடும்.

யாரிடமாவது சென்று நிலையை எடுத்துக் கூறி பொருள்கூட அல்ல—உணவு—அதுதான் முதலில் அவனுக்கு வேண்டியது—பெற்று வரலாமெனப் புறப்பட்டான். தெருவோடு சென்று கொண்டிருந்த அவனுக்கு பல நிலைமாடங்கள் அமைந்த மாளிகை தென்பட்டது. செல்வந்தர் இல்லம்போன்று தோன்றுகிறதே என்றெண்ணி இல்லத்தின் வாயிலருகே சென்று நின்றான். உள்ளே வீட்டின் உரிமையாளர் பேழையிலிருக்கும் பணத்தை எண்ணிச் சரிபார்த்துக் கொண்டிருந்தார்.

நின்று நின்று அவன் கால்கள் கடுத்தது. கடைசியில் தற்செயலாக வெளியில் வந்த கனவான் அந்த ஏழையைப் பார்த்தார். ஏழையின் கண்கள் அவரை மேல் நோக்கின. அக்கண்கள் தன் வறிய வாழ்க்கையை அக்கனவானுக்கு எடுத்துரைத்தது.

"போ; போ! இங்கு ஒன்றும் இல்லை. நின்றாலும் கிடைக்காது." அவன் காதுகள் இதைத்தான் கேட்டது! உடல் நாணத்தால் குன்றியது! குனிந்த தலையோடும் ஒட்டிய வயிறோடும் வந்த வழியே திரும்பினான்.

அவன் எதிரே வள்ளுவர் வந்தார். அவனைக் கையால் விளித்து அழைத்தார். ஆவலோடு வந்த அவனை நோக்கி வள்ளுவர் கேட்டார்:

"உன்னிடம் ஒன்று நான் இரக்கிறேனப்பா!"

"என்ன ஐயா இது? என்ன சொல்கிறீர்கள்?" என்று அவரை அதிசயத்துடன் பார்த்து வினவினான்.

"ஆம்! உனக்கு அதிசயமாகத்தான் இருக்கும். நீ இரத்தலைப் பார்த்து என் நெஞ்சம் உருகுகிறது. ஆனால் நீ இரந்தும், உள்ளத்தையும் ஒளித்து வைத்து 'இல்லை' என்று சொல்லும் கொடுமையை நினைத்தால் உள்ளம் உருகுமளவும் இல்லாமல் அழிகிறது. இரத்தல் என்பது காவல் இல்லாத மரக்கலம். அதை உள்ளதை ஒளித்துவைக்கும் தன்மையாகிய வன்பாறை தாக்கினால் உடைந்துவிடும். ஆகவே கேட்கத் தக்கவரிடம் கேள். உள்ளதை ஒளித்துவைப்பவர்களிடம் சென்று இரக்கவேண்டாம் என்று உன்னையும் உன்னைப்போல் இரப்பவர்களையும் நான் இரந்து கேட்டுக் கொள்ளுகிறேன்!

இதைக் கேட்ட அவன், கரத்தலைக் கனவிலும் அறியாத ஒருவரைத் தேடிச் சென்றான்! "இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின் கரப்பார் இரவன்மின் என்று"

★

"தெய்வம்"

கண்ணையன்

வேப்பமரத்தின் அடியிலே — வெண்ணிலவின் ஒளியிலே—வீசும் தென்றலிலே — பரந்த மணற் பரப்பிலே தலைசாய்ந்திருந்தான் அந்தச் சிற்பி. முழுமதியின் மோகனப் புன்னகையை அவன் இமை கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தான். குளிர்ந்து வீசிய மெல்லிய காற்று அவன் உடலைமட்டுமல்ல, உள்ளத்தையும் சில்லிட வைத்தது. வானத்து நிலவின் வனப்பிலே தன் வாஞ்சையற்ற உள்ளத்தைப் பறிகொடுத்திருந்த அவனைத் திடுக்கிட வைத்தது மணம். திரும்பிப்பார்த்தான். மல்லிகையின் நறுமணத்தை அள்ளித் தெளித்த வண்ணம் ஒரு மங்கை நின்றுகொண்டிருந்தாள்.

அந்தச் சிற்பி வெடவெடக்கும் உடலியந்திரத்தை முறுக்கிவிட்டுக்கொண்டு எழுந்து நின்றான். அவன் உதடுகள் அசைந்தன. ஆனால், வார்த்தைகளிலே உயிரில்லை. அந்நேரம் அருகேயுள்ள அமராவதியிலிருந்து அருவி விழும் சத்தம் நகையொலிபோலக் கேட்டது. தென்னைமரக் கீற்றுகள் படபடவென அடித்துக்கொண்டன. அதன்மேல் அமர்ந்திருந்த இரு குயில்களும் அஞ்சிப் பறந்தன அங்கிருந்து. விழியைச்சுழற்றி மறுமுறை அந்த வேல் விழியாளை நோக்கினான் சிற்பி.

அமுதகலசம்போல் — ஒளியூற்றுப்போல்—வெள்ளிக் கிண்ணம் போல் விளங்கிய வெண்ணிலவைக் கருமுகில்கள் மொய்த்துக் கொண்டன. பாலாறு பாய்ந்து கொண்டிருந்த நிலப்பரப்பு, இருள் திரையால் மூடப்பட்ட நாடக அரங்குபோல் காட்சி தந்தது. அந்த இருளிலே இருவர் முகங்களிலும் ஓடிய உணர்ச்சி ரேகைகளை ஒருவருக்கொருவர் உணர முடியாமல் திணறினர். தந்தத்தால் பெண்ணுரு ஒன்று சமைத்து — அதைத் தன் முன்பு போட்டிக்கு அனுப்பியிருக்கிறான் போலும் ஒரு சிற்பி என்று உள்ளூர வியந்தான் — சொல்லூற இல்லையே நாவில்.

எத்தனை நேரம்தான் இப்படி மௌன முற்றுகை. பொறுக்காத நெஞ்சம் இருவருக்குமேதான். இன்னும் பொருத்தியானபாடில்லையே வார்த்தைச் சரங்களை. அவன் பேசத் துணிந்தவன்போல் அவள் முகத்தை நோக்கினான். அவளும் ஆவலோடு எதிர்நோக்கினாள். வேற்படையை விழியிற் கொண்ட அணங்கு தானே வருத்துவதோடு அல்லாமல், ஒரு தனிப் படையையும் கொண்டு வந்து தாக்கினாற்போல் அவன் நடுங்கினான்.

அவள் "களுக்" என்று சிரித்தாள். "திடுக்"கென்றது நெஞ்சம் அவனுக்கு. செவ்விதழைக் குவித்துப் புன்முறுவல் காட்டினாள். செங்கரும்பின் சாறுபோல் உள்ளம் அவனுக்கு இனித்தது. அந்த முறுவல் அவனுக்குப் புதுத் தெம்பை அளித்தது. கோழையாயிருந்த அவன், அவள் கொடுத்த முறுவல் பானத்தைப் பருகியதால் முறுக்கேற்றப்பட்டான்.

"நீங்கள் யார்?"

"பெண்"

"பேசுந் தெய்வம்! பொற் சித்திரம்! பூங்கொடி! தெரிந்தது தானே!"

"நீங்கள் புலவரோ? அதுதான் இப்படி......"

"இல்லை, சொல்லால் காவியம் பாடத் தெரியாது எனக்கு; கல்லால் காவியமிழைப்பேன். சுருக்கமாகச் சொன்னால் நான் ஒரு சிற்பி!"

"என்னைப்போல் ஒரு சிலை..."

"வடிவமைத்துவிட்டேன் அப்போதே!"

"எங்கே?"

"என் உள்ளத்தில் — பிளந்து காட்டட்டுமா?"

"அவள் மயில்போன்ற சாயல் காட்டி, மான்போலத் துள்ளி ஓடினாள். ஆற்றோரத்திலே நிலவின் ஒளியிலே ஓடியாடி மகிழ வந்திருந்த மங்கையர்கள் எதிர்கொள்ளக் கலந்தாள். கண்கள் காண முடியாதபடி மறைந்தும் விட்டாள். ஆனால் அவன் இதயத்திலே ஒரு சுடர் விளக்கையுமல்லவா ஏற்றி வைத்துவிட்டாள்?

கருங்கல்லைத் தகர்த்தெறிந்து கொண்டிருந்தது சிற்றுளி. எழும்பிய புகை மண்டலமும், கற் சிதறல்களும் சிற்பியின் தலையையும் முகத்தையும் நிரப்பிக்கொண்டிருந்தன. தீப்பொறி பறந்தது. தீவிரமான முயற்சி. அன்று நிலவு அவன் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தது. அவனுக்கோ? அதைப்பற்றிய நினைவே இல்லை.

வேப்பமரம் தளிர் குலுங்க அசைந்தாடியது. வெண் மணற்

குன்றம் மலராசனம்போல் விரிந்துகிடந்தது.

நிசப்தமான இரவு வேளை. நெடுநேரமாகியும்கூட குடிசையிலே இருந்து சிற்றுளியின் சத்தம் விடாது ஒலித்தது. ஊரின் எல்லையிலே — அமராவதி ஆற்றின் கரையிலே இருந்தது அந்தக் குடில்.

முல்லையின் மணம் கமழ்ந்தது, மூச்சுத் திணறியது சிற்பிக்கு. திரும்பிப் பார்க்க விரும்பியது மனம். அரும்பிய ஆசையை அடக்கிக் கொண்டு கடமையில் கண்வைத்தான் அவன். அவளுக்குத் தலை கால் தெரியாத ஆனந்தம். நேற்று நிலவிலே வந்து— நெஞ்சத்திலே இடம் பெற்று—இன்று சிலையாக உரு மாறிக் கொண்டிருப்பவள்தான் —அந்த சிங்காரி என்று எப்போதோ புரிந்து கொண்டிருந்தான் அவன்.

அவன் கரங்கள் வேலை செய்ய மறுத்தன. கருத்து அந்தக் கட்டழகியையே அல்லவா சுற்றிச் சுழன்றது. நிதானம் இழந்த கைச் சுத்தி அவன் விரலொன்றைப் பதம் பார்த்தது. அந்தோ! அவள் கண்களிலே கண்ணீர்கசிந்தது. குருதி கொட்டியதைக்கூட அலட்சியப்படுத்திய அவன் கை விரல்கள் முத்துத் திவலைகள் படிந்த மாங்கனிக் கன்னத்தை வருடின.

விரலுக்குக் கட்டிட்டாள் அவள். அவன் இதயத்திலே கூடவே காதல் வித்திட்டாள். உள்ளங்கள் உறவாடின — உணர்வுகள் இசை பாடின. இன்ப உலகம் அவர்கள் சொந்தமாயிற்று.

"அனாதை என்னிடத்தில் இத்தனை அன்பா?" அவன் பேசினான்.

"சீமான் மகளாக நான் இருந்துதான் என்ன பயன்? உங்களிடம் அடிமையாக இருப்பதிலே கானும் இன்பத்தைப் பெற முடியாதே!"

"என்ன சீமான் மகளா?" திடுக்கிட்டான்.

"பேதம் காட்டாதீர்கள். நாத மெழுப்பிய வீணையின் நரம்பை அறுத்துவிடாதீர்கள். களங்கமற்ற உள்ளங்கள் இரண்டல்ல; இனி ஒன்றுதான்!"

"என் அமைதிக்கு அழிவைத் தேடுகிறாய்"

"இல்லை, அமைதியோடு இனிமையும் கலந்திருக்கவேண்டாமா" பிறகு, குப்பைமேட்டிலே இருந்தால் கூட நாம் குபேரர்கள் தானே!"

"அமரா" ஓர் ஆணவக்குரல் நடுங்கவைத்தது இருவரையும். கனவு கலைந்தது-உணர்வு சிதைந்தது. அது தன் தந்தையின் குரல்தான் என்றுணர்ந்த அவள் நடுங்கினாள். சிலைக்குப் பின்புறம் ஒளிந்துகொண்டாள். சிற்பி வெளியே வந்தான்.

வெள்ளிப் பிரம்பை சுழற்றியபடி நின்றுகொண்டிருந்தார் பெரிய மனிதர். முறுக்கு மீசை—மிடுக்கான தோற்றம் — பகட்டான உடை—எடுப்பான தலைப்பாகை எல்லாம் அவர் செல்வாக்கைப் பறைசாற்றின. பணக்காரப் பார்வையை அள்ளிவீசிவிட்டு, உரத்த குரலில் பேசத் தொடங்கினார்.

"அம்பிகை சிலையொன்று வேண்டும்."

"அம்பிகையா?" அவன் மனக்கண் முன்பு அசைந்தாடினாள் அவன் அன்புத் தெய்வம்.

"ஆம், அதுவும் இன்னும் பத்து நாட்களில் வேண்டும்" என்றது அதிகாரக் குரல்.

"சரி" அவன்வாய் முணுமுணுத்தது. "இதற்கா நடு இராத்திரியிலே இவ்வளவு தூரம்?"

"ஆண்டவன் பணிக்கு அர்த்த இராத்திரியாய் இருந்தாலென்ன? பக்கத்து ஊர் சென்றிருந்தேன். செய்தியை உன் செவியிலேயும் போட்டுவிடலாம்னு வந்தவேலையோடு இந்த வேலையையும் முடித்துக்கொண்டேன்."

"நல்லது"

சென்றார், பெருமூச்சு விட்டான் சிற்பி. சிலை மறைவிலிருந்து வெளியே வந்தாள் அவள். கடலிலிருந்து உயிர் பிழைத்து வந்தவர்கள் போல் இருவரும் மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்கச் சந்தித்தனர். அந்தக் குலுங்கித் தளிரசைக்கும் பூங்கொடியின் கோணலெல்லாம் அழகின் கோணமாக இருந்தது அவனுக்கு. குறும்பு, நயனங்களின சுழற்சியிலே — புன்னகை பூத்த கோலத்திலே வந்தாள் முகமோடு அகமும் மலர.

கடமையிலே கண்வைத்தான் சிற்பி அமரன். உடனுதவிக்குக் கரம் கொடுத்தாள் அவன் காதலி தாரா. அவன் உள்ளக்கோயிலிலே உருவாகியிருந்த அம்பிகை-தன் கண்ணெதிரே கைவண்ணத்தால் உருவாகிக்கொண்டிருந்தாள். ஆசைக் கனவுகள் அவன் அகக் கண் முன்பு நிழலாடின— அவளோ? — தன்முன் அழகுப் போட்டியிடும் அந்தக் கலைச் செல்வத்தைப் பார்த்து நகை பூத்தாள் — தன் காதலன் கலையாற்றலை எண்ணிப் புளகாங்கிதம் அடைந்தாள் ஓர்புறம்.

இரவு நேரம் அவர்களுக்காகக் காத்திருக்கவில்லை. நினைவுச் சுழலில் நீந்திக் கரைகாண முடியாதவர்களாய்த் தவித்த அந்த இளம் சோடிகளைக் காலம் பிரித்தது.

"கன்னட நாடு"

தமிழகம் தவிர்த்து உங்கள் திராவிடநாடு கோரிக்கைக்கு இடமுண்டா? என்று மாற்றுக் கட்சியினர் கேட்பதுண்டு. அங்கெல்லாம் நமது கழக ஒளி, வேகமாகப் பரவிடும் அறிகுறி, அதிகமாகி வருகிறது.

சென்ற சில தினங்களாக, "திராவிடநாடு" எனும் பெயருடனேயே தோழர் சுபேர் நடத்திவருகிறார், ஒரு மலையாள ஏடு. வனப்பும், நடையழகும் பொருந்தி அந்த ஏடு, கேரளத்தில் நமது கருத்துக்களைப் பரப்பி வருகிறது.

இந்தக் கிழமை, "கன்னடநாடு" அரும்பியுள்ளது. கன்னடமாவட்ட தி. மு. க. வைச் சேர்ந்த எஸ். வி. பதியின் முயற்சியும், தோழர்களின் ஆதரவும்கொண்டு, இதனை மைசூரின் முன்னாள் முதலமைச்சர் அனுமந்தையா துவக்கி வைத்திருக்கிறார்.

அதுபோது அவர் பேசியதாக வந்திருக்கும் சேதி, தோழர்களுக்கு ஊக்கமளிப்பதாகும். "திராவிட முன்னேற்றக் கழகத்தினால் தேசப் பிரிவினை ஏற்படும் என்று சொல்வது தவறு. இந்தி வெறியர்களின் திமிர்ப் பேச்சால்தான் நாட்டுப் பிரிவினை ஏற்படும். உத்தரப் பிரதேசத்தில் இருப்பவர்களுக்கு ஆண்டவன் புத்தி கொடுத்தால் இந்த விபரீதம் ஏற்படாது. இந்தியப் பிரதமர் நேரு உலகப் புகழ்பெற்றவர். இந்தியமக்களின் பெருந் தலைவர். அவரைக் கன்னடத்திலோ, தமிழிலோ, பேசச்சொல்லுங்கள், பார்க்கலாம். நேரு தமிழ்மொழி கற்றுத்தமிழிலே பேசினால் நானும் இந்தி கற்று இந்தியிலே பேசத் தயார், அவரால் ஏற்கமுடியாது," என்று அனுமந்தையா பேசியிருக்கிறார்.

அரும்பியுள்ள அந்த ஏடு, வளர்ந்து நமது கொள்கைகளைப் பரப்பவேண்டும் என வாழ்த்துகிறோம்.

அது தன் கடமையைச் செய்தது- அதற்கு உள்ளம்என்று ஒன்றிருந்தால்தானே ஓய்ந்துவிட.

விழா — நகரெங்கும் ஒலித்தது இன்ப உலா. திரள் திரளாய் மக்கள் கூட்டம். இல்லமெங்கும் தீபாலங்காரம். கூடகோபுரங்களும் மாட மாளிகைகளும் அலங்கார முத்திரை தாங்கித் தலை நிமிர்ந்து நின்றன. கண்களிலே மகிழ்ச்சிப் பெருக்கு—கால்களிலே இயந்திரமாய்ச் சுழலும் முடுக்கு—உள்ளத்திலே ஆனந்தக் கணைத் தொடுப்பு—கரங்களோ? மிதந்தன துடிப்பில். இங்கும் அங்குமாக ஓடிக்கொண்டிருந்தனர் மக்கள்.

அணி அணியாய் மறவர் கூட்டம் முன் நடக்க — வேலேந்திய வீரர்கள் பக்கபலமிருக்க—வைரத்தால் இழைத்த முகபடாம் அணிந்த பட்டத்து யானையின் மீதேறிப் பவனி வந்தார்-மட்டற்ற மகிழ்ச்சியோடுமன்னர்மணிமார்பர்.

அன்று அம்பிகையின் ஆலயத் திருப்பணி. விழாக்கோலம் கொண்ட மக்கள் விதவிதமாய் அணி புனைந்தனர். காணிக்கை செலுத்தினர் அம்பிகைக்கு. பால் சொரிந்தனர். பன் மலர் மாலைகள் சாத்தினர். சுடர் விளக்குகள் ஜோதி காட்டின. பூஜை நடந்தது. மணி ஒலியிட்டது. சங்கு முழங்கியது. கொற்றவர் அம்பிகை குடியிருக்கும் கோயிலுள் புகுந்தார். தலைவணங்கிச் சிலையை நோக்கினார். நிலை மறந்தார். கலை மெருகுதான் கடவுளாய்க் காட்சி தந்ததோ?—அழகின் பிறப்பிடத்தைக் கண்டுவிட்டவன் போல் ஆனந்தம் கொண்டார். இன்பப் பரப்பிலே மிதந்தார். மக்கள் கூட்டம் மன்னரையும் — அம்பிகை மாதாவையும் மாறிமாறிப் பார்த்துக் கூறவொண்ணாத ஆச்சரியத்தின் கைப்பொமமைகளாய் நின்றனர்.

அந்த ஆச்சரியத்திற்குக் காரணமாயிருந்த அவ்வூர் அதிகாரி மருதப்பரை, மன்னர் மனமகிழ்வால் புகழ்ந்தார். சிலையைச் செதுக்கிய சிற்பியின இருப்பிடம அறிந்து, ஏவலாளர்களை அனுப்பிப் பல்லக்கில பாராட்டுக்குரிய அவனை ஏற்றிவருமாறு பணித்தார. ஏவலாளர்கள சென்றனர். காவலன விடைபெற்றான—சூழ்ந்திருந்த மக்கள் கலைந்தனர். அடித்துவைத்த சிலைபோல அசையாது நின்றுகொண்டிருந்தார் மருதப்பர்.

அவர் கண்கள் தீயுருண்டைகளாக ஜொலித்தன. உள்ளமோ? பூகம்பமாய் ஓங்காரமிட்டது. ஓடும் நரம்புகளிலே வீரம் இளர்ந்தது. காதுகளிலே "பழிக்குப்பழி" என்ற குரல் ரிங்காரமிட்டது.

"மாசு! மானமே பெரிதென வாழ்ந்த என் மறக்குலத்திற்கு மோசம தேடிவைத்துவிட்டான் முழு முட்டாள் — பரமபாதகன் அந்தச் சிற்பி. என்மகளைப்போல் சிலை செதுக்கி—பலர்கண்டு வியக்கும்படி அதை நிறுத்திப் பறித்துவிட்டானே என் கௌரவத்தை! அதுமட்டுமா? அந்த அனாதைப் பயல் காதல் வலை விரித்து என் கண்மணி தாராவையும் மயக்கிவிட்டான். பரிசு! ஆம் அவனுக்கு சரியான பரிசு, நான் தரப்போகிறேன்." நெஞ்சம் படபடத்தது மருதப்பருக்கு. அம்பிகையின் அருகிலே சாத்திவைத்திருந்த கொடுவாளை எடுத்தார்—கொக்கரித்தார்.

எங்கோ இருந்து சிற்பி ஓடிவந்தான் பொங்கும் மகிழ்வோடு. பலர் வாழ்த்தத் திகழும் தன் கலைப் படைப்பைக் கண்டு களிக்க வந்தான். கூட்டம் கலைந்திருந்தால் — ஏகாந்தத்திலே எந்தத் தடையுமின்றி — ஏற்றமுற்றிருக்கும் தன் இதயக் கனியின் எழிற் பிழம்பை பார்த்துப் பூரித்துப் பரவசத்தால் மார்பு விம்ம — தன் கடைக்கண்ணிலே அரும்பும் பரிசான ஆனந்தக் கண்ணீர்ச் சொட்டைக் காணிக்கையாக்கலாமென வந்தான்.

திகைத்தான் சிற்பி உள்ளே காலடி வைத்ததும். நகைத்தார் மருதப்பர், தன் அழிவைத் தேடி வந்த அவனைப் பார்த்து. பதைத்த உள்ளத்தோடு பார்த்தான் சிற்பி. கொதித்த உள்ளத்தோடு கொடுவாளை ஓங்கினார் மருதப்பர். பயந்தான்—நயந்தான்—பயனில்லை. பாதுகாப்பிற்காக கையை உயர்த்தினான். ஒரேவீச்சு! துண்டாகி விழுந்தது சிற்பியின் வலது கரம் இரத்தமசொட்ட. அவன் அலறினான் — மருதப்பர் நகை முழங்கினார்.

கண்களிலே நீர் வழிய மருதப்பரைப் பார்த்தான் சிற்பி அமரன். அந்தப் பார்வை, "செலுத்தியாகிவிட்டதா பரிசை?" என்று கேட்பது போலிருந்தது. பாராட்டும்—பரிசும் எந்தக் கரம் ஏந்த வேண்டுமோ? அந்தக்கரம் இரத்த வெள்ளத்திலல்லவா தோய்ந்து கிடந்தது.

ஆம். சரியான பரிசு. அவனது கடைசிச் சிலைக்கு அவன் கரமே காணிக்கை. முடிமன்னரையும் நிலை மறக்கச் செய்த சிலைக்குப் பரிசு. தன் காதல் தெய்வத்தைக் கண்காணும் தெய்வமாக்கியதற்குப் பரிசு கிடைத்தேவிட்டது. துடித்து விழுந்தான் அடுத்த கணம்.

மன்னர் பணியாட்கள்வந்தனர். முத்துப் பல்லக்கு அவனை ஏற்றிச் செல்லக் காத்திருந்தது. பொற்காசுகளும் வளநாடும்—யானைக் கன்றுகளும் தாக்காத்துக் கிடந்தான் அந்நாட்டுக் காவலன். அறிஞர் கூடிய அவையிலே அவனுக்கோர் தனியாசனம் ஒதுக்கிக்கூட வைத்திருந்தான். பட்டம்—பதவி--புகழ்மாலை இவைகளெல்லாம் இனி அவனுக்கெதற்கு? அவன்தான் ஈடு கொடுக்க முடியாத பரிசைப் பெற்றுவிட்டானே!

★

தொழில் கல்வி வகுப்புகள்

1958 மே மாதம் 1-ம் தேதி முதல் ஜூன மாதம் 9-ம் தேதி வரை ஆட்டோமோபைல் ஸர்வீஸ் என்ஜினீயரிங், ரேடியோ ஸர்வீஸ் என்ஜினீயரிங் ஆகிய, ஆறு வார வகுப்புகள நடத்தபபடும. S.S.L.C.யும அதற்கு மேலும படித்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். ஒரு சில மாணவிகளுக்கு சில சலுகைகள் கொடுக்கப்படும். இந்த 6 வார வகுப்புகள முடிவடைந்தவுடன், தொடர்ந்தாற்போல் அதேபாடங்களில் மூன்று மாத வகுப்புகள் நடத்த உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. விவரங்கள் அறிவிக்கபபடும். பிராஸ்பக்டஸுக்கு I. L. W. A. Ltd., கோபால் பாக், கோயமுத்தூர் என்று எழுதவும்.

போன்: 40

தந்தி: "ILWA".

G. D. NAIDU,
பிரஸிடெண்ட்

ஆத்திரமும் ஆதரவும்

—[ம. கி. தசரதன்]—

தி. மு. க. சொல்லும் திராவிட நாட்டு அமைப்பு இயலாத செயல் என்று சொல்லிடும் அமைச்சர் 'இராஜா மகள்' உதாரணம் எடுத்துக் காட்டுகின்றார் ஓர் ஊரில்.

கதைகள் சொல்லி திராவிட நாட்டுக் கோரிக்கையை மாய்த்துவிடலாம் என்று நமது மாநில நிதியமைச்சர் கருதுகின்றார் போலும்! தி. மு. கவின் வளர்ச்சியைக் கண்டு மனம் பொருத அவர் அப்படி ஒரு மயக்கத்தில் இருப்பது கண்டு நாம் பரிதாபப் பட வேண்டியவர்களாகின்றோம்.

திராவிடநாடு பெறுவதுசினிமா கதை எழுதுவது போலவோ, காட்சி சோடனையைப் போலவோ? அல்ல என்று சொல்லிடும் நிதியமைச்சர் தாமே ஒரு 'இராஜா மகள் கதை' சொல்ல ஆசைப்படுவது விந்தைதான்.

"கேரளம், கன்னடம், ஆந்திரம் இவற்றைத் தமிழகத்துடன் சேர்த்துத் திராவிடநாடு அமைக்க வேண்டும் என்று கோருகின்றார்கள். இது எப்படி இருக்கிறது என்றால் இராஜா மகளைக் கலியாணம் செய்துகொள்ளப் போகிறோம் என்று சொல்வது மாதிரி இருக்கிறது. இராஜா மகளைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்றால், இராஜாவும சம்மதிக்க வேண்டும், அவருடைய மகளும் சம்மதிக்க வேண்டும்." என்கிறார். திராவிட நாடு ஏதோ கிடைத்தற்கரிய பொருள் என்று சொல்லிவிட்டதாக நினைக்கின்றார்.

இராஜா மகளைத் திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்று எண்ணினால் அது முடியாமற் போகின்ற செயல் அல்ல. காதல், கோட்டைச் சுவர்களைக் குடைந்துகொண்டு போகவும் வரவும் வல்லது என்பதை எல்லோரும் அறிவர். காதலில் வெற்றி கண்ட அமைச்சரே இதனை இவ்வளவு எளிதில் மறந்துவிட்டது வியப்புத்தான்!

இந்த 'அரிய' உதாரணம் காட்டித் திராவிட இன முழக்கத்தைத் தீர்த்துக்கட்டிவிட்டோம் என்று கருதிவிட்ட அவர் அடுத்து இன்னும் ஒரு 'அரிய' 'உண்மை'யைக் கூறுகின்றார்:

ஆந்திராவிற்குப்போய்த் திராவிட நாட்டிற்கு ஆதரவுகேட்டால், ஆந்திரர்கள் அடித்து நொருக்கிவிடுவார்களே என்கிறார்.

"அந்தத் தோப்பிலே சுவையான பழம் இருக்கிறது என்கிறாய். அடேயப்பா அது எவ்வளவு தொலைவு தெரியுமா? அவ்வளவு தொலைவு போனாலும் அங்கு மரம் என்ன குட்டையாகவா இருக்கிறது. முயன்று ஏறினால் குளவிகள் கொட்ட வருமே! என்று யாராவது சொன்னால், உன்னால் முடியாவிட்டால் நீ இங்கேயே இரு. நான் போய்ப் பழம் பறித்து வருகின்றேன். அதன் சுவையைப் பிறகு பார் நீ" என்றுதான் பதில் சொல்ல வேண்டும்.

அமைச்சர் திராவிடநாடு தீதானது என்று சொல்லவில்லை. ஆனால் அதை அடைவது ஆபத்தாக இருக்கிறதே என்கிறார். தோப்பின தொலைவு கண்டு அஞ்சுகின்றார், மரத்தின் உயரம் கண்டு மலைக்கின்றார்; குளவியின் கொடுக்குக் கண்டு குமைகின்றார். அவ்வளவேதான். இவை அத்தனையும் கடந்துவிட்டால் இனிக்கும் பழம்கிடைக்கிறது என்பதை அமைச்சர் மறுக்கவில்லை.

ஆந்திரர்கள் அடித்து நொருக்கிவிடுவார்களே என்றுதான் அச்சப்படுகின்றாரே ஒழிய அவர்கள் ஆதரவு தந்துவிட்டால் அடைய முடியும் திராவிடத்தை என்று சொல்லுவார். அந்தத் துணிவினை அவர் பெறவேண்டும் என்பதற்காக, ஆந்திரர்கள் ஆதரிக்கின்றார்கள் என்பதை நாம் அவர் 'திருமுன்' படைக்க வேண்டியவர்கள் ஆகின்றோம். அவர் அமைச்சர் என்பதற்காக அல்ல, அவரைப்போல வேறு பலர் இன்னமும் அச்சப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் காங்கிரஸ் கட்டடத்திற்குள். அவர்களுக்கெல்லாம் தெளிவு ஊட்டிட நாம் கடமைப்பட்டவர்கள் அன்றோ?

அந்தக் காங்கிரஸ் நண்பர்களை ஆந்திர சட்ட மன்றத்திற்கு அழைத்துத்துச் செல்லுவோம் இப்போது. அவர்கள், அவர்களுக்குச் சாதகமான ஒன்றின்மீது ஓட்டெடுக்கும்போதும், நம் கழக உறுப்பினர்கள் பேசும்போதும் தான் இங்கே இருக்கும் சட்டசபைக்கே வருகின்றார்கள். தொலைவில் உள்ள ஆந்திர சட்ட மன்றத்திற்கு எங்கே போகப்போகின்றார்கள். நாமாவது அவர்களை அழைத்துக்கொண்டு போய் 'பாரீர் இந்தக் காட்சியை; கேளீர் இந்தக் குரலை' என்று காட்டி அவர்கள் மனதில் படிந்துவிட்ட அச்சத்தினைத் துடைத்திட வேண்டியவர்களாகின்றோம்.

ஆந்திர மாநில சட்ட மன்றத்தில் தொழில் இலாகா மானியக் கோரிக்கையை முன்மொழிந்து பேசுகின்றபோது ஆந்திர மாநில முதலமைச்சர் திரு. சஞ்சீவி அவர்கள் மத்திய அரசினரின் போக்கைக் கண்டித்துப் பல உண்மைகளை எடுத்து மொழிந்திருக்கின்றார். அந்த உண்மைகளைக் கேட்ட பின்னரேனும் காங்கிரஸ்காரர்கள் இங்குள்ள நிலைமைகளை மறைத்

490 திராவிடநாடு
5—1—58 | வார வெளியீடு | விலை 16 காசு

OFFICE OF THE REGISTRAR OF NEWSPAPERS
30 JAN 1958
MADRAS

சட்டம் பறக்கும்!

[கலைச்செல்வன் அண்ணாமலைநகர்]

வான்முட்டும் மாளிகையின் கொம்பர் நின்று
வளமார்ந்த செந்தமிழை இசைக்க எண்ணி
நான்மட்டும் நனிபெரிதும் ஆவல் கொண்டேன்
நாவின்றி மொழி வெளியில் வருதலுண்டோ?
ஊன்கட்டுக் கொண்டவர்கள்; உணர்வே யில்லார்;
ஒருங்குள்ள பெருங்குழுவில் யாது செய்வேன்?
தேன்சொட்டும் மலர்ச்சோலை நாடித் தேடித்
தீச்சுடரில் வீழ்ந்திட்ட சுரும் பரானேன்!

"ஆனாலும் உளம்தளரேன்! தமிழை எந்தன்
ஆவியது போகும்வரை இசைப்பேன்" என்றேன்.
"வீணாகப் பிதற்றாதே எங்கள் இந்தி
விண்போற்றும் மொழி" என்றார் வீணர், நெஞ்சம்
தானாகக் கொதித்தெழுந்து தணிந்து, "என்ன
தறுதலையே வெறியடக்கா" தென்றேன். "என்ன
தேனாகப் பருகிடுவாய் ஒருமைக்" கென்றால்
சிரம்வறண்ட நிலையன்றி என்ன' வென்றேன்.

"சிறுபிள்ளைத்தனம்" என்றார்; "தேவபாஷை
தெரியாதார் ஒன்றினையும் அறியார்" என்றார்.
கறியுண்ணும் நரிஆடு நனைதல் கண்டு
கதறிஉளம் பதறியதாம்! "கசடர் உங்கள்
'வரி'க்கணைகள் புகுந்துழக்கும் நெஞ்சம் இந்த
வஞ்சகத்தையும் உணர்ந்து எழுந்து விட்டால்
'சரி'ப்படுத்தல் எதனாலும் முடியாதுங்கள்
சட்டமெலாம் பட்டமெனப் பறக்கும்" என்றேன்.

4?
1-58
14356
600 008.

நாஞ்சில் மாநாட்டு முக்கிய தீர்மானங்

—ooo—

மத்திய அரசாங்க ஊழியர்களின் பஞ்சப்படியாக ரூ. 5 கொடுக்க, அதற்கென நியமிக்கப்பட்ட குழு சிபாரிசு செய்திருப்பதை, மிகவும் குறைவானது என இம்மாநாடு கருதுவதுடன், விலைவாசி உயர்வுக்கேற்ப ஊழியர்களின் பஞ்சப்படியை உயர்த்தாது பிடிவாதம் காட்டிவரும் மத்திய அரசாங்கத்தை இம்மாநாடு கண்டிக்கிறது.

*

மத்திய அரசாங்க ஊழியர்களின் சம்பள விகிதத்திற்கொப்ப சென்னை மாநிலப் பதிவு பெறாத அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தையும் உயர்த்தவேண்டும் எனப் பலகாலமாகக் கோரிவந்தும், அக்கோரிக்கையை இதுவரை அலட்சியப்படுத்தி வரும் சென்னை அரசாங்கத்தையும், மத்திய அரசாங்கத்தையும் இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

—தலைவர்

*

உணவு நெருக்கடியைச் சமாளிக்க தென்னாட்டினர் அரிசி உணவுப் பழக்கத்தைக் கைவிட்டு கோதுமை உணவுப் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசு கூறுவது, தென்னாட்டினருக்கு இழைக்கப்படும் அநீதியாகும் என்றும், வடவருக்கு எப்படி வெளிநாடுகளிலிருந்து கோதுமை இறக்குமதி செய்யும் பொறுப்பை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறதோ அதேபோல், நமக்கும் அரிசி பெற்றுத்தரும் பொறுப்பினையும் மேற்கொள்ள வேண்டுமென்றும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

—தலைவர்

*

இந்தியத் துணைக்கண்டத்தின் வாய்ப்புகளையும் வசதிகளையும் முன்கூட்டியே ஆராயாமல், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நடத்தமுடியாத அளவில் அமைத்து, அதனால் ஏற்பட்டசிக்கல்களைச் சமாளிக்க முடியாமல், திட்டத்தின் 'அடிப்படை' என்ற பெயரால் வடநாட்டிலுள்ள பெரிய திட்டங்களை மட்டுமே அமுலாக்க முயற்சிக்கும் இந்தியப் பேராசின் போக்கை இம்மாநாடு கண்டிப்பதுடன், உடனே தென்னகத்தின் இயற்கை வளத்தை நாட்டு மக்களின் நன்மைக்காக முற்றிலும் பயன்படுத்தும் வகையில் தொழிற்சாலைகளை நிறுவுவதன் மூலமும், வேண்டிய நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலமும், திராவிட மக்களுக்கு நீதி வழங்கும் வகையில், நாட்டின் பொருளாதார நிலை தொடர்ந்து சீர்குலையாது பாதுகாக்கப்படும் முறையில், திட்டத்தைத் திருத்தி அமைக்கும்படி இம்மாநாடு அரசியலாரை வற்புறுத்துகிறது.

முன்: செழியன்
வழி: வி. பி. இராமன்

*

நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகக் கூறிக்கொண்டு பல கோடி ரூபாய்களைப் பாழ்படுத்தி நடத்தப்படும் தேசிய அபிவிருத்தித் திட்டம் பயனற்றதாகவும், ஊழல் நிறைந்ததாகவும், வெறும் கண் துடைப்பு வேலையாகவும் இருந்து வருகிற தன்மையை திராவிட முன்னேற்றக் கழகம் முன்பு எடுத்துக் காட்டி வந்திருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் பல்வந்த்ராய் குழுவின் அறிக்கை இருப்பதை அரசியலாரின் கவனத்திற்குக் கொண்டுவருவதுடன், வெறும் கண் துடைப்பு வேலையாக மட்டும் இருப்பதை மாற்றி, மக்கள் அனைவருக்கும் பயன்தரும் விதத்தில்—கட்சியின் ஆதிக்கத்திற்குப் பயன்படுத்தாமல் எல்லாப் பகுதிகளுக்கும் உதவும் வகையில் திட்டத்தைத் திருத்தி செம்மையாக—நடத்துமாறு மத்திய அரசாங்கத்தை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

முன்: கே. இராசாராம்
வழி: ஆர். மாணிக்கம்

*

(அ) புதிய ஸ்தல ஸ்தாபன மசோதா மக்களாட்சியையும், கிராம அரசையும் வளர்ப்பதற்குப் பதிலாக ஏற்கனவே மேற்படி அமைப்புகளுக்கு உள்ள உரிமைகளையும், அதிகாரங்களையும் பறித்து அதிகார வர்க்கத்திடம் ஒப்படைத்து, மக்களாட்சி முறையையே கெடுப்பதாக இருக்கிறதாகையால், இம்மாநாடு இந்தப் புதிய முறையினை வன்மையாகக் கண்டிக்கிறது.

(ஆ) பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தல் நடத்துவது என்ற கருத்தை சென்னை அரசாங்கம் சொல்லிவருவதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், ஏற்கனவே பொதுமக்களால் பஞ்சாயத்துத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டுவந்த சனநாயக முறையையே கடைப்பிடித்து வரவேண்டும் என்று சென்னை அரசாங்கத்தை வற்புறுத்துகின்றது.

முன்: ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.,
வழி: எம். குழந்தைவேலு எம்.சி.,

*

தமிழகத்துடன் இணைக் [illegible] திட்டத்தில் டெல்லி ஏகா[illegible]திய ஆட்சியினரின் அதிகார பலத்தாலும். தமிழ் மாநில அரசியலாரின் கவலையற்ற போக்கினாலும் விடுபட்டுப் போன பகுதிகளான நெய்யாற்றின் கரை. தேவிகுளம், பீர்மேடு சிற்றூர் வட்டங்களையும், செங்கோட்டை வட்டத்தின் பிற பகுதியையும் தமிழ் மாநிலத்துடன் இணைக்கவேண்டிய முயற்சியில் தீவிரமாக இறங்குமாறு தமிழ் மாநில அரசினரை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

முன்: தூத்துக்குடி ஜோசப்
வழி: நாஞ்சில் அன்பெழில்

*

இதுகாறும் கைத்தறி நெசவாளர்களுக்கு உதவித் தொகையாக ரூபாய்க்கு ஒன்றரை அணா என்ற அளவில் கொடுத்து வந்ததை 1957-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் ஒரு அணாவாகக் குறைக்கப்பட்டிருப்பதுடன், இன்னும் ஓராண்டுக்குள் அந்த உதவித் தொகையை அறவே நிறுத்திவிடப் போவதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கின்ற மத்திய அரசினரின் உத்தரவை வன்மையாகக் கண்டிப்பதுடன், ஏற்கனவே நசிந்துவரும் கைத்தறித் தொழிலை மேலும் சிதறடிக்காமல் அத்தொழிலில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான மக்களுக்கு வாழ்வளிக்க உதவித் தொகையை ஒன்றரை அணாவாகவே கொடுத்து வரவேண்டுமென்று இம்மாநாடு வற்புறுத்துகிறது.

முன்: மதுரை சந்தானம்
வழி: டி. ஆர். சுப்ரமணியம்
,, அலமேலு அப்பாதுரை

*

இந்தியத் துணைக்கண்டத்தில் ஓர் பகுதியாக இன்று திராவிடம் பிணைக்கப்பட்டிருப்பினும் திராவிடக் கூட்டாட்சி எனும் தனி அரசுக்காகப் பாடுபட்டு வரும் திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியாவுக்குஒருபொது மொழி தேவை என்ற தத்துவத்தை மறுக்கிறது.

இந்தியாவுக்கு ஒரு பொது மொழி வேண்டும் என்ற போலித் தத்துவத்தைக் காட்டி இந்தி ஆட்சி மொழியாக ஆகவேண்டும் எனக் கூறிவரும் டெல்லி ஆதிக்கத்தின் போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

(16-ம் பக்கம் பார்க்க)

நேருவுக்கு கருப்புக் கொடி!

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [5—1—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 25

நேரு வருகிறார்! வருகிற 6-ந் தேதி, சென்னைக்கு வருகிறார்!!

அவர் வருவதிலும் போவதிலும் வியப்புமில்லை—நமக்கு ஆட்சேபணையுமில்லை. ஆனால், ஒவ்வொரு தடவை வரும்போதும், அவர் தென்னாட்டை, ஏளனமாகவும் எரிச்சலாகவுமே மதித்துப் பேசுகிறார்.

உலகத் தலைவர்களுள் ஒருவராகி விட்டவர் நேரு! ஆனால் அவர், தென்னாட்டுக்கு வரும்போதெல்லாம், அந்தப் பெருந்தன்மையைக் கொஞ்சம் ஒதுக்கியே வைத்துவிடுகிறார்—இங்கேயிருப்பவர்களையெல்லாம், ஏனோதானோக்களென்றும், இவரது எடுபிடிகள் போலவும் எண்ணிக்கொண்டே பேசுகிறார்.

தோழர் ம.பொ.சி. யின் எல்லைப் போராட்டம் நடந்தபோதும் சரி, நமது உரிமைப் போராட்டம் நடந்த பிறகும் சரி, பெரியார் அவர்களின் சாதி ஒழிப்பைக் குறித்தும் சரி, நேரு அவர்கள் சிந்திய வார்த்தைகள் இன்னும் காற்றோடு போய்விடவில்லை. இவை போதாதென்று, ஆச்சாரியாரும் அவர்போன்ற முதுபெரும் அரசியல் பெரியவர்களும் இந்தியை எதிர்ப்பதைக் கண்டதும், கொஞ்சங்கூட மதிப்பின்றி, தனது 'வசை புராணத்தை'ப் பாடியிருக்கிறார்.

தென்னாட்டைப் போல வடநாட்டிலும் பலவிதமான கிளர்ச்சிகள் நடந்திருக்கின்றன—நடக்கின்றன. பஞ்சாபில் இந்திமொழி எதிர்ப்பும், மராட்டியத்தில் உரிமைக் கிளர்ச்சியும், மிக மிக உத்வேகமாக இருந்து வருகிறது. அங்கு 'விஜயம்' செய்யும்போதெல்லாம் நேருவுக்கு அவ்வளவு ஆத்திரமும், ஏளனமும் பிறப்பதில்லை. குழைகிறார்! வளைகிறார்!! ஆனால், தென்னாட்டில், எந்தவித கிளர்ச்சியென்றாலும், கிளர்ச்சியிலீடுபடுபவர்கள் யாரானாலும், தோள் தட்டுகிறார்! சொல்லொணா வார்த்தை அம்புகளைத் தொடுக்கிறார்!!

சின்னாட்களுக்கு முன் திருச்சிக்கு வந்து அவர் பேசியபோது, பெரியார் அவர்களை நாட்டைவிட்டே துரத்திவிட வேண்டும் என்றார். பெரியாரைப் போல நேருவின் ஆட்சியையும், இந்திக் கூட்டத்தையும் தாக்குகிறவர், பஞ்சாப் தலைவர் தாராசிங்! அவரை, இப்படியொரு போதும் பேசியதில்லை, நேரு. மாறாக, அழைத்துப் பேசி, குலவியதுண்டு. காந்தி கிராமத்துக்கு வருவதற்கு முன், மராட்டியத்தில் சிவாஜி சிலையைத் திறக்கப்போயிருந்தார்-மராட்டிய மக்கள், பல்லாயிரக் கணக்கில் கூடியிருந்து, கருப்புக் கொடி காட்டினர், அவருக்கு. அப்போதுகூட அவர், 'நான்சென்ஸ்','காட்டுமிராண்டித்தனம்', 'பைத்யக்காரர்கள்', 'முட்டாள்கள்' என்று ஏசவில்லை! மாறாக, மராட்டிய மக்களின் வீரத்தையும் தீரத்தையும் மிகமிகப் புகழ்ந்து பேசினார்!!

மராட்டியர்களைவிடவோ, பஞ்சாபியர்களை விடவோ, வீரத்திலும் தீரத்திலும் குறைந்தது அல்ல, தென்னாடு. அங்கெல்லாம், கிளர்ச்சிகள் என்றால், கொடுமையும் கோரமும் நர்த்தனமாடும். சாவுப் பட்டியலும், நடைபெற்ற கலவரங்களும் பெரிதாக வரும். தென்னாட்டிலோ, எந்தக் கிளர்ச்சியும், சாந்தமாகவும் அமைதியாகவுமே நடக்கும்-எனினும் அவருக்குத் தென்னாடு என்றால்தான் எரிச்சலும் ஆத்திரமும் அதிகமாகிறது. ஏசுகிறார்! கடுமையான சொற்களை வீசுகிறார்!!

தமிழ்மண், வீரத்திற்கு மட்டுமல்ல, அன்புக்கும் பெயர்போன மண். வடவரைவிட எல்லா வளங்களிலும் சிறந்த பூமி, இது. வீண் வம்பும், வேண்டாத கிளர்ச்சியும் விரும்பாதவர்கள், நாம். இங்கு துவக்கப்பட்ட எந்தக் கிளர்ச்சிக்கும் ஒரு அனுதாபப் பார்வைகூடக் காட்டியதில்லை, நேரு. எல்லைப் போராட்டம், நடந்தது! ஏசினார், பேசினார். பீர்மேடும், தேவிகுளமோ, இழந்தோமே தவிர, நீதி தரவில்லை, அப் பெரியவர். 'தமிழ்நாடு', கேட்டோம் — திமிர்க் குரல் கிளம்பிற்றே தவிர, உரிமை கொடுக்கவில்லை, அவர். டால்மியாபுரம், பெயர் மாற்றம் கேட்டோம்; பற்களை நற நற வென்று கடித்தாரே தவிர, நீதி தரவில்லை. பெரியார், சாதிகளை ஒழிக்கவேண்டும் என்கிறார்; பரிசு, பைத்யக்

காரப்பட்டம் அளிக்கப்பட்டதே தவிர, அந்த ஒப்பற்ற பணியாளரின் குரலுக்கு மதிப்புத் தரவில்லை, அவர். இவ்வளவும் போகட்டும் — நாமெல்லாம் எதிர்க்கட்சிக்காரர்கள் என்பதால் இவ்வளவு ஆத்திரமும் அலட்சியமும் காட்டுகிறார் போலும் என்று நினைத்திருந்தோம். ஆனால், 'அது தவறு. எனக்கு தென்னாடு என்றாலே, ஏளனம்தான் எப்போதும்' என்று காட்டுவதைப்போல, ஆச்சாரியாரையும் அவர் கூட நிற்கும் சர். சி. பி. போன்றவர்களையும் சாடியிருக்கிறார். ஆச்சாரியார், இந்திய உபகண்டத்தின் கவர்னர் ஜெனரலாக இருந்தவர்! ஒப்பற்ற விவேகி என்று வெளிநாட்டவரால் கூடப் போற்றப்படுபவர்!! அவரும், பைத்யக்காரர் — பெரியாரும் பைத்யக்காரர் — உரிமை கோரும் தி. மு. க. வினரோ சிறுபிள்ளைகள்— தமிழ்நாடு கேட்போர் 'நான்சென்ஸ்'கள்—என்றால், அவர் நம்மை எப்படி மதிக்கிறார் என்பது விளங்கும்.

இவர்கள் எல்லாம், கொடி தூக்கியும், மில் துணிகளை எரித்தும், உப்பு எடுத்தும், இரயிலையும் தபாலாபீசையும் கொளுத்தியும், 'சுதந்திரப் போர்' நடத்தியபோதெல்லாம், இவர்கள் தம் கோரிக்கைகளை அவ்வளவு எளிதில் ஏளனம் செய்துவிடவில்லை வெள்ளையன்! மக்களின் குமுறல்கள் என்கிற அளவுக்கு மதிப்புக் கொடுத்தான்!!

இதே மதிப்பை, வடக்கில் நடைபெறும் கிளர்ச்சிகளுக்குக் காட்டமுடிகிறது நேருவால். •அஸ்ஸாமியருடைய எண்ணெய்ப் போராட்டத்திலிருந்து மராட்டியரின் மனக் கிளர்ச்சி வரையில் அறிவதற்கு ஆவல்காட்ட முடிகிறது நேருவால்—ஆனால், தென்னாட்டின் பிரச்னைகள் என்றால்தான்,—அது ஆச்சாரியாருடைய கூற்றானாலும், தமிழரசு கழகத்தின் முயற்சியானாலும், ஜனநாயக காங்கிரசின் (கா. சீ. க.) கோரிக்கையானாலும், பெரியாரின் பேச்சானாலும், நம்முடைய கோரிக்கையானாலும் — அலட்சியமும், அநாவசியமான வார்த்தை வீச்சுகளும் காட்டப்படுகிறது நேருவால்!!

அமெரிக்காவை மதிக்க முடிகிறது அவரால்— சிறு நாடு ஜப்பானை மதிக்கத் தெரிகிறது அவருக்கு —உதைக்கும் ஆபிரிகாவுக்கு ஓடோடியும் அன்பு காட்டுகிறார் — விரோதியாக விளங்கிய வெள்ளையனுக்கு அரவணைப்புத் தர இயலுகிறது—காந்தியடிகளின் உயிரைப் பொசுக்கிய கட்சியிடமும் 'கருணை' காட்ட முடிகிறது-ஆனால், அன்பும் பண்பும் விளங்குமிடம், அகிம்சையின் சொந்த இடம், குறளும் சிலம்பும் ஒலிக்குமிடம், குன்றாத வளங்கள் கொண்ட இடம், அறிவு மணிகள் வாழுமிடம், உலகுக்கே நாகரிகம் போதித்த இடம், உன்னதக் கலைகள் சிறந்த இடம், உத்தமத் தியாகிகள் வாழ்ந்த இடம், நமது தென்னகத்தை மட்டும் மதிக்க மறுக்கிறார்! ஏதோ, இவரது காலடியில்கிடக்கும்'காளான்'களைப்போலநம்மைமட்டுமல்ல—ஆச்சாரியார் உள்பட அனைவரையும் நினைக்கிறார்—நான்சென்சுகளா! காட்டுமிராண்டிகளா! சிறுபிள்ளைகளா! முட்டாள்களா! பைத்தியக்காரர்களா! என்றெல்லாம், ஏதேதோ ஏசுகிறார். பெரியார் போன்றவர்களை நாட்டைவிட்டே விரட்டவேண்டும் என்கிற அளவுக்குப் போகிறார்.

அவர் உலகத் தலைவர்! நிச்சயமாக நாம் அவரை மதிக்கிறோம்!!

தியாகங்கள் பல புரிந்தவர் நேரு! நிச்சயமாகத் தலை வணங்குகிறோம்!!

ஆனால், அவர் இதுபோல, நம்மை, ஒருமுறையல்ல, இருமுறையல்ல, தொடர்ந்து ஏசுவதையும பேசுவதையும் மட்டும் நாம், இனியும் அனுமதிக்கத் தயாரில்லை.

சொல்வது யார் என்பதைவிட, சொல்லப்படும் குறைகளைப் பற்றிக் கவனிக்கவேண்டியது, ஒரு அரசியல் தலைவனின் கடமையாகும். நேரு அரசியல் தலைவர் மட்டுமல்ல, உபகண்டத்தையாளும் பொறுப்பிலுமிருப்பவர். இட்லர் — முசோலினி — பிராங்கோ போல, சர்வாதிகாரியோ எனில், தன்னை ஒரு ஜனநாயக வாதியென்றும் கூறிக்கொள்கிறவர். இப்படிப்பட்டவர், தென்னாட்டின் எந்தப் பிரச்னைகளையும், கேவலமாகவும் அலட்சியமாகவும் கருதுகிறார் என்றால், அவருடைய தவறான பாதையை யாராவது எடுத்துக்காட்டத்தான் வேண்டும்!!

எனவேதான் நாஞ்சிலில் கூடிய தி. மு. க. வரும் 6-ந்தேதியன்று நேரு சென்னைக்கு வரும்போது, கருப்புக்கொடி காட்டி அதிருப்தியையும் கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்வதென்றும் — அன்று மாநிலம் முழுவதிலும், கண்டனக் கூட்டங்கள் நடத்துவதென்றும் முடிவு செய்திருக்கிறது.

சென்னையில் கருப்புக்கொடி காட்டுவதில், நமது மாநிலத்தின் சட்டசபையில் தி. மு. க. சார்பில் வீற்றிருக்கும் சட்ட மன்றப் பிரதிநிதிகளும்—டில்லிப் பாராளுமன்றத்தில் தி. மு. க. பிரதிநிதிகளாயிருப்பவர்களும் கலந்துகொள்வார்கள்.

சென்னை, அன்று 'கருங்கடலாக' காட்சியளிக்கும் என்பதில், நமக்கு ஐயமில்லை.

அமைதியும், சாந்தமும் விளங்கும் வகையில் இந்தக் கண்டனம் நடைபெறும்.

மதிப்பளிக்கத் தெரியாதவர்களுக்கு, அரசியல் கண்ணியம் இழந்தவர்களுக்கு, பாடம் புகட்ட வேண்டிய பொறுப்பும் கடமையும் நமக்கு இருக்கிறது.

புண்ணின்மேல் ஈட்டிகள் வீசப்பட வீசப்பட, பொறுத்துக்கொள்ளத்தானா நாம் பிறந்தோம்? 'மானம்' ஒன்றே நல்வாழ்வெனக்கொண்டு வாழ்ந்த தமிழ் மரபு, தருக்கர்தம் ஆதிக்கத்தால் தரைமட்டமாகித் தவிக்கிறது, என்றால், இப்படி ஏளனத்துக்கும் கேலிக்கும் ஆளாகி, அவதிப்படையவா, நாம் பொதுப்பணியிலீடுபட்டோம்.

தவறியவருக்கு, உணர்த்தும், நற்பணி இது. வீரர்காள்! வழக்கம்போல், வெற்றியாக்குங்கள்— வீரத் திருமரபின், புகழ் காட்டுங்கள் — தி. மு. க. தனக்கு வரும் இழுக்கை மட்டுமின்றி, தன்னவருக்கு —அவர்கள் எந்தக் கூடாரத்திலிருந்தாலும்—வரும் தாக்குதலையும் கண்டிக்கத் தயங்காது, என்பதையும் நிலைநாட்டுங்கள்!!

★

கம்பிகளுக்குப் பின்னால்!

பெரியார் அவர்கள், சிறைக்குள்ளே கிடக்கிறார்: பல்லாயிரக்கணக்கான நாட்டு மக்கள் நெஞ்சம் வேகின்றனர் தள்ளாத வயது, தடியூன்றிடும் கட்டம், எண்பதை நெருங்கும் பருவம்; இந்த நிலைமையில் அவருக்கு, சிறைவாசம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது. "நீதிமன்றத்தில் பதில் அளிக்கும்போது அவர் உடல் ஆடிக்கொண்டேயிருந்தது", என்று குறிப்பிடுகிறார், செஷன்ஸ் நீதிபதி. அவ்வளவு வயதானவர், பெரியார். வயதானால் என்ன, சட்டம் தன் கடமையைச் செய்துதானே ஆகவேண்டும் என்பார்கள் சட்ட நிபுணர்கள்.

சிறை, பெரியாருக்குப் புதிதல்ல; "இதயத்தில் ஏற்றிருக்கும் இலட்சியத்துக்கு நாம் கொடுக்கும் 'விலை'" என்று எத்தனையோ தடவை கூறியிருக்கிறார், அவர்.

நீதிமன்றத்தில் எதிர் வழக்காடவோ, குறுக்கு விசாரணை செய்யவோ அவர் விரும்பவில்லை. இதுவே போதும், அவர் உள்ள உறுதியை விளக்க.

தீர்ப்புப் பெறுவதற்கு முதல் நாள் சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றில், சில பார்ப்பனர்களைக் கொல்வதாலோ, ஒரு சில அக்கிரகாரங்களைக் கொளுத்துவதாலோ, சாதியை ஒழித்துவிட முடியாது என்று அவர் தெளிவாக எடுத்துச் சொன்னதாகத் தெரிகிறது. ஏடுகளும், அதை வெளியிட்டிருக்கின்றன.

சட்டம், தன் பாதையில் சென்றுவிட்டது. இப்போது, நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்து, ஆவன செய்யவேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சேர்ந்தது. அமைதியையும், நல்லாட்சியையும் விரும்புவோர், இதுபற்றிச் சிந்திக்காமலிருக்க முடியாது.

கம்பிகளுக்குப் பின்னால், பெரியார் அவர்கள் கிடப்பதைக் கண்டு 'அப்பாடா!' என்று பெருமூச்சு விடும் சிலரும் இருக்கிறார்கள். அவர்கள், பெருந்தன்மைக்கு மதிப்புக் கொடுக்காதவர்கள். வெறியைத் துணைக்கழைப்பவர்கள். மனித இதயம்துறந்தவர்கள்.

பெரியாருக்குஅளிக்கப்பட்ட தண்டனை போதாது என்று கூறும் சிலரும் இருக்கிறார்கள்! இவர்கள், ஆத்திரத்தால், அறிவுக்குத் திரையிட்டுக் கொண்டவர்கள்; குரோதத்தையும், தோல்வி மனப்பான்மை தந்த ஆத்திரத்தையும் மனதிலே வளர்த்துக் கொண்டிருப்பவர்கள்; சிந்திப்பதற்குப் பதில் 'சின்னப் புத்தி'யைக் காட்டுகிறவர்கள். சுற்றி வளைத்து, வார்த்தைகளை எண்ணி, வாய் 'ஜாலம்' பேசினாலும், அவர்களது இதயத்தில் கிடக்கும் 'இருள்' பிறருக்குத்தெரியாமற் போகாது!!

"கிளர்ச்சிக்காரரை"ப் பிடித்து அடைத்துச் சிறையில் போடும்படி செய்துவிட்டோம் என்று "மேலிடத்திலிருப்பவர்கள்" பெருமூச்சு விடக்கூடும்! பேரானந்தமும் காணக்கூடும்!!

அவர்களெல்லாம் ஒன்றை மறந்துவிடுகிறார்கள்—சென்னைக் கூட்டமொன்றில், தள்ளாத கிழவர் வெளியிட்ட தெளிவான வாசகங்களுக்குப் பின்னும், சிறைக்குள் போட்டு மூடப்பட்டிருப்பது கண்டு கொதிக்கும் உள்ளங்கள் பல்லாயிரக்கணக்கில் உள்ளன என்கிற உண்மையை !!

விளக்கம் கொடுத்தார்-தெளிவு அளித்தார்—மனதாரப் பேசினார், என்று எந்தப் பெயரிட்டு வேண்டுமானாலும் சொல்லட்டும். தன்னுடைய நோக்கம் பலாத்காரம் அல்ல என்று தெளிவாகப் பேசியிருக்கிறார், பெரியார். பார்ப்பனரைக் கொல்வதாலோ, அவர்கள் குடியிருக்குமிடங்களைக் கொளுத்துவதாலோ தன்னுடைய இலட்சியமான சாதி ஒழிப்பு நிறைவேற முடியாது என்றும் விளக்கமாக வெளியிட்டிருக்கிறார்.

சட்டத்தின் ஷரத்து, அதற்குள்ளே பொதிந்து கிடக்கும் அம்சம், ஆகியவைகுறித்துச் சட்ட நிபுணர்களுக்கு சிரத்தையிருக்கக்கூடும். ஆனால், மக்கள், தங்கள் மனப்போக்கை, தத்தமது தலைவர்கள் தரும் "விளக்கம்" கொண்டே அமைத்துக் கொள்வார்கள். பெரியாரின் விளக்கம், யாவருக்கும் திருப்தியளிக்கும் விதத்தில் இருக்கிறது. ஆனால், 'குரோத மனம் கொண்டோர்' தவிர்த்து, மற்ற எல்லோரும், இதற்குப் பின்னும் பெரியார் ஏன் சிறைக்குள் அடைபட்டுக் கிடக்க வேண்டும் என்றே கேட்பார்கள்.

மக்களின் குரலையும் மன நிலையையும் மதித்து, உடனடியாகப் பெரியாரை விடுதலை செய்வதே விவேகமானதாகும் என்று ஆள்வோருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அரசியல் சட்டத்தை எரித்தது இனி தொடர்ந்து நடக்காது—அதிருப்தியைக் காட்டும் அடை

யாளமாகச் செய்யப்பட்டதுதான் அது—ஒரு நாள் மட்டுமே நடத்தப்பட்டது — என்று பெரியாரே சொல்லியிருக்கிருர். அதோடு, தனது கழகத்தவரை, பலாத்காரத்துக்குத் தூண்டும் நோக்கமும் தனக்கு இல்லையென்று உறுதி மொழி அளித்திருக்கிருர். இதோடு மட்டுமின்றி, பார்ப்பனர்களைக் கொல்வதாலோ, குடியிருக்கு மிடங்களைக் கொளுத்துவதாலோ சாதியை ஒழித்துவிட முடியாது என்பதையும் வெளியிட்டிருக்கிருர்.

பெரியாரின் இந்த மொழிகள், வரவேற்கப்பட வேண்டியதாகும்; இந்த வார்த்தைகளை ஏற்று பெரியாரையும்; அவரைப்போல, கொண்ட கொள்கைக்காகச் சட்டத்தை மீறிச் சிறைக்கோட்டம் சென்றிருக்கும் ஆயிரக்கணக்கான தோழர்களையும், தோழியர்களையும் உடனடியாக விடுதலை செய்து, தனது பெருந்தன்மையையும், புத்திசாலித்தனத்தையும், இச்சமயத்தில் அரசாங்கம் காட்டிக் கொள்ளவேண்டும்.

ஆள்வோர், இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தக்கது செய்யாவிடில், எரியும் நெருப்புக்கு எண்ணெய் ஊற்றுகிருர்கள் என்றே பொருள்படும். மக்கள் மன்றம், ஆள்வோரின் பிடிவாதம் கண்டு, கண்டித்தெழும் நிலை ஏற்படக்கூடும். மக்களின் குரல், சட்டத்தின் முன்னுல் எப்படிக் கருதப்படினும், நாட்டின் வாழ்வில் சாதக பாதகங்களை ஏற்படுத்தும் தன்மைவாய்ந்தது என்பதை ஒருபோதும் மறக்கக்கூடாது.

பெரியாரையும் அவரது தொண்டர்களையும் சிறைக்குள்ளேயே வைத்திருப்பதால், யாருக்கும் பயனுமில்லை; பலனுமில்லை. ஏதோ சில பார்ப்பன குல "பெரியவர்கள்", ஆபத்து, ஆபத்து என்று எழுப்பிய கூச்சலுக்காக, அமுமுதுபெரும் கிழவரைக் கொண்டுபோய்ச் சிறையில் போட்டிருக்கிருர்களே! — என்றுதான், மக்கள் எண்ணுவர்; பேசுவர். இது, வகுப்பு ஒற்றுமையை வளர்க்க வழி செய்யாது.

பார்ப்பன குல "பெரியவர்கள்", மிரட்டி, தூண்டி, இதுபோன்ற நிலைமைகள் ஏற்படுமபடி செய்வதற்குப் பதில் சந்தித்தும், தொடர்பு கொண்டும், சமரசமாகப் பேசியும், விளக்கம் விரும்பியும், நல்லெண்ணமும் நம்பிக்கையும் மலரச் செய்திருக்கலாம். இது, பலனும், ஒற்றுமையை மலர்விக்கும் சூழ்நிலையையும் உருவாக்கப் பெரிதும் உதவியிருக்கும். இது போல, "அந்தப் பெரியவர்கள்," நடந்துகொள்ளவில்லையே, என்று பெரிதும் நாம் வருந்துகிறேம்! இவ்வளவுதூரம் நிலைமை வளரக் காரணம் அவர்கள்தான் என்றும் குற்றம் சாட்டுகிறேம்.

ஆச்சாரியார் அவர்கள், இந்திப் பிரச்னையைப் பற்றி விவாதிக்க, பலதரப்பட்ட அரசியல் கட்சிகளையும், அவைகளின் தலைவர்களையும் அழைக்கவில்லையா—அணுகவில்லையா? முன்பு இப்படியோர் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றபோது பெரியார் இராமசாமிகூட அழைக்கப்பட்டு, கலந்துகொண்டாரே! பெரியார், அப்போது எப்படி நடந்துகொண்டார்? ஆச்சாரியார் அவர்களிடம், அன்போடும், நட்போடும் நடந்துகொண்ட காட்சியைக் கண்ணுரக் கண்டோமே! எனவே, பலதரப்பட்டவர்களையும், ஒரு நல்ல நோக்கத்துக்கு ஒன்று திரட்டும் சக்தி பெற்ற ஆச்சாரியார், ஏன் பெரியாரைப் பதப்படுத்தவும், அவரது நம்பிக்கையைப் பெறவும் இயலாதவரா? என்னுல் முடியாது — இது வெளி மாகாணத்து விவகாரம்— என்ரு சொல்ல முடியும் அவர்? பெரியாரைக் காணவும் பேசவுமான பொறுப்பையேற்க ஆச்சாரியாரே மறுத்தால், யார்தான் இருக்கிருர்கள் பிறகு? இருவரும் வயதானவர்கள் என்பதோடு, ஒருவருக்கொருவர் எவ்வளவு மரியாதையும் மதிப்பும் அன்பும் வைத்திருக்கிருர்கள் என்பது, எல்லோருக்கும் தெரியுமே!!

இப்படியொரு "கட்டம்" ஏற்படுவதை விட்டுவிட்டு, சிக்கலான சூழ்நிலை உருவானதும், அந்தச் சூழ்நிலையையே காட்டி வாய்மூடி மௌனியாவதும், வம்பை வளர்ப்பதும் நல்லதா.

ஆச்சாரியார் போன்றவர்கள், பார்ப்பன குலத்தின் முன்னேடிகளாக விளங்கும் மற்றவர்களோடும் சேர்ந்து, பெரியாரைக் கலந்து பேசி, சாதி ஒழிப்புச்சம்பந்தமாகத் திடமும் தீவிரமுமான வழிவகைகளைக் காணும் முயற்சியிலீடுபட்டால், இப்படியெல்லாம் ஏன வரப்போகிறது? ஆச்சாரியார் போன்ற மேதைகள், சாதி ஒழியக்கூடாது என்ருவது சொல்ல முடியுமா! ஒரு வேளை, இந்த முயற்சியால் ஏற்படும் குழப்பங்கள், தலைகீழ் மாற்றங்கள் அதிர்ச்சியைக் கொடுக்கக் கூடும். அந்த அதிர்ச்சியையும், கூடிப்பேசி, ஒரு திட்டம் வகுத்து தவிர்த்துக்கொள்ள இயலுமே. ஏதோ, தத்தமது விருபபு வெறுப்பைக் காட்டிக் கொள்ளும் ஒரு 'கட்டம்' எனக் கருதக்கூடாது. பெரியவர்கள் அன்பும், அனுதாபமும் கொண்டு அறிவுத் தெளிவோடு கவனிக்க வேண்டிய பிரச்னையாகும் இது.

கத்தியின் மூலமோ அல்லது தண்டனைகள் பெற்றுத் தருவதன் மூலமோ தீர்க்கக்கூடிய பிரச்னையல்ல, இது. இரண்டும, இந்தத் தீராத் தொல்லையைத் தீர்க்கும் வழிகளல்ல. வேதனையை, இது வளர்க்குமே ஒழிய தீர்க்காது.

சிலர் நினைப்பதுபோல இந்தப் பிரச்னை, இரண்டு வகுப்புகளுக்கு இடையே மட்டும் இருக்கிற பிரச்னையல்ல. நாட்டின் மொத்தப் பிரச்னை.

தாழ்த்தப்பட்டவர்களின் உணர்ச்சித் தீ, கொழுந்துவிட்டெரிகிறது! "வலுத்தோர்" அதை அணைக்கவும் அடக்கவும் முனைகின்றனர்!! — இப்படிப்பட்ட பிரச்னையை, கிண்டல் செய்வதாலோ, கார்ட்டூன் போட்டுக் காட்டியோ, தீர்த்துவிடமுடியாது. இவை, எரிச்சலை அதிகமாக்கவே செய்யும். 'தடி'யின் மூலம் இந்த எழுச்சியை அடக்க முயல்வதென்பதும் நிச்சயமாக முடியாது.

நல்லெண்ணத்தின் மூலம், அறிவைத் துணைக்கொண்டு, ஒரேயடியாகத் தீர்த்து ஒரு முடிவுகாண வேண்டிய பிரச்னையாகும் இது. இயலுமா எனின், நிச்சயமாக முடியும் என்போம்! பெரும் பொறுப்புகளையும் சேவைகளையும் செய்தவர்களால், இதைத்தாரு, சாதிக்கமுடியாது!!

திருக்கோவிலூரில் நமது ஏஜண்டு

*

எம். முல்லைவேந்தன்
12. ஆறுமுகம் சோடா கடை,
பஸ் ஸ்டாண்ட்
திருக்கோவிலூர்.

சிக்கல் தீராது—பலன் கிடைக்காது என்று பயமும் பராமுகமும் உருவாகிக் கிடந்த நாட்களிலே, முன் யோசனையும், விவேக புத்தியும் கொண்டு, "பாகிஸ்தான் கொடுத்துத் தீரவேண்டிய ஒன்றுதான்!", என்று துணிவோடு சொன்னவர் ஆச்சாரியார். திகைத்தனர் பலர் இவரே இப்படிச் சொல்கிருரே, என்று! எனினும், பிரச்னையை நுட்பமாகவும், தெளிவாகவும் உணர்ந்து, வருவதை முன்கூட்டியே உரைத்தார். அவர் உரை, இன்று கனவாகவில்லை!! அன்று காட்டிய அந்த உறுதியும், வருமுன்னுரைக்கும், கூர்த்த மதியும், இன்றும் அவரிடமிருக்கின்றன என்பதில் நமக்குச் சிறிதும் ஐயமில்லை. இருந்தும், நாட்டை அலைத்துக் குலைக்கும் பெரியதோர் பிரச்சினையில், அவர் காட்டும் அலட்சியமும், வேற்றுமையும், அவருக்கும் சரி, நாட்டுக்கும் சரி நல்லதல்ல என்று பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

இப்போது, பொறுப்புச் சுமைகளோ, அதிகார பீட வேதனைகளோ அற்ற நிலையிலிருக்கிருர் அவர். நிச்சயம், முன்வரலாம், இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேட. நண்பரும் சகாவுமான பெரியாருடன் பேசி, வழிதேடலாம்! இதைவிட்டு, பேசாதிருந்தால், சாதி ஒழிப்பில் ஆச்சாரியாருக்கு அக்கரை கிடையாது என்ற முடிவுக்கே மக்கள் வந்து சேர நேரும்.

கம்பிகளுக்குப் பின்னுல், பெரியார் நிற்கிருர்! ஆனுல், மக்கள் மன்றத்தின் முன்னுல் பலர் இருக்கின்றுர்கள்!! பெரியாரையும், சிறையில் வாடும் ஆயிரக்கணக்கானவர்களையும் விடுதலை செய்யுமாறுவற்புறுத்தும் கடமையுண்டு அனைவருக்கும். குரலை ஏற்கும் பொறுப்பும் ஆள்வோருக்கு இருக்கிறது. அக்கட்டம் ஏற்பட்ட பிறகு, எல்லோருமாக ஒன்றுகூடி சாதி ஒழிப்புப் பற்றிப் பேசி, ஒரு உன்னத முடிவுக்கு வரவேண்டும். அந்த நல்ல நாள், உதயமாகும் போதுதான், நாட்டின் எதிர்காலம் நல்ல சூழ்நிலைக்கு வந்துள்ளது என்ற நம்பிக்கை பிறக்கும்.

★

அன்னையின் கண்ணீர்!

(சு.ப. கோ. நாராயணன்)

'வையகத்தை வென்று வான்புகழ் பெறுவேன்' எனச்சூளுரைத்து, சுழலும் பம்பரமெனப் பல நாடுகளின மேல் படையெடுத்து பெரும் வெற்றி கண்ட மன்னன், மாவீரன் அலெக்சாண்டர்! இவன் அரசியல் கற்றதோ, அறிவுக் களஞ்சியமென அவனி போற்றும் அரிஸ்டாட்டிலிடம்! வீரமும், விவேகமும் இணைந்தால், வெற்றியன்றி வேறு என்ன காண முடியும்?

அத்தகு தீரனின் அன்னை தான், ஒலிம்பியஸ் என்பாள். அரசியல் சூழ்ச்சிகளை நன்குணர்ந்தவள்; அதிகார மோகங்கொண்டவள்; எனவே, அரசியல் விவகாரங்களில் அனுவசியமாகத் தலையிட்டாள். சென்தேள் கூடச் சில சமயங்களில் கொட்டாமலிருக்கலாம்! ஆனுல் அதிகாரம் செலுத்திப் பழகிய அரசியல் மனிதர்கள், அதிகாரம் செய்யாமல் சும்மாயிருக்க இயலாதே! தன் தாய் இப்படி அரசியல் விவகாரங்களில் நுழைவது, அலெக்சாண்டருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை; என்ன செய்வது? அன்னையிடம் 'தாயே, தாங்கள் சற்று ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். வீணுக இந்த அரசியல் சேற்றிலே சிக்கி வருந்துகிறீர்கள்' என ஆயிரம் முறை வேண்டிக் கொண்டான். பலனேதும் இல்லை. பழையபடியும், அவள் இந்த அரசியல் சதுரங்க விளையாட்டிலே புகுந்து மனம்போல் ஆடினுள்.

மாவீரன், மாதாவிடம் மட்டற்ற அன்புகொண்டவன். அதற்குச் சான்ருக ஒன்றினைக் கூறலாம். அவன் சென்று, போரிடும் வெஞ்சமரிலே, வெற்றி பெறுவானல்லவா? அந்தச் சமரில் வென்ற அற்புதப் பொருள்களை எல்லாம் அன்னைக்கு, அன்பளிப்பாக அளிப்பானும்! அத்தகு கருணையுள்ளங்கொண்டவன் கடுமொழி கூறி, தாயின் இதயத்தை சுட வைப்பானு?

அலெக்சாண்டரின் ஆட்சியில், ஆண்டிப்பேட்டர் எனும் அஞ்சா நெஞ்சமும், ஆண்மையும் கொண்ட ஓர் கவர்னர் இருந்தான். இவன், மன்னன் மற்ற நாடுகளுக்குச் செல்லும்போதெல்லாம், நாட்டின் நிர்வாகத்தை நனமுறையில் அரசனுக்கு பதிலாக நிர்வகித்து வருவான. இவனுக்கு, மன்னனின் அன்னை அரசியல்விவகாரங்களில் நுழைவது சற்றும் பிடிக்காது.

ஒருசமயம் காவலன் வெஞ்சமர் புரிய வேறுநாடு சென்றிருந்தான். அங்கு சென்றவுடனே, மாதாவுக்கு 'தாயே, தயை செய்து இந்தச் சமயம் நாட்டின் நிர்வாகத்தில் குறுக்கிடாதே' எனக் கேட்டுக் கொண்டு மடல் தீட்டினுன். மைந்தனின் பேச்சை பெற்றவள் மதிக்கவில்லை. மாருக இன்னும் அதி தீவிரமாக ஈடுபட்டாள் அரசியலில்! ஆண்டி பேட்டர் பொறுமை இழந்து, வேந்தனுக்கு அவனுடைய தாய் அனுவசியமாக, நிர்வாகத்தில் ஈடுபட்டுத் தொல்லை தருகிருள்' எனக்குற்றஞ் சாட்டி ஒரு கடிதம் வரைந்தான். அதற்கு பதிலாக மன்னர் மன்னன், மாதாவைத் திட்டி எழுதி இருப்பான் என்றுதானே, நினைக்கிறீர்கள்? இல்லவே இல்லை! அது ஓர் அன்பு மகனின், இதயக் குமுறலின், எதிரொலியாகும்! அவன் ஆண்டி பேட்டருக்கு, "ஆண்டி பேட்டர்! நீ அறுநூறு கடிதங்களை, என் அன்னையைப் பற்றித் தூற்றி வரைந்தாலும், என் அன்னையின் ஒரு துளி கண்ணீர் அத்தனை கடிதங்களையும் அழித்து விடுகிறது" என மறு பதில் எழுதினுன்.

★

"பிரிவாற்ருமை"

—[வேலூர்—குழலன்]—

காதலியைப் பிரிந்து காட்டு வழியில் தனிநடை நடந்து, பொருள் சேர்க்கச் செல்லுகின்ருன் அவன்.

முகிலைத் தொடும் அகில் மரங்களும், விண்ணை முட்டும் தென்னை மரங்களும், நீண்டு பருத்துப் பல விழுதுகளைக்கொண்ட ஆலமரங்களும், பழுத்துத்தொங்கும் பெரிய பெரிய பழங்களைக்கொண்ட பலா மரங்களும், கொய்யாவும், பிறவும் அந்த காட்டுவழியில் நிறைந்து காணப்பட்டன.

ஒன்றை ஒன்று துரத்தும் பாம்புகளின் கூட்டமும், கட்டிப் புரண்டு சண்டைசெய்து இரத்த துளிகளுடன் காணப்படும் பாம்புகளும் கீரிகளும், முட்களும் கற்களும் நிறைந்து கிடக்கின்றன.

முல்லை மலர்களைக் கொத்துக் கொத்தாகச் சூடியுள்ள முல்லைக் கொடிகளும், பூத்துத் தொங்கும் செண்பக மலர்களை அணிந்துள்ள செண்பக மரங்களும் நிறைந்து மணம் பரப்பிக்கொண்டு இருந்தனவாம்.

அருவிகளில் நிறைந்துள்ள நீலோற்பல மலர்களும், செவ்வாம்பல் மலர்களும், இடையில் ஒற்றைக் காலில் நின்று வாளை மீனகளைக் கொத்தித் தின்னும் வெண் நாரைகளும், கரையில் ஏறி விளையாடும் நீர்நாய்களும், அவைகளைப் பிடிக்கவரும் பருந்துகளும் இன்னும் பலவும் நிறைந்து இருந்தன.

வழி நடப்பவர்கள் இவைகளைக் கண்டு கருத்தை அவைகளிற் பதித்துப் பயணத்தின் அலுப்பை மறந்து நடப்பராம்.

ஆனல், அவனே வேதனை ரேகை படர்ந்த முகமும், துன்பம் உமிழும் கண்களும், சோர்ந்தநடையும், தளர்ந்த உடலும்கொண்டு, அடிக்கு அடி நிற்பதும் பிறகு நடப்பதுமாக இருந்தான்.

அழகிய மயில் ஒன்று தன் தோகையை விரித்து களிநடம் புரிந்துகொண்டு இருப்பதை அவன் கண்டான்.

அந்த மயிலின் மினுமினுப்பும் பளபளப்பும் அதன் இறகுகளில் காணப்படும் வர்ண ஜாலங்களின் கூட்டும் அவன் கண்ணைப் பிளந்து கருத்தில் பதிந்தன.

அந்த மயிலின் ஆடல் கண்டதும் அவன் உள்ளம் "பக்" என்றது, கண்கள் 'குரு' குரு!' என்று விழித்தது, உடல் பர! பர! வென்று துடித்தது.

காரணம்?

அந்த மயிலின் ஆட்டம்!

தன் காதலியிடம் பிணக்குக் கொண்டு துள்ளி ஓடும்போது காணப்படும் அவள் கால்களின் துடிப்பு இந்த மயிலின் ஆட்டத்தை அப்படியே ஒத்து இருந்தது.

அதுமட்டுமா?

இந்த மயிலின் சாயல் தன் காதலியின் சாயலைப் பொருந்தி இருப்பதையும் கண்டவுடன், அவன் உள்ளம் தன் காதலியை நினைக்கத் தொடங்கியது.

ஆசைக் கண்ணாளன் தன்னைப் பிரிந்து பொருள்தேடக் காட்டு வழியில் தனிநடை நடக்கின்ருனே, அவனுக்கு எவ்விதமான தீங்கும் அண்டக் கூடாதே என்று அவள் நினைந்து நினைந்து உருகுவதைபோல், அவன் நினைந்தனன்.

அவன் கண்கள் கலங்கின.

அசைவற்று நின்ருன்.

அச்சமயத்தில் அவன் மீது முட்டி மோதிக்கொண்டு மான்கள் நடந்தன.

அந்த அதிர்ச்சியில் விழித்தான், கண்டான் மான்களை.

அல்ல! அல்ல! அதன் விழிகளை.

கொண்டான் மறு அதிர்ச்சியை.

அடே! காதலியின் துரு! துரு! வென்ற கண்ணின பார்வை இங்கு எப்படி வந்தது. அவள தான் மயிலாகவும் மானாகவும் வந்து தன்னை ஏய்க்கிருளபோல் உளளது என்று எண்ணி அதைப் பிடிக்க நடந்தான்.

ஆனல்!

தன் காதலியின் இனிமையான குரல் அவன் காதில் கேட்டது.

திடுக்கிட்டான்! நின்ருன்! திரும்பினன்.

அங்கு அவன் கண்டது என்ன?

பாடும் குயில்!

ஆம்! அவன் அந்தக் குயிலின் இனிமையான குரலைக் கேட்டுத் தான் தன்காதலியின் குரலென்று மயங்கினன்.

சீ! சீ! எல்லாம் வெறும் பித்தலாட்டம். அவளையே உள்ளம் எண்ணிக்கொண்டு இருப்பதால் தோன்றும் பிரமை.

இனிமேல் அவளை நினைக்கக் கூடாது. நன்ருகப் பொருள்சேர்த்துக்கொண்டு சென்று அவளுக்குக் காட்டி மகிழவேண்டும் என்று உள்ளம் துணியக் கால்கள் வேகமாக நடந்தன.

பொன்னும் மணியும், முத்தும் மாணிக்கமும் சேர்த்து, சந்தனக் கட்டிலில் உட்காரவைத்து, முத்து மாலையை மாட்டி, முல்லை மலர் தனைக் சூட்டி, கட்டி அணைத்து அவள் பவள உதட்டில் ஆயிரம் முத்தங்களை ஈந்து மகிழும் அந்த நாளை நினைந்து அவன உள்ளம் களிநடம் புரிந்தது.

கால்கள் மறுபடியும் நடக்க சக்தி அற்று நின்று இருப்பதைக் கண்டான்.

அவன் வெட்கப்பட்டான்; இனிமேல் வேகமாக நடக்க வேண்டுமென்று எண்ணி வேகமாக நடந்தான்.

தன் காதலியை இப்பொழுது மறக்க எண்ணிச் சுற்றுப்புற இயற்கை அழகில் தன் உள்ளத்தை பறிகொடுத்து நடந்தான்.

அச்சமயத்தில் அங்கு ஒரு அருவியின் ஓரம் அழகிய வெண்மை நிறம் பொருந்திய அன்னங்கள் சில நடப்பதைக் கண்டான்.

அவன் உள்ளம் திடுக்கிட்டது.

தன் காதலியின் நடையும் அந்த அன்னத்தின் நடையும் ஒத்து இருப்பதைக் கண்டதும் அவன்மனம் பழையபடிகாதலியை நினைக்கத் தொடங்கியது.

முதலில் அவன் உள்ளத்தில் தன் காதலியின் கண்கள் இரண்டு தென்பட்டன.

அந்தக் கண்கள் கருவண்டோ? அல்லது வேற்படையோ? இப்படி ஒரு சந்தேகம்.

கருவண்டின் பளபளப்பும் வேலின் கூர்மையும் ஒத்து இருப்பதையும், ஆயினும் ஆடவரை நோக்கும்போது அவள் கண்கள் வேலின் கூர்மையைவிட அதிகமான கூர்மையுடன் ஆண்களைத் தாக்குவதையும் உணர்ந்து இது வேற்படைதான் என்று துணிந்தான்.

இப்படி அவள் எழிலில் மறுபடியும் மூழ்கி நடப்பதையும் மறந்தோம் என்று உணர்ந்து அவன் வெட்கப்பட்டான்.

அவன் உள்ளத்துக்குக் கூறுகின்ருன், இப்படி கண்டவைகளுக்கெல்லாம் தன் காதலியை ஒப்பிட்டு ஒப்பிட்டு, மனம் அவளை எண்ணிப்புண்பட்டு, நடப்பதையும் தவிர்த்து இப்படி நடுக் காட்டில் அவதிப்படுவதைவிட அவளைச் சென்று அடைவதே மேல்போல் உள்ளதே என்று.

மயில்கண்டால் மயிலுக்கே
வருந்திட ஆங்கே
மான்கண்டால் மானுக்கே
வாடி மாதர்
குயில்கண்டால் குயிலுக்கே
குழைதி யாகில்
பொருள்வயின்போக் கொழிநெஞ்சே
கொழுங்கண் என்னும்
அயல்கொண்ட படையாரை
அன்னப் பேடும்
அதிசயிக்கும் நடையாளை
அணையல் உற்றே.

இது "நந்திக்கலம்பகத்தில்" காணப்படும் ஒரு அழகு மிக்க மயக்கம் பொருந்திய காதலனின் வேதனைக் காட்சியை விளக்கும் பாட்டு.

★

சொல்

[அன்பு]

நம் எண்ணத்தைப் பிறருக்கு ஒலி வடிவில் அறிவிக்கும் மொழியே சொல் என்பது. சொல் சாதனமேயன்றி இலட்சியமன்று. கருத்தைக் கூறுவதே நம நோக்கம். அதற்குரிய சாதனமே சொல்.

நாம் சொல்லும் சொல் நா அசைவதன்மூலம் உண்டாகிறது. ஆகவே நாம் பேசுவதற்கு மூல காரணம் எண்ணம், அதை ஒலி வடிவில் அறிவிப்பது நா.

நாம் சொல்லும் சொல் வன்மையுடையதாக இருக்க வேண்டும். அதேபோது பிறரைப் புண்படுத்தாமல் இருக்கவேண்டும். "வாள் தரும் புண்ணினும் நா தரும் புண்ணே கொடியது."

சொல்லம்பு பட்டபுண்மறையாது' இதனலேயே வள்ளுவர்.

யாகாவா ராயினும்
நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப்
பட்டு.

என்று, சுருங்கிய சொல்லால் விரித்துக் கூறினர்.

சொல்லும் சொல் பயனுள்ளதாக இருக்கவேண்டும். அறிவுடையோர் பயனில்லாத சொற்களை ஒருபோதும் சொல்லமாட்டார்கள். அவர்கள் சொல்லுகின்ற ஒவ்வொரு சொலலிலும் அவர்களது அறிவின திட்பம் வெளிப்படும். பயனில்லாத சொற்களைக் கூறுபவனை மனிதன் என்றே சொல்லக்கூடாது. மனிதப் பதர் என்று கூறவேண்டும் என்று கூறிய வள்ளுவர்.

சொல்லுக சொல்லிற்
பயனுடைய, சொல்லற்க
சொல்லிற் பயனில்லாச்
சொல்

என்று சொல்லின் இலக்கணத்தை வரையறுக்கிருர்.

சொல்லுகின்ற சொல் இனிய சொல்லாக இருக்கவேண்டும். "இன்சொல் பேசுவதால் நாக்கு காயமுறுவதில்லையே?" என்று இன்சொல் பேச அஞ்சுபவர்களை நோக்கி ஓர் அறிஞர் கேட்கிருர்!

ஒரு மனிதனை நாம் மதிப்பிடுவதே அவனுடைய சொல்லின் மூலம்தான.

பானை கீறலா அன்ரு? ஒலியால் அறியலாம். அறிவாளியா அறிவிலியா? பேச்சால் அறியலாம்.

சொற்களை நாம் அளந்து உபயோகிக்க வேண்டும். கூடுமான வரையில் சுருங்கிய சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லுதல் வேண்டும். அதிகப் பேச்சு அறிவுச் சூன்யத்தையே காட்டும் என்பது ஒரு பழமொழி.

இதுபோலவே நாம் உபயோகிக்கும் சொல் பொருளுடையதாக இருக்கவேண்டும். மொழிகள் என்பவை அறிவு உபயோகிக்கும் நாணயங்களேயாகும். சர்க்காரிடத்தில் பொருளில்லையெனில் நாணயங்கள் செலாவணியாகா. அதுபோல் பொருளில்லாத மொழிகளும் பயன்படா. அறிஞர் சில மொழிகளில் பல கூறிவிடுவர், மூடர் பல மொழிகளில் சிலவே கூறுவர்.

நாம் பேசுவதைவிடக் கேட்பது தான் அதிகமாயிருக்க வேண்டும். அதற்கு சாதனம் மௌனம் ஒன்றே. மௌனத்தின் மூலம் நம் குறைகளை மறைக்க முடியும். பிறர் குறைகளை அறிய முடியும். இரண்டு காதிருந்தும் ஒரு நாவே நமக்கு இருக்கிறது. இதன் மூலம் நாம் என்ன அறியவேண்டும்? நாம் பேசுவதைவிடக் கேட்பதே அதிகமாயிருக்க வேண்டும். நாம சொல்லாத சொல் உறையிலுள்ள வாள். பேசிவிட்டால் வாளைப் பிறன கையில் கொடுத்தது போலாகும். சொல்லாத சொல் நம்மை ஒருநாளும் தீங்கு செய்வதில்லை.

(12-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியர் பணி

ந. கோவிந்தன்

ஒரு நாட்டின் எதிர்கால வாழ்வு வளம் கொழிப்பதாகவோ அன்றி வறுமைமீதுற்றதாகவோ ஆவது அந்நாட்டின் எதிர்காலச் செல்வங்களாகிய மாணவர்களால் என்பதை நாம் நன்கறிவோம். ஆனால் அம்மாணவச் செல்வங்களைப் படைத்தளிக்கும் பொறுப்பினர் யார்? ஆசிரியரன்றோ! எல்லா வகையிலும் துவண்டுகொடுக்கும் தன்மையது சிறுவர் உள்ளம்: அத்தகு இளம் உள்ளங்களைச் செம்மை நிறைந்த பாங்கில் பக்குவப்படுத்தி நாட்டிற்கு நல்லபணி செய்ய, உலகம் நல்வழிப்போந்து உய்ய, மன்பதைக்கு உதவுவோர்கள் ஆசிரியச் சான்றோர்கள் என்பதை நாம் நெஞ்சார உணர வேண்டும். ஒரு நாட்டில், ஒரு நூற்றாண்டில் வாழும் மக்கள் உள்ள நிலை, அதுபோகும்போக்கு, அதனால் ஏற்பட்ட விளைவுகள், பொதுவாக அந்நாட்டின் நிலை ஆகியவை அதற்கு முந்திய நூற்றாண்டில் அப்பொழுதைய ஆசிரியர்கள் நல்கிய பணியினைப் பொறுத்தனவாம்.

இல்லத்தில் தாயன்பு உண்டு திளைத்த சிறுமகவு, வயது வந்ததும் கல்வி பயிலப் பள்ளிக்குச் செல்கின்றது. தாயன்பு ஒரு மகவிற்கு எங்ஙனம் இன்றியமையாததோ, எவ்வளவு எண்ணரிய வளஞ் சொரிந்து பயன்விளைக்கின்றதோ, அதுபோன்றதே பள்ளியில் அச்சிறுவனுக்கு ஆசிரியர் அன்பு. அவரது அன்பினைப் பயிருக்கு மழை எவவாறே அவ்வாறென மொழியலாம். தாயினும் அன்பு செய்வோர் உலகினில் எவருமில்லை; அவள் அன்புத் தேக்கம். ஆனால் பள்ளியில் அதே அளவான, தரமான அன்பைப் பொழிய முயற்சிக்கின்றார் ஆசிரியர்.

பயிற்றுவதின் நுண்மையுணர்ந்து தெளிந்த ஆசிரிய நல்லார், பயிற்றுங்கால் தன்னை ஒரு தாயாக ஆக்கிக்கொள்ளுகின்றார். தன் முன்னிருக்கும் மாணவனைத் தாய் நோக்குமாறு போல நோக்குகின்றார். அந்நோக்கின் பயனாய்த் தன்னிலை முற்றிலுந் திரிந்து கண்களில் தாயருள் சுரக்க நா அன்புச் சொற்கள் பொழிய, கைகள் அணைக்கும்வழி நீள, பாடங்களைத் தெளிவுற விளக்குகின்றார். அந்நிலையில் அச்சிறுவன் செய்பிழைகள் புல்லெனப் படுகின்றன; சினஞ் சிறிதுங்கொள்ளாது, பல தடவை சொல்லவேண்டியிருப்பினும் தயங்காது சொல்லிப் புகட்டுஞ் செவ்வியபாங்கு உன்னி உன்னி வியக்கற்பாலது! மாணவனும் அவர்காட்டும் அன்பிலே மயங்கி, பன்னிப் பன்னித் தெளிவுறப் புகன்றிடும் பாடங்களில் கருத்தினை நிறுத்தி, தாயிடம் உணவுகொள்தலைப்போல ஆசிரியர் தரும் அறிவுணவை உண்ணுகின்றான். தாய் மகவிற்கு அன்புடன் சோறூட்டுங்கால், அம் மகவு அடம்பிடித்திடின் சினங்கொள்ளாது, "கண்ணே! தமிழே, மணியே!" என்று அன்புற அழைத்து, மதிமுகங்காட்டி, காக்கையைக் கூவி, கிளியினைக் கூட்டித் தான் கொண்ட பணி நிறைவு பெற இயற்கையைத் துணைக்கழைப்பாள்; குழவியின் சிந்தை இனிய காட்சிகளில் பதியுங்கால் சிறிது சிறிதாக உணவினை ஊட்டிவிடுவாள். அதுபோன்று ஆசிரியர் சிறுவன் உள்ளத்திற்கியைந்த எழில்தரு மேற்கோள் காட்டி, மாணவனின் எண்ணத்தையும் மேற்கோள்களில் நிலைக்கவிட்டு, அம்மேற்கோள்வழி அறிவுக் கருத்துக்களை உள்ளத்தில் செலுத்துகின்றார். குழைசோறு முழுதும் ஊட்டிய நிலையிலே குழவியின சிறு வயிற்றைத் தடவி, எழில் வழி விழிகளைக்கண்டு, குழியிடுங் கன்னத்தைச் சுவைத்துத் தாயுள்ளம்எவ்வளவு உவக்குமோ, அவ்வண்ணமாக ஆசிரியர்தான் புகட்டி முடித்த அறிவுக் கருத்துக்களை அம்மாணவன் திரும்பச் சொல்லக்கேட்டு, தான் விளக்கியவெல்லாம் அவன் உள்ளத்தில் பதிந்துவிட்டன என்றறிந்ததும் உள்ளம் மகிழ்வினால் விம்மிப் பொங்க, உடலெல்லாம் உவகை மேலீட்டால் மயிர்க்கூச்செரிய அன்போடு தட்டிக்கொடுத்து மாணவனது நினைவு நலத்தைச் சுவைக்கின்றார்; அதன் வழி அவனுக்கு ஊக்கமூட்டுகின்றார். அந்தப் பொழுதினில் ஆசிரியர் பார்வையும் மாணவன் பார்வையும் கலந்து இருவரது உள்ளத்திலும் அன்பினைப் பாய்ச்சுகின்றன. மாணவனின் அன்புப்பார்வை ஆசிரியர் உள்ளத்தே பாய்ந்து தனியான ஒரு அன்பை, சிறப்பான ஒரு பற்றுதலைத் துளிர்க்கச் செய்கின்றது! ஆசிரியரின் அருள் நிறை அன்புப் பார்வையினை மாணவனின் உள்ளந்தாங்கமாட்டாது நிறைந்து தணிகின்றது.

அந்நிலையில்தான் பணிவென்னும் ஒழுக்கத்தின் அச்சாணி உருப்பெறுகின்றது. ஆசிரியரிடம் பணிவாக நடக்கவேண்டுமென்று சொல்லக்கேட்ட மாணவன், இந்நிலையில்தான் பணிவுணர்வைத் தானாகத் தன்பாங்கில் பெறுகின்றான். அப்பணிவின் மாண்புதான் என்னே! அந்தப் பணிவுதான், ஆசிரியரின் பழுதற்ற அன்பும், அருளும் நல்ல பொறுப்புணர்வும் ஒன்றி, ஈன்று தந்த பணிவுதான் ஆசிரியர் மாணவர் கூட்டுறவை வளர்க்கின்றது. அக் கூட்டுறவு வலுவில் குன்றம்; வளத்தில் மருதம்; வண்மையில் பாரி தன் உள்ளம் என இயம்பற்பாலது. இதுதான் ஆசிரியர் மாணவர் நற்றொடர்பின் நுட்பம்.

பொறுமைதனில் தாய் முதல்வள் எனரூல், ஆசிரியர் இரண்டாவது. குறும்பும் தவறும் அளவு மீறின் ஆசிரியர் கடிந்து கொள்ளத்தான்செய்வார். ஆனால் அவர் கடிந்துகொள்ளும் முறை சேயினைத் தாய் கடிந்து கொள்வதுபோல்வதே! தவறுகள் நிறைந்துவிடின் தறுதலையாவது ஒரு தலை. தன் மகனைச் சான்றோன் என்று கேட்கத்தானே ஒரு தாய் உள்ளம் விழையும்; தன் மாணவன் எதிர்காலச் சமுதாயத்திற்கு அருந்தொண்டாற்றும் அறிஞனாகத் திகழ வேண்டுமென்றுதானே ஒவ்வொரு ஆசிரியரும் அவாவுவர். ஆகவே குற்றஞ் செய்யுங்காலை கண்டித்துத் திருத்துவது ஆசிரியரின் அரும்பொறுப்பாகின்றது. அப்பொறுப்பு தனக்கல்லாது மாணவனின் நன்மைக்கே; மேலும் அது இன்றியமையாததாகும்.

நிலத்தினை உழுது பண்படுத்தி, பொறுக்கி விதைகளை விதைத்து, நீர்பாய்ச்சி, களையெடுத்து, செழிப்புற வளர்த்து பயனீட்டி இப்பாருக்கு அளிக்கும் உழவனைப் போன்றவர் ஆசிரியர்! ஆசிரியரைச் சமுதாய உழவன் எனல் சாலப் பொருத்தமாகும். உழவன் உழைப்பை நுகர்வது உலகம், மக்கள். இளம் உள்ளங்களை அறியாமையென்னும் கனல் கருக்கிவிடாமல், அன்பு கொண்டு பண்படுத்தி, ஒழுக்கமெனும் உரமிட்டு அறிவு விதைத்து; ஒன்றுக்கு நூறாகப் பயன்தரச் செய்பவர் ஆசிரியர். அந்தப் பயனை நுகர்வது மன்பதை, சமுதாயம். எனவே உழவனும், ஆசிரியரும் சமுதாயத் தொண்டர்கள். உழவினால் உலகம் வலுவுற்று இயங்குகின்றது என்பதை நாம் அறிவோம். ஆனால் அவ்வியக்கம் நேர் வழிப்பட்டு, அன்பு வழிப்பட்டு, அறிவு வழிப்பட்டு இயங்குவது ஆசிரிய நல்லாரால் என்ற பேருண்மையை நாம் மறந்து அவர்தம் இழிவு நிலை களைய முனையாதது ஏனோ? குற்றமெனும் இருள் நீக்கித் தெற்றமெனுந் தெளிவு தருதலாலேயே — அறிவொளி நல்குதலாலேயே ஆசிரியர் என்ற அருந்தமிழ்ப் பெயரிட்டழைத்தனர் தமிழ் மாந்தர். (ஆசு. குற்றம், மாசு; இரியர் போக்குவோர்) ஆசிரியத் தொண்டு செய்வோரினும் விரிந்து பரந்த உள்ளங்கொண்டோர் புவிதனில் யாருமில்லை; இருக்க முடியாது. ஆசிரியரைத் தெய்வம் என்று நாம் அழைத்து மகிழ்வது இந்தப் பொருளில்தான். ஆசிரியர் சமுதாயத்தின் சிற்பி; பொதுநலத் தொண்டர்; அன்பின் மாட்சியுணர்ந்த அண்ணல். பள்ளி மாணவர்களே தன் மக்கள், அவர்களின் இன்ப துன்பங்களே தன் இன்ப துன்பங்கள் என்று இயங்குபவர். தன் வீடு, மனைவி என்ற எண்ணமே எழுவதில்லை! அவ்வெண்ணந் துறந்த துறவிகள் அவர்கள்.

அவ்வாறு எல்லாவற்றையுந் துறந்தஅருளாளர்களின் நிலையை இன்றையத் தமிழகத்தில் காணுவோம்வாரீர்! ஐயகோ! கொடுநிலை! கொடுநிலை பாரீர்! வறுமைப் பேய் பிடித்து ஆட்டி அலைக்கழிக்கின்றது அவர்களை! தங்களின் வாழ்வுத் தேவைகளை நிரப்பிக்கொள்ள வழியின்றி மிடிப்புற்று வாடிய முகத்துடன் நடமாடுகின்றனர்; அந்த நடமாட்டத்தில் உயிரில்லை. வறுமைப் பிணியால் துன்புற்றுழலும் ஆசிரியர் உலகு அருமையான சமுதாயத்தை உருவாக்க எங்ஙனம் இயலும்? ஊழியம் செய்யவேண்டும உலகளவு; ஊதியம் பெறவேண்டும் கடுகளவு என்னும் போக்கு எவ்வாறு நேர்மையின்பால் படும்? பகலவனின் திறம் விளைக்கும் பாலை நிலத்தின் கண், வேலிக்கு ஆயிரங் கலம் விளைவிக்க எண்ணினும் ஒரு மேதாவி! ஆட்சிப் பீடங்களில் அமர்ந்திருப்போர்தம் போக்கு இதைப போன்றதே! ஆசிரியர் பணியை வானளாவப் புகழுகின்றனர். எல்லையே இல்லை அவர்கள் பணியின் மாட்சிக்கு என்கின்றனர்! ஆனால் அவர்தம் இழிநிலை நீக்க ஏதாவது உருப்படியான நடவடிக்கை எடுத்திருக்கின்றனரா? இல்லையே! பொதுவாக இந்தியத் துணைக்கண்டத்தின் நிலையேஇதுதான. அவர்கள் தீனிபோடாது கறக்க நினைக்கின்றனர். அதன் முடிவு அம்மாட்டின் இறுதிக் காலம் நெருங்குகிறதென்பதே! அதன் விளைவு அப்பசு வழங்கிய இனிய தீம்பாலின் பயனையே இழப்பதாகும்.

உலகில் உள்ள பெரும்பாலான நாடுகளில், செழித்துக் கொதித்த நிலையில் இலங்கும் நாடுகளில் ஆசிரியர்நிலை எவ்வாறிருக்கிறது? நம நாட்டினின்றும் அந்நாடுகள் போந்து மீண்ட நல்லறிவாளர்களின் அறிவுதுலங்கு சொற்பொழிவுகள் இதற்கு விடை கூறும். "ஆசிரியர் நிலை அந்நாடுகளில் சாலச் சிறப்புற்றிருக்கிறது. அங்குள்ள ஆட்சிப் பொறுப்பாளர் எல்லாம், தங்கள் தங்கள் நாட்டின் வாழ்வும் வளமும், வீழ்வும் வறுமையும் ஆசிரியர் பணியுடன் பேரளவில் தொடர்புகொண்டிருக்கிறது என்பதை நன்கு உணர்ந்து, ஆசிரியர் நிலையில் கவனஞ் செலுத்திக் கல்வித் துறைக்காக நிறையச் செலவு செய்கின்றார்கள். ஆசிரியர் வாழ்வின் அளவினையும் தரத்தினையும் ஒத்ததுதான், கல்வியின் அளவும் தரமும். கல்வியின் நிலையை ஒத்துத்தான் நாட்டின் முன்னேற்றத்தின் வலுவும் செழிப்பும் என்ற உண்மையை அவர்கள் உள்ளத் திருத்தி அதன் வழி இயங்குகிறார்கள்" இது அவர்களின் உரைகளினின்றும் நாம் பெறும் செய்தியாகும்.

இவ்வாறு எண்ணிச் செயல்படும் நாடுகளின் கல்வி வளத்தில் எங்ஙனம் குறை இருக்கும்? வளமான வாழ்வு நுகரும் ஆசிரியர்கள் மாணவர்கட்கு அறிவு கொளுத்துகிறார்கள்; கருத்துக்கள் பூக்கின்றன; கலைகள் பெருகுகின்றன! ஆராய்ச்சி அறிவு செம்மையுற்றுச் சிறக்கிறது; அதனால் விளையும் பயன் சிறிதோ! புதுப் புதுக் கண்டுபிடிப்புக்கள் பல்கிப் பெருகுகின்றன. மக்களின் வாழ்வுநிலை உயர்கின்றது. மக்கள்

மக்களாக வாழும் நீர்மை மொட்டவிழ்க்கின்றது. அந்நாடு வளநாடாகின்றது. உண்டது போகக் கண்டதைப் பிற நாடுகட்குக் கொடுத்துதவும் மேம்பாடு பெற்றுத் திகழ்கிறது. பொருளியல் துறை, அறிவியல் துறை, அரசியல் துறை என எல்லாத் துறைகளிலும் தன்னிறை பெற்று வழியும் அந்நாடு, அத்துறைகளில் பின்தங்கிய நாடுகட்குக் கைம்மாறு செய்ய முன்வருகிறது. இவ்வாறு தானும் உயர்ந்து பிறரையும் உயர்த்தும் அளவிற்கு அது பெற்றிருக்கும் வளம் ஆசிரியர் பணியால் இயன்றதே யெனல் பொருந்தச் சொல்லினதாகும்.

இன்றையத் தமிழகம் அதன் சங்க கால நிலையுடன் ஒப்பிடுங்கால் மடுவிற்கும் மலைக்கும் உள்ள உறவினதாகத் தென்படுகிறது. ஏதாவது இக்காலத்தில் நல்லவை காணப்படுகின்றனவெனின், அது காலமென்னும் கொடும்புயலுக்குத் தப்பிய மரவேர்களினின்றும் துளிர்விட்ட கொழுந்துகளாகும். ஆனால் அவ்வாறு துளிர்ப்பதற்கு இயற்கையின் தண்ணருளாம் மழை எங்ஙனம் இன்றியமையாததோ அதுபோல மாண்ட தமிழகப் பண்பாட்டின் சிறு சிறு சிதறல்கள் காணப்படுவதற்கு காரணமாவார் தமிழக ஆசிரியர்கள். அவர்களின் சலியாத உழைப்பே பெருமுயற்சியின் விளைவே நாம் நன்னிலை காணலாம் என்ற நம்பிக்கையைத் தருகிறது.

ஆசிரியர் யார்? அவர்கள் உழைப்பினால் கிட்டும் பயன் எவ்வளவு? அது எங்ஙனம் இன்றியமையாதது? அவர்களின் உழைப்பு எந்தெந்த நிலைகளினின்றும் அரும்பி மலர்கின்றது? அந்த மலர் சமுதாயமென்னும் இளநங்கையின் கூந்தலைச் சார்ந்து, இன்மணம் பரப்பி, அவள் அழகினைக் கூட்டிப் பண்பாடென்னும் கட்டழகனின் உள்ளத்தை எவ்வண்ணம் கொள்ளை கொள்கிறது? ஆனால் அவ்வின்றியமையாப் பணியாற்றும் தொண்டர்களின் நிலையென்ன? இந்நிலை நீடித்தால் தமிழகம் ஈடேறுமா? நாம் காண, தணியா வேட்கை கொண்டிருக்கும் சங்கத் தமிழ்ச் சமுதாயம் உருவாகுமா? அடித்தளம் வலுவாக அமைக்கப்பெற்ற கட்டிடமே உறுதியுடன் நீண்டகாலம் நிலை பெற்றிருக்கும்! அவ்வடித்தளம் போன்றதே ஆசிரியர் பணி.

இனி, அரசினர் கடமையென்ன? தமிழகத்தின் நலனில் நாட்டங் கொண்ட பேரறிஞர் பலரும் பல்வேறு வழிகளில் "ஆசிரியர் சமுதாயம் உயரவேண்டும். அதன் வாழ்க்கை வசதிகளும், வாழ்வுத் தேவைகளும் நிறைகொள வழங்கப் பெறுதல் வேண்டும். ஆட்சியாளர்கள் நாட்டின் நிலையை நன்குணர்ந்து ஆசிரியர் நிலையைத் தெளிவாகக் கருத்திற்கொண்டு உருப்படியான திட்டங்கள் போட்டு, ஆசிரியர் நலனில் உள்ளம் ஒன்றிய அக்கறை கொண்டு நிறைவேற்ற முயலவேண்டும். தங்களின் பொறுப்பை உணர்ந்து பாடுபட வேண்டும்" என்று நயந்தும், கண்டித்தும் எடுத்துரைத்து வரும் சொற்களுக்கு அரசினர் மதிப்புத் தரல் இன்றியமையாததாகும். கல்வித் துறைக்கு நிறையப் பணம் ஒதுக்கவேண்டும். ஆசிரியர் உள்ளம ஒடிந்துவிட்டால் அரசினர் எதிர்பார்க்கும் அளவு நாட்டில் முன்னேற்றம் இராது. "ஆசிரியர் தொழிலைப் போல, அரசாங்கத்தால் கேவலமாக நடத்தப்பெறும் தொழில் வேறு எதிலுமில்லை" என எனது பெருமதிப்பிற்குரிய ஆசிரியர் ஒருவர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அப்பொழுது அதுபற்றி ஒன்றும் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் அது எவ்வளவு உண்மையென்பதை நான் இப்பொழுது உணர்கிறேன். அவரது சொல் பல தடவை தங்கள் இழி நிலைபற்றி அரசாங்கத்திடம் எடுத்துக் கூறி, தங்கள் நிலை உயர உதவிகோரித் தீர்மானங்கள் நிறைவேற்றி, ஒருமுறையேனும் தங்களின்பால் அவ்வருளாளர்களின் கடைக்கண் பார்வை விழும் என்று நம்பி, அந்நம்பிக்கை ஈடேறுமையால் வருத்தமேலீட்டு ஏங்கி ஏங்கி வெளிப்பட்ட பெருமூச்சின் விளக்கமேயல்லாது வேறென்ன?

ஆயினமையின், மக்களுடைய அரசாங்கம் என முழங்கும் ஆட்சியாளர்கள் மக்களின் ஒருபகுதியினராக, மக்களின் நாகரிகத்தினை உருவாக்கும் ஆசிரியர்களின் நலனில் நாட்டங்கொண்டு விரைவாக விரிவாகத் திட்டமியற்றி ஆசிரியர் நிலை உயர்த்த முனையவேண்டும். மக்கள் தலைவர்களாக இருக்கும் அறிஞர் பெருமக்களின் வேண்டுகோள்களைப் புறக்கணியாது ஏற்றுக்கொண்டு சீர்படுத்த முயலவேண்டும். நமது மாநில கல்வித் துறையமைச்சர் திருவாளர் சுப்பிரமணியம் அவர்கள் இதற்கான வழிவகைகளை ஆராய்ந்து, வீணாக விரயமாகும் தொகையையாவது தடுத்து எடுத்து ஓரளவாவது பயன்பெறப் பாடுபட்டால் ஆசிரியர் உலகே அவரைப் போற்றும்.

★

9-ம் பக்கத் தொடர்ச்சி

மேற் கூறிய அத்தனை இலக்கணங்களோடும், கேட்டார் பிணிக்கும் பண்புகளோடும், கேளாதவரும் கேட்க விரும்பும் ஆற்றலோடும் கூறப்படுவதே சொல்வன்மை என்பது. திறனறிந்த சொல்லைச் சொல்லுதலைவிட அறமும் பொருளும சிறந்ததல்ல என்கிறார் வள்ளுவர்! இவ்வாறு சொல்வன்மைமிக்க நாவலர்களைச் சரித்திரம் பல இடங்களில் கண்டிருக்கிறது.

நாவன்மை ஒருவனுக்கு இல்லாதிருத்தல் அவனுக்கு பெரிய இழப்பாகும். நா தான் மனிதனிடமுள்ள நல்ல அம்சம். கெட்ட அம்சமும் அதுவேதான். நாம் நாவின வசமானால் அதைவிடத் தீய பொருளில்லை. அது நம்வசமானால் அதைவிட உயர்ந்த பொருளில்லை.

ஒருவனுக்கு அமைந்திருக்கும் நலங்களிலெல்லாம் நா நலமே சிறந்தது, அத்தகையவனே சொல்வன்மையுடையவன். என்பது வள்ளுவர் கருத்து. வில்லை ஏராக உடைய உழவராகிய வீரருடன் பகைகொண்டாலும் கொள்ளலாம். சொல்லை ஏராக உடைய உழவராகிய அறிஞருடன் பகை கொள்ளக் கூடாது, என்று சொல்வன்மையுடையாரின் திறமையைப்பற்றி புகழ்ந்து கூறி, அது அற்றவர்களை எச்சரிக்கிறார் வள்ளுவர்.

வில்லேருழவர் பகை
கொள்ளினும் கொள்ளற்க
சொல்லேருழவர் பகை.

★

123-5: ஒரு வேதனைக்கதை!

பணமில்லை! பணமில்லை!'—என்கிற பல்லவி, காங்கிரஸ் பீடமேறிய நாள் முதல் இன்றுவரை கேட்கப்படுகிறது.

பணமில்லை! பரதவிக்கிறோம்!! — என்று உள்நாட்டில் சொல்வது மட்டுமல்ல, வெளிநாடுகளுக்கும போய், டில்லியினர் ஓலமிடுகின்றனர், திருவோடு தூக்கிக் கெஞ்சுகின்றனர்.

அமெரிக்கா உதவுமா, ருசியா ஏதாவது தருமா, ஜெர்மனி கடன் கொடுக்குமா, ஜப்பான் நல்ல மனது வைக்குமா, என்று ஒவ்வொரு நாட்டையும் அண்ணாந்து பார்க்கிறார்கள் — ஆலாய்ப் பறக்கிறார்கள்.

"என்ன செய்யுமப்பா நேரு சர்க்கார்? மக்களுக்கு எவ்வளவோ செய்யவேண்டுமென்றுதான் நேருவும் படாதபாடுபடுகிறார். அணைக்கட்டுகள் இல்லை, ஆலைகள் இல்லை என்று இந்த தி. மு. க.-வினர் அலறுகிறார்களே. இது எங்கள், மனித குல மாணிக்கமாம் நேருவுக்கு மட்டும் தெரியாதா என்று நினைக்கிறீர்கள்? தெரியும். தெரிந்து என்ன செய்வது? பணமில்லையே!", என்று பரிதாபச் சிந்து பாடுவோரும் உண்டு.

பணமில்லை!—என்கிற பரிதாப நிலையை நாமும் மறுக்கவில்லை. டில்லி பீடத்திடம், போட்ட திட்டங்களை நிறைவேற்றக்கூடிய அளவுக்குப் பணமில்லாமலிருக்கலாம்.

பணமில்லாதபோது என்ன செய்யவேண்டும்? — "எமக்குத் தெரியாதா! செலவைக் குறைக்க வேண்டும். இதை உணர்ந்ததால் தான், எமது அகில உலக சோதி, சமாதானக் காவலர், சாந்த சீலர் நேரு, செலவைக் குறைக்கவேண்டும் என்று தினம் தினம் சுற்றறிக்கைகள் அனுப்புகிறார். மந்திரிகள் வசிக்கும் வீடுகளில் அதிகப்படி மின்சாரம் உபயோகிப்பது உள்பட சிக்கனம் செய்யும்படி விடுத்த வேண்டுகோளைக் கவனிக்கவில்லையோ? எந்தெந்த விதங்களில் பணத்தை மிச்சப்படுத்தி, திட்டங்களை நிறைவேற்ற முடியுமோ, அந்த வகைகளில் எல்லாம் முயற்சிக்காமலா யிருக்கிறார் நேரு", என்று கேட்போருண்டு.

உண்மைதான்! அடிக்கடி நேரு அவர்கள், சிக்கனச் சிந்து பாடுகிறார்—அப்போதுதான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு வேண்டிய பணத்தைத் திரட்ட முடியும் — வெளிநாடுகள் உதவும் என்று எதிர்பார்த்துப் பயனில்லை—தன் கையே தனக்கு உதவி என்று சரமாரியாகப் பேசுகிறார்! சண்டமாருதமெனக் கர்ச்சிக்கிறார்!!

இதோ ஒரு செய்தி:- 1956-ம் ஆண்டில் ஆயுத தளவாடங்கள் மட்டும் பிரிட்டனிடமிருந்து 47·29 கோடி ரூபாய்களுக்கு வாங்கப்பட்டது.

47 கோடி ரூபாய்க்கு 1956-ல் ஆயுத தளவாடங்கள் வாங்கப் பட்டதாம்! அதுவும் பிரிட்டனிலிருந்து!!

கோதுமையோ, இயந்திரமோ, துணியோ அல்ல வாங்கப்பட்டது —துப்பாக்கிக் குண்டுகள்! பீரங்கிகள்! போர் விமானங்கள்!!— அதுவும், ஒருகோடி இரண்டு கோடிக்கு அல்ல, 47 கோடி ரூபாய்க்கு!!

ஆயுத உற்பத்தியைக் குறைக்க வேண்டும் — போர் முயற்சிகளில் எந்த நாடும் இறங்கக்கூடாது— சமாதானமே எமது இலட்சியம்— குண்டுகளுக்கு விரயமாக்கும் பணத்தை கோதுமையும் அரிசியும் உற்பத்தியாவதற்குச் செலவழிக்கலாம்—மனிதர்களை அழிக்க ஏன் முயல்கிறீர் — வாழ்விக்கப் பாடுபடலாகாதா! என்று, வானதிரப் பேசுகிறவர், நேரு. வண்ணப் புறாக்களையும், சமாதானத்துக்கு அறிகுறியாகப் பறக்கவிடுகிறார்.

அகில உலக சமாதான 'நோபெல்' பரிசு யாருக்குக் கொடுக்கப்படலாம் என்று கேட்டபோது, ஸ்வீடனில், நேருவுக்கு அளிக்கப்பட வேண்டும், அதற்குரியவர் அவரே, என்று வெளியிட்டார்களாம். அந்தளவுக்கு, சமாதானம் பற்றி, முழக்கமிட்டு வருகிறார்.

அப்படிப்பட்டவரது சர்க்கார், 47 கோடி ரூபாய்களை, துப்பாக்கிக்கும் பீரங்கிக்கும் கொட்டிக் கொடுத்திருக்கிறது! போர்க் கருவிகள் வாங்க, 47 கோடி ரூபாய்களைப் பிரிட்டனுக்குக் கொடுத்திருக்கிறது!!

"உன் தி. மு. க. வேலையைக் காட்டிவிட்டாயல்லவா? 1956-ம் ஆண்டில் வாங்கியது பற்றி, இப்படி அங்கலாய்க்கிறாயே. 1957 வரவு செலவில், நேரு சர்க்கார், அப்படி ஏதாவது செய்ததாகக் காட்டமுடியுமா? 1956ல் செய்திருக்கலாம்! பிறகு, நிலைமை மோசமானதைக் கண்டு, நிச்சயம் எமது காங்கிரஸ் சர்க்கார் இதுபோன்ற செலவினங்களைத் தவிர்த்திருக்கும். 1957ல் தானே, செலவினங்களில் சிக்கனம் பார்க்கும்படி, தாக்கீதுகளும் நோட்டீசுகளும், அனுப்பினார்", என்று சொல்லக் கூடும்!

தவறு செய்வது மனித இயற்கை! ஆனால், அதைத் தவறென உணர்ந்தபோது, திருத்திக் கொள்ள வேண்டும்—அவன்தான் உண்மையான மனிதன். அதுவும் நாட்டை நிர்வகிக்கும் அரசு, அப்படிச் செய்தால்தான், அரசை நம்பிவாழும் கோடிக்கணக்கான மக்களுக்கு நீதியும சுகமும் மலரச் செய்யமுடியும்.

1956ல் 47 கோடி செலவிட்ட டில்லி, பணமில்லாத நிலைமையில் அடுத்த ஆண்டு, இந்தச் செலவைக் குறைத்திருக்கும் என்றே எதிர்பார்ப்பர்! ஏனெனில், இப்போது இந்திய உபகண்டத்துக்குத் தேவையானது தோட்டாக்களல்ல—சோறு!!

பார்லிமெண்டில் கடந்த 17ந் தேதி டி. சி. எம். மேனன் என்பார், இதுபற்றிக்கேள்வியொன்று கேட்டார். அப்போது, பாதுகாப்பிலாகாவின உதவிமந்திரியான சர்தார் சுர்ஜித் சிங் என்பார் சொன்னார் — 1956ல் 47 கோடி செலவிட்டோம், உண்மைதான என்று!!

1957ல் அந்தச் செலவு என்ன வாயிற்று? — என்று கேட்டார், உறுப்பினர்! அமைச்சர், கலக்கம் ஏதுமின்றி பதிலளித்தார், அதிகமாயிற்று என்று!!

1956ஐ விட 1957ல் அதிகமான குண்டுகளையும், தோட்டாக்களையும், டில்லி சர்க்கார் வாங்கியிருக்கிறார்கள், பிரிட்டனிடமிருந்து; அதுவும் எவ்வளவு ரூபாய்க்குத் தெரியுமா? **123-06 கோடி ரூபாய்களுக்கு!!**

கடந்த ஆண்டைவிட, இந்த ஆண்டு 76 கோடி ரூபாய்க்கு மேல் அதிக ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள்! 1956ம் ஆண்டில் 47 கோடியாக இருந்தது, 57ல் 123 கோடியாக உயர்ந்திருக்கிறது!!

குறைந்திருக்கிறது — என்கிற சொல்லையே, எதிர்பார்ப்பர். ஏனெனில், பணமில்லை, பணமில்லை என்று பாடப்பட்டு வரும் சிந்து, அதிகம். ஆனால், நேருபண்டிதரின் சர்க்கார், போர்த் தளவாடங்களுக்கென்று 76 கோடியை அதிகமாக்கியிருக்கிறது.

எக்கட்சியினராயினுஞ் சரி, இந்த இடத்தை மட்டும், தயவு செய்து உற்று நோக்கும்படி வேண்டுகிறோம். இவ்வளவு கோடி ரூபாயை ஆயுதத் தளவாடங்களுக்கென கொட்டி அழவேண்டிய அவசியம் என்ன ஆண்டாண்டுதோறும், போன ஆண்டைவிட அதிகமாக்குமளவுக்கு என்ன ஆபத்து ஏற்பட்டிருக்கிறது இந்தியாவுக்கு? கோதுமையும் அரிசியும்தானே மக்கள் கேட்கிறார்கள்; அவர்கள் குண்டையும் துப்பாக்கியையுமா கேட்கிறார்கள்!!

123 கோடி ரூபாய்!—*ஏ, அப்பா!! என்று திடுக்கிட வைக்கிறது, நம்மை. கொஞ்சங்கூட மனம் கூசாமல், நாட்டிலே கண்ணீரும் கம்பலையுமாய் அலையும் மக்களைப் பற்றிய கவலையுமில்லாமல், கொட்டித் தொலைக்கிறார்கள். இந்த இலட்சணத்தில், பணமில்லை, பணமில்லை என்று சொல்லிக் கொண்டு திருவோடு தூக்கிக் கொண்டும் ஓடுகிறார்கள்! 'உம்' மென்று முகத்தை வைத்துக் கொண்டு, ஏமாற்றத்துடன் திரும்பியும் வருகிறார்கள்!!*

இன்னொரு செய்தி: **திட்டம் வெட்டப்படக்கூடாது என்பதற்காக நிதியமைச்சர் சுப்பிரமணியம் மிகுந்த பிரயாசை எடுத்துக்கொண்டார். ஆனால், விவசாய சம்பந்தப்பட்டவை தவிர ஏனைய திட்டங்கள் அனைத்தையும் திட்டக்குழுவினர் வெட்டி விட்டனர்.**

போர்த் தளவாடங்களுக்கென 123 கோடி ரூபாய்களை அழிக்கும் டில்லியிலிருந்துதான் இச் செய்தியும் கிடைக்கிறது.

விற்பனையாளர்களுக்கு முக்கிய அறிவிப்பு

டிசம்பர் பட்டியல் பாக்கி முழுவதும், மலருக்குரிய தொகையும் 10—1—58 க்குள் அனுப்பாத ஏஜண்டுகளுக்கு மலர் கண்டிப்பாக அனுப்பப்பட மாட்டாதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், எதையும் வெட்டக் கூடாது, எங்களுக்கு ஏற்கனவே அளிக்கப்பட்டதே கொஞ்சம், ஆகவே அப்படியே நிறைவேற்ற வேண்டும் என்று அண்மையில் டில்லி போயிருந்த நமது சுப்பிரமணியம் கெஞ்சினாராம்; டில்லி பீடம், ஏற்கவில்லையாம்? இதை! மறுத்துவிட்டதாம்!

சுப்பிரமணியம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், சென்னை மாநிலத்துக்கு 400-கோடியாவது ஒதுக்க வேண்டும் என்று கேட்டார் முதலில்—400-கேட்டதற்கு, "முடியாது 200-கோடி தருகிறோம்" என்றது டில்லி—பரவாயில்லை என்று சென்னை வந்து சேருவதற்குள் 200-கோடியையும் 176-கோடியாக்கிவிட்டார்கள் என்று செய்தி வந்தது--அந்த 176-கோடியாவது நிலைத்ததா என்றால், கொஞ்ச நாட்களுக்கெல்லாம் 152-கோடியாக்கி விட்டோம் என்று தகவல் வந்தது; இப்போது அந்த 152-கோடியிலும் வெட்டு வந்திருக்கிறது.

400
200
176
152

என்கிற இந்த 'தேய் பிறை'க் கணக்கிலேதான் திராவிட நாடு திராவிடருக்கே எனும் முழக்கம் புதைந்து கிடக்கிறது! தென்னாடு, முதல் 5-ஆண்டுத் திட்டத்தில் வஞ்சிக்கப்பட்ட பூமி; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது ஏதாவதுகிடைக்கும் என்றே 400-கோடி ரூபாய்க்குத் திட்டம் தீட்டினார்கள் சென்னை சர்க்கார். 400-லிருந்து 200-ஆகி, 200-லிருந்து 152-ஆகி, இப்போது இன்னும் வெட்டப்படும் கட்டத்தில் நிற்கிறது!!

இப்படி டில்லி செய்யும் என்பதால் தான், தேர்தலின்போது — நாம் சொன்னோம்—இரண்டாவது 5-ஆண்டுத் திட்டத்தில் 6000-கோடிபோய் தருவதாக டில்லி வாக்களிக்கட்டும். நாங்கள் தேர்தலில் போட்டியிடாமல் விலகிக்கொள்ளுகிறோம் என்று!

நாமறிவோம், டில்லியிலிருந்து தென்னாட்டுக்கு எப்போதும், சமநீதி கிடைக்காது என்கிற உண்மையை.

400—200—176—152 என்கிற கணக்கு உரைக்கும் இந்த உண்மையை. இந்த 152-கோடி என்கிற உறுதியைவைத்து, இந்த ஓராண்டுக்கு **35-கோடி** *ரூபாய்க்குத் திட்டம் போட்டுக்கொண்டு சென்றிருக்கிறார் நிதியமைச்சர் சுப்பிரமணியம்! இதாவது இடைக்கட்டும் என்கிற பெருமூச்சோடுதான் அவர் சென்றிருக்க வேண்டும்!! இந்த 35-கோடி ரூபாயைக் குறைத்துக்கொள்! — என்று டில்லி சொல்லிவிட்டதாம்.*

மிகுந்த பிரயாசை எடுத்துக் கொண்டாராம், சுப்பிரமணியம்.

போய்யா, போ! —என்று சொல்லிவிட்டதாம், டில்லி.

வடக்காவது! தெற்காவது!! —என்று இங்கு எக்காளமிடும் நண்பருக்கு, வேதனையும் கண்ணீரும் ஏற்பட்டு இருக்கக்கூடும், டில்லியில்.

5-கோடி ரூபாய்! — *மிகப்பெரிய தொகையல்ல, டில்லிக்கு! ஆனால் சென்னைக்கு 5-கோடிரூபாய் சாதாரணமான தொகையல்ல!*

ஆண்டுக்கு 123-கோடி ரூபாய் போர்த்தளவாடங்களுக்கு அழிக்க முடியும் டில்லியால்.

ஆண்டுக்கு கேவலம் 5-கோடி ரூபாய் கூட சென்னைக்குத் தரமுடியாது டில்லியால்.

57-ஐ வெகுசுலபமாக 123-ஆக்க முடியும் டில்லியால்! 35-ஐ 40-ஆக்க மனம் வராது, 30-ஆக்குவதென்றால் ஆனந்தம் டில்லிக்கு!

இந்த அலங்கோலத்தை எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம்.

*

இந்தி-ஆட்சிமொழியா?

நானும், எதிர்க் கட்சியினர் வேறு சிலரும் கலந்துகொண்ட மொழி ஆய்வுக் கமிட்டியில், இந்தி ஆட்சி மொழியாவதற்கு நான் சம்மதம் அளித்ததாகத் தெரிவிக்கும் பத்திரிக்கைச் செய்திகள் என் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டன.

தப்பர்த்தம் தரக்கூடிய வகையில் அமைந்துள்ள அத்தகைய அறிக்கைகளால் தவறான எண்ணங்கள் எழக்கூடுமாகையால், இந்தி ஆட்சி மொழி ஆவதற்கு நான் சம்மதம் அளித்துவிட்டேன் என்ற கூற்றினை, இதன் மூலம் மறுக்கிறேன்.

உண்மையைக் கவனிக்குமிடத்து, அந்தக் கமிட்டி, இந்தி, ஆட்சி மொழியாக இருக்கலாமா என்பது பற்றி விவாதித்து முடிவு எடுக்கக் கூட்டப்பட்டதல்ல.

1965-ல், ஆங்கிலத்தை நீக்கிவிட்டு, இந்தியை ஆட்சி மொழி ஆக்குவதற்கான வழி வகைகளை எடுத்துமகூறும் கேர் கமிட்டி அறிக்கை பற்றி, சென்னை சர்க்கார், இந்திய சர்க்காருக்கு தமது கருத்தைத் தெரிவிக்க விரும்பினர்.

இந்த அம்சத்தைக் கவனித்து, பலரும் ஏற்றுக்சொள்ளத்தக்க வகையில் ஒரு யோசனையைக் காணவே, கமிட்டி கூட்டப்பட்டது —இந்தி ஆட்சி மொழி ஆக இருப்பதா என்பதுபற்றி எமது கருத்தினை அறியவோ, ஆதரவு பெறவோ அல்ல.

அரசியல் சட்டத்தில், இந்தி ஆட்சி மொழி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது; சட்டத்தின் படி கிடைத்துள்ள இந்த நிலையை மையை, நடைமுறைக்கு எப்படிக் கொண்டு வருவது என்பதுதான் கேர் கமிட்டியினரின் அறிக்கையின் சாரமாகும்.

அரசியல் சட்டத்தைத் தயாரித்தவர்கள், இந்தியை ஆட்சிமொழி அந்தஸ்துள்ளதாகச் செய்தது மாபெரும் தவறு என்று கருதியும், கூறியும், இந்தியைத் திணிக்கும் முயற்சியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தும், அரசியல் சட்டத்திலேயே பல திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்று வலியுறுத்தியும் வருகிற ஒரு கட்சியைச் சார்ந்தவன் நான்.

நான் கமிட்டிக்கு அழைக்கப்பட்டது, இந்த என்னுடைய கட்சியின் கொள்கையை விட்டுக் கொடுத்துவிடவோ, அல்லது அதைக் கவனியாமல் இருந்து விடவோ, அல்ல.

கேர் கமிட்டி அறிக்கையின் விளைவாகக் கிளம்பிய பிரச்சினை குறித்துக் கருத்து அறியவே எங்கள் உதவி நாடப்பட்டது. பல் வேறு கட்சியினர், வெவ்வேறான பல கருத்துகளை, விவாதித்தான பிறகு,

ஆங்கிலம் தொடர்ந்து மிக நீண்ட காலம் ஆட்சி மொழியாக இருந்து வர வேண்டும் என்றும்;

இதற்கான முறையிலே பார்லிமெண்டு சட்ட—சம்மதம் தரவேண்டும் என்றும்—

இதனை எப்பொழுது மாற்றுவதாக இருப்பினும், மாநில சட்டசபையின் சம்மதம் பெற்றாக வேண்டும் என்றும்

இந்திய சர்க்காருக்கு எடுத்துக் கூறும் திட்டத்தைச் சென்னை சர்க்கார் தீட்டிற்று.

எல்லா எதிர்க்கட்சிகளும், ஆங்கிலம் தொடர்ந்து மிக நீண்ட காலம் (Prolonged Period) ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற கருத்துக்குச் சம்மதம் தெரிவித்தன. இந்தி ஆட்சி மொழி ஆவதற்கு நான் சம்மதம் அளிக்கவில்லை. அதிலே பொருத்தமும் இல்லை; ஏனெனில் அரசியல் சட்டம் இந்தியை ஆட்சி என்று குறிப்பிட்டிருக்கிறது; என் கட்சியும், வேறு சில கட்சிகளும் (இந்தி ஆட்சி மொழி என்று சட்டம் கூறுவதை) எதிர்த்துக் கிளர்ச்சி செய்து கொண்டு வருகின்றன.

கமிட்டியில், ஒன்றுக்கொன்று மிக வேறுபட்ட கருத்துகொண்ட கட்சிகளெல்லாம் இருந்தன. 'ஆங்கிலத்தை அகற்றியே தீர வேண்டும்-இந்தியைப் புகுத்தியே ஆகவேண்டும்' என்று உறுதியாகக் கூறிடும் பிரஜா - சோஷலிஸ்டு கட்சியும் இருந்தது; 'இந்தி எந்த முறையிலும், வடிவிலும் புகலாகாது' என்று கூறும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நானும் இருந்தேன். உடனடியாக வர இருக்கும் விபத்து குறித்து எங்கள் கருத்து அறிய விழைந்தனர்; அனைவரும் ஆங்கிலம் தொடர்ந்து நீண்ட காலம் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பதற்குச் சம்மதம் அளித்தோம்.

தத்தமது கட்சியின் கருத்துக்களைக் கொண்ட — மாறுபாடான கருத்துக்கொண்ட அறிக்கைகளையும் சர்க்கார் அறிக்கையுடன் இணைத்து அனுப்பலாமா என்று கேட்டபோது, கனம் சுப்பிரமணியம் அவர்கள், 'எந்தக் கட்சியும் அதனுடைய கொள்கையை விட்டு விட்டதாக எண்ணத் தேவையில்லை; வர இருக்கும் நெருக்கடியைச் சமாளிப்பதற்கு —கேர் கமிட்டியின் விளைவுகளைக் கவனிப்பதற்குத்தான் ஒன்றுபட்ட கருத்தை அறிகிறோம்—பெறுகிறோம்' என்று சொன்னார்.

எனவே, எல்லா எதிர்க் கட்சிகளும், ஆங்கிலம் தொடர்ந்து மிக நீண்ட காலம் ஆட்சி மொழியாக இருப்பதற்குச் சம்மதம் அளித்தன.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து, திட்டவட்டமாகக் கூறப்பட்டாகி விட்டது — (1) இந்தி ஆட்சிமொழி என்று தி. மு. க. ஏற்க மறுக்கிறது; (2) தனி அரசு காணவேண்டும் என்று பாடுபட்டு வரும் கழகமாதலால், அந்த அரசு அமையும்போது, 'அகில இந்திய பாஷை' என்ற பேச்சுக்கே, அவசியமோ அர்த்தமோ இல்லை என்று கருதுகிறது.

எனவே, தி. மு. கழகத்தையோ அதன் சார்பில் என்னையோ அழைத்து, 'இந்தியை அகில இந்திய பாஷை என்று ஏற்கச் சம்மதமா? என்று கேட்பதிலே பொருள் இல்லை.

கேர் கமிஷன் அறிக்கையின் விளைவாகத் தோன்றி, நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்சினையை

திராவிடநாடு
பொங்கல் மலர்-1958
அணா
8

ரிப்பது என்பதுதான் கமிட்டியின் முன்பு இருந்த பணி. இதிலே தான் ஒருமித்த கருத்து தேடப்பட்டது; அடிப்படைத் தத்துவங்கள் பற்றி அல்ல.

தி. மு. கழகம் கொண்டுள்ள கொள்கைகளை நான் திட்டவட்டமாகவே தெரிவிக்க விரும்புகிறேன்—(1) இந்தி ஆட்சிமொழியாக இருத்தல் கூடாது; (2)தனித் திராவிட நாடு பெறும் நிலையை எதிர்பார்த்து இருக்கும் நாங்கள், அகில இந்தியாவுக்கு ஒரு ஆட்சிமொழி வேண்டும் என்ற தத்துவத்தையே, பொருளற்றது—தேவையற்றது என்று கருதுகிறோம்.

பத்திரிகையில் வெளிவந்த செய்திகளால், ஏதேனும் தவருன எண்ணம் ஏற்பட்டிருக்குமானல், அதனை நீக்கிட விரும்புகிறேன்.

இந்தியை ஆட்சிமொழியாக்குவதற்கும் இல்லை; நான் சம்மதம் தரவும் இல்லை.

கேர் கமிட்டி அறிக்கையின் விளைவாகக் கிளம்பிய பிரச்சினை குறித்தே கலந்தாலோசிக்க நேரிட்டது; அதில், அனைவரும், 'ஆங்கிலமே தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்' என்று கூறினர்.

இந்தவிஷயத்தில்தான் எல்லாக் கட்சிகளும் ஒருமுகமான சம்மதம் அளித்தன.

அந்தந்தக் கட்சிகளின் அடிப்படைத் தத்துவங்கள், அந்தந்தக் கட்சிகளின் தனி உரிமை.

எங்களைக் கலந்தாலோசித்து, எமது சில கருத்துக்களை இணைத்து சென்னை சர்க்கார் ஒரு 'மனு' தயாரித்தனர்; நடந்தது அவ்வளவுதான்.

ரித்த அறிக்கை அல்ல.

அதிலே, நாங்கள் கையெழுத்து இடவுமில்லை; அதில் காணப்படும் யாவும் எங்களுக்கு முழுக்க முழுக்க ஒத்தவை என்றும் கூறுவதற்கில்லை.

1965-க்குப் பிறகும், தொடர்ந்து நீண்டகாலம் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்பதிலேதான் பொதுவான சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

எனவே இந்தி ஆட்சி மொழியாவதற்கு நான் சம்மதம் அளித்தேன் என்று கூறுவது உண்மையைத் திரித்துக் கூறுவதாகும்.

அண்ணாதுரை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தி மொழியை ஆட்சி மொழியாக்கும் நோக்கத்தில் வானெலி. தபால்--தந்தி, படக்காட்சி, நாணய முறை, அரசாங்க அறிவிப்புகள், கல்வித் துறை போன்ற அரசாங்க நிர்வாகத்திற்குட்பட்ட எல்லா அமைப்புகளிலும் இந்தியை நேரடியாகவும், மறைமுகமாகவும் திணிக்கும் முயற்சிகளை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

திராவிடத்தில் அந்தந்தப் பகுதிகளில் தாய்மொழி ஆட்சி மொழியாகவும், ஆங்கிலம் தொடர் மொழியாகவும் இருந்திட வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்கெனவே வலியுறுத்தியிருப்பதை மீண்டும் வலியுறுத்துகிறது.

1965-ம் ஆண்டுக்குள் இந்தியை ஆட்சி மொழியாக்க முயற்சிக்கும் டெல்லி ஆட்சியாளரின் போக்கைக் கண்டித்துத் தென்னகத்திலுள்ள எல்லா கட்சிகளும், எல்லா தலைவர்களும், சென்னை அரசியலாரும் திட்ட வட்டமான கண்டனத்தைத் தெரிவித்திருந்தும், அவற்றையெல்லாம் அலட்சியப்படுத்தி, இந்தியைத் திணிக்க அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளைக் கண்டிப்பதுடன், இம்முயற்சி தொடர்ந்து நடைபெறுமேயானல் அதைத் தடுத்து நிறுத்துவதற்காக இறுதிவரை போராடத் தயாராகுமாறு தென்னக மக்களை இம்மாநாடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறது.

—முன்: **அண்ணுதுரை**
—வழி: **என். வி. நடராசன்**
,, **இரா. செழியன்**
,, **வி. பி. இராமன்**
,, **ஏ. கோவிந்தசாமி**
எம். எல். ஏ.

★ நாஞ்சில் ★

இக்கட்டுகள் ஏராளம் வந்திடினும், முட்டுக்கட்டைகள் பல முளைத்து எழுந்தாலும், அவைகளை யெல்லாம் தாண்டித் தள்ளிவிட்டுச் செல்லும் விடுதலை இயக்கம்—என்கிற முதுமொழிக்கு இலக்காக, இன்றைய தினம் வளர்ந்து வருகிறது, திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்த வளர்ச்சியைக் காட்டும் வகையில் கடந்த கிழமை நாஞ்சில் மாவட்டத்தின் மாநாடு, நாகர்கோயிலில் சீரும் சிறப்புடன் நடந்திருக்கிறது. நாட்டுக்குக் கலையையும் தன் வருவாயின் பெரும் பகுதியையும் அளித்த நல்லவராம் கலைவாணரின் நினைவையும், கொள்கைவீரன் — குன்ருத மனமுடைய சேரன் கே. வி. கே. சாமியின் அருந்தொண்டினை நினைவூட்டும் வகையிலும், அமைந்த அம்மாநாட்டுக்கு, நமது குரலை டில்லி ஏகாதிபத்தியம் உணரும் வகையில் பணியாற்றிவரும் சொல்லின் செல்வர் ஈ. வே. கி. சம்பத் தலைமை வகித்தார். படித்ததும், பட்டம் பெற்றதும் பணம் பெறவே ஒழிய வேறு எதற்கு மல்ல என்று எண்ணிடுவோரைப் போலன்றி, தாயகத்தின் விடுதலைக்குப் பயன்படுத்தும் ஆர்வம் கொண்ட மதுரை டாக்டர் அருணசலம் மாநாட்டைத் திறந்துவைத்திருக்கிருர். மாணவப் பருவ முதல் கொள்கைக்குத் தன் வாழ்வை அர்ப்பணித்துவிட்ட தோழர் மனேகரன் எம். ஏ.-வின் தலைமையில், தோழர்கள் பி. சாம், பி.ஏ; பி.எல்; ஏ. இராமசாமி ஆகியோரைச் செயலாளர்களாகவும் கொண்ட வரவேற்புக் குழுவினர், சிறந்தமுறையில், மாநாட்டினை நடத்தி கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளித்திருக்கின்றனர். இசைவல்லுநர் எம்.கே.கோவிந்தராச பாகவதரின் தமிழிசையும், கழக மணிகளின் நாடக ஓவியமும், சிறப்பாக நடைபெற்றிருக்கிறது.

நாஞ்சில் மாவட்டம், நமக்கும் கேரளத்துக்குமிடையே தொடர்பு உண்டுபண்ணும் ஒரு இடத்திலிருப்பதாகும். அது, டில்லிபீடத்தின் வஞ்சனையின் காரணமாக பெற்றுள்ள இழப்புகள் பல! ஏனைய இடங்களைப் போலவே தொழில் துறையிலும், ஏனைய வகைகளிலும், மிகவும் பிற்போக்கான நிலையிலிருப்பதாகும். ஆனல், தமிழர்களுக்கே உரித்தான நல் மனதும், வீர உருவும் பெற்று விளங்கும் நல்லவர்களும், வல்லவர்களும் உலவும் மாவட்டமாகும் அது. அங்கே, வளர்ந்து வரும், நமது குரல் கண்டு மகிழ்கிறோம்! குரல், ஒவ்வொரு குடிலுக்கும் புகவும்-புகாத மனந்தோறும் புகவுமான வகையில், நமது தோழர்கள் பணிபுரிவார்கள் என்கிற நம்பிக்கையையும் மாநாடு, நமக்களிக்கிறது!!

நம்பிக்கை வளரட்டும், நாஞ்சில் பெருமை பெறட்டும், நாடு புதுவாழ்வு பெறட்டும், என்று நாஞ்சில் மாவட்ட கழகத்தினருக்கும், கொள்கை வீரர்களுக்கும், நமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில் ஆசிரியர் சி. என். அண்ணதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

பொதுச் செயலாளர் வாழ்த்து

இன்று பொங்கல் விழா! தமிழகம் முழுவதும் திருவிழாக் கோலம் பூண்டு திகழும்!

தமிழர்களின் இல்லங்கள் தோறும் பொங்கல் பொங்க, அவர்களின் உள்ளங்கள் தோறும் இன்பம் பொங்கும்!

பொங்கல் விழா, அறுவடைத் திருவிழாவாகும். மனிதன் முதன் முதல் கண்டுபிடித்த விழாவும், கொண்டாடிய விழாவும் உணவைப் பொங்கி உண்டு களித்த திருவிழாவே யாகும். உலகம் முழுவதும் போற்றிக் கொண்டாடப் பெறும் அறுவடை விழா, தமிழகத்தில் தொன்றுதொட்டுச் சீரோடும் சிறப்போடும் பொங்கல் விழா என்ற பெயரில் வழங்கி வருகிறது.

பொங்கல் விழாத்தான் தமிழர்க்குரிய ஒரு பெரும் விழாவாகத் திகழ்ந்து, புதுமைகொள் விழாவாகவும், புத்தாண்டு விழாவாகவும், வேடிக்கை விழாவாகவும், விளையாட்டு விழாவாகவும், கவின் கஃல விழாவாகவும், கருத்தளிக்கும் விழாவாகவும் காட்சியளித்து வருகிறது.

தமிழகம்—திராவிடம், வாழ வேண்டிய வகையில் இல்லாமல், வடநாட்டுக்கு அடிமைப்பட்டு, வளம் குன்றி, அல்லலுற்று, இழிநிஃலயில் வைக்கப்பட நேரிடினும் தமிழர்கள் பொங்கல் விழாவைப் பொலிவோடும் வலிவோடும் போற்றிக் கொண்டாடத் தயங்குவதேயில்ஃல. தொல்ஃல துயரங்களுக்கிடையே பொங்கல் விழா பொலிவோடு கொண்டாடப் பெறுகிறது என்றால், திராவிடம்—தமிழகம் விடுதஃல பெற்று, தன்னாட்சி நிறுவி, வளம் பல பெற்று, நலம் பல எய்தி, ஈடும் எடுப்பும் அற்று, ஓங்கு புகழ் எய்தி உயர்ந்து விளங்கும்போது எப்படிப்பட்ட முறையில் பொங்கல் விழா நடைபெறும் என்பதை நாமே எண்ணிப் பார்த்து இறும்பூதெய்தலாம். அந்த நாளை நாம் நம்பிக்கையோடும், ஆர்வத்தோடும்' விரைவில் எதிர்பார்ப்போமாக!

பொங்கல் நாளில் நம் சிந்தையை மணக்கவைக்க "திராவிடநாடு" வண்ண அழகோடும், கருத்து வளத்தோடும் நம் கைகளில் வந்து தவழ்கின்றது!

"வாழ்க "திராவிட நாடு!" வளர்க அதன் புகழ்! வெல்க அதன் தொண்டு!" என்று நாமெல்லாம் வாழ்த்துவோமாக!

என் உள்ளங்கனிந்த பொங்கல் வாழ்த்துகளைத் "திராவிட நாடு" மூலம் திராவிடப் பெருங்குடி மக்கள் அனைவருக்கும் உவகையோடு தெரிவித்துக்கொள்கிறேன்!!

இரா. நெடுஞ்செழியன்.

கொட்டடி எண்-9

முடுகு முரசொலி
முடுகு முழவொலி
முடுகு முருடொலி
முடிவிலாக்
கடுகு பறையொலி
கடுகு கலமொலி
கலிவெழாத்
தொடுகு குழலொலி
தொடுகு குரலொலி
தொடுகு துதியொலி
தொடுதலாற்
படுகு முகிலொலி
படுகு கடலொலி
படுதலில் மணமாயதே!

உடன்பிறந்தோரே! தமிழகத்தைக் காட்டுகிறார் கவி! ஆங்கு எழும் ஒலிகளைக் கேட்கச் சொல்கிறார்.

இன்றையத் தமிழகத்தில் நித்தநித்தம் கேட்டிடக் கிளம்பிடும் 'ஒலி', அனைவர் உள்ளத்தையும் வாட்டுவதாக உளது. ஒரோவழி, பழந் தமிழகத்தைப் புலவர் பெருமக்கள் காட்டிடக் காண்பது, பயனற்றதாகிவிடாது; பெருமூச்சும் புன்னகையும் கலந்திடும் ஓர் நிலை தரும்.

அந்நிலையில்தானே, உள்ளோம்! இருந்ததையும், இனிக் காண விழைவதையும் எண்ணிடுங்கால் புன்னகை; இருப்பதையும் இழப்பதையும் எண்ணிடும் போதோ, பெருமூச்சு!

பொங்கற் புதுநாள், என்றுவரும் என்று வரும், என்று ஆவலுடன் வரவேற்கும் நிலையுடையார், அதிகம் இல்லை; வருமே! என்று அஞ்சுவோரின் தொகையே அதிகம்; எனினும் எப்பாடுபட்டேனும் எவ்வளவு தொல்லையைத் தூர்த்தியபடியேனும், தமிழர் உளமெலாம் மகிழ்ச்சிபொங்கக் கொண்டாடிக் களித்திடுவது, இந்தத் திருநாளைத்தான்!

இந்தத் திருநாள், இவ்வாண்டு, "இரத்தப் பொங்கலோ?" என்று கூறத்தக்க வகையிலே, நடைபெற்ற அடக்குமுறை அலங்கோலத்தை, நாடு கண்டு, நடுக்கம் கொண்டுள்ள நேரத்திலே வந்துளது.

நாலாயிரவருக்குமேல் எனலாம், நாடாள்வோரால், வேட்டையாடப்பட்டவர்கள்.

ஆயிரவருக்கு இருக்கும் என்கின்றனர், அடிபட்டோர், படுகாயமுற்றோர்.

சிறை சென்றோரின் தொகை கணித்திட இயலவில்லை.

வழக்குகள் பல, வாய்பிளந்தவண்ணம் உள்ளன.

இவற்றினுக்கிடையே, பொங்கற் புதுநாள் வருகிறது—எங்ஙனம் நாம் மகிழ்ச்சி அடைவது? கண்ணீர் பெருக்கியும், செந்நீர் சிந்தியும் செந்தமிழ் நாட்டார் இருக்கையிலே ஐயயோ! அம்மவோ! என்றலறி, கை உடைந்தது கால் முறிந்தது, துவைத்துவிட்டனர், தூர்த்தித் தாக்கினர், எலும்பு நொறுங்கிற்று, இரத்தம் கொட்டிற்று, என்றெலாம், பதறிக் கதறிப் பலரும் இருந்திடும் வேளையில், "பொங்கலோ பொங்கல்!" என்று கூறிக் கொண்டாட நாவும் எழாதே, என்றெண்ணி நானிருந்தேன்.

எனினும், நாள்பலவில் திருகாணுதிருக்கிறோம், விழா பலவும் வீணாட்டம் என வெறுத்தொதுக்கி, வேண்டாம் வெற்றாட்டம் என்றே கூறிவிட்டோம், ஆண்டுக்கோர் நாள், அருமை மிகு பொன்னாள், பொங்கற் புதுநாள், புது வாழ்வு மலரும் நாள்' என்றே இதனை நாம், நன்றெனக் கொண்டாடி வருதல், நாடு கண்ட முறை அல்லவோ, என்றெண்ணி எப்படியும் விழாவினை நாம் ஏற்றமுடன் நடாத்துதல்தான், அடிப்போம் குடல் அறுப்போம், என்றே ஆர்ப்பரிக்கும் ஆணவக்காரருக்கும் அரும் பாடம் தானளிக்கும், என்று உறுதி கொண்டு, ஏற்புடைய விழாவினை எவ்விதத்தும் நடத்துதலே சால்புடைத்து என்று கண்டோம்.

இந்த நிலைகூட வந்திடுமோ, வாராதோ, என்று எண்ணிடும் வகை ஒன்றும், என்னையும் என்போன்ற நமதருமைத் தோழரையும், வந்து கைப்பற்றிற்று.

சிறையில் சென்றிருந்தோம்; சில நாட்கள்!

விரைவிலே வெளிவருவோம் என்ற நிலை அல்ல அது.

இந்த ஆண்டு பொங்கற் புதுநாள், உடன்பிறந்தோரே! உம்மிடமெல்லாம் அளவளாவும் வாய்ப்புக்கிடைக்குமோ மறுக்கப்படுமோஎன்ற ஐயப்பாடு என்னை வாட்டிக்கொண்டிருந்த நிலையில், சென்ற கிழமை, நான் 9-ம் எண்ணுள்ள கொட்டடியில் அடைபட்டுக்கிடந்தேன்.

துளியும் எதிர்பாராத நிகழ்ச்சி—அதிலேயும் ஒரு வேடிக்கை இழைந்திருந்தது. அதே 9-ம் எண்ணுள்ள கொட்டடியில், நான் இருபதாண்டுகளுக்கு முன்பு ஒருமுறை அடைக்கப்பட்டிருந்தேன். இருபதாண்டுகள் உருண்டோடிவிட்டன! இந்த இருபதாண்டுகளுக்குள், நாட்டிலே, உலகிலே, என் மன நிலையிலே, என்னென்ன மாறுதல்கள்! எத்துணை வளர்ச்சி!

திட்டமிட்டு நடத்தப்படுவதுபோல, அதே கொட்டடிக்குள், இருபதாண்டுகளுக்குப் பிறகு, நான் சென்றேன்!!

அப்போது — இருபதாண்டுகளுக்கு முன்பு — 1938-ல் நான் ஒரு நாள் 'அந்தி சாயும்' நேரத்தில் அங்கு இழுத்துச் செல்லப்பட்டேன். கட்டாய இந்தியை எதிர்த்து நடத்தப்பட்ட கிளர்ச்சியில், நான் 'மறியலை'த் தூண்டிப் பேசியதாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டேன். வழக்கு விசாரணைக்காக, என்னை அந்தக் கொட்டடியில் அடைத்து வைத்தார்கள். இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியிலே 'பிடிக்கப்பட்ட' நூற்றுக்கணக்கானவர்கள், சென்னை மத்திய சிறையில் இருந்தனர். என்னை மட்டும், தனியாக, அழைத்துக்கொண்டு போனார்கள் — 9-ம் எண் கொட்டடிக்கு—சைதாப்பேட்டை சப்ஜெயிலில்!!

அதே சிறை! அதே கொட்டடி! அப்போது, உள்ளே பூராவும் 'கருப்பு' சாயம் பூசப்பட்டிருந்தது! —இப்போது 'வெள்ளை' அடிக்கப்பட்டிருக்கிறது!

அறை மட்டுமா? நானேகூடத்தான்!! அப்போது கருத்த மீசை! இன்று வெளுத்துக் கிடக்கிறது! அப்போது காளை! கல்லூரி மூலாம் கலையாத பருவம்! இப்போது, கட்டுத்தளர்ந்து, கல்லூரி மூலாம் குலைந்து, 'பட்டிக்காட்டான்' என்பார்களே, அந்த 'உருவம்' பெற்றுவிட்டிருக்கிறேன். அப்போது 'சிறை' என்றால், ஏதோ ஓர் இனம் அறியாப் பயம்! இப்போது? சிறையிலிருப்பதற்கும் வெளியில் இருப்பதற்கும் அதிக மாறுபாடு காணமுடியாத, மனப் பக்குவம் பெற்றுவிட்டேனல்லவா? அப்போது, நான், தனியாகச் சென்றேன்! இப்போது, என்னுடன் எழுபது தோழர்கள்! அப்போது, நான் பெரியாரின் 'புதிய கண்டுபிடிப்பு'!! இப்போதோ பெரியாருக்குத்தான் என் பெயர் என்றாலே கசப்பாமே!!

அந்திசாயும் வேளையிலே, அன்று, உள்ளே என்னை அழைத்துச் சென்ற போலீஸ்காரர், சிறைக் 'காவலர்' முன் நிறுத்தினார்.

முதியவர்! நாட்டு நடப்புப்பற்றி அதிகம் ஏதும் அறியாதவர்—அறிந்துகொள்ள வேண்டுமென்ற நினைப்பும் கொள்ளாதவர்.

இப்போது, சைதாப்பேட்டை 'சப்-ஜெயில்' உள்ளே, நான் அழைத்துச் செல்லப்பட்டபோது, என் மனக்கண் முன்னால், அந்த முதியவர் தெரிந்தார்; அவர் 'உரையாடல்' ஒலித்தது!

ஒரு 'உம்' போட்டபடி என்னை ஏற இறங்கப் பார்த்தார் அந்த முதியவர்!

சிறை என்றால் இப்படித்தான் பார்ப்பது வாடிக்கைபோலிருக்கிறது, என்று எண்ணிக்கொண்டேன். நாமாகப் பேசுவது கூடாது — அது ஒரு வேளை, சிறையிலே, குற்றமென்று கருதப்படக் கூடும்; நமக்கேன் வீண்தொல்லை என்று நினைத்துக் கொண்டு, சிலையாக நின்றேன். முதியவர், சிரிக்கவில்லை—ஆனால் புன்னகைக் கோடுகள் முகத்திலே காணப்பட்டன.

"மணி ஆறுக்கு மேலாகிவிட்டது! இந்த நேரத்திலே, வந்தால் சோறு ஏது" என்றார் சிறைக் காவலர்.

நான் சோறு கேட்டுத் தொல்லை தருவேன் என்று எண்ணிக்கொண்டார்போலும்.

நானோ, சோர்ந்துகிடந்தேன்; ஓயாத பயணம்; பலநாட்களாக, இன்று பிடித்துவிடுவார்கள், இதோ வருகிறார்கள், அதோ 'வாரண்டு' — என்றெல்லாம் பலர் கூறக் கேட்டுக் கேட்டு, மனக் குடைச்சல் ஏற்பட்டிருந்தது. சிறைக்கு! — என்ற செய்தி, எனக்கு ஒருவகையில், செந்தேனாகிவிட்டது—ஏனெனில், என்ன செய்வார்களோ? எப்போது வருவார்களோ? என்றெல்லாம் எண்ணி எண்ணி, மனதைப் புண்ணாக்கிக் கொண்டிருந்தேனல்லவா? அந்தத்தொல்லை தீர்ந்தது—சிறை! என்ற செய்தி, செந்தேனாயிற்று. எனவே, 'சோறு' கிடைக்காவிட்டால், என்ன செய்வது என்று எண்ணும் நிலையோ, ஏங்கும் நிலையோ இல்லை!

ஒரு 'அத்தியாயம்' முடிந்தது!—என்ற திருப்தி.

சிறைக் காவலரிடம், கைதிகள், 'சோறு' கேட்டுத் தொல்லைதருவது, வாடிக்கையாக இருந்திருக்க வேண்டும்; எனவேதான், "ஆறுமணிக்குமேல் வந்ததால், இன்று சோறு இல்லை!" என்ற செய்தியை, விளக்கமளிக்கும் முறையில், சிறைக்குக் காவலராக இருந்த முதியவர் கூறினார்.

அடக்க ஒடுக்கத்துடன் அவர் எதிரே, நின்ற என்னைக் கண்டதும், அவருக்கே ஒரு 'பரிவு' ஏற்பட்டிருக்கும் என்று எண்ணுகிறேன்; எனவேதான், சோறு இல்லை! என்று கூறியதுடன், ஒரு வாழைப் பழம் தருகிறேன் — ஒரு பொட்டலம் தின்பண்டம் தருகிறேன்—என்றார். அவர் பரிவுக்கு என் மகிழ்ச்சியைத் தெரிவிக்க வேண்டுமல்லவா! பற்களை வெளியே தெரியச் செய்தேன்! காவிபடிந்திருப்பது கண்டார்—சிறிதளவு கண்டிப்புடன், 'வெற்றிலை கிற்றிலை' எதுவும் போடக்கூடாது — கிடைக்காது — என்றார்!

மேற்கொண்டு, 'உத்தரவுகள்' மளமளவென்று புறப்பட்டன.

கிட்டே, வா! துணியை உதறு! சோக்காயைக் கழற்று! அரைஞாணை அறுத்தெறி!

ஒழுங்காக, பரிசோதனைக்கு உட்பட்டேன்.

மெல்லிய குரலிற் கேட்டார், "ஏதாவது அபினி கிபினி, கஞ்சா கிஞ்சா, பீடி கீடி, இருக்கா?"

"அதெல்லாம் கிடையாதய்யா! அப்படிப்பட்ட பழக்கமெல்லாம் கிடையாது."

"ஆமாம்! இங்கே வருகிற எந்தப் பயதான், அந்தப் பழக்கமெல்லாம் இருப்பதாக ஒப்புக் கொள்கிறான்"

"நான் அப்படிப்பட்டவனல்ல"

"நீ பெரிய யோக்கியன்தான் — சரி—அதோ, பார் மூலையில்; சட்டிகள்; இரண்டு எடுத்துக் கொள்; ஒன்று குடிக்கத் தண்ணீர் வைத்துக் கொள்ள; மற்றொன்று இரவிலே சிறுநீர் கழிக்க......... நிற்காதே...... எடுத்துக் கொண்டு போய் அறையிலே, வைத்துக் கொள்; கம்பளி இருக்கும், விரித்துக் கொள்; தொந்தரவு கொடுக்காமல் படுத்துக் கொள்.!"

படுத்துக்கொண்டேன்! அந்தக் கொட்டடிதான், 9-ம் எண்! அதே கொட்டடிதான், இந்த ஜனவரித் திங்கள் நாலாம் நாளில்!

இம்முறை, என்னுடன், நாவலர், அவர் தம்பி, நடராசன், அன்பழகன்!!—அதே கொட்டடியில்.

இதிலென்ன பெருமை! — என்று கூட, அவர்கள் எண்ணிக் கொண்டிருந்திருப்பார்கள்; நான் அந்தக் கொட்டடியைக் காட்டி, இதோ, என் அறை! இருபதாண்டுகளுக்கு முன்பு, நான் இருந்த இடம்! மீண்டும் இங்கு வந்திருக்கிறேன்',—என்று சொன்னது கேட்டு.

இருபதாண்டுகளில், நாட்டிலே ஏற்பட்டிருக்கும் மாறுதலை விளக்கிட வேறெதுவும் காட்டத் தேவை இல்லை; அன்று, சிறைக் காவலர், அடைந்த திகைப்பையும், இன்று எங்கு உள்ள சிறைக்காவலராயினும், கொண்டுள்ள தெளிவையும் ஒப்பிட்டாலே போதும்.

அன்று, உள்ளே சென்று, கம்பளியை விரித்துக் கொண்டு, 'ஒழுங்காக' நான் படுத்தேன்; பக்கத்து அறைகளிலே, 'கைதிகள்' கானம் பாடினர், கைத்தாளமிட்டனர், சிறைக்காவலரை நையாண்டி செய்தனர்— எல்லாம் எரிச்சலூட்டும் முறையில். நான் இருந்த நிலை கண்டு, அந்தக் காவலருக்கே, ஒரு வியப்பு!

அருகே வந்தார் — கம்பியைப் பிடித்தபடி, "ஏன் வந்திருக்கிறாய்?" என்று கேட்டார். "இந்தி எதிர்ப்பு!" என்று சற்றுக் கெம்பீரமாகச் சொன்னேன்!! முகத்தில் அறைந்ததுபோலப் பதில் பிறந்தது, "அப்படின்னா?" என்று கேட்டாரே, காவலர்!!

துக்கம் துளைத்தது! வேதனை பிய்த்தது! வெட்கம் கொட்டிற்று! கோபம்கூட, மெள்ள மெள்ளக் கொப்பளித்தது!

தமிழ் நாடெல்லாம், சுற்றிச் சுற்றிப் பேசி வருகிறோம். இந்தி ஆதரவாளர் காட்டும் காரணங்களை எல்லாம் சுக்கு நூறாக்கிவிடுகிறோம். நாகையில் தஞ்சையில், அய்யம்பேட்டையில் ஆற்காட்டில், வேலூரில் சூலூரில்—காட்டூரில், மோட்டூரில், நெல்லையில் தில்லையில், சென்னையில் கோவையில், எங்கும் 'ஈரோடு செய்தியை'ப் பரப்பி வருகிறோம்—சென்னைக்கு அருகே உள்ள சைதையில், இந்தி எதிர்ப்பு என்றால் என்ன? என்று கேட்கிறாரே, என்பதை எண்ணியபோதே, நெஞ்சம் 'பகீர்' என்றது!

கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு —என்பார்களே; சுற்றியதன் பலன் சைதை வரை கூட எட்டவில்லையே! அதுவாகவன்றோ இது இருக்கிறது. செச்சே! இவ்வளவுதானா, நமது 'பிரசாரம்'? இந்தச் சிறைக் காவலருக்குக்கூடச் 'சேதி' எட்டவில்லை; நாமோ, நாள் தவறாமல் பேசுகிறோம்!!— என்று எண்ணி வெட்கப்பட்டேன்.

இந்தி—அதனை ஏன் எதிர்க்கிறோம் என்பதற்கான காரணங்கள், இவைகளை விளக்குவது எளிதல்ல; அவ்வளவு மூடுபனி படர்ந்திருக்கக் கண்டேன்; எனவே இயலாததை முயற்சிக்க வேண்டாமென்று தீர்மானித்து, சிறைக் காவலர், எளிதிலே, புரிந்துகொள்ளக்கூடிய முறையில் பேசினேன்.

"சர்க்காருக்கு விரோதமான காரியம் செய்ததற்காகக் கைது செய்திருக்கிறார்கள்,"

என்று சொன்னேன்; அவர் விளக்கம் கேட்கவில்லை; புரிந்ததாகத் தெரிவித்தார். ஒரு பத்து நாட்களுக்குப் பிறகுதான், அவர், விளக்கம் பெற்றார். அது, இருபதாண்டுகளுக்கு முன்பு! இப்போது? ஒவ்வொரு அதிகாரியும் தமது மகனை 'நமது' 'வலையில்' விழாது தடுத்திட வேண்டுமே, என்றல்லவா, தவியாய்த் தவிக்கிறார்கள். நமது நோக்கம், எங்கும் நிறைநாதமாகி விட்டிருக்கும் நேரமல்லவா?

எனினும், இருபதாண்டுகளுக்கு முன்பு, நான், எந்தச், சைதாப்பேட்டை சப்-ஜெயிலில், சிறை வைக்கப்பட்டேனோ, அதே இடத்தில், அதே 9-ம் எண் கொட்டடியில், கொண்டுபோய்ப் பூட்டப்பட்டேன்!!

எனக்கு, சிரிப்புப் பீறிட்டுக்கொண்டு வந்தது. "சம்பத்து!" என்றேன். "என்னண்ணா!" என்றான்! "ஒரு வேடிக்கை பார். இப்படி, சப்-ஜெயிலிலும், ஜெயிலிலும் அடைபட்டுக் கிடந்தவர்கள், எம். எல். ஏ.-க்கள் ஆனார்கள், எம். பி.-க்கள் ஆனார்கள்; ஆனால் நாமோ, எம். எல். ஏ., எம். பி.- எல்லாம் ஆன பிறகும், சப்-ஜெயிலில் தள்ளப்பட்டிருக்கிறோம்" என்றேன்.

என்னுடன், இரண்டு எம். பி.-க்கள்—சம்பத்து —தர்மலிங்கம்; ஒரு டஜன் எம். எல். ஏ.-க்கள்! பல கவுன்சிலர்கள்! பல வணிகர்கள்! பல பட்டதாரிகள்!! எல்லோரும், சப்-ஜெயிலில்தான்!! சப்-ஜெயிலில், சாதாரணக் கைதிகளாக! சாதாரணக் கைதி என்றால், சிறை விதியின்படி, 4 அவுன்சு அரிசி; 4 அவுன்சு கேழ்வரகு, 4 அவுன்சு காய் கறி! இவைகளைக் கேட்டுப் பெறவும், கடப்பைக் கல்லில், எரிச்சலூட்டும் கம்பளியை விரித்துப் படுக்கவும், ஒரு மூலையில், 'மூத்திரச் சட்டி' உடனிருக்க, உள்ளே உறங்கவும், 'உரிமை' பெற்றவர்கள்!!

எம். எல். ஏ.-க்களுக்கு, சட்டசபை நடைபெறும் நாட்களில், 'படிச் செலவு' — ஒரு நாளைக்கு — 12 - ரூபாய் தருகிறார்கள்!! எம். பி.-க்களுக்கு இதைவிட அதிகம்!!

இவர்கள் யாவரும், சைதை சப்-ஜெயிலில், 'மூத்திரச் சட்டியை' மூலையில் வைத்துக்கொண்டு, கம்பளிமீது படுத்து உறங்கும், 'கைதிகள்' ஆக்கப்பட்டனர்.

'கோடை' கொளுத்தும்போது, சட்டசபையைச் சென்னையில், நடத்தினால், தாங்கமாட்டார்கள், எனவே 'ஊட்டி' சென்று கொலு இருக்கவேண்டுமென்று, காங்கிரஸ் சர்க்கார், எங்களிடம் பேசுகிறது, சைதைச் சிறையில், கேழ்வரகுக் கஞ்சியும் கம்பளியும், மண் சட்டியும், எங்களுக்கு!!

சென்னை மத்திய சிறையில், 'வகுப்புகள்' உண்டு. —நாங்கள் வகுப்புபேதம் ஒழியவேண்டும் என்று கூறுகிறோம் அல்லவா! அதனால், இருப்பதிலேயே, எது கீழ்த்தர வகுப்போ, அதிலே தள்ளி, அழகு பார்த்தனர் போலும்.

பரவாயில்லை! அதனால், எங்கள் இலட்சியம் பட்டுப்போய் விடாது, உடல் கெட்டாலும், உள்ளம் பழுதுபட்டு விடாது! கோடிக்கணக்கான மக்கள், இந்த 'அளவு' வாழ்க்கைத் தரமும் பெறமுடியாது வேதனைப்படும், நாடல்லவா இது! நாட்டினை இந்த நிலையில் வைத்திருக்கும் நாயகர்கள், எங்களை மிகக் கேவலமான வகுப்பில் தள்ளியதில், ஆச்சரியப்படவோ, ஆயாசப்படவோ தேவையில்லைதான்!

'சைதை'ச் சிறையிலாவது, இரவில், அறையில், சிறுநீர் கழித்திடச் 'சட்டி' தந்தனர்; அங்குகொண்டு செல்லு முன்னம், நாங்கள் அடையாறு போலீஸ் லாக்கப்பில் அல்லவா, தள்ளிப்பூட்டப்பட்டிருந்தோம்; அங்கு, இந்தக் கம்பளியும் கிடையாது, சட்டியும் இல்லை; மேல் துண்டை உதறிப்போட்டுப் படுத்துக் கொண்டு உறங்கினோம், என்றல்லவா, எண்ணிக் கொள்கிறீர்கள்; நாங்கள் எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள் ஆயிற்றே, 17 இலட்சம் வாக்காளர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான கழகத்தவராயிற்றே, எங்களை அந்தக் கேவலத்துக்கா, ஆளாகவிடுவார்கள்; மேல் துண்டுகளை ஒன்றுவிடாமல், எடுத்து வைத்துக் கொண்டனர்!! வெறும் கல்லிலேதான் படுத்தோம்!!

அமைச்சர் பக்தவத்சலம், எங்களைச் சாடினார்— பொறுப்பற்றவர்கள், போக்கிரிகள், என்பதாக வெல்லாம். சீறுவும் வன்செயலும் கண்டிக்க, நாம தயங்கோம்; கயவர் செயலெல்லாம் கழகத்தைக் காய்வதற்குப் பயன்படுத்தல் முறையல்ல.

எங்களை நாடு அறியும்; நல்லோர் எமது நோக்கம் அறிவர்; ஆனால், எங்களை இந்த ஆட்சியாளர் நடத்தியதை, நாடு அறியாதல்லவா? அதற்காக, 'அடையாறு' சம்பவம் கூறினேன்!! வேறு, யாரையும் குறைகூற அல்ல.

நடுநிசி! நா வரண்ட நிலையில், தர்மலிங்கம் எம்.பி. தண்ணீர் கேட்டார்; தர இயலாத போலீஸ்காரர், கண்ணீரைச் சொரிந்தார்!!

அடையாற்று லாக்கப்புக்கு, சைதை சப்-ஜெயில், 'அரண்மனை' போலத்தானே!! மூத்திரச் சட்டியாவது, தந்தார்கள்! லாக்கப்பில், அறையில் ஒரு மூலையைத்தான் காட்டினார்கள்!

நாங்கள்தான், சட்டசபையில் உட்கார்ந்து, சட்டங்கள் பற்றிப் பேசுகிறோம், திட்டங்களைக் குறித்து விவாதிக்கிறோம்!!

எங்களைப் போட்டடைத்ததோ, சாதாரணக் கைதிகள் தங்கிடும், கொட்டடியில்தான்.

எனினும், அந்த 9-ம் எண் கொட்டடியில், நாங்கள் தங்கி இருந்தோமே தவிர, எங்கள் எண்ணம், சிறகடித்துக்கொண்டு தமிழகத்தையே ஒரு சுற்றுச் சுற்றிவிட்டது!

கழகம் அடைந்துள்ள வளர்ச்சியைக் கண்டறிய இயலாதார், எம்மைக் கேவலமாக நடத்துகின்றனர்; ஆனால், எமது கொள்கையின் நேர்த்தியை அறிந்து, கொண்டாடிப் போற்றுபவரின் தொகையோ, வளருகிறது, வளருகிறது, வளர்ந்த வண்ணம் இருக்கிறது —என்பதை எண்ணிடும்போதே, அந்த இருட்டறையே, ஒளிப்பிழம்பாகத் தெரிந்தது!

தண்ணீர் கேட்கிறோம், தர மறுக்கிறார்கள்! இவர்கள் அறியார், நாங்கள் சிறைப்பட்டோம் என்ற செய்திகேட்டு, கண்ணீர் உகுத்தோரின் தொகையை!!

பெற்றவர் காட்டும் பரிவினும் மிக்கதான அன்புகாட்டி, உறவுகாட்டி, உற்சாகமூட்டி, நம்மை ஆதரிப்போர், 'ஆலெனத் தழைத்து, அறுகுபோல் வேர்விட்டு, வளர்க, வளர்க! என வாழ்த்துவோர், எண்ணற்றவர்', என்பதனை அறிந்துகொள்ளும் கண்ணற்றவர்கள், கஞ்சிக் கலயத்தை எமது கரத்தினில் தருகின்றனர்; கேவலம் என்று எண்ணிக் கவலைப்படுவோம்!!

மனைதொறும் மனைதொறும், மகிழ்கிறார்கள், தமிழகம் தாழ்நிலை நீக்கிக்கொண்டு, தன்மானம் பெற்று வாழ்ந்திட உழைத்துவரும் நமது கழகத்தின் மாண்பு கண்டு! இதனை உணர்ந்து உவகை பூத்திடும் உளத்தினராகிப் பணியாற்றி வரும், நம்மைச் சிறையிலே, சீரழிவாக நடத்தினால், இரத்தம் சிறிது சுண்டிவிடும், உடல்சற்றே இளைத்துவிடும், வாலிபருக்கும் வயோதிகம் மேலிடும், இஃதேயன்றி, வேறென்ன நட்டம்?

சிறையிலே, தகுதிபற்றியும், பொதுமக்களிடம் பெற்றுள்ள ஆதரவு பற்றியும், அலட்சியம் காட்டி, அருவருக்கத்தக்க விதத்தில் நடத்துவதனாலேயே, நாட்டிலே, நமக்குகிடைத்துள்ள நன்மதிப்புக்குன்றிப் போகுமா, குறைந்து போகுமா! வரலாறும் வீரக் காதையும் அறியாதாரே அங்ஙனம் எண்ணுவர்; துளியேனும் அவை அறிந்தோர், அரைபடும் சந்தனம் மணத்தல் போல, சிறை தரும் இன்னல், கழகத்தின் புகழைத்தான் பெருக்கும் என்பதனை அறிந்து அகமகிழ்வர். அவ்விதத்தில், உடன் பிறந்தோரே! நீவிர், மகிழ வேண்டும் என்பதற்கே, சிறையில் நாங்கள் பெற்ற சீரழிவைக் கூறினேன்—சிந்தை நொந்து மட்டுமல்ல, உமது சிந்தை நொந்திடச் செய்யவுமல்ல.

அதோ, உமது உள்ளம் வென்றாள், குத்திப் புடைத்தெடுக்கும் செந்நெலைப் பயிரிட்டோன், முழங் காலளவு சேற்றிலே இறங்கினான். இன்னல் முதலில், பிறகே கன்னல்! முத்து முத்தாக வியர்வை உதிர்த்திடும், முல்லை, வாழை பரப்பி, வண்ணச் சேலை புரள, வகைவகையான உண்டி நிரப்பி, நீ உண்ணும் போது, கண்ணால் கொத்திடத்தானே போகிறாள்! முத்து முத்தாக வியர்வை—முதலில்! பிறகு, முத்தம், முத்தம், முத்தம்—உனக்கல்ல—பெற்றெடுத்த மகவுக்கு!!

கொட்டடி, எண் 9-ல் நாங்கள் தள்ளப்பட்டால், என்ன? அதனினும் கொடிய இருட்டறையில் அடைக்கப்பட்டால்தானென்ன, கருவில் உருவான போது, கண்டது கதிரவனை அல்லவே! இருள் மயம் தானே! பிறந்த பிறகோ? அஃதே போலத்தான், கொட்டடியில் பூட்டி வைக்கப்படும் கொள்கை வீரர்கள், இன்னலைத் தழுவிக்கொள்கின்றனர்; ஈன்றெடுக்கப்போகும் செல்வத்தை எண்ணி மகிழ்கின்றனர், என்பதனைத்தான் நீவிர் அனைவரும் எண்ணிடல் வேண்டும்.

உறுதி வளர வேண்டும்! உழைக்கும் திறன் ஓங்க வேண்டும்! இடுக்கண் கண்டு அஞ்சாமை மிகவும் வேண்டும்! இன்னல் செய்வாரை வெறுத்திடாத தூய்மை வேண்டும்! மறந்தும் தீச்செயலை நாடாதிருத்தல் வேண்டும்! தமிழ் மரபென்பதனை மனதிலிருத்த வேண்டும்! தன்மானம் நாட்டினிலே தழைத்திட உழைக்கும்போது, நம் மானம் பறித்திடவே மாற்றார் செய்யும் கொடுமைதனைத் துச்சமென்று தள்ள வேண்டும்! இச்சகம் பேசிடினும், ஏசிடினும், இடித்திடினும், இகழ்ந்திடினும், மனம் உடைந்திடாமல், என் நாடு பொன்னாடு, இஃதோ மற்றவர்க்கு அடிமைக் காடு? என் முன்னோர் மாப் புகழை மறந்து நானும், நத்திப் பிழைத்திடவோ, நானென்ன எத்திக்கும் கொடி கட்டி, எவருக்கும் திறை கட்டா, ஏற்றமிகு தமிழ் இனத்தில் உதித்தேன் அலனோ? என்றெண்ணி, இதயம் தன்னில் ஏற்புடைக் கொள்கை கொண்டு, உழைத்திடவே வேண்டும்!

நாடு பல உள, நாமறிவோம்! காடும் மேடும் கொண்டனவாய், கழனி நலமற்றதுவாய், பொன்னும் மணியும் காணாது, கரும்பும் இரும்பும் கிடைக்காது, கனல் கக்கும் மலையும் நிலநடுக்கமும் கொண்டதாய், உள்ள நாடுகளும் உள்ளன. பாறை மீது தூவிய விதையாகும், அத்தகு நாடுகளிலே, பாட்டாளி தரும் உழைப்பு என்று எண்ணத்தக்க விதத்தில், இயற்கை வளமற்று, உள்ள நாடுகள் பல.

நாமிருக்கும் நாடு அஃதல்ல! இயற்கை கொஞ்சும் எழிலகம்! இங்கு இல்லாத பொருள் இல்லை; எவர்க்கும் ஈந்திடத்தக்க அளவு கண்டிடலாம். இந்நாடதனில், காடு காட்டும் கனிவுங்கூட பல்வேறு நாடுகளில் காண இயலாதென்பது கட்டுக் கதை அல்ல; கணித்துரைப்போர் கூறுவது.

உடன் பிறந்தோரே! இத்தகு திருநாட்டில் வந்துதித்தோம், இருந்து வருகிறோம்;

நாமிருக்கும் நாடு நமதல்ல என்ற நஞ்சினும் கொடியதோர் நிலை நம்மைப் பிடித்தாட்டுகிறது.

ஏடெல்லாம், நம் நாட்டின் புகழ் பாடுகின்றன!

புலவர் தரும் சொல்லோவியத்தில், பூம்புகார் காணுகின்றோம், பூரிப்படைகின்றோம்; அல்லங்காடி செல்கின்றோம், ஆடலரங்கம் நுழைகின்றோம்; சுங்கம் கொள்வார் காண்கின்றோம், அங்கம் தங்கம் என்று அகமகிழ்ந்து கூறிடத்தக்க அரிவையர் தெரிகின்றனர்! பழமுதிர் சோலைகள் — பாங்கான வயல்கள்! களிறு உராயும் சந்தனக் காடுகள்! வாளை துள்ளும் வயல்கள்! தேன்சொரியும் தேமாங்கனிச் சாலைகள்! சிற்பக் கலையின் சிறப்புகள்! அம்மவோ! தமிழகத்தை இந்தப் 'பொல்லாத' புலவர்கள் காட்டும் போது, தெரிந்திடும் திருவுடன், நம் கண்முன், தோன்றிடும் தமிழகத்தின் 'உருவினை' ஒப்பிட்டுப் பார்க்கும்போது உள்ளம் வெதும்பாதிருத்தல் இயலுமோ?

எலும்புருக்கிக்கு ஆளாகி நாம் காணும்போதே இளமையும் எழிலும், குன்றியும் குறைந்தும்போகும், மனையாட்டியையும், மணக்கோலத்துடன் காட்சி தரும் அம்மங்கை நல்லாளின் ஓவியத்தையும் மாறி மாறிப் பார்த்திடும், மணவாளன் மனம் என்ன பாடு படும்!

நாட்டுப்பற்றுடையார், இன்று பெறும் வேதனை அத்திறத்தது; ஐயமில்லை.

ஊரில் இருக்கும் துள்ளு நடையுடன் கூடிய ஆண் குருவி, கருப்பம் முதிர்ந்திருக்கும் பெண் குருவிக்குப் பிரசவிக்கும் இடம் ஏற்பாடு செய்வதற்காக, இனிமை பொருந்திய கரும்பின் வெள்ளிய பூவைக் கோதி எடுக்கிறதாம்! புலவர் கூறுகிறார்!!

ஊர்ச் சிறப்பு, ஊராள்வோன் சிறப்பு, வீரம், ஈரம், காதல் கவிதை, வளம் கொடை, அறம் அன்பு, போர்முறை பொருள்தேடுமுறை, எனும் எத்துறை பற்றிய தாயினும், புலவர் தீட்டிடும் ஓவியம் காண்போர் உள்ளத்தைத் தொடுவதாகவே இருந்திடக் காண்கிறோம்.

வளம் நிறைந்து, வாழ்க்கைத் தரம் சிறந்து, ஆட்சி முறையில் அன்பும் அறமும் தழைத்து வீடெல்லாம் மகிழ்ச்சிக் கூடங்களாகி இருந்த திருநாடு, நம்முடையது.

இங்கு, யானைகொண்டு போரடித்தனர்; முத்துக்கொண்டு கழலாடினர்; சந்தனம்கொண்டு நெல் குத்தினர்; தந்தம்கொண்டு 'இருக்கை' அமைத்தனர்; கரும்புகொண்டு கூரை வேய்ந்தனர்; அறிவுகொண்டு ஆண்டுவந்தனர்; ஆற்றல்காட்டி வெற்றி கண்டனர்; புலவரைப் போற்றிப் பெருமை பெற்றனர்.

அத்தகைய நாடு, இன்று பழுதுபட்ட சித்திரமோ, பழங் கதையோ, என்று நினைத்திடத்தக்க கோலம் கொண்டுளது; மக்களிற் பெரும் பகுதியினர் ஓலமிட்டு உழல்கின்றனர்; ஆட்சியாளர், 'ஏனென்றால் சிறைவாசம், இம்மென்றால் வனவாசம் என்பார்களே, அந்நிலைக்கு வேகமாகத் தாவிக் குதிக்கின்றனர்.

இந்நிலை மாற, நமக்கெனத் தமிழ்ப் பண்புடன் கூடியதோர் அரசு வேண்டும் என்கிறோம்; ஆர்ப்பரிக்கின்றனர், அரசுக் கட்டிலில் அமர்ந்திட அனுமதிக்கப்பட்டுள்ள அடிவருடிகள்.

கிடைக்கும் இன்பத்தைக் கொண்டு, மகிழ்ந்திருக்கும் இத் திருநாளன்று, நாடு வாழவும் கேடு தீரவும் பாடுபடும், நமது கழகத்தவர் அனைவருக்கும், அறிவாற்றல் வளரவேண்டும், என்ற வாழ்த்துரையை வழங்குவோமாக!

அறிவாற்றல் மிகுந்து, அது மிகுந்தோர் தொகை வளர்ந்து, அதற்கேற்ப அறமும் திறமும் வளர்ந்து, நமது குறிக்கோள் ஈடேறினால்......! பாலை சோலையாகும், பைங்கிளிகள் கொஞ்சும், பங்கப் பழனத்து உழும் உழவர் பலவின் கனி பறித்து, தெங்கு திருகிடும் மந்தியைச் சாடுவர்; மலரை வாளை தாக்கி, தேனினைச் சொரியச்செய்யும்; தேமதுரத் தமிழோசை கேட்டுப் பல தேயத்தார், தருக! தமிழ்! தருக! என்று, வருவர்! இல்லாமை இல்லாது ஒழியும், இடுக்கண் எனில், என்ன என்று கேட்பர் மக்கள். தொழிலெலாம் துலங்கும், தொல்லை அகலும்! பகலென ஒளி பரவி, பேத இருளினைப் போக்கி வைக்கும், அறநெறி நிலைக்கும், அன்பு அரசோச்சும், இன்பநிலை எவ்வெவர்க்கும்; இதிலே அட்டியில்லை, என்று எடுத்தியம்பும் காலம் காண்போம்.

மின்னிடும் பொன்னினைக் காண, எலும்பு நொறுங்குமோ என்பது குறித்து எண்ணாது, உழைப்பாளி குடைந்து சென்றிடக் காண்கிறோம்! சுறாவும் சுழலும் கண்டு அஞ்சாது, மூழ்கித்தான், முத்துக் கொணர்கின்றனர்!

அவரையும் துவரையும், இஞ்சியும் மஞ்சளும், வாழையும் தெங்கும், வரகும் தினையும், சேமையும் பிறவும், கிடக்கும் இடம்பார்த்து எடுத்து வரப்பட்டன அல்ல! நிலம் திருத்தி, நீர் பாய்ச்சி, காத்து வளர்த்த பின்பு, கண்டோர் கை சிக்கிடாமல், விழிப்பாக இருந்து, பின்னர், கொண்டுவரப்பட்டவை!

படர்வனவும், வளர்வனவும்கூட, உழைப்பின் துணை பெற்றாக வேண்டும் எனில், பட்ட மரம் துளிர்த்திடும் பான்மைபோல, எந்தையர் நாட்டிலே இன்றுள இழிநிலை போக்கி, இடர்களை நீக்கி, மிடியினைத் தாக்கி, சுடர்தனைக் காணவேண்டுமாயின், நாம் ஒவ்வொருவரும், எத்துணை அளவுக்குப் பாடுபட வேண்டும், தொல்லைகளைத் தாங்கிக்கொள்ள வேண்டும், என்பதனை எண்ணித் துணிவுகொள்ள வேண்டாமோ?

அதனை எண்ணிடும்போது, கொட்டடி ஒன்பதும், அதிலே நாங்கள் பெற்ற கொசுக்கடியும், சகதியும், சட்டியும் அவை பரப்பிய கெடுநாற்றமும், அழுலும் அதட்டலும், அவை தரும் அல்லலும் அருவருப்பும், ஒரு பொருட்டாகா!!

எனவே, கடினமான உழைப்புக்கு, கண்ணியமிக்க தொண்டினுக்கு, கண்டோர் வியக்கும் கட்டுப்பாடுணர்ச்சிக்கு, ஏற்றவர்களாக, நாம் ஒவ்வொருவரும் ஆகவேண்டும். திருநாள் தரும் தித்திப்பு, இந்தப் பயனை நாம் பெற உதவவேண்டும்.

சுற்றிலும் காணும், பொருள் ஒவ்வொன்றும், வினையின் விளைவு — மதியுடன் கலந்த வினையின் விளைவு! உழைத்துப் பெற்றது! சுவை கண்டு மயங்கி, பொருள் வந்த விதம் மறத்தலாகாது!! மறந்திட மாட்டீர்!! மரபறிவீர், நானறிவேன!!

எனவே, இன்று மகிழ்ந்திருப்பீர், எனினும், நாட்டுக்குழைக்கும் கடமையினை மறவாதீர்! வீட்டிலே இன்று காணும் பாட்டொலி, வளைகூட்டொலி, பேச்சொலி, 'இச்'சொலி, இவை யாவும் நலிவில்லை என்று நாட்டிலோர் நல்லொலி எழ வேண்டும், அதற்கான செயலினிலே புக வேண்டும், அச்செயலில் அறமும் திறமும் இணைந்திருத்தல் வேண்டும், என்ற கருத்தினைக் கெடுத்திட அல்ல; வளர்த்திட!—என்பதனை, காணும் சுவையுடனே, நான் அளிக்கும் தேனெனவே கலந்து உண்பீர்!!

நாட்டுக்கு நாம் உழைத்து, பாட்டு மொழியாம் தமிழ் பாரெல்லாம் மணம் பரப்பும் பாங்கு கண்டு, பழம் ஏடதனில் பார்த்திடும் ஓர் சீரும் சீலமும், துலங்கிடவும் விளங்கிடவும், காண்பதுதான் திருநாளிற் திருநாள் — தீதெலாம் தீர்ந்தொழிந்த திருநாள்!

அதற்கான ஆவலை எழச் செய்ய வருவதுதான், ஆண்டுக்கு ஒரு நாள், ஆன்றோர் காலந் தொட்டு அகமகிழ்வு தானளிக்கும் அறுவடைத் திருநாள், பொங்கற் புது நாள்!!

இதனை உமக்குக் கூறிடவும், இவ்வாண்டு இசைவு பெற இயலாதோ என்றெண்ணி, இருட்டறையில், கொட்டடியில், முடங்கிக் கிடந்திட்டேன்! உமது விருப்பம் உணர்ந்தார்போல், ஊராளும் பேறு பெற்றோர், உனை விடுத்தோம்! என்றல்ல, வெளியே சென்றிரு, விளிப்போம், வந்து சேர்! என்று கூறியே எனை அனுப்பினர்! வந்தேன்—செந்தேனென இனித்திடும் திருநாளில், நலமெலாம் பெருக! என்று என் நல்லெண்ணந்தனைத் தந்தேன். இருந்துவிட்டுவந்த, எண் ஒன்பது கொட்டடியைக் காட்டினேன்—மீண்டும் அஃதோ, வேறோ, நானறியேன்! எங்கு எனைக் கொண்டு செல, இன்று ஆட்சியிலுளார் எண்ணம் கொண்டிருப்பினும், என்றென்றும், உமது நெஞ்சில் எனக்கோர் இட முண்டன்றோ! இச்சிறப்புப் பெற்ற பின்னர், இருட்டோ இடரோ, இழிவோ பழியோ, எதுவந்து தாக்கிடில் என், எதையுந்தாங்கும் இதயம் உண்டு, என்னினும் ஆற்றல் மிக்கார் எண்ணற்றோர் உண்டு. எனவே, நாடு நன்னிலை அடையப் போவது உறுதி! நமது இலட்சியம் வெற்றி பெறப்

போவது தின்னாம். பால் பொங்கும்! பொங்கிட, தழலிட விறகு வேண்டும்!! காட்டிலே நல்லாட்சி எனும் பால் பொங்கிட, தழலில் நாம் விறகாக்கப்பட்டால், அதனினும் சிறந்ததோர் பேறு வேறில்லை அல்லவா!!

சிறை புகுதலும் அங்கு சிரழிவு காணுதலும், ஒவ்வொரு நாட்டு விடுதலைக்காகப் பலர் பட்ட இன்னலுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, மிகச் சாதாரணமானவை!

ஆனால், இவைகளைத் தாங்கித் தாங்கி, நெஞ்சுரம் கொண்டு, பின்னர் காவியம் புனைவோனும், ஓவியம் தீட்டுவோனும், கருத்திலே கொண்டிடத்தக்க, 'வீரத் தியாகி' ஆகிடும் வாய்ப்பைப் பெற வேண்டும்.

கேட்டுப்பாருங்கள், உழவனை! முளைவிட்டு, பச்சைப் பசேலென்று வளர்ந்து, முனையில் கதிர் காட்டி, குலுங்கிக் கூத்தாடி, முற்றிச் சாய்ந்தது தான், இன்று முனை முறியா அரிசியாகி, ஆவின் பாலுடன் கருப்பஞ் சாற்றுடன், அடுக்களை ஏறி, உமது அன்புக்குரிய அல்லியோ அஞ்சுகமோ, அன்னமோ, சொர்ணமோ, மலர்க்கொடியோ செல்வியோ, "ஒரே ஒரு பிடி! என் கையால்! இந்த ஒரு முறை மட்டும்" என்று கொஞ்சிப் பேசி, உமக்கு வட்டிக்கும் பொங்கலாகிறது!!

சிறுவிரலால் துழாவி, வாயிலிட்டு மீண்டும்வழித்தெடுத்து இலையிலிட்டதை வாள் நுதலாள் கண்காட்ட எடுத்துண்ணுகின்றீர்; அல்லது மீண்டும் செல்வத்திற்கே ஊட்டுகின்றீர்!

நமக்குப் பிறகு இங்கு வாழ்ந்திடும் வாய்ப்பினைப் பெற இருக்கும், வழித் தோன்றல்களுக்கு, முக்கனி பிழிந்து வடித்து ஒன்றாகக் கூட்டி ஊட்டினால் மட்டும் போதாது, நாவுக்கு மட்டுமே சுவை கிடைக்கும்; நாட்டுக்கோர் நல்ல நிலை நாம் கண்டு தந்திட்டால், வீட்டுக்கு வீடு, விழாக்கோலம், என்றென்றும், அறிந்திடுவீர் இவ்வுண்மையினை, அதற்கேற்பச் செயல்படுவீர்!

இன்றல்ல! இன்று, திருநாள்! காளை களிக்க, பேளை பேருவகை கொள்ள, நாணம் கொண்டாளின் நல்லிதழில் ஒளி ஏற்ற, வீணை மொழிகேட்டு வியர்த்திருக்க, பாணன் துணை தேடாமல் பாவையரின் பரிவு பெற, இன்புற்றிருக்க ஏற்ற நாள்!

இந்நாளில், நீவிர் கொள்ளும் இன்பம், எந்நாளும் எங்கெங்கும் இருந்திடத் தக்கதான, 'திருநாடு' நாம் காண்போம், திறமெல்லாம் அதற்களிப்போம், என்ற உறுதிபெற்று, எழுவீர் விழா முடித்து.

விழா நாளன்று, உடன்பிறந்தோரே! என் மகிழ்ச்சியை, நல்லெண்ணத்தை அளிக்கிறேன்; பெறுவதிலே நீவிர் அடையும் மகிழ்ச்சியினும், தருவதிலே நான் பெறும் பெருமிதம் அதிகம்.

அன்பன்,

அண்ணாதுரை

உறுதிகொள்வீர்!

[ச. சிவப்பிரகாசம், புதுவை]

அறியாமை எனுமிருளே உலகு தன்னில்
அரசோச்சி ஆர்ப்பரித்த முற்கா லத்தில்,
திறனரும் அறிவொளியைத் துணையாய்க் கொண்டு
சீரியநன் னெறிகண்டு பண்பு கொண்டு
விறலாரும் வீரர்களாய் நாக ரிக
மேம்பாடு மிக்கவராய்த் தமிழர் என்போர்,
இறவாத வரலாற்றுப் புகழை ஏற்றே
எழில்பெற்று வாழ்ந்திட்டார் வியக்கும் வண்ணம்!

அத்தகைய சிறப்புடைய தமிழர் வாழ்வில்
அறிவார்ந்த ஒருதிருநாள் அமைந்த துண்டு!
பித்தரது செயல்போன்று விளங்கு கின்ற
பீடழிக்கும் இந்நாளின் விழாப்போ லன்றி,
எத்திறத்தா ரும்அதனின் சிறப்புக் கண்டே
இயம்புகின்ற புகழ்மணக்கும் பெருமை நன்னாள்!
இத்தரையில் 'தைப் பிறந்தால் வழி பிறக்கும்'
எனஉரைக்கும் பழமொழியும் கொண்ட தந்நாள்!

புதுமையெழில் வளர்விக்கும் அந்தப் பொன்னாள்
பொங்கலெனும் தனித்திருநாள்! தமிழ ரில்லம்,
வதுவைகொண்ட கோலமதாய்க் காட்சி கொள்ளும்!
மகிழ்ச்சிநிறை யுள்ளத்தால் மாந்த ரெல்லாம்
புதியஉடை விதவிதமாய் அணிந்தே இன்பப்
புத்தமுதை வருபவருக் கன்பாய் ஈந்து,
மதுரமொழி யால்உறவின் நலம் உசாவி,
வளர்த்திடுவார் சமுதாய உயர்வை மேலும்!

சிந்தனைக்குக் காரணமாய் அமைந்த பொங்கல்,
சிறுநெறியைப் புறமொதுக்கிப், புதுமை சேர்த்து
விந்தையுறு வாழ்வுதனை மலரச் செய்யும்
மேலான ஒருதிருநாள்! இந்த நாளில்,
நிந்தனைக்குக் காரணமாய் அமைந்த தீய
நெடுஞ்சாதி பேதங்கள் பிறவும் போக்கிச்,
செந்தமிழைக் காத்திடவும், உரிமை வாய்ந்த
திராவிடத்தை மீட்டிடவும் உறுதி கொள்வீர்!



டில்லி நடப்புகள்

ஈ.வெ.கி. சம்பத், எம்.பி.,

இரண்டாண்டுகளுக்கு முன்பு வடநாட்டுச் சுற்றுப் பிரயாணம் சென்றிருந்தபோது டில்லியில் ஆறு நாட்கள் தங்க நேரிட்டது. அது சமயம் பாராளுமன்றத்தையும் அங்கு வளரும் அரசியல் சூழ்நிலைகளையும், நடப்புகளையும் ஓரளவு கண்டறிய முடிந்தது. உலகின் கண்கள் இந்தியத் துணைக்கண்டத்தை அறிய டில்லியின்மீது பார்வையைச் செலுத்திக் கொண்டிருப்பதையும் உணர்ந்தேன். நமது கழகத்தைப் பற்றி அங்குள்ளோரும், வந்துபோவோரும் அறியவொட்டாமல் அரசும் பத்திரிக்கைகளும் முழு இருட்டடிப்புச் செய்வதில் வெற்றி கண்டிருந்தன. ஏகாதிபத்திய எண்ணங் கொண்ட வடநாட்டுத் தலைவர்கள், உலகோர் உள்ளங்களில் இடம் பெற, உரிமை, விடுதலை, குடிஅரசு ஆகியவை குறித்து உரத்த குரலில் முழக்கிக் கொண்டிருந்தனர். தமது பிடியில் அகப்பட்டுள்ள இப்பரந்த பூமியில் உள்ள அனைவரும் ஓரின மக்களென்றும், அவர்களனைவரும் உரிமை பெற்று, விடுதலையடைந்து குடிஅரசு முறை கண்டு வாழ்வில் இன்பம் துய்க்கின்றனர் என்றும் பலபடக் கூறிக்கொண்டிருந்த செய்தி விளம்பர இலாகா வானொலி, வெளியீட்டு நடப்புகளையும் கண்டேன்.

எனதுள்ளத்தில், நமது கழகப் பணி சிறு அளவிலேனும் இப்பெருநகரில் நடைபெற வேண்டுமென்ற எண்ணம் பிறந்து வலுப்பட்டது. இந்தியப் பேரரசு என்பது நடைமுறையில் வடவராதிக்கமேயன்றி வேறல்ல என உலகுக்கு மெய்ப்பிக்க டில்லி தக்கதொரு அரங்காகப் பயன்படும் என்றும் பட்டது.

நமது கழகம் தேர்தலில் ஈடுபடுவது என்று முடிவெடுத்தவுடன், இந்நிலைமைகளை நமது தோழர்களுடன் விளக்கி விவாதித்தபோது பாராளுமன்றத் தேர்தலிலும் நாம் ஈடுபடவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. தேர்தல் முடிந்தது. திருவண்ணாமலை தோழர் தர்மலிங்கமும், நானும் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றோம். திராவிடத்தின் விடுதலை கோரும், மாபெரும் கழகத்தின் தூதுவராக டில்லி செல்லும் பேறுபெற்றோம். இருவர் மட்டுமே செல்கிறோம் என்பதிலும், நமது தோழர்களைப் பிரிந்து நெடுந்தொலைவு சென்று, அடிக்கடி பல நாட்கள் தங்க நேரிடுமே என்று அறிந்தபோதும் எனக்குப் பெரும் வேதனையாக இருந்தது.

டில்லிக்குப் புறப்படும் நாளன்று அண்ணா அவர்களும், பொதுச்செயலாளர் அவர்களும் ஏனைய கழகத் தோழர்களும் இரயிலடிவரை வந்து எங்களுக்குத் தைரியம் சொல்லி, அனுப்பியபோது உள்ளம் நெகிழ்ந்தது. சென்ற வண்டி 'குளுகுளு' வண்டியே தவிர உள்ளம் 'குளுகுளு' என்றிருக்கவில்லை. எங்களுடன் வழக்கறிஞர் இராமன் அவர்களும், கரூர் மாணிக்கம் அவர்களும் வந்தனர். கனத்த உள்ளத்தோடு நமது பகைப் புலத்தின் ஆதிக்கபுரியான டில்லியில்போய் இறங்கினோம். அங்கு பத்துப் பதினைந்து தோழர்கள் எங்களை வரவேற்றபோது, டில்லியிலும் நமது வருகையை விரும்பும் உள்ளங்கள் இருப்பதையறிந்து ஒருவகை ஆறுதல் ஏற்பட்டது.

டில்லி! எட்டாவது டில்லி! ஆம், இதற்குமுன் ஏழு டில்லிகள் இருந்து அழிந்து போயிருக்கின்றன என்ற வரலாற்றுக் குறிப்பு, டில்லியைச் சுற்றிப்பார்ப்போருக்குத் தரப்படுகிறது. டில்லியில் இதற்குமுன் எத்தனையோ வல்லரசுகள் இந்தியா முழுமையும் கட்டி ஆளும் வெறி எண்ணத்துடன் கோட்டை கட்டி வாழ்ந்திருக்கின்றன. ஒவ்வொரு அரசு அழியும்போதும் நகர் தரை மட்டமாக்கப்பட்டதும் இரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோடியதும், வரலாற்று வாழ்க்கை என மற்றொரு குறிப்புக் கூறுகிறது. 1947-ல் வெள்ளையரிடமிருந்து வடவரிடம் ஆட்சி மாறிய போதும் டில்லியில் கொலை வெறியாட்டம் நிகழ்ந்து இலட்சக் கணக்கானவர்கள் படுகொலைக்காளாகி பிணமலைகளும், இரத்த ஆறுகளும் தோன்றி, கடைசியில் உத்தமர் காந்தியாரின் உயிர் குடித்த பிறகே வெறியாட்டம் ஓய்ந்தது என்ற குறிப்பு மட்டும் ஏனோ ஏனைய குறிப்புகளோடு தரப்படுவதில்லை. அது சமயம் டில்லி மக்கள் ஆடிய வெறியாட்டத்தை நேரில் கண்ட தமிழர்கள் கதை கதையாய்ப் பல நிகழ்ச்சிகளை என்னிடம் கூறியபோது செங்கிஸ்கானும், தைமூரும், கான்களும் மாண்டு போன மனிதர்களே தவிர, மாண்டுபோன உள்ளங்களல்ல, உணர்ச்சிகளல்ல என்பதை உணர்ந்தேன். இன்றும், அதுசமயம் இருபது பேரைக் கொன்றவன், அந்த வகுப்பாரின் குழந்தைகள் படிக்கும் பள்ளியில் புகுந்து, குழந்தைகளைக் கொன்றவன், இத்தனை பெண்களைக் கொன்றவன் எனத் தனது 'அரசியல்' சுயசரிதம் கூறித் தனது நண்பர்கள் மத்தியில் பெருந் தேசியத் திருப்பணிக்குரிய பாராட்டுதலைப் பெறும் 'வீரர்'களை, டில்லியில் சர்வ சாதாரணமாகக் காணலாம். டில்லியில் சுதந்திர தினத்தன்று, தேசியக் கொடியை ஏந்திப் பவனிவரும் இலட்சக் கணக்கான கரங்களில் பல, படுகொலை புரிந்தவை. பாதகம் புரிந்தவை. இவை அங்கு திடுக்கிடும் உண்மைகளாகக் கருதப்படவில்லை. பெருமைக்குரியவையாகக் கருதுவோரும், வெளிப்படையாகக் கூறி மகிழ்வோரும் பலர் உண்டு என்பதை நேரில் கண்டுணர்ந்தபோது திடுக்கிட்டுப் போனேன். ஆனால் மறுகணம் இத்தகைய இடத்திலிருந்து, இத்தகைய மக்களால் நாம் ஆளப்படு

கிரோம் என்பதை எண்ணியபோது வெட்கத்தால் நான் குன்றிப் போய்விட்டேன்.

மக்கள் சபை தொடங்கியது. ஆர்ப்பாட்டங்களுக்கும் ஆரவாரங்களுக்கும் பஞ்சமில்லை, ராஷ்டிரபதியின் ராஜாங்கப் பவனியை கண்ணும் கருத்துமாக, மிக ஆடம்பரத்துடன் நடத்துகிறார்கள். பஞ்ச சீலப் பண்டிதர் எதிர்க் கட்சியினரைத் துச்சமென மதிக்கிறார் என, அடிக்கடி அவருடன் கருத்து மாறுபாடு கொண்டோரைக் கண்டிக்க அவர் கையாளும் இழி மொழிகளிலிருந்து நாம் அறிந்திருந்தாலும், சபையின் உயர வீற்றிருக்கும் உலகத்தின் கண்முன், நான் உலகிலேயே அதிதீவிர ஜனநாயக வாதி எனக் காட்டிக்கொள்ளப் பண்டிதர் கையாளும் முறைகள் எவரையும் மலைக்கவைக்கும். சபைத் தொடக்க நாளன்று துள்ளிக் குதித்து எதிர்க் கட்சியினர் வீற்றிருக்கும் வரிசைக்கு ஒவ்வொருவரிடமும் புன்சிரிப்புடன் கைகுலுக்கும் காட்சியைக் காணும் வெளிநாட்டவர், 'ஆகா எத்தகைய குடியரசுப் பேரொளி இந்த நேரு' என்றே வியப்பர்.

கல்லூரிகளிலும், நூல் நிலையங்களிலும் குடிஅரசு தத்துவம் பற்றியும், மக்கட் பேரவை நடைமுறை விதிகள், வழக்கங்கள் ஆகியவை குடிஆட்சிக்குக் காப்பாக விளங்கும் சிறப்பினையும், எவ்வளவு கற்றாலும், இவைகளின் பெயராலேயே, இவைகளை மாய்க்கும் கயமை முறைகளையும், அவைகளைத் திறமையாகக் கையாளும் 'விற்பன்னர்' களையும் நேரில் பார்த்தால் மட்டுமே நாம் அறிந்து கொள்ள முடியும். தாம் பெருந்தொகையினராக இருக்கிறோம், தாம் விரும்பிய எதனையும் சட்டமாக்கும் வாய்ப்பிருக்கிறது என்பதோடு திருப்தி அடையாது, சிறுபான்மைக் கட்சியினரின் கருத்து சபையில் எவ்வளவுக் கெவ்வளவு கூறப்படாமல் இருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு திருப்தி கொள்ளும் உள்ளம் படைத்தோரே ஆளும் கட்சியினராக வீற்றிருக்கின்றனர்.

குறை கூறுவோரை விலை பேசுவதும், மசியாதவரை அச்சுறுத்தி அடக்கப் பார்ப்பதும், டில்லியில் வளர்ந்துள்ள நவீன ஜனநாயக நடைமுறைகள்.

ஐந்நூறுக்கு மேற்பட்டவர்களைக் கொண்ட மக்கள் சபையில் திராவிட முன்னேற்றக் கழகம் இருவரை மட்டுமே அனுப்பியிருக்கிறது. எனினும் கழகக் குறிக்கோள்களில் உள்ள நியாயத்தின் திண்மை அனைவரையும் அதன்பால் ஈர்க்கின்றது. வெறுப்புடனாயினும், முகச் சுளிப்புடனாயினும் கழகத்தினைப் பற்றி அறிந்தாகவேண்டுமென்ற உணர்வு எவரிடமும் தலைதூக்கி நிற்பதைக் காணலாம். சபையில் பேசும் வாய்ப்புகள் மிகக் குறைந்து இருப்பினும், சபை உறுப்பினர்களும், பத்திரிக்கையாளரும் நாளும் கழகத்தைப் பற்றி நிறையச் செய்திகளை அறிவதில் பெரும் ஆர்வம் காட்டுகின்றனர். வங்கத்தைச் சார்ந்த சில உறுப்பினர்களும், மராட்டியத்து உறுப்பினர் சிலரும், ஒரிஸாவைச் சேர்ந்தவர்கள் பலரும் மிக அனுதாபத்துடன், நாம் மேற்கொண்டிருக்கும் தனி நாடு பிரச்னையை அணுகி ஆராய்கின்றனர். அரசின் இந்தித் திணிப்புக் கொள்கை, நமக்கு அவர்களுடைய ஆதரவைப் பெருமளவுக்குப் பெற்றுத் தந்துள்ளது. மக்கள் சபையிலும், அதன்மூலம் ஆட்சியிலும், உத்தரப்பிரதேசமும் பீகாரும் வகிக்கும் ஆதிக்கம், இந்த அரசியல் சட்டப்படி என்றுமே நீடிக்கும் ஒன்று என்பதை நம்மைத் தவிர பிறரும் உணரும் நிலை வளர்கிறது. வெள்ளையன் வெளியேறிய மகிழ்ச்சி மயக்கத்தில் இந்த ஆபத்தை உணர்ந்திருந்தோரில் மராட்டியரும், வங்க மக்களும் மிக முக்கியமானவர்கள். அவர்கள் இன்று விழிப்படைந்து வருகின்றனர்.

உத்தரப் பிரதேச, பீகார் அரசியல்வாதிகள் அனைவரும் இந்தியா ஒன்றாய் இருக்கவேண்டும் என்பதைவிட, இந்தியா தம் வசம் இருக்கவேண்டும் என்பதிலேயே கண்ணும் கருத்துமாய் உள்ளனர். இனி, மற்றவர்கள்தான், ஒன்றாய் இருக்கும் இந்தியர் எனின், அவர்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட இந்தியாதானா என்பதைப்பற்றி முடிவு செய்து கொள்ளவேண்டும், என வங்கத்தினரும், மராட்டியரும், ஒரியர்களும் எண்ணுகின்றனர்.

பல ஆண்டுகளுக்கு முன்பே நமது கழகம் இதனை எண்ணி, இந்தியா ஒன்றாய் இருப்பதெனில் அதன் ஆட்சி வடவர் வசமேதான் இருக்கும் என்பதைக் கண்டுணர்ந்து, பெரிய தேசத்துக்குடிகள் என்பதைவிட நமது தேசத்தின் குடிகள் என்ற நிலையேதான் நமக்கு வாழ்வளிக்கும் நிலை என்ற முடிவுக்கு வந்தது. அதனை ஒப்புக்கொள்ளும் உணர்ந்துகொள்ளும் திராவிடர் தொகை நாளும் வளர்ந்து வருவது கண்கூடு. இன்று திராவிடர்க்கு மட்டுமேயன்றி மராட்டியருக்கும், வங்க, ஒரிய மக்களுக்கும் வழிகாட்டும் பெரும்பணியைக் கழகம் ஆற்றப்போவது உறுதி.

> கற்பனை உலகமே ஒரு தனி உலகம் தான். அதில் பல இன்பங்களையும் ஏக காலத்தில் அனுபவிக்கலாம். பல்வேறு பருவங்களும் கற்பனையுலகிலே சந்திக்கும்; எந்த மலரையும் எந்தக் கனியையும், எந்த நிலையிலும் சந்திரனையும் சூரியனையும் நினைத்த உடனே சந்தித்து இன்புறலாம்; கவிஞன் உலகமே கற்பனை உலகம்தானே!



விழித்துக் கொண்டான்!

அல்லி

அன்று ஊர்க் காவல் நிலையத்தில் ஒரே பரபரப்பு. அன்றுடம் சாராயம் காய்ச்சியவர்கள், இரவில் சூதாடியவர்கள் போன்றவர்களையே விசாரித்துச் சலித்துப்போன இன்ஸ்பெக்டரின் முகத்தில் ஒரு தனிக் களை குடிகொண்டிருந்தது. தூங்கி வழிந்த பலரும் எழுந்து உட்கார்ந்துகொண்டு சோம்பல் முறித்துக் கொண்டிருந்தார்கள். மொத்தத்தில், அங்கிருந்த யாவருமே ஒரு சுறுசுறுப்புடன் காணப்பட்டனர். இதற்கெல்லாம் காரணம் என்ன? அன்று அவர்களுக்கு மேலிடத்திலிருந்து அறிக்கையொன்று வந்தது. அந்த வட்டாரத்தில் முற்போக்குக் குழுவினர் மொழிப் போர் நடத்தப் போவதாகவும், அப்போர் நடைபெறுதவாறு போலீசார் பாதுகாக்க வேண்டும் என்றும் அறிக்கையில் கண்டிருந்தது. அதனால்தான் எப்போதும் தூங்கிக் கிடக்கும் அந்த அலுவலகத்தில் அன்று அத்தனை பரபரப்புக் காணப்பட்டது.

மாணிக்கம் மட்டும் மிகவும் கவலை தோய்ந்த முகத்தவனாகக் காணப்பட்டான். அன்று காலை வந்திருந்த கடிதத்தின் மூலம் அப்போரினைப் பற்றி முன்கூட்டியே அறிந்திருந்தான் அவன். மேலிடத்தினின்று இத்தகைய கட்டளை வரும் என்பதையும் அவன் எதிர்பார்த்திருந்தான். ஆகவே மற்றவர்களைப்போல் அவன் பரபரப்படையவில்லை. அமைதியாக இருந்தான். ஆனால் அவன் உள்ளத்தில் பெரிய சூறாவளி அடித்துக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில் அவன் நெஞ்சை அரித்துக்கொண்டிருந்த துன்பத்தை யார் அறிவார்!

கான்ஸ்டபிள் கந்தப்பன் மாணிக்கத்தின் முதுகில் அறைந்து, "நல்ல சான்ஸ் அப்பா நமக்கு! இந்தப் போராட்டத்தில் நாம் சாமர்த்தியமாக நடந்துகொண்டால் நல்ல பலனை அடையலாம்" என்று சொன்னபோது மாணிக்கம் ஒரு வறட்டுப் புன்னகை புரிந்தான். அதன் காரணம் அப்போது கந்தப்பனுக்குப் புரியவில்லை.

மாணிக்கத்துக்கு, தான் அலுவலகத்திற்குப் புறப்படும்போது தன் மனைவி கூறியது இப்போது நினைவு வந்தது. "என்னங்க, இன்னிக்கு மாப்பிள்ளைக்கு ஒரு கடுதாசி எழுதிடுங்க. மாப்பிள்ளைக்குத் தான் இப்படிப் புத்தி போச்சுதுன்னா எழில்மணியாவது அவரைத் தடுக்கக்கூடாதா? அவளும் அவரோடே சேர்ந்து கூத்தடிக்கிறது கொஞ்சமும் நல்லாயில்லை. என்ன போராட்டமோ என்ன எழவோ! உசிரைக் கொடுத்துக் கெட்ட பெயர் வேறே வாங்கிக்கிறது! ரெண்டு பேரும் உடனே இதிலிருந்து விலகி விடணும்னு எழுதிடுங்க" என்று சொன்னாள் மாணிக்கத்தின் மனைவி மணியம்மை.

மாணிக்கத்துக்குத் தன் தங்கை எழில்மணியைப் பற்றித் தெரியாதா? கரிகாலன் சற்றே சோர்ந்திருந்தாலும் அவனைத் தட்டி யெழுப்பிப் போராட்டத்திற்கு அனுப்பும் வீரமங்கையல்லவா அவள்? அவள் கரிகாலனை மணந்து கொண்டது இன்ப வாழ்க்கை நடாத்துவதற்கல்ல. நாட்டை மீட்கும் பணியிலே ஒரு துணை இடைத்தால் நல்லது என்று எண்ணியே அவனைத் திருமணம் செய்துகொண்டாள். அவளுக்குக் இடைத்த துணையும் அவளுக்குத் தக்கபடியே இருந்தது. இருவரும் கூட்டங்களுக்கும், மாநாடுகளுக்கும் செல்வதோடு தங்கள் நாட்டுப் பற்றை நிறுத்திக் கொள்ளாது, கிளர்ச்சி, அறப்போர் முதலியவற்றில் கலந்துகொண்டு உண்மையாக நாட்டுக்கு உழைத்தார்கள். தடியடி, கண்ணீர்ப் புகை, சிறைவாழ்க்கை அனைத்தையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்கள்.

மாணிக்கத்துக்கு எழில்மணியும் கரிகாலனும் சேர்ந்து நடத்திய பல போராட்டங்களின் நினைவு வந்தது. இந்தி எதிர்ப்புப் போரின்போது எழில் மணியும், கரிகாலனும் விளைத்த வீரத்தினை எண்ணினால் இப்போது கூட உடல் சிலிர்க்கும். மாணிக்கம் கண்மண் தெரியாமல் தடியடிப் பிரயோகம் செய்து

கொண்டிருந்தான். கரிகாலன் இடத்தைவிட்டு அசையாமல் இருந்ததால் மாணிக்கம் அவனது முழங்கையில் தடியால் பலமுறை அடித்துவிட்டான். கரிகாலன் தன் முழங்கையிலிருந்து பெருகும் குருதியைச் சிறிதும் பொருட்படுத்தாமல் தன் தோழர்களை ஊக்கிக் கொண்டிருந்தான். இதனைத் திகைப்போடு பார்த்துக்கொண்டிருந்த மாணிக்கம் தன் மனத்தைக் கட்டுப்படுத்த வேறு இடம் நோக்கிச் சென்றான்.

○

மாணிக்கம் தன் கண்களில் பெருகிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டான். யாராவது பார்க்கிறார்களா என்று நாற்புறமும் நோக்கினான். அந்த அமர்க்களத்தில் அவனை யார் பார்க்கப் போகிறார்கள்!

"ஏ! என்ன பிழைப்பு!" அவனது வாய் அவனையும் அறியாமல் முணுமுணுத்தது. 'எழில்மணியின் சொல்லில் எத்தனை உண்மை இருக்கிறது!' என்று எண்ணினான்.

கல்லக்குடிப் போராட்டத்திற்கு முன் எழில்மணி ஒரு கூட்டத்தில் பேசினாள்; "தாய் நாடு, தாய் மொழி, தாய் நாட்டு மக்கள்—இவை நம் உயிரைவிட உயர்ந்தவை. இவற்றில் எதற்குத் தீமை நேர்ந்தாலும் உயிர் கொடுத்தேனும் அதனை நீக்க முற்பட வேண்டும். வடநாட்டான் பெயரால் திராவிடத்தில் ஒரு ஊர் அழைக்கப்படுகிறது என்பது எதைக் காட்டுகிறது? நாமனைவரும் ஏமாளிகள், உணர்ச்சியற்றவர்கள் என்பதையல்லவா காட்டுகிறது? தோழர்களே! உயிர் வாழ்வதுதான் முதன்மையானதா? விலங்குகள் கூடத்தான் உயிர் வாழ்கின்றன. எது முக்கியம்? சோறா மானமா? மானம்தான் பெரிது. அதுதான் மனிதனுக்கும் விலங்குக்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் காட்டுகிறது. சில மனிதர்கள்கூட விலங்குகளைப்போல் பிழைப்பின் பொருட்டு இழிதொழில் செய்கிறார்கள். போராட்டத்தின்போது குறுக்கே புகுந்து நம்மை அடக்க முயலும் 'ஊர்க் காவலர்'களைத்தான் எடுத்துக் கொள்வோமே. அவர்கள் மனிதர்கள் இல்லையா? அவர்களுக்கு உணர்ச்சி இல்லையா? இருக்கிறது; ஆனால் அதை அடக்கி வைத்திருக்கிறார்கள், வயிற்றுப் பிழைப்பின் பொருட்டு! இதுவும் ஒரு வாழ்க்கையா? அன்பர்களே! நாம் வாழ்வது நமக்காக அல்ல, நாட்டுக்காக!......"

கூட்ட நடவடிக்கையைக் காண வந்திருந்த மாணிக்கத்தின் உள்ளத்தில் இந்தச் சொற்கள் 'சுரீ'ரெனத் தைத்தன. அது முதலே அவன் எண்ணத் தொடங்கிவிட்டான், 'ஏ! இதென்ன வாழ்வு' என்று. கல்லக்குடிப் போராட்டத்தின் போது ஒருவருக்கும் தெரியாமல் பெயர்ப் பலகையில் 'கல்லக்குடி' என்ற பெயரை மறைவாக ஒட்டியவர்களில் மாணிக்கமும் ஒருவன்.

○

ஒரே செடியில் வெவ்வேறு நிறங்கொண்ட மலர்களைப் பார்ப்பது அரிது. ஆனால் மனித சமுதாயத்திலே இத்தகைய நிகழ்ச்சிகள் மிகச் சாதாரணமானவை. ஒரே தாய் வயிற்றில் பிறந்த மாணிக்கத்திற்கும் எழில்மணிக்கும் எத்துணை வேறுபாடு! தந்தையார் இறந்தபோது அக்குடும்பத்தைக் காப்பாற்ற ஏதேனும் ஒரு தொழிலைச் செய்தே ஆக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது மாணிக்கத்துக்கு. நகர்க் காவலன் ஆவதற்கு வேண்டிய தகுதிகள் யாவும் அவனிடம் பொருந்தியிருக்கவே, அவ்வேலை அவனுக்கு எளிதில் கிடைத்தது. எழில்மணி வளர்ந்தாள். அவள் வளர வளர அவளது உள்ளத்திலே முற்போக்குக் கருத்துக்கள் இடம் பெறலாயின. பள்ளிப் படிப்பை முடித்தபோது அவள் ஓர் புதுமைப் பெண்ணாக நின்றாள். சீர்திருத்தவாதிகள் பேசும் கூட்டங்களுக்குச் செல்லலானாள். மாணிக்கம் தடுத்தான்; அவள் மதிக்கவில்லை. மணம் செய்விக்க அவன் எண்ணியபோது முற்போக்காளனைத் தவிர வேறு யாரையும் மணக்க முடியாது என்று கூறிக் கரிகாலனை மணாளனாக ஏற்றுக்கொண்டாள். அடி தொழுதேத்தும் மாணிக்கத்தின் தங்கையாகத் தன்மான எழில்மணி தோன்றியதேன்? விந்தைதான். 'சோறா—மானமா?'—எழில்மணி கேட்டாள். அதே கேள்வியைத்தான் மாணிக்கமும் கேட்டான். ஆனால் இருவரது விடைகளில்தான் வேற்றுமை இருந்தது. 'மானம்!' என்றாள் எழில்மணி. மாணிக்கத்தின் பதில்: 'சோறு!'

இத்தொழிலை ஏற்றுக்கொண்ட புதிதில் மாணிக்கம், தான் நாட்டுக்கு நன்மை செய்யும் வேலையில் ஈடுபட்டிருப்பதாகவே எண்ணினான். ஆனால் கரிகாலன் - எழில்மணி இவர்களின் பேச்சுக்களைக் கேட்கக் கேட்க 'நாம் நாட்டுக்குத் தீமை செய்யும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறோமா? நாட்டை மீட்கப் போரிடும் சக்தியை அடக்க முற்பட்டிருக்கிறோமா?' என்ற ஐயம் தோன்றலாயிற்று.

மணிமங்கலத்திலே கரிகாலன் — எழில்மணி பேச்சுக்கு நல்ல வரவேற்பிருந்தது. அவ்வூரார் அடிக்கடி அவர்களைப் பேச அழைப்பார்கள். அச்சமயங்களில் அமைதி காக்க அங்கே மாணிக்கம் அனுப்பப்படுவான். இவ்வாறு அவர்கள் சொற்பொழிவுகளை விடாது கேட்கும் வாய்ப்பு அவனுக்குக் கிடைத்து வந்தது. அதன் விளைவு, முன்பெல்லாம் தான் நாட்டுக்குத் தொண்டு செய்வதாகக் கருதிய மாணிக்கம், இப்போது 'ஏ! இதென்ன பிழைப்பு!' என்று வெறுத்துக் கொள்வான். வேலையை விட்டால் குடும்பம் தவிக்குமே என்ற ஒரே நோக்கோடுதான் அவன் அந்த வேலையை இப்போது செய்துவருகிறான்.

"என்ன அண்ணே, அப்படி உட்கார்ந்திட்டே?" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்தான் மாணிக்கம். கந்தப்பன் முகம்மலர நின்றுகொண்டிருந்தான். அவன் ஒரு வெறி நாய். விடுதலைப் பட்டாளத்தைச் சிதைத்துச் சீரழிப்பது அவனுக்குப் பிடித்தமான வேலை. அதிகாரிகள் 'த' என்பதற்குள் தடியடிப் பிரயோகத்தில் இறங்கிவிடுவான். எதற்காவது 'து' என்று சொன்னால் கூடத் துப்பாக்கியை எடுத்து நான்கு முறை சுட்டுத்தீர்க்கும் இயல்பினன். கல்லக்குடிப் போராட்டத்தின்போது காவியமணி பட்ட துன்பத்திற்காக உண்மையான மகிழ்ச்சி அடைந்தவன் இவன் ஒருவன்தான். வெள்ளையர் ஆட்சியின் போது கிளர்ச்சி செய்த காங்கிரசாரை ஆத்திரம் தீர அடித்து நொருக்கிய இவன், காங்கிரசார் ஆளும் இந்நாளில் அவ்வேலையை விடாது தொத்திக்கொண்டு, இன்று விடுதலை வீரர்களின் உடலைப் பதம் பார்த்துக்கொண்டிருக்கிறான். இந்த அடித்தல், உதைத்தல் எல்லாம் அவர்களுடைய உடலைத்தானே தாக்கும்! உள்ளத்தை என்னசெய்ய முடியும் இவனால்! எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்களல்லவா அவர்கள்!

கந்தப்பனின் வெறி நிறைந்த மகிழ்ச்சியைக் கண்டு வெறுப்படைந்தான் மாணிக்கம். 'உஸ்......' என்று நீண்ட பெருமூச்சு விட்டுக்கொண்டே எழுந்தான் அவன்.

○ ○ ○

தங்களுக்காக அமைக்கப்பட்ட அந்த விடுதியில் ஊர்க்காவலர் கூடிக் கும்மாளமடித்துக் கொண்டிருந்தனர். ஒவ்வொருவரும் முற்போக்குக் குழுவினரைத் தம் வயிற்றெரிச்சல் தீரத் திட்டிக்கொண்டும் கிண்டல் செய்துகொண்டும் இருந்தனர். மாணிக்கம் மட்டும் கவலை தோய்ந்த முகத்தினனாய் ஒரு ஓரத்தில் உட்கார்ந்திருந்தான். அவன் உள்ளத்திலே பெரிய போராட்டம் நிகழ்ந்துகொண்டிருந்தது. இவனது கவலையைச் சற்றும் அறியாதவர்களாக மற்றவர்கள் கொட்டமடித்துக் கொண்டிருந்தார்கள்.

அதே நேரத்தில் மற்றோர் இடத்திலே கிளர்ச்சி வீரர்கள் குழுமியிருந்தனர். யாவரது உள்ளத்திலும் உவகை பொங்கி வழிந்துகொண்டிருந்தது. அன்று நடக்கவேண்டிய போராட்டத்தைக் குறித்து அனைவரும் களிப்பு நிரம்பிய குரலில் பேசிக்கொண்டிருந்தனர்.

அடுத்த இதழ்

பொங்கல் விடுமுறை காரணமாகத் "திராவிட நாடு" இதழ் நிறுத்தப்பட்டு, **1—2—58**-ல் மீண்டும் வெளிவருகிற தென்பதை விற்பனையாளர்களுக்கும் வாசகர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பொறுப்பாளர்.

இங்கே விடுதலை வீரர் பட்டாளம்; அங்கே விடுதலை உணர்ச்சியைத் தட்டியடக்க முயலும் ஊர்க் காவலர் கூட்டம்; இங்கே அன்பு நிறைந்த கலகலப்பு; அங்கே ஆணவம் நிறைந்த கலகலப்பு! இங்கே வீரச் சிரிப்பு; அங்கே வெறிச் சிரிப்பு!

'அமைதிகாக்க'ப் புறப்படும்போது மாணிக்கத்தின் முகத்திலே தெளிவு. ஆம்; அவன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டான்.

போராட்டம் மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. அதனை அடக்கப் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்துகொண்டிருந்தனர். ஆனால் வீரர்கள் சிறிதும் அசையவில்லை. தங்கள் மேல் விழும் அடியை அவர்கள் பொருட்படுத்தவேயில்லை. 'ஆணவம் சீறலாம்; இராணுவம் பாயலாம்; சீற்றத்தைக் கண்டு சிதறுதே' என்று அவர்கள் தலைவர்கள் அறிவுரை கூறியிருக்க, அவர்களா இதற்கெல்லாம் அஞ்சி அடங்கிவிடுவர்? அவர்கள் அங்கிருந்து அசையவுமில்லை; அடக்கவந்த காவலரைத் தாக்கவும் இல்லை. ஆனால் போலீசாரால் 'நிலைமையைச் சமாளிக்க' இயலவில்லை!

அதிகாரிகள், ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். "'காலிகள்' போலீசாரைக் கல்லாலடித்ததால் வேறு வழியின்றித் துப்பாக்கிப் பிரயோகம் செய்யநேரிட்டது" என்று செய்தி வெளியிடத் தப்ப அவர்களுக்கா தெரியாது? இரத்த தாகம் ஏற்படும்போதெல்லாம் அவர்கள் கையாளும் தந்திரமாயிற்றே அது! அவ்வளவுதான்; அடுத்த கணம் 'சுடு!' என்ற உத்தரவு பிறந்தது.

மாணிக்கம் துப்பாக்கியை எடுத்தான்; கண்களை இறுகமூடிக்கொண்டான். கிளர்ச்சி தீவிரமாக இருந்த இடத்தை நோக்கித் துப்பாக்கியை நீட்டினான்.

'டுமீல்! டுமீல்!'

'ஆ' என்ற குரல்! கரிகாலன் குருதி பெருகும் மார்பை ஒரு கையால் அழுத்திக்கொண்டு, 'வெற்றி! வெற்றி! வெற்றி நமக்கே! அஞ்சாதீர்கள்; அசையாதீர்கள்! நன்கு போராடுவோம்; நாட்டை மீட்போம்!" என்று எழுச்சியோடு கூறினான். அடுத்த கணம் தடாலென்று கீழே விழுந்தான். 'கரிகாலன் வாழ்க! வாழ்க!' என்ற குரல் எங்கும் நிறைந்து ஒலித்தது.

மீளுகின்ற இன்பக்காட்சியினைக் காணாமலே மறைந்துவிட்டான், பாராண்ட திராவிடர் வழித்தோன்றல் கரிகாலன். எழில்மணி கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள், "வீரமரணம்! அன்பரே, தாங்கள் வீரமரணம் அடைந்துவிட்டீர்கள்!" என்று கூவினாள்.

திறந்த கண்களை மீண்டும் மூடிக்கொண்டான் மாணிக்கம்.

"தோழர்களே!"—வீரர்கள் நிமிர்ந்து நின்றனர்.

"தோழியர்களே!"—பெண்களனைவரும் வரிசை வரிசையாக எழில்மணியை நோக்கி வந்தனர்.

"அடிமை நாட்டிலே தோன்றிய அறிவுமணிகளே! நமது படைத் தளபதி கரிகாலன் அவர்கள் விடுதலைக்குப் போரிட்டு வீர மரணம் அடைந்துவிட்டார். அவர் விட்டுச் சென்ற பணியை நாம் பொறுப்புடன் ஏற்று முடிப்போமாக. தோழர்களே! 'தேனென்னும் வாழ்வே தேளாய் மாறும், போர்முனைச் சாவே பொது வாழ்வில் இன்பம்' என்ற நமது போர்ப்பரணியைச் சற்றே நினைவுக்குக்கொண்டு வாருங்கள். நம் வாழ்வு இப்போது தேளாய் மாறியுள்ளது. போர்முனைச் சாவு நம்மை அழைக்கிறது. எழில்மணி பாய்ந்துவந்தாள் கரிகாலனிடம். அவன் கரிகாலனைச் சுட்டுத் தன் தாகத்தைத் தணித்துக்கொண்டு விட்டதிந்த அரசாங்கம். 'வானத்தை நோக்கிச் சுட்டால் அங்கிருக்கும் முப்பத்து முக்கோடி தேவர்களுக்குத் தொல்லை ஏற்படுமோ' என அஞ்சுபவர் நம் அரசாங்கத்தார். ஆளைக் குறித்துச் சுடும் விந்தையை இங்கேதான் கண்டோம். தோழர்களே! நம் கரிகாலர் மறைந்துவிட்டார். ஆனால் நம்மிடையே இன்னும் ஆயிரமாயிரம் கரிகாலர்களும் செங்குட்டுவர்களும் இருக்கையிலே 'கவலையேன்? தோழியர்களே! சீறி வந்த சிறுத்தையை முறத்தால் அடித்து விரட்டிய மறத்தியர் வழி வந்த நாம் இந்தச் சுண்டெலிகளுக்கா அஞ்சுவோம்? 'நாட்டை மீட்கப் போராடி உயிர் கொடுப்போம் வாரீர்! வாரீர்!!"

மாணிக்கம் தன் உடுப்புகளைப் பரபரவென்று கழற்றினான்; தொப்பியை எடுத்தான்; துப்பாக்கியையும் அவற்றோடு வைத்து அதிகாரிகள் இருந்த பக்கம் வீசினான். உள் சட்டையுடனும் அரைக்கால் சட்டையுடனும் தோன்றி அவன் கிளர்ச்சிக் குழுவில் பாய்ந்து அவர்களுடன் கலந்தான். யாவரும் வியப்போடு பார்த்துக்கொண்டிருக்கையிலே மாணிக்கம் கூவினான், **"திராவிட நாடு திராவிடருக்கே!"**

"தங்கைக்கு"

[சொ. அடைக்கலம்]

வெள்ளி முளைத்தவுடன் எழுந்து — வீட்டு
வேலைகளைச் செய்வோம் தங்காய்
எள்ளிப் பிறர் நகைக்கத் தூக்கம் — நீ
ஏற்றுப் படுத்திராதே தங்காய்.

பள்ளிப் படிப்புனக்கு வேண்டும் — வேலைப்
பழக்க வழக்கங்களும் வேண்டும்
துள்ளி விளையாடு தங்காய் — எவரிடமும்
தோழமை கொண்டிடு தங்காய்.

தாயை வணங்கிடு தங்காய் — உந்தன்
தந்தை சொல்லை மீறுதே தங்காய்
வாயைப் பெரிதாக்கித் தங்காய் — வீண்
வம்பு சண்டை செய்யாதே தங்காய்.

கூட்டிப் பெருக்கி மெழுகி — அடுப்பை
மூட்டிச் சமையல்செய்யப் பழகு
ஏட்டில் தமிழ் மறை குறளை — என்றும்
ஏற்றுப் படித்ததுபோல் ஒழுகு.

நாட்டுக்குப் பெருமதிப்பு உன்போல் — பிறர்
நாடும் படித்தஇளம் பெண்கள்
வீட்டு விளக்காகித் தங்காய் — சான்றோர்
விருப்பம் நிறைவேற்று தங்காய்.

கண்ணை இமைகாத்தல் போல — குடும்பம்
கட்டிக் காக்கும் பெண்களாலே
மண்ணில் தமிழ்மாதர் பெருமை — இமய
மலையிலும் உயர்ந்தது தங்காய்.



முகவை:
மீ. மனோகரன்

பயிர் விளையத் தன் உடலளித்து இடமளித்த நிலமடந்தையை நினைக்கும் நாளே பொங்கல் நாள்; பருவம் பொய்க்காது பெய்தளித்த மாரியையும் போற்ற மறந்ததில்லை; இவ்வளவுக்கும் மேலாக செந்நெற்பயிரைத் தன் செங்கதிர்க்கரங்களால் அணைத்து வளர்த்து அன்பொளி வீசிய ஞாயிற்றை வாழ்த்தத் தவறியதில்லை. இந்த நன்றி மறவாக் கடப்பாடு தமிழரிடம் தொன்று தொட்டு வந்த பண்பு. இத்தகைய ஓர் உன்னதமான கருத்தின் அடிப்படையில்—உயிரனைய பயிர் விளைய தனக்கு ஆண்டு முழுதும் துணை நின்ற இயற்கைக்குத் தமிழர்கள் தம் நன்றியைத் தெரிவிக்கும் நன்னாளே பொங்கற் புது நாள்.

○ ○ ○

இதே பெயரில், அதாவது "நன்றி தெரிவிக்கும் நன்னாள்" என்ற பெயரில், புதிய உலகம் என்று வழங்கப் பெறும் அமெரிக்கக் கண்டங்களுள் ஒன்றான வட அமெரிக்காவில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது. அந்நாட்டு அரசாங்கம் விழா நாட்களில் விடுமுறை அளிக்கிறது. பெருவாரியான மக்களால் கொண்டாடப் பெறும் இவ்விழா எந்த மத அடிப்படையிலும் தோன்றியதல்ல; தனி ஒரு மனிதர் போற்றுதலுக்காகவும் தோற்றியதல்ல, ஆனால் இந்தப் பெரும் விழா தமிழர் கொண்டாடும் பொங்கல் திருவிழா கொண்டாடப்படும் அதே நெறியின் அடிப்படையில் அமைந்திருப்பதுதான் விந்தையாகும்; சிந்தனைக்குரியதுமாகும்.

○ ○ ○

கி. பி. 1585-ல் சர்வால்டர் ராலே என்பவர் எலிசபெத் அரசியாரின் சார்பில் வடஅமெரிக்காவில் வர்ஜினியா குடியேற்ற நாட்டை உருவாக்கிய நாள் முதல், ஸ்பானியர், போர்ச்சுக்கீசியருடன் ஆங்கிலேயரும் புதிய உலகத்தில் குடியேறத் துவங்கினர். அது முதல் அமெரிக்கா ஐரோப்பியருக்குத் திறந்த வீடாயிற்று.

கி. பி. 1620-ல் இங்கிலாந்திலிருந்த தூய மதவாதிகள் என்போர் அங்கு தமக்குச் சமய விடுதலை கிடைக்காததால் சமய விடுதலை வேண்டி அமெரிக்க மண்ணில் தஞ்சம் புகுந்தனர். இவர்களை வரலாற்றில் யாத்ரீகத் தந்தையர் என்று அழைக்கப்படுகின்றனர். வட அமெரிக்காவில் காட்முனையில் இறங்கிய இவர்கள் ஏற்கனவே அங்கு வாழ்ந்த பழங்குடிகளைத் துன்புறுத்தும் கயமையில் இறங்கவில்லை. அமெரிக்க மண்ணிலும் தம் உழைப்பிலும் நம்பிக்கை வைத்து நிலங்கிள்ளிப் பயிரிட்டனர், பாடுபட்டனர்; ஆண்டு இறுதியில் பலன் கிடைத்தது. நன்றி பெருக்கெடுத்தது.

முற்றிலும் புதிய மண்ணிலே தாங்கள் பெற்ற அறுவடை எனும் பெரு வெற்றிக்கு அறிகுறியாக அதனை ஓர் விழாவாகவே கொண்டாட எண்ணினர். புதியதாக விளைந்த சோளத்திலே களி சமைத்தனர். பூசனிப் பழத்திலே பணியாரம் செய்தனர். வான்கோழிப் புலால், இன்னபிற படைக்கப்பட்டன. விருந்துண்டு, ஆட்டமும் கூத்தும் நடத்திக் களிப்பெய்தினர்.

கி. பி. 1621ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் திங்கள் நான்காவது வியாழக்கிழமையில் "நன்றி தெரிவிக்கும் நன்னாள்" எனும் இப் பொன்னான விழா கொண்டாடப்பெற்று நாளடைவில் பொலிவுபெற்று, இன்று அது ஒரு பெரிய "தேசியத் திருநாள்" ஆகச் சிறப்படைந்துள்ளது.

○ ○ ○

அமெரிக்காவின் அறுவடைத் திருநாளைப் பற்றி ஆராய்ச்சியாளர்கள் தரும் விளக்கங்களோ வேறு விதமாக இருக்கின்றன. நன்றி தெரிவிக்கும் கடப்பாடு இயற்கையாகவே பழங்குடி மக்களிடம் காணப்படும் சிறப்பியல்புகளுள் ஒன்று. இன்றைய மேலைநாட்டு நாகரிக மக்களிடம் இப்பண்பு உதட்டளவில்தான் உண்டு. உலக விழாவெடுத்துக் காட்டும் உணர்ச்சி—எண்ணம்—இங்கிலாந்திலிருந்து குடிவந்த ஐரோப்பியருக்குத் தாமாகவே உதித்த ஒன்றா? அல்லது அந்நாட்டில் ஏற்கனவே இருந்த பழங்குடி மக்களிடமிருந்து கடன் வாங்கிய ஒன்றா?" என்ற கேள்வி ஆராய்ச்சியாளரின் உள்ளத்தில் எழுந்தது. அதற்குக் காரணம் இருந்தது. ஏனெனில் ஏற்கனவே அங்கு வாழ்ந்த செவ்விந்தியர்கள் மயா, அஃச்டெக் போன்ற சிறந்த பண்பாடுகளைப் பெற்றிருந்தவர்கள். அவர்கள் இது போன்ற பல விழாக்களைக் கொண்டாடிவந்தனர் என்று வரலாற்றுச் சான்றுகளிலிருந்தும் தெரிய வருகிறது.

○ ○ ○

1956ம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் நம் நாட்

டுக்கு வந்த டாம்டு ஏரோசு என்ற செவ்விந்திய நடனக்காரர், நமது பொங்கலைப் போன்ற திருநாளை அவரது இனத்தவரும் கொண்டாடுவதாகவும் ஞாயிற்றையும் மாரியையும் போற்றி சடங்குகள் நடத்துவது உண்டெனவும் தெரிவித்துள்ளார்.

இது எவ்வளவு உண்மையென்பது செவ்விந்தியர்கள் நடத்திய 'மழை நடனம்' பற்றி வரலாற்ருசிரியர் குறிப்பிடுவதிலிருந்து தெரியவருகிறது. அவர்கள் மிகச் சிறப்பாக நடத்தி வந்த 'ஞாயிற்று நடன விழா' கி. பி. 1884ல் ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தால் சட்டபூர்வமாகத் தடை செய்யப்பட்டது.

பழைய பெருவியப் பேரரசை ஆண்ட 'இன்கா' எனப்படும் அரச பரம்பரையினர் ஞாயிற்றுக் கடவுளுக்கு கோவில்கள் கட்டினர். அவைகளின் இடிபாடுகள் இன்றும் காணப்படுகின்றன.

தவிரவும், செவ்விந்தியர்களது மிகச் சிறந்த நாகரிகங்களை வளர்த்ததும் அழித்ததும்அவர்களது பிரதான உணவாகிய மெயிஃச் எனப்படும் சோளம் என்பர் வரலாற்ருசிரியர்கள். அவர்கள் தாங்கள் பயிராக்கி வந்த நிலம் வரண்டுவிட்டால் உரமிடுவதில்லை உடனே தாம் சீரும் சிறப்புமாக வாழ்ந்த நகரங்களை விட்டுவிட்டுக் கூட்டங் கூட்டமாக வேறு இடங்களை நோக்கி நகர்ந்தனர். இவ்வாறு பாழான பல நாகரிக நகரங்கள் மத்திய அமெரிக்காவிலுள்ள யுகாடன் காடுகளில் அகழ்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே இத்தனைச் சிறப்பு வாய்ந்த சோளப்பயிரை அறுவடை செய்யும் ஒவ்வொரு முறையும் அவர்கள் விழாக் கொண்டாடியதில் வியப்பில்லை.

இவ்வாறு செவ்விந்தியர்கள் கொண்டாடி வந்த விழாவினைத்தான் வட அமெரிக்காவில் குடியேறிய ஐரோப்பியர்கள் கடன் வாங்கினர் என்று திரு. டெஸ்மான்ட் என்ற ஒரு அமெரிக்க ஆய்வாளர் கருதுகிருர்.

செவ்விந்தியரிடை பல விழாக்கள் இருந்தபோதிலும் இந்த அறுவடைத் திருநாளை, அது அமைந்திருக்கும் அடிப்படையின் கருத்துயர்வினை எண்ணித் துணிந்துதான் மற்ற விழாக்களை விடுத்து — அதனை மட்டும்—ஐரோப்பியர் ஏற்றுக் கொண்டாடி வருகின்றனர். இத்தகைய விழா தமிழரிடையேயும் செவ் விந்தியரிடையேயும் தான் சிறப்பாகக் காணப்படுவதால் இவ்விரு இனத்தவரிடமும் உள்ள ஒருமைப்பாடுகள் ஆராய்ச்சிக்குரியனவாகும்.

○ ○ ○

பழந் தமிழரும் அறுவடைக் காலத்தை விழாக் காலமாகக் கருதி வாழ்த்தினர். பழந் தமிழர் நல்ல அறுவடையைப் போர்க்களத்திலே காணும் பெரு வெற்றிக்குச் சமமாகக் கருதினர் என்பது முத்தொள்ளாயிர வரிகளால் தெரிகிறது :-

காவல் உழவர்
    களத்(து) அகத்துப் போர்ஏறி,
நாவலோ ஓ! என்றிசைக்கும்
    நாளோதை, காவலன்தன்
கொல்யானை மேலிருந்து
    கூற்றிசைத் தாற்போலுமே,—
நல்யானைக் கோக்கிள்ளி
    நாடு.

வீரர்கள் செந்நீர் சிந்தும் போர்க்களத்திலே கொட்டும் வீரச் சொற்களும் சோழநாட்டுச் செந்நெல் வயல்களிலே எழும் அறுவடைக் கால வாழ்த்தொலியும் ஒன்ருக மதிக்கப்பட்டன.

பழந் தமிழ் வேந்தருள், சிறப்பாகச் சோழ வேந்தர்கள் கோவில்கள் பல கட்டினர். இது போன்றே தென்அமெரிக்காவில் பெருநாட்டின் செவ்விந்திய அரச பரம்பரையினரான இன்காகர் ஞாயிற்றுக் கடவுளுக்கு தங்கத்தால் இழைக்கப்பட்ட பல கோவில்கள் கட்டினர். இன்கா என்ற செவ்விந்திய அரச பரம்பரையினருள் "சோலா' என்ற ஒரு குழுவினர் உண்டு.

மெக்சிகோ நாட்டில் காணப்படும் பழைய கோவிற் கோபுரங்கள் சோழர் கோவிற் கோபுர அமைப்பினைப்பிரதிபலிப்பதாக திரு. டானல்லி என்பார் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிகிறது.

○ ○ ○

இலங்கைத் தமிழறிஞர்கள் டாக்டர் திரு. சேவியர் தனிநாயக அடிகளாரும் திரு. ந. சி. கந்தையா பிள்ளையவர்களும் இத் துறையிலே பல உண்மைகளைத் தமது நூல்களில் வெளியிட்டுள்ளனர்.

எனவே புதிய உலகத்துப் பொங்கல் விழாவாகிய 'நன்றி தெரிவிக்கும் நாள்' ஆதியில் தமிழரிடமிருந்து சென்றது என்பதில் நமக்குப் பெருமிதப் பொங்கல் ஏற்படுவது இயற்கையே.

★

கலை வழி

Aykan

சி·என்·ஏ

கலைத்துறை இன்று செழிப்புடன் வளர்ந்து கொண்டு வருகிறது; சிறப்புடன் என்று கூருமல் செழிப்புடன் என்று கூறுவது, பொருளாழத்துடன் தான். செழிப்பான வளர்ச்சியே, சிறப்பு என்று கொள்ள விரும்புகின்றவர்களை நான் தடுக்கவில்லை!

கலைத்துறையுடன் மக்களுக்கு உள்ள தொடர்பு வளர்ந்த வண்ணம் இருக்கிறது. 'நடை உடை பாவனை'யில் கலையின் 'வண்ணம்' அறிந்தோ அறியாமலோ ஏறி இருந்திடக் காண்கிறேன்.

அழகுக் கலையிலிருந்து அடுக்களைக் கலை வரையில், ஒரு புதுமையும் வளமையும் மின்னிடக் காண்கிருேம். மின்னுவதெல்லாம் பொன்னல்லதான்; ஆனல் மங்கிக் கிடப்பதுதான் மாண்புக்கு அடையாளம் என்றும் தீர்ப்பளித்துவிட முடியாதல்லவா?

கலைத்துறை குறித்து எண்ணுவதும் பேசுவதும், ஆய்ந்தறிவதும் எழுதுவதும், வளர்ந்து வருகிறது. ஏராளமான ஏடுகள்! இதழ்கள்! மலர்கள்! துண்டு வெளியீடுகள்! எல்லா இதழ்களுமே, கலைக்காக ஒரு இடம் அமைத்துக்கொண்டுள்ளன; கலைக்காக என்றே உள்ள இதழ்கள் பல வெளிவருகின்றன. இந்த இதழ்கள், கலை குறித்துஎண்ணிட உதவுகின்றன; மக்கள் கலைபற்றி எண்ணுவதைத் துணைகொண்டு இதழ்கள் பயன் பெறுகின்றன; ஒருநல்ல தொடர்பு ஏற்பட்டுக்கொண்டு வருகிறது.

கலை, சமுதாயத்தின் நிலையை உயர்த்துகிறது என்பார் உளர்; இல்லை, சமுதாயத்தின் நிலையைக் கலை தாழ்த்தி வருகிறது என்று கூறுவார் உளர்; இருசாரார் கூறுவதினின்றும், நிலையை மாற்றும் வலிமை கலைக்கு இருப்பது புலனுகிறது; அதிலே ஒரு மகிழ்ச்சி ஏற்படத்தான் செய்கிறது; ஏனெனில், கலையின் வலிமை போயே விட்டது என்றும், கலையின் மூலம் கிடைத்த பலனகளை இன்று காணமுடிவதில்லை என்றும் கூறிக் கவலையைக் காட்டுகிறார்களே, சிலர், அவர்தம் உரை உண்மை அல்ல என்

இருக்கிறது, பொலிவு வளருகிறது, மக்களிடம் உள்ள தொடர்பு வேகமாகப் பெருகிவருகிறது, செழிப்பாகவும் இருக்கிறது.

வலிவும் பொலிவும், மக்கள் தொடர்பும், செழிப்பும் கொணடதாகக் 'கலை' இருக்குமபோது, அந்தத் துறையை அலட்சியபபடுத்துவதோ, அதன் 'வளர்ச்சியையும் வகையையும்' இயற்கைக்கு விட்டு விடுவதோ, அதன் மூலம் பெறப்படவேண்டியவைகள் எவை எவை எனபது குறித்துப் பொறுப்புக் காட்டாதிருப்பதோ, நல்லதல்ல.

மலடிக்கு மகவுடன் கொஞ்சத் தெரிகிறதா இல்லையா என்பது பற்றி அதிகக்கவலை கொள்ளத் தேவையில்லை; பெற்ற 'செல்வத்தை'ப் பேணி வளர்த்திடும் ஆற்றல் அன்னைக்கு இருக்கிறதா என்று அறிந்தாகவேண்டுமல்லவா!

கலை, மலடி அல்ல; படக்காட்சி 'பாஷை'யில் கூறுவதானல், கலை, "மக்களைப் பெற்ற மகராசி!" எனவே, கலை மூலம் கிடைப்பது கிடைக்கட்டும், பெறுவோர் பெறட்டும் என்று இருந்துவிடக் கூடாது. மக்களைப் பெறக்கூடிய மகராசி என்று தெரிந்தான பிறகு, சீராட்ட, பாராட்ட, சிறப்புடன் வளர்த்திட வழிவகையுடன் 'மகராசி' இருந்திடத் தக்க ஏற்பாடு இருந்தாக வேண்டுமே.

நல்லதங்காள் கூடத்தான் 'மக்களைப்பெற்ற மகராசி'-ஆனல் பாபம், கிணற்றில் போட்டல்லவா குழந்தைகளைக் கொல்லவேண்டி நேரிட்டது.

அதுபோலத்தான், கலை, பல்வேறு 'பலன்களை' ஈன்றெடுக்கும் வளமுள்ளது என்பது உணரப்பட்டான பிறகு, அதன் போக்குக் கவனிப்பாரற்றதாக, இருந்துவிடச் செய்வது கூடாது, என்கிறேன்.

கலை, வலிவுடையதுதான்; ஆனல் அந்த வலிவு, அழிவு வேலைக்கா? ஆக்க வேலைக்கா?

அந்தப் பொலிவு, உள்ளத்திலே ஆசாபாசங்களை மூட்டிவிடவா? அல்லது தூய்மையைத் தழைத்திடச் செய்யவா?

கலை, மக்களிடம் நெருங்கிய தொடர்புடையதுதான்; ஆனால் அந்தத் தொடர்பு ஆசான், மாணவன் என்ற விதமாகவா? போலீஸ்காரன் குற்றவாளி என்ற வகையிலா? தோழர்கள் என்ற போக்கிலா? தொடர்பு எங்ஙனம் இருத்தல்வேண்டும்?

கலை, செழிப்புடையதுதான், ஆனால் அந்தச் செழிப்பு, மக்களின் வளத்தை—உடல்—உள்ளம்—பொருள்—பண்பு—ஆகிய எல்லா வளங்களையும்—பெருக்கும் விதத்தில் இருத்தல் முறையா? அல்லது, ஈடுபட்டோரைச் செழித்திடச் செய்வதுடன் மட்டும் இருந்திடல் போதுமா?

இன்னோரன்ன கேள்விகள் எழுகின்றன.

எவரும் இதுபோல எழுப்புதல் காணோமே, என்கிறீர்கள்; கலைத் துறையிலே ஈடுபட்டவர்களுக்குள்ளே அடிக்கடி காணப்படும் 'சச்சரவுகள்' கலைத் துறையினருக்கும் மற்றத் துறைகளில் உள்ளோருக்கும் உள்ள வேறுபாட்டுணர்ச்சிகள், இவையாவுமே, மேலே குறிப்பிட்டுள்ள 'கேள்விகள்' உள்ளத்திலே ஊசலாடுவதன் விளைவுதான்; வேறென்ன?

முறைப்படுத்தி, பக்குவப்படுத்தி, விளக்கம் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன், இந்தக் கேள்விகளை அணுகாததால், அணுகுவது கடினமாக இருப்பதால்தான், எளிதான வேறோர் வழியைக் கையாண்டு, கலை உலகிலுள்ளோர் ஏளனம்——ஏச்சு — பழித்தல்—சபித்தல் — என்பன போன்ற கணைகளை ஒருவர்மீதொருவர் ஏவிக்கொள்கின்றனர்.

சச்சரவுகளாகிவிடுகின்றன, இயற்கையாக எழுந்துள்ள பிரச்சினைகள்.

கலைத்துறையினர் எவரும் இந்தப் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் முடியாது; இந்தப் பிரச்சினைகளுக்குப் 'பரிகாரம்' ஒருவருக்கொருவர், 'வசை' வழங்கிக்கொள்வதுமல்ல.

கலை, வலிவும் பொலிவும்கொண்டது; மக்களிடம் அதற்கு உள்ள தொடர்பு வளர்ந்தவண்ணம் இருக்கிறது; அதன் செழிப்பும் பளிச்சிடுகிறது. உண்மை! இந்த 'வாய்ப்பு' எவ்வழி செல்லல்வேண்டும்?

ஈதென்ன கேள்வி? எவ்வழி செல்லவேண்டும் என்றால், நல்வழி செல்லவேண்டும்—என்று பதிலளிப்பீர்கள்; பதிலளிக்கிறார்கள்; எளிதாகவும் நம்பிக்கையுடனும் பதிலளிக்கிறார்கள்; பதிலிலே பாகு கலந்தும் அளிப்பவர்களைக் காண்கிறேன், நாராசத்தைக் கலப்பவர்களையும் பார்க்க நேரிடுகிறது.

இவ்வளவு எளிதான ஒரு பதில் இருக்கும்போது, கேள்வியில் ஏதோ கடினம் இருப்பதுபோல ஏன் காட்டிக்கொள்கிறீர்? என்று என்னைக் கேட்க எண்ணுவீர்கள். தொடுக்கும் கேள்வியில் அல்ல; கிடைத்திடும் பதிலில்தான், நான் கடினம் ஊடுருவி இருந்திடக் காண்கிறேன்.

எவ்வழி செல்லவேண்டும் என்றால், நல்வழி என்கிறார்கள். மெத்த மகிழ்ச்சி.

நல்வழி, எது?

நல்வழி கூற வல்லார் எவர்?

நல்வழி என்பது, நம் காலத்துக்கு மட்டும் பொருந்துவதா, என்றென்றும் நிலைத்து நிற்பதா?

நல்வழி இஃது என்று கூறுபவர், கூறிடத் தகுதி படைத்தோர்தான் என்று ஏற்றுக் கொள்வது எங்ஙனம்?

இவைகள், நீங்களும் நானும், எண்ணி எண்ணிப் பார்த்துப் பதில் தேடித் தீரவேண்டிய கேள்விகளிலே சில.

"மலேரியா காய்ச்சல் இது; கொயினா தந்திருக்கிறேன்"—

என்று மருத்துவர் கூறும்போது, இவருக்கு எப்படி இது தெரிந்தது? இவர் கூறுவதை நாம் எங்ஙனம், சரியானது என்று ஏற்றுக்கொள்வது? என்று எவரும் ஐயப்பாட்டுக்கு ஆளாவதில்லை; 'ஆம்' என்கின்றனர். பணமும் தருகின்றனர்.

அஃதேபோல, குறிப்பிட்ட சிறப்பறிவுத் துறைகளிலே ஈடுபட்டிருப்பவர்களின் 'கருத்துகள்' மற்றவர்களால், ஏற்றுக்கொள்ளப்படுகின்றன; மறுப்பார், ஐயறுவார், வழக்காடுவார் அதிகம் இரார்.

ஆனால் எது நல்வழி? என்பதற்கு, இன்னின்னவர் பதிலளிக்கும் தகுதி பெற்றார், பிறர், கேட்டு இசைவு அளிக்கும் கடமையுடையார், என்று அறுதியிட்டுக் கூறிவிடமுடியாது, கூடாது; தேவையுமில்லை.

எனவேதான், எது நல்வழி என்பதற்கு, அளிக்கப்படும் பதில், வழக்கை முடிவுபெறச் செய்வதாக இல்லை, புது வழக்குகளுக்கு வழி செய்கிறது.

இதற்கு முடிவுதான் என்ன?

உண்டு! நல்வழி, எது என்பதைப் பிறர் கூறக் கேட்டு, எண்ணிப் பாராமல் ஏற்றுக்கொள்வதோ, அல்லது மறுத்துப் பேசி மாச்சரியங்களை மலியச் செய்வதோ, உண்மையான பலனைத் தராது.

வெற்றி, பெற்றவர்களையே வீழ்த்திவிடுவதுண்டு, வாதியே பிரதி வாதியாகிவிடும் விசித்திரமும் எழக்கூடும்.

எனவே, 'நல்வழி' என்பதற்குப் பொருள், பிறர் கூறுவதைக் கொண்டும், நாமே எண்ணிப் பார்ப்பதைக் கொண்டும் மட்டுமல்லாமல், நாம் எங்கு செல்ல விரும்புகிறோம்? நமது சமுதாயம் எங்கு செல்ல வேண்டுமென்று நமக்கு உறுதியாகத் தோன்றுகிறது? என்பது பற்றி ஒரு 'முடிவு கண்டு' பிறகு, அந்த இடம் செல்ல, எவ்வழி சிறந்ததோ அது நல்வழி என்று கொள்ள வேண்டும்.

இதிலே இன்னல் அதிகம்; ஆனால் இந்த முறையில் தேர்ச்சி ஏற்பட்டால், இனிமையும் கிடைக்கும்.

இனி, எங்கு செல்ல வேண்டும்? என்பதைத் தகுந்த முறையிலே காண வேண்டுமானால், இன்று எங்கு இருக்கிறோம் என்பதனை அறிந்தாகவேண்டும்; இன்றுள்ள கேடுபாடுகள் யாவை என்பதையும் தெரிந்துகொண்டாக வேண்டும்.

வெயிலில் இருந்தவனுக்கல்லவா, நிழலின் அருமை தெரியும்?

இன்று, நாமும், சமுதாயமும் 'எங்கு' இருந்து வருகிறோம்?

ஜாதியும் அதனாலாய பேதங்களும், மூடநம்பிக்கைகளும் அவைகளால் மூண்டு விடும் நாசங்களும், பொருளாதார பேதங்களும், அவைகளால் கொதித்து எழும் குரோதங்களும், ஆட்சி முறை அலங்கோலங்களும், அவைகளால் ஆர்த்தெழும் ஆவேச உணர்ச்சிகளும், அருவருக்கத்தக்க நடவடிக்கைகளும் — தன்னம்பிக்கையற்ற தன்மையும், பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் போக்கும், சலிப்பும் —குழம்பிக்கிடக்கும் இடத்திலே இருக்கிறோம்.

சேற்றிலுள்ள செந்தாமரையைக் காட்டினால், மலருக்குப் பெருமையே தவிர, சேறு சிறப்படைந்துவிடாது. அதேபோல, இவ்வளவு இழி தன்மைகளுக்குமிடையிலே, காணப்படும் கருத்துத் தெளிவுள்ளோரை, அவர் தம் பேச்சினைக் காட்டிவிடுவது, சமுதாயம் சிறந்த நிலையில் உள்ளது என்று காட்டுவதாகாது.

இந்த 'இழி தன்மைகளை' நீக்கிக்கொண்டு, இவை ஒழிந்த, பண்புகள் நிறைந்த ஓர் 'நல்லிடம்' செல்ல வேண்டும்.

அதற்கான வழிதான், நல்வழி!

காசிக்குச் செல்ல எண்ணிக்கொண்டு, காஞ்சிபுரம், பஸ்ஸில் ஏறிப் பயன் என்ன?

பம்பாய் போகும் வண்டி பளபளப்பாக இருக்கிறது என்பதால், அதிலே ஏறிக்கொண்டு, பாபநாசம் எங்ஙனம் போய்ச் சேர முடியும்?

அதுபோலத்தான், செல்லும் இடம் எது என்று ஏற்படுத்திக்கொள்ளுகிறோமோ, அந்த இடத்துக்குக் கொண்டு செல்லும் பாதை, எதுவோ, அதுதானே நம்மைப் பொறுத்தவரையில் நல்ல பாதை!

இந்த முறையிலே, ஒரு 'பக்குவம்' ஏற்படுத்திக் கொள்ளுங்கள்; பிறகு பாதையும் புரியும்; பயணமும் எளிது.

ஏடெடுத்துப் படித்திடும் போதும், பாடலைக் கேட்டு இன்புறும் வேளையிலும், ஆடலைக் கண்டு அகமகிழும்போதும், படக்காட்சி கண்டு பரவசப்படும் வேளையிலும், ஓவியத்தைக் கண்டு உள்ளத்தில் கிளர்ச்சி எழும்போதும், பேச்சுக் கேட்டுப் பேரின்பம் பெறும்போதும், அழகு கண்டு ஆனந்தமடையும் போதும், இந்த 'ஒரு நோக்கம்' அளவு கோலாகவும், துலாக் கோலாகவும், உரை கல்லாகவும், இருந்திட வேண்டும்; இந்தக் கலை நிகழ்ச்சிகளை ஆக்கித் தருவோருக்கும், இது முழுதும் தேவை.

இந்த வகையிலே 'கலை' கவனிக்கப்பட்டால், அதன் மூலம் செழிப்புக் கிடைக்கும்; அந்தத் துறையும் செழிப்புடன் இருந்திடுவது மட்டுமல்லாமல், சிறப்புடன் திகழும்.

★

> அழுக்கான உடைகளிலோ, ஆடம்பரங்களிலோ, திருநீற்றிலோ, தலை மொட்டை அடித்துக்கொள்வதிலோ, கொம்பு, தப்பட்டை முழங்குவதிலோ பக்தி இல்லை.
> —குரு நானக்

அவனே அவள்!

மாலை!

பகலவன் தன் வேலையை முடிக்கின்ற நேரம்! அணையப்போகும விளக்கு ஒளிவிட்டுப் பிரகாசிப்பது போல் அந்திவானம் அழகுடன் காட்சி அளித்தது. இசையுடன் ஓசை கிளப்பியது ஆற்றில் ஓடும் நீர். ஆற்றில் உள்ள மீன்கள் நீர் மட்டத்திற்கு வந்து அந்திவான அழகை இரசித்துக்கொண்டிருந்தன! உறுமீன் வருமளவும் வாடியிருந்த கொக்கும், வந்திருந்த மீன்களைப் பார்க்காமல் அந்திவான அழகை இரசித்துக்கொண்டிருந்த நேரம்!

ஆற்றில் நீராடிவிட்டு, அவிழ்ந்த அளகாபாரம் முதுகில் புரள, பச்சைப் புல் பாதத்தைக் குத்தும் மெய்வருத்தம் பாராமல் பூ தொடுத்துக்கொண்டிருந்தாள், அந்நாட்டு இளவரசி பூங்கொடி. தேனை உண்டு கொண்டிருந்த வண்டுகள், மலரை விடுத்து, அவள் கூந்தலில் உள்ள மணத்தை முகர்ந்து கூந்தலைச் சுற்றிவந்து, இன்பகீதம் பாடி, வண்டுமனம் என்று உலகத்தார் சொல்வது உண்மை, உண்மை எனப் பறைசாற்றின. ஓசைகேட்டு நிமிர்ந்து பார்த்த பூங்கொடி கண்டது, கட்டழகன் ஒருவனை.

தலைவன் தன்னைநோக்குவதைக் கண்ட தலைவி, தன் தலையைத் தாழ்த்தி நிலம் நோக்கினள் எனும் வள்ளுவர் வாய்மொழி அங்கு செய்கையானது. அவனும் பேசவில்லை, அவளும் பேசவில்லை. தவறு, தவறு! அவர்களால் பேசமுடியவில்லை.

அ. பரிமளம்

அந்தக் காளையும் சென்றுவிட்டான். அவளுக்கோ கன்னிப்பருவம். கண்டதோ கட்டழகனை. அவள் மனதில்......?

கன்னியின் மனத்தில் பதிந்த அந்தக் காளையின் உருவத்தைப் படமாக எழுதிவிட்டாள் அந்தக் கலை அரசி.

தோழி! எனக் கூப்பிட்டாள்; கனிமரச் சோலை அதிரவில்லை; ஆனால் அந்தச் சொல், சோலை முழுவதும் எதிரொலித்தது. அந்திவானத்து அழகு மறைந்து இருள்சூழ ஆரம்பித்ததும், இன்ப மயக்கத்தில் இருந்த மீன்களும், கொக்கும் இவள் குரல்கேட்டு விழிப்புற்றன.

நிலவு வானில் எழும்பியது. பூங்கொடி தலை நிமிர்ந்து பார்த்தாள். நிலவுப் பெண் "நானல்ல உன் தோழி! அதோ வருகிறாள் அமிர்தம்" எனச் சொல்லாமல் சொல்லிற்று.

"அழைத்தீர்களா இளவரசி"

"இல்லையடி!...... பறந்துவரச் சொன்னேன்".

"என்ன அவ்வளவு அவசரம்" எனக் கேட்டுக் கொண்டே பூங்கொடியின் பட்டுக் கைகளுக்குள் சிறைபட்டிருக்கும் அந்தச் சிங்காரனின் உருவப் படத்தைப் பார்த்தாள்.

"யாரம்மா இவர்"

"அதைக் கேட்கத்தான் உன்னை அழைத்தேன்"

"நீங்கள்தான் இதயச் சிறையில் பூட்டிவிட்டீர்களே"

"அமிர்தம், அவரின் உள்ளம் மட்டும்தான் என் இதயச் சிறையில் இருக்கிறது. அறிந்து வாடி இவர் யாரென்று?"

"தோழிகளின் வேலையே இதுதானம்மா"

இருவரும் சிரித்தனர்.

○ ○ ○

நிலவுப் பெண் இதுவரை ஐந்து, ஆறுமுறை வான வீதிக்கு வந்து நடைபோட்டுப் போய்விட்டாள். பூங்கொடி பஞ்சணையில் அனலிட்ட புழுப்போல் நெளிந்து கொண்டிருந்தாள், மருத்துவர்கள் வந்து போனபடி இருந்தனர். மருத்துவம் பார்க்கப்பட்டது. மருந்து கொடுக்கப்பட்டது. நோய் தீரவில்லை!! அடுத்து வந்த ஒரு முதிர்ந்த மருத்துவர் தன் அனுபவத்தினால் இது மனநோய் எனக் கூறிச் சென்றுவிட்டார். அரசனும் அரசியும் துடித்தனர் மனநோய் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள!

○ ○ ○

"அமிர்தம்"

"அரசே!"

"பூங்கொடியின் மன நோய்க்குள்ள காரணத்தை நீ அறிந்திருக்கலாம் என நம்புகிறேன்."

"மன்னா, இளவரசி, நந்தவனத்தில் ஒரு கட்டழகனைக் கண்டாள்கள். ஆகையால் இது காதல் நோய் என்கிறேன் நான்" என்று சொல்லிவிட்டாள் அந்தக் காதல் மருத்துவச்சி.

"யார் என்று நாம் கண்டோம், அமிர்தம்?"

"அரசே அவரின் உருவப்படத்தை நான் பார்த்திருக்கிறேன். இன்னும் சில நாட்களில், அவரைப் பற்றி விசாரித்துச் சொல்லுகிறேன்."

மன்னன் மனதிற்கு ஒரு ஆறுதல் ஏற்பட்டது.

○ ○ ○

அமிர்தம், தன் அடுத்த வீட்டுத் தோழி சுந்தரியைக் காண அவள் வீட்டின் உள்ளே சென்றாள். சுந்தரி அங்கு இல்லை. ஆனால்...? அந்த உருவப்படம்! மன்னன் மகளின் மனக்கலக்கத்திற்குக் காரணமான படம் அங்கு மாட்டப்பட்டிருந்தது.

தோழி திகைத்தாள். ஆம், அமிர்தம் திகைத்து நின்றாள். சுந்தரியின் தாயார் அங்கு வந்தார்கள்.

"அம்மா இந்தப்படத்தில் இருப்பவர் யாரம்மா? நம் சுந்தரியின் முகச்சாயல் இருக்கிறதே! அவளின் அண்ணனா தம்பியா?

"ஏம்மா, அவரை உனக்குப் பிடித்திருக்கிறதா?" சுந்தரியின் தாயார் பேச்சில் கேலி கலந்திருந்தது.

"போங்கம்மா......இல்லை, அவர்......"

"அமிர்தம் நீயும் ஏமாந்துவிட்டாயே. இது சுந்தரிக்கு ஆண்வேடம் போட்டு எழுதப்பட்ட படம்."

அமிர்தத்திற்கு வியப்பு மேலிட்டது.

அந்தப் பட்டு மேனியாள் சிட்டெனப் பறந்தாள், பட்டத்து அரசனிடம்—செய்தியைச் சொல்ல.

அரசனுக்கும் வியப்புத் தாங்க முடியவில்லை செய்தி அறிந்ததும்.

அமிர்தாவின் காதில், ஏதோ விடயத்தைச் சொல்லி அனுப்பிவிட்டான் மன்னர் மன்னன்.

அமிர்தம் ஓடிவிட்டாள்.

மன்னன் மனத்திற்குள் சிரித்தான்

காதலின் விசித்திரத்தைக்கண்டு!!

அன்று மாலை, அரசன் பூங்கொடியை அழைத்துக்கொண்டு, மலர்த் தோட்டத்தை அடைந்தான். மன்னன், மகளைத் தனியே விடுத்துச் சென்றுவிட்டான்.

அவளின் வாடிய முகத்தைக் கண்ட இயற்கையும் அவளுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முறையில் அவளுடைய துன்பத்தில் பங்குகொண்டு வாடியது. சோலையின்கண் உள்ள மலர்கள் மணம் பரப்ப மறந்து அவளின் துன்பத்தை நினைந்து வருந்தின; நம்மைப்போன்ற மலர் மேனியாள் என்ற காரணத்தாலோ என்னவோ வண்டுகள் இவளைச் சுற்றிக் கொண்டு இசைபாடின. உன்னால் துன்பமடைந்த எங்கள் காதலியர், எங்களை, மனம் மகிழ்ந்து அழைக்கவில்லை. இதற்குக் காரணம் நீதான் எனக் குற்றப்பத்திரிக்கை படிப்பதுபோல்இருந்தது அவைகளின் ரீங்காரம். பூங்கொடியின் மென்மையான தோள்களின்மேல் யாருடைய கையோ படுவதை அறிந்த பூங்கொடி துள்ளி எழுந்தாள். எதிரே! அவளின் இன்பம்—எதிர்கால மணாளன் தன்கைகளை நீட்டி அவளை அழைத்தான். காந்தத்தால் கவரப்பட்ட இரும்புபோல், அவள் ஓடி அவனை அணைத்துக்கொண்டாள். தந்தையின் சிரிப்பொலி கேட்டு, காதலனின் அணைப்பில் இருந்து விடுபட்டுச் சற்றுத் தள்ளி நின்றுகொண்டாள். 'அப்பா இவர்தான்' என்று அவள் முடிப்பதற்குள், மன்னன் குறுக்கிட்டுப் பேசினான். "பூங்கொடி உன் காதலனின் தலைப்பாகையை கையில் எடம்மா!"

பூங்கொடி தலைப்பாகையைக் கையில் எடுத்தாள். திகைத்தாள்!!

அவள் காதலித்தது ஒரு பெண்ணை என்பது தெரிந்ததும், வெட்கித் தலை குனிந்து நடந்து சென்றாள்.

சுந்தரி தன்னுடைய விசித்திர அனுபவத்தைக் கண்டு பயந்து நடந்து சென்றாள்.

அரசனும், அமிர்தமும் சிரித்தனர்,

இந்தக் காதலைப் பார்த்து!!

★ ★

வேலையில்லாத் திண்டாட்டம்

"கவிஞர் வாணிதாசன்"

வானில் செம்மை வளர்ந்து மலிந்து
காளுறு போலக் காட்சி யளித்தது!
செம்மேட்டு வெள்ளத் தேக்கம் போலவும்,
அம்மேட்டு மருங்கு வயல்வெளி போலவும்,
செங்கடல் திசையெலாம் சீறிப் பாய்ந்து
பொங்கி மோதும் புதுமை போலவும்,
சிந்திய சுடரொளி சிரிப்பால் அழைக்கும்
அந்தி வான அழகு முகில்கள்
புந்தியை மயக்கின; புதுப்புது ஓவியம்
தந்து மறையும் செந்தீத் தொடுவான்
இடையில் மலையின் இடையில் பரிதி
உடைந்த தட்டென ஒளிமங் கியதே!

கடற்கரை யோரம் காற்றுட வந்த
நடைபயில் நிலவுகள் நகரக் கன்னியர்
இடையில் இடையில் எழிலோ டிறுக்கிய
உடையில் உடலில் ஒளிசேர் விழியில்
கடற்கரை மணலில் கரைதவழ் அலையில்
படரும் இருளொடு படரும் செம்மை,
செக்கர் சிந்திய செவ்வொளிச் சிறுசுடர்
இக்கரை காட்டும் எழில்மது மாந்தி
இருந்தான் 'இளைஞன்'; மனம்எங்கோ இருந்தது.
பெருவெளி வானப் பிறையும் மீனும்
பூந்தாழை மடலும் பித்தளைப் பொடியுமாம்!
சீந்துவா ரற்றுக் கிடப்பதைப் போலக்
கிடந்தான்; சோர்ந்து கிடந்தான் இளைஞன்.

○

படர்ந்தோடி ஆடும் பைங்கிளிச் சிறுரும்
பின்னல் அசையப் பேசிச் சிரிக்கும்
கன்னல் மொழியார் கடைக்கண் தேனும்
எங்கோ அலறும் வானொலி இசையும்
பொங்கு கடலின் புதுத்தமிழ்ப் பாட்டும்
வெறுப்பே தந்தன. விரிவான் பரப்புக்
கறுத்தது; மெல்லக் காரிருள் படர்ந்ததே.

எழுந்தான்; நடந்தான்; ஏதேதோ எண்ணினன்
தொழுநோய்ப் பசியின் தொல்லை தாங்காது
காற்றுடு வோர்முன் கையை நீட்ட
ஆற்றளுகி அமர்ந்தான் ஓர்பால்.
வறுமையா தெரியும் வயிற்றுப் பசிக்கு?
பொறுமையாய் இருவெனப் புகன்றால் கேட்குமா?
ஒருநா ளல்ல இருநாள் பட்டினி;
பொருளும் இல்லை; புகலிடம் இல்லை;
ஏங்கித் தவித்தான்; எதிர்ப்படு வோர்முன்
தாங்காப் பசியின் தகைமை கூறினன்.
பரிகசச் சிரிப்பே பரிசாய்க் கிடைத்ததே.

எரியும் வயிற்றை இறுக்கவா முடியும்?
நின்றான்; ஏங்கினன்; நீள்மூச் செறிந்தான்.
சென்று திருடெனச் செப்பிய துள்ளம்
நன்றல இச்செயல் என்றது நுழைபுலம்
நின்றான்; பசியே வென்றது. தொலைவில்
வருவான் ஒருவனின் வழியினைப் பார்த்து
தெருவின் முடக்கில் இருளில் மறைந்து
சுண்டெலி தொடரும் பூனையைப் போல
ஒண்டி இருந்தான் ஒதுக்கிடம் பார்த்தே.

"திருடன்! திருடன்!" சுவர்எதிர் ஒலிக்க
அருகில் வாழ்நகர் அங்குள மக்கள்
ஒருவ ரேனும் உடன்வர வில்லை.
தெருவில் நிகழும் சிறுசண் டைக்கே
வருவதும் பார்ப்பதும் வாடிக்கை இல்லை;
பட்டின வீரப் பண்புஇப் பண்பாம்!

○

பட்டினம் பார்க்க 'வந்தவன்' திருடனை
எட்டிப் பிடித்தே இரண்டறை கொடுத்தே
கையும் களவுமாய்க் காரிருள் இல்லா
மைய்ய விளக்கின் மருங்கில் வந்தான்.

இருவரும் விளக்கில் ஒருவரை ஒருவர்
அருகில் பார்த்தனர்: "அப்பா சாமியா"?
என்றான் வந்தவன் இருவரும் திகைத்தனர்.

"பொன்னு என்னை மன்னித்து விடடா;
என்நிலை வறுமை என்செய்கோ நான்?
ஒன்றிய நட்போ(டு) உயர்நிலைப் பள்ளியில்
படித்து முடித்தோம்; பட்டமும் பெற்றோம்;
நடுத்தரக் குடும்ப நலிவைப் போக்க
அலைந்தேன் பட்டினம் முழுமையும் அலைந்தேன்;
தொலைந்தது கைப்பொருள் தோழா" என்றே
நடந்ததை அப்பா சாமி நவின்றான்.
அடங்காப் பசிவந் தவர்களை அலைக்கச்
சென்றனர் இருவரும் சிற்றூண் அருந்த
"இன்றைய செயல்ஒன் றென்றிட மில்லை;
நாளைக் கெதுவோ? நான்சொல மாட்டேன்;
தோளை, நம்பிடும் தொழில்பல கற்றும்
வாழும் நிலையோ வகுத்துள தரசியல்?
சூழும் பஞ்சம் தொலைவ—தெந்நாளோ?
வாழ்க்கை உயர வழிசெயாப் படிப்புப்
பாழா கட்டும்; படித்தது போதும்"
என்று நொந்தே இரவெலாம் பேசிச்
சென்றனர் இருவரும் வெவ்வேறு திசையில்.

○

கப்பிய குளிரில் கந்தையு மின்றி
அப்பா சாமி அலைந்து திரிந்து
வேலை தேடி வெறுங்கை யாகிச்
சோலை இடையில் தோன்றும் மிருகச்
சாலை வந்து தன்னிலை கூறினன்.
காலையில் செத்த, சாலைக் குரங்கின்
கவலையில் இருந்த காட்சிச் சாலையோர்
கவலை போக்கும் வழியினைக் கண்டார்!!

"எந்தத் தொழிலும் இழிதொழில் அல்ல!
இந்தக் குரங்கின் தோலை ஏற்று
சிந்தை களிக்கச் செய்வாய் ஆனால்
வந்தது புதிய குரங்கென மகிழ்வோம்,—
கூலியும் கூடுதல்; கூறெ"னக் கேட்டார்.
வேலை இலாதான் வேறென்ன செய்வான்?
குரைத்துப் பெற்ற செல்வம் குரைக்குமா?
உரைத்தான் இணக்கம் உயிர்வாழ லானான்.

○

மிருகக் காட்சிச் சாலையில் கூட்டம்
பெருகி இருந்தது; பேரூர் வாழ்நர்
பந்தி பந்தியாய் வந்து குவிந்தனர்.
தொந்தி பருத்த மந்திக் குரங்கின்
கூண்டிற் கருகில் கூண்டொன் றிருந்தது.
நீண்ட வெளியில் கம்பிகள் நிறுத்தி
வேண்டும் போழ்து விளையாட் டயர
ஆண்டு சமைத்த அழகிய கூண்டுள்
ஒருபுறம் புலியொன் றுலவித் திரியும்;
ஒருபுறம் மனிதக் குரங்கொன் றிருக்கும்.

குரங்கைப் பற்றிக் கூறுர் இல்லை;
வருவோர்க் கெல்லாம் வணக்கம் செய்யும்;
வாழைப் பழமும் வட்ட முறுக்கும்
கூழைவால் குரங்கு கொடுஎனக் கேட்கும்,
ஓடும்; ஆடும்; உயர்மரம் ஏறிக்
கூடினர் களிக்கக் குப்புற வீழும்.

ஒருநாள் குரங்கின் ஒப்பிலா ஆடலை
வருவோர் கண்டே வாழ்த்துரை நல்கினர்;
பழம்பல தந்தனர்; பண்ணியம் தந்தனர்;
அழகிய குரங்கின் ஆடலை வியந்தனர்.
மீண்டும் ஏறித் தாண்டிக் குதிக்கையில்
கூண்டில் வாழும் கொல்புலி அருகில்
வீரிட் டலறி விழுந்தது குரங்கும்.
கூர்நகப் புலியும் கொல்லப் பாய்ந்து
குப்புறக் கிடக்கும் குரங்கின் காதில்
"அப்பா சாமி! அஞ்சேல்!" என்று
புலித்தோல் போர்த்த பொன்னன் உரைத்தான்.
ஒலித்தது சிரிப்பொலி ஒலித்தது நீடே!!

இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கைக்கு மேற்கு திசையில், சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன், நடந்ததாகப் பேசப்பட்டு வரும் ஒரு காதல் கதையின் சாரம் இது, சுருக்கித் தரப்பட்டிருக்கிறது.

ஊரின் நடுவிலே உள்ள சாவடிப் பொட்டலில் பாவைக் கூத்து நடந்துகொண்டிருந்தது. தெற்குச் சீமையில் பேரும் புகழும் பெற்று விளங்கிய அந்த வேடிக்கையைப் பார்க்க, கிராமத்து மக்கள் அனைவருமே மைதானத்திற்கு வந்திருந்தார்கள். வெளியிலே வரக்கூடாத பருவமடைந்த பெண்கள்கூடத் தலையிலே முக்காடிட்டுக்கொண்டு கூத்தை இரசித்தார்கள். நடந்தது சந்திரமதி கதை. எங்கேயுமே சந்திரமதி நாடகத்திற்கு ஆண்கள் அதிகம் வருவதில்லை. பெண்கள்தான் முட்டி அடித்துக் கொண்டு மாலையிலேயே கொட்டகைக்கு முன்னால் பாயை விரித்து வைப்பார்கள்—இடம் பிடித்துக் கொள்வதற்காக! அன்றைய தினம் திருப்பாச்சேத்திக் கிராமத்திலேயும் பெண்கள்தான் அதிகம் வந்திருந்தார்கள்.

○

தமிழர் நெஞ்சு இரக்கமுள்ளது. எந்த அளவு காதலை மதிக்கிறதோ, அந்த அளவுக்கு சோகத்தைக் கண்டு கண் கலங்கி நிற்கிறது. சந்திரமதியை, யார், எந்த-நாட்டுக்காரி என்று அவர்கள் பார்ப்பதில்லை. அவளுக்குத் துயர் என்றால் தங்கள் வீட்டில் தீப்பற்றிக்கொண்டதாகவே தமிழ்ப் பெண்கள் நினைக்கிறார்கள்; அழுகிறார்கள்.

வேந்தன் மனைவியாக வாய்த்த சந்திரமதி, வேற்றாள் ஒருவனிடம் அடிமையாகி வேலைக்காரியாக வந்து வீடு கூட்டும் கட்டம் நடந்துகொண்டிருக்கிறது. மைதானத்தின் பெருமூச்சு மேக மண்டலத்தைக் கலக்கிறது. அப்போது கூட்டத்தின் நடுவே இருந்து ஒரு வாலிபன்—இரும்புக் குண்டைப்போல் உடற்கட்டுடையவன் எழுந்து நடந்துகொண்டிருந்தான். அவனைத் தொடர்ந்து ஒரு பெண் நடந்தாள். அவளுக்கு அவன் வயதுதானிருக்கும். இருவருக்கும் நல்ல பொருத்தம், அவர்களின் தோற்றம் அகநானூற்றுக் காதலர்களையே நினைவூட்டியது. ஆடை அணிகலன்கள் அதிகமில்லை. கழுத்தில் கருமணி மாலை. அதில் ஒரு பொன்வில்லை. காதுகளில் பூடி—அது ஒருவித அணி. கைகளில் ஒற்றைக் காப்பு. வாரிக் கலைத்த தலை. மல்லிகைப் பூ சொருகியிருந்தாள்.

அவன் சாய வேட்டிகட்டி இருந்தான். இடது கையில் பவளவேர்க்காப்பு அணிந்திருந்தான். இடுப்பில் ஒரு பிச்சுவா கத்தி, தொங்கியது. தலையில் எண்ணெய் சத்து இருந்தது; ஆனால் வாரிவிடப்படவில்லை. அவனுக்கு அந்தச் சிகை அலங்காரத்தில் பற்று இருப்பதாகவே தெரியவில்லை, உழுந்துக்கு எண்ணெய் தடவி வெயிலிலே உலரவைத்தால் எப்படி மின்னுமோ அப்படி மின்னியது அவன் மேனி, அவரைக்காய் அளவு படர்ந்த — அழகிய கருமீசை அவனுடைய கம்பீரத்தைப் பறைசாற்றியது.

○

சந்திரமதியின் துக்கத்தில் பங்கு கொண்டு கேட்டுக் கொண்டிருந்த பொது மக்களின் கவனம், இவர்கள் பக்கம் திரும்பியது, எல்லோரும் இவர்கள் இருவரைப்பற்றியே ஒருகண நேரம் பேசினார்கள்.

அவளுக்கு வெட்கம்—வாயை மூடிக்கொண்டாள். அவளுடைய நடையுடை பாவனையெல்லாம் அந்த வாலிபன் எது சொன்னாலும் கேட்கும் தோரணையில் இருந்தது.

அவர்கள், கூட்டத்தைத் தாண்டினார்கள். ஊரைத் தாண்டினார்கள். அடுத்து கண்மாய்க் கரை! வீடு அந்தபக்கம்தானிருந்தது! அவன் வேகமாக நடந்தான். அவள் ஓடினாள். அவனைத் தொடர்ந்து அவளால் நடக்க முடியுமா?

கரையிலே நின்றுகொண்டு கிராமத்தைப் பார்த்தான். லோகிதாசனுக்குப் பாம்பு கடிக்கும் கட்டம் நடந்துகொண்டிருந்தது—கூத்தில்!

"அத்தான் இன்னிக்கி இருட்டு அதிகம்! பாதையே தெரியல்லையே!"

"ஆமாம், இருட்டு அதிகம்தான். பழகிப்போன எனக்கே பாதை மட்டுப்படவில்லை!"

"பாத்துப் போங்க! நாளைக்கி வேலை ரொம்ப இருக்குது! படுத்துக்கிட்டா, அவ்வளவுதான்! கழுத்துக்குள்ளே சிரிக்கிறவங்க கைதட்டிச் சிரிப்பாங்க!"

"நீ ஒன்னு! முத்தாயி, ஒன்னையே நெனைச்சேன்; நீ கெடைச்சுட்டே! இனி நான் செத்தா என்ன!"

"அத்தான்!"—என்று கதறினாள் முத்தாயி.

வேலியோரத்தில் பதுங்கியிருந்த இருவர் திடீரென்று வாலிபன்மீது பாய்ந்து தாக்கினார்கள். அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை.

"டேய் செந்தட்டி! நீயும் ஒரு ஆம்பிளைதானா? ஈரல் செத்தவனே! ஒழிஞ்சிருந்தா வெட்டுறாய்? ஒத்தைக்கு ஒத்தை வந்து பாருடா? அப்போ தெரியும்!" என்று அந்த வாலிபன் சத்தம் போட்டுக்கொண்டே சண்டை போட்டான். கல்லை உடைப்பதுபோல் மூவரும் பல்லைக் கடித்துக்கொண்டு யுத்தம் புரிந்தார்கள். ஆனால் அந்தச் சண்டை அவ்வளவு விரைவில் முடிந்து விடுமென்று அவள் நினைக்கவில்லை. தாக்கியவர்கள் இருவரும் ஓடிவிட்டார்கள். வாலிபன் மட்டும் கீழே கிடந்தான். முத்தாயி ஓடிப்போய் அவனைக் கட்டிப் பிடித்தாள். அவள் உடம்பெல்லாம் ஈரப் பசை தட்டுப்பட்டது.

'ஐயோ! இரத்தம்!'—என்று புலம்பினாள். முகத்தைப் பார்ப்பதற்கு அவன் உடலைப் புரட்டினாள். உடலைத்தான் அவளால் புரட்ட முடிந்தது. முகத்தைப் பார்க்க முடியவில்லை—ஆமாம், தலையையே காணோம். அவன் பிணமாகக் கிடந்தான்.

2

திருப்பாச்சேத்தி என்பது சிற்றூர்; இராமனாதபுரம் மாவட்டத்தில் மானாமதுரைக்கு அருகாமையில் இருக்கிறது. வாள் வீச்சுக்காரர்கள், சிலம்பாட்டக்காரர்கள் நிறைந்த வட்டாரம் அது. அந்தப் பகுதியிலேதான் இன்றும் பண்டைத் தமிழகத்தின் வாடையைக் காணலாம். ஆடவர்கள் கொண்டை போட்டிருப்பார்கள். வைதிகக் கொண்டையல்ல! அன்றையத் தமிழர் வைத்திருந்த வீரமுடி! மீசையில்லாத ஆடவரைப் பார்க்கமுடியாது. எல்லோருமே கொத்து மீசைக்காரர்கள்தான். பாளையக்காரர் காலத்திய வாட்ட சாட்டமான உருவங்களைப்போல் இருப்பார்கள். இன்றைக்கும் அப்படித்தான்!

செந்தட்டிக் காளை என்பவன் செல்வாக்குப் பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவன். அவன் நான்கைந்து வெற்றிலைக் கொடிக்கால்களுக்குச் சொந்தக்காரனாக இருந்தான். அதை வைத்து, பல குடும்பங்களுக்கு அவன் வேலை கொடுத்துக்கொண்டிருந்தான். இத்தனைக்கும் அவன் இருபத்தைந்து வயது இளைஞன் தான. திருமணம்கூட ஆகவில்லை.

அறிவாளி ஒரு மனிதனை, நீ எந்த இனத்தான், எந்த ஜாதியான் என்று கேட்க மாட்டார். நீ செய்திருப்பது என்ன என்றே கேட்பார்.

முத்தாயி அவன் தங்கை. ஒரே தங்கை, அடுப்புக் கரியைக் காட்டிலும் அவள் கருப்பு. ஆனால் கடைந்தெடுத்த உடற்கட்டு. எல்லோரும் அவளை நினைத்தார்கள். அவர்களில் சிலர் அவளைப்பற்றிப் பேசித் தீர்த்துக்கொண்டார்கள். ஆனால் யாரும் அவளை நெருங்கவில்லை. பாதிப் பேர், அவள் எரிந்து விழுவாளே, ஏசித் தீர்ப்பாளே என்பதற்காக அஞ்சினார்கள். மிகுதிப் பேர் அவள் அண்ணன் செந்தட்டிக் காளைக்குப் பயந்தார்கள். சேம்பரலினும் குடையும்போல், சர்ச்சிலும் சுருட்டும்போல் எந்த நேரமும் வெட்டு அரிவாளை அல்லவா அவன் கையிலேயே வைத்துக்கொண்டிருந்தான்!

○

காரம் தொனிக்கிறது; திறமைசாலியின பசசுமல சர்வாதிகாரம் இழையோடுகிறது; அழகியின் பார்வையில் அலட்சியம் நர்த்தனம் புரிகிறது. முத்தாயிக்கு, தான் கருப்புத்தான் என்று அவளுக்குத் தெரியும்; தன்னைக் காட்டிலும் சிவப்பானவர்கள் அவளோடு தண்ணீர் எடுக்க வருவதையும் அவள் உணர்வாள். அவர்களுக்கெல்லாம் இல்லாத 'ரப்பும், 'அரங்கத்தனமும்' முத்தாயிடம் இருந்தது என்றால், வாலிபர்கள் மத்தியில் அவளுக்கொரு 'மார்க்கெட்' இருப்பதை அவள் நன்கு உணர்ந்திருக்கிறாள் என்றுதானே பொருள்.

பலபேர் ஒருத்திமீது குறிவைப்பதைக் கதைகளில் படிக்கிறோம்; நாடகங்களில் பார்க்கிறோம். திரையிலும் திரும்பத் திரும்ப அந்தக் காட்சிகளே வருகின்றன. ஆனால் பல பெண்கள் ஒரு ஆடவன் மேல் குறிவைப்பதுண்டா? உண்டு; யாரும் அதை மிகைப்படுத்துவதில்லை. திருப்பாச்சேத்தியில் அது வெளிப்படையாகத் தெரிந்தது. முத்தாயியைப் பலர் விரும்பினார்கள். அதற்காக 'கர்ணம்' போட்டார்கள்; காசைக் காட்டினார்கள்; அதைப்போல் பல முத்தாயிகள் ஒருவனுக்காகக் காத்துக் கிடந்தார்கள். **கருமுயல்** அவன பெயர்! கீர்த்திபெற்ற சிலம்பாட்டக்காரன். அவன்தான் உண்மையான சிலம்புச் செல்வன். பெண்ணுக்கு எவ்வளவு போட்டியிருககிறதோ, அந்த அளவுக்கு ஒரு ஆணுக்கும இருக்கத்தான் செய்கிறது ஆடவர்கள் காதலை - பெண்ணாசையை — தற்பெருமையாகக் கருதுகிறாகள் — பறையடிக்கிறார்கள். பெண்கள் அப்படியல்ல; காதலைத் தங்கள் வாழ்க்கையோடு பிணைத்து விடுகிறார்கள்—இரகசியமாகவே வைத்துக் கொள்ளுகிறார்கள். மனம், பருவம், எண்ணங்கள்—இவை இருபாலாருக்கும் ஒன்றுதானே! ஆடவர்கள் சுரைக்கூடுகள்—பெண்கள் நிறைகுடங்கள்!!

○

அண்ணன் வரும்வரை அவள் சாப்பிடமாட்டாள். காத்திருப்பாள். பத்து மணிக்குமேல் செந்தட்டிக் காளை வீட்டுக்கு வருவான். அவனுக்காகச் சாப்பாடு பரிமாறி இருப்பதையும், அதற்குப் பக்கத்தில் முத்தாயி தூங்கிக்கொண்டிருப்பதையும் பார்ப்பான். பாசம் வளர்ந்தது. அவளை எப்படியும் வைரஊசிக்குக் கொடுத்துவிட வேண்டும் என்று எண்ணியிருந்த ஆசையை ஊர்ஜிதப்படுத்தி விட்டான். இந்த எண்ணத்தை அவளிடம் எப்படியாவது தெரிவித்துவிட அவன் பலதடவை முயற்சி செய்தான். முடியவில்லை. தமிழினத்திற்கும், பிற இனத்திற்கும் இங்கேதான் விரிந்த வேறுபாடு உண்டு. எதை எப்படிச் சொல்லவேண்டுமோ, யார் யாரிடம் கூறவேண்டுமோ அதைத்தான் தமிழர்கள் சொல்லுவார்கள். முத்தாயியை அதிகாரம் செய்வதற்கு உரிமை படைத்தவன்தான் செந்தட்டி; எத்தனையோ காரியங்களுக்கு அவளை மிரட்டியிருக்கிறான், பயம் காட்டியிருக்கிறான், அடிக்கக்கூடக் கையை ஓங்கியிருக்கிறான்; ஆனால் அவளுடைய மணவினைத் தகவலை

அவளிடம் நேரடியாகச் சொல்லத் தயங்கினுன். பயம் அல்ல! பண்பாடு அத்தகையது.

ஒருநாள் செந்தட்டி திடீரென்று ஒரு கட்டளை பிறப்பித்தான்.

"முத்தாயி, இன்னக்கி நீ கொடிக்காலுக்குப் போய்ப் படுத்துக்க. ஆடு மாடுகள் அழிச்சிடப் போகுது!"

"ஒத்தையிலேயா?"

"வைர ஊசியை வரச்சொல்லியிருக்கேன்"

"உஹு-ம்! பயமாயிருக்கு! நா மாட்டேன்."

"பயமா இருக்கா? ஊரிலே இருக்கிற பயலுகளெல்லாம் ஒன்னைப் பேய், பிசாசுங்கிறுனுக, நீ என்னடான்னு, பயமா இருக்குதுங்கிறியே"—என்றுன் செந்தட்டி கொஞ்சம் குறும்பாக!

செந்தட்டியின் கட்டளை, அவளுக்குப் பயத்தைக் காட்டிலும், கவலையைத்தான் அதிகமாகத் தந்தது. ஏனென்றுல், அன்று இரவு பன்னிரண்டு மணி அளவில் ஆற்றுப் படுகையில் கருமுயலைச் சந்திப்பதாக அவள் அவனுக்கு அறிவித்திருந்தாள்!

மனித இனம் தனக்கு விருப்பமான முடிவுக்கு எதிராக எத்தகைய பயங்கரக்கட்டளைகளையும் மதிப்பதில்லை. அதிலும் பெண்கள் பொருட்படுத்தவே மாட்டார்கள். போட்ட திட்டத்தை நிறைவேற்றுவதில்—ஆடவரிலும் பெண்கள் கைதேர்ந்தவர்கள். காதலர்களைச் சந்திப்பதில், வெள்ளைக்காரர்களைக் காட்டிலும் நேரத்தைத் துல்லிதமாகக் கையாளுவார்கள்; காதலன் பேச்சின் பல்பொருள் விளக்கத்தை அவர்களிடம் கேட்டால் சுவை மிகுந்த விரிவுரையாளர்களின் சொல்லோவியங்கள்கூடக் கசக்குமாம்—அனுபவசாலிகள் கூறுகிருர்கள்!

○

தலையிலே முக்காடிட்டுக்கொண்டு ஒற்றையடிப் பாதை வழியாக முத்தாயி ஆற்றங்கரைக்குப் போனுள். பனி கொட்டியது. அவள் கால் விரலில் போட்டிருந்த வெள்ளித் தண்டை, அந்த அமைதியான வேளையில் ஒரு இனிய நாதத்தை ஒலித்துக் கொண்டிருந்தது. காரிருள் வேளையில் காட்டுப் பாதையில் போகும்போது கருகல் வாடை வீசும். பாம்பு அடை காத்திருந்தால்தான் அப்படி மணக்கும் என்று கிராமத்தார் சொல்லுவர். முத்தாயிக்கு அது தெரியும். ஆனுலும் குறிப்பிட்ட இடத்தில் வீசிய அந்த வாடையை அவள் பொருட்படுத்தவில்லை. தாழம் புதருக்குப் பக்கத்தில் அவள் உட்கார்ந்திருந்தாள். அந்த இடம் பயங்கரமான இடம். ஐந்தாண்டுகளுக்கு முன அந்த இடத்திலே தான் உள்ளூர் நாட்டாண்மைக்காரர் மகள் தற்கொலை செய்துகொண்டாள். அதனுல் அந்த இடத்தைப் பேய் பிடித்த புதர் என்று அழைத்தார்கள்.

நடுநிசி! கருமுயல் தலையிலே சிகப்புத் துண்டு கட்டிக்கொண்டு அங்கு வந்தான். முதலிலே என்ன பேசுவது என்று இருவருக்கும் யோசனை! அவளுக்கு வெட்கம்! அவனுக்கோ பயம்! அவள் பொல்லாதவள் என்று பெயர் பெற்றவளாயிற்றே! அறிமுகமில்லாதவர்களுக்கு எழுதும்கடிதத்தைப் போல் உரையாடல் தொடங்கியது.

"வந்து வெகுநேரமாகிவிட்டதோ?"

"உ.........ம்!"

"வீட்டில் கோபித்துக்கொள்ள மாட்டார்களா?"

"துணிஞ்சாச்சு! வருவதை ஏத்துக்கத்தானே வேணும்!"

"இப்போது உன் அண்ணன் செந்தட்டி வந்தால் என்ன செய்வாய்?"

"நான் செய்வதிருக்கட்டும்! நீங்கள் என்ன செய்வீர்கள்?"

"எனக்கென்ன பயம்? உன் வீட்டுக்கு வந்தால் அவன் கேட்கலாம். இது ஆற்றங்கரை! செந்தட்டிக்கு அதிகாரமில்லை!"

"அடேயப்பா! ஒரே முறுக்கா முறுக்குறீங்களே!"—இப்போதுதான் அவள் வாழ்நாளில் ஒரு ஆடவனிடத்தில் மனம் விட்டுப் பேசுகிருள்.

கருமுயல், உலகம் தன் கையில் சிக்கிவிட்டதாகவே நினைத்தான். திருப்பாச்சேத்தியில் விக்டோரியா மகாராணியைப்போல் யாருக்கும் பணியாமல் எவர் சொல்லையும் கேட்காமல் நடமாடியவள், தன்னைப் பார்க்கவந்திருக்கிருள், தன் சொல்லைக் கேட்கத் தயாராக இருக்கிருள் என்றுல், மகிழாதிருப்பானு?

அன்று முதல் காலைக் கதிரவன் அவனுக்குப் பணியாளாகத் தெரிந்தான். சந்திரிகை பணிப் பெண்ணுனுள். "நாட்டாண்மைக்காரர் மகன் இருக்கிருன், அம்பலகாரர் பேரன் இருக்கிருன், அவர்களையெல்லாம் விரும்பாமல் என்னை விரும்பினுள் என்றுல்—பெண்மைக்கு எதில்தான் அன்பு சுரக்கிறது"—இப்படித் தன்னை அவன் பல முறை கேட்டுக்கொண்டிருக்கிருன். அவள் மனம் அவனுக்குப் புதிராகவேபட்டது.

அன்றிலிருந்து அவள் வரச்சொன்ன இடத்திற்குப் போனுன்; சந்திக்கச் சொன்ன இடத்தில் சந்தித்தான்.

"முத்தாயி!"

"ஊ...ம்!"—குரலிலே கர்வமும், குழைவும் பின்னிக்கிடந்தன. ஆண்—பெண் இருவருக்குமுள்ள உறவு, காதல் நிலையில் இருக்கும்வரை பெண்தான் எசமானியாக இருக்கிருள். காதல்கடமையாகிக் கழுத்திலே தாலி ஏறிய பிறகு, அந்த எசமானி வேலைக்காரியாகிவிடுகிருள். இப்போது எசமானியாக இருந்தாள் முத்தாயி.

நாம் எத்தனை நாளைக்கு இப்படி இருட்டு வேளையில் சந்தித்துக்கொண்டிருப்பது?"

"காலம் கனியும் வரை!"

"நம்பிக்கையில்லை முத்தாயி! செந்தட்டியின் மனம் ஒருபோதும் கரையாது! அவன் மதயானை. கர்வம் வைத்தால் எத்தனை யுகம் தாண்டினுலும் பலி வாங்காமல் விடமாட்டானே!"

"அப்படியின்னு என்னை மறந்திடுங்க!"

"உஹு-ம்! அதுக்கா சொல்கிறேன்! நிலைமையைச் சொன்னேன். புரிந்துகொள்."

○

கோடை காலம் முழுவதும் அவர்கள் சந்திப்பு இரகசியமாகவே இருந்தது. மாந்தோப்பு, கருவேலங்காடு, கண்மாய்க்கரை — இவைகளே அவர்களுக்கு உத்தியா நந்தவனங்களாகவும் உப்பரிகைகளாகவும் மாறின.

பனிக் காலம் ஆரம்பமாகியது. உழவுத் தொழில் மும்முரமாக நடைபெறத்தொடங்கிற்று. முத்தாயி பெரும்பாலும் வீட்டில் இருப்பதில்லை. வயற்காட்டிலேயே திரிந்தாள். கருமுயலைச் சந்திப்பதற்கு அதுவே அவளுக்கு பெரும் வாய்ப்பாக இருந்தது.

○

ஒரு நாள்!

செந்தட்டி முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக்கொண்டிருந்தான். முத்தாயி அவன் முகத்தைப் பார்க்கவே பயந்தாள். குனிந்தபடியே வீட்டுக்குள் நடமாடினுள்.

"முத்தாயி!"

"என்ன!"

"செந்தட்டி ஜெயிலுக்குப் போகப் பயப்படுறவனில்லே! ......தெரியாதா உனக்கு?"

"என்னண்ணே சொல்றீங்க!...புரியல்லியே!"

முன்னர் எந்த மனிதனும் தன்னுடைய உழைப்பினுலேயே முன்னுக்கு வருவது வழக்கம். ஒருவருடைய தயவையும் அவன் எதிர்பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதில்லை. இந்தக்காலத்திலோ, நல்ல செல்வாக்கு உள்ளவர் எவரையேனும் தொத்திக் கொண்டு மேலேற வேண்டியிருக்கிறது. அங்ஙனம் தங்களுக்கு சிபாரிசு செய்யக்கூடியவர் எவரேனும் ஒருவர் கிடைத்தால் அதுவே பெரிய அதிர்ஷ்டமாகக் கருதப்படுகிறது.

"புரியாது உனக்கு! புரியவைக்கிறேன்" என்று அடக்கத்தோடு சொல்லிவிட்டு வெளியே போய் விட்டான்.

அன்றைய தினம்தான் கிராமத்திலே பாவைக் கூத்து. மழை முகத்திற்காக ஊரார் ஏற்பாடு செய்திருந்தார்கள். மாரியம்மனுக்குப் பாவைக் கூத்து என்றுல் அளவுகடந்த பிரியமாம்! அப்படி ஒரு நாளைக்கு கூத்தை ஏற்பாடு செய்தால் அந்த வருஷம் பஞ்சம் வராதாம்! தென்மாவட்டங்களில் இப்படி ஒரு நம்பிக்கை.

முத்தாயியும் கூத்துப்பார்க்க வந்திருந்தாள். கருமுயலும் வந்திருந்தான். வழக்கம்போல் அவர்கள் சந்திக்கும் நேரம் வந்தது. அவன் எழுந்தான். அதைப் பார்த்துக்கொண்டிருந்த அவளும் எழுந்தாள். பின் தொடர்ந்தாள். தாழம்புதரை நோக்கி நடந்தார்கள். அப்போதுதான் கருமுயல் கொல்லப்பட்டது.

○

3

கருமுயல் கொலை வழக்கு — அந்த வட்டாரத்தில் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது. மதுரையில் வழக்கு நடைபெற்றது.

முத்தாயி வாக்குமூலம் தெரிவிக்கும் அன்று, மதுரை நீதிமன்றத்தில் கூட்டம் வழிந்தோடியது.

கண்ணீரும் கம்பலையுமாக நீதிமன்றத்திற்கு வந்திருந்தாள் முத்தாயி. அவள் அதிகம் பேசவில்லை.

என் மச்சான் கடைசியாகப் பேசியது இது: "டேய் செந்தட்டி! நீயும் ஒரு ஆம்பிளைதானு? ஈரல் செத்தவனே! ஒழிஞ்சிருந்தா வெட்டுருய்? ஒத்தைக்கி ஒத்தை வந்து பாருடா?"

—கூடியிருந்தோர் அழுதார்கள். அவளும் கண்ணீர் வடித்தாள். எதிர்க் கூண்டிலே விலங்கு பூட்டி நிறுத்தப்பட்ட செந்தட்டியின் கண்களும் கலங்கத்தான் செய்தன. வழியும் கண்ணீரைத் துடைக்க அவனுக்கு மார்க்கமில்லை. கரங்களில் இரும்புச் சங்கிலி!

நீதிபதி தீர்ப்பை வாசித்தார். மன்றத்தில் அனல் காற்று நிறைந்தது. செந்தட்டிக்கு ஆயுள் தண்டனை! யார், யாருக்காக அழுவது? தங்கையை வாழ்விக்க நினைத்தான்; ஆனுல் தங்கையின்

வாக்குமூலமே அவனைக் காராக்கிரகத்திற்கு அனுப்பி வைத்தது.

அவள் அண்ணனை மதித்தாள். ஆனால் அத்தானின் கடைசிப் பேச்சு அவளை உருக்கி விட்டது. அதை அப்படியே வழக்கு மன்றத்தில் சொன்னாள். அவளுடைய வாக்குமூலத்தின் ஒவ்வொரு எழுத்துக்கும் அண்ணனுக்குத் தண்டனை கிடைக்குமென்று அவளுக்குத் தெரியுமா?

○

பதினொன்கு ஆண்டுகள் ஓடிவிட்டன. பலர் சிறைக்குப் போகிறார்கள்; அதில் சிலபேர் உணர்ச்சி மழுங்கிப்போய் வெளிவருகிறார்கள். மிகுதிப் பேர் கூர்ப்படுத்தப்பட்டு 'பழிக்குப் பழி' என்ற எண்ணத்தில் வெளியேறுகிறார்கள்.

சூழ்நிலை சில நேரங்களில் சுத்தமானவர்களையும் தண்டித்து விடுகிறது. கருமுயல் கொலைக்கும் தனக்கும் தொடர்பில்லை என்று வழக்குமன்றத்தில் பன்முறை சொன்னான் செந்தட்டி. ஆனாலும் தண்டிக்கப்பட்டான். என்ன செய்வது! வாதிக்கு நீதி எப்போதும் கொஞ்சம் வளைந்துதான் கொடுக்கிறது.

திருப்புவனம் ரயில் நிலையத்தில் இறங்கித் திருப்பாச்சேத்திக்கு நடந்தான், செந்தட்டி. வழியிலே அந்தக் கரை—கருமுயல் சொல்லப்பட்ட கரை வந்தது. அந்த இடத்தில் ஒரு கல்லறை கட்டப்பட்டிருந்தது. அந்தக் கல்லறை கருமுயலுடையது என்று தெரிந்துதான் செந்தட்டி அதன்மேல் குந்தியிருந்தான்.

"எப்படியும் இந்தப் பக்கம் அவள் வந்துதானே ஆகவேண்டும்! சதக்! ஒரே வெட்டு! இன்னொரு பதினொன்கு வருஷம்! அவ்வளவுதானே" — பைத்தியக்காரனைப்போல் தானாகப் பேசிக்கொண்டான் செந்தட்டி.

இருட்டு வந்தது. ஒரு நாடோடிப்பாடல் ஊருக்குள்ளிருந்து மிதந்து வந்தது. செந்தட்டி, பாட்டைக் கூர்ந்து கவனித்தான். அது அவனைப்பற்றிய பாடல்தான். யாரோ மாடோட்டி பாடிக்கொண்டு போயிருக்கிறான். செந்தட்டி அந்தக் கீதத்திலே மெய்மறந்து போயிருந்தான்.

யாரோ அவன் அருகில் வந்து அதட்டினார்கள்.

"ஏய் பைத்தியம்! இதென்ன மதகடியின்னு நெனைச்சே! கருமுயலின் புதைகுழி!"

"கருமுயல்! அவன் யாரவன் கருமுயல்! மானங்கெட்டவன்!" என்று கரகரத்த குரலில் கேட்டான் செந்தட்டி.

மனம் ஒரு அமைதியற்ற பறவை போன்றது. எவ்வளவுக்கெவ்வளவு அதற்குக் கிடைக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு அதன் ஆசை மிகுதிப்படுகிறது. பின்னும் திருப்தியற்ற நிலையிலேயே இருக்கிறது. நாம் நமது மனோவிகாரங்களுக்கு எவ்வளவு மிகுதியாய் இடம் கொடுக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு மிகுதியாய் அவை கட்டுக்கு அடங்காதனவாய் விடுகின்றன.

வந்த ஆள் நடுக்கத்துடன் கையிலிருந்த தீப்பெட்டியைத் தீட்டிப் பார்த்தான்.

"ஆ! செந்தட்டி! மச்சான்! மச்சான்!" என்று கூவினான் அந்த ஆள்!

செந்தட்டி கண்களை அகலவிரித்துப் பார்த்தான். எதிரே நின்றவன் வைர ஊசி!

"மாப்பிள்ளை! சௌக்கியமா? நான் சொன்ன வாக்கை நிறைவேற்ற முடியல்லே! முத்தாயிக் குட்டியை உசிரோடு தரமுடியாவிட்டாலும் இன்னும் கொஞ்சநேரத்தில் பிணமாகத் தருகிறேன், மாப்பிள்ளை, அவள் வரட்டும்" என்று பொடுபொடுத்தான்.

வைரஊசியின் கண்களில் நீர் துளித்தது. என்னை மன்னிச்சுக்க செந்தட்டி! அதோ வருகிறான் உன் மருமகன். அவன் பெயர் சின்னச் செந்தட்டி! என்மகன்! ஆமாம் முத்தாயியின் மகன். முத்தாயி இப்போது என் மனைவி செந்தட்டி!

"டேய் ஊசி!!"

"ஆமாம் செந்தட்டி! நான்தான் கருமுயலைக் கொன்றேன். மறுநாளே அந்தமானுக்கு ஓடிப்போய் விட்டேன். வழக்கு முடிந்த பிறகுதான் எனக்கு எல்லா விபரமும் தெரிந்தது. காலம் எப்படியோ என்னையும் முத்தாயியையும் சேர்த்துவைத்துவிட்டது. இப்போது அவள் நிறைமாதக் கெர்ப்பம்! வீட்டில் இருக்கிறாள். உன் ஆணையை அவள் நிறைவேற்றிவிட்டாள் வா போவோம்" என்று கூறி மறுபடியும் தீக்குச்சியை பற்றவைத்துப் பார்த்தான் வைரஊசி. அந்த இடத்தில் செந்தட்டியைக் காணவில்லை. அவன் கரையில் வேகமாக நடந்துகொண்டிருந்தான்.

அவன் நடைக்கு ஒத்தாப்போல் மாடோட்டியின் பாடல் மறுபடியும் ஒலித்தது. அந்தப் பாடலும் செந்தட்டியின் புகழைப் பற்றிய பாடல்தான்.

கிராமிய இலக்கியம்!

கோவை இரத்தினம்

கார்த்திகை பிறந்துவிட்டாலே வயல்களில் களையெடுப்பு ஆரம்பமாகிவிடும்! நன்கு களையெடுத்து நீர்பாய்ச்சிப் பயிர்களைப் பாதுகாத்தால்தான் அந்த ஆண்டு பொங்கல் விழாவைச் சிறப்போடு கொண்டாட முடியும் கிராம மக்களால்!

பொங்கல் திருநாளை எண்ணும் போதெல்லாம் அவர்களது இதயங்கள் மகிழ்ச்சியால் பூரிக்கும்.

சாதாரணமாகக் கிராமங்களில் வாழும் மக்கள் எப்போதுமே சுறுசுறுப்பாக இருப்பார்கள். அந்தச் சுறுசுறுப்புடன் சற்றுமகிழ்ச்சியும் சேர்ந்துவிட்டால் அவர்களுடையஉள்ளத்திலிருந்து பாடல்கள் கிளம்பிவிடும்! கவிதைகளுக்குரிய இலட்சணங்களான இலக்கணம், யாப்பு, மோனை போன்ற தடைகளைத் தாண்டியதாகவும் அது இருப்பதுண்டு! இவ்வகைப் பாடல்களைத்தான் "நாட்டுப்பாடல்கள்" அல்லது "நாடோடிப் பாடல்கள்" என்கிறோம். ஆனால் இவைகள் கிராமியக் காதலையே அடிப்படையாகக் கொண்டிருப்பவை என்பதும் குறிப்பிடத்தகுந்தது!

தனது வயலிலே களையெடுக்கும் பெண்களில் தன் அத்தை மகள் இரத்தினத்தைப் பார்த்துவிடுகிறான் ஒரு காளை. அவன் பெயர் பொன்னுசாமி. உடனே பாடல் பிறந்து விடுகிறது :—

"களையெடுக்கும் பெரியகுளம்,
கணக்கெழுதும் ஆலமரம்
கொத்தடிக்கும் கொட்டாரம்
கூறுவைக்கும் களத்துமேடு!"

அத்தை மகள் இரத்தினம் சும்மா இருப்பாளா? அவள்தான் முறைப் பெண்ணாயிற்றே. பதிலுக்குப் பாட ஆரம்பிக்கிறாள் :—

"வாய்க்கா வரப்புச் சாமி
வயக்காட்டுப் பொன்னுச்சாமி
களையெடுக்கும் பெண்களுக்குக்
காவலுக்கு வந்தசாமி!"

எப்படியிருக்கிறது? களையெடுக்கும் பெண்களுக்குக் காவலுக்கு வந்திருக்கிறானாம் அவன்! காவலுக்கு மட்டுமா வந்திருக்கிறான்? அவளுடன் காதல் பேச்சுப் பேசி மகிழவும் அல்லவா வந்துள்ளான்?

அவள்மீது அவனுக்கு ஆசைதான். காதலை விட அவனுக்கு காரியம்தான் முக்கியம்! தனக்குப்போட்டிப் பாட்டுப் பாடிக்கொண்டே அத்தை மகள் வேலையில் பின்னடைந்தாள். அதைத் தந்திரமாகப் பாட்டு மூலமாகவே சொல்கிறான் :—

"கண்ணாடி வளைவி போட்டு
களையெடுக்க வந்தபுள்ளே!
கண்ணாடி மின்னலிலே உன்
களையெடுப்புப் பிந்துதடி!"

அதுகேட்ட அவள் வெட்கத்தால் தலைகுனிந்து கொண்டாள். இதைப் பார்த்த மற்றப் பெண்கள் 'கொல்'லெனச் சிரிக்கின்றனர். பொன்னுச்சாமிக்கு மேலும் 'குஷி' பிறந்துவிடுகிறது.

"வெள்ளிப்பிடி வளைவிநல்ல
விடலைப்புள்ளே வளைவிகையி
சொல்லியடிச்சவளை நல்லா
சுழட்டுதில்லே நெல்களையை!"

என்று பாடுகிறான். இந்தக் காதல் ஜோடிகளை இப்படியே விட்டுவிட்டு இன்னொரு ஜோடிகளைப் பார்ப்போம்.

○

தன் அத்தை மகனைப் பற்றிய நினைவிலேயே மூழ்கிக் கிடக்கிறாள் ஒரு குமரி. அவளுக்கு அத்தை மகன் செய்யும் தொழில் எல்லாம் இனிக்கிறது! எப்படி? சர்க்கரையைப்போல இனிக்கிறதாம். அவன்மீது அவளுக்கு எத்தனை அன்பிருந்தால் இப்படிச் சர்க்கரையாக இனிக்கும்? இதோ பாடுகிறாள் கேளுங்கள் :—

"செடியோரம் கிணறு வெட்டி
செவலக்காளை ரெண்டு கட்டி
அத்தை மகன் ஓட்டும் தண்ணீர்
அத்தனையும் சர்க்கரையே!"

"மலையோரம் கிணறு வெட்டி
மயிலைக்காளை ரெண்டுகட்டி
அத்தைமகன் ஓட்டும் தண்ணீர்
அத்தனையும் சர்க்கரையே!"

○

ஆற்றுக்கு அக்கரையிலுள்ள தன் தென்னந்தோப்பைக் காண ஒரு இளங்காளை போகிறான். அவன் அக்கரை சென்றதும் ஆற்றிலே பெருவெள்ளம் வந்துவிடுகிறது. திரும்ப வழியின்றித் தவிக்கிறான். புறப்படும்போது தன் ஆசைக் காதலியிடம் உடனே திரும்பிவிடுகிறேன் என்று சொல்லிவிட்டு வந்தான். என் செய்வது?

இருவரது இதயக் குமுறலும் இங்கே ஒலிக்கிறது!

அவன் :—

" ஆற்றிலே தண்ணீர்வர
ஆளிறங்காத் தண்ணீர்வர
நீச்சலிலே நான்வருவேன்
நீலக்கிளி தூங்காதடி !"

தன் ஆசைக்காதலி காத்திருந்து பார்த்துவிட்டு தூங்கப் போய்விடுவாள் என எண்ணினான் காதலன். ஆனால் அவளோ காதலன் வரவுக்காக வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கிறாள். வழியில் வருவோரை யெல்லாம் விசாரிக்கிறாள். துயரத்துடன்.

அவள் :

" ஆற்றுக்கு அந்தப்புறம்
ஐந்தாறு தென்னைமரம்
வச்சமரம் பார்க்கப்போன
மச்சான் வரக் கண்டீர்களா?"

○

இன்னொரு காதலன், தன் காதலியிடம் குறியிடம் கேட்கிறான்:

" புள்ளிபோட்ட ரவிக்கைக்காரி
புளியங்கொட்டைச் சேலைக்காரி
நெல்லறுக்கப் போகும்போது—நான்
நெல்லிமரக் காவலடி!
கஞ்சிக் கலையங் கொண்டு
கருக்கு வாளைத் தோளிலிட்டு
அறுப்பறுக்கப் போகும்போது—உன்
இருப்பிடத்தைச் சொல்லிடடி!"

○

நகர்ப்புறத்திலே அழகான சிமெண்ட் ரோடுகள் போட்டு அழகு பார்க்கும் சர்க்கார், கிராமப் பகுதிகளில் சாதாரண மண் பாதைகூடப் போட முயலுவதில்லை. அதனால் கிராம மக்கள் படும் தொல்லைகள் கொஞ்சமா? நாட்டுப்புற மக்களின் வாழ்வைப் போலவே, அங்குள்ள பாதைகளும் மேடுபள்ளம் நிறைந்ததாகவே இருக்கிறது! அப்படிப்பட்ட பாதை ஒன்றிலேதான் புதிதாகத் திருமணமான இளந் தம்பதிகள் இருவர் வில்வண்டி ஒன்றில் செல்கின்றனர். வண்டியில் அவர்களைத் தவிர வேறு யாருமில்லை. விளையாட்டுகளுக்குக் கேட்கவேண்டுமா என்ன?

இடையே ஒரு சிற்றாறு. ஆற்றில் நீர் அதிகமாக இல்லாவிட்டாலும் சேறு அதிகம். வண்டியின் ஒருபுறச் சக்கரம் சேற்றில் சிக்கிவிடவே, வண்டி நின்றுவிடுகிறது. உதவிக்கு ஆளில்லாததால் கணவனை வண்டி மீது இருக்கச் சொல்லிவிட்டு மனைவி இறங்கிச் சேற்றில் பதிந்துள்ள சக்கரத்தைத் தள்ளுகிறாள்! இப்போதுதானா அவனுக்குப் பாடல் கிளம்பவேண்டும்?

"ஆற்றுக்குள்ளே போன வண்டி
சேற்றுக்குள்ளே நிற்கையிலே
கொண்டை போட்ட குமரியிவள்
மண்டிபோட்டுத் தள்ளுறாளே!"

இருவரும் சிரிக்கின்றனர். வண்டியும் சேற்றைக் கடந்து விடுகிறது! இருவரின் காதல் விளையாட்டுகள் மீண்டும் துவங்குகின்றன!!

○

அவனுக்கு அவள் முறைப் பெண். அவளை அவன் நேசித்தான். ஆனால் அவளுக்கோ அவனைக் கண்டாலே பிடிக்கவில்லை. முகத்தை வேறுபுறம் திருப்பிக்கொள்ளுவாள். இப்படிப்பட்ட அவளை எப்படி வாழ்க்கைத் துணைவியாக ஏற்பது என்பது அவனின் ஓயாத சிந்தனை. மலைப் பூப்போல அழகு நிறைந்தவள். என்றாலும் அதிலுள்ள சுகந்த மணம் இவளிடம் இல்லையே!

"மாமி வீட்டிலே
மலரொன்று பூத்திருக்கு
ஆய்ந்து முகர்ந்தேன்
அழகொளிய மணக்குதில்லை!',

என்றான் அவன், அவளைப் பார்த்து. அவளோ சுட்டெரித்து விடுவது போலப் பார்த்தாள். அவள் ஒரு மணமில்லா மலராம். இந்த அழகு சுந்தரன் கூறுகிறான் என்று எண்ணினாள். பதிலுக்குச் சுடச்சுடக் கொடுத்தாள். அதில் கேலியும் கிண்டலும் நிறைந்திருந்தது.

" அத்தர் புனுகுகளாம்
அழகான (!) பவுடர் மணம்
இஞ்சிதின்ற குரங்குபோல
இவருக்கென்ன வந்த பசி!"

என்றாள். மாமியார் வீட்டுக்கு வருவதற்கென்றே பூசிய அத்தர், புனுகு நறுமணமா என்று அவள் அவனைப்பார்த்துக் கேட்கிறாள். "இஞ்சி தின்ற குரங்குபோல" என்று கூறி, கண்ட பெண்களை முறைத்துப் பார்க்கும் ஆண் இனத்துக்கே சவுக்கடி கொடுக்கிறாள்! அவமானம் தாளாத அவனோ,

" இடுப்பு சிறுத்த பொண்ணே
இருகாலும் நீண்டவளே !
கொக்குக் கண்பொட்டே—உனக்கு
கோபமென்ன என்னோடே ?"

என்கிறான். பதிலுக்குப் பதில்தானே!

அவள் ஒல்லியாகவும், சற்று உயரமாகவும் இருந்ததை எப்படிப் பொருத்தமாகக் கூறிவிட்டான்! கோபம் வந்துவிட்டது அவளுக்கு. சும்மா இருந்தால், ஆணுக்குப் பெண் அடங்கிவிட்டவள் என்றல்லவா நினைக்கவேண்டி வரும்?

" சுட்ட கட்டைபோலே
சுடுகாட்டுப் பேய்போலே
அட்ட முகனே — நீ
அடுப்படிக்கும் ஆகாதடா !"

அவன் கொஞ்சம் கருப்பாக இருந்தான். இதைத்தான் அவள் "சுட்டகட்டைபோல" என்ற உபமானத்தைத் தேடிப்பிடித்துக் கூறுகிறாள். அவனுக்கு இருபற்கள் முன்னால் சற்று நீண்டபடி இருந்தது. அதற்குத்தான் "சுடுகாட்டுப் பேய் போல!" என்கிறாள். அட கறுமி! நீ என் அடுப்படிக்கும் ஆகாதடா!" என்கிறாள், எப்படி?

எல்லாம் ஒன்றுபடாத இரு உள்ளங்களின் வினை! அடுத்து ஒன்றுபட்ட இரு உள்ளங்களைக் காணலாம் வாருங்கள்,

○

ஒரு காதலி, தன் காதலனுடன் வெளியூர் போய்விடத் தீர்மானிக்கிறாள். செல்லும் வழியிலுள்ள இடைஞ்சல்களைக் கூறி அவள் தன்னுடன் வர வேண்டாம் எனக் கூறுகிறான் காதலன்.

" ஈதி இடைஞ்சலிலே
இடிவிழுந்த கானலிலே
பாறை இடைஞ்சலிலே
பயமும்மெத்த ஆகுமடி! "

தலைவன் எவ்வழியோ அவ்வழி நிற்கும் தலைவி, அதுதானே தமிழ்ப் பெண்களின் உன்னதப் பண்பாடு! அவளா இதற்கெல்லாம் பயப்படுகிறவள்?

"இருட்டை இருட்டடிக்க
இந்திரனைப் பேயடிக்க
சாமவழிதனில் நடக்கச்
சம்மதமே எந்தனுக்கு!"

நம் உடல் நலத்துக்காகப் பிறர் பாடுபடுவது முடியாத காரியம். நமக்கு நாமே துணை. நம்மைப்பற்றி பூரணமாக அறிந்து கொள்ளவும், அந்த அறிவை நம் ஒவ்வொருவரின் தேவைகளுக்கும் ஏற்றவாறு பயன்படுத்தவும் முயலவேண்டும். இதற்குச் சுய முயற்சியும் ஒழுங்கும் உண்மையைக் கடைப்பிடிக்கும் உயரிய பண்பும் அவசியம்.

வேறு என்ன பேச்சு வேண்டிக்கிடக்கிறது? இருவரும் புறப்பட்டுவிட்டனர். காட்டு வழியில் நடந்துகொண்டிருந்தனர். கடுமையான வெயில். மெல்லியலாள் மெய் சோர்ந்துவிட்டாள்.

அவன்:— "கையோடு கைசேர்த்து
கானல் வழி நடக்கையிலே
மெய் சோர்ந்து விழ்ந்ததென்ன
மென் குயிலே கண்ணாட்டி?"

மெய் சோர்ந்துவிட்ட மெல்லியலாள் கூறுகிறாள்:—

"கையோடு கை சேர்த்து
கானல் வழி நடக்கையிலே
கண்டேன் உனத ழகை
கட்டழகா சோர்ந்து விட்டேன்"

எப்படியிருக்கிறது பார்த்தீர்களா? இத்தனை நாளாகத் தன் காதலனுடன் பழகும் இவளுக்கு அப்போதெல்லாம் தன் காதலனின அழகு தெரியவில்லையாம்! தன்னந்தனியாக—மனித சஞ்சாரமற்ற கானகத்தில் தன் மனதுக்குகந்த மணாளனோடு கைகோர்த்துக் கொண்டு செல்லும் போது தான் அவனுடைய அழகு அவளுக்குத் தெரிந்ததாம்!

அலர் தூற்றிய ஊரைத்தாண்டி நீண்ட தொலைவு வந்து விட்டனர். இனி இவர்களிடையே மகிழ்ச்சிக்கு என்ன குறை?

அவள்:— கண்ணாடித் தலையழகா!
காக்காயி மூக்கழகா!
அவன்:— எண்ணெய்த் தலையழகி!
எழுத்தாணி மூக்கழகி!

இவ்விதமாக இருவரும் பேசிமகிழ்தபடியே நடந்தனர்!!

★





அலங்காரக் கலை

மா.கி. தசரதன்

அன்று பிற்பகல் மூன்று மணியிலிருந்தே 'காந்தள்' உடைப்பெட்டியைத் திறப்பதும் மூடுவதுமாக இருந்தாள். எப்படியோ ஒருவகையாக, ஏதோ ஒருவாறு உடையணிந்து கொண்டு, புறப்படுமுன் கடைசியாக ஒருமுறை நிலைக்கண்ணாடிக்குள் தலையை நீட்டி நெற்றியில் இருந்த சாந்துவட்டத்தை அழுத்தி விட்டுக்கொண்டு சின்னக் குழந்தையை ஒரு கையில் பிடித்து 'மெல்ல மெல்ல' என்று சொல்லிக் கொண்டே படியிறங்கிப் போனாள். தலைமறையும் வரை அவளையே பார்த்துக்கொண்டிருந்த மாமியார் 'காலம் கெட்டுப்போச்சு' என்று முணுமுணுத்துக் கொண்டே உதடுகளை மடித்து 'அழகு' காட்டினாள்.

"கமலம், உன் மருமகள் எங்கோ சிங்காரித்துக் கொண்டு கிளம்பிவிட்டாளே, என்ன சிறப்பு?" என்று கேட்டுக்கொண்டே எதிர்வீட்டு அன்னம்மாள் வந்தாள்.

"ஐயோ அதையேன் கேட்கிறே—போ—பக்கத்துத் தெருவில் அவள் தோழி இருக்கிறாளே, அவள் குழந்தைக்கு இன்று பெயர் சூட்டுகின்றார்களாம்—அதற்குத்தான் இந்த ஒப்பனையும் அலங்காரமும்" என்று தன் வெறுப்பை வெளியிட்டாள்.

கமலம் மட்டும் அல்ல அப்படி. எல்லா மாமியார்மாரும் அப்படித்தான் தங்கள் மருமகமாரைக் கருதுகின்றனர். இரண்டு குழந்தைக்குத் தாயாயிற்றே—இவளுக்கு எதற்கு இனமும் அலங்காரம் என்று குறைபட்டுக் கொள்ளுகின்றார்கள்.

மாமியாரையாவது விட்டுவிடலாம். ஆனால் கொண்ட கணவன் என்ன சொல்லுகின்றான்? திருமணம்ஆன கையோடு ஒரு இரண்டு ஆண்டுகள்வரைகூட மனைவி செய்துகொள்ளுகின்ற அலங்காரங்களை ஆசையோடு பார்த்துக் கொண்டிருக்கின்றான். "இன்னும் கொஞ்சம் மாவு போட்டுக்கொள். உதட்டுச் சாயம் போடவில்லையே! இல்லை என்றால் சொல்வதுதானே. வாங்கிவரமாட்டேனா நான்—இதென்ன முரட்டுப் புடவை. மெல்லியதாக எடுத்துக்கொள் அடுத்த முறை — இதோ பார் இதுதான் நகத்திற்குத் தீட்டும் வண்ணம்" என்று ஒவ்வொரு வகையில், புதிய புதிய முறையில் தன் மனைவியை அழகுபடுத்திப் பார்க்கின்றான்.

"ஐய!—இதெல்லாம் வேண்டாமே — உங்கள் அம்மா பார்த்தால் என்னவாவது சொல்லுவார்கள்" என்று மனைவி தடுத்தாலும் "அவர்கள் கிடக்கின்றார்கள் விடு. இப்படிக் காட்டு விரலை" என்று தானே வண்ணம் தீட்டிவிடுகின்ற கணவனும் இருக்கின்றான்.

எல்லாம் ஒரு சில ஆண்டுகள்வரையில்தான். பிறகு பாலும் புளித்துப் போகின்றது—ஆசையோடு அதையும் இதையும் வாங்கிக் கொண்டுவந்து கொடுத்து அலங்காரம் செய்துகொள்ளச் சொன்ன அதே ஆள் "என்ன சின்னப் பெண் என்ற நினைப்போ? இதெல்லாம் என்ன வேடம், சினிமாக் காரியைப்போல?" என்று எரிந்து விழுகின்றான்.

மகனுக்குப் பெண் பார்க்கப் போகும் தாய், "பெண் நன்றாக இலட்சணமாக கண்ணுக்கழகாக இருக்கிறாள்" என்று சொல்லித்தான் தன் மகனை திருமணத்திற்கு இசையவைக்கிறாள். 'மூக்கும் முழியுமாக இருக்கிறது' என்று அழகுக்கு இரண்டு பிரதிநிதிகளையும் ஏற்படுத்துகின்றாள்.

ஆனால் பின்னரோ, "இந்த வயதில் கண்ணுக்கு என்னடி மை உனக்கு?" என்று அதே பெண்ணைத் திட்டுகினறாள்.

மையிட்ட கண்ணைக் கண்டு மயங்கிப்போன கணவன் "பூனைக் கண்போல் இருக்கிறது. போய் முதலில் கண்ணில் பூசியிருக்கும் கரியைத் துடைத்துக்கொண்டு வந்து சோறுபோடு போ" என்று விரட்டுகின்றான்.

இதெல்லாம்கூட வியப்பில்லை. அந்தப் பெண்ணின் நிலைதான் பெருவியப்புக்கு உரியதாகும். திருமணம் ஆகும்வரை அவள் எப்போதும் கண்ணாடியும் கையுமாக, எண்ணெயும் சீப்புமாக, சுண்ணவும் மாவுமாகத்தான் இருக்கின்றாள். நொடிக்கு நொடி விதவிதமான ஒப்பனைகள் செய்து கொண்டு ஒய்யார நடை நடந்துகொண்டிருக்கின்றாள். திருமணம் ஆனபின் மெல்ல மெல்ல அலங்காரம் செய்துகொள்ளுவதைக் குறைத்துக் கொள்ளுகின்றாள். குறைத்துக்கொள்ளுவது மட்டுமல்ல 'என்ன புடவையில் ஒரே கரியாக இருக்கிறதே' என்று கேட்பவர்களிடம் "ஆமாம் நான் இருக்கிற இருப்புக்கு இது போதாதா?" என்கிறாள். "இதென்ன எண்ணெய் வடியும் முகத்தோடு......" என்று கேட்டு முடிப்பதற்குமுன் "எல்லாம், இருக்கிற முகத்திற்குச் சோறு கிடைத்தால் போதும்" என்று சலித்துக் கொள்ளுகின்றாள்.

பெரும்பாலும் எல்லார் இல்லங்களிலும் இந்த நிலைதான் இருக்கிறது; ஒவ்வொருவர் நிலையும் இப்படித்தான் இருக்கிறது. அலங்காரம் செய்து கொள்ளுவதை ஏதோ தீயநெறியில் செல்லுவதைப் போல் நினைக்கின்றார்கள். அழகுபடுத்திக்கொள்வதை ஆடம்பரம் என்று எண்ணிவிடுகின்றார்கள். அதனால்தான் அழகுபடுத்திக்கொள்ளுகிறவர்களைக் கண்டால் 'மினுக்கிக்கொண்டு' திரிவதாகக் கூறிக் கண்டிக்கின்றனர்.

அப்படியானால் எப்போதும் 'வேடம்' போட்டுக் கொண்டுதான் இருக்கவேண்டுமா என்று கேட்கக் கூடாது. வேடம் போடவேண்டாம். அழகு படுத்திக் கொள்ளவேண்டும்.

வேடம் போடுவது என்பது வேறு; அழகு படுத்திக் கொள்வது என்பது வேறு. இல்லாததை இருப்பதுபோல் காட்டுவது வேடம். இருப்பதை எடுத்து விளக்குவது அழகுபடுத்துதல்—காகிதத்தில் பூவைப்போல் கத்தரித்து மாலையாகச் செய்துவைப்பது வேடம். கட்டிய மலர்மாலையை சரிகையால் சுற்றிவைப்பது அழகு படுத்துவது.

எந்தப் பொருளையும் அழகு படுத்தினால்தான் அதன் அருமை புலப்படும். இல்லை எனில் அதை விரும்புவார் இல்லாமல் போய் விடுவர்.

சுவையான பண்டங்கள் செய்யும் கடையைவிட அழகாகச் செய்யும் கடையில் வியாபாரம் மிகுதியாக நடைபெறுகின்றது. இதில்தான் உண்மையின் விளக்கம் இருக்கிறது. சுவையாக இருப்பது அழகாகவும் இருந்தால் அது 'பொன் மலர் நாற்றமுடைத்து' என்பதைப்போல சிறப்புபெறும். அழகு இல்லை எனில் அங்கே சிறப்புப்பெறுதல் இல்லை; சீர் அழிதல்தான் நடக்கும்.

நம்முடைய இல்லங்களில் நடக்கும் பெரும்பாலான 'சச்சரவு'களைக் கூர்ந்துபார்த்தால் இந்த உண்மையை விளங்கிக்கொள்ளலாம். ஒன்றுமில்லாததற்கு 'ஓ' என்ற இரைச்சல் போட்டு சண்டை நடைபெறும். ஏன்? காரணம் எதுவும் இருக்காது. "அன்பாகத்தானே இருக்கிறேன், நான். இவர் என்னமோ, 'ஆகாயத்துக்கும் பூமிக்குமாக' குதித்துக் கொதிக்கின்றாரே, என்னவோ தெரியவில்லையே" என்று மனைவி புழுங்குகின்றாள். ஏன்?

எங்கோ அலைந்து திரிந்து அவரையும் இவரையும் பார்த்து அதுவும், இதுவும் நாடி, எவரும் உதவாமல், எதுவும் கிடைக்காமல் திண்டாடி வீட்டிற்கு வருகின்றான் கணவன். வீட்டிலாவது கொஞ்சம் மன நிம்மதி பெறலாம் என்று எண்ணி வருகின்றான். வீடு என்ற சொல்லுக்கே அதுதானே பொருள்! விடுதலை — வெளியில் உள்ள தொல்லைகளுக்கு விடுதலை—தரும் இடம் வீடு என்று சொல்லுகின்றனர். அந்த நிம்மதி நிலையத்திற்கு வந்தவுடன என்ன நடக்கின்றது? வந்ததும் வராததுமாக எண்ணெய் வழியும் முகம், காற்றில் அலையும் கூந்தல், கறைபடிந்த புடவை, என்று இந்தக் கோலத்தில்—கோலத்தில் அல்ல 'கோரத்தில்'—வந்து நிற்கும் மனைவியைக் கண்டதும் அவனுக்குக் கோபம் முன்னே வந்து நிற்கின்றது. வாயைத் திறப்பதற்கு முன்னே வம்பு பிறக்கின்றது.

ஆனால், பெண்கள், என்ன, ஆண்களின் கண்களுக்கு விருந்து தரும் பாவைகளா என்று கேட்டுப் பயன் இல்லை. பெண்கள் மட்டுமல்ல, நம்முடைய நண்பர்கள் எப்படி இருக்கவேண்டும் என்று விரும்புகின்றோம்? தூய்மையாக உடை உடுத்தி 'அழகாக' விளங்கவேண்டும் என்று விரும்பவில்லையா? அழுக்கேறிய உடையுடன் உடன் வருகின்றவனிடம் "ஏன் கொஞ்சம் நன்றாகத்தான் வருவதுதானே" என்று கேட்கின்றோமே, அந்தக் கேள்வியைத்தான் மனைவியிடம் கேட்பதாகக் கொள்ள வேண்டுமே யன்றி 'அலங்காரப் பாவை'யாக இருக்கச் சொல்லுகின்றோம், பெண்ணுரிமை பேணவில்லை என்று சொல்லக்கூடாது. 'இருக்கலாம், ஆனால் பணம்?' என்று கேட்கத் தோன்றும். பணம் ஒன்றுமட்டுமல்ல இதற்குத்தேவை; மனமும் இருக்க வேண்டும். மனம் இருந்தால் கந்தையும் போதும், அழுக்கு போகக் கசக்கி, அழகு விளங்க மடித்துக் கட்டலாம்.

இது ஏதோ சின்னச்செயல் போல் நமக்குத் தோன்றுகின்றது. பெரிய பெரிய பிரச்னைகள் இருக்கின்றபோது இந்த அழகுக் கலைதானா அவ்வளவு முக்கியமாகிவிட்டது என்றுகூடச் சிலர் நினைக்கலாம்.

அப்படி எண்ணுகின்றவர்கள், குடும்பத்தில் இந்தக் கலை இல்லாத காரணத்தினால் எவ்வளவு 'கொதிப்பு' உண்டாகின்றது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். குடும்பத்தில் இருக்கும் நிலைதான் பரவலாக நாட்டிலும் இருக்கும். நாடு என்பது வேறு ஒன்றுமில்லை, பல குடும்பங்களின் தொகுப்பின் வளர்ச்சிதான். 'ஒரு நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்' என்பதனை உணரவேண்டும்.

இந்தக் காலத்திலே மட்டுமல்ல நெடுங்காலமாகவே தமிழ் நாட்டில் குடும்பத்தில் 'அழகுக்கலை' இருந்திருக்கிறது என்பதையும்; அது இல்லாததினால் குடும்பத்தில் பல கோளாறுகள் ஏற்பட்டன என்பதனையும் நமக்கு இலக்கியங்கள் சொல்லுகின்றன.

கோவலன் கதை போதும், எடுத்துக்காட்டுக்கு.

கண்ணகி பேரழகு வாய்ந்த பெருமாட்டிதான். அவள் அழகை நுகர்ந்த கோவலன் 'தீராக் காதலின் திருமுகம் நோக்கி' 'உலவாக் கட்டுரை பல பாராட்டினன்' என்று இளங்கோவடிகள் சொல்லுகின்றார். அந்த அழகு அவனை என்றும் தன்வயத்திலேயே வைத்திருக்கப் பயன்படவில்லை.

மாதவியின் ஆடல் கண்டவுடன் 'நூறு பத்து அடுக்கி எட்டுக்கடை நிறுத்த; (1008) பசும் பொன் கொடுத்து மாலையை வாங்கிக்கொண்டு மாதவியின் இல்லம் சென்று 'விடுதல் அறியா விரும்பினன் ஆயினன்.'

எப்படி இந்த விருப்பு அவனுக்கு வந்தது? அதுமட்டுமா, தன் மனைவியையும் மறக்கச் செய்தது? அங்குதான் ஆசிரியர் இளங்கோவடிகள் சொல்லாமல் விட்ட செய்தி ஒன்று ஒளிந்திருக்கிறது.

கண்ணகி அழகு மிக்கவள்தான்; ஆனால் அழகுபடுத்திக்கொள்ளும் பணியில் ஈடுபட்டதில்லை.

மாதவியும் அழகுமிக்கவள். அந்த அழகை மேலும் அழகுபடுத்திக்கொள்ளுவதிலும் வல்லவள்.

இருவரும் பொன் மலர்தான். அதில் கண்ணகி வெறு மலர்; மாதவி நறுமலர். இந்தச் சின்ன வேறுபாடுதான் கோவலன் வாழ்க்கையில் பெரும் பங்கு பெற்றிருக்கின்றது.

கொண்ட மனைவியை விட்டு மாதவி மனையில் இருப்பது தவறு ஆகாது, கூடாது, என்று யாராவது ஒரு நண்பன் கோவலனுக்கு இடித்துக் கூறி அவனை வீட்டிற்கு அழைத்து வருகிறான் என்று வைத்துக்கொள்ளுவோம். அப்படி வருகின்றபோது அவனை வா என வரவேற்கின்ற கண்ணகி எப்படி இருக்கின்றாள்?

எவ்வகை ஒப்பனையும் இன்றி, செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்ப, பவள வாணுதல் திலகம் இழப்ப, தவள வாள்நகை கோவலன் இழப்ப, துன்பமே உருவானவளாக இருக்கிறாள். இன்பமே உருவானதுபோல் இருந்த இடத்தைவிட்டு வந்தவன் எப்படி இந்தத் துன்பமே உருவானவளுடன் உளம் கலந்து பழகுவான்? அணி வேண்டாம், அலங்காரம் வேண்டாம், முறுவலுமாகூடாது. அதுவும் இல்லை என்பதைப் பாட்டு கூறுகின்றது. இந்த நிலையில் இருக்கும் கண்ணகியைக் கண்டு வெதும்புவதைவிட மாதவியின் இல்லமே மேல் என்று அவன் கிடந்திட்டான்.

இதேபோல் மறுபுறம் மாதவியின் நிலையைக் காணுவோம். ஒரு முறை மாதவியின் மீது கோபம் கொண்டுவிடுகின்றான் கோவலன். உடனே அவனிடம் போய் 'கோபம் தீது, தாபம் விடும்' என்றெல்லாம் அவள் சொல்லி உருகவில்லை. கோவலன் கோபம் தணியும் வழி நாடினாள். தன் மேனியை அழகுபடுத்திக்கொள்ளத் தலைப்பட்டாள்.

பத்துத் துவரினும் ஐந்து விரையினும்
முப்பத்து இருவகை ஓமா லிகையினும்
ஊறின நன்னீர் உரைத்த நெய்வாசம்
நாறிருங் கூந்தல் நலம்பெற ஆட்டி
புகையில் புலர்த்திய பூமென் கூந்தலை
வகைதொறும் மான்மதக் கொழுஞ்சேறு ஊட்டி-

இவ்வாறு கூந்தலை முதலில் அழகுபடுத்திக் கொண்டாள். பின்னர் கால் விரல்களில் அலங்காரம் நடக்கிறது; அதன்பின் நீலஆடையின்மீது முத்துக்களின் அணி; தோளுக்கு அணி; கைகளுக்கு வளையல்கள்; அதிலே பலவகை; பின் கை விரல்களுக்கு மோதிரங்கள், தலையில் பல அணிகள் இவை எல்லாம் செய்து கொண்ட பின் கோவலனின் கோபம் எங்கோ போய்விடுகிறது. அதற்குப் பின் மாதவி கோவலனிடம் கோபம் கொள்ளுகின்றாள்.

கூடலும் ஊடலும் கோவலனுக்கு அளித்தாள் என்று மாதவியைப் பற்றிச் சொல்லுகின்றார். இந்த உரிமையைப் பெறுவதற்கு அவள் செய்துகொண்ட கடமைகளைப் பற்றி—அலங்காரங்களைப் பற்றி— இளங்கோவடிகள், முப்பத்து மூன்று வரிகள் எழுதுகின்றார்.

கண்ணகியுடன் கோவலன் ஆண்டுக் கணக்கில் நடத்திய இல்வாழ்க்கையை 'ஆண்டு சில கழிந்தன' என்று மூன்று சொற்களில் சொல்லிப்போகும் இளங்கோவடிகள் முப்பத்து மூன்று வரிகளில் என்றோ ஒருநாள் கோவலன் கொண்ட கோபத்தைத் தணிக்க மாதவி செய்துகொண்ட அலங்காரங்களைப் பற்றி மட்டும் சொல்லுகின்றார்.

கோவலனுக்கு மட்டும் அல்ல அந்த மனநிலை. நமக்கு எல்லோருக்கும்தான் இருக்கிறது. அதனால் தான் பெரும்பாலான இல்லங்களில் கணவனும் மனைவியும் கலந்து பேசுவதில்லை. நண்பர்களோடு எவ்வளவு நேரம் பேசுகின்றோமே, அவ்வளவு நேரம் மனைவியோடு பேசுகின்றோமா? வெளியில் எங்கேனும் அலையும் கண்கள் அகத்தில் அலைகின்றனவா? இல்லையென்றால் ஏன்? இதுதான்விடை; அழகுபடுத்திக் கொள்ளும் கலை.

பெண்கள் மட்டும்தான் இப்படி எனறு இல்லை. ஆண்களின் நிலையும் இதுவேதான். நாம் வெளியில் போகின்றபோது மட்டுமே' அழகாக' செல்ல வேண்டும் என்று நினைக்கின்றோம். வீட்டில் 'எப்படி வேண்டுமானாலும்' இருக்கலாம் என்று எண்ணுகின்றோம்.

துணி எடுக்கும் போதே 'சும்மா வீட்டில் இருக்கும் போது கட்டிக் கொள்ள' என்று சொல்லிக் கொண்டே இரண்டு முரட்டு வேட்டிகளைவாங்குகின்றோம். பலர் வெளியில் போய்வந்ததும் வேறு

ஏழை சொல் அம்பலம் ஏறிற்று

தில்லை வில்லாளன், எம்.ஏ

"ஏழை சொல் அம்பலம் ஏறாது" என்றுதான் சொல்கிறார்கள். ஆனால் எல்லா நேரத்திலும், எல்லா இடத்திலேயும் சரியாக இருப்பதில்லை, இந்த மூதுரை.

இங்கு குறிப்பிடப்படுகிற ஏழை, சொல்லி வந்த சொல் ஒரு நாள் அம்பலம் ஏறிவிட்டது.

ஏழை சொல் அம்பலம் ஏறிற்று--அதற்கு விளக்கமாக அமைந்துள்ள சம்பவத்தைக் குறிப்பிடுகிறேன்.

ஏழை

அம்பலவாணன் மிகவும் ஏழை—ஏழையா, பிச்சைக்காரன்! பொன்னூர் முருகர்கோவில் வாசற்படியிலே அமர்ந்து பிச்சை ஏற்பதுதான் அவனது பழக்கம்.

பிச்சை யெடுப்பதிலேயே அவன் புது ரகம்— வருகிற பிச்சையில் தனக்குப்போக மிகுதியை அன்றன்றுடம் மற்றப் பிச்சைக்காரர்களுக்குப் பிரித்துக் கொடுத்துவிடுவான்.

மாலையானல் கோயிலைச் சுற்றிவருவான்— முருகனைத் தரிசிப்பான். ஆனால் திருநீறு அணிய மாட்டான்.

பாடுவான்—ஆடுவான்—ஆனால் கடவுள் பெயர் கூறி கயமைத்தனம் புரிபவரைச் சாடுவதாகவே அவன் பாடல்கள் இருக்கும். சிலருக்கு அவனைக் கண்டாலே எரிச்சல்—வேறு சிலருக்கு உள்ளூர மகிழ்ச்சி—எப்படியோ, அவன் பிச்சைக்காரப் பிழைப்பு நடந்துவந்தது.

சொல்

அந்த ஊர் முருகர் கோயில் அந்த வட்டாரத்திலே சக்திவாய்ந்த கோயில் எனப் பாராட்டுவர். தீராதவினை யெல்லாம் தீர்த்துவைத்துவிடுவான் எனக் கார்த்திகைதோறும் ஆயிரக்கணக்கான மக்கள்

அழுக்கு ஆடையை எடுத்து உடுத்திக் கொண்டு, முன்னதைமடித்து வைத்து பின் வெளியில் போகும் போது அதை அணிந்து கொள்ளுகின்றார்கள். வீட்டில் ஆண்கள் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என்பதை விட்டு இப்படித்தான் இருக்க வேண்டும் என்று வைத்துக் கொள்ளட்டும், பிறகு பெண்களும் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொள்ளுவர்.

இந்த உண்மையை உணர்ந்து உணர்த்திய ஒரு புலவர் பாடிய பாட்டு புறநானூற்றில் இருக்கிறது. என்ன, இந்தக் கருத்து புறநானூற்றிலா என்று திகைக்க வேண்டாம்.

பகைவன் போர்ப் படையுடன் வந்து தாக்க வெளியில் முற்றுகை இட்டிருந்தபோது கோட்டைக்குள் அடைந்து இடந்தான் நெடுங்கிள்ளி. அதனால் மக்கள் எவ்வாறெல்லாம் துன்பமுற்று வருந்துகின்றனர் என்பதனை எடுத்துச் சொல்லிடும் போது

பாலில் குழவி அலறவும் மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவும்......

என்று பாலில்லாமல் குழவி அலறுவதும் மகளிர் பூ இன்றித் தலை முடிப்பதும் பொறுத்தற்கரிய துன்பங்கள் எனக் காட்டுகின்றார். தலையில் பூ முடிப்பது என்றால் வாழ்க்கை நிறைவு எய்தியதோடு மட்டுமல்லாமல் அவர்கள் ஒப்பனைக் கலையில் தேர்ந்தவர்கள் என்பதனை விளக்குவதாகும்.

குழந்தைகளுக்குப் பால்—மகளிர்க்கு ஒப்பனை— இருந்தால் வாழ்க்கை நிறைந்தது எனப் புறநானூறு புகலுகின்றது.

இந்தப் பின்னணியைக்கொண்டு இப்போது அலங்காரக் கலையைக் காணுவோம். அலங்காரக் கலை அவசியமானது என்பதனை உணருகின்றோமேயன்றி ஆடம்பரம், பொழுதுபோக்கு என்று ஒதுக்கிவிட இயலவில்லை.

ஆனால் எதுவும் அளவுக்கு மிஞ்சினால் நஞ்சு தானே? அதைப்போல ஒப்பனைக் கலையும் குறையாது கூடாது வேண்டிய அளவுதான் இருக்கவேண்டும் என்பதனை உணர்ந்தால் நன்மை.

பொங்கற் புதுநாளில் இந்தப் புதிய கோணத்தில் நின்று அலங்காரக் கலையைக் காணுவோம்; பொலிவு பெறுவோம்.

★

கூடுவர். சந்தனக் குழம்பு வாங்கிப் பூசிக்கொள்வர். குழந்தைகளுக்கு இங்குதான் மொட்டையடிப்பது பழக்கம்—காதும் குத்துவர்.

முருகன் கோயில் பூசாரி முருகாண்டிக்கு அமோக மான செல்வாக்கு. அவன் அந்தக் கோயில் பூசாரி யான பிறகுதான் சொந்த விடு கட்டினன். நான்கு காணி நஞ்சையும், இரண்டு காணி புஞ்சையும் வாங்கினன். சாதாரண உருத்திராக்கமாலை, தங்கத் தகடு வைத்த மாலையாயிற்று.

முருகாண்டிக்கு இவ்வளவு 'மவுசு' வந்ததற்குக் காரணம் என்ன? அவன் முருகன்கோயில் பூசாரி யானவுடன் குழந்தைகளுக்கு மொட்டையடிப்பதில் ஒரு புதுத் திட்டம் போட்டான். அதாவது நாலு சக்கரம் போட்ட ஒரு வண்டி செய்தான். அந்த வண்டியில் மொட்டையடிக்கவேண்டிய குழந்தையை வைத்துத் தள்ளிவிடுவான். கற்பக்கிருகம் பக்கம் ஓடும். குழந்தை காணுமல் போய்விடும். அரை மணிநேரம் கழித்து, குழந்தைக்கு மொட்டையடித்து, சந்தனம் பூசி, காது குத்தவேண்டுமென்றல் காதும் குத்தி, கையில் வேலும் கொடுத்து, குழந்தை வரும். இந்தத் திட்டத்தினல்தான் முருகாண்டி அவ்வளவு செல்வாக்குப் பெற்றன்.

விசித்திர பிச்சைக்காரன் அம்பலவாணன், இந்த திட்டத்தைக் கிண்டல் செய்தே பாட்டு பாடு வான். அதனலேயே முருகாண்டி, அவனை அந்த ஊரைவிட்டே துரத்திவிட முடிவுசெய்தான்.

ஊரைக் கெடுக்க வந்தான் ஓர் ஆண்டி
அவன் பேரு முருகாண்டி
மொட்டை யடிக்கிருண்டி—அவன்
மூலை அறையிலே ஆளைவைத்து
காது குத்தருண்டி அவன்
காசுக்குப் பத்தனை அடிமையாக்கி
கேடுகெட்ட இந்த ஜனங்களுக்கு
கேட்கிற புத்தி இல்லே, இல்லே
இந்த ஏழையின் சொல் அம்பலம்
ஏறும் நாள் எந்த நாளோ?

இந்தக் கருத்தில் அவன் பாடுவான். ஊரார் முதலில் அலட்சியமாக நினைத்தனர். பிறகு யோசிக்க ஆரம்பித்தனர்.

அம்பலம்

பெயர்தான் அம்பல வாணண். ஆனல் அவன் சொல்லுக்கு எந்த அம்பலத்திலும் மதிப்பில்லை. அம்பலம் என்றல் அவை என்று தானே பொருள் கூறுகின்றனர். முன்பெல்லாம் அம்பலத்தில் நிறைந் திருந்தவர்கள் வைதீகப் பிடிப்பும், மூட நம்பிக்கை யில் முரட்டுத் தொடர்பும் கொண்டவர்களே. காலம் தான் மாறி வருகிறதே — எவ்வளவு சிற்றூராக இருந்தாலும், பகுத்தறிவு வாடையடிக்கும் ஒரு வாலிபன் இல்லாமலிருப்பதில்லையே! பொன்னூரி லும் அத்தகைய வாலிபன் இருந்தான். அவன் பெயர் அறிவரசன் அவன் மணமாகி இரண்டாண்டு களுக்குப் பிறகு ஒரு அருமைக் குழந்தையைப் பெற் றெடுத்திருந்தான். அவன் மனைவி மலர்விழிக்குத் தன் குழந்தை மணிக்கு மொட்டையடித்து, காதுகுத்தி விழாக்கொண்டாட வேண்டும் என்ற ஆசையை அவளுடைய தாயார் தூண்டிக்கொண்டிருந்தாள். அறிவரசனிடம் இது பற்றிச் சொல்ல ஆரம் பித்தாள்.

பிச்சைக்கார அம்பலவாணன் மீது அறிவரசனுக்குத் தனிப்பிரியம்—அவன் என்றவது ஒருநாள் இலை போட்டுச் சாப்பிட வேண்டுமென்றல் நேராக அறிவரசன் வீட்டிற்குத்தான் வருவான். அப்படி அன்றும் வந்திருந்தான். அப்பொழுது தான் கணவனும், மனைவியும் குழந்தைக்கு முடி யிறக்கி, காது குத்துவது சம்மந்தமாய்ப் பேசிக் கொண்டிருந்தார்கள். அம்பலவாணன் குறுக்கிட்டுப் பேசினன்.

'தம்பி, நல்ல சந்தர்ப்பம் — உங்கள் குழந்தை யின் முடியிறக்குகிற நாளிலேயே இந்த ஊராரின் மூட நம்பிக்கையின் முடியும் இறக்கப்படட்டும். அதற்கு நான் ஒரு வழி சொல்லுகிறேன். அதன் படி நடந்தா யானல் எல்லாம் நினைத்ததுபோல் முடியும் என்றன்.

அறிவரசனுக்கு அம்பலவாணன் கூறியது மிகவும் பொருத்தமாகப்பட்டது. உடனே, அவன் கூறிய திட்டப்படி நடக்கச் சம்மதித்தான்.

ஏறிற்று

பொன்னூர் மக்கள் அனைவருமே அன்று முருகன் கோயிலில் கூடிவிட்டனர். அதுவும் நாத் தீகம் பேசி வந்த அறிவரசன், அறிவு தெளிந்து தன் குழந்தை மணிக்கு முருகர் கோயிலில் மொட்டை அடிக்கிறன் என்றல், ஏன் கூடமாட்டார்கள்? எப்பொழுதுமே, முருகாண்டி ஏக அமர்க்களமாக இருப்பான்—அன்று அவன் ஆர்ப்பாட்டங்களுக்கு அளவே இல்லை. அவன் தனக்கு ஒரு பெரிய வெற்றி நாளாகவே அன்றைய தினத்தை எண்ணிக் கொண்டான்.

முருக பூசை வெகு தடபுடலாக நடந்தது — குழந்தையை வாங்கினன் — சகடத்தில் வைத்தான். 'ஏ முருகா, பழனியாண்டவா, செந்தில் வேலா, குழந்தையைக் கைலாயத்திற்குக் கொண்டு போடா' என்று பெருங்குரலெடுத்துக் கூறினன். சூடம் எரிந்தது — சாம்பிராணி புகை 'கம்'மென்று எழுந்தது. சகடம் உருண்டது.

கால்மணி நேரந்தான் கழிந்திருக்கும். என்ன விந்தை! என்ன ஆச்சரியம்! ஒரு சகடத்தில் குழந்தை மணி கை கொட்டிச் சிரித்துக்கொண்டிருந் தான். மற்ற இரண்டு அடியாட்கள் கை கால்கள் கட்டப்பட்டு, வாயில் துணியும் கொடுக்கப்பட்டிருந் தனர்--மூன்று சகடங்களையும் ஏழை அம்பலவாணன் இழுத்து வந்தான்.

கூடியிருந்தோர் வியப்பால் வாயடைத்துப் போய்விட்டனர். முருகாண்டி ஓடுவதற்கு எத்தனித் தான்—அம்பலமா விடுபவன்? அவனையும் பிடித்துக் கட்டிச் சொல்லி விட்டான்.

'பொன்னூர் பெரியோர்களே, தாய்மார்களே, ஏழை அம்பலம் பேசுகிறேன். கேளுங்கள்—பிச்சைக் காரன் பேச்சு என்று இத்தனை நாள் தள்ளிவிட்டீர் கள்—இன்று தள்ளிவிட மாட்டீர்கள் என நம்பு கிறேன்.

எனக்கு பூசாரி முருகாண்டியின்மீது, வந்த நாளிலிருந்து நம்பிக்கையில்லை. அதுவும் குழந்தை களுக்கு மொட்டையடிக்க கைலா சத்திற்கு அனுப்புகிறன் என்பது சுத்தப் பித்தலாட்டம் என்று எண்ணினேன். அதனல் அதனை நிரூபிக்க வேண்டும் என்றும் உறுதியெடுத்துக் கொண்டேன்.



மாலையானதும் கோயிலை வலம் வர ஆரம்பித்தேன்.

மூலை அறையொன்றில் பேச்சுக் குரல் கேட்டது. அதையும் கவ னிக்க ஆரம்பித்தேன்.

இரவு நேரங்களில் அங்கேயே படுக்கவும் தொடங்கினேன், இந்த இருவருக்குமிடையே ஏற் பட்ட சச்சரவுகளெல்லாம் என் காதில் விழுந்தது.

இதோ, இருக்கிறனே, இவன், கொலைகார நாகப் பன். இவன், முகக்ஷவரம் செய்வதுபோல் நடித்து இரண்டு வருடங்களுக்கு முன் பிச்சையாண்டித் தேவரைக் கொலை செய்தவன். கொலை நடந்த நாளி லிருந்து இவன் கிடைக்கவே இல்லை. கொலை நடந்த இரவே பூசாரியிடம் அடைக்கலம் புகுந் தான். அவனுக்கு ஏற்ற வேலை குழந்தைகளுக்கு மொட்டை யடிப்பது எனமுடிவு செய்தான்.



இதோ, நிற்கிறனே, தங்கந் திருடி தானப்பன், இவன் கள்ளத் தங்கம் கடத்திய வழக்கில் கைதாகித் தப்பியோடி வந்த வன். இவனும் பூசாரியிடம் அடைக்கலமாய் வந்து சேர்ந் தான். இவனுக்கு ஏற்ற வேலை குழந்தைகளுக்குக் காது குத்து வது என்று அந்த வேலையைத் தந்தான்.

இவனுடைய சூது வேலையை அவர்கள் சொல்ல முடியாது— அவர்களுடைய குற்றங்களை இவன் சொல்லக்கூடாது—இந் தக் கூட்டு ஒப்பந்த நிலையில் இந்த மொட்டையடிக்கும் திட்டம் நடந்து வந்தது. அதிலேயும் பூசாரிக்குத் தெரியாமல் திருட்டு பாருங்கள். தானப்பன், இங்கிருந்து அனுப்பப்படும் குழந்தைகள் அணிந்திருக்கும் நகைகளைப்போல் பித்தளையில் செய்து, தங்க நகைகளை உருவிக்கொண்டு, பித்தளை நகைகளைப் போட்டு வந்தான். இந்தத் திருட்டு வெளிப் படாது என்று அவன் நம்பினன். ஏனெனில், கைலாயத்திற்குச் சென்று வந்த நகையை யாரேனும் அழிக் கவோ, மாற்றவோ விரும்புவரா?

ஏழை அம்பலம இதைக் கண்டு பிடித்து எத்தனையோ நாட்க ளாகிவிட்டன. ஆனல் என் சொல்லை ஏற்பார்யாருமில்லை.

ஊரைக் கெடுக்க வந்தான் ஓர் ஆண்டி
அவன் பேரு முருகாண்டி
மொட்டை அடிக்குருண்டி அவன் ஊரை
மூலையறையிலே ஆளை வைத்து
காது குத்துருண்டி அவன்
காசுக்குப் பத்தனை அடிமையாக்கி
கேடு கெட்ட இந்த ஜனங்களுக்கு
கேட்கிற புத்தி இல்லை, இல்லை
இந்த ஏழையின் சொல் அம்பலம்
ஏறிய நாளும் இந்த நாளே!

ஊரார் அம்பலவாணனை வாயாரப் புகழ்ந்தனர். முருகாண்டியை அடித்துத் துன்புறுத்த எல்லோ ரும் நெருங்கினர். அம்பலவாணன் அனைவரையும் தடுத்து நிறுத்தினன்.

ஊரை ஏமாற் றிப் பிழைக் காதே--உழைத் துப் பிழை' என்று அறி வுரை கூறி அனுப்பிவைத் தான், முரு காண்டியை. அறிவரசன், மலர்விழி, அவள் தாய், மணி, ஆகியோர் அம்பலவாணனுக்கு நன்றி தெரிவித்துத் திரும்பினர்.

கூட்டம் கலைந்தது- அன்று முதல் பொன் னூரில் பகுத்தறிவியக்கம் தலையெடுத்தது.

★

திருட்டுத் தாலி

க. அன்பழகன் M.A., M.L.A.

இந்தியத் துணைக்கண்டத்தின் பேரரசு 'சுதந்திரம்'—பெற்றதன் விளைவாக ஆட்சித் துறையில் பலப்பல மாற்றங்களை, அரசியல் நிர்ணய சட்டத்தின் மூலம் இடம்பெறச் செய்து நிறைவேற்றி வருகிறது. அவைகளுள், மிகவும் முக்கியமானதும், எல்லா மக்களுடைய கவனத்திற்கு உரியதுமாக இருப்பது 'ஆட்சிமொழி' மாற்றமேயாகும்.

சுதந்திரம் பெறும்வரை ஆட்சிமொழியாக இருந்தது ஆங்கிலம். சுதந்திரம் கிடைத்ததன் பயனாக அதில் ஒரு மாற்றம் காணவேண்டாமா? என்ற எளிய ஆசையினாலேயே பலப்பல மொழியினரும் ஒரு புது ஆட்சி மொழி வருவதுதான் சுதந்திரத்தின் அடையாளம் என்ற கற்பனையில் ஆட்பட்டனர்.

அந்நியர் ஆட்சியில் ஏற்பட்ட வெறுப்பு அந்த ஆட்சியுடன் வந்து சேர்ந்த மொழியிலும் பாய்ந்தது. ஆங்கில மொழி அக்காலத்தில் ஆதிக்க மொழியாக இருந்தது என்பதும், ஆங்கிலத்திடம் பொதுமக்கள் வெறுப்படையக் காரணமாயிற்று.

உத்தமர் காந்தியடிகளோ அந்நியர் ஆட்சியை ஆதிபத்தியத்தைத்தான் எதிர்க்கிறோமே தவிர, அந்நிய மக்களை அல்ல என்றார்—என்றாலும் எதிர்ப்பு 1942 ஆகஸ்டு மாதப் போராட்டத்தில்—ஆங்கிலேயர்கள் முகத்தில் திராவகங் கொட்டுமளவிற்குச் சென்றது. அந்நியன் சுரண்டலைத்தான் எதிர்க்கிறோமென்று சொன்ன தேசியத் தலைவர்கள்—கிளாஸ்கோ மல்லுக்கு நெருப்பை வைக்கத்தானே செய்தார்கள்? அப்படியே ஆதிக்க வெறுப்பு—ஆங்கில வெறுப்பாகவும் பரவியது. அதனால் ஆங்கிலமொழியின் சிறப்பினையும் — மேன்மையினையும்—நன்மையினையும்—பயனையும் பலரும் மறந்தனர்.

அவரவர் தாய்மொழியின் இடத்தை ஆங்கிலம் பிடித்துக்கொண்டிருந்ததால் — ஏற்பட்ட பகைநோக்கு, ஆங்கிலத்தினை விரட்டுவதிலேயே பதிந்துவிட்டது. பகைவனொருவனுடன் சண்டையிட்டுக்கொண்டுள்ள நேரத்தில் — மூன்றாவது வீட்டான் ஒருவன்—வீட்டிற்குள் நுழைந்து அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு போவதைப்போல-ஆங்கிலத்தை விரட்டும் வெறிநோக்கு வளர்ந்த சமயத்தில் நமக்கு அந்நியமான இந்திமொழி நுழைந்து அந்த ஆதிக்கப் பீடத்தில் ஏற வழிதேடிற்று. உத்தமர் காந்தி அடிகள் போன்றார்—ஒற்றுமையாக ஆங்கிலேயரை எதிர்த்துப் போராட ஒரு தேசியமொழி, பொது மொழியாக வேண்டுமென்று பேசியதும்—அவரிடத்தில் மக்களுக்கிருந்த மதிப்பும்—நம்பிக்கையும் அக்காலத்தில் வளர்ந்திருந்த தேசியக் கனலும் அவர் சொன்ன கருத்தை—வலுப்பெறச் செய்தன. ஆனாலும் இடையே எத்தனை தடுமாற்றங்கள்? காந்தியடிகள் தேசியப் பொதுமொழியாகத் தக்கது என்று கருதியதும்-கூறியதும் இந்துஸ்தானிதான். இன்று ஆக்கப்பட்டிருப்பதோ இந்தி! இந்துஸ்தானி அல்ல.

இந்தியில் சமஸ்கிருதச் சொற்கள் நிரப்பப்பட்டு—பாமர மக்களிடம் இருந்து விலகி நிற்கும் பண்டிதர்கள் மொழியாக வளர்ந்து வருகின்றது.

இந்தியாவின் தேசீயப் பொது மொழியாக இந்தியைத் தீர்மானித்ததுங்கூட மக்களால்—தமது ஆட்சியை நடத்துவதற்கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் அல்ல. காங்கிரஸ் தலைவர்கள் பொறுக்கி எடுத்துக்கொண்ட பிரதிநிதிகளைக் கொண்ட கான்ஸ்டிடியூஷனல் அசெம்பெளி (பொறுக்கப்பட்டோர் குழு)யிலேயே—இந்தி ஆட்சி மொழியாகுந் தகுதியை அரசியல் நிர்ணய சட்டத்தால் தேடிக்கொண்டது. அந்தச் சட்டமும் அரசியல் நிர்ணய மன்றத்தில் இயல்பாக — நேரடியாகக் கொண்டுவரப்பட்டு, எவரும் தம் விருப்பம்போல் வாக்களிக்கும் நிலையில் நிறைவேற்றிய ஒன்றன்று. கட்சிக் கட்டுப்பாட்டினாலேயே சட்டமாக நிறைவேறும் வாய்ப்பினைப் பெற்றது. அரசியல் நிர்ணய மன்றத்தில் முற்றும் நிரம்பியிருந்த காங்கிரஸ் கட்சியினரின் தனிக் கட்சிக் கூட்டத்தில் இந்தியை ஆட்சி மொழியாக்குவது பற்றிய தீர்மானம் விவாதிக்கப்பட்டு—அதில் தோல்வியடைந்த பின்னர், தலைவராக இருந்த இராசேந்திரரின் ஒரு வாக்கால் நிறைவேற்றப்பட்டு — அதனாலேயே—முதலில் எதிர்த்தவர்களின் அவ்வளவு வாக்குகளையும் அரசியல் நிர்ணய மன்றத்தில் ஆதரவாகுமாறு செய்துகொண்ட பிறகே சட்டமாக்கப்பட்டது.

அரசியல் நிர்ணய மன்ற காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் பெரும்பாலோர் வடநாட்டினரே — இருந்தும் ஆதரவாக 78-வாக்குகளும். எதிராக 78-வாக்குகளுங் கிடைத்ததென்றால், என்ன பொருள்? வடநாட்டிலேயே பலர் — காங்கிரஸ்காரர்கள்கூட இதற்கு உடன்படவில்லை என்பதுதானே? ஒன்று இயல்பாக ஏற்றுக்கொள்ளப்படுவதானால் இந்த நெருக்கடி விளைந்திருக்காதன்றோ? நெருக்கடியைத் தவிர்க்க மறுமுறையும் — கட்சியைக் கூட்டி வாக்கு

எடுக்கப்பட்டபோதும் அதே முன்னைய 'சமநிலை' தோன்றியதெனில் ஆட்சி மொழி பற்றி 'இந்திக்கு' ஆதரவு இல்லை என்பதுதானே பொருளாகும்?

ஆடவன் ஒருவன், ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள விரும்பி வெறிகொண்டு அலைகிறான்—அவளோ அவனை அடியோடு வெறுக்கிறாள். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒரு புரோகிதனைத் துணை வைத்துக்கொண்டு ஒரு தாலிக் கயிற்றை அவள் கழுத்தில் கட்டிவிட்டால் மட்டும் அவள் மனைவியாகிவிடுவாளா? அது 'திருட்டுத் தாலி தானே?' தாலி கட்டப்பட்டது என்பதற்காக மட்டும் எவள்தான் தாரமாகிவிடுவாள்? அதுபோன்றே 78—78 ஆகப் பிரிந்து நின்ற கட்சிக் கூட்டத்தில்—தலைவர் இராசேந்திரபிரசாத் — தமது வாக்கை—இந்திக்கு ஆதரவாகத் தந்து அந்த மொழி "ராஷ்ட்ர பாஷை"யாக வழிவகுத்தார். பிரசாத் ஒருவர் வாக்கு—இந்தி மொழியை ஆட்சி மொழியாக்கும் வல்லமையை அவர்கட்கு அளித்துவிட்டது. 'தாழ்ப்பாள் திறந்திருந்தது — அதனாலேதான் உள்ளே நுழைந்தேன்' என்று கள்ளன் சொல்வதில்லை; அதைப்போன்றே என் வாக்கால் நிறைவேற்றும் வாய்ப்பிருந்தது — எனவேதான் 'நிறைவேற்றினேன் என்று ராஷ்டிரபதி—பிரசாத் கூறவில்லையே தவிர—உண்மை அதுதானே?

தனியொரு மனிதரின்—விருப்பத்தால்—ஆசையால்—வாக்குரிமையால்—ஒரு பெருந்துணைக் கண்டம் கொடியதொரு தொல்லைக்கும், துன்பத்திற்கும் ஆளாகியுள்ளது. இந்தி—இந்தியாவின் 'ராஷ்டிர பாஷை!' அதைச் சாதித்தவரோ இந்தியாவின் ராஷ்டிரபதி. இந்திய ஆட்சி மொழியாக இந்தி வருவதுபற்றி—ஒரே கட்சி ஆதிக்கம் வளர்ந்திருந்தும்—வடநாட்டவரே—பெரும்பாலோராய் இருந்தும் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்திலேயே ஆதரவிற்கு ஈடான எதிர்ப்பு இருந்ததென்றால்,—அக்கட்சிக்கு வெளியில், பொதுமக்களிடத்திலும், நல்லறிஞர்களிடமும்—தென்னாட்டிலும், வங்கத்திலும்—மராட்டியத்திலும், எவ்வளவு எதிர்ப்பு இருந்திருக்கும் என்பதைச் சிந்திப்போர் உணரலாம்.

வல்லவன் கையில் இருந்ததாலேயே—அந்த இரண்டு சாண் கயிறு ஒரு நிமிடத்தில் தையலின் கழுத்தில் தாலியாகி விடவில்லையா?-அதுபோன்றே — சந்தர்பவசத்தால் — சதியால் — சர்வாதிகார மனப்போக்கால்—இந்தி, அந்த மேலான இடத்தைப் பிடித்துக்கொண்டது.

ஒரு தனி மனிதரின் ஆசைக்காக—32 கோடி மக்களைக் கட்டுப்படச் செய்யும ஒரு திட்டம சட்டமாக்கப்பட்டுளது. ஒரு மனிதரின விருப்பத்தால் 14 மொழி வழி இனமக்களை — இந்தி மொழிக்கு அடிமைப்படுத்தும் அதிகாரம்—சதிகாரச் சட்டமாகக் கப்பட்டுள்ளது.

இந்தி மொழி பேசும் மக்கள் அநத மொழியை ராஷ்டிர பாஷையாக்கும வெறியில் அலைந்தனர், அலைகின்றனர். ஆனால் அவர்களோ அன்றும் இன்றுங்கூட எண்ணிக்கையால் பெரும்பான்மையினரல்ல. எண்ணிக்கையைப் பெருக்கிக் காட்ட, சேராத மொழியினரை எல்லாம் சேர்த்துக் கூட்டி, இந்திப் பட்டியலில் அடைத்துக் கணக்கெடுத்தாலும்—மொத்தம் 14 கோடியேதான். பிறமொழி பேசுவோரோ 20 கோடி! எனினும் இந்தியாவில் பேசப்படும் மொழிகளுள்—பெருந்தொகையினரால் பேசப்படுவது என்று காரணங் காட்டி—பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெருமலேகூட இந்தி ஆட்சிப் பீடத்தில் ஏற்றப்பட்டுவிட்டது.

இந்தியாவிற்கோ தேசீய மொழிகள் ஒன்றல்ல—பதினான்கு. தேசீய மொழி ஒரு நாட்டு மக்களை ஆளும் மொழியாக இருக்கமுடியும். அவரவர் தாய்மொழிதான் அவரவர் வாழும் நாட்டிற்கு ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்ற கொள்கையை—அந்தந்த வட்டார மொழிகளே நிறைவேற்ற முடியும். தமிழ் நாட்டில் தமிழும், ஆந்திர நாட்டில் தெலுங்கும்போல — அவ்வந்நிலத்து மொழியே—அவ்வந்நாட்டு மக்களின் உரிமையை — இலட்சியத்தைப் பூர்த்திசெய்ய முடியும். அதே முறையில் இந்தி பேசப்படும் வட்டாரத்திலும் இந்தியே தேசீய மொழி. அதுவே அங்கு ஆட்சி மொழியாக இருப்பதும் நியதி. ஆனால் அனைத்து மொழி வட்டாரத்தினரும் தேசீய மொழிகளுள் ஒன்றான இந்தியைச் சட்டப்படி ஆட்சி மொழியாக ஏற்கவேண்டும் என்பது அவசியமுமன்று—நீதியுமாகாது.

பல தேசீய மொழிகள்—14 மொழிகள் அரசியல் சட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அப்படியானால் ஒவ்வொரு தேசீய மொழியும் வழங்கும் இடத்தில் மற்றொரு தேசீய மொழி எப்படி இடம் பெற முடியும்? ஒவ்வொருவருக்கும் பெற்றெடுத்த அன்னை ஒருத்தியாகத்தானிருக்க முடியும். ஒருவருக்கு மேற்பட்டு உண்மைத் தாயார் இருக்க முடியாது—அதுபோன்றே ஒவ்வொரு குடிமகனுக்கும் மகளுக்கும்—தேசீய மொழி—நாட்டு மொழி ஒன்றுதானிருக்க முடியும். தாய் மொழி தவிர்த்த மற்றொரு மொழி தேசீய மொழியாக முடியாது. எந்தத் தேசீயத்தைக் காக்கவும் அது பயன்படாது. ஆனாலும் இந்தி இப்பொழுது புகுத்தப்படுகின்றதே, ஏன்? இன்றே இந்தியைப் புகுத்திவிட்டால்தான் அந்தந்த வட்டார தேசீய உணர்ச்சி வளர்ந்து, அவரவர் மொழி வழி உரிமை வாழ்வில் வேட்கை பெறுவதற்கு முன், அந்தந்தத் தனி மொழி வழி இன அடிப்படைகளை மறைத்தும் — குலைத்தும் சீரழித்தும் — இந்தியாவின் முழுப் பரப்பிலும் — இந்தி மொழி தேசீயத்தை நிலைபெறச் செய்து—இந்தி மொழியினரே ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்ற பேராசையினாலேயே யாகும்.

எனவே இந்தி தேசீயம் என்றும் அதுவே இந்தியாவின் இயல்பான தேசீயம் என்று பிறநாட்டவரை மயங்கச் செய்யவுமே இம முயற்சி. பிற மொழிகளின — தனி வாழ்வுரிமைகளை — இந்தி வெள்ளத்தில் ஆழ்த்திடலாம எனபதே அவர்தம் நோக்கம். இது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைத்துவிடச் செய்யும் முயற்சி. ஆனால் முடியுமா? ஒரு

குறித்தகாலத்தில்
போட்டோ எங்க்ரேவிங்
ப்ளாக்குகள்
ரப்பர் ஸ்டாம்புகள்
பித்தளை சைன் போர்டுகள்
முதலியன
உயர்ந்த முறையில்
தயார் செய்கிறோம்
S.S.S. ப்ரதர்ஸ்
போட்டோ எங்க்ரேவர்கள்
153 ப்ராட்வே, மதராஸ்.
போன். 55,116

மத்திய ஆட்சி மொழி வேண்டுமெனில் — அவற்றுள்ளே ஒரு மொழிக்கு மட்டும் அங்கிலே எப்படிப் பொருந்தும்?

ஆகவே மத்திய ஆட்சி மொழியாக இருப்பதற்கு வேண்டிய தகுதி—தேசிய மொழியென்ற ஒரு காரணத்தாலேயே ஒரு மொழிக்கு வழங்கப்பட முடியாது. அது இந்தியாவிலுள்ள எல்லா மொழிகட்கும்—மக்கட்கும் சமமாகப் பயன்படும் சிறப்புடைய பொதுமொழியாக இருக்கவேண்டும்.

தேசியம் என்ற பெயரில் நடத்தப்படும் மத்திய ஆட்சியின் கற்பனைத் தேசியத்திற்கு ஆற்றல் அதிகமா என்பது சோதனைக்கு ஆளாகியே தீரும். கற்பனைத் 'தேசியம்' நிலைகுலையாமற் போகாது.

ஆங்கிலம் — இயல்பாகவே — இந்தியாவில் கற்றவர்களிடையே பொதுமொழியாக நிலவி வருவதாலும் 'விஞ்ஞான' வளர்ச்சியுடன் இயைந்து வளரும் மொழியாக உள்ளதாலும் — நல்லாட்சிக்குத் தேவையான வளப்பம் அனைத்துங்கொண்ட மொழியாக இருப்பதாலும் — ஏற்கனவே இந்தியாவில் ஆட்சிமொழியாக நின்று இன்றும் நிலவி வருவதாலும், மேலும் பலமடங்கு சிறப்பான உரிமை பெற்றதாகின்றது. இந்தியாவைப் பொறுத்த வரையில்—பொது ஆட்சிமொழியாக இயங்க ஆங்கிலத்திற்குள்ள இயல்பான வாய்ப்பும்—சிறப்பான தகுதியும்—வேறு எம் மொழிக்குமே யில்லை.

அந்நிய மொழி என்போர் — அந்நியர் நம்மிடையே பரவவிட்டதை எல்லாம் விலக்கிவிட்டோமா? என்று எண்ணிப் பார்க்கவேண்டும். தபாலும் தந்தியும்—வானொலியும்-தொலைக் காட்சியும்—காரும் — ரயிலும் — கப்பலும் —:வான ஊர்தியும்—அலோபதியும்—ஹோமியோபதியும்—ஒலி பெருக்கியும்—அச்சுப் பொறியும் பாராளுமன்ற நெறியும்—ஆட்சிமுறையும் மற்றும் எண்ணிறந்தவுமான அந்நியர் கண்டுபிடித்து நம்மிடம் சேர்க்கப்பட்டவையே என்பதை ஏனோ மறந்துவிடுகின்றனர்? கிராப்பும்--காலர் சட்டையும் அந்நியர் நாகரிகமாகக் கருதப்பட்டவை தானே? விதவை விவாகமும், பெண்ணுரிமையும் ஆங்கில அறிவால் விளைந்தவைதானே? ஏன் இன்றைய சுய ஆட்சியைப் பெறவே அந்த அந்நிய ஆங்கிலந்தானே வழி வகுத்துத் தந்தது என்பதை எவரே மறுக்கமுடியும்?

ஆயினும் ஆங்கிலத்தை எதிர்ப்பதுதான் ஏனோ? எதிர்ப்பவர்கள் என்ன நம்மைப்போல் பைத்தியக்காரர்களா? காட்டுமிராண்டிகளா? அல்ல—அல்ல—இந்திக்கு முடிசூட்டினால்தான் தமது—ஏகாதிபத்தியம் — 'சூரிய சந்திரர்'கள் உள்ளளவும் ஏனென்று கேட்பாரற்று நிலவும் என்று கருதியே அவ்வாறு வலியுறுத்தி எதிர்க்கின்றனர். அவர்கள் அதிகார வாதிகள் — ஆட்சிபீட கர்த்தாக்கள் அல்லவோ? ஆனால் இந்திய தேசங்கள் பலவற்றிற்கும் தேசிய மொழிகளுள் ஒன்றான இந்தியே ஆட்சி மொழியானால் இந்தியர் சில காலமும் நிலைக்க முடியாது என்பதை அவர்கள் ஏனோ உணரவில்லை? ஆதிபத்திய ஆசை கண்ணையும் கருத்தையும் மறைக்குமன்றோ?

இங்நிலையில் இந்தியை எல்லாத் தேசிய இனங்களுக்கும் ஆட்சி மொழியாக்குவது-'திருட்டுத் தாலி' கட்டும் செயலே யாகும். மாபெருந் தலைவரான இராசேந்திரர் செய்ததனாலேயே—வாய்ப்பைப் பயன்படுத்தி ஜனநாயகத்தைக் கொன்று — இந்தியை ஆட்சி மொழியாக்கும் சட்டத்திற்கு வழி வகுத்த செயல் நியாயமாகிவிடாது. அவர் அரசியலில் கண்ணியம் கருதுபவரானால் தன்னால் விளைந்த தவறை அவரே திருத்தி மாற்ற முன்வரவேண்டும். சட்டத்தை மாற்றி அனைவர்க்கும் சமசந்தர்ப்பம் அளித்து மக்கள் விருப்பத்திற்கேற்ப ஆட்சி மொழியை அமைத்துக்கொள்ள இடம் தர வேண்டும்.

கூட்டத் தலைவர் இராசேந்திரர் ஒருவரின் வாக்காலேயே ஒரு மொழி ஆட்சிமொழிப் பீடமேறிற்றென்றால் மத்திய அரசியலிலேயே கூட—அது கட்டாயத் திணிப்பு தானே? அதனாலே தான் இந்திக் கட்டாயத் திணிப்புக்கு எதிர்ப்புப் பல வகையிலும் தோன்றிவிட்டது. கட்டாயத் திணிப்பு-"திருட்டுத் தாலியேதான்"? இராசேந்திரர் கட்டியதேயானாலும் 'திருட்டுத் தாலி' அறுந்தே தீரும்.

★

"**வாங்கம்மா!**" என்று கடை முதலாளியே எழுந்து வந்து அவளை வரவேற்றான்.

"ஏதாவது புதிதாக......"

"பொங்கலாயிற்றே, உங்களைப்போன்றவர்களுக்கு நல்லதா, பிடித்தமானதா தரணுமேன்னு, காஞ்சிபுரத்திற்கும் ஆரணிக்கும் போயிட்டுக் காலையில்தான் வந்தேன்! கொளளேகாலம் பட்டுப் புடவைகளும், ஸ்பெஷல் கிரேப் சில்க் ரகங்களும் வந்திருக்கின்றன! உட்காருங்களம்மா!" என்று ஜவுளிக்கடை முதலாளி நெளிந்து குழைந்து பேசி, நாற்காலியை இழுத்துப்போட்டான்.

அதற்குள் கடைப் பையன் ஓடிப்போய், குளிர்பானம் வாங்கிக்கொண்டு வந்தான்!

அழகு முகம்

-இராதா மணாளன்-

சிவகாமி கடைக்குள் அடியெடுத்து வைத்துவிட்டாள் என்றால், அன்று குறைந்தது ஐந்நூறு ரூபாய்க்காவது வாங்காமல் போக மாட்டாள் என்பது முதலாளிக்கு உறுதியாகத் தெரியும்—ஆகவே உபசாரங்கள் பலமாக இருக்கக் கேட்கவா வேண்டும்?

சிவகாமியின் கழுத்திலிருந்த வைர நெக்லேசும், காதிலிருந்த வைரத்தோடும் லோலாக்கும் மின்சார விளக்குகளின் ஒளியில் அவளது செல்வ நிலையை ஆடம்பரச் சிரிப்போடு பறைசாற்றிக் கொண்டிருந்தன. ஒய்யாரமாக அவள் நாற்காலியில் அமர்ந்து ஒரு கையிலிருந்த கற்கள் பதிக்கப்பட்ட தங்க வளையல்களை மேலே தள்ளிவிட்டு, மற்றொரு கையிலிருந்த கடிகாரத்தைப் பார்த்தாள்.

"மூன்றாகி விட்டதா?" என்று முணுமுணுத்தபடி, கடைக்காரன் பிரித்துப்போட்ட புடவைகளைப் பார்த்தாள்.

நான்கைந்து புடவைகள் இன்று செலவழியும் என்று எதிர்பார்த்தான் கடைக்காரன். அதைப் போல் இருமடங்கு அவள் தேர்ந்தெடுத்து விடவே, அவன் முகமெல்லாம் பல்லாகிவிட்டது!

கடையைவிட்டு இறங்கியவளை, "அம்மா! பசியாயிருக்கு! ஓரணாக் கொடுங்கம்மா!" என்ற பிச்சைக்காரியின் குரல் தடுத்து நிறுத்தியது.

சிவகாமியின் கண்கள் அவளை உற்றுப்பார்த்தன. வயது பதினேழு பதினெட்டுத்தான் இருக்கும். கட்டான உடல், கவலை மேகங்களுக்குப் பின்னால் மதி முகம், கிழிந்த புடவை, வாராத தலை...... பரிதாபமான தோற்றம்!

"ஓரணுவுக்கு என்னம்மா சாப்பிடுவாய்?" புன்னகையோடு சிவகாமி கேட்டாள்.

"உங்களைப்போல நாலு பேரு ஒவ்வொரு அணா கொடுத்தா......"

பிச்சைக்காரி கூறியது அதற்கு மேல் கேட்கவில்லை—அவள் சிந்தனை எங்கோ ஓட ஆரம்பித்து விட்டது.

"என் வாழ்க்கையில் எதையாவது புதுமையாகச் செய்ய வேண்டுமென்று நினைக்கிறேன்! ஆனால் எதைச் செய்வது என்றுதான் புரியவில்லை!" என்று தன் கணவன் அடிக்கடி சொல்வது, இப்பொழுது அவள் கவனத்திற்கு வந்தது.

"அவருக்கு முன் அதை நான் செய்து காட்டுகிறேன்!" என்ற இதய முணுமுணுப்போடு, பிச்சைக்காரியைப் பார்த்தாள்.

"நீ என்னோடு வருகிறாயா, சோறும் போடுகிறேன், காசும் தருகிறேன்!" என்றாள்.

"எங்கேயம்மா?"

"என் வீட்டிற்கு!"

"வேண்டாம்மா, ஓரணாக் கொடுங்கம்மா போதும்!"

"என்னோடு நீ வந்தால் நான் மகிழ்ச்சியடைவேன்—வரமாட்டாயா?" என்று பரிவோடு பேசியவளை, உதட்டிலே விரலை வைத்தபடி ஆச்சரியத்தோடு பார்த்தாள், பிச்சைக்காரி.

"வா!" என்று அவள் கையைப் பிடித்துக் கொண்டு, காரை நோக்கி நடந்தாள் சிவகாமி.

ஓடிய காரில் உட்கார்ந்திருந்த பிச்சைக்காரிக்கு ஒன்றுமே புரியவில்லை.

"ஒருவேளை..." எதையோ நினைத்துக்கொண்டு "அம்மா! அம்மா!" என்று கத்தினாள்.

"என்ன?"

"என்னைப் போலீஸ் ஸ்டேஷனில் கொண்டு போய் விட்டுவிடப் போறீங்களா அம்மா?" பிச்சைக்காரி அழவே ஆரம்பித்துவிட்டாள்.

"என்னைப் பார்த்தால் அத்தகைய கொடூர நெஞ்சம் கொண்டவளாகவா உனக்குத் தெரிகிறது? பயப்படாதே! உன் பெயர் என்னம்மா?"

"சாமந்தி!"

"சொந்தக்காரர்கள் உனக்கு யாருமே இல்லையா?"

"அப்பா மட்டும் இருக்கிறாரு! ஏதாவது கூலி வேலை செய்து நாலணா எட்டணா கொண்டு வருவாரு! குடிசையைவிட்டு என்னை வெளியே போக விட மாட்டாரு! அப்பாவுக்கு ரெண்டு நாளா காய்ச்சல்-அதனாலே..."

தேம்பிக் கொண்டே அவள் கூறியதைக் கேட்டதும், சிவகாமியின் மெல்லிய உடல் சிலுசிலுத்தது — இளகிய மனம் கவலையில் விழுந்து அழுந்தியது.

"வருந்தாதே சாமந்தி! இன்று முதல் உன் வாழ்க்கையே மாறிவிட்டதென்று நினைத்துக் கொள்! நீ புது வாழ்வு பெறப்போகிறாய்!"

ஒன்றும் புரியாமல் பிச்சைக்காரி ஏறிட்டுப் பார்த்தபோது, கார் பெரிய பங்களாவினுள் நுழைந்தது.

காரை விட்டு இறங்கியதும் பங்களாவிற்குள் நுழையத் தயங்கிய சாமந்தியைப் பார்த்து, சிவகாமி சிரித்தாள்.

"உள்ளே வா, சாமந்தி!"

"வேண்டாம்மா, இப்படியே இருக்கிறேன்!"

"பணக்காரர்களுக்கும் இதயமுண்டு — எல்லாப் பெண்களும் சகோதரிகள் என்ற எண்ணமுண்டு — சுயநலத்தைவிடப் பிறர் நலத்தில் நாட்டமுண்டு— என்பதை உலகத்திற்குக் காட்டப் போகிறேன் நான்! உன்னைப்போல நானும் பெண்தானே—பயப்படாதே வா, சாமந்தி!" என்று கலக்கத்தோடு நின்றவளின் கையைப் பிடித்து, பங்களாவுக்குள் அழைத்துச் சென்றாள்.

மாடி அறையினுள் நுழைந்ததும், "உட்கார் இப்படி!" என்று நாற்காலியைக் காட்டினாள்.

"அதுபோலெல்லாம் உட்கார்ந்து பழக்கமில்லை அம்மா!" என்று நாணத்தோடு தயங்கித் தயங்கிக் கூறியவளைப் பார்த்து, சிவகாமி கலகலவென்று சிரித்தாள்.

சாமந்தி தன்விழிகளை உயர்த்தி, அந்த விசாலமான அறையில் நோட்டம்விட்டாள், வெளிர் பச்சை நிறச் சுவர்கள், சுவர்களில் மாட்டப்பட்டிருந்த தங்க நிறச் சட்டம் போட்ட வண்ண ஓவியங்கள், ஜன்னல்களில் அசைந்தாடிக்கொண்டிருந்த பட்டுத்திரைகள், மேலே சுற்றும் விசிறி, வெல்வெட் விரிப்புக் கொண்ட தாழ்வான கட்டில், மேஜைமீது விதவிதமான பொருள்கள், ஆள் உயரத்திற்கு முகம் பார்க்கும் கண்ணாடியோடு கூடிய பெரிய பீரோ......அவளுக்கு மயிர்க் கூச்சல் எடுத்தது!

ஏதோ ஓர் அச்சம் அவள் உள்ளத்தில் விழுந்து கவ்வியது.

"எனக்குப் பயமாக இருக்கிறது! நான்போய் விடுகிறேன் அம்மா! வெளியேபோய் விடுகிறேன்!" என்று கைகால்கள் நடுங்க அவள் கூறினாள்.

"ஏன் இப்படிப் பயப்படுகிறாய், சாமந்தி?"

"என்னமோ எனக்குப் பயமாக இருக்கிறது! என்னை விட்டுவிடுங்களம்மா, நான் போய்விடுகிறேன்!" அவள் அழவே ஆரம்பித்துவிட்டாள்.

அவள் தோள்மீது கைவைத்து அழைத்து வந்து கட்டிலில் உட்காரவைத்து, தானும் பக்கத்தில் அமர்ந்தாள், சிவகாமி.

"சாமந்தி! ஏன் இப்படி நடுங்குகிறாய்? வறுமையிலே பிறந்தோம், வறுமையிலே வளர்ந்தோம், வறுமையிலேயே புரண்டுகொண்டிருந்தோம்— அந்த வறுமை நம்மை விட்டுவிட்டு ஓடிவிடப் போகிறதே என்று அலறுகிறாயா? பைத்தியக்காரி! பயப்படாதே! என்னை நீ இன்று கண்டது, உனக்கு எவ்வளவு பெரிய அதிருஷ்டம் தெரியுமா?"

"உங்கள் பேச்சே எனக்குப் புரியவில்லையே, அம்மா?" என்று கேட்பதைப் போலச் சாமந்தி விழித்தாள்.

"மாலை ஒன்றை ஏந்தி யானை வரும்—தெருப் புழுதியில் ஓடி விளையாடிக்கொண்டிருக்கும் பஞ்சைச் சிறுவன் ஒருவனின் கழுத்தில் அந்த மாலையை அதுபோடும்—உடனே அந்தப் பையனைக்கொண்டு போய் சிம்மாசனத்தில் உட்காரவைத்து அரசனாக்குவார்கள் —. என்று கதைகளில் படித்திருக்கிறேன்! ஆனால் அத்தகைய திடீர் அதிர்ஷ்டம உண்மை வாழ்க்கையில் யாருக்கும் ஏற்பட்டதாக நான் கேள்விப்படவில்லை! அத்தகைய அதிருஷ்டம் இப்பொழுது உனக்கு வந்திருக்கிறது!......ஆச்சரியமடையாதே சாமந்தி — உண்மையாகத்தான் சொல்கிறேன்!.........வாழ்க்கையில் எதையாவது புதுமையாகச் செய்யவேண்டுமென்று என் கணவர் சொல்வார். அவருக்கு முன் நானே புதுமை செய்து காட்டப்போகிறேன! என் தந்தை வைத்துவிட்டுப்போய் இருக்கும் சொத்து ஏராளம்! இதைபோன்ற பெரிய பங்களாக்கள் பல! சிறியதும் பெரியதுமான வீடுகள் அநேகம்! பாங்கிலோ இலட்சக்கணக்கில் பணம்! இவ்வளவும் இருக்கும்; நான்—ஒரு ஏழைப் பெண்ணுக்கு ஏன் புதுவாழ்வு அளிக்கக் கூடாது? ஏன் முடியாது?.........உனக்கு ஒரு பங்களா தரப்போகிறேன்—பணம் தரப்போகிறேன்—செல்வந்தனாகவும் நல்லவனாகவும், உன் கண்ணுக்குப் பிடித்தவனுமாக இருக்கும் ஒருவனுக்கு உன்னைத் திருமணம் செய்து தரப்போகிறேன்! கடைத்தெருவில் நின்று, "ஓரணாக் கொடுங்கம்மா!' என்று கேட்ட பிச்சைக்காரி அல்ல நீ இப்பொழுது—இந்த நொடி முதல் நீ என் சகோதரி!" என்று மூச்சுவிடாமல் பேசியவளை, கண் சிமிட்டாமல் ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டிருந்தாள் சாமந்தி. ஏதாவது கனவு காண்கிறோமா என்ற சந்தேகம் கூட அவளுக்குத் தோன்றியது.

"சாமந்தி எழுந்திரு! குளித்துவிட்டு வேறு புடவை கட்டிக்கொள்!"

இருவரும் அந்த அறையைவிட்டு வெளியே சென்றனர்.

"இதோ இருக்கிறதே சோப்பு, இதில் கொஞ்சம் கூட மீதம் வைக்கக் கூடாது-அப்படித் தேய்த்துக் குளி! இதோ புடவை! புதுப் பட்டுப்புடவை! இதைக் கட்டிக்கொண்டு வா!" என்று சிரித்துக் கொண்டே கூறிவிட்டு, குளிக்கும் அறையைவிட்டு வெளியே வந்தாள் சிவகாமி.

"இரண்டு ஓவல் கொண்டுவா!" என்று சமையல்காரியிடம் கூறிவிட்டுத் தன் அறைக்குச் சென்றாள்.

சிறிது நேரம் கழித்து' பட்டுப் புடவையைச் சுற்றிக்கொண்டு உள்ளே வந்த சாமந்தியைப் பார்த்துப் புன்னகை செய்தாள்.

"புடவையைச் சரியாகக் கட்டத் தெரியவில்லையே — நான் கட்டிக் காட்டுகிறேன்!" என்று அவளுக்கு நாகரிகமான முறையில் புடவைகட்டி, சரிகை இழைகள் ஓடிய வெல்வெட் சோளி போட்டு, தலைவாரி பூ வைத்து, முகத்திற்குப் பவுடர் அடித்து, திலகம் வைத்தாள்.

"இப்பொழுது எவ்வளவு அழகாக இருக்கிறாய் பார்!" என்று அவளை இழுத்துப்போய் நிலைக்கண்ணாடியின் முன் நிற்கவைத்தாள்.

கண்ணாடியில் தெரிவது தன் உருவம்தானா என்பதை சாமந்தியால் நம்ப முடியவில்லை.

"இது உண்மை அல்ல! நான் ஏதோ பயங்கரமான கனவு காண்கிறேன்!" என்ற சந்தேகத்தோடு தன்னைக் கிள்ளிப் பார்த்துக்கொண்டாள்.

"இந்தா ஓவல் சாப்பிடு!" என்று சிவகாமி கொடுத்த வெள்ளிக் கோப்பையைப் பேசாமல் வாங்கிக்கொண்டாள்.

"சிறிது நேரத்திற்கு முன்புவரை நீ பிச்சைக்காரியாக இருந்தவள் என்று சொன்னால், இப்பொழுது யாருமே நம்பமாட்டார்கள்! ஆடை அலங்காரம் உனக்கு எவ்வளவு எடுப்பாக இருக்கிறது!" என்று அவளைச் சிவகாமி அணைத்தபடி கட்டிலில்கொண்டு போய் உட்காரவைத்தாள்.

"இங்கேயே இரு சாமந்தி, இதோ வந்துவிடுகிறேன்!" என்று சிவகாமி மான்போல் துள்ளி அறைக்கு வெளியே ஓடினாள்.

ஒன்றுமே சரியாகப் புரியாமல் திக்குமுக்காடிக் கொண்டிருந்த சாமந்தி, பெரிய தலையணை மீது சாய்ந்து கட்டிலின் தலைப்பக்க விளிம்பின்மேல் தலை வைத்தவாறு, ஒருக்களித்துப் படுத்தாள். அப்படியே தூங்கியும் விட்டாள்.

"பாருங்கள் அத்தான்—நான் சொன்னால் நீங்கள் நம்பவில்லையே?"

அந்த அறையினுள் நுழைந்ததும் தன் கணவனிடம் சாமந்தியைச் சுட்டிக்காட்டி இவ்வாறு சிவகாமி கூறினாள். செயற்கரிய செயல் செய்துவிட்டவளைப்போல அவள் முகத்திலும் குரலிலும் ஒருவித பெருமிதம் தாண்டவமாடியது.

"இவளா பிச்சைக்காரி?" என்று அவள் கணவன், கட்டிலில் சாய்ந்து படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தவளின் அருகில் வந்தான்.

வாட்ட சாட்டமான உடலும், வட்டமான முகமும், வசீகரமிக்க கண்களும் கொண்ட அவன், "நம்பவே முடியவில்லையே!" என்றான், சாமந்தியின் முகத்தைப் பார்த்தபடி.

"புதுமைசெய்து காட்டுவதில் உங்களை நான் முந்திக்கொண்டேன் அல்லவா?" என்று குறும்போடு கூறிப் புன்னகை செய்தவள், சாமந்தி மீது வைத்தகண் வாங்காமல் ஆர்வத்தோடு அவன்

பார்ப்பதைக் கண்டதும், புருவங்களை உயர்த்தினாள்.

"கள்ளங் கபடமில்லா அழகு முகம்! வளமான உடல்! இவள் உலவினால் இந்தப் பங்களாவே ஒரு தனி அழகைப் பெறும்!"

மனதில் தோன்றியதை அவன் வெளியில் கொட்டிவிட்டான்.

"நல்லவனாக ஒருவனைப் பார்த்து முதலில் இவள் திருமணத்தை முடித்துவிட வேண்டும்!"

"ஏன், நான்தான் கட்டிக்கொள்கிறேனே!"

குறும்புக்காகத்தான் இப்படி அவன் கூறினான் என்றாலும், அவள் முகம் மாறத் தொடங்கியது! இதயத்தின்மீது சாட்டையடி விழுந்தவளைப்போலத் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

"ஐயாவைப் பார்க்க யாரோ வந்திருக்கிறார்கள்!" என்று அந்த நேரத்தில் வேலைக்காரி வந்து கூறவே, அவன் வெளியே சென்றான்.

சிந்தனையோடு சாமந்தியைத் திரும்பிப் பார்த்தாள் சிவகாமி.

"கள்ளங் கபடமில்லா அழகு முகம்! இவள் உலவினால் இந்தப் பங்களாவே ஒரு தனி அழகைப் பெறும்!"

கணவனின் இந்தச் சொற்கள் அவளைச் சுற்றி வட்டமிட்டன.

"இவள் அழகு முகம் என் அத்தானின் நெஞ்சைப் போதைகொள்ளச் செய்துவிட்டால்?"

அவள் பெண் மனதில் இருட் கோடுகள் பின்னலிட்டன.

பேதைப் பெண்ணின் சிந்தனை கொந்தளித்தது. களைத்து ஓய்ந்த கண்களுக்கு எவ்வாறு, எல்லாம் இரண்டாகத் தெரியுமோ, அவ்வாறே அவள் உள்ளத்தில் சகல விஷயங்களும் வாதமும் எதிர் வாதமுமாக, இரண்டு இரண்டாகப் பிரிந்து நின்றன.

"இவள் வாழ்வை வளர்பிறை ஆக்கப்போய், என் வாழ்வைத் தேய்பிறையாக்கிக்கொள்வதா?" என்ற உள்ளுணர்ச்சி அவள் நெஞ்சில் அலைமோதியது.

நிலைக்கண்ணாடியின் முன்பு போய் நின்றாள். அவளையும் தன்னையும் மாறிமாறிப் பார்த்தாள்.

"இவள் உலவினால் இந்தப் பங்களாவே ஒரு தனி அழகைப் பெறும்!" யாரோ கடகடவென்று கர்ணகடூரமான குரலில் கெக்கலி கொட்டிச் சிரிப்பதைப்போன்ற பேரலைச் சப்தம், அவள் தலையைச் சுற்றச் செய்தது.

கண்ணை மூடியபடி ஒரு கணம் மௌனமாக நின்றாள். மறு கணம் பீரோவைத் திறந்து பத்து ரூபாய் நோட்டுகள் ஐந்தை எடுத்தாள். எடுத்ததில் நான்கைத் திரும்பவும் வைத்துவிட்டு, ஒன்றைக் கசக்கி உள்ளங் கையில் மூடிக்கொண்டு கட்டிலின் அருகில் வந்தாள்.

"சாமந்தி!"

"சாமந்தி!"

"சாமந்தி! சமாந்தி! ஏ, சாமந்தி!"

உரக்க அழைத்தும் அவள் விழிக்காததினால், உலுப்பி எழுப்பினாள்.

சாமந்தி திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள்.

"இந்தா!" என்று பத்து ரூபாய் நோட்டை வெறுப்போடு அவளிடம் கொடுத்தாள்.

அதைப்பிரித்துப்பார்த்தபடி "இதென்னம்மா?" என்றாள் சாமந்தி.

"உனக்குப் பிச்சை!" கடுகடுத்த முகத்துடன் கோபமும் வெறுப்பும் கலந்த குரலில் சிவகாமி கூறினாள்.

"பிச்சையா?"

சாமந்தியின் முகத்தில் கவலையும் பரபரப்பும் நிழலாடின. கையிலிருந்த நோட்டுத் தரையில் விழுந்தது.

"இந்த வீட்டில் இனி ஒரு நொடிகூட நீ இருக்கக் கூடாது! வெளியே போய்விடு!" சிவகாமி உறுமினாள்.

"சரியம்மா!"

"இதை எடுத்துக்கொள்!" என்று புருவத்தை நிமிர்த்தித் தரையில்கிடந்த பத்துரூபாய் நோட்டைச் சுட்டிக்காட்டினாள், சிவகாமி.

"வேண்டாம் அம்மா!" என்று வார்த்தைகளால் அல்ல, தலை அசைவால் கூறிவிட்டுக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள், சாமந்தி.

வாயிற்படியை நோக்கி நடந்து சென்றவளைப் பார்த்தபடி கட்டில் மீது உட்கார்ந்த சிவகாமி, நீண்டதொரு பெருமூச்சு விட்டாள்.

★

நீங்கள் எங்கிருந்தாலும் சரி, எந்த நிலைமையிலிருந்தாலும் சரி, மக்கள் சமுதாயத்தின் வளர்ச்சியை வளர்த்துக் கொண்டிருங்கள். ஒற்றுமையின் தூதுவர்களாக விளங்குங்கள். இன்று உலகமும் அறிவாளிகளும் உங்களிடமிருந்து இதைத்தான் கேட்கின்றனர். அதிகமான எதையும் செய்ய முடியாவிட்டாலும், மக்கள் சமூகத்தின் பிரச்சாரகர்களாயிருங்கள். அதுவே எவ்வளவோ நன்மையைச் செய்ததாகும்.

அறுந்த சங்கிலி

ராமலிங்கம், M.A.

கப்பல்போல் மிதந்துவந்த கார்,பங்களாவின் காம்பவுண்டிற்குள் திரும்பிப் போர்டிகோவில் நின்றது. உடனே டிரைவர் இறங்கிக் காரின் கதவைத் திறக்க, இராமாமிர்தம் ஐயர் காரிலிருந்த பொட்டளத்தை எடுத்துக்கொண்டு இறங்கி "முனுசாமி காரை நன்னா துடைச்சி நாளைக்குத் திருத்தணிக்குப் போவதற்குத் தயார் செய்து வை — காலையிலே 10 மணிக்கு வந்து சேரு" என்று சொல்லிக்கொண்டே ஹாலில் நுழைந்தார். முனுசாமி காரை ஷெட்டில் விடப் போய்விட்டான். ஹாலில் யாரும் இல்லாததால், ஐயர் "அலமு......அலமு... என்னடி செய்திண்டிருக்கே? இங்கே வா......எங்கே இந்த வாண்டுப் பயலையும் காணோம்......டேய் சுந்துமணி" என்று கூப்பிட்டார். அலமேலு அம்மாள் உடல் வளப்பத்தின் காரணத்தால் ஓடிவர முடியவில்லை, என்றாலும், தத்தி நடக்கும் தன் பேரனோடு ஒருவாறு அசைந்துவந்து "என்ன சமாசாரம்... இதென்ன பொட்டளம்" என்றுகேட்டாள். இராமாமிர்தம், சாவகாசமாக, மேல் அங்கவஸ்திரத்தை மற்றொரு சோபாவின்மேல் போட்டுக்கொண்டே "நம்ம மந்திரி இன்றைக்கு ஒரு ஓட்டல் திறந்தாரே தெரியுமோ! அந்த ஓட்டல் ஸ்வீட்சு ரொம்ப நன்னாயிருக்குடி...டேய் சுந்துமணி இங்கே வாடா... நோக்கு ஜாங்கிரி வேண்டாம்" என்று சொல்லிக்கொண்டே ஒரு ஜாங்கிரியை எடுத்துக் கொடுத்துவிட்டு, மிகுதி பொட்டளத்தை அம்மாளிடம் கொடுத்துவிட்டார். சுந்துமணி அதைச் சுவைத்துக்கொண்டே வாசல் பக்கம் பார்த்துக் கை காட்டி "பாம்...பாம்" என்று மழலை மொழி பேசினான். அலமேலு திரும்பிப் பார்த்து "அட நம்ம முனுசாமி வந்திருக்கான்; அதைச் சொல்றான்......முனுசாமி, ஜாக்கிரதையாய் திருத்தணி போய்விட்டு வாங்கோ! நான் உன் பெண்டாட்டி அலங்காரம் கிட்டே சொல்லியிருக்கேன், அவளை மூன்று நாளைக்கு இங்கேயே படுத்துக்கொள்ள" என்றாள். அதற்கு முனுசாமி "சரிங்கம்மா, நல்லது. நான் கவனிச்சுக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு நகரும்போது "என்னங்க அருணாசல முதலியார் இருக்காரே, அவர் நாளைக்கு வடிவுடை அம்மன் கோவிலுக்குக் கும்பாபிஷேகம் செய்யப் போகிறாராம் உங்களைக் கட்டாயம் வரச்சொன்னார்" என்று ஐயர் அம்மாள் சொல்ல, ஐயர், தன்னை நாளைக் காலையிலேயே வரச் சொல்லுவாரோ என்று திரும்பினான் முனுசாமி.

இதுவரை பாதி ஜாங்கிரியை ரசித்து சாப்பிட்டுக்கொண்டிருந்த சுந்துமணி திடீரென்று ஹாலின் கதவண்டை ஓடி "தாயி...தாயி..." என்று கத்தினான். எல்லோரும் திரும்பிப் பார்க்க, ஐயர் சிரித்துக்கொண்டே "ஏது? இவன் பெரிய சிக்னலர் போலிருக்கே! ஆள் வருவதற்கு முன்பாகவே இவன் கத்திடறானே...யாரு அலங்காரம் வராளா" என்றதும் "ஆமாங்க சாமி" என்று சொல்லிக்கொண்டே உள்ளே வந்தாள். உடனே சுந்துமணி அவளிடம் ஓடி அவள் மடியைக் காட்டி "த்ச...த்ச..." என்று சப்புக்கொட்டினான். தினமும் தான் வாங்கிவரும் சீப்பான பிஸ்கட்டை யாருக்கும் தெரியாமல் அவனுக்குக் கொடுக்கும் பழக்கம்; இன்று அவன் கேட்டான். இதைத் தெரிந்துகொண்ட அவள், ஒன்றும் கண்டுகொள்ளாமல் "என்னடா வேண்டும் நாம் காரிலே போலாமா" என்று சமாதானம் செய்ய அவன் ஓவென்று கத்தி அவள் மடியைக் காண்பித்து அழுதான். "என்னடி வச்சிருக்கே மடியிலே —அவனுக்குத்தான் காட்டேன்" என்று அலமேலு அம்மாள் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, சுந்துமணி வேகமாக அவள் மடியைப் பிடித்திழுக்கவே, தொப்பென்று விழுந்தது ஒரு அறுந்த சைக்கில் சங்கிலியும் ஒரு பொட்டளமும் "ஹை..." என்று 'சுந்துமணி' கையைத்தட்டி அந்தப் பொட்டளத்தை எடுத்துக்கொண்டான். ஐயர் "என்னடி இது அறுந்த சங்கிலி ஏது? தெருவிலே இருக்கிற ஒரு தும்பு தூசியைக்கூட விடமாட்டே போலிருக்கே! முனுசாமி நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி! பார்த்தியோ அறுந்த சங்கிலி எதுக்காவது உபயோகப்படுமன்னு கொண்டு வந்திருக்கா" என்று சொல்லிக்கொண்டே சிரித்தார். அவர் சிரிப்பு அவன் உள்ளத்தைக் கிளறிவிட்டது "எத்தனை தடவை சொல்லியும் இந்தப் பழக்கத்தை இவள் விடமாட்டேங்கிறாளே என்று நினைத்துக்கொண்டே சிறிது கோபத்துடன் ஷெட் நோக்கி நடந்தான். அலங்காரம் முகத்தில் அசடு வழிய அந்தச் சங்கிலியோடு வீட்டினுள் நுழைந்தாள்.

○ ○ ○

காரைக் கழுவிவிட்டு, சில கருவிகளை எடுத்து வைத்துவிட்டு ஷெட்டைப் பூட்டி, முனுசாமி வீட்டிற்குப் போகும்போது பங்களாவில் மணி ஒன்பது அடிக்கும் சப்தம் கேட்டது. தன் பெண்டாட்டி இப்படிக் கண்ட பொருள் எல்லாம் எடுத்து வந்து சேர்க்கும் பழக்கத்தை ஒழித்துவிட வேண்டும் என்ற எண்ணத்துடன், அதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண்டே வீட்டை நெருங்க, வெளியிலேயே கதவின்மேல் சாய்ந்தபடி செப்புச் சிலைபோல் ஏக்கத்தோடு நின்றுகொண்டிருந்தாள் அவள்.

"என்ன அலங்காரம் எனக்காகவா, காத்துக் கொண்டிருக்கே, நீ சாப்பிட்டுடக்கூடாது'' என்று முனுசாமி கேட்டான்.

"இல்லிங்கோ மச்சான், இன்னும் என் தங்காச்சி வரலே! சாதாரணமா ஏழுக்கெல்லாம் வந்திடுவா; மணி ஒன்பதாச்சு'' என்று பெருமூச்சோடு அலங்காரம் சொல்ல "சிங்காரிதானே, அவ எசமான்தான் நாளைக்குக் கும்பாபிஷேகம் செய்யப்போகிருரே, ஏதாவது வேலையிருக்கும்'' என்று சொல்லிக் கொண்டே படிக்கட்டு ஏறினன். "என்னங்க மச்சான்! நாளைக்கு அம்மன் கோவிலில் கும்பாபிஷேகம் என்ருல் இன்றைக்கு வீட்டில் என்ன இருக்கு, போய்ப் பார்த்துவிட்டு வாங்க மச்சான்'' என்ருள். அவன் சிறிது கோபமடைந்து "அதுக்குத்தான் ஆயிரம் தடவை சொல்கிறது, இப்படி இரண்டுங் கெட்டாளுக இருப்பதாலே தானே நான் எல்லாவற்றிற்கும் போகவேண்டியிருக்கு! அவளுக்கு ......'' என்று சொல்லிகொண்டிருக்குபோதே, அலங்காரம் குறுக்கிட்டு "மச்சான் அதெல்லாம் அப்பாலே பேசிக்கலாம், முதலில் போய்ப் பார்த்துவிட்டு வாங்க'' என்று சொன்னதும் அவன் அப்படியே இளம்பிவிட்டான்.

○ ○ ○

"என்ன சிங்காரி நாளைக்குக் கும்பாபிஷேகத்துக்கு தவரும உங்க அக்காவோடவந்திடு தெரியுதா...''

"சரிங்க எசமான்; நான் போகட்டுங்களா, மணி ஆகுது''

"இரு போகலாம், சிங்காரி, உனக்கு யாரு இந்தப்பேரு வச்சுது? பொருத்தமா இருக்கே''

"என்னங்க எசமான் இண்டல் பண்றீங்க! குழந்தைகளுக்கு அப்பா அம்மா தானே பேர் வைப்பாங்கோ''

"அது தெரியும், ஒரு சமயம் உன் புருசன் வச்ச ஆசைப் பேரோன்னு பார்த்தேன்''

"சிங்காரி இதைக் கேட்டதும் கண்களில் கண்ணீர் ததும்ப "எசமான் அவரோடு நான் பேசினதுகூட இல்லையே— காலையிலே கலியாணம் ஆச்சு — சாயங்காலம் தோட்டம் பக்கம் போகும்போது பாம்பு கடிச்சு இறந்துட்டாரு'' என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே அவளால் துக்கம் பொறுக்க முடியவில்லை. தன் முந்தானையால் முகத்தை மூடி, விசித்து விசித்து அழ ஆரம்பித்துவிட்டாள். திடீரென்று அவள் முதுகின் மீது, முரடான கை படவே திடுக்கிட்டுப் பார்த்து "எசமான்.........'' என்று ஒதுங்கினள்.

"சிங்காரி... வருத்தப்படாதே திக்கற்றவருக்குத் தெய்வமே துணை-உன்னைப் போன்றவர்களுக்கு நாங்கள்தானே துணை'' என்று சிறிது நெருங்கினர்.

"எசமான் என்ன இது அக்கிரமம்! இதுதானு உங்கள் தெய்வ பக்தி?''

"தெய்வபக்திக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? ஆண்டவன் செய்யாததா நான் செய்கிறேன். சிங்காரி! இதோ பார், எனக்கு இருக்கும் இவ்வளவு சொத்தும் ஏன் வீணுகவேண்டும்? வேண்டுமென்ருல் உன் எடைக்கு எடை தங்கமே தருகிறேன்...... நீ மாத்திரம்......

"இது என்ன துலாபாரமா! பணம் எங்களுக்குப் பிரதானமில்லை. எங்களுக்கு மானம்தான் முக்கியம்''

"நான் உன் கற்பைச் சூறையாடவில்லையே...... நீயே இசைந்து என் ஆசைநாயகியாக இரு'' என்று சொல்லிக்கொண்டே அவள் கைகளை எட்டிப்பிடிக்க, கண்ணுடி வளையல்கள் நொருங்கின.

○ ○ ○

வழியெல்லாம் முனுசாமிக்கு, எப்படியாவது அந்த அறுந்த சங்கிலியை வீட்டைவிட்டு வெளியே எறிந்துவிட வேண்டும். எப்படியாவது இவளையும் கண்டதை எடுத்துச் சேர்க்காதவாறு திருத்த வேண்டும் என்ற எண்ணம் அவன் மனதை அரித்துக்கொண்டிருந்தது. இதற்குத்துணையாகச் சிங்காரியைத்தான் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று நினைத்துக்கொண்டு, எப்படி அவளை ஏனம் செய்வது என்ற யோசனையில் ஆழ்ந்தான். யோசனை வரவில்லை என்ருலும், அருணுசல முதலியார் வீடு வந்துவிடவே திரும்பினன். பங்களாவைக் காவல் காக்கும் கூர்க்கா "க்யா... தங்கச்சி... உள்ளே இருக்குது... போ'' என்று அவனை உள்ளே அனுப்பிவிட்டான். முனுசாமியும் அவனுக்கு நன்றி தெரிவிக்கும் தோரணையில் புன்னகை புரிந்து பங்களாவில் நுழைந்ததும் "சிங்காரி... [illegible] ஓடறே'' என்ற சப்தம் மாடியிலிருந்து கேட்கவே, மாடிப்பக்கம் திரும்பினன். எதிரே சிங்காரி அலங்கோலமாக கையில் இரத்தக் கரையுடன் ஓடிவந்தாள்.

"மச்சான்...''

"சிங்காரி...என்ன இது...ஏதாவது...''

"உஷ்...பேசாதிங்கோ......வீட்டிற்குப் போய்ப் பேசிக்கொள்ளலாம்''

"என்ன சமாசாரம் சொல்...கையிலே இரத்தம் ...ஏதாவது...''

"வாங்க மச்சான், நான் விபரமாகச் சொல்கிறேன்'' என்று மச்சானை இழுத்துக் கொண்டு சிங்காரி வெளியேறினுள்.

அருணுசல முதலியார் முகத்தில் கீறல்களுடன், "சிங்காரி... ......அடிப்பாவி! முகமெல்லாம் வளையல் துண்டுகளால் கீறி விட்டாளே, நாளைக்கு எந்த முகத்தோடு கும்பாபிஷேகத்திற்குப் போவது? வடிவுடை அம்மனே! அகிலாண்டநாயகியே! உன் திருவருள் இதுதானு? இதற்குத்தானு உனக்குக் கும்பாபிஷேகம்'' என்று சொல்லிக்கொண்டே மெதுவாகத் தரையிலிருந்து எழுந்து குளியலறை நோக்கிச் சென்ருர்.

○

"சிங்காரி ஏன் இதை அங்கேயே சொல்லியிருக்கக்
"சிங்காரி ஏன் இதை அங்கேயே சொல்லியிருக்கக் வைக்கலாமா''
கூடாது? அவனை உயிருடன் விட்டு
"மச்சான் உனக்குக் கோபம் வந்து ஏதாவது
"மச்சான் உனக்குக் கோபம் வந்து ஏதாவது செஞ்சிடுவேன்னுதான் நான்
அவசரத்திலே
சொல்லல்லே''

"இதற்குத்தான் வெளி வேஷம் போடுகிருன் போலிருக்கு. திருநீறுக்கும் குங்குமத்துக்கும் குறைச்சலில்லை. நாளைக்குக் கும்பாபிஷேகம் செய்யும் பக்தன செயலா இது!'விதவை என்ன புறம்போக்கு நிலம் என்று நினைத்துவிட்டானு? இனி நீ வேலைக்குப் போகவேண்டாம்''

"சரிங்க மச்சான்; எனக்குப் பயமா இருக்கு, பணத் திமிர் பிடித்தவன் ஏதாவது செய்வான''

"என்ன செய்வான் என்பதை நான் ஒரு கை பார்த்துடறேன் — சிங்காரி! அதோட எனக்கு இப்போ ஒண்ணு ஞாபகம் வந்தது; உங்க அக்கா கண்டதைக் கொண்டு வந்து வீட்டில் சேர்க்கிருளே அந்தப் பழக்கத்தை விட்டுவிடச் செய்யணும்......... சிங்காரி......நீ கலியாணம் செய்துண்டா இந்தத் தொந்தரவே வராது வேலியில்லா தோட்டமனு கண்டதும் நுழையத்தான் செய்யும்''

"போதும் மச்சான், அறுத்திட்டவளை எவனு வது கட்டிக்குவானு?''

○

அடுத்த வாரம் பொங்கல், திராவிடர் திருநாள். —சிங்காரி அடுக்களையில் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தாள். முனுசாமி ராந்தல் விளக்கு வெளிச்சத்தில்சாமான்களை ஒழுங்குபடுத்தி அடுக்கிக் கொண்டிருந்தான். திடீரென்று அந்த அறுந்த சங்கலி ஞாபகம் வந்தது. எப்படியாவது சிங்காரிக்கும் தெரியாமல் எடுத்து எறிந்துவிட வேண்டும் என்று தேட ஆரம்பித்தான்! இருட்டிலே பெட்டியில் துழாவும்போது ஒரு தகரத்துண்டு இவன் விரலைப் பதம் பார்த்துவிட்டது. அதையும் சொல்லிக் கொள்ளாமல் ஒரு ஈரத்துணியை விரலுக்கு கட்டிக் கொண்டு தேடினன். கடைசியாக அறுந்த சங்கிலி பிப்பாயின் சந்தில் பாம்பைப்போல் இருந்ததைக் கண்டு முதலில் பயந்து, பிறகு எடுத்துக்கொண்டு மெதுவாக வீட்டைவிட்டு வெளியே வந்துவிட்டான். பங்களாப் பக்கம் போனல் ஒரு சமயம் அலங்காரம் பார்த்துவிடலாம் என்ற எண்ணத்துடன் பங்களாவின் பின்புறமாகச் செல்லும் ஒரு சந்தில் வீசியெறிந்து திரும்பினன். "ஐயோ'' என்ற அலறல் கேட்டதும், தான் போட்டது யார் மேலேயோ விழுந்துவிட்டது என்ற எண்ணத்துடன் பங்களாவின பின்புறக்கதவை மெதுவாகத் திறந்துகொண்டு ஓடினன். இருட்டில்ஓர் உருவம் மதில் ஓரமாகச் சாய்ந்துகொண்டு முனகிக் கொண்டிருந்தது. ஓடிப்போய் அருகில் பார்த்த போது பயந்து அவனை தூக்கி வந்து தெரியாமல் தன் வீட்டில் படுக்க வைத்து "சிங்காரி இதோ இந்தத் தம்பியைப் பார்த்துக்கோ! கொஞ்சம் சூடா டீ போட்டுக்கொடு, நான்போய் டாக்டரை அழைத்துக் கொண்டு வரேன்'' என்று சொல்லிக் கிளம்பினன்.

"யார் மச்சான் இது! ஐயோ. ரத்த வெள்ளமா இருக்கே இவர் தலை! அடபடுபாவிங்க......''

"சிங்காரி, நீ ஒண்ணும் தொந்தரவுபடுத்தாதே. அப்படியே ஒரு கட்டு கட்டி, டீ போட்டுக் கொடு'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அவனே உணர்வின்றிக் கட்டைபோல் படுத்திருந்தான். இவள் சுடச் சுட டீ போட்டுக்கொண்டு வந்து, எப்படிக் கொடுப்பது என்று யோசித்தாள்; முதலில் அவனைத் தட்டிப் பார்த்தாள். ஸ்பரிசம்

பட்டவுடன் இவள் உடம்பெல்லாம் சூடேறி இவளுக்கு வியர்வை கொட்ட ஆரம்பித்துவிட்டது. கடைசியாக வெட்கமும் ஊற்றுணர்ச்சியும் போட்டியிட மெதுவாக அந்த அரும்புமீசைக்காரனை சுவரில் சாயவைத்துவிட்டு, சூடான தேநீரை அவன் வாயருகில் கொண்டுபோனாள்......இரண்டு மூன்று விழுங்குகள்......அவன் மெதுவாகக் கண் திறந்து சுற்றுமுற்றும் பார்த்தான். யாரோ ஒரு பெண் தனக்குத் தேநீர் கொடுப்பதைக் கண்டவுடன், அவனுக்கு தான் எங்கே இருப்பது என்று தெரியவில்லை.

"நான் எங்கே இருக்கிறேன்......நீ யார்? வெட்கம் பிடுங்க, அவள் அங்கிருந்து எழுந்து கதவின் பின்னால் போய் நின்று கொண்டு "என் பெயர் சிங்காரி......என் மச்சான் உங்களைக் கொண்டுவந்து படுக்கவச்சுட்டு டாக்டர் வீட்டுக்குப்போயிருக்காரு, நீங்க யாரு?.........எப்படி அடிப்பட்டது?"

"உம்......தெரிய வேண்டுமா! என் பெயர் சிங்காரம் "திருவள்ளுவர்" என்ற ஒரு வார இதழில் வேலை செய்கிறேன்!" நான் போய் வருகிறேன்."

"வீட்டிற்குத்தானே? டாக்டர் வரட்டும்"

"வீட்டிற்கில்லை, அலுவலகம் போகவேண்டும்."

"இந்த நேரத்தில் அலுவலகத்தில் என்ன வேலை? மணி ஒன்பதடிக்கப்போகிறது"

"அடுத்த வாரம் பொங்கல் — பொங்கல் மலர் தயாராகிக்கொண்டு இருக்கிறது."

"என்ன இருந்தாலும், டாக்டர் வரட்டும். அதோட இந்தக் காயம் ஆறும் வரை நீங்கள் இங்கேயே இருபபது நல்லது. உங்களுககுத்தான் யாருமில்லையே.........

"யாருமில்லைத்தான்...ஆனால்...என்று அவன் அவளைப் பார்கக, அவள் வெட்கத்கால் தலை குனிந்து கால் விரலால் தரையைக் கீறிக்கொண்டிருந்தாள்.

○

நாளை பொங்கல், எங்கும்கோலாகலம், முனுசாமியின் வீட்டில் மாத்திரம் குறைவா! சிங்காரி அடுக்களையில் சமையல் செய்து கொண்டிருக்க, முனுசாமியும் அலங்காரமும் தங்கள் முதல் பொங்கல் அனுபவத்தை நினைத்து ரசித்துக்கொண்டிருந்தார்கள்.

"அண்ணா"

"யார் அது சிங்காரமா...வா...வா..இதென்ன பெரிய பொட்டளம்."

"அண்ணா, சிங்காரிக்கு பரிசம் போடவேண்டாமா"

"சிங்காரிக்கா...அவள் விதவை"யென்று...

"அண்ணா, எல்லாம் தெரியும்! அவளே ஒரு நாள் என்னிடம் எல்லாம் சொன்னாள். தெரிந்துதான் செய்துகொள்கிறேன். என்னைப்போல் ஒருசில இளைஞர்கள்முன்வந்துவிதவைகளைத் திருமணம் செய்து கொண்டால்தான், பெண்களின் துயரம துடைக்கப்படும். அண்ணா! நீங்கள் இல்லை என்றால் நான் சிங்காரியைப் பார்த்திருக்க முடியுமா? உங்களுக்கு நான் என்றும் கடமைப் பட்டவன்"

"அடேடே! எனக்கு இல்லே! எல்லாம் உன் அண்ணிக்குத்தான். அவள் அந்த அறுந்த சங்கிலியைக் கொண்டு வரலேன்னா நீ வந்திருக்க முடியாது" என்று முனுசாமி சொல்ல...

"என்னாலே என்ன இருக்குது? எல்லாம் அந்த அறுந்த சைக்கல் சங்கிலியால்தான் தம்பி; அதன் நினைவாகச் சிங்காரி கழுத்திலே ஒரு சைக்கில் செயின் மாதிரியில் தங்கச் சங்கிலி போட்டுடு" அலங்காரம் குறுக்கிட்டுச் சொன்னாள்.

"அப்படியே ஆகட்டும் அண்ணி! நான் இது வரை சேர்த்திருக்கிற பணத்திலே செய்துபோட்டுடறேன்" என்று சொல்லிக் கொண்டே அவர்களிடம் "திருவள்ளுவர்" பொங்கல் மலரைக் கொடுத்து அவர்களை இன்புறச் செய்துவிட்டு, வீட்டிற்குள் சென்றான் சிங்காரம்.

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

திராவிடநாடு

2—2—58 | வார வெளியீடு 898 1-58 | விலை [illegible] காசு

இயற்கையே, எழு!

—[கதி]—

வாவிசூழ் தமிழகத்தின் வலிவெலாம் சிதைந்ததுவே!
வண்டமிழை அழித்திடவே வகுத்திட்டார் திட்டம்பல;
பூவிதழின் நறுமணத்தைப் புழுக்கூட்டம் அறிந்திடுமோ?
புரிந்திடுமோ வடவருக்குச் செந்தமிழின் இனிமையெலாம்?
தேவிகுளம் பீர்மேட்டைப் பறிகொடுத்து உளந்துடித்துத்
திகைத்தநமைப் பார்த்தரசு தேற்றவிலை; தூற்றியது!
தாவியோடும் காவிரியின் தண்புனலே! தகித்தெழுந்து
தறுக்கர்தமை அழித்தவாறே தமிழர்களை வாழ்விப்பாய்!

நிலைகெட்டு வீதியிலே உணவின்றி உடையின்றி
நித்தமிங்கு அலைந்தலைந்து சோர்வுற்று மக்களெலாம்
தொலைதூரம் கடந்தேகித் துடிக்கின்றார் கொடுமையினால்!
துய்க்கின்றார் எவரெவரோ நம்நாட்டின் இன்பங்களை!
விலைமதிக்க வொண்ணாத நல்வாழ்வு போனபின்னும்
வீணர்களாய் வீற்றிருத்தல் நம்மவர்க்கு அழகாமோ?
அலையெழுப்பும் திரைகடலே ஆர்த்தெழுந்து சினமுடனே
ஆதிக்கந் தனையறுத்து அமைந்திடுக நன்கடலாய்!

தென்னகத்தைச் சிறிதேனும் ஏறிட்டு நோக்கிடாது
தின்றுஉடல் கொழுக்குமொரு கும்பல்வாழ விட்டுவிடின்
இன்னல்பல நமைவந்து அடுக்குமென உணர்ந்துநீவிர்
இணைந்துகூடி முழக்கமிட்டு வென்றிடுவீர் வடவர்களை!
கன்னலிளந் தமிழ் மொழியைக் காத்திடவே இயற்கையெலாம்
கடுகிவந்து முன்னிற்கக் காதலினால் அழைக்கின்றேன்!
தென்பொதிகைத் தென்றலேநீ சீறியெழு நீக்காற்றாய்த்
தினவெடுத்து நமைநசுக்கும் தீயர்களை வாட்டிடவே!

கேட்டீரா! சேதி!

"என். ஜி. ஓ."க்களுக்கு சம்பள உயர்வு தருவது பற்றி நிதியமைச்சர் சுப்ரமணியம் இந்தக் கிழமை வெளியிட்டிருக்கிறார். எவ்வளவு? எப்போது முதல்? — என்று, ஆவலோடு கேட்கக்கூடும். இனிமேல்! — அதுவும் நிதி நிலைமை சரியாகயிருந்தால் !!-செய்யப்படலாம் !!! எப்படி உறுதிமொழி? என். ஜி. ஓ. - க்கள், ஆண்டாண்டு காலமாக, தங்களுக்கும் மத்திய சர்க்கார் சிப்பந்திகளைப்போல் சம்பள உயர்வு தரப்பட வேண்டும என்று போராடி வருகிறார்கள். அவர்கள் குறைகளைத் தீர்க்க, வழக்கம்போல் பாடப்படும் 'பணமில்லை' என்கிற பல்லவியையே இம்முறையும் நிதியமைச்சர் பாடியிருக்கிறார். நிதி நிலைமை சரியானால், சம்பள உயர்வு பற்றி, வரும் ஆண்டில் கவனிக்கும் உத்தேசமும் அவருக்கு உண்டாம் !! தெரிவிக்கிறார் !!

*

"பணமில்லை," என்று பாடுகிறார்கள். ஆனால், ஆண்டு ஒன்றுக்கு "பத்து லட்சம்" கொட்டி அழும கவர்னர் பதவி, அநாவசியமாக இன்னும் இருக்கிறது! ஜான் இறந்துபோனதால், அஸ்ஸாமில் முதல் மந்திரியாயிருந்த விஷ்ணு ராம மெகதி, இங்கு கவர்னராகியிருக்கிறார் !! முதலமைச்சர் பதவியை இவர் விடுவதற்குக் காரணம, உடல்நலக் குறைவாகயிருப்பதுதான் என்று கூறினார்கள். இப்போது நேரு, "அதெல்லாமில்லை. அவர், திடகாத்திரமாகவேயிருக்கிறார்,' என்று அறிக்கை விட்டுள்ளார். மெகதி, நல்லவரா புத்திசாலியா என்பதல்ல நமக்குக் கவலை. பத்து லட்ச ரூபாய் விரயமாகும் ஒரு வீண் பதவி, எதற்காக. இதனால், யாருக்கு என்ன பிரயோசனம்.

*

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நடைபெறுகிறது !— என்று சொன்னால், உங்களில் பலர், 'எங்கே?', என்று கேட்பீர்கள். அவ்வளவு அழகில் நடைபெறும் 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டில் அதாவது சென்ற ஆண்டில் 750 கோடி ரூபாய் செலவிட்டார்களாம். நடக்கும் இந்த ஆண்டில் 850 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டு 50 கோடி ரூபாய் மிஞ்சிவிட்டதாம். மூன்றாவது ஆண்டான அடுத்த நிதி ஆண்டில் 950-கோடி செலவிடப் போகிறார்களாம். இதில் மத்திய சர்க்காரின் திட்டச் செலவுகளுக்காக 500 கோடி ரூபாயும், மாநில சர்க்கார்களின் செலவுகளுக்காக 450 கோடி ரூபாயும் செலவிடப்படுமாம்.

*

சோஷியலிஸ்டுத் தலைவர் லோகியா, நாகபுரியில் ஒரு கல்லூரிக்குப் பேசப் போயிருந்திருக்கிறார் சென்ற வாரம்! அங்கு இருக்கும் பெரும்பாலோர் லோகியா, ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்றனராம். முடியாது — நான் இந்தியில்தான் பேசுவேன் என்று லோகியா பிடிவாதம் செய்ய, மாணவர்கள் கூட்டத்தை விட்டே வெளியேறினராம்! நாகபுரி தமிழ்நாட்டிலிருப்பதுஅல்ல! இதேபோல, கௌகத்தி காங்கிரஸ் மாநாட்டிலும் நடந்ததாம். பலர் இந்தியிலேயே பேசினராம். அதைக் கண்ட மக்கள், எழுந்து போய்க்கொண்டேயிருந்தனராம். ஏற்கனவே, கூட்டம வேறு குறைவு. இருப்பதும் போய்விட்டால்......? எனவே, நேரு, அசாம் மொழி தெரிந்த இருவரைக் கூப்பிட்டுப் பேசச் சொல்லி, சமாளிக்க முயன்றாராம் !!

கருப்புக் கொடிகாரருக்கு வெற்றி — வெற்றி — வெற்றிமேல் வெற்றி—வீர வெற்றி! என்றுதான் சொல்லவேண்டும்.

ஏன், எப்படி?

ஒரு நாட்டுப் பிரதம மந்திரி 'வணங்காமுடி மன்னன்' சர்வாதிகார சிகாமணி எப்படிப்பட்டவர்களையும்

'நான்சென்ஸ்'

'காட்டுமிராண்டி'

'கண்டெம்டு மேன்'

'கிழட்டுப்பிண்டங்கள்'

'இருந்தால் அடங்கிக் கிட; இல்லாவிட்டால் வீட்டைவிட்டு ஓடு'

"யாரானாலும், எப்படிப்பட்ட பெரியவரானாலும், மன்னிக்க முடியாது; போடு ஜெயிலில்! அனுப்பு பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு!"

என்றெல்லாம் பேசும் 'வீரப் பிரதாப தீர புருஷர்' ஆயிரக்கணக்கான போலீசு பாதுகாப்புடன் தொடங்கிய பவனி கலைந்து ஓட்டம் பிடிக்கவேண்டியதானது மாத்திரமல்லாமல், இத்த நிலைமையையெல்லாம் தெரிந்தும் அதிகாரிகள் பல ஆயிரக் கணக்கான பல நாட்டுப் போலீசுப்படைகளைக்கொண்டு வந்து நிறுத்தியும் கைசலிக்க லத்தி சார்ஜ் தடியடி அடித்து மக்களின் கை கால்களை முறித்துத் தள்ளியும், பலரைச் சாகடித்தும், கண்ணீர்ப் புகை வெடிகளை சரமாரியாக வெடிக்கச் செய்யப்பட்டது, உலகம் புகழும் வீர ஜவகர்லால்பண்டிதர் தனிப்பட்ட முறையில் அல்லாமல் 35-கோடி மக்களுக்கு இணையற்ற சர்வாதிகாரியான 'பிரதாப சிம்ம' முதல் மந்திரியாக எழுந்தருளி திக் விஜயம் செய்யும் போது நிகழ்ச்சிக் குறிப்புப்படி ஏற்பாடு செய்திருந்த இடத்திற்குப் போய்ச் சேர, நிகழ்ச்சிக் குறிப்புப்படி ஏற்பாடு செய்திருந்த ராஜபாதை வழியில் செல்லாமல் செல்ல முடியாமல் கொல்லை வழியில் போய்ச் சேரவேண்டி வந்ததென்றால், இது அதிகாரிகளுக்கு வெற்றியா? கொடி பிடித்தவர்களுக்கு வெற்றியா?

"விடுதலை"

11—1—58

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [2—2—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 29

'பொங்கலு'க்குப்பிறகு!

சிறையில் பூட்டு! தேடிப் பிடித்து, வா! கண்ணீர்க் குண்டு களைப்போடு! உள்ளூர் போலீஸ் போதாதென்றால் ஆந்திரப் போலீசைக் கூப்பிட்டுக்கொள்! எம். எல். ஏ. க்களானாலும் எம். பி. க்களானாலும் கொட்டடியில் பூட்டு! சந்தேகப்பட்டவரையெல்லாம் இழுத்துவந்து அடை! அதிகாரம் இருக்கும்போது நம்மை யார் என்ன செய்துவிட முடியும்? நேருவின் கண்ணெதிரே ஒரு கருப்புக் கொடி கூடத் தெரியக்கூடாது !!—
என்கிற தீர்மானத்தில், சென்னை அரசு அவிழ்த்து விட்ட அடக்குமுறைகளையும், தடியடி தர்பார்களையும் கண்ட பிறகும்கூட, திராவிடப் பெருங்குடி மக்கள் உள்ளம் தளராது பொங்கி வரும் வீர எழுச்சியை உணர்த்தும் வகையில் "நேருவுக்குக் கண்டனம்" காட்டிய பிறகு, நாட்டில் எழுந்துள்ள நிலைமைகளை, தோழர்கள் அறிவர். இரண்டு உருவங்கள், மிதிபட்டுச் செத்தன! ஆயிரக்கணக்கானவர்கள் அடிதடிக்காளாகி, தழும்புகளோடு உலவுகின்றனர் !! அரசினர் மூட்டிய ஆத்திரத் தீயின் காரணமாக, கழகத்தவர் மட்டுமல்ல, பொதுமக்களும் தாக்கப்பட்டனர். மவுண்ட்ரோடு வட்டாரமே கண்ணீர் சிந்துமளவில், வீட்டுக்குள் புகுந்தும், எதிர்ப்பட்டோரையெல்லாம் தாக்கியும், கொடுங்கோன்மைகள் நிகழ்த்தப்பட்டன. இந்தப் பொல்லாச் செயலால், ஆத்திரத்துக்கு ஆளாகிய மக்கள் 'அடாவடி'ச் செயல்களில் ஈடுபடும் அலங்கோலமும் நிகழ்ந்திருக்கிறது !!

சென்னையின் 'கௌரவம்' போய்விட்டதே என்று சிந்து பாடுகிறார் ஒரு அமைச்சர்—நேருவின் 'தயவு' போய்விடும் போலிருக்கிறதே, என்று கலங்கினாராம் இன்னொரு அமைச்சர்—பத்திரிகை நிருபர்களைக் கூட்டிவைத்து தனது வீரப்பிரதாபத்தினை வெளிப்படுத்திக் கொண்டாராம், முதலமைச்சர்! சேதிகள் பல வருகின்றன—சென்னைப் போலீஸ் அதிகாரிகூட 'அறிக்கை' விடுகிறார் பத்திரிகைகளில் — செல்லுமிடந்தோறும், அமைச்சர்கள், ஏதேதோ பேசுவதாக ஏடுகள் சொல்லுகின்றன.

நேருவுக்குக் கருப்புக் கொடி!— ஏன் காட்ட முடிவு செய்தோம் என்பதை, நாடு அறியும். தென்னாட்டுத் தலைவர்கள் என்றாலே, எடுபிடிகள் போலவும், ஏனோதானோ என்றும் எப்போதும் பேசிவரும் நேருவின்போக்கைக்கண்டிப்பதே,நாம் கருப்புக்கொடி காட்ட முடிவு செய்ததின் முதல் நோக்கமாகும். அதை விளக்கப் போடப்பட்ட பொதுக் கூட்டத்துக்கு அனுமதி வழங்க மறுத்தனர். 'அடாது' என்பதால் மீற முடிவு செய்தோம். கைது செய்து, வழக்கும் போட்டிருக்கின்றனர் !! கூட்டத் தடையை மீற முயற்சித்தவர்கள் மீது மட்டுமல்ல, சாதாரணமாகச் சென்றோர், ஆரும் தேதியன்று தடியடிக்கு ஆளாகி ஆசுபத்திரிக்குக் கொண்டு போகப்பட்டோர் மீதுகூட வழக்குகள் போடப்பட்டுள்ளன !!

அமைச்சர் குழு, நேருவின் அன்பைக் காப்பாற்றிக்கொள்வதற்காகவும், பெரியாரின் எடுபிடியே சென்னை சர்க்கார் என்று டில்லியில் உலவும் கருத்தை, 'இல்லை' என்று காட்டிக்கொள்ளவுமே, இவ்வளவு 'கடுமையாக' நடந்துகொண்டதாக ஒருபுறம் கூறப்படுகிறது. காமராசரின் ஆட்சி பற்றி, டில்லியில்தவறுதலான கருத்துக்கள் உள்ளனவாம்! அத் தவறினைப் போக்கிக்கொள்ளவே, தடியையும் தடைகளையும் நாடினாராம், காமராஜ். இரண்டு உயிர்கள்! ஏராளமான அண்ணன் தம்பிகளின் உடல்களிலே, காயங்கள்!! — இவ்வளவு தூரம் நடத்தி, நேருவின் அன்பினைப் பெற, அரும் பாடுபட்டிருக்கிறார்கள். கிடைத்தது அன்பா! கேலியா!! என்பது ஒருபுறமிருக்க, இவ்வளவு அலங்கோலத்துக்கும் காரணமான அமைச்சர்கள், ஆங்காங்கு செல்லுமிடந்தோறும் பேசும் பேச்சுகள் சிந்தையைக் கிளறுவதாயிருக்கின்றன.

பதவியின் ருசி, பலரைக் கொடுங்கோலர்களாக்கியிருக்கிறது! மணிமுடிகளைப் பெறுவதற்காக, தந்தையைக் கொன்ற தனயர்கள்—பிள்ளைகளைக் கொன்ற பெற்றவர்கள்—உற்றவர்களை உதைத்துத் துரத்தியவர்கள்—அக்கிரமங்களைச் செய்ய அணுவளவும் அஞ்சாதவர்கள்,எத்தனையோ விதத்தில் இருந்திருக்கின்றனர், என்பதை சரிதங்கள் சொல்லும். நமது மாநிலத்தில்கூட, பதவியின் காரணமாக, காங்கிரஸ் கட்சி, யாராரை ஓட ஓடத் துரத்தியிருக்கிறது —

என்னென்ன சாகசங்களைச் செய்திருக்கிறது—ஆடிய சதிர்கள் எத்தனை யெத்தனை என்பதை நன்ருக அறிவோம், நாம். நேருவுக்கு நல்ல பிள்ளைகளாக நடந்துகொள்ளவேண்டும், அப்போதுதான் மேலிடத்துத் தயவு நீடிக்கும் என்கிற ஒரே காரணம் தான், இங்குள்ளவர்களின் பாசத்தை மறைத்து நேசத்தைக் கொன்று, இவ்வளவு அடக்குமுறைகளை அள்ளிவீசச் செய்திருக்கிறது என்பதை அனைவரும் அறிவர். இல்லாவிடில், கருப்புக்கொடி காட்டிட அனுமதித்திருக்கும், சென்னை அரசு—கடற்கரையில் கூட்டம் நடத்தவும் செய்திருக்கும்.

நேருவுக்காகவே, இவ்வளவு தூரம் அடக்கு முறைகளை மேற்கொண்டோம்!—என்பதை, அன்பர் பக்தவத்சலம், ஒளிவு மறைவின்றி உரைத்திருக்கிருர். அவர் வரும்போது, கருப்பக் கொடி காட்டலாமா?—என்று கேட்டிருக்கிருர். நேரு, உலகத் தலைவர்!—அவருக்குக் கருப்புக் கொடி காட்டுவதை எங்களால் சகிக்கமுடியுமா? என்று, கேள்வி கிளப்பியிருக்கிருர். நேரு, இந் நாட்டின் பிரதம மந்திரி! அவரைக் கண்டிக்கப் பொதுக்கூட்டம் போடுவதா—ஐயகோ, அதை நாங்கள் எப்படி அனுமதிப்போம்—என்றும் அலறியிருக்கிருர். பக்தவத்சலனருக்கு நேரு, 'கண்கண்ட தெய்வமாக' இருக்கலாம்! அண்மையில் கூடத் தேர்தலில் தோற்ற அளகேசனருக்கு நேருவின் 'கிருபை' கிடைத்திருப்பதை நாடு அறியும்!! அதற்காக, எல்லோரும் பக்தவத்சலனருடன் கூடிக்கொண்டு நேருவின் பாதாரவிந்தங்களைச் சேவிக்கவா முடியும்? "மாடுமனை போனுல் என்ன, மக்கள் சுற்றம் போனுல் என்ன, மந்திரிப் பதவி போதுமடி!", என்கிற பல்லவி, பொருத்தமாகயிருக்கக் கூடும் அவருக்கு. அந்தப் பதவியை வழங்கும் நிலையிலுள்ள நேருவின் தயவும் கிருபையும் பெரிதாக இருக்கலாம்! மானம் போனுலும், தமிழ்நாடு எனும் பெயர் போனுலும், தேவிகுளம் பீர்மேடு போனுலும், தெற்குத் தேய்வதானுலும், சிறந்த பெரும் தலைவர்களின் கீர்த்தியை இகழ்ந்துரைத்தாலும், 'பதவிக்காக' விட்டுக்கொடுக்கும் 'பெருந்தன்மை' இருக்கக்கூடும் அவருக்கு!! அந்த அவசியம் பிறருக்கு ஏன்? தேய்ந்தும் காய்ந்தும், வயிறு ஒட்டியும் வேலை கிடைக்காமலும், வாடியும் வதங்கியும், வளர்த்த மொழிக்குக் கேடு விளைக்கப்படுவதைக் கண்டு கொதித்துக் கிடக்கும் மக்களுக்கு, "ஜே" போடவேண்டிய அவசியம் என்ன? காமராஜர் சென்னையை ஆள்கிருர்—அங்கு போனுல் வசந்தம் வீசுகிறது என்று நேரு கருதி ஆனந்தமடைந்தால், 'இலாபம்' அவர்களுக்குண்டு. அதனுல், மக்களுக்கென்ன!! மராட்டியம் சென்ருல் கருப்புக் கொடி காட்டுகிருர்கள் — சீக்கிய நாடு சென்ருல் சினம் காட்டுகிருர்கள் — நாகர் குன்றுகளுக்குப் போனுல் எதிர்ப்புக் காட்டப்படுகிறது — வங்கத்திலும் ஆத்திரம் தென்படுகிறது — இவையாவும், நமது ஐந்தாண்டுத் திட்டத்தால் பலன் பெறும் பாகங்கள்! பலனும் காணுத, நமது ஆதிக்கத்துக்கு வேட்டைக்காடாகவும் விளங்கும், சென்னையிலோ—இந்தியைப் புகுத்தினுலும், தமிழ்நாடு எனும் பெயர் வழங்க மறுத்தாலும், தமிழருக்குரிய இடங்களைக் குறைத்தாலும், தமிழர்தம் தலைவர்களை ஏசினுலும், —மாலையும் மரியாதையும் கிடைக்கிறது, இதற்குக் காரணம் காமராஜரும் பக்தவத்சலமும்தான் என்று நேரு கருதினுல், பரிசும் புன்சிரிப்பும் நிறையக் கிடைக்கக்கூடும்! 'கௌரவமும்' நீடிக்க வாய்ப்புண்டு ஆள்வோருக்கு!! அதனுல், நாட்டுக்கு என்ன பலன்? நாட்டில் வாழும் மக்களின் மானமும் நல்வாழ்வும் காப்பாற்றப்படும் என்பது என்ன நிச்சயம்?

கருப்புக்கொடி காட்ட வேண்டாம் — நாங்களும் தமிழர்கள்தானே — தமிழர் தம் தலைவர்களை இகழ்ந்துரைப்பது கூடாதென நேருவிடம் எடுத்துரைக்கிறேம் — கார்டு கவர்களிலுள்ள இந்தியை நீக்குங்கள் என்று உடனே டில்லிக்குச் சொல்கிறேம் —தமிழ் நாடு என்கிற பெயர்தானே வேண்டும், சரி, ஏற்பாடு செய்கிறேம்—நீங்கள் கருப்புக்கொடி காட்ட வேண்டாம்!! என்று கேட்டிருந்தால், அதிலே பொருளும் உண்டு, நியாயமும் உண்டு.

இதையெல்லாம், இவர்கள் கேட்க மாட்டார்கள்! பசித்தாலும் துடித்தாலும் மக்கள் மட்டும் அவதியடைய வேண்டும், ஆனுல் பாராளும் பிரதமருக்கு மாலைகளையும் 'ஜே'களையும் போட்டு வாழ்த்துப் பாடி அனுப்ப மட்டும் யாவரும் ஒன்றுபட வேண்டும் என்ருல் என்ன பொருள்? அதனுல், இலாபம் நாட்டுக்கு உண்டென்ருல், சரி! அப்படியில்லையே!!

பிரதமருக்குக் கருப்புக் கொடியா! அவரை எதிர்த்துக் கூட்டம் போட அனுமதிப்பதா!! —என்கிற பக்தவத்சலனரின் கூற்று, ஜனநாயகம் பற்றிப் பேசப்படும் இந்தக் காலத்தில், எவ்வளவு மட்டரகமானது என்பதை யாவரும் அறிவர். கருப்புக் கொடி பிடிப்பதும், கூட்டம் போட்டுக் கண்டனங்களை எடுத்துக் காட்டுவதும்தான், ஜனநாயகத்திலுள்ள சிறப்பு மிக்க அம்சங்களாகும். ஜனநாயகமா? சே! அதெல்லாம், பேச்சுக்கு. காரியத்தில், எங்களோடு, ஒத்தூதுவதுதான் எல்லோரும் செய்ய வேண்டியது!! — என்கிருர் அமைச்சர். இலாபம் அடைந்துகொண்டிருப்பவர்! என்ன பதிலைச் சொல்ல முடியும் அவருக்கு!!

உணர்ச்சிப் பொங்கலுக்குப்பிறகு, காமராஜரும்; தமது வாய் திறந்து, நம்மைப்பற்றிப் பேச ஆரம்பித்திருக்கிருர். இன்னெரு சகாவான சுப்பிரமணியமும்,

(13-ம் பக்கம் பார்க்க)

திணிப்பதில்லை என்று கூறிக்கொண்டே திணிக்கப்படுகிறது

அகில - இந்திய ஆட்சிமொழி
விஷயமாக மேற்கொண்டு என்ன
செய்ய உத்தேசம் என்பதைப்
பற்றி அதிகார பூர்வமாக அறி
விக்க வேண்டியது இந்திய சர்க்
காரின் பொறுப்பு. 1965-ம்
ஆண்டுக்குப் பிறகும் ஆங்கிலம்
ஆட்சிமொழியாக நீடிக்கலாம்.
எல்லோருடைய இணக்கத்தின்
பேரில்தான் ஹிந்தி - ஆட்சி
மொழித் திட்டம் அமலுக்கு வர
வேண்டும் என்று பொருள்பட
கௌஹாட்டியில் நிறைவேறி
யுள்ள தீர்மானத்தில் புதுநிலைமை
எதுவும் ஏற்படவில்லை. அரசியல்
சட்டம் கூறியிருப்பதும், காங்
கிரஸ் காரியக் கமிட்டி முன்னர்
முடிவு செய்திருப்பதுந்தான்
அதில் சேர்ந்து காணப்படுகின்
றன. இந்தத் தீர்மானம் நிறை
வேறியது ஹிந்தியைத் தாய்
மொழியாகக் கொள்ளாதவர்களுக்
குப் பெரியதோர் வெற்றி என்று
நினைப்பது அசட்டுத்தனம். தீர்
மானத்தில் கூறியிருப்பதைவிட
சொல்லாமல் விட்டிருப்பதுதான்
அதிக முக்கியத்துவமுள்ளது.
ஆங்கிலத்தின் உபயோகத்தில்
மாறுதலும், இந்தியைப் புகுத்து
வதும் எப்படி, எவ்வாறு, யாரைக்
கொண்டு முடிவாகி, எந்த வகை
யில் அமல் நடத்தப்படும் என்பது
தான் முக்கியம். சென்னையில் குடி
யரசு தினக் கூட்டத்தில் பேசிய
நமது ராஜ்ய மந்திரிகள் இதைப்
பற்றி எதுவும் பேசவில்லை. காங்
கிரஸ் விஷயாலோசனைக் கமிட்டி
யில் இத்தகைய பிரச்னைகளை
ஸ்ரீ. சுப்ரமண்யம் எழுப்பினார்.
பிறகு தமக்குத் திருபதி ஏற்பட்டு
விட்டதுபோல காங்கிரஸ் மகா
சபைக் கூட்டத்தில் பேசினார்.
ஆனால் விவாத விவரங்களி
லிருந்து, திருப்திகரமான விளக்
கம் எதுவும அவருககுக் கிடைத்
ததாகத் தெரியவில்லை. தனிப்பட
நேருஜி என்ன கூறினாரோ, அது
யாருக்கும் தெரியாது. ஆனால்

பொதுமக்கள் சம்பந்தப்பட்ட வரை, மேல் நடவடிக்கைகள் எப்படி உருப்பெறும்எனபதைப்பற்றி சம்பந்தப்பட்ட எல்லோருமே மௌனம் சாதிக்கிறார்கள். இது நல்ல நிலையல்ல.

> இந்தி எதிர்ப்புக்குரிய காரணங்களை விளக்கி, அது, ஒருபோதும் நாட்டின் பொதுமொழியாக ஆகமுடியாதென்று, இன்றல்ல நேற்றல்ல, இருபதாண்டுகளுக்கு மேலாகவே நாம் கூறிவருகிறோம். இப்பொழுதும் கூறுகிறோம். ஆனால், நாம் கூறுவதைக் காதால் கேட்டு கருத்தில் இருத்த மறுத்தோரெல்லாம் இன்று இந்தி எதிர்ப்பில் நம்மையும் மிஞ்சி நிற்கின்றனர் என்பதைக் காணும்போது, நம்முடைய பணி பழுதானதல்ல — பயனுள்ளதுதான் என்று எதிர் முகாமில் இருப்போர் கூறுவதைக் கேட்கும்போது, களிபேருவகை அடைகின்றோம். நாம் குறிப்பிடக் கூறிய சொற்களையெல்லாம் அவர்கள் பயன்படுத்தி இந்தி எதிர்ப்பு முழக்கம் செய்கிறார்கள் —
>
> **அசட்டுத்தனம், மந்திரிகளின் பசப்பல், பிரதம மந்திரியின் மழுப்பல், சுதந்திரத்துக்கே ஆபத்து, இது ஒரு தலைவரின் விவகாரமல்ல,**
>
> என்ற இன்ன பிற சொற்களையும் சொற்றொடர்களையும் உள்ளடக்கிய ஒரு தலையங்கத்தை 29—1—58ல் "தினமணி" தீட்டியிருக்கிறது. அத்தலையங்கத்தை அப்படியே இங்கு வெளியிட்டிருக்கிறோம்.

ஹிந்தி திணிக்கப்படமாட்டாது என்று சொல்லிக்கொண்டே தபால் இலாகா உள்பட பல துறைகளில் அதன் உபயோகம், பிற மொழிப் பகுதிகளில் விஸ்தரிக்கப்பட்டிருப்பது நல்லெண்ணத்தைக் காட்டவில்லை; எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையைத் தருவதாக இல்லை. எனவே இதுவரை மத்திய சர்க்காரது உத்தரவின் பேரில் எடுத்துக்கொள்ளப்பட்ட அத்தகைய நடவடிக்கைகளையெல்லாம் உடனடியாக நிறுத்திவிடுவதுதான் இன்றைய நிலைமையின் தேவைக்கு ஏற்ற சமிக்ஞையாக இருக்கும். அடுத்தபடியாக, பிற மொழியினரின் இணக்கத்தையும் ஒத்துழைப்பையும் பெறுவது பற்றிச் சிந்தித்து, தக்க வழிவகை வகுத்து, எல்லா ராஜ்யத்தினரையும் ஆலோசனை கலந்து ஒரு திட்டத்தை உருவாக்கி, படிப்படியாக ஏற்றம் காண முயற்சிக்க வேண்டும். இந்த நடவடிக்கையில் நிர்ப்பந்த அம்சமே சிறிதும் இருக்கலாகாது. இந்தத் திட்டத்தின் இணைபிரியாத உட்பகுதி பள்ளிக்கூடங்களில் ஹிந்தியின் போதனை. அதைத் தனியாக கவனிப்பதற்கில்லை. இத்துடன் சேர்த்தே கவனிக்கவேண்டும். பரிசீலித்தாக வேண்டிய மூன்றாவது அம்சம் ஹிந்தியை வளப்படுத்துவது. அது முதலில் நான்கு ஹிந்தி ராஜ்யங்களில் ஆட்சிமொழியாகச் செயலாற்றட்டும. அவற்றில் முதற்படியாக ஒருமுகமான ஹிந்தி உருவான நிலையில்தான் அதன் அகில-இந்தியத் தகுதி வெளிப்படும். இதற்கிடையே இந்தியாவெங்கும், எல்லா ராஜ்யங்களிலும் அத்தகைய ஹிந்தியைக் கையாளக்கூடியவர்களின் தொகை கணிசமாக ஏற்படக்கூடிய போதனை நடக்கும. அந்நிலைமை வருமவரை ஹிந்தி அகில-இந்திய ஆட்சிமொழியாவது தள்ளிப்போடப்படுவதுதான் நியாயம். அப்படி வளம்பெறும இந்திகூடச் சிறுகச் சிறுகத்தான் ஆங்கிலத்துக்குப் பதிலாகப் பயன்பட முடியும்.

உடனடியாக நிறுத்திவிடுங்கள்

இதுபோன்ற அபாயம் வேறு கிடையாது

மொழி வளம், தேசமெங்கும் பரவலாக மக்கள் அறியும் வகையில் அகில - இந்தியத் தகுதி, ஆகிய இரண்டும் இந்திக்கு ஏற்படுவது எப்பொழுது சாத்தியம் என்று எவராலும் சொல்ல முடியாது. மொழி வளர்ச்சி இயற்கையானது. தானகக் கனிய வேண்டும். தடிகொண்டு பழுக்க வைக்க முயன்ருல் பயன் பூஜ்யந்தான். அகில - இந்தியத் தகுதியின் வளர்ச்சி இரண்டாவது கட்டத்தைச் சேர்ந்தது. படிப்புத் திட்டம், ராஜீய சூழ்நிலை, பொருளாதார மாறுதல்களின் வேகம், தேசத்தில் இனி ஏற்படக்கூடிய பல மொழித் தொழில் பகுதிகளின் செல்வாக்கு முதலியவற்றையே அதன் அபிவிருத்தி பொறுத்திருக்கும். எந்த மொழியினருக்கும் பாதகம் இல்லாதபடி இவ்விரு தகுதிகளும் ஏற்படுவது இரண்டு அல்லது மூன்று தலைமுறைகளில் நடக்கவேண்டிய விஷயம். **காங்கிரஸ் தீர்மானமோ, மந்திரிகளின் பசப்பலோ, பிரதம மந்திரியின் மழுப்பலோ இந்த உண்மைகளை மறைத்துவிட முடியாது.** இந்தியின் இயற்கையான வளர்ச்சிக்கும் வியாபகத்துக்கும் உழைக்க வேண்டியது அவசியம் என்ருலும், **அதை அவசரப்பட்டு அகில - இந்திய ஆட்சிப் பீடத்தில் ஏற்றிவிடப் பார்ப்பதைப் போன்ற அபாயம் வேறு இருக்க முடியாது.**

ஆங்கிலத்தின் உபயோகத்தை வேகமாகக் கைவிட்டால்தான் ஹிந்தி பரவுவதற்கான சூழ்நிலை ஏற்படும் என்று ஹிந்தி மொழியினரில் சிலர் நினைக்கிருர்கள். நல்லாட்சி தேச ஒற்றுமை, ஐக்கிய உணர்ச்சி, பாதுகாப்பு, சுதந்திரம, நல் வாழ்வை நோக்கி வேகமான முன்னேற்றம் ஆகியவை தாம் பிரதானம். இன்று ஆங்கிலத்தின் மூலந்தான் இந்தப் பொறுப்புக்கள அகில இந்திய நடவடிக்கைகள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இதைத் திடீரென மாற்ற முடியாது. மேலே நாம் குறிப்பிட்டபடி, அகில-இந்திய இணக்கத்தின் பேரில், காலக்கிரமத்தில், ஹிந்தி சிறுகச் சிறுக வரச்செய்வதுதான் நியாயம். ஹிந்தியுடன் ஆங்கிலத்தையும் சிறிது காலத்துக்குச் சகித்துக்கொண்டு இருக்கலாம் என்ற அடிப்படையில் ஆட்சி மொழிப் பிரச்னை கவனிக்கப்பட்டால், தேசத்திற்குப் பெரிய தீங்குதான் நேரும். தேச ஒற்றுமைக்காக ஹிந்தி வேண்டுமென்பவர்கள், அதே ஒற்றுமைக்காக ஹிந்தி தகுதியடைந்து பிற மொழியினருக்கு முழுத் திருப்தி ஏற்படும் வரை இப்பொழுது போலவே ஆங்கிலம் நீடிப்பதற்கு இணங்குவதுதான் அறிவுடைமை.

ஆங்கிலம் போய்க்கொண்டே இருப்பதாகவும் அதை யாராலும் காப்பாற்ற முடியாதென்றும் சென்னைக் கூட்டத்தில் முதன் மந்திரி ஸ்ரீ காமராஜ் கூறினாராம். ராஜ்யத்தில் ஆட்சி மொழியும், காலேஜில் போதன மொழியும் தாய் மொழியாக இருக்க வேண்டும் என்று முடிவான நிலையில் ஆங்கிலத்துக்கு இடமேது என்று அவர் கேட்டாராம். அவரே சற்றுச்சிந்தித்திருந்தால் இப்படிக் கேட்டிருக்க மாட்டார். தாய் மொழி ராஜ்ய ஆட்சி மொழியாவது முழுமை காண்பதற்கு பல ஆண்டுகளாகும். காலேஜ் படிப்புப் பற்றி இன்னும் எவரும் முடிவு செய்யவில்லை. தாய் பாஷை போதன மொழியாவது அவசியமே. ஆனல் அதில் ஏற்றம் காண்பது மிக மெதுவாகத்தான் இருக்க முடியும். இதில் எழும் எண்ணற்ற பிரச்னைகள் நெருக்கு விடுவது சுலபமல்ல. இவ்விரண்டும் இயற்கையான வளர்ச்சிகளே. ஓரளவுக்கு ஆட்சியாளர் ஆணை புரியலாம். ஆனல் மக்களுக்குப் புரியக்கூடிய ஆட்சி மொழியும், கருத்துச் செழுமையுள்ள போதன மொழியும் பருவத்தினலன்றிப் பழா என்பதை மறுப்பதற்கில்லை.

இடைக்காலத்தில் மட்டுமின்றி, எக்காலத்திலுமே அறிவு வளர்ச்சிக்காக ஆங்கிலத்தில் நல்ல பரிச்சயம் இன்றியமையாதது. இதை உணர்ந்துதான், நமது ராஜ்யத்தில் ஆங்கில போதனையை இனி 5-ம் வகுப்பில் தொடங்கப் போகிருர்கள். ஹைஸ்கூலில் ஆங்கிலப் படிப்பின் தரத்தை உயர்த்தத் தேசமெங்கும் திட்டமிடப்பட்டுள்ளது. பாடப் புத்தகங்களைச் சிரமப்பட்டுத் தாய் மொழியில் ஏதோ ஒரு மாதிரி தயாரித்து விட்டாலும், அறிவு வளர்ச்சிக்கான உப-நூல்களை நிரந்தரமாக ஆங்கிலத்தில்தான் படிக்க வேண்டியிருக்கும். ஆகையால்தான் ஆங்கிலத்தைப் புரிந்துகொண்டு, கையாளும் தகுதி இந்தியாவெங்கும் அதிகமாக வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டுள்ளது. படிக்க வருகிறவர்கள் அதிகரித்து வருவதால், இனி, ஆங்கிலம் தெரிந்தவர்களின் எண்ணிக்கையும் வீதா-

அன்பு

அன்பில் எத்தனையோ விதம் உண்டு. தாய் சின்னஞ்சிறு குழந்தையை மடியில் வைத்து அணைத்துக் கொள்ளுகிருள்; குழந்தை வளரும்போது அதைக் கட்டிக் கொஞ்சி முத்தமிடுகிருள்; குழந்தை பெரியவனகித் தனக்குமேல் உயரமாய் வளர்ந்துவிடும்போது கண் குளிரப் பார்க்கிருள். அன்புதான் இத்தனை விதமாகவும் வெளிப்படுகிறது. அன்பு எவ்வளவோ சிக்கல்களைத் தீர்க்கிறது; சிக்கல்களே ஏற்படாவண்ணமும் தடுக்கிறது. பெற்ருேர்களின் பரிபூரண அன்புக்குரிய குழந்தை சந்தோஷமாய் வளர்வதுடன், வேறு சங்கடத்துக்கு ஆளாகாமலும் இருக்கும்.

—பேரெண்ட்ஸ் மாகஸீன், (சிக்காகோ)

இந்தி எப்போது வளம்பெறும் என்று எவராலும் கூறமுடியாது

சுதந்திரத்துக்கே ஆபத்து

சாரமும் போகப் போக உயர்ந்து கொண்டே இருக்கும். ஆங்கிலம் 100 - க்கு 99·5 சதம் பேருக்குக் கட்டாயப் படிப்பு மொழியாக இருக்குமாகையால், சில ஆண்டுகளுக்குப் பின் அது தனிப் பெரும் மொழியாக விளங்கக்கூடும். சிந்தித்துப் பார்த்தால் இவை திரு. காமராஜ-க்கு தாமே புலப்படும் என்று நினைக்கிருேம்.

ஆங்கிலத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற மோகம் எவருக்குமில்லை. அப்படியிருப்பதாக அவர் நினைப்பது தவறு. அகில - இந்திய அடிப்படையில் இன்று ஆங்கிலம் நல்ல முறையில் செயல்படுவதுபோல் இனியும் நெடுநாளைக்கு இருக்கச் செய்வது இன்றியமையாதது. **உணர்ச்சி வசப்பட்டு அதைக் கைவிட்டு, அரை குறை இந்தியைத் திணித்து, தேசத்தின் ஒற்றுமையைச் சிதைத்து, நிர்வாகத்தை நிலைகுலைத்து, சுதந்திரத்துக்கு அபாயத்தை விளைவித்துவிடக் கூடாதே என்பதுதான் விஷயமறிந்தவர்களின் கவலை. இதை திரு. காமராஜ் புரிந்துகொள்வது அவசியம். நேருஜிக்குத் தெரியாதா என்று கேட்பதால் பயனில்லை. நேருஜி இவ் விஷயமாக என்ன செய்யப் போகிருர் என்பதுதான் முக்கியம். தவிர இது ஒரு தலைவருடைய விவகாரமல்ல.** எனவே, தாம் வாக்களித்து வரும் அகில — இந்திய இணக்கத்தையும் ஒத்துழைப்பையும் உருவாக்க அவர் என்ன செய்யப் போகிருர் என்பதுதான் முக்கியமாகிறது.

★

சேலம் மாவட்ட **தி. மு. க. 3-வது மாநாடு**

1958 பிப்ரவரி 15, 16 சனி ஞாயிறு நாட்களில்

வேலூர் (சேலம்) 'அழகிரி பந்தலி'ல் நடைபெறும்.

தலைவர்: கலைஞர் மு. கருணாநிதி, எம். எல். ஏ.

திறப்பாளர்: நடிப்பிசைப் புலவர். கே. ஆர். இராமசாமி

அண்ணாதுரை, நாவலர் இரா. நெடுஞ்செழியன்

கழக முன்னணிச் சொற்பொழிவாளர்கள் கலந்துகொள்வர்.

இருநாட்களிலும் கலை நிகழ்ச்சிகள் உண்டு.

இரு நாட்களுக்கும் நுழைவுக் கட்டணம்:—
ஆண்களுக்கு ரூ. 5, 3, 2, பெண்களுக்கு ரூ. 1.

பி. எம். குப்புசாமி — பொருளாளர்
ப. இராமலிங்கம் — செயலாளர்
ஜி. பி. சோமசுந்தரம் — வ. கு. தலைவர்
இரா. தாண்டவன்—தொண்டர் படைத் தலைவர்.

குறுந்தொகை அளிக்கும் நகைச்சுவை விருந்து

—[கோ. கோதண்டராமன்]—

அகத்துறை நூல்களில் ஒன்றாகிய 'குறுந்தொகை' என்னும் தொகை நூல் கருத்தாழமும் சொல் வளமும் விரவி, கற்போரின் நெஞ்சையள்ளும் பெற்றியுடைத்தாதலை நாம்காண்கிறோம். குறுந்தொகைப் பாடல்களில் கொழிக்கும் அருஞ்சுவையில் மாந்தித் திளைத்த காரணத்தாலேயே பண்டைத் தமிழ்ப் புலவர் பெருமக்கள் அதனை, 'நல்ல குறுந்தொகை' என்று போற்றிப் புகழலாயினர் போலும்! குறுந்தொகைப் பாடல்களில் துள்ளும் தமிழ்க்கவினும், அப்பாடல்களில் பரந்து செறிந்து காணப்படும் காதல், கனிவு, நகை, அவலம் போன்ற பல்வகைச் சுவைகளும் நம்மையெல்லாம் வெறிகொள்ளச் செய்யும் தகைமைத்தாகலின், குறுந்தொகை, புலமை மணம் கமழும் சிறந்த ஓர் கவிதை நாடகமெனில் மிகையாகாது. குறுந்தொகைப் பாடல்களை நாம் கற்க முனைகின்றபோது, அப்பாடல்களில் வரும் பாத்திரங்களுடன் இயைந்து விடுகிறோம். நம்மை அறியாமல் நம்முள்ளம் பெருமிதத்தால் சிறகடித்து எங்கோ பறந்து செல்கிறது. என்னே அக்கவிதைகளின் அருந்திறம் இருந்தவாறு!

நெய்தல் நிலத்துத் தலைமகன் ஒருவனுக்குப் பரதவர் குலத்துப் பூங்கொடியாள் ஒருத்திமீது மட்டிலாக் காதல். அந்த மீனவர் குலத்துத் தேன்மொழித் தோகைக்கும் அத் தலைமகன்பால் அளவிறந்த காதல். இவர்களின் காதல் நாடகத்துக்கு உறுதுணையாக நின்றாள் ஒரு தோழி! தலைவியின் வேண்டுகோளுக்கிணங்க, ஓர் நாள் தலைமகனிடம் தோழி சென்று, அவனை மறுநாள் பகற்பொழுதிலே, அருகிருந்த கடற்கரை மருங்கர் அமைந்த இருண்ட புன்னைமரச்சோலை ஒன்றின் பக்கத்தில் இருந்த வெண்மணற் பரப்பில் வந்து தங்கியிருக்கும்படியும், தான் அங்கு தலைவியுடன் வருவதாகவும் கூறிச் சென்றாள். தோழி கூறியவாறே, மறுநாள் பகற்பொழுதில் தலைமகன், அவள் குறித்த கடற்கரையின் அருகிற் பொருந்திய புன்னைமரச் சாரலில் தலைவியைச் சந்திப்பதற்காகக் குறித்த நேரத்திற்குச் சற்று முன்னரேயே வந்து தலைமகளின் வருகைக்காகக் காத்திருந்தான். சிறிது நேரத்தில் அவன் ஆவலுடன் எதிர்நோக்கியிருந்த தலைவி, தன் தோழியுடன் வந்துகொண்டிருப்பதைக் கண்டான். அவன் உள்ளம் உவகையால் துள்ளிற்று. தான் முன்னரே அங்கு வந்திருப்பதை, அவர்கள் உணர்ந்திலராதலால், அவர்களைச் சிறிது அசதியாடி மகிழ்வோம் என நினைத்தவனாய், அருகிருந்த புன்னைமரச் செறிவிற் சென்று மறைந்து கொண்டான்.

தலைவியோடு வந்த தோழியோ பலே கைகாரி! தலைவன், தான் குறித்தபடி கடற்கரைக்கு வந்துள்ளான்என்பதை அறிந்தபின்னரே, தலைவியை அழைத்துக்கொண்டு புன்னைமரச் சோலையை நோக்கி அவள் வந்தாள். ஆனால், தான் குறித்த இடத்தில் தலைவனை அவள் கண்டிலள். எனினும் சற்று முன்பே கடற்கரையை நோக்கி வந்த தலைவன் வேறெங்கும் சென்றிருக்க முடியாது என்பதையும், தலைவியின்பால் அவன் கொண்டிருந்த காதலின் ஆழத்தையும் நன்கு உணர்ந்தவளாகிய அந்தத் தோழி, தலைமகன் நம்மை அசதியாடிக் களிக்கும் பொருட்டு எங்கேனும் மறைந்திருத்தல் உறுதி என எண்ணியவளாய், "நன்று! நம்மை அசதியாடி மகிழ நினைத்த இத்தலைமகனை, யானே அசதியாடி நகைப்பேன்" எனத் தனக்குள் கூறிக்கொண்டு ஒரு சிறிய சூழ்ச்சித் திட்டத்தைத் தன் நெஞ்சத்தில் வகுத்துக்கொண்டாள். உடனே அருகிருந்த ஓர் மணற்றிட்டின் மீதேறி, தலைவியை நோக்கி, "அன்னாய்! புன்னைமரப் பாங்கருற்ற விரிமணற் சாரலில், யான் குறித்தபடி இன்னும் நம் தலைவரோ வந்திலர். இவ்வெண்மணல் பரப்பு அவர் வாராததால் வெறிச்சென்றிருக்கிறது. நான் என் செய்வேன்? காலமோ கடந்துகொண்டிருக்கிறது. மீன் பிடித்தற்குக் கடல்மேல் சென்ற நம் தமையன்மார்களின் மரக் கலங்களோ கரையை நோக்கி விரைந்துகொண்டிருக்கின்றன" என்று கூறுகிறாள். அந்தப் பாடல் இதோ:-

"இருள் திணிந்தன்ன ஈர்ந்தண் கொழுநிழல்
நிலவுக்குவித் தன்ன வெண்மணல் ஒருசிறைக்
கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழில் புலம்ப
இன்னும் வாரார் வரூஉம்
பன்மீன் வேட்டத் தென்னையர் திமிலே"

(குறுந்தொகை—123)

குறிப்பு:- வேட்டத்து — என்னையர் என்பது வேட்டத்தென்னையர் என மருவியது, திமில்—படகு அல்லது மரக்கலம்; கோடு—கொம்பு அல்லது கிளை.

தலைமகன் - தலைவி-இவர்களின் இந்தச் சந்திப்பு களவின்பால் நிகழ்வதொன்றாகலின், கடல்பால் சென்ற தலைவியின் தமையன்மார்கள் திரும்பிவிட்டால் களவொழுக்கம் நிகழ முடியாது என்ற கருத்தைத் தோழியின் வாயிலாக ஆசிரியர் ஐயூர் முடவனார் கூறுமற் கூறி விளக்குகிறார். இவ்வாறு தமையன்மார்கள் வருகிறார்கள் என்று கூறின், மறைந்துள்ள தலைமகன் அச்சத்தால் உடன் வெளிவருவான் என்பதே அந்தத் தோழியின் அரிய திட்டம். தன்னை அசதியாடற் பொருட்டு, தலைவியை நோக்கித் தமையன்மார்கள் வருகிறார்கள் என்று தோழி கூறுகிறாளோ என்று தலைமகன் ஐயுறாத வண்ணம், அருகிருந்த ஓர் மணற்றிட்டின் மேலேறி, கடலிடைக் கலங்கள் விரைந்து வருவதை உண்மையாகக் காண்பவளைப்போல் நடிக்கிறாள். இந்தச் சுவை கெழுமிய நாடகம் எவ்வளவு இயற்கையாக அமைக்கப்பட்டுள்ளது பாருங்கள்!

* * *

மேற்குறித்த அசதியாடல் நிகழ்ச்சியைப் போன்ற பிறிதொரு நிகழ்ச்சி நற்றிணைப் பாடல் ஒன்றில் வெகு அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. குறுந்தொகைப் பாடலில், தலைமகன் புன்னை மரச் செறிவில் மறைந்து தலைமகளை அசதியாட நினைத்ததைக் காண்கிறோம். நற்றிணைப் பாடலில், அதன் ஆசிரியர் அம்மூவனார் தலைமகனை அசதியாடி மகிழ எண்ணும் தலைவியொருத்தி "புன்னை மரச் செறிவில் சென்று நாம் மறைந்துகொள்வோம் வா" என்று தன் தோழியை அழைக்கும் நிகழ்ச்சியைத் திறம்பட நமக்கு அளித்துள்ளார்.

பாய்ந்து வரும் புரவிகள் பூட்டப்பட்ட தேரூர்ந்து தலைமகன் ஒருவன் தன் தலைவியைக் காணுதற்பொருட்டு விரைந்து வருகிறான். புன்னை மரச் சோலையொன்றின் அருகே அவர்கள் சந்திப்பதாக அவர்களுக்குள்ளே முன்னேற்பாடு. அதற்கிணங்க தலைவியும் தோழியும் குறியிடத்தே முன்னரே வந்து தங்கி இருந்தனர். தலைவியைக் காணுதற் பொருட்டு, தலைமகன் ஊர்ந்துவந்த தேரினின்று எழுந்த மணியோசையும், தேர்ஊர்ந்து வருவதை அறிவித்து ஏவலாளர்கள் எழுப்புகின்ற ஒலியும் தலைவியின் செவிகளில் வந்து புகுகின்றன. காதலன் வரவறிந்த தலைவி களிப்பெய்துகிறாள். தலைவனைச் சிறிது நேரம் அசதியாடி அவன் படும் அல்லலைக் கண்டு அக மகிழ எண்ணுகிறாள். உடனே தோழியை நோக்கி, "அம்ம! நமது தலைவரின் வருகையை அவர் தேரிடைப் பொருந்திய மணியோசையும், ஊர்ந்து வருகின்ற அத்தேர் வருவதை அறிவிக்கும் ஏவலாளர்களின் ஒலியும் நமக்கு உணர்த்திவிட்டது கண்டாய்! என் உள்ளங் கவர்ந்த கள்வராகிய என் தலைவர் நம்மைக் காண்பதற்கு முன், இவ்வெண் மணற் பரப்பில் உயர்ந்து விரிந்த புன்னை மரச் செறிவில் சென்று நாம் மறைந்து கொள்வோம் வருவாயாக! நாம் அவ்வாறு மறைந்து கொண்டால் இப்பொழிலிடத்து நம்மைக் காணாது அவர் மிகவும் வருந்துவார். அவ்வருத்தத்தினைக் கண்டு சற்று நாம் மகிழ்வோமாக" என்று கூறுகிறாள். அந்தப் பாடல் பின்வருமாறு:-

இவர்பரி நெடுந்தேர் மணியும் இசைக்கும்
பெயர்பட இயங்கிய இளையரு மொலிப்பர்
கடலாடு வியலிடைப் பேரணிப் பொலிந்த
திதலை யல்குல் நலம்பா ராட்டிய
வருமே - தோழி! வார்மணற் சேர்ப்ப
னிறைபட வாங்கிய முழவுமுதற் புன்னை
மாவரை மறைகம் வம்மதி பானாட்
பூவிரி கானற் புணர்குறி வந்துநம்
மெல்லிணர் நறும்பொழிற் காணா
அல்ல லரும்படர் காண்கநாஞ் சிறிதே.

(நற்றிணை - 307)

இப்பாடலில் ஆசிரியர் பெண்மையின் உள்ள உளைச்சலை ஒரு புதுக்கோணத்தில் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார். காதலன் படும் துயர் கண்டு களிகொள்ள விரும்புகிறாள் அந்தக் காதல் காரிகை. அதிலே அவளுக்கு ஓர் அலாதியான இன்பம். இக்கவிதையில் ஊடல் உவகையை ஒரு புது முறையில் நமக்கு ஆசிரியர் அளித்துள்ளார். சாதாரணமாக, பண்டை இலக்கியங்களில் எல்லாம், தலைவியும் தலைவனும் இணைந்துள்ளபோதே ஊடல் நிகழ்தலையும், அவ்வூடல் பின்னர் கூடல் இன்பத்தைப் பெருக்கும் ஆற்றலையுமே நாம் வெகுவாகக் காண்கிறோம். தலைவன் அறியாத வண்ணம், தலைவி அவனை அல்லல் அரும்படருறச் செய்து, அது கண்டு களிகூர எண்ணும் இந்தப் புதிய ஊடல் முறை உண்மையிலேயே சுவைத்து இன்புறற்பாலதாகும்.

ஒருவன் தான் இழந்த பொருளொன்றினைத் திரும்பக் கிடைக்கின்றபோது, அப்பொருளை அவன் முதற்கண் அடைந்தபோது பெறும் இன்பத்தினும் பன்மடங்கு இன்பத்தினைப் பெறுவது கண்கூடு. அதைப்போலவே காதலியைத் தேடிவந்த காதலன், தான் குறித்த புன்னைமரச் சோலையருகில், அவ்வேந்திழையைக் காணாது ஏமாற்றம் கலந்து நிற்கும்போது, சிறிது நேரத்தில் அவள் அந்த இடத்திலேயே இருப்பதைக் காண்கின்றான் என்றால், அவன் பெறுமின்பமும் மட்டிலடங்காததொன்றன்றோ?

மேற்குறித்த செய்யுள்கள் இரண்டிலும் 'அங்கதம்' என்று சொல்லப்படும் ஒருவித சுவை துளிர்ப்பதை நாம் காணலாம். இது ஆங்கிலத்தில் 'செடயர்' என்ற சொல்லால் குறிக்கப்படும். இவ்வங்கதத்தின் இலக்கணத்தினை தொல்காப்பியர் பின் வருமாறு கூறுகிறார்.

"வசையொடும் நசையொடும் புணர்ந்தன் றாயின்
அங்கதச் செய்யு ளென்மனார் புலவர்"
"அங்கதந் தானே அரிதபத் தெரியின்
செம்பொருஇ கரந்த தெனவிரு வகைத்தே"
"மொழிகரந்து சொல்லினது பழிகரப் பாகும்"

அங்கதம் ஒருவனின் குறையையோ அல்லது சமூகத்தின் குறையையோ, உறுத்தும்படி கூறுவது. அது செம்பொருள் அங்கதம், பழிகரப் பங்கதம் என இருவகைப்படும். ஒரு பொருளை வெளிப்படையாக நகைச்சுவை தோன்றக் கூறுவது 'செம்பொருள் அங்கதம்' எனப்படும். நகைச்சுவை தொக்கி நின்று பொருளுணர்த்துமேல் அது 'பழிகரப் பங்கதம்' எனப்படும். இக்கட்டுரையில் குறுந்தொகைப் பாடல் செம்பொருள் அங்கதத்திற்கும் எடுத்துக்காட்டாக உள்ளன. கலைவாணரின் நகைச்சுவை பழிகரப்பு அங்கதத்தின் பாற்படும். 'செடயர்' அல்லது அங்கதம் எனும் சுவை சொற்பொழிவுக்கு இன்றியமையாத பல பண்புகளில் ஒன்றாகும். இப்பண்பு நாவன்மை மிக்க சொற்பொழிவாளர்களான எட்மண்ட் பர்க் போன்றவர்களின் சொற்பொழிவுகளில் மிகுதியாகக் காணலாம். அங்கதம் சொற்பொழிவுக்கு மட்டுமன்றி கவிதை, நாடகங்கள் இவற்றிற்கும் இன்றியமையாத ஒரு கூறெனில் அது மிகையாகாது.

சுவையும் மணமும் கெழுமிய சொன்மலர்கள் மண்டிக்கிடக்கும் தமிழ்ப் பூங்காவில், சிறிது சிறிதாக முளைத்து, அந்த நறுவிய தமிழ் மலர்களை அரித்திட முயலும் வேற்றுமொழிக் காளான்களையும் கள்ளிகளையும் வேரோடு களைந்தெறியத் தமிழ் மறவரும் மகளிரும் தளராது உழைக்க முன்வராவிட்டால், இன்பத் தேன் பிலிற்றும் எழில் மலர்க் கடாகிய தமிழகம், கள்ளிக் காடாக வன்றோ ஆகிவிடும்?

★

"திக்கற்றோரின் தேற்றரவாளன்"

[இரா. மாணிக்கம்]

அவர்!......ஓர் ஆசிரியர். ஆம் அவர் ஓர் பள்ளியாசிரியர்தான். பிற்பகல் பள்ளி முடிந்தது. கதவுகளைப் பூட்டினார். தன் இல்லம் நோக்கி ஏகினார். பள்ளிப் பிள்ளைகளின் நல்வாழ்வைப்பற்றி எண்ணியவாறே நடந்தார். கந்தலாடையும் கலைந்த முடியும் கொண்டவனாய்த் தெருவின் ஓரத்தில், ஓர் மூலையில் ஆழ்ந்து தூங்கும் ஓர் சிறுவன் அவரின சிந்தனையைத் தன்பக்கம் இழுத்தான். அவரும் அவன் அருகில் சென்றார்.

தம்பி...எழுந்திரு. ஏன் இங்கு தூங்குகின்றாய்? உன் அன்னையிடம் செல்வதுதானே!

ஐயா! எனக்கு அன்னை இல்லையே!

தந்தை!

அவரும் இல்லை.

உன் வீட்டிற்காவது செல்லக் கூடாதா?

அதுவும் எனக்கில்லையே!

உன் நண்பர்கள் வீட்டிற்காவது செல்லலாமே!

நண்பர்கள் கூட எனக்கு இல்லை ஐயா......

தாயுமில்லை! தந்தையுமில்லை! நண்பர்களும் இல்லை! இருக்க இல்லமும் இல்லை! ஒருவேளை இவன் பொய்யுரைக்கின்றானோ? இவ்வாறு எண்ணிய ஆசிரியர் தன் அனுபவத்தில் இத்தகைய சிறுவனைச் சந்தித்ததேயில்லை என அவருக்குள் கூறிக்கொண்டார்.

அச்சிறுவன் கூறியது அத்தனையும் உண்மையென்பதனை ஆசிரியர் சிறிது நேரத்தில் அறிந்துகொண்டார். ஆசிரியரின் உள்ளம் எல்லையில்லாத் துன்பமடைந்தது. அவன் பெயர் 'ஜிம் ஜார்விஸ்'. இலண்டன்மாநகரத்தின் தெருக்களில் இரந்தும், திருடியும், மூட்டை தூக்கியும் தன் துன்ப வாழ்வினைக் கழித்து வந்தான். குப்பைத் தொட்டிகளும், தெருவின் ஓரங்களில் நிற்கும் சீரழிந்த வண்டிகளுமே அவனது உறைவிடம். படிப்போ, பாதுகாவலோ இல்லாத அவன் ஒளிவிடும் கண்களுடனும், சுறுசுறுப்புடனும் இருந்தான். பத்து வயதினையடைந்த அவன் தொல்லை பல கண்டுவிட்டவன். அரசாங்கக் காவலரின் கண்களில் மண்ணினைத் தூவித் தன் காலத்தினைக் கழித்து வந்தான்.

ஆசிரியர் அச்சிறுவன் அவலநிலையினைக்கேட்டு, "ஓ! என்னாடே! இச்சிறுவனைப் போன்று இன்னும் எத்தனை சிறுவர்களைத் தன்னில் அடக்கி வைத்திருக்கின்றாயோ?" என்று கேட்டார். 'ஜிம்'மின் உதவியால் அவனைப்போன்று அல்லலுறும் சிறார்களைக் கண்டுபிடித்தார். ஏன்? சல்லடைபோட்டாற்போல் சலித்து எடுத்தார்.

அன்றே அவரது உள்ளம் அனாதைப் பிள்ளைகளின் அவல வாழ்வினைப் போக்கும் அரிய பணியினைத் துவக்கும்படி தூண்டியது. துவக்கினார் தன் பணியினை. ஆயிரமாயிரம் சிறுவர்களின் கண்ணீர்த் துளிகளைப் போக்கினார். கவலையை நீக்கினார். அவர் பெயரால் ஆங்கில நாடு பூராவும் அனாதை இல்லங்கள் பல தோன்றின. சிறுவர்களின் வாழ்வினைச்செம்மைப்படுத்திய அச்செம்மல் அந்நாட்டுக்கு நல்ல பல மருத்துவர்களையும், வழக்கறிஞர்களையும், பேராசிரியர்களையும், புலவர் பெருமக்களையும், கலைஞர்களையும், ஆளும் அமைச்சர்களையும் ஆக்கித்தந்துதவினார்.

அத்தகைய தூய உள்ளங்கொண்ட ஆசிரியரின் பெயர் **டாக்டர் தாமஸ் ஜான் பர்னார்டோ.** 1845-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4-ம் நாள் அயர்லாந்து நாட்டினைச் சேர்ந்த டப்ளினில் பிறந்தார். இளமையிலேயே ஆழ்ந்த அறிவும், மாற்றார்க்குப் பணிபுரியும் ஆர்வமும் கொண்டவராயிருந்தார். பள்ளிப் படிப்பிலே நாட்டமில்லாத அவர் தனியாகப் பயனுள்ள நூல்கள் பலவற்றைத் தெளிவுறக் கற்றார். ஏதேனும் தொழில் செய்ய எண்ணிய அவர் அதனையும் விட்டார். மக்கட்குத் தொண்டுபுரிய எண்ணினார்.

அன்றோர் நாள் சீனா சென்று மதத்தொண்டு செய்ய மதகுருவிடமிருந்து அழைப்பு வந்தது. அழைப்பினை ஏற்று இலண்டனுக்கு விரைந்தார். மதக்கல்வி தவிர்த்த நேரங்களில் அனாதைப் பிள்ளைகளின் பள்ளியில் ஆசிரியப் பணி புரிந்தார். தன முயற்சியால் தானே ஓர் அனாதைப் பள்ளி ஆரம்பித்தார். சீனா சென்று தொண்டாற்றுவதைவிட "நாட்டு மக்கட்கு ஆற்றும் தொண்டே சிறந்த தொண்டு" என்பதனை நன்குணர்ந்தார். ஓர் நாள் மாபெரும் பொதுக்கூட்டமொன்றில் சொற்பொழிவாற்றும் வாய்ப்புக் கிட்டியது. வாய்ப்பினை நழுவவிடாது, "வளமில்லா, வறண்ட சிறுவர்களின் வாழ்க்கையைச் சீர்திருத்துவதே உண்மையான மதத் தொண்டெனக் கூறி" ஆங்கு குழுமியிருந்த மக்களைத் தன்வயப்படுத்தினார். மக்கள் திரளோ பர்னார்டோ சொல்லுவது அத்தனையும் உண்மை உண்மை என ஒலி முழக்கினர்.

கூட்டம் முடிந்து அவர் வீடு திரும்பினார். மதக்குருக்களின் பணிக்காக மாற்றார் குடும்பங்களில் பணியாற்றி வந்த ஓர் வேலைக்காரி பர்னார்டோவின் கையில் பணமுடிச்சு ஒன்றினைக் கொடுத்துப் பறந்தோடிவிட்டாள். அம் முடிச்சில் இருபத்தேழு பார்த்திங்குகள் இருந்தன. அதுவே அவரது புனிதப் பணிக்கு அளிக்கப்பட்ட முதல் காணிக்கை.

நாட்கள் பல நகர்ந்தன. சூதுமதியினர் சூழ்ச்சி வலை வீசினர். "அனாதைப் பிள்ளைகள் இன்னும் நம் நாட்டில் ஏராளம் பேர் உள்ளனர் என்று பர்னார்டோ கூறுவது அத்தனையும் பொய்" எனக் கதை கட்டினர், நல்ல பணிக்கு எங்கும் எதிர்ப்பு இருப்பது இயல்புதானே! அதுபோழ்து சுரங்கங்களிலும், தொழிலகங்களிலும் பெருநகரங்களிலும் பணியாற்றிய எத்தனையோ ஏழைச் சிறுவர்களின் வாழ்க்கையை வளம் கொழிக்க வைத்த ஷாப்ட்ஸ்பரி பிரபு என்பார் டாக்டரைக் கூப்பிட்டு அம்மாதிரி அனாதைக் குழந்தைகளை எனக்குக் காட்ட

முடியுமா? எனச் சற்றுக் காட்டத்துடன் கேட்க — அதற்கென்ன இப்போதே தயார்! புறப்படுவோம் வாரீர்! போவோம்! என அனாதைக் குழந்தைகளின் இருப்பிடத்துக்கு இட்டுச் சென்று அல்லலுறும் வருங்கால இளைஞர்களின் எழிலற்ற வாழ்க்கையினைக் காட்டினார். ஷாப்ட்ஸ்பரி பெரிதும் வருந்தி பர்னார்டோவின் பணிக்குத் தன்னாலான உதவியனைத்தும் அளிப்பதாகக் கூறி டாக்டரை மேலும் உற்சாகப்படுத்தினார்.

ஆரம்பத்தில் பயனற்ற கழுதைக் கொட்டகையில் ஆரம்பித்த அனாதை இல்லமானது பின் இரண்டு குடிசைகளில் குடியேறிற்று. இடம் போதாத காரணத்தால் இன்னுமோர் கட்டடத்தை வாடகைக்கு வாங்கினார். அனாதைகளின் நல் வாழ்வுப் பணிக்காக அவர் யாரிடமும் கடன் பெறவில்லை. நல்ல உள்ளம் படைத்தோர் கொடுத்த நன்கொடையைக் கொண்டே திறம்பட நடத்தினார் தாம் மேற்கொண்ட பணியினை. யாரையும் சோம்பேறியாய் விடாது அனைவர்க்கும் விருப்புமான கல்வியும், தொழிலும் கற்பிக்கப்பட்டது. இல்லத்துக்கு உதவுவோரைவிட, உதவி நாடி வந்தோரே ஏராளம். இதற்கிடையில் சிறுவர்களின் உடல் நலத்தைப் பேண மருத்துவத் துறையிலே தேர்வு எழுதி 'டாக்டர்' பட்டமும் பெற்றார்.

ஓர் நாள் 'காரட்ஸ்' என்னும் சிறுவன் அனாதை இல்லத்தில் சேர விரும்பினான். இட நெருக்கடியால் இன்னும் ஒருவாரம் கழித்து வரும்படி டாக்டர் அவனிடம்கூறி அவனது ஒருவாரச் செலவுக்குச் சிறிது பணமும், ரொட்டியும் கொடுத்தனுப்பினார். ஆனால், அந்தோ! அச்சிறுவன் ஒரு வாரத்துக்குப் பின் குளிராலும், நோயாலும்தொல்லைபட்டு இறந்துபோன செய்தியைக் கேள்விப்பட்ட டாக்டர் ஆழ்ந்த கவலையுற்று, அன்றே அவரது அனாதை இல்லத்தின் முன் "உதவி நாடி வரும் எந்த அனாதைக்கும் எச்சமயத்திலும் இனி உதவி மறுக்கப்படமாட்டாது" எனக்கொட்டை எழுத்துக்களில் விளம்பரம் செய்தார் என்றால், என்னே அவரது தொண்டு. சிறுவர்களின் அவலநிலையைப் போக்கிய டாக்டர் சிறுமிகளின் வாழ்க்கையையும் செம்மைப் படுத்தினார்.

டாக்டரின் சீரிய தொண்டுகள் அவருக்குப் பல எதிரிகளைச் சம்பாதித்துக் கொடுத்தது. சிலர், "அனாதைகளுக்காகக் கொடுக்கப்படும் நன்கொடைகளைத் தனக்காக வைத்துக் கொள்ளுகின்றார்" எனக் கதை கட்டினர். சிலரோ "அனாதைப் பிள்ளைகட்கு அரை வயிற்றுக் கஞ்சியே கொடுக்கப்படுகிறது" என்றனர். இன்னும் சிலரோ "பொது விசாரணை" தேவை என்றனர். பொது விசாரணையும் நடந்தது. கணக்குகளும் தணிக்கை செய்யப்பட்டன. கணக்குகள் யாவும் சரியெனத் தணிக்கையாளர் தீர்ப்புக் கூறினார். நீதிவென்றது! நேர்மைநிலைத்தது! தொண்டு துரிதமாக முன்னேறத் தீர்ப்பு வழிகோலியது. வன்சொல்லாளரின் வாய்கள் பூட்டப்பட்டன.

இருப்பினும் தொல்லை கொடுப்பதே தொழிலாகக் கொண்டோர் பர்னார்டோ குழந்தைகளைத் திருடுகிறார் எனக் குற்றஞ் சாட்டி கொடுமை பல கொடுத்தனர். நீதிமன்றம் ஏறினர். என்றாலும் வெற்றி டாக்டருக்கே. இதனையெல்லாம் ஆய்ந்த ஆங்கில நாட்டுப் பாராளு மன்றம் பெயர் பெற்ற "பர்னார்டோ சட்டம்" என்பதனை 1891-ஆம் ஆண்டு இயற்றி பர்னார்டோ போன்றார் நடத்தும் பள்ளிகளுக்கு எவ்விதத் தொல்லையும் கொடுக்கக்கூடாது எனப் பாதுகாப்பளித்தது. டாக்டர் தம் வாழ்நாள் பூராவும் அறுபதாயிரம் சிறுவர்களின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி, இன்றும் உலகின் நானா பக்கங்களிலும் பர்னார்டோவின் இல்லத்தைச் சேர்ந்தோர் பலர் இருக்கக் காணும்படி சிறந்த தொண்டாற்றிய அப்பெம்மான், பெரியோன் 1905-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

வாழ்க அவர் பணி! வளர்க அவரது தொண்டு!!

★

"நீ, என்றேன் நான்"

அன்பும் அறமும் உடைய இல்லறத்திலிருந்து வழுவித் தலைவன் திடீரென ஒருநாள் பாணனது உதவியின் மூலம் பரத்தைவீடு சென்றுவிடுகிறான். தலைவி, தலைவனது பிரிவால் சொல்லொணாத்துயருறுகிறாள். நீரைப் பிரிந்த மீனைப்போல் துடிக்கிறாள்.

தோழி அவ்வப்போது 'எப்படியும் தலைவன் திரும்பிவிடுவான்' என்ற நம்பிக்கையைத் தலைவிக்கு ஊட்டி வருகிறாள்.

சில நாட்களில், பாணன்தான் தலைவனை இவ்வாறு பரத்தையர் சேரிக்கு அழைத்துசென்றிருக்கிறான் என்ற உண்மை தோழியின் மூலம் தலைவிக்கும் தெரிந்துவிடுகிறது.

இத்தகைய இழி செயலைச் செய்த பாணனுக்குத் தக்க பாடம் கற்பிக்க வேண்டுமெனத் தலைவியும் தோழியும் எண்ணித் திட்டமிடுகின்றனர். திட்டம் உருவாகிறது. பாணனது வருகையை எதிர்பார்க்கின்றனர்.

இதற்கேற்றாற்போல், பரத்தையின் வீட்டிலிருந்த தலைவன், பாணனைத் தன் வீட்டுக்குத் தூதாக அனுப்புகிறான். அவ்வாறே பாணனும் தூதுவனாகத்தலைவியின் வீட்டை அடைகிறான். தலைவியும் தோழியும் தயாரித்து வைத்திருந்த திட்டம் செயல்படத் தொடங்குகிறது!

தலைவி, பாணன் மீதிருக்கும் சினத்தையெல்லாம் வெளிக்குக் காட்டாமல் மறைத்து அவனிடம் பேசுகிறாள்;

"புகழுடைய பாண! நீ தினந்தோறும் எம் சகோதரியின் (பரத்தையின்) வீட்டிலிருந்துகொண்டு பாடுகிறாய். அவ்வாறு பாடும் உன்னையும் உன் பாட்டின் ஒலியையும், விடிவளவும் காட்டிலழும் பேயொலி என்று என் அன்னை கூறுகிறாள்! மற்றவர்கள் ஊளையிடும் நரியென்று கூறுகிறார்கள்! என் தோழியோ நாய் என்கிறாள்!! ஆனால் நானோ, அவைகளெல்லாம் அல்ல, பாடுவது நீதான் என்றேன்!"

தலைவி தன்னைப் பற்றி வெகுவாகப் புகழப் போகிறாள் என்று எதிர்பார்த்த பாணனின் முகம் வேறுபடுகிறது!

பரத்தையின் வீட்டிலிருந்த தலைவனால், தூதாக அனுப்பப்பட்ட பாணனைத் தலைவி புகழ்வதுபோல் இகழ்ந்து கூறுவதாகப் பாடப்பட்ட இவ்வெளிய பாடல் நந்திக் கலம்பகத்தில் உள்ளது. இப்பாடலின்நகைச்சுவைப் பயன் எண்ணிப் போற்றுதற்குரியது.

ஈட்டு, புகழ்நந்தி பாண! நீ எங்கையர்தம்
வீட்டிலிருந்து பாட விடிவளவும் - காட்டிலழும்
பேயென்றாள் அன்னை! பிறர் நரியென்றார்; தோழி
நாயென்றாள்! நீ என்றேன் நான்.

—அன்பு.

"குட்டித்தீவில்" விடுதலை முழக்கம்!

இத்தாலி நாட்டுக்கு அருகே, மத்தியதரைக் கடலில் உள்ள ஒரு சின்னஞ்சிறிய "குட்டித்தீவு" மால்டா. அதுதான் உலக வல்லரசான பிரிட்டனை எதிர்த்து சுதந்திரக் கொடி உயர்த்தியுள்ளது!

"பிரிட்டன் பிடியிலிருந்து வெளியேறுவோம். எங்கள் விடுதலை வேட்கையை எவராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது. அணு குண்டு போட்டாலும் சரி, ஹைட்ரஜன் குண்டுகளை வீசினாலும் சரி, எங்கள் விடுதலை முழக்கம் ஓயாது! மால்டாவை அடக்கி ஆள எவரேனும் எண்ணினால் அவர்கள் தோல்வியைத் தழுவுவது நிச்சயம்!"—இப்படிப் பேசியிருக்கிறார் குட்டித்தீவு மால்டாவின் பிரதமர் 'மின்டோப்' என்பவர்!

மால்டாதீவு தற்போது பிரிட்டனின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாக இருந்து வருகிறது. இதற்கு ஒரு தனி சர்க்கார் இருக்கிறது. இது பிரிட்டனின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டு இயங்கிவந்தது! அந்தச் சர்க்காரின் பிரதமர்தான் மின்டோப்! அவர்தான் இன்று மால்டாவின் சுதந்திரத்தில் தலையிட எவருக்குமே உரிமையில்லை என வீரமுழக்கமிடுகிறார்!

மால்டாதீவின் நிலப்பரப்பு 122-சதுரமைல்களாகும். அங்கு வசிக்கும் மக்கள் தொகை மூன்று இலட்சத்து இருபதினாயிரம்பேர். அதாவது நமது சென்னை நகர மக்கள் தொகையில் நான்கில் ஒருபகுதி, மதுரை நகர் மக்கள் தொகையில் பாதி!

மூன்றே லட்சம் மக்கள் வாழும் மால்டா, அன்னியன் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளப் போராடுகிறது! ஆனால் மூன்றரைக்கோடி மக்களைக் கொண்ட நமது தமிழகம் தனி நாடாகப் பிரிந்தால் வாழுமா என வினாவெழுப்புகின்றனர் சிலர் இங்கு! அழுவதா இல்லை சிரிப்பதா?

மால்டாவாழ் மக்களுக்கு மிகப் பெரிய தொழில் அங்குள்ள பிரிட்டிஷ் கப்பற்படைத்தளத்தில் கூலியாக வேலை செய்வதுதான்! பல்லாயிரம் மக்கள் அங்கு வேலை பார்க்கின்றனர். அந்தக் கப்பல் தளத்தை பிரிட்டன் மூடிவிடப் போவதாக அறிவித்தது. அது கேட்டு மால்டா வாழ் மக்கள் பெரும் அதிர்ச்சிக்குள்ளானார்கள். வேலையிழந்து தவிக்கும் ஆயிரக் கணக்கான மக்களுக்கு வேறு வழி என்ன என மால்டா சிந்தித்தது!

வேலை இழக்கும் தொழிலாளர்களுக்கு வேறு வேலை தரவேண்டும் என மால்டா சர்க்கார் பிரிட்டனைக் கேட்டது. ஆனால் பிரிட்டன் மறுத்துவிட்டது.

விளைவு......?

பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்வது என மால்டா முடிவு செய்தது. இந்த முடிவை அறிவித்து மாபெரும் தொழிலாளர் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் பிரதமர் மின்டோப், "பிரிட்டிஷ் ஆட்சியைவிட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை......பிரிட்டிஷ் சர்க்கார் அணுகுண்டு, ஹைட்ரஜன்குண்டுகளை வீசினாலும் எங்களை அடக்கிவிட முடியாது!" என்று முழக்கமிட்டிருக்கிறார்.

"வேலையிழந்து, பட்டினிகிடந்து சாவதைவிடப் பிரிட்டனை எதிர்த்து, விடுதலைக்காகப் போராடிச் சாவோம்! வேண்டாத ஆட்சியை எதிர்ப்பதில் நாங்கள் அஞ்சவில்லை" என்று கூறுகிறார் மின்டோப்?

"பிரிட்டிஷ் ஆட்சி ஒழிக!" என்ற குரல் இன்று மால்டா முழுதும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பிரிட்டிஷ் ஆட்சிமீது தங்கள் வெறுப்பைக் காண்பிக்க ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

"பிரிட்டிஷ் 'ஆட்சியிலிருந்து மால்டா தீவு விடுதலை பெறவேண்டும்!" என்று மால்டா சட்டசபை ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது! அதுகண்டு பிரிட்டிஷ் சர்க்கார், வெளியேறும் தீர்மானத்தைக் கண்டித்து மால்டா சர்க்காருக்கு ஒரு அவசரச் செய்தி அனுப்பியுள்ளது!

"பிரிந்தால் வாழுமா?" என வினாவெழுப்பும் "பெரிய மேதைகள்" இதை எண்ணிப் பார்ப்பார்களா?

ரப்பர் தொழிலை மட்டும் நம்பியே 60-இலட்சம மலேயர், சுதந்திர வாழ்வு வாழ்கின்றனர்!

அண்மையில் விடுதலை பெற்ற "கானா" என்ற ஆப்பிரிக்க நாடு 37-இலட்சம் மக்களைக்கொண்டது தான்!

மற்றும் அல்ஜீரியா, மால்டா போன்ற பல நாடுகள் விடுதலைப் போர் புரிந்து வருகின்றன.

தனிநாடாக சுதந்திரத்துடன் இதுபோன்ற சிறு நாடுகள் எல்லாம் இருக்கும்போது, எல்லா வளமும், செல்வச் சிறப்பும் கொண்ட நம்நாடு ஏன் சுதந்திர நாடாக வாழமுடியாது? துருக்கியைவிட தமிழ் நாடு இருமடங்கு பெரிய தாயிற்றே!

அந்த நாடுகள் எல்லாம் இன்று உலக வல்லரசுகளின் கழுகுப் பார்வையில்பட்டு அழிந்துவிடவில்லையே! மாறாக வல்லரசு நாடுகளை விரட்டியடித்த காட்சிகளைத் தானே கண்டு வருகிறோம்!

வெல்க விடுதலை முழக்கம்!

— கோவை க. இரத்தினம்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்லுமிடந்தோறும் பேசுகிறார். இவர்கள் யாவரும் பேசும் தொனியில், வழக்கம்போல் ஆத்திரமும் வேகமும் காணப்படுகிறது! தெற்கைக் காட்டிக் கொடுத்து, அந்தக் 'கவுரவத்தின்' மீது, டில்லியின் புன்சிரிப்பையும் ஆதரவையும் பெற்று வருகிறவர்கள் இப்படித்தான் பேசுவார்கள் — டில்லியால், இலாபம் பெறுகிறவர்களல்லவா!!

கொட்டடியில் பூட்டினாலும், தடியடிகளை வீசினாலும், வழக்குகளைப் போட்டாலும், வம்புக் குரல் எழுப்பினாலும், யார் செய்வது நியாயம் என்பதை அறிந்து கொள்ளாமலில்லை, மக்கள். சென்னையில் நடைபெற்ற அட்டகாசங்களைக் கண்டு, "தூ! தூ!! இதுவா, அகிம்சா சர்க்கார்?", என்று, எல்லோரும் பேசுகிறார்கள். அடக்கு முறைகளும், ஆத்திரத் தர்பாரும் நடக்க நடக்க, ஆட்சியின் பலம்தான் சரியும் என்கிற பழைய உண்மை, மக்கள் மன்றத்திலே நிலைநாட்டப்பட்டிருக்கிறது. கொள்கைக்காக—நாட்டுக்காக—மொழிக்காக, செந்நீரும் கண்ணீரும் சிந்துவோர்பால், மக்கள் அனுதாபம் காட்டத்தான் செய்வார்கள்! நமக்குக் கூட்டம் நடத்த அனுமதி மறுத்ததையும் — சென்னையில் தடியடி தர்பார் நடத்திய அக்கிரமப் போக்கையும் — ஆளும் கட்சி தவிர, ஏனைய எதிர்க்கட்சிகள் யாவும் கண்டித்திருப்பதிலிருந்தே, நாம் எடுத்த முடிவின், நியாயம் விளங்கும், கொடுங்கோலைக் கண்டிக்க முற்படும் கொள்கை வீரர்கள்பால் அன்பும் அனுதாபமும் வளரச் செய்திருக்கிறது, தென்னகம் காட்டிய உணர்ச்சிப் பொங்கல்! சொந்த மக்களைவிட, பதவிதான் பெரிது என அதிகாரத் தர்பார் நடாத்திடும் ஆள்வோரின் போக்குப் பற்றி, 'சேச்சே!' என கூறுதோரெல்லாம் கூறும்படியான நிலைமையையும் உண்டு பண்ணியிருக்கிறது!!

★

வாழ்க நடராசன்-சோதி

26-1--58 ஞாயிற்றுக்கிழமை காலை ராஜா பஸ், ராஜா டாக்கீஸ் உரிமையாளரும், நமது அருமை நண்பருமான டபிள்யூ. கே. தேவராசன் அவர்களின் திருமகன், **டி. நடராசனுக்கும்** வேலூர் திரு. வி. கே. எம். நடராசனார் அவர்களின் திருமகள் **சோதிக்கும்** சென்னை பச்சையப்பன் கல்லூரித்தமிழ்ப் பேராசிரியர் **டாக்டர் மு. வரதராசனர்** அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது.

திருவாளர்கள் டபிள்யூ. டி. மாசிலாமணி பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை, டி. புருஷோத்தமன் எம். எல். சி. காஞ்சி நகர மன்றத் தலைவர் வி. என். பெருமாள், ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., ப. உ. சண்முகம், எம்.எல்.ஏ., சி. வி. இராசகோபால், டி. சண்முகம், எம். எஸ். இராமசாமி, கலைஞர் கருணாநிதி, எம்.எல்.ஏ., அ. பொன்னம்பலனார், என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன், கே. கே. நீலமேகம், இராம. அரங்கண்ணல், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் வழக்கறிஞர் வி. பி. இராமன், இரா. செழியன், பா. வாணன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., டாக்டர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ., பேராசிரியர் க. அன்பழகன் எம்.எல்.ஏ., நடிகமணி டி. வி. நாராயணசாமி, அன்பில் தர்மலிங்கம், திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், திருமதி அலமேலு அப்பாதுரை, எஸ். விஜயலட்சுமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தமிழ்த் திருமணங்கள் நாட்டில் நடைபெறவேண்டிய அவசியத்தை வலியுறுத்தி, இந்தத் திருமண விழாவில் பல சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டிருக்கின்ற காரணத்தால், தமிழ் வாழ்த்துதலோடு நடத்தப்பெறுத திருமணங்களை செல்லாதவைகளாக்க சட்டம் இயற்ற முயற்சிப்பார்களென்று எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

மாநில முதலமைச்சர் காமராசர், திருவாளர்கள் சி. சுப்ரமணியம், எம். பக்தவத்சலம், எஸ். எஸ். வாசன், எஸ். ஏ. அய்யாசாமி பி. டி. இராசன், எம்.எல்.சி., பி. ஆர். இராசரத்னம், சி. டி. நடராசன், வி. கே. இராமசாமி ஆகியோர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர். மணமக்களுக்கு ஏராளமான பரிசுகளும், வாழ்த்துரைகளும் வழங்கப்பட்டன.

அன்று பிற்பகல் திரு. எம். கே. கோவிந்தராச பாகவதர் அவர்களின் இசையரங்கும், நடன இளவரசி ஈ. வி. சரோஜாவின் நடனமும், இரவு காருக்குறிச்சி அருணாசலம் அவர்களின் நாதசுரக் கச்சேரியும் இனிது நடைபெற்றது.

25—1—58 அன்று இரவு காருக்குறிச்சி அருணாசலம் அவர்களின் நாதசுரத்துடனும், வேலூர் வி. கே. குப்புசாமி அவர்களின் பாண்டு வாத்யத்துடனும், தஞ்சாவூர் டி. வி. பாபு அவர்களின் பொய்க்கால் குதிரை நாட்டியத்துடனும் மணமகள் அழைப்பு நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு வந்து மணமகள் அழைப்பையும், திருமண விழாவையும் சிறப்பித்தார்கள்.

அண்ணா அவர்களது நன்றி கூறலுடன் திருமண விழா இனிது முடிந்தது.

ஒருநாள் முன்னதாக!!

—[W]—

நேரு வந்தார்

தலைவர்கள் அனைவரும் கூடினர்

பெரிய பந்தல்கள் உண்டு

சிறு நகரமே நிறுவப்பட்டது.

இலட்சக்கணக்கான ரூபாய் செலவு

ஆனால்

மாநாடு ஒரு நாள் முன்னதாகவே முடிவுற்றது·

காரணம்

மக்கள் இல்லாதது!!

*

உனக்கென்ன வேலை! இப்படி, காங்கிரசென்றால் ஏதாவது இழித்தும் பழித்தும்தான் பேசத் தெரியும்!—என்று தேசியத் தோழர்கள், கோபம் கொள்ளக்கூடும். உண்மை நண்பர்களே, உண்மை—நாம், கௌகத்தி போகவில்லை—நமது நிருபரையும் அனுப்பவில்லை—காங்கிரஸ் ஏடுகளே இவ்விதம் கண்ணீர் சொரிய வெளியிடுகின்றன.

"பிரதிநிதிகள் சார்பில் வரவேற்புக் கமிட்டிக்கு நேருஜி நன்றி கூறினார். சங்கடங்கள் இருந்தபோதிலும், மகாசபைக்கு நன்றாகவே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாக அவர் பாராட்டினார். நேருஜி அவ்விதம் புகழ்ந்தபோதிலும், மகாசபையை ஒட்டிய வழக்கமான உற்சாகம், ஜனத்திரளைக் காணோம்"

என்கின்றன ஏடுகள்! இந்த மாநாட்டினைப் பற்றியும் அங்கு செய்யப்படும் ஏற்பாடுகளைப் பற்றியும், வானளாவப் புகழ்ந்தார்கள்—இந்தியத் துணைகண்டத்திலுள்ள ஏடுகளிலெல்லாம், விளம்பரங்கள் வந்தன — விளக்கக் குறிப்புகள் தரப்பட்டன.

63-யானைகள் ஊர்வலம் சென்றனவாம்!

அலங்காரமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தனவாம்!

இந்தியத் தலைவர்கள் எல்லோரும் வருவார்கள் என்று விளம்பரம் செய்யப்பட்டிருந்ததாம்!

இருந்தும், மக்கள் வரவில்லை—இதுபோல மோசமாக நடைபெற்ற மாநாடே காங்கிரஸ் சரிதத்தில் இல்லை என்று தலைவர்களே கூறுமளவுக்கு விநோதமாகயிருந்திருக்கிறது, மாநாடு. தப்பித் தவறி வந்தவர்களும் எங்கே இருந்தார்களாம் தெரியுமா? கனல் கக்கப் பேசும் நேரு, தலைமைப் பிரசங்கம் செய்யும் தேபர், வெளி மாகாணங்களிலிருந்து வந்திருப்பவர்களின் பேச்சுகள், இவைகளைக் கேட்க வரவில்லை! மாறாக, பக்கத்தில் கொண்டு வந்து வைக்கப்பட்டிருந்த "மிருகக் காட்சி சாலையில்" வேடிக்கைப் பார்த்துக்கொண்டு நின்றனராம்!!

அந்த மிருகக் காட்சியும் ஏற்பாடு செய்யப்படாமலிருந்திருந்தால், வந்த கூட்டத்தில் பெரும் பகுதி, வந்திருக்காதுபோலும்.

மாநாட்டில், ஏதாவது வசதிக் குறைவுகளோ என்றால், கிட்டத்தட்ட கால்கோடி ரூபாய் செலவானதாகக் கூறப்படுகிறது! சிறியதோர் நகரமே அமைத்திருந்தார்களாம்!! இருந்தும், மக்கள் செல்லவில்லை, மாநாட்டுக்கு. இதன் காரணமாக, ஒரு நாள் முன்னதாகவே, மாநாட்டினை முடித்துக்கொண்டு அவரவரும் கிளம்பியிருக்கிறார்கள்.

ஒருநாள் முன்னதாக! மக்கள் இல்லாமையால்!!—உண்மையில், இது ஒரு பெரிய சோகச்சம்பவம் என்போம். நாடாளுகிறது, காங்கிரஸ்-அதனை ஆட்டிவைக்கும் நேருபிரானின் புகழ் அகில உலகத்திலும் பரவியிருக்கிறது—எங்கு சென்றாலும் அவர்புகழ்பாடப்படுகிறது இப்படியிருக்கும்போது, காங்கிரஸ் மகாசபை கூடுகிறது, மக்கள் சரிவர வராததால் ஒரு நாள் முன்னதாகவே கலைகிறது, என்றால், இதைவிட திகைப்பான ஒரு சம்பவம் இருக்கமுடியாது.

டிக்கட் கட்டணம் அதிகம்! மாநாடு கூடிய சுற்று வட்டாரத்தில் இலட்சக்கணக்கில்தான் மக்கள் தொகை!!—என்று காரணம் காட்டப்படுகிறது. இதெல்லாம், மிகமிகச் சாதாரணக் காரணங்கள். கட்டணம் கட்டக் கவலைப்படும் காத்தானும் முத்தனுமா இன்று காங்கிரசில் இருக்கிறார்கள். ஒரு இலட்சம் பேருக்கு டிக்கட் வாங்கிக் கொடுத்து உள்ளே அழைத்து வரக்கூடிய டாடாக்கள் உண்டே!!

இது ஒருபுறமிருக்க, தப்பித் தவறி வந்தார்களே அந்த மக்களும், தீர்மானங்களும் தீப்பொறி பறக்கும் பேச்சும் நிகழும் இடத்திலா இருந்தார்கள். அல்ல! அல்ல!! வேடிக்கை பார்க்கும் மிருகக் காட்சிசாலையில் இருந்திருக்கிறார்கள்.

என்ன பொருள்? மக்களுக்கு காங்கிரஸ் மகாசபை மீதும், அது செய்திடும் காரியங்கள் மீதும், முன்புபோல ஆர்வமும் ஆசையும் இல்லை! வரவர, அது குறைந்து கொண்டே வருகிறது!!

வட்டாரக் கமிட்டிகள் அமைக்கலாம் — பிரசாரகர்களை நியமிக்கலாம்—எதிர்க் கட்சிகளை கண்டபடி ஏசலாம்—இதனாலெல்லாமா, காங்கிரஸ் வளர்ந்துவிட முடியும்.

காண்கிறோமே, **சுதந்திர நாள் — குடியரசுத் திருநாள்**—என்பவை எவ்வளவு சோபிதமற்று உள்ளன. அலுவலகங்களிலும், சர்க்கார் காரியாலயங்களிலும்தான், விழாவின் அறிகுறியாக வெளிச்சமும் அலங்காரமும் உள்ளதே ஒழிய மக்கள் மன்றத்தில் மகிழ்ச்சியும் ஆனந்தமுமா இருக்கிறது? எப்படி யிருக்கும்?

தேர்தல்கள் வந்தால், எப்படியோ பணநாதன் அருள் தனக்கிருப்பதைக் கொண்டு, வெற்றி பெறுகிறார்கள்! சிண்டு முடித்துவிட்டும், எதிர்க் கட்சிகளுக்கு வாய்க் கட்டுப் போட்டும், எப்படியாவது தேர்தலில் வெற்றி கொள்ள முயற்சிக்கிறார்கள். அது தவிர, முன்போல, மக்களின் இருதயங்களில் காங்கிரசுக்கு இடமுண்டோ! ''தில்தான், கௌகத்தி காங்கிரஸ் !!

★

சண்முகசுந்தரனார்

ஏணியின் கீழ்ப்படியிலிருந்து ஒவ்வொன்றாக ஏறி உச்சிக்குப் போவதற்குப் பெருமுயற்சி தேவை, உறுதி தேவை, உழைப்பு தேவை., இவையெல்லாம் நிரம்பப் பெற்று வாழ்க்கையில் உயர்வை அடைந்தவர் **பேராசிரியர் ம. சண்முக சுந்தரனார்** அவர்கள் ஆவார்கள்.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் எம். ஏ. பட்டம் பெற்ற இவர் முதன் முதலில் முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர்க் குழுவில் சேர்ந்து பதினைந்து ஆண்டுகள் பணியாற்றினார். அங்கிருந்து, தான்கல்வி பயின்ற பச்சையப்பன் கல்லூரியிலேயே ஆங்கிலத் துறையில் துணைப்பேராசிரியராகச்சில ஆண்டுகள் பணியாற்றினார். அந்தக் காலத்தில் சென்னைப் பச்சையப்பன் கல்லூரிப் பள்ளி (உயர்நிலைப் பள்ளி)யின் தலைவராய்த் தக்கார் ஒருவரை அமைத்துப் பள்ளியின் தலைவராய்த் தக்கார் ஒருவரை அமைத்துப் பள்ளியின் வளர்ச்சிக்கு வழிகோல வேண்டும் என்ற நிலைமை தோன்றியதும் அறநிலையப் பாதுகாவலர்கள் பேராசிரியர் சண்முகசுந்தரனாரை ஆண்டனுப்பி நிலைமைகளைச் சீர்செய்து பள்ளியின் வளர்ச்சிக்குப் பாடுபடுமாறு தலைமையாசிரியராய் அனுப்பினர். அந்தப் பதவியில் ஐந்து ஆண்டுகள் இருந்து பின் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலேயே ஆங்கிலத் துறைப் பேராசிரியராக உயர்த்தப்பட்டு வந்து சேர்ந்தார். அந்தப் பதவியிலிருந்து 1951 - ஆம் ஆண்டு காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியின் முதல்வராய் வந்திருந்து 1958-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 22-ஆம் நாள் இயற்கை எய்தும்வரை கல்லூரியின் வளர்ச்சியில் தன் உழைப்பைச் செலவிட்டு வந்தார்.

தனிப்பட்ட முறையில் ஆசிரியராக இருந்த ஒருவர் பேராசிரியராகி, கல்லூரித் தலைவராக விளங்கினார் என்பதோடு மட்டுமல்லாமல் அவரிடம் குடிகொண்டு விளங்கிய பல பல பண்புகள் அவரை நன்மனிதராக்கின.

நெடுநாட்களுக்கு முன் பாடங்களைப் பயிற்றும் மொழி தமிழாக இருக்க இயலுமா என்ற ஐயம் இருந்தது. ஆங்கிலத்திற்குத்தான் அந்தத் தகுதி இருக்கிறது, தமிழுக்கு இல்லை எனச் சிலர் வாதிட்டுக் கொண்டிருந்த நேரத்தில், ஆங்கிலப் பேராசிரியராக இருந்த சண்முகசுந்தரனார் உயர்நிலைப் பள்ளிகளுக்கான, வரலாறு சமூகம், விஞ்ஞானம், நிலவியல், ஆகிய துறை நூல்களைத் தாமே தமிழில் புதியதாய் எழுதியும், ஆங்கில நூல்களை மொழி பெயர்த்தும் தமிழில் பயிற்றுதல் தகைவுடைத்தே என நிறுவிக் காட்டினார்.

தமிழ் மொழியினிடத்தில் மிக்க பற்றும், தமிழ் வளர வேண்டும்

> காஞ்சிப் பச்சையப்பன் கல்லூரி முதல்வர் பேராசிரியர் **சண்முக சுந்தரனார் 22-1-58** இரவு 10 மணிக்கு இயற்கை எய்தினார். கல்லூரியின் வரலாற்றில் சிறந்த இடத்திற்கு உரியவரான அந்தப் பேராசிரியரின் பண்புகள் சிலவற்றை இக்கட்டுரை கூறுகின்றது.

என்ற பெருவேட்கையும் பேராசிரியர் அவர்களிடத்தில் மிகுந்திருந்தது. தமிழ் இலக்கணத்தைச் சிறுவர் உளங்கொளுமாறு இனிய எளிய நடையில் வினாவிடைகளாக அமைத்து எழுதியதோடு, தமிழ் இலக்கிய உலகில் என்றும் தம் பெயர் நிலைக்குமாறு அரிய பணி ஒன்றினைச் செய்துள்ளார். தமிழ் மொழிக்கு அணி செய்யப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய 'மனோன்மணீயம்' என்ற நூல் செய்யுள் வடிவான் ஆயது. அந்தச் செய்யுள் நூலைப் பலரும் படித்தறியும் வகையில் அதனை ஒட்டி—அதனையே—உரைநடை நூலாக்கியதன் மூலம் ஒரு நல்ல இலக்கியம் எல்லோர் கைக்கும் எட்டச் செய்திருக்கின்றார்.

நூல் எழுதினால் மட்டும் போதாது. எழுதிய நூல்களை அழகுற அச்சிட்டு வெளியிட வேண்டும். அந்தத் துறையிலும் பேராசிரியரின் பணி சென்றிருக்கின்றது. ஆசிரியர்களின் கூட்டு முயற்சியான ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம் தோன்றக் காரணமாக இருந்தவர் இவரே.

இவ்வாறு பல வகையிலும் சிறப்பியல்புகள் கொண்ட பேராசிரியரோடு நான் கொண்டிருந்த தொடர்புகளை எண்ணிப் பார்க்கின்றபோது அவருடைய ஆற்றல்களை வியந்து பாராட்டுகின்றேன்.

நான் சென்னைப் பச்சையப்பனின் மாணவனாக இருந்தபோது இவரைப்பற்றிக் கேட்ட அளவினன்தான். ஆனால் காஞ்சிபுரம் கல்லூரியில் பணியாற்றத் தொடங்கிய நாள் தொட்டு நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்தமையின் மேலும் பல உண்மைகளை அறிந்தேன்.

இளைஞர்களிடம் காணப்படும் சின்னஞ்சிறு திறமையையும் தூண்டி, அதனை வளர்க்கவேண்டும் என்ற பேரவா இவரிடம் குடிகொண்டிருந்தது. மாணவர்கள் வெறும் கல்லூரிப் படிப்போடு சொல்லாற்றல் எழுத்தாற்றல் முதலியன பெறுதல் வேண்டும் என விரும்பியவர். அதற்காகத் தன்னாலான வகைகளில் எல்லாம் உதவியையும் ஒத்துழைப்பையும் நல்கிவந்தார்.

எந்தச் செயலையும் எண்ணிய உடனே செய்யத் தொடங்கிவிட மாட்டார். அதைப்பற்றி நன்றாக எண்ணிப் பார்த்து, அதனால் வரும் விளைவுகளை சீர்தூக்கிப் பார்த்து ஒரு முடிவுக்கு வந்து, பின்னரே அதனைச் செயலாக்கத் தொடங்குவார். இதனால் சில நேரங்களில் காலம் தாமதமாவது போல் தோன்றினாலும், அவர் செய்வது எவ்வளவு உறுதியாக நிலைக்கின்றது என்பதனைப் பின்னரே உணர இயலும்.

வருந்துகிறோம்

நமது நண்பரும், கழகத் தோழரும், வழக்கறிஞரு மான **வி. பி. இராமன்** அவர்களின் அருமைத் தந்தையார் **ஏ. வி. இராமன்** அவர்கள் 30ந் தேதியன்று சென்னையிலுள்ள தனதில்லத்தில் காலமான செய்தி அறிய திடுக்கிட்டோம். நல்லதொரு மகனை, நமக்கும் நாட்டுக்கும் அளித்ததோடு மட்டுமின்றி, பார்ப்பன குலத்தில் பிறந்தும், முற்போக்குக்கு முட்டுக்கட்டை இடாமல், வளரும் புதுமைகளுக்கு வாழ்த்துரைகள் வழங்கிய பெரியவர் அவர். நம்பால் அவர் காட்டிய அன்பும், நல்ல பண்பும், நினைக்க நினைக்க நெஞ்சை உருக்குகிறது. அறிவியக்கம் என்றாலே அஞ்சிடும் பார்ப்பனகுலப் பெரியவர்களுக்கு ஒரு வழி காட்டி எனலாம் அவரை. நண்பர் வி. பி. இராமன், நமது கழகத்தில் ஏற்று வரும் பொறுப்புகள் கண்டு, உள்ளபடியே மனமகிழ்ந்துகிடந்த அவரை, காலம் கொண்டு சென்றுவிட்டது. கலங்கும் தோழர் இராமனுக்கும், அவரது குடும்பத்தாருக்கும் நமது அன்பு கலந்த ஆறுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கல்லூரியின் வளர்ச்சிக்காக எந்தெந்தத் துறைகளில் பாடுபட இயலுமோ அந்தந்தத் துறைகளில் எல்லாம் தன் முயற்சியைச் செலுவிட்டு வந்தார் என்பதனை எண்ணும்போது உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்புகின்றது.

அவரிடம் நான் பெருமதிப்பு கொள்ளக் காரணமாக இருந்த ஒரு பண்பு இருக்கிறது. சீர்திருத்த நோக்கமும், புதுமை ஆர்வமும் மிகவும் படைத்தவர் பேராசிரியர் அவர்கள். ஒரு முறை கல்லூரி ஆசிரியர்க் கூட்டத்தில் நடந்த சொற்போரில் மதம் மனிதனின் வளர்ச்சிக்குச் செய்த கேடுகளைப்பற்றி நான் விளக்கிப் பேசினேன். இரண்டொருவர் என்னை மறுத்துப் பேசினர். அவர்களுக்கு நான் விடையிறுககும் முன தலைவராய் இருந்த சண்முகசுந்தரனார் அவர்கள் எழுந்து மதத்தால் இதுவரை மனித சமுதாயம் உற்ற கேடுகளை எடுத்துச் சொல்லி மறுப்பாளர்களுக்கு விடை பகன்று வென்றார். அந்த நேரத்தில் நான் அவரைப்பற்றி எண்ணிய எண்ணங்கள் பல. கல்லூரி முதல்வர் பணியில் இருக்கும் ஒருவர் இவ்வளவு சீர்திருத்த நோக்கம் உடையவராய் இருபபது எவ்வளவு நல்லது—சிறப்பு—அருமை எனப் பாராட்டிக் கொண்டேன்.

1939-ம் ஆண்டில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியிலும் பங்குகொண்டு இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பாடுபட்டுவந்த கல்வித் துறையாளர்களில் சண்முகசுந்தரனாரும் ஒருவர். இறுதி வரையில் இந்தி எதிர்ப்பாளராக விளங்கியது பாராட்டக் கூடியதாகும். வெளியில் இந்தி எதிர்ப்பு இயக்கம் நடைபெறும் போதெல்லாம் எங்கள் கல்லூரியில் இந்தி எதிர்ப்பு வாதங்கள் நடக்கும். சண்முகசுந்தரனார் முக்கிய பங்குகொண்டு இந்தியை எதிர்ப்பார்.

அவரும் மனிதர்தான். அதனால் சில குறைகள அவர் வாழ்க்கையில் இருந்திருக்கக் கூடும். ஆனால் அந்தக் குறைகள் எல்லாம் மனதிலே தோன்றிவிட்ட சில எண்ணங்களின் விளைவு என பதனை அறியவேண்டும். அவரிடம் இருந்த நற்பண்புகளையும், நல்ல எண்ணங்களையும் கணக்கிடும்போது குறைகள் சிலவே. சாவு அந்தக் குறைகளைத் தின்று விட்டது. எனவே இன்று அவர் நிறைகள் மட்டுமே காணத்தக்கன.

உழைப்பு, ஊக்கம் உறுதி, தமிழ் ஆர்வம், சீர்திருத்த நோக்கம், புதுமை காணுவதில் ஒரு வேகம் — இவை நிரம்பியிருந்த ஒருவர்தான் மறைந்த பேராசிரியர் சண்முகசுந்தரனார்!

வாழ்க அவர் பெயர்!

"...அமளிகளுக்கும், 2-பேர் உயிர் நீத்ததற்கும் தி. மு. க-வினர் குற்றவாளியா அல்லது சர்க்கார் குற்றவாளியா என்பது தான் இன்றுள்ள கேள்வி. நம்மைப் பொறுத்தவரை, சர்க்கார்தான் இதில் மன்னிக்க முடியாத குற்றத்தை செய்திருக்கிறார்கள் என்று அறிகிறோம். கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் சம்பந்தமாக பொதுக் கூட்டம் நடக்க ஏற்பாடாகி இருந்ததை போலீசார் தடுக்காதிருந்தால் இக் கலவரம் நிச்சயமாக ஏற்பட்டிருக்காது. அண்ணாதுரையோ, மற்ற தலைவர்களோ வெளியே இருந்திருந்தால் இந்த அளவுக்கு கலவரம் ஏற்படச் செய்யாது என்பதை குழந்தைகூட அறியும்.

"பேரிகை" 13—1—58

"திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் தங்கள் கட்சித் தோழர்களுக்கு அமைதியான முறையில் ஆட்சேபக் கொடிகள் காட்டவேண்டும் என்று வற்புறுத்தவே சென்னைக் கடற்கரையில் கூட்டம் கூட்ட விரும்பியதாகத் தெரிகிறது. ஏற்கனவே நகரில் தடைஉத்திரவு இருந்ததால் காரணத்தை விளக்கிக் கூட்டத்துக்கு அனுமதி கோரினார்கள். இது தரப்படவில்லை. உத்திரவை மீறிக் கூட்டம் நடத்துவதற்கும் ஏற்பாடுகள் நடைபெற்றன. சர்க்காருடைய அவிவிவேகத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டது. தி. மு. க. தலைவர்களைக் கைது செய்துவிட்டு, அந்தக் கட்சி பாமரர்களுக்கு வழி காட்டவும், அமைதியைப பாதுகாக்கவும் தலைவர்கள் இல்லாமல் செய்து விட்டார்கள் ..."

"கல்கி" 19—1—58

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில் ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

திராவிடநாடு

9—2—58 | வார வெளியீடு | விலை 16 காசு

அன்னையின் காலில் விலங்கோ?

[இரா. வேங்கடபதி]

கூண்டுக் கிளியல செந்தமிழா—நாம்
குகைப்புலி என்றுணர் பைந்தமிழா!
தூண்டும் விளக்கெனக் கிளம்பிடுவோம்—தென்
தாய்தமிழ்த் தோள்வலி சேர்த்திடுவோம்.

சேரன் வடபுலம் வென்றதுவும்—அவன்
செந்தமிழ் ஆற்றலாய் நின்றதுவும்
வீர மறக்குல வாழ்வலவோ?—அது
வீழநாம் வாழுதல் தாழ்வலவோ?

அந்நியர் தாள்நிழல் தங்குவதோ?—அவர்
ஆள அடங்கிநாம் மங்குவதோ?
அன்னை விடுதலை நாடுகிறாள்—அவள்
ஆருயிர் சேய்நமைத் தேடுகிறாள்.

கூடித் திரண்டெதிர் போரிடுவோம்—வெற்றிக்
கோபுரம் மீதினில் ஏறிடுவோம்.
பாடிக் களித்துயிர் வீறிடுவோம்—பச்சைப்
பைந்தமிழ் பேசியே தேறிடுவோம்.

பொன்னைப் பெறும்வளம் கூட்டிடுவோம்—துயர்
போக்கப் பசிப்பிணி ஓட்டிடுவோம்
அன்னைத் திருவெலாம் தேக்கிடுவோம்—தமிழ
ஆற்றல் உறும்வழி ஊக்கிடுவோம்.

அன்னைத் தமிழினைப் போற்றிடுவோம்—அவள்
அன்பின் திருச்சுடர் ஏற்றிடுவோம்.
முன்னைப் பெருமைகள் கூறிடுவோம்—அவை
மூள, இவண்புகழ் ஏறிடுவோம்.

வியட்நாம் குடியரசுத் தலைவர், விடுதலை புரிப் பயணம் நடத்தி வெற்றிகண்ட தீரர் ஹோசிமின் இருதினங்களுக்கு முன், டில்லி வந்திருக்கிறார். ஒரு வாரம் தங்கியிருந்து, இந்திய உபகண்டத்தின் பல பாகங்களையும் சுற்றிப் பார்ப்பதற்காக வந்திருக்கிறார்.

*

வருக!



டாக்டர் ஹோசிமின் — இப் பெயர் இன்றைய தென்கிழக்கு ஆசியப் பகுதியிலே மிகப் பழகிப் போன பெயர். அவர் ஒரு நாட்டு மக்களின் உரிமைச் சிலை.

ஹோ, இளமையிலே படிப்பிலே நாட்டம் செலுத்தினார். இந்தோ சீன அரசியல் புயலில் அவரது வீட்டாரும் மாட்டித் தவித்த பொழுதுதான் அவர் மனதிலே ஒரு திடீர் மாற்றம் ஏற்பட்டது. பிரஞ்சு ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடினார்கள், அவரது தந்தையும் தனயனும் என்று சந்தேகப்பட்டு, சிறைப் பறவைகளாகப் பிடித்தபொழுது தான் ஹோ, 'ஓகோ, இந்த ஆதிபத்ய வெறி ஆபத்தானது, அடக்கப் படவேண்டும், இந்த ஆணவ வெறியாட்டம்......'' என்று எண்ணினார்.

நாடோடியாக, இங்கிலாந்திலே, அமெரிக்காவிலே, ரஷ்யாவிலே வாழ்ந்தார். ரஷ்யப் பொதுவுடமை மணத்திலே அவருக்கு அதிக நாட்டமிருந்தது.

இ. பி. 1919-ல் பிரான்சில் நடந்த சமாதான மாநாட்டிலே, பங்கு கொண்டார். அவர் வாழ்விலே, அது ஒரு குறிப்பிடத்தக்க திருப்பமாகிவிட்டது. அவர் தன் நாட்டு மக்களின் விடுதலைப் போரில் தன் உயிரை, உடலை, உடைமையை இழக்கத் தயாரானார். ஏடெழுதினார், கூடாது என்று தடுத்துவிட்டது, பிரஞ்சு சர்க்கார். அவர் பேனாவைப் பிடுங்கிவிடப் பெரும் பாடு பட்டது, அந்தப் பிடிவாத மிக்க பிரஞ்சு ஆட்சியாளர்!

ஹோவைப் பிடிப்பவர்களுக்குப் பரிசில் உண்டு என்று அறிவித்தவுடன், பிரான்சைவிட்டு, சைனாவிற்குச் சென்றுவிட்டார். இப் பொழுது ஒடியொளிந்து கிடக்கும் சியாங்கே - ஷேக்கிடம் அறங் கூறுவோராக அமர்ந்தார்.

சீனாவிலிருந்தாலும், தனது தாயகமாம் இந்தோ சீனாவின் நல்வாழ்விற்கான திட்டங்களைத் தீட்டியபடியே இருந்தார்.

இரண்டாம் உலகப் போர் தொடங்கியது. ஹோ, புதியதோர் புனை பெயரில், புகுந்துவிட்டார், தான் பிறந்த மண்ணின் விடுதலைப் போராட்டத்தில்! ஜப்பானை எதிர்த்துப் போராடும் கொரில்லா வீரர்களுக்குத் தலைமை பூண்டு, திடீர் தாக்குதல்களை நடத்தி வந்தார். அமெரிக்காவிற்கு, பெருந்துணையானார்.

வியட்நாமின் சுதந்திரக் குடியரசை அவர் நிலைநாட்ட படை படையாக, குவிந்து வந்த எல்லா இடையூறுகளையும, இன்னல்களையும் எதிர்த்துப் போராடியிருக்கிறார்.

அவர் ஐந்தடி உயரம்—ஒல்லியான சரீரம்—படாடோபம் எதுவும் இல்லாதவர்-சாதாரணகாக்கியுடை—சீவபபடாத சிகை, கோதி விடப்படாத தாடி......இபபடித்தான் அவரை வர்ணிக்கமுடியும. அவர் எளிய வாழ்வு வாழ்கிறார். எனினும் இந்த உலகத்தின் கண்களில் ஒரு ''இமயமாகத்'' தெரிகிறார்.

அவரை எதிர்த்திடும் மாற்றுக் கட்சியினரும் அவரைப் புகழ்வர்—அவரின் பெருங்குணத்திற்காக எளிய வாழ்விற்காக, அவரது உள்ள உறுதிக்காக, மக்களின் இதயத்திலே தவிந்தாடும் சாதாரண 'ஆசாபாசங்களை' அறிந்திருக்கும் நுண்ணறிவுத் திறத்திற்காக, அவரது உண்மையான நாட்டுப்பற்றிற்காக, உரிமைப் போராட்டத்திலே அவருக்குள்ள திட நம்பிக்கைக்காக! ஆம், அவர் உருவில் சிறியவர்—ஆனல் செயலில் பெரியவர்! புத்தகத்தை, அதற்கு மாட்டப்பட்டிருக்கும் அட்டையைக் கொண்டே மதிப்பிட்டுவிடாதே என்பார்களே, அப்படித்தான், டாக்டர் ஹோவின் உருவை, எளிய தோற்றத்தை முதலாகவைத்து அளந்துவிடக் கூடாது.

என்னுடன் பிறந்தவர் எத்தனையோ பேருக்கு உடுத்த உடையில்லையே என்று 'ஒப்பாரி'யிடும் பாழ் நிலை மாருதவரை, அலங்காரமாக அணிகிறவர்களையே சமூகத்தின் அவமானச் சின்னங்கள் என்றுதான் கருதுவேன்...என்று கூறுவாராம்.

டாக்டர், ஹோ, இந்த அவனிக்கு ஒரு அதிசயப் பிறவி! அவரது ஆற்றலுக்கு அலங்காரப் பட்டுத் திரையில்லை! அவரது பொன் குணங்கள, பூட்டில்லாத இரும்புப் பெட்டியிலே உள்ள வைரங்களைபபோல!

அவரிடம் உலகு கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு பெரும் பண்பு - ஆடம்பரமின்மை, அடக்கமுடைமை, அதே நேரத்தில் ஆற்றலுடைமை! அதனல்தான் படிக்காத ஒரு மக்கள் கூட்டத்தை படையாகத திரட்டி, ஒரு பெரிய வல்லரசோடு போரிட முடிந்தது. அந்தப் பாமரருக்குப் புரியும் கொச்சை மொழியிலே பேசி அவரது குருதி கொதிப்படையச் செய்து, உணர்ச்சியிலே கொந்தளிப்பை விதைத்து, கொண்டு வந்து நிறுத்தினார். போர்க்களத்தில் !-ஆம, விடுதலைப் பட்டாளத்திற்குக் கொட்டு முரசமானார், ஊதும் வெற்றிச் சங்குமானார்!

★

நொண்டியும் ராஜநடையும்!

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [9-2-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 30

இலட்சக் கணக்கான இதயங்கள், சிந்துபாடும் காட்சியைத் தினசரி காண்கிறோம்—ஆனல், சிலர் ஒருவா, அறை கூவல்விடுத்திருக்கிறார்!! கிராமங்கள் — மலைநாட்டுப் பகுதிகள் — கல்லூரிகள் — பள்ளிகள்—தொழிற் கூடங்கள்—பெரியவர்கள் மனமெலாம் நிறைந்து, மங்காத புகழ் பெற்று வருகிறது திராவிட முன்னேற்றக் கழகம். மாநில தொழில் அமைச்சர் வெங்கட்டராமனே, ''தேர்தலுக்கு நின்று பாருங்கள். நிச்சயம் இன்னும் இருபது இடங்கள் அதிகமாகக் கிடைக்கும் காங்கிரசுக்கு'' என்று தெரிவிக்கிறார். திராவிடநாடு எனும் பிரச்னைமீது தேர்தலுக்கு நிற்கவேண்டுமாம்—நின்றல் இருபது இடங்கள், அதாவது இப்போது நாம் பெற்றிருக்கும் 15-இடங்களும் போக இன்னும் அதிகமாக ஒரு 5-இடங்களும் காங்கிரசுக்குக் கிடைக்குமாம்!!

எப்படி இக்கணக்குப் போட்டார் அமைச்சர், என்று தெரியவில்லை. ஓராண்டுக்கு முன்தான், பொதுத்தேர்தல் நடந்தது நாட்டில். இந்தப் பாரதசீலர், அப்போது, கடல் தாண்டிச் சென்றதாகக் கவனமில்லை, நமக்கு. கண்ணாரக் கண்டார், தி. மு. க. நாட்டில் எத்தனை இலட்சம் வாக்காளர்களின் மதிப்பைப்பெற்றது என்பதை! 17-இலட்சம் ஓட்டுகள் பெற்றோம்!! உச்சிமாகாளியின் சீடர்கள், உத்தமராம் காமராஜின் அன்பர்கள், எள்று சொல்லியல்ல—திராவிடநாடு திராவிடருக்கே! வடக்கு வாழ்கிறது—தெற்கு தேய்கிறது!! எனும் முழக்கங்களை மேடைகளில் முழக்கியும், அறிக்கைகள் மூலம் வெளியிட்டும், அதற்குப் பிறகே இந்தஓட்டுகளைப்பெற்றோம். தஞ்சைமண்ணில் பிறந்தவர் ஆதலால், ஒருதடவை மூளையில் ஏற்றிய விஷயம், அவ்வளவு சீக்கிரம் பட்டுவிடாது என்கிற நம்பிக்கையுண்டு நமக்கு!! எனினும், நாடு அறிந்த ஒரு விபரத்தை மறந்துவிட்டு, திராவிடநாடு பிரச்னை மீது தேர்தலுக்கு நின்றல், இன்னும் இருபது இடங்கள் காங்கிரசுக்குக் கிடைக்கும் எனகிறார்.

எடுத்த எடுப்பிலேயே காங்கிரஸ் கொடிகட்டி ஆளக் இளம்பவில்லை! வெள்ளையனை எதிர்த்துப் போர் முழக்கம் எழுப்பி, 50 ஆண்டுகளுக்குப் பிறகுதான், அவர்களால் மக்களின் கவனத்தைக் கவர முடிந்தது என்பதையும் நாம் மறந்துவிடவில்லை!! ''ஏ! அரைநிர்வாணப் பக்கிரி'', என்று காந்தியடிகளை, இகழ்ந்துரைக்கும் அளவுக்கு ஒரு போது, காங்கிரசை சாதாரணமாகக் கருதிய சர்ச்சில் இருந்ததையும் அறிவோம் நாம். ஏதோ ஒரு சிலர்—இங்கு மங்குமாக ஒரு சிலர்—உப்பு எடுக்கிறோம் என்கிறார்கள்—துணிகளை எரிக்கிறோம் என்கிறார்கள்—என்று இறுமாப்போடு வெள்ளையர்கள் காங்கிரசைப் பற்றி, கணித்த ஜாதகம், கவனமிருக்கிறது நமக்கு. 'தூ! தூ!! நீங்களா?'', என்று இன்று துரைத்தனம் நடாத்திடும் இந்தச் சிங்கார புருடர்களை, எவ்வளவு அலட்சியமாகக் கருதினன் வெள்ளையன் என்பதும், அறிவோம் நாம். ஏடுகள் பல, பணக்காரர்கள் பலர், படித்தவர்கள் ஏராளம், தேசீய இயக்கத்தில் சேர்ந்திருந்தும், சுமார் அரை நூற்றாண்டு வரையில், மக்கள் மன்றத்தைச் சந்தித்து ஓட்டு வாங்க காங்கிரஸ் கட்சி, எவ்வளவு தயங்கியது என்பதை உலகம் அறியும். அந்தளவுக்கு வசதிகளற்றவர்கள், அன்னக் காவடிகள், தன் கையையே நம்பியவர்கள், தகரக் குவளைகளைக் கொண்டவர்கள், சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னரே அரசியல் மேடையை அமைத்துக் கொண்டவர்கள், பல முனைகளிலும் எதிர்ப்பைச் சமாளிப்பவர்கள், தன் கையையே நம்பியவர்களான, நாம், இன்று 17-இலட்சம் வாக்குகளைப் பெற்றிருக்கிறோம்! 15 எம். எல். ஏ. - க்களைப் பெற்றிருக்கிறோம்!! காங்கிரஸ் காத்துக் கிடந்ததுபோல, ஒரு அரை நூற்றாண்டு இல்லை—பத்தே ஆண்டுகளில், இவ்வளவு பலமும் சக்தியும் பெற்றிருக்கிறோம். இதனல், அபரிமிதமான செல்வாக்கும், எல்லாருடைய இருதயத்திலும் புகுந்துவிட்டோம் என்று முரசொலிக்க நாம் தயாரில் இல்லை. ஆனல், அறுபது ஆண்டுகளுக்கு மேற்பட்ட காங்கிரஸ்! அதற்கு அடுத்தபடியாக நிற்கக் கூடியது என்று ஓட்டு வாங்கியதன் மூலம் நிரூபித்திருக்கிறது, உதயசூரியன் பெட்டி!! இருந்தும், அமைச்சர், அறைகூவல் விடுக்கிறார். அன்று, வெள்ளையன் குரலில், எந்தளவுக்கு அழுத்தமும் ஆணவமும் இருந்ததோ அதே அளவுக்குக் காண்கிறோம், அமைச்சரின் குரலில்.

தொழிலமைச்சர் அறைகூவல் விடுக்கிறார்! அதே சமயத்தில், நிதியமைச்சர் பழியினைப் போடுகிறார்! பக்தவத்சலம், நெற்றிக் கண்ணைத் திறப்பேன் என்கிறார்! காமராசரோ, இரத்தினச் சுருக்கமாக, சபிக்கிறார்!! நம்மை எதிர்த்து முகாம்அமைக்கும் கட்டத்துக்கு வந்திருக்கிறது, தமிழ் நாட்டுக் காங்கிரஸ்! அமைச்சர்கள் இப்போது, ஐந்தாண்டுத் திட்டத்தை மறந்துவிட்டார்கள், காந்தியடிகளின் திருநாளை மறந்துவிட்டார்கள், சதாநேரமும் நம்மைப் பற்றிச் சிந்தித்தவண்ணம் கிடக்கிறார்கள். ஆங்காங்கும் ஓடி ஓடி, நம்மைத் தாக்க எண்ணுகிறார்கள். அப்படித் தாக்கும்போது, குற்றப் பட்டியல்களை

ளாவது. கூறலாமன்றோ? தி. மு. க. சொல்வது இன்னின்ன விதத்தில் தவறு என்று நேர்மையோடு கூறலாமன்றோ? கிடையாது! சட்டியிலிருந்தால் அல்லவா, அகப்பையில் வரும்!! அதனால், சவால் விடுக்கிறார், அமைச்சர்—பழி போடுகிறார், நிதியமைச்சர்.

பாருக்கே தெரியும், இந்தியை எத்தனை காலமாக, திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்து வருகிறது என்கிற உண்மை! ஆனால் அமைச்சர் சுப்பிரமணியம், புதியதொரு உண்மையைச் சொல்லப் புறப்பட்டிருக்கிறார், இந்தியை நாமும் ஏற்றுக் கொண்டோம் என்று!! நம்மை வெட்டித் துண்டு துண்டாக்கினாலும், அந்தத் துண்டுச் சதைகூட "இந்தி வேண்டாம்" என்று உரைக்குமே ஒழிய; நமது இரத்தத்தின் ஒரு துளிக்குப் பேசும் சக்தியிருந்தால், அந்த ஒரு துளி இரத்தம்கூட "வேண்டாம் இந்தி" என்று முழக்கமிடுமே ஒழிய, ஒரு போதும் தலை வணங்காது. இந்த உண்மையை, நாடு அறியும். ஆனால், நண்பர் சுப்ரமணியம், வேறேதும் கூற வக்கு வழியில்லாததால், பிரமாதமாகச் செல்லுமிடந்தோறும் ஏதேதோ செப்புகிறார்!

இவர்களின் பேச்சுகளிலிருந்து ஒன்று புரிகிறது நமக்கு. திராவிட முனனேற்றக் கழகம என்கிற பெயர் இவர்களுக்கெல்லாம் கிலி பிடித்த ஒனறாகியிருக்கிறது, இன்று! 104-டிகிரி காயச்சல் — ஈளை கட்டிவிட்டது—சளி, இழுக்கிறது—ஜன்னி கண்டுவிட்டது, எனகிற நிலைமை வந்திடும்போது, பிதற்றலும் பேச்சும் அதிகமாகத்தானிருக்கும். அந்தக் கட்டத்துக்குக் காங்கிரஸ் மந்திரி சபை, இன்றைய தினம் வந்திருக்கிறது. ஆதனாலேயே அறைகூவல், பழி சொல்லுதல் போனற படலங்கள் ஆரம்பமாகியிருக்கின்றன.

*

"திராவிட நாடு" பற்றி ஓட்டு எடுக்கலாம் என்றாரே, தொழிலமைச்சர்! அவருடைய கவனத்துக்கு ஒரு நிகழ்ச்சியினை இச்சமயத்தில் கொண்டுவர விருமபுகிறோம. சென்ற பிப்ரவரி முதல் தேதியன்று சென்னையில் கைத்தறி கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள்கூடி ஒரு மாநாடு போட்டார்கள், டில்லி இழைத்திடும அநீதியைக் கண்டிக்க. அங்கே, பேசியிருக்கிறார் ஒருவர்:-"மத்திய மந்திரிகளுடன் 'ரிபேட்' விஷயமாக நான் விவாதித்தேன். கைத்தறித்தொழில் செயற்கையான முறையில் தூக்கி நிறுத்திவைக்கப்பட்டு வரும் தொழிலாக இல்லாமல், தன் சொந்தக் காலிலேயே நிற்கும் தொழிலாக இருக்க வேண்டுமென்றும், அதற்காக 'ரிபேட்'டையே ஒழித்துவிடப் போவதாகச் சொன்னார்கள். இது, நொண்டியை ராஜ நடை நடக்கச் சொல்லுவதைப்போலிருக்கிறது......"

நொண்டி எப்படி ராஜ நடை நடப்பான்! சொல்கிறது, மத்ய சர்க்கார்!! — என்று, வேதனையோடு வெளியிட்டிருக்கிறார், ஒருவர் அம்மாநாட்டில். இது மட்டுமல்ல, "கைத்தறிப் பிரச்னை ஒவ்வொரு ராஜ்யத்திலும் ஒவ்வொரு விதமாக இருக்கிறது. இதை உணராமல் சகல ராஜ்யங்களையும் ஒன்றாகச் சேர்த்துக் கூட்டு சராசரி பார்த்து முடிவு செய்கிறது மத்ய சர்க்கார். இது ஆற்றின் ஆழத்தைச் சராசரி கணக்கெடுத்து அதில் இறங்கின புத்திசாலியைப் போலிருக்கிறது!!"

இப்படிப் பேசியது யார் தெரியுமா? புத்திசாலி! நொண்டியை ராஜநடை போடச் சொல்லுபவர்கள!- என்றெல்லாம் மத்ய சர்க்காரைத் தாககிப் பேசியிருப்பது, வேறுயாருமல்ல; யார் நமக்கு அறைகூவல் விடுக்கிறாரோ, அதே தொழில் அமைச்சர் தோழர் வெங்கட்டராமன்தான், இபபடிப் பேசியிருக்கிறார்.

தி. மு. க. வுக்கு அறைகூவல் விடுகிறார்! தறியாளர்களின் தவிப்பைப் பார்க்கும் போதோ, டில்லி மீது, தாவுகிறார்!!

தொழிலமைச்சர் மட்டுமல்ல, ஒவ்வொரு அமைச்சரும், கொட்டும் போதுதான வடக்கைப் பற்றிப் பேசுகிறார்கள் — நேருவின் தயவும், நமது வளர்ச்சியையும் காணும்போது, உடனே அதையெல்லாம் மறந்துவிட்டு, தாக்கவும், பழிககவும் முற்படுகிறார்கள். தாசர்கள்தானே! வேறென்ன செயயஇயலும்!!

அறைகூவலுக்கு அஞ்சியதல்ல, தி. மு. க! வெங்கட்டராம் உள்ளபடியே, "ஒருகை" பார்க்க விரும்புவாரேயானால், தயார் நாம. அவர் எப்படி 20 இடங்கள் அதிகமாகக் காங்கிரசுக்குவரும எனறு நினைக்கிறாரோ, அதேபோல மேலும 20 புது இடங்களை இப்போது நாம் பெற்றுககாட்ட முடியும. இப்படி அறைகூவல் விடுமளவுக்கு ஆத்மாக்கள் இருப்பதையும், நமது தோழர்களின் பார்வைக்குக் கொண்டுவருகிறோம. தோழர்கள் வெங்கட்டராம், சுப்ரமணியம் போன்றோர், அறிந்தோ அறியாமலோ, நமக்கு ஒரு உதவியைச் செய்துவருகிறார்கள். இப்போது பழிபோடும சுபரமணியம், "பத்து ஆண்டுகள்" தவணை கேட்டது, பலருக்குக் கவனமிருக்கலாம்! ஒரு பக்கம் பயம மோத, இனனொரு பக்கம தி. மு. க. வைப் பார்க்கும்போது ஏற்படும் மிரட்சி மோத, ஏதேதோ பேசுகிறார்கள். இந்தப் பேச்சுகளைக்கண்டு நமது தோழர்கள, புத்துணர்ச்சி பெறவேண்டும். **ஐயகோ! தாயகத்தில் இப்படிப்பட்டவர்களுமா, இருக்கிறார்கள். தாயகமே! மன்னியம்மா, இவர்களை!!** —எனறு எண்ணிவிட்டு, நமது காரியத்தில் கண்ணும் கருத்துமாயிருககவேண்டும். நாள்தோறும், கழக வளர்ச்சிக்கான, பணிகளில் ஈடுபடவேண்டும். அறைகூவல் விடும் அமைச்சரே, நொண்டி என்று ஒப்புக்கொள்கிறார், தென்னகத்தை! இந்த நொண்டியும் ராஜநடை போடும் காலத்தை உருவாக்கும் பொறுப்பு, நம்மிடமே உள்ளது—தாயகத்தில் இவர்களின் அடக்குமுறைகளால் நொண்டியான சகோதரர்கள் உண்டு—இவர்களின் காட்டிக்கொடுக்கும் போக்கால் அரசியல் வாழ்விலும் நாடே நொண்டியாகியும் கிடக்கிறது. நொண்டியைவிட மோசமான நிலையிலுள்ள நாடுகள்கூட, இன்று ராஜநடை போட்டுக்கொண்டுள்ளதை நாம் பார்க்கிறோம்!! எனவே, முடமாகிக் கிடக்கும் தாயகம் மீள, சகோதரர்காள், நினைப்பையும் நேரத்தையும் கழகத்துக்காக்குங்கள் என்று தெரிவித்துக்கொள்கிறோம் —வம்பர்களுக்கு வாயால் அல்ல, செயல் மூலம் பதில் காட்டவேண்டும். அப்போதுதான், புத்தி வரும். தவறு, புரியும்.

★

வெற்றிக்குரியவன்

[மலர் மன்னன்]

1356-ம் ஆண்டு செப்டம்பர் மாதப் பிற்பகுதியில் ஒருநாள். மேற்குப்பிரான்சில் பாய்ங்டியர் என்னும் இடம்; பகல் கழிந்து இரவு துவங்கிவிட்ட நேரம்; எங்கும் மயான அமைதி இருளுடன் இரண்டறக் கலந்து காட்சி தருகின்றது. புயலுக்குப் பின்னர் அமைதி நிலவுவது இயற்கைதானே! சில நாட்களுக்கு முன்னர்தான் அந்த இடத்தில் பெரியதொரு புயல்—ஆம்; மாபெரும் போராட்டம்—பேயாட்டம் போட்டது. ஆங்கிலப் படைகளும் பிரெஞ்சுப் படைகளும் அங்கே ஒன்றோடொன்று மோதிக்கொண்டன.

பிரான்சின் அரசுக் கட்டிலில் அமர்ந்திருந்த பேரரசன் ஜான் எவராலும் வெல்லப்பட முடியாத பெரும் படை பலம் கொண்டு வல்லரசு அமைத்த ஜான் மன்னன்—அவனை எதிர்த்திடச் சிறு படையுடன் வந்திருக்கும் "கறுப்புடை வேந்தன்" என அழைக்கப்படும் எட்வர்டோ வயதிலும் சிறியவன்; அரசின் அளவாலும் ஆற்றலாலும் கூடச் சிறியவன்!

'அந்தோ பரிதாபம், "இளங்கன்று பயமறியாது" என்பது உண்மையாகிவிட்டதே! பேரரசன் ஜானையா இந்தச் சிறு வேந்தன் வெல்லக்கூடும்? உலகமே படை திரட்டி வந்திடினும் பிரெஞ்சுப் படையை வெல்லுதற்கியலாது என்பதை எட்வர்டு மறந்து போயினனோ? அல்லது பிரெஞ்சு மண்ணில் சாவை அணைத்துக்கொள்ளும் ஆசை கொண்டனனோ?' என்றுதான் பிரெஞ்சு நாட்டவர்—ஏன், ஆங்கிலேயரும் கூடப் பேசிக்கொண்டனர்.

ஆனால் என்ன விந்தை! பேரரசன் ஜானின் பெரும்படை, தோல்வியைத் தழுவிக்கொண்டது! சாவை அணைத்துக்கொள்ள வந்த எட்வர்டுக்கு எதிர்பாராத விதமாக வெற்றியின் அணைப்புக் கிட்டியது! 'இது தற்செயலாகக் கிடைத்த வெற்றிதான்' என்பதை எட்வர்டும் உணர்ந்தான். ஜான் மன்னனைக் கௌரவக் கைதியாய் ஓர் மாளிகையில் வைத்துவிட்டு, தான் மட்டும் தாயகம் திரும்பினான் கறுப்புடை வேந்தன்.

எழிற் கூடத்திலே சிறை வைக்கப்பட்ட பேரரசன் ஜான் சின்னஞ்சிறு படையிடம் தான் தோற்றுப் போனதை எண்ணியெண்ணி மனம் வெதும்பினான். வேதனையால் பொருமினான்.

இருளை விரட்டியடிக்கும் ஏராளமான விளக்குகள் ஒளியை வாரியிறைக்க, எழிலுடன் விளங்கும் ஒரு பெரிய மாளிகையிலேதான் ஜானரசன் சிறைவைக்கப்பட்டிருக்கிறான்.

மாளிகையின் உப்பரிகை—ஆடம்பரமாக அமைக்கப்பட்ட அலங்காரக்கூடம். ஆனால் ஜான் மன்னனின் கருத்தை எதுவும் கவரவில்லை; கூண்டிலடைபட்ட சிங்கமென அவன் முன்னும் பின்னுமாக உலவுகின்றான்.

ஜான்:- (மெல்லிய குரலில்) அனைத்தும் போயின; இத்தனை நாள் சேர்த்த புகழனைத்தும் ஒரு நொடியில் போய்விட்டன. பெருமைதொலைந்தது; சிறுமை வந்துற்றது; 'பேரரசா ஜானா? எவராலும் வெல்லப்பட முடியாத பெரும்படையுடன் பிரான்சின் அரியணையில் வீற்றிருக்கும் மாமன்னரல்லவா, அவர்!' என்பு பேசிவந்த உலகம், 'ஜான் என்பவனா? யார், அந்தச் சிறுவனை எட்வர்டிடம் தோற்றுப் போனானே, அவனா?' என்று இனி ஏளனத்துடன் பேசும்; 'வல்லரசு கட்டியாண்டானாமே ஜான் மன்னன்! தன் படைக்குச் சிறப்புறப் போர்ப் பயிற்சி யளித்தானாமே! கடையில் சின்னஞ்சிறு ஆங்கிலப் படையிடம் தோற்றானாமே! இதுதானோ இவன் வீரம்!' என்று, வாய்திறந்து பேசக் கற்றுக்கொண்ட பச்சிளங் குழந்தைகளும் கூடப் பேசிக்கொள்ளும். 'பிரான்சைத் திறம்பட ஆண்டு வந்த மன்னர் மன்னன் ஜான் சிறுபடையுடன் வந்த இளைஞன் எட்வர்டிடம் தோல்வியுற்றான்' என்று வரலாற்றில் குறிக்கப்படும். ஐயோ, இதற்காகவா நான் பிறவியெடுத்தேன்! இந்த இகழைப் பெறுவதற்காகவா, பல போர் முனைகளில் வெற்றிக்கொடி நாட்டிப் பெரும் புகழ் திரட்டினேன்! இந்த அவலமொழிகளைச் செவியாரக் கேட்பதற்காகவோ, நான் களத்தில் மடியாமல் சிறைபிடிக்கப்பட்டேன்! அந்தோ! நான் செத்து மடிந்திருந்தால் இந்த அவல ஒலிகளைக் கேட்காதிருக்கவாவது முடிந்திருக்குமே!

[வேதனையின் வெம்மையைத் [illegible] முகத்தை மறைத்தவண்ணம் அருகிலுள்ள மஞ்சத்தில் அமர்ந்துவிடுகிறான். யாரோ வரும் காலடியோசை கேட்கின்றது. பேரரசன் திரும்பிப் பார்க்கிறான்.]

ஜான்:- யார் அங்கே?

[ஆங்கில வீரனொருவன் எதிரில் வந்து நின்று வணங்குகிறான்.]

வீரன்:- மாமன்னரே, தங்களை எங்கள் நாட்டிற்கு அழைத்து வருமாறு எம் அரசர் ஆணை அனுப்பியுள்ளார். நாளைக் காலையில் பயணம். அதனை அறிவிக்கவே வந்தேன்.

[வணங்கிவிட்டுச் செல்கிறான்.]

ஜான்:- "பேரரசன் ஜானை எவராலும் வெல்ல முடியாது என்று கூறினீரோ, இதோ, அந்தப் பேரரசனை என் கைதியாக நிற்பதைப் பாரீர்! எவராலும் வெற்றி கொள்ளமுடியாது ஜான மன்னனை எனப் பேசி வந்தீரே! இதோ, அந்த ஜான் மன்னனை நான் அடிமைப் படுத்தி விட்டதைக் காணீர்! பேரரசன்—மாவீரன எனப் புகழப்பட்ட பெருவேந்தன் என்னெதிரில் விலங்கொடு நிற்கும் காட்சியினைப் பாரீர்!" என்று எட்வர்டு பெருமை பேசிக் கொளவதன் பொருட்டு என்னைக் கொண்டு வருமாறு கட்டளை பிறப்பித்துள்ளான் போலும்! சிங்கத்தைத் தற்செயலாகச் சிறை பிடித்து விட்ட சிறு முயல் எல்லோர் முன்னிலையிலும் சிங்கத்தைக் கொண்டுபோய் நிறுத்தி, 'எனது சாதனையைப் பாரீர்!' என்று கொக்கரிக்கத்தானே செய்யும்!

பெருமையுடன் ஆட்சிப்பீடத்தில் கொலுவிருந்த என் வாழ்வு, பிறனொருவன் பெருமை பேசிக் கொள்ளுதற்குரியதாகவா, மாறவேண்டும்!

[நெடுமூச்சுடன் உலவுகின்றான்.]

* * *

[இங்கிலாந்தின் எல்லைப் புறம், பிரான்சிலிருந்து அழைத்து வரப்படும் ஜான் மன்னனை எதிர்கொண்டழைக்கக் கறுப்புடைவேந்தன் எட்வர்டே நேரில் வந்துள்ளான். தோரணங்களும், வரவேற்பு வளைவுகளுமாக எல்லைப் பகுதி முழுவதும் விழாக்கோலம் பூண்டிருக்கிறது. தலைநகரமான இலண்டனுக்குச் செல்லும் அரசபாட்டையும் நன்கு அலங்கரிக்கப்பட்டு விளங்குகின்றது. படைவீரர்கள் புடைசூழ, அழகிய இரதமொன்றில் அமர்ந்துள்ள ஜான் மன்னன் இங்கிலாந்தின் எல்லைக்குள் நுழைகிறான்.]

எட்வர்டு:- மன்னர் மன்னரே, வருக வருக!

[வேந்தனுக் கருகில் நின்றுள்ள அரசவைப் பிரமுகர்களும் மக்களும் அவ்வாறே ஒலியெழுப்புகின்றனர்.]

எட்:-(இரதத்தை அணுகி) மன்னர் மன்னவா. வரும் வழியில் ஒரு குறைவும நேர்ந்திருக்காது என்றே நமபுகிறேன். நானும கூட இருந்து தங்களை இங்கிலாந்திறகு அழைத்துவரலாம் என்றுதான் முதலில் கருதினேன். ஆனால் ஒரு விருந்தாளியை வீட்டிலிருந்தபடியே வரவேறபதுதானே வீடடுககாரனுக்கு அழகு? மேலும, தங்களை வரவேற்பதற்கான ஏற்பாடுகளை நானே முனனின்று செய்தால்தானே எனக்குப் பெருமை?

[பேரரசன் ஜான் விழிக்கிறான், ஏதும் புரியாமல்; எட்வர்டு வேறொரு இரதத்தில் ஏறிக்கொள்ள, இரு இரதங்களும், படைகளும் தலைநகரை நோக்கி விரைகின்றன. செல்லும் வழியெல்லாம், "கறுப்புடை வேந்தர் வாழ்க!" என்ற ஒலி முழக்கத்துடன், "பேரரசன் ஜான் வாழ்க! மாமன்னரே வருக, வருக!" என்ற வாழ்த்தொலிகளும் கேட்கின்றன. இந்தக் கோலாகலமான வரவேற்பையெல்லாம் கண்ட பெருவேந்தன் ஜான் ஒரு வியப்புக் குறியாகவே மாறிவிட்டான்!]

* * *

[அரண்மனை நடுமன்றம். மாமன்னன் ஜானுக்கும், இங்கிலாந்துப் படைகளால் கைது செய்யப்பட்ட மற்றப் பிரெஞ்சுப் படைத் தளபதிகட்கும் பெருவிருந்து படைக்கிறான், கறுப்புடை வேந்தன். ஜான் மன்னன் அமர்ந்துள்ள ஆசனத்தின் பக்கவாட்டில் நின்றுகொண்டு, தானும் சிப்பந்திகளுள் ஒருவனாக ஜானுக்குத் தேவையான

உணவு வகை என்னென்ன என்று பார்த்து, அவற்றைப் பரிமாறும்படி பரிசாரகரிடம் கூறிக்கொண்டிருக்கிறான், அவன். எட்வர்டின் இந்த உயரிய போக்கினைக் கண்டு திகைத்துப்போன ஜான்வேந்தன், உணர்ச்சி வயப்பட்டவனாக வாய் திறந்து பேசவும் இயலாது திணறுகிறான். அன்பு ததும்பும் விழிகளால் எட்வர்டின் முகத்தையே நோக்கியவாறிருக்கிறான்.]

எட்வர்ட்:- (ஜான் தன்னையே நோக்கியபடி இருப்பதைக் கண்டு) என்ன வேந்தே, என்ன வேணடும?

ஜான:- (கரகரத்த குரலில்) இங்கிலாந்தின மணிமுடி தரித்த மன்ன! இதைவிட வேறென்ன வேண்டும எனக்கு? நின்றபடி

"காஞ்சிச் செய்தி"

காஞ்சி நகரும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் முன்னேற்றமடைந்து முழு வளம் பெறுவதற்கான சூழ்நிலைகளை உண்டாக்கும் எண்ணத்தோடு தோழர் சி. எஸ். **பூஞ்சோலை** அவர்களை ஆசிரியராகக் கொண்டு நடத்தப்பட்டு வரும் **"காஞ்சிச் செய்தி"** எனும் கிழமை இதழ், காஞ்சித் தொகுதிலுள்ள செய்திகளைமட்டும் வெளியிடுவதோடு நின்று விடாமல், நல்ல கருத்துக் கருவூலமாகவும் விளங்குவதுகண்டு களிப்படைகிறோம்.

பொதுநலத் தொண்டில் ஆர்வம்கொண்டுள்ள தோழர் பூஞ்சோலை அவர்களின் இம்முயற்சி வெற்றி பெற காஞ்சி நகரின் நலன்கள் பாதுகாக்கப்படுவதில் ஆர்வம் கொண்டுள்ள அனைவரும் நல்ல ஆதரவு நல்கிக் 'காஞ்சிச் செய்தி' நல்லமுறையில் நடைபெற ஊக்கமும் உற்சாகமும் அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

—ஆ-ர்.

என்னை உபசரிக்க வேண்டாம், எட்வர்ட்; என்னருகில் அமர்ந்துகொள். அதுவே எனக்குப் பெருமை.

எட்:- இல்லை, அரசர்க்கரசே, நான் சாதாரண மன்னன், தங்களுக்குச்சமதையாக அமர்வதற்கான தகுதி எனக்கு இன்னும் உண்டாகவில்லை...

ஜான்:- என்னை வெற்றி கொண்ட பிறகுமா, இவ்வாறு கூறுகிறாய்?

எட்:- எனக்குக் கிடைத்த வெற்றி எத்தன்மையது என்பதை நன்கு புரிந்துகொண்டுதானிருக்கிறேன பேரரசே. பாய்க்டியர் போரின் முடிவு, தங்களுக்குத்தான வெறறியைத் தந்திருக்க வேண்டும; ஆனால் எதிர்பாராத விதமாய் அந்த வெற்றி எனக்குக் கிட்டியது; அது உண்மையான வெற்றி ஆகாது வேந்தே ...வீதியிலே செல்கையில் தற்செயலாகக் கீழே இருந்து கிடைக்கும பொருளைப போனறதுதான, அந்த வெற்றி; அதனைக் கொண்டாட எனக்கு விருபபமில்லை; பேரரசர் ஜானை வென்றுவிட்டோம என்று பெருமை பேசிக்கொள்ளும ஆசையும் எனக்கில்லை; மன்னர் மன்னவா, உங்களுக்குக் கிடைப்பதற்குப் பதிலாகத் தற்செயலாய் எனக்குக் கிட்டிய அந்த வெற்றியை வைத்துக்கொண்டு தங்களை இழிவாக நடத்தும் சிறுமதியாளனல்ல நான்!

ஜான்:- எவருக்கும் இல்லாத உயர் குணத்தைப் பெற்றவனே எட்வர்ட்; உண்மையில் நீதான் வெற்றி கண்டாய்; எனனை வெற்றி கொண்டாய்; நீ என்னை வென்றுவிட்டது உண்மை தான் எட்வர்ட்; உண்மைதான் ......

[கலங்கியதன்கண்களினின்று கண்ணீர் சொரியவும், தலையைத் தாழ்த்திக் கொள்கிறான், ஜான் வேந்தன]

எட்:- மன்னர் மன்னவா, எஃகு நெஞ்சம் படைத்த தாங்களா, கண்ணீர் வடிக்கின்றீர்கள்? அரசர்க்கரசனாய் அரசுக் கட்டிலில் அமர்ந்து ஆட்சி செலுத்திய எனக்கு, அந்தோ, ஒரு சிறு வேந்தனாலா தோல்வி இட்ட வேண்டும்? மலையெனக் குவிந்த புகழ்யாவும் மண்ணோடு மண்ணாகவா போகவேண்டும்? என்றெண்ணியா கண்ணீர் சொரிகின்றீர்கள்? பெரும் புகழுக்குப்பங்கம்விளைந்ததேஎன்று சித்தங் கலங்குகின்றீர்கள்?

ஜான்:- (மெல்லச் சிரித்தபடி) இல்லை எட்வர்ட்; சித்தங் கலங்கியதால் சொரிந்த கண்ணீரல்ல இது; சிந்தை நெகிழ்ந்தமையால் சிந்தபபட்டது. எட்வர்ட், ஆயுதத்தால்தான் எனனை வென்றுவிட்டாய் என்று எண்ணியிருந்தேன; அன்பினாலும் அல்லவா என்னை வென்றுவிட்டாய? உன்னிடம் தோல்வியுற்றதால் என் புகழுக்கு ஒரு சிறிதும் பங்கம் ஏற்பட்டுவிடவில்லை, எட்வர்ட்; மாறாக முன்பிருந்ததைக் காட்டிலும பனமடங்காகப் பெருகி விட்டது. உனைபோனற உத்தமனிடம தோறபதே ஒரு பெரும புகழல்லவா, நண்பனே! அத்துடன், உன் பெருந்தன்மையின் காரணமாக வெல்லபபட்டாலும், நனகு கௌரவிக்கபபட்டான ஜான் மன்னன், அந்த அளவுக்கு அவன் பெருமை ஓங்கியிருந்தது எனறுதானே வரலாற்றில் எழுதபபடும?

[அன்பு மிகுதியால் சூழ்நிலையினையும் மறந்து கருப்புடை வேந்தனை இறுகத் தழுவிக்கொள்கிறான், மாமன்னன் ஜான்.]

பெயர் சூட்டல்

26—1—58 ஞாயிற்றுக்கிழமை இரங்கூனில் இருக்கும் நண்பர் கே. எம். கணபதி அவர்களின் பெண் குழந்தைக்கு, அகில பர்மா தமிழர் சங்கத் தலைவர் திரு. எஸ். லெட்சுமணன் அவர்கள் தலைமையில் பெயர் சூட்டு விழா நடைபெற்றது. குழந்தைக்கு **மணிமேகலை** என்று பெயரிட்டார். தோழர்கள் க. சேரன், நாரா. நாச்சியப்பா ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். தோழர்கள் டி. செல்லம், வி. கே. கிருஷ்ணன், ஜெயராமன் ஆகியவர்கள் இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

*

காஞ்சிபுரம் ஆலடிப்பிள்ளையார் கோயில் தெரு, மா. நாராயணசாமி அவர்களின் பெண் குழந்தைக்கு **கலைச் செல்வி** என்ற பெயர், நகரமன்ற உறுப்பினர் திரு சி. வி. எம். அண்ணாமலை அவர்களால் 22—1—58 அன்று சூட்டப்பட்டது.

நூல் அரங்கு

வள்ளுவரும் - மார்க்சும்

திருவள்ளுவரின் அறிவுரையை வெறும் இலக்கியமாகப் பார்ப்பதோடு, தமிழ் மொழியின் சிறப்பு மிளிரும் நூலாகக் காண்பதோடு வாழ்க்கை வழிகாட்டியாகவும் காண வேண்டுமானால் புதிய புதிய கோணங்களில் நின்று திருக்குறளை ஆராயவேண்டும். நித்த நித்தம் வளரும் வாழ்க்கைக் கலையின் ஒவ்வொரு துறைக்கும் வள்ளுவர் ஏதேனும் வழிகூறியிருக்கிறாரா எனக் கண்டு பயன் பெறுதல்தான் நல்ல பயனை அளிக்கக் கூடியதாகும்.

தோழர் க. திருமாறன் அவர்கள் இந்த நோக்கத்தை மனத்துள் கொண்டு பொருளாதார வள்ளுவரைக் கண்டிருக்கிறார். பொருளாதாரம் என்ற கலை மேற்கு நாடுகளில் மிக அண்மையில் நல்ல வளர்ச்சியைப் பெற்று வாழ்க்கை முறைகளில் புரட்சிகரமான மாறுதல்களை விளைத்திருக்கிறது, அந்தக் கொள்கைகளில் 'உடைமை பொது' என்ற கொள்கையை உருவாக்கியவர் காரல் மார்க்சு ஆவர்.

அவர் வாழ்ந்து கண்ட உண்மைகளைக் கொண்டு கண்ட முடிவுகளையும், வள்ளுவர் சொல்லில் உள்ள முடிவுகளையும் இணைத்து இணைத்து இரண்டினையும் சீர்தூக்கி வள்ளுவரின் வழி எவ்வாறு சிறப்புடையது என்பதனை ஆசிரியர் இந்த நூலில் விளக்கியுள்ளார்.

பொருளாதாரத் துறைச் சொற்றொடர்களை நன்கு விளக்கியிருப்பது பாராட்டற்குரியதாகும்.

நூல் அளவில் சிறியது எனினும் உள்ளடக்கியுள்ள கருத்தில் பெரியது என்பதனை ஒருமுறை ஏடுகளைத் திருப்பிடுவோர் உணரலாகும்.

நல்ல முயற்சி, வெல்க!

வள்ளுவரும் மார்க்சும்: க. திருமாறன்: மலர் விழிப் பதிப்பகம், 3, தெற்குப் பெருமாள் மேத்திரி வீதி, மதுரை. 52 பக்கங்கள்: விலை அணா 6.

★

அன்றும்-இன்றும்

[அன்பு]

வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி பாயும் சோழவள நாடு. அதன்கண் வளம் கொழிக்கும் பல சிற்றூர்கள், பாக்கங்கள், ஊர்களைச் சுற்றிலும் இடையறாது விளைந்து கொண்டிருக்கும் பசுமை பொருந்திய வயல்கள்.

வயல்களில் விளையும் செந்நெற் கதிர்களை வயிறு புடைக்கத் தின்ற எருமைகள் ஆங்காங்குள்ள நெற் கூடுகளின் நிழலில் உறங்கிக் கொண்டிருக்கின்றன. முதிர்ந்த பசுமையான கரும்பின் சாற்றைக் தொட்டியில் இட்டு உழவர்கள் காய்ச்சுகின்றனர். எனவே அதனின்றும் நறுமணம் எழுகிறது. காய்ச்சுவதனின்றும் நெருப்பின் புகை அதனாலே வயலோரங்களில் மலர்ந்திருந்த நெய்தல் மலர்கள் வாடி நிற்கின்றன.

குலைகளையுடைய தென்னையும் இலைகளையுடைய வாழையும், பாக்கையுடைய கமுகும், மணம் வீசும் மஞ்சளையும், சோம்பு, இஞ்சி முதலிய கொடிகளையும் உடைய தோப்புகளும், சோலைகளும் ஊரைச் சுற்றிலும் அடர்ந்தும் செறிந்தும் காணப்படுகின்றன.

ஊரின் நடுவே வரிசை வரிசையாக வீடுகள் அமைந்திருக்கின்றன. அவ்வீடுகளின் முற்றங்களில் நெல் உலருகின்றது. அவைகளைத் தின்ன கோழிகள் வருகின்றன. காவல் புரியும் சிறுமியர் கோழிகளை விரட்டுவதற்காகத் தங்கள் காதிலிருக்கும் பொன் மகரக் குழைகளை கழற்றி எறிகின்றனர். அவ்வாறு வீசியெறியப்பட்ட குழைகள் முற்றங்களில் சிதறுண்டு பரவிக் கிடக்கின்றன. சிறுவர்கள் இழுத்து விளையாடும் சிறு தேர் செல்லும் வழியை அந்தப் பொற்குழைகள் தடை செய்கின்றன.

ஊரின் நடுவே பல அட்டிற்சாலைகள் அமையப் பெற்றிருக்கின்றன. அவைகளில் வறியவரும் அயலூராரும் வந்து உணவு பெற்றுச் செல்லுகின்றனர். அட்டிற்சாலையின் கதவுகளில் சோழனது முத்திரையாகிய புலியுருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. உள்ளே அடுக்களையில் சோற்றை வடித்தலால் ஒழுகிய கஞ்சி வெளியே தெருவில் ஆறுபோல் பெருக்கெடுத்து ஓடுகிறது. அதனைக் கண்ட எருதுகள் ஒன்றோடொன்று போட்டி போட்டுக்கொண்டும் சண்டையிட்டுக் கொண்டும் கஞ்சியினைப் பருகுவதோடு சேற்றையும் புழுதியையும் கிளப்பி விடுகின்றன. அதன்மீது புரவிகள் பூட்டிய தேர்கள் ஓடுவதால் கஞ்சி படிந்த அந்தச் சேறு புழுதியாக மேலே கிளம்பி அரண்மனையின் சுவர்களிலெல்லாம் படிகிறது. அதனால் அச்சுவர்கள் பார்ப்பதற்கு வெண்ணீற்றில் புரண்ட களிற்று யானையைப்போல் தோற்றமளிக்கிறது.

கனவா, கற்பனையா என்று கேட்கிறீர்களா? அல்ல, அல்ல. உண்மை! கடியலூர் உருத்திரங் கண்ணனாரால் மெருகேற்றப்பட்ட உண்மை! ஆம். பட்டினப் பாலை தரும் சோழ நாட்டு நிலவளமும் ஊர்வளமும் தான் நீங்கள் மேலே கண்டது.

சோழ நாட்டு மருத நில வளத்தை,

‘விளைவறா வியன்கழனிக்
கார்க்கரும்பின் கமழாலைத்
தீத்தெறுவிற் கவின்வாடி
நீர்ச்செறுவின் நீணெய்தற்
பூச்சாம்பும் புலத்தாங்கண்
காய்ச்செந்நெற் கதிரருந்தும்
மோட்டெருமை முழுக்குழவி
கூட்டுநிழல் துயில்வதியும்’

என்றும், அகன்ற மனைகளின் செல்வச் சிறப்பை,

‘வியன் முற்றத்துச்
சுடர்நுதல் மடநோக்கின்
நேரிழை மகளி ருணங்குணக் கவரும்
கோழியெறிந்த கொடுங்கால் கனங்குழை
பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டும்
முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்
விலங்கு பகையல்லது கலங்கு
பகையறியாக்
கொழும்பல்குடிச் செழும் பாக்கத்து
குறும்பல்லூர் நெடுஞ் சோணாட்டு’

என்றும், சோறிடும் அட்டிற் சாலைகளின் நிலையை,

‘புகழ் நிலைஇய மொழி வளர
அற நிலைஇய அகனட்டில்
சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி
ஏறுபொரச் சேறாகித்
தேரோடத் துகள்கெழுமி
நீறாடிய களிறுபோல
வேறுபட்ட வினையோவத்து
வெண்கோயில் மாசூட்டும்,’

என்றும், உண்மையொடு சிறிது கற்பனை மெருகையும் கூட்டித் தந்து இன்று ‘இந்த நிலை’யிலிருக்கும் நம்மையெல்லாம் அன்றொரு நாள் அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு அரசாண்ட தென்புலத்து மன்னர்கள் வளத்தோடு வாழ்ந்த காலத்துக்கு இப்புலவர் பெருமான் இழுத்துச் செல்லுகிறார். தமிழ் பாடும் புலவரல்லவா, ஆதலால் அவருக்கு இச் சக்தி இயற்கையாகவே அமைந்திருப்பதில் நமக்கெல்லாம் வியப்பொன்றுமில்லை.

எங்கே, இன்னுமோர் முறை புலவரோடு சோழவள நாட்டிற்குச் சென்று வாருங்கள். வந்தால் தான் இன்றைய நிலை தெரியும். புலவர் அன்றைய உண்மை நிலையை சொல்லோவியமாகச் சித்தரித்திருப்பது இன்றைய நிலையிலிருக்கும் நமக்கு ஏதோ கனவு போன்றும் கற்பனை போன்றும் தோன்றுகிறதல்லவா!

எதிர்காலத் தமிழகம் மேற்கண்ட வளங்களை யெல்லாம் அனுபவிக்காது என்று எண்ணிதானோ என்னவோ புலவர் நூலாகப் பாடிச் சென்றிருக்கிறார்.

நெல்லைத் தின்ன வரும் கோழிகளை சிறுவர்கள் தங்கள் பொற்குழைகளால் விரட்டினராம் — இன்று? மாதாவின் முகத்தைக்கூடச் சரிவரத் தெரிந்திராத மழலைகள் விலை பேசப்படுகின்றன.

அட்டிச் சாலைகளில் சோறு வடித்தலினின்றும் ஒழுகிய கஞ்சி ஆறாக ஓடிற்றாம்—இன்று? மக்கள் வடிக்கும் வியர்வை ஓடுகிறது! சிந்தும் கண்ணீர் ஓடுகிறது! கொட்டும் இரத்தம் ஓடுகிறது! தமிழகத்தில் மட்டுமல்ல— இலங்கை பர்மா முதலிய இடங்களில் கூடத்தமிழனது கண்ணீரும்வியர்வையும் ஆறாக ஓடுகிறது!

அன்று தமிழகத்திலிருந்து விலை மதிக்க வொண்ணாத அரும் பொருள் ஏற்றுமதியாயிற்றாம். இன்று தாயகத்தில் கூலி வேலைகூடக் கிடைக்காமல் தமிழர்கள் வெளி நாடுகளுக்கு ‘ஏற்றுமதி’யாகின்றனர்!

அன்று தமிழ் மன்னர்கள், வாகை சூடிய நாடுகளிலிருந்து பல அரிய பொருள்களைத் தங்கள் வெற்றியின் அறிகுறியாகக்கொண்டு வந்தனராம். இன்று தமிழகத்திற்கு வெளிநாடுகளிலிருந்து விரட்டப்படும் தமிழர்கள் வருகின்றனர்! இவைகள்தான் இன்றைய தமிழகத்தின் "பெருமை"கள்!

அன்று வளத்தோடும் தன்னுரிமையோடும் வாழ்ந்தவர்களும் நாம் தான். இன்று வளமிழந்து, உரிமையிழந்து, வறுமையில் உழல்பவர்களும் நாம் தான். மீண்டும் அந்நிலை பெறுவதென்றோ? இன்றில்லை! இனி என்றுமே இல்லை என்னும் ஏக்கத்தைப் போக்க வழியே இல்லையா? உண்டு; ஒன்றுபட்டால் உண்டு. திராவிடர் அனைவரும் ஒன்றுபட்டால் நிச்சயம் உண்டு.

★



மயிலாப்புரம் புல்லாக்காளே!

கோவிற்பட்டியான்

பரபரப்பு நிறைந்த நகரங்களில் வாழ்பவர்கள் சற்றுக கிராமத்திற்குச் சென்றால் மனதிற்கு அமைதியையும் இன்பத்தையும் நிச்சயம் அடைவார்கள். மனிதனது உடலுழைப்பைக் குறைக்கக் கருதி இயந்திரங்கள் வந்துள்ள நாளிலும் கூட, மனிதன் தனக்கு ‘ஓய்வே இல்லை, கலையைப் பற்றி பேச எங்கேஜயா நேரமிருக்கிறது?’ என்று கூறிவிட்டுத் தலை தெறிக்க ஓடுகிறான். ஆனால் இயந்திரங்கள் பெருகாத உடலுழைப்பை நம்பி வாழும் உழவர் பெருமக்கள் வாழுகின்ற கிராமங்களிலே இத்தகைய பரபரப்பைக் காண்பது அரிது. குறைந்த மக்கள் தொகை—நிறைந்த மனத்திருப்தி. நகரத்திலோ பெருவாரியான மக்கள் நெருக்கமாக வாழுகின்றனர். அடுத்த வீட்டுக்காரரிடம் கூட அன்பாக இரண்டொரு சொற்கள் பேசமுடியாத அவ்வளவு அவசரம். ஆம், நகரத்திலே மனிதனை இயந்திரத்தினும் மேம்பட்ட இயந்திரமாகவே மாறிவிட்டான். இயந்திரமாக மாறிவிட்ட காரணத்தினால் கலையின்பால் அவனது உள்ளம் அவ்வளவாக ஈர்க்கப்படவில்லை. ஆனால் கிராமத்தில் வாழும் உழவர் பெருமக்கள் இயந்திர மனம் உடையர்களல்ல. தங்களையறியாமலேயே கலையின்பால் ஈர்க்கப்பட்டிருந்தார்கள். கிராமப் புறங்களில் வழங்கி வரும் நாட்டுப் பாடல்களே தக்கதோர் சான்று:-

நண்பகல் வேளை. ஆற்றிலே தண்ணீர் மெதுவாக ஓடிக்கொண்டிருக்கிறது. பகலவன் தன் வெப்பத்தைக் கடுமையாக வெளியிட்டுக் கொண்டிருக்கும் வேளை. பக்கத்திலே வயல். அவ்வயலிலே அங்கொன்றும் இங்கொன்றுமாக சில மாடுகள் நின்றுகொண்டிருக்கின்றன. தலையில் முண்டாசு கட்டிக்கொண்டு முறுக்கிய மீசையுடன் சிலர் வேலைபார்க்கிறார்கள். கவலை இழுத்தவண்ணம் ஒருவன் பாடிக்கொண்டிருக்கிறான் தன் காதலியைப்பற்றி. தன் காதலி அருகில் இல்லை என்ற நினைப்பிலே தன்னையும் மறந்து பாடுகிறான்.

ஆனால் அவன் காதலியோ திருட்டுத்தனமாக, அதோ! அந்த மரத்தின் மறைவிலிருந்து அவன் பாடுவதையும் கவலை இழுப்பதையும் கவனித்துக்கொண்டிருக்கிறாள். தன்னைப்பற்றிப் பாடியவுடனே அவள் முகத்தில் ஏன் குங்குமச் சிவப்பு ஏறவேண்டும்? நாணம் போலும். தூரத்தே தெரியும் சாவடியிலே வெயிலின் கொடுமையால் ஆடுகளெல்லாம் ஒதுங்கி யிருக்கின்றன. அந்தப் பூவரச மரத்தடியிலே தன் அருமை மச்சானுக்கு ‘கஞ்சி’ ஊற்றிக்கொண்டிருக்கிறாள் குடிக்க. பக்கத்திலே ஒரு தோப்பு! அந்தத் தோப்பிலே ஒரு கயிற்றுக் கட்டில், அக்கட்டிலிலே இளைஞன் ஒருவன் கையிலே புத்தகத்தை விரித்து வைத்தபடியே தூங்குகிறான். உண்மையிலேயே தூக்கமா? அல்லது பாசாங்கோ, யார் கண்டது? உண்மைத் தூக்கமாக இருப்பின் திருட்டுத் தனமாகத் தன் கையிலிருந்து புத்தகத்தை எடுக்கும் வளையலணிந்த தளிர்க் கரங்களைப் பிடித்திருக்க மாட்டானா உணர்வு பெற்று? பொய்த் தூக்கம் தூங்குபவன் எப்படித் திடுக்கிட்டு விழிப்பான்? இந்த இன்பக் காட்சிகளெல்லாம் இருக்க,

அதோ! பாருங்கள். அந்த ஆற்றங்கரை மேல் இருக்கிறதே வேப்பமரம்! அவ் வேப்பமரத்தடியிலே துண்டைக் கீழே விரித்துப் போட்டு அதன்மேல் உட்கார்ந்திருக்கிறானே சோகமே உருவாய்! அவன் யார்? என்ன கவலை வந்துவிட்டது அவனுக்கு? ஓ! பாண்டியனா? என்ன இப்படி உட்கார்ந்திருக்கிறான்? காரணம் புரியவில்லையே! உம், என்னவாயிருக்கும். இதோ! இவன் யார்? ஏன் இப்படி வியர்க்க விறுவிறுக்க ஓடி வருகிறான்? என்ன தலைபோகிற அவசரமோ? ஆ! கந்தசாமி! ஆமாம்! பாண்டியனிடம் என்னமோ கூறுகிறானே!

"மயிலாப்புரம் புல்லாக்காளே"

மயிலாப்பூரில் வாங்கிய புல்லாக்காளையாம். வெண்மையும் சிவப்பும் கலந்த நிறமுள்ளதே புல்லாக்

காளை! இவ்வளவுதானு! இல்லை இல்லை,

"மாடக் கொம்பு சிவலக்காளை"

நன்கு உயர்ந்து வளைந்த கொம்பையுடைய சிவப்பு நிறக் காளையாம். ஆமாம்! இப்பொழுது இந்த இரண்டு காளைகளுக்கும் என்ன வந்துவிட்டது

"மாடு ரெண்டும் தப்பிப்போச்சே
மலையிலே
அடடா மதிகுறைவா"

மலையிலே மேயப்போன மாடுகள் இரண்டும் எப்படியோ தப்பிக் காணமற்போய்விட்டதே! அடடா! உன் மதி என்ன கெட்டா போய் விட்டது. அதுவும்

"இப்போ இருக்கிற விலையிலே
அடடா மதிகுறைவா!"

இப்பொழுதிருக்கும் உயர்ந்த விலையிலே இந்த மாதிரி மாடுகளை உன் கவனக் குறைவால் தப்பவிட்டு விட்டாயே! நமமால் பிறகு உயர்ந்த விலையில் இத்தகைய நல்ல மாடுகளை வாங்கத்தான் முடியுமா? என்று கேள்வி மேல் கேள்வி கேட்கிருன். பாண்டியனே பேசாமல் மௌனமாகவே உட்கார்ந்திருக்கிருன. பேசாது உட்கார்ந்திருப்பதைக்கண்ட கந்தசாமிக்குக் கோபம வந்துவிடுகிறது. அக் கோபத்தின எதிரொலியாக,

"உன் மண்டையிலே மூளையில்லே
தலையிலே"

ஓங்கியடித்தாற்போல கூறுகிருன் கந்தசாமி. தன அறிவைச் சரியான வழியில் உபயோகிக்காததிலை அல்லவா மாடுகள் இரண்டும் தப்பிப்போய்விட்டது என்று சுட்டிக் காட்டுகிருன் கந்தசாமி. தன்னைப் பார்த்து "மூளையிலலை" என்று கூறுவதா? பாண்டியனுக்கோ பொறுக்கவில்லை. எப்படியும்கந்தசாமிக்குப்பதில் கூறத்தான் வேண்டும். கூறியும் விடுகிருன்.



"மாமரமாம் மல்லிகைத் தோப்பாம்"

மாமரங்கள் பணம் வீசிடும் மல்லிகை மலர்கள் நிறைந்த ஒரு அழகிய தோப்பாம்! அந்தத் தோப்பினிலே

"மயிலாடும் மஞ்சண மேடையிலே—நான்
மறந்தாப்பலே உறங்கிட்டேன் நிழலிலே"

வண்ண மயில் ஆடுவதற்கென்றே கட்டப்பட்ட மேடை, இறுதியில் தூங்குவதற்குத்தான பயன்பட்டது. அதுவும் நண்பகலிலே வெயிலின் கொடுமைக்கு ஆற்ருது நிழலிலே மேடையிலே படுத்தால் தூக்கம் வராமல் என்ன செய்யும? அந்த ஆழ்ந்த நித்திரையின்போதுதான்



"இந்த மாடு ரெண்டும்
தப்பிப்போச்சு வயலிலே"

உயர்ந்த வம்சத்து மாடுகள் இரண்டும் வயலிலே இருக்கும் பொழுது தப்பிச்சென்றுவிட்டன. தப்பிச் சென்றுவிட்ட மாடுகள் மீண்டும் கிடைக்கவில்லை! ஐயம் எழலாம். அதையும் பாண்டியனே கூறுகிருன்.

"இங்கே புடிச்சிக் கொண்டு
மாட்டிட்டானே பவுண்டு
ரோட்டுச் செயிலிலே"

கடைசியில் மாடுகள் இரண்டும் 'பவுண்டில்' அல்லவா அடைப்பட்டிருக்கின்றன. தப்பி வந்த கால் நடைகள், அடுத்தவர் பொருளை நாசம் செய்யும் கால் நடைகள் முதலியவைகளை அடைத்து வைப்பார்களே 'பவுண்டு' என்ற இடத்தில். நல்ல வேளை வேறு எங்கேயும் காணமற்போய் விடவில்லை. பவுண்டில் தானே அடைபட்டிருக்கிறது. பணம் கொடுத்து மீட்டு விட்டால்போகிறது. கந்தசாமியின் கோபம் ஓரளவுதான் தணிந்தது. பண்டியனின் கவலைக்குக்காரணம்தான் புரியவில்லை? யோசிக்கிருன். மாடுகளை மீட்கப் பணத்திற்கு என்ன செய்வதென்ற யோசனையா? பாண்டியனிடம் எதையோ சுட்டிக்காட்டிப் பேசுகிருன். அவ்வளவுதான் கவலை தோய்ந்த முகத்தில் களிப்பல்லவா பொங்குகிறது. ஆம! பாண்டியனின் உள்ளங் கவர்ந்தவள்! வடிவு! தூரத்தே துணி துவைத்துக் கொண்டிருக்கிருள். நிச்சயம் அவளிடம் பணம் இருக்கும், பாண்டியனுக்கு என்ருல் நிச்சயம் கிடைக்கும். ஒன்றுபட்ட மனத்தினர் அல்லவா? தீர்யானித்ததுதான் தாமதம. கீழே விரித்திருந்த துண்டை தரையில் ஒரு உதறு உதறிவிட்டு தலையில் முண்டாசு கட்டிக்கொண்டு வேட்டியை மடித்துக் கட்டியவாறே வடிவு இருககும இடத்திற்கு ஓடுகிருன. அதோ! பாருங்கள் அவன் தன 'இனியவளிடம். பேசிக் கொண்டிருப்பதை!

கந்தசாமி:—

மயிலாப்புரம் புல்லாக் காளை
மாடக் கொம்பு சிவலக்காளை
மாடு ரெண்டும் தப்பிப்போச்சு
மலையிலே அடடா மதிகுறைவா!
இப்போ இருக்கிற விலையிலே
அடடா மதி குறைவா
உன் மண்டையிலே
மூளையில்லே தலையிலே

பாண்டியன்:—

மாமரமாம் மல்லிகைத் தோப்பாம்
மயிலாடும் மஞ்சண மேடையிலே-நான்
மறந்தாப்பலே உறங்கிட்டேன்—
நிழலிலே
இந்த மாடுரெண்டும தப்பிப்போச்சு—
வயலிலே
இங்கே புடிச்சிக் கொண்டு
மாட்டிட்டானே பவுண்டு
ரோட்டுச் செயிலிலே

கள்ளமற்ற உள்ளத்திலிருந்து வெளிவரும் இனிய எளிமையான பாடல் எத்தகையதாய் அமைந்திருக்கிறது.? இலக்கணத்திற்குக் கட்டுப்படாமல், எளிமையோடு விளங்குவது கிராமீய இலக்கியம். மக்கள தம உளபபாங்கினை நாட்டுப பாடல்களின் மூலம நாம அறியக் கூடும. மேற்கண்ட பாடல் கிராமங்களில் பாடப்படுகிறது. விடுமுறையிலே கிராமத்திறகுச் சென்ற பொழுது, ஒரு இளைஞன் மேற்கண்ட பாடலைப் பாடியதன் விளைவே இச்சிறு விளக்கம். மாறி வரும் காலத்திற்கேற்ப நாம் கிராமிய இலககியஙகளுக்கு ஆதரவு கொடுத்து வளர்க்க முற்பட வேண்டும். வளர்க கிராமிய இலக்கியம்.

"......சட்டசபைக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை, சாதாரணக் கைதிகளைப் போல் நடத்தாமல் மரியாதையோடு நடத்த வேண்டுமென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. திருடர்களையும் கொள்ளைக்காரர்களையுமே மனிதத் தன்மையுடன் நடத்த வேண்டும் என்ற கருத்து நிலவும் காலம் இது. எதற்கெடுத்தாலும் இப்பொழுது மரியாதை வாரங்கள் வேறு நடத்தப்படுகின்றன. அப்படிப்பட்ட இந்நாளில், எதிர்க் கட்சி அரசியல் தலைவர்களுக்கு மதிப்புக் கொடுக்கவில்லை என்பது வருந்தத்தக்க காரியம்தான்.

ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் மாஜிஸ்டிரேட்டுகள் விசாரணையின் போது காங்கிரஸ் தலைவர்களுக்கு ஆசனங்கள் அளித்து உட்காரச் சொல்லியிருக்கிருர்கள். காங்கிரஸ் ஆட்சியில் அந்த மரியாதைக்குக் கூட இடமில்லாமல் போய்விட்டதா?

'ஆனந்த விகடன்'
26—1—58

ஆஸ்திரேலியா

[கோ. கோதண்டராமன்]

ஆஸ்திரேலியா, பிரிட்டிஷ் காமன்வெல்த்திற் குட்பட்டடொமினியன் நாடுகளில் ஒன்ருகும். இதன் பரப்பு 29 74,581 சதுர மைல்கள். இந்நாட்டின் மொத்த மக்கள் தொகை 7,400,000-பேர். பரப்பில் இந்நாடு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அளவினதாகும். பரப்பில் விரிந்த நாடாயினும் தட்ப வெப்ப நிலைகளினுல் பெரும் பாகம், மக்கள் குடியேற்றத்திற்கு ஏற்றதாக இல்லை. இத்துடன் நாட்டின் உட்பகுதிகள் கரம்பு நிலமாக உள்ளன. இதனுல், பெரும்பாலும் மக்கள் தென்கிழக்குப் பகுதிகளிலும், பாதிக்கு மேற்பட்டவர்கள், சிட்னி மெல்போர்ன, பிரிஸ்பேன், அடிலெய்ட், பெர்த், ஹோபர்ட் என்ற ஆறு மாநிலத் தலைநகர்களிலேயே வாழகிருர்கள். அங்கு வாழும் மக்களில் பெரும்பாலானவர்கள் ஆங்கிலேயர்கள். மிகுதி மக்களில் மற்ற ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்கள போக, சுமார் 60 000 பேர் அந்நாட்டின பூர்வீகக் குடிகளாவர். ஆஸ்திரேலியா மிகச் செழிப்பு வாயந்தவொரு நாடாகும. முயற்சி செய்தால் இன்னும அதிகமான மக்கள் அங்கு குடியேற முடியும். வறுமையில் உழலும தென்கிழக்கு ஆசிய மககளில் பலர், அஙகு கூலிகளாக உழைப்பதற்குக் கிடைப்பதால் ஆஸ்திரேலியா தன் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் கட்டிக் காக்க முடிகிறது அண்மையில் வெள்ளையர்களின குடியேற்ற நாடாக மாறிய ஆஸ்திரேலியா, வகுப்பு வேற்றுமைகளையும், சர்வாதிகாரப் போக்கையும் அறவே ஒழித்து, எல்லைப்புற ஜனநாயகம் போன்ற ஒன்றினைக் கொண்டு இலங்குகிறது.

இரண்டாவது உலகப்போருக்கு முன்வரை, ஆஸ்திரேலியப் பொருளாதாரம் பெருமபாலும் கம்பளி, கோதுமை உற்பத்தியையே ஒட்டி இருந்தது. போர்த் தளவாடங்களை உறபத்தி செய்யும் தேவை ஏற்பட்ட உடனே, சிறிது சிறிதாக இந்நாட்டின் பொருளாதாரம் தொழிற் றுறையின் பக்கம் சாய்ந்தது. போர்க் காலத்தில் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களின் எண்ணிக்கை முன்பை விட ஏழு லட்சம் அதிகரித்தது.

இப்பொழுது டாஸ்மேனியா என்றழைக்கப்படும் வான் டைமன்ஸ் லாண்ட் என்ற பகுதியில் குடியேறியதற்குப் பின்னரே, அதாவது பததொன்பதாம் நூற்ருண்டின் தொடக்கத்திலேயே வெள்ளையர்கள் ஆஸ்திரேலியாவில் குடியேறினுர்கள.

முதன் முதலில் மாநில சுயாட்சி 1842-ம ஆண்டில் புதிய தென் வேல்ஸில் கொண்டுவரப்பட்டது. இதைத் தொடர்ந்து 1855-ம் ஆண்டில் பொறுப்புள்ள அரசாங்க முறை வேறு மாநிலங்களிலும புகுத்தப்பட்டது. 1901-ம் ஆண்டில் நிறைவேற்றபபட்ட குடியரசு அரசியலமைபபுச் சட்டத்தின்படி, ஆஸ்திரேலியாவில் ஒரு கூட்டாட்சி மலர்ந்தது. இன்றைய ஆஸ்திரேலிய அரசாங்கம் ஆறு மாநிலங்களைக் கொண்டதாகும. அவையாவன:—புதிய தென வேல்ஸ், விக்டோரியா, தெற்கு ஆஸ்திரேலியா, டாஸ்

மேனியா, குயின்ஸ்லாந்து, மேற்கு ஆஸ்திரேலியா. இது தவிர வேறு சில பிராந்தியங்களும் சிற்சில சிறு தீவுகளும் உள்ளன.

ஆஸ்திரேலிய அரசியலமைப்புச் சட்டத்தை ஆக்கியவர்கள், அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா இவ்விரு அரசியலமைப்புச் சட்டங்களின் அடிப்படையையே துணைக்கொண்டனர். மேற்குறித்த இருநாட்டு அரசாங்கங்களைப் போலவே, ஆஸ்திரேலியாவில் முன்னரேநிலவிய மாநிலங்களை இணைத்து ஒரு மத்திய சர்க்காரைத் தோற்றுவிப்பது அவசியமாயிற்று. ஆழ்ந்த சிந்தனைக்கும் பரிசீலனைக்கும் பின் அமெரிக்க மாதிரி கூட்டாட்சி முறை இந்நாட்டிற்கு ஏற்றதெனத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இம்முறையில் பெடரல் அரசாங்கத்திற்கு உயர்ந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டன. எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டன. ஆஸ்திரேலிய பெடரல் அரசாங்கத்திற்கு, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பெடரல் அரசாங்கத்திற்கு அளித்திருப்பதை விட, அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக, திருமணம், திருமண ரத்துப் பற்றிய சட்டங்களை இயற்றும் அதிகாரங்களும் பெடரல் அரசாங்கத்துக்கு உண்டு.

கூட்டாட்சி முறையைப் பொறுத்தவரை ஆஸ்திரேலியா, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பை ஒட்டியது. கீழ்ச் சபையின் ஆதிக்கத்துக்குட்பட்டு, பிரதம மந்திரி தன் மந்திரி சபையை நடத்திச் செல்வார். பிரதிநிதிகள் சபை என்றழைக்கப்படும் பாராளு மன்றக் கீழ்ச்சபை 74 உறுப்பினர்களைக் கொண்டதாகும். இந்த உறுப்பினர்களைத் தெரிந்தெடுக்கும் தேர்தலில், வயது வந்தவர்கட்கெல்லாம் வாக்குரிமை உண்டு. மக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பிரிக்கப்பட்ட மாநிலத் தொகுதிகளில் இருந்து இவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். செனட் என்றழைக்கப்படும் மேல் சபை 6 உறுப்பினர்களைக் கொண்டது. இவ்வுறுப்பினர்களின் ஆயுட்காலம் ஆறு ஆண்டுகளாகும். அதற்குப் பின், ஒரு உறுப்பினர் அங்கம் வகிக்க வேண்டுமென்றால் மூன்று மூன்று ஆண்டுகளாக அவ்வுறுப்பினரின் ஆயுட்காலம் நீடிக்கப்படும்.

எல்லா மாநிலங்களின் ஒப்புதலைப் பெற்றதும், ஆங்கிலப் பாராளு மன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்று, ஆஸ்திரேலிய அரசியலமைப்புச் சட்டம் 1900-ம் ஆண்டில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. கனடாவில் அரசியல் அமைப்புச் சட்டத்திற்குத் திருத்தம் வேண்டுமென்றால், பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டம் பிரிட்டனில் முதலில் திருத்தப்படவேண்டும். ஆனால் ஆஸ்திரேலியாவில் பிரிட்டனின் தலையீடு இன்றியே அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படலாம். ஆனால் அதற்குச் சில நிபந்தனைகள் உண்டு. பாராளு மன்றச் சபைகள் இரண்டிலும் மெஜாரிட்டி இருக்க வேண்டும். இதனறியும் பெருவாரி மாநிலங்களில் வாக்காளர்களின் ஒப்புதலையும் பெறவேண்டும். அரசியலமைப்புச் சட்டத்திற்குத் திருத்தங்கள் கொண்டு வரும் முறை எளிதுதான் என்றாலும், அரசியல் அமைப்புச் சட்டத்தில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏதும் கடந்த ஆண்டுகளில் நிகழவில்லை.

ஆஸ்திரேலியாவின் அரசியல் கட்சிகளில் மிகவும் பலம் வாய்ந்த தேசியக் கட்சி தொழிற் கட்சிதான். 1941-முதல் 1945-ஆண்டு வரை பிரதமராக இருந்த ஜான் கார்டின் என்பவருடைய தலைமையில் அது இயங்கியது. அதற்குப் பின் ஜோசப். பி. சிப்ளி என்பவரின் தலைமையில் இயங்கியது. முதன் முதலில் எதிர்க் கட்சிகளிடையே ஒற்றுமை நிலவச் செய்வது மிகவும் கடினமாக இருந்த போதிலும் 1944-ம் ஆண்டில் இருந்து முன்னாள் பிரதமரான ராபர்ட் கார்டன் மென்சிஸ் என்பவரால் லிபரல் கட்சி எதிர்க்கட்சியாக இயங்கியது. இப்பொழுது மறுமுறையும் ராபர்ட் கார்டன் மென்சீஸ் கட்சியே ஆட்சி செய்கிறது.

இரண்டாவது உலகப்போருக்கு முன் தொழிற்கட்சி செனட் சபையில் 22-இடங்களையும் கீழ்ச்சபையில் 49-இடங்களையும் பெற்றுத் திகழ்ந்தது.

அடிப்படைத் தேவைப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் யாவும் அரசாங்கத்தின் கையிலேயே உள்ளன. ஆஸ்திரேலியத் தொழிற் கட்சி இன்னும் விரிந்த முறையில் தொழில் ஸ்தாபனங்களைத் தேசிய மயமாக்க வேண்டும் என்று கருதுகிறது. சமூக இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தையும் விரிவுபடுத்த வேண்டும் என்றும் அது விரும்புகிறது. தொழிற் கட்சி அரசாங்கத்தின் மிகச்சிறந்த சாதனை என்னவென்றால், தொழிற் பிரச்னை சம்பந்தமான வேலைநேர நிர்ணயிப்பு, தொழில்களின் நிலைமை, கூலி பற்றிய தகராறுகளை சுமுகமான முறையில் தீர்த்துவைக்க, காமன்வெல்த் தொழிற் கோர்ட்டுகளைத் தோற்றுவிப்பதாகும் ★

"......லட்சம் பேர் கூடி தக்கதொரு தலைவரின்கீழ் நேருவுக்கு கருப்புக்கொடி காட்டியிருப்பினும் ஒன்றும் குடிமுழுகிப் போய் விடாது. அதைவிட மோசமான அளவில் பஞ்சாபில் சீக்கியர் கோயிலிலும், ஆமதாபாத்தில் மாணவர் கூட்டத்திலும், பம்பாய் ராஜ்யத்தில் மராத்தியரிடையிலும் நேருவுக்கு எதிரே ஆர்ப்பாட்டங்கள் நடந்திருக்கின்றன. ஆனால் காமராசர் ஆட்சி, முன் ஜாக்கிரதை யென்ற பெயரால் தி. மு. க. தலைவர்களைக் கைது செய்து அராஜக செயல்களுக்கு அழைப்பு விடுத்தது......வெளி ஜில்லாக்களிலும் தி. மு. க. - க்கள் அணி அணியாகக் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இதுவும் தேவையற்ற நடவடிக்கை என்றே நாம் கருதுகிறோம். அடக்குமுறையின் மூலம் ஒரு கட்சியை அல்லது கிளர்ச்சியை அடக்கிட முடியுமானால், பிரிட்டிஷ் ஆட்சியின் அடக்குமுறையால் காங்கிரஸ் அழிக்கப்பட்டிருக்கலாம்......"

"செங்கோல்" 12—1—58

*

"...... அமைச்சருடைய கைவசமுள்ள அரசியல் வேதத்திலே, பஞ்சமா பாதகங்களோடு சேர்த்து எண்ணப்பட வேண்டிய ஆறாவது பாதகம், பிரதம மந்திரிக்கு எதிராகக் கறுப்புக் கொடி பிடிப்பது போலும்! அதைக் காட்டிலும் பயங்கரமான குற்றம், கூட்டம் போட்டுப் பிரதம மந்திரியைக் கண்டிப்பது போலும்!

......பிரதம மந்திரியைக் கண்டிப்பது அனுமதிக்கப்படாதென்றால் அப்புறம் தேர்தல் எதற்கு, ஓட்டுரிமை எதற்கு, பேச்சுரிமைக்கு உறுதியளிக்கும் அரசியல் சட்டம் எதற்கு, இந்தியக் குடியரசு என்கிற ஆடம்பரப் பெயர் தான் எதற்கு?

"குமுதம்" 1-2-58

ஒலிபெருக்கி வைத்து!

பணதிக்கம் உள்ள சமூகத்தில், செல்வர்கள் வைத்ததே சட்டம். அவர்கள் வசமே, வியாபாரமும், பாங்குகளும் இருப்பதால், எப்படி வேண்டுமானாலும், சமூகத்தை ஆட்டிப் படைக்க முடியும்.

வியாபாரம் கெடவும், பணப் புழக்கம் தடையாகவும், சமூகம் எதிர்பாராத நெருக்கடிக்கு ஆளாகும்படியும், இன்றுள்ள பணதிக்கக்காரர்களால் செய்ய முடியும். அவர்கள் நினைத்தால், ஆலைகளைத் திடீரென்று மூடலாம்—வியாபாரத்தை யாருக்கும சொல்லாமல் நிறுத்தலாம். ஒரு ஆலை மூடப்பட்டால் பல்லாயிரக் கணக்கான மக்கள் வீதிகளிலே அலைய நேரும்! வியாபாரம், மூடப்பட்டால், பொருள்கள் முடக்கப்பட்டு பொதுமக்கள் அல்லாடக்கூடும்!!

இப்படித் தனிப்பட்டவர்கள் வசம், ஆலைகளும், வாணிபமும் இருப்பதால், அவர்களுக்குத் தக்க பாதுகாப்புத் தரவேண்டிய அவசியம், ஒரு அரசுக்கு ஏற்படுகிறது. எங்கே ஆலைகளை மூடிவிடுவார்களோ, அதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் நமது ஆட்சிக்கு நிம்மதியற்ற நிலையை உண்டுபண்ணுவார்களோ, வாணிபம் நிறுத்தபபடுமோ, அப்படியாயின் கப்பல்களில் வந்த பொருள்கள் இறக்கப்படாமல், கடைகளை நாடிச் செல்லும மக்கள் சாமான் கிடைக்காமல் திண்டாட நேருமோ, என்கிற அச்சம், முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தில் நிச்சயம் ஏற்படும்.

கிஷின் சந்த், பெரிய ஆலையரசர்! அவர் பெரிய பெரிய இயந்திரங்களை வரவழைக்கிறார்-பணம் போதவில்லை; அப்போது, என்ன செய்கிறார். பாங்கில். 'ஓவர் டிராப்ட்' பணம் பெறுகிறார். பணம் கொடுக்க பாங்கு மறுத்தால், அவர் ஆலைகளை மூடிவிடுவார்! ஆலைகள் மூடப்பட்டால் உற்பத்தியும குறையும் உழைப்பாளர்களும் அவதியடைவர். ஆகவே, பாங்கு, கடன் கொடுக்க முன்வருகிறது. இவ்வளவுதான் கொடுக்கலாம். இப்படித்தான் கொடுக்கவேண்டும், என்கிற விதிகளை அரசு வைத்திருக்கலாம். ஆனால், சங்கடமான நேரத்தில், கடன் கொடாமல் ரிசர்வ் பாங்கைக் கட்டுப்படுத்தினால், ஆலையரசர் முறைத்துக் கொள்வார்? விளைவுகள் விபரீதமாகும்!!

[அண்ணல்]

ஆகவே, அரசு, பல்வகையிலும் - ஆலையரசர்களையும், பெரிய வியாபாரிகளையும் தட்டிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்கான உதவிகளையும் செய்து தரும் அவசியம் ஏற்படுகிறது. பாங்குகள் மூலமும், ஏற்றுமதி இறக்குமதித் துறையிலும், அவர்கள் பலனடையும் வாய்ப்புகளைச் செய்துதர நேருகிறது.

பணம் படைத்தவர்களும், இந்த வசதிகளை அரசிடமிருந்து பெற வேண்டியவர்களாயிருப்பதால், அரசுக்கு ஒத்தூதவும், குல்லாப் போடவுமான அவசியத்துக்கு ஆளாகிறார்கள்.

உதாரணத்துக்கு, எங்கும் போகவேண்டியதில்லை! செட்டிநாட்டு முத்தையா போன்றவர்களே, போதும். எந்த அரசு வந்தாலும், இவர்கள், வேண்டியவர்களாவார்கள். முதலாளித்துவ அடிப்படையில் முகிழ்க்கும் எந்த அரசானாலும், இவர்களை, வேண்டியவர்களாகக் கொள்ளவே செய்யும்.

டாடாக்களும், பிர்லாக்களும், கோயங்காக்களும, இன்று கோலேந்தியவர்களின் சகாக்களாக ஏனிருக்கின்றனர் என்பது நன்கு விளங்கும். கோலேந்தியவர்களும், இவர்களைக் கூட்டிவைத்துக்கொண்டு குலவுவதன் நோக்கம் இதுதான்.

சீமான்கள் நினைத்தால், 24 - மணி நேரத்தில், இந்த அரசுக்குப் பல இடையூறுகளைச் செய்துவிட முடியும், ஏனெனில், வாணிபமும், பாங்கும் அவர்கள் வசமே இருக்கிறது. இன்றைய பொருளாதார அமைப்பில், ஒரு நாட்டின் செல்வவளம், இந்தத் துறைகளைப் பெரிதும் சார்ந்தே இருக்கிறது.

வியாபாரம் - வியாபாரத்துக்குத் துணையாகப் பாங்கு - பாங்குக்குத் துணையாக இன்சூரன்ஸ் அமைப்பு. இந்த மூன்றும் ஒன்றையொன்று சார்ந்தவை! ஒரு நாட்டின் செல்வத்தை வளைக்கவும்; நிமிர்க்கவும் கூடியவை!!

இன்சூரன்ஸ் கம்பெனிக்கு 7- ரூபாய் கட்டுகிறான், ஏழுமலை. பாங்கில், மாதம் 10 - ரூபாய் போடுகிறாள் பத்மா. இவர்கள் போடும் பணம், பாங்கிலும் இன்சூரன்ஸ் கம்பெனியிலும், அப்படியே தூங்குவதில்லை! நாட்டிலிருக்கும் பல்லாயிரக்கணக்கான ஏழுமலைகளும், பத்மாக்களும் இலட்சக் கணக்கான ரூபாய்களை, இந்த இரு நிறுவனங்களிலும் போடுகிறார்கள். பாங்கில் 'டெபாசிட்' செய்தால், போட்ட பணத்துக்கு மூன்று சதவிகிதம், ஐந்து

சதவிகிதம், என்று "வட்டி" தருகிறார்கள். இன்சூரன்ஸ் கம்பெனிகளும் ஆண்டு முடிவில், வந்த "இலாபம்" இவ்வளவு, அதைப் பங்குதாரர்களுக்கு இப்படியிப்படி பகிர்ந்துகொடுத்தோம் என்று சொல்லுகிறார்கள். பாங்குக்கு, வட்டிகொடுக்க ஏது பணம்? இன்சூரன்ஸ் கமபெனிக்கு, இலாபம் கொடுக்க எங்கிருந்து பணம் வந்தது?

ஏழுமலைகளும் பத்மாக்களும் செலுத்தும் பணத்தை, டாடாவோ, பிர்லாவோ "ஓவர் டிராப்ட்" கேட்டால் கொடுக்கிறார்கள். அதற்கு வட்டி வாங்கி, பிரித்துக்கொடுக்கிறார்கள். ஏன், அவர்களுக்குக் கடன் கொடுக்கப்படுகிறதென்றால், வாணிபமும் உற்பத்தியும் செழிக்க!! இப்படியொரு சங்கிலித் தொடர்பு இருப்பதாலேயே பல சீமான்கள், சொந்தப்பொறுப்பில் பாங்குகளை அமைத்து நடத்தி வருகிறார்கள் — கொஞ்சக் காலத்துக்கு முன்புவரை இன்சூரஸ் கம்பெனிகளையும் நடத்திவந்தார்கள்.

டால்மியா நடத்திவந்த பாரத் இன்சூரன்ஸ் கம்பெனி, ஏழுமலைகளும் பத்மாக்களுமாகச் சேர்ந்து போட்டிருந்த மூன்று கோடி ரூபாயை, மனம்போன போக்கில் தன் சொந்த உபயோகங்களுக்குப் பயன்படுத்திக்கொண்டது. திடீரென, அரசு, அதைக் கண்டுபிடித்தபோது, தனிப்பட்ட முதலாளிகள் வசமிருக்கும் பல இன்சூரன்ஸ் அமைப்புகள், இப்படியே செய்கின்றன என்கிற உண்மை புலப்படவே, டில்லி அரசு, "தனியார் வசம், இன்சூரன்ஸ்கள் இருக்கக் கூடாது. அரசே, ஏற்று நடத்த வேண்டும்" என்று திட்டம் போட்டனர். தேசிய மயமாக்கினர். இன்சூரன்ஸ் தொழில் தனியார் கையிலிருந்து பிடுங்கப் பட்டது.

இப்படிச் செய்த அரசு, மற்ற துறைகளான, உற்பத்தி—வாணிபம், பாங்கு முதலியவைகளையும் தன் வசமாக்கியிருக்க வேண்டுமல்லவா? இன்னும் செய்யவில்லை! பாங்குகளைப்பற்றிக் கேட்டால் தனியார் எத்துணை பாங்குகளை— இந்தியன் பாங்கு, இண்டோ கமர்ஷியல் பாங்குபோல—நடத்தினாலும், அவைகள் எமது கண்காணிப்பிலேயே உள்ளன. ரிசர்வ் பாங்க், ஸ்டேட் பாங்க் மூலம், அவைகளைக் கண்காணித்தே வருகிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால், உற்பத்தியும் வாணிபமும்? அது, பிரபுக்களின் வேட்டைக் காடாகவேயிருந்து வருகிறது! இந்தப் பிரபுக்கள் நினைத்தால், வாணிபத்தை வளமும் ஆக்கலாம்—வற்றவும் செய்யலாம்!!

*

சரோஜாமில், நல்ல துணிகளை நெய்கிறது — ஜப்பானிலிருந்து பேனாக்கள் வருகின்றன. இரண்டையும், மக்களுக்குக் கிடைக்கும்படிச் செய்பவை, வியாபாரததிலீடுபடும் கமபெனிகள். இது போன்ற பெரிய கம்பெனிகள் ஏராளம் உள்ளன.

வெளிநாட்டுப் பொருள்களை வரவழைக்கவும், உள்நாட்டுப் பொருள்களை விற்கவுமான பொறுப்புகள் இந்தக் கமபெனியின் வசமே உள்ளன. இவைகளை நடத்துவோர், பெரிய பெரிய பிரபுக்களாகும்! இந்தக் கம்பெனிகளில் பல, லிமிடெட் கம்பெனிகளாகும். ஒவ்வொரு கம்பெனியிலும், பல பங்குதரரர்கள் இருப்பார்கள். அந்தப் பங்குதாரர்களின் சார்பில், டைரக்டர்கள் இருப்பார்கள். டைரக்டர்களுக்கு மேல், மானேஜிங் டைரக்டர் இருப்பார். ஒரு கம்பெனியில், இலட்சம் பங்குகளிருப்பதாக வைத்துக்கொள்வோம்! 60,000 பங்குகளுக்கு உரியவர், மானேஜிங் டைரக்டராக இருப்பார். மீதிப் பங்குகளில் 20,000; பத்தாயிரம்; 5000 என்று வழங்கியவர்கள் டைரக்டர்களாயிருப்பார்கள். கம்பெனிக்கு ஆண்டு தோறும் நல்ல இலாபம் வருகிறது! நிறைய மிச்சம் வருகிறது—என்றால், இந்தக் கம்பெனியின் மதிப்பு உயரும்போது அந்தக் கம்பெனியிலுள்ள 'பங்கின்' மதிப்பும் உயரும். ஒரு பங்கின் மதிப்பு 10-ரூபாய் என்றால், இலாபம் அதிகம் வந்த பிறகு 10-ரூபாய் மதிப்புள்ள ஒரு பங்கு 15-ம் ஆகலாம், 50-ம் ஆகலாம்!!

பெத்தாச்சி செட்டியாரிடம், பணம் இருக்கிறது. அவர், ஏதாவது 'பிசினஸ்' செய்ய ஆசைப்படுகிறார். மார்க்கெட்டில் ஒரு கம்பெனி, நன்றாகப் பிசினஸ் செய்து வருவது தெரிகிறது. அதில் தன் பணத்தையும் போடும் ஆசை, அவருக்கு வரலாமல்லவா? புரோக்கர்களைப் பிடிக்கிறார்! கம்பெனியிலுள்ள பங்குகளை, வாங்க விரும்புகிறார். பேரம் நடத்தப்படுகிறது--பங்கு, கைமாறுகிறது. பெத்தாச்சியின் பங்கை இன்னும் கொஞ்சக் காலம் கழித்து ஹீராசந்த் வாங்க முனைகிறார். பங்குக்கு இலாபம் வருகிறது! கம்பெனி எங்கேயோ இருக்க, அங்கே பாடுபடுபவர்கள் யாராரோ இருக்க, அதன் பங்குகள் இப்படியெல்லாம நாடு முழுவதும் ஒவ்வோர் நாளும் விலை பேசப்படுகின்றன!! கம்பெனிகளுக்கு மட்டுமல்ல, பொருள்களை உற்பத்திசெய்யும் ஆலைகள் உள்ளனவே — அவைகளின் பங்குகளை வாங்கவும், இப்படிப் போட்டிகள் நடந்துகொண்டே உள்ளன. இதனைச் செய்யவே, 'பங்கு மார்க்கெட்' என்பது இருக்கிறது. ஷேர்களின் மதிப்பின பேரில், வெறும் சூதாட்டம் நடக்கிறது.

இருந்த இடத்தைவிட்டு எங்கும் போகாமல், டெலிபோனை மட்டும் வைத்துக்கொண்டே, இந்தப் பங்குகளின மீது "பேரம்" நடத்தி, இலாபம் காணும் இலட்சாதிபதிகள் உண்டு.

இப்படிப்பட்ட பேரங்களையும், வியாபார முறைகளையும், இந்தக்கிழமை நேரு அவர்கள் பம்பாயில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில், கண்டித்திருக்கிறார். உண்மையான செல்வம், இப்படி 'பங்கு மார்க்கெட்' பேரம் செய்வது அல்ல! உழைப்பில் இருக்கிறது!! பங்கு மார்க்கெட்டுக்கு ஓடுவதும்; அதன் மூலம் இலாபம் தேட நினைப்பதுமா, செல்வம்? அல்ல! அல்ல!! உழைப்பே, செல்வம். உற்பத்தியே செல்வம் என்று முழக்கமிட்டிருக்கிறார்.

நேரு அவர்கள் கூற்று நூற்றுக்கு நூறு உண்மை! செல்வம், பங்கு மார்க்கெட்டில், இல்லை. ஆனால், இன்று செல்வம் கொழிக்கும் இடமாக "பங்கு மார்க்கெட்" விளங்கக் காரணம் என்ன? வாணிபமும், உற்பத்தியும் தனியார் வசமிருப்பதுதான்! இலாபமும், வருவாயும் பெற்றுச் சீமான்களாக விரும்புவோர், இந்த மார்க்கெட்டுகளையே தேடி ஓடுகின்றனர்!! அப்படிப்பட்ட சீமான்களுக்கு, நேருவின் அரசு, அடைக்கலமும் ஆதரவும் தரக் காத்துக்கொண்டிருக்கிறது—"ஓவர் டிராப்டா", "ஷேர்களை வாங்கிக்கொள்ள வேண்டுமா?", என்றெல்லாம், ஓடோடியும் செய்கிறது.

இந்தப் போக்கின் காரணமாக விளைந்த ஒரு விபரீதம் தான், முந்திரா ஊழல். முந்திரா, பல கம்பெனிகளுக்கு மானேஜிங் டைரக்டர். ஒரு கம்பெனியின் முதலை எடுத்து, இன்னொன்றுக்குப்போடுவதும், அதிலிருந்து இன்னொரு புதுக் கம்பெனியை அமைப்பதுமாகப் பல திருவிளையாடல்களை செய்துகொண்டிருந்திருக்கிறார்.

அரிச்சுவடி மட்டுமே படித்த முந்திரா, ஒரு அரசே அல்லாடுமளவுக்குச் செய்திருக்கிறார்!!

அவருக்குப் பணமுடை ஏற்பட்டது—என்ன செய்யலாம் என்று பார்த்தார். அவருடைய கம்பெனிகள் நன்றாக நடந்தும், அவரது திருவிளையாடல்கள் காரணமாக, பணம வைத்திருக்கும் பெத்தாச்சி செட்டியார் போன்றவர்கள் அந்தக் கமபெனியின் 'பங்கு'களை வாங்க அஞ்சினார்கள். பங்குகளை விற்பதன மூலம், இன்னொரு கம்பெனிக்கு அதிபதியாக விரும்பிய முந்திரா, இந்திய அரசை நாடினார்! பண உதவி செய்யுங்கள் எனறார்! -இல்லாவிட்டால், என் கம்பெனிகள் முறியும்—அது நாட்டின் வாணிபத்தைப்பாதிக்கும் என்றார். டில்லியும், அவருக்கு, ஏழுமலைகளும் பத்மாக்களும் கட்டியதன் மூலம் சேர்ந்திருந்த இன்சூரன்ஸ் கம்பெனிப் பணத்தை எடுத்து, "உதவி"யிருக்கிறார்கள். ஒன்றரைக் கோடிக்கு அவரது கம்பெனியின் "ஷேர்"களை இன்சூரனஸ் கம்பெனியார் வாங்கினார்கள்!! உண்மையில், அந்த ஒனறரைக் கோடி ரூபாய் மதிப்புண்டா, அந்த "ஷேர்"களுக்கு என்று பார்த்தால், ஏமாற்றம் கிளம்பியது. ஊழல் நடந்திருப்பதாகத் தெரிய வந்தது-இப்போது, யார் முந்திராவுக்கு உதவ முன்வந்தது என்பதைக் கண்டுபிடிக்க விசாரணை நடக்கிறது.

நிதி மந்திரி கிருஷ்ணமாச்சாரி, டில்லி நிதிக் காரியதரிசி படேல், இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் சேர்மன் காமத், ரிசர்வ் பாங்க் கவர்னர் அய்யங்கார்—இப்படி, யார் இந்தியாவின் "நிதி"யை நிர்வகிக்கிறார்களோ, அவர்கள் தலையெல்லாம் உருளுகின்றன! இன்சூரன்ஸ் கார்பபரேஷன்காரர்கள், தவறு எங்கள் மீதில்லை, நிதிக்காரியதரிசி மீதுதான் என்கின்றனர்-அவரோ, நிதி மந்திரியின் சொற்படிதான், நடந்தேன் என்கிறார். நிதி மந்திரியோ, "முந்திராவின் திருவிளையாடல்களை முன்னமே அறிவேன். ஆயினும், வாணிபம் கெடாமலிருக்க, என் இலாகா இந்த முடிவுக்கு வந்தது", என்கிறார். இப்படி, வழக்கு, நடக்கிறது பம்பாயில்.

வழக்கைக் காணத் தினசரி ஏராளமான மக்கள் கூடுகிறார்களாம் பம்பாயில்! நீதிமன்றம் நிரம்பி வழிவதால், வெளியிலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் நிற்கிறார்கள். வழக்கின் நடவடிக்கைகளைக் கேட்பதற்காக, ஒலிபெருக்கி ஏற்பாடுகளும் செய்யப் பட்டிருக்கிறதாம்!!

"ஒலிபெருக்கியா வைப்பது?", என்று பம்பாயில் பேசிய நேரு தெரிவித்திருக்கிறார்! டி. டி. கே. யின் மானமும், நிதியை நிர்வகிப்போரின் தராதரமும், ஒலிபெருக்கி மூலம் வெளியாகிறதே என்கிற வேதனையும் — மக்கள் இவ்வளவு பரபரப்பும் ஆர்வமும் காட்டுகிறார்களே, நமது மானமன்றோ பறக்கிறது என்கிற சங்கடமும் தென்படுகிறது அவரது பேச்சில்!

ஆலையரசர்களை ஒருபுறம் வளர்த்துவிடவும், இன்னொரு பக்கம் சோஷியலிசம் பேசவுமான 'மாடல் சோஷியலிசம்' பேசப்படும் வரையில், இதெல்லாம் நடக்காமலிருக்காது.

அரசு, எல்லாத் துறையிலும் ஒரேவிதமான கொள்கையைப் பின்பற்ற வேண்டும். இன்சூரன்ஸ் கம்பெனியைத் தேசீயமயமாக்கியதுபோல், நாட்டின் பொருளாதார வளத்தைப் பெருக்கும் வகைகளையும் தன்வசமே வைத்துக் கொள்ள வேண்டும். ஆலைகளையும், பொருள்களை விநியோகிக்கும் கம்பெனிகளையும், சர்க்காரே ஏற்று நடத்தவேண்டும்.

அதுதான் சோஷியலிசம் — மக்களாட்சி.

அதைவிட்டு, ஆட்டுக்கும் தோழன் நரிக்கும் நண்பன் என்கிற கொள்கை யிருப்பதால்தான் கோளாறுகள் முளைக்கின்றன.

"முந்திரா ஊழல்", விசித்திரமானது; பிறகு, விளக்குவோம் அதனை.

அடிப்படையினைச் சரியாக வைத்துக்கொள்ளாது, இப்போது மானம் கப்பலேறுவதைக் கண்டு, குழப்பமும் கோபமும் கொண்டு என்ன பயன்?

தொழில் சாம்ராஜ்யம் ஏற்படுத்த முயன்றாராம், முந்திரா! துணிச்சலுடன் தெரிவித்திருக்கிறார்!!

அதற்குத் துணைபோயிருக்கிறார்கள், நிதியை நிர்வகிப்பவர்கள். அடுத்த கிழமைக்குள், யார் தவறுக்குக் காரணம் என்பது தெரியக்கூடும்.

நம்மைப் பொறுத்தவரையில், இப்படிப்பட்ட ஊழல்கள், இன்றுள்ள அமைப்பு நீடிக்கும்வரை, ஏற்படவே செய்யும். இன்று முந்திரா! இன்னொரு நாளைக்கு ஒரு சந்திரா ஏற்படமாட்டார் என்று யாரும் உறுதி கூற முடியாது!!

ஒலிபெருக்கியா!!—என்று கேட்பதைவிட, ஒலிபெருக்கி மூலம் ஒரு விசாரணையில் கவனம் செலுத்துமளவுக்கு, மக்களின் பார்வை ஆட்சியின் மீதுள்ளது என்பதை உணரவேண்டும்.

அதற்குத் தக்கபடி, சமூக அமைப்பை மாற்ற முயற்சிக்க வேண்டும். உழைப்பே செல்வம்! — எனச் சண்டமாருதமாக முழக்கமிடுவதும், உண்டு கொழுப்போருக்குப் பண வாய்க்கால்களைத் திறந்து விடுவதும், ஊழல்களைத்தான் வளர்க்கும்.

கௌகத்தியில் இந்த ஆண்டு இந்திய காங்கிரசின் மாநாடு நடைபெற்றதல்லவா? இந்த மாநாட்டுக்கு மொத்தம் கால் கோடி ரூபாய் அதாவது 25 - இலட்சம் ரூபாய் செலவாகியிருக்கலாமென்று ஒரு சேதி கூறுகிறது! இது தவிர, இம்மாநாட்டுக்கென அம்மாநில அரசாங்கம் சுமார் அரை கோடி ரூபாய் செலவழித்திருக்கக்கூடுமாம்!! காங்கிரஸ் சரித்திரத்திலேயே கூட்டம் மிகவும் குறைவாக வந்த மாநாடு, இது. மாநாடு முடிவதற்கு ஒரு நாள் முன்னதாகவே, வந்தவர்களில் பெரும்பாலோர் மூட்டை கட்டிக் கொண்டு கிளம்பி விட்டார்கள்.

சேலம் மாவட்ட தி. மு. க.

3-வது மாநாடு

1958 பிப்ரவரி 15, 16 சனி ஞாயிறு நாட்களில்
வேலூர் (சேலம்) 'அழகிரி' பந்தலில்
நடைபெறும்.

தலைவர் :	திறப்பாளர் :
கலைஞர் மு. கருணாநிதி எம். எல். ஏ.	நடிப்பிசைப்புலவர் கே. ஆர். இராமசாமி

அண்ணாதுரை, நாவலர் நெடுஞ்செழியன்
கழக முன்னணிச் சொற்பொழிவாளர்கள் கலந்துகொள்வர்.
இரு நாட்களிலும் கலை நிகழ்ச்சிகள் உண்டு.

இரு நாட்களுக்கும் நுழைவுக் கட்டணம்:—
ஆண்களுக்கு ரூ. 5, 3, 2, பெண்களுக்கு ரூ. 1.

பி. எம். குப்புசாமி	ப. இராமலிங்கம்	ஜி. பி. சோமசுந்தரம்
பொருளாளர்	செயலாளர்	வ. கு. தலைவர்

இரா. தாண்டவன்—தொண்டர் படைத் தலைவர்.

காஞ்சீபுரம், ௧௫, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

திராவிடநாடு
16—2—58 | வாரவெளியீடு 900 1-58 | விலை 16 காசு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 FEB 1958
MADRAS

வெகு நாட்களில்லை!

[கே. சி. முல்லைவழுதி]

நஞ்சூறும் பல்லுள்ள நாகத் திற்கும்
நலிவின்றி உயிர்வாழப் புற்று உண்டு;
நடுக்காட்டில் உறைகின்ற சிங்கத் திற்கும்
நடுக்கும்புலி சிறுத்தைக்கும் குகைக ளுண்டு.

எஞ்சாது எப்பொழுதும் எவ்வி னைக்கும்
எள்ளளவும் பிறழாமல் மறந்தி டாமல்
பஞ்சாங்கம் பற்றுகின்ற 'புனிதா!' நீயேன்
படுத்திடவும் இடமின்றி உழலு கின்றாய்?

அஞ்சாது எண்ணிப்பார்! நினைப்பில் கூட
அடிமைக்குணம் ஏனுனக்கு? உன்றன் முன்னோர்
வெஞ்சமரில் வீரத்தை விளைத்தார்; நீயோ
விழித்திடவும் உயிர்த்திடவும் அஞ்சு கின்றாய்!

பஞ்சாகிப் போனதுவோ உன்றன் வீரம்?
புகையாகிப் போனதுவோ உன்றன் வாழ்வு?
பண்பாடு தமிழருக்கென் றென்று உண்டு;
பண்பட்ட சிலமொழியுள் தமிழ்தான் முன்னே!

இனியேனும் விழித்தெழுந்து வீரம் காட்டு!
இளிக்கும்மொழி இந்தியைநீ விரைந்து ஓட்டு!
கனியமுதாம் கற்கண்டாம் தமிழின் முன்னே
கரட்டுக்காய் இந்திமொழி காண்பதா? சீ!

காகிதப்பூ மணத்ததில்லை; எட்டிக் காய்கள்
கடுகளவும் இனித்ததில்லை; அலறும் ஆந்தை
கோகிலமாய் இசைத்ததில்லை; இந்திப் பாடை
கவின்தமிழ்முன் காணிடினும் பிணத்தின் வாடை!

தமிழ்மொழியை நம்பினவர் தாழ்ந்த தில்லை;
தரங்கெட்டு இகழ்ந்துரைத்தோர் வாழ்ந்த தில்லை;
இமிழ்செய்து எக்களிக்கும் இந்திப் 'பூதம்'
இடிப்பொடிந்து ஓடவெகு நாட்க ளில்லை!

கேட்டீரா! சேதி!

வெள்ளையன் போன பிறகு இந்திய உபகண்ட மக்களுக்கு சுதந்திரம் கிடைத்ததோ கிடைக்கவில்லையோ, இரயில்களுக்கு அபரிமிதமான சுதந்திரம் கிடைத்திருக்கிறது என்பது மட்டும் நூற்றுக்கு நூறு உண்மை. அப்பப்ப! எத்தனை இரயில் விபத்துக்கள்—எவ்வளவு ஆபத்துக்கள்!! இதுபோன்ற விபத்துக்களை முன்கூட்டியே எச்சரிக்க, ஒரு புதிய கருவியைக் கண்டுபிடித்திருப்பதாக, டில்லியிலுள்ள இரயில்வே ஆராய்ச்சி நிலையம் அறிவிக்கிறது. அதன் பெயர் "டெலிசின்டிகேடராம்" இதைப் பொருத்திவிட்டால், அபாயம் வருகிறதென எச்சரிக்க, இரயில் என்சினில் ஒரு மணி ஓயாது அடித்துத் தெரிவிக்குமாம்.

*

பஸ் வண்டிகள், கார்கள் முதலியவை மனிதனுக்கு உதவி செய்யும் சாதனங்கள். ஆனால், அவைகளைப் பலர் அப்படிக் கருதாமல், தைரியத்தைச் சோதிக்கும் கருவிகளாகப் பயன்படுத்துகிறார்களல்லவா? 60 மைல், 50 மைல் என்று ஓட்டுவதால், ஏராளமான விபத்துகள் ஏற்படுகிறதல்லவா? இதைத் தடுக்க சென்னை அரசு ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறது இந்த வாரம். அரசாங்கத்தின் எல்லா இலாகாக்களையும் சேர்ந்த 'கெஜட்' பதிவு பெற்ற அதிகாரிகள், மிதமீறிய வேகத்தில் செல்லும் பஸ்-கார்-லாரி முதலியவைகளின் நம்பரைக் குறித்து ஆங்காங்கே உள்ள போக்குவரத்து அதிகாரிகளுக்குப் புகார் செய்ய வேண்டும் என்றும், அந்த அதிகாரி இந்தப் புகார்களின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. இந்த உத்தரவைச் சர்க்கார் அதிகாரிகள் ஒழுங்காக நிறைவேற்றத் தொடங்கினால், சென்னையில் ஓடும் சர்க்கார் பஸ்களில்தான், ஏராளமான வழக்குகள் கிடைக்கும்!!

*

எகிப்து நாடும், சிரியா நாடும் ஒன்றாக இணைந்து வாழுவது என்கிற முடிவுக்கு வந்திருக்கின்றன. இந்த இரண்டு நாடுகளும், இஸ்லாமியர்கள் அதிகம் உள்ள நாடுகள். மத ஒற்றுமையின் காரணமாக, மத்திய கிழக்கில் இந்த அதிசயம் நிகழ்ந்திருக்கிறது. இது, எந்த அளவுக்கு வெற்றியளிக்கப் போகிறது என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

*

பத்மவிபூஷண், பாரதரத்னம் போன்ற பட்டங்களை ஒவ்வோராண்டும் இந்தியக் குடியரசுத் தலைவர் அளிக்கிறாரல்லவா? இந்த ஆண்டு பத்மவிபூஷண் என்கிற பட்டம் காங்கிரஸ் சேவாதளத்தைச் சேர்ந்த சர்திகர் என்பவருக்கு வழங்கப்பட்டது! அவர், அப்பட்டத்தை, "இந்தக் கௌரவத்துக்குப் பாத்திரமாகும்படி நான் செய்யவில்லை என்று என் மனச்சாட்சி கூறுகிறது. ஆகவே, இந்தாருங்கள்" என்று திருப்பி அனுப்பியிருக்கிறார்.

*

தோழர் சி. பா. ஆதித்தன் எம். எல். ஏ. இன்னும் சிலரும் சேர்ந்து "தமிழர் கட்சி" என்று ஒரு புதிய கட்சியை அமைத்துள்ளனர். வடவர் ஆதிக்கத்திலிருந்து, தமிழ்நாடு பிரியவேண்டும் என்பது, இக்கட்சியின் கொள்கையென்று தெரிய வருகிறது. பிரிவினைத் திட்டம், இக்கட்சியின் முக்கிய நோக்கம் என்பது கேட்டு, அனைவருக்கும் மகிழ்ச்சியே பிறக்கும். சட்டசபையிலும் இக்கட்சி, தனித்து இயங்குமென்றும் மொத்தம் 4-எம். எல். ஏ.-க்கள் உள்ளனர் என்றும் தெரிய வருகிறது.

சம்பத் - தாராசிங் சந்திப்பு

பார்லிமெண்டு உறுப்பினரான நமது ஈ. வெ. கி. சம்பத், பிப்ரவரி 3-ந் தேதி, டில்லியில் சீக்கியர் தலைவர் மாஸ்டர் தாராசிங்கைச் சந்தித்திருக்கிறார். இந்து மத வெறியையும், வடநாட்டு இந்தி வெறியையும் எதிர்த்துப் போராடிவரும் முதுபெருங் கிழவரான தாராசிங், நமது சம்பத்தோடு உரையாடுவதற்குப் பெரிதும் மகிழ்ந்தாராம். நமது கழக வளர்ச்சிகளைப் பற்றியும் நோக்கங்களையும் எடுத்துச் சொன்னபோது, ஆர்வத்தோடு, கேட்டாராம் தாராசிங். "உங்கள் கழக நடவடிக்கைகளைப் பற்றிக் கொஞ்சம் கொஞ்சம் எனக்கு, ஏடுகளில் கிடைப்பதுண்டு." என்று கூறிய தாராசிங், உங்கள் தலைவர்கள் பஞ்சாபுக்கு வர வேண்டும் என்று தெரிவித்துக் கொண்டாராம். பார்லிமெண்டு கூடியிருக்கும் சமயத்தில், இதுபோன்ற பல தலைவர்களையும் சந்தித்தும், பிறருடன் உரையாடியும், நாம் யார் - நமது இலட்சியம் என்ன என்பதை விளக்கி வருகிறாராம் சம்பத். வெளிமாகாணங்களிலுள்ள எம். - பி. - க்கள், சம்பத் மூலம் நம்மைப்பற்றி அறியப் பெருத்த ஆவல் காட்டுகிறார்களாம். அதன் காரணமாக டில்லியில் நமது ஆங்கில ஏடான "ஹோம் லண்டு"க்கு, நல்ல கிராக்கியும், பார்க்கவேண்டுமெனும் ஆசையும் அதிகரித்து வருகிறதாம்.

"கவர்னர்"

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [16—2—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 31

ஆண்டு ஒன்றுக்குப் பத்து இலட்சம் செலவழிக்கப்பட்டு 'கவர்னர்' ஒருவர் அமர்த்தப்படுகிறார்! அவருக்கென, ஏதாவது முக்கிய வேலைகள் உள்ளனவா, என்றால் கிடையாது என்பதை எல்லோருமே ஒப்புக்கொள்ளுகின்றனர்!!

"இதென்ன வேலை, டீ பார்ட்டிக்குப் போவதும், விழாக்களுக்குச் செய்தி அனுப்புவதும் தவிர, என்ன இருக்கிறது இவ்வேலையில்" என்று முன்னாள் சென்னைக் கவர்னரான பிரகாசாவே, கூறியிருக்கிறார். கவர்னர் நிர்வாகத் தலைவர் என்று குறிப்பிடப்படுகிறார், அந்தத் தலைவர் செய்கிற பணியினையோ, வேலைகளையோ யாரையாவது கேட்டால், தக்க பதில் தர இயலாது.

"மாகாண மந்திரி சபை, மத்யசர்க்காருக்கு எதிராகப் போனால், அப்போது கவர்னர் குறுக்கிட்டு, நிர்வாக ஆட்சியை ஏற்பார்" என்று கூறப்படுகிறது. இந்தக் காட்சியினை கேரளத்தில் கண்டோம். எப்படி, வெள்ளையன் காலத்தில் தன்னுடைய பிரதிநிதிகளாக 'கவர்னர்'களை அனுப்பினரோ, அதுபோலவே, இப்போதும் டில்லிசர்க்கார் தனது 'தூதர்களாக' இந்தக் கவர்னர்களை நியமிக்கிறது.

ஆரம்ப முதலே இக்கொள்கையினைக் கண்டித்து வருகிறோம், நாம். வேண்டுமென்றே தனது பிடியினை, மாநிலங்களில் செலுத்த டில்லி செய்துகொண்ட ஏற்பாடு என்றும் எடுத்துரைத்து வருவது அனைவருக்கும் தெரியும். அதனை ஒட்டியே, சட்டசபைக் கூட்டத்தொடர் பின் முதல் நாள் நிகழ்ச்சியன்று, தி. மு. க. சட்ட சபையினர், சபைக்குப் போகாமல் தங்களது எதிர்ப்புணர்ச்சியைக் காட்டிக்கொண்டிருக்கின்றனர்.

பணமில்லை, பணமில்லை என்று சதா பாடிக்கொண்டிருக்கும் ஒரு அரசு, பத்து இலட்சம் ரூபாயை ஒரு பதவிக்காகக் கொட்டி அழிக்கிறதென்றால், அது கொடுமையினும் கொடுமையாகும். அதிலும், அப்பதவி உப்புச்சப்பற்றது, உருவான காரியங்களுக்காக இருப்பதல்ல என்று கூறிக்கொண்டே, இவ்வளவு ரூபாயையும் வீணடிப்பதென்றால், பெரிய வெட்கக்கேடன்றோ அது!!

கவர்னர், சட்டசபையைத் துவக்கிவைத்து நிர்வாகத் தலைவர் என்கிற முறையில் பேசியிருக்கிறார். அந்தப் பேச்சைப் படிப்போருக்கு "இதற்கு ஏன் ஒரு கவர்னர்?" என்று நிச்சயம் கேட்கவே செய்வர். யாரோ அதிகாரிகள் தயாரித்துக் கொடுத்ததை, அப்படியே அவர் படித்திருக்கிறார். ஆகவே, மேதகு அவர்கள்மீது குறை சொல்லவில்லை, நாம்! ஆயினும், அப்பேச்சு, எப்படியிருக்கிறது — என்ன புதுமையைச் சொல்லியிருக்கிறார் — என்று எண்ணிப் பார்த்திடின், விந்தையும் வேதனையும் எழும்.

மக்களாட்சி—குடியரசு—மக்களின் தீர்ப்பே நாட்டின் சட்டம், என்றெல்லாம் பேசிக்கொண்டு, அதே சமயம் இதுபோன்ற கவர்னர்களையும் நியமிப்பது என்பது ஜனநாயகத்தின் அம்சங்களைக் கேலி செய்வதாகும். இந்தக் கருத்தினை நாம் மட்டுமல்ல பலதரப்பட்டவர்களும் எடுத்துச் சொல்லியே வருகிறார்கள். எனினும், விடாப்பிடியாக, டில்லி இப்பதவிகளை வைத்திருக்கிறது. டில்லிக்குத் தாளம் போடும், மாநில ஆட்சியும், தனது வரிப் பணத்தில் பல இலட்ச ரூபாய்களைக் கொட்டி அழுது, இப்பதவியைக் காப்பாற்றி வருகிறது.

ஏனோ, இது!—என்று, மக்கள் சிந்திக்காமலில்லை. அதனால்தான், மக்களின் தூதர்களான நமது உறுப்பினர்கள், தங்கள் எதிர்ப்புணர்ச்சியை, சட்டசபைக்குப் போகாததன் மூலம் காட்டிக்கொண்டுள்ளனர். ★

தறி வளர!

நாடெங்கும் கைத்தறி வார விழா நடைபெறுகிறது.

கூட்டுறவு சங்கங்கள், தத்தமது வாய்ப்பு வசதிக்கேற்ற வகையில், இதனைக் கொண்டாடுகிறார்கள்.

அரசியல் தலைவர்களும், அமைச்சர்களும், இவ்விழாக்களில் கலந்துகொண்டு உருக்கமாகப் பேசுகிறார்கள்.

டில்லி அமைச்சர்களும், அன்பும் ஆதரவும் கனிய, செய்திகள் விடுத்துள்ளார்கள் மக்களுக்கு.

இது மட்டும் போதாது என்று நாம் பல காலமாக வலியுறுத்தி வருவது, அனைவருக்கும் தெரியும். வேட்டி - சேலை - போன்ற சில ரகங்கள், தறித் தொழிலுக்கென ஒதுக்கிட வேண்டும் என்றும் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகிறோம்.

இது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இந் நிலையில், வழங்கப்பட்டு வரும், "ரிபேட்டை"க் குறைச்சவும், டில்லி நடவடிக்கை எடுத்து வருகிறது.

இது கூடாதெனச் சொல்லப் போவதாக, சென்னை அரசும் சொல்லி வருகிறது.

ஆதரவு, உதட்டு அளவோடா! செயலாகுமா!! —என்பதைப் பொறுத்தே, தறி வளர்வதும் சாவதும் இருக்கிறது.

ஆண்டுக்கொரு முறை கைத்தறி வாரம் என்று கொண்டாடுவதும், அதில் அதிகாரிகளும் அமைச்சர்களும் கலந்துகொண்டு கைத்தறியின் அருமை பெருமைகளைப் பற்றிப் பேசுவதும் கைத்தறி வளர்ச்சிக்கும் அதில் ஈடுபடும் நெசவாளர்களுக்கும் வழி வகுத்ததாகி விடாது.

காலம் முழுவதும் கைத்தறியே கதி என்று வாழும் நெசவாளி கட்டக் கந்தைக்கே வழியின்றி வாடுகிறான் — குடிக்க அரை வயிறு கஞ்சிகூடக் கிடைக்கவில்லையே என்று கலங்குகிறான். ஒண்டக் குடிசை இல்லையே என்று ஓலமிடுகிறான். கைத்தறி நெசவாளியின் இந்த அவலநிலைகள் மாறக் கைத்தறி வார விழா நிகழ்ச்சிகள் பயன்பட வேண்டும்—வழி காண வேண்டும். வறிதே வார விழாக் கொண்டாடி வாழ வகையுள்ளோர் வரவேற்பும வாழ்த்தும் பெற்றுவிடுவதால் நெசவாளியின் குறை குறைந்து விடாது—தீர்ந்துவிடாது. இதனை ஏழைபங்காளர் நாங்கள்தான் என்று கூறிக்கொள்ளும் ஆள்வோர் உணர்ந்து செயலாற்ற வேண்டுமென்பதே எமது விருப்பமும் வேண்டுகோளுமாகும். ★

உருவகம்

'சிலையும் சிற்பியும்'

கல்:- ஐயா! ஐயா!

சிற்பி:- யாரது......கல்லா.....ஏன் சிரிக்கிறாய்?

கல்:- சிரிக்காமல் என் செய்வது ...உம்மைப் பார்த்தால்......

சிற்பி:- பரிதாபமாயிருக்கிறதா...? ஏன் மீண்டும் சிரிக்கிறாய்?

கல்:- ஆமாம், உலகத்திலுள்ளோர் அனைவரும் 'கல்' என்றாலே இரக்கமற்ற, பண்பற்ற, பொருள் என்று இயற்கையாகவே எண்ணிக்கொண்டிருக்கும் என்னை, உயிர் கொடுத்து —உயர்ந்த பொருளாக்கி, காவியமே பாட வைப்பது யார்? அழகாடும் வண்ணச் சிலை, செந்தமிழ்ச் சிந்து பாடும் பொற்பாவை, வில்லெழுதி — கயல் எழுதி—நுதல் எழுதி--எள்ளுப் பூ எழுதி — வள்ளைத் தண்டு எழுதி — கொடி எழுதி — வாழைத் தண்டெழுதி கமுகெழுதி...அப்பப்பா!......

சிற்பி:- ஏன் மேல் மூச்சு...சொல்; ...பேசு...பேசு......

கல்:- சிற்பியே! உமது திறமையால் நாவலரும், பாவலரும், அறிஞரும், கலைஞரும் போற்றும் என்னைப் பாமரரும் மயங்கும் படி செதுக்குகிறீர்......; ஆனால்......புகழ்? ஏன் புருவத்தை நெரிக்கிறீர்?

சிற்பி:- கல்லாயிருந்த உன்னைப் பேசும் சிலையாக்கி உயிர் கொடுத்தவன் நான். எனக்கில்லாத புகழ் உனக்கு என்கிறாயே ...அதைக் கேட்டுத்தான் புருவத்தை நெரித்தேன்! பேதையே! கவியாத்த புலவனுக்கில்லாதபெருமை, அதைக் கேட்டு ரசிக்கிறவனுக்கு உண்டென்கிறாயே? சரியா? பாடுபடும் உழவனுக்கில்லாத உயர்வு நிலச் சொந்தக்காரனுக்கு உண்டென்கிறாயா......?

கல்:- அவர்கள் தொழிலும், நிலையும் வேறு! உங்கள் நிலை வேறு! சிற்பியே! வேண்டுமானால் நாளை என்னைப் பிரதிஷ்டை செய்யும் கோயிலுக்கு வாரும், நீங்கள் எழுப்பிய வினைக்களுக்கு விடை கிடைக்கும்.

சிற்பி:- சிரிப்பு வேண்டாம்; நாளை சந்திப்போம்...!

கல்:- நாளைக்கா......; பரிதாபம்! என் அருகில் நெருங்க முடியாதே உம்மால்...! சரி, சரி வருகிறேன் வணக்கம்!

•

சிற்பி:- ஐயா, உம்மைத்தான்...... இதுதானே "குமரிக் கோயில்"

பக்தன்:- ஆமாம், நீர் யார்?

சிற்பி:- அதோ நீங்கள் தெய்வமாக வழிபடுகிறீர்களே, அந்தப் பத்தினித் தெய்வத்தை வடித்தெடுத்த சிற்பி நான் தான்...!

பூசாரி:- யாரது? யாரய்யா...நீ...

சிற்பி:- நான்...நான்தான் நீங்கள் வணங்கும் அருள் மங்கையைச் செதுக்கியவன்...பெயர்...

பூசாரி:- சரி சரி! வெளியே போய் நில்!

சிற்பி:- என்ன அநீதி! கேட்பாரற்றுக் கிடந்த கல்லுக்கு உயிர் கொடுத்து, பேசும் பதுமையாக்கிய எனக்கு அருகில் நெருங்க உரிமையில்லையா? எவ்வளவு கொடுமையான உலகம்! பொருளுக்கு உரிமையாளன் கதற, கன்னக்கோல் கொண்டு பறித்துக் கொண்டவனைப் பார்த்துப் பரிந்து பேசுவது போலல்லவா இருக்கிறது!

[கூட்டம் கலைகிறது. ஆனுக்கு அருகில் நின்றிருந்த சிற்பி சிலையருகே செல்கிறான்.]

சிலை:- என் தெய்வமே, ஏன் கண்ணீர்?

சிற்பி:- சிலையே! நீ செப்பியது முழுதும் உண்மை!

சிலை:- உண்மைமட்டுமல்ல, உலக நியதியும் அப்படித்தான் போலும்! முதலில் எல்லாச் சிற்பிகளையும் ஒன்று சேர்த்து "மாநாடு" கூட்டும்!

சிற்பி:- எதற்கு மாநாடு? பூசாரிகளை விலக்கவா!

சிலை:- இல்லை, விளக்கம் தா! சிலையைச் செதுக்கின சிற்பிகளும் சிலையருகே நெருங்கலாம் உரிமையாக்கலாம், என்ற எண்ணத்தை ஊட்டிய, உலகறிய முழக்கம் செய்யுங்கள்! முரசு கொட்டுங்கள்!! உயர்வு உங்களுக்கே! உரிமை உங்களுக்கே! புகழ் உங்களுக்கே! வெற்றி உங்களுக்கே!

சிற்பி:- அருமை! அருமையான திட்டம்! நான் படைத்த சிலையே! தான் பெற்ற குழந்தைக்குச்சிறுபருவத்தில் தாயே மரியாதை செய்வதுபோல், உன் யோசனைக்கு நானும் நன்றி கூறுகிறேன்! வருகிறேன்!

—கோபி. கலிங்கன்.

வடிவுக்கு வாய்த்த மணாளன்!

"இரமணி தூங்கிவிட்டாளா?" என்று தன் கடைக்குட்டியைப் பற்றி கேட்டுக்கொண்டே வீட்டிற்குள் நுழைந்தார் சோமசுந்தர முதலியார். வழக்கப்படி கையிலே ஒரு கட்டு 'ஆபீஸ் பைல்' இருந்தது.

"உம்......அவளும் தூங்கிவிட்டாள்; சின்னவனும் தூங்கிவிட்டாள். நீங்க வாங்க, ஊரடங்கிற வேளைக்கு, குழந்தைகள் முழிச்சிகிட்டு இருக்கும்!" என்று கடுகடுத்த மூஞ்சியோடு கூறினாள் அவருக்கு வாய்த்த அருமை மனைவி உருக்குமணி அம்மாள்.

முதலியாருக்கு அவள் கோபத்தின் காரணம் விளங்கவில்லை. காலையில்தான் செலவுக்குப் பத்து ரூபாய் பணம்கூடக் கொடுத்துப் போனார். இருந்தும் உருக்குவுக்கு ஏன் கோபம்?

"ஏன் ஒரு மாதிரியா பேசுறே? பெரியவன் எங்கே?"

"பெரியவனா...அதான் பெரிய வினையாயிற்றே! நீங்க ஒன்பது மணிக்கு வரீங்க. அவன் பத்து மணிக்குத்தான் வருவான். அப்பாவுக்கு பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கே!"

"என்னடியம்மா அவ்வளவு கோபம்? இபபோ என்ன நடந்திடுத்து?"

"என்னத்தை நடக்கணும்? இனி ஒன்றும் நடக்க வேண்டியதில்லை. நானுந்தான் தினம் இளிப் பிள்ளைக்குச் சொல்றமாதிரி சொல்லிக்கிட்டு வரேன். காலாகாலத்திலே நடத்த வேண்டியதை நடத்தணும். பையனுக்கு வயசாயிண்டு வருது. அவனோடொத்த பிள்ளைக்கெல்லாம் கால் கட்டு போட்டாச்சு. எதையாவது ஒன்றைப் பார்த்து முடியுங்கோண்ணு; நீங்க நான் சொல்றதை காதாலாவது வாங்கிக்கிறீங்களா? உம்......உங்களைச் சொல்லி என்ன பலன். இருக்கிற வகையோட நான் இருந்திருந்தா என் பிள்ளைக்கு இந்தக் கதி வருமா?"

"ஏய்...இரு...இரு...என்னமோ நீ பாட்டுக்குப் பேசிக்கொண்டே போனால் என்ன அர்த்தம். இப்போ என்ன சொல்றே? கந்தசாமி கல்யாணத்திற்கு இன்னைக்கு என்ன திடீர் அவசரம் வந்துடுத்து?"

"என்ன அவசரமா? அதோ மேஜை மேலே பத்திரிகை கிடக்கு......" என்று கூறிக் கொண்டே சமயலறைக்குள் போய் விட்டாள் உருக்கு.

ப. வாணன்

அவளுடைய திடீர் தாக்குதலிலே வாயடைத்துப் போன சோமசுந்தர முதலியார் மேஜை மேல் கிடந்த பத்திரிகையை எடுத்துப் பார்த்ததும்தான், அவளுடைய கோபத்திற்கான காரணத்தைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

தஞ்சாவூரிலே இருக்கும் அவருடைய சகபாடி மகனுக்கு அடுத்த வெள்ளிக்கிழமை திருமணமாம். அதற்கு வந்த அழைப்பிதழ் அது. அவருடைய பெரிய பையன் கந்தசாமிக்கு ஒரு வயது இளையவன்தான் இப்போது திருமணமாகப் போகிறவன். உருக்குவிற்கு கோபம் வராமல் என்ன செய்யும்? தன் தங்கச்சி பையனுக்கு முதலில் கல்யாணம். அதுவும் கொஞ்சம் முயன்றிருந்தால் கந்தசாமிக்கேக்கூட அந்தப் பெண்ணை முடித்திருக்கலாம்! ஆகவேதான் ஆத்திரம் பொங்கி வந்தது அவளுக்கு.

"வீட்டிலே இருக்கிறவ ஏதாவது சொன்னால், அதைக் கொஞ்சமாவது மதிக்கிற ஆம்பளையாயிருக்கணும்; பேசலாம். நாம் எதைச் சொன்னாலும் அசை கொடுத்துக் கொண்டே இருந்தால் எனன செய்வது? நாளைக்கு நாலு பேர் என்ன சொல்வார்கள். தெரிஞ்சவங்க அறிஞ்சவங்க முகத்திலே எப்படி விழிக்கிறது. அப்பா இருக்கிறதுக்கு மேலே பிள்ளை இருக்கு. குடித்தனத்திலே யாராவதுநாம்சொல்வதைக் கேட்டால்தானே?

போன வருஷம் மேட்டூர் சாமிநாத முதலியார் வந்தாரே. அவர் ஆவடி காங்கிரஸ் பார்க்கவா வந்தாரு, அப்படின்னு அவர் மாத்திரம் வந்திருப்பாரே! கூட அமிர்தத்தையும் எதுக்கு அழைத்து வரணும்? ஏதோ பிள்ளை பொண்ணை பார்க்கட்டும்; பொண்ணு பிள்ளையைப் பார்க்கட்டும் எனறுதானே அழைத்து வந்தார். பொண்ணோ இலட்சணமாத்தான் இருந்தாள. அப்பவே ஒரு வார்த்தை பேசுங்கள் என்றேன். "பையன் படிக்கிறான், பார்க்கலாம்" என்று தட்டிக் கழித்தீர்கள். இப்படி இருந்தால் குடித்தனம் எப்படி விளங்கும்?" என்று சரமாரியாகப் பேசிக்

கொண்டிருந்தாள், சமையலறையிலிருந்தபடியே.

பத்திரிகையைப் பார்த்தது முதல் முதலியாருக்கும் கொஞ்சம் மன ஆட்டம்தான். உருக்கு கூறுவது முழுவதும் தப்பல்ல. ஊரிலே நாலு வீட்டிலே நடக்கிற மாதிரி காலாகாலத்திலே ஒரு முடிச்சைப் போடவேண்டியதுதான். ஆனால் போன ஆண்டு அதைப் பற்றி நினைக்க அவருடைய நிலைமை இடம் கொடுக்கவில்லை. அதோடு பையன் காலேஜ் படிப்பை முடித்தவுடன்தான கல்யாணப் பேச்சை எடுக்க வேண்டும் என்பது அவருடைய எண்ணம். அரசாங்க உத்தியோகத்திலே, அதிலும் குமஸ்தாவாகவேலை பார்க்கும் எவன்தான் தன் குழந்தைகளைக் கல்லூரிச் சுவருக்குள் அனுப்ப முடியும்? ஏதோ அதிர்ஷ்டவசமாக நான்காண்டுகளுக்கு முன் அவருக்கு ஹிந்து மத பரிபாலன இலாகாவில் 'ஹெட்கிளார்க்' ப்ரமோஷன் கிடைத்து, சென்னைக்கு மாற்றினார்கள். அந்த நேரத்தில் கந்தசாமியும் எஸ்.எஸ்.எல்.சி., பாஸ் செய்துவிட்டு காலேஜ் படிப்புக்கு ஆவலோடு இருந்தான். தனக்குத்தான் அந்தப்பாக்கியம் கிடைக்காவிட்டாலும் அவனுக்காவது கிடைக்கட்டுமே என்று அவனைக் கல்லூரியில் சேர்த்துவிட்டார், ஹெட்கிளார்க் கானதில் கிடைத்த கொஞ்சம் அதிக வருவாய் இந்த விதத்திலே செலவானது. இருந்தாலும் உருக்கு வருத்தப்படவில்லை. உற்சாகமாகவே குடித்தனத்தை நடத்தி வந்தாள்.

ஆனால் ஓரிரு ஆண்டுகளுக்குள்ளேயே அந்த உறசாகம குறைந்து விட்டது. அவடுைத்த பிளளைகளுக்குக் கல்யாணக் கடுதாசி வர ஆரமபித்ததே அதற்குக் காரணம. கந்தசாமி இணடர் பாஸ் பண்ணியதுமே, உருக்கு அவன் திருமணப் பேச்சை துவககிவிட்டாள. சோமசுந்தரமும அவளுக்கு ஏதாவது சமாதானம் சொலலிக் கொண்டே வந்தார். ஆனால் இனிமேல் சமாதானம சொல்ல வேண்டிய அவசியமில்லை என்றே, அன்று அவருக்கும் பட்டது. பையன இந்த ஆண்டு பி. ஏ., பரிட்சை எழுதபபோகிருன; மே மாதத்தில் முடிவு வந்துவிடும்; ஜூன மாதததில் திருமணத்தை முடித்துவிடலாம்என்றுகணக்குப் போட்டார். ஆகையினாலேதான் சாப்பிடும்போது "இப்போதாவது சொல்லுங்கள். தஞ்சாவூருக்குப் போயிட்டு வரும்போது அப்படியே திருவாருக்கும் போய், பார்வதி வீட்டுக்குப் போய்வரலாம், அவள் பெண் இலட்சுமியை பார்த்துவிட்டுவரலாம்" என்று உருக்கு கூறியதற்கு அவர் சரிஎன்று ஒத்துக் கொண்டார்.

தன் யோசனையை அவர் ஒத்துக் கொண்டதுமே உருக்குவின் பேச்சே மாறிவிட்டது.

"நான் ஏதேதோ உளறினேன்னு நினைச்சுச்சிகாதீங்க, நீங்க ஆபீஸ் வேலையிலே எல்லாத்தையும் மறந்துடுறீங்க" என்று பரிவோடு பேசி, பாலை ஆற்றிக்கொடுத்தாள். சோமசுந்தரத்திற்கு அவள் மாற்றத்திற்குக் காரணம் தெரியும். "உருக்கு! நீ எதுக்குக் கோபப்படுகிறேன்னு எனுக்குத் தெரியாதா? எல்லாம் இந்த ஆனி, ஆவணியிலே முடிச்சிடலாம! கவலைப் படாதே!" என்று அவள் மனதில் பாலை வார்த்தார். கணவனும, மனைவியும் அனைப் பரிமாறிக் கொண்டிருக்கும நேரத்திலேதான் கந்தசாமி வந்து சேர்ந்தான.

"ஏம்பா, நம்ப நாயர் டென்னிஸ் விளையாடிக்கொண்டே 'ஜஸ்டிஸ்' பத்திரிகைக்கு தலையங்கம் சொல்லுவாராமே!" என்று உள்ளே நுழையும்போதே தன் கழக ஆர்வத்தைக் காட்டிக் கொண்டு வந்தான் அவன். அவர் வேலைக்குச் சேர்ந்த நாளிலேயிருந்தே ஜஸ்டிஸ் கட்சியிலே ஆர்வம் கொண்ட சோமசுந்தரம் பையனின் பற்றுதலைக் கண்டு மகிழ்வோடு,

"அது பெரிதில்லை அப்படி அவர் சொல்லும தலையங்கத்தை படித்துப் பார்க்கணுமே! ஆகா! எவ்வளவு அருமையான கருத்துக்கள்; அழகான நடை! இந்தக் காலத்திலே எழுதுகிருனுங்களே. இது இங்கிலீஷா? சேச்சே..."

"நீங்க நாயர் பேசிக் கேட்டிருக்கிங்களா?"

"ஒரு தடவை கேட்டிருக்கிறேன. அபபொழுதுதான நான வேலைககு சேர்ந்த சமயம. எழுமபூரில் இபபோது டி. பி. ஆஸ்பத்திரி இருககிறதே, அந்த இடத்தில், என்ன தெளிவாகப்பேசினர் தெரியுமா? அப்பொழுது இருந்த செட்டே வேறே. தியாகராய செட்டி, நாயர், இவர்களைப்போல இந்தத் திராவிட சமுதாயத்திற்கு உழைக்க யாரால் முடியும்? அவுங்கபோட்ட அஸ்திவாரத்தில்தான் இன்று நாமெல்லாம் நிற்கிறோம். முப்பது ஆண்டுகளுக்கு முன்னல் இவர்களெல்லாம் உழைக்காமல் இருந்திருந்தால், நம்மையெல்லாம் இன்றைக்கு உண்மையிலேயே நாட்டை விட்டு துரத்தி இருப்பானுங்க!" அது சரி. ஏனப்பா இவ்வளவு நேரம்?"

"இன்றைக்கு ஒரு புதிய வாக்குவாதம். தாலி கட்டுவது அவசியமா (?) அது தமிழர் பண்பாட்டுக்குகந்ததா (?) எனபதுபற்றி. தாலி அடிமையின் சின்னம். பெண்களின சுதந்தரத்தைப்பறிக்கிறது என்பது என் வாதம. சில பேர் பழந்தமிழாகூடத் தாலிகட்டினர்; தாலி இல்லாவிட்டால் மணமானவள எனபது எபபடி தெரியும் என்று வாதிட்டனர். மணமனல் ஒரு போர்டு கூடக் கட்டி கழுததில தொஙகவிடச் சொல்வார்கள் போலிருககிறது!" என்ருன் கந்தசாமி.

> கடன் படுவது வறுமை காரணமாக என்று கூறுவதற்கில்லை. பெரும்பாலான கடன்காரர் செல்வர்களே என்னலாம். அவர்கள் தம்மைச் செல்வர்களாகக் காட்டிக்கொண்டு சமூகத்தின் கண்முன் தம் மதிப்பை காக்க எண்ணியே வருவாய்க்கு மேற்பட்டுச் செலவு செய்து கடன்படுகின்றனர். மக்கள் பண்பு இப்பகட்டால் அளக்கப் படுவதால் இப்போலி அளவைப் பெறப் பலரும் பணத்தைக் கடன் வாங்கிச் செயற்கை வாழ்வு வாழ்கின்றனர். அதன் காரணமாக அவர்கள் குற்றவாளிக் கூண்டுகளில நிற்க நேரிடுகிறது.

"சுவாரஸ்யமான வாதம்தான். அதிகம் கூறினல் உங்கம்மாவிற்கு கோபம் வரும். போய் படியப்பா!" என்ருர் சோமசுந்தரம். பையன் நல்ல முறையிலே தேர்ச்சி பெற்று வருகிருன் என்று எண்ணிப் பூரிப்பு அடைந்தார். இவர்கள் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டு ஒரு பக்கத்தில் அமர்ந்திருந்த உருக்கு "சரி சாப்பிட்டுப்பேசலாம் வாடா தபி!" என்று எழுந்தாள். பையன் சாப்பிடப் போகு முன, "அடுத்த வாரம் தஞ்சாவூர் போகவேண்டும. பரமுவுக்குக் கல்யாணம்!" என்று தஞ்சைப் பயணத்தை கூறினர் தந்தை.

"நான் கூடவாப்பா, வரவேண்டும்?" என்று கேட்டான் கந்தசாமி,

"ஏண்டா, அப்படிக் கேட்கிறே?" என்று அவசரமாகக் குறுக்கிட்டாள் அவன் தாயார். "ஏன் அப்படி கேட்கிருய்?" என்ருர் சோமசுந்தரம். எதையோ சொல்ல வாயெடுத்த கந்தசாமி பேசாமல் சாப்பிடப் போய்விட்டான்.

காலேஜில் சேரும்வரை கந்தசாமிக்குக்கழகம் என்ருலே என்னவென்று தெரியாது. சு. ம. க்கள் என்று தமிழ் வாத்தியார் கோபாலகிருஷ்ணய்யர் கிண்டல் செய்வதைத்தான் பள்ளிக்கூடங்களில் அவன் கேட்டிருக்கிருன். ஆனால் கல்லூரியில் சேர்ந்த ஆறுமாதங்களில் அவன் தமிழ்ப் பற்றும், நாட்டுப் பற்றும் அதிகமாகியது. புதிய புதிய புத்தகங்கள், வரலாறுகள், கழக ஏடுகள் இவைகளைப்படிக்க ஆரம்பித்தான். பையனின் ஆர்வத்தை வரவேற்ருர், அந்தக் காலத்திய ஜஸ்டிஸைட் சோமசுந்தரம். ஆகவே வெகு சீக்கிரத்தில் மாணவர் கழக நடவடிக்கைகளில் பெரும்பொறுப்புகளை ஏற்க ஆரம்பித்தான் கந்தசாமி, 'விபூதி அணிவது ஜாதிக் குறி' என்று அவன் மறுத்தபோது உருக்குமணி அம்மாளுக்கு ஆத்திரம் வந்தது. சோமசுந்தரம் மெல்லவும் முடியாமல் தள்ளவும் முடியாமல் "ஏதோ, சிறுபயல். அவனிஷ்டப்படி இருந்துபோகிருன், நீ போ!" என்று மனைவியை சமாதானப்படுத்திவைத்தார். இப்படி முழுக்கழக வீரனை மாறிவிட்டான் கந்தசாமி. பேச்சோடு மட்டுமல்ல செய்கையாலும் "நான் கழகம்!" என்று பெருமையாகப் பொதுப் பணி செய்து வந்தான். படிப்பது, கழகப்பணி புரிவது இவைகளைத் தவிர உலகத்தில் வேறெதுவும் இருப்பதாக அவனுக்குத் தோன்றியதே இல்லை. ஆகவேதான் அன்று தஞ்சாவூருக்குப் போகவேண்டும் என்றவுடன் "நானுமா......?" என்று கேட்டான்.

சாப்பிட்டு வந்தவுடன் சம்பாஷணை தொடர்ந்தது. "திருமணமென்ருல்...எல்லாம் சடங்கோடுதான் நடக்கும். நிறையச் செலவு செய்வார்கள்!" என்ருன் கந்தசாமி. அவன் பேசி முடிப்பதற்குள், "அவங்களுக்கென்னடா செலவு செய்ய, இரு வீட்டிலும் ஆளுக்கு ஐயாயிரமாவது ஆகும்!" என்றுகூறினுள் உருக்குமணி அம்மாள். பையன் பேசியதில் இருக்கும் சூட்சமம் சோமசுந்தரத்திற்குத்தானே தெரியும். "ஆமாம்! அவர்கள் 'சீர்திருத்தம்' என்ருல் வீசை என்ன விலை என்று கேட்பார்கள். முழுச் சடங்கோடுதான் நடக்கும்" என்ருர் அவர்.

"எவ்வளவு நஷ்டம்! அர்த்தமற்ற சடங்குகள். அனுவசியச் செலவுகள், அந்தப் பணத்தைப் போட்டு நம்ப பையன் யாராவது ஒருவனைப் படிக்கவைக்கலாம்!" என்று அலுத்துக்கொண்டான் கந்தசாமி.

அவன் தாய் ஏதோ பேச வாயெடுத்தாள். அதற்குள் சோமசுந்தரம் "அதற்கு நாமென்ன செய்வது? என்று அவள் வாயை அடக்கினர்.

"நாமென்ன செய்வதா? இப்படிப்பட்ட கல்யாணங்களைப் பகிஷ்கரிக்க வேண்டும். அப்போது தான் அவர்களுக்குப்புத்திவரும்" என்று ஆவேசமாகக் கூறினன் கந்தசாமி. அவன் தாய்க்கு ஒன்றும் புரியவில்லை. இந்தக் கழகக் கட்டிடத்திற்குப் போக ஆரம்பித்ததிலே இருந்தே அவன் பேசும் பல விஷயங்கள் அவளுக்குப் புரிவதில்லை. சோமசுந்தரத்திற்கு அதற்குமேல் பேச விருப்பமில்லை.

"அந்த நிலைமை வர இன்னும் சில ஆண்டுகள்போகவேண்டும்!" என்று கூறிக்கொண்டே எழுந்தார். எல்லோரும் படுக்கச் சென்றனர். அன்றிரவெல்லாம் திருமணம் என்ற பெயரால் இந்த நாட்டிலே நடத்தப்படும் அர்த்தமற்ற சடங்குகளைப் பற்றியே ஆராய்ந்து கொண்டிருந்தான். நினைக்க நினைக்க அவன் மனம் வெதும்பியது. தமிழ் நாட்டின் கதி இப்படியானதே என்று வருத்தப்பட்டுக்கொண்டே நித்திரையில் ஆழ்ந்தான்.

> மனிதனுக்குக் கவலையைக் கொடுத்து அவனை அறியாமையில் வீழ்த்தும் எதிரிகள் பல. இவற்றை எதிர்த்து போராடுகிறவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. பகைவனை எப்படியாவது தட்டிக் கழிப்பதும், போராட்டத் தொல்லையிலிருந்து தப்பித்துக்கொள்வதுமே சாமானிய மக்களின் வாழ்க்கை வழி. இந்த முறைகளினல் பகைவன்ஓடிப்போவதில்லை. அவன் ஒவ்வொரு சமாதானத்தின்போதும் அதிகச் சலுகைகள் கேட்கிருன். இதற்காகப் பணம் மட்டுமல்ல; உயிரையும் வீரத்தையும் சுதந்திரத்தையும் கூட விலை கூறவேண்டி வருகிறது.

அவசரப் பிரச்சினைக்கு.....

[M. S. வெங்கடாசலம், M. A.,]

கௌகத்தி திருவிழா, ஏதோ ஒரு விதமாக முடிவுற்றது.

அங்கு பேசப்படாத பிரச்னையில்லை! வராத தலைவர்களில்லை!

நிறைவேற்றப்பட்டிருக்கிற தீர்மானங்கள் பற்பல — அவற்றில் ஒன்று நிலச் சீர்திருத்தம் பற்றியது!

"இந்தியா விவசாய நாடாக இருப்பதாலும்; விவசாய உற்பத்தி போதுமான அளவு பெருகவில்லை என்பதாலும் அத்தகைய பெருக்கம் நாட்டின் மற்றத் தொழில்களின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமையும் என்பதாலும், நிலச் சீர்திருத்தங்கள் மிகமிக அவசியமானவை—தாமதமின்றி நிறைவேற்றப்பட வேண்டியவை"

இது நிலச் சீர்திருத்தங்கள் பற்றிய தீர்மானத்தின் ஒரு பகுதி.

கவலை மறைந்தது இனி, என்று களிப்போடு எழுதின ஏடுகள் பல!

காங்கிரசு ஆட்சியாளர்களின் முதற்பணியே அதுவாகத்தான் இருக்கும் என்று ஆரூடம் கணித்தவர்கள் பற்பலர்!

அவ்வித எண்ணம் தோன்றியதற்கு, தீர்மானத்திலுள்ள வாசகங்கள் மட்டுமல்ல, காரணம்!

எந்தெந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன என்று கோடிட்டுக் காட்டிட வேண்டிய மாநாட்டுத் தலைவர் தேபரும், எந்தப் பிரச்னையை நழுவவிடாதுபேசிப்பேசித் தனது ஆசையைப் பூர்த்தி செய்து கொண்ட பண்டிதரும், தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய தலைவர்கள் பலரும், அந்த அளவு வலியுறுத்திப் பேசினர், நிலச் சீர்திருத்தம் பற்றியும், அதன் அவசியம் பற்றியும்.

நிலச் சீர்திருத்தத்தின் மூலம், உணவுப் பொருள் உற்பத்தியை இப்போது இருப்பதைப்போல், மூன்று அல்லது நான்கு மடங்கு பெருக்கிட இயலும் என்ற, வெளிநாட்டு நிபுணர் ஒருவரின் கூற்றை துணைக்கழைத்து வாதாடினர், காங்கிரசுத் தலைவர் தேபர்!

வளர்ந்துள்ள விஞ்ஞான சாதனங்கள், வகையாக, வேண்டிய அளவு நாட்டில் பயன்படுத்தப் படவில்லையே, ஐயகோ! ஏனிந்த நிலை என்று ஏக்கத்தோடு பேசியவர் பற்பலர்!

அத்தகைய இழிநிலைக்குக் காரணம் யாரென்று, அவர்களில் யாரும் திட்டவட்டமாகக் கூறிட முன்வரவில்லை, என்றாலும், அத்தனை பேரும் அரசாங்கத்தைக் குற்றம் சாட்டியதாக நினைத்துக் கொண்டோ, என்னவோ, அதற்குக் காரணம் அரசாங்கமல்ல— விவசாயிகள்தான்! அவர்களிடத்தில் ஊக்கம் இல்லை என்று குற்றம் சாட்டினார், உணவு அமைச்சர் ஜெயின்!

இவை எல்லாவற்றையும்விட, நாட்டு நிலையை நல்ல முறையில் படம் பிடித்துக் காட்டியது, வங்கத்துக் காங்கிரசுக்காரரின் பேச்சு தான்! அவர் பெயர் டாக்டர் நளினச சயால்......

அவர் சொன்னாராம்; **"நம்நாட்டில் நடுத்தர வருப்பார் வீட்டுப் பெண்களுக்கு வாரத்தில் ஐந்து நாட்கள் உணவு இருப்பதில்லை"** என்று!

கூறியது மட்டுமல்ல—கதறியழுதிருக்கிறார் அவர்!

வாரத்தில் ஐந்து நாட்கள் பட்டினி!

அந்த நிலையிலுள்ள பெண்கள் தொகை, இந்நாட்டுப் பெண்கள் தொகையில் பாதிக்கு மேலிருக்கும்!

இத்தகைய திடுக்கிட வைத்திடும் உண்மைகளை — மனிதாபிமானம் உள்ள எவரது உள்ளத்திலும் ஆற்றொணாத் துயர் ஏற்படுத்துகின்ற அலங்கோலத்தை- ஆட்சியில் அமர்ந்திருப்போர் வெட்கித் தலைகுனிந்திட வேண்டிய அவலத்தை — அவர் எடுத்துரைத்திருக்கிறார்!

இவ்வளவும் பேசப்பட்ட பிறகுதான், நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் பற்றிய தீர்மானம், காங்கிரசு மாநாட்டிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று அறிகிற எவருக்கும், காங்கிரசாரின் முதல் வேலைத் திட்டமே நிலச் சீர்திருத்தமாகத்தான் இருக்கக் கூடும் என்ற எண்ணம் இயற்கையாகவே எழும்!

ஆனால்...? நினைத்தாலே நெஞ்சு திடுக்கிடுகிறது! இவ்வளவு நெஞ்சழுத்தக்காரர்களா காங்கிரசார் என்று ஆச்சரியத்தோடு,-ஆனால் ஆத்திரத்தோடு—கேட்கத் தோன்றுகிறது!

முதற்பணி — மிக மிக முக்கியமானதென்று அவர்களாலேயே வேதனையோடு, ஒரு முகமாக, ஒப்புக்கொள்ளப்பட்ட பணி—எப்போது நிறைவேற்றப்படும் என்று, காங்கிரசுக் கட்சியின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற சத்திய நாராயண ராஜு என்பவர் கூறிடும்போது நாடே திடுக்கிடுகிறது!

அவர் சொல்லுகிறார், நிலச் சீர்திருத்தம் 1962ல் நிறைவேற்றப்படும் என்று?

அவசரமான பிரச்சினைக்கு விடிவு காலம் 1962ல்!

நாட்டு மக்களில் 70 சத விதத்திற்கு மேலிருக்கின்ற, உழவர்களின் வாழ்க்கைப் பிரச்சனைக்கு விடிவு காலம் 1962ல்!

வாழ்வதா—சாவதா, என்றிருக்கிற வினவுக்கு விடை, 1962ல்!

நாடு ஏதாவது தவிர்க்க முடியாத ஆபத்தில் சிக்கியிருந்தால் —பகைவர்களால் தாக்கப்பட்டு, உரிமைக்காகப் போராடவேண்டிய சிக்கலான நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தால்—நான்கு ஆண்டுகளல்ல, நாற்பது ஆண்டுகள் கூடப் பொறுத்திருக்கலாம்!

அப்படிப்பட்ட நிலை இல்லையே இன்று!

சுதந்திர நாளிலும், குடியரசு தினத்திலும், ஜனாதிபதிக்கும், மற்ற அமைச்சர்களுக்கும் மரியாதை செலுத்தவேண்டிய சமயங்கள் தவிர, மற்ற எந்தச் சமயத்திலும், நமது படைவீரர்களுக்கோ படைக்கலங்களுக்கோ வேலையில்லாத நிலை!

இருந்தும் நான்கு ஆண்டுகள் பொறுத்திடுங்கள் என்று, பொறுப்பான தலைவர், பொறுப்பற்ற முறையில் பேசிடக் காரணம் என்ன?

அவரது அடுத்த வாசகம், அந்தக் காரணத்தைத் தெள்ளத் தெளிய விளக்கிடுகிறது நமக்கு! இதோ, அந்த வாசகம் :-

"1962-ல் தேர்தல் சமயத்தில் நிலச் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்படும்!"

வாழ வகையற்ற வனிதை, ஆற்றிலே இறங்கியாவது உயிரை மாய்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில், ஆற்றில் மெள்ள மெள்ள, தயங்கித் தயங்கி, இனி

யேர்வது வாழ்ந்திட ஏதேனும் வகையிருக்கிறதா என்று அந்த நேரத்திலும் சிந்தித்துக்கொண்டு, தண்ணீரில் இறங்கிக்கொண்டிருக்கிற சமயத்தில், ஒரு வாலிபன் பார்த்துவிடுவதாக வைத்துக் கொள்வோம். அவன் மனிதாபிமானம் உள்ளவனாக இருந்தால், உடனே ஓடிப்போய் அவளைத் தடுத்து நிறுத்தி, அவளுக்கு தன்னாலான உதவியைச் செய்வான். மாறாக, அவள் தண்ணீரில் இறங்குகிறவரை, இறங்கட்டும் இறங்கட்டும் என்று பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, அவள் மூச்சுத் திணறி மூழ்குகிற நேரத்தில் ஆற்றிலே குதித்து அவளைக் காப்பாற்றி, அதன் மூலமாகத் தனது வீரத்தை வெளிக்காட்டி, அவள் மயக்கமாக இருப்பதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, அவளை வீட்டிற்குக் கொண்டு செல்ல நினைப்பவனைக் களங்கமற்றவன் என்று சொல்ல இயலும்?

வனிதையைக் காப்பதற்கு உயிரைத் துச்சமென மதித்தான் என்று அவனைப் பாராட்ட இயலும்?

ஆற்றிலே குதித்து, அந்தப் பெண்ணைக் காப்பாற்றியவனது நோக்கம், அவளை உண்மையாகவே காப்பாற்றுவதற்கல்ல!

அதைப்போல், "தேர்தல் காலம் வரை பொறுத்திருங்கள், நன்மை செய்கிறோம்" என்பவரது நோக்கமும் மக்களுக்கு நன்மை செய்வது அல்ல!

"தேர்தல் காலத்தில்" என்று அவர் சொல்லுகிறார்—"தேர்தலுக்காக" என்று நாம், அதனைக் கொள்ளுகின்றோம்!

அவசரப் பிரச்சினைக்கு விடிவு காலம் 1962-ல் அதுவும் தேர்தலுக்காக! மக்களின் முக்கியப் பிரச்சினையாக உள்ள நிலச் சீர் திருத்தம் செய்யுங் காங்கிரசுக்கே நமது வாக்குரிமைகளை வழங்குவோம் என்று நினைத்து மக்கள் காங்கிரசுக்கே 'ஓட்' அளிப்பார்கள் என்பது இவரது நோக்கம் போலும்! பாவம், இனியும் மக்களை ஏமாற்றலாம் என்று நினைக்கும் இவரது போக்கைக் கண்டு நாம் பரிதாபப்படுகிறோம். மக்கள் இத்தகைய சாகசங்களில் மயங்கும் காலம் மலையேறி விட்டதென்பதை எடுத்துக் கூற விரும்புகிறோம்.

★

மலை வளம்

[அன்பு]

கடற்கடம் பொறிந்து இமயத்தில் தங்கள் இலச்சினையைப் பொறித்த சேரர் குல வழித் தோன்றல்-வாய்வாள் மன்னன்-சேரன் செங்குட்டுவன் தன் துணைவி வேண்மாளுடன் மலைவளங்காணச் செல்லுகிறான். பல்வகைப் படையினரும் ஆய் மகளிரும் அவனைத் தொடருகின்றனர்.

வஞ்சிமா நகரை விட்டு நீங்கி, பெருமலையினின்றிழியும் பேரியாற்றின் கரையில் ஓர் மணற்றிட்டில் தங்குகிறான். கோங்கம், வேங்கை, கொன்றை, சுரபுன்னை, மஞ்சாடி, சந்தனம் போன்ற மரங்களினின்றும் உதிர்ந்த மலர்கள் நிறைக்கப்பட்டு மலையினின்றும் இறங்கியோடுகிறது பேரியாற்று நீர்! மதுரகம், ஞமிறு, வண்டு முதலிய கூட்டங்கள் ஆற்று நீரைச்சுற்றி இசை பாடுகின்றன!

செங்குட்டுவன் தங்கியிருக்கும் மலையின் சுற்றுச் சூழல்களினின்றும் பல்வேறுபட்ட ஒலிகள் கிளம்புகின்றன. குறவைக் கூத்தும், கொடிச்சியர் பாடலும், வெறியாடலும் தினை குற்றுவோரது உலக்கைப்பாட்டின்ஒலியும், புனத்து எழும் விளியும், தேன் கூட்டை உடைத்த குறவர் ஓதையும், அருவி இழியும் பறையொலியும், புலியொடு பொருதும் யானையின் பிளிறலும், பரண் மேல் நின்று பகைவிலங்கைக் கடிதலும், குழியில் வீழ்ந்த யானையைப் பிடிக்கும் பாகர் ஒலியும், எங்கும் திரிகின்ற செங்குட்டுவனது சேனையொலியுடன் கூடி மலை பகுதி எங்கணும் அதிர்கிறது!

மலைவளங் காண வந்த மன்னனைக் காண, குன்றக்குறவர், தாங்கள் அன்பின் காணிக்கையாகக் கொண்டு வந்த பல்வேறு வகை மலை படு பொருள்களைத் தலையில் சுமந்துவந்து நிற்கின்றனர்.

யானைத் தந்தங்கள், அகிற் கட்டைகள், மான் மயிர்க் கவரிகள், மதுக் குடங்கள், சந்தனக் கட்டைகள், சிந்துரக் கட்டிகள், நீலக் கற்கள், கத்தூரிகள், ஏலக்கொடிகள், மிளகுக் கொடிகள், கூவைக் கிழங்கின் மா, கவலைக்கொடிகள், முதிர்ந்த தேங்காய்கள், இனிய மாம்பழங்கள், பச்சிலை மாலைகள், பலவின் பழங்கள், வெள்ளுள்ளிகள், கரும்புகள், பூ மலிந்த கொடிகள், கொழுதாள் கமுகின் செழுகுலை தாறு, பெருகுலை வாழையின் இருகனி தாறு, யாளிக் குட்டிகள், அரியின் குருளை, வாள் வரி புலிக்குட்டிகள்; யானைக்குட்டிகள், குரங்குக் குட்டிகள், கரடிக் குட்டிகள், மான், மான் குட்டிகள் கத்தூரிக் குட்டிகள், கீரிப்பிள்ளைகள் பீலி மஞ்சை, (தோகையுடைய ஆண் மயில்) புனுகுப் பூனைக் குட்டிகள், கானற் கோழிகள்' தேன் மொழிக் கிள்ளைகள் முதலிய பொருள்களை மலை பிசைக் குறவர் தலை மிசைக் கொண்டு வந்து செங்குட்டுவன் முன் நின்றனர்.

யானைவெண் கோடு மகிலின் குப்பையும்
மான்மயிர்க் கவரியு மதுவின் குடங்களும்
சந்தனக் குறையுஞ் சிந்துரக் கட்டியும்
அஞ்சனத் திரளு மணியரி தாரமும்
ஏல வல்லியு மிருங்கறி வல்லியும்
கூவை நாறுங் கொழுங்கொடிக் கவலையும்
தொங்கின் பழனுந் தேமாங் கனியும்
பைங்கொடிப் படலையும் பலவின் பழங்களும்
காயமுங் கரும்பும் பூமலி கொடியும்
கொழுந்தாட் கமுகின் செழுங்குலைத் தாறும்
பெருங்குலை வாழையி னிருங்கனித் தாறும்
ஆளியி னணங்கு மரியின் குருளையும்
வாள்வரிப் பறழு மதகரிக் களபமும்
குரங்கின் குட்டியுங் குடாவடி யுளியமும்
வரையாடு வருடையு மடமான் மறியும்
காசறைக் கருவு மாசறு நகுலமும்
பீலி மஞ்ஞையும் நாவியின் பிள்ளையும்
கானக் கோழியுந் தேமொழிக் கிள்ளையும்
மலைமிசை மாக்கள் தலைமிசைக் கொண்டு

(சிலம்பு : வஞ்சிக் காண்டம், காட்சிக் காதை.)

'செங்குட்டுவன் மலைவளங் கண்டான்' என்பதைக் கூறவந்த இளங்கோவடிகள் சேரநாட்டின் மலை வளத்தை அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறார்.

செங்குட்டுவன் தங்கியிருந்த மலைப் பகுதியைச் சுற்றிப்பல்வகை ஒலிஎழுவதாக விவரிக்கிறார். அவ்வொலிகள் மலைவாழ் மக்களின் வாழ்க்கையையும், அவர்தம் தொழிலையும் நமக்கு நன்குணர்த்தி நிற்கின்றன.

குன்று வாழ் குறவர்கள் கொண்டு வந்த மலை படுபொருள்கள், சேரன் பால் அம்மக்கள் கொண்டிருந்த அன்பின் திட்பத்தை வெளிப்படுத்துவதோடு சேர நாட்டின் கொழுத்த வளத்தையும் வெளிப்படுத்துகிறது.

★

உலக சமுதாயம்!

[நாஞ்சில், செ. அன்பெழில்]

முதன் முதலில் ஏற்பட்ட சமுதாயம் குடும்பம், உலக வாழ்க்கை என்னும் வண்டியை ஒழுங்காக ஓட்டிச் செல்ல ஆணும் பெண்ணும் மிகமிக இன்றியமையாதவர்கள் என்ற கட்டாயம் ஏற்பட்ட காரணத்தால் குடும்பங்கள் பல உருவாயின, ஆண்மை என்ற மரத்தைப் பெண்மை என்ற கொடி தழுவி வளர்ந்தது. அக்கொடியிலே பூத்த மலர்கள்தான் குழந்தைகள். இவர்களின் சேர்க்கைதான் குடும்பம். குடும்பங்கள் பல சேர்ந்து ஓர் இனமாக மாறியது. பிறகு ஊர்களும் நாடுகளும் உருவாயின. ஒன்றி வாழத் தலைப்பட்ட மக்கள் தங்களை ஒழுங்காக நடத்திச் செல்ல ஒரு தலைவன் தேவை என்று உணர்ந்தனர். 'யாரைத் தலைவனாக எடுப்பது' என்ற கேள்வியைக் கிளப்பிவிட்டுப் பதில் காணச் சிந்தித்துக்கொண்டிருந்த வேளையில் 'நானே தலைவன்' என்ற ஒரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தார்கள் மக்கள். உடல் வலிமை மிக்க ஒருவன் தன்னை ஊருக்குத் தலைவன் என்று அறிவித்துக்கொண்டான். 'தலையெடுத்தவன் தண்டல்காரன்' என்ற பழமொழிக்கேற்ப உடல் வலிமை உள்ளவன் ஊராள்வோனானான். எதிர்க்கத் திறனற்ற மக்கள் அவனுக்குப் பணிந்து, அவனோடிணைந்து வாழ ஒத்துக்கொண்டார்கள். அவன் ஆள்வோனானான். இவர்கள் அவனுக்கு அடிபணிந்து வாழ்வோரானார்கள். ஊர்கள் பல ஒன்று சேர்ந்து நாடாக, நாடுகள் பல சேர்ந்து கண்டங்களாக, பிறகு உலகமாக உருவெடுத்தது.

இந்த நேரத்தில்தான் 'நான்' என்ற சொல் உருவானது. நான்! இந்த இரண்டு எழுத்துச் சொல் இந்த உலகிலே ஏற்படுத்தியிருக்கும் கொடுமைகள் எண்ணத் தொலையாதன. 'நான்' என்ற ஆணவத்தின் மரண மண்டபத்தில் இன்னொரு சொல் அரும்பியது. அதுதான் 'நாம்'! இச்சொல் தேய்பிடக்கிடந்தவர்களுக்கு இன்பத் தென்றலாக இருந்தது. இந்தச் சொல்லை அரியணையில் ஏற்றுவதற்குத் துடித்துக்கொண்டிருந்தவர்களின்முயற்சி சில இடங்களில் வென்றது, ஆனால் பல இடங்களில் தோல்வியைத்தான் முத்தமிட்டது நான்! இந்தச் சொல்லின் விளைவால்தான் போரும் பூசலும், கொலையும் குழப்பமும், தொல்லைகளும் தொந்தரவுகளும் ஏற்பட்டன. உலகப் போர்கள் ஆரம்பத்திற்கே இச்சொல்தான் அடிப்படை.

தன் அதிகாரத்திற்கு உட்பட்ட எல்லைக் கோட்டை விரிவுபடுத்த முயன்றதன் விளைவுதான் இது.

அந்த உலகப் பெரும் போர்கள் இந்த உலகிற்கு ஒரு எச்சரிக்கைப் பலகை. இன்றும் உலகம் அந்தப் பாதையில்தான் அடியெடுத்து வைக்கப்பார்க்கிறது. இது தடுக்கப்பட வேண்டும், தடுக்கப்பட்டே ஆக வேண்டும். அந்தப் பாதை ஆபத்து நிறைந்தது மட்டுமல்ல, அழிவைக் கொடுப்பதும்கூட. அழிவின் ஆரம்ப கீதம் இப்போது ஆங்காங்கே ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது அருக்கியில் ஆர்ப்பரிப்பு, காஷ்மீரில் கடும் புயல், பொதுவுடைமைச் சீனவில் போரின் புகைச்சல், பார்மோசாவின் பதை பதைப்பு நீங்க அமெரிக்காவால் பல மூட்டப்படுகிறது. இரஷ்யா இவைகளை யெல்லாம் பார்த்துவிட்டு இதழோரத்தில் மென் சிரிப்பை வரவழைக்கிறது. அந்தச் சிரிப்பின் பொருள்............?

இந்த நிலைமை மாறவேண்டுமானல் சமுதாயத்தின் இன்றைய அமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும். மாற்றியமைப்பது என்றால் மதிற் சுவர்களின் பூச்சுக்குப் புது வர்ணம் கொடுப்பதல்ல. அதன் அடிப்படையையே அடியோடு மாற்றியமைக்க வேண்டும். புதிய முறையில் பொன்னான தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும் சமுதாயம். மனித உரிமை என்னும் அடித்தளத்தில் அமைக்கப் படவேண்டும் அந்த அழகு மாளிகை. அந்தச் சமுதாய அமைப்பானது இன்றுள்ளது போல ஏற்றங்கொண்டோர்க்கு இன்பச்சோலையாகவும், ஏழைகளுக்கு எரிமலையாகவும் இருக்கக் கூடாது. விண்ணிலே ஓரினம் மண்ணிலே மற்றோரினம் என்ற நிலைமையை ஏற்படுத்தக் கூடாது. அந்த அமைப்பு, அரிஸ்டாட்டல் என்ற கிரேக்க நாட்டு அறிஞன் தனி வாழ்வு சமுதாய வாழ்வு, நல்வாழ்வு என்று வாழ்க்கையை மூன்று வகையாகப் பிரித்து ஒவ்வொரு அரசாங்கமும் மக்களின் நல்வாழ்க்கையையே தங்கள் கொள்கையாகக் கொள்ள வேண்டும்மென்று வலியுறுத்துகின்றார்.

இந்த இடத்தில்தான் 'அரசாங்கம் என்றால்என்ன?' என்றகேள்வி நம் சிந்தனையைத் தொடுகிறது. கூட்டுவாழ்க்கையையே தங்கள் கொள்கையாகக் கொண்டு ஒன்று சேர்ந்த மக்கள் தங்கள் வாழ்க்கையை வளமுள்ளதாக அமைத்துக்கொள்ள ஏற்படுத்திய அமைப்புத்தான் அரசாங்கம். ஆனால் சூழ்நிலைக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப அது பல இடங்களில் பல மாதிரியாக அமைந்துகொண்டது. இதைத்தான் பேராசிரியர் லாஸ்கி, "சமுதாயத்தின் வாழ்க்கையை மேலும் மேலும் வளமுள்ளதாக மாற்றியமைப்பதற்காக மக்கள் ஒன்றுகத் திரளும் அமைப்புத்தான் அரசாங்கம்" என்று குறிப்பிடுகிறார்,

அரசாங்கம் சிங்காதனப் பதுமைகளுக்கு சிங்காரப் பூஞ்சோலையாகவும், அதிகார பிம்பங்களுக்கு அலாவுதீனின் அதிசயவிளக்காகவும், சீமான்களுக்கும் பூமான்களுக்கும் தித்திக்கும் செங்கரும்பாகவும், கடவுளைக் காட்டி காசு பறிக்கும் கயவர்களுக்குக் கதவில்லாக் கருவூலமாகவும், இளைத்துப்போன ஏழைகட்கு எத்தர்களின் குகையாகவும், இறை செலுத்தும் மக்களுக்கு எதிர்த்தடிக்கும் புயலாகவும், புதுமை விரும்பிகளுக்குப் புதை குழியாகவும் இருக்கக்கூடாது. சமுதாய அமைப்பை அடியோடு மாற்றிப் புதுமை நிறைந்ததாக ஏற்படுத்த வேண்டும் அரசாங்கம். கிரேக்க நாட்டறிஞர் அரிஸ்டாட்டல் "சமுதாய வாழ்க்கையை மிகச் சிறந்த வாழ்க்கையாக மாற்றுவதுதான் ஒரு சிறந்த அரசாங்கத்தின் நோக்கமாக இருக்க வேண்டும்" என்ற சொற்களின் வாயிலாக அரசாங்கத்தின் தலையாய கடமையை அறுதியிட்டுக் கூறுகிறார்.

கி. பி. பத்தாவது நூற்றாண்டின் முன்னைய நாட்களெல்லாம் இருண்ட நாட்கள் என்று அழைக்கப்பட்டன. பத்தாவது நூற்றாண்டில்தான் விஞ்ஞானத்தின் விடிவெள்ளி வேகமாகக் கிளம்பியது. பொற்காலம் பேரொளி பரப்பிப் பூரிப்போடு அடியெடுத்து வைக்க ஆரம்பித்தது. சிந்தனைப் புரட்சி உலகைச் சிதற அடித்தது. மன்னர் மகுடத்தைத் தாங்குகின்ற மதத் தலைவர்களின் ஜப மாலைகள் அறுந்து விழுந்தன. அரசாங்க இலகான் தங்கள் கையில் கிடைத்துவிட்டது என்ற அதிகார வெறியால் அத்துமீறி ஆனந்தக் கூத்தாடிய ஆணவக்காரர்கள் அழிவுப் பாதையிலே அடியெடுத்து வைக்கத் துவங்கினார்கள் அரசிருக்கைப் பதுமைகளும் அரண்மனைத் தூண்களும் அலறின. 'ஆண்டவன் பிரதிநிதி நான்' என்று ஆணவத்தோடு கூறிவந்த அரச பரம்பரை மாண்டவர்கள் பட்டியலிலே இடம் பெற்றது. மன்னன் தலையிலே இருந்த மணிமுடி மண்ணை முத்தமிட்டது. ஆதிக்கவெறியர்களுக்கு அபாய அறிவிப்பு முழங்கியது. பொற்காலத்தின் உதயகீதமே மக்களின் இதய கீதமாக ஒலித்தது.

பதினைந்தாவது நூற்றாண்டிற்குப் பிறகுதான் விஞ்ஞானம் ஒளிவிட்டு வளரத் துவங்கியது. இருட்டறையினுள்ளே பொன்னொளி பாய்ந்ததும் காரிருளைத் தேடிக் கதிகலங்கி ஓடும் வௌவால் கூட்டம்போல பொற்காலத்தின் புதுமைக் கீதத்தைக்கேட்ட புரட்டர்களும், போக்கிரிகளும், மதத் தலைவர்களும், மன்னர் பரம்பரையினரும், செல்வச் சீமான்களும், சீறிவிழும் பூமான்களும், அதிகார வெறியர்களும் ஆணவக்காரர்களும் இருள் எங்கே கிடைக்குமென்று தேடித் தேடி ஓடினர். பதினாவது. நூற்றாண்டில் விஞ்ஞானம் வெடி மருந்தைத் தந்தது. காலச் சக்கரம் வேகமாகச் சுழன்றது. நான்கு நூற்றாண்டுகள் ஓடி மறைந்தன. விஞ்ஞானம் வளர்ந்தது, வளர்கிறது, வளர்ந்துகொண்டே இருக்கிறது. அணுகுண்டையும் அதனினும் ஆற்றல் மிக்க நீரக்குண்டையும் விண்வாணங்களையும் குழந்தைத் திங்களையும் இன்று உலகிறகு அளித்திருக்கிறது விஞ்ஞானம். அழிவுக் கருவிகளினும் அதிகமாக ஆக்கக் கருவிகளையே விஞ்ஞானம் தருகிறது, தந்திருக்கிறது விண்ணில் பறந்து செல்லும ஊர்தி, கடலைக் கிழித்துச் செல்லும் கப்பல், வெளிஉலக நிகழ்ச்சிகளைக் காட்டும் தொலைக் காட்சி, விண்கோள்களை அருகில் காட்டும் தொலைநோக்கி ஆடும் நிழற் படம், பாடும் வானொலி, செயற்கை உறுப்புக்கள், சிங்காரப் பொருட்கள் இன்னும் எண்ணிக்கைக் குள்ளடங்காத அளவற்ற புதுமைகளை உலகிற்குத் தருகிறது விஞ்ஞானம்.

இந்த இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞானம் தனது உச்ச நிலையை அடைந்துவிட்டது. மக்களைப் படைத்தான் மகேஸ்வரன் என்றால், அந்த மகேஸ்வரனையே கட்டியிழுத்து வந்து மக்களின் முன்னே வேடிக்கைப் பொருளாக விளையாட்டுக் காட்டும் அளவிற்கு வளர்ந்திருக்கிறது. இன்றைய சமுதாய நிலையை ஆல்பாட் ஜன்ஸ்டீன் என்ற விஞ்ஞான மேதை சுவைபட ஆனலசுருக்கமாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார் :-

"நாம் வாழும் இந்த இருபதாம் நூற்றாண்டு விஞ்ஞானத்தின் உச்ச நிலையை அடைந்திருக்கிறது. விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்கள் காலத்தையும் நேரத்தையும் மிகமிகக் குறைத்துவிட்டன. ஆகாயத்தில் பறக்கிறோம், ஆழ்கடலைக் கடக்கிறோம். சந்திரமண்டலத்தை எட்டிப்பிடிக்கத் தாவிக்கொண்டிருக்கிறோம். சிதைந்துபோன உறுப்புகளுக்குப் புது உறுப்புகளைச் சேர்க்கிறோம். வெகுதூரத்தில் நிகழும் நிகழ்ச்சிகளை வீட்டிலிருந்தபடியே கண்டு களிக்கிறோம். இவை மட்டுமல்ல, இன்னும் எண்ணிறந்த நன்மைகளை மின்சக்தியைப் பயன்படுத்தி நாம் அடைகிறோம்-அடைந்துகொண்டும் வருகிறோம். அமெரிக்காவில் நடக்கும் செய்திகளை ஆப்பிரிக்காவிற்கு அரைநொடியில் அனுப்பிக் கொடுக்க முடிகிறது இன்று. அறிவுத் துறையில் நம்மிடம் இவ்வளவு முன்னேற்றம் இருந்தும்கூட உலகத்தின் பொருளாதார நிலை சீர்படவில்லை. பொருட்களை உற்பத்தி பண்ணுவதிலும் அவைகளை உபயோகிப்பதிலும் இன்னும் ஓர் ஒழுங்கு, நியதி, நேர்மை ஏற்படவில்லை. உலகில் ஏற்றத் தாழ்வுகள் ஏராளம் இருக்கின்றன. இல்லாதவன் இருக்கின்றவனைப் பார்த்து ஏங்குகிறான். இந்த ஏக்கம் எத்தனையோ தொல்லைகளை, துயர்களை, புரட்சிகளை இடர்களை உலகத்தில் உண்டுபண்ணிக் கொண்டிருக்கிறது. எனவே உலகத்தில் கொந்தளிப்புக் கூடுதலாக ஏற்பட்டுக் கொண்டிருக்கிறதே ஒழிய, கொஞ்சங்கூடக் குறையவில்லை. இருக்கின்றவர்கள் இல்லாதவர்களைத் தங்கள் எடுபிடிகளாக மாற்றிக்கொண்டு காலாவிட்ட வேலைகளைக் கலையால் செய்யுமாறு கட்டாயப்படுத்துகின்றனர். இதன் விளைவு மிக மிக ஆபத்தானது மட்டுமல்ல, அழிவைத் தருவதும்கூட. இந்தப் புயல் தடுக்கப்படாதவரை உலகில் போரின் புகைச்சல் எழுந்துகொண்டேயிருக்கும். இந்தப் புகைச்சல்தான் உலகின் அழிவிற்கு முன்னறிவிப்பாகத் திகழ்கிறது. இனிமேல் போர் ஒன்று ஏற்படுமானல் உலகமே பூண்டோடு அழிந்துவிடும் என்பது மறுக்கமுடியாத உண்மை. இதனுல் எதிர்காலம் என்ன நிலையிலிருக்கும் என்பதைப் பற்றி எண்ணி எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கிற ஒவ்வொருவரும் அளவற்ற அச்சத்துடனும் நடுக்கத்துடனுமே வாழ்கின்றனர்." இந்த விஞ்ஞான வித்தகரின் சொற்கள் உலகின் நிலையை அப்படியே பிரதிபலிக்கும் கண்ணுடியாகத் திகழ்கிறது. இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டியது உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்குமுள்ள மறுக்க முடியாத கடமையாகும்.

உலக சமுதாயம் இதுவரை எத்தனையோ துறைகளில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. உலகத்தில் எத்தனையோ மாற்றங்கள், எண்ணச் சுழலுக்குள் அடக்கிவிட முடியாத நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. கொடிகட்டி வாழ்ந்த அரசுகளெல்லாம் அடிச்சுவடு தெரியாமல் அழிந்துபோயிருக்கின்றன. உலகத்தையே அடக்கியாண்ட மன்னாதி மன்னர்களெல்லாம் ஒருபிடி சாம்பலாகமாறி அவர்களின் முடிகளெல்லாம் மண்ணை முத்தமிட்டுப் பொடிப் பொடியாகச் சிதறி மறைந்திருக்கின்ற செய்திகளை வரலாறு கூறுகிறது. எத்தனையோ அரசுக் கட்டில்களும், ஆள்வோர்முடிகளும் பொருட்காட்சிச் சாலையினுள்ளே மக்களின் பார்வைக்குப் பத்திரமாகப் பூட்டிவைக்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் கடந்துபோன நிகழ்ச்சிகள் நமக்குக் கற்பிக்கும் பாடம். ஆனல் இன்றைய நிலை ஓரளவுக்கு உயர்ந்திருக்கிறது. உலகத்தின் எதிர்கால நிலைமையை நிர்ணயிக்கும் துறையில் உலகின் ஒவ்வொரு நாடும் முக்கிய இடம் பெற்றிருக்கின்றது. வல்லரசுகள் சில சேர்ந்துகொண்டு 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்ற பழமொழிக்கேற்ப நாட்டை வேட்டைக் காடாக்கலாம் என்ற எண்ணம் இப்போது இடம் தெரியாமல் மறைந்துவிட்டது. சின்னஞ்சிறு நாடுகளும் இன்று சிங்கார நடைபோட முடிகிறது. இருந்துங்கூட இன்று செஞ்சீனவை ஒரு நாடு என்று ஒத்துக்கொள்ள மறுக்கிறது பொருளாதாரத்தில் உயர்ந்து, அகிலத்தையே ஆட்டிப் படைக்கத் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கும் அமெரிக்கா. ஒரு உலகப்பெரும் போரை இந்த நிகழ்ச்சி உற்பத்தி பண்ணிவிட்டாலும்கூட நாம் ஆச்சரியப் படுவதற்கில்லை. உலக நாடுகளின் இடையே ஒற்றுமையை ஏற்படுத்தி, அரசியல் கொந்தளிப்புகளை அடக்கி, சண்டைகளை ஒழித்து,சமாதானத்தை நிலைநிறுத்த வெண்டும் என்ற நல்லெண்ணத்தில் எத்தனையோ பல நிறுவனங்கள் தோன்றிப் பிறகு நிலை பெருமல் அழிந்துபோனதுண்டு. இன்று இருக்கிற நிறுவனமும் கோல் எடுத்தவனுக்குக் குனிந்துகொடுக்கும் தன்மையுடையதாகத்தாவிருக்கிறதே தவிர, உலகப் பொது நன்மைக்கு உழைக்கிறோம் என்ற நல்லெண்ணத்தோடு நடப்பதாகத் தெரியவில்லை. அதன் அங்கத்தினர்களும் அகில உலகத்திலும்அமைதி தவழவேண்டும் என்ற அதன் அடிப்படைத் தத்துவங்களை மறந்து சொந்த நாட்டைப் புகழ்ந்து பேசி அடுத்த நாட்டோருக்கு ஆத்திரமூட்டி வருகிறார்கள். வீட்டைப் பேசி முடித்துத் தன் பெயரில் விலை வாங்கப் போகிறவர் ஐந்தாவது மாடியின் மேல் ஏன் ஆறுவது மாடி கட்டவில்லை என்ற ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு முன்னதாக அடித்தளம் பலமுடையதுதானு என்பதை அறிவுக்கண் கொண்டு ஆய்ந்தறிந்துகொள்ள வேண்டும். அடித்தளம் பலமாக இருந்தால் கட்டிடமும் ஆட்டம் கொடுக்காது. புலி வேட்டைக்குப் போனவன் எலியைத் துரத்திச் சென்றால் கேட்டவர் நகைப்பர்.

இன்றும், "விஞ்ஞானம், உலகத்தார் அத்தனை பேருக்கும் உரியது.

அளக்கமுடியாத அளவிற்கு வளர்ந்து விரிந்துள்ள அறிவிற்கு வரம்பிட்டுத் தங்கள் அதிகார எல்லேக்குள்-அரசியலுக்குள் அதை அடிமையாக்கக் கூடாது. அறிவு அனைவருக்கும் பொது. அதனைப் பகிர்ந்து கொள்ளவோ பயன்படுத்தவோ உலகில் தோன்றிய மனிதர்கள் அத்தனை பேருக்கும் உரிமையுண்டு." என்ற எண்ணத்தில் வல்லரசுகளின் அங்கத்தினர்கள் அறிவை அரசியலுக்கு அடிமைப்படுத்தவும் தவறுவதில்லை. இக்குறைகளெல்லாம் நீக்கப்படாத வரை உலக ஒற்றுமை நிறுவனம் சரியாக மனித உரிமைகளுக்குப் போராட முடியாது.

சென்ற உலகப்போர் எத்தனையோ இழப்புகளை ஏற்படுத்தி யிருந்தாலுங் கூட, சில உண்மைகளை உலகிற்கு உணர்த்திக்கொண்டு சென்றிருக்கிறது. அந்த உண்மைகளை நன்றாக உணர்ந்து உரிய வழியில் நாம் பயன்படுத்திக் கொண்டால் உலகத்தில் ஒற்றுமையும் உயரிய பண்பும், சாந்தமும் சமாதானமும், அமைதியும் அன்பும் நிலவுவது உறுதி. "போர் முழக்கம் செய்து உலகைப் புதை குழிக்கு இழுத்துச் செல்லும் புன்மைக் குணம் அகலவேண்டும். எங்கும் எப்போதும் சாந்தமும் சமாதானமும் நிலவவேண்டும் !என்ற எண்ணமும், நாம் மனித குலத்தைச் சார்ந்தவர்கள் என்ற மறக்கமுடியாத உண்மையும் உலகத்தில் வாழும் மனிதர்கள் அத்தனை பேரின் இதயங்களிலும் இடம் பெற்றிருக்க வேண்டும். வல்லரசுகளின் ஆதிக்கத்திற்குக் கீழே சின்ன நாடுகளையும் சிக்கவைக்கலாம் என்ற எண்ணம் அழிந்துவிட்டதோடு, சின்னநாடுகளும் இன்று உலக அரங்கில் சிங்கார நடைபோட்டு உலவ முடிகிறது. இன வழிப்படி, கலாசாரப் பண்பாட்டின் அடிப்படையில், இயற்கை அமைப்புக்கும் பேசும் மொழிக்கும் மதிப்பளித்து, நாடுகளை அமைத்து, அப்படி அமைக்கப்பட்ட நாடுகளெல்லாம் மனித குலம் என்ற ஒரு வழி நின்று, உலக ஒற்றுமை மன்றத்தை நிறுவி, உலகில் போரையும் பூசலேயும் ஒழித்து அமைதியைப் பேண வேண்டும்" இந்த நிறுவனம் 'எள்ளாத எண்ணிச் செயல் வேண்டும்' 'புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும்' இத்தகைய மன்றம் ஒன்று மிக விரைவில் அமைக்க உலகத்தார் அத்தனை பேரும் முயன்று உழைக்க வேண்டும், இன்றைய நிலேயில் இது ஒன்றே உலக சமுதாய உய்வுக்கு வழி வகுப்பது.

★

இராமநாதபுரம் மாவட்ட

தி. மு. க. 3-வது மாநாடு

22, 23-2-58-ஆம் (சனி ஞாயிறு) நாட்களில்
தேவகோட்டை---வள்ளுவர் திடல்
மஜீத் அரங்கில் நடைபெறும்.

தலேவர்:	திறப்பாளர்:
க. அன்பழகன் எம்.ஏ., எம்.எல்.ஏ.	எஸ். எஸ். இராசேந்திரன்

அண்ணுதுரை, பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன்
மற்றும் கழக முன்னணித் தோழர்கள் கலந்துகொள்வர்.

முதல் நாள்:	இரண்டாம் நாள்:
22—2—58 சனி இரவு	23—2—58 ஞாயிறு இரவு
தோழர் மு. கருணுநிதி அவர்கள் நடிப்பதும், புதுமை நாடகமன்றத்தார் அளிப்பதுமான "உதய சூரியன்" நாடகம்	தோழர்; நாகூர் அனீபா அவர்கள் குழுவினரின் இசை விருந்து

இருநாட்களுக்கும் நுழைவுக் கட்டணம்:— ரூ. 5, 3, 2, பெண்களுக்கு அணு 8

இ. ல. ம. சவுந்தரபாண்டியன்,
வ. கு. தலேவர்.
நவமார்க்கண்டேயன்,
பொருளாளர்.

இராம. வெள்ளேயன்,
மா. குருசாமி,
செயலாளர்கள்.

"எழுந்து நில்லுங்கள்!"

ஒருவரல்ல. இருவரல்ல; ஓராயிரமல்ல, ஈராயிரமல்ல; இலட்சக் கணக்கான மக்கள், எழுந்து நின்றனர்.

" நாம் உடையணியாத போலீஸ்காரர்கள் என்பதை இந்த அரசுக்கு உணர்த்த வேண்டும். கட்டுப்பாட்டுக்கு அடங்கியவர்கள் என்பதை இவர்களுக்குக் காட்ட வேண்டும். எங்கே, எல்லோரும் எழுந்து நில்லுங்கள்"

எல்லோரும் எழுந்து நின்றனர்! அமைதியோடு, எழுந்துநின்றனர்!

தளபதி கட்டளை பிறப்பிக்க, விரல் நீட்டிய இடத்தில் அம்புகள் போல் பாயும், பண்பு நமது பரம்பரைச் சொத்து என்று படித்திருக்கிருேம் ஏடுகளில். படித்த காட்சியைச் சென்னைக் கடற்கரை காட்டிற்று! எந்த அரசு, நம்மால் அமைதிக்குப் பங்கம் வரும் என்று ஜனவரி 3ந் தேதியன்று கூட்டம் நடத்த அனுமதி மறுத்ததோ, அதே கடற்கரையில், ஜனவரி 14-ந் தேதியன்று இக் காட்சி நிகழ்ந்தது.

ஏதோ பெரிய அமர்க்களம் நடைபெறப்போவது போலவும், கூட்டத்துக்கு வரும் மக்கள் எல்லாரும் கத்தி கம்பு எடுத்துக் கொண்டு கலவரம் செய்யப் போவது போன்றும், பயமுறுத்தலை உருவாக்க முனைந்தனர் ஆள்வோர். திருவல்லிக்கேணி நோக்கிச் செல்லும் எல்லாச் சர்க்கார் பஸ்களையும், திடீரென நிறுத்தினர். ஏன்—ஏன்—என்று மக்கள் கேட்கும்போது, பயமும்பதட்டமும் பரிமாறிக்கொள்ளப்படும் எனக் கருதினர் போலும். திருவல்லிக் கேணி வட்டாரத்திலுள்ள கடைக்காரர்களிடமும், தொழிலாளர்களிடமும்கூட, எச்சரிக்கைகள் எழுப்பப் பட்டதாக அறிந்தோம். தி. மு. க. என்றுலே ஒரு பயமும் பதைப்பும் மக்களிடம் உருவாக்க, ஆள்வோரும் அவர்தம் அம்புகளும் பெரிதும் முயனறனர். ஆனல், அந்தோ, எல்லாம் வீணுயிற்று! வெள்ளமபோல் மக்கள் கூட்டம் விரைந்து வரத்தான் செய்தது,

அண்ணல்

கடற்கரைக்கு. சாரிசாரியாக எறும்புகள் ஊர்ந்து செல்வது போல், இலட்சக்கணக்கான மக்கள்-தடையுத்தரவு போடப்பட்ட இடத்தை நோக்கி, எச்சரிக்கைகளும் பயமுறுத்தல்களும் செய்யப்பட்டும், கூடினர்.

இதுவே போதும், மக்கள் மன்றத்தின், அனுதாபமும் ஆர்வமும் யார் பக்கம் இருக்கிறதென்பதை விளக்க! எவ்வளவு பயமுறுத்தல்கள் செய்யப்படினும், தி.மு.க.வின் குரல் கேட்டிட, மக்களுக்குள்ள ஆசையின் அளவினை இதுவே சொல்லும்!!

இப்படிக் கூடியிருந்த மக்களைப் பார்த்துத்தான், தி. மு. க. வின் முன்னுள் பொதுச் செயலாளர், சொன்னுர், "நாம் எவ்வளவு கட்டுப்பாட்டுக்கு அடங்கியவர்கள் என்பதைக் காட்ட, எழுந்து நில்லுங்கள்", என்று.

எழுந்து நின்றது மக்கள் வெள்ளம்! அந்தக்காட்சி, இறும்பூதெய்தும் வகையில் இருந்தது என்கின்றனர், கண்டோர்!! மாற்றுக்கட்சி ஏடாம், 'தினமணி' கூட, மறக்கவில்லே, இச்செய்தியைத்தர. ஆள்வோரின் அம்புகள், எவ்வளவோ பரபரப்பை உருவாக்க முயற்சித்தும், திருவல்லிக்கேணியிலிருக்கும் கடைகள் யாவும் கூட்டம் முடியும் வரையில், திறந்தே இருந்தன.

சிறுகலாம், மிகச் சிறிய கல் வீச்சு, சின்னஞ்சிறு தகராறுகூட ஏற்படவில்லே.

இந்த அமைதிதானே 3ந் தேதியன்று இருந்திருக்கும். அன்றைய தினம் பொதுக்கூட்டம் நடாத்த அனுமதி தரப்பட்டிருந்தால், இதுபோலத்தானே அக்கூட்டமும் நடைபெற்றிருக்கும். இன்று, நேற்று!! இதுவரை, எத்தனை கூட்டங்களை நடத்தியிருக்கிருேம், சென்னையில். கடற்கரையில் மட்டுமா, சின்னஞ்சிறு சந்துகள் உள்பட, வாரத்துக்கு ஒன்று இரண்டு என்று, இதுவரையில் எத்தனை கூட்டங்கள் நிகழ்ந்து வருகின்றன! எங்காவது ஒரு குழப்பம், தகராறு, பூசல் ஏற்பட்டதாகச் சொல்ல முடியுமா? நிச்சயமாக, எதிரிகள்கூடக் கூற முடியாது. அவ்வளவு அமைதியையும், கண்ணியத்தையும், நமது மக்கள் கடைபிடித்து வருகின்றனர். இருந்தும், காமராஜர் அரசு, 3-ந் தேதி கூட்டம் நடத்த அனுமதி மறுத்தது. அதன் மூலம், தனது ஆதிக்கத்தின் வேகத்தை, நமக்கும் நாட்டுக்கும் உணர்த்த நினைத்தது. பேசச் சென்ற நம்மையும் பிடித்தடைத்தது! பேச்சைக் கேட்க வந்த மக்களையும், தடியால் அடித்து, கண்ணீர்க் குண்டுகளைப் போட்டு, கலேக்க முயன்றது! காலிகளும், கூலிகளும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு கூட்டத்துக்குச் சென்றவர்களை, கற்களால் தாக்கியிருக்கிருர்கள். விளைவு, விபரீதமாகி, அடிதடியும் அமர்க்களமும் நிகழ ஏதுவாயிற்று.

கூட்டம்தான் இப்படியாயிற்றே கருப்புக் கொடி காட்டவாவது, அனுமதித்திருக்கலாமன்றோ? குமாரசாமியார் ஆட்சியிலும், ஆச்சாரியார் ஆட்சிக் காலத்திலும், கருப்புக்கொடிகள் காட்டி

யிருக்கிறோம். ஜனநாயக உரிமையான அதை, நமது அதிருப்தியை காட்டிக்கொள்ள, பயன்படுத்தியிருக்கிறோம். அமைதியும் கண்ணியமும் நிரம்பிய வழி அந்த நிகழ்ச்சிகளை நடத்திக்காட்டியிருக்கிறோம். நேரு பண்டிதர் வந்த அன்று, அதுபோலக் கண்டனத்தைக் காட்டிக்கொள்ள மக்கள் அனுமதிக்கப்படவில்லை. எப்படியாவது, ஒரு கருப்புக்கொடிகூட நேருவின் கண்ணில் படாமல் செய்துவிட வேண்டும் என்கிற 'வெறி'யுடனேயே வேலை செய்திருக்கிறார்கள், ஆள்வோர். அன்றைய தினம் பறங்கிமலையிலும், மாலையில் மவுண்ட்ரோடிலும் நடைபெற்ற போலீஸ் தர்பார்களைப் பற்றிக் கேட்கக் கேட்க நெஞ்சு நெகிழுகிறது. மீனம்பாக்கம் விமான நிலையம் சென்று, வெற்றிகரமாகக் கருப்புக்கொடி காட்டிவிட்டுத் திரும்பிய மக்களை, அடி அடி என்று அடித்திருக்கிறார்கள் ரிசர்வ் போலீசார். தப்பித்து ஓட முயன்றவர்களை ஓடிப்பிடித்து அடித்திருக்கிறார்கள்! "என்னடா கையில், கருப்புக் கொடி?" என்று கேட்டுத் தாக்கியிருக்கிறார்கள்! கண்ணீர்ப் புகை போட்டு, அது தாங்காது அங்குமிங்கும் ஓடிய மக்களை வளைத்துக்கொண்டு அடியடி என்று அடித்திருக்கிறார்கள்! பக்கத்திலே வெட்டப்பட்டிருந்த பள்ளங்களிலே அகப்பட்டுப் படாத பாடு பட்டனராம் மக்கள். கட்டிடத்துக்குள் குதித்தாவது தப்பலாம் என்று ஓடி, சுவர் ஏறும் போது, அடிபட்டதால் பிரக்ஞை இழந்து கீழே விழுந்திருக்கிறார்கள். இப்படி அலங்கோலத் தர்பார் நடத்தப்பட்டு இருக்கிறது, பறங்கிமலையில்! அன்று மாலை மவுண்ட்ரோடிலே கடை வைத்திருப்போரையும், டாக்சி வண்டி ஓட்டுபவர்களையும் என்ன நடந்தது என்று கேட்டுப் பாருங்கள். விழிகள் குளமாக அவ்வளவு வேதனையுடன் சொல்வர். வரிசையாக நின்ற மக்கள் மீது போலீசார், பாய, மக்கள் பயந்து அங்குமிங்கும் ஓட, அந்த வேகத்திலே பலர் மிதிபட்டு விழ, ஆயிரக்கணக்கான கால்கள் அவர்களைத் துவைக்க, அப்பப்பா, அங்கு நடந்த கோலம் வர்ணிக்கக் கூடியதல்ல. இலட்சக்கணக்கான மக்கள் மீது, கண்ணீர்ப்புகையும் தடியடியும் தாக்க, வடித்த கண்ணீர் மிகப் பெரிது. சைகிளை வைத்துக்கொண்டு நின்றோர் கலவரத்துக்குப் பிறகு தமது சைகிள் 'அப்பளம்' போல ஆகியிருப்பதையே கண்டனராம்! இரண்டு உயிர்கள் — கூட்டத்தில் நசுங்கியே செத்தனர் என்று போலீசாரே கூறுகின்றனர் என்றால், எவ்வளவு தூரம் அன்று போலீசார் மக்களைத் துரத்தியிருக்கவேண்டும்? ஒடிந்த கால்கள் பல, உடைந்த மண்டைகள் ஏராளம், கிழிந்து தொங்கியதாம் சதை, உடம்பெல்லாம் வாங்கிய அடிகளால் 'கன்னி'ப் போனவர்களாக இன்னும் உலவுகிறார்கள் ஆயிரக்கணக்கில். இவ்வளவு தூரம், வெறியாட்டம் நடத்தியிருக்கிறது? இதனைக்கண்டு ஆத்திரமடைந்திருக்கின்றனர் மக்கள். இது போதாதென்று, அன்றெல்லாம் போலீசார் காக்ஸ்சேரி போன்ற ஆதித்திராவிடச் சேரிகளிலெல்லாம் புகுந்து, குடிசைக்குள்ளிருந்தோரையெல்லாம் வெளியே இழுத்து வந்து, அடித்து, இழுத்துக்கொண்டு போயிருக்கின்றனர்.

நேரு, வந்தது சென்னைக்கு! தடியடி—கண்ணீர்ப்புகை—கைது யாவும் சென்னையில், நிகழ்ந்தது!! சரி, மாநில முழுதும், அன்றும் அதற்கு முதல் நாளும் ஒரு இடமல்ல, எல்லா ஊர்களிலும் மொத்தம் 4700-தோழர்களைக் கைது செய்தனரே — ஏன், அது? செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், கோவை, திருச்சி, தஞ்சை, திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, நாஞ்சில் போன்ற மாவட்டங்களிலெல்லாம் எதற்காகக் கழகத் தோழர்கள் கைதுசெய்யப்பட்டனர்? என்ன காரணம்?

கூட்டத்துக்கு ஏன் அனுமதி மறுத்தாய்?

கருப்புக் கொடி வைத்திருந்தவர்களையெல்லாம் ஏன் போலீசை விட்டு அடித்தாய்?

இருவர் சாகவும், பலர் காலொடிந்தும் கையொடிந்தும், கிடக்கும்படி ஏன் செய்தாய்?

சென்னையில் மட்டுமின்றி, எல்லா வெளியூர்களிலும், ஏன் தோழர்களைக் கைது செய்தாய்?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதிலளிக்கவேண்டிய காமராஜ் அரசு, எங்கே மக்கள் இந்தக் கேள்விகளையெல்லாம் எழுப்பிவிடப்போகின்றனரோ, அர்த்தமில்லாமல் நாம் மேற்கொண்ட அடாவடித் தர்பாரைப்பற்றிப் பேசுவார்களோ, என்கிற அச்சத்தில், மக்களின் கவனத்தை வேறு வழியில் திருப்ப முயற்சிக்கின்றனர். தங்களது தவறை மறைக்க, ஏசலையும் பழியையும் எடுத்து வீசுகின்றனர்! "தி. மு. க என்ன செய்தது தெரியுமா — தி. மு. க. தலைவரே, இந்தியை ஒப்புக்கொண்டார், அறிவீரோ, நீங்கள்" என்று ஆங்காங்கும் பேசத் தலைப்பட்டிருக்கின்றனர். திருவிழாக் காலங்களில் கூடியிருப்போர் கவனத்தை மறைக்க "அதோ ஒரு பாம்பு!" என்று அலறுவார்களாம், எத்தர்கள். கூட்டம் வந்த வேலையை மறந்து அலறியடித்துக்கொண்டு ஓட முயற்சிக்கும்போது, தங்கள் வேலையை செவ்வனே முடித்துக் கொள்வார்களாம் முடிச்சு அவிழ்ப்பவர்கள். அதேபோல, ஆதிக்கத் தர்பார் நடத்தி, தமது முகத்தில் கரி பூசிக் கொண்ட இந்த சர்க்கார், மக்களின் மனதிலே நிறைந்துள்ள பிரச்சினையை மறைக்க, நம்மீது பழியைத் தூக்கிப் போடுகின்றனர். இப்படிச் செய்வது, ஆதிக்கக்காரர்களின் பழைய தந்திரம் என்பதை நாம் அறிவோம். ஏதாவது ஒரு புதிரை எடுத்துப் போட்டு, மக்களின் கவனத்தை அந்த வழியில் திருப்பிவிட முயல்வது, எத்தர்களின் விளையாட்டு என்பதையும் மக்கள் அறிவார்கள்.

இரண்டு உயிர்கள் செத்தன! ஏராளமானோர், தடியடிக்கு ஆளாகினர்! பல இடங்களிலும் கைது !!

ஏன் இதெல்லாம்? கேட்க வேண்டும் மக்கள்! அப்படி மக்கள் கேட்டால், என்ன பதிலைச் சொல்வது நாம் என்கிற அச்சத்தாலேயே, அமைச்சர்கள் அங்குமிங்கும் ஓடி, நம்மீது 'பிரமாதமாக'க் குற்றம் சாட்டிட முயற்சிக்கிறார்கள் !!

இரண்டு உயிர்கள் செத்தன! காமராசரின் ஆட்சியிலேயே, இருவர் பிணமாயினர் !!

இது, சாதாரணமானதா? யார் அவர்கள்! ஏன் இப்படி அலங்கோலமாகச் சாகவேண்டும்?

(16-ம் பக்கம் பார்க்க)

ஒய்யாரக் கொண்டையாம்...!

ஒய்யாரக் கொண்டையாம்
தாழம்பூவாம்
உள்ளே இருக்குமாம் ஈரும் பேனும்!-

என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அதற்கு, நல்லதொரு உதாரணமாக அமைந்திருப்பது, டில்லி காங்கிரஸ் ஆட்சியாகும். நேரு அவர்களைப் பற்றி, வெளிநாடுகள் யாவும் போற்றுகின்றன. புதியதொரு பாதையில், இந்தியா போய்க்கொண்டிருப்பதாக வானளாவப் பேசுகிறார்கள். "ஆகா! ஊகூ! எங்கள் பெருமை என்ன தெரியுமா? அவர் போற்றுகிறார்! இவர் பாராட்டுகிறார்!!", என்று காங்கிரஸ்காரர்களும் கர்ச்சிக்கிறார்கள். ஒய்யாரக் கொண்டை மட்டுமே வெளிக்குத் தெரிகிறது! உள்ளே, எவ்வளவு ஈரும் பேனும் உள்ளன தெரியுமா?-என்று விவரிக்கிறார், பார்லிமெண்டு உறுப்பினரான **ஆச்சார்ய கிருபளானி**. கிருபளானி, காங்கிரஸ் தலைவராக இருந்தவர்—காந்தியடிகளிடம் பல காலம் இருந்தவர். அவரது இந்தக் கருத்துக்களை, அகில இந்தியப் புகழ்பாடுகிறவர்கள், சிந்தித்துப் பார்க்க வேண்டும்:-

மத்திய அரசாங்கத்தில் பணம் வீணாக்கப்படுவதைப் பற்றிச் சில உதாரணங்களைப் பட்ஜட் உரையில் நான் குறிப்பிட்டேன். புதுடில்லி நகரம் "ஆபீசுகள் நிறைந்த ஒரு காடு" என்று நமது பிரதம மந்திரியே கூறினார். யுத்த காலத்தில் காரியாலயங்கள் பல மடங்கு பெருகி விட்டன. அதற்குப் பின் சுயராஜ்ய அரசாங்கம், மாஜி சமஸ்தானாதிபதிகளின் அரண்மனைகளையும் மற்ற பெரிய பெரிய கட்டிடங்களையும் அரசாங்க காரியாலயமாகவோ அல்லது வேறு காரியங்களுக்காகவோ எடுத்துக்கொண்டு விட்டனர். இருந்தாலும்கூட, பத்து ஆண்டுகளாக நடந்துவரும் இந்தக் கட்டிட வேலைகளுக்கு இன்னும் ஒரு முடிவு காணவில்லை. மற்ற நாடுகளில் பார்த்தால், மிகப் பெரிய திட்டங்களை வகுத்து, அதற்கு வேண்டிய பணம் பற்றாக்குறையாகிவிட்டால் கிடைக்கின்ற வசதிகளோடு மக்கள் வாழ்வதையும் அந்த நிலையிலேயே தங்கள் வேலைகளை ஒழுங்காகச் செய்வதையும் காணலாம். உலக யுத்தத்திற்குப்பின் மேற்கு ஜெர்மனியில் மக்கள் சின்னஞ் சிறு குடிசைகளிலே வசித்தனர். அரசாங்க காரியாலயங்களைக்கூடச் சிறு இடங்களில் வைத்துக்கொண்டனர். கட்டிட நிர்மாண வேலையனைத்தும், மில்களும் தொழிற்சாலைகளும் கட்டுவதற்காக செய்யப்பட்டது. ஆனால் டில்லியில், அரசாங்கத் தலைமைக் காரியாலயமான செக்ரடேரியட்டில் ஒவ்வொரு அறைக்கும் ரூ. 5000 செலவழிக்கப்பட்டிருக்கிறது. அனாவசிய அலங்காரம் செய்ய! ஒவ்வொரு கட்டிடமாக 'ஏர் கண்டிஷன்' செய்து வருகின்றனர். இப்போது கட்டப்படும் கட்டிடங்களும் 'ஏர் கண்டிஷன்' வசதியோடு கட்டப்படுகின்றன. புதியதாக அணைகட்டவோ அல்லது வேறு ஏதாவது திட்டம் போடப்பட்டு, வேலை துவங்கும்போதோ, முதன்முதலில் கட்டப்படுவது அதிகாரிகள் வசிப்பதற்காகப் பெரிய பெரிய பங்களாக்களும், வசதிமிக்க கட்டிடங்களும்தான்!

ராஜ்ய அரசாங்கங்களிலும் இப்படித்தான் நடக்கிறது. கிராமப் புறங்களிலும், நகரப் புறங்களிலும் மக்கள் குடியிருக்கின்ற நிலையைப் பற்றி, "நாகரிக வளர்ச்சி பெற்றது என்று உரிமை பாராட்டிக் கொள்ளுகின்ற எந்த ஒரு சமுதாயத்திற்கும் இது ஒரு பெருத்த அவமானம்" என்று நமது நிதியமைச்சர் கூடக் குறிப்பிட்டார். ஆயினும், மக்கள் நிலை ஒருபுறம் இப்படியிருக்கும் அதே சமயத்தில், மற்றொருபுறம் புதிய புதிய காரியாலயங்களும், புதிய புதிய தலைநகரங்களும் பல ராஜ்யங்களில் எழுப்பப்படுகின்றன. சந்திகார் (பஞ்சாப்) என்று புதியதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நகரம் நவீன காலத்திய சிற்பக் கலையிலே அலாதியானதோர் சாதனை என்று கூறப்படுகிறது. உண்மைதான்! கவர்னர் மாளிகைக்கு மட்டும் 40-இட்சம் ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்படுகிறது. பெப்சு (பாடியாலா கிழக்கு பஞ்சாப்) ராஜ்ய யூனியன் ராஜ்யம் ஏற்படுத்தப்பட்ட பின்னர், ஏற்கெனவே அங்கு கட்டப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டுவந்த சட்டசபைக் கட்டிடம் அதற்கு மேல் உபயோகிக்கத் தகுதியற்றது என்று கருதி 68-இலட்ச ரூபாய் செலவில் புதியதாகச் சட்டசபைக் கட்டிடம் கட்டப்படுகிறது. 92-இலட்ச ரூபாய் செலவழித்து செயற்கை ஏரி ஒன்று கட்டப்பட்டுள்ளது.

சந்திகாரில் வேலை செய்த பிரான்சு தேசத்தைச் சேர்ந்த இரண்டு சிற்பிகளுக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்ற கேள்வி பஞ்சாப் சட்டசபையில் கேட்கப்பட்டபோது, அதுவரையில் ஒருவருக்கு 9 லட்ச ரூபாயும் மற்றொருவருக்கு இரண்டரை லட்சம் ரூபாயும் கொடுக்கப்பட்டதாகப் பதில் வந்தது. மத்திய பிரதேசத்தின் கோடைகாலத் தலைநகரான பச்மாரியில், ஒரு விடுதி கட்டுவதற்காக 12 இலட்ச ரூபாய் செலவிடப்படுகிறது. இதைத் தவிர,

பிரமுகர்கள் வந்தால் தங்குவதற்கெனத் தனியாக வேறொரு விடுதியும் கட்டப்படுகிறது. பிஹார் கோடை வாசஸ்தலமான ராஞ்சிக்கு ஒவ்வொரு ஆண்டும் கோடை காலத்திற்கு அரசாங்கத் தலைவர்களும், அதிகாரிகளும் செல்வதற்காக, நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் தங்குவதற்காக ஆகும் செலவுக்குமேல் பத்து லட்ச ரூபாய் செலவாகிறது. "சர்க்யூட் ஹவுஸ்" என்ற விடுதி ஒன்று ஏற்கனவே இருந்தும். மற்றொன்று கட்டப்படுகிறது, இதைப் போலவே மற்ற ராஜ்ய சர்க்கார்களும் கோடை காலத்தில் மலை வாசஸ்தலங்களுக்குச் செல்லும் ஆடம்பரப் பழக்கத்தில் ஈடுபடுகின்றனர்.

சுதந்திரம் பெறுமுன் அந்நிய ஆட்சியாளர்கள் இத்தகைய ஆடம்பரங்களில் ஈடுபட்டபோது, அவர்கள் இந்திய சீதோஷ்ண நிலையின் வெப்பத்திற்குப் பழக்கப்படாதவர்கள் என்ற போதிலும் கூட நாம் தீவிரமாகக் கண்டித்தோம். இப்போது, நமது சுதேச ஆட்சியாளர்களே இந்த ஆடம்பரத்தை தாங்களும், தங்கள் குடும்பத்தினரும், நண்பர்களும் அனுபவிப்பதற்காக வேண்டி நீடிக்கச் செய்துள்ளனர். முன்பெல்லாம் மலை வாசஸ்தலங்களில் ஊருக்குள் செல்லும் சாலைகளில் வைசிராய், சேனாதிபதி, கவர்னர் ஆகியவர்கள் தான் காரில் செல்ல முடியும். இப்போதோ மந்திரிகளின் கார்களும், அரசாங்கக் காரியதரிசிகளின் கார்களும் மலைகளிலுள்ள ஊர்களின் குறுகிய பாதைகளில் பாதசாரிகளுக்கு அசௌகரியமும், உபத்திரவமும், ஆபத்தும் உண்டாக்கும் வகையில் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் மலை வாசஸ்தலங்களில் நடந்துஉலாவித் தேகப் பயிற்சி பெற்று நன்றாக அனுபவித்தனர். ஆனால் நமது இந்திய அதிகாரிகளோ உள்ளத்திற்கு குதூகலம் அளிக்கும் இந்தத் தேகப் பயிற்சியைக்கூட செய்ய முடியாத "மிருதுத் தன்மை" படைத்தவர்கள்! வீட்டு வாசற்படி வரைக்கும் காரில் வந்து இறங்குவார்கள்!!

*

நமது ஆட்சியாளர்களின் திறமைக்குச் சில உதாரணங்களைப் பார்ப்போம். அஸ்ஸாம் ராஜ்யத்தில் 1957 மார்ச் 31-உடன் முடிந்த பட்ஜட்டின் மொத்தத் தொகையான 47·10 கோடி ரூபாயில் 13·47 கோடி ரூபாயை அரசாங்கத்தின் பல்வேறு இலாக்காக்கள் செலவழிக்காமல் அந்த நிதி வருடத்தின கடைசி நாளன்று திருப்பிக் கொடுத்துவிட்டனர். செலவழிக்கபபடுவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் 28·6 சதவீதம் செலவழிக்கப்பட முடியவில்லை. பற்றுக்குறை பட்ஜட்டுகள் பற்றிப் பிரதம மந்திரி சமீபத்தில் குறிப்பிட்டார். தேவைக்கதிகமாகக் கணக்கிடுவதுதான் இதற்குக் காரணமாகும். சென்ற ஆண்டில் ஐந்தாண்டுத் திட்டத்திற்காகச் செலவிடப்பட்டதில்கூடச் சரிவு ஏற்பட்டது சுமார் 8 சதவீதம் என்று கணக்கிடப்படுகிறது. வழக்கமாகப் பட்ஜட்டில் சேர்க்கப்பட்ட பணத்தில் பெரும்பகுதியை நிதி வருடத்தின் கடைசி மாதமான மார்ச் மாதத்தில் எப்படியாவது செலவழிக்கப்படுவது உண்டு. அவசரமாகச் செலவழிக்கப்படும் இந்தத் தொகையில் பெருமளவு வீணாகிறது. பஞ்சாப் ராஜ்யத்தில் உணவு தானிய விநியோக திட்டமொன்று லாபமோ, நஷ்டமோ இல்லாத வகையில் நடத்தத் திட்டமிடப்பட்டது. ஆனால் 1954 - 55ல் ரூ. - 18,84318 நிகர நஷ்டமானதாக ஆடிட் ரிப்போர்ட்டில் குறிப்பிடப்பட்டது. இந்த நஷ்டத்திற்கு உணவு தானிய விலையில் சரிவேற்பட்டதும் சரியான நேரத்தில் விற்காததால் தானியங்கள் கெட்டுப் போனதும் காரணமாகும்.

கிருபளானி அவர்களின் இந்த உரையை இன்னொரு முறை படியுங்கள் - காங்கிரசாட்சியின் ஆடம்பர அனாவசியச் செலவுகள் நன்றாகப் புரியும்.

*

திருமணம்

"திராவிட நாடு" ஏஜண்ட், தோழர் ஜி. எம். ஆறுமுகத்திற்கும் தோழியர் எஸ். ஏ. சாரதாம்பாளுக்கும் சிறுவலூர் மணமகள் இல்லத்தில் வாழ்க்கை ஒப்பந்த விழா சிறப்பாக நடைபெற்றது.

14-ம் பக்கத் தொடர்ச்சி

என்ன காரணம் இதற்கு? தி. மு. க. அப்படியென்ன, மாபெரும் கலவரமா செய்ய இருந்தது? 14-ந் தேதி நடைபெற்ற கூட்டம் காட்டுமே; நம்மிடம எவ்வளவு கட்டுப்பாடும் ஒழுங்கும் உள்ளது என்பதை. இந்த ஒழுங்கு குலையும் படியாக நடந்து கொண்டது யார்? ஆட்சியாளரன்றோ! ஏன், அவர்கள் இப்படி அடக்குமுறைப் பாதையை மேற்கொண்டனர்? இதற்குப் பதில் சொல்லவேண்டும், மக்கள் மன்றத்தில்!!

ஆள்வோர், மமதைப் பாதையில் சென்று, மாறாத பழியைத் தேடிக்கொண்டிருக்கின்றனர். அதை மறைக்க, ஏதாவது செய்ய வேண்டுமேயென்று, ஏதேதோ கூறித் திரிகின்றனர். இரண்டு உயிர்கள்! அடிதடி! கூட்டத்துக்குத் தடை! — ஏன், இவ்வளவு அடக்குமுறை? அமைதியையும் கண்ணியத்தையும் தமது வழிகாட்டியாகக் கொண்டியங்கும் கழகத்தினர்மீது, இவ்வளவு ஆத்திரத்தையும் எடுத்து வீசவேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது? இதற்குப் பதிலளிக்க வேண்டும், ஆள்வோர்.

பதிலளிக்கப் பயந்தே, பிரச்சினையை மாற்றுகின்றனர்! திசையைத் திருப்பிவிட முயல்கின்றனர்!! தாம் செய்தது தவறு— மக்கள் மனதில் இத்தவறு உறைத்தால் நமது ஆட்சியைக் கண்டிப்பார்கள் என்பதாலேயே, இப்படிச் செய்கின்றனர்.

ஆட்சி செய்த தவறை, எடுத்துக் காட்டி, அகிம்சா ஆட்சி எந்த வகையில் நடக்கிறது என்பதை மக்களிடம் சொல்லவேண்டியது நமது பொறுப்பு என்பதைத் தோழர்கள் மறந்துவிடக்கூடாது. இரண்டு உயிர்கள்! தடியடி! தடை!— இதற்குத் தக்கப் பதில் பெற முயற்சிக்க வேண்டும்; மக்கள் மன்றத்தில், ஆட்சியின் வெறியாட்டத்தை, உணர்த்த வேண்டிய கட்டம் இது.

★

445 / 2.88

6—4—58 | வார வெளியீடு | விலை 10காசு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 APR 1958
MADRAS

நற்றமிழாணை - நாடடைவோம்!

[கலைவாணன்]

★

அந்தித் தென்றல்விளை யாடுமெழிற் சோலையிலே
அகன்றோடு மருவியது கரைமணற் பரப்பினிலே
சிந்தனை மிக்கவனாய்க் குந்திநா னிருக்கையிலே
சின்னஞ்சிறு நெருப்பை முழக்கிடு மெண்ணெய்போலே
வந்துவந் தென்றனகத் திடைதோன்றும் எண்ணம்பல,
வாய்திறந் துரைக்கவொண்ணா வகையென்னை வாட்டியதை
சிந்தையிலே வைத்திருக்கச் செந்தணலா யிருப்பதனால்,
சிங்காரப் பெருமகனே! செப்புகிறேன் கேட்டிடுவாய்;

அன்றைநாட் காலைமணி ஐந்தோடு ஆறிருக்கும்
அகந்தேடி வழக்கமாக வந்ததொரு தமிழேடு!
தென்னைதரு மிளநீரைத் தேடிவந்து கோடையிலே
தேடினா மோர்சொட்டு நீர்கிட்டாப் பாதையிலே
அன்புநெஞ் சாளொருத்தி அகமலர்ந் தருகுவந்து
அருந்துங்க ளெனக்கொடுக்கி னாவலோ டடைவதேபோல்,
புன்னகை யோடேட்டை வாங்கினேன்! நோக்கியதும்,
புத்தக சாலைபோந்தேன்! பத்துப்பிற வேடுங்கண்டேன்!

ஏட்டுக்கு ஏடுகோலம்! எப்படித்தா னியம்பிடுவேன்!
"ஏதிவர்க்குத் தனிநாடு, தனிமொழியு மில்லையில்லை—
நாட்டுடைக் காளையரே நம்புவீரோ இவர்களைத்தான்—
நாடகம் திரையாடிகள் நாடாளுஞ் சிரமமறியார்—
காட்டமாய் நேற்றிப்படிக் கர்ஜித்தா ரமைச்ச"ரென்று
கண்டகண்ட ஏடெல்லாம் சாற்றியதா லுரைக்கின்றேன்:
நாட்டுடைக் கலையேசி எமையேசி வாட்டினாலும்
நற்றமிழாணை ஐயா! நாடடைந்தே தீருவோம்!

பேசட்டும்! பேசட்டும்!!

நாட்டுப் பிரிவினைபற்றி இப்போது காங்கிரஸ் அமைச்சர்கள் அதிகமாகப் பேசத் தொடங்கியுள்ளார்கள். நாட்டுப் பிரிவினை என்பது ஒரு "வியாதி" போன்றதென்று கூறும் அளவுக்கு அவர்கள் பீதி அடைந்துள்ளார்கள். அதிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய நாம் திராவிட நாடு தனியாகப் பிரிந்து ஆக வேண்டிய ஒன்று என்று கூறுவதைக் கேட்கும்போது அமைச்சர்களுக்கு ஆத்திரமும் ஆவேசமும் உண்டாகிவிடுகிறது. தி. மு. க.-வின் நாட்டுப் பிரிவினைக் கோரிக்கை ஒரு "வியாதி" "மாயை" என்று மந்திரிகள் தங்கள் வேலையைக், கடமையைக்கூட மறந்து, இது ஒன்றுதான் தாங்கள் பேசவேண்டிய பிரச்சினை என்று பகிரங்கமாகவே கூற ஆரம்பித்து விட்டார்கள். "தி. மு. க. நோய் மக்களைப் பிடிக்காது தடுப்பதே சர்க்காரின் கடமை" என்று சட்டசபையிலும், பொதுக் கூட்டங்களிலும், பிற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும்போதும் நாள் தவருது பேசி வருகிருர்கள்.

இந்த நாட்டு மக்களுக்குத் தீமை விளைவிக்கக் கூடியது ஒன்று இருக்குமாயின், அது, தி. மு. க-வினரின் நாட்டுப் பிரிவினைக் கோரிக்கைதான் என்று தாராளமாகவும் வெளிப்படையாகவும் பேசுகிருர்கள்.

இப்படி அமைச்சர்கள் பேசுவதை நாம் தவருகக் கருதவில்லை. மாருக, அவர்கள நமக்கு—நமது கோரிக்கைக்கு மறைமுகமான உதவியே செய்து வருகிருர்கள் என்றுதான் கருதுகிரேும்.

நாட்டு மக்களிடம் நாள் தவருது நாம் கூறிவரும் நாட்டுப் பிரிவினைக் கொள்கையை அவர்கள் மறுத்துப் பேசுவது உண்மையிலேயே நமக்கு அவர்கள் செய்யும் மறைமுக உதவியென்றே நாம் கருதுகிரேும். ஏனென்ருல் அவர்கள் இப்படியெல்லாம் பேசுவதால்தான் நாம் கோரும் திராவிடநாடு கிடைக்கிறதென்ற பொருளில் நாம் கூறவில்லை. தமிழனுக்கென்று தனியாக அமைந்திருக்கும் நன்றி மறவாப் பண்பின் காரணமாக, அவர்கள் எந்தக் கோணத்தில் எப்படிப் பேசினுலும்—ஏசினுலும், அவர்கள், நம்முடைய கோரிக்கையை எடுத்து வைத்துக்கொண்டு பேசுவதால் — பொது மக்கள் இருசாரார் பேசுவதையும் கேட்கும் வாய்ப்புப்பெற்று, உண்மை எங்கே — யார் பேசுவதிலே இருக்கிறதென்பதை உணர முடிகிறதே என்பதால்தான் அவர்கள் பேசுவதையும், நமக்கு அவர்கள் உதவி செய்வதாகக் கருதுகிருேம்.

அடிகள்

நாட்டுப் பிரிவினைக்கு நாம் காட்டும் காரணங்கள் பலவற்றையும் அவர்கள் — அமைச்சர்கள் எடுத்து வைத்துக்கொண்டு, "இதோ பார்த்தீர்களா, இவர்கள் கூறும் காரணங்களை; இவையெல்லாம் இன்னின்ன குறைகளையுடையன" என்று விளக்கம் தந்தா மறுக்கின்றனர்? இல்லவே இல்லை. நாம் கா—க்காரர்கள்; அவர்கள் தி. மு. க-க்காரர்கள். எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய இவர்கள் கூறும் காரணங்களைக் காங்கிரசுக்காரராகிய நாங்கள் கண்ணையும் கருத்தையும் மூடிக்கொண்டு மறுக்க வேண்டியதுதான் நம்முடைய — தற்காலச் சர்க்காராகிய நம்முடைய கடமை என்ற போக்கில் நடந்துகொள்கிருர்கள்.

ஆனல், நாட்டு மக்கள் இருசாரார் பேசுவதையும் கேட்கிருர்கள்—எழுதுவதையும் படிக்கிருர்கள். யார் கூறுவதிலே உண்மை இருக்கிறது; யார் காரணங்காட்டிப் பேசுகிருர்கள்; யார் "வெத்து வேட்டு" அடிக்கிருர்கள் என்பதைக் கவனித்துக்கொண்டுதான் வருகிருர்கள்.

நாம் நாட்டுப் பிரிவினைக்காக எடுத்துக்காட்டும் காரணங்கள் எதனையும் எந்த மந்திரியும் தனது மதிகொண்டு இதுவரை மறுத்துப்பேசவில்லை — காரணம், நாம் கூறும் காரணங்கள் உண்மையானவை, ஒளிவு மறைவு அற்றவை என்பது மட்டுமல்ல, நேர்மைக்கும் நீதிக்கும் கட்டுப்பட்டு நடக்கக்கூடிய எவராலும் ஒப்புக்கொள்ளக்கூடியவையுமாகும்.

நாடு பிரிந்தால் நாம் வாழ முடியாது— அதற்கு இன்னின்ன காரணங்கள் என்று எடுத்துக்காட்டினலாவது, அவற்றில் நேர்மையும் நீதியும் இருக்கிறது — எனவே நாம் நாடு பிரியவேண்டுமென்று இதுவரை கூறிவந்தது தவறு என்று ஒப்புக்கொள்ளலாம். ஆனல், அவர்கள் எந்தக் காரணமும் கூறுவதில்லை — கூற முடிவதில்லை. வறிதே, "வியாதி" "தீமை" "மாயை" "வலை" என்ற வார்த்தைகளில் அவர்கள் கூறும் காரணங்கள் எல்லாம் மறைந்து கிடப்பதாக மனப்பால் குடித்துக்கொண்டு பேசிவருகிருர்கள்.

மாணவர்களே! அவர்கள் வலையில் விழுந்து விடாதீர்கள்!

இளைஞர்களே! அவர்கள் மாயையில் சிக்கிவிடாதீர்கள்!

பெரியவர்களே! அவர்கள் கொள்கை வியாதியுள்ளது, நெருங்காதீர்கள்!

பொதுமக்களே! அவர்களின் பேச்சு தீமைகளை விளைவிக்கும், நம்பாதீர்கள்!

(15-ம் பக்கம் பார்க்க)

நமது கீதம்!

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [6-4-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 3

ஆரியமாவது! திராவிடமாவது!! — என்று பேசுவார்களே, அந்தக் கட்டம், வெகு வேகமாக மறைந்து வருகிறது.

திராவிடம் என்ற சொல்லையே உச்சரிக்கக் கூசியோர்கூட, இன்று சரளமாகவும் சந்தேமின்றியும் பேசத் தலைப்பட்டிருக்கின்றனர்.

பேசத் தலைப்பட்டது மட்டுமல்ல, திராவிடம்—திராவிடன் என்கிற வார்த்தைகளையும் ஒப்புக்கொண்டு உபயோகிக்கவும் முற்பட்டுள்ளனர்.

மார்ச் 19-ந் தேதி வங்காள சட்ட சபையில் இந்தி கூடாது என்று கர்ச்சித்த வங்கப் பிரதமர் பி. சி. ராய், தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிருர்......"ஆரிய, திராவிட, மங்கோலிய மொழி இனங்களைச் சேர்ந்த பல்வேறு பண்பாடுகளும், மரபுகளும் உள்ள பல வகை மக்கள் வாழும் பன்மொழி நாடு இந்தியா" என்று. பன்மொழி நாடு! பல்வேறு இனங்களைச் சேர்ந்தோர் வாழும் நாடு, என்கிருர் பி. சி. ராய்!!

மார்ச் 8-தேதி, பெரோஸ்பூர் எனுமிடத்தில் பேசிய, வி. கே. கிருஷ்ணமேனன் தெரிவித்திருக்கிருர், "எங்கேயோ திராவிடனின் தலையில் அடி விழுகிறதென்ருல் ஒவ்வொரு சீக்கியனின் மீசையும் துடிக்கவேண்டும்" என்பதாக. சீக்கியர், மராட்டியர் என்ருல் இதுவரை ஒப்புக்கொண்டவர்களின் உதடுகள் 'திராவிடன்' என்பதையும் எடுத்துக்கொள்ள ஆரம்பித்திருக்கின்றன.

காலம், உண்டாக்கி வரும் பெரிய மனமாற்றத்தின் ஒரு கட்டம் இது! பிறருக்குச் சாதாரணமாகத் தோன்றலாம்--ஆனல், இதனை, இவர்கள் எல்லாரும் ஒப்புக்கொள்ளச் செய்ய, நாம் பட்டபாடு நமக்கன்ரோ தெரியும்!!

வி. கே. கே. மேனன் உலகம் சுற்றி வருகிறவர் —நேருவின் பிரிய நண்பர். அவரும், பி. சி. ராயைப் போல, இந்தியா ஒரே நாடு, ஒரே விதமாகத்தான் குமரி முதல் இமயம் வரை வாழ்கிருர்கள் — என்று சிலர், உண்டாக்க முனைகிருர்களே — "ஐக்கிய உணர்ச்சி" இதுபற்றி குறிப்பிட்டிருக்கிருர்.

"இந்திய மக்களுக்கு ஒரு பொது மொழி கிடையாது, ஒரு பொதுச்சித்தாந்தம் கிடையாது, பொது உடைகிடையாது, இந்திய தேசத்தில் பிறகென்ன இருக்கிறதென்ருல் நாம் எல்லோரும் இந்தியர் என்கிற உணர்ச்சிதான். இதுதான் நம்மை இந்தியர்களாக்கியிருக்கிறது."

*

ஒரு தாயின் வயிற்றில் பிறந்தவர்கள் — ஒரே பண்பாடு கொண்டவர்கள் — ஒரே கூட்டில் வாழ வேண்டியவர்கள்—ஒரே மொழியைப் பேச வேண்டியவர்கள்—ஒரே மாதிரி வாழ வேண்டியவர்கள்—என்கிற ஒரு மயக்கம், பன்னெடுங்காலமாகப் பலருக்கு இருந்து வருகிறது. அதனலேயே, அவர்கள் காதுகள், திராவிடம், தனிமொழி, தனிக்கலை என்று சொன்னல் கேட்க மறுத்தன. ஏதோ இந்தியா பூராவும் ஒரே விதமாக வாழ்வோரின் நாடெனக் கருதி, இனனமும் பேசி வருகிருர்கள். இமயமுதல் குமரிவரை, அப்படியே ஒன்ருகவே இருக்கவேண்டும் என்னும் ஆசை கலந்த ஒரு மனமயக்கத்தையும் வளர்த்துக்கொண்டு வருகிருர்கள்.

அந்த மயக்கத்துக்கு, பி. சி. ராயிடமிருந்தும், கிருஷ்ணமேனனிடமிருந்தும் விளக்கம் வருகிறது! பன்மொழி இனங்கள் வாழும் நாடு—என்கிருர், ராய். நாம் எல்லோரும் இந்தியர் என்கிற உணர்ச்சிதான் நம்மை இந்தியர்களாக்கியிருக்கிறது என்கிருர் கிருஷ்ணமேனன்.

நேரு போன்றவர்களுக்கு நன்ருகத் தெரியும், இந்தியா ஒரு சர்க்கஸ் கூண்டு என்கிற உண்மை! எனினும், அவர்கள் 'இந்தியர் என்கிற உணர்ச்சியை' எல்லோருக்கும் உண்டாக்கிவிட முயற்சிக்கின்றனர்!! தங்களது காலத்திலேயே, இந்த உணர்ச்சியை காத்தானிலிருந்து முத்தன் வரை உண்டாக்கிவிட்டுப் போய்விடவேண்டும் என்ற ஆவலையும் ஆசையையும் அதிகமாக்கிக்கொண்டிருக்கிருர்கள். அதனல்தான் அடிக்கடி, இமயமும் குமரியும் ஒன்று, எல்லோரும் இந்தியர் என எண்ணுங்கள் என்று பேசி வருகிருர்கள், இந்தியைப் பொதுமொழியாக்கவும் பிடிவாதம் செய்கிருர்கள்.

*

உண்டாக்கிவிடும் உணர்ச்சி! தானகவே ஏற்படும் உணர்ச்சி!! — என்று இரண்டு வகையிருக்கிறது. கட்சி பேதமிருந்தாலும், மனவேற்றுமைகள் இருந்தாலும் டில்லியில் நம்மவர்கள் இருவர் சந்தித்தால், இயற்கையாகவே அவர்களுக்குள் 'நம்மவன்' என்கிற உணர்ச்சி, உருவாகிறது. பிறகுதான், "இந்தியன்" என்கிற உணர்ச்சி ஏற்படுகிறது. அதுகூடச் சந்தேகம்தான்!!—எப்போதும், இயற்கையாகவே உள்ளத்தில் எழும் உணர்ச்சிதான் வெல்லும். தானடா விடினும் தன் சதையாடும் என்பது இதுதான். பிறரால், உண்டாக்கிவிடப்படும் உணர்ச்சியிருக்கிறதே, அது அந்திநேரத்து வானம் போல, மாறிவிடக்கூடியதாகும்.

நாம் எல்லோரும் இந்தியர் என்கிற உணர்ச்சிதான் நம்மை ஒன்றுபடுத்துகிறதே ஒழிய, வேறு ஒன்றும் இல்லை என்று ஒப்புக்கொள்கிருர், வி. கே. கே. மேனன்.

இப்படி ஒப்புக்கொள்வதும் சாதாரணமான கட்டம் அல்ல, நமது விடுதலை வரலாற்றில்! உண்டாக்கப்படும் உணர்ச்சி தவிர, அடிப்படையில் ஒன்றுக்கும் அம்சமில்லை என்கிறார் மேனன், மொழியைக் காட்டினார், ராய்! மேனன், இன்னும் ஒருபடி சென்று உடை—உணவு—சித்தாந்தம் வரையில் ஆராய்ந்து உரைக்கிறார்—உணர்ச்சி தவிர, வேறேதும் இல்லையென்கிறார்!!

இந்த உணர்ச்சி வெல்லுமா, ஒரு ஐக்கியத்தை உண்டுபண்ணி விடுமா என்பதுபற்றிச் சிந்திக்கும் கட்டத்துக்குத்தான் அடுத்தபடி காங்கிரஸ் தலைவர்கள் வரவேண்டும். நட்பு என்பது வேறு!! ஒருவருக்கொருவர் ஏற்படும் இன்பதுன்பங்களைப் பரிமாறிக்கொள்வதும், விரோதமின்றிப் பழகுவதும், அன்பு காட்டி வாழ்வதும் நட்பாகும். ஐக்கியம் என்பது, குடும்ப விவகாரம் போல! இந்த ஐக்கியம் ஒருமொழி-ஒரு உடை—ஒரு கலை—ஒரு இனம்—என்கிற நிலைமையில் வாழ்பவர்களுக்குள்தான் ஏற்பட இயலும். திராவிடநாடு கேட்கும் நாம் இதனையே, விரும்புகிறோம். தாயகத்தில் ஐக்கியமும், பிறருடன் நட்பும் கொண்டு வாழ விரும்புவதுதான், நமது தனியரசின் கோட்பாடு. நண்பர்களாக, உலகிலுள்ள ஒவ்வொரு நாடும் வாழ முற்படுகையில், அருகிலுள்ள ஏனைய இந்தியப் பகுதிகளுடன், திராவிடமும் வாழ முடியும்! வெளிநாடுகளைவிட இன்னும் ஒருபடி அதிகமான உறவுகொண்டே வாழமுடியும்!!

அந்த நட்புத்தான் நீடிக்க இயலும்—வளரும்—வாழவும் செய்யும். அந்த நட்பு ஏற்படச் செய்வதை விட்டு, யாவரையும் வலிந்துஒன்றுக்கும்உணர்ச்சியை வளர்க்க, நேரு போன்ற தலைவர்கள் முயலுகிறார்கள். அந்த முயற்சி ஒருபோதும் வெல்லாது—இனத்துக்கொரு அமைப்பு ஏற்படத்தான் செய்யும் என்பதையே—நேருவின் அந்தரங்க நண்பர்களான ராய், மேனன், போன்றவர்களின் கூற்று மெய்ப்பிக்கிறது. காலம், இவர்களை, அடுத்த கட்டத்துக்கு விரைவில் அழைத்து வரவே செய்யும்—அந்த நம்பிக்கையிருக்கிறது, நமக்கு! ஏனெனில், "இந்தியா", அநாதி காலத்தது அல்ல—இடையில் உருவாக்கப்பட்டது தானே !!

★

அ' நகரில்.

தடியடி—இருவருக்குக் காயம்—25 பேர் கைது, என்கிற வேதனையான செய்திகளைப் பெறுகிறோம், கலையூரான அண்ணாமலை நகரிலிருந்து! சம்பவங்களின்போது, அங்கேயே இருந்த அமைச்சர் சுப்பிரமணியம், சட்டசபையில் விரிவான விளக்கம் ஒன்றும் அளித்துள்ளார். அண்ணாமலை நகரிலிருந்து வரும் தகவல்கள், அமைச்சர் கூறாத பல செய்திகளைச் சொல்லுகின்றன.

கோரிக்கைகளை எழுப்புவோரின் கூற்றுக்குப் பதிலளிப்பதும், அதன் முக்கியத்தைக் குறைத்துக் கூறுவதும் காங்கிரஸ் அரசு கடைப்பிடித்து வரும் வழியாகும்.

ஆகவே, மாணவர்களுக்குப் போதனை புரியும் வகையில் அமைச்சரது கூற்று, அமைந்திருப்பது கண்டு நாம் வியப்படையவில்லை. நமக்கு ஏற்படும் ஆச்சரியமெல்லாம், கல்வி வளர்க்கும் அமைச்சர் அங்கே போயிருந்தும், இந்தளவுக்கு நிலைமை வளர்ந்ததே என்பதுதான். அது ஏன்?—என்று சட்டசபையில் கேட்கப்பட்டதற்கு, "நிர்வாகிகளும் சரி, மாணவர்களும் சரி என்னைத் தலையிடுமாறு கேட்கவில்லை. நான் தலையிடவில்லை", என்று சொல்லியிருக்கிறார். இது தக்க பதிலல்ல! வேண்டுகோள் விட்டால்தான் எதையும் கவனிப்பது என்பதல்ல அமைச்சுத் தொழில்!! நிர்வாகிகள் பக்கமாயினும் சரி, மாணவர்களிடையாயிலும் சரி, யார் பக்கம் தவறு இருப்பினும், தடியடி அளவுக்குச் செல்லாமல் நிலைமையைச் சரிசெய்து வந்திருந்தால், அமைச்சர் கடமையுணர்ந்து செய்த காரியமாக ஏற்கலாம். அடிதடியும், போலீஸ் எதிர்ப்பும், ஏற்பட்டபோது அமைச்சர், துணைவேந்தரின் மாளிகையில்தான் தங்கியிருந்திருக்கிறார்! துணைவேந்தரும் அமைச்சரும் இதுபற்றிப் பேசாமலா இருந்திருப்பார்கள்—அமைச்சர் கூறுமலா, தஞ்சையிலிருந்தும் திருச்சியிலிருந்தும் விசேஷ போலீசார், அந்தச் சிற்றூருக்கு விரைந்திருப்பார்கள் !!

ஒழுக்கமும் நல்வாழ்வும் மாணவர்கள் மத்தியில் மலரவேண்டுமென்பதில் எவருக்கும் கருத்து வேற்றுமை கிடையாது. ஆனால், அரும்பு நிலையிலிருக்கும் மாணவர்கள் மத்தியில், அவைமலர அன்புதான் பயன்படுமேயொழிய, அடக்குமுறையும் சொல் வீச்சும், திசையைத்தான் திருப்பிவிடும். துடிப்பும், வருவதை முன்கூட்டி உணரும் சக்தியும் வளரும் பருவத்திலுள்ளவர்கள்தான் மாணவர்கள். பெரிய அரசியல் தலைவர்கள் என்பவர்களிடமே, விருப்பு வெறுப்புக் காட்டும் பண்பு இருக்கின்றபோது, மாணவர்கள் மத்தியில் அன்பு காட்டுவோர்மீது பரிவும், எரிச்சலைத் தெளிப்போர் மீது ஒருவகைக் கோபமும் ஏற்படுவது இயற்கைதான். அப்படி எரிச்சல் ஏற்படாத அளவில் பார்த்துக்கொள்வதும் — கோபமும் கொந்தளிப்பும் ஏற்படும்போது சமாளிப்பதும்தான் நிர்வாகத்திற்கு அழகு. இந்தப் பெருந்தன்மை இல்லாத காரணத்தாலும், தடியையும் துப்பாக்கியையும் நாடுவதாலும், அரசுக்கே இழுக்கு ஏற்பட்டு வருகிறது! துணைவேந்தராக விளங்குபவர் பெரிய விவேகி, எனினும், ஏனோ இந்தளவுக்கு நிலைமை மோசமாகி இருக்கிறது!

"அதிகமாக நடவடிக்கை எடுத்துவிடாதீர்கள்", என்று போலீசாரிடம் சொன்னாராம், சுப்பிரமணியம். குறைவாகப் போலீசார் எடுத்த நடவடிக்கைதான், தடியடி! கைது!! இந்த நடவடிக்கை எடுக்கச் சொன்னவர், அங்கேயே இருந்து, சிக்கலை தீர்த்துவிட்டுவர முயற்சித்திருந்தால், 'நவகாளியில் நடந்து காட்டிய காந்தியடிகளின்' பாதையில் நடப்பவர் என்கிற பெருமையைத் தேடித்தந்திருக்கும். அமைச்சர், சென்னை வந்துவிட்டார்! அந்த அறிவாலயம் மூடப்பட்டுவிட்டது!!

கைது — வழக்கு — தண்டனை, என்பது சாதாரணமாகப் பழக்கப்பட்ட செயல், ஒரு அரசுக்கு. இந்த முறைகளில், மாணவர்கள்தம் பிரச்னைகளை அணுகாமல்; வீம்புக்கு பலரது வாழ்வைப் பலியிட விடாமல் அறிவாலயத்தின் கதவுகள் திறக்கும்படி செய்ய வேண்டுகிறோம். அன்பால், மாணவர்களை நிச்சயம் கட்டுப்படுத்த இயலும். அண்ணாமலைமலை நகரில், அந்த 'அன்புக்கு' பஞ்சம் ஏற்பட்டது ஏனோ என்று தெரியவில்லை.

★

வரலாற்று நாடகம்:

முதலாவது குற்றவாளி!

[மலர் மன்னன்]

நிலைமை விளக்கம்:

"உலகமெங்கிலும் பரவியிருக்கும் கிருத்துவ மதம் என் விருப்பத்திற் கேற்பவே இயங்கும். கிருத்துவ மதத்தைப் பின்பற்றுவோர் உலகத்தின் எந்தக் கோடியிலிருப்பினும், அவர்கள் எனக்குக் கட்டுப்பட்டேயாக வேண்டும்; என்னால் இடப்படும் கட்டளையே கடவுளால் இடப்படும் கட்டளை; எனது விருப்பப்படியே அனைவரும் நடந்தாக வேண்டும்" எனக் கொக்கரித்தவாறு ரோமாபுரியில் கோலாகலமாகக் கொலுவிருந்த போப்பாண்டவரின் ஊழலைப் பகிரங்கமாகப் பறை சாற்றி மதச் சீர்திருத்தம் புரிந்த மார்டின் லூதரின் கொள்கைகள் ஐரோப்பிய நாடுகளில் வேரூன்றத் தொடங்கிய காலம்.

தந்தை மறைந்தமையால் இங்கிலாந்தின் அரசுக் கட்டிலில் சின்னஞ் சிறுவனான ஆறும் எட்வர்ட் அமர நேர்ந்தது. அவனது பிரதிநிதியாகப் பதவியேற்று ஆளும் பொறுப்பை ஏற்றுக்கொண்டவன் லூதரின் கொள்கைகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டு, மதச் சீர்திருத்தம இங்கிலாந்து முழுவதும் பரவுவதற்கான வழிவகைகளைச் செய்துவந்தான்.

சிறுவனான எட்வர்ட், அரியணையில் அதிக நாட்கள் அமர்ந்திருக்கவில்லை; மழலைப் பருவம் முதலாகவே உடல் நலம் குன்றியவனாயிருந்த அவன், தனது பதினாறுவது வயதிலேயே நிரந்தர தூக்கத்தில் ஆழ்ந்து போனான். எனவே அவனுக்கு முன் அரசாண்ட எட்டாம் ஹென்றியின் முதல் மனைவிக்குப் பிறந்தவளான மேரி ஆட்சிப்பீடமேறினாள். மேரி, மதச் சீர்திருத்தத்தை வெம்பெ வெறுப்பவள்; பழமையிலே நாட்டங் கொண்டவள். சீர்திருத்த வாதிகளின் ஆதிக்கத்தை அகற்றி, பழைய வழிபாட்டு முறையினைத் திரும்பவும் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் அவள் ஈடுபட்டாள்.

அரசியின் ஆதரவு தமக்குக் கிட்டும் என்று தெரிந்ததும், பழைமைவிரும்பிகள் ஒன்றுதிரண்டனர். அருணன் மறைந்து இருள் பரவியான பிறகு அவர்கள் கூடிக் கூடிப் பேசிப் பலப் பல சதித் திட்டங்கள் வகுத்தனர். சீர்திருத்தவாதிகளனைவரையும் வஞ்சகமாகக் கொலை செய்யத் துவங்கினர். விரைவிலேயே மடாலயங்களும், கோயில்களும் அவர்கள் வசமாயின; சீர்திருத்தவாதிகள் பகிரங்கமாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கொலையுண்டனர். மதவாதிகளின் வெறி பிடித்த நடத்தையால் இங்கிலாந்து மண் சிவப்பாயிற்று!

பழமையாளர் நிரம்பிய அரசவையில் மதச் சீர்திருத்தவாதிகள் குற்றவாளிகளாக நிறுத்தப்படுவர்; அவர்கள் தாம் கொண்ட கொள்கை தவறென ஒப்புக்கொண்டு எல்லோர் முன்பாகவும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டால் விடுதலை கிடைக்கும் — சொற்ப தண்டனை விதித்தும், பலவாறு அவமானப்படுத்தியுமான பின்னர் தான் !

மன்னிப்புக் கேட்க மறுப்பவர்கள் உயிரோடு தீயிலிடப்படுவார்கள். அரசி துணை இருக்கவே பழைமையாளர்களின் வெறியாட்டம் எல்லை கடந்தது; மதச் சீர்திருத்தம் தேவையெனப் பேசுவோர்களையெல்லாம் பலவாறு கொடுமைப்படுத்தி, அவர்களிடமிருந்து 'பழைய மதாச்சாரமே நீடிக்கவேண்டும்' என்ற ஒப்புதலைப் பெறுவது பழமையாளரின் தினசரி நடவடிக்கையாக இருந்து வந்தது.

இந்த அவல நாட்களிலேதான் கிரான்மர் என்ற மதச் சீர்திருத்தவாதி புதுமைக் கருத்துக்கள் நிரம்பி வழியும் நெஞ்சினனாய் இங்கிலாந்தில் உலவிக்கொண்டிருந்தான். கிரான்மர் நல்லவன், நாட்டோர் நலத்தில் நாட்டங் கொண்டவன், ஒழுக்கம் வழுவா உயர் பண்பாளன் என்றெல்லாம் நாட்டு மக்களால் கருதப்பட்டு வந்தவன். பழைமையாளர் குழாமில் செல்வாக்கும், அரசியின் பெருமதிப்பும் பெற்று விளங்கியோருள் குறிப்பிடத் தக்கவர்கள், கார்டினர், பொன்னர் என்போர். பின் வரும் காட்சிகளில் இம்மூவரே குறிப்பிடத்தக்க உறுப்பினர்கள்.

1

[கார்டினரின் ஆடம்பரமான அறை; கார்டினரது கூட்டாளிகளுள் முக்கியமானவனான பொன்னரும், வேறு சிலரும் அறையில் குழுமியுள்ளனர். அனைவரும் கார்டினரையே நோக்கியவாறிருக்க, அவனோ தன் செக்கச் சிவந்த விழிகளை எங்கேயோ பதித்திருக்கிறான்.]

பொன்னர் :- ஏன சிலையாகி விட்டாய், கார்டினர். உள்ளத்தில் உருவாகும் அற்புதத் திட்டங்களை வெளியிட்டு எங்களைச் செயலாற்றத் தூண்டும் உனது வாய் ஏன் இப்போது மௌனம் சாதிக்கின்றது? எந்நேரமும்

பலப் பல திட்டங்களை உருவாக்கிக்கொண்டிருக்கும் உன் உள்ளம் செயலற்றுப் போய்விட்டதா? உள்ளம் சூன்யமடைந்துவிட்டது என்பதைத்தான் உதடுகளால் இறுக மூடப்பட்டுவிட்டிருக்கும் உன் வாய் கூறாமல் கூறுகின்றதோ ஒருவேளை?

கார்டினர் :- (மெல்லச் சிரித்து) ஆதவன் தன் செயலை மறந்தாலும் என் சிந்தை செயல் மறக்காது நண்பனே... இரண்டு நாட்களுக்கு முன்பு நம்மால் கைது செய்யப்பட்ட அந்தச் சீர்திருத்தக்காரன் எதற்கும் மசிபவனாகத் தோன்றவில்லை; அவனை வழிக்குக் கொண்டு வருவது பற்றித்தான் எண்ணியபடியிருந்தேன், பொன்னர்; எத்தனையோ சித்திரவதைக்காளான போதிலும், அவன், தான் கொண்ட கொள்கைக்கு மாறுபடச் சம்மதிக்கவில்லை...

பொன் :- யார், அந்தப் புல்லறிவாளன், கிரான்மரா?

கார் :- ஆமாம், பொன்னர்; என்ன பாடுபடுத்தியும் அவன் இணங்குபவனாக இல்லை; கிட்டிபோட்டு வாட்டியும், நகக் கண்களில் ஊசியைப் பாய்ச்சியும், இன்ன பிற வேறு முறைகளைப் பிரயோகித்தும்கூட, அந்தப் பகுத்தறிவாளன் பணிய மறுக்கிறான் நண்பா. அவனைப் பாவமன்னிப்புக் கேட்கச் செய்வதற்கான மார்க்கம் எதுவென்பது இன்னும் புலப்படவில்லை; தேடிக்கொண்டிருக்கிறேன்...

பொன்:- கார்டினர், எனக்கொரு நல்லயோசனை தோன்றுகிறது; நேர்மையாளர் எவனும் தனது நேர்மைக்குப் பங்கம் நேரிடும்படியான குற்றம் சாட்டப்பட்டால் மனம் பொருமுவானல்லவா? கிரான்மர், மக்களால் நல்லவன் எனக் கருதப்படுபவன்; 'நேர்மையாளன்; ஒழுக்கக்கேடான செயல்களைக் கனவிலும் கருதாதவன்' என்றெல்லாம் புகழப்படுவன். மிகமிகக் கீழ்த்தரமான செயல்களைப் புரிந்ததாக அவன்மீது குற்றம் சாட்டுவோமானால், அவன் வேதனையால் துடிதுடித்துப் போவான்; அத்தகைய குற்றம் சாட்டப்படாதிருக்க வேண்டுமானால் தனது சீர்திருத்தக் கொள்கையையும் விட்டுவிட அவன் சம்மதிக்கக்கூடும்; ஏனெனில், "அவன் மானஸ்தன் ஒழுக்கசீலன்; தீயன கண்டால் தீயைக் கண்டதுபோல் விலகுபவன்" என்று எந்த மக்களால் போற்றப்பட்டானோ, அதேமக்களால் "இழி செயல் புரிந்தவன்" எனத் தூற்றப்படுவதை அவனால் சிறிதளவும் பொறுத்துக்கொள்ளவியலாது; இல்லையா?

கார்:- நீ கூறுவதும் சரிதான், பொன்னர்; உடலை வருத்தும்படியான செய்கைகளையெல்லாம் செய்து பார்த்தாயிற்று; அனைத்துமே விழலுக்கிறைத்த நீராயின. இனி உள்ளத்தை வருத்தும்படியான நடவடிக்கைகளை மேற்கொண்டால், ஒருவேளை பயன் கிடைக்கக்கூடும் நண்பா; கிரான்மர் சிறந்த அறிஞன்; மக்களது பெரு நம்பிக்கைக்குரியவனாக இருப்பவன்; 'மதச் சீர்திருத்தம் தீதானது, தேவையற்றது; ஒரு சிலரது சுயநலத்திற்காகவே துவக்கப்பட்டது' என்று அவனாலேயே ஒரு அறிக்கை வெளியிடப்படுமானால், அது நம்மவர்க்கு மாபெரும் வெற்றியாகும்; கிரான்மரைச்சாகவிடக்கூடாது; அவனை உயிரோடு வைத்திருந்து, மதச் சீர்திருத்தத்திற்கு எதிரான அறிக்கையை அவனிடமிருந்தே பலவந்தமாக வாங்கிக்கொள்ளவேண்டும்...

குழுமியுள்ளோர்:- (உரத்த குரலில்) அதற்குப் பொன்னர் கூறிய முறையினைப் பின்பற்ற வேண்டும்!

கார்:- ஆமாம், நண்பர்களே; பொன்னர் முறையைத்தான் நாம் கடைப்பிடிக்கப் போகிறோம்!

பொன்:- இருட்டறையில் கிடக்கும் அந்த நீசனைக் காணப் புறப்படுவோம் வாருங்கள்!

[அனைவரும் கைதாக்கப்பட்டுள்ள மதச் சீர்திருத்தவாதி கிரான்மரைக் காணச்செல்கின்றனர்.]

2

[சீர்திருத்தவாதி கிரான்மர் உடம்பெங்கும் குருதிவடியும் காயங்களுடன், விலங்குகளுடன், சங்கிலியால் பிணைக்கப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கிறான். அவனெதிரில், இரத்தவெறி பிடித்த விலங்குகளாக கார்டினர் கூட்டம் நிற்கின்றது.]

கார்டினர்:- பாதகனே நீ விடுதலை செய்யப்படவேண்டுமானால் ஒரேயொரு வழியிருக்கிறது...

கிரான்மர்:- (ஏளனப் புன்னகை இதழ்களில் மிளிர) விடுதலையடைய வேண்டுமென்பதில் விழைவிருந்தாலல்லவா, வழியைப்பற்றிக் கவலைப்படவேண்டும்?

பொன்னர்:- மூடனே, கார்டினர் பெருமானின் கருணையுள்ளம், பாவியான உன்னை மன்னித்துவிட நினைக்கிறது. இதுவரை நீ பரப்பிவந்த கொள்கைகள் தீதானவை என்பதை ஒப்புக்கொண்டு, அதனை உலகோர்க்கும் உணர்த்துவதாக இருந்தால் நீ விடுதலை செய்யப்படுவாய்; இல்லையேல்...

கிரான்:- கொல்லப்படுவேன்! அவ்வளவு தானே? செத்துப்போக நான் என்றைக்கோ சித்தமாகிவிட்டேன்!

பொன் :- கொல்லப்போவதில்லை முட்டாளே, உன்னைக் கொல்லப்போவதில்லை; உன் உள்ளத்துக் கொள்கைகளை நீ மாற்றிக்கொள்ளாவிடில் பெரியதொரு குற்றச்சாட்டுக்கு நீ ஆளாவாய்!

கிரான்:- 'நாத்திகன்—நாசகாரன்' என்ற குற்றச்சாட்டுத்தானே? அதற்காக நான் எனது பாதையிலிருந்து வழுவிவிடப் போவதில்லை!

பொன்:- நீ எண்ணுவதுபோல் அம்மாதிரியான குற்றச்சாட்டு அல்ல, கிரான்மர்! குடிபோதை தலைக்கேறி நீ விலைமாதரோடு சுற்றியதாகவும், நடுத்தெருவில் அலங்கோலமாகக் கிடந்ததாகவும், உயர் குடும்பத்துப் பெண்களிடம் தகாத முறையில் நடந்துகொண்டதாகவும் உன்மீது குற்றம் சாட்டப்படும்; அத்துடன் அரசாங்கத் தொடர்புள்ள இரகசியங்களை உளவறிந்து கூறுவதற்காக அந்நியனொருவனிடம இலஞ்சம் வாங்கியதாகவும் உன்மீது குற்றம் சாட்டப்படும்; அதுமட்டுமல்ல, கிரான்மர்; நீ எங்கள் வழிக்கு வராவிட்டால் உன் கண்ணெதிரிலேயே உன் குடும்பத்துப் பெண்கள் இழிவு படுத்தப்படுவார்கள்!

கிரான்:- (நெஞ்சம் பதறி) பாவிகளே, என்னைச் சாகடியுங்கள்!

தயவுசெய்து என்னைக் கொன்றுவிடுங்கள்! எந்த மக்களால் நான் 'ஒழுக்க சீலன்' எனப் பாராட்டப்பட்டேனோ, அதே மக்களால் தீயவனெனக் கருதப்படுவதை என்னால் பொறுக்கவியலாது; என் நெஞ்சுக்குச் சரியென்று பட்டதை மறுத்துப் பேசுவதற்கும் என்னால் முடியாது; எனவே என் உயிரைப் போக்கிவிடுங்கள்! தயவுசெய்து எனக்கு இந்தச் சிறு நன்மையினையாவது செய்யுங்கள்!

[அவன் படும் வேதனையைக் கண்டு கார்டினர் கூட்டம் குரூரமாக நகைக்கிறது.]

பொன்:- அது மட்டும் முடியாது கிரான்மர்! நீ மதச் சீர்திருத்தத்திற்கு எதிர்ப்புத்தெரிவிக்க வேண்டும்; அல்லது மேற்சொன்ன குற்றங்களைச் செய்தவனாக எல்லோராலும் கருதப்பட வேண்டும், குடி வெறியில் நீ வீதியில் கிடந்தாயென்பதற்கும், அயலானிடம் இலஞ்சம் வாங்கினாயென்பதற்கும் சாட்சியங்கள் ஆயிரக்கணக்கில் எம்மால் படைக்கப்படும் என்பதை மறந்துவிடாதே!

[உரக்கச் சிரிக்கிறான்.]

கிரான்:- (நடுங்கும் குரலில்) வேண்டாம்.........வேண்டாம்; மக்களுக்கிருக்கும் என் ஒழுக்கத்தைப்பற்றிய நம்பிக்கைக்கு எவ்வித ஊறும் விளைய வேண்டாம்......அவர்கள் என்னிடத்தில் நிரம்ப நம்பிக்கை கொண்டுள்ளார்கள்; அவர்களது நம்பிக்கையை நானே சீர்குலைக்க வேண்டாம்! 'ஒழுக்கம், நேர்மை' என்று பேசுவோரெல்லாம் 'கபட வேடதாரிகள்' என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட வேண்டாம்...மதச் சீர்திருத்தவாதிகள் எல்லோரும் வாயளவில் மட்டுமே ஒழுக்க சீலர்கள் என்ற கருத்து அவர்களிடம் தோன்றிவிட வேண்டாம்...... அதைவிட நான் என் உள்ளத்துக் கொள்கையை மறைத்துக் கொள்வது எவ்வளவோ மேலானது......வெளியுலகுக்கு நான் பழைமையாளனாக மாறினாலும் உள்ளத்தால் சீர்திருத்தவாதியாக இருப்பேன். "உயிர் மீதுள்ள ஆசையால்தான் கிரான்மர் பழமையாளனானான்" என்று நாடு பேசும்; சீர்திருத்தவாதியான கிரான்மர் ஒழுக்கங் கெட்டலைந்தவன் என்று பேசப்படுவதைக் காட்டிலும் அப்படிப் பேசுவது தவறாகாது...நிச்சயமாகத் தவறாகாது......!

கார்:- கிரான்மர், நீ உண்மையிலேயே புத்திசாலிதான்; எங்கே உன் கைப்பட "மதச் சீர்திருத்தம் என்பது ஒரு சிலரது சுயநலத்திற்காக உருவாக்கப்பட்டது; அது இறைவனுக்குத் துரோகமிழைப்பதாகும் என்பதை நான் உணர்கிறேன்; ஏற்கனவே இருந்து வந்ததும் புனிதமானதுமான வழிபாட்டு முறையை ஏற்றுக்கொள்வதுடன் கடவுளின் பிரதிநிதியாக ரோமாபுரியில் கொலுவீற்றிருக்கும் போப்பாண்டவரின் தலைமையையும் ஒப்புக்கொள்கிறேன்; பாவியான என்னைக் கருணையே வடிவான அவர் மன்னித்தருள இறைஞ்சுகின்றேன்; அத்துடன் அரசவையில் மதச்சீர்திருத்தம் தீதானது; பழைய வழிபாட்டு முறையே நீடிக்க வேண்டும்' என்ற பொருள்பற்றி நீண்டதொரு சொற்பெருக்காற்றவும் முடிவெடுத்துள்ளேன்" என்று எழுதிக் கையொப்பமிட்டுக் கொடு பார்க்கலாம்!

[கிரான்மரின் கைவிலங்குகள் அகற்றப்படுகின்றன, எழுதுகோலும் தாளும் அவனிடம் தரப்படுகின்றன; கிரான்மர் தயக்கத்துடன் அனைவரையும் நோக்குகின்றான்; வேதனை படர்ந்த அவன் விழிகளினின்று கண்ணீர் பெருக்கெடுத்து வழிகின்றது. சில விநாடிகள் சிந்தித்தபடியிருந்த அவன் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாய் எழுதத் துவங்குகிறான். கார்டினர் கூட்டத்தினர் வெற்றிப் பெருமிதத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்கின்றனர்.]

கார்:- பொன்னர், நாங்கள் முன்னால் போகிறோம்; நீ கிரான்மர் எழுதிக்கொடுப்பதை வாங்கிக்கொண்டு வா; கிரான்மர் அறிக்கையை நகலெடுத்து நாடெங்கும் பரப்புவது உன் பொறுப்பு; கிரான்மர் அரசவையில் பேசுவதற்கு ஒரு நாளையும் குறித்து விளம்பரம் செய்துவிடு; கிரான்மர், அரசவையில் பேசும் நாள்

பட்டியல்

ஐந்தாண்டுத் திட்டம் பற்றி, பேசுகிறார்கள்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி, எடுத்துப் பரப்ப ஏதேதோ செய்ய இருப்பதாகவும் சொல்லுகிறார்கள்.

தலை எப்படி என்று தெரிந்து கொண்டால், ஆள் எப்படி என்று புரிந்து கொள்ள முடியுமல்லவா! இந்தத் திட்டங்களையெல்லாம் போடும் திட்டக்கமிஷன் எப்படிப்பட்டது என்று ஆராய்கிறார், ஒருவர்!

டாக்டர் டி. ஆர். காட்கில் எனும் அவர், திட்டக் கமிஷனுக்கு ஆலோசனை கூறும் பெறுப்பிலிருப்பவர், சிறந்த பொருளாதார அறிஞர். அவர் கூறுகிறார்.

பொருத்தமான திட்டங்களைப் போடுவதில்லை.

விரிவான ஆராய்ச்சி நடத்துவதில்லை.

எப்படிச் செய்வதெனும் ஒழுங்கு கிடையாது.

திட்டம் எப்படி நிறைவேறியது என்கிற கண்காணிப்பும் கிடையாது.

சரியான பாதையைக் காட்டத் தவறி வருகிறது.

"குறைகள் பட்டியல்", தெரிவிக்கிறார் அவர்! பிரதமர் நேருவுக்கும், நிதி அமைச்சராயிருப்பவருக்கும் திட்டக் கமிஷனில் இடம் இருக்கக் கூடாது என்றும் அவர் தெரிவிக்கிறார். இதனால், ஒழுங்கான திட்டம் கிடைப்பதற்குப்பதில், குழப்பமான திட்டங்களே கிடைக்கின்றனவாம்!!

அவர் கூறுகிற இன்னொரு தகவல், புதுயுகத்தை உருவாக்கும் இதுபோன்ற காரியங்களில் 55 வயதுக்கு மேற்பட்டோரே இருக்கலாகாது என்பதாகும். நேரு, ஒரு உறுப்பினராகக் கூட இருக்கலாகாது என்கிறார் இவர். ஆனால் திட்டக் கமிஷனுக்குத் தலைவராக இருப்பவரே நேருதானே!!

★

வரை அவன் எங்கள் பாதுகாப்பிலேயேதான் இருப்பான்; ஆனால் இதுவரை இருந்து வந்ததைப் போலல்ல; கவலைப்படாதே!

[ஆணவத்துடன் நகைக்கிறாள். கிரான்மர் வெறுப்பை உமிழும் விழிகளால் அவளை நோக்குகிறான்.]

பொன்:- நல்லது கார்டினர்; நீங்கள் எல்லோரும் செல்லுங்கள்; நான் பின்னால் வருகிறேன்.

[அனைவரும் செல்கின்றனர். பொன்னர் மேற்பார்வையிட, கிரான்மர் எழுதுகிறான்.]

3

[அரசவை கூட்டப்பட்டிருக்கின்றது. அறிஞனும், மக்கள் ஆதரவைப் பெற்றவனுமான மதச் சீர்திருத்தவாதி கிரான்மர் மனம் மாறிப் பழைய மதக்கோட்பாட்டை ஆதரித்துப் பேசப்போவதாகப் பறைசாற்றப்பட்டதால் மக்கள் அனைவரும் திரண்டு வந்துள்ளனர். மதச் சீர்திருத்தம் விரும்புவோரும், நெஞ்சுரமற்ற கிரான்மர் என்ன கூறுகிறான் என்று கேட்பதற்காகக் குழுமியுள்ளனர். அரசி மேரி, அரியணையில் வீற்றிருக்கின்றாள். அவளுக்கெதிரில்—மன்றத்தின் நடுமையத்தில் போடப்பட்டுள்ள ஆசனத்தில் — கிரான்மர் அமர்த்தப்பட்டிருக்கிறான். கார்டினர், பொன்னர் முதலானோர் ஆணவமும், பெருமிதமும் தவழும் முகத்தினராய் அரசியைச் சார்ந்து அமர்ந்துள்ளனர். நிகழ்ச்சி துவங்குவதற்கான அனுமதி அரசியிடமிருந்து அளிக்கப்பட்டதும், கார்டினர் தனது இருக்கையினின்று எழுகிறான்.]

கார்டினர்:- மதிப்பிற்குரிய அரசியாரே, மற்றைய பெரியோரே! இதுவரை தீதான பாதையில் சென்றுகொண்டிருந்த கிரான்மர் பழைய முறைதான் புனித முறை என்பதை உணர்ந்து மனம் திருந்தியுள்ளான்; நமது பாதைக்குத் திரும்பியுள்ளான்; அன்பும் இரக்கமும் மிக்க போப்பாண்டவர் இதுநாள் வரை பாவியாயிருந்த அவனது தவறுகளை மறப்பாராக — மன்னிப்பாராக! 'மதச் சீர்திருத்தம் புரட்டர்களின் போதனை' என்பது பற்றி இனிக் கிரான்மரே விளக்கமாகச் சொற்பொழிவாற்றுவான். சீர்திருத்தம் பேசிய அவனது வாயினின்று சீர்திருத்தம் தீதானது என்பதற்கான விளக்கங்கள் வருவதை நாட்டவர் யாவரும் கேட்டறிய வேண்டுமென்பதற்காகவே மக்களுக்கும் அரசவையில் அகன்ற இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது; கிரான்மரின் சொற்பொழிவைக் கேட்டபின்னராவது பழைய வழிபாட்டு முறையே சிறந்த வழிபாட்டு முறை என்பதை எல்லோரும் உணரட்டும்!

[கிரான்மர் பேசுவதற்காக எழுந்திருக்கிறான். மக்களிற் பெரும்பாலோர் அவனை ஏளனத்தோடும் அருவருப்போடும் நோக்குகின்றனர்.]

கிரான்மர்:- பேரன்புடையோரே! 'மதச் சீர்திருத்தம் புரட்டர்களின் போதனை' என்பதுபற்றி நான் பேசப்போவதாக நீங்கள் எதிர்பார்த்து இங்கே குழுமியிருக்கிறீர்கள்; எடுத்த எடுப்பிலேயே உங்களை ஏமாற்ற வேண்டியவனாயிருப்பதை எண்ணிப் பெரிதும் வருந்துகிறேன்; எனினும் இந்த ஏமாற்றம் உங்களிற் பெரும்பாலோருக்கு மகிழ்ச்சியினை உண்டாக்கும் என நம்புகிறேன்......

[கார்டினர், பொன்னர் முதலியோர் ஏதும் புரியாது ஒருவரையொருவர் பார்த்துக்கொள்கின்றனர்; கிரான்மர் தொடர்ந்து பேசுகின்றான்.]

கிரான்:- 'மூடப் பழக்க வழக்கங்கள் அகலவேண்டும்; மதத்திலுள்ள பகுத்தறிவுக்கொவ்வாத கொள்கைகள் புறக்கணிக்கப்பட வேண்டும்; மத நூல் எல்லோராலும் நன்கு ஆராயப்பட வேண்டும்; எனவே அது எல்லா மொழிகளிலும் எழுதப்படவேண்டும்; தனிப்பட்டவர்களது ஆதிக்கம் மதத்துறையிலிருந்து அகற்றப்படவேண்டும்' என்ற உயர்ந்த கொள்கையையல்ல; 'மத நூல் எல்லோராலும் படிக்கப்படலாகாது; அப்பப் படிப்பதால் அதன் புனிதத் தன்மை கெட்டுவிடும்; எனவே மதநூல் இலத்தீன் மொழியில் மட்டுமே இருத்தல் வேண்டும்' என்று கூறி, இல்லாததையும், பொல்லாததையும், தமக்குச்சாதகமானதையும் மத நூலில் இருப்பதாகப் போதிக்கப்பட்டதைத்தான் "புரட்டர்களின் போதனை" எனக் கூறவேண்டும்!

மதச் சீர்திருத்தம் தீதானது என்று ஒப்புக்கொள்ளுமாறு நான் வற்புறுத்தப்பட்டேன்; சித்ரவதைக்காளாகியும் நான் சித்தம் தளரவில்லை. எனவே என் மனத்தை மாற்றுவதற்கு வேறொரு முறை கையாளப்பட்டது; எனது நேர்மையிலும், ஒழுக்கத்திலும் மக்களுக்குள்ள நம்பிக்கையைத் துணையாக வைத்துக்கொண்டு என்னை வலுக்கட்டாயமாக மதச் சீர்திருத்தத்திற்கு எதிர்ப்பாளனாக்கினார்கள்; மதச் சீர்திருத்தத்தைக் கைவிட்டு, மன்னிப்பும் கேட்டுக்கொள்ளத் தவறினால், குடிபோதையில் விலைமாதரோடு திரிந்ததாகவும், அரசாங்க இரகசியத்தை அம்பலப்படுத்துவதற்காக அயலானொருவனிடம் இலஞ்சம் வாங்கியதாகவும் என் மீது குற்றம் சாட்டப்படும் என எச்சரித்தனர். "சீர்திருத்தம் பேசிய கிரான்மர் ஒழுக்கக் குறைவானவன்" என்று நாட்டு மக்களால் பேசப்படுவதைக் காட்டிலும், 'உயிர்மீதுள்ள ஆசையால் கிரான்மர் பழைமையாளனானான்' என்று பேசப்படுவது தவறல்ல எனக்கருதினேன். 'மதச் சீர்திருத்தம் தீயது; தேவையற்றது' என்று என் கைப்பட எழுதிக் கையொப்பமிட்டும் கொடுத்தேன். ஆனால் அப்போதே அரசவையில் பேசும் வாய்ப்புக் கிட்டுகையில் உண்மையினைக் கூறிவிட முடிவு செய்தேன்; கூறியும்விட்டேன். இனி எனக்கு என்ன நேர்வதாயினும் கவலையில்லை!

[திடுக்கிட்டுப்போன கார்டினர் குழாம் செயல் மறந்து திகைக்கிறது. கலவரக்களை படிந்த அவர்கள் முகத்தை அரசி உற்று நோக்குகிறாள்; பழைமையாளர் பரபரப்புடன் காணப்படுகின்றனர். சீர்திருத்தவாதிகள் சிந்தை மகிழ்கின்றனர்; "கிரான்மர் வாழ்க!" என்ற வாழ்த்தொலி அரசவையினையே அதிரவைக்கிறது.]

அரசி:- (சீற்றத்துடன்) இந்த நீசனைத் தீயிலிடுங்கள்!

[அரியணையிலிருந்து எழுந்து சினத்துடன் தன்னிருப்பிடம் நோக்கி விரைகிறாள். சிறிது நேரத்திற்கெல்லாம், கிரான்மர் கொலைக்களத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறான். மக்கள் கூட்டமும் அவனைப் பின் தொடர்கின்றது.]

4

[கொலைக்களம்; கொழுந்துவிட்டெரியும் தீக்குழிக்குக் கிரான்மர் அழைத்துச் செல்லப்படுகின்றான். தீக்குழியை அணுகியதும், கிரான்மர் இருமருங்கிலும் தன்னைப் பிடித்தபடி நிற்போரை நோக்குகிறான்.]

கிரான்மர்:- தயவு செய்து கொஞ்சம் இருங்கள், ஒரே ஒரு செயலைச் செய்ய எனக்கு அனுமதி அளியுங்கள்; பழிக்கு அஞ்சி மதச் சீர்திருத்தத்திற்கு எதிர்ப்பாக நான் அறிக்கை எழுதிக் கையொப்பமிட்டது மகத்தான குற்றம்தான்; எத்தகைய இடுக்கண் வரினும் உள்ளத்துக் கொள்கையை அடகுவைக்கலாகாது; எத்தகு பழி வரினும் தயக்கமுறாது, கொண்ட கொள்கையைக் கைவிடாதிருப்பதல்லவோ இலட்சியவாதியின் கடமை? எனவே கொள்கையை அடகு வைத்த குற்றத்தைப் புரிந்த எனது வலது கரத்தை நான் முதலில் தண்டித்தாக வேண்டும்; இரண்டாவது குற்றவாளியான நான் வெந்து போவதற்கு முன்னதாகவே முதற் குற்றவாளியான எனது வலக்கரம் வெந்துபோகட்டும்!

[துணிவுடன் தன் கரத்தைத் தீயினுள் நுழைக்கிறான். அவன் 'செயல் கண்டு, கார்டினரும் பொன்னரும் கூடச் சிலிர்ப்புடன் கண்களை மூடிக்கொள்கின்றனர்; கண் விழித்துப் பார்த்த போது, அச்சீர்திருத்தச் செம்மல் வெந்துக் கருகிக் கொண்டிருப்பதையே அவர்கள் கண்டார்கள்.]

இரப்பாரை இரக்கும் வள்ளுவர்!

—[அன்பு]—

வறுமைக்கு ஈடு வறுமையே என்னும்படியான வறுமையின் கடைசி முடிவெல்லையில் உழன்றது அந்தக் குடும்பம். 'நேற்று கொலைசெய்ததுபோல் துன்புறுத்திய வறுமை இன்றும் என்னிடம் வருமோ' என்று தினம் தினம் செத்துப் பிழைத்துக் கொண்டிருந்தான் அந்தக் குடும்பத் தலைவன்.

அக்குடும்பத்திற்குக் கிடைத்த ஒரே இலவசஉணவுகாற்றுத்தான். அதற்காக அக்குடும்பம் யாரையும் இரக்கவில்லை! 'பரந்து கெடுக உலகியற்றியான்' என்று அவன் அதுவரையில் நம்பிக்கொண்டிருந்த கடவுளைச் சபித்தான். அதனாலும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை!

அவன் மனைவி அடுப்பு எப்படியிருக்கும் என்பதையே மறந்தவளானாள். பேசத் தெரிந்த குழந்தைகள் 'அம்மா பசிக்கிறது' என்று பேசக்கூடச் சக்தியில்லாமல் மயங்கித் தாயின் முகத்தை மட்டுமே நோக்கிக் கிடந்தன! பால் அருந்தும் பருவத்திலிருந்த சிறு மழலை தன் தாயிடமிருந்து பால் உணவு கிடைக்கப் பெறாததால் கதறியழுதது! தாய் கணவன் முகம் நோக்கினாள்!

அவனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு இழிவு வந்ததாகக் கருதுபவன் அவன். வறுமையிலும் தன் சால்பை இழத்தலை அவன் விரும்பவில்லை!

ஆனால், அவன் தன் பண்பை இழந்து பிறரை அண்டி உணவு கேட்கும் நிலைக்குத் துரத்தப்பட்டான். அப்படி அவன் இரக்க அஞ்சுவானேயானால் தன் குடும்பம் பசியால் இறத்தலைத்தான் காண நேரிடும்.

யாரிடமாவது சென்று நிலையை எடுத்துக் கூறி பொருள்கூட அல்ல—உணவு—அதுதான் முதலில் அவனுக்கு வேண்டியது—பெற்று வரலாமெனப் புறப்பட்டான். தெருவோடு சென்றுகொண்டிருந்த அவனுக்கு பல நிலைமாடங்கள் அமைந்த மாளிகை தென்பட்டது. செல்வந்தர் இல்லம்போன்று தோன்றுகிறதே என்றெண்ணி இல்லத்தின் வாயிலருகே சென்று நின்றான். உள்ளே வீட்டின் உரிமையாளர் பேழையிலிருக்கும் பணத்தை எண்ணிச் சரிபார்த்துக் கொண்டிருந்தார்.

நின்று நின்று அவன் கால்கள் கடுத்தது. கடைசியில் தற்செயலாக வெளியில் வந்த கனவான் அந்த ஏழையைப் பார்த்தார். ஏழையின் கண்கள் அவரை மேல் நோக்கின. அக்கண்கள் தன் வறிய வாழ்க்கையை அக்கனவானுக்கு எடுத்துரைத்தது.

"போ; போ! இங்கு ஒன்றும் இல்லை. நின்றாலும் கிடைக்காது." அவன் காதுகள் இதைத்தான் கேட்டது! உடல் நாணத்தால் குன்றியது! குனிந்த தலையோடும் ஒட்டிய வயிறோடும் வந்த வழியே திரும்பினான்.

அவன் எதிரே வள்ளுவர் வந்தார். அவனைக் கையால் விளித்து அழைத்தார். ஆவலோடு வந்த அவனை நோக்கி வள்ளுவர் கேட்டார்:

"உன்னிடம் ஒன்று நான் இரக்கிறேனப்பா!"

"என்ன ஐயா இது? என்ன சொல்கிறீர்கள்?" என்று அவரை அதிசயத்துடன் பார்த்து வினவினான்.

"ஆம்! உனக்கு அதிசயமாகத்தான் இருக்கும். நீ இரத்தலைப் பார்த்து என் நெஞ்சம் உருகுகிறது. ஆனால் நீ இரந்தும், உள்ளத்தையும் ஒளித்துவைத்து 'இல்லை' என்று சொல்லும் கொடுமையை நினைத்தால் உள்ளம் உருகுமளவும் இல்லாமல் அழிகிறது. இரத்தல் என்பது காவல் இல்லாத மரக்கலம். அதை உள்ளதை ஒளித்துவைக்கும் தன்மையாகிய வன்பாறை தாக்கினால் உடைந்துவிடும். ஆகவே கேட்கத் தக்கவரிடம் கேள். உள்ளதை ஒளித்துவைப்பவர்களிடம் சென்று இரக்கவேண்டாம் என்று உன்னையும் உன்னைப்போல் இரப்பவர்களையும் நான் இரந்து கேட்டுக்கொள்ளுகிறேன்!

இதைக் கேட்ட அவன், கரத்தலைக் கனவிலும் அறியாத ஒருவரைத் தேடிச் சென்றான்! "இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்கரப்பார் இரவன்மின் என்று"

★

“தெய்வம்”

வேப்பமரத்தின் அடியிலே — வெண்ணிலவின் ஒளியிலே—வீசும் தென்றலிலே — பரந்த மணற் பரப்பிலே தலைசாய்ந்திருந்தான் அந்தச் சிற்பி. முழுமதியின் மோகனப் புன்னகையை அவன் இமை கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தான். குளிர்ந்து வீசிய மெல்லிய காற்று அவன் உடலைமட்டுமல்ல, உள்ளத்தையும் சில்லிட வைத்தது. வானத்து நிலவின் வனப்பிலே தன் வாஞ்சையற்ற உள்ளத்தைப் பறிகொடுத்திருந்த அவனைத் திடுக்கிட வைத்தது மணம். திரும்பிப்பார்த்தான். மல்லிகையின் நறுமணத்தை அள்ளித் தெளித்த வண்ணம் ஒரு மங்கை நின்றுகொண்டிருந்தாள்.

அந்தச் சிற்பி வெடவெடக்கும் உடலியந்திரத்தை முறுக்கிவிட்டுக்கொண்டு எழுந்து நின்றான். அவன் உதடுகள் அசைந்தன. ஆனால், வார்த்தைகளிலே உயிரில்லை. அந்நேரம அருகேயுள்ள அமராவதியிலிருந்து அருவி விழும் சத்தம் நகையொலிபோலக் கேட்டது. தென்னைமரக் கீற்றுகள் படபடவென அடித்துக்கொண்டன. அதன்மேல் அமர்ந்திருந்த இரு குயில்களும் அஞ்சிப் பறந்தன அங்கிருந்து. விழியைச்சுழற்றி மறுமுறை அந்த வேல் விழியாளை நோக்கினான் சிற்பி.

அமுதகலசம்போல் — ஒளியூற்றுப்போல்—வெள்ளிக் கிண்ணம்போல் விளங்கிய வெண்ணிலவைக் கருமுகில்கள் மொய்த்துக் கொண்டன. பாலாறு பாய்ந்துகொண்டிருந்த நிலப்பரப்பு, இருள் திரையால் மூடப்பட்ட நாடக அரங்குபோல் காட்சி தந்தது. அந்த இருளிலே இருவர் முகங்களிலும் ஓடிய உணர்ச்சி ரேகைகளை ஒருவருக்கொருவர் உணர முடியாமல் திணறினர். தந்தத்தால் பெண்ணுரு ஒன்று சமைத்து — அதைத் தன் முன்பு போட்டிக்கு அனுப்பியிருக்கிறான் போலும் ஒரு சிற்பி என்று உள்ளூர வியந்தான் — சொல்லூறவில்லையே நாவில்.

எத்தனை நேரம்தான் இப்படி மௌன முற்றுகை. பொறுக்காத நெஞ்சம் இருவருக்குமேதான். இன்னும் பொருத்தியானபாடில்லையே வார்த்தைச் சரங்களை. அவன் பேசத் துணிந்தவன்போல் அவள் முகத்தை நோக்கினான். அவளும் ஆவலோடு எதிர்நோக்கினாள். வேற்படையை விழியிற்

கன்னையன்

கொண்ட அணங்கு தானே வருத்துவதோடு அல்லாமல், ஒரு தனிப் படையையும் கொண்டு வந்து தாக்கினாற்போல் அவன் நடுங்கினான்.

அவள் “களுக்” என்று சிரித்தாள். “திடுக்”கென்றது நெஞ்சம் அவனுக்கு. செவ்விதழைக் குவித்துப் புன்முறுவல் காட்டினாள். செங்கரும்பின் சாறுபோல் உள்ளம் அவனுக்கு இனித்தது. அந்த முறுவல் அவனுக்குப் புதுத் தெம்பை அளித்தது. கோழையாயிருந்த அவன், அவள் கொடுத்த முறுவல் பானத்தைப் பருகியதால் முறுக்கேற்றப்பட்டான்.

“நீங்கள் யார்?”

“பெண்”

“பேசுந் தெய்வம்! பொற் சித்திரம்! பூங்கொடி! தெரிந்தது தானே!”

“நீங்கள் புலவரோ? அதுதான் இப்படி......”

“இல்லை, சொல்லால் காவியம் பாடத் தெரியாது எனக்கு; கல்லால் காவியமிழைப்பேன். சுருக்கமாகச் சொன்னால் நான் ஒரு சிற்பி!”

“என்னைப்போல் ஒரு சிலை...”

“வடிவமைத்துவிட்டேன் அப்போதே!”

“எங்கே?”

“என் உள்ளத்தில் — பிளந்து காட்டட்டுமா?”

“அவள் மயில்போன்ற சாயல் காட்டி, மான்போலத் துள்ளி ஓடினாள். ஆற்றோரத்திலே நிலவின் ஒளியிலே ஓடியாடி மகிழ வந்திருந்த மங்கையர்கள் எதிர்கொள்ளக் கலந்தாள். கண்கள் காண முடியாதபடி மறைந்தும் விட்டாள். ஆனால் அவன் இதயத்திலே ஒரு சுடர் விளக்கையுமல்லவா ஏற்றி வைத்துவிட்டாள்?

கருங்கல்லைத் தகர்த்தெறிந்து கொண்டிருந்தது சிற்றுளி. எழும்பிய புகை மண்டலமும், கற் சிதறல்களும் சிற்பியின் தலையையும் முகத்தையும் நிரப்பிக்கொண்டிருந்தன. தீப்பொறி பறந்தது. தீவிரமான முயற்சி. அன்று நிலவு அவன் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தது. அவனுக்கோ? அதைப்பற்றிய நினைவே இல்லை.

வேப்பமரம் தளிர் குலுங்க அசைந்தாடியது. வெண் மணற்குன்றம் மலராசனம்போல் விரிந்துகிடந்தது.

நிசப்தமான இரவு வேளை. நெடுநேரமாகியும்கூட குடிசையிலே இருந்து சிற்றுளியின் சத்தம் விடாது ஒலித்தது. ஊரின் எல்லையிலே — அமராவதி ஆற்றின் கரையிலே இருந்தது அந்தக் குடில்.

முல்லையின் மணம் கமழ்ந்தது, மூச்சுத் திணறியது சிற்பிக்கு. திரும்பிப் பார்க்க விரும்பியது மனம். அரும்பிய ஆசையை அடக்கிக் கொண்டு கடமையில் கண்வைத்தான் அவன். அவளுக்குத் தலை கால் தெரியாத ஆனந்தம். நேற்று நிலவிலே வந்து— நெஞ்சத்திலே இடம் பெற்று—இன்று சிலையாக உருமாறிக் கொண்டிருப்பவள்தான் —அந்த சிங்காரி என்று எப்போதோ புரிந்து கொண்டிருந்தான் அவன்.

அவன் கரங்கள் வேலை செய்ய மறுத்தன. கருத்து அந்தக் கட்டழகியையே அல்லவா சுற்றிச் சுழன்றது. நிதானம் இழந்த கைச் சுத்தி அவன் விரலொன்றைப் பதம் பார்த்தது. அந்தோ! அவள் கண்களிலே கண்ணீர்கசிந்தது. குருதி கொட்டியதைக்கூட அலட்சியப்படுத்திய அவன் கை விரல்கள் முத்துத் திவலைகள் படிந்த மாங்கனிக் கன்னத்தை வருடின.

விரலுக்குக் கட்டிட்டாள் அவள். அவன் இதயத்திலே கூடவே காதல் வித்திட்டாள். உள்ளங்கள் உறவாடின — உணர்வுகள் இசை பாடின. இன்ப உலகம் அவர்கள் சொந்தமாயிற்று.

“அனாதை என்னிடத்தில் இத்தனை அன்பா?” அவன் பேசினான்.

“சீமான் மகளாக நான் இருந்துதான் என்ன பயன்? உங்களிடம் அடிமையாக இருப்பதிலே காணுமினபத்தைப் பெற முடியாதே!”

“என்ன சீமான் மகளா?” திடுக்கிட்டான்.

“பேதம் காட்டாதீர்கள். நாதமெழுப்பிய வீணையின் நரம்பை அறுத்துவிடாதீர்கள். களங்கமற்ற உள்ளங்கள் இரண்டல்ல; இனி ஒன்றுதான்!”

“என் அமைதிக்கு அழிவைத் தேடுகிறாய்”

“இல்லை, அமைதியோடு இனிமையும் கலந்திருக்கவேண்டாமா” பிறகு, குப்பைமேட்டிலே இருந்தால் கூட நாம் குபேரர்கள் தானே!”

“அமரா” ஓர் ஆணவக்குரல் நடுங்கவைத்தது இருவரையும். கனவு கலைந்தது-உணர்வு சிதைந்தது. அது தன் தந்தையின் குரல்தான் என்றுணர்ந்த அவள் நடுங்கினாள். சிலைக்குப் பின்புறம் ஒளிந்துகொண்டாள். சிற்பி வெளியே வந்தான்.

வெள்ளிப் பிரம்பை சுழற்றியபடி நின்றுகொண்டிருந்தார் பெரிய மனிதர். முறுக்கு மீசை—மிடுக்கான தோற்றம் — பகட்டான உடை—எடுப்பான தலைப்பாகை எல்லாம் அவர் செல்வாக்கைப் பறைசாற்றின. பணக்காரப் பார்வையை அள்ளிவீசிவிட்டு, உரத்த குரலில் பேசத் தொடங்கினார்.

“அம்பிகை சிலையொன்று வேண்டும்.”

“அம்பிகையா?” அவன் மனக் கண் முன்பு அசைந்தாடினாள் அவன் அன்புத் தெய்வம்.

“ஆம், அதுவும் இன்னும் பத்து நாட்களில் வேண்டும்” என்றது அதிகாரக் குரல்.

“சரி” அவன்வாய் முணுமுணுத்தது. “இதற்கா நடு இராத்திரியிலே இவ்வளவு தூரம்?”

“ஆண்டவன் பணிக்கு அர்த்த இராத்திரியாய் இருந்தாலென்ன? பக்கத்து ஊர் சென்றிருந்தேன். செய்தியை உன் செவியிலேயும் போட்டுவிடலாம்னு வந்தவேலையோடு இந்த வேலையையும் முடித்துக்கொண்டேன்.”

“நல்லது”

சென்றார், பெருமூச்சு விட்டான் சிற்பி. சிலை மறைவிலிருந்து வெளியே வந்தாள் அவள். கடலிலிருந்து உயிர் பிழைத்து வந்தவர்கள் போல் இருவரும் மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்கச் சந்தித்தனர். அந்தக் குலுங்கித் தளிரசைக்கும் பூங்கொடியின் கோணலெல்லாம் அழகின் கோணமாக இருந்தது அவனுக்கு. குறும்பு, நயனங்களின சுழற்சியிலே — புன்னகை பூத்த கோலத்திலே வந்தாள் முகமோடு அகமும் மலர.

கடமையிலே கண்வைத்தான் சிற்பி அமரன். உடனுதவிக்குக் கரம் கொடுத்தாள் அவன் காதலி தாரா. அவன் உள்ளக்கோயிலிலே உருவாகியிருந்த அம்பிகை-தன் கண்ணெதிரே கைவண்ணத்தால் உருவாகிக் கொண்டிருந்தாள். ஆசைக் கனவுகள் அவன் அகக் கண் முன்பு நிழலாடின— அவளோ? — தன்முன் அழகுப் போட்டியிடும் அந்தக் கலைச் செல்வத்தைப் பார்த்து நகை பூத்தாள் — தன் காதலன் கலையாற்றலை எண்ணிப் புளகாங்கிதம் அடைந்தாள் ஓர்புறம்.

இரவு நேரம் அவர்களுக்காகக் காத்திருக்கவில்லை. நினைவுச் சுழலில் நீந்திக் கரைகாண முடியாதவர்களாய்த் தவித்த அந்த இளம் சோடிகளைக் காலம் பிரித்தது.

“கன்னட நாடு”

தமிழகம் தவிர்த்து உங்கள் திராவிடநாடு கோரிக்கைக்கு இடமுண்டா? என்று மாற்றுக் கட்சியினர் கேட்பதுண்டு. அங்கெல்லாம் நமது கழக ஒளி, வேகமாகப் பரவிடும் அறிகுறி, அதிகமாகி வருகிறது.

சென்ற சில தினங்களாக, “திராவிடநாடு” எனும் பெயருடனேயே தோழர் சுபேர் நடத்திவருகிறார், ஒரு மலையாள ஏடு. வனப்பும், நடையழகும் பொருந்தி அந்த ஏடு, கேரளத்தில் நமது கருத்துக்களைப் பரப்பி வருகிறது.

இந்தக் கிழமை, “கன்னடநாடு” அரும்பியுள்ளது. கன்னடமாவட்ட தி. மு. க. வைச் சேர்ந்த எஸ். வி. பதியின் முயற்சியும், தோழர்களின் ஆதரவும்கொண்டு, இதனை மைசூரின் முன்னாள் முதலமைச்சர் அனுமந்தையா துவக்கி வைத்திருக்கிறார்.

அதுபோது அவர் பேசியதாக வந்திருக்கும் சேதி, தோழர்களுக்கு ஊக்கமளிப்பதாகும். “திராவிட முன்னேற்றக் கழகத்தினால் தேசப் பிரிவினை ஏற்படும் என்று சொல்வது தவறு. இந்தி வெறியர்களின் திமிர்ப் பேச்சால்தான் நாட்டுப் பிரிவினை ஏற்படும். உத்தரப் பிரதேசத்தில் இருப்பவர்களுக்கு ஆண்டவன் புத்தி கொடுத்தால் இந்த விபரீதம் ஏற்படாது. இந்தியப் பிரதமர் நேரு உலகப் புகழ்பெற்றவர். இந்தியமக்களின் பெருந் தலைவர். அவரைக் கன்னடத்திலோ, தமிழிலோ, பேசச்சொல்லுங்கள், பார்க்கலாம். நேரு தமிழ்மொழி கற்றுத்தமிழிலே பேசினால் நானும் இந்தி கற்று இந்தியிலே பேசத் தயார், அவரால் ஏற்கமுடியாது,” என்று அனுமந்தையா பேசியிருக்கிறார்.

அரும்பியுள்ள அந்த ஏடு, வளர்ந்து நமது கொள்கைகளைப் பரப்பவேண்டும் என வாழ்த்துகிறோம்.

அது தன் கடமையைச் செய்தது. அதற்கு உள்ளம்என்று ஒன்றிருந்தால்தானே ஓய்ந்துவிட.

விழா — நகரெங்கும் ஒலித்தது இன்ப உலா. திரள் திரளாய் மக்கள் கூட்டம். இல்லமெங்கும் தீபாலங்காரம். கூட கோபுரங்களும் மாட மாளிகைகளும் அலங்கார முத்திரை தாங்கித் தலை நிமிர்ந்து நின்றன. கண்களிலே மகிழ்ச்சிப் பெருக்கு—கால்களிலே இயந்திரமாய்ச் சுழலும் முடுக்கு—உள்ளத்திலே ஆனந்தக் கணைத் தொடுப்பு—கரங்களோ? மிதந்தன துடிப்பில். இங்கும் அங்குமாக ஓடிக்கொண்டிருந்தனர் மக்கள்.

அணி அணியாய் மறவர் கூட்டம் முன் நடக்க — வேலேந்திய வீரர்கள் பக்கபலமிருக்க—வைரத்தால் இழைத்த முகபடாம் அணிந்த பட்டத்து யானையின் மீதேறிப் பவனி வந்தார்-மட்டற்ற மகிழ்ச்சியோடுமன்னர்மணிமார்பர்.

அன்று அம்பிகையின் ஆலயத் திருப்பணி. விழாக்கோலம் கொண்ட மக்கள் விதவிதமாய் அணி புனைந்தனர். காணிக்கை செலுத்தினர் அம்பிகைக்கு. பால் சொரிந்தனர். பன் மலர் மாலைகள் சாத்தினர். சுடர் விளக்குகள் ஜோதி காட்டின. பூஜை நடந்தது. மணி ஒலியிட்டது. சங்கு முழங்கியது. கொற்றவர் அம்பிகை குடியிருக்கும் கோயிலுள் புகுந்தார். தலைவணங்கிச் சிலையை நோக்கினர். நிலை மறந்தார். கலை மெருகுதான் கடவுளாய்க் காட்சி தந்ததோ?—அழகின் பிறப்பிடத்தைக் கண்டுவிட்டவன் போல் ஆனந்தம் கொண்டார். இன்பப் பரப்பிலே மிதந்தார். மக்கள் கூட்டம் மன்னரையும் — அம்பிகை மாதாவையும் மாறிமாறிப் பார்த்துக் கூறவொண்ணாத ஆச்சரியத்தின் கைப்பொம்மைகளாய் நின்றனர்.

அந்த ஆச்சரியத்திற்குக் காரணமாயிருந்த அவ்வூர் அதிகாரி மருதப்பரை, மன்னர் மனமகிழ்வால் புகழ்ந்தார். சிலையைச் செதுக்கிய சிற்பியின் இருப்பிடம் அறிந்து, ஏவலாளர்களை அனுப்பிப் பல்லக்கிலே பாராட்டுக்குரிய அவனை ஏற்றிவருமாறு பணித்தார். ஏவலாளர்கள் சென்றனர். காவலன விடைபெற்றான—சூழ்ந்திருந்த மக்கள் கலைந்தனர். அடித்துவைத்த சிலைப்பால அசையாது நின்றுகொண்டிருந்தார் மருதப்பர்.

அவர் கண்கள் தீயுருண்டைகளாக ஜொலித்தன. உள்ளமோ? பூகம்பமாய் ஓங்காரமிட்டது. ஓடும் நரம்புகளிலே வீரம் இளர்ந்தது. காதுகளிலே "பழிக்குப்பழி" என்ற குரல் ரிங்காரமிட்டது.

"மாசு! மானமே பெரிதென வாழ்ந்த என் மறக்குலத்திற்கு மோசம தேடிவைத்துவிட்டான் முழு முட்டாள் — பரமபாதகன் அந்தச் சிற்பி. என்மகளைப்போல் சிலை செதுக்கி—பலர்கண்டு வியக்கும்படி அதை நிறுத்திப் பறித்துவிட்டானே என் கௌரவத்தை! அதுமட்டுமா? அந்த அனுதைப் பயல் காதல் வலை விரித்து என் கண்மணி தாராவையும் மயக்கிவிட்டான். பரிசு! ஆம் அவனுக்கு சரியான பரிசு, நான் தரப்போகிறேன்." நெஞ்சம் படபடத்தது மருதப்பருக்கு. அம்பிகையின் அருகிலே சாத்திவைத்திருந்த கொடுவாளை எடுத்தார்—கொக்கரித்தார்.

எங்கோ இருந்து சிற்பி ஓடிவந்தான் பொங்கும் மகிழ்வோடு. பலர் வாழ்த்தத் திகழும் தன் கலைப் படைப்பைக் கண்டு களிக்க வந்தான். கூட்டம் கலைந்திருந்ததால் — ஏகாந்தத்திலே எந்தத் தடையுமின்றி — ஏற்றமுற்றிருக்கும் தன் இதயக் கனியின் எழிற் பிழம்பை பார்த்துப் பூரித்துப் பரவசத்தால் மார்பு விம்ம — தன் கடைக்கண்ணிலே அரும்பும் பரிசான ஆனந்தக் கண்ணீர்ச் சொட்டைக் காணிக்கையாக்கலாமென வந்தான்.

திகைத்தான் சிற்பி உள்ளே காலடி வைத்ததும். நகைத்தார் மருதப்பர், தன் அழிவைத் தேடி வந்த அவனைப் பார்த்து. பதைத்த உள்ளத்தோடு பார்த்தான் சிற்பி. கொதித்த உள்ளத்தோடு கொடுவாளை ஓங்கினர் மருதப்பர். பயந்தான்—நயந்தான்—பயனில்லை. பாதுகாப்பிற்காக கையை உயர்த்தினன். ஒரேவீச்சு! துண்டாகி விழுந்தது சிற்பியின் வலது கரம் இரத்தமகொட்ட. அவன் அலறினன் — மருதப்பர் நகை முழங்கினர்.

கண்களிலே நீர் வழிய மருதப்பரைப் பார்த்தான் சிற்பி அமரன். அந்தப் பார்வை, "செலுத்தியாகிவிட்டதா பரிசை?" என்று கேட்பது போலிருந்தது. பாராட்டும்—பரிசும் எந்தக் கரம் ஏந்த வேண்டுமோ? அந்தக்கரம் இரத்த வெள்ளத்திலல்லவா தோய்ந்து கிடந்தது.

ஆம். சரியான பரிசு. அவனது கடைசிச் சிலைக்கு அவன் கரமே காணிக்கை. முடிமன்னரையும் நிலை மறக்கச் செய்த சிலைக்குப் பரிசு. தன் காதல் தெய்வத்தைக் கண்காணும் தெய்வமாக்கியதற்குப் பரிசு கிடைத்தேவிட்டது. துடித்து விழுந்தான் அடுத்த கணம்.

மன்னர் பணியாட்கள்வந்தனர். முத்துப் பல்லக்கு அவனை ஏற்றிச் செல்லக் காத்திருந்தது. பொற்காசுகளும் வளநாடும்—யானைக் கன்றுகளும் தரக் காத்துக் கிடந்தான் அந்நாட்டுக் காவலன். அறிஞர் கூடிய அவையிலே அவனுக்கோர் தனியாசனம் ஒதுக்கிக்கூட வைத்திருந்தான். பட்டம்—பதவி--புகழ்மாலை இவைகளெல்லாம் இனி அவனுக்கெதற்கு? அவன்தான் ஈடு கொடுக்க முடியாத பரிசைப் பெற்றுவிட்டானே!

★

தொழில் கல்வி வகுப்புகள்

1958 மே மாதம் 1-ம் தேதி முதல் ஜுன் மாதம் 9-ம் தேதி வரை ஆடோமோபைல் ஸர்வீஸ் என்ஜினீயரிங், ரேடியோ ஸர்வீஸ் என்ஜினீயரிங் ஆகிய, ஆறு வார வகுப்புகள நடத்தபபடும. S. S. L. C.யும அதற்கு மேலும படித்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். ஒரு சில மாணவிகளுக்கு சில சலுகைகள் கொடுக்கப்படும். இந்த 6 வார வகுப்புகள முடிவடைந்தவுடன், தொடர்ந்தாற்போல் அதேபாடங்களில் மூன்று மாத வகுப்புகள் நடத்த உததேசிக்கப் பட்டிருச்கிறது. விவரங்கள் அறிவிககபபடும். பிராஸ்பக்டஸுக்கு I. L. W. A. Ltd., கோபால் பாக், கோயமுத்தூர் என்று எழுதவும்.

போன்: 40
தந்தி: "ILWA".

G. D. NAIDU,
பிரஸிடெண்ட்

ஆத்திரமும் ஆதரவும்

—[ம. கி. தசரதன்]—

தி. மு. க. சொல்லும் திராவிட நாட்டு அமைப்பு இயலாத செயல் என்று சொல்லிடும் அமைச்சர் 'இராஜா மகள்' உதாரணம் எடுத்துக் காட்டுகின்றுர் ஓர் ஊரில்.

கதைகள் சொல்லி திராவிட நாட்டுக் கோரிக்கையை மாய்த்து விடலாம் என்று நமது மாநில நிதியமைச்சர் கருதுகின்றுர் போலும்! தி. மு. கவின் வளர்ச்சியைக் கண்டு மனம் பொருத அவர் அப்படி ஒரு மயக்கத்தில் இருப்பது கண்டு நாம் பரிதாபப் பட வேண்டியவர்களாகின்றோம்.

திராவிடநாடு பெறுவதுசினிமா கதை எழுதுவது போலவோ, காட்சி சோடனையைப்பேரலவோ? அல்ல என்று சொல்லிடும் நிதியமைச்சர் தாமே ஒரு 'இராஜா மகள் கதை' சொல்ல ஆசைப்படுவது விந்தைதான்.

"கேரளம், கன்னடம், ஆந்திரம் இவற்றைத் தமிழகத்துடன் சேர்த்துத் திராவிடநாடு அமைக்க வேண்டும் என்று கோருகின்றுர்கள். இது எப்படி இருக்கிறது என்றுல் இராஜா மகளைக் கலியாணம் செய்துகொள்ளப் போகிறோம் என்று சொல்வது மாதிரி இருக்கிறது. இராஜா மகளைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டும்என்றுல்,இராஜாவும சம்மதிக்க வேண்டும், அவருடைய மகளும் சம்மதிக்க வேண்டும்." என்கிறுர். திராவிட நாடு ஏதோ கிடைத்தற்கரிய பொருள் என்று சொல்லிவிட்டதாக நினைக்கின்றுர்.

இராஜா மகளைத் திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்று எண்ணினல் அது முடியாமற் போகின்ற செயல் அல்ல. காதல், கோட்டைச் சுவர்களைக் குடைந்து கொண்டு போகவும் வரவும் வல்லது என்பதை எல்லோரும் அறிவர். காதலில் வெற்றி கண்ட அமைச்சரே இதனை இவ்வளவு எளிதில் மறந்துவிட்டது வியப்புத்தான்!

இந்த 'அரிய' உதாரணம் காட்டித் திராவிட இன முழக்கத்தைத் தீர்த்துக்கட்டிவிட்டோம் என்று கருதிவிட்ட அவர் அடுத்து இன்னும் ஒரு 'அரிய' 'உண்மையை'க் கூறுகின்றுர்:

ஆந்திராவிற்குப்போய்த் திராவிட நாட்டிற்கு ஆதரவுகேட்டால், ஆந்திரர்கள் அடித்து நொருக்கிவிடுவார்களே என்கிறுர்.

"அந்தத் தோப்பிலே சுவையான பழம் இருக்கிறது என்கிறுய். அடேயப்பா அது எவ்வளவு தொலைவு தெரியுமா? அவ்வளவு தொலைவு போனுலும் அங்கு மரம் என்ன குட்டையாகவா இருக்கிறது. முயன்று ஏறினல் குளவிகள் கொட்ட வருமே! என்று யாராவது சொன்னல், உன்னல் முடியாவிட்டால் நீ இங்கேயே இரு. நான் போய்ப் பழம் பறித்து வருகின்றேன். அதன் சுவையைப் பிறகு பார் நீ" என்றுதான் பதில் சொல்ல வேண்டும்.

அமைச்சர் திராவிடநாடு தீதானது என்று சொல்லவில்லை. ஆனல் அதை அடைவது ஆபத்தாக இருக்கிறதே என்கிறுர். தோப்பின தொலைவு கண்டு அஞ்சுகின்றுர், மரத்தின் உயரம் கண்டு மலைக்கின்றுர்; குளவியின் கொடுக்குக் கண்டு குமைகின்றுர். அவ்வளவேதான். இவை அத்தனையும் கடந்துவிட்டால் இனிக்கும் பழம்கிடைக்கிறது என்பதை அமைச்சர் மறுக்கவில்லை.

ஆந்திரர்கள் அடித்து நொருக்கிவிடுவார்களே என்று தான் அச்சப்படுகின்றுரே ஒழிய அவர்கள் ஆதரவு தந்துவிட்டால் அடைய முடியும் திராவிடத்தை என்று சொல்லுவார். அந்தத் துணிவினை அவர் பெறவேண்டும் என்பதற்காக, ஆந்திரர்கள் ஆதரிக்கின்றுர்கள் என்பதை நாம் அவர் 'திருமுன்' படைக்க வேண்டியவர்கள் ஆகின்றோம். அவர் அமைச்சர் என்பதற்காக அல்ல, அவரைப்போல வேறு பலர் இன்னமும் அச்சப்பட்டுக்கொண்டிருக்கிறுர்கள் காங்கிரஸ் கட்டடத்திற்குள். அவர்களுக்கெல்லாம் தெளிவு ஊட்டிட நாம் கடமைப்பட்டவர்கள் அன்றோ?

அந்தக் காங்கிரஸ் நண்பர்களை ஆந்திர சட்ட மன்றத்திற்கு அழைத்துத்துச் செல்லுவோம் இப்போது. அவர்கள், அவர்களுக்குச் சாதகமான ஒன்றின்மீது ஓட்டெடுக்கும்போதும், நம் கழக உறுப்பினர்கள் பேசும்போதும் தான் இங்கே இருக்கும் சட்ட சபைக்கே வருகின்றுர்கள். தொலைவில் உள்ள ஆந்திர சட்ட மன்றத்திற்கு எங்கே போகப்போகின்றுர்கள். நாமாவது அவர்களை அழைத்துக்கொண்டு போய் 'பாரீர் இந்தக் காட்சியை; கேளீர் இந்தக் குரலை' என்று காட்டி அவர்கள் மனதில் படிந்துவிட்ட அச்சத்தினைத் துடைத்திட வேண்டியவர்களாகின்றோம்.

ஆந்திர மாநில சட்ட மன்றத்தில் தொழில் இலாகா மானியக் கோரிக்கையை முன்மொழிந்து பேசுகின்றபோது ஆந்திர மாநில முதலமைச்சர் திரு. சஞ்சீவி அவர்கள் மத்திய அரசினரின் போக்கைக் கண்டித்துப் பல உண்மைகளை எடுத்து மொழிந்திருக்கின்றுர். அந்த உண்மைகளைக் கேட்ட பின்னரேனும் காங்கிரஸ்காரர்கள் இங்குள்ள நிலைமைகளை மறைத்

காமல் சொல்லிடும் திறம் பெற வேண்டும்.

"சிங்கரேணி என்ற இடத்தில் நிலக்கரிச் சுரங்கத்தை விரிவாக்கவும், உர உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை அமைக்கவும் மத்திய சர்க்காரிடம் ஆந்திர சர்க்கார் 4 கோடி ரூபாய் கடனுகக் கொடுத்துதவும்படி கேட்டனர். மத்திய சர்க்கார் இந்த முக்கிய தொழில் நிறுவனத்தில் உதவி செய்ய மனம் இல்லாதவர்களாக இருக்கின்றனர்" எனத் திரு. சஞ்சீவி குறிப்பிட்டிருக்கின்றார். முடியாது என்று நேரடியாகச் சொல்லாமல் அந்த நான்கு கோடி ரூபாய்களைக் கொடுத்தால் தொடங்க இருக்கும் தொழில்களில் பெரும்பகுதி மத்திய சர்க்காருக்குச் சொந்தமாக இருக்கவேண்டும் என நிபந்தனை போட்டனராம்.

எல்லாம் ஒரே இந்தியாதானே பங்குகள் டெல்லியிலே இருந்தால் என்ன! ஹைதராபாத்திலே இருந்தால் என்ன! என்று ஆந்திர சர்க்கார் உடனே அந்தப் பணத்தை அனுப்புங்கள் என்று ஆலாய்ப் பறக்கவில்லை. அல்லது இதை நாம் ஏன் மக்களிடம் சொல்ல வேண்டும் என்று எண்ணி வாய் மூடிக் கிடக்கவில்லை. சட்டமன்றத்திலே மத்திய சர்க்காரின் போக்கைக் கண்டித்துப் பேசியிருக்கின்றார் முதலமைச்சர். 'நான்' இந்தியன் என்று எண்ணாமல் 'நான் ஆந்திரன்' என்று அவருடைய மனம் துணிவோடு எண்ணியது. இந்தியா வளர்வது இருக்கட்டும். என்னுடைய மாநிலம், என் தாய் நாடு, நான் பிறந்து வளர்ந்த மண் வளரவேண்டும், செழிக்கவேண்டும், வளம் பெற்று வாழவேண்டும் என்று எண்ணுகின்றார். ஆனால் இங்கிருக்கும் அமைச்சர்களோ தொழில் வளர்ச்சியில் அக்கறை காட்டாதது மட்டுமல்ல, இருக்கின்ற செல்வங்களையே இழந்துவிடுவதற்கு ஒருப்படுகின்றனர். 'குளமாவது மேடாவது; எங்கே இருந்தால் என்ன; எல்லாம் இந்தியாவில் தானே இருக்கிறது' என்று ஏதோ யாருக்கும் தெரியாத, தெரிந்து கொள்ள முடியாத அரிய தத்துவத்தைச் சொல்லுவதுபோல் சொல்லுகின்றனர்.

ஆந்திரத்தில் ஆதரவு இருக்கிறதா என்று கேட்கும் காங்கிரஸ்காரர்களுக்கு ஒன்று சொல்லுகின்றோம். ஆந்திரத்தில் ஆதரவு இருக்கிறதா இல்லையா என்பதைப் பிறகு ஆராய்வோம். ஆந்திரத்தில் மத்திய சர்க்காரின்மீது ஆத்திரம் இருக்கிறது. அந்த ஆத்திரத்தை அவர்கள் நமக்குத் தரும் ஆதரவாக மாற்றிக்கொள்ள எத்தனை காலம் ஆகும்?

ஆந்திரர்கள் அடித்து நொறுக்கிவிடுவார்கள் என்று சொல்வது இங்கிருக்கும் சில கோழைகளை அச்சுறுத்துவதற்குப் பயன்படலாம் என்று அமைச்சர் நினைத்திருக்கக்கூடும். ஆந்திரர்கள் திராவிட நாடு கேட்டால் நம்மை அடித்து நொறுக்கமாட்டார்கள்; மத்திய சர்க்கார், கொடுக்கமாட்டோம் திராவிடநாடு என்றால், மத்திய சர்க்காரைத்தான் அடித்து நொறுக்குவார்கள். பொட்டி ஸ்ராமுலு உயிர் நீத்தபோது அப்படித்தான் அடித்து நொறுக்கினார்கள். அந்த ஓசை டெல்லி செங்கோட்டைச் சுவர்களைக் கடந்து உள்ளே நடந்துகொண்டிருந்த பாராளுமன்ற மண்டபத்தின் நான்கு சுவர்களிலும் எதிரொலித்தது. நேரு பண்டிதர் எழுந்து 'பெறுக ஆந்திரம்' என்றார். இது அமைச்சர்களுக்கு நினைவிருக்க வேண்டுமே!

சிங்கரேணியில் ஏன் தொழில் வளருவதை மத்திய சர்க்கார் விரும்பவில்லை? அப்படியே வளர்ந்தாலும் அது தங்கள் பங்கில் வளரவேண்டும் என்று விரும்பக் காரணம் என்ன? அதற்கு ஆந்திரம் இணங்காதது ஏன்? எல்லாம் இந்தியாவில்தானே இருக்கப்போகின்றது? என்றாலும் ஆந்திர சர்க்காரின் சொந்தத் தொழில் வளருவதை மத்திய சர்க்கார் விரும்பவில்லை. மத்திய சர்க்காரின் கூட்டை ஆந்திர சர்க்கார் விரும்பவில்லை. இதனைத்தான் அந்த நிலைமை நமக்குப் புலப்படுத்துகின்றது.

சிங்கரேணியில் ஆந்திர சர்க்கார் திட்டப்படி சுரங்கத்தை விரிவாக்கி உர உற்பத்தியைத் தொடங்கினால் தென்னகத்தின் தேவையை அது நிறைவேற்றும் அளவுக்குச் செழிப்புடையதாம்.

இப்போது தென்னகத்திற்குத் தேவையான நிலக்கரி பீஹாரிலிருந்து கொண்டுவரப்படுகின்றது. இதற்காகக் கொட்டிக் கொடுக்கப்படும் விலை ஒருபுறம் இருக்க, அந்த நிலக்கரியைக் கொண்டுவர மட்டும் இரயில்வே கட்டணம் ஒரு கோடி ரூபாய் செலவாகின்றது எனக் கணக்கிடப்படுகின்றது. இந்த வகைச் செலவுகளைக் குறைக்கலாம் என்று மத்திய சர்க்காரிடம் கடன் கேட்டால், அவர்கள் உதவி செய்ய மனம் இல்லாதவர்களாய் இருக்கின்றனர்.

நிலக்கரி விலையின்றிப் போவது ஒன்று; ஒரு கோடி ரூபாய் இரயில்கட்டணம் இல்லாமல்போவது இரண்டாவது. இரண்டும் வடநாட்டு மாநிலத்திற்கு இழப்பாகிறது. எனவேதான் ஆந்திர சர்க்காருக்கு உதவி செய்ய மத்திய சர்க்காருக்கு மனம் இல்லாமலிருக்கிறது! என்றைக்கும் தென்னாடு வடநாட்டுக்குச் சந்தையாக இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றனரேயன்றி, தென்னகம் ஏதாவது ஒரு துறையில் வளர வேண்டும் என்று முன்வந்தாலும் உதவும் மனம் இல்லாதவர்களாக அவர்கள் இருக்கின்றனர். நம்முடைய அமைச்சர்களோ 'வடக்காவது தெற்காவது' என்கின்றனர். இதோ சிங்கரேணி சொல்கிறதே, வடக்குவேறு தெற்குவேறு என்று!

வேறு வழியின்றி உதவி செய்தேதான் தீரவேண்டும் என்ற நிலைமைவந்தால், என்ன செய்வது என்று எண்ணியவர்களைப்போல் நீங்கள் கேட்கும் தொகையைத் தருகின்றோம்; ஆனால் அந்தத் தொழிலில் பெரும் பங்கு எங்களுக்கிருக்க வேண்டும் என்கின்றனர்

படித்துவிட்டீர்களா?

இராசை கி. அரங்கசாமி அவர்கள் இயற்றிய ஒப்பரும் உயர் திராவிட இலக்கியம்

திராவிட ஆட்சிமுறை 333

—விலை ரூ. 1

பதினெண் கலைகளை விளக்கும்

படிப்பது எப்படி?

—விலை ரூ. 1-25

அஞ்சற் செலவு ரூ. 0-25 பு. காசு

ஏஜெண்டுகள் 25% கழிவு நீக்கி முன்பணம் அனுப்புக

கிடைக்குமிடம்:—

திருக்குறள் பதிப்பகம்,
இராசிபுரம், சேலம் மாவ.

மத்திய சர்க்கார். இதை ஒப்ப சஞ்சீவியாரின் மனம் ஒருப்படவில்லை. சஞ்சீவியாரும் சுப்பிரமணியத்தைப்போல் காங்கிரஸ்காரர்தான் — நேருவுக்கு நெருக்கமானவர்தான், என்றாலும், தான் ஆந்திரன் என்று நினைவுறுத்திக் கொள்கிறார். அதனால் "உங்களைக் கடன் கேட்டோமேயன்றித் தொழில்களில் முதலீடு செய்யச் சொல்லவில்லை" என்று திட்டவட்டமாகக் கூறி மத்திய சர்க்காரின் கூட்டு வேண்டாம் என ஒதுக்கிவிட்டார். ஆனால் சுப்பிரமணியம், தான் ஒரு தமிழர் என்பதை அடிக்கடி மறந்துவிடுகின்றார்; ஏக பாரதத்தின் தலைப்பிள்ளை ஆகின்றார்!

'கூட்டத்தில் கூவிப் பிதற்றலன்றி நாட்டத்தில் கொள்ளாரடி—கிளியே' என்று பாரதியார் பாடியதற்கு இதோ நாங்கள்தான் சான்றாக நிற்கின்றோம் என்று சொல்வதுபோல் இவர்கள் போக்கும் பேச்சும் இருந்திடக் காணுகின்றோம். தமிழ் தமிழ் என நமது கல்வியமைச்சர் எங்கும் முழங்குகின்றார். ஆனால் தமிழ் வளர ஏதேனும் செய்திருக்கின்றார்களா எனின், வளரும் தமிழ் இவர்களால் வாடிப்போகாமல் இருந்தால் போதும் என்று நினைக்கத் தோன்றுகின்றதேயன்றி, ஏதும் ஆக்கப்பணி செய்தவர்களாகக் காணோம். ஆனால் வேறு எந்த மொழி வளர்ச்சிக்கும் பாடுபடாமல் இருக்கிறார்களாஎனின்; இந்தியும் சமஸ்கிருதமும் வளரவேண்டும்-வாழவேண்டும் என ஓடி ஓடித் தொண்டு செய்கின்றனர். இந்தியில் டைப்ரட்டர் பொறி முதலியன வாங்க என முன்பொருமுறை பெருந் தொகை செலவிட்டிருக்கின்றனர். இந்த முறை சட்டமன்றத்தில் கேள்வி ஒன்றுக்கு விடையிறுக்கும்போது டெல்லி பம்பாய் முதலிய இடங்களில் இருக்கும் சமஸ்கிருதப் பாடசாலைகளுக்கு ரூ. 7000/- வீதம் மூன்று நிலையங்களுக்கு சென்னை சர்க்கார் நன்கொடை தந்திருக்கின்றார்கள் என்று அறிவித்திருக்கின்றார்.

இங்கே தாய்மொழி வளர வழி செய்யக்காணோம்! எங்கோ சமஸ்கிருதம் வளர இங்கே தானம் நடக்கிறது. தாய் பசித்து வாடுகின்றாள்; அவள் வயிற்றுப் பிள்ளை தானமும் தருமமும் செய்கின்றார்; ஏதிலார் ஆருகின்றனர்; தமர் பசித்துத் தவிக்கின்றனர்; பேதையின் செயல் இது எனத் திருவள்ளுவர் கூறியிருக்கின்றார்.

"இதேபோல் அந்தமாநிலங்கள் தமிழ் வளர நன்கொடை தந்திருக்கின்றனவா" என நமது கழக உறுப்பினர் ஒருவர் கேட்டதற்கு அமைச்சர் மழுப்பல் விடை பகர்ந்திருக்கிறார்.

இந்தப் போக்கிலே இருக்கும் 'சென்னை' மாநில அரசினர் தங்களுக்குத் தமிழ் வளர்ச்சியில் ஆர்வம் இருப்பதாகக் கூறிவருவது விந்தைதான்! தன்னுடைய குற்றத்தை மறைக்க இன்னொருவன் மீதுபழி சுமத்துவதுபோலத் தங்களுடைய தகாத செயலை மறைத்துக் கொள்ள நினைக்கும் அமைச்சர் நம்மைப்பார்த்து திராவிடநாடு கேட்பது இராஜா மகளைக் கலியாணம் செய்துகொள்ள விரும்புவதைப் போல' என்று சொல்லுகின்றார்.

சிங்கரேணி ராஜாமகள் சம்மதம் சொல்லுகின்றாள், ஆந்திர இராஜா சஞ்சீவி சரி என்கிறார், சுப்பிரமணியம் என்ன சொல்வாரோ இப்போது?

இத்தனை பெரிய கோட்டைச் சுவரைத் தாண்டி எப்படி நான் உள்ளே போவேன் என்று மலைக்கின்றார். நாமோ கோட்டைச் சுவரின் கொடுமையை எண்ணாமல் உள்ளத்தில் கொண்டிருக்கும் கொள்கையின் உறுதியால் மெல்ல மெல்ல மேலே ஏறுகின்றோம்; கீழேயிருக்கும் சுப்பிரமணியம் 'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்' என்கிறார்.

எத்தனை நாட்களுக்கு இப்படி பழம் புளிக்கும் கதை சொல்லிக் கொண்டிருக்கப் போகிறார்களோ பார்க்கலாம்!

★

ரதம்

"ஏழு வயதுள்ள சிறுமி கற்பகம் திருவானைக்காவல் பிள்ளையார் ரதம் ஏறி மாண்டாள்."

குழந்தைகள் ரதத்தை இழுத்தனர். அப்போது ஏற்பட்டது இந்த விபத்து.

(சு. மி.)

2-ம் பக்கத் தொடர்ச்சி

என்ற இவ்வளவோடு, நாம் கோரும் நாட்டுப் பிரிவினைக்குக் காரணம் காட்டி மறுத்து விட்டதாக எண்ணிக்கொண்டு பேசி முடித்து விடுகிறார்கள்.

ஆனால், பொதுமக்கள், பெரியவர்கள், இளைஞர்கள், மாணவர்கள் ஆகிய எல்லோருமே நாம் கூறுவதையும் கேட்கிறார்கள், அவர்கள் கூறுவதையும் கேட்கிறார்கள். யார் கூறுவதில் உண்மை இருக்கிறதென்பதையும் அறிந்து விளக்கம் பெற்றுக் கொண்டுதான் வருகிறார்கள். இந்த விளக்கத்தின் விளைவு எந்த அளவிற்குப் போய் இருக்கிறதென்பதை மட்டும் எப்படியோ அமைச்சர்கள் அறிந்திருக்கிறார்கள். எனவே, அவர்கள் எங்கு சென்றாலும் அங்கெல்லாம் தி. மு. க. பற்றி, சம்பந்தம் இருக்கிறதோ இல்லையோ, ஏதாவது பேசித் தொலைக்கிறார்கள்! பேசட்டும், பேசட்டும். நன்றாகப் பேசட்டும். தி. மு. க. பற்றிப் பேசுவது தான் இன்றைய சர்க்காரின் கடமை என்று வேறு சொல்லுகிறார்கள். அவர்களுடைய இந்தக் கடமை, நாம கோரும் திராவிட நாடு கிடைக்கும்வரை நடைமுறையில் இருக்கட்டும். அது, நமக்கு அவர்கள் செய்யும் மறைமுக உதவியாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாம் எதிர்காலத்தில் அவர்களை மறக்கமாட்டோம்.

நாளைக்கு ஆளும் கட்சி வேறாக மாறி, அந்தக் கட்சி, இன்று ஆளும் கட்சியை வியாதிபிடித்த கட்சி, வலைவீசும் கட்சி, தீமை பயக்கும் கட்சி, மாயையால் மயக்கும் கட்சி என்று கூறினால், நாம் எங்கிருந்தாலும், அப்படியெல்லாம் ஆளும் கட்சியைப் பற்றிப் பேசுவது அரசியல் நாகரிகமாகாதென்று கூறத் தவறமாட்டோம் என்பதை மட்டும் இன்று ஆளும் பொறுப்பில் இருப்பவர்களுக்கு நினைவூட்டுகிறோம்.

★

The School of English Learning
ஆங்கிலக் கல்வி நிலையம்
60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.

KNOWLEDGE IS POWER

★ ஒரே ★ வருடத்தில்

தமிழ் தெரிந்தவர்கள் இலக்கண ரீதியாக அடிப்படையிலிருந்து	இங்கிலீஷ் புரிந்துகொள்ளக்கூடிய வர்கள் அடிப்படையிலிருந்து
இங்கிலீஷ்	**மெட்ரிக்**

காலையிலோ மாலையிலோ ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி

நேரில் கற்கலாம்.

நாட்டின் உயிர்நிலையாய கல்வித் துறையில் பயனுள்ள நூதன புரட்சிகர மான மாற்றங்களைச் செய்துவரும் எங்கள் கலாநிலைய நடவடிக்கைகளை நேரில் வந்து பார்வையிட்டால் எங்கள் அரிய சேவையைப் பாராட்டாமல் இருக்கமாட்டீர்கள்.

புதிய வகுப்புகள் ஆரம்பம்: 11–4–1958

சேர மனுசெய்துகொள்ள கடைசி தேதி: 10–4–1958

- ★ கற்றோரும் போற்றும் நூதன பாடதிட்டங்கள்
- ★ சீரிய முறையில் அமைக்கப்பட்டுள்ள வகுப்புகளின் காட்சி
- ★ உரிய மரியாதையுடன் மாணவர்கள் நடத்தப்படும் போக்கு
- ★ மாணவர்கள் காட்டும் ஆர்வம்

நேரிலே காணீர்.

முழு விவரங்களை நேரில் வந்து தெரிந்துகொள்க.

கல்வி நிலையம் எல்லா நேரங்களிலும் (ஞாயிற்றுக் கிழமைகளில் கூட) திறந்திருக்கும்

முக்கிய அறிவிப்பு: சென்னை வாசிகள் மட்டுமே சேரலாம். 16 வயதிற்கு மேற்பட்ட வாகளே இங்கிலீஷ் வகுப்புக்ளில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். 20 வய திற்கு மேற்பட்டவர்களே மெட்ரிக் வகுப்புகளில் சேர்த்துக்கொள்ளப்படுவார் கள், பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

திருத்தமாகக் கற்க ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் இங்கிலீஷ் வகுப்புகளில் சேரலாம்.

446

திராவிடநாடு

13—4—58 | வார வெளியீடு | விலை 16 காசு

30 APR 1958
MADRAS

தாயின் விலங்கொடிய!

(கழுகு மலையான்)

“என்வீட்டின் பொருள்தன்னை யான்அநுப விக்க
இடமின்றி வடநாட்டார் இருஞ்சிறையுள் என்னை
மூன்பூட்டி வைத்(து)உரிமை முழுவதையுங் கொன்று
முறையின்றி அதிகாரம் முடிக்கின்றார் பாரீர்!
அன்(பு)ஊட்டி நான்வளர்த்த அருமைமிகு மக்காள்
அநியாயந் தனைக்கேட்க ஆளிலையோ? இங்கே?”
என்(று)ஈட்டி பாய்ந்தாற்போல் இதயத்தைக் குத்த
எதிர்நோக்கிக் கேட்கின்றாள் எழில்“திருவி டத்தாய்”

பாடுகின்ற ஆறுகளும் பைம்பொன்னும் முத்தும்
பசுமைநிறை காடுகளும் பலவளமுஞ் செறிய
தேடுகின்ற நிலையின்றிச் சேர்ந்தொருங்கே பெற்ற
“திருவிடத்தாய்” தனையின்று சிறைவைத்தார் கண்டீர்
ஆடுகின்ற வடநாட்டார் அதிகாரங் காட்டி
ஆருயிராம் உரிமையினை அபகரித்தார். இங்கே
கூடுகின்ற பொருளையெலாம் கொள்ளையடிக் கின்றார்
கூக்குரலிட் டழுதபடி குமைவதுவோ? நம்தாய்!

வடநாட்டுச் சிறையினிலே வாடிமெலி கின்றாள்
வையகத்தே குறைவற்ற வளம்மிகக் கொண்டாள்.
உடலெங்குஞ் செங்குருதி ஓடுகின்ற மக்காள்
உளங்கொதிக்க உயிர்பிழைக்க உணர்ச்சிமிகப் பெற்று
“விடமாட்டோம் இனியாங்கள் வேறெவர்க்கும் அஞ்சோம்
வெற்றியெமக் கே”யென்று விளம்பிடுவீர் இன்றே
திடமான நெஞ்சோடு சேர்ந்திங்கே யொன்றாய்
திருவிடத்தாய் மகிழ்ந்திடவே சிறைமீட்க வாரீர்

கோட்டையிலிருந்தே!

வடக்குக்கும் தெற்குக்கு முள்ள பிளவு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு போகிறது என்ற உண்மையை மறைக்கலாம், விஷயம் கசப்பானது, பயங்கரமானதும்கூட. நினைத்தால் நெஞ்சம் ஐயுறுகிறது. ஆனால் விஷயங்களை மறைப்பது வியாதிக்குச் சிகிச்சையோ, அரசியல் விவேகமோ ஆகாது. இப்போதும் விஷயம் முற்றிப் போகவில்லை, தலைக்கு மேல் வெள்ளம் போகுமுன் தகுந்த முயற்சி எடுக்கப்படாவிடின் இந்தப் பிளவு சுவராக எழும்பி இந்தியாவின் மற்றொரு பிரிவினைக்குக் காரணமாகும். மத வெறியை நாம் எதிர்க்க முடியாததால் பாகிஸ்தான் தோன்றியது. "ஐக்கிய நாடு" என்ற மனோபாவம் உண்டாக்கப்படாவிட்டால் தென்னாடும் துண்டாகிவிடும்.

*

தெற்குக்கும் வடக்குக்கும் உள்ள உறவுப் படத்தை நாம் சரித்திரத்தில் பார்க்கிறோம். அது அவ்வளவு அழகானதாக இல்லை! மேனாட்டுச் சரித்திர ஆசிரியர்களின் கருத்துப்படி முதன் முதலில் இந்தியாவெங்கும் கௌலர்களும், திராவிடர்களும் பரவி இருந்தார்கள்: மத்திய ஆசியாவிலிருந்து ஆரியர்கள் வந்தார்கள். அவர்கள் கௌலர்களையும் திராவிடர்களையும் தெற்கே விரட்டி விட்டார்கள். ஆரியர்கள் மாநிறமாகவும் உறுதி வாய்ந்தவர்களாகவும் இருந்தனர். கௌலர்களும் திராவிடர்களும் அவர்களை எதிர்த்து நிற்க முடியவில்லை. ஆகவே அவர்கள் வடக்கை விடுத்துத் தெற்கே குடியேறினார்கள். இந்தக் கருத்து எவ்வளவுதூரம் உண்மை என்பதைக் கூறுவது கடினம். சரித்திர ஆசிரியர்களிடையே அபிப்பிராய பேதம் அதிகமாக உள்ளது. இந்தியச் சரித்திர ஆசிரியர்கள் இந்தக் கருத்து ஆதாரமற்றது என்கிறார்கள். அவர்கள் கருத்துப்படி ஆரியர்கள் வேறு எங்கிருந்தும் வரவில்லை. ஆரம்ப கால முதல் அவர்கள் ஐரோப்பா, ஏசியா மட்டுமின்றி ஆப்பிரிக்காவின் வடக்கு நாடுகளிலும் பரவியிருந்தார்கள். இந்தியாவிலும் அவர்கள் ஒரு பகுதி மட்டுமின்றி இமயம் முதல் குமரிவரை இந்துகுஷ் முதல் பர்மாவரை எங்கும் பரவியிருந்தனர். நிற வேற்றுமைக்குக் காரணம் இனமல்ல, சீதோஷ்ண நிலையேயாகும். இவ்விரு கருத்துக்களில் எது சரி, எது தவறு என்பதைப் பற்றி அபிப்பிராய பேதம் இருக்கலாம்.

திராவிடநாடு கோரிக்கை, வடநாட்டவர்களின் கவனத்தையும் கருத்தையும் கவரத் துவங்கியிருக்கிறது.

வட நாட்டிலுள்ள ஜலந்தரிலிருந்து இந்தி மொழியில் வெளிவரும் "இந்தி மிலாப்" எனும் தின இதழில் கடந்த 19—3—58 முதல் தொடர்ச்சியாகச் சில தினங்களுக்கு "வடக்கும் தெற்கும்" எனும் தலைப்பில் தலையங்கங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

மேற்படி தலையங்கத்தின் சில பகுதிகளை இங்கே, "தேவி" திரட்டித் தந்துள்ளார். கோட்டையிலிருந்தே, கேட்கும் குரல், இது! நமது பிரச்சினைகள், வடவர் இதயங்களுக்குள் புகத் தலைப்பட்டுள்ளது மட்டுமின்றி, அங்கேயே கேள்விகள் உருப்பெறத் துவங்கிவிட்டன என்பதையும் விளக்கும்.

*

மகாபாரத காலத்திலேயே வட இந்தியாவும் தென் இந்தியாவும் ஒரு குடை நிழலில் இருக்கவில்லை என்பது வெள்ளிடைமலை. இராமச் சந்திரனின் தலைநகர் அயோத்தியில் இருந்தது. சீதையைத் தேடி அவர் தெற்கே சென்று அங்குள்ள அரசர்களின் ஒத்துழைப்பைப் பெற்றார். இதன் கருத்து என்ன? தென்னகத்து அரசர்கள் அயோத்திக்கு அடிமையாக இருக்கவில்லை என்பது தானே. சந்திரகுப்தர் இந்தியாவை ஒரு கயிற்றில் பிணைக்க முயன்றார். அவர் கிரேக்கர்களுடனும் உள்நாட்டு அரசர்களுடனும் போர் புரிந்தார். வட இந்தியா மட்டுமின்றி ஆப்கானிஸ்தானத்தின் ஒரு பகுதியையும் தன் கீழ்க் கொண்டுவந்தார். அவருக்குப் பின் அசோகர் அதே வேலையைத் தொடர்ந்தார். பல போர்களின் மூலம் தனது சாம்ராஜ்யத்தைப் பரப்பினார். ஆனால் அவரும் தென் இந்தியாவை தன் குடைக்கீழ்க் கொண்டுவர முடியவில்லை. அவருடைய கடைசிப் போர் கலிங்கப் போர் ஆகும். ஒரிஸ்ஸாவரைதான் அவர் போர்புரிந்து வெற்றி கண்டார். பின்னர் போரைக் கைவிட்டு விட்டார். அதன் பின் மௌரிய வல்லரசு சிறுத்துக் கொண்டே போயிற்று. அசோகருக்குப் பின் இந்தியாவில் பேரரசு ஸ்தாபித்தவர்கள் முகலாயர்கள் ஆவார்கள். பாபர் முதலான முகலாயர்கள் நூற்றாண்டுகளாக இந்தியாவில் ஆட்சி செலுத்தினார்கள். அவர்களின் ஆட்சி இடமாகவும் பரவியும் இருந்தது. ஆனால் அவர்கள் காலத்திலும் தெற்கே சுதந்திர அரசர்களும் நவாபுகளும் அரசாண்டு வந்தனர். போர் புரிந்துகூட முகலாயர்களால் தென்னகத்தை தனது அரசுடன் இணைக்க முடியவில்லை.

(13-ம் பக்கம் பார்க்க)

கலை ஒளி

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [13-4-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 39

பயங்கரவாதியல்ல, அவன்! பாடகன்!! எனினும், அவன் பாடுவதைக் கேட்கக்கூடாது என மக்கள் தடுக்கப்பட்டார்கள். கீதக் குரல் எழுப்பி, அவன் பாடும்போது, பனி மலரைத் தொடும் உணர்ச்சியும், இறகு முளைத்து வானவளையத்தை வட்டமிடும் ஆனந்தமும் ஏற்படும்! குயிலும் தோற்கும் குரலினிமை கேட்டு! கல்லும் உருகும், கானப் பெருக்கால்!!—கல்லினும் கடின மனம் படைத்த காதகர்களோ, முள்வேலி போட முனைந்தார்கள். முரட்டுப் பிடிவாதமும், வறட்டுக் கவுரவமும் தாக்க, மக்களுக்குத் தடை விதிக்க முற்பட்டார்கள். அழகான முல்லையாயினும், அது மாற்றார் தோட்டத்தில் மலர்ந்தது, எனவே மணக்காது — மணந்தாலும், நீர் அதைச் சுவைக்கலாது எனின் மனம் கேட்குமோ! அமெரிக்க நாட்டு மக்களின் மனம், தேனை நாடும் வண்டுபோல, அந்தப் பாடகனின் இன்னிசையின்மீது பதிந்தது. அவன் பாடுகிறான் எனின், பல்லாயிரக் கணக்கில் மக்கள் திரண்டார்கள் — ஆண்களும், பெண்களும், வாலிபர்களும் வயோதிகர்களும் 'எங்கே, எங்கே' யென்று ஓடினார்கள். ஏளனமோ, கேலிச் சொல்லோ, கண்டனக் குரலோ, மக்களின் மனதைத் தடுக்கவில்லை; மாறாக, என்னதான் அவன்பாட்டிலிருக்கிறது எனும் ஆர்வத்தைக் கிளப்பியது! இலட்சம் இலட்சமாக மக்கள் செல்லலானார்கள் — அவன் பாடுகிறான் எனின், மக்கள் அணைகடந்த வெள்ளம்போலப் போகலாயினர்— அரைக்க அரைக்கச் சந்தனம் மணப்பதுபோல, தடுக்கத் தடுக்க அவனை நோக்கி மக்கள் திரளலாயினர்!! பிடிக்கவில்லை, தடைபோட்டோருக்கு. சகிக்க முடியவில்லை, ஒரு இசைவாணன், தனனிகரில்லாதவனாக விளங்குவதைக் காண. அடுத்த கட்டம், ஆரம்பமாயிற்று — அமெரிக்காவில், எங்கே அவன் கச்சேரி நடக்கிறதென்றாலும், புகுந்து நொருக்க ஆரம்பித்தனர்—மேடைகள் பிய்த்தெறியப்பட்டன! ஒலிபெருக்கிகள் நாசமாயின! கூட்டத்தினர்மீது, குண்டுகள் வீசப்பட்டன! ஒவ்வொரு பாட்டுக் கச்சேரியும், போலீசாரின்றி, நடைபெறாது எனும் நிலைமை ஏற்பட்டது!!

பாடகன் பாடத் தெரிந்தவனல்ல—சங்கீதக் கொலை நடத்துகிறான் — ஆபாசமான பாடல்களைப் பாடி அநாகரீகத்தை வளர்க்கிறான்—என்றாலும், தடுப்பதில் பொருளுண்டு! அவன் பாட்டிலோ, பெருந்தன்மை தொனித்தது — கீதத்தில், கண்ணியம் மிளிர்ந்தது — நிறைகுடமாக விளங்கினான் அவன். அமெரிக்க நாட்டின் சங்கீதம் மட்டுமல்ல, உலகின் பல பகுதிகளில் விளங்கும் இசை நுட்பங்களை யெல்லாம் அறிந்திருந்தான். என்ன இசை வேண்டும்? — பிரெஞ்சா, பாடுகிறேன்! பொலிஷ் இசையா, இதோ! நார்வேஜிய நாட்டுப் பாடல்களா, தெரியும் எனக்கு! ஸ்பானிஷ் நாட்டிய கீதமா, நன்றாக அறிவேன்! ருஷிய கீதமா, கேளுங்கள், பாடுகிறேன்! ஹிப்ரு மொழியில் வேண்டுமா, அறிவேன் நன்றாக! ஆங்கிலேய நாட்டுக் கீதமா, அறியாதவன் என்று எண்ணாதீர் என்னை! இந்திய நாட்டு இசைகூட அறிவேன்! — என்று, உலகின் பல் வேறு மொழிகளிலுமுள்ள இசைகளை யெல்லாம் அறிந்திருந்தான். இப்பேற்பட்ட கலைஞனை, கண்களிலன்றோ ஒத்திக்கொள்ள வேண்டும்? ஒப்பற்ற ஒரு கலைஞன் எமது நாட்டிலிருக்கிறான் என்று, பாராட்டும் பரிசுகளும் அளிப்பதன்றோ ஒரு நாட்டுக்குப் பெருமை? இவ்வளவு இசைகளும் தெரியும்; ஆனால் வாய் திறந்தால் கர்த்தபத்தை கவனமூட்டுவது போலிருக்கும்; பன்மொழி யறிந்தவனா யிருந்தென்ன, விரசமும் விசாரமும் குரலில் தொனித்தால் விரும்புவரோ விவேகிகள், என்றாவது கூறமுடியுமோவெனின், அவனுக்கு இசை முறைகள் யாவும் தெரிந்திருந்தது மட்டுமல்ல, குரலினிமையும் அதற்குமேல் அமைந்திருந்தது! வீணையின் ஒலியும், குழலின் இனிமையும், தென்றலின் சிலுசிலுப்பும், தேனருவியின் சுவையும், மிளிர்ந்தன அவன் குரலில். இருந்தும், எதிர்த்தனர்! தாக்கினர்—தடுத்தனர்—தகராறுகள் செய்தனர்!!

என்ன காரணம் தெரியுமா?—பால்ராப்சன் எனும் பெயர்கொண்ட அந்தப் பாடகன் ஒரு நீக்ரோ!! அமெரிக்க நாட்டில் வாழும் வெள்ளை நிற வெறியர்களின் அகராதிப்படி, அவன் ஒரு தீண்டத்தகாதவன்; அடிமை; சேற்றிலே முளைத்ததென்றாலும் செந்தாமரையைப் போற்றுவர்! சிப்பியிலே பிறந்ததென்றாலும் முத்தினை எடுத்தணிந்து மகிழ்வர்! ஆனால், தாழ்த்தப்பட்ட குலத்திலிருந்து உருவான ஒரு பெருங் கலைஞனையோ, மதிக்க மறுத்தனர்— எதிர்த்தனர்—அடக்க முற்பட்டனர் — அட்டகாசமும், ஆத்திரமும் காட்டினர்.

உலகம், அவன் கீதத்தைக் கேட்டு, பிரமித்தது. ஒவ்வொரு நாடும் இப்படியொரு கலைஞன், நமக்குக் கிடைக்கமாட்டானா என்று ஏங்கிற்று!! ஆனால், நிற வெறியர்களோ, அவனை ஒழித்துக்கட்டவும், அவன் குரலுக்குத் தடை விதிக்கவும் முற்பட்டனர். நிற வெறி இயக்கங்கள்—'கூக்ளஸ்கிளான்' மூலம்—அவனுடைய குரல், எவருடைய காதிலும் ஏறுதபடி செய்ய பெரு முயற்சி எடுத்துக்கொண்டனர்! இரையிட்டு மூடும் சகல முயற்சிகளும் செய்யப்பட்டன—

தியவன் எனக்கூறிடும் எல்லாப் பிரச்சாரமும் முடுக்கி விடப்பட்டன — இருந்தும், அவன் இசை, உலகின் நாலுபகுதிகளிலும், இருளைக் கிழித்துக் கொண்டு ஒலிக்க ஆரம்பித்தது! மயில் ஆடும், குயில்களிக்கும், வண்ணப்புறு பறக்கும், பாம்பும் மயங்கும்—ஆனால் ஆறறிவுபடைத்த மனிதர்கள்மட்டுமே 'அவனுக்கு இவ்வளவு சிறப்பா?" என்று மனம் கொதிக்கலாயினர்!!

கொதிப்பும், குமுறலும், திறமையையும் உண்மையையும் அடக்கிவிட முடியுமா? அவன் பாடினான்— தடைகளைத் தாண்டிப் பாடினான்-தடுப்போரின் அக்கிரமங்களையே பாடல்களாக்கிப் பாடினான் — தான் ஒரு நீக்ரோ என்பதற்காக இழைக்கப்படும் அநீதிகளை இசையின் மூலம் எடுத்துக் காட்டினான்— நீக்ரோ இனத்துக்கு, நிறவெறி கொண்ட வெள்ளையர்களால் இழைக்கப்படும் அக்கிரமங்களை உணர்த்தும் உணர்ச்சிக்காரணாகமாறினான் — இதயத்தில் குமுறி வரும் சுதந்திர வேட்கையை வெளிப்படுத்தும் சாதனமாகத் தனது கலையைப் பயன்படுத்தினான்—நீக்ரோக்கள், மகிழ்ந்தனர்! நிறவெறியர்கள், நிலைகுலைந்தனர்! வெறும் கலைஞனாக மட்டுமின்றி, அந்தக் கலையின் மூலம் தன் இனத்தின் நிலையினை எடுத்துணர்த்த ஆரம்பித்த அவன், வெறும் பாடகனாக மட்டுமின்றி ஒரு விடுதலைச் சின்னமும் ஆனான். தனது மக்களின் தாழ்வுற்ற நிலையை எடுத்து விளக்க, அந்தப் பாடகன், நாடக நடிகனாகவும் ஆனான்—இசையும், கூத்தும், காண்போரை மகிழ்வித்தது மட்டுமல்ல, இயேசு நாதரின் சீடர்கள் வாழும் நாட்டில், உழைக்கும் பட்டாளமாக விளங்கும் நீக்ரோக்கள் படும் அவதிகளைக் கிளறிடும் கருத்துக்களையும் பரப்பலாயின!!

அப்படிப்பட்ட பால்ராப்சனின், அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவினை, கடந்த 9-ந் தேதி உலகெங்கும் கொண்டாடியிருக்கின்றனர்.

இந்தியத் துணைக்கண்டத்திலும், மிகச் சிறப்பாகக் கொண்டாடியிருக்கிறார்கள்—அரசின் ஆதரவில், ஒரு குழு ஒன்றும் அமைக்கப்பட்டு இவ்விழா கொண்டாடப்பட்டிருக்கிறது. அக்குழுவில் அங்கம் வகிப்போரின் பட்டியலைப் பார்த்தபோது, நமக்கு வியப்பே ஏற்பட்டது — பம்பாய் உயர்நீதிமன்ற நீதிபதி சாக்ளா, டாக்டர் சி.வி. இராமன், டாக்டர் சி.பி. இராமசாமிஅய்யர், டாக்டர் இராஜமன்னார் போன்ற பெரியவர்கள் எல்லாம் இவ்விழாக் குழுவில் அங்கம் வகிக்கிறார்கள். இந்தியப் பிரதமர் நேரு அவர்கள், மிக்க ஆர்வத்தோடு, இந்த விழா நடைபெறுவதில் கவனம் செலுத்தியிருக்கிறார். அது மட்டுமின்றி, அவர் பெருமையோடு விடுத்துள்ள செய்தியில் "அவனைப் பாராட்டுவதன் மூலம், அவன் கொண்ட கொள்கையை நாம் ஆதரிக்கிறோம். அக்கொள்கை, ஏற்றத்தாழ்வு இருக்கலாகாது, என்பதே ஆகும்" என்று குறிப்பிட்டிருக்கிறார். உயர்வு தாழ்வு பேதத்தின் அடிப்படையில் மனிதனை மதிக்க மறுப்பதும், மாணிக்கமானாலும் அதனைக் கல்லென்று சொல்லும் மனத்துணிவு பெறுவதும் ஆகாது; தகாது.

"நாட்டின் ஆண்டைகள், வெள்ளைக்காரப் பிரபுக்கள், என்னைப் பற்றியும், என் கருத்துகளைப் பற்றியும் என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றி நான் சிறிதும் கவலைப்படவில்லை. கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாகவே அவர்கள் என்னை ஒவ்வொரு வழியிலும் இம்சித்து வந்துள்ளனர். தூற்றுதல், வெறி பிடித்த கூட்டத்தை ஏவிவிட்டு பலாத்காரச் செயலில் ஈடுபடுதல் முதலியவைகளைச் செய்தே வருகிறார்கள். ஒரு கலை என்ற முறையில் என்னுடைய தொழிலைச் செய்வதற்குள்ள என்னுடைய உரிமையைக்கூட மறுக்கிறார்கள். வெளிநாடுகளுக்கு நான் செல்லக்கூடாதென்று தடையும் விதித்தே வருகிறார்கள். ஆயினும், என் குரல், எங்கும் கேட்கும்!" என்று அந்தப் பெருங்கலைஞன், ஆர்வத்தோடு, அறிவித்துள்ளான். இந்திய உபகண்டத்துக்கும், இங்கிலாந்துக்கும் செல்ல அவனுக்கு அனுமதியளிக்கவும் மறுத்துவிட்டது அமெரிக்க சர்க்கார்! காரணம், அவன் ஒரு விடுதலை விரும்பி, என்பதுதான்!!

எவ்வளவுதான் திரைபோட்டு மூடினாலும், அடக்குமுறைகளை வீசினாலும், தாழ்த்தப்பட்டவன் எனத் தள்ளினாலும், அங்கே எழும் மணத்தை— அது கலைமணமானாலும் சரி, அறிவு மணமானாலும் சரி — ஆதிக்கக்காரர்களால் தடுத்து நிறுத்திவிட முடியாது. அதுவும், சுதந்திரவேட்கை கலந்த கலையின் மணத்தை, எவராலும் தடுக்க இயலாது; ஏனெனில், உணர்ச்சியும் கலையும் ஒன்றுசேரும் போது, எட்டாத இடங்களுக்கெல்லாம் அது எட்டவே செய்யும்! அதனால்தான், நேரு அவர்களும், குழு ஒன்றை அமைத்து அந்தக் கலை மன்னனைக் கவுரவித்துள்ளார், இங்கு!!

ஒரு விடுதலைப் புறாவுக்கு, மதிப்பும் கவுரவமும் அளிக்க முற்பட்ட, நேருவின செயலை எவரும் பாராட்டவே செய்வர். நாமும், பாராட்டுகிறோம். ஆனால், இவ்வளவு ஆர்வமும் அன்பும், இங்கேயுள்ள விடுதலைக் கலைஞர்கள்பால் காட்டிடும் ஆர்வம் ஏன், நேரு அவர்களுக்கு வருவதில்லை — குழு எதுவும் போட்டு கவுரவிக்காவிடினும், கொட்டும் தேள் போல துன்புறுத்தாமலாவது இருக்கச் சொல்லுவது கூட இல்லை—எனும் போதுதான், சஞ்சலம் உண்டாகிறது! கவுரவிக்காவிடினும், இங்குள்ள கலைஞர்கள் பலர், மொழிக்கும் இனத்துக்கும் தம்மையும் தமது தொழில் திறமையையும் அர்ப்பணித்தால் — கூத்தாடிகள்! நாடகமாடிகள்! என்று ஏளனம் செய்கிறார்கள். தடைகளாலும், 'சென்சார்' மூலமும், அவர்களது குரல்வளையை நெரிக்கவும் முற்படுகிறார்கள். பால்ராப்சனைப் பாராட்டும் அந்தப் பெருங்குணம் உள்நாட்டிலும் ஏற்பட்டுவிட்டால், பழியும் மாசும் துடைக்கப்பட்ட நிலையில், எத்தனை கலைஞர்கள் இங்கே உலவுவார்கள் என்பதை நினைக்க, நெஞ்சம் குமுறத்தான் செய்கிறது, நமக்கு' எனினும், எவ்வளவுதான் ஏச்சும் பேச்சும் கிடைத்தாலும், நாட்டுக்கும் இனத்துக்கும் பணிசெய்திடும் கலைஞர்கள் — இன்றில்லாவிடினும் ஒரு நாள், உலகத்தால் கவுரவிக்கப்படுவார்கள் என்கிற நம்பிக்கையை, பால்ராப்சனின் விழா, உணர்த்துகிறது!! தாழ்த்தப்பட்ட இனத்தில் பிறந்தாலும், தன் கலை மூலம், தனக்கும் தன் இனத்துக்கும் பெருமைதேடியதோடு மட்டுமின்றி—உலகில் வாழும் பிற்பட்டவர்களுக்கும் ஒரு நம்பிக்கை நட்சத்திரமாய் விளங்கும் பால்ராப்சனுக்கு, நாமும், இந்தச் சமயத்தில் நமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். அவரது, நெஞ்சுறுதி வாழ்க! தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காக தனது கலையைப் பயன்படுத்தும் கலைஞர்களுக்கு, அவர் உறுதி, ஒரு ஒளிவிளக்காக், விளங்குக! ●

வீரம் ஊட்டுகிறார்!!

"வடநாட்டார் என்ன பூதமா? அல்லது பேயா? நம்மை விழுங்கிவிடுவார்களா? தென்னாட்டார்களாகிய நாம் ஏமாளிகளா? நமக்கு வீரியம் இல்லையா?"

*

மார்ச் 18ந் தேதியன்று, மதுராந்தகம் எனும் பழந்தமிழூருக்குப் பவனி சென்றிருந்த காமராசர் விடுத்தாராம் இந்த வினாக்களை!! வேகமும், அவருக்கு வந்துகொண்டிருக்கும் விவேகமும் காண மகிழ்ந்தோம். அனல் தெறிக்கிறது, கேள்விகளில்! ஏமாளிகளா? வீரமற்றவர்களா?-என்று குன்றெடுக்கும் நெடுந்தோளும், கம்பீர உருவும் கொண்ட 'கனம்' கேட்டிருக்கிறார்!!

வடவர் பூதமுமல்ல; நாம் ஒன்றும் சோற்றுப் பொதிகளுமல்ல! வடவர் பேயுமல்ல; நாம் நாயினும் கேடுகெட்டவர்களுமல்ல! வடவரைவிட நமக்கு வீரம் உண்டு — வெற்றிச் சின்னங்களும் உண்டு. கடல்கட்டி ஆண்டவன் தமிழன்! கடாரங் கொண்டவன்! கங்கையை வென்றவன்! கல் சுமக்கவைத்தவன்! அவன் கரம்பட்டுக் கிளம்பிய வில்லின் அம்புக்கு மாற்றார், மடமடவெனச் சாய்ந்தனர் எனச் செப்புகிறது வரலாறு. சொல்லுக்கு, சிரம் வணங்கி, பல நாடுகள் காத்துக் கிடந்தனவாம், ஒரு காலத்தில். அகத்தையும் புறத்தையும் துருவினால், சிலம்பையும் மேகலையையும் ஆராய்ந்தால், கடுகைத் துளைத்து அதற்குள் கடலை அடக்கியது போலிருக்கும் குறளைத் தொட்டால், கோடிகோடி சான்றுகள் கிடைக்கும் — தமிழனின் வீரத்தையும் விவேகத்தையும் விளக்க. பேயும் பூதமும், பூசுரர்தம் கற்பனை!-என்பது தமிழன் அறிவான். அந்தப் பேயும் பூதமும் கூட,உயிரோடுவரின்,சும்மாவிட்டிடும் குணம் கொண்டவனல்ல, தமிழன். வீரம் அவனுக்கு விளையாட்டு! வெஞ்சமர், அவனுக்குத் தோட்டத் தொழில்!!

"முடிநடப் போனாரோ, உன் கணவர்?", என்றொருத்தி வினவ, "ஆமாமடி! முடிநடத்தான்போனார் என் கணவர். நீ நினைப்பதுபோல, நாற்றுமுடியல்ல, தார்வேந்தர் தம் மணிமுடிகளை," என்று பதிலிறுத்த வீரத்தாய்மார், உலவிய வீரர்கோட்டம் தமிழகம். அறிவோம், இதனை! அனுதினமும், நாம் பயிலும் தமிழ், இவைகளை எடுத்தெடுத்துச் சொல்லுகிறது!!

அரங்கண்ணல்

படிக்கிறோம் — உருகுகிறோம்— இதயம் வேகிறது—எழுத்தாலும், பேச்சாலும், "தமிழனே! இது கேளாய். அமிழ்தினும் இனிதாம் உன் மொழி. அறுதியிட முடியாத வீரமாம் உன் பலம். அப்படிப்பட்ட நீயோ, தாழ்ந்தாய்? தவிக்கிறாய்?", என்று, எடுத்துரைத்து வருகிறோம். கத்தும் கடலையும், அங்கு ஒரு காலத்தில் கிடைத்த முத்தையும், அந்த முத்துக்களை வாங்க முசிறியிலும் புகாரிலும் காத்துக் கிடந்த அயல்நாட்டு வாணிபர்களையும், அவர்கள் கொண்டுவந்து கொட்டிய பொன்னையும மணியையும் வாரிவாரி நாவலருக்கும் பாவலருக்கும் வழங்கிய மன்னர்களையும், அந்த மன்னரின் ஆட்சியில் மகிழ்ந்து கிடந்த மக்களையும், மனக்கண்முன் காண்கிறோம்.

புலிக்குத்தி! தென்கொண்டார்! மழவராயர்! காடுவெட்டியார்! — எனும் தமிழ்ப் பெயர்கள் தரும் வீரத்தையும், அவைகளுக்குள் பொதிந்து கிடக்கும் வரலாறுகளையும், எண்ணி எண்ணி மகிழ்ந்து,

"ஆண்ட நீ மாண்டாயே!
மகுடம் வீழ்ந்ததே மண்ணில்!"

என்று, குருதி கொதிக்கக் குமுறுகிறோம். தமிழா! நினைத்துப்பார், புலிவந்தாலும்எதிர்த்துநின்றஉன் நிலைஎன்ன? இன்று, பூனைகுறுக்கே ஓடினாலும் பயந்து அலறுகிறாயே! —தருக்கர் கொட்டம் அடக்கப் புறப்பட்ட நீ, ஒரு தர்ப்பைப் புல்லுக்கு கைகட்டிச் சேவகம் புரிவதோ? ஆண்ட மரபினனான நீ, வேண்டித்தொழுது ஒரு வயிறு சோற்றுக்கு மண்டியிடுவதோ?— என்று, கேட்டு வருகிறோம். சேரனின் வாழ்வையும், சோழனின் வீரத்தையும், பாண்டியனின் நெறியையும், பாரி வள்ளலையும், குமணக் கோமானையும், கொடிகட்டியாண்ட குறுநில மன்னர்களையும், மக்களின் மனக்கண்முன் வைத்து, பல்லாண்டுகளாக வினாக்குறிகளை எழுப்பி வருகிறோம் நாம்.

கேலி செய்தவர்! பழங்கதை பேசுகிறவர்கள், உலகமறியாததுகள் என்று சொன்னவர்!-இன்று, அந்த வீரத்தையும், விவேகத்தையும் உணர்த்தப் புறப்பட்டிருக்கிறார்!!

நாம் என்ன ஏமாளிகளா? வீரியம் அற்றவர்களா?—என்று காமராசர் கேட்கிறார்! அகில இந்திய

—அகண்ட பாரதம்—பாரதமாதாவின் புதல்வர்கள்—என்றெல்லாம், எந்த வாய் கூறியதோ, அதே வாய் கேட்கிறது, தென்னாட்டார்களாகிய நாம் என்ன ஏமாளிகளா? என்று! தென்னாட்டவர்களாகிய நாம் என்ன வீரியம் அற்றவர்களா என்று வேறு கேட்கிருர்!

"வடநாட்டவரே! தெரியுமோ எமது வீரம்? அறிவீரோ எமது விவேகம்? யானைகட்டிப் போரடித்தோரின் பரம்பரையினர் நாங்கள்! எமக்கு முன் நீங்கள் பூனைக்குச் சமானம். உமைக்கண்டு பயப்பட நீரென்ன பூதமோ அல்லது பேயா? அப்படியிருப்பினும் ஏமாறமாட்டான் தமிழன்! அஞ்சாதவன் தென்னகம் கொண்டான்!!" என்று உணர்த்தக்கூடிய இடத்திலே இருப்பவர், காமராசர்.

ஓடி ஓடி மண்டியிட்டு, இருநூறு கோடி கேட்டு, 150-தான் தருவேன் எனச் சொல்லி, அதையும் குறைத்து அடிவயிற்றிலடிக்கும் டில்லியிலிருந்து அலறிய வண்ணம் ஓடிவருகிற நிலையும் உண்டு அவருக்கு. எனவே, தமிழரது வீரத்தையும் ஏமாருத தன்மையையும் வடவருக்கு உணர்த்தி, வசதிகளையும் வாய்ப்பையும் பெறவேண்டியவர்! அதன் மூலம், தென்னாட்டாரின் வாழ்வின் மறுமலர்ச்சியை உண்டாக்கும் பதவியிலே இருப்பவர்!!

அவர், இந்த வீரமுரசத்தை டில்லியிலே ஒலிக்கவில்லை; மதுராந்தகத்திலே தட்டிப் பார்க்கிருர்.

ஒருவேளை, மதுராந்தகத்தில் பேசியது டில்லிக்கு எட்டி, டில்லியிலே உள்ளவர்கள் காமராசரின் குரல் கேட்டுப் பதறி, இனிமேல் ஏமாற்றக்கூடாது எனக் கருதி 'இந்தா! இந்தா!' என்று அவர் கேட்கும் வசதிகளைச் செய்து தருவர், என்கிற எண்ணத்தில் முரசு கொட்டுகிருரோ எனின், இல்லை.

போர்முனையிலே ஊதவேண்டிய சங்கினை, வீட்டுக்குள்ளேயே ஊதுகிருர்! மாற்றானுக்கு விடவேண்டிய எச்சரிக்கையை நமக்கு விடுக்கிருர்!

ஏமாளிகளல்ல
வடவர், பூதமுமல்ல;
பேயுமல்ல,
நாம வீரர்கள்!

என்கிற விளக்கம் வடவருக்கு தரப்படவில்லை, காமராசரால்! நமக்கு வழங்கப்படுகிறது!!

வடவருக்கு உணர்த்தி, வாடும் தென்னாட்டுக்கு வாழும் வகை வழிகளைச் செய்துகொள்ள வேண்டிய காமராசர், பழந்தமிழரின் வீரத்தையும் விவேகத்தையும் நமக்கு உணர்த்துகிருர்! வீரமும் விவேகமும் கொண்ட நாமோ, வடக்கு தெற்கு என்று பேசுவது? வடக்கு என்ன செய்துவிடும் என்று கேட்கிருர்! அவர்கள் என்ன பூதமா என்கிருர் — நமது வீரத்துக்கு வடக்கு எந்த மூலை என்கிருர்!!

களத்திலே கடும்போரிட்டு நின்ற அண்ணன் இராவணனை விட்டு அயலான் இராமனிடம் சரண் சென்ற விபீடணனின் கதை தெரியும் அனைவருக்கும். அந்த விபீடணன், வஞ்சகத்துக்கு இரையாகி, வாடும் அரக்கர்களை நோக்கி "இராமனின் சேனைகள் என்ன பூதங்களோ! இல்லை. உங்கள் வீரம் என்ன சாமான்யப்பட்டதா? நீங்கள் என்ன ஏமாளிகளா!! எதற்கும் அஞ்சவேண்டாம். பேசாமலிருங்கள்" என்று புத்திமதி கூறினால் என்ன பொருள்? அண்ணன் படைக்குச் சாதகம் செய்கிருன் என்ரு கருத முடியும்? இராமனைக் காப்பாற்றிட—வெற்றி தேடித் தந்திட—இலங்கைமாநகர் வீரர்களை ஏமாற்றிட முயலுகிருன் விபீடணன் என்றுதானே கருதுவர்!!

தவிக்கும் தென்னகத்தை, வடவர் பிடியில் சிக்கவைக்கும் விபீடணர்களாக விளங்கும் காமராசர் குழு பழந்தமிழ் வீரத்தை நினைவூட்டி, என்ன செய்துவிடுவார்கள் இந்தவடநாட்டார், எதற்காக நாம் பயந்து பிரிந்துபோக வேண்டும் என்று கேட்கிறது.

பூஞ்சோலைக்குள்ளே புலிபுகுந்து நாசம் செய்யும்போது, புண்பட்டு ஒரு மூலையில் கிடத்தப்பட்டிருக்கும் வீரனிடம் போய் அவனது திறமைகளையும் வாள் வீச்சின் அருமையையும் பற்றிப் பேசி என்ன பயன்?

தென்னகம், இன்று புண்பட்டுக் கிடக்கும் வீரனின் நிலையிலே இருக்கிறது! வேலும் வாளும் வாழ்வெனக் கொண்டிருந்த தென்னகம், புண்படுத்தப்பட்டது, இடையில். எப்படி? — என்கிற விபரம் அறிவோம். மதத் துறையில், படிப்படியாக, கட்டுக் கதைகளும், கற்பனைப் புளுகுகளும் பரவி, தமிழனின் வீரத்தைக் குன்றச் செய்தது. அரசியல் துறையில், அவனுக்குக் கட்டுமேல் கட்டுப் போடப்பட்டு, கலங்கும்படி செய்யப்பட்டான். இந்த இரண்டு விலங்குகளையும் உடைத்தெறிய முயலுகிருன்! அவனிடம் போய், பழைய வீரத்தையும் விவேகத்தையும் கூறி, "சும்மா கிட! வேளாவேளைக்குச் சோரு போடவில்லை? போடாவிட்டால் விட்டா விடுவோம்?", என்ருல், என்ன பொருள் இதற்கு?

திராவிட நாடு, திராவிடருக்கே! —என்பதன் பொருள், மாட்டப்பட்டிருக்கும்விலங்குகள் உடைத்தெறியப்பட வேண்டும் என்பதுதான். காலையும் கையையும் கட்டிப் போட்டுவிட்டு, அடிபட்ட புண்ணுக்கு மருந்திடாமல் அவதியடையச் செய்துவிட்டு, அவனிடம் போய், சும்மாகிட என்று, போதிக்கப் புறப்படுகிருர், காமராசர்! நாம் என்ன ஏமாளிகளா? —என்று கேட்கிருர்!! வீரமூட்டுகிருர்!!

இந்தப் பத்தாண்டு கால ஆட்சியில், நாம் ஏமாளிகள் இல்லை என்பதை காமராசர் கட்சி நிரூபித்துக் காட்டிவிட்டு, இந்தக் கேள்விகளைக் கேட்டிருந்தால் பொருளுண்டு. யார் ஏமாறமாட்டானே, யார் வீரத்தின் விளக்கோ, யார் விவேகமுடையவனே, அவனை விபீடண தந்திரத்தால் விலங்கு பூட்டிக் கிடத்திவிட்டு, வீரமும் சூரமும் உண்டே உனக்கு என்று சொல்வதில் என்ன நன்மை விளைய முடியும்? காமராசர் கேட்பதுபோல், நிச்சயம் நாம் ஏமாளிகளுமல்ல! வடவருக்குப் பயந்து வாழ்ந்திடும் பண்பும் நமக்குக் கிடையாது!!

ஆனல், காமராசர் போன்றவர்களால், நம்மைச் சுற்றிக் கட்டுகள் அன்றே போடப்பட்டிருக்கின்றன. அந்தக்கட்டுகளை அவிழ்த்துவிட்டு, பிறகு நமது வீரத்தையும் விவேகத்தையும் சுட்டிக் காட்டினல், அப்போது பொருளுண்டு; விவேகமும் இருக்கிறது. அதைவிட்டு, வடவருக்கு வால்பிடிப் போராய், அவர்களை வாழ்த்தியே வாழவேண்டியவர்களாய், வெண்சாமரம் வீசிகளாய், விபீடணப் பம்பரையாய் இருந்துகொண்டு

வீரஉபதேசம் செய்தாலென்ன பொருள்!!

புண்பட்டுக் கிடப்பவனுக்கு மருந்து போடவேண்டும்—அவனைச் சுற்றியிருக்கும் தளைகளை அறுத்தெறியவேண்டும்- அதைத்தானே நாம் கேட்கிறேம்! விடுதலையும், சுகவாழ்வும் தென்னாட்டுக்குத் தரப்பட்டுவிட்டால், பிறகு வடவரென்ன, உலகத்துக்கே தென்னாட்டான் பதிலளிப்பான்—தன்னுடைய வீரத்தையும் விவேகத்தையும் உணர்த்தக் கூடிய வாய்ப்புக் கிடைக்கும்.

அதைவிட்டு, பிரியலாமா, வடக்குத் தெற்கு என்று பேசலாமா, நமது வீரம் எப்பேற்பட்டது, விவேகம் எத்துணை சிறப்பானது என்று சொல்லி யாருக்கென்ன இலாபம்? புண்ணுக்குப் புனுகு பூசும் வேலைக்கா புறப்பட வேண்டும், காமராசர் குழு!!

கட்டுண்டு கிடக்கும் வீரனை விடுவித்துவிட்டு, இந்தக் கணைகளைப் பூட்டினல் பயனுண்டு. அதை விட்டுவிட்டு, ஆர்வத்தையும், எழுச்சியையும் உண்டு பண்ணுகிருராம், 'கனம்'. வீரத்தையும் விவேகத்தையும் நினைவூட்டுகிருராம்.

வடநாட்டார்தான் பூதமல்ல என்று தெரியுமே; பேயுமல்ல என்று புரியுமே! ஏன் காமராசர், இந்தப் பத்தாண்டு காலத்தில், அந்த வடவரிடமிருந்து, தென்னாட்டுக்கான அணைக்கட்டுகளை, ஆலை போடும் திட்டங்களைப் பெற்றிருக்கக் கூடாது? ஏமாளிகளா நாம், என்று கேட்கிருரே கனம்—எத்தனை தடவைகள் டில்லிக்கு ஓடி ஓடி மூக்குடைபட்டு வந்திருக்கிறது சென்னை சர்க்கார்?

கொட்டிக் கொட்டி அழுகிறேம், பல வரிகளை!

அதிகாரங்கள் யாவுமோ, டில்லியிடமே குவிந்து கிடக்கிறது!!

வரிப்பணத்தை இங்கேயே செலவழிக்கவும், அங்குள்ள அதிகாரங்களை இங்கே பெறவும், மார்க்கம் என்ன செய்தார் இந்த மாவீரர்? ஆலைகள் உண்டு வடக்கே! கவலைகள் வளருது தெற்கே!! அணைக்கட்டுகள் பெருகுது வடக்கே! அவதி வளருது தெற்கே!!— என்று எழும் அவலக் குரலுக்கு மூடிபோட, என்ன செய்தார், இவர்? ஓடுவதும், டில்லியினர் சாடத் திரும்புவதும், பிறகு தெம்பினை பாடுவதுமாகத்தானே இருந்து வருகிறது இவர்தம் போக்கு!!

★

கர்னுடக தி. மு. கழக 2-வது மாநாடு

1958 ஏப்ரல் 26, 27-ம் நாட்களில் பெங்களூர் நகர் சுபாஷ்நகர்

கோலார் தங்கவயல் சின்னராசன் திடலில்

கலைவாணர் என். எஸ். கே. அரங்கில் நடைபெறும்.

தலைவர்:	திறப்பாளர்:
டாக்டர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.	நடிகமணி டி. வி. நாராயணசாமி

அண்ணதுரை, நாவலர் **நெடுஞ்செழியன்**

மற்றும் கழக முன்னணி வீரர்கள் கலந்துகொள்வர்.

இசைமுரசு நாகூர் அனிபா குழுவினரின் கலைநிகழ்ச்சி உண்டு.

—வரவேற்புக் குழு.

சந்தேகப் புள்ளிகள்

M. S. வெங்கடாசலம் M. A.,

பம்பாயிலிருந்து வெளிவரும் டைம்ஸ் ஆப் இந்தியா (Times of India) செய்தி, நிருபர் இப்படியொரு செய்தியைத் தருகிறார்.

"தமிழகத்து காங்கிரஸ்காரர்களிலே 'சந்தேகப் புள்ளிகள்' பலர் இருக்கின்றனர். அதுமட்டுமல்ல! தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கட்சி, பிரிவினைச் சக்திகளோடு இணைந்துபோகிறது என்று பலமுறை, பற்பல காங்கிரஸ் தலைவர்களால் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது."

தேர்தல் காலத்தில், பெரியாரோடும், அவர் தம் இயக்கத்தோடும், காங்கிரசு இயக்கம் கொண்டிருந்த நட்பு, வடக்கே இருக்கிற தலைவர்களைத் திகைக்க வைத்தது. "வகுப்புவாதிகளோடு சேராதீர்கள்" என்ற தாக்கீது பிறப்பித்த வண்ணம் அவர்கள் இருந்ததை நாடு கண்டது!

தேர்தலுக்குப் பின்னாலே, அமைச்சர் சுப்ரமணியம், சட்டமன்றத்தில் "பத்து ஆண்டு ஒப்பந்தம்" செய்துகொள்ளுங்கள் என்று தி. மு. கழகத்தை வேண்டினார்! அம்மம்மா! நினைக்கவே பரிதாபமாக இருக்கிறது; எத்தனை சுடுசொற்கள்! எவ்வளவு கேள்விக் கணைகள்!! "இப்படியா பேசுவது" என்ற கண்டனக் குரல்கள்! வடநாட்டு இதழ்களெல்லாம் கனல் கக்கின! அதன் பிறகு, "நான் சொன்னதைத் தவறாகப் புரிந்து கொண்டீர்கள். நான் நாட்டுப் பிரிவினையை என்றுமே ஆதரித்ததில்லை! இனியும் என்றும் ஆதரிக்க மாட்டேன்!" வடநாட்டுத் தலைவர்களிடம் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்கும் முறையில், 'வாபஸ்' வாங்கினார்!

ஒருமுறை சோரம் போனவள் எவ்வளவுதான் நாணயமாக நடந்தாலும், அவள் செய்கிற ஒவ்வொரு காரியத்தையும் கணவன், சந்தேகக் கண்ணோட்டத்திலேயே பார்ப்பதைப்போல், அமைச்சர் சுப்ரமணியம் எதைச் செய்தாலும், அவரை மட்டுமல்ல, அவரை உள்ளடக்கியிருக்கிற அமைச்சரவையையே, டில்லிப்பீடம் சந்தேகக் கண்ணோட்டத்திலேதான் பார்க்கிறது.

"வடக்கே நீர்ப்பாசனத்திற்கு ரூ. 250 கோடி செலவிடும்போது, இங்கே மட்டும் ரூ. 25-கோடி செலவிடுவானேன்? அதனாலே, அமைச்சர்களே, நீங்கள் டில்லியிடம் போராடிப் பணம் பெறுங்கள்" என்று ராஜா சர் முத்தையா செட்டியார் கூடச் சட்டமன்றத்திலே பேசிவிட்டார்.

அமைச்சர் சுப்ரமணியம் பேசினாலும், ராஜா சர் பேசினாலும், — டில்லியைப் பொறுத்தவரை ஒன்றுதான். அவர்கள் 'சந்தேகத்'துக் குரியவர்கள்தான் — அவர்களை உள்ளடக்கியிருக்கிற காங்கிரசு இயக்கத்தின் மீதும் அவர்களுக்கு சந்தேகம்தான்!

காங்கிரசுக்காரர்கள் தங்கள் இயக்கத்திற்கு உண்மையாக உழைப்பதில்லை - கொள்கைகளைத் தீவிரமாகக் கொண்டவர்களல்ல- அப்படி 'நாணயமற்ற' தன்மையில் பற்பலர் இருக்கிறார்கள் — என்று டெல்லி எண்ணுவதற்கு இன்னொரு காரணமும் இருப்பதாக அந்தப் பத்திரிகை நிருபர் கூறுகிறார். இதோ அவரது வாசகங்கள்:—

"மாநிலமன்றத் தேர்தலில், காங்கிரசுக் கட்சியினர் எவரும் தோல்வியடையவில்லை என்றாலும், காங்கிரசு அபேட்சகர்களுக்கு, எதிர்பார்த்த அளவு வாக்குகள் கிடைக்கவில்லை. உதாரணமாக சுயேச்சை அபேட்சகரான H. D. ராஜா 34-வாக்குகளைப் பெற்றிருக்கிறார். சாதாரணமாக அவர், 24-வாக்குகளைத்தான் பெற்றிருக்க வேண்டும். காங்கிரசு உறுப்பினர்களில் சிலர் அவருக்கு வாக்களிக்கவில்லையென்றால், அவர் 34-வாக்குகளைப் பெற்றிருக்க முடியாது."

அந்தக் "குற்றவாளி"களைக் கண்டு பிடிக்குமாறு. காமராசர், கட்சிக் கொறடாவான கருத்திருமனுக்குக் கட்டளையிட்டிருக்கிறாராம்.

H. D. ராஜாவுக்கு ஓட்டுப் போட்டதாலேகூட காங்கிரசுக்காரர்களின் மீது வருத்தமல்ல, டில்லிப் பீடத்திற்கு!

ஆனால், கட்சிக் கட்டுப்பாட்டை இந்த அளவுக்கு மீறிச் சுயேச்சை அபேட்சகரை ஆதரித்தவர்கள், நாளைக்கு நாட்டுப் பிரிவினையை ஏன் ஆதரிக்கமாட்டார்கள், என்பது அவர்கள் உள்ளத்திலே எழுகிற வாதம்!

அந்த வாதம் உண்மை என்று நிரூபிப்பதைப்போல், மற்றொன்றும் நிகழ்ந்திருக்கிறது என்கிறார், டைம்ஸ் ஆப் இந்தியா நிருபர்.

"சென்னை மாநிலத்தைச் சேர்ந்த மேல் சபைக்கு அண்மையில் உபதேர்தல் நடந்தது. ஜஸ்டிஸ் கட்சியின் தலைவராக விளங்கியவரும், சுயேச்சை அபேட்சகருமான P. T. ராசன் அவர்கள், காங்கிரசாரின் ஆதரவிலேதான் தேர்ந்தெடுக்கப்பட்டார். தேர்ந்தெடுக்கப்பட்டதும் அவர் மேல் சபையின், தனித் தமிழ்நாடு அமைக்கப்பட வேண்டுமென்று வாதாடினர்,"

டில்லிப் பீடத்தின் 'சந்தேகம்' வலுப்பதற்கு, வேறென்ன காரணம் வேண்டும்? சந்தேகம் வலுத்தால், பதவி பறிபோய்விடுமோ என்று பயப்பட வேண்டிய நிலை அமைச்சர்களுக்கு!

அதனால்தான், டில்லி பீடத்தின் சந்தேகம் வலுக்க வலுக்க தாங்கள் 'குற்றமற்றவர்கள்' என்று நிரூபித்திடும் எண்ணத்தில், தமிழகத்து அமைச்சர்கள், நம்மை நோக்கிப் பொழிகின்ற வசைமாரியும் வலுக்கிறது!

பாவம் 'சந்தேகப் புள்ளிகள்' எதையோ பேசிவிட்டுப் போகிறார்கள் என்று அவர்கள் மேல் பரிதாபப்பட வேண்டிய நிலையிலிருக்கிறோம் நாம்! ★

எங்கெங்கு நோக்கினும்!

"எந்தக் கட்சி இருக்கிறது — எதற்கு இருக்கிறது போக்கியதை--கம்யூனிஸ்டுக் கட்சி கலவரக் கட்சி. சோசியலிஸ்ட் கட்சி தெளிவில்லாத கட்சி, ஜனநாயகக் காங்கிரஸ் தேவையில்லாதக்கட்சி, தி. மு. க.வோ, கொள்கையில்லாத கட்சி—ஆகவே, இந்த நாட்டில் ஒரே ஒரு கட்சிதான் ஒழுங்கான கட்சி! அதுதான் காங்கிரஸ் கட்சி!! சுதந்திரம் வாங்கிக் கொண்டு வந்ததும், அந்த சுதந்திரத்தைப் பாதுகாக்க ஐந்தாண்டுத் திட்டம்போட்டு நிறைவேற்றுவதும், எமது காங்கிரஸ்தான். ஜே, ஹிந்த்!!"

"வெளுத்துக் கட்டிவிட்டீர்கள். ஒரு கட்சியும் இலாயக்கில்லை என்று நீங்கபேசினதுதான்சரி..."

"இன்னும் வெளுத்து இருப்பேன்! சோடா, இல்லாமற் போய் விட்டது......"

"அடடே! கேட்டிருக்கக்கூடாது —ஆமாம் எப்படி இருக்கிறது, மார்க்கெட்......?"

"என் மார்க்கெட்டைத்தானே கேட்கிறீர்கள்? இப்ப எனக்குத்தான் மார்கெட். நேற்று,கும்மிடிப் பூண்டி—முந்தாநாள் முடிச்சூர்—போன வாரம்மட்டும் நாலுகூட்டம் பேசினேன். நல்லா எதிர்க்கட்சிகளை ஒருபிடி பிடிக்கிறேன் என்பதால்,மற்றவங்களைவிட, என்மார்க்கெட் நல்லாயிருக்கு......"

"நான் அதைக் கேக்கலீங்கோ! மந்திரிசபை மார்க்கெட் எப்படியிருக்குன்னு கேட்டேன்......"

"மந்திரிசபை மார்க்கெட்டா? மந்திரி சபையை என்ன, கத்தரிக்காய் பாவற்காய், முட்டைக் கோஸ் எல்லாம் விற்கும் கொத்தவால் சாவடின்னு நினைச்சீங்க..."

"சேச்சே! மந்திரிசபையில் எந்த மந்திரிக்கு அதிக செல்வாக்கு, யாரைப் பிடிச்சா சீக்கிரம் காரியம் நடக்கும்னு கேட்டேங்க......"

"ஏன், உங்களுக்கு ஏதாவது காரியம் நடக்கணுமோ?"

"எனக்கு ஒண்ணும் நடக்கணும்னு இல்லே! என சம்சாரம், ஒரு வெங்காய பர்மிட் வேணுங்கிறு......"

"இவ்வளவுதானே! செஞ்சாப் போச்சு......"

*

பிரசங்கி வெளுத்து வாங்கிவிட்டுவந்ததும், கூட்டம் நடத்திய காங்கிரஸ் பிரமுகரின் இல்லத்துக்குள் நுழைந்தால், இப்படிப்பட்ட உரையாடல்கள்தான் இருக்குமே ஒழிய - ஐந்தாண்டுத் திட்டத்தின் அருமைபற்றிய விவாதமோ, அதை நிறைவேற்றுவதற்கான முறைகளைப்பற்றிய உரையாடலோ, காங்கிரஸ் எனனென்ன செய்யவேண்டும் என்பது பற்றிய விளக்கங்களோ, நிச்சயம் இருக்க வியலாது.

ஏனெனில், இந்தத்துறைகளில் அக்கரை செலுத்தக்கூடியவர்கள் இன்றைய தினம் அங்கில்லை! எவரெவரோ-ஆசைகளை வளர்த்துக் கொண்டிருப்பவர்கள், 'சான்சு' அடிக்குமோ என்று எதிர்பார்த்தவர்கள்,-இன்று அங்கே அங்கம் வகிக்கிறார்கள்! அவர்களிலே பலர் எம். எல். ஏ-க்களாகிறார்கள்-பேரம் பேசுகிறார்கள்-அந்த எம்.எல்.ஏ-க்களை வசப்படுத்த முனைந்தவர் அமைச்சராகிறார்-பிறகு அந்த அமைச்சர், எம். எல். ஏ-க்களுக்குக் கட்டுப்பட்டவராகிறார் - உடனே, எம். எல். ஏ. தனது காரியங்களைச் சாதித்துக்கொள்ள முயல்கிறார்-ஏதாவதுஒருதடவை எம். எல். ஏ. யின் விருப்பத்தை நிறைவேற்ற அமைச்சர் தவறினால், உடனே அதிருப்தி வளருகிறது-அவருக்கு எதிராகக் கையெழுத்து வாங்கும் முயற்சி துவங்குகிறது-மேலிடத்துக்குப் போகிறது-அரசு மாறுகிறது! பழையவரின் இடம் பறிக்கப்பட்டு, புதியவருக்கு அளிக்கப்படுகிறது.

காங்கிரஸ் பதவியேற்ற நாள் முதல்' இந்தக்கண்றாவிகளை' அடிக்கடி கண்டும் கேட்டு வருகிறோம் நாம். காங்கிரசைத் தவிர வேறு கட்சியில்லை என்று கர்ச்சிக்கிறார் பிரசங்கி! காங்கிரசின் நிலையோ, சொத்தவால்சாவடிபோல ஆகி வருகிறது!!

ஒவ்வொராண்டும் இந்த நிகழ்ச்சிகள், உருவாவதுண்டு. இந்தஆண்டும், அந்தநிகழ்ச்சிகள் இந்த உபகண்டத்தின நாலு பகுதிகளிலும் ஏற்படத் துவங்கியுள்ளன.

*

மேற்கு வங்கத்தில், காங்கிரஸ் மந்திரிசபை மீது ஊழல்களிருப்பதாகக் குறிப்பிட்டுச் சித்தார்த்தராய் எனும் அமைச்சர் தனது பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டார். அவர் வெளியிட்ட குற்றச் சாட்டுகளை மேலிடம் பரிசீலித்து வருகிறது.

அதுவும் போகிறது?

அறநிலயங்களிலும் கோயில்களிலும் சுமார் 17 கோடி ரூபாய்க்குச் சொத்துகள் முடங்கிக் கிடப்பதாகக் கூறப்படுகிறது! இந்தச் சொத்துக்களின் முழுப் பொறுப்பையும், எடுத்துக்கொள்ள டில்லி முடிவு செய்திருக்கிறதாம். இப்போது டிரஸ்டுகள் மூலம் இவைகளை மாநில அரசே நிர்வகித்து வருகிறது. இந்தஉரிமையையும் இனி, டில்லி எடுத்துக்கொள்ளுமாம். மார்ச் 20ந் தேதியிட்டு டில்லியிலிருந்து வந்த சேதி கூறுகிறது:-''மதஸ்தாபன தர்மடிரஸ்டுகளின் நிர்வாகம் சம்மந்தமாக மத்திய சர்காரே அகில இந்திய அடிப்படையில் ஒரு சட்டம் தயாரித்துக் கொண்டிருக்கிறது."

ஆந்திரத்தில், கோபால ரெட்டிக்கு டில்லியில் மந்திரிப்பதவி கொடுத்ததால், அந்த இடத்துக்கு யாரைப் போடுவதென்பதில் ஆந்திரக் காங்கிரஸ் தலைவர்களுக்குள் கருத்துவேற்றுமை ஏற்பட்டிருக்கிறது. சமாதானம் செய்யக் காங்கிரஸ் செயலாளர் பல்வந்த்ராய் மேதா போயிருக்கிறார்.

அஸ்ஸாமில், முன்பிருந்த முதலமைச்சர் சென்னைக்குக் கவர்னராக வந்ததையொட்டி ஏற்பட்ட மந்திரி சபை மாறுதல்களால் உண்டான சச்சரவு தீரவில்லை. நேருவிடமும் தேபரிடமும் புகார்கள் போயிருக்கின்றன.

ஒரிசாவில், மேல்சபைத் தேர்தலில் எதிர்பார்த்தபடி காங்கிரஸ் எம். எல். ஏ-க்கள் ஓட்டளிக்காததால், காங்கிரஸ்பிரதிநிதி தோற்க நேர்ந்தது. முதலமைச்சர் அரிகிருஷ்ணமேதாவுக்கும் சிலருக்குமிடையே உண்டான கருத்து வேற்றுமையே காரணம் எனக் கருதப்படுகிறது. மேதாப், தான் விலகப்போவதாக வெளியிட்டிருக்கிறார்.

மைசூரில், நிஜலிங்கப்பா மந்திரி சபையைக் கவிழ்க்கத் தீவிரமான முயற்சிகளில் காங்கிரஸ் தலைவர்கள் ஈடுபட்டு ஏதோ தற்காலிக சமரசம் ஏற்பட்டிருக்கிறது.

பஞ்சாபில், தேவிலால் என்கிற ஒருவரை எதிர்பாராதபடி மாகாண காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுத்ததால், ஒரே குழப்பம். பஞ்சாப் காங்கிரஸ் பிரமுகர்கள், மேலிடத்துடன் கலந்தாலோசிக்க டில்லிக்கு விரைந்திருக்கிறார்கள்.

பாண்டிச்சேரியில், குபேர் மந்திரி சபைக்குத் தலைவலி — காங்கிரஸ்காரர்கள் வேறொரு மந்திரி சபையை அமைக்கும் முயற்சியில் முழுமூச்சாக இறங்கியுள்ளனர்.

*

என்ன காரணம் — ஏனிப்படி இருக்கிற மந்திரிகளை மாற்றிவிட முயலுகிறார்கள் — என்று பார்த்தால், மேலே சொன்னதுபோல, சொந்தத் தகராறுகளும் விருப்பு வெறுப்புகளும்தான் முக்கிய பங்கு வகிக்கின்றனவே ஒழிய, கொள்கை பேதமோ, வேறு காரணங்களோ இல்லை.

மைசூரின் நிலைமை, நாற்றமடித்தது; எடுத்ததும் கீழே விழுந்துவிடக்கூடிய மூக்கைப் போன்றது தான் மந்திரிப் பதவி என்றால் அந்தப் பதவி வேண்டாம் என்றார் நிகலிங்கப்பா. "அழுக்கு அகற்றப்பட வேண்டும்—கெட்டவர்கள் விரட்டப்பட வேண்டும்" என்றார், முன்னாள் முதலமைச்சரான அனுமந்தையா.

இப்படி ஒவ்வோரிடத்திலும் தகராறும்—அதை வளர்த்திடப் பல காங்கிரஸ்காரர்களும் — ஓட்டளிக்க எம். எல். ஏ-க்களும்-எனிருக்கிறார்கள் என்று பார்க்கும் போதுதான்,

பதவியே
பெரிதாயிருக்கிறது!
சேவை அல்ல, இன்றைய காங்கிரசில் இருப்பவர்களுக்கு முக்கியம்!

என்கிற உண்மை பளிச்செனத் தெரிகிறது—பதவி மூலம் இலாபம் கிடைப்பதால் ஒவ்வொருவரும் பதவி அடைய முயற்சிக்கிறார்கள்,

டாக்டர் பி. சி. ராய், நீண்ட நாட்களாகக் காங்கிரசிலிருப்பவர் —நேருவின் தோழர் — அவரது மந்திரி சபையில்

ஊழல்
இலாபவேட்டை
சுயநலம்
உறவினர்களுக்கு
நலன் நாடல்

அனைத்தும் மலிந்திருப்பதாக நேற்றுவரை கூடிக் குலாவிய சித்தார்த்தராய் குறிப்பிடுகிறார். பாம்பின் கால் பாம்புக்குத்தானே தெரியும்!

*

இப்படிப்பட்ட காங்கிரஸ் கட்சி தான் நாட்டுக்கு நன்மை தேடித் தரக்கூடிய ஒரே கட்சி! ஏனையவைகள் எல்லாம் கட்சிகளே அல்ல!! என காங்கிரஸ் பிரசங்கி பேசுகிறார்.

இங்குள்ள காமராசர் போன்ற அமைச்சர்களும், பேசுகிறார்கள், இப்படி.

கேட்கின்ற மக்கள் தினசரி, ஏடுகளைத் திறந்ததும் மக்களுக்குப் பாடுபடும் கட்சியின் யோக்கியதைகளைப் படிக்கிறார்கள்! மாலையில் காங்கிரஸ் பிரசங்கி கர்ச்சிக்கும் போது சிரிக்கிறார்கள்!!

தெளிவாக — திடமாக —மக்கள் மன்றத்தில், காங்கிரசைப்பற்றிய உண்மைகள் விளங்கி வருகின்றன.

இந்த அழகில், பிரசங்கிகள் போயென்ன! பேசியென்ன!! வட்டாரத்துக்கு ஒரு கமிட்டி அமைத்தென்ன—ஆடலும் பாடலும் நடத்தியென்ன!

"சுதந்திரம் வந்ததும் காங்கிரசுக்கு சமாதி கட்ட வேண்டும்" என்றார் காந்தியார். அவர், எவ்வளவு பெரிய தீர்க்கதரிசி என்பது தினசரி வெளியாகி வருகிறது! இந்த இலட்சணத்தில் மக்களுக்குச் சேவை செய்ய காங்கிரசே கட்சி என்கிறார்கள் 'கனம்'கள்!!

பட்டாளச் செலவு

பாரத நாட்டு வரிமுறையைப் போல் கடுமையான வரிமுறை உலகில் வேறு எங்கும் கிடையாது. இவ்வளவு கடுமையானவரிகளின் மூலம் வசூலிக்கப்படும் பணத்தில் பெரும்பகுதி இராணுவச் செலவுக்கும், மற்றப்பகுதி சாதாரணநிர்வாகச் செலவுக்குமே தீர்ந்துபோகிறது!

* * *

நாம் உலகநாடுகளை--ருஷ்யாவையும் அமெரிக்காவையும், அணுகுண்டு ஜல குண்டுகளைத் தூரத் தூக்கி எறியுங்கள் என்று ஓயாமல் வற்புறுத்தி வருகின்றோம்.

அந்த உபதேசத்திற்கு முரண்படாமல் நம்முடைய நிர்வாகம் நடைபெற வேண்டும்.

* * *

நம்முடைய இராணுவ அதிகப்படிச் செலவெல்லாம் மேற்கத்திய வல்லரசு நாடுகளிலிருந்து தருவிக்கப்படும் தளவாடங்களுக்குத்தான் போகின்றன. வல்லரசுகளுடன் நாம் கட்சி செய்து கொள்ளாமல் தனித்து நிற்பதாக நம்முடைய யோசனை. அந்த யோசனைக்கும் இந்த இராணுவத்தளவாட இறக்குமதிக்கும் உள்ள முரண்பாட்டை பிரதமர் நேரு அவர்கள் கவனிக்க வேண்டும்.

—'கல்கி' 30—3—58

'எண்சாண் உடம்பிற்குத் தலையே பிரதானம்' என்பர். அத்தகைய முக்கியத்துவம் பெற்ற தலையில்தான் உள்ளது கேசம். மயிர் எனவும் அழைக்கலாம். பெண்களுடைய கேசத்தை, கூந்தல், குழல், அளகபாரம் என்பனபோன்ற பெயர்களில் வழங்கப் பெறும்.

வாளொத்த நீள் கூந்தலை; இல்லை, பின்னலைக் காணும் கவிஞன் கற்பனை உலகத்தில் சஞ்சாரம் செய்யத் தலைப்படுகிறான். "கருநாகம் போன்ற நீண்ட கூந்தல்," என்கிறான் இன்னொருவன் —சாதாரண அறிவு படைத்தவன் —பார்க்கிறான்; "எவ்வளவு அருமையான நீண்ட கூந்தல்" எனப் புகல்கிறான். இவன் இரசிக்கத் தெரிந்தவன்; ஆனால் விளக்கத் தெரியாதவன். "இதுபோன்ற மயிர் கிடைத்தால் நீண்ட ஒரு 'சவரி' கட்டலாம், அதனால் நாலணாக் காசு பெறலாம்" என்கிறான் ஒருவன். இதுபோன்று நீளமான கூந்தல் நமக்கு இல்லையே என, பொறாமையும் வருத்தமும் கொள்கிறாள் குட்டையான மயிர் உடைய ஒரு பெண்.

ஐவர்க்கும் பத்தினியாகிய திரௌபதியைப் பார்த்து அரவக்கொடியோன் துரியோதனன், நகைத்தானும். அதுகண்ட திரௌபதி மனங் கொதித்தவளாய்த் தன்னருங் கூந்தலை அவிழ்த்து விட்டு, "இந்தத் துரியோதனன் இறவா முனனம் - இல்லை, கொல்லப்படாமுன் யான் என் கூந்தலை முடியேன்" என்று வஞ்சினம் கூறினளாம். அப்படியே தன காதலன் வீமன் துரியோதனனைக் கொன்றபின் திரௌபதி கூந்தல் முடித்தனளாம். இது பாரதக் கதை.

இனி, பாண்டியன் அவையில் கூந்தலுக்கு இயற்கையில் மணம் உண்டா என்னும் வினவெழுந்தது. கூந்தலுக்கு இயற்கையில் மணம் உண்டு என்று தருமி என்பான் கூறினான். அவன் பாட்டின் பொருளில் தவறு கண்டு அவன் கூற்றை மறுத்தான் நக்கீரன். பிறகு சிவன் அவன்முன் தோன்றி ஒப்புக் கொள்ளுமாறு கேட்கவும், 'நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே' என்று மறுமொழி பகர்ந்தான் நக்கீரன். கூந்தலால் எழுப்பப்பட்ட விவாதம் தமிழ்ப் புலவன் ஒருவனின் நேர்மையையும் உள்ளத் திண்மையையும் படம் பிடித்துக் காட்டுவதாயிற்று.

பிசிராந்தையாரைப் பார்த்த அவருடைய நண்பர் ஒருவர், "உங்களுக்கு நரை தோன்றவில்லையே, காரணம் என்ன?" எனக் கேட்க, "யான் யாதொரு கவலையும் இன்றி மகிழ்வுடன் இருக்கிறேன். அதனாலே நரை தோன்றவில்லை" என்று பதில் கூறினார். ஆகவே கவலை மிகுதியால் வருந்தும் மனிதனைக் கண்டறியப் பயன்படுவதும் மயிரேயாகும்.

அதிகமாகச் சிந்திப்பவர்களுக்கு மயிர் குறைவு எனக் கேள்வி. அதிக பிள்ளைப்பேறெய்தும் தாய்மார்களுக்கும் தலைமயிர் உதிர்ந்து விடுகிறதாம்.

குடுமியைப் பிடித்துக்கொண்டு இருவர் சண்டை போட்டதாகச் செய்தி தாள்களில் படிக்கிறோம்; பிறர் சொல்லக் கேட்கிறோம்; அல்லது நேராகவே பார்க்கவும் செய்கிறோம். வேறெங்கு பிடித்தாலும் பிடிப்புத் தளர்ந்துவிடும். ஆனால் மயிரைப் பிடித்தால் தப்பிக்கவே முடியாது.

கூந்தலைப்பற்றி சபைக் கிழுத்துவந்த துச்சாதனனிடம் "கூந்தலை விடடா பாவி" என்று ஒப்பாரிவைத்தாள் உலகளந்த பெருமாளின் ஒப்பற்ற தங்கை.

'கார்குழலே! வார்குழலே! தார்குழலே!' என்று தன் மனதுக்கினியவளை விளிக்கின்றான் காதலன். கார்குழல்—மேகம்போன்ற கருமையான கூந்தல்; ஆனால் அவன் விளிப்பதோ கூந்தலையல்ல, கூந்தலையுடையவளை. அங்ஙனமாயின் கூந்தலுக்கு அவன் தரும் சிறப்பு எத்தன்மைத்து என்பது விளங்குமன்றோ.

கூந்தல்தான் பெண்களின் அழகுக்கு அழகு செய்வதாகும். என்னதான் அழகே வடிவெடுத்து வந்தவளாயிருப்பினும் தலையில் மயிர் இல்லையெனின் பார்ப்போர் வெறுக்கத்தான் செய்வர். அழகில்லாதவளும் கூந்தலால் ஆறுதலும் வனப்பும் பெறுவதுண்டு.

மயிரால் ஏற்படும் நன்மைகள் குறைவு. மாறாக, சில வேளைகளில் தீமைகள் ஏற்படுவதுண்டு. குறிப்பாக பெண்கள் ஆண்களிடையே, ஆபத்துக்களினின்றும், மறைந்து வாழ முடியாதவர்களாகிறார்கள். டாக்டர் மு. வ. வின் 'பாவை' ஆணுடை தரிக்கையில் தன் கூந்தலை அறுத்து விடுகிறாள்.

ஹென்றியின் சிறுகதையொன்றில், டெல்லா என்பவள் கிறிஸ்துமஸ் பண்டிகையின்போது தன் கணவனுக்குப் பரிசு கொடுக்க விரும்புகிறாள். கையில் ஒருடாலரும் எண்பத்தேழு செனட்களும் தான் இருக்கின்றன. ஆகவே தன் கணவன் வருமுன் கூந்தலைக் கத்தரித்து இருபது டாலர்களுக்கு விற்று ஒரு கடிகாரம் வாங்கி வருகிறாள். மயிரின் மதிப்பு அங்கே!

ஆனால் நம் நாட்டிலோ, மயிரையும் கொடுத்து அத்தோடு கட்டணமாகப் பணத்தையும் கொடுத்துவிட்டு வருகின்றனர் நம்மவர்.

மொத்தத்தில் நம்நாட்டில் ஒரு பழமொழி உண்டு: 'கட்டையைச் சுட்டால் கரியாகும்; மயிரைச் சுட்டால் கரியாகுமா?' என்பதே அது. என்றாலும் வெட்டத் துளிர்க்கும் தன்மையுடையது கூந்தல்.

—நெடுவேள்.

கேட்டீரா! சேதி!

"தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்கிறார்கள். இப்படி எதிர்க் கட்சியினர் கூச்சல் போடுகிறவரையிலும், இந்தச்சர்க்கார் பெயர் மாற்றம் செய்யப்போவதில்லை," என்று சிதம்பரத்தில் பேசிய நிதியமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். எதிர்க் கட்சிகள் கூச்சல் போடுகிற வரையிலும், சர்க்கார் செய்யாதாம்! தெரிவிக்கிறார் அமைச்சர்!! நல்லதைச் சொன்னாலும், அது எதிர்க் கட்சி சொல்லியது என்றால் அமைச்சர் ஏற்க மாட்டார்போலும்! இது நாள் வரை, இவர்கள் மறுக்கக் காரணம் வேறு ஏதாவது இருக்குமெனஎன எண்ணினோம் "அதெல்லாமில்லை-எதிர்க் கட்சி சொல்லி நாங்கள் கேட்பதா?", என்று தெளிவுபடுத்துகிறார் அமைச்சர். இந்த அழகில், எதிர்க் கட்சிகள் நல்லயோசனைகள் சொன்னால் தம் கட்சி தலை வணங்கி ஏற்கும் என்று சட்டசபையில் பேசவும் செய்கிறார்! உருவான யோசனைகளைச் சொல்வதில்லை என்றும் சாடுகிறார்!! எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளிலுள்ள நியாயங்களை மதித்து அவைகளை ஏற்பதுதான் ஜனநாயகம். ஆனால், தாயகத்துக்கு தமிழகம் என்று பெயர் வைக்க மக்களே கோருகின்றனர்! மதிமுக அமைச்சர், இப்படிக் காரணம் காட்டுகிறார்!!

*

மலேயாவில் உள்ள பேராக் மாகாணத்தில் இருக்கிற தஞ்சோங்மாலம் என்ற இடத்தில் கடந்த திங்கள் ஒரு ஒருநிகழ்ச்சி நடந்தது. புது சினிமா கொட்டகை ஒன்றின் பெயரை ஆங்கிலம்—சீனம்— மலாய் மொழிகளில் மட்டும் மின்சார விளக்குகள்மூலம் கொட்டகைமுதலாளிகள் எழுதி இருந்தார்களாம். தமிழ் மொழி இல்லை. இதனால், அங்கு வாழும் தமிழர்கள், தமிழிலும் பெயர் எழுதப்படும்வரை அந்தக் கொட்டகைக்குப்போகக் கூடாது என்று முடிவு எடுத்து அந்தக் கொட்டகையைப் புறக்கணிக்க ஆரம்பித்தார்கள். இதைக்கண்ட கொட்டகையாளர், தமிழர் தம் புறக்கணிப்பைக் கண்டு, கொட்டகையில் தமிழுக்கும் இடம் அளித்து தவறைத் திருத்திக் கொண்டிருக்கிறார்!!

*

மச்சாவதாரம் எடுத்தார் எங்கள் திருமால்!—என்று நமது புராணிகர்கள் புகழ்கிறார்களல்லவா இங்கே? மச்சாவதாரமோ, கூர்மாவதாரமோ எடுக்காமல் கடலுக்குள் நடந்து செல்லப் பாதை அமைத்துள்ளனர் ஜப்பானில்! கடலுக்குள் சுரங்கப் பாதை — அதுவும் 2½ மைல் தூரத்துக்கு அமைப்பதென்றால் நினைக்கவே ஆச்சரியமாயிருக்கும் நீருக்குள், ஒருபாதை அதன்மூலம், சாதாரண 'ரோடில்' போவது போல, சங்கடமில்லாமல் நடந்து செல்ல முடியுமாம். 21 ஆண்டுகள் அரும்பாடு பட்டு இந்தப்பாதையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள், ஜப்பானியர். இந்தப் பாதையில் இரண்டுமாடிவைத்த பஸ்கள் போய்வர முடியுமாம். நடந்து செல்வோருக்கென, தனிப்பாதையும் உண்டாம்!! இந்தப்பாதை அமைக்க 7½ கோடி ரூபாய் செலவாம். ஜப்பானியத் தீவுகளான ஆன்சூவையும் கியூஷுவையும் இப்பாதை இணைக்கிறதாம். கடந்த மார்ச் 9-ந்தேதி, இப்பாதையை ஜப்பானிய உதவிப் பிரதமர் திறந்து வைத்திருக்கிறார்.

*

ஜப்பானைப்போல, சுரங்கப் பாதையொன்று பிரிட்டனிலும் இருக்கிறது! உலகத்திலேயே, இந்த இரண்டு இடங்களிலும் தான் சுரங்கப்பாதைகள் இருக்கின்றன. பிரிட்டனிலுள்ள மெர்சே சுரங்கப் பாதையின் நீளம் 15,000 அடி. இந்தச் சுரங்கப் பாதை, தரையில் அமைக்கப்பட்டதாகும். தண்ணீருக்குள் சுரங்கப் பாதை அமைத்திருக்கும் சாதனையை உலகிலேயே சாதித்துக் காட்டியிருக்கும் நாடு ஜப்பான்தான்!!

*

கல்கத்தாவுக்குப்போய் இந்தி எதிர்ப்பு மாநாட்டில் கலந்துகொண்ட ஆச்சாரியார் தெரிவித்தாராம், "இந்தி உள்ளூர் வார்த்தையல்ல. இந்தியாவில் வாழ்ந்த நாகரீகமற்ற மக்கள் பேசிக்கொண்டிருந்த மொழிக்கு புராதன பாரசீகர்கள் வைத்த பெயர் அது", என்று. இந்திக்கு மட்டுமா, ஆச்சாரியாரெல்லாம் போற்றும் இந்து மதத்துக்குக் கூட இப்படித்தான் பெயர் வந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்!

★

முக்கிய அறிவிப்பு

காஞ்சிபுரத்தில், "திராவிட நாடு" அலுவலகத்திற்கு அருகாமையில் புதிய பெரிய தபால் நிலையம் (Post Office) ஏற்பட்டுவிட்டபடியால், கடிதம், மணியார்டர் முதலியன அனுப்பும்போது, ஏஜண்டுத் தோழர்களும் பிற அன்பர்களும் சின்னக் காஞ்சிபுரம் (Little Kancheepuram) என்று முகவரியில் குறிப்பிட்டு எழுதும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பொறுப்பாளர்,
"திராவிட நாடு"

2-ம் பக்கத் தொடர்ச்சி

முதன்முதலாக ஆங்கிலேயர்களே தெற்கையும் வடக்கையும் இணைத்தார்கள். ஆங்கிலேயர்களின் அடிமையாக நாடு இருளில் கிடந்தது. இந்த இருளில் ஒரு ஒளி என்னவென்றால் முதன் முதலாக அரசியல் அடிபபடையில் வடக்கும் தெற்கும் இணைந்ததே ஆகும். இதில் ஆங்கிலேயர்களின் சுயநன்மையும் உள்ளது. ஏனென்றால் நாடு முழுவதும் டில்லிக்கு அடிமையானால்தான் அவர்கள் தங்கள் ஆட்சியைத் திடப்படுத்த முடியும். ஆகவே தங்களது ஏகாதிபத்திய நோக்கத்தை நிறைவேற்றவே அவர்கள் இதற்கு முன் இல்லாத தெற்கு வடக்கு ஒற்றுமையை ஏற்படுத்தினார்கள். ஆனால் இந்த ஒற்றுமை வெறும் ஆட்சி முறையை அடிப்படையாகக் கொண்டதாகும். நல்லெண்ணமோ தேசிய மனப்பான்மையோ அல்ல. இவை அவர்களுடைய இலட்சியத்துக்கே உலைவைக்கக் கூடியவை. ஆதலால் அவர்களும் இதை இத்தேவையாகக் கருதவில்லை. ஆட்சியின் சௌகரியத்துக்காக வடக்கும் தெற்கும் இணைந்திருக்கட்டும், ஆனால் அவைகளுக்கு இடையே நல்லுறவு இல்லாமலும் இருக்கட்டும் என்றே அவர்கள் முயற்சி செய்தார்கள். சந்தர்ப்பங்களையும் சூழ்நிலைகளையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் திறமை அவர்களுக்கு இருந்தது. ஆகவே அவர்கள் இம்முயற்சியில் வெற்றி கண்டார்கள். நாம் ஆங்கிலேயர்களைக் குறை கூறுவதில் பயனில்லை. அவர்களுடைய தந்திரம் அது. ஆனால் ஆங்கிலேயர் சென்ற பின்னரும் நாம் நல்லுறவையோ அல்லது தேசிய ஒற்றுமை மனப்பான்மையையோ ஒரு அடி கூட வளர்க்கவில்லை என்பதுதான் வருந்தத்தக்க விஷயமாகும்!!

*

இந்திய அரசியல் சட்டத்தின் ஷரத்துப்படி 1965-முதல் ஆங்கிலத்தின் இடத்தை இந்தி கைப்பற்றிக்கொள்ளவேண்டும். தெற்கத்திய சிறந்த பெரும் புள்ளிகள் இந்தத் தேதியை ஒத்திப்போட வேண்டும் என்று குரல் எழுப்புகிறார்கள். காங்கிரஸ் கௌஹாத்தியில் இதை ஒப்புக்கொள்ளாவிட்டாலும் தென்னிந்தியரின் இந்த வேண்டுகோளின் எதிர்ப்பு குறைவதற்கு முயற்சி செய்துள்ளது. கௌஹாத்தித் தீர்மானம் நன்றாக இருந்தாலும் தென்னிந்தியர் திருப்தி அடைந்துவிட்டார்கள் என்று கூறமுடியாது. கருத்து வேற்றுமைக்கு வங்கமும் பாஞ்சாலமும் வலுக்கொடுத்திருக்கிறது. இந்தியைத் தேசிய மொழியாக்கவேண்டும் என்று கூறிய போது சியாமாப் பிரஸாத் முகர்ஜி மற்றும் இதர வங்காளிகள் எதிர்த்தபோதிலும், தீர்மானித்த பின் அவர்கள் திருப்தியாக இருந்துவிட்டார்கள். ஆனால் இப்போது அவர்கள் தென்னிந்தியர்களுடன் சேர்ந்துகொள்ளத் தலைப்பட்டுவிட்டனர். தாராசிங்கைத் தாக்கி ராஜாஜி பேசியுள்ளார் என்பது என்னவோ உண்மைதான். ஆனால் தாராசிங்கின் ஆங்கில ஆதரிப்புப் பேச்சுக்கள் இந்தி எதிர்ப்பாளர்களை ஊக்குவித்துள்ளன. தாராசிங் தன் கொள்கைகளுக்காக ஆங்கிலத்தை ஆதரிக்கிறார். ஆனால் அதனால் "ஏக இந்திய மனப்பான்மை"யை அவர் பலவீனப் படுத்துகிறார் என்ற உண்மையை அவர் யோசிக்கவில்லை.

*

மொழியின் இணைப்பு மிகக் கடுமையானது. நாடு முழுவதும் வடமொழி வழக்கில் இருந்த போது ஆட்சி வெவ்வேறாக இருப்பினும் தெற்கும் வடக்கும் நெருங்கியிருந்தன. மொழியின் பிணைப்பு தளர்ச்சியடையடைய வடக்குக்கும் தெற்குக்கும் வேற்றுமை வளர்ந்தது. ஆனால் மொழி என்ற பிணைப்பு இயற்கையானது. வலுக்கட்டாயமாக அந்த இணைப்பை ஏற்படுத்த முடியாது. அதற்குத் தகுந்த சூழ்நிலையை உண்டாக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட மொழியை மக்களாகவே முன்வந்து படிக்க வேண்டுமென்ற விருப்பம், தானே உண்டாகவேண்டுமேயல்லாது பலவந்தமாகச் சுமத்த ஆசைப்படுவது விவேகமல்ல. இதற்கான தேவைகள் பல்வேறுபட்டவை. வியாபாரம் சட்டமன்றங்கள், அரசியல், அரசாங்கம், மதம் அல்லது சமூக அமைப்பு இவைகளை அடிப்படையாகக் கொண்டவை. வியாபாரத்துக்காகவோ அல்லது அரசாங்கத் தேவைக்கோ ஒரு மொழியை மக்கள் படித்தால் அந்த மொழி பரவும், ஆனால் இது நிரந்தரமாக இராது. உதாரணமாக உருதுவை எடுத்துக்கொள்ளுங்கள். உருது அந்நிய நாட்டு மொழியல்ல. நம் நாட்டு மொழிதான். அது அரசாங்கமொழியாக இருந்ததால்தான் இது அதிகம் பரவிற்று. வழக்கு மன்றங்களில் உருது தெரியாமல் ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலை ஏற்பட்டது. மக்கள் அதன் தேவையை உணர்ந்து படித்தார்கள். ஆனால் அரசாங்க பீடத்திலிருந்து அது இறங்கவே மக்களும் அதைப் படிப்பதை நிறுத்திக்கொண்டார்கள். பஞ்சாப் மாகாணம் உருதுவின் கோட்டை என்று கருதப்படுகிறது. ஆனால் சென்ற பத்து ஆண்டுகளாகக் கல்வி பயிலும் மாணவர்களில் ஒருவருக்கும் உருது தெரியாது. கணக்கப்பிள்ளைகளின் வேலை நிறுத்தத்தைச் சமாளிக்க அரசாங்கம் புதிய கணக்கப்பிள்ளை (குமாஸ்தா)களைச் சேர்க்கத் தொடங்கிற்று. அவர்களில் உருது தெரிந்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. உருது தெரியாதவர்களைக் கொண்டே காரியத்தை நிகழ்த்த பஞ்சாப் அரசாங்கம் ஆரம்பித்தது. ஆகவே அரசாங்கத்தின் ஆதரவு இழந்த உருதுவும் மக்களைக் கவர முடியவில்லை. ஆகவே அரசாங்கம் ஒரு மொழியைப் பிரசாரம் செய்தால் அது அதிக நாள் நீடிக்காது. அரசாங்க ஆதரவு நின்றுவிட்டால் அது வலுவிழந்துவிடும். இப்படிப் பரப்பப்பட்ட ஒரு மொழியை "தேசிய இணைப்புக்குச் சாதனம் என்று கூறமுடியாது. மக்கள் தாங்களாகவே தேசிய சமுதாய உணர்ச்சியுடன் ஒரு மொழியைக் கற்றால்தான் அது பலனளிக்கும். "கடனுக்கு மாரடிக்கும் மக்களின்" மனதில் உண்மையான தேசிய உணர்ச்சி இராது. வயிற்றுப் பிழைப்புக்காக ஒரு மொழியைக் கற்பவர்களிடம் உள்ளன்பு இருக்க முடியாது!!

★

கட்சி அரசியலில் ஆள்வோர் தங்கள் கட்சிப்பலத்தை நிலைநிறுத்த அதிகாரங்களை உபயோகிப்பார்களே தவிர, நாட்டின் பொதுநலனில் அக்கரை கொள்ளமாட்டார்கள். ஆகவே, ஆளும் கட்சிக்கு எதிரான கட்சிகள் ஒன்று மாற்றி ஒன்று மக்களிடையே ஆக்கம் பெற்றுக்கொண்டிருக்கும்.

கோடித் துணி

—[மா. இளங்கோவன்]—

அவர்கள்—தந்தையும் மகனும் தங்கள் குடிசை வாசலருகில் நெருப்பின் முன்பு அமர்ந்து குளிர் காய்ந்துகொண்டிருந்தார்கள். அந்தப் பெண், மகனுடைய மனைவி, உள்ளே பிரசவ வேதனையால் புரண்டாள். இடைவெளி விட்டு விட்டுக் கேட்கும் அவளது அலறல்கள் அந்த இரண்டு ஆண்களின் இதயத் துடிப்பை ஒரு நிமிட நேரத்திற்கு தம்பிக்க செய்தது.

"அவள் பிழைக்கமாட்டாள் என்று தோன்றுகிறது. இன்று முழுவதும் நமக்கு ஒருவேலையும் கிடைக்கவில்லை. நீ உள்ளேபோய் அவளுக்கு எப்படி இருக்கிறதென்று பார்த்துவா!" என்றான் கிழவன், தன் தாடியை தடவிக்கொண்டே.

மகன் துக்கத்தோடு பதில் சொன்னான்:

"அதுதான் அவள் முடிவு என்றால், அவள் சாவதைத் தவிர வேறு வழியில்லையென்றால், எவ்வளவு விரைவில் மரணம் நேர்கிறதோ அவ்வளவு நல்லது. உள்ளேபோய் என்னத்தைப் பார்ப்பது?"

அது ஒரு ஏழைக் குடும்பம். சில மண்பாண்டங்களைத் தவிர அந்த வீட்டில் வேறு சாமான்கள் கிடையாது. கிழிந்த சில கந்தல்கள்தான் அவர்கள் நிர்வாணத்தை அரை குறையாக மறைத்தது.

யாருடைய வயலிலிருந்தோ தோண்டி எடுத்துவந்த கிழங்குகளை இருவரும் சுட்டுத்தின்று கொண்டிருந்தார்கள். கிழவனின் மனைவி வெகு காலத்திற்கு முன்பே மரித்துப்போனாள். மகன் போன ஆண்டுதான் திருமணம் செய்துகொண்டான். இந்தப் பெண் அங்கே வந்த பிறகு அந்தக் குடும்பத்தில் ஒரு அடுக்குப் பானையும் உறியும் உண்டாக்க தனிமையில் முயன்றாள். மற்றவர்களுக்குத் தானியம் குத்திக் கொடுத்தோ, புல்வெட்டி விற்றோ வயல்களில் களையெடுத்தோ தினமும் ஒருபிடி கருணை அரிசி சம்பாதிப்பாள். "அந்த நாணங்கெட்ட பிராணிகள்" அதைக்கொண்டு வயிற்றை நிரப்பிக்கொள்வார்கள். அந்தப் பெண்தான் இப்பொழுது பிரசவவேதனையால் சாகத் துடிக்கிறாள். ஒருவேளை, அவள் சாவதின்மூலம் அவர்களைப் பழிதீர்த்துக்கொள்ள முயல்வதாகவும் இருக்கலாம்!.........

கிழவன் தீயிலிருந்து ஒரு கிழங்கை எடுத்துத் தோலை உரித்துக்கொண்டே சொன்னான்:

> வறண்ட நிலத்தில் வளமை இல்லாததைப் போல மென்மையான உள்ளங்களை வறுமை எவ்வளவு கொடூரமாக மாற்றிவிடுகிறது........

"நீ ஒரு தடவை போய்ப் பார்; அவளுக்கு எப்படி இழுக்கிறதென்று தெரிந்துகொள். ஒருவேளை, அதிகமாகவும் இருக்கலாம்; இல்லாவிட்டால் இவ்வளவு ஏன்? வைத்தியரைக் கூட்டிடலாமென்றாலோ, ஒரு ரூபாய்க்குக் குறையாமல் அவனுக்குக் கொடுக்கவேண்டும்!"

தான் உள்ளேபோனால், கிழங்கு முழுவதையும் கிழவன் தின்று தீர்த்துவிடுவான் என்று மகன் பயந்தான்!!

*

நடுநிசியில் மகன் எழுந்து குடிசைக்குள் சென்று பார்த்தபோது, அவன் மனைவி இறந்து குளிர்ந்து கிடப்பதைக் கண்டான்! ஒளியற்ற கண்களின் பார்வை மங்கிப் போயிற்று. உடல் விறைத்திருந்தது.

மொட்டு மலர்வதற்கு முன்பே கருகிவிட்டது—குழந்தை தாயின் கர்ப்பத்திலேயே மாண்டது!

அவன் கிழவனருகே ஓடிவந்தான். இருவரும் உடனே உரக்க அழவும், மார்பிலடித்துக் கொள்ளவும் தொடங்கினார்கள். இந்த அலறலைக் கேட்ட பக்கத்து வீட்டுக்காரர்கள் ஓடிவந்தார்கள்; அவர்களைச் சமாதானப்படுத்த முயன்றார்கள்.

யாரோ ஒருத்தி ஒரு அகல் விளக்கைக் கொண்டுவந்து, அதுவரை இருளின் பூச்சு. திப்பித் திப்பியாக மண்டிக் கிடந்த அந்த அறையில், கும்மிருட்டின் குகையில் விறைத்து மாண்ட அவள் தலைக்கருகில் வைத்தாள்.

அழுது புரளவும், தேம்பிப் புலம்பவும் கூட அவர்களுக்கு அதிகநேரம் இருக்கவில்லை. கோடித் துணி, விறகு, வாய்க்கரிசி—இவைகள் சம்பாதித்தாக வேண்டும்! ஆனால், அவர்கள் கையில், பருந்துக் கூட்டத்திற் இடையில் சிக்கிய ஒரே ஒரு மாமிசத் துண்டுபோல எதுவுமில்லை!

தந்தையும் மகனும் அழுதுகொண்டே பண்ணையார் வீட்டை நோக்கி நடந்தார்கள். இந்த "நடை பிணங்களைப்" பார்ப்பதற்கே அவர் விரும்பவில்லை!

"ஏண்டா, என்ன? ஏன் அழுகிறீர்கள்?'

கிழவன் மூக்கின் முனை நிலத்தில் முட்டக் குனிந்து வணங்கினான். அவன் கண்களில் கண்ணீர் ததும்பி நின்றது:

"ஐயோ, எசமான்! நான் பெரிய ஆபத்தில் சிக்கிக்கொண்டேன். மருமகள் இராத்திரி இறந்து போனாள். இரவு முழுவதும் அவள் கொடிய வேதனை அனுபவித்தாள். கடைசியில்......என்னத்தை சொல்ல ஐயா, எங்களை ஏமாற்றிவிட்டுப் போய்விட்டாள். இனி எங்களைக் காப்பாற்ற யார்

இருக்கிறார்கள்? ஒருவேளை கஞ்சி ஊற்ற யார் முயல்வார்கள்? எங்கள் குடும்பம் நசித்தது; எல்லாம் போயின. எசமானே! நான் உங்கள் அடிமை. அவளுடைய அந்திமக்கிரியைகளைச் செய்வதற்கு எங்களுக்கு உதவ உங்களைத் தவிர யார் இருக்கிறார்கள்; உங்கள் மனம் இரங்கினால்தான், ஐயா, அவள் உடலைப் புதைக்க முடியும்! நாங்கள் இப்படிக் கெஞ்சிக் கேட்க உங்களைவிட எங்களுக்கு யார் இருக்கிறார்கள்?......"

பெரிய மனிதர் பேசவில்லை. கிழவனிடம் கருணை காட்டுவதில் எவ்வித பொருளும் இருப்பதாக அவருக்குத் தோன்றவில்லை. காய்த்துக் குலுங்கும் மரமல்லவே அவன்!

"போடா இங்கிருந்து, நாயே!"

"எசமான், எசமான், தருமம்!"

"போகிறாயா இல்லையா? போக்கற்றவர்களுக்கு இதென்ன தர்ம சத்திரமா?"

"சாமி! கருணை காட்டுங்கள்! சாமி...சாமி...!"

கடைசியில், அவர் இரண்டு ரூபாய்களை எடுத்து வீசினார். அவர் மனதில் பச்சாத்தாபம் சுரந்ததால் அல்ல; வீதியிலே வந்து நின்ற ஊர்க்காரர்கள்; அவர்கள் முன்னால் அவர் "தருமதுரை"யாயிற்றே!

கிழவன் மீண்டும் விழுந்து கும்பிட்டுவிட்டுத் திரும்பினான்.

பண்ணையார் இரண்டு ரூபாய்களை கொடுத்த பிறகு, அங்குள்ள வேறு பணக்காரர்கள் சும்மா இருக்க முடியுமா? ஒரு தர்மகர்த்தா — உண்மையிலேயே அவர் கோயில் தர்மகர்த்தா— ஓரணா கொடுத்தார்; மற்றொருவர் நாலணா; இன்னொருவர் இரண்டணா—இப்படி ஒரு மணி நேரத்திற்குள் சுமார் ஐந்து ரூபாய் வசூலாயிற்று. ஓரிடத்திலிருந்து கொஞ்சம் தானியமும், மற்றொரு இடத்திலிருந்து விறகும் கிடைத்தன.

நடுப்பகலுக்குப் பிறகு, கோடித் துணி வாங்கி வருவதற்காகக் கிழவனும் மகனும் நகரத்திற்குச் சென்றார்கள். மற்றவர்கள் பாடை கட்டுவதிலும், சில்லறை வேலைகளிலும் ஈடுபட்டார்கள். மென்மையான உள்ளம் படைத்த கிராமப் பெண்கள், மாண்டவளுடைய மிருதுவான தேகத்தைப் பார்த்துப் பார்த்து அவள் துரதிருஷ்டத்தை நினைத்து நினைத்து மாரடித்து அழுதார்கள்.

*

நகர வீதிகளை அடைந்தபோது, இருமருங்கிலும் நீண்டுவளர்ந்து நிற்கும் கடைகளையும் அவற்றில் அடுக்கி இருக்கும் விதவிதமான பொருட்களையும் கண்டு அவர்கள் வியந்தார்கள்.

அவள் உடலை எரிப்பதற்கு வேண்டிய விறகும், வாய்க்கரிசியும் இருக்கின்றன அல்லவா?" என்றான் கிழவன், எதையோ நினைத்துக்கொண்டு,

"உம்..., கோடித்துணி ஒன்றுதான் வாங்கவேண்டும்!" என்று பதில் வந்தது மகனிடமிருந்து.

அப்படியானால் வா. குறைந்த விலையில் ஒன்று வாங்கலாம்!"

இருவரும் சிறிது தூரம் நடந்தார்கள்.

மகன் முகத்தில், திடீரென்று மின்னல் வேகத்தில் ஏதோ மாறுதல்; அவன் தலையை அசைத்தான். மீண்டும் அதே சாயல். உதடுகளின் ஓரத்தில் தெளிவற்ற புன்னகைக் கீறல்......

"அப்பா, அது......இல்லாவிட்டால் என்ன?"

"எது?"

"கோடித் துணி! சவத்தைத் தூக்கும்போது இரவு வெகுநேரமாகிவிடும். அந்த இருட்டில், அந்த இரவில், கோடித்துணி எப்படி இருக்கிறது என்று யார் கூர்ந்து கவனிக்கப்போகிறார்கள்?"

"ஆனால், அது ஒரு ஆசாரம், மகனே; சடங்கு!"

"நல்ல ஆசாரம்; நல்ல சடங்கு! எவ்வளவு விசித்திரமாக இருக்கிறதென்று பார், அப்பா; உயிரோடு வாழ்ந்தபோது ஒருதுண்டு பழந் துணிகூடக் கிடைக்காமல் திண்டாடிய ஒருத்திக்கு, செத்த பிறகு கோடித்துணி போர்த்துகிறார்கள்! அதுவும் எதற்காக? வேகும்உடலோடு எரிந்து போக!"

"பின்னே அது எரியாமல் அவள் உடலிலேயே இருக்குமென்று நீ நினைத்தாய். அவ்வளவு ஏன், மகனே; இந்த ஐந்து ரூபாய்கள் உரிய நேரத்தில் நமக்குக் கிடைத்திருந்தால், ஒரு வைத்தியரை அழைத்து அவளுக்கு சிகிச்சைசெய்திருக்கலாம்; மருந்துகள் வாங்கிக் கொடுத்திருக்கலாம்; ஒருவேளை, அவள் பிழைத்திருக்கவும்கூடும்!"

"ஆனால். அப்பொழுது இந்த ஐந்து ரூபாய்கள் நமக்குக் கிடைத்திருக்காது!"

சிந்தனை, புழுக்களாக ஊர்ந்து மூளையைக் கொஞ்சம் கொஞ்சமாக அரித்துத் தின்ன, தந்தையும் மகனும் உயர்ந்த மாடமாளிகைகளுக்கு நடுவே நடந்தார்கள்; ஆங்காங்கே கண்களில் படும் துணிக் கடைகளில் ஏறி இறங்கினார்கள்; பலவகைத் துணிகளைப் பார்த்தார்கள். ஆனால், எதுவுமே அவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஆர்கண்டி சேலையோ, கோஹினூர் பட்டோ, கடாவ்வாயிலோ, காஞ்சிபுரம் புடவையோ அவர்களுக்கேன்? விலையும் துணியும் ஒத்து வரவில்லை.

*

அவர்கள், விழித்துக்கொண்டு நிற்பதைக் கண்ட ஒரு நகரத்தான் அருகில் வந்தான்! "என்ன தேடுகிறீர்கள்? ஒரு ரூபாய் கொடுத்தால் ஒரு புட்டி தரத் தயார்! அதோ, அந்த கூரைக் குடிசையின் பக்கம் வரவேண்டும். யாரிடமும் சொல்லக்கூடாது" கேட்காமலே, தூதுவிடுத்தான், அவன்!!

புட்டி ஒரு ரூபாய்!

"கள்ளா?" என்று கேட்டான், கிழவன்.

"சுழட்டி கள்ளைவிட போதையானது" என்றான் நகரத்தான். பிள்ளையும் அப்பனும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். எவ்வளவோ, நாளாயிற்று, கள்ளைப் பார்த்து! குடிசையில் இறந்துகிடக்கும் பெண்ணின் நினைவு, அறுந்தது. அவன் பின்னால், இருவரும போனார்கள்.

அவர்கள் குடித்தார்கள்; வறுத்த மீன் வாங்கித் தின்றார்கள்; வடையை வாங்கி உருசித்துத் சுவைத்தார்கள்; அதன் பிறகு அவர்கள் உணர்விழந்து உளறினார்கள்.

கிழவன்தான் முதலில் தொடங்கினான்:

"கோடித் துணி வாங்கி இருந்தால், எவ்வித பயனுமின்றி அது வீணில் கருகிச் சாம்பலாகி இருக்கும்; அது ஒருபோதும் என் மருமகள்கூட போகப்போவதில்லை!"

"ஆனால், இந்த மனிதர்கள்,

ஐயோ கடவுளே, அவர்களுக்கு என்ன பதில் சொல்லுவாய்; கோடித் துணி எங்கே என்று கேட்டால்...?"

கிழவன் சிரித்தான்,

சிங்கம் இரையை நகத்தால் குத்திக் கிழித்து விழுங்கும் ஆவலோடு. அவர்கள் அந்த மீன் துண்டுகளையும் வறுவலையும் வாயில் திணித்து மென்றார்கள். நாணக் குறைவைப் பற்றியோ, அவமானத்தைப் பற்றியோ அவர்கள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை; நாகரிக நாசுக்கை அவர்கள் அறிந்திருக்க வழியில்லை! இவற்றையெல்லாம் அவர்கள் கண்டு பல்லாண்டுகள் ஆயின— அவ்வளவுதான்!

ஒரு தத்துவ ஞானியைப்போல கிழவன் பேசினான்:

"நம் ஆத்மாக்கள் அவளை வாழ்த்துகின்றன; அவளுக்காக கடவுளிடம் வேண்டிக்கொள்கின்றன. அவை என்றென்றும் நன்றி பாராட்டும்!"

மகன் பேராசையோடு தலை குனிந்தவாறு சொன்னான்:

"நிச்சயமாக அவை அவளை ஆசீர்வதிக்கும்...! கடவுளே! தாங்கள் எல்லாம் அறிந்தவர்; உங்கள் கண்முன்பு ஒன்றும் மறைக்கப்படவில்லை! எங்கள் தேவனே! அவளை சுவர்க்கத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும், அப்பனே! நாங்கள் இருவரும் மனமுவந்து அவளை ஆசீர்வதிக்கிறோம்; எங்கள் ஆயுளில் தொட்டுமறியாத விதவிதமான ஆகாரம் திருப்தியாக, அவளால் எங்களுக்குக் கிடைத்தது!"

உலகத்தையே மறந்துகொண்டிருந்தார்கள், அவர்கள். ஐந்து ரூபாயை, பிணமான பிறகும் சம்பாதித்துக்கொடுத்த அவளைப் பற்றியகவனமில்லை இருவருக்கும். கவலைகள், பறந்துவிட்டன. ஏதோ, ஒரு கனவுலகில் மிதக்கலானார்கள் இருவரும். மகனின் மனம் அவளுடன் வாழ்ந்த நாட்களின்மீது ஓடியது. அந்த நினைப்பை, உடனே, சுழட்டி ஒரு உருட்டு உருட்டிவிட்டது. அங்கேயே, உருண்டு கிடந்தார்கள்! காலையின் வெய்யில் உடம்பில் உறைத்தது. கண் விழித்துப் பார்த்தபோது, எதற்காக நகரத்துக்கு வந்தோம் என்கிற ஞாபகம் வந்தது. இறந்து கிடக்கும் மருமகளும், அவளுக்காகக் கோடித் துணி வாங்க வந்ததும் நினைவுக்கு வந்தது.

எங்கே போவார்கள் பணத்துக்கு? கோடித்துணி வாங்காமல் போனால், சிரிப்பார்களே!" அப்பா! இப்படியே, நாம் எங்காவதுபோய் விட்டால் என்ன...," மகன் கேட்டான். தந்தை ஆமோதித்தான். அவர்கள் நடக்கலானார்கள். ஆருயிராள், குடிசையில் பிணமாகவே கிடந்தாள். யாரோ ஏற்றி வைத்த அகல் விளக்கும், எண்ணெயில்லாததால் அணைந்து போய்க் கிடந்தது.

❋

எம். ஜி. ஆர். திருப்பணி

அறிவு மணம் பரவுவதில், திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டிருக்கும் ஆவல் பெரிதென்பதை நாடு அறியும்! புதுயுகத்தில், வளர்ந்துவரும் புதுமைகள் பல! எனினும், அதன் சிறு ஒளிகூட நமக்குப் படாத அளவுக்கு அறியாமையும் பழைமையும் நமது நாட்டில் படர்ந்துகிடக்கிறது!!

இந்தப் பழைமையையும் அறியாமையையும் விரட்டியோட்ட வேண்டுமென்பதில், கருத்துவேற்றுமை இருக்க முடியாது. ஆனால், அந்தப் பணிக்கு, சமூகத்தின் தூண்களாக விளங்கும் பெரிய மனிதர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்க்கும் போது, வேதனை வெள்ளமாகும். வைரத்திலேமூக்குத்தி! வெள்ளியிலே பல்லக்கு! தங்கத்திலே உலக்கை! கனகாபிஷேகம்! ரத்னாபிஷேகம்! என்று கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழிப்போர் உண்டு. மாதா மாதம் வரும் திருப்பதி ஏழுமலையானின் வருமானக் கணக்கைப் பார்த்தால், திகைப்பு ஏற்படும்! இலட்ச ரூபாய்க்கு குறையாமல் ஒவ்வொரு மாதமும் உண்டியலில் கொண்டுபோய்ப் போடுகிறார்கள்!!

இப்படிச் செலுத்தும் பணத்தில், ஒரு பகுதியையாவது, அறிவுவளரும் நற்பணிக்கு செலவழிக்கிறார்களாவெனின், கிடையாது! தர்மம் செய்வது என்றாலே—கோயிலுக்குத் திருப்பணி செய்வது, சங்கராச்சாரியாருக்கு கனகாபிஷேகம் செய்வது, உண்டியலில் போடுவது — என்று பெரிய மனிதர்கள் எண்ணுகின்றனரே யன்றி, அந்தப் பணத்தைக் கொண்டு ஒரு சிலரது பசியைத் தீர்த்தால் என்ன? பல பள்ளிகளைக்கட்டி அறிவு மணம் ஓங்கச் செய்தால் என்ன? — என்கிற பெரிய குணம் வருவதில்லை.

பணம் சம்பாதித்து, அதைச் சேர்த்துவைத்துச் சிரமப்படுவதைப் பார்க்கினும், அதை நல்ல வழியில் செலவிடும்போது ஏற்படும் ஆனந்தம் மிகப்பெரிது — என்றொரு, ஆங்கிலப் பழமொழி உண்டு. அதைக் கவனமூட்டுபவர்போல, உழைப்பின் பலனை, நல்ல பல நற்பணிகளுக்காகச் செலவிட்டு வருகிறார், நடிகத் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், சக நடிகர்களிடம் நடப்பது பற்றியும், வறியோரைக் கண்டால் அவர் காட்டும் அன்பு குறித்தும், பலர் நம்மிடம் கூறுவதுண்டு. அன்பு காட்டும் இதயம் படைத்தவர், அவர்! அப்படிப்பட்டவர்கள் எப்போதும், நல்ல காரியத்துக்குத் தம்மை ஒப்படைக்கவே செய்வர்!! புரட்சி நடிகர் என மக்கள் போற்றவும், நல்லவர் என நண்பர்கள் வாழ்த்தவும், தோழர்களின் தோழர் எனக் கழகத்தவர் கனிக்கவுமான எம். ஜி. ஆர். அண்மையில், சென்னைத் தியாகராயர் கல்லூரிக்குத் தன் மூலமும் தனது ஒத்துழைப்பு மூலமும் 50,000 ரூபாய்களைத் திரட்டி அளித்தார் எனக் கேள்வியுற்றோம். மகிழ்ந்தோம், பணத்தைச் செலவழிக்கும் வகையினை அறிந்து, பணியாற்றும் அவர் குணம் கண்டு.

அவருடைய பண்பைப் பாராட்டும் வகையில் மேற்படி கல்லூரியினர் சில நாட்களுக்கு முன்பு, சட்டசபைத் தலைவர் கிருஷ்ணாராவின் தலைமையில் அண்ணாதுரையைக்கொண்டு. எம்.ஜி. ஆரின் படத்திறப்பு விழாவைச் செய்திருக்கின்றனர். கூத்தாடிகள்! நாடகமாடிகள்! — என்று ஏளனமாகப் பேசப்பட்ட நிலைமாறி, அவர்களது திருஉருவங்கள் கல்லூரிகளில் ஏறுகின்ற நிலை ஏற்பட்டுவருகிறது. பெரிதும் மகிழ்கிறோம்.

பணம் வருவது கடினம்! ஆனால் வருகின்ற பணத்தை வகையறிந்து செலவழிப்பது மிகமிகக் கடினம்!!— அதிலும் நடிப்புலகில், இது மிகமிகக் கடினம். இருந்தும், மனதை நல்ல காரியங்களுக்காகப் பயன்படுத்தி வரும் நன்மணிகள் அனைவரும், நம்மவர்களாக இருக்கிறார்கள் என்பதில் நமக்கு ஒரு பெருமை இருக்கிறது. இருக்கின்ற இடத்துக்கும், தனக்கும் பெருமை தேடித் தரும் புரட்சி நடிகர் வாழ்க! வளர்க, அவர் அறப்பணி!! ★

காஞ்சீபுரம், ஏ5, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர்

திராவிடநாடு

20—4—58 | வார வெளியீடு | விலை 10காசு

நீ பெற்றதுண்டோ?

(குறிக்கோளன்)

கருவண்டைப் பாராய்; காவில்
காற் றெடு கொஞ்சி யாடும்
நறுமலர் பாராய்; நிழலில்
நடம் பயில் மயிலைப் பாராய்
ஒரு வினை அவைகள் கேட்கும்
உலகத்தில் நாங்கள் வாழ்ந்து
பெறுகின்ற இன்பம், நீயும்
பெறுகின்றாயா தோழா?
அனைத்துமே பெற்று உள்ளாய்—
ஆண்டிடத் தலைவர்; இன்பம்
தனைத்தர மாடம்; மன்றம்
தமிழிசை இனிமைக்கலைகள்!
தினைத் துணை தீங்குமின்றிக்
காத்திடப் படைகள்! ஆனல்
நினைத்ததைச் செய்யும் உரிமை
நீ பெற்று உள்ளாய் கொல்லோ?

சட்டசபையில், இத்தடவை!

கோட்டையிலே கூடிய சென்னை சட்டசபை, கடுமையான வாதங்களுக்கும் வார்த்தை வீச்சுகளுக்கும் பிறகு, தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது! வெளியில் வெயில் தந்த சூட்டைப் போலவே, சபைக்குள்ளும் கடந்த நாற்பது நாட்களும் சூடும் வேகமும் சற்று அதிகமாகவே இருந்திருக்கிறது!!

'பலத்த மெஜாரிடி' கையிலிருக்கிறது என்கிற வழக்கமான தெம்பும், எதிர்க்கட்சிகள் எது சொன்னாலும் மறுக்கத்தான் வேண்டும் எனும் அரசியல் பண்பும், ஆளும் கட்சியிடம் இம்முறையும் கொடி கட்டிப் பறந்தது. அதனால், உள்ளத்திலிருந்து வந்த நல்லவைகளைக்கூட, அவர்களால் ஏற்க முடியவில்லை! ஏற்கும்படி, நாட்டின் நலனைக் கருதி, எதிர்க்கட்சிகள் வற்புறுத்தினாலும், வழக்கம் போல் வெற்றி அவர்களுக்குத்தான்! அவர்களிடம் இருப்பது 150 ஆயிற்றே!!

தி. மு. க. சார்பில் சட்டசபையில் இடம் பெற்றுள்ள 15 பேரும், தாம் சரியென இதயத்தில் ஏந்தியிருக்கும் கொள்கைகளை எடுத்துச் சொல்லத் தவறவில்லை. அதற்காக, எதையெடுத்தாலும் 'திராவிட நாடு திராவிடருக்கே,' என்று மட்டுமே சொல்லிக்கொண்டில்லை. நாட்டின் பிரச்னைகள் பற்றி, நல்யோசனைகளை வழங்கினர்! தொகுதி வாழ் மக்களின் குறைகளைச் சொல்லி, ஆள்வோரின் கவனத்தையும் கருத்தையும் ஈர்க்க முயன்றனர்! ஒவ்வொரு துறைக்கும், இவ்வளவு தொகை, மான்யமளிக்கவேண்டுமெனச் சர்க்கார் சார்பில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களின்போது வெட்டுப் பிரேரபணைகள் மூலமும், கருத்துரைகள் தருவதன் வழியாகவும் தத்தமது கண்டனங்களையும் கருத்துக்களையும் சொல்லினர். அவைகளுக்கெல்லாம் தக்க பதிலும், மக்களுக்குச் செய்யப்படும் நன்மைகளைப்பற்றிய சரியான தகவல்களையும் அளிக்கத்தான், ஒவ்வொரு அமைச்சரும் விவாதக் கடைசியில் பதிலளிக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கிறது! அந்த நல் சந்தர்ப்பத்தை, அமைச்சர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொண்டார்களா என்றால், ஏமாற்றமே, கிடைத்தது எல்லாம்!!

உள்ளம் நிரம்பி வழிந்தால், உதடுகள் உடனே கொட்டிவிடும்! காங்கிரஸ் பீடமேறியிருப்போருக்கு உள்ளத்தில் ஆத்திரம் தானே நிரம்பி வழிகிறது—அதனால்தான் போலும், சபையை நடத்திச் செல்லும் பொறுப்பிலுள்ள நிதியமைச்சர் அவர்கள், பாதையை விட்டுச் சென்றுகூட, சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் நம்மைப்பற்றியே பேசினார்—ஏசினார்!! சட்டியிலிருந்தால், அகப்பையில் தாராளமாக வரும். சட்டியில், தேவையான உணவுப் பொருள் இல்லாதபோது, என்ன வரும்? கேட்பவருக்குத் தக்க பதில் சொல்லாமல் தயங்க நேரும்! தக்க பதில் இல்லையாயினும் ஏதாவது ஒரு பதில் சொன்னால்தானே 'இருக்கிற இடத்துக்கு' அழகு. சுப்பிரமணியம் அவர்கள், 'இடத்தின் அழகை' எண்ணி, எதற்கும் பதிலளித்தாரே ஒழிய, தக்க பதில் தந்தாரில்லை! ஆரம்ப முதல், கடைசிவரை இந்த வழியையே பின்பற்றி, 'தப்பித்து'க் கொள்ள முயன்றார்!! சபையில் பேசும்போது, அடிக்கடி, இடைமறிப்பது கூடாது என்பது ஓர் விதி. இது, ஜனநாயகப் பண்பாட்டுக்கு ஏற்ற, நல்லதோர் விதியுங்கூட. எல்லோரும் பேசிய பிறகு, எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசிய பிறகு, கடைசியாகப் பதில் அளிக்கும் வாய்ப்பு, சபையின் ஆட்சிக்குழுத் தலைவர் என்பதால் அவருக்கு உண்டு. இடைமறிக்க மாட்டார்கள்! கடைசியில் நாம் என்ன சொன்னாலும் பதில் அளிக்கும் வாய்ப்பு அவர்களுக்கு இருக்கப் போவதில்லை!—எனும் துணிச்சலில், அன்பர் சுப்பிரமணியம், ஏதேதோ பேசினார். தான் சபையை விவாத அரங்கு ஆக்குமளவுக்கும் சென்றார்.

சுப்ரமணியம் ஏனையோரைப் போன்றவர் அல்ல! இளமைத் துடிப்பும், கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும் என்கிற அவாவும் உடையவராகத் தோன்றுகிறார். நல்ல ஜனநாயகவாதி, 'இடத்தின் அழகை' எண்ணி, ஏதேதோ பேசிடல்

(15-ம் பக்கம் பார்க்க)

முப்பது விபத்துக்கள்! ஓராண்டில் தானே?— என்று கேட்பீர்கள். அல்ல, அல்ல! நாள் ஒன்றுக்கு!!

நாள் ஒன்றுக்கு முப்பது விபத்துக்கள் ஓராண்டில் கிட்டத்தட்ட 10,000 விபத்துக்கள்!! ஏ, அப்பா! பதினாயிரம் விபத்துக்களா! ஒரு ஆண்டிலா!! எங்கே நடக்கிறது, எப்படி? மூன்று நூறுமைல் வேகத்தில் இரயில்கள் ஓடுவதாகக் கூறும் அமெரிக்காவிலா என்று கேட்பீர்கள்.

அல்ல தோழர்காள், வெள்ளையனை விரட்டிவிட்டு, வெற்றிப் புன்னகையுடன் உலகம் போற்ற அரசாள்கிறார்களே, இந்தக் காங்கிரஸ் காரர்கள்! இவர்களது ஆட்சியில் தான், நாள் ஒன்றுக்கு 30விபத்துக்கள் வீதம் நடைபெற்று வருகிறது!!

தினசரி ஏடுகளில் வரும் செய்திகளைக் கூட்டி நாம் போட்ட கணக்கல்ல, இது—சர்க்கார் சார்பில், பார்லிமெண்ட்டில் ஒருகேள்விக்குப் பதிலளிக்கப்பட்டிருக்கிறது. 1956—57-ம் ஆண்டில் மொத்தம் 9553 இரயில் விபத்துக்கள் நடைபெற்றிருக்கின்றனவாம்! ஒன்று, இரண்டல்ல, 9553 விபத்துக்கள்!!

விபத்துக்கள், திடீரென ஏற்படக் கூடும்! எதிர்பாராமல் நடைபெறும் இதற்கு யாரும் எதுவும் செய்யமுடியாதுதான். ஒன்று, இரண்டு என்றால் சரி. இப்படி, நாளைக்கு முப்பது விபத்து என்றால், என்னவென்று சொல்வது? பாலங்கள் உடைந்ததால் விபத்து—இரயிலும் இரயிலும் மோதி விபத்து—ரயில் பாதை மாறிப்போனதால் விபத்து-ஸ்டேஷன் மீது மோதி விபத்து—என்று இப்படி ஏராளமான விபத்துக்கள்! மயிர் கூச்செறியச் செய்யும் நாவல்களில் கூடக் காண முடியாது—அப்படி நடைபெற்று வருகின்றது!!

நாதியில்லையே!

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [20—4—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 40

நாடற்றோர்...! ஓரிருவரல்ல — ஓராயிரம் நூறாயிரம்கூட அல்ல—இலட்சக்கணக்கானோர்! மனித உள்ளம் படைத்திருக்கும் எவரையும், மானிட உரிமைகளைக் காத்திடும் திறமும், தூய எண்ணமும் கொண்டிருக்கின்ற யாரையும் திகைத்திடவைக்கிறது இத்தகு நிலை!

தங்கமும், தரளமும், தரணி போற்றரு மணிக்குவையும் — காடும் கழனியும் — கானாறும், அவற்றின் பிறப்பிடமாம் கவினுறு குன்றுகளும் மலைகளும் — இன்னபிற பன்னரு செல்வங்களைப் படைத்திருக்கும் நாடுதான் அவர்களது தாயகம்—தரித்திரம் தாண்டவமாடும் தரணியல்ல!

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல, நாட வளந்தரு நாடு" என்று அவர்களாலே வகுக்கப் பட்ட இலக்கணத்திற்குச் சிறந்ததோர் இலக்காய், விளங்கிடுகின்ற எழில்மிகு பூமி ஈன்றிட்ட புதல்வர்கள்தாம் அவர்கள்!

ஆனாலும், இன்று அவர்களுக்குத் தரப்படுகின்ற பெயர்—"நாடற்றோர்"!

நீலத் திரைக்கடலில் நாவாய் செலுத்தி, நாடுகள் பலவற்றைத் தமது கொடிக்கீழ் கொணர்ந்தனர் அவர்களது முந்தையோர் எனச் செப்புகிறது வரலாறு!

இமயம் வென்றான் — கடாரம் கொண்டான் — தலையாலங்கானத்தான் — கனக விசயரைக் கல் சுமக்க வைத்தோன்—இவை அவர்கள் தம் மூதாதையர் பெற்றிட்ட விருதுகளில் சிற்சில!

என்றாலும், அந்தப் பரம்பரையினைச் சார்ந்தோர்—இலட்சக்கணக்கானோர் "நாடற்றோர்" என்று அழைத்திடப்படும் நிலை!

அம்மவோ! எண்ணிடவே நெஞ்சம் குமுறுகிறது! "தமிழினமே! நீ ஏன் இத்தனை இன்னல்களுக்கும், ஏளனத்துக்கும் ஆளானாய் — பஃறுளியாறும் பன்மலையடுக்கமும் குமரிக் கோடும் கடலால் விழுங்கப்பட்டதாமே — அந்தக் கொடுங்கடல் மீதமிருக்கிற பகுதிகளை மட்டும் ஏன் விட்டுவைத்தது —அகல வாய் திறந்து அன்றே நம்மனைவரையும் விழுங்கியிருப்பின் இத்தகு சீர்கேட்டுக்கு நாம் ஆளாகியிருக்கவேண்டியதில்லையன்றோ" — என்று நெஞ்சம் குமுறுவோர் எண்ணிறந்தோர்!

கடற்கொள்ளைக்காரர்கள் என்று உலகம் முழுவதும் ... வில்லை! எங்கள் நாட்டவர் அவர் என்று மார்தட்டிக் கூறிடத் தயங்கவில்லை, அவர்களை ஈன்றெடுத்த இங்கிலாந்து!

யூதர்களுக்கென்று தாயகமெதுவுமில்லாமல், அவர்கள் பற்பல நாடுகளில் சிதறிக்கிடந்தனர் என்பதற்காக, அவர்களுக்கென பாலஸ்தீனத்தை ஒதுக்கித் தந்தது உலகம்!

ஆனால் தமிழன்...? தன் தாயகத்தில் பிழைத்திட வழியில்லாமல் கடல் கடந்தனன் என்ற ஒரே காரணத்துக்காக இன்று "நாடற்றோர்" என அழைக்கப்படுகின்றான்!

கடல் கடந்ததொன்றுதான் அவன் இழைத்திருக்கும் மகத்தான 'குற்றம்?'

அந்தக் 'குற்றத்'திற்காக, அவன், அரசியல் உரிமைகளும் மற்றும் பல அடிப்படை உரிமைகளும், மறுக்கப்படுகிறான்!

அவனது தாய்மொழியாம் தமிழுக்கு, அரியணையில், சிங்களத்தோடு சம இடம் தந்திட மறுக்கிறது, ஈழத்து அரசு!

எனவே, "மானம் அல்லது மரணம்" என்ற கீதத்தோடு போராட்டத்திலே குதித்திருக்கின்றனர் பல்லாயிரக் கணக்கானோர்!

மொழிப்பற்றும் இனப்பற்றும் கொண்டோரனைவரும், ஆழ்ந்த அனுதாபத்தோடும், அளவு கடந்த வேதனையோடும் பார்க்கிறார்கள், அந்த மாவீரர்கள் நடத்த இருக்கின்ற மகத்தான போராட்டத்தை!

இதற்குள்ளாகவே இரண்டு உயிர்கள் பலியிடப்பட்டுவிட்டன! ஏறக்குறைய 50 பேருக்கு மேல் சிறைக்கோட்டம் அடைந்திருக்கின்றனர்!

ஆனால் தமிழகத்து அரசு, இன்னமும் வாய் திறக்கவில்லை!

தம்மினத்திற்கு ஏற்பட்டிருக்கும் இழிவு தமக்கு ஏற்பட்ட இழிவெனக் கொண்டிடும் தகைமை, இனப்பற்று, இன்னமும் நமது அமைச்சர்களை, நண்ணிடக்கூட இல்லை!

இவர்களை ஆட்டிவைக்கின்ற "சூத்திரதாரி'யான டில்லி அரசும், இதுவரை வாய் திறக்கவில்லை!

"ஐயகோ! எட்டு இலட்சம் தமிழர் 'நாடற்றவர்கள்' என்று அழைக்கப்பட்டு, அவமானத்திற்கு ஆளாக்கப்பட்

பாராளுமன்றத்தில் பண்டிதரை நோக்கி, தமிழ்நாட்டு காங்கிரசுக்காரருக்கும் இனப்பற்றும் மொழிப்பற்றும் இருக்க முடியுமென்று அவ்வப்போது, காட்டிவரு கின்ற டாக்டர் சுப்பராயன், கேட்டிருக்கிறார்.

ஆனால் இன்னும், பண்டிதர் உருப்படியான, எந்தச் செயலிலும் இறங்கிடவில்லை.

மாறாக "இது அரசியல் பிரச்னையல்ல, மக்களினத்தின் பிரச்னை" என்று, சொற்களை வைத்து விளையாடியிருக்கிறார்.

அரசும், அரசியலும் மக்களுக்காகத்தான் என்பதும், மக்களில்லாமல் அரசு இல்லை என்பதும் அவரறியாதவையல்ல! ஆனால், சொற்சிலம்பம் ஆடுவதாலே, நம்மையெல்லாம், வாய்மூடி மௌனிகளாக்கிட முயலுகிறார்!

ஈழத்திலே தமிழர்படும் அவதி, அவமானம், பண்டிதருக்குப் புரியாததல்ல! மனித உரிமை மறுக்கப்படுவதென்பது, எவ்வளவு மாபெரும் கொடுமை என்பதுபற்றி, மிக நன்றாக அறிந்தவர், உணர்ந்தவர்!

ஆனால், என்ன காரணத்தாலோ, இன்னமும் தனது கவனத்தை அவர்கள்பால் திருப்பிட வில்லை! ஆதரவான சொற்களில்லை! ஆறுதல்மொழி பகன்றிட முன்வரவில்லை!

அனுராதபுரத்தை ஐந்தாவது முறையாகத் திறந்துவைத்திடும் 'பெருமையைத்'தேடி ஈழம் சென்றாரே தவிர, அவதியுறும் தமிழரின் துயர் துடைத்திடச் செல்லவில்லை!

சென்றார், அனுராதபுரத்தையும், புத்தர் கோயிலையும் பார்வையிட்டார்—திரும்பிவிட்டார்!

ஈழத்து முதலமைச்சர் இங்கே வந்தபோதும், எதையெதையோபற்றி அவரோடு விவாதம் நிகழ்த்தினார்—தாளுகின்ற நாட்டின் நிலை மறந்து, அது பூண்டிருக்கும் ஆண்டிக்கோலத்தினை மறந்து, "நீங்கள் ஐந்தாண்டுத் திட்டங்கள் தீட்டினால், எங்களாலான உதவியைச் செய்கிறோம்" என்றுகூட உறுதிமொழி தந்தார்! அப்போதும், ஈழத்திலே வாழ்கின்ற தமிழரின் நிலைகுறித்து வாய்திறந்திட வில்லை!

இந்த அளவுக்கு, பண்டிதரின் போக்கு அலட்சியமாக இருந்ததாலேதான், "தமிழர்கள் வாழும் பகுதிகளில் தமிழ் தான் ஆட்சிமொழியாக இருக்கும்" என்று சென்ற ஆண்டு வாக்குறுதி தந்த ஈழத்து முதல் அமைச்சர் பண்டாரநாயகர், அந்த வாக்குறுதியை 'வாபஸ்' பெற்றுக் கொண்டார்! தமிழுக்கு சமஇடம் தரமுடியாதென்று, திட்டவட்டமாகக் கூறிவிட்டார்! தமிழர்களுக்கு அரசியலுரிமையும், மக்களுரிமை வழங்குவதையும்தான் விரும்பவில்லை என்று வெளிப்படையாகவே கூறுகின்றார்.

பண்டித நேருவுக்கு அகில உலக அரங்கில், சிறப்பாக ஆசிய நாடுகளிடையே இருக்கின்ற புகழையும் செல்வாக்கையும், பேசாத நாடில்லை!

அண்மையிலேகூட நியூயார்க் டைம்ஸ் என்ற இதழ், "ஆசியாவில் நேருவுக்கு இருக்கிற புகழ் சாதாரணமானதல்ல" என்று தீட்டியிருக்கிறது.

அணு ஆயுதங்களைக் கண்டிப்பதில் அவர் காட்டுகின்ற உணர்ச்சியில் — அல்ஜீரிய நாட்டு விடுதலை இயக்கத்தின்மீது காட்டுகின்ற அனுதாபத்தில்—அமெரிக்காவிலும், ஆப்பிரிக்காவிலும், நீக்ரோக்கள் படும் அவதியைப் போக்குவதில் அவர் கொண்டிருக்கும் ஆர்வத்தில்—காஷ்மீரத்தை பாரதத்தோடு இணைப்பதற்கு அவராலே வெளியிடப்படும் அக்கறையில் — பாகிஸ்தானத்திலிருந்து பாரதத்திற்கு வந்து குடியேறியிருக்கின்ற 'அகதியற்றோர்'பால் அவர் பொழிகின்ற அன்பில்—பத்திலொரு பங்கு, ஈழத்துத் தமிழர் பிரச்சினையிலே காட்டியிருந்தால், இத்தகு இழிநிலை இன்று எப்படி வந்திருக்கும்?

இலங்கைத் தமிழருக்கு உரிமைகள் வாங்கித் தரும் பணியிலே மட்டுமே, பண்டிதரும் அவர்தம் அரசும் அக்கறை காட்டவில்லை என்பதல்ல!

உரிமையற்ற வாழ்வு எமக்குத் தேவையில்லை என்று, தாயகம் திரும்புகின்ற தமிழரின் நல்வாழ்வுக்கு வழிகோலும் முயற்சியிலும், டில்லி அரசு ஈடுபடவில்லை!

பாகிஸ்தானத்திலிருந்து வருகிற வடநாட்டு அகதிகள் பிரச்னை 'தேசியப் பிரச்னை' என்று பேசுகின்ற வாய்கள், தமிழினத்தின் பிரச்னையைப் பற்றிப் பேசிட இன்னமும் முன்வரவில்லை.

பாகிஸ்தானத்திலிருந்து இந்தியாவில் குடியேறியிருக்கிற மக்கள் தொகை 90 இலட்சமாம்! அவர்களின் நல்வாழ்வுக்கெனச் செலவிடப்படும் தொகை 300 கோடிக்கு மேலிருக்குமாம்!

இவ்வளவும் போதாதென்று மத்திய இந்தியாவிலுள்ள தண்டகாரணியம் என்ற பகுதியில் அவர்களுக்குப் புகலிடம் தரப்பட்டு, சீரமைப்புக்காகப் பல இலட்சங்கள் செலவிடப்படுகின்றன!

"அந்த இடத்தில் குடியேறமாட்டேம்" என்று மேற்கு வங்கத்திலே உள்ள அகதிகள் மாபெரும் போராட்டமே நடத்துகிறார்கள். 500 பேருக்குமேல் சிறை சென்றுமிருக்கிறார்கள்!

ஆனால் தண்டகாரண்யத்தில் அவர்களைக் குடியேற்றி வாழ வைத்திடும் நோக்கத்தோடு செலவிடப்படும் பணம், பல இலட்சங்கள்!

வட நாட்டு அகதிகளுக்கு 300 கோடிக்கு மேல், செலவிட்ட டில்லியரசு, ஈழத்திலேயிருந்து மீளுகின்ற தமிழர்களின் வாழ்வைச் சீர்படுத்துவதற்கு, எந்தமுயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை.

அதனால், இலங்கையிலும் வாழ விரும்பாமல், இங்குவந்தாலும் வாழ வகையில்லாமல் 'அந்தரத்திலே' தவிக்கின்ற தமிழர் தொகை ஏராளம்!

இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கென, இருக்கின்ற வழிகள் இரண்டு: ஒன்று இலங்கை அரசிடம் வாதாடி, தமிழர்களுக்கு உரிமைகளை வாங்கித் தருவது. இரண்டு, அங்கே வாழ விரும்பாமல் தாயகம் திரும்பிடுவோரின் வாழ்வினைச் சீர்படுத்தும் வழிவகைகளைக் காணுவது!

இந்த இரண்டிலுமே, பண்டித நேருவும், அவர்தம் அரசும் ஈடுபடவில்லை என்று எண்ணிடும் போது தமிழர் உள்ளம் கொதிக்கின்றது.

"ஆட்சி நம் கரத்தில் இருந்தால்......?" என்ற கேள்வி தன்மானம் கொண்டோர் அனைவருடைய உள்ளங்களிலும் கொழுந்துவிட்டெரிகிறது!

'நில்லு திருடா!'

வி. ஆர். துரை

இரண்டாம் ஜேம்ஸ் இங்கிலாந்தின் மன்னராக இருந்த காலத்தில் அவர் கொஞ்சம் மண்டைக் கனம் படைத்தவராகவே இருந்தார். மக்கள் குரலுக்குச் செவி சாய்க்க அவர் மறுத்தார். மன்னனுக்காகத்தான் மக்கள்' என்ற ஆபத்தான பாதையிலே, ஜேம்ஸ் நடைபோட்டார். இதனால் இங்கிலாந்து மக்களின் மொத்த வெறுப்பினைச் சம்பாதித்துக்கொண்டார்.

மன்னன் மீது மிக்க வெறுப்புக் கொண்ட மக்கள், ஹாலண்டின் சிற்றரசரான ஆரஞ்ச் வில்லியத்தை அழைத்தார்கள். தமது நாட்டு மன்னனை விரட்ட, அயல் நாட்டு மன்னரை அழைத்தார்கள். இரண்டாம் ஜேம்ஸின் திருமகள் மேரியை, திருமணம் செய்து கொண்டிருந்த வில்லியம், விருப்பத்தோடு விடுத்த இங்கிலாந்து மக்களின் அழைப்பினை ஏற்றுக் கொண்டார். 'ஒரு படையுடன் மதத்தையும், இங்கிலாந்தின் அரசியல் உரிமைகளையும் காத்தருள வரவேண்டும்' என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒரு பெரும்படை திரட்டினார். முப்பத்தையாயிரம் போர் வீரர்களை, தகுந்த முஸ்தீபுடன் கொண்ட அப்படையுடன், வில்லியம் இங்கிலாந்திற்குள் நுழைந்தார்.

மருமகனின் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாத மாமனாராகிய ஜேம்ஸ், நள்ளிரவில் நாட்டை விட்டுக் கள்ளத்தனமாக கப்பலேறி, பிரான்ஸ் நோக்கி ஓடினார்; பாரிஸ் நகரத்தைச் சென்றடைந்தார். அங்கே அவர் நண்பர் [illegible] செய்தார், சாங்ழர் மாங் என்னும் அரண்மனையை இருப்பிடமாகக் கொடுத்து, ஆண்டு தோறும் நாற்பதாயிரம் பவுன் வருவாயும் ஏற்பாடு செய்தார்.

தம் விருப்பம் போலவே இங்கிலாந்தின் அரச பதவியை மிகச் சுலபமாக வில்லியம் அடைந்தார். இங்கிலாந்தின் ஆட்சிச் சக்கரம், வில்லியத்தின் கையில் சுழன்று கொண்டிருந்த நேரத்தில், வீரன் மார்ல்பரோ சில சில்லரை இராணுவ அதிகாரங்களை அயர்லண்டிலும், நெதர்லண்ட்ஸிலும் வகித்திருந்தார். அப்பொழுதே வில்லியத்திற்கு, தளபதிக்குரிய திறமைகள் மார்ல்பரோவிடம் இருப்பது புலப்பட்டது. ஆனாலும் அவர் உண்மையான பற்றுதலுடன், நடந்துகொள்வாரா என்று வில்லியம் சந்தேகப்பட்டார். அவ்வாறு அரசர் சந்தேகப்படும்படி, பல சந்தர்ப்பங்களில் மார்ல்பரோ நடந்துகொண்டார். இது மார்ல்பரோவின் முன்னேற்றத்திற்கு ஒரு பெரும் முட்டுக்கட்டையாக அமைந்தது.

தமக்கு மார்ல்பரோ துரோகம் இழைக்கக் கூடும் என்று வில்லியம் கருதினார். அதனால், தளபதிக்குரிய திறமைகள் மார்ல்பரோவிடம் இருப்பதைக் கண்டும், அரசர் காணாதவர்போல் இருந்து விட்டார்.

ஒரு சமயம் நுரையீரல் சம்பந்தமான நோயொன்றால், வில்லியம் பீடிக்கப்பட்டு, உடல் நலம் கெட்டு இறக்கும் தருவாயில் இருந்தார். அப்போது அவர் தம் எண்ணங்களை இனிது நிறைவேற்றி வைக்க வல்லவர் மார்ல்பரோஒருவர்தான் என்பதை உணர்ந்தார். கூட்டுறவுப் படைகளின் தலைமையை மார்ல்பரோவுக்குக் கொடுக்க வேண்டும் என்று சிபார்சு செய்தார்.

ஒரு நாள் குதிரை மீது சென்று கொண்டிருந்த வில்லியம் தவறி விழுந்து, தோளெலும்பொன்றை உடைத்துக்கொண்டு மாண்டார். வில்லியத்தின் அன்பு மனைவியாம் மேரி அரசியின் தங்கை ஆன் (Anne) பட்டம் வகித்தவுடன், வில்லியத்தின் சிபார்சை ஆமோதித்தாள். சில சில்லறை இராணுவ அதிகாரங்களை வகித்துக் கொண்டிருந்த, மார்ல்பரோ ஆன் அரசியின் தயவால் தளபதி ஆக்கப்பட்டார்.

ஆன்—இரண்டாம் ஜேம்ஸின் இரண்டாவது மகள், தன் தந்தையின் கஷ்ட காலத்தில் தனியே தவிக்கவிட்டு ஓடியவள். அப்போது மார்ல்பரோ தம்பதிகளின் ஆதரவில் இருந்தவள். நல்ல அழகியான இவள் மிகவும் சாந்தமானவள். எதுவும் மிகச் சுலபமாகவே நடந்துவிட வேண்டும் என்று எதிர்பார்ப்பவள். இவளுக்கும் லேடி மார்ல் பரோவுக்கும் நெடுங்காலமாகவே நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது.

லேடி மார்ல்பரோ — இவள் திறமை மிக்க மார்ல்பரோவுக்கு வாய்த்த நல்ல மனைவி. ஆபர

றாம் லிங்கனுக்கு வாய்த்த மனைவியைப் போன்றவள் அல்ல; கணவனைப் போலவே மிகுந்த சாமர்த்தியம் கொண்டவள்; பேராவல் கொண்டவள். சுறுசுறுப்பும் சாமர்த்தியமும் கொண்ட ஒரு தோழியான இவள், ஆன் அரசியை இலகுவில், தன் வழிப் படுத்திக்கொண்டாள்.

மார்ல்பரோ — இங்கிலாந்தின் சரித்திரத்திலே பெரும்புகழ் பெற்றவர்களுள் ஒருவர். நல்ல உயரமும் வனப்பும் அமைந்தவர். எவரையும் மகிழ்விக்கும் மனப்பான்மையுடன் நடந்துகொண்டார். இவருடன் பழக நேர்ந்த அனைவரும் இவரைப் பெரிதும் விரும்பினர். அளவற்ற செல்வமும் செல்வாக்கும் பேரும் புகழும் பெறவேண்டும் என்பது அவரது மனப்போக்கின் ஆழ்ந்த எண்ணமாக இருந்தது.

தமக்கு ஒரு சிறந்த தருணம் எப்பொழுது வாய்க்கும் என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார். ஆன் இளவரசியின் காலத்தில் அவர் கனவு நனவாகியது. மார்ல்பரோவின் பெருமை விளங்குவதற்கான பெருந்தருணம் வாய்த்தது.

அவ்வமயம் அவருக்கு முன்னால், சிக்கலும், கஷ்டமுமான வேலை நிரம்ப இருந்தது. அவிழ்ந்த நெல்லிக்காய் மூட்டைபோல், சிதறிக்கிடந்த பல இராச்சியங்களை ஒன்றாகச் சேர்த்தார். இந்த விஷயத்தில் வில்லியத்தை விடச் சாமர்த்தியமாக நடந்துகொண்டார். படைகளோ பணமோ கொடுக்காமலேயே, பெருத்த இலாபம் அடையவேண்டும் என்று இருந்தவர்களிடம், தமது சாமர்த்தியம் ஒன்றையே பயன்படுத்தி வெற்றிகண்டார். தாம் கூட்டுறவின் அங்கத்தினரோடு விவாதிக்கவேண்டிய நேரத்தில் பொறுமைக்குப் பெருமை அளித்தார். தெம்பை இழந்துவிடாமல் பார்த்துக்கொண்டார்.

சிறந்த தைரியமும் உயர்ந்த கற்பனு சக்தியும் கொண்ட இவர் பெரிய போர்த்திட்டங்களை வகுத்தார். எப்போது எவ்விடத்தில் தாக்குவதென்று தீர்மானிப்பதில் பிழையற்ற தெளிவு, துணிச்சல் இவரிடம் துலங்கின. போர் முனையில் சக்திமிக்க தளபதிகளுள் ஒருவராகத் திகழ்ந்தார். போரிலே துணிச்சலும் தைரியமும் இல்லாமல், பெருவெற்றி கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது பேதைமையல்லவா?

எதிரிகளால் ஏற்பட்ட இடைஞ்சல்களை எல்லாம், தைரியமாக மார்ல்பரோ சமாளித்து வெற்றி கண்டார். 1702-ம் ஆண்டின் கோடையில் படைத்தலைமை வகித்து நெதர்லண்ட்சுக்குச் சென்றார். அப்போது டச்சு எல்லைக்குள், பிரெஞ்சுப் படைகள் நுழைந்து விட்டிருந்தன. வெகு சாமர்த்தியமாக மார்ல்பரோ, தம் படைகளை அங்கும் இங்கும் நடாத்திச் சென்று போரிட்டார். எதிரிகளின் எலும்பொடித்தார்; முறியடித்தார். பிரெஞ்சுப் படைகள் டச்சு எல்லைக்கு அப்பால் ஓடிப்போகும்படி செய்துவிட்டார். இலையுதிர் காலத்தில் மார்ல்பரோ இங்கிலாந்திற்குத் திரும்பினார். ஆன் இராணி அகமகிழ்ந்து அவருக்கு ட்யூக் பட்டமளித்துக் கௌரவித்தாள்.

போர்முனைப் பிரதிநிதிகள் என்று ஒரு குழு இருந்தது. அந்த டச்சுக் குழுவினரின் அனுமதியின்றி, மார்ல்பரோ எதையும் செய்தல் என்பது இயலாது. இவர்கள் போர்ப் பழக்கமே இல்லாத துரைத்தனக் காரியாலய உத்தியோகஸ்தர்கள். தங்களின் படைகளுக்குச் சேதம் விளைவிக்கக்கூடாதென்பதே இவர்களின் முக்கிய கவலையாக இருந்தது. பிரெஞ்சுப் படைகள் நிலைத்திருந்த இடங்களை எதிர்க்க, மார்ல்பரோவை இந்தக் கோழைகள் விடவே இல்லை. இடைஞ்சல்கள் சங்கடமாக மார்ல்பரோவுக்கு இருந்தது.

*

பேரரசின் தலைநகராம் வியன்னு நகரத்தைத் தாக்க, ஓரயி ஒரு பெருஞ் சேனை திரட்டினர். கூட்டுறவுப் படைகளின் பெரும் பாகத்தை நடு யூரோப்புக்கு அழைத்துச் சென்று வியன்னுவைக் காக்க மார்ல்பரோ திட்டமிட்டார். இங்கிலாந்து ஹாலண்ட் துரைத்தனத்தார் பெரிதும் பயந்தார்கள். மார்ல்பரோவுக்கு அநுமதி அளிக்கவும் மறுத்தார்கள்.

இந்தக் கட்டத்தில் மார்ல்பரோ துணிச்சலான செயல் புரியத் தீர்மானித்தார். அனுமதி தராத அதிகாரிகளை ஏமாற்றினர். அப்படிச் செய்வதைத் தவிர அப்போது வேறு வழி இல்லை. தளபதி பதவியிலிருந்து நீக்கினாலும் கவலை இல்லை என்று கட்டளையை மீறினர்.

ஒரு பெருஞ் சேனையைத் திரட்டிக்கொண்டு, மார்ல்பரோ மொசேல் ஆற்றுப்பக்கம்போனர். அவ்வாற்றங்கரையில் நிற்காமல், ரைன் ஆற்றை அடைந்தார். அவர் செய்யப்போவதை, எவரும் உணர்வதன் முன் மைன்ட்ஸ் பட்டணத்துக்கு வந்துவிட்டார். அங்கிருந்து கிழக்கு நோக்கிச் சென்று பவேரியாவுக்குள் நுழைந்தார். கண்டோர் வியப்புறும் வண்ணம் திடுமெனத் தாக்கி தோனெள ஊர்க் கோட்டையை பிடித்துக் கொண்டார். இங்கே தம் நிலைமை பலப்படுத்திக் கொண்டார். யூகேன் சிற்றரசரின் படைகளுடன் சேர்ந்துகொண்டார். ப்ளென்ஹிம் ஊருக்கு அருகில், மார்ஷெல் டலார்ட் தலைமையின் கீழிருந்த, பிரெஞ்சு பவேரிய சேனைகளோடு கைகலந்தார். அங்கு ஒரு பெரும் போராட்டம் 1704-ம் ஆண்டில் நடந்தது.

டான்யூப் ஆற்றங்கரையில் நடந்த இந்தப் பெரும் போரில், இருபத்தையாயிரம் வீரர்களை எதிரிகள் பலி கொடுத்தார்கள். படுதோல்வி அடைந்தார்கள். மார்ல்பரோ பிரெஞ்சுத் தளபதியையே கைது செய்தார். இந்தப் பெருமைமிக்க வெற்றியின் பயனாய் வியன்னு தப்பியது; அஞ்சி [illegible]

சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாடு

26, 27—4—1958 ஆகிய நாட்களில் நடைபெறுமென்று அறிவிக்கப்பெற்ற மாநாடு, மேத் திங்கள் 3, 4-ஆம் நாட்களில் நடைபெறுமென்பதை அறிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம்,
வரவேற்புக்குழுவினர்.

அலுவலகம்: கலைக்கதிர் அகம்,
6/256-டி. அவனுசிச் சாலை,
கோயமுத்தூர்.

ரியா விலகிக்கொண்டது, பிரெஞ்சுப்படைகள் மூச்சுவிடாமல் ஜெர்மனியிலிருந்து பின்வாங்கின. பிரெஞ்சுக்காரர்கள் பெரும் கிலி கொண்டார்கள்.

தாம் போரில் கைப்பற்றிய நூற்றுக்கணக்கான படைக் கொடிகள் முன்செல்ல, ஊர்வலக் கோலத்துடன் மார்ல்பரோ இலண்டனுக்குள் நுழைந்தார். முதல்முறையைவிட, இந்த இரண்டாவது முறை வரவேற்புப் பிரமாண்டமாய் இருந்தது. நாடே ஆனந்த வெள்ளத்தில் மூழ்கியது. நாடு முழுமையும் வெற்றியைக் களியாட்டத்துடன் கொண்டாடினர்கள். வெற்றி வீரரைப் பலவகையாகப் போற்றிப் புகழ்ந்தார்கள். அவருக்கு ஒரு பெருநிதியைப் பார்லிமெண்ட் நல்கியது. உட்ஸ்டாக் என்னும் பெரிய சொத்தை சன்மானமாக வழங்கியது. அத்துடன் இரண்டரை இலட்சம் பவுன் செலவில் ஒரு மாளிகையும் கட்டித் தந்தது. தாம் பெற்ற மகத்தான வெற்றிக்கு ஏற்ற வெகுமானத்தை மார்ல்பரோ அடைந்தார்; ஆனந்தம் கொண்டார்.

மார்ல்பரோ என்ருல் பிரெஞ்சுப் படைகள் பெரும் பீதி கொண்டன. தளபதி வில்லராய் முதற்கொண்டு சாதாரண பறையடிக்கும் ஆள் ஈருக மார்ல்பரோ என்ருல் அஞ்சினர்கள், பிரெஞ்சுக்காரர் மனதில், இவ்வளவு கலக்கத்தை, இவருக்கு முன்னும் பின்னும் ஒரு ஆங்கிலேயத் தளபதி, உண்டாக்கியதில்லை என்று கூறுகின்ருர்கள். அவர் புகழேணியின் உச்சியிலே நின்ருர். யுத்தத்தை நடத்தியதோடுநில்லாமல் துரைத்தனத்தையும் நடத்தலானர். தமது தோழியின் பெருமை மிக்க கணவராகிய இவருக்கு, ஆன் அரசி எதையும் மறுக்கவில்லை.

இதுவரையில் மார்ல்பரோவின் பக்கம் இருந்த அதிர்ஷ்டம், இனியும் அவரை ஆதரிக்க விரும்பவில்லை. அந்த வெற்றி வீரரைக் கைவிடலாயிற்று. டோரி கட்சியினர் அவரது வெற்றிகளை இழிவுபடுத்திக் கூறினர்கள். ஒரு பெரும் மாறுதல் இங்கிலாந்தின் அரசியல் நிலையில் தோன்றலாயிற்று. போர் என்ருல் நாட்டு மக்கள் சலிப்படைந்தார்கள். வருடத் [illegible] அதிகமாவதை மக்கள் வெறுத்தார்கள். இந்த சமயத்தில் இராணியும் அப்படியே நினைத்தாள்.

மார்ல்பரோ டச்சஸின் அட்டகாசங்களைக் கண்ட இராணிக்கு, அவள்பால் மனக்கசப்பு உண்டாயிற்று. டோரி தலைவர்கள் இந்தச் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டார்கள். தங்கள் கட்சியைச் சேர்ந்த லேடிமாஷாம் என்பவளை, இராணியின் அந்தரங்கத் தோழியாக்கச் சூழ்ச்சி செய்தார்கள். சூழ்ச்சியில் வெற்றியும் கண்டார்கள். அரசியிடம் பெற்றிருந்த தனிப் பெரும் செல்வாக்கை மார்ல்பரோ டச்சஸ் இழந்தாள்.

இந்த இக்கட்டான நேரத்தில், தாமாகவே மக்கள் நம்பாத வழியை மார்ல்பரோ தேடிக் கொண்டார். என் ஆயுள் வரையில் 'காப்டன் ஜெனரல்' என்னும் பட்டத்துடன், இராச்சியத்தின் இராணுவ அதிகாரியாக இருக்கவேண்டும் என்று அவர் கூறினர். கட்டற்ற இராணுவ சர்வாதிகாரியாக மாறிவிடுவார் என்று நாட்டு மக்கள் அஞ்சினர்கள். அவரை ஆதரிக்கவும் மறுத்தார்கள். மார்ல்பரோவின் வீழ்ச்சிப் படலம் வெற்றிகரமாக ஆரம்பித்துவிட்டது என்றுதான் இதைக் குறிப்பிட வேண்டும்.

நெதர்லண்ட்ஸில் மார்ல்பரோ போரில் ஈடுபட்டிருந்தார். டோரி அமைச்சர்கள், போரை நடத்தாமலிருப்பதற்கு வேண்டிய தடைகளைப் போட்டார்கள். தளபதி மார்ல்பரோவை படைத் தலைமையினின்றும்நீக்கிவிட்டார்கள். ஆன் அரசி, தான் கொடுத்த தளபதிப் பதவியினைத் திரும்பவும் பிடுங்கிக் கொண்டாள். வியாபாரிகளிடம் இலஞ்சம் வாங்கியதாக வேறு மார்ல்பரோ குற்றம் சாட்டப்பட்டார்.

தமது குதிரைவண்டியில் மார்ல்பரோ, இலண்டன்மா நகரத்துத் தெருவில் போவார். அப்படி அவர் போகும் போதெல்லாம், 'நில்லு திருடா! நில்லு திருடா!!' என்று மக்கள் கூச்சலிட்டுத் துரத்திக்கொண்டு ஓடுவார்கள்.

'எங்கள் நாட்டின் ஒப்புயர்வற்ற தளபதி மார்ல்பரோ' என்று கூறிய அதே மக்கள், 'நில்லு திருடா!' என்று துரத்தினர்கள். வீரத்தைப்பாராட்டி ட்யூக் பட்டம் அளித்த ஆன் அரசி கொடுத்த பதவியினைப் பிடுங்கிக் கொண்டு பெரும் இழிவு செய்தாள்.

ஒரு பெரியமனிதரின் புகழ்மிக்க வாழ்க்கை இறுதியில் அவமானத்தில் போய் முடிந்தது.

எப்படியெப்படியோ இருந்ததெல்லாம் தலைகீழாக மாறி இருக்கின்றன. இந்த உண்மை மட்டும் இங்குள்ள சிலருக்கு—குறிப்பாக ஆளும் கட்சியினருக்கு இன்னும் புரியாமலேயே இருக்கின்றது. என்றைக்கும் இந்நாட்டின் ஆளும் கட்சியாக நாம்தான் இருப்போம் என்று நினைத்துக் கொண்டிருக்கிருர்கள். அதனுல் துப்பாக்கி ஆட்சி நடத்துகிருர்கள். தொல்லை பல தந்தவண்ணம் உள்ளார்கள். அதோ! மாரல் பரோ துரத்தப்படும் காட்சியும் அதற்கு முன் அவன் இருந்த ஆடம்பர நிலையும் மனக் கண்முன் தெரிகிறது.

★

முக்கிய அறிவிப்பு

காஞ்சீபுரத்தில், "திராவிட நாடு" அலுவலகத்திற்கு அருகாமையில் புதிய பெரிய தபால் நிலையம் (Post Office) ஏற்பட்டுவிட்டபடியால், கடிதம், மணியார்டர் முதலியன அனுப்பும்போது, ஏஜண்டுத் தோழர்களும் பிற அன்பர்களும் சின்னக் காஞ்சீபுரம் (Little Kancheepuram) என்று முகவரியில் குறிப்பிட்டு எழுதும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பொறுப்பாளர்,
"திராவிட நாடு"

இலக்கியம் காட்டும் வியப்பு

(தில்லை. க. இளவழகன் III B.A., HONS.)

நாம், வைரத்தை விலையுயர்ந்த பொருளென்போம். ஆம்! அது, இன்று அழகியின் அங்கத்தில், சீமாட்டிகளின் செவிகளில், சங்கென்னும் கழுத்தில் புரள்கின்றது. அந்த வைரத்தை தென் ஆப்பிரிக்க பழங்குடி மக்கள் கோழிக்கும், நாய்க்கும் கோத்தணிவித்திருந்தார்களாம் அன்று? இன்று விஞ்ஞானிகளோ அது வெறும் கரித்தூளின் தொகுப்பென்று கூறுவதைக் கேட்டால் பலர் வியப்புக் கொள்வர்? இதற்கா இத்தனை இலட்சம் என விம்முவர் பலர்?

வியப்பு—இந்தச் சொல் மகிழ்வூட்டும் பல நிகழ்ச்சிகளைக் குறிக்கும். மனிதன் ஒவ்வொருவனும் தான் இதுவரை கண்டிராத ஒன்றைக் காணும் பொழுதும், புதிய செயல்களை — புதுமையான பொருள்களை அறிந்திடும்பொழுதும் ஒருவித மனநெகிழ்ச்சிக்கு உள்ளாகிறான். அந்த மனநெகிழ்வைக் காட்டும் இந்த "வியப்பு", உண்மை பொய் என்ற இரண்டு பண்பின் அடிப்படையிலும் தோன்றும். அந்நாள், அருந்தமிழ் இலக்கியப் படைப்புகளில் வியப்பான செய்திகள் ஏராளம்?

நிலப்போர் மட்டுமல்ல? கடற்போர்க் களங்களிலும் நாடு பல கைக்கொண்டவர்கள் நாம்? இன்ப வாழ்வு வாழ்ந்தவர்கள்? பாணரும், புலவரும் நம்மவர்களின் வீரமறச் செயல்களைப் பாடிப் புகழ் பரப்பினர். அத்தகைய தனிப் பழம் பண்புகள் பலவற்றைக் கூறும் நூலுள் புறநானூறும் ஒன்றும்?

ஆம்! அதோ வல்வில் கோட் ஒன்று வேழத்தை வீழ்த்தி விரைந்துபோய், புலியைக் குத்தி, புறம்போய், கலையை உருட்டி கழன்றுபோய், பன்றியை உருட்டி, பக்கத்தே தாழையிற் தங்கியிருந்த உடும்பின் உடலிலே தங்கியதாம். இந்தச் செய்தியை வன்பரணர் அழகாக விளக்குகின்றார். இது புறம் காட்டும் வியப்பாம்!

ஒரே அம்பு, ஐந்து பிராணிகளை வீழ்த்தியது வியப்புக்குரியது தான். எனினும் நிகழக்கூடிய நிகழ்ச்சி! ஆம்! அம்பு எய்தது "வல்விலோரி" அவன் அடைமொழியே அவனின் வன்மையைக் காட்டுகிறது. வன்மையோடு விடுத்த அந்த அம்பு காட்டின் கண் விரைந்தது. காட்டிலோ பல்வேறு மிருகங்கள் மயங்கித் திரிகின்றன. எனவே விரைந்த அம்பு சந்தித்தது வேழத்தை, அதை வீழ்த்திப் புறம்போன அம்பு, எதிரே புலியும்வந்தது—வீழ்த்திற்று. இப்படியே அது நான்கு விலங்குகளையும் வீழ்த்தி, ஐந்தாவது விலங்கோடு விசையற்று நின்றுவிட்டது.

அம்பு பாய்ந்த மிருகங்களின் தரம். அது சென்ற முறை, மிருகங்களின் தோலின் திட்பக் குறைவு, கூரிய அம்பிற்குக் கொழுப்புச் சத்து தரும் எளிய முறை இவைகளை நாம் அறிதல் வேண்டும். ஓரிவிட்ட அம்பானது மேலிருந்து சரிவாகக் கீழ்நோக்கிச் சென்று இறுதியில் புற்றிலே புகுந்திட இருந்த உடும்பில் உட்பட்ட கற்பனை 'வன்பரணரின்' பாடல் என்பர். உண்மையாகத் தகும் நிகழ்ச்சியுங்கூட!

ஆம்! ஆனால் இதோ இன்னொன்று? கம்பர் காவியத்தில் இராவணன் வதைப் படலத்தில் வரும்காட்சி. குன்றனையதோளான் பொன்றுத புகழான் இமயமலையையே அசைத்தானாகிய இராவணனின் உரம் கிழித்தது. அவன் உள்ளத்தில் சீதையின் நினைவு உண்டோ எனத் துருவித் துருவிப் பார்த்தது. பின் உதிரம் கொட்டக் கொட்ட ஓடோடி, ஓயாது குரைக்கின்ற ஏழ்கடலிலும் மூழ்கிற்று. இறுதியிலே வேகமாய்ப் புறப்பட்டு இராமனது அம்பறாத் தூணியில் வந்து புகுந்துகொண்டதாம். அதுதான், இராமன் விட்ட அம்பு—வியப்புத் தரும் செய்தி—உண்மையாக முடியுமா? இராமனின் அம்பு வேகமாகக் கிளம்பியிருக்கலாம். இலங்கை வேந்தன் இராவணனின் மார்பைப் பிளந்துகொண்டு கடல்வரை கூடச் சென்றிருக்கலாம். ஆனால், அதோடு அது விசையற்றுப் போயிருக்கும். நீர் எந்த ஒரு பொருளினது விசையையும் குறைக்குமென்பது அறிஞர்களின் கருத்து. அந்த அம்பிற்கும் திரும்பிவர எந்த ஏதுவுமில்லை. கல்லிலே பட்டிருந்தாலும் எதிர்த்துவந்து எதிர்பாராமல் அம்பறாத் தூணியில் அல்ல; இராமன் நின்ற திசையில் — பக்கத்தில் வந்து விழுந்தது என்று கொள்ளலாம். ஆனால், கடலில் அல்லவா விழ்ந்தது. எனவே, காவியம் காட்டும் நிகழ்ச்சி எத்தகையதாகும்! கடவுட் தன்மையும் கலந்து ஊட்டப்பட்டதாலேயே நடக்கக் கூடிய நிகழ்ச்சியாகிவிட முடியுமா? புறம் காட்டும் இயற்கையாக நடக்கக் கூடிய நிகழ்ச்சி மெய்யா? கம்பரின் கற்பனைக் காட்சி மெய்யா? அதிலும் கடவுளை நமக்கெல்லாம், அறிவிக்கக் கம்பர் கையாண்ட முறையிருக்கிறதே, கடவுளின் அளவு கடந்த ஆற்றலை இராமனின் அம்புக்குள் நுழைய விட்டு அதன் வாயிலாக நமக்கெல்லாம் கடவுளைக் காட்ட முனைந்த கம்பரின் திறமை, அந்தோ! வியப்பினும் வியப்பேயன்றோ!!

வளியே, நீ வாழ்க!

மாலை, அறையில் அமர்ந்திருந்த எனக்கு ஒரே புழுக்கமாக இருந்தது. உடலெல்லாம் வியர்த்தது. திடீரென அறைக் கதவு இலேசாகத் திறந்தது. யாரெனப் பார்த்தேன். ஒருவரையும் காணோம். சன்னல் கதவுகள் படபடவென அடித்துக்கொண்டன. மேசை மீதிருந்த காகிதக் கற்றைகள் எல்லாம் பறக்க ஆரம்பித்தன. என் மேலாடைகூட மெல்லப் பறக்க ஆரம்பித்தது. உடல் புத்துணர்ச்சி பெற்றது போல் ஆயிற்று. வியர்வை நின்றது. இவ்வேலைகளுக்கெல்லாம் யார் காரணம் எனப் புரிய முடியவில்லை.

அறையை விட்டுச் சோலையை அடைந்தேன். அங்கு மரக்கிளைகள் எல்லாம் மெல்ல ஆடின. இலைகள் அசைந்தன. பூக்கள் மணம் பரப்பின. 'உஸ்' என்ற ஒலி மரக்கிளைகளினூடே புகுந்து ஒலித்தது. என் ஆடை முன்னிலும் அதிகமாகப் பறக்க ஆரம்பித்தது.

இப்போது இச்செயல்களுக்கெல்லாம் காரணம் யாரெனப் புரிந்துகொண்டேன். பேசலுற்றேன்.

காற்றே! நீதான் இத்தனை செயல்களையும் செய்தனையோ? வேறு யார் இவ்வாறு செய்ய முடியும்! காற்றே! நீ உருவில்லாதவன்! ஆனால் இவ்வுலகின் கரு—மூலப்பொருள் நீதான்! நீ இன்றேல் இவ்வுலகமும் இல்லை. உலக உயிரினங்கள் ஒவ்வொன்றின் மூச்சிலும் நீதானே நீக்கமறநிறைந்திருக்கிறாய்! இவ்வுலகில் அங்கிங்கெனாதபடி எங்கணும் இருப்பவன் நீதானே!

காற்றே! நீ மனிதர்களுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் செய்யும் தொண்டுதான் எத்துணை பயனுடைத்தாய் இருக்கிறது தெரி...ளையும் கைம்மாறு கருதா உதவியன்றோ! ஒலியை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குத் தூக்கிச் செல்வது நீதானே! நீ இல்லாவிட்டால் புலகில் உயிரினங்கள் ஒலியின் பயனை அனுபவிப்பதுதான் எப்படி? வண்ண மலர்களை மலர்விக்கிறாய். பின் அதனின்றும் எழும் நறுமணத்தை மற்றவர் உணரச் செய்கின்றாய்! நீ மனிதர்களுக்குப் போதுமான அளவு கிடைக்காவிட்டால் அவர்கள் எவ்வளவு இன்னலுறுகிறார்கள் தெரியுமா? உன்னைத் தேடிச் சோலைக்குச் செல்கின்றனர்; பூங்காவுக்குப் போகின்றனர்; கடற்கரையை நாடுகின்றனர். இல்லையானால் செயற்கை முறையில் உன்னை வரவழைக்க முயலுகின்றனர். என்ன இருந்தா

அன்பு

லும் நீ இயற்கையாகவே வீசுவது போல் அது இல்லை என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்!

உயிரினங்கள் உயிர் வாழ்வதற்குத் தேவையான, நீ செய்யும் பல்வேறு செயல்களை எண்ணிலடக்க முடியாதனவாக அல்லவா இருக்கின்றன. காற்றே! நீ பல துளிகளினூடே புகுந்து வெளிவரும்போது உண்டாகும் இனிய இசையைக் கேட்டு மெய்மறந்த மக்கள்தான் குழலிசை இனிது என்கிறார்கள்! அதற்கு அடிப்படை நீயல்லவோ!

வளியே! எல்லோர் உள்ளங்களையும் அறிந்து வைத்திருப்பவன் நீ ஒருவன்தான். ஒவ்வொருவர் மூச்சின் வழியாகச் சென்று வெளிவரும்போது அவர்கள் உள்ளத்திலே இருக்கும் எண்ணங்களையெல்லாம் அறிந்து வருகிறாய்! அதைப் பிறரிடம் கூறமாட்டேனென்கிறாயே! அவ்வாறு சொல்லிவிட்டால் உலகில் நன்மைகளும் தீமைகளும் அளவிட முடியாமல் போய்விடுமே என அஞ்சி, மிதமாக இருக்கட்டும் என்று எண்ணி உன்னுள்ளத்திலேயே வைத்துக் கொள்கிறாய் போலும்! அதோடு மட்டுமா? நீ ஏழையின் வறண்ட வயிற்றையும் சென்று துழாவிப் பார்த்து வருகிறாய்; பணக்காரனின் கொழுத்த வயிற்றையும் கண்டு வருகிறாய்! நீ ஒருவர் மூச்சிலிருந்து நின்றுவிட்டால்தானே அவரை இவ்வுலகம் இறந்தவர் எனக் கருதுகிறது!

காற்றே! நீ 'சில்'லென இருக்கும் போதுதானே கருநிற மேகப் பெண்ணோடு சேர்ந்து மழை என்ற குழந்தையை உலகுக்கு அளிக்கிறாய்! அக்குழந்தையின் வரவை நோக்கி உலகோர் சில சமயங்களில் எவ்வளவு ஆவலோடு காத்து நிற்பார்கள் தெரியுமா? அக்குழந்தையின் வரவால் இப்பூமி முழுவதும் பசுமைக் காடாகும். அருவியும், புனலும் மலைகளினின்றும் இழிந்தோடும். அவ்வாறு எதிர்பார்த்திருக்கும் போதுதான் நீ வேண்டுமென்றுதானோ என்னவோ மழைக் குழந்தையை அளிக்காமலே விட்டுவிடுகிறாய்; வேண்டாத போது அளிக்கிறாய்! இன்னும், வேண்டும் என்ற இடத்திற்கு மழையை அளிக்காமல், வேண்டாம் என்ற இடத்திற்கு அளிக்கிறாய்! இத்தகைய செயல்களைப் புரியும் போது மக்கள் உன்மீது எவ்வளவு ஆத்திரப்படுவார்கள் தெரியுமா? நீ அவற்றையெல்லாம் ஒரு பொருட்டாக நினைத்துக் கொள்ளாதே!

காற்றே! நீ வீசியடிக்கும்போது மரத்திலிருக்கும் வேண்டத்தகாத சருகுகளையெல்லாம் உதிர்த்து விடுகிறாய். அதுபோல் மனித சமுதாயத்திலிருக்கும் சில வேண்டத்தகாத 'சருகு'களையும் உன்னால் உதிர்க்கமுடியுமா? முடியுமென்றால் அதை அவசியம் செய்வாயா? அவ்வாறு நீ சமுதாயச் 'சருகு'களை உதிர்த்துவிட்டால்

மக்கள் உனக்கு என்றென்றும் கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள்.

காற்றே! நீ உன்னுள்ளே எத்தனை பிரிவுகளாகப் பிரிந்து நிற்கின்றாய்! தென்றலாகின்றாய்; வாடையாகின்றாய்; புயலாகின்றாய், இன்னபலவும் ஆகின்றாய்! இவையனைத்தும் உன் கூறுகள் தானே!

காற்றே! நீ புயலாகமாறிச் செய்யும் அநீதியைநினைத்தால் உன்னை என்னவேண்டுமென்றாலும் செய்யலாம் போல் தோன்றுகிறது! அப்போது நீலக் கடலின் வெண்ணிற அலைகளை நாட்டிற்குள்ளெல்லாம் பரவச்செய்து வேடிக்கை பார்க்கின்றாய்! பெருமழையைக் கொடுத்துக் காட்டாறுகளை ஓடச்செய்து கிராமங்களைச் சின்னா பின்னமாக்கி விடுகிறாய்! அப்போது அவர்கள் போடும் ஓலக் கூக்குரல் உன் ஒலியினும் பன்மடங்கு ஒலிப்பதைக்கூட நீ கேட்டிலையா? ஏரிகள் உடைபடுகின்றன; பச்சைப் பயிர்கள் நாசமாகின்றன. அதிலும் தமிழகத்தின் முன் உனக்குத் தனிக்கண்! இரண்டு மூன்றாண்டுக்கு ஒரு முறை தவறாமல் வந்துவிடுகிறாயே!

சூறைக்காற்றே! நீ ஏழைகளுக்குச் செய்யும் அநீதி...! அப்பப்பா! நினைத்தாலும் நெஞ்சம் கலங்குகிறதே! பாவம்! அவனது ஓட்டை ஓலைக் குடிசைகளைத்தானா நீ சூறையாடவேண்டும்? ஊருக்கிளைத்தவன் அவன்தானா? சூறையே! இனிமேலும் அதுபோலெல்லாம் செய்யாதே என்று சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்; அப்புறம் உன் விருப்பம். பல முக்கிய ஆக்கவேலைகளுக்கெல்லாம் காரணமானவனை நீ சில அழிவு வேலைகளையும் செய்துவிடுகின்றாய்! என்ன செய்வது, இயற்கை உன்னை அப்படிப் படைத்துவிட்டிருக்கின்றது.

காற்றே! நீ வாடையாக இருக்கும்போது உன்னை மக்கள் வெறுக்கிறார்கள். அதிலும் நீ வடக்கிலிருந்து வந்து ஓயாததொல்லைகள் தருவதால் தமிழர்களுக்கு உன்னை ஒரு சிறிதும் பிடிக்காது! நீ திரும்பிப் போகும்வரை மக்கள் வெளியே வந்து உன்னைப் பார்க்கவே மாட்டார்கள். அப்போது அவர்களுக்கு உன்னால் எவ்வளவு வியாதிகள் வருகிறது தெரியுமா?

காற்றே! நீ தென்றலாக இருக்கும்போதுதான் மக்கள் மதிப்பை வெகுவாகப் பெறுகிறாய்! அப்பருவத்திலிருக்கும் உன்னைப் பாடாத உலகப் புலவர்கள்தான் யார்! தென்றலின் வருகையில்தான் உலகம் புதுக்கோலம் பூணுகிறது. மக்கள் மறுமலர்ச்சி எய்துகின்றனர். அதுவும் காதலர் உலகு......! அதைப்பற்றி நான் அதிகம் விவரிக்கத்தேவையில்லை; ஏனெனில் அவ்வுலகத்தோடு நீ மிகவும் ஈடுபாடு கொண்டவன்! நீ இடைத்துவிட்டால் காதலர்களுக்கு ஒரே களியாட்டம்தான்! தலைவனைப் பிரிந்த தலைவியர்கள் உன்னைத்தானே தூதுவிடுகிறார்கள்! இதிலிருந்து அவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன் நீ என்பது நன்கு விளங்குகின்றதே! தென்றலாக இருக்கும்போது நீ சிலபல குறும்புவேலைகள்—ஆம் அதை வேறெப்படிக் குறிப்பிடுவது — செய்கிறாய்! என்ன தெரியுமா? பெண்கள் விலக்காத ஆடைகளை நீ போய் விலக்குகிறாய்! நீ அப்படிச் செய்கிறாயே என்று அவர்கள் உன்னை விலக்குகிறார்களா? அதுதான் கிடையாதே! இன்னொரு குறும்புச் செயல் என்ன தெரியுமோ? காதலர்களின் பிணக்குக்கு இடையே நீபோய் புகுகிறாய்! நீ நுழைவதால் எழும் சின்னஞ் சிறு இடைவெளியையும் தாங்கப் பொறாத பேதையுள்ளங்கொண்ட தலைவி பசப்புறுகிறாள்! இவையெல்லாம் உன் தன்னிகரில்லாத் தனித் திறமைகள்!

காற்றே! இயற்கையின் கூறுகளின் நான் உன்னையே முக்கியமானவனாகவும் உயர்ந்தவனாகவும் கருதுகிறேன்; இதை யாரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். காற்றே! கவிஞன் ஷெல்லி கூறியிருப்பதுபோல், நான் மரக்கிளைகளிலுள்ள பசும் இலைகளாக ஆக விரும்புகிறேன்! நீலக்கடலின் வெண்ணிற அலைகளாக மாற விரும்புகிறேன்! வானத்தில் அலையும் கார்நிற முகிற் கூட்டங்களாகத் தோன்ற விரும்புகிறேன்! இவைகளெல்லாம் எதற்குத் தெரியுமா? உன்தொடும் உணர்ச்சியை நன்கு அனுபவித்து அறிவதற்காக!

காற்றே! உருவில்லாக் கருவே! உனது பல்வேறுபட்ட செயல்களை விவரிப்பின் நீண்டு கொண்டேபோகும். உன்னை நான் எப்படி வாழ்த்துவதென்றே தெரியவில்லை! உன்னைவிட மதிப்பிற் சிறந்ததொன்று இவ்வுலகில் இருந்தாலல்லவா உன்னை அதற்கு உவமை காட்டிப் பெருமைப்படுத்தி வாழ்த்தலாம்! எங்கள் உள்ளத்தின் ஆழத்தில் தோன்றியெழும் பெரு மகிழ்ச்சியினைச் சொல்லால் விவரித்து உன்னை வாழ்த்த எங்கள் தமிழ்மொழியில் கூடச் சொல் இருக்கிறதோ என ஆராயவேண்டும்! கைம்மாறு கருதாமல் உலகுக்கு அடிப்படைத் தொண்டுகளைச் செய்துவரும் உன்னை—நாங்கள் வாழ அடிப்படையாயிருக்கும் உன்னை--வாழ்த்துகிறோம்! சிற்சில சமயங்களில் ஈடுசெய்ய முடியாத இடையூறுகளை நீ செய்யினும், பெரிய அளவில் நீ உலகுக்குச் செய்யும் தொண்டு—பெரிது—மிகப்பெரிது.

★

பெண்ணே! நீ உனக்காக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். உனக்காக வென்றால், சுய நோக்கத்துக்காக அல்ல. நீ தேடும் கணவன் உனக்காக என்ன வேண்டுமாயினும் செய்யத் தயாராயிருக்கவேண்டும். அவன் உன்னை நம்பும்படி நீ நடந்துகொள்ள வேண்டும். நீ அவனுக்கு உண்மையில் அன்பு காட்டினால், அவன் உனக்கு அமுதம் ஊட்டுவான். உன் வாழ்விலே அவன் ஊட்டும் அமுதம் நிரந்தர இன்பம் நிலவச் செய்யும்.

"எச்சம்"

(வித்துவான்:—பா. தங்கவேலன்)

காலை முதல் மாலைவரை பள்ளியில் காலம் கழிப்பவன் நான். ஓர் நாள் மாலைவேளை; காற்றுவாங்கக் கோட்டைச் சுற்றுச்சாலை வழியாகப் பலஎண்ணக்கோட்டைகளுடன் போய்க் கொண்டிருந்தேன். குழந்தைகள் பூங்காவை அடைந்தேன். உற்ற நண்பர்கள் இருவர் உரையாடிக் கொண்டிருக்கக் கண்டேன். நானும் அந்நண்பர்கள் உரையாடலில் கலந்து கொண்டேன்.

ஒரு நண்பர் "தக்கார் தகவிலர் என்பது அவர் அவர் எச்சத்தால் காணப்படும்" என்றுகூறித் தான்நடுநிலைமைதவறாத நன்மகன் என்று சொல்லிக் கொண்டார். அடுத்த நண்பரோ செய்வது அறியாது சிந்தை அயர்வுற்றார்- ஏன்? முதல்வர்க்குச் சீலமுடைய பாலகன் உள்ளான். அடுத்தவருக்கோ அப்படி ஒரு பாலகன் இல்லை.

"தக்கார் தகவிலர் என்பது அவர் அவர் எச்சத்தால் காணப்படும்"

—குறள்.

நடுவுநிலைமை என்னும் அதிகாரத்தின்பாற்பட்டது. "........ அவர் அவர் எச்சத்தால் காணப்படும்" —இப்பகுதிக்குப் பதப் பொருள் கூறவந்த பரிமேலழகர் "அவர் அவருடைய நன்மக்கள் உண்மையானும் இன்மையானும் அறியப்படும்" எனப் பகர்ந்தார். மேலும், பரிதியார் தம் சிறப்புரையில் கீழ் வருமாறு எடுத்துரைத்துள்ளார். "தக்கார்க்கு எச்சம் உண்டாதலும் தகவிலார்க்கு எச்சம் இல்லையாதலும் ஒருதலை ஆகலின், இரு [illegible] அவை குறியாயின. இதனால் தக்காரையும் தகவிலாரையும் அறியுமாறு கூறப்பட்டது."

இதனால் போந்த பொருள் எச்சமாவது மக்களேயாம். "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்றார் வள்ளுவனார். இப்பொருள் மெய்ப் பொருளா — பொய்ப் பொருளா என்று அறியவேண்டிய அவசியத்திற்கு உள்ளாக்கப்படுகின்றோம் அல்லவா? ஆம் - காய்தல் உவத்தல் அகற்றி ஆய்வாம்.

முதற்கண் ஏன் இவ்வாறு உரைகொண்டார் என்று பார்ப்போம். எச்சமாவது எஞ்சுதலாம் —மீதியாக நிற்றலாம். எனவே தந்தைக்குப் பின் எச்சமாக எண்ணப்படுவது பிள்ளைகளேயாம் - என்பது ஒரு சாரார் கூற்று. புதல்வரைப் பெற்றோர் வீடடைவர், புதல்வரை அற்றோர் நரகடைவர் என்பது மதக் கோட்பாடு. வீடடைவிப்பவன் புதல்வன். இன்னோரன்ன மதக் கொள்கைக்கு அரண் செய்வார் போன்று பொருள் செய்தார்.

வான்புகழ் வள்ளுவனார் தாம் கொண்ட கருத்துக்களை விளக்கக் கொண்ட வகைகள் பல. ஓரிடத்துக் கூறிய சொற்களுக்குப் பிறிதோரிடத்தில் பொருள் விளக்கிச் சொல்வார். "ஈகை"—இச்சொல்லைப் பல்கால் ஆண்டுள்ளார். இச்சொல்லுக்குப் பிறிதோரிடத்தில் பொருளையும் தம் வாக்காலே விளக்கிச் சென்றார். "வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை" என்று அச்சொற்பொருளை ஐயம் திரிபு அற அறுதியிட்டார். இத்தகைய அகச் சான்று முறையில் எச்சம் என்பதற்குப் பொருள் எதுவாக இருக்கும் என்று பார்த்துத் தெளிவோம். புகழ் என்ற அதிகாரத்துள் புலவர் கோ "வசை என்ப வையத்தார்க்கு எல்லாம் இசை என்னும் எச்சம் பெறுவிடின்" என்றார். இக்குறள் வழி எச்சமாவது இசை என்று கொள்ள வேண்டியுள்ளது. எஞ்சி நிற்பது—அழியாத் தன்மையது புதல்வரா? புகழா? புகழே என்க!!

வாதம் நமக்குள் வேண்டாம். இவ்வினவுக்கு விடை வித்தகரிடமே கேட்போம். "மாநிலத்தில் தோன்றி மறையாத பொருள்கள் இல்லை. ஆனால்........அழியாத மறையாத பொருள் ஒன்று உண்டு. அது புகழே ஆகும். அப்புகழ் தவிர இப்புவியில் நின்று நிலைப்பது ஒன்றுமில்" இதுதான் விடை. இதோ வள்ளுவனார் குரல். "ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்; பொன்றாது நிற்பது ஒன்றில்" இதனால் எஞ்சி நிற்பது-எச்சமாவது புகழ்தானே அன்றிப் புதல்வர் அல்லர் என்பது உள்ளங்கை நெல்லியாம். "புகழ் நிறீஇ மாய்ந்தனரே" — புறப்பாட்டுப் பகுதியும் உடன் சான்று உரைக்கின்றது.

நிற்க, மக்களைக் குறிக்க எச்சம் என்பதைப் பயன்படுத்த எண்ணியிருப்பாராகில், புலவர் பெருமான் "தக்கார் தகவிலர் என்பது அவர் அவர், மக்களால் காணப்படும்" என்று வெளிப்படையாகச் சொல்லியே இருப்பர். எதுகைச் சிறப்பும் ஏற்புடையதாகவே உள்ளது. ஆனால் எச்சம் என்னும் சொல்லை இனஎதுகை நோக்கி வைத்தமைக்குச் சிறப்புடை வேறு காரணம் இருக்கவேண்டுமல்லவா?

பல உரையாசிரியர்களிலும் உண்மையாகவேஉயர்த்திப் பேசப்படும் பரிதியார்கூட மதக் கொள்கை வழி உரை கண்டமையால் இன்ன பிற பிழைகளை, மறந்தோ—தமிழ்க் கொள்கைகளை மறைத்தோ செய்துவிட்டார். வேறென்ன சொல்ல முடியும்?

எச்சம் என்பது புதல்வர் ஆகா. புகழ்தான். வள்ளுவனாரின் உள்ளம் கொண்ட முடிவு இதுவாகத்தான் இருக்க முடியும்; இல்லையா?

நமது பங்கு!

(சா. வெ. பாண்டியன்)

கீழே காட்டியிருக்கும் புள்ளி விவரம் வடநாட்டிற்கும், திராவிடத்திற்கும் ஒவ்வொரு துறையிலும் திருப்பித் தரப்படும் பங்கு எத்தனை விழுக்காடு என்பதைக் காட்டும் இவ்விபரம் இரண்டாவது "நிதிக் குழு" அளித்த குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

வடநாடு

மாகாணம்	வருமான வரியில் பங்கு	எக்ஸ் சைஸ் வரியில் பங்கு	273வதுபிரிவு படி உதவித் தொகை	275 ஏ-பிரிவு படி உதவித் தொகை	எஸ்டேட் டூட்டியில் பங்கு	ரெயில்வேயில் பங்கு
	60 %	25 %	...	...	99 %	99·75 %
			இலட்சம்	இலட்சம்		
அசாம்	2·44	3·46	75·	375	2·53	2·71
பீகார்	9·94	10.57	72·31	350	10 86	9·39
பம்பாய்	15·97	12·17	...	...	13·52	16·28
ம. பிரதேசம்	6·72	7·46	...	300	7·30	8·31
ஒரிசா	3·73	4·46	15·	325	4·10	1·78
பஞ்சாப்	4·24	4·59	...	225	4·52	8 11
ராஜஸ்தான்	4·09	4·71	...	250	4·47	6·77
உ. பிரதேசம்	16·36	15·94	...	...	17·71	18·76
மேவங்காளம்	10·08	7·59	152·69	325	7·37	6·31
ஜம்மு, காசுமீர்	1·13	1·75	...	300	1·24	...
ஆக மொத்தம்	74·70	72·70	315·00	2450	73·62	78·42

திராவிடப் பகுதி

மாகாணம்	வருமான வரியில் பங்கு	எக்ஸ் சைஸ் வரியில் பங்கு	273வதுபிரிவு படி உதவித் தொகை	275 ஏ-பிரிவு படி உதவித் தொகை	எஸ்டேட் டூட்டியில் பங்கு	ரெயில்வேயில் பங்கு
தமிழகம்	8·40	7·56	...	...	8·40	6·46
ஆந்திரம்	8·12	9·38	...	400	8·76	8 86
மைசூர்	5·14	6·52	...	600	5·43	4·45
கேரளம்	3·64	3·84	...	175	3·79	1.81
ஆகமொத்தம்	25·30	27·30	...	11·75	26·38	21·58

மேலே இருக்கும் விபரம் நாம் பெறும் பங்கு எவ்வளவு என்பதைத் தெற்றென விளக்கும். வருமான வரியில் மத்திய சர்க்கார் 60 விழுக்காட்டை மாகாணங்களுக்கென்று பிரித்துக் கொடுக்கிறது. அதில் 74·70 விழுக்காடு வடநாட்டிற்கும், திராவிடப் பகுதிக்கு 25·30 விழுக்காடுவே கிடைக்கிறது. தமிழகத்திற்கு எவ்வளவு பங்கு என்று பார்த்தால் 8·40-விழுக்காடே! அலுங்காமல், நலுங்காமல் 40 விழுக்காட்டை மத்திய சர்க்கார் கொத்திக்கொண்டு போய்விடுகிறது.

இதேபோல் "எக்சைஸ் டூட்டி" மூலம் கிடைக்கும் வருவாயில் முக்கால் பாகம் "டெல்லி மூலம்" விழுங்கிவிட்டு கால் பாகத்தையே மாநிலங்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கிறது. அதிலும் வடநாடு, பெரும் பங்கை — 72·70 விழுக்காட்டைப் பெற்றுக்கொண்டு விடுகிறது. திராவிடப் பகுதி மத்திய சர்க்கார் கொடுக்கும் கால் பங்கில் 27·30 விழுக்காடே பெறுகிறது. தமிழகத்திற்கோ 7·56-விழுக்காடே கிடைக்கிறது.

273-வது பிரிவுப்படி 'டில்லி' மாநிலங்களுக்கு மான்யத் தொகை-உதவியாகக் கொடுக்கிறது. அதில் திராவிடப் பகுதிக்கு ஒரு புதுக் காசுகூட இல்லை! ஆனால் வடநாட்டிற்கோ 315 இலட்சம் ரூபாய் கிடைக்கிறது. இது மட்டுமல்லாமல் 1960-61, 1961-62 ஆகிய வருடங்களுக்கு இதே உதவித் தொகை அசாம், பீகார், ஒரிசா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களுக்கு உயர்த்தவும் பட்டிருக்கிறது. அசாமிற்கு 450 இலட்சம், பீகார் 425 இலட்சம், ஒரிசா 350 இலட்சம், மேற்கு வங்காளம் 475 இலட்சம் என்ற முறையில் உயர்த்தப்பட்டிருக்கிறது. இதிலும் திராவிடத்திற்கு எக்காசும் உதவியாக அளிக்கப்படவில்லை.

275 (ஏ) பிரிவுப்படி அளிக்கப்படும் உதவியிலும் வடநாட்டிற்கே பெரும் பகுதி சென்றுவிடுகிறது. வடநாட்டிற்கு 2450-லட்சம் என்றால் தென்னகம் பெறுவது 1175-லட்சமே! 'எஸ்டேட்' டூட்டியில் 99-விழுக்காடு மாகாணங்களுக்கு திருப்பி அளிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இதிலும் தென்னகம் கால்வாசியே பெற முடிகிறது. அதாவது 26.38 விழுக்காடு திராவிடத்திற்கும் 73.62 விழுக்காடு வடநாட்டிற்குமாகப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது. இதே விகிதாச்சாரம்தான் 'இரயில்வே' வருமானத்திலும் கொடுக்கப்படுகிறது. வடநாடு பெறுவது 78·42 விழுக்காடு என்றால் தென்னகம் 21.58 விழுக்காடே பெறுகிறது!

நிதிக் குழு தனது அறிக்கையில் 80-விழுக்காடு மக்கள் தொகை அடிப்படையிலும், 20-விழுக்காடு வசூலிக்கும் தொகை அடிப்படையிலும் இந்தப் பங்கிடுசெய்யப்படுவதாகக் கூறியிருக்கிறது. அது தென்னகத்தைப் பொறுத்த மட்டில் எந்த அளவிற்கு உண்மை என்பதை இவ்விவரத்தை ஊன்றிக் கவனிப்போருக்கு விளங்கும்.

ஏன் இந்த நிலை? பெரும் பகுதியை வடக்கே கொடுத்துவிட்டு அவர்களிடம் கைகட்டி நிற்கவேண்டியிருக்கிறது ஓரளவு பணத்திற்காக. திராவிடம் தனியாகுமேயானால் நாம் அவர்களிடம் குனிந்து நிற்க வேண்டியதில்லை, முழுப் பங்கும் நமக்கே கிடைக்கும்! அண்ணாதுரை அவர்கள் சட்ட மன்றத்தில் எடுத்துக் காட்டியபடி 257 கோடி ரூபாய் மத்திய சர்க்காருக்கு 'எக்சைஸ்' வரி மூலம் மாநிலங்கள் செலுத்துகின்றன என்றால் அதில் தமிழகம் செலுத்துவது 21·58 கோடியாகும். இதே மாதிரி மற்ற துறைகளை எல்லாம் எடுத்துக் கொண்டு பார்த்தால் திராவிடம் 'டில்லி'க்கு கொடுப்பது மிகுந்து காணப்படுவது தெரியும்! 'திராவிடம்' நமக்கானால் எத்தனையோ கோடிகள் நமக்கு வரும். தென்னகம் நன்னிலையில் நிற்க முடியும். பெரியவர்கள் ஆராய்வார்களாக!

சென்னை, கேட்டது! டில்லி, மறுத்தது!!

"ஐயா!"

"என்ன?"

"இரண்டு புதுத் திட்டங்களை நீங்கள் நிறைவேற்றி அருள வேண்டும்"

"புதுத் திட்டங்களா? ஏது பணம்! எங்கேயிருக்கிறது பணம்!!"

"அப்படிச் சொல்லக் கூடாது. இந்த இரண்டு திட்டங்களையும், அவசியம் நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டும். இதனால், ஒரு மாவட்டத்துக்கே, நன்மை ஏற்படும்"

"புதிதாக நீர்ப்பாசன திட்டம் போடுவதென்றால், அதிகப்பணம் தேவைப்படும்; அதற்கான பொருள்களை அந்நிய நாடுகளில் வாங்கும்படி நேரும். அதற்கு அந்நியச் செலாவணி தேவைப்படும். இப்போதுள்ள நிலைமையில் அந்நியச் செலாவணிக்கு எங்கே போவது?"

"அந்நியச் செலாவணி வசதி தேவைப்படாது. ஏனெனில், நாங்கள் சொல்கிற திட்டங்கள், பக்ராநங்கல்போலப் பெரிய திட்டங்கள் அல்ல; சாதாரண நீர்ப்பாசனத் திட்டங்கள்தான். நீங்கள் மனம் வைத்தால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்றிவிடலாம்"

"சாதாரண திட்டமா? அந்நிய செலாவணி தேவைப்படாத திட்டமா?"

"ஆம்! ஆம்!!"

*

அந்நிய செலாவணி தேவைப்படாது! அதிகப் பணச்செலவும் ஆகாது!! அப்படிப்பட்ட திட்டங்கள் மூலம், ஒரு மாவட்டத்துக்கு பலன் விளையுமென்றால், துடிதுடித்துக்கொண்டு முன்வர வேண்டுமல்லவா, சர்க்கார்?

டில்லி, மறுத்துவிட்டது—சென்னை அரசினர் விடுத்த கோரிக்கையை டில்லி, வழக்கம் போல், வீசியெறிந்துவிட்டது—தென் ஆற்காடு மாவட்டத்தில் மணிமுத்தாறு, [illegible] என்கிற இரண்டு திட்டங்கள் நிறைவேற்றப்படாது என்கிற பதில் கிடைத்துவிட்டது!!

அந்நியச் செலாவணி தேவையில்லை — அதிகப் பணச்செலவு ஆகாது — என்று, விளக்கி, வேண்டுகோள் விடுத்திருக்கிறது, சென்னை சர்க்கார். எனினும், டில்லி மறுத்திருக்கிறது!!

"இப்போது, கவனிப்பதற்கில்லை. சென்னை சர்க்கார் சிபாரிசு செய்தது உண்மை. எனினும், நாங்கள், ஏற்கவில்லை" என்று இளைய பெருமாள் என்கிற பார்லிமெண்டு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு, டில்லி, பதிலளித்துவிட்டது.

> வடக்கு வாழ, தெற்கு தேய்கிறது!! — என்பது உண்மையில்லை எனும் 'கனம்'கள், இதற்கென்ன பதில் அளிப்பரோ?

பதில், நமக்கு, பழக்கப்பட்டதுதானே! எனவே, ஆச்சரியமோ—அதிர்ச்சியோ, கொள்ளவில்லை!!

ஆனால், ஏன் அவைகள் நிறைவேற்றப்படமாட்டா என்பதற்கு டில்லி தந்துள்ள காரணமே, நமது சிந்தனையைக் கிளறுகிறது.

இந்த திட்டங்களால் அதிகப் பலன் கிடைக்காதாம்!

ஆதலால்தான், டில்லி மறுக்கிறதாம்!!

கோடிக் கணக்கில் கொட்டி செலவழிக்கப்படும் பக்ராவும் நங்கலும், என்ன பலனைக் கொடுத்துக்கொண்டு வருகின்றன என்கிற விபரம் அறிவோம், நாம். அதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பை, கனமாகிறது! ஆண்டுதோறும் வெளியிடப்படுகிற 'கணக்கு தணிக்கை' மக்களின் வரிப்பணம் எப்படியெப்படி நாசமாகிறது என்கிற நாற்றத்தை எடுத்துச் சொல்கிறது!! அந்தப் "பலன்" அன்றி வேறெதுவும் கண்டறியோம்—எனினும் பலன் கிடைக்காது என்பதால், மணிமுத்தாறு திட்டத்தை ஏற்பதற்கில்லையாம்!!

ஒரு உண்மை, தெரியவேண்டும். ஆள்வது டில்லியா? அல்லது சென்னையா? — என்கிற உண்மைதான்.

"இதென்ன கேள்வி! மாகாணங்களை ஆள்வது மாகாண சர்க்கார்தான். அந்த மாகாண சம்பந்தமான நன்மை தீமைகளுக்கு மாகாண சர்க்கார்தான் பொறுப்பாளி. மாகாணங்களின் விவகாரங்களில் உதவுவதற்குத்தான் மத்ய சர்க்கார் இருக்கிறது," என்று காங்கிரஸ் கனம்கள் மார்தட்டிச் சொல்லுகிறார்கள்.

இந்த இரண்டு திட்டங்களும் நிறைவேற்றப்பட்டால் தமது மாகாணத்துக்கு நல்லது என்பதால்தான், காமராஜர் சர்க்கார் சிபாரிசு செய்தார்கள்! அசாமைப் போல மிரட்டியோ, பீகாரைப் போல அதட்டியோகூட அல்ல "அன்புள்ள ஐயா! அந்நியச் செலாவணிதேவைப்படாது; அதிகச் செலவு ஆகாது," என்று நெளிவுடன், கெஞ்சியபடியே, மனு அனுப்பியிருக்கின்றனர்.

மறுப்பு கிடைக்கிறது! அதிக பலன் கிட்டாது, என்று அறிவிக்கிறது டில்லி!!

அப்படியாயின், காமராஜர் அரசுக்கு திட்டம்போடத் தெரியாது என்பது டில்லியின் கருத்தா? டில்லியைவிட சென்னை சர்க்கார் மட்டமானது என்று கருதப்படுகிறதா?—இந்த உண்மையை அறிய விரும்புகிறோம்.

ஆயிரம் மைல்களுக்கு அப்பாலேயுள்ள டில்லியைவிட, நூறு மைல்களுக்கு அருகிலேயுள்ள சென்னைக்கு மணிமுத்தார் நதியைப் பற்றி நன்கு தெரியும்! அந்த நதி ஓடும் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள மக்களுக்கு வரும் இன்ப துன்பங்களைத் துடைக்கும் பொறுப்பும்அதிகாரமும் சென்னை சர்க்காரிடம்தான் இருக்கிறது! எனினும் எங்கோயிருக்கிற டில்லி, பலன் கிடைக்காது எனத் தீர்ப்பு அளிக்கிறது-சிபார்சினை வீசி எறிகிறது!!

எந்த யோசனை சொன்னாலும், ஏதாவது ஒரு பதில்சொல்லி, தட்டிக் கழிப்பதில் டில்லிக்குள்ள ஆர்வமும் சிரத்தையும் அதிகம். அந்த இடம்தான் நமக்குப் புரியவில்லை! ஏமாற்றங்களைப் பதிலாக பெறும் அமைச்சர்களோ, இதை உணர்வதற்குப் பதில் — நம்மைக் கண்டிக்கக் கிளம்பிவிடுகிறார்கள்!!

*

காந்தியடிகள், அகிம்சையைப் பற்றிப் போதித்ததில் அர்த்தம் உண்டு! அதே கொள்கையினை, கசாப்பு கடை வைத்திருக்கும் கந்தசாமி போதித்தால், என்ன பொருள்? வாழ்ந்துவிட்ட சுமங்கிலி, மணப்பெண்ணுக்கு, எப்படியெப்படி வாழ்க்கையை நடத்த வேண்டும் என்று சொல்லிக் கொடுப்பதில் பொருளுண்டு! ஒரு நாள்கூட வாழ்க்கையைச் சுவைக்காத அமங்கிலி வரிந்துகட்டிக் கொண்டு, புது மணப்பெண்ணுக்குப் போதனைசெய்யக் கிளம்பலாமா?

இந்த இரண்டு திட்டங்களாலும் அதிகப் பலன் ஏற்படாதாம் — சொல்கிறது டில்லி! ஏதோ, எந்தத் திட்டம் போட்டாலும், அதனால் எவ்வளவு பலன் விளையும்— எவ்வளவு இலாபம் வரும் — எத்தனை மக்கள் பலன் பெறுவார்கள் —என்று புள்ளி விபரம் போட்டுப் பார்த்தே இவர்கள் காரியம் செய்வது போல, போதனை செய்கிறார்கள்!!

ஆனால், மக்களுக்கு நலன் விளைவிக்காத காரியங்கள் எத்தனையெத்தனைக்குக் கோடிக்கணக்கான ரூபாய்கள் கொட்டி அழிக்கப்படுகின்றன எனும் விபரங்கள் நாள்தோறும் வந்தவண்ணமேயுள்ளன!!

வடக்கில் பெரிய பெரிய அணைக்கட்டுகள் கட்டியிருக்கிறார்களல்லவா? அவைகள் மூலம் 65 இலட்சம் ஏக்கர்கள் சாகுபடி செய்யலாமாம். ஆனால், 40 இலட்சம்தான் சாகுபடி நடக்கிறதாம்.

தோண்டப்பட்ட குழாய்க் கிணறுகள் ஒவ்வொன்றின் மூலமும் சராசரி 200-ஏக்கருக்குமேல் சாகுபடி செய்ய வேண்டுமாம். ஆனால், இருபதே இருபது ஏக்கர்கூட சரிவர, பலன் பெறுவதில்லையாம்.

கட்டப்பட்ட அணைக்கட்டுகளிலிருந்து இவ்வளவு மின்சாரம் பயன்படுத்தப்பட வேண்டுமென்று கணக்குப் போடப்பட்டதல்லவா? அந்தக் கணக்கேதுவும் பலன் தரவில்லையாம்!

நமது கைச்சரக்கல்ல, இவை; டில்லி மந்திரியான எஸ். கே. பட்டீல் என்பார் சென்ற சில கிழமைகளுக்குமுன், பார்லிமெண்டிலேயே தெரிவித்திருக்கிறார் இவ்விதம். எப்படி ஒரு சிறு விஷயமும் தாமதமாகிறது என்பதை விளக்கும்போது, விபரமாகத் தெரிவித்திருக்கிறார்! நகைச்சுவையுடன், ஆனால் பகிரங்கமான முறையில் ஒரு அமைச்சரிடமிருந்தே குற்றச்சாட்டுகள் வந்தது இதுதான் முதல் தடவை என்று ஏடுகள் குறிப்பிட்டிருக்கின்றன! இத்தனை காரசாரமாக நொந்துகொண்டவர்தான் நீர்ப்பாசனத் துறைக்கும் மந்திரியாக இருந்தவர்!!

மந்திரியே நொந்துகொள்கிறார் —எவ்வளவோ முயன்றேன், என்றாலும் ஒரு மாற்றத்தைக் காண முடியவில்லை—சின்ன விஷயங்கள் கூட சீக்கிரம் முடிவாவதில்லை— இலாகாவிட்டு இலாகா மாறி, ஒரு குறிப்பு 'பைசல்' ஆவது பெரிய சிரமமாயிருக்கிறது — அப்படியே மத்திய சர்க்காராகிய நாங்கள் ஒரு முடிவு எடுக்கிறோமென்றாலும், அதைப் பற்றி மாகாண சர்க்காரின் இலாகாக்கள் பரிசீலனை செய்து அனுப்புவதற்குள் பெரியபாடாகிவிடுகிறது! இதைப் போக்க, நான் என் இலாகாவில் முயன்றேன்-முடியவில்லை, என்று பேசியிருக்கிறார்!!

கோடி கோடியாகக் கொட்டி செலவழிக்கப்பட்ட திட்டங்களின் மூலம், வேண்டிய பலனைக் காண முடியவில்லை, டில்லியால். ஆட்சி நிர்வாகத்தாலும், அவை சரிவர நடக்காததாலும், பலன் இல்லை! பரிதாபம் மிஞ்சுகிறது!!

இந்த இலட்சணத்தில், கொஞ்ச தொகையில் போடப்பட விரும்புகிற திட்டத்துக்கு அனுமதி மறுக்கிறது—பிள்ளை பிறக்குமுன்பே பெயர் சூட்டும் நிபுணர்போல, அதிகப் பலன் கிட்டாது ஆகவே மறுக்கிறோம், என்று பதில் தரப்படுகிறது!!

என்னென்ன இடங்களுக்கு நீர் பாயும், எந்தெந்த இடங்களில் விவசாயம் பெருகும் என்று கணக்கெடுத்த பிறகே, சென்னை அரசினர் சிபார்சு செய்திருக்கிறார்கள்,

சென்னையில் வாழும் இன்சீனியர்கள்தான், இந்திய உபகண்டத்திலேயே திறமையானவர்களாம்! அப்படிப்பட்ட திறமையானவர்கள் கணித்த திட்டத்துக்கு, திறமையற்ற-செயல் வன்மையற்ற-டில்லி 'சர்டிபிகேட்' தருகிறது. உதவாத திட்டம் என்று வீசியெறிகிறது !!

★

“கால் பந்தைப்போல் உதைக்கப்பட்டு வரும் இனமே நாம்” என்று ஓரிடத்தில் ராஜாஜி சொல்லியிருக்கிறார். “நமது பணத்தையெல்லாம் மத்திய அரசாங்கத்திற்கு அள்ளி கொடுத்துவிட்டு, அவர்களிடம் கை கட்டி நின்று பிச்சை கேட்கும் நிலையில் இன்று நாம் இருக்கிறோம்” என்று சில வருடங்களுக்கு முன்பே தாம் மைசூர் முதன் மந்திரியாக இருந்தபோதே சொல்லியிருந்தார் திரு அனுமந்தையா. இப்படி தென்னகத்திலே வாழும் திராவிட பெருங்குடி மக்களை சூறையாடி தன் பொக்கிஷத்தை நிரப்பும் வடக்கின் போக்கை புரிந்துக் கொண்ட அறிஞர்கள் இன்று நம்மை எச்சரித்து வருகின்றார்கள். 'வடக்கு வாழ தெற்கு தேய்கிறது' என்று முழங்குகிறார்கள். அதை நாம் சற்று சிந்தித்து பார்க்க வேண்டும் எல்லாத் துறைகளிலும் நம்மை சிறிது சிறிதாக அடக்கி, ஒடுக்கி நம்மேல் ஆட்சி செலுத்திவருகிறது வடக்கு. தன்னையே நம்பி இரவும், பகலுமாக மாடுபோல் உழைத்து தேய்ந்துவரும் குமாஸ்தாக்களுக்கு ஐந்து ரூபாய் அதிகப்படி சம்பளம் கொடுக்க வேண்டுமென்றால் டில்லியிலிருக்கும் மத்திய சர்க்காரின் முன் கைகட்டி நின்று கெஞ்சுகின்ற மாநில சர்க்கார்கள், ஏன் இந்த நிலைமை? தமிழ் நாட்டிலோ, கருநாடகத்திலோ, கேரளத்திலோ அல்லது ஆந்திரத்திலோ போதிய அளவு செல்வம் இல்லையா? என்றால், இருக்கிறது. ஆனால் கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை என்பதைப்போல் நம் செல்வம் வடக்கில் குவிகிறது. அணு அணுவாக தேய்ந்து வருகிறோம். இங்கு தெற்கே ஒரு தொழிற்சாலையோ, நீர்ப்பாசன திட்டமோ அல்லது வேறு எந்தத்திட்டத்திற்கோ பணம் கேட்டால் கைவிரிக்கிறது மத்திய அரசாங்கம்: மாபெரும் அணைக்கட்டுகளும், மின்சார, நீர்ப்பாசன திட்டங்களும், தொழிற்சாலைகள் பலவும் அங்கு வடக்கே நாள் தோறும் நிறுவப்பட்டு வருகிறது.

2-ம் பக்கத் தொடர்ச்சி

கூடாது என்பது அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். சொத்தை வாதமும், திறமைக் குறைவும் உள்ளவர்கள்தான், சந்து இருக்கிறதா தப்பிக்க— இண்டு இடுக்கு உண்டா ஏதாவது சொல்லித் தட்டிக் கழிக்க, என்று முயல்வார்கள். நேர்மையும், நினைப்பில் தூய்மையும் உள்ளவர்கள், எழுப்பப்பட்ட பிரச்னைகளுக்கே பதிலளிப்பார்கள்! தி. மு. க. சட்டசபை தலைவர், இதனை சபையில் சுட்டிக் காட்டாமலுமில்லை!!

காங்கிரஸ் பீரங்கியும், காலஞ்சென்ற சொல்வல்லாருமான சத்யமூர்த்தி அவர்கள் ஒருமுறை டில்லி சட்டசபையிலே, முழக்கமிட்டார். **“நடைபெற்ற விவாதங்களைப் பற்றி, நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். விவாதங்களுக்குக் கடைசியில் சர்க்கார் பதிலளிக்கும் வாய்ப்பு இருக்கிறது; அப்போது யாரும் குறுக்கிடாமல் பார்த்துக் கொள்வீர்கள். அப்படிச் செய்வது தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனால், கடைசியில் ஒருபக்கத்தாரின் வார்த்தையே முக்கியமாகி விடுகிறது. எதிர்க்கட்சிகள்கூறிய எதையும், ஏற்றுக் கொள்ளாமல் போய் விடுகிறீர்கள். குறைகளைக் காதில் போட்டுக் கொள்ளாத தர்பார் போலாகிவிடுகிறது.**

சர்க்கார், கடைசியில் விவாதத்துக்குப் பதில் தருவதால், அதற்குப் பிறகு அந்த சர்க்கார் சொன்ன பதிலில் எது தவறு,—எது சரி—என்று எடுத்து மறுக்கும் வாய்ப்பும் எங்களுக்குக் கிடையாது. குறுக்கிட்டுப் பேசவோ கூடாது.”

சத்ய மூர்த்தியார் அப்போது, எதிர்க்கட்சியில் இருந்தார். ஆளும் கட்சியர்க, வெள்ளையர் இருந்தார்கள். அப்போது சுட்டிக் காட்டிய குறை இப்போதும் போகவில்லை! அவர் கட்டிக் காத்த காங்கிரஸ், அந்தக் குறையையே தன்னுடைய நிறையாகக் கருதிக் கொண்டு இருக்கிறது சட்டசபையில்!!

இருந்தும், சபையில், ஜனநாயகப் பண்பும், ஒழுங்கும் நிலவுகிறது—'கல்கத்தா'க்கள் இங்கே, நிச்சயம் ஏற்படாது என்றும் நம்பலாம். ஏனெனில், சபைத் தலைவராக விளங்கும் டாக்டர் கிருஷ்ணராவ், காட்டிடும் பெருந்தன்மையும், கூர்த்த மதியும் நிச்சயம் ஜனநாயகப் பண்பினை வளர்க்குமென நம்ப இடம் உண்டு.

ஜனநாயக அமைப்பின் முக்கிய இடமே, விவாதித்து எதையும் முடிவு செய்யவேண்டும் என்பதுதான். அப்படி விவாதிக்கும்போது, எதிர்க்கட்சிகள் சொல்லும் நல்லவைகளை ஏற்கும் தைரியமும் துணிவும் வேண்டும், ஆளும் கட்சிக்கு. அன்பர் சுப்ரமணியம், அந்தப் பண்பை நிலைநாட்ட ஆசைப்படுகிறார். ஆனால், 'கட்சி' எனும் கட்டம் வருகிறபோது, எல்லாவற்றையும் உதறிவிட்டு, பாதை மாறிவிடுகிறார்! பற்பல, பேசுகிறார்!!

காங்கிரஸ் எம். எல். ஏ-க்கள், இக்கட்டான 'கட்டத்திலிருக்கிறார்கள். தேர்ந்தெடுத்து அனுப்பிய தொகுதியும், நாட்டில் அன்றாடம் காணும் நிகழ்ச்சிகளும், அவர்களைப் பலப்பல பேசத் தூண்டும். “அது இல்லை, இது தேவை” என்று அவர்களும் பேச ஆரம்பித்தாலோ, கட்சியின் பார்வை பாயும்! கட்சிக்கும் கட்டுப்பட்டிருக்கவேண்டும் — மனச்சாட்சியையும் மதிக்கவேண்டும். என்ன செய்வார்கள்? பொதுநலமா! சுயநலமா!!—எனும் போராட்டக்களமாகிவிடுகிறது, அவர்கள் மனம். கடைசியில், பின்னாலே சொன்னது வென்றுவிடுகிறது! எனவே, அவர்களிடமிருந்து உருப்படியான விமர்சனங்களையும், குறைபாடு கூறுதலையும் எதிர்பார்க்க முடியாது— எதிர்க்கட்சிகள்தான், அத்தக் கடமையைச் செய்ய வேண்டிய இடத்திலே உள்ளன —இதனால், பல காங்கிரஸ் எம். எல். ஏ-க்கள், தமது மனதிலுள்ளதைச் சொல்லும்படி மாற்றுக் கட்சியினரை நாடினால் கூட எவரும் ஆச்சரியப்படுவதற்கில்லை!! ஏனெனில், இன்றுள்ள நிலைமை, அப்படி.

சபையில், தி. மு. க. சார்பில் அதன் சட்டசபைக் கட்சித் தலைவர் பொது விவாதத்தின்போது பேசிய பேச்சுக்கு எவரும் பதிலளிக்கவில்லை. பிறகுகூட, எழுப்பப்பட்ட பிரச்சனைகளைப் பற்றி, தக்க பதில் தரப்படவில்லை. இப்படிப்பட்ட கட்டம் வருகிறபோது, நிதியமைச்சர், திசையைத் திருப்பிவிடவே முயல்கிறார்! சரியான திசையிலாவது செல்கிறாரா என்றால், தி. மு. க. வரலாற்றைச் சொல்வதாக ஆரம்பித்து, எங்கெங்கோ போய்விடுகிறார்! ஆனால், வெளியில் பொதுக்கூட்டங்களில் வந்து பேசுகிறபோது, “உருப்படியான யோசனைகளைச் சொல்லட்டுமே? சொன்னாரா, தி. மு. க. தலைவர்! சொல்ல முடியுமா அவரால்!!”, என்று மார்தட்டிக் கேட்கிறார். போலிஸ் பாரா உள்ளதல்லவா—அதனால்போலும்!

சபையில் தி. மு. க. வின் சார்பில் வீண் வார்த்தையலங்காரத்துக்காகப் பல விஷயங்கள், இந்த முறைபேசப்படவில்லை. ஆட்சியை காரசாரமாகத்தாக்குவதுதான் சட்டசபைப்பணி எனும்கருத்துடனும் நடந்து கொள்ளவில்லை. பாராட்ட வேண்டிய இடத்தில் பாராட்டி, நாட்டின் சீர்கேடுகளைச் சுட்டிக் காட்டி, அந்தச் சீர்கேடுகளை எப்படிப்போக்குவது என்பது பற்றியும் தெள்ளத் தெளிய விளக்கியிருக்கிறார்கள். “நம்நாடு” மூலம் வெளிவந்த பேச்சுக்களைப் படித்திடும் மக்கள் மன்றம் அறியும், இதனை —உண்மையாகவே உருப்படியான யோசனைகளை அமைச்சர்கள் வரவேற்பவர்கள் என்றால், சூடும் வேகமும் தணிந்த இந்த நேரத்தில், தி. மு. க. சார்பில் பேசப்பட்டவைகளை எடுத்து, படிப்பது நல்லது—நாட்டுக்கும், அவர்களுக்கும்!!

★

திருமணம்

30—3—58 ஞாயிறு காலை 9-30 மணியளவில் தஞ்சை மாவட்ட தி. மு. க-துணைச் செயலாளர் மன்னை திரு. ப. நாராயணசாமி அவர்களின் மகள் தென்றலுக்கும், சேரன்குளம் சுவாமிநாதன் அவர்கள் மகன் துரை-மாணிக்கத்திற்கும், அண்ணா அவர்கள் தலைமையில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. புலவர் குழந்தையா, நடிகமணி டி. வி. நாராயணசாமி, என். எஸ். இளங்கோ, இராம. அரங்கண்ணல், அன்பில் தர்மலிங்கம், சொக்கலிங்கம் காக்கா டி. இராமசாமி, து. ப. நடனம், கோபால்சாமி தென்கொண்டார் முதலியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மாவட்டத்தின் பலபகுதிகளிலிருந்தும், கழகத் தோழர்களும், உறவினர்களும், வந்து இருந்தார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட, நமது அறிவு மணத்தினை வரவேற்றுப் பேசியது குறிப்பிடத்தக்கது. மண மக்களுக்கு ஏராளமான பரிசுகளும் வாழ்த்துகளும் வந்து குவிந்தன. எல்லோரையும் கலைஞர் மு. கருணாநிதி எம். எல். ஏ. வரவேற்றார்.

கர்நாடக

தி. மு. க. 2-வது மாநாடு

1958 ஏப்ரல் 26, 27-ம் நாட்களில் பெங்களூர் நகர் சுபாஷ்நகர்
கோலார் தங்கவயல் சின்னராசன் திடலில்
கலைவாணர் என். எஸ். கே. அரங்கில் நடைபெறும்.

தலைவர்:	திறப்பாளர்:
டாக்டர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.	நடிகமணி டி. வி. நாராயணசாமி

அண்ணாதுரை, நாவலர் நெடுஞ்செழியன்

என். வி. நடராசன்,
ஈ. வெ. கி. சம்பத் எம். பி.,
க. அன்பழகன் எம். எல். ஏ.,
மு. கருணாநிதி எம். எல். ஏ.,
ப. உ. சண்முகம் எம். எல். ஏ.,
ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ.,
எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ.,
ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ.
இரெ. இளம்வழுதி,
வி. பி. இராமன்,
கி. மனோகரன்
கே. ஏ. மதியழகன்,
காஞ்சி- கல்யாணசுந்தரம்,
சி. பி. சிற்றரசு,
என். எஸ். இளங்கோ
ஆர். எஸ். பாண்டியன்
அ. பொன்னம்பலனார்,
கண்ணதாசன்,
மீ. சு. இளமுருகு
பொற்செல்வி
எம். இராமன்
குமார வெங்கண்ணா
எம். ஜி. இராமச்சந்திரன்
எஸ். எஸ். இராசேந்திரன்

மற்றும் கழக முன்னணி வீரர்கள் கலந்துகொள்வர்.

இசைமுரசு நாகூர் அனீபா, சேலம் சீனிவாசன், நித்தியானந்தன் குழுவினரின் கலைநிகழ்ச்சி உண்டு. மாநாடு, வித்துவான் ஜி. எஸ். முனிசாமியப்பா குழுவினரின் நாதஸ்வர இன்னிசையுடன் ஆரம்பமாகும்.

இரு நாட்களிலும் நுழைவுக் கட்டணம்: ரூ. 5, 3, 2, 1

எஸ். வி. பதி, வ. கு. தலைவர்
வி. கே. நடேசன், தி. திராவிடமணி செயலாளர்கள்
முத்து, பொருளாளர்
எஸ். ஜி. வேந்தன், இரா. கோபால் விளம்பரக் குழுத் தலைவர்
பெரியசாமி, தே. வெ. செல்வம் தொண்டர்படைத் தலைவர்.

வரவேற்புக் குழு.

825 திராவிடநாடு

4—5—58 | வார வெளியீடு | விலை 16காசு

அரசியலார் செயல்!

(எழிலியரசன்)

பைந்தமிழைப் பயில முயலாரடா—அவர்
  பாவலரைப் பழித்தே திரிவாரடா
செந்தமிழ்ப் புலவரை மதியாரடா—அவர்தம்
  செம்மைப் புகழினை அறியாரடா
தன்னல மாயவர் வாழ்வாரடா—அவர்
  தன் னலத்திற்காக உழைப்பாரடா
பன்னலம் பெற்றவர் வாழ்வாரடா—அவர்
  பாமர மக்களை வதைப்பாரடா
இவரைத்தான் நாட்டார் மதிப்பாரடா—நாட்டின்
  இன்னலைச் சொன்னால் கறுப்பாரடா
எவரையும் எதுவும் செய்வாரடா—தன்
  இட்டமா யாட்சி புரிவாரடா
வரிகளை அதிகம் சுமத்துவாரடா—என்றும்
  வறுமையைப் போக்க வழிசெய்யாரடா
அரசியனு பவ மடையாதார்—இவர்
  ஆன்றோ ரரசியலைப் பழிப்பாரடா
சாதிகள் நாட்டி லதிகமடா—கெட்ட
  சாத்திரத்தால் நாடு குலையுதடா
நீதிகள் வாழ இடமில்லையே—இந்த
  நீதங்கள் எங்கு நடக்குமடா
தமிழ்நாடென பண்டும்பெயரிருக்க—இதைத்
  தட்டிக் கழித்து மறுப்பாரடா
அமிழ்த மாமுயிரை மறந்தே—நீவிர்
  அறிவதன்துணை தலைமையில் கூடுவீரே
தமிழன் புகழை நாட்டிடுவோம்—இந்தத்
  தரணி புகழ வாழ்ந்திடுவோம்
அமிழ்தமாம் தமிழ் மொழியை—நாம்
  அன்னை யெனப்போற்றி உயர்ந்திடுவோம்.

பெங்களூர் கண்டோம்! ஆரூர், அழைக்கிறது!!

பெங்களூர் முடிந்துவிட்டது! ஆரூர், அழைக்கிறது!!

கருநாடக மாவட்ட மாநாடு, கடந்த கிழமை, களிப்பு விழாவாகவும் கருத்துத் தோட்டமாகவும் காணக் கிடைத்தது! சுவையைப் பெற, சுதந்திரத்தைக் கண்டு மகிழ வாரீர், வாரீர் என்று இந்த கிழமை 'தஞ்சை' அழைப்பு விடுக்கிறது!!

தமிழகத்தின் பகுதிகளில் மாநாடுகள் நடத்துகிறார்கள்—இதுதானே? திராவிடநாடு கேட்கும் தி. மு. க.வுக்கு, வேறிடத்தில் இடமுண்டா, என்று கேள்வி எழுப்புவோர் உண்டு. அவர்கள், வந்து கண்டிருக்க வேண்டும், பெங்களூரில் நடைபெற்ற தி.மு.க. மாநாட்டினை! மக்கள் வெள்ளம்—சிறந்த ஏற்பாடுகள் — அது மட்டுமின்றி, ஏராளமான கன்னடியர் கலந்து கொண்டனர்—கன்னட மொழியிலேயே விளக்கம் தரும் பேச்சாளர்களையும் கழகம்கண்டது அங்கே!!

ஓடி ஓடிப்பணியாற்றிய வரவேற்புக் கழகத் தலைவர் எஸ். வி. பதியும், செயலாளர்களான வி. கே. நடேசன், தி. திராவிடமணி ஆகியோரும், விளம்பரக்குழு உறுப்பினர்களாக எஸ். ஜி. வேந்தன், இரா. கோபாலும், தொண்டர்படைத் தலைவர்களாக பெரியசாமியும், தே. செல்வமும் இருந்து செயலாற்றினர், கருநாடக மாநாட்டுக்கு. இவர்களைப் பற்றி எழுதவும் வேண்டுமோ! தி. மு. க.வைக் கன்னடமெல்லாம் பரப்பிட வேண்டும் என்கிற இவர் தம் ஆவல், பலித்திடும் காட்சியினைக் கண்டோம்—நாம். மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய கழகத்தின் முத்து, சென்னை தந்த செல்வம், சுயமரியாதைச் சின்னம் தோழியர் சத்தியவாணிமுத்து M.L.A.யும், மாநாட்டினைத் துவக்கி வைத்த, நடிப்புலகத்திலிருந்து நமக்குக் கிடைத்த முதல் தொண்டர்—கொள்கைக் குன்று — நல்ல நண்பர் டி. வி. நாராயணசாமியும், வழங்கிய நல்லுரைகளுக்கும் நாவலர் தம் உரைக்கும், நமது கழக காவலர்களின் சொற்பொழிவுக்கும், வந்திருந்தோர் காட்டிய ஆர்வமும் எழுச்சியும், எத்தனை 'தேபர்'கள் இங்கு இறக்குமதி செய்யப்படினும் என்ன—வெல்லுவோம் நாம், என்கிற உற்சாகத்தை வழங்கிற்று! மலரின் மணம் பரவுகிறது என்றால், மணத்தை நுகர்வோர் படிப்படியாக மலரிருக்கும் தோட்டம் நாடிவரத்தானே செய்வர் — மணம் பரவுகிறது, கருநாடகத்தில். அதற்கெனத் தம்மை ஒப்படைத்த மாபெரும் படையும் பெருகிவருகிறது—இனிமேன்ன!!

காவிரி தோன்றும், கருநாடகத்தில் கடந்த கிழமை கழகத்தின் வளர்ச்சி கண்டோம்—இதோ, காவிரி கொஞ்சித் தஞ்சமடையும் எமதிடத்தில் வந்து பாரீர் கழகத்தை என்று தஞ்சை மாவட்டத்தினர் அழைக்கின்றனர்! நன்செய் மாவட்டமல்லவா? அந்த எக்களிப்பும் பெருமிதமும் அவர் தம் குரலில் தோன்றுகிறது!! என். எஸ். இளங்கோவும், மன்னை. நாராயணசாமியும் குடவாயில் கிருட்டிணமூர்த்தியும், ஆரூர் நாகப்பனும், அடைக்கலமும், நடராசனும் ... போதாக்குறைக்கு மு. கருணாநிதியும், உள்ள வரவேற்புக் குழுவும் அவர்களுக்கு உறுதுணையாகத் தஞ்சை மாவட்டத் தோழர்களும் உள்ளனரென்றால், கேட்கவா வேண்டும்! அழைக்கின்றனர், தாயகத்தை! மதியழகன் தலைமைவகிக்கிறார் ப. உ. சண்முகம், எம். எல். ஏ. துவக்கி வைக்கிறார்.

'மதி'யையும் 'முகத்தையும்' நாவலர் தம் உரையையும், கழகத் தோழர்கள்விளக்கத்தையும்காணவும் கேட்கவும் வருகின்ற மே 10, 11-தேதிகளில் திருவாரூர், வாரீர்! அனைவரும் வாரீர் என்று நாமும் அழைக்கிறோம்!!

அன்றும் இன்றும்

"உலகம் முன்னேறிக் கொண்டாயிருக்கிறது?

ஒரு வேடிக்கையைக் கேளுங்கள். 1928-ல் ஒருநாள் காலையில், எனக்கு நோபல் பரிசு வந்திருப்பதாகத் தந்தி வந்தது. அன்று மாலையே நானும் என் மனைவியும், வெளிநாடு செல்வதற்காக ரயில் ஏறினோம்.

உலகம் முன்னேறிவருவதாகக் கூறப்படும் இப்போது என்ன தெரியுமா? லெனின் நினைவுப் பரிசு எனக்கு வழங்கப்பட்டிருப்பதாக ஒரு தந்தி வந்தது! அது கிடைத்து, மாஸ்கோவுக்குப் புறப்பட, நான்கு மாதங்கள் ஆயிற்று. எளிதில் அனுமதிக்கவில்லை; ஏதேதோ, விளக்கங்கள் கேட்டு, அவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியதாயிற்று.

இதற்குப் பெயரா உலக முன்னேற்றம்?''

என்று மைசூர் முதலமைச்சர் நிசலிங்கப்பா தலைமையில் நடைபெற்ற ஒரு விருந்தில் உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி டாக்டர் சர். சி. வி. இராமன் சொன்னாராம், கடந்த 28-ந்தேதி. வெள்ளையன் ஆண்ட காலத்தில், வெளிநாடு செல்ல உடனே அனுமதி கொடுத்தார்கள்! இப்போதோ, எதெற்கெடுத்தாலும் நேரம் விரயமாகிறது!!

★



தியாக நாள்

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [4-5—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 42

மேதினியெங்கும் மே நாள், வழக்கம்போல் கொண்டாடப்படும்! பாட்டாளிகள் உள்ள இடங்களிலும், அவர் தம் உள்ளங்களிலும் இந்நாள், மன எழுச்சியையும், விழாக் காட்சியையும் உருவாக்கும்!!

"15-மணிநேரம் உழைத்துழைத்துச் சாகவேண்டுமா? நாங்களும் மனிதர்கள்தானே! 12-மணி உழைக்கிறோமய்யா-8-மணி நேரம் பாடுபட்டால் போதாதா", என்று 1886-மே முதல் நாள், பாட்டாளியின் முதல் குரல் கிளம்பிற்று! அடிமை, குரல் எழுப்புவதா — குமுறலைத் தெரிவிக்கும் துணிச்சல் பெறுவதா—என்று ஆண்டைகளின் உள்ளத்திலே எழுந்தடித்த ஆத்திரத்தின் காரணமாக, துப்பாக்கி திறந்தது! சுடுவதும், சிறைச்சாலையும், சாதாரண வழக்கமாகின!! சுடு—போட்டு, அடை—பொசுக்கு—அடி—ஆனாலும், அஞ்சமாட்டோம் — ஏனெனில் நாங்கள் கேட்பது நியாயமானதாகும்—நியாயத்தை, நெருப்பாலும், பிணத்தாலும் மூடிவிட முடியாது, என்று சொல்லும் மன உறுதியை, ஒவ்வோராண்டு மேதினமும் தொழிலாளர்களுக்கு வழங்கி வருகிறது. எனவேதான், புத்துணர்ச்சி பெறும் நாளாக, விடுதலை எழுச்சிக்குச் சாணை பிடித்துக்கொள்வதுபோல, ஒவ்வோராண்டு மே நாளையும், உலகமுழுவதிலுமுள்ள பாட்டாளிகள் கூடாரம் பெருமிதத்தோடு, கொண்டாடுகிறது! பாட்டாளிகளும், பதைக்கும் வாழ்வை நுகர்வோரும், உரிமைப் பாதையில் நிற்போரும் நிரம்பிய தி. மு. கழகமும் இந்நாளை, ஒரு உன்னத நாளாகக் கருதுகிறது—கொண்டாடுகிறது!!

கடந்த மே தினத்துக்கும் இந்த மேதினத்துக்கும் இடையிலே, எந்தச் சக்தி வெற்றிபெற்று வருகிறது என்பதை நோக்கிடின், மனம் பூரிக்கவே செய்யும். அடித்தால் அடங்கிவிடும்—பூட்டினால், கருகிவிடும்—மிரட்டினால் சாய்ந்துவிடும்—என்று, ஆதிக்கக்காரர்கள், விடுதலை விரும்பிகளைத் துச்சமாக மதிப்பது சகஜம்! இந்தக் கட்டம் மாறி, வளரும் உழைப்பாளிகளின் படையினைக்கண்டு, அச்சம் கொள்வோராக மாறி வருகின்றனர் ஆதிக்கபுரியினர்!! அந்த அச்சத்தின் காரணமாக, என்ன இனிப்புத்தரலாம், எரிமலையை மூட எந்த மூடியைப் போடலாம், எப்படி முயன்றால் பாட்டாளிகளின் மனதை அடங்கவைக்கலாம் என்கிற சாகசப்பாதையினையும் மேற்கொள்ள ஆரம்பித்து வருகின்றனர். பிர்லாவும் டாடாவும் பேசுகின்றனர், இனிமையாக! நாட்டுக்கு நன்மை என்கிற பொது நலத்தைத்காட்டி, அதற்காகவே தாங்கள் பாடுபடுவதாகச் சொல்கிறார்கள் — நாடாளும் காங்கிரசும் அதுவே தனது வழி எனச் சொல்லி, கொப்பளங்கள் வெடிக்காமல் என்னென்ன மருந்துகளைத் தடவலாம் என்று யோசிக்கிறது.

கவனிக்கக் கூடாதது! அலட்சியப்படுத்தப்பட வேண்டியது!!—என்று கருதிய காலம்போய் இவைகளை எப்படிச் சமாளிப்பது, என்னென்ன 'சாகசங்களைக் கையாண்டு வெடிக்கும் கொப்புளங்களை அடங்கச்செய்வது, என்ற முயற்சிக்கு ஆள்வோரும் அவர்களை ஆட்டிப்படைக்கும் ஆதிக்கக்காரர்களும் வரத் தலைப்பட்டிருக்கிறார்கள். சென்ற சில ஆண்டுகளாக ஏற்பட்டிருக்கும் இந்த மன மாறுதல், கடந்த ஆண்டிலும் அதிகரித்தே உள்ளது! குறையவில்லை!!

உரிமையா? உனக்கா! — என்று அதட்டிக் கேட்ட காலம் போய், உரிமைதானே! உனக்குத்தானே!! என்று சஞ்சலத்துடன் கூறும் கட்டத்தை இப்போது, பல இடங்களில் காண்கிறோம். ஆள்வோரும், ஆதிக்கக்காரர்களும், முரட்டுத்தனத்தை விட்டு, புது வழி மூலம், விடுதலைக் குரலை மடக்கிடும் அவசியத்துக்கு வந்துள்ளனர். அதாவது, புரையோடும் புண்ணுக்குப் புனுகு பூசும், முறைகாண முயற்சிக்கின்றனர்.

காங்கிரஸ் பேசிடும் சோஷியலிசமும், கனதனவான்கள் கூறிடும் 'ஒத்துப்போதல்' முறையும் இதுதான். இந்த வழி, புண்ணை ஆற்றாது என்பதையும், சமூக அமைப்பைத் தலைகீழாக மாற்றியமைத்தால்தான் "சக்திக்கேற்ற உழைப்பும்; உழைப்புக்கேற்ற ஊதியமும்" என்கிற தாரக மந்திரம் வெற்றிபெறும் என்பதனையும் பாட்டாளிகள், ஒன்றாக உணர்ந்திருக்கிறார்கள். அந்த உணர்வு, கடந்த ஓராண்டில், உலகெங்கும் அதிகமாகி வருகிறதே ஒழிய — குறையவில்லை.

நாட்டை நாடு அடிமைப்படுத்துவதையும் — மனிதனை மனிதன் வஞ்சித்து வாழ நினைப்பதையும் —தீமையானது, வேண்டாதது, ஒழித்துக் கட்ட வேண்டியது என்கிற 'உண்மை' ஒவ்வோர் இதயத்திலும் பற்றிக்கொண்டு வருவது, உலக முன்னேற்றத்தின் காட்சிகளில்ஒன்றாகும். தீ பற்றுகிறது! —என்பதைக் கூறும் ஆதிக்கபுரியினர், பழைய திமிர்பாதையை விட்டு, பாசமும், நேசமும் காட்டி 'சுரண்டிடும்' பாதையை நாடிடும் நிலைமைக்கு வந்துகொண்டிருப்பதும், தொழிலாளர் உலகுக்கு ஒரு வெற்றியேயாகும். எனினும் நிரந்தர வெற்றி காண—புதுயுகம் பூத்திட—செய்யவேண்டிய வேலைகள், ஏராளம் இருக்கிறது! அவைகளைச் செவ்வனே

செய்து, தாழ்ந்த தாயகத்தின் விலங்குகளை உடைத்து, தன் உடல்களிலே பூட்டப்பட்டிருக்கும் ஆதிக்கச் சங்கிலிகளையும் தூள் தூளாக்கி, பாடுபடும் நாம், 'முழுப்பலன்' பெறும் உன்னதபுரி நோக்கி விரையவேண்டிய சபதத்தை, ஒவ்வொரு பாட்டாளியும் இந் நாளில் மனதில் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

திராவிடநாடு, எனும் அந்த உன்னத புரியில், சமதர்மம் மணக்கும்! மனிதனை எல்லாரும் வாழலாம்! சாதி சமயக் கழுகுகள் இருக்காது! சாந்தமும் அமைதியும் நிலவும்! பிறகு, உலகப் பாட்டாளிகளுடன் ஒன்றுகூடி மகிழலாம்!—அந் நாள் வர, இந்தத் தியாக நாளினை, ஒவ்வொரு தோழரும் பயன்படுத்தவும், பலருக்குச் சொல்லவும் வேண்டுமென விரும்புகிறோம். வெல்க உழைப்பு! வெல்க உரிமைக் குரல்!!

★

ஓய்வு கேட்கிறார்!

நாற்பது ஆண்டுகளுக்கு மேல் அல்லும் பகலும் அரசியலிலேயே கிடக்கிறேன்! பதினெரு ஆண்டுகளாக அரசுப் பாரத்தைத் தாங்கிக்கிடக்கிறேன்!!—என்று, அறிவிக்கிறார், நேரு அவர்கள்.

தென்னாடு வந்து, கேரளம் கண்டு, டில்லி சென்றதும், அவர் செய்திருக்கிற முதல் காரியம், பார்லிமெண்டு காங்கிரஸ் உறுப்பினர்களைக் கூட்டி, இந்தச் சேதியை அறிவித்துள்ளதுதான். எதானலும் நீண்ட நேரம் பேசுகிற அவர், இதனை, ஒரு அறிக்கையாக எழுதிப் படித்தாராம்—அதிகம் பேசவில்லையாம் — இதற்காக அவசரமாகக் கூட்டப்பட்டதாம், இந்தக் கூட்டம்!!

இந்திய உபகண்டத்தின் வரலாற்றில் நேரு அவர்கள் ஆற்றியிருக்கிற பணியின் அளவை, யாரும் அலட்சியம் செய்துவிட முடியாது. அரசியலில் அவர் காட்டிடும் ஆர்வத்தையும் வேகத்தையும், எவரும் சாதாரணமாகக் கருதிட முடியாது. அல்லும் பகலும் அவர் பட்டிடும் பாட்டினையும், மாற்றார் என்பதால், நாம் மறுக்கவில்லை.

அவர் அவசர அவசரமாகப் பார்லிமெண்டுக் கட்சியைக் கூட்டி இந்த விளக்கம் தர வந்தது வேறு எதற்குமல்ல--ஓய்வு வேண்டுமாம், அவருக்கு! உருக்கமாக, வெளியிடுகிருர்!!

இத்தனை ஆண்டுகள் இடைவிடாத உழைப்பிலிருக்கும் அவர், ஓய்வுபெற வேண்டியது, அவசியம். எவ்வளவுதான், "என்னைக் கிழவன், கிழவன் என்று சொல்லாதீர்கள். எனக்கு இளமை முறுக்கும் செயலாற்றும் வலிவும் உண்டு", என்று சொல்லிக் கொண்டாலும், தள்ளாத வயது, தனது விசித்திரங்களைப் பதிக்காமற் போகாது. நீண்ட காலமாக இருந்து வரும் அவர், ஓய்வுபெற வேண்டியது அவசியம்தான்.

நேரு அவர்களே! அன்றட அரசியலிலிருந்து விலகி, மகாத்மாவைப் போலாகி, ஒரு பொது மனிதராக நீங்கள் விளங்க வேண்டும். நீங்கள் நாட்டின் சொத்து; ஒரு கட்சியின் சொத்தல்ல. நீங்கள் வகிக்கும் பிரதமர் பதவியை, நீங்களே ஒரு ஆளைத் தேர்ந்தெடுத்து வைத்துவிட்டுப் போகவேண்டும்! — என்று ஜெயப்பிரகாஷ்நாராயண், அடிக்கடி வேண்டுகோள் விடுத்தபடியிருக்கிருர்.

ஜெயப்பிரகாசும், நேருவும் நெருங்கிய நண்பர்களாம்! நண்பரின் வாழ்வில் அக்கரையும், நாட்டின் எதிர்காலத்தில் ஆர்வமும் இருப்பதாக ஜெயப்பிரகாசரின் வேண்டுகோள்கள் காட்டுகின்றன, நேருவுக்கு அடுத்தபடி அந்த இடத்தில் ஜெயப்பிரகாசரே இருக்கலாமே என்று ஏடுகளில் கருத்துக்கள் வருகின்றன. அந்தளவுக்கு, நேருவிடம் நெருக்கம் கொண்டவர். நேருவிடமே போய், இந்தச் சேதியை நேரில் கூறலாம் ஜெயப்பிரகாசர்! ஆனல், வேண்டுகோள்களை அடிக்கடிப் பத்திரிகைகள் மூலம்தான் அனுப்புகிருர்!! அதன்மூலம், ஒரு பரபரப்பும், நேருவின் கவனத்தைக் கவரும் ஆசையும் தென்படுகிறதே ஒழிய—எளிமையான முறையில் செய்யப்படவில்லை இது.

ஒரு அதிகாரி வேலையைவிட்டுப் போக வேண்டுமென்ருல், 'கால் கடுதாசி' எழுதிக் கொடுத்தால், தீர்ந்தது. ஆனல் அரசியல் வாதிகளால், அது முடியாது. அதிலும் நேரு போன்றவர்களால், திடீரென அரசியலை விட்டு ஒதுங்கிவிடுவதென்பது ஒருபோதும் முடியாது!!

ஆனல் ஒதுங்குவது என்பது வேறு; ஓய்வுபெறுவது என்பது வேறு.

நேரு அவர்கள், ஒருபோதும் அரசியலை விட்டுத் தனது வாழ்வைப் பிரிக்கமுடியாதென்பதை கேரளத்தில் பேசிய ஒரு கூட்டத்தில் தெளிவுபடுத்தியிருக்கிருர்! ஒதுங்கிக்கொள்ளும் உத்தேசமே தனக்கு இடையாது என்கிருர்!! எனவே, அவர் கேட்பது ஓய்வுதான்—ஒதுங்குவது, அல்ல.

"கொஞ்ச நாளைக்கு, நான் இப்போது கவனித்து வரும் தினசரி

(13-ம் பக்கம் பார்க்க)

> பெண்கள் சுதந்திரமாய் வாழ வேண்டியதுதான். ஆனல் இந்த சுதந்திரம் குடும்பத்தின் கௌரவத்திற்கும், நலனுக்கும், உயர்வுக்கும் கணவனுடைய மன அமைதிக்கும், தன் நல்ல பெயருக்கும் உகந்ததாகவே இருக்க வேண்டும். பொறுப்புணர்ந்து நடக்கும் பெண்களே குடும்பத்தின் சக்தி விளக்குகள்.

ஜனநாயகப் போர்வையில்!!

★

M. S. வெங்கடாசலம், M. A.

கோலாகலமான விழாவாம் — ஆரம்பப் பள்ளியில்! — 'அண்ணமலை'யான் திருப்பதியில்!

அமைச்சர் பக்தவத்சலத்துக்குப்பொன்னடை போர்த்தப்பட்டதாம்!

பொன்னடை போர்த்தியோர் மனம் மகிழ்ந்திட, சில பொன்னன வாசகங்களை உதிர்த்திருக்கிருர், நமது போலீசு அமைச்சர்!

"நல்ல முறையில் பணியாற்றக்கூடிய எதிர்க்கட்சி இன்று நாட்டில் எதுவுமில்லை" என்று புலம்பியிருக்கிருர்.

ஜனநாயகம் நல்லமுறையில் இயங்கிட எதிர்க்கட்சி தேவை — எவரும் மறுத்திட முடியாத உண்மை!

நல்ல எதிர்க்கட்சி எதுவுமில்லையென்ருல், ஜனநாயகத்தில் நம்பிக்கையும், அதன் வளர்ச்சியில் அக்கறையும் கொண்டவர் வருந்திடுவர் — இல்லை என்று எவரும் மறுத்திடவில்லை!

ஆனல், எதிர்க்கட்சி இல்லையே என்று புலம்புகிற அமைச்சரும், அவர் சார்ந்திருக்கிற காங்கிரசுக் கட்சியும், எதிர்க்கட்சி வளருவதற்காக அளித்திருக்கிற வாய்ப்பு என்ன என்று எண்ணிடும்போதுதான், இவரது வேஷம் கலைகிறது —இவர் சார்ந்திருக்கிற கட்சி ஜனநாயக வளர்ச்சியில் எவ்வளவு 'அக்கறை' காட்டுகிறது என்பதும் தெள்ளத் தெளிய விளங்குகிறது!

'அளித்திருக்கிற வாய்ப்பு' என்று குறிப்பிடுவது, ஆட்சியிலிருக்கிற கட்சியே எதிர்க்கட்சியை அல்லது கட்சிகளை வளர்க்க வேண்டும் என்பதல்ல! அவ்வாறு வளர்க்கப்படும் கட்சியும் எதிர்க்கட்சியாக இயங்கிட முடியாது—நாமறிவோம்!

அவர்கள் எதிர்க்கட்சியை வளர்க்க வேண்டாம்—வளரவிடட்டும்!

உண்மையில் ஜனநாயக வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்களாகக் காங்கிரசு ஆட்சியாளர்கள் இருப்பார்களானல், அவர்கள் செய்ய வேண்டிய பணி இதுதான்!

ஆனல் இந்தப் பணியை — — அடிப்படை ஜனநாயகக் கடமையினை — அவர்கள் எந்த அளவு ஆற்றி வந்திருக்கிருர்கள்?

கடந்த பத்து ஆண்டு வரலாறு காட்டுகிற உண்மை, காங்கிரசார் எந்த எதிர்க்கட்சியின் வளர்ச்சியையும், சகிப்பதில்லை என்பதுதான்!

எதிர்க்கட்சி வேறு — எதிரி வேறு! எதிர்க்கட்சியினர் எதிரிகளல்லர் — இது ஜனநாயகத்தின் அடிப்படை உண்மை.

இந்த உண்மையினைப் புரிந்துகொள்ளாமலோ, அல்லது புரிந்துகொள்ள மனமில்லாமலோ, காங்கிரசார் எதிர்க்கட்சிகளுக்கு எவ்வளவு இன்னல்களைத் தர முடியுமோ அவ்வளவையும் தந்து வந்திருக்கின்றனர்--தருகின்றனர்.

தடுப்புக்காவல் சட்டம், தவருமல் புதுபிக்கப்பட்டு, எதிர்க்கட்சிகளின் வளர்ச்சியை விழுங்கிட, அகல வாய்த்திறந்து, காத்துக் கிடக்கிறது. அதற்கு இரையாகி, சிறைக்கோட்டம் நண்ணியிருக்கிற எதிர்க்கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் ஏராளம்!

தடியடி தர்பார் — கண்ணீர்ப் புகைக் குண்டுகள் — துப்பாக்கிப் பிரயோகம்— இவையனைத்திற்கும் ஆட்பட்டிருக்கின்றன இன்றிருக்கிற எதிர்க்கட்சிகளிலே, பெரும்பாலானவை!

இவையெல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு, ஒரு கட்சி வளர்ந்தால், அந்தக் கட்சியை இழித்தும் பழித்தும் பேசுவது—இல்லாதன பல சொல்லி ஏசுவது — எந்தக் குற்றச்சாட்டின் மூலம் அந்தக் கட்சியினைச் சட்ட விரோத இயக்கமாக ஆக்கிட முடியும் என்று சட்டத்தில் சந்து பொந்துகளைப் பார்த்துக்கொண்டிருப்பது—என்பன அனைத்தையும், ஒன்றுவிடாமல் கையாளுகிறது, இன்றைக்கு ஆட்சியிலே இருக்கிற காங்கிரசு!

எதிர்க் கட்சிகளைப் பற்பல இன்னல்கட்கும் உட்படுத்தி, அவற்றின் வளர்ச்சியைக் குன்ற வைத்திட முயலுவதோடல்லாமல், எந்த நியாயத்திற்கும் கட்டுப்படாத பற்பல முயற்சிகளாலே தம் கட்சியை வளர்த்திட முனைகின்றனர் — ஆட்சியிலே இருக்கின்ற காங்கிரசார்!

மக்கள் விழிப்போடில்லாத காரணத்தால், அவர்கள் வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி வரியாகக் கொட்டித்தருகிற பணம், ஆட்சியிலே இருக்கிற காங்கிரசின் வளர்ச்சிக்குப் பற்பல வழிகளிலும் பயன்படுத்தப்படுகிறது!

தேசிய வளர்ச்சித் திட்டம், சமுதாய வளர்ச்சித் திட்டம், இவற்றின் மூலம் செலவிடப்படும் பணத்தின் பெரும்பகுதி, காங்கிரசு அபேட்சகர்கள் தேர்தலிலே வென்றிருக்கிற தொகுதிகளிலே செலவிடப்படுகிறது!

இந்த இழிநிலையை — ஜனநாயகத்துக்கு உலை வைக்கும் ஒழுங்கற்ற தன்மையினை—காங்கிரசார் வெற்றிபெற்ற பகுதிகளிலே தான், பற்பல நன்மைகளும் செய்யப்படும் என்ற எண்ணத்தை மக்கள்பால் உண்டாக்கி, அதன் மூலமாகவாவது மக்களது ஆதரவைப் பெறவேண்டும் என்ற அற்ப ஆசையை — தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கண்டித்துப் பேசியிருக்கிருர்கள்!

அத்தகைய இழிநிலே, — ஜனநாயகத்தின் கழுத்திலே பாய்ச்சப்பட்டிருக்கும் கூர்வாளைப்போன்ற கொடுமை — நமது தமிழகத்துக் காங்கிரசாலே மட்டும்தான் செய்யப்படுகிறது என்பதல்ல!

அண்மையில் மத்தியப் பிரதேச சட்ட மன்றத்திலும் அத்தகைய குற்றச்சாட்டு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பலராலே, கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அரசாங்கம் காங்கிரசுக்கட்சிக்கு இத்தகையதோர் பண உதவி செய்வது தவறு என்று "டைம்ஸ் ஆப் இந்தியா" கண்டித்து எழுதுகிறது.

அடுத்தொரு குற்றச்சாட்டு — அதே மாநிலத்தில்!

இந்தூர் மாநாட்டை நடத்தியதற்காகக்காங்கிரசுக்கட்சி, அரசாங்கத்திடமிருந்து, ஒரு இடத்தை வாடகைக்கு வாங்கியிருந்ததாம். ஆனல் அந்த மாநாடு நடந்து, ஆண்டு ஒன்று ஆகியும், அந்த வாடகைத் தொகை இன்னமும் வசூலிக்கப்படவில்லையாம்!

காங்கிரசு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற காரணத்தால், இத்தகைய சலுகைகளையெல்லாம், அது பெற முடிகிறதே 'தம்பி' வேறென்ன?

இந்த நிலையினைக் கண்டித்து, நாகபுரியிலிருந்து வெளிவரும் இதவாதா (Hitavada) என்ற இதழ் எழுதுகிறது. இதோ அதன் கண்டனக் குரல்:—

"இந்தூர் மாநாடு நடைபெற்று, நீண்ட காலமாகியும், காங்கிரசுக் கட்சியினிடமிருந்து மத்தியப் பிரதேச அரசாங்கத்திற்கு வரவேண்டிய தொகை இன்னமும் வசூலிக்கப்படாமலிருப்பது, வியப்பிற்குரியது! இதுபோன்ற சலுகையை அரசாங்கம், மற்றக் கட்சிகளுக்கும் வழங்க முன்வருமா? காங்கிரசுக் கட்சிதான் ஆட்சியை நடத்துகிறது என்ருலும், பணம் பொதுமக்களைச் சார்ந்தது — எந்த அரசியல் கட்சிக்கும் சொந்தமானதல்ல!"

இந்த அளவு தில்லுமுல்லுகளை நடத்தி — மக்களது பணத்தைக் கட்சியின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக்கொண்டு வருகிறது, காங்கிரசுக் கட்சி, அநேகமாக எல்லா மாநிலங்களிலும்!

இவ்வளவு ஏளனத்துக்குரிய செயல்களிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருக்கின்றகட்சியினைச் சேர்ந்தவர்—அதன் மாநிலக்கிளையில் முக்கிய 'ஸ்தானம்' வகிப்பவர்களிலே ஒருவராக விளங்குபவர், "நாட்டிலே எதிர்க்கட்சி இல்லையே" என்று வருந்திஞல் என்ன பொருள்?

எதிர்க்கட்சி இருப்பதனை, அவரும் அவர் சார்ந்திருக்கிற கட்சியும் சகிப்பதில்லை!

தப்பித் தவறி ஒரு எதிர்க்கட்சி இருக்கிறது — எழிலோடு, வளத்தோடு வளருகிறது — என்ருல், பாவம் அவராலே பொறுக்க முடியாது! நிலே பிறந்துவிடும்!

அந்தத் திகிலை மறைப்பதற்குத்தான் அடிக்கடி 'எதிர்க்கட்சியே இடையாது' என்கிருர்!

தி. மு. க.வை மறந்துவிட்டீர்களோ என்று, தமது 'வந்தே மாதரம்கள்' கூடக் கேட்டுவிடக்கூடாது என்பதற்காக, அதே கூட்டத்தில், மற்ருெரு பொன்மொழியையும் உதிர்த்திருக்கிருர்.

"தி. மு. கழகம் சினிமா, நாடகம், மேடைப் பேச்சு இவற்றிலேதான் திறமையுள்ளதே தவிர, அது ஒரு நல்ல அரசியல் கட்சியல்ல" என்ருராம் அவர்!

தி. மு. க. நல்லதொரு அரசியல் இயக்கமா அல்லவா என்பதைப் பற்றி மக்கள் புரிந்துகொண்டிருக்கிருர்கள்.—இந்த 'மதியுக' மந்திரியின் 'விளக்கம்' தேவையற்றது.

"தமிழகத்தை இனியும் புறக்கணிக்கக் கூடாது என்பதனை மத்திய அரசாங்கம் உணர்ந்து வருகிறது. வளர்ந்து வரும் தி. மு. க. வருங்காலத்தில் எந்த அளவு பலமுள்ளதாக ஆகிவிடுமோ என்ற பயம், இந்த உணர்வுக்கான காரணங்களிலே ஒன்று" என்று 'மெயில்' 15—4—58 இதழில் பேர்டிஞக்ஸ் என்பவர் எழுதுகிருர்.

நமது சம்பத் பாராளுமன்றத்திலே முழங்குகிற முழக்கம், அங்கிருக்கிற எதிர்க்கட்சிகள் அனைத்தாலும் பாராட்டப்படுகிறது, வரவேற்கப்படுகிறது, என்றும் கூறுகிருர் பெர்டிஞக்ஸ்.

இந்திப் பிரச்சனையில் சென்னை எடுத்திருக்கிற முடிவுக்கு, டில்லி தருகிற மதிப்பும்—கைத்தறித் துணிக்கு 'ரிபேட்' உயர்த்தப்பட வேண்டும் என்ற சென்னை அரசின் கோரிக்கைக்கு, 'அரை மனதோடாவது' டில்லி இணங்கியதும்—தி. மு. க. தமிழகத்தில் வளருவதாலேதான், என்கிருர் அவர்.

இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போன்ற நிகழ்ச்சியொன்றினையும் அவர் குறிப்பிடுகின்ருர்! இதோ அவரது வாசகங்கள்:-

"தேசிய வளர்ச்சிக் குழு, திட்டக் குழு ஆகியவற்றில் நடந்த விவாதத்தில், சென்னை நிதியமைச்சர் சுப்ரமணியம் நடந்து கொண்ட விதம், தமிழகத்து அரசியல் நிலைமைகளின் பிரதிபலிப்பு என்று இங்கு (டில்லி) அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது. சென்னையின் கோரிக்கைகளை மத்திய அரசு அனுதாபத்தோடு பார்க்கவில்லையென்ருல் விவாதத்திலிருந்து வெளி நடப்புச் செய்வதாகக் கடந்தமுறை நடந்தவிவாதத்தின் போது அமைச்சர்சுப்ரமணியம் பயமுறுத்தியதாகத் தெரிகிறது—மத்திய அரசும், அவரது கோரிக்கைக்கு இணங்கியது"

தமிழகத்து அமைச்சர், டில்லி அரசினைப் பயமுறுத்துகிருர் என்பது, இந்தப் பத்தாண்டு காலத்தில், காலம் கண்டிராத ஒரு அதிசயம்!

அந்த அதிசயம்-டில்லியைப் பயமுறுத்துமளவுக்கு அமைச்சர் பெற்றிட்ட-அஞ்சாமை தமிழகத்து அரசியல் நிலைமைகளின் பிரதிபலிப்பு, அதன் எதிரொலி.

என்ன பொருள் இதற்கு?

தி. மு. க. வின் வளர்ச்சி காங்கிரசுக்கு நடுக்கத்தினை ஏற்படுத்தியிருக்கிறது—அதனுலே மாநில அமைச்சர்களும், கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, தமது கோரிக்கைகளை டில்லி அரசிடம் எடுத்துக் கூறுகின்றனர்—மக்களது கோரிக்கைகளை அவரது அவலத்தை, ஆளுவோருக்கு எடுத்தியம்பி, ஆவன செய்கின்ற தி. மு. கழகத்தை அரசியல் கட்சியல்ல என்று அமைச்சர் சொன்னதாலே, மக்கள் "ஆம் ஆம்! அது அரசியல் கட்சியல்ல" என்று சொல்லிவிடப் போவதில்லை—அனைவரும் அறிவர்—அவரே கூட அறிந்திருக்கக் கூடும்.

ஆனல், தி. மு. க. அரசியல் கட்சியல்ல என்பதோடு நிற்காமல், "நல்லதோர் எதிர்க்கட்சி நாட்டில் இல்லையே' என்று 'ஜனநாயகப் போர்வை போர்த்திக் கொண்டு உலவிட முயலுவதைப் பார்த்திடும் போதுதான் நமக்குப் பரிதாபமாக இருக்கிறது!

அவருக்குப் போர்த்தப்பட்டது பொன்னடை! அதுபோதுமா? அமைச்சராயிற்றே அவர்? எனவே, அதன் மேலே ஜனநாயகப் போர்வையை அவராகப் போர்த்திக்கொள்ளப் பார்க்கிருர்!

★

இதய ஒலி

முத்துமணாளன்

"பரிதாபம்! அரசாங்க ஊழியர் மனைவி விஷம் குடித்தாள்! சம்பளம் போதவில்லை! குடும்பம் பட்டினியாகக் கிடந்தது!!" — இது தலைப்பு — பெரிய எழுத்துக்களில்.

"குழந்தைகளின் பசியைப் பார்க்கச் சகிக்காமல் 5 குழந்தைகளுக்குத் தாயாரும், அரசாங்க ஊழியரின் மனைவியுமான ஆச்சி அம்மாள், அரளி விதையை அரைத்துக்குடித்து இறந்தாள்" —இது மேற்காணும்தலைப்பின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள செய்தி.

நாட்டில் நல்லதோர் மனிதனுக —நற்பெயரும், புகழுடனும் திகழ்ந்து — வாழ்வை வளமிக்கதாகச் செய்யவந்த செம்மல்—என்றெல்லாம் இன்பக் கனவுகள் பல கண்டு கண்டு—குழந்தைக்கு இன்றுடன் வயது, மாதம் மூன்று —ஒரு ஆண்டு—ஐந்து ஆண்டு—இப்படியாக நாள் ஒவ்வொன்றையும் கணக்கிட்டு, தன் வறுமையையும் சற்று மறந்து இன்பமுறும் தாய், தான் பெற்ற செல்வம் பசி—பசி—என்று கதறித் துடிப்பதைச் சகியாமல் தற்கொலை செய்துகொண்டிருக்கிருள் ஓர் அரசாங்க ஊழியனின் மனைவி —சிதம்பரம் தாலுக்காவில்.

ஒருவரல்ல—இருவரல்ல. இது போன்று ஆயிரமாயிரம் அரசாங்க ஊழியர்கள், நம் தமிழ் நாட்டில் நாள்தோறும் சாகாமல் செத்துக் கொண்டிருக்கிருர்கள்.

"சம்பளம் போதவில்லே, சம்பளம் போதவில்லே" என்று கூக்குரலிடுகின்றனரே, ஆனல் தோற்றத்தில் அவ்வாறு துன்பப்பட்டுக் கொண்டிருப்பதாகத் தென்படவில்லையே என்றும் சிலர் நினைக்கக்கூடும். உண்மைதான். வெள்ளையும் சள்ளையுமாக ஆடை அணிந்துகொண்டு அலுவலகத்திற்குச் செல்லுகிருர்களே தவிர, மேலிருக்கும் ஆடையைக் கழட்டி விட்டுப் பார்த்தால், உள்ளிருக்கும் ஆடை பல கிழிசல்களுடன் தான் காணப்படும். அது தன் வறுமையை மறைக்கும் மேலாடை என்றுதான் சொல்லவேண்டும். தன் வறுமையை வெளிக்காட்ட எவனும் விரும்பமாட்டான். இப்படி, மடிப்புக் கலையாத சலவைச் சட்டை அணிந்தாவது வறுமையை மறைக்க ஆசைப்படுகின்றனர் அரசாங்க ஊழியர்கள். ஒருபடி அதிகமாகச் சொல்லப் போனல், மாதத்தில் 15 தேதிக்குப் பின் வெறும் இரசத்திலேயே சோறுண்டு, நாட்களைக் கழிக்கும் அரசாங்க ஊழியர்கள் அநேகம் உளர்.

கதிரவனின் கொடுமை தாளவில்லை—அதனல் குளிர்சாதனம் அமைக்கப்பட்ட "பங்களா"வேண்டும்—காரியாலய வேலை முடிந்தவுடன் அப்படியே காரில் பவனி வர ஒவ்வொரு அரசாங்க கெசட் பதிவில்லா ஊழியனுக்கும் மோட்டார் கார் வேண்டும்—என்றிவ்வாறு கேட்கவில்லை அவர்கள். தானும், தன் குடும்பத்தினரும், பட்டினியில்லாமல் சாப்பிட்டு, உடலை மறைக்க ஆடையும் அணிந்து - மனிதனுகவே நடமாடுவதற்கு வேண்டிய அளவு மட்டும் கூலி வேண்டும் என்கின்றனர்.

ஒரே இடத்தில் வேலை செய்யும் இரு அரசாங்க ஊழியர்களிடையே சம்பள விகிதத்தில் பெருத்த வேறுபாடு. மாநில அரசாங்க ஊழியன் ஒருவன் மாதம் ரூ. 79/ சம்பளம் பெறுகிருன் என்ருல், மத்திய அரசாங்க ஊழியன் ரூ.-105/ பெறுகிருன். ஒரே ஊரில், ஒரு பொருளை இருவரும் ஒரே விலை கொடுத்துத்தான் வாங்குகிருர்கள். உணவு விடுதியிலும் இருவரும் ஒரேவிதமாகப் பணம் செலுத்தித்தான் சாப்பிடுகிருர்கள். இந்த நிலையில் மாநில அரசு ஊழியனுக்கு ஒருவித சம்பளம், மத்திய அரசு ஊழியனுக்கு இன்னெருவித சம்பளம். இதன்றி மாநில அரசாங்க ஊழியர்களைவிட மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு அதிகப்படியாகப் பல சலுகைகளும் அளிக்கப்படுகின்றன.

வேறுபாடின்றி, அநீதியின்றி, மாநில அரசாங்க ஊழியர்களுக்கும், ஓர் அளவு வாழ்க்கை நிலை உயர, மத்திய அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பள விகிதத்தில் ஊதிய உயர்வு கொடுக்கப்பட வேண்டும் என்று சாமாதான முறையில் — ஆளவந்தார்களால் வகுத்துக்கொடுக்கப்பட்ட "அகிம்சா" வழியில் முப்பது வருட காலமாக மாநாடுகள் பல கூட்டப்பட்டு, தீர்மானங்கள் பலப்பல இடப்பட்டு, அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டன, இன்றும்அனுப்பப்பட்டுக்கொண்டிருக்கின்றன—பயனில்லை.

காரணம் கேட்டால்-"பணவசதியில்லை. அதனல் மத்திய அரசாங்கத்தை எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது" என்று மாநில அரசு மத்திய அரசைச் சுட்டிக்காட்டுகிறது. "ஐந்தாண்டுத் திட்டங்களுக்கே கடன் வாங்கவேண்டியிருக்கிறது எங்கள் நிலைமை, எங்களிடமும்

பணமில்லை. மேலும் இந்தப் பிரச்சினை மாநில அரசாங்கமே தீர்க்க வேண்டியதொன்றாகும்" என்று சாக்குப்போக்குச் சொல்லி மாநில அரசைச் சுட்டிக்காட்டுகிறது மத்திய அரசு. மாநில அரசாங்க கெசட் பதிவில்லாத ஊழியர்களின் இழிநிலையைக் கவனித்து ஆவன செய்ய இரு அரசாங்கங்களும் நடவடிக்கை எடுக்கவில்லை. அவர்களது இதய ஒலி—இதயக் குமுறல் — வீணே விண்ணில் சென்று மறைந்தொழிந்ததே தவிர, அரசாங்கத்தினர் தம் செவிகளுக்கு எட்டவில்லை. 1956ல் தமிழ்நாடு கெசட் பதிவில்லாத அரசாங்க ஊழியர்களின் தூதுக்குழு ஒன்று தங்கள் சமுகத்தினர் குறைகள் தீர்க்கப்படும் என்ற உறுதியான நம்பிக்கையுடன், டில்லி மாநகர் சென்றது நேரு பண்டிதரைப் பேட்டி காண. "தரிசனம்" கொடுக்கவே மறுத்துவிட்டார் "ஆசிய ஜோதி". அயல்நாட்டு விருந்தினர்களை வரவேற்கவே நேரம்போதவில்லை என்றகாரணத்தாலோ, தமிழ்நாட்டில் உள்ள அரசாங்க ஊழியர்கள் சிக்கனமாகச் செலவு செய்கிறார்கள், அதனால் அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தவேண்டிய அவசியமில்லை என்ற காரணத்தாலோ — தெரியவில்லை; பேட்டி காணவே மறுத்துவிட்டார் "ஆபத்பாந்தவர்."

"N G. Os are the back bone of Administration — அரசாங்கத்தின் முதுகெலும்பு போன்றவர்கள் கெசட் பதிவில்லாத அரசாங்க ஊழியர்கள்" என்றெல்லாம் பலவாறாக வருணிக்கப்பட்டு, அவர்களின் உழைப்பும், திறமையும் அரசாங்கத்தினரால் பாராட்டப்படுகின்றன. ஆயினும் மனம் இல்லை அரசாங்கத்துக்கு அவர்களுடையவாழ்க்கைநிலையை உயர்த்த.

அரசாங்கத்தின் முதுகெலும்பு போன்றவர்களின் முதுகெலும்பே கூனி, குறுகி, ஒடிந்துபோகும் நிலையிலிருக்கும்போது ஐந்தாண்டுத் திட்டங்கள் பல தீட்டப்பட்டு என்ன பயன்? திட்டங்கள் நல்ல முறையில் செயல்பட, அரசாங்க ஊழியர்களின் ஒற்றுமையுணர்ச்சியுடன் கூடிய, மாசு இல்லா உண்மைத் தொண்டு அவசியம் என்று சொல்லத் தேவையில்லை. திட்டங்களை நிறைவேற்றும் ஊழியர்களின் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும் போது, இட்ட ஆக்க வேலைகளில் அக்கறையுடனும் உற்சாகத்துடனும் வேலை செய்ய முனைவார்களா? இப்படி இருந்தால் திட்டங்கள் எங்ஙனம் வெற்றியடையும்? ஆகவே இந்தப்பிரச்சினை ஒருசாரிப்பட்ட மக்களையே அன்றி, நாட்டு மக்கள் அனைவரையும் பாதிக்கும் தன்மை வாய்ந்துள்ளதாக இருக்கிறது.

பரிதாபச் சிந்து மட்டும் பாடத் தவறுவதில்லை அமைச்சர்கள், சில இக்கட்டான நிலைமைகளில் அகப்பட்டுக்கொள்ளும் சந்தர்ப்பங்களில் "ஊதிய உயர்வு அளிக்கப்படுவது நீதிதான் — நியாயம்தான்—ஆனால் பணமில்லை" ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு மட்டும் பணம் கோடி கோடியாகத் திரட்டப்படுகிறது. பயனளிக்காத திட்டங்களுக்கெல்லாம் கோடி கோடியாகப் பணம் நாசமாக்கப்படுவதற்குக் கொட்டிக் கொடுக்க வசதியிருக்கிறது, வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இன்று உயிர் போகும் நிலையிலுள்ள அத்தியாவசியமாக--அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினைக்குப் பணம் கொடுக்க வழியில்லை. நாட்டு மக்களின் வாழ்வை வளமாக்கத்தான ஐந்தாண்டுத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. நாயினும் கேடான நிலையில் உள்ள அதே மக்களாகிய கெசட் பதிவில்லாத அரசாங்க ஊழியர்களின் வாழ்வைச் சீர்படுத்த மட்டும் திட்டங்கள் ஏதும் இல்லை. திட்டங்களை நிறைவேற்றப் பணம் போதவில்லை என்றவுடன், சிறு சேமிப்புத் திட்டம் என்று ஒன்று தீட்டப்பட்டு கோடி கோடியாகப் பணம் ஏழைப் பொதுமக்களிடமிருந்தும் திரட்டப்பட்டது. அதுபோல் அல்லற்படும் அரசாங்க ஊழியர்களுக்கும் ஒரு சிறு சேமிப்புத்திட்டம் ஒன்று ஏற்படுத்தப்படட்டுமே—இதுபோன்ற எத்தனையோ வழிகள் உள்ளன.

தமிழ்நாடு கெசட் பதிவில்லாத அரசாங்க ஊழியர்களின் வாழ்க்கைத் தரம் மிகமோசமான நிலையில்தான் உள்ளது. அவசியம் கவனிக்கப்படவேண்டிய பிரச்சினையுமாகும். அதுதான் நீதியும் நேர்மையுங்கூட-இப்படிக் கருதும் அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் "என். ஜி. ஓ. வின் கோரிக்கையில் மாற்றுக்கட்சிகள் தலையிட்டால், அது தீர்க்கப்படாது, நீடித்துக் கொண்டேதான் போக நேரிடும்" என்று வெளிப்படையாகப் பகன்றுள்ளார்.

அமைதியான முறையில் பல ஆண்டுகளாக, தீர்மானங்கள் போட்டு அனுப்பி, பல் வகையில் கெஞ்சிக் கூத்தாடிக் கேட்டார்கள். செவிசாய்க்கவில்லை அரசாங்கம். கடைசியில் முதல் மந்திரி கனம் காமராசர் அவர்களையும் மாநாடு ஒன்றிற்கு வரவழைத்துக் குறைகளைக் கொட்டி அழுதார்கள். கவனிக்கபடவில்லை. பொறுத்திருந்து பார்த்து, சிரச் சிந்தித்துக் கடைசியில் ஓர் வழியைக் கண்டார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர்கள் மூலமாவது தங்கள் காரியத்தைச் சாதித்துக்கொள்ள முயலுவோம் —என்ற வழிதான் அது. அதே போல் மதுரையில் மாநாடு கூட்டப்பட்டு, எதிர்க்கட்சித் தலைவர்கள் அழைக்கப்பட்டு, அவர்களிடம் தங்கள் குறைகளை எடுத்துச் சொன்னார்கள். அதன் பயனாகச் சந்தர்ப்பம் கிட்டும்போதெல்லாம் தி. மு. க. தலைவர்களும், மற்றும் இதர எதிர்க்கட்சித் தலைவர்களும், போராடி வருகிறார்கள் அவர்களுக்காக. இதைக் காரணமாகவைத்துக் கொண்டு, எதிர்கட்சித் தலைவர்கள் தலையிட்டால் பிரச்சினை நீடிக்கவிடப்படும் என்ற மிதவாத — சர்வாதிகார அரசியல் பண்பு நீடித்தால் இனி அரசாங்கஊழியர்களும் ஓர் எதிர்க்கட்சியாகத்தான் இயங்க நேரிடும் என்று அரசாங்கம் இனியாவது உணரட்டும். அவர்களது இதய ஒலி, கடல் அலையாக மாறி, பின் எரிமலையாக உருவெடுக்கும்அளவு பிரச்சினையை நீடிக்கவிடாதுமாநில அரசு உடனடியாக ஓர் வழிகண்டு ஆவன செய்யவேண்டும்.

தொழிலாளிகள் குருதி சிந்திப் போராடி வெற்றியடைந்தது ஒரு மே திங்களில்தான். சர்வாதிகாரி "ஜார்" ஆட்சி கவிழ்க்கப்பட்டதும் ஒரு மே திங்களில்தான். அத்தகைய புரட்சித் திங்களாகிய வரும் மே 15ல் தமிழ்நாடு கெசட் பதிவில்லாத அரசாங்க ஊழியர்களின் போராட்டம் துவங்க இருக்கிறது. இக்கட்டான இந்நிலையில் இனிக் காலம் கடத்திக்கொண்டே போனால் ஆபத்தும் அதிகரித்துக் கொண்டேதான் போகும்.

★

மேதை துஸிடிடெஸ்

இங்கிலாந்தின் இணையற்ற அறிஞனும் வரலாற்றாசிரியனுமான மெக்காலே, ஒரு இடத்தில் "இதுவரை இருந்திருக்கின்ற வரலாற்றாசிரியர்கள் எல்லோரைக் காட்டிலும் துஸிடிடெஸ் தான் மேம்பட்டவன்" என்று வாயாரப் போற்றுகிறான். மெக்காலே மட்டுமல்ல; இப்பரந்த மாநிலத்தில் பிறந்துள்ள பேரறிஞர்கள் யாவருமே 'துஸிடிடெஸ் தான் மாபெரும் வரலாற்று ஆசிரியன்' என்று சிறிதும் ஐயத்திற்கிடமின்றிக் கூறுவார்கள். அறிவுலகம் 'வரலாற்றுக்கு இலக்கணம் அமைத்துக் கொடுத்தவன்' என்று அவனைப் புகழ்கின்றது.

சிந்தனை உலகிற்கு ஒரு ஸாக்ரட்டீஸையும், அரசியலுலகிற்கு ஒரு பிளேட்டோவையும், வீரருலகிற்கு ஒரு அலெக்ஸாண்டரையும், விஞ்ஞான உலகிற்கு ஒரு டெமோக்கிரிடீஸையும் நல்கிய கிரேக்கம்தான் வரலாற்றுலகிற்காக ஒரு துஸிடிடெஸையும் தந்தது.

கிரேக்கம் அந்நாளில் பல பிரிவுகளாகப் பிரிந்து இருந்தது. அப்படிப்பட்ட பிரிவுகளில் ஏதென்சும் ஒன்று. ஏதென்சை "ஜனநாயகத்தின் தொட்டில்" என்று பெருமையாகக் கூறுவார்கள், முதன் முதலில், உலகத்தில் முகிழ்ச்சியடைந்த ஜனநாயகம் மலர்ந்தது அங்கேதான். அந்த ஏதென்சில்தான் கி. மு. 471-ல் மேதை துஸிடிடெஸ் தோன்றினான். துஸிடிடெஸ் பிறந்த குடும்பம் நல்ல செல்வமும் செல்வாக்கும் பெற்று விளங்கிய குடும்பம். கிரேக்கத்தின் வடதிசையில் இருந்த திரேஸ் என்ற மாகாணத்திலிருந்த தங்கச் சுரங்கங்கள் சிலவற்றினின்றும் தங்கத்தைப பெறும் பாத்தியதை அந்தக் குடும்பத்தினருக்கு இருந்தது. துஸிடிடெஸின் தகப்பன் ஆலோரஸ் என்பவன், துஸிடிடெஸ் ஒரு சான்றோன் எனக்கேட்டு ஈன்ற பொழுதிற் பெரிதுவந்த தாய் யாரோ, தெரியவில்லை.

"வரலாற்றின் தந்தை" என்று நாளைக்கும் போற்றப்படும் ஹெரொடோட்டஸும் சிந்திக்கக் கற்றுக்கொடுத்த ஸாக்ரட்டீஸும், பேரறிஞன அனக்ஸாகோரஸும் ஏதென்ஸ் நகரின் வீதிகளில் வலம் வந்து கிரேக்கத்தின் பெருமையை அதிகரிக்கச் செய்த காலத்திலேதான் இவனும் வாழ்ந்தான். பேரறிஞன் அனக்ஸ்கோரஸை ஆசானாகக் கொண்டு கல்வி கற்பதுதான் பெருமைக்குரியது என்று அக்கால கிரேக்க இளைஞர்கள் எண்ணி வந்தார்கள்.

மலர்மன்னன்

கிரேக்க மகான் ஸாக்ரட்டீஸ்கூட இவனிடத்தில்தான் கல்வி பயின்றான். நம் துஸிடிடெசும், எல்லோரையும்போல் தானும், அனக்ஸ்கோரஸிடம் மாணவனாகச் சேர்ந்தான்.

'ஏதென்ஸ் அரசாங்கத்தின் ஒவ்வொரு ஏதென்ஸீ இளைஞனும் இராணுவக் கல்வி கற்றாக வேண்டும்' என்ற சட்டத்தின்படி ஏட்டுக் கல்வியை முடித்துக்கொண்டதும் இராணுவக் கல்வி கற்கலானான். இராணுவப் பயிற்சி துஸிடிடெஸை போர் நுட்பங்களை நன்கறிந்த தளகர்த்தனாகவும் சிறந்த ராஜதந்திரியாகவுமாக்கிற்று.

மேதை துஸிடிடெஸ் ஏதென்ஸின் தலைசிறந்த அறிவாளிகளுடன் தொடர்பு கொண்டான். அவர்களுடன் கூடி உரையாடி, தன் அறிவை மேலும் விரிவாக்கிக்கொண்டான்.

அன்றைய கிரேக்கம் பல பிரிவுகளாகப் பிரிந்து கிடந்ததென்று முன்பே சொன்னோமல்லவா? ஒவ்வொரு பிரிவும் தனித்தனியே அரசாட்சி செய்து வந்தது. இவ்வாறு கிரேக்கம் பல துண்டுகளாக இருந்த காலத்திலேதான், பாரசீகம், 'பிரிந்து கிடக்கும் கிரேக்கத்தை எளிதில் கைப்பற்றிவிடலாம்' என்று பேராசைகொண்டு பெரும்படை திரட்டி வந்தது. ஆனால் அதன் மனக்கோட்டை கிரேக்கத்தால் தரைமட்டமாக்கப்பட்டது. பிரிந்துகிடந்த கிரேக்கம், பகைவனை முறியடிக்க ஒன்றுபட்டு எழுந்தது. பாரசீகம் படுதோல்வியடைந்தது. தங்கள் பொதுப் பகைவனை புறங்காண, தங்களுக்குள் இருந்த மனத்தாபங்களையெல்லாம் மறந்துவிட்டு, ஒன்றுபட்ட கிரேக்க நாடுகள் அந்தப் பகைவனைத் தோற்கடித்தானதும், மறுபடியும் முன்போலவே ஒன்றுக்கொன்று எதிர்த்துக்கொள்ளத் தொடங்கின. கிரேக்க நாடுகள் இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிந்தன, ஒன்று ஏதென்ஸ்; மற்றொன்று ஸ்பார்ட்டா.

ஏதென்ஸ், தன்னை ஆதரித்த நாடுகளையெல்லாம் சேர்த்துக்கொண்டு 'டெலோஸ் கூட்டமைப்பு' என்ற பெயரில் ஒரு சமஷ்டியை அமைத்தது. அதேபோல, ஸ்பார்ட்டாவும், தன்னை ஆதரித்த நாடுகளையெல்லாம், சேர்த்து 'பொலெப் பொனேசியக் கூட்டமைப்பு' என்ற பெயரில் ஒரு சமஷ்டியை ஏற்படுத்திக் கொண்டது. இரண்டு சமஷ்டிகளும், ஒன்றையொன்று குற்றம் சாட்டிக் கொண்டு, போர்க்களத்தில் இறங்கின. இரண்டு சமஷ்டிகளுக்கும் நடைபெற்ற இந்தப் போராட்டம் கிரேக்கத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்தது. சீரும் சிறப்பும் பேரும் புகழும் பெற்றுத் திகழ்ந்த கிரேக்கத்தின் அழிவுக்கு அடிகோலிய இந்தப் போரை பொலாப் பொனேசியப் போராட்டம் என்பார்கள்,

இந்தப் போராட்டத்தில் நம் துஸிடிடெஸும் கலந்துகொண்டான். தன் தாயகத்தின் வெற்றிக்காகக் கடற்படைக்குத் தலைமை தாங்கினான். ஏதென்ஸ் இவனை, தாசோஸ் என்ற தீவிற்குப் போய், கடற்படையுடன் தங்கியிருக்குமாறு ஆணையிட்டது. தாய் நாட்டின் ஆணைப்படி, தாஸோஸுக்குப் போய் தன் உறையுளை அமைத்துக்கொண்டு, எதிரிப் படைகளுக்குத் தன் நாட்டுப் பகுதிகளைப் பறிகொடுத்து விடாமல் பாதுகாத்தான். இவன் எவ்வளவோ முயன்றும், ஆம்ப்பிபோலீஸ் என்ற நகரம் மட்டும் எதிரிகள் வசம் சிக்கிவிட்டது.

ஏதென்ஸின் வெற்றிக்காக உயிரையும் துச்சமெனக் கருதி அரும்பாடு பட்ட துஸிடிடெஸைப் பாராட்டவேண்டிய ஏதென்ஸின் மக்கள் சபை, ஆம்ப்பிபொலிஸ் பறிபோனதற்கு அவன்தான் காரணம் என்று அபாண்டமாகப் பழி சுமத்தி, அவனை நாடு கடத்தியது. நல்லவர்கள், நாட்டு மக்களுக்கு நல்லறிவு புகட்டுபவர்கள், எல்லோருமே நிகழ் காலத்தில் தீயவர்களாகத்தான் கருதப்பட்டு வந்திருக்கிறார்கள். அறிஞர்களுக்கு நிகழ்காலம் என்றுமே எதிராளியாகத்தான் இருந்துவருகிறது. ஸாக்ரட்டீஸுக்கு நச்சுக் கோப்பையையும், சமுதாய ஒப்பந்தத்தைத் தந்த ரூஸ்ஸோவிற்கு 'பைத்தியக்காரன்' என்ற பட்டத்தையும், ஏசுநாதருக்குச் சிலுவையையும், நபிகள் நாயகத்திற்கு கல்லடியையும், காந்தியடிகளுக்குத் துப்பாக்கிக் குண்டுகளையும் பரிசாகத் தந்த உலகம், துஸிடிடெஸை மட்டும் சும்மா விட்டுவிடுமா?

அறிஞன் துஸிடிடெஸ் எங்கெங்கெல்லாமோ அலைந்து திரிந்து தன் அறிவையும் அநுபவத்தையும் பெருக்கிக் கொண்டான். ஆழ்ந்த சிந்தனைகளில் மூழ்கி, தன் மனத்தைப் பளிங்கைப்போல் தெளிய வைத்துக்கொண்டான். இந்தக் காலத்திலேதான் இவனுக்கு, ஏதென்ஸுக்கும் ஸ்பார்ட்டாவுக்கு மிடையே நடைபெற்றதும், தான் பங்கு கொண்டதுமான பெலொப் பொனேசியப் போராட்டத்தைப் பற்றிய விரிவான சரித்திரத்தை எழுத வேண்டுமென்ற எண்ணம் பிறந்தது. அதற்கான தகவல்களையெல்லாம் திரட்டுவதிலேயே, தன் தேசப் பிரஷ்ட காலத்தைச் செலவிட்டான் இவன்.

வரலாறு எழுதுவதென்பது எல்லாச் சௌகரியங்களும் நிரம்பியுள்ள இந்தக் காலத்திலேயே மிகவும் சிரமமானது. துஸிடிடெஸ் எவ்விதத் துணையுமின்றி, தானொருவனாகவே பெலொப் பொனேசியப் போரின் சரித்திரத்தை எழுதியிருப்பதைப் பாராட்டாமலிருக்க எவராலும் முடியாது.

துஸிடிடெஸ் ஒரு ஏதென்ஸ் நாட்டவன். பெலொப்பொனேசியப்போரோ, அவனுடைய தாயகமான ஏதென்ஸுக்கும், ஸ்பார்ட்டாவுக்கும் நடைபெற்றது. அதுமட்டுமல்ல; துஸிடிடெஸும் அந்தப் போரில் ஈடுபட்டு, ஸ்பார்ட்டா படைகளுடன் போர் புரிந்திருக்கிறான். வாசகர்கள் இந்த இடத்தில் சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்; தனது தாய்நாட்டிற்கும் எதிரி நாட்டிற்கும், நடைபெற்ற போரைப்பற்றி அந்தப் போரில் கலந்துகொண்ட ஒருவன் எழுதுவானேயானால் நிச்சயமாக அவனது எழுத்துக்களில் நடுநிலைமையைப் பார்க்க முடியாது. ஆனால் மேதையான துஸிடிடெஸ், ஒரு வரலாற்று ஆசிரியன், நீதிபதியைப்போல் நடந்துகொள்ள வேண்டுமென்பதை அறிந்தவனாதலால், தன் தாயகத்தை ஒரேயடியாகவானளாவப் புகழ்ந்து, அதன் பக்கம் எள்ளளவு தவறும் இல்லை என்று சாதித்தோ, அதே சமயத்தில், தனது பகை நாட்டை மட்டப்படுத்தி, எல்லாப் பழிகளையும் அதன் தலையில் போட்டோ எழுதவில்லை. இந்த நேர்மை, துஸிடிடெஸ் போன்ற, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற மனப்பான்மை கொண்ட மேதையர்களிடம் மட்டுமே காணப்படும்.

துஸிடிடெஸின் நூலில் எந்தப் பக்கத்தைப் புரட்டினாலும் சொற்பொழிவுகளாகவே இருக்கின்றன, இவன் தளபதிகள், மக்கள் சபை உறுப்பினர், தூதுவர்கள், பிரதிநிதிகள் முதலியோர் தத்தம் கருத்தைப் பேசுவது போலவே தன் நூலிற் பெரும்பகுதியை எழுதியிருக்கிறான். அதன் காரணமாக இந்த நூல் ஒரு நாடகம் போலவே இருக்கிறது. ஏதென்ஸின் தளபதிகள், பிரதிநிதிகள் முதலியவர்களின் வாயிலாக, இவன் தனது தாய்நாட்டுப்பற்றை வெளிக்காட்டுகிறான். அதே சமயத்தில், ஸ்பார்ட்டாவின் பிரதிநிதிகள் முதலானவர்களது வாயிலாக ஸ்பார்ட்டாவையும் போற்றி எழுதியிருக்கிறான்.

இவனது நூலில்சொற்பொழிவுகள் மண்டிக்கிடப்பதிலிருந்து, இவன் ஒரு சிறந்த நாவலனென்றும் பேச்சுக் கலையின் இலக்கணத்தை நன்குணர்ந்தவன் என்றும் ஊகிக்கலாம்.

துஸிடிடெஸின் நூல் சொற்பொழிவாற்றும் திறமையைப் பெறவேண்டுமென்ற ஆவலுள்ளவர்கள் எல்லோரிடத்திலும் இருக்கவேண்டிய நூல். இந்த நூல் எத்தனையோ பெரிய பெரிய நாவலர்களையெல்லாம் உருவாக்கியிருக்கிறது. டெமாஸ்தனிஸ் என்ற பெரும் பேச்சாளன், இவனது நூலைப் பலதடவை நகல் செய்து தன் பேச்சுத் திறமையை வளர்த்துக் கொண்டானாம். ரோமின் பேரரசனான ஐந்தாவது சார்லஸ் இவனது நூலைப் பலமுறை படித்துப் படித்து அறிவாளியானான். அரசாங்கத்தில் பெரும் பதவிகளை வகித்தவர்களும், போர்ப்பிரச்சாரகர்களும் இவனது நூலை எங்கே போவதானாலும் கூடவே எடுத்துப் போவார்களாம். மேனாட்டு அரசியல்வாதிகளெல்லோரும் துஸிடிடெஸின் நூலைக் கற்றறிந்தால்தான் மதிப்பு என்று கருதினார்கள்.

போரைப்பற்றிய தகவல்களைத் திரட்டுவதிலும்,பிறகு அவற்றைக் கோர்வையாக எழுதுவதிலும் தன் வாழ்நாளில் பெரும் பாகத்தைச் செலவிட்ட துஸிடிடெஸ், தான் துவங்கிய வேலையைச்சரிவரக்கூட முடிக்காமல், கி. மு. 400-ல் இறந்து காலமாகிவிட்டார்.

"துஸிடிடெஸுக்கு இணையாக வர எந்த வரலாற்றாசிரியனாலும் இயலாது" என்று தீர்மானமாகக் கூறுகின்றான் மெக்காலே. "துஸிடிடெஸை நாம் காண வேண்டுமானால் நாம் பெலொப் பொனேசியப் போரைப் படித்தாகவேண்டும்" என்கிறான், மற்றொரு மேதை. உண்மையான வார்த்தை: உண்மையான துஸிடிடெஸை நாம் பார்க்கவேண்டுமானால், அவனது நூலைப் படித்தாக வேண்டும். அதில்தான் அவனைத் தெளிவாகக் கண்டறிய முடியும்.

கிரேக்கம் மூன்று தலை சிறந்த வரலாற்றாசிரியர்களைத் தோற்றுவித்தது. அந்த மூவரையும், வரலாற்றறிஞர்கள் 'முப்பெரும் வரலாற்றாசிரியர்கள்' என்று போற்றுவார்கள். இந்த மூவரில் முதல்வன் ஹெரொடோட்டஸ். இவனை 'வரலாற்றின் தந்தை' என்று அழைப்பார்கள். துஸிடிடெஸ்தான் அடுத்தவன். இவனை, 'வரலாற்றுக்கு இலக்கணம் வகுத்தவன் என்று சொல்வார்கள். கடைக்குட்டி, ஜெனோபன். இவனை துஸிடிடெஸின நூலை நல்ல முறையில் திருத்தி, வெளியிட்டவன்' என்று அறிவுலகம் பாராட்டுகிறது.

துஸிடிடெஸின் எழுத்துக்கள் ஆழ்ந்த கருத்துக்களை உள்ளடக்கியவை. உன்னி உன்னிப் படிப்பவர்களுக்கு மட்டுமே, துஸிடிடெஸின் நூல் மகிழ்ச்சியைத் தரும். எனவே, சிலர், "அப்படியென்ன எழுதிவிட்டான் இவன்! என்று கூறிவிடுவதுண்டு.

துஸிடிடெஸின் காலம், கிரேக்கம் புகழேணியின் உச்சியில் வீற்றிருந்த காலம்: கிரேக்கம் நாகரிகத்தின் எல்லையில் நின்ற காலத்தில் துஸிடிடெஸ் வாழ்ந்திருக்கிறான். ஆனால் அவனது நூலில் அதன் சாயல் துளியளவுமில்லை. கிரேக்கத்தின் அப்போதைய சிறப்பான அம்சங்களை இவன் தன் நூலில் காட்டவில்லை; ஆனால் அவன் காலத்தில் கிரேக்கத்தில் பரவிய மிகக் கொடிய நோயொன்றைப் பற்றி விரிவாகஎழுதியிருக்கிறான்!

துஸிடிடெஸின் நூல் முழுவதும், போர்க்களம், போரைப் பற்றிய வாக்குவாதங்கள் நிகழும் சபை, இவற்றாலேயே பின்னப்பட்டிருக்கிறது. இது இலக்கிய உள்ளம் படைத்தவர்கட்கு வெறுப்பைத் தருவதாக இருக்கலாம். வரலாற்று ஆசிரியர்களாலும், பேச்சாளர்களாலும்தான், அவனது நூலின் சிறப்பையும், அவன் எத்தகைய அருஞ்செயலைச் செய்திருக்கிறான் என்பதையும் அறிந்து கொள்ள முடியும்.

துஸிடிடெஸ் உலகிலுள்ள இளைஞர்களெல்லாம் நாவன்மை மிக்கவர்களாக, ஒரு சிறந்த நூலைத் தந்து விட்டுப் போயிருக்கிறான்; அந்த நூல் மேனாட்டு மொழிகள் எல்லாவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன.

தமிழ் நாட்டு இளைஞர்கள் சிறந்த பேச்சாளர்களாக வேண்டுமென்ற பேரவாக்கொண்ட நல்லறிஞர் வெ.சாமிநாதனவர்கள்,மேதை துஸிடிடெஸின் நூலைத் தமிழ்ப்படுத்தித் தந்திருக்கிறார்கள். அந்தச் சிறந்த நூலைப் பயன்படுத்திக்கொள்வது தமிழர்களின் முதற் கடமையாகும்.

★

முயற்சியும் பயனும்

"அன்பு"

"தோழி!"

"என்னம்மா? ஏன் வாட்டமுற்றிருக்கிறாய்? இப்போதுதானே உன் தலைவன் வந்து சென்றார்."

"தலைவன் தான் தினம் தினம் வந்து செல்கிறாரே...எவ்வளவு நாட்கள்தான் இப்படிக் களவொழுக்கத்திலேயே அவரைச் சந்தித்துக் கொண்டிருப்பது?...பெற்றோருக்குத் தெரிந்துவிட்டால் அப்புறம் இப்படி சந்திப்பதும் முடியாத செயலாகிவிடும்"

"ஏன் அவரிடம் திருமணத்தைப் பற்றி நினைவூட்டுவதுதானே?"

"நினைவூட்டித்தான் வருகிறேன். அவரும் முயற்சி செய்து கொண்டு வருவதாகத்தான் கூறுகிறார்...என்ன முயற்சியோ?"

"அப்படிக் கூறிவிடாதே! முயற்சியால் முடியாத செயலே இவ்வுலகில் இல்லை. முயற்சி திருவினையாக்கும். முயற்சி வெல்லும்..."

"போதுமடீ! பெரிய தத்துவம் தான்!"

"தத்துவம்இல்லையம்மா, உண்மை. கண்டறிந்த உண்மை"

"என்ன உண்மை, சொல்லு பார்ப்போம்."

"சொல்லுகிறேன் உன் தலைவர் உன் முகத்தை எதற்கு ஒப்பிட்டார்?"

"அதெல்லாம் உனக்கெதற்கடீ?"

"நீ சொல்லாவிட்டால் நான் சொல்லுகிறேன்! தாமரை போன்ற முகம் என்றுதானே கூறினார்?"

"குறும்புக்காரி! அதையெல்லாம் நீ எப்படிப் பார்த்தாய்?"

"பார்க்கவில்லையம்மா, கேட்டேன்!"

"சரி அவர் ஒப்பிட்டதற்கென்ன?"

"அவர் ஒப்பிட்டது சரியல்ல, முற்றிலும் தவறு! எப்படித் தெரியுமா? வண்டுகள் மதுவுண்ணும் தாமரையைப் போன்றதல்ல உன் வதனம்! மாறாக உன் வதனத்தைப் போன்றதுதான் இந்தத் தாமரை!! வேறுபாடு புரிந்ததா?"

"போடீ! பெரிய கண்டுபிடிப்புத்தான்"

"இதுவல்லக் கண்டுபிடிப்பு. இனி இதிலிருந்து வருவதுதான் கண்டுபிடிப்பு...இந்தத் தாமரை உன். முகச் சாயலை எப்படிப் பெற்றது தெரியுமா? முயற்சி, இடைவிடா முயற்சியின் விளைவே அது. முதன் முதல் உன் முகத்தைப் பார்த்ததும் 'நாம் அவள் முகத்தைப் போன்றில்லையே' என்று மிகவும் வருந்தி உன் முகத்தின் சாயலை எப்படியும் பெற்றுவிட வேண்டும் என்ற எண்ணமதைத் திண்ணமுற மனதில் கொண்டது. எண்ணினால் மட்டும் போதுமா? முயலவேண்டுமே! ஆகவே இடைவிடா முயற்சியுடன் தன் ஒற்றைக் காலில் நின்று தவம் புரியத் தொடங்கியது. கடைசியில் முயற்சியின் பயனாக உன் வதனத்தின் சாயலைப் பெற்றது! இருந்தும் ஒற்றைக்கால் நிலை மாறவில்லை!"

"அதுபோல..."

"அதுபோல உன் தலைவரும் அவர் முயற்சியில் பயனடைந்தே தீருவார். முயன்றால் இப்பாரில் முடியாதது என்று ஒன்றுமே இல்லை! உன்னை மணப்பார். மணந்த பிறகு அவர் முன்பு கூறிய உவமையைத் தவறென்று நினைத்து நான் கூறிய உண்மையை உணர்வார்!"

தண்துறைநீர் நின்ற தவத்தால் அளிமதுவு
புண்டரிகம் நின்வதனம் போன்றதால்— உண்டோ
பயின்றால் உளம்பருகும் பண்மொழியாய் பார்மேல்
முயன்றால் முடியாப் பொருள்.

★

தூண்டுகோல்!

[மாண்மகிழன்]

தூண்டுகோல் ஆக்கத்தின் அச்சாணி என்று சொல்லப்படுகிறது. தூண்டுகோலால் உலகு பெற்ற ஆக்கங்கள் பல. அவற்றுள் நம்மிடையே அடிபடும் டெலிபோனும் ஒன்று.

டெலிபோனை உலகத்திற்குத் தந்தவர் அலெக்சாண்டர் கிரகம் பெல் என்பது யாவருக்கும் தெரிந்திருக்கும். ஆனால் (பெல்லுக்கு) அவருக்கு டெலிபோனை கண்டுபிடிக்கத் தூண்டுகோலாய் இருந்தது யார் என்பது திட்டவட்டமாக எல்லோருக்குமே தெரிந்திருக்க நியாயமில்லை.

அத்தகைய ஒரு தூண்டுகோல் பெல்லுக்குக் கிடைத்திராவிட்டால், அவர் டெலிபோனைக் கண்டுபிடித்த பெருமையினைப் பெற்றிருப்பார் என்பது சந்தேகத்திற்குரியதுதான்!

ஏனென்றால் அவர் அத்தகைய இடர்ப்பாடுகளின் மத்தியிலே சிக்கி இருந்தார். ஆராய்ச்சி செய்துகொண்டிருந்த நேரங்களில் அவருக்கு மருந்துக்குக்கூட ஒருவர் உற்சாகமூட்டும் வார்த்தைகளை உதிர்த்தது கிடையாது. ஆராய்ச்சிகளுக்குத் "தீனி" போட்டு உதவிய அவருடைய பிற்கால மாமனார் — அன்புடைக் காதலி — நண்பர்கள் — மற்றவர்கள் எல்லோருமே அவருடைய திட்டத்தைக் கண்டு நகைத்தார்கள். 'பகற்கனவு'—'கடை காலற்ற மனக்கோட்டை' என்றெல்லாம் கூறி எள்ளி நகையாடினார்கள். இந்நிலையில் அவருக்கு ஏது தூண்டுகோல்? கேட்கத் தூண்டுகிறது! தூண்டுகோல் இருந்தது; வரும் பதில்! எப்படி—எங்ஙனம்? மீண்டும் எழும் ஐய வினாக்கள் இவை!

அப்பொழுது பெல்லுக்கு வயது இருபத்தைந்து இருக்கும். போஸ்டன் நகரத்திலே செவிடு நிவாரண ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். செவிடு நிவாரணத்தைத் துரிதப்படுத்தும் பல புதிய முறைகளைக் கையாண்டதோடு, ஓய்வுநேரங்களில் ஆராய்ச்சிகளும் செய்துவந்தார். இச்சமயத்தில்தான் இசைத் தந்தி ஆராய்ச்சியில் உயிரையே கொடுத்து வந்தார். மேலும் தொடர்ந்து புதிய ஆராய்ச்சிகளிலே ஈடுபட மனமிருந்தும், பொருளாதாரத் தொல்லையால்மார்க்கமின்றித்துன்புற்று வந்தார். இதுவே அவருக்குப் பெருங் கவலையாகப் போய்விட்டது.

இதை அந்த நகரத்து மிகப் பெரிய பணக்காரரான அப்பார்ட் அறிந்தார். அவருக்கு இருந்த ஒரே ஒரு செவிட்டு மகள் கூட பெல்லிடம்தான் நிவாரணம் பெற்றுவந்தாள். பெல்லின்மேல் அவருக்கு, மகள்மேல் எவ்வளவு அன்பு இருந்ததோ, அவ்வளவு அன்பு இருந்தது. காரணம், பெல், தன் மகள் மேபலின் அருமைக் காதலன் என்பதால்தான்.

எனவே ஆராய்ச்சிகளுக்குப் பண ஒத்தாசை செய்ய முன்வந்தார். தன் மகளுக்கு, செவிடு நிவாரணம் தருவதற்கென்றே கண்டுபிடிக்கப்போகும் புதிய கருவிக்கான ஆராய்ச்சிகளே, பெல் உயிரைக் கொடுத்துச் செய்துவருபவை என்பதை அறிந்ததும், அவருக்கு மகிழ்ச்சி மேலிட்டது. தாராளமாக ஆராய்ச்சிகளுக்கு உதவி வந்தார்.

நாட்கள் நகர்ந்தவண்ணம் இருந்தன. ஆராய்ச்சிகளோ பயனின்றிச் சென்றுகொண்டே இருந்தன. எனவே சலிப்பு முளைத்தது. நகைப்புப் பிறந்தது!

ஆனால் பெல் மட்டும், காதலியின் குறையினைத் தீர்த்தே ஆகவேண்டும் என்ற குறையா ஆசையினால் தளராமல் முயன்றவாறு இருந்தார். அந்த முதிர்ந்த முயற்சியின் பயனால் டெலிபோனைக் கண்டுபிடித்தார். ஊர் அறிந்தது! பெல்லுக்கு புகழ்மாலைகளைச் சூட்டிக் கொண்டாடினார்கள்.

ஆனால் கடைசிவரை அவரால் தன் காதலியின் குறையைத் தீர்த்துவைக்கவே இயலவில்லை. அவரை, ஏளனத்துக் கிடையிலே—தரித்திரத்திற்கிடையிலே தொடர்ந்து சளைக்காமல் ஆராய்ச்சியில் இறங்கத் தூண்டியது, தன் காதலிக்கு உள்ள குறையை நீக்கவேண்டும் என்ற ஆவலாகிய தூண்டுகோல் என்றுதான் கூறவேண்டும். வேறென்ன கூறக்கூடும்?

பெல், தன் காதலியைக்கண்டு வெற்றிச் சிரிப்பு சிரித்தபோது "உலகமே புகழும் என் வாகைக்கு, தாரகையே நீதான் தூண்டுகோல் என்பதை யார் அறிவார்கள்" என்ற உண்மை ஒலிக்காமல் ஒலித்தது!

★

கலியாணமாகி வீட்டிற்கு நாட்டுப் பெண் வந்துவிட்டால் போதும்! தாயாரின் உரிமை உணர்ச்சி தனக்கே சொந்தம் என்ற மனப்பான்மை முழுச்சக்தியுடன் வெளிக்கிளம்பிவிடுகிறது. தன் பிள்ளை தன்னிடம் வைத்திருக்கும் அன்பிற்கு பங்காளியாக ஒருத்தி தோன்றிவிட்டாளே, பிள்ளை தன்னை அலட்சியம் செய்துவிடுவானோ என்றொரு பயம். நாட்டுப் பெண்ணும், இவர் அம்மா சொல்வதையே கேட்கிறாரே என்று நினைக்கிறாள். அந்த உரிமை உணர்ச்சியின் காரணமாக மாமியார் மருமகள் கலகங்கள் ஏற்பட்டு வீடு இரண்டுபடுகிறது. தாய்மார்களுக்கு இது மிக மிகப் பெரிய சோதனை காலம். புத்திசாலித்தனமாகவும், சாதுரியமாகவும் நடந்துகொள்ளவேண்டும். கற்றறிந்த பெண்கள் எப்படியோ சமாளித்து விடுகிறார்கள்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

அலுவல்கள் இல்லாமல் இருக்கவேண்டும்.

நான் கவனிக்காதபோது, அவைகள் எப்படி நடக்கின்றன, என்பதை நான் பார்க்கவேண்டும்."

இதற்காகவே ஓய்வு கேட்கிறார்! ஓய்வும், ஓராண்டுக்கோ ஈராண்டுக்கோ அல்ல—கொஞ்ச நாளைக்குத்தான், என்பதை அவரே தெளிவுபடுத்தியிருக்கிறார்!! டில்லியிலிருந்து வரும் சேதியொன்று, "மூன்று மாத காலத்துக்கே இந்த ஓய்வு", என்று கூறுகிறது.

இவ்வளவு காலம் பாடுபட்ட ஒரு தலைவர் மூன்று மாத ஓய்வு கேட்பது, உள்ளத்தை உணர்ச்சி வசப்படச் செய்யும் கட்டமாகும். நாட்டு மக்களின் மனதிலே இடம் பெற்றுவிட்ட அவர், அப்படிக் கேட்கிறபோது, நெஞ்சுருகும் நிலை பெறுவோர் ஏராளம் உண்டு. உணர்ச்சிக் கொந்தளிப்பால் 'கூடாது, கூடாது' எனக் கூறுவோரும், இருக்கவேசெய்வார்கள். நேரு அவர்களது அறிக்கையைப் படித்ததும் ஒரு உறுப்பினர் ஓடோடியும் சென்று, "இதென்ன இப்படி அணுகுண்டைப் போடுகிறீர்கள்?" என்று கேட்டிருக்கிறார்.

நாடே, இன்று பேசுகிறது அவர் அறிவிப்பு கண்டு! அவர் கேட்கும் ஓய்வுக்கும், ஒதுங்குவதற்கும் வித்தியாசம் புரியாமல் மயங்கிடும் மக்களும், உண்டு!

ஓய்வு பெறுவது என்பது சாதாரணமானதுதான். சர்ச்சில் துரைமகனார், பிரிட்டன் முதலமைச்சராயிருந்த காலத்தில், கிராமத்திலிருக்கும் தனது உல்லாச வீட்டுக்கு அடிக்கடிப் போய்விடுவதுண்டு. ஐசனோவரைப்பற்றியும், ஓய்வுக்காக அங்கே போயிருக்கிறார் இங்கே போயிருக்கிறார் என்கிற செய்திகளை நாமேடுகளில் காண்பதுண்டு.

நேரு அவர்களும், இதுபோல ஓய்வு பெறலாம்! ஆனால், அவர் அதையும் ஒரு தேசியப் பிரச்னை ஆக்கியிருக்கிறார் — அந்த இடம் தான், நம் சிந்தனைக்கு வேலை கொடுக்கிறது!!

இரண்டு மாதம்—மூன்று மாதம் என்று அவர் வெளிநாடுகளுக்குப் போகிறபோதெல்லாம், இப்படி அவர் அறிக்கையேதும் வெளியிடுவதில்லை. போவார்! வருவார்! அப்போதெல்லாம், ஆட்சிக் காரியங்கள் நடக்காமலுமில்லை—எப்படி நடக்கிறது என்பதை வெளியிலிருந்து பார்க்கும் வாய்ப்பும் ஏற்பட்டிருக்கிறது.

இப்போதும், தனது பொறுப்புகளை சகாக்களிடம் ஒப்படைத்துவிட்டு, இரண்டு மூன்று மாதங்கள் இவர் போயிருப்பதென்றால் மறுப்பார் கிடையாது—ஒருசேதி, "நேரு அவர்கள் ஓய்வுக்காக இமயமலைச்சாரலுக்குப் போயிருக்கிறார்" என்று வெளியிட்டுவிட்டால் போதும்! இருந்தும் நேரு அவர்கள் இதனைப் பெரிதாகக் கருதுகிறார் — அவசரமாகப் பார்லிமெண்டு காங்கிரஸ் கட்சியைக் கூட்டி அங்கே அறிவிக்கிறார் — 'பரபரப்பும் பதைபதைப்பும் காங்கிரஸ் வட்டாரங்களில் உருவாக்கப்படுகிறது!!

வெகு எளிதில் முடித்துக் கொள்ளக் கூடிய இந்தக் காரியத்துக்காக, இவ்வளவு பெரிய பரபரப்பு உருவாக்கப் படுவதால், இதில் ஏதாவது உள்நோக்கம் உண்டோ என்று எண்ணுவோரும் இருக்கவே இருக்கிறார்கள்.

ஏனெனில், இன்று காங்கிரஸ் கட்சி உள்ள நிலையையும் — மத்ய பீடத்திலேயே உருவாகியிருக்கும் ஒருவர்க்கொருவர் தகராறையும் — ஒவ்வொரு மாநிலத்திலும் நடந்துகொண்டிருக்கும் குடுமிபிடிச் சண்டைகளையும் பார்க்கிற ஒருவருக்கு, "அப்பப்பா! இந்தக் கூச்சல்களே இல்லாத இடமாக ஒரு மூன்று மாதத்துக்குப் போய் இருந்து தொலைத்துவிட்டு வருவோம்" என்கிற சலிப்பு வரத்தான் செய்யும்.

இப்படி சலிப்புவரும் சமயங்களிலெல்லாம் நேரு அவர்கள், அதிர்ச்சி வைத்தியம் செய்வதுண்டு. அவர் கைவசமுள்ள மருந்து, "நான் விலகிக்கொள்ளப் போகிறேன்! ஓய்வுப்பெறப் போகிறேன்!!", என்பதுதான். இதனால் பரபரப்பு பரவும்—மத்திய பீடத்திலிருப்போர் கூட நேருவை நாடி வேண்டாம் என்பார்கள்—வெளிநாடுகள் பேசும்—உள்நாடு எங்கும் பேசப்படும்—கடைசியில், வழக்கம் போலாகிவிடும்!!

இப்போது நேரு அவர்களும், அந்த அதிர்ச்சி வைத்தியத்துக்காகத்தான் இந்த அறிவிப்பைத் தந்திருக்கிறாரோ என்று ஐயம் கொள்வதில், பொருளில்லாமலில்லை.

அவர் ஓய்வுகேட்பதிலும், அதிலுள்ள உள்ளமுருக்கும் வாசகங்களையும், நாம் உணருகிறோம். அவருக்கு, இந்தஉபகண்டத்தின் வாழ்விலுள்ள அவசியத்தையும் நாம் அறியாமலில்லை. எப்போதும் அவருடைய தொண்டும் சேவையும், நமது மரியாதையைப்பெறுவதாகும்.

ஆனால், இதனையும் ஒரு 'அதிர்ச்சி வைத்தியமாக' அவர் கருதிடின், காங்கிரஸ் கட்சியின் கண்றாவிக்கோலமே நமக்குத்தெரிகிறது! கோஷ்டிச் சண்டைகளாலும், தலைவர்களுக்குள்ளேயே பூசலாலும், கேடுற்றுவரும் அக்கட்சியை, "அதிர்ச்சி வைத்தியங்களா" காப்பாற்றிவிடும்—ஒரு போதுமில்லை!!

★

நாடெங்கும் விற்பனையாகிறது!

'எனது முதல் சந்திப்பு'—இயக்கத் தலைவர்கள் எழுதுவது. சட்ட மன்றத்தில் நான்—நமது எம். எல். ஏ. க்கள் எழுதியது, மற்றும் அரசியல் சினிமாப் பகுதிகள்

'அண்ணா'

ஆசிரியர்:- டி. என். இராவணன்

தி. மு. க. வார ஏடு

விலை 10-காசு

விற்பனையாளர்கள் இல்லாத ஊர்களில் முன் பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை. விவரங்களுக்கு;

பொறுப்பாளர்,
அண்ணா
46, மெக்னிகல் ரோடு,
சேத்துப்பட்டு, சென்னை 31

பெங்களூர் மாநாட்டில்

—[★]—

அண்மையில் அமிருதசரசில்கூடிய இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி நிறைவேற்றிய தீர்மானத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தை ஏசியிருப்பதை இம் மாநாடு கவனித்து, அந்தத் தீர்மானத்தின் அடிப்படையான காரணம், நம் வளர்ச்சியைக் கண்டு கம்யூனிஸ்டுகள் அடைந்துள்ள ஆத்திரம் தான் என்றும், அத்தீர்மானம், கம்யூனிஸ்டுக் கட்சியின் பலவீனத்தையே குறிக்கும் என்றும் கருதுவதுடன், கம்யூனிசத் தத்துவப்படி தேசிய இனங்களடங்கிய மாநிலங்களுக்குப் பேரரசிலிருந்து பிரிந்துபோகும் உரிமைக்காகப் போராடும் திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்க்கும் கம்யூனிஸ்டுகள் கொள்கைக் குழப்பத்தின் காரணமாகத்தான் இந்தப் பரிதாபத்துக்குரிய நிலையை அடைந்துவிட்டார்கள் என்றும் இம்மாநாடு கருதுகிறது.

*

பெங்களூர், கோலார், மற்றும் பத்திராவதி முதலிய ஊர்களில் குடிதண்ணீர் வசதிகளை செய்து தரத்தக்க திட்டம் தீட்டி செயல்படுமாறு மைசூர் அரசியலாரை இம்மாநாடு கேட்டுக்கொள்வதோடு, பத்திராவதியிலுள்ள அரசாங்கத் தொழிற்சாலையினின்று வரும் அசுத்த நீரை பத்திரா நதியில் ஊருக்கருகில் கலக்கவிடாமல் தக்க வசதிகள் செய்து தரவேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

*

(அ) கருநாடகப் பகுதியில் ஆசுப்பேட்டை, சாந்தூர் முதலிய இடங்களில் எடுக்கப்படும் மாங்கனீசு, இரும்பு ஆகிய தாதுப் பொருள்களிலிருந்து மேற்படி உலோகங்களைப் பிரித்தெடுக்கும் தொழிற்சாலைகளை நிறுவி, அதன்மூலம்ஏற்றுமதியைத் தடுத்து பாட்டாளிகளுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று இம்மாநாடு டெல்லி ஆட்சியைக் கேட்டுக் கொள்கிறது.

(ஆ) வட கருநாடகத்தில் கிடைக்கும் சுரங்கப் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு தக்கபடி கார்வார் துறைமுகத்தை விரிவுபடுத்துமாறும் ஊப்ளியிலிருந்து தாதுப் பொருள்களை கார்வாருக்கு எடுத்துச் செல்வதற்கு எந்தவித வசதியும் இல்லாததால் அதிவிரைவில் ஊப்ளி — கார்வார்—தண்டாலே இரயில் பாதை அமைக்குமாறும் இம்மாநாடு மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

சாமராஜ நகரிலிருந்து சத்திய மங்கலம் இரயில் பாதை அமைக்க வேண்டும் என்ற திட்டத்தையும் துரிதமாக நிறைவேற்ற வேண்டுமென இம்மாநாடு வற்புறுத்துகிறது.

(இ) முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் முடிக்கப்பட்டிருக்கவேண்டிய துங்கபத்திரா மேட்டு நிலக் கால்வாய்த் திட்டம் (Tungabadra High Level Canal Scheme) டெல்லி ஆட்சியின் பாரபட்சத்தால் இன்னும் துவக்கப்படாமல் இருப்பதையும், தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மின்சார உற்பத்திச் சாலைகள் இன்னும் முழு அளவு

> வெற்றிகரமாக நடைபெற்ற பெங்களூர் மாநாட்டில், நிறைவேற்றப்பட்ட முடிவுகளில், சில.

இயக்கப்படாமல் காலம் கடத்தப்பட்டு வருவதையும் இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதோடு, திட்ட வரையறைக்குரிய அந்தந்தக் காலத்திலேயே துரிதத்தோடு முடிக்குமாறு இம்மாநாடு மத்திய ஆட்சியை வற்புறுத்துகிறது.

(ஈ) மல்நாடு (Malnad) பகுதிகளின் வளத்தைப்பற்றியும், அவற்றைத் தென்னகம் முழுவதற்கும் எவ்வாறெல்லாம் பயன்படுத்த முடியும் என்பது பற்றியும் இம் மாநில அரசு பன்முறை டெல்லிக்கு எடுத்துணர்த்தியபோதிலும், காலஞ்சென்ற ரபி அகமது கித்வாய் இதைப்பற்றிக் கவனித்து ஆவன செய்வதாக வாக்குறுதி அளித்திருந்த போதிலும், சிர்சியில் கூடிய மல்நாடு முன்னேற்ற மாநாட்டில் மூன்றும் முறையாக டெல்லி ஆட்சியின் கவனத்திற்கு இப்பிரச்சினைகளைக் கொண்டுவரும் நடவடிக்கை எடுத்துக்கொண்ட போதிலும், சுமார் ரூ. 5 கோடி செலவிலேயே மகத்தான முன்னேற்றம் அடைய முடியும் என்பதை மாநில நிபுணர்கள் வெளிப்படுத்திய பின்பும், டெல்லி ஆட்சி இத்துறையை அலட்சியப் படுத்துவதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

(உ) எட்டாண்டுகட்கு முன்னர் குடகு (Coorg) ஆட்சியினரால் டெல்லியிடம் சமர்ப்பிக்கப்பட்ட பாராபோல் நீர்ப்பாசன—மின் இயக்கத் திட்டத்தின் (Baropol Irrigation and Hydro - Electric Scheme) நீல நகல் (Blue Print) என்னவாயிற்று என்று இம்மாநாடு டெல்லி அரசைக் கேட்க விரும்புவதோடு, வடக்கில் பல நூறு கோடி ரூபாய்களால் சாதிக்கக் கூடியதைவிட அதிக நன்மையை ரூ. 19 கோடி செலவில் பாராபோல் திட்டத்தின் மூலம் பெற முடியுமென்று உணர்த்தப்பட்டிருந்த போதிலும், மத்திய சர்க்கார் இந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டதை வன்மையாகக் கண்டிப்பதோடு, உடனடியாக இத்திட்டத்திற்கு வாய்ப்பளிக்குமாறு இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது,

*

(ஊ) இதுகாறும் துங்கபத்திரா அணைக்கட்டு திட்டத்திற்காக உருவாக்கப்பட்ட (Shutter Manu - facturing Factory) நீர்த்தேக்க மதகு உற்பத்திச் சாலை இந்திய உபகண்டத்திலேயே மிக அரிய உற்பத்திக் கருவிகளைக் கொண்டதாக இருப்பதால் அதை மூடிவிடும் எண்ணத்தைக் கைவிட்டுவிட்டு இயந்திரக் கருவிகள் உற்பத்திச் சாலையாக (Machine Tools Factory) அமைத்து வட கருநாடகத்தின் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குமாறு இம்மாநாடு மத்திய அரசினரைக் கேட்டுக் கொள்கிறது.

*

(அ) தொழில் தகராறுகள் தற்போது மிக மிகத் தாமதமாக தொழில் கோர்ட்டுகளால் குறுகிய காலத்தில் தீர்க்கப்படாமல், குவிந்து கிடப்பதைக் குறித்து இம்மாநாடு வருந்துவதுடன், உடனடியாக ஆட்சியாளர்கள் இதுபற்றி ஆவன செய்யுமாறு இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

(ஆ) தொழில் தகராறுகள் விரைவில் முடிவதற்காக திராவிடப் பகுதிக்கென்று தனி சுப்ரீம் தொழில் கோர்ட் நியமிக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

*

பெங்களூரை யொட்டி வளர்ந்துள்ள தேவர் ஜீவனஹள்ளியில் ஒரு பகுதியான உப்புமாநகருக்குப் 'பெரியார் இராமசாமி நகர்' என்று பெயரிட வேண்டுமென அப்பகுதி மக்கள் பெருவாரியானவர்களால் வலியுறுத்தப்பட்டிருந்தும், 1946-ம் ஆண்டு நடைபெற்ற பெங்களூர் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தும் அரசியலார், இவ்வேண்டுகோளைக் கவனியாமல் இருப்பது குறித்து வருந்துவதுடன் உடனடியாக இதனை நிறைவேற்ற வேண்டுமென இம்மாநாடு வற்புறுத்துகிறது.

*

தென்னிந்திய இரயில்வே போன்ற துறைகளிலும், பெங்களூரில் மத்திய ஆட்சியின் சார்பில் நடத்தப்படும் (I. T. I., H. M. T., H. A. L., Bharat Electronics) போன்ற துறைகளிலும், முக்கிய நிர்வாகங்களுக்கு வட நாட்டினரை - பிரதேசத்தில் அத்துறை நிபுணர்கள் இருந்த போதிலும் - வடவரை அமர்த்துவதை இம்மாநாடு கண்டிக்கிறது; முடிந்த வரை இப்பிரதேசத்தவரையே அவற்றிற்கு நியமிக்க வேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

*

தங்கவயலில் உள்ள சானிடரி போர்டை முனிசிபாலிட்டியாக மாற்றி அமைக்க வேண்டுமென்று இம்மாநாடு கருநாடக சர்க்காரை வற்புறுத்துகிறது.

*

நாகு நீர்த்தேக்கத்திலிருந்து வடியும் நீரைக்கொண்டு சிம்ஷா மின்சார நிலையத்தில் மேலும் 2 உற்பத்தி யூனிட்டுகளைச் சேர்த்தால் 22,800 - கில்லோ வாட்டுகள் மின்சாரம் அதிகப்படியாகக் கிடைக்குமென்று காட்டப்பட்ட போதிலும், அதை இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்காமல் இருப்பதை மத்திய ஆட்சியின் கவனத்திற்குக் கொண்டு வந்து, முன்னுக்கு சேர்க்கப்படும் திட்டங்களிலாவது இதற்கு வாய்ப்பளிக்கும்படி இம்மாநாடு வற்புறுத்துகிறது. ★

புறம் தரும் பாடம்

—[கு. குட்டுவஞ்சேரல்]—

மலையமான் திருமுடிகாரி ஒரு குறுநில மன்னன். ஏழைகளின் நண்பன். புலவர்களுக்குப் பரிசில் வழங்குவதில் இவன் ஓர் புரவலன். இவனுடைய புற நாடுதான் மலை வளப்பமுடைய சிறிய நாடே தவிர, இவன் அகநாடு மிக விசாலமானது. பண்புடையது. பகுத்தறிவுடையது. எதையும் சிந்தித்துச் செயலாற்றும் திறனுடையது. எவ்வரசர்களுக்குள் போர் மூண்டாலும், அவர்கள் குறுநில மன்னராயினும் சரி, பெருநில மன்னராயினும் சரி, இவன் எந்தப் பக்கம் சேருகிறானோ, அந்தப்பக்கம் தான் வெற்றி நிச்சயம் கிடைக்கும். இதனால் இவனுக்கு மிகுந்த செல்வாக்கு உண்டு. இவன் காரி என்னும் குதிரையை உடையவன். இவன் அழகிய— நன்றாக வாரி விட்ட (தலை) முடியை உடையவன். இஃதே போல் நாட்டின் முடியையும் நல்லபடி ஆட்சி செய்யும் திறமுடையவன். இவனைப்பற்றி புலவர் கபிலர் கூறுகிறார்கேளுங்கள்:-

"பெரிய மலையினின்று இழிந்து நிறைந்திருந்து வழிகின்ற பெரிய அருவியை உடைய பழம் பெருமை வாய்ந்ததும், சிறப்பு மிக்கதும், மலைவளப்பம் அத்தனையும் உடைய நாட்டையுடைய புகழ் மிக்க அரசனாகிய திருமுடிகாரியைக் காணச் செல்வோர், நல்ல நாள் அல்லாத தினத்தில் சென்றாலும், பறவைகளின் சகுனத் தடையாயிருந்த நேரத்தில் சென்றாலும், நல்லசந்தர்ப்பம் இல்லாத நேரத்தில் சென்றாலும், திறனற்ற வார்த்தைகளை மொழிந்தாலும் திரும்பி வரும்போது வெறுங்கையோடு வருபவர் இல்லை" எனக் கூறுகிறார்.

இதிலிருந்து இவ்வரசன் சமயத்தையும் சமயச் சழக்கர்களையும் எவ்வளவு மதித்தான் என்பதும், சோதிடத்தையும் பஞ்சாங்கத்தையும் எவ்வளவு சோதித்தான் என்பதும், அக்காலத் தமிழர்களிடம் அறியாமை இருள் அகன்று பகுத்தறிவொளி வீசியது என்பதற்குச் சான்று வேறு என்ன வேண்டும்.

இது, இக்காலத்தில் பகுத்தறிவுக் கொள்கையை ஏற்க மறுக்கிறவர்களுக்கு புறம் தரும் ஒரு பாடமாக இருக்கட்டும்.

" நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிது பெயர் குநரல்லர் ;
நெறி கொளப் ; பாடான்றிரங்கு
பிடு கெழுமலையிற் பாடியோரே ! "

★

4--5--58 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு
எம். ஆர். ராதா நடிக்கும்
இரத்தக் கண்ணீர்
சென்னை
ஒற்றைவாடை தியேட்டரில்
கட்டணம்: ரூ. 3, 2, 1. அணா 8.
ஜி. என். சாமி, ஆர்கனைசர்.

தஞ்சை மாவட்ட

தி.மு.க. 3-வது மாநாடு

1958 மே 10, 11 சனி, ஞாயிறு ஆகிய நாட்களில்

திருவாரூரில் பன்னீர்செல்வம் பந்தல்,

அழகிரி அரங்கில் நடைபெறும்.

தலைவர்	திறப்பாளர்
கே. ஏ. மதியழகன் பி. ஏ.	**ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ.**

அண்ணாதுரை, நாவலர் நெடுஞ்செழியன்

என். வி. நடராசன்,
ஈ. வெ. கி. சம்பத் எம். பி.,
ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ.,
இரெ. இளம்வழுதி,
தில்லை வில்லாளன் எம்.ஏ.
டி.கே. தாமரைச்செல்வன்
கி. மனோகரன்
கா. அப்பாதுரையார் எம்.ஏ., எல்.டி.,
எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ.,
அ. பொன்னம்பலனார்,

அன்பில் தருமலிங்கம்,
க. அன்பழகன் எம்.எல்.ஏ.,
சி. பி. சிற்றரசு,
காஞ்சி- கல்யாணசுந்தரம்,
இரா. செழியன், எம்.ஏ.,
இராம. அரங்கண்ணல்,
கண்ணதாசன்,
ஏ.கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
வி. பி. இராமன்,
மதுரை. முத்து,
டி. வி. நாராயணசாமி,
புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன்

இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன்
மூதாட்டி இராமாமிர்தம்மையார்,
சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.,
அலமேலு அப்பாதுரை,
வெற்றிச்செல்வி அன்பழகன்
பொற்செல்வி இளமுருகு
தேசீயமணி கண்ணன்
பங்கயற்செல்வி
சற்குணம்

மற்றும் கழக முன்னணி வீரர்கள் கலந்துகொள்வர்.

நடிப்பிசைப் புலவர்
கே. ஆர். இராமசாமி
அவர்களின் இன்னிசையுடன்
மாநாடு துவங்கும்.

10—4—58 சனி இரவு 10-மணிக்கு
மு. கருணாநிதி நடிக்கும்
புதுமை நாடக மன்றத்தாரின்
உ த ய சூ ரி ய ன்
நாடகம் நடைபெறும்.

இரு நாட்களுக்கும்
நுழைவுக் கட்டணம்:—
ரூ. 5, 3, 2,
பெண்களுக்கு ரூ. 1

என். எஸ். இளங்கோ வ. கு. தலைவர் மு. கருணாநிதி பொருளாளர்
ப. நாராயணசாமி, சி. கிருஷ்ணமூர்த்தி செயலாளர்கள்
கு. அடைக்கலம், அ. நடராசன், தொ. ப. தலைவர்கள்
அ. நாகப்பன், விளம்பரப் பொருப்பாளர்.

குறிப்பு:— முதல்நாள் திருவாரூர் புகைவண்டி நிலையத்திலிருந்து காலை 9 மணிக்கு, மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, மாநாட்டுப் பந்தலை அடையும். மாநாட்டு ஊர்வலம்—மாநாட்டு நிகழ்ச்சிகளை திரைப் படம் எடுக்க ஏற்பாடுகள் நடைபெறுகிறது.

காஞ்சிபுரம், [illegible] திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்

826
திராவிடநாடு
11—5—58 | வார வெளியீடு | விலை 16காசு

தனி உலகம் நீயன்றோ?

(இரா. வேங்கடபதி)

பால்நிலவே! பனிமலரே! பழமே! தேனே!
பார்மீதில் பழமைக்கும் பழமை ஆனாய்!
காலமென்னும் பெருவெள்ளம் புரட்டி ஓய
கால்பெயரா தமர்ந்தொளிரும் கனியே! கண்டே
ஓலமிடும் சிறுமனத்தை ஓயா தூக்கி
ஒருநொடியும் அகலாது ஒண்டி நின்று
தாலாட்டுப் பாடுகின்ற தமிழே! தாயே!
தனிஉலகம் நீயன்றோ? தரணி மீதில்.

கார்உலவும் அகல்வானைத் தழுவும் தென்றல்
கற்கண்டுத் தூள்மழையில் களித்தல் போல
மார்விம்ம பெருமிதத்தில் மகிழ்ச்சி கொண்டு
மாத்தமிழே! மணிவிளக்கே! மலர்த்த கண்ணே!
ஊர்தோறும் உன்குரலே ஒலிக்கக் கேட்பேன்
உலகமெலாம் உன்புகழே உயரக் காண்பேன்
தார்வேந்தர் மணிமுடியில் தரித்த பொன்னே!
தனிஉலகம் நீயன்றோ? தரணி மீதில்.

கற்பனையில், காண்கின்ற கனவில், நெஞ்சம்
களிக்கின்ற நனவுகளில், கருவாய்த் தோன்றி
பொற்புடனே பொலிகின்ற போக ஊற்றே!
பொய்உலகில் ஒருண்மை உண்டு யென்றால்
அற்புதமே! ஆருயிரே! அழகே! அன்பே!
அதுஒன்றும் நீயேதான் அட்டி இல்லை
பற்பலவாம் கலையின்பம் பயக்கும் தாயே!
தனிஉலகம் நீயன்றோ? தரணி மீதில்.

வடக்கு வேறு! தெற்கு வேறு!!

சில ஆண்டுகளுக்கு முன்பு "எம். ஏ." படித்த மாணவர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தேன் நான். வட இந்தியப் பல்கலைக் கழகம் ஒன்றில், சரித்திர வகுப்பில், பட்டம் பெற இருந்தார் அவர். இந்திய இலக்கியங்களைப்பற்றி எங்கள் பேச்சுத் திரும்பியது; அதிலிருந்து இந்திய மொழிகளிலேயுள்ள கவிதைகளைப்பற்றிப் பேசலானேன், சிறந்த கவிதைகளை சமஸ்கிருதம், இந்தி, உருது முதலியவைகளிலும்; தாகூரின் வங்காள மொழியிலும்தான் காண முடியும் என்று தெரிவித்தார், அவர்.

"மதராசிகள் இருக்கிறார்களே, அவர்கள் சொன்னதை எழுதுபவர்களாகயிருக்கலாம்; ஆனால், கவிதைக்கும் அவர்களுக்கும் வெகு தூரம்" என்றார் அம்மாணவர்.

"கவி பாரதியைப்பற்றி கேள்விப்பட்டதுண்டா?" என்றேன். அவர் கேள்விப்பட்டதேயில்லையாம்.

"வள்ளத் தோலைப் பற்றி......?" என்று கேட்டேன். "ஏதோ மெட்ராசி டான்சுகளில் ஒருவகை டான்சு தெரிந்தவர் என்று கேள்விப்பட்டது போல் இருக்கிறது" என்றார்.

"மெட்ராசி மொழி"யில் எழுதப்பட்ட நல்லகவிதைகளைப்பற்றி தான் கேள்விப்பட்டது இடையாது என்றும் அவர் சொன்னார்!

"மெட்ராசி மொழியா? அப்படியொரு மொழி இடையாது" என்றேன்.

"என்னது? மெட்ராசி மொழியில்லையென்றால் மெட்ராஸ் மாகாணத்திலிருப்பவர்கள் என்ன மொழி பேசுகிறார்கள்?" என்றார். அப்போது, ஆந்திரமும், கேரளமும் உருவாகவில்லை.)

தெற்கில் பேசப்படும் பெரிய மொழிகள் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்று நான் தெரிவித்தேன்!

"அப்படியா? இப்போதுதான் கேள்விப்படுகிறேன்!" என்றார் அவர். மெட்ராசிகள், 'மெட்ராசி' எனும் மொழியைத்தான் பேசுவார்கள் என்பதாக அவர் இது நாள்வரையில் நினைத்துக்கொண்டிருந்திருக்கிறார்!!

சில ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம் இது. இப்போதும், இந்த நிலைமை, மாறிவிட்டதாகக் கருதுவதற்கில்லை.

"எம். ஏ." படிக்கும் இவரைவிட, இன்னும் மோசமானவர்கள் வடக்கே இருக்கிறார்கள் என்றால், தென்னாட்டு வாசகர்களுக்கு பேரதிர்ச்சியாயிருக்கும். ஐக்கிய மாகாணத்திலும், பஞ்சாபிலும் இருக்கும் பெரும்பான்மையான மக்களுக்கு, "மெட்ராசி" என்று எம்மொழியும் இல்லை என்பது தெரியாதது மட்டுமல்ல, தென்னிந்தியாவைப் பொறுத்த வரையில் தாழ்மையான எண்ணம் படைத்தோராகவுமே உள்ளனர். விந்திய மலைக்கு அப்பால், கறுப்புடல் படைத்த திராவிடர்கள் வாழும் இருண்ட நாடு இருப்பதாகவும், இப்பால் ஆரிய கலாச்சாரமும் நாகரிகமும் இருப்பதாகவுமே எண்ணியவாறு உள்ளனர். எப்படி அவர்களுக்கு இந்த மனோபாவம் ஏற்பட்டது என்பதை நானறியேன்! ஆரியர்கள் வந்தகால முதல் இருக்கிறதோ, அல்லது டில்லியை இந்தியாவின் தலைநகராக்கி வடக்கேயே, அரசியல் கவுரவமும் அதிகாரமும் இருக்கும்படி செய்யப்பட்ட பிறகு உண்டானதோ, புரியவில்லை. அது எப்படி இருந்தாலும், நமது நாட்டுக் கலாச்சாரம் பற்றி, நல்லதோர் தெளிவு பெரும்பாலோருக்கு இல்லை என்பது மட்டும் உண்மை.

ஆங்கிலக் கல்வி முறையின் காரணமாக, சராசரி படித்த இந்தியன்கூட இங்குள்ள கலைகளையும் இலக்கியங்களையும் பற்றி சிரத்தைகொள்ளவில்லை. ஷேக்ஸ்பியரைப் பற்றித் தெரிந்த அளவுக்கு காளிதாசனை அறியார்கள்; டெனிசனைப்பற்றி அறிந்த அளவுக்கு துளசிதாஸ் புரியாது இவர்களுக்கு; பிரெஞ்சு ஓவியங்களின்

வடக்கும் தெற்கும், இந்தியா என்கிற துணைக் கண்டத்தின் இருபகுதிகள், கலாச்சார மாறுபாடு கொண்டவை என்று தி. மு. க. சொல்லும்போது, "இல்லை! இல்லை!! இந்தியா ஒன்றே", என்கிற பல்லவியைப் பாடுவோர் இருக்கிறார்கள். நமக்கு, தக்க பதில்தர இயலவில்லையென்றாலும், "இந்தியா ஒன்றே" என்று விடாப்பிடியாக இன்னும் சொல்லி வருகிற அவர்கள், இக்கட்டுரையைப் படிக்கவேண்டுகிறோம். சென்னையில் வெளியாகும் "சுயராஜ்யா" எனும் ஆங்கில இதழில் அக்மது அப்பாஸ், தீட்டியிருப்பதாகும் இது. அப்பாஸ், சிறந்த எழுத்தாற்றல் உள்ளவடவர்! உலகப்புகழ் பெற்றவர்! அவர், 'நமது குரல்' ஒலிப்பதற்கான காரணங்களை உணர்ந்து இருப்பது, கட்டுரையில் விளங்கும். வடநாட்டுக் கலாச்சாரத்துக்கும் தென்னாட்டுப் பண்பாட்டுக்கும் இடையிலுள்ள வேற்றுமைகளை நன்கு உணர்ந்திருக்கிறார் அவர்! எனினும், எல்லோரையும் போல அவரும் "ஒன்று;' என்கிற ஆசையை வலியுறுத்தியுள்ளார். வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலே ஒரு கலாச்சார சங்கம் வேண்டுமென விரும்புகிறார். ரஷ்யா அல்லது சீனாவைப்போல வடக்கும், திராவிடநாடும் இருக்க வேண்டும் என்று அவர் ஒத்துக் கொள்வாரானால், நமக்கும் சம்மதம் தான்! கலாச்சார தொடர்பை வளர்ப்பதில், நமக்கும் ஆசையுண்டு. திராவிடமும், எஞ்சிய பாரதமும், இன்றுள்ள ரஷ்யா—இந்தியா போல வாழலாம்! ஆனால், வடவர் ஆதிக்கமும், வடவரின் பிடியும் அகல வேண்டும்!! நட்பும் நேசமும் பெருகி வாழ்வதில் நமக்கு ஆட்சேபணையில்லை. சுரண்டலும், ஆதிக்கமும் ஒழிந்து தனியரசு மலர்ந்திடின், ரஷ்யாவும் இந்தியாவும் இன்று பரிமாறிக்கொள்வதுபோல பல கலாச்சார குழுக்கள் இங்கு வளரவும்—நாம் அனுப்பவுமான சகல அன்புவழிக்கும் நாம்தயார்.

(13-ம் பக்கம் பார்க்க)

ஐந்து நாட்கள்

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [11-5-58] தனிப் பிரதி 16-காசு [இதழ்

இந்த ஐந்து நாட்களும் ஒரு பாடத்தை, உணர்த்துகின்றன.

இந்திய உபகண்டத்தின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதையும், நேரு அவர்களுக்குப் பிறகு கலகலத்துவரும் காங்கிரஸ் எந்தக் கதியை அடையும் என்பதையும், இந்த ஐந்து நாட்களும் தெளிவாக்கிவிட்டன.

விலகி ஓய்வெடுத்துக் கொள்ளப் போகிறேன்! என்று நேரு அவர்கள் விடுத்த அறிக்கையால், நாட்டிலேற்பட்ட பரபரப்பும் பதைபதைப்பும், ஐந்து நாட்கள் நீடித்தன. அதற்குப் பிறகு, "வழக்கம்போல்" ஆயிற்றே ஒழிய, எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

காங்கிரஸ் கட்சியில் பெரும் பொறுப்பு வகிக்கும் சத்யநாராயண் சின்கா என்பவர், உருக்கத்தோடு சொன்னாராம், "நேரு அவர்களே! உங்களை விடுவிக்க நாங்கள் தயாராயில்லை. ஏனெனில், நாட்டின் தலைவிதி உங்களோடு சேர்த்துப் பின்னப்பட்டிருக்கிறது," என்று. பல காங்கிரஸ்காரர்களும், நாடாளும் பொறுப்பிலிருப்போரும் இதே போல வே சொல்லியிருக்கின்றனர்.

இதனை மறுப்பதற்கில்லை! நாட்டின் 'விதி' நேருவோடு பிணைக்கப்பட்டிருப்பதால்தான், உள்நாட்டிலும் சரி வெளிநாட்டிலும் சரி, "......நேருவுக்குப் பின்?", என்கிற ஒரு கேள்வி அடிக்கடி எழும்பி வருகிறது. அந்தக் கேள்விக்கான பதிலையே, இந்த ஐந்து நாட்களும், தெளிவாக்கியிருக்கின்றன.

'பூஜா மனோபாவம்', இந்த உபகண்டத்தின் நீண்ட நாளைய வியாதி! காந்தியடிகளுக்குப் பிறகு, காங்கிரசில், அந்த இடத்தையும், நல்லதொரு செல்வாக்கையும் நேரு ஒருவர்தான் பெற்றிருக்கிறார். அவரால்தான், கேரளத்துக் காங்கிரசாரையும் காஷ்மீரத்து பக்ஷி குலாமையும், கட்டுப்படுத்த முடியும். கோடிக்கணக்கான மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் ஒரு சக்தி, அவர் ஒருவருக்குத்தான் இருக்கிறது.

"நான் விலகிவிட்டால் என்ன ஆகும்? யோசித்துப் பார்க்காமலில்லை நான்! அப்போது ஏற்படக்கூடிய விளைவுகள், என் கண்முன்னே தெரிந்தன. எனவே, இப்போது விலகினாலும், மீண்டும் இதே இடத்துக்கு நான் வந்து சேரவேண்டிய கட்டம் ஏற்படும் என்பதை நான் யூகிக்காமலில்லை. எனினும் இப்போதுள்ள சூழ்நிலையில், கொஞ்ச நாளைக்காவது நான் 'சாதாரணமான'வனாக யிருப்பதே, என் மனதுக்குச் சாந்தி தரும் என நினைக்கிறேன்."

நேரு, அவர்கள், ஓய்வு பெறப் போவதாக வெளியிட்டபோது, சொன்ன சொற்கள் இவை! தான் விலகிடின், அரசிலும் கட்சியிலும் தனக்குள்ள பொறுப்பைத் தளர்த்திக் கொண்டிடின், என்னென்ன ஏற்படும் என்பதை அவரும் உணராமலில்லை. நிச்சயம், அவரைத் தவிர வேறு யாராலும், யாரையும் எதனையும் கட்டுப்படுத்தும் வல்லமை இடையாது. அதனாலேயே, காங்கிரஸ்காரர்கள் கலங்கினர்—என்ன ஆகுமோ என்றஞ்சினர்—ஐந்து நாட்களும் அகில இந்தியா முழுமையும் ஒரு அவலநிலையை ஏற்படுத்தின. இப்போது பயமும் பரபரப்பும் போய்விட்டது—நேரு அவர்கள் தனது இடத்திலிருப்பதாகச் சம்மதித்துவிட்டார்! ஆனால், "நேரு அவர்களுக்குப் பிறகு...?" என்ற கேள்விக்கு, விடை இடைக்கவில்லை—விடை இடைக்காது, ஏனெனில், நேருவோடுதான் நாட்டின் தலைவிதி யிருக்கிறது, என்று காங்கிரஸ்காரர்களே கருதுகிறார்கள்!!

நேரு அளவுக்குச் செல்வாக்கும், தன்னலமற்ற தன்மையும் உள்ளோர் காங்கிரஸ் கட்சியில் உள்ளார்களாவெனின், ஐயம்தான். ஒருகாலத்தில், தேசம், தியாகம் என்கிற தாரக மந்திரத்தைச் சபித்த வண்ணம், ஏதோ ஒரு புனித காரியத்திலிறங்கியிருக்கிறோம், மாடுமனை போனாலும் மக்கள் சுற்றத்தை இழந்தாலும் அந்தப் புனிதப போருக்குத் தம்மைத் தியாகம் செய்வதே மேல் என்கிற உணர்ச்சி, காங்கிரசில் இருந்தது. அந்த உணர்ச்சி போய்விட்டது, என்று நாமல்ல, நேரு அவர்களே சொல்கிறார்.

"அந்த உணர்ச்சி போய்விட்டது. பெரிய தலைவர்களாயிருப்போருக்கே போய்விட்டது. மந்திரிப் பதவிக்கு வேட்டையாடுவதும், சுயநலத்தைப் பெரிதாக எண்ணுவதுமே மலிந்துவிட்டது. அது மட்டுமல்ல, இவைகளை நிறைவேற்றிக்கொள்ள கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடவும்கூடப் பரவாயில்லை என்று கருதுகிறார்கள்."

பெரிய தலைவர்கள்— பதவி வேட்டை கீழ்த்தரம்—இந்த சொற்கள், இன்றுள்ள காங்கிரசைப் பற்றிய அருமையான படப்பிடிப்பாகும். அந்தளவுக்கு, நேரு அவர்களின் கண்ணெதிரிலேயே கட்சி கெட்டிருக்கும்

போது, பிறகு யார் இருக்கிறார்கள்—பதவிவேட்டையைத் தடுக்க!! கீழ்த்தரமான சுபாவத்தைப் போக்க!!

"இப்போதுள்ள சூழ்நிலை" என்கிறார் நேரு. நாட்டில் வளர்ந்து வரும் மாற்றுக்கட்சிகளின் செல்வாக்கும், தனது கட்சிக்குள் அன்றாடம் ஏற்பட்டு வரும் சீரழிவும், அவர் மனதைப் பெரிதும் தாக்கியுள்ளன. கட்சிக்குள், சாதாரண நிலையிலிருப்போர் 'தவறுகள்' செய்தால் தட்டிக் கேட்கலாம் — ஒழுங்கு நடவடிக்கை யெடுக்கலாம். ஒழித்துக் கட்டலாம். நேரு சொல்கிறாரே, பெரிய தலைவர்களே இப்படியிருப்பதாக! அவர்களை என்ன செய்ய முடியும்!!

"மெயில்" தருகிறது, ஒரு சேதி: — மந்திரிகளை நியமிக்கும் விஷயத்தில்கூட, நேருவின் ஆசைகள், தாக்கி எறியப்பட்டுவிடுகின்றனவாம். ஆசாத் மறைந்ததும், அந்த இடத்துக்கு ஒரு பெரியவர் வேண்டுமென்பதால் டாக்டர் ராதாகிருஷ்ணனை நியமிக்க வேண்டும் என்றாராம். டில்லியிலிருக்கும் அவருடைய சகாக்கள் மனம் ஒப்பவில்லையாம்.

மந்திரிகளின் நியமனங்களில் மட்டுமல்ல, உப தேர்தல்களில் போட்டியிட ஆட்களைத் தேர்ந்தெடுப்பதிலும் நேருவின் ஆசையை, காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு, உதறித் தள்ளி வருகிறதாம். ஐக்கிய மாகாணத்தில் நடைபெற்ற ஒரு உப தேர்தலில், ஒரு பிரபல காங்கிரஸ்காரரைப் போட நேரு விரும்பவில்லையாம்! அவரையும் மீறிப்போட்டு பலத்த தோல்வியைக் கண்டது, காங்கிரஸ்!!

பல கலாச்சாரங்களையும், பலவித இனத்தவர்களையும் கொண்ட இந்திய உபகண்டம் "ஒரே நாடாக' இருக்கவேண்டுமெனில், ஓரளவுக்காவது விட்டுக்கொடுத்துப் போகவேண்டும் என்று நேரு விரும்புகிறாராம். அதனாலேயே, அண்மையில் கேரளத்துக்கு வந்தபோதுகூட, நடப்பது ஒரு உப தேர்தல் என்றாலும், கம்யூனிஸ்டு கட்சியின் ஆட்சிக் கயிறு ஒட்டிக்கொண்டிருக்கிறது என்று தெரிந்தும், பெருந்தன்மையோடு வந்துபோயிருக்கிறார், நேரு. அதேபோல, இந்தி விஷயத்திலும் சமரசத்தோடு, தெற்குக்கும் வடக்குக்கும் இடையிலே ஒரு நல்ல சூழ்நிலையை விரும்புகிறாராம் நேரு. ஆனால், ஐக்கிய மாகாணம்—பம்பாயைச் சேர்ந்த 'பெரிய தலைகள்' அவருடைய இந்தப் போக்கை விரும்பவில்லையாம்! காங்கிரஸ் கட்சிக்குள் பணம் பெருத்தோர் அடியெடுத்து வைத்திருக்கிறார்கள் — அவர்களுக்குக் கட்டுப்பட்டவர்களாகச் சில 'பெரிய தலை'களும் ஆகியிருக்கிறார்கள். அதுமட்டுமின்றி, பல 'பெரிய தலை'கள், "சுதந்திரம்" என்கிற ஒரே காரணத்துக்காகக் காங்கிரசில் தியாகம் புரியுமளவுக்கு வந்தார்களே ஒழிய, நேரு அளவுக்குப் பொருளாதாரத் துறையிலும் சமூக அமைப்பிலும் "முற்போக்கு" ஏற்படுவதை விரும்பாதவர்களாகும்! சோஷியலிசம் என்று பேசிக்கொண்டு நேரு அவர்கள் செல்லுகின்ற பாதை, இந்தக் குழுவுக்கு அதிகம் பிடிக்கவில்லை —

ஆதலால் நேருவை மீறவும், அடிவாளம் போடவும் முற்பட்டுவிட்டார்கள்!!

இந்தப் 'பெரிய தலை'களின் ஆதிக்கம், டில்லி மந்திரி சபையிலேயே அதிகமாகி இருப்பதாகத் தெரிகிறது. மொரார்ஜி தேசாய், பண்டித பந்து போன்றோர், டில்லி பீடத்தில் அமர்த்தப்பட்ட பிறகு, இந்தச் சூழ்நிலை வளர்பிறையாகியே வருகிறதாகவும் கூறப்படுகிறது.

மந்திரி சபையில் மட்டுமின்றி, காங்கிரஸ் மத்ய போர்டிலும், இப்படிப்பட்டவர்களே வலிவும் செல்வாக்கும் பெற்றுள்ளனராம்.

நேருவின் மனவேதனைக்கு இதுவே முக்கிய காரணம்! நாட்டிலுள்ள எதிர்க் கட்சிகள், ஐந்தாண்டுத் திட்டம், ஆகியவைகளைச் சமாளிப்பதைவிட, இந்தக் "கூட்டத்தை" சமாளிப்பதே பெரிய தலைவலியாகி வருகிறதாம் நேருவுக்கு!!

பேராசிரியர் குமாயூன்கபீர் என்பார், நேருவே நீடிக்கவேண்டும் என்று தெரிவிக்கையில், "நேரு அவர்களே! உங்கள் விருப்பம்போல், எதையும் செய்யுங்கள். வேண்டுமானால், இப்போதுள்ள மந்திரி சபையை நீக்கிவிட்டு, உங்களுக்குப் பிடித்தமானவர்களைச் சேர்த்தாலும் எங்களுக்குச் சம்மதம்," என்று பேசியிருக்கிறார். இப்போதுள்ள மந்திரிகளை நீக்கி, பிடித்தமானவர்களைச் சேருங்கள்—என்பதனை குமாயூன்கபீர் போன்ற பேராசிரியரே வெளியிடுகிறாரென்றால், நேருவுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியின் அளவும் வேதனையும் விளங்கும்.

இந்தக் கட்டமே, ஒவ்வொரு மாநிலத்தையும் தமது 'ராஜதந்திர மூலம்' கைவசம் வைத்திருப்பதாகும்-நேருவுக்குப் பிறகு, இவர்கள்தான் இந்திய உபகண்டத்தின் ஆசானாக விளங்கப்போகிறவர்கள். அப்போது, எப்படி காங்கிரசின் எதிர்காலமும், ஆட்சிப் பீடத்தின் அழகும் இருக்குமோ, யாமறியோம்!!

ஒன்றுமட்டும் விளங்குகிறது—இப்போது தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது — இன்றுள்ள காங்கிரஸ், நேருவைத்தான் நம்பியுள்ளது! இன்று உள்ள 'டில்லி' யும் நேருவால்தான் வாழ்கிறது!!

ஆர்வமும் ஆசையுமிக்க அவர் நீண்ட நாள் வாழட்டும் — ஆனால், அவருக்குப் பிறகு!!

இந்தக் கேள்விக்கான பதிலையே, இந்த ஐந்து நாட்கள் தந்திருக்கின்றன — காங்கிரசும் சரி, அகில இந்திய ஐக்கியமும் சரி, அவருள்ளவரையில் தான்! பிறகு, வட்டாரங்களின் வாழ்வே முக்கியமாகும் — நாம் கேட்காவிடினும் கூட, ஒவ்வொரு வட்டாரமும் சுயேச்சை பெற்று ஆட்சி நடத்தும் — அநேகமாக நமது வாழ்நாளிலேயே, இந்தக் காட்சியைக் காணும்படி நேர்ந்தாலும் நேரலாம்!!

★ ஒரு காது! ★

வி. ஆர். துரை

இருபதாண்டுகள் இங்கிலாந்தின் ஆட்சி மன்றத்தில், இணையற்று ஒளி வீசிய புத்திசாலியான சர் இராபர்ட் வால்போல், ஆரம்பத்தில் துரைத்தனத்தில் கீழ்ப் பதவியொன்றில் இருந்தார் என்றால், நீங்கள் மிகவும் ஆச்சரியப் படுவீர்கள். ஐம்பத்து நான்கு வயது நிரம்பிய—சொன்ன சொல் தவறாத ஜியார்ஜ் - லீவிஸ், டோரிகளின் எதிரிகளாம் விக்கட்சியினரின் ஒருமுகமான ஆதரவினால், 'முதல் ஜியார்ஜ் மன்னர்' என்று பிரகடனஞ் செய்யப்பட்டார். அதுபோழ்து நாட்டின் செல்வத்தைப் பெருக்குதலையே, தமது தலையாய நோக்கமாகக் கொண்டிருந்த வால்போல், கருவூலத் தலைவராகப் பணியாற்றிக் கொண்டு இருந்தார்.

வாழ்க்கையில் ஒரு உயர்நிலையை அடைதல் வேண்டும்; வரலாற்றில் முக்கிய இடம் பெறல் வேண்டும் என்று மனதிற்குள் ஒரு பெரிய திட்டம் வகுத்துக் கொண்டிருந்த வால்போல், மக்கள் புகழ் மாலை சூட்டத்தக்க சில பல நல்ல காரியங்களை அவ்வப்பொழுது செய்திடலானார். அதன் பயனாய், இரண்டாவது முறையாகக் கருவூலத் தலைவராகத் தேர்ந்து எடுக்கப்பட்டார். நாளடைவில் பார்லிமெண்டின் ஆதிக்கத்திலே, நம்பிக்கை வைத்துக் கொண்டிருந்த அவர், கஜானா முதலமைச்சராக 1729-ஆம் ஆண்டில் ஆனார். பிறகு, அரசரிடம் தமக்கிருந்த அதிக செல்வாக்கையும், மக்களின் ஏகோபித்த ஆதரவினையும், நன்கு பயன்படுத்திக் கொண்டு வாழ்க்கையில் படிப்படியாக உயரலானார்.

இவருடைய ஆட்சிக் காலம் என்று, பிரிட்டிஷ் சரித்திரத்தில் வழங்கப்படும் இருபது ஆண்டுகளில், அப்படியொன்றும் குறிப்பிடத்தக்க சிறப்பான நிகழ்ச்சி எதுவும் நடைபெறவில்லை. அந்த இருபது ஆண்டுகளும், மிகச் சாதாரண ஆண்டுகளைப் போலவே, இருந்தன என்று செப்புகின்றார்கள். 'சரித்திரம் இல்லாத ஒரு நாடு, சந்தோஷமான நாடு' என்ற கூற்றுக்குப் பொருத்தமாக, இவரின் ஆட்சிக் காலத்தைக் குறிப்பிடலாம். 'தூங்கும் நாய்கள் தூங்கிக்கொண்டே இருக்கட்டும்'—இது ஒரு ஆங்கிலப் பழமொழி. இந்தப் பழமொழியால் பிரிட்டிஷ் சரித்திரத்தில், வால்போலின் ஆட்சிக் காலம் குறிக்கப்படும் என்று, வரலாற்று வல்லுநர்கள் வருணிக்கின்றார்கள்.

சிக்கனப் பிரியரும் சுயநலத்தில் கெட்டிக்காரருமான வால்போலின், இயற்கைக் குணங்களைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டும். நாட்டுக் கனவான்களாக இருந்த பலருள், ஒருவராக இலங்கிய இந்தப் பேராசைக்காரருக்கு, நார்பக்கிலே பெருஞ்சொத்து இருந்தது. காட்டிற்குச் சென்று வேட்டையாடுதலில் களிப்படைவார். நல்ல கதைகள் என்றால் உயிர். அஃதேபோல் நல்ல சகவாசத்திலும் நல்ல சாப்பாட்டிலும், இவருக்கு விருப்பம் அதிகம். சுயநலத்தைத் தவிர வேறு எந்த இலட்சியமும், மனிதரின் செயல்களைத் தூண்ட வல்லதல்ல என்பது இவரின் சித்தாந்தம்.

பருத்த உடல் இருக்கும்; முகத்திலே தெம்பு இருக்கும்; உரத்த குரல் இருக்கும்; அத்துடன் பலத்த சிரிப்பு இருக்கும்—இவைகள்தான் நாட்டுக் கனவான்கள் என்பவர்களின் அடையாளங்களாகும். மேற்சொன்னவைகள் அனைத்தும், மற்றக் கனவான்களைப் போலவே வால்போலுக்கும் அமைந்திருந்தது. ஆனாலும், பலவகையில் இவருக்கும் அந்தக் கனவான்களுக்கும் வித்தியாசம் இருந்தது. எல்லாக் கனவான்களும் டோரிகளாக இருக்க, இவர் மட்டும் விக்காக இருந்தார். இஃதேபோல் மற்றொரு விஷயத்திலும் இவர் தனித்து நின்றார். வியாபாரத்தையும் பண விருத்திக்கான முயற்சிகளையும், கனவான்கள் என்போர் வேம்பென வெறுத்தார்கள்; கேவலமாகக் கருதினார்கள். வால்போலோ அதனைக் கரும்பெனக் கருதினார். அவற்றில் நிபுணராகவும் இலங்கினார்.

முதலாம் ஜியார்ஜ் எட்டிக் கோயிலுக்கு நிரந்தரமாகத் தூங்கச் சென்றார். சமரசம் உலாவும் இடத்திற்குத் தந்தை சென்றதும், தனயன் இரண்டாம் ஜியார்ஜ் அரச முடியைப் பெற்றார். அவர் பட்டத்திற்கு வந்ததும், ஒருவகையில் 'திறமை மிக்கவரான வால்போலை, வெற்றிகரமாக வீட்டிற்கு அனுப்பிவிட்டார். சில்லாண்டுகள் கழிந்தன. தன் தந்தையின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்த வால்போலை, இரண்டாம் ஜியார்ஜ் திரும்பவும்

அமைச்சர் தொழிலுக்கு அழைத்துக்கொண்டார். இழந்த பதவியினை வால்போல் மீண்டும் பெற்றார். முன்பிருந்ததைவிட அவர் தம் செல்வாக்கு மும்மடங்கு மேலும் ஒளி வீசலாயிற்று.

போர் என்றால், தோள் தட்டிக் கொண்டு எழுபவர் இரண்டாம் ஜியார்ஜ். அரசருக்கும் அமைச்சர் வால்போலுக்கும், இந்த விஷயத்தில் தலைகீழ் விதமாக இருந்தது. போரின்கண் மன்னரை ஈடுபட விடாமல் இழுத்துப் பிடித்து நிறுத்திவைக்க, வால்போல் பெருஞ் சங்கடப்பட்டார். அரசியாரை மெதுவாகத் தன் பக்கம் சேர்த்துக்கொண்டார். தம்முடைய எண்ணம் ஈடேறவேண்டுமானால், மெல்ல இராணியிடம் செல்வார்; சாதுர்யமாக அவள் ஆமோதிக்கும் வண்ணம், செவியில் விஷயத்தை ஓதுவார். ஜியார்ஜ் மன்னரை ஆண்ட அவள், பக்குவமாக விஷயத்தை மன்னரின் செவியில் போட்டு, சம்மதம் பெற்றுவிடுவாள். கெட்டிக்காரியான அரசியிடம் சென்று, 1734-ஆம் ஆண்டின் முடிவில் வால்போல் இப்படிச் சொன்னாராம்:

“இராணியாரே, இந்த ஆண்டு நடந்து முடிந்த போரில், மாண்டு போய்விட்ட மக்கள் தொகை மட்டும் ஒரு இலட்சம் ஆகும். அந்த இலட்சம் பேர்களில் ஒரு இங்கிலாந்து ஆள் கூட இல்லை” என்று பெருமையாகக் கூறினாராம்.

நல்ல சில குணங்கள் அமைச்சர் வால்போலிடம் இருந்தாலும், அவர் ஒரு பதவிப் பித்தராக இருந்தார். அவர் தம் பதவியை எக்காரணத்தை முன்னிட்டும், பறிகொடுக்க ஒருபோதும் விரும்பியதில்லை. இந்தப் பேராசை இருந்ததனால், மிகவும் இழிவாக அவர் நடந்துகொண்டார். தேர்தல் காலங்களில் அவர் நடந்துகொண்ட முறை, அவ்வளவு கேவலமாக இருந்தது. பலரும் தம்மை ஆதரிக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக, பார்லிமெண்டின் அங்கத்தினர்களுக்கும் மற்றவர்களுக்கும், அவ்வமயம் ஆட்சியின்கண் தமக்கிருந்த தனிப் பெரும் செல்வாக்கு முழுவதையும் பயன்படுத்தி, உத்தியோகங்களைத் தருமம் செய்தார். வள்ளல்போல் பணத்தை நண்பருக்கும் உறவினருக்கும் வாரி வாரி இறைத்தார். ஒவ்வொரு ஓட்டையும் குறிப்பிட்ட தொகை கொடுத்து விலைக்கு வாங்கினார்.

எத்தனை நாளைக்குத்தான் ஒரு மனிதன் இப்படி மக்களை ஏமாற்றிக்கொண்டு இருக்க முடியும்?

தாம் பதவியில் எக்காலத்தும், மக்கள் விரும்பாவிட்டாலும் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக, பதவிகளை வழங்கியும் பணத்தை அள்ளிக் கொடுத்தும், ஓட்டுக்கள் பெறுகின்ற 'நல்ல' பழக்கத்தை, ஆரம்பித்து வைத்த அரசியல் விவேகி டான்பி என்பவராகும். இரண்டாம் சார்லஸ் மன்னரின் ஆட்சிக் காலத்தில், இவர் அமைச்சராக இருந்தவர். ஆனாலும் வால்போல் இந்த விஷயத்தில், குருவையே மிஞ்சிவிட்டார் என்று சொன்னால் அதில் தப்பொன்றும் இல்லை. சுயநலக்காரரான வால்போலைப் போன்று, அத்துணை வெளிப்படையாக, இந்த இழிவான வியாபாரத்தை அரசியலில் நடத்தியவர்கள் வேறெவருமில்லை.

ஒரு நாள் பார்லமெண்ட் நடந்துகொண்டிருந்தது. சபையின்கண் வால்போலும் உட்கார்ந்துகொண்டுதான் இருந்தார். சில மெம்பர்கள் எழுந்து நின்று, அவரை மிகவும் காட்டமாகத் தாக்கிப் பேசி, அமைச்சர் வால்போலின்மீது அடுக்கடுக்காகக் குற்றம் சுமத்தினார்கள். இருக்கையை விட்டுத் திடீரென்று எழுந்து நின்று, தாக்கிப் பேசிய அங்கத்தினர்களை வால்போல் சொல்லால் சுட்டிக் காட்டி, 'இந்த மனிதர்க்கெல்லாம் ஒரு விலையுண்டு' என்று கூறினாராம். இதிலிருந்தே வால்போல் தமக்கென்று அரசியலில் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்த பாதையினை, மிகத் தெளிவாக நாம் எடை போட்டுக் கொள்ளலாம்.

பதவியென்னும் பெருங் காதலால் ஆட்கொள்ளப்பட்டிருந்த வால்போல், ஆட்சியிலிருந்த திறமைசாலிகளைத் தமக்கிருந்த அதிகார ஆணவத்தால், சமயம் வாய்க்கும் போதெல்லாம், மட்டந்தட்டிக்கொண்டே வந்தார். அரசியல் வாழ்க்கையில் ஆப்த நண்பர்களாக இருந்த, வில்லியம் பல்டினி போன்ற வித்தகருக்குக் கூட, அமைச்சர் குழுவில் ஒரு இடம் கொடுக்க, அவரின் உள்ளம் ஒருப்படவில்லை. எந்த ஒரு விஷயத்திலும் அளவுக்கு மீறிய அதிகாரத்தைச் செலுத்திக் கொண்டிருந்த வால்போலின்மீது வெறுப்புற்ற கார்ட்டெரட் என்ற திறமை மிக்க அமைச்சர், தமது பதவியை ராஜிநாமாச் செய்து விட்டார். ஒரு அமைச்சரின் ஒழுங்கற்ற போக்கினைக் கண்டிக்கும் முகத்தான் மற்றொரு அமைச்சர், தமது பதவியினை உதறிவிட்டார். அவரன்றோ அமைச்சர்! டவுன்ஷெண்ட் பிரபு என்ற உறவினர், காலம் முழுவதும் வால்போலுடன் சண்டை செய்து கொண்டிருப்பதை விரும்பாது, அரசியல் வாழ்வுக்கு ஒரு முழுக்குப் போட்டு விட்டு, விவசாயத்தில் ஈடுபடலானார்.

இதிலிருந்து நமக்கொரு உண்மை கண்ணாடிபோல் புலனாகின்றது. புலமைமிக்க அறிஞர்க்கு அமைச்சர் குழுவில், வால்போல் இடங்கொடுக்க விரும்பவில்லை. தம்மை மிஞ்சி விடுவர்; தம் பேச்சைத் தட்டிக்கழித்து விடுவர்; என்பது காரணமாக இருக்கலாம். தம்முடைய விருப்பத்திற்கு ஏற்ப கை தூக்கும் பொம்மைகளையும், ஆமாம் போடும் ஆசாமிகளையும், சாதாரண அறிவு படைத்த இரண்டாந்தர மக்களையும்தான், அவர் தம் சகாக்களாக வைத்துக் கொண்டார். அதாவது இப்படியெல்லாம் அட்டகாசம் செய்து, தம்முடைய பெருமைக்குத் தாமே குழி தோண்டிக் கொண்டார்.

இங்குள்ள ஒரு சிலர், வால்போலைச் சிறந்த ராஜதந்திரி என்று கூறலாம். ஏனென்றால், அவரை விடக் கேவலமான 'வால்போல்கள்' தானே இன்றைய ஆட்சியில் எங்கும் மலிந்து இருக்கின்றார்கள்.

வால்போலின் ஏதேச்சதிகாரமான போக்கிற்கு, ஒரு முற்றுப் புள்ளி வைக்கின்ற காலம், நெருங்கி விட்டது. ஆட்சியிலிருந்து வால்போலின் அதிகாரத்தால் துரத்தப்பட்டு, பதவி தராமல் விலக்கி வைக்கப்பட்டிருந்த, அனைவரும் ஒன்று கூடினார்கள். பல்டினி முதற்கொண்டு பலரும் ஒருங்கு சேர்ந்து வால்போலின் ஆட்சியை எதிர்க்கலானார்கள். அவரின் நெடுநாளைய

தோழரான பல்டினி, வால்போலின் ஆட்சியை எதிர்த்துப் பிரசாரம் செய்து, அவரின் புகழினை அழிந்தொழியும்படி செய்வதற்காகவே, 'தி க்ராப்ட்ஸ்மன்' என்ற ஒரு பத்திரிகையை ஆரம்பித்தார். அந்தப் பத்திரிகையில் வால்போலின் அரசியல் போக்கிற்கு, சரியான சாட்டை கொடுத்து வன்மையாகக் கண்டித்து எழுதினார். அவரது தனி மாட்சிக்கு 'ராபினாட்சி,' என்று பெயர் சூட்டினார். மந்திரி வால்போல் நாட்டைமடைமையால்பாழ்படுத்துகின்றார் என்று அங்கிங்கெனாதபடி நாடெங்கும், ஓயாமல் பிரசார மழை பொழிந்தார். அவரின் முயற்சி இருவினையாக்காமலா போகும்?

அதுபோழ்து பார்லமெண்டிற்குப் புதிதாக வந்த அங்கத்தினர்கள், வால்போலைத் தாக்குவதையே தொழிலாகக் கொண்டார்கள். அவர்களில் முக்கியமானவர்களாக ஹென்றிபாக்ஸி, வில்லியம் பிட் ஆகிய இருவரையும் குறிப்பிடலாம். இவ்விரு இணையற்றவர்களின் இடைவிடாத தாக்குதலினால், அதுவரையில் வால்போலுக்குபார்லமெண்டில் இருந்த செல்வாக்கு, 'என்னைவிடு' என்று பறந்தோடலாயிற்று. அந்த இருவரும், அவர்தம் குழுவினரும் 'தேசாபிமானிகள்' என்று மக்களால்புகழப்பட்டார்கள். அதிலென்ன தவறு?

நாடகம் ஒன்று காமன்ஸ் சபையில் ஒரு சமயம் நடந்தது. அந்த நாடகத்தை ஏற்பாடு செய்தவர்கள், எதிர்ப்புக் கட்சியினர்; வால்போலின் எதிரிகள். அவர்கள் நாடகத்தில் வால்போலை ஒரு கோழையென்று மறை முகமாகத் தாக்கி நடித்தார்கள். அது மட்டும் அல்ல! ஒரு செவி இழந்த ஜென்இன்ஸ் என்ற கப்பல் தலைவரை, நாடகத்திடையே கொண்டு வந்து நிறுத்தினார்கள். அந்தக் கப்பல் தலைவர், ஸ்பானிஷ் டிண்டர்கள் தமது காதினை, அறுத்த வரலாற்றை மிகவும் உருக்கமாகக் கூறினார். சில ஆண்டுகளுக்குப் பகைவர்களால் அறுக்கப்பட்ட அந்தச் செவியினை, உப்பில் ஊறுகாய் போட்டுப் பத்திரமாக வைத்திருப்பதாகக் கூறி, இழந்த அந்தக் காதினையும் எடுத்துக் காட்டினார். அதைக் கண்டு நாடகத் அங்கத்தினர்கள் ஆவேசத்துடன் ஆர்ப்பரித்தார்கள். மக்கள் ஸ்பெயின்மீது, படையெடுக்க வேண்டும் என்று போர்க்குரல் எழுப்பினார்கள். இந்தஇக்கட்டான நேரத்தில் போரினையே விரும்பாத வால்போல், பொதுமக்களின் குரலுக்கு இணங்க வேண்டியவரானார். அப்படி இணங்காவிடில், தம் நிலை ஆபத்தாகப் போய் முடியும் என்பதை, அவர் நன்கு உணர்ந்திருந்தார். எந்த நோக்கத்தோடு எதிர்ப்புக்கட்சியினர், நாடகத்தை நடித்தார்களோ அந்த நோக்கம் நிறைவேறியது.

போரினைத் திறம்பட நடாத்தும் அனுபவம் இல்லாத வால்போல், ஸ்பெயின் மீது போர் தொடுத்தார். காது இழக்கப்பட்டதின் காரணமாகத் தொடுக்கப்பட்ட இந்தப் போர், 'காதுச் சண்டை' எனப் பெயர் பெற்றது. போரின் ஆரம்பத்திலேயே அவர் ஒரு தோல்வி அடைந்தார். அடுத்தடுத்துத் தோல்விகள் பல வந்து அவரை அணைத்துக்கொண்டன. குதிரைச்சவாரி செய்யத்தெரியாதவன், புதிதாகக் குதிரை மீது ஏறிச் சவாரி செய்தால் என்ன ஆவான்? விடை எல்லோருக்கும் தெரிந்ததே!

இச்சமயத்தில் எதிரிகள் வால்போலைப் பழித்துப் பிரச்சாரம் செய்தார்கள். மக்களும் அவரைப் பற்றி மிகக் கேவலமாக நினைத்தார்கள். இப்படியொரு போரில் வால்போலை இறங்க வைத்து அவமானப்படச் செய்து, வீட்டிற்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று, எதிர்பார்த்துக்கொண்டிருந்த எதிர்ப்புக் கட்சியினர் வெற்றி அடைந்தார்கள். 1741-ம் ஆண்டில் பொதுத் தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் வால்போலின் பேச்சு மக்கள் மத்தியில் எடுபடவில்லை. வால்போலை எதிர்த்து மும்முரமாகப் பிரச்சாரம் செய்தார்கள். அமைச்சர் பதவியினின்று வால்போல் எதிர்பார்த்தபடி விலகினார். நாட்டுப்புற வாழ்க்கையில் நாடாண்ட அவர் மறைந்தார். இது எல்லோரும் எதிர்பார்த்த முடிவுதான்.

யினை, மாற்றான் அறுத்துவிட்டான் என்பதற்காக, ஒரு பெரிய படையெடுப்பு இங்கிலாந்தில் நடந்தது. அந்தப் போருக்கே ஜென்கின்ஸ் காதுச் சண்டை என்று பெயரிடப்பட்டது.

இங்கே பல வகையிலும் தென்னாடு ஒரு சாராரால் சுரண்டப்படுகின்றது. தமிழனின் உரிமைகள் காலடியில் போட்டு மிதிக்கப்படுகின்றன. அவனுடைய இன்பத் தாய்மொழிக்கு ஊறு செய்யப்படுகின்றது. எனினும், ஏனோ வீரர்களின் வழித்தோன்றல்கள் விழித்தெழாமல், உறங்கியவண்ணம் உள்ளார்கள்.

பதவிப் பித்துக் கொண்டவர்களும், பணத்திற்கு ஓட்டு வாங்குகிறவர்களும், பொதுநலமிலாச் சுயநல வேட்டைக்காரர்களும், கடமையுணர்ச்சியும் நாட்டுப் பற்றும் அற்றவர்களுமான 'வால்போல்கள்' இங்கு மலிந்து இருக்கின்றார்கள். அவர்களை எல்லாம் அரசியலிலிருந்து துரத்திடும் நாள் என்னாளோ?

1741-ம் ஆண்டிற்கு முன்னால் நடந்த தேர்தலின்போதெல்லாம், மார்தட்டி முழங்கி எத்தனையோ இழிவான முறைகளைக்கையாண்டு மக்கள் தம் ஆதரவினைப் பெற்று எதிரிகளை முறியடித்து எக்காளமிட்டு வெற்றி உலா வந்தவர், 1741-ம் ஆண்டின் பொதுத் தேர்தலில் என்ன முயன்றும் ஏமாற்றம் அடைந்து, மக்களால் கைவிடப்பட்டு, மற்றவர்களாலும் தூற்றப்பட்டு, மாயமாய் எங்கோ மறைந்த வால்போலின், 'பெருமை மிக்க' சரித்திரத்தை ஒருமுறை எண்ணிப் பார்ப்பது, அதிகார ஆணவ உச்சியில் என்றென்றைக்கும் தாமே இருத்தல் வேண்டும் என்று எண்ணும் எவருக்கும் ஒரு நல்ல பாடமாக அமையும்.

ஆண்கள் மரங்கள்; பெண்கள் அந்த மரத்தை ஆதாரமாகத் தழுவிக்கொண்டு அதனைச் சுற்றி இருக்கும் கொடிகள்; குழந்தைகள் அந்தக் கொடிகளில் கூத்தாடும் மண மலர்கள்.

இன்றும் ஏன் பூத்தாயோ?

[கோவிற்பட்டியான்]

நேற்றுவரை மகிழ்ச்சியாக இருந்தார்; மன நிறைவோடு இருந்தார், ஆனால் இன்று? உள்ளத்திலே உவகையில்லை, நடையிலே சோர்வு, பார்வையிலே பரிதாபம், உடலும் உள்ளமும் சோர அவர் அந்த வீட்டு வாயிலை அடைகிறார்; உள்ளே செல்லக் காலெடுத்துவைத்தார்; ஆனால் திடீரென்று அவர் கண்களில் தென்பட்ட ஒரு காட்சி அவர் உள்ளேசெல்வதைத்தடைசெய்து அவரைச் சிந்தனையில் ஈடுபட வைத்துவிட்டது.

வெற்றிப் பெருமிதத்துடன் பூக்களைப் பூத்துக்கொட்டி நிற்கும் முல்லைக் கொடிதான் அவரை தடுத்து நிறுத்திவிட்டது. வெண்ணிறப் பூக்கள் நிறைய மலர்ந்திருந்தன. மனதில் இன்ப எண்ணங்களைக் கிளறிவிடும் இக்காட்சியைக் கண்ட அவர் — குடவாயில் நல்லாதனார் — என்ன செய்திருப்பார்? நாம் நினைப்போம் 'மனம் மகிழ்ச்சியுறும் பாடலைப் பாடியிருப்பார் என்று. இல்லை; பாடினார், ஆனால் அந்தப் பாடலிலே இன்பம் தரக்கூடிய நிகழ்ச்சி இல்லை. துன்பத்தின் சாயல்தான் தெரிந்தது. மகிழ்ச்சியூட்டும் வகையில் அந்த முல்லைப் பூ மலர்ந்திருக்கவில்லையே?

இன்று இவ்வளவு செழிப்புடன் படர்ந்திருக்கும் இந்த முல்லைக் கொடியின் வளர்ப்புக்குக் காரணமானவரோ ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன். அவர் ஒரு பெரும் வள்ளல். தன்னை நாடி வரும் மாந்தர்பால் மட்டும் தன் வள்ளல் தன்மையைக் காட்டுவதில்லை. தாவரங்களிடத்திலும் ஏனைய உயிரினங்களிடத்திலும் காட்டினார். தன்னுடைய வீட்டு வாயிலின் முன்பு படர்ந்திருந்த முல்லைக் கொடிக்கு நாள்தோறும் நீர் ஊற்றி வளர்த்தார். நாள்தோறும் அம்முல்லைக் கொடியின் செழிப்பை—சிறப்பைப்பற்றியே எண்ணினார். வள்ளல் எவ்வாறு பாருபாடினறிவந்தவர்க்கெல்லாம் வாரி வழங்கினாரோ, அதே போன்று அவரால் பேணி வளர்க்கப்பட்ட முல்லைக் கொடியும் தன்னை நாடி வருபவர்க்கெல்லாம் மலர்களைக் கொடுத்துக் கொண்டேயிருந்தது. ஆண்மைத் திறனும் அழகிய வனப்பும் வாய்ந்தவர்கள், கற்றறிந்த புலவர்கள், பாடும் கவிஞர்கள், முதலியோருக்கெல்லாம் பயன்பட்டது; அதுமட்டுமல்ல, பக்கத்து வீட்டிலுள்ள இள நங்கைகள் தங்கள் பூப்போன்ற வளையலணிந்த கரங்களில் அப்பூக்களைக் கொய்து கொண்டு செல்வார்கள்; யாழேந்தி வரும் பாணர்கள் தங்கள் யாழ் நுனியில் வைப்பதற்காகப்பூக்களை எடுத்துக்கொள்வார்கள். பாணர்களோடு வரும் பாடினிகளோ தங்கள் கார்மேகம் போன்ற கூந்தலுக்கு முல்லைப் பூக்களைச் சரமாகத் தொடுத்துவைதது் கொள்வார்கள். இத்தகைய சிறப்புக்களால் பயன்தரும் முல்லைக் கொடியைப் பார்த்த புலவர் சிலையாய் நிற்கக் காரணம்? அவர் சிந்தனையில் தோன்றியதுதான் என்ன?

இந்த முல்லைக் கொடியின் வள்ளல் தன்மைக்கு காரணமாக இருந்த அந்த மாபெரும் வள்ளல் நேற்றுத்தான் இயற்கை எய்தினார். வீரர்களைப்போல் காட்சியளிக்கவேண்டிய இளைஞர்கள் அவர் பிரிவால் கோழைகள்போல் சோகமே உருவாயிருக்கின்றனர். ஒண்கொடி மாதர்களையோ காணவில்லை. வள்ளல் இல்லாத காரணமாயிருக்கலாமோ? பாணர்களின் யாழுக்கும் வேலையில்லை; முல்லைப் பூவுக்கும் அவசியமில்லை. பாடினிகள் தங்கள் கார் குழலுக்கு பூ வைத்துக்கொள்ள வேண்டுமே மென்று எண்ணவில்லை. எப்படி எண்ணுவர்? எல்லோரும் கண்கலங்கித் தவிக்கின்றனர் வள்ளலின் பிரிவு குறித்து. முல்லைப்பூவால் இன்று ஒருவருக்கும் உபயோகமில்லை-எல்லோரும்-அவர் உதவி பெற்ற—எல்லோரும் துக்கத்தில் மூழ்கியிருக்க இந்த முல்லைக்கொடி மட்டும் ஏன் துக்கத்தின் சாயல் கூட இன்றிப் பூத்துக் கொட்டியிருக்கிறது. இன்று ஒரு நாள் அந்த மாபெரும் வள்ளல் மறைந்ததின் அறிகுறியாகவாவது பூக்காமல் இருந்திருக்கலாம்!

புலவரின் சிந்தனையில் எழுந்த உணர்ச்சி பாடலாக வெளிப்பட்டது. புறநானூற்றில் அப்பாட்டைக் காண்போம்

"இளையோர் சூடார் வளையோர் கொடியார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேல் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே."

★

தங்களைப் பொதுமக்களோடு ஐக்கியப்படுத்திக் கொள்ளுவதன் மூலந்தான், பொதுமக்களின் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் வெளியிடுவதன் மூலம்தான், பொதுமக்களின் விருப்பங்களை உண்மையாகப் பிரதிபலிப்பதன் மூலந்தான், எழுத்தாளர்கள் தலைசிறந்த நூல்களை இயற்ற முடியும். அவர்கள் தங்களைப் பொதுமக்களின் எஜமானர்களென்று கருதிக் கொண்டார்களானால், அவர்களால் பொது மக்களுக்கு நன்மை எதுவும் ஏற்படாது என்பது மட்டுமல்ல, அவர்கள் கல்வித்திறம் எவ்வளவு மேதாவிலாசம் பொருந்தியதாயிருந்தாலும் சரி, அவர்கள் நூல்களுக்கும் எதிர்காலம் இல்லாது போய்விடும்.

தூக்கமா உறக்கமா

—[மா. கி. தசரதன்]—

நமது வாழ்க்கையில் நாம் மிகுதியாய்ச் செய்கின்ற வேலை எது? யாராவது கணக்கெடுத்திருக்கின்றோமா? சிலர் சாப்பிடுவதையே தொழிலாகக் கொண்டவர்கள்; வேறு சிலர் வேறு பலவற்றைத் தொழிலாகக் கொண்டவர்கள். இத்துணைபேரும் சேர்ந்து செய்யும் பெருந்தொழில் ஒன்று இருக்கிறது. அந்தத் தொழிலைத்தான் நாம் நமது வாழ்க்கையில் மிகுதியாகச் செய்கின்றோம். அவ்வளவு பெரிய தொழில் என்னவாக இருக்கும். கொஞ்சம் நினைத்துப் பாருங்கள்.

வேறு ஒன்றுமில்லை: தூக்கம் தான் அந்தத் தொழில்! நமது வாழ்க்கையில் பெரும் பங்கு பெறுவது இந்தத் தூக்கம். தூக்கம் உடலுக்கு ஓய்வு தருகின்றது என்பதையும், உழைப்பில் செலவான ஆற்றலைப் பெற உதவுகின்றது என்பதையும் விஞ்ஞானிகள் நமக்கு உணர்த்துகின்றனர். விஞ்ஞானிகள் உணர்த்துவதை ஒப்புக்கொள்ளுகின்றோமோ இல்லையோ, நமக்கே தெரிகின்றது, களைப்பாக இருக்கின்றபோது 'ஒரு சின்னத் தூக்கம் போட்டால்' எல்லாம் சரியாகப் போகிறதைக் காணுகின்றோம்.

இரவில்தான் தூங்கவேண்டும் என்பது கட்டாயம் இல்லை. எப்போது கண்ணைச் செருகுகின்றதோ, எப்போது வாய் பெருங்காற்றை உள்ளிழுத்து விடுகின்றதோ அப்போது கையையேனும் தலைக்கு அணையாக்கிக்கொண்டு தூங்கிவிடலாம். காலையில் தூங்கலாம்; மாலையில் தூங்கலாம்; இரவிலும் தூங்கலாம். சாப்பிட்டவுடன் சிலருக்குக் கட்டாயம் சற்று நேரம் கண்ணை மூடியாக வேண்டும்.

தூக்கத்திற்குத் துணை செய்வது எது? இன்னதுதான் என்று சொல்லமுடியாது. எவ்வளவோ கருவிகள் துணையாகின்றன. கோரைப்பாயிலிருந்து இலவம் பஞ்சு மெத்தைவரை இதற்குப் பயன்படுகின்றது. இந்தக் காலத்தில் காற்றடைத்த பைகள் பாயாகவும் தலையணையாகவும் வந்திருக்கின்றன. பழங்காலத்தில் நிரம்ப வசதியானவர்கள் மயில்களின் தூவி (சிறகு)களால் படுக்கை ஆக்கிக்கொண்டனர் என்று சொல்லப்படுகின்றது. அரசகுமரிகளின் படுக்கைகளின்மீது மலர் தூவப்பெற்றிருக்குமாம்! அந்த மலர் இதழ்களுடன் சின்னஞ்சிறு பூவின் காம்பு கலந்திருந்துவிட்டால் அன்றைக்கெல்லாம் அவர்கள் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுப்பாராம். பொழுது புலர்ந்ததும் மலர் கொணர்ந்த தோழிக்கு வாழ்த்துக்கு மாறாக வசவு காத்துக் கிடக்குமாம்.

நல்ல கட்டில், நுரைபோன்ற படுக்கை மட்டும் இருந்தால் போதுமா, உறக்கம் வர? பொல்லாத உறக்கம் மெல்ல வீசும் காற்றின் துணையையும் கேட்கிறது!

எல்லாம் இருந்தும் தூக்கம் வராமல் துயரப்படுகின்றவர்கள் கோடிக் கணக்கில் இருக்கின்றார்கள். அந்தக் கோடிக் கணக்கான பேர்களில் எத்தனைபேர் எத்தனை வகைக் காரணங்களால் தூக்கம் வராமல் கிடக்கின்றனர்.

அதோ அந்தக் குடிசையில் ஒரு ஏழை விவசாயி நோயினால் நலிந்து உறங்காமல் வாடுகின்றான்; அவன் பக்கத்தில் அவன் மீது அன்பைச் சொரிந்திடும் அவன் துணைவி 'என்ன ஆகுமோ' என்ற கவலையோடு நிலை குலைந்திருக்கின்றாள்.

இதோ இந்தத் தெருக் கோடியில் தெரிகின்றதே மாடி வீடு. அதில் கூடத்தான் இருவர்—கணவன் மனைவியர்—தூங்காமல் விழித்திருக்கின்றனர். நோயும் நொடியும் வந்து நொந்துபோய் அவர்கள் தூங்காமல் இல்லை. காதல் கதை பேசிக்கொண்டும் கண் விழித்துக் கிடக்கவில்லை. கணவன் எந்நேரத்தில் எழுந்து எங்கே போய்விடுவானோ என்ற அச்சத்தில் அவள் விழித்திருக்கின்றாள், அவள் தூங்கிவிட்டாளா என்பதைத் தெரிந்துகொண்டு வெளியில் 'உலா'போகலாம் என்று அவன் தூங்காமல் இரவைக் கழித்துக்கொண்டிருக்கின்றான். இத்தனைக்கும் மேலாக புதையல் எங்கே பறிபோய்விடுமோ என்ற கவலையும் அவர்கள் உள்ளத்தில் உறுத்திக் கொண்டிருக்கிறது.

போலீஸ்காரர்களில் சிலரும் போக்கிரிகளில் பலரும் கூட தூக்கமின்றித்தான் இரவைக் கழிக்கின்றனர்.

இப்படிப் பலபேர் தூக்கமில்லாமல் கிடக்கின்றபோது, உழைத்து அலுத்தவன் தூக்கத்தின் அணைப்பில் தன்னை மறந்து தூங்குகின்றான். உழைத்தவனுக்குக் கட்டிலும் இல்லை; அதன் மீது கனத்த மெத்தையும் இல்லை; அதில் வேறு எதுவும் இல்லை. என்றாலும் உழைப்பு அவனைத் தட்டி உறங்கவைக்கின்றது. நீட்டிப் படுக்கவும் இந்த நீள் நிலத்தில் இடமின்றி முடங்கிக்கிடக்கும் ஏழையர் எத்துணைபேர்!

இழுக்கும் ரிக்ஷாவில், ஓட்டும் வண்டியில், நடக்கும் பாதையில் கையும் காலும் சேர்த்து இணைத்துக்கொண்டு சுருண்டுவிட்டால் அவர்கள் உலகை மறந்துவிடுகின்றனர்.

எப்படியோ ஒன்று, தூங்கியாக வேண்டும். இல்லையானால் உடலுக்குக் கெடுதி என்பதை அறு

வம் உணர்த்துகின்றது. 'என்ன கண்கள் சிவந்திருக்கின்றனவே?' என்று உங்கள் நண்பரைக் கேளுங்கள். என்ன சொல்கிறார் அவர். 'இரவெல்லாம் தூங்கவே இல்லை ஐயா, அதுதான்' என்கிறார் அவர்.

தூக்கம் இவ்வளவு நல்லது ஆயிற்றே என்று இன்னும் கொஞ்ச நேரம் தூங்கிப் பாருங்கள். என்ன பரிசு பெறுகின்றீர்கள் பார்க்கலாம்!

சிரமமில்லாமல் உங்களுக்கு ஒரு பட்டப் பெயர் 'தூங்கு மூஞ்சி' என்று கிடைத்துவிடும். பொல்லாத உலகம்தான் இது! உடம்புக்கு நல்லது என்று இன்னும் கொஞ்ச நேரம் தூங்கினாலும் இதற்குப் பொறுக்கவில்லையே! என்னவென்றுசொல்வது? வேறு என்னசெய்வது, போர்வையை உதறிவிட்டு எழுந்திருக்க வேண்டியதுதான், அது என்ன அவ்வளவு இலகுவில் முடிகின்ற செயலா? கடைசி நேரத்தில்தான் எழ இயலாதவாறு தூக்கம் நம்மை இழுத்துப் பிடிக்கிறது. அதன் பிடிப்பிலிருந்து விடுவித்துக்கொள்ளத் தானே என்னவோ தூங்கி எழுந்ததும் கையையும் காலையும் நீட்டி நெட்டி முறித்து எழுந்து நிற்பது?

மனிதனுக்கும் விலங்கிற்கும் இருக்கின்ற தலையாய வேறுபாடு தூக்கத்திலும் இருக்கிறது என்கின்றனர். மனிதன் தவிரப் பிற விலங்குகள் அனைத்தும் நிம்மதியாகத் தூங்க முடிவதில்லை என்கின்றனர். மனிதனின் பெருமை நம்பிக்கையான தூக்கத்தில் இருக்கிறது என்கிறார்கள்.

வல்லவனுக்குப் புல்லும் ஒரு கருவியாகிவிடும் என்பது பழமொழி. தமிழன் வல்லவன். அதனால் புல்லிய தூக்கத்தை வைத்துக் கொண்டு எவ்வளவு அரிய உண்மைகளைப் பெற வைத்து விட்டான்.

தூக்கம் என்பதை கண்மூடி நினைவற்றுக்கிடப்பது என்ற பொருளிலே மட்டும் இல்லாமல், கருத்திழந்து, செயல் மறந்து கிடக்கும் நிலையையும் உணர்த்தப் பயன்படுத்திய பெருமை தமிழனுக்கு இருக்கிறது.

'தூங்கியவன் தொடையில் திரித்தவரையில் போதும்' என்று அறிவுறுத்தி இருக்கின்றனர். திருவள்ளுவர் சின்னச் சின்னப் பொருள்களை வைத்துக் கொண்டு பெரிய பெரிய உண்மைகளைக் காட்டுவதில் வல்லவர்க்கு வல்லவராயிற்றே! அவர்களை விட்டுத் தூக்கம் எப்படி அகன்று இருக்கும்? அந்தத் தூக்கத்தை வைத்துக்கொண்டு எவ்வளவு அருமையான கருத்தை ஒன்று சொல்கிறார் பார்ப்போம்:

தூங்குக தூங்கிச் செயற்பால; தூங்கற்க
தூங்காது செய்யும் வினை

காலந்தாழ்த்துச் செய்ய வேண்டிய வேலைகளை நீட்டித்துச் செய்வாயாக; விரைவாகச் செய்ய வேண்டியதை உடனே செய்து விடு; ஒத்திப்போடாதே என்கிறார். நாளைக்கு வரும் இரயிலுக்கு இன்றைக்கே போய்க் காத்திருக்காதே; இன்றைக்குக் காணவேண்டிய நண்பரை நாளைக்குக் காணலாம் என்றும் தள்ளிப்போடாதே என்பது அநுபவ உரையன்றோ?

பிறப்பு இறப்புப் பற்றிய பேருண்மைகளையும் வள்ளுவர் தூக்கத்தைக் கொண்டே துலக்கிடுகின்றார். சாவு சாவு என்கிறார்களே என்ன அது; ஒன்றுமில்லை; உறங்குவதுபோலத்தான்; பிறப்பு என்பது என்ன? தூங்கி எழுதல் போல என்கிறார். இதில் உண்மை இருக்கிறதா என்று ஆராய்வதை விட, வாழுகின்ற மனிதனின் மனதில் நம்பிக்கை ஊட்டுவதில் எவ்வளவு திறமையாகச் செயல்படுகின்றார் என்பதைக் கண்டு வியக்க வேண்டியவர்களாகின்றோம்.

தமிழ் இலக்கியங்களில் தூக்கத்தைப் பற்றிய பல குறிப்புக்கள் ஆங்காங்கே காணக் கிடைக்கின்றன.

ஊர் உறங்கும்போது விழித்திருந்து, கூடும் காதலர்க்கு நாய் உறங்காமையும், தாய் உறங்காமையும் எத்துணை இடர்ப்பாடு தருகின்றன என்பதனைப் படிக்கின்றபோது அந்தக் காதலர்கள் மீது நமக்கு இரக்கம் எழுகின்றது. என்ன செய்வது, நாம் உதவிக்குப் போகலாம் எனின் நாம் விழித்திருப்பது தெரிந்தால் அந்தக் காதலர்க்கு இன்னும் 'வெட்கமாகப்' போகுமே! அதனால் நாமும் தூங்காமல் தூங்கிச் சுகம் பெற வேண்டியதுதான்.

தூங்காமல் தூங்குவது என்றால் என்ன என்று யார்க்கும் கேட்கத் தோன்றுது. ஏன் எனில் நாம் எல்லோரும் ஏதாவது ஒரு நேரத்தில் தூங்காமல் தூங்குகிறவர்கள்தான.

சின்ன வயதில் மருந்துடன் வந்து நம்மை எழுப்பிய தாயைக் கண்டு தூங்குவதுபோலத் திரும்பிப் படுத்துக்கொண்டோம்; படிக்கிற வயதில் பள்ளிக்கூடம் போக வேண்டாம் என்று எண்ணினால் உடனே நோய் வந்ததுபோல் படுக்கையிலேயே கிடந்து தூங்குகின்றோம். நம்முடைய நண்பர்கள் நாம் தூங்கும்போது என்ன பேசுகின்றார்கள் என்பதைத் 'தூங்குவது'போல இருந்து கேட்கின்றோம். வேண்டாதவர் நம்மைப் பார்க்க வந்தால், பார்க்க விரும்பவில்லை என்று சொல்லாமல் 'இழுத்துப் போர்த்திக்கொண்டு' 'தூங்கு'கின்றோம்.

நிழல்—அது தூய்மையானது; மாசற்றது; அமைதி நிறைந்தது; கறைப்படுத்த முடியாதது. பாம்பின் நிழலிலே நஞ்சிருப்பதில்லை; புலியின் நிழலிலே அதன் கொடூரப் பசியில்லை; வெறுக்கத்தக்க புரோகிதனின் நிழலிலே அவனது இழிதன்மை--சுரண்டும் பண்பு இல்லை; கோயிலின் நிழலிலே அதனுள்ளே நிகழும் அக்கிரமக் களங்கமில்லை; பாசாங்கு பக்தனது நிழலின் நெற்றி, அவனது பட்டை நாமம்—திருநீறு—சாதிக் குறி— இவைகளின் களங்கத்தை உதறி எறிந்துவிடுகிறது. நிழல், எவ்வளவு பெருவியப்பான பொருள்!

இப்படி எங்கும் எதிலும் கை கொடுக்கும் தூக்கம் நம்மைக் கைவிட்டு வேடிக்கை பார்க்கும் இடங்களும் இருக்கின்றன.

வகுப்பில் மாணவனும் தூங்குகின்றான்; ஆசிரியரும் மெல்லத் தலையாட்டுகின்றார். அலுவலகத்தில் தலைமையிடத்தில் இருப்பவர் தனியறையில் தூங்கினால், வாயில் காப்போன் வாயிலிலும், மற்றவர்கள் அவரவர்கள் இடங்களிலும் 'ஓய்வு' எடுத்துக் கொள்ளுகின்றனர். எல்லோருக்கும் மேலதிகாரி வந்துவிட்டால் அவரவர்கள் யார் யாரை எழுப்ப வேண்டுமோ அந்த நியதியின் படி எழுப்புகின்றனர்!

செய்துமுடிக்கவேண்டிய செயல் ஒன்று முன்நிற்கும்போது 'இரவு பகல் பாராமல்' தூக்கத்தை மறந்தால்தான் செயல் முடிகின்றது. நெப்போலியன் போர்க்களத்திலேயே சிலமணி நேரங்கள் மட்டுமே தூங்குவான் என்று வரலாற்றுக் குறிப்புச் சொல்கிறது. பழைய தமிழ்ப்பாட்டு 'கருமமே கண்ணாயினார்' 'கண் துஞ்சார்' என்று தூக்கத்தைத் துரத்துகின்றது.

தூக்கத்திற்கு ஒரு பெரிய தடைக்கல் இருக்கிறது. ஓயாமல் பாடிக்கொண்டுவரும் கொசுவின் தொல்லை அல்ல; தேடிக் கடிக்கும் மூட்டைப் பூச்சியின் தொல்லையும் அல்ல. கனவுகள் இருக்கின்றனவே, அவைதான் தூக்கத்தைக் கெடுக்கும் நச்சரவுகள்!

இனியகனவானாலும் இன்னுறக்கத்தைக் கலைத்துவிட்டுத்தான் போகின்றது; அச்சந் தரும் கனவாயினும் அதுவே முடிவாகிறது.

முறிந்துவிழும் மரத்தின் கீழ் நசுங்கிவிட்டதாகக் கனவு காணும் நாம் விழித்துப்பார்த்தால் கட்டிலிலிருந்து பொத்தென்று கீழே விழ்ந்துகிடக்கின்றோம்; நம்மீது தலையணைகள் இரண்டொன்று கிடக்கின்றன. காதலியின் கன்னத்தைத் தடவுவதாகக் கனவு கண்டு விழித்துப் பார்த்தால் கட்டிலின் கால்களைத்தான் நம் கை தேய்த்துக் கொண்டிருக்கும். பொல்லாத கனவுகள் — தூக்கத்தைக் கெடுக்கும் வெடி மருந்துகள்!

தூக்கம், தூக்கம் என்கிறேனே, தூக்கம் என்ற சொல்லுக்குப் பொருள் என்ன? தூக்கம் என்றாலும் உறக்கம் என்றாலும் ஒன்றுதானா? இன்று அப்படித்தான் சொல்லுகின்றோம். பையன் தூங்கிவிட்டான்; பையன் உறங்கிவிட்டான்; என்று இரண்டு வாக்கியத்திலும் ஒரே பொருள் காணுகின்றோம் இன்று; ஆனால் தமிழ் இலக்கியத்தில் அப்படி இல்லை!

தூக்கம் என்று இன்று நாம் சொல்வதை அவர்கள் உறக்கம் என்றுதான், சொன்னார்கள். ஆனால் தூக்கம் என்ற சொல் அப்போது இல்லையா எனின் இருந்தது. இருந்தால் என்ன பொருளில் வழங்கியது?

தொங்குதல் என்ற பொருளில் வழங்கியது. புறநானூற்றில் இருபத்திரண்டாம் பாடலில் ஒரு யானையைப்பற்றிப் பாடும்போது,

'தூங்கு கையால் ஓங்கு நடைய'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. தூங்கும் கையையும் ஓங்கும் நடையையும் உடையது என்று சொல்லப்படுகின்றது.

யானையின் கை துதிக்கை; அது தொங்குகின்றது; உறங்கவில்லை. அதனால் தொங்குதல் என்ற பொருளில்தான் தூங்குதல் என்ற சொல் பயன்படுகின்றது.

தூக்கணங்குருவி என்று அழைக்கின்றோமே, ஏன்? மற்றப் பறவைகளின் கூடுகள் போல் இன்றி, அந்தக் குருவியின் கூடு தொங்குகின்றது, தூங்குகின்றது, அதனால் தூக்கணங்குருவி என்று அதைச் சொல்கிறோம். 'தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்' என்ற தொடரிலும் தூங்கும் எயில், உறங்கும் கோட்டை என்று பொருள் கொள்ளாமல் தொங்கும் கோட்டை என்று சொல்கிறோம்.

தூங்குதல் என்பது தொங்குதல்; ஆனால் ஏன் உறங்குதலுக்கு அந்தச்சொல்லைக் கையாண்டனர். ஏதாவது காரணம் இருக்கவேண்டும் அல்லவா? டாக்டர் மு. வ. அவர்கள் எங்கட்குக் குறுந்தொகை வகுப்பில் சொன்ன காரணம் பொருத்தமாகத் தோன்றுகின்றது.

"மனிதன் நிற்கின்றபோது, நடக்கின்றபோது, உட்காருகின்றபோது நிலைத்திருக்கின்றான். ஆனால் உறங்கும் போதோ எந்த நிலையிலும் இல்லாமல், இப்படியும் அப்படியுமாக அலைந்து கொண்டிருக்கின்றான். அவன் அலைவதும் தொங்குவதும் ஒன்றாக இருந்ததை நோக்கிய யாரோ முதன் முதலில் உறக்கத்திற்குப் பதில் தூக்கத்தைப் பயன் படுத்தியிருக்கவேண்டும். இதிலே உங்களுக்கு ஐயம் இருந்தால் ஓடும் பஸ்ஸில் தூங்குகின்றவர்களைப் பாருங்கள், அவர்கள் ஆடி அசைந்து தொங்கிக்கொண்டிருப்பது போல் தோன்றுகின்றார்கள்"

என்று நகைச்சுவையைக் கலந்து ஊட்டினார்.

தூக்கமோ உறக்கமோ, எந்தப் பெயரிட்டழைத்தாலும் ரோஜாவின் மணம்மாறாததைப்போல்அதன் மயக்கம் இருக்கிறது. உங்களுக்கு அந்த மயக்கம் கண்ணைச் செருகுகின்றதை நானும் இதோ 'தூக்க கலக்கத்தில்' பார்த்துவிட்டேனே! இன்னுமா எழுதிக்கொண்டிருப்பேன்; பேசாமல் படுத்துத் தூங்க வேண்டியதுதான்; இல்லை இல்லை உறங்கவேண்டியதுதான்!

★

பெண் என்பவள் பலமற்றவள். வாழ்க்கை யென்னும் கொந்தளிக்கும் கடலில் அவள் தன்னந்தனியாகப் பிரயாணம் செய்யமுடியாது. அவளுக்கு உணவும் உடையும் சுகமும் கொடுத்து ஆதரிக்க, அவளிடம் அன்பு செலுத்தி, அவளது சுக துக்கங்களைத் தன் சொந்தச் சுக துக்கங்களாகப் பாவிக்க, பயங்கள் இன்னல்களிலிருந்தெல்லாம் அவளைப் பாதுகாக்க, தேவை ஏற்படும்போதெல்லாம் அவளுக்கு ஆறுதல் தர, ஒரு ஆண் மகன் அவசியமாகிறான். அவனது அந்த உதவிகளுக்குப் பதிலாக இளமைக் களஞ்சியமாய் விளங்கும் தன்னையே அவள் பரிசாக அளிக்கிறாள்.

பாலிபியஸ் (கி. மு. 204-122)

—[கோ. கோதண்டராமன்]—

கிரேக்க ஆசிரியரான பாலிபியஸ் என்பாரின் பெயரும் புகழும் பெரும்பாலும் ரோம் நாட்டு வரலாற்றினையே ஒட்டியது என்னலாம். அரசு பற்றிய அவரது சீரிய ஆராய்ச்சி முடிவுகள், ரோம் நாட்டு அரசியல் அமைப்பை, அவர் தனது சிந்தனை உரைகல்லில் தேய்த்து உத்தரவாதமுள்ளவை என்று தெளிந்தபின் உலகுக்கு அளித்தவை என்பர் அரசியல் வித்தகர்கள்.

அகேயன்லீகின் இருப்பிடமாக மிளிர்ந்த ஆர்கேடிய நாட்டைச் சேர்ந்த "மெகலோபாலிஸ்" என்ற இடத்தில் பாலிபியஸ் தோன்றினார். மாசிடோனிய ஆதிக்கத்தை விரட்டி, கிரேக்க நாட்டை ரோம் சாம்ராஜ்யத்தின் ஆளுகையின் கீழ்க்கொண்டு வந்த ரோமானியப் படையெடுப்பின்போது, அகேயன் லீகின் திட்டங்களை உருவாக்கிய அரச தந்திரிகள் பலருள் பாலிபியசும் ஒருவர். மேற்கூறிய படையெடுப்பின்போது, அவர் மிதவாதிக் கட்சியைச் சார்ந்திருந்தார். இந்த மிதவாதக் கட்சி, ரோம் நாட்டைப் பொறுத்தவரை ஒரு எதிர்மறைக் கொள்கையையே கடைப்பிடித்து வந்தது. இந்தப் படையெடுபபின் இறுதியில் ரோமர்களே வெற்றிபெற்றனர். இவ்வெற்றி காரணமாக அகேயன் லீகைச் சேர்ந்த மாபெருந் தலைவர்கள், அதே லீக்கைச் சார்ந்த— ரோம் நாட்டு ஆட்சியை ஆதரித்த ஒரு சில உறுப்பினர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டு, ரோம் அரசாங்கத்தின் கைதிகளாயினர். அந்தத் தலைவர்கள் ரோம்நாட்டு அரசாங்கத்தால் வெறும் பெயரளவுக்குக் கைதிகள் என்று கருதப்பட்டார்களே தவிர, உண்மையில் அவர்கள் ரோம் நகரத்தில் மிகுந்த மரியாதையுடனேயே நடத்தப்பட்டார்கள்.

இத்தாலிநாட்டில், பாலிபியசின் திறமையும், அநுபவமும் உணரப்பட்டுநன்கு பயன்படுத்தப்பட்டன. ரோமாபுரிக்கும் அகேயர்களுக்குமிடையில் நல்லுறவை வளர்க்கும் சமாதானத் தூதுவராக அவர் கிரீசுக்கு அனுப்பப்பட்டார். பாலிபியசின் சமாதானத் தூது முதலில் எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லையென்றாலும், சின்னாட்களில், அவர் கிரேக்க நாட்டுப் புனருத்தாரண வேலையைக் கவனிக்கும் பொருட்டு, ரோமானிய அரசாங்கத்தின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். இதற்குப்பின், பாலிபியஸ் தனது எஞ்சிய வாழ்நாட்களைக் கலை, கல்வித் துறைகளில் செலவழித்தார். அக்காலத்தில் சிறந்த அரச தந்திரியாக விளங்கிய "இளைய சிபியோ ஆப்பிரிக்கானஸ்" என்பாரின் ஆதரவும் நட்பும் பாலிபியசுக்குக் கிடைத்தது. இந்த அரிய நல்வாய்ப்பினை அவர் ரோம்நாட்டு வரலாற்றுக் குறிப்புக்களையும் ஆதாரங்களையும் திரட்டுவதற்குச் சுற்றுப்பயணம் செய்து நன்கு பயன்படுத்திக் கொண்டார்.

அவரது மேற்குறித்த சுற்றுப் பயணத்தின் நோக்கங்கள் கீழ்க் கண்டவைகளாகும். ஒன்று, ரோம் சாம்ராஜ்யத்தின்சீரையும்சிறப்பையும் விளக்குவது. இரண்டாவது ரோம் சாம்ராஜ்யம், உலக வல்லரசாகத் திகழ்வதற்குக் காரணமாக இருந்த இரண்டாவது பியூனிக் யுத்தத்தில் இருந்து மாசிடோனிய வெற்றிவரை உள்ள நிகழ்ச்சிகளைத்தொகுத்து வரலாறு எழுதுவது. மூன்ருவது, ரோமாபுரியின் ஆதிக்கம் எவ்வாறு அதன் விரிந்து பரந்த சாம்ராஜ்யத்தில் செவ்வனே செலுத்தப்பட்டு வந்தது என்பதை விளக்குவது. இவ்வாறு தனது பிறநாட்டுச் சுற்றுப் பயணத்தின் மூலம் நேரில்காண நேரிட்ட ஆட்சிமுறைகளைப் பற்றிய அநுபவத்தையும், ஆங்காங்கு திரட்டிய அரசியல் குறிப்புக்களையும் துணைக்கொண்டு பாலிபியஸ் எழுதியுள்ள வரலாற்றுச் சுவடிகளுள் முதல் ஐந்து நூல்கள் முழு வடிவத்திலும் ஏனைய முப்பத்தைந்து நூல்கள் சிதறுண்ட துண்டுகளாகவும் நமக்குக் கிடைத்துள்ளன. தனது ஆறுவது புத்தகத்தின் ஒரு பகுதியில் பாலிபியஸ் அரசாங்கத்தைப் பற்றிய சில அரிய கருத்துக்களை வழங்கியுள்ளார். இந்நூலின் முக்கிய நோக்கம், அரசாங்க அமைப்பின் எந்தக் கூறுகள், ரோம் நாடு ஓர் பரந்த சாம்ராஜ்யத்தை உருவாக்குவதற்கு உறுதுணையாக இருந்தன என்பதை விளக்குவதுதான் என்று கூறப்படுகிறது. இந்நூலில் பாலிபியஸ், அரசியல் சமூகத்தின் தோற்றத்தையும், அது எவ்வாறு நாளுக்கு நாள் ஒரு புரட்சிகரமான மாறுதலுக்கு (அதாவது வேறுபட்ட ஆறுவகை நல்ல அல்லது கெட்ட முறைகளைக்கொண்ட சுழற்சியின் மூலம்) உட்படுகிறது என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளார். இந்த அடிப்படையின் பேரிலேயே அவர் ரோமானியக் குடியரசின் அரசியலமைப்பை அலசி ஆராய்ந்திருக்கிருர். சுருங்கக் கூறின், மூன்று நல்ல முறைகளின் கூட்டுறவின் மூலம் ரோம் சாம்ராஜ்யம் கலப்படமான ஓர் அரசியல் அமைப்பைக் கொண்டு சக்திவாய்ந்த வல்லரசாகத் திகழ்ந்தது, திகழ முடிந்தது எனும் உண்மையைப்புலப்படுத்துவதே பாலிபியசின் நூல்களின் நோக்கமாகும்.

கிரேக்க நாட்டு மண்ணிலே பிறந்து, ரோமாபுரியில் வாழ்ந்து, ரோமாபுரியின் வரலாற்றையும், அவ்வரலாற்றின் அடிப்படையில் அரிய அரசியல் கருத்துக்களையும் உலகுக்கு வழங்கி, வான்புகழ் பெற்ற அரசியல் ஞானிதான் பாலிபியஸ்! வாழ்க அவர்தம் நாமம்! வளர்க அவரது புகழ்.

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

பெருமையைப்பற்றிப் பேசுவார்களே ஒழிய, அஜந்தாவின் அழியா ஓவியங்களைக் கருதார், எல்லோராவின் எழிலைவிட 'எப்ஸ்டின்' சிற்பங்களையே வியந்து பேசுவர், கதகளியைப்பற்றியும் பரதநாட்டியத்தைப்பற்றியும் அறியார். ஆனல் வால்ட்ஸ், டாங்கோ நடனத்தைப் பற்றி நன்ருகச் சொல்லுவார்கள்.

அலிகார் பல்கலைக் கழக மாணவனாக இருந்தபொழுது, "கதகளி" என்ருல், 'கலா ஆசர்' என்று சொல்லப்படும் வியாதியைப் போன்ற இன்னொரு வியாதியாக்கும் என்று நானே கருதியிருந்ததுண்டு! நான் மட்டுமல்ல, பலர் அப்படித்தான் எண்ணியிருக்கக் கூடும்!!

நமது கலாச்சாரம்பற்றிய பொது அறிவு மிகமிக மோசம், வெட்கப் படவேண்டிய ஒன்று என்ருலும் தென்னட்டு வாழ்க்கை — கலை— இலக்கியம் — சிற்பம் பற்றி வடநாட்டிலிருக்கும் சராசரி மனிதனுக்கும் "தெரியாது" என்பது, திடுக்கிடவைக்கும். மேலே சொன்னேனே கல்லூரி மாணவன், அவன் எவ்வளவோ மேல்! அவனையும்மிஞ்சக்கூடியவர்கள் வடக்கிலுண்டு!!

*

பிரிந்துபோகவேண்டும் என்று கழகத்தவரும், "நாம் தமிழர்" என்போரும் கூறுவதை நான் ஏற்கமாட்டேன். (பாகிஸ்தான் கேட்ட முஸ்லீம் லீக்கைப்போல இவர்கள். பாகிஸ்தான் கோரிக்கையால், நமது நாடு துண்டாடும்படி ஏற்பட்டதன் விளைவுகளை அனைவரும் அறிவோம்.) ஆனல், என்ன காரணத்தால் "வடக்கு தெற்கு" போராட்டம் நடத்துமளவுக்குக் குரோதம் ஏற்பட்டுள்ளது என்பதை என்னல் புரிந்துகொள்ள முடிகிறது.

வட இந்தியாவிலுள்ள மிகப் படித்தவர்களுக்குக்கூட, சாதாரண விஷயமான கதகளியைப் பற்றியோ பரதநாட்டியத்தைப் பற்றியோ, தெரியாது; பாரதியும் வள்ளத்தோலும் அவர்களுக்குத் தெரியாது; மதுரைக் கோயிலின் அழகையும் சோமநாதபுரத்தின் கவர்ச்சியையும் பற்றி அவர்கள் அறியார்கள்; எம். எஸ். சுப்புலட்சுமி, யார் என்பது பற்றியோ; ருக்குமணி அருண்டேலைப் பற்றியோ, வடக்கேயிருக்கிறவர்கள் அறியார்கள். தமிழிலும் தெலுங்கிலும் உள்ள, சிறப்பும் புகழும் மிக்கப் புராதன இலக்கியங்களையும் சரி, வளரும் இலக்கியம் பற்றியும் சரி அவர்களுக்கு ஒரு துளியும் தெரியாது. மலையாளத்தில் வளர்ந்து வரும் சிறுகதை இலக்கியம் பற்றி, அறியார். இந்திய மொழிகளிலே வெளிவரும் இலக்கிய—கதை — ஏடுகளில் புகழும் பெருமையும் மிக்க ஏடுகள் தமிழிலே வெளியிடப்படுகின்றன என்பதோ புரட்சிகரமான நாடகங்களும் கவிதைகளும் தெலுங்கிலே தீட்டப்படுகின்றன என்பதோ அவர்களுக்குத் தெரியாது. தென்னட்டவருக்கு, இசையின் மீதுள்ள ஆர்வம் எத்தனை என்பதையும், எம். எஸ். சுப்புலட்சுமி செய்யும் ஒரு கச்சேரிக்கு அரை இலட்சம் வசூலாகுமென்பதையும், அந்த வசூலையும் அந்தப் பாடகி ஏதாவது ஒரு நல்ல காரியத்துக்குக் கொடுத்துவிடுகிருர் என்பதையும் பற்றி யாரும் வடக்கில் அறியமாட்டார்கள்! நுண்கலைமிக்க நாட்டியத்திலும், இசையிலும், தெற்கிலுள்ள ஒவ்வொருவரும் நல்ல ரசிகர்கள் என்பதைக்கூட அவர்கள் அறியார்கள். கலையை ரசிப்பதில் வடக்கில் வாழ்வோரை விடத்தெற்கேயிருக்கும் சாதாரண ஆள்கூடத் தேர்ந்தவர்கள் என்று சொன்னல், வடக்கே யிருப்பவர்கள் நம்ப மறுப்பார்கள்.

தென்னிந்தியர்களைப் போற்றிப் புகழவேண்டுமென்பதற்காக இதையெல்லாம் நான் சொல்லவில்லை! தங்களை மற்றவர்களிடமிருந்து பிரித்துக்கொண்டு வாழும் குணம் அவர்களிடமும் இருக்கலாம். ஆனல், வடஇந்தியர்கள் அளவுக்கு அவர்கள், இருள் படிந்தவர்களாக இல்லை. இலட்சக்கணக்கான தென்னிந்தியர்கள், காலிப்பைப் பற்றியும் இக்பால்யார் என்பது குறித்தும், பிரேம்சந்தைக் குறித்தும் சுமித்ராணந்தன் பந்தைப் பற்றியும், ஜோஷைப் பற்றியும் கிருஷ்ண சந்தரைக் குறித்தும், இஸ்மத் அகதியின் பெயரையும் ராஜிந்தர் சிங்பேடியின் திறமையையும் கேட்டிருக்கமாட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை.

நான், இதை எழுதும் காரணம் எவர்மீதும் குற்றம் சொல்வதற்காக அல்ல. வடக்குக்கும் தெற்குக்கும் இடையே இன்னும் நெருங்கிய, விரிந்த, கலாச்சாரத் தொடர்புகள் இருக்கவேண்டுமென்பதையே வலியுறுத்த விரும்புகிறேன்.

அகில உலகத்துடனும் தொடர்பு கொள்ள வேண்டுமெனும் பேரார்வத்தோடு இப்போது பல இயக்கங்களை, நாம் வைத்திருக்கிருேம்-இந்தோ சோவியத் கலாச்சாரக்குழு, இந்தோ சீன நட்புறவுக் கழகம் என்பதுபோல, இந்தியாவின் பல பகுதிகளிலிருக்கும் கலாச்சாரங்களுக்கும் மொழிகளுக்குமிடையே நட்புறவை வளர்க்கும், இப்படி ஒரு குழுவை ஏற்படுத்தவேண்டும். தெற்கு வடக்கு கலாச்சார சங்கம் என்றிருந்தால் என்ன?

வடக்குக்கும் தெற்குக்கும் தொடர்பு ஏற்பட, பழங்காலத்தில் விந்தியமலை குறுக்கேயிருந்தது. இப்போது, இரயிலும், பாதைகளும் வடக்கையும் தெற்கையும் இணைத்துவிட்டிருக்கிறது. சுதந்திரப் போராட்டத்தின் விளைவாக ஐக்கியமும் மலர்ந்து தென்னிந்திய ராதாகிருஷ்ணனும், வடஇந்திய நேருவும் சேர்ந்து பங்கு ஏற்கும் நிலையும் உள்ளது. விந்தியத்தைத் தாண்டிடும் ஆகாய விமானங்கள், உள்ளன. காலையில் தேநீர் சாப்பிட்டுவிட்டு, டில்லியைவிட்டுக் கிளம்பினல் மத்தியான சாப்பாட்டுக்கு சென்னையைச் சேர்ந்து விடலாம்.

ஆனல், கலாச்சாரத் துறையிலோ, "விந்தியம்" இன்னும் உள்ளது. தெரியாமை, குரோதம், தனித்த நிலை எனும் "விந்தியத்தை" இருதரப்பாரும் கடக்கவேண்டும். வடக்கும் தெற்கும் ஒன்ருெடொன்று தொடர்பு பெறவேண்டும்."

★

மே, 10, 11 தேதிகளில்

திருவாரூர் மாநாடு

வருக! வருக!!

வரவேற்புக்குழு.

எண்ணம் சரி! .....செயல்?.....

"ஒத்துழைப்போர் சங்கம் ஒன்று வைக்கப்போகிறேன்..."

"அதென்ன சங்கம்?"

"பலருழைக்கவும் ஒருவன் உண்டு கொழுக்கவும், பணக்காரன் எனச் சிலரும் பாட்டாளிகள் எனப் பலரும் இருப்பது தீது, எல்லோரும் வாழவேண்டும் என்று பேசப்படுகிறதல்லவா? அதை நடத்திக்காட்டப் போகிறேன்!"

"இதுதான், அச் சங்கத்தின் கொள்கையா?"

"ஆமாம்! ஒருவருக்கொருவர் ஒத்துழைத்துக்கொண்டு, அரிசியிருப்போருக்கு ஆடையும், ஆடை வைத்திருப்போருக்கு அரிசியும், இப்படி ஒருவர்க்கொருவர் இல்லாததைப் பரிமாறிக்கொண்டுவாழும் ஒரு அமைப்பை உருவாக்க ஆசைப்படுகிறேன்..."

"அதெப்படி முடியும்?"

"ஏன்முடியாது! ஒரு வீட்டில் நாலு பேர் அண்ணன் தம்பிகள். ஒருவனுக்கு விவசாயம், இன்னொருவனுக்கு வியாபாரம், வேறொருவன் விஞ்ஞானி, மற்றொருவனுக்கு ஆலைத் தொழில், இவர்களனைவரும் தத்தமது தொழிலின்மூலம் கிடைப்பதை வீட்டுக்குக்கொண்டு வருகிறார்கள். விவசாயி, அரிசி தருகிறான்! வியாபாரி, மிஞ்சிய அரிசியை விற்று, வேண்டிய பொருள்களைக் கொண்டுவரும் துறையிலிருக்கிறான்! விஞ்ஞானி ரேடியோ போன்றவைகளைச் செய்தளிக்கிறான்! ஆலைத் தொழிலாளி நெய்தவைகளைக் கொண்டுவருகிறான்! அப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைக் கொண்டுவந்து அந்த வீட்டில் போட்டால், யாருக்கு என்ன கவலை?"

"அதெப்படி முடியும்? நீ சொல்வதைப்பார்த்தால், அந்தக் குடும்பம் பணக்காரக் குடும்பமாக வன்றோ இருக்கவேண்டும்? அப்போதுதானே, சொந்தத்தில் ஆலை வைத்திருக்கவும், சொந்தத்தில் ரேடியோ செய்யவும், சொந்தத்தில் வாணிபம் நடாத்தவும்—விவசாயம் செய்யவும் முடியும்?"

"உண்மைதான்! ஒரு குடும்பம் என்று வரும்போது, இக்கேள்வி எழும். ஆனால், சமூகமே இந்தக் குடும்பமாக மாறினால், அந்தச் சமூகத்தின் உழைப்பு இவ்வண்ணம் பங்கிடப்பட்டால், அங்கே விளையும் வளத்தை அனைவரும் பங்கிட்டுக்கொண்டு வாழ்ந்தால்.."

"கேட்க, இனிக்கிறது! முடியுமா?"

"முடியுமா! என்று முயற்சிக்காமலே கேட்டால் எப்படி? முயற்சித்துப் பார்ப்போம்!!"

அண்ணல்

"எப்படி முயற்சிப்பாய்? உன் கொள்கையை நாடெங்கும் ஒவ்வொரு நாளும் எடுத்துச்சொல்லப் போகிறாயா? அப்படிச்சொல்லி, உன் வழிக்கு மக்களையும், மக்களை ஆளும் அரசாங்கத்தையும், அவ்வளவு எளிதில் திருப்பிவிட முடியுமா?"

"நான், பேசப்போவதில்லை. ஒரு 'மாடல்' வைக்கப்போகிறேன். ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கே சிலரைச் சேர்த்து, ஒரு 'காலனி' நிறுவி, அந்தக் காலனிக்குள் இதையெல்லாம் செய்துகாட்டப் போகிறேன்."

"அதற்கு வசதி உண்டா உன்னிடம்?"

"இல்லை!"

"பிறகு...?"

"என் திட்டத்தைக் கேள்விப்பட்டு இந்தளவுக்கு உதவி செய்ய ஒருசிலராவது வராமலா போவார்கள்? எதெதற்கோ பணத்தை அள்ளியிறைக்கும் பணக்காரர்களில் ஒருவருக்காவது என் திட்டம் பிடிக்காமலா போகும்? மனித சமூகத்துக்குப் புதியதோர் அமைப்பைத் தரும், எனக்கு உதவாமலா போவார்கள்?"

"அப்படிப்பட்டவர்கள் யார் எனத் தேடிக் கண்டுபிடித்து உதவிப்பெறபோகிறாயா..."

"நான் போகப்போவதில்லை. வீட்டு வாசலில், ஒவ்வோர் நாளும் காத்திருக்கப்போகிறேன்--இப்படி ஒரு காலனியை ஏற்படுத்த யாராவது ஒரு பணக்காரர் வலுவில் என்னிடம் வந்தேதீருவார்!!"

* * *

ஒரு நாள், இருநாளல்ல; பன்னிரண்டு ஆண்டுகள், வீட்டு வாசலிலேயே காத்துக்கிடந்தானும்! யார் வருவார்கள்? பிரபுக்களுக்கு இது தானா வேலை? பிரியவல்லிகளைத் தேடுவதிலும், பெரும் பிரபுவாக என்ன செய்யலாம் என்பதிலும் கவனம் ஓடுமே ஒழிய, பிறர் வாழ்வதைப் பற்றியும் பெரும்பாலானோரின் பிரச்னைகள் தீர்க்கப்படும் முறைகளைப் பற்றியும் என்ன கவலை அவர்களுக்கு? யாரும், வரவில்லை! கடைசியில், ஏமாற்றத்தோடேயே, அவன் இறந்தான்!!

அவன் இறந்த பிறகு, அவன் சொன்ன கொள்கைகளின் மீது சிலருக்குப் பற்றுதல் உண்டா

யிற்று. அவன் விருப்பம்போல், காலனிகளை உருவாக்கி, நடத்தினர். ஆனால், அப்போதிருந்த பிரான்சின் சூழ்நிலையில் இந்த முயற்சிகள் எதுவும் பலிக்கவில்லை. ஏனெனில், நவீன எண்ணங்கள் மலராத காலம் அது! 18-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் என்றால் கேட்கவேண்டுமா!!

"சக்திக்கேற்றபடி உழைக்கவேண்டும். தேவைக்கேற்றவாறு வாழ வேண்டும்" என்கிற உன்னதக் கொள்கையை சோஷியலிசம் — சமதர்மம் என்கிறோம்!! இந்த உத்தம நெறி, உலகில் மனிதன்படும் ஒவ்வொரு கஷ்டத்தையும் ஒரு நிமிடம் சிந்தித்துப் பார்த்த எவருக்கும் ஏற்படாமலில்லை. நமது நாட்டில் வாழ்ந்த சித்தர்களும் ஜீவன் முக்தர்களும், "இப்படியேன் மனிதன் கஷ்டப்படுகிறான்?" எனும் கேள்வியை எழுப்பி, "அது அவன் தலைவிதி. ஆண்டவன் செயல்" என்று சொல்லிவிட்டார்கள். இப்படிச் சொல்வோர், பிரான்சு போன்ற இடங்களில் இருந்தும் கூட, மனித சாதியின் தீராத பிரச்னைகளைத் தீர்த்துவைக்க புதுப்புது யோசனைகள், அப்போதைக்கப்போது பூக்காமலில்லை.

சார்லஸ் போரியர், சொன்ன ஒத்துழைப்போர் சங்கக் கொள்கையில், குறிப்பிடப்கூடிய ஒன்று 28-வயதுக்குமேல் யாரும் உழைக்கக்கூடாது என்று சொன்னதாகும்.

ஒவ்வொரு மனிதனும் 28-வயதோடு 'ரிடயர்' ஆகிவிட வேண்டும், என்று சொன்னான். அதற்கு மேல், அவன் உழைக்கக்கூடாது. அவனது தேவைகளை, 'காலனி'யிலிருப்போர், கவனித்துக் கொள்ளவேண்டும் என்பது அவன் கருத்து.

சாகும் வரையில் உழைக்கும் மனிதர்களிருக்கிறார்கள்! உழைப்பின் காரணமாகச் சாவோரும் இருக்கிறார்கள்!! இதற்கா, மனிதன் பிறந்தான்?—என்று கேள்வி எழுப்பினான், போரியர்.

மனிதன், இதற்கா பிறந்தான்? — சிந்தித்தால், மனிதன், உழைத்து உழைத்து உயிரை விடப் பிறக்கவில்லை, வாழத்தான் பிறந்தான் என்பது தென்படும்.

வாழ்வது என்றால் என்ன? தேவைக்கேற்ற வசதிகளைப் பெற்று, மனிதன் உயிரோடிருப்பது எனலாம்! தேவைக்கேற்ற வசதிகளை, அவன் பாடுபடாவிட்டால் யார் தருவார்கள்? "காலனி" தரும் என்றான் போரியர்! 28-வயதுக்குட்பட்டவர்கள் பலர் இருப்பார்களல்லவா, வாலிபப் பருவமல்லவா அது, அப்போது பாடுபடக் கூடியவர்களால் கிடைக்கும் பலனை அனைவரும் பகிர்ந்து வாழவேண்டும் என்று சொன்னான்.

இயந்திரம்போல உழைத்துழைத்துச் சாகாமல், ஒரு கட்டம் வந்ததும் மனிதன் அந்த உழைப்பிலிருந்து 'ரிடயர்ட்' ஆகிவிட வேண்டும், அவனது தேவைகளை, அவன் விட்ட இடத்துக்கு வருவோர் பங்கிட்டு நிறைவேற்றிவைக்கவேண்டும் என்று சொன்னான்.

அவன் சொன்ன 28-வயது என்பதில் வேண்டுமானால் கருத்து வேற்றுமை இருக்கலாமே ஒழிய, உலகிலுள்ள எந்த அரசும், உழைத்தவனுக்கு ஓய்வு கிடைக்க வேண்டும் என்பதை மறுக்கவில்லை. நமது நாட்டில்கூட அரசாங்க அலுவல்களிலிருப்போருக்கு 55-வயது வந்தால் விலகிவிடவேண்டும் என்கிற முறையிருக்கிறது.

சர்க்காரிலும், சர்க்கார் சம்பந்தப்பட்ட துறைகளிலும் இந்த முறை உள்ளதே ஒழிய—சாதாரண விவசாயிக்கும், வியாபாரி போன்றோருக்கும் இந்தக் கட்டுப்பாடு உண்டோ எனின், கிடையாது! விவசாயிக்கு, வேலைசெய்தால் தான் கூலிகிடைக்கும்—இட்லி சுட்டு விற்கும் கிழவி, காலையில் அடுப்பை மூட்டினால்தான், சில அணாக்களையாவது பார்க்க முடியும்.

குறிப்பிட்ட வயதுக்குப் பிறகு "ஓய்வு" பெறும் அரசாங்க அதிகாரிகளில் கூட, தள்ளாத வயதிலும் ஏதாவது வேலைகிடைக்காதா, கிடைத்தால் செய்யலாமே என்கிற ஆசையோடு, அலைவோர் ஏராளம் உண்டு.

காரணம், மனிதனின் தேவைகளைப் பெற்றுத்தரவேண்டிய பொறுப்பு, எவரிடமும் இல்லை. அவனவனுகவே, பெறவேண்டியவனுயிருக்கிறன்.

இது கூடாது என்பதால்தான், "ஒத்துழைப்போர் சங்கம்" வைத்து அதன்மூலம் 'காலனி' நடத்திப் பார்க்கவேண்டும் என்று கனவு கண்டான் போரியர்.

கனவு, அழகானது மட்டுமல்ல, ஆழ்ந்த மனிதத் தன்மையும் மிக்கதாகும்! ஆனால், அதை நடத்திப்பார்க்கப் பணம் படைத்த தர்ம தாதாக்களே, முன்வருவர் என்று எதிர் பார்த்தான். இயலாமலேயே செத்தான்.

*

'காலனி' அவன் விரும்பியது! அதுபோன்ற 'காலனி'யாக ஒரு நாடே இருக்கவேண்டும் என்றே, இன்று முற்போக்காளர்கள் கூறுகிறார்கள் !!

மனிதன் வாழ வேண்டும்—என்கிற ஆசையின் காரணமாகவே, முற்போக்காளர்கள், சக்திக்கேற்ற உழைப்பு வேண்டும்; தேவைக்கேற்ற வசதிகளை அவர்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும், அதுதான் சோஷியலிசம், என்கிறார்கள்.

இப்படிப்பட்ட சோஷியலிச முறையில்தான் எமது நாடு, முன்னேறி வருகிறது, என்று தெரிவிக்கும் ரஷ்யா, சீனாவும் உண்டு உலகில்.

28 வயதுக்கு மேல் மனிதன் எவ்வித கவலையுமற்று, தன் காலனியில் இருக்கவேண்டுமென்ற போரியரின் 'கனவு' அப்படியே பலிக்காவிடினும், இயலாதோருக்கு வசதிகளைத் தரும வழிகள் ரஷ்யாவிலிருப்பதாகக் கேள்விப்படுகிறோம்.

உழைப்போருக்கு வாழ்வும், முதுமைக்காலத்தில் வசதிகளும், இயலாதோருக்கு உதவிகளும் தேடித் தரும் ஒரு அரசியல் ஏற்படவேண்டும் என்பதை, மனித குலத்தின் மாண்பு அறிந்தோரனைவரும் ஒப்பவே செய்வார்கள்.

அந்த நிலை, இந்திய உபகண்டத்தில் உள்ளதா எனின், இல்லை! ஆளும் நேரு அவர்களும், அவர்தம் கட்சியினரும் "சோஷியலிசமே எமது குறிக்கோள்", என்று கூறிக்கொள்கிறார்களே ஒழிய, அந்தச் சோஷியலிசபாணியின் அம்சங்கள் ஏற்பட்டுள்ளனவா எனின், நிச்சயமாக இல்லை!!

ஏழு வயதில் ஏர் பிடித்த அஞ்சான் எழுபதாவது வயதிலும் அதே கதியில்தான் இருக்கிறான், பதினைந்து வயதில் கணக்கெழு

உட்கார்ந்த காத்தமுதது வயது 80 ஆகியும் இன்னும் பெட்டியடியில்தான் இருக்கிறார், அறுபதைத் தாண்டிவிட்ட 'அம்மாமி' கூட அப்பளாம் வடாம் செய்தால் தினசரி ஆறணா எட்டணா கிடைக்காதா என்றுதான் உழைத்துக் கொண்டிருக்கிறார்.

பேரியரின் பரந்த 'கனவு'க்கு இல்லாவிடினும், ரஷியா அளவுக்குக்கூட, மனித வாழ்க்கைக்குத் தரப்பட வேண்டிய மகத்துவ நிலை மலரவில்லை; அரும்புகூடத் தென்படும் அறிகுறியில்லை.

ஏன்?—என்பதற்கு நேரு அவர்கள் என்ன பதில் தருகிறார், தெரியுமா? கடந்த ஏப். 21-ந் தேதி புது டில்லியில் கூடிய காங்கிரஸ் சோஷியலிஸ்டுகள் கூட்டம் ஒன்றில் கூறுகிறார்:

"சமூகத்தின் சமுதாய பொருளாதாரச் சீர்கேடுகளைப் போக்கிட வேண்டியது அவசியம்தான். இந்த அவசியத்தை ஒரு பேராசிரியர் சுலபமாக உணர்ந்துகொள்ளலாம். ஆனால் ஒரு அரசியல் வாதிக்கு பலதரப்பட்ட தடைகள் உள்ளன. ஓட்டளிக்கும் மக்களின் உளப்பாங்கு இன்னும் வளர்ச்சியடையாதது, இந்தத் தடைகளுக்கு ஊன்றுகோலாயுள்ளது."

ஓட்டளிக்கும் மக்கள் வளர்ச்சியடையாததால், சோஷியலிசம் நாடிச் செல்லும் பாதையில் பல தரப்பட்ட தடைகள் உள்ளனவாம்!!

இப்படித் தெரிவித்ததன் மூலம், இன்னும் தடைகளைத் தாண்டும் நிலையில்தானில்லை என்று உணர்த்திவிட்டிருக்கிறார் நேரு. பேராசிரியர் புரிந்துகொள்ளலாம்—மக்கள், தெளிவு பெறவில்லையே என்கிறார்! அதனால், தடைகள் ஏற்படுகின்றனவே யென்கிறார்!!

அதுவும் பலதரப்பட்ட தடைகளாம்! அந்தத் தடைகளைத் தாண்ட வேண்டிய கட்டத்தில் அரசியல் வாதி இருக்கிறாராம்!!

"தடைகள் இருந்தாலென்ன? வெள்ளையனையே எதிர்த்த காங்கிரசா அஞ்சும்? ஒரே சட்டம்! தூள், தூளாக்கி சமதர்ம அரசை நிறுவுவோம்!", என்று காங்கிரஸ்காரர்கள் கர்ச்சிப்பதுண்டு. நேரு அவர்கள், "அது உண்மை இல்லை—ஏனெனில், ஓட்டுப் போடுபவர்களிடம் தெளிவு இல்லை-காரணம்—தடைகள் உள்ளன", என்று ஒப்புக்கொள்கிறார்.

இந்தத் தடைகளைத் தவிடு பொடியாக்கும் தைரியமும் செல்வாக்கும் நேரு அவர்களுக்கா இல்லை? சமஸ்தானங்களைச் சாய்த்தோம் — ஜமீன்தார்களை ஒழித்தோம்—நிலப் பிரபுக்களை மடக்கினோம்—ஆலையரசர்கள் எங்களிடமிருந்து தப்ப முடியாது—என்றெல்லாம் பேசுகிறார்களே, அப்படிப்பட்டவர்களாலா இந்த 'பல தரப்பட்ட தடை'களைத் தாண்ட முடியாது?

நேரு, 'தடைகள்' என்கிறார்! டி. டி. கே. விலகுமுன், 'புலிகள்' என்றார்!!

தடைகள், புலிகள் எது என்று தெரிந்து கொள்ளவேண்டும், நாம். நேரு அறிவார். ஆயினும், மக்களின்மீது பழியைப் போடுகிறார், அதாவது மக்களுக்கு இன்னும் தெளிவு வராததால் இந்தத் 'தடைகள்' நீடிக்கின்றன என்கிறார்.

தெளிவு பெறுமலில்லை, மக்கள்! தெளிவு இல்லாமலிருக்குமிடம் காங்கிரஸ்தான்!! ஏனெனில் அங்குதான், ஒரு பக்கத்தில் முதலாளிகள் வீற்றிருக்கிறார்கள்—இன்னொரு பக்கத்தில் சோஷியலிசம் பேசுகிறவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். ஒருவர் ஒன்று பேசுகிறார், இன்னொருவர் வேறொன்று பேசுகிறார், குழப்பமும் கோளாறும் அங்குதான் கோலோச்சுகிறது. தெளிவு, அங்குதான் இல்லை.

* * *

பலதரப்பட்ட தடைகள், சோஷியலிசம் மலர, எங்கிருந்து முளைக்கும்? நிச்சயம் முதலாளிகளிடமிருந்துதான்!

அப்படிப்பட்ட ஒரு முதலாளியின் சுயநலத்தைக் கண்டபோதுதான் சார்லஸ் பேரியருக்கு, வெறும் பிரச்சாரத்துக்குப்பதில் காரிய மூலம் ஏதாவது செய்து காட்டவேண்டுமெனும் ஆவல் பிறந்ததாம்.

வியாபாரியின் மகனாகப் பிறந்த பேரியர், சிறுவயதில் வியாபார உலகின் நாடிகளாக விளங்கும் பிரபுக்களின் தில்லுமுல்லுகளைக் கண்ணாரக் கண்டான்! ஒரு வாடிக்கைக் காரரிடம் ஒரு சரக்கைப் பற்றிய உண்மையைச் சொன்னதற்காக அவருடைய அப்பாவே, அவனைப் போட்டு அடித்தாராம்!!

ஒம் சமயம், ஒரு பணதிபதி, அரிசியைப் பதுக்கி வைத்திருந்திருக்கிறார். நாட்டிலே, கொடும் பஞ்சம், தலைவிரித் தாடிய சமயம் அது. மக்கள் திண்டாடத் திண்டாட, அவர் அரிசியைத் தாராளமாக விற்கவில்லை—கள்ள மார்க்கெட்டில் பணம் சம்பாதிப்பதிலேயே குறியாக இருந்தார். அது, பேரியருக்குப் புரியவில்லை கெட்டு மக்கிப் போயிற்றாம் இதனால். அதைக் கொண்டு போய் ஆற்றில் கொட்டிவிட்டு வரச்சொன்னாராம்! அப்போதுதான் பேரியருக்கு, "முதலாளிகள், இலாபத்துக்காக எதுவும் செய்வார்கள். இதே அரிசியை, தவித்த மக்களுக்கு கொடுத்திருக்கலாமே! ஏன் கொடுக்கவில்லை" என்று கேள்வி எழுந்தது, இதயத்தில்.

பதிலும் பிறந்தது, நாட்டின் பொருள்கள் யாவும் ஒருவன் கைக்குப் போகாமல் தடுக்கப்பட்டு ஒரு பொதுக் களஞ்சியத்தில் சேர்க்கப்பட்டு, யாராருக்கு எப்படியெப்படிப் பகிர்ந்திடவேண்டுமோ, அவ்விதம் கொடுக்கப்படவேண்டும், என்று.

அரிசி மட்டுமின்றி, ஒவ்வொன்றும் இப்படியே செய்யப்படவேண்டும்—அதற்கு ஒரு காலனியை நாம் அமைத்துச் செய்துகாட்டுவோம் என்கிற முடிவுக்கு வந்தான் அவன்.

நல்ல எண்ணம்! நல்ல முடிவு!!-ஆனால், அந்தக் காலனிக்குப் பணம்! தான் யாரை எதிர்த்து இதைச் செய்யவேண்டுமென எண்ணினாரோ அதே பணக்காரனிடமிருந்து கிடைக்குமென நம்பினான்.

அதேபோல, நேருவும், சோஷியலிச பாதையால் யார் பாதிக்கப்படுவார்களோ அந்த முதலாளிகள் மூலமே, ஒத்துழைப்பு கிடைக்குமெனக் கருதுகிறார்-காங்கிரசிலும் இடமளித்து வைத்திருக்கிறார். 'பலதரப்பட்ட தடை'கள், அங்கிருந்து கிளம்புகின்றன! மக்கள்மீது பழி போட்டுப் பயன் என்ன!!

★

காஞ்சிபுரம், 6௯, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்

827 திராவிடநாடு

18—5—58 | வார வெளியீடு | விலை 16காசு

28 MAY 1958
827/2.18

திராவிடநாடு

[பி. கே. வேலன்]

திராவிட நாடெனும் போதினிலே—பகுத்தறிவுத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
அன்னையர் நாடென்ற எண்ணத்திலே—ஒரு
அன்பு பிறக்குது இதயத்திலே.

தண்புனல்காவிரி பெண்ணை நதியும்—நம்
தங்கத் திருநாட்டின் செல்வமாகும்—பொன்
நெல்அளிக்கும் வைகை பொருநையும்—நம்
பூந்திரு நாட்டின் வளமாகும்.

கன்னடம் ஆந்திரம் கவின்மலையாளமும்—கன்னித்
தமிழ் நாட்டின் கிளைநாடே—இன்று
தரணியில் ஒலிக்கும் திராவிடநாடு—நம்
சங்ககாலத் தமிழ் நாடே.

கலைகள் நிறைந்த திருநாடு—புகழ்
கவிஞர்கள் பிறந்த பெருநாடு—நல்ல
பகுத்தறிவு நூல்கள்பல உலவி—மணம்
பாரெங்கும் வீசும் திராவிடநாடு.

குறளையும் சிலம்பையும் குவலயத்திற்கே—தந்து
குன்றாப் புகழ்கொண்ட திருநாடு—நெஞ்சை
அள்ளும் அறிவு மலர்களென்—றோர்மறை
ஆரம் படைத்த திராவிடநாடு.

வாழ்க திராவிடநாடு! வாழ்க திராவிடநாடு!
வாழ்க! வாழ்க! வாழ்கவே!
என்றும் புகழ்பெற்ற எங்கள் திராவிடநாடு!
என்றென்றும் வாழ்கவே!!

தேனில் தோய்த்த பலா!

(அரங்கண்ணல்)

விழிகளே போதும் விரர்களை விழுத்த! அவைகளுக்கு மையும் தீட்டப்பட்டு விட்டால்? அலைகளை வம்புக்கு இழுக்கும் அழகிய கூந்தலுடன் முல்லைச் சரமும் சேர்ந்தால்? முத்தாரம் விளங்கும் கழுத்தில் மோகன வைரமாலையும் தொங்கும்படி செய்தால்? தொட்டால் மணக்கும் தேகத்துக்கு சந்தனத்தையும் குழைத்துப் பூசினால்? பாலோடு சர்க்கரையும் கலந்தால்? பலாச் சுளையோடு தேனையும் சேர்த்தால்? அது போலாயிற்று, இயற்கை அன்னை தொட்டில் போட்டுத் தூங்கும் நன்செய் நாடாம் தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்ற மாநாட்டு வரவேற்புக் குழுவுக்கு கருணாநிதியும் போய்ச் சேர்ந்தது. அதிராம்பட்டினம் இளங்கோ, மன்னார்குடி நாராயணசாமி—கிருட்டிணமூர்த்தி, பேராவூரணி அடைக்கலம், கொரடாச்சேரி நடராசன், ஆரூர் நாகப்பன், எனும் ஆர்வமிக்க தோழர்களுடன் கருணாநிதியும் போய்ச் சேர்ந்து கொண்டார் எனின், மாநாட்டின் எழிலும் சிறப்பும் எப்படியிருந்தது என்று உரைத்திடவுமா வேண்டும்?

“கண்களை உயர்த்திப் பார்க்கிறேன்! கனிகள், காட்சியளிக்கின்றன—பலாப் பழம் தொங்குகிறது, வாழைத் தார்களின் வரிசையும், பனங் குலையும், எச்சம் பழக் கொத்துக்களும என்னைக் கவருகின்றன. அவைகளிலிருந்து கண்ணைக் கொஞ்சம் தாழ்த்தினாலோ, கனிந்த முகங்களைப் பல்லாயிரக் கணக்கில் காண்கிறேன். வீரர்களாகிய நீங்கள், அகமும் புறமும் மலர, இருக்கிறீர்கள் மாநாட்டில். இந்தப் பெறற்கரிய காட்சியினும் பிறிதொன்றுண்டோ?”, என்றார் அண்ணா, பேசும்போது.

கலையும், தமிழும், தூங்குமிடம் என்பர் தஞ்சைக் கோட்டத்தை! விதைக்கும் நெல், வீணாகாது, கதிராக மாறும் கழனிகள் நிரம்பிய மாவட்டம் அது; இதென்ன அதிசயம்? விதை போட்டால் எங்கும் தான் கதிர் கிடைக்கும் எனக் கூறக்கூடும். கதிர் எங்கும் கிடைக்கும்; ஆனால் தஞ்சை மாநிலத்தில் விளையும் நெல்மணிகளுக்குத் தனித்ததோர் அழகுண்டு; நெல் மணிகளை, அரிசியாக்கி, அதனை விருந்தினருக்குப் படைத்திடும் முறையிலும் கலை நயத்தைக் காணலாம். நட்சத்திரங்கள் ஆயிரம் உண்டெனினும் விடிவெள்ளியில் ஒரு அழகு இருக்கத்தானே செய்கிறது! அந்தப் பாங்கும், பண்பும் மாநாட்டின் ஒவ்வொரு செயலிலும் மிளிர்ந்தது; போட்டிருந்த கொட்டகை, அப்பப்ப; முதல் முதலாக நாம் நடத்தினோமே மாநில மாநாடு, அதனை நினைப்பூட்டிற்று. ஓமான் கடலுக்கு இரையான பன்னீர்ச் செல்வத்தின் பெயரால் அமைந்திருந்த அப்பந்தலின் முகப்போ, அபாரம்! அபாரம்!! ஒளியுமிழும் வகையில் அமைந்திருந்த அந்த முகப்பின் அழகை, இரயிலில் வந்தபோது நானும் “காஞ்சிச் செய்தி” ஆசிரியர் பூஞ்சோலையும் கண்டோம்—ஆகா, தாஜ்மகால், தோற்றது—கலையூர் வென்றது. அம்முகப்பைத் தாண்டி உள்ளே நுழைந்தால், வாயில்! அதுவும், உயர்ந்த வேலைப்பாடுகளுடன் அமைந்திருந்தது!! முகப்புக்கும் வாயிலுக்குமிடையே, பரந்து கிடந்த இடைவெளியையும் சும்மாவா விட்டார்கள்? எச்சமரத்தையும் வாழை மரங்களையும் பெயர்த்தெடுத்து வந்து, அழகுற அமைத்திருந்தார்கள்! அவைகளின் மத்தியில் நீண்டதோர் கம்பத்தில், இருவர்ணக் கொடியைப் பறக்கவிட்டிருந்தார்கள்!! அந்தக் கொடிக் கம்பத்தைப்பூமியில்வைக்க மட்டும் 50 ஆட்கள் தேவைப்பட்டார்களாம்.

இதென்ன, இதுவும் ஒரு மாநாட்டுப பந்தலோ என்று கேட்குமளவில் ஒரு கொட்டகை யிருந்தது—விசாரித்தபோது, உணவுவிடுதி என்றார்கள்! உணவுப்பொட்டலக்கடை, தேநீர் கடை, சிற்றுண்டிக் கடை, சோடாக் கடைகள், நூல் அரங்கு, என்று இவ்விதம் பல கடைகள். சைக்கிள்களை நிறுத்துவதற்காக ஒரு பரந்த மைதானம்—அது முழுதும் ஈருருளிகளாகவே இருந்தன—கார்கள் நிற்கவும் தனி இடம் ஏற்பாடு செய்திருந்தார்கள்!! புற அழகை இரசித்துவிட்டுக்கொட்டகைக்குள் நுழைந்தாலோ, அண்ணா வர்ணித்ததுபோல, எங்கும் எதிலும் அழகு மிளிர்ந்தது. மேடையின் அலங்காரம், கண்ணைப் பறித்தது—மேடைக்கு இட்டிருந்த, “அழகிரி அரங்கு” எனும் பெயரோ, இதயத்தை எங்கோ இழுத்துச் சென்று, மறைந்த அம்மாவீரர் போன்றோர் நம் முன்னோர்களன்றோ எனும் நினைவைக் கிளறியது.

அழகு மிளிரக் காரணம் டாக்டர் விசயராகவன், சதாசிவம்; பந்தல் இவ்வளவு சிறப்பாக இருக்க ‘அத்தான்’ வெங்கட்டராமனைத்தான் சொல்லவேண்டும்; மேடையழகு மிளிர்ந்தது வெங்கிடங்கால் சௌரிராசனால்; முகப்பு வேலையின் பெருமை குத்தாலம் தோழர்களைச் சாரும்; வாயிலின் அழகு மாயவரம் தோழர்களின் கைவண்ணம்; வண்ண ஓவியங்களின் பெருமை மாயவரம் பி. டி. ராஜனையும், அறந்தாங்கி கருணையையும், ஆரூர் வீரையாவையும் சேரும். அனைத்தையும்கூட இருந்து கவனித்து, ஆட்களைத் தந்து, ஓடியாடி உழைத்தவர்கள் வெங்கிடங்கால் சந்தானமும், வாழக்கரை இராசகோபாலும்! அதோ, ‘காரில்’ பறந்த வண்ணம் உள்ளாரே தென்னன், அவர்தான் கேட்டதை யெல்லாம் கொண்டுவந்து கொடுத்துக் கொண்டிருந்தவர்! ஏணியில் நின்றபடி எதையோ கட்டிக் கொண்டிருக்கும் அத்தோழன் பெயர் ஜயராமன், ஆர்வக் காளை. ஜமால் என்பவரைத் தெரியுமா? கலா ரசிகர்! கழக மணம் பரவ வேண்டுமென்பதில் ஆர்வமிக்க

(௪-ம் பக்கம் பார்க்க)

நல்ல பாடம்!

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [18-5—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 44

கடந்த சில நாட்களாக டில்லியில் நடைபெற்ற காங்கிரசுக் காரியக் கமிட்டிக் கூட்ட நிகழ்ச்சிகள், நாட்டுக்கும், நாட்டில் உள்ள வேறு பல கட்சிகளுக்கும் ஒருநல்லபாடம் கற்பிப்பதாக அமைந்துள்ளது. அதிலும் நாட்டு நலனில் அக்கறைகொண்ட ஒரு கட்சி தனது செல்வாக்கின் மூலம் நாட்டை ஆளும் பொறுப்புக்கு வருமானால், அது எப்படியெப்படி எல்லாம் தன் இஷ்டம்போல் நடந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்று விடுகிறதென்பதை இக்கமிட்டிக் கூட்டம் நன்கு தெளிவாக்கியுள்ளது.

கட்சித் தலைவரிலிருந்து சாதாரண தொண்டர் வரை அவரவர்களும் தத்தமக்குள்ள செல்வாக்கை வாய்ப்பாக்கிக் கொண்டு நாட்டின் நல்வாழ்வுக்கு ஊறு எப்படியெல்லாம் தேடுகிறார்கள் என்பது அக்கமிட்டியின் நடவடிக்கைகளின் வாயிலாக எதிரொலித்திருக்கிறது.

காங்கிரசின் ஆணி வேராக அமைந்துள்ள பண்டித நேரு அவர்களே வேதனைக் கடலில் மூழ்கி, அதிலிருந்து மீள வழி தேடியிருக்கிறார் என்றால், தமது கட்சிக்குள்ளே நிலவிக் கிடக்கும் ஊழல்களைக் கண்டு உளம் வெதும்பியிருக்கிறார் என்றால், அக் கட்சி எந்த அளவுக்கு சுயநலக் கோட்டையாக மாறியிருக்கிறதென்பதைச் சொல்லத் தேவையில்லை.

பதவிப் பொறுப்பில் இருந்து விலகப்போகிறேன் என்று பயம்காட்டி மிரட்டுமளவுக்கு அவர் சென்றிருக்கிறார் என்றால், காங்கிரசின் பெயரால் எவ்வளவு தகாத காரியங்கள் நடைபெறுகின்றன என்பது தெளிவாகத் தெரிகிறது.

காங்கிரசுக் காரியக்கமிட்டிக் கூட்டத்தில் கீழ்க் குறிப்பிடும் கருத்துக்களும் குற்றச்சாட்டுகளும் பரவலாக எடுத்துக் காட்டப்பட்டதாகத் தெரிகிறது:—

காங்கிரசில் உள்ளவர்களுக்கே சோஷலிசக் கொள்கை சரியாகத் தெரியவில்லை.

தொழில் துறை உள்பட தேசப்பொருளாதாரத்தின் எல்லாவற்றையும் அதிகாரத்திலுள்ளவர்கள் தங்கள் வசப்படுத்திக்கொண்டு இஷ்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்கிறார்கள்.

இலட்சியத்தையும் அதை அடையும் வழியையும் பற்றிக் காங்கிரசுக்காரர்களிடையே தெளிவில்லை.

காங்கிரசுக்குள் விரும்பத்தகாத பலர் புகுந்துவிட்டார்கள்.

தனியாக எந்தக்கட்சியிலும் சேராதிருந்த வகுப்புவாதிகள்பலர் காங்கிரசில் இடம்பெற்றுவிட்டார்கள்.

இவர்கள் தங்கள் சுயநலத்துக்காகக் காங்கிரசைச் சிறிதும் கூசாமல் பயன்படுத்தி வருகிறார்கள்.

காங்கிரசின் பெயரால் சிலர் சட்ட சபைகளிலும் இடம் பெற்றுவிட்டார்கள்.

வேறுவகையான சுயநலமிகள் பலரும் காங்கிரசில் புகுந்து விட்டார்கள்.

இதனால், காங்கிரசில் கட்டுப்பாடு தளர்ந்து ஊழல்கள் மலிந்துவிட்டன.

காங்கிரசின்பால் மக்கள் வைத்திருந்த மதிப்புக் குன்றிவிட்டது.

ஒவ்வொரு காங்கிரஸ் வாதியும் தன் இஷ்டம்போல் நடக்க ஆரம்பித்து விட்டார்கள்.

பதவி மோகம் தலைவிரித்தாடுகிறது.

ஒவ்வொரு ஊரிலுமுள்ள காங்கிரசுக்காரர்கள் தங்கள் இஷ்டம்போல் — தங்கள் சுயநலத்தையே அடிப்படையாக வைத்து தகுதியற்றவர்களையும், விரும்பத்தகாதவர்களையும் காங்கிரசில் சேர்த்துவிடுகிறார்கள்.

இவையும் இவைபோன்ற இன்னும் பல கருத்துக்களும் குற்றச்சாட்டுகளும் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் எடுத்துப் பேசப்பட்டதாகத்தெரிகிறது.

பத்திரிகைகள் தரும் செய்திகளைக்கொண்டு இந்த அளவு தெரிந்து கொள்ள முடிகின்றபோது, பத்திரிகைகளில் வெளியிட முடியாத--அனுமதிக்கப்படாத இன்னும் எவ்வளவோ பிரச்சினைகள் அங்கு எழுப்பப்பட்டிருக்கலாம். ஏனென்றால், பண்டித நேருவுக்கு உண்டான வேதனையையும் விரக்தியையும் எண்ணிப் பார்க்கும்போது இந்தக் காரியக் கமிட்டிக் கூட்டம் காங்கிரசுக்கட்சிக்கு ஒரு சோதனையாக அமைந்திருந்ததென்றே சொல்ல வேண்டும்.

எனவே, ஒரு கட்சி ஆளும் பொறுப்புக்கு வந்துவிட்டால், அதன் போக்கும் நோக்கும்எப்படியெப்படியெல்லாம் மாறிவிடுகிறதென்பதை விளக்கும் ஒரு நல்ல வாய்ப்பை இந்தக் கமிட்டிக் கூட்டம் ஏற்படுத்தியிருக்கிறதென்பதை எடுத்துக் காட்டி, இதன் வாயிலாக மற்றக் கட்சிகள், அதாவது நாட்டின் செல்வாக்கைப் பெற்றுள்ள கட்சிகள் எவ்வளவு எச்சரிக்கையாகத் தம்மையும் தம் கட்சியையும் கட்டிக் காத்துக்கொள்ள வேண்டுமென்பதைச் சுட்டிக் காட்ட வேண்டியவர்களாகிறோம். ❀

2-ம் பக்கத் தொடர்ச்சி

வர் — பல வழிகளிலும் ஒத்துழைப்பு தந்தார்! சேதுபதிதான், மாநாட்டின் தண்ணீர் இலாகாத் தலைவர் — என்று, ஒவ்வொருவரின் ஒத்துழைப்பைப் பற்றியும் கருணாநிதியும், இளங்கோவும் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தனர்.

மாநாட்டுக் கொட்டகை மட்டுமல்ல, திருவாரூருக்குள் எப்பக்கம் திரும்பினும் இருவண்ணக் கொடிகளும், ஒரு ஆயிரத்துக்கு மேற்பட்ட வரவேற்பு வளைவுகளும் காட்சியளித்தன. ஒவ்வொரு வளைவிலும், கருணாநிதியின் 'தமிழ்' இருந்தது. இத்தனையையும் இரண்டே இரவில் கட்டி முடித்தவர், இவர்தான் — இவர் பெயர் டாக்டர் தண்டபாணி என்றார்கள்! "அவரைப் பார்த்தால் நோயாளி போல் இருக்கிறாரே", என்றேன். ஆறு நாட்களாயிற்று, கண்களை மூடி, அதனால்தான்!—என்றார், அவர். "அவர் மட்டுமா? நாங்கள் எல்லோரும்தான் ஆறு நாட்களுக்கு மேலாயிற்று, கண்மூடி", என்றனர் கருணாநிதியின் அருகில் நின்ற மாயவரம் கருணானந்தமும் முல்லைசத்தியும்!!

"தவறு சகோதர! மாநாட்டுக்காக இவர்கள் மட்டுமே, இந்த ஆறு நாட்களும் கண்மூடாம விருந்ததாக எண்ணிக் கொள்ளாதீர்கள். தஞ்சை மாவட்டமே; பல நாட்களாகக் கண்மூடவில்லை. மாநாட்டின் பெருமைக்குக் காரணம், இவர்கள் மட்டுமல்ல, ஒவ்வொரு ஊரிலும் உள்ள ஏராளமான தோழர்கள்தான்; அவர்கள் அத்தனைபேரது பெயர்களையும்; சொல்லவும் எழுதவும் நேரம் போதாது. ஊர்வலத்தைப் பார்த்தீர்களல்லவா, நேற்று?" என்றார் கருணாநிதி.

ஊர்வலங்கள், பல இடங்களில், பலவிதங்களில் கண்டிருக்கிறோம் இதுவரை! கழகமிருக்கும் ஊரின் பெயரினைப் பொறித்த கொடிகளுடன், பல்லாயிரக் கணக்கில் தோழர்கள் கலந்துகொள்வார்கள், ஊர்வலங்களில். ஆனால், தஞ்சை மாவட்ட மாநாட்டிலோ இது மட்டுமல்ல; இன்னொரு காட்சியையும் கண்டோம். வளமும் வகையுமட்டும் கிடைத்தால், இதென்ன, கடல்மேவும் கப்பல் செய்வோம் — வானத்தை வட்டமிடும் விமானம் கட்டுவோம்— கனகவிசயன் தலையில் அன்றோர்நாள் கல்சுமக்கவைத்த சேரன் செங்குட்டுவனின் புகழை நாட்டுவோம் — வெற்றித் தேரில் ஏறிப் பவனி வருவோம் என்பதை எடுத்துக் காட்டுவதுபோல, ஆகாய விமானம்போல் ஒரு கழகமும், கடலில் மிதந்திடும் கப்பலைப் போல் இன்னொரு கழகமும், கனகவிசயன் கல்சுமந்து செல்லவும் தேர் ஏறி மூவேந்தரும் வருவது போல் வேறொரு கழகத்தவரும், முத்துப் பல்லக்கு ஒன்றும், இப்படி விதவிதமாக அழகூட்டும் விதங்களில் பல செய்திருந்தார்கள்! குதிரைகள் பூட்டிய வண்டியில் மாநாட்டுத் தலைவர், கே. ஏ. மதியழகனும், திறப்பாளர் ப. உ. சண்முகம் எம். எல். ஏ-யும், கழகக் காவலர்கள் நாவலர் நெடுஞ்செழியனும், என். வி. நடராசனும், மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் என். எஸ். இளங்கோவும், பொருளாளர் கலைஞர் மு. கருணாநிதியும் அமர்ந்து வந்தனர். அவர்கட்கு, நகரமுழுமையும் மலர்மாலைகள் சூட்டினர்! மக்கள் எல்லாம் விழாப்போல் கொண்டாடிய காட்சி, ஆரூரின் வரலாற்றிலேயே ஒரு புதுமையாக இருந்தது!!

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஆரூர் கழகச் செயலாளர் நாகப்பன், நல்லதோர் காரியம் செய்தார். பொதுச் செயலாளரைக் கொண்டு, கழகக் கட்டடத்துக்குக் கல் நாட்டியதுதான், அது. வெள்ளியால் செய்த கொல்லறு கொண்டு, நாவலர், கால்கோல் விழாச் செய்தார்! 2000 ரூபாய்க்கு மேற்பட்ட அந்த இடம், கருணாநிதியால் கழகத்துக்கு வாங்கி அளிக்கப்பட்டிருக்கிறது—அங்கே தனது தந்தை 'முத்துவேலரின்' நினைவாக ஒரு கழகமனை விரைவில் எழுப்பப்போவதாகவும் அவர் தெரிவித்தார்!!

தஞ்சை மாவட்ட மாநாட்டில் கூடியோரின் வகையினையும், சொற்பொழிவாற்றியோர் தந்த கருத்துமழையினையும், தொண்டர் குழாத்தின் சிறப்பினையும் எடுத்துக்காட்ட வேறெதுவும் தேவையில்லை — மாநாட்டின் விளைவாகக் கிடைத்திருக்கும் மிச்சம் சுமார் இருபதினாயிரம் ரூபாய்க்கு மேல் என்கின்ற ஒன்றே போதும்! ஒரு மாவட்ட மாநாட்டில் ரூபாய் 20,000 மிச்சம்—உண்மையிலேயே, இதனை அறிவித்தபோது, கருணாநிதியின் உள்ள மகிழ்வு, கண்களில் படர்ந்தது. "தம்பி! உன் கரம் பட்டு, எத்தனையோ பேர் நாட்டில் இலட்சாதிபதிகளாகியிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, உன் கரம் பட்டு, 20,000 கிடைத்தது ஒரு பெரிதா?" என்று அண்ணா அவர்கள் சொன்னார், மாநாட்டில். கருணாநிதி, கண்களைத் துடைத்துக்கொண்டார்! ஆர்வமும் உணர்ச்சியுமிக்க அந்தக் காளை— 'கலைஞர், கலைஞர்' என நாட்டோரால் அழைக்கப்படும் அத்தொண்டர்—அதே ஆரூரில் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் கழகம் வளரப் பட்டபாடு, என் கண் முன்னால் வந்தது—நானும், என் கண்களைத் துடைத்துக் கொண்டேன்!!

*

திராவிட முன்னேற்றக் கழகம், இன்றையதினம் அடைந்திருக்கும் வளர்ச்சியினையும், வெற்றியினையும் மாநாடுகளிலே மட்டுமல்ல ஒவ்வொரு பொதுக் கூட்டங்களிலும்கூடக் காண்கிறோம். மக்கள் மன்றத்திலே, நாள்தோறும் கழகம்பற்றிய பேரார்வம் வளர்ந்த வண்ணமேயிருக்கிறது! இதனை மாநாட்டில் பேசியஒவ்வொருவரும் எடுத்துச் சொல்லி ஆனந்தப் பட்டனர். எனினும், வடவரோடு பழகவும், அவர்தம் உள்ளங்களை உணரவும் நல்லதோர் வாய்ப்பைப் பெற்றிருக்கிற நமது சம்பத், நம்மைப் பற்றி வடவர் என்ன எண்ணுகின்றனர், நமது கழகம் கடந்த தேர்தலுக்குப் பிறகு எவர் எவருடைய கவனங்களை ஈர்த்து வருகிறது என்பதை, "வடவரும கழகமும்" எனும் தலைப்பில், தெளிவாக எடுத்துரைத்தார். ("நம் நாட்டில்", அவரது பேச்சினைப் படிக்க வேண்டும், தோழர்கள்). ஒரு காலத்தில், டில்லிக்கு எட்டுமோ நம் குரல், என்று எண்ணியோருண்டு! இவர்களால் தேர்தலில் நின்று ஓரிரு இடங்களிலாவது வெற்றிபெற முடியுமோஎன்று கொக்கரித்தோருண்டு!! ஏளனமும், கொக்கரிப்பும் மாறி, கனவெனக் கருதியதெல்லாம் நினைவாகி வருகிறது. இப்போது, கழகத்தின் கொள்கைகள் நாட்டவரின் மனதில் மட்டுமின்றி, நல்லவர்தம் உள்ளமெல்லாம் நிறைய ஆரம்பித்திருக்கிறது. ஒருபோது காங்கிரஸ்காரர்களாக விளங்கியோரெல்லாம் கூட இப்போது கழகம் நாடிவரு

(13-ம் பக்கம் பார்க்க)

மொழிபெயர் தேயம்

20—4—58 ஞாயிறன்று காஞ்சிபுரத்திலிருந்து புறப்படும்போதே பொல பொல எனப் பொழுது விடிகின்ற நேரம். அண்ணாவுடன், செழியன், இள்ளிவளவன், நான் ஆகியோர் சென்றோம். பெங்களூர் செல்லும் சாலையில் தமிழ் நாட்டு எல்லையைக் கடந்து ஆந்திரத்தின் நிலப் பகுதியில் சென்றுகொண்டிருந்தோம். பசுமை என்பது பார்த்துத் தெரிந்து கொள்வதை விட நினைத்துப் பார்த்துக் கொள்ள வேண்டிய அளவில் இருந்த பகுதி நாங்கள் சென்றது. பெரிய பெரிய கற்களை எங்கிருந்தோ கொண்டுவந்து குவித்து வைத்ததைப் போலத் தோற்றமளிக்கும் குன்றுகள். கல் இருக்கின்றது; இடையிலே மண் இருக்கும் என நாமாக எண்ணிக் கொள்ளவேண்டும்; அவ்வளவுதான். அந்தப் பகுதியில் செல்லும்போது அந்தக் கற்களில் தலை இடித்துக் கொண்டதாக இரண்டொருமுறை தோன்றியது. பிறகுதான் நான் தூக்க மயக்கத்தில் பக்கத்தில் இருந்தவர்களின் தலைமீது முட்டிக்கொண்டு வந்தேன் என்பது தெரிந்தது!

மழையும் வளமும் குறைவான அந்தப் பகுதி தெலுங்கு நாட்டில் இராயல சீமை எனறழைக்கபபடுகின்றது. இராயர்களின் ஆட்சிக் காலத்தில் அவர்களுக்குச் சொந்தமான மண என்பதனைக் குறிக்க இராயல (இராயர்களின்) சீமை என வழங்கப் பெறுகின்றது. இந்த வறண்ட பகுதிக்குச் சொந்தக்காரரான அந்த மன்னர்கள் தென்னகத்து அரசியலில் எப்படித்தான் அத்தனை புகழ் இரட்டினார்களோ என வியந்து கொண்டே அந்தப் பகுதியைக் கடந்தோம்.

குந்தக்கல்லிலும், குத்தியிலும் உள்ள தமிழர்கள் அண்ணாவின் உரையைச் செவி மடுக்க வேண்டும் என்ற தங்களுடைய நெடுநாளைய ஆவலைக் காட்டி அங்கு அழைத்துச் சென்றனர். குத்தியில் காலை 10 மணிக்குக் கூட்டம் என்று குறிப்பிட்டிருந்தும் மாலை 5 மணியளவில்தான் அங்கு போய்ச் சேர்ந்தோம். ஆனால் வழியில் ஏற்பட்ட தொல்லை, எங்களுக்கு அங்கு போய்ச் சேரமுடியுமா என்ற ஐயம்கூட அவ்வப்போது வந்தது எனலாம்.

மா. கி. தசரதன்

ஏனெனில் வழியில் ஓரிடத்தில் சுமார் 15 நிமிட நேரம் மணல் படலம் காற்றில் பறந்தது. வீசும் காற்றே சுற்றிச் சுற்றியடிக்கும் என்றால், அது மண்ணும் சுமந்து வந்தால் என்ன சொல்வது? போதாதற்கு குத்திக்கு நெடுந் தொலைவில் இருக்கும்போதே மழையும் பெய்யத் தொடங்கிவிட்டது என்றாலும், கார் ஓட்டிவந்த தோழர் துணிவோடு முன்னேறினார். அந்தத் தோழர் அர்ச்சுனனின திறமையையும் இலட்சிய நடிகரின அந்தக் காரையும புகழ வேண்டிய இடம பின்னால் ஒன்று இருக்கிறது. அங்கே அவர்களுக்கு நன்றி சொல்லலாம்!

குத்திக்குப் போனதும் அந்த ஊரைச் சுற்றி இருந்த மலைகளின மீது தொடர்ச்சியாக இருந்த கோட்டை மதில் கம்பீரமாகத் தோற்றமளித்தது. ஊருக்குள் இரண்டொரு தெருக்களில் நுழைந்து சென்றோம். கோட்டைக்குள் இருந்த தெருக்கள் அவை. இடைக்காலத்து மன்னர்களின் காலத்து வாழ்வு ஒரு படம் போல மனத் திரையில் கோடிட்டது. 'இரயில்வே நிலையம்' எங்கே —இல்லை இல்லை எக்கட ?-என்று கேட்டுக்கொண்டே இரண்டரைக் கல் தொலைவில் இருந்த அந்த இடத்தை அணுகும்போதே நமக்குச் சொந்தக்காரர்கள் இருக்கும் இடத்திற்கு வந்துவிட்டோம் என்ற உணர்ச்சி தோன்றியது. இரயில் நிலையத்தின் வாயிலில் அண்ணாவின் வருகை பார்த்து நமது நண்பர்கள் காத்திருந்தனர். காரைப் பார்த்தவுடன் வழக்கமாகத் தமிழகத்துத் தெருக்களில் கேட்கும் 'வாழ்க' முழக்கம் அன்று குத்தி இரயில் நிலையத்தையே ஒரு குலுக்குக் குலுக்கி விட்டிருக்கும் என நினைக்கினறேன்.

உடனே நிலையம் சென்றோம். தோழர் ஒருவர் வரவேற்பு உரை நிகழ்த்தினார். தலைவரின் முன்னுரைககுப் பதிலாகப் புன்னகை வெளிவந்தது. செழியன் தமிழனின தொன்மை, மேன்மை பற்றிப் பேசினார். நான் பேசினேன். பின்னர் நீண்ட மகிழ்ச்சி ஆரவாரத்திறகிடையே அண்ணா எழுந்தார். வரவேற்புரையும மலர்மாலைகளும கைத்தறி ஆடைகளும அணிந்தார்கள்.

தமிழகத்திலே இருந்து நெடுந் தொலைவு வந்துள்ள அவர்கள தமிழ் நாட்டுக்குச் செய்யவேண்டிய தொண்டுகளைப் பற்றியும்

தெலுங்கு மக்களிடையே கலந்து பழக வேண்டியதின் தேவையையும் வகையையும் பற்றிச் சுமார் 1 மணி நேரம் அரியதொரு உரையாற்றினர்.

இரயில்வே நிலையத்தின் மண்டபம் திருமணக்கூடம்போல் எழில் ததும்ப அலங்கரிக்கப்பட்டிருந்தது. குத்தியில் வாழும் தமிழர்கள் அத்தனை பேரும் வந்திருந்தனர். தெலுங்கு நண்பர்களும் பலர் வந்திருந்தனர்.

குத்தி நிகழ்ச்சி முடிந்ததும் உடனே குந்தக்கல்லுக்குப் பயணமானேம்.

மழையோ விட்டபாடில்லை; வானம் இருண்டிருந்தது. வழியோ புதிது; எனினும் குந்தக்கல் போய்ச் சேரவேண்டும் என்ற ஆவல் — விரைவைத் தந்தது. குந்தக்கல் சென்ற பிறகு வழியறியாமல் எங்கெங்கோ சென்று திரும்பி இறுதியாக அடை மழையில் 'இரயில்வே நிலயம்' வந்தடைந்தோம்.

வரவேற்பு வளைவுகளும், வாயில் தோரணங்களும், வண்ணத் தாள் ஒப்பனைகளும் 'வருக வருக' என வரவேற்க, தமிழரும் தெலுங்கரும் கூடிநின்று மகிழ்ச்சிக் கடலில் ஆரவாரித்தனர்.

தமிழர்களுக்கும் தெலுங்கர்களுக்கும் உள்ள உறவினைப் பற்றியும் இருவரும் சேர்ந்திணைந்து வளர்ந்து வாழ வேண்டியதின் அவசியத்தையும் நான் பேசும் போது குறிப்பிட்டேன். நண்பர் செழியன் அவர்கள், பண்டைத் தமிழரின்மேன்மையினையும், இலக்கியத்தின் இறவாப் புகழினையும், தமிழ் மொழியின் அருமையினையும் பல அரிய எடுத்துக் காட்டுகளோடு குறிப்பிட்டு மீண்டும் அந்த நல்ல நிலை அடையவேண்டும் என அனைவரையும் கேட்டுக்கொண்டார்.

இறுதியாக அண்ணா, மனிதனுக்கு மனிதன் சாதியால் கொண்டிருக்கும் வேறுபாடுகளின் கொடுமைகளை எடுத்து விளக்கிப் பல அரிய உண்மைகளைச் சொன்னர். சாதி இருந்தால் என்ன என்று கேட்போருக்கு, சாதியில்லாத மேல்நாட்டான் விஞ்ஞானம் கண்டான், இரயில கண்டான், மோட்டார் கண்டான், ஆகாய விமானம் கண்டான், அணுவைக் கண்டான்; இன்னும் பல அரிய சாதனைகளைச் சாதித்தான், அவனுக்கு வேண்டாத சாதி நமக்கு ஏன் என்று வினவினர். தமிழர் சமுதாயத்தில் சமத்துவம் ஏற்பட்டு உயர்வும் சிறப்பும் பெற வேண்டும் என வலியுறுத்தினர். தமிழன் நல்வாழ்வு வாழ வழிவகை கண்டிட வேண்டும் என வேண்டினர்.

அன்றைய தினம் கூட்டத்தில் இருந்த 'உயர் சாதி' ஆண்கள் அண்ணாவின் பேச்சைக் கேட்டு எழுச்சி பெற்றது ஒரு சிறப்பல்ல; பெண்கள் அண்ணாவின் வாதம் ஒவ்வொன்றையும் ஒப்புக்கொள்ளும் வகையில் வினாடிக்கு வினாடி புதிய ஆர்வம் கொண்டு விளங்கியது, உண்மையிலேயே பாராட்டற்பாலது, வரவேற்கவேண்டியதுமாகும்.

சொற்பொழிவு என்றமுறையில் இவ்வளவுதான், முன்னமே ஒப்புக்கொண்ட நிகழ்ச்சி. ஆனல் அண்ணாவிடம், தெலுங்கர்களின் சார்பாகச் சிலர் வந்து அண்ணா ஆங்கிலத்தில் பேசவேண்டும் எனத் தங்கள் ஆர்வத்தையெல்லாம் வெளியிட்டுக் கேட்டனர். "தமிழ் விழாவில், வேறு மொழியில் பேசி, அதன் தூய்மையைக் கெடுக்க மாட்டேன்" என்று அண்ணா, அவர்களுக்குச் சொல்லிவிட்டார். என்றாலும் அவர்கள் விடுவதாய் இல்லை. செயலாளர் நன்றி சொன்னதும் மறுபடியும் அண்ணாவிடம் வந்து "இப்போது விழா முடிந்துவிட்டது; இனி ஆங்கிலத்தில் பேசலாமே" என வாதிட்டனர். என்ன சொல்வது! அவர்கள் ஆர்வத்தைக் கண்ட அண்ணாவும் "சரி" என்ருர். ஒரே ஆரவாரம், சுமார் அரைமணி நேரம் தமிழில் பேசிய கருத்துக்களை ஆங்கிலத்தில் திரட்டித் தந்து, மேலும் அரசியல்பொருளாதார உரிமையும் சமத்துவமும் தேவை என்பதனை எடுத்துச் சொல்லி மறுமுறை ஆந்திரப் பகுதிக்கு வரும்போதுதான் தெலுங்கிலேயே பேசுவதாகச் சொன்ஞர். கர ஒலியும், மகிழ்ச்சி ஆரவாரமும் நீண்டது.

"உங்களுக்கு ஆந்திரத்திலே ஆதரவு இருக்கிறதா?" என்று எளிதாகக் கேட்டுவிடுகின்ருர்கள் எதிர்க் கட்சியினர். 'ஆந்திரர்கள் அடித்து நொருக்கிவிடுவார்கள்' என்கிருர் சுப்பிரமணியம். இவர்கள் எல்லாம் அன்றைய தினம் குத்திக்கும் குந்தக் கல்லுக்கும் வந்திருக்கவேண்டும். அங்கு நடந்த நிகழ்ச்சிகளையும், அதில் தெலுங்கர் காட்டிய அக்கறையையும் ஆர்வத்தையும், பார்த்திருக்க வேண்டும். அப்படி வந்திருந்தால், பார்த்திருந்தால் 'வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ' என ஏதோ இரண்டு சொற்கள் பேசிவிடமாட்டார்கள். போகட்டும் அவர்களை விடுவோம்.

அன்று இரவு அங்கேயே உணவை முடித்துக்கொண்டு பெல்லாரிக்குப் புறப்பட்டோம், இரவு பெல்லாரியில் தங்கிக் காலையில் துங்கபத்திரா அணைக்கட்டை

மனித இனத்தின் உளப் பண்புகளை, உணர்ச்சித் துடிப்புகளைப் படம் பிடித்துக் காட்டுவதுதான் இலக்கியம். அதன் பெரும் உறுப்புகள்தான்—கவிதை, நாடகம், சிறுகதை போன்றவை. இந்த ஒவ்வொரு உறுப்பின் உயிர்த் துடிப்புத்தான் காதல். காதல், கவிதை, இலக்கியம் இவையத்தனையும் சேர்ந்த கூட்டுச் சரக்குத்தான் மனித வாழ்க்கை. மனித வாழ்க்கையின் முன்னேற்றம்தான் — அதாவது, இந்த இலக்கிய வளர்ச்சிதான்—சரித்திர வளர்ச்சி - உலகத்தின் பொதுவான முன்னேற்றம்.

யும் ஹம்பி(Humbi) அழிவுகளையும் காண்பது என ஏற்பாடு.

குந்தக்கல்லிலிருந்து பெல்லாரி முப்பத்தைந்து கல் தொலைதான் என்றதும், ஒன்றரை மணி நேரத்தில் அங்கு போய்ச் சேர்ந்து உறங்கிடலாம் என நினைத்தோம். அந்த நினைவு எவ்வளவு தப்பு என்பதைப் பின்னல் உணர்ந்தோம்.

பெல்லாரி 35 என்று எழுதிக் காட்டிய வழியே சென்ருேம். இரண்டு மூன்றுகல் தொலைவு கூடக் கடந்திருக்க மாட்டோம். வழி தவறிவிட்டோமோ என்று ஐயப்பட்டுக் கொண்டோம். ஏன் எனில் அந்தப் பாதை அப்படி இருந்தது. அதைப் பாதை என்று சொல்வது தப்பு. வண்டித் தடம் என்ருல்கூடப்பொருந்தாது என எண்ணுகின்றேன். இதிலே இன்னொரு வேடிக்கை என்ன வென்ருல், மைல் கற்களில் பெல்லாரி 30, 29, 28 என்று குறித்திருந்ததற்கு மேலே பம்பாய் 212, 213, 214 என்று எழுதியிருந்தது, எங்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை; ஒரே குழப்பமாக இருந்தது. பம்பாய்க்கு இத்துணை அண்மையிலா வந்துவிட்டோம் எனத் திகைத்தோம். இதிலே இன்னொரு வேடிக்கை, ஒரே திசையில் இருந்த இரண்டு ஊர்களில் ஒன்றின் இடைவெளி போகப் போகக் குறைந்தது! இன்னொன்றின் இடைவெளி போகப்போக மிகுந்தது! யாரோ எழுதியவன் கல்லைக் கெடுத்தான் என்பதை ஒரு இருபது கல் தொலைவு கடந்த பிறகுதான் கண்டுபிடித்தோம்.

அந்த இருபது கல் தொலைவு கடப்பதற்குள் போதும் போதும் என்ருகிவிட்டது. வழியிலே நிறுத்தியிருந்த — இல்லை நின்று போன—லாரி ஒன்றினை அணுகி வழி இதுதானு என உறுதிப்படுத்திக்கொண்டு பெல்லாரி போய்ச் சேர்ந்தோம்.

அந்த 35-கல் தொலைவும் கடந்ததை கார் ஓட்டி வந்த தோழர் அர்ச்சுனன் அவர்களின் திறமைக்கும் காரின் உறுதிக்கும் சான்ருகத்தான் கொள்ளவேண்டும்!

இரவு பெல்லாரியில் இரயில் நிலயத்தில் தங்கி மறுநாள் காலை ஹாஸ்பெட் சென்ருேம். அங்கிருந்து மூன்று கல் தொலைவில் துங்கபத்திரா நதி அணைக்கட்டு இருக்கிறது.

இரண்டு மலைகளை இணைத்து நீரைத் தேக்கியுள்ள பெரிய சாதனையாகும் அது. அந்த அணையில் நீர் நிறைந்திருக்கும்போது நீரின் மேல்பரப்பளவு 135-சதுர மைல் என்று கணக்கிட்டிருக்கின்றனர். 'அடேயப்பா' — என்று மலைக்கத் தோன்றுகின்றது அல்லவா?

இத்தனைக்கும் ஆயியுள்ள செலவு ரூ. 60-கோடிதான். வடநாட்டில் பக்ராநங்கலுக்கு ஆன செலவு ரூ. 173·54 கோடி. இப்போது இரண்டையும் ஒப்பிட்டுப் பாருங்கள்—மலைப்பு மறையும்.

இன்றைய தினம் அந்த அணை மைசூர் மாநிலத்தைச் சேர்ந்தது. எனினும் அதனைச் சமைத்திடச் செலவான உடல் ஆற்றலில் பெரும் பகுதி தமிழர்களுடைய வியர்வையும் இரத்தமும் என்று அறிகின்றபோது 'ஊருக்கு உழைக்கும் தமிழர்களே உங்கள் ஊருக்கு என்றுதான் உழைக்கப் போகின்றீர்களோ?' என்று கேட்கத் தோன்றுகின்றது.

அங்கிருந்து 7 அல்லது 8 கல் தொலைவில் 'ஹம்பி' என்ற இடம் இருக்கிறது.

ஹம்பி என்பது இன்று ஒரு சிற்றூரின் பெயர். ஒரு காலத்தில் அங்கு இந்தத் தென்னகத்திலே புகழ் பெருக்கிய விஜய நகரப் பேரரசர்கள் இருந்து ஆண்டனர். வடநாட்டு மன்னர்களுக்கு எதிராகத் தென்னகத்தில் போர் முரசு ஒலித்த ஒரு மன்னர் பரம்பரை அங்கு வாழ்ந்திருந்தது. அந்த மன்னர்களின் வாழ்க்கையின் நிழற்படம்போல இன்றைய தினம் இங்கும் அங்குமாகச் சிதைந்த கலைக்கூடங்களும், குலைந்த கட்டடங்களும், சின்னபின்னமான சிற்பங்களும் கலைந்த கனவுபோல நமக்குக் காட்சியளிக்கின்றன.

அங்கு காணப்பெறும் சிற்பங்களையும், அரண்மனையின் கூறுகளையும், பிறவற்றையும் எடுத்தெழுதுவது எனின் தனிக் கட்டுரையே தேவைப்படும்.

சிறுவர்கள் விளையாடிய இடம் இது எனச்சிந்திய பூவும், சிதைந்த மணல் வீடும், சிதறிய பாண்டங்களும் கொண்டு சொல்வதுபோல அழிந்தஒரு பேரரசின் அடிச்சுவடு இதோ என்று 'ஹம்பி'யைக் குறிப்பிடலாம்.

அந்தக் கனவுலகிலிருந்து மீண்டு காற்றும் மணலும் கலந்து வீசிடும் வழியெல்லாம் கடந்து காஞ்சீபுரம் வந்தடைந்தோம்.

மொழி பெயர்ந்த தேயம்—தமிழ் மொழி பெயர்ந்த(தெலுங்குமொழி வழங்கிடும் தேசம்) தேயம் ஆயினும், வாழ்க்கைவழி நாகரிகம் முதலியன பெயரவில்லை என்பதைக் கண்டோம். நமது கருத்து அங்கே சிறக்கிறது; வளருகின்றது—வாழும்.

ஆந்திரம் நமது கருத்துக்களை ஆதரிக்கிறதுஎன்றஉறுதியினைத் தருவதாக அமைந்திருந்தது, இந்தச் சுற்றுப் பயண நிகழ்ச்சிகள்,

★

குடும்பம் ஒரு சிறு மனித சமூகமாய், மனித சமூகத்தின் அடிப்படைக் கூருய்; அச்சமூகப் பண்பு எல்லாவற்றையும் வளர்க்கும் பண்ணையாய் அமைகிறது. அதன் பொருளாட்சியே சமூகம், நாடு, உலகம், ஆகிய பரந்த எல்லைகளின் பொருளாட்சிக்கு அடிப்படை.

★

உண்மையான அறிவாளிகளிடம் மற்றவர்களைத் தாழ்மையாக நினைக்கும் மனப்பான்மை இருக்காது. அதற்குப் பதிலாக மற்றவர்களிடம் கற்றுக்கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறது என்ற ஆர்வம்தான் நிலைத்து நிற்கும்.

மெய் தீண்டல்

V. V. இராமசாமி M.L.C.,

வள்ளுவர் பெருந்தகையின் வாய்மொழியைத் தோய்ந்து உணர்ந்த தோய்வினுடன், அழுந்தியறிந்த உணர்வினுடன், ஆன்றோர் மொழிந்த நூலினுடன் பல்கால் பழகிக் காணுதல் வேண்டும். அங்ஙனம் ஆய்ந்தாலன்றி அதன் அருமையை அறிதல் அரிதாகும். எடுத்துக்காட்டாகச் சிலவற்றை நோக்குவோம். உலகில் உள்ள செல்வங்கள் எல்லாவற்றிலும் மழலைச் செல்வம் சிறந்த செல்வம். இளமை முதல் இறுதிவரை மக்கள் உள்ளம் மழலையோடு பழகித்தான் வருகின்றது. அதன் அருமை உள்ளத்தில் உவகையை ஊற்றெடுத்து ஓடச்செய்கிறது. ஆனாலும் அதன் இயல்பைக் கவிஞர் சொல்லும்போது தமது வாழ்வியலிற்கண்ட தோய்வினுடன் தோய்ந்து உணராமல் எழுத்திலும் சொல்லிலும் அவற்றிற்குத் தாம் காணும் தவறான பொருளிலுமே நின்றுவிடுவதும் இயல்புபோல் காணப்படும் தவறாகும்.

குழந்தையைத் தாயோ தந்தையோ தமக்கையோ தாம் சென்று தூக்குவதும் தழுவிக்கொள்வதும் உடலுக்கு ஒருவகை இன்பம்தான். ஆனால் தாம் சென்று குழந்தையைத் தூக்குவதைக்காட்டிலும் அது தவழ்ந்துவந்து அல்லது "குறு குறு நடந்து சிறுகை நீட்டி" வந்து தீண்டுவதும், மேலே வந்து விழுவதும், குறிப்பாக முதுகில் வந்து மோதி அணைவதும் பூங்கையால் முகத்தை வருடுவதும், அத்துடன் அப்பா! அம்மா! என்று மழலை மொழிவதும் ஆகிய செயல்களே மிகுந்த இன்பம் தரத்தக்கன. நடைமுறையில் நிகழும் நிகழ்ச்சிகளை வைத்து உணர்பவர்களுக்கு இவைகளெல்லாம் தெளிவாகத் தெரியக் கூடியனவே.

ஆசிரியர் திருவள்ளுவரும்—

"மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு"

என்று கூறியுள்ளார். "மக்களது மெய்யைத் தீண்டுதல்" என்று தவறாகப் பொருள் கூறுவோர் பலர். மக்களது என்று ஆறும் வேற்றுமை விரிப்பது பொருந்தாது. மக்களை எழுவாய் ஆக்கித் "தம் மக்கள் தமது உடம்பினைச் சார்தல்" என்று பொருள் கொள்ளுதல் வேண்டும். அதுவே முற்றிலும் பொருந்தும். தீண்டுதல் என்ற சொல்லின் போக்கினையும் நோக்குதல் வேண்டும். குழந்தை வந்து மெல்லத் தொட்டவுடனேயே மேனி சிலிர்க்கின்ற இன்பமும், தொட்டுக்கொண்டே அம்மா! என்றழைக்கும்போது உண்டாகும் செவிக்கின்பமும் ஒருங்கு சேர அமைத்துக் கூறியிருக்கும் திறன் இன்புறுத்துவதாகும்.

மணக்குடவர் "தம் மக்கள் தமது உடம்பினைச் சார்தல் தம் உடம்பிற்கு இன்பமாம்" என்றே உரைத்தார்-

"பொற்றொடிப் புதல்வர் ஓடி யாடவும்
செஞ்சாந்து சிதைந்த மார்பு"

என்பது பத்துப் பாட்டு.

"சிற்றில மகன்பூங் கையால்
திருமுகம் வருடப் பெற்ற
பெற்றதாய் தவிறும் நெஞ்சம்
பெரிது உருகுமால் அன்ப"

என்று, சிவப்பிரகாசர் துய்த்து உணர்ந்த தாய்மொழியால் குறளுக்குக் கவிதை வடிவினால் உரை கண்டுள்ளார். மேலும் அவர் இயற்றிய பிரபுலிங்க லீலையில்,

குழலும் யாழும் இனியவெனக்
கூறுவண்ணம் மென்கனிவாய்
மழலை மொழிந்தும் உடற்கின்பம்
மருவ ஓடி மேல்விழுந்தும்
விழையும் அமிழ்தின் மிகவினிமை
விளைய நுகருஞ் சுவையடிசில்
செழிய சிறுகை யாலளைந்தும்
செய்தான் மோகம் ஈன்றோமை.

என்றும் பாடியருளினார். இதில் இன்னொன்றும் நோக்கத்தக்கது. "உடற்கின்பம் மருவ ஓடி மேல்விழுந்தும்" என்று குறளுக்கு நல்லுரை தந்தது மட்டுமன்றி, "நுகருஞ் சுவையடிசில்" என்று கூறியது நோக்கத்தக்கது. மூன்று திருக்குறளை ஒரு பாடலில் எடுத்தாண்டு அம்மூன்று குறட்பாவின்கண் அமைந்துள்ள பொருள் நயங்களையும் நன்கு குறிப்பிட்டுப் பாடியுள்ளார். குழந்தை தன்னடிப் குறுகுறு நடந்து சிறுகை நீட்டிவந்து உணவிற் கைவைக்கும்போது, அந்த உணவு "நெய்யுடை அடிசில்" ஆக இருக்கவேண்டுமென்று கருதினான் பாண்டியன் அறிவுடை நம்பி. குழம்பு, மிளகுச்சாறு உற்றிய சோற்றில் குழந்தை கைவைப்பது பொருத்தமன்று. நெய்ச் சோற்றைக் குழந்தை இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழாவியும் மெய்பட விதிர்த்தும் விளையாடும்போது தந்தை உண்ணக்கூடாது; பார்த்துக்கொண்டிருத்தல் வேண்டும். குழந்தையின் செயலுக்குப் பின்பு குழந்தையைத் தூக்கி அப்பாற் கொண்டு போய்த் தாய் வைத்துக்கொண்டிருக்கத் தந்தை உணவு உண்ணுதல் நன்று. தந்தை உண்ணும்போது அந்த எச்சில் கலந்த அடிசிலை மகவும் உடனிருந்து உண்ணச் செய்தல் கூடாது. அது பெரியதோர் குற்றமாகும். "நுகருஞ் சுவையடிசிலை"க் குழந்தை உண்ட பின்பு தந்தை உண்ணல் வேண்டும். அவ்வாறன்றிக் கடைசியாக மோருஞ் சோறும் உண்ணும்வரை குழந்தையை உடனிருந்து உண்ணச் செய்வோர் குழந்தைக்கு உணவு உண்பிப்பவரல்லர், நோயை ஊட்டுபவராவார். மக்கள் சிறுகையளாவிய கூழ் பெற்றோர்க்கு அமிழ்தினும் ஆற்ற இனிது என்று ஆசிரியர் கூறினாரேயன்றி, பெற்றோர் உண்ணும் மிச்சிலொடு குழந்தை யுண்ணவேண்டுமென்று குறிப்பிட்டிலர். ஆகவே பெற்றோர்கள் தம் குழந்தையைத் தம்மொடு எச்சில் நுகரவிடாமல் முதலிற் சிறிது உண்டு மகிழ்வதற்கு மட்டும் இடம் கொடுத்து விலகுதல் வேண்டும் என்பது நன்றாய் உலகம் உணரவேண்டியதொன்றாகும். இவ்வாறு வழக்கியலும் கண்டு குறளுக்கு உரை நுவல்வோமாக.

★

> மனிதனே உயிரினங்களுள் சிறந்தவன். அந்தச் சிறப்பை அவனுக்குத் தருவது அவனது சிந்தனைத் திறன். அதை முழுவதும் வளர்த்துக் கொள்வதே, அவன் பிறவிப் பயனை அடைவதற்குத் திறவுகோல்.

"தூண்டிற் புழு!"

(M. S. வேங்கடாசலம் M.A.,)

1885-ம் ஆண்டில் துவக்கப்பட்ட நிறுவனம் அது.

திராவிடத்தின் தங்கவயலாம் கோலாரில், தங்கம் வெட்டி எடுப்பதற்கென, ஆங்கிலேயராலே துவக்கப்பட்ட அந்த நிறுவனத்தின் பெயர், டெய்லர் அண்டு கோ.,

அது கோலாரில் முதலீடு செய்திட்ட தொகை, ஏறக்குறைய ரூ. 160-இலட்சம்!

அலுவல் துவங்கிய ஆண்டிலிருந்து 10-ஆண்டுகள் வரை, அதன் பங்குதாரர்கள் அனைவரும், அவர்களது பங்குத் தொகையில் 20%லிருந்து 75% வரை, இலாபமாகப் பெற்றிருக்கின்றனர் என்று புள்ளி விவரம் தரப்படுகிறது.

1896-லிருந்து 1917வரை அவர்களுக்குத் தரப்பட்ட பங்குப் பிரிவு அவர்களது பங்குத் தொகையைப்போல் 100%லிருந்து 140% வரை இருக்குமெனவும், கணக்கிடப்பட்டிருக்கிறது.

1917-முதல் 1940-வரை இந்தத் தொகை 20%லிருந்து, 25%வரை தரப்பட்டதாம்!

மொத்தத்தில், துவக்கப்பட்ட காலத்திலிருந்து, பங்குதாரர்கள் பெற்றிருக்கும் பங்குப் பிரிவு, அவர்களது பங்குத் தொகையினைப்போல் 25-மடங்கிலிருந்து, 30-மடங்கு வரை இருக்கக்கூடுமென்கிறார்கள். அதாவது, அந்த நிறுவனத்திடம் 100-ரூபா கொடுத்து ஒருவர் ஒரு பங்குதாரராகச் சேர்ந்திருந்திருந்தால், அவர் இதுவரை பெற்றிருக்கும் தொகை ஏறக்குறைய ரூ. 3000!

ஆனால் அந்த நிறுவனம் அரசாங்கத்திற்குச் செலுத்தி வந்த வரி, மொத்த வருமானத்தில் 5%தான்—1955 வரை!

எனவே, 5% வரியை, 10% ஆக்கிட வேண்டுமென, மைசூர் மாநில அரசு, 1955ல் முயன்றபோது, டில்லி குறுக்கிட்டு அவ்விதம் உயர்த்துவது கூடாதெனத் தடுத்துவிட்டது. மைசூரும் பணிந்தது!

இந்த நிறுவனம் திறமையாகப் பணியாற்றிடும் பொருட்டு, துவக்கத்திலிருந்தே மைசூர் அரசு அதற்கு வழங்கி வந்திருக்கிற சலுகைகள் பற்பல!

மிக்க குறைந்தவரி விகிதத்திலேயே தண்ணீர் வசதியும், மின்சார வசதியும் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது மைசூர் அரசினரால்!

அந்த நிறுவனமும், அதன் பங்குதாரர்களும், இந்த அளவு இலாபத்தினைப் பெற்ற பிறகு, தங்கக் கனிகளை, நாட்டுடைமையாக்குவதைத் தவறென்று, எவரும் கூறிட இயலாது!

ஆனால், ஆவடியிலே துவங்கி இன்றுவரை, மூச்சுவிடாமல் சமதர்மகீதம் பாடி வருகிற மத்திய அரசு, கோலார் தங்கக் கனிகளை நாட்டுடைமையாக்கிட வேண்டுமென, இரண்டு ஆண்டுகளுக்கு முன் மைசூர் அரசாங்கம் முயன்றபோது, குறுக்கிட்டு அதனைத் தடுத்திருக்கிறது.

அப்போது மைசூர் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தவர் அனுமந்தையா. மாநிலத்து உரிமைகளுக்கெனப் போராடும் திண்மையும், திறனும் பெற்றவர் அவர்! எனவே, எப்படியும் நாட்டுடைமையாக்கிட வேண்டுமென்பதிலே தீவிரமாக ஈடுபட்டு, எடுத்த பணியினை இயற்றிவைத்தார்—எந்த இடையூறுக்கும் பயந்திடாமல்!

தங்கக் கனிகளை எப்படியும் நாட்டுடைமையாக்குவதென முடிவு செய்து, டெய்லர் ஆண்டு கோ., நிறுவனத்திற்கு நஷ்ட ஈடாக ரூ. 97·5 இலட்சம் தருவதற்கு ஒப்புக்கொண்டது மைசூர் அரசு!

நிறுவனம், போட்ட முதலீட்டைப்போல், 25-அல்லது 30-மடங்கு இலாபம் பெற்ற பிறகு, தரப்படவிருந்த இந்த நஷ்டஈடு, குறைவான தொகையல்ல என்பதனை எவரும் ஒப்புவர்!

ஆனால் மத்திய அரசாங்கம் இந்தப் பிரச்னையிலே தலையிட்டு, நஷ்டஈடாகத் தரவேண்டிய தொகை இன்னமும் அதிகமாக்கப்பட வேண்டுமென, மைசூர் அரசுக்குத் தாக்கீது பிறப்பித்தது; எவ்வளவு தொகை தரப்பட வேண்டுமென நிர்ணயிக்க ஒரு ஆலோசனைக் குழுவையும் நியமித்தது.

அந்தக் குழு, மைசூர் அரசு ரூ 119 கோடி, நஷ்ட ஈடாகத் தர வேண்டும் என்று கருத்தறிவித்தது.

ஆனாலும், ரூ 164 கோடிதான் தரப்படவேண்டுமென்று மத்திய அரசாங்கம் மைசூர் அரசினை வற்புறுத்தித் தாக்கீது பிறப்பித்திருக்கிறது. எப்படியும், தங்கக் கனிக்கள் நாட்டுடைமையாக்கப்பட வேண்டுமென்ற தீவிர ஆர்வத்தில், மத்திய அரசின் கட்டளைக்கு மைசூர் பணிந்தது—ரூ 164 கோடி நஷ்டஈடாகத் தரப்பட்டது.

என்ன பொருள் இதற்கு? ஆவடியிலே துவக்கப்பட்டு—பின்னர் அமிர்தசரசில் ஓரளவு மாற்றியமைக்கப்பட்டு — இடையீடில்லாமல் 'பாடப்படுகின்ற 'சமதர்மகீதம்' உண்மையிலேப்ய இன்றைக்குஆட்சிப் பொறுப்பிலேயிருக்கிற காங்கிரசாரின் உள்ளத்திலேயிருந்து எழுகிற கீதமானால், ஒருதொழிலை நாட்டுமையாக்குவதற்கு, அவர்கள் இடையூறாக இருந்திடுகின்ற நிலை ஏன்?

தங்கம் தோண்டியெடுக்கப்படுவதென்பது சாதாரணத் தொழிலல்ல! இன்றைய உலகத்து வாணிபமெல்லாம் தங்கத்தின்

அடிப்படையில்தான் நிகழ்த்தப் படுகின்றது என்றால், அது மிகையல்ல!

ஒருநாடு மற்றொரு நாட்டுப் பொருள்களை விற்றாலோ வாங்கினாலோ, அந்தப் பொருளுக்குப் பதிலாக, பெறப்படுகின்ற அல்லது தரப்படுகின்ற பொருள் தங்கமாகத்தானிருக்கும்— இங்கிலாந்திலிருந்து இயந்திரங்களை நாம் இறக்குமதி செய்தால், அந்த இயந்திரங்களின் விலையாக நமது ரூபாய் நோட்டுக்களை அங்கே அனுப்பினால், ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். காரணம், இந்தியாவில் வழங்கிவரும் ரூபாய்க்கு மதிப்பு இந்தியாவில்தானேயொழிய, இங்கிலாந்திலோ, அல்லதுவேறெந்த நாட்டிலோ இல்லை! அதேபோலத்தான் இங்கிலாந்து, நாணயம் இந்தியமக்களுக்குப் பயன்படாது.

எனவே தங்கம், வெளிநாட்டு வாணிபத்துக்கு உரிய, தேவையானதோர் சாதனமாக, நாணய மாற்றின் கருவியாகப் பயன்படுகிறது.

நாணயமாற்றுக்குக்கருவியாகப் பயன்படுவதோடு மட்டும் நின்றுவிடவில்லை, அதன் உபயோகம் தங்கத்தின் விலையின் அடிப்படையில் தான், நாணயமாற்று விகிதங்கள்—1 ரூபாய்க்கு எத்தனை ஸ்டர்லிங், ஒரு ஸ்டர்லிங்குக்கு எத்தனை டாலர், ஒரு டாலருக்கு எத்தனை ரூபிள் என்பன போன்ற விகிதங்கள்—நிர்ணயிக்கப்படுகின்றன. எனவே நாணயமாற்று விகிதத்தின் கட்டளை அளவாக விளங்குகிறது தங்கம்!

தங்கத்தை வெட்டியெடுப்பதாலேயே ஒரு நாடு தரணிபோற்றத் தகு செல்வம் பெற்றதாக ஆகிவிடும் என்பதல்ல! ஆனால்! வெட்டியெடுக்கப்பட்ட தங்கத்தை வைத்துக்கொண்டு, எண்ணிறந்த பற்பல பொருள்களை—மூலப்பொருளானாலும், இயந்திரங்களானாலும், உணவுப் பொருள்களானாலும், மற்றெதுவாயினும்—அவற்றைப் பற்பல நாடுகளிலேயிருந்து எளிதில் பெறமுடியும்!

இத்தகையதோர் தொழிலை—நாட்டுக்கு உயிர்போன்ற தங்கக் கனிகளை, நாட்டுடைமையாக்குவதில், எந்த அரசும் மாறுபட்ட கருத்தினைத் தரமுடியாது! அரசியற் போறிஞர்களும், பொருளியல் நிபுணர்களும் கூட மாறுபட்ட கருத்தினைத் தந்ததில்லை, இதுவரை!

அங்ஙனமிருக்க, கோலார் தங்கக் கனிகளை மைசூர் அரசு நாட்டுடைமையாக்கிட முயன்றபோது, மத்திய அரசாங்கம் குறுக்கே நின்றிடக் காரணமென்ன? கொள்ளை கொள்ளையாகப் பணத்தைக் கொட்டிக்கொடு, என்று தாக்கீது பிறப்பிக்கக் காரணமென்ன?

நாட்டையே ஒரு கலக்குக்கலக்கிவிட்ட முந்திரா பேர ஊழலிலேகூட, பங்கு மார்க்கட் விலையைவிட, ஒரு ரூபாயோ இரண்டு ரூபாயோதான் ஒவ்வொரு பங்குக்கும் அதிகமாகத் தரப்பட்டிருக்கிறது. ஆனால் டெய்லர் அண்டு கோ பங்குதாரர்கள், பங்கு மார்க்கட்டில், அப்போது வழக்கிலிருந்த விலையைப்போல் மூன்று மடங்கு நஷ்ட ஈடு வழங்கப்பட்டனரென்னும் திடுக்கிடும் தகவலைப் பாராளுமன்றத்தில் வெளியிட்டிருக்கிறார், திரு. முகமதுஇமாம் என்னும் பாராளுமன்ற உறுப்பினர்!

"கோலார் தங்கச் சுரங்கத்தின் நஷ்ட ஈட்டுக்கெனத் தொகை தரப்பட்டதில் காணப்படும் அலட்சியப் போக்கினையும் ஊதாரித்தனத்தினையும் பார்க்கும்போது, முந்திரா பேர ஊழல், மூலைக்குப்போய் மறைந்துவிடுகிறது" என்று முழக்கமிட்டிருக்கிறார் அவர்.

நிகழ்ச்சியினை அழகாகப் படம் பிடித்துக்காட்டி, கனல் கக்குகிற முறையில் கண்டனத்தைக் தெரிவித்தஅவர், பேசுவதற்குப்போதுமான நேரம் கிடைக்காததாலோ, அல்லது வேறு எந்தக் காரணத்தாலோ, இத்தகைய தொரு நிலை ஏற்பட்டதற்குக் காரணமென்ன என்னும் ஆராய்ச்சியிலே ஈடுபடவில்லை.

டெய்லர் அண்டு கோவுக்கு பற்பல வசதிகளைச் செய்துகொடுத்திருக்கிறது மைசூர் அரசாங்கம்—நீர் வசதியும், மின்சார வசதியும் குறைந்த கட்டணத்தில் தரப்பட்டிருக்கிறது— அதையெல்லாம் கணக்கிடாமல், இவ்வளவு நஷ்ட ஈடு தருமாறு தாக்கீது பிறப்பித்தீர்களே, இது நியாயமா?—என்று கேட்டிருக்கிறார், காங்கிரசுக் கட்சியைச்சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் திரு. சங்கரையா!

இது மைசூர் அரசாங்கத்தால் முடிவு செய்யப்படவேண்டிய பிரச்சனை — மத்திய அரசாங்கத்தாலல்ல—இந்தப் பிரச்சினையில் மத்திய அரசாங்கம் தலையிட்டது அதன் எதேச்சாதிகாரப் போக்கினையே காட்டுகிறது — என்று கண்டனம் தெரிவித்திருக்கிறார், கம்யூனிஸ்ட் உறுப்பினர் திருமதி. பார்வதி கிருஷ்ணன்!

மற்றொரு விளக்கமும் தரப்பட்டிருக்கிறது, திரு. கேசவா என்னும் காங்கிரசு உறுப்பினரால்!

குற்றம் செய்த பையனைப் பெற்றோர்கள் தண்டிக்கும் முறையில், தங்கக் கனிகளை நாட்டுடைமையாக்க விரும்பிய மைசூர் அரசாங்கத்திடம் மத்திய அரசாங்கம் நடந்துகொண்டிருக்கிறது, என்கிறார் அவர்!

என்ன பொருள் இதற்கு?

எந்தப் பொருளையும் நாட்டுடைமையாக்குவதை மத்திய அராசரசாங்கம் விரும்பவில்லையென்று பொருளா?

மாநிலங்கள், நகராண்மைக் கழகங்களைப்போல்தான் இயங்கிட வேண்டும், மத்திய அரசாங்கம் இடுகின்றகட்டளை ஒவ்வொன்றையும் இஷ்டப்படி நிறைவேற்ற வேண்டும், இல்லையென்றால் "தண்டனைகள்" அவைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றும், மத்திய அரசாங்கம் கருதுகிறதென்று பொருளா?

அல்லது கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பது என்று பழமொழி சொல்லுவார்களே, அந்தப் போக்கிலே டில்லி மூலவர்கள் நடக்கிறார்கள் என்று பொருளா?

மைசூர் மாநிலத்து மக்களின் நலனில் உள்ள அக்கறையை விட ஆங்கிலேயரால் நடத்தப்படுகின்ற அந்தக் கம்பெனியின் இலாபத்தில் அக்கறை டில்லி அரசாங்கத்துக்கு அதிகம் என்று, இத்தகு நடவடிக்கைக்கு நாம் பொருள் கொள்ளலாமா?

பற்பலரால்—பற்பல கட்சிகளைச் சார்ந்தவரால் — மத்திய அரசாங்கத்தின் கோணல் போக்கிற்குக் கண்டனமும், காரண காரியங்களும் எடுத்தியம்பப்பட்ட பிறகு மத்திய அமைச்சர் திரு. மாளவியா தருகின்ற பதில், நம்மைத் திடுக்கிடச் செய்கிறது.

கொடுக்கப்பட்ட நஷ்ட ஈடுத் தொகை நியாயமானதுதான் என்று வாதாடவில்லை அவர்—

அவ்வாறு வாதாடியிருந்தால், அந்த வாதத்தில் உண்மை இருக்கிறதோ இல்லையோ, மத்திய அரசாங்கம், நடந்துகொண்ட விதம் நியாயமானது என்று கூடத் தோன்றக்கூடும், பலருக்கு!

ஆனால் அவரது விளக்கம் விபரீதமாகத் தோன்றுகிறது.

"கோலார் தங்கக் கனிகளை நாட்டு உடமையாக்க வேண்டாமென்று மத்திய அரசாங்கம் சொன்னதற்குக் காரணம், நாணயச் செலாவணியிலிருந்த கஷ்டமான நிலை ஒரு புறமிருந்தாலும், நாட்டுடைமையாக்குவதானால், வெளிநாடுகளிலேயிருந்து இந்தியாவுக்கு நிறைய மூலதனம் வருவதற்கு இடையூறாக இருக்கும் என்று மத்திய அரசாங்கம் கருதியது." என்று பேசியிருக்கிறார் அவர்!

வெளிநாட்டு மூலதனம் நம் நாட்டிற்கு நிறைய வரவேண்டும் என்பதற்காக, ஒரு தொழிலை, நாட்டிற்கு வளம் தேடித்தரும் தொழிலை, நாட்டுடைமையாக்கக் கூடாதென்று தடுக்கிற காங்கிரசு அரசாங்கம், சமதர்மத்தைக் குறிக்கோளாகக் கொண்டது என்று எப்படி நாம் நம்புவது, ஒப்புவது?

இங்கே நாம் கவனிக்கவேண்டிய உண்மை அதுமட்டுமல்ல!

வெளிநாட்டு மூலதனம் வரவேற்கப் படுகிறது, ஆட்சியாளர்களால் — உண்மைதான. அந்த மூலதனம், பற்பல திட்டங்களுக்கும், புதுப்புது ஆலைகளைத் துவக்கிடுவதற்கும் பயன்படுபடுத்தப் படுகிறது—எவரும் மறுத்திடவில்லை!

ஆனால் அந்தத் திட்டங்களிலே பெரும் பகுதி வடக்கே!—கோலார் பிலாய், துர்காபூர் ஆலைகளுக்கும் மற்றும் பற்பல தொழிற்சாலைகளுக்கும்தான் வெளிநாட்டின் மூலதனத்தின் பெரும்பகுதி பயன்படுத்தப்படுகிறதேதவிர, அதிலே தென்னகத்துக்குக் கிடைக்கிற தொகை மிகமிகக் குறைவு — அரசாங்கத்தாலேயே தரப்படுகிற புள்ளி விவரம் காட்டுகிற உண்மை இது;

எனவே வெளிநாட்டு மூலதனம் பயன்படுத்தப்படுவது வடக்கே! அதனைத் தூண்டில் போட்டு இழுக்க, தூண்டிற் புழுவாகப் பயன்படுத்தப்படுவது, தென்னகத்துப் பணம்! ஏனிந்த நிலை?

★

"வானொலியும்— இலக்கியக் கொலையும்"

(அரிமழம் கதிரவன்)

30—3—58 காலை 7-மணி முதல் இரவு 11-மணிவரை திருச்சி வானொலியில் சிந்தையள்ளும் முத்தமிழ்க் காப்பியமாம் 'சிலப்பதிகாரத்திலிருந்து சில நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒலிபரப்பினார்கள். இந்த நிகழ்ச்சியில் பெரிதும் முழுமை இன்மையையே "பத்தினித் தெய்வம்" என்ற நாடகம் ஒன்று அன்றைய நிகழ்ச்சிக்கு மணிமுடிபோல் அமைத்திருந்தார்கள்.

சிலப்பதிகாரம், தமிழக வரலாற்றினைத் தன் உள்ளே தாங்கியுள்ளது என்பதையும், சங்க காலத் தமிழக மக்கள் பண்பாடு வடநாட்டுப் பண்பாட்டினின்று முற்றிலும் வேறுபட்டது என்பதையும்எடுத்துக்காட்டுகின்றது. இந்தச் செய்தி அறியமாட்டாத நுண்மாண் நுழைபுலமற்ற, இலக்கிய அறிவை முற்றும் உணராத முறையில் நாடகத்தை உருவாக்கி நடாத்தியுள்ளார்கள். இலக்கியத் தவறுகள் பல அன்றைய நாடகத்தில் மலிந்திருந்ததைக் கண்டு நாம் பெரிதும் வருந்துகின்றோம்.

மனையறம் படுத்தப் பெற்ற மணமக்கள் இருவரும் உரையாடியதாகத்தமிழ் இலக்கணமோ, இலக்கியமோ இயம்பியதாக நாம் அறியோம். ஏனெனில் பண்பாடு குறையாத மக்கள் தமிழர். மணமாகிய அன்று மணமகன் கூறுவனவற்றிற்கெல்லாம் மணமகள் மறுமொழி தருதல் இல்லை என்பதைத்தொல்காப்பியபொருளதிகாரத்தில் (இளம்) 108-ஆம் சூத்திரத்தில்:—

"சொல்லெதிர் மொழிதல் அருமைத் தாகலின்
அல்லல் கூற்றுமொழி அவன்வயி னான"

என்று விளக்குகிறார்.

தலைவி பேசமாட்டாள், என்றாலும் அவள் உள்ளக் குறிப்பை முகம் கோடிட்டுக் காட்டும் என்பதை (இளம்)—சூத்: 116

"தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்
எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லைப்
பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்
பெய்ந்நீர் போலும் உணர்விற் றென்ப"

என்று நீர் உள்ள குடத்தில் கசிவு இருத்தல்போல உள்ளம் புலப்படும் என்கிறார். ஆனால் தலைவன் முன் தலைவி பேசுதல் இல்லை என்று அழுத்தந்திருத்தமாகக் கூறி உள்ளார். இந்த மரபு தமிழ் இலக்கண, இலக்கிய மரபு.

இந்தப் பண்பைப் பழுதறக் கற்றுத் துறைபோகிய இளங்கோ அடிகள் தம் சிலம்பில் கோவலன் கண்ணகி மணவிழாவையும் மனையறம் படுத்தியமையையும் காட்டுகிறார். கோவலன் "மாசறு பொன்னே! வலம்புரி முத்தே" என்று தொடங்கி கண்ணகியைப் பலவாறு புகழ்ந்து உலவாக் கட்டுரை ஒன்று மொழிந்ததாகக் காட்டுகிறார். இங்கு கண்ணகி கோவலன் புகழ்ந்ததை ஒட்டியோ அவனைப் புகழ்ந்தோ மறுமொழி பகர்ந்தாளில்லை. இலக்கண வரம்பு இடம்தரவில்லை; தமிழ்ப் பண்பு தலைதூக்கி நிற்கின்றது. இது உண்மையாக இலக்கியத்தில் உள்ளது.

ஆனால் திருச்சி வானொலி நிலையத்தாரின் பத்தினித் தெய்வமாகிய கண்ணகி கோவலனைப் புகழ்கின்றாள். கோவலன் 'மாசறு பொன்னே!' என்றான், கண்ணகி கோவலனை, உங்களை விடவா?' என ஒருபடி மேலே புகழ்கின்றாள். இந்தக் கண்ணகி 1958-இல் வந்தவள் போலும்! நவீன உண்மையில் இலக்கிய மரபு அறியா மக்களிடம், சிலபபதிகாரம் சிக்கிச் சிதைக்கப்படுகிறது.

இந்தத் தவறுக்கு அவர்கள் மறுமொழி: "நாடக அமைப்புக்காகச் சிறசில உத்திகள அவசியமெனக் கருதியதால் இவ்வாறு சில காட்சிகள் சேர்க்கப்பட்டன

என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்"

நாடக அமைப்புக்காக நடவாத, முறையற்ற, பண்பாடற்றசெயலைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் தமிழ் மரபைக் குழிதோண்டிப் புதைக்கிறார்கள். இது உத்தியா? அல்லது நிறைவற்ற புத்தியா? தாங்கள் பின்பற்றி அமைக்கும் காப்பியம் 2000 ஆண்டுகட்கு முற்பட்டது என்பதையும், தமிழ் மரபுகளைக் கொண்டது என்பதையும் எண்ண முடியாமைக்குரிய காரணம் தெரியவில்லை.

சிலப்பதிகாரம் — முத்தமிழ்க் காப்பியம் — இலக்கிய வளமுள்ள இன் தமிழ்க் காப்பியம் — தமிழ் மரபுகளைத் தனித் தன்மையுடன் படமிட்டுக் காட்டவல்ல காப்பியம் என்பதை இலக்கிய ஆய்வு படைத்த எவரும் ஒப்புவர். இத்தகைய ஆய்வற்றவரால் அமைக்கப்பெற்று ஒலிபரப்பிவிட்டு "உத்திகள்" என்று அமைவு படுத்த முற்படுவது முறையல்ல. அமைக்கப்பட்ட பல பாடல்களில் சில குறிப்பிடத் தகுந்த தவறுகளைக் காணுவோம். தவறுகளைப் படித்த பின்னர் தமிழ் உள்ளங்கள் வேதனையால் விம்மத்தான் செய்யும்.

கோவலன் கண்ணகியின் சிலம்பைப் பெற்று விற்றுவர மதுரை சென்றவன், கொற்றவன் ஆணையால் கொலைப்பட்டான் என்ற செய்தியைக் கண்ணகிக்குக் கூற வேண்டிய இடம் வருகிறது. இந்த இடத்தில் "சிலம்பு" என்று அப்படியே கூறிவிட்டால் கண்ணகி மயங்கி விழுந்துவிடுவாளே என்று கவிஞர் மறைபொருளில் அதாவது இலக்கியச் சொல்லாக "ஞெகிழம்" என்று கூறுகிறார். "ஞெகிழம்" என்றால் சிலம்பு என்று பொருள். இது, "நெகிழ" என்று இரண்டுமுறை திரும்பத் திரும்ப வருகிறது வானொலியில 'ஞெகிழம' என்பதும 'நெகிழ' என்பதும ஒன்றுதான என்று எண்ணிவிட்டாாகள போலும. 'நெகிழ' என்று அந்த இடத்தில் இருப்பது இலக்கியச் சொலலென்பதைத் தவிர வேறு என்ன என்று விளம்புவது?

மாதவியின் அரங்கேற்றத்தை மிக்க கவனமும் கருத்தும் கொண்டு 'அரங்கேற்றுக் காதை'யில் அழகுபடக் காட்டுகிறார் அடிகள். ஒவ்வொரு காதையின் முடிவிலும் அந்தந்தக் காதையின் முழுமை அடங்கிய ஒரு வெண்பா அமையப் பெற்றுள்ளது. அதே போல் அரங்கேற்றுக் காதை இறுதியிலும் ஒரு வெண்பா உண்டு. கதை ஓட்டத்தை விரைவு படுத்த வெண்பாவை மட்டும் கூறி நாடகத்தை நடாத்துவது போற்றக் கூடியதே. அந்த வெண்பாவையாவது முழுதும் படித்திருக்கலாம்! காதையைத்தான் முழுவதும் படிக்க நேரமில்லை என்றாலும் வெண்பாவின் முடிந்த கருத்தையும் படிக்காமல் உருவாக்கிவிட்டார்கள், "மாதவி பண்ணின்ற கூத்தும் பதினொன்றும்" பதிய முறையாக ஆடினாள் என்று வெண்பாவில் உள்ளது.

ஆனால் வானொலிப் பாடலில் "பண்ணின்ற கூத்துப் பதினைந்தும்' என்று நான்கு சேர்த்து 1958-ல் மாதவி ஆடினாள் போலும்! அது மட்டுமல்ல இது 15-என்பதை வானொலியின் தண்டமிழாசான் சாத்தனார் வேறு மீண்டும் கூறுகிறார்! பாடலில் மட்டுமல்ல தவறு எங்கள் உரையாடலிலும் தவறுதான் என்பதைக் காட்டுகிறது.

மற்றும் ஒன்று: தமிழகத்தில் எழுந்த நூல்களில் இறுதியில் அறவுரை கூறுதல் உண்டு. அது போல சிலப்பதிகாரத்தில், வரந்தரு காதையில் இளங்கோ பல அறவுரைகளைக் கூறி மக்களை அறிவு பெறச் செய்ய முனைகின்றார். அந்த அறவுரைகளையாவது நன்றாகப் படித்து, பயின்று எழுதப் பெற்றிருக்கவேண்டும். இலக்கிய ஈடுபாடு குறைவு காரணமாகப் பெருந் தவறு செய்துள்ளார்கள்—என்பது நிலையப் பாடலில் காணப்பட்டது.

சிலப்பதிகாரம்--வரந்தருகாதை 189-ஆம வரியில் "ஊனூண் துறமின" என அறவுரை தருகிறார். இதனை 'ஊனூண்டு உறமின" என அமைத்தனா. மாமிசம உண்ணாதே என்று சிலமபு சொல்ல திருசசி நிலையம "மாமிசம் உண்" என்று மொழிகின்றது. ஐயகோ! பரிதாபம்!!

அதுமட்டுமா? 195 ஆம் வரியில் சிலமபில் "பிழையுயிர் ஓமபின" என்றார் அடிகள். பிழை செய்தலைத் தவிர்க்க விழையுங்கள் என்றா இளங்கோ அடிகள். ஆனால் "பிழையுயிர் ஒப்புமின்" என்று வானொலியின் பாட்டு முழங்குகிறது.

இந்த அளவில் இலக்கியங்களை வானொலி நிலையத்தார் பயன்படுத்துவார்கள் என்றால் தமிழ் இலக்கிய உலகம் கண்ணீர் சிந்துவதைத்தவிர வேறு செய்வதற்கு ஒன்றும் இல்லை.

சிறந்த இலக்கியங்களை நாட்கமாக்கும் செயலில் ஈடுபடும் பொழுது அந்தந்த இலக்கியத்தில் நுண்மான் நுழைபுலமும், ஆய்வுத் திறனும அமையப் பெற்றோரைப் பயன்படுத்திச் சிறப்புறச் செய்தலே செயற்படும் முறையாகும். அதனை விட்டு கூலிக்கு மாரடிக்கும் கும்பலைக் கொண்டு, பழந்தமிழ்ப் பண்பைப் பாழாக்கும் செயலில் இனியாவது ஈடுபடாமல் இருக்க விழைகின்றோம். தமிழகத்தில் ஒருகதை உண்டு: குற்றம் காணப்பட்டால், குற்றம் குற்றமே என எடுத்துக் காட்டிய நக்கீரர் பரம்பரை உண்டு என்பதுதான்.

சிலப்பதிகாரம் ஏதோ எளிய 'கீர்த்தனங்கள்' எனக்கொண்டு பெருந்தவறு செய்துவிட்டார்கள் தொல்காப்பியரே 193 ஆம் சூத்திரத்தில்

"இசைதிரிந் திசைப்பினும் இயையுமன் பொருளே
அசைதிரிந் திசையா என்மனார் புலவர்"—

என்று கூறுகிறார். இசையை வேண்டுமானால் திரித்து ஒலித்தாலும் பொருள் இயையும்; ஆனால் அசையைத் திரித்து ஒலித்தால் பொருள் பொருள் பெறாது என்கிறார். இதனையும் வானொலியார் உணர்ந்தவர்களாய் தெரியவில்லை.

தமிழ் இலக்கியத் தொடர்பான நிகழ்ச்சிகளில் காலூன்றும்போது, மிக்க கவனத்துடன அந்தந்த அருந்தமிழ் காவியத்தின் பண்பு எள்ளளவுங் குறையாத முறையில் எடுத்தாள விழைகினறோம. வானொலியார் தமிழ் இலக்கிய ஆய்வுடையார்களை அலுவலர்களாக அமைத்துத் தமிழகத்திற்குத் தொண்டு செய்ய விழைகின்றோம்.

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

இன்றனர். காட்டூர் இராமையா என்பார், மாநாட்டுக்கு வந்த கழகத் தலைவர்களுக்கான உறையுள்-உணவு வசதிகளைச் செய்தார். அவர் ஒரு ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு, காங்கிரசிலே ஒரு குறிப்பிட்ட இடம் வகித்தவர். இப்போது, நமக்கு ஒரு நண்பர் என்பதுமட்டுமின்றி, சுவை மணக்கும் விருந்து வைத்தார்-அதிலும் எப்படி? பலாச்சுளையைத் தேனில் தோய்த்து, விருந்து!! குளிக்கரை இசைப்பெருங்கோ கே. எம். பிச்சையப்பா, பாவா கலியாணசுந்தரனார், ஆகிய இருவரும் தலைவர்களுக்கு ஒவ்வொரு வேளை விருந்தளித்து மகிழ்ந்தனர். நேரடி கழகத்தோழர்கள் அல்ல என்றாலும், நாட்டின் வளர்ச்சியில் அக்கரைகொண்ட நல்லவர்கள் ஆவார்கள்! குளிக்கரை பிச்சையப்பா, வயிற்றுக்கு விருந்து அளித்தது மட்டுமல்ல, நாயன மூலம் இசை விருந்தும் தந்தார், மாநாட்டினருக்கு-நாகூர் இசை முரசு அனீபா அளித்த இசை முரசுக்குப் பிறகு. இயக்க முரசுக்குப் பிறகு. மாநாட்டின் வெற்றியில் அக்கறை கொண்டு வேலை செய்தார், திருவாரூரில் முக்கியமானவர்களில் ஒருவரான இராசசந்தானம் என்பவர்! இப்படி கழகத்தில் நேரடித் தொடர்பு கொள்ளாதோர்கூட, நம்மையறியவும், நமக்கான ஒத்துழைப்புகளை வலுவில் அளிக்கவும், முன்வருகிறார்கள் எனின், இந்த மலர்ச்சியின் அளவையும் வலிவையும், பத்தாண்டுகளுக்கு முன்பு 'கண்ணீரை மட்டுமே' மூலதனமாகக் கொண்டு கழகம் அமைத்த நாம் மட்டுமே அறிய முடியும்!!

"என்ன! மாநாட்டுக்கு, ஏதாவது பணவுதவி வேண்டுமோ? தருகிறேன்!!", என்றாராம் வரவேற்புக்குழுவினரைச் சந்தித்த, ஒரு பெரியவர். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு—திராவிடர் கழகமாயிருந்த காலத்தில் —அந்தப் பெரியவர்கள் போன்றோரைநத்தி வசூல் செய்தால் தான் ஒரு பொதுக்கூட்டமாவது நடத்த முடியும். இன்று அவர் வலுவில் வருகிறார்! வரவேற்புக் குழுவினரோ மிக்க நன்றி. கழகக் கிளைகளே, வேண்டுமளக்கு உதவி அளித்துள்ளன", என்று பதில் அளித்தனராம். கூட்டம் ஒன்றுக்கு நூறு ரூபாய் வீதமும், கிளைக் கழகங்கள் ஒவ்வொன்றும் ரூபாய் பத்துமாக, சுமார் 5000-க்கு மேல் வந்ததாம் மாநாட்டின் செலவுக்கு! அந்தளவுக்கு, ஏழையரும், கழகக் காளையரும் அளிக்கும் நன்கொடைகளைக் கொண்டே, கழகத்தை நடாத்திடும் தனித்ததோர் அரசியல் கட்சியாக வளர்ந்து வருகிறோம், நாம். இந்த வளர்ச்சியின் வகை, பெருமிதம் தரக்கூடியதே! பலாச்சுளையும், அதனைத் தேனில் தோய்த்து உண்ணும்போது கிடைக்கும் சுவையும் — மிகமிகப் பெரிது என்பதோடு, அதில் பொதிந்திருக்கும் 'விளக்கம்' குறிப்பிடக்கூடியதாகும்!!

ஆனால், அதே சமயத்தில், அண்ணா அவர்கள் குறிப்பிட்டது போல மற்றொன்றினையும் மறந்து விடுவதற்கில்லை, நாம். 300க்கு மேற்பட்ட கிளைக்கழகங்கள் இருந்தும் ஆதரவுதர நல்லவர்கள் இருந்தும்—ஆர்வமிக்க காளையர் பலர் இருந்தும்—கண் மூடாது உழைக்கும் உழவர்கள் ஏராளமிருந்தும் — 'தஞ்சை' தேர்தலில் "ஒருவரை"க்கூட சட்டசபைக்குத் தரவில்லை, நமக்கு. அதற்கு, பல காரணம் சொல்லக்கூடும்--தஞ்சையின்மீது கழகக்காவலர்கள் தமது கவனத்தை அதிகம் செலுத்தவில்லை என்று முணுமுணுப்பதும் கேட்காமலில்லை, நமக்கு. நடைபெற்ற தேர்தலில் கழகச் சார்பில் நின்றோர் வாங்கிய ஓட்டுகளின் எண்ணிக்கை, சாதாரணமானதல்ல, என்கிற கணக்கும் புரியாமலில்லை நமக்கு. இந்தநிலை, மாறி, அடுத்த தேர்தலின்போது 'நாம்' வெற்றி காணும் சூழ்நிலை ஏற்பட வேண்டும்.

நல்லோரின் ஆசி இருக்கிறது— மக்கள் மன்றத்திலும் நம்மைப்பற்றிய நல்லெண்ணம் இருக்கிறது— உழைக்கும் தோழர்கள் - நாட்டை வாழ்விக்கும் கொள்கையும் நம்மிடம்தான் இருக்கிறது. இவைகளையெல்லாம் தக்க முறையில் பயன்படுத்தி, இப்போது முதல், நல்ல தொடர்பை மக்களிடம் ஒவ்வொரு கழகத்தோழரும் உண்டுபண்ணிக் கொள்ள வேண்டும். அதற்கான வகையில், மாவட்டங் செயலாளர் என். எஸ். இளங்கோவும், அவருடன் ஒத்துழைத்த வரவேற்புக் குழுவினரும், மாவட்ட பிற நிர்வாகிகளும் தக்க திட்டம் தீட்டி பணியாற்ற வேண்டும்.

தஞ்சைமண்ணில், நல்ல விதைகளைத் தூவிவிட்டால், எளிதாகவும் விரைவிலும் பலன்காண முடியும். தூவினால், அறுவடை செய்யலாம் என்கிறநம்பிக்கையுள்ளது. துவக்கப்பட்ட இடங்களில் வளர்ந்திருக்கும் பயிர்களின் பாங்கும் கண்ணைப் பறிக்கிறது. எனவே, எங்கெங்கு கழகக் கொள்கைகள் பரவ வேண்டுமோ, அங்கெல்லாம் விதைத்திடும் வேலைகளை, மாநாட்டினை வெற்றிகரமாக, நடாத்திக் காட்டி, இருபதினாயிரம் ரூபாய் மிச்சத்தையும் காட்டி, ஏறுபோல் திரும்பிச் சென்றிருக்கும் ஒவ்வொரு கழகக் காளையரும் செய்ய வேண்டும்—"நஞ்செய்நாடு, நமது நாடு" எனும் புகழை நிறுவிடல் வேண்டும், என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்டுகள் இயக்கம் ஆகியவைகளின் இன்றையநிலையை எண்ணிடின், எதிர்காலம் யாருக்கு என்பது நன்கு விளங்கும்.

தஞ்சைத்தரணி, சாதாரணமானது அல்ல! அங்கு காவிரி பாய்கிறது, அதிலிருந்தும் உண்டான பல நதிகள் ஓடுகின்றன, என்பது மட்டுமே பலருக்குத் தெரிந்திருக்க முடியுமே தவிர, ஆண்டு மாண்ட வீரப்பரம்பரையினரின் வெற்றிகளை உணர்த்தும் சின்னங்களும் உண்டு என்பதைப் பலர் அறியார்! முடிகொண்டான் என்று பெயர்கொண்ட ஆறு ஓடுகிறது--கடாரங்கொண்டான் எனும் ஊரும் உண்டு — புகாரும் 'தரங்கம்' பாடிடும் ஊரும், அரண் தாங்கியும், அழகான ஆலயங்களும், அமிழ்ந்துபோய்க் கொண்டிருக்கும் அரண்மனைகளும் நமது பழந்தமிழ்ப் புகழை எடுத்துக் காட்டுவதாகும்.

அவைகளையெல்லாம் ஒருகணம் எண்ணிடின், உள்ளம் எரிமலையாகும்! உணராத காரணத்தினாற்றான், தஞ்சை மாவட்டத்திலுள்ள பலர், இருளிலும், 'கொண்டதே கோலம்' எனும் போக்கிலும் உள்ளனர்—அந்த இருளைப் போக்கிடும் பணியினை, அங்குள்ள கழகத்தவர், அன்பு முறையால், கழகத்தின் கண்ணியம் கடமை கட்டுப்பாடு எனும் மூலமந்திரங்களின் துணை கொண்டு முயற்சிப்பார்களாயின் வெற்றிகிட்டும்! தாயகம், விடுதலை முரசு கொட்டும் நாள் விரைவில், எட்டும்!!

★

இராணி இராசேந்திரா

மாடி வீட்டிலே ஏழை!—இதென்ன புலிக் குகையிலே பசு என்பது போலுள்ளதே! மாடி வீட்டிலே எப்படி ஏழை இருக்கமுடியும், மாடி வீடானாலே அங்கு 'மவுசுகள்' பெற்றோர்தானே இருப்பர், கோடீசுவரர்களும் குபேரபுரியினரும் வாழத்தானே மாடி வீடுகளைக் கட்டிக்கொள்ளுகிறார்கள், என்றே எண்ணத் தோன்றும் எவருக்கும்.

ஏழு அடுக்குகள் கொண்ட மாடி வீடானாலும், அங்கே ஒரு ஏழை தோன்றினாள்; பட்டுப் பட்டாடைகளும், பணமும், அணிமணியும் பெட்டிகளில் குவிந்து இருந்தும், அவள் ஏழையாகவே இருந்தாள்; எனக்கேனிதெல்லாம், சாதாரண ஆடை ஒன்று போதும், உடம்பை மறைத்துக்கொள்ள பதினாறு முழத்தில் ஒரு புடவை. இரண்டு முழத்திலே ஒரு இரவிக்கைத் துணி; இது போதும் என்றாள்; பூரியும், சப்பாத்தியும், பேணியும், லாடும், வெள்ளித்தட்டும், அள்ளி வைக்க எடுபிடிகளும் இருந்தனர்; அவளோ, வயிறார ஏதாவது உணவு கிடைத்தால் போதும். அதைவைத்துச் சாப்பிட வெள்ளியேன்? பீங்கானே போதும் என்றாள்.

அவளையொத்த ஆரணங்குகள் அத்தைமகள், சிற்றப்பன் செல்வி போன்றோர், சிங்காரமான மாளிகையிலே தளுக்கும் குலுக்குமாக, மதுரசக்கிண்ணம் ஏந்தி. 'மச்சான் உன்னைப் பார்த்து, மயங்கிப்போனேன் நேத்து' என்று பாடிக்கிடந்தனர்! இவளோ, அந்தச் சமயங்களில், குடிசைகளே வீடாய் எரிமலையே வயிறாய், எலும்பும் தோலுமாய் நின்ற ஏழையர்தம் மத்தியில் போய், "நீங்கள் எனிப்படி இருக்கிறீகள்? ஏழைகளாய், கோழைகளாய் நீங்கள் இருக்கக் காரணம் என்ன? விதியென்பார் வீணர்! வெற்றுரையாம் அது! அறிவீனர் வகுத்த சதியென்பேன் நான்! அதனை முறியடித்து, தாய் நாட்டை மீட்டிட வாரீர்!" என்று பொதுப்பணி புரிந்தாள்.

டாடா, பிர்லா போன்ற சீமான்களைவிட மேலான குடும்பத்திலே பிறந்தவள்! சிற்றரசுக்கே உரிமையானவள்! சுதந்திரம் வருமுன் சோபிதத்தோடு விளங்கிய இந்திய சமஸ்தானங்களில் ஒன்றில் பிறந்தசெல்வி அவள். இராணிராஜேந்திர குமாரி என்பது அவள் பெயர். வீடு மட்டுமல்ல, அரண்மனைகளிருந்தன, அவளுக்கு. வெண்சா

அண்ணல்

மரம் வீசிடத் தாதியரும், வெளியில் கிளம்பினால் குதிரை பூட்டிய கோச்சுகளும், பாதுகாத்து வர படையினரும், வாய் திறந்தால் வைரமும், கேட்டால் தங்கமும் கிடைக்கக்கூடிய வாய்ப்பும் ஏராளமிருந்தன, அந்த இளவரசிக்கு! எனினும், அவள் அவைகளைத் துச்சமென மதித்தாள் — சுதந்திரப் போருக்குத் தன்னை அர்ப்பணித்தாள்—ஏழைகளோடு ஏழையாய் வாழ விரும்பினாள் — புதியதொரு 'புத்தர்' போல விளங்கினாள்.

செட்டிநாட்டரசர் தன்னை ஒரு காங்கிரஸ்காரர் என்று இன்று சொல்லிக்கொள்கிறார் — இராமநாதபுரம் இராஜாவும், மைசூர் மன்னரும் தத்தமக்கு காங்கிரசின் மீதுள்ள பிரியத்தைப்பற்றி விவரிக்கிறார்கள்—இலப்பிரபுக்கள் ஆலையரசர்கள், சமஸ்தானாதிபதிகள், யாவரும் இன்று தங்களைக் காங்கிரஸ்காரர்கள் எனக் கூறிக்கொள்வதே பெருமை என எண்ணுகின்றனர். காங்கிரசும் "இவர்கள் எல்லாம் எங்கள் கட்சிக்குள்!" என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுகிறது.

இராணிராசேந்திரகுமாரிகாங்கிரசுக்குத் தன்னை அர்ப்பணித்த நேரம் இப்படிப்பட்டதல்ல! உற்றாரும் உறவினரும், வெள்ளையர்தம் தாசர்களாயிருந்த நேரம். காந்தி அடிகளையும், காங்கிரஸ்காரர்களையும், 'நுழையாதே எமது எல்லைக்குள்!' என்று தடைபோட்டுவிட்டு, அதற்கான சன்னதைப் பெற, ஐரிகைக் குல்லாய்களைப் போட்டுக்கொண்டு, தங்கத்தாலான சாரட்டிலேறி, வைஸ்ராய் மாளிகையே, தஞ்சம் எனக் கிடந்த காலம் அது. அப்போது, இந்தப் பெண், அரண்மனையை விட்டு, ஏழைகள் கூடாரம் நோக்கிச் செல்வதென்றால்; சென்று, பிரிட்டிஷாரை எதிர்த்துப் பேசுவதென்றால்; உறவினர், என்ன கருதியிருப்பர்! உற்றாரெல்லாம் எப்படியெப்படி ஏசியிருப்பர்! மாடிவீடு இருந்தும், இந்த மண்டுகம் எனிப்படியெல்லாம் அலைகிறது-வசதியிருந்தும் இவளேன் வயிற்றுக்கில்லாததுகளுடன் போய்க் கிடக்கிறாள் — தேசமாமே தியாகமாமே—புத்தியில்லாதவள் — நமக்கேனிதெல்லாம் — நன்செயில்லையா, புன்செயில்லையா—இப்படித்தானே கேலிக் கணைகளைத் தொடுப்பர்! வீரன் விடுக்கும் அம்புகளைக் கூடத் தாங்கிக்கொள்ளலாம், அவை உடலை மட்டுமே வருத்தும். ஆனால், வீணர் தொடுக்கும் கேலிக் கணைகள் இதயத்தைப் பிளந்து, குடையக் கூடியதன்றோ !!

மாளிகைகள் இருந்தன—மக்களின் மனமாளிகையே பெரிதென நினைத்தாள். வலம் வர எடுபிடிகளிருந்தனர், சமஸ்தானத்தில்; மக்களின் அன்பே மூல பலம் என எண்ணினாள். ஆள்வதற்கோர் சிம்மாசனம் இருந்தது; மக்கள் தம் மனமே எனக்குச்சிம்மாசனம் எனக் கருதினாள்; பராக்குக் கூறிடுவோரும், பல்லக்குத் தூக்கிகளும் ஏராளம் இருந்தனர், அவளோ மக்கள் மன்றம் 'வாழ்க இராணி!' என்று எழுப்பிடும் முழக்கமே, என் காதுகளுக்குக்கீதம் என்று கருதினாள்; தங்க நகைகள் தரப் பலர் காத்துக் கிடந்தனர், மக்கள் தரும் மலர்ச் செண்டுகளிலே கிடைக்கும் மணம் இவைகளுக்கு ஏது என்றாள்; உறவினர்கள் உறுமினர், அவள் காதுகளில் மக்கள் எழுப்பிடும் வறுமைக் குரல் மட்டுமே கேட்டது; வீணர்கள், வம்பு பேசினர், 'தூ தூ' என அவைகளைத் தள்ளி ஒதுக்கினாள்; வாழத் தெரியாதவள், என்றனர், சிற்றரசுகள்—அவளோ, 'வீராங்கனை' என வாழ்த்தும் மக்கள் கூட்டத்தைக் கண்ணால் காட்டினாள்.

உப்பு அள்ளும் போர்—தனிப்பட்டோர் 'சத்தியாக்கிரகம்' — ஆகஸ்டு அறப்போர்—என்கின்ற ஒவ்வொன்றிலும் அவள் பங்கேற்றாள்! அரண்மனையிலே, தங்கக் கோப்பைகள் இருந்தன ஏராளம்; அவளோ, காராக்கிரகத்திலிருக்கும் கஞ்சிக் கலயத்தை ஏந்திச் சோற்றுக்குக் காத்துக் கிடந்தாள். அவளின் தியாகத்தைக் கண்டோர், மிகவும் சிக்கலான சமயத்தில் (1934-ல்) அவளை பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக ஆக்கி, அவள் கட்டளைப்படி நடந்தனர்! அந்த வீராங்கனைக்கு இரண்டு குழந்தைகள் இருக்கின்றனவாம — அந்த இரண்டுபேரும், அவள் சிறைச்சாலைகளிலேயிருந்தபோது பிறந்தவர்களாம்!!

நாட்டின் விடுதலைக் குரல் கிளம்பியபோது, எவரெவரையெல்லாம் அக்குரல் ஈர்த்தது, என்னென்ன தியாகங்களையெல்லாம் செய்யும்படி செய்தது, என்கிற பட்டியல், காங்கிரஸ் சரிதத்தில், மிகப் பெரிது. வக்கீல் வேலையை விட்டெறிந்தவர்கள், மாளிகைகளைக் காங்கிரசுக்குக் காணிக்கையாக்கியவர்கள், பள்ளிகளைவிட்டு அறப்போரில் குதித்தவர்கள், பட்டங்களை வீசியெறிந்தவர்கள், தூக்கு மேடை நோக்கிச் சென்றவர்கள், சொந்த நலன்களையெல்லாம் துறந்தவர்கள், செக்கிழுத்தவர்கள், செங்குருதியைச் சிந்தியவர்கள், சிறைச்சாலைகளை அறக்கோட்டமாக எண்ணியவர்கள், சித்ரவதைக்காளானவர்கள், ஏராளம் உண்டு காங்கிரசில். இராணி ராசேந்திர குமாரியின், வரலாறே, சுதந்திரக் குரல் எங்கெங்கிருந்தெல்லாம், எவரெவரையெல்லாம் இழுத்தது என்பதை விளக்கும்.

பெண், வீட்டைவிட்டு வெளியே கிளம்புவதே இந்த நாட்டில் அருமை! அதிலும், போக போக்கியங்களும், வாழ்வதற்கு வேண்டிய வசதிகளும் நிரம்பியஒரு அரசகுமாரி, இந்தளவுக்கு வந்தாள் எனின், இரண்டு குழந்தைகளைச் சிறைச்சாலைக்குள்ளே பெற்றெடுக்குமளவுக்கு நிலைமையிருந்தபோதும் நெஞ்சுரம் இழக்காமல் தொண்டு புரிந்தாள் எனின், சுதந்திரக்குரல் உண்டாக்கிய வேகமும் விடுதலைத் தாகமும் எவ்வளவு பெரிதென விளங்கும். விடுதலை புரி நாடும், ஒவ்வொரு வீரரும், உண்மையில் அன்று ஊற்றப்பட்ட சுதந்திர உணர்ச்சிக்கு, சிரம் வாழ்த்தவே வேண்டும்.

அப்படிப்பட்டஇராசேந்திரகுமாரி ஓரிரு மாதங்களுக்குமுன், ஒரு உபதேர்தலுக்கு நின்றாள்! பொதுத் தேர்தலிலே, பொன்னுள்ளம் கொண்ட இப் புனிதவதிக்கு இடமளித்திருக்க வேண்டுமேயெனபீர்கள் — இப்பேற்பட்டவர்களுக்கு இடமளித்து, தேர்ந்தெடுத்து, பொறுப்பில் வைக்கும் ஆர்வமா இருக்கிறது, இன்றைய காங்கிரசில். காங்கிரசின் எதிரிகளாய் இருந்தவர்களுக்குத்தானே இப்போதெல்லாம் இடம் கிடைக்கும்! இவள் தியாகம் செய்தவளாயிற்றே—தியாகிகளுக்கு கவுரவம் அளிக்கும் எண்ணமிருப்பின், காரைக்குடி சா. கணேசனைஒதுக்கி விட்டு, அந்த இடத்தை செட்டிநாட்டுச் சீமானுக்குக் கொடுப்பார்களா! அதுமட்டுமல்ல இராணி ராசேந்திரகுமாரி, இப்போது காங்கிரசிலே, இல்லை. என்ன? காங்கிரசுக்காக 'புத்தரான' அப்புண்ணியவதி காங்கிரசிலே இல்லையா, என்று திகைப்புடன் நீங்கள் கேட்பது தெரிகிறது மனக்கண்ணில். உண்மைதான், அவள், இப்போது காங்கிரசிலே இல்லை. ஏன், பொதுத் தேர்தலில், தன்னைநிற்க வைக்காததால், மனம் பொருமி, விலகி விட்டாளோ எனில், அதுவுமில்லை! பெரிய சிற்றரசையே, தேசவிடுதலைக்காக, சிறிதென மதித்த அந்தத் தியாகசேவிக்கு, எம். எல். ஏ. பதவியா பெரிது? இரண்டு மூன்றாண்டுகளுக்கு முன்பே, அவள் காங்கிரசைக் கை கழுவி விட்டாள். காரணம், இப்படி எம். எல். ஏ.—மந்திரிப் பதவிகளே—முக்கியம் என்று காங்கிரசுக்குள் ஏற்பட்டுவிட்டகன்றாவியைக்கண்டு, மனம் நொந்தே, அவள் காங்கிரசை விட்டாள்!! அப்பேற்பட்ட உத்தமி, ஒரு உபதேர்தலிலே, நிற்க நேர்ந்தது.

எந்தக் காங்கிரசே தனது வாழ்வின் மூச்சு என்றுகருதி வாழ்நாளெல்லாம் பாடுபட்டாளோ, அதே காங்கிரசை எதிர்த்து இந்த உபதேர்தலில் நின்றாள்.

காங்கிரசை எதிர்த்துத் தேர்தலில் ஈடுபட்டபோது, அம்மாதரசியின் மனதிலே, என்னென்ன எண்ணங்கள் எழுந்தனவோ—எத்தனை தடவைகள் கண்ணீரால் முகத்தைக் கழுவிக்கொண்டாளோ, நாமறியோம்! ஆனால், அவள் இந்த உபதேர்தலில் போட்டியிடமுன்வந்ததுகூட, காங்கிரசுக்குப் பாடம் புகட்டவும், காங்கிரஸ் எப்படிப்பட்டகட்சியாகி விட்டதென்பதை மக்களுக்கு எடுத்து விளக்கவும்தான்!!

அவள் எதிர்த்துநின்ற, காங்கிரஸ் அபேட்சகர், சாதாரணமானவரல்ல. இங்கே 'காமராசர்' இருக்கிறாரல்லவா, நிரந்தரத்தலைவராகவும், நினைதப்படி நாட்டை ஆட்டிவைப்பவராகவும்! நேருவின் சொந்த மாகாணமான ஐக்கிய மாகாணத்திலே, 'காமராஜாராம்' அவர்!! மந்திரிகளை ஆக்கவும் அழிக்கவும் வல்லமை படைத்தவராம்—காங்கிரஸ் கட்சிக்குள்ளே அவர் வைத்ததுதான் சட்டமாம் —டில்லியிலே வாழும் பண்டிதபந்த் உட்படப் பலரும் அவரது தயவில்தான் வாழவேண்டுமாம்,

—ஆதலால் அவருக்கு "மந்திரிப் பிதா!" என்றொரு பட்டப் பெயரும் உண்டாம்—கடந்த மூன்றாண்டுகளாகக் காங்கிரஸ் கட்சியிலும்சரி, மாநில ஆட்சியிலும் சரி, அவர் விரலசைவே வேதமாம்—ஐக்கிய மாகாணத்துக்கு சம்பூர்ணனந்த் என்பவர்தான் இன்றைய முதலமைச்சர் என்றாலும், இவர் சொற்படிதான் எதுவும் நடக்குமாம். சுருங்கச் சொல்லின், எந்த மந்திரிசபையிலும் இடம் பெறும், 'பக்தவத்சலம்' இவர்! எதையும் ஆட்டிவைக்கும் திறன் படைத்த, ஐக்கிய மாகாணத்து 'காமராஜர்' இவர் !!

கி. பி. குப்தா எனும் திருநாமம் கொண்ட இவர் போன்றோரால் தான் காங்கிரஸ் சீரழிகிறது—எப்படியாவது பம்பரத்தை ஆட்டி வைக்கும் கயிற்றினைத் தம் வசமே வைத்துக் கொள்ள வேண்டுமெனும் ஆசையில் தலையாட்டும் ஒரு கும்பலைச் சேர்த்து வைத்துக் கொண்டு கொட்டமடிக்கிறார்கள்—தலையாட்டுவோர் தம்வசமிருந்து நழுவிவிடா திருப்பதற்காக அவர்களுக்கு அரசாங்க சலுகைகளை அளிக்க ஆரம்பிக்கிறார்கள்—அதன் காரணமாக ஊழல் மலிகிறது, உறவினருக்கு உத்தியோகம் கொடுக்கும் சலுகைகள் அதிகமாகின்றன—அரசு கெடுகிறது—இப்படிப்பட்ட "கட்சி முதலாளிகள்" (Political Bosses) முதலில் அரசியல் வாழ்வை விட்டு அகற்றப்பட வேண்டும்—இவர் போன்றோரால்தான் கண்ணீர் விட்டு வளர்த்த காங்கிரஸ் விருட்சம் கெட்டு வருகிறது—எப்படியும் இந்த ஆளுக்குப் புத்தி போதிக்க வேண்டும் எனும் ஆவலில்தான், பிரஜா சோஷியலிஸ்டு கட்சியின் சார்பில் இராணி ராசேந்திரகுமாரி, போட்டியிட்டாள்! உப தேர்தலில் நின்றாள் !!

குப்தாவுக்கு, மற்ற மாகாணங்களில் இருந்தெல்லாம் படைகள் குவிந்தன மாகாண அமைச்சரவையையே ஆட்டி வைக்கிறவர் என்பதால், பணம்கொண்டுவந்து கொட்டப்பட்டது பெரியபெரிய கார்களும் 'ஜீப்'களும், காங்கிரஸ் கொடியுடன் வட்டமிடலாயின; மந்திரிகள் பேசினார்கள்; பெரிய மந்திரிகள் வந்தார்கள்; நேரு அறிக்கை விடுத்தார்; அவர் நின்ற தொகுதியும் சாதாரணமானதல்ல, காங்கிரசுக்கு அபரிமித செல்வாக்குள்ள இடமென்று கூறப்படும் பகுதியாகும். கேட்கவா, வேண்டும்! தேர்தல் பிரச்சாரம், ஒரு மகத்தான உற்சவமாக இருந்தது !!

இராணி ராசேந்திரகுமாரிதான், மாடிவீட்டு ஏழையாயிற்றே—அதனால், தன்னையும் தன் தியாகத்தையும் நம்பியே, தேர்தலில் இறங்கினாள். கார் இடையாது அவளுக்கு; கால்கள் இரண்டும் தான் துணை. காங்கிரசுக்குச் செல்வாக்கு அதிகமுள்ள பகுதியம்மா, என்றார்கள், தோழர்கள்! அதனால் என்ன, இன்றுள்ள காங்கிரசை மக்கள் மதிக்கிறார்களா—என் தியாகத்தை மதிக்கிறார்களா என்று பார்த்துவிடுகிறேன், என்றாள். 205 இராமங்களிருக்கின்றனவே? — என்றார்கள். எல்லாக் கிராமங்களுக்கும், கால்நடையாகவே போகப் போகிறேன், என்றாள். என் தியாகத்தை மக்கள் உணர்ந்தால் உணரட்டும், உணராவிடின் போகட்டும், நான் வளர்த்த காங்கிரசைக் கெடுக்கும் கெடுமதியாளர்களை மக்களுக்கு அறிமுகப் படுத்தவாவது இந்தத் தேர்தல் பயன்படட்டும் என்று போட்டியிட்டாள்.

சென்ற இடங்களிலெல்லாம், அவளை வரவேற்றனர் மக்கள்.

வாழ்த்துப்பாக்கள் வழங்கினர்! காலைத் தொட்டுக் கும்பிட்டனர்!!

வீடு, வீடாகச் சென்றாள்—விபரத்தை எடுத்துரைத்தாள்!

கால் நடையாவே எங்கும் சுற்றினாள்.

காங்கிரசுக்கோ — கார்கள் ஏராளம்! கர்ச்சித்தோர், பலர்! படைகள், திரண்டன!!

தனியாகத் தன்னையும் தன் தியாகத்தையும் நம்பியே, அவள் நின்றாள்.

முடிவு? வென்றாள் இராணி ராசேந்திரா! ஆட்சியையும், கட்சியையும் ஆட்டிப் படைக்குமளவுக்குச் செல்வாக்குப் பெற்று இருந்த குப்தா — தோற்றார், 7000-வோட்டுகளுக்குமேல் குறைவாகப் பெற்றுத் தோற்றார்.

இராணி ராசேந்திரா, மாடிவீட்டு ஏழை! குப்தா, ஏழையாக இருந்து மாடிவீடு பெற்றவர்!

அவள், தேசத்துக்காக, எல்லாவற்றையும் தியாகம் செய்தவள்.

இவரோ, தியாகம் செய்த கட்சியின் பெயரால், சுகவேட்டையாடுபவர்.

மக்கள் தியாகத்தை மதித்தார்கள்; நரிவேடத்தை அம்பலப் படுத்தினார்கள்.

இன்று நேருவின் மனதில் மாறாத வேதனையை உண்டாக்கியிருக்கும் பல காரணங்களில், இத்தேர்தலும் ஒன்றாகும்.

என்றும் உண்மைச் சேவை வெல்லும்—ஒருசில நாட்களுக்கு, பதவி மவுசும், படாடோபமும் ஆட்டம் போட்டாலும், தியாகமே வெல்லும், என்பதை உலகுக்கு உணர்த்தி விட்டாள் 'மாதரசி இராசேந்திரா! மாபெரும் காங்கிரஸ் என்று மார் தட்டுவோரே இத் தேர்தலின் விளைவால் இன்று மனங்கலங்கிக் கிடக்கின்றனராம் ஐக்கிய மாகாணத்தில். இந்த விபரங்களை யெல்லாம் 'இந்து' நிருபர், விபரமாகத் தந்துள்ளார்!!

தனக்கு உகந்த மணமகன் கிடைக்கும்வரை பெண் வருங்காலத்தைப் பற்றிச் சிந்திக்கிறாள்; தனக்கு மணப் பெண் கிடைக்கும்வரை ஆடவன் வருங்காலத்தைப் பற்றிச் சிந்திப்பதில்லை.

328 திராவிட நாடு

25—5—58 | வார வெளியீடு | விலை 16காசு

இடம் உண்டோ ஏட்டில்?

(தாமரைக்கண்ணன்)

வான்உலவி மழைபொழியும் கார்முகிலின் கூட்டம்
தான்வந்து சேருமெனில் மயிலாடும் ஆட்டம்
தேன்கனிவும் பால்சுவையும் தமிழில்மிகக் கொஞ்சும்
நான்அதனை மேவுங்கால் துள்ளிடும்என் நெஞ்சம்
மேன்மேலும் திணிக்கின்ற இந்தியில்ஏ தின்பம்?
மான்அல்ல மந்தியதால் வரும்நாளும் துன்பம்
கோன்ஆட்சி நீங்கினதோர் குடியரசு தன்னில்
ஏன்இந்த வெங்கொடுமை தீராத இன்னல்?

மலருமெழில் சோலையுளே பூக்கமெனில் எங்கும்
நிலைகொள்ளா தங்குவரும் வண்டுகளி பொங்கும்
விலைதந்தே வாங்கிடினும் நல்லரிசிச் சோற்றால்
வலிவடையும் நம்முடலும் ஏற்படுமோர் எற்றம்
தலைமீதே அவர்கொட்டும் கோதுமையை உண்ணில்
நலிவெய்தி உயிர்வாடி இடறுதல் திண்ணம்
பலபேர்கள் தேர்ந்தாலும் குடியரசு வாழ்வில்
அலைபோன்றே துயரங்கள்! ஏன் இந்தத் தாழ்வு?

இழைகின்ற நல்லுறவால் பெறுகின்ற செல்வன்
எழில்அன்னை அணைப்பாள்அங் கன்புமிக வெல்லும்
மழைவெள்ளம் போல்வந்து மேநாட்டார் கேட்பீர்;
அழிந்தேநம் தென்னவரால் எடுத்தார்கள் ஓட்டம்!
வழிவழியாய்த் தோற்பதிலே வீரர்அவர் தெம்பால்
அழகுடனே விடுதலைநாம் பெற்றிட்டோம் என்றால்
எழிலோடு நலம்கூடும் குடியரசு நாட்டில்
பழியாகும் இவைஎழுத இடமுண்டோ ஏட்டில்?

தஞ்சை மாவட்ட மாநாட்டுத் தீர்மானங்கள்

இந்தியத் துணைக்கண்டம், அந்நிய ஆதிக்கப் பிடிப்பிலிருந்து விடுபட வேண்டும் என்பதற்காக மகத்தான பணிபுரிந்தவரும், குறிப்பாக எல்லைப்புற மக்களின் உரிமைப் பிரச்சினைகளுக்காக அரும் பணியாற்றியவருமான டாக்டர் கான்சாகிப் அவர்கள், முரடன் ஒருவனால் படுகொலைக்கு ஆளாக்கப்பட்டதை அறிந்து இம்மாநாடு மிகவும் வருந்துவதுடன், அவரது பிரிவுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

*

இந்தியா, பல்வேறு மொழி—கலாச்சாரம் இன வேறுபாடுகளைக் கொண்ட ஒரு துணைக் கண்டம் என்பதைப் பலமுறை ஆதாரபூர்வமாக எடுத்துக் காட்டியிருப்பினும், அந்த உயரிய எண்ணத்தை மதித்து நடக்கும் மனவளமற்ற இந்திய அரசியலார், இந்தி மொழியைப் பொது மொழி என்ற பேரால் பிற மாநிலங்களின்மீது—குறிப்பாகத் தமிழகத்தின்மீது நேரிடையாகவும் மறைமுகமாகவும் திணிப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், இந்தி மொழி ஆதிக்கத்திற்குத் தென்னகம் என்றைக்கும் அடிமைப்பட்டிருக்காது என்பதை இம்மாநாடு, இந்தியப் பேரரசுக்கு எச்சரிக்கை செய்து தெரிவித்துக்கொள்கிறது.

*

ஐந்தாண்டுத் திட்டத்தில் பல அலங்கோல நிலைமைகள் ஏற்பட்டு, ஏற்பட்ட தவறுகளையும் செய்யப்பட்ட மோசங்களையும் மறைக்கும் விதத்தில் திட்டத்தைத் திருத்துதல், திட்டத்தைக் குறைத்தல், அடிப்படைத் திட்டத்தை நிறைவேற்றுதல் எனப் பல பெயர்களால் முதலீடுகளைக் குறைக்கும்பொழுது, முதலிலேயே தொழில் துறையில் தாழ்ந்துள்ள தென்னகத்துக்காக உள்ள சில பல திட்டங்களை, இந்தக் காரணங்களைக் காட்டி, டெல்லி அரசாங்கம் கைவிடும் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால், தென்னகத்தின் உரிமைகளை விட்டுக் கொடுக்காத வகையில் பணியாற்றுமாறு அரசாங்கங்களையும், தென்னகத்திலிருந்து சென்றிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் இம்மாநாடு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

*

அடுத்த குடிமதிப்புக் கணக்கு (Census) எடுக்கும்போது சாதிப் பெயர்களை இணைப்பதில்லை என்று அரசியலார் திட்டமிட்டிருப்பதை இம்மாநாடு வரவேற்பதுடன், சாதிப் பெயர்களைப் பொது இடங்கள், தெருக்கள், விடுதிகள் வணிகக் கூடங்கள் ஆகியவற்றிலிருந்து நீக்குவதன் மூலம் சாதி உணர்ச்சியை நீக்க வேண்டுமென்றும், அதற்கேற்ற சட்டம் இயற்றவேண்டுமென்றும் இம்மாநாடு அரசியலாரை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

*

ஒரு ஆசிரியருக்குச் சராசரி முப்பத்தைந்து மாணவர்கள் என்று அரசாங்கம் பிறப்பித்திருக்கும் புதிய உத்தரவை மாற்றி முன்புபோலவே ஒரு ஆசிரியருக்கு இருபது மாணவர்கள் என்று உத்தரவிடுமாறு இம்மாநாடு அரசியலாரை வற்புறுத்துகிறது.

*

சீர்காழி வட்டம், வைத்தீஸ்வரன் கோயில், வைத்தியநாதசாமி பேரால் பட்டாவும், சீர்காழி சட்டநாதசாமி பேரால் பட்டாவும் உள்ள தர்மபுரம் ஆதினத்துக்குச் சொந்தமான நஞ்சை—புஞ்சை நிலங்களைச் சாசுவதப் பகுதி பாத்தியத்தின்கீழ், அதாவது நிலங்களை அனுபவிப்பவர்கள், சர்க்கார் தீர்வை செலுத்திக்கொண்டு, மேற்படி சொத்துக்களைப் 'பாராதீனங்கள்' செய்யும் பாத்தியத்துடன் அனுபவித்து வருபவர்களுக்கே மேற்படி நிலங்களைப் பட்டா செய்யும்படி இம்மாநாடு அரசியலாரை வற்புறுத்துகிறது.

*

தேசிய மயமாக்கப்பட்ட இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷனில் வேலை செய்து வருகிற ஊழியர்கள், குறிப்பாக இன்ஸ்பெக்டர்கள் இவர்களுடைய கோரிக்கைகளை உடன் கவனித்து ஆவன செய்ய இம்மாநாடு இந்திய அரசியலாரை வற்புறுத்துகிறது.

*

சென்னை மாவட்ட நகரசபைகளின் சட்டம் 1920-ல் இயற்றப்பட்டிருந்தும் நாளது தேதிவரை மாற்றப்படாமலேயே இருந்து வருகிறது. எனவே, நகரசபைகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கும் இரத்தின சபாபதி குழுவின் சிபாரிசுகளை செயல் முறைக்குக் கொண்டுவர அரசினரை இம்மாநாடு கேட்டுக்கொள்வதுடன்; நகரசபைகளின் ஆயுட்காலம் இப்பொழுது உள்ளது போலவே, மூன்றாண்டுகள் போதும் என்றும், ஐந்தாண்டுகள் தேவையில்லை என்றும் இம்மாநாடு கருதுகிறது.

*

கைத்தறி விற்பனைகளுக்குத் தற்போது தரப்பட்டு வரும், ரூபாய்க்கு 12 காசு என்ற தள்ளுபடியை தற்காலிகமாயிருப்பதற்குப் பதிலாகத் தொடர்ந்து தருமாறும், கைத்தறித் தொழிலுக்கு நிரந்தரமான பாதுகாப்புக் கிடைக்கும்விதத்தில், கரைபோட்ட வேட்டி, சேலைகளைக் கைத்தறிக்கென்று ஒதுக்கும்படியும், அரசாங்க நிர்வாகத்தில் வாங்கித் தரப்படும் உடை வகைகளுக்குக் கைத்தறியைப் பயன்படுத்தும்படியும் இம்மாநாடு அரசியலாரை வற்புறுத்துகிறது.

*

தஞ்சை மாவட்டத்தின் பல சிற்றூர்களில், மருத்துவ நிலையங்கள் இல்லாமலிருக்கும் குறையைப் போக்கவும், மருத்துவ நிலையங்கள் இருக்கும் சில இடங்களில் சரியான டாக்டர்கள் இல்லாத குறையை நீக்கவும், கொசு, மலேரியா, யானைக்கால் முதலிய தொந்தரவுகள் இருக்கும் இடங்களில் அதிகப்படி மருத்துவப் பாதுகாப்புகளைத் தருவதற்கும் அரசியலார் தக்க முயற்சியை எடுக்கவேண்டுமென இம்மாநாடு வற்புறுத்துகிறது.

★

அந்தோ!

நமது உற்ற நண்பரும் "சண்டே அப்சர்வர்" ஆசிரியருமான பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் 22—5—58 - காலை இயற்கை எய்திவிட்டார் என்ற திடுக்கிடும் செய்தி, பத்திரிகை அச்சுப் பொறியில் ஏறும் கடைசி நேரத்தில் கிடைத்து எம்மை எல்லாம் மீளாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டது.

பணமே, உயிர்!

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [25—5—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 4

அரசியல் கட்சிகளுக்கு, வியாபார வேந்தர்களும், பணதிபதிகளும் "நன்கொடை" நல்குவதைத் தடை செய்ய வேண்டும் என்று பார்லிமெண்டில் கொண்டு வரப்பட்ட மசோதா, எதிர்பார்த்ததுபோல நிராகரிக்கப்பட்டுவிட்டது! இதனை ஏற்றுத் தனது மாசுமருவற்ற தன்மையை காங்கிரஸ் அரசு காட்டிக்கொண்டிருக்கலாம் — எனினும் விரும்பவில்லை. பருக்வா எனும் தனிப்பட்ட உறுப்பினர் கொண்டுவந்த இம்மசோதா வீசியெறியப்பட்டுவிட்டது!!

"ஆளும் கட்சிக்கு அடிக்கடி பண உதவிகள் அளிப்பதென்பது மிக மிக ஆபத்தானது. நிர்வாகத்தைச் சீர்குலைக்கக் கூடியது. ஜனநாயகத்தை நாசமாகக்கூடியது" என்று கல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதி முகர்ஜி என்பார் இதுபற்றித் தீர்ப்பு வழங்கியிருந்தார். பம்பாய் உயர் நீதிமன்றமும் இப்படியே கருத்து வழங்கியிருந்தது. ஆனால் பார்லிமெண்டில் பதிலளித்த அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி என்பார், "இப்படி நன்கொடைகள் பெறுவதால் என்ன தவறு?" என்று கேட்கிறார்! அன்போடு அளிக்கிறார்கள் பிரபுக்கள்—நிபந்தனையெதுவுமின்றித் தருகிறார்கள்—பணத்தை வாங்கிக்கொண்டு அதற்காகப் பாதையை மறந்துவிடும் குணம் கொண்டது அல்ல காங்கிரஸ் — நன்கொடை பெறுகிறோமேயொழிய அதற்காக எங்களை விற்றுவிடவில்லை—என்று விளக்கமளித்திருக்கிறார்!!

இன்றைய காங்கிரசுக்கு, டாடாக்களும் பிர்லாக்களும் இலட்சம் இலட்சமாகக் கொட்டிக் கொடுக்கிறார்கள் என்பதும், அதைக் காங்கிரஸ் மறுக்காமல் வாங்கிக்கொள்கிறது என்பதும் உண்மைதான், என்று தெளிவாக விளங்கிவிட்டது! அமைச்சரும், வெட்கமின்றி ஒப்புக்கொண்டதோடு 'தவறென்ன' என்று தைரியமாகவும் கேட்கிறார்!!

ஆளும் கட்சி, காங்கிரஸ். அதனால்தான் வியாபார வேந்தர்கள், கொட்டிக்கொடுக்க முன்வருகிறார்கள். காங்கிரசும் அப்பணத்தை வாங்கி, அஞ்சாமல் செலவிட்டு, தேர்தலில் வெற்றிக்கொடி பறக்கவிடுகிறது! ஏனைய கட்சிகளோ, மக்களையும் அவர்தம் நம்பிக்கையையுமே மூலதனமாகக்கொண்டு தேர்தல் களத்தைக் கடக்கமுனைகிறது!!

"நாங்கள் என்ன கொள்கையையா விட்டுவிடுவோம்?" என்கிறார் லால்பகதூர். இலாபமில்லாத விஷயத்தில் பணத்தைக் கொட்ட பிரபுக்கள் ஒன்றும் தெளிவற்றவர்களல்ல!

ரூபாய் 400-கோடிக்குமேல், ஒவ்வோராண்டும், வருமான வரி கொடுக்காமல் ஏமாற்றுகிறார்கள்— என்று பேராசிரியர் கல்டார், கணக்கெடுத்திருக்கிறார்! லால்பகதூரோ, நாங்கள் என்ன ஏமாந்தாவிடுவோம் என்று மார்தட்டுகிறார்!!

பாவைக்குப் பணம் தரும் பிரபு, பழக்கமிலாக் குழந்தைக்கு மிட்டாய் தரும் கள்ளன், கனிமரத்தில் கவண் எறியும் வழிப்போக்கன், இவர்கள் எவரும் 'நோக்கம்' இன்றி எதுவும் செய்யார்—இலாபம் இன்றி இந்த வேலைகளில் இறங்கார்.

டாக்டர். வி. கே. ஆர். வி. ராவ், என்பார், சிறந்த பொருளாதாரப் பேராசிரியர். அவர் அண்மையில் டில்லியிலுள்ள கோகலே பொருளாதார அரசியல் கழகத்தில், நம்நாட்டு வரியமைப்பைப்பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார், "முதல் ஐந்தாண்டுத் திட்டத்துக்காக 473-கோடி ரூபாய் வரி உயர்வு மூலம் கிடைத்திருக்கிறது. இவ்வளவு ரூபாயில், கம்பெனிகளும், சீமான்களும் எவ்வளவு செலுத்தியிருக்கிறார்கள் என்றால், வெறும் மூன்றுகோடி ரூபாய்தான்! சுங்கமூலம் 122-கோடியும், துணி—தீப்பெட்டி—மண்ணெண்ணெய்—சர்க்கரை போன்ற மக்கள் உபயோகிக்கும் பொருள்களுக்குப் போட்ட கலால் வரி மூலம் 180-கோடியும், நிலவரிமூலம் 65-கோடியும், விற்பனை வரி போன்றவைகள் மூலம் 93-கோடியும், ஸ்டாம்பு வரி மூலம் 6-கோடியும் கிடைத்திருக்கிறது" என்பதாக.

யார் அதிக வரி கட்டியிருக்கிறார்கள், பார்த்தீர்களா! சீமான்கள் பக்கம் வரி அதிகமில்லை—முன்பே 400 கோடிக்கு மேல் வருமானவரி கட்டாதவர்கள் இவர்கள் — இப்போதும், வரி கட்டாத சலுகை கிடைக்கிறது இவர்களுக்கு. ஏழையும் இல்லாதவனும், வரிச்சுமையைத் தாங்கியிருக்கிறான். தான் வாங்கும் ஒவ்வொரு பொருள் மூலமும் ரூ 470 கோடி வரி கட்டியிருக்கிறான்.

இப்படி ஆட்சியின் போக்கு இருந்தால் பிரபுக்களுக்கு ஏன் தாராள மனம் வராது! தங்களுக்கு 'இலைமறை காயாக' உதவி செய்யும் காங்கிரஸ் கட்சிக்கும், தேர்தல் செலவுக்கும், ஏன் அள்ளிக் கொடுக்க மாட்டார்கள்?

ஒருவருக்கொருவர் இப்படி மறைமுகமாக உதவி செய்து கொள்கிறார்கள்--இதற்குப் பலியாவது, நாம். —நாட்டு மக்கள்!!

மசோதாவைக் கொண்டுவந்த பருக்வா, ஜனநாயகத்தை நாம் சாகடிக்கக்கூடாது என்று வலியுறுத்தினார், பார்லிமெண்டில். ஜனநாயகம் பற்றிப் பேசும் காங்கிரசோ, இதை மறுத்துவிட்டது! தன்னை, யாரென்று உலகுக்கு முன் உணர்த்திக் கொண்டுவிட்டது!!

★

சிரிப்பு

அன்பு

"சிரிப்பே மனிதனை மற்ற உயிரினங்களின்றும் வேறு படுத்திக் காட்டுகிறது" என்று ஆங்கில எழுத்தாளர் அடிசன் கூறுகிறார். நாம் தினந்தோறும் ஒரு முறையாவது சிரிக்கிறோம். அவ்வாறு சிரிக்காமல் இருக்கும் நாட்களெல்லாம் வாழ்க்கையிலேயே அதிகமாக வீணாக்கிய நாளாகும் என்று மற்றொரு அறிஞரான ஷாம்பர்ட் என்பார் கூறுகிறார்.

இப்படி வாழ்க்கையில் அதிக முக்கியத்துவம் பெற்றது சிரிப்பு. ஒரு பொருளைச் சுவைக்கத் தெரிய வேண்டும்; அதுபோலச் சிரிப்பையும் சுவைக்கத் தெரியவேண்டும். சிரிப்புக்கும் நகைச்சுவை என்ற மற்றொரு சொல் உண்டல்லவா! சிரிப்பு ஒரு கலை. சிரிப்பை உண்டாக்கவும் தெரியவேண்டும்; பொருளுக்கேற்றாற்போல் தக்க இடத்தில் தகுந்த அளவு சிரிக்கவும் தெரியவேண்டும். இவ்விரு பெரும் திறனையும் உடையவர்களைத்தான் நகைச்சுவை மன்னர்கள் என்று சொல்லுகிறோம்.

சிரிப்பிலே பலவகை உண்டு. அதிகாரச் சிரிப்பு, ஆணவச் சிரிப்பு, கேலிச் சிரிப்பு, அடிமைச் சிரிப்பு, புன்சிரிப்பு, சங்கிதச் சிரிப்பு, சாகசச் சிரிப்பு என்ற பல்வேறு வகைகளையும் சிரித்துக் காட்டி நம்மைச் சிரிக்கவைத்தார் தமிழகத்தின் கலைவாணர். அவர் நம்மை சிரிக்க வைத்ததால் ஏற்பட்ட இன்பவலி இன்னும் நம்மை விட்டு நீங்கா முன்னரே அவர் நம்மினின்றும் பிரிந்துவிட்டார்.

சிலர் எந்த நேரமும் எந்த ஒரு சிறிய காரணத்திற்காகவும் இடைவிடாது சிரிப்பர். இவர்களைத் தான் "இளிச்சவாயர்கள்" (இச்சொல்லுக்கு வேறு பொருளும் வழக்கில் உண்டு) என்று உலகம் கூறுகிறது. சிலர் எப்படிப்பட்ட நகைச்சுவை பயக்கும் நிகழ்ச்சிக்கும் ஒரு சிறிதுகூடச் சிரிக்கமாட்டார்கள். இத்தகையவர்களுக்கும் "அழுமூஞ்சி" என்ற பட்டம் வழங்கப்படுகிறது!

சிரிப்பை உண்டாக்கும் திறன் படைத்தவர்கள் கூடுமானவரையில் அதிகமாகச் சிரிக்காமலிருக்க வேண்டும், அப்போதுதான் நகைச்சுவையின் பயன் சிரிப்போரிடத்தில் அதிகமாகக் காணப்படும். இவ்வாறு சிலர் நல்ல நகைச்சுவையின் மூலம் பிறரைச் சிரிக்க வைத்துவிட்டு, தான் மட்டும் நகைக்காமல் அமைதியாக இருப்பர். அவ்வாறு அவர் அமைதியாக இருப்பதைப் பார்த்துச் சிரிப்பவர்கள் இன்னும் அதிகமாகச் சிரிப்பார்கள். சிலருக்கு இத்திறன் இயற்கையாக அமையாத காரணத்தால், நகைச்சுவையைப் பிறப்பிக்கும்போது, அதைக் கண்டோ கேட்டோ மற்றவர்கள் சிரிப்பதற்குப் பதிலாக, தன் நகைச்சுவையின்மீது தானே சொந்தம் பாராட்டிப் பலத்த சிரிப்பிலாழ்வர்! இதனால் மற்றவர்கள் இவர் சிரிப்பதைப் பார்த்து இரக்க உணர்ச்சி கொள்வார்களே அல்லாமல் சிரிக்கமாட்டார்கள்!

'சான்றோரிடம் புன்னகையைக் காணலாம், சிரிப்பைக் கேட்க முடியாது' என்று செஸ்டர்ஃபீல்டு என்ற ஆங்கில எழுத்தாளர் அறிஞரின் சிரிப்பைப் பற்றிக் கூறுகிறார்.

சிரிப்பினால் நாம் அடையும் பலன் என்ன? இன்பம் வந்தபோது சிரிக்கிறோம்; ஆனால் துன்பத்திலிருக்கும்போதும் சிரிப்பதனால் ஓரளவு துன்பத்தை மறக்கிறோம். சிரிப்பு நோயைப் போக்கும் மருந்து என்றுகூடச் சொல்லுகிறார்கள். ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது சிரித்தால் அது டாக்டர்கள் நம்மிடம் வருவதைத் தடுக்கிறது என்பது ஒரு ஆங்கிலப் பழமொழி. வள்ளுவரும் இடுக்கண் வருங்கால் நகுக என்று கூறுகிறார். 'உன் நோக்கத்தை வாளால் சாதித்துக் கொள்ளுவதைவிட நகைமுகத்தால் சாதித்துக் கொள்ளுதலே சாலச் சிறந்ததாகும்' என்று கூறுகிறார் ஷேக்ஸ்பியர்.

இப்படி அறிவாளிகள் ஒவ்வொருவரும் தங்கள் எண்ணத்தைத் தந்திருக்கும் சிரிப்பில் எந்தவித ஆபத்தும் இல்லையென்றுதான் பெரும்பாலானவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அது தவறு, உலகில் பலர் சிரிப்பினால் சொல்லொணாத் துன்பத்தையும், சிலர் உயிரையும் இழந்திருக்கின்றனர்.

பல செல்வந்தர்கள் தாங்கள் நன்றாகச் சிரித்து மகிழ வேண்டுமென்பதற்காக அதிகப் பணம் கொடுத்து நகைச்சுவை உண்டாக்கும் திறன் படைத்தவர்களை அமர்த்திக் கொண்டிருக்கிறார்கள். இதேபோல் பலர் தாங்கள் இடைவிடாச் சிரிப்பினின்றும் விடுபடுவதற்காகவே ஏராளமான பணம் செலவழித்திருக்கின்றார்கள்!

அமெரிக்க கப்பல்படையைச் சேர்ந்த Bob Mitchison என்பவர் தன் சிரிப்பினால் வேலையையே இழந்திருக்கிறார்! இவருக்கு முதன் முதல் சிரிப்பு வந்ததே ஒரு வேடிக்கையான கதை. ஏதோ ஒரு பத்திரிகையில் வந்த கேலிச் சித்திரத்தைப் பார்த்துச் சிரிக்க ஆரம்பித்த இவர், தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் சிரித்திருக்கிறார்! ஒரு நாளில் இரண்டு அல்லது மூன்று மணி நேரம்கூட அவரால் சிரிக்காமலிருக்க முடியவில்லை! இதனால் அவரை வேலையிலிருந்தே நீக்கி விட்டார்கள். வேலையை இழந்தும் அவரால் சிரிப்பை அடக்க முடியவில்லை! சரியாகச் சாப்பிடக்கூட முடியாமல் சிரித்துக்கொண்டேயிருந்தார்! ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் எழுதிக்காட்டித்தான் தெரிவித்தார். தூங்கும்போதுகூட அவரால் சிரிப்பை நிறுத்த முடியவில்லை. மருந்து முதலிய சிகிச்சைகளால்கூட அவரது சிரிப்பை நீக்கமுடியவில்லை. கடைசியில் அவரது வாழ்க்கை வேறு வகையில் திரும்பியது! சினிமாவுக்கோ நாடகத்துக்கோ சிரிக்கவேண்டிய கட்டங்கள் இருந்தால், அவரது குரலை வேண்டிய அளவு பதிவு செய்ய ஆரம்பித்தார்கள்! எங்கேனும் பொழுதுபோக்கு விருந்துக்

(15-ம் பக்கம் பார்க்க)

வரலாற்று நாடகம்:

வெறி!

—பழநி—

மாவீரன் நெப்போலியன் இங்கிலாந்தைத் தனதாக்கிக் கொள்ளும் எண்ணத்துடன், இங்கிலாந்தின் தென்கோடிக்கு வெகு அருகாமையிலுள்ள பிரெஞ்சுக் கடற்றுறையான பௌலோனில் பெரும் படையுடன் உறையுள் அமைத்துக்கொண்டு தங்கியிருந்த சமயம்.

அதே இடத்தில் கடற்கரையையொட்டியுள்ள வனாந்திரப் பகுதியில் பித்தம் பிடித்தாற்போல் தோற்றமளிக்கும் ஒருவன், மரத் துண்டுகளையும், மூங்கில்களையும், பசுங் கொடிகளால் பிணைத்தபடி உட்கார்ந்திருக்கிறான். வினாடிக்கொருமுறை வானத்தை அண்ணாந்து பார்த்துத் தனக்குள்ளாகவே ஏதேதோ பேசிக்கொள்கிறான்.

அவன் :- (வானத்தில் வரிசையாகப் பறந்து செல்லும் கடற்பறவைகளை நோக்கி) பொல்லாத பறவைகளே! உங்களுக்கு அழகான இறக்கைகள் இரண்டு இருக்கின்றன; நினைத்த நேரத்தில் நீங்கள் டோவருக்குச் சென்றுவிட முடியும்; இடையிலே படுத்தபடி குமுறிக் கொண்டிருக்கும் கடலைக் கண்டு நீங்கள் தயங்கத் தேவையில்லை. "மலை மலையாய் அலைகளை எழுப்பி, வெடித்து நுரை கக்கும் கடலே, எங்களை என்ன செய்துவிட முடியும் உன்னால்?" என்று அலட்சியமாக வினவியவாறே நீங்கள் டோவருக்குச் சென்றுவிடுவீர்கள்; ஆனால், என்னால் அது எப்படிச் சாத்தியமாகும்? நான் மனிதன். நினைத்த நேரத்தில் பறந்து செல்ல எனக்கு இறக்கைகள் இல்லை; எண்ணியவுடனே விண்ணில் மிதந்து செல்ல என்னால் இயலாது; இறக்கைகள் எனக்கு இல்லைத்தான்—ஆனால், பொல்லாத பறவைகளே, வலுவான கரங்கள் எனக்கு இருக்கின்றன; நெஞ்சுரம் எனக்கு நிரம்ப இருக்கிறது. தன்னம்பிக்கையினை நான் இழந்துவிடவில்லை! எப்படியும் நான் டோவருக்குச் சென்றே தீருவேன். அன்னை நாட்டை அடையாமலிருந்து விடமாட்டேன்; மரச் சுள்ளிகளையும், மூங்கில் துண்டுகளையும், கரையோரத்து மணலில் புதைந்து கிடக்கும் உடைந்த மரக்கலங்களின் துணுக்குகளையும், வளர்ந்தோங்கி நிற்கும் மரங்களைத் தழுவிப் படர்ந்திருக்கும் கொடிகளாற் பிணைத்துச் சிறு படகாக்குவேன்; கொந்தளிக்கும் கடலை அதன் துணை கொண்டு கடப்பேன்; விரைவில் டோவரை அடைவேன்—ஆங்கில மண்ணை முத்தமிடுவேன். இன்னும் பதினைந்தே நாட்கள்—இன்னும் பதினைந்து நாட்களுக்குத்தான் நான் கைதி; அதன் பிறகு நானும் உங்களைப் போல் ஒரு விடுதலைப் பறவை!

மலர் மன்னன்

[அரைகுறைப் படகாகக் காட்சியளிக்கும் அந்த மரத் துண்டுகளின் இணைப்பை ஓர் புதருக்குள் மறைத்து வைத்து விட்டு அவன் எங்கோ சென்று மறைகிறான்.]

* * *

[நெப்போலியனது உறையுள்; நெப்போலியன் எப்போதும் போலவே தன் இரு கரங்களையும் தனது அகன்ற மார்பில் பொருத்தியவாறு சிந்தித்தபடி நிற்கிறான். யாரோ உள்ளே வரும் அரவம் கேட்கின்றது.]

நெப்போலியன்:- யார் அங்கே?

குரல்:- (உறையுளின், வெளிப்புறத்திலிருந்து) வந்திருப்பது "மலர்", மன்னா!

நெப்:- ஓ, ஒற்றர் படையின் "மலர்" பிரிவைச் சேர்ந்தவனா? உள்ளே வா.

[மலர்ச் சின்னம் பொறித்த தொப்பியினை அணிந்த ஒருவன் உள்ளே வந்து வணங்குகின்றான்.]

நெப்:- (ஆவலுடன்) புதிதாக என்ன செய்தி? எதைப் பற்றியது? இங்கிலாந்தின் தென் கோடியினது நிலைமைப் பற்றி ஏதேனும் அறிந்து வந்திருக்கிறாயா?

ஒற்றன் :- இல்லை, மன்னா; இது முற்றிலும் புதிய செய்தி...

நெப்:- எதைப் பற்றியது?

ஒற்றன்:- நமக்கும் ஆங்கிலக் கடற்படைக்கும் அண்மையில் போர் நிகழ்ந்ததல்லவா? அவ்வமயம் கைதான ஆங்கிலக் கடற்படை வீரர்களில் ஒருவனை மட்டும் விலங்கு பூட்டிச் சிறையினுள் தள்ளாமல் சுதந்திரமாகச் சுற்றியலையத் தாங்கள் அவனுக்கு அனுமதி யளித்துவிட்டீர்கள்...

நெப்:- காரணம்...? போருக்கான திட்டங்களைத் தீட்டுவதிலேயே

கவனத்தைச் செலுத்தியிருப்பதால் எனக்குப் போரைத் தவிர வேறெதுவும் நினைவில் தங்குவதில்லை...

ஒற்றன்:- உயிரைத் துச்சமெனக் கருதி அவன் தங்களுக்கெதிரில் போர் புரிந்தமையால், தாங்கள் அவனது வீரநெஞ்சத்தைப் பாராட்டி, அதற்காக அளித்த சலுகைதான், அது வேந்தே...

நெப் :- சரி; செய்தியைச் சொல்; அதற்கென்ன இப்போது?

ஒற்றன்:- தன் தாயகத்திற்குத் தப்பியோடிவிட அவன் ஏற்பாடு செய்து வருகிருன் மன்னு...

நெப்:- (வியப்புடன்) தன்னந்தனியனுயிருக்கும் அவனுல் இடையிலிருக்கும் கடலைக் கடப்பது எப்படிச் சாத்தியமாகும்?

ஒற்றன்:- இடையிலிருக்கும் கடலைக் கடந்து செல்லக் கடலோரத்துப் மணற்பரப்பில் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் புதைந்துகிடக்கும் மரக்கலத் துண்டுகளையும், மூங்கில்களையும், செடி கொடிகளாற் பிணைத்துப் படகு ஒன்று உருவாக்கி வருகிருன் அரசே...

நெப்:- (பெரிதும் வியந்து) என்ன! சீறிப்பாயும் நாகங்களென அலைகள் உலவும் கடலில்—சுரு மீன்களும் திமிங்கிலமும் சுற்றியலையும் நீர்ப்பரப்பில் — கொடிகளாற் பிணைத்த மரத்துண்டுகளைச் செலுத்திக்கொண்டு அக்கரை சேர்ந்துவிட முடியுமென்று அவன் நினைக்கிருன்?

ஒற்றன்:- வியப்பான செய்திதான் வேந்தே; இன்னும் பதினைந்து நாட்களுக்குள் படகை உருவாக்கிக் கடலைக் கடந்து தாயகம் சேர்ந்துவிடுவானும். நேற்றுக் காலையில் வானத்தை அண்ணுந்து பார்த்தவாறு கடற்பறவைகளிடம் அவன் மனம் விட்டுப் பேசிக்கொண்டிருக்கையில் தற்செயலாய் அந்த வழியாகச் சென்றேன்; அவனது உரையாடலின் வாயிலாகக் கிடைத்த செய்திதான் இப்போது நான் தங்களிடம் கூறியது...

நெப்;- என்னுல் நம்பவே முடியவில்லை ஒற்றனே......எதற்கும் பதினைந்து நாட்கள் பொறுத்திருந்து பார்ப்போம்; குமுறும் கடலைக் கடந்து செல்லும் துணிவு இறுதிவரையில் அவனுக்கு இருக்கிறதா என்பதை நாம் காண வேண்டும்; இப்போது நாம் அவனுக்கு எவ்வித இடையூறும் தரவேண்டாம்; பதினைந்து நாட்கள் கழிந்த பிறகு அவன் தான் உருவாக்கிய உடைசல் படகில் கடலைக் கடக்க முயல்வானுகில் அச்சமயம் அவனைக் கைது செய்து என்முன் கொண்டுவர ஏற்பாடு செய்!

ஒற்றன்:- சித்தம் மன்னவா, நான் சென்றுவர அனுமதி தாருங்கள்...

நெப்:- நல்லது; நீ கூறிய செய்தி என்னை வெகுவாகச் சிந்திக்கச் செய்துவிட்டது; செல்லும்போது எனது ஆலோசனையாளரிடம் நான் அவரை அழைத்ததாகக் கூறு...

[ஒற்றன் அதற்கு ஒப்புதல் தெரிவித்துவிட்டுச் செல்கிருன். சற்று நேரத்திற்கெல்லாம் நெப்போலியனின் ஆலோசனையாளர் அங்கு வருகிருர்.]

நெப்:- வாருங்கள்......சற்று முன் எனக்கு வந்த தகவலொன்று என்னைப் பெரிதும் வியப்பிலாழ்த்திவிட்டது...அதுபற்றிப் பேசத்தான் தங்களை அழைத்தேன்...

ஆலோசனையாளர்:- தங்களை வியப்பிலாழ்த்திய அந்தத் தகவலை அறிந்துகொள்ளப் பெரிதும் ஆவலாக இருக்கிறது அரசே!

நெப்:- சுதந்திரமாகச் சுற்றித் திரிய என்னுல் அனுமதிக்கப்பட்ட ஆங்கிலக் கைதி ஒருவன் இப்போது தன் தாயகத்திற்குத் தப்பி ஒடுவதற்கான முயற்சியிலீடுபட்டிருக்கிருனும்!

ஆலோ:- தப்பி ஓடுவதா? இக்கரையில் அலையும் அவன், அக்கரைக்கு எப்படித் தப்பியோட முடியும்?

நெப்:- சுள்ளிகளையும் மரத்துண்டுகளையும் செடி கொடிகளாற் பிணைத்து, கடலைக் கடப்பதற்கான படகை உருவாக்குகிருனும், அவன்!

ஆலோ:- (பெரிதாக நகைத்து) குமுறிப் பொங்கும் கடலை, செடி கொடிகளால் பிணைக்கப்பட்ட மரத்துண்டுகளின் துணையுடன் கடப்பதா? வேந்தே இது விபரீதமுடிவு! ஆழ்கடலைத் தாண்ட சுள்ளிகளைப் படகாக்குபவன் நிச்சயமாக அறிவிலியாகத்தானிருக்கவேண்டும்!

நெப்:- அவசரப்பட்டு முடிவு எடுத்துவிடாதீர்கள், பயங்கரமான கடலை, எந்தச் சமயத்திலும் சிதறி மூழ்கிவிடக்கூடிய படகின் துணையால் தன்னந்தனியனுக ஒருவன் கடக்க முடிவெடுத்திருப்பின், அம்முடிவுக்கு அவனைக்கொணர்ந்திருப்பது ஏதோ ஒருவிதமான வெறி உணர்வாகத்தான் இருக்க வேண்டும், இல்லையா?

ஆலோ:- உண்மைதான், மன்னு; 'வெறி' தான்ஒருவனை அசட்டுத்தனமான துணிவிற்கு ஆளாக்கும்; மனிதனைப் பித்தனுக்கி, எத்தகைய துணிகரச் செயலையும் புரியத் தூண்டக் கூடிய வெறி, காதல் வெறிதான் வேந்தே; காதல் வெறிதான் அந்தக் கைதியையும் பயங்கரப் படகில் கடலைக் கடக்கத் தூண்டியிருக்கும்!

மேதாவியோடு அனுசரித்து வாழ்வது என்பது சாதாரணமாகப் பெண்ணுக்கு மிகவும் கடினம். மேதாவியின் உணர்ச்சியும், பெண்ணின் உணர்ச்சியும் இரு துருவங்கள் போன்றவை. மனைவியின் சாதாரண உணர்ச்சியோடு மேதாவியின் உயரிய உணர்ச்சி மோதும்போது மேதாவிக்கு மூளைக் குழப்பமும், பெண்ணுக்கு உணர்ச்சித் திகைப்பும் ஏற்படும்.

நெப்:- நீங்கள் நினைப்பது சரியாகத்தானிருக்கும்...

ஆலோ:- இங்கிலாந்தில் அவனது உள்ளத்தைக் கொள்ளை கொண்டவள் வாழ்ந்து கொண்டிருப்பாள்; இங்கே-பௌலான் வனந்திர வெளியில்- இவன் தன்னந்தனியனுக விரகதாபத்துடன் அலைந்து கொண்டிருக்கிருன்; இறுதியில், பிரிவு நோயின் வேதனையைத் தாங்கமாட்டாமல் எப்படியாவது இங்கிலாந்துக்கு ஓடிவிட நிச்சயித்து, இந்த விபரீத முடிவுக்கு வந்துவிட்டிருக்கிருன்; காதல் வெறி தலைக்கேறியமையால் பயங்கரப் பயணத்தை மேற்கொள்ள அவன் தயங்கவில்லை!

நெப்:- அப்படித்தானிருக்கும் ஆலோசகரே! காதலைத் தவிர வேறெதற்கும் இத்தனை ஆற்றல் இல்லை! காதல்தான் அவன் கண்களை மூடிவிட்டது. கட்டைச் சிறு குட்டையாக அவனுக்குத் தோற்றுவித்து விட்டது!

ஆலோ:- சிக்கலான போர்த் திட்டங்களைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் தங்களையே தன்பக்கம் ஈர்த்துவிட்ட இந்தத் தகவல், ஐயத்திற்கிடமின்றி வியப்பான தகவல்தான் வேந்தே!

[நெப்போலியன், போர்த் திட்டங்களை மறந்து புதிய தகவலைப் பற்றிய சிந்தனையில் மூழ்கிய தனது மனப்போக்கை எண்ணி வெட்கத்துடன் சிரிக்கிருன்; பின் மீண்டும் பழைய — போரைப் பற்றிய சிந்தனையில் மூழ்குகிருன்.]

*

[இருகிழமைகளுக்குப் பின் ஒருநாள் -நெப்போலியன் தன் உறையுளில் அமர்ந்திருக்கையில் சில வீரர்கள், தாயகத்திற்குத் தப்பியோட முயன்ற ஆங்கிலக் கைதியை அழைத்து வருகின்றனர். அவர்களில் ஒருவன், கைதி உருவாக்கிய படகையும் எடுத்து வந்திருக்கிருன்.

நெப்போலியன் கைதியைக் கண்டு தனக்குள்ளாகவே வியந்து கொள்கிருன்; பின் உள்ளத்து உணர்ச்சிகளை வெளியே காட்டாமல் பேசத்துவங்குகிருன்]

நெப்:- (போலிக்கண்டிப்புடன்) யார் இவன்? என்ன நடந்தது?

வீரருள் ஒருவன்:- நம்மால் ஏற்கனவே கைது செய்யப்பட்ட ஆங்கிலேயன்; இங்கிலாந்துக் கடற்படையில் பணியாற்றியவன்; போரிலே புரிந்த சாகசச் செயலுக்காகத் தங்களால் பௌலானில் சுதந்திரமாகச் சுற்றித்திரிய அனுமதிக்கப்பட்டவன்......

நெப்:- இப்போது இவனை இங்கழைத்து வந்ததன் காரணம்?

வீரன்:- தாயகத்திற்குத் தப்பியோட முயன்ருன், வேந்தே...

நெப்:- (இகழ்ச்சியுடன்) தப்பியோடுவதா? இதென்ன பிதற்றல்! இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையிலிருப்பது நிலப்பகுதியல்ல; பயங்கரமான நீர்ப்பரப்பு!

வீரன்:- உண்மைதான் வேந்தே; அந்த நீர்ப்பரப்பைக் கடக்க இதோ, இந்தப் படகின் துணையை நாடினுன்......

[நெப்போலியன் தன்னெதிரில் வைக்கப்பட்டுள்ள படகைப் பார்க்கிருன்; பின், பெரிதாக நகைக்கிருன்.]

நெப்:- இந்த விநோதப் படகை இவன் நாடியது தற்கொலை செய்துகொள்ளவா, அல்லது தப்பியோடவா?

கைதி:- தப்பியோடுவதற்குத்தான் வேந்தே...

நெப்:- இந்தப் படகில் தப்பிச் செல்ல முயன்றது உண்மையானுல், அதற்குக் காரணம் ஏதோ ஒரு வெறியாகத்தான் இருக்கவேண்டும்!

கைதி:- ஆம்; வெறிதான் வேந்தே......!

நெப்:. (ஏளனமாக) அதிலும் சிறப்பாகக் "காதல் வெறி"யாகத்தானிருக்கவேண்டும்! இங்கிலாந்து மண்ணில் எவளோ ஒருத்தி உன்வரவை எதிர்நோக்கிக் காத்திருக்கிருள் போலும்; காதல் போதையில் இடையில் கடல்கடப்பது பெரிதாகத் தோன்றவில்லை உனக்கு; சரிதானே எனது ஊகம்?

கைதி:- மன்னிக்கவேண்டும், மன்னு; தங்களது ஊகம் தப்பாகிவிட்டது; கடலில் பகைவரது எதிர்ப்பை எதிர்நோக்கிக் காத்திருப்பதிலேயே காலங்கழித்துவந்த எனக்கு காதலிக்க நேரமில்லாது போய்விட்டது...!

நெப்:- (சற்றே ஏமாற்றத்துடன்) அப்படியானுல் இந்த விசித்திரப் படகில் ஆழ்கடலைக் கடக்க உன்னைத் தூண்டியது எது?

கைதி:- ஏக்கம்தான் மன்னு; என் முதிய தாய் முகத்தை— என்னரும் தாயகத்தைக் காண வேண்டுமென்ற ஏக்கம்தான், வெறியாக மாறி என்னை இப்பயங்கரப் பயணத்தை மேற்கொள்ளத் தூண்டியது; "அடிமையாய் வாழ்வதைக் காட்டிலும், சுதந்திர மனிதனுக இறத்தலே சிறந்தது" என்ற எண்ணத்தை எனக்குத் தந்த என் அன்னை தள்ளாத பருவத்தினளாய்த் தாயகத்தில்

பிறருடைய ஆற்றலை, அதிலும் தனக்கு இல்லாத ஆற்றலைப் பிறர் பெற்றிருப்பதை, ஒப்புக்கொண்டு அதற்காகப் பாராட்டும் பண்பு: மிக மிக மேலானது. எனவே, மிகப் பெரும்பாலோரால் அந்த உயரிய பண்பின் வழி ஒழுக முடிவதில்லை.

*

வாழ்க்கையின் இரகசியம் நாம் நினைப்பதைச் செய்வதன்று ; நாம் செய்வதிலே விருப்பம் இருக்கும்படி அமைவதே.

வாழ்ந்து கொண்டிருக்கிருள்; அவள் !முகத்தையும், தாய்த் திரு நாட்டையும் காணும் ஆவலில், கொந்தளிக்கும் கடல் எனக்குச் சிறு குட்டையாகவே காட்சியளித்தது; மரத்துண்டுகளாலான சிறு படகு—ஒரு பெரும் அலை வந்து மோதினுலும் சுக்கு நூருகச் சிதறிப் போகும் படகு — பெரிய மரக்கலமாகத் தோன்றியது; நடுக்கடலில் வீசும் சுழற்காற்று மென்மைக் காற்ருகத் தோன்றியது; சுருவும், திமிங்கிலமும் கூட வண்ண மீன்களாகவே தென்பட்டன; எனவே வேந்தே, கைதியாய் வாழவிரும்பாமல், தப்பியோட முயன்றேன்; ஆனுல், திடீரெனக் கைதாக்கப் பட்டேன்!

[ஏமாற்றம் ததும்பும் விழிகளைக் கீழ் நோக்கிச் செலுத்துகிருன்]

நெப்:- அன்னையின்மீதும் தாயகமீதும் உனக்குள்ள பாசத்தை எண்ணிப் பார்க்கையில் என் நெஞ்சம் சிலிர்க்கிறது; 'கைதியாய் வாழ்வதைக் காட்டிலும் சுதந்திரத்தோடு சாவதேமேல்' என்ற கருத்து உன் இதயத்தில் ஆழப் பதிந்திருத்தலேயே இச் சம்பவம் உணர்த்துகின்றது; நெஞ்சுரமிக்க இளைஞனே, உன்னைக் கைதாக்கிவைத்திருக்க நான் விரும்பவில்லை; உனது நாட்டிற்கும் எனது நாட்டிற்குமிடையிலுள்ள கடலை நீ எளிதில் கடந்து செல்ல நானே தக்க ஏற்பாடு செய்கிறேன்; பயங்கரக் கடலைக் கடக்க மரத் துண்டுகளால் படகை உருவாக்கிய உனக்கு நல்லதொரு மரக்கலத்தை நான் நல்குகிறேன்; விரைவில் தாயகத்தையும், தாய்முகத்தையும் கண்டு மகிழ்வாயாக!

[கைதி நன்றிப் பெருக்குடன் நெப்போலியனை வணங்குகின்ருன்; "வீர வேந்தே, வாழ்க உம் பெருந்தன்மை!" என்று நெஞ்சுருக வாழ்த்துகின்ருன்.]

ஆதாரம்: டி. கேம்பெல் என்பார் எழுதிய, 'நெப்போலியனும், ஆங்கிலேய மாலுமியும்' என்னும் ஆங்கிலக் கவிதை.

★

சிறுகதை

வைத்தியம்

(கரந்தை கணேசன்)

" இந்தாங்க - உங்களைத்தானே" என்ருள் மனைவி "என்னவாம்—பெட் காபி கொடுக்காமல்" என்றபடியே அவர் மனம் தூங்கிக் கொண்டிருந்தது.

"யாரோ ஒரு பெரியவர் தன் மகளுடன் உங்களைத் தேடிக் கொண்டு..." வார்த்தையை முடிக்கக்கூடவில்லை, டாக்டர் சுந்தரவதனத்திற்கு நான்கு பெட் காபிகளை ஒரே சமயத்தில் குடித்த உணர்ச்சி எழுந்தது. படுக்கையிலிருந்து ஒரே தாவாகத் தாவி எழுந்து உட்கார்ந்தபடியே "எங்கே அவர்கள்" — என்ருர் பரபரப்புடனேயே. அவருடைய பரபரப்பைக் கண்டு அவர் மனைவியால் சிரிக்காமல் இருக்கமுடியவில்லை. இதுவரை பெட் காபி ஒன்றுக்குத்தான் தன்னுடைய தூக்கத்தைக் கலைக்கக்கூடிய சக்தி இருந்தது என்பது தவறு; அதோடு பெண் என்ற அந்த வார்த்தைக்கும் அத்தனை பலம் இருக்கிறது என்பதை எண்ணிய பொழுது டாக்டருக்கும் சிரிப்பு வரத்தான் செய்தது. தன் மனைவி சிரித்ததும் இதற்காகத்தான் என்பதை உணர்ந்தவுடன் ரோஜாவைத் தொடப் போய் அதன் முட்கள் கைவிரல்களிலே குத்தியது போன்ற நிலை ஏற்பட்டுவிட்டது அவருக்கு.

அதற்குள் "முன் அறையில்உட்கார வைத்திருக்கிறேன் அந்தப் பெண், பைத்தியம்போல் தெரிகிறது" என்ருள் டாக்டரின் மனைவி. இதைக் கேட்டவுடன், முள் கைவிரல்களில் குத்தியது மல்லாமல் அதன் முனை விரலிலே முறிந்துகொண்டது போன்று ஆகிவிட்டது.

டாக்டரை நாடி நோயாளிகள் தானே வருவார்கள் என்று எண்ணியபடி முன்அறையை நோக்கிச் சென்ருர். அங்கு அவர் மனைவி சொன்னபடியே தந்தை, மகள் அதோடு அவர்களின் வீட்டு வேலைக்காரன் சகிதமாக ஒரு குட்டிக் குடும்பமே இருந்தது.

டாக்டரைக் கண்டவுடன் பெரியவர் எழுந்து வணங்கினுர். வேலைக்காரனும் தன்னுடைய மாமூலான பாட்டைப் பாடினுன். ஆனுல் அந்தப் பெண்...ஏதோ ஒரு மாயாவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள்.

வந்த பெரியவரின் முகத்திலே சோகக் களையே தட்டியது. வேர் நோயுற்றிருக்கும்பொழுது இலைகளிலே குதூகலம் தாண்டவமாட முடியுமா? டாக்டர் சுந்தரவதனம் வாயைத் திறப்பதற்குள்ளேயே பெரியவர் "டாக்டர் சார் நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும், எனக்கு ஒரே மகள், இவள் ஒருத்தியால்தான் என் குலம் கொடியோட வேண்டும், இல்லாவிட்டால்..." என்றபடியே.

சுந்தரவதனத்திற்கு இதெல்லாம் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன சொற்களாக இருந்தாலும், அந்தப் பெண்ணைப் பார்த்தவுடன் மனதிலே ஒருவகையான இரக்க உணர்ச்சி எழத்தான் செய்தது. வருகிற நோயாளிகளின் உறவினர்கள் நோயாளியின் நோயைக் கூறுவதை மறந்துவிட்டு, நோயாளியின் இலாப நஷ்டக்கணக்குகளையேஒப்புவித்து விடுகிருர்கள் முதலில். டாக்டர் சுந்தரவதனத்திற்கு இதன் பொருள் இப்படித்தான் என்று தோன்றும், இந்த நோயாளி இல்லாவிட்டால் குலம் வாழாது; எனவே இவளைக் காப்பாற்றுங்கள்; இவருக்கு இன்ன நோய் இருக்கிறது, அதனுல் காப்பாற்றுங்கள் என்பதல்ல" என்று.

இந்த எண்ணம் தோன்றியவுடனேயே டாக்டர் வதனம் மெல்ல நகைத்தபடியே பெரியவரை அமரச் செய்தார். இம்மாதிரியான சமயங்களில் எதிரியின் மனத்தில் உள்ள உண்மையை வாங்குவது என்பது கற்பாறைகள் நிறைந்த பிரதேசத்திலிருந்து நீரைப் பெறுவது போன்ற தீவிர முயற்சி என்பது அவருக்கு நன்ருகத் தெரியும்.

டாக்டர், பெரியவரை நிமிர்ந்து பார்த்தார், கம்பீரமான அந்த உருவம் கூம்பிக் குறுகிப் போய் இருந்தது நன்ருகத் தெரிந்தது. டாக்டராகிய தன்னுடைய சொற்கள் ஒவ்வொன்றையும் பக்தி பரவசத்தோடு கேட்கும் உண்மையான பக்தனைப்போல பெரியவர் கேட்கத் தயாராக இருந்தார் என்பதை உணர்ந்தார். டாக்டர் பெரியவரைப் பார்த்து "பெரியவரே, தங்கள் மகளின் நோயைத் தெரிவித்தால் நலமாக இருக்கும், பார்த்தால் பைத்தியம்போல் தெரிகிறது" என்ருர்.

பெரியவர் அதற்குத்தானே தங்களை நாடி வந்திருக்கிறேன், இவளுக்குப்பைத்தியம்தான், என்னென்னவெல்லாமோ, மாந்திரீகம், ஜெபம் மருந்து, மாத்திரை எல்லாம், ஆனுல் பைத்தியம் மட்டும் தீர்ந்தபாடில்லை, போனுல் போகிறதென்று பார்க்கவோ என் குலம் விளங்கவேண்டுமே" என்ருர். பெரியவரின் கண்களிலிருந்து கண்ணீராகிய வைரக்கற்கள் உதிர்ந்தன. அந்தக் காட்சி மன்னுதி மன்னர்களை எல்லாம் வீழ்த்திய மாமன்னன் ஒருவன் எதிர்பார்க்கமுடியாத அளவிற்கு கோழையாகி ஒரு பிச்சைக்காரன் முன்னே அழுவதுபோன்று இருந்தது.

டாக்டர் வதனம் பெரியவரைத் தட்டிக் கொடுத்தபடியே, "எவ்வளவு நாட்களாயிற்று பைத்தியம் வந்து" என்ருர். டாக்டருடைய அந்தத் தட்டு பெரியவருக்கு, ஊமைக் காயம் பட்டவனுக்கு ஒத்தடம் கொடுத்தது போல இருந்திருக்க வேண்டும். மெல்ல மேல்த் துண்டை எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டு, "இப்பொழுதுதான் ஒரு ஆறு மாதம் இருக்கும்; இவளுக்குத் திருமணத்திற்கான ஏற்பாடுகளை எல்லாம் செய்தோம், அப்பொழுதிருந்தே இந்தப் பைத்தியமும் ......" என்ருர். அவரால் அதற்கு மேலும் பேசமுடியவில்லை. தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார். அவர் முகத்தை டாக்டரால் பார்க்க முடியவில்லை. பார்க்க முடிந்திருந்தால் அவள் பைத்தியமானதற்கான துப்புகள் எதுவும் கிடைத்திருக்கக்கூடும்.

"இதற்கு முன்பு இதுபோல் எதுவும்?" திரும்பியபடியே "இல்லை இதுதான் முதல் தடவை" என்ருர் பெரியவர்.

டாக்டர் வதனத்திற்கு இதற்கு மேலும் அவரிடமிருந்து ஏதாவது அறிந்துகொள்ள முடியுமென்று தெரியவில்லை. இந்தக் கேசை வெறும் வைத்திய உணர்வோடு மட்டும் பார்த்தால் போதாது, மனத்தொடர்போடும் பார்க்க வேண்டுமென்று பட்டது. அதற்குப் பெரியவர் இலாயக்கில்லை; வேறு யாராவது சம்மந்தப்பட்டவர் கிடைத்தால்...

தலையை நிமிர்த்தி அந்தப் பெண்ணைப் பார்த்தார். பேசாத ஊமை போன்றிருந்த பெண் அவரோடு, "வெறும் வைத்தியத்திலேயே என்னைக் குணப்படுத்த முடியாது என்று தாங்கள் எண்ணுவது சரிதான்" என்று பேசுவது போன்றுபட்டது. அந்தப் பெண்ணுக்கருகே அவர்களுடைய வேலைக்காரன் நின்று கொண்டிருந்தான். அவனைப் பார்த்தவுடனேயே இந்தக் கடலிலிருந்து முத்தை எடுத்துவிட முடியுமென்ற உணர்வு அவருக்குத் தட்டியது. வீட்டு வேலைக்காரர்களுக்குத் தெரியாத உள் விவகாரங்கள் எந்தப் பெரிய வீட்டிலும் எப்பொழுதும் இருப்பதில்லை. ஒருவேளை அது வீட்டு எஜமானர்களுக்குத் தெரியாமல் போகலாம். வேலைக்காரர்கள் என்பவர்கள் அரசாங்கத்தின் இரக்சிய போலீஸ்காரர்களைப்போல.

டாக்டர் வதனம் பெரியவரிடம், "உங்கள் வேலைக்காரரிடம் தனியாக ஒரு சில நிமிடங்கள் பேச அனுமதிப்பீர்களா?" என்ருர்.

"ஓ! நன்ருக...அதற்கு அவன் வேண்டியதில்லையே, தாங்கள் என்ன வேண்டுமானுலும் என்னைக் கேட்கலாம். நானே சொல்வேன்" என்ருர்.

டாக்டர், "மன்னிக்கவும், சில செய்திகள் அவர்களுக்குத்தான் ......"

"சரி, சரி அப்படியே செய்யுங்கள்."

டாக்டர் வேலைக்காரனை உள்ளே அழைத்துச் சென்ருர். வேலைக்காரனின் மனம் என்ன பாடுபட்டதோ அவன் கண்கள் சுழன்ற சுழற்சியும், உடல் நடுங்கிய நடுக்கமும் பார்த்தால் முதல் முதலாகச் செய்யத்தகாத கொடிய குற்றத்தைச் செய்த குற்றவாளி போலீஸ்காரர் முன்னுல் நிற்பதுபோல இருந்தது. டாக்டர் வதனம் அவனது நடுக்கத்தைக் கண்டு சிரித்தபடியே தட்டிக்கொடுத்து, "பயப்படாதே, இங்கே பயப்படுவதற்கு ஏதுமில்லை" என்ருர்.

"அதற்இல்லைங்க" என்ருன் வேலைக்காரன். "சரி, அப்படியானுல் நான் கேட்கும் கேள்விகளுக்கு உன் மனம் அறிந்ததை ஒளிக்காமல் என்னிடம் கூறிவிடு. இதிலும் இன்னென்று பார்—உன் எசமானர் வீட்டுப் பெண்ணின் பைத்தியம் குணப்பட வேண்டுமானுல், அது உன்னிடம்தான் இருக்கிறது" என்ருர்.

"என்னிடமா?" அவன் வாய் அகல விரிந்தது; அவன் பேசுவதற்கான தைரியம் பெற்றுவிட்டான் என்பதை டாக்டர் உணர்ந்தார். மருண்ட அவன் கண்களிலே ஒளி வீசின, போர்க்களத்திலே இறங்கிவிட்ட தீரனுடைய வீரம் அவன் உள்ளத்திலே குடிகொண்டது. குதிரை ஓடத் தயாராகிவிட்டது என்றவுடனேயே சாட்டையை லாவகமாகக் கொடுக்கிற வண்டிக்காரனைப்போல.

"ஆமப்பா, உன் எஜமானரின் மகளுக்கு திருமணம் நிச்சயம் செய்த பிறகு பைத்தியம் பிடித்தது என்கிருரே, அப்படியானுல் எசமானரின் பெண்ணுக்கு அந்தத் திருமணம் பிடிக்கவில்லையோ?" என்ருர்.

இந்தக் கேள்வி ஏதோ வெடிகுண்டை அவன்மேல் தூக்கிப் போட்டதைப்போல இருந்திருக்க வேண்டும். அவன் மருண்ட மருட்சியும், பார்த்த பார்வையும், அப்பொழுது மட்டும் அந்த அறை திறந்திருந்தால் ஒரே தாவாகத் தாவி வெளியே ஓடியே போயிருப்பான். சாத்திஇருக்கிற அறையை ஒருமுறை சுற்றிக் கண்ணோட்டம் விட்டபடியே, "அதெல்லாம் என்னைக் கேட்டால்......நான் என்ன கேவலம் அவர்கள் வீட்டு வேலைக்காரன்" என்றான்.

இந்தச் சொற்களைக் கேட்டவுடன் பாழும் கிணற்றுக்குள்ளே வைரம் ஒளிவிடுவதைக் கண்டார். "வீட்டு வேலைக்காரனென்றாலும் உனக்குத் தெரிந்தது உன் எசமானருக்குத் தெரியாதே" என்றார்.

மேலும் ஒரு வெடிகுண்டு' ஐயோ டாக்டர் என்று கத்திவிடலாம் போன்றிருந்தது. டாக்டரின் கரங்கள் மெல்லத் தன்மேல் படுவதைஉணர்ந்தான்மீண்டும்வேறு யாரும் அற்ற அந்த அறையை ஒரு கண்ணோட்டம் விட்டு விட்டு, "எதற்கு மறைக்கவேண்டும், டாக்டரிடமும், வக்கீலிடமும் யாரும் எதையும் மறைக்கக்கூடாது என்பார்கள். என் வேலையே போனாலும் சரி, என் சின்ன எசமானியின் பைத்தியம் குணப்பட்டால் சரி" என்று பேச்சை நிறுத்தினான்.

அவனுடைய அந்தத் தீவிரம் நாட்டுக்காகச் சகலத்தையும் துறக்கத் தயாராகிவிட்ட வீர இளைஞனுடைய நிலைபோல் இருந்தது.

அவன் மேலும் பேசினான், "சின்ன எஜமானிக்கும் வீட்டுக் கணக்கப்பிள்ளைக்கும் நெடு நாட்களாகவே தொடர்பு உண்டு, இது ஒரு நாள் எஜமானருக்குத் தெரிய வந்தது, கணக்கப்பிள்ளையை வேலையிலிருந்து நீக்கிவிட்டு எஜமானிக்கு வேறு இடத்தில் மாப்பிள்ளை பேசி முடித்துவிட்டார். இது தெரிந்த அன்றிலிருந்து...'

டாக்டர் வதனத்திற்கு, பயந்த முயல் குட்டி போன்றிருந்த இவனுக்கு இத்தனை தீவிரம் எங்கிருந்து வந்தது என்பதே ஆச்சரியமாக இருந்தது,

டாக்டர் உடனே எழுந்தார், அவன் கைகளைக் குலுக்கிய வண்ணம், "இனி உன் எஜமானியின் பைத்தியத்தைப் போக்கிவிடலாம், அது என்னால் முடியும். ஆனால்..." நிறுத்தினார்.

"ஆனால் என்னங்க". என்றான் வேலைக்காரன். அவன் மனதில் மெயில் வண்டியின் தீவிர ஓட்டம் இருந்தது.

"நான் சொல்லுகிறபடி உன் எஜமானர் கேட்க வேண்டுமே."

"அதற்குத்தனே தங்களிடம் வந்திருக்கிறோம்."

"அந்தக் கணக்கப்பிள்ளைக்குத் தன் மகளைத் திருமணம் செய்து வைக்க ஒத்துக்கொள்வாரா?"

இந்தக் கேள்வி நந்தவனத்தில் உலாவிக் கொண்டிருந்தவளுக்கு நாகசர்ப்பம் தீண்டியது போலாகி விட்டது.

"என்ன சொன்னீர்கள்..." என்றான், அவனுடைய இந்த வாக்கியத்திலேயே அது கனவு என்பது நன்றாகத் தெரிந்தது.

அதற்குள் "சதாசிவம், சதாசிவம்" என்ற கதறல் வெளியே கேட்டது. டாக்டர், வெளியே யாரோ இன்னேரத்தில் வந்து தொந்தரவுசெய்கிறார்களே என்று எண்ணுவதற்குள்...

"ஐயா...இதோ வந்துவிட்டேன் என்ற வேலைக்காரன் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனார்.

"வாடா கழுதை, இன்னும் அங்கே என்ன பேச்சு, அவள் பைத்தியமாகவே இருந்து தொலையட்டும், எனக்குக் குழந்தைகளே பிறக்கவில்லை என்று நினைத்துக் கொள்ளுகிறேன் நீ வாடா...கிடக்கிறாள் அவள்..." என்றார். இப்பொழுதுதான் இதுவரை பெரியவர் உள்ளே நடந்த பேச்சுக்களை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தார் என்பது தெரிய வந்தது.

கதவைத்திறந்துகொண்டுவேலைக்காரன் வெளியே ஓடினான், டாக்டரும் பின்னே சென்றார். இவர் போவதற்குள் அந்தப் பெண்ணை இழுத்துக் கொண்டு தெரு வாசலுக்குச் சென்று விட்டார்கள். டாக்டர் வதனம் பின்னாலேயே சென்று தெருவில் போகிற அவர்களைப் பார்த்தார். அந்தப் பெண் ஒருமுறை திரும்பி டாக்டரைப் பார்த்தாள். பரிதாபத்திற்குரிய அந்தப்பார்வையில், "சமுதாயத்தில் ஊறிக் கிடக்கும் பழைமைக்கு வைத்தியம் செய்யாதவரை, எங்களைப் போன்ற பைத்தியங்களுக்கு உங்களைப் போன்ற டாக்டர்களால் வைத்தியமே செய்ய முடியாது டாக்டர்" என்று கூறுவது போன்றிருந்தது. டாக்டரின் கண்களில் இரண்டு சொட்டுக் கண்ணீர்த்துளிகள் உதிர்ந்தன.

நான் செய்யும் ஒவ்வொரு செயலும் நான் அனுபவிக்கும் ஒவ்வொரு வேதனையும் என்னை எல்லாவிதத்திலும் புதிய மனிதனாக மாற்றுகின்றன. வறுமை, அன்பு, அதிகாரம், கோபம், நோய், துயரம், வெற்றி எல்லாம் நம் மனத்தில் புதைந்து கிடக்கும் பல்வேறு சக்திகளை வெளிக் கொணர்கின்றன. இவைகளினால் நமது அற்ப ஆசைகள் பாதிக்கப்பட்டாலும்,நமது மனோசக்தி பெருகுவது தடைப்படுவதில்லை. ஒரு மனிதன் என்ன செய்தாலும், அல்லது அவனுக்கு என்ன நேர்ந்தாலும் அவைமூலம் அவனுடைய உள்ளத்தில் ஒரு புது உணர்ச்சி, புதுச் சிந்தனை, புதிய சக்தி பிறக்கிறது. இந்த அதிசயமான சக்திகளை உண்டாக்கி அனுபவிக்கவே மனிதன் பிறந்திருக்கிறான்.

பாடலிபுத்திரம்

(கோபி. கலிங்கன்)

காட்சி 1

இடம்: படைவீடு
காலம்: மாலை
இருப்போர்: அஜாதசத்ரு, வீரர்கள்

வெற்றி முரசு ஒய்கிறது. மகத நாட்டு மகா வீரனும், இளவரசனுமான அஜாதசத்ருவும், வீரனும் பேசிக்கொண்டிருக்கையில் ஓர் வீரன் வருகிறான்.

அஜாதசத்ரு: ஆகா...! மயிலாடிய சோலை, மந்தி விளையாடிய பூக்காடுபோல் புழுதிமேடாகி விட்டதோ! என்ன வீரா! ஏன் விழிக்கிறாய்? கோசலத்தான் எதிர்பார்த்து இருக்கமாட்டான் முதல் தாக்குதலிலேயே மண்ணை முத்தமிடுவோமென்று...!

வீரன்: ஆம் இளவரசே! போர் முனையில் அவன் முழக்கிய முழக்கம்...

அஜா:- முழக்கமா, சாக்காட்டிலே ஒப்பாரியல்லவா அது! உம்... சரி நடனமாதைக் கூப்பிடு...... வெற்றிக் கூத்தாடட்டும்...

[பூங்கொடியென ஓர் ஆடலழகி நடனமாடுகிறாள்... சில விநாடிக்குப்பின்...... சற்றுத் தொலைவில் குதிரையின் குளம்பு ஓசை கேட்டு......அஜாதசத்ரு ஓடுகிறான்...

குதிரையின் மீது ஓர் இளைஞன் அமர்ந்து குதிரையை அடக்க முடியாமல் தடுமாறுவதைப் பார்த்து அஜாதசத்ரு உதவியளிக்க முயற்சிக்கையில் ......

குதிரை வீரன்: தொடாதே, எட்டி நில்!

அஜா:- ஆபத்தில் எட்டி நிற்கும் பழக்கம் வீரர்களுக்கு அழகல்ல,

குதிரை வீரன்:- கோழைக்குத் தான் உதவி தேவை.

அஜா:- வைசாலிகளில் உன்னைப் போல் ஒரு வீரன் இருப்பது வியப்பினும் வியப்பு!

குதிரை வீரன்:- வைசாலிகள் கோழைகள் என்பது உன் எண்ணமா?

அஜாதசத்ரு:- 'உன் எண்ணமா?' ஆ...எவ்வளவு துணிவு? நான் யார் தெரியுமா...

குதிரை வீரன்:- தெரியும், வாய்ச் சொல்லில் வீரன். ஏன் விழிக்கிறாய்? வேல் எறியத் தெரியாத வீணர் கூட்டம் என்றாயே...... அதைக் காட்டத்தான் வந்தேன். (வீரர்கள் ஓடிவருகிறார்கள்)

அஜா:- வீரர்களே! வேண்டாம்... நான்கவனித்துக்கொள்கிறேன். தம்பி! இறங்கு கீழே! ஆகா...!

குதிரைவீரன்:- ஏனிந்த அசட்டுச் சிரிப்பு? எடு உன் வாளை.

அஜா:- புலியை இடறாதே! தம்பி, போ......ஓடிப்போ...! கோசல மன்னனே மரணத்தை முத்தமிட்டான்......இந்த மகதத்தின் மத்தகத்தை எதிர்க்க முடியாமல்...நீ எனக்கு எம்மாத்திரம்?

குதிரை வீரன்:- தற்புகழ்ச்சி பேடிகளின் குணம்!

அஜா:- என்ன சொன்னாய் எடு வாளை......(இருவரும் போரிடுகின்றனர்.....இடையிடையே...) அபாரம்! அருமை! கத்தி வீசவும் தெரிந்துதான் இருக்கிறாய்,

குதிரை வீரன்:- ஏன் வீண் பேச்சு!

அஜா:- ஏன் களைப்புண்டாகிவிட்டதோ...!

[குதிரை வீரன் ஒரு இள நங்கை என்று அஜாதசத்ரு தெரிந்து வாளை வீசிவிடுகிறான்]

குதிரைவீரன்:- ஏன் வாளை எறிந்துவிட்டீர்கள்......உயிருக்குப் பயந்தா...

அஜா:- உம்......வேலாகிய உன் விழிகள் குத்துவதால்...

குதிரை வீரன்:- என்ன!

அஜா:- என் கைகளை அங்குசமாக்கி யானைகளைப் பிளிறவைத்திருக்கிறேன்! சீறும் மலைச் சர்ப்பங்களை இந்த விரல் நகங்களால் நசுக்கி எறிந்திருக்கிறேன்! பாயும் புலிகளை இந்தக் கைகளை ஈட்டியாக்கிக் குத்திக் கொன்றிருக்கிறேன்......ஆனால்!

குதிரை வீரன்:- என்ன.....ஆனால் ....

அஜா:- சொல்லவா......, மாவீரர்களைக் கண் பார்வையெனும் மதுவூட்டி, "மஞ்சத்தை மறந்தவனே! கடமை வீரா, வா பஞ்சணைக்கு" என்றழைக்கும் பாகு மொழிக்காரிகளை, "ஆணழகா! எனையாட்கொண்ட என் வரசே! தங்களுக்கு என்ன வேண்டும்? சொல்லுங்கள்...... நாட்டையாள அருந்தவப் புதல்வன்தானே...இதோ அடுத்த ஆண்டில் இரண்டாவது அஜாதசத்ரு பிறந்து விடுவானென்று" கிள்ளை மொழிபேசி, காதற்கடலில் தள்ளும் காரிகைகளுடன் நான் இதுவரை போரிட்டதில்லை!

குதிரை வீரன்:- நான் பெண் என்று......

அஜா:- எப்படித் தெரிந்ததென்கிருயா? மங்கையர் திலகமே! மான் விழி மிரளும், ஆண்விழி மிரட்டும்! இது போர் முறை தெரிந்த எனக்குத் தெரிந்ததில் ஆச்சரியமில்லையே!

குதிரை வீரன்:- (ஆடைகளைக் களைந்து) நான் யார் தெரியுமா ....

அஜா:- மண்ணிலே நிற்கும் மதி முகவதனி! மாதர் தம் மணி விளக்கு! நீ என் போன்ற வீரருக்கேற்ற வாழ்க்கைத் துணைவி!

பெண்:- ஆண்களே ஆத்திரக்காரர்கள் என்று கேள்விப்பட்டேன். அது உண்மையாகி விட்டது.

அஜா:- என்ன சொல்கிருய்?

பெண்:- கண்டதும் காதல் கணையை வீசி விட்டீர்களே.

அஜா:- நீ விழியால் பேசினுய்' நான் மொழியால் கூறினேன்' ஏன் என்னைப் பிடிக்கவில்லையா...?

பெண்:- கோசலத்தை வென்ற வீரரைப் பிடிக்கவில்லையென்ருல், மகதத்தின் சரித்திரத்திற்கே வேலையில்லாமல்போய் விடுமே!

அஜா:- அப்படியென்ருல் என் எண்ணம் நிறைவேறும்!

பெண்:- கோசலத்தை அடிமை கொண்டவரின் எண்ணம் நிறைவேறத்தானே வேண்டும்.

அஜா:- அடிமை! யார் சொன்னது அடிமையென்று. கோசலம் இன்றிலிருந்து முன்போலவே விடுதலை பெற்ற நாடு! உம்... உம்...உன் பெயர்...

பெண்:- பாடலி...!

அஜா:- பாடலி!

பாடலி:- ஏன் அழகாயில்லையா?

அஜா:- அழகுக் கவிதை அழகாயில்லை என்று கூற நான் அறிவிலியல்ல.

பாடலி:- அழகரசே!

அஜா:- ஏன் பயமா? வெட்கமா?

பாடலி:- தங்களை என்னவென்று அழைப்பது?

அஜா:- 'அஜாதசத்ரு' என்றழை.

பாடலி:- ஊஹூம்!

அஜா:- மாட்டாயா...?

பாடலி:- ஊஹூம்!

அஜா:- அப்பொழுது 'ஊஹூம்' என்றழை.

பாடலி:- (சிரித்து) போங்கள் எனக்கு வெட்கமாயிருக்கிறது!

அஜா:- சரி எப்படியோ கூப்பிடு.

பாடலி:- வாருங்கள் தலைநகருக்குச் செல்லலாம்!

காட்சி 2

இடம் மகத நாட்டு அரண்மனை

காலம் காலை

இருப்போர் மகத மன்னன் பிம்பிசாரன், அமைச்சர்

பிம்பிசாரன்:- மகாமந்திரி! இளவரசனின் வெற்றியை முன்னிட்டு, இந்த நாட்டின் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்துவிட்டு நாம் ஓய்வு பெறலாமென்று நினைக்கிறேன்.

அமைசர்:- நானும் அதைக் கூறவே வந்தேன் மன்னு!

பிம்பிசாரன்:- அவனுக்குப் பட்டத்தைக் கட்டிவிட்டு புத்த மதப் பிரசாரத்திற்கு நானும் புறப்படலாம் என்றிருக்கிறேன். புத்தர் என்னுயிர் நண்பர் என்பது தங்கட்குத் தெரியுமே.

அமைச் :- தெரியும். ஆனல்...

பிம்பி :- என்ன கேள்விக் குறி...

அமைச் :- இளவரசர்......அஜாத சத்ரு...

பிம்பி :- ஏன் தயக்கம்? மனதிலே மயக்கமோ......? செய்தியைக் கூறும்?

அமைச் :- மகாராஜா! இளவரசர் போரிலே வெற்றி கண்டார்; கோசலத்தை அடிமை கொண்டார்; காதலில் கட்டுண்டார்!

பிம்பி :- என்ன......காதலில் கட்டுண்டானு...? யாரவள்? எந் நாட்டு ராஜகுமாரி?

அமைச் :- எதிரி நாட்டு இளவரசி! போரிலே புறமுதுகிட்டுமாண்டு போன கோசலத்து மன்னன் மகள!

பிம்பி : (ஆத்திரமாக) ஆ...! நமக்குப் பரம்பரை வைரிகளான கோசலத்துக்குலமகளையா காதலித்தான்? வரட்டும். திருமணம் என்பது அவனுடைய சொந்தப் பொறுப்பென்று எண்ணி விட்டான் போலும்!

அமைச் :- அமைதியாக இருங்கள். இளவரசர் வரட்டுமே, கேட்போம்!

காட்சி 3

இடம் : கோசல நாட்டு அரண்மனை. (வசந்த மண்டபத்தில்)

காலம் : பிற்பகல்.

இருப்போர் : அஜாத சத்ரு, பாடலி.

[பாடலி தாமரைத் தடாகத்தருகில் உட்கார்ந்து மலர்களைக் கொய்து கொண்டிருக்கிருள். அஜாத சத்ரு ஊஞ்சலில் அமர்ந்திருக்கிருன். அருகில் கனிவகைகள் வைக்கப்பட்டிருக்கின்றன.]

பாடலி:- உள்ளத்தரசே! இந்தத் தாமரை...

அஜா:- அழகில் உன்னைவிடக் குறைந்ததுதான் உள்ளத்தரசி!

பாடலி:- இதோ, அன்னங்களைப் பார்த்தீர்களா?

அஜா:- அன்னத்தைவிட மிருதுவானது உன் பாதங்களென்று நான் சொல்லவேண்டுமென்பதுதானே உன் ஆசை!

பாடலி:- உம்...மறந்தேன்...

அஜா:- எதை?

பாடலி:- ஒரு நிபந்தனை...

அஜா:- என்ன...?

பாடலி:- நீங்களென்னைத் திருமணம் செய்துகொள்வது உறுதிதானே...?

அஜா:- ஒரு குழந்தை பெற்ற பிறகு 'குழந்தைக்கு நீதானே தாய்' என்று கேட்பதுபோலிருக்கிறது உனது கேள்வி.

பாடலி:- விளையாட்டுப் பிறகு. நீங்கள் என்னைப் பலரறிய மணம் செய்து கொள்ளவேண்டும். ஏனென்ருல் கல்யாணமென்று ஆசை காட்டி அந்தப்புரக் கொலுப்பொம்மைகளாக்கி விடுவது உங்கள் போன்ருரின் செயல் என்பதை நான் நன்கறிவேன்!

அஜா:- நீ கூறுவது உண்மை; ஆனல் நீ என் அடிமையல்ல; அகிலத்தைத் தன் வாள் பலத்தால் ஆட்டிப் படைத்த மாவீரன் பிம்பிசாரனின் மருமகள், மகதத்தின் மகாரணி என்பதை விரைவில் நடத்திக் காட்டுகிறேன்! வா! சோலை சென்று வருவோம். (தோழி ஒருத்தி ஓலையைக் கொண்டு வந்து கொடுக்கிருள். அஜாதசத்ரு ஓலையைப் படித்து முடிக்கிருன்)

பாடலி! கண்ணே பாடலி! ஏன் மௌனம்?

பாடலி:- என்ன ஓலையது...

அஜா:- வெற்றிச் செய்தி என் தந்தையைப் பூரிப்பில் ஆழ்த்தி விட்டதாம். உடனே வரும்படி எழுதியிருக்கிருர்.

பாடலி:- அதற்குள்ளாகவா...

அஜா:- நீ என்னுடன் வரவில்லையா...

பாடலி:- நான் வரலாமா? சரி புறப்படுங்கள்...!

[குதிரையின் குளம்படி கேட்கிறது. அதைத் தொடர்ந்து முரசுகள் முழங்குகின்றன.]

காட்சி 4

இடம்: மகதத்தின் மந்திராலோசனை மண்டபம்.

காலம்: முற்பகல்.

இருப்போர்: மன்னன் பிம்பிசாரர் அமைச்சர் பிரதனிகள், வீரர்கள்.

[பாடலியும் அஜாத சத்ருவும் அவைக்குள் நுழைகின்றனர்.]

வீரர்கள்: மகதத்தின் மாவீரர்! வாழ்க!! வாழ்க!!!

பலகுரல்கள், கோசலம் வென்ருன் வாழ்க!

மன்னன்: வாழ்க பல்லாண்டு வெற்றிமைந்தா! கோசலத்தின் வெற்றி மூலம், மகதத்தை உன்னத நிலைபெறச் செய்து விட்டாய்! சூரிய சந்திரன் உள்ள வரை உன்புகழ் நிலைத்து நிற்குமாக! இதோ எனது வாளை உனக்குப்பரிசாக அளிக்கிறேன்!

இருபோர்: மாவீரர் அஜாதசத்ரு வாழ்க!

மன்னன்: இவ்வெற்றியின் அடையாளமாக உனக்கு மகுடம் சூட்டி மணமும் முடித்துவிட முடிவு செய்திருக்கிறேம்.

அஜாதசத்ரு: என் பாக்கியம் தந்தையே!

மன்னன்:- நம் குலவிளக்கு, மகேந்திரனின் 'புத்திரியாம்சாயாவை' உனக்குத் திருமணம் முடிக்க நீண்ட நாளைய கனவு, அதைக் குலைக்கமாட்டாயென்று நினைக்கிறேன். நினைவாக்கக் காத்திருக்கிருய் என்பதும் எனக்குத் தெரியும். வீரமைந்தா மௌனம் ஏனே?

அஜாதசத்ரு:- தந்தையே! தங்களைக் கேட்காமலேயே தேடிக் கொண்டேன் அந்தப் அன்புப் பரிசை!

மன்னன் :- யாரை, சாயா தேவியையா?

அஜாதசத்ரு:- இல்லை, சாயா தேவி விழப்போகும் விண் மீன். அனல் நான் கண்டெடுத்தது மங்காதமாணிக்கம்! கோசலமும், மகதமும் மறக்க முடியாத சரித்திர ஏடு! அவள் தான் பேரழகி பாடலி! இதோ ......என் அன்பின் திருவுருவம்!

மன்னன் :- பெருந்தவறு செய்து விட்டாய் செல்வ! சாதாரண மனிதனல்ல நீ; எதிர்காலச் சக்கரவர்த்தி. மன்னர்கள் தம் வம்சத்துக் கன்னியரைத்தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும். அதுதான் நீதி! முறையுங்கூட!

அஜா :- பாடலியும் அரச குமாரி தான்; அரச பரம்பரைதான்.

மன்னன் :- அதைக் கூறவில்லை... அவள் வேறு வம்சம்; நாம் வேறு வம்சம்.

அஜா :- ஆண்டவன் படைப்பில் எல்லாம் ஒன்று' என்று நீங்களே பன்முறை எனக்கு உபதேசித்திருக்கிறீர்கள்......

மன்னன் :- அஜாதசத்ரு...! நீ யாருடன் பேசுகிருய் என்பதை நினைவில் வை...!

அஜா :- மகதத்தின் கிழவேந்தனிடந்தான் பேசுகிறேன்! நிலை தடுமாறவில்லை நான்!

மன்னன் :- ஆ! என் கோபத்தைக் கிளருதே! என் வாழ் நாளில் இதுவரை காணுததை இன்று காண்கிறேன்!

அஜா :- எதை?

மன்னன் :- நீ என்னை எதிர்த்துப் பேசுவது இதுதான் முதல் தடவை!

அஜா:- இனி எதிர்த்துப் பேசும் நிலை ஏற்படாது!

மன்னன்:- நான் இந்நாட்டு மன்னன்!

அஜா:- நான் இந்நாட்டுத் தளபதி! எதிர்கால மன்னன்! மாவீரர்களின் தலைவன்! பேரழகி பாடலியின் மணளன்!

மன்னன்:- வேண்டாம், இந்த விபரீத எண்ணத்தை விட்டுவிடு. மக்கள் சீறுவர், ஏசுவர்!

அஜா:- பார்வர்! பயந்தோடுவர்! ஆட்டுமந்தையல்ல எனக்குக் கீழ்வாழப்போகிறவர்கள்.

மன்னன்:- என் முடிவு...

அஜா:- எனக்குத் தெரியும்; பாடலியை மணப்பதாளுல் எனக்கு மகுடமில்லை......ஏன் அப்படித்தானே...! அறுபது வயதிற்கும் மேலான உங்களை வெளியில் உலவவிடுவதே பெருங் குற்றம்! டேய்......இவரைச் சிறையில் தள்ளுங்கள்!

மன்னன்:- ஆ...! எனக்கா? சிறை! வேண்டாம் மகனே! கறையில்லாத மகதத்தின் வரலாற்றைக் களங்கப்படுத்தாதே! நேற்றுச் சந்தித்தவளுக்காக உன்னைப் பெற்றுப் பேணி வளர்த்து மனிதனுக்கிய உன் தந்தையை ...நூருண்டுகள் வாழப்போகும் இந்தக் கிழவனை அநியாயமாகச் சிறையில் தள்ளிச் சாகடித்து என் சாபத்தைப் பெருதே!

அஜா:- இழுத்துச் செல்லுங்கள்!

பாடலி:- சுவாமி! வேண்டாம்...! வேண்டாம்!!

அஜா:- பாடலி, பேசாமலிரு! அமைச்சரே! நாளைத் திருமண மண்டபத்தில் எல்லோர் முன்னிலையிலும், திருமணத்திற்கு ஏற்பாடுகள் செய்யுங்கள்! பாடலி, வா போவோம் அந்தப் புரத்திற்கு!

காட்சி 5

இடம்: அந்தபுாம்.

காலம்: மாலை.

இருப்போர்: அஜாதசத்ரு, பாடலி.

அஜாதசத்ரு: பாடலி! கண்ணே! இந்நாள் வாழ்விலே மறக்க முடியாத பொன்னுளல்லவா...! பரிமளகந்தம், பட்டாடை, பொன் அணிகள், மாணிக்கக் கட்டில் இவை இருந்தால் மட்டும் போதாது, அமைதியாக இன்பம் பெறவேண்டும். அதுதான் இந்தவேளைக்குத் தேவை!

பாடலி:- அமைதிதான் எனக்கு ஏற்படமாட்டேனென்கிறது!

ஒரு திருத்தம்

18—5—58-ல் வெளிவந்த "தூண்டிற் புழு" என்ற கட்டுரையில் 164-கோடி என்றிருப்பதை 164 இலட்சம் என்று திருத்திப் படிக்கவும்.

அஜாதசத்ரு:- ஏன்?

பாடலி :- மாமாவின் சொற்கள் என் காதுகளில் ரிங்காரமிட்ட வண்ணமாகவே இருக்கின்றன..

அஜாதசத்ரு:- சொல் கண்ணே... என்ன அதற்கு!

பாடலி:- நம் உல்லாசத்திற்கு என்றே ஓர் வசந்த மண்டபம்...

அஜாதசத்ரு:- ஒரு மண்டபம் என்ன...ஒரு நகரத்தையே நிர்மாணித்துவிட்டால் போகிறது- அதுவும் உன்பெயரால்!

பாடலி:- எங்கே...எந்த இடத்தில்

அஜாதசத்ரு:- ஸோன் நதிக்கும், கங்கை நதிக்கும் இடையிலுள்ள அழகுத் தோட்டத்தில், அதோ.........!

[சிற்பக்கலை வல்லுனர்களும், கட்டிடக்கலை நிபுணர்களும்.........ஓயாத உழைப்பாளிகளும்சேர்ந்து...இறுதியில்...அழகு மணி மாளிகைகளுடன் புதிய நகரம் திகழ்கின்றது.]

காட்சி 6

இடம் : புதிய நகரத்தில் அரண்மனையில்...

காலம் : பிற்பகல்

இருப்போர் : அஜாதசத்ரு, பாடலி.

அஜாதசத்ரு :- ஏன் பாடலி, தோழிகளை அனுப்பிவிட்டாய். அமைதி பெறவா...

பாடலி :- ஆமாம் வாருங்கள். இதோ இந்தத் தங்க ஊஞ்சலில் அமருங்கள்.

அஜாத :-ஏன் தாலாட்டுகிறாயா...

பாடலி :- ஊம்...இனி நீங்களல்லவா என் புத்திரனைத் தாலாட்ட வேண்டும்...

அஜாத :- ஓ...அதற்குள் மகன் என்றே தீர்மானித்து விட்டாயா...! சரி...இந்த அரண்மனையைச் சுற்றிலும் எத்தனை அகழிகள் இருக்கின்றன தெரியுமா...!

பாடலி :- சொல்லுங்களேன்!

அஜாத :- அகழிகள் 606; கூட கோபுரங்கள் 570; வாயில்கள் 64.

பாடலி :- அப்பா...இவ்வளவெல்லாம் எதற்கு?

அஜாத :- நீயும், நானும் மறைந்தாலும் இந்த நகரம் உன் பெயரால், உன் புத்திரனின் பெயரால் மங்காமல் "பாடலிபுத்திரன்" என்று உலகம் உள்ள வரை அப்படியே இருக்கும்.

பாடலி :- எவ்வளவு செலவாயிற்று?

அஜாத :- நூறாயிரம்பொன்! ஐயாயிரம் ஆட்கள் வேலை செய்தார்கள்!

பாடலி :- சரி வாருங்கள், வாடைக் காற்று வீசுகிறது.

காட்சி 7

இடம் : அரண்மனை அந்தப்புரம்.

காலம் : இரவு.

இருப்போர்: அஜாதசத்ரு, பாடலி...

அஜாத : தேவி! இந்த உப்பரிகையிலிருந்து பார்த்தால் இந்நகரம் எவ்வளவு வசிகரமாகத் தெரிகிறது பார்த்தாயா......? அதோ...அந்தக் கடைக் கோடியில் இருவண்ண ஓவியங்களைப் பார்த்தாயா ... எவ்வளவு திறமையான வேலைப்பாடு...! அதற்குப் பெயர் என்ன தெரியுமா... "காதலர் மொழி!"

பாடலி :- உம்...இருக்கும்...இருக்கும். சுவாமி அதோ பாருங்கள்...!

புத்தபிட்சுக்கள் :- புத்தம் சரணம் கச்சாமி! தர்மம் சரணம் கச்சாமி...! சங்கம் சரணம் கச்சாமி...!

அஜாத :- சந்நியாசிகளைக் கண்டு கலக்கமேன். அருள் கொடுப்பவர்கள்தானே அவர்கள். மருளை உண்டாக்க மாட்டார்கள்!

பாடலி :- சுவாமி! தாங்களும் சித்தார்த்தனைப்போல் மாறிவிட மாட்டீர்களே...!

அஜாத :- நீ உயிருடன் இருக்கும் வரை புத்தனாக மாட்டேன்! ஏன் வீண்கலக்கம்...உன் கருவிலிருக்கும் அருமைச் சிசுவை நினைத்துச் சந்தோஷப்படாமல் ...வா...!

....

சின்னாட்களில் பாடலி ஓர் அருமை மகனைப் பெற்றெடுத்தாள்! மக்களும், மன்னரும் பாடலி பெற்றபுத்திரனை வாழ்த்தி வணங்கினர் புதியதாகஏற்படுத்தப்பட்ட நகருக்கு ... "பாடலி புத்திரன்" என்ற பெயரை வைத்துப் புகழ்ந்தனர்...! கால மாறுபாட்டால்... "பாடலிபுரமாக" மருவி, இன்றும் பழைய சரித்திர சம்பவங்களைக் கொண்டு திகழ்கின்றது!

★

தென்னாற்காடு மாவட்ட

தி.மு.கழக 3-வது அரசியல் மாநாடு

விருத்தாசலத்தில் ஜூன் 7, 8 தேதிகளில்

ஆறுமுகம் பந்தலில் மஜித் அரங்கில்

நடைபெறும்

தலைவர் :

மதுரை எஸ். முத்து

திறப்பாளர் :

குடந்தை கே. கே. நீலமேகம்

அண்ணாதுரை நாவலர் நெடுஞ்செழியன்

மற்றும் கழக முன்னணி வீரர்கள் கலந்துகொள்வர்

—வரவேற்புக்குழு.

4-ம் பக்கத் தொடர்ச்சி

கேளிக்கைகள் நடந்தால் அங்கெல்லாம் அவரை அழைத்துச் சிரிக்கச் செய்து அதன் மூலம் அவருக்கு நிறையப் பணம்கிடைத்தது! எந்தச் சிரிப்பினால் அவர் வேலையிழந்து வந்தாரோ அதே சிரிப்பினால் பின் நிறையச் சம்பாதித்தார்!

கடைசியில் அவருக்குச் சிரிப்பு நின்றதும் வேடிக்கையான கதை! அவர் முன்பு காதலித்த ஒரு பெண் அவருடைய சகோதரனை மணந்துகொண்டாள் என்று சொல்லக் கேட்டதும், அவரது ஐந்து வருடச் சிரிப்பு உடனே நின்றது! அதுவரையில், நமக்கு மூச்சுவிடுவது எப்படிச் சாதாரண நிகழ்ச்சியாக இருக்கிறதோ, அப்படிச் சிரிப்பது அவருக்கு சாதாரண நிகழ்ச்சியாக இருந்திருக்கிறது. அந்த ஐந்து ஆண்டுகளும் அவர் சிரித்ததைக் கண்டு மற்றவர் மகிழ அவர் மட்டும் துன்பத்தையே அனுபவித்து வந்தார்.

Ellen-Hanson என்ற டேனிஷ் பெண்ணும் தொடர்ந்த சிரிப்பை அனுபவித்திருக்கிறாள். இவள் ஒரு சமயம் நாட்டியம் ஆடிக்கொண்டிருக்கும்போது இவளுடன் நாட்டியம் ஆடிக்கொண்டிருந்தவர் ஏதோ ஒரு நகைச்சுவையான சொல் ஒன்று உதிர்க்க இவளுக்கு சிரிப்பு ஆரம்பித்து, தொடர்ந்து சில நாள் சிரித்திருக்கிறாள்! இவள் முதலில் சிரித்ததைப் பார்த்து மற்றவர் சிரிக்க அவரைப் பார்த்து இன்னொருவர் சிரிக்க, இப்படி அந்த நாட்டிய மன்றத்திலிருந்தவர்கள் எல்லாரும் சிரித்தார்கள்! ஒருவருக்கும் தான் எதற்காகச் சிரிக்கிறோம் என்றே தெரியவில்லை. கடைசியில் ஒரு டாக்டர் இவள் மூலம்தான் சிரிப்பு ஆரம்பித்திருக்கிறது என்று கண்டுபிடித்தார்! பின்பு ஒரு நாளைய இடைவிடாத் தூக்கத்திற்குப்பின்தான் இவளுடைய நீண்ட நாளைய சிரிப்பு நின்றது!

இவளைப்போலவே சுவீடிஷ் (Swedish) நாட்டுப் பெண் ஒருத்திக்கு அவள் டெலிபோனை எடுக்கும்போதெல்லாம் சிரிப்பு வந்துவிடுமாம்! டெலிபோனை எடுத்தால் சிரிப்பு ஒன்றுதான் அவள் வாயிலிருந்து வெளிப்படும்! சாதாரண சிரிப்புக்கூட அல்ல; பலத்த சிரிப்பு! இதனால் மத்திய டெலிபோன் நிலையத்தில் இருந்தவர்களுக்குப் பெரிய தொல்லையாய்ப் போய்விட்டது. கடைசியில் அவள் டெலிபோனையே உபயோகிக்கக்கூடாது என்று தடையுத்தரவு போட்டுவிட்டார்களாம்!

இவர்களெல்லாம் தங்கள் சிரிப்பின் மூலம் துன்பங்களை மட்டுமே பெற்றவர்கள். ஆனால் சிரிப்பினால் உயிரிழந்தவர்களும் இருக்கிறார்கள்! Liffng-Yin என்ற சீனக்காரர் ஒருவர், தான் செய்த பெருங்குற்றத்திற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டுக் காவலில்வைக்கப்பட்டார். ஆனால் ஏதோ ஒரு காரணத்திற்காக அவரைக் குற்றமற்றவர் என நிரூபித்துத் தண்டனையை நீக்கிவிட்டார்கள். அவர் சிறையில் உணவருந்திக்கொண்டிருக்கும்போது இச் செய்தியை அவருக்குத் தெரியப்படுத்தினர். அவ்வளவுதான்! கட்டுக்கடங்கா மகிழ்ச்சிப் புன்னகையில் ஆரம்பித்து காட்டாறுகக் கரைபுரண்டோட ஆரம்பித்தது. இடிபோன்ற ஒலியுடன் சிரித்தார். இப்படிச்சில மணி நேரம் சிரித்ததால் உடல் பலவீனமாகி சிறையிலேயே உயிரிழந்தார்!

அமெரிக்க அச்சுத் தொழிலாளியான 'லாரிலெவின்' என்பவர் ஒருசமயம் நாடகம் பார்த்துக்கொண்டிருக்கும்போது அந்த நாடகத்தில் வந்த சிரிப்புநடிகன் உண்டாக்கிய நகைச்சுவையால் பலத்த சிரிப்புக்கு ஆளானர். இவர் சிரித்த சிரிப்பினால் உட்கார்ந்திருந்த நாற்காலி உடைந்து இவரும் கீழேவிழுந்து தலை, கை, கால் முதலிய இடங்களில் பலத்த அடிபட்டது! மேலும் இடைவிடாச் சிரிப்பால் இவரது இருதயம் வலிகாண ஆரமபித்துவிட்டது! மேற்கண்டவாறு தாம் அடைந்த இன்னல்களுக்காக அந்த நாடக முதலாளியை 7500 டாலர்கள் நஷ்டஈடு தரும்படி கேட்டு அப்படியே பெற்றுகொண்டாராம்! இதைக்கண்ட 'ஹெர்ட்போர்ட்ஷையரிலுள்ள ஒரு சினிமாக் கொட்டகை முதலாளியொருவர், தன் கொட்டகைக்குச் சினிமா பார்க்க வருபவர்கள் சிரிப்பினால் எந்தவித ஆபத்தும் நேர்ந்தால் அதற்குத் தான் பொறுப்பாளியல்ல என்று விளம்பரப்படுத்திவிட்டாராம்!

இங்கிலாந்தில் ஓங்கர் என்ற பகுதியில் வாழ்ந்த எசக்ஸ் என்பவர் தனக்குச் சிரிப்பை உண்டாக்குபவர்களுக்கு 100-டாலர்கள தருவதாகப் பிரகடனப்படுத்தினாராம்! அவரைச் சிரிக்கவைபபது அவ்வளவு கடினமான செயல் போலிருக்கிறது!

தன் வாழ்க்கையிலேயே இரண்டே இரண்டு முறைதான் சிரித்திருக்கிறாராம், 21-வயதுடைய ஜெர்மானிய இராணுவத் தலைவரான 'ஹெல்முத்' என்பவர்.

இப்படி, தனக்குத்தானே சிரிப்பவர்களைவிடப் பிறருக்குச்சிரிப்பை உண்டக்குபவர்களைத்தான் திறமைசாலிகள் என்று சொல்ல வேண்டும். இலண்டனில் எர்லிங் என்ற இடத்தில் வசித்துவந்த ஒருவர் பிறரைச் சிரிக்கவைப்பதில் மிகப்புகழும் பெயரும் பெற்றவராம். இவரை எந்த ஒரு நாடகக் கொட்டகைக்குள்ளோ சினிமாத் தியேட்டருக்குள்ளோ அனுமதிப்பதில்லையாம்! இவர் உள்ளே சென்றால் சுற்றியிருக்கும் மக்களுக்குச் சிரிப்பை உண்டாக்கிக் கொண்டு படக்காட்சியைப் பார்க்க விடமாட்டாராம்!

இதையெல்லாம் தெரிந்துகொண்டபின்னரும் யாருக்காவது சிரிப்பு அடக்க முடியாமல் வந்தால் அவர்களெல்லாம் உடனே சிரித்தே இறந்தவர்களையும், பல இன்னல்கள் அடைந்தவர்களையும் நினைத்துக்கொண்டால், வந்த சிரிப்பு, தானேபோய்விடுமல்லவா!

அழுவது சிரிப்பின் நேர் எதிர்மாறான செய்கை. சிரிப்பு எப்படி உள்ளத்தின் உவகையைக் காட்டுகிறதோ, அதுபோலவே அழுகை உள்ளத்தின் துயரத்தைக் காட்டும். அழுவதிலும் எத்தனையோ வகைகள் உண்டு! சிலர் எவ்வளவுதான் துனபங்கள் தனக்கு வந்துற்றாலும மனதிலேயே அடக்கிக் கொள்வார்கள். இத்தகையவர்களுக்குப் பெரும்பாலும் கண்ணீரென்பதே வராது. சிலர் எந்த ஒரு சிறிய துன்பத்திற்கும் மிகப் பெரிதாக வருந்துவார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு நினைத்ததற்கெல்லாம் கண்ணீர்தான் வரும். இவர்கள் ஒருபுறமிருக்க, மகிழ்ச்சியால் ஆனந்தக் கண்ணீர் விடுபவர்களும் இருக்கிறார்கள்!

மிகஅதிகமாகச் சிரிப்பதில்சிலர் எவ்வாறு பெரும் இன்னல்கள் அடைந்திருக்கிறார்களோ, அவ்வாறே மிக அதிகமாகத் துயரம் வந்தபோது அதை வெளிக்காட்டி அழாமல் மனத்துள்ளேயே

அடக்கிவைப்பதிலும் இருக்கிறது என்று விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளார்கள்! மன மகிழ்ச்சியோடு மிதமாகச் சிரிப்பது உடலுக்கு நன்மை புரிகிறது. அதுபோல இன்னலோ துயரமோ வந்தபோது அதைக் கண்ணீர்விட்டு அழுவதின்மூலம் வெளிப்படுத்திவிட்டால், மனதிலிலுள்ள துயரம் குறைந்து உடலும் உள்ளமும் புத்துணர்ச்சி பெற்றாற்போல் ஆகும். அவ்வாறு அதிகத்துன்பம் வந்தபோது அதை மனத்துள்ளேயே அடக்கிவைத்துப் புழுங்கச் செய்வதால் உடலுக்குப் பல கேடுகள் வருகின்றன என மருத்துவநிபுணர்கள் கூறுகின்றனர். சீரண சக்தி பாதிக்கப்பட்டு, நரம்பு வியாதி தோன்றுவதோடு இரத்த அழுத்தம் உண்டாகி இருதயம் மிக வேகமாக அடித்துக் கொள்ளும். மேலும் நிரந்தரமான தலைவலியும், இரவில் உறக்கமின்மையும் ஆஸ்மாவும் உண்டாகிறதாம்! இவைகளெல்லாம் அதிகதுயரம் வந்தபோது அதைக் கண்ணீர்விட்டு அழாததின்மூலம் உண்டாகும் கேடுகள்!

சிரிப்பதையும் அழுவதையும் நாம் வாழ்க்கையில் மிகச் சாதாரண செய்கைகள் என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவைகள் மூலமும் மனிதனுக்குப்பல கேடுகள் நிகழ்கின்றனவே! அதிகமாகச் சிரித்தாலும் ஆபத்து! அப்பப்ப! இதை நினைத்தலே நமக்கே சிரிப்பு வருகிறது! உடனே அழுகையும் வருகிறதே!

★

புறம் காட்டும் வீரம்

[நெடுவாணன்]

வீரமென்பது என்ன? உள்ளத்தில் முகிழ்த்திடும் ஊக்கத்தின் முதிர்ச்சி பெற்ற எழுச்சியே வீரமாகும். வீரத்திற்கு அன்பும் பண்பும் அணிகலன்கள்: அறமும் மறமும் இரட்டைக் குழவிகளாக ஆட்கொள்வதே வீரத்தின் சிறந்த ஊற்று. தன்னிகர் பெற்ற வீரனுடன் நேர் நின்று புரியும் போர்தான் வீரத்தின் செம்மல்—ஆண்மையின் உலைக்களம்—நிலைக்களம் என்பதை உணர்த்தும்.

தமிழகத்தின் மண், வீரத்தின் விளைநிலம்: கலை கொஞ்சும் நிலைக்கூடம்; இலக்கியத் துறையின் எழில் மாடம்; அன்பின்பிறப்பிடம்; பண்பின்சிறப்பிடம்; நாகரிகத்தின் ஊற்றுக்களம்—என்பதைச் சொல்லாமல் சொல்லி விளக்கும் ஆற்றல் பெற்றவை, நமது சங்க இலக்கிய ஏடுகள்! அத்தகைய ஏடுகளில் வீரத்தினை நேரே படம்பிடித்துக் காட்டும் நூற்களில், புறநானூறு சிறப்பிடம் பெற்று, தலைமை வகிக்கும் தன்மை கொண்டதாகும். ஈண்டு புலவர் ஒருவர் காட்டும் போர்க்களக் காட்சியைக் காண்போம்.

போர்க்களம் வீரர்குழாம் விளையாடும் செருமுனை! போர்க்களத்திலே வீரர்களெழுப்பிடும் கூச்சலோ, கடல் அலைகள் எழுப்பிடும் ஒலிபோல் இருந்தனவாம். அந்தப் பாசறையின நடுவே, மனம் செருக்கியவாறு, வடித்த கூர் வேலைத் தாங்கிய வீரனொருவனை ஏறு நடையில் செல்கின்றான். தோள்புடைத்து, வேல் பிடித்து, அவன் போடும் வீரநடையில் காணும் பெருமிதந்தான் என்னே! அணியன்றோ, வீர நடை பெருந்தோளானுக்கு! அவன் வாள் வீசிச் சுழற்றுந் திறத்தைச் செப்பிட-நாவொன்று போதுமோ? அப்பப்ப! அம்மறவன் வாள்பட்ட உயிரினங்கள் மீண்டதில்லை. துள்ளிய மகன் கிள்ளியெறியப்பட்டானே தவிர, பிழைத்தது கிடையாது. களிறுப் படைகள் கண்டதுண்டமாயின; பரிகள் கூட்டம் சிதைந்து பாழாயின; ஊர்ந்த தேர்கள் உருவிழந்தன; எண்ணற்ற வீரர்கள், கால் வேறு, கரம் வேறு, சிரம் வேறாகச் சிதைந்து கிடந்தனர், மறவன் கரம்பட்டு, சிறபபில் முண்டமானோர் — உறுப்பில் பிண்டமானோர், கணக்கற்றோர்! வரும் படையாவுங்கொன்று, குவித்த வண்ணமாகவல்லவா இருக்கின்றான், வாள்பிடித்த சளையாத காளை! இவனால் செருக்களம், 'குருதிக் குளம்' ஆகிவிடுமோஎன மலைத்தனர் பலர். அம்மவோ, எங்கு பெற்றனவோ, அவன் தோளும் வாளும் வியத்தகு ஆற்றல்!

இத்தகைய வீரத்துடன் போராடும் அம்மறவனை, ஈன்ற தாய் நேரே காண்கின்றாள். மகன் ஆற்றல் காணக் காண, எல்லையில்லா மகிழ்ச்சி; சொல்லவொண்ணா உவகை; ஈன்ற பொழுதின் பெரிதும் பேருவகை பூண்டாள். மறமகன் போராடும திறத்தை யெண்ணி யெண்ணி வியந்தாள். 'இவ்வீரனைப் பெற்ற நாமன்றோ பெரும்பேறு பூண்டவள்—கொண்டவள்' — என்றெண்ணி வரம்பு காணா மகிழ்ச்சியில் மூழ்கினாள். இடையிடை சுழன்று சுழன்று போராடும் அவ்வீரனை, மாற்றான் ஒருவன், அவன் அறியாவகையில், அவன் உடலைச் சிதைத்தான். கொள்கை வீரனோ இடம் பெயராமல் போராடினான். சளைக்கவில்லை; உடல் அழிவு கண்டு மலைக்கவில்லை. புறமிட்டு ஓடவில்லை. உயிர் துறக்கும் வரையில் நின்ற இடத்திலே நின்றவண்ணம் வீரச் சமர் புரிந்தான். முடிவில் உயிர்நீத்தான் கொள்கை வீரன்! கொள்கை மகன் மாண்பு கொண்ட தாய்க்கோ மனம் புண்ணடையவில்லை; எண்ணம் பின்னடையவுமில்லை. மாறாக, தன் மகனின் உறுதி கண்டு, மாண்பையெண்ணிட்ட தாய்க்கு, வற்றிய மார்பகத்தில் பால்சுரந்ததாம். அப்பப்ப! என்னே உறுதி! படையை நிலை கலக்கி, முறியடித்த மகனின் மடிவு கேட்டு, மனங் கலங்கவில்லை. கண்களில் நீர் கொப்பளிக்கவில்லை. மாறாக, மகிழ்ச்சியின் ஊற்றால், மார்பகத்தில் பால் ஊற்றெடுத்ததாம்! வீரத்தின்—மறத்தின் திண்மை—நெஞ்சழுத்தம்தான் என்னே! இவ்வீரக் காட்சியை, நம் கண்முன் நிறுத்தி, மறக்கமுடியாமல் செய்துவிட்டார் பெரும்புலவர் ஔவையார். வாழ்க அப்புலவர் வடித்த பாடல் :—

"கடல்கிளர்ந் தன்ன கட்டூர் நாப்பண்
வெந்துவாய் வடித்த வேல்தலைப் பெயரித்
தோடுஉதைத்து எழுதரூஉத் துரந்துஎறி ஞாட்பின்
வருபடை போழ்ந்து வாய்ப்பட விலங்கி
இடைப்படை அழுவத்துச் சிதைந்து வேறு ஆகிய
சிறப்புடையாளன் மாண்புகண்டு அருளி
வாடுமுலை ஊறிச் சுரந்தன
ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே."

★

திராவிட நாடு

1—6—58 | வார வெளியீடு | விலை 16காசு

66

4 - JUL 1958

MADRAS

தோற்றம்:
15—1—1900

மறைவு:
22—5—1958

காங்கிரஸ் சீர்திருத்தம்

> மறைந்த அண்ணன் பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் "சண்டே அப்சர்வர்" ஆங்கில ஏட்டின் மூலம், வாரா வாரம் தீட்டிடும் கருத்தோவியங்களைப் படித்து இன்புற்றோர் ஏராளமாகும். மறைந்த அப்பெரியார், கடைசியாகத் தனது ஏட்டில் தீட்டிய கட்டுரை இது :-

வங்காள காங்கிரசிற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி பற்றி அங்குள்ள முதலமைச்சருக்கு, அண்மையில், பண்டித நேரு எழுதிய கடிதம் ஒன்றில், காங்கிரசில் ஏற்பட்டுள்ள தொல்லைகளுக்கான அடிப்படைகளை ஆராய்ந்திருந்தார். மந்திரிகளையும், உறுப்பினர்களையும் பொறுக்குவதில் காங்கிரஸ் தனது தகுதியை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்றும், அறிவாளிகள் வந்து சேரும்படியாகத் தன்னை ஆக்கிக்கொள்ள வேண்டுமென்றும், அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். ஆனால் காந்தியாருக்குப் பிறகு ஏற்பட்ட சகாப்தத்தில், காங்கிரசுக்கு இந்த வகையில் இறங்கு முகம்தான்! சுமார் 1918-வாக்கில், பிரிட்டிஷாரை எதிர்த்து மக்களைத் திரட்ட வேண்டும் எனும் எண்ணத்தில், நாலணா கொடுக்கும் யாரும் சேர்ந்துகொள்ளலாமென்று, கதவுகள் விரியத் திறந்துவிடப்பட்டன. கதர் — மதுவிலக்கு — மொழிவாரி மாகாணம்—கிராமத்துக்குப் போவோம் என்பன போன்ற, திட்டங்களையும் வகுத்துக்கொண்டது. பிரிட்டிஷாருடன் போராட வேண்டியிருந்ததால், ஒருவர் சொல்லுக்கு ஆடுவதென்பதும் முறையாகக் கருதப்பட்டது. மேலிடத்தின் உத்தரவுக்கு மக்கள் கீழ்ப்படிய வேண்டியவர்களாயினர் — இராணுவத்திலுள்ளதுபோல் ஒரு கட்டுப்பாடு அமுலாக்கப்பட்டது—செய் அல்லது செத்துப்போ, என்பதே விதிமுறையாகக் கருதப்பட்டது. சிறைக்குச் செல்வது, சத்யாக்கிரகம் செய்வது போன்ற தியாகச் சேவைகளுக்கும் மக்கள் தூண்டப்பட்டனர். இதனால் எல்லாம் ஒரு ஆர்வமும், உணர்ச்சியும் உண்டாக்கப்பட்டது! இந்த வேகத்தின் காரணமாக, கொள்கைகளை வரையறுப்பதிலும் நடைமுறையிலும் சிரத்தை காட்டப்படவில்லை. அதிகார வாய்ப்பும் வசதியும் பெறத்தக்க சிலர், அங்கே இடம் பெறலாயினர். ஜெயக்கர் போன்ற புத்திசாலிகள், விரைவில் வெளியேறினர். டேஜ்பகதூர் சாப்ரு போன்றவர்கள், அதில் சேரவில்லை. உறுப்பினர் தொகை அதிகமாக வேண்டும் என்பதிலும், சொன்னதைக் கேட்பவர்கள் இருக்க வேண்டுமென்பதிலும் அதிகக் கவனம் எடுத்துக்கொள்ளப்பட்ட காரணத்தினால், அறிஞர் பெருமக்கள் பலருக்கு அங்கு இடம் தரப்படவில்லை. பிரிட்டிஷாரை வெளியேற்றும் ஒரு மக்கள் இயக்கம் என்று மட்டுமே கருதப்பட்டது! காங்கிரஸ் இப்போது ஆட்சிக்கு வந்துவிட்டதால், இந்த நோக்கத்துக்கு இப்போது வேலையில்லை. நல்லாட்சிக்குத் தேவையான புத்திக் கூர்மையும், ஆய்ந்தோய்ந்து செய்யும் திறனுமே ஒழிய, முழக்கங்களோ வீரமோ அல்ல; சொன்னதைக் கேட்கும் சுபாவமும் கூடாது — எதையும் யோசித்துச் செய்யும் பக்குவம் வேண்டும். இதனால்தான் சுயராஜ்யம் கிடைத்ததும் காங்கிரசைக் கலைத்துவிடும்படி காந்தியார் சொன்னார்!! ஆனால், காங்கிரஸ் தலைவர்கள் அந்தமதியை ஏற்கமறுத்தனர் — ஏனெனில், தேர்தலில் வெற்றி பெற்று வரக் கட்சியிருக்க வேண்டுமெனக் கருதினர். ஆனால், அப்படிப்பட்ட நல்லதொரு அரசியல் கட்சியாகவோ, ஆளுங்கட்சியாகவோ அது விளங்குகிறதாவெனின், இல்லை.

ஆளும் கட்சியாக விளங்க வேண்டுமென்றால், காங்கிரஸ் தன் கொள்கைகளை இல்லாவிட்டாலும், எண்ணங்களையாவது மாற்றிக் கொள்ள வேண்டும். நடைமுறைக்கு ஒத்த, அறிவுக்கு ஏற்றதான வகையில், அரசியல் ரீதியில் அதன்போக்கு இருக்கவேண்டுமே ஒழிய, கதர் அபிவிருத்தி போன்றவைகளின் அடிப்படையில் கொள்கைளை வகுப்பதை, விட்டுவிட வேண்டும். அதன் உறுப்பினர்கள் கற்றறிந்தவர்களாகவும், இலாப வேட்டையில் ஆசையில்லாதவர்களாகவும் இருக்க வேண்டும். சர்க்காரை நடத்துவதிலும், ஆலோசனைகள் பெறும் போதும், கட்சிக்கு அப்பாற்பட்ட திறமைசாலிகளைப் பயன்படுத்திக் கொள்ளும் தைரியம் வர வேண்டும். இருப்பதைவிட அதிகமான சுதந்திரமும் சகிப்புத்தன்மையும், நிலையை அறியும் பண்பும்தான் இன்று காங்கிரசுக்குத் தேவை. நேரு, தலைவராக இருக்க விரும்புவாரேயானால், உயர்ந்தஒழுக்கமும் இந்தப் பண்பாடுகளும், காங்கிரசில் உண்டாகும்படி செய்ய வேண்டும். கெட்டுவிட்டது, கெட்டுவிட்டது என்று குற்றஞ்சாட்டிவிட்டு, அதற்கான மாற்றத்தை எதிர்காலம் செய்து கொள்ளட்டும் என்று விட்டுவிடுவதால், காங்கிரசுக்குப் பயனில்லை!!

★

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [1—6—58] தனிப் பிரதி 16-காசு [இதழ்

இலட்சிய வீரரை இழந்தோம்

எடுத்த காரியத்தை எந்த இடுக்கண் வந்துற்ற போதிலும் முடித்தே தீருவேன் என்ற எஃகுள்ளம் படைத்த எங்கள் பெரிய அண்ணன்—கட்சியின் நலனுக்காகத் தனத்தையும் தன்நலத்தையும் இழந்தும் மறந்தும் மறையாப் புகழ்பெற்ற மாண்பினன்—இலட்சியமே என் உயிர், மற்றவையெல்லாம் எனக் கலட்சியம் என்று எழுத்தாலும் பேச்சாலும் நிலை நாட்டிய நீதிக் கட்சியின் செம்மல்—நேர்மையின் இருப்பிடம் திரு: பாலசுப்ரமணியம் அவர்கள் இன்று நம்மிடம் இல்லை—இயற்கை தனதாக்கிக் கொண்டு விட்டது.

இருபதாண்டுகளுக்கு மேலாகவே இயக்கப்பணி புரிந்து திராவிட மக்களின் முன்னேற்றத்திற்கு வழி கோலியவர்களில் ஒருவரை—நெஞ்சுரம் படைத்த நல்லவரை நாடு இழந்துவிட்டது — நாம் இழந்து விட்டோம்.

இனி நாம் அவரைக் காணமுடியாது — ஆம் அவர் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார் —நாம் அவரை பிரிந்து நிற்கிறோம் — பிரிவாற்றாமையால் கலங்குகிறோம்—கதறுகிறோம்.

இயற்கை எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்த போதிலும், இடையிடையே அதற்கும் கொடுமையில் பற்றும் பாசமும் ஏற்பட்டு, "நல்லது செய்கிற நான் நல்லவர்களை என்னிடமே வைத்துக்கொள்வேன்" என்ற பொறாமையுணர்ச்சியுடன் நடந்து கொள்வதைப் பார்க்கும்போது, இயற்கையே உனக்கு இன்னது செய்யலாம், இன்னது செய்யக் கூடாதென்ற நியதியே கிடையாதா என்றுகூடக் கேட்கத் தோன்றுகிறது.

இன்று நமக்கிருக்கும் ஆதரவையும் இருபதாண்டுகளுக்கு முன் நமக்கிருந்த ஆதரவையும் ஒப்புநோக்கிப் பார்ப்பவர்களுக்குத்தான் திரு. பாலசுப்ரமணியம் போன்றோரின் தொண்டின் அளவு எவ்வளவென்பது தெரியும்.

நீதிக்கட்சியின் நிலை பெயராத் தொண்டராக இருந்து, அவர் திராவிட மக்களின் முன்னேற்றத்தில் எந்த அளவு பற்றும் பாசமும் கொண்டு பணியாற்றினார் என்பதை அறிய விரும்புவோர், அவரால் நடத்தப்பட்ட "சண்டே அப்சர்வர்" பத்திரிகையின் பழைய பிரதிகளை ஒருமுறை திருப்பிப் பார்த்தால் நன்கு தெரியும்.

1938-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போரின் வெற்றிக்கு அவரால் நடத்தப்பட்ட ஆங்கில வார இதழும் (Sunday observer) ஒரு காரணமாக இருந்ததென்றால், அது மிகைபடக் கூறுவதாகாது. இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டுத் தண்டிக்கப்பட்டவர்கள் சிறையில் பட்ட கொடுமைகள் திரு. பாலசுப்ரமணியம் அவர்கள் தீட்டிய தலையங்கத்தால் நீக்கப்பட்டன என்பதை நாம் அறியும்போது, ஆதரவு அதிகம் பெறாத நமக்கு அந்தக் காலத்தில் அது எவ்வளவு உதவியாகவும் பெருமையாகவும் இருந்ததென்பதைச் சொல்லவும் வேண்டுமோ !

பொதுவாகவே திராவிட இயக்கத்தில் பற்றுக் கொண்டு பணியாற்றிய பாலசுப்ரமணியம் அவர்கள், தமது கடைசிக் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் நேரடியான தொடர்பு வைத்து, நமது இலட்சியங்கள் நிறைவேற ஆர்வமும் ஆசையும் கொண்டு பணியாற்றி வந்தார்.

திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள், பழந்தலைமுறையின் ஒரு பெருமைமிக்க பிரதிநிதியாக விளங்கியவர்; சமுகத்தில் நிலவுகிற கொடுமைகளுக்கும், அநீதிகளுக்கும் எதிராகப் போராடுவதிலேயே வாழ்நாளைச் செலவிட்ட பெருந்தகையாளர்.

திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஒரு நல்ல பேச்சாளர். தமக்குச் சரி என்று படுகிற கருத்தினை வலியுறுத்துவதற்காக, கடுமையான பதப்பிரயோகத்திற்கும்கூடத் துணிந்து விடுகிறவர். தேர்தல் காலங்களில், மக்களிடை பேசும்போதெல்லாம் அவரது குரலில் தொனிக்கும் உறுதி, பலருக்கு ஆச்சரியம் தருவதாயிருக்கும். தமது இளமைப் பிராயந் தொட்டே அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்த அவர், எவருக்கும் அஞ்சாத துணிச்சல் மிக்கவராய், சுயசிந்தனையுடையவராய் விளங்கியவராவார்.

நமது இலட்சியம் நிறைவேறிக் கொள்கை வெற்றி பெறுவதைக் கண்டு களிக்கும் அவாவோடு பணியாற்றியவரை இடையே இயற்கை புகுந்து தனதாக்கிக்கொண்டு விட்டது.

உண்மைக்கும் நேர்மைக்கும் உறைவிடமாக விளங்கிய உத்தமரை நாம் இழந்துவிட்டோம். அவருடைய இழப்பால் வருந்தும் எல்லாருக்கும் நமது ஆறுதல் மொழிகளைக் கூறி, அவர் செய்த

தொண்டை அவர் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து செய்வோம் என்ற உறுதியை எடுத்துக் கொள்வோமாக. வாழ்க அவர் புகழ்! வளர்க அவர் தொண்டு.

*

நீதிக் கட்சிக் காலந்தொட்டு திராவிடர் இயக்கத்தில் பற்றும், பாசமும் கொண்டு இடைவிடாது பணியாற்றி வந்தவரும், 'சண்டே அப்சர்வர்' ஆங்கில வார இதழின் ஆசிரியருமான பி. பாலசுப்பிரமணியம் அவர்கள், தமது 58-வது வயதில், 22—5—58 காலை 8-மணியளவில் இயற்கையெய்தினர்.

கடந்த சில காலமாகவே நோய்வாய்ப்பட்டிருந்த அவர், மீண்டும் உடல்நலம் பெற்று வருவதாகவே நமக்குத் தகவல் தரப்பட்டுவந்தது, எனினும்' அவர் மாரடைப்பால் நம்மிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டார் என்ற செய்தி நம்மைத் திடுக்கிடவைத்துவிட்டது.

செய்தியறிந்ததும், நமது பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களும் மறைந்த அத்தலைவருக்கு இறுதி வணக்கம் செலுத்த, இராயப்பேட்டையில் உள்ள அவரது இல்லத்திற்கு சென்றிருந்தனர்.

கழகத்தின் சார்பில், பொதுச்செயலாளர் அவர்கள், மறைந்த அத்தலைவருக்கு மலர்மாலை அணிவித்து, இறுதி வணக்கம் செலுத்தினர்.

என். வி. நடராசன், மு. கருணாநிதி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, சத்தியவாணிமுத்து, முல்லை-சக்தி, அலமேலு-அப்பாதுரை முதலியோரும் மலர் மாலைகள் அணிவித்து, தங்களது இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டனர்.

டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி எம். பி., நகரசபைத் துணை ஆணையாளர் என். சங்கரன் முதலியோரும், தங்கள் மரியாதையைத் தெரிவித்தனர்.

மறைந்த திரு. பாலசுப்பிரமணியம் அவர்களது சடலம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, இல்லத்தின் முன்வாயிலில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது.

மறைவு கேட்ட கழகத் தோழர்கள் பலரும், பொதுமக்களும், மறைந்த வீரரைக் காண ஏராளமாகக் கூடித் தங்கள் மரியாதையைத் தெரிவித்தனர்.

1900-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 15-ம் நாள் பிறந்த திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் தமது இளமைப் பருவம் தொட்டே அரசியலில் ஈடுபாடு கொண்டு விளங்கியவர். கடந்த சுமார் இருபத்தைந்து ஆண்டுக் காலமாக, நீதிக்கட்சி திராவிடர் இயக்கம் ஆகியவற்றில் நீங்காப் பற்றுக்கொண்டு அரும்பாடுபட்டவர். அவரது மறைவு நமக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும்.

கடந்த 22 ஆண்டுக் காலமாக 'சண்டே அப்சர்வர்' என்ற ஆங்கில வார இதழைத் தோற்றுவித்து நடத்திவந்த அவர், கடந்த 1957-ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தென்சென்னைப் பாராளுமன்றத் தொகுதியில் தி. மு. கழக அபேட்சகராகப் போட்டியிட்டு, எதிர்த்து நின்ற காங்கிரஸ் அபேட்சகர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரைவிட ஒரு சில வாக்குகள் குறைவாகப் பெற்றதனால் வெற்றி பெறத் தவறிவிட்டார். 1952-ம் ஆண்டிலும், அதேதொகுதியில் கழகத்தின் ஆதரவு பெற்று, பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார். தேர்தலின்போது நமது கழகத்தின் உறுப்பினராகி, கழக வளர்ச்சியில் மிக்க ஆர்வம் காட்டிவந்தார்.

மறைந்த அவருக்கு தவறிப் போய்விட்ட முதல் மனைவியார் மூலம் ஒரு மகனும், மூன்று பெண்களும் உள்ளனர்; இரண்டாம் மனைவியாருக்கு மூன்று ஆண்பிள்ளைகளும், இரண்டு பெண்பிள்ளைகளும் உள்ளனர்.

அவரது மறைவால் துயருறும் அவரது துணைவியாருக்கும் பிள்ளைகளுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

★

தங்கல்: மன்னார்குடி
22—5—58

"நமது **பி. பாலசுப்பிரமணியம்** அவர்கள் இறந்துவிட்ட செய்தியை இன்று மாலை 5½-மணிக்கு அறிந்து திடுக்கிட்டேன். நமக்கெல்லாம் மூத்த அண்ணனாகத் திகழ்ந்தவர் பிரிந்துவிட்டார்; இந்த ஆற்றொணாத் துயரை எப்படித் தமிழக மக்கள் தாங்கிக் கொள்ளப்போகின்றனரோ?

இன்று சென்னையே துக்கக் கடலில் ஆழ்ந்திருக்குமெனக் கருதுகிறேன்.

நான் நேரில் வந்து இறுதி வணக்கம் செலுத்த இயலாமற்போனபோதிலும் நம் தோழர்கள் அனைவரும் சென்று, அன்னாருக்கு இறுதி வணக்கம் செலுத்தி அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறிவாருங்கள்.

ஒரு குடும்பத் தோழரை — அண்ணனைப் பிரிந்த இந்தத் துக்கத்தை என்னால் மறக்க முடியவில்லை.

தமிழக மக்கள் அத்தனை பேருக்கும் எந்த வார்த்தையைக்கொண்டு ஆறுதல் கூறுவது என்பதே எனக்குப் புரியவில்லை."

அண்ணாதுரை

செலவைத் தவிர்த்த தோற்றம்

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருக்கும் தமிழ்க் குடும்பம் அது. அந்தக் குடும்பத் தலைவனும் தலைவியும் களவு வாழ்வில் இணைத்துப் பின்னர் கற்புவாழ்வை மேற்கொண்டவர்களாவர். குறு குறு என நடந்தும் மழலை மொழிந்தும் கண்ணுக்கும் காதுக்கும் விருந்தளிக்கும் புதல்வன் ஒருவனும் அவர்களுக்குப் பிறந்திருந்தான். இவ்வாறு காதல் அமுதமும் குழந்தை இன்பமும் குறைவின்றி நிறைந்திருந்ததால் அந்தக் குடும்பத்தில் இன்பமும் அமைதியும் இணைந்து குலுங்கின.

நாட்கள் நகர்ந்தன. அன்பும் அறனும் உடைய பண்புடைய அந்தக் குடும்பத்தில் துன்பப் புயல் வீசத் தொடங்கியது. தலைவன் கவலை கொண்டான். அதைக் கண்ட தலைவிக்கோ கலக்கம் மிகுந்தது. இதற்கெல்லாம் காரணம் பொருளே ஆகும்.

பொருள், வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாகும். அதனை ஈட்ட வேண்டியது ஆடவரது தலையாய கடமையாகும். பொருளை இருப்புப் பெட்டியுள் இறுக்கி வைப்பதற்காக அறத்திற்கு முரணான வழிகளில் செல்லும் இக்காலத்தவரைப்போல் பண்டைத் தமிழர்கள் வாழ்ந்தார்களில்லை. விருந்தோம்புதற்கும், சுற்றம் தழுவுவதற்கும், இரவலர்களைப் புரப்பதற்கும், முன்னோர்கள் தேடிவைத்த செல்வத்தைச் சிதைத்தல் கூடாது என்ற கருத்தை நிலை நிறுத்துதற்கும் அவர்களுக்குப் பொருள் தேவைப்பட்டது. இத்தகைய அறத்தின் அடிப்படையிலே எழுந்த தேவைக்காகத்தான் பழந்தமிழர்கள் பொருளீட்டச் சென்றனர்.

அறத்தின் அடிப்படையிலே எழுந்த தேவைதான் தலைவனுக்கும் பொருள் தேடும் கவலையைத் தந்தது. அந்தப் பொருளைச் சொந்த ஊரிலேயே ஈட்டுவதற்கு வழியிருந்தால் கவலையில்லை. ஆனால், தலைவன் வாழும் ஊரிலோ அந்த வாய்ப்பு இல்லை. அவன் வெளிநாடு சென்றுதான் பொருளைப் பெருக்கவேண்டியிருந்தது. அதை எண்ணித்தான் தலைவன் கவலை கொண்டான். இன்னுயிர்க் காதலியையும், அருமை மகனையும் பிரிந்து நெடுந்தொலைவு எப்படிச் செல்வது எனக் கலங்கினான். மனைவியையும் மகனையும் எண்ணிக்கொண்டு 'ஈதலும் துய்த்தலும்' இல்லாது வறியனாய் வாணாளை வீணாக்குவதா என்ற கடமையுணர்ச்சியும் அவ்வப்போது அவனிடையே எழுந்தது. இத்தகைய போராட்டங்கள் அவனுள்ளத்தே நடந்து அவனைத் துயருறுத்தி வந்தன. இறுதியில் பொருள் தேட மனைவியையும் மகனையும் பிரிந்து சென்றுவிடுவது என்ற முடிவுக்கு வந்தான். ஆனால், "இந்த முடிவைத் தலைவியிடம் புறப்படுவதற்கு முன் கூறுதல் கூடாது. அப்படிக் கூறினால் எனது செலவுக்கு அவள் ஒருபோதும் ஒருப்பட மாட்டாள். எனவே செல்லும் போதுதான் அவளிடம் சொல்ல வேண்டும்" என்றெண்ணிச் செலவுக்கான செயல்களில் ஈடுபடத் தொடங்கினாள்.

து. இரத்தினவேல்

தலைவன் பொருள் தேட வெளிநாடு செல்ல இருக்கும் சேதி தலைவியின் காதுக்கு எப்படியோ எட்டியது. எட்டியவுடன் அவள் கொண்ட கலக்கமும் உற்ற துயரமும் பெரிது; மிகப் பெரிது. 'வினையே ஆடவர்க்கு உயிர்' என்பதையும், வினையின் ஒரு கூறே பொருளீட்டல் என்பதையும், பொருள் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்று என்பதையும் அவள் நன்குணர்வாள். இருந்தும் அவள், தலைவன் பொருளீட்டச் செல்ல இருக்கும் சேதி அறிந்து ஆறாத் துயருற்றாள். காரணம், பொருளின் பொருட்டுத் தலைவன் தன்னையும் அருமை மகனையும் பிரிந்து செல்கிறானே என்பதுதான். அத்துடன் மட்டுமல்லாது தலைவன் கடந்து செல்ல வேண்டிய காட்டு வழிகளையெல்லாம் அவள் கணநேரம் எண்ணிப் பார்த்தாள். ஐயகோ! அதை எண்ணவே அவள் நெஞ்சு பதறியது. நீரும் நிழலும் அறியாமல் பகலவனுடைய கடுங் கதிர்களால் வெந்து தீய்ந்த காடு, காய்ந்து போன ஓமை மரங்கள், அவற்றிற்கிடையே பாறைகளில் உதிர்ந்த நெல்லிக் காய்கள், விளையாடும் வட்டுக் காய்கள்போல் சேர்ந்து கிடக்கும் அவற்றின் தோற்றம், பதித்து வைத்தாற்போன்ற கூர்மையான கற்கள், தீட்டப்பட்டாற் போன்ற அவற்றின் தேய்ந்த கூரிய முனைகள், அவற்றால் நடப்பவரின் கால் விரல் முனைகள் சிதையும்படியான வழிகள், அவ்வழிகளில் வருபவர்களை அம்பெய்து கொன்று பொருளைக் கவர்கின்ற ஆறலை கள்வர்கள்—இத்துணையும் தலைவியின் மனக்கண் முன் தோன்றி அவளை நடுங்கச் செய்தது. தன்னையும் தன் மகனையும் பிரிந்து தன் இன்னுயிர்க் காதலன் இக்கொடிய காட்டு வழிகளில் செல்லத் துணிந்

திருப்பதை அவளால் பொறுக்க முடியவில்லை. முன்பு—தலைவனும் அவளும் களவுக் காதலராய் இன்பம் துய்த்து வந்த காலை—தலைவன் அவளுக்களித்த வாக்குறுதியொன்று அதுபோது அவளது நினைவிற்கு வந்தது. "கண்ணே! இனி உன்னை எக்காரணத்தைக் கொண்டும் பிரியேன்; பிரிதல் அறநெறி அன்று என்று கொள்வேன்"—இப்படி அன்று எனக்குச் சொன்ன காதலர் இன்று என்னையும் மகனையும் பிரிந்து செல்லத் துணிந்தாரே! என வருந்திச் சோர்ந்தாள் தலைவி.

தலைவன் செலவுக்கான ஏற்பாடுகளை யெல்லாம் செய்து முடித்துவிட்டுத் தலைவியிடம் தன செலவைக் கூறி விடைபெற எண்ணி வந்தான். அவ்வேளையில் தலைவி அடுக்களையில் தன் மகனை வைத்துக்கொண்டு அலுவலாய் இருந்தாள். வந்த தலைவன் "அன்பே!" என அழைத்தான். தலைவனின் குரல் கேட்டாள் தலைவி. தன் செலவைக் கூறி விடை பெறவே தலைவன் தன்னை அழைக்கிறான் என்பதை உணர்ந்தாள். பிரிவு வேதனையால் அவள் உள்ளம் வெந்து கொண்டிருந்தது. அதனால், கூப்பிட்ட கணவனுக்கு மறுமொழி கூற அவளால் இயலவில்லை. மெல்ல எழுந்தாள். தளர்ந்து நடந்தாள். உளநிலை ஊறு உற்றிருந்ததால் நடக்கவும் முடியவில்லை. அவளது மெல்லிய அழகிய பாதம் நிலத்தில் வடு ஏற்படுத்திட நடந்தாள். அழைத்த கணவனை நெருங்கிச் சென்றாள். அப்பொழுதும் அவள் அவனுடன் ஒன்றும் பேசவில்லை. அவன் முகத்தை ஏறிட்டுப் பார்க்கும் துணிவும் அவளுக்கில்லை. தன் கூரிய வெள்ளைப் பற்கள் தெரியுமாறு புன்முறுவல் மட்டும் பூத்தாள். அதுவும் சிறிய அளவிலே தோன்றி வாயினுள்ளேயே நின்றது. அந்த முறுவல் மகிழ்ச்சியால் பிறந்த உண்மைச் சிரிப்பு அன்று. உள்ளத்தில் உள்ளதற்கு மாறாகப் புறத்தே நடிக்கும் பொய் முறுவலாகும். இப்படி வந்து நின்ற தலைவி ஒன்றை நினைத்தாள். முன்பு—களவுக் காலத்தில்—தலைவன் அவளுக்களித்த வாக்குறுதியை—இனி எக்காரணத்தைக் கொண்டும் உன்னைப் பிரியேன்; பிரிவது அறம் அன்று என்று கொள்வேன் என்ற வாக்குறுதியை நினைத்தாள். அன்று அளித்த அந்த வாக்குறுதி இன்று என்ன ஆயிற்று? என்று அவள் கேட்கவில்லை. ஆனால், அந்தக் குறிப்பை மட்டும் உணர்த்துகின்ற ஓவியம்போல் நின்றாள்; பேசாத ஓவியம்போல் நின்றாள். அதுபோது அவள் கண்களில் நீர் நிறைந்து கண் பார்வையை மறைத்தது. ஆனால், கண்ணீர் கன்னங்களில் வழியாதவாறு அடக்கிக் கொண்டாள். தன் துயர் மிகுந்த நிலையை செலவுக்கு ஆயத்தமாகி நிற்கும் கணவன் கண்டு கொள்ளக்கூடாதே என்றெண்ணித் தன் தோளில் சாய்த்து வைத்திருந்த அருமை மகனின் தலையில் சூடியிருந்த செங்கழுநீர் மாலையை முகர்ந்தவாறு முகத்தை மறைத்துக் கொண்டாள். அவளது உள்ளம் வெப்பத்தால் வெந்து கொண்டிருந்ததால் அவள் முகர்ந்த செங்கழுநீர் மாலையும் வாடி அழகிழந்தது.

தலைவியின் இத்தோற்றத்தைக் கண்டான் தலைவன்.

தான் கூப்பிட்ட குரலுக்கு மறுகுரலும் கொடுக்காமல் மனத்துயருடன் தலைவி எழுந்ததையும், எழுந்தவள் என்றும்போல் நடக்கமாட்டாது அழகிய மெல்லிய பாதங்கள் நிலத்தைக் கீறி வடு ஏற்படுத்திடத் தளர்ந்து நடந்து வந்ததையும், வந்தவள் தன்னை ஏறிட்டும் பார்க்காமல் உள்ளத் துயரைமறைக்கப்பொய்யாகச் சிறிதளவு முறுவல் பூத்ததையும், 'பிரிவது அறம் அன்று' என்று முன்பு—களவுக் காலத்தில்—சொன்ன சொல்லை நினைத்துக் கொண்டு ஒரே பொருளை உணர்த்துகின்ற ஓவியம் போல் நின்ற நிலைதனையும், அந்தத் துயர் நிலையிலே கண்களிலே நீர் மல்கியதையும், மல்கிய நீரை அடக்க எடுத்த முயற்சியையும், தன் நிலை தெரியக் கூடாதே என்றெண்ணித் தன் தோள்மீது சாய்ந்திருந்த மகனின் தலையில் சூடியிருந்த செங்கழுநீர் மாலையை முகர்ந்து தன் நிலையை மறைத்ததையும், முகர்ந்தவுடன் மாலை வாடி அழகிழந்ததையும் கண்டான் தலைவன். தான் உடனிருக்கும் போதே இவ்வளவு துயரப் படுபவள், மலர் மாலை வாடி அழகிழக்கின்ற அளவுக்கு வெப்பமான பெருமூச்சு விட்டுக் கலங்குபவள், தான் பிரிந்து சென்ற பின்னர் உயிர் வாழ்வதும் அரிதே என்றெண்ணித் தன் செலவைத் தவிர்த்தான். இவ்வாறு தலைவியின் தோற்றம் கண்டு தலைவன் செலவைத் தவிர்க்கும் காட்சியை,

அளிநிலை பொறாஅது அமரிய முகத்தள்
விளிநிலை கொள்ளாள் தமியள் மென்மெல
நலம்மிகு சேவடி நிலம்வடுக் கொளாஅக்
குறுக வந்துதன் கூர்எயிறு தோன்ற
வறிதுஅகத்து எழுந்த வாயல் முறுவலள்
கண்ணியது உணரா அளவை, ஒண்ணுதல்
வினைதலைப் படுதல் செல்லா நினைவுடன்
முளிந்த ஓமை முதையலங் காட்டுப்
பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை ஈட்டுவட்டு ஏய்ப்ப
உதிர்வன படூஉம் கதிர்தெறு கவாஅன்
மாய்த்த போல மழுகுநுனை தோற்றிப்
பாத்தி அன்ன குடுமிக் கூர்ங்கல்
விரல்நுதி சிதைக்கும் நிரைநிலை அதர
பரல்முரம்பு ஆகிய பயம்இல் கானம்
இறப்ப எண்ணுதிர் ஆயின், அறத்தாறு
அன்றுஎன மொழிந்த தொன்றுபடு கிளவி
அன்ன ஆக என்னுநள் போல
முன்னம் காட்டி முகத்தின் உரையா
ஓவச் செய்தியின் ஒன்றுநினைந்து ஒற்றிப்
பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு
ஆகத்து ஒடுக்கிய புதல்வன் புன்றலைத்
தூநீர் பயந்த துணையமை பிணையல்
மோயினள் உயிர்த்த காலை மாமலர்
மணிஉரு இழந்த அணிஅழி தோற்றம்
கண்டே கடிந்தனம் செலவே; ஒண்டொடி
உழையம் ஆகவும் இனைவோள்
பிழையலள் மாதோ பிரிதும்நாம் எனினே"

என்ற அகநானூற்றுப் பாடலுள் அடக்கிக் காட்டுகிறார், பாலை பாடிய பெருங்கடுங்கோ எனும் பெரும் புலவர்.

கணவன், தன்னையும் பெற்ற மகனையும் விட்டுப் பிரிந்து போவதை ஆற்றாத மனைவியின் நிலையை விளக்க எழுந்த இந்த அகநானூற்றுப் பாடல் நமக்கு இன்னொரு ஐயப்பாட்டினையும் தந்து நிற்கின்றது.

அதாவது, வாழ்க்கையின் அடிப்படைத் தேவை பொருள் தான் என்பதை எவரும் மறுக்கார். அப்பொருளைத் தான் இருக்கும் இடத்திலிருந்தே தேட முடியாத நிலை ஏற்படின், வேற்றிடம்சென்று தேடியாக வேண்டுமென்பதையும் எவரும் மறுக்கார்.

இப்படியொரு நெருக்கடியான நிலை உண்டாவதைத் தடுக்க வேறு வழி ஏதேனும் உண்டோ என்று ஆராய வேண்டிய கட்டத்தைப் பாலைபாடிய பெருங்கடுங்கோ ஏற்படுத்தி விட்டார்.

வாழ்க்கையின் முதற் பெருந்தேவையான பொருளைக் குடும்பத் தலைவனே தேடியாக வேண்டும் என்ற ஏற்பாட்டை ஒப்புக்கொள்பவர்கள், மனைவி மக்களை விட்டுக் கணவன் பிரிந்து போவதைத் தவறாகக் கருத மாட்டார்கள்.

மனைவியைப் பார்த்துக் கொண்டும், மழலையைக் கொஞ்சிக் கொண்டும் கணவன் பிரியாது உடன் இருப்பானாயின், அனைவருமே உணவின்றி உயிர் துறக்க நேரிடுமன்றோ.

இப்படியொரு இரங்கத்தக்க நிலை ஏற்படுமாயின், இதனை எப்படியாவது — எக்காரணத்தைக் கொண்டாவது தடுத்தாக வேண்டுமென்ற முடிவுக்கு, கணவனிடம் எத்தகைய உறுதிமொழியைப் பெற்றிருந்த மனைவியும் வந்தேயாக வேண்டும். இல்லையேல், பிரியவிரும்பாத கணவனையும் தான் பெற்றெடுத்த குழந்தைச் செல்வத்தையும், தன்னையும் பறிகொடுத்தாக வேண்டுமன்றோ!

மானத்தோடு வாழ, நிலங் கடந்தும் நீர் கடந்தும் சென்று பொருள் தேடலாம். வேண்டுமானால், கணவனைப் பிரிய உடன்படாத மனைவி அவன் கூடவே செல்லலாம். இஃதன்றி மனைவியின் பக்கத்திலேயே கணவன் காலமெல்லாம் இருக்கவேண்டுமென்றமுறை காலநிலைமையையொட்டிப் பார்க்கும்போது அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை.

ஆனால், இந்த அகநானூற்றுப் பாடல் கணவன் மனைவியரிடையே நிலவக்கூடிய ஒற்றுமையை எடுத்து விளக்க எழுந்த பாடல் தான் என்பதை எண்ணும்போது அந்தப் புலவர் பெருமானின் அறிவின் திறத்தை அளந்து — அறிந்தறிந்து வியக்க வேண்டியவர்களாகிறோம்.

செல்விருந்தோம்பி 'வருவிருந்தை எதிர்நோக்கி நிற்கும் தமிழகப் பண்பாட்டிற்குப் பொருள் பெரிதும் இன்றியமையாத ஒன்றன்றோ!

★

பிறப்பு

தஞ்சை வீரியங்கோட்டைத் தி. மு. க. உறுப்பினர் தோழர் கோவிந்தன் அவர்களுக்கு 17—5—58-ல், ஒரு ஆண் மகவு பிறந்து "இளங்கோ" என்று பெயரிடப்பட்டது.

தெரிந்துகொள்ளுங்கள்

உண்மை, அமைதி—இவைகளைச் சித்தார்த்தன் தேடிச் சென்றான். உறுவெலா என்னும் காடு அவனைப் பெரிதும் கவர்ந்தது. கடுமையான துறவறம் பூண்டு ஆறு ஆண்டுகளை இங்கு கழித்தான். ஆனால் தேடிவந்த உண்மையோ, நாடி வந்த அமைதியோ அவனுக்குக்கிட்டவில்லை. துறவறத்தின் பெயரால் தன்னுடலை வருத்துவதை நிறுத்திக்கொண்டான். சஜாதா என்னும் அழகிய குமாரி ஈந்த அமுதம் போன்ற பாயசத்தை அருந்தினான். பின்பு, தளரா உறுதியுடன் போதி மரத்தடியில் அமர்ந்தான். தான் விரும்பிய பேருண்மையைக் கண்டான். சித்தார்த்தன் புத்தனானான்.

*

கி. மு-6-ம் நூற்றாண்டை வரலாற்று அறிஞர்கள், "ஓர் அதிசயமான நூற்றாண்டு" என அழைக்கின்றனர். ஏன் எனில், புத்தர், இராக்லிடஸ், இஸா, கான்பூஷியஸ், லா ஓட்சி போன்ற தத்துவஞானிகள் வாழ்ந்தது இந்த நூற்றாண்டில்தான்.

*

பண்டைய தமிழகம், தங்கம், முத்து தந்தம், மிளகு இவற்றுடன் மயில்களும், குரங்குகளும் கிரேக்கம், எகிப்து, ரோம் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தது.

ரோமாபுரியை ஆண்ட அகஸ்டஸின் அவைக்களத்திற்கு, ஒரு தூதுகோஷ்டியை அனுப்பினான் பாண்டிய மன்னன் ஒருவன்.

*

புத்த மதத்தின் தத்துவத்தை நன்கு உணர்ந்தவனும், பெரும் எழுத்தாளனுமான தர்மபாலன் என்பவன் நாலந்தா சர்வகலாசாலையின் (450-1200 கி. பி.) துணை வேந்தனாக நியமிக்கப்பட்டான். அவன் காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவன் என்பதை அறியும்போது நாம் ஆச்சரியப்படவில்லை!

*

பனியா வகுப்பைச் சேர்ந்த ஹேமு சாதாரண கடைக்காரனாகத் தன் வாழ்க்கையைத் துவக்கினான். பின்பு தன்னுடைய திறமையினால் வங்காளத்தின் பிரதம மந்திரியானான். இரண்டாவது பானிப்பட்டுப் போரில் அவன் அக்பரை எதிர்த்து வெல்லும் தருணத்தில், ஓர் அம்பு அவன் கண்ணில் பாய்ந்ததும் மயக்கமுற்று கீழேவிழுந்தான். அவனுடைய சேனை சிதறி ஓடியது. அக்பர் எளிதில் வெற்றி அடைந்தான்.

*

சமுகார் என்னுமிடத்தில் ஷாஜஹானுடைய மூத்த புதல்வன் தாராவுக்கும், இளைய புதல்வன் ஔரங்கஜீப்பிற்கும் நடந்த போரில் தாரா வெற்றியடையும்கட்டத்தில்இருந்தான். தாராவின் யானையின்மீது அம்புகள் பாய்ந்தன. அவன் உடனே குதிரை மீதேறி போரிட்டான். அவன் வீரர்களோ, அவன் யானையின் மீது இல்லாததைக் கண்டு இறந்தான் என எண்ணி, பீதியடைந்து போர்க்களத்தைவிட்டு ஓடினர். ஔரங்கஜீப் போரில் வெற்றியும்' முகலாயப் பேரரசின் மகுடத்தையும் பெற்றான்.

*

கௌடா வம்சத்தைச் சேர்ந்த சசாங்கன் என்னும் அரசன் புத்த மதத்தை அறவே வெறுத்தவன். அதனால், அவன் (புத்தர் பேருண்மையைக் கண்ட) போதி மரத்தையே வெட்டி விழ்த்தினான்.

*

1857-ல் நடந்த பெரும் புரட்சியில் புரட்சிக் கொடி காட்டிய ஆறு சிறுவர்கள் கொல்லப்பட்டனர். ஆங்கிலசேனையைக் கண்டவுடன், முகங்களை வேறு பக்கம் திருப்பிக் கொண்ட பன்னிருவர் தூக்கிலிடப் பட்டனர். அலகாபாத்தில் மட்டும் 6000 பேர் கொல்லப்பட்டனர்.

*

—"அறத்தமிழன்"

*

தமிழர் இயற்கை

(கு. குட்டுவஞ்சேரல்)

செந்தமிழ் பூக்காடாம் நம் நந்தமிழ் நாட்டை சேர, சோழ, பாண்டியர்கள் ஆண்டுகொண்டிருந்த காலம்! போர் முனைக்குச் சென்று எதிர் வந்த அரசனை வென்று, தம்வீரருடன் வீறுநடை போட்டுத் தன் நாட்டில் வெற்றி விழாக் கொண்டாடிய நேரம்! ஆற்றல் படைத்த அரசரும், அறிவிற் சிறந்த அமைச்சரும், அருந்தமிழ்ப் புலவரும் அரசவையில் கூடி, குற்றங்களைந்து குடிகளைக் காப்பாற்றும் முறைமை தெரிந்து, அற நெறி பிறழாமல் அன்புடன் ஆட்சி நடாத்தும் முறைமையை மிக நுண்ணிதின் ஆராய்ந்து அறிந்து கொண்டிருந்த காலம்! கொள்கையளவில் கோனாட்சி என்றாலும், அது குடி தழுவிய கோனாட்சி முறையில் கோலோச்சி வந்த நேரம்! இவ்வருஞ் சிறப்பியல்புகளையும் சீரிய முறைகளையும், அற நெறியினையும் அறிந்த அக்காலத்து வடநாட்டு ஏகச் சக்ராதிபதியான அசோகன் கூட அச்சமுற்று இங்கு அடி எடுத்து வைக்காத காலம்!

இக்காலத்தில்......!

ஒரு நாள் மாலை நேரம். ஆனால் அது மாலை நேரமென்று மற்றுஞ் சிலருக்குத் தெரியாது. ஏனெனில் அது மாரிக் காலம். பின் தெரிந்தது எப்படியெனில், தெற்கிருந்து வரும் தேன் மணக்கும் தென்றலை தன் வீட்டுக்குள் வரவிடாமல், தன் வீட்டுத் தென் வாயிற்படியை மாதர் மறந்தும் திறந்து வைக்காத நேரம்! தென்றலின் குளிர்ச்சியையும், நீலக் கருமேகத்தின் திருவண்ணத்தையும் கண்டு களித்து களிநடம் புரியும் மயில்கள் தம் தோகைகளைப் பாகையாக விரித்து ஆடாத நேரம்! தெருவில் மக்கள் திரளாக உலவாத சமயம்! மாலை நேரத்தில் வேலையிலிருந்து வரும் மக்கள் தலையெல்லாம் தண்ணிரால் நனைந்து நடுநடுங்கி நடந்து வந்த நேரம்! இந்நிலை இதன் பின் பின்னிலையானது. மாலை மறைந்தது. இருள் எழுந்தது. மதியின் முகத்தை மக்களுக்குக் காட்ட வொட்டாமல் கருமேகம் மையிருட்டாக்கிற்று. இதன் பின் இருள் ஈரிரண்டு சாமங்களாக எண்ணி ஏங்கிற்று. காலை வந்தது. கதிரவனும் கடுகி வந்தான். வந்தவன் தன் பொன்னிறக் கதிர்களால் இம் மண்ணுக்கு மகிழ்ச்சி உண்டாகும் வண்ணம் தண்ணொளி வீசினன்.

மாரிக்காலம் மறைந்தது என்று மக்களுக்குத் தெரிந்தது. மாரியின் பாரித் தன்மையை உணர்ந்து அதை உபயோகப்படுத்தி, இப்பாரிலுள்ள மக்களுக்கு பகுத்துண்ண வளிக்க — பல விளைபொருள்களையும் உண்டாக்க உழவர்கள் நிலத்தை உழுதனர். பண்படுத்தினர். பயிரிட்டனர். பயிர் வளர்ந்து வருவதைப் பச்சை நிறம் எடுத்துக் காட்டிற்று. இதைப் பார்த்து பண்பட்ட நெஞ்சங்கொண்ட உழவனின் நெஞ்சமும் மகிழ்ச்சியில் திளைத்தாடியது. திங்கள்கள் சில தேய்ந்தன. அறுவடை நாள் அவனை அணுகி வந்தது. அந்த நாளும் வந்தது. அறுவடை முடிந்தது. உழைத்தோருக்குத் தக்க ஊதியம் தந்தான். அதன்பின் தன் உழவடைகளுடனும் நெல் மூட்டைகளுடனும் தன் வீடடைந்தான். பின் தன் உற்றார்க்கும் தனக்கு தக்க தருணத்தில் உதவி செய்தோருக்கும் உறுபொருள் கொடுத்து உதவினன். தன் மனைவி மக்களுடன் மகிழ்ச்சியில் திளைத்து இல்லற வாழ்வினை இனிது நடாத்தி வந்தான். ஏழைகளுக்கு தன்னால் இயன்ற அளவு ஈகையும் செய்து வந்தான். இன்பமும் பெற்று வந்தான்.

இது மருத நில மக்கள் வாழ்க்கையின் மாண்பு. இஃதே போன்றுதான் மற்ற மூன்று நில மக்களும் தங்களின் தட்ப வெப்ப சூழ்நிலைக்கிணைந்த வாறும் இயற்கையை யொட்டியும் தத்தமது வாழ்வினை ஒழுங்குபடுத்தி வளம் பல பெற்று நலம் பல அடைந்து நல் வாழ்வு வாழ்ந்து வந்தனர். இங்ஙனம் இயற்கையின் ஒரு மாறுபாட்டால் நிலங்கள் வேறுபட்டு இருந்தாலும், மற்றொரு மாறுபாட்டால் ஒரு நிலத்திலுள்ள மிருகங்களும் பறவைகளும் மற்றொரு நிலத்தில் போய் நிம்மதியாக வாழ்ந்து வந்தன. இதே போல் ஒரு நில மக்கள் மற்றொரு நிலத்தில் போய் பண்ட மாற்று வியாபாரம் செய்தலும், பழக்க வழக்கங்களில் ஈடுபாடு கொண்டு இயற்கையோடு இயங்குதலும், அவ்வந் நிலத்திலேயே வதிதலும் பழந் தமிழ் மக்களின் பண்பாடாம் -தனி இனத்தின் இயற்கையுமாம்.

இவ்வியற்கை ஒற்றுமையையும் நட்பையும் வர்ணிக்கும் முகத்தான் நம் பழம் பெரும் இலக்கிய நூலாம்—புடம் போட்ட தங்கமாம்—புலவரின் பொன்னேடாம் "பொருநராற்றுப் படை" புகழ்கின்றது. அது இது.

"குறிஞ்சி நிலத்திலுள்ள குறவர் நறுந்தேனையும் கிழங்கையும் நெய்தல் நிலத்திலே விற்று அதற்குப் பதிலாக ஆங்குள்ள மதுவையும் மீனின் நெய்யையும் வாங்கும் வழக்கமும்; மருத நிலத்து மன்னர் தித்திக்கும் கரும்பையும் அவலையும் குறிஞ்சி நிலத்திலே விற்று, இவற்றிற்குப் பதிலாக உருசிமிக்க மான் தசையையும் நறுந்தேனையும் பெற்றுக் கொள்ளுதலும்; நெய்தல் நிலத்துப் பரதவர் குறிஞ்சி நிலப் பண் பாடுதலும், குறிஞ்சி நிலக் குறவர் நெய்தற் பூச்சூடுதலும், முல்லை நிலத்து இடையர் மருதப் பண் பாடுதலும், மருத நிலத்துப் பள்ளர் முல்லைப் பண் பாடுதலும், முல்லை நில வான்கோழி மருதநிலத்தில் உள்ள நெற்கதிரையும், மருத நிலத்திலுள்ள மனைக்கோழி குறிஞ்சி சார்ந்த முல்லையிலுள்ள தினையையும் கவர்ந்துஉண்ணலும் குறிஞ்சி நிலத்திலுள்ள மந்தி நெய்தலின் கழியில் மூழ்குதலும், நெய்தல் நிலக்கழியிலுள்ள நாரை குறிஞ்சியிடத்து மலையிற் சென்று தங்கி மகிழ்ந்திருத்தலும்" கற்போருக்குக் கற்குந்தோறும் கற்குந்தோறும் கழிபேருவகை பயப்பதாகும். இன்னும் இயற்கையோடு மிகவும் நெருங்கி ஒன்றிப் போய் ஆழ்ந்த சிந்தனையில் பிறந்த சிறந்த கருத்தை சுருங்க அளிக்கும் நம் செந்தமிழ்ப் புலவர்களைப் போற்றாமலிருப்பதற்கில்லை. இப்புலவர்களைப் போற்றி வளர்த்த புரவலர்களையும் புகழாமலிருப்பதற்கில்லை. இவ்விருவரை மட்டுமின்றி மாற்றாரையும் புகழாமலிருப்பதற்கில்லை. இவ்விருவரை மட்டுமின்றி மாற்றாரையும் போற்ற வைக்கும் நமதருந் தமிழ் செழுந் தமிழைச் சிந்தையில் இருத்தாமலிருப்பதற்கில்லை — நினையாமலிருப்பதற்கில்லை. இதோ பாடல்:-

"தேனெய்யொடு கிழங்கு மாரியோர்
மீனெய்யொடு நறவு மறுகவும்
தீங்கரும்போ டவல் வகுத்தோர்
மான்குறையொடு மது மறுகவும்,
குறிஞ்சி பரதர்பாட, நெய்தல்
நறும்பூங்கண்ணி குறவர் சூடக்,
கானவர் மருதம்பாட, அகவர்
நீனிறமுல்லைப் பஃறிணை நுவலக்,
கானக்கோழி கதிர் குத்த,
மனைக் கோழி தினைக் கவர,
வரை மந்தி கழி மூழ்கக்,
கழி நாரை வரையிறுப்பத்,
தண் வைப்பின் நாடுடு குழீஇ"

—பொருநராற்றுப்படை.

அன்பான வார்த்தைகள் கருணை ததும்பும் செயல்கள், பிறரை நோகச் செய்யாத மனோபாவம்—இந்தக் குணங்கள் அத்தனை கடினமானவையல்ல. ஆனால் இவை தரும் பலன் என்றும் நிலைக்கக்கூடியது.

மூநகரும் சேறே!

(நெல்லை நல்லான்)

"நாம் சுயராஜ்யம் அடைந்தால், இங்கு தெருவெல்லாம் பாலாறு பாயும், தேனாறு ஓடும்" என்று கூறினார்கள், சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னால். ஆனால் இன்று தெருவில் பாலாறு பாயவும் இல்லை, தேனாறு ஓடவும் இல்லை —மாறாகத் தெருவெல்லாம் சாக்கடை ஓடியதால் சேறாய்க் கிடக்கின்றது! பாலும் தேனும் தெருவில் பாய்ந்து "பாரீர் பாரதத்தின் சிறப்பை!" என்று பாரிலுள்ளோருக்கு காட்ட முடியாவிட்டாலும், சாக்கடையாவது போக வேண்டிய இடத்தில் போகிறதா என்றால் இல்லை. "கடவுளின் மக்கள்" என்று கருதப்படுகிற அரிஜனங்கள் சாக்கடையோடுசாக்கடையாய் வதியும் வேதனைநிலை மாறவே இல்லை. 'சாக்கடையூர்' என்றே ஒரு ஊர் வர்ணிக்கப்படுகிறது! அங்கிருந்துசெய்திகளும் 'அதைப் பற்றி' வருகின்றன!!

பண்டைய நம் தமிழகத்திலும் தெருக்கள் சேறாய்க் கிடந்தனவாம்! அன்றும் சேறு, இன்றும் சேறு— இரண்டுக்கும் உள்ள வேறுபாடு.

*

"மெசபொடாமியாவிலிருக்கும் உரின்னும்நகரத்தில்உள்ள புராதனமான அரண்மனைகளில் சில, தென்னிந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட தேக்குமரத்தை வைத்துக் கட்டப்பட்டவை என்று சொல்கிறார்கள். மற்றும் தென்னிந்தியாவிலிருந்து மேல் நாடுகளுக்கு தங்கமும், முத்தும், யானைத் தந்தமும், மயிலும் அனுப்பினார்கள்என்று என்று கூறுகிறார் பண்டித நேரு தமது புத்தகத்திலே. அந்த அளவுக்குச்சீரும்சிறப்பும் பெற்று, ஆண்ட மூவேந்தர்கள் சேர, சோழ, பாண்டியமன்னர்கள், அவர்தம் தலைநகரம் சிறப்பின் நிலைக்களமாம் கலைமின்னும் வஞ்சி, காவிரிப்பூம்பட்டினம், மதுரை. அங்குள்ள நீண்ட பெரிய வீதிகள் எல்லாம் சேறாய்க் கிடக்கின்றன.

வஞ்சித் திருநகரம், சேரனின் தலைநகரம், வீரத்தின் பெருஞ் சிகரம் — அங்கு வீதிகள் வானம் போல் பரந்து கிடக்கின்றன. விண்முகட்டில் வெண்ணிலவு தனது பால்நிகர் தன் தோற்றத்தால் வீதி முழுவதும் வெள்ளையடித்துக்கொண்டிருந்தது. சாரை சாரையாய் நச்சிலைவேல் கைக்கொள் காளையர்குழாம் வந்து கூடுகின்றது. மகிழ்வும், அவர்கள் பால் குடிகொண்டுள்ளன. விருந்து, அவர்களுக்கு வேந்தன் அளிக்கிறான். எல்லையிலா இன்பம் கொல்லென்ற சிரிப்பின் மூலம் வெளிவருகிறது. வீரர்கள் மதுவை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளுகின்றனர். எல்லோரும் மதுக் கிண்ணத்தைப் பெறுகின்றனர் — அருந்துகின்றனர்—களிமிகக் கொண்டு இல்லம் செல்லுகின்றனர்.

இதற்கிடையில் ஒரு சிறு நிகழ்ச்சி—ஆசாரச் செயல்—அன்பின் அடையாளச் செயல், ஒவ்வொரு வீரரும் மதுக்கிண்ணத்தைப் பெற்றபின் — ஒரு விரலின் நுனியால் மதுவைத் தொட்டு, தரையை நோக்கி உதறுகின்றனர். பின்னர் எல்லோரும் ஏரே

நேரத்தில் அருந்துகின்றனர், ஆங்கிலேயர்கள் விருந்தின்போது மதுக்கிண்ணத்தை ஒன்றோடொன்று மோதிச் சிறிது ஓசை உண்டாக்கிய பின்னர் பருகுவதைப்போல!

இப்படி அந்த வீரர் கூட்டம் — அன்பை, பெற்ற மகிழ்வை, உற்ற பூரிப்பைக் காட்டச்செய்த ஆசாரச் செயலால், மதுவை உதறியதால், வஞ்சிமாநகர வீதியெல்லாம் நனைந்துவிட்டனவாம்! பின்னர் வீரர்கள் செல்லுகின்றனர்—வேந்தனின் வேழங்கள் வீதி வழியே வருகின்றன. நனைந்த வீதிகள் வேழங்களின் காலடிபட்டு சேறுகின்றன. விரலால் உதறிய சிலவாகிய மதுத்துளிகள் வானம் போன்ற விரிந்த வீதிகளையே நனைத்து, சேறுகக் காரணமாய் இருந்தது எனில், அங்குள்ளவீரர் தம் எண்ணிக்கைதான்எவ்வளவு? அவ்வீரர்களைக்கொண்ட நாட்டின் வீரம்தான் எவ்வளவு?

சேரனது நகரம் சேறுகிய கதையைச் செப்பிச் சென்றுள்ளார் பெயர் தெரியாப் பெரும் புலவர் —முத்தொள்ளாயிரம் தந்த முனிவர்.

களிகள் களிகட்கு நீட்டத்தம் கையால்க்
களிகள் விதிர்த்திட்ட செங்கள்ந்துவிகலந்(து)
ஓங்கெழில் யானை மிதிப்பச்சே றாயிற்றே,
பூம்புனல் வஞ்சி அகம்.

வஞ்சி ஒருவகையில் கழியாகியது. எஞ்சியுள்ள தலைநகரங்களில் காவிரிப் பூம்பட்டினக் கதையை மற்றொரு புலவர் தெற்றெனக் காட்டுகிறார்.

சோழநாடு என்றதும் 'சோறுடைத்து' என்ற எண்ணம் எழும் —அவ்வளவு வளம். காரணம் காவிரி, அதனால்தான் 'வான் பொய்ப்பினும்தான் பொய்யா மலைத்தலைய கடற்காவிரி' என்று உருத்திரங்கண்ணனார்,உணர்த்துகின்றார். காவிரி வளங்காக்கும் சோழவள நாட்டில் அறச்சாலைகள் மலிந்துள்ளன. அங்கெல்லாம் சோறு பொங்கிய வண்ணமேயுள்ளனர். பொங்கி வடித்த கஞ்சித் தண்ணீரை கீழே ஊற்றுகின்றனர். ஓடுகின்றது—ஆறாய் ஓடுகின்றது. அதனால் ஆறுபோன்ற வீதிகள் எல்லாம் ஈரமாகின்றன. அங்கே எருதுகள் ஒன்றோடொன்று சண்டையிடுகின்றன. அதிவேகமாக, மிக்க பலத்துடன் சண்டையிடுவதால்,எருதுகளின் காலால் கடையப்பட்ட வீதியெல்லாம் சேறுகின்றது. படம் பிடித்துக் காட்டுகின்றார் பட்டினப்பாலை ஆசிரியர் உருத்திரங்கண்ணனார்-காவிரிப்பூம்பட்டினம் கஞ்சித் தண்ணீரால் கழியாகிய கதையை.

"சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி
ஏறுபொரச் சேறாகி"

—பட்டினப்பாலை

வீதியே நனையும் அளவுக்கு கஞ்சித் தண்ணீர் ஓடினால் எவ்வளவு சோறு சமைக்கப்பட்டிருக்கவேண்டும் என்பதும், அதனால்சோழநாடு எவ்வளவு வளமாய் வாழ்ந்தது என்பதும், எருதுகள் வீதியே கழியாகும்படியாக சண்டையிட வேண்டுமானால் எவ்வளவு நேரம் சண்டையிடவேண்டும்? மேலும் எவ்வளவு பலத்துடன் சண்டையிடவேண்டும்—அவ்வளவு பலத்தோடும், அதிகநேரமும் சண்டையிட வேண்டுமானால் அந்த எருதுகள் எவ்வளவு ஊட்டம்பெற்றவையாய்—இன்று உள்ள நிலைமைக்கு மாறாக இருக்கவேண்டும் என்பதும ஒருதலை. இரண்டாவது நமது கவனத்தைஈர்ப்பது மதுரை நகரம் சேறுகிய விதம்!

வஞ்சியும் காவிரிப் பூம்பட்டினமும் சேறுகிய கதையைப் பார்த்தோம். பாக்கி பாண்டியனின் மதுரை மட்டுமே. வஞ்சி சேறுகக் காரணம் மறம். காவிரிப்பூம்பட்டினம் சேறுகக் காரணம் அறம். மதுரைமாநகரமோ மனிதனின் ஒருகண்ணும் காதலின் பொருட்டு சேறுகியுள்ளது.

காதல் மனிதனின் கண் என்றால், ஊடல்தான் அதன் ஒளி, ஒளியில்லாக் கண்ணும், ஊடலில்லாக் காதலும் சிறக்காது—'உப்பிலாப் பண்டம் சுவைக்காது' என்பதைப்போல. அன்று கூடல் மாநகரத்து மங்கையர் எல்லோரும் ஊடல் வசம் கூடியுள்ளார்கள். வழக்கமாக உள்ள ஆடலையும் பாடலையும், காதலரைத் தேடலையும் காணவில்லை. நாயகர்கள் நாயகிகளிடம் நெருங்குகின்றனர். நாசுக்காகப் பேசுகின்றனர். நாயகிகளோ, "கெஞ்சினால் மிஞ்சுவோம், மிஞ்சினால் கெஞ்சுவோம்!" என்பதைப்போல 'கிராக்கியில்' நிற்கின்றனர்! ஊடல் அவர்களை ஆட்டிப் படைக்கிறது. ஆனால் நாயகர்களை வாடல், வாட்டி வதைக்கிறது. நாயகர்கள் திகைக்கின்றனர், திணறுகின்றனர். அடுத்த கட்டம் ஊடல் ஓட வழி தேடல்.

நாயகர்கள் பன்னீரில் சந்தனத்தையும் குங்குமத்தையும் கரைத்துக்கிண்ணத்திலிட்டு நீட்டுகின்றனர். ஆனால் ஊடலில் உச்சாணிக் கிளைசென்றநாயகிகளோஅப்படியே கிண்ணத்தைத் தட்டிப்பறித்து சாளரம் வழியாகக் கொட்டுகின்றனர். இப்படியே வீதியில் உள்ள வீடுகள்தோறும் நடக்கிறது. இப்படிக் கொட்டப்பட்ட சந்தனம் வழியில் விழுந்து வீதியை நனைக்கிறது. வீதிகள்யாவும் நனைந்து கழியாக இருப்பதுடன், சந்தனமும் அதனுடன் சேர்ந்து வழுக்கலை வழங்குகிறது. இதை ஆசையோடு விளக்குகிறார் முத்தொள்ளாயிரம் தந்த வித்தகர்.

மைந்தரோ(டு) ஊடி மகளிர் தமிர்ந்திட்ட
குங்கும ஈர்ஞ்சாந்தின் சேறிழுக்கி, எங்கும்
தடுமாறல் ஆகிய தன்மைத்தே, தென்னன்
நெடுமாடக் கூடல் அகம்.

வஞ்சிநகரம் மறத்தால் சேறுகியது. காவிரிப் பூம்பட்டினம் அறத்தால் சேறுகியது. கூடலகம் ஊடலின் திறத்தால் சேறுகியது. இப்படியே பண்டைத் தமிழக வீதிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் — மறத்தால், அறத்தால், காதலால் ஆகிய முப்பெரும், மனிதனுக்குத்தேவையான வகையால் சேறுகியுள்ளது. பண்டை இலக்கியங்கள் அடுத்ததை எடுத்துக் காட்டும் கண்ணாடிபோல் காட்டுகின்றன. ஆனால் இன்று தெருக்கள் சேறுகும் கதை—வேதனை தரத்தக்கது. இந்த நிலை மாறுதா? காத்திருங்கள் 'காலம்' கனியும்.

★

> சத்துள்ள விதையே ஆனாலும், அதைப் பண்படுத்தப்படாத நிலத்தில் விதைத்தால் பயன் தருவதில்லை; அதன் சத்தும் குறைந்து விடுகிறது. அதுபோலவே, மக்கள் சமுதாயத்திற்குக் கல்வி அறிவு அளிக்காவிடில் மக்களிடம் இயற்கையாக இருக்கும் சக்திகள் குறைந்து பயனற்றவைகளாகி விடும்.

நிலவும் உலகும்

[மாண்மகிழன்]

★

நிலவு கவிஞனுடைய உள்ளத்தில் நிலவும்போது இனிமையும், கனிவும் மொழி வடிவில் எழிலாகத் தெறிக்கிறது! மொத்தத்தில் கற்பனை நெஞ்சங்களில் அது அகப்பட்டுக் கொண்டால் எங்கெங்கோ போகிறது!

குழந்தையின் விழிகளில் அது பட்டுத் தெறித்த மாத்திரத்தில் அழகின் சிரிப்பு கொஞ்சிக் குலவுகிறது! அப்போது குழவியின் முகத்தில் தோன்றி விளையாடும் உணர்ச்சி வடுவுகள் — நினைக்க நினைக்கக் கழிபேருவகையினைத் தருகின்றன!

ஓவியன் விழிகளில் நிலவு எழில் வட்டம் போடும்போது, அவனுடைய நுண்ணிய நோக்கில் மிளிரும் அணியே ஒரு அலாதியானது!

பெருவீடு கமழச் செல்லும் இளையவர்களுக்கு நிலவு ஒரு கண்கொள்ளாக் காட்சி!

பிரிவுத் துயரில் நைந்துருகும் சுந்தரங்களுக்கு சிந்தையிலே குளிர்மையினைத் தந்து, தேறுதல் கூறவும், ஆறுதல் தரவும் இடையில் துணையாக நிற்கும்போது நிலவினுடைய மாட்சிமை மகத்தானது!

தேன்நிலவு வாழ்விலே ஒரு பெருநாள்! இப்படி எத்தனையோ, நிலவை நினைக்குங்கால்.

இவையத்தனையும் நிலவை நுட்பமாக நோக்கும் நோக்கல்ல;

நுட்பமாக நிலவை நோக்கும் நோக்கே வேறு!

இப்பொழுது நம் நாட்டைப் பொறுத்தவரை அந்த நோக்கு அறவே இல்லையென்றால் தவறாகாது. அடிமைத் தளையில் இருக்கும் நம் நாடு, அந்த நோக்கினை அறியாமல் இருப்பதும் தவறாகாது. ஏனென்றால் உரிமை முதல்; உணர்வு பின்பு.

இதற்குப் பின் நம் நாட்டைப் பார்க்கிறோம். நிலவும் கடவுளாக வணங்கப்பட்டதை எண்ணி அனுதாபப்படுகிறோம்.

நிலவைப் பற்றிய உண்மைகளை-அதிகம் ஒன்றும் தெரிந்திருக்கா உண்மையை அறிகிறோம். சரடுகளைக் கண்டு சிரிக்கிறோம்!

அதே நேரத்தில் நிலவை மையமாக வைத்து அன்றே வளர்ந்து செழித்திருந்த கலையழகைக்கண்டு களிப்படைகிறோம்!

தகுந்த இடைநேரங்களில் கடல் நீர் எழுவதும் விழுவதும் நிலவினால்தான் என்பதை நம் முன்னவரே உணர்ந்திருந்ததை எண்ணிப் பூரிக்கிறோம்!

அந்த உண்மையை, பவுண்டி விரிகுடாவில் அதிகப்படியாக நாற்பது அடி உயரம் நாடோறும் கடலலைகள் எழுந்து விழுவதிலிருந்தும், மத்திய திரைகடலில் குறைந்தபடியாக மூன்று அல்லது நான்கு அடியேனும் கடலலைகள் நாடோறும் எழுந்து விழுவதிலிருந்தும், இன்று நாம் நம் இரு கண்களாலும் காணுகின்றோம! களிப்படைகின்றோம!

நிலவின் சலனத்திற்குத் தக்கவாறு கடல் இயங்குவதை ஆணித்திறமாக நம்புகிறோம்! பூரிக்கின்றோம்!

இந்த நேரத்திலும் 'சந்திர பகவான்!... அப்படி இப்படி என்று கத்தும் புரட்டர்களைக்கண்டு விலா வொடியச் சிரிக்கிறோம்!

அன்புப் பார்வையினை அந்த அப்பாவிகள்மேல் வீசி அறிவுலகத்திற்கு அழைக்கிறோம்!

புழுதியை வாரித் தூற்றிக் கொண்டே நம்மைத் தொடர்கிறார்கள்! புதிய உலகத்தைக் காணுகிறார்கள்! கருந்திரை கிழிபடுகிறது!

நிலவை எட்டிப் பிடிக்கக் கிளம்பும் வீரர்களைக் காணுகிறார்கள்!

நிலவைப் பற்றிச் சந்தேகத்தில் இருந்த உண்மைகளை சுடரொளியோடு நோக்குகிறார்கள்!

மண்ணுக்கும் மதிக்கும் உள்ள தொடர்பு நெடுநாட்கள் துலங்கப் படாமல் இருந்து, இன்று துலக்கப்படுவதை எண்ணி மகிழ்கிறார்கள்!

நிஷ்டை, ஞானம்—ஆஸ்ரம அந்தம்—சடைகோடிகள் துணை-பரமன் சினேகிதம் இவை யொன்றுமே இல்லாமல் மண்ணுக்கும் மதிக்கும் உள்ள தொடர்பை விளக்கும் டாக்டர் பால்ஃபூட் அவர்களின் திறனைப் பொறுமையோடு நோக்கி, தெளிந்து 'ஆஸ்ரம அனர்த்தங்க'ளைச் சாடுகிறார்கள்!

புராணம் போடும் புரட்டுகளை அம்பலப்படுத்துகிறார்கள்.

டாக்டர் பால்ஃபூட்டை ஆசையோடும் மதிப்போடும் நோக்குகிறார்கள். பூமியின் விசைக்கும் இழுக்கும் சக்திக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் படித்து தக்கவாறு அமைக்கப்பட்ட அவருடைய தனிப்பட்ட நூதனக் கருவியைக் கூர்ந்து கவனிக்கிறார்கள். அக்கருவியின் உதவியினால் மண்ணுக்கும் நிலவுக்கும் உள்ள தொடர்பை பால்ஃபூட், பிட்ஸ்பர்க் நகரம் நிலவின் பிரத்யேக சக்தியினால் 13 அங்குலத்தினின்று 23 அங்குலம்வரை தினசரி எழுந்து ஆழ்வதைச் சுட்டிக் காட்டி விளக்கிய விந்தையை விண்ணளாவப் புகழ்கிறார்கள்.

அத்தகைய தனிப் பெரும் சக்தியைச் சுருக்கமாக நிலவின் நகர்வு அல்லது சலனம் என்று ஆதார

பூர்வமாக வரையறுத்துக் கார்டின தகைமையை வாயார வாழ்த்துகிறார்கள்.

பால்ஃபூட்டைப் பின்பற்றி டாக்டர் டி. ஏ. லேன் ஆராய்ச்சியில் இறங்கினார். அவர் வானநூலில் மாபெரும் விற்பன்னர். லாஸ் ஏன்ஜில்ஸ் நீர் தேக்கத் துறையில் பணியாற்றி வந்தவர். ஒருநாள், கிணறுகளில் நீர் ஏறியும் இறங்கியும் காணப்படுவதைக் கண்டு திடுக்கிட்டார்!

ஆராய்ச்சிகளைத் துவக்கினார். ஆயிரக்கணக்கான கிணறுகளில் பதிவுப் பொறிகளைப் பொருத்தினார். கிணறுகளில் உள்ள நீர் மட்டம் கடலலைகளைப்போல விழுந்து எழுவதைக் கண்டார். அவ்வலைகள் கடலலைகளைக்காட்டிலும் குறைந்த விசையில் செல்வதை அறிந்தார்.

இப்படி ஆய்ந்து கண்ட உண்மைகளை வெளியிட்டதைக் கண்டு 'சிகாமணிகள்' மெய்சிலிர்க்கிறார்கள்.

*

நிலம், நீர் இவற்றைப் பாதிக்கும் நிலா உயிரினங்களையும் பாதிக்கிறது என்பதை நினைக்குங்கால் வியப்புதான் மேலிடுகிறது!

கருவில் வளரும் உயிரினங்கள் உண்டாவதற்கு நிலவும் காரணம் என்று கூறப்படுகிறது.

மனிதர்களுக்குச் சில சிறப்பட்ட பிணிகள் உண்டாவதும் நிலவினால்தான் என்று பகரப்படுகிறது. அத்தகைய பிணிகளில் லூன்ஸ்ட்ரக், லூனடிக் என்பவை குறிப்பிடத்தக்கன.

வழுக்கைத் தலைகளுக்கு நிலவொளி ஒரு மாற்று என்றும், ஆனால் அதுவே முழுமாற்றாக அமையாது என்றும் சொல்லப்படுகிறது.

குதிரைகளுக்கு மாலைக்கண் என்னும் வியாதி உண்டாவதும் நிலவின சலனம் படுவதால்தான்!

டாக்டர் ஆர்லெளசாப்லி என்னும் புகழ்பெற்ற அமெரிக்க விஞ்ஞானி கடல் மீனகள் நிலவால் பெரிதும் பாதிக்கப்படுவதாக ஆய்ந்து கூறியுள்ளார். குறிப்பாக மீன்களின் உணவு, சல்னம் இவற்றோடு நிலவு பெரும் தொடர்பு கொண்டுள்ளதை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தார்.

கப்பலில் பிரயாணம் செய்து கொண்டிருந்த ஒரு பெண் கப்பல் தளத்தின்மேல் இரவெல்லாம் விழுந்து கிடந்த மீன் ஒன்றைச் சமைத்துத் தின்றாளாம். அதனால் அவளுக்குப் பெரும் வயிற்று வலி வந்துவிட்டதாம். முடிவில் அவள் முகம் வீங்கிப்போய், கண்களே போய்விட்டனவாம்! இந்தச் சம்பவத்தை பர்சியன் விரிகூடாவில் கண்டதாகப் பிரயாணங்களைப் பற்றிச் சுவை சொட்டச் சொட்ட எழுதும் இதா அர்ஸ்ட் என்னும் பிரபல எழுத்தாளர் குறிப்பிடுகிறார். இதினின்று மீன் நிலவொளியால் எப்படிப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது தெரிகிறதல்லவா?

கடலுக்குள் இருக்கும் பல வகைப்பட்ட பிராணிகள் நிலவால் பாதிக்கப்படுகின்றன. அத்தகையவற்றுள் 'பலோலாஸ்' என்னும் புழு முக்கியமானது. இத்தகைய புழுக்கள் சாமோ என்னும தீவில் அதிகம் இருக்கின்றனவாம்!

பொங்கல் நாள் நமக்கு எத்தனை இனிக்கிறதோ அத்தனை பெரும் புழு நாள் சாமோ மக்களுக்கு இனிக்குமாம்!

நவம்பர் மாதத்தில் — பௌர்ணமி தோன்றும் கடை நாளில் மைரியட்ஸ், பலோலாஸ் எனப்படும் புழுக்கள் இருப்பிடத்தைவிட்டு வெளியேறுமாம்! இது ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தில் — பௌர்ணமி நாளில் நடப்பது வாடிக்கையாம்! இந்த நாளில் அங்குள்ளோர் கூடைகளுடன் கிளம்பி, வெளிவந்த புழுக்களை வாரி வந்து, சமைத்து, பழமா இலைகளில் வைத்து வயிறார உண்பர்களாம்! இப்படி வருஷத்துக்கு ஒருமுறை வரும் அந்த நாளைத்தான் பெரும் புழு நாள் என்று அங்குள்ள காலண்டர்களில் குறிக்கப்பட்டிருக்குமாம்!

சில இடங்களில் உள்ள மிருகங்கள் பௌர்ணமி நாட்களில் உறங்காதாம்.

பசிபிக் கடற்கரை ஓரம் வாழும் பலதிறப்பட்ட உயிரினங்கள் நிலவால் பாதிக்கப்படுகின்றனவாம்!

அங்குவாழும் பில்லியம் என்னும் ஒருவகைப் பிராணி நிலவு இல்லாத இரவு நேரங்களில் மட்டுமே வெளிவருமாம், பகல் நேரங்களிலும், நிலவு காயும் நேரங்களிலும் அப்பிராணி வெளிவருவது இல்லையாம்!

உயிரினங்களின் இனவிருத்தி சம்பந்தமாகவும் நிலவு முக்கிய இடத்தைப் பெறுகிறது. ஜாகப் என்பவர் நிலவின் சலனங்களை கூர்ந்தறிந்து, உயிரின் விருத்தியை அதிகமாக்கி வெற்றி கண்டிருப்பதாகவும் பைபிளில் ஒரு குறிப்பு இருக்கிறது.

ஜாகப்பின் முறைகளைப் பின்பற்றிப்பல நூற்றாண்டுகளுக்குபின், 1913-ஆம் ஆண்டில் பி. எச். மூர் என்பவர் உயிரின விருத்தியில் வெற்றியும் கண்டிருக்கிறார்.

தாவரங்களின் வளர்ச்சியையும் நிலவு பாதிக்கிறது என்பதை ஸ்டிவன்ஸ் என்பவர் அருமையாக நிரூபித்தார். அவர் பட்டாணி, தக்காளி, அவரை போன்ற தாவரங்களை பௌர்ணமிக்கு இரு நாட்களுக்கு முன்னரும் இருநாட்களுக்கு பின்னரும் நட்டுவைத்து, அவற்றின் வளர்ச்சியை மிகநுட்பமாகக் கவனித்தார். முழுநிலவுக்கு முன்னர் நடப்பட்ட தாவரங்கள் பலனை அதிகமாகவும், முழுநிலவுக்குப் பின்னர் நடப்பட்ட தாவரங்கள் பலனைக் குறைகாகவும் தந்ததை உணர்ந்தார். இந்த வித்தியாசத்திற்குக் காரணம் நிலவுதான் என்று சொல்ல வேண்டியதில்லை.

★

உனக்கு ஏதாவது ஆபத்துவரும்போது உனது உறவினர்களின் போக்கை நன்கு கவனி; உனக்குப் பயத்தை அளிக்கும் சந்தர்ப்பங்களில் உன்னுடைய மெய்க்காவலர்களின் செயலைக் கவனி; நீ தரித்திரத்தில் மூழ்கித் தவிக்கும்போது உன்னுடைய மனைவியின் நடத்தையை ஆராய்ந்து பார்!

இழந்தோம்

(அரங்கண்ணல்)

கனி கொய்திடும் வேளையில் கருநாகம் தீண்டுவது போல, இயக்க வளர்ச்சி கண்டு பெருமிதங் கொள்ளும் நம்மை, ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டது, அண்ணன் பி. பா. அவர்களின் மறைவு.

தென்னாட்டில் புத்துயிர்ப்பு உண்டு பண்ணிய நீதிக்கட்சியின் பால் நீங்காத் தொடர்பு கொண்டிருந்த அவர், சில ஆண்டுகளாக தி. மு. க. - விடம் காட்டிய ஆர்வமும் பரிவும் மிக அதிகமாகும். "என்னடா தம்பி!" எனத் தனக்கே உரித்தான கொச்சைத் தமிழில், இச்சையையெல்லாம் கூட்டியெடுத்து, வழங்குவார் நம்மவர்களைக் காணும்போது. கடந்த ஓராண்டில் கழக உறுப்பினருமாகி, விடுதலை முரசு கொட்டுவோரைக் கண்டு மகிழ்ந்தார்! சில காலமாகவே அவரது உடல் நலம் கெட்டிருந்ததெனினும், வளரும் கழகம் பற்றிய ஆனந்தமே, அவருக்கு அருமருந்தாக இருந்ததென்பதை சென்னையில் உள்ளோர் அதிகம் அறிவார்கள்!!

சீமான்களும் பூமான்களும் உலவிய நேரத்திலும் சரி, மாளிகையிலிருந்த கட்சி மக்கள் மதிக்கு இழுத்து வரப்பட்ட இப்போதும் சரி, என்றும் அவர் தொண்டர்களின் துணைவனாகவே நின்றார்! சேவை செய்வோரின் சிறந்த தோர் நண்பனாகவே விளங்கினார்! கவர்னருக்கு கைலாகு கொடுத்த அவரது கரங்கள், கனிவுடன் ஒரு கட்சித் தோழரின் முதுகில் தட்டும் போதுதான், முழு இன்பத்தையும் பெற்றது எனலாம். அவரால் பலருக்கு, பலவகையில் இலாபங்கள் ஏற்பட்டதுண்டு! அவரை ஏணியாகப் பயன்படுத்தி, ஏற்றம் பெற்றோர் ஏராளம்! எனினும் அவர் எப்போதும் "தேவை', யெனும் தேள் கொட்டும் நிலையிலேயே வாழ்ந்தார்—அவ்விதமே இறக்கும்வரையிலும் இருந்தார் என்பது சிந்தை நோக வேண்டிய செய்தியாகும்.

'ஜஸ்டிஸ்' கட்சியின் முத்திரையுடன், சன்னத்தும், விருதுகளும், வியாபார வேட்டையில் வெற்றிகளும், அடைந்தோருண்டு. அவர்களில் பலர், இன்று, அந்தக் கட்சியினை மறந்து இப்போதுள்ள ஆளும் கட்சியின் தாசர்களாகவுமாகி, அப்போதிருக்கும் சுகம் எள்ளளவும் மாறாத நிலையினை இடைவிடாமல் அனுபவிப்பதே "பொதுப் பணி" என்று இருந்து வருகின்றனர். அண்ணன் பி. பாலசுப்பிரமணியம், அப்போதும் சரி, சாகும்வரையிலும் சரி, சுயநலத்துக்காகக் கொள்கையை இழந்ததுமில்லை! சுகபோகத்துக்காகக் கூடுவிட்டுக் கூடுபாயும் செயலுக்கு ஆளானதுமில்லை!! கொண்ட கொள்கையில் அவர் காட்டிய உறுதியும், திராவிட சமுகத்தின் நலனில் அவர் கொண்டிருந்த அக்கரையுமே, கடந்த பொதுத் தேர்தல்களின்போது ஓட்டுகளைக் கொண்டுவந்து குவித்தது. காங்கிரசுக்கு 'கனமான' மோட்டார்கள் ஓடின! பணம் பாய்ந்தது, வெள்ளம்போல! இவருக்கோ ஏழை 'ரிக்ஷா'க்காரர்களும் — டாக்சி ஓட்டி வயிறு வளர்ப்போரும் — குப்பங்குடிசைகளில் வாழ்வோருமே துணையாக நின்று, பணியாற்றி, "வெற்றி பெறுவது இவர்தான்!", என்று சென்னையே பரபரப்பு அடையும் படியான அளவுக்கு வாக்குகளைப் பெற்றுக் காண்பித்தார். அப்படிப்பட்ட ஒரு அஞ்சாநெஞ்சரை, அடுத்த முறை டில்லிக்கு நிச்சயம் அனுப்பிவிட முடியும். டில்லிச் சபையிலே அவரது சிங்கநாதம் ஒலிப்பதை நிச்சயம் கேட்போம் என்று நாம் கொண்டிருந்த ஆசையில், மண்விழுந்துவிட்டது. சாவு, அவரைத் தட்டிப் பறித்துக் கொண்டுபோய் விட்டது!!

என்றாவது ஒருநாள், நாமெல்லோரும் இறக்கத்தான் போகிறோமெனினும், இதுபோல் ஏற்படும் சாவுகள் நம்மை ஒரு ஆட்டு ஆட்டவே செய்கின்றன! வெயிலில் வாடுபவனுக்கு ஒரு தருவைப் போலவும், அரசியல் புயல் அடிக்கும் போது ஆறுதல் பெறும் ஒரு இடமாகவும், விளக்கமும் வரலாறும் பெறும் உருவமாகவும், விளங்கியவர் அவர். இந்த இழப்பை ஈடு செய்து தர யாருள்ளனர் என்று எண்ணும்போது, கண்கள் அருவியாகின்றன! மறைந்த மூத்தவரின் புன்சிரிப்பும், குறும்புக் கண்களும், நினைவில் மின்னி மீளாச் சோகத்தை மேலும் மேலும் தருகின்றன!!

"சேலம்" நடந்தபோது, நம்முடன் மாறுபட்ட கருத்துக் கொண்டிருந்தபோதிலும், அவர் நமது கொள்கையிலே தியாகமும் தன்னலமற்ற தன்மையும் குடிபுகுந் திட்டத்தைக் கண்டதும், அவர் மனம் மகிழ்ந்தார். வயதிலும் அனுபவத்திலும் எவ்வளவோ மூத்தவராக இருந்தும "அறிவகத்தை", தனது தலைமைநிலையமாக ஏற்றார்! அங்கிருந்துவரும் ஆக்ஞைகளைக் கடைப்பிடித்து ஒழுகவேண்டும், அதுதான் "கட்சிக் கட்டுப்பாடு" என்று தான் நடாத்திய ஆங்கில ஏடாம் "சண்டே அப்சர்வர்" மூலம், சொல்லிக் கொண்டே வந்தார். அந்த ஏடு, எவ்வளவோ புயல்களுக்கிடையிலும் இலண்டன் வரையில் நமது எண்ணங்களைச் சுமந்து செல்லும் வாய்ப்பைப் பெற்றது அவரால்! பெரிய பெரிய இடங்களுக்குள் எல்லாம் நுழைந்து ஒரு கலக்குக்கலக்கும் எழுத்தாற்றலைப் பெற்றிருந்தது!! "சிறு பொறி பெருந்தீ" எனும் குறிக்கோளைக்கொண்டு, உலவிய அந்த ஏட்டில் அண்ணனின் எழுத்துக்களைக் காணமுடியாது இனி என்றெண்ணும்போது, கரையிலாத் துக்கமே கொள்கிறோம். இனி, என்று காணப்போகிறோம் அவரை! எப்போது படிக்கப்போகிறோம் அவரது எழுத்தை!!

தோழர்களுக்குத் துணைவராகவும், நாடி வருவோருக்கு நல்லதோர் கலங்கரை விளக்கமாகவும் இருந்த அவரின், அன்பும் ஆதரவும் இனிக் கிடைக்காதே என்று எண்ணி ஏக்கமுறுவோர் ஏராளமுண்டு. அவர்கள் எல்லாம் இன்னும், பெருமூச்சுடனும், பேச இயலாத் துக்கத்தோடும் விம்மிய வண்ணம் உள்ளனர் என்பதை அறிவோம். அவர்களது கண்ணீரோடு நாமும் பங்குகொள்கிறோம் —அவர் விட்டுப்போன பணியைத் தொடர்ந்து செய்வோம்! அவரது ஆசைகள் நிறைவேறப் பாடுபடுவோம். வாழ்க அவர் பெயர்! வளர்க அவர் பாடுபட்ட கொள்கைகள்!!

★

"பேதைகாள்! என்ன புத்தி உங்களுக்கு! நாட்டைத் துண்டாக்கத் தூண்டுகிறீர்களே! சின்னநாடு தனித்து வாழ முடியுமா?" என்று சுடுசொல் வீசுவோருக்குச் சவால் விடுவதுபோல இஸ்ரேல் தனது பத்தாவது விடுதலை விழாவை ஏப்ரல் 24ம் தேதியன்று எழுச்சியூட்டும் விதத்தில் கொண்டாடியிருக்கிறது!

"சிறுநாடாம் "இஸ்ரேல்" இன்று தனது பத்தாவது வருடாந்தர விழாவைக் கொண்டாடுகிறது" என்று "இந்து" ஏடு தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுக் காட்டுகிறது. குறைந்த மக்கள் தொகை கொண்டது இஸ்ரேல்! இவ்வருடம் 'மார்ச்சு' மாதம் முடிய எடுத்த கணக்குப்படி அங்குள்ள மொத்த மக்கட் தொகை 1990000 பேர்களேயாகும்!

'இவ்வளவு சிறு நாடா' என்று மூக்கில் விரலை வைப்பதற்கு முன் அது இருக்கும் இடத்தையும், அங்கு உருவாகி வருகிற சூழ்நிலைகளையும் ஒரு கணம் சிந்தித்துப் பார்ப்போருக்கு திகிலையே உண்டாக்கும்.

'மத்தியகிழக்குப்பகுதி' என்றாலே போரின் அபாயப் பகுதி என்பர் -அரசியல் வல்லுநர்கள். இஸ்ரேல், அரேபியா நாடுகளிடையே உண்டாகும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டு அமெரிக்காவும், பிரிட்டனும், ருசியாவும் போட்டி போட்டுக்கொண்டு தங்களது பலத்தைப் பெருக்கி வருகிறது. இதுமாத்திரமல்லாமல் இஸ்ரேல் - எகிப்து எல்லைத் தகராறு, இஸ்ரோல்—ஜோர்டன் தகராறு தீர்வுபெறுத இந்தியா—பாக்கிஸ்தான் எல்லைச் சிக்கல்போல்இருக்கிறது. இவ்விதமான இடத்திலிருந்து கொண்டுதான்—சிறு நாடும் தனித்து வாழ முடியும், கரடிகளும், சிங்கங்களும் உலவினாலும் பசுவும் வாழமுடியும், வலிமைமிக்க வல்லரசுகள் தலையிட்டாலும் வலிமையற்ற 'இஸ்ரேல்' வாழமுடியும் என உலகிற்கு எடுத்துக்காட்டி விழாக் கொண்டாடுகிறது! பத்து ஆண்டுகள் ப்ாரீர் எனப் பரவசப்படுகிறார்கள்!

'நியூயார்க்டைம்ஸ்' இதழில் அதன் பிரதம மந்திரி "டேவிட் பென்குரின்" குறிப்பிட்டுள்ளதை போல அந்நாட்டின் விடுதலை வரலாறும், முதல் பத்தாண்டுக் கால வாழ்வும் மற்ற நாட்டைவிட முற்றிலும் மாறுபட்டதாகும்!

ஒரு நாடு மற்றொரு நாட்டை அடிமையாக்கி ஆண்டுவந்தால் அடிமைபட்ட நாடு தனது புரட்சியின் மூலமோ. அல்லது மனமொத்த ஒப்பந்தத்தின் மூலமோ தனது அடிமை விலங்கை உடைத்தெறியும். வரலாற்றில் விடுதலைப் பாதை இப்படித்தான் இருக்கும் —எல்லா நாடுகளிலும். ஆனால் இஸ்ரேலிலோ அப்படியல்ல! அது முதலில் தனது நாட்டினின்றும் வெளியேற்றபபட்டு மூலைக் கொன்றாகக் கிடந்த தன் இன மக்களைத் தன்னகத்தே இழுத்து அதற்குப் பின் போராட வேண்டி இருந்தது.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நாடோடிக் கூட்டத்தவராக — நாடற்றவர்களாக வாழ்ந்து வந்தவர்கள்—

இந்த யூதர்கள். தன் இனப்பற்று அழிந்து, மொழியை மறந்து காடோ, மலையோ என உலகெலாம் அலைந்து திரிந்தவர்கள்!

இச்சூழ்நிலை காலம் செல்லச் செல்ல மாறலாயிற்று. மேனாடுகளில் கல்வி பயின்ற சிலயூதர்கள் தன் இனத்தின் பரிதாப நிலையையும், தம் மொழியாம் "ஈப்ரு" பேச்சுவழக்கினின்றும் அழிந்து வரும் தன்மையையும் கண்டு மாற்றியமைக்கமுற்பட்டனர். தம் தாயகத்தை நினைத்தனர். அத் தாயகத் திருநாட்டில் குடியேறித் தமது கலாச்சாரம், கலை, பண்பு மொழி ஆகியவற்றைப் பாதுகாக்கப் பெரிதும் விரும்பினர். இவ்விழைவு 1878-ம் ஆண்டிலிருந்து வேகமுறலாயிற்று. அன்றிலிருந்து கற்றறிந்தோரின் தொகை கூடலாயிற்று-குடியேறினவர்களில்! இதே ஆண்டில் அப்பொழுது இருந்த மொத்த மக்கட் தொகை 60,000 பேர்களேயாகும்.

படிப்படியாக குடியேறினவர்களின் தொகை பெருகலாயிற்று. பின்னர் ஒன்று சேர்ந்து "துருக்கி"ய ஆதிபத்திய ஆட்சியினின்றும் விடுதலை பெறப் பாடுபடலாயினர். இந்த இருபதாம் நூற்றாண்டில்கூட 'இஸ்ரேல்' பகற்கனவு எனப் பேசப்பட்டது. ஏன் இரண்டாம் உலக யுத்தம் முடிந்த போதும்கூட "எங்கே இஸ்ரேல்" என்று அதட்டிக் கேட்கப்பட்டது. என்றாலும் இவர்கள் குரல் உலக மன்றத்திற்கு எட்டலாயிற்று. "யூதர்களின்" முறையிடு பயன் பெறலாயிற்று. ஆமாம்! உதயசூரியன் உதித்துவிட்டான். 1947-ம் வருடம் நவம்பர் மாதம் 29-ம் தேதி ஐ. நா. பொதுச் சபை "இஸ்ரேல்" என்ற நாடு இருக்க - வாழ — தனியாட்சி செலுத்த உரிமையளித்தது.

கருத்துள்ள பெண், உடலில் வீரமும் உள்ளத்தில் கூச்சமும் உள்ள வாலிபனையே விரும்புவாள்; கருத்தற்ற பெண், உடலின் பளபளப்பும், உதட்டில் புன்சிரிப்புப் பேச்சும் உள்ள ஆடவனிடம் தன்னையே பறி கொடுத்து விடுவாள்.

இதோடு அதன் விடுதலை அத்தியாயம் முடிந்துவிடவில்லை. இதற்குப் பின் கிட்டத்தட்ட ஒரு வருட காலம் வரை அது 'அரேபியர்'களுடன். போராட வேண்டியிருந்தது. கடைசியில் விடுதலை முரசு 1948 ஏப்ரல் 24-வில் முழங்கலாயிற்று.

விடுதலை கிடைத்ததும் அதன் வாழ்வு இனிமையாக இருந்திடவில்லை. அரபிய நாடுகளின் எல்லைத் தகராறுகள் ஒரு பக்கமும், எகிப்துமீது பிரிட்டனின் கண்மூடித்தனமான தாக்குதல் மறு பக்கமுமாக, இவைகளுக்கிடையில் அது தொல்லைப்பட வேண்டியதாயிற்று. எனினும் இவ்வளவு இன்னல்களினூடே தனது நாட்டு வளர்ச்சியில் மிகுந்த கவனம் செலுத்தியே வருகிறது.

விவசாயத்தைப் பெருக்குதல், வீடு கட்டுதல் ஆகியவை அங்கு இன்றியமையாததாக இருப்பதால்; இதுவரை 5 லட்சம் வீடுகளும், $2\frac{1}{2}$ லட்சம் உழவர்களும் தயார் செய்யப்பட்டிருக்கிறார்கள். உழவர்களுக்கென 500 உழவர் குடியேற்றங்களும் ஆங்காங்கு உண்டாக்கப்பட்டிருக்கின்றன. பண்படுத்தப்பட்ட நிலம் 195000 ஏக்கர்களிலிருந்து 950000 ஏக்கர்களாக உயர்த்தப்பட்டிருக்கிறது. குன்றுகளும், மண் பிரதேசங்களுமாக உள்ள "இஸ்ரேல்" நாடெங்கும்—மலை — மணல் பிரதேசம், பெருஞ்சாலையோரங்கள் எங்கணும் இலட்சக்கணக்கான மரங்கள் நடப்பட்டுள்ளன.

இதுமாத்திரமல்லாமல் கல்வி வளர்ச்சியில் சிறந்த பொறுப்பேற்றுப் பணியாற்றுகிறது-அந்நாடு! 1949-ம் வருடம் செப்டம்பர் மாதத்தில் ஏற்படுத்திய சட்டத்தின்படி 6 வயதிற்கும் 14 வயதிற்கும் உட்பட்டவர்களுக்கு கட்டாயக் கல்வி நடைமுறையில் இருந்து வருகிறது. 1949-ல் பள்ளி செல்வோர் தொகை 180844 (இதில் 6780 பேர் அராபியர்கள்) ஆக இருந்தது, இன்று 404900 (27500 பேர் அராபியர்கள்) ஆக உயர்ந்துள்ளது!

இவண் ஒரு பல்கலைக் கழகமும், ஒரு தொழில் நுட்பக் கல்லூரியும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வருடா வருடம் 1200 புதிய புத்தகங்கள் "ஈப்ரு" மொழியில் வெளிவந்தவாறு இருக்கின்றன!

இயற்கை வளத்திற்கும் குறைவில்லை எனலாம். சிறப்பாக எண்ணெய், மைக்கா, இரும்பு, புரோமின், பொட்டாஸ், காஸ்டிக் சோடா, மெக்னீசியம், பாஸ்பேட், மாங்கனீஸ்......போன்ற தாதுப் பொருள்கள் நிறைய இருக்கின்றன. இவற்றைப் பயன்படுத்தும் தொழிற்கூடங்களும் ஆங்காங்கு எழுந்தவாறே உள்ளன!

தவழும் குழந்தை 'இஸ்ரேல்' என்றால் வளர்ந்துள்ள மனிதன் 'திராவிடமாகும்'. மக்கட் தொகையில் மாத்திரமல்ல வளம்-வாய்ப்பு — வரலாறு — எல்லாவற்றிலும் எத்தனையோ மடங்கு 'திராவிடம்' உயர்ந்தது! பெரியது! திராவிடம் ஏன் தனித்து வாழமுடியாது?

★

ஐயகோ!

இருபதுபேர் மாண்டனர்.

கொள்ளை.

கொலை.

அட்டகாசம்.

இரயில் கவிழ்ந்தது.

தந்திக்கம்பிகள் அறுபட்டன.

இப்படிப் பீதியூட்டும் செய்திகளைப் பெறுகிறோம், இலங்கைத் தீவிலிருந்து! அண்ணன் தம்பிகளைப்போல் வாழவேண்டிய சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள "கலாம்" இந்தளவுக்கு வேதனையூட்டும் விபரீதங்களை உண்டாக்கியிருப்பதாகக் கேளவிப்படக் கேள்விப்பட இதயம் துடிக்கிறோம்!! வளரும் உலகில் ஒவ்வொருவரும் தத்தம் மொழியினையும், தாம் வாழுமிடத்தில் தமக்குக் கிடைக்கவேண்டிய உரிமைகளையும் நிலைநாட்டிக் கொள்ள முயலுவது, தவறல்ல. ஆனால், இலங்கையில், இந்த அடிப்படை உரிமைகள் நெடுநாட்களாகவே தமிழர்களுக்கு மறுக்கப்பட்டு வருவதெனபது, இடைவிடாத கூக்குரலாகும். நேருவின் நண்பரான இலங்கை முதல்வர் பண்டாரநாயகா, இதனை அளிக்க முன்வராததால், தமிழர்கள் இந்தளவுக்குப் படாதபாடுபடும் ஒரு சூழ்நிலை அங்கே உருவாகியிருக்கிறது. உண்மையில், வெதும்புகிறோம்; வேதனைப் படுகிறோம்.

அன்பைத் தெய்வம் என வணங்குபவர்கள் தமிழர்கள்! அதேபோல, அன்பைப் போதித்த, போதி மரத்துப் புத்தனின் கொள்கை வழிநடப்பவர்கள் சிங்களவர்கள்!! இருந்தும், இருவரிடையிலும் ஏற்பட்ட காழ்ப்பு, கலவரம் ஆகுமளவுக்கு வளர்ந்ததை எண்ணி வெட்கப்படுகிறோம். ஒருவர், இருவரல்ல, இருபதுபேருக்குமேல் இறந்தனரெனின், ஐயகோ, மனித சமுகம் நாகரிகம் பெற்றுவிட்டதென்று சொல்லமுடியும்?

நெருப்புப் பற்றி எரியுமுன், அணைக்க முயற்சிப்பதுதான், விவேகிகள் செயலாகும். அந்த விவேகத்தை வீம்புக்குப் பலியிட்டதால், வந்த தீவினைதான் இது. சித்தங் கலங்குகிறோம்—இனியாவது, திமுளாத ஒரு சமுக நிலையை அமைக்கும் வழிகளைக் காணுமாறு இலங்கை சர்க்காரைக் கோருகிறோம்.

இந்தத் துறையில், டில்லி காட்டிவரும் அசிரத்தை அறியாததல்ல. டில்லிதான் அப்படியென்றால், ஆளும் காமராசர் அரசாவது ஏதாவது செய்தால்தான் நல்லது. சாகிறவர்கள் தமிழர்கள்! தவிப்பவர்கள் தமிழர்கள்!! அவர்களது செந்நீரையும், கண்ணீரையும் துடைக்க இப்போதாவது ஒரு நிரந்தர பரிகாரம் கண்டு, இந்தக் கொடுமைகள் நிகழாவண்ணம் செய்ய, முன் வருவார்களா? முன்வருவார்களா? என்று, ஏக்கத்தோடு கேட்கிறோம் ஆள்வோரை. ஐயகோ, இருபது பேராமே! எண்ணக் கொதிக்குதே நெஞ்சம்!!

★

தென்னாற்காடு மாவட்ட

தி. மு. க. 3-வது மாநாடு

1958 ஜூன் 7, 8 சனி, ஞாயிறு ஆகிய நாட்களில்
ஆறுமுகம் பந்தலில், மஜித் அரங்கில்
விருதாசலத்தில் நடைபெறும்.

தலைவர்	திறப்பாளர்
மதுரை முத்து M.C.,	குடந்தை கே. கே. நீலமேகம்

அண்ணாதுரை, நாவலர் நெடுஞ்செழியன்

என். வி. நடராசன்,	காஞ்சி- கல்யாணசுந்தரம்,	இரெ. இளம்வழுதி,
ஈ. வெ. கி. சம்பத் எம். பி.,	ஆர். எஸ். பாண்டியன்	கோவை செழியன்
ஆர். தருமலிங்கம் எம்.பி.	இராம. அரங்கண்ணல்,	அருண்மொழிவில்வம்
மு. கருணாநிதி எம்.எல்.ஏ.,	எஸ். எஸ். தென்னரசு	இ. ஆர். கிருஷ்ணன்
சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.,	டி.கே. தாமரைச்செல்வன்	க. அறிவழகன்
க. அன்பழகன் எம்.எல்.ஏ.,	அன்பில் தருமலிங்கம்,	எஸ். வி. பதி
எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ.,	டி. வி. நாராயணசாமி,	அலிசேக் மன்சூர்
ப.உ. சண்முகம் எம்.எல்.ஏ.,	எஸ். ஏ. இராசமாணிக்கம்	வி. பி. இராமன்,
டி. இருசப்பன் எம்.எல்.ஏ.,	கி. மனோகரன்	டி. கே. பொன்னுவேல்
பி. எஸ். சந்தானம் எம்.எல்.ஏ.	இரா. செழியன், எம்.ஏ.,	அறிவுடைநம்பி
S.M. அண்ணாமலை எம்.எல்.ஏ.,	எஸ். எஸ். இராசேந்திரன்	பி. ஆர். கோகுலகிருஷ்ணன்
எம். பி. சாரதி எம்.எல்.ஏ.,	என். எஸ். இளங்கோ	சு. பெருமாள்
கவிஞர் கண்ணதாசன்,	கா. அப்பாதுரையார் எம்.ஏ., எல்.டி.,	வி. வி. சாமிநாதன்
கே. ஆர். இராமசாமி	மா. கி. தசரதன்	அலமேலு அப்பாதுரை,
தில்லை வில்லாளன் எம்.ஏ.	ஏ. கே. வில்வம்	பொற்செல்வி இளமுருகு
அ. பொன்னம்பலனார்,	கே. ஏ. மதியழகன்	பங்கயற்செல்வி
		சற்குணம்

மற்றும் கழக முன்னணி வீரர்கள் கலந்துகொள்வர்.

இசை முரசு **நாகூர் அனீபா** இன்னிசை உண்டு

அண்ணா தலைமையில், செல்வி **மல்லிகா** நடனம் உண்டு

இரு நாட்களுக்கும் நுழைவுக் கட்டணம்:— ரூ. 5, 3, 2, பெண்களுக்கு ரு. 1

ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., வ. ரு. தலைவர்
எம். செல்வராஜ் எம்.எல்.ஏ., பொருளாளர்
சி. முனுசாமி, ஜி. சொக்கலிங்கம்,
சி. நடராசன் எம்.எல்.ஏ., எம். ஆனந்தன் எம்.எல்.ஏ., செயலாளர்கள்
தொ. பிச்சமுத்து, பா. குப்புசாமி, தொ. ப. தலைவர்கள்.

திராவிடநாடு

8—6—58 | வார வெளியீடு | விலை 10 காசு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 4 - JUL 1958 MADRAS

எங்கள் நாடு

—[ரவி]—

பாரெங்கும் பண்பாடு வளராத நாளிற்
பல்கலைகள் வளம்பெற்றே திகழ்ந்ததென் நாடு;
சீரெங்கும் பெருகிடவும் திறனெங்கும் மேவித்
திராவிடத்தில் அறிவுடனே வாழ்ந்தனரெம் முன்னோர்
வீரங்கொள் திறத்தினிலே ஏறுகளாய் வாழ்ந்தார்;
விரிகடலிற் கலமோட்டி வாணிபமும் செய்தார்;
போரதனிற் புண்பட்டும் புறங்காட்டி மாண்டும்
புவியிழப்பர் பகைவர்தாம் எம்மவரின் முன்னால்.

பண்பாட்டில் தொல்புகழில் பாவளர்ச்சி தன்னில்
பாராளும் முறைதன்னில் சீரான நாடு;
எண்கணக்கில் நல்லறிவில் வானக்கோள் ஆய்வில்
இருங்கணித வல்லோர்கள் வாழ்வதுமென் நாடு;
பெண்மக்கள் பாவலராய் இலக்கியங்கள் ஆக்கும்
பெற்றிதனுக் களவுண்டோ? பிறப்புதனை நீக்கி
விண்புக்கு வாழும்வழி விளக்கமுடன் கூறும்
வித்தகர்கள் மருத்துவர்கள் விளங்குகின்ற நாடு.

புத்துணர்ச்சி மிக்குண்டு பொதுநாட்ட முண்டு;
பூரித்த தோளுடையோர் எம்நாட்டில் உண்டு;
இத்துணையாம் அறிவுவழி இன்பவழி நாட்டில்
எஞ்ஞான்றும் கற்றோர்கள் அறிவிழந்த தில்லை;
எத்தர்கள் சிலபோரால் சற்றுவளம் இழந்தோம்
இனியெங்கள் திட்டத்தால் வளம்செழித்துப் பொங்கும்
புத்துலக கவிஞர்கள் அறிஞர்வாழ் நாட்டில்
பூத்திடும் இன்பத் திராவிடம் விரைவில்!

பாரிஸ் லீலா!

— பழநி —

வெண்டைக் காய் வேண்டுமா, கத்தரிக்காய் இதோ, புதிதாகப் பறித்த புடலங்காய் சாமி, என்று போட்டி போட்டுக்கொண்டு கூவுகிறார்கள்; சந்தையில். 'அழுகிப் போன தக்காளியை வைத்துக் கொண்டிருக்கும் கடைக்காரிகூட 'அருமையான தக்காளி' என்று சொல்லுகிறார். இது நல்லதா, இது புதியதா என்று பொறுக்கிப் பார்த்து, தேவையானதை வாங்கிக்கொண்டு திரும்புகிறோம்! கடைக்காரி சொல்கிறாள் என்பதற்காகவோ, கடைக்காரனின் சாதுர்யத்தை மெச்சியோ, எதையும் நாம் எடுத்துவிடுவதில்லை. தேவையையும், சரக்கின் தரத்தையும் மதிப்பிட்டே வாங்குகிறோம்!! திடீரென ஒரு நாளைக்கு, ஊராளும் சர்க்கார் உத்திரவொன்று போடுகிறது என வைத்துக்கொள்ளுங்கள் — "இன்று முதல் எல்லோரும் கத்தரிக்காயைத்தான் வாங்கவேண்டும். மீறினால், ஆறு மாதம் தண்டனை" என்று. என்ன செய்வோம்? இதென்ன சர்க்கார், சர்வாதிகார சர்க்காராயிருக்கிறதே என்போம்! குமுறலும் கொந்தளிப்பும் ஏற்படும்!!

* * *

கடைக்குச் செல்பவனுக்கு எப்படி தன் விருப்பப்படி கறிகாய்களைப் பொறுக்க உரிமையிருக்க வேண்டுமோ, அதைப்போல ஒரு நாட்டில் வாழும் மனிதனுக்கு தன் விருப்பப்படி 'அரசு'களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையிருக்க வேண்டும் என்பதுதான், ஜனநாயகத் தத்துவமாகும். நாட்டைப் பொதுவுடைமையாக்குவோம் எனலாம் ஒரு கட்சி; அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்ட அழகான கொள்கைகள் — இதை ஆதரியுங்கள் என்று இன்னொன்று சொல்லலாம்; பூஜையை விடாதீர் பொழுதெல்லாம பஜனை செய்வீர் புது வாழ்வு மலரும் என்று முழக்கமிடலாம் இன்னொரு கட்சி; இதில் எது தேவை, எது சொல்வதை ஏற்றால் நன்மை கிடைக்கும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை ஒவ்வொருவனுக்கும் இருக்கவேண்டும் என்றுரைப்பதே, ஜனநாயகத்தின் முக்கிய அம்சமாகும்.

இந்த "ஜனநாயகம்" எனும் சொல்லைப் பெற, மக்களாட்சி எனும் மாண்புறு புதுமையைக் காண, நடத்தப்பட்டிருக்கும்

அண்ணல்

போராட்டம் மிக மிகப் பெரிது. வல்லான் வகுத்ததே வழி! மன்னன விருப்பமே மகேசன் கட்டளை! —என்று இருந்த நிலை மாறி, மக்களின் எண்ணங்களே ஒரு நாட்டினை ஆளவேண்டும் என்பதற்காக நடைபெற்ற இரத்தக் களரிகள் மிகப் பெரிதாகும். நாகரீகம் வளராத நாட்களிலே, வல்லவன், தலைவனானான். அவனுக்குத் தெரிந்த கூட்டத்தை அவன் அடக்கியாண்டான். அவனது புஜபல பராக்கிரமத்தைக் கண்டு, மாற்றார் மருண்டனர்; உற்றார், முழங்காலிட்டுத் தொழுதனர். பிறரது படையெடுப்பினின்று தங்களைக் காக்கவும், தங்கள் தேவைக்கான பொருள்கள் கிடைக்கும்படிச் செய்யவும், மன்னனிருக்கிறான் என்று மக்கள் கருதினர். மன்னனுயிர்த்தே மலர் தலையுலகம், என்று எண்ணப்பட்டது. அப்படிப்பட்ட மன்னன், நல்லவனாகயிருந்தால், நாடு வாழ்ந்தது. தீயவனாக யிருப்பினோ, தீமைகள் மலிந்தது. மதுவும் மங்கையுமே வாழ்வெனக் கருதி, வசூலிக்கப்படும் வரிகளையெல்லாம் கொட்டி அழித்துவிட்டு, களஞ்சியம் காலி என்றபோது, புதுப் புது வரிகளைப் போட்டு, கட்டாதாருக்கு கிட்டி கட்டி, 'தர்பார்' நடத்திய போது, மக்கள் விழித்தனர். அந்த விழிப்பிலிருந்து, விளைந்ததொரு சொல்தான், மக்களாட்சி! ஜனநாயகம்!!

*

இந்த "மக்களாட்சி முறை"க்கு வித்திட்டு, வியர்வை சிந்திய இடம் இங்கிலாந்து எனலாம். மன்னனுக்குப் பதில், மக்களின் பிரதிநிதிகள் அமர்ந்து ஆட்சி செய்யும "பார்லிமெண்டரி முறை" உருவானதும், உயிர் பெற்றதும், பிரிட்டனில்தான் என்பர். பார்லிமெண்டுகளின தாய், என்று சொல்லப்படும் அங்கு, மன்னன் வசமிருந்த அதிகாரங்களை மக்கள மன்றம் கைப்பற்றுவதற்கு, நெடுங்காலமாயிற்று.

13-வது நூற்றாண்டில் ஜான் என்பான இங்கிலாந்தை ஆண்டு கொண்டிருந்தான். விருப்பம் போல் அவன் ஆண்டான். வேதனை தாளாத பிரபுக்கள் ஒன்றுகூடி, ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும்படிச் செய்தனர். இதுவரை, மகேசனின் தூதனென்றும், தன் வார்த்தையை

(4-ம் பக்கம் பார்க்க)

திருவாசகம்!

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [8—6—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 47

"காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலர் இரட்டை வேஷம் போடுகிறார்கள். ஒருபுறம் கருப்புச் சட்டைகளுடன் கைகோர்த்து நின்றுகொண்டே மறுபுறம் காங்கிரசில் இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைவிட்டு இவர்கள் வெளியேறுவது நல்லது"

ஒரு திங்களுக்கு மேலாயிற்று இத்திருவாசகத்தைச் செப்பி! கடந்த ஏப்ரல் 23-ந் தேதி மதுரை மாநகரில் பேசியபோது, காங்கிரஸ் தலைவர் தேபர் தான் இவ்வண்ணம் கர்ச்சித்தார்.

ஒரு திங்கள் பொறுத்துப் பார்த்தோம் — தேபரின் குரல் கேட்டு யாராவது வெளியேறுகிறார்களா என்று, ஒருவர்கூட வரவில்லை!

தேபர், காங்கிரசின் தலைவர். தமிழ் நாட்டுக் காங்கிரசில், 'இரட்டை வேஷம்' போடுவோர் யாரார் என்பது அவருக்குத் தெரியாமலிருக்க முடியாது. தெரிந்ததால்தான், பேசியிருக்க வேண்டும். ஒரு திங்களாயிற்று, ஒருவரும் விலகியதாகவும் காணோம் —தமிழ்நாட்டுக் காங்கிரஸ் வெளியேற்றியதாகவும் விபரம் இல்லை!

அப்படியாயின், இரட்டை வேஷம்' போடுபவர்கள் எவருமே இல்லையா? ஒருவருமே இல்லையென்றால், தேபர் பேசிட வேண்டிய அவசியமில்லை. பேசியதும், காமராசரோ, இராசாராமோ மறுத்தாவது இருக்கவேண்டும். இவர்களும் மறுக்காததால், தேபரின் கூற்றுச் சரியென்றே ஆகிறது. இருந்தும் எவரும் வெளியேறவில்லை! எந்நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை!!

ஒரு மாதமாகிவிட்டதே, ஒருவரும் வெளிவரவில்லையே என்பதைக் கண்டு, தேபராவது, இன்னின்னார் திராவிட கழகத்தவர்கள் என்று சுட்டிக் காட்டி, அவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக் காங்கிரசைப் பரிசுத்தப்படுத்தியிருக்க வேண்டும். அவரும் செய்ததாகவோ செய்யப்போவதாகவோ அறிகுறியில்லை. ஆயினும், மதுரையம்பதியில், இவ்வாறு பேசினார்—இரட்டை வேஷம் போடுகிறார்கள் என்றார்! திராவிட கழகப் பற்றுடனும், காங்கிரஸ் போர்வையுடனும் இருக்கிறார்கள் என்றார்-அதுவும் பொதுக்கூட்டத்தில்!!

மக்கள் மத்தியில், ஏதோ இப்படிப்பட்டவர்கள் இருப்பதால்தான், பால் கெட்டுவிட்டது பருக முடியாமற் போய்விட்டது, இல்லையெனில் காங்கிரசைப் போன்றதொரு கட்சியிருக்க முடியாது என்று 'பேசலாம். தங்களது பத்தினித்தனத்தை மெய்ப்பிக்கவும் முயலலாம். ஆனால், சொன்னதை, செயலாக்கிக் காட்டினால்தான் தூய்மை எனும் சொல்லுக்கு மதிப்புண்டு. கட்சிக் கட்டுப்பாடு, எனும் வார்த்தைக்கும் அர்த்தமுண்டு. ஆனால், தேபர், பேசினார் —போய்விட்டார்—அவ்வளவுதான்!!

திராவிட கழகப் பற்றும், பெரியார் மீது பாசமும் கொண்டோர் பலரிருக்கலாம், காங்கிரசில். அப்படிப்பட்டவர்களை ஏன், தேர்தல் காலத்தில் சேர்த்துக்கொண்டார்கள்? அவர்களுக்கெல்லாம் தேர்தல் 'டிக்கட்' கொடுத்தது, தேபரின் வசமுள்ள பார்லிமெண்டரிக் குழுதானே. அப்போது, பேசாதிருந்துவிட்டு, காங்கிரஸ் சீரழிகிறதென்றதும், அங்கேயிருக்கும் இவர்களெல்லாம் உத்தமர்கள் போலவும், யாராரோ சேர்ந்ததால்தான் கெட்டு வருவது போலவும், பழியையும் இழி சொல்லையும் போடுவது அழகுமல்ல; ஒழுங்குமல்ல.

தேபர் இப்படித் தூற்றுகிறாரே, நமக்கேன் வீண் பழி என்று, காங்கிரசில் 'இரட்டை வேடம்' போட்டுலவுவோர், ஒருநாளும் போட்டுக்கொண்டுள்ள புதுக் கதர்ச் சட்டையினைக் கழட்டிடப் போவதில்லை. ஏனெனில், கதரை மாட்டியபோதே, அவர்கள் "கட்சி" என்பதைத் துறந்துவிட்டவர்களாகும்! அவர்களுக்குக் கட்சியைவிட, பதவியும் பவிசுமே பெரிது!—அப்படிப்பட்டவர்கள், தேபரின் திருவாசகம் கேட்டு, திரும்பிவிடமாட்டார்கள் ஒருபோதும்.

கொள்கை உறுதியில்லாத, வேடம்போடுபவர்களை, நுழையவிட்டபோதே காங்கிரஸ் கெட்டுவிட்டது. அதை அனுமதித்துவிட்டு, இப்போது தேபர் ஏன் இப்படிப் பேசவேண்டும்? பேசி, ஒரு திங்கள் ஆகியும், அதுபற்றி எவ்வித சிரத்தையும்

கொள்ளாதவராக இருக்கவேண்டும்—கேள்வி எழத்தான் செய்யும், மக்கள் மனதில்.

ஒருவேளை, அப்படி நடவடிக்கையெடுத்தால், காமராசர் போன்றோருக்கே சீட்டுக்கிழிக்கப்படும் சிக்கலான நிலைமை வரும் எனும் மயக்கமோ? அல்லது, என்ன காரணமோ?—என்பதைத் தேபரிடமிருந்து அறியும் ஆசை, தமிழ் நாட்டுக்கு இருக்கிறது. என் எனில், வந்த அவர், இந்தப் பிரச்னையை எடுத்துப் பேசிக் கர்ச்சித்திருக்க வேண்டியதில்லை! வேறு எவ்வளவோ பேசியிருக்கலாம்!! ஆனால், பேசிவிட்டு இப்போது பேசாமடந்தையாக இருப்பது, பாரதியாரின், "நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி, வஞ்சனை சொல்வாரடி கிளியே! வாய்ச் சொல்லில் வீரரடி!!", என்னும் வரிகளையே நினைவூட்டுகிறது.

வாய்ச்சொல் வீரம், பலனளிக்காது! காங்கிரசில் புது மலர்ச்சி உண்டு பண்ணவேண்டுமெனும் பெரிய தலைகளான தேபர் போன்றவர்களே வாய்ச் சொல் வீரர்களாக உள்ளனரெனின், அந்தக் கட்சிக்கு உயிரூட்ட யாரே உள்ளனர்? எவரால்தான் இயலப் போகிறது!!

—OO—

2-ம் பக்கத் தொடர்ச்சி

தட்டி நடக்க எவரும் இல்லையென்றும் கருதி வந்த மணிமுடிதாரிகளின் பிடரியிலே கைவைத்த முதல் ஒப்பந்தமாகும் இது. "மாக்னகார்ட்டா" என்று சரித்திரத்திலே பெருமையோடு சொல்லப்படும் இந்த முதல் ஒப்பந்தத்தில் 1215-ம் ஆண்டில் கையெழுத்திட்டான் ஜான் மன்னன்! ஐரோப்பாவிலேயே, ஒரு மறுமலர்ச்சியை உண்டுபண்ணிய ஒப்பந்தம் இது.

மனம்போல் ஆளலாம் மன்னன் என்கிற பழைமைக்கு எச்சரிக்கை மணி அடிக்கப்பட்டது, இதன் மூலம்.

மன்னனின் விரலசைவே சட்டம் என்பது மாறி, மக்களின் குரலே சட்டம் என்கிற கட்டம் உருவாயிற்று.

ஜானுக்குப் பிறகு, இப்படிப்பட்ட மக்களின் தூதுவர்கள் நிரம்பிய ஒருசபை கூடி, ஆளும் மன்னனின் அதிகாரங்களையும், அவனுக்கு ஆண்டுச் செலவுக்கு எவ்வளவு ஒதுக்கலாம் என்பதையும் முடிவு செய்யலாயிற்று. இப்படி முடிவு செய்யக்கூடியவர்களில், பிரபுக்கள் முதலிடம் வகித்தனர்! ஒவ்வொரு வட்டாரத்திலிருந்தும் ஒரு சிலர் பிரதிநிதிகளாக அழைக்கப்பட்டார்கள்!! முதலிடம் வகித்த பிரபுக்களுக்கென ஒரு சபையும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கென இன்னொரு சபையுமாக "ஹௌஸ் ஆப் லார்ட்ஸ்" "ஹௌஸ் ஆப் காமன்ஸ்" என்று இரு சபைகள் ஏற்படலாயின. இப்படி, மன்னனின் நடவடிக்கைகளை மக்கள் கட்டுப்படுத்த முயன்றனர். மன்னர்களில் தெம்பும் பிடிவாதமும் கொண்டவர்களோ, மக்கள் பிரதிநிதிகளை மடக்கித் தமது பழைய உரிமையையும் ஆதிக்கத்தையும் நிலைநாட்ட முயன்றனர். அப்படி முயன்றவர்களில் ஒருவன் முதலாம் சார்லஸ்! அவனுக்கும் மக்களுக்குமிடையிலே ஏற்பட்ட போராட்டத்தின் முடிவில், சார்லஸின் சிரம் போயிற்று, பிடிவாதக்காரனை அவனை, தூக்கு மேடையிலே நிறுத்தி, சிரத்தை வெட்டினர் மக்கள்.

இவ்விதம் பெரும் பெரும் போராட்டங்களுக்கு இடையிலே தான், "மக்களாட்சியின் விதை" ஊன்றலாயிற்று. இங்கிலாந்து என்று மட்டுமல்ல, எங்கெங்கு மன்னராட்சி இருந்ததோ அங்கெல்லாம் இந்த எண்ணம் அரும்பி, படிப்படியாக மக்களின் கைக்கு அதிகாரம் வந்து சேர பல நூற்றாண்டுகளாயிற்று.

பிரிட்டனில் சார்லஸ், பிரான்சில் லூயி, ரஷ்யாவில் ஜார் போன்ற மன்னாதி மன்னர்கள், மணிமுடியை மட்டுமின்றி, அந்த மணிமுடியைத் தரித்திருந்த தலைகளையுமே இழக்கலாயினர்! மக்கள் தமது குரலொலியே சட்டமாக இருக்க வேண்டுமெனும் புதுமைத் தாகம் மலர்ந்தது—வளர்ந்தது-வாகையும் சூடிக்காட்டிற்று!!

*

மன்னனிருக்கட்டும் நாட்டை ஆள நாம் பார்லிமெண்டை வைத்துக்கொள்ளலாம். என்றன சில நாடுகள். மன்னனுக்குப்பதில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட "குடியரசுத் தலைவர்கள்" இருக்கட்டும் என்றன சில நாடுகள். "குடியரசுத் தலைவன் என்று ஒன்று எதற்கு? எவன் வல்லவனாயிருக்கிறானோ, அந்த வல்லவன் ஆளட்டும்", என்று கருதின சில. இப்படி, பல விதமான அரசு முறைகள் உலக அரங்கில் ஏற்படலாயின. இந்த முறைகளில், மக்களின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் குடியரசுத் தலைவன், மக்களின் சபையின் உதவி கொண்டு ஆளும் முறையினை அமெரிக்கா போன்ற நாடுகள் ஏற்றுக் கொண்டன! மன்னனைப் பெயரளவில் வைத்துக்கொண்டு ஆளும் வழியினை இங்கிலாந்து, ஹாலந்து போன்றவைகள் இன்னும் வைத்துக் கொண்டிருக்கின்றன! குடியரசுத் தலைவரும் இருப்பார்—பார்லிமெண்டும் இருக்கும்—அப்பார்லிமெண்டுக்குக் கட்டுப்பட்ட மந்திரிசபைதான் ஆளும் என்கிற முறையினை இந்தியா இலங்கை போன்றவைகள் ஏற்றுக் கொண்டுள்ளன! ரஷ்யாவிலும், செஞ்சீனாவிலும் நடைபெறும் அரசுமுறை ஒருவிதமாகும்!-இப்படி, மன்னனே ஆள்வது என்கிற நிலை மாறி, மக்கள் மன்றத்துக்கு அதிகாரம் வந்துவிட்டது, கடந்த சில நூற்றாண்டுகளில்.

முடியரசு (Monarchy), வல்லவர்கள் ஆட்சி (Oligarchy), செல்வர்கள் ஆட்சி (Plutocracy), மக்கள் ஆட்சி (Democracy), எனும் புதுச் சொற்கள், அரசியல் அகராதியில் ஏற்படலாயின.

இப்படி மக்கள் மன்றத்துக்கு அதிகாரம் வந்த பிறகு, ஏற்பட்ட ஒரு புது வியாதிதான் "சர்வாதிகாரம்" (Dictator Ship) என்பது! "ஏமாந்த காலத்தில் ஏற்றம் கொண்டோன்-புலிவேஷம் போடுகின்றான்—பொதுமக்களுக்கு புல்லளவு மதிப்பேனும் தருகின்றானா?", என்று கவியரசர் பாடியதுபோல, மக்கள் மத்தியிலே ஏதோ ஒரு காரணத்தால் செல்வாக்குப் பெற்ற ஒருவன், அந்தச் செல்வாக்கைக் கொண்டு நாடு

(13-ம் பக்கம் பார்க்க)

ஒரே, ஒருவராவது!

ஒருவராவது தேவையாம்!

ஊழியர் ஒருவராவது வேண்டுமாம்!!

கட்சி வேலைகளுக்குத் தனது முழு நேரத்தையும் செலவிடும் மனப்பான்மையுள்ள ஊழியர் ஒருவராவது தேவையாம்!!!

*

நாட்டுக்குச் சேவை செய்ய வீட்டுக்கொருவரைக் கேட்கவில்லை—வீதிக்கு ஒருவராவது தேவை எனச் சொல்லவில்லை—ஊருக்காவது ஒருவர் கொடுங்கள் என்று கூறவில்லை—தாலுகாவுக்கு ஒருவர் என்றும் செப்பவில்லை—மாவட்டத்துக்கு ஒருவர், ஒரே ஒருவராவது தேவை என்கிறார். **மாவட்டத்துக்கு ஒருவராவது!** — என்கிறார்; ஒருவர் என்பதற்கும் ஒருவராவது என்பதற்கும் இடையே அப்பப்ப, எவ்வளவு பெரிய வித்தியாசம் இருக்கிறது. ஒருவராவது தேவை, என்று அவர் சொல்லும்போது, அவர் உள்ளத்தில் எழுந்தடிக்கும் உணர்ச்சி அலைகள் தெரியாமலில்லை. கண்களைக் கசக்கிக்கொண்டாரோ, எத்தனை தடவை பெருமூச்சுகளை விட்டாரோ யாமறியோம்; ஆனால் மிகமிக வேதனையுடனேயே அவர் இந்த அறிவிப்பைச் செய்திருக்க வேண்டும்.

"ஜில்லாவுக்கு" ஒருவராவது தேவை!—எனகிறார். அவர்கள், கட்சி வேலைகளுக்காக முழு நேரத்தையும் செலவிடும் மனப்பான்மையுள்ளவர்களாக இருக்கவேண்டுமாம். கட்சி வேலைக்காக முழு நேரத்தையும் நான் செலவிடுகிறேன், எனக்கு அது கொடுங்கள் இது கொடுங்கள், ஆறுபத்து சம்பளம் போதும், நாளுக்கு நாலு ரூபாய் 'பேட்டா' போதும் என்று வேலையில்லாத இக்காலத்தில் பலர் வரக்கூடுமல்லவா? அதனைத் தெளிவாக உணர்ந்த காரணத்தினாலேதான், "மனப்பான்மை"யுள்ளவர்கள் அகப்படுவார்களா என்று கேட்கிறார்!!

அன்றோர்நாள் அந்நியனை விரட்டப் போராட யார் வருவீர், என்று காங்கிரசுக் கட்சி குரல் எழுப்பியபோது, கோடி கோடியாகக் கூடினர்! பதவியிலிருந்தோர், பதவியை விட்டெறிந்தனர்—வக்கீல்கள் உதறித்தள்ளினர் பட்டத்தை — வியாபாரிகள் விட்டு வந்தனர் பணப்பெட்டியை — மாணவர்கள் வகுப்பறையை விட்டு நேரே சிறைக்கூடம் நோக்கிச் சென்றனர்—தொழிலாளிகளின் காதுகளில் மோகன கீதமாக ஒலித்தது அந்த அழைப்பு —பட்டினத்தார், பட்டிக்காட்டார் எல்லோரும் 'இதோ! இதோ!' என்று வந்தனர்—செக்கிழுத்தார் சிதம்பரனார்--மூத்திரச் சட்டியைத் தூக்கவேண்டும், அதிலேதான் கஞ்சியை ஊற்றிக் குடிக்கச் சொல்வார்கள் என்பது அறிந்தும் அணிவகுப்பு பெருகிற்று—தெருவிலே அடிபட்டு வீழ்ந்தான் திருப்பூர் குமரன் — தில்லையாடி வள்ளியம்மை, துப்பாக்கிக்கு மார்பு காட்டினார்—ஆறு ஆண்டுகள், ஆயுட்காலம், எனறெல்லாம் தண்டனை விதிக்கப்பட்டபோதும் அஞ்சவில்லை — 'ஐஸ்' பெட்டியில் வைத்துக் கொடுமைப்படுத்தினர் ஜயப்பிரகாஷ் நாராயணை, அவர் காங்கிரசுக்குச் செய்யும் தியாகம் எனறு இருந்தார்—தூக்குமேடைகள் காட்டப்பட்டன, பஞ்சாப் படுகொலைகள நிகழ்த்தப்பட்டன, சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன — எனினும, ஒருவரல்ல, இருவரல்ல, ஆயிரமல்ல, பத்தாயிரமல்ல, இலட்சக்கணக்கில் திரண்டனர்! தியாகத் தீயில் குளித்தனர்! காங்கிரஸ் முழக்கிய முழக்கத்தில், உண்மை இருந்தது. அந்த உண்மை, அனைவரையும், இழுத்தது. மக்களுக்கான நன்மையைச் செய்திடும் ஒரு கட்சிக்கு ஆள்தேடும் கட்டம் —அதுவும் ஒரு மாவட்டத்துக்கு ஒருவராவது கிடைப்பாரா என்கிற நிலைமை--நிச்சயம் ஏற்படாது.

எனினும் இவர் கேட்கிறார்' வேதனையுடனேயே வெளியிடுகிறார், ஒருவராவது தேவை என்று. முழுநேரத்தையும் அவர் கட்சி வேலைக்கு செலவிடும் மனம உள்ளவராயிருக்க வேண்டுமாம்!! கிடைப்பவருக்கு அப்படிப்பட்ட "மனம்" இருக்கிறதென்பதை, "ஸ்கேல்" வைத்து அளந்து பார்ப்பாரா, "எடை" போட்டு நிறுத்துத் நிர்மானிப்பாரா என்று தெரியவில்லை. அப்படிப்பட்டவராக யிருக்க வேண்டுமாம்—அந்த ஊழியருக்கு இன்னொரு நிபந்தனையும் இருக்கிறது—அது, **அவர் எவ்வித பதவியையும் விரும்பாதவராக இருக்க வேண்டும்!!**

"இதென்ன விந்தையாக உள்ளதே! அரசியல் பணியிலீடுபட, 'மனம்' வேண்டும் என்கிறார்—அடுத்தபடி 'பதவியை அவர் விரும்பக்கூடாது' என்கிறார். ஆர்வமும், தியாகசுபாவமும் இருந்தால்தானே, அவருக்கு அரசியல் ஊழியர் எனும் பெயர் பொருந்தும. யாரிது இப்படி ஆள் தேடுவது—பொபபிலியா, பெத்தாபுரமா, டாடாவா, பிர்லாவா, இந்து மகாசபையா," என்று கேட்கத் தோன்றலாம் தோழர்களுக்கு. வேதனையுடனேயே தெரிவித்துக் கொளகிறோம், இப்படி அறிவிப்பைச் செய்வது வேறு எந்தக் கட்சியுமல்ல! காங்கிரஸ்!!

"காங்கிரசா?", என்று திகைப்பதும், திருப்பூர் குமரனும் செக்

இழுத்த சிதம்பரனும் இல்லையாடி அம்மையும் இருந்த காங்கிரசா என்று வியப்புடன் கேட்பதும், தெரிகிறது நமக்கு—ஆமாம், தோழர்காள், அப்படிப்பட்ட கட்சியில்தான் மாவட்டத்துக்கு ஒருவராது தேவை—எனும் நிலை!! பதவியாசை அற்றவராக — உண்மையாகப் பாடுபடுபவராக ஒருவராவது இருப்பாரா என்று கேட்கப்படுகிறது !!

எப்பேற்பட்ட கட்சி, இன்று எப்பேற்பட்ட கதிக்கு ஆளாகி இருக்கிறது? குரல் கேட்டால், ஊரே கிளம்பிய காலம் இருந்தது! விரல் நீட்டினால், துப்பாக்கிகள் ஆயிரம் இருப்பினும், பாய்ந்திடும் படை வரிசைகள் ஏராளம் இருந்த கட்சி அது !! ஒருவராவது தேவையாம்—'ஜில்லா'வுக்கு ஒருவராவது தேவையாம்—அவருக்குப் பதவியாசை கூடாதாம்-அவர் உண்மை ஊழியராக இருக்க வேண்டுமாம்—தெரிவிக்கிறார், லால்பகதூர் சாஸ்திரி.

மார்தட்டிப் பேசும் காமராசரும், உரத்து முழக்கமிடும் சுப்ரமணியமும், ஊருக்கு ஒன்று சொல்லும் பக்தவத்சலமும், ஏசல் நடை பேசும் பட்டாளமும், இன்ன பிறவும் "எமக்கு நிகர் யாரே! எமது காங்கிரசைப்போல் ஒரு கட்சியுண்டோ !!", என்று பெருமை பேசுகிறார்களல்லவா, அவர்கள் எல்லாம் வாழும் தமிழகத்துத் தலைநகராம் சென்னையில்தான், லால்பகதூர், கடந்த மே 22-ந் தேதியன்று இவ்விதம் தெரிவித்திருக்கிறார். அதுவும், காங்கிரஸ்காரர்களைக் கூட்டிவைத்து, அவர்கள் மத்தியில்தான் இவ்விதம் கேட்டிருக்கிறார் !!

லால்பகதூர், டில்லியில் மந்திரி என்பது மட்டுமல்ல, நேருவுக்கு மிக மிக நெருங்கியவராம். காங்கிரசை தாங்கியிருக்கும் பெரிய தூண்களில் ஒருவராகக் கருதப்படுகிறவர். நேருக்குப் பதில், அகில இந்தியக் காங்கிரசுக்கு இவரையே தலைவராக்கினால் என்ன என்று நேரு போனறார் நினைக்குமளவுக்கு 'இடம்' பெற்றிருப்பவர். அவர்தான், இவ்விதம் வெளியிட்டிருக்கிறார்; ஏடுகள் எல்லாம், விடாமல், போட்டிருக்கின்றன.

"......எவ்வித பதவியையும் விரும்பாத, காங்கிரசின் உண்மையான பிரதிநிதி எனக் கருதத்தக்க, கட்சி வேலைகளுக்கே தனது முழுநேரத்தையும் செலவிடும் மனப்பான்மையுள்ள காங்கிரசு ஊழியர் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒருவராவது தேவை......"

ஆயிரம், நூறு என்று சொல்லவில்லை, ஒருவராவது தேவை எனக் கேட்கிறார். கேட்டுவிட்டு, "அப்படி ஒருவர் கிடைத்தால் கூடப் போதும். காங்கிரசைக் காப்பாற்றிவிடலாம். ஆனால்..." என்று மேலும் தெரிவித்துள்ளார், அக்கூட்டத்தில்.

"........இதுபோன்ற ஊழியர் இன்று காங்கிரசில் ஒருவர்கூட இல்லை என்பதை நினைக்கும்போது மனம் பெரிதும் வேதனைப்படுகிறது."

கர்ஜிக்கிறார் காமராசர் ! நீங்கள் எல்லாம் தேசத் துரோகிகள் என்கிறார் சுப்ரமணியம் !! இதோ, லால்பகதூர், இன்றுள்ள காங்கிரசைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

> **பதவி ஆசையிலாத சேவைக்**
> **குணம் கொண்ட ஒரு ஆள்.**
> **ஒரு மாவட்டத்துக்கு**
> **ஒருவர்கூட**
> **இல்லையாம்!!**

காங்கிரஸ் இன்று அந்தளவுக்கு வந்துவிட்டது — காங்கிரசிலிருக்கும் ஒவ்வொரு ஊழியருக்கும் மக்களுக்குப் பாடுபடும் ஆர்வம் இல்லை; காங்கிரசிலிருக்கும் எல்லோரும் பதவியாசை கொண்டவர்களாகவே விளங்குகிறார்கள்-என்று நாமல்ல, லால்பகதூர் சொல்கிறார். தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவரையும், காமராசரின் குழாத்தையும் கூட்டிவைத்துக்கொண்டே இதனைச் சொல்லியிருக்கிறார், அவர்.

ஊருக்கு ஒருவர் அல்ல; மாவட்டத்துக்கு ஒரே ஒருவராவது கிடைப்பாரா எனில், இயலாது என்கிறார்!!

"காங்கிரஸ் கெட்டுவிட்டது. அதனால், இனி இந்தியாவுக்குப் பயன் ஏற்பட முடியாது. அதை மக்கள் புறக்கணிக்கத் துவங்கிவிட்டார்கள்."

ஜெர்மனியிலே சுற்றுப்பயணம் செய்துக் கொண்டிருப்பவரும், காங்கிரசில் தியாகம் பல புரிந்து பிறகு விலகியவருமான ஜயப்பிரகாஷ் நாராயண், வெளிநாட்டிலே வெளியிடுகிறார், இத்தீர்ப்பை.

அவர்கள் ஏன்? காங்கிரஸ் மூச்சுவிடும்படியான அளவுக்காவது இருப்பதற்குக் காரணமான நேரு அவர்கள், அண்மையில்தான் விலகப்போவதாக அறிவித்தபோது, காங்கிரசை எப்படி வர்ணித்தார்?

பதவியாசை
பிற்போக்குப்பித்து
சுயநலம்
போட்டிச் சண்டை

மிகுந்துவிட்டது, என்றார் நேரு! இதைவிடவா, வேறு 'நற்சாட்சி' வேண்டும் காங்கிரசைப்பற்றி? இப்படி, எல்லாம் சொன்னாலும், இன்னும் அங்குதான் இருக்கிறார்கள் இவர்கள்! வளர்த்த கட்சியெனும் பாசம்போலும்!

பாசம் பரிவு எவ்வளவு காட்டினும், காங்கிரசின் எதிர்காலம் என்னவென்பது, அங்குள்ள ஒவ்வொருவருக்கும் இன்று தெளிவாகத் தெரிந்துவிட்டது. ஆயினும், மக்கள் மத்தியில் பேசும்போது 'அது இது' என்று சொல்லித் தப்பிக்க நினைக்கிறார்கள். இது, எத்தனை நாளைக்குச் செல்லும்?

★

தயாராகிவிட்டது!

நந்தமிழ் நாட்டின் நல்ல பல நிகழ்ச்சிகளை பின்னணியாகக்கொண்டு தீட்டப் பெற்றதும் திரு. அகிலன் அவர்களின் மதிப்புரை கொண்டதுமான சிறந்த,

துப்பறியும் நாவல்!

"உயிரை வாங்கிய உயில்!"

(ரா. வேங்கடசாமி)

விலை ரூ. 1-25

குறிப்பு:- தனிப் புத்தகம் வேண்டுவோர் புத்தக விலையுடன் 25-புதிய காசுகள் சேர்த்து ரூ. 1-50 எம். ஒ. அனுப்புக.

விபரங்கட்கு:-

முத்துவேல் பதிப்பகம்
77, மதுரைசாலை
திருச்சிராப்பள்ளி-8.

வடக்கு வாழ்கிறது! தெற்கு தேய்கிறது!! — என்று நாம் சொன்னால், வெகுண்டு, வடக்கும் வாழவில்லை தெற்கும் தேயவில்லை என்று 'படபட'வெனப்பேசிப் பதிலளிக்கும், நமது நிதியமைச்சர் சுப்ரமணியனார், சென்ற மே 23-ந் தேதி, கோவையில் நடைபெற்ற ஒரு விழாவில் பேசியபோது, டில்லி மந்திரியாருக்குத்தந்த பதிலினைக் கண்டோம்; மகிழ்ந்தோம்.

7 இலட்சம் முதல் போட்டு, கோவையில் ஒருவர், ஒரு சிறு இரும்பு உருக்கு ஆலை அமைத்திருக்கிறார். அதன் திறப்பு விழாவில், டில்லி தொழில் மந்திரியான லால் பகதூர் சாஸ்திரி என்பாரும், முதலமைச்சர் காமராஜரும், சுப்ரமணியமும் கலந்து கொண்டிருந்திருக்கின்றனர். லால் பகதூரார் பேசும்போது சொன்னாராம், "சின்னச் சின்ன வழிகளில், சென்னை, இதுபோன்ற ஆலைகளை அமைக்கிறது. பாராட்டப்பட வேண்டியதாகும். சென்னை மனித வளமும் இயற்கை வளமும் நிரம்பியநாடு. இங்கு புத்திசாலிகள் அதிகம்", என்பதாக.

"இங்குள்ளவர்கள் புத்திசாலிகள் தான்! சந்தேகமில்லை. என்றாலும், இங்கே தொழில்வளர, மத்ய சர்க்கார், மனப்பூர்வமான-ஒத்துழைப்பையும் உதவியையும் அளிக்க வேண்டும்", என்றாராம், விழாவில்கலந்து கொண்டு பேசிய சுப்ரமணியம்! "மனப்பூர்வமான ஒத்துழைப்பு......", என்றால் என்ன பொருள்? நாம் கேட்டால், சுப்ரமணியனாருக்குக் கோபம் வரும்! நீங்களே, புரிந்து கொள்ளுங்கள்!!

முதல் 7 இலட்ச ரூபாய்-சின்ன ஆலை—நாள் ஒன்றுக்கு 50 டன் இரும்பு கிடைக்குமாம். முயற்சி சிறிதாயினும், ஈடுபட்டவரை நிச்சயம் பாராட்ட வேண்டியதுதான்! அதே நேரத்தில், வடக்கேயுள்ள டாடா ஆலையினைப் பற்றி ஒரு சிறிது சிந்தித்தால் மனம் குழம்பாமற் போகாது. நாளொன்றுக்கு 2,500 டன் இரும்பு, டாடாவில் உற்பத்தி செய்யப்படுகிறது — ரூபாய் 14 லட்சத்துக்கு மேல் ஒரு நாளைக்கு வருமானம் வருகிறது, அக்கம்பெனிக்கு. டாடா கம்பெனி ஒரு நாளைக்கு சம்பாதிப்பது 14-இலட்சம் ரூபாய்! கோவைக் கம்பெனியின் மூலதனமே 7 இலட்சம் ரூபாய்தான் !!

ஜாம்ஷெட்பூரிலுள்ள டாடா ஆலையைப்போல், இங்கும் ஒரு இரும்பாலை வைக்கவேண்டும் என்பதுதான் நமது கோரிக்கையாகும். சேலத்தில், அதைப்போல் ஒரு ஆலையை வைக்கவேண்டும் என்று நெடுநாட்களாகக் கோரப்பட்டு வருகிறது. ஆனால், வடநாட்டில் பிலாய், ரூர்கலா எனுமிடங்கள், டில்லிக்குத் தெரிந்தனவே ஒழிய "சேலம்" தெரியவில்லை. நாம் மட்டுமின்றி, சேலத்திலிருந்து டில்லிப் பார்லிமெண்டுக்குச் சென்ற எஸ். வி. இராமசாமி எனும் காங்கிரஸ் உறுப்பினர், அடிக்கடி 'சேலம், சேலம்' என்றே பேசிக்கொண்டிருந்தார். "என்னடா பெரிய தொல்லையாக இருக்கிறது," என்று அவருக்கு ஒரு துணை மந்திரிப் பதவியைத் தந்துவிட்டார்கள்! உடனே அவர், இங்கு சுற்றுப் பயணம் வந்து, "தெற்கு எங்கே தேய்கிறது?", என்று பேச ஆரம்பித்து விட்டார் !!

தென்னாடு பலவழிகளில் புறக்கணிக்கப்படுகிறது என்பதை விளக்கவே நாம்; "வடக்கு வாழ்கிறது: தெற்கு தேய்கிறது", என்று சொல்லி வருகிறோம். லால்பகதூர் சொன்னதுபோல, தென்னாடு வளம் நிரம்பிய பூமி. இயற்கை வளம் மட்டுமல்ல, மனித வளமும் நிரம்பிய நாடாகும். ஆனால் இப்படி வளம் நிரம்பிய பகுதிக்கு, வடநாட்டுச் சர்க்கார் அளிக்கும் மதிப்பு என்ன? இதோ ஒருவர், அதை விளக்குகிறார் :

"இரும்பு போன்ற இன்றியமையாத கனிப் பொருள்கள், இங்கே ஏராளம் உண்டு. ஆனால், அதை யார் கண்டு பிடிக்கிறார்கள். டில்லி சர்க்கார் இதற்கான ஆராய்ச்சிகளைப் பலவிடங்களில் செய்கிறார்கள். ஆனால், தென்னாட்டைச் சேர்ந்த ஆந்திராவிலோ? வேதனையுடன் சொல்கிறேன், சுமார் 1,12,000 சதுர மைல் பரப்புள்ள, ஆந்திராவில் மூன்றில் இரு பகுதியுள்ள பாகம் இன்னும் தோண்டிப் பார்க்காமலும், ஆராய்ச்சி செய்து பார்க்கப்படாமலுமே கிடக்கிறது."

பொறுப்பற்றவரல்ல, இவர்! ஆந்திர அரசின் ரெவினியு அமைச்சராக இருக்கும் காளா வெங்கட்டராவ், கடந்த மே 21-ந் தேதி ஐதராபாத் நகரில் நடந்த இந்திய சர்க்காரின் எஃகு-கனிப் பொருள்—ஆலோசனைப் போர்டின் 6-வது மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார். வளம் இருக்கிறது! ஆனால், அதைப் பற்றிச் சிந்திப்பதுகூட இல்லை, டில்லி !! சிந்தனைக்குப் பிறகுதானே, செயல். சிந்தனைக்கே இடமில்லை எனும்போது, ஆலை எப்படி ஏற்படும்? நமது நாடு எப்படி முன்னேறும்?

லால்பகதூர், புத்திசாலிகள் என்கிறார்—சிறு சிறு ஆலைகள் அமைப்பதை வெகுவாகப் பாராட்டுகிறார்—இப்படித்தான் செய்ய வேண்டும் என்கிறார். கோவையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆலையில் தயாராகயிருக்கும் உருக்குப் பொருள்கள், ஒருவேளை, அந்த ஆலையினரின் வசமுள்ள நூல் ஆலை போன்றவைகளுக்குப் பயன்படுத்தப்படலாம். ஆனால், வியாபாரத்தை நோக்காக வைத்து

அப்படியொரு "சிறு ஆலை" அமைக்கப்பட்டால், அதனால் வாழ முடியுமா? டாடாவுடன் போட்டி போட இயலுமா? ஒரு நாளும் முடியாதே! அதற்கு வழி என்ன செய்து தருவார், லால் பகதூர்?

அவர் சென்ற இடங்களில் கைத்தறியைப்பற்றியும் அதிகம் பேசியிருக்கிறார்—கைத்தறித் துணி அதிகம் தேங்கியிருக்கிறது, என்று வேதனையுடன் வெளியிடவும் செய்திருக்கிறார். அப்படித் தேங்காமல் செய்யத்தானே, தென்னாட்டினர் நீண்ட நாட்களாகக் கேட்டு வருகின்றனர்—புடவையையும் வேட்டியையும் கைத்தறிக்கே ஒதுக்கிவிடுங்கள் என்று! கவலைப்படும் டில்லி அமைச்சர், வழி செய்வாரா, இதற்கு? செய்யமாட்டார்—ஏனெனில், நாட்டைச் சுரண்டும் பெரிய பெரிய நெசவாலைகள் எல்லாம் வடக்கேயன்றோ உள்ளன? அவைகளுக்குக் கிடைக்கும் இலாபமன்றோ போய்விடும்! எப்படி டில்லி சம்மதிக்கும்? சம்மதிக்க மனம் வராததால்தானே, நமது நெசவுத் தொழில், குற்றுயிராக அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறது!

"குடிசைத் தொழில்களைச் செய்யுங்கள்—செய்யுங்கள்!!" என்று டில்லியிலிருந்து வரும் ஒவ்வொருவரும், நமக்குச் சொல்லத் தவறுவதில்லை. அப்படிச் சொல்கிறவர்கள் பெரிய தொழில்களை நடத்த நமக்கு வசதியளிக்கிறார்களோ என்று கேட்டால், நிதியமைச்சர் போன்றோர், "இதுதான் பேதபுத்தி! நெய்வேலி இல்லையோ நமக்கு? அது என்ன சிறு தொழிலா? எப்பேற்பட்டது தெரியுமா?" என்று கோபாவேசத்துடன் கூறுவார்கள். அந்த நெய்வேலியைப்பற்றி, சிம்சன் அதிபரும் பெரிய தொழிலதிபருமான அனந்தராமகிருஷ்ணன் என்பார் மே 29-ந் தேதி விருதுநகர் வர்த்தக சபையில் பேசும்போது, குறிப்பிட்டிருக்கிறார்.

"தமிழ் நாட்டிலிருக்கும் வியாபார சமூகம், நல்ல தேர்ச்சிபெற்றது; புத்திக் கூர்மை நிரம்பியது. எனினும் இங்குதான் தொழில்கள் கிடையாது! இதுவரையில் நமக்கு என்று இருக்கிற ஒரே ஒரு பெரிய திட்டம், நெய்வேலி ஒன்றுதான். வடக்கே 5000 கோடி செலவிடுகிறார்கள், ஐந்தாண்டுத் திட்டத்தில். இங்கோ 60 கோடியில் செலவிடும், ஒரே ஒரு நெய்வேலிதான்."

அனந்தராமகிருஷ்ணன், தி. மு. க. வல்ல! அவர், இவ்விதம் கூறுகிறார். அங்கே 5000; இங்கே 60 தானா? என்கிறார். இதுபோல ஒவ்வொரு துறையாக, எடுத்துக் கொண்டு பார்த்தால், அமைச்சர், அனந்தராமகிருஷ்ணன் போன்றோரும் ஆயாசப்படாமல் இருப்பதில்லை. அதையே நாம் சொல்லும் போதுதான். ஆயாசமும் ஆத்திரமும் கொள்ளுகின்றனர். என்ன மனமோ, இது!!

★

முல்லையின் காதல்!

"கதி"

பட்டது அந்தமரமென்றறிந்தும் அப்பசுமுல்லை தாவிப் படர்ந்தது. முல்லை பூத்து மணத்தை முகிழ்த்திடக் கார்காலமும் வந்தது. பட்ட மரமும் துளிர்த்தது. கார்கால நிலவினிலே கொடியும் கொம்பும் ஒன்றாய்த் தழுவிக் கதைபல பேசிக் களித்துச் செழித்தன. தென் பொதிகை அகில் மணமும் இந்தமிழின் பாமணமும் தென்றலலை மீது வந்து, தேனிலவு கொட்டும் வெண்ணொளியோடு கலந்து, நன்றலர்ந்த கொடிக்கும் கொம்புக்கும் மன்றல் வாழ்த்துக் கூறிப் போந்தன. காதலினால் அங்கே ஊடலுமுண்டு; பின் கூடலுமுண்டு.

கார்காலக் கழிவிற்கு முன்னே காலதேவன் கைப்பட்ட கடுங்காற்றொன்று முல்லைக்குக் காலனாய் வந்தது. தகையில்லாப் பெருங்காற்று தழுவி நின்ற தளிர்க் கொடியை மரத்தினின்றும் தனியேபிரித்துச்சிதைத்து அழித்தது. முல்லையைப் பிரித்த காற்றின தாக்குதல் மரத்திற்கும் உண்டு. நன்கு துளிர்த்து முழுதும் தளர்ந்து முக்காலம் பழுக்கக் காத்திருந்த மரம் மறுபடியும் ஏனோ மொட்டையாயிற்று.

காலத்தின் பருவத்திலே மாறுதல். கூதிர் காலப் பனித்துளியின் பசிய உணவால் மறுபடியும் துளிர்த்த மரம் வானோக்கிப் படர்ந்து வளர்ந்து வளமிக்க காய்கள் காய்த்துக் கனிந்து பயன் ஈந்து நின்றது.

வேனிற் காலம். பயன் தந்து நிற்கும் அம்மரத்தைப்பற்றியேறப் பல கொடிகள் சுற்றிவந்தன. மரம் அவைகள் தன்மேல் ஏறுவதை விரும்பவில்லை. ஆயினும் அவை பற்றின. தண்மையும் மென்மையும் அக் கொடிகளுக்கு இருக்கலாம். ஆனால் முல்லையைப் போல் மணம் முகிழ்க்கும் திறன் அவற்றிற்கு இல்லை. முல்லைக்கு இல்லை அக் கொடிகள் என்றெண்ணியது மரம்.

முதுவேனிற் காலம் வந்தது. முல்லைக்கு நிகரில்லா அம் முட் கொடிகளைத் தாங்க விரும்பாத மரம் முல்லையின் நினைவால் மறுபடியும் பட்டது.

ஆடியிளம் பிறையினிலே ஓர் நாள். அன்றுதான் முல்லை மொட்டைமாய்ப் பட்டு நிற்கும் மரத்தின் காதலி-கொழுகொம்பை தழுவியேற முற்பட்ட நன்னாள். அன்றும் பட்ட மரம், இன்றும் பட்டமரம். ஆனால் அன்றையபட்ட மரம் முல்லையின் தழுவலால் தளிர்த்தது. இன்றைய பட்ட மரமோ இனி என்றுமே துளிர்க்காது.

இரவு வந்தது; புயலையும் கூட இழுத்து வந்தது. முல்லையின் அணைப்புக்கு ஏங்கித் துடித்த மரம் புயலைத்தான் அணைத்துக் கொள்ள முடிந்தது.

★

மூலம்: மோபசான்

"வைரமாலை!"

தமிழில்: "அன்பு"

மாட்டில்டா அப்படியொன்றும் பெரிய பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவளல்ல. நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு எழுத்தாளன் மனைவிதான். வருவாய்க்கும் செலவுக்கும்தான் சரியாக இருந்தது அவர்களது வருமானம் பணத்தைச் சேமித்து வைப்பது என்பது அவர்கள் கனவிலும் செய்து பார்க்காத ஒன்று.

ஆனால் மாட்டில்டாவுக்கோ அந்த வாழ்க்கையே வெறுப்பாக இருந்தது. ஆடம்பர வாழ்க்கையைப்பற்றியே அவள் மனம் எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கும். விலையுயர்ந்த வீடு, வெளியே செல்ல கார், உயர்ந்த நகைகள், வீட்டு வேலைகளைச் செய்ய ஏராளமான ஆட்கள், இவைகளைப் பற்றியெல்லாம் அவள் பகற்கனவு காணுவாள். இவ்வாறான ஏழ்மை நிலையில் இருப்பதற்குச் சிலசமயங்களில் வருந்திக் கண்ணீர் வடிப்பாள். அவள் பள்ளித் தோழி ஒருத்தி! இப்பொழுது செல்வச் செருக்கோடு வாழ்வதைக் கண்டு பொறாமைப்படும் அளவுக்குக்கூட வந்துவிடுவாள். பெண்களுக்குள்ள இயற்கையான குணங்களுள் ஒன்றான நகைப்பைத்தியம் இவளையும் பிடித்துக் கொண்டது. அவள் கழுத்தில் நகைகள் ஒன்றுமில்லையென்றாலும், அவளுக்கிருந்த இயற்கை அழகு அக் குறையைப் போக்கிற்று.

ஒருநாள் மாலை அவள் கணவன் லூய்சேல் அலுவலகத்திலிருந்து என்றுமில்லாத மகிழ்ச்சியோடு வந்தான். ஆனால் மாட்டில்டாவுக்கோ அவன் மகிழ்ச்சியைக் காணக் கோபமாகத்தானிருந்தது. பாவம்! கணவன் தன்னை இந்த நிலையில் வைத்திருக்கிறானேஎன்ற வெறுப்புணர்ச்சி போலும். அவன் தான் என்ன செய்வான்! காலமெல்லாம் எழுதி எழுதி கை வலி ஒன்றுதான் அவன்கண்டது. ஆனால் அந்தக்கைநிறையப்பணம் தான் அவன் காணாதது!

"மாட்டில்டா! நமக்குமந்திரியின் வீட்டிலிருந்து ஒரு விருந்துக்கு அழைப்பு வந்திருக்கிறது, இதோ பார்!" என்று மகிழ்ச்சியுடன் அழைப்பிதழை நீட்டினான். வாங்கிபபடித்த அவள் அதை வெறுப்போடு கீழே எறிந்தாள்.

"என்ன? அழைப்பிதழைக் கண்டு ஆனந்தப்படுவாய் என்றல்லவா இருந்தேன்? ஏன் இப்படி?" என்றான் லூய்சேல்.

"இந்த அழைப்பிதழைக் கண்டு நீங்கள ஆனந்தப்படலாம். நான் அந்த நிலையில் இல்லை. அழைப்பு வந்திருப்பதோ மந்திரியின் வீட்டிலிருந்து, பத்துப் பேர் பெரிய மனிதர்கள் வருவார்கள். அங்கு போய் என்னை இப்படி இந்த உடையோடும் வெறும் கழுத்தோடும் நிற்கச் சொல்கிறீர்களா? அது உங்களுக்கே அவமானமில்லை?",

"இதோ பார்! உயர்ந்த உடையாலா உன் உடல் அழகுபெற வேண்டும்? உனது உடலிலிருக்கும் எந்தஉடையும் அது உன்மீது இருப்பதிலல்லவா அழகு பெறுகிறது! உன் புன்னகை ஒன்று போதுமே! உனக்கு வேறு நகை எதற்கு?"

"இப்படிச் சொல்லிச் சொல்லி ஏமாற்றிவந்தது போதும். இந்த நிலையில் நான் வரவேமாட்டேன்; வேண்டுமானால் அந்த அழைப்பிதழை வேறு யாருக்காவது கொடுத்துவிடுங்கள்"

"சே! அது மரியாதையாகுமா? நம்மை மதித்து ஒரு மந்திரி அனுப்பியிருக்கிறாரே! இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட்டால் வேறு இதுபோல் நமக்கு கனவிலும் கிடைக்காது!"

"பின் வேறு வழி?" மாட்டில்டாவின் கண்களிலிலிருந்து இரு துளிக் கண்ணீர் வழிந்தது. இதுவரை வேடிக்கையாகப் பேசிவந்த லூய்சேலின் மனம் உருகிற்று.

லூய்சேல் ஏதோ யோசித்தவனாக "சரி, சரி! உனக்குப் புது உடைகள் வாங்குவதற்கு எவ்வளவு ஆகும் என்றான். "சுமார் 400 பிராங்குகள் ஆகும்" என்றாள் ஆவலுடன.

"என்னிடமிருக்கிறது. துப்பாக்கி வாங்குவதற்காக என் ஆயுள் பூராவும் சேமித்து வைத்த தொகை. அதைக் கொண்டு வாங்கிவிட்டால் பிறகு பார்த்துக் கொள்ளலாம்" மாட்டில்டாவின் கண்களில் மல்கியிருந்த நீர்த்துளிகள் மறைந்து மகிழ்ச்சி தோன்றியது.

நாளை விருந்துக்குச் செல்ல வேண்டும். லூய்சேலுக்கோ கட்டுக்கடங்கா மகிழ்ச்சி! மறுநாளும் வந்தது. அவன் வேலைகளை முடித்துக்கொண்டு தயாரானான்.

"என்ன இளம்பலாமா?......இப்போதுதான் தலையலங்காரமே ஆரம்பிக்கிறதா, சீக்கிரம்!" என்று மனைவியைத் துரிதப்படுத்தினான்.

கண்ணாடி முன் சென்று புது உடையில் தன் மேனியழகைப் பார்த்த மாட்டில்டாவின் முகம் திடீரெனச் சுருங்கியது. அவள் கைகள் தன் கழுத்தைத் தடவிப் பார்த்துக்கொண்டு இருந்தன. வெறும் கழுத்து!

"நான் விருந்துக்கு வரப்போவதில்லை; விருப்பமானால் நீங்கள் சென்று வாருங்கள்" படபடப்புக் கலந்த கோபக் குரலில் பேசினாள் மாடில்டா.

"உனக்குப் பைத்தியமா என்ன? ஏன் இப்படித் திடீரென்று உளறுகிறாய்?"

"எனக்குப் பைத்தியமுமில்லை ஒன்றுமில்லை. எப்படிநான் இந்தக் கழுத்தோடு விருந்துக்கு வருவேன்?"

"இப்படித்திடீரென்று நினைத்ததும் நகை வாங்கிவிட நாம் என்ன செல்வந்தர்களா?"

"நாம் செல்வந்தர்கள் இல்லையென்று இப்போதுதான் தெரிந்ததா? எப்படியோ நகையில்லாமல் நான் வெளியே வரமாட்டேன்!'

லாய்சேலுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அவன் மனதில் திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது "அடுத்த தெருவில் உன் பணக்காரச் சிநேகிதி ஒருத்தி இருக்கிறாளே, அவளைக் கேட்டுப்பாரேன்! விருந்துக்குச் சென்று வந்ததும் திரும்பவும் கொடுத்துவிடுவோம்"

"நல்ல நேரத்தில் யோசனை கூறினீர்கள்! இதோ போய்க் கேட்டுப்பார்க்கிறேன்" என்று மகிழ்வு பொங்கக் கூறிவிட்டுத் தன் சிநேகிதியின் இல்லத்தை நாடினாள். அவளுக்கோ 'நம் வீட்டைத் தேடி இவ்வளவு தூரம் வந்துவிட்டாளே' என்ற பெருமிதத்தில் அவளிடமிருந்த நகைகள் பூராவையும் எடுத்துக் காண்பித்து விரும்பியதை எடுத்துச் செல்லுமாறு கூறினாள். மாட்டில்டாவுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை! தன் கனவில்கூட அவள் இவ்வளவு நகைகளைப் பார்த்தது கிடையாதே! அங்கிருந்த நகைகளுள் ஒரே ஒரு வைரமாலைதான் அவள் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்தது. அதைக் கேட்டு வாங்கிக்கொண்டு, மறுநாள் தந்துவிடுவதாக வாக்குறுதியும் தந்து வந்தாள்.

இரவல் வாங்கிய வைரமாலையைப் போட்டுக் கொண்டு இருவரும் விருந்துக்குக் கிளம்பினர். மாட்டில்டாவுக்கு இருந்த இயற்கைஅழகுடன் அவள்தேடிக் கொண்ட செயற்கை அழகும் சேர்ந்து வழியில் வருவோர் போவோரையெல்லாம் கவனித்து விட்டுப் போகச் செய்தது!

விருந்திலும் எல்லாப் பெரிய மனிதர்களும் அவளையே நோக்கினார்! லாய்சேலுக்கும் பெருமிதம் தாங்க முடியவில்லை! தன் மனைவியின இத்துணையளவு அழகை அவனே இதற்கு முன் பார்த்தது கிடையாது! மாட்டில்டாவும் என்றுமடையாத மகிழ்ச்சியடைந்தாள்.

விருந்து முடிந்தது. இரவு வெகு நேரமாகிவிட்டதால் கார் போக்குவரத்து முதலியவைகள் எல்லாம் நின்றுவிட்டன. ஆகவே அவர்கள்வாடகைக்கார்வைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தனர். மாட்டில்டா கதவைத் திறந்து விளக்கைப் போட்டாள். தன் புது அழகை இன்னொரு முறை பார்க்க விரும்பினாள் போலும்! பெருமிதத்தோடு கண்ணாடியின் முன் நின்று தன் உடைகளைக் கவனித்தாள். அடுத்து கழுத்திலிருந்த தன் இரவல் நகையைப் பார்க்க முயன்றாள்.

நகையைக் காணோம்! வைரமாலையைக் காணோம்! ஐயோ என்றலறினாள்! அவளது அலறலைக் கேட்டு என்ன என்று கேட்டபடியே ஓடோடி அவளருகில் வந்தான் லாய்சேல்!

"கழுத்திலிருந்த வைரமாலையைக் காணோமே! இப்பொழுது என்ன செய்வது?" பதைபதைத்தாள் மாட்டில்டா.

"என்ன உளறுகிறாய்? மாலை வரை இருந்த மாலை எப்படித் திடீரென்று காணாமற்போகும்? சரியாகப் பார்! ஆச்சரியமாக இருக்கிறதே!" அதற்குள்ளாக உடல் வியர்த்துவிட்டது அவனுக்கு.

"உண்மையாகவே காணோம்! நன்றாகத் தேடிப் பார்த்துவிட்டேன். வீட்டிற்குள் நுழைந்ததும் நேராக கண்ணாடி முன்தான் வந்தேன். வேறு எங்காவது சென்றாலல்லவா வீட்டிற்குள் ஒழிந்திருக்க வேண்டுமென நினைக்கலாம்?"

"ஒருவேளை நாம் வந்த காரில் நழுவி விழுந்திருக்கலாம்!...ம்...... அந்தக் காரின் எண் உனக்கு ஞாபகமிருக்கிறதா?"

"நான் அதைக் கவனிக்கவில்லையே!" என்றாள் கண்களில் நீர் மல்கியபடி.

"சரி சரி நாம் வந்த வழியே ஒரு முறை சென்று பார்த்து வருகிறேன். கீழே எங்காவது விழுந்திருந்தாலும் விழுந்திருக்கும்" சோர்வோடு வெளிக்கிளம்பினான் லாய்சேல்.

மாட்டில்டாவுக்கு ஒன்றுமே ஓடவில்லை. மயக்கமடைந்தவள் போல நாற்காலியில் சாய்ந்தாள். தன் சிநேகிதிக்கு என்ன பதில் சொல்வது என்பதை நினைத்தபோது அவள் உடல் நடுக்கமெடுத்தது. சிறிது நேரம் கழித்து லாய்சேல் திரும்பி வந்தான். ஆனால் அவன்சோர்வோடு வருவதைக் கண்டு அவள் இன்னும் பன்மடங்கு அதிர்ச்சியடைந்தவளானாள். இனியும் வைரமாலை அவர்களுக்குக் கிடைக்கும் என்பது வீண் எண்ணம் என்பதை உணர்ந்தாள்.

மறுநாள் லாய்சேல் முதல் வேலையாக போலீசுக்கு விபரங்கள் தந்தான். எல்லாப் பத்திரிகைகளிலும் விளம்பரங்கள் கொடுத்தான். அவனுக்கு வைரமாலை கிடைக்கும் என்ற நம்பிக்கை சிறிதும் இல்லை. மனைவியின் கட்டாயத்தின் பேரில்தான் இவையனைத்தையும் செய்தான். அந்தப் பணக்காரச் சிநேகிதிக்கும் இன்னும் ஒரு வாரத்திற்குள் நகையைத் திருப்பிக் கொடுத்துவிடுவதாக மாட்டில்டாவை ஒரு கடிதம் எழுதியனுப்பச் சொன்னான்.

மாட்டில்டா அந்த நிகழ்ச்சிக்குப் பின் முற்றிலும் மாறிவிட்டாள். பார்ப்பதற்கு நோயாளி போல் காணப்பட்டாள். நான்கு நாட்கள் சென்றன. வைரமாலையைப் பற்றி எந்தவிதத் தகவலும் அவர்களுக்குத் தெரியவில்லை. வைரமாலை இனிக் கிடைக்காது என இருவரும முடிவுகட்டி விட்டனர். ஆகவே அந்தச் சிநேகிதிக்கு இன்னொன்று புதியதாகத்தான் வாங்கிக் கொடுத்தாக வேண்டும்! இதை நினைத்தபோது இருவருக்கும் பேரதிர்ச்சியாக இருந்தது. எப்படியும் வாங்கிக் கொடுத்துத்தானே ஆகவேண்டும்!

மறுநாள் இருவரும் கடைகடையாக ஏறி இறங்கினார்கள். பழைய வைரமாலையைப்போல் எங்கும் இல்லை. கடைசியாக ஒரே ஒரு கடையில்தான், அதுவும் ஒன்றே ஒன்று ஒழிந்த நகையைப் போன்று இருந்தது. அதன் விலையைக் கேட்டபோது இருவர் உடலும் வியர்வையால் நனைந்தது!

நாற்பதினாயிரம் பிராங்குகள்!

அவர்கள் வாழ்க்கையிலேயே பார்க்காத தொகை! என்ன செய்வது! எப்படியும் வாங்கிக் கொடுத்துத்தானே ஆகவேண்டும்! இருப்பதும் ஒன்றுதான்! ஆகவே அந்தக் கடைக்காரனை, தாங்கள் இன்னும் இரண்டு மூன்று நாட்களில் தொகையைக் கொடுத்து வைரமாலையைப் பெற்றுக் கொள்வதாயும், அதுவரையில் அதை விற்காமல் வைத்திருக்குமாறும் மன்றாடிக் கேட்டுக் கொண்டனர். அவனும் இரக்க உணர்ச்சியோடு சம்மதித்தான்.

இருப்பதோ மூன்று நாட்கள்! இதற்குள் 40,000 பிராங்குகள் சம்பாதித்தாக வேண்டும்! கடைக்காரனிடம் என்னவோ மதிப்பாகச் சொல்லிவந்துவிட்டார்கள். இருவரும் ஒருவரை யொருவர் பரிதாபத்துடன் பார்த்துக் கொண்டனர். லாய்சேல் பணம் தேடும் படலத்தில் இறங்கினான்! எப்படியும் அவன்தானே சம்பாதித்தாக வேண்டும்! காசைக் கொடுத்துத் தேளைக் கொட்டிக் கொள்ளச் செய்த கதையாயிற்று அவர்கள் கதையும்!

கடனாகப் பாதி; பொருள்களை அடகு வைத்துப் பாதி, இப்படியாக பல இடங்களில் பல்வேறு வகையாக சிறு சிறு தொகையாகப் சேர்த்து நாற்பதினாயிரம் பிராங்குகள் சேர்த்தான்! தவறு தன்மீதிருப்பதால் மாட்டில்டாவுக்குத் தன் கணவன் முகத்தை ஏறிட்டுப் பார்க்கக்கூடத் துணிவில்லை. சேகரித்த தொகையைக் கொடுத்து வைரமாலையை வாங்கி வந்தனர்.

அன்று மாலையே நகையை எடுத்துக்கொண்டு சிநேகிதி வீடு நோக்கிப் புறப்பட்டாள். நகை ஒழிந்தது, அதற்குப் பதிலாக அதுபோலவே புது நகை ஒன்று வாங்கியது, அதனால் காலதாமதமாகியது இவைகளை யெல்லாம் மாட்டில்டா சிநேகிதியிடம் கூற விரும்பவில்லை. தன்னைப் பற்றிக் கீழாக நினைத்து விடுவாளே என்று நாணம் கொண்டாள்.

சிநேகிதியும் மாட்டில்டாவைக் கண்டதும் மகிழ்ச்சியுடன் வரவேற்று உபசரித்தாள். மாட்டில்டா வைரமாலையை சிநேகிதியிடம் தயங்கிக்கொண்டே கொடுத்தாள். ஆனால் அவளோ அந்த பெட்டியைக்கூட திறந்து பார்க்காமல் வாங்கி வைத்துக்கொண்டாள்! இதைக் கண்ட மாட்டில்டாவின் மனம் மகிழ்ச்சியடைந்தது. திறந்து பார்த்துவிட்டால் நகையை அடையாளம் கண்டு கொள்வாளோ என்ற பயம் அவளுக்கு! சிநேகிதிக்கு நன்றி தெரிவித்துவிட்டு வீடு திரும்பினாள்.

இனித்தான் அவர்கள் முன் இமயம் போன்றதொரு பிரச்சனையிருந்தது. எப்படிக் கடனையெல்லாம் தீர்ப்பது? எனவே அவர்கள் குடும்பத்தில் பல மாற்றங்கள் உண்டாயின.

குடும்பம் முற்றிலும் மிகச் சிறிய வீட்டிற்குமாற்றப்பட்டது. இருந்த ஓரிரு வேலைக்காரர்களும் நீக்கப்பட்டனர். எளிய உணவு எளிய உடை இவைகளையே மேற்கொண்டார்கள். வருவாயில் பாதிக்கு மேல் கடனை அடைப்பதற்கு மட்டும் ஒதுக்கிவைத்தார்கள். எல்லா வேலைகளையும் மாட்டில்டாவே செய்ததால், அவள் மேனி உருக்குலைந்தது. லாய்சேலுக்கு அவளைக் காணும்பொதெல்லாம் வருத்தமாக இருக்கும். என்னசெய்வது! மாட்டில்டாவும் இப்போதெல்லாம் ஆடம்பர வாழ்க்கையைப் பற்றியே நினைப்பதில்லை! முன்பிருந்த எண்ணங்களை யெல்லாம் மாற்றிக் கொண்டாள்!

பத்துஆண்டுக்காலம்சென்றது! நாற்பதினாயிரம் பிராங்குகள் சேர்ந்தன!! கடன் தொகை முழுதும் அடைக்கப்பட்டது!!!

ஒரு நாள் மாலை!

தெருவில் போய்க் கொண்டிருந்த மாட்டில்டா தற்செயலாகத் தன பழைய சிநேகிதியைப் பார்க்க நேர்ந்தது. இன்னும் அந்தப் பழைய ஆடம்பரத்துடனேயே காணப்பட்டாள். மாட்டில்டா அவளைப் பெயர் சொல்லிக்கூப்பிட்டாள். சிநேகிதி அவளைக் கண்டாள். ஒரு நிமிடம்; இரண்டு நிமிடம் இன்னும அவளால் மாட்டில்டாவை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை!-'மாட்டில்டா!' என்றொரு ஆச்சரியக் குரல் இருவரும் கட்டித் தழுவினர்!

மாட்டில்டாவின் உள்ளத்தில் 'பழைய' நினைவு தலை தூக்கியது! இவ்வளவு காலம் கழிந்த பின்னர் அந்த நிகழ்ச்சியைக் கூறுவதில் தவறு இல்லையென எண்ணி, பத்து ஆண்டுகளுக்கு முன்னர் சிநேகிதியின் வைரமாலை காணாமற் போனதில் இருந்து அதற்குப் பதில் எவ்வளவோ இன்னல்களுக்கிடையில் 40,000 பிராங்குகளுக்குப் புது நகை வாங்கிக் கொடுத்ததோடு கடனையும் தீர்த்தது வரையில் சோகக் குரலில் சொன்னாள்.

"ஒழிந்த உன் வைர மாலைக்காக 40000 பிராங்குகள் கொடுத்து அதேபோல் புது நகை ஒன்று வாங்கிக் கொடுத்தோம்."

—இந்தச் சொற்கள் மாட்டில்டாவின் வாயிலிருந்து வெளிவந்ததும், அந்தச் சிநேகிதி அடைந்த அதிர்ச்சிக்கு அளவேயில்லை! அவள் முகத்தில் ஆச்சரியம் அதிர்ச்சி, பரிதாப உணர்ச்சி இவையனைத்தும் மாறி மாறித் தோன்றி மறைந்தன! கடைசியில் நிலைமையைச் சமாளித்துக் கொண்டு அந்தச் சிநேகிதியின் வாயில் இருந்து திக்கித் திக்கி வந்த சொற்கள் இதுதான்: "மாட்டில்டா!......அது, அந்த வைர மாலை...என் வைரமாலை...உண்மையான வைரம்......இல்லை!......போலி...வைரம் மாதிரி......இருக்குமே தவிர...உண்மையானது... இல்லை"

அவ்வளவுதான்! மாட்டில்டாவுக்கு கடந்த பத்தாண்டு காலத் துன்ப வாழ்வு ஒருமுறை மனக் கண்ணில் பளிச்சிட்டது! கடைசியாக அந்தச் சிநேகிதியின் ஒழிந்த "வைர" மாலையும் அதற்குப் பதில் அவள் வாங்கிக் கொடுத்த வைரமாலையும் அவள் முன் தொங்குவதுபோல் காணப்பட்டது! உடன் அவளுக்கு அவள் முன்னிருந்த சிநேகிதி...சாலை... மனிதர்கள்...ஏன் ... உலகமே சுழன்றது!

குணசாலியான பெண் தன் கணவனுக்குக் கிரீடமாயிருக்கிறாள்; இலச்சை உண்டு பண்ணுகிறவளோ, அவனுக்கு எலும்புருக்கியாயிருக்கிறாள்.

மார்க்கஸ் துல்லியஸ் சிசிரோ (கி. மு. 106-43)

[கோ. கோதண்டராமன்]

ரோமானிய இலக்கியம் அரசியல் தத்துவத்திற்கு மூலாதாரமான கருத்துக்கள் ஏதும் வழங்கவில்லை என்றாலும், ரோம்நாட்டுக் குடியரசு, சாமராஜ்யம் இவற்றைச் சார்ந்த சட்ட நிபுணர்களும், கட்டுரையாளர்களும், வாதத்திறமையானதும், நடைமுறைக்கு மிகவும் ஏற்றதுமான, ரோம் நாட்டுச் சட்டம், ஆட்சிமுறைத் துறைகளுக்கு விலைமதிக்கவொண்ணாத கருத்துக் கருவூலங்களை அளித்துள்ளார்கள். ஆனால் அவர்கள் அரசாங்க அமைப்புமுறை, அரசியல் கொள்கை, கோட்பாடுகள் பற்றிய தங்களின் தத்துவ நூல்களில், பெரும்பாலும் கிரேக்கப் பேராசிரியர்களின் கருத்துக்களையே பின்பற்றியுள்ளனர். குறிப்பாக, கிரேக்கத் தத்துவாசிரியர்களின் அரிய அரசியல் கருத்துக்களால் பெரிதும் தூண்டப்பட்ட ரோம் நாட்டு எழுத்தாளர் "இயற்கை விதிகள்" பற்றிய தத்துவங்களை, ரோம்நாட்டுச் சட்டத் தொகுப்புக்களில் நயனுறப் பின்னியுள்ளனர். இதன் மூலம், பிற்காலத்து அரசியல் தத்துவத்திற்கு வேண்டப்பட்ட, அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த தங்களின் சீரிய கருத்துக்களை ரோம்நாட்டு எழுத்தாளர்கள் மிகத் தெளிந்த வடிவத்தில் வழங்கியுள்ளார்கள்.

அரசியல் தத்துவங்களைப்பற்றிய தமது கருத்துக்களை மிக விரிவாகவும் தெளிவாகவும் எழுதிய ஒரே ரோமானிய ஆசிரியர் சிசிரோ தான். பொதுவாக அவர் ரோமானிய உரை நடை எழுத்தாளர்களில் தலை சிறந்தவரெனக் கருதப்படுகிறார். அக்காலத்துத் திறமைவாய்ந்த வெற்றிகரமான வழக்கறிஞர்களுள் ஒருவராகவும், சிறந்த அரசியல் சொற்பொழிவாளராகவும், தேர்ந்த அரசியல் வாதியாகவும், அரசியல் நிபுணராகவும் விளங்கியவர்தான் மார்க்கஸ் துல்லியஸ் சிசிரோ. களிப்பு வாய்ந்த கட்சி அரசியலில் மிகச் சிறந்த தலைவராகவும், நீண்ட நாட்கள் நாடு கடத்தப்பட்ட அரசியல் வாதியாகவும் அவர் மிளிர்ந்தார். இவ்வாறு அவர் அரசியல் வாழ்க்கையில் மூழ்கித் திளைத்திருந்தபோது, கொடூரமான கட்சிப் பூசலொன்றில் கொல்லப்பட்டார்.

சிசிரோவின் நூல்கள் பல பிரிவுகளையும் கவர்ந்துள்ளன. சொற்பொழிவு, அறநெறி, தத்துவம் இன்ன பிற பொருள்களைப் பற்றியெல்லாம் அவர் விரிவாக எழுதியுள்ளார். அவரது நூல்களின் முக்கிய நோக்கம் முற்றிலும் புதுமையானதொரு அரசியல் தத்துவத்தைப் படைப்பதன்று. மாறாக, அவரது நூல்களின் ஒரே நோக்கம் — ஒப்பற்ற நோக்கமென்னவென்றால், அவருக்கு முற்பட்ட கிரேக்க நாட்டு அரசியல் மேதைகள் அளித்துச் சென்ற தத்துவங்களைப் பாமரரும் கற்றுப் புரிந்துகொண்டு பயன் பெறும் வகையில் விளக்குவதும், அந்தத் தத்துவங்களை ரோம்நாட்டில் எவ்வாறு தக்க முறையில் கையாள வேண்டும் என்பதை அறிவிப்பதுமேயாம். சிசிரோவின் இரு அரசியல் நூல்களின் சிற்சில பகுதிகளே நமக்குக் கிடைத்துள்ளன. அவை கி. மு. 51-ம் ஆண்டில் வெளியான குடியரசு என்ற நூலும், சிசிரோ இறந்துபோனதற்குப் பின் வெளியான "சட்டங்கள்" என்ற நூலுமேயாகும்.

சிசிரோ விட்டுச் சென்ற அரசியல் நூல்களின் உடனடியான நோக்கமென்னவென்றால், கிரேக்கர்களால் வெளியிடப்பட்ட எல்லோருக்கும் ஏற்புடைத்ததான, சமூக, அரசியல் உண்மைகளின் அடிப்படையின் பேரில், எவ்வாறு ரோமானியர் பாரம்பரிய— மக்கள் பணியை நிறுவ முடியும் என்பதை எடுத்துக்காட்டுவது தான். இவ்வுண்மைகளை அறிந்து தெளிவதற்கு எவ்வாறு ஒரு அரசு துணை செய்கிறது என்பதையும் அந்நூல்கள் நன்கு புலப்படுத்துகின்றன. சிசிரோ அனுசரித்த பொது முறையின்படி, முதன் முதல் முழுமைத்துவம் பெற்ற ஒரு அரசினைப்பற்றி விவரித்து, ரோம்நாட்டு வரலாறு எவ்வாறு அத்தகைய முறையை அனுசரிக்க முயற்சிசெய்து வெற்றியும் பெற்றது என்பதை அந்நூல்கள் விளக்காநிற்கும்.

பிளேடோ, அரிஸ்டாடில், பாலிபியஸ் இவர்களிடமிருந்து, "கலப்பட அரசியலமைப்பு முறையே பல இறப்பட்ட அரசுகளிலும் சிறந்தது." என்ற தத்துவத்தைச் சிசிரோ எடுத்துக் கொண்டார். இத்துடன் "மேற்கூறிய அரசியலமைப்பின் அவசியமான தத்துவங்களை ரோம் நாட்டு அரசாங்கம் தான உச்சநிலை அடைந்திருந்த நாட்களில் நடைமுறையில் புகுத்தி உலக அரசுகளுக்கெல்லாம் ஒரு எடுத்துக் காட்டாக விளங்கியது" என்ற பாலிபியசின் கருத்தினைச் சிசிரோவும் பின்பற்றினார். ஆனால் அந்தத் தத்துவங்களைச் செயல்படுத்துதற்கு எத்தகைய சாதனங்கள் பயன்படுத்தப்பட்டன என்பதைப் பொறுத்தமட்டில், சிசிரோ பாலிபியசைப்போல் அவ்வளவு திட்டவட்டமாகவோ தெளிவுடனோ கூறிச்சென்றாரில்லை, எனினும், "சட்டங்கள்" தனது நூலில், ரோம் நாட்டின் கலப்பட அரசியலமைப்புச் சட்டத்தில் காணப்பட்ட குறைகளைத் தவிர்ப்பதற்கு, சில அரிய யோசனைகளை அவர் அளித்துச் சென்றுள்ளார்.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ரோமானிய அரசியலமைப்புப் பற்றிய தனது ஆராய்ச்சியில், "இயற்கை விதிகள்" பற்றிய கிரேக்கத் தத்துவாசிரியர்களின் சிந்தனைப் படைப்புக்களை, தனக்கே உரித்தான ஆற்றொழுக்கு நடையில் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். இயற்கை விதிகளைப் பற்றிய அத்தகைய தத்துவத்தினின்று. ஒரு அரசின் அறநெறி பற்றியும், அதன் சீலத்தைப் பற்றியும், உண்மையான ஒரு அரசியல் சமுதாயத்தில் மக்களின் மகத்தான தலைமை பற்றியும், அத்தகைய அரசியல் சமுதாய மக்கட் குழுவினுக்கிடையில் வேண்டப்படும் அவசியமானதும் சட்ட ரீதியானதுமான சமத்துவத்தைப் பற்றியும், தனது ஆழ்ந்த ஆராய்ச்சியின் மூலம் கண்டெடுத்த பல அரசியல் முடிவுகளை நமக்கு வழங்கியுள்ளார். இவ்வாறு அவர் ஒரு அரசுக்குச் சிறப்பாக வேண்டப்படும் நீதி, நேர்மை பற்றியும்—சமூக, அறநெறி பற்றியும் அளித்துள்ள கருத்துக்களே, அவர் அரசியல் வளர்ச்சிக்குத் தந்துள்ள "மாபெருங் கொடை" என்னலாம். இடைக் காலத்தில் அவரது நூல்கள், அரசியல் வல்லுநர்களால் விரும்பிக் கற்கப்பட்டதுடன், மேற்கோள்களாகவும் அவ்வப்போது பயன்படுத்தப்பட்டன என்பது வெளிப்படை. இந்த இடைக் காலத்திலேயேதான் சிசிரோவின் கருத்துக்கள், கிறித்துவச் சர்ச்சுகளின் சமூகக் கொள்கைகளிடை அமிழ்ந்துவிட்டன என்று கூறப்படுகிறது.

உலகைத் திருத்துதற்கு முனையும் உத்தமர்கள் எவ்வாறு அப்பணிக்காகத் தத்தமது ஆவியைத் தியாகம் செய்ய வேண்டிய அவசியத்திற்குத் தள்ளப்படுகிறார்களோ, அதே நிலைதான் சிசிரோவின் வாழ்க்கை வரலாற்றிலேயும் நாம் காண்கிறோம். மேதக்க ரோமானிய நாட்டிற் தோன்றி, அரசியல் வாழ்வை ஏற்றுக்கொண்டு, அவ்வரசியல் வெள்ளத்திலேயே தன் இன்னுயிரை நீத்த மாபெருந் தியாகிதான் சிசிரோ! சிசிரோ, கட்சிப் பூசலொன்றில் தன் ஆருயிரை இழந்தாரெனினும், அவர் இன்னும் தனது நூல்களின் வடிவத்திலே உலக மக்கள் நெஞ்சங்களில் நடம் புரிகிறார். கால வெள்ளம் வேண்டுமானால், கலைஞரை - கவிஞரை - அரசியல் மேதைகளை அழித்திடக் கூடும்! ஆனால் அவர்கள் உலகுக்கு அளித்துச் செல்லும் உயர்ந்த கருத்துக்களும், தத்துவங்களும் கலைச் செல்வங்களும் என்றும் நின்று நிலைத்து நமக்கு மகிழ்வூட்டுவன அன்றோ? ❋

வருந்துகிறோம்

கழிந்த 1—6—58 அன்று, தோழர் சி. பி. சிற்றரசு அவர்களின் தாய் மாமனாரும், தமக்கையாரின் கொழுநருமான திரு. வி. ஆர். இராசகோபால் அவர்கள் சிலநாட்கள் நோய்வாய்ப்பட்டுத் தமது 63-ம் அகவையில் வேலூர் மருத்துவ மனையிலேயே இயற்கை எய்தினார். அன்னாரைப் பிரிந்து வாடும் சுற்றத்தார்க்கும், நண்பர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

முழுவதையும் தன் விரலசைவில் ஆடும்படிச் செய்யலானான். சார்லஸ் மன்னனின் சிரம் கொய்யப்பட்ட பிறகு, இங்கிலாந்தில் யார் ஆள்வது என்கிற குழப்பம் ஏற்பட்டபோது, ஒருவன் தோன்றினான்! பார்லிமெண்டுக்குத் தலைமை வகித்து மன்னனின் மணிமுடியை அறுத்துத் தள்ளக் காரணமான ஆலிவர் கிராம்வெல் தான அவன்!! அவன் தனது வீரதீரங்களையும், வெற்றிக் குணத்தையும் முதலாக வைத்து, (Lord Protector) எனும் திருநாமம் பூண்டு, ஆட்சியை நிறுவினான். அதாவது மன்னனிருந்த இடத்தில், இவன் அமர்ந்தான்! வல்லவனாகவும் நல்லவனாகவும் இருந்ததால், இவன் ஆட்சியில், கெடுதல் ஏதும் ஏற்படவில்லை. ஆனால் இவனைச் சுற்றியிருந்தோர் அனைவரும், கைவசம் கிடைத்த அதிகாரத்தைத் தத்தமது சுயநலத்துக்குப் பயன்படுத்தலாயினர். எனவே, அவன் இறந்த பிறகு, இங்கிலாந்தில் இந்த ஆட்சி முறை ஒழிந்து, இப்படி ஒரு தனி நபரைப் பெரியவனாக்குவது தீது எனும் எண்ணம் மலர்ந்து, இப்போதுள்ள ஆட்சி முறை அரும்பலாயிற்று!! இங்கிலாந்து கண்ட இதே பாடத்தை, பிரான்சும் சந்தித்தது - பிரான்சில், லூயி மன்னனின் சிரம் கொய்தனர், மக்கள். மன்னனை ஒழித்த புது ஆனந்தத்தில் தலைகால் தெரியாமல் தத்தளித்துக்கொண்டிருந்த பிரெஞ்சு மக்களின் மத்தியிலே, நெபோலியன் தோன்றினான்!! பிரெஞ்சுப் படையிலே சாதாரண தளபதியாகயிருந்து, ஒரு சில வெற்றிகளைப் பெற்றுக் காட்டியதன் மூலம், தன்னை "வெற்றி வீரன்" என்று நிரூபித்துக் கொண்ட இவனை பாரிஸ், கோபுரத்திலேற்றிற்று— கொண்டாடிற்று. கொந்தளிக்கும் கடலில் சிக்கிய கலத்துக்கு ஒரு கலங்கரை விளக்கம் எனக் கருதப்பட்டான்! முடியரசு ஒழிந்த பிரான்சில், நெபோலியன் அரசு ஏற்பட்டது. அவனுடைய வீரக் காதைகளும், வெற்றிக் குறிப்புகளும் மக்கள் மன்றத்தில் பரவிக் கொண்டிருந்த அதே நேரத்தில், இவன் ஆட்சியைத் தன்னுடையதாக்கிக் கொண்டிருந்தான். ஒரு சில ஆண்டுகளுக்குள், சர்வாதிகாரியானான். லூயி, மன்னன்! இவன் மக்கள் மத்தியிலிருந்து வந்த தலைவன்!! இந்த ஒரு வேற்றுமை தவிர, உண்மையான மக்களாட்சி மலரவில்லை. இதே கதிதான், ஏழையின் மகனாகப் பிறந்து, ஏற்றம் பெற்ற ஹிட்லரைத் தலைவனாக ஏற்றுக்கொண்ட ஜெர்மனிக்கு ஏற்பட்டது. முசோலினியை ஏக தலைவன் என்று எண்ணிய இத்தாலிக்கு உண்டாயிற்று. நெபோலியன் - ஹிட்லர் - முசோலினி - ஸ்பெயின் நாட்டில் விளங்கும் பிராங்கோ ஆகியவர்களெல்லாம், சர்வாதிகாரிகள் ஆவார்கள்! முடியரசு கவிழ்ந்தும், மக்களாட்சியின் போர்வையில், மணிமுடிதாரிகளானவர்கள் இவர்கள்.

ஹிட்லரின் ஆட்சியில் ஜெர்மனி என்ன பாடுபட்டதென்பதை அனைவரும் அறிவர். தன்னாட்டில் ஒலி பரப்பப்படும் வானொலியையன்றி, வேறுநாட்டு ஒலிபரப்பு எதையும் கேட்டால் தண்டனையுண்டு என்கிற அளவுக்கு, மக்களுரிமைக்கு உலைவைத்தான். முசோலினி, இத்தாலியில் படிக்கும் ஒவ்வொரு சிறு குழந்தையும் துப்பாக்கி வைத்திருக்க வேண்டும் என்று சொன்னான். பிராங்கோ ஆளும் ஸ்பெயின், இன்று எப்படியிருக்கிறது என்பதைப் பலரும் அறிவர்!!

* * *

"கத்தரிக்காயே சமைத்துத் தின்னவேண்டும்," என்று ஒரு அரசு எல்லோர்மீதும் நெருக்கடியை உண்டாக்கினால், வாய் விட்டுச் சிரிப்போம் முதலில்! பிறகு, வயிற்றெரிச்சல், கிளம்பி, கிளர்ச்சியில்போய் முடியும்!! ஹிட்லர், முசோலினி, போன்றவர்கள் இப்படித் தத்தமது விருப்பப்படி ஒரு நாட்டை ஆட்டிப் படைத்த சர்வாதிகாரிகள் ஆவார்கள். இந்தச் சர்வாதிகாரப் பாதை, முடியரசின் மாற்றுருவேயன்றி வேறல்ல என்பதால் தான், ஜனநாயகம் விரும்பிகள், எந்த இடத்தில் சர்வாதிகாரம் முகிழ்த்தாலும், வருந்தவும் எச்சரிக்கவும் செய்கின்றனர்.

சர்வாதிகாரிகளுள்ள நாட்டில் கூட பார்லிமெண்டு என்று ஒன்று இருக்கக்கூடும். ஆனால், அது "ஆமாம் சாமி" போடுவதாக யிருக்குமே ஒழிய, விவாதித்து முடிவு கட்டும் ஜனநாயகப் பார்லிமெண்டாக யிருக்காது. சட்ட மன்றம் இருப்பதும், அங்கு

பிரச்சனைகள் விவாதிக்கப்படுவதும், பிறகு முடிவெடுக்கப்படுவதும் ஜனநாயகத்தின் முக்கிய அம்சங்களாகும். இந்த உரிமைகள், சர்வாதிகாரப் போக்கில் கிட்டாது! வல்லான் வகுத்ததே வழியென ஆகும்!!

*

ஜனநாயகத்துக்கு அடிப்பீடம் பார்லிமெண்டரி முறையாகும். பார்லிமெண்டரி முறை சரியாக இயங்கவேண்டுவதற்குத்தான் அரசியல் கட்சிகள் தேவைப்படுகின்றன. அந்த அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றுக்கும் பலதரப்பட்ட கொள்கைகள் இருக்கலாம். அவை ஒவ்வொன்றும் தத்தமது கொள்கைகளே நல்லது என வாதிக்கலாம். சந்தைக்குச் சென்ற நாம் எது நல்லது என்று பார்த்துத்தானே வாங்குகிறோம்! அதைப்போல, எந்தக் கொள்கை இடமானது—நாட்டுக்குத் தேவையானது—என்று மக்கள் மன்றம் கருதுகிறதோ, அந்தக் கட்சிக்கு வாக்களித்து, ஆளுங் கட்சியாக ஆக்கிக்கொள்ளுகிறது. ஆளுங் கட்சியாக ஆனாலும், அக்கட்சி நாட்டு நலனுக்கு ஊறு விளைக்காத வகையில் நடக்கிறதா என்று கண்காணிக்கவும், தவறு செய்தால் இடித்துரைத்துக் கண்டிக்கவுமான "லகானாக", எதிர்க்கட்சி இயங்குகிறது. எப்படி ஒவ்வொரு கட்சிக்கும் தனது கருத்தை வலியுறுத்த உரிமையுண்டோ, அதேபோல ஒன்றுக்கொன்று கருத்து விமர்சனம் செய்யவும் சந்தர்ப்பம் நேரும்போது, நாட்டின் முக்கியப் பிரச்சினைகளில் ஒத்துப்போகவும், ஜனநாயகப் பாதையில் இடமுண்டு.

ஆளுங் கட்சியும், அதைத் தட்டிக்கேட்க பலமான எதிர்க்கட்சியும் இருப்பதுதான் ஜனநாயகத்துக்குத் தெம்பூட்டுவதாகும். கத்தரிக்காய் — வெண்டைக்காய் — அவரை — துவரை என்று பல இருந்தால்தான், எதையாவது ஒன்றை நாம் வாங்கமுடியும். எல்லோரும் அவரையைத்தான் வாங்கவேண்டும் என்று, அவரையை மட்டும் கொண்டுவந்து விற்றால், என்னசெய்ய முடியும்? பலபொருள் இருந்தால்தான் எது நல்லது என்று தேர்ந்தெடுக்க முடியும்! மாற்றுக் கட்சிகள் இருந்தால்தான், எது நல்லது என்று எடைபோடவும், அதைத் தேர்ந்தெடுக்கவும் மக்கள் மன்றத்துக்கு இயலும்.

விவாதித்து முடிவெடுப்பது என்பது ஜனநாயகத்தின் முக்கிய அம்சமாகும்! விவாதித்து முடிவெடுக்க, மாற்றுக் கட்சிகள் இல்லாமல் இயலுமோ? எனவேதான், பல அறிஞர்கள், மாற்றுக் கட்சியின் அவசியத்தை அடிக்கடி எடுத்துரைத்து வருகின்றனர்.

*

சர்வாதிகாரப் பாதையில், மாற்றுக் கட்சிகளுக்கே இடம் கிடையாது! அந்நிலைமை ஏற்படும்போது, ஏக மனிதன் ஆட்சியே ஏற்பட்டு, பழைய நிலைமையே திரும்பும். அதனால்தான் எங்காவது, ஒரே மனிதன் ஆட்சி உருவாகிறதென்றால், உலகத்தில் அச்சமும் ஐயமும் ஏற்படுகிறது. பிரான்ஸ் மக்களாட்சிக்கு உரம்போட்ட நாடு. அங்குதான், சமத்துவம்—சகோதரத்துவம்—சுதந்திரம் எனும் உரிமைக் கீதம் எழும்பிற்று. வால்டேர், ரூசோ போன்ற சிந்தனைச் சிற்பிகள் சிந்துபாடிய கூடம் அது! ஆனால் அங்கே—பிரான்சின் தலைநகரான பாரிஸ்மா நகரில் கடந்த சில நாட்களாக நாம் காணும் காட்சியென்ன? ஜனநாயகம், தூக்கியெறியப்பட்டு, சர்வாதிகாரத்துக்கு தாம்பூலம் வைக்கபட்டிருக்கிறது! ஜெனரல் டிகாலே என்பாரை, ஓய்வெடுத்துக் கொண்டிருந்த சிற்றூரிலிருந்து நகரத்துக்கு இட்டு வந்து, நாட்டின் நாயகராக ஆக்கியிருக்கிறார்கள். ஒருபக்கம் இந்த முயற்சிகுப் பலத்த எதிர்ப்பு இருந்தபோதிலும், இன்னொரு பக்கம் டிகாலேயிடமே ஆட்சியிருக்க வேண்டுமெனக் கூப்பாடு போடுவோரும் இல்லாமலில்லை. டிகாலே, கடந்த உலகப்போரின் போது பணிபுரிந்த வீரத் தளபதி! ஆனால், அரசுத்துறையில் மிகவும் பிற்போக்கான இலட்சியங்களைக் கொண்டவர்!!

அவர் வசம், பிரதமர் பொறுப்பு அளிக்கப்பட்டதும், அவர் விடுத்த முதல் வாசகம், "இன்னும் ஆறுமாத காலத்துக்கு, நான் வைத்ததுதான் சட்டம். அதுவரையில் பார்லிமெண்டு கூடக்கூடாது," என்பதுதான். அதாவது, இன்னும் ஆறுமாத காலத்துக்கு அவர்தான் லூயி—அவர்தான் நெபோலியன். இந்த நிபந்தனைக்கும் சரியென்றே பிரெஞ்சுப் பாராளுமன்றம் ஒப்பியிருக்கிறது!!

காரணம் என்ன? பிரெஞ்சு நாட்டில் வாழும் பிரபுக்கள்-பிற்போக்குவாதிகள் — இன்னும் ஆதிக்க ஆசை கொண்டோராகவேயுள்ளனர்! அதன் காரணமாக என்றோ ஒரு காலத்தில் அவர்கள் வசமான அல்ஜீரியா போன்ற அராபிய நாடுகளைத் நமது பிடிப்பிலிருந்து விடுவிக்க விரும்பவில்லை. அதே சமயத்தில், அல்ஜீரியாவில் நடைபெறும் சுதந்திரக் கிளர்ச்சியை அடக்கலாம் எனிலோ, பாரிஸ்மா நகரில் பீடமேறும் எந்த மந்திரி சபையும் எத்தனை நாள் நீடிக்கும் என்று சொல்ல முடியாத நிலை. காலையில் ஒரு ஆட்சி, நண்பகலில் இன்னொரு பிரதமர், மாலையில் மற்றொரு முதலமைச்சர் என்று கடந்த பல ஆண்டுகளாகப் படாதபாடுபட்டு வருகிறது. இந்த அலங்கோலத்தைக்கண்டு மக்கள் மனங் குமுறுவது ஒருபுறமிருக்க, இராணுவத்தினருக்குப் புதுத் தைரியம் வந்துவிட்டது. நமது வசமிருக்கும் பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் கொண்டு நாமே நடவடிக்கையெடுத்தால் யார் தட்டிக்கேட்க முடியும்? அப்படித் தட்டிக்கேட்க கூடிய அளவுக்கு வலிவுள்ள அரசாங்கமோ, பாரிசில் கிடையாது. ஒரு வேளை அப்படித் தட்டிக் கேட்டாலும், "முடியாது" என்று மறுத்தால் அவர்களால் என்ன செய்யமுடியும்? என்கிற தைரியம் வந்துவிட்டது, தளபதிகளுக்கு. அவர்கள், அல்ஜீரியாவில் தமது முயற்சியைத் துவக்கினர். பாரிஸ், மிரண்டது! சீக்கிரம் ஒரு முடிவுக்கு வாருங்கள் — இன்றேல் இதே கதிதான் உங்கட்கும் என்று அல்ஜீரியத் தளபதிகள் சொல்லாமல் சொல்லினர். பாரிஸ் நடுங்கிற்று! பிரெஞ்சுப் படையில் இன்று தளகர்த்தர்களாக இருக்கும் பலர் டிகாலேக்குக் கீழ்ப்பணியாற்றியவர்களாகும். அதனால், அவர்கள் மத்தியில் டிகாலேக்கு செல்வாக்குண்டு அவர்கள், பிரான்சை நடத்திச் செல்லக்கூடிய ஒரே நபர் டிகாலேதான் என்றனர். எங்கோ ஒரு சிற்றூரில், எதையும் மறந்தவராய்க்கிடந்த, டிகாலேக்கு "சான்சு" அடித்தது! அவர் அழைத்துவரப்பட்டு, பாரிஸ் பீடத்திலிருந்து ஆளும் அந்தஸ்து பெற்றுவிட்டார்!!

நாட்டின் விஷயங்களில், இராணுவம் தலையிடுவதென்பது, நல்லதல்ல. ஆனால் நாடாளும் கட்சியே வலிவற்றுப் போய்விட்டதெனின், பிறகென்ன செய்ய முடியும்? கடந்த சில ஆண்டுகளாக, ஒரு நாட்டின் தலைவிதியைத் திடீரென மாற்றவும், கவிழ்க்கவுமான காரியத்தை இராணுவ ஜெனரல்களே செய்து வருகின்றனர். நெபோலியனும், ஹிட்லரும், முசோலினியும், பிராங்கோவும் இப்படி படையிலிருந்து வந்து பிறகு சர்வாதிகாரியாக ஆனவர்கள் தான். எகிப்து நாட்டில் முடியாட்சி கவிழ்க்கப்பட்டு, பரூக் மன்னன் வெளியேற்றப்பட்டு, ஜெனரல் நகிப் ஆட்சிப் பொறுப்பை யேற்றபோது—"என்னடா, ஒரு படைத் தளபதி ஆள வருகிறாரே!", எனும் அச்சம் உலகுக்கு ஏற்படத்தான் செய்தது. அந்த அச்சம், இன்றுள்ள ஜெனரல் நாசர் விஷயத்திலும் பலருக்கு, இன்னும் இருக்கத்தான் செய்கிறது. இந்நிலையில், ஜெனரல் டிகாலே, 'சர்வாதிகாரி' எனும் நிலையிலே பிரெஞ்சின் பீடத்திலேறியிருக்கிறார்! எதிர்காலம் பற்றியும், ஜனநாயக வளர்ச்சி குறித்தும் எண்ணுவோருக்கு, இராணுவ மூலம் அரசியல் மாறுதல்கள் உருவாவது பற்றி கவலை ஏற்படத்தான் செய்யும்!!

*

பிரான்சு ஏன் இந்தக் கட்டத்துக்கு வந்தது—ஏன், பல நாடுகளில் ஜனநாயகம் இப்படி திசை மாறிச் செல்கிறது—என்று கேள்வி எழக்கூடும்.

மாஸ்கோ மணத்தைச் சுட்டிக்காட்டி, இன்றுள்ள ஜனநாயகத்தின் ஏற்றம் இறக்கம் பற்றி விமர்சனம் செய்யவும் பலர் முன்வரக்கூடும்.

ரோஜா, நல்லதுதான்! ஆனால், அது யார் கையிலிருக்கிறது என்பதைப் பொருத்துத்தானே அழகும் மதிப்பும் ஏற்பட முடியும். கனிரசவல்லியின் கரத்திலிருப்பதற்கும், காட்டெருமையின் காலில் கிடப்பதற்கும் வித்தியாசமுண்டன்றோ? ஜனநாயகம் — பார்லிமெண்டரி முறை— எல்லாம் நல்லதுதான்! ஆனால், ஜனநாயகம் தழைக்கும்படிச் செய்யவேண்டிய பார்லிமெண்டுக்கு, இன்னும் உண்மையான மக்கள் பிரதிநிதி போகும் வாய்ப்பு ஏற்படவில்லை. "உண்மையான" என்றால், கருத்துக்களை அலசி, அதன் அடிப்படையில் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் சூழ்நிலை மலரவில்லை. வசதி படைத்தோர், சீமான்கள் முதலியோரே ஏராளமாகப் பணம் செலவிட்டு, இடம்பெறுகின்றனர்! இந்தக் காரணத்தாலேயே, இன்று பிரான்சில், பல் பிற்போக்குவாதிகள் அரசியல் அரங்கில் இருக்கின்றனர், ஆட்டிப் படைக்கவும் செய்கின்றனர். பிரான்சிலென்ன, இங்குகூட அதனால்தானே பலர் காங்கிரசில் எம். பி.க்களாகவும் எம். எல். ஏக்களாகவும் உள்ளனர்!

பணம் படைத்தோரும், சீமான்களும் எப்போதும் சுயநலவாதிகளாகவும், சுயநலம் பாதிக்கப்படும்போது கூடுவிட்டு கூடு பாயத் தயங்காதவர்களாகவும் தான் இருப்பார்கள். நாட்டு நலனைவிட, தங்கள் நலனே அவர்கட்குப் பெரிதாகும். "பணம்" அவர்கள் வசம் இருக்கிற காரணத்தால், ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டிய இடங்களுக்கு அவர்களே போய் அமர்ந்துகொள்ளுகிறார்கள்! தமது இலாபத்துக்காக, யாரைத் துதித்தால் நல்லதோ, அவரைத் துதிக்கவும், அதன் மூலம் தூக்கியெறியப்படும் பதவித் துண்டைப் பதம் பார்க்கவும் முற்படுகிறார்கள். இதனால், மக்களாட்சியின் மாண்பு சிதைகிறது. பாரிஸ்லீலைக்கு, முக்கிய காரணம் இதுதான். இந்த நிலை மாறி, கொள்கையின் அடிப்படையில், பிரதிநிதிகள் போகும் காலம் வரவேண்டும். பணம் படைத்தோருக்கன்றி, குணம் கொண்டோருக்கெல்லாம்; சீமான்களுக்கு அன்றி, சிறந்த கொள்கையுடைய கட்சிகளுக்கெல்லாம்; பார்லிமெண்டுக்குள் நுழையும், நிலை வரவேண்டும். அப்போது தான், ரோஜா கசங்காது! உலக அறிஞர்கள் ஒப்பற்றதெனக் கூறிடும், "மக்களாட்சி முறை" மணக்கும். சர்வாதிகாரமும், ஒரே மனித வழிபாடும் ஒழியும்.

★

★ விருத்தாசலத்துக்கு வருக!

தென்னாற்காடு மாவட்ட தி. மு. க. மாநாடு
ஜூன் 7, 8 தேதிகளில்

தலைவர்: மதுரை முத்து,
திறப்பாளர்: குடந்தை கே. கே. நீலமேகம்

அண்ணா, பொதுச்செயலாளர்
கழகக் காவலர்கள் அனைவரும் வருகை தருவர்.
அனீபா இன்னிசையும், மல்லிகா நடன விழாவும் நடைபெறும்.

தாயகத்தோரே அன்புடன் அழைக்கிறோம்.

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ. வ. கு. தலைவர்.
எம். செல்வராஜ், எம். எல். ஏ. பொருளாளர்.
சி. முனுசாமி,
சி. நடராசன், எம். எல். ஏ.
ஜி. சொக்கலிங்கம்,
எம். ஆனந்தன், எம். எல். ஏ.
செயலாளர்கள்.
தொ. பிச்சமுத்து, ம. குப்புசாமி, தொ. ப. தலைவர்கள்.

வு எண். எம். 4842

The School of English Learning

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே, சென்னை-1.

ஓர் நற்செய்தி!

இங்கிலீஷ் போதிப்பதில் தனிப்பட்ட சாதனையைச் செய்து காட்டிவரும் எங்கள் கல்வி நிலையம் எஸ். எஸ். எல். சி. -இல் தவறிய மாணவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்க முன்வந்திருக்கிறது.

இவ்வரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்.

உடனே சேருக! உடனே சேருக!!

S. S. L. C.

அக்டோபர் 1958

பரிட்சைக்கு நேரில் படிக்க

எங்கள் சாதனைகள்:

★ வேறு எங்குமே காணமுடியாத ஒப்பற்ற இங்கிலீஷ் இலக்கணப் பயிற்சி
★ எளிய முறையில் அளிக்கப்படும் கணிதப் பயிற்சி
★ இரசாயனக் கூட (LABORATORY) வசதிகள்
★ ஆற்றலும் ஆர்வமும் மிக்க ஆசிரியக் குழு
★ எளிய முறையில் தயாரித்து அளிக்கப்படும் பாடக் குறிப்புகள்.

முக்கிய அறிவிப்பு:- பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

... திருச்சிற்றம்பலம் ... தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்

திராவிடநாடு

15-6-58 | வார வெளியீடு | விலை 16 காசு

உழைப்போம் வருவீர்!

(தாமரைக்கண்ணன்)

சிங்களத் தீவினில் நம்தமிழர்—மிகச்
சிந்தை கலங்கி வருந்துகின்றார்;
செங்குருதிப் புனல் வெள்ளமதை—அவர்
சிந்திக் கடுந்துயர் கொள்ளுகின்றார்!

தேயிலைத் தோட்டங்க ளில்உழைத்தே—உடல்
தேய்ந்துச் சருகென மாய்ந்திடினும்
வாயில்லை அங்கவர் பேசிடவே—பெரும்
வாட்டம் அடைந்துக் கதறுகின்றார்!

நாட்டைமுன் னேற்றிடப் பாடுபட்டே—உயிர்
நல்கிப் பலபணி செய்திடினும்
ஓட்டுரிமை அவர்க் கில்லையதால்—இடர்
ஓயாமல் எய்திக் குமைகின்றார்!

கொஞ்சும் எழில்தமிழ்ச் சொற்களெனும்—மணம்
கொட்டும் மலர்க்கவின் கொத்துக்களை
நஞ்செனச் சாடி அழிப்பதனைக்—கண்டு
நைந்துளம் வெம்பிப் பதறுகின்றார்!

தென்னவர் தோழர்கள் ஈழமதில்—உறும்
தீமைகள் நீங்கநம் நேருதுரை
இன்னமும் யாதும் துணியவில்லை—என
ஏங்கிக் கண்ணீர் சிந்தித் தேம்புகின்றார்!

சோழர் புலிக்கொடி அங்குயர்ந்தே—வெற்றி
சொன்ன இலங்கைத் தமிழ்க் குடிகள்—நலம்
சூழும் முறைதனில் வாழ்ந்திடவே—நெஞ்சில்
சோர்வு தவிர்த்துழைப் போம் வருவீர்!

குடும்ப விளக்குகள் குமுறல்!

"ஏதடி பணம்? இப்படி, பணம் பணம் என்று உயிரை எடுத்தால், எங்காவதுபோய் தூக்குப் போட்டுக்கொள்ளவேண்டியதுதான்..."

"நான் என்னங்க செய்வேன்? இந்தமாசம் 'கரன்ட் சார்ஜ்' மட்டும் ஐந்து ரூபாய் அதிகம். எண்ணெய் விலையும் ஏறிவிட்டது. பிள்ளைக்கு மருந்து வாங்கப் போனால், மருந்து விலையும் ஏறிவிட்டதாகச் சொல்றுங்க..."

"எப்படியோ பார்த்துக்க! என்னைப் பணம் பணம் என்று மட்டும் கேட்காதே..."

"நான் எப்படிப்பார்த்துக்கிறது? கழுத்திலே கிடந்த சங்கிலியையும் தான் போன மாசம் 'பள்ளிக்கூடத்துக்கு' அனுப்பியாச்சே!!"

"...என்னை என்ன பண்ணச் சொல்றே!"

"நான்தான் என்னபண்றது? நீங்க போட்ட தாலிதான் இருக்கு கழுத்திலே!"

"...அதை அறுத்துடு. எல்லாக் கஷ்டமும் தீர்ந்துடும. அப்பப்பா, ஏண்டா, நான் கலியாணம் செஞ்சுகிட்டேன்"

"கலியாணம் செஞ்சுகிட்டதாலே, என்ன கஷ்டம் வந்துட்டுதாம்?"

"பேசாதே."

"பேசினா...?"

"மூதேவிக் கழுதே! உனக்குப் பேச்சு வேறு பேச்சு..."

"ஐயோ! அம்மாடி! அப்பா!!"

* * *

அன்பே, ஆருயிரே, இன்னமுதே, உன்னைவிட்டுப் பிரியேனடி, உன் முகம் செந்தாமரை, முத்துக்கள் என்பேன் பற்களை, உன் மோகன அதரங்கள்என்னைப் பைத்யமாக்கிவிடுகிறதடி, பால் மொழியே என்று படுக்கையறையிலே கொஞ்சிய கணவன், 'மூதேவி! துக்கிரி! கழுதை!', என்று அர்ச்சிப்பதோடு இல்லாமல், கையாலும் காலாலும் சாத்த ஆரம்பிக்கிறன். ஆனந்தம் அரசோச்ச வேண்டிய குடும்பத்திலே, அழுகுரல் கேட்க ஆரம்பிக்கிறது. அவள் என்னசெய்வாள்? 'இல்லை' என்பதை எடுத்துச்சொன்னாள். அவனும்தான் என்ன செய்வான்? மிட்டாவா, மிராசா, கேட்டதும் வாங்கிவந்து தர!! கிடைக்கும் சம்பளத்தைவிடச் செலவு ஏறுகிறது — செலவு ஏறக் காரணம், பொருள்களின் விலை உயர்ந்ததால் — பொருளின் விலை ஏறக் காரணம்' பொறுப்புள்ள ஆட்சியில்லை. கோபம்தான் வருகிறது, கொண்டவனுக்கு. தவறு செய்யாத போது தன்னைத் தண்டிக்கிறாரே அத்தான், என்பதால், துக்கம்அடைக்கிறது, அவளுக்கு. அவள், அழுகிறாள்! அவன் பெருமூச்சு விடுகிறான்!!

இந்தமண்ணில் உள்ள சராசரிக் குடும்பங்களிலே, மாதத்தில் இருபது நாட்களாவது, இந்தக் காட்சியை நாம் காணமுடியும். இல்லாமையின் காரணமாக, அழுகுரலும் ஆத்திரமும் அலைமோதும் இல்லங்கள்தான் நம்முடையவை.

*

இந்நிலையை ஒருநாள், இருநாளல்ல, பல நாட்கள் அனுபவித்துப் பார்த்தார்கள். வேறு வழி இல்லாததால், வீட்டை விட்டுக் கிளம்பினார்கள். வீதியிலே புறப்பட்டார்கள். ஆளும் அரசினர் கூடம் நோக்கிக் கிளம்பினார்கள்.

> அரிசியின் விலையைக் குறை!
> சர்க்கரை விலை ஏறிவிட்டது
> புட்டிப்பாலும், ஓவல்டின்னும் விலை
> உயர்ந்துவிட்டது,
> எண்ணெய் விலை, ஏறுகிறது
> தினசரி.

என்று முழக்கமிட்டுக்கொண்டு, சென்றார்கள். யார்? பெண்களா, என்று வியப்புடன் கேட்கத் தோன்றும். வெளியில் வரவும், உரத்துப் பேசவும், தன் குடும்ப நிலையை அடுத்தவரிடம் சொல்லவும் கூச்சப்படக் கூடியவர்கள் நமது பெண்கள்! அவர்கள்தான், இப்படி வீதிக்கு வந்தார்கள்!

கடந்த 4-ந் தேதி, கல்கத்தா நகரிலே, 2000க்கு மேற்பட்ட பெண்கள், அணிவகுத்த வண்ணம் வீதிகளிலே கூச்சல் போட்டுக்கொண்டு, சர்க்கார் காரியாலயம் நோக்கிச் சென்றிருக்கிறார்கள்.

"மனையரசிகள்" என்று கூறுகிறது, சுதேசமித்திரன், ஏடு.

மனையரசிகள், வீதியிலே கிளம்பினார்கள்! வேதனையை வாய் விட்டுச் சொன்னார்கள்!!

"சமையலறையிலே, நாங்கள் படும் பாடு கொஞ்சமல்லய்யா? வாதைப் படுகிறோம்" என்று சட்டசபை உறுப்பினர்களைச் சந்தித்து, எடுத்துரைத்திருக்கிறார்கள்.

படை பதைக்கும் வெயிலில் சென்றனர், பாவையர் கூட்டம்! என்கிறது ஏடு. அனிச்சம் பூவையும்,

(14-ம் பக்கம் பார்க்க)

★ ஜூன் 22 ★

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [15–6—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 4

கடந்த சில நாட்களாக இலங்கையில் நடைபெற்றுவரும் அட்டூழியத்தைக் கேட்டு நாம் மனம் நொந்து போயிருக்கின்றோம். இலங்கையைத் தாயகமாகக் கொண்ட இலட்சக் கணக்கான 'தமிழர்கள் அங்கே இன்றைய தினம் படுகின்ற அவதியை அளவிட இயலாது. சிங்கள வெறியர் தமிழர்களின் இல்லங்களைச் சூறையாடுகின்றனர்: கடைகளைக் கொள்ளையிடுகின்றனர்; தமிழ் மக்களை வெட்டி வீழ்த்தும் வெறிச் செயலில் தாராளமாக ஈடுபடுகின்றனர்—சதிசெய்து கொண்டிருக்கின்றனர். ஆம். சர்க்கார் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒரு 'நாகரிக'நாட்டில் தான் இந்த அநியாயங்கள் நடைபெறுகின்றன.

இலங்கையைத் திருத்தி அதனை வளங்கொழிக்கும் நாடு என ஆக்கிய தமிழர்களை, இலங்கையின் புகழை வளர்த்த தமிழர்களைத்தான்--இலங்கையைத் தாயகமாகக் கொண்ட யாழ்ப்பாணத் தமிழர்களைத் தான் — மட்டக்களப்பு, திரிகோணமலை போன்ற பகுதிகளில் வாழும் தமிழ்மக்களைத்தான், இவ்வாறு கொடுமை செய்கின்றனர். 'தமிழே நீ போ' 'தமிழனே வெளி'யேறு, என்று வாயால் சொல்வதைவிட வதைப்பதுசாலாது என்று எண்ணியவர்களைப் போல வாள் எடுத்து வாட்டுகின்றனர்; தமிழர்கள் வதைபடுகின்றனர்.

தரணி எங்கும் புகழ் பரப்பிய தமிழ் நாடு, உலகத்திற்கு நாகரிகம் வழங்கிய தமிழ் நாடு, வளங்கொழிக்கும் தமிழ் நாடு, ஆற்றல் மறவர் படைத்த தமிழ் நாடு என்று புகழ் பாடும் இந்த மண்ணில் பிறந்த இலட்சக்கணக்கானவர்கள்; சேரன், சோழன், பாண்டியன் மரபின் வழி வந்தவர்கள், இன்றைய தினம் அங்கே அல்லல் படுகின்றனர், அவதிப் படுகின்றனர். அச்சம் அவர்களைக் கப்பிக்கொண்டிருக்கிறது. ஒருநாள் கழிந்தது என்பதை ஏதோ பெறற்கரிய பேறு என்று எண்ணிடும் நிலைமை இருக்கிறது.

டெல்லிப் பட்டணத்திலே கொலுவிருக்கின்றவர்கள் இன்றுவரை ஒருசொல் ஏன் என்று கேட்கவில்லை. இந்த அக்ரமத்தை எப்படி அனுமதிக்கின்றீர்கள் என்று அவர்கள் கேட்க வேண்டும்.

சென்னைப் பட்டணத்திலே இருக்கும் 'பச்சைத் தமிழர்' ஆட்சி இதைப்பற்றி வாய் திறக்கவில்லை. 'ஐயோ பாவம்' என்று அனுதாபப்படவில்லை. 'அக்ரமக்காரர்களா!' என்று ஆத்திரப்படவில்லை. ஒன்றுமே நடைபெறாததுபோல, குண்டு வீழ்ந்திட்டபின் 'என்ன புகைகின்றதே' என்று கேட்கும் செவிடராகிவிட்டனர்.

ஆனால் நாம் அப்படி இருக்க இயலாது; இருக்கவும் மாட்டோம்; இருக்கவில்லை.

இலங்கைத் தமிழர்படும் இன்னலை எடுத்து மக்கள் மன்றத்தில் விளக்கி, இந்த இழிநிலை ஏன் ஏற்பட்டது என்று சிந்தித்துப்பார்த்து இதனைத் துடைத்திட திராவிட முன்னேற்றக் கழகம் வழி கண்டிருக்கிறது.

விருத்தாசலம் மாநாட்டில் இதைப்பற்றியதொரு தீர்மானம் நிறைவேறியிருக்கிறது.

ஜூன் 22-ம் நாளை இலங்கைத் தமிழர் உரிமை நாள் ஆகக்கொண்டு பணிபுரியுமாறு பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்திருக்கின்றார்.

> "அந்த நாளை, இலங்கைத் தமிழர்களின் உரிமையைப் பாதுகாக்கும் நாளாக மதித்து, இங்கிருந்து இலங்கை சென்றிருக்கின்ற தமிழர்களும், அங்கு இருக்கின்ற தமிழர்களும் உரிமை பெறுகிற வகையிலே, அதற்கான காரண காரியங்களைஎடுத்துச்சொல்லிச்சிங்களவர்களின் வெறிப்போக்கைக் கண்டிக்கும் முறையில் 'இந்திய சர்க்கார் இதில் தலையிட்டு ஆவன செய்யவேண்டும்' என்று கோரித் தீர்மானங்கள் நிறைவேற்றியும், கருத்துக்களையும் விளக்கங்களையும் தந்தும், அந்த நாளை உணர்ச்சியூட்டும் நாளாகக் கொண்டாடவேண்டும்."

எனக் கேட்டுக்கொண்டிருப்பதற்கிணங்க, கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும் இந்த நற்பணியில் ஈடுபடுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

—OO—

இலங்கையில் தமிழர்படும்பாடு!

—[★]—

'பாரதம்' துண்டாடப்பட்ட போது பாகிஸ்தானிலிருந்து அகதிகள் வெளியேறி அங்கு மிங்குமாக அலைந்த சோகச் சம்பவங்கள் இன்னும் மனதைவிட்டகலவில்லை. அதேபோன்ற காட்சிகளை இப்போது இலங்கையிலும் காணக்கூடிய நிலையேற்பட்டுவிட்டது. நாடெங்கும் கொழுந்துவிட்டெரியும் இனவெறித் தீயினால் பாதிக்கப்பட்ட தென்னிலங்கை வாழ் தமிழ் மக்கள் தம் மூட்டை முடிச்சுக்களுடன் வடக்கு நோக்கி இடம்பெயரத் தொடங்கிவிட்டார்கள். தென்னிலங்கையிலேயே பிறந்து வளர்ந்து அங்கேயே தம் வாழ்க்கையை நடத்திவந்த குடும்பங்கள் அநேகம். வர்த்தகத்திலும் மற்றும் உத்தியோக முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கும் தமிழ் மக்களை இலங்கையின் எந்த மூலையிலும் காணலாம். அவர்கள் இன்று நிர்க்கதியான நிலையில் செய்வதின்ன தென்றறியாது திகைப்புக்குள்ளாகியிருக்கின்றனர்.

சிலர் இப்போது எண்ணுவது போல இன்னும் நாடு துண்டாடப்படவில்லை. சிங்கள வல்லாட்சிதானும் அமைக்கப்படவில்லை. ஆயினும் தென்னிலங்கையை விட்டுத் தமிழரை வெளியேறிவிடுமாறு பகிரங்கமாக வற்புறுத்தும் அடாதுடித்தனங்கள் மட்டும் நடந்துவருகின்றன. இவற்றையெல்லாம் அரசாங்கம் கண்மூடி மௌனியாகப் பார்த்துக்கொண்டிருக்கிறது. வெறித்தனங்களினால் பீதியடைந்தவர்கள் தம் நிலபுலங்களையும் மற்றும் உடைமைகளையும் கேட்ட விலைக்குக் கொடுத்துவிட்டுக் குடிபெயரக்கூடிய சூழ்நிலை இப்போது உருவாகிவிட்டது.

சிங்களப் பகுதிகளிலிருந்து வெளியேறி யாழ்ப்பாணம் செல்லும் குடும்பங்களைத் தினமும் கொழும்பிற் காணக்கூடிய நிலை ஏற்பட்டிருப்பது பெரிதும் வேதனைப் படக்கூடிய காரியமாகும். வெளியிடங்களில் மட்டுமென்ன, கொழும்புப்பகுதியிலேகூட இப்போது தமிழ் வர்த்தகர்கள் பலர் தம் வியாபார நிலையங்களை மூடுவதற்கு முன்வந்துவிட்டார்கள்.

> கழகத்தின் வளர்ச்சி குறித்து பொருமையும், அச்சமும், வெறுப்புமடைந்துள்ள அரசியலார், அடக்குமுறைகளைக் கையாண்டு பார்க்கும் கட்டத்தை அடைந்திருப்பதை இச்செயற்குழு கவனித்து, இப்பேர்ப்பட்ட ஆத்திரச் செயல்களினால், மக்களின் நம்பிக்கையினாலும், ஆதரவினாலும் வளர்ச்சியடையும் கழகத்தை ஒடுக்கிவிட முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறது.
>
> ஏழைஎளியவரின் ஆதரவைக் கழகம் பெரிதும் பெற்றிருப்பதைக் கண்டு சினம் கொண்ட ஆளும் கட்சியினர், —அடக்குமுறைகளை குறிப்பாக அவர்கள்மீது திருப்புவதை நாணயமற்றதாகும் என்று கருதி, மேலும் ஆட்சியாளரின் வன்செயல்களை மறைக்கும் முயற்சியில் வழக்குகளைச் சுமத்தி வசதியில்லாதவர்களை வாட்டுவது கேவலமான செயல் என்று இச்செயற்குழு கருதுகிறது,
>
> கண்ணியமான முறையிலும், அமைதியான வகையிலும் அரசியல் போராட்டங்களை நடத்தும் கழகத்தை இழிவுபடுத்துவதற்கென்றே செயல்படும் ஆட்சியாளருக்கு, எப்பேர்ப்பட்ட தூண்டுதலையும் தாங்கி, கட்டுப்பாட்டையோ, கடமையையோ, கட்சித் தோழர்கள் கைவிடமாட்டார்கள் என்று தெரிவித்துக்கொண்டு, ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்து ஏகாதிபத்திய சர்வாதிகாரப் போக்கை எதிர்க்க, கழகம் என்றும்போல் இன்றும் முன்னணியில் இருக்கும் என்றும் இச்செயற்குழு தீர்மானிக்கிறது.
>
> சென்னை 6—6—58
>
> தி. மு. க. செயற்குழு.

அடிக்கடி நிகழும்காடைத்தனங்களுக்கஞ்சி அவர்கள் எத்தனை நாட்கள்தான் வியாபார நிலையங்களை மூடிவைத்திருக்க முடியும். நித்திய பீதியிலும் பார்க்க ஒரேயடியாக மூடிவிட்டுப் போய்விடுவதுதான் நல்லதென்று அவர்கள் முடிவு செய்துவிட்டார்கள். சிங்களம்மட்டும் அரசாளும் மொழியாக ஏற்றுக்கொண்டதிலிருந்து, இந்நாட்டிலே தமிழனுடைய நிலை சீர்கெட்டு வருகிறது. அரசியலிலும் சரி, பொது வாழ்விலும் சரி அவன் அவமதிக்கப்பட்டும், உரிமைகள் இழந்தும் கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டு வருகிறான். தமிழ்—சிங்களம் என்ற வகுப்புவாதக் கோட்டைகள் பலப்பட்ட பிறகு தமிழ்ப் பிரதேசங்கள் பொருளாதார அபிவிருத்திகளின்றிப் புறக்கணிக்கப்படுகின்றன. சிங்களம் மட்டும் என்ற சட்டம் இயற்றப்பட்டதிலிருந்து தமிழன் இந்நாட்டில் இரண்டாந்தரக் குடியாக்கப்பட்டிருக்கிறான்.

தமிழ் உரிமை காக்க நேரடிப் போராட்டத்தில் இறங்கிய பிறகு நிலைமை மேலும் குழப்பமடைகிறது. சிங்கள வகுப்புவாதிகளின் கை ஓங்கிவிட்டதன் காரணமாக வெளியூர்களில் தமிழர் படும் அவஸ்தை கொஞ்சமல்ல. வியாபார — தொழில் துறைகளில் அவர்கள் அனுபவித்து வந்த சலுகைகள் பறந்துவிட்டன. இன்று தமிழர்கள் வெளியூர்களில் அச்சமும் துன்பமுமே துணையாக வாழ்கின்றார்கள். அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்க்கும் காலம் மலையேறிவிட்டது. அமைச்சர்மார் தமிழனுடைய மனம் புண்படும்படியாக மேடைகளில் கீழ்த்தரமாகப் பேசி வருகிறார்கள்.

—ஈழகேசரி.

ஊமைப்பெண்

மூலம்: டாகூர் ★ தமிழில்: அன்பு

அவளுக்கு அவள் பெற்றோர்கள் சுபாஷினி (நன்கு பேசக்கூடியவள்) என்று பெயரிட்டதனால் தானோ என்னவோ பிறந்தது முதல் ஊமையாகவே இருந்தாள்.

ஊமைப்பெண் என்றால் மட்டும் என்ன, அவளை இந்தச் சமுகம் இப்படியா மதிப்பது? பாவம், அவள் எதிரிலேயே அவள் 'துரதிருஷ்ட'த்தைப் பற்றிப் பலவாறாகப் பேசிவந்தார்கள். பெற்ற அன்னைகூட அவளை வெறுத்தாள். சுபா இருப்பது பெற்றோர்களுக்கு ஒரு பெரும் பாரமாக இருந்தது. சுபாவின் மூத்த சகோதரிகள் இருவரும் முன்னரே மணமானவர்கள். ஆகவே குடும்பத்தின் கவலைகளுக்கெல்லாம் காரணமாகச் சுபா விளங்கி வந்தாள். பெற்றோரின் கவலையெல்லாம் சுபாவுக்கு — அந்த ஊமைப பெண்ணுக்கு—வயது ஆகிக்கொண்டே வருவதைபபற்றித்தான்.

சுபாவுக்கு வாய்தான் ஊமையாகி விட்டது என்றால், கண்கள் கூடவா ஒளியிழந்துவிட்டன? அல்ல, அல்ல! எல்லோருக்கும் நா பேசும்; அவளுக்கோ காதுவரை நீண்ட கரிய புருவங்களினூடே இருந்துகொண்டு இரு நீலக் கருவிழிகள் பேசும்! நா பல சொல்லி விளங்கவைப்பதை அவளது கருவிழி ஒரே பார்வையில் விளங்கவைத்துவிடும்! அவள் பேசவேண்டுமென எண்ணினால் அவளது கண்கள் மொழியை உமிழும். உதடுகள் அசையும—ஒலியில்லாமல்! அவளுடைய ஒரு பார்வையில் எவ்வளவோ கருத்துகள் தொனிக்கும!

இயற்கைதான் அவளைப் பெரும் அளவுக்கு வஞ்சித்து விட்டது என்றாலும், அவளுக்கு இயற்கையின் மீது எந்தவித வெறுப்பும் கிடையாது. மாறாக, பேசும் மாந்தரைவிட, பேசா அப்பேதைப் பெண் இயற்கையைத்தான் தன் அன்னையாக மதித்துவந்தாள். அவள் இல்லத்திற்கு எதிரே கதிரவனின் பொன்னிறக் கிரணங்களால் தங்கத் தகடாக்கப்பட்டுச் சலசலத்து ஓடிக்கொண்டிருக்கும் சிற்றாறு—அதையடுத்த வெண்ணிற மணற்றிட்டு—பசுமை உமிழும் தழைத்த மரங்கள் — வீசுகின்ற மெல்லிய பூங்காற்றுத் தரும் சோலைகள்—இவைகளெல்லாம் அத்திக்கற்றவளின் தேற்றாளர்கள்!

பேசும் மனிதர்கள் யாவரும் அப்பேசாப் பெண்ணிடம் பேசுவது கிடையாது. அவர்கள் அவளை அன்புடன் நோக்கினால் போதாதா? அதுகூடக் கிடையாதே! அவள் வீட்டில் வளர்ந்த ஐந்தறிவு படைத்த கொட்டில் மாடுகள் அவளைப புரிந்து கொண்ட அளவுக்கு ஆறறிவு படைதத வீட்டு மனிதர்கள புரிந்துகொள்ளவிலலை.

சுபா, இவ்வாறு தான் வெறுக்கப்பட்டதை உணராமலில்லை. நனகு உணர்ந்திருந்தாள். தான் இவ்வாறு பிறபபு முதலே ஊமையாக இருப்பதறகாக வருந்துவாள். அவவாறு வருந்தும் போதெல்லாம் அவளுககு இயறகைதான் அடைக்கலம அளித்துவந்தது சுழன்றோடும சிறறாறிடமும், தழைத்த தருக்களிடமும் தன் உளளக் குமுறல்களை முகத்தோற்றத்தால் வெளிப்படுத்திக் கண்ணீர் வடித்து நிற்பாள். பாவம்! அவைகள்தான் என்ன செய்யும்! அவளைப்போல அவையும் "ஊமை"கள்தானே!

இவ்வாறு அவள் கன்னி வாழ்க்கையிலேயே இன்னல்கள் பலவும் அனுபவித்துக்கொண்டிருக்கும் போதுதான் அவளுக்கு ஒரு நண்பன் கிடைத்தான்! ஊராரால் 'சோம்பேரி' என்று சுலபத்தில் பட்டம் சூட்டப்பட்டவன்! அவளைப்போலவே தாய் தந்தையர்களால் வெறுத்தொதுக்கப்பட்டவன்! பெயர் பிரதாப். மீன பிடிப்பது அவன் தேர்ந்தெடுத்துக் கொண்ட ஒரு பொழுதுபோக்குத் தொழில்.

ஊராரின் கண்ணுக்கு 'உதவாக்கரை'யாகக் காணபபட்ட அவன் சுபாவின் கண்களுக்கு ஒழுங்கான வனாகத் தென்பட்டான். இருவரது பொழுதுபோக்கு இடமும் ஒன்றல்லவா, அதனால் நட்பும் மிக வேகமாக வளர்ந்தது; 'அனப' 'அமுதே' என்பன போன்ற காதலர்களின் வழக்கமான சொறகளாலல்ல! பேசமுடியாதவனானன்! கண்ணால் மொழி பேசினர்; கருத்தால் ஒருமிததனர்! உள்ளத்தின ஆழத்தில் தோன்றியெழுந்த அனபை வடித்தெடுதது்க் கனிவொழுகும் கண்களால் பரிமாறிக்கொண்ட காதல் அவர்களது காதல்!

விதையைச் செடியாக்கிய இயறகை, மொட்டை மலராக்கிய இயற்கை, காயைக் கனியாக்கிய இயற்கை, சுபாவையும் வயது வந்தவளாக்கியது. இதற்கு முனனரே அவளைப் பெரும்பாரமாகக்

கருதிய சுபாவின் பெற்றோர்களுக்கு அவள் திருமண வயது வந்தது பெரும் மனக்கொதிப்பைக் கொடுத்தது.

ஊரார் மூட்டிய சனாதனத்தீ அவர்கள் மனதில் கொழுந்து விட்டு எரியத்தொடங்கியது. சுபாவுக்கு இன்னும் சாதி முறைப்படி திருமணம் ஆகாததற்கு ஊரார்தான் மிகவும் அக்கறைகொண்டவர்கள் போலானார்கள்: "பெண்ணோ ஊமை—வயதோ திருமணப் பருவம்—பெற்றோர்களோ இதைப் பற்றி எண்ணிப் பார்க்காதவர்களாக இருக்கிறார்கள்—அடுக்குமோ இது குல முறைக்கு?—கிடைக்குமோ இவர்களுக்கு புண்ணியம்?—அடைவரோ இவர்கள் இறைவன் சன்னிதானம்?" வெறும் வாயை மென்றவர்களுக்கு அவல் கிடைத்தாற்போன்று ஊரார்க்குப் பேசுவதற்குப் பொருள் கிடைத்தது.

சுபாவின் தந்தைக்கு ஊராரின் கேலியும் எள்ளலும் நிறைந்த பேச்சு தீராத மனத்துயரைக் கொடுத்தது. சுபா ஒரு ஊமைப் பெண்—அதனால் வாழ்வில் துயர் அடையப்போவது அவள்—அதனால் வருந்தவேண்டியவர்கள் அவளது பெற்றோர். ஆனால் இவ்விஷயத்தில் ஊரார்தான் அதிக 'முயற்சி' எடுத்தவர்களானார்கள். சுபாவின் தந்தையைச் சாடை மாடையாகக் கேலிபுரியத் தொடங்கிய அவர் குலத்தவர்கள் பின் எச்சரிக்கையும் தரத் தொடங்கினார்கள்! வயதுவந்த பெண்ணை இதுபோல் குல முறைப்படி திருமணமாகாமல் வைத்திருப்பது குல முறைக்கே ஒவ்வாதது. ஆகவே என்று தீர்மானத்தைப் போட்டு சாதியை விட்டு நீக்கிவிடுவோம் என்ற பயமுறுத்தலையும் தந்தனர்.

" ஐயோ! சாதியை விட்டு நீக்கி விட்டால...! பாபம்! அதனினும் பெரும் பாபம் வாழ்வில் பெறக் கூடியது வேறென்ன?" என்ற பெரும் அதிர்ச்சிக்குள்ளானார்கள் பெற்றோர்கள்.

தன் பெண்ணுக்கு மணமகன் தேடவேண்டுமெனறால் குடும்பம் கல்கத்தாவுக்குச் சென்றால்தான் முடியும் என்ற முடிவுக்கு வந்தார் சுபாவின் தந்தை. குடும்பத்தினர் கல்கத்தாவுக்குப் புறப்பட ஆயத்தமாயினர். சுபா எல்லாவற்றையும் புரிந்துகொண்டாள்.

துயரம்! பெருந்துயரம்! யாரிடம் புகலடைவாள் தன் துயர் நீங்க? சுபாவின் எண்ணத்தை ஏற்கத் தயாராயில்லை அவள் பெற்றோர்கள். அவர்கள் எண்ணமெல்லாம் சுபாவுக்குத் திருமணம் நடந்தேறவேண்டும்; ஏனெனில் அப்போதுதான் அவர்கள் சாதிப்பெருமை காப்பாற்றப்படும்! புண்ணியம் அவர்களுக்குக் கிட்டும்! இறைவன் தன் திருவடி நிழலில் அவர்களை ஏற்றுக் கொள்வான்! இவ்வளவும் அவர்கள் இறப்பிற்குப் பிறகு!

குடும்பம் கல்கத்தாவுக்குப் புறப்பட்டது. பேசும் மனிதர்களிடமிருந்தும் பேசா இயற்கைக் காட்சிகளிடமிருந்தும் அந்த ஊமைப் பெண் விடைபெற்றுக்கொண்டாள். கடைசியில்...! பிரதாப்! பிரிய விரும்பா அவனிடமிருந்து பிரிய விடைகேட்டாள். அவனும் கண்ணீர்ப் படலம் கண்களைக் கப்பக் கடைசி விடைகொடுத்தான்.

சுபாவின் தந்தை கல்கத்தாவில் மாப்பிள்ளை வேட்டையில் ஈடுபடலானார். அவர்கள் கல்கத்தா வந்ததன் காரணமே தங்கள் பெண் ஊமை என்பதை மறைப்பதற்குத்தான்! அவர்கள் இருந்தது சிற்றூரானதால் அங்கு அவள் ஊமை என்பது சுலபத்தில் யாவருக்கும் தெரிந்ததால் அவளை மணக்க அவள் குலத்தவர்கள் யாவரும் தயாராயில்லை. எனவே கல்கத்தா வந்தனர். அம்மாபெரும் நகரத்தில் அவர்கள் செய்த தந்திரம் எளிதில் வெற்றியைக் கொடுத்தது!

கடைசியாக ஒருநாள் மாப்பிள்ளை ஒருவர் பெண் தேர்வு நடத்துவதற்காக வந்தார். சுபா அலங்கரிக்கப்பட்டுக் கொண்டு போய் நிறுத்தப்பட்டாள். சுபாவின் பெற்றோர்களின் மனதில் பயங்கர அமைதி நிலவியது! மாப்பிளளை பெண்ணை மேலும் கீழுமாகப் பார்த்து தேர்வின முடிவை வெளியிட்டார்: "பெண் பரவாயில்லை"! பெண்ணின 'அமைதி'யைக் கண்டு மிகவும் மெச்சினார்!

சுபாவின் பெற்றோர்களுக்கு அப்போதிருந்ததெல்லாம் தங்கள பெண் திருமணமாகும் வரை, ஊமை அல்ல என்று வெளியாருக்குத் தெரியவேண்டுமெனபது தான். அதற்குப் பிறகு அவள் ஊமை எனபது தெரிந்துதானே தீரும். அதற்குப்பின அவள் வாழ்க்கை என்ன ஆகும் என்பதைப்பற்றியெல்லாம் கிஞ்சிற்றும் கவலைப்படவில்லை. தங்கள் மகளின் கழுத்தில் குலமுறைப்படி ஒரு தாலி விழவேண்டும்! அவ்வளவுதான்! அப்போதுதான் தங்களுக்குச் சொர்க்கம்கிட்டும் என்று எண்ணினர். அதற்குப் பின் அந்த ஊமைப் பெண்ணின் கதி......? இவ்வினாக்குறியே அவர்கள் மனதில் எழவில்லை!

சுபாவுக்குத் திருமணம் நடந்தேறியது! ஒரு சில நாட்களில் சுபாவை அவள் பெற்றோர் மணமகன் வீட்டில் கொண்டு போய் விட்டனர் — திரும்பினர். சுபா ஒரு ஊமைப் பெண்ணென்பது மணமகன் முதல் சுற்றத்தார் வரை எல்லோர்க்கும் அம்பலமாகியது! ஆகவே சுபாவின் வாழ்க்கை அதற்குப் பிறகு..,

ஆனால் அதைப்பற்றியெல்லாம் அவளது பெற்றோர்கள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை! பெரும் பாரமொன்று தலையினின்றும் கழிந்ததாகவே கருதினார்கள். ஊராரின் கேலிப் பேச்சினின்றும் பயமுறுத்தலினின்றும் தப்பினார்கள்! குல ஆசாரம் காப்பாற்றப் பட்டது என்று எண்ணினார்கள்! இறப்பிற்குப்பின்பு புண்ணியம் கிடைக்கும் என நம்பினார்கள்! இறைவனை அடைவோம் எனக் கருதினார்கள்!

ஆனால்...! சுபா! அவள் கண்களினின்றும் கடும்புனல் ஒன்று தோன்றியது! தோன்றியது கடைசிவரை மறையவே இல்லை! அவள் ஓர் ஊமை என்று கணவனுக்கும் மற்றோருக்கும் தெரிந்த மறு விநாடி முதல் அவளது வாழ்க்கையில் பெரும் சூறவளி தோன்றியது! அப்பேயக் காற்று எழுப்பிய மணல் மேடு அவளை மூடி மறைத்தது!

★

> மயிலைக் கண்டு மாச்சர்யம் கொள்ளும் வான்கோழியும், புலியைக் கண்டு பொறுமைகொள்ளும் வரிக்குதிரையும் என்றும் தன் நிலையிலிருந்து உயரமுடியாது.
>
> —லீவர்.

வாழ்க்கையிலே தவறிய எழுத்துலக வேந்தர்கள்!

[கா. வேழவேந்தன்]

எழுதுகோல் பிடித்து வையகத்தைத் திருத்த முனைந்த எழுத்துலகச் சிற்பிகளில் சிலர் தங்கள் வாழ்க்கையிலேயே தவறு செய்திருக்கிறார்கள்!

மாணவனின் எதிரிலேயே ஆசிரியன் தவறி நடப்பதும், தனயனின் எதிரிலேயே தந்தை பண்பு கெட்டு நடப்பதும், மக்கட்கூட்டத்தின் மத்தியிலேயே மக்கள் தலைவன் ஒழுக்கங்கெட்டு நடப்பதும் எப்படி மாபெரும் குற்றங்களாகுமோ, அம்முறையில்தான் ஊரைத் திருத்த முனைந்த இந்த எழுத்தாளரும பெருமக்கள் தங்கள் உள்ளத்தைத் திருத்திக்கொள்ளாதது தவறாகப்படுகிறது.

எனினும் நாங்கள் தவறு செய்யாவிட்டால் எங்கள் அனுபவங்களை உங்களுக்குக் கூறியிருக்க முடியாதே என்று சிலரும், நாங்களும் மனிதர்கள்தானே என்று சிலரும் காரணம் காட்டி தப்பிக்க முனையலாம். எது எப்படி இருந்தாலும், சில எழுத்தாளர்களின் எழுத்துக் குவியல்கள் நமக்குச் சுவையூட்டுவனபோல வாழ்க்கைப் பாதைகளும் புதுவித சுவை தருவனவாக அமைகின்றன. சிலர் தாண்டி வந்த வாழ்வுச் சுழல்களை ஆழ்ந்து நோக்கும்போது 'இவர்களும் இப்படி இருந்தார்களா'? என்று ஆயாசப்படத் தோன்றுகிறது.

"சமுதாயத்தின் சட்டதிட்டங்களுக்கு மனிதன் அடங்கித்தான் நடக்கவேண்டும்; அப்போதுதான் அவன் மனிதன் என்றே சொல்லப்படுகிறான்" என்று தன் நவீனங்கள் முழுவதும் வற்புறுத்திச் சொன்ன அலெக்சாண்டர் டூமாஸ் ஒரு சமுதாய விரோதியாக இருந்தார்! அவர் பல்வேறு தடவை திருடித் திருடிச் சிறை சென்றவர். வாழ்க்கையிலே அவர் சந்தித்த துன்பங்கள் அவர் கைகளைக் கன்னம் வைக்கத் தூண்டின. திருடித் திருடிப் பழக்கப்பட்ட அதே கைகள் எழுதிய "கௌண்ட் ஆப் மாண்டி கிரிஸ்டோ" போன்ற எழுத்தோவியங்கள்தான் உலகினரால் மறக்கப்படாத நிலைபெற்றுவிட்டன.

'போரும் சமாதானமும்' என்ற ஒப்பற்ற நாவலால் புகழின் உச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டவர் லியோ டால்ஸ்டாய். எழுத்தாளர் மரபுக்கு மாறாக, பணக்காரராகவே பிறந்தவர் அவர். உலகெங்கும் சமதர்ம சமுதாயம் அமையவேண்டும் என்று தன் நூல்களில் கனவுகண்ட அந்த மேதை தன் வாலிப வயதில் ஆடாத ஆட்டமெல்லாம் ஆடினார். வேண்டிய அளவுக்குமேல் குடித்தார். இராக் கழகங்களில் தன்னை மறந்து, தன் கொள்கைகளை மறந்து காலங் கழித்தார். ஆனால் அவர் அப்படியே இருந்துவிடவில்லை. நல்லபல படைப்புகளை உலகுக்கு அளித்தார். என்றும் உயிரோடு வாழ்கின்ற அவருடைய எழுத்தோவியங்களும், பிற்கால அறவாழ்வும் அவரை மறக்கமுடியாத நிலைக்கு ஆக்கிவிட்டன.

லார்டு பைரனின் ஆங்கிலக் கவிதைகள் சுவையும் செறிவும் நிறைந்து காணப்படுவன. அவருடைய கவிதைக் கனிகள் படிப்போரை மீண்டும் மீண்டும் தன்பால் இழுக்கத்தக்க காந்த சக்தி படைத்தவை என்று சொல்கிறார்கள். ஆனால் அவருடைய வாழ்க்கையை மேலிடையாகப் பார்த்தாலும் தூய்மை நிறைந்ததாகத் தெரியவில்லை.

கவிஞர்கள் எளிதில் உணர்ச்சிவயப்படுபவர்கள் என்றாலும், பைரனைப் போன்ற ஒரு விந்தைக் கவிஞரைக் காணமுடியாது. மங்கையரை மங்கையராகவே மதிக்கத் தவறியவர் அவர். அன்று இரவு வெளியே அலைந்துவிட்டு ஏதேதோ எண்ணங்கள் இதயத்திலே சுழல, தான் தங்கியிருந்த மாடி அறைக்குள் நுழைந்தார் பைரன். அப்போது வேலைக்காரி ஒருத்தி சுவைநீர் கொண்டுவந்தாள். அவளைக்கண்ட பைரன் கருத்திலே வேற்றுமை தோன்ற, அருகே அழைத்தார். அவள் அஞ்சினாள். "ஐயோ! ஆராயாமல் என்னைப் படுகுழியில் தள்ளிவிடாதீர்கள்!" என்று கெஞ்சினாள். ஆனால் பருவ உணர்ச்சியால் உந்தப்பட்ட பைரன் தன் கருத்தை நிறைவேற்றிக்கொள்ளத் தவறவில்லை.

சத்தான தத்துவங்களையும் உலகியல் உண்மைகளையும் கவிதை உருவிலே வடித்துத் தந்தார், பாரசிகத்தின் மாபெரும் கவிஞர் உமர்கையாம். அவருடைய எண்ணங்கள் மலையளவு உயர்ந்து காணப்பட்டாலும் உணர்ச்சிகள் மதுவையும் மங்கையையுமே பெரிதென மதித்துச் சுழன்று சுழன்று வந்ததாக அறிகிறோம்.

ஆப்ரகாம்லிங்கன் போன்றோர் மனைவியின் கையில் சிக்கித் துன்பம் அனுபவித்த நேரத்தில், ஆங்கில முன்னணி எழுத்தாளர்களில் ஒருவரான தாமஸ் கார்லைல் தன் மனைவியை மனைவியாகவே மதிக்க மறந்தார். அவர் வீட்டரசி உண்மையிலேயே பண்புடையவளாக இருந்தும் அவர் தம்முடைய பிடிவாத குணத்தால் அவளுக்கு அடுக்கடுக்காகப் பல துன்பங்கள் விளைவித்தார். பெண்ணுரிமை பேசும் எழுத்தாளர் சமுதாயத்திலே ஒருவர்தான் கார்லைல் என்னும்போது, அவர் செய்த மாபெரும் தவறு நன்கு புலனாகிறது.

இதே முறையில் சீர்திருத்தக் கருத்துக்களை ஏட்டிலே தீட்டிக் காட்டிய பால்சாக், மாப்பசான் போன்ற எழுத்து மன்னர்களின் வாழ்க்கையிலும் தவறுகள் இருக்கத்தான் செய்கின்றன.

எனவே, இவர்களுடைய வாழ்வினை ஆழ்ந்து நோக்கும்போது, "என்னுடைய கருத்துக்களை—நூல்களை—ஆராய்ந்து பின்பற்று. ஆனால் என் வாழ்க்கையை அப்படியே நகல் செய்யாதே" என்று சொன்ன ஓர் அறிஞரின் வாதம் உயிர் பெறுகின்ற நிலையைக் காண்கிறோம்.

★

வாள் தந்த வாழ்வு

—[கோ. பி. கலிங்கன்]—

உலகில் நாகரிகத்தின் சிகரமாகத் திகழ்ந்த இடம், அழகிகளும் அறிஞர்களும் தோன்றிப் புகழ் பெற்ற இடம், ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் பரணி பாடப் பட்ட, சரித்திரப் புகழ் வாய்ந்த அழகு நகரமான "பாரிஸி"ல்......, அன்றொருநாள்......!

மீண்டும் கலகக்காரர்களால் புரட்சி ஏற்படாதபடி நகரைக் காக்கப் பாதுகாப்புப் படைக்கு அரசாங்கம் ஆணை பிறப்பித்தவுடன், சேனைத் தலைவனுடன் படை புறப்பட்டது! தெருத்தெருவாக, இல்லமில்லமாகப் புகுந்து சோதனையிட்டுப் போர்க் கருவிகளைப் பறிமுதல் செய்தது அப் படை.

ஒரு பிரபுவின் இல்லத்தின் முன்பு......

"என்ன வீரா! இது யாருடைய இல்லம்?" என்று சிறிது அதிகாரத் தோரணையில் கேட்டான் வைர நெஞ்சுடைய சேனைத் தலைவன்.

"ஐயா! கலகக்காரர்களால் கொல்லப்பட்ட ஒரு பிரபுவின் இல்லம்" என்று பணிவுடன் விடையிறுத்தான் விபரமறிந்த வீரன்.

"சரி, சீக்கிரமாகச் சோதனையிட்டு வாருங்கள்" என்று தன் குதிரையைத் தட்டிவிட்டான் சேனைத் தலைவன். அவனைத் தொடர்ந்து சில குதிரைகள் சென்றன முகாமை நோக்கி.

குதிரைகளின் குளம்பின் ஒலி குறையக் குறைய...வீட்டின் உள்ளிருந்து ஓர் அவலக் குரல் வெளி வந்தது.

"ஐயா, எப்பொருள் வேண்டினும் எடுத்துச் செல்லுங்கள், ஆனால் என் கணவரின் நினைவாக நான் உயிரெனப் பாதுகாக்கும் இந்த வீரவாளை மட்டும்கொடுத்து விடுங்கள்" என்று கணவனை இழந்த காரிகையொருத்தி கண்களில் நீர் அருவியெனப் பாயக் கெஞ்சினாள்!

"அம்மா! எங்களால் அது முடியாது! இது எம் தலைவருக்குத் தெரிந்தால் எங்களுக்கு வேலையே போய்விடும். ஆகையால் வேண்டுமாயின அவரிடம்வந்து பெற்றுக் கொள்ளுங்கள்" என்று வாளைப் பிடுங்கிக்கொண்டு, அவள் மறு மொழிகூடக் கேளாது விரைந்து சென்றனர் மாவீரர்கள்.

துணைவனைப் பிரிந்த அம் மங்கை நல்லாள், அவர் வாளையும் பறிகொடுத்துவிட்டு ஆறாத் துயரில் அமர்ந்திருக்கையில்..., விளையாடிவிட்டுத் திரும்பிய அவள் அருந்தவப் புதல்வன், கள்ளங் கபடில்லாத பாலகன், தன் தாய் வருந்துவதைக் கண்டு காரணம் கேட்கலானான்.

செய்தியைக் கூறாது மழுப்பினாள் மாசற்ற தாய். ஆனால் குழவியுள்ளம் ஆறுதலடையாது, புண்படுவதைக்கண்டு நடந்த செய்தியைக் கூறினாள்.

'இளங்கன்று பயமறியாது' என்பதுபோல, வீராவேசத்துடன் தாய் தடுத்தும், 'எப்படியும் தன் தந்தையின் வாளைத் திரும்பப் பெற்று வருவேன்' என்று வெளியில் இளம்பிள்ளையான் மழலைச் சிறுவன்.

மாமிசமுண்டு, மதுவைப் பருகிக் கும்மாளமடித்துக் கொண்டிருந்தனர் வீரர்கள் முகாமில். அவர்களின் உல்லாசத்தைக் கலைத்தது வெளியிலிருந்து வந்த சிறுவனின் விம்மிய குரல்.

சேனைத் தலைவன் சிறுவனை அன்புடனழைத்து, இருக்கையிலமர்த்தி, உபசரித்து வந்த செய்தியைக் கனிவோடு கேட்டான்.

"சிறுவா! என்னை நாடி இவ்வளவு தூரம் நீ வந்த நோக்கம் யாது! உனக்கென்னவேண்டும்?" என்று இனிமை கலந்த குரலில் கேட்டான் படைத் தலைவன்.

"ஐயா! கணவனையிழந்த என் தாய்க்கு உறுதுணையாயிருந்தது என் தந்தையின் வீர வாள் ஒன்றே! அதை உமது சேனைவீரர்கள் பலவந்தமாகப் பறித்துக் கொண்டுவந்துவிட்டனர். அதைத் திரும்பப் பெற்று, என் தாயின் துயர் துடைக்கவே உம்மை நாடி வந்தேன். ஆகையால் தயை கூர்ந்து அதைத் திருப்பித்தாருங்கள், அப்போதுதான் என் தாய்க்கு வாக்களித்ததை நான் நிறைவேற்றியவனாவேன்" என்று பணிவோடு, அஞ்சாது இன்மொழி சிந்தினான் சிறுவன்.

இளைஞனின் வீரப் பேச்சில் வியப்படைந்த படைத் தலைவன் வாளை அவனிடம் கொடுத்து, சிற்றுண்டி தந்துபசரித்து, வீரர்கள் துணைகொண்டு வீட்டிற்கு வழியனுப்பி...அவன வாளோடு நடந்து செல்லும் பின்னழகை ரசித்தபடியே வெகு நேரம் மெய் மறந்து நின்றான்.

ஓர் நாள்......

அம்மாது சிரோன்மணி, தன் மைந்தனுடன்...படைத் தலைவனை நாடிச் சென்றாள்.

அவள் நடந்துவரும் அழகை ரசித்த தலைவன் அச்சிறுவனின் தாய்தான் என உணர்ந்துகொண்டான். அவனைக் கண்ட அவள் மாது பேசுவதென அறியாது பூங்கொடியென நின்றாள். நீண்ட நேரம் வரை அவளின் விழியழகைப் பருகியவண்ணம் ஒன்றுமறியாது நின்றான் படைத் தலைவன்.

குவிந்த மொட்டு மலர்ந்தது! முத்துப் பற்கள் சிதறின! புன்

(11-ம் பக்கம் பார்க்க)

அலைகள்

மலர் மன்னன்

பணத்தை மனிதன்தான் தன் சௌகரியத்திற்காக உண்டாக்கினான். ஆனால் கடைசியில், தான் உண்டுபண்ணிய பணத்திற்கே அடிமையாகிவிட்டான். இன்று, பணம் ஒவ்வொருவனையும் பம்பரமாக ஆட்டிவைக்கிறது; பணத்தைப் பெறுவதற்காக எதையும் செய்யத் துணிந்தவனாக ஒவ்வொரு மனிதனும் இருக்கிறான். 'பணம் இருந்தால்தான் மதிக்கப் படுவோம்' என்று நினைத்து ஒவ்வொருவனும் பணத்தைத் தேடித் திரிகிறான். பணம் இன்று அகில உலகத்தையும் ஆட்டிப்படைக்கும் சர்வாதிகாரியாக இருக்கிறது. பணத்தைக் குறை கூறுவதால் சினமடைகின்ற பொருளாதார வல்லுனர்கள், ரஷ்யப் பெரியார் டால்ஸ்டாயின் 'நாம் இனி செய்ய வேண்டியன யாவை?' என்ற நூலின் கருத்துக்களை நினைத்துப் பார்த்துக்கொள்ளட்டும்.

பணம்தான் செல்வம் என்று கருதப்படுகிறது. உண்மையில் பணமல்ல, செல்வம். நல்ல சமுதாயம் சமைக்க வேண்டும் என்ற ஆசையினால் தன்னந்தனியனாகப் புறப்பட்டிருக்கிற வினோபா சொல்வதுபோல, நிலத்திலிருந்து கிடைக்கும் தானியங்களும், காய் கனிகளும்தான் உண்மையான செல்வங்கள். இயந்திரத்தால் அச்சிடப்படுகின்ற நாணயங்களும் நோட்டுகளுமா, செல்வமாக முடியும்? பணத்தைப் புசித்தால் பசியடங்குமா? மன நிறைவு இடைக்குமா? காடு கழனிகளைக் காணும் பொழுது உண்டாகும் குளுமை, பணக் குவியலைக் காணும்போது உண்டாகுமா? மனத்தைக் கெட்ட வழியில் செலுத்தத் துணை செய்யும் பேராசையல்லவா, உண்டாகும்?

'அமெரிக்க மக்களுக்கு ஒரு செய்தி தாருங்கள்' என்று அமெரிக்கப் பத்திரிகை நிருபர் ஒருவர் வினவிய பொழுது நம்மிடையே ஒளிவிளக்காகத் திகழ்ந்த காந்தியடிகள் கொடுத்த செய்தியை ஒவ்வொருவரும் நினைவில் வையுங்கள்.

'உங்கள் நாட்டில் அரியாசனத்தில் அமர்ந்திருக்கும் பணம் என்கிற சாத்தானைக் கீழே இறக்கிவிட்டு, ஏழையான கடவுளை ஏற்றிவையுங்கள். அமெரிக்கா அப்போது பெரிய காரியங்களைச் சாதிக்க முடியும். ஆனால் சாத்தானை வழிபட்டுவந்தால் எதிர்காலத்தில் இழிவான நிலையே ஏற்படும். சாத்தான் இதுவரை எவருக்கும் நண்பனாக இருந்ததில்லை. எதிர்காலத்திலுங்கூட அவன் ஏய்க்கின்ற நண்பனாகவே இருப்பான்' என்று அவர் மக்களுடைய முன்னேற்றத்தையும் நன்மையையும் மட்டுமே நினைத்துக்கொண்டிருந்த அந்த முதியவர், அமெரிக்கருக்கு மட்டுமே சொல்லவில்லை. அமெரிக்கருக்குச் சொல்வதைப்போல் உலக மக்கள் அனைவருக்குமேதான் சொல்லி விட்டுப் போனார்.

ஒருவரை வஞ்சித்து மற்றொருவரை வாழ வைக்கும் கள்ள நெஞ்சம் நிலத்திற்கு இல்லை. இந்த முதல் — அமைப்பு, மனிதனால்— சுயநலமே உருவான மனிதனால் தான்—அமுலாக்கப்பட்டது.

"எந்த மனிதன் முதன்முதலாக ஒரு துண்டு நிலத்தைச் சுற்றி நான்கு பக்கமும் வேலியடைத்துவிட்டு, 'இது என்னுடைய நிலம்; இது எனக்குச் சொந்தமானது' என்றானோ, அவன்தான் தனிச் சொத்துரிமைக்கு அடித்தளமிட்டவன். அப்போதே அவன் பிறனொருவனால் தடுக்கப்பட்டிருந்தால், இந்த உலகத்தில் எத்தனை குற்றங்கள், போர்கள், துன்பங்கள் நிகழாமல் இருந்திருக்கும்?" என்று சிந்தனையாளன ரூஸ்ஸோ மனித இனத்தை நோக்கி வினவுவதைக்கேட்டு வெட்கப்படுவோம். இனி வரப்போகும் சமுதாயத்திலாவது இந்த முறை இல்லாத வண்ணம் செய்வோம். நிலம் எல்லோருக்கும், சொந்தமானதாக இருக்கட்டும். எல்லோருடைய நன்மைக்காகவும் எல்லோரும் உழைக்கட்டும்.

'நான்' 'எனது' 'எனக்கு', என்பதெல்லாம் இந்தத் தலைமுறையோடு கல்லறைக்குப் போகட்டும். நாளைய சமுதாயத்தினர் 'நாம்' 'நமது' 'நமக்கு' என்ற மனப்பான்மையுடையவர்களாக இருக்கட்டும்.

'நமக்குள்ளே பேதமில்லை; நாமனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்' என்ற நற்கொள்கை வாயளவில் நின்றுவிடாமல் இனி மேல் அமுலுக்கும் வரட்டும். ஒருவருக்கொருவர் பகைத்துக் கொள்ளாமல் எல்லோரும் ஒன்றாக இணைந்து வாழும் பழக்கம் ஏற்படும்.

பொருமை என்ற பேய்த்தனம் மனித இனத்தைவிட்டே அகல வேண்டுமானால், உயர்வு தாழ்வு முதலில் அகன்றாக வேண்டும். நானிலச சமுதாயத்தினர்கள் எல்லோருமே சமத்துவத்தைக் கடைப்பிடிக்கட்டும்.

சமுதாயத்தின் சிறிய உருவம் தான் ஒரு குடும்பம். 'குடும்பம்' என்ற பதத்திற்கு 'சிறிதாக்கப் பட்ட சமுதாயம்' என்பதுதான் சரியான விளக்கமாகும்.

குடும்பம் இல்லாதவனுடைய வாழ்க்கை எப்படி முழுமையடையாத வாழ்க்கையாக இருக்கிறதோ அதேபோலத்தான் சமுதாய அமைப்பை ஏற்படுத்திக்கொள்ளாமல் ?தனித்தனியாக வாழ்கிறவர்களுடைய வாழ்க்கையும் இருக்கிறது.

ஒரு குடும்பத்தில் ஆணுக்கு எவ்வளவு உரிமை வழங்கபபட்டிருக்கிறதோ, அதே அளவுக்குப் பெண்ணுக்கும் வழங்கப்படவேண்டும். இன்றைய குடுமபங்களில் பெண்களிடம் எந்த அளவுக்குக் கடமைகள் ஒப்படைக்கபபட்டிருக்கின்றனவோ, அந்த அளவுக்கு உரிமைகள் அளிக்கப்படவில்லை. கடமைகளைச்செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருபபவர்களுக்கு உரிமைகளும் வழங்குவதுதான நியாயமானதாகும்.

வெகுகாலமாகவே ஆண்கள் தங்களைப் பெண்களைவிட உயர்ந்தவர்களாகக் கருதிக்கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் எண்ணி வருவதற்கு எந்தவிதமான ஆதாரமோ, காரணமோ, இருப்பதாகத் தெரியவில்லை. 'பெண்களைக்காட்டிலும் உயர்ந்தவர்கள்' என்று சொல்லிக்கொளளும்படியாக, பெண்களிடம் இல்லாத எந்த உயர்ந்த அம்சமும் ஆண்களிடம் இல்லை. எனவே, பெண்களைவிட உயர்ந்தவர்களாகத் தங்களை இனிமேலும் ஆண்கள் கருதிக்கொள்வார்களேயானால்அதைவிடப் பைத்தியக்காரத்தனம் வேறில்லை.

புதிய இத்தாலியை உருவாக்க அரும்பாடுபட்டவனான மாஜினி, 'முதன் முதலில் ஆண் படைக்கப்பட்டான். அவன் பொருட்டு பெண்ணானவள் பிற்பாடு படைக்கப்பட்டாள்' என்ற மதவாதத்தை மறுக்கிறான். 'மனித இனம் படைக்கப்பட்டது. தன் இனம் அழிந்துபோய் விடாமலிருக்க மனித உயிர் ஆணாகவும், பெண்ணாகவும் பரிணமித்தது' என்ற கொள்கையினையே வருங்காலத்தவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று விரும்பினான். அவன், அந்த மகானான மாஜினி, எந்தக் கொள்கையை வருங்காலத்தவர்கள் கடைப்பிடிக்க வேண்டுமென விரும்பினானோ, அந்தக் கொள்கையை — ஆணும் பெண்ணும் சரிசமமானவர்கள் என்பதை—நம் சந்ததியார்கள் கடைப்பிடிக்க, நாம் இப்போதிருந்தே ஏற்பாடுகள் செய்வோம்.

உயிருக்கு எப்படி உடலோ, அப்படிச் சமுதாயத்திற்குத் தேசம். உயிரின் இயக்கத்திற்கு ஏற்றவாறுதான் உடல் இயங்கும். உயிரின் தன்மையைப் பொறுத்துத்தான் உடல் மதிப்பிடப்படும். அதேபோல் சமுதாயத்தின் இயக்கத்தைப் பொறுத்துத்தான், தேசமதிப்பிடப்படும். நம்முடைய சமுதாயம் ஒழுக்கங்கெட்ட காட்டுமிராண்டிகளின மந்தையாகக் காட்சியளிக்குமேயானால்,நம்தேசம் ஏளனப்படுததப்படும். நம்நாடு கட்டுப்பாடுடைய சமுதாயத்தைப் பெற்றிருக்குமேயானால் நம்முடைய நாடும் மதிக்கப்படும். எனவே நமது சமுதாயத்தைச் சீராக்குவதன் மூலம் நம்முடைய தேசத்திற்கு நாம் கௌரவத்தைத் தேடிக்கொடுப்போம்— சீர்குலைந்த சமுதாயத்தினைப் பெற்ற நாட்டிற்கும், உயிரை இழந்துவிட்ட உடலுக்குமிடையே எந்தவிதமான வித்தியாசமுமில்லை என்பதை உணருவோம்.

உடம்பில் கரங்கள் மேலானவைகளாகவோ, கால்கள் தாழ்ந்தவைகளாகவோ எண்ணப்படுவதில்லை. தரையைத்தொட்டுக்கொண்டிருப்பதன் காரணமாக அடிப்பாதங்கள் இகழப்படுகின்றனவா? உடம்பை நிலத்தில் பரவச்செய்கின்றஅவைகளைத் தாழ்வாக நினைப்போமேயானால்அது எவ்வளவு பைத்தியக்காரத்தனம்!

பல்வேறு தொழில்களை உடலின் நன்மைக்காகச் செய்துவரும் உறுப்புக்களுள் உயர்வு தாழ்வு என்ற பேச்சுக்கிடமில்லை. அதேபோலத்தான், சமுதாயத்தினுடைய நன்மையின் பொருட்டுப் பல்வேறுதொழில்களை மேற்கொள்ளுபவர்களுக்கிடையேயும் உயர்வு தாழ்வுகள் இருக்கலாகாது.

உடலில் எந்த உறுப்புக்கு இடையூறு உண்டானாலும், அது உடல் முழுவதையுமே பாதிப்பதுபோல் சமுதாயத்தின் எந்தவொரு பிரிவுக்குத் தொல்லை ஏற்பட்டாலும், அந்தத் தொல்லை சமுதாயம் முழுவதையுமே பாதிக்கும். அதனால்தான், 'ஒரு பகுதி மக்களைச் சேற்றிலும் சகதியிலும் நெளியும்படி விட்டுவைத்திருப்பது, சமுதாயம் முழுவதையுமே நாசமாக்கும்' என்ற அறிவுரை வழங்கப்பட்டது. இந்த உண்மை இதுவரை உணரப்படாமலேயே இருந்துவிட்டபடியால்தான், இந்தச் சமுதாயத்தில் எண்ணமுடியாத அளவிற்குக் குறைபாடுகள் நிறைந்திருக்கின்றன.

நாம் நம்மைச் சுதந்திரமானவர்களென்று நினைத்துக்கொண்டிருக்கிறோம்; இது எவ்வளவு பைத்தியக்காரத்தனம்! நாம் உண்மையில், அடிமைகள். நமக்கோ, நம் நாட்டிற்கோ நன்மைகள் செய்துகொள்ளும் உரிமை நமக்குத் தரப்படவில்லை. அப்படியிருக்கையில் நாம் எப்படிச் சுதந்திரமானவர்களாவோம்? நாம் ஒன்று இரண்டு புரட்சி செய்துவிடாமலிருப்பதற்காக, நம்மை ஆளுகிறவர்கள் 'நீங்களெல்லோரும் சுதந்திரக்குடிகள்' என்று கூறி ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பெயரளவுக்கு மட்டுமே நாம் சுதந்திரக் குடிகள்.

நாம் ஒரு காலத்தில் கிரேக்கர்களைவிடச் சிறப்பாக வாழ்ந்தோம். நமக்கென்று தனியாக ஒரு நாடு இருந்தது. நம்மை நாமே ஆண்டுகொண்டு, நம்மையெல்லாம் தோற்றுவித்த இந்த நாட்டிற்கும் நாம் பெரும் புகழைச் சம்பாதித்துக்கொடுத்தோம். நடுவில் கொஞ்சம் அயர்ந்து போய்விட்டோம். வேற்றுக் கொள்கைக்கு இடங்கொடுத்து, கடைசியில் அதற்கே சரணடைந்துவிட்டோம். நம்முடைய அஜாக்கிரதையின் காரணமாக நாம் அடிமைப்படுத்தப்பட்டோம்.

இந்த மயக்கத்திலிருந்து நம்மை விடுவித்துக்கொள்ள விரைவில் முயற்சி எடுத்துக்கொள்வோம். இந்த மயக்கத்திலிருந்தபடியே நம்மால் நல்ல சமுதாயத்தைச் சமைக்க முடியுமென்று நாம் நம்புவோமானால், அது ஏளனத்திற்குரிய முட்டாள்தனமாகும்.

நமது முன்னோர்கள் நம்மை அடிபணிந்து கிடப்பதற்காக உருவாக்கவில்லை. நாம், நம்மை ஆளவரும் பகைவரை விரட்டுவோம், அடிமைப்படுத்தப்பட்டுவிட்டாலும் கூட, கூடிய விரைவில் அடிமைத்தளையறுத்துச் சுதந்திரமாக நிற்போம் என்ற நம்பிக்கையிலேதான், அவர்கள் நம்மை உருவாக்கியிருக்கிறார்கள். நாம் இவ்வளவுதூரம் தாழ்ந்துகிடப்போம் எனபதைஅவர்கள் முன்னதாகவே அறிந்திருப்பார்களேயானால், நம்மை உருவாக்கியே இருந்திருக்கமாட்டார்கள்.

பிரான்ஸ் நாட்டில் லாமனே என்று ஒரு தத்துவஞானி இருந்தான. கி.பி. 1782-ம் ஆண்டு முதல் 1854-ம் ஆணடு வாழ்ந்த அவன், உலக மக்களனைவருக்கும் அறிவுரைகள் கூறியவண்ணம் உலவிக்கொண்டிருந்தான்.

ஒருமுறை அவன் உலக மக்களை, நோக்கிப பின்வருமாறு பேசினான்:

"உங்களுடைய குழந்தைகள் உங்களைப் போலவேதான் இருப்பார்கள். நீங்கள் ஒழுக்கமுடையவர்களாக இருந்தால், அவர்களும் ஒழுக்க முடையவர்களாயிருப்பார்கள். உங்களிடத்தில் நேர்மையும் நாணயமும் சகோதரத்துவமும் இல்லாவிட்டால், அவர்கள்மட்டும் மேற்சொன்ன குண நலன்களைப் பெற்றவர்களாக எப்படி இருக்க முடியும்? நீங்கள் அவர்களது முன்னிலையில் ஒழுக்கமற்றவர்களாயும், கீழ்த்தரமான பேச்சுக்களைப் பேசுபவர்களாகவும் இருப்பீர்களேயானால், அவர்கள்மட்டும் நல்லொழுக்கம் நிரம்பியவர்களாயும், இனிமையான சொற்களைப் பேசுபவர்களாயும் இருப்பது எவ்வாறு சாத்தியமாகும்?

உங்களுடைய வாழ்க்கை என்ற வார்ப்படத்திலேதான, உங்கள் குழந்தைகளின் மனப்பான்மை அமைகிறது, உங்கள் குழந்தைகள் மனிதர்களாகவோ, அல்லது விலங்குகளாகவோ இருப்பார்களேயானால், அதற்கு நீங்கள்தான் காரணம். அவர்கள் மனிதர்களாவதற்கும் சரி; மிருகங்களாவதற்கும் சரி; நீங்கள்தான் பொறுப்பாளிகள்."

திராவிட தேசிய உணர்ச்சி, தமிழ்நாடு, தவிர, ஆந்திர, கேரள, கருநாடக மாநிலங்களிலும் மெல்ல மெல்ல—ஆனல் உறுதியாக வளர்ந்து வருவதையும், வடநாட்டிலும் மேல்நாடுகளிலும் கூடநமது இயக்கம் குறித்து அறிவதற்கு ஏற்பட்டிருக்கும் ஆவலையும் இச்செயற்குழு மகிழ்ச்சியுடன் கவனிப்பதுடன், ஆங்கிலத்திலும், பிற திராவிட மொழிகளிலும் கழகக் கொள்கைகளை விளக்கும் துண்டுப் பிரசுரங்களை வெளியிடுவதன் மூலமும், பிறவகையாலும் இயக்கக் கொள்கைகளை மேலும் பரப்புவதென இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

சென்னை 6—6—58
தி. மு. க செயற்குழு

கணவன் என்று தனக்கு ஒருவன் வந்ததும் ஒரு பெண் தான் பிறந்த குடும்பம், பெற்றோர் அனைவரையும் விட, அவர்கள் எல்லோருக்கும் சேர்ந்து தனது மனதில் இருந்த இடத்தைவிட கணவனுக்கு அதிகமான இடம் கிடைத்துவிடுகிறது. இதேபோல ஆண் மகனும் தான் யாருக்கும் தராத இடத்தை மனைவிக்குத் தருகிறான்.

8-ம் பக்கத் தொடர்ச்சி

முறுவல் பூத்தது. மான்விழியாள் தலைநிமிர்ந்தாள்! கொவ்வை இதழ்கள் கனி மொழிகள் சிந்தின!

"மறைந்த என் மணாளரின் வாளைக் கொடுத்து என்னையும் எனதருமைக் குமாரனையும் கௌரவித்ததற்குத் தங்களுக்கு நான் எவ்விதம் நன்றி தெரிவிப்பதென்றே தெரியவில்லை........," என்று கூறுமல் கூறி நின்றாள் நங்கை நல்லாள்.

அவளுடைய தேன் சொற்கள் சிதறி ஓடுவதற்குள்......, படைத்தலைவனின் உள்ளத்தில் ஆயிரமாயிரம் எண்ணங்கள் மின்னல் எனத்தோன்றி மறைந்தன. அவள் அழகை அள்ளிப் பருகத் துடி துடித்து அவள் பொற்கரங்களைப்பிடித்து.........தன் உள்ள உணர்ச்சியை விழிகளில் பகன்றான் காதலில்கட்டுண்ட வீரத்தலைவன்.

காலம் உருண்டோடியது. அவர்களின் காதற்சுனை அருவியெனப் பாய்ந்தோடியது! ஆயிரமாயிரம் காதற் காவியங்களைத் தீட்டி, வானம்பாடிகளாகப் பறந்தனர் அவ்விருவரும்.

படைத்தலைவனின் திறமையையுணர்ந்த மக்கள் "பிரெஞ்சு" நாட்டிற்கு அதிபதியாக்க அன்போடழைத்தனர். மக்கள் கட்டளைக்குப் பணிந்து, தன் இல்லக்கிழத்தியுடன் விரைந்தான் "பிரெஞ்சு" நாட்டிற்கு அம்மாவீரன்.

பிரெஞ்சு நாட்டின் மன்னனாக மக்கள் முடிசூட்டினர். தன் துணைவிக்குத் தன கரங்களாலேயே அரசியென முடி சூட்டினான் மன்னன். அதுபோழ்து அவளின் அழகை ரசித்து ஆனந்தக் கண்ணீர வடித்தான படைத்தலைவன்.

இருவரும் அரசனும், அரசியுமாகக் காதல் மணம பூண்டு சினனாள் இனிது வாழ்ந்தனர்!

அவன் யார்? அவள் யார்?

அவன்தான் அஞ்சா நெஞ்சன் என்று உலகம் போற்றும் மாவீரன், "நெப்போலியன்" அவன் மனைவிதான்......விதவையான மாதரசி, "ஜோசப்பைன்".

குறிப்பு:- நெப்போலியனின்வாழ்க்கைச் சரித்திலிருந்து ஒரு சிறு சம்பவத்தைக்கொண்டு பின்னப்பட்ட "சிறுகதை".

நாணம் மறந்துரைத்த நங்கை!

[சோ. கருணநிதி]

குறிஞ்சி நிலப்பகுதியில் வாழும் பெண் ஒருத்தி; நல்ல அழகி; பருவத்தின் பூரிப்பு அவள் உடல் எங்கும் பரவி எழில் கொழிக்கும் மங்கையாய்க் காட்சி அளிக்கும் அவள், ஓர் ஆடவனின் இதயத்துக்கு பலியாகிவிட்டாள். அவள் தாய்க்கு தலைவியின் காதல் விளையாட்டுத் தெரிந்துபோகவே தலைவி வெளியே போகக்கூடாது என்று தடுப்புக்காவல் சட்டம் போட்டுவிடுகிருள். எனவே தலைவியின் இதயம் வேதனையால் வெந்து தணிகிறது. அவள்படும் வேதனையைக் காணப் பொருமல் தோழியும் வேதனை அடைகிருள். "தலைவியின் காதல் விளையாட்டு நற்றாய்க்கு எப்படித் தெரிந்தது?" என்று தனக்குத்தானே கேட்டுக் கொள்கிருள். இதற்குப் பதில் தலைவியிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று இருந்து விடுகிருள். அவளுக்குத் தெரியாது தலைவியேதான தன் காதல் கொண்ட கதையை சொல்லிவிட்டாள் தன் தாயிடம் என்பது.

ஆமாம்! இந்த விசித்திரமான தலைவி, சங்ககாலப் புலவரான நொச்சி நியமங்கிழார் எனற புலவரின் அற்புதப படைப்பு. தலைவி தான் காதல் கொண்ட கதையை களவொழுக்கம் நிகழ்த்திய முறையை தன தாயிடமே சொல்லி விடுகிருள; எபபடிச் சொல்ல முடிந்தது அவளால்? ஒரு தமிழ பெண் உயிரினும மேலான தன நாணத்தையும மறந்து இப்படிச் சொல்வாளா? சொல்வதுதான நியாயமா? என்று தோனறும் நமக்கு, உண்மைதான். தமிழ் நாட்டுப் பெண்கள் தம் களவொழுக்கத்தை, தம் வாயாலேயே செப்பமாட்டார்கள்; அது மட்டுமல்ல. எந்த நாட்டுப் பெண்களும் தம் காதலை தம் தாயிடம் நேரிடையாக ஒப்புவது அரிது. ஆங்கிலப் புலவன் ஷேக்ஸ்பியர் கூட இதை வெகு அழகாகக் குறிப்பிடுகிருர். "ஒரு பெண்ணின் மனம் காதலைச் சொல்ல விரும்பும். ஆனல் நா சொல்லாது" என்கிருர். ஷேக்ஸ்பியரின் இதே கருத்தை நம் அருந் தமிழ் நாட்டுப் புலவர் ஒருவர் அகநானூற்றிலும் பாடிப் போயிருக்கிருர். "...யாக்கை இன்னுயிர் கழிவதாயினும் நின் மகள் ஆய் மலர் உண்கண் பசலை காம நோய் என செப்பாதீமே!" என்று. "இந்த உடலும் உயிரும் அழிந்து படுவதாய் இருந்தாலும் நான் காதல் கொண்ட செய்தியை தாயிடம் சொல்லாதே!" என்று தலைவி தோழியைப் பார்த்துச் சொல்வதாகப் பாடுகிருர். இது நாணமும் நிறையும் வளர்த்த பண்பாடு, இப்படிப்பட்ட பெண்கள் மத்தியில பிறந்த குறிஞ்சித் தலைவி மட்டும எப்படி தன் காதலை அவள் தாயுடம் சொல்லி இருப்பாள்? அப்படிச் சொல்வதாகப்பாடி இருப்பது பெண்களுக்கே இழுக்குத் தருவதாக அல்லவோ இருக்கிறது? உண்மை தான! ஆனல் அதற்கான சூழ்நிலையை கவி வெகு அழகாகப படம்பிடித்துக் காட்டுகிருர். அதிலே மிகச் சிறந்த ஒரு மனோதததுவ உண்மையையும புகுத்தி இருபபது கண்டு நாம பெருமைப் படாமல் இருகக முடியவில்லை.

தலைவியே தன் உயிரினும் மேலான நாணத்தையும் மறந்து தன் காதலைச் சொல்லிவிட்டது குறித்து அளவிலா வேதனை கொள்கிருளாம். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலைக்குத் தலைவியைக் கொணர்ந்து நிறுத்துகிருர் ஆசிரியர். கடலன்ன காமம் தம் இதயத்தே பொங்கி வழிந்தாலும் அதை வெளிக்காட்டாது மறைத்துவிடும் பெண் குலத்தில் உதித்த ஒருகற்பரசி தன்காதலைத் தன் தாயிடமே சொல்லிவிட்டாள். ஆனல் அதற்காக அவள் படும துன்பம் இருக்கிறதே! அது கொஞ்சமா நஞ்சமா? துன்பத்திலும் எப்படிப்பட்ட துன்பம்! அவள் வெளியே எங்கும் செல்லமுடியாதவாறு அவள் தாய் சிறைப்படுத்திய துன்பம்! இதை எப்படி பொறுப்பாள் அவள்? பொங்கி வரும் அருவியின் ஆனந்த கீதத்தை இனி அவளால் அனுபவிக்க முடியாதே! வளர்ந்தோங்கிய மரக்கிளைகளிலே இருந்து கூவிடும் குயில்களின் இன்ப கீதத்தை இனி அவள் செவிகள் கேட்க முடியாதே! ஆடி வரும் தென்றலோடு ஓடி விளையாடிய அந்த இன்பத்தை இனிமேல் அவள் எப்படி அனுபவிப்பாள்!" தலைவியின் வேதனை காட்டாற்று வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடுகிறது. யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளுமாமே! அதைப்போல் அல்லவா செய்துவிட்டாள் அவள். நாணத்தை மறந்து சொல்லும்போது தெரியாத வேதனை இப்போது அல்லவா தெரிகிறது, என்ன அறிவின்மை!

திடீரென்று அவளுக்கு அவன் நினைவு வருகிறது. அவன்தான் அன்றொருநாள அவளை, கொஞ்சும சலங்கைபோல அருவியின் ஒலி கேட்க, கூவிடும குயிலோசை அதனோடு இழைந்துவர, யாழுக்குப்பதில வண்டின ரீங்காரம் அங்கே இனப மூட்ட, மல்லிகை மணம பரப்பிவரும தென்றலோடு தென்றலாய் அவளைக் கட்டி அணைததானே அந்தக் கள்வனின நினைவு வருகிறது. அபபப்பா! அவனை நினைத்து விட்டாலே இவ்வளவு இனபம் என்றால நேரிலேயே அவன வந்துவிட்டால்—? வந்திருந்தால் இந்தக் கதியெல்லாம அவளுக்கு ஏற்பட்டு இருக்குமா? போய்வந்து மணமுடிப்பேன் என்றுபோனவன் குறித்த காலத்தில் வந்திருந்தால் அவள் ஏன் அவன் நினைவாகவே ஏங்கி இருக்கப்போகிருள். கை வளையல்கள் எல்லாம் காமலிட்டுக் கழன்றோடக் கண்களிலே பசலை நோய் பரவ, இவற்றையெல்லாம் நற்றாய் கண்டு நடுங்கவேண்டிய அவசியமே இல்லாமல் போயிருக்குமல்லவா? அவன் வாராததினல்தானே தாயுடன் ஒரு நாள் அருவிப்பக்கம் போய்வரும் போது, தானும் தன் காதலனும் களவொழுக்கம நிகழ்த்திய இடத்தைக் கண்டபோது நெஞ்சம் நெக்குருகிக்கண்ணீர்விட வேண்டி வந்தது. அதன் விளைவுதானே தலைவியின களவொழுக்கம் தாய்க்குத் தெரிந்தது. இந்த தண்டனை? இத்தனைபாடும்அவன் குறிப்பிட்ட காலத்தில் வராததினல் தானே! அதற்கு அவனையல்லவா தண்டிக்கவேண்டும்! ஆனல் தண்டனை அனுபவிப்பது தலைவி அல்லவோ! தலைவி இவற்றையெல்லாம் நினைந்து நினைந்து வேதனையால் கண்ணீரைக்கொட்டுகின்ருள். வடிக்கின்ற கண்ணீரைத் தோழி துடைப்பதைக்கண்டு திடுக்கிடுகிருள் தலைவி-"நீ எப்போது வந்தாய்?" தலைவியின் இந்தக் கேள்வியைக் கேட்டுத் தோழி 'குளுக்' என்று சிரித்துவிட்டு "நீ உன் காதலனை நினைந்து நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்து கொண்டிருக்கும் போதுதான்-!" தோழியின் பதில் தலைவிக்கு அந்தத் துன்பத்திலும் கூட நகைப்பையூட்டுகிறது. மெல்லத் தன் வரண்ட உதடுகளை விரித்து முறுவலை அவற்றிலே நெளிய விடுகிருள்.

"தாய்க்கு எப்படியடி தெரிந்தது உன் லீலைகள்?" என்கிருள் தோழி. "நானே தான் தெரிவித்து விட்டேனடி!" தோழியைப் பார்க்கக்கூட வெட்கமாய் இருக்கிறது அவளுக்கு, வேறு எங்கோ பார்த்துக்கொண்டு சொல்கிருல்.

"உன் உயிரினும் மேலான உன் நாணத்தையும் மறந்தா இதைச் செபபிவிட்டாய்?"

"ஆமாம்!"

"என்ன ஆமாம் போடுகிருய்! நீ எதற்காக இதைப்போய் தாயிடம் சொன்னுய்?"

"அதுதான் எனக்கும் புரியவில்லை; சொல்கிறேன் கேள்" என்று தொடங்குகிருள் தன் கதையை.

"சின்ஞட்களுக்கு முன் நானும் தாயும் அருவிக்குப போய் நீராடி விட்டு வந்தது உனக்கு நினைவு இருக்கிறதா?'

"ஆமாம்! சொல்லு!"

"நான் மழை பெய்த அந்த நன்னெடுங் குன்றிலிருந்து கரிய கடலினைபபோல வழிந்தோடும் அந்த அருவியில நீராடிவிட்டு பின் அந்த அகன்ற பெரிய காட்டிடத்துச் சென்ருேம், மெல்ல நானும் என் தாயும் பேசிக் கொண்டே வரும் போது எதிர் பாராத விதமாக அந்த இடத்துக்கு வந்துவிட்டோம...

"எந்த இடத்துக்கு?" தோழி குறுக்கிட்டாள்.

குறும்புக்காரி! சொல்வதைக் கேள், என்று மேலும் தொடர்கிருள்.

"யாழை வெல்லும் வண்டினங்கள் ரீங்கார ஒலி பரப்பிக்கொண்டிருக்கவும், குவளை மலர்களின் நறுமணம் மூக்கைத் துளைத்துக் கொண்டு போகவும், நெஞ்சைக் கொள்ளைகொள்ளும் அந்த இடத்தில்தான் நானும் அவரும் சேர்ந்து களவொழுக்கம் நிகழ்த்திய இடம். அங்குதான் நான் அவரை முதல் நாள் சந்தித்து என் இதயத்தை அவரிடம் பறிகொடுத்த இடம். அதே அந்த இடத்தில்தான் அவர் என் கரம் பற்றிக் கைவிடேன என்று சொல்லிப் போனதும், அந்த இடத்திற்குச் சென்றதும், அவருடைய சிவந்த கண்களும், பரந்த மார்பும், குன்றொத்த தோள்களும், அரும்பு மீசையும் துடுக்குப் பேச்சும் என் நினைவுக்கு வந்தன. அவருடைய நினைவு வரவே நான் என்னிலை மறந்து தாய் ஒருத்தி இங்கு இருக்கிருளே என்பதைக்கூட நினைந்துபாராமல்-ஆற்ருது என அஞ்சன விழிகள் கண்ணீரைக் கொட்டிவிட்டன. நடுக்காட்டில் நான் திடீரென்று அழுவதைக் கண்ட தாய் என்னை நோக்கி "ஏன் கண்ணே அழுகிருய்! இனி அழாதே சொல்; உனக்கு வந்துற்ற துயரை நான் துடைப்பேன் கூறுவாயாக!" என்று என் முகத்தை முத்தமிட்டவாறே அன்புடன் கேட்டாள். தாயின் அன்பான அமுதான மொழிகள் என் இதயத்தை கலக்கின. தாயிடம்கூடச் சொல்லக்கூடாத செய்தியாயிற்றே என்பது அப்போது நெகிழ்ந்துபோய் விட்ட என் இதயத்தில் தோன்றவில்லை. சுயநினைவற்ற ஒரு நிலை அப்போது. எனவேதான் என் உயிரினும் மேலான நாணினையும் மறந்துவிட்டு, "இதோ! இந்தச் சாரலின் கண்ணுள்ள காந்தளின் தேனையுண்ட நீல மணிபோலும் நிறத்தையுடையவண்டு, யாழிற் கட்டிய இனிய நரம்பு ஒலித்தாற் போல ஒலிக்கா நிற்கவும், விசும்பிலோங்கிய வெற்பினையுடைய தலைவனது மார்பை அணைத்து இன்புற்ற இடம் இதுதான். இந்த இடத்தைப் பார்த்ததும் அவரைப் பிரிந்து வாழும் நிலையின் கொடுமை அதிகமாகி விட்டது. பொங்கி வந்த வேதனை உணர்வைத் தாங்காது அழத்தொடங்கி விட்டேன்." என்று அவசரப் பட்டுச் சொல்லிவிட்டுப் பிறகு தான் சிந்தித்தேன். "ஐயோ நாம் செய்தது எத்தனை பெரிய தவறு எனறு, அதன் விளைவு தானடி இந்தச் சிறை வாழ்வு" என்று சொல்லிமுடிக்கிருள்.

இப்படியொரு அழகான ஓவியத்தை நொச்சி நியமங்கிழார் என்ற புலவர் நற்றிணை நானூறு என்னும் நூலில் பாடி இருக்கிருர். உயிரினும் மேலான நாணத்தை மறந்து செப்பிவிட்டாளாம் அந்த செவ்விதழாள். அதற்காக அவள் படுந்துன்பத்தை நாமும் உணரும் போது அந்தத் தலைவி மேல் எவ்வளவு அனுதாபப்படுகிருேம்! நாணம மறந்து செபபிவிட்டாளே என்று அவள மேல் நாம் கோபப் படுவதற்கா முடிகிறது! அந்த அளவுக்கு தலைவிபால் படிப்போர் உள்ளம் அனுதாபப்படும்படி புலவர் எவ்வளவு உணர்ந்து பாடி இருக்கிருர் என்று உன்னும் போது உண்மையிலேயே நாம் பெருமைப்படுகிருேம்.

நான்மழை தலைகய நன்னெடுங் குன்றத்து
மால் கடற் றிரையி னிழிதரு மருவி
அகலிருங் கானத் தல்கணி நோக்கித்
தாங்கவுந் தகைவரை நில்லா நீர் சுழல்
பேந்தெழின் மழைக்கண் கலுழ்தரான் அன்னை
எவன் செய் தனையோநின் னிலங் கெயிறுண்
மெல்லிய இனிய கூறலின் வல் விரைந் [தொள
துயிரினுஞ் சிறந்த நாணு நனிமறந்
துரைக்க லுய்ந் தனனே தோழி சாரற்
காந்த ளூதிய மணிநிறத் தும்பி
தீந் தொடை நரம்பின் முரலும்
வான்றோய் வெற்பன் மார்பணங் கெனவே.

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

புருவின் சிறகையும், மங்கையர் தம் பாதங்களுக்கு உவமை சொல்வார்கள். அந்த அனிச்சம் பூ, படைபதைக்கும்வெயிலில் கிளம்புகிறது! பவனி வருகிறது! தன் வறுமையை எடுத்துச் சொல்கிறது!!

* * *

ஜனநாயக ஆட்சியில், மக்களுக்குத் தேவையான பொருள்களைக் கிடைக்கும்படி செய்ய வேண்டியது தலையாய கடைமையாகும்.

தனது நாட்டில் இல்லையென்றால், அந்தப் பொருள்களை வெளி நாட்டிலிருந்து தருவித்தாவது அளித்தல் வேண்டும்.

நிலக்கரியை மட்டுமே மூலப் பொருளாகக்கொண்டிருக்கும் பிரிட்டன், இவ்வளவு காலமும் சிக்கல் ஏதுமின்றி, சிறப்பாக ஆட்சி நடாத்தி வருவதற்குக் காரணம், இந்தக் கடமையைச் செவ்வனே செய்து வருவதுதான்.

பிரிட்டனைப்போல அவ்வளவு ஏழைநாடல்ல, இந்திய உபகண்டம்! எனினும் இங்கு, அடிக்கடி, இதுபோன்ற பிரச்னைகள் எழுகின்றன!!

"காகிதம்!—எங்கே போவது? வெளி நாட்டிலிருந்தன்றோ இறக்குமதி செய்ய வேண்டும். அந்நியச் செலவாணி சிரமமாயுள்ளதே."

"கச்சாபிலிம்! — எங்கே போவது? அந்நியச் செலாவணி வேண்டுமே? வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்ய!!

இப்படி, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படவேண்டிய பொருள்களுக்கு அந்நியச் செலாவணி வசதியில்லையே என்று சொல்கிருர்கள்.

நமதுநாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு எத்தனை ரூபாய்களுக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்கிறோம், அங்கிருந்து எவ்வளவு ரூபாய்களுக்குப் பொருள்களை இறக்குமதிசெய்கிறோம் என்கிற கணக்கு, ஒரு அரசுக்கு முக்கியமானதாகும்.

பத்துக் கோடி ரூபாய்க்குப் பொருள்களை ஏற்றுமதி செய்துவிட்டுப் பதினைந்து கோடிக்கு இறக்குமதி செய்தால், நமது நாட்டுப் பணதநில் வீணுக ஐந்து கோடி வெளிநாட்டுக்குப் போய் விட்டதென்று பொருள்,

வெளிநாடுகளில் எல்லாம் இப்போது, அமெரிக்கப்பணமான டாலரை வைத்தே மதிப்பிடுவதால், நாம் அதிகமாகக் கொடுக்கும் பணம் எல்லாம் டாலராக இருக்க நேருகிறது. பல புதிய புதிய இயந்திரங்களை நாம் வாங்க வேண்டியிருப்பதால், நமக்குப் பலகோடி ரூபாய் டாலர் தேவைப்படுகிறது, என்பது உண்மை.

இந்த நிலைமையில், வேறு வழிகளில் டாலரைச் செலவழித்து விட்டால் என்ன செய்வது என்கிற கலக்கத்தாலேயே, பல பொருள்களை இறக்குமதி செய்யாமல் இந்திய சர்க்கார் கட்டுப்படுத்த விரும்புவதாகச் சொல்லப்படுகிறது.

மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், சர்க்கார் சொல்வது சரிதானே என்று தோன்றும்—அந்நியச் செலாவணிக்கு அல்லாடுகிற போது, அநாவசியப் பொருள்களில் பணத்தைச் செலவிட முடியுமோ — ஆலைகளை நிறுவ இயந்திரங்கள் தேவையன்றோ, என்றெல்லாம் சொல்லத் தோன்றும்.

*

இந்திய உபகண்டம், பிரிட்டன் போன்ற நாடுகளைப்போல ஏதோ ஒரு பொருளை மட்டும் வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு, பல பொருள்களை இறக்குமதி செய்யும் நிலையிலிருக்கிற நாடல்ல.

தேயிலை
முந்திரி
மிளகு
கைத்தறி
தோல்
புகையிலை

போன்ற பல பொருள்களை, இந்தியா, வெளிநாடுகளுக்கு அனுப்பிவருகிறது (இப்பொருள்களில் பல, தென்னாட்டில் கிடைப்பன.) இவைகளுக்கு அமெரிக்காவில்தான், அதிகக் கிராக்கி யென்பதால், நாணயச் செலாவணியில் உயர்ந்த அந்தஸ்தை வகிக்கும் டாலர்களை, இந்தப் பொருள்கள் கொண்டுவருகின்றன.

சர்வதேச பாங்க், அமெரிக்க உதவி, என்பவைகள் மூலமும் இந்தியாவுக்குக் கோடிக் கணக்கில் டாலர்கள் கிடைக்கின்றன.

ஏற்றுமதி
நிதிஉதவி

இந்த இரண்டு வழிகளிலும், ஏராளமான டாலர் உதவி கிடைக்கிறது. அப்படியிருக்கும்போது காகிதம், பிலிம் போன்ற இன்றியமையாத பொருள்களுக்குக் கூட ஏன் "தடை" விதிக்க வேண்டும்? செண்டுப் பாட்டில், போன்ற வாசனைத் திரவியங்கள், டுவிட் வகைகள், அலங்காரப் பொருள்கள் முதலியன, மாளிகைக்குத் தேவையானவை! இது போன்ற பொருள்களுக்குத் தடை விதிப்பதும், அவைகளுக்காக நமது பணம் செல்லாமல் தடுப்பதும், செய்யவேண்டிய காரியங்கள் தான். ஆனால் டில்லி அரசு, **இன்றியமையாத பொருள்களுக்கு** இறக்குமதிக் கட்டுப்பாடு விதிக்கிறது.

இன்றியமையாத பொருள்கள், தன்னாட்டில் இல்லையென்றால், வெளி நாடுகளிலிருந்து தருவித்துக் கொடுக்கும் பொறுப்பு ஒரு ஜனநாயக அரசுக்கு உண்டு.

ஜனநாயகமூலம் ஆட்சி நடத்துவதாகச் சொல்லிக்கொள்ளும் டில்லி அரசோ, அவைகளுக்குக் கூட கட்டுப்பாடு விதிக்கிறது.

காரணம் கேட்டால் டாலர் பஞ்சம் என்கிறது! ஏற்றுமதி மூலமும் — அந்நிய உதவி மூலமும் டாலர்களைக் குவித்தபடியே, இதனைச் சொல்கிறது!

*

டாலரும் கிடைக்கிறது! அதே சமயத்தில், அந்நியச் செலவாணியில்லை என்றும் சொல்லப்படுகிறதே—என்ன காரணம்?

இந்தக் கேள்வி எழும்போது தான், நமக்குப்பல விளக்கங்கள், கிடைக்கின்றன.

இந்தியாவிலே கப்பல் கட்டுவதாகச் சொல்கிருர்களல்லவா? அப்படிக் கப்பல் கட்டப்படும் Hindustan Shipyard பற்றி ஏப். 26ந் தேதி டில்லிப் பார்லிமெண்டில் டி. சி. என். மேனன் M. P. என்பார், வெளியிட்டார்.

"...அங்கே செய்யப்பட்டுள்ள கப்பல்களில் எத்தனை நீரில் மிதக்கும் என்பதே இன்னும் தெரியவில்லை. கற்றுக்குட்டிகளான பிரெஞ்சு நிபுணர்கள் கையில் கப்பல் கட்டும் வேலை ஒப்படைக்கப்பட்டு, ஒவ்வொரு கட்டத்திலும் கோளாறுகள் ஏற்பட்ட வண்ணமே உள்ளன. இதனுல் அழிந்த அந்நியச் செலாவணி மிக அதிகம். இந்தியாவில் கிடைக்கும் சாமான்களுக்குக்கூடப், பிரான்சுக்கு ஆர்டர் கொடுத்தார்கள்."

ஒரிசாவைச் சேர்ந்த வி. சி. பட்ராய்க என்பார், ஒரு சுயேச்சைப் பார்லிமெண்டு உறுப்பினர். ஏப். 15-ந் தேதி, அவர் பார்லிமெண்டிலே சொன்னர்:—

"பார்லிமெண்டுக்குக்கூடச் சொல்லாமல் 1957-ல் 100-கோடி ரூபாய்க்கு விமானங்களை வாங்கியிருக்கிருர்கள். ரஷ்யா தர இருந்தும் இவைகள் யாவும் பிரிட்டன், பிரானசு, கானடா போன்ற நாடுகளிலிருந்தே வாங்கப்பட்டன.

இவைகள், தனிப்பட்ட கம்பெனிகளிலிருந்தே வாங்கப்பட்டிருக்கின்றன.

'ரிப்பேர்' செய்யும் நிலையிலுள்ள விமானங்களைக்கூட வாங்கியிருக்கிருர்கள்கள்!

நெடுந்தொலைவில், தங்கள் ஆதிக்கத்திலுள்ள 'காலனி'களைக் காப்பதற்கு. போர் விமானங்கள் தேவை. இந்தியா, அப்படிப்பட்ட நாடல்ல. இருந்தும் வாங்கப்பட்டிருக்கின்றன 100-கோடி அளவில்!"

இன்னெருவ பார்லிமெண்டு உறுப்பினர், அதே கிழமையில் வெளியிட்டிருக்கிருர்:

வாஷிங்டனிலுள்ள, ஒரு இந்திய அதிகாரி, இங்குள்ள இரயில்வேக்களுக்காகச் சில சாமான்களை வாங்கினுர். ஸ்டர்லிங்காகக் கொடுக்க வேண்டியவைகளுக்குக்கூட டாலராகக் கொடுத்தார"

சர்க்காரின் கணக்குத் தணிக்கைக் குழு ஏப். 27ந் தேதி வெளியிட்டது:

"இலண்டனிலும், அமெரிக்காவிலுமுள்ள இந்திய அதிகாரிகளின போக்கைக் கட்டுப்படுத்த வேண்டும். அவர்களது போக்கால், பலத்த பொருள் நஷ்டம் ஏற்பட்டு வருகிறது."

*

கிடைக்கிற டாலர், இப்படி அழிகிறது! இந்த இலட்சணத்தில், அந்நியச் செலாவணிப் பஞ்சம் என்று அழுகிருர்கள்!!

* * *

இன்றியமையாத் பொருள்களுக்கும் திண்டாட்டம்.

அதே சமயத்தில், உள் நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களின் விலையும் ஏறுகிறது.

இப்படிப்பட்டஅரசு, வாழ்கிறது இங்கு! வனிதாமணிகள், வீதிகளிலே, வலம் வருகிருர்கள்—இல்லங்களிலோ, இன்பம் இல்லை — சோகம் அரசோச்சுகிறது!!

கேட்டாலோ, பலப்பல சொல்கிருர்கள், பதிலளிக்கமுயல்கிருர்கள்!!

*

ஊர்வலம்

—[ஞானக்கண்]—

நிர்வாகி மீது ஆசிரியருக்குக் கோபம்—"நல்ல தாள் அகப்படவில்லையா, மட்டக் காகிதம்தானு பத்திரிகைக்குக் கிடைக்கிறது" என்று. நிர்வாகிக்கு, கடைக்காரர் மீது கோபம், "விலை ஏறிவிட்டது. பேப்பர் கிடைக்கவில்லை," என்று அடிக்கடி சொல்வதைக்கேட்டு. கடைக்காரருக்கு, சர்க்கார் மீது கோபம், "இப்படி, தானும் உற்பத்தி செய்யாமல், வேண்டியதையும் வரவழைத்துக் கொடுக்காமல் திண்டாட வைக்கிருர்களே!", என்று சர்க்காருக்கோ, எல்லார் மீதும் கோபம்!—இந்தச் சூழ்நிலைகளைப்பற்றி எண்ணிக்கொண்டிருந்த என்னை, அலுவலகப் பையன் கூப்பிட்டான், "ஆசிரியர் கூப்பிடுகிருர். நீங்கள் அவரைப் பார்ப்பதில்லையென்று மிகவும் கோபமாகயிருக்கிருர்", என்று.

நாம் யார் மீது கோபித்துக் கொள்ளலாம் என்று பார்த்தேன்! என்மீதுதான் எனக்குக் கோபம் வந்தது—எத்தனையோ தொழில் இருக்க ஏனடா இந்தப் பேனு பிடிக்கும் தொழிலில், அதுவும் 'ஊர்வலம்' வரும தொழிலில் சேர்ந்தோம் என்று. என்ன செய்வது? ஆசிரியரைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று 'மனோரதம்' ஏறினேன் — என் பெயர் தான் ஞானக்கண் என்று உங்களுக்குத் தெரியுமே!!

* * *

மக்கள் கும்பல் கும்பலாக ஓடிக்கொண்டிருந்தார்கள்-அவர்களைத் துரத்திக்கொண்டு காலிகளும் கைக்கூலிகளும் ஓடினுர்கள்—திடீரென கடைகளிலிருந்த பொருள்கள் எல்லாம் வீதிக்கு வந்தன—போலீசும் அதுபோதாதென்று இராணுவமும் ஓடிவந்தது-படபடவெனச் சப்தம் கேட்டது—பலர் சுருண்டு விழுந்தார்கள், பறந்து போய் நோக்கினேன்! இலங்கையென்று தெரிந்தது — அங்கு போய் உழைத்து உலரும் தமிழ்மக்கள் வாழும் பகுதியில்தான் இத்தனை சங்கடங்களும் என்று அறிந்தேன்; மனம் துடித்தது. சிங்களவர், தமிழரை ஒடுக்கிட, கடைசி ஆயுதமான பலாத்காரத்தைக்கையேந்தியுள்ளனர் என்று தெரிந்தது. தமிழர்கள் பெடரல் கட்சி பவனியா எனுமிடத்தில் கூட்டிய மாநாட்டுக்குப் போய்க்கொண்டிருந்த பிரதிநிதிகளின் இரயிலும் கவிழ்க்கப்பட்டது. தமிழர்கள், "அகதிகள்" ஆக்கப்பட்டிருக்கிருர்கள்! தமிழர்களின் நிலை, சொல்லுந்தரமன்று! எப்போது, என்ன நேருமோ என்கிற அச்சம் பிடித்தாட்ட, தாயகத்திலுள்ள குழந்தை குட்டிகளை நினைத்தவர்களாகத் திண்டாடுகிருர்கள். அகதிகள் என்று சொல்லப்பட்டு, இருந்த இடத்தைவிட்டு எங்கெங்கோ போய வாழும்படி செய்யப்படுகிருர்கள. இந்தக் காட்சியைக் கண்டதும என் மனம் பற்றியெரிந்தது. ஆளும் முதல்வர் பண்டாரநாயகாவை ஒரு முறை போக்குவாதிஎன்கிருர்களே, அவரைப்போய்ப் பார்க்கலாம் என்று போனேன். அனுமதி கிடைக்கவில்லை. என்னைக் கண்ட

திமே பல சிங்களவர்கள் துரத்திக்கொண்டு ஓடிவந்தனர்! அங்கிருந்து கிளம்பினேன்!!

*

"டபார், டுமீல், பட்படபட்..." என்று தொடர்ந்து சப்தம் கேட்டது. மறுபடியும் இலங்கைக்கு வந்துவிட்டோமோ என்று பார்த்தேன. அராபியர்களும், ஆங்காங்கே ஐரோப்பியர்களும் தெரிந்தார்கள். "இது என்ன நாடு?" என்று உற்று நோக்கினேன். பாலஸ்தீனம தெரிந்தது--அருகேயுள்ள லெபனன் என்று புரிந்துகொண்டேன், லெபனன் மக்கள் பெரும்பாலும் அராபியர் ஏன்பதால், லெபனனை, நாசர் ஆரம்பித்திருக்கும் அரர்பியக் குடியரசுடன் சேர்க்க வேண்டுமெனக் கிளர்ச்சி செய்கிறார்கள். அந்தக் கிளர்ச்சிக்காரர்களை அடக்குவதில், ஆளும் அரசு தீவிர சிரத்தை காட்டுகிறது. ஏனெனில், ஆளவோர், மேற்கு நாடுகளின் தொடர்பு கொண்டவர்கள். நாசர், அராபிய வட்டாரத்தில் அபரிமித செல்வாக்குப் பெற்று வருகிறார். அதோடு, அண்மையில் அவர் ருஷியாவுக்கும் போயிருந்ததால், அமெரிக்கா பிரிட்டன் போன்ற வல்லரசுகளுக்கு அவர் மீது அதிருப்தி வளர்ந்துள்ளது. அதனால், லெபனனிலுள்ள ஆளுங்கட்சியின் மூலம், ஒரு அதிகார தளத்தை ஏற்படுத்திக்கொள்ளத் திட்டம் போடுகிறார்கள். லெபனனில் நிறைய ஐரோப்பியர்களும் வசிக்கிறார்கள். மத்திய கிழக்கில் இதுவரை, எங்கே இருக்கிறது என்றே தெரியாமலிருந்த லெபனன், வல்லரசுகளுக்கு ஒரு ஆட்டக்காயாகி இருக்கிறது! ஒரு பக்கம் மக்கள் கிளர்ச்சியும், இன்னொரு பக்கம் அதை எதிர்த்து இராணுவமுமாக 'களம்' காட்சியளிக்கிறது!!

*

லெபனனைத் தாண்டி, சகாரா பாலைவனத்தையும் கடந்து, டுனிஷியாவுக்குப் போனேன். பிரஞ்சு ஆதிக்கத்திலிருந்து, கொஞ்சக் காலத்துக்கு முன்பு சுதந்திரம் தரப்பட்ட நாடு இது. வட ஆப்பிரிக்காவிலிருக்கும் இது, மொராக்கோ, அல்ஜீரியா இம்மூன்றும் பிரெஞ்சுப் பிடியில் இருந்தவை. இதில, இன்னும் சுதந்திர ஒளி படாமல் தீவிரமாகப் போராடிக்கொண்டிருப்பது அல்ஜீரியாவாகும்! அல்ஜீரிய மக்கள் பிரெஞ்சுப் பிடியிலிருந்து விடுபட, போராடிக்கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில், அங்குள்ள ஆட்சியை பிரெஞ்சு இராணுவம் கைப்பற்றிக்கொண்டுவிட்டது. அதன் விளைவாக, பிரான்சிலேயே டிகாலே எனும் ஒரு ஜெனரல் சர்வாதிகாரியாகவும் ஆக்கப்பட்டிருக்கிறார். டிகாலே, நிச்சயம் அல்ஜீரியாவுக்குச் சுதந்திரம் வழங்கப்போவதில்லை! அதுமட்டுமின்றி, விடுதலை பெற்ற டுனீஷியாவை மீண்டும் பணியச்செய்யும் வகையில் பிரெஞ்சுத் துருப்புகள் இப்போதே எல்லையோரங்களைத் தாக்கத் துவங்கிவிட்டனவாம்—டிகாலே வந்திருப்பதால், இந்த உற்சாகம் இன்னும் பன்மடங்கு அதிகரிக்கவே செய்யும். பிறகு, மொராக்கோவுக்கும் படைகள் நுழையும். இப்படியொரு நிலைமை ஏற்பட்டால், அண்டையிலுள்ள அராபிய நாடுகளுக்கும், குறிப்பாக நாசருக்கும், இந்த நாடுகளைக் காப்பாற்றும் பொறுப்பு அதிகரிக்கும். இதனுல், மத்திய கிழக்கில் ஒரு மாபெரும் போர் மூளுமோ, என்கிற அச்சம் உலக அரங்கில் உண்டாகியிருக்கிறது.

*

"என்ன உலகமடா இது! எங்கு பார்த்தாலும், போரும புகைச்சலுந்தானு?",என்கிற சலிப்போடு திருமபினேன். ஒருவனையொருவன் மதித்து, சகோதர பாவத்துடன் வாழும் நாள் ஒருபோதும் முகிழ்க்காதோ எனும வேதனை எழுந்தது மனதில். எங்குபோனுல் நிம்மதி கிடைக்கும் என்று எண்ணினேன். உடனே, காஞ்சிபுரத்துக்குக் கிளம்பி வீட்டுக்குள் நுழைந்தேன். "வந்துட்டீங்களா!" என்று சொல்லியபடியே என் மனைவி, பைக்குள் கைகளை விட்டாள். பணம, வேண்டும, வீட்டுச் செலவுக்கு என்றாள். "அதுதான் மாதஆரமபத்தில் கொடுத்தேனே 120-ரூபாய்!", என்றேன். கணக்கை ஒப்புவிக்க ஆரம்பித்தாள்—150க்கு மேல் போயிற்று--பையனுக்கு 'ஆர்லிக்ஸ்' வாங்க வேண்டும், 3½ ரூபாய்க்கு விற்றது இப்போது 6 ரூபாய் ஆகிறது, இப்படி எல்லாம் விலையேறிக்கிடக்கிறது,இந்தஇலட்சணத்தில் 120ல் எப்படிக் குடித்தனம் நடத்துவது என்று இருவிழிகளையும் அருவியாக்கினுள். என்ன செய்வது! ஒரு பத்திரிகையின் பொறுப்பான இடத்திலிருக்கும் என் நிலையே இதுவென்றால், என்னைவிடக் குறைவாகச் சம்பாதிக்கும் எழைகள், என்ன செய்வார்கள்? எல்லாப் பண்டங்களின் விலையும் இப்படி ஏறிக்கிடக்கிறது! காகிதம் போன்ற பல பொருள்களோ, கிடைப்பதோ அரிதாயிருக்கிறது!! ஐயகோ, என்ன வாழ்வடா இது, என்று தலையில் கைவைத்துக்கொண்டு, உட்கார்ந்தேன்.

★

இலங்கையில் உள்ள சில பொறுப்பற்ற சிங்களத் தலைவர்கள் கிளப்பிவிட்ட சிங்கள வெறியுணர்ச்சிக்குப் பலியாகி, தமது உரிமைகாக்கப் பல துன்பங்களுக்காளாகிவரும் இலங்கைத் தமிழர்களுக்கு இச்செயற்குழு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

இலங்கைத் தமிழ்ச் சிறுபான்மையாரின் உரிமைகளை மதித்து அளித்து, இலங்கையை இரத்தக் களறியிலிருந்து காக்க வெறிச் செயல்களை விடுத்து அதனைத் தூண்டும் அரசியல் தலைவர்களைக் கண்டித்து அமைதிநிறுவ சிங்கள மக்கள் முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறது.

இதுவிஷயத்தில் இந்திய சர்க்கார் இலங்கை சர்க்காரிடம் தனது நல்லுறவைப் பயன்படுத்தி இலங்கைத் தமிழ்ச் சிறுபான்மையினரின் உரிமைக்கும் வாழ்வுக்கும் இதுவரை பாதுகாப்புத் தேடத் தவறியதைக் கண்டிப்பதுடன் உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறது.

சென்னை 6—6—58

தி. மு. க. செயற்குழு.

69 திராவிடநாடு

22—6—58 | வார வெளியீடு | விலை 16 காசு

4 - JUL 1958 MADRAS

69/3-58

இந்தியை எதிர்ப்போம்

(தமிழன்)

இந்தி மொழிக்கெதிராய் கிளர்ச்சி செய்குவோம்—அதை
இந்நாட்டில் புகுந்திடாமல் தடுத்திடுவோம்;
பிந்தி வரும் நிலைமையினைப் போக்கிடவே—நாம்
பொங்கி யெழுந்ததனை எதிர்த்திடுவோம்.

கட்சி சண்டை யாவற்றையும் விட்டுவிடுவோம்—இதில்
கண்டிப்பாக நாமெல்லாம் ஒன்று சேருவோம்;
ஆட்சியிலே அமர்ந்திருக்கும் ஆளவந்தார்க்கு—நாம்
அனைவரும் ஒன்றுசேர்ந்து அறிவுறுத்துவோம்.

இறுதிவெற்றி யதனைநாமும் இதனில் காணவே
இந்தநாட்டின் மக்களெலாம் ஒன்றுகூடியே
உறுதிகொள்ளுவோம் நாம் உணவு கொண்டிடோம்
உணர்ச்சி பொங்கி யாவருமே எழுந்திடுவோம்!!

தொடர்பு, கொண்டுள்ளதாம்!!

மலைவாசம் போயிருக்கிறார், நேரு அவர்கள்.

மந்திரிகளாம் காமராசரும் அவர் தம் குழுவும், நாள்தோறும் நாடெங்கும் பவனி வருகிறார்கள்.

காந்தியடிகள் தீட்டிய கடிதங்களையும், பெர்னாட்ஷா அனுப்பிய அன்புரைகளையும் ஆய்ந்து பார்ப்பதில், ஓய்வைச் செலவழிக்கிறார் நேரு அங்கே! இவர்களும், பவனிவரும் ஒவ்வொரு ஊரிலும், 'பார்! பார்! இந்தத் தி. மு. கவை. இதென்ன ஒரு கட்சியா? இக்கட்சி சொல்லும் வடக்கு தெற்கு என்பது பித்தலாட்டம்" என்று நம்மைத் தாக்கும் நற்பணியே பெரும் பணியெனக் கருதிப் பேசி வருகின்றனர், இங்கே!!

மலைவாசம் செய்யும் நேருவையும், மக்கள் மன்றமாம் தி. மு. க-வை ஏசிடும் இவர்களையும் பார்க்கின்ற போது, தமிழ் மண், கண்ணீர் உதிர்க்கிறது. தமிழ்நாட்டு மக்கள், பெருமூச்சுவிடுகிறார்கள்.

மலைவாசத்திலிருக்கும் நேருவுக்கு, சைப்ரஸ் தீவிலிருக்கும் கிளர்ச்சியைப் பற்றியும், அல்ஜீரியப் பிரச்னைபற்றியும், லெபனான் தகராறு குறித்தும் எண்ண நேரமுண்டு. இந்த வாரத்தில் இந்திய அரசின் சார்பில், லெபனானுக்குப்போகும் ஐ. நா. குழுவில், ஒருவர் செல்ல இருக்கிறார்!

அமைச்சர்களாக உலவும் இவர்களுக்கு, வீண்வம்படிக்கவும், வேண்டாத விஷயங்களை மக்கள் மத்தியில் போட்டுக் குழப்பவும், உதகைமண்டலம்போய் காய்கறி உற்பத்திகளைப் பார்வையிடவும், நேரமுண்டு; நினைப்புமிருக்கிறது!!

ஆனால், ஒருவர் வாயிலிருந்தாவது, இலங்கையில் மடிந்தார்களே. என்ன நேருமோ என்று அஞ்சிச் சாகிறார்களே, அந்தப் பரிதாபத்துக்குரிய தமிழர்களைப் பற்றி, ஒரு சொல்கூட வரவில்லை, இது வரையில்.

செல்லுமிடந்தோறும் சொற்பொழிவு செய்யும் காமராசரோ போகுமிடமெல்லாம் புலம்பிடும் சுப்ரமணியனாரோ, அறிக்கைகள் விடுவதில் ஆசை காட்டிடும் ராஜாராம் அவர்களோ, எவரும் ஒரு சொல் உதிர்க்கவில்லை! ஒரு சொட்டுக் கண்ணீர் கூட விட்டதாகத் தெரியவில்லை!!

ஏன் இப்படி? சென்னை அரசு, துடிதுடித்திருக்க வேண்டுமே—டில்லியைவிட, அக்கரை அதிகம் இருக்க வேண்டியது சென்னைக்குத்தானே—இங்கிருந்து சென்றவர்கள்தானே இலங்கையில் வாழும் தமிழ் மக்கள்—அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்; துரத்தித் துரத்தி அடிக்கப்பட்டார்கள்; கடைகளைவிட்டு விரட்டப்பட்டார்கள்; சென்ற இரயிலிலிருந்து **தள்ளப்பட்டுச் சாகடிக்கப்பட்டார்கள்**; என்ன நேருமோ என்று கலங்கி நிற்கிறார்கள் — தமிழ்மொழிக்கு இடமில்லை, தமிழர்களுக்கு இடமில்லை, தவிக்கிறார்கள், தத்தளிக்கிறார்கள்—ஒருசொல் உதிர்க்கவில்லை, எவரும்! என்று எண்ணிடும் தோழர்காள், இதோ ஒரு செய்தி, கிடைத்துள்ளது. நீங்கள் எல்லாம் எண்ணுவதுபோல, காமராஜ் அரசு, சும்மாயில்லை. தொடர்புகொண்டிருக்கிறார்கள்—அதுவும் சாதாரணத்தொடர்பு அல்ல, நெருங்கிய தொடர்பு!! யாரோடு? பண்டாரநாயகாவுடனா, பாராளும் டில்லியின் சார்பில் இலங்கையில் வீற்றிருக்கும் இந்தியக் கமிஷனரோடா, யாரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்பலாம், அவர்களுடன் தொடர்பு கொண்டால்தானே, விபரங்களும் விஷயங்களும் கிடைக்கும், அதனால் அவர்களோடுதான் தொடர்புகொண்டிருக்கும் என்று எண்ணலாம்.

அந்த அதிகாரம் ஏது இவர்களுக்கு? — அதனால், நேரடித் தொடர்பு இலங்கையோடு, இந்தியக் கமிஷனரோடு கொண்டில்லை — டில்லியோடு கொண்டிருக்கிறார்களாம்! கலங்கும் இலங்கை குறித்து, டில்லியோடு, சென்னை நெருங்கிய தொடர்புகொண்டுள்ளதாக, ஒரு தகவல் சென்ற வாரம் வந்துள்ளது ஏடுகளில்! என்னடா சென்னை சும்மாயுள்ளதே என்று திகைத்த ஒரு நிருபர் போய், சேகரித்து, இத்தகவலைத் தந்துள்ளார்!!

என்ன தொடர்பு தெரியுமா?—இலங்கையில் என்ன நடக்கிறது என்பதற்குச் சரியான விபரங்கள் கிடைக்கவில்லையாம் சென்னை அரசுக்கு! அந்த விபரங்களை, முறைப்படி சேகரித்து அடிக்கடி அனுப்பும்படி, டில்லிக்கு சென்னை சர்க்கார் வேண்டுகோள் விட்டுள்ளதாம்!!

விபரங்களை அனுப்பி வைக்குமாறு சென்னை, வேண்டுகோள் விடுத்திருக்கிறது — தமிழகத்துக்கும் இலங்கைக்கும் இடையிலுள்ள தூரம்கொஞ்சம். இருபது மைல்கூட, இல்லையென்பர். இவ்வளவு அருகிலிருக்கும் இலங்கையில் தமிழன் சாகிறான்—அவன் ஏன் சாகிறான், எப்படிச் சாகிறான், என்பதைப் பற்றித் தகவல் சேகரித்து உடனுக்குடன் தருமாறு, எங்கோ இருக்கும் டில்லியைக் கேட்கிறது, சென்னை! நெருங்கிய தொடர்பு, டில்லியுடன், வைத்திருப்பதாகச் செய்தி தரப்படுகிறது, நாட்டுக்கு!!

நீரில் வந்த நிமிர்ப்பரிப் புரவியும், கப்பலில் வந்த கருநிற மிளகும், வடமலையில் விளைந்த மணியும் பொன்னும், குடகுமலையில் கிடைக்கும் அகிலும் தேக்கும், கங்கைப் பொருள்களும், காவிரியின் வளமும், ஈழத்துப் **பொருளும், கடாரத்துச் செல்வமும்**, மகதநாட்டு தச்சரும், அவந்திரநாட்டுக் கொல்லரும், வச்சிர நாட்டுத் தொழிலாளரும், ரோமாபுரியிலிருந்து வந்த வணிகரும், அந்நாட்டு மன்னன் அனுப்பிய தூதரும், இருந்த இடம் தமிழகம்! அப்போது வாழ்ந்த, முடிவேந்தர் மூவரும் கடல் கடந்து வெகு தொலைவிலுள்ள நாடுகளோடெல்லாம் நெருங்கிய தொடர்பு கொண்டு வாழ்ந்தனர் என்று சரிதம் செப்புகிறது!!

காமராசர் அரசு, இதோ அருகிலிருக்கும் இலங்கையில் கலங்கிக்கண்ணீர் விட்டுக் கதறும் தமிழர்களின் நிலைபற்றி அறிய, டில்லிக்குக் கடுதாசி போடுகிறது! விபரங்களை அனுப்புமாறு, வேண்டுகோள் விடுக்கிறது!!

ஒரு தமிழனுக்கு வேதனையெனில், அத்தமிழனின் மண்ணில் ஆண்டிடும் அரசுக்கு தூக்கம் வருமா? அந்த அரசு, உள்ளபடியே தமிழர் தம் அரசெனில், சும்மாயிருக்குமா? துடித்து ஓடியிருக்க வேண்டாமா, டில்லிக்கு! ஒரு தூதரை தன் சார்பில் இலங்கைக்கு அனுப்பிடச் செய்திருக்கக்கூடாதா! செய்யவில்லை, சென்னை அரசு—இலங்கையில் நடப்பது பற்றி சரியான தகவல்கள் தருமாறு, டில்லியோடு, தொடர்பு கொண்டிருக்கிறதாம், தொடர்பு.

இலங்கையில் நடைபெற்ற கலவரங்கள் குறித்துப் பல்பல கூறப்படுகின்றன — தப்பி வந்தோர் தந்திடும் தகவல்கள் பயங்கரமாய்உள்ளன; அங்கிருந்தோ கடிதங்கள் எதுவும் வருவதில்லை, ஏடுகள் ஒன்றோ இரண்டோ தான் வருகின்றன — இந்த நிலை பொது மக்களுக்குத்தானென்றால், அரசும் அதே நிலையில்தான் இருக்கிறதாம் — தகவல்களைத் தருமாறு கடிதம் எழுதுகிறதாம், கடிதம்!!

என்ன செய்தார், இலங்கையிலிருக்கும் இந்தியத் தூதர்? அவர் அனுப்பிய செய்திகளை வைத்து, என்ன செய்தது டில்லி சர்க்கார்? — தகவல் ஏதுமில்லை! லெபனானுக்கு இந்தியாவின் சார்பில் செல்லவிருக்கும் தலித் தூதர் பற்றிச் செய்திகள் வருகின்றன—அவைகளில் கவனம் செலுத்த டில்லிக்கு ஓய்விருக்கிறது — ஆனால், அந்தோ பரிதாபம் செத்திடும் தமிழ் மகனைப் பற்றிச் சிந்திக்க ஆளில்லை; உதவிட ஒருவருமில்லை!!

அவனுக்கென ஒரு ஆட்சியில்லாததால், அவன் பெயர் சொல்லி வாழும் ஆட்சி திறமையும் விவேகமும் அற்றதென்பதால், சாகிறான்; தத்தளிக்கிறான்; தாயகத்தை எண்ணிப் புலம்புகிறான்.

பரிகாரம் காணவேண்டிய டில்லியோ, பேசாதிருக்கிறது. அதற்குப் பணிந்துகிடக்கும் சென்னையோ; தொடர்பு கொண்டுள்ளதாம். **தொடர்பு! செய்தி; வருகிறது!!**

இரத்தக்கண்ணீர்

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [22-6-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 49

விழிகள், குளமாகின்றன.
மொழி குளறுகிறது.
பெருமூச்சு விடுகிறோம்.
பேச நா, எழவில்லை!
இதயம், துடிக்கிறோம்.
நாடா? இல்லை, புலிக் காடா?
என்று, நம்மை நாமே, கேட்டுக்கொள்கிறோம்.

தலை, தரையில் சிதறிக்கிடந்ததாம்.
சுவர்களில், இரத்தத்துளிகள் நிரம்பினவாம்.

சென்னை! சிங்காரத் திருவிடத்தின், சிறப்புறு நகரம். வானமுட்டும் மாளிகைகளும், வசிகரமூட்டும் வியாபாரக் கம்பெனிகளும், வயிறெரியச் செய்யும் வடவர் தம் கோட்டமும், அலைபாயும் கடலும் உள்ள அழகுபுரி.

அங்கே, எட்டுப்பேர் மாண்டார்கள்! 11 வயதாம், 24-வயதாம், 43-ஆகிறதாம் பட்டியலும் தருகிறார்கள்—மாண்டவர்களையும், மாண்டோர்தம் விபரத்தையும் கேட்கக்கேட்க, இதயம் எரிமலையாகிறது. உள்ளம் துடிக்கிறோம்.

காங்கிரஸ் ஆட்சிப்பீடம் ஏறியதுமுதல், துப்பாக்கிகள் மாதாமாதம் வெடிக்காமலிருப்பதில்லை—குண்டடிபட்டு உயிரிழந்தோர் ஏராளம்—இந்த உதவாக்கரைப் போக்குக்கு ஒரு முடிவு ஏற்படாதா என்று ஏங்குவோர், அநேகம்.

இதோ, இன்னொன்று! சென்னைத் துறைமுகத்தில், குண்டுமாரி நடைபெற்றது. கூடியிருந்தோர், 5000-க்கு மேலிருக்குமாம். அவர்களை நோக்கி, துப்பாக்கிகள் முழங்கின. எண்மர் பிணம் என்கிறது அரசாங்க அறிக்கை! அவ்வட்டாரத்தினர் தரும் கணக்கோ, குலைநடுங்கவைக்கிறது!! காயமுற்றோர் 200-க்கு மேலிருக்குமாம் — படுகாயமடைந்தோர்—கால் போனவர்கள் கையிழந்தவர்கள் ஏராளமாம். ஐயகோ, ஏராளமாம்.

'டீ' வாங்கப்போனவன், தையல் கடைக்காரர், வீதிவழியே போனவர், சந்துக்குள்ளே பயந்து ஓடியவர், இப்படியாகப் பலர் பிணமாக்கப்பட்டிருக்கிறார்கள். மடமடவென, ஒரு சில நிமிடங்களுக்குள்ளாகச் சாய்க்கப்பட்டிருக்கின்றனர் — தாலியிழந்தனர் தாய்மார்கள்! தம்பிகளை இழந்தனர் அண்ணன்மார்! கையைப்பார் — காலைப்பார்—என்று தடவித்தடவி வளர்த்தெடுத்த பெற்றோர், 'அப்பா, மகனே, அலங்கோலமானாயோ, என்று அலறுகின்றனர்!!

சென்னை இதுவரை கண்டிராத சம்பவம் என்கிறார்கள்—எப்போதும் இப்படி நடைபெற்றதில்லையாம். துறைமுகம், இருக்கின்றபகுதி, மாம்பலமல்ல, மயிலாப்பூருமல்ல! ஏழைகள் வாழ்கின்ற இடம்!! சின்னஞ்சிறு சந்துகளும், அந்தச் சந்துகளுக்குள் 'சாவே, வா' என்று அழைத்திடும் நிலையில் உழைப்பாளர்களும், அந்த உழைப்பாளர்கள் உலவிடும் மண்ணடி போன்ற நெருக்கடியான தெருக்களும் நிரம்பியவட்டம். அங்கே, ஓட ஓடச் சுட்டார்களாம்—துரத்தித் துரத்திச் சுட்டார்களாம் — ஏடுகள் சொல்லுகின்றன! கண்ணால் கண்டோரும் கதறுகின்றனர்!!

துறைமுகத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் கேட்டது வாழ்வு; ஆனால், அவர்கட்குத் தரப்பட்டிருப்பதோ, பிணங்கள். சென்னையிலே மட்டுமல்ல, அகில இந்தியாவிலுமுள்ள எல்லாத் துறைமுகப் பட்டினங்களிலும் கடந்த 16-ந்தேதி வேலை நிறுத்தம் நடைபெற்றுள்ளது. கலவரங்கள் அடிக்கடி எழும் கல்கத்தா, பயமறியாதவர்கள் வாழும் பம்பாய், எர்ணாகுளம் கொச்சி, விசாகப்பட்டினம், இப்படி எல்லா இடங்களிலும் வேலைநிறுத்தம் தொடங்கியிருக்கின்றனர் தொழிலாளர்கள். ஆனால் அங்கெல்லாம் துப்பாக்கி வெடிக்கவில்லை; காமராசர் ஆட்சிதான், இக் கைங்கரியத்தைத் திறம்படச் செய்திருக்கிறது. தமிழ் மண்ணில்தான், இரத்தக்களரி! சாவு! தாலியறுந்தோர்! தத்தளிப்போர்!

"20-நிமிடங்கள், கண்ணீர்ப்புகைவிட்டார்கள் போலீசார். அப்படியும் கலையவில்லை கூட்டம். 5000-க்குமேலிருக்கும். பிறகு, தடியடிப்பிரயோகம் செய்ய நேர்ந்தது. மக்கள், கல்லால் அடித்தார்கள். கலவரம் நேரும்போலிருந்ததால். துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்படி ஏற்பட்டது."

வழக்கமாக, ஒரு துப்பாக்கிப் பிரயோகத்துக்கு என்ன விளக்கம் தரப்படுமோ அது அளிக்கப்பட்டிருக்கிறது அரசால்! கண்ணீர்ப்புகை விட்டும் கலையவில்லை—ஒரு நிமிடம் இரு நிமிடமல்ல, இருபது நிமிடங்களுக்குக் கண்ணீர்ப்புகை விட்டும் கலையவில்லை—ஆகவே, துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் கட்டம் ஏற்பட்டது. அறிக்கையைக் கண்ணுறும் போது, இருபது நிமிடங்கள் கண்ணீர்ப்புகைக்கே அஞ்சாத கூட்டத்தை வேறு எப்படிக் கலைப்பது

கற்பனை உரையாடல்

டில்லி மூலபீடத்திலே.....

—[புதுமைப்பித்தன்]—

[அழகான அறையொன்றில் உள்நாட்டமைச்சர் கோவிந்த் வல்லப பந்த் தேநீரை ஒரே மூச்சில் குடித்துவிட்டு, சோபாவின் மீது போடப்பட்டுள்ள வெல்வெட் திண்டின் மேல் கைகளை ஊன்றிய வண்ணம் சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறார். எதிர்சோபாவில் தேநீரைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சுவைத்துக்கொண்டு அமர்ந்திருக்கிறார், நிதிஅமைச்சர் மொராஜீ தேசாய்.]

மொரார்ஜி தேசாய்:- என்ன மிஸ்டர் பந்த்! ஒரேயடியாகச் சிந்தனையில் மூழ்கிவிட்டீர்!

பந்த்:- உம்... கட்டிய கோட்டைகளெல்லாம் தரைமட்டமாகி விட்டன. எண்ணிய எண்ணங்களெல்லாம் மண்ணோடு மண்ணாகி விட்டன.

மொ. தே:- அதற்குள் அவசரப்பட்டு இந்த முடிவிற்கு வந்துவிட்டீர்களே! நேருவிற்குப்பின கோவிந்த் வல்லப பந்த் என்பதை மறந்துவிட்டீர்களா? இனனும எத்தனை நாட்களுக்குத்தான் பண்டித நேரு பதவியிலிருக்கப்போகிறார் என்பதைப் பார்ப்போம்!

பந்த்:- மொரார்ஜி! நேருவிற்குப் பின் நான்தான என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால்... எனக்கும் வயதாகிறது. வெகு சீக்கிரம் பாரதத்திலே பந்தின் பிரதம ஆட்சியின் கீழ் இந்தி கொடிகட்டிப் பறக்கவேண்டும் எனபதுதான் எனது ஆசை—ஏன், வெறி என்று கூடச் சொல்லலாம்.

மொ. தே:- பாரதத்திலே பந்த் வெகு சீக்கிரம் பிரதமராகப் போகிறார் என்பதென்னமோ நிச்சயம். ஆனால்...

பந்த்:- (கடுகடுத்த முகத்துடன்) ஆனால் என்ன?

மொ. தே:- இந்தி இந்த நாட்டின் ஆட்சிப்பீடமேறுமா என்பது சந்தேகம்!

பந்த்:- ஏன்?

மொ தே:- 'டெல்லி டைம்ஸை'லே தாங்கள் காணவில்லையா?

பந்த்:- எதைச் சொல்கிறீர்கள்?

மொ. தே:- அதுதான் D. M. K. தமிழ்நாட்டில் காங்கிரசிற்கு எதிராக மிகப்பெரிய கட்சியாக வளர்ந்து வருகிறது. அதைப் பற்றி டெல்லி டைம்ஸிலே தொடர்.கட்டுரையே வருகிறது. ஏன் — மெயில் பத்திரிக்கை கெட் லைனசாகக்கூட (Head Lines) சில சமயம் வருகிறது. அதைத் தாங்கள் காணவில்லையா! ஓ...! தாங்கள் பதவி வெறியில் அதைக் கவனிக்கவில்லைப் போலும்.

பந்த்:- என்ன! வெறி என்கிறீர்!

மொ. தே:- கொஞ்ச நேரத்திற்கு முன் தாங்கள்தான் அந்த அழகான வார்த்தையைஉபயோகித்தீர்கள்! மேலும நானும் அந்த ... மொழி வெறி, பதவி வெறி பிடித்தவனதானே! இல்லாவிட்டால், இந்த நிதிமந்திரி பதவிக்கு என்னையும்விடத் திறமைசாலிகள் சிலர் இருக்க நான் வந்திருப்பேனா? உம... அதிருக்கட்டும் — விஷயத்திற்கு வருவோம. சென்ற சில வாரங்களுக்கு முன அந்தக்கட்சியைப் பற்றி 'கரண்ட்' பத்திரிக்கையிலேகூடப் பாராட்டிச் செய்தி வெளிவந்துள்ளது.

பந்த்:- ஓ! இப்பொழுதுதான் எனககுப் புரிகிறது. 'இந்தி ஏகாதிபத்தியம்' என்று என் முன்னாலேயே பேசிய அந்த சம்பத்தின் கட்சியைத்தானே சொல்லுகின்றீர்கள்?

மொ. தே:- ஆமாம்; ஆமாம் போன 'லோக் சபை'க் கூட்டத்திலேகூட கேஸ்கரையே கிடுகிடுக்க வைத்த அந்த சம்பத்தின் கட்சியைத்தான் குறிப்பிடுகிறேன்.

பந்த்:- அவர்களுக்கு இந்தி மீது கொஞ்சம்கூட விருப்பம இடையாதா?

மொ. தே:- நம்ப இந்தி மொழியை லம்பாடி மொழியென்றல்லவா பேசறாங்க. இதிலே நல்ல இலக்கணமே இல்லையாம்; ஆங்கிலத்தின் முன் நிற்கக்கூடத் தகுதி இல்லையாம்.

பந்த்:- இதையெல்லாம் இந்தி கற்றநம பிராமணர்கள் எப்படிப் பொறுத்துக் கொண்டிருக்கிறார்கள்?

மொ. தே:- ராஜாஜியை எதிர்க்கும்போது......உம்......ராஜாஜி இந்தியை எதிர்க்கிறதுக்குக் கூட......மூலகாரணமாயிருந்தவங்க கருபபுச் சட்டைக்காரங்கதானே-

பந்த்:- (பெருமூச்சுடன்) உம்...... நிலைமை ரொமப........முத்தி விட்டதுபோலிருக்கே.

[பந்த் பற்களை நறநறவென்று கடிக்கிறார். குறிப்பறிந்த மொரார்ஜீ தேசாய் பணியாளை இன்னுமோர் கோப்பை தேநீர் கொண்டு வரும்படி பணிக்கிறார். பணியாள் கொண்டு வந்து கொடுக்க, அதை வாங்கி மொரார்ஜீ பந்திடம் நீட்டுகிறார். பந்த் ஒரே மூச்சில் தேநீரைக் காலி செய்துவிடுகிறார்.]

★

என்றே எண்ணத் தோன்றும். ஆனால், இருபது நிமிடங்கள் கண்ணீர்ப்புகை விட்டும் ஏன் கூட்டத்தினர் கலையவில்லை? கண்ணீர்ப்புகையென்ன கரும்பா! பசித்த வயிறு கொண்டோருக்கு அது என்ன பலாப்பழமா! புகை மூக்கிலும் நெஞ்சிலும் ஏறும்போது, கண்களில் நெருப்பை அள்ளிக் கொட்டியதுபோல இருக்கும்—கண்ணீர் ததும்ப குருடன்போல் நிற்கவேண்டியிருக்கும்—கண்களைக் கசக்கி விட கசக்கிவிட எரிச்சல் அதிகமாகும் — இருந்தும் அதையெல்லாம் சகித்துக்கொண்டு, 20 நிமிடங்களுக்குத் தொழிலாளர்கள் கலையாமலும் ஓடாமலும் இருந்தார்கள் எனின், தொழிலாளர்மாட்டு, எவ்வளவு கட்டுப்பாடு இருந்திருக்கிறது—தமது கோரிக்கைகளைப் பெறுவதற்காக அவர்கள் எவ்வளவு உறுதியோடு இருந்திருக்கிறார்கள் எனகிற உண்மையே விளங்கும்.

5000க்கு மேற்பட்டோர், இருபது நிமிடங்கள், கண்ணீர்ப் புகை விட்டும் ஏன கலையவில்லை? அரசு, தமது வேலை நிறுத்தத்தை முறியடிக்க, தமது கோரிக்கைகளை நிறைவேற்றாமல் தள்ளிப்போட, ஆயிரமாயிரம் சாகசங்களைச் செய்யும் என்பதை அவர்கள் உணர்ந்து, அப்படி என்ன நேர்ந்தாலும் —எது ஏற்பட்டாலும் உள்ள உறுதியோடு தமது கோரிக்கைகளைப் பெறவேண்டும் என்று இருந்திருக்கின்றனர். அது ஒன்றே போதும் தொழிலாளர், தம் கோரிக்கைகளில் எவ்வளவு உறுதியோடு உள்ளனர், அக்கோரிக்கைகள் எவ்வளவு நியாயம் நிரம்பியவை என்பதை விளக்க!!

தொழிலாளர்கள் தமது கோரிக்கைகளைக் கூறுவதும், முதலாளிகள் அதனை மறுப்பதும், பிறகு வேலை நிறுத்தம் ஏற்படுவதும் அதைக் கண்ட முதலாளிகள் "லாக் அவுட்" செய்வதும், கிளர்ச்சி தீவிரமாக நேருவதும் முதலாளித்துவ அடிப்படையிலுள்ள மண்ணில், சகஜம். இப்படி ஒரு சிக்கல் நேரும்போது, இரு சார்புக்கும் பொறுப்பாகவுள்ள அரசு, நடுநிலையிலிருந்து சுமுகமும் சமாதானமும் ஏற்படப் பணியாற்ற வேண்டும். அதுதான் ஒரு ஜனநாயக அரசுக்குள்ள கடமை என்று அனைத்துலகும் கூட ஒப்புக்கொண்டுள்ளன. ஆனால் இப்படி ஒரு சிக்கல் ஏற்படும்போதெல்லாம், இப்போதுள்ள அரசு, நடுநிலை என்பதை மறந்து, எப்படி எப்படித் தொழிலாளர்களை மிரட்டலாம் என்பதையே குறிக்கோளாகக் கொண்டிருப்பதை அறிவோம்! கடந்த திங்களில், இதே காரணத்தால், வடக்கேயுள்ள டாடா தொழிற்சாலையில், துப்பாக்கி வெடித்ததும்—பலர் மாள நேர்ந்ததும் கவனமிருக்கலாம். சென்ற சில ஆண்டுகளுக்கு முன்பு, வால்பாறையில் தோட்டத் தொழிலாளர்கள் போராட்டம் துவக்கிய போதும், இதே கதி ஏற்பட்டது நினைவிருக்கலாம், பலருக்கு.

முதலாளிகள் — தொழிலாளர்கள் ஆகியோருக்கிடையிலே ஏற்படும் பிரச்சினைகளிலேயே இந்தப் போக்கினைக் காட்டும் அரசு, தனக்குக்கட்டுப்பட்ட இடங்களில் இப்படித் தகராறுகள் முளைக்குமானால் எப்படி நடக்கும் என்பது தெரிந்ததுதானே! தமக்குக் கட்டுப்பட்ட என். ஜி. ஓ.க்களானாலும் சரி, தம் பொறுப்பிலுள்ள இடங்களிலுள்ள தொழிலாளர்கள் குரல் எழுப்பினும் சரி, முதலாளியின் இடத்திலிருந்து உற்றுப்பார்க்கும் ஒரு மனோன்மத்த குணத்தைக்கொண்டிருக்கிறது. எப்படி ஒரு முதலாளி, தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை முறியடிப்பதில் கவனம் செலுத்துவாரோ அதைப்போலவே அரசும் நடந்துகொள்ள முயற்சிக்கிறது.

கித்தாப்பை நிலைநாட்டிக்கொள்வதில் கருத்து சர்க்காருக்கு இருக்கின்ற அளவுக்கு ஆசை ஏழை மக்களின் இதயத் துடிப்பை அறிந்துகொள்வதில் இருப்பதில்லை.

அதனால்தான், தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்ததும், சமரச முயற்சிகளில், அதிகம் கவனம் செலுத்தாமல், அதை முறியடிப்பதில் அக்கறை காட்டத் துவங்கிற்று. தெரிந்தோ தெரியாமலோ இப்படிப்பட்ட விஷயங்களில் இங்குள்ள காமராசர் சர்க்கார், அதிக கித்தாப்பைக் காட்டிக்கொள்ள, ஒவ்வொரு தடவையிலும் முயற்சித்து வருகிறது! அதிலும், கடந்த தேர்தலில் அதிக வெற்றிபெற்றோம் எனகிற தைரியம் வந்த பிறகு, காமராசருக்கு, எதுவும் சாதாரணம் — எல்லாம் சாதாரணம் என்பதாகிவிட்டது! பெரியாருடனே கூடிக் குலவுவதிலும் சரி—பிறகு அவர்தம் படையினரைக் கூண்டுக்குள் தள்ளுவதிலும் சரி; பேச்சுரிமையைப் பறிப்பதிலும் சரி, அதைக் கண்டிப்போர் மீது போலீசை ஏவிவிட்டுத் துவைப்பதிலும் சரி; தனக்கு நிகர் யாருமில்லை என்கிற கித்தாப்பைப் பெற எல்லா வழிகளிலும் ஈடுபடத் தவறுவதில்லை. கண்டோம், நேருவுக்குக் கருங்கொடி பிடிக்க முடிவு எடுத்தபோது!!

மக்கள் குரலை, வெகு சாதாரணமாக எண்ணுவது மட்டுமின்றி; அதிருப்தியடைந்த மக்கள் ஏதாவது ஆத்திரக் குரல் எழுப்ப முனைந்தால், அதனைப் போலீசையும் படையையும் கொண்டு, பயமுறுத்தி கிள்ளிவிட வேண்டும் என்கிற திமிர் அதிகமாகி வருகிறது, சென்னை அரசுக்கு.

காமராசரிடத்திலா பலிக்கும் — அவர் மாநிலத்தில் எதிர்க்கட்சிகள் நடுங்குகின்றன — நமத்தாலும் பயத்தாலும் பார்ப்பார்; முடியாவிடில் அடக்குமுறைதான் — துவைத்துத் தளுவார்; துப்பாக்கிகளை வெடிக்க விடுவார்—அண்டித் தண்டனிட்டால் ஆதரிப்பார். அல்லாதோரைப் படாதபாடு படுத்தி விடுவார்—ஏ, அப்பா பலே ஆள், அவர்!—என்று, டில்லியினர் பேசவேண்டுமென்பதற்காக, அவர் கொடுத்திருக்கும் பலி பெரிது, பெரிது.

கல்கத்தா — பம்பாய் — விசாகை — கொச்சி— எர்ணாகுளம் போன்ற துறைமுகங்களில் எல்லாம் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்கின்றனர். அங்கெல்லாம் துப்பாக்கியும் வெடிக்கவில்லை — தடியடியும் ஏற்படவில்லை. அதுமட்டுமின்றி, அங்குள்ள 'அரசு'களெல்லாம் இந்தளவுக்குச் 'சதி'களிலும் ஈடுபடவில்லை!

தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவார்கள் என்றதும், லாரிகளையும் பஸ்களையும் தேடிப் பிடித்து, சென்னைக்கு அருகிலுள்ள மாவட்டங்களுக்கெல்லாம் அனுப்பி, இடைத்தவர்களையெல்லாம் ஒரு நாளைக்கு 2 ரூபாய் கொடுப்போம் வருக வருகவெனச் சொல்லி, ஆள்பிடித்து வந்திருக்கிறார்கள்! அப்பாவி மக்களும், 'வேலை' கிடைக்கிறதே என்ற

(13-ம் பக்கம் பார்க்க)

சரித்திரத்தின் தந்தை!

—[இரா. மதனகோபால், பி. காம்.]—

"ஆலிகார்னசசைச் சேர்ந்த எரோடோடஸ் இங்கு தன்னுடைய ஆராய்ச்சிகளை, காலம் செய்யும் கோலத்தால் ஞாலத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள் நீள் வையத்தினுள் வதியும் மக்கள் மத்தியினின்று மறைய ஏது இல்லை என்ற எண்ணத்தோடும், கிரேக்கர்களாலும் மற்றவர்களாலும் காட்டப்பட்ட வீர தீர உயர்ந்த செயல்கள் சிறியனவல்ல என்ற நினைப்போடும், குறிப்பாக என்ன காரணத்தின் பொருட்டு அவர்கள் அச் செயல்களைச் செய்தார்கள் என்பதையும் குறித்தும் வெளியிடுகிருன்."

இப்படித்தான் ஐரோப்பாவின், அல்ல, உலகத்தின் முதல் சரிதஏடு துவங்குகிறது. இது இவ்வுலகம் கண்ட இலக்கியங்களில் தலைசிறந்த ஒன்று.

இவனைத்தான் சிரிய சிந்தனையாளன் சிசரோ "சரித்திரத்தின் தந்தை" என்றெல்லாம் போற்றிப் புகழ்ந்தான். இதை யாராலும் மறுக்கவோ, மறைக்கவோ இயலாது. "கவிஞர்களிடையே கவின்மிகு இடம் பெற்ற ஹோமரைப் போன்று, சொற்பொழிவாளர்களிலே சிறந்தவன் சிந்தனை நிறைந்தவன என்று சொல்லப்படும் டெமாஸ்தனிஸ் போன்று சரித்திர ஆசிரியர்களினூடே எரோடோடஸ். "அவன் எழுத்து நடை எழிலும், ஏற்றமும், இனிமையும், சுவையும் மிக்கது" என்று லெம்பிரேர் எழுதுகிருர். அதுமட்டுமன்று: எரோடோடசை "ஐரோப்பிய உரைநடை எழுத்தின் தந்தை" எனறும் எள்ளளவும் ஐயமின்றிப் பகரலாம்.

தான் வாழ்ந்த காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளையும், சேதிகளையும்திரட்டவும், கோர்வையாக அமைக்கவும் தன் திறனைப் பயன் படுத்திய இப்பேரறிஞன் தன் வாழ்வைக் குறித்தமட்டில் ஏதும் தொடாமல் விட்டுவைத்தது விந்தையாகவுள்ளது! இன்றும் இவன் வாழ்வைப்பொறுத்தமட்டில் சரிதம் ஏதும் கூருத நிலையில் உள்ளது!

ஆலிகார்னசஸ்—ஆசியாமைனரில் உள்ள காரியாவில் ஒரு நகரம்—அங்கு பிறந்தவன்தான் எரோடோடஸ். அவன் பிறந்தது ஏறக்குறைய 484 கி. மு. வாகயிருக்கலாம்! சலாமிஸ் என்னும் பெரும் கடற் சண்டையில் ஜெர்க்சஸ்காரர்களுக்காகத் தீவிரமாகப் போரிட்ட பெண் இராணி ஆர்டிமிஸியாதான் அவ்வமயம் ஆண்டுகொண்டிருந்தாள். எரோடோடஸ் இளைஞனயிருக்கையில் அவள் பேரன் லிக்டாமிஸ் என்பவன் அந்நகரத்தின் கொடுங்கோலனக இருந்தான். பெர்ஷியாவின் பேரரசன அர்டாக்செர்க்சஸ் என்பவன் கீழ்தான் அவன் இருந்தான்.

பெர்ஷிய பேரரசனிடமிருந்தும், லிக்டாமிசிடமிருந்தும நகரத்தை விடுவித்து, சுதந்திர கிரேக்க நகராக்க முயற்சித்த புரட்சிவாதிகளின் கட்சியில் சேர்ந்தான இலட்சியவாதி எரோடோடஸ். எரோடசின் மாமனும் இதிகாச கவிஞனுமான பனயாசிஸ் என்பவன்தான் அக் கட்சிக்குத் தலைவன். அவன், பின்னர், கைது செய்யப்பட்டு, கொல்லப்பட்டான் லிக்டாமிஸ்ஸால். அதுபோது சாமோசிற்கு ஓடிவிட்டான் எரோடோடஸ். அங்கு இருந்த எட்டு ஆண்டுகளில் அந்த இடத்து மொழியான "லோனிக்" மொழியைக் கற்ருன். இம்மொழியில்தான் அவன் தன் சரித்திரங்களை எழுதினன்.

பின்னர் கொடுங்கோலன் லிக்டாமஸ் வீழ்த்தப்பட்டான்; எரோடோடஸ் நாடு திரும்பினன். ஆனலும், பதவிக்கு வந்த புதுக் கட்சியும் அவனை லிக்டாமஸ் பாவித்ததுபோல், பாவித்ததால், ஆலிகார்னசஸ்ஸை விட்டு புறப்பட்டு, ஊர்சுற்றும் வாழ்க்கையை மேற்கொண்டான்.

உலகக் கலாசாரத்தின் மையமாகவும், புகழின் உச்ச நிலையிலும் இருந்த எழில் நிரம்பிய ஏற்றமிகு ஏதன்சு அவனுடைய இரண்டாவது தாயகமாக ஆனது. அவன் பெரும் நாடகாசிரியனன சோபாக்கிளீசை தோழனகப பெற்ருன். அவனுக்காகச் சோபாக்கிளீஸ் ஒரு பாவே இயற்றியிருக்கிருன். அது மட்டுமனறு; பெரிக்கிளிசும், மற்ற மேதைகளும அவனுக்கு அறிமுகமானுர்கள்.

அவன் எழுதிய சரித்திரத்தினின்று சிற்சில பகுதிகளை அவன் படித்து ஏதானியர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினனும். அதனல் அவர்கள அவனுக்கு பொது மக்கள் பணத்திலின்று ஒரு பகுதி பரிசாக அளித்தனர் என்ற சேதி வழங்கி வருகிறது.

ஒலிம்பிக் பந்தயங்களில் அவன் சரித்திரம் மிகவாகப் பேசப்பட்டு பெரும் கைமொலிகளையும், பாராட்டுகளையும் பெற்றது என்று கூறுவாருமுளர். நாட்டை விட்டுப் பிரிந்த எரோடோடஸ் மகிழ்வூட்டும் ஏதானிய சமூகத்தில் தன் வாழ்நாளைக்கடத்தவில்லை. அவன் சுற்றுப் பயணம் செய்து கொண்டேயிருந்தான்.

தன் சரித்திரத்தில் கூறியுள்ள கதைகளும், வருணனைகளும் பெரும்பாலும அவன வாழ்க்கையில் நடந்தனவாகவே உள்ளன. அற்றைக் காலப் பயணத்தின் இடைஞ்சல்களையும், தொல்லைகளையும், துயரங்களையும் எண்ணிப் பார்க்குமபோது அவன் மேற்கொண்ட பயணங்களையும், அதன் பலன்களையும்கண்டு உளளபடியே, உளமாரப் பாராட்டி வாழ்த்த வேண்டும்.

அவன் நைல் நதி வழியாக மேல் எகிப்து முழுதும் கண்டான். ஆசியா வழியாக பெபிலான் வரை சென்று சுசா, எக்படானவிற்குச் சென்ருன். கருப்புக் கடலில் சென்று டேனியுப் நதியின் சங்கமம் வரை கண்டு, இரிமியாவைச் சுற்றிப்பார்த்தான். பின்னர் கோல்கிஸ் (ஜார்ஜியா) தாண்டிச் சென்ருன். டையரை நோக்கிக் கப்பலில் சென்று சிரியாவின் கடற்கரை முழுதும் கண்டான். திராசியன் கடற்கரையைப் பார்த்துவிட்டு, சைரினி, லிபியாவைச் சுற்றிப் பார்த்தான். கிரேக்கம் முழுவதும் சுற்றினன். எபிரஸ், தெஸ்ஸாலி, அட்டிகா, பெலோபோனஸ் ஆகிய இடங்களையும் பார்த்தறிந்தான்.

அவன் மேற்கொண்ட சுற்றுப் பயணங்களின் இன்றியமையாத நோக்கம் எதுவாகஇருந்தாலும்—சரித்திரம் எழுத முதல் சரித்திராசிரியன் மேற்கொண்ட பயணம்—அவைகளின் முடிவு தெள்ளெனத் தெரிகின்றது. ஏமாற்றத் தக்கனவும், முறையாக இல்லாத பிழையான குறிப்புகளுக்காகவும்அவன தாக்கப்பட்டாலும் அவன் ஒரு சிறு குறிப்பை ஒப்பிடும் முகத்தான், மறுமுறை சென்ருன் என்று தன் இரண்டாவது நூலில் குறித்திருப்பது இங்கு கவனிக்கவேண்டியது.

கி. மு. 432க்குப் பிறகு அவன் ஏதன்சில் இருந்தான் என்பது தெரிகிறது. கி. மு. 426—415 இவ்வாண்டுகளில் ஏதோ ஒன்றில் அவன் இறந்திருத்தல் வேண்டும். அவன் தொடங்கிய அப்பெரும் வேலைமுற்றுப்பெறுமுன்,என்மறுமுறை ஒப்பிட்டு பார்க்கு முன் இறந்துவிட்டான் உலகத்தின் முதல் சரித்திராசிரியன்.

எரோடோடஸ் எழுதிய சரித்திரம் இன்றைக்குக் கூறப்படும் சரித்திரம் போன்றது அல்ல.

நிலத்தின் வருணனைகள், கட்டுக் கதைகள், நல்லறிவு புகட்டும் நவினங்கள், விஞ்ஞானத்தின் பல கூறுகளைப்பற்றிய சேதிகள், திண்ணைப் பேச்சு, செய்திக் கதைகள் போன்றவைகள் குவிக்கப்பட்டுள்ளன அவன் சரித்திரத்தில்!

இதனல்தான் அவனை முறையாகச் சரிதம் எழுதத் தெரியாதவன் என்று கூறுகின்றனர் போலும்!

எரோடோடஸ் தன் சரித்திர நூல்களில் ஆங்காங்கே பல கவிஞர்கள்—பிண்டார் போன்றவர்களின்—கவிதைகளினின்று சிற்சில முக்கிய பகுதிகளைப் பெயர்த்தெடுத்து ஒப்புமை காட்டுகிருன். இதினின்று அவன் அற்றைக் கால கிரேக்க இலக்கியம் முழுதும் கற்றிருந்தான் என்று அறியலாம். நன்கு படித்தறிந்த மேதை, திறமை சாலி, தேர்ந்த எழுத்தாளன், தான் கண்டவற்றினின்று முடிவைக் கணிக்கும் ஆராய்ச்சியாளன் என்று அவன் எழுத்துப் பறைசாற்றுகிறது.

தான் கண்ட உண்மைகளை உறை போட்டு மறைக்காமல் உள்ளபடியே உரைத்தவன் எரோடோடஸ். அவன் உரை நடையின் தந்தை என்பதாலும், உலகின் முதல் சரித்திரம் எழுதிய மேதை என்பதாலும் மட்டும் போற்றப் படவில்லை. அவன் எழுத்திலே எழில் கொஞ்சுகிறது; அழகு மிளிர்கிறது; அருமையான கருத்துக்களைக் கொழித்தெடுத்துத் தருகிருன்; சுவையைப் பெருக்கும் சொல்லோவியத்தைச் சொல்லிச் சென்ற சொல்வல்லன். எரோடோடஸ் மேதை. அறிஞன், கலைஞன்—இவர்கள் தான் என்றும் இறப்பதில்லையே, உலகம் உள்ள வரை வாழ்பவர்களாயிற்றே!! ❋

டி காலே

சுமார் பத்தாண்டுகளுக்கு முன் உலக மக்களின் வாயில்—பத்திரிகைகள் வாயிலாக அடிக்கடி அடிபட்ட பெயர் ஜெனரல் டி காலே.

சர்ச்சிலின் வார்த்தைகளில் இவரை வர்ணிக்க வேண்டுமாயின், 'பிரான்சின் விதியை நிர்ணயிக்கக் கூடிய மனிதர்' டி காலே.

இப்போது இவர் மீண்டும் பிரான்சின் 'விதியை நிர்ணயிக்க' முன்வந்திருக்கிருர்.

அல்ஜீரியாவில் கடந்த நான்காண்டுகளாக நடைபெற்று வரும் குளறுபடிகளை ஒதுங்கியிருந்து கவனித்து வந்த டிகாலே, அங்கு ஒரு 'குட்டி இராணுவப் புரட்சி' நடைபெற்றிருக்கும் சந்தர்ப்பத்தைச் சாதகமாக்கிக் கொண்டு மீண்டும் அரசியலில் தலையிட முன்வந்திருக்கிருர். பிரான்சின் 'தலைவிதியை' இந்த 'முரட்டு மனிதர்' டிகாலே எப்படித்தான் மாற்றப் போகிருர் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஜெனரல் டிகாலே ஆஜானுபாகு, முரட்டுத்தனமும் பிடிவாதமும் நிறைந்தவர். யுத்த காலத்தில் இவர் ஜெர்மானியருக்கு எதிராகக் காட்டிய சாகஸங்கள், இவரைப் 'பிரான்சின் ரட்சகராக' உயர்த்தின. எனினும் ஜெர்மானியர்களிடம் டிகாலேயின் ஜம்பம் சாயவில்லை.

நேச நாடுகளின் உதவியுடன் பிரான்சு ஒருவாருக 1944-ல் விடுவிக்கப்பட்டவுடன் ஜெனரல் டிகாலே பாரிசுக்குத் திரும்பினர்.

உடனே ஒருமந்திரிசபை அமைத்து அதற்குத் தாமே பிரதமரும் ஆனர்.

ஜெனரல் டிகாலேயின் பிடிவாத குணம் அவர் உடன் பிறந்தது என்றே கூறப்படுகிறது. அவர் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்னும் போக்குடையவர். இப்போக்கை அவருடைய இராணுவ வாழ்க்கை உரமிட்டுப் பலமாக்கியது.

எனினும் நெருக்கடியான சமயத்தில் டிகாலேயின் பிடிவாதம் நன்மையாக முடியலாம் என்ற கருத்தும் பிரான்சில் நிலவுகிறது. அதனல் பிரான்சின் கழுத்தில் சுருக்குக்கயிறு மாட்டப்பட்டுள்ள இச்சமயத்தில் ஜெனரல் டிகாலே அரசியல் நுழைவைச் சிலர் வரவேற்கின்றனர் போலும்!

முதல் உலகப் போரில் டிகாலே சிறு படையை வைத்துக்கொண்டே ஜெர்மானியருடன் துணிச்சலுடன் மோதிப் போர்க்கைதியாக அவர்களிடம் சிக்கிக்கொண்டார். அப்போரில் அவர் பலமான காயமடைந்தார்.

இரண்டாவது உலகப் போரிலும் அவர் ஜெர்மானியரின் ஆக்கிரமிப்பு வேகத்தைத் தடுக்கப் பிரான்சின் நொண்டிப் படைகளை வைத்துக் கொண்டு படாதபாடு பட்டதை உலகம் அறியும்.

ஆனல் ஜெர்மானியர் மின்னல் வேகத் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க மாட்டாமல் பிரஞ்சு இராணுவம் மண்டியிட்டபோதுஜெனரல் டி காலே விமானமார்க்கமாக இலண்டன் போய்ச்சேர்ந்தார்.

ஜெனரல் டி காலே அயல்நாட்டிலே ஒரு போட்டி சர்க்காரை நிறுவிப் புதியதான ஓர் அரசியல் சித்தாந்தத்தையும் வெளியிட்டார்.

இவருடைய அரசியல் சித்தாந்தப்படி ஜனதிபதி என்பவர் ஒரு சர்வாதிகாரியாவார்.

அதிகார ஆசை அளவுக்கு மீறிப் போய்க்கொண்டிருந்ததால் பிரஞ்சு மக்கள் டிகாலேயின் அரசியல் சித்தாந்தத்துக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டு 1946ம் ஆண்டு அவரை அரசாங்கத்தைவிட்டே வெளியாக்கினர். அவருடைய அரசியல் சித்தாந்தத்துக்கும் 1953ல் தடை விதிக்கப்பட்டது.

அன்றிலிருந்துஇன்றுவரைஅரசியல் துறவு பூண்டிருந்த ஜெனரல் டி காலேயைத்தான் இன்று மீண்டும் அரசியலில் இழுத்துப் போடுகின்றனர் பிரெஞ்சுக்காரர்கள். —ஏஸ்லெஸ்

செழுமையும் வறுமையும்

—[அனுசுயா—மோகனசுந்தரம்]—

செம்மைமிகுந்த ஒரு குடும்பத்தை நம் கண்முன் கொண்டு வருகிருர் நற்றிணையில் கவிஞர் போதனர். செல்வம் மிகுந்த ஒரு குடும்பம். பொன்னாலாகிய ஒளி படைத்த ஒரு கலத்தில் தேனும் உடன் கலந்தது போன்ற மிக்க சுவையுடைய பால் சோற்றை பெண் மகவுக்கு ஊட்டுகின்றனள் தாய். அக்குழந்தை உண்ண மறுக்கிறது. மீண்டும் தாய் வற்புறுத்துகிருள். வாயினல் சொல்லிப்பார்த்தாள்; மகள் கேட்பதாகயில்லை. பூவொத்த மெல்லிய சிறிய கோலெடுத்து "நீ சாப்பிடு! இல்லையேல் இக்கோலால் உன்னை அடிப்பேன்" என்கிருள். அதற்கு மகள் "நான் சாப்பிட மாட்டேன்" என்று ஓடுகிறது. அங்ஙனம் ஓடும் பெண் மகவின் காலில் முத்துப்பரல் வேய்ந்த பொன் சிலம்பு அணிந்திருக்கிறது. சிலம்பு ஒலி இளம்ப அது பாற்சோற்றை உண்ண மறுத்து, சிறு கோலுக்கும் அஞ்சாது ஓடுகிறது. அப்பெண் குழந்தையைப் பிடிக்க செவிலித் தாய்மாரும் ஓடிக் குழந்தையைப் பிடிக்க முயல்கின்றனர். வயது வந்த செவிலித் தாய்மார் குழந்தையைப் பிடிக்க முடியாது தளர்ந்து சோர்வடைகின்றனர். இனிய பால் சோற்றை உண்ண மறுத்து அப்பெண் மகவு இங்ஙனம் சிறு விளையாட்டு விளையாடுகின்றது.

புலவர் போதனர், பசிஇல்லாத குழந்தைக்கு பசி உண்டாகுமாறு அக் குடும்பத்தார் செய்யும் காரியத்தையும், அதே சமயத்தில் பாற்சோறு, பொன்னாலாகிய கலம், முத்துப்பரல் வேய்ந்த பொற் சிலம்பு, செவிலியர் ஆகிய செய்திகளைக் கொண்டு அக்குடும்பத்தின் செழுமையை மிக அழகாக திரைப்படம்போல் நம் கண் முன் காட்சி தருகிருர். அவர் சொல்லாலேயே அக்காட்சியைக் காண்போம்.

" பிரசங் கலந்த வெண் சுவைத் தீம்பால்
விரிகதிர் பொன்கலத்து ஒருகை ஏந்திப்
புடைப்பில் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
உண்ணென்று ஒக்குபு புடைப்பத்
தெண்ணீர்
முத்தரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று
அரிநரைக் கூந்தல் செம்முது செவிலியர்
..............................பந்தர் ஓடி
...."

செல்வச் செழுமை உடைய நற்காட்சி இங்ஙனமிருக்க:

இதற்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு காட்சியை, வறுமையால் வாடிய பெருஞ்சித்திரனர் தன் குடும்பக் காட்சியையே குமணவள்ளலுக்கு ஒருபாடலில் விளக்குகிருர்.

தன் மனைவி வறுமையின் காரணமாக பல நாள் பட்டினி. குழந்தையும் இருக்கிறது. குழந்தைக்குப் பால் கொடுக்க முயல்கின்ருள். குழந்தையும் தன் தாயின் வறண்ட முலையைப் பல முறை கவ்வியும் பால் வராமையைக் கண்டுபசியால் துடிக்கிறது. தாய் பல நாள் பட்டினி இருந்ததால் இயற்கை உணவாகியபாலும் இல்லாது போயிற்று. தாய் மடியில் இயற்கை உணவாகிய பால் இல்லாது போகவே, குழந்தை செயற்கை உணவாகிய சோற்றை நாடுகிறது. ஆனல் அடுக்களையில் சோறுண்ணலாம் எனச் சென்ற குழந்தை வெறும் கலத்தையே காண்கிறது. பசி குழந்தையை வாட்டுகிறது. குழந்தை தாய்க்கு பசியை அறிவிக்கிறது. பாவம்! புலவர் மனைவி என் செய்வாள், குழந்தையிடம் மாத்தால் ஆய புலியைக் காட்டி "கண்ணே! இதோ பார், பசி என்று கூருதே, அழாதே! பார்த்தாயா புலியை. இந்தப் புலி பொல்லாதது. இனிப் பசிக்கிறது என்ருல் புலி விழுங்கி விடும். இது பொல்லாத விலங்கு கண்ணே! எனக் குழந்தையை மருட்டுகிருள். பின்னர் நிலவைக் காட்டிப் பசியை மறைக்க முயல்கிருள். அதன்பிறகு குழந்தையை நோக்கி, உன்னை இப்படிப் பசியால் அலைக்கச் செய்த உன் தந்தை வந்தால் எப்படி வெறுப்பாய் என்று காட்டு! எனக்கேட்க, அக்குழந்தையும் தன் முகத்தைச் அதற்கு உரிய வகையில் சுளித்துக் காட்டுகிறதாம்.

பெருஞ்சித்திரனர் இங்ஙனம் ஒரு காட்சியைக் குமணன் முன் கொண்டு வருகிருர். ஏன் நம் முன்னும் கொண்டு வருகிருர்.

நற்றிணையில் செழுமையால் குழந்தைக்குப் பசி இல்லை. புறநானூற்றில் வறுமையால் பசிக்கின்ற குழந்தைக்கு உணவில்லை. அங்கே பால்சோறு பாழாகிறது. இங்கே வெறும் சோறும் இல்லை. அங்கே செழுமையால் ஒரு தமிழ் மகள் மகவைப் பேணிய விதம், இங்கே வறுமையில் ஒரு தமிழ் மகள் ஒரு குழந்தையைப் பேணிய விதம். வறுமைத் தாயின் துன்பக் காட்சியை பெருஞ்சித்திரர் சொற்களாலேயே இங்கு காண்போம்.

"....................................
பாலில் வறுமுலை சுவைத்தனன் பெருஅன்
கூழும் சோறும் கிடை இ யூறின்
உள்ளில் வறுங்கலந் திறந்தழக் கண்டு
மரப்புலி யுரைத்து மதியங் காட்டியும்
நொந்தன ளாகி நுந்தையை யுள்ளிப்
பொடிந்தநின் செவ்வி காட்டெனப் பலவும்
.................................."!

இத்தகைய இலக்கியங்களைத் துய்க்கின்றபோது உள்ளம் விளைவிக்கும் எண்ணங்கள் பல கோடிகளாக விரிகின்றன. சங்கம் சார்ந்த புலவர் பெருமக்கள் மக்களின் வாழ்க்கையைப் படம் பிடிக்கின்றபோது அக்காட்சி ஒரு நாளைக்கு மட்டும் இன்பம் துய்ப்பதாய் இல்லாமல், உன்னுந்தோறும் உன்னுந்தோறும் உணர்வு வயப்பட்டு நாம் பல அரிய காரியங்களில் ஈடுபடுகிறோம். புலவர் போதனர் காட்டிய செழுமையையும், புலவர் பெருஞ்சித்திரனர் தன்வாழ்க்கையிலேயே கண்ட வறுமைக் காட்சியையும் காணும்போது நம்மை ஒரு புதுப் பாதைக்கு செல்லத் தூண்டுகிறது.

★

கடைசிப் பயணம்!

பட்டத்து அரசி! பாராளும் இராணி! "நாமே அரசும்; நாமே யாவும்", எனப் பெருமை பேசிக் கிடந்தவள் தான் "மேரி அண்டாய்னெட்."

"சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்; வெறும் சோற்றிற்கே வந்ததிந்தப் பஞ்சம்" என ஏழை—பாழைகள்பஞ்சப்பாட்டுப்பாடிக் கொண்டலைந்தபோதும், வயிற்றைக் காட்டி ஒரு துண்டு ரொட்டி கேட்டபோதும் "பஞ்சமா? அப்படியென்ருல் என்ன? அது எப்படியிருக்கும்?" எனக்கேட்ட "பர்ணசாலைக்காரி" அவள்!

வரிசெலுத்த வக்கு இல்லாது மக்கள் வருந்தின சமயத்தில் சவுக்கால் அடித்து 'தர்பார்' நடத்திருள். ஏழைகள் இல்லாது வாடும் போது எங்ஙனம் வரிசெலுத்துவார்கள் என்பதை நினைக்காது வாட்டிப்படைத்த சுந்தரி அவள்! உண்ணுமல்,உறங்காமல்உழைத்த மக்கள் தாங்கள் நல்வாழ்வு வாழாதது மட்டுமல்ல, இவளின் கொடுரங்களால் கொல்லாமல் கொல்லப்பட்டனர்!

ஏழைகள் அழுதனர்! அவளோ சிரித்தாள்! பொன்னபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு பிரபுக்களின் முன் பளபளக்க மின்னிருள்! குடிக்கக் கஞ்சியின்றி எண்ணற்றோர் வாடிக்கிடந்த நேரத்தில், அவள் கோமான்களின் மத்தியில் விருந்துண்டு கேளிக்கைகளில் மூழ்க்கிக்கிடந்தாள்!

வேதனை இங்கே! விலா நோகச் சிரிப்பு அங்கே! ஆம்! இப்படித்தான் ஆக்கி வைத்திருந்தாள் நாட்டை!

தன் கணவன் "16-ம் லூயியை"யே தன்கைப்பொம்மையாக ஆட்டி வைத்திருந்தாள்! படாடோபமும், ஆணவமும் மிகுந்த அவள் முன் அரசன் நின்று பேசவே பயந்து கிடந்தான்!

எவரைப் பற்றியும் எண்ணுது—எதுபற்றியும் கவலை கொள்ளாது ஆணவத்தின் உச்சாணிக் கொம்பிலே நின்றிருந்தாள்! இந்த ஆணவப்போக்கு இவளை எங்கு கொண்டுபோயிற்று? சரித்திர ஆசிரியர்கள் "நாடு எனும் கப்பலை பாறையில் மோதி உடையச் செய்தவள் இவள் தான்" எனக் குறிப்பிடுகிருர்கள், நம்மவர்களைக் கேட்டால் "பிரெஞ்சுப புரட்சிக்கு வித்தூன்றிய பிரமுகர்களில் இவளும் ஒருவள்" எனக் கூறுவர்!

ச. வே. பாண்டியன்

ஆம்! இவளாலும் — இவளைப் போன்ற இவளுக்கு முந்தியவர்களாலும் தொடர்ந்து கடைப்பிடித்து வரப்பட்ட கொடுங்கோன்மை, ஈவு இரக்கம் அற்ற செயல் மக்களையெல்லாம் ஒரு பெரிய புதிய நிலைக்கு இழுத்துச் சென்றது!

16ம் லூயி ஓரளவிற்குப் புத்திசாலி எனலாம்! தனது காலத்தில் ஆட்சியில் வெடிப்பு ஏற்படப் போகிறது என்பதை ஒருவாறு அறிந்து சில சீர்திருத்தங்களைச் செய்து ஏமாற்ற எண்ணினன்! ஆனல் அரசி அதற்கும் விடவில்லை! அவனுடைய அலுவலில் தலையிட்டாள்! அரசியலில் தலையிட்டாள்! தனக்குவேண்டியவருக்கும், தனது உறவினர்களுக்கும் உயர்ந்த பதவிகளை அளித்தாள். மந்திரிகளின் வேலைகளில் தலையிட்டு அவர்கள் விரும்புவதைச் செய்யாது தடுத்தாள்! அரசன் வாளா கிடந்தான்! மந்திரிகள் செய்வதறியாது இருந்தனர்!

எரிமலை வெடிக்கப்போவதற்குண்டான அறிகுறிகள் தோன்றி வருவதை அறியாது குரங்காட்டம் ஆடினள்! புரட்சித் தீ பரவிக் கொண்டிருந்தது! அவள் புன்னகை வராளி பாடிக்கொண்டலைந்தாள்!

முடிவில் புரட்சி எழுந்தது! புது யுகம் பூக்கலாயிற்று! ஏழைகள் எரிமலையாயினர்! 'ஓடப்பராக' இருந்தவர்கள் ஒப்பப்பராகத் தலைப்படலாயினர்! அவர்களின் கோபாவேசத்திற்கு 'பாஸ்டிலி' சிறை இடிந்து தகர்ந்தது! ஆணவச் சின்னங்கள் அழிந்தொழிந்தன! தங்களை வாட்டிய ஆதிக்கபுரியினரை, அநியாயக்காரர்களை அழிக்கும் வண்ணம் அவர்களைப் பிடித்துச் சிறையிலடைத்தனர்! அவர்களுள் இவளும் ஒருத்தி! மமதையில் நின்ற 'மேரி'யின் கடைசி வாழ்வு இரங்கத்தக்கது.

பலி வாங்கும் எண்ணத்தோடு "மக்கள் நீதி மன்றத்திற்கு" கைதியாகச் சிறையிலிருந்து அழைத்து வரப்பட்டாள். அப்போது இரவு மணி நான்கு! நீதிபதிகளும், குற்றவாளிகளும் பொதுமக்களும அவ்வளவு நேரமாகியும உஷாராகவே இருந்தனர்! சோர்வு என்பதே இல்லை!

நீதிபதிகள் அவள் குற்றவாளிதான் என்பதற்குண்டான சாட்சியங்களைச் சேகரித்துக்கொண்டிருந்தனர். அவளோ கைதிக்கூண்டில்

நின்றுகொண்டிருந்தாள்! நீதிபதிகள் ஏதேதோ பேசிக்கொண்டனர்! கடைசியில் அவள் கொலைக்களத்திற்குக் கொண்டுபோகப்பட வேண்டியவள்தான் எனக் கூறினர்!

"நீ ஏதாவது சொல்லப்போகிருயா?" எனக் கேட்டார் நீதிபதி! அவள் என்ன பதில் சொல்வாள்! "கார்லைல்" குறிப்பிட்டுள்ளபடி எல்லாமே தலைகீழ் மாற்றமாக இருக்கும் போது அவள் என்ன பேச முடியும்! இராணுவ வீரர்கள் அவளைச் சிறைக்குள இழுத்துக் கொண்டுபோய்ப் பூட்டினார்கள்! கல் பதித்தபடி வழியே இறங்கிக் கல் தரையில்போய் உட்கார்ந்தாள்! பளிங்கு வீட்டு வாழ்வு பாருங்கல் வாழ்வாயிற்று! பளபளக்கும் ஆடை இழந்து கருப்பு ஆடை அணிந்திருந்தாள்! இவைகளை எல்லாம் அவள் எண்ணிப் பார்த்திருக்க வேண்டும். ஏனெனில் கன்னத்தில் கை லவத்தவாறு அழுது கொண்டிருந்தாள்!

சிறுமி ஒருத்தி உள்ளே வந்தாள். அவள் புரட்சி வீரர்களால் உள்ளே அனுமதிக்கப்பட்டிருந்தாள்! தனது சூப்பை' உண்ணுது அழுதுகொண்டு இருந்த இராணியைச்சாப்பிடும்படிவேண்டினுள்! "முப்பது மணி நேரமாகச் சாப்பிடாது இருக்கிறீர்களே..." என அனுதாபபட்டாள் சிறுமி! இவளாவது நம் மீது பாசங்காட்டுகிருளே என எண்ணி ஒரு கவளம் சாப்பிட்டாள்! உடனே இது "வெட்டுப்படப்போகும் ஆட்டிற்கு அளிக்கப்படும் உணவு போன்றதல்லவா" எனும் நினைப்பு வரவே உணவை, உட்கொள்ளாமல் விம்மி அழுதாள்! தேற்றுவார் இல்லை!

விளக்கு அலையும் ஒலிகேட்டது. வந்தவர்கள் புரட்சி வீரர்கள்! அவளை 'இல்லட்டி'னுக்கு அழைத்துப்போக வந்திருந்தனர். அதற்குண்டான வேறு ஆடையை அணிந்துகொள்ளுமாறு வேண்டினர். மாற்று ஆடை தரிக்க அப்பால் போகும்படி கேட்டுக்கொண்டாள் இராணி! 'முடியாது' என்றனர் வீரர்கள்! அவளின் அதிகாரம் அல்ல வேண்டுகோள்கூட நிராகரிக்கப் பட்டுவிட்டது! சிறுமிதான் திரையாகிக்கொண்டாள். கொலைக்கள ஆடை உடுத்தியானதும் கைகளில் விலங்குகளை மாட்டினர். அவன் அவள் கைகளைப் பிடித்த போது திமிறினுள்! என்றாலும் எங்கு போக்கிடம்? விலங்கு மாட்டி வெளியே இழுத்துக்கொண்டு வந்தனர். வெளியே நின்ற மக்கள் ஆரவாரத்தின் குரல் கேட்டது. அவளை ஒரு வண்டியில் ஏற்றினர். அக்கால வழக்கப்படி ஒரு பாதிரியையும் பக்கத்தில் இருக்க வைத்தனர். அப்போது விடிந்திருந்தது!

வண்டி புறப்பட்டதுதான் தாமதம் மக்கள் ஒரே கூச்சல் போட்டனர்! "ஆணவக்காரி ஒழிக! அடங்காப்பிடாரி ஒழிக! என ஆரவாரம் செய்தனர். வண்டி தகுந்த பாதுகாப்போடு வந்துகொண்டு இருந்தது!

அசைந்து, ஆடிக்கொண்டு வந்த வண்டி, அவளுக்கு தனது வாழ்வும் அசைந்து ஆடிக்கொண்டிருப்பதை எடுத்துக் காட்டுவது போல் இருந்தது. பெருஞ்சாலை வழியாகச் சென்ற வண்டி குறுஞ்சாலை வழி செல்லலாயிற்று! எங்கும் அரசியின் "கடைசிப் பயணத்தைக்" காணக் கூட்டமாக மக்கள் நின்றிருந்தனர்! 'வீழ்க' வீழ்க!' என்ற குரல்கள் அவள் காதுகளில் எதிரொலித்தவாறே இருந்தன. வண்டி 'சீன' நதி பாலத்தைக் கடந்துகொண்டிருந்தது. முட்டி மோதிக்கொண்டு வந்த வெள்ளம் மக்களின் எழுச்சியைக் காட்டுவதுபோல் இருந்தது.

பக்கத்தில் இருந்த பாதிரியிடம் அவள் பேசவே இல்லை! யார் இந்தப் பாதிரி? இவர்தான் முன்பு நல்லனவற்றிற்கும் கெட்டனவற்றிற்கும் அரசியால் அழைக்கப் பட்டு வணங்கப் பெற்றவர்! இன்று...?. மரணத்திற்கு நிம்மதி அளிக்கப்போகிருர்! எவ்வளவு மாற்றம்! பாவம்! இதை நினைத்துத் தான் பேசாது இருந்தாளோ என்னவோ?

குறிப்பிட்ட இடம் வந்ததும் இராணி-மேரி-ஆண்டிய்னெட்கீழே இறக்கப்பட்டாள். தன் முன்னால் பத்தாயிரக் கணக்கான மக்கள் கூடி நின்று வேடிக்கை பார்ப்பதைப் பார்த்தாள். ஆனால் ஒன்றும் பேசவில்லை! அவள் பிரேதக்களை தட்டிப்போய் இருந்தாள்!

கூடியிருந்த கும்பி கொதித்த கூட்டம் சீக்கிரம் பலிவாங்கு எனக் கூக்குரல் எழுப்பிற்று! கொலையாளி அவளை உயர்ந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ள 'இல்லட்டினுக்கு' நடத்தி வந்தான். புதிய வித உயிர் வாங்கும் கருவியைப் பார்த்தவாறே சொன்ன இடத்தில் போய் நின்றுள். நிமிர்ந்து பார்த்தாள்! ஆம்! அந்த இடம் அவள் தோட்டம். அவளது குழந்தைகள் விளையாடிய இடத்தில்தான் 'கொலைக்களம்' அமைக்கப்பட்டிருந்தது!

"உல்லாச இடத்தில் இன்று உயிர் வாங்கும் கோரமா?" இதை அவள் நினைப்பதற்குள் 'இல்லட்டின்' தன் வேலையைச் செய்தது! தலை ஒரு பக்கமும்—முண்டம் ஒரு பக்கமுமாக விழுந்தது! கூடியிருந்த கூட்டம மகிழ்ச்சியால் ஆரவாரித்தது!

ஆணவக்காரர்களுக்கு எச்சரிக்கை தரும் இச்சம்பவம் பிரான்சில் 1793-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ம் தேதி காலை நடந்ததாகும்.

கோபியில்!

ஜூலை 5, 6 தேதிகளில்

கோவை மாவட்ட

தி. மு. க. மாநாடு

ஓரங்க நாடகம்

தலைகாத்த தமிழ்!

—[கரந்தை கணேசன்]—

காட்சி 1.

இடம்:- அரச சபை

இருப்போர்:- புலவர் மோசிகீரனுர்

[புலவர் பெருஞ் சேரலிரும் பொறையைக் கண்டு பார்த்துப் பரிசில் பெறும் எண்ணத்துடன் அரச சபைக்குள் செல்கிருர். சபையில் ஒருவரும் இல்லாததைக் கண்டு திகைத்து......]

புல:- என்ன வியப்பு...! அரச சபை எங்கணும் அமைதி நிலவுகிறது. அரசனின் ஏவலாளர்களைக் கூடக் காணவில்லை. வேந்தன் எங்காவது வேற்றூர்சென்றிருப்பானே! அப்படி இருந்தால் அரண்மனை வாயில் காவலர்களே அதைக் கூறி இருப்பார்களே.

ஒருக்கால்......புலவன் நான் வருகிறேன் என்றவுடன்...... சேச்சே......பெருஞ்சேரலிரும் பொறை அப்படிப்பட்ட சிறு மதியாளனல்ல. கனவில் கூட இத்தகு கயமையை நினையான். 'புலவர்' என்றவுடனேயே வாயில் காவலர்கள் வரவேற்று வாழ்த்துரைத்து "அரசன் நும் போன்றவர்கட்கு அடையாத வாயிலையுடையான்" என்று கூறியல்லவா அனுப்பினர்.

இல்லாதன பொல்லாதன வற்றை எண்ணி நாம் ஏன் இடர்ப்படவேண்டும் எல்லாவற்றிற்கும் சற்றுப் பொறுத்தால் புரிகிறது.

உஸ்...உஸ்....உஸ்......(மேல் துண்டால் விசிறியபடி) என்ன வெமமை....என்ன வெம்மை.... வெய்யோன் நம்மை வாட்டி வதக்கிவிட்டனனே! சற்று அமர்வோம்.

[முரசுக் கட்டிலைப் பார்க்கிருர்]

ஆ.....கனக மணிக் கட்டில்... கவர்ச்சி தரும் பட்டு மெத்தை ...நமக்கென்றே போடப்பட்டது போல் இருக்கிறது. பசித்தவனுக்குப் பாலுணவு கிடைத்தது போலல்லவா கிடைத்திருக்கிறது, அலைந்து இளைத்த எனக்கு இக்கட்டில். இதில் சற்று அயர்வோம். அதற்குள் அரசனும் வந்துவிடக்கூடும்.

காட்சி 2

இடம்:- அரசசபை

இருப்போர்:- புலவர், அரண்மனைப் பணியாட்கள்.

[பணியாட்கள் முரசை நீராட்டிக் கொணர்ந்து முரசுக்கட்டிலில் அமர்த்த வருகின்றனர். முரசுக் கட்டிலில் வேற்ருள் ஒருவர் படுத்திருக்கக்கண்டு திகைக்கின்றனர்.]

பணி 1:- என்ன புதுமை...! முரசுக் கட்டிலில் யாரோ ஒரு புதியவன்.

பணி 2:- முரசுக் கட்டிலிலா, யார் அந்த நிர்மூடன்?

பணி 3:- அரசரே அமர மறுக்கும் முரசுக்கட்டிலில் அயர்ந்து தூங்க இவனுக்கு எவ்வளவு ஆணவம்?

பணி 1:- செருக்குமிக்க அவனை எழுப்புங்கள். அவன் சிரம் இனித் தப்பாது. வினைசகாலம் பிடித்துவிட்டது அவனுக்கு, இதோ வேந்தனிடம் செல்கிறேன்.

[மன்னனை நாடி ஓடுகிருன்.]

பணி 3:- (பணியாள் 2 எழுப்பச் செல்கிருன்) அதற்குள் மூன்ருமவன் எழுப்பாதே...... சற்று பொறு...... அரசரே இங்கு அயரச் செய்திருந்தால்.

பணி 2:- நல்ல ஆளடா நீ......! அரசராவது... அயரச் செய்யவாவது. முதலில் அமர விடுவாரா...?

பணி 3:- எதற்கும் மன்னவரே வந்து விடட்டுமே, நமக்கேன் இந்தத்தொல்லை...!

காட்சி 3

இடம்:- அரண்மனையில் ஓர்புறம்

இருப்போர்:- பெருஞ்சேரல், பணியாளன்.

[மன்னன் தமிழ் இலக்கிய எடு ஒன்றைக் கையில் கொண்டு அதைப்பார்த்தபடி இருக்கிருன்.]

[ஓடோடி வந்த பணியாள் வீழ்ந்து பணிந்து.]

பணி:- வேந்தே...! மன்னிக்கவும் ...நடவாதது நடந்துவிட்டது.

பெரு:- என்ன... என்ன...?

பணி:- ஆம் அரசே...! நடக்கக் கூடாதது நடந்துவிட்டது.

பெரு:- நடக்கக் கூடாததா......? நடந்ததா......? என்ன சொல்கிருய்...?

பணி:- முரசுக்கட்டிலில் யாரோ ஒரு மூடன் அயர்ந்து தூங்குகிருன். முரசத்தை நீராட்டச் சென்றிருந்த நேரத்தில் அங்கு வந்து அயர்ந்தனன் போலும்.

பெரு:- என்ன... (இடையில் உள்ள வாளை உருவியபடி)

முரசுக்கட்டிலில் ஒரு மூடனா...? அரசைப் பழித்தனனா...? அந்த ஆணவக்காரன் யார்...? அமர்ந்ததோடல்லாமல்...... அயர்ந்து வேறு உறங்குகின்றானா? அந்த நீசன் இன்னுமா நிலவுலகில் வாழ்கிறான்......? அவன் சிரம் இன்னுமா கொய்யப்படாமல் இருக்கிறது......? வீரம் விளையாடும் சேரர் குடியை இகழ்ந்த இழிகுலத்தோன் எங்கே? என் முரசைப் பழித்தால் என்ன...? முடியைப் பழித்தால் என்ன......? சிங்கத்தின் குகையிலே சிறு நரி வாலாட்டுவதா? சிறுமதியாளனுக்கு வெகுமதி தர வருகிறேன.

காட்சி 4

இடம்:- அரச சபை

இருப்போர்:- புலவர், மன்னன், பணியாட்கள்.

[மன்னவன் கோபக் கனல் கக்க ஓங்கிய வாளை வலக் கரத்தில் தாங்கியபடி முரசுக் கட்டிலை நோக்கிக் கர்ச்சனை செய்து சிங்கமென வருகிறான். புலவர் அயர்ந்து தூங்குகிறார். பணியாட்கள் என்ன நடக்குமோ, ஏது விளையுமோ, என அஞ்சி ஒதுங்கி நிற்கின்றனர்.

மன்னன்:- உறங்குகின்றனனா....? உறங்கட்டும். ஒரே உறக்கமாக உறங்கட்டும். கட்டிலைக் கறைப்படுத்திய அவனது சடலத்தைத் துண்டாடி இரத்த நீரால் புனிதப்படுத்துகிறேன்.

[கர்ச்சனைசெய்து வந்தவேந்தன், வாளை ஓங்கியபடி புலவரைப் பார்க்கிறான். துயில்பவர் புலவர் என அவன் உள் மனம் அறிவிக்கிறது. ஓங்கிய வாள் கையைவிட்டு நழுவுகிறது.

மன்:- (மனம் பேதலிக்க) சற்று நேரத்திற்குள் என்ன செய்ய இருந்தேன். முரசுக் கட்டிலில் யாரோ ஒருவன் என்றவுடன் அரசுக்கு அவமானம் என்று எண்ணினேனே தவிர, முரசுக் கட்டிலில் அயர்ந்து தூங்குமளவுக்குத் துணிவு பெற்றவர் யாராயிருக்கக்கூடும் என்று எண்ணிப் பார்க்கவில்லையே! என்னே சிறுமதி! இன்னேரம்... தண்டமிழ்ச் சோலையிலே வண்டென இசை பாடும் பாவேந்தரையல்லவா பாவி நான் பழி தீர்க்க இருந்தேன். தமிழ்மாதாவின் தவப்புதல்வனை அல்லவா தருக்கன் நான தண்டிக்க இருந்தேன. என் அன்னைக்கல்லவா அவதூறு விளைவிக்க இருந்தேன. தமிழையல்லவா கொல்ல இருந்தேன். தமிழ் கொண்டு வரும் புலவர்களைப் புரக்கக் கடைமைகொண்ட நான், ஐயோ...! புரியாதன புரிய இருந்தேனே!

[புலவர் புரண்டு படுக்கிறார். உடனே மன்னன் பணியாட்களை நோக்கி அமைதியாக]

விசிறி கொண்டு வருங்கள். புலவர் வியர்வை வெள்ளத்திலே மிதக்கிறார்.

]ஏவலாளர்கள் விசிறி கொண்டு வருகின்றனர். அவர்களே விசிற முற்படுகின்றனர். மன்னர் தானே பெற்று விசிறுகிறார். விசிறிக்கொண்டே மெதுவாக]

அன்பு தவழும முகம், அறிவு கொஞ்சும இமைகள, புன்னகை உதிர்க்கும உதடுகள், செந்தண்மை பூண்டொழுகும் சிவந்த மேனி, மாசுமருவற்ற உள்ளம், பார்த்தாலே தெரிகிறதே பாவலர் என்று. எனக்குத் தமிழ் தந்து தனக்குத் தனம் கேட்க வந்திருந்த தமிழாசானின் தலை கொய்ய இருந்தேன். தமிழ் தடுத்தது என்னை. அவர் தலை காத்தனள் அன்னை.

[இதற்குள் புலவர் விழித்தெழுகிறார். நிலைமை புரியாமல் விழிக்கிறார்.]

மன்:- புலவர் பெரும! யாதும் அஞ்சுதல் வேண்டாம், தாங்கள் மீண்டும அயரலாம்.

புல:- வேந்தே......! தாங்களா விசிறி கைக்கொண்டு இந்த எளியேனுக்கு விசிறுவது. மன்னிக்க வேண்டும் மன்னவா ....நான் மா பெரும் தவறு செய்துவிட்டேன்.

மன்:- பாவேந்தரே......! நான் தங்கட்கு விசிறவில்லை. தமிழுக்கு விசிறினேன். இதில் ஏதும தவறில்லையே. மேலும் மனனிக்கப்படவேண்டியவன் நான்தான்.

புல:- இல்லை மன்னவா......இல்லை ......வந்த களைப்புக் காரணமாக வீர முரசம் வீற்றிருக்கும் கட்டில் என்று கூட அறியாது அயர்ந்துவிட்டேன். ஆனல்... அரசே...நான் அறியாமல் செய்தேன். அதைப் பொறுக்க வேண்டும்.

மன்:- பொறுக்க வேண்டியவன் நானல்ல புலவரே...தாங்கள் தான...முரசுக் கட்டிலில் யாரோ புதியவன் உறங்குகிறான் என்று கேட்டவுடன; என உள்ளம் குமுறியது. காற்றெனக் கடுகி வந்தேன. அந்தக் கயவனைக் கண்டதுண்டமாக்கிவிட. ஆனல்...முரசுக் கட்டிலிலே... தமிழ் தூங்கிற்று...என் தாய் தூங்கினாள...தகாதது செய்ய இருந்தேன. என தன்மையைப் பொறுத்தருள வேண்டியது தாங்கள்தான.

புல:- காவலா......என்னே....தமிழின தனிப பெருமை...தமிழ் பெற்றோர் யாவருமே தரித்திரத்தைப பெற்றாரெனும் இலக்குக்கோர் இலக்கியமாய் இங்கு வந்தேன். இங்கோ......தமிழ் பெற்றோர் யாவருமே உயிர் பெற்றாரெனும உயர் நிலையைப் பெறறேன. எனனே "தலை காத்த தமிழின்" தகைமை. வாழிய தமிழ்! வளர்க நின கொற்றம்!

★

அங்கும் !

சென்னை ராஜ்யத்துக்கு தமிழ்நாடு என்று பெயரிடுக.

தமிழ்நாட்டுத் தலைவர்கள், கவிஞர்கள், கோயில்களின் படங்களைக் கொண்ட தபால் தலைகளை வெளியிடுக.

நாகர் கோவிலில், முதியவர் வெ. சாமிநாத சர்மா அவர்கள் தலைமையில் கூடிய எழுத்தாளர்கள் மாநாட்டில் மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

கூடியோர், ஒருசார்புடையோரேனும், அங்கும் இவ்வெழுச்சியுள்ளதை யெண்ணி அகமகிழ்கிறோம். பாராட்டுகிறோம்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

காரணத்தால் வந்திருக்கிறார்கள். அவர்களைத் துறைமுகத்தில் கொண்டுபோய் நிறுத்தி — பழைய தொழிலாளர்களை மிரட்டவும், வேலை நிறுத்தத்தை முறியடிக்கவும் சதி செய்திருக்கிறார்கள். அப்படித் தொழிலாளர்களைக் கொண்டுபோய் துறைமுகத்தில் சேர்க்க முயற்சிக்கும்போதுதான், கூடிநின்ற 5000 தொழிலாளர்களும் ஆத்திரமடைந்தார்களே ஒழிய, வேலை நிறுத்தம என்றதும் வேகமாகக் கிளம்பி, சர்க்கார்கட்டிடம் எது, மந்திரிகள் வீடெது, மாளிகைவாசிகள் யாரார் என்று தேடிக்கொண்டு 'கலவரம்' செய்யக் கிளம்பவில்லை. தாம் வேலை செய்கிற இடத்தை, 'கருங்காலி'களைக்கொண்டு நிரப்ப நிர்வாகம் சதி செய்கிறது, அதற்கு அரசும் துணை போகிறது என்றதும், யாருக்குத்தான் ஆத்திரம் வராமலிருக்கும்? அப்படி ஆத்திரம் அடைந்தும், என்ன செய்தார்கள் துறைமுகத் தொழிலாளர்கள்? மறியல்தான செய்தார்களே ஒழிய, துறைமுகத்துக்குள தாவிப்பாய்ந்து, கப்பலுக்குள் எல்லாம புகுந்து, உள்ளேயிருக்கும சரக்கையெல்லாம் கொண்டுபோக முயற்சிக்கவில்லை, மறியல் செய்தார்கள். போகாதே — கருங்காலிகளைக் கொண்டுபோகாதே — எமது வயிற்றிலடிக்கச் சதி செய்யாதே—என்று, அமைதியான முறையில், பஸ்களும் லாரிகளும உள்ளே புகாமல், ..டுத்துக்கொண்டும், கரங்களைக் குவித்தும கெஞ்சியிருக்கிறார்கள்' பலர், இததாபபுக்கு இரையாகிய சர்க்கார் கண்ணீர் வாயுவைவிட்டு கலைக்க முயற்சித்திருக்கிறது—கண்ணீர்ப்புகை கண்களை குளமாக்கினும சரி. இந்த அக்கிரமத்தைச் சகியோம் என்று இருந்த இடத்தைவிட்டு நகராமல் இருந்திருக்கிறார்கள்—இந்த உறுதியை எண்ணிப்பார்த்து பிரச்னைக்குப் பரிகாரம செய்யவேண்டியவர்களோ, தடியடியைத் துவக்கியிருக்கிறார்கள்— அதனபிறகு, ஆத்திரமடைந்தோர் கையில கிடத்ததை எறிந்திடும் நிலைக்குச் சென்றிருக்ககூடும— அதைக் காரணமாக வைத்து, ஓட ஓடத் துரத்தி, சந்து பொந்துக்குள் எலலாம் சென்று, மண்டை சிதறவும், இரத்த வெள்ளம நிறையவுமாக, சுட்டுபபொசுக்கியிருக்கிறார்கள்! எட்டுபேர் செத்தனர்—இருபதுக்கு மேல சாகக் கிடக்கின்றனர் — காலையும கையையும இழந்தோர் ஏராளம—என்று கணக்குகள் கூறப்படுகின்றன!

நேருவுக்கும் காமராசருக்கும் நாட்டு மண்ணில் எவ்வளவு உரிமைகள் உள்ளனவோ, அந்தளவுக்கு உரிமைகள் கொண்டவர்கள்தாம், உயிரையிழந்த ஒவ்வொரு தொழிலாளியும். அதை எண்ணிப் பார்த்திடாமல், அரை ரூபாய்க்கும் ஒரு ரூபாய்க்கும் உரிமைக்குரலெழுப்பும பாட்டாளிகளினமீது அடக்குமுறையை ஏவி விடுவது, அக்கிரமமாகும். தொழிலாளர்களின பிரச்னைகளை, எப்போதும் அன்போடும் பரிவோடும் அணுகவேண்டும்! காங்கிரஸ் அரசு, அதனை மறந்து, துப்பாக்கியுடனேயே அணுக முயற்சிப்பது, வெட்கக்கேடு மட்டுமல்ல வேதனையும் நிரம்பியது!!

உரிமைக்குரல் கிளம்பும்போதெல்லாம் துப்பாக்கிகள் வெடிப்பதும், அதன் பலனாக 'இந்நாட்டு மன்னர்களில்' பலர் மண்ணில் மரம்போல் சாய்வதும், கொடுமை. மிகமிகக் கொடுமையெனும் கண்டனம் நீண்ட நாளாகவேயிருந்து வருகிறது. இதுபற்றி டில்லிபார்லிமெண்டில், தீவிரமான கண்டனம கிளப்பியபோது, உள்நாட்டமைச்சர் பந்த் சொன்னார், "ஆட்களைக் கொல்வதற்காகச் சுடுவது, இருக்காது. காலுக்குக் கீழ்தான், அப்படியேற்பட்டால், சுடும்படி செய்வோம்," என்று. ஆனல், இதோ, சென்னையில் — ஜாம்ஷெட்பூரில் — வழக்கம்போல் துப்பாக்கி, தலைகளைத் தூளாக்கியிருக்கிறது, சந்தை மீன்களாய் மனிதர்களை ஆக்கியிருக்கிறது!!

கண்ணீர் வடிக்கிறோம்—தமிழர்தம் கதி இதுவா எனக் கதறுகிறோம். பிறந்த மண்ணிலும் குண்டுதான் பரிசு! புகுந்த இடமாம் இலங்கைபோன்ற இடங்களிலும் குண்டுதான பரிசு- அபபடிக் குண்டடிபட்டதை எண்ணி ஒரு சொல்கூட உதிர்க்காத அரசு, இங்கும், அதையே பரிசாக வழங்குகிறது எனபதை எண்ணும்போது, தாய்நாடே, தமிழ் மண்ணே, உன் கதி இதுதானா, உன் மடியில் உழைப்பாளர்களாய்ப் பிறந்ததற்குப் பலன் இதுதானா! இதுதானா! என்று, வேதனையுடன கேட்கிறோம.

விழிகள், குளமாகின்றன.
கண்ணீர், பெருகுகிறது.
ஐயோ! எட்டுப்பேர்—
எட்டு குடும்பங்கள்—
நினைக்கவே, முடியவில்லை!
நெஞ்சம் குமுறுகிறோம்—
இதயம் துடிக்கிறோம்

——[★]——

17ம் 17,000மும் !

குடந்தைப் பெரியவர் கே. கே. நீலமேகம் துவக்கிவைக்க, மதுரைத் தோழர் முத்து தலைமையில், சிந்தையெல்லாம் களிக்கச் சிறப்புடன் நடைபெற்ற தென்னாற்காடு மாவட்ட மாநாட்டில், மாநாட்டுப் பொருளாளர் செல்வராசு எம். எல். ஏ. அறிவித்தார், "கடந்த 2வது மாநாட்டின் முடிவில் ரூபாய் 17 தான் மிச்சம கிடைத்தது. ஆனல், இந்த மாநாட்டில் ரூபாய் 17000ம மீதம் என்பதைப் பெருமையுடன் தெரிவிக்கிறேன்," என்று.

17 எங்கே! 17000 எங்கே!!—என்று எண்ணிய போது, இடையில் கழிந்த இந்த இரண்டு மூன்றாண்டுகளில், கழகம் பெற்றுள்ள வளர்ச்சியே, கண்முன் தோன்றிற்று. விருத்தாசலத்தில், மாநாட்டுக்கெனப் போடப்பட்டிருந்த 'ஆறுமுகம் பந்தலும்', அங்கே அழகுற அமைந்திருந்த 'மஜீத் அரங்கும்', முகப்பும், விளக்கு அமைப்புகளும், அப்பப்ப, சாதாரணமானதென எவரும் கூறார். மாநாட்டு நிர்வாகிகள் எனப் பணிபுரிந்த வரவேற்புக்குழுத் தலைவர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ. செயலாளர்கள் சி. முனுசாமி, ஜி. சொக்கலிங்கம், நடராசன் எம். எல். ஏ. ஆனந்தன், எம். எல். ஏ. தொண்டர் படைத்தலைவர்கள் தொ. பிச்சமுத்து, பா. குப்புசாமி மற்றும், ஆர்வமும் வீரமும் மிக்க மாவட்டத் தோழர்கள் அனைவரது முகத்திலும், மாநாட்டுக்கெனப் புணியாற்றியதால் தோன்றிய களைப்போடு

களிப்பும் கூனம் புரிந்தது. அவர்களிலே பலரை, நாம் நடந்த மாநாட்டினபோது, கண்டோமில்லை! இப்போதோ, நான்கு எம். எல். ஏக்கள் இருக்கிறார்கள், ஏராளமான தாய்மார்களும், பெரியவர்களும், வீரர்களும் இருக்கிறார்கள். ஊரே விழாக்கோலம் பூண்டிருந்தது! அருகிருந்த மணிமுத்தா நதியில் வெள்ளமில்லையே தவிர, மக்கள் வெள்ளம் மாநாட்டுப் பந்தலில் இருந்தது!! இல்லையெனில் 17,000 மிச்சம் என முடியுமா செல்வராசால்?

தென்னார்காடு மாநாடு மட்டுமல்ல, தஞ்சை, சேலம், மதுரை, வட ஆற்காடு, இராமநாதபுரம், நாஞ்சில் மாவட்டங்களில் நடைபெற்ற மாநாடுகளிலும், புதுவெள்ளத்தைக் கண்டோம். மிட்டாவும் மிராசும், அதட்டும் குரல்படைத்தோரும், உருட்டும் விழிகொண்டோரும், காற்றுக் கோழிகளும், சோறே சதமெனக் கருதிடும் தோல் பொதிகளும், அல்ல கூடியோர்; உழைக்கும் உத்தமர்கள், இதயம் ஏந்திய கொள்கைக்காக இன்னுயிரையும் தரக்கூடிய வாலிபர்கள் "என்னத்தான்! நெடுஞ்செழியன் கூட்டத்துக்குப் போகவேண்டாமா?" என்று கணவர்களைக் கழகக்குரல் கேட்க இட்டு வரும குடும்ப விளக்குகள், மாணவமணிகள், மறக்கவொணாத் தொழிலாளர்கள், இப்படி யாரார் நாட்டின் நரம்புகளோ, அவர்கள் தான் வருகின்றனர். ஒரு இயக்கம் இப்படியெல்லாம் ஊடுருவும்போதுதான், அது உயிர் பெறுகிறது! அப்படிபெற்ற உயிரால்தான், காங்கிரஸ் கட்சியால் விடுதலை முரசத்தை வேகமாகத் தட்ட முடிந்தது; இன்று உலகெங்கும நடைபெறும் சுதந்திரப்போரில், பல கட்சிகள், தடிகள் தாக்கினாலும், துப்பாக்கிகள் துளைத்தாலும், சோர்வுறாமல் தாங்கிடும் சக்தி, அதனால்தான் முடிகிறது. அந்த உயிர்ச்சக்தி, நமக்குக் கிடைத்துவிட்டது! தி. மு. க. திராவிடத்தின தேசீய இயக்கமாக உயிர்பெற்றுவிட்டது!!

வளம் குறைந்த மாவட்டம் எமது, என்று சொன்னார் பொருளாளர். இருந்தும் இவ்வளவு பேர் வந்து, இததனை ரூபாய்களையும் மீதம் பிடிக்க முடிந்தது என்று தெரிவித்துக்கொண்டார். 20,000 கொடுத்த தஞ்சையைத் தாண்ட முடியவில்லையே, என்கிற வருத்தம் அவருக்கும் நண்பர் கோவிந்தசாமிக்கும் இருப்பதுபோலப்பட்டது. இந்த ஆர்வம், வேறெங்கு காண முடியும்? இதுவன்றோ, நமது கழகத்துக்கு, எரு—நீர்—யாவும்!!

"வளமா இல்லை? உலகத்திலேயே இல்லாத கருப்புத் தங்கம உங்கள் மாவட்டத்திலேதானே இருக்கிறது" என்றார் சி. என். ஏ. பேசும்போது. இருக்கிறது, ஆனால் ...? என்கிற, ஏக்கக் குரலையும் எளப்பினார். தென்னார்காட்டில் மட்டுமா, தென்னாட்டிலுள்ள ஒவ்வொரு இடமாகப் பார்த்திடினும், ஏதாவது ஒரு வளம் இருக்கத்தான் இருக்கிறது. ஆனால், அவையாவும், கரமி கையில் கிடைத்த பணம்போல, மூடன் வசம் கிடைத்த திருக்குறள்போல, பூமிக்கடியிலும், வசதிசெய்து தரப்படாத நிலையிலுமன்றோ உள்ளது.

ஏனிது என்று கேட்கிறோம்! உண்மைகளைச் சுட்டிக்காட்டிக் கேட்கிறோம் — மக்களின் உள்ளமும் 'உண்மைதானே அவர்கள் சொல்வது?', என்று எண்ண ஆரம்பிக்கிறது. நமது குரல் கேட்கும் ஒவ்வொருவரும், கழக உறுப்பினர்களாகிறார்கள்; கழகம் இல்லாத இடங்களிலெல்லாம் துவக்குகிறார்கள். இதைக்கண்டு, காமராஜரும் அவர் தம் குழாமும், கன்னாபின்னாவெனப் பேசுவதும், கனியைக் காஞ்சிரங்காய் என்று ஏசுவதும், பலனதரும்? நிலவை நெருப்பென்றால், ஒப்புவரோ, மக்கள்!!

செல்லுமிடந்தோறும் அமைச்சர்களும் சரி, அவர் தம் கட்சியின் பிரங்கிகளும் சரி, தமது கொள்கை திட்டங்களை விளக்குவதற்குப் பதில் தி. மு. க.வைத் தாக்குவது என்கிற கட்டத்துக்கு வந்திருக்கிறார்கள். கடந்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு, இது அதிகமாகி இருக்கிறது. தாக்கிப் பேசியும் பயன் கிட்டாவிடில், 'தடி'யை எடுத்துக்கொள்ளலாமா என்று பரீட்சை பார்த்திடும் ஆசையும் உள்ளதென அவர் தம் நடவடிக்கை சொல்லுகிறது. தவிக்கிறான் தமிழ் மகன், இலங்கையில்! அவர்தம் செந்நீரைத் துடைக்கச் சிறுவழியும் காண இயலாத காமராசரோ, கர்ச்சிக்கிறார் — நமமை அடக்கப் பல வழிகளையும் பரிட்சிக்க எண்ணுகிறார்!! ஒரு தேசிய இயக்கம், வழக்காலும் வம்பாலும், அடக்கு முறைகளாலும் அழிந்துவிட முடியாது. அது சாத்தியமாயின், வெள்ளையன் காலத்தில்காங்கிரஸ், தூள் தூளாகப போயிருக்கும். இதனை அறிய வேண்டியவர்களே, இனறு நம்மீது, பற்பல வழக்குகளைத் தொடர்ந்தும், பழி தீர்க்கும் வழிவகைகளைக் காணவும் முயற்சிக்கின்றனர். யாருக்கும் தீங்கு நினையாத ஏ. கோவிந்தசாமி மீதே, கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்பு, கொள்ளைச் சதி வழக்கு போட்டார்களே? நீதிதானே வென்றது! நீதி நிச்சயம் வெல்லும், நெறி தவறுவோருக்குப் பாடமும் புகட்டும் என்கிற நம்பிக்கை நமக்குண்டு. அந்த நம்பிக்கையை வலியுறுத்தும் மூல முழக்கம்தான், கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு, என்பது.

தென்னார்காடு, அரசியல் புயலால் அவதிப்பட்ட கட்டம் மாறி வருகிறது என்பதை நம்பும் மலர்ச்சி தென்படுகிறது. அங்கு வாழும் பகை, ஆட்சி நடத்தியோர் சாதியின் பெயராலும், பொருளாதாரத் துறையிலும் அடைந்திருக்கும் பிற்போக்கினைப் போக்க முளைத்தெழுந்த சேவலை, மாடு மிதித்துக் கொன்றபோது, துடித்தவர்கள் நாம். அரசியல் நெறி சாகிறதே, சுயாட்சிக் கொடியைத் தூக்க வேண்டிய கரங்கள் அடிமைக் கரங்களைக் கோர்த்துக்கொள்ளுகின்றனவே என்று கலங்கியதுண்டு, நாம். அந்தக் கலக்கமும் சோகமும் அகலுமளவில், தென்னார்காடு புத்தெழுச்சி கொண்டிருக்கிறது. அதனை வலிவும் பொலிவுமுள்ளதாக்கும் செல்வங்கள், மாநாட்டிலே தென்பட்டார்கள். இந்த இன்பம் நீடிக்கவும் நிலைக்கவும், தென்னார்காட்டினர் பணிபுரிய வேண்டும், தாயக விடுதலைக்குத் தமது மாவட்டத்தையும் தயார் செய்தல் வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறோம். மாநாட்டை நடத்தியவர்களுக்கு நமது, மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஆங்கிலமும்-இந்தியும்

—[மான்]—

இந்திய துணைக்கண்டம் விடுதலை பெற்றதற்குப் பிறகு; அது அத்தகைய அரசியல் சுதந்திரம் பெற்றதின் விளைவாக ஏற்பட்டிருக்கிற கொள்கைக் குழப்பங்களில் முக்கியமானது இந்தப் பொது மொழிப் பிரச்னை.

இந்திய துணைக்கண்டம் முழுமைக்கும் பொதுமொழியாக இருக்கவேண்டியது ஆங்கிலமா அல்லது இந்'தியா ;என்பதில் நாளும் நாளும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாத எந்த அரசியல் தலைவரும் இல்லை. அரசியல்—அதைவிட்டே விலகி இருந்தவர்கள்; நாட்டு விவகாரமா நமக்கென்ன என்று நினைத்தவர்கள் எல்லாம் இந்தப் பிரச்சினையில் இன்று இரண்டறக் கலந்திருக்கின்றனர். அந்த அளவுக்கு டில்லி இந்தப் பிரச்சினையில் தன் வெறித்தனத்தை விளையாட விட்டிருக்கிறது.

ஆங்கிலம் இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்கக்கூடாது; இந்திதான் இந்த நாட்டின பொதுமொழியாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் எனபதற்காக இந்தி ஆதரவாளர்கள் சொல்லுகிற காரணங்கள்;

ஒன்று இந்தியை இந்திய அரசியல் சட்டம ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பது. ஆங்கிலம வெள்ளைக்காரர் மொழி — இந்த நாட்டுக்கு அந்நிய மொழி என்பது இன்னொன்று.

தென்னிந்தியர்களை--குறிப்பாகத் தமிழர்களைப் பொறுத்தவரை இந்த இரண்டு காரணங்களுமே ஏற்றுக்கொள்ள முடியாதவையாகும. இந்தியர்களுக்கு ஆங்கிலம் எப்படி அந்நிய மொழியோ, அதுபோலத்தான் தமிழர்களுக்கு--திராவிடர்களுக்கு இந்தி அந்நிய மொழி! இனனும சொல்லப்போனால் தமிழர்களுக்காவது ஆங்கிலம் 150-வருடமாக பழக்கமுள்ள மொழி — ஆனால் இந்தி வடநாட்டுக்காரர்களுக்கே 150-வருடங்களாகத்தான் பழக்கத்தில் உள்ளமொழி. எனவே தமிழர்கள் எப்படி இந்தியைப் பொதுமொழியாக ஏற்றுக் கொள்ள முடியும்?

19-ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த முஸ்லீம்களுக்கும், அவர்கள் பேசிய அரபு—பாரசீக மொழிக்கும் எதிராக, இந்துக்கள் தங்கள் சுயநலத்துக்காக உண்டாக்கிக் கொண்ட ஒரு செயற்கை மொழிதான் இந்தி என்பதை—போதிய இலக்கிய வளமோ—சொல் வளமோ இல்லாத ஒரு கொச்சை மொழிதான இந்தி என்பதை—மறுப்பதற்கு வரலாறு இல்லை. எனாலும் இந்தியை இந்த நாட்டின பொது மொழியாக்க, இந்த நாட்டின் ஆட்சிப பொறுபபேற்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிற காங்கிரசார் தீவிரயாக முயன்று வருகின்றனர். இன்னும் இந்தத் துணைக்கண்டத்தின மொத்த ஜனத்தொகையில் இந்துஸ்தானி பஞ்சாபி, உருது, இந்தி ஆகிய நான்குமொழி பேசுவோர் தொகை 25—43 சதவிகிதமும்: அஸ்ஸாம், பெங்காலி, குஜராத்தி, ஒரியா முதலிய மொழி பேசுவோர் 24-24 சதவிகிதமும; மற்ற மொழி பேசுவோர் 9-சதவிகிதமுமாக இருக்கிற புள்ளி விவரங்களைப் பார்க்கிறபோது இந்திக்கிருப்பதைப் போலவே இந்தியாவின் பொது மொழியாகும உரிமை மற்ற இந்திய மொழிகள் 14-க்கும் இருக்கிறது என்பதை யார் மறுக்க முடியும்?

இந்தியை அரசியல் சட்டம் ஏற்றுக்கொண்டிருக்கிறது எனபதும தமிழர்களைக் கட்டுப்படுத்த முடியாத வாதம் ஆகும். அரசியல் சட்டம் பெரும்பான்மையான மக்களின் பிரதிநிதித்துவம் பெற்றவர்களால் இயற்றப்பட்டதுமல்ல; அல்லது அது நிறைவேற்றப்பட்டவுடன் இந்நாட்டு மக்களின் ஒப்புதல் பெற்றதுமில்லை. அப்படியிருக்க யாரோ சிலர் கூடி உண்டாக்கிக்கொண்ட ஒரு சட்டத்தைச் சுட்டிக் காட்டி இந்த மண்ணக மக்களைக் கட்டியாள நினைப்பதில் என்ன நியாயம் இருக்க முடியும்?

150-வருடகால வெள்ளையன் ஆட்சியிலே பெரும்பான்மையான மக்கள் நடையுடை பாவனைகளில் வெள்ளைக்காரர்களுடன் ஒத்துப் போகுமளவுக்கு மாறுதல் பெற்றுள்ளனர். ஆனால் ஒரே குடும்பம் என்று பேசப்படுகிற எந்த வடநாட்டாரோடாவது தமிழர்கள் ஒத்துப்போக முடிகிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்?

150-வருடகாலம் ஆங்கிலம் இங்கே அரசோச்சியுங்கூட, ஆங்கிலந் தெரிந்தவர்கள் என்று நூற்றில் ஒருவரைத்தான் குறிப்பிட முடிகிறதென்றால், ஆங்கிலத்தில் சிறந்த பேச்சாளர்கள் என்று ஒரு சிலரைத்தான் சொல்ல முடிகிறது என்றால்........ இந்தியைப் பொது மொழியாக ஏற்றுக் கொண்டு, வேண்டுமென்பவர்கள் ஆங்கிலத்தை இஷ்டபாடமாக பயிலட்டுமே என்று விட்டுவிட்டால் நாம் நம்முடைய முன்னேற்றத்தில் எவ்வளவு பின்தங்கிப் போவோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்? அந்நிய விவகாரத்துக்கொரு' மொழியும் — சர்வதேச விவகாரத்துக்கொரு மொழியுமாக அவதிப்படுவதைவிட ஆங்கிலமே பொது மொழியாக இருப்பின் உலக அரங்கில் நாம் ஒளிவீசித் திகழ முடியாதா?

மொழி என்பது என்ன ஒரு கருவிதான். மேதை ஜெஸ்பர்ஸன்

கூறுவதுபோல "மொழி வளர்ச்சி என்பது முடிவான ஒன்றல்ல. முன் வளர்ச்சியின் முடிவாகவும், பின் வளர்ச்சிக்கு வித்தாகவும் மொழி இருக்கவேண்டும்" இந்த வகையில் ஆங்கிலம் அந்நிய மொழி என்று குரோதம் பாராட்டி அதை இழக்க விரும்புவது நம்மை நாமே ஏமாற்றிகொள்வதாகும். ஆங்கில நாகரிகத்தின வியக்கத்தக்க சாதனைகளை அனுறுடம் அனுபவித்துக்கொண்டே மொழி விவகாரம் ஒன்றில் மட்டும் அதை அந்நிய மொழி என்று வெறுத்தொதுக்குவது கேலிக்குரியதாகும்.

உலக சரித்திரத்தில் மிக மிகத் தொன்மையானவர்கள் தமிழர்கள் தான் — திராவிடப் பெருங்குடி மக்கள்தான் என்பதில் சந்தேகம் இல்லை என்றாலும்..., வாழையடி வாழையாக வளர்ந்து வந்திருக்கிற புகழ்பெற்ற பண்பாட்டின் வாரிசுகள் நாம்தான் என்பதை சரித்திரம் ஒப்புக்கொண்டிருக்கிறது என்றாலும்..., கலைக்கோயிலில் — இலக்கியத்தின் முன்னே உலக நாடுகள் அனைத்தும் கைமெடுத்துக் கும்பிடுகிற ஒப்பற்ற திருக்குறளைச் செய்துதந்த முதாதையர்கள் தமிழர்கள்தான என்பதை மறுப்பதற்கில்லை என்றாலும்...;

இன்று தமிழ் உள்ளிட்ட சகல இந்திய மொழிகளும், சர்வதேச விவகாரங்களுக்கல்ல, அனைத்திந்திய விவகாரங்களுக்குக்கூடலாயக்கற்றதாக, பின்தங்கிய நிலையிலே தான் இருக்கின்றன என்பதை..., பௌதிகம ரசாயனம், பூதத்துவம் முதலிய எல்லாத் துறைகளிலும் சகல இந்திய மொழிகளும முன்னேற முடியாமல் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கோட்டுக்குளளேயேமுடங்கிக் கிடக்கினறன என்பதை நாம வெட்கமின்றி ஒப்புக்கொண்டாக வேண்டும்.

உலக நாடுகள் வியக்கத்தக்க சிந்தனைச் சிறபிகளை அறிஞர்களை, மேதைகளை நாம பெற்றிருந்துங் கூட, அவர்கள் புகழ் விந்தியத்துக்கு வடக்கே எட்டமுடியாதபடி குடத்திலிட்ட விளக்காயப் போன தற்குக்காரணம நமமுடைய இந்த மொழிப் பலவீனம்தான் என்பதை மறுப்பதற்கில்லை. நமக்கிருப்பதைப்போன்ற இதே பலவீனம் வங்காளிக்கும், குஜராத்திக்கும், மராட்டியருக்கும சீககியருக்குங்கூட இருக்கிறது எனபதில் சந்தேகமில்லை.

இந்த ஒரே காரணத்தால்தான் அமெரிக்காவின மிகச் சாதாரண எழுத்தாளர்கள்கூட மிகச் சுலபமாக அகில உலக மார்க்கெட் விளமபரத்தைப் பெற்றுவிடுகிறார்கள். நமமவர்களின் புகழ் மிக்க எண்ணங்களும், எழுத்துக்களும் பாலையிலே பொழிகின்ற நிலவாகப் பறிப்பாரறற ரோசாவாக நித்தநித்தம வீணாகி வருகினறது.

ஒரு காலத்தில் தமிழ் உலகம் ஆண்ட மொழியாக இருந்தது என்பதை மெசபபடோமியா நாகரிகத்தினொடு வைத்து எண்ணத்தக்க அளவுக்கு திராவிட நாகரிகம் தொனமைச் சிறப்புடையது என்பதை, மொஹஞ்சதாரோ ஹரப்பா நாகரிகத்தின் முன் விளக்கமாகத் தமிழ் அரசோச்சியிருக்கிறது எனபதை, இத்தனைக்கு மேலாக இனறும் ராஜ்மஹால் குனறுகளில் பேசபபடுகிற ப்ராஹி மொழியும், மத்திய மாகாணத்தில் பலுஸிஸ்தானத்தில் பேசப்படுகிற கூய் மொழியும் திராவிட மொழிச் சார்புடையன என்பதையுபசுட்டிக்காட்டித் தமிழ் தான் இந்தியாவின் பொது மொழியாகவேணடும் என்று யாரும் வாதிடவில்லை. மாறாக இந்தியானாலும் சரி, மற்ற எந்த இந்திய மொழிகளானாலும் சரி விஞ்ஞானத் தேவைகளை —— வெளியுலகத் தொடர்பைப் பொறுத்தவரை வளர்ச்சி குனறிய நிலையிலே தான் இருககின்றன என்பதைத்தான் நினைவு படுததவிரும்புகிறோம். இந்த நிலை மாறி ஆங்கிலத்தின அந்தஸ்தை மறற இந்திய மொழிகளும எட்டிப பிடிகக வேண்டுமானால ஆங்கிலத்தின் துணையோடு தான அந்த இலட்சியத்தை அடைய முடியுமே தவிர — ஆங்கிலம இல்லாமலே நாம வளாந்துவிட முடியும் என்று நினைபபது அஸதிவாரம் இல்லாமலே கட்டிடம கட்டுவதுபோலத்தான.

செடி முளைவிட்டவுடன் செடியை ஒட்டியிருக்கிற விதைகளில் இருந்துதான் ஆகாரத்தை எடுத்துக்கொண்டு வளர்கிறது. வேர்விட்டு நிலத்தில் கால்ஊனறி உணவு தானாகத்தேடும் வளர்ச்சியைச் செடி அடையும் வரை— செடிவிதைப பருபபுகளில் உள்ள உணவை உட்கொண்டுதான் வளாகிறது. விதைதான முளைவிட்டுவிட்டதே என்று பருப்பைப் பிய்த்து எடுததுவிட்டால் செடி வளராது. அதேபோலத்தான அருமபு நிலையில் இருக்கின்ற இந்திய மொழிகள் அகில உலக அரசியல் விவகாரங்களில் கலந்து கொள்ளக்கூடிய அளவுக்குக் காலூனறி வேர் விடுகிறவரை ஆங்கிலத்தின் துணை மிகமிக அவசியம்.

இந்திய மொழிகள் அனைத்தும் வளர்ச்சி குன்றிய நிலையில் இருக்கினறனஎனபதை ஒப்புக்கொள்ள வெட்கபபடுவதோ, அந்தக் குறையை நிவர்த்தி செய்து கொள்ள ஆங்கிலத்தின் துணையை நாடுவதோ தவறு எனறு சுயநலம், சொந்த விருபபு வெறுப்பு காரணமாக இன்னும யாரேனும் நினைத்துக்கொண்டு இருந்தால் அவர்கள் புரையோடும் புண்ணுக்குப் புனுகு பூசிக்கொண்டிருக்கிறார்களே தவிர, இரணத்தைக் கீறி வியாதியைக் குணப்படுத்தும் வழிக்கு இன்னும தங்களைத் தயார் படுத்திக்கொள்ளவிலலை என்றுதான் பொருள்.

உலக அரங்கில் ஆங்கிலம் தனியரசு செலுத்றுமளவுக்கு பிரமிக்கத்தக்க முனனேற்றத்தை அடைந்திருக்கிறது. எனவே இந்திய மொழிகளும ஓரளவுக்கு அதை ஒட்டி முனனேற ஆங்கிலத்தை நாம இனனும கொஞ்ச நாளைக்கு வைததிருபபதுதான அறிவுடைமை ஆகும்.

★

> பணம மிகவும் பலப்படைத்த தோர் வியாதி. ஒருவன் செல்வத்தைப் பெற்றதும் முற்றிலும் மாறிவிடுகிறான்.

70 திராவிடநாடு

29—6—58 வார வெளியீடு விலை 16 காசு

70

... JUL 1958 ... MADRAS

வழிதான் உண்டோ?

(சா. சதாசிவம்)

சென்னையில் துறைமு கத்தில்
எண்மர்தான் மாண்டு போனார்!
அன்னையின் விழிகள் கொட்டும்
அருவிநீர் எனவே கண்ணீர்!
எண்ணவே குமுறும் நெஞ்சம்
எவரினித் தவிர்ப்பார் சோகம்!
என்னையா ஆட்சிப் பீடம்
எதிலுமே கொலைதான் அந்தோ!

நடந்ததை ஏட்டில் கண்டு
நன்றென உரைப்பார் உண்டோ?
கடந்ததை என்னும் போது
கண்கனே அருவி யாகும்!
மடிந்தவர் நிலையை எண்ணும்
மனமுமே உடைந்து போகும்!
இடிந்ததே வாழ்க்கை என்று
கண்ணீரே கொட்டும் கூட்டம்!

உழைக்கின்ற தோழர் கூட்டம்
உய்வுற வழியைக் கேட்டால்
இழைக்கின்றார் துன்பம் என்றால்
எளியோர் உயர்வு தென்றோ?
பிழைத்திட வேண்டும் என்றால்
பிடித்திடு துண்டை என்பர்!
உழைப்பவர் நிலை உயர
அரசிலே வழிதான் உண்டோ?

விடுதலையானர்

சிறைச்சாலையிலிருந்து, சென்ற வாரம், பெரியார் விடுதலையானது கேட்டு, தமிழகம் களித்தது; திராவிடர் தம் உள்ளமெல்லாம் குதூகலமடைந்தது. சென்னையிலும், அவர் சென்றவிடங்களிலும், போட்டியிட்டுக்கொண்டு வரவேற்பும் வாழ்த்துமளித்திருக்கின்றனர். மன்பதை நிரம்பிய ஒரு தலைவர், காங்கிரஸ் நன்றிகாட்டவில்லையென்றாலும், காமராசர் ஆட்சி வழங்கியது சிறையென்றாலும், தளராத வயதிலும் தளர்ச்சியில்லா ஊக்கமும் உறுதியும் கொண்டுள்ளது காண எவருக்கும் மகிழ்ச்சியே ஏற்படும்.

பெரியாரையும் அவரது படையையும் சிறைக்கனுப்புவதன் மூலம், அவர் கொண்டுள்ள கொள்கையைச் சாய்த்துவிடலாம் என்று ஆட்சியாளர் கண்ட கனவு பலிக்கவில்லை. சாதி ஒழியவேண்டும் என்கிற பெரியாரின் கோட்பாட்டிற்காக, இலட்சக்கணக்கான மக்கள் உள்ளனர், இந்தக்கோட்பாடு, வெற்றி பெறவேண்டும் என்பதிலும், கருத்து வேற்றுமை இருக்கமுடியாது.

"நான எதற்காக, இந்தக் கிளர்ச்சியைத் துவக்கினேனோ, அது இனனும் நிறைவேறவில்லை. ஆகவே, அடுத்தது என்ன? என்பதற்குத் தயாராகவேண்டும்—தமிழ்நாடு இல்லாத இந்தியாவின் படத்தைக் கொளுத்துவதுதான், அடுத்த கிளர்ச்சியாகயிருக்கலாம்—அதற்குத் தயாராக இருங்கள்" எனறு தனனைப் பின்பற்றுபவர்களுக்குப் பெரியார் அறிவித்துள்ளார், விடுதலையானதும்.

சாதி ஒழிப்புப் பிரச்னைபற்றி, பெரியாரின மொழியிலும குரலிலும், ஒரு மாறுதல் உண்டாகியிருப்பதைக் காணகிறோம்; மகிழ்கிறோம. சிறைக்குச் செல்லுமுனபெல்லாம், 'பாாப்பனரை வெளியேற்றவேண்டும் எனபதே அவர் தம முழககமாயிருந்தது. அவர் மீது, மதிப்பும மரியாதையும் கொண்டவர்கள என்றாலும், இவ்வித முழக்கம்பற்றிய நமது கருத்து வேறறுமையை நாம தெளிவுபடுத்தியிருக்கிறோம. வழக்கமபோல், ஏச்சையும் பேச்சையும் பரிசாகவும் பெற்றோம். நம்முடைய போராட்டம், தனிபபட்டவர்களோடு அல்ல; பன்னெடுங்காலமாக நீடித்துவருகிற ஒரு அமைப்பு முறையை மாற்றவேண்டும் என்பதுதான். இதைச் சொன்னதற்காக, எரிச்சலைப் பரிசாகப்பெற்றோம்' எனினும், இப்போது பெரியார் அவர்களுடைய குரலிலும் மொழியிலும் ஒரு மாறுதல் உண்டாகியிருபபதைக்கண்டு மகிழுகிறோம். இம மாறுதல், நல்லதை விளைவிக்கும் என்றும் நம்புகிறோம்.

அக்கிரகாரங்களைக் கொளுத்துவதாலோ, பார்ப்பனர்களைத் துன்புறுத்துவதாலோ, சாதிச் சனியனை ஒழித்துவிடமுடியாது.

> ஜூன் 22-ந் தேதிய, "ஹோம் லேண்ட்" இதழில், தீட்டப்பட்ட கட்டுரையின் சாரம்.

தெளிந்த திட்டமும், விவேகமும் வேண்டும்; தீயும் வாளும் சாதிப் பதைவிட, இவை மூலமே சாதி ஒழிப்புக்கு மார்க்கம் காணவேண்டும்.

சாதிமொழிப்புக்கு அடையாளமாக, இந்தியத் திரைபபடத்தை எரிக்கும் கிளர்ச்சியைச் செய்ய வேண்டும் என்கிறார் பெரியார். இதுகூட, சரியான வழி என்று நாம கூறமாட்டோம்.

காமராஜர் ஆட்சி பற்றிக்கூட பெரியாருடைய குரலிலும மொழியிலும மாறுதல் தெரிகிறது. முனபுபோல, அவ்வளவு உற்சாகம் தென்படவில்லை. கண்டிக்கவும் செய்திருக்கிறார் காமராஜர் ஆட்சியை, எனச் சேதிகள் சொல்லுகின்றனர்.

டில்லி தூண்டிவிட, சென்னை அடக்குமுறையை அள்ளி வீசுகிறது எனறு பெரியார் சொனனாலும; இந்த சாதி ஒழிப்பில், காமராசரும அவர்தம சகாக்களும் கொஞ்சம் சிரத்தையும் ஆர்வமும காட்டியிருக்கவேண்டும் எனபதை அவரும உணருகிறார் எனறு தெரிகிறது.

பெரியாரையும்கூட கண்டிக்கவும, மறுக்கவுமான துணிச்சல் இப்போது காமராசருககு வந்திருப்பதாக, அவரிடமிருபபோர் மூலம, சொல்லப்படுகிறது. முனபைவிட, இபபோது, தனது படை வலிவு பெற்றிருக்கிறது; இன்னும் காங்கிரசுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுத்தால், இந்த வலிவு அதிகமாகும்; காமராசரைக் கண்டிக்குமளவுக்குப் போயினும் கூடப் பரவாயில்லை, என்று பெரியார் கருதுகிறார் எனத் தெரிகிறது.

திராவிடர்கழகம் தேவையெனக் காமராசர் எண்ணுவதெல்லாம், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஒரு எதிர்ப்பு இருக்க வேண்டுமே என்பதுதான்.

தி. க.வும் தி. மு. க.வும் மோதிக் கொள்ளட்டும் — நமது கையை பலப்படுத்திக்கொள்வோம், என்பதுதான் காமராசரின் நோக்கம் எனத் தெரிகிறது.

இதனை தி. மு. க. தெளிவாக அறிந்திருக்கிற காரணத்தால் தான், திராவிட கழகம் எவ்வளவு தான் ஏசினாலும் பேசினாலும், பொறுத்துக்கொள்கிறது. காங்கிரசாரின் தந்திரத்துக்கு தி.மு.க. இரையாக விரும்பவில்லை.

தி. மு. க-வைப்பற்றிப் பெரியார் எவ்வளவுதான ஏசினாலும், 'கண்ணீர்த் துளிகளே' என்றாலும், டில்லி ஆதிககத்தை அவர் கண்டிக்க வேண்டியவராகிறார். அவருடைய பிரச்சாரத்தின், பலன் இதுவாகத்தான் இருக்கிறது. அப்படியாயின், டில்லி ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் தி. மு. க. வுக்குத்தான் இலாபமும், பயனும்!

கிருஸ்துவ மார்க்கத்திலுள்ள, கத்தோலிக்காராலும் புராடெஸ்டெண்டுகளாலும, இருவரும் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு செய்யும் பணியால், கிருஸ்துவ மார்க்கத்துக்குத் தான் இலாபம். இப்படித்தான் எண்ணுகிறது, தி. மு. க. காமராசர் மீது பெரியாருக்குள்ள பிரியம் தளர்ந்து, சாதி ஒழிப்புப் பிரச்னையும் ஒரு கட்டத்துக்கு வருமானால், பெரியாரின் தாக்குதல் டில்லி ஆதிக்கத்தின் மீதுதான் பாயும். தி. மு. க. இதை, வரவேற்கும்.

இங்கிலையில், கூண்டு திறக்கப்பட்டு, மீண்டும் தமிழர்கள் மத்தியில் பெரியார் பவனி வரத் துவங்கியுள்ளார். தனது புனிதப போரை வழக்கமான வேகமும் விவேகமும் கலக்க நடாதத முற்படுகிறார் — அவரைத் தமிழகம், வருக, வருக என வரவேறகிறது.

✽

துயர்துடைப்பாரா!

மலர் 16] ஆண்டு சந்தா [29-6-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 5

"...தெருக்களில் தமிழர்கள்மீது பெட்ரோலைக் கொட்டி அவர்கள் உயிருடன் எரிக்கப்படுகையில், ஜனங்கள் பேசாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்ததாக நேரில் கண்டவர்கள் என்னிடம் கூறினர்."

"கடந்த 3-வார பயங்கர ஆட்சியில் முதல் சில தினங்களில் மாண்டவர்கள் மட்டும் குறைந்தபட்சம் 300-பேர் இருப்பார்கள். இவர்களில் பெரும்பாலோர் கலகங்களில் கொலையுண்டவர்கள். 400-முதல் 500-பேர்வரையினாவது கொல்லப்பட்டிருப்பார்கள் என்பது அநேகரின் மதிப்பிடு."

"தமிழர்கள் தீவின் வடபகுதிக்கு ஓடுகிறார்கள். குறைந்தபட்சம் 20,000 பேர் தம் வீடுவாசல்களை விட்டு ஓடியிருப்பார்கள்"

"கொழும்பு நகரில் தமிழர்கள் பகுதி எரிந்துபோன வீடுகளும் கொள்ளையடித்துச் சூறையாடப்பட்ட கடைகளுமாகக் காட்சியளிக்கின்றன. கிராமாந்தரப் பகுதிகளில் ஏசப்பட்ட தமிழர் பேட்டைகளுக்கும் இதே கதிதான் ஏற்பட்டது."

✽

வெளியிட்டிருப்பது, தி. மு. க. அல்ல! இலண்டன் மாநகரிலிருந்து வெளிவரும் "டெய்லி டெலிகிராப்" எனும் ஏட்டின் நிருபர், இலங்கையிலிருந்தால் இச் செய்திகளை அனுப்ப இயலாதெனறு சென்னைக்குப் பறந்துவந்து, இங்கிருந்து ஜூன் 23-ந்தேதி இந்த விபரங்களை அனுப்பியிருக்கிறார், இலண்டனுக்கு!!

"தினமணி" ஏடு, எடுத்து, இதனை ஓரளவு போட்டிருக்கிறது.

ஏட்டின் நிருபர், அவர். அவருக்கு, இவ்வளவு அக்கரை! பறந்துவந்து, சென்னையிலிருந்து எழுதி அனுப்புகிறார்!!

இலங்கையில் நடந்ததென்ன என்பதைப் பற்றிச் சரியான விபரம் யாருக்கும் கிடைக்கவில்லை. நிருபர் பறந்துவருகிறார், செய்தி எடுக்க! இந்தியாவின் ஹைகமிஷனராக இலங்கையில் வீற்றிருக்கும் குண்டேவா என்பார், பறந்தும் வரவில்லை—அதிகாரியையாவது அனுப்பி விபரம் தெரிவித்ததாகவும் தகவலில்லை!!

நெஞ்சு கொதிக்குமளவிலும், உள்ளம் எரிமலையாகும் விதத்திலும் ஓராயிரம் செய்திகள் வருகின்றன, இலங்கைத் தமிழர்படும் அவதிகள்பற்றி... ஆவலும், அச்சமும் இங்குள்ள ஒவ்வொருவரையும் பிடித்தாட்டுகிறது. அங்கே, தமிழர்களின் நலன் பேணும் பொறுப்பிலிருப்பவரோ, பேசாதிருக்கிறார். அவரை, அந்த வேலைக்கு அனுப்பிய டில்லிப்பீடமோ ஏதும் செய்யவில்லை. டில்லியின் அடிவருடிபோல் விளங்கும் சென்னை அரசோ, "ஆகட்டும் பார்க்கலாம்" போக்கிலேயே உள்ளது.

தி. மு. க. உதித்த நாள்முதல், "தமிழர்கள் சென்று வாழும் வெளிநாடுகளிலேயெல்லாம் கூடியவரையில் ஒரு தமிழரையாவது ஹைகமிஷனராக நியமிக்கவேண்டும்; அப்போது தான், தானுடாவிட்டாலும் தன் சதையாடும், கொஞ்சமாவது, தமிழர்தம் பிரச்னை புரியும்" என்று கூறிவருகிறோம். நடைபெற்றுள்ள பல மாநாடுகளில், தீர்மான மூலமும் அரசுக்கு, மக்கள் குரலை எடுத்துக் காட்டிவந்துள்ளோம். டில்லி, எவ்வளவுதான் செவிடாக இருந்தாலும், ஒரு தமிழர் ஹைகமிஷனராக இருந்தால், அடிக்கடி சங்காவது ஊதிக்கொண்டிருப்பாரல்லவா, என்கிற சபலம் நமக்கு. வடவர், இருக்கிறார்! வடவர்களுக்குத்தான், தென்னாட்டின் பிரச்னைகள் என்றாலே புரிவதில்லையே!!

சென்ற கிழமை, பிரஜா சோஷியலிஸ்டு கட்சியின் பொதுக் காரியதரிசி எனப்படும் என். ஜி. கோரே என்பார் தமிழ் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டு, பல ஊர்களில் பேசியிருக்கிறார். அகில இந்திய ரீதியிலிருக்கும் ஒரு இயக்கத்தின் காவலர் அவர்! அவரிடம் "இலங்கைத் தமிழர் பிரச்னைபற்றித் தங்கள் கருத்து யாது?" என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள். "அந்தப் பிரச்னையின் முழு விபரமும் எனக்குத் தெரியாது. எனவே, நான் அதைப்பற்றி அதிகம் சொல்லுவதற்கில்லை" என்று பதிலிறுத்திருக்கிறார். கோரே அவர்களின் கூற்றில் அடங்கியிருக்கும், அடக்கத்தை நாம் பாராட்டுகிறோம். "விபரம் அறியேன்" என்று வெளிப்படையாக அவர் வெளியிட்ட தன்மையை, மெச்சுகிறோம். அதே சமயத்தில், ஒரு அகில இந்தியக் கட்சிக்கு, தமிழர்களின் பிரச்னை குறித்து எந்தளவுக்குப் புரிந்திருக்கிறது என்கிற உண்மையையும் நாம் உணரத் தவறக்கூடாது.

கோரேக்கு மட்டுமல்ல, அ. இ. கம்யூனிஸ்டு கட்சியின் டாங்கேயாலும், அஜாய்குமாராலும், அகில இந்தியக் காங்கிரசின் தேருவாலும், தேபராலும் அவர்களுக்கெல்லாம், தமிழர்களின் பிரச்னை பற்றி அறிந்திடும் ஆவலும் அக்கரையும், அதிகம் இருப்பதற்கில்லை. ஏனெனில், இந்தியா ஒரு உபகண்டம்!

ஆதிலும், தென்னகம், ஒரு மூலையில் கிடக்கிற பகுதி! இதன் துயரங்களையும் சோகங்களையும், நாம்தான் ஒருவருக்கொருவர் கட்டி அழுதுகொள்ள வேண்டுமே ஒழிய, வடவர்களை நம்புவதிலும், அவர்கள் மூலம் பரிகாரம் கிடைக்கும் என எதிர்பார்ப்பதிலும் அர்த்தமில்லை. இலங்கையில் தமிழர்களுக்கேற்பட்ட அளவுக்கு இன்னலும் துன்பமும், ஒரு பத்து மார்வாடிகளுக்கும், குஜராத்திகளுக்கும் ஏற்பட்டிருக்குமேயானால், அவர்களது உள்ளமெலாம் பதறும். நேரு அவர்கள், 'குளு'வுக்குப் போய் குளிர்ச்சி தேடமாட்டார்! கொதிக்கிறதே உள்ளம்— என்று குமுறுவார்; அலறுவார்; அறிக்கைகள் விடுப்பார்; இலங்கைக்கு அதிகாரிகளையும் அனுப்புவார்!

> பெட்ரோலைக் கொட்டி: எரிக்கப்பட்டனர்.
> மாண்டோர் தொகை, 300க்கு மேலிருக்கும்.
> வீடுவாசல்களை விட்டு ஓடினர்கள்.
> கொள்ளையடிக்கப்பட்டனர்;
> சூறையாடப்பட்டன.

இப்படிச் செய்திகள் வருகின்றன; திடுக்கிடுகிறோம்; திகைக்கிறோம். ஏனைய அகில இந்திய கட்சிகளைப் போலன்றி, இலங்கைவாழ் தமிழர்களின் பிரச்சினை நமக்கு நன்ருகப் புரிகிறது. அங்குவாழ் தமிழர் தம் உழைப்பும் வியர்வையும், இலங்கையின் வளத்துக்கு எவ்வளவு பயன்பட்டிருக்கிறதென்பதை நம்மால் அறிய முடிகிறது. இலங்கையும் தமிழகமும், இன்று நேற்றல்ல, சரித்திர காலந்தொட்டு சகோதர நாடுகளாகும்!!

அங்கு இப்போது நடைபெறும் அமளிகளை' இலங்கை முழுவதிலுமுள்ள சிங்களவர் அனைவரும் விரும்புவர் என, எண்ணுவதற்கில்லை. படிப்பாளிகளும், நாகரிக மேன்மையும் நிரம்பிய அங்கு வெறி கொண்டவர்கள் மட்டுமே இருப்பார்கள் என்பதல்ல; நல்லோரும் இருப்பார்கள். அதனை உணர்ந்த காரணத்தால்தான், கடந்த 22-ந் தேதி, நாடெங்கும் **"இலங்கைத் தமிழர் உரிமைப் பாதுகாப்பு நாள்"** நடாத்திய, தி. மு. க. பின்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. சம்பந்தப்பட்டோரனைவரது பார்வையிலும் படட்டும் என்று மீண்டும் அதனை இங்கு வெளியிடுகிறோம்.

> இலங்கையிலுள்ள ஒருசில பொறுப்பற்ற சிங்கள அரசியல்வாதிகளின் தூண்டுதலின் பேரில் நடைபெறும் வெறிச் செயல்களுக்கு ஆளாகி உயிரையும், உரிமையையும், உடைமையையும் இழந்து அவதியுறும் இலங்கைவாழ் தமிழர்களின் நிலைகண்டு இக்கூட்டம் மிகவும் இரங்குகிறது.
>
> நீண்ட காலமாக இலங்கையைத் தாயகமாகக் கொண்டுள்ள தமிழர்களுக்கு நியாயமாக அளிக்கப்பட வேண்டிய ஜனநாயக உரிமைகளை வழங்குமாறு இலங்கை அரசியலாரை இக்கூட்டம் விரும்பிக் கேட்டுக்கொள்கிறது.
>
> அந்தப்படிக்கு இலங்கை அரசியலாரை இணங்க வைக்கும் முறையில், தங்களுடைய நல்லுறவையும், செல்வாக்கையும் முழுக்க முழுக்கப் பயன்படுத்த வேண்டும் என்று இந்தியப் பேரரசினரை இப் பொதுக்கூட்டம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.
>
> அந்த வகைக்கு இந்தியப் பேரரசினரைச் செயல்படத் தூண்டுவதற்கு ஆவனவெல்லாம் செய்யுமாறு சென்னை அரசியலாரை இந்தப் பொதுக்கூட்டம் வற்புறுத்துகிறது.

இலங்கைத் தமிழர்தம் பிரச்னையில், சுமுகம் ஏற்பட வேண்டுமென்பதில், தி. மு. க. எவ்வளவு அக்கரையும் விருப்பமும் கொண்டிருக்கிறது என்பதை, தீர்மானத்தின் வாசகங்கள் விளக்கும்.

டில்லியும் சென்னையும் எவ்வளவுதான்' இலங்கைவாழ் தமிழருக்கு, இதுநாள் வரையில் "துரோகம்" செய்திருந்தாலும், இனியேனும் கொஞ்சம் சிரத்தை கொள்ளவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

★

சமண சமயச் சிலைகள்

சென்னை ஜூன் 5 தேதி எழும்பூரிலுள்ள அரசாங்க அபூர்வ பொருட் களஞ்சியத்தில் புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதியில் அண்மையில் ஐந்து சமண வெண்கலச் சிலைகள் சேர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இவை தென்னாற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், சிங்கணிக்குப்பம் கிராமத்தில் புதைபொருளாகக் கண்டெடுக்கப்பட்டவையாகும். இவை நான்கு தீர்த்தங்கரர் வடிவமும், ஒன்று யட்சிணி வடிவமும் கொண்டவை. இவற்றுள் ஒரு சிலை மகாவீரர் வடிவத்தைக் குறிப்பாக அறியப்படுகிறது. கவர்ச்சிகரமாக இருக்கும் யட்சிணி சிலையின் ஒரு பக்கத்தில் ஒரு பெண்ணும் மற்றொரு பக்கத்தில் ஒரு குழந்தையும் அமைந்துள்ளன. யட்சிணியின் ஆடை அணிகளும் பெண்ணின் கொண்டை முடிப்பும் அற்புதமாக அமைந்திருக்கின்றன. குழந்தை உருவமும் மிகுந்த சிற்ப நுட்பத்துடன் செதுக்கப்பட்டு உள்ளது. சிற்பச் சிலையில் உள்ள பெண் வடிவத்திடம் உள்ள மலர்மாலை, தென்னிந்திய வெண்கலச் சிலை அமைப்புகளிலே மேகாணப்படாத சிறந்த ஒப்பனையுடன் விளங்குகிறது என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அந்த உருவச் சிலைகளின் அமைப்புகளிலிருந்து அவை கி. பி. 1200 அதாவது பிற்காலச் சோழர்கள் காலத்தைச் சேர்ந்தது என்று சொல்லலாம். சோழ மன்னர்கள் சகிப்புத்தன்மைக்குப் பேர்போனவர்கள் என்ற கூற்றுக்குச் சோழர் காலத்துச் சமண சிலைகளும் சான்று கூறுவனவாக உள்ளது.

❀



அகத்தில்....? புறத்தில்....?

—[மாண்மகிழன்]—

சென்னை
6—7—58

அன்புள்ள மணிமாறனுக்கு,

உன்னை நினைக்கும்போது எனக்குச் சிரிப்பும் வருகிறது; வெறுப்பும் எழுகிறது. உன்னை என்ன செய்வதென்றே எனக்குப் புரியவில்லை. நானும் பார்க்கிறேன், கடந்த மூன்று மாதங்களாக. அந்த நப்பாசை மட்டும் உன்னை விட்டு நீங்கியபாடில்லை. நான் மட்டும் பழையபடி பெங்களூரிலேயே இருந்தேனென்ருல் உன்னை என்னதான் செய்வேன் தெரியுமா?

நீ ஒரு ஆடம்பரக்காரன்—விளம்பரத்தால் மட்டுமே உலகத்திலே சாதிக்க முடியாதவைகளை எல்லாம் சாதிக்க முடியும் என்பதை நம்பிக்கொண்டிருப்பவன் என்பதைப் புரிந்துகொண்டு, உன்னைப் புதிய வழிக்குத் திருப்ப நான் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அனைத்தும் செத்தே போயின. நீயாக நிச்சயம் வழிக்கு வருவாய் என்று நம்பிக்கொண்டு நானுகவே அந்த முயற்சிகளை எல்லாமவிட்டு ஒழித்துவிட்டேன். நீ எப்படியேனும் என்னைப்பற்றி நினைத்துக்கொள். அதற்காக நான் வருந்தப் போவதில்லை. ஏனென்ருல் இதுதான் உன் தனிப்பட்ட வாழ்க்கையைப்பற்றி நான் தீட்டும் கடைசி மடல். ஏன் நான் இந்த மடலை என் கடைசி மடலாகக் கருதுகிறேன் என்ருல், நிச்சயம் இதனுல் உனக்கு ஒரு சலனம் ஏற்படவேண்டும். அப்படியில்லையென்ருல், மணிமாரு நீ மனிதனே அல்ல!

நீ என்னவோ எல்லாவற்றையுமே விளையாட்டுப் போக்கிலே கண்டுகொண்டு இருப்பதாகத் தெரியவந்தேன். நீ நினைக்கலாம்இவனென்னடா நான்என் கலியாணத்தைப்பற்றி தீவிரமாக முயன்று கொண்டிருந்தால், இதைப்போய் விளையாட்டுத்தனம் என்கிருனே என்று! நண்பனே, திருமணத்தைக் குறித்து நீ செய்யும் எல்லா முயற்சிகளையும் நான் மதிக்கிறேன்; மனம் குளிர்கிறேன்; வான்போர்த்த வாழ்த்துகிறேன். ஆனுல் நின் அதி தீவிர முயற்சி பயனற்ற முறையில் போவதைக் கண்டுதான் வருந்துகிறேன்.

நீ இன்னும் கருதிக்கொண்டிருக்கிருய், தினசரிப் பத்திரிகைகளில் "தேவை! மதிப்பும் வளமும்உள்ள குடும்பத்து, 16 வயதினின்று 20 வயதுக்குள்ளிருக்கும் ஒரு அழகான பெண், 24 வயதுள்ள, நல்ல நிலையில் இருக்கும் ஒரு வாலிபனை மணக்க! விவரத்திற்கு உடனே எழுதுக" என்று பிரசுரிப்பதிஞல் பொருத்தமானவளைப் பெற்றுவிடலாமென்று! இந்த முறையில் எத்தனை பேர் வெற்றி கண்டிருக்கிருர்கள்? வெற்றிகண்டவர்களில் எத்தனை பேர் நிம்மதியான வாழ்க்கையினைத் துய்த்துக் கொண்டிருக்கிருர்கள்? இதைமட்டும் சொல்லிவிடு பார்க்கலாம்!

வெற்றி பெற்ருர்களோ இல்லையோ — சுகபோக வாழ்வில் திளைக்கிருர்களோ கிடையாதோ, அவை போகட்டும்! இந்த முறையில் நீ எந்த நன்மை இருப்பதாகக் கருதிக்கொண்டுள்ளாய்? இதிலே தான் சிறப்பிருக்கிறது என்று 'நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்ற விவாதத்திற்கு வருவாயானுல் நிச்சயம் அது...... கபோதிபுரக்... என்றுதான் கூற வேண்டியதாய் இருக்கும். எங்கோ இருக்கும் ஒருவனுக்கு, எங்கோ இருக்கும் ஒருத்தி விளம்பரத்தால் மட்டும் துணையானுல் அது என்ன உருப்படுகிற காரியமா?

உளம் ஒன்றுபட்டு, மணக்க வேண்டும் என்று கூறுவாயே, ஏன் மறந்துவிட்டாய்? உன் விளம்பர வேதாந்தத்தை இந்தத் திருமணப் பெருநாளிலுமா காட்டிக்கொள்ள வேண்டும்? இதோடு மற்றொரு மாபெரும் உண்மையினையும் மறந்துவிட்டாய், நீ எத்தகையவள் துணைவியாக் வாய்த்திட வேண்டும் என்று விரும்பி விளம்பரப் படுத்திஞயோ, அத்தகையவள் இந்த விளம்பரத்திஞல் நிச்சயம் கிடைக்கமாட்டாள் என்பதைக்கவனத்திற்கொண்டுவா. இந்த நிலையில் உன்னை நீயே பணங்கொடுத்து மலிவுபடுத்திக் கொள்ளுகிருய்—இதை நினைக்கும் போதுதான் எனக்கு எப்படியோ உள்ளது.

சிக்கல்கள் நிறைந்த திருமண விவகாரத்தை நீ ஒரு சாதாரண காரியமாகத் தெரிந்தோ தெரியாமலோ கருதிவிட்டாய். அதுதான் வாழ்விலேயே ஒரு மாபெரும் காரியம் என்பதை அடியோடு மறந்துவிட்டாய்! நான் ஏன் திருமணத்தை ஒருவனுடைய வாழ்க்கையில் ஒருமுறை வரும் ஒரு மாபெரும் விவகாரமாகக் கருதுகிறேன் என்ருல், அதற்குப பல காரணங்கள் உண்டு. அவற்றை எல்லாம் உளடக்கி அகநிலை புறநிலை என இருபெரும் பிரிவுகளிலே எளிதாகக் காணலாம்.

அருமை நண்பனே, நீ தேர்ந்தெடுக்கும் துணைவி இந்த

இரண்டு நிலைகளினையும் இரண்டறக் கலந்துள்ளவளாக இருக்க வேண்டும். இவைகளில் எது குறைந்தாலும் வாழ்க்கை இனிக்காது. வாழ்க்கை வாழ்வதற்காகாது. எல்லா உரிமைகளையும் எனக்குக் கொடுப்பவனாதலால்—எனக்கு வாய்த்த உண்மை நண்பன் நீ ஒருவனே என்பதால் இதை நான் உரிமையோடு உன்னிடத்தில் கூறுகிறேன்.

அகநிலை என்றேனல்லவா, அது என்னவென்றுகேட்கிருயா? வேறொன்றுமல்ல; மனதின்நிலைதான். இந்த நிலையில் எத்தனையோ வகைப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அத்தகையோர்களில் உள்ளாழக்காரர்கள் — பகட்டுக்காரர்கள்—கபடதாரிகள் — பசுப்போல் தோன்றி நரிபோல் செயலாற்றுபவர்கள் ஆகியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இப்படிப்பட்ட உள்ளங்களை எல்லாம் நீ புரிந்துகொள்ளவேண்டுமே! நான்—எனது என்ற விவாதத்திற்கு வரும் இந் நெஞ்சங்களை எல்லாம நீ கடந்தாகவேண்டுமே! இல்வாழ்க்கைக்கென்று குடும்ப விளக்கொன்றை அடையவேண்டுமே. அத்தகைய குடும்ப விளக்கை—வாழ்க்கைத் துணைவை அடைய அகநிலையினை நீ மெத்தவும் புரிந்தாக வேண்டுமே. கலியாணத்தைப்பற்றி இன்பக் கனவுகள் பல கண்டுகொண்டிருக்கும் உனக்கு, இவ்வகநிலையினை ஆழ உழுது குழப்பத்தினை வாரி வழங்க நான் விரும்பவில்லை. இதையெல்லாம் கொஞ்சம் கவனி. அவ்வளவு தான்.

புறநிலையினைக் கேட்கிருயா? இதுவும் அகநிலை இலக்கணம் எத்தனை முக்கியத்துவம் வாய்ந்ததோ, அத்தனை முக்கியத்துவம் வாய்ந்தது. வாழ்க்கை என்னும் எழிலோவியத்துக்குத் தாள் போன்றது. நீகூடக் கூறுவாயே பெண்டிர் வகைகளை எல்லாம்... சித்தினி... பத்மினி... என்றெல்லாம்! நினைவில் உள்ளதா? அவையெல்லாம் ஏதோ விளையாட்டிற்கோ சின்னத் தனத்திற்கோ எவனே எப்பொழுதோ கூறிவிட்டதாக நினைக்காதே! ஏனென்ருல், உடலின் நிலைகளை எல்லாம் ஆய்ந்து கூர்ந்தறிந்த எந்தப் பெரியவரோ அப்படி ஐந்துவகையினராகப் பகுத்துவிட்டுப்போயிருக்கிருர். எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் அப்பெருங் கூறுகளை வரையறுத்த அவரை மனமார வாழ்த்து!

என்னடா நீ புதுத் தகராறினைக் கிளப்புகிருயே என்று கேட்பாய்? என்ன செய்வது? இத்தனையும் திருமணம் என்பதில் அடங்கத்தானே செய்கிறது. அதனுல் அல்லவா நான் அதை மாபெருங் காரியம் என்று குறிப்பிட்டேன்!

Rh. பதார்த்தம் (Rh. Substance) என்னும் ஒருவகை இரசாயனப் பொருளைக்கேள்விப்பட்டதுண்டா? அதனுடைய இரசாயனச் சேர்க்கையினையும் (ChemicalComposition) இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லையாம். இந்த அபூர்வ இரசாயனப் பொருள் மனித இரத்தத்தில் கலந்திருக்குமாம்! சிலருடைய இரத்தத்தில் அது கலந்திருக்காதாம்! இதை முதல் முதலில் ரேசஸ் (Rhesus Monkey) என்னும் குரங்கின் இரத்தத்தில கண்டுபிடித்தார்களாம். அதனுல் அவ்வகைக் குரங்கின் பெயரினையொட்டி Rh. பதார்த்தம் என்று அழைக்கப்படுகிறதாம்.

Rh. பதார்த்தம் யாருடைய இரத்தத்தில் இருக்கிறதோ அவர்களை Rh. நேர் வகையினர் (Rh. Positive types) என்றும், அது யாருடைய இரத்தத்தில் இல்லையோ அவர்களை Rh. எதிர் வகையினர் (Negative types) என்றும் பிரிக்கலாம்.

Rh. பதார்த்தம் சிலருடைய இரத்தத்தில் இருப்பதற்கும் இல்லாமல் போவதற்கும் மூல காரணம் உயிரணுக்களில் உள்ள ஒரு வகைப்பட்ட ஜின்கள் தான (Gene) ஏனென்றுல் அவைகள் தான் Rh.பதார்த்தங்களைக்கட்டுப்படுத்தி இயக்குகின்றனவாம்!

என்னடா இவன் ஏதேதோ சொல்லுகிருனே என்று எண்ண வேண்டாம். கவனமாகப் பின்பற்றி வாயேன்; பிறகு புலப்படும்.

Rh. பதார்த்தங்கள் இருப்பதைக் கட்டுப்படுத்தும் ஜீனை—ஜீன் (— Gene) என்றும், கட்டுப்படுத்தா ஜீனை + ஜீன் (+ Gene) என்றும் சொல்லுகிருர்கள்.

மனித உடலில் இந்த ஜீன்கள் பொதுவாக இரட்டையாகவே இருக்கும். இரட்டையில் உள்ள ஒரு ஜீன் தாயின் பெண்ணணு (OVUM) மூலமாகவும், மற்ருெரு ஜீன தந்தையின் ஆணணு (SPERM) மூலமாகவும் வந்ததாம்!

ஜீன்கள் இரட்டையாகவே இருப்பதனுல் ஒவ்வொருவரிடமும் + + என்ற கூட்டு வகை ஜீன்களாகவோ, — — என்ற கூட்டு வகை ஜீன்களாகவோ, + — என்ற கூட்டுவகை ஜீன்களாகவோ இருக்குமாம்!

+, — என்னும் இருவகை ஜீன்களில், + வகை ஜீன மிகவும் சக்திவாய்ந்ததாம்! எனவே அது — வகை ஜீனை இயக்கி ஆளுமாம்!

+, — என்ற கூட்டு வகை ஜீன்கள் உள்ளவரிடம் Rh. நேர்வகை பண்பு இருக்கும்; அவவாறே + + என்ற கூட்டுவகை ஜீன்கள் உள்ளவரிடமும் Rh நேர்வகை பண்பு இருக்கும். ஆனல் — — என்ற கூட்டு வகைப்பட்ட ஜீனகள் உளளவர்களிடம் Rh. எதிர் வகை பண்பு (Rh. Negative type) இருக்குமாம். இபபடிப்பட்டவர்களை Rh நேர்வகை (Rh. Positive type) பண்பினர் மணக்க நேர்ந்துவிட்டால் வாழ்க்கையில் ஏராளமான தொல்லைகள் — கசப்புகள் உண்டாகும்! பிணி அப்படிச் செய்துவிடுமாம்!

இத்தகு இடக்குகள் எல்லாம் மலிந்திருக்கும் காரியத்தில் நீ இறங்கும முறையினைப் பார்த்துத் தான் இந்தச் சேதிகளை எல்லாம உனக்குத் தேவையான மட்டில் தெரிவித்தேன். இவ்வளவு இடக்குகள் இருக்கின்றதே என்று அஞ்சி வாளா இருந்துவிடாதே. தெரிந்துகொண்டால் நல்லதுதானே என்றுதான் நான் இவறறைக் குறிப்பிட்டேன்.

இன்னும் அதிகம் தெரிந்துகொள்ள விருமபுவாயானல் உனக்கு மணமாகி, நீயே விரும்பிக் கேட்பாயானல் கூறுகிறேன்; தெரிகிறதா?

விளம்பரத்தை மட்டும் உன்னுல் விடவே முடியாதென்றுல் மேற் குறிப்பிட்ட நேர் எதிர் துனபங்களாவது உன்னை அணுகாமல் இருக்க டாக்டர் பரிசிலனையின் முழு விபரமும் தேவை என்று குறிபபிட்டு விளம்புரஞ் செய்!

என்றும் உன் நலத்தை விழையும்,

நண்பன்,

அன்பரசன்.

கடமை உணர்ச்சி

—[மு. தனராசன்]—

விடியற்காலை. நான் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த நேரம் அது! என்முன் ஓர் உருவம் தோன்றியது. இவ்வுலகத்தின் வனப்பை எல்லாம் ஒன்று திரட்டி ஓர் உரு—பதுமை அமைத்தால் எங்ஙனமிருக்குமோ அங்ஙனம் இருந்தது அவ்வுருவம்; ஏன்? இருந்தாள் ஓர் எழிலணங்கு. அவள் அங்கம் தங்கத் தகடென ஒளி யுமிழ்ந்து கொண்டிருந்தது. கற்றறிந்த—பெறுதற்கரிய தமிழணங்கே அவள்! இருப்பினும் நான சற்று ஐயத்துடன் அவ்வணங்கை நோக்கி, "யார் நீ?" என்றேன். "நான் தான் உன் அன்னை. தமிழன்னை" என்றுள்.

"என்னருமைத் தாயே! நீங்கள் என்னிடம் வரக்காரணம் என்னை?" என்றேன. "புரியாமல்—ஏதும் அறியாமல் கேட்கின்ருயே மகனே! பேதை நீ" என்றுள்; பின் நகைத்தாள்.

"நகைக்கக் காரணம்?" நான் சற்றுக் கோபத்துடன் கேட்டேன். "நகைக்காமல் அழச் சொல்கிருயா மகனே?" என்றுள்.

நான் பேசவில்லை. தமிழன்னையின் முகத்தை நோக்கிக் கொண்டிருந்தேன். மீண்டும் பேசலானுள் நம் தமிழன்னை.

"கேள் மகனே கேள்! நகைப்பதின் காரணத்தை. பண்டு நானிருந்த வனப்பென்ன? இன்று என் வனப்பென்ன? அன்று அரியணை ஏறி நின்றேன். இன்று ஆதரிப்பாரற்றுக் கிடக்கின்றேன். என் அடி பணிந்து வாழ்ந்தனர் புலவர் பெருமக்கள். இன்று புல்லர்களால் இழித்துரைக்கப் படுகின்றேன். அனறு மண்டலத்தையே மண்ணேடு மண்ணுக்கினர், எனக்காக! இன்றே வாய் பொத்தி—க்கைகட்டி--கட்டியங்கூறி நிற்கின்றனர். அன்று என்னைப் பரப்ப—வளர்க்கத் திக்கெட்டும் போயினர்—வளர்த்தனர். இன்றே எனக்குச் சிறப்பில்லை—சீரில்லை. நின்னைப்போன்ற இளங் காளையர் சோம்பலுடன் கூம்பி வாழ்கின்றனர். மொழிப்பற்று இல்லை; நாட்டுப் பற்றில்லை. என் அங்கத்தில் ஒரு பகுதி மாற்ருரிடம் போய்விட்டது. அதை மீட்க இங்கு எவருமிலர். என்னை இகழ்ந்தான் எனக்கேள்வியுற்று களம நோக்கிச் சென்றுன் சிலப் பதிகாரம் கூறும் காவலன். கலிங்கத்தையும்--கடாரத்தையும் ஈழத்தையும் வெற்றிகொண்டனர் பலர். வீரப்பண் பாடி நின்றுன். யானும் களிப்புக் கடலில் நீந்தலுற்றேன். கல் தோன்றி—மண் தோன்ருக்காலத்தே முன்தோன்றிய நான் இன்று இகழப்படுகின்றேன்——ஒதுக்கப்படுகின்றேன். என்னை வீழ்த்தப் பார்க்கின்றனர் வடவர்கள்! யாறு வீழ்பவள்? வீழேன்; வீழேன; வானிடிந்து வீழினும் வீழேன். என்றும் வாழ்வேன். பாசறையிலே பேசிய மொழி—சந்தியிலே வந்த மொழி இந்தியாம் அதனைக் கூசாது கொணர்கின்றனர் ஆட்சி மொழியாக! இலக்கணமிலா மொழி——பேச இனிமையிலா மொழி—அதற்கு அரியணையா? என்னை மூந்திக்கொள்ள—அழிக்கப் பலர் திட்டம் தீட்டினர்—யானிருக்கும் இடமெல்லாம் மேலே இந்தி—நான் கீழே! அன்று எனக்காக—என் வளர்ச்சிக்காக இரத்தம் சிந்தினீர்கள். இன்று வாளா கூம்பிக் கிடக்கின்றீர்கள். உம் தோளுரம் எங்கே? எங்கே? மொழிப்பற்றெங்கே? கடமை எங்கே? எங்கே? எங்கே?"

தமிழன்னை நீண்ட சொற் பொழிவே ஆற்றினுள்!

சொற்பொழிவா அது? அல்ல. உணர்ச்சியை—மொழிப்பற்றை—நாட்டுப்பற்றை தூண்டிய அறிவுரை.

நான் உணர்ச்சிவசப்பட்டேன்.

"அன்னையே! என் அறிவுக் கண்ணை திறந்த அன்னையே! என் அருமைத் தாய்க்கு—(மொழிக்கு) ஏதேனும் தீங்கு நேரின் என் ஆருயிர் போகினும் கவலை கொள்ளேன். அதோ பாருங்கள்! நாட்டைக்காக்க-மொழியைக் காக்க எத்தனை எத்தனை இளங்காளையர்—முதியவர்——பெண்கள் அணி வகுத்துச் செல்லும் அணியைப் பாருங்கள். சிறைக்கோட்டமும் எங்கட்கு இடைத்திடினும் கவலையில்லை. வெற்றிப் பாதையில் செல்ல எத்தனை வீரர்கள் காத்திருக்கிருர்கள் தெரியுமா? அறப்போர் நடாத்த அதோ போகிருர்கள் பாருங்கள் தாயே! மொழி—எங்கள் தமிழ்மொழி வாழ்க வெனும் குரல்—உரிமை முழக்கத்தைக் கேட்பீர் தாயே! ஆளும் கட்சியினர் அல்லவோ வடவர்க்குக் கைகட்டி—வாய்பொத்தி நிற்பவர். நாங்கள் அல்ல. நேற்று வந்த மொழி இப்பொன்னாட்டில் பரவினுல் அறப்போர்--போர்! செங்குருதி பாய்ந்தாலும் சாயோம். தமிழ்—தமிழ் என்பதே எங்கள் மூச்சு. கடமை—கடமை என முழங்குகிருர்கள் அதோ! உங்கள் செவியில் விழவில்லையா?" என்றேன் ஆவேசத்துடன்.

"என்னருமை இளங் காளையர்காள்! யான் வேண்டுவது தாய்மொழி வாழவேண்டும்—உயர வேண்டும் என்பதே! மொழிக்காக—நாட்டுக்காக என்றும் பாடுபடுங்கள். இந்தக் 'கடமை உணர்ச்சி' என்றும் வாழ்க! வருகின்றேன் மகனே!" என்று கூறிவிட்டு மறைந்து சென்றுள் நம் தமிழன்னை.

விழித்துக்கொண்டேன்; எதிர் வீட்டுக் கூரைமேல் நின்று கொண்டு ஒரு சேவல், "கொக்கரக்கோ" எனக்கூவி எழுப்பிற்று அனைவரையும். "கடமையைச் செய்யுங்கள்" என்று கூவிற்ருே என்னவோ? என்னே அதன் கடமை உணர்ச்சி.

★

ஏது நாடு?

—பி. வி. கிரி—

பொன்னி வளநாடு புகழ் ஏர் சிறந்த நாடு; பொன்னும் மணியும் மின்னியதாம் கன்னித் தமிழ்நாடு, பல்கலையும் தெரிந்தறிந்த பழமைப்பெருநாடு, பாணர்களும் தமிழ் வாணர்களும் வாழ்ந்து வந்த நாடு, மும்மணியாம் மூவேந்தர் ஆண்ட தமிழ்நாடு, முத்தமிழின் மணம் வீசும் முடியணிந்த நாடு, காரி, பாரி, ஓரிகளை வழங்கிய சீர்நாடு, சிற்பங்களும் சித்திரமும் சிறந்து பொலிந்த நாடு, சிலம்பினுடன் முப்பாலும் பிறந்த தமிழ்நாடு, வந்தாரை வாழவைத்த வண்டமிழ் நாடு, அன்பும் அறனும் நிலைத்த அழகிய தமிழ்நாடு. இத்தகு எல்லாவளமும் நலமும் பெற்றுத் திகழ்ந்த நன்னாடு இன்று எந்த நிலையிலே உள்ளது? உணவும், உடையும், உறையுளும் இன்றிக், கணமும் களிப்பின்றி வாழும் கணக்கற்ற ஏழைக் குடும்பங்கள் நடைபாதையின் ஓரத்திலே! வந்தாரை வாழவைத்த வண்டமிழ் நாட்டில் இன்று வாழ்வோர்க்கு வாழ வழியின்றி வறுமை தலைவிரித்தாடும் கோலநிலை காண்கிறோம்.

நடைபாதையின் ஓரத்திலே ஒதுக்கப்பட்ட ஏழைக் குடும்பங்கள் வெயிலையும், மழையையும், குளிரையும் பொருட்படுத்தாமல் வாழ்க்கையை நடத்துகின்றனர். "ஒதுக்கப்பட்டவர்கள்" ஆயிற்றே [illegible] ஒதுக்கப்பட்டோர் [illegible] நடைபாதையின் ஓரத்திலே! ஒரு காலத்தில் உயர்ந்த குடியினர் என்று கருதப்பட்டவரே இன்று ஏற்பட்ட சாதி மத வேறுபாட்டால் அவர்கள் தீண்டப்படாதவர்கள் என்று ஒதுக்கப்பட்டனர் உயர் குடியைச் சேர்ந்த உன்மத்தமர்களால்! "துடியன், பாணன், பறையன், கடம்பனென்று இந்நான்கல்லது குடியுமில்லை!" (புறம் 355) என்றார் சங்கப் புலவர் மாங்குடி மருதனார். இன்று தாழ்த்தப்பட்டவர்கள் என்று கூறப்படும் 'பறையன்' என்போரின் உயர் தன்மையை விளக்கினார். ஆக இவர்கள் மட்டுமில்லாமல், பொதுவாகத் தமிழர்களில் பெரும்பாலோர் கால்வயிற்றுக் கஞ்சிக்கும், கட்டக் கந்தலுக்கும், உறங்க உறையுளுக்கும் வழியின்றி வதைகின்றனர். இந்த அவல நிலை அழியும் நாள் எந்நாளோ அந்நாளே ஓர் நன்னாள். அந்நாடே ஒரு பொன்னாடு.

வேற்று நாட்டு அலுவலர்களும், அமைச்சர்களும், அதிகாரிகளும் தமிழகத்துக்கு வரும்போது அவர்களுக்குச் சுற்றிக் காண்பிக்க 'மெரினா கடற்கரை'தானா கிடைத்தது? ஏன், ஏழை மக்கள் வாழும் (வீழும்) நடைபாதையின் சாலை கிடைக்கவில்லையா? ஏழை மக்களின் வாட்ட நிலையை அவர்கள் காணக்கூடாதா? கொட்டமடிக்கும் பணக்காரர்களின் வீதியிலேதான் பவனி வரவேண்டுமா? ஐயோ, அரசாங்கமே!

வறுமையால் பசி, பசி என்ற ஓலம் மட்டும் நம் காதில் விழவில்லை. பிணி என்ற ஓலமும் கூடத்தான்.

பெரும் பிணிக்கு இரையாவோர் பெரும்பாலோர் ஏழை மக்களாகவே இருக்கின்றனர். சாதாரணமாக ஒரு தலைவலியோ, சுரமோ வந்துவிட்டால் பணக்காரன் பணம் படைத்து பணத்தை இறைத்து, டாக்சி, தனி மருத்துவர் — இப்படிச் செலவழிக்கிறான். கொடிய நோயெல்லாம் தாங்கி மடியப் போகும் நிலையிலிருக்கும் ஏழைக்கெங்கே இந்த வசதி? ஏழைகள் பெரும்பாலும் பிணிக்காளாகி, பிணச்சாம்பலாவதற்குக் காரணமென்னவாம்? அவர்களுக்குப் போதிய சுகாதார வசதிகளோ தங்க இடமோ தரப்படாமையே, மேலும் இதுபோன்ற குறைகள் பல. குறைகளை ஓரளவு நிவர்த்திக்கலாம். வெறும் ஐந்தாண்டுத் திட்டம், 2-வது ஐந்தாண்டுத்திட்டம் என்று ஐம்பதாண்டுத்திட்டம் வகுத்தாலும், ஏழைகளின் வாட்டத்தைப் போக்க முடியாது. நாடும் உருப்படாது. இது உண்மை.

எனவே ஏது நாடு?
பசியில்லாத நாடு
பிணியில்லாத நாடு
பகையில்லாத நாடு
இதுவே பொன்னாடு

இதை வள்ளுவப் பெருந்தகையார்

உறு பசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு.

என முப்பாலில் கூறிப்போந்தார்.

★

எலும்பும் தசை நார்களும் சேர்ந்து ஒரு மனிதனை உருவகப்படுத்திவிட முடியாது. கண்டோர் வியக்கும் அழகுடன் மட்டும் இருப்பதாலோ அன்றி அழகான ஆடை, ஆபரணங்கள் பூண்டு உல்லாசச் சீமானாய் உலவிக் கொண்டு இருப்பதனாலோ அவனை மனிதன் என்று கூறிவிட முடியாது. மனிதன் என்ற பெயருக்கேற்ப அவன் மனிதத் தன்மையுடன் இருக்க வேண்டும்.

அறிவும் திருவும்

—கா. வேழவேந்தன்—

அறிவை நிலவென்றால், திருவை கதிரவனுக்கு ஒப்பிட்டுக் காட்ட முடியும். நிலவு வான்வெளியில் உலாவரும்போது, கதிரவன் எங்கோ ஓய்வெடுத்துக் கொள்ளச் சென்றுவிடுகிறான். பகலவன் பவனி வரும்போது செம்மண் பாதையிலே மறைந்துகிடக்கும செப்புக்காசைப்போல, நிலவோன் எங்கோ சுவடு தெரியாமல் மறைந்து கிடக்கிறான்.

வான் வெளியில் மட்டும் இந்த விந்தை நிறைந்த செயல் நடைபெறுகிறதென்று எண்ணிவிடாதீர்கள்; வையகத்திலே வாழும் பல பெரிய மனிதர்களிடமும் அறிவும் திருவும் ஒரே நேரத்தில் சந்திப்பதில்லை. எனவே சில நாட்களில் நீலத் திரைவானில் நிலவோனும் பகலவனும் ஒன்றாகத் தெரிவதைப்போல், சில அறிஞர்கள் இந்தக் கோட்பாட்டுக்கு மாறுபடுகிறார்கள்.

'இரு நகரக்கதை' எழுதி இறவாப் புகழ் பெற்ற 'சார்லஸ் டிக்கன்ஸ்' ஆங்கிலக் கதாசிரியர்களில் புகழ் பூத்தவர். அவர் இறக்கும் தறுவாயில் அவர் எழுதிய ஒவ்வொரு சொல்லுக்கும் மூன்று மூன்று பவுன் தருவதாக அவரை முற்றுகையிட்டார்கள் நூல் வெளியீட்டாளர்கள். ஆனால் அறிவாற்றலும் கற்பனைத் திறனும் ஒருங்கே படைத்த அந்தக் கலைஞர் தன் பிஞ்சுப் பருவத்தில் கால் வயிற்றுக் கஞ்சிக்காகப் படாதபாடுபட்டார். பத்தாவது வயதிலேயே பழக்கொத்துப்போன்றிருந்த அவர் குடும்பத்தின்மீது பொறாமைக்காரச்சமுதாயம் கல்லை வீசி எறிந்தது. சொந்தத் தந்தை துன்பத்தை வாரியணைத்துக் கொண்டு சிறைசென்றார். சுந்தரத் தாய் வீடு வீடாகச் சென்று தொழில்புரியும் வேலைக்காரியானாள். நாதியற்ற டிக்கன்ஸ் வீதி வீதியாக அலைந்தார். மருந்துக் கடையொன்றில் மணிக் கணக்கில் தங்கியிருந்து புட்டிகளுக்கு 'லேபில்' ஒட்டினார். தூங்குவதற்குக் கிடைக்கும் கொஞ்ச நேரத்தில் விழிகளை ஏய்த்துவிட்டு, கதை எழுதத் தொடங்கினார். இருட்டு அறையில், நான்கு சுவர்களுக்கிடையில் அந்த ஏழை எழுதிய கதைகளை விளம்பர உலகம் முதலில் பொருட்படுத்தவில்லை. ஓய்வோ அன்றித் தலைசாய்வோ இல்லை டிக்கன்ஸ்! அதன் பலன் ...? அவர் எழுதிய 'கிரிஸ்மஸ் கரோல்' என்ற எழுத்தோவியம் எத்தனை ஆயிரம் பிரதிகள் விற்றதென்றே கணக்கிட முடியாமற் போய்விட்டது! மதிக்க மறந்த இந்த உலகத்தை உழைப்பு என்னும் சாட்டை கொண்டு துதிக்கவே வைத்தார் டிக்கன்ஸ். அன்று வறுமையில் உழன்ற டிக்கன்ஸ்தான் இன்று வையகமே மறக்கமுடியாத நிலை பெற்றுவிட்டார்.

என்றுமே இறவாத தத்துவங்களைத் தன் எழுதுகோலால் படைத்துக் காட்டியவர் இத்தாலிய மாக்கவிஞர் 'தாந்தே' பிறக்கும்போதே அறிவுச் செல்வத்தை வாரிக்கொண்டு வந்த தாந்தே, இந்த நானிலத்தில் பொருட் செல்வத்தை மட்டும் பெறாமலே வாழ்ந்து மடிந்தார். மாக்கிளையைப்பற்றியிருந்த கையை விட்டுவிட்ட பிறகு, மதியினை மதிக்கும் முட்டாளைப்போல, அந்த மாபெரும் கவிஞனை வகை அறிந்து பாராட்டத் தவறியது இந்த வையகம். உணர்ச்சி நிறைந்த கருத்துக்களின் ஊற்றான அந்த உடல், வறுமைப்பிணியால் கொஞ்சம் கொஞ்சமாகக் கருகி மடிந்தது. ஈடு இணையற்ற அந்தக் கவிஞர் ஏழையாகவே மடிந்தார். இறுதிக் காலத்திலும் அவர் ப்ளாரன்சிலிருந்து ஓட ஓட விரட்டப்பட்டார்; இந்தப் பாழான உலகத்திலிருந்து ஓடிய அவர் ஒரு பாழடைந்த மாதா கோவிலைத் தஞ்சமடைந்தார். அங்கே அவர் எழுதிய 'திருக் காட்சி' என்ற எழுத்தோவியம்! இலக்கியப் பூங்காவில் தங்கநிற ரோஜாவாக மிளிர்கிறது. பாவம்! டிக்கன்சிடம் வணிகனாகவேனும் நடந்துகொண்ட இந்த உலகம், தாந்தேயிடம் கொள்ளைக்காரனாகவே மாறிவிட்டது!

இலக்கியமென்னும் கத்தியை அத்தனை துறைகளிலும் கூர் பார்த்தவர் எழுத்துலக மேதை 'எச். ஜி. வெல்ஸ்' ஏழ்மையைத் தோழமை பூண்ட குடும்பத்திலே வந்தவர். அவர் தந்தையோ தெருவிலே பானை விற்றுப் பிழைத்து வந்தார்; தாய் நாலைந்து வீடுகள் ஏறி, வேலைசெய்து குடும்பத்தை நகர்த்தி வந்தாள். சின்னஞ்சிறு வயதிலேயே—ஏனையோர் அறிவுச் செல்வத்தைத் தேடி, கல்விச் சாலைக்குப் போய்க்கொண்டிருந்த நேரத்தில்-வெல்ஸ் ஏதேனும் வேலை கிடைக்குமா என்று தெருத்தெருவாக அலைந்தார். துணிக்கடையிலும் மருந்துக்கடையிலும் இருந்து ஓயா

...புரிந்தார். சிறகு முளைக்காத பறவையை, தாய்ப்பறவையே இரைதேடி வருமாறு கூட்டி விருந்து விரட்டினால்—? வெல்ஸ் தன்னுடைய அவல நிலைகண்டு நெஞ்சம் வெந்துபோனார். அந்த அரும்பு உள்ளம் தன்னுடைய அருமையான உயிரையே மாய்த்துக்கொள்ளத் துணிந்துவிட்டது. ஆனால் ஓர் ஆசிரியர் அவருக்கு ஆதரவு தந்தார். வெல்சின் வாழ்வுத் தொடர் திசை மாறியது. தொடக்கத்தில் 5-ஆண்டுகள் வரை எழுதிய கதை, கட்டுரைகளை மனகு அமையவில்லையே என்று கொளுத்திவிட்ட அதே வெல்ஸ், பின்னர் தன பேனாவால் மட்டும் 2-இலட்சம் பவுன் சம்பாதித்தார். வறுமைப்பேய் அறிவை அழிக்க முனைந்தது; ஆனால் எப்படியோ அறிவு அதை வென்றேவிட்டது; எச். சி. வெல்ஸ் இறவாத புகழ் பெற்றார்.

'சமுதாய ஒப்பந்தம்' எழுதி, பிரஞ்சு நாட்டுச்சரித்திரத்திலேயே சாகாத இடம்பெற்றவர் 'ரூசோ'. வாளெடுத்துப் போர் தொடுத்த பிறகே ஒரு நாட்டின் வழிமுறைகளை மாற்றியமைக்க முடியும் என்பதைத் திருத்தி, பேனாமுனையாலேயே புத்துலகம் காண முனைந்தவர் அந்த அறிவுலக மேதை. ஆனால் உலகம்போற்றும் அதே ரூசோதான் தொடக்க நாட்களில் ரொட்டிக்கு வழியின்றி, பார்ப்போர் பரிதாபப்படுமாறு அலைந்து திரிந்தார்.

'ஐரோப்பாவின் வியாதி' என்று அழித்தெழுதாக் கறைபடிந்த துருக்கியின் தலைவிதியையே மாற்றியமைத்து, அனைத்துலகும் மதிக்கச் செய்த 'முஸ்தபா கமால் பாஷா' ஏழையர் மரபிலே வந்த ஏந்தல்தான்! அவர் தந்தை கடற்கரை அலுவலகத்தில் மிகக் குறைந்த சம்பளம் பெற்று வாழ்ந்த ஓர் ஏழைக் குமாஸ்தா. குமாஸ்தாவின் மகனான கமால் பாஷாதான் குவலயமே போற்றும் நிலைக்கு உயர்ந்தார்.

அடிமை விலங்கொடிக்க அரும்பாடு பட்ட 'ஆப்ரகாம் லிங்கன்' ஜனாதிபதியாகவே பிறந்தவரல்லர்! இரவல் வாங்கிவந்த புத்தகங்களைப் படிப்பதற்குக்கூட அடுப்பு வெளிச்சத்தைத் தேடிச் சென்றவர். விறகு வெட்டியின் தவப்புதல்வரான அவரால், எழுதிப் படிப்பதற்கு வேண்டிய கற்பலகைகளைக்கூட கனவிலும் நினைத்துப் பார்க்க முடியவில்லை. சுண்ணாம்புக் கட்டியால் மண்வெட்டியின் மீது எழுதி எழுதிப் பழகினார். ஆனால் அதே லிங்கன்தான் அகில உலகமும் போற்றும் பேரறிஞராகத் திகழ்ந்தார்!

பணம் படைத்த அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியாக இருப்பவர் 'ஐசன்ஹோவர்' உழைப்பை உடன்கொண்டுவந்த அவர், பணத்தோடு பிறக்க மறந்துவிட்டார். கான்ஸாஸ் நகரத்தில் நித்த நித்தம் பாத்திரம் கழுவியும், பசு மாடுகளை மேய்த்தும் வாழ்க்கையைத் தொடங்கிய அவர்தான், இன்று செல்வம் கொழிக்கும் ஒரு பெரிய வல்லரசின் முதல் தலைவராகத் திகழ்கிறார்!

எவ்வளவோபேர் வளமும் வசதியும் பெற்றுவாழ, எத்தனை எத்தனையோ அறிவியல் கருவிகளைக் கண்டு பிடித்துத் தந்தவர் விஞ்ஞான வித்தகர் 'தாமஸ் ஆல்வா எடிசன்.' ஆனால் அவரோ இளவயதிலேயே பொருளீட்ட வேண்டிய அவசியத்தால், இரயிலில் சென்று காய்கறிகளைக் கூவிக் கூவி விற்றுவந்தார். இலாபத்தையும் நஷ்டத்தையும் கணக்குப் போட்டுப் பார்த்த அதே மூளைதான், நாகரிகத்தின் முன்னேற்றத்திற்கான பலப்பல அறிவியல் படைப்புகளை உலகுக்குக் கண்டுபிடித்துத் தந்தது.

புற்று நோய்க்கே ஒரு முடிவு கட்டும் ரேடியத்தைக் கண்டறிந்த 'மேடம் கியூரியம்மையார்' ஒரு பணக்காரியின் வேலைக்காரியாக இருந்தார். உலகிலேயே ஒப்பற்ற செல்வரான 'ஹென்றி ஃபோர்டு' ஓர் ஏழை உழவரின் மகன்; இளமையிலேயே வீட்டைவிட்டு ஓடிப்போய் எதிர்பாராத இன்னல்களை எல்லாம் சந்தித்த அவர் மூளையிலே உதித்தது தான் இன்று சாலைகளிலே பரபரப்பூட்டும் மோட்டார் வண்டிகள்.

மண்ணெண்ணெய்க் கிணறு தோண்டி, எண்ணற்ற அளவில் செல்வம் படைத்தவர் 'ராக்பெல்லர்.' வையகமே என்றும் மறக்க முடியாத அளவு அறவாழ்வு வாழ்ந்தவர். ஆனால் அதே ராக்பெல்லர்தான் முதலில் உருளைக் கிழங்குகளை வெட்டிக்காயவைக்கும் வேலையில் ஈடுபட்டு வயிறு காய்ந்துவிடாமல் பார்த்து வந்தார்!

தத்துவ நூலின் தந்தை 'சாக்ரடீஸ்' கோழிக் குஞ்சுகளைக் 'கடன் வாங்கிக் காலங்கழித்தவர்; இறக்கும்போதுகூட, தன்னை நெருங்கியவர்களிடம் தான் கடன் வாங்கிய கோழிக்குஞ்சைத் திருப்பித் தந்துவிடுமாறு வேண்டிக்கொண்டிருக்கிறார்!

செகமெலாம் ஏற்றிப்போற்ற, ருஷ்ய நாட்டின் மாபெரும் தலைவனாக விளங்கிய 'ஸ்டாலின்' அன்றாடம் செருப்புத் தைத்துக் காலந்தள்ளிய ஓர் ஏழைக்குத்தான் மகனாகப் பிறந்தார்!

'மூலதனம்' என்ற அரிய பொருளியல் நூலை அளித்த 'கார்ல்மார்க்ஸ்' செல்வத்தில் புரண்டெழுந்தவர்கள் மத்தியில் பிறந்து இந்தச் சிறந்த நூலை எழுதவில்லை; அவரும் மிகமிக எளியவரின் குடும்பத்தில் வந்தவர்தான்!

நாற்றமில்லாத வெங்காயமும், முள்ளில்லாத ரோஜாவும் உற்பத்தி செய்ய இந்த நானிலத்திற்குக் கற்றுக்கொடுத்த விஞ்ஞான மேதை 'லூதர்பர்பாங்' உணவுக்காகத் தெரு நாயுடன் போராடிய பிச்சைக்காரராக வாழ்ந்தார்!

இவர்களையெல்லாம் நாம் காணும்போது, என்றோ 1800-ஆண்டுகளுக்குமுன் எடுத்துச் சொல்லிச் சென்றாரே, நம் வள்ளுவர். அவர் சொற்கள் நினைவுத் திரையில் வந்து மோதுகின்றன:

'இருவேறு உலகத்தியற்கை திருவேறு தெள்ளிய ராதலும் வேறு'

★

> முள் நிறைந்த செடியிலே தான் வனப்பும் வாசனையும் தருகின்ற ரோஜாப்புஷ்பம் மலர்கின்றது. அதுபோலவே, சொல்லொண்ணாத் துயரங்களுக்கும் தாங்கமுடியாத எதிர்ப்புகளுக்கும் மத்தியிலேதான் உண்மை பூத்து மலர்கிறது.

இந்தி வெறியர்களுக்கு!

—[★]—

இந்திப் பிரச்சினை இன்னும்தீராமலே இருந்து வருகிறது. இந்தியை உத்தியோக மொழியாக்க வேண்டுமா வேண்டாமா; உத்தியோக மொழியாக்கினால் புதிய 'பரீட்சை' என்று முதல்தொடங்குவது? ஆங்கிலத்தையும் இன்னும் கொஞ்சக் காலத்துக்கு இந்தியுடன் உத்தியோக மொழியாக வைத்திருப்பதா வேண்டாமா? என்பன போன்ற, இந்தியுடன் சம்பந்தப்பட்ட, பல பிரச்சினைகளுக்கும் ஒருவித முடிவும் ஏற்படவில்லை. திரு. இராசகோபாலாச்சாரியைப் போன்ற தென்னாட்டுத் தலைவர்களின் தீவிர எதிர்ப்பினால், வடநாட்டு இந்திவெறியர்கள் நினைத்தபடியெல்லாம் நடக்காது என்பது தெளிவாகியுள்ளது.

எந்த ஒரு காரணத்திற்காகவும் இந்தி அரசாங்க மொழியாகக் கூடாது என்று ஆச்சாரியார் போன்றவர்கள் தகுந்த காரணங்களுடன் வாதாடும்போது, இந்தியையும் ஆங்கிலத்தையும் ஒரே அந்தஸ்தில் ஏற்றுக்கொண்டு 'அர்த்தநாரீசுவர பதவி' கொடுத்திருக்கின்றனர் சென்னை அரசினர்.

அரசாங்கமொழிப்பிரச்சினையைப் பொறுத்த வரையில், ஒருவித தெளிவற்ற இரண்டுங்கெட்டான நிலைமையே நீடித்து வருகிறது. இந்தி வெறியர்கள் தெளிவற்ற தன்மையிலும், இந்தி பேசாத பகுதியினர் இரண்டுங்கெட்டான நிலைமையிலும் இருந்து வருகின்றனர். இந்நிலையில், சில அமைச்சர்கள், தலைவர்கள் ஆகியோரின் பேச்சுக்கள், மக்களிடையே மனப்பூசலையும் குழப்பத்தையும் பீதியையும் தூண்டிவிடுவனவாக அமைந்திருக்கின்றன.

இந்திய சர்க்கார் கல்வியமைச்சர் ஸ்ரீமாலி சமீபத்தில் கூறியிருக்கிறார், தேச ஒற்றுமையை முன்னிட்டு இந்தியப் பல்கலைக் கழகங்கள் எல்லாம், ஒரு பொதுமொழியைப் போதனா மொழியாகக் கொள்ளவேண்டும் என்று. எது பொதுமொழியாகவிருக்கவேண்டுமென்பதை அவர் குறிப்பிடவில்லை. ஆனால், அது ஓர் அன்னிய மொழியான ஆங்கிலமாக இருக்கக்கூடாது என்பது அவர் திடமான கருத்தாகும். ஆகவே, இந்தியப் பல்கலைக் கழகங்களெல்லாம் இந்தியையே போதனா மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே ஸ்ரீமாலியின் விருப்பம் என்பது புலனாகிறது. இதே விருப்பத்தை வேறு பல வடநாட்டுத் தலைவர்களும் தெரிவித்திருக்கின்றனர்.

> கேரளத்தைச் சேர்ந்த கோட்டையம் நகரிலிருந்து பிரசுரிக்கப்படும் **"கேரள பூஷணம்"** என்ற மலையாள தினசரியின் 5—6—58 இதழில் வெளியிடப்பட்ட தலையங்கத்தின் தமிழாக்கம்தான் இங்கு தரப்பட்டிருப்பது.

இந்த விருப்பத்தை நிறைவேற்றவும் அவர்கள் முயலக்கூடும் என்ற பீதி ஏற்படலாம். வடநாட்டு இந்திவாலாக்களுக்கு, இந்தியைத் தேசியமொழியாகவும் உத்தியோக மொழியாகவும் ஆக்கிவைத்தாலும் போதாது; பல்கலைக் கழக மொழியாகவும் அங்கீகரித்தால்தான் அவர்கள் ஓய்ந்திருப்பார்கள். இவற்றையெல்லாம் கண்டும் கேட்டுங்கூட, இனியும் தென்னாட்டு மக்கள் எப்படிக் கலக்கமடையாமலிருக்க முடியும்?

எவ்விதமேனும், இந்தி பேசப்படாத மாநிலங்களிலுள்ள பல்கலைக் கழகங்கள், இந்தி வெறிக்கு இரையாகுமென்று நினைக்க முகாந்திரமில்லை. ஆங்கிலத்தைக் கைவிட நேர்ந்தால், பிரதேச மொழியைத்தான் போதனா மொழியாகக் கொள்ளவேண்டும் என்ற கருத்தையே பல பல்கலைக் கழகங்களும் தெரிவித்திருக்கின்றன. இந்தி பேசப்படாத மாநில பல்கலைக் கழகங்களெல்லாம் இந்தக் கொள்கையைக் கடைபிடிக்கக்கூடும். நமது (கேரள) கல்வியமைச்சரும் இதைத்தான் ஆதரித்திருக்கிறார்.

மொத்தத்தில், வடக்கத்தியர், அரசியல் சட்டத்தின் கால வரம்புக்குள் ஆங்கிலத்தின் இருப்பிடத்தில் இந்தியைக் கொலுவேற்ற முயலுகின்றனர் என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. புற்றிலிருந்து தலை நீட்டும் பாம்பைப்போல, அவர்களது 'ஆர்வம்' அடிக்கடி தலைநீட்டுகிறது. இதை நன்கு புரிந்துகொண்டே, சர். பி. டி. ராஜன் எச்சரித்திருக்கிறார், இந்திபேசாத மக்கள் மீது இந்தியைத் திணித்தால் ஒற்றுமைக்குப் பதில் பிளவுதான் ஏற்படும் என்று. இந்தத் 'திணிப்பு இயக்கம்' தலைதூக்கி வருவதன் காரணம், மத்திய அமைச்சரவையில் உத்தரப் பிரதேசத்தினருக்குள்ள பெரும்பான்மையே என்பது அவர் கருத்தாகும்.

இந்திப் பிரச்சினை சம்பந்தமாக எழுந்துள்ள நிச்சயமற்ற நிலைமை மேலும் நீடிப்பது ஆபத்தானது. பெரும் பான்மையினர் விருப்பத்தை மதிப்பதே ஜனநாயகம் என்றால், இன்னும் சிறிது காலம் ஆங்கிலமே உத்தியோக மொழியாக நீடிக்க, உடனடியாக அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும். வடநாட்டு அமைச்சர்களும் தலைவர்களும் இதற்கு இணங்க மறுத்தால், இந்தி பேசாத பிரதேச மக்கள் இதற்காக ஒருமுகமாக நின்று போராடவேண்டும்.

கோவை மாவட்ட

தி. மு. க. 3-வது மாநாடு

1958 ஜூலை 5, 6 சனி, ஞாயிறு ஆகிய நாட்களில்

கோபிசெட்டிபாளையம்

வி. பி. இராசு நகரில் அமைந்துள்ள அர்ச்சுனன் பந்தலில்
நாகம்மையார் அரங்கில் நடைபெறும்.

தலைவர்	திறப்பாளர்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி M. L. A.	**ஆர். தர்மலிங்கம்** M. P.

அண்ணாதுரை, நாவலர் **நெடுஞ்செழியன்**

கழகக் காவலர்கள், மாவட்டச் செயலாளர்கள்,
நடிகச் செல்வர்கள் அனைவரும் வருவர்.

★

மராட்டியத் தலைவர்கள்:

பாவாசாகிப்மகாதவுன்கர் எம். பி., **பி. ஆர். சாவன்** எம். பி.

மாநாட்டையும், தி. மு. க-வையும் காணவருகின்றனர்!

★

இயல், இசை, நாடக நிகழ்ச்சிகள்

சிறப்பான முறையில் நடைபெறும்.

தாயகத்தோரே! தவறாமல் வருவீர்! நம்புகழ் நாட்டுவீர்!!

இரு நாட்களுக்கும் நுழைவுக் கட்டணம்:—ரூ. **5, 3, 2,** பெண்களுக்கு ரூ. **1**

ப. நாராயணன் வ. கு. தலைவர், ஈ. வெ. கி. சம்பத் எம். பி. பொருளாளர்.
எஸ். அப்பாவு, பி. ஏ. சாமிநாதன் செயலாளர்கள்.
கே. எஸ். சீரங்கராயர், ஜி. கே. பழனிச்சாமி தொ. ப. தலைவர்கள்.
ஜி. ஏ. வெங்கடாசலம் விளம்பரப் பொறுப்பு.

"காமிக்" காட்சி!

—பழனி—

"கோப்பன் மவனே, அடிப்பியோ, சிங்கண்டா" என்று ஆத்திரத்தில் ஆரம்பித்து, அழுகுரலில் முடிக்கும் காட்சியை 'சகுந்தலை' படம் கண்டோர் மறந்திருக்க முடியாது. கையாலாகாதவனுக்குப்பேச்சிலே காரம் இருந்து என்ன பயன்?—எனபதை, கலைவாணர் N. S. K. அவர்கள், T. S. துரைராஜ் மூலம் உணர்த்திய காமிக் அது! உரத்த குரலில் ஆரம்பித்து, உட்கார்ந்த படி ஒலமிடும், அக்காட்சியை அன்பர் காமராசர், கவனமூட்டியிருக்கிறார், இக்கிழமை. தஞ்சைக்கருகிலுள்ள நடுக்காவேரி எனுமிடத்திலே, ஜூலை 19-ந் தேதி பேசுகையில் சொன்னாராம், "நான் ஏன் வடக்கிலிருக்கிற யாருக்கும் பயப்பட வேண்டும்?" என்று. விருதுநகராரின் வீரம், காண மகிழ்கிறோம்! ஆனால் அவ்வீரம், தீயைக்கண்ட கற்பூரமாகவன்றோ ஆகி வருகிறது, டில்லியைக் கண்டதும்!!

காமராஜ், கனகவிசயர் பரம்பரையல்ல; உழைத்துழைத்து உரமேறிய உடல் கொண்டவர். வீர இனம்! இவருக்கு வீரம் இல்லாதிருப்பின்வியப்புக்குரியதேயன்றி, வீரம் இருப்பது ஒருசிறப்பல்ல. கற்பு எப்படித் தமிழ்ப்பெண்ணின் சொத்தோ, அதுபோல வீரம் தமிழனின் பரமபரைக் குணம்! அஞ்சான், தமிழன். அதுவும், முத்துக்கடலும், முல்லைக் கொல்லையும் கொண்ட ஒரு வீரமரபின் வழிவந்த, அவர், யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை. எனினும், "நான் கற்பிழந்தவள் அல்ல" என்று சொல்லித் தெரிய வேண்டிய கட்டத்துக்கு அவர் அழைத்துவரப்பட்டு இருக்கிறார்! தஞ்சையில், அண்மையில், பெருமையோடு நடந்து முடிந்த தி. மு. க. மாநாட்டின், வெற்றி இது!!

"நான் ஏன் பயப்படவேண்டும்?" என்று கேட்கிறார். இதே, கேள்வியைத்தான் நாமும் கேட்கிறோம். வடக்கிற்கும், வடநாட்டிலிருக்கும் தலைவர்களுக்கும், இவர் ஏன் பயப்படவேண்டும்? காமராஜ் என்ன கங்காணி வேலை பார்த்தவரா! கைது செய்யப் போலீசார் வருகின்றனர் என்றதும் கழுநீர்ப் பானை எங்கேயுள்ளது என்று தேடி ஒளிந்தவரா! கழிசடையா—ஒன்றுக்கும் உதவாதவரா! ஒரு நாளுமில்லை. வடக்கில் வாழும் காங்கிரஸ் தலைவர்கள், எந்தள

அரங்கண்ணல்

வுக்குத் தியாகம் செய்ததாகச் சொல்லப்படுகிறதோ அந்தளவுக்குத் தியாகம் செய்தவர். இன்னும் சொல்லவேண்டுமானால் காங்கிரஸ் பணிக்காக, கலியாணமே செய்யாத பிரம்மச்சாரியாக இன்னும் இருந்து வருபவர். இப்போது காங்கிரஸ் தலைவராக இருக்கிறாரே தேபர், அவர் காங்கிரஸ் தலைவராக நேருவால் முடிசூட்டப்படுமுன், காங்கிரஸ் காரியக்கமிட்டியில் கூட அங்கம்வகித்ததில்லை. தெற்குஎன்றாலே காமராஜ் என்று சொல்லுமளவுக்கு, நீண்ட காலமாகக் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் இருந்து வருபவர். அப்படிப்பட்டவர், ஏன் வடவருக்குப் பயப்பட வேண்டும்? அவசியமும் இல்லை! அர்த்தமும் இல்லை!!

நாணலைக் கண்டு நரி பயந்திடுவதில் பொருளுண்டு; சிங்கம் ஏன் அஞ்சவேண்டும். புள்ளுக்குச் சிரம் குனிவதுண்டோ புலி? வில்லுக்கு அஞ்சுவாரோ வீரன்?—காமராஜ், தமிழ் நாட்டுக் காங்கிரசிலே சிங்கம். தேர்தல் களத்திலே புலி. எதிரிகளை வசியம் செய்வதிலே, சூரர். இப்படிப்பட்டவர், வடக்கைக் கண்டு ஏன் பயப்படவேண்டும்? எதற்காக வடக்கிலிருக்கும் தலைவர்களுக்காக அஞ்சுதல் வேண்டும்?—தேவையில்லை என்றே நாம் கூறி வருகிறோம்! தேசமாளும் அமைச்சரும், அதே கேள்வியைக் காரத்துடன் எழுப்புகிறார், நான் ஏன் பயப்பட வேண்டும், என்று!!

முதலமைச்சரின் முழக்கம், காதுக்கு விருந்து; ஆனால், கருத்துக்கு, கசப்பு மருந்தாகவன்றோ உள்ளது. அடிப்பியோ, சிங்கண்டா எனும் கதையை அன்றோ நினைவூட்டுகிறது.

"வடநாட்டினரே! உம்மோடு சேர்ந்து, சுதந்திரப் போரில் தெற்கும்தான் போரிட்டது.

•

சுதந்திரம் வந்தபிறகு திட்டங்கள் பல போட்டீர்கள். ஆலைகள் அங்கே! அணைக்கட்டுகள், வடக்கே! 100கோடி 200கோடி என்று ஏராளமான திட்டம் அங்கே! எமக்கோ, எதுவுமில்லை மிகமிகச் சாதாரணமான உதவிகள்தான் செய்துள்ளீர்.

•

ஒரு இரும்பாலைக்கு வழியில்லை — உர உற்பத்தி ஆலைக்கு வழி

யில்லை— இருப்பதெல்லாம் ஒரே ஒரு நெய்வேலி! அதுவும் 100-கோடிக்குள்தான்!

*

எந்நாட்டிலுமுள்ள தொழிலதிபதிகள்— அரசியல் வாதிகள்— ஏடுகள்—எல்லாம், இக்கேட்டை எடுத்துரைக்கின்றனர். எனினும் ஏதும், செய்யவில்லை?

*

என்ன நியாயம் இது? இது சரியா? சொல்லும்! சொல்லும்!!

என்று, இதுநாள்வரை, எப்போதாவது டில்லி பீடத்தை அதட்டிப் பேசியுள்ளாரோவெனின், இல்லையாது. எனினும், "நான் ஏன் வடவருக்குப் பயப்பட வேண்டும்; எனக்கு என்னைத் தேர்ந்தெடுத்த மக்கள் நலனில் தான் அக்கறை" என்று சொல்லுகிறார்.

நாடு, காடாகிறது. நலம் மலரவில்லை. இரண்டு ஐந்தாண்டு திட்டங்கள் போட்டும ஏதும் பலனில்லை—என்று, தி. மு. க. மட்டுமல்ல,

சர். சி. பி. இராமசாமி
அனந்தராமகிருஷ்ணன்
ஆச்சாரியார்
மெயில்
இந்து
மித்ரன்
சந்தானம்
அனுமந்தையா
அன்றுமாஸ்காரனீஸ்.....

போன்றோரும் சொல்லுகின்றனர்! இவர்கள் எல்லாம், எதிரிகளோ, நம்மைப்போல் நாட்டுப் பிரிவினை விரும்பிகளோ, அல்ல!! எனினும், நாட்டின் நிலைமையினை அவர்கள் அறிவதால், எதிர்காலம்பற்றி அஞ்சுவதால், எடுத்துரைத்து வருகின்றனர்.

சுதந்திரம் மலர்ந்து பத்தாண்டுக்குமேலாகியும், நாட்டைப்பார்க்கிறோம். நலிவு தீரவில்லை; குமுறல் தான் எங்கும்.

கண்ணீர்வடிக்கும் கைத்தறியாளர்!
கலங்கும் இலங்கைத் தமிழர்
வேலையில்லாமல் அலைவோர்.
விலைவாசி உயர்வு.

இப்படி, எதைப் பார்த்தாலும் பிரமிட் கோபுரம்போல் பெரிதாக வளர்ந்துள்ளதேயன்றிக் குறையவில்லை. நீரில்லாத பாலாறு! நிலமில்லா உழவன்! வேலையில்லா வாலிபன்! இயங்காத தறி!—இப்படித்தானிருக்கிறது, நாடு.

வடக்கைப் பார்த்திடலோ, தாமோதர் நதிப்பள்ளத்தாக்கு, கோசி அணை, சந்திகார் புதிய நகரம், பம்பாய் ஆலைகள். இப்படிப் பற்பல காட்சியளிக்கின்றன. போதாக்குறைக்குப் படம் எடுத்தும் காட்டுகின்றனர்.

இந்தப்பரிதாபகோலத்தை இதுநாள்வரை எடுத்துக் காட்டியதுண்டோ காமராசர்? வாதாடியதுண்டோ! வம்புசெய்ததுண்டோ! பயமின்றிக் கேட்டதுண்டோ!!

"சேச்சே! நான் என்ன பிரிவினை விரும்பியா? வடக்கு தெற்கு என்று பேச, நான் என்ன தேசிய உணர்ச்சி அற்றவனா! அப்படித்தான் வடக்கு வாழத் தெற்கு தேய்ந்துகொண்டா உள்ளது. சுத்தப் பொய். தி. மு. க-க்கள் பித்தலாட்டம் பேசுகின்றனர்" இதுபோலத் தானும், தனதுசகாக்களை விட்டும், ஆங்காங்கும் சங்கநாதம் செய்ய முற்படுகிறாரே ஒழிய, ஒரு நாள் கூட வடவருடன் வாதாடியது இடையாது. இவருக்கு முன்பு, இதே முதலமைச்சர் பீடத்திலிருந்த,

பிரகாசம்
ஓமந்தூரார்
குமாரசாமிராஜா
ஆச்சாரியார்

அனைவரும் வடக்கு, தெற்கை, வஞ்சிப்பதாக, சமயம் கிடைத்த போது எடுத்துச் சொல்லியிருக்கின்றனர். ஏடுகளைப் புரட்டினுல் கிடைக்கும். அதுமட்டுமல்ல, சென்றகிழமை, தெனுட்டில் சுற்றுப்பயணம் நடாத்திய அகில இந்தியப் பிரஜா சோஷியலிஸ்டு கட்சியின பொதுக் காரியதரிசியாம் கோரே என்பார், காமராஜ் 'பயம் ஏன் எனக்கு?' என்று வினு எழுப்பியதற்கு முதல் நாள் சென்னை நிருபர்களிடம் பேசும் போது,

"தெற்குமீது வடக்கு ஆதிக்கம், பொருளாதாரத் துறையில் பின் தங்கியிருப்பது ஆகியவைதான் பிரிவினை கோரிக்கை கிளம்பியிருப்பதற்குக் காரணம் என்ற வாதத்தில், சிறிது பசையிருக்கலாம்......"

என்று, எங்கே நமது குரலை ஒப்புக்கொண்டதாகி விடுமோ எனும் அச்சத்தில் வார்த்தைகளை அளந்து போட்டுப் பதிலளித்து விட்டு,

"அமெரிக்காவில், தொழில்கள் நிறைந்த வட பகுதிக்கும், விவசாய பிரதேசமான தென் பகுதிக்கும் பொருளாதார சமநிலை இல்லாமலிருந்ததால்தான், அங்கு உள்நாட்டு யுத்தம் மூண்டது. பொருளாதார சமநிலை இல்லாவிடில் இத்தகைய போக்குகள் தலைதூக்கும்"

என்று விளக்கமும் உதாரணமும் தந்திருக்கிறார். கோரே கூற்றின் சாரம என்ன? வடக்குத் தொழில் வளம் நிரம்பியது; தெற்கு விவசாய வளம கொண்டது. வடக்கு பணக்காரநாடு; தெற்கு ஏழை நாடு—என்பதுதானே!!

கோரே, ஒரு வடநாட்டுக்காரர்—அகில இந்தியா ஒன்ருக விளங்கவேண்டும் என்கிற ஆசை கொண்டவர்—அவர் கூட, இப்படிப் பேசுகிறார்! தென்னுடு, தொழில்வளம் இல்லாத இடம்—அப்படியிருந்தால் 'அமெரிக்கா போல உள்நாட்டுயுத்தம் ஏற்படத்தான் செய்யும்! என்கிற அளவுக்கு — எடுத்துரைக்கிறார். ஆனுல், காமராஜ்? இதைச் சொல்லும, நம்மீது, பாய்வதே தேசப் பணியென்று இருந்து வருகிறார்! அதே சமயத்தில், "நான், ஏன் வடவருக்குப் பயப்படவேண்டும்?" என்றும தோள் தட்டிக் கேட்கிறார்!!

நாட்டுவளம் ஒருபுறம் இருக்கட்டும்,

மொழிவளம்—பற்றி, பயமறியாப் பைந்தமிழர், என்ன செய்தார்? தபால் தலைகளைப் பார்க்கிறோம்; வயிறு எரிகிறது. ரேடியோவைப் பார்க்கிறோம்; 'வானொலி' போய் 'ஆகாஷ்வாணி' வந்திருக்கிறது. மெல்ல மெல்ல, ஒவ்வொரு துறையிலும், இந்தி, ஆதிக்கம் பெற்றுக்கொண்டே வருகிறது.

ஒருபக்கம், இந்தியைத் திணிக்க மாட்டோம் என்று சொல்லிக் கொண்டே வடநாட்டுக்காரர்கள், உத்தியோக நியமனம், உயர்தரப் படிப்பு முதலியவைகளில் இந்தியைப் புகுத்திக்கொண்டு வருகின்றனர்.

புழங்கும் நாணயத்தின் பெயரே நயா பைசா!!

வழங்கும் பழைய பெயர்கள் இந்திமயமாகிக்கொண்டு வருகின்றன!!

பயமற்ற காமராசர் என்ன செய்தார்? விளக்கமளிக்கிறார்! கண்டிக்கிறார்!! தி. மு. க.க்களுக்கு வேறென்ன வேலை? — என்று எடுத்துப் பேசுகிறார். ஆனுல், மொழிவளம்பற்றிய பிரச்னையிலும், தி. மு. க. மட்டுமல்ல,

சகல நிபுணர்கள்.
விஞ்ஞானிகள்.
டாக்டர் இலட்சுமணசாமி.
டாக்டர் இரத்தினசாமி.
ஆச்சாரியார்.
சர். சி. பி.
மைசூர் முதல்வர்.
பேராசிரியர்கள்.
இந்து, மித்திரன்.
மெயிலும், பிறவும்

எல்லோரும், டில்லியின் போக்கை, எடுத்துக் கண்டித்து வருகின்றனர். என்ன செய்தார், காமராசர்? இவர்தான் பயமற்றவராயிற்றே! பறந்து போனாரா—சண்டை பிடித்தாரா — பரிகாரம் கண்டாரா? ஏதோ, தனக்கும் தமிழ்மொழி மீது அபார அன்பு இருப்பதாகக் காட்டிக்கொள்ள முயற்சிக்கிறாரேயன்றி, உருப்படியாக ஏதேனும் செய்ததுண்டோ! செய்யும் அறிகுறியேனும் உண்டோவெனில், நம்பிக்கை மலரவில்லை நமக்கு!!

இவை போகட்டும். இன்னொரு பிரச்னை. மிகமிகச் சாமான்யமானது. இதை நிறைவேற்றிட, நல் மனம் இருந்தால் போதும்—வடவருடன், பெரிய போருக்குக் கிளம்பிடும் அவசியமகூட இல்லை. அதுதான்,

சென்னைக்குத் தமிழ்நாடு என்று பெயரிடுவது!!

இதையாவது, வடநாட்டுக்குப் பயப்படாத இவ்வீரர்செய்தாரோ? மிகமிகச் சிறு விஷயம் — பிறந்த நாட்டையும், பேசும் மொழியையும் கௌரவப்படுத்தும் விஷயம்—இதற்காவது, ஏதாவது செய்தாரோ, காமராசர்? இந்தபிரச்னையில்கூட, தி. மு. க. மட்டுமல்ல,

கம்யூனிஸ்டு.
தமிழரசு.
சோஷியலிஸ்டு.
நல்லோர்

எல்லோரும் ஒன்றுகூடி நின்றே விண்ணபித்தனர் — வேண்டுகோள் அனுப்பினர். செய்யவில்லை காமராசர்!;

அவர், இங்ஙனம், எந்தப் பிரச்னைக்கும பரிகாரம் தேடாததற்குக் காரணம், டில்லியிடம் **அவருக்குள்ள பயம்தான்;** டில்லி, இபபடி இவர்களை ஆட்டிப் படைக்கிறது, என்றே நாம் எண்ணுகிறோம்.

டில்லிக்கு நான் ஏன் பயப்பட வேண்டும்? — என்று காமராசர் கேட்கிறார்.

"காமராஜ் என்ன செய்வார்? நல்லவர், நம்மவர்! அவரைப் பிடித்தாட்டும் டில்லியின் குடுமியைக் குலுக்கவேண்டும்," என்று பெரியார் அவர்கள் கூடக் கருதுகிறார்; ஆதரவு நல்குகிறார்.

காமராசரோ, "வடக்கேயிருக்கிறவர்களுக்கு நான் ஏன் பயப்பட வேண்டும்?", என்று நடுக் காவேரியில், கர்ச்சிக்கிறார்.

ஒன்று, நாம் அழிவதற்குக் காரணம் வடக்காயிருக்கவேண்டும்;

அல்லது, காமராசர் போன்றவர்களாயிருக்கவேண்டும்.

எஜமான விசுவாசத்தை யொட்டி, இவ்விதம் காமராஜர் பேசுகிறாரே ஒழிய, இந்திய அரசியலமைப்பின்படி,

இவர் பயந்தாலும் பயப்படாவிட்டாலும், எதையும் சாதிக்கமுடியாது.

இன்றுள்ள அரசியலின்படி, டில்லிதான் சகலமும்; இவர் எடுபிடிதான்.

வேண்டுமானுல், தனது கீர்த்தியைக் காட்டிக்கொளளவும், வீரப் பிரதாபத்தை வெளியிடவும், இது போன்ற பேச்சுக்கள் பயன்படுமே ஒழிய, காமராசரையும, அவரது தியாகமும் வீரமும் விழலுக்கிறைத்த நீராகிவிட்டதையும, தமிழகம் நன்கு அறிந்திருக்கிறது.

வடவருக்கு அவர் தாசராகிவிட்டதால், அந்த வலையினின்று மீண்டிடும் நிலைமையில்லாததால், இப்படியெல்லாம் பேசுகிறார்; நமக்குப் பதிலளிப்பதாக நினைத்துக் கொண்டு "நான் ஏன் வடநாட்டுக்குப் பயப்படவேண்டும்", என்று கர்ச்சிக்கிறார்.

கர்ச்சனை முடிந்த மறுநிமிடமே, அவர் இதயம், எப்படியிருக்கும் என்பதை நம்மால் அறிய முடிகிறது. அப்போதுதான், கையால் ஆகாதவனுக்குப் பேச்சிலே கனமும் வீரமும் இருந்தென்ன பயன் எனும பழமொழியும், கலைவாணரின் 'காமிக்'காட்சியும்கவனத்துக்கு வருகிறது. "நான ஏன் வடவருக்குப பயப்பட வேண்டும?" என்று கேட்ட காமராசர், "**எனது அக்கறையெல்லாம் என்னைத் தேர்ந்தெடுத்த நாட்டு மக்களின் நல்லெண்ணத்தைப் பெறுவது ஒன்றுதான்**" என்றும் பேசியிருக்கிறார்.

சாத்தூர் தொகுதிக்குப் போய் இவருக்கு ஓட்டளித்த மக்களையும், அங்கு திண்டாடும் **தீப்பெட்டி தயாரிப்பாளர்களையும்** கேட்டால், இவர் பெற்று வரும் நல்லெண்ணம் புரியும்.

தன்னை M. L. A. யாக மட்டுமின்றி, முதலமைச்சராக ஏற்றுக்கொண்டுள்ள நாட்டு நலனில், இவர் காட்டிய அக்கரையென்ன? தொழில் வளம் வேண்டுமென்பது நாட்டு நலனில்லையா! மொழி அழியக் கூடாது, என்பது நாட்டு நலனில்லையா! தமிழ்நாடு என்று பெயர் கோருவது நாட்டு நலனில்லையா! எதனைக், காமராசர், நாட்டு நலன் எனக் கருதுகிறார்? தான் அக்கரை காட்டுவதாகச் சொல்கிறார்?

இந்தப் பிரச்சனைகளில், தி.மு.க. மட்டுமல்ல, நாட்டின் நாடியே, துடிப்பு எழுபபி வருகிறது. அறிவார்; ஆயினும், சிறப்போடு நடந்து முடிந்த தஞ்சை தி. மு. க. மாநாட்டைப்பற்றிக் கேள்வியுற்ற உடனே அந்த மாவட்டத்தில் சரியும் காங்கிரசைச் சரிபடுத்திட வன்றோ சென்றுள்ளார்? ஆனுல், ஏதோ பேசியிருக்கிறார்—"எனக்கென்ன பயமா?" என்று கேட்டிருக்கிறார்.

ஒரு தாக்கீது மட்டும் வரட்டும், டில்லியிலிருந்து. ஆடாமலிருப்பாரா! எனக்கென்ன நீ உத்தரவு போடுவது, என்று கேட்பாரா!! கேட்டால், மறுநிமிடமே, கவர்னரின் கை, காமராசரின் பதவிக் கழுத்தில் இருக்குமே!!

★

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்

திராவிடநாடு

ஆற்றலைப் படையின்!

[ப. இராமசாமி]

இனியசெந் தமிழும் இங்கிதத் தெலுங்கும்
தேனூறும் கன்னடமும் தேர்ந்தமலை யாளமும்
விளங்கும் நான்குமா நிலமுடைத் திருவிடமே!
தொல்புகழ் வரலாறு சொந்தமாய்ப் படைத்தநாம்
உணவினில் உடையினில் உயர்ந்த பண்பால்
ஒன்றிய இனமாகி வென்றிடும் கலையேனும்
வீசுபுகழ் கொண்ட வீரர்தம் கோட்டமே!
இரும்பும் தங்கமும் இயக்குநல் நிலக்கரியும்
காவிரிமண் வெண்ணெயும் கனிப்பொருள் பலவும்
தேக்கொடு அகிலும் தென்பாண்டி முத்தும்
சேர்தர விளையும் பார்புகழ் மணிநாடே!
அத்தனை வளமும் இத்தரை தழுவிட
இருந்தும் என்னே? ஏழ்மையே கண்டோம்
அன்னியர் வடவர் ஆள்வதால் நமதரும்
நலமெலாம் இழந்தோம்; நாடற்றோம்; நலிவுற்றோம்.
ஏமாந்த தென்னகமே! இன்னுமா உணர்விலை?
வென்றவர் மரபே! வேற்றவர் பிடியற—
விடுதலைத் திராவிடம் விரைவிலே மலர்ந்திட
அன்றாடம் உழைமின்! ஆற்றலைப் படையின்!!

THE REGISTRAR OF BOOKS 29 JUL 1958 MADRAS
38/3-58

நாதியற்றேன்!

[கா. வேழவேந்தன்]

பொருமைக்காரன் கதிரவன் வாயால் அணைத்துவிட்டுச்சென்ற விண் மீன் விளக்குகள் கேட்பாரற்று எங்கெங்கோ சிதறிக்கிடந்தன. அவனைப் பின்தொடர்ந்து வந்த நிலவோன் உழைப்பைப் பொருட்படுத்தாமல் ஒவ்வொன்றின் அருகிலும் சென்று ஒளியேற்றிவிட்டு வான்வெளியில் தன்னந் தனியே நடந்து கொண்டிருந்தான்.

அந்த வீட்டில் கும்மிருட்டு இன்னும் சூழ்ந்து இடந்தது. தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு யாரோ செல்வந்தர்கள் வாழும் வீடுபோலத் தோன்றும். ஏன்? நேற்றைக்கு முந்தியநாள் வரை அந்த வீட்டிலே வாழ்ந்தவர்கள் செல்வாக்கும் சிறப்பும் பெற்றவராகத்தான் இருந்தார்கள்.

ஆனால் இன்று.........?

நிலைமை அடியோடு மாறிவிட்டது. கொள்ளைக்காரன் காலதேவன் அந்த இல்லத்தைத் தாங்கிவந்த முதுகெலும்பு போன்றவர்களையெல்லாம் சுருட்டிக்கொண்டு போய்விட்டான். இப்பொழுது அங்கே நான்கைந்து கன்னிப் பெண்கள் தான் இருந்தார்கள். அனாதைகளாக, ஆதரவற்றவர்களாக ஆகிவிட்டோமே என்று எந்த நேரமும் அவர்கள் அவலக் குரலை எழுப்பிக் கொண்டே இருந்தார்கள். தூக்கி நிறுத்தி உயரவைக்கும கொழு கொம்புகளை இழந்த அந்தப் பூங்கொடிகளுக்கு எதிர்காலமே பீதி நிறைந்ததாகத் தென்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் அடுத்த ஊரிலிருந்து இரண்டொரு ஆண் மக்கள் அந்த வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். இளகிய நெஞ்சை மூலதனமாகக் கொண்ட அந்த இள மங்கையர் வந்தவர்களை 'வாருங்கள்' என்று மனமுவந்து வரவேற்றார்கள். கரவா உள்ளம் படைத்த அந்தக் கன்னியரை ஏமாற்ற, கள்ள உள்ளம் படைத்த அந்த ஆண்களுக்கு எப்படியோ துணிவு பிறந்தது. "உங்களை மணந்து கொள்கிறோம்" என்றார்கள் நாவினில் தேனைச்சேர்த்து! அந்தப் பேதைப் பெண்களும் முழுக்க முழுக்க நம்பிவிட்டார்கள்.

இளையவள் ஒருத்தியைத் தவிர ஏனையவர்களுக்குத் திருமணம் நடந்து முடிந்தது. ஆனால் வந்தவர்களின் உண்மை உரு கொஞ்ச நாட்களுக்குள் அந்தப் பெண்களுக்குப் புரிந்துவிட்டது. அன்பால், ஆதரிக்கும் பண்பால் அல்ல அவர்கள் தங்களை மணந்து கொண்டது, தங்களிடமுள்ள செல்வத்திற்காகவே என்பதை அவர்களுக்கு அடுத்தடுத்து நிகழ்ந்த நிகழ்ச்சிகள் உணர்த்தாமல் உணர்த்திவிட்டன. பாவம்! அந்த அபலைப் பெண்களால் விழிநீர் பெருக்குவதைத் தவிர வேறு வழிகாண இயலவில்லை.

எல்லோருக்கும் இளையவள் இவற்றையெல்லாம் கண்டாள். "சகோதரிகளே! எனக்கு இந்த வீட்டு வாழ்வே பிடிக்கவில்லை; என்னை விட்டுவிடுங்கள். நான் அயலூர்போய் ஒரு நல்லவனைக் கைபிடித்து எப்படியேனும் பிழைத்துக்கொள்ளுகிறேன்" என்றாள். தங்கள் வாழ்வைச்சீர்குலைத்துக்கொண்ட அந்தச் சகோதரிகள் தங்கையின் நலனுக்கும் தடையாக நிற்க விரும்பவில்லை; அனுப்பிவைத்தார்கள்.

மணமாகா மங்கை. அந்த ஊர் ஆண்மகன் ஒருவன் அவளை ஆர்வத்துடன் வரவேற்றான். திறமையும் அழகும் ஒருங்கே அமைந்த அந்தச் சேல்விழியாளுக்கு சீரும் சிறப்பும் அளிப்பதாக உறுதி தந்தான். அந்தப் பூவை உள்ளமெல்லாம் பூரித்துப் போனாள். இல்லத்தரசியாகிவிட்ட அவள் அவனுடைய குடும்பம் ஏற்றம் பெற இரவென்றும் பகலென்றும் பாராமல் உழைத்தாள். உழைப்பு என்றைக்கு வீணாயிற்று? அவன் குடும்பம் வளர்ந்தது; செழித்தது.

ஆனால் எண்ணமெல்லாம் ஈடேறிவிட்டால்...?

கொஞ்ச நாட்களுக்குள் யாரோ அந்தக் குடும்பத் தலைவனுக்குச் சொந்தக்காரர் என்று சொல்லிக் கொண்டு வந்தவர்கள் அவன் நெஞ்சத்தில் நஞ்சைக் கலந்தார்கள். குறையா அன்பு காட்டுவதாக ஆணையிட்டுக் கூறிய அந்தக் கணவன் கோணல் புத்திக்காரனாக மாறிவிட்டான்.

முடிவு...?

நேற்றுவரை தித்திக்கும் தேனாகக் காட்சிதந்த அந்த நீள்விழியாள் நஞ்சாக ஒதுக்கப்பட்டாள். அவள் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு தீராத தொல்லைகளை அடுக்கடுக்காகத் தந்தான் அவன். கடைசியில் அந்த மனிதத் தன்மையற்றவன் தான் கட்டிய தாலியையே அவள் கழுத்திலிருந்து அறுத்துக்கொண்டான். "உதவாக்கரையே! ஓடிப்போ!" என்று விலங்கென விரட்டினான்.

நாதியே இல்லாத அந்த நங்கையால் என்ன செய்யமுடியும்? புழுவாகத் துடிக்கிறாள்; புலம்பிப் புலம்பி அழுகிறாள். கட்டிய கணவனை விட்டுப் பிரியவும் இயலவில்லை; பிறந்த வீட்டைத் தேடிச் செல்லவும் வெட்கம் பிய்த்துத் தின்கிறது. அந்தப் பேதைப் பெண்ணுக்கு ஆறுதல் அளிப்பவர்யார்? நிலைகெட்டுத் தவிக்கும் அந்த நேரிழையாளுக்கு நீதி வழங்குபவர் யார்?

இன்றைய சூழ்நிலையில் அந்தப் பரிதாபத்திற்குரிய மங்கையாகத் தான் இலங்கைத் தமிழன் நம் கண் முன்னே நிற்கிறான்!

★

கோயிலில் நுழைய....!

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [6-7-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 51

ஆண்டியப்பன், எனும் பெயருடைய அந்த இளைஞர், மேல்படிப்புக்கு முயன்றார்! இ. எஸ். எல். சி. யில் தேர்ச்சிபெற்ற அவர், இன்னும் மேலே படிக்கலாம் எனும் ஆசையில், உற்றாரையும் உறவினரையும் நாடினார். உதவி, குதிரைக் கொம்பாயிற்று. ஆசையோ, படிக்கத் தூண்டுகிறது! வறுமையோ, தாழ்ப்பாள் போடுகிறது!! நெஞ்சொடிந்த அவர், கடந்த ஜூன் 30ந் தேதியன்று, ஓடும் இரயிலில் படுத்து உயிரைவிட்டார்—அவரது சொந்த ஊர், மதுரை மாவட்டத்திலுள்ள சில்குவார்பட்டி என்று, செய்தியொன்று சொல்கிறது.

"அதிகக் கல்விகற்க விரும்பிய நான் ஏமாற்றமடைந்தேன். ஆதலால், சாக முடிவுசெய்தேன். இதற்கு எவரும் பொறுப்பு இல்லை," என்று அந்த இளமலர், எழுதிவைத்திருந்ததாம், கடிதம்.

அமைச்சர்களும் அவர்தம் தலைவரும், தமிழ் நாடெங்கும் சென்று, சொல்கிறார்களாம் — சுதந்திர சர்க்காரில் என்ன இடைக்கவில்லை, என்று! தோள் தட்டி, வாதுக்கு இழுக்கிறார்களாம் எதிர்க்கட்சிகளை!! இதோ, நாடு, எபபடியிருக்கிறது என்பதற்கு சேதி வருகிறது—சாகிறார், ஒரு இளைஞர்! படிக்க வசதியின்றி, ஓடும் இரயிலை நாடியிருக்கிறார்!!

✱

கல்லூரிகளும், பள்ளிகளும் திறக்கப்பட்டு விட்டன. கைகளிலே, 'நற்சான்று'களை வைத்துக் கொண்டு, மாணவரும் அவர்தம் பெற்றோரும், வலம் வரும் காட்சிகளை ஆங்காங்கும் காண்கிறோம். தொழிற் கல்லூரிகளில் சேர்வதென்றால் சிரமம் என்றொரு கட்டமிருந்தது—பிறகு எந்தக் கல்லூரியானாலும் சேருவது கடினம் எனும் நிலைமை வந்தது—இப்போது கல்லூரிகளில் மட்டுமல்ல, பள்ளிகளிலே சேர்வதென்றால்கூட சாமான்யமல்ல என்கிற சூழ்நிலை உருவாகியுள்ளது.

"படித்தோர் எண்ணிக்கை நூற்றுக்கு 15கூட இல்லை", என்று இந்திய உபகண்டத்தைப்பற்றிச் சொல்வார்கள். இங்குதான், கல்வியிலாமை அதிகம் என்கிற பல்லவி, மிகமிகப் பழையதாகும். "படித்து என்னசெய்யப் போகிறாய்?", என்று, அலட்சியத்தோடு கருதிக்கிடந்த நம்நாட்டு மக்களிடத்திலே, படிக்கவேண்டும், உயர்படிப்புக்கு மகனை அனுப்பிடவேண்டும் என்கிற ஆவலும் ஆர்வமும் இப்போது, முளைவிட ஆரம்பித்துள்ளது. சரசுவதிக்குப் படையிலிட்டால் போதும் என்பதோடு இல்லாமல், அறிவுக் கோயில்களாம் பள்ளிகளுக்கும் போகச்செய்யவேண்டும் புதல்வர்களை எனும், தெளிவு, வளரத் துவங்கியிருக்கிறது நாட்டில்.

இந்த விழிப்பு, நமது நாட்டின் வளர்ச்சியில், குறிப்பிடவேண்டியதாகும். மூடநம்பிக்கை ஒழிந்து, முன்னேற்ற ஒளிபரவவேண்டும் என்று விரும்புவோர், ஆனந்தப்படவேண்டிய கட்டமாகும்.

✱

ஆர்வமும் ஆவலும் அரும்பியுள்ளது! ஆண்டியப்பன் சாகிறான்—ஆவலிருந்தும், வசதியில்லாத காரணத்தால்! ஓரளவு வசதியிருப்போரோ, வசதியிருந்தும் இடம் கிடைக்காத காரணத்தால், ஏங்கிய படி கல்வி நிலையங்களை வலம் வந்துகொண்டிருக்கிறார்கள்!!

வசதியில்லை—இடமில்லை, எனும் இரண்டு நிலைமைகள், இன்று நாட்டில் உள்ளன. ஏழையின் வயிற்றில் பிறந்தவன், எழில் மணக்கும் கல்வித்துறைகளை எட்டிப் பார்த்திட இயலாது! கிராமத்தைக் கடந்து, நகருக்குவந்து, மாதம் 50, 100 என்று அவனால் செலவழித்திட முடியாது—எனவே, ஆண்டியப்பனாகிறான்!! கடன் வாங்கியோ, சொத்தை அடகு வைத்தோ, நன்கொடை பெறுவதன் மூலமோ, கல்வியின் மணத்தைப் பெறலாம் என முயலவோ, விரும்புகிறவர்களையெல்லாம் சேர்த்துக் கொள்ளுகிற அளவுக்கு, கல்வி நிலையங்கள் இல்லை. ஏனெனில் போதிய இடம்—தேவையான கருவிகள்—போதிக்கும் ஆசிரியர்கள், இல்லை என்று காரணம் சொல்லுகிறார்கள்.

பின்தங்கிய ஒரு நாட்டில், கல்வி மணம் பரவ, சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படுதல் அவசியம். அதற்கான முயற்சிகளைச் செய்துவருவதாக, ஆளும் அரசினரும் சொல்லுகிறார்கள். நிலைமையோ ஆண்டுதோறும் சீர்கெட்டு வருகிறது! ஆண்டியப்பர்கள் சாகிறார்கள்!!

✱

கல்வி மணம் பரவவேண்டுமென்பதிலும், அதன் பலன் இந்நாட்டில் பிறந்த ஒவ்வொருவருக்கும் இடைக்கவேண்டுமென்பதிலும், யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்கமுடியாது—கெடுமதி, கொண்டவனைத்தவிர. ஆளும்கட்சி மட்டுமின்றி, அவர்களால் ஏசலுக்கு ஆளாகும் எதிர்க்கட்சிகளுக்கும் இந்தப்

பிரச்னை இப்படி வளர்ந்து கொண்டுபோகிறதே என்கிற கவலையிருக்கிறது. கல்வித்துறையில் தனி அக்கறைகாட்டும் நமக்கு, மிகமிகக் கவலை ஏற்படுகிறது. கல்வி ஒளி புகத் தலைப்பட்டால், மக்கள் மன்றத்தைப் பிடித்துள்ள அறியாமையும் மூடநம்பிக்கையும் வெகு விரைவில் அகன்று, விஞ்ஞானயுகம் பூக்கும் என்று தி. மு. க. கருதுகிறது.

உள்ள நிலைமையோ, ஒவ்வொரு அறிவுக்கோயிலின் வாயிலிலும் கூட்டம் —இடம் கிடைக்குமா, தெரிந்தவர் உண்டா, யாரைப்பிடிக்கலாம் என்பது போன்ற பெருமூச்சுகள்! இன்னொருபக்கம், வசதியில்லாமல் சாகும் ஆண்டியப்பர்கள்!!

கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியைச் சமாளிக்க, பற்பல வழிகளை வகுத்துள்ளோம்—நாங்கள் ஒன்றும் சும்மாயில்லை என்று ஆள்வோர், கூறக்கூடும். ஆனால், பிரச்னை பெரிது—அது தீர்க்கப்படுவதற்கான முழுச் சூழ்நிலையும் உருவாக்கப்படவில்லை, என்பதில் கருத்துவேற்றுமை இருக்க முடியாது.

கோளாறு எங்கே!—என்பதைக் கண்டுபிடித்து, வசதியில்லாமல் அலைவோர், இடமில்லாமல் வலம் வருவோர்—அனைவருக்கும் கல்வியின் ஒளி கிட்டும் படியான ஒரு திட்டம் தீட்டப்படவேண்டும்.

ஒவ்வொரு பள்ளியாண்டுத் துவக்கத்திலும் அறிவுக்கோயிலுக்குள் நுழைவதற்குள்ள நெருக்கடி அதிகமாகிக்கொண்டே வருகிறது! நல்லாட்சிக்கு, இது உகந்ததல்ல; நாட்டின் வளர்ச்சிக்கும் ஏற்றதல்ல!!

❋

இலங்கைத் தமிழரும் இங்குள்ள கா. தலைவரும்!

ஐயா,

இலங்கையிலுள்ள தமிழர் இயக்கத்துக்கும், இந்தியாவிலே உள்ள தமிழர் இயக்கத்துக்கும் நிரம்ப வேற்றுமைகள் உண்டு. இரண்டுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. சங்கடத்துக்கு ஆளாகும் மக்கள்பால்,—அவர்கள் அல்ஜீரியாவிலிருந்தாலும், சைப்ரசிலிருந்தாலும், இலங்கையிலிருந்தாலும், தென் ஆபிரிகாவிலிருந்தாலும்—ஒரு அனுதாபம் காட்டப்படுகிறதல்லவா, அதுபோன்றதே ஒழிய, வேறு சம்பந்தம் கிடையாது. இங்கிலையில், இலங்கை வாழ் மக்களின்பிரச்சினைகளைச் சரிவரப் புரிந்துகொள்ளாமல், தென்னிந்தியாவிலுள்ள இரண்டு அரசியல்-தலைவர்கள், திருநெல்வேலியில் நடைபெற்ற ஒரு மாநாட்டில், பொறுப்பற்றவிதமாகப்பேசியிருக்கிறார்கள். அந்தப் பேச்சினை எடுத்து, தமிழ் மக்களுக்கு அண்மையில் இழைக்கப்பட்ட அநீதிகளை மறைக்கும் விதத்தில், இலங்கை அரசு பயன்படுத்திக்கொண்டிருக்கிறது.

இந்தியாவிலிருக்கும் தமிழர் இயக்கம், பிரிவினையை விரும்புகிறது. இலங்கையிலுள்ள பெடரல் கட்சி, இலங்கையில் மொழி அடிப்படையில் ஒரு கூட்டாட்சி (பெடரல்) சர்க்காரை ஏற்படுத்த விரும்புகிறது. இப்படி அமையும் கூட்டாட்சியின் மூலம், தங்களது மொழியையும் கலாச்சாரத்தையும் காப்பாற்றிக்கொள்வதோடு, அரசுப் பொறுப்பிலும் தங்கள் குரலுக்கு செல்வாக்கு கிடைக்கமுடியும் என்று நம்புகிறார்கள். தங்களது 150 ஆண்டு ஆட்சிக்காலத்தில், சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே, வெள்ளையர்களால் உண்டாக்கப்பட்ட ஒரு ஐக்கியத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்பதில், பெடரல்கட்சி அக்கரைகாட்டுகிறது. வெள்ளையர் நுழையுமுன், 2000 ஆண்டுக் காலத்துக்கு முன்பிருந்தே, இருதரப்பினரும் தனித்தனி அரசு அமைத்து, ஆண்டிருக்கிறார்கள். இருந்தும், இப்போது, கூட்டாட்சிதான் கேட்கப்படுகிறது.

வெள்ளையர்கள் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பாசமும் நேசமும், நீடிக்கவேண்டுமானால், 1948ல் கிடைக்கப் பெற்ற சுதந்திரத்தில் தமிழர்களுக்கும் பங்களிக்கப்படவேண்டும். இப்போதுள்ளபடி பார்த்தால், 'எஜமான மாற்றம்' மட்டுமே, இந்தச் சுதந்திரத்தால் தமிழர்களுக்குக்கிடைத்ததே தவிர, உண்மையான சுதந்திரம் மலரவில்லை. புது அரசியலமைப்புப்படி, சிங்களவர்களுக்கு, ஏராளமான அதிகாரங்கள் ஏற்பட்டுள்ளன; தமிழர்கள் அடங்கி நடுங்கி வாழவேண்டியவர்களாக உள்ளார்கள். இந்த அதிகாரங்களைப் பெற்றுள்ளதால், இலங்கையரசு, தொடர்ந்து தமிழர்களை உதாசீனப்படுத்தியே வருகிறது. தமிழர்கள் வசிக்கும் இடங்களிலேயெல்லாம், சிங்களவர்களைக் குடியேற்றி, தமிழர் தம் நிலத்தையெல்லாம் சீர்கெடுத்து வருகின்றனர்.

1956-ல் "சிங்களவர்மட்டும்" என்கிற சட்டத்தையும் இலங்கையரசு செய்தது. இந்தச் சட்டத்தை, தமிழர்கள் மட்டுமல்ல, நல்ல உள்ளம் படைத்த சிங்களவர்கள் சிலர் கூட எதிர்த்தார்கள். இருந்தும், இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது-முன்பு அரசாங்க மொழியாக இருந்த தமிழ்—சிங்களம்—ஆங்கிலம், இம் மூன்றினில், சிங்கள மொழி மட்டுமே அரசாங்க மொழி என்று வலியுறுத்தப்பட்டு அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

இலங்கை, "சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தம்" என்கிற கருத்துடன், ஏனையவர்களையெல்லாம் தீவிலிருந்து விரட்டியோட்டவேண்டும் எனும் கருத்து, சிங்களவர்களில் வெறிகொண்டவர்களிடம் வளர்ந்து வருகிறது. எப்போதாவது, தங்களது கோரிக்கையைத் தெரிவிக்க தமிழர்கள் அறப்போர், ஏதாவது துவக்கினால், இந்த வெறியர்கள், ஏனையோரைத் தூண்டிவிட்டு, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தமிழர்களைக் கொடுமைப்படுத்தும்படி மக்களை ஏவிவிடுவதும், தூண்டிவிடுவதுமாகவுமேயிருந்து வருகிறார்கள். இதுபோன்ற சமயங்களில், அரசு சில காலங்களுக்கு வாளா இருக்கும். வெறித்தனம் நடைபெற்றபிறகே, ஓடோடிவரும் கிறுத்தி! பிரதமர் பண்டாரநாயகா, பிரமாதமாகப்பேசுவார்—

(16-ம் பக்கம் பார்க்க)

கனி குடித்த உயிர்

காட்சி 1.

இடம்:- நன்னனின் அந்தப்புரம்.
காலம்:- நிலவெறிக்கும் இரவு.

[சேரநாட் டெல்லையிலுள்ள பாலிநாட்டின் மன்னன் 'நன்னன்', கழுத்திலே தன் குலத்துக்குரிய பொன்மாலையின்றி, வீரக்கழலுமின்றி — முகம் சுருங்கி, வருந்துகிறான்—கடந்தகால நிகழ்ச்சியை எண்ணியபடியே...]

நன்னன்:- நீலவானில் களங்கமின்றிப் பவனி செல்லும் தண்நிலவே, என் வாழ்வு களங்கப்பட்டு விட்டதே......! என்னைக் கண்டு நீ நாணுவாய் என்றல்லவா இருந்தேன். 'நேற்றுவரை என் குலப்பெருமையைப் பாடிய புலவர்கள்,...... இன்று என் சிறுமையைப் பாடிப் பரிகசிக்கின்றனர்! நேற்று என்னை நாடி வந்து பரிசில் பெற்றுச்சென்ற பாணர்கள் இன்று என் கொடையை ஏற்காது, என்னை மதியாதுசெல்கின்றனர்! நேற்று என்னை நாடிவந்த மறவர் குலம், இன்று மகிழ்விழந்து வசை பாடுகிறார்கள்! அதைச் செவியுற்றும், பார்த்தும் தலை கவிழாத நீயல்லவோ எனைக்கண்டு நாணவேண்டும், வேதனைப்பட்டுத் துடிக்கவேண்டும் என்று தானே பார்க்கிறாய்! இதோ, என்னைப்பார்... கழுத்திலே வெற்றி மாலையில்லை, பொன் மாலையில்லை..., காலில் வீரக் கழலில்லை... ஏன்? என் வாழ்வை நானே மாசுபடுத்திக் கொண்டேன்..., இறந்த காலத்தில் நடந்த அந்த நிகழ்ச்சியைக் கேள்...! அன்றொரு நாள்...!

குறுந்தொகையில் ஒரு காட்சி

காட்சி 2

இடம்:- நீதிமன்றம்.
காலம்:- முற்பகல்.
பாத்திரங்கள்:-குற்றவாளியாக ஒரு சிறுமி, அவளின் பெற்றோர், மன்னன் நன்னன், அமைச்சர்கள், அவைக்களப் புலவர், மற்றும் பலர்...

அமைச்சர்:- அவையோரே! நீங்கள் கேட்கப்போகும் சேதி புதுமையானது மட்டுமல்ல, விசித்திரமும் கொண்டது! அஃதாவது... அரண்மனையைச் சேர்ந்த தோட்டத்துப் பசுங்கனி ஒன்று ...சிற்றோடையில் மிதந்து வர ...அக்கனியை எடுத்துச்

கோபி. கலிங்கன்

சுவைத்துவிட்டாள் இதோ குற்றவாளிக் கூண்டிலே நிற்கும் இச் சிறுமி! இதைத் தீர ஆலோசித்து நீதியளிக்கவே இம்மன்றம் கூட்டப்பட்டது. இதை நம்வேந்தரே விசாரிப்பர்!

நன்னன்:- இளஞ் சிறுமியே......! ஓடையிலே மிதந்து வந்த பசுங்கனி அரண்மனைத் தோட்டத்தைச் சேர்ந்தது. அதை நீ எடுத்துச் சுவைத்தது உண்மைதானே...!

சிறுமி:- பாலிநாட்டின் பெருநிதியே! மக்கள் தலைவ! புலவர் புகழும் புரவல! சென்றகிழமை மாலைப் பொழுதில் பள்ளிக்குச் சென்று திரும்புங்காலை... பளிங்கு நீர் ஓடையின் எழிலில் மயங்கி நின்றேன்......, பரவசமடைந்தேன் மாலையின் தென்றலில். அந்நீரோடையில் ஒரு பசுங்கனி மிதந்து வர... அதை எடுத்துச் சுவைத்தேன், நடந்த உண்மை இதுதான் மன்னவ!

நன்னன்:- குழந்தாய்! மாற்றுந் தோட்டத்துக் கனியைச்சுவைப்பது குற்றமில்லையா...?

சிறுமி:- அரசே! நான் தெரிந்து செய்யவில்லையே...

நன்னன்:- தெரிந்தோ, தெரியாமலோ செய்த குற்றம் குற்றமே!......இம்மன்றத்தில் மறுத்துரைப்போருண்டோ...?

சிறுமியின் தாய்:- எம் இறையே! அறியாச் சிறுமி என் அருமகள்! எனவே கருணைகொண்டு இம்முறை மன்னித்துவிடுங்கள். மேலும் தான் செய்ததை மறுக்கவில்லை என்குலவிளக்கு!

நன்னன்:- தாயே! நீதி என்பது எல்லோர்க்கும் பொது. அதில் சிறியவர், பெரியவர், வலியோர், எளியோர் என்ற பேதம் கிடையாது...! பல வீரமைந்தரை ஈன்று பெருமைகொண்ட தாய் செய்தாலும், கல்வி பயிலும் சிறுமி செய்தாலும் குற்றம் குற்றமே......! மேலும் சிறுமி என்று இவளை மன்னித்துவிட்டால்........எதிர்காலத்தில் இப்பழக்கம் வளர்ந்து விடும். ஆகவே இவளுக்கு மன்னிப்புக் கிடையாது......

தாய்:- ஐயகோ...நான் என்செய்வேன்...? அறம் பாடும் புலவர்

களே! நாடு காக்கும் நாயகர்களே! மாற்றுரை மருண்டோடச் செய்யும் மறவர்களே! நீதியின் சின்னங்களே! என் மகளுக்கு மன்னிப்பே கிடையாதா...? கூறுங்கள்...! கூறுங்கள்!!

மன்னன்:- அம்மா......! நீ அழுதாலும், தொழுதாலும் பயன் இல்லை...! இச்சிறுமிக்கு மரண தண்டனை அளிக்கிறேன்...!

தாய்:- ஐயகோ......! இதென்ன கொடுமை...!

[மயங்கிக் கீழே சாய்கிருள்]

புலவர்:- மன்ன! இச்சிறுமிக்கு நீ அளித்தது நீதியல்ல......நன்கு சிந்தனை செய்து மீண்டும் தீர்ப்புக்கூறு; உன் எண்ணத்தை மாற்று...; வழி, வழிவந்த நின் புகழை நிலைநாட்டு; உன் வாழ்வைக் களங்கப்படுத்திக்கொள்ளாதே......உன் பரம்பரைக்கு மாசு தேடிக்கொள்ளாதே! தமிழகத்துச் சரித்திரத்தில் உன் புகழ் மங்காமல் ஒளிவீச வழி தேடு...!...சிறிது கருணைகாட்டு!

சிறுமியின் தந்தை:- அரசர் பெரும! அறியாச் சிறுமி...என் செல்வி...! அவள் செய்த குற்றத்திற்காக எனக்களியுங்கள் தண்டனையை; மனமகிழ்வோடு ஏற்றுக்கொள்கிறேன்...! ...அவள் விடுதலைக்காக...பல கரிகளையும், அவள் எடைக்கு ஒரு பொற்சிலையையும் அளிக்கிறேன். அவளை விட்டுவிடுங்கள். எனக்குத் தண்டனை அளியுங்கள்!...உங்கள் பெருமையை, மங்காத புகழை நிலைநாட்டுங்கள்!

மன்னன்:- புலவர் பெருமானே! அவையோரே! உங்கள் மன்னன் சலனமனம் படைத்தவனல்லன். நீதியின் காவலன். எனவே எம் தீர்ப்புத் தீர்பபே! திரும்பப் பெற முடியாதது! தண்டனையை நிறைவேற்றுங்கள்!

[காவலர்கள் சிறுமியை இழுத்துச்செல்கின்றனர், தாய் தந்தையர் பிரிவைத் தாளாது துடிக்கின்றனர். மக்கள் கூட்டம் கண்ணீர் வடிக்கிறது...]

காட்சி 3.

இடம்:- அந்தப்புரம்
காலம்:- பிற்பகல்......

[மன்னன் சிந்தனையிலிருக்கையில் அவன் தேவி மன்னனின் தவறை உணர்த்த......அதுபோது புலவர் நுழைகிருர்.]

அரசி:- நாதா! தெரியாமல் செய்த குற்றத்திற்காக மரண தண்டனையா? அதுவும் அறிவு வளராத பேதைச் சிறுமிக்கு......! கொடுங்கொலை செய்தாளா..., அல்லது தங்கட்கு எதிராக அவமரியாதை ஏதேனும் புரிந்தாளா...? மிக, மிகச் சிறிய நிகழ்ச்சியை, மலையளவு பெரிதாக்கி...... நானிலம் தூற்றும்படி..., மக்கள் மன்றம் கூட்டி உங்கள் வரலாற்றை மாசுபடுத்திக் கொண்டீர்களே...! ...இதுதான் அறமா...? தமிழ்காக்கும் காவலனின் செயலா இது...! கொடுமை!

மன்னன்:- தேவி, போதும் எம் மனதைக் குழப்பாதே! அரசியலிலே இவைபோன்ற நிகழ்ச்சிகள் மிக, மிக அற்பமானவை...!

[புலவர் வந்துகொண்டே]

புலவர்:- அற்பமானவையல்ல, மன்ன! அறிவுக்கொவ்வாத ...நினது நீதியை வையத்திற்கு எடுத்தியம்பி... நாளெல்லாம்... காலமெல்லாம்... வசைபாடச் செய்யும் அநீதியை வழங்கிய செயல்... அற்பமானதல்ல...! மன்னவா... மீண்டும் சிந்தனை செய்துபார்...... இன்னும் காலமிருக்கிறது...... தண்டனையை மாற்று...!

மன்னன்:- புலவரே! நீதி வழங்கியது... வழங்கியதே...! அதை மாற்றுவதென்பது இயலாதது ... தாங்கள் போகலாம்!

புலவர்:- இதுதான் நீதியோ! இனி உன் புகழ் பாடிய புலவர்கள்... உன் அழிவுக்காக அறம் பாடுவார்கள்......! உன் புகழ் பரப்பிய தமிழ், உன்னை அநீதியின் நிலைக்களனுக்கி...சபிக்கும்! மக்களின் அகமெல்லாம் தூற்றும்! பிறகென்ன...தமிழ்பாடும் புலவர்களை இழந்த நீ, நீதியை மறந்த நீ..., மக்களை மறந்த நீ..., மனிதனுகவா உலவ முடியும்...! ...போ...! போ...! கண்ணீர் விட்டுக் கதறு! வருகிறேன்...! இனி உன் கொற்றம் அழிக! (போகிருர்...)

*

... பழைய... நினைவு...

காட்சி 4

இடம்:- அந்தப்புரம்.
காலம்:- இரவு. (நிலவு மறைவுகிறது)

மன்னன்:- நிலவு மங்காய்!, "அநீதியின் பிறப்பிடமே! போதும் உன் நீதியின் கதை...! இனியும் என்னுல் கேட்க முடியாது...! உன் வதனத்தைப் பார்க்கவும் முடியாது......", என்றுதான் முகிலுனுள்ளே மறைந்து கொண்டாய்? உனக்கிருக்கும் நாணம், உயர்வு, மக்களின் புகழ் மாலை......,கவிகளின் பாமாலை எனக்கினி ஏது? இனி அவைகளை வேண்டி அழைத்தாலும் வாரா...!...சிறுமியின உயிரைக் காப்பாற்றியிருக்கலாம்...! சென்ற உயிர் மீளாது...! அழுகிய கனி காயாகுமோ...? இனி ...... எனக்கு...எதற்கு இந்த வாழ்வு......! என்னுடன் என் வம்சமே அழியட்டும்! அதுதான் எனக்கு நானே அளித்துக் கொள்ளும் தீர்ப்பு...!

குடந்தை திருநகர் மக்கள் மன்றம்
2-வது ஆண்டு விழா
6—7—58 ஞாயிறு
திருநகர் நாடகக்கலைக் குழுவினர்
நாடு காத்த நல்லவன்
எனும் நாடகத்தை திறந்தவெளியரங்கிலே நடிப்பர்.
அன்பு சகோதரர்கள், பொருளுதவி வழங்க வேண்டுகிறேன்.
G. சுப்பிரமணியன், B.A. (Hons) நிர்வாகி.

மாந்தோப்பு மங்கை

ஊரின் புறத்திலுள்ள மாந்தோப்பில் மங்கையரின் மகிழ்ச்சியொலி கேட்கிறது. சற்றுமுன் சிலவாகப் பெய்த மழைத்துளிகள் மாவிலைகளில் பதிந்து முத்துப்போல் காணப்படுகின்றன. மாசுபடிந்த முகத்தைத் தூய்மையாக்கியது போலுள்ள அவ்விலைகளுக்கிடையிலே கண்பொத்தி விளையாடும் கன்னியர்கள் ஓடி ஒளிகின்றனர். அழகே உருவான ஆரணங்கொருத்தி அன்ன நடையால் நடந்து, மான்விழியால் மருண்டு மருண்டு நோக்கி வருகிறுள். யானைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்பதற்கேற்பப் பைந்தொடியாள் வருகையினைச் சிலம்பொலிகள் உணர்த்தியது. தேடிவரும் அப்பேரழகி காணமுடியாதபடி ஏந்திழையர் நன்கு மறைகின்றனர். அவள் முயற்சிக்கு யாரும் அகப்படாமையால் முகமெல்லாம் வியர்வை தோன்றுகிறது. அதோ! அங்கு இலையை நெருக்குவதால் ஓசை கேட்கிறது. ஒளிந்துள்ள தோழி இடைத்துவிட்டாள் என்று உள்ளத்தால் மகிழ்கிருள். ஓசைவந்த திக்கை நோக்குகிருள்; ஓடுகிருள்; என்ன வியப்பு! கடனகாரரைக் கண்டதுபோல் தலையைக் கவிழ்த்துக் கொள்ளுகிருள் அந்தக் கட்டழகி!

மலைமீது காலைமுதல் மாலைவரை வேட்டையாடிவிட்டு வந்தான் வேலும் அம்பும் கொண்ட வீரன்! கன்னித்தமிழ் கற்றவன் என்பதை அவன் புன்னகை முகம் காட்டியது. கடமை உணர்ச்சி உடையவன் என்பதைக் கூர்ந்து நோக்கும் விழிகள் உணர்த்தின; அந்த ஆணழகனை எதிர்பாராமல் நோக்கிய செந்தமிழ்ச் செல்வி நாணத்தால் கீழ்நோக்கியது தவறில்லை யல்லவா?

செல்வனும் செல்வியும் விழியால் கண்டனர்; மொழியால் பேச முற்பட்டனர். ஆனுல் வாயில் சொற்கள் எழவில்லை. அவன் நோக்கினுன் — அவள் தலையை தாழ்த்திக்கொண்டாள். அவன் நோக்காதபோழ்து கடைக் கண்ணுல் நோக்கி மெல்ல நகைத்தாள்; இவ்வாறு இணைந்த இருவரும் பிரிய மனமின்றிப் பிரிகின்றனர்.

இரண்டாம் நாள் அதே இடத்தில் தலைவன் தலைவியைச் சந்திக்கிருன். நங்கையும் நம்பியை மகிழ்வோடு வரவேற்று, செந்தமிழால் பண்ணிசைத்து, மயில் போல ஆடிக் காட்டுகிருள். தகைமை சான்ற வேல் வீரனும் தேமொழியின் இனிமையினைப்பைந்தமிழால் பைந்தொடிக்குக் கூறுகிருன் "அன்னய்" என்று தோழியர் அறைகூவ நேரிழையாள் நீங்குகிருள்.

—[வித்வான் எம். ஏ. கிருஷ்ணன்]—

புதிய நட்பைவிட மகிழ்ச்சி தருவதுளதுவுமில்லை. பிரிவதைவிடப் பெருந்துனபம் பிறிதொன்றுமில்லை என்று கூறினுர் சீனத்து அறிஞரொருவர். இருவரும் புதிய சந்திப்பால் மகிழ்ந்தனர்; பிரிவால் பெரிதும் வருந்துகின்றனர். நாளும் கருத்தோடு பணிபுரியும் தலைவனின் முகம் வாடியுள்ளது. அர்த்தமின்றி எதையெதையோ கூறுகிருன். முறையான செயலாற்றும் அவனிடம் குறை காணப்படுகிறது. உயிர்த்தோழனுக்கு ஒன்றும் புரியவில்லை. உள்ளத்தில் ஏதேனும் வருத்தம் இருக்கவேண்டுமென எண்ணி "மாண்புக்குரிய தோழனே! உன் முகத்தில் மலர்ச்சி இல்லாமைக்குரிய காரணம் யாதோ" என்று கனிவோடு வினவுகிருன்.

"நலம் விழையும் நண்பா! நேற்று மாந்தோப்பு மங்கையொருத்தி வேல்விழியால் என் விலாப்புறத்தைக் கொத்திவிட்டாள்; செவ்விதழால் என்னுள்ளத்தைப் புண்ணுக்கிவிட்டாள்" என்றுன் பெருமூச்சோடு!

தலைவனின் தவறுன பேச்சுத் தோழனுக்குப் பிடிக்கவில்லை. இது நின்போன்ற ஆண்மை கொண்டவர்க்கு ஏற்றதல்ல! இது ஒழுக்கத்திற்கு இழுக்கு விளைவிக்கும் என இடித்துக் காட்டுகிருன்.

ஆனுல் தலைவன், அவன் சொல்லினைச் சற்றும் பொருட்படுத்தாமல் மங்கையிடத்தில் மனதைக் கொடுத்துவிடுகிருன். தோழனும் தனியே சிந்திக்கிருன். தலைவன் துன்பத்தைப் போக்கவேண்டும்; அவன் மீண்டும் ஆற்றல் மிக்கவனுக உழைக்கவேண்டும். அதற்குத் தலைவியைச் சேர்த்து வைப்பதைத் தவிர, வேறு வழியில்லை என்று உணர்கிருன். தலைவி வாழுமிடம், அவள் தன்மை, ஆகியவற்றைத் தலைவன் வாயிலாகக் கேட்டறிந்து, அவளையடைய வழி வகுக்கிருன். இத்தோடு மூன்ரும் காட்சி முடிவுறுகிறது.

இவ்வாறு தோழன் வாயிலாகவும் தோழி வாயிலாகவும் உரிய தலைவியைக்கண்டு களவியல் இன்பத்தை அடைகிருன். வருங்கால வாழ்வை எண்ணுமல் தலைவியும்

இன்பத்தோடு இருந்துவிடுகிறாள். அவன் அவளைத் திருமணம் செய்யாமல் களவு முறையில் கண்டு செல்வது தோழிக்குப் பிடிக்கவில்லை. இருவரையும் பலர் காணும் மணமக்களாக மாற்ற வேண்டும். அதைக்கண்டு மகிழ வேண்டும். இதுவே அவள் வேட்கை!

ஒரு நாள் வேல்வீரன் அந்த வேல்விழியாளை இரவிலே காண வருகிறான். வந்தவனை வரவேற்காமல், "தலைவரே! தாங்கள் இவ்வாறு இரவில் வருவது எம் தலைவிக்கு வருத்தத்தை அளிக்கிறது; கடும் புலியும் கொடுங் களிறும் திரியும் இக் கானகத்தில் நீவிர் இரவில் வராமல் பகலில் வருவீராக" என்று கூறுகிறாள். தலைவனுக்கு ஏக்கமிருப்பினும் ஏந்திழையாளின் தோழி கூறுவதைத் தட்டக்கூடாதென விரும்பிப் பகலில் வருகிறான். அக்காலை அத்தோப்பில் மலர் கொய்வாரும் மாங்கனி பறிப்போரும் வருவதும் போவதுமாக இருந்தனர். அன்புக்குரிய காதலியைக் கூடிப்பேச வாய்ப்புக் கிட்டவில்லை. எதிர்ப்பட்ட தோழியோ "என்றும்போல் இரவே வருக" என்று இயம்புகிறாள். நுண்மாண் நுழைபுலம் வாய்ந்த வீரனுக்குச் செய்தி புரிந்துவிட்டது. தலைவியை மறைமுகமாக காண்பதைக் காட்டிலும் மணம்செய்து நிரந்தரமாகக் காண்பதே நன்று என்று உணர்கிறான்.

சிந்தியாத தலைவிக்கோ தோழியின்செயல் சினத்தை உண்டாக்குகிறது. "இரவில் வந்தாரைப் பகலில் வா என்கிறாய். பகலில் வந்தாரை இரவில் வா என்கிறாய் நின் கருத்துத்தான் யாதோ" என்று ஆத்திரத்தோடு வினவுகிறாள். "அன்னாய் நின் நலன் பொருட்டு யான் நிகழ்த்திய சூழ்ச்சியாகும். விரைவில் நீ மணப்பெண்ணாக வேண்டும். இணையற்ற இல்லக்கிழத்தியாகத் திகழ வேண்டும். இதுதானம்மா யான் விழையும் எண்ணம்" என்று கனிவோடும் பணிவோடும் கூறிச் சினத்தை மாற்றுகிறாள்.

மாந்தோப்பு மங்கையை மணம் பேசத் தலைவன் சுற்றத்தாரோடு வருகிறான். அவர்களது களவு மணத்தை அறியாத பெற்றோர்கள் பெண் கொடுக்க மறுத்துவிடுகின்றனர். உண்மையை உணர்த்துவதற்கு இருசாராருக்கும் துணிவு பிறக்கவில்லை. உள்ளத்தாலன்றி உருவத்தாலும் இணைந்த அந்தச் செம்மல்களைக் காண முடிவதில்லை. பொற்பும் கற்பும் வாய்ந்த எழிலரசியை என்ன நேரினும் வாழ்க்கைத் துணைவியாக்க வேண்டும். அதுதான் தமிழ்நெறி என்று தண்டமிழ் வீரன் உணர்கிறான். அதற்கு ஒரே வழி, யாரும் அறியாமல் தலைவியைத் தன்னூருக்கு அழைத்துச் சென்று, மணம் முடிப்பதே யாகும். இதனைத் தோழியிடமும் அறிவித்துச் செயல்படுகிறான்.

தலைவிக்கு நெருக்கடியான நிலை ஏற்படுகிறது. உடன் போவது ஒரு புறத்தில் அச்சத்தையும் மறுபுறத்தில் நாணத்தையும் கொடுக்கிறது. அச்சத்தையும் நாணத்தையும் எண்ணி உடன் செல்லாமல் விட்டுவிட்டால், இனித் தலைவனுடன் செல்லும் வாய்ப்பு இல்லாமல் போய்விடும்; அதனால் கற்பும் கெட்டுவிடும்; ஆகவே, அச்சத்தையும் நாணத்தையும்விடக் கற்பே சிறந்தது. அதைக் காப்பதே கன்னித் தமிழ்க் கன்னியரின் கடமையெனக் கருதி, தலைவனுடன் சென்றுவிடுகிறாள்.

பொழுதுபுலர்ந்தது; படுக்கையிலிருந்து வழக்கம்போல் செல்வியிடமிருந்து இசையொலி செவிலிக்குக் கேட்கவில்லை. ஏதேனும் உடலுக்கு ஊறு ஏற்பட்டுவிட்டதோ என எண்ணிப் படுக்கையைப் பார்க்கிறாள். ஆங்கு பண்புமிகு மகளைக் காணவில்லை. சின்னேரத்தில் இல்லத்தில் அவலநிலை ஏற்படுகிறது. காதலின் தன்மையை உணராமல், அவளை அவனுக்குக் கொடுக்காமல் விட்ட தன் தவறை அப்போதுதான் அறிகின்றனர். பெற்ற நற்றாய்க்கோ எல்லையில்லா மனக்குழப்பம் நேருகிறது. அவளது துன்பத்தைப் போக்கும் பொருட்டுச் செவிலி இணைந்த மணமக்களைத் தேடிப் புறப்படுகிறாள்.

காடுகளை வயல்களைக் கடந்து, வந்தாரையும், போவாரையும் வினவுகிறாள். ஒருவர்கூட வினவுக்கேற்ற விடை கூறவில்லை. அதனால் அவள் நடை தளர்ந்து கண்ணொளி மங்கியது; சோர்வு மிகுதியாகியது. அதோ! அங்கொரு குழுவினர் வருகின்றனர். அவராவது நம் ஐயத்தைப் போக்குவாரென எண்ணிப் புறப்படுகிறாள். வந்தவர் அறுதொழில் கற்றவர் என்பதையும், மெய்ம்மை உணர்ந்தவர் என்பதையும் அறிந்து "ஐயன்மீரே! என் மகளொருத்தியும் பிறன் மகனொருவனும் இவ்வழியே சென்றதைக் கண்டீரோ என்று வினவுகிறாள். அவர்கள் அரும்பொருள் ஆயும் அறிவினராதலின் அவர் கூறும் விடை எண்ணி எண்ணி மகிழத்தக்கது.

அம்மணி! செல்வன் ஒருவனும் செல்வி ஒருத்தியும் இவ்வழி செல்வதைக் கண்டனம். நீவிர் அப்பெண்மணியின் தாயாரோ? என்று வினவினர்; ஆம்! என்றுரைத்த செவிலிக்கு.
அம்மையே!

மலையிலே பிறந்த சந்தனமும் கடலிலே தோன்றிய முத்தும், யாழிலே பிறந்த இசையும் பிறந்தகத்திற்கு எவ்விதப் பயனும் அளிக்க இயலாமல் புகுந்த இடத்திற்கே பலன் அளிக்க வேண்டி உள்ளது. அதுதான் உலக இயற்கை அதனையே!

"பலவுறு நறுஞ்சாந்தம்
படுபவர்க்கு அல்லதை
மலையுளே பிறப்பினும்
மலைக்கவைதாம் என்செய்யும்
நினையுங்கால் நும்மகள்
நுமக்கும் மாங்கனையளே

சீர்கெழு வெண்முத்தம்
அணிபவர்க்கு அல்லதை
நீருளே பிறப்பினும்
நீர்க்கவைதாம் என்செய்யும்
தேருங்கால் நும்மகள்
நுமக்குமாங் கனையளே!

ஏழ்புணர் இன்னிசை
முரல்பவர்க்கு அல்லதை
யாழுளே பிறப்பினும்
யாழ்க்கவைதான் என்செய்யும்
சூழுங்கால் நும்மகள்
நுமக்குமாங் கனையளே"

எனப் பண்ணிறைந்த தமிழால் அறைந்தனர். கேட்ட செவிலியும் அவர்தம் அறிவுரையை ஏற்று இல்லந் திரும்பினாள்!!

★

நற்குண நற்பண்புகளுக்கு மேன்மை எப்போதும் இருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம். ஆனால், அந்த உணர்வுக்கேற்றபடி ஒழுங்காக நாம் நடத்துகொள்வதில்லை.

"ஜீவனாம்சம்!!"

—[மாண்மகிழன்]—

"என்னை அழைத்தீர்களாமே"

"ஆமாம், நின்றுகொண்டே இருக்கிறீரே, முதலில் அமருங்கள்!......அவசரமாக எங்காவது போகவேண்டி உள்ளதா?"

"அப்படியொன்றும் இல்லை....

"அப்படியானால், பொறுமையாக இருந்து, நான் சொல்லப் போவதற்குச் செவி மடுத்து நுட்பமாகக் கேளுங்கள். பின்பு கேட்பேன்; சரியான, முடிவான உங்கள் கருத்தைக் கூறுங்கள்; சரிதானே."

"சீனாவில் அழகான பெண்ணொருத்தி இருந்தாள். அவளுக்கு நெடுநாட்களாகத் திருமணம் ஆகாமலே இருந்தது. இதைக்குறித்து அந்த வெண்ணிலா முகத்தழகி, எல்லாப்பெண்களையும் போலவே உள்ளூர வருந்திக் கொண்டிருந்தாள். 'வெறுப்பில்' பெற்றோர்களைக் கூடக் கசப்பாக நோக்கி வந்தாள். இதைக் கண்ட அப்பெற்றோர்கள் நைந்துருகினார்கள். எங்ஙனமேனும் மாப்பிள்ளை பார்த்துக் கலியாணத்தை முடித்துவிடத் தீவிரமாக முயற்சிக்க ஆரம்பித்தார்கள்.

எப்படியோ ஒருவாறு ஒரு மாப்பிள்ளையைப் பார்த்து, கலியாண ஏற்பாடுகளைச் செய்து கொண்டு கடிதில் திரும்பிவிட்டார்கள். இதை அறிந்தாள் அவள். மெய் சிலிர்த்துப் போகாமலும் இருப்பாளா? கலியாண வழியின்மேல் விழிவைத்து நோக்கிக் கிடந்தவளாயிற்றே.

அந்தப் பாழாய்ப்போனவளுக்கு கலியாண இன்பம் பருகுவதற்கு, இடையே இருந்த, சிலநாட்கள், சில ஆண்டுகளைப் போல் துன்பத்தைக் கொடுத்தந்து எப்படியோ கழிந்து ஒழிந்தன.

அன்று திருமணநாள்! கோலாகலமாக அலங்கரித்து விடப்பட்டிருந்தது அந்தத்திருமண விடுதி. அதில் உற்றார், உறவினர், நண்பர்கள் இப்படி யாவருமே புடைசூழ்ந்திருந்தார்கள். பட்டை தீட்டப்பட்ட வைரத்தைப் போல் ஒளிந்து கொண்டிருந்த அவளோ என்னென்னவோ கனவுகளைக் கண்டுகொண்டிருந்தாள். மணப்பந்தலுக்குச் செல்லத் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தாள். நேரமோ சென்றுகொண்டிருந்தது. ஆனால் அவளைத் திருமண மேடைக்கு அழைத்துச் செல்லாமலே இருந்தார்கள்.

திருமணத்தில் குழுமி இருந்தவர்களோ மணமகனின் வருகைக்காக எதிர்நோக்கி அலைந்து கொண்டிருந்தார்கள். மணமகன் இன்னும் வரவில்லையே என்று கைகளைப் பிசைந்துகொண்டிருந்தார்கள்.

அப்பொழுது ஒருவன் புன்னகைப் பூத்த முகத்தோடு தடபுடலாக வந்தான். எல்லோரும், அவனை ஆவலோடு பார்த்தார்கள். எங்கோ இருந்த அந்தப் பரிதாபத்துக்குரிய மணமகளும் அவனை எட்டிப் பார்த்தாள். அவள் உள்ளம் பூரித்துப் போயிற்று. சமயம் சந்தர்ப்பம் அறியாத அந்த வெட்கம் சும்மா இருக்கிறதா...அதுவேறு வந்து தொலைந்தது! நாணிக்கோணி உள்ளேபோய் மறைந்துக்கொண்டாள்!

வந்த அவனோ நேராக மணமகளின் தந்தையிடம் சென்றான். சட்டைப்பைக்குள் இருந்த ஒரு கடிதத்தை எடுத்துப் பயபக்தியோடு அவரிடம் கொடுத்தான். ஏதோ என்னவோ என்று பிரமித்துப்போன அந்த மனிதர் அக்கடிதத்தைத்திகிலோடுவாங்கினார். ஆவலோடு பிரித்தார். அதில்! "அன்புடையீர், கலியாணத்திற்கு எப்படியேனும் வரவேண்டுமென்றுஎவ்வளவோ முயன்றேன், சந்தர்ப்பம் சதி செய்துவிட்டது! என்ன செய்வது?........ஆனாலும் என்ன...? திருமணம் நடக்கட்டும்! மற்றொரு சம்பிரதாயப்படி எனக்குற்ற நண்பனை எனக்குப்பதிலாக அனுப்பி வைக்கிறேன். கவலை வேண்டாம். இன்னும் சில நாட்களில் எங்ஙனமேனும் வந்து என் அருமை மனைவியை அழைத்துச் செல்கிறேன்!" என்று மணமகன் குறிப்பிட்டிருந்தான்.

அதன்படி திருமணம் முடிந்தது. தேன் நிலவு இனித்தது! மணமகன் இல்லாமலேயே இத்தனையும் நடந்தது!

ஆண்டுகளும் உருண்டோடின! மழலைகளும் நடைபயின்றன. ஆனால் அந்த 'மணமகன்' மட்டும் வரவேயில்லை.

திடீரென்று ஒருநாள் 'மணமகனின்' நண்பன் மாண்டுபோனான்!

அந்த அழகரசி துணையற்றவளானாள்! அநாதையானாள்! குழந்தைகளோ பாலுக்கு அழுதன! இதுவரை அவனைக் காணாமலே இருக்கும் தன்கணவன்மேல் அவளுக்குச் சொல்லமுடியாத கோபம்! கஷ்டத்தை அறியாமல் —பணம் அனுப்பாமல் இப்படியே போய்க்கொண்டு இருக்கின்றானே என்ற வருத்தம்!

கணவனைத் தேட ஆரம்பித்தாள்! அவன் ஹாங்காங்கில் இருப்பதாகத் தெரிய வந்தது.

அவன்மேல் ஜீவனாம்ச வழக்குத் தொடர்ந்தாள்! கோர்ட்டில், தன் கணவன் எப்படி இருப்பான் என்றே அறியாத அவள், அவனை முதல் முறையாக — மணமாகிப் பல ஆண்டுகளுக்குப்பால் கண்டாள்!

ஹாங்காங் நீதிமன்றம் இந்தச் சதிபதியர் விசித்திரக் கதையைக் கேட்டது. அவள் ஜீவனாம்சத்தைக் குறித்து ஒரு வழிகாணமுடியாமல் திக்குமுக்காடியது!

கேட்டீர்களா கதையை?

இப்பொழுது சொல்லுங்கள் அவளுடைய ஜீவனாம்சக் கோரிக்கையைப் பற்றிய உங்கள் தனிப்பட்ட கருத்தை!

★

அவதி அகல வழி உண்டா?

பி. கே. வேலன்

நமது சகோதரத் தமிழர்கள் இலங்கையில் அனுபவிக்கும் இன்னல்களை எண்ணும்பொழுது நெஞ்சம் புண்ணாகிறது. அதற்கு ஆவன செய்யாது தமிழர்களைப் புறக்கணித்துச் செயல்படும் டில்லி சர்க்காரைப்பற்றிநினைக்கும்பொழுதோ நெஞ்சம் கொதிக்கிறது; எரிமலை போல் குமுறவும் செய்கிறது. சென்னை மாநில மக்களுக்காகச் சென்னையில் அமர்ந்து அரசோச்சும் காமராசு சர்க்கார், இலங்கையில் தமிழர்கள் இன்னல் கடலில் சிங்கள வெறி என்ற அலைகளால்மோதி அடிக்கப்படுவதைக் கண்டும், கேட்டும் வாளா இருப்பதைப் பார்க்கும்பொழுது. எட்டிகாயாது இருந்தென்ன, காய்த்துப் பலனென்ன என்பதுபோல இந்த மந்திரிசபை இருந்தாலென்ன, போனலென்ன என்ற எண்ணமே தமிழர்களின் இதயத்தில் உதயமாகிறது. வடநாட்டைப்போல தென்னட்டையும் வாழவைக்கவேண்டும் என்ற எண்ணம் டில்லி சர்க்காருக்கு இருக்குமேயானல், பண்டாரநாயகாவைத் தட்டிக் கேட்டிருக்கலாம். அல்லல்படும் தமிழர்களுக்கு ஆறுதல்கள் பல கூறியிருக்கலாம். இதோ அடைக்கலமும் தருகிறோம் என்று சொல்லி அகதிகளாக வரும் தமிழர்களுக்கு ஆவன செய்திருக்கலாம். ஆனல் அப்படி ஒரு காரியமும் செய்யவில்லை. சொல்லும் இல்லை; செயலும் இல்லை.

வடநாடு வாழ்கிறது; தென்னடு தேய்கிறது என்று சட்ட மன்றத்தில் நம் தோழர்கள் முழங்கிய பொழுது சென்னை மந்திரிகள் துடிமாய்த் துடித்தனர். இன்று என்ன சொல்வார்களோ தெரியவில்லை. தனக்கும் தனது மக்களுக்கும் வேண்டிய உரிமைகளைப் பெற முடியவில்லை சென்னை சர்க்காரால். அதோடு இருந்துவிட்டாலும் பரவாயில்லை. வடநாடு மட்டுமே வாழ வழி வகைகள்செய்து செயல்படும் டில்லி சர்க்காருக்குப் பக்கபலமாகவும் இருக்கிறது சென்னை சர்க்கார்.

பாகிஸ்தானிலிருந்து பதறி ஓடி வரும் அகதிகளுக்குத் தனி நகர் முதலாக அமைத்து ஆவன செய்து ஆதரிக்கிறது டில்லி சர்க்கார். அவர்களை ஆதரிக்கவேண்டாம் என்று சொல்லவில்லை. ஏழைகளைக் கசக்கிப் பிழிந்தெடுத்து வசூலித்துப்போன வரிப் பணத்தைக் கோடிகோடியாக வடநாட்டு அகதிகளுக்காகக் கொட்டுகிருர்கள். வேண்டாமென்று சொல்லவில்லை. அதே போன்று இலங்கையிலிருந்தும் பர்மாவிலிருந்தும் மலாயாவிலிருந்தும்வரும் தென்னட்டைச் சேர்ந்த தமிழ் அகதிகளுக்கும் வேண்டுவன செய்யவேண்டுமல்லவா? செய்ய நினைப்பதாகக் கூடத் தோன்றவில்லை.

ரோமானியர்களும், கிரேக்கர்களும் நாகரிகமாக வாழ்வதற்கு முன்பே நாகரிகமாக வாழ்ந்த இனத்தவர்கள் தமிழர்கள். தமிழர்களையும், தமிழ் நாட்டையும் மேன்மைப்படுத்தவேண்டும் என்பதற்காக மேலுக்காகக் கூறும் கூற்றல்ல இது. உண்மையிலேயே தமிழர்கள் உலகுக்கே முன்னணி வீரர்களாகத் திகழ்ந்தார்கள். இதற்குச் சான்றாக உள்ளவை சங்கநூல்களும் சரித்திர நூல்களுமேயாகும்.

இப்படி அவதியுறும் நாடுதான் பண்டைக் காலத்தில் மூவேந்தர்கள் ஆண்ட பொழுது அவர்கள் சிங்களவர்களைத் தங்களின் உறவினர்களாகக் கருதியும் நடத்தியும் வந்தார்கள். இன்று சிங்களவர்கள் தமிழர்களை நண்பர்களாகக் கூடக் கருத மறுக்கிருர்கள்.

இலங்கையும், பர்மாவும் மலாயாவும் இன்று உலக நாடுகளோடு ஒட்ட ஒழுகிவருகின்றன. அதற்குத் தலையாய காரணகர்த்தாக்கள் தமிழர்களே. தமிழர்கள் இலங்கை சென்றார்கள்; பர்மா சென்றார்கள்; மலாயா சென்றார்கள். உடலிலும், உள்ளத்திலும் முன்னேற்றமும் சுறுசுறுப்பும் இல்லாதிருந்த மக்களோடு தமிழர்கள் தங்களுக்கே உரித்தான அன்போடு பழகி நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டு, புகுந்த இடத்தையும் பிறந்த இடமாகக் கருதிப் பொன்னடாக்கிஞர்கள். இன்று மற்ற நாடுகளோடு சமத்துவமாகச் செயல்படும் நிலையில் அந்நாடுகள் உள்ளன. ஆகவே அவர்கள், குறிப்பாகச் சிங்களவர்கள் தாங்கள் தமிழர்களால் முன்னேறினேம்; இன்று முன்னணியில் நிற்கிறோம் என்பதை மறந்து, தமிழர்களுக்கு எண்ணற்ற இன்னல்களைக் கொடுத்துக்கொண்டிருக்கிருர்கள். "எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகர்க்கு" என்ற வள்ளுவர் குறளை அறிந்திருந்தால் அவ்வாறு செய்யமாட்டார்கள். ஒருவேளை அவர்கள் கற்ற நெறிப்படி நிற்காத கயமைக் குணம் படைத்தோராக இருக்கலாம்,

பிறப்பால் தமிழர்களாக இருந்தும் சிங்கள அரசுக்குக் கட்டுபட்டு வாழ்கிறோம் என்று வாக்களித்து இலங்கையில் வாழும் உரிமை வேண்டி இலங்கைத் தமிழர்கள் மனுப்போட்டார்கள். பெரும்பாலான மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. இலங்கையில் வாழும் உரிமையை இழந்தவர்கள் தமிழகத்திற்கு அனுப்பப்பட்டனர். இலங்கையில் வாழும் உரிமையை இழந்தவர்கள் தாயகமாம் தமிழகத்தில் வாழ வழியின்றித் தவிக்கின்றனர்.

தமிழர்கள் தங்களுடைய தாய்மொழியைத் தங்களுடைய உயிரை விட மேலாகக் கருதிச் செயல்படக் கூடியவர்கள். பண்டாரநாயகா தமிழ்மொழிக்கும், அரசியலில், சிங்கள மொழிக்கு அளிக்கும் உரிமையை அளிப்பதாக ஒப்புக்கொண்டு உடன்படிக்கையும் செய்து கொடுத்தார். இன்று உடன்படிக்கையை மீறியதோடு மட்டுமன்றித் தமிழ் மொழியைப் பாதிக்கக்கூடிய செயல்களையும் செய்துவருகிருர். அரசின் ஆதரவோடு சிங்கள வெறியர்கள் பொறுக்கமுடியாத துன்பங்களை எல்லாம் செய்து வருகிருர்கள்;

தமிழ்மக்களைக் கொடுமைப்படுத்தி வருகிருர்கள்.

இலங்கையில் தமிழர்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் இழந்துகொண்டு வருகிருர்கள். பத்திரிகைகள் மூலமாக இலங்கைச் செய்திகளை ஒருவாறு அறிகிறோம். பத்திரிகைச் செய்திகளைப் படிக்கும் பொழுதே நமது உள்ளம் படாத பாடுபடுகிறது. நேரில் காண நேர்ந்தால் நெஞ்சமே வெடித்துவிடும்.

பண்டாரநாயகாவின் அரசு கொழும்பு நகரிலுள்ள தமிழர்களை, ஏறக்குறையப்பத்தாயிரம்பேர்களை இரண்டு தடவைகளாகக் கப்பல்களிலும் இரயில் மூலமாகவும் யாழ்ப்பாணத்தில் கொண்டு வந்து இறக்கிவிட்டிருக்கிருர்கள். யாழ்ப்பாணத்தில் இறக்கிவிடப்பட்டிருக்கும் தமிழ் மக்கள்—தமிழ் அகதிகள உணவு, உடை, இடம் இன்றித் தவிக்கிருர்கள். அதே நேரத்தில் எங்கெங்கோ, ஏனேதானேக்களாகத் திரிந்த, சிந்திக்கவும், செயல்படவும் தெரியாத சிங்களவர்களைக் கொழும்பு நகருக்குக் கொண்டுவந்து வாழ்வளிக்கிருர்கள். தண்ணீரில் வாழும் மீனைத் தரையில் கொண்டுவந்து வாழவைப்பது போன்றிருக்கிறது பண்டாரநாயகாவின் செயல்.

தமிழர்கள் நலனுக்காகவும் தமிழ்மொழியின் உரிமைக்காகவும் பாடுபடும் தலைவர்கள் எல்லாம் அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிருர்கள். இலங்கை அரசு தமிழர்களை இன்னும்என்னென்ன செய்யக் காத்துக்கொண்டிருக்கிறதோ தெரியவில்லை.

இங்கிலையிலும் நேரு சர்க்கார் வாளா இருபபது நேர்மை உள்ள செயலாகத் தோன்றவில்லை. சென்னை சர்க்காருக்கு இலங்கை வாழ் தமிழ்மக்களின் நல்வாழ்வில் அக்கறை இருப்பின் தமிழர்களின் நலனுக்கு ஆகவேண்டிய காரியங்களை இப்போதாவது உடனடியாகச் செய்யவேண்டும்.

★

> ஒரு பெரிய புத்தகத்தை அவசரமாகப் படித்து முடிப்பதை விட, ஒரே பக்கத்தை நன்ருகப் படித்து அறிவு பெறுவது மேலானது.

கூத்துக் கலைஞன்!

[இரா. மதனகோபால், பி. காம்.]

எழில் மிக்க ஏதன்சு நகரம் ஏற்றமிகு இவ்வுலகிற்கு அளித்த மேதையர்கள் எண்ணிறந்தவர்கள். அவர்களில் கூத்துக் கலைஞர்கள் முதலிடம் வகிக்கின்றனர்.

இன்று நம் நாட்டிலே திரைப் படங்களில் நடிக்கும் கலைஞர்களையும், நாடக நடிகர்களையும் "கூத்தாடி" என்று கேவலமான தொனியில் அழைத்து வருவது மங்கி, மறைந்து வருகிறது. மாருக அக்கலைஞர்களுக்கு மதிப்பும், மாண்பும் பெருகி வருகின்றது.

போர் மிகவும் பயங்கரமாக நடந்துகொண்டிருந்தது. ஆவேசமாக வீசும் காற்றிலே இரத்த வாடை கலந்து இன்னும் மோசமாக ஆக்கிக்கொண்டு இருந்தது. போர்க் கவசம் பூண்டிருந்த வீரர்கள் உக்கிரமாக ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். வாட்கள் ஒன்ருேடொன்று உராய்ந்து தீப்பொறி கக்கிக்கொண்டிருந்தன; அவற்றின் சத்தமும், வீரர்களின் அலறலும் கேட்கப் பயங்கரமாக இருந்தது. ஓய்ந்து விழும் கைகால்களும் சாய்ந்து விழும் சடலங்களும் வழிந்தோடும் குருதியுமாக இருந்தது போர்க்களம். சண்டையிடுபவர்களின் ஆவேசக் கூக்குரலும், காயம்பட்டவர்களின் கதறலும், பெருமூச்சும் தான் களத்தில் நிறைந்திருந்தன!

அந்தப் போர் வீரர்களிலே ஒருவன் சிறிது பின்னடைந்து, கணநேர ஓய்விற்காக நின்ருன். அவன் "குழந்தை பெறுவது இது போன்றுதான் போலும். ஆனலும் இந்த அளவு அது மோசமாக இருக்காது!" என்று அது போது கூறினன்.

அவன் வேறு யாருமில்லை! உலகிற்கு உன்னதமான நாடகாசிரியர்களை அளித்த ஏதன்சின் தலை சிறந்த நாடக எழுத்தாளனை "யுரிப்பிடீஸ்" பார்பபவர்களுக்கு வெறுப்பும், கோபமும், ஆத்திரமும் ஊட்டும் வண்ணம் நாடகம் வரைந்து, பெண்ணினத்தை வெறுத்து வசைபாடும் எழுத்தாளன் என்று கூறுவர் யுரிப்பிடீசை!

குழப்பத்தில் சிக்கிய மக்கட்கூட்டத்திற்குச் சிந்தனையாளன் ஓர் எதிரி. அவ்வகையில் யுரிப்பிடீஸ் கூட மக்களின் எதிரிதான். நடப்பவைகளையும், நிகழும் கேவலமானவைகளையும் உள்ளது உள்ளபடி, தெள்ளத் தெளிய, எள்ளத்தனையும் தயங்காது நாடகமாக வடித்து நாட்டினரின் முன் வைப்பான். "பெர்னட் ஷா" போன்று அவனும் மனிதர்களை நையாண்டி செய்து, சமுகத்தின் ஊழல்களை இழிவுகளை, நடை முறைகளை, பழக்க வழக்கங்களைச் சுட்டிக் காட்டி எழுதுபவன்.

கடைக்குணம் மிக்கவன், கன்னிகளை வெறுப்பவன், கடைந்தெடுத்த அயோக்கியன் என்றுதான் அன்றும் இந்தப் பாழும் சமுதாயம் அந்த மேதைக்குப் பட்டம் சூட்டிற்று. அதுமட்டுமன்று, அவன் நாத்திகன், கடவுளின் மீதும் மனிதர்களின் மீதும் வஞ்சம் வைத்துக் கொண்டு வரைகிருன் நாடகங்களை என்றும் கூறினர்கள் அன்றைய'பெரியவர்கள்.'

இருந்தும் அவர்களையறியாமலேயே அந்த எழுத்துலக மேதையின் அற்புதப் படைப்புகளைப் பார்க்கத் தூண்டின அவனுடைய 'அழகு நடையும், அலங்கார வார்த்தைகளும், அறிவுக் கருத்துக்களும். அவன் தன் படைப்புக்களையெல்லாம் பாவடிவிலேயேதான் செய்தான்.

அவன் போர்க்களத்திலே புகன்ற வார்த்தைகள் அவன் எண்ணம் வனிதயரைப் பற்றியது எப்படியென்பதை ஓரளவு காட்டும். அவனுடைய வெறுப்பிற்கு எத்தனையோ காரணங்கள் உண்டு! கவிஞனின் கற்பனை வளம் மிக்க நாடகாசிரியன் தான் அவன். அவன் மனிதர்களைச் சிந்திக்க வைத்தான். நாட்டிலே காணப்படும் கேடுகளைச் சுட்டிக்காட்டினான். அவன் பழைய கதைகளையும், பழைய (மாஜி) கடவுள்களையும் பற்றித்தான் எழுதினான் என்றாலும், அதைக் கேட்டும், கண்டும் போனவர்களிடையே ஓர் விழிப்புணர்ச்சியை உண்டுபண்ணினான்.

அவன் ஒரு மேதைத் தன்மை நிறைந்த புரட்சிவாதி; அறிஞன். அவன் எழுதி இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகின்றன என்றாலும் இன்றுகூடப் படித்து, சுவைத்து பல அரிய சேதிகளை, உயர்ந்த தத்துவங்களை அறிந்துகொள்ளும் வகையில் எழுதியுள்ளான். அவனுடைய வாழ்நாளில் அவன் தான் கிரேக்கத்தின் பெருமை மிகு கவிஞன் ஆக இருந்தான். இறக்கு முன்னரே அவனுக்குத் தெரிந்தது அவனுடைய புகழ் இறவாதது என்று.

கி. மு. 480-அளவில் அவன் இவ்வுலகில் பிறந்தான். அப்போது பெர்ஷிய பேரரசனை ஜெர்க்சசின் பெரும் கப்பற்படையை சலாமிசில் கிரேக்கர்கள் வென்ற நாள் அது. கிரேக்கத்தின் முப்பெரும் நாடகாசிரியர்கள், ஏகிலஸ் சலாமிஸ் போரில் சண்டையிட்டதாகவும், சோபாக்கிளீஸ் சிறுவர்களின் கோரஸ்ஸில் பங்கெடுத்துக்கொண்டு ஆடியதாகவும், சண்டை நடந்த ஆண்டில் யுரிப்பிடீஸ் பிறந்ததாகவும் 'வழி வழி கதை' கூறுகிறது. யுரிப்பிடீசின் தந்தை கடன் வாங்கி ஏமாற்றினவன், அயோக்கியன் என்றும், அவன் தாய் அழுகல் காய்கறிகளை விற்கும் கடைக்காரி என்றும் அக்கதை கூறுகிறது. இது அவ்வளவும் உண்மையல்ல, யுரிப்பிடீசின் பெருமையைச் சிதைக்கச் சிலசின்னதுகள் செய்த சித்து விளையாடல் எனலாம். அவன் தந்தை நெசார்க்கைடீஸ் பெரிய பணக்கார குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றும், பில்யாவில் உள்ள அப்போலோ கோயிலைச் சேர்ந்த ஓர் அலுவலகத்தின் உரிமையாளன் என்றும்; அவன் தாய் காய்கறி விற்றவள் என்றாலும் கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பதும் வரலாற்றாசிரியர்கள் கூறும் உண்மைகள்.

அவனுடைய இல்லக்கிழத்தியைப்பற்றியும் இப்படித்தான் இல்லாததும், பொல்லாததுமாகச் சிலர் புனைந்துரைத்துள்ளனர்.

யுரிப்பிடீஸ் இளைஞனாயிருக்கையில் சித்திரம் வரையக் கற்றுக்கொண்டிருந்தான். அதை நடுவில் நிறுத்திவிட்டுத் தன் கவனத்தை உலகிலேயே சிறந்த பணியான எழுத்து வேலையில் செலுத்தினான். ஆம், அவன் கவிதைபுனையவும், அவலச்சுவை நாடகம்வரையவும் விழைந்தான்.

அவன் முதல் நாடகம் "திடாட்டர்ஸ் ஆப் பீலியாஸ்" என்பது. 455 கி. மு. வில் வெளிவந்தது. அன்றிருந்து ஏதானிய பெருமக்கள் இதோ ஒரு புது விண்மீன் கிளம்பியுள்ளது; அது ஒளிவிட்டுப் பிரகாசிக்கப் போகிறது என்று அறிந்துகொண்டனர். இந்த இளங் கவிஞன் கடினமான உயர்ந்த நடையில் எழுதாமலும், 'பெரியவர்'களின் பாணியைக் கைக்கொள்ளாமலும் தனக்கே உரிய எளிய — ஆனால் எழில் நிரம்பிய, அழகு மிளிர, அறிவு பொங்கி நேரடி நடையைக் கைக்கொண்டான். உண்மையை உரைக்கும் தன்மை, உள்ளதை உள்ளபடியே எடுத்துக்காட்டும் வண்மை அன்று புகுந்தது நாடக உலகில், யுரிப்பிடீசால்.

இந்த நாடகக் கவிஞரின் நடையில் நளினம் காணப்பட்டது. நாடகத்திலே இவர் உச்சக்கட்டத்தைப் புகுத்தும்போது புதுமுறையைக் கையாண்டார், நாடகத்திலே வரும் காட்சிகளின் அமைப்பும், கவினாறும் கவிதை நடையும், அற்புதமான முடிப்புமாகச் சேர்ந்து நம்மை வியப்பில் ஆழ்த்தும். அத்தகைய எழுத்து மேதை அவர்.

"டெலிபஸ்" என்று அவர் எழுதியுள்ள நாடகம் மிகவும் அற்புதமாக எழுதப்பட்டது. அந்நாடகத்தின் "கரு" புராணத்தது தான் என்றாலும், அது கி. மு. 438-ம் ஆண்டில் நடித்துக் காட்டப்பட்டபோது பேரும் புகழும் கிடைத்தன. பாராட்டுகள் பல குவிந்தன. அந்த அரிய நாடகப் பிரதி தொலைந்துபோயிருந்தாலும் சில பகுதிகள் உள்ளன. அவையே போதும் யுரிப்பிடீசின் திறமையை உலகுக்குப்பறைசாற்ற.

யுரிப்பிடீஸ் ஏறக்குறைய எண்பதுக்குமேல் தொண்ணூறுக்கு உட்பட நாடகங்கள் எழுதியுள்ளான். அவற்றில் நமக்கு கிடைத்தவை ஒருசிலவே.

"இறந்தவர்களுக்கு நினைவு உண்டென்பது உண்மையானால், உடனே நான் தூக்குப் போட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொள்வேன், இறப்புலகில்யுரிப்பிடீசை சந்திக்க" என்று பிலிமென் சொன்னதே போதும யுரிப்பிடிசின் புகழை அறிந்துகொள்ள.

★

> வாழ்க்கையில் ஒவ்வொரு சிக்கலும் எதிர்ப்படும்போது ஒதுங்கிச் செல்வதும் உண்டு, ஒதுக்கிச் செல்வதும் உண்டு. ஒதுங்கிச்செல்லும் வாழ்க்கை அச்சம் நிறைந்த வாழ்க்கை; ஒதுக்கிச் செல்வதோ, அக்கறையற்ற வாழ்க்கை. இந்த இரண்டும் பயன் இல்லை. சிக்கலைத் தீர்த்து வெல்லும் வீரம் வேண்டும். அதுவே புத்துலகத்தின் திறவுகோல்.

இவர்கள் பேசினால்....!

M. S. வெங்கடாசலம், M. A.

பண்டித நேரு

துறவுக்கோலமாம்! காரணமெதுவும் கூறிடவில்லை அவர்! ஆனாலும் "துறவியாகப் போகிறேன் — அரசியல் வாழ்வினைத் துறந்திடப் போகிறேன் — புத்த பிட்சுவாகிவிட விரும்புகிறேன்" என்று தெரிவித்துவிட்டார்!

ஏன்? எதற்காக? இன்னமும் அவர் தெளிவாகச் சொல்லவில்லை!

நானும் தான் சொன்னேன், ஓய்வு எடுத்துக்கொள்ளப் போகிறேனென்று! அதற்கான காரணத்தையும்குறிப்பால் உணர்த்தினேன். காங்கிரசுக்குள் ஊழல்கள் மலிந்துவிட்டன—உன்மத்தம் பிடித்தோர் பெருகிவிட்டனர் — பதவி வெறி வளர்ந்துவிட்டது— ஜாதீயப் பித்து ஆழப் பதிந்துவிட்டது--என்றேன். இவ்வளவையும் சொல்லிவிட்டுத்தான், 'நிம்மதியில்லை—ஓய்வெடுத்தால்தான் பரவாயில்லை" என்றேன்! ஆனாலும் சில பத்திரிகைகள் நான் வெளிப்படையாகப் பேசவில்லை என்று குற்றம் சாட்டின! இதைவிட வெளிப்படையாகப் பேச என்ன இருந்தது? உத்தமர் காந்தி காங்கிரசைக் கலைத்துவிட வேண்டுமென்றார் — நான் அதைச் சொல்லவில்லை! ஆனால் காங்கிரசு காங்கிரசாக இல்லையென்று சொல்லிவிட்டேன் — ஒரு காங்கிரசுக்காரன் எப்படி இருக்கவேண்டும் என்று காந்தியார் வகுத்தாரோ, அந்த நெறிமுறைகளைக் கடைப்பிடித்து வருகிற உண்மைக் காங்கிரஸ்காரர்கள் மிகக் குறைவு என்று சொன்னேன்! இதைவிடச் சொல்லவேண்டியதென்ன?

இந்த அளவு கூட வெளிப்படையாகப் பேசவில்லை பர்மாவின் பிரதமர் யூ நூ. நம்பிக்கையில்லாத் தீர்மானம் பாராளுமன்றத்திலே வந்தது. எப்படியோ அவரது தலை தப்பியது. தலை தப்பிய பிறகு துறவியாகப் போகிறேன் என்று அறிவித்திருக்கிறார்!

> ஒரு வாரத்திற்கு முன்னால் பர்மிய பிரதமர் யூ நூ, தான் புத்த பிட்சுவாகிவிடப் போவதாக அறிவித்தார். அந்த அறிவிப்பை யாரார் எப்படி எடுத்துக்கொள்ளக் கூடும்என்று கற்பனைக் கண்கொண்டு கண்டு தீட்டப்பட்டதுதான் இந்தக் கட்டுரை.

ஏன்? எதனால்? விளக்கமில்லை! ஆனாலும் என்னைக்கண்டித்து எழுதிய பத்திரிகைகள், அவரை ஏன் கண்டித்து எழுதவில்லை? அல்லது நாட்டில் தனக்குச் செல்வாக்கு இல்லை என்று அவரே தீர்மானித்துவிட்டதாகப் பத்திரிகைகளெல்லாம் கருதுகின்றனவா? உலகத்தின் மற்ற நாடுகளிலுள்ள தலைவர்களுக்கு இதில் அக்கறையே காணோமே, ஏன்?

நான் ஓய்வெடுத்துக்கொள்ளுகிறேன் என்றதும், எவ்வளவு ஆர்வத்தோடு தங்கள் கருத்துக்களைத் தெரிவித்த வெளிநாட்டுத் தலைவர்கள், பர்மாப் பிரதமரின் முடிவைப்பற்றி இன்னமும் வாய் திறக்கவில்லையே, ஏன்?

இதை முக்கியமாக நமது நாட்டு மக்களும், அரசியல் தலைவர்களும் எண்ணிப் பார்க்கவேண்டும்! பாரதத்திற்கும் பர்மாவிற்குமுள்ள வேறுபாடு — இரண்டும் அகில உலக அரசியலில் பெற்றுள்ள செல்வாக்கின் தாரதம்மியம் வெளிப்படும்! பாரதத்தின் புகழ் நாளுக்கு நாள் பரவி வருகிறது என்று நான் கூறும்போது கேலியாகப் பேசியவர்கள் அனைவரும், இதை எண்ணிப்பார்க்க வேண்டும். நான் நாள்தோறும் எடுத்துரைக்கின்ற, பஞ்சசீலக் கொள்கையின் பெருமை—அதன் தேவை, அதை உலகிற்குப் போதித்ததால் பாரதம் அடைந்திருக்கிற மாண்பு, இத்தனையும் புலப்படும்.

மற்றொன்று; அது அவ்வளவு வெளிப்படையாகச் சொல்லப்பட வேண்டிய விஷயமல்ல! ஏனென்றால் வெளிப்படையாகச் சொல்லுவது, என் கருத்துப்படி, இராஜதந்திரமல்ல! இரு பொருள்படப் பேசுவதுதான் இராஜதந்திரமென்று நானே பாராளுமன்றத்தில் ஜனவரி மாதம் பேசியிருக்கிறேன்! ஆனாலும் என்ன செய்ய? உலகம் உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக ஒளிவு மறைவு இல்லாமல் சில சமயங்களிலாவது இருந்துதானே தீரவேண்டி இருக்கிறது?

யூநூ இங்கே வந்தபோது என்னை யோசனை கேட்டிருந்தால் கூட, நான் அந்த யோசனையை

ஒளிவு மறைவு இல்லாமல் சொல்லியிருந்திருப்பேன். ஆனால் பாவம் அவரென்ன செய்வார்? இப்போதுதான்—அதுவும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் பாராளுமன்றத்திற்கு வந்த பிறகுதான் — அந்த யோசனையே தோன்றியிருக்கக்கூடும்!

சரி, சரி! அதுவேறு விஷயம் சொல்லவேண்டிய உண்மையை மறந்துவிட்டு, வேறெங்கோ சென்றுவிட்டேன்! வர வர எல்லா நிகழ்ச்சிகளிலும் பேசிப்பேசி எனக்கு இதே பழக்கமாகிவிட்டது! எழுத்தாளர் மாநாட்டுக்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால் கல்கத்தாவுக்குப் போனபோதுகூட இப்படித்தான், பேசவேண்டியதை மறந்துவிட்டு மொழிப் பிரச்சினையைப் பேசினேன்? எது நல்ல இலக்கியம்—எத்தகைய நூல்கள் நாட்டுக்குத் தேவை — என்பதுதான் எழுத்தாளர்களுக்கு முக்கியம்! என்னவோ அவர்களெல்லாம் பேனா எடுத்துவைத்துக்கொண்டு, இலக்கிய சிருஷ்டிக்குத் தயாராகிவிட்ட பிறகு, எந்த மொழியில் எழுதுவது என்று குழம்பிக் கிடப்பதைப் போல எண்ணிக்கொண்டு பேசிவிட்டு வந்தேன். இந்தத் தவறு அடிக்கடி ஏற்படுகிறது. என்ன செய்ய?

துறவியாகப் போகிறேன், என்று எந்த எண்ணத்தில் யூ நூ சொன்னார்? அரசியலில் துறவுக் கோலம் பூண்டால் ஒரு தனி மதிப்பு ஏற்பட்டுவிடும் என்று தப்புக் கணக்குப் போட்டுவிட்டார் என்றுதான் நான் நினைக்கிறேன்!

காந்தியடிகள் இருந்தார்—அவருக்குக் கடைசிவரை மதிப்பிருந்தது, மக்களிடம்! ஆனால் அந்த வாய்ப்பு, பெருமை எல்லோருக்கும் கிடைத்திடும் என்று எப்படிச் சொல்லமுடியும்?

இதையெல்லாம் புரிந்துகொள்ளாமலா, நான் இமயமலைச் சாரலிலே போய் ஓய்வெடுத்தபோதுகூட என்னுடைய இலாகாப் பொறுப்பை யாரிடமும் ஒப்படைக்காமல் போனேன்? ஒரு வாரம் வெளிநாட்டுக்குச் சென்று வருவதானால்கூட, யாரிடமாவது என்னுடைய பொறுப்பை ஒப்படைத்துச் சென்று பழக்கப்படுத்திவிட்ட நான், இப்போது மட்டும் யாரிடமும் ஒப்படைக்கவில்லையே, ஏன்? இதிலிருந்தாவது புரிந்துகொள்ளவேண்டாமா, யூ நூ?

இவ்வளவு எச்சரிக்கையாக நான் நடந்துகொண்டும் என்ன ஆயிற்று? நான் ஒருவன் இன்னமும் இருக்கிறேன் என்பதையல்லவா இந்தப் பத்திரிகைகளெல்லாம் மறந்துவிட்டன! அதற்கு முன்னாலெல்லாம் நான் இருமினாலும், தும்மினாலும், கொட்டை எழுத்துக்களிலோ, அல்லது தனியாகக் கட்டம்கட்டியோ வெளியிட்டுக்கொண்டிருந்த பத்திரிகைகளெல்லாம், என்ன செய்தன என்று உலகத்திற்குத் தெரியாதா?

இப்படியிருக்க யூ நூ துறவியாவது எனக்கென்னவோ அவ்வளவு சரியானதாகப்படவில்லை. அதுவும் "துறவியாகிறேன்" என்று அவர் சொல்லி வாய் மூடுவதற்குள், பா ஸ்வே கோஷ்டி இவரைக் கட்சியிலிருந்தே வெளியேற்றிவிட்டது! இப்போது இவர் துறவியானால் என்ன ஆகும்?

நான், இன்னமும் கட்சியில் செல்வாக்குப் பெற்றிருக்கிறேன்—நாட்டிலும் செல்வாக்கு இருக்கிறது. சமயம் கிடைத்தபோதெல்லாம், அமெரிக்காவில் எனக்குக் கிடைத்த அன்பான உபசாரத்தையும்—ரஷ்யாவிலே கிடைத்த வரவேற்பையும்--இங்கிலாந்து மக்கள் காட்டிய ஆர்வத்தையும் — நாசர் என்மீது பொழிந்த பாசத்தையும் அனுராதபுரத்தை ஐந்தாவது முறையாக என்னைத் திறக்கச் செய்த பண்டாரநாயகா காட்டிய பரிவையும்—இத்தனை தாரக மந்திரங்களையும் வைத்துக்கொண்டிருக்கிற என் கதியே இதுவானால், யூ நூவின் கதி என்ன ஆகும்?

மற்றொன்றுகூட அவருக்குப் புரிந்திருக்கக்கூடும்! நானில்லாதபோது யார் யார் தங்களுடைய செல்வாக்கை எப்படியெப்படியெல்லாம் வளர்த்துக்கொண்டார்கள் என்று, அன்றாட அரசியல் நிகழ்ச்சிகளை நுணுகிப் பார்த்தவர்களுக்கு நன்றாகத் தெரியும்?

நான் அஞ்ஞாதவாசம் சென்றபோது பண்டிதபந்த் தென்னிந்தியாவுக்குச் செல்லவேண்டிய காரணமென்ன? ஜனவரி 6ம் தேதி சென்னையில் எனக்குக் கிடைத்த 'வரவேற்பு' அவருக்கு நன்றாகத் தெரியுமே! என்னிடம் பற்றும் பாசமும் கொண்டவராக இருந்தால், கறுப்புக்கொடி காட்டியவர்களைக் காரசாரமாகக் கண்டித்திருக்க வேண்டாமா? வழவழா என்று, இந்திய ஒற்றுமையைப் பற்றிப் பேசிவிட்டு வந்தார்! "பண்டிட்ஜி! நீங்கள் போனீர்கள், கறுப்புக்கொடி காட்டினார்கள்! ஆனால் எனக்குக் காட்டவில்லை, பார்த்தீர்களா" என்று நாளைக்கு அவர் கேலியும் கிண்டலும் கலந்த தொனியில் பேசக்கூடுமே? நேரிடையாக யாராலும் எதிர்க்கப்படாத என் கதியே இப்படியென்றால், ஆட்சியிலிருக்கும்போதே கட்சியிலிருந்து வெளியேற்றப் பட்டிருக்கின்ற யூ நூவின் கதி?

யூ நூ

"துறவியாகிவிடப் போகிறேன்" என்றேன்! ஏன் சொன்னேன்? எனக்கே தெரியாது!

இதை 'ஸ்டன்ட்' என்று சிலர் கருதக்கூடும்! கருதுகிறார்கள் என்று நான் எண்ணவில்லை— கருதக்கூடும் என்று யூகிக்கிறேன் அப்படி யூகிப்பதற்குக் காரணம், பண்டித நேருவுக்கு ஏற்பட்ட கதியை நினைத்துத்தான். அவர்தான் அரசியலிலிருந்து ஓய்வெடுத்துக் கொள்ளப்போவதாக அறிவித்தவுடன், அதை அரசியல் 'ஸ்டன்ட்' என்று எந்தப் பத்திரிகையும் எழுதவில்லை? ஆனால் இத்தகைய அறிவிப்பை அவர் இதற்கு முன்னால் கூட வெளியிட்டிருந்த காரணத்தால், அதை 'ஸ்டன்ட்' என்று எல்லோராலும் புரிந்துகொள்ள முடிந்தது! ஆனால் நான் அப்படியல்லவே! "விலகிக்கொள்ளுகிறேன்" என்று இதற்கு முன்னால் எப்போதும் சொன்னதில்லை. அப்படியிருக்க, என்னுடைய அறிவிப்பை 'ஸ்டன்ட்' என்று ஏன் எடுத்துக் கொள்ளப்போகிறார்கள்!

நேருவின் அறிவிப்பைப்பற்றி அவ்வளவு'பத்திரிகைகள் வெளிப்படையாக எழுதியும், அமெரிக்க ஜனாதிபதி சும்மா இருந்தாரா? "விலகாதீர்கள்" என்றல்லவா விண்ணப்பம் விடுத்தார்! காரணம் என்ன? அமெரிக்க நாட்டு மூலதனம் அளவுக்கு மீறி இந்தி

யாவில் முடங்கிக்கிடக்கிறது! அதனால், நேருவுக்குப் பிறகு வருகிற ஆட்சி அவர்களுக்குப் பாதகமாக நடந்துகொண்டால் என்ன செய்வது என்ற பயம்!

ஆனால் அதே ஐசன்ஹோவர், என்னுடைய அறிவிப்பைப்பற்றி இன்னமும் வாய்திறக்கவில்லையே, ஏன்? எங்கள் நாடு அமெரிக்க மூலதனமென்றாலே வெறுக்கின்ற-மருட்சியடைகின்ற நாடு. எங்கள் நாட்டு வளத்தைப் பெருக்க—மக்களது வாழ்வை உயர்த்த—நாங்கள் மற்ற நாடுகளின் உதவிக்காகக் கையேந்தி ஏங்கிக் கிடக்கவில்லை. அப்படி வாங்கியிருந்தாலல்லவா அவர்கள், நான் பதவியிலே இருக்க வேண்டுமா அல்லது என்னை எதிர்க்கின்ற பா ஸ்வே (Ba Swe) ஆட்சியிலே இருக்கவேண்டுமா— இரண்டில் எது இலாபகரமானது — என்ற ஆராய்ச்சியில் ஈடுபடுவர்?

பண்டித நேரு பதவியிலிருந்து விலகப்போவதாக அறிவித்தற்கும், நான் துறவியாகிவிடப்போவதாக அறிவிப்பதற்கும் வேறுபாடு இருக்கிறது. அவருக்கு இருக்கின்ற தொல்லைகள் ஏராளம்! 'இருக்கின்ற' என்று சொல்லுவதைவிட 'அவராக ஏற்றிவைத்துக்கொண்ட' என்று சொல்லுவது பொருத்தமாக இருக்குமென்று நினைக்கின்றேன்.

அவர் ஆளுகிற நாடு மிகப் பெரியது — பரந்தது—பல்வேறு மக்கள் தொகையைக்கொண்டது —பல்வேறு மொழிகளைக்கொண்டது. ஆங்கிலேயர் வருவதற்கு முன், என்றுமே ஒன்றாக இல்லாத நாடு அது! அதனை ஒன்றாக்கி ஆள்வதென்பது சாதாரண விஷயமல்ல! அதை அவர் புரிந்துகொள்ளாததுதான், அவருக்கு ஏற்பட்ட தொல்லைகள் அனைத்திற்கும் அடிப்படையான காரணம்!

ஆனால் என் நிலை அப்படியல்ல! பர்மாவின் அமைப்பும் பாரதத்தைப் போன்றதல்ல! இப்போது ஏற்பட்டிருக்கிற அரசியல் குழப்பத்திற்கு முக்கிய காரணம் தனிப்பட்டோரது ஆசைகளும் பதவிப் பித்தும்தான்!

பண்டித நேருவின் கட்சியில் பல 'கோஷ்டிகள் இருப்பதாகப் பத்திரிகை வாயிலாக அறிந்துகொண்டேன். ஆனால் நானிருக்கின்ற கட்சி, பல கட்சிகளின் கூட்டணி — ஒரு கட்சியல்ல! அதனாலே எங்களுக்குள் பிளவு ஏற்படுவது ஆச்சரியம் விளைவிக்கின்ற ஒன்றல்ல!

கம்யூனிஸ்டுகளை முறியடிப்பதற்கு, பா ஸ்வே என்பவரையும் நீன் என்பவரையும் வளர்த்தேன். அவர்களை மக்களுக்கு அறிமுகப்படுத்திவைத்தேன — அரசியல் தலைவர்களாக்கினேன். வளர்த்த கடா மார்பில் பாய்வதைப்போல், அவர்கள் என்மீதே பாய்ந்துவிட்டார்கள் — என்னைக் கட்சியிலிருந்து வெளியேற்றிவிட்டார்கள்.

அவர்கள் பாராளுமன்றத்தில் எனக்கெதிராகக் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் நான் வெற்றி பெற்ற காரணத்தால், இனி எந்தப் பயமும் எனக்கு இல்லை என்று தப்புக் கணக்குப் போட்டுக்கொண்டு, செல்வாக்கு இருக்கும்போதே துறவறம் பூணுவதுதான் நல்லது என்ற கருத்தில், புத்த பிட்சுவாகிவிடத் தீர்மானித்ததாக அறிவித்தேன்!

ஆனால் இப்போது என்ன செய்ய? இருதலைக்கொள்ளி எறும்பாகிவிட்டேன். உலகத்துக்கு நான் அறிவித்தபடி துறவியாகிவிட்டால் அரசியலைக் கண்டு அஞ்சி ஓடிவிட்டேன் என்று நாளைக்கு உலகம் சொல்லக்கூடும்! அப்படியொரு பெயர் — எனது அரசியல் வாழ்வில் அழித்திடப்பட முடியாத கறை ஏற்படக்கூடாதே என்று கருதி, துறவியாகின்ற எண்ணத்தைத் துறந்துவிட்டால், நானும், பண்டித நேருவைப்போல் 'ஸ்டன்ட்' அடிப்பதாக உலகம் கருதிக்கொண்டால்? காலமே! என்ன செய்யவேண்டும் என்று வழிகாட்டும் பொறுப்பை உன்கரத்திலேயே விட்டுவிடுகின்றேன்!

பா ஸ்வே

உலகம் போற்றட்டும் அல்லது புழுதிவாரித் தூற்றட்டும்-அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை! எனக்கிருக்கிற கவலையெல்லாம், கம்யூனிஸ்டுகளை நேற்றுவரை எதிர்த்து வந்த என் தலைவர்— இல்லை, நேற்றுவரை எனக்குத் தலைவராக இருந்தவர் — இன்று எப்படி அவர்கள் பக்கம் சேரலாம்? தேர்தலில் வெற்றி பெறுவதற்காக அவர்கள் உதவியை நாடுகிறார் என்றால், தான் இதுவரை கடைப்பிடித்துவந்த கொள்கையைக்கைகழுவி விட்டுவிட்டார் என்பதைத் தவிர வேறென்ன?

பாசிச எதிர்ப்பு மக்கள் உரிமை அணியிலிருந்து கம்யூனிஸ்டுகள் 1946ல் வெளியேறினார்கள். வெளியேறிய பிறகு அவர்கள் அரசாங்கத்திற்குக் கொடுத்த தொல்லைகள் எவ்வளவு! அரசாங்கத்தின் பணம் கொள்ளை கொள்ளையாகச் செலவிடப்பட்டல்லவா, அவர்களது ஆணவமும் அட்டகாசமும் அடக்கப் பட்டிருக்கிறது!

அதே கம்யூனிஸ்டுகள்தான், நமது அணியிலிருந்து வெளியேறிய இரண்டு ஆண்டுகளில், நமது பழைய பிரதமர் அவுங் சான் என்பவரையும் மற்றும் பலரையும் சுட்டுக் கொன்றார்கள். அவர்களோடு இன்று யூ நூ கைகுலுக்குகிறார்— எங்களையெல்லாம் உதறித் தள்ளுகிறார் என்றால் என்ன அர்த்தம்?

கம்யூனிஸ்டுகளோடு கைகுலுக்கிக் கொள்வதோடு நிறுத்திக் கொண்டாலும் பரவாயில்லை. அமெரிக்காவிலிருந்து எந்த உதவியும் தேவையில்லை என்று, இறுமாப்போடல்லவா நாட்டை நடத்திச்செல்லுகிறார்? ஐந்தாண்டுத் திட்டத்தைக்காட்டி, பாரதம், அமெரிக்காவிடமிருந்து, எப்படியெப்படியோ பணம் பெறுகிறதே! அப்படி இவரும் கடன் வாங்கி, அல்லது உதவிகளைப் பெற்று நாட்டை ஏன வளப்படுத்தக் கூடாது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை ஏன் உயர்த்தக்கூடாது?

"பாரதம் ரஷ்யாவின் பக்கமுமில்லை—அமெரிக்காவின் பக்கமுமில்லை--நியாயத்தின் பக்கம்தான்" என்று பண்டித நேரு அடிக்கடி சொல்லிவருகிறாரே, அந்தப் பாதையை யூ நூ ஏன் கடைபிடிக்கக்கூடாது? ஏதாவது ஒரு பக்கம் சேர்ந்துவிடுவதாலே ஏற்படுகிற பயன் என்ன?

இவ்வளவையும் எண்ணிப்பார்க்காமல் நாட்டை நடத்திச் செல்வதால் ஏற்படவிருக்கின்ற அபாயங்களை எண்ணினேன். அதனாலே

கட்சியிலிருந்து அவரை வெளியேற்றினேன்! இப்படி நடக்கும் என்றுதெரிந்துதானோஎன்னவோ வெளியேற்றப்படுவதற்கு முன்னால் "துறவியாகிவிடுகிறேன்" என்று அவர் அறிவித்துவிட்டார். இத்தனை வருட அனுபவம், இவருக்கு இந்த முன் யோசனையைக்கூடத் தராமலிருந்தால் நான் வருத்தப்பட்டிருப்பேன். இப்போது மகிழ்ச்சியடைகிறேன்! எங்களுக்குள்ளே எவ்வளவு பேதா பேதங்களிருந்தாலும், என் தலைவர் இவ்வளவு முன்யோசனையோடு, தீர்க்க தரிசனத்தோடு நடந்துகொள்ளும் திறமை வாய்ந்தவர் என்பதை எண்ணிப் பார்த்திடும்போது எனக்கு மகிழ்ச்சி பிறக்காமலா போகும்? ஆனால் நான் — அவருடைய அறிவைக் கண்டு பாராட்டுகின்ற-பெருமைப்படுகின்ற நான் — அவர் சொன்ன சொல் தவறுதவர் என்று உலகம் அவரை எண்ணும்படி நடந்து கொள்ள வேண்டுமென்று மன்றாட விரும்புகின்றேன்.

❋

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஒற்றுமை உபதேசம் செய்வார்— நடந்த சம்பவங்களுக்கு ஏதாவது ஒரு நொண்டிச் சமாதானம் சொல்வார்—எல்லாச் சம்பவங்களுக்கும் பெடரல் கட்சியினரே காரணம் என்று பாய்வார்.

கடந்தமாதம், பெருத்த அளவில், இலங்கைத்தீவு முழுவதுமே இந்த: முறை கையாளப்பட்டது. கொழும்பில் நடைபெற்ற சிலசம்பவங்களைத் தவிர, சிங்களவர்கள் வாழுமிடங்களிலெல்லாம் காலிகளையும் கூலிகளையும் வைத்துக்கொண்டு தமிழர்கள்மீது நடாத்தப்பட்ட அக்கிரமங்களைப்பற்றி அரசாங்கம் விடுத்த அறிக்கைகள் எதிலும் ஒரு வார்த்தை கூடக் குறிப்பிடவில்லை. ஆனால், தமிழர்கள் வசிக்கும் இடங்களில் ஒரு சிலர் ஈடுபட்ட செயல்கள் பற்றிப் பிரமாதமாக வர்ணிக்கப்பட்டு, தமிழர்கள் வசிக்கும் பகுதிகளிலேயெல்லாம் இராணுவம் கொண்டுவந்து குவிக்கப்பட்டது; பெடரல் கட்சித் தலைவர்கள் எல்லாரும் கைதுசெய்யப்பட்டார்கள்- சிங்கள வெறியர்கள், சர்க்கார்— பிரதமர் ஆகியோரின் பிடியிலேயே உள்ளனர்.

திரு. சின்னதுரை (பி.எஸ்.பி.), திரு. ராஜாராம் நாயுடு (காங்கிரஸ்) ஆகியோர், எதிர்க்கட்சியினரைத் தாக்க வேண்டும் என்பதற்காக, இலங்கைவாழ் தமிழர்களைப்பற்றி அநாவசியமாகத் தங்களது பேச்சில் இழுத்திருக்கின்றனர். எந்த உண்மையை வைத்து அப்படிப் பேசினார்களோ தெரியவில்லை! இதுபோன்ற பேச்சுகள் மூலம், இலங்கைவாழ் தமிழர்களுக்கு பெருத்த தீங்கும் சிக்கலும் உண்டுபண்ணியுள்ளார்கள்.

சி. எச். முத்து,
இலங்கை.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஒருவர்! இன்னொருவரோ், அரசியல் கட்சி ஒன்றின் முன்னணியில் நிற்பவர்! தோழர் ராஜாராமும், சின்னதுரையும், இலங்கைத் தமிழர்கள் பற்றி வெளியிட்ட கருத்துக்கள், அங்கு வாழ்வோரின் மனதை எந்தளவுக்குப் புண்படுத்தியுள்ளன என்பதைக் கடிதம் உணர்த்தும்.

சின்னதுரையைவிட ராஜாராம் அவர்களுக்குப் பொறுப்பு அதிகம். ஆளும் கட்சியின், தமிழ் நாட்டுப் பிரிவுக்குத் தலைவர் அவர். அப்படிப்பட்டவர், "இலங்கைப் பிரச்னைக்குக் காரணம் அங்குள்ள தமிழர்கள்தான்" என்று தமிழ் மக்களையே குற்றம் சாட்டிப் பேசினதாக, ஏடுகளில் கண்ணுற்றோம்.

இலங்கையில், தமிழன் துயர் பெரிது! இதனைத் தமிழர்கள் கொடுத்துள்ள உயிர்ப்பலி விளக்கும்!

நம்மோடு இருக்கவேண்டியவன் —நமது இனத்தான், நமது சகோதரன், அங்கே சாகும்போது, இங்கேயுள்ள இவர், பிரச்னை தீர ஆவன செய்திருக்க வேண்டும்; இன்றேல் அனுதாபமாவது காட்டியிருக்க வேண்டும்; அதை விடுத்து, அவர்கள்மீதே குற்றம் சுமத்துவதென்றால், கொடுமை என்போம்.

இங்குள்ள சிலர் பேசுவதைக் கேட்டு, இலங்கைவாழ் தமிழர்கள் நடந்துகொண்டதன் விளைவாகத்தான், அங்கே இப்படியெல்லாம் நடக்கிறதாம்!— சொல்லியிருக்கிறார், ராஜாராம்.

தீ எரியும்போது அது அடங்கும் விதத்தில் முயற்சிகள் எடுப்பதுதான் நல்ல செயலாகும். அதைவிடுத்து, இப்படி இவர்கள் பேசுவது, வேதனையானது மட்டுமல்ல; இதுபோன்ற விஷயங்களில், ஏனிப்படி இருக்கிறார்கள் என்கிற ஐயத்தையும் எழுப்புகிறது. உண்மையில், வருந்துகிறோம்.

ஆ. ர.

தூத்துக்குடி தேர்தல்

இருப்பது கொஞ்சநாட்களே!

தோழர்காள்!
கழகங்காள்!!

கையில் கிடைத்ததை ஒவ்வொருவரும் உடன் அனுப்பியுதவுங்கள், அறிவகத்துக்கு.

அவசரப்பணி! காசுகள் தேவை!!

திராவிடநாடு

13—7—58 | வார வெளியீடு | விலை 16 காசு

இனத்தை இனம் காக்கும்

(மா. சபாபதி)

இலங்கைமா நகரில் இன்று
இனவெறி பிடித்தோர் பேய்போல்
கலகத்தை மூட்டி விட்டார்;
கதிகெட்டார் தமிழர் அங்கே!
கொலைகளும் கொள்ளை போன்ற
கொடுமையும் மிகுந்த தாலே
நிலைகெட்டார்; மானங் கெட்டார்
நீதியே எங்கே சென்றாய்?

செந்தமிழ் நாட்டு மக்கள்
சிங்களர் செய்தி கேட்டார்
நொந்தனர் மனசு நோக
நடுங்கினர் திகைத்து நின்றே
பைந்தமிழ் மக்கள் வாழ்வு
பறப்பதோ தெருவில் என்று
செந்தமிழ்த் தோழர் எல்லாம்
சேர்ந்தனர் உரிமை காக்க.

நடந்ததை ஏட்டில் கண்டும்
நடுக்கமே சிறிதும் இன்றி
உடம்பிற்கு ஓய்வு தேட
'குளு'வுக்கு சென்றார் நேரு.
வடவனை என்று கேட்டு
வாழ்வளிக்க ஓடும் நேரு
துடிக்கின்ற தமிழர் மாசை
துடைத்திட மறுப்ப தேனோ?

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 29 JUL 1958 MADRAS

தமிழ் வென்றது

[கா. வேழவேந்தன்]

மாலை வந்தது. சோலையிலே பூத்திருந்த மலர்களெல்லாம் ஒன்றையொன்று நோக்கிச் சிரித்துக்கொண்டன. பொதியமலைத் தென்றல் வந்து அவற்றின் செவிகளில் ஏதோ சொல்லிவிட்டு தன்வழியே சென்றுகொண்டிருந்தது. அதற்கு 'ஆமாம், ஆமாம்' என்று தலையாட்டுவனபோல அத்தனை மலர்களும் ஆடிக்கொண்டே இருந்தன.

அவள் வந்தாள். கொய்யாத மலர்களைச் சேர்த்துத் தன் கையால் அணைத்தாள். அவள் விழிகளிலிருந்து உதிர்ந்த முத்துத் துளிகள் அந்த மலர் இதழ்களில் விழுந்து தெறித்தன. அவள் வாய் ஏதேதோ பேசியது,

"நறுமணம் தரும் மலர்கள் என் நிலையைப் பார்த்து நகைக்கின்றன! குளிர்ஊறும் தென்றல் என்னைத் தொட்டிழுத்துவிட்டு, கைகொட்டி நகைத்துக்கொண்டே செல்கிறது! கோல மயில் எழில் மங்கிய என்னை வென்றுவிட்ட கொண்டாட்டத்தில் துள்ளித் துள்ளி ஆடுகிறது! குரலே எழாத நிலையில் இருக்கிறேன் என்பதை உணர்ந்துவிட்ட அந்தப் 'பொல்லாத குயில் ஓயாமல் பாடித் தீர்க்கிறது! குமரியாடுவதற்குத் தம் காதலருடன் என் தோழியர் கூட்டம் கூட்டமாகச் செல்கிறார்கள்! ஆனால்நான்? நீரில்லா ஆறாக, நிலவில்லா வானமாக அவரில்லாமல் கொஞ்சம் கொஞ்சமாக நைந்து மடிகிறேன். பாழும் நெஞ்சமே! நீ ஏன் வாய்மூடிக் கிடக்கிறாய்? சென்றவர் எங்கே? திரும்பவேமாட்டாரா? என்னை முழுக்க முழுக்க மறந்தேவிட்டாரா?" அவள் இப்படி நெஞ்சைக் கேட்டாள்.

"இல்லை! உன் காதலன் நெஞ்சம் பாலை நிலத்து மணல் வெளியென்று நினைக்கிறாய்? சுழற்காற்று வீசியவுடன் நடந்து சென்ற சுவடுகளை கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிட! அவன் நெஞ்சம் தங்கத் தட்டால் ஆனது; அதிலே இழுக்கப்பட்ட கீரல், தட்டே அழிந்தால்தான் அழியும்! உறுதியாகச் சொல்கிறேன்! ஓயாமல் ஏன் புலம்புகிறாய்? அவன் நெஞ்சத்திலிருந்து என்றுமே உன்னை மறக்கவில்லை—மறைக்கவில்லை—மறுக்கவில்லை!" இப்படி ஆறுதல் கூறியது அவள் இளநெஞ்சு!

"மறந்திருக்கவில்லையென்றால், எங்கே சென்று மறைந்திருக்கிறார்? ஒன்றுமே புரியவில்லையே! ஒருவேளை அடுத்த நாட்டுப் பகைவருடன் மோதல் ஏற்பட்டு அன்னை நாட்டின் மானங்காக்க எனக்குரிய உயிரை என்னைக் கேட்காமலேயே பணயம் வைத்துவிட்டாரோ? நினைக்கவே முடியவில்லையே என்னால்! நெஞ்சே! இதுதான் நடந்திருக்குமா?"

"இல்லை! ஏன் உன்னை நீயே நெருப்பில் தூக்கிப் போட்டுக்கொள்கிறாய்? உன் உள்ளங்கவர்ந்தவனின் வைரமேறிய தோள்களின்மீது உனக்கு ஏன் உறுதிப்பாடு இல்லை? மாறன் வழுதியின் நாட்டிலே பிறந்தவனுடைய மறப்பண்பிலே எப்படி உனக்கு ஐயப்பாடு ஏற்பட்டது? வெற்றியன்றி வேறறியா மாவீரன் உன் காதலன்! எனவே மீண்டும் உன் வலிவு குன்றிய நாவினால் இப்படியெல்லாம் சொல்லாதே!"

"சொல்லவில்லை! அப்படியென்றால் என் அன்பையெல்லாம் வாரிக்கொண்டுபோன அவர் எங்கே? எத்தனை நாட்கள் மொத்தமாகக் கழிந்துவிட்டன? ஒருவேளை இல்லறவாழ்வே கூடாதென்று நல்லுலகம் தேட, காவியுடுத்துக் கமண்டலம் வந்திப் புறப்பட்டு விட்டாரோ? அப்படி என்றால் இனித் திரும்பவா போகிறார்?"

"சேச்சே! உன் கற்பனை ஏன் இத்தனை தாழ்வாகச் செல்கிறது? அவன் தமிழ் இனத்திலே வந்தவன்! அவன் உடலிலே ஓடுவது தமிழ்க் குருதி! அந்த அறியாமைப் படுகுழியில் விழவேண்டுமென்றால், அவனுக்கு மூளைதான் குழம்பவேண்டும்! ஆனால் இன்னும் அவன் தன்னுணர்வுடனேயேதான் இருக்கிறான். எனவே அஞ்சி அஞ்சிச் சாகாதே! உலகைத் துறக்கும் ஊதாரியல்ல, உன் ஒப்பற்ற காதலன்!"

"பாழும் நெஞ்சே! எல்லாவற்றிற்கும் ஏதேனும் பதில் சொல்லிவிடுகிறாய்? வாடுகின்ற என் கண்களுக்கும், தோய்கின்ற என் கைகளுக்கும் என்ன பதில் சொல்லச்சொல்கிறாய்? என்னை அவர் மறந்தார் என்றால் ஒருவேளை என்னைப்போன்றவள் ஒருத்தி, இடையிலே வந்து அவரை..."

"சீச்சீ! மதிகலங்கிய நீ அவன்மீது எத்தனை எத்தனை மாசு கற்பிக்கிறாய்? கன்னித்தமிழ் நாட்டிலே வந்தவன்தான் உன் கண்ணாளன்! அவன் நெஞ்சக் கோயிலிலே ஒரே ஒரு உருவத்திற்குத்தான் இடம் உண்டு; மீண்டும் சொல்கிறேன். அவன் அயலார் பண்பை தூசுக்கும் மதிக்காதவன்! உன்னைக் கைவிடமாட்டேன் என்று கூறிய அவன் உலகமே அழிந்தாலும் வேறு பெண்களைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டான்! கல்லையெடுத்து கையை ஏன் குத்திக்கொள்கிறாய்? கலைக்குதவாத கற்பனைகளால் அவன் ஒழுக்கத்திற்கு ஏன் இழுக்குத் தேடுகிறாய்?"

"குறும்பு நெஞ்சே! என்னை ஏன் கொல்லாமல் கொல்லுகிறாய்? அவர் எந்த நிலையில் எங்கே இருக்கிறார் என்று நீயும் எனக்குச் சொல்லமாட்டாய்? என்னையும்பேசவிடமாட்டாய்? அப்படி என்றால் வழிதான் என்ன? இறுதியாக அவரைப்பற்றி எனக்கு ஒரே ஒரு எண்ணம்தான் தோன்றுகிறது! என்னைப்பிரிந்த அவர் எங்கோ பொருள்தேடச் சென்றிருக்கிறார்; எதிர்பார்த்த அளவு பொருள்சேர்க்க இயலவில்லை; திரும்பிவந்தால் எங்கே நான் குறைத்து மதிப்பிடுவேனோ என்று எண்ணியிருக்கிறார்; எப்படி என் முகத்திலே விழிப்பது என்று கருதித் தன்னையே தான் அழித்துக்கொண்டிருக்கிறார்......"

"பிதற்றாதே! பெண்தானே நான் என்பதை உன் பிற்போக்கான கற்பனைகளால் காட்டிவிடுகிறாயே! உன் அத்தான் என்ன அத்தனை நெஞ்சுரமற்றவன் என்று நினைத்துவிட்டாய்? 'வையை' நீரைப் பருகியவன் என்றுமே கோழையாக வாழ்ந்ததில்லை! பஞ்சு மனம் கொண்டவன்தான் உன்னைக் கவர்ந்த அந்தப் பண்பாளன்; ஆனால் இப்படி அற்பத்திற்கெல்லாம் ஆவியைத் துறந்துவிடும் எலும்புகளே இல்லாத மனிதக்கூறு அல்ல, அவன்! அந்தப் பீடுநடைக்காரன் நீ நினைப்பதுபோல் ஒன்றும் பிணமாகி இருக்கமாட்டான்!"

"ஐயோ! வாடா மலரே என்றழைத்துப் பின் என்னை வாடவிட்டுப் போன அவர் ஏன் வரவில்லை? நெஞ்சே! உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன்! எங்கேதான் சென்று, என்றுமே திரும்பிவராத நிலைபெற்றுவிட்டார் அந்த இரக்கமே இல்லாதவர்?"

"பேதைப்பெண்ணே! சுற்றுலாச் சென்றவன் மதுரைக்குச் செல்வதாகச் சொன்னானே, நினைவிருக்கிறதா?"

"ஆமாம்!"

"தேனூறும் தமிழ் மணக்கும் சங்கத்தில் சென்றுதான் அவன் ஈடுபட்டிருக்கவேண்டும்! அவனுடைய மதியை மயக்க அமுதனைய தமிழ் ஒன்றால்தான் இயலும்! மதுரை சென்ற உன் காதலன் மதுரத் தமிழ் உண்ட வண்டாக மாறிவிட்டான்! புரிகிறதா?"

"தெரிகிறது. இது முன்பே தெரிந்திருந்தால் மதுரை இருக்கும் திக்கிலேயே அனுப்பியிருக்கமாட்டேன்! ஐயோ! கன்னித்தமிழே! நீதானா என் கார்த்திகைத் தீய்ப்பது."

விழிநீரையும் துடைக்காமல் வெறி பிடித்தவள் போலத் திரும்பினாள் அந்தத் தலைவி. மலரைத்தேடி ஓடி வந்த வண்டொன்று அவள் முகத்திலே மோதிச்சென்றது! ★

தூத்துக்குடி தேர்தல்

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [13-7-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 52

தூத்துக்குடியில் சட்டமன்ற உறுப்பினர் தேர்தல் நடக்க இருக்கின்றது. இடைக்காலத் தேர்தல் என்றாலும், அதனுடைய வெற்றியை நாடிப்போட்டியிடும் கட்சிகள்பாடுபடுவது தெரிந்ததே. இதன் வெற்றி தோல்வியால் சட்டமன்றத்தின் உறுப்பினர் தொகையில் பெருத்த மாறுதல் ஏதும் விளையாது என்றாலும், இந்தத் தொகுதியின் தேர்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். காங்கிரசை மக்கள் ஆதரிக்கின்றார்கள், அவர்கள் இடும் கட்டளைகளை ஏற்றுக் கொள்ளுகின்றனர் — என்று காங்கிரஸ் காரர்கள் சொல்லிவருகின்றனர். மக்களை மதியாமல், மக்களின் எண்ணங்களை மதியாமல், நாட்டு நலனிலும், அக்கரையின்றி ஏதேதோ செய்திடுகின்றனர். தேர்தல் காலத்தில் **வாக்காளர்களை**—மக்களை அல்ல; வாக்காளர்களை—தங்கள்பால் ஈர்த்துக்கொள்ளும் வகையைத் தேடி எப்பாடுபட்டோ, எவ்வழி முயன்றோ வெற்றி பெற்றாகவேண்டும் என முனைந்து நின்கின்றனர். உண்மையான மக்கள் ஆதரவு அவர்களுக்கு இல்லை என்றாலும், வாக்காளர்களின் ஆதரவு இருக்கிறது என்று பெருமைப் படுகின்றனர்.

இதற்கு அடிப்படை, காங்கிரஸ் கட்சி பெற்றிருக்கும் பணபலமே முக்கிய காரணம் எனலாம். பணத்தால் எதையும் செய்திட இயலும் என்றெண்ணி அவர்கள் பணத்தின்மீது தங்கள் கட்சியைக் கட்டிவைத்திருக்கின்றனர். உண்மையான மக்களின் உணர்ச்சி மேல் எழுந்து, உண்மையினை உணரும் தெளிவு பிறந்திட்டால் பணம் அதன் முன்னே நிற்காமல் பஞ்செனப் பறந்தோடிவிடும்.

ஆனால் இன்றைய சூழ்நிலையில் அந்த நிலை நம்முடைய நாட்டிலே ஏற்படவில்லை. அதனால் மக்களின் ஆதரவு இல்லாவிடினும் பணத்தின் ஆதரவு இருக்கும் காங்கிரஸ் கட்சி பெருமை பேசுகின்றது.

அந்தக் கட்சியை நாம்—தி. மு. க. எதிர்க்கின்றோம். கொள்கைகளின் பெயரால் எதிர்க்கின்றோம். நாட்டு நலன் வளர உண்மையான மக்கள் குரல் ஒலிக்க வேண்டும் என எதிர்க்கின்றோம். காங்கிரஸ் கட்சியைப்போல் நாம் காரிருளில் பணத்தினை நாடப்போவதில்லைஎன்றாலும், அடிப்படைத் தேவைக்கான பணம் வேண்டுமல்லவா? மக்களைச் சென்று சந்திக்க, செய்திகளைச் சொல்லிட, சுவரொட்டிகள் அச்சிட, என்று இன்றியமையாத கடமைகளைச் செய்யவும் பணம் இன்றி இயலாது என்பதை நாம் உணர்வோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் மக்களின் தேசீய இயக்கமாதலினால், இதற்கு வேண்டிய உதவிகளைச் செய்வது மக்களின் கடமை என இதுநாள் வரை மக்களே அவ்வப்போது கை கொடுத்து கழகத்தைக் காத்துவருகின்றனர். அந்த முறையில் தூத்துக்குடித் தேர்தலுக்காகும் செலவுகளை ஈடு, செய்வதற்காகத் தலைமை நிலையம் வேண்டுகோள் விடுத்தவுடன் சென்னையில் மக்கள் ஆதரவு தந்த செய்தியனையும், கோபி மாநாட்டில் உண்டியலில் போட்ட பெருந் தொகையினையும் கண்டும், கேட்டும், தமிழக மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திடம் கொண்டுள்ள நம்பிக்கையினையும், காட்டிடும் ஆதரவினையும் நாம் அறிந்து பாராட்டுகின்றோம்.

அதோடு மேலும், இன்னும் தங்கள் பங்கைச் செலுத்தாத தோழர்களும், ஆதரவாளர்களும் உடனடியாகத் தங்களால் இயன்ற உதவிகள் அனைத்தையும் விரைந்து செய்ய வேண்டுகின்றோம். உடலால், பொருளால் இயன்ற உதவிகளைச் செய்யத் தேர்தல் நிறைய வாய்ப்பளிக்கும். தொண்டர்களாகப் பணியாற்றுவதும், தொகை சேர்த்துத் தருவதும் காலத்தால் செய்யத்தக்க உதவிகளாகும். காலத்தால் செய்த உதவி ஞாலத்தின் மாணப் பெரிது என்பது தமிழர் கொள்கை.

நாட்டு நலனில் அக்கறைகொண்ட திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெறப் பாடுபடுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

★

நாகியின் பரிதாபம்!

1956-ம் ஆண்டு, அங்கேரியா மீது, அங்குள்ள சர்க்கார் வரம்பு மீறிப்போவதாகக் குற்றம்சாட்டித் தன் படைகளை அனுப்பிற்று ரஷ்யா! வெண்புறாக்களைப் பறக்க விட்டுக்கொண்டும், அணுகுண்டுகளைத் தயாரிக்கும் வெறிபிடித்த அமெரிக்காவின் சதிகளை அம்பலப்படுத்திக்கொண்டும், நேருவுடன் பஞ்சசீல உடன்பாடு செய்துகொண்டும் பவனி வந்த இதே சமயத்தில்தான், படைகளையும் இன்னொரு நாட்டிற்கு அனுப்பிற்று!

அங்கேரியை ஆண்ட பிரதமர் நாகி என்பாரும், வேறு சிலரும், ருஷ்யாவின் எடுபிடிகளாயிருக்க மறுத்ததே, இந்த ஆக்கிரமிப்புக்குக் காரணம் என்று சொன்னார்கள். மாஸ்கோவின் புதிய ஸ்டாலினாக உருப்பெற்ற குருஷேவுக்கு நாகி, பிடிக்காததனாலேயே இந்த ஆக்கிரமிப்பு என்று சொல்லப்பட்டது. "இது ஆக்கிரமிப்போ, படையெடுப்போ அல்ல; அமைதியை நிலைநாட்டும் ஒரு செயல்" என்று ரஷ்யாவின் சார்பில், செய்திகள் தரப்பட்டன!

உலகின் மிகப்பெரும் வல்லரசுகளில் ஒன்றான ரஷ்யாவின் பலம் கண்டு அந்தச் சின்னஞ்சிறு நாட்டு அதிபர் நாகி, தன்னூர் நாட்டைவிட்டு அண்மையிலுள்ள யுகோஸ்லேவியா நாட்டிற்கு. (இதுவும், ஒரு கம்யூனிச நாடு தான்! ஆனால், ரஷ்யாவைப் போன்றதல்ல!!) தூதராலயத்துக்கு ஓடி, சரண்புகுந்தார். நாகியும், அவரது சகாக்கள் சிலரும், யுகோ சர்க்காரின் தயவில் 19-நாட்கள் இருந்தார்கள். அதற்குள், அங்கேரியில், மாஸ்கோவின் சொல் கேட்கும் ஒரு அரசு ஏற்பட்டுவிட்டது. அந்த அரசு, யுகோ சர்க்காருடன், "நாகியையும் அங்கு வந்திருப்பவர்களையும், வெளியே அனுப்பிவையுங்கள். பழி வாங்கமாட்டோம். அந்த உத்தேசமில்லை" என்று சொல்லி உறுதி தந்தது. பொதுவுடைமைக் கொள்கைகளில் பற்றுக் கொண்டவரும், அதே சமயம் கொள்கைக்காக மனித மாண்பை இழத்தலாகாதெனும் போக்குக் கொண்டவருமான யுகோவின் தலைவர் டிட்டோ மேற்படி நிபந்தனைகளைப் பெற்றுக்கொண்டு நாகியையும் பிறரையும் வெளியே அனுப்பி வைத்தார்! அவர்கள் எடுத்தடி வைத்ததும், ருஷ்யப் படை அவர்களைப் பொறுப்பேற்றுக் கொண்டது; எங்கேயோ கொண்டு சென்றுவிட்டது!! "இது நியாயமா? சொன்ன சொல் மீறலாமா! ஒழுங்கா?" என்று யுகோ சர்க்கார் மாஸ்கோவைக் கேட்டது. "நாங்கள் எதுவும் செய்துவிடவில்லை, ருமேனியாவில்கொண்டுபோய்ப் பத்திரமாக வைத்திருக்கிறோம்" என்பதுபோல, மாஸ்கோவிலிருந்து பதில்கள் தரப்பட்டன.

ஜெனரல் மேலேட்டர் என்பார், நாகி பிரதமராயிருந்தபோது, இராணுவத் தளபதியாக இருந்தவர். அங்கேரியிலிருந்து ரஷ்யப் படைகள் "வாபஸ்" ஆவதுபற்றிப் பேச வருமாறு அவரை அழைத்தார்கள். போனார்; போனவர், திரும்பவில்லை. அவரையும் எங்கோ மறைவான ஒரு இடத்துக்குக் கொண்டுபோய் விட்டதாகச் சொல்லப்பட்டது. நாகியையும், மெலடரையும் அவர்தம் தோழர்களையும், எங்கே வைத்தார்கள், எப்படி வைத்திருந்தார்கள் என்கிற தகவலேயில்லை. சொன்னதில் நம்பிக்கைவைத்த, யுகோ திகைத்தது! அது மட்டுமல்ல, அங்கேரிய சர்க்காருக்கே, தகவல்கள் இல்லையாம் — அந்தளவுக்கு. இரகசியமாக, மாஸ்கோ அவர்களை வைத்திருந்தது!! கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம், அங்கேரியப் பிரதமர் காடார் என்பார் பேசும்போது, "கோடைவாசம் செய்துகொண்டிருக்கிறார்கள்" என்று உலகுக்குச் சொன்னார்.

இப்போது சேதி வருகிறது! அங்கேரியாவின் தலைநகரிலே இருந்தல்ல; மாஸ்கோவிலிருந்து, நாகி, கொல்லப்பட்டுவிட்டார் என்று!! "மரணதண்டனை பெற்றார்", என்பதுதான் செய்தி. என்றாலும், நடந்த விபரங்களைப் பார்க்கும்போது, கொல்லப்பட்டார்" என்பதே பொருத்தமாகும்!

• • •

தண்டனை அளிக்கப்படுமுன், விசாரணையும் நடைபெற்றதாம். எப்படி நடந்ததாம், விசாரணை தெரியுமா?

இரகசியமாக, நடக்குமுன் யாருக்கும் சொல்லாமல், தீர்ப்பு என்னவென்று உலகுக்குத் தெரிவிக்கப்படாமல்

நடைபெற்றிருக்கிறது! உலகுக்கு, அவர்கள் கொல்லப்பட்ட பிறகுதான், இப்படி ஒரு விசாரணை நடைபெற்றதாகவும் சொல்லப்படுகிறது!

தேங்காய்க் குலைகளை அறுப்பது போல், நேற்று ஒளி விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்த அரசியல் தலைவர்களை அறுப்பதும், அவர்தம் சமாதிகளைத் தோண்டிப் பறித்துச் சாணிகளைக் கொட்டுவதும் மாஸ்கோவிலிருந்து நாம் அடிக்கடி கேள்விப்படும் சேதிகள் ஆகும். மாஸ்கோவின் மனம் பற்றியும், அங்குள்ளோர் நடத்திய வீரப்போர் குறித்தும், அங்கு நடைபெறும் அரசாங்கத்தின் பலமாண்புகளைப்பற்றியும், சிரவணக்கம் செய்வோர் நாம். எனினும், "மனிதன்", என்கிற உருவுக்கு

(15-ம் பக்கம் பார்க்க)

அன்றோர், நாள்!

"லிங்கம், என்ற பெயர் அப்போது உண்டாகவில்லை அந்த நிலப்பரப்புக்கு! அங்கே, ஆளவந்தான் கார்காந்து எனும் மன்னன்!! அவன் அங்கே ஆட்சிக்கு வந்ததைப்பற்றி, அரியதோர் கதையுண்டு. சின்னஞ்சிறு வயதில், பறையன் ஒருவனுக்குப் பாலகனாக வளர்ந்தவன் அவன்! சுடுகாட்டிலே, சுடலைகாக்க வந்தபோது, குழந்தையொன்று அழுவதைக் கண்டு அந்தப் பறையர் எடுத்துக் கொண்டுபோய் வளர்த்தாராம்!! வயதுவந்த அச்சிறுவன், தன்னையொத்தவர்களுடன் விளையாடும்போது, அவர்களுக்குள் வாக்குவாதம் வளர்ந்ததாம். சின்னஞ்சிறுவர்கள் பேசிக்கொள்வதுண்டல்லவா, எங்கப்பாவைப்போல் பெரிய அதிகாரியாக வருவேன்—போடா! நான் யானைமேலே ஏறித்தான் ஊருக்குப்போவேன்—ஏய்! நான் இந்த நாட்டுக்கே ராஜாவாக வருவேன்!—என்பதுபோல. அதுபோல, அவர்களும் பேசிக்கொண்டிருந்திருக்கிறார்கள்!! அப்போது, அங்கேயிருந்த நமது சிறுவன் "நான்! இந்த நாட்டுக்கே ராஜாவாக வந்து உங்களையெல்லாம் விடப் பெரியவனாக, பெரிய இடத்திலே உட்கார்ந்திருப்பேன்" என்றானாம். சிறுவன, பறையர் குலமாயிற்றே! நீசன் மகன்-ஆசையோ அதிகம் ஆள. அதைக்கேட்டான், அங்கிருந்த வேதியர்குலச் சிறுவனொருவன். மனம் பொறுக்கவில்லை! "எழைப் பறையன்—நீ, ராஜாவாக, வரவா! டேய்........ கேளுங்கடா, இந்தப் பறையன் ராஜாவாக வரப்போறானாம், வெட்டியான் மகன், கட்டியாளப் போறானாம் நாட்டை!!" என்று ஏளனம் பேசினானாம். சிறுவனோ, "இல்லை! இல்லை!! நிச்சயம் நான, பெரியவனானதும் ராஜாவாகத்தான் ஆவேன். நீ, வேண்டுமானால் பாரேன்," என்றானாம். உடனே, அந்தச் சிறுவர்கள சங்கத்தில் யார் ராஜாவாக வருவார்கள். பார்ப்பனப்பையனாபறையர்மகனா! என்பதைத் தீர்மானிக்க ஒரு பந்தயம் வைத்தனர். அதன்படி, கொஞ்சத் தூரத்திலுள்ள மூங்கிற் புதரைக்காட்டி அங்கே ஓடி யார் முதலில் ஒரு மூங்கிற் குச்சியை ஒடித்துக்கொண்டு வருகிறார்களோ, அவர்கள் தான் ராஜாவாக வருவார்கள் — என்று பந்தயம் வைக்க, பறையனும் பார்ப்பனனும் ஓடினர். உழைத்துழைத்து உரமேறிய உடல் எங்கே! உண்டு கொழுத்த உருவம் எங்கே! நமது சிறுவன், முதலில்போய் ஒடித்துவிட்டான். பார்ப்பனப் பையனுக்கோ, அவமானம் தாங்கமுடியவில்லை! அதிலும் ஒரு பறையன் அரசனாவதா!! — என்று கோபம் வேறு. அதனால் அவன், இவன் மீது பாய, இவன் அவனமீது பாய, சச்சரவு ஆரம்பித்து அந்த ஊர் அரசனிடம் போயிற்று தகராறு. வழக்கைக் கேட்ட அரசனும் சிரித்தான்! சபையினரும் சிரித்தனர்!! என்ன சொல்வது? சிறுவர்கள் சண்டை! ஆனால் அவர்கள் வைத்த போட்டியின்படி, பறையன்தான் அரசபதவி பெறுவான்! ஆனால், அவனோ தீண்டாதவன்! அதுமட்டுமல்ல, புலாலும் புழுதியுமே சதமெனக் கிடந்ததால், உடம்பெல்லாம் சொறிவேறு! சிரங்கிலிருந்து வடியும் சீழ் நாற்றம் வேறு!! இவன், 'அரசன்' என்றால் எளனமும் கெக்கலிப்பும்தானே இருந்திருக்கும் அரசமன்றத்தில். அரசனும் சிரித்துக்கொண்டே, கைக்கலையாகச் சொன்னான், "ஏய்! சொறி சிரங்கா!! — (கார்காந்து என்றால் சொறிசிரங்கன் என்று பொருளாம்) நீ, ராஜாவாக வந்ததும், உன் தேசத்திலிருக்கிற கிராமத்தில் ஏதாவதொன்றை இந்தப் பிராமணனுக்கு கொடு. பிராமணா, போ!", என்று கேலியாகத் தீர்ப்பளித்து அனுப்பினானாம். ஏய்! கார்காந்தா!!—ஏய், சொறிசிரங்கா—ஏ, சிரங்கு மகாராஜா எங்கே உங்கள் இரதகஜதுரகபதாதிகள்? —எனப்பா! ராஜாவின் அப்பனு போறது? — என்று இவ்வாறெல்லாம். அவனையும் அவன் வளர்ப்புத் தந்தையான பறையரையும் ஊர் கேலி பேசிற்றாம்! பேசாதா, என்ன? கீழ்சாதிக்காரனாயிற்றே! வேண்டிய அளவு பேசிற்று!! அது பொறுக்கமுடியாது. தந்தையும் மகனும் அந்த ஊரைவிட்டே ஓடினராம். காலமும் ஓடிற்று! சிறுவன், வாலிபனானான்!! சிறுவயது ஆசை, பெரிதாகி, மனதைக் குடைய சேடி எனும் அரசுக்கு வந்தாராம். சேடி என்பது,

கூனூரில், நீலகிரி கலக்டர் ஜோபு பிரபு தலைமையில் கடந்த ஜூன் 26ந் தேதி, விழா ஒன்று நடந்திருக்கிறது.

நடத்தியோர், சத்குரு சர்வ சமரச சங்கம், எனும் பெயர் கொண்டோர்.

ஆதித்திராவிடப் பெருங்குடி மக்கள் 30 பேருக்கு, "ஐயர்" எனும் பட்டத்தை ராஜபகதூர் வீரேந்திர பகதூர் சிங் எனும் பார்லிமெண்டு உறுப்பினர், வழங்கியிருக்கிறார்.

காந்தியடிகள் வழங்கிய 'அரிசனம்' எனும் பட்டத்தைவிட, இதில் புரட்சியிருக்கிறது! இப்படி பார்ப்பனப் பட்டம் வழங்குவதாலேயோ, ஏழை ஆதித்திராவிட மக்கள் வாழ்வில் ஏற்றம் கண்டுவிடுவார்கள் என்று சொல்ல முடியாது!!

எனினும், மேற்படி சங்கத்தின், ஆர்வம், குறிப்பிடப்பட வேண்டியதுதான்.

இந்தச்சம்பவத்தைக் கண்ணுற்ற போது, ஒரு சரிதச் சம்பவம், கவனத்துக்கு வந்தது.

சாதிக்கேடு, எப்போது முதல் இருக்கின்றது, அதை எதிர்த்து எப்படி யெப்படிப் போராட்டங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை, இச் சம்பவம் விளக்கும்.

அரங்கண்ணல்.

பிற்பாடு கலிங்கம் என்று அழைக்கப்பட்ட நாட்டின் ஒரு பகுதி. அங்கே அப்போது இருந்த மன்னன் இறந்துபோய் அவனுடைய இடத்துக்கு ஆளைத் தேடிக் கொண்டிருந்தார்களாம், அவனுக்கு வாரிசு இல்லாததால்! எப்படியோ இவன் கிடைத்தான்—அரசனுக்கப்பட்டான். பழையகால சரிதம்தான் ஒரு புதைபொருளாராய்ச்சியாயிற்றே! அரசனுனன் — அவ்வளவுதான் தெரிகிறது, ஆராய்ந்தால். அரசனானதும், எப்படியோ, செய்தி எட்டிற்றும் ஏழைப் பார்ப்பனச் சிறுவனின் நாட்டுக்கு! உடனே, ஓடோடியும் வந்தானாம், சேடிக்கு. வந்ததும் அந்த ஊரிலிருந்த பார்ப்பனர்களையெல்லாம் திரட்டி முதல் முதலாகத் தெரிவித்த சேதி, "பிராம்மணோத்தமர்களே! உங்கள் ராஜ்யத்தை ஆளவந்திருப்பவன் யார்தெரியுமா, சொறியும் சிரங்கும் பிடித்து அலைந்த பறையன. காலம் பதித்த மாறுதலால் உருவும் திருவும் பெற்று வீரனாகத் தோன்றிய இவனை க்ஷத்திரியனின் இடத்தில் அமர்த்திவிட்டீர்கள். அக்கிரமம்! அப்படிச் செய்யலாமா!!", என்பதுதான். இனித்தான், ஆரம்பமாகிறது, ஆரியத்தின் பாதை.

* * *

"பறையனய்யா, பறையனும் நம்ம ராஜா"

"பேரென்ன தெரியுமோ? கார்காந்து! கார்காந்து என்றால் என்ன பொருள் தெரியுமோ? சொறிசிரங்கன்!!"

"சாதிதான் அப்படியென்றால் பெயர் கூடவா, அப்படியிருக்க வேண்டும்?"

"செச்சே! ஒரு பக்கம் சமணாள் தொடை தட்டுறு — இன்னொரு பக்கம் இப்படிப்பட்ட அக்கிரமம் நடக்கிறதே. பட்டர்வாள்! என்னய்யா செய்றது?"

இப்படி, ஊரில் பேச்சு! பேச்சு மட்டுமா? ஏச்சு வேறு!! இதைப் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான், கார்காந்தன். சகிக்க முடியவில்லை அவனால்! தான் பறையர் குலத்தவன் என்பதால், இவர்கள் படுத்தியபாடெல்லாம் கவனத்துக்கு வந்தது. ஏனிப்படிச் சாதிகள்? இவர்கள் மட்டும் எப்படி உயர்ந்த சாதிக்காரர்களானார்கள்? நாலு சாதி ஏன்? உச்சிக்குடுமியும் பூணூலும் போட்டிருப்பதால், இவர்கள் உயர்சாதிக்காரர்களென்றால் எல்லோரும் அப்படிப் போட்டுக்கொள்ள ஆரம்பித்தால் உயர் சாதிக்காரர்களாகிவிட முடியுமா? —என்று எண்ணலானான். அந்த எண்ணந் தோன்றியதும், தனையும் தன் ஆட்சியையும் தூற்றும் இவர்தம் துடுக்கடக்கவேண்டுமென்னும் ஆர்வம் அதிகமாயிற்று. அதனால் ஒருநாள் திடீரென்று உத்தரவு போட்டான்:

நாட்டிலிருக்கும் தீண்டாதவர்களுக்கு,

கார்காந்து மன்னனாகிய நான் உங்களை எல்லாம் பிராம்மணோத்தமர்களாக்க முடிவு செய்துவிட்டேன். பிராம்மணரெனப்படுவோர் எவ்வெவ்விதம் நடை உடை பாவனைகளில் தென்படுகிறார்களோ, அதுபோல நீங்களும் உங்களை ஆக்கிக்கொள்ள வேண்டியது. நீங்களும் இன்று முதல் என் நாட்டில் பிராம்மணர்கள்தான். இந்த உரிமையை யாராவது மறுத்தாலோ, எதிர்த்தாலோ அவர்களுக்கு அரச தண்டனை கிடைக்கும்.

முரசறையப்பட்டது, எங்கும்! முணுமுணுத்தனரே யொழிய, பார்ப்பனர் எவரும் அரச ஆக்ஞையை மீறத் துணியவில்லை! அதனால் (Vide PP. 104 of Bharatesvar B. V. Translation "......Karkandu converted the Vasi chandalas into Brahmins) சண்டாளர்கள் எனப்பட்டோரெல்லாம், வேதியர்களாயினர்! சட்டத்தின் முனையில், செய்தான் இதனை. தர்ப்பா சூரர்கள் என்ன செய்ய முடியும். கூடிக் கூடிப் பேசினர்! இவனுடன் போட்டிபோட்டுச் சிறுவயதில் தோற்ற பார்ப்பனவாலிபனுக்கோ, மனமும் உடலும் அருவையால் தகிக்கப்பட்டுக்கொண்டிருந்தது. பக்கத்து நாட்டானிடம் போய் பகைமூட்டிப் போரிடத் தூண்டலாமென்றாலோ, அங்கத்து மன்னன் தாகிவாகனனோ ஒரு சமணன்! என்ன செய்வது என்று யோசித்த வேதியர்கள், அரசனுக்குப் பால்ய பழக்கமான பார்ப்பனனை தூது அனுப்பினர். அவனைக்கண்ட 'சொறி சிரங்கனோ' கேலியத்தனையும் செய்தான். "டேய்! கீழ்சாதி என்று சொல்லி என்னைச் சிறுவயதில் எவ்வளவு கேலிசெய்திருப்பாய். இப்போது, என் சாதிக்காரர்களையெல்லாம் உயர் சாதிக்காரர்களாக்கிவிட்டேன். பார்த்தாயா?" என்று கேட்டான். வெந்த புண்ணில் வேலைச் சொருகுவதுபோலிருந்தது வேதியனுக்கு! விழிகள் குளமாயின! ஆயினும், "அதுசரி, கார்காந்து. அரசனானதும் ஒரு கிராமம் தருவதாகச் சொன்னாயே. அதைத் தருகிறாயா?"

"சொன்னேன்! அப்படியே தரவேண்டுமோ?"

"பிராம்மணனுக்குத் தானம் தரவேண்டியது, கீழ்சாதிக்காரருடைய கடமை! அதிலும், நீ, முன்பே தானம் தருவதாக வாக்களித்தவன். தராவிட்டால் என்ன நேரும் தெரியுமோ?"

"என்ன நேரும்? என் தலை இத்து விழுந்துவிடுமா? அல்லது நான் எரிந்து பஸ்பமாகிவிடுவேனா?"

"இப்படிப் பேசுவது, கிரீசுவாதிகள் பேச்சு. நமது இந்து தர்மத்துக்கு அடுக்காது. ஆண்டவன் தண்டிப்பார். நரகவேதனை கிடைக்கும்......"

"அப்படியா! அய்யரே, அங்க தேசத்து அதிபதி, ஒரு சமணன், அவனிடம்போய், இதையெல்லாம் பேசிப்பாரும். நரகமாவது! தானமாவது!! இந்து தர்மமாவது! உயர்ந்த சாதியாவது!—என்பான் அவனிடம் உங்களால் வாலாட்ட முடியாது. ஆனால், என்னை மிரட்ட முடியும்!"

"அவன் என்ன! யாராயிருந்தாலும் பிராம்மணனுக்கு மரியாதையும் உபசரணையும் செய்ய வேண்டுமாக்கும்..."

"அப்படியா? சரி! முதலில், தாதிவாகனனிடம் போய் ஒரு கிராமம் தானம் வாங்கிவாருங்கள். பிறகு நான் தருகிறேன்."

கார்காந்து, கேலி பேசினான், அவனை! ஆனால் அந்தக் கேலியைக்கொண்டே இரண்டு அரசர்களுக்கிடையும் சிண்டு முடித்துவிட்டனர், ஆரியர்! சமண மதத்தவன் என்று தெரிந்தும் தாதிவாகனனிடம் சென்றனர். "அரசரே! எங்கள் வேந்தர் கார்காந்து, தங்கள் நாட்டை ஜெயித்து எங்களுக்கு ஒரு கிராமத்தை பரிசளிக்கப் போகிறார்" என்று செப்பினர். விளைவு, அங்கமும் சேதியும் போருக்கெழுந்தன! தாதிவாகனனும் கார்காந்துவும் கடிகமேந்திப் போரில் இறங்கினர்! கடும்போர், நடைபெற்றது ஒரு கானகத்தில். காரகாந்து, தாதிவாகனன் தலையைச் சீவப்போகும் சமயம். ஓடி வந்தாள் ஒரு சமண சந்நியாசினி! தடுத்தாள் இருவரையும்! ஏறிட்டுப் பார்த்தாள், தாதிவாகனனை — "நாதா! நீங்களா?" என்று அலறினாள். திடுக்கிட்ட தாதிவாகனனும் திரும்பினான், "பத்மாவதி நீயா?" என்று குதித்தோடிக் கட்டிக்கொண்டான். கார்காந்தோ, விழித்தான்! ஆச்சரியம் தோய்ந்த அவன் விழிகளையும், மார்பையும் கண்ட பத்மாவதி திகைத்தாள். யார் நீ?—என்று கேட்டபடியே நெருங்கினாள். அவன் கழுதித்தில் கிடந்த ஒரு சின்னத்தைத தொட்டுப் பார்த்தாள்! "ஆ! மகனே!! நீயா?" என்று கார்காந்துவையும் கட்டிக்கொண்டு கண்ணீர் விடலானாள்.

"அம்மா! நான் பறையன்...உங்கள் மகனல்ல" என்றான் கார்காந்து.

உண்மைதானடா,மைந்தா!-ஒரு நாள்—சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு—நானும் உன அப்பாவும் இரண்டு யானைகள் மீதேறி பவனிவரச் சென்றோம். நான் ஏறியிருந்த யானை மிரண்டு, என்னைத் தூக்கிக்கொண்டு ஓட ஆரம்பித்தது. உன் தந்தையும் சேனைப் பிரதானியரும் எவ்வளவோ முயன்றும் ஒருவருக்கும் அகப்படாது, வெகுதூரம் போய் ஒரு ஆரண்யத்தில் என்னைத் தள்ளிவிட்டது. அப்போது நான் கர்ப்பம். அங்கிருந்த ஒரு சமண முனிவரின் ஆதரவிலிருந்தேன். நீ பிறந்ததும், நீ எப்படியாவது பிழைத்துக்கொள்ள வேண்டும்—என்னைப்போல் கானகவாசத்தில் அவதிப்படலாகாது என்று ஒரு சுடுகாட்டில் போட்டுவிட்டுப் போனேன். நீ பறையனல்ல!" என்று அவள் சொன்னதைக் கேட்ட, கார்காந்து தந்தையின் காலில் வீழ்ந்தான. தான் கீழ் சாதியில் பிறந்ததால் அடைந்த அவதிகளைச் சொல்லக் கேட்ட அங்க தேசாதிபதி "மகனே! ஆர்யமதத்தின் முதல் கொள்கையே வர்ணாசிரம தர்மம்தான். அது பிடிக்காததால்தான் நாங்கள் எல்லாம் வேறு மதம் சென்றோம். நீ இந்து மதத்தில் சிக்கியதால், இத்தனை தொல்லைகளையும் அனுபவிக்க நேர்ந்தது. இனி வேண்டாம்! நீயும் சமணனாகிவிடு!! இன்று முதல், நமது இருநாட்டுக்கும் நீயே அரசன். நானும் உன் அன்னையும் அன்பு மார்க்கப் பணியிலீடுபடப் போகிறோம்!" என்றான்.

'சொறிசிரங்கனுக்கு' —எல்லாம் கனவுபோலிருந்தது!

வேதியர்களோ, தாங்கள் வைத்த 'வேட்டு' இப்படியாகிவிட்டதே என்று வருந்தினர்!

அவர்கள் வகுத்த வஞ்சகப் பாதையால், சமணத்திற்கு, இன்னொரு அரசன் கிடைத்தான் —இன்னொரு நாடும், கிடைத்தது. ஏக்கம் நிறைந்த கண்களோடு அவனைப் பார்த்தனர்! 'பறையன்' பார்வேந்தனாகப் போய்க்கொண்டு இருந்தான்!!"

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

4-ம் பக்கத் தொடர்ச்சி

அளிக்கப்படவேண்டிய மதிப்பைக் கூட, 'கொள்கை' என்பதன் பெயரால் சுட்டுப் பொசுக்கும், பண்பு கடந்த சிலகாலமாக அங்கு வளர்ந்து வருவதன் போக்கு நமக்குப் புரியவில்லை! அங்கு மட்டுமல்ல, எங்கெங்கு கம்யூனிஸ்டுகள் உள்ளனரோ, அவர்கள் உள்ளத்தில் இப்படியொரு எண்ணம் வளர்ந்திருப்பதாகவேதெரிகிறது. நெல்லை மாவட்டத்தில், 'காம் ரேடை'யே கொன்றதாக, இன்னும் ஒரு சேதி உலவிக்கொண்டுள்ளது பலருக்கு நினைவிருக்கலாம்!!

அரசு பிழை செய்திடின் வாதிடவும், தனது உரிமைகளை நிலை நாட்டிக் கொள்ளவுமே, நீதிமன்றங்களும், விசாரணை அமைபபும் உள்ளன. குடியரசில், இது, இன்றியமையாத ஏற்பாடாகும். இப்படி நடத்தப்படுகிற விசாரணை,

பகிரங்கமாக, மக்கள் அறியும் படி, கீழ்க் கோர்டடில் சரியான நீதி கிடைக்கவில்லையெனக் கருதினல் 'அப்பீல்' செய்யும் உரிமையோடு, 'மரண தண்டனை' விதக்கபபட்டால், விதிக்கப்பட்டிருககிறது என்பது அனைவரும் அறியும் விதத்தில்,

இருப்பதுதான், ஜனநாயகம் வழங்கும உரிமையாகும். "இப்படிப்பட்ட உரிமைகள் எங்கள் ஜனநாயக நாடுகளில்தான் உண்டு. ரஷ்யாவில் உண்டோ?" எனறு முதலாளித்துவ நாடுகள் ஆர்ப்பரித்துக் கேட்கும்போதெல்லாம், "எல்லாம் உண்டு!" என்று ஒரே மடியாகப் பதில் சொல்லுவதுண்டு. 'ஜனசக்தி' போன்ற ஏடுகள், அதுபற்றிப் பத்திபத்தியாக வர்ணித்து எழுதும்; வார்த்தைகள் அகப்படாவிட்டால், மார் மீதாவது ஏறிச் சிறிப்பாயும். ஆனால், இதோ, நாகியின் பரிதாபம் — முதலாளித்துவ நாடுகளின் வாய்க்குச் சர்க்கரையாகி விட்டது! நம்பிக்கையோடு ஒப்படைக்கப்பட்ட அரசியல் தலைவர்களை—ஒரு நாட்டுக்கே பிரதமராக இருந்தவரை — 'இரகசியமாகக்' கொண்டுபோய் வைத்திருந்து, 'இரகசியமாக' வழக்கு நடாத்தி, "இரகசியமாகவே' தண்டனையையும நிறைவேற்றியிருக்கிறார்கள்.

*

பொதுவுடைமை — எனும் கொள்கையும, அதற்கு வித்திட்ட மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் போன்றாரின் சிந்தனையுரைகளும், பாட்டாளிகள் உலகுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்று, எங்கெங்கு ஏழைகளிருக்கின்றனரோ அவர்களெல்லாம் கருதிக் கொண்டிருக்கின்றனர். அந்தக் காரணத்தால்தான், முதலாளித்துவ நாடுகள் தவறுகள் செய்யும் போது, "பார், பார் எமது ரஷ்யாவை!" என்று புத்தொளி பூக்கும் கண்களோடு, நாம் எல்லாம் சொல்வதுண்டு. புல்கானினும், குருசேவும் சென்னை வீதிகளிலும், வங்கத்துத்தெருக்களிலும் வாகை சூடிய வீரர்கள்போல் சென்ற போது மக்கள் திரள் திரளாக நின்று 'வாழ்க! வாழ்க!' என்று முழக்கமிட்டதும், அதனால்தான. தங்களுக்கு ஒரு இலட்சிய பூமி — தங்களைப் போன்ற ஏழைகளுக்கு வாழ்வளிக்கும் ஒரு தேசம்—என்கிற, எண்ணம, கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேராத ஏழைகள் மனதிலும் கூட இருந்து வருகிறது.

"ரஷ்யாவில், ஒரு சிலர் வைத்ததுதான் தர்பார்! அங்கு பேச்சுரிமையில்லை—எழுத்துரிமையில்லை — எண்ண உரிமை கிடையாது. திடீரென ஒருவரைப் பிடிக்காவிடில், தலையை அறுத்து விடுவார்கள்" என்று முதலாளித்துவ நாடுகள் சொல்லும் போதெல்லாம், "முதலாளி நாடல்லவா! இப்படித்தான், தூற்றும்!" என்று, அலட்சியமாகவே, உலகிலுள்ள முற்போக்குவாதிகள் கருதி வந்தனர். குருஷேவ், பதவிக்கு வந்தபின், ஸ்டாலின் திருநாமத்தின்மீது எச்சில் வீசப்பட்டது—பற்பல முக்கிய தலைவர்களுடைய தலைகள் அறுக்கப்பட்டது-முதலான விஷயங்கள், உள்ளத்

தில், ஒரு ஐயத்தை எழச் செய்தது! கம்யூனிஸ்டுகளுக்கு, இப்படியொரு நடைமுறைப் பழக்கம் உண்டுபோலும் என்கிற அச்சம் உருவாகலாயிற்று!!

நாகியின் பரிதாபம், அமெரிக்கா போன்றவைகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்துவிட்டது. ரஷ்யாவை, இலட்சிய பூமியெனக் கருதிக்கொண்டிருந்தோருக்கு, சிக்கலையும் பெரு மூச்சையும் உண்டாக்கிவிட்டது. நம் போன்றவர்களுக்கு மட்டுமல்ல,

கம்யூனிசக் கொள்கையினை ஏற்றுக் கொண்டிருக்கும் நாடுகள்,

ஏன்? — பல கம்யூனிஸ்டுகளுக்குக் கூட,

குழப்பத்தையும், தலையிறக்கத்தையும் உண்டுபண்ணியிருக்கிறது.

இலண்டனில் 50-கம்யூனிஸ்டுகள், மாஸ்கோவின் இந்தப் போக்குப் பிடிக்காமல், கட்சியை விட்டு விலகியிருக்கிறார்கள்!!

* * *

கணவனும் மனைவியுமாக வாழும் ஒரு குடும்பத்துக்குள்ளேயே, கருத்து வேற்றுமைகள் முளைக்காமல் இருப்பதில்லை. "சினிமாவுக்கு மனைவி போகலாம்!" "கணவன் நாடகத்துக்குப் போகலாமே" என்பது முதல், பல விஷயங்களில், வேற்றுமைகள் ஏற்படத்தான் செய்கின்றன. அதற்காக, ஒருவருக்கொருவர் தலையை அறுத்துக் கொள்ளலாமா!! அதேபோல, பலகோடி மக்கள் வாழும் ஒரு நாட்டில், பலதரப்பட்ட கருத்துகள் எழத்தான் செய்யும். ஜனநாயக நாட்டில், இந்தக் கருத்து வேற்றுமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்கிற உயரிய நோக்கத்தின் காரணமாகத்தான், பல அரசியல் கட்சிகள் உலவ இடமளிக்கப்படுகிறது. இந்த உரிமை, ரஷ்யா போன்ற நாடுகளில் இடையாது என்பார்கள்! தங்களுக்குள் ஏற்படும் கருத்து வேற்றுமைகளை அலசிப் பேசி அதன் முடிவுகளை ஏற்றுக்கொள்ளக் கூடிய கட்சி ஆட்சிமுறையிருப்பதால் இந்தத் தேவை ஏற்படவில்லை என்பார்கள். ஆனால் இப்படிக் கருத்து வேற்றுமைகளைச் சொல்வோர், தலையையே இழக்க நேரும் என்கிற புதுப்போக்கு வளர்ந்து வருகிறதே! இதற்கு என்ன பதில் சொல்லக்கூடும்!!

நாகி, ரஷ்யாக்காரர்கூட அல்ல; இன்னொரு நாட்டுக்காரர். அந்த நாடு, தன் விரலசைவுக்குக் கட்டுப்படக்கூடியதென்பதால், அந்த நாட்டின் பிரதமராக இருந்த ஒருவரின் தலையையே அறுக்குமளவுக்குப் போயிருக்கிறதென்றால்; ரஷ்யாவை இலட்சிய பூமியாகக் காட்டியும், ரஷ்யாவின் உறவு கிடைத்தால் இன்னின்ன லாபம் வருமென்றும், கூறினால், பயம்தானே முதலில் ஏற்படும் மக்களுக்கு!!

"இந்தியாவுடன் ரஷ்யா செய்துகொண்ட பஞ்சசீல கோட்பாட்டு ஒப்பந்தத்துக்கு, இது முரணானது. பஞ்சசீலம் என்பது, ஒத்துப்போவதாகும். இது பற்றிய விளக்கம் அனுப்புமாறு, பண்டித நேரு, ரஷ்யாவுக்கு எழுதியிருக்கிறார்."

என்று சொல்லப்படுகிறது! நேருகூட, இதுபற்றி, தன் கருத்துரையை வெளியிட்டுவிட்டார்— ஆனால், இங்குள்ள **இந்தியக் கம்யூனிஸ்டுக்கட்சி,** நாகிசம்பவம் குறித்து, ரஷ்யாவின் போக்கை ஆட்சேபிக்கவுமில்லை! கண்டனம்தெரிவிக்கவுமில்லை!!

ஜூலையில் கூடப்போவதாகச் சொல்லப்பட்ட இந்தியக் கம்யூனிஸ்டுக்கட்சியின் செயற்குழுவை, ஆகஸ்டுக்கு ஒத்திப்போட்டிருக்கிறார்கள். மாஸ்கோவுக்குப் போயிருக்கும் **அஜாய்கோஷ், ஏ. கே. கோபாலன்** ஆகியோருக்காகப்போலும் இந்த ஒத்திவைப்பு. எனினும், நாகியின் பரிதாபம்பற்றி, இங்குள்ள கம்யூனிஸ்டுகளிடம் தெளிவில்லை.

பூபேஷ் குப்தா எனும் பார்லிமெண்டு உறுப்பினர், அபிப்பிராயம் எதுவும்தர மறுத்திருக்கிறார். ஆனால், பார்லிமெண்டு எதிர்க்கட்சித்தலைவரான **டாங்கே,** "மரண தண்டனைகளைத் தவிர்த்திருக்கலாம்," என்கிறார். இன்னொருவரான **பி. சி. ஜோஷியோ,** "அதனால் என்ன தவறு?", என்று கேட்கிறார். இப்படி கருத்து முரண்பாடுகளும், மௌனமும், ஏற்பட்டிருப்பதிலிருந்து அங்குள்ள சிக்கல் புரியும். எசமான விசுவாசம் ஒரு பக்கம்! பீதி, இன்னொரு பக்கம்!!— கம்யூனிஸ்டுகள் கடைசியில், எசமான விசுவாசத்துக்குத்தான், அடிபணிவார்கள் என்பது தெரிந்தது தானே.

இப்படி அடிபணிவதே கம்யூனிஸ்டு இயக்கத்தின் முதற்கொள்கை என்று, கம்யூனிஸ்டுகள் என்போர் கருதிக்கொண்டிருக்கிறார்கள்! மாஸ்கோ, ஸ்டாலின் படத்தை வை என்றால் வைப்பதும், எடு என்றால் எடுப்பதும், கும்பிடு என்றால் கும்பிடுவதும், குத்து என்றால் குத்துவதும் அல்ல பொதுவுடைமை.

பொதுவுடைமை—என்பது ஒரு சித்தாந்தம்.

அதன் நற்கொள்கைகளை, நாட்டுக்கேற்றபடி, ஏற்றுக்கொள்ளலே விவேகம்.

அது ஒரு சாஸ்திரமல்ல; கொள்கை! அது, காலத்தையனுசரித்து, மாறும்.

பொதுவுடைமையின் எண்ணங்களை ஏற்றுக்கொண்டிருக்கும் பல முற்போக்குக் கட்சிகள், இதே அடிப்படையில்தான் இயங்குகின்றன, தி. மு. க.வும் அப்படித்தான்.

யூகோ நாட்டு டிட்டோ, மாஸ்கோவுக்கு எடுபிடியல்ல; எனினும் அவர் நாட்டில், பொதுவுடைமை மணம் வீசத்தான் செய்கிறது.

எனினும், கம்யூனிஸ்டுகள் என்போர், ஏனோ ஒரு மாதிரியான நெறியினைத் தங்களுக்கு வகுத்துக் கொண்டுள்ளார்கள்! அவர்களுக்கு மாஸ்கோவே, வேதபுத்தகம்—அரிச்சுவடியாவும்!!

இந்தச் சுபாவத்தையும், எதையும் இரத்த மூலமும் 'கொலை'கள் மூலமும் சாதிக்கும் எண்ணத்தையும், கம்யூனிஸ்டுகள் என்போர் அறவே அகற்றிக்கொள்ள வேண்டும்.

எப்போதும் மாற்றாரை, ஏசியும் தூற்றியுமே வரும் "ஜனசக்தி" போன்றவைகளைக் காண்போருக்கு இந்த ஆசை அதிகரிக்கத்தான் செய்கிறது! அங்கிலே வருமா!!

★

390 திராவிடநாடு

20—?—58 வார வெளியீடு 16 காசு

நேற்று-இன்று-நாளை

[எம். கே. சீனிவாசன்]

தென்னைக்கு நீரூற்றி வயிரம் பாய்ச்சித்
திண்ணியதாய் வளர்க்கின்றான் ஒருவன்; ஆனால்
பொன்னுருகும் கடுவெயிலில் இளநீருண்டு
பூரிக்க இன்னொருவன் இருக்கின்றானே!
'என்ன இது; இதுதானோ வாழ்க்கை?' என்று
இந்நாட்டின் இருள்மாய்ப்பார் எவருமில்லை!
பின்னர்வரும் சமுதாய மாந்தரெல்லாம்
பித்தரெனத் தூற்றிநம்மைப் பேசிடாரோ?

பனிமலைத் தீப்பந்தம் அழிப்பதேபோல்
பழந்தமிழர் திருநிலத்தைப் பாழ்படுத்தி,
'இனியிவர்கள் தலையெடுக்க வேண்டாம்' என்ற
எண்ணத்தால் சதிகள் பல நடத்துகின்றார்;
தினையளவும் ஆதரவு காட்டிடாமல்
தேம்புகின்ற தமிழினத்தின் எலும்பின்மேலே
பனையளவில், விண்ணிடிக்கும் உயரந்தன்னில்
பளிங்குநிலை மாடங்கள் எழுப்புகின்றார்!

ஒவ்வாத உரையொன்றை வடக்குமாந்தர்
உரைத்திட்டார் என்றவுரை கேட்டபோதே
செவ்வானம் போல்விழியில் சிவப்பையேற்றிச்
சீரியநம் மூதாதை வரலாறெல்லாம்
எவ்வாறோ மறந்துவிட்டோம் என்றபோதும்
இன்றேனும் ஒன்றாகி இணைந்துவிட்டால்
சவ்வாதுத் தமிழ்நிலத்தில் நம்மையெதிர்க்கும்
சதிகளெலாம் சிதிபடவே நடப்போம் நாளை!

கேட்டீரா சேதி!

துப்பாக்கியால் சுட்டாலும், தடியால் தாக்கினாலும், கண்ணீர்ப் புகைகளை விட்டாலும் உடனே ஒரு காரணம் தருவார்கள் — "சட்டம், அமைதியைப் பாதுகாப்பதற்காக," இவை தேவைப்பட்டன என்று!! சட்டம் அமைதி ஆகியவைபற்றி அறியாமல், அத்துமீறிக் கலவரம் செய்பவர்கள் என்று, ஏழைத் தொழிலாளர்களையும், பொதுமக்களையும் குற்றம் சொல்வது எளிது. ஆனால், இதே குற்றத்தைச்சுமத்தி, இந்தக்கிழமை இரண்டு தடவை கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்திருக்கிறது,காங்கிரஸ் அரசு! வடக்கேயுள்ள ஜயப்பூரிலிருந்த உயர்நீதிமன்றத்தை ஒழித்துவிட்டதைக் கண்டித்து, கிளர்ச்சி செய்து வருகிறார்கள், வழக்கறிஞர்கள். அவர்கள் மீதுதான், 'சட்டம், அமைதிக்காக,' சர்க்கார் கண்ணீர்க் குண்டுகளைப் போட்டிருக்கிறது!! வடாற்காடு மாவட்டத்திலுள்ள இராணிப்பேட்டையில், தோல் பதனிடும தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து வருகிறார்கள். அவர்களுக்கும் இங்குள்ள காங்கிரஸ் அரசு இந்தக்கிழமை பிரம்படிகொடுத்ததாகச் செய்திகள் வருகின்றன!! இப்படி, உரிமைக்குரல் எழுப்புவோரை ஒடுக்குவதில், ஒன்றையொன்று மிஞுசுவதாகவே உள்ளன, இந்திய உபகண்டத்தில் வாழும் காங்கிரஸ் அரசுகள்.

*

ஐதராபாத்தில் கடந்த சில தினங்களாக, சென்னை—மைசூர்—கேரளா — ஆந்திரா முதலிய அரசுகள் கலந்துகொண்ட தெற்குவட்டார மாநாடொன்று நடந்தது. நீர்ப்பாசன முனேற்றம் பற்றித் தீவிரமாக ஆலோசித்த இம்மாநாட்டில், "சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு முதலிடம் தரவேண்டும்," என்று முடிவு கட்டியிருக்கிறார்கள். டில்லி மந்திரி ஜெயின், மாநாட்டுக்குத்தலைமை வகித்தாராம். இப்படி, சிறிய நீர்ப்பாசனங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம்தான், உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியுமாம்! வடக்கே கோடி கோடியாகச் செலவிட்டு, நீர்ப்பாசனத் திட்டங்களைப் போட்ட பிறகே இந்த யோசனை மனதில் தென்பட்டது போலும்!! சிறிய நீர்ப்பாசனங்கள் என்றால், கால்வாய் அமைத்தல், வாய்க்கால் தோண்டுதல், குளம் குட்டைகளைச் செப்பனிடுதல் உள்பட, யாவும் அடங்கும். இந்தக் காரியங்களைத்தான இப்போதே ஆங்காங்குள்ள கிராமத்தார் செய்துகொள்கிறார்களே, இதற்கென்ன பெரிய மாநாடு என்று நீங்கள் கேட்கலாம்! என் செய்வது!!

*

சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலை வைப்பது சம்பந்தமாக வெளிநாடு சென்றிருந்த தொழிலமைச்சர் ஆர். வெங்கட்டராமன், பிரான்சிலுள்ள ஒரு கம்பெனியிடம் பேசினாராம். அவர்களும், சம்மதம் தந்துள்ளனர், "ஆனால்... இந்திய சர்க்கார் இணங்குவதையொட்டி மேற்கொண்டு கவனிக்கப்படவேண்டும்," என்று ஆர். வி. பேசியுள்ளார்! தெனைகம் தொழில் வளம் பெறவேண்டுமென்பதில் தோழர் வெங்கட்டராமன் கொண்டுள்ள அக்கரையை எவரும் பாராட்டவே செய்வர். அக்கரையிருப்பினும், டில்லிக்குத் தூக்கவேணடியிருக்கிறதே, காவடி! இதே வெங்கட்ராமிடம் நினைத்ததைச் செய்யும் அதிகாரமிருப்பின், அவரது திறனும் செயல்வன்மையும் பெற்று எவ்வளவு பயன்படமுடியும் தென்னகம் என்பதை நினைக்கும்போதுதான் ஏக்கமும் துக்கமும் வருகிறது, நமக்கு!!

*

திரைப்படத் தொழிலிலும் "வடக்கு-தெற்கு" காட்டப்படுவதாகச் சொல்கிறார் வாகினி அதிபர் தோழர் நாகி ரெட்டி! உண்மையில், கச்சா பிலிம் நெருக்கடியால், தென்னிந்திய திரைப்படத் தொழில், அல்லாடும் கட்டத்துக்கு வந்துள்ளது-"ஐயகோ, என் செய்வோம்?", என்று இலட்சக்கணக்கான ரூபாய்களைக்கொட்டி இத்தொழிலில் ஈடுபட்டுள்ளோர கலங்குகின்றனர்!! இந்நிலையில், அமெரிக்கக் கம்பெனியான கோடாக், டில்லி சர்க்காரிடம் ஒரு திட்டம் சமர்ப்பித்துள்ளதாம், இங்கேயே வேண்டிய கச்சா பிலிமைத் தயாரிக்கலாம் என்று. இதற்கு 50 கோடி ரூபா மூலதனமாகுமாம். வேண்டிய இயந்திரங்களையும், தொழில் நுணுக்கங்களையும் தான் தருவதாகவும், இந்திய சர்க்காருடன் சேர்ந்து இதைச் செய்வதாகவும், இக்கம்பெனி முன் வந்திருக்கிறது. ஒரு ஆண்டுக்கு சுமார் 5 கோடி ரூபாய்க்கு வெளிநாட்டிலிருந்து கச்சா பிலிமை இறக்குமதி செய்கிறது, இந்தியா! 50 கோடி மூலதனம் போட்டால், பத்து ஆண்டுக்குள் பெற்றுவிட முடியும், என்கிற நம்பிக்கை இருக்கிறது. செய்யுமா, டில்லி? — என்று அச்சபபடுகிறோம்! ஏனெனில் இப்படியொரு கச்சா பிலிம்சாலை ஏற்படுத்துவதென்றால் அதற்கான இடம் தெற்கேயுள்ள நீலகிரிதான் என்று, முனபுதேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இளகுமா, டில்லியின் மனம்!!

17-ம் ஆண்டு பிறந்தது!

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [20-7-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 1

திராவிடநாடு, ஆண்டு 17-க்குள் அடியெடுத்து வைக்கிறது.

காகித விலையேற்றம்! கவலைகள் தேக்கம்!! — இரண்டுக்குமிடையேதான், ஏடு எடுத்தடி வைக்கிறது.

ஆண்டுத் துவக்கத்தின்போது, கொண்டிருந்த ஆசைகள் பல! அனைத்தினையும், செய்துதரவில்லையே, என்கிற ஏக்கம் வாசகர்களிடம் உண்டு; முடியவில்லையே எனும் சோகம் நம்மிடத்திலும் இருக்கிறது.

கழகத்தின் பணி பல துறைகளில் இப்போது வளர்ந்துவிட்டது. ஓய்விலாது, ஒவ்வொரு ஊருக்கும் செல்லவேண்டும் — இயலாமையைச் சொன்னாலோ, ஏற்கும் நிலையில் தோழர்கள் இல்லை—இதயத்துக்குள் ஒவ்வொரு ஊரினையும் அங்கு கழகம் வளர்ந்திருக்கும் பாங்கினையும் அறியும் ஆவல் ததும்புகிறது—எனவே, அப்பணி, வாரத்தில் பல நாட்களைக் கொண்டுபோய்விடுகிறது! ஆங்கில ஏடு, "ஹோம்லண்ட்" கழகக் கொள்கைகளைச் செல்லாத இடங்களுக்கெல்லாம் எடுத்துச் செல்கிறது; இலட்சியத்துக்கு நல்லதொரு விளக்க ஏடாகமிளிர்கிறது. எனவே அந்தப் பணியையும் சென்னையிலிருந்து செய்ய நேருகிறது! இடையில், சட்டசபைப் பணி வேறு!!

இப்படிப்பட்ட, ஓய்விலாத நிலையில், பொறுப்பினைப் பங்குபோட்டுக்கொண்டு பலர் ஆற்றினால்தான் இயலும் என்கிற அளவில், இருப்பதை அறிய முடியாதவர்களல்ல தோழர்கள். எனவே, துவக்கத்தில் சொன்ன ஆசைகளை நிறைவேற்றவில்லையே என்று வருந்தமாட்டார்கள் — மன்னிப்புக் கிடைக்கும் என்று மனதார நம்புகிறோம்.

வாசகர்களைப்போல, நமக்கும், ஏராளமான தகவல்களை, கதைகளாகவும் கட்டுரைகளாகவும் வடித்துத்தர வேண்டுமெனும் ஆவல் இல்லாமலில்லை! நேரம் வேண்டுமே!! பாதி நாட்களைப் பயணத்திலும், ஓய்ந்த நேரத்தை வேறுபல இயக்கப் பணிகளிலும் பயன்படுத்த வேண்டிய நிலை, நாள்தோறும், வளர்கிறது. கழகத்தின் அளவையும், அது தரும் வேலைகளையும் கவனிக்கும்போது, இந்நிலை குறையும் என்கிற அறிகுறியில்லை. மாறாத ஆசையும், குறையாத ஊக்கமும் உள்ளத்தில் ததும்புகிறது எனினும், ஏர்ப்பில்லை! ஓய்வுமில்லை!! இருப்பினும், புத்தாண்டில், அடிக்கடி தொடர்பு வைத்துக்கொள்ளும் கட்டுரைகளும் கதைகளும், தர, நிச்சயம் முயற்சிப்போம் என்று உறுதி தருகிறோம்.

கடந்த பதினாறு ஆண்டுகளில், இப்போது முடிந்த ஆண்டு, குறிப்பிடத்தக்க ஒரு புதுமையை—அல்ல — ஒரு புரட்சியை உண்டாக்கியிருக்கிறது. நமது இயக்கக் கொள்கைகளின் அடிப்படை உண்மை பேச்சளவில் மட்டும் இல்லை; எழுத்து வடிவத்திலும் நடைமுறையில் உண்டு என்று "திராவிடநாடு" தனது செயல் முறையால் காட்டியுள்ளது. அதாவது பல இளம் எழுத்தாளர்களை நாட்டுக்கு அறிமுகப்படுத்தும் ஒரு நல்ல வாய்ப்பைத் "திராவிடநாடு" உண்டாக்கியதன் வாயிலாக நாட்டின் கருத்துச் செல்வம் படைத்த பல இளம் எழுத்தாளர்களை—குடத்திலிட்ட விளக்கு—குன்றில் ஏற்றிய பேரொளியென எல்லோரும் அறியவும் பாராட்டவுமான நிலை ஏற்பட்டது உண்மையிலேயே கழகக் கொளகைகளை அரண் செய்யும் ஒரு நல்ல வாய்ப்பென்றே கருதுகிறோம். பேச்சிலே ஜனநாயகமும் செயலிலே சர்வாதிகாரமும் தோன்ற அரசியலரங்கிலே உலவுவோருக்கு இது ஒரு எச்சரிகையும் விழிப்பும் தருவதாக அமைய வேண்டுமென்று விரும்புகிறோம்.

'திராவிடநாடு' நீண்ட காலமாக, குறைபட்டு வந்தது, நல்ல எழுத்தாளர்கள் புதிது புதிதாக இல்லையே, என்று. எழுத்துத் துறையில் ஈடுபாடு கொள்ள விரும்பும் தோழர்களும், தங்களுக்கு 'திராவிடநாடு' இடம் தருவதில்லை என்று குறைபட்டதுண்டு. இக்குறை, சில காலமாக, குறைந்து வருகிறது! மணக்கும் தமிழில், கொள்கை சிறக்கும் விதத்தில், கருத்துக்களைத் தேடித்தரும் சிந்தனையாளர்கள், அறிவியக்கத்தில் பாவி வருகிறார்கள். இந்த வளர்ச்சி, வெகு வேகமாகச் சென்றுகொண்டிருக்கும் ஒரு தேசிய இயக்கத்துக்கு, மிகமிகத் தேவையாகும். எனவேதான், திராவிடநாடு, பல எழுத்தாளத் தோழர்களை அறிமுகம் செய்விக்கவும், அவர்தம் எழுத்துக்களுக்கு ஆக்கம் அளிக்கவும் முன்வந்திருக்கிறது. இந்த நல்வாய்ப்பை, தாயகத்து சிந்தனையாளர்கள் பயன்படுத்திக்கொள்வார்களெனக் கருதுகிறோம்! புதிது புதிதான, கருத்தாழம் நிரம்பிய, தமிழ் மணக்கும் கட்டுரைகளுக்கும்; கொள்கை விளக்கம் மிளிரும் கவிதைகளுக்கும்; சிந்தனையைத் தூண்டும் சிறு கதைகளுக்கும்; சுவை நிரம்பிடும் தொடர் சித்திரங்களுக்கும், 'திராவிட

நாடு' இடம் தரும்—பயன்படுத்திடவருக, எனப் புது எழுத்தாளர்களை அழைக்கிறோம்.

கொள்கை விளக்க ஏடுகளின் முதல் நோக்கம் வாணிபமாக இருக்க முடியாது. வாணிபமே முக்கிய மெனின், வண்ணம் கலக்கலாம், வாசகர்களின் மன உணர்ச்சியைத் தூண்டும் கதைகளை நிரப்பலாம், யாரையும் நோகாதவைகளை ஆங்காங்கும் தெளிக்கலாம், ஆங்காங்கும் ஒட விளம்பரங்களைப்போட்டு 'பெட்டி'யை நிரப்பலாம். ஆனால், 'திராவிட நாடு' அரும்பியதே, கொள்கை விளக்கத்துக்கு! ஒரு பக்கம் கிடைப்பினும், அதன்மூலம் கொள்கை விளக்கம் தரலாமே எனும் குறிக்கோள்தான், நமக்கு முதலில் வருகிறது!! இதனால், 'கணக்குப் புத்தகம்', அடிக்கடி எச்சரிக்கை செய்யும் கட்டம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. எனினும், என் செய்வது? கொள்கையை விற்று, குவித்திடும் ஆசை கொண்டோரல்லவே நம்மவர்கள்!!

வழக்கமாக, 'திராவிட நாடு,' ஒவ்வோராண்டும், தன்னை நிமிர்த்திக்கொள்ளப் போராடிய வண்ணமே உள்ளது. இந்தப் போராட்டம், திராவிடம் பெறும் வரையிலும், நிற்காது என்றே எண்ணுகிறோம்! ஆனால், திராவிடம் பிரியும் நாள் வரையில், தன்னாலான பணியைச் செய்துகொண்டு, அந்த விடுதலை விழாவில் கலந்துகொள்ளும் பேறுபெற, "உயிர்" இருக்கவேண்டுமல்லவா? அந்தஉயிருக்கும், ஆபத்து வந்துவிடுமோ என்று காகிதத்தின் அகவிலையேற்றம், அச்சமூட்டுகிறது. போர்க்காலம்கூடத் தேவலாம் போலிருக்கிறது! இப்போதுள்ளநெருக்கடி மிகமிகப் பெரிது—ஒன்றுக்கு மூன்றாக விற்கிறது, விலை! அப்படிக் கொடுத்தாலும், கிடைக்கிற காகிதம், ஏட்டின் அழகையே அழித்துவிடும் போலிருக்கிறது!

நெருக்கடிகளும், "ஏன் வாழவேண்டும்?" என்கிற விரக்தியும், தோன்றினாலும், ஏழை, போராடிக்கொண்டுதானே இருக்கவேண்டியிருக்கிறது. அதிலும் கொள்கை ஆர்வமிக்க ஏழையின் இடத்திலே உள்ள திராவிட நாடு, தன்னால் நாட்டில் ஏற்பட்டுள்ள 'தம்பி'களைப் பெருமிதமாகப் பார்க்கிறது; தமிழ்த் துறையில், தான் செய்த பணியால் கிடைத்துள்ள மறுமலர்ச்சியைக் காணுகிறது; இந்தத் தொண்டினைத் தொடர்ந்து செய்யவேண்டும் என்கிற ஆசையையும் ஆர்வத்தையும், இன்னும் அதிகமாகப் பெறுகிறது. இதனைச் சரிவர, நிறைவேற்றி வைக்கும் பொறுப்பு, வாசகர்களிடம் இருக்கிறது—திராவிட நாடு படிப்போரின் தொகை, முன்பைவிட அதிகமுள்ளது. 'எதிர்பார்ப்பது இல்லை,' எனும் அதிருப்தியிருப்பினும் கூட, விடுதலைப் போரின் பல்வேறு பணிகளிலே ஈடுபட்டிருக்கும் நமக்கு உற்சாக மூட்டவும், தவறவில்லை வாசகர்கள். அவர்களுக்கெல்லாம் வாராவாரம் ஏடுகளைக் கொண்டு போய்க் கொடுக்கும், ஏஜண்டுத் தோழர்களும், திராவிட நாட்டைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் கடமையைச் செய்யத் தவறவில்லை. ஒரு சில ஏஜண்டுகள், நமக்கு நெருங்கியவர்கள் என்பதாலும், நெருங்கியவர்களை நெருக்கும் சுபாவம் நமக்கில்லை என்பதைப் புரிந்துகொண்டவர்கள் என்பதாலும், சாதித்துவரும் 'மௌனம்' அறிவோம்! இந்த மௌனம், நல்லதல்ல; நாட்டுப் பணியில் ஈடுபாடு கொண்டிருக்கும் ஏட்டுக்குச்செய்திடும் நன்மையுமல்ல என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறோம்!!

ஒருசிலரைத் தவிர்த்து, ஏனையோரெல்லாம், வழக்கம்போல், அன்புகாட்டி வருகிறார்கள். நமக்குள்ள சிரமங்களை உணர்ந்து, நம்முடன் ஒத்துழைக்கும், இத்தகைய அன்புருவங்கொண்ட ஆதரவாளர்களுக்கும், நம்முடனேயே கலந்துவிட்ட வாசகச் சகோதரர்களுக்கும், கட்டுரைகள், கவிதைகள் தந்துதவும் எழுத்தாளர்களுக்கும் நமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அவர்களும், நாமும், மகிழும் வகையில், விடுதலை விழா விரைவில் வரும்படியான ஒரு நாள் பூக்காமற் போகாது! அதுவரையில், ஏற்படும் சகலவிதமான இன்பதுன்பங்களையும் பகிர்ந்துகொள்ள, இந்நாட்டிலுள்ள கழகத்தவர்களைத் தவிர யாரிருக்கிறார்கள் நமக்கு!!

" குடும்பத்தோரே !
உங்கள், ஏடு, திராவிட நாடு."

என்று சொல்லி, அனைவருக்கும், நமது அன்பையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம். வருக, திராவிட நாடு! வளர்க, நம் கொள்கைகள்!!

★

கேரள கம்யூனிஸ்ட் சர்க்கார், கேரளாவில் ஒரு ரயான் தொழிற்சாலை ஆரம்பிப்பது சம்பந்தமாக பிர்லாவுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருப்பது தெரிந்ததே.

குறிப்பாகத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட ஷரத்திலும் அமைதியை நிலவச்செய்ய உத்தரவாதம் அளிக்கும் ஷரத்து தலைமைக்கு கட்டோடு பிடிக்கவில்லையாம்.

*

காங்கிரஸ் ஆட்சியினர் தனிப்பட்ட முதலாளிகளால் நடத்தும் கம்பெனிகளில் சர்க்கார் பணத்தை முதலீடு செய்வதை கம்யூனிஸ்டு கட்சியினர் பலமாக எதிர்த்து வருகிறார்கள் அல்லவா?

ஆனால் அதே முறை கேரளாவிலும் கையாளப்படுகிறது. தனிப்பட்ட முதலாளிகளால் நடத்தப்படும் கேரள நீர்ப் போக்குவரத்து கார்ப்பரேஷன் என்ற ஸ்தாபனத்திற்கு சர்க்கார் 18 லட்சம் ரூபாய் முதலீடு செய்திருக்கிறது.

இந்தக் கம்பெனியைத் தேசியமயமாக்குவதாக முன்னர் தேர்தல் அறிக்கையில் கூறியிருந்தார்கள். ஆனால் அந்தக் கம்பெனியைத் தேசிய மயமாக்காததோடு மட்டுமல்லாமல், சர்க்கார் பணத்தை 18 லட்சம் ரூபாயை முதலீடு செய்துமிருக்கிறார்கள்.

இது முதலில் பட்ஜெட்டில்கூட அங்கீகாரம் பெறவில்லை. இப்போது அதனை உபமான்யக்கோரிக்கையாக சட்ட சபையில் கொண்டு வந்தார்கள்.

"சமுதாயம்"

நிழலில் நின்று....

இலங்கையிலே தமிழர்கள் அடைந்த அல்லலினை அளவிட்டு உரைக்க இயலாது. சிங்களவெறியர்கள் தமிழர்களைக் குறிவைத்துத் தாக்கினார்கள். இரத்தம் பெருகி ஓடியது என்று சொல்லும் விதத்தில் அங்கே அமளியும் அக்ரமமும் நடைபெற்றன. இந்தச் சோக நிகழ்ச்சிகளைக் கேட்டவர்களின் மனம் நொந்து புண்பட்டது; இரக்கம் மிகுந்தவர்களின் கண்கள் குளமாயின; பழந்தமிழ்ப் பண்பும் மரபும் உணர்ந்தவர்கள் பெருமூச்செறிந்தனர்; ஆத்திரப்பட்டனர். ஏதும் செய்யவில்லையே இங்குள்ள அரசினர் என வருந்தினர். மக்கள் இந்தக் காலத்திலே அவ்வளவுதான் செய்ய முடியும்; செய்ய அவ்வளவுதான் இடமும் இருக்கிறது.

அரசுக்கட்டிலுக்குப் பாரம் ஆகி இருப்பவர்கள் உள்ளத்திலே உணர்ச்சி — நாட்டுணர்ச்சி — இருந்தால் இந்த அக்கிரமங்கள் ஏன் — என்று கேட்பர், என்ன செய்தால் இந்த இன்னல் தீரும் என்று வழிவகை காண முயன்றிருப்பர். ஆற்றலும் அதிகாரமும் இருந்தால் அக்கிரமங்களைத் தடுக்க இலங்கைக்கு வேண்டுகோள் — விட்டிருப்பர். ஆனால் இன்று சென்னைக் கோட்டையிலே கொலு இருப்பவர்கள். அமைச்சர்கள் எனற பெயர் பூண்டிருக்கின்றனரேயன்றி, பெயருக்கு ஏற்ற அதிகாரம் பெற்றிருக்கின்றார்களா எனில், இல்லை என்பதை அவர்களே பலமுறை ஒப்புக்கொண்டிருக்கின்றனர். எங்கோ நெடுந்தொலைவிலே இருப்பவர்களிடம் இங்குள்ளவர்களின் வாழ்க்கை ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் இடும் கட்டளைகளை ஏற்றுநடக்கச் சொல்லும் ஆணையைச் செயல்படுத்த--அவர்கள் புகழ்பாடி ஆனந்தப்பட இங்கே சிலர் அமைச்சர்கள் என்று பெயர்—அல்ல, பட்டம் பெற்றுத் திரிகின்றனர். அவர்கள் தமிழர்கள்தான், தமிழ்மொழி கற்றவர்கள்தான். இலக்கியச் சுவை உணர்ந்தவர்கள்தான். பழைய மரபு தெரிந்த பண்பாளர்கள்தான். இத்தனை சிறப்புடைய அவர்களுக்குத் தலைமை பூண்டிருப்பவரும் தமிழர்தான்-தமிழர் மட்டும் அல்ல—அவர் ஒரு பச்சைத் தமிழர்!

தமிழ்நாட்டில் தமிழன் ஆட்சி நடக்கிறது — பச்சைத் தமிழர் தலைமையிலே நடக்கிறது. ஆனாலும்,

இலங்கையிலே தமிழர்கள்
ஐயோ என அலறுகின்றனர்.

அந்த அலறல் ஒலி வெளிவருமுன்னே அவர்கள் உடலிலே

மா.கி. தசரதன்

இருந்து—பகைவர் வெட்டிய புண்ணிலேயிருந்து பச்சை இரத்தம் குபுகுபுவெனப் பாய்ந்து மண்ணை ஈரமாக்குகின்றது. தமிழ் மகன் மானத்தைக் காப்பதில் பெயர் பெற்றவன். அந்த மானம் அங்கே விலைபேசப்படவில்லை — பறிக்கப்படுகின்றது. பாழாகின்றது. இங்கிருக்கும் தமிழ் அரசு அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறது.

ஆம். பார்த்துக்கொண்டுதான் இருக்கிறதே ஒழிய, பார்த்த காட்சி மனதிலே வேதனையை உண்டாக்கவில்லை; அதனாலே பதைத்து எழ இயலவில்லை. பதைத்து எழுந்து தமிழன் தன் மானம காத்தான் எனக் கதை கதையாக இலக்கியம் சொல்லுகின்றது. இன்று பதைத்து எழாதது இருக்கட்டும், பதைத்து எழுந்து ஒரு அநுதாபம் சொல்லவும் தமிழரின் அரசுக்கு மனம் இருந்தும் வாய்ப்பு இல்லை. அதனாலே வாளா பார்த்துக்கொண்டிருக்கிறது!

ஆடும் ஆட்டத்தைப் பார்த்திருப்பதைப்போல, தொலைவிலே நிகழும் தொடர்பில்லா நிகழ்ச்சியைப் பார்த்திருப்பதைப் போல, இலங்கையிலே நடக்கும் அநீதிகளை இங்கே இருக்கும் அரசு பார்த்துக்கொண்டிருக்கிறது.

ஆனாலும் இவர்கள் தமிழர்கள் தான்! இவர்கள், தலைவர் ஒரு 'பச்சைத்' தமிழர்தான்! எனினும் இவர்களால் பார்த்திருக்கத்தான் முடிகின்றது.

ஏன்?

ஏன் இந்நிலை? இதற்கு விடை கண்டால் தென்னாட்டு அரசியலில் புதிய விழிப்பு உண்டாகும். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கும் அந்தத் தெளிவு பிற அரசியல் கட்சிகளுக்கும் வரவேண்டுமானாலும், அவை ஏன்? என்று கண்டுபிடித்தாக வேண்டும்.

இங்கே இருக்கும் அமைச்சர்கள், அதிகாரம் அற்ற பிரதிநிதிகள்--டெல்லியிலே இருக்கும் முழுமுதல் பொருள் இட்ட கட்டளைக்கு தலைவணங்கித் தீரவேண்டியவர்கள்.

பொம்மைகளை ஆட்டி வேடிக்கைகாட்டும் ஒரு கலை இருக்கிறது. அந்தக் கலையாட்டத்திலே மனிதனைப் போன்ற, மற்ற விலங்குகளைப் போன்ற பொம்மைகள்

ஆடும்; கையையும் காலையும் ஆட்டும், தூக்கும். ஆனால் அவை தாமாக ஆடாமல், ஆட்டுவிக்கிற வித்தைக்காரன் கையும் காலும் தூக்கத் தூக்கும். அவ்வளவே. அதே போலத்தான் டெல்லியிலே இருக்கும் எசமானர்கள் கையைத் தூக்க இவர்களும் கையைத் தூக்குவார்கள். அவர்கள் சொல்லிக்கொடுத்ததை இவர்களும் சொல்லுவார்கள்.

மனிதனைப் போன்ற பொம்மை ஆடுகிறது, மந்திரிகளைப் போன்ற இவர்களும் ஆளுகின்றார்கள்.

அதனால்தான் இலங்கையில் 'ஓ' எனத் தமிழன் கதறும் ஓலம் இவர்கள் காதுகளில் கேட்டும், கேளாதவர்களாய், அவர்கள் அடையும் அல்லலைக் கண்டும் காணாதவர்களாய், மனம் இருந்தும் ஆற்றல் இல்லாதவர்களாய் கையிழந்து நிற்கின்றனர்.

அதிகாரம் இருக்கும் அந்த இடத்தினர் இதிலே அக்கறை காட்டுகின்றனரா என்று அடுத்துப் பார்க்கவேண்டும். ஏனெனில் எதுவும் செய்யவேண்டியவர்கள் அவர்கள் ஆனதினால், அவர்களிடம் 'என்ன வழி?' என்று கேட்க வேண்டும்.

அவர்களுடைய தலைவர்—பிரதமர்—ஜவகர்லால் நேரு பண்டிதர் அவர்கள் இதுபற்றித் தனது கருத்தைத் தெளிவாகச் சொல்லிவிட்டார்.

நேரு பண்டிதர் பண்பட்ட இதயம் படைத்தவர், அந்த இதயத்திலே இரக்க குணம் மிகுதி, பிறர் துயர்கண்டு மனம் வருந்தும் பெற்றியினர் என்றெல்லாம் அவர் புகழைச் சிலர் பாடுகின்றனர். பஞ்ச சீலத்தைப் பாருக்கு அறிவித்தவர், அது பரவவேண்டுமென்பதிலே மிக்க அக்கறை கொண்டவர் என்றெல்லாம் கூறுகின்றனர்.

இலங்கையிலே தமிழர்கள்,

தாக்கப்பட்டார்கள்!

அடிக்கப்பட்டனர்!

இரத்தம் வெள்ளமாகியது!!

இத்தனையும் கேட்ட பின்னர் இரக்கமிக்க அவருடைய உள்ளத்திலே வேதனை பிறக்கும் என்று எதிர்பார்த்தோம்; நம்பினோம். ஆனால் அவரோ கண்களை இறுக மூடிக்கொண்டு நான் அந்தக் காட்சியைக் காணமாட்டேன் என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார். ஏன் என்றார்கள் நிருபர்கள். 'ஏனா?' அது அவர்கள் உள்நாட்டு விவகாரம், அதிலே நான் தலையிடமாட்டேன் என்று கூறிவிட்டார்.

இலங்கையிலே தமிழர்கள் வெட்டப்படுவது உள்நாட்டு விவகாரம் என இங்கே பிரதமர் சொல்லுகின்றார். அதிலே தலையிடமாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கின்றார். நான் எப்படி அதைக் கேட்பேன் என்று நிருபர்கள் வாயிலாக நம்மை — தமிழ் மக்களைக் கேட்கின்றார்.

ஆனால் பேசவேண்டியவர் அவர்தான். பேசவேண்டிய அதிகாரம் இருப்பதும் அவரிடம்தான். ஆனால் அவர் 'மாட்டேன்' என்று மறுக்கின்றார்.

தமிழர்கள் கதி என்னதான் ஆவது?

அதனால்தான் நாம் நமது பிரச்சினைகளை நாமே பார்த்துக்கொள்ளுவோம்; அதற்கான அதிகாரங்களைப் பெறுவோம். அதற்கு நமக்கு என்று ஒரு அரசு வேண்டும் என்று கூறிவருகின்றோம். நமக்கு என்று ஒரு அரசு, அதிகாரம் இருக்கும் அரசு, மனிதனைப் போன்ற பொம்மை இல்லாமல், மனிதனே தோன்றும் நாடகத்தைப் போல அமைச்சர்களைப் போன்றவர்கள் ஆளாமல் அமைச்சர்களே ஆண்டால், இலங்கைத் தமிழரின் இன்னல்மட்டும் அல்ல, இங்குள்ள தமிழரின் இடுக்கண் இல்லாமை, இன்னல் இத்தனையும் போக வழிகாண மனம் இருக்கும். மனம் இருந்தால் மார்க்கம் எளிதிலே புலனாகும்.

இதை நாம் வலியுறுத்திக் கூறினால் நேரு எவ்வளவு நல்லவர் தெரியுமா--அவர்கீழே நாம் இருப்பது இன்னும் சிறந்தது-தெரிந்துகொள்ளுங்கள் எனக் கூறுகின்றனர்.

நல்லவரான நேருவே நம் மக்கள் படும் துயரம் துடைக்கமாட்டேன் என்னும்போது பிறர்பற்றிப் பேசலும் வேண்டுமோ?

உள்நாட்டு விவகாரம் அதனால் பேசமாட்டேன் என்னும் நேரு பண்டிதர், பிற உள்நாட்டு விவகாரங்களைப் பேசாமல் இருக்கிறாரா என்று பார்த்தால், அங்கெல்லாம் அழைக்காமலே நுழைகின்றார்.

இம்ரே நாகி படுகொலை — உள்நாட்டு விவகாரம்; என்றாலும் — என்று சொல்லிவிட்டு அதற்கு அநுதாபம் தெரிவிக்கின்றார். பஞ்சசீலத்தைப் பேசுகின்றவர்கள் செய்கின்ற செயலா இது எனப் பதறித் துடிக்கின்றார். உள்நாட்டு விவகாரம் ஏன் அதைப் பற்றிப் பேசுகின்றீர்கள் என்று யாராவது கேட்டால், உடனே அது உள்நாட்டு விவகாரம்மட்டும் அல்ல, உலக விவகாரம்— அதனால் பேசுகின்றேன் என்று சொல்லக் கூடும். உள்நாட்டு விவகாரம், உலக விவகாரமாக எப்போது மாறும்? அந்த நாடு தனி உரிமை படைத்த நாடாகயிருந்தால், அது உலக விவகாரமாக மாறும். இன்று தமிழ்நாடு தனி உரிமை நாடாக இருந்தால், தமிழர்கள் இலங்கையிலே படும் அல்லல், வெறும் உள்நாட்டு விவகாரம் என்ற போர்வையால் மூடப்படாமல், உலக விவகாரம் என்று அறிவிக்கப்பட்டு உண்மை தெளியப்பட்டு, நீதி கிடைத்திட வழி பிறந்திருக்கும்.

அந்த நிலை இல்லாமல், தமிழ் மண் வேற்றவர் ஆட்சியில் சிக்கிச் சீரழிகின்ற காரணத்தினால் தமிழன் தவிப்பு, தமிழன் அழுகை, தமிழன் இன்னல்—இவைகளையும் போக்க இயலாமல், இமை மூடிக் கிடப்போரும், மூடிய இமைகளை நீக்கிவரும் நீரைத் துடைத்துத் தேம்புவோரும், எழுந்திடும் மூச்சினை அடக்கப் பயின்றிடுவோருமாகத் தமிழர்கள் வதைபடுகின்றனர்.

நாகியின் மரணம் நெஞ்சைத் தொடுகின்றது! ஆனால் தமிழரின் இரத்தம் மனதிலே இடம் பெற முடியவில்லை. இத்தனைக்கும் நேரு பண்டிதர் மிக நல்லவர்! மிக நல்லவர் ஆட்சியில் இது நிலைமை என்றால் மற்றவர்கள் ஆட்சியில்...

நல்ல பிள்ளையே கூரைமேல் கொள்ளிக்கட்டையுடன் உலவினால், மற்றவர்கள் என்ன செய்யமாட்டார்கள்?

இலங்கைத் தமிழரின் இன்னல் கண்ட இப்போதேனும் இந்த உண்மையினை உணர்ந்து திருந்தினால்தான், இனியேனும தமிழன் இங்கேனும் வாழமுடியும்.

இதனை அமைச்சர்கள் மட்டும் அல்ல, தமிழ்நாட்டின் நலனில் அக்கறைகொண்டவர்கள் அத்தனை பேரும் உணர்ந்தால் வாழ்வு.

உணர்த்தும் பணியினை நாம் செய்கின்றோம், செய்வோம். உணராதவர்கள் உணரட்டும்.

இலங்கைத் தமிழனே உன்னிலை அதற்கு வாய்ப்பளிக்கட்டும்! [...]

வடிக்கும் கண்ணீர், சிந்தும் இரத்தம், படும் துயரம், செய்யும் தியாகம், இழக்கும் உயிர் இதற்காவது பயன்படுகின்றது — அந்த நிலைக்குத் தாயகம்—நீ போற்றும் தமிழ்நாடு-தாழ்ந்திருக்கின்றது. தாழ்ந்திருக்கும் தமிழகம் உனக்கு வாழ்வளிக்கவில்லை; ஒரு கவளம் சோறும் ஒரு விழுங்கு நீரும் தேடிக்கொண்டு வளம்மிக்க இந்தத் தமிழகத்தைவிட்டு, கடல் தாண்டிப்போய் கண் கலங்கும் நீ உன்னை வாழவைக்காத தமிழ்நாட்டிற்கு வாழ்வளிக்க இந்த அளவு உதவி செய்கின்றாய். அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்றாற்போல், நீ தமிழகத்திற்கு அன்போடு இந்தப் பாடம் புகட்டுகின்றாய். ஆனால், கண்படைத்தும் காணும் ஆற்றல் படைக்காதவர்களாய், காது படைத்தும் கேட்க ஆற்றல் படைக்காதவர்களாய், நெஞ்சம் இருந்தும் அதிலே நேர்மையான எண்ணங்களை எண்ண இயலாதவர்களாய், இங்கே சில தமிழர்கள் — அவர்களிடம்தான் இப்போது அதிகாரம்--உன்னையையும், உன்னுடைய பொன் நாட்டையும் காக்கும் அதிகாரம் கிடக்கிறது—இருக்கின்றார்கள்.

அவர்கள் தமிழர்கள் என்பதோடு 'இந்தியர்'களாகவும் இருந்திடுகின்றனர். இந்தியர்களுக்கு இதிலே தொடர்பு இல்லை என இந்தியர்களின் பிரதமர் பண்டித நேரு கூறிவிட்டார். அதனால் இனி இந்தத் தமிழ்— இந்தியர்களும் அதையேதான் சொல்லிடுவர்.

தமிழன் என்ற பெயரை மறந்தால் என்ன கேடு வருகின்றது என்பதனை இந்த நிகழ்ச்சி காட்டுகின்றது.

நேரு தமிழர் அல்லர்;

இந்தியர்.

ஆனால் இலங்கையிலே அவதிப்படுவோர் இந்தியர் அல்லர்;

தமிழர்.

அதனாலே நேருவின் பார்வை அவர்கள் மீது படவில்லை.

ஆனால் 'பச்சைத் தமிழர்' பார்வையும் இலங்கைத் தமிழர் மீது படவில்லை. 'பச்சைத் தமிழர்' பச்சைத் தமிழராக மட்டும் இல்லாமல் இந்தியராகவும் இருக்கின்றார். அதனாலே அவர் நேருவின் நிழலிலே நிற்கின்றார். நிழலிலே எத்தனை காலம் நிற்க முடியும்? ஆதவன் கீழ்த்திசையில், மேற்றிசையில் இருக்கும்போது நிழல் நீண்டிருக்கும். அப்போது அதிலே நின்று இளைப்பாற ஆசை பிறக்கும். ஆதவன் அடிவானம் விட்டு எழுந்தால் நீண்ட நிழலுக்கே நிற்க இடம் கிடைக்காது. அதனாலே அதன் கீழ் நின்று இளைப்பாற ஆசை இருந்தாலும் இயலாதுபோகும்.

மக்கள் மனதிலே தெளிவு என்ற ஆதவன் எழ எழ நேருவின் நிழல் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையும்; அப்போது அதன் கீழே நின்று பதவி என்ற இளைப்பாறுதல் பெற பச்சைத் தமிழருக்கு இயலாதுபோகும். அந்த நாள் வரும்வரை காத்திருந்து ஏமாறாமல், இப்போதே உண்மை உணர்ந்து, நிலையற்ற நிழலிலே நின்று இளைப்பாறாமல் 'குந்தக் குடிசை' ஒன்று சொந்தத்தில் அமைத்துக்கொள்ளவேண்டுகின்றோம், பச்சைத் தமிழரை. சொந்தக் குடிசைதான், நமக்கென ஒரு ஆட்சி, அரசு—அதுவே தன்னாட்சி பெற்ற தமிழகம் — திராவிடம்—தென்னகம்.

தூத்துக்குடி அழைக்கிறது!

பொதுச்செயலாளர் அழைப்பு விடுத்திருக்கிறார்

கழகச் சார்பில், தேர்தலுக்காகச் சென்றிருக்கும் **கருணாநிதியும், மதியழகனும், முத்தும்** திராவிடத்தை அழைக்கிறார்கள்.

சென்ற தேர்தலில் கொஞ்ச ஓட்டுகளால் எம். எல். ஏ. ஆக இயலாமற்போன எம். எஸ். சிவசாமி எல்லோரையும் அழைக்கிறார்.

வேடிக்கை காண அல்ல! வேலை செய்யும் பாங்கைக் காண அல்ல!!—தூத்துக்குடி என்றாலே, தமிழகத்திலுள்ளோர் அறிவர்—மறைந்த மாவீரன் சாமியையும், அவர் போன்றாரின் உழைப்பு எப்படிப் பட்டதாக இருக்கும் என்பதையும்.

நடைபெறும் துணைத் தேர்தலில், தி.மு.க, தன் கடமையைச் சரிவரச் செய்ய வேண்டும். ஒவ்வொரு ஊரிலிருக்கும், கிளைக் கழகங்களும்-ஒவ்வொரு கழகத் தோழரும் தத்தமது உதவியை **உடனே, இன்றே** அனுப்பியுதவ வேண்டும்-என்பதற்குத்தான், அழைப்பு விடுகிறார்கள்!! பொற்குவை தருவோர் நம்மிடம் இல்லை-நோட்டு நோட்டாக அளிக்கும் "டாடா பிர்லாக்களை" அறியோம் நாம்—காசுகள் தரக் கூடியவர்களேயிருக்கிறார்கள்! அப்படிப்பட்டவர்கள் கையில் கிடைத்ததை ஒன்றோ இரண்டோ ஆயினும் உடனடியாக "பொதுச் செயலாளர்-அறிவகம் சென்னை" எனுமுகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அழைக்கிறோம்!!

சுழலும் பம்பரங்கள்-தூக்கமறியாத் தொண்டர்கள்-வாக்காளர்களுக்கு விளக்கம் தந்து, தவறாது அவர்களை 'உதய சூரியனு'க்கு வாக்களிக்கச் செய்யும் முயற்சியுடையோர்-நெல்லையில் ஏராளம் உண்டு. அவர்களுக்குத் தெம்பும் ஊக்கமும் அளிக்கும் வகையில், ஒவ்வொரு கழகத் தோழரும், இயன்றதை அளிக்க வேண்டுமென விரும்புகிறோம்.

காலத்திற் செய்த உதவி, சாலப் பெரிது:

கவனியுங்கள்! காசுகளை, அனுப்புங்கள்!!

வெட்கம்தான் வருகிறது

—[கா. வேழவேந்தன்]—

என்னை தாயின்வயிற்றிலிருந்து ஏந்திக் கொண்ட நாடு; நான் தவழ்ந்துவிளையாடியநாடு; என்னை அணு அணுவாக வளர்த்து ஆளாக்கிய நாடு; மங்காத அன்புடன் என்னைத் தன் மார்பிலே தாங்கி நிற்கும் அன்னைத் திருநாடு; அந்த நாடுதான் உலகிலேயே முதன் முதல் தோன்றிய 'தொன்மை மிகு நாடு!' என்கிறார்கள்; தேனாக இனிக்கிறது செவிக்கு; கேட்கிறோம்! பூரிப்படைகிறோம்!!

வஞ்சம் கொஞ்சமும் இல்லாத பெருநிலம்; வளமெலாம் ஒருங்கே பெற்றுவிட்ட வற்றாத பூமி; நெல் விதைத்தால் பொன்னையே விளைவிக்கும் செல்வம் கொழிக்கும் திருமண், இங்கே விளையாதது எங்குமே விளைவதில்லை என்று போற்றப்படும்பூமி; அதுதான் அன்னை நாட்டின் 'வளமார்ந்த நிலம்' என்கிறார்கள்; தேனாக இனிக்கிறது செவிக்கு, கேட்கிறோம்! பூரிப்படைகிறோம்!!

வற்றாத வளம்படைத்த பெருமலைகள், வாசமிக்க பொருள்களை வாரிவழங்கும் மாமலைகள், தேயிலை வேண்டுமா, காப்பி வேண்டுமா என்று இனம்இனம்கேட்டுஅள்ளிக் கொடுக்கும் அருமைமிகு நீள்மலைகள்; பத்துமாதம் சுமந்து பெற்றெடுக்கும் அன்னையைப்போல, ஆறுகளை ஈன்றெடுத்த அழகுத் திருமலைகள்: அவைதாம் எம் தாய் திருநாட்டில் மண்டிக்கிடக்கும் 'செழிப்புடை மலைகள்' என்கிறார்கள், தேனாக இனிக்கிறது செவிக்கு; கேட்கிறோம்! பூரிப்படைகிறோம்.

நெளிந்து வளைந்து ஓடும் நீண்ட ஆறுகள்; நித்த நித்தம் இந்த நாட்டை எழில் குலுங்கச் செய்ய, ஓயாமல் ஓடிவரும் பாட்டாளி நதிகள், உழவையும் ஏனைய எழில் மிக்க தொழில்களையும் வாழவைக்கும் ஒப்பற்ற சக்திபடைத்த ஆறுகள்; பூநாறும்நீரால் எங்கள் தென்னாட்டைப் பொன்னாடாகச் செய்யவந்த பொலிவுமிக்க நதிகள், இவைதாம் எம் மண்மாதாவின் இரத்த நாளங்களாகப் பின்னிக்கிடக்கும் 'சீரார்ந்த ஆறுகள்' என்கிறார்கள்; தேனாக இனிக்கிறது செவிக்கு; கேட்கிறோம்! பூரிப்படைகிறோம்!!

அலைக்கரம் உயர்த்தி என்றென்றும் பணிபுரியக் காத்துக் கிடக்கும் கடல்கள், என் அன்னை மண்ணை அணி செய்ய, நீல ஆடையாய் வாய்த்த நெடிய கடல்கள்; அழகுமிகும் ஆண் முத்துக்கள் வேண்டுமா, என்று ஓசை எழுப்பி கேட்டுக் கொண்டிருக்கும் ஆழமுடைக் கடல்கள்: அற்புதமான எழில் அமைந்த கரைகளால் வளம் சேர்க்க ஏங்கி நிற்கும் அருமைமிகு ஆழிகள்; இவைதாம் என் தாய்த்திரு நாட்டைச் சுற்றி அணிவகுத்துக் கிடக்கின்றன என்கிறார்கள், தேனாக இனிக்கிறது செவிக்கு; கேட்கிறோம்! பூரிப்படைகிறோம்!!

வந்தாரைவாவென்று அழைக்கத் தெரிந்த மக்கள்; இனி வருவாரை எதிர்நோக்கிக் கண்பூக்கும் மக்கள்; மானமொன்றே வாழ்வுக்கு மணம் சேர்ப்பது என்ற உண்மையைச் சொந்தமாக்கிக் கொண்ட மக்கள்; நேர்மைக்கும் நீதிக்கும் மட்டுமே அஞ்சிவாழும் மக்கள்; தங்களுக்குப் பின்னால் மறைக்கமுடியாத வரலாற்றைப் பெற்றிருக்கும் மக்கள்; எங்கள் சிங்காரத் தாயகமாம் தென்னாட்டுக்குரிய மக்கள்; அந்த எந்நாட்டு மக்கள்தான் வையகத்திலேயே 'முன்தோன்றிய மூத்த குடியினர்' என்கிறார்கள்; தேனாக இனிக்கிறது செவிக்கு; கேட்கிறோம்! பூரிப்படைகிறோம்!

கற்புக்குப் புதுப்பொருள்கண்ட கன்னியர்கள்; கவிஞர்களின் உள்ளங்களை உருகவைத்து, தமக்கென்றே காவியங்களை ஆக்கிக் கொண்ட மங்கையர்குல திலகங்கள்; விருந்தோம்பி இல்வாழ உலகுக்குக் கற்றுக் கொடுத்த பெண்மணிகள்; சமுதாய வாழ்வில் என்றோ சமநிலை பெற்றுவிட்ட தாயகத்துப் பெண்டிர்; அவர்கள் தாம் எந்நாட்டிலும் காண இயலாத எம்நாட்டு 'பெண் அரசிகள்' என்கிறார்கள்; தேனாக இனிக்கிறது செவிக்கு; கேட்கிறோம்! பூரிப்படைகிறோம்!!

ஆயுளையோ கணிக்க இயலாத அரியமொழி; அமுதுக்கும் தேனுக்கும் உவமை கூறியும், அவையெல்லாம் மனநிறைவு தாராமல் அறிஞர்கள் வேறு உவமை தேடிக்கொண்டிருக்கும் அரிய மொழி; தொட்டாரை எல்லாம் தன்பக்கம் இழுத்துக்கொள்ளும் சுந்தரமொழி; அந்த எங்கள் செந்தமிழ் மொழிதான் 'தனித்தியங்கும் மொழி' என்கிறார்கள்; தேனாக இனிக்கிறது செவிக்கு; கேட்கிறோம்! பூரிப்படைகிறோம்!!

வாழ்வுக்கு ஒளிசேர்க்கும் வளமார்ந்த அருங்கலைகள்; நுண்ணிய தன்மைகளால் நுகர்ந்தோரை மதுவுண்ட வண்டாக்கும் பெருங் கலைகள்; ஏற்றமும் தோற்றமும் பெற்றதால் யார் யாரோ அழிக்க முனைந்தாலும், அழியாத நற்கலைகள்; கலப்பாலும் கொடியோர் வீசிய கணைகளாலும் நிலைகுலையாத கவின் கலைகள்; அவைதாம் என் தந்தையர் நாட்டுக்கே உரிய 'நுட்பம் நிறை கலைகள்' என்கிறார்கள்; தேனாக இனிக்கிறது செவிக்கு; கேட்கிறோம்! பூரிப்படைகிறோம்!!

உலகம் நினைத்துப் பார்க்கு முன்பே உருவான இலக்கணம்; வாழ்வுக்கும் செயல்களுக்கும் வரைமுறைகூறும் வளம் செறிந்த இலக்கணம்; காதலின் வகைகளை எல்லாம் கவின்படக் கூறிச் செல்லும் இலக்கணம்; மாத்தமிழரின் அறவாழ்விற்கும், மறவாழ்விற்கும் பொருள்கூறும் இலக்கணம்; நாம் படிப்பதற்கு இன்று கிடைக்கும் முதல் இலக்கியமான இலக்கணம்; அதுதான் என் வெற்றித் திருநாடு பெற்றெடுத்த 'தொல் இலக்கணம்' என்கிறார்கள்; தேனாக இனிக்கிறது செவிக்கு; கேட்கிறோம்! பூரிப்படைகிறோம்!

நானிலத்துக்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைந்த நாகரிகம்; நவிரா வளம்படைத்த வரலாற்றுப் பின்னணிகொண்ட நாகரிகம்,

(10-ம் பக்கம் பார்க்க)

கோவை மாநாடு

மாமலைகளும், அங்கே விண்ணையளந்திடும் மரங்களும், அந்த மரங்களிலே தாவிப் படரும் கொடிகளிலே பூத்த மலர்களும், அம்மலர்களிலிருந்து வீசும் நறுமணமும் சூழ்ந்த பூநாடு என்பர்! அல்ல அல்ல, தேனாடு எனவும் சொல்லலாம்-ஏனெனில், 'கொங்கு' என்பதற்கு தேனென்றும் பொருள் உண்டு என விளக்கமுரைப்போரும் உண்டு!! பூமணமும், தேன் சுவையும் நிரம்பியதுமட்டுமல்ல, இது வள்ளல் நாடு-எப்படித் தெரியுமோ? எமது பகுதியில் சிறுமி போல ஓடும் காவிரியால்தான், கழனிகள் குலுங்கும் திருச்சியும் தஞ்சையும் புனிதமடைகிறது! அம்மட்டோ, ஆங்காங்குள்ள சின்னஞ்சிறு மலைகளிலிருந்து வழிந்தோடும் நீரால் வளம்பெறும் இடங்கள் பல, பட்டியல் வேண்டுமா, என்று புகழ் பாடுவோரும் உண்டு. கொடைக்குக் குமணன் என்கிறீர்களே, அக்குமணன் இருந்தது எங்கு தெரியுமோ? எமது மண்ணில்தான்! பதினெண் சித்தர்களில் பலருக்கு உறைவிடம் இதுதான்! பாரியையொத்தோர் வாழ்ந்தது இங்குதான்! வணங்காமுடி வாணராயர் எனும் பெயர் தெரியுமோ? தன்னெதிரே வந்து நிற்கும் புலவர்கள், தமது வறுமையைச் சொல்லி யாசிக்கும்போது அவர் தம் உடல் குறுகும் அந்த வேதனையான காட்சியைக்காணவே விரும்பாமல் வந்து கேட்டோருக்கு வரையாது அளிக்கும்படி வாயில் காப்போனுக்கு உத்தரவிட்டு வாழ்ந்த குறுநில பூபதிகள் பலர் இருந்ததாக்கும் எமது கொங்கு பூமி என்பார்கள்!!

பழம் பெருமையும், இயற்கை வளமும் எப்படியிருப்பினும் கொங்கு நாட்டின் பெரும் பகுதியாக விளங்கும் கோவை மாவட்டம், 'அன்பு' ததும்பும் மாவட்டம் எனலாம்! அவர்கள்பேசிடும்மொழியிலே, யாழோசையுண்டு—அவர் தம் மூச்சிலே வாளுண்டு—அவர்களைப்பார்த்திடும்போது, அவர் தம் திண் தோளும், கம்பீரமும் மூவேந்தர்களை நினைவூட்டும்—உழைத்து வாழ்பவர்கள்—ஒருவரையும் வஞ்சிக்க நினையாதவர்கள்—உள்ளப் பாங்கு உணர்ந்தவர்கள்—இத்தனைக்கும் மேலாக, எடுத்த காரியத்தை பொறுமையோடு முடித்துக் காட்டும், செயற் காளைகள்!!

ஓராயிரமல்ல, ஈராயிரமல்ல, இலட்சக் கணக்கிலே, கழகத்தின் பக்கம் இதுபோன்ற காளைகள் இருக்கின்றனர், அப்படிப்பட்ட 'சம்பத்தை' கழகம் பெற்றிருக்கிறது எனும் மாட்சியினை எடுத்துரைக்கும வகையில், காட்சியாக அமைந்திருந்தது கடந்த 5,6 தேதிகளில் கோவையிலே நடைபெற்ற, கோவைமாவட்ட மாநாடு.

குறுநில மன்னர்களும், பழைய கோட்டையினர் எனக்கூறிப் பெருமை கொள்வோரும், வாணிப வேந்தரும், ஆலையரசுகளும், அதிகாரத்திலமர்ந்துள்ள கட்சியை நாடும் அவசியத்துக்கு ஆட்பட்டோரும், நிரம்பியமாவட்டம் அது. நிதி சேர்க்கும் நிலை ஏற்படின், பறந்து சென்று பணம் பெற்று வரும் காங்கிரஸ்! அப்படிப்பட்ட இடம் அது!!

ஆனால், அங்கு மாநாடு நடத்திய தி. மு. கழகத்துக்கும் சீமான்களுக்கும்தான் 'சேலம்' நடந்தாகிவிட்டதே. எனவே அவர்தம் ஆறுதலையோ, பணப்பையையோ நம்பி அங்கு காரியம் ஆற்றப்படவில்லை. கழகங்கள் செலுத்திய காணிக்கை! கட்டணப் பேச்சு வைத்துப் பெற்ற காசு! — இவைகளைக்கொண்டு, மாநாட்டினைக் கூட்டி, மகத்தான கொள்கை விளக்கங்களை மக்களுக்கு அளித்து, மகிழ்ச்சியுறும்படியான மீதத்தையும் அளித்திருக்கிறார்கள், கோவை மாவட்டக் கழகத்தினர்.

செலவுபோக **22,222—00** ரூபாய் மிச்சப்பட்டிருக்கிறது.

வரவேற்புக் கழகத் தலைவர் உடுமலை ப. நாராயணன், செயலாளர்கள் ஈரோடு எஸ். அப்பாவு, பி. ஏ. சாமிநாதன், தொண்டர்படைத் தலைவர்கள் கே. எஸ். சிங்காராயர், ஜி. கே. பழநிசாமி, விளம்பரப் பொறுப்பாளர் ஜி. ஏ. வெங்கடாசலம், முதலியோரும், அவர்களுக்கு உறுதுணையிருந்து காரியமாற்றிய நூற்றுக்கணக்கானவர்களும்; அவர்களுக்கும் நாட்டுக்கும் கிடைத்துள்ள "சம்பத்தும்" என்னென்ன பாடுபட்டிருக்க வேண்டும் என்பதை அழகுற அமைத்திருந்த அர்ச்சுனன் பந்தல் சொல்லிற்று! நாகம்மையாரின் நினைவைக் கிளறும் வகையில், அமைந்திருந்த அரங்கு, இயக்கத்தின் ஆரம்ப காலத்தையும், இடையிலேற்பட்ட பெருங்குமுறலையும், அக்குமுறலைத் தாண்டி கொள்கை வளர்க்க வளர்ந்துவரும் தொண்டர்களையும், அடிக்கடி நினைவூட்டிக்கொண்டிருந்தது!

தலைமைவகித்தார், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ. துவக்கி வைத்தார் தோழர் தர்மலிங்கம் எம்.பி; இருவரதுஎழுச்சி மிக்க உரையையும், நாவலரின் விளக்கத்தையும், ஏனைய இயக்க வீரர்களின் குரலையும், மக்கள் கேட்டு மகிழ்ந்தனர். மாநாட்டின் குறிப்பிடத்தக்க சிறப்பு, இப்படி ஒரு இயக்கம் வளர்ந்திருக்கிறதே எனும் எண்ணம் கிளர்ந்தெழ மராட்டிய நண்பர் பாவாசாகிப், மகாதேவுன்கர் எனும் பார்லிமெண்டு உறுப்பினர் அமர்ந்திருந்ததும், நம்மை அறிந்துகொண்டதுமாகும்!!

கூடுகின்றனர் இலட்சக்கணக்கில் —ஒருமாவட்டத்தை மிஞ்சும் அளவில் இன்னொரு மாவட்டம் இருக்கிறது—எப்போதும் கேட்கின்ற கொள்கை விளக்கத்தைத்தான் கேட்கின்றனர் மக்கள் —மாதத்துக்கு ஒரு மாவட்ட மாநாடு நடக்கிறது—ஒவ்வொன்றும்ஒவ்வொரு 'ஆவடி' போலக்காட்சியளிக்கிறது —ஊர்வலம் நடத்துகிறார்கள், அந்த ஊர்வலத்தைக்கூடக்கருத்து விளக்கம்தரும் கவினுறு ரதங்கள்

செல்லும் வகையில் செய்கிருர்கள்—எப்படி வளர்கிருர்கள்! என்ன செய்யலாம் நாம்!—என்கிற அச்சம், காங்கிரஸ் தலைவர்களுக்கு, அதிகமாகிவருவதை நாடு அறிந்து வருகிறது. ஒரு மாவட்டத்தில் மாநாடு முடிந்தது என்ருல், அமைச்சர் குழாம் உடனே அங்கே 'டேரா' அடித்து, மிச்சமீதியிருப்போரும் கழகத்தின்பால் சென்றுவிடாமல் பார்த்துக்கொள்வோம் என்று அஞ்சுகிற அளவுக்கு அச்சம் வளர்ந்திருக்கிறது, ஆளும் கட்சிக்கு.

அச்சத்தை மறைத்துக்கொள்ள முயலும்போது, தூற்றுகிருர்கள்! தோழர் காமராஜரே 'அரசியல் தெரியுமா இந்த தி. மு. க.வுக்கு' என்கிற அளவுக்குப் போகிருர்.!

கழகத்தின் வளர்ச்சியையும், கொள்கைக்கு கிடைத்து வரும் செல்வாக்கையும் காணும்போது 'கனம்'களுக்கும், ஆளும் கட்சியின் தயவால் 'கனம்' குறையாமல் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமெனக் கருதுவோருக்கும், பரதவிப்பும் பதட்டமும் ஏற்படவே செய்கிறது. அதைக் கண்டு ஆத்திரமோ, எரிச்சலோ, கொள்ளும் கட்டத்திலில்லை தி. மு. க! ஏனெனில், இவர்களுக்கும் சேர்த்துத்தான் "வாழ்வுபெற" நாம் போராடிக்கொண்டிருக்கிருேம்!!

நமது கவனமும் ஊக்கமும் எப்படிப்பட்டதென்பதை மாநாட்டின் தீர்மானங்களை உணர்வோர் அறியலாம். உடனே கிளம்பு! வெட்டு!குத்து! வீட்டுக்குத்தீவை!—என்று இப்படி ஒரு எழுத்தும் காணமுடியாது நமது தீர்மானங்களில். மக்களின் தேவைகளைத் திரட்டித் தருகிருேம் — தேவைகளைப் போக்கிக் குறையில்லாமல் செய்யும் திட்டம் விரும்புகிருேம்—அப்படி ஒரு திட்டம் வகுத்தளிக்க மனமில்லாத டில்லியைக் காட்டுகிருேம்—அந்த டில்லியின் தொடர்பு அறுந்தால் என்னதான் கெட்டுவிடும் என்று வினவுகிருேம் — திராவிட நாடு திராவிடருக்கே என்று முழக்கமிடுகிருேம். நாம் தருகிற அளவுக்கு அரசியல் விளக்கம், பொருளாதார விபரம், எந்த மந்திரியும் சொன்னதில்லை! எனினும், காமராசர் "அரசியல் தெரியுமா" என்று கேட்கிருர். கம்யூனிஸ்டுகளைப்போல, பலாத்காரவாதிகள் எனவும் பேசுகிருர்! கேட்டுக்கொள்ளுகிருேம் — வற்புறுத்துகிருேம், என்று தீர்மானங்கள் போடும், நாம் பலாத்காரவாதிகளாம்!!

காங்கிரசுக்கு மட்டுமல்ல, அகில இந்திய ஐக்கியம் பேசும் கட்சிகளுக்கெல்லாமே, நமது வளர்ச்சி ஒரு புதிராக உள்ளது; உடனே எரிச்சல் வருகிறது; சரியான பதிலளிக்க இயலாததால், எரிச்சல், ஆத்திரமாகி, ஏதேதோ பேசவும் எழுதவும் ஆரம்பிக்கிருர்கள். அவர்கள் மீது, அதற்காக நாம் ஆத்திரம் கொள்வதோ, அன்பு நெறியை மீறுவதோ சிறிதும் தகாது; கூடாது. ஏனெனில், நாம் பெறப்போகும் இன்பத் திராவிடம், அவர்களுக்கும் தான்! 'திராவிடம்' வந்ததும் அவர்களையெல்லாம் நிச்சயம் நாம், விரட்டிவிடமாட்டோம்! எனவே மாற்றுக் கட்சிகள், நம்மை ஏசவும் பேசவும் முயலும்போது, ஏற்படும் நெஞ்சக் குமுறலின் விளைவாக ஒவ்வொரு கழகத் தோழரும் சபதம் எடுத்துக்கொள்ள வேண்டும். இன்னும் ஒரு பத்து ஊரில் எமது கழகங்களைத் துவக்குவேன்—எங்கெங்கு எங்கள் ஏடுகள் போகவில்லையோ அங்கெல்லாம் போகச் செய்வேன்—இன்னும் ஒரு நூறு பேரை, அடுத்த கூட்டத்துக்குள் உறுப்பினராக்குவேன் என்று.

கடந்த பொதுத்தேர்தலின் போது, கோவை, நமக்குரிய பங்கைச் செலுத்தவில்லை! காரணம், பணபலத்தோடு, மோத இயலாமற் போனது எனலாம். எனினும், அந்தப் பணபலத்தையும் புறமுதுகிட்டோடும்படி செய்யும் வலிவும் ஆற்றலும் ஏற்படவேண்டும். மாநாட்டினை, இவ்வளவு பாங்கோடு நடாத்திய மாவட்டத் தோழர்கள், தொடர்ந்து பணியாற்றிடின், இயலாத காரியமா, என்ன! நிச்சயம் முடியும்!! பணியாற்றும், 'மதி'யும் ஆர்வமெனும், 'சம்பத்தும்' உண்டே நிரம்ப!!

அப்படியொரு வெற்றியைத் தேடித்தரும் வகையில் கழகங்கள் பணிபுரிதல் வேண்டும். கழகத் தோழர்கள், நெஞ்சிலே, இந்த எண்ணத்தைப் பதியவைத்துக் கொள்ளவேண்டும்.

எண்ணங்கள் ஆளும் ஜனநாயக காலம் இது! நாட்டின் எண்ணம் முழுவதும்' பிரிவினையை' விரும்புகிறது எனும் ஓர்நிலை மலர்ந்து விடின், தன்னாலே வரும் புதிய தாயகம்! தண்புனலும், தளிர்க்காவும், மலையும், மாநதிகளும், அவைகளை மிஞ்சக்கூடிய வள்ளல்களும் வாழ்ந்த பழைய தமிழகம் மிளிரும்!!

அதற்கான பணிகளில்' கோபிக்குவந்துசென்ற, கொள்கை விரர்கள் ஈடுபடவேண்டும் என்று அன்போடு. தெரிவித்துக்கொண்டு, வளர்கதேளுடு, மணம் பரவட்டும் எங்கும், என்று வாழ்த்துகிருேம். வாழ்க, கொள்கை வீரர்கள்! வளர்க ஊர்தோறும் கிளைகள்!!

★

8-ம் பக்கத் தொடர்ச்சி

கேட்டாரைத் திகைக்க வைத்தும், கேளாரையும் கவருகின்ற நாகரிகம்; அறிவியல் உலகம் சாதிக்க இயலாதவற்றை எல்லாம், என்ருே சாதித்துக் காட்டிய நாகரிகம்; சீரும் சிறப்பும் பிணைந்துவிட்ட காரணத்தால், என்றுமே அழியாப் புகழ்பெற்றுவிட்ட நாகரிகம்; அதுதான் எம் தாய்த் திருநாட்டுக்கே உரிய 'தலை சிறந்த நாகரிகம்' என்கிருர்கள்; தேனுக இனிக்கிறது செவிக்கு; கேட்கிருேம்! பூரிப்படைகிருேம்!

ஆனுல்...ஆனுல்...?

இன்று எம் அன்னை நாடு ஒளியின்றிக் கிடக்கிறது! என் அன்னை வளர்த்த அருங்கலை கேட்பாரற்றுக் கிடக்கிறது! என் அன்னை நாட்டுப் பண்பாடு சீரழிந்து கிடக்கிறது! என் அன்னை மண் பெற்ற நாகரிகம் மாசு படிந்து கிடக்கிறது என் அன்னைத் திரு நாட்டின் மக்கள் வாழ்க்கைத் தரங்குன்றி வாடிக் கிடக்கிருர்கள்!

ஏன்......?

எம் நாட்டை எம் நாட்டவர் ஆளவில்லை; என் இனத்தை என் இனத்தவர் ஆளவில்லை! ஐயோ! இதையும் கேட்கிருேம்! வேதனை விலாவைத் துளைக்கிறது, வெட்கம்தான் வருகிறது.

★

தண்டனை

—[புலவர் பொன்னிவளவன்]—

உள்ளத்தைச் சிலிர்க்கவைக்கும் நினைவு, உடலைக் குளிர வைக்கும் தென்றல், பக்கத்துணை என்ற பெயரிலோ, துக்கவிசாரணை என்ற பெயரிலோ எல்லையில்லாமல் பேசிப் பொறுமையைச் சோதிப்பவர்களின் தொல்லையில்லாத தனிமை, ஆயிரமாயிரம் 'மெர்க்குரி லைட்'டுகளாலும் விரட்டியடிக்க முடியாத இருட்டு, வானத்தில் எண்ணெய் இல்லை; திரி இல்லை; ஒளிமட்டும் தென்பட்டது. ஆமாம் சுடர் நிலவு தன்னுடைய கடமைக்குத்'தொடக்கவிழா'ச்செய்து கொண்டிருந்தது.

'நெஞ்சமே! உலகத்திலேயே யாருக்கும்—எந்தப் பொருளுக்கும் இல்லாத சுறுசுறுப்பு உனக்கு எப்படி வந்தது? கொஞ்ச நேரம் சும்மா இருக்கமாட்டாயா?' அவள் நெஞ்சைக் கெஞ்சிப்பார்த்தாள்; கொஞ்சிப் பார்த்தாள். ஆனுல் அது அஞ்சி அடங்கி ஒடுங்குவதாக இல்லை. என்னதான் அப்படிச் சிந்தனையோ?

வேதனை விழிகளிலே நிழலாட்டம் போட்டது. விழிகள் வேதனையைக் கண்ணீராக வெளியேற்றிக் கொண்டிருந்தன. அவனுல் படிக்கப் படாத கதையாகப்—பார்க்கப் படாத படமாக-சூடப்படாத பூவாகச்—சுவைக்கப்படாத கனியாக அவளுடைய அழகு இருக்கிறதே! என்றுதான் அவளுக்குக் கவலை. 'சொந்த வீட்டுச் சாப்பாட்டுக்கு வெற்றிலை பாக்கு வைத்தா அழைப்பார்கள்? நான் அவருக்குச் சொந்த வீட்டுச் சாப்பாடுதானே? என்னிடத்திலே அவருக்கு என்ன உரிமையில்லை? அத்தை மகளே! என் ஆசைக் கிளியே! அருகில் வா! என்று அன்பொழுக என்னை அழைத்தால் நான துள்ளித் துள்ளி ஓடுவேன். பழத்தோப்பு பழுத்திருப்பது நமக்காகத்தான் என்று வெளவாலுக்குத் தெரிய 'வேண்டாமா?'

அவள்மூக்கிலிருந்து பெருமூச்சு என்ற பெயரில் அனற்காற்று வெளிப்பட்டது. அவளுடைய கண்கள் கன்னம் குளிபபதற்கு வெந்நீர் வைத்துக் கொடுத்தன. வானத்து நிலவு அவளைப் பார்த்துச் சிரித்தது. அவள் நிலவைப் பார்த்துச் சிரித்தாள். அதைப் போல அவளுடைய அத்தான் அவளைப் மார்த்துச் சிரித்தால்...? 'நடக்காததையெல்லாம் நினைத்தால்......? எது நடக்காது? ஏன் நடக்காது? நாளைக்கே நடக்கிறதா இல்லையா? என்று பார்த்துவிடுகிறேனே!'

மீண்டும் அவள் நிலவைப் பார்த்தாள். எவனுவது ஒரு ஆண் கூர்ந்து பார்த்தால் எங்காவது ஓடி ஒளிந்து கொள்ளலாமா? என்று தோன்றுகிறதல்லவா பெண்ணுக்கு? அந்த மாதிரி நிலவும் நினைத்ததோ என்னவோ, மேகத்தை இழுத்துத் தன் தேகத்தைப் போர்த்திக்கொண்டது.

நிலவை நோக்கி அவள் பறந்தாள். நிலவின் காதோடு காதாக அவள் சொன்னுள். "நீ தேய்வதற்குக் காரணம எனக்குத் தெரியும்! என்னைப்போல இரவு முழுதும் கண்விழித்தால் உடம்பு தேயாமல் என்ன செய்யும்? நான் ஏன் தெரியுமா தேய்கிறேன்? எனக்குத் தெரிகிறது. ஆனுல் தெரியவேண்டியவருக்குத் தெரியவில்லையே!"

'நானுவது பகலிலே தூங்குகிறேன. நீ அதுகூட இல்லையே!' அந்த ஊமை நிலவு பேசமுடியாமல் தத்தளித்தது. படுக்கையிலிருந்து அவள் துள்ளி எழுந்தாள். அவளுடைய கைவளையல்கள் அவளைக கிண்டல் செய்து கலகலவென்று சிரித்தன. அவள் 'ஸ்விட்ச்'சைப்போட்டாள். அறை எங்கும ஒளி பரவியது. சுவரிலே மாட்டியிருந்த 'காலண்டரை'ப் பார்த்தாள். அங்கே அவளுடைய அத்தான் அவளைப் பார்த்துப் புன்னகை பூத்தான். 'யார்? அத்தானு?' அவள் கண்களைக் கசக்கி விட்டுப் பார்த்தாள். அந்தக் காலண்டரில் யாரோ ஒரு சினிமா நடிகன்..? சீ! விழித்துக்கொண்டே கனவு காண்கிற வித்தை காதலர்களுக்கு எங்கிருந்து வருகிறதோ?

உள்ளம் ஒரு உருவம் பெற்று அவளெதிரிலே தவழ்ந்து வந்தால் ஒரு 'சாக்லட்'டை அதன் வாயில் திணித்து அதை அவள் சமாதானப் படுத்தியிருப்பாள். ஆனுல் உருவில்லாத அந்த உள்ளம் இடைவிடாமல் அவளை நச்சரித்துக் கொண்டேயிருந்தது. விளக்கை அணைத்துவிட்டுச் சோர்ந்துபோய் படுக்கையில் விழுந்தாள். தூக்கம் அவளையறியாமல் ஆட்கொண்டது.

*

பொழுது புலர்ந்தது. பொன் உருகிக்கொண்டிருந்தது வானத்தின கிழ்த்திசையில். மொட்டுகள் மலர்ந்தன. சிட்டுகள் பறந்தன. கையில் வளைகுலுங்கக் கண்ணில் சிரிப்பெழும்பத் தாமரைப் பொய்கையை நோக்கித் தண்ணீர் தூக்கிச், சின்ன இடையசைய, அனன நடை நடந்து கொண்டிருந்தன சிங்காரப் பொற்சிலைகள். மீனுவும் அந்த அணிவகுத்துச் செல்லும் பெண்களின் பெரும்படையில் ஒருத்தியாக நடந்துகொண்டிருந்தாள். அவளுடைய உள்ளம் பழைய நிகழ்ச்சிகளைக் கனவுகளாக மாற்றி வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது.

அவளுக்கு ஒரு அக்கா. அவள்தான் செந்தாமரை. யாரோ ஒரு பணக்காரப் பூனைக்கு அந்தக் கொஞ்சுங்கிளியைக் கொடுத்துவிடத. திட்டமிட்டார் அவளுடைய தந்தை. ஆனுல் அந்தக் கத்துங் கிளியோ தன்னுடைய அத்தான் டாக்டர். சேகரின் தோளில் தொத்துங் கிளியாக மாறத்தான் ஆசைப்பட்டது. அப்பொழுதுதான படிப்பை முடித்துவிட்டுத் தொழிலைத் தொடங்கியிருந்தான் சேகர். 'கையிலே காசில்லாதவனுக்கு உன்னை நான் கொடுப்பதா? முடியாது' என்ருர் தந்தை. இரண்டு வாரங்களுக்குப் பிறகு செந்தாமரையை வீட்டில் காணவில்லை. அவள் கடலில் விழுந்து இறந்திருக்கவேண்டும் எனறு வீட்டிலே இருப்பவர்கள் பேசிக்கொண்டார்கள். அவ்வளவு தான்தெரியும் மீனுவிற்கு. அதன்

பிறகு அவளுடைய அத்தான் அவர்கள் வீட்டிற்கு வருவான்; போவான். அந்த நேரங்களிலெல்லாம் "மீனா உனக்குத்தான்" என்று சொல்லத் தவறுவதில்லை அவளுடைய தந்தை.

'இருந்தாலும், இந்த அத்தான் ஏன்தான் என்னிடம் வாய்திறக்காமலிருக்கிறாரோ?' அவள் நடந்து செல்லும் பாதையிலே ஒரு அழகான மாடிவீடு. அந்த வீட்டின் வாசலில் டாக்டர் சேகர், M.B.B.S. என்ற பொன்னெழுத்துக்கள் மின்னும். அந்த வீட்டுக்கெதிரில் வந்ததும் அவள் தலைநிமிர்ந்தாள். தூரிகையும் கையுமாக அவளுடைய அத்தான் நின்றுகொண்டிருந்தான். "என்ன மீனா? எங்கே? குளத்துக்கா?" இப்படிஒருகேள்வி கேட்டால் என்ன? முத்தா உதிர்ந்து போகும்?

மீனா இலேசாகச் சிரித்தாள். அவன் தலைகுனிந்துகொண்டான். 'இதெல்லாம் என்ன சோதனையோ?' அவள் நெஞ்சம் வேதனையின் விளிம்பைத் தொட்டது. கால்கள் விரைந்தன. குளத்தை அடைந்தாள். குளித்து முடித்துக் கரையேறிய நேரம் அவள் காதிலே மோதியவார்த்தைகள்...?

"என்ன இருந்தாலும் பணம் படிப்புக்குத் தகுந்தாப்போலப் பழக்கம் இருக்கவேணும்? டாக்டர் சேகர் எங்கே? அந்தக் குறத்தி எங்கே? என்னமோ டாக்டர் நல்ல மனுசன்தான். இந்த விவகாரத்திலே எல்லாம் நல்ல மனுசன் கெட்ட மனுசன் என்று பார்க்க முடியாது!"

யார்? குறத்தியா? எந்தக் குறத்தி? ஓகோ! ஊர்க்கோடியில் ஆலமரத்தடியில் இருக்கிறதே குடிசை? அங்கேயா? ஐயோ! அத்தான்! அவள் கண்களைத் துடைத்துக்கொண்டாள், வீடு அருகிலேயே வந்துவிட்டது போலத் தோன்றிற்று அவளுக்கு. அவ்வளவு வேகம் நடையில்.

*

அந்தி நேரம் வந்தது. பட்டாடை உடுத்திப் பால்நிலவு முகத்தில் 'பௌடர்' பூசி மல்லிகை சூடி மஞ்சள் வெயிலில் பூங்கா நடப்பதுபோல மீனா நடந்தாள் அத்தான் வீட்டை நோக்கி.

'அத்தான்! அத்தான்!'

'யாரது?'

"நான்தான்! மீனா!"

'உள்ளே வா!"

'என்ன சங்கதி?'

'உடம்பு சௌகரியமில்லை'

'என்ன உடம்புக்கு?'

'அது உங்களுக்கல்லவா தெரியும்?'

டாக்டர் நோயாளியை நன்றாகச் சோதித்துப்பார்த்தார்.

'நன்றாகத்தானே இருக்கிறாய்?'

'இப்பொழுதாவது நான் நன்றாக இருப்பது உங்களுக்குத் தெரிந்ததே!'

'அதுசரி! உனக்கு என்ன செய்கிறது?'

'இரவெல்லாம் தூக்கம் வர மாட்டேன் என்கிறது. ஒரே கனவுகள். எனக்கு வந்திருப்பது காதல் ஜுரம் அத்தான்! காதல் ஜுரம்! அதற்கு மருந்து...'

'அதற்கு மருந்து என்னிடமில்லையே! அதைத்தான் வேறொருத்திக்கு முன்பே கொடுத்துவிட்டேனே"

'யாருக்கு? அந்தக்குறத்திக்கா?'

'ஆமாம்! உன்னுடைய அக்காவிற்குத்தான்!'

'யார்? அந்தக் குறத்தியா என்னுடைய அக்கா? அக்கா இறந்து எத்தனையோ வருடங்களாகி விட்டனவே அத்தான்?'

'இல்லை மீனா! அவள் சாகவில்லை. உயிரோடிருக்கிறாள்.'

'எங்கே? உங்களுடைய நெஞ்சிலா? உங்களுக்குப் பைத்தியமா அத்தான்'

'சரி! மீனா! எனக்கு வேலை நிறைய இருக்கிறது. என்னை நீ பைத்தியமாக்காமல் நகர்ந்தால் நலமாக இருக்கும்.'

'போய் வருகிறேன் அத்தான்!'

செத்துப்போன காதலுக்காக அவள் அழுதாள். அதைச் சவ அடக்கம் செய்வதற்கு நெஞ்சிலேயே ஒரு புதைகுழி தோண்ட முடியுமா என்ன? புண்ணான நெஞ்சில் ஒரு புதைக்குழியா?

*

நாட்கள் பறந்தன. அழுது அழுது கண்கள் சிவந்தன. எண்ணி எண்ணி இதயம் நொந்தது. அவள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள். அந்த முடிவு...? அவள் எத்தனையோ முறை அப்பா வைத்திருக்கும் பிச்சுவாக் கத்தியைப்பயத்தோடுபார்த்திருக்கிறாள். அதைப் பயன்படுத்தும் நோக்கத்தோடு இப்பொழுது பார்த்தாள்.

நடுநிசி, நல்ல நிலவு, கையில் பிச்சுவாக் கத்தியோடு ஓசையிடாமல் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள். "என்னுடைய காதலுக்கு எதிராக ஒருத்தியா? குத்திக் கொன்றுவிட்டு மறுவேலை பார்க்கிறேன்" அவளுடைய உள்ளம் உறுமியது. ஆலமரத்தடிக் குடிசைக்கு வந்தாள். கதவு திறந்தே இருந்தது.

அங்கே எரிந்துகொண்டிருந்த விடிவிளக்கின் மங்கலான ஒளியில் இரண்டு உருவங்கள் தென்பட்டன. ஒன்று அவளுடைய அத்தான் சேகர். மற்றொன்று...?

விளக்கு வெளிச்சத்தைப் பெரிதாக்கினாள். படுத்துக் கிடந்தவளுடைய கூந்தலை அவளுடைய கை பற்றியது. "ஐயோ! அத்தான்" என்று அலறிக்கொண்டே மீனா அவளுடைய முகத்தை உற்று நோக்கினாள்.

"யார்? அக்காவா? நீ உயிரோடு இருக்கிறாயா?" அவளுடைய குரல் தழுதழுத்தது. கை நடுங்கியது. கண்கள் நீர் பொழிந்தன.

செந்தாமரை பேசினாள். "மீனா! ஏன் தயக்கம்? உனக்கு அத்தான் தானே வேண்டும்? என்னைக் கொன்றுவிடு! அத்தானோடு வாழ்க்கை நடத்து." அவள் அமைதியாகச் சொன்ன வார்த்தைகள் மீனாவின் பாதி உயிருக்கு உலைவைத்தன.

"இப்படியெல்லாம் பசப்பினால் உன்னைக் கொல்லாமல் விட்டுவிடுவேன் என்று நினைத்தாயா?"

மீனா கையை ஓங்கினாள். செந்தாமரை கண்களை மூடிக்கொண்டாள். மூடிக்கொண்ட கண்களை அவள் திறந்த பொழுது மீனா இரத்த வெள்ளத்தில் மிதந்தாள்.

"மீனா! மீனா!" இரண்டு குரல்கள் சேர்ந்து அலறின, மீனாவின் வாய் முணுமுணுத்தது. "அக்கா! அத்தான்! உங்கள் வாழ்க்கையைக் கெடுக்க இருந்த எனக்கு நானே கொடுத்துக்கொண்ட தண்டனை இது! ஆமாம் தண்டனை தான்! சரியான தண்டனை!" அவள் தலை சாய்ந்தது.

நான்கு கண்கள் அவளுடைய உடம்பைப் போட்டி போட்டுக் குளிப்பாட்டின. ★

லெபனான்

மேற்கு ஆசியா அல்லது மத்திய கிழக்கு என்று கூறப்படும் வல்லரசுகளின் சதுரங்கப் பலகையில் உருளும் இன்றைய பகடை லெபனான். வல்லரசுகளின் எண்ணெய்த் தேவைக்காக இன்று உருட்டப்படுகிறது லெபனான்.

அன்று, பண்டைக் காலத்திலே மேற்கு ஆசியாவில் தோன்றிய அத்தனை சாம்ராச்சியங்களினதும் வேட்டைக்களமாக இருந்தது லெபனான். எகிப்திய, அஸீரிய, பாரசீக, செலுக்கீதிய சாம்ராச்சியங்கள் எல்லாம் சின்னஞ்சிறு லெபனானின் வனச் செல்வத்தைப் போட்டிபோட்டு வாரிச் சுருட்டின. உரோமர் லெபனானில் இரும்பு, செம்பு முதலிய உலோகச் சுரங்கங்களைத் தோண்டினர்.

ஆயினும் காலப் போக்கிலே லெபனானது இயற்கை அமைப்பு வென்றது. மலைகள் மிகுந்துள்ள பிரதேசமான லெபனானுக்குள் மக்கள் ஓரளவு சுதந்திரமாகத் தனித் தன்மைகளுடன் வாழும் நிலைமை ஏற்பட்டத. இதிலிருந்து லெபனான் தனித்தொரு வரலாற்றையும் பெறலாயிற்று. ஏறத்தாழக் கிறிஸ்துவிற்குப் பின் 9-ம் நூற்றாண்டுவரை லெபனானில் கிறிஸ்துவப் பண்புகள் தலைதூக்கி நின்றன. மெல்ல மெல்ல இஸ்லாமும், அராபிய மொழியும் லெபனானில் நிலைக்கலாயிற்று.

பதினாறும் நூற்றாண்டில் லெபனான் உதுமானிய சாம்ராச்சியத்திற்குள் வந்தது. பல வழிகளில் இக்காலத்தில் அரசியல் சமுதாய பொருளாதார மாற்றங்களும் நிகழ்ந்தேறின.

முதலாவது உலகப்போரில் துருக்கி குதித்தபோது லெபனானும் மாற்றத்துக்குள்ளாகியது. 1918-ல் பிரிட்டிஷ் பிரெஞ்சுப் படைகள் லெபனான் கடற்கரைப் பிரதேசங்களைக் கைப்பற்றின. 1920ல் பிரெஞ்சு அரசாங்கம் 'மகா லெபனான்' என ஒன்றைத் தாபித்தது- 1920—36 வரை லெபனான் அமைதியாக முன்னேறிக்கொண்டு வந்தது. 1926-ல் புதிய ஒரு அரசியல் திட்டம் வகுக்கப்பட்டது. ஆயினும் அது நடைமுறைக்கு ஏற்றதாக அமையவில்லை. அதிலிருந்து ஜனாதிபதி ஆட்சி ஏற்பட்டது.

1935-ம் ஆண்டளவிலேயே சிரியாவில் தேசிய எழுச்சியும், விழிப்பும் மலரத் தொடங்கியது. ஆயினும் லெபனான் தேசிய எழுச்சியில் உற்சாகத்துடன் பங்குபற்றவில்லை. 1937-ல் புதியதொரு அரசியல்திட்டம்; அதைத் தொடர்ந்து இரண்டாவது உலகப் போர், 1941-ல் பிரான்சு லெபனானுக்குச் சுதந்திரம் வழங்கியது.

சின்னஞ் சிறு நாடு லெபனான்! உலகப் படத்தைத் துருவித் துருவிப் பார்த்தால்தான், இந்நாட்டைக் கண்டுபிடிக்க முடியும். ஒரு பக்கம் மத்திய தரைத் கடல், இன்னொரு பக்கம் இஸ்ரேல் நாடு, வேறொரு பக்கம் சிரியா தேசம்தான் இதன் எல்லைகள். இந்நாடு இன்று ஒரு போர்க்களமாக விளங்குகிறது. இதனைப்பற்றிய சில தகவல்கள்.

1946-ம் ஆண்டளவிலிருந்தே லெபனான் தனது அண்டை நாடான சிரியாவின் போக்கிற்கு முரணாக இருந்து அதைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கத் தொடங்கிற்று 1950-ல் லெபனான் சிரியா ஆகிய இரண்டினுக்கும் பொருளாதார நிதி இணைப்பு வேண்டும் என்று சிரியா கோரியது, லெபனான் மறுத்தது.

அண்மையில் லெபனானில் அமெரிக்காவின் செல்வாக்கு அதிகரித்தது. ஈராக், சவூதி அரேபியா நாடுகளின் எண்ணெய்க் குழாய்கள் லெபனானுக்கூடாகச் செல்கின்றன. இது பண வருவாயைக் கொடுக்கிற...

1952-ல் லெபனானில் பலத்த உள்நாட்டு அரசியல் குழப்பம் ஏற்பட்டது. இதன் விளைவாக சாமுகன் ஜனாதிபதியானார்.

1955-ம் வருடம் ஏப்ரல் மாதம் நடந்த பாந்தூங் மாநாட்டில் லெபனான் பிரதிநிதிகள் கம்யூனிசத்தை வன்மையாகத் தாம் எதிர்ப்பதை வெளியிட்டனர். அதிலிருந்து சோவியத் வட்டாரத்துடன் உறவு சுமுகமாக இருந்தாலும் அந்நியோன்னியமாக இல்லை.

*

லெபனான், மத்திய கிழக்கில் சிறிய தேசம். நிலப்பரப்பு 4,015-சதுர மைல். ஜனத்தொகை 14-இலட்சம். கிறிஸ்தவரும் முஸ்லீம்களும் ஏறத்தாழச் சம அளவினர். இஸ்ரேலில் இருந்து வந்த அகதிகள் லெபனானில் ஆயிரக்கணக்கில். 1947-ல் ஜனத்தொகை 11-இலட்சம், 1955-ல் 14-இலட்சம்.

இந்த லெபனானிலேதான் இன்று உள்நாட்டு யுத்தம் தீவிரமாக, சாவதானமாக நடக்கிறது. இவ்வாண்டு செப்டம்பர் மாதத்தில் அங்கு பொதுத் தேர்தல் நடக்க இருந்தது. மீண்டும் ஜனாதிபதியாகப போட்டியிட விரும்பிய சாமுவன் அரசியல் சட்டத்தை மாற்ற முற்பட்டார்; மூண்டது கலகம். ஜனாதிபதியும் சகாக்களும் இராஜினாமாச் செய்ய வேண்டுமெனபது கலகக்காரர் கோரிக்கை. சாமுவன் அதற்குத் தயாரில்லை.

இதுதான் உள்நாட்டு விவகாரம். ஆயினும் இதற்குள் மத்திய கிழக்கில் அரபு தேசியத்திற்கும் மேனாட்டுச் செல்வாக்கிற்கும் மோதல்; நிலப்பிரபுத்துவத்திற்கும் மத்தியதா வர்க்கத்திற்கும் மோதல்; பழமைக்கும் புதுமைக்கும் மோதல். இந்த மோதல்களுக்கு எல்லாம் சிகரம் வைத்துள்ள வல்லரசுகள் மோதல் இருக்கிறது. அந்த மோதல் சதுரங்கப் பலகை[illegible]ன் இன்று ஒ[illegible]

சாதிக் கொடுமை அகல!

—['வண்டு']—

சென்னை மேரிஇராணியார் கல்லூரியில் சென்ற 12-ந் தேதியன்று, உலக சகோதர இயக்கத்தின் சார்பில், நடைபெற்ற "கருத்து அரங்கத்தில், பலர் கலந்துகொண்டனர். நிதி அமைச்சர் சுப்ரமணியமும், நீதித் தலைவர் வி. பி. இராசமன்னரும், திருமதி ரேணுகாமுகர்ஜியும், திருமதி அடெல்தா சீதாதேவியும், அப்துல்மஜீத்தும், சி. என். ஏ.யும் அந்த அரங்கத்தில் கலந்துகொண்டு, கருத்துரை தந்தனர்.

சாதி ஒழிப்பு என்பது சுயமரியாதை இயக்கத்தினர் பேசிடுகின்ற ஒரு பேச்சு என்றிருந்த ஒரு நிலை மாறி, அதன் தீமைகளை, சமூகத்தின் பலசாராரும் உணர்ந்திடும் ஒரு கட்டம் முகிழ்க்கத் துவங்கியிருக்கிறது என்பதை, அந்த அரங்கம்காட்டிற்று. அமைச்சர் சுப்ரமணியனும், தலைமை நீதிபதி இராசமன்னரும், அன்று வெளிப்படையாகவே பேசினர். அமைச்சரைவிட, நீதிபதியவர்கள், நெஞ்சத்தைக் கொஞ்சம் அதிகமாகவே திறந்து பேசினர்.

சாதிக் கொடுமைகள் நமது சமுகத்தில் விளைவித்துவரும் இன்னல்களையும் துயரங்களையும் அறியாதோர் இருக்க முடியாது! அறிந்தும், "பழைய முறைகளை மாற்றுவதா?" என்று பயப்படும் பத்தாம்பசலிகள் வேண்டுமானல், இருக்கலாமே ஒழிய; "சாதியின் கொடுமைகளை!" உணராத எந்த மனிதனும் இந்த நூற்றுண்டில், நிச்சயம் இருக்க இயலாது!! மேல் தட்டிலிருக்கும் அய்யர் அய்யங்கார்களும்சரி, கீழ்ப்பட்டவர்களெனக் கருதப்படும் பள்ளு, பறையர்களும் சரி, எவரும் இன்று சாதிக்கொடுமைகள் பற்றிப் பேசாமலிருப்பதில்லை. மயிலையும் மாம்பலமும் வேண்டுமானல், பேசிவிட்டு, வீட்டுக்குச் சென்றதும் பழைய பாதையிலேயே போக நினைக்குமே ஒழிய, பலர் நிச்சயம் இக்கொடுமைக்கு ஒரு பரிகாரம் காண வேண்டியது, அவசியம் என்றே நினைக்கின்றனர்.

அந்த ஆர்வம், அமைச்சரின் பேச்சில் தென்பட்டது! தலைமை நீதிபதி அவர்கள், "சாதியை ஒரு இடத்தில் மட்டும் நீக்கிவிட்டால் போதாது, எல்லாக் கட்டத்திலும் அறவே நீக்க வேண்டுமென்றார்" சாதியை ஒழிப்பது என்று, பார்ப்பனர்களை மட்டும் வெளியேற்றுவதாலோ, அவர்களை மட்டும் தொலைப்படுத்துவதாலோ, முடிகிற காரியமல்ல என்றார் அவர்— சாதிக் கொடுமைக்கு ஒரு சின்னமாக அவர்கள் இருக்கலாம், தங்களை உயர்த்திக்கொள்ள அவர்தம் முன்னோர் உருவாக்கிய முறையாக இருக்கலாம், அதற்காக இப்போதுள்ள பார்ப்பனர்களை விரட்டுவதால் என்ன இலாபம் பெறமுடியும்? சாதித் திமிர் கொண்டோர், எல்லாச் சாதிகளிலும் தானே உள்ளனர்! அவர்களை எல்லாம் பதம்படுத்தும் ஒரு மாபெரும் காரிய மூலமே, சாதியில்லாச் சமுகத்தை உருவாக்க முடியும் — எனும், கருத்தைத் தெரிவித்தார், இராசமன்னர். சிந்திப்போருக்கு, இக்கருத்தின் சிறப்பு விளங்கும்.

காங்கிரஸ்—கம்யூனிஸ்டு—திராவிட கழகம்—திராவிட முன்னேற்றக் கழகம்-சோசியலிஸ்டு—எதாலும் சாதி வேண்டும் என்று சொல்லுவதில்லை! இந்துமகாசபை ஒன்றைத் தவிர, அநேகமாக எல்லாக் கட்சிகளும், சாதி ஒழிய வேண்டும் என்றுதான் சொல்லுகின்றன!! அப்படிச் சொல்லுகிற கட்சிகளில் எதெது சொன்னதைச் செயலாக்குகிறது, எதெது சொல்லிவிட்டுப் போய்விடுகிறது, என்பது வேண்டுமானல் குறித்துப் பார்க்கலாமே ஒழிய, "சாதி இருக்கவேண்டும்!" என்று சொல்கிற அரசியல் இயக்கம் எதுவுமில்லை. எனினும் சாதி இருக்கிறது! சாதிக் கண்ணோடு எதையும் அணுகும் ஆசையும் ஒழியவில்லை!!

"தேர்தலுக்கு ஆள் நிறுத்துவதென்றால், இந்த வட்டாரம் முதலியார்களுடையதா? — ஒரு முதலியாரைப் போடு! இது, வன்னியர்கள் அதிகம் நிரம்பியதா? போடு ஒரு வன்னியரை!!— என்கிற சுபாவம், காங்கிரஸ் கட்சியில் இருக்கிறது. நான் ஏன் பிறகட்சிகளைக் குறிப்பிடாமல், காங்கிரசைச் சுட்டிக் காட்டுகிறேன் என்றால், இன்று காங்கிரஸ் தான் பெரிய கட்சி. அதுதான் வழிகாட்ட வேண்டும்" என்கிற கருத்தில் பேசினார் உயர்நீதி மன்றத் தலைவர். இதயத்திலிருந்து வந்த வார்த்தைகள் அவை! அமைச்சருக்குக் கொஞ்சம் சங்கடமாயிருந்திருக்கும் — ஆனால், உள்ள நிலைமை அதுதானே!!

தேர்தல் முதல் சாதாரண உத்யோகம் தருவது வரையில் சாதியில்லாமலில்லை. பிற்பட்ட வகுப்பினர்களுக்கு சலுகைகள் அளிக்கப்பட வேண்டும் என்கிற சட்டமிருந்தும்கூட, சாதியின் பேரால் சலுகைபெற விரும்புவோர், தங்கள் விருப்பத்தைச் சமாளித்துக்கொள்ளும் வகையில், இன்றைய அரசு இருக்கிறது என்பதை யாரும் மறுத்திட முடியாது! அப்படிப்பட்ட ஆசையின் காரணமாக, அய்யர் சாதிபோய்-முதலியார் சாதி—முதலியார் போய் ரெட்டியார் — ரெட்டியார் போய் கோனர் — கோனர் போய் நாடார் — என்கிற இந்தச்சூழ்நிலைதான் மலருமே ஒழிய, சாதி ஒழிந்த சமுதாயத்தை இந்தத் தலைமுறையில் நிறுவும் வேலை, நீளும்!

இப்படி நிகழாமல் பார்த்திட வேண்டிய பொறுப்பு, ஆள்வோருக்கும், ஆட்சியை நடாத்திடும் அமைச்சர்களுக்கும்; கட்சிகளுக்கும், கட்சியை நடாத்திடும் தலைவர்களுக்கும் மிகமிக அவசியமாகும். தலைமை

(16-ம் பக்கம் பார்க்க)

பிறழவில்லை

"....எனவேதான் எந்த இலட்சியத்தில் "திராவிட நாடு திராவிடருக்கே" என்று பாடுபட்டு வந்தோமோ, அந்த இலட்சியத்தினின்றும் இன்று "தமிழ்நாடு தமிழருக்கே" என்று பாடுபட்டு வரும் நாம் — திராவிட கழகத்தினர் ஒரு சிறிதளவும் பிறழவில்லை என்று எடுத்துக் காட்ட விழைகின்றோம்."

5—7—58 "விடுதலை"
'சுதந்திரத் தமிழ்நாடு'
எனும் தலையங்கம்.

உலக அரங்கில்

இஸ்லாமிய நாடுகளில், இரண்டு மூன்றுண்டுகளாகத் திடீரெனப் புரட்சிகள் முளைத்து வருகின்றன. எகிப்தில் கொட்டமடித்த பரூக் மன்னன் விரட்டப்பட்டதிலிருந்து, மன்னராட்சிகளுக்கு முடிவு தேடவேண்டும் என்கிற ஆர்வம், மத்ய கிழக்குப் பிரதேசத்தில், அதிகமாகியே வருகிறது. இந்தக் கிழமை ஈராக் நாட்டில், மன்னரின் முடியும் பிரதமரின் உயிரும் பறிக்கப்பட்டு, ஆட்சியாசனத்தை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன. எங்கே தனது நண்பனுக்கு நேர்ந்தகதி தனக்கும் சம்பவித்துவிடுமோ என்கிற பயத்தில் ஜோர்டான் நாடு கலங்கிக்கொண்டுள்ளதாம்! 60-க்கு மேற்பட்ட இராணுவ அதிகாரிகளை முன்னெச்சரிக்கையாக ஜோர்டானில் கைது செய்திருக்கிறார்கள்!!

*

ஈராக் பிரதமராக நேற்றுவரையில் விளங்கிய நூரிஅல்சேட் என்பாருக்கு இக்கதி வரும் என எவரும் எண்ணவில்லை. மூனறு வாரங்களுக்கு முன்புதான், அவர் இலண்டனிலே ரசமான விவாதங்களில் ஈடுபட்டிருந்தார். 1930-முதல், ஈராக்கின் தலைவிதியை நிர்ணயித்துக்கொண்டிருந்த அவரது வீழ்ச்சி இலண்டன வட்டாரத்தையே அதிரச் செய்திருக்கிறது. கிட்டத்தட்ட 50-இலட்சம் மக்களைக் கொண்ட ஈராக் நாட்டில், ஆண்டுக்கு 3-கோடி டன்னுக்கு மேற்பட்ட எண்ணெய் கிடைக்கிறது. விரட்டப்பட்டதாகக் கூறப்படும் மன்னர் பெய்சல், 1953-ல் பட்டத்துக்கு வந்தார். ஜோர்டானையும் ஈராக்கையும் ஒன்ருக்கி ஒரு "பெடரேஷனைக்"ச் செய்தார், அண்மையில். அப்படிச் செய்யப்பட்ட அராபியயூனியனுக்கு முதல் மந்திரியாகவும் ஆனர்! அப்படிப்பட்டவருக்கேற்பட்ட திடீர் வீழ்ச்சி, உலகத்தையே அதிரச்செய்துள்ளது!!

*

மேற்கு வல்லரசுகள் உண்டாக்கிய பாக்தாத் ஒப்பந்தநாடுகளின் கூட்டம் நடைபெறுவதாக இருந்ததற்கு முதல் நாள் (14-ந்தேதி) தான், இநதப்புரட்சி நடந்திருக்கிறது. ஈராக்—ஈரான்—பாகிஸ்தான — துருக்கி முதலிய நான்கு நாடுகளும் கலந்து கொள்ளவிருந்த இக்கூட்டம் ரத்துசெய்யப்பட்டுவிட்டது. இக்கூட்டத்துக்கு வரும் ஈராக் மன்னர் பெய்சலுக்காக, இஸ்தான்புல் நகரில், பிரமாதமான வரவெற்புகள் செய்யப்பட்டிருந்தன! மன்னர் வரவில்லை — இந்தச் செய்திதான் வந்தது!!

*

லெபனனில், தகராறு. இந்நிலையில், ஈராக்கிலும் வீழ்ச்சி. மலைபோல் தாங்கள் நம்பியிருந்ததெல்லாம் சரிவதைக் கண்டு, அமெரிக்காவும் இங்கிலாந்தும் பரபரப்படைந்துள்ளன. இராணுவப் புரட்சி செய்த ஈராக் மக்கள் வீதிகளிலே ஓடியபோது, "வாழ்க நாசர்! வீழ்க, ஆதிக்கக்காரர்கள்!" எனறு முழக்கமிட்டனராம். இதிலிருந்து, எகிப்து நாசருக்கு, அரேபிய நாட்டு மக்களிடம் உள்ள செல்வாக்கு விளங்கும். அரேபிய நாடுகளிலுள்ள முடி மன்னர்களும் அவர்தம் மந்திரிகளும் மேற்கு நாடுகளின் தயவை விரும்புகிறவர்கள்; மக்களோ, நாசரின வீரத்தையும் தீரத்தையும் மெச்சுகிறவர்கள். நாசருக்கு வளர்ந்துவரும் இந்தப்பெருமையைக்கண்டு, வல்லரசுகள், மிரள ஆரம்பித்திருக்கின்றன! ஒன்று ஒதுங்கிடவேண்டும்—இன்றேல் பாய்ந்திடவேண்டும். அமெரிக்காவும் பிரிட்டனும் என்ன செய்யப்போகின்றன வென்பதை யொட்டியே, உலக அமைதி இருக்கிறது.

* * *

ஜுலை 12-ந் தேதியன்று, தன் வசமிருந்த கப்பற் படையைச்

சிங்கப்பூர் முதலமைச்சர் லிம்யூ-காக், மலேயா முதலமைச்சர் துங்கும் அப்துர்ரஹ்மான், ஆகியோர், "விரைவில், சிங்கப்பூரும் மலேயாவும் ஒரே ஆட்சிக்குள் வந்துவிடும் என்பதற்கான அறிகுறி" என்று குறிப்பிட்டிருக்கின்றனர். இதனால், தனியாட்சி நடாத்திவரும் சிங்கப்பூர்த்தீவும் மலேயா பெடரேஷனும் ஒன்று சேர்ந்து, மிக விரைவில் ஒரு கூட்டாட்சியாகக்கூடும் என்கிற கருத்து வலிவடைந்துள்ளது.

* * *

பிரான்சின் அரசுப் பொறுப்பையேற்ருரல்லவா இராணுவத் தளபதி டிகால்! அரசுக்கு வந்ததும், அவர் என்ன செய்யப் போகிருர், பிரான்சு சர்க்கார்முறையில் என்னென்ன மாறுதல்களைச் செய்யப் போகிருர் என்பது ஒரு இரகசியமாகவேயிருந்து வருகிறது. இந்நிலையில், அமெரிக்க வெளிநாட்டு விவகார அமைச்சரான டல்லஸ், டிகாலை, பாரிசில் இந்தக் கிழமை சந்தித்திருக்கிருர்! அப்போது டிகால் சொனனராம், "என் ஆசை, அணுசக்தி ஆயுதங்களைக்கொண்டே ஒரு வல்லரசாகப் பிரான்சை ஆக்க நான் உறுதி கொண்டிருக்கின்றேன்" என்ருராம். இதிலிருந்து, டிகாலின் ஆசை விளங்குகிறது! டிகால், இன்னொரு நெப்போலியனாகும் ஆசையை விடுவார் என்கிற அறிகுறி தென்படவில்லை!

* * *

இந்தக்கிழமையில், இன்னொரு குறிப்பிடத்தக்க "சந்திப்பும்" நடைபெற்றிருக்கிறது. யுகோ தலைவர் டிட்டோவும், எகிப்துத் தலைவர் நாசரும் சந்தித்திருக்கின்றனர். "கெடுபிடிபோர் தேவையில்லை, அந்நிய ஆதிக்கம் அறவே ஒழியவேண்டும், அணுகுண்டுத் தடை வேண்டும" என்று வலியுறுத்தி இருவரும் கூட்டறிக்கை விடுத்திருக்கின்றனர், யுகோ நாட்டில் சுற்றுப் பயணம் செய்யவிருந்த நாசர், ஒரு நாள் முன்னதாகவே புறப்பட்டுவிட்டார் எகிப்துக்கு! ஈராக் புரட்சியின் விளைவாகத் தான் இப்பயணம் அவசியமாகி விட்டது என்று கருதப்படுகிறது!!

14-ம் பக்கத் தொடர்ச்சி

நீதிபதியவர்கள் சொன்னதுபோல "சட்டம் ஒன்றினால் மட்டும், இச் சமூகத் தீமையை குழி வெட்டிப் புதைத்துவிட முடியாது. சமூக அமைப்பிலேயே ஒரு புது மாறுதல், ஏற்பட்டாக வேண்டும்" இப் புது மாறுதலை, எப்படிச் செய்யலாம் என்னென்ன விதத்தில் சமூகத்தில் புகுத்தலாம் என்பதை, சகலரும் யோசிக்க வேண்டும்.

அரங்கம் வைப்பதன் மூலமோ, மாநாடு ஒன்று நடாத்திக் கர்ச்சிப் பதன் மூலமோ, இதைச் செய்திட முடியாது! இவை, கருத்துகளைத் திரட்டிடப் பயன்படும், செயலாற் றத்தக்க திட்டம் வேண்டும்!! இந்தத் திட்டங்களை, அமைச்சர் சுப்ரமணியம், ஆளும் கட்சியைக்கொண்டு ஏனைய கட்சிகளையும் கலந்து வகுக்க வேண்டும். நமது ஒத்துழைப்பு, இந்தத் துறையில் எப்போதும் உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

திட்டம் தீட்டி அறவே சாதியை ஒழித்திடும் நல்ல நாள் மலரும் வரையில், அரசினர் சும்மாயிருத்தலும் ஆகாது. என்னென்ன வகையில் "சாதி" எனும் பெயரை ஒழித்திட வேண்டுமோ, அதையெல்லாம் செய்துகொண்டேயிருக்கவேண்டும். இதைப்பற்றி, கருத்து அரங்கத்தில், சி. என். ஏ. சொன்னார், "சாதி ஒழிப்பில் நமக்கு இருக்கும் அக்கரையைக் காட்டுமுகத்தான், எங்கெங்கு சாதியின் பெயரால் தெருக்களும் ஊர்களுமுள்ளனவோ அவைகளையெல்லாம் சர்க்கார் மாற்றவேண்டும்," என்று. இதனால், சாதி ஒழிந்துவிடுமா என்று கேட்கலாம்! சாதி ஒழியாது—ஆனால், அதுபற்றி நாம் கொண்டிருக்கும் தீவிரமும் ஆர்வமும் உலகுக்கு விளங்கும் வகை ஏற்படும்!! சி. என். ஏ. தெரிவித்த இதே யோசனையையே, இரண்டு நாள் கழித்து, அகில இந்திய காங்கிரஸ் பொதுக்காரியதரிசியான சிமந் நாராயண் என்பாரும் வேறொரு இடத்தில் வேறொரு சூழ்நிலையில் பேசுகையில் வெளியிட்டிருக்கிறார். எனவே, நமது அமைச்சர் குழுவுக்கு, அகில இந்திய காங்கிரசின் 'கடிவாளம்' எதுவும் ஏற்படாது என்று நம்ப ஏதுவுண்டாகிறது! எனவே, சாதி ஒழிப்பிலுள்ள சிரத்தையைக்காட்டும் முதல் நடவடிக்கையாக இதைச் செய்வதோடு, சகலரையும் கலந்து நிரந்தரமான பரிகாரம் காண்பதற்கான திட்டங்களையும் தீட்டிட முயல வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்!!

★

காகித ஆலைகள்!

1.	டாகுர் பேப்பர் மில், 1	—	டிமாஷார்.
2.	டாகுர் பேப்பர் மில், 2	—	கங்கிநாரா.
3.	இந்தியா பேப்பர் மில்,	—	நைகதி.
4.	பெங்கால் பேப்பர் மில்,	—	ராணிகஞ்ச்.
5.	பாரத் பேப்பர் மில்,	—	லெடோ.
6.	திரிவேணி டிஷ்யூஸ்,	—	திரிவேணி.
7.	அப்பர் இந்தியா கூபர் மில்,	—	லக்னௌ.
8.	ஸ்டார் பேப்பர் மில்,	—	சரோன்பூர்.
9.	கோபால் பேப்பர் மில்,	—	அப்துல்லாபூர்.
10.	ரோடாஸ் இன்டஸ்டிரிஸ்	—	டேரி ஆன்சோன்.
11.	நேஷனல் நியூஸ் பிரிண்ட்	—	நேபா நகர்.
12.	பல்லார்பூர் பேப்பர் மில்,	—	பல்லாஷா.
13.	குஜராத் பேப்பர் மில்,	—	அகமதாபாத்.
14.	புதும்ஜி பேப்பர் மில்,	—	பம்பாய்.
15.	வெஸ்டர்ன் இந்தியா.	—	பம்பாய்.
16.	டோராப் பேப்பர் மில்,	—	புனா.
17.	டெக்கான் பேப்பர் மில்,	—	புனா.
18.	வெஸ்ட் கோல்டு பேப்பர் மில்,	—	தண்டேலி.
19.	பிராவிடன்ஸ் பேப்பர் மில்,	—	பம்பாய்.
20.	ஸ்டாண்டர்ட் பேப்பர் மில்,	—	நாசிக்.
21.	ஓரியண்ட் பேப்பர் மில்,	—	ஒரிசா.
22.	பேப்பர் அண்ட் பல்ப் கன்வர்ஷன்,		பம்பாய்.
23.	சிர்பூர் பேப்பர் மில்,	—	சிர்பூர்.
24.	கன்ட்போர்டு கன்டெய்னர்ஸ்,	—	பம்பாய்.
25.	நட்லம் ஸ்ட்ராபோர்டு,	—	நட்லம்.
26.	அர்விந்த் போர்டு,	—	பில்லிமோரா.
27.	ஸ்ட்ரா ப்ராடெக்ஸ்,	—	போபால்.
28.	சௌராஷ்டிரா பேப்பர் மில்,	—	ராஜ்கோட்.

இத்தனையும் வடக்கே!

தெற்கே

1.	ஆந்திரா பேப்பர் மில்,	—	ராஜமந்திரி.
2.	மைசூர் பேப்பர் மில்,	—	பத்ராவதி.
3.	காவேரி பேப்பர் மில்,	—	நஞ்சன்கூடு.
4.	காவேரி பேபபர் மில்,	—	மைசூர்.
5.	புனலூர் பேப்பர் மில்,	—	திருவாங்கூர்.
6.	திருவாங்கூர்,	—	ரேயான்ஸ்.

28 அங்கே! ஆறே ஆறுதான் இங்கே!! — ஆந்திரத்திலும், கேரளத்திலும், கன்னடத்திலும்கூட ஒன்று இரண்டாவது உள்ளது. தமிழகத்தில், அதுவும் கிடையாது!!

வாழ்வது வடக்கு! தேய்வது தெற்கு!!—என்று சொன்னால், திட்டுகிறார்களே, அவர்கள் இதற்கு என்ன பதில் சொல்வார்கள்?

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில் ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

திராவிடநாடு

27—7—58 | வார வெளியீடு | விலை 16 காசு

சிரிப்பதா, அழுவதா?

(கா. வேழவேந்தன்)

செந்தமிழ்த் தோழிஇங்கே தெரியுமா சேதிஒன்று!
முந்தாநாள் அமைச்சர்சொன்ன மொழியினைக் கேட்டேன்நேரில்!
சாதியை ஒழித்துக்கட்ட தருவீர்கள் ஒத்துழைப்பை
நீதியைச் சமுதாயத்தில் நிலைநாட்ட வாரீர் என்றார்!
சொல்கிறேன் வெட்கம்வந்து துளைத்தது கேட்டபோதில்!
பல்லெலாம் தெரியஅங்கே பளிச்சென்று சிரித்துவிட்டேன்!
செட்டியார் தெருவிலிங்கே சேணியர் தெருவிலெல்லாம்
கொட்டையாய்ச் சாதிப்பேர்கள் கொடுங்காட்சி தந்தால்உள்ளே
சட்டத்தின் துணையைக்கொண்டு தகுமுறை செய்திடாமல்
வெட்டிக்குப் பேசுவானேன்? வெறும்பேச்சுத் தானேதோழி?
நாடார்கள் அதிகமானால் நாடாரில் ஒருவர்தன்னை
தேடியே நிற்கவைத்து தேர்தலில் வென்றபின்பு
சாதியா? இருக்கலாமா? சாடுவோம் வாரீர்என்றால்
நீதிக்கு இடந்தான்எங்கே? நேர்மைதான் எங்கே.தோழி?
இருக்கின்ற நிலையமெல்லாம் இருக்கலாம் சாதிப்பேரில்,
இருக்கின்ற இதழ்கள்கூட இருக்கலாம் சாதிப்பேரில்,
தனிப்பட்ட சாதியொன்று தனக்குள்ளே மாநாடொன்றைத்
தனிப்பட நடத்தஇங்கே தடையில்லை என்றுங்கூறி
இருப்பதா சமுதாயத்தில் இத்தனைசாதி என்றால்
சிரிப்பதா, அழுவதாநாம்? தெரியத்தான் இல்லையே,தோழி!

OFFICE OF THE REGISTRAR
29 JUL 1958
MADRAS

391

கேட்டீரா! சேதி!

அந்தமான்!—ஒரு காலத்தில் கடுந்தண்டனை பெற்றவர்களை அனுப்பும் இடமாக இருந்தது. இப்போது, அது ஒரு அழகுத் தீவாக ஆகிவருகிறது.

அந்தமான், நிகோபார் தீவுகளில் வசிப்போருக்காக இந்தியா ஆண்டுக்கு ஆள் ஒருவருக்கு ரூ. 2000 வீதம் செலவிட்டு வருகிறது. 1951-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புப்படி 31,000 ஆகும். அங்கு 1956ல் போடப்பட்ட ஐந்தாண்டுத் திட்டப்படி, 6-கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இத்தீவுகளில் கிடைதத வருமானம் 2½ கோடி ரூபாய்தான. ஆனால் அந்த இரண்டு ஆண்டுகளில் அதைபபோல இரண்டு மடங்கு தொகை 4·37 கோடி செலவிடப்பட்டிருக்கிறது.

இத்தீவுகளில் 'விவசாய குடும்பங்களை குடியமர்த்தும்' திட்டத்தின் கீழ் இதுவரை 1629 குடும்பங்கள் குடியேறியுள்ளன. ஐந்து ஏகர் நிலமும், மானியமாக ரூ. 1050ம் கடனாக 1730 ரூபாயும் தரப்படுகிறது. கடனை மட்டும், ஒவ்வொரு குடும்பமும் திருப்பித் தரவேண்டும்.

நான்கு ஆரம்பப் பள்ளிகள்—இரு ஆதாரப்பள்ளிகள் — 20 படுக்கை வசதிகொண்ட ஆஸ்பத்திரி எல்லாம் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கொழும்பு திட்டத்தின் கீழ் "இண்டாஸ்" எனும் ஆஸ்பத்திரிக் கப்பல், நிகோபார் தொகுதித் தீவுகளில் வசித்து வருபவர்களுக்குச் சேவை செய்து வருகிறது.

*

ஒரு தங்கக் கைக் கடிகாரமும் ஒரு தங்க மோதிரமும் ஒரே ராத்திரியில் ஒரு மாங்கொட்டையாக மாறும் அதிசய வித்தையை இரு ஜாலவித்தைக்காரர்கள் செய்து காட்டினர்கள் பம்பாயில். இந்தக் கைக் கடிகாரமும் மோதிரமும் ஒரு டாக்டருடையவை.

இவ்விரு ஜாலவித்தைக்காரர்களையும் குருவையும் அவரது பரமானந்த சீடரையும் பம்பாய் போலீசார் தேடி வருகின்றனர்.

குருவின் அமானுஷ்யமான சக்தியில் மேற்படி டாக்டருக்கு சீடர் நம்பிக்கை ஏற்படச் செய்து இவ்விரு ஜாலவித்தைக்காரர்களும சிறிது ரொக்கம் உள்பட டாக்டரின் மேற்சொல்லப் பட்ட பொருள்களைத் தட்டிக்கொண்டு போய் விட்டதாகக் கூறப்படுகிறது.

இவ்விரு பொருள்களையும் படுக்கையின்கீழ் வைத்திருக்கும்படி டாக்டரிடம் இவர்கள் சொன்னதாகவும், மறுதினம் டாக்டர் துணியைப் பிரித்து பார்த்தபொழுது அதனுள் ஒரு மாங்கொட்டை இருந்ததைக் கண்டதாகவும் கூறப்படுகிறது.

*

வருடம் 10000 டாலர் சுமார் 50 000 ரூபாய் சேர்க்கலாம். பிஸிபிக் தீவு ஒன்றில் வேலை செய்து, ஆடம்பர வாழ்க்கை நடததுவதினால் இதைச் சாதிக்கலாம என லாஸ் ஆங்ஙளஸ் என்ஜினீயரிங் கார்ப்பரேஷன் ஒன்று தெரிவிக்கிறது.

இத் தீவில் இலவசமாக சினிமா காட்டப்படுமாம். உணவும் இலவசம; அமெரிக்காவில கிடைக்கும உணவைக் காட்டிலும அங்கு நல்ல உணவு கிடைக்குமாம. இத்தீவில ஒரே ஒரு பெரிய குறை இருக்கிறது. பெண்கள் கிடையாது. அமெரிக்காவிற்கு அருகிலுள்ள இத்தீவின் பெயர் 'பாரி ஐலண்ட்' அணு சோதனைகள் நடத்தப்படும எனவிடாக் கோஷ்டித் தீவுகளில் இதுவும ஒன்று! அணு சோதனைகளைமேற்கொள்வதறகான தளத்தை நிர்மாணிக்கவும், பின்னர் அதை நிர்மூலமாக்குவதிலும் ஈடுபட்டு உள்ள ஒரு என்ஜினீயரிங் கம்பெனிதான இந்த அறிவிப்பை வெளியிட்டு உள்ளது. 1949-ம் ஆண்டு முதல் இத்தீவில் மனிதர்கள் வேலை செய்து வருகின்றனர். சாதாரணமாக அங்கு 500 பேர் வசிப்பர். அணு சோதனையின்போது சுமார் 3200 பேர்களுக்கு மேல் இருப்பர். சிலர் 7 ஆண்டு காலமாக அத்தீவில் வசித்து வருகின்றனர்.

2 ஆண்டுகளுக்கு ஒரு முறை அணு சோதனை மேற்கொள்ளப்படும. சோதனை தளத்தை நிர்மாணிக்க சுமார் ஒரு ஆண்டு பிடிக்குமாம். அதைப் பின்னர் நிர்மூலமாக்க 6-மாதம் தேவைபபடுமாம்.

*

நியூஜிலந்து தேசத்தில் பெண்களுககுப் பஞ்சம ஏற்பட்டு உள்ளது' வெளி நாடுகளில் இருந்து 20,000 பெண்களை அந்நாடு சிலாகிக்கும்.

திருமண வயது வந்த ஆண்கள் இருவர் இருநதால், பெண் ஒருத்திதான் இருக்கிறாள்!

இந்நாட்டுக்கு வர விரும்பும் பெண்களுக்கு வழிச் செலவு கொடுக்கவும் சர்க்கார் தயாராக இருக்கிறது. ஏதாவது தொழில் தெரிந்திருந்தால் போதும.

ஏராளமான பிரிட்டிஷ் பெண்கள் இங்கு வரத் தயாராக இருப்பார்கள. அவர்கள் வராவிட்டால் ஐரோப்பாவிலிருந்து பெண்களை 'இறக்குமதி' செய்வது பற்றி நியூஜிலந்து யோசிக்குமாம்.

*

மூன்று 'குடும்பப் பெண்கள்' குழு ஒன்று இமயமலை ஏற முற்பட்டுவிட்டது' இமயமலைத் தொடரிலுள்ள சாமபா' என்ற மலைக்கு சென்றுள்ளனர்.

லண்டனில வாழும் இப பெண்மணிகள் மோட்டார் வண்டி மூலம லண்டனிலிருந்து புதுடில்லிக்கு ஆறு வாரத்தில் வநது சேர்ந்தனர்.

அவர்கள் பனிமனிதனைக் காண ஆவலுள்ளவர்களாக இருக்கின்றனர்!

*

★ மேகம் ★

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [27—7—58] தனிப் பிரதி 16-காசு [இதழ்

குருசேவ் கடிதம் எழுதுகிறார் — ஐசனோவர் அறிக்கை விடுக்கிறார்—நேரு, இருபக்கமும பார்க்கிறார் — உலகமோ, கலங்குகிறது! துருப்புகளோ, மத்யதரைக் கடலின் பகுதியிலே உள்ள நாடுகளில் எப்போது பாய்வதென வலம் வருகின்றன!

ஏதாவது ஒரு 'அதிர்ச்சி'யை உண்டுபண்ணி, அதன்மூலம், இலாபம் அடையப்பார்ப்பது, நாகரிகம் பெற்ற மனிதனின் குணமாகி வருகிறது. 'பொருள் கிடைக்கவில்லை' எனச் சொல்லி, கிராக்கியை உண்டு பண்ணி, விற்க முயலுகிறார் கொள்ளைலாபம் விரும்பி; 'என்ன நேருமோ!' என்கிற பயத்தை உண்டுபண்ணி, மக்களை மடக்க நினைக்கிறார், ஆதிக்க ஆசைக்காரர். இப்படிப்பட்ட இலாபவேட்டைக்காரர்களை வளர்க்கும் முதலாளித்துவ முகாம், அடிக்கடி ஏதாவது ஒரு பேரதிர்ச்சியை உலகுக்கு அளித்துக்கொண்டே இருக்கிறது. விளைவு, உலக மக்கள் நடுங்குவது மட்டுமல்ல, சாதாரணமானவர்கள் எல்லாம் தலையில் கைவைத்து ஏங்க நேருகிறது! லெபனானில் அமெரிக்கத் துருப்புகள் இறங்குகின்றன என்றதும், கல்கத்தா சர்க்கார் அவசரக்கூட்டம் போட்டிருக்கிறது, 'யாராவது, சாமான்களின் விலையை உயர்த்தப்பார்த்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுவார்கள்', என்று!!

விஞ்ஞானம் வளர வளர, உலகம் மிகமிகச் சிறியதாகி விட்டது. உலகத்தை ஒழித்துக்கட்டும் குண்டுகள் தயாரிப்பதுகூட சாதாரணமாகிவிட்டது. ஒலிபெருக்கியையும், வான ஊர்தியையும், காற்றின் வேகத்தையும், ஒளி ஊடுருவிப்பாயும் சக்தியையும் கணக்கிட்டான் விஞ்ஞானி! அந்தக் கண்டுபிடிப்பின் மூலம், என்னென்ன குண்டுகளை வீசலாம், எந்தெந்தக் கிருமிகளை எங்கெங்கே அனுப்பலாம் என்று ஆதிக்கக்காரர்கள் வளர்த்துக்கொண்டேயிருக்கிறார்கள்!!

ஒரு வாரமாக, உலகை "போர் மேகம்" சூழ்ந்து கொண்டுள்ளது. கடந்த போர், நேரடியாகத் தாக்காவிடினும், அதனால் பட்டபாட்டினை இன்னும் மறக்க முடியவில்லை நம்மால்! குழந்தைகளுக்குத் தேவையான புட்டிப்பாலிலிருந்து இங்கேயே விளையும் பொருள்கள்வரை, விலையேறிக் கிடக்கும் இச்சமயத்தில், ஆதிக்கக்காரர்களின் "கெடுபிடிப் போரால்", வாழ்க்கைச் சுமை எவ்வளவு அதிகரிக்கமோ—என்னென்ன நேருமோ, என்கிற அதிர்ச்சி இங்குள்ள ஒவ்வொருவரையும் தாக்க ஆரம்பித்து விட்டது.

அன்பு நெறியை வளர்த்தார் இயேசு. அவருடைய மதத்தைப் பின்பற்றுகிறவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் மேற்கு வல்லரசுகளுக்கு, ஏனோ இப்படி ஒரு மனோபாவம்? எங்காவது, ஏதாவது என்றால், உடனே வரிந்துகட்டிக்கொண்டு கிளம்பி விடுகிறது, அமெரிக்கா. உடனே, ருசியா, எதிர்ச் சவால்விட்டுக்கொண்டு, கிளம்பவேண்டியதாகிவிடுகிறது. "என்ன இருந்தாலும், ஒரு நாட்டின் உள் நாட்டுப் பிரச்னையில் தலையிடுவது தவறு" என்று ருசியா கண்டிக்க, "நீமட்டும் அங்கேரியில் செய்தது என்னவாம்? உன்படைகளை நுழையவிடவில்லையோ" என்று அமெரிக்கா கேட்க, 'இப்படி ஒருவருக்கொருவர், போட்டிபோட்டுக்கொண்டு, 'சதுரங்கம்' ஆடுகின்றனர். சாதாரண மக்களோ, தத்தளிக்கின்றனர்! தவிக்கின்றனர்!!

உலகத்தில், விடுதலைத் தாகம், அதிகரித்து வரும் யுகம் இது. ஏழை, உரிமைக் குரல் எழுப்புகிறான்! அடிமை, கிளர்ந்தெழுகிறான்! அவதிப்பட்டவன் வாழத் துடிக்கிறான்! இதன காரணமாக, மணிமுடிகள் உருளுகின்றன; மதோன்மத்தர்கள் விரட்டியடிக்கப்படுகிறார்கள்; ஆதிக்கம் செலுத்தவிரும்பும் அந்நிய ஆட்சிகள் அகற்றப்படுகின்றன. இந்தத் தாகம் இயற்கையாக ஏற்படக் கூடியது! இதனை, யாரே தடுக்க முடியும்? அமெரிக்கா, படையாலும் பயமுறுத்தலாலும் முடியும் எனக் கருதுகிறது போலும்! மிகமிகத் தப்புக்கணக்கு!!

"எண்ணங்கள் மோதிக் கொள்ள வேண்டுமே தவிர; உடல்கள் தாக்கிக் கொள்ளுதல் கூடாது", என்பதைத்தான், விஞ்ஞான யுகத்தில் வாழ்வோர் உணரவேண்டும். ஏனோ தெரியவில்லை, உலகில், அன்புக்கு இடம்கொடுபடாமல் இதுபோன்ற ஆர்ப்பரிப்புகளுக்கு வாய்ப்புகள் உண்டாக்கப்படுகின்றன! இயேசு—முகம்மது—புத்தர் போன்ற சீலர்கள், அன்பைத்தான் போதித்தனர். அதன் வழிநின்று காந்தியடிகளும், அகிம்சை, அகிம்சை' என்றார். அகிம்சையைப் பேசிக்கொண்டே, நேரு அவர்கள், நாகர்கள்மீது குண்டுகள் போடுகிறார்! இவரே இப்படிச் செய்யும்போது, ஏனையவர்களைப்பற்றி என்ன சொல்வது! சுண்டு விரலே துள்ளும் போது, கைக்குச் சொல்லவா வேண்டும்.

ஒன்று மட்டும் சொல்வோம்—"மனிதன்" என்கிற உருவத்துக்கும், அந்த மனிதன் சாவதற்கு வாழ வேண்டியிருக்கிற நாட்களுக்கும், மதிப்பு அளிக்கிற மனோபாவம், இங்குமட்டுமல்ல; உலகெங்கும் மலரவேண்டும். அப்போது, பேதாபேதங்கள் மட்டுமல்ல, ஆதிக்க ஆசை, சுரண்டல் புத்தி, சூதுக் குணம் யாவும் ஒழியும்; சுகமும், உலக சகோதரத்துவமும் மலரும். அந்நாள், வருமா! ஏக்கத்துடன், உலகைப் பார்க்கிறோம்!!

*

வாழவில்லையாம்; வக்கீலாகிறார்!!

["வண்டு"]

"ஏனடா, தம்பி! இப்படியெல்லாம் ஓடியாடிச் சம்பாதிக்கிறாய். ஆனால், உன் மனைவியின் கழுத்திலோ, காதிலோ ஒருமணி கூட இல்லை. கண்ணீர்தான் குடும்பத்தில் என்று கேள்விப்படுகிறோம். என்ன காரணம்? உன் உழைப்புக் கேற்றஊதியம் கிடைக்கவில்லையா! இல்லை, கிடைக்கிற பணத்தை வீண் செலவு செய்கிறாயா! அல்லது, கிடைக்கவேண்டிய சம்பளத்தை நீ கேட்டு வாங்குவதில்லையா!!", என்று கேட்கிறார், ஒரு பெரியவர் என வைத்துக் கொள்ளுங்கள். மரியாதையுள்ளவனாகயிருந்தால், காரணத்தைச் சொல்வான்—தவறு நீ நடப்பது என்று குறிப்பிட்டால், திருத்திக் கொண்டு, வாழ்க்கையை நடத்த ஆரம்பிப்பான். திமிர் கொண்டவனாயிருந்தால், "இது என் சொந்த விஷயம். உமக்கென்ன?", என்று கேட்பான். ஏமாளியிருக்கிறானே, அவன்கூட, "ஏமாறுகிறோம், போதும். இனிமேல் ஏமாறாமல், உரியதை வாங்கிட வேண்டும்," என எண்ணுவான். ஆனால் ஏமாளியாகவும் அதே சமயத்தில் திமிர் பாதி கலந்ததாகவும், தவறினைத் திருத்திக்கொள்வது போல் பாவனை செய்யும் வேடம்தாங்கியாகவும் இருப்பவன் ஏமாறுவதையும் உணர்வான் — சொன்னால் 'கித்தாப்பு' குறைந்துவிடுமோ எனும் திமிரால் உண்மையையும் மறைப்பான் — மறைப்பதோடு மட்டுமின்றி, தான் ஏமாறுவது தவறு அல்ல என்று வாதாடவும் கிளம்புவான்.

இப்படிப்பட்ட 'கதம்ப மனிதனை'க் காட்சியளிக்கிறார் 'கனம்' நிதியமைச்சர் சுப்ரமணியம்! சென்றகிழமைகுடியாத்தம்போய்ப் பேசினாராம். அப்போது, அவர் கூறியுள்ள சில வாசகங்கள், அவரை எந்த ரகத்தில் சேர்ப்பதென்கிற, ஐயத்தை உண்டு பண்ணியிருக்கிறது, நமக்கு.

இரண்டொரு ஆண்டுகளுக்கு முன்பு தூத்துக்குடியில் போய்ப் பேசியபோது, சொன்னதாகப் படித்தோம்:

"போதுமான நிதிவசதிகள் தென்னாட்டுக்கு இல்லை. தொழில் துறையில் தென்னாடு பின் தங்கிக் கிடக்கிறது."

முன்னூறு கோடி கேட்டு 150ம் கிடைக்காமல், கொண்டிச் சமாதானங்களுடன் டில்லியிருந்து திரும்பிய அமைச்சர், உண்மையை உரைக்கிறார் — போதுமான நிதி உதவி, டில்லியிலிருந்து கிடைக்கவில்லை எனும் ஏமாற்றத்தால் உண்மையை உரைக்கிறார் — ஏமாளி நாம், என்பதை உணர்ந்து பேசுகிறார், என்றே எண்ணினோம்! நாமென்ன, டில்லிக்கு ஓடி, வெறுங் கையுடன் இவர் திரும்பியதை யறிந்தோர் எவரும் அவ்விதமே எண்ணச் செய்வர்!!

"இந்தி தெரிந்தால்தான் உத்தியோகங்களுக்குச் செல்லமுடியுமாமே! ஆங்கிலம் இருந்த இடத்தில் உடனடியாக இந்தியை உட்காரவைப்பதென்றால் எப்படி முடியும்? நிச்சயம், சென்னை சர்க்கார், இதுவிஷயத்தில் போராடும்."

என்று சென்னை மயிலாப்பூரில் நடைபெற்ற கருத்தரங்கத்தில், ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பு, முழக்கமிட்டார் நிதியமைச்சர். தவறினைத் திருத்திக்கொள்கிறார் அமைச்சர் — இதுகாறும் இந்தி விஷயத்திலிருந்த பிடிவாதத்தைத் தளர்த்திக்கொள்கிறார் — உண்மையை உணர்கிறார் — என்றே நம்பினோம். நாமென்ன, அவரது கூற்றினைப் படித்த எவரும், அப்படி நம்பத்தான் செய்வர்!!

ஏமாந்ததை ஒப்புக்கொண்டு, செய்திட்ட தவறினைத் திருத்திக் கொள்வது போலவும் காட்டிக் கொண்ட அவர், குடியாத்தத்தில் பேசினாராம்:

"பம்பாய், வங்காளம் தவிர, இந்தியாவிலுள்ள மற்ற ராஜ்யங்கள் சென்னை ராஜ்யத்தைவிட முன்னேற்றமடைந்திருக்கின்றன என்று நிரூபித்தால் நான் பொதுவாழ்விலிருந்தே விலகிக்கொள்கிறேன்."

இவ்விதம் பேசினாராம்! பொது வாழ்விலிருந்தே விலகிக்கொள்கிறேன் என்றாராம்!! நிரூபிக்க முடியாது தி. மு. க.வால் — அப்படி நிரூபித்தால் நான் பொன்னெனக் கருதும் பொதுவாழ்வை விட்டே போய்விடுகிறேன்-என்றாராம். நிதியமைச்சரை அப்படிப்பட்ட சிக்கலில் வைக்க விரும்பவில்லை, நாம்! கொண்டுவந்த கல்வித் திட்டத்தை நாடு குப்பையில் விட்டெறிந்த பிறகும், இருக்குமிடம் விட்டு நகர விரும்பாத இவரின் 'பொது வாழ்வு'க்கும் அதனால் அடையும் சுகங்களுக்கும் நாம் ஏன் தடையாக நிற்கவேண்டும்!! சிரஞ்சீவி மந்திரியாக அவர் இருக்கட்டும். ஆனால் ஒன்று, இவர் ஏன, வடக்குப் போதிய உதவி செய்யவில்லை என்று ஒரு சமயம் சொல்லவேண்டும்? ஏன் இந்தவிஷயத்தில் அப்படிப் பேசவேண்டும்-இப்போது இப்படி, தெற்கை வடக்கு ஒன்றும் வஞ்சிக்கவில்லை என்று ஏன் பேசவேண்டும்?

"ஏண்டா, தம்பி! நன்றாகத்தானே பாடுபடுகிறாய். நீ இருக்கிற கம்பெனியும், நல்ல கம்பெனியாமே. ஏன், உன் வீட்டில் சதா அழுதலும் முனகலும்?"

என்று கேட்டால்.

அதனால் என்ன? "கம்பெனி மானேஜர் நன்றாக வாழ்கிறார் என்று நினைக்கிறீர்கள்? அவர் வீட்டில், மனைவிக்கு எவ்வித நகைகளுமே கிடையாது! இங்காவது, தங்கத் திருகாணி இருக்கிறது— அதுகூட அங்கே கிடையாது!!"

என்று பதில் தந்தால், என்ன எண்ணுவோம்? தன் ஏமாளித்தனம் அல்லது திறமையற்ற தன்மையை மறைக்கத் தேடும் சாக்கு என்றுதானே சொல்வோம்!! அமைச்சர் சுப்ரமணியத்தை, "ஏனய்யா, தென்னாட்டுக்கு வரவேண்டிய பங்குத் தொகையை ஒழுங்காகக் கேட்டு வாங்க முடியுமா—தருமா வடக்கு

(13-ம் பக்கம் பார்க்க)

சூழ்ச்சியின் வீழ்ச்சி

இலண்டன் மாநகரம் அன்று துக்கத்திலாழ்ந்திருந்தது. மக்கள் முகமும் அகமும் சோகத்திலேயே காணப்பட்டது. 'காதரின்' இன்னும் இன்பத்தின் வாயிற் படியைக் கூட அடையவில்லையே; அதற்குள் இந்நிலையா என்றனர் ஒரு சாரார். "விதி யாரை விட்டதுஎன்றனர் மற்றொருசாரார். அதோ மாவீரன்! மக்களின் தலைவன்! மாசிலா உள்ளங்கொண்ட ஆர்தரின் சவம் வந்துகொண்டிருக்கிறது; முன்னே இராணுவம் அணி வகுத்து வருவதும், பின்னே தந்தையும் ஏனையோரும் அழுது புலம்பிவருவதும் கல்நெஞ்சரையும் உருகச்செய்தது.

இங்கிலாந்து மன்னன் ஏழாம் ஹென்றி நட்புக்கொள்ளும் முறையில் ஸ்பெயின் நாட்டுப் போழுதி காதரின் என்பாளை, தன் மூத்த மகன் ஆர்தருக்கு மணமுடித்து வைத்தான். நட்புக்கு நல்லதைச் செய்த அவன் எண்ணம் நிறைவேறாதபடி மணம் முடிந்த முப்பதாம் நாளிலேயே ஆர்தர் மாரடைப்பால் மாண்டான். இந்தத் துன்ப நிகழ்ச்சிதான் இலண்டன் மாநகரிலே முன்னே கூறியாங்கு நிகழ்கிறது.

காதரின் கட்டழகி மட்டுமல்ல! கற்றோர் போற்றும் கலையரசி! மக்கள் போற்றும் மாண்பரசி! பொற்புள்ள கற்பரசி! நுண்ணறிவு கொண்ட பெண்ணரசி! தங்க நிறத்தோடு தங்க உள்ளங்கொண்ட காதரின் பற்றுக்கோடில்லாக் கொடியாக வாடுவதைக்கண்டு கவலைப்பட்டோர் பலருண்டு! ஆனால் அவள் படும் கவலையைப்போக்க முற்பட்டவர் உல்சியைத் தவிர வேறு யாருமில்லை!

அரசன் அமைச்சர்களுடன் அமர்ந்துகொண்டிருக்கிறான். எட்டாம் ஹென்றியுடன் நுழைகிறான் உல்சி! உல்சியிடம் உன்னதக் கொள்கைகள் எப்போதும் உண்டு என்பதை உணர்ந்தவன மன்னன். எந்தப் பதவியும் இல்லாமல் மன்னனிடம் அதிகம் செல்வாக்குப் பெறுகிறானே என்று பொறாமை கொண்டவன் அமைச்சன் எட்வர்ட்.

உல்சி வருகையால் அமைச்சரவைக் கூட்டம் அத்தோடு முடிகிறது. எட்வர்ட் வஞ்சகக் கண்களோடு வெளியேறுகிறான்.

XXXXXXXXXXXXXXXX

வித்துவான் M. A. கிருஷ்ணன்

XXXXXXXXXXXXXXXX

"மன்னா! நாட்டின் நலனையும் பெண்ணின் நலனையும் எண்ணித் தங்களிடம் ஒன்று வேண்டுகிறேன்" என்றான் சிறிது அச்சத்தோடு......

"உல்சி! உன் எண்ணம் எதுவானாலும் நிறைவேற்றுவது என் பொறுப்பு; கூறுக என்றான்" கனிவோடு.

"அரசே! தாங்கள் ஆத்திரப்படாமல் சிந்திக்கவேண்டுகிறேன்" என்றான் பணிவோடு.....

நீ சிந்திக்காமல் கூறமாட்டாய் என்பது எனக்குத் தெரியும். சிறிதளவும் சிந்திக்கவேண்டியதில்லை. செய்தியைச் சொல்!

"காதரின் நிலைமைத் தாங்கள் நன்கு உணர்வீர்களே" என்று குறிப்பிட்டபோது மன்னன் முகம் மாறுபட்டது. உல்சி தொடர்ந்து, அவள் கணவனைத்தான் இழந்தாளேயன்றி அழகையோ, உணர்ச்சியையோ இழந்துவிடவில்லை!" என்றான்.

"பரமன் கட்டளை அவ்வாறிருக்க நாம் என்னசெய்ய முடியும்" என்றான் மன்னன் அனுதாபத்தோடு ......!

"இதைப்போக்க வேறு வழியே இல்லையா?" என்று ஒரு வினாவை எழுப்பினான் உல்சி!

பரமண்டலத்தில் இருக்கும் பரமபிதாவின் வழிபாட்டால் அவள் எண்ணம் மாறுவதோடு, மறு பிறவியிலாவது கணவனோடு வாழ வழியிட்டும்.

"மன்னா! மறுபிறப்புக்குப் பின்பு அதற்குவழிவகுப்போம். காதரின இப்பொழுது தனிமையாய் இருப்பதை மாற்றவேண்டும்."

"நீ சொல்வது ஒன்றும் புரியவில்லையே."

"அரசே! காதரின் அழுது அழுது புலம்புவதையும், அவள தங்க மேனி நாளும் மங்கி வருவதையும் மாற்றவேண்டும். அதற்கு ஒரே வழி எட்டாம் ஹென்றி காதரினை மணக்கவேண்டும்."

மன்னன் முகத்தில உடனே வியர்வை தோன்றியது. மீசை துடிதுடித்தது. கண்களில் சிவப்பு ஏறிக்கொண்டது. "உல்சி! யாரிடம் பேசுகிறோம் என்பதை மறந்து பேசிவிட்டாய். வழி வழியாக வளர்ந்துவரும் மதநம்பிக்கை

களை குழிதோண்டிப் புதைக்க உன் மனம் எப்படி ஒப்பியது? விதவையை இளவரசன் மணந்ததாக வரலாறு உண்டா?" என்றான் ஆத்திரத்தோடு......

"மத நம்பிக்கைக்கு நான் எப்பொழுதும் மாசுதேட மாட்டேன். காதரின் விதவை என்ற பட்டம் கொண்டுள்ளாளே தவிர, அவள் விதவையல்ல, அதை உணர்ந்துதான் இதற்குப் போப்பும் மனம் ஒப்பினார்."

"என்ன 'போப்' ஒப்புக்கொண்டாரா!" என்று வியப்போடு வினவியபடியே, இளைய மகனை நோக்கினார். கலையரசியைத் துணைவியாகக்கொள்ள விரும்பும் அவன் முகத்தில் இன்பம் படர்ந்திருந்தது. மன்னன் அகமும் மாறுபடத் தொடங்கியது.

எட்டாம் ஹென்றி காதரினை மணப்பதற்கு போப்பாண்டவர் அனுமதி அளித்துவிட்டதும், ஜூன் நான்காம் நாள் திருமணம் நிகழவிருக்கிறது என்பதும் காட்டுத் தீ போல் நாடெங்கும் பரவியது. பேரழகி வாழ்வு மீண்டும் மலர்கிறது என்பது மட்டுமின்றி, ஸ்பெயின் நட்புக் கயிறுகள் மீண்டும் இணைக்கப்படுகிறது என்பதால் மக்கள் மகிழ்ச்சி மேலும் ஒரு படியைக் கடந்திருந்தது.

அன்று ஜூன் மூன்றாம்நாள் இரவு இலண்டன்மாநகரம் பலவகைகளிலும் அலங்கரிக்கப்படுகிறது. இளவரசன் இணையற்ற வாழ்வு பெறுவதை எண்ணி இரவெல்லாம் திருமணப் பணியில் ஈடுபட்டிருந்தான். உல்சி அவனுடன் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தான. கலையரசி காதரின் இன்பத்தால் இசைபாடிவிளையாடித்தோழியோடுஉறவாடிக்காலத்தைக்கழித்துக் கொண்டிருந்தாள். மணி பன்னிரண்டைக் கடந்தும் அவள் அன்று உறங்கவில்லை. தோழியர்கள் தலைவியின் நலனையெண்ணித் தூங்கவைத்தனர்.

மாதாவின் கோவிலில் மணி மூன்றடித்தது. காதரின் அறையைச் சுற்றிலும் முழு அமைதி காணப்பட்டது. எல்லோரும் உறங்கிக்கொண்டிருந்தார்கள். விழியழகி அழகிய பஞ்சணையில் துஞ்சிக்கொண்டிருக்கிறாள், வெண்திங்கள் சன்னல் வழியாக அவள் முகத்தைப்பார்த்துக்கொண்டிருந்தான். அது அவள் புன்னகை முகத்தைப் பொலிவு படுத்தியது. வெண்ணிலவு புகுந்த சன்னல் வழியாகக் கம்பளி போர்த்த இரு உருவங்கள் குதித்தன. அவர்கள் கை இளவரசியை ஏனோ நோக்கிச் சென்றன. சின்னேரத்தில் அவர்கள் ஒத்துழைப்புக்கு இரு பெண் மணிகள் உடன் கலந்தனர். இளவரசி இப்பொழுது மாடிப்படியின் மறைந்த வழியில் தூக்கிச்செல்லப்படுகிறாள். அந்த இரு உருவங்களும் அவர்களால் தூக்கிச் செல்லப்பட்ட ஸ்பெயின் நாட்டுச் செல்வியும் மறைகிறார்கள்.

அரண்மனையின் அடுத்த பகுதியில் இருந்த உல்சியிடம் இரு பெண்மணிகள் ஓடோடி வருகின்றனர். அவர்கள் உல்சியின் காதில் ஏதோ மொழிகின்றனர். உல்சி வியப்பும் துடிதுடிப்பும் கொண்டு குதிரையிலே விரைகிறான். இளவரசியைத் தூக்கிச்சென்ற குதிரையை அவன் நெருங்குவதும், அவர்கள் விரைந்து செல்வதும் தொடர்ந்து துரத்துவதும் நிகழ்ந்துகொண்டிருந்தது.

திருமணப் பெண்ணை இழந்த அரண்மனை அல்லோலப்பட்டது. மணவிழாவுக்கு இன்னும் இரண்டு மணிகளே உள்ளன. ஆனால் மணப்பெண் இல்லை.

"உள்ளதைச் சொல்லுங்கள், இல்லையே உடலை உரித்துவிடுவேன்" என்று தோழிகளை நோக்கி உறுமினான் இளவரசன்.

தோழியரின் முகத்தில் அழுகையும் அமைதியும் தவிர வேறொன்றும் அவன் காணவில்லை. "என்ன! உங்களுக்கு உயிரின்மீது ஆசையில்லையா? எப்படி எங்கே

போனாள் என்று சொல்லுவதற்கு உங்களால் முடியவில்லையா?"

மீண்டும் அமைதியே காணப்பட்டது. இளவரசனுக்கு ஆத்திரம் தாங்கவில்லை. கையில் இருந்த சவுக்கு அணிவகுத்து நின்ற தோழியரின் உடலில் பாய்ந்தது.

ஐயோ என்ற அவர்கள் அலறல் அரண்மனையையே அதிரச் செய்தது.

"இளவரசே! இரவு நெடுநேரத்திற்குப் பின்பே உறங்கத் தொடங்கினோம்" என்று கூறினாள் ஒருத்தி.

இளவரசி பஞ்சணையில் படுத்து உறங்கிய பின்பே நாங்கள் உறங்கினோம் என்றுரைத்தாள் பிறிதொருத்தி.

உறக்கத்திற்குப் பின் என்ன நிகழ்ந்தது எனபதை அறியோம் என்றாள் இன்னொருத்தி.

செய்தி கேட்ட மன்னனும் அமைச்சன் எட்வினும் ஆங்கு வந்து சேர்ந்தனர். "இளவரசே! இவர்களை இப்படிக் கேட்டால் சொல்லமாட்டார்கள்" என்று சொல்லிக்கொண்டே சவுக்கைக் கையிலெடுத்தான் அமைச்சன் எட்வின்.

"ஆயுதந்தாங்கிய ஆடவர்கள் அரண்மனையைச் சுற்றி ஆயிரம் பேரிருந்தும், இளவரசி போனதைக் கண்டுபிடிக்க முடியவில்லை! வன்மையில்லா ஆண்மையை மறைப்பதற்கு எங்களைப்போன்ற பெண்களா பயன்படவேண்டும்? என்று துணிந்து உணர்ச்சியுடன் பேசினாள் ஒரு தோழி.

முகத்திலடித்தாற்போன்ற அவள் சொற்கள் எட்வினுக்குச்

நமது அனுதாபம்

30—6—58 மாலை சென்னை அறிவகத்தில் கூடிய தி. மு. க. செயற் குழுவில், போடப்பட்ட முதல் தீர்மானம்:-

தேசியப் போராட்டத்தில் சிறந்த பணியாற்றியவரும், பின்னர் காங்கிரஸ் ஏகாதிபத்திய ஆட்சி முறையைத் தீவிரமாக எதிர்த்து வந்தவரும், தொழிலாளர் தலைவருமான திரு: சக்கரை (செட்டியார்) அவர்களும், மருத்துவத்துறையில் மேதையாக விளங்கிவந்தவரும், கல்வித் துறைக்குப் பேருதவி புரிந்துவந்தவருமான டாக்டர் குருசாமி (முதலியார்) அவர்களும் இயற்கையெய்தியமை குறித்து மிகவும் வருந்துவதுடன், அவர்களது குடும்பத்தாருக்கு இச் செயற்குழு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

சினத்தை உண்டாக்கினாலும், அதைக் காட்டிக் கொள்ளவில்லை. முன்னால் இருந்த தோழியர் இருவரை "உம் நடந்ததை சொல்லுங்கள். நீங்கள்தானே இளவரசியின் முதல் தோழிகள்" என்று வினவினான்.

அவர்களும் ஏதோ சொல்லத் தொடங்கி அச்சத்தின் காரணமாக அடங்கிக் கொண்டனர்.

"அச்சமின்றிக் கூறுங்கள் உங்களுக்கு எந்தத் தீதும் ஏற்படாது. இதோ மாபெரும் மன்னர் பெருமான் இருக்கிறார்! மாண்புக்குரிய இளவரசர் இருக்கிறார்! நன்மை நாடும் நானிருக்கிறேன்" என்றான் அமைதியாக.

"மன்னா! நாங்கள் நள்ளிரவில் நன்குஉறங்கிக்கொண்டிருந்தோம். மாதா கோவில் மணி மூன்றடித்தது. எங்கள் அறைக்குள் ஏதோ உருவமொன்று நுழைந்தது. அதன் கையில் பளபளவென்று ஒரு கத்தி காணப்பட்டது. அச்சத்தின் காரணமாக ஐயோ என்று அலறினோம், ஆனால் கத்தி முனையில் சிக்கிய நாங்கள் பெரிய சத்தம் போடமுடியவில்லை. அந்த உருவம் இளவரசியைத் தூக்கிச்சென்றது" என்றனர் மெல்லிய குரலில்.

உருவத்தின் சாயல் யாரைப் போன்றிருந்தது என்று வினவினான் இளவரசன்.

தொழியர் மீண்டும் தலையைச் சாய்த்தனர். சொல்லுங்கள்! என்றான் எட்வின்.

உல்சியை ஒத்திருந்தது என்றாள் அச்சம் நிரம்பிய குரலில்.

"என்ன சொன்னாய்! என் உயிர் நண்பன்மீதா அந்தப் பழியைப் போடுகிறாய்! அவன் மாசுமருவற்ற மாணிக்கம், காணக்கிடைக்காத வைரம்! ஒருக்காலும் அவன் அந்த இழி செயலைச் செய்திருக்கமாட்டான். அவன்மீது தீமையைக் கூறும் உன் நாவை அறுக்க வேண்டும்" என்று வாளை உருவினான் இளவரசன்.

பொறுங்கள் இளவரசே! தோழியரின் வார்த்தையை மெய்யென நம்பவேண்டாம். ஆனால் பொய்யென எண்ணுவதற்கு என்ன ஆதாரம்! உற்ற காலத்தில் உதவும் உங்கள் நண்பன் உல்சி இந்த நேரத்தில் எங்கே போனான். இளவரசியைக் காணவில்லை! அதே நேரத்தில் நீங்கள் போற்றும் உல்சியையும் காணவில்லை!

இல்லை, இதில் ஏதோ சூது நிகழ்ந்திருக்க வேண்டும். அப்பா! இதை நீங்கள் நம்புகிறீர்களா? என் அருமை நண்பன் இந்த அடாத செயலைச் செய்திருப்பான் என எண்ணுகிறீர்களா? என்று கதறினான் இளவரசன்.

நம்பாமலிருக்கலாம். ஆனால் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் உல்சியைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகிறது என்றார், ஒழுக்கத்தைப் போதிப்பதாகக் கூறும் போப்.

நம்பியவர்களை நட்டாற்றில் கைவிடும் அந்தத் துரோகியை எங்கு இருந்தாலும் இழுத்து வாருங்கள் என்று ஆணையிட்டான் மன்னன் ஹென்றி.

உலகமறியா உல்சியை உண்மையானவன் என்று நீங்கள் நம்பிய தன் பலன் அவமானம்-அதுவும் தாங்கமுடியாத அவமானம். திருமணத்திற்குப் போப்பெருமான் குறித்தபடி இன்னும் ஒரு மணி நேரமே உள்ளது. மக்கள் மாதா கோவிலை நோக்கிச் சாரை சாரையாகச் சென்றுகொண்டிருக்கின்றனர். மணமகளைக் காணவில்லை—இளவரசனின் உற்ற நண்பன் உயிர் நண்பன் என்று போற்றப்படும் உல்சியையும் காணவில்லை என்றுமக்களிடம்எப்படிச்சொல்லுவது? என்றான் எட்வின்.

அமைச்சரே! வார்த்தையை அளந்து பேசுங்கள். உல்சியே 'காதரினை, அழைத்துச் சென்றான் என்பதற்கோ, செல்லவில்லை என்பதற்கோ சான்றேதுமில்லை. ஏதுவில்லாமல்பேசுவது பொறுப்பாகாது என்றான் இளவரசன்.

இவ்வாறு உரையாடிக் கொண்டிருக்கும்போது குதிரையின் மீது ஆடவன் ஒருவன் வந்து கொண்டிருந்தான். அவன் குதிரை மின்னல் வேகத்தில் அரண்மனையை நோக்கி வந்தது. வருவது உல்சியாகத்தான் இருக்க வேண்டுமெனபது இளவரசனின் எண்ணம். ஆனால் நெருங்க நெருங்க உல்சியுமல்ல, தான் இது வரை கண்ட ஆடவனுமல்ல...... சுமார் பதினெட்டு வயது கூட மதிப்பிட முடியாத வாலிபன் குதிரையை விட்டு இறங்கி மன்னனை வணங்குகின்றான். அரசே! இளவரசி காதரினைக் கயவர்கள் சிலர் கடத்திச் சென்றார்கள் அல்லவா? அவர்களிடம் இருந்து காதரினை மீட்கும் பொருட்டு உல்சி போராடிக் கொண்டிருக்கிறார், உடனே புறப்பட வேண்டும்; இல்லையேல் உல்சியை உயிருடன் காண முடியாத நிலை ஏற்பட்டாலும் ஏற்படலாம்!

"இதோ இப்பொழுதே புறப்படுகிறேன். இளவரசிக்கு ஆபத்தொன்றுமில்லையா என்றான் இளவரசன்.

அவர்களுக்கு ஒன்றுமில்லை; இப்போது இங்கேயே சுகமாக இருக்கிறார்; நண்பரைக் காக்கப் புறப்படுங்கள் என்றான் புன்னகை கொண்ட வாலிபன்.

புறப்படுகிறேன் இதைச் சொல்லவந்த நீயார்!......

வாலிபன் பேசவில்லை......

யார் நீ என்றபடியே அவன் தலைப்பாகையைத் தட்டினான்; என்னவியப்பு! குதிரைமீது வந்த வாலிபன் வேறு யாருமல்ல. ஸ்பெயின் நாட்டு இளவரசி, இங்கிலாந்து நாட்டின் வருங்காலப் பட்டத்தரசி! இன்றைய மணமகள்காதரின்தான். கண்டவர்எல்லோர் முகமும் மலர்ந்தது; ஆனால் அமைச்சன் எட்வின் முகம் மலரவில்லை. இதைஇளவரசன் கடைக்கண்ணால் நோக்கிக்கொண்டே குதிரைமீது ஏறினான்...உல்சியை அழைத்து வந்த பிறகே காதரினுக்கு மணமாலை சூடுவேன் என்று சொல்லிக்கொண்டே புறப்பட்டான்!

எட்வின் முகத்தில் ஏமாற்றமும் அச்சமும் வளர்ந்துகொண்டிருந்தது. இளவரசியைக் கடத்திச் சென்றவர்கள் அமைச்சன் எட்வினின் ஆட்களே என்பது பலருக்குத் தெரியாது.

❀

அன்பம் வந்து உள்ளத்திலே புகைந்துகொண்டு நிற்கும்போது, தன்னம்பிக்கைதான் நம்மைக் காப்பாற்ற முடியும். வேதனையை மறந்து, வெற்றியை நோக்கி முன்னேற தன்னம்பிக்கை அவசியம் வேண்டும்.

*

மனிதப் பண்பை மறந்தவன், அரசனுமல்ல, மனிதனுமல்ல.

சிறுகதை

நளாயினி

கரந்தை—கணேசன்

"தேவிகா...! தேவிகா...!"

"யாரம்மா அது?"

"நான்தான் நளாயினி, உள்ளே வரலாமா?"

தேவிகாஎழுந்து ஓடோடிவந்து, "என்னம்மா இது; இப்படிக் கேட்டுவிட்டீர்கள்? தங்களின் பாத தூளிபட இக்குடில் என்ன தவம் செய்ததோ" என்றாள்.

"தவம் என்னடி வேண்டிக்கிடக்கிறது" என்றாள் நளாயினி தோழியிடம் அலுப்பாக.

தோழி தேவிகாவுக்கு ஒரே ஆச்சரியம், நளாயினியின் வருகை அவளால் என்றுமே எதிர்பார்க்க முடியாதது. எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடைபெறும் பொழுதுதானே மனிதனுடைய எண்ணங்கள் எங்கெங்கெல்லாமோ பறந்து செல்கின்றன. தேவிகாவும் அந்த நிலையைத்தான் அடைந்துவிட்டாள்.

நளாயினி, மவுக்கல்லியரிஷியின் பத்தினி. கொண்ட கணவனைக் கூடையில் வைத்து ஊரறிய உலகறியத் தாசி வீடு தூக்கிச்சென்று கணவனின் கட்டளையை நிறைவேற்றியவள். இன்று அவளை, உலகம் பூஜிக்கிறது, கற்புக்கரசி என்கிறது, கணவனே தெய்வம், அவன் கட்டளையே தன் இஷ்டம் எனக்கொண்டு அவன் வழிநின்ற குலமாது என்கிறது. அவள்—அப்படிப்பட்டவள்—தன் குடிசை நோக்கி வந்திருக்கிறாள் என்றால், தேவிகாவின் உள்ளம் ஆச்சரிய அலைகளால் தாக்கப்பட்டதில் வியப்படைவதற்கில்லை.

தேவிகா—நளாயினி, இருவருக்கும் உள்ள ஒரே உறவு ஏதோ தோழிகள் என்பதுதான். தேவிகா, சாதாரணமானவள். நளாயினி, உலகத்தாரின் தொழுகைக்கு உரியவள்!

உள்ளே வந்த நளாயினியை, 'சற்று நில்லுங்கள் அம்மா' என்றாள். நளாயினிக்குஒன்றுமே புரியவில்லை. இருந்தாலும் சமாளித்துக் கொண்டவளாய், "உள்ளே உன் கணவர்"......என்றாள்.

"இல்லையம்மா..." என்றபடியே உள்ளே சென்றுவிட்டாள் தேவிகா.

நளாயினி என்ன காரணம் என்பதை எண்ணி முடிப்பதற்குள் தேவிகா செம்பில் நீரும், தட்டில் மலரும் கொண்டுவந்தவளாய் அங்கே காட்சியளித்தாள். சற்று நேரத்திற்குள் நளாயினிக்கு நிலைமைபுரிந்துவிட்டது. தன்னைப் பூசைக்குரிய தெய்வமாகக்கருதிவிட்டாள் என்பதை உணர்ந்த உடனேயே நளாயினிக்கு வந்த கோபம் கொஞ்ச நஞ்சமல்ல.

"சே... நீயுமா இப்படி? முதலில் அவைகளைக் கொண்டுபோய் குப்பையில் கொட்டிவிட்டுவா" என்றாள் நளாயினி. அவளுடைய சொல்லிலே இருந்த கடுமையும், கண்களிலே எழுந்த கனலும் தேவிகாவை நிலைகுலையச் செய்துவிட்டன. தேவிகாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அழகான அம்மானைக்காய், எடுத்து விளையாடலாம் என்று எடுக்கப்போய் அது திடீரென்று வெடித்துச் சிதறினால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது தேவிகாவுக்கு. அப்படியே ஆடாமல் அசையாமல் நின்றுவிட்டாள்.

"ம்......ஓடு...முதலில் கொட்டிவிட்டு வா" என்றாள் நளாயினி. மறுபடியும் தன்னுடைய தெய்வத்தின் கட்டளையை பக்தனால் மறுக்கக்கூடுமா? பேசாமல் திரும்பிச் சென்று கொட்டிவிட்டு வந்தாள். குப்பையிலே கொட்டப்பட்ட அந்தப்புத்தம்புது மலர்கள் சற்று முன்பு செடி, கொடிகளிலே குதூகலமாகக் கூத்தாடிக்கொண்டிருந்தன. பலம் பொருந்திய மனிதர்களின் விருப்பு வெறுப்புகளும் இப்படித்தான் பலரைக் குப்பைக்கும் கோபுரத்திற்கும் நடத்திச் சென்று விடுகின்றன என்பதை அந்த மலர்கள் உணர்ந்தனவோ என்னவோ, ஆனால் அவைகள் மட்டும் அந்தக் கருத்துக்குச் சாட்சியாகிக்கிடந்தன.

"என்ன, கொட்டிவிட்டாயா?" திரும்பிவந்த தேவிகாவைக் கேட்டாள் நளாயினி. குப்பையில் கொட்டாமல் உள்ளே வைத்துவிட்டு வந்துவிட்டாளோ என்னவோ என்ற சந்தேகம் போலும் நளாயினிக்கு.

"தங்கள் கட்டளைப்படியே செய்துவிட்டேன்" என்றாள் தேவிகா.

தேவிகாவுக்கு முன்பெல்லாம் நளாயினி பூசனைக்கு உரியபொருளாகக் காணப்பட்டாள். கண நேரத்திற்குள் அந்த நிலைமாறிப் பிரச்னைக்குரிய புரியாப் பொருளாகி விட்டாள். தேவிகாவுக்கு நளாயினியிடம் என்ன கேட்பது, என்ன பேசுவது என்பதே புரியவில்லை. நின்றுகொண்டிருந்த தேவிகாவை நளாயினி தன் அருகே அமரச்செய்து பேசத் தொடங்கினாள்.

"உலகம்தான் என்னைப் பூசிக்கிறதே, நீயுமா அதே வேலையைச் செய்யவேண்டும். உன்னிடம் நான் அதை எதிர்பார்த்திருந்தால் உன் குடிசைநோக்கி நான்வந்திருக்கவே மாட்டேன், உன்னை என் குடிசை நோக்கி வரச்செய்திருப்பேன். தேவிகா நீ என் தோழி. நான் உன்னிடம் எதிர்பார்ப்பது தோழமையைத்தானே தவிர, வேறல்ல. நானும் உன்னைப் போன்றசாராசரியானநிலையிலுள்ள

பெண் என்று கருது. அதுதான் நான் வேண்டுவது. உனக்கு நான் பேசுவது ஆச்சரியமாக இருக்கும். நான் இனிப் பேசப்போவது இன்னும் ஆச்சரியமாக இருக்கும். மனிதனுடைய உருவத்தைப் போன்றேதான் அவன் மனமும் இருக்கிறது. வெளிப்புற உருவம் எவ்வளவு அழகாக இருக்கிறதோ அதற்கு நேர் எதிர்மாருக உள்ளுருவம் இருக்கக்காண்கிறோம். உளளே குடலும், கும்பியுமாக... ஒரு கோரம். மனமும் அப்படித்தான். வெளி உலகுக்கு ஏற்ப அதன் செயல்களை அமைத்துக் கொண்டு அழகு பெறுகிறது. அதன் உள்ளேயோ...... அதன் அடித்தளத்திலே குமைந்து கிடக்கிற ஓராயிரம் எண்ணங்கள்...... உண்மை நிலையை உலகு அறிய முடிவதில்லை. அறிய முடிந்தால் உலகம் என்னை இவ்வளவு போற்றுமா?" என்றாள்.

இதுவரையிலும் எப்படியோ கேட்டுக்கொண்டு வந்த தேவிகா தன்னையும் அறியாமல் "என்ன அம்மா சொல்கிறீர்கள்?" என்றாள்.எவ்வளவோதேக்கியும்தேக்க முடியாமல் அணையை உடைத்து வரும் வெள்ளம்போல் வந்தது அந்தச் சொல். தன் அன்புக்குப் பாத்திரமான ஒரு பொருள் தன் முன்னாலேயே அழிவதை யார்தான் பார்த்துக்கொண்டிருக்க முடியும்.

நளாயினியோ இவளுடைய கேள்வியைப்பற்றிக் கவலைப்படவில்லை. மெல்ல நகைத்தபடியே 'மேலும் கேள் சகோதரி' என்று தொடர்ந்தாள்.

"என்ன சொல்கிறாயடி?" என்று கேள் அதிலேதான் நான் ஆனந்தப்படுவேன். உயர்த்திப்பேசும் பேச்சுக்களால் என மனம் திருப்தி பெறாது. வேண்டுமானால் உன் மனதிலே என்னைப்பற்றிய நிலை என்ன என்பதை மட்டும்தான் அதனால் காட்டமுடியும."

"அம்மா........" தேவிகாவால் மேலும் பேசமுடியவில்லை. தொண்டையின் இடையிலே ஏதோ ஒரு பொருள உள்ளேயும் செல்லாமல் வெளியேயும் வராமல் சிக்கிக்கொண்டதைப்போன்று ஆகிவிட்டது. மூச்சுக் குழலை யாரோ பிடித்து அமுக்கிக்கொண்டிருப்பது போன்று பட்டது அவளுக்கு. பேச்சு மூச்சற்ற முறையில் அப்படியே அமர்ந்துவிட்டாள்.

"தேவிகா...... உனக்குத் தெரியாது, நான் எப்படி வயதோடிய முனிவருக்கு வாழ்க்கைப்பட்டேன் என்பது. பதித்தொண்டுக்குப் பக்குவம் அடைய எண்ணித்தான் இவருக்கு வாழ்க்கைப்பட்டேன் என்று பலர் எண்ணுகிறார்கள். நீயும் அப்படித்தான் எண்ணி இருப்பாய்.

நான் மாமன்னன் மகள். தந்தை நளனிடம் பலநாட்டு மன்னவர்களும் பயந்துகிடந்த காலம் அது. காதுக்கெட்டிய தூரம்வரை என் தந்தையே பேரரசன் என்பதால் நான் தோண்டி எடுக்கப்படாத தங்கம்போன்று அந்தப்புரத்திலேயே அடைபட்டுக் கிடந்தேன்.

இந்த நிலையில்தான் என்னைப் பற்றி அறிந்திருந்த மவுக்கல்லிய முனிவர் என் சூழ்நிலையைச் சாதகமாக்கி என் தந்தையிடம் என்னைக் கேட்டிருக்கிறார். தந்தையோ முனிவரின் முனிவுக்கு அஞ்சி மறுத்துக்கூற முடியாத நிலையில், மகளின் மனம்போல என்று கூறி இருக்கிறார். என் அனுமதி பெறுவதாகத் தந்தையிடம் கூறி என்னிடம் எழில் மிகுந்த வாலிபன் ஒருவனை அனுப்பி என் அனுமதியும் பெற்றுவிட்டார். நானோ அந்த வாலிபனுக்கு வாழ்க்கைபபடுவதாகத்தான்கூறினேன். என் கணையாழியையும் பெற்றுச் சென்றான் அடையாளமாக. அந்தவாலிபனோ இந்த முனிவருக்காக அவராகி வந்திருக்கிறான். இந்தச் சூது தெரியாத நான் என் தந்தை கேட்டபோழுதுகூட, 'ஆம், அவரைத்தான் திருமணம் செய்து கொள்வேன்' என்று கூறினேன். பின்னர், என் மணம் நடைபெற்றது. இல்லை... இல்லை...... என் இன்பம்... என் இளமை...... என் எழில்...... யாவும் தாக்கிலிடப்பட்டன. நான் தியாகி ஆக்கப்பட்டேன். சமுதாயச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவள் ஆனேன். சமுதாயச் சட்டமோ ஆண்களுக்கு வளையவும், நெளியவும் கூடிய இரப்பர்க்கோலாகவும், நமக்கெல்லாம் நிலையான இரும்புக்கோலாகவும் இருக்கிறது. இந்நிலை இருக்கும் வரை நம்போன்றாரின் நிலை இப்படித்தான் இருக்கும். இதற்குக் காரணம் ஆண்களே நமக்கும் சேர்த்துச் சட்டம் அமைப்பது தான்.

என் கணவரோ, தேடக் கிடைக்காத தனம் கிடைத்தால் லோபி எப்படி ஆனந்தமும், அவதியும் படுவானோஅப்படிப்படுவார். அதைப் பார்க்கும் பொழுதே எனக்குச் சிரிப்பு வரும். எண்ணற்ற போராட்டங்கள் அவர் உள்ளத்திலே எழும். அதன் பிரதிபலிப்பை நான் அனு தினமும் அவரிடம் காண்பேன்.

'நீ புதையல், வேறு யாருக்குக் கிடைத்தது இப்படி' என்று பூரிப்பார். பூரிப்பின் இடையிலேயே, 'இந்தப் புதையலை நம்மால் காப்பாற்ற முடியுமா கொள்ளை போகாமல்' என்கிற கேள்விக் குறியும் எழும். எழுகின்ற கேள்விக் கணைகளுக்குப் பதில்சொல்லமுடியாமல் அவர் சோர்ந்து கிடக்கும் நேரங்களில் என் மனம் பச்சாதாபப் படுவதுண்டு. பரிதாபத்திற்குரிய அந்த மனிதரை நான் பதியாகக் கொள்ள முடியாவிட்டாலும், பதியாகக் கருதி நடந்து கொள்வதென்று இந் நிகழ்ச்சிகளினால் முடிவு செய்துவிட்டேன்.

நான் இயந்திரமானேன். அவர் அதை இயக்குபவரானார். இப்படியே காலம் சில கடந்தது. இப்பொழுதோ மவுக்கல்லியர் மனதிலே மாற்றமில்லாவிட்டாலும் உடலிலே மாற்றம், முடைநாற்றம், தொழுநோய். இளமைப பருவக் குறும்புகளின் விளைவு என்கிறார்கள் உண்மைநிலை உணர்ந்தவர்கள். எதாக இருந்தாலும், இந்த நிலைக்குப பிறகும... தேவிகா...... நளாயினியின் கண்களிலே கண்ணீர் பெருக்கெடுத்து ஓட ஆரம்

"காதலெனும் தீவினிலே........!"

தோழர் இரா. மதனகோபால் பி-காம்; அவர்களால் தீட்டப் பெற்ற மேற்படி நாடகம் பெங்களூர் குப்பி தியேட்டரில் தோழர் எஸ். வி. பதி அவர்கள் தலைமையிலும் தோழர் மு. கருணாநிதி எம். எல். ஏ. அவர்கள் முன்னிலையிலும் 26—7—58-ல் நடைபெறும்.

கட்டணம்: ரூபா 3, 2, 1, 0-8-0

பிடித்துவிட்டது. தேவிகாவுக்கோ, தன் முன்னாலேயே தன் தெய்வம் அழுவது...... கலைஞன் ஒருவன் உருவாக்கிய உயிர்ச் சித்திரம் அவன் முன்பே அழிக்கப் படுவது போன்று ஆயிற்று. அப்படியே நளாயினியைக் கட்டிப் பிடித்து, 'ஐயோ... அக்கா... நீ தெய்வமில்லை...நீ என் சகோதரி தான்' என்று கத்திவிடவேண்டும் போலிருந்தது. ஆனால், கண்ணீர்த் திவலைகளின் மூலம்தான் அவைகளைப் பிரதிபலிக்க முடிந்தது.

தேவிகாவின் கண்ணீரைப் பார்த்தவுடன் நளாயினிக்குப் புதிய தெம்பு ஏற்பட்டது.

'கேளடி தங்கையே' எவ்வளவுதான் மனதை இரும்பாக்கிக் கொண்டாலும் உணர்ச்சி என்னும் உலைக்கு முன்னால் மனம் உருகத்தான் செய்கிறது என்பதை அப்பொழுதுதான் உணர்ந்தேன். என் மனமும் புரட்சி செய்ய ஆரம்பித்தது. இளமை தூங்காத வன்மை பெற்ற வயோதிக முனிவருக்கோ என்னைத் தொந்தரவு செய்வதே வேலையாகவும் போய்விட்டது. என்னால் பொறுக்க முடியாத நிலையில் ஒரு நாள் கேட்டேவிட்டேன், 'ஏன் என்னைத் தொல்லைப் படுத்துகிறீர்கள். எந்தத் தாசி வீடாவது சென்று வருவதுதானே. வேண்டுமானால் நானேயாவது யாராவது ஒருதாசியிடம் கேட்டு வருகிறேன். வேறு வகையில் நான் ஆளல்ல' என்ற முறையில்.

அப்புறமாவது விட்டாரா முனிவர். நான் சொன்னதுதான் சாக்கென்று கொண்டு, 'உன்னால் முடியாவிட்டால் அதையாவது செய்; இல்லாவிட்டால் நீ உடன்படு' என்கிற முறையில் பேச ஆரம்பித்துவிட்டார். அதன் விளைவுதான் தேவிகா நான் தாசி வீட்டிற்குக்கூடை தூக்கிச் சென்றதும், கணவன் சொல் தட்டாத கற்புக்கரசி என்ற பட்டம் பெற்றதும். ஆண்கள் எப்பொழுதுமே வல்லவர்கள்; யானையைக் கொண்டே யானையைப் பிடிக்கும் பாகன் கலையை அவர்கள் எப்போதோ கற்றுவிட்டார்கள்,

நீ நினைக்கலாம், எந்தப் பெண்ணும் தன் கணவன் பிற பெண்களை பார்க்கக் கூடச் சகிக்க மாட்டார்கள், நானோ பிறரொருவள் இல்லத்திற்கே என் கணவரை அழைத்துச் சென்று அவர் விரும்பியதை அடையச் செய்தேன். இந்நிலையில் நான் வேறு என்ன செய்வது? சொல்...... தேவிகா......சொல்......' என்றவாறே நளாயினி தேவிகாவின் தோள்களைப் பிடித்து உலுக்கினாள்

'ஐயோ......அக்கா.........என் தலை சுற்றுகிறது. நீ மிகவும் பரிதாபத்திற்கு உரியவள்' என்று உரக்கக் கத்தியே விட்டாள் தேவிகா.

* * *

திடீரென்று எழுந்து உட்கார்ந்தாள் நளாயினி. எதிரே தேவிகா இல்லை. அவள் தேவிகாவின் குடிலிலும் இல்லை. தன் குடிசையில்தான் இருந்தாள். தன் வாழ்க்கையில் பல காலமாகக் குமைந்து கிடக்கும் இந்த உண்மையைத் தன் தோழி தேவிகாவிடமாவது கூறி விடவேண்டுமென்ற ஆவல் பல காலம் எழுந்ததுண்டு. ஆனால் கற்சிலையைக் கடவுளாக எண்ணி மலர் தூவிக் கொண்டிருக்கும் பக்தன் முன், கல், "நான் கடவுள் அல்ல, கல்தான்" என்று கூறினால் பக்தன் என்ன நிலை அடைவானோ, அதே நிலையை இவளும் அடைந்து விடுவாள். தன்னை அருவருப்பாகக் கூடப் பார்க்கத் தொடங்கிவிடுவாள் என்ற அச்சம்தான் ஆவலை அடக்கி வைத்தது. அந்த ஆவலின் கட்டுமீறிய செயல்தான் இந்தக் கனவு என்பதை உணர்ந்தவுடன்; வாய்விட்டு 'நல்லவேளை' என்றாள்.

அப்போது, "தண்ணீர்...... ளா...... தண்ணீர்......" என்ற குரல் கேட்டது. குரல் வந்த திசையை நோக்கினாள். மவுக்கல்லிய முனிவர் ஓலைப்பாய் ஒன்றில் முடை நாற்றம் வீச முனகிக் கொண்டிருந்தார். நளாயினி எழுந்து சென்று, தண்ணீர் எடுத்துக்கொண்டு ஊரறிய உலகறிய பதிசேவை செய்யப் புறப்பட்டு வந்தாள்.

தூத்துக்குடி தேர்தல்

இருப்பது கொஞ்சநாட்களே!

தோழர்காள்!
கழகங்காள்!!

கையில் கிடைத்ததை ஒவ்வொருவரும் உடன் அனுப்பியுதவுங்கள், அறிவகத்துக்கு.

அவசரப்பணி! காசுகள் தேவை!!

"மலடி!"

—[வி. ஆர். துரை]—

அவர்கள்—பெண்தேடி அலைந்தார்கள். சீக்கிரத்தில் ஒரு நல்ல பெண்ணைப் பார்த்து, தன் மகன் தலையில் கட்டிப்போட்டுவிட வேண்டும் என்று, அந்தத்தாயும் தந்தையும் அவசரப்பட்டார்கள்.

பெற்றவர்கள், இன்னும் சில்லாண்டு கழித்துத்தான் மகனின் திருமணத்தைக் கோலாகலமாக நடாத்தவேண்டும் என்று இருந்தார்கள். அந்த முடிவிற்கு ஒரு குழுக்குப்போட்டுவிட்டு, இப்படித் திடீர் என்று பெண்தேடும் படலத்தில், அந்த 'அழகு' மகனை ஈன்றெடுத்தவர்கள் இறங்கியதற்கு ஏதாவது ஒரு காரணம் இல்லாமலா போகும்?

தாய்க்கும் தந்தைக்கும் பயந்து, அடக்க ஒடுக்கமாகத்தான் மகன் இருந்து வந்தான். தாயிடம் தவறாக ஒரு வார்த்தை பேசமாட்டான். தந்தை வந்தால் உட்கார்ந்த இடத்தைவிட்டு எழுந்து நிற்பான். அப்படி அவன் இருந்ததெல்லாம் பழையகாலம். இப்போது அவன் ஒரு 'மாதிரி' ஆகி விட்டான்.

வேறு எதைப் பற்றிப் பேசினாலும், அவ்வளவாக அதைச் செவியில் போட்டுக்கொள்ளமாட்டான். ஒரு பெண்ணைப் பற்றிய பேச்சென்றால், வெல்லம் அவனுக்கு. மணிக்கணக்கிலே சலிக்காமல் மங்கையர்தம் மதிமுகத்தைப் பற்றியும், அவர்தம் இயல்பு பற்றியும்பேசிக்கொண்டிருப்பான், அரிவையர் விஷயத்தில் அதிகமாக அக்கரை எடுத்துக்கொண்டான்.

மகன் பச்சையாகவே நடந்துகொள்ளுகின்றான். அவன் வெற்றிகரமாக நடத்துகின்ற பெண்விளையாட்டுகள் கண்ணாடிபோல் தெரிகின்றது. தெரிந்தும்கண்டிக்காமல் கண்டும காணாதவர்போல் தந்தை நடந்துகொண்டார். மகனைக் கண்டித்து, அவன் திருவிளையாடலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப் பெற்றவர்கள் தயங்கினார்கள். ஏதேனும் மனம் நோகச் சொல்லிவிட்டால், செல்லமாக வளர்த்த ஒரே ஆசை மகன், 'யாதும் ஊரே' என்று எங்காவது போய்விடுவான்; தண்டவாளத்தின்மேல் தலைவைத்துப் படுத்துக்கொள்வான்; கொடிய நஞ்சை கொம்புத்தேனாகக் கருதிக் குடித்துவிடுவான்; ஆசையோடு மின்சாரக் கம்பியை பிடித்துக்கொள்வான்; மரத்தில் ஏறி ஒரு முழக் கயிற்றில், உடலைத் தொங்கபோட்டுக் கொள்வான் என்று அவர்கள் மிகவும் பயந்தார்கள்.

அவனுக்கு வயது இருபது. பெயர், மணவாளன். ஒரே மகன். ஏராளமான சொத்துவேறு இருக்கிறது. இந்த எண்ணமே, பெற்றோர்களை எதையும் செய்யவிடாமல் தடுத்து நிறுத்தியது.

"இப்படியே விட்டுக்கொண்டு போனால், பையன் நிச்சயமாகக் கெட்டொழிந்து போவான். காலணுவுக்கு உதவமாட்டான், எதிர்காலம் அவனைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கும். எங்காவது 'ஒன்றை'ப் பார்த்து, அவனுக்கு முடித்துவிடுங்கள். எல்லாம் சரியாகப் போய்விடும்." சில பெரிய மனிதர்கள், இப்படியோசனை வழங்கினார்கள். பெற்றோர்களின் புத்திக்கும் அது சரியென்றே பட்டது. அப்போது அதைத் தவிர வேறு ஒரு வழி இருப்பதாக, அவர்கட்குப் புலப்படவில்லை. ஒரு செல்வந்தரின் வீட்டில், நினைத்ததைச் செய்து முடிக்க என்ன தடை இருக்கப் போகின்றது?

எங்கெங்கோ வலைபோட்டுத் தேடினார்கள். பாவையைத் தேடிப் பல ஊர்களிலும் சுற்றி அலைந்தாகிவிட்டது. சரியான பெண்ணொருத்தி அவர்கட்கு கிடைக்காமலேயே இருந்தது, பெருங் கவலையை உண்டாக்கிவிட்டது. தென்கடல் முத்தை பல்லாகவும், கீழ்க்கடல் பவளத்தை வாயாகவும், நிறைமதி முகமும், மானைப் பழிக்கும் விழிகளும், மணிக்கொடி இடையும், கிளிப் பேச்சும் பொன மேனியும் கொண்ட ஒரு பொற்சிலையைத் தேடி அவர்கள் அலையவில்லை, பெண்ணிற் குரிய இலட்சணங்கள் பலவும் அமையப் பெற்று மகனுக்குப்பொருத்தமாக இருக்கும் மங்கை நல்லாள் ஒருத்தியைக் கஷ்டப்பட்டு அவர்கள் தேடினார்கள்.

கிளியான மங்கை ஒருத்தி, அவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு மேலாகவே இருந்ததை, ஒரு கிராமத்தில் பார்த்தார்கள். செடியில் பூத்திருக்கும் ரோஜா போன்றிருந்த அந்தப் பாவை அவர்கட்கு மிகவும் பிடித்துவிட்டது. அந்தக் கோதைக்கு பூஞ்சோலை என்று பெயர் சூட்டியிருந்தார்கள். பெண்ணை ஈன்றவர்களின் சம்மதத்தைப் பெற்றுக்கொண்டு, பெண்தேடிச் சென்றவர்கள் புன்னகையுடன் வீடு திரும்பினார்கள்.

இது என்ன அந்தக் காலமா? மனைவியாக வரப்போகின்றவளை, மகன் சென்று பார்த்தான். அவன் திரும்பிவந்து திருமணத்திற்குத் தடையேதும் சொல்லவில்லை. "பூஞ்சோலை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது" என்று திருவாய் மலர்ந்தான். அதுபோழ்து ஈன்றவர்கள் பெரிதும் மகிழ்ந்தார்கள்.

ஒரு சீமான் மகனின் திருமணம் எத்துணை ஆடம்பரமாக நடைபெறுமோ, அந்த ஆடம்பரத்தில் இம்மியும் குறைவின்றி 'மணவாளன்—பூஞ்சோலை' மணவிழா நடந்தேறி முடிந்தது.

அவனும் அவளும் இன்பத்தின் உச்சாணிக் கிளையிலேபோய் நின்றார்கள். கைபடாத ரோஜா அவள். கசப்புத்தட்டக் கொஞ்ச நாட்கள் ஆகும் அல்லவா? கொள்ளை கொள்ளையாக இன்பத்தை அனுபவித்தார்கள்.

ஈடு இணை சொல்ல முடியாத இந்தப் பேரின்பம், அவளுக்குச் சொந்தமாக இருந்ததெல்லாம் மூன்றே ஆண்டுகள் தான். அதற்கு மேல் அப்படி என்ன நடந்துவிட்டது? அவள் கனவில் கூட எதிர்பார்க்காத ஒரு பயங்கரத் திருப்பம், அவளின் வாழ்க்கைப் பாதையில் நடந்துமுடிந்துவிட்டது.

"கிட்டத்தட்ட நான்கு வருடங்களே முடியப் போகின்றன. கடல் போன்ற வீட்டில் 'குவா-குவா' என்று கத்துவதற்கு ஒரு குழந்தை இல்லை. இதுவரையில் எவ்வளவோ வைத்தியம் செய்து

பார்த்தாகிவிட்டது. போகாத கோயிலும் இல்லை. பணச்செலவைத்தான் நாம் கண்டது. பலன் என்னவோ பூச்சியம்தான். மலடிக்குப்போய் என்ன செய்தாலும் பலன் கிடைக்குமா? கடலில் கரைத்த பெருங்காயம்தான். என்ன செய்வதென்றே எனக்குப் புரியவில்லை?'' மணவாளனின் தந்தை பேசி முடித்தார்.

''நேற்றுக்கூட விடு தேடி ஒரு சாத்திரக்காரன் வந்தான். இனியும் குழந்தை ஒன்று பிறக்கும் என்று எதிர் பார்ப்பது, முட்டாள்தனம் என்றான். இதில் போய் அபாரமாகயோசனை செய்ய வேண்டியது என்ன இருக்கிறது? வேறொரு பெண்ணைப் பார்த்து, மகனுக்கு முடிக்கவேண்டியது தான்'' மணவாளனின் தாய் பிரச்னைக்கு ஒரு முடிவுகட்டினாள்.

ஏதோ வேலையாக, அந்த அறையின் பக்கமாக வந்த பூஞ்சோலை, மாமனாரும் மாமியாரும் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டுத் திடுக்கிட்டுப்போனாள். காய்ச்சிய ஈயத்தை அவள் செவியில் ஊற்றுவதுபோல் இருந்தது. அவள் வேதனையால் துடிதுடித்தாள்; துவண்டாள்; தூக்கம் இன்றி வருந்தினாள். கட்டுக்குலையாத அவள் உடல் எலும்பாகியது. கண்ணைப் பறிக்கும் அவள் பொன்மேனி எங்கோ ஓடி ஒளிந்துகொண்டது. மாமியாரின் சொல்லம்புகள் அவளது மென்மையான இதயத்தை, முள் போல் தைத்தது அதைக்கூட அவள் பொறுத்துக்கொண்டாள்.

தான் இன்பசுகம் கண்ட இடத்திற்கு, மற்றொருத்தி வரப் போகின்றாள். அவர்கள் நடத்துகின்ற இனபக்கேளிக்கையை இவள் பார்த்துக்கொண்டு பேசாமல் தனி அறையில் குந்தி இருக்க வேண்டும. அவள் என்ன மரக்கட்டையா? இந்தத் துன்பத்தை அவளால் எப்படிச் சகித்துக் கொண்டு இருக்கமுடியும்? கணவரின் காலைக் கெட்டியாகப் பிடித்கொண்டு, கோவென்று அழுதாள். இந்த அபலையின :கூக்குரலுக்கு அவன் எங்கே செவி கொடுத்துக் கருணை காட்டப் போகின்றான்? வாடிப்போய்விட்ட இந்த மலர் இனிமேல் அவனுக்கு எற்றுக்கு? புத்தம் புது மலரின் வரவை, ஆவலுடன் அவன் எதிர்பார்த்துக்கொண்டு இருந்தான். அவனுக்கும்'இதயம்' இருக்கின்றது!

ஒரு நாள், பூஞ்சோலை ஓடிவிட்டாள். இல்லை, தாய்வீட்டிற்கு பலாத்காரமாகத் துரத்தப்பட்டு விட்டாள். அவளுக்குத் 'தாலி' கழட்டப்பட்டது. மனைவியிருக்க, மற்றொரு பெண்ணைக் கொடுக்க பலரும் தயங்கியதே அதற்குக் காரணமாகும். பெண் வீட்டாருக்காக அவர்கள் அஞ்சவில்லை. நினைத்ததை அநாவசியமாக செய்து முடித்துவிட்டார்கள். இரும்புப் பெட்டியில் கத்தை கத்தையாக பணம் தூங்கிக் கொண்டிருந்தது. 'பணமேதான் உயிர்நாடி, என்கிற இந்தக் காலத்தில், என்ன அக்கிரமம்செய்தாலும் தப்பித்துக்கொள்ளலாம் அல்லவா? இதை அவர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள்.

மணவாளனின் இரண்டாவது திருமண வைபவம் முடிந்துவிட்டது. முதல் மணவிழாபோல் அவ்வளவு ஆடம்பரம் இல்லை. ஆண்டுகள் இரண்டு மூன்று உருண்டு விட்டன. நிலைமை என்னவோ 'மாமூலாகவே' இருந்தது. மணவாளனின் தாயும் தந்தையும் வேதனையில் நீந்தினார்கள். திரும்பவும் அவர்கட்கு பழைய எண்ணம் தலைதூக்கியது. இரண்டாவது முறையாகக் கட்டிக்கொண்டு வந்த பரிமளாவையும், அவர்கள் படுகுழியில் தள்ளப்;பார்த்தார்கள்.

பழைய சட்டையைக் கழட்டி எறிந்துவிட்டு, புதுச்சட்டை மாட்டிக்கொள்வதைப்போல், பெண் மாற்றும் தொழிலில் ஈடுபட்டார்கள். பெற்றவர்கள்தான் அப்படியென்றால், மகனாவது புத்திசாலியாக இருக்கக் கூடாதா? ஒவ்வொரு கனியாகச் சுவைத்துக் கொண்டே போகலாம் என்ற தீய எண்ணத்தை, அவன் கொண்டிருந்தான்.

கதிரவன் இன்னும் ஒரு சில நிமிடங்களுக்குள், குணதிசையில் வந்திடுவான். பெண்மயிலைத் தேடிக் கிளம்ப, துரிதமாக அவர்கள் தயார் படுத்திக்கொண்டிருந்தார்கள். இது அவர்களின் மூன்றாவது பயணம். ''இராகு காலம்' கழிந்து, அவர்கள் எதிர் பார்த்துக்கொண்டிருந்த ''நல்ல நேரம்'' வந்தது. புறப்படுகின்ற சமயத்தில், தபால்காரன் ஒரு கடிதம் கொடுத்துவிட்டுச் சென்றான்.

அன்புடையீர்!

வணக்கம். உங்கள் 'மாஜி' மருமகள்தான் கடிதம் எழுதுகின்றேன். எதை நினைத்தும் ஆச்சரியப்படாதீர்கள்.'மலடி' என்று திருவாய் மலர்ந்தீர்கள். என் அப்போதைய மாமியாரும், ''சாத்திரம்கூடக் குழந்தை பிறக்காது'' என்று சொல்லிவிட்டதுஎன்றார்கள். அதனால் நான் படுகுழியில் தள்ளப்பட்டேன். பாலைவனமாகியது என் வாழ்வு.

எனக்குப் புதுவாழ்வு அளிக்க ஒருவர் முன்வந்தார். சமுதாயத்தைத் திரும்பிப் பார்க்காத அவரின் அன்பு மனைவியானேன். புது இன்ப வெள்ளத்தை எனக்குத் தந்தார். இப்போது எனக்கொரு குழந்தை பிறந்திருக்கிறது. ஆண் குழந்தை. பெயர், 'இளங்கோவன்' என்று நானும் என் கணவரும் சேர்ந்து வைத்திருக்கின்றோம். சுகமாக இருக்கிறேன்.

உங்கட்கு என் இன்ப வாழ்வை அறிவிக்கவேண்டி, நான் கடிதம் எழுதவில்லை. எனக்குப் பின்னால் கட்டிக் கொண்டு வந்தவளையும் படுகுழியில் தள்ளப் போவதாக அறிந்தேன். ஏனோ வீணாகப் பெண் மாற்றித் திரிகின்றீர்கள். முதலில் உங்கள் மகனை, ஒரு பெரிய டாக்டரிடம் அழைத்துக் கொண்டுபோய் காட்டுங்கள். குற்றம் அங்கேயும் இருக்கலாம். இப்படிக்கு

பூஞ்சோலை.

கடிதத்தைப் படித்து முடித்த போது, அவர்கள் சிலையாகிவிட்டார்கள். கொஞ்ச நேரம் கழிந்தது. ''மலடி என்று துரத்தியவளுக்கு, மாணிக்கம் போன்ற ஒரு ஆண்குழந்தை பிறந்திருக்கிறது'' பெரியவரின் வாய் முணுமுணுத்தது. பக்கத்தில் வாய் திறவாமல் மனைவி உட்கார்ந்திருந்தாள். தலை குனிந்த வண்ணம் மகன் நின்றிருந்தான்.

இப்போதுஅவர்களுக்குப்பெண் தேடிக் கிளம்பும் உத்தேசமில்லை. அந்த எண்ணம் செத்துவிட்டது. இனித் தலையெடுக்காது.

மூலையில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்த பரிமளாவின் முகத்தில், முறுவல் தோன்றி மலர்ந்தது.

நாகி தூக்கிலிடப்பட்டதைப் பற்றி........

இவர்கள் பேசினல்.....!

ஐசன்ஹோவர்

நாகி தூக்கிலிடப்பட்டார் என்ற செய்தி என்னைத் தூக்கி வாரிப்போட்டது! காரணம், கொஞ்ச நாளைக்கு முன்னால்கூட அவர் கோடை வாசஸ்தலம் எதற்கோ போயிருப்பதாக அங்கேரி நாட்டுப் பிரதமர் காதர் சொன்னார். நானும் அப்படித்தான் நம்பினேன். நானென்ன, உலகமே அப்படித்தான் நம்பியது. எந்தத் தெளிவான விஷயத்திலும் ஏதோ சிக்கல் இருப்பதாக விளக்கம் தருவதில் நிபுணத்துவம் பெற்ற ராஜதந்திரி டல்லஸ் கூட அதை உண்மையென்று தான் எண்ணினார்.

ஆனால் திடீரென்று ஒருநாள் ரஷ்யாவிலிருந்து செய்தி வருகிறது, நாகி தூக்கிலிடப்பட்டாரென்று! நாகி பிறந்து வளர்ந்த நாடு ஹங்கேரி! அந்த நாட்டின் பிரதமராகக்கூட இருந்தவர்தான் அவர்! ஆனால் அவர் தூக்கிலிடப்பட்ட செய்தி, ரஷ்யாவிலிருந்து வருகிறது — ஹங்கேரியிலிருந்தல்ல! அதன் பிறகுதான் ஹங்கேரியப் பிரதமர் ஆதைப்பற்றி வாய் திறந்திருக்கிறார்.

அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு, தேசத் துரோகம் செய்தார் என்பது! அதனால் விசாரணைகூட நடந்ததாம்— இரகசியமாக! — உலகுக்கு அறிவிக்கப்படாமல்! எனக்கிருக்கிற சந்தேகம், அந்த விசாரணை பற்றியும், அதன் முடிவில் நாகி தூக்கிலிடப்பட்டது பற்றியும், ரஷ்யா உலகுக்கு அறிவிப்பதற்கு முன்னால், ஹங்கேரியின் பிரதமருக்கே தெரியுமா என்பதுதான்! தெரிந்திருந்தால் அவரல்லவா முதலில் வெளியிட்டிருக்க வேண்டும் இந்தச் செய்தியை? இல்லையே, ஏன்?

ஆனால் நான், என் கருத்தை அவ்வளவு தெளிவாகவும் திட்டவட்டமாகவும் கூறிடுவது நல்லதா என்று எனக்கே புரியவில்லை. அதற்குக் காரணங்கள் பல! அதில் முக்கியமானது அமெரிக்க அரசியலில் இன்றைக்கு எனக்கு ஏற்பட்டிருக்கிற நிலைதான்!

நான் சார்ந்திருக்கிற குடியரசுக் கட்சிக்கும், பாராளு மன்றத்தில் பெருவாரியாக இடம் பிடித்துக் கொண்டிருக்கிற ஜனநாயகக் கட்சிக்கும் கொள்கையிலே இருக்கிற வேறுபாடு, கோட்பாட்டிலே இருக்கிற பேதாபேதம் இன்னது

M. S. வேங்கடாசலம் M. A.,

என்று இன்னமும், எனக்கும் என் போன்ற தலைவர்களுக்குமே சரியாக விளங்கிடவில்லை. கம்யூனிசத்தை எதிர்ப்பதிலோ, முதலாளித்துவத்தை வளர்ப்பதிலோ எங்களுக்குள்ளே எந்தக் கருத்து வேறுபாடும் இடையாது. அமெரிக்காவின் செல்வாக்கு, அகிலமெங்கும் பரவ வேண்டும் என்ற அவா இரண்டு கட்சிகளுக்குமே உண்டு. ஆனாலும், ஒரு நோய் இங்கே இருக்கிறது — அது ஜனநாயகத்துக்கே உரிததான நோயோ என்றுகூடக் கருதுகிறேன், அந்த நோயால் தாக்கப்பட்டு இன்று நான் படுகிற அவதி! அம்மம்ம! என்னென்று சொல்வது?

வளம் பெருத நாடுகளுக்கு உதவி செய்ய வேண்டும் — அப்போதுதான் அங்கெல்லாம் நம்முடைய செல்வாக்கு வளரும்— என்று சொல்லித்தான் பாராளுமன்றத்தில் மசோதா கொண்டு வந்தேன்; அவ்வாறு, உதவுவதற்காக 870-டாலர் ஒதுக்கிட வேண்டும் என்று கோரினேன். ஆனால் பாராளு மன்றம் அந்தத் தொகையில் நான்கில் ஒரு பங்கினைத்தான் அங்கீகரித்திருக்கிறது! எப்படியிருக்கும் என் நிலை?

பக்கத்து நாட்டிலே பிரதமராயிருந்த நாகியை, யாருக்கும் அறிவிக்காமல், தூக்கிலிட முடிந்தது, குருஷேவால்! ஆனால் நான்? அவனது தலை வேண்டும் — இவனது உயிரை வாங்கியாக வேண்டும்—இன்னாரின குருதியைக் குடித்தாக வேண்டும — என்று கேட்டேன்! நான் கேட்டதெல்லாம் மற்ற நாடுகளுக்கு உதவி செய்தாக வேண்டும, அதற்குத் தொகை ஒதுக்குங்கள் என்றுதான்! ஆனால் என் ஆசை நிராகரிக்கப்பட்டது — குருஷேவின் ஆசை, தங்கு தடையில்லாமல் நிறைவேறியிருக்கிறது!

என்ன உலகமிது? நல்லது செய்யத் தடை — தீயது செய்யத் துணையா?

இங்கிலாந்து அரசனை, ''ரபர் ஸ்டாம்ப் அரசன'' என்பார்கள். ரஷ்யப் பிரதமர் பெற்றிருக்கிற அதிகாரமோ அளவு கடந்தது! ஆனால் அமெரிக்க நாட்டு ஜனாதிபதியின் நிலை இக்கட்டானது —இரண்டுமே சோதது.

அதிகாரம் தரப்படவில்லையென்றாலும், இங்கிலாந்து நாட்டு அரசனுக்குத் தரப்பட்டிருக்கும் அந்தஸ்து அளவு கடந்தது, மதிப்பு அளவு கடந்தது என்பது மட்டுமல்ல — பொறுப்புகள் மிக மிகக் குறைவு. அரசன் எந்தத் தவறுமே செய்ய முடியாது என்பது அந்த நாட்டு சித்தாந்தம். அதனால் அரசன் செய்கிற எந்தத் தவறுக்கும், பிரதம மந்திரியே பொறுப்பாளி! ஆனால் இங்கு?

இங்கிலாந்து அரசனுக்கோ அரசிக்கோ தரப்படுகின்ற அந்தஸ்து இந்த நாட்டு ஜனாதிபதிக்குத் தரப்படவில்லையே என்பதற்காகக்கூட நான் அவ்வளவாகக் கவலைப்படவில்லை! ஆனால் எனது செயலாளராக இருக்கின்ற ஷெர்மன் ஆடம்ஸ் மீது சாட்டப்பட்டிருக்கின்ற இலஞ்ச ஊழல் குற்றத்தின்போது என்பெயரும் அடிப்படுகிறது—என் கட்சியின் பெயரும் களங்கப் படுத்தப்படுகிறது. அடுத்த ஜனாதிபதி தேர்தலில் என் கட்சி வெற்றி பெறுமா என்றே சந்தேகப் படவேண்டிய சூழ்நிலை! அதற்காகத்தான் வருந்துகிறேன்.

குருஷேவ் பெற்றிருக்கிற அதிகாரம் எனக்கில்லை—இங்கிலாந்து நாட்டு மணிமுடிக்குத் தரப்பட்டிருக்கிற அந்தஸ்தும், நான் அமர்ந்திருக்கிற ஆசனத்திற்குத் தரப்படவில்லை! நாகி தூக்கிலிடப்பட்ட செய்தியறிந்து, நான் இதைத்தான் எண்ணுகிறேன்! ஆனால் அமெரிக்க ஜனநாயகத்தில் உள்ள சிறப்பான பண்பு இது, என்றும் கருதுகிறேன். ஏனென்றால் அதிகாரம் இருக்கிறது—அதற்கு வரம்பும் இருக்கிறது!

இருந்தாலும் பாராளுமன்றம் அதிகாரத்தை நல்ல முறையிலே நான் பயன்படுத்த முயலும்போது, குறுக்கிட்டிருக்க வேண்டியதில்லை...! உம்! என்ன செய்ய?

பண்டித நேரு

'இந்தியாவைப் பற்றிய கண்டுபிடிப்பு'' என்று புத்தகம் எழுதினேன். இப்போது எனக்கிருக்கிற ஆசை, ''உலகத்தைப் பற்றிய கண்டுபிடிப்பு'' என்றொரு புத்தகம் எழுதவேண்டும் என்பது!

இரண்டு புத்தகங்களுக்கு மிடையே நிறைய ஒருமைப்பாடுகள் இருக்கும் என்பதை என்னால் உணரமுடிகிறது. இந்தியாவைப் பற்றி எழுதும்போது சில கசப்பான உண்மைகளை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. 'பாரதம் ஒன்றுதான்' என்று இன்றைக்கெல்லாம், சென்றவிடமெங்கும் சொல்லுவதற்குக் காரணம், அது ஒன்றல்ல — என்றும் ஒன்றாக இருந்த நாடல்ல — பல இன, மொழி மக்களைக்கொண்ட உபகண்டம்—என்பதை நானே அறிவேன். அந்த உண்மைகளை — அவை எனது உள்ளத்திற்குக் கொஞ்சம் கசப்பாக இருந்தாலும் — ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று, நான் எழுதிய அந்த நூலில்! அவற்றையெல்லாம் ஒப்புக்கொள்ளாமல் இருந்திருந்தால், என்னை நேர்மையாளன் என்று யார் ஒப்புவார்கள்? என் நூலுக்கு எந்த வரலாற்று ஆசிரியர் மதிப்புக்கொடுப்பார்? அதற்கு அகில உலகப் புகழும், ஆங்கில இலக்கிய உலகத்தில் ஒரு உன்னத இடமும் எப்படிக் கிடைத்திருக்கும்?

கசப்பான உண்மைகளையும் மறைக்காமல் வெளியிடுவதுதான் வரலாற்று ஆசிரியனது பணி! அந்தப் பணியை இந்த பாரதத்தின் வரலாற்றைப் பொறுத்த வரை செவ்வனே செய்து முடித்த நான், உலகத்தைப் பற்றி எழுதினாலும் அதே கண்ணியமான பாதையைத்தான் கடைப்பிடித்தாக வேண்டும்—கசப்பான உண்மைகள் பலவற்றை ஒப்புக்கொண்டே தீரவேண்டும்!

என்ன அந்தக் கசப்பான உண்மைகள் என்பதை உலகம் அறியும் —நானே கூட நாகி தூக்கலிடப்பட்ட செய்தி எட்டியதும் வெளிப்படையாகச் சொல்லிவிட்டேன்.

உலகில் போரில்லாமல், பிணக்கில்லாமல், மக்கள் அமைதியாக வாழ்ந்திட இதோ நான் கண்டுபிடித்திருக்கும் அருமருந்து என்று, எங்கெங்கெல்லாம் சென்றேனோ அங்கெல்லாம் பஞ்சசீலத்தைப் போதித்தேன். அமெரிக்காவிலும்தான் போதித்தேன்—ரஷ்யாவிலும் எடுத்துரைத்தேன். அதை ஏற்றுக்கொள்ளாத நாடில்லை-அந்தத் தத்துவத்தின் மகத்துவத்தைப் போற்றிப் புகழாத அரசியல் தலைவனில்லை.

ஆனால், அந்தப் பஞ்சசீலம் எப்படிப் பயனற்றுப் போய்விட்டது—தத்துவார்த்த நிலையோடு நின்றுவிட்டது — என்று எண்ணும்போது என்நெஞ்சம் கொதிக்கிறது.

''அந்நிய நாடுகள் விவகாரத்தில் தலையிடக்கூடாது'' என்னும் கொள்கை பஞ்சசீலத்தில் ஒரு அங்கம்! ரஷ்யாவும் அதை ஏற்றுக்கொண்ட நாடுதான்.

ஆனால் இன்று நடந்ததென்ன? ஹங்கேரி நாட்டு விவகாரங்களில் ரஷ்யா தலையிட்டது என்பது மட்டுமல்ல—அந்த நாட்டின் முன்னாள் பிரதமரின் தலையையே வாங்கிவிட்டது! இதுவா பஞ்சசீலக் கொள்கையினை ஏற்றுக்கொண்டதற்கு அடையாளம்?

நான் உலகிற்கு உவந்தளித்த மாமருந்து பஞ்சசீலம் என்று பலர் போற்றுவதைக்கேட்டு பூரித்துப் போயிருக்கிறேன்! ஆனால், அந்தப் பஞ்சசீலம் இப்படிக் காற்றில் பறக்கவிடப்படுவதை எண்ணிடும்போது என் நெஞ்சம் கொதிக்கிறது. இந்தக் கசப்பான உண்மையை, பற்பல ராஜ தந்திரிகளைப் போல், என்னால் மறைத்துக்கொள்ள இயலவில்லை.

''உலகைப்பற்றிய கண்டுபிடிப்பு'' எழுதினால், இதனை நான் ஒப்புக்கொண்டே தீரவேண்டும்.

''போரைவிட போருக்குப் பின்னால் ஏற்படுகின்ற விளைவுகள் மிகவும் பயங்கரமானவை'' என்று நானே முன்னர் எழுதியிருக்கிறேன். அந்த வாசகங்கள்தான் இப்போது என் மனக்கண் முன்னாலே வந்து நிற்கின்றன. காரணம் என் பஞ்சசீலக் கொள்கை தோற்றது என்று நான் எண்ணும்போது அதற்குப்பின்னால் ஏற்படவிருக்கிற விளைவுகளை எண்ணிப் பார்க்கிறேன்!

விளைவுகள் என்று நான் குறிப்பிடுவது, அகில உலக அரசியல் நிலையில் ஏற்படக்கூடும் என்று நான் கருதுகின்ற விளைவுகளைப் பற்றி மட்டுமல்ல! உள்நாட்டு அரசியல் நிலையில் என்ன ஏற்படக்கூடும் என்பதை எண்ணிப்பார்க்கும்போதுதான் என் உள்ளம் மிகவும் வேதனைப்படுகிறது.

உள்நாட்டு விவகாரங்களில் நானும், நான் நடத்திச் செல்லு

கிற அரசாங்கமும் சாதித்திருக்கிற சாதனைகளை நாடறியும்! மக்களின் அல்லல் தீரவில்லை-ஐந்தாண்டுத் திட்டம் தவிடு பொடியாகிறது—திட்டக் குழுவிலிருந்து ஒவ்வொருவராக வெளியேறிக்கொண்டு இருக்கிறார்கள்.

இந்த நிலையில் என் வெளிநாட்டுக் கொள்கையிலும் எனக்குத் தோல்வியென்றால்...? எண்ணவே மறுக்கிறது இதயம்! இங்கிலாந்திலும் எகிப்திலும்--அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும்--சீனத்திலும் ஜப்பானிலும்-ரஷ்யாவிலும் மற்றும்பல நாடுகளிலும் எனக்கிருக்கிற செல்வாக்கைப் பாரீர் என்று எந்த முகத்தை வைத்துக்கொண்டு மக்களுக்கு எடுத்துச் சொல்வேன்?

''அவ்வளவு செல்வாக்கு இருந்தால், உங்கள் பஞ்சசீலத்திற்கு அவ்வளவு மதிப்பும் மகத்துவமும் இருந்தால், நாகி தூக்கிலிடப்பட்டதை உங்களாலே ஏன் தடுக்க முடியவில்லை?'' என்று கேட்டால், அவர்களுக்கு நான் என்ன பதில் சொல்ல — ''நான்சென்ஸ்'' என்பதைத் தவிர?

குருஷேவ்

நான் ஒரு மகத்தான தவறு செய்துவிட்டேன். கம்யூனிஸத்துக்கே உரித்தான இராஜ தந்திர நெறியிலிருந்து தவறிவிட்டேன்! நாகி தூக்கிலிடப்பட்டதென்னவோ உண்மைதான்! ஆனால் அந்த உண்மையை நான் வெளியிட்டுத்தான் ஆகவேண்டுமென்று என்ன இருக்கிறது? வெளியிட்டதால்தானே இடரென்று என்மீது நம்பிக்கையில்லையென்று சொல்லுகின்றன முதலாளித்துவ நாடுகளெல்லாம்,

இரும்புத் திரைக்குள்ளே என்ன நடக்கிறதென்று வெளியுலகிற்குத் தெரிந்திட நியாயமில்லை. அதனால் நாகியைப்பற்றி நான் எந்தத் தகவலும் தராமலிருந்தாலும், உண்மையை யாரறியப் போகிறார்கள்?

ஆனால் நான் எண்ணியது வேறு, நடைபெற்றது வேறு! நாகியைப் பற்றிய தகவலை நான் வெளியிட்டதற்கே காரணம், கம்யூனிஸ்டு நாடுகள் ரஷ்யாவுக்கு எந்த அளவு பணிந்துபோக வேண்டும் என்று அவைகளுக்கு வலியுறுத்துவதற்குத்தான்! இதைப் பயமுறுத்தல் என்று பலர் கருதக்கூடும்—ஆனால் பாட்டாளி வர்க்க உலகம் நிறுவப் படுவதற்கு வேறு வழி? ''உலகப் பாட்டாளி மக்களே ஒன்றுபடுங்கள்'' என்றுதானே கார்ல் மார்க்ஸ் எழுதினார்! அந்த ஒருமைப்பாட்டை நயத்தாலோ பயத்தாலோ ஏற்படுத்தித்தானே தீர வேண்டும்? உலகில் முதலில் கம்யூனிஸத்தை ஏற்றுக்கொண்ட காரணத்தால், ரஷ்யாவுக்கு அத்தகைய கடமையும் உரிமையும் இருக்கிறது! இதனை யார் மறுக்க முடியும்?

கம்யூனிஸ்டு நாடுகளுக்கிடையே இத்தகையதொரு தொடர்பு ஏற்படுத்துவதற்காகக் கடந்த ஓரிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை ''கோமின்பார்ம்'' என்றொரு அமைப்பு இருந்தது, உலக நாடுகளெல்லாம் அந்த அமைப்பைக் கண்டு ஐயமும் அச்சமும் கொண்டதால் அதனைக் கலைத்து விட்டேன், அப்படிக் கலைப்பது, ஸ்டாலின் பாதையிலிருந்து நான் விலகுகிறேன் என்று உலகுக்கு எடுத்துக்காட்ட மகத்தான ஒரு சாதனமாக எனக்குப் பயன்பட்டது, ஆனால் அதன் விளைவுகள் ....?

''நூறு மலர்கள் மலரட்டும்'' என்று மாசேதுங் ஒரு புறம் பேசுகிறார். கம்யூனிஸத்தை அடைவதற்கு ரஷ்யாவின் பாதை சிறந்ததா சீனத்தின் பாதை சிறந்ததா என்று கம்யூனிஸ்டுகளுக்குள்ளேயே விவாதம் நடைபெறுகிறதென்றால், ரஷ்யாவிற்கு உள்ள தனி மதிப்பும் மகத்துவமும் என்ன ஆவது?

நூறு மலர்கள் மலரட்டும் — வேண்டாமென்று சொல்லவில்லை! ஆனால் அந்த மலர்கள், சூரிய காந்தி மலர்களாக இருக்க வேண்டுமென்பதுதான் என் ஆசை—ரஷ்யா சூரியனாகக் கருதப்படவேண்டும்!

ஆனால் அப்படியில்லையே நிலை! ஹங்கேரியிலும் போலந்திலும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ரஷ்யாவையே எதிர்த்துப்போராட்டம், நடத்துகிறார்கள் என்றால் எப்படி அதைக்கண்டு நான் சகித்துக்கொண்டிருக்க? அந்தப் போராட்டங்களை இன்று நான் நசுக்காவிட்டால், மார்க்ஸீயப் பாதையிலிருந்து நான் விலகிப் போவதாக என்மீது புகார் ஏற்பட்டு, ஸ்டாலினுக்கு நான் கொடுத்த மரியாதையே எனக்குத் திரும்பக் கிடைத்தால்? அதுவாவது பரவாயில்லை, இறந்த பின்னாலே கிடைக்கின்ற இழிவு! பெரியா, மாலங்கோவ் இவர்களுக்கெல்லாம் ஏற்பட்டகதி எனக்கும் ஏற்பட்டுவிட்டால்?.........தவறு, தவறு! மாலங்கோவ் இன்னமும் உயிரோடு இருக்கிறார்! அப்படித்தான் மாஸ்கோ ரேடியோவிலும், ''பிராவ்டா''விலும் வெளியிடப்பட்டிருக்கும் செய்திகள் கூறுகின்றன! எனக்கு ஏற்பட்டிருக்கிற குழப்பத்தில் இப்படிச் சொல்லிவிட்டேன்! மாலங்கோவ் உயிரோடுதான் இருக்கிறார்!

எனவே ஹங்கேரியிலும் போலந்திலும் நடைபெற்ற கிளர்ச்சிகளை, ரஷ்யாவின் முழு பலத்தைக் கொண்டும் அடக்கியதற்கு முக்கிய காரணம் என்னை நானே காப்பாற்றிக்கொள்ளுவதுதான்!

ஆனால் சூழ்நிலை என்னை அதோடு நிறுத்தவில்லை! ரஷ்யாவில் ஆட்சிப் பொறுப்பிலிருப்பதைப்போல் பயங்கரமானதும் அபாயகரமானதும் உலகத்தில் வேறெதுவும் இருக்க முடியாது! துரும்பைக் கண்டாலும், அதனுள்ளே எந்த எதிரி ஒளிந்துகொண்டிருக்கிறானோ, நம்மைக் கொல்லுவதற்கு அதனுள் எந்தச் சக்தி அடைத்து வைக்கப்பட்டிருக்கிறதோ என்று அஞ்ச வேண்டிய நிலை!

அதனால் என்னைக் காப்பாற்றிக்கொள்ள என் நாட்டு கம்யூனிஸ்டுகளுக்கு என்மீது நம்பிக்கையை ஏற்படுத்த — அடுத்தொரு ஆயுதத்தையும் பிரயோகித்தேன்! அதுதான் நாகிக்குத் தூக்கு தண்டனை என்பது!

வாழ்க்கைச் செலவுப் புள்ளி

28—6—58 உடன் முடிந்த வாரத்தில் சென்னை நகரில் தொழிலாளர் பிரிவினருக்கான வாழ்க்கைச்செலவு 3 புள்ளி அதிகம் ஆனது; அரிசி, பருப்பு, காய்கறி மற்றும் மிளகாய் விலை உயர்வே இதற்குக் காரணம்.

நாகிக்கு விதிக்கப்பட்ட தூக்கு தண்டனை உண்மையிலேயே ஒரு ஆயுதம்—அதுவே எனது முடிவு என்பதல்ல! ரஷ்யாவிலிருந்து விலகிச் செல்லும் கம்யூனிஸ்டு நாடுகளுக்கு—சிறப்பாக யூகோஸ்லாவியாவிற்கு — ஒரு பாடமாக, பயமுறுத்தலாகத்தான் அதனைப் பயன்படுத்தினேன்!

ஆனால்...? ஆனால்...? என் குறி தப்பிவிட்டது? யூகோஸ்லாவிய ஜனாதிபதி மார்ஷல் டிடோ இதற்கெல்லாம் அஞ்சுவதாக இல்லை! என் குறி தப்பிவிட்டதே எனபதிலே கூட எனக்கு அவ்வளவாக வருத்தமில்லை! ஆனால் அதன் விளைவுகள்.....? ரஷ்யாவில் ஒரு குறிக்கோளில் ஏற்படும் தோல்வி என்பது ஆட்சியிலே இருப்பவர்களுக்குச் சாதாரணமானதல்ல! அதுவே தேசத் துரோகமாகவும் கருதப்படலாம்! அந்த நிலை ஏற்பட்டால்...? நினைக்கவே நெஞ்சம் நடுங்குகிறது!

ஏ. கே. கோஷ்.

என்ன இக்கட்டான நிலை! நாகி தூக்கிலிடப்பட்டார்! அவர் செய்த குற்றமென்ன? இல்லை, இல்லை! அவர் செய்ததாக நாம் சாட்டி வருகிற குற்றமென்ன? ஹங்கேரி அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்தார் என்பது!

அரசாங்கத்தைக் கவிழ்ப்பது என்? எப்போது? ஜனநாயக நாடுகளிலெல்லாம் ஒரு அரசாங்கம் சரிவர நடைபெறவில்லையென்றால் அதைமாற்ற அமைதியான முறைகளிலேயே வழிவகைகள் இருக்கின்றனவே! அந்த முறைகள் ஜனநாயகமில்லாத நாடுகளில் இல்லை! அப்படியானால் ஹங்கேரியில் நடப்பதும் ஜனநாயகம்—போலந்தில் பொலிவதும் ஜனநாயகம் — சீனத்தில் இருப்பதும் ஜனநாயகம் — ரஷ்ய ஆட்சியும் ஜனநாயக ஆட்சிதான் — என்று நான் கூறிவந்த சித்தாந்தம் என்ன ஆவது? இவையெல்லாம் "உழைப்பாளர் ஜனநாயகம்", மற்றவையெல்லாம் "முதலாளிகளின் ஜனநாயகம்" என்று நாம் சொல்லிவந்த சித்தாந்தம், யதார்த்த வாதம் என்ன ஆவது? ஒன்று நம்மை ஏமாளிகள் என்று மக்கள் கருதுவார்கள் — இல்லையென்றால் கைதேர்ந்த எத்தர்கள் என்று சொல்லுவார்கள்!

இரண்டு பெயர்களுமே அரசியல் வாதிகளுக்குக் கிடைக்கக் கூடாதவைதான். ஆனால் இன்று எனக்கு முன்னுள்ள பிரச்சனை, இரண்டில் எது பரவாயில்லை என்பதுதான்!

"நாகியைத் தூக்கிலிட்டது தவறு—அது ஜனநாயக முறையல்ல—மனிதப் பண்புக்கு அப்பாற்பட்டது" என்று இனிநானும் என்னைச் சார்ந்த கம்யூனிஸ்டுகளும் சொன்னால், "ஆகா அப்படியானால் இதுவரை ரஷ்யாவைப் பாரீர், சீனாவைப் பாரீர், என்று நீங்கள் சொல்லிவந்ததெல்லாம் தவறுதானே" என்று கேட்பார்கள்! ஆம் என்றுதானே சொல்லியாகவேண்டும்! "அப்படியானால், இதுவரை நீங்கள், அந்த நாடுகளைப்பற்றி தப்புக் கணக்கு போட்டுக்கொண்டிருந்தீர்கள், ஏமாளிகளாக இருந்தீர்கள், இல்லையா!" என்று கேட்பார்கள், மக்கள். என்ன சொல்வது அவர்களுக்கு?

ஆனால் இப்படிச் செய்வதை விட்டுவிட்டு "நாகியைத் தூக்கிலிட்டது சரிதான்" கம்யூனிஸ்டுக் கட்சி சொல்ல ஆரம்பித்தால், யார் நம்புவார்கள் அதனை? அமிர்தசரஸ் மாநாட்டில் "ஜனநாயகம்தான் நாங்கள் விரும்புகிற ஆட்சிமுறை" என்று நம்மாலே நிறைவேற்றப்பட்டிருக்கிற தீர்மானத்தை மனப்பூர்வமாகப் போடப்பட்ட தீர்மானம் என்று எப்படி ஏற்பார்கள்?

தீர்மானம் நிறைவேற்றி மாதங்கள் மூன்று நான்குகூட இன்னமும் முடியவில்லை — அதற்குள்ளாகவா இப்படிப்பட்டதோர் இக்கட்டான நிலை வந்து சேரவேண்டும்.

ஆனால், நல்ல வேளையாக, நாகி தூக்கிலிடப்பட்டசெய்தி வெளியான சமயத்தில் நான் இந்தியாவிலில்லை. இந்தியாவில் இருந்திருந்தால் செய்தி வெளியானவுடன் என் கருத்தைக் கேட்டறிந்து கொள்ள, இந்தப் பாழும் பத்திரிகை நிருபர்கள் என்னைக் குடைந்தெடுத்திருப்பார்கள்.

அதனால் எனக்கு சிந்திக்க நிறைய அவகாசம் கிடைத்திருக்கிறது. ஆனால் சிந்தனையை அதிலே செலுத்தச் செலுத்த, எனக்கு என்னென்னவோ பயங்களெல்லாம் ஏற்படுகின்றன.

முதல் பயம், ஷேக்அப்துல்லாவின் நிலையையும், நாகியின் கதியையும் எண்ணிப் பார்த்திடும்போது ஏற்படுகிறது. எனக்கென்னவோ இரண்டு பிரச்சனைகளிலும் ஏராளமான ஒருமைப்பாடு இருப்பதாகத் தோன்றுகிறது.

ஹங்கேரியும் தனிநாடுதான்—காஷ்மீரும் தனி நாடுதான். இரண்டுக்கும் தனியான அரசியல் அமைப்புகள் இருக்கின்றன. அப்படியிருக்க ஷேக் அப்துல்லாவை நேரு சர்க்கார் கைது செய்ததையே கண்டித்து நியூஏஜ் இதழில் கட்டுரை வெளியிட்டோம். நாகி தூக்கிலிடப்பட்டிருக்கிறார்! இதைக் கண்டிக்காமல் எப்படி இருக்கமுடியும் என்று எனக்கே புரியவில்லை.

எனக்கிருக்கிற அடுத்த பயம், அவ்வாறு கண்டனக் குரல் எழுப்பினால் என்ன ஆகும் என்பதுதான்! கம்யூனிஸ்டு கட்சி போய்க்கொண்டிருக்கிற போக்கைப் பார்க்கும் போது, எந்தப் பாதை இடது சாரிக் கொள்கை என்று கருதப்படும், எது வலது சாரிக் கொள்கை என்று எண்ணப்படும் என்றே என்னால் அறுதியிட்டுச் சொல்ல முடியவில்லை.

அமிதவாதக் கொள்கையை வைத்துக்கொண்டு இருந்ததற்காக ரணதீவேயைத் தலைமைப் பதவியிலிருந்து எறிந்துவிட்டு என்னை அந்த இடத்திலே அமர்த்தியிருக்கிற கட்சி, என்னிடமும் அதே முறையில் நடந்து கொண்டால்? காலமே, நீதான் எனக்கு வழிகாட்ட வேண்டும்!—என்னைக் காப்பாற்ற வேண்டும்!!

★

ஆட்சி ஒரு சாராரிடம் மட்டும் சிக்கினால், பழைய கொடுமைகளே புதிய உருவில் தோன்றும். ஒரு சாரார் மட்டுமே அரசாளலாம் என்றிருக்குமானால், சுதந்திர வீறு புரட்சிக் கனலாய்ப் புறப்படும். உலகத்தில் ஏற்பட்டுள்ள புரட்சிகளெல்லாம் இவ்வாறுதான் தோன்றியுள்ளன.

இலக்கியத்தில் பறவையினங்கள்!

[பொ. மறைமலை]

கற்றாரையும் மற்றாரையும் களி வெள்ளத்தில் ஆழ்த்தும் காவினிலே, பன்னிறப் பறவைகளின் பாங்கைக் காண்கிறோம். வண்ண மலர்களும், வளமைமிக்க மரங்களும் சூழ்ந்துள்ள அச்சோலை தன்னில் ஒரு மருங்கே குயில் இன்னிசை பாடும், அதற்கேற்றாற்போல மயில் நடனம் ஆடும். ஓடையின் மருங்கே இணைந்த புறாக்கள் காதல் மொழி பேசும்—கொஞ்சும். மரகதப் பச்சையும், மாணிக்க மூக்கழகும் கொண்ட வண்ணக் கிளிகள் எதை எதையோ பேசும்!

தாமரைத் தடாகத்திலே வெண்ணிற அன்னம் இக்காட்சிகளைக் கண்டு களிப்புற்ற வண்ணம் நீந்தும்.

இயற்கையன்னை களி நடம் புரியும் சூழலில் தன் இனங்கள் மகிழ்ந்தாடும் பாங்கைக் கண்ட பறவையினங்கள் பரவச வெள்ளத்தில் ஆழ்ந்து இங்கு மங்கும் பறக்கும். பழம்பெரு தமிழகத்தில் பகலவனது ஒளிபோல அன்புசால் அறிஞர்களும், பண்புசால் புலவர்களும் வாழ்வாங்கு வாழ்ந்து வாழ்க்கைக்கு வேண்டும வளமுள்ள கருத்துக்களைத் தங்கள் தங்கள் பாடல்களிலே பரக்கக் கூறியுள்ளார்கள்.

இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருவள்ளுவர், இளங்கோவடிகள் முதலிய பெரும் புலவர்கள் தேன் பிலிற்றும் பனுவல்களில் பறவையினங்களை உதாரணமாகக் கவியில் சேர்த்துக்கொண்டதை நாம் கண்டு இன்புறலாம்.

தலைவன் ஒருவன் ஒரு பெண்ணைக் கண்டு ஆச்சரியமுறுகிறான். காரணம்? அவள் ஏந்தெழில் பெற்ற ஏந்திழையாகத்தான் இருக்கவேண்டும். அவன் அவளைக் கண்டதும்,

"அணங்கு கொல் ஆய் மயில் கொல்லோ கனங்குழை
மாதர் கொல்மாலு மென் நெஞ்சு"

என்று எண்ணி மயங்குகிறான்.

இவள் அழகான மயிலோ? மனிதப் பெண்ணோ? என்று துணிய முடியாது நெஞ்சு மயங்குகின்றதே! என்கிறான்.

பண்டைப் புலவர் பெருமக்கள் அனைவரும் காரிகைக்குத் தங்கள் கவிதையிலே இடமளித்திருக்கின்றனர். பெண்களின் அழகை வர்ணிக்காத புலவர்களே இல்லையெனலாம். அப்படிப் பெண்களைப் பற்றிக் கூறும்போது, அவர்களின் எழில் நலத்தைப் பாராட்டுகையில் தக்க உதாரணங்கள் கொடுக்கவேண்டியிருந்தது. பறவையினங்கள் மற்றும் பலவற்றை அவர்கள் அதற்கேற்ப அமைத்துப் பண்பாடினார்கள்.

'சுற்றந்தழால்' என்னும் அதிகாரத்தின் கண் வள்ளுவர் உறவினரைப் பேணும் விதத்தை விளக்குகின்றார். சுற்றப் பெருக்கம் உண்டாக என் செய்வது? இதற்கு உதாரணமாக வள்ளுவர்,

"காக்கை கரவா கரைந்துண்ணும்"

என்றார். காக்கையானது இரையைக் கண்டதும் மறைக்காது தம் இனத்தை அழைத்து உண்ணும். அத்தகைய இயல்பினருக்கே சுற்றப் பெருக்கமும் உண்டாகும். இதை,

"ஆக்கமும் அன்ன நீரார்க்கேயுள"

என்றார். இக்குறளில் காக்கையினது சிறப்பைக் காண்கிறோம்.

"காலமறிதல்" அதிகாரத்தின் கண் இரு குறள்: காலம் இன்றியமையாததுதான். சிலர் காலத்தைப் பொன்னேபோல் போற்றிச் செயலாற்றுவர். சிலர் காலத்தை வீணே கழித்து உறங்குவர். இதனால் 'கதைகள் பேசிக் காலம் போக்காதே!' என்ற மொழியும் எழுந்தது.

பகலிலே காக்கையானது தன்னிலும் வலிய ஆந்தையை வெல்லும். அதுபோல பகைவரை வெல்லக் கருதும் மன்னர்களுக்குக் காலம் இன்றியமையாதது, என்கிறார் வள்ளுவர். காலத்தைச் சொல்லி காக்கையையும், ஆந்தையையும் காட்டுகிறார்.

"பகல் வெல்லுங் கூகையைக் காக்கை இகல் வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது"

அடுத்த குறளில் 'கொக்கு' வருகிறது.

"கொக் கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து"

'காலம் வாய்த்தபோது கொக்கைப்போல — கொக்கு மீனைக் குத்துவதுபோல தவறாமல் முடிக்க வேண்டும் என்றார்.

நாரையைப்பற்றி ஒரு புலவர் கூறுகிறார்.

"நாராய்! நாராய்! செங்கால் நாராய்!
பழம் படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர் வாய்ச் செங்கால் நாராய்!"

"நாரையே, சிவந்த கால்களையுடைய நாரையே! பனம்பழத்தின் கிழங்கைப் பிளந்ததுபோல், பவள நிறங்கொண்ட வாயையுடைய நாரையே!" என்கிறார் சத்திமுற்றத்துப் புலவர்.

கண்ணகியின் சாயலையும் நடையையும், மொழியையும் கோவலன் புகழுங்கால்,

"மா இரும் பீலி, மணிநிற மஞ்ஞை; நின்
சாயற்கு இடைந்து தண்கான் அடையவும்
அன்னம் நல் நுதல்! மென் நடைக்கு அழிந்து
நல்நீர்ப் பண்ணை நளி மலர்ச் செறியவும்
அளியதாமே சிறு பசுங்கிளியே......"

(சிலம்பு: மனை: 53: 57]

மயில் உன் சாயலுக்குத் தோற்று கானகத்தை அடைந்தது;

அன்னம் உன் நடையழகைக் கண்டு நாணி மருதநில மடைந்தது;

இளி உன் மொழிக்குத் தோற்று வருத்தமுற்றது, என்று,

கோவலன் கண்ணகியின் எழிலை வர்ணிக்கிறான் — இளங்கோவடிகள் கண்ணகியின் சாயலுக்கு மயிலையும், நடைக்கு அன்னத்தையும், மொழிக்குக் கிளியையும் உவமையாகக் கூறியிருக்கும் திறம் மகிழ்தற்குரியது.

காவிரி ஆற்றின் ஒலியும், பறவைகளின் ஓசையையும் இளங்கோ அடிகள் குறிப்பிடுகின்றார். பூம்பொழில் தன்னில் ஆம்பல் கோழியும், நாரையும், செங்கால் அன்னமும், பைங்கால்

கொக்கும், காட்டுக் கோழியும் நீர்க்காக்கையும், உள்ளான் பறவையும், குருவைப்பறவையும், புள்ளும், பெருநாரையும் ஆக இவைகளின் ஓசைகள் 'வெல்போர் வேந்தர் முனையிடம் போல' ஒலித்தன என்கிறார்.

"...கம்புள் கோழியும் கனைகுரல் நாரையும்
செங்கால் அன்னமும் பைங்கால் கொக்கும்
கானக் கோழியும் நீர்நிறக் காக்கையும்
உள்ளும் ஊரலும் புள்ளும் புதாவும்
வெல்போர் வேந்தர் முனையிடம் போல
பல்வேறு குழூஉக்குரல் பரந்த ஓதையும்"

(சிலம்பு: நாடுகாண் 114—119)

பழங்காலத்தில் பாணர்களும் விறலிகளும்பண்ணிசைத்துப் பார் வேந்தர்களின் பரிசில்கள் பெற்றதைப் பண்டை இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. வறுமையுற்றக் காலத்தில் பாணர்கள் மன்னர்களைத் தேடிச் சென்று, அவர் தரும் பொருள் பெற்று மகிழ்வர். இதனைப் புலவர்கள் கூறும்போது, பரிசில் தரும் வள்ளலைத் தேடிச் செல்லும் புலவரின் வாழ்க்கையைப் 'பழுமரம் தேடிச் செல்லும் பறவை போன்றது' என்றனர். இதை பெரும் பாணாற்றுப் படை, மலைபடுகடாம் முதலிய நூல்கள் விளக்குகின்றன.

"பழுமரம் தேடும் பறவை போலக்
கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண"

(பெரும்பாணாற்றுப்படை 20—22)

"நீயிரும்
கனிமொழி காவம் கிளையோடு உனீஇய
துணைபறை நிவக்கும் புள்ளினும் மான...
உள்ளினிர் சேறிர் ஆயின்"

(மலைபடுகடாம் 53—65

'அசுணமா' என்றொரு பறவையுண்டு அது இன்னிசை கேட்டு மயங்கும். அதனைப் பிடிக்க எண்ணுவோர், இனிய யாழ் வாசிப்பராம். அது கேட்டு அது மகிழ்ந்து இருக்குமாம். அப்போது அதைப் பிடித்துக்கொள்வார்களாம். இன்னா இசை கேட்டால் வீழ்ந்திடுமாம்.

'இசைகொள் சீறி யாழின்னிசை கேட்ட
அசுண நன் மாவந்நிலைக் கண்ணே
பறையொலி கேட்டுத்தன்படி மறந்ததுபோல'

(பெருங்கதை, உஞ்சை 1-47 241-3)

இதுபோன்று பலப்பல கருத்துக்களை எடுத்தெழுதலாம். அவைகளையெல்லாம் விரிக்கின் கட்டுரை பெருகும்!

★

இதுதான் உலகம்!

—[ச. வே. பாண்டியன்]—

மேதை "கோல்டுசிமித்" குறிப்பிட்டுள்ளபடி எண்ணத்திற்குக் கடிவாளமிட முடியுமா என்ன? எண்ணங்கள் எங்கெங்கோ சிறகடித்துச் சென்று வருகின்றன. ஆம்! இரண்டு ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம் ஒன்று எண்ணக் கோவையில் நன்ருகப் படுகிறது!

அன்றுதான் என் தலையில் பேரிடி ஒன்று விழுந்தது! இயற்கை எனனை மாளாத வருத்தத்தில் உழலும்படி செய்துவிட்டது. தாங்கொணுத் துயரத்தை என்மேல அள்ளித் தெளித்துவிட்டது — காலம். ஆம்! என அருமை அண்ணனை இப்பூவுலகம் தாங்காது தன வயிற்றிற்குள் இழுத்துக்கொண்டுவிட்டது. எப்படித் தாங்கிக்கொள்ள முடியும இப்பிரிவை? துயரத்தால் துடித்தேன்!

போகக்கூடிய பருவமா என்ன? முப்பத்து இரண்டு வயதடைந்த வாலிபர்! உருண்டு, திரண்ட கருத்த மேனி! எடுப்பான தோற்றம! மறைந்துவிட்டான் என்பதை எப்படித் தாங்கிக்கொள்வேன்?

எல்லார்க்கும் ஏற்படுவது தானே என்று இயல்பாகக் கூறி வருத்தப்படுவதற்கில்லை. ஏனெனில் அவருக்கும் எனக்கும் இருந்த தொடர்பு மிகவும் அருமையானதாகும்! என் எதிர் காலத்தைப்பற்றி உயர்ந்த கனவு கண்டுகொண்டு அது நிறைவேறும் நாளை ஆவலோடு எதிர் பார்த்துக்கொண்டிருந்தவர்! எனது வளர்ச்சியைத் தனது வளர்ச்சியாகக் கருதியவர்! நான் ஒரு பட்டத்தை எட்டிப்பிடிக்கும் அளவிற்கு வந்திருக்கிறேன் என்றால் அதற்கு அடிகோலியவர் என் அண்ணனே! பகுத்தறிவுப் பாதையை எனக்குக் காட்டியவர். எனக்கு மட்டுமா? இல்லை, எங்கள் கிராமம் முழுதும் பகுத்தறிவு ஒளி பெற்றுத் திகழவும், பாடுபட்டவர் —எனது அருமைச் சகோதரன் அவர்கள்!

இப்படிப்பட்ட தூயவர்—தொண்டு மனப்பான்மை உள்ளவர்—இனிய உள்ளபடைத்தவர் திடீரென்று இறந்துபட்டார் என்றால் தாங்கிக்கொள்ளக் கூடிய செய்தியா என்ன? மீளாத சோகம் கொண்டேன். துயரக் கடலில் தத்தளித்தான்! தோழர்கள் தேற்றியும் தெளிவு பெற முடியவில்லை!

சரியாக இருபது நாட்கள் நல்லபடி உணவு அருந்த முடியவில்லை. தினசரி அலுவல்களை மறந்தேன். செய்தித் தாள்கள் பார்த்தறியவில்லை. கழக இதழ்களை வாசிக்கவில்லை. கடிதங்கள் உடைக்கப் படாமல் கிடந்தன. இப்படி இருபது நாட்கள்.

கடைசியில் எப்படியோ ஒருவாறு தேறினேன். அலுவல்களைப்பார்க்கமுற்பட்டேன். எனது மேஜையை முதல்முதலில்பார்த்த போது இதழ்களும், கடிதங்களும் நிறைந்துகாணப்பட்டன. முதலில் கடிதங்களைப்படித்து ஒதுக்கிவிடுவது என்று தீர்மானித்தேன்.

ஒரு 'கவரை' உடைத்தேன். உள்ளே "திருமண அழைப்பிதழ்" ஒன்று இருந்தது. திருவாளர் சந்திரனுக்கு திருமதி சந்திராவை திருமணம் செய்ய விருப்பதாக அதில் இருந்தது!

சந்திரன் — சந்திரா நல்ல பெயர்ப பொருத்தம் என்பீர்கள்! பெயரில் மாத்திரமல்ல; ஜோடிப் பொருத்தமும் அப்படித்தான். சானும், சந்திரனும் கல்லூரியில் ஒரே வகுப்பில் பயின்று வருபவர்கள். சந்திரன், சந்திராமீது காதல் கொண்டலைந்தது அநேகமாக எல்லோருக்கும் தெரிரிம். இளியோவின் காதலனுக சந்திரன் விளங்கினுன். சந்திராவோ அவனை 'அந்தோனி' யாகவே பாவித்துவந்தாள். ஆனுல் ஒரே ஒருகுறை! சந்திரன் ஏழை என்பதுதான். இதனுல்தான் சந்திரனுக்கு, படித்துக்கொண்டிருக்கும் போதே கலியாணம் செய்துவிட வேண்டும் என்று அவன் பெற்றோர்கள் விரும்பினுலும் காலதாமதமாயிற்று.

எப்படியோ காரியம் முடிந்திருக்கிறது என்பதைத் 'திருமண அழைப்பிதழ்' காட்டுகிறது. அழைபபிதழோடு ஒரு கடிதமும் இருந்தது. அதில் "என் இலட்சியக் காதல் நிறைவேறுமா என்று சந்தேகித்துக்கிடந்தேன். இப்போது உறுதியாகிவிட்டது. எனவே என உள்ளம் மகிழ்ச்சிக் கூத்தாடுகிறது. இம் மகிழ்ச்சியில் கலந்துகொள்ள ஓடோடியும் வந்துவிடு......" என எழுதியிருந்தான!

மகிழ்ச்சி என்கிருன் நண்பன், மகிழ்ச்சியின் விளைவு அவனது பரமபரை வளர்ச்சியுறுவதற்கு வித்தாகிறது! ஆம்! இவர்கள் சந்ததியை உண்டாக்கத் தயாராகி விட்டார்கள்!

நள்ளிரவில் கொட்டுச் சத்தம் கேட்டது. எண்ணம விடுபட்டு விட்டது. ஏன மேளச் சத்தம் எனப் பார்க்க வெளியே வந்தேன். மொட்டை மாடியில் நின்று கீழ கவனித்தேன். ஒரு சிறு ஊர்வலம சென்றுகொண்டிருந்தது. அது ஒரு 'சடங்கு' ஊர்வலம!

எங்களூர் ஏகாம்பர நாடார் மகள் பூபமபெய்தியமைக்காக நடத்தப்படும சடங்கு அது. ஏராள மான பெண்கள் தாமபாளத்தில் சேலை, பழங்கள் ஏந்தியபடி சென்றுர்கள். பலர் வெள்ளி, பித்தளை பாத்திரங்களைச் சீதனமாக்கச் சென்றுர்கள்!

எல்லோருக்கும் முன்னுல் முல்றுமாப்பிள்ளைப் பையன் பட்டாத் துண்டு போட்டுக்கொண்டு கம்பீரமாகச் சென்றுகொண்டிருந்தான். தனது முறைப் பெண்ணிற்கு சீதனமாகப் பெரிய கொம்புக்கிடாய் ஒன்றைக் கையில் பிடித்திருந்தான்! குழலோசை 'ஆலாபனை'யால் ஊரையே அலறச் செய்தது. மேளகாரன் தகுந்தபடி கொட்டித் தள்ளினுன். ஊர்வலம் மெல்ல மெல்ல நகர்ந்துகொண்டிருந்தது.

கூட்டத்தினர் எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி ரேகை படர்ந்திருந்தத. தரித்திரர்கள் பலர் ஊர்வலத்தில் வந்தாலும் அந்நேரம் சந்தோஷத்தோடுதான் தென்பட்டார்கள்!

ஊர்வலம் கண்பார்வையினின்றும் மறைந்துவிட்ட பின் மேடையின உள் அறைக்குள் நுழைந்தேன். நான் நுழைந்ததுதான் தாமதம் யாரோ கதவைத்தட்டிக் கூப்பிடும் சப்தம் கேட்டது.

"யார் அது?" என்றேன்.

"நான்தான் அருணுசலம்" பதில் குரல்.

"அண்ணுச்சியா... என்ன இந்த நேரத்தில் கதவைத் தட்டுகிறீர்கள்!"

"ஒன்றுமில்லை! ஒரு நல்ல சேதி..."

"என்ன அப்படிச் செய்தி?"

"என் மனைவி குழந்தை பெற்றிருக்கிருள்"

"அப்படியா...... மகிழ்ச்சி. குழந்தை ஆணு, பெண்ணு..."

"ஆண் குழந்தை"

"அபபோ மகிழ்ச்சிதான்"

"வந்து... அவளுக்குக் கொஞ்சம் மருந்து தயார் செய்து கொடுக்க வேண்டியதிருக்கிறது. கொஞ்சம் இஞ்சி தேவை. இருந்தால் கொடேன்."

"இதோ... தருகிறேன்."

வீட்டிற்குள் சென்று தேடியலைந்து அதை எடுத்துக்கொடுத்தேன. அவருமபெற்றுக்கொண்டு போய்விட்டார்.

மீண்டும் இருப்பிடம் வந்து சேர்ந்தேன். அடுத்தடுத்து நடந்த மூன்று சம்பவங்களும் எண்ணத்திற்கு வேலை கொடுக்கலாயின. சிந்திக்க, சிந்திக்க இச்சம்பவங்களுக்கும், உலக இயல்புக்கும் ஏதோ தொடர்பு இருப்பதுபோல் தென்படுகிறது!

உண்மைதான்! நானே அண்ணன் மறைவிற்காக அழுது கலங்கிப்போய் இருக்கிறேன். துக்ககரமான நிகழ்ச்சி!

திருமண அழைப்பிதழோ வா... வா...திருமண விழாவில் கலந்து கொள், மகிழ்ச்சியில் பங்கு கொள்ளவா...எனப் பறையறைவதுபோல் இருக்கிறது, இங்கே மகிழ்ச்சி!

சடங்கும் அப்படித்தான்! தன் மகள் பூப்பெய்திவிட்டாள் என் பதிலேதான் என்ன பூரிப்பு பெற்றோர்களுக்கும், உற்றுர்களுக்கும், இங்கும் மகிழ்ச்சிகரமான செய்தியே!

குழந்தை பிறந்ததிலுலே களிப்படைகிருன் தகப்பன். எதிர்கால வாரிசு கிடைத்துவிட்டதே என் பதிலே அவன் காணும் களிப்புத்தான் என்னே! மங்களமான சூழ்நிலை இங்கும்!

நான் வசிக்கும் அதே ஊரில் அடுத்தடுத்து இதே சம்பவங்கள்! "நீ அண்ணனை இழந்து தவித்தால் என்ன? நீ துக்கத்தில் ஆழ்ந்திருந்தால் என்ன? உனக்காக ஊரே உன்னோடு சேர்ந்து எப்பொழுதும் அழுதுவிடுமா? போடா! பைத்தியம்! நீ எப்படிக் கிடந்தால் என்ன? உன்னோடு எல்லாம் அடங்கிவிடாது! இதோ பார் உன் நண்பனின் திருமணம்! இங்கேபார் சடங்கு ஊர்வலத்தை! குழந்தை பிறந்த மகிழ்ச்சியைப் பார்! நீ முக்காடிட்டுக்கொண்டு இருந்தாலும இவைகளெல்லாம் வந்துகொண்டும், போய்க்கொண்டுமதான் இருக்கும்! 'இதுதான் உலகம்' உணர்ந்துகொளளப்பா நீ" என்று இவைகள் எனக்குப் பாடம் புகட்டும் வகையில் இருந்தன.

சிந்தனையினின்றும் விழித்துக்கொண்டேன். இரண்டாண்டுகட்கு முன் நடந்த சம்பவத்தின் கோவையாக இது இருப்பினும் அதில் ஒரு சிறந்த தத்துவமே பொதிந்திருக்கிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

★

இராமன் ராஜிநாமா!

[தி. மு. க.வின் தொண்டர்படை வரிசையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, உற்சாகப் பணிபுரியும் ஆர்வக்காளை தோழர் வி. பி. இராமன் சட்ட நிபுணர். "பார்ப்பனியத்தை" விடாது நிலைநாட்ட போராடும் உயர் சாதியினர் என்போரின் மத்தியிலிருந்து கழகத்துக்குக் கிடைத்த நல்ல நண்பர்.

அவர், சட்டக் கல்லூரியின் ஒய்வு நேர விரிவுரையாளராக இருந்தார். கழகத்திலும், 'ஹோம்லேண்ட்' இதழிலும், அவர் கொள்ளும் ஈடுபாடுகளைக் கண்டு மனம் பொறுத அரசு, புதுக் கட்டளை பிறப்பித்தது.

கொள்கைக்காக, பதவியை உதறிட முன் வந்து, அரசுக்கு அனுப்பிய அவரது கடிதம் கீழே. உறுதி கொண்ட இராமனைப் பாராட்டுகிறோம்.]

●

திராவிட முன்னேற்றக் கழகத்தின்பால் நீங்காத பற்றும், அதன் வளர்ச்சியிலே பெரும் அக்கறையும் கொண்டோரில் வழக்கறிஞர் வி. பி. இராமன் அவர்களும் ஒருவர். கழகநடவடிக்கைகளில் இடையறாது ஈடுபட்டு, பாடுபட்டு வருபவர் அவர்.

அவர் திறமைமிக்க வழக்கறிஞர் என்பதோடு, சென்னை சட்டக் கல்லூரியிலும் பகுதி நேர விரிவுரையாளராகப் பதவி வகித்துவந்தார்.

"தோழர் இராமன் அவர்கள் இயக்கத்திலே பேரார்வத்துடன் பணிபுரிவது சிலருக்கு வியப்பாக இருக்கலாம். அவர் ஒரு 'பிராமணர்' என்ற காரணத்தால்! ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் 'பிராமணீயம் மட்டுமே ஒழியவேண்டும்' என்ற கொள்கைக்கு ஓர் எடுத்துக்காட்டாக அவர் விளங்குகிறார். ஆகவேதான் உங்களால் பாராட்டப்படுகிறார்..."

—என்ற பொருள்பட திருவாரூரில் நடைபெற்ற தஞ்சை மாவட்ட மூன்றாம் மாநாட்டிலே தலைமை வகித்த தோழர் மதியழகன் அவர்கள் குறிப்பிட்டார்.

அதற்கு பதிலளிக்கும் பாணியில் தோழர் இராமன் அவர்கள் "நான் ஒரு பிராமணனல்ல; திராவிடன் என்று சொல்லிக்கொள்வதில் பெருமை அடைபவன்!" என்று சொன்னார்.

ஆனால் ஆட்சியினர் பொதுப்பணியிலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு வழக்கம்போல் தந்துவருகின்ற தொல்லைகளை தோழர் இராமன் அவர்களுக்கும் தரத் துவங்கினர்.

ஆகவே, வழக்கத்திற்கு மாறாக சட்டக் கல்லூரி பகுதி நேர விரிவுரையாளர்களின் அரசியல் ஈடுபாட்டு உரிமைகளைப் பறிக்கும் விதத்தில் புதிய புதிய விதிகளைக் கொணர்ந்தனர். தோழர் இராமன் அவர்கள் ஒன்று அரசியலைக் கைவிட்டுவிட வேண்டும்; அல்லது சட்டக் கல்லூரிப் பதவியை விட்டுவிட வேண்டும் என்ற இக்கட்டான நிலைக்குத் துரத்தப்பட்டார்.

இறுதியில் அவர் சென்ற 12-7-58 அன்று. தன்னுடைய சட்டக் கல்லூரிப் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார் என்ற செய்தி கிடைத்தது! அந்த ராஜிநாமாவுக்குப் பின்னால் மறைந்து கிடக்கும் அவரது தொண்டுள்ளமும், ஆட்சியினரது கோணல் போக்கும் நாட்டுக்குப் புரிந்தது. .

பகுதி நேர விரிவுரையாளர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்ற வாதம் முரணானது என்பதற்கு ஆயிரமாயிரம் ஆதாரங்களை எடுத்துக் காட்ட முடியும்! எத்தனையோ அரசியல் தலைவர்கள் சட்டக் கல்லூரியின் போதகர்களாக இருந்திருக்கிறார்கள்!

○ இன்று இந்தியக் குடியரசுத் தலைவராக இருக்கின்ற இராசேந்திர பிரசாத்திற்கு ஒரு காலத்தில் கல்கத்தா சட்டக் கல்லூரி இடம் கொடுத்திருக்கிறது!

சென்னை சட்டக் கல்லூரியில் பணியாற்றிய எவ்வளவோ பேர் வெறும் ஆசிரியர்களாகமட்டுமல்ல; அரசியல் மேதைகளாக — ஆட்சியிலே பங்கு கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள்.

○ வி. கிருஷ்ணசாமி ஐயர் (1892—95) பி. என். சிவசாமி ஐயர் (1893—99) — ஆகியோர் சட்டக் கல்லூரி பணியாளர்கள்தான்— ஆனாலும் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் பிரமுகர்கள் என்ற அளவில்தான் நாடு நன்கு அறிந்திருந்தது அப்போது!

○ எஸ். துரைசாமி (1916-20) யின் அரசியல் நடவடிக்கைகளை. யாரும் மறந்திருக்க முடியாது—அவர் ஒரு தீவிர காங்கிரஸ்காரர்!

○ நீதிக் கட்சியின் பிரபல தலைவராக இருந்த மதனகோபால்நாயுடு, 1921-ம் ஆண்டில் சட்டக் கல்லூரியின் பகுதி நேர விரிவுரையாளராக பணி புரிந்திருக்கிறார்.

○ என். சிவராஜ், லக்கப்பராய்— ஆகியோர் சட்டக் கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் தேர்தலிலும் போட்டியிட்டிருக்கிறார்கள், நீதிக் கட்சியின் சார்பில்!

○ வடாற்காடு மாவட்டத்தின் காங்கிரஸ் கட்சியின் வலுவுள்ள தூணாக விளங்கிய வி. எம். இராமசாமி முதலியாரும் பகுதி நேர விரிவுரையாளர் பதவி வகித்தவர்தான் 1925-முதல் 31-வரை!

அப்போதெல்லாம் இல்லாத சட்டம்—ஜனநாயகம் பேசுகின்ற காங்கிரஸ் சர்க்காரால் இன்று பிரயோகிக்கப்படுகிறது என்றால் அதன் உட்பொருள் என்ன? எதிர்க் கட்சிகளுக்கு இருக்கின்ற செல்வாக்கைக் குறைக்க வேண்டும்; அவைகளில் ஈடுபாடு கொண்டிருப்போரின் ஆர்வத்துக்கு உலைவைக்கவேண்டும் — என்பதைத் தவிர வேறென்ன இருக்க முடியும்?

அந்தத் தீய எண்ணத்திற்குப் பலியாகாத தோழர் இராமன் தனது இராஜிநாமா கடிதத்தில் இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்:

1957, செப்டம்பர் 9-தேதியிட்ட உத்தரவு ஒன்றின் மூலம், சென்னை சர்க்கார், என்னை சட்டக் கல்லூரியில் பகுதி நேர விரிவுரையாளராக நியமித்தது. அந்தத் தேதிக்கு முன்கூட, 1956-பிப்ரவரி முதல் தேதியிலிருந்து அவ்வப்போது, அந்தப் பதவியைத் தற்காலிகமாக வகித்து வந்திருக்கிறேன். மேலும், பொதுப் பணித் தேர்வுக்குழுவும் என்னைத் தேர்ந்தெடுத்திருந்தது.

பொது விவகாரங்களில் நான் மிகுந்த ஆர்வம் காட்டி வந்திருக்கிறேன். சர்க்கார் என்னை விரிவுரையாளராக நியமித்தபோது. எனது பொதுவாழ்வு பற்றி அறிந்தே இருக்கவேண்டும்.

நான் பதவியை ஒப்புக்கொண்டபோது, பதவிப் பெயர் குறிப்பிடுவதுபோல, அது ஒரு பகுதிநேரப் பணி என்ற உண்மையான முழு நம்பிக்கையில்தான் ஒப்புக்கொண்டேன். இங்கும் மற்றும் இதர சட்டக் கல்லூரிகளிலும் உள்ள பகுதி நேர விரிவுரையாளர்கள், நெடுங்காலமாகக் கல்லூரிக்கு வெளியே அனுபவித்து வருகிற சுதந்தரம் நமக்கும் தரப்படும் என்ற நோக்குடன்தான் பதவியை ஒப்புக்கொண்டேன். சட்டக்கல்லூரிகளில் பகுதி நேர விரிவுரையாளர்களாயிருந்தவர்கள், இதர துறைகளிலும் நாட்டுக்குச் சேவை செய்திருக்கின்றனர்.

எனவே, கடந்த மார்ச்சு திங்கள் 14-ந்தேதி யன்று, சட்டக் கல்விக்கான இயக்குநர் என்னை அழைத்து, ஒரு பகுதி நேர விரிவுரையாளர் அரசியலில் தீவிர ஈடுபாடு கொள்வது நல்லதல்ல என்று தெரிவித்தபோது, நான் ஆச்சரியமடைந்தேன், ஒரு பகுதி நேர விரிவுரையாளருக்கு உள்ள சட்டபூர்வமான உரிமைகள் பற்றியும், எதிர்கால, அரசியல் வாழ்வுபற்றியும் தீர ஆராய்ந்தேன்; சர்க்கார் ஊழியருக்கான நடத்தை விதிகளை ஆராய்ந்தபோது முழுநேர சர்க்கார் ஊழியர்களுக்கு விதிக்கப்படும் எந்தக் கட்டுபாடுகளுக்கும் நான் உட்படுத்தப்பட முடியாது என்பதைத் தெளிவாக உணர முடிந்தது.

உதறிவிட நான் முடிவு செய்துவிட்ட சம்பளமோ, அல்லது உத்தியோகமோ என்னை நான் விரும்பும் வழி நடப்பதிலிருந்து விலக்கிவிட முடியாது; திருத்தங்களைச் செய்ததின் மூலம், சர்க்கார் விதிகளுக்குக் கட்டுப்பட்டு நான் நடப்பேன் என்று சர்க்கார் எதிர்பார்த்திருக்குமானால், அது தவறாகும். எனது கட்சியிடம் நான் கொண்டுள்ள பிடிப்பை, அது தவறாக மதிப்பதாகும். செய்யப்பட்டுள்ள திருத்தம். மாநிலத்தில் பகுதி நேர ஊழியத்தின் தன்மையில் சட்ட விரோதமாக இல்லாவிடினும், அநியாயமாகச் செய்யப்படும் மாற்றம் என்பதையும் நான் குறிப்பிடாமலிருக்க முடியாது. மேலும் எனது அரசியல், ஆளும் கட்சிக்கு விரோதமானதாயிருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக சர்க்கார் எனது அரசியலைக் கட்டுப்படுத்த நினைத்து, விதிகளைத் திருத்தும் அளவு நடவடிக்கை எடுத்ததானது மிக வருத்தப்படவேண்டிய ஒன்றாகும். இந்த அரசியல் நோக்கத்தோடு, விதிகளைத் திருத்த சர்க்கார் முற்பட்டதானது தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதாகும்."

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

—என்று கேட்டால், பதிலளிக்க முன் வருகிறார்—வடக்கு ஒன்றும் வாழ்ந்துவிடவில்லையாம். தென்னாட்டில் வளம் பெருகியுள்ளதாம். நேருவின் மாகாணமான ஐக்கிய மாகாணத்தில் எதுவும் கிடையாதாம்! வக்கீலாகி, பதில் அளிக்க முன்வருகிறார்! நிரூபித்தால், பொதுவாழ்விலிருந்தே விலகி விடுகிறேன் என்கிறார்!!

●

வைர அட்டிகை இருக்கிறதோ இல்லையோ, மானேஜர், மானேஜர் தான்! அதுபோல, தென்னாட்டைவிட ஐக்கிய மாகாணமும் ஏனைய பகுதிகளும் முன்னேறியிருக்கின்றனவோ இல்லையோ, அவைகள் தான் நமக்கு எஜமானர்!!

இதனை, இல்லையென்று மறுக்க முடியுமா நிதியமைச்சரால்.

சின்னஞ்சிறு நாடு இலங்கை— சென்ற ஆண்டு வெளி நாடுகளுடன் வாணிபம் நடாத்தியதில் 2-கோடி ரூபாய். இலாபம் பெற்றோம் என்று அறிவிக்கிறது.

2-கோடியா! பூ!! — எனலாம், நிதியமைச்சர். ஆனால், ஏதாவது ஒரு வெளிநாட்டுடன் ஒருபடி மிளகைவிற்று, இரண்டு ரூபாய் சம்பாதிக்கும அதிகாரம் உண்டா இவருக்கு? அது இருக்கட்டும், செல்லுமிடந்தோறும், இங்கே இந்த ஆலைகளை அமைக்கலாம் அங்கே அந்த ஆலைகளைக் கட்டலாம் என்கிறாரே, யாராவது முன் வந்து ஒரு ஆலை கட்டலாம் என்றால் உடனே அனுமதிக்க அதிகாரம் உண்டா இவருக்கு? போகட்டும், சதாரண தபால் தலைகளில், வள்ளுவரையும் பாரதியையும் பொறிக்கும்படி விரும்பினால், செய்யமுடியுமா இவரால்? நயா பைசா வந்ததே, அதன் பெயர் அப்படியிருக்கக் கூடாது என்று இவரால் அடித்துச் சொல்ல முடிந்ததா? எல்லாக் கட்சியினரும் சேர்ந்து கேட்டார்களே, சென்னை மாநிலத்துக்கு, 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்கவேண்டுமென்று, செய்ய முடிந்ததா இவரால்?

என்ன அதிகாரம் இருக்கிறது இவரிடம்—ஏதாவது ஒரு சட்டம் செய்தாலும், அதற்கு கவர்னர் அங்கீகாரம் வேண்டும்—கவர்னரோ, டில்லியின் தூதுவர் — டில்லியோ, அரசியல் சட்டமூலம், மாகாணங்களை எடுபிடியாக்கி வைத்திருக்கிறது—இப்படிப்பட்ட நிலையில், வடக்கு எங்கே தெற்கை வஞ்சிக்கிறது, தெற்குத்தான் சுகமாக வாழ்கிறது எனகிறார்!!

வஞ்சிப்பது என்பதற்கு, பல விளக்கங்கள் தரலாம்.

சுகமாக வாழ்வது என்பதற்கும், பொருள் பல உண்டு.

கூண்டிலேயிருக்கிறது, கிளி! தங்கத்தாலான கூண்டு—வேளா வேளைக்கு விதவிதமான கனிகளை வைக்கிறான் — நிமிடத்துக்கொரு தரம் போய் கொஞ்சுகிறான—கிளியைச் சுகமாக வைத்திருக்கிறேன், பட்டு மெத்தை, பழவகை, கிரீச் சென்றால் ஓடுவேன, கவனிப்பேன், எவ்வளவு சுகமாகயிருக்கிறது தெரியுமா—என்று சொல்லலாம்! கிளிக்கு, அதுவா சுகம்? என்பதை உணர்ந்து, இறந்துவிட்டாலும் ஓடாமலிருந்தால், அப்போது சொல்லலாம்! அதை விட்டு, நாமே சொல்லுவதால், கிளி சுகம் அடைவதாகவா எண்ண முடியும்!!

நாம் 'சுகம்' என்று கருதுவது, கிளிக்கு வேதனையாக இருக்கலாம். அதேபோல, அமைச்சர் சுப்ரமணியம், "முன்னேற்றம்" அடைந்து இருப்பதாகக் கருதுவது, அவருடைய தரத்துக்கும் திறமைக்கும் வேண்டுமானால் உயர்ந்ததாக இருக்கலாமே ஒழிய, விடுதலை விரும்பும் நாம் எப்படி ஏற்க முடியும்? ரோமாபுரிக்கும் கிரேக்கத்துக்கும் முத்தையும் பட்டையும் அனுப்பிய தமிழகத்தை நாம் பார்க்கிறோம்! இன்றுள்ள ஐக்கிய மாகாணமும், ஏனைய பகுதிகளும் 'இந்தி' எனும் ஒரு மொழியைப் பெற்றிலாத காலத்திலேயே, ஏற்றமும் எழிலும் இலக்கண அமைப்பும் நிரமபி வழிந்த தமிழினைக்கொண்டிருந்த தாயகத்தைப் பார்க்கிறோம்! அந்தப் பழம் பெரும் நிலை, மீண்டும் வரவேண்டுமெனத் துடிக்கிறோம். நமது கனவு பெரிது! சுப்ரமணியனுக்கு இக்கனவிலுள்ள அருமை புரியாது; எனவே, அவர் 'கடுகு' கிடைத்தாலும், களிப்பு அடைய முடியும்!! ஆனால், அதையே "அளவுகோலாக" வைத்து, புத்தி மதிகூறக் கிளம்பலாமா? கிளம்பிடினும்தான, கேட்பார் எவர்!!

வடக்கு எங்கே வஞ்சிக்கிறது— வஞ்சித்தால், நேருவின் ஐக்கிய மாகாணம் சிறந்து விளங்கவேண்

டுமே?-என்று கேட்கிருர், அமைச்சர். ஐயோ, பாவம்! காங்கிரஸ் கட்சியில், சகலவிபரமும் தெரியக்கூடிய இடத்திலிருப்பவர் என்று எண்ணியிருந்தோம் — அது கூட இல்லை, என்று தெரிகிறது!!

இன்றுள்ள அகில இந்திய காங்கிரசையே, ஆட்டிப்படைப்பதும், இந்தி விஷயத்தில் வெறித்தனமாகயிருந்து படாத பாடுபடுத்துவதும் ஐக்கிய மாகாணம்தான்.

அதனுல், ஐக்கிய மாகாணம், "முன்னேறிவிட்ட" மாகாணம் என்று சொல்லிவிடமுடியுமோ, என்று வாதாட முன்வரலாம் தோழர் சுப்ரமணியம். "முன்னேற்றம்" என்பதற்குள்ள அரிச்சுவடியைக்கொஞ்சம அவர் உணர வேண்டும்.

எது முன்னேற்றம்?--இங்கிலாந்தை முன்னேறியநாடு என்கிறோம்! ஏன்? எதனையும் பெறும செல்வாக்குடன் இருப்பதால்! அங்குள்ள மக்களுக்கு எதனையும் அடையக்கூடிய வாய்ப்பு இருப்பதால்!! இந்தச்செல்வாக்கு இருந்திடின், பிறகென்ன கவலை, இந்தியாவைக் கேட்டால் கோதுமை அனுப்புகிறது, எகிப்தைக்கேட்டால் பருத்தியை அனுப்புகிறது. இனனொரு நாட்டைக்கேட்டால் இரும்பைத் தருகிறது, இப்படித் தனது செல்வாக்கைவைத்தே சகல முன்னேற்றத்தையும் பெற்றுவிட முடியும் அதனுல்! இந்தச் சூழ்நிலையில், செல்வாக்கு, அந்த நாட்டுக்கு வாய்க்காலாய் விடுகிறது. அதன் மூலல், பல முன்னேற்றவழிகளையும் அதனுல் தேடிக்கொள்ள இயலுகிறது.

அப்படிப்பட்டசெல்வாக்கு, ஐக்கிய மாகாணத்துக்கு, சரி, வடக்கிலிருக்கும் வேறு மாகாணங்களுக்கும்சரி நிரம்ப இருக்கிறது.

"சரி! அந்தச் செல்வாக்கால், வடக்கு என்ன சாதித்துவிட்டது. என்ன ஒரவஞ்சனை செய்துவிட்டது. என்ன நன்மைகளைத் தேடிக்கொண்டுவிட்டது?"

என்று கேட்கலாம்! அதைத்தான், கேட்கிருர் சுப்ரமணியம்!

செல்வாக்கைத் தன் வசம் திரட்டிக் கொண்டிருப்பதே, முதல் வஞ்சனை என்போம்.

டில்லி தன் வசம் அதிகாரங்களையும், அந்த அதிகாரத்தை உபயோகிக்கும் அனைவரையும் வடவர்களாக வைத்திருப்பதே ஓர வஞ்சனை என்போம்,

வடக்கு வாழ்கிறது! எப்படி? எப்படி?

மொழியில்
அரசு அதிகாரத்தில்
வாணிபத்தில்

இவை, நாம் தரும பொதுக் காரணங்கள்! இவைகளைச் சொல்லும்போது, இதற்கான அதிகாரங்களைச் சுமக்கும் டில்லியையே குற்றம் சாட்டுகிறோம். இந்த அதிகாரங்கள் யாவும், தெற்குக்கு நிச்சயம் கிடையாது— இவை நமக்கு இருந்தால், மிகமிக நல்லது, நமது காரியங்களை நாமே கவனித்துக்கொள்ள இயலும் என்பதால் கேட்கிறோம்.

வடக்கு, எப்படி வாழ்கிறது என்று பிரித்துப் பிரித்துப பார்த்தால், இந்த ஒரு இதழ் போதாது விளக்க.

எத்தனை அணைக்கட்டுகள்?
அவை எங்கெங்கே?
எத்தனை ஆலைகள்?
அவை எங்கெங்கே?
எத்தனை கோடி ரூபாய்கள்?
அவை எங்கெங்கே?

என்பதுபற்றி, நாம் இதுவரை தந்திருக்கும் பட்டியல்களைப் படித்துப் பார்க்கட்டும், அமைச்சர்! ஓமந்தூரார் ஆட்சிக் காலத்தில், கோதுமை வரவழைத்தோம் ஐக்கிய மாகாணத்திலிருந்து. நம்மிடமிருந்து ஐக்கியமாகாணம் அதிகவிலை பெற்றது அநேகருக்கு நினைவிருக்கலாம்! அதற்கு வஞ்சனை என்று பொருளில்லையா?

சராசரி வடக்கே வாழ்வோரின் வருமானத்தையும், தெற்கே வாழ்வோரின் வருமானத்தையும் அமைச்சர் புள்ளி விபரம் கேட்டுத் தரட்டும்.

தானே, புரிந்து கொள்வார்கள், எந்தப் பகுதி பொருளாதாரத்தில் நன்கு உள்ளது என்று!

வடக்கு எங்கே வாழ்கிறது? பம்பாய், வங்காளத்தைவிட, ஏனைய மாகாணங்களெல்லாம் நம்மைவிடத் தாழ்ந்துதான உள்ளன, என்ருர். அவைகளுக்கு வாதாடும் வக்கீலாகிருரே, இவர் முதலில் இவைகளுக்குப் பதில் சொல்லட்டும்.

பலகோடி ரூபாய் செலவு செய்து அமைக்கப்பட்ட புதிய தலைநகர் சந்திகார் எங்கே உள்ளது?

ஹிராகுட்டும், தாமோதர் நதிப் பள்ளத்தாக்கு தேக்கமும் எங்கெங்கே இருப்பவை?

ரூர்கலா, பிலாய் எங்கே இருக்கின்றன?

அமைச்சர், இந்த இரண்டொரு உதாரணங்களுக்கு முதலில் பதில் சொல்லட்டும். இந்தப் பத்தாண்டுகளில் செலவாகியிருக்கிறதே,

கிட்டத்தட்ட 5000 கோடிக்குமேல் அதில் தெற்குக்குக் கிடைத்த பங்கென்ன?

என்கிற விபரத்தையும், தரட்டும். அப்போது புரியும், வடக்கு

அரசியல் அதிகாரம்
வாணிப ஆதிக்கம்
மொழி ஏகாதிபத்யம்

இத்துறைகளில் மட்டுமின்றி, தென்ஞட்டினை,

தொழில் துறையில்
பாசனத் துறையில்

எவ்வளவு வஞ்சித்திருக்கிறது என்கிற உண்மை! மக்கள் மத்தியில் சவால்விடுவதன் மூலம் உண்மைகளை மறைத்துவிட முடியாது.

சுப்ரமணியம் மட்டுமல்ல,
அரசியலறிந்தவர்கள்
நிபுணர்கள்
தொழில் துறையினர்.

அனைவருமே, வடக்கால் வஞ்சிக்கப்படுகிறது தெற்கு என்பதை, அடிக்கடி எடுத்துப் பேசி வருகின்றனர். இருந்தும், வக்கீலாகிருர் நிதியமைச்சர்! வாதியாக ஒரு சமயம்—சாட்சியாக இன்னெரு சமயம், செச்சேச்சே, இந்த உரு மாற்றம் யாருக்கும் நல்லதல்ல!! ஏமாளியாகக்கூட இருக்கலாம், சுயநலத்துக்காக, எத்தனுகக்கூடாது — அறநெறியாகாது — என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு,

"வடக்கு வாழவில்லை
தெற்கு வாழ்கிறது"

எனும் தலைப்பில், வாதிட அவர் முன்வருவதென்ருல், நாம் தயார் என்று அழைக்கிறோம்! அவர், பொது வாழ்வைவிட்டுப் போக வேண்டும் என்று நாம நிச்சயம் கட்டாயப்படுத்த மாட்டோம் என்கிற உறுதியினைத் தந்தே அழைக்கிறோம்!!

உலக அரங்கில்

எங்கும் ஒரே பரபரப்பு — அங்கேரிய நாகியை, ருசியக் கம்யூனிசம் தூக்கிட்டுக் கொன்றது பற்றிய கண்டனக் குரல் அமுங்கிவிட்டது. ருசியாவின் போக்குப் பற்றி ஆட்சேபித்து, இத்தனை நாளும் சமாதானக் கவுன்சிலின் உறுப்பினராக இருந்த தத்துவ மேதை அறிஞர் பெட்ரண்ட் ரசல் ராஜிநாமா செய்ததுகூட உலகுக்குத் தெரியவில்லை — அந்தளவுக்கு எங்கும் பேச்சு! இன்னெரு போர் மூளுமோ — வந்தால் அடிக்கலாம் இலாபக்கொள்ளை என்று பலர் நாக்கை சப்புக் கொட்டவும், "ஐயோ, இன்னெரு போரா?", என்று மக்கள் அலறவுமான வகையில், இந்தக் கிழமை உலக அரங்கம், ஆடிக் கொண்டிருக்கிறது.

✱

ஈராக் புரட்சியையொட்டி மத்திய கிழக்கில், அமெரிக்காவும் பிரிட்டனும் படைகளைக் கொண்டுபோய் வைத்துள்ளன. இதைக் கண்ட எகிப்து நாசர், ருசியாவுக்கு ஓடிக் குருசேவுடன் ஆலோசனைகள் நடததிவிட்டு வந்துள்ளார். மேற்கு வல்லரசுகளின் படைகள் பீரங்கியைத் திறந்தால், தனது பீரங்கிகளும் பதிலளிக்கத் தயங்காது'— என்று ருசியா எச்சரிக்கை விட்டிருக்கிறது. அதோடு தன்னிடம் அணுகுண்டுகள் மட்டுமின்றி, சகலத்தையும் சாம்பலாக்கும் இருமிக்குண்டு இருப்பதாகவும், கபர்தார்! — எனவும் ருசியா மேற்கு வல்லரசுகளுக்கு எழுதியிருக்கிறது.

✱

போர் ஏற்பட வேண்டும்!— என்கிற ஆசை ஆதிக்கக்காரர்களுக்கு இருந்தாலும், அந்தப் போரின விளைவாக இருதரப்பாரும் அணுகுண்டுகளை வீசிக்கொள்ள நேர்ந்தால் கதியென்னவாகும்? என்கிற அச்சமும் இல்லாமலில்லை. இருந்தாலும், உலகைமிரட்ட, இது போன்ற பயமுறுத்தல்களை செய்துகொண்டுள்ளனர். சூயஸ் கால்வாய் தகராறில் நடுநிலைமை வகிப்பது போல் நடித்து தன்னைக் காப்பாற்றிக் கொண்ட அமெரிக்கா' இப்போது பெருந் தவறு செய்துவிட்டது! ஜோர்டானுக்கும லெபனுனுக்கும் தனது படைகளை அனுபபியது மிகத்தவருகும்!! அமெரிக்கா, ருசியா மீதுள்ள எரிச்சலையும், நாசர்மீதுளள ஆத்திரத்தையும் காட்டிக்கொள்ள உற்பத்தி செய்த "கெடுபிடிப் போராகும்", இது.

✱

இரண்டு மன்னர்கள் தோள் தட்டிக்கொண்டு, ரதகஜதுரக பதாதிகளுடன் மோதிக் கொள்ளுமபோது, நஷ்டப்படுவது, எது? அழகாக தாகூர் சொல்லியிருக்கிருர், இருதரப்புப்படைகளும் போரிடுகின்றனவே, அந்த மைதானத்தில் இருக்கும் "புல்" இரண்டுக்கு மிடையிலே மாட்டிக் கொண்டு சாகிறது என்று! அதைப்போல் இவர்கள் அட்டகாசத்துக்கு, மத்யகிழக்கிலுள்ள மக்கள் இரையாகநேருகிறது. இதற்குக் காரணமான அமெரிக்காவை, மத்யகிழக்கு மக்கள் சுலபத்தில் மன்னிக்க மாட்டார்கள்.

✱

ரசமான செய்தி! இப்படி அமெரிக்காவுநாசரும் மோதிக் கொண்டுளளார்கள் அல்லவா? இதே சமயத்தில் எட்டுக் கோடி ரூபாய்க்கு, ஒரு காண்டிராக்டை ஏற்றுக்கொணடுள்ளது அமெரிக்கக் கமபெனி ஒன்று! சூயஸ் கால்வாயை ஆழமாகவும், விரிவாகவும் ஆக்கும எகிப்து சர்க்காரின திட்டத்துக்குத்தான் இந்த 'காண்டிராக்ட்'

✱

விரைவில் ஒரு மாநாடு கூட்டி அதில் உட்கார்ந்து விவாதிப்போம் என்று மேற்கு வல்லரசுகளுக்கு குருசேவ் கடிதங்கள் எழுதியுள்ளார். இதற்கு இன்னும் சரியானபதில்கள் கிடைக்கவில்லை. இம் மாநாட்டில் நேருவையும் அழைக்குமாறு சொல்லியுள்ளார்! இப்படி உட்கார்ந்து, எல்லா உலகத் தலைவர்களும், மனம்விட்டுப் பேசினுல், அபாயம் நீங்கும் அறிகுறி ஏற்படலாம் — ஓரளவுக்கு ஆபத்து நீங்கலாம். நேரு சமரச நிலையிலிருப்பதாகக் கருதப்படுகிறவர். ஆனுல் பாகிஸ்தான் ஒத்துக்கொள்ள வேண்டுமே! பக்கத்து நாட்டிலிருக்கும் நேரு, இன்னும் தங்களைப் பயமுறுத்தி வருவதாக, பாகிஸ்தான் சொல்லிக்கொண்டிருக்கிறதே!!

✱

"அங்கேரிய உள்நாட்டு விவகாரத்தில் மட்டும் எப்படி ரஷ்யா தன்படைகளை அனுப்பலாம்? அதுபோலத்தான் எங்களுக்கு வேண்டிய நாட்டுக்கு எங்கள் படைகளை அனுப்பியுள்ளோம்! இவ்வளவு தானே ஒழிய வேறல்ல", என்று அமெரிக்கத் தலைவர் ஐசனேவர் அறிக்கை விடுத்துளளார். யார் செய்தது சரிஎன்பதல்ல, பிரச்னை. இப்படி இன்னெரு நாட்டுவிவகாரத்தில் தலையிடுவது, தவறு என்று உலகம் கருதுகிறது. இனைத் தவனுக்கு உதவியளிக்கப் போவதாகக் கூறிக்கொண்டு இருவருமா பலப்பரிட்சை பார்க்க வேண்டும்? கொள்கைகள் மக்கள் மனதில் பரவ வேண்டுமே ஒழிய, பீரங்கியாலா ஒரு கொள்கைக்கு மகத்துவம் தேட முடியும்? ஆதிக்கம ஒழிய வேண்டும் என்று சொல்லும் ருசியாவுக்குத்தான — அமெரிக்கா எவ்வளவு சொன்னுலும் —அனுதாபம் போகும். இதை அறிந்துகொள்ள வேண்டும், வல்லரசுகள்.

★

ஒரு கேள்வி, எழுப்பப் படுகிறது அடிக்கடி.

எல்லோருக்கும் எல்லாம்!

தனிப்பட்டோரிடமிருந்து, ஆலைகளையும், வியாபாரச் சாலைகளையும் எப்படி ஒரு சர்க்கார் ஏற்று நடத்த முடியும், என்பதுதான் அக் கேள்வி.

டாடாவும் பிர்லாவும் செய்யும் தொழில்களை சர்க்காரே எப்படி ஏற்று நடத்த முடியும்?—என்கிருர்கள்.

'ஆம்! ஆம்!! அது, சிக்கலானதுதான். அவர்கள் எவ்வளவு திறமையாக நிர்வாகம் செய்கிருர்களோ, அதுபோல, அரசால் செய்ய இயலாதுதான்,'' என்று ஒருசில பொருளாதார நிபுணர்களும் தலையசைக்கிருர்கள்.

அரசு ஏற்று நடத்தும் சர்க்கார் பஸ் சர்வீசின் இலட்சணத்தைப் பார்க்கிறீர்களன்றே!-என்று, மிக, எளிதில் கேலியை வீசியெறிந்து இந்தக் கொள்கையே தீதானது, தேசிய மயமாக்கும் முறையே கூடாது, என்று சமய சஞ்சீவிகள் முரசம் தட்ட ஆரம்பித்துவிடுகிருர்கள்.

ஒருபோது, தொழில்களையெல்லாம தேசிய உடமையாக்க வேண்டும் என்று பறை சாற்றிய நேரு சர்க்காருக்குக் கூடத் தம்மால், டாடா பிர்லா போன்ற முதலாளிகளைப்போலத் தொழில்களை நடத்த முடியுமா எனகிற சந்தேகம் அரும்பிப், பூவாகிக் காயாகி, இப்போதுகனியாகவே ஆகிவிட்டது!

அதனுல் பற்பல தொழில்களைத் துவக்கும்படி ஆலையரசர்களைக் கெஞ்சுகிருர்கள்.

அப்படித் துவக்கப்படும் தொழில்துறைகளை நாங்கள் எடுத்துக் கொள்ளமாட்டோம், என்று உறுதி மொழிகளும் அளிக்கிருர்கள்.

நேரு மட்டுமல்ல, நேற்று முளைத்த கேரள கம்யூனிஸ்டு அரசுகூடக் காற்றுப் போகும திக்கில் போவோம் என்று பிர்லாவுக்கு 'வெற்றிலை பாக்கு' வைத்தழைத்து, கேரளத்தில், தொழில்களைத் துவக்கும்படி, கேட்கிறது. நீது செய்யோம் என்று உறுதிகளைத் தருகிறது எனில் விந்தை தானே!!

தேசிய உடைமையாக்குவது எனும் தத்துவமே, கூடாதது எனறு குப்பைத் தொட்டியில் எடுதெறியப்பட்டு விடுமோ என்கிற சூழ்நிலை மலர்ந்து வரும் இச் சமயத்தில், ஒரு ஒளிச்சிதர் கிடைக்கிறது—செஞ்சீனுவிலிருந்து!!

வட சீனுவிலுள்ள பெரிய வியாபாரநகரம், டீண்ட்சின் என்பதாகும். அங்குள்ள 37,000 தனிப்பட்ட வியாபாரிகளையும், சீர் திருத்தி, தேசிய உடைமையாக்கியிருக்கிறது, சீன அரசு.

தொழில் கேந்திரங்களைமட்டுமல்ல, கடைகளையும் கூட, ஒரு அரசு ஏற்று நடத்த முடியும்—திறமையும், சக்தியுமிருந்தால், என்று சீன அரசு நிரூபித்திருக்கிறது.

ஒருவரல்ல, இருவரல்ல, 37,000 பேர்! அத்தனை பேரும், தனித் தனியாகக் கடைவைத்து வியாபாரம் செய்தவர்கள்!!

அவர்தம் கடைகள் யாவும் தேசிய மயமாக்கப்பட்டுவிட்டன. சர்க்காரின் வசம், கொண்டுவரப் பட்டு விட்டன.

இதனுல்என்ன இலாபம்?-என்னலாம. போட்டி குறையும்-கொள்ளை இலாபம் ஒழியும்-ஒரேசீராக தமக்கு வேண்டிய பொருள்களைப் பெற இயலும்!!

''அதுசரி, இப்படிக்கடைக்காரர்களின் தொழிலைப் பறித்துவிட்டால், அவர்கள் எங்கேபோவது? பிச்சை எடுக்கவிடுவதா! அல்லது பிடித்துக்கொணடு போய் கடலில் தள்ளுவதா! இல்லை, கழனிகளில் துரததி கஷ்டப்படும்படி செய்வதா!'' என்று கேட்கத் தோன்றும்.

ஆலைகள்—வியாபார நிலையங்கள்—பெரிய பண்ணைகள் முதலியவைகளை ஒழித்தால், அவைகளை இதுகாறும் அனுபவித்தவர்கள் பழிக்குப்பழி வாங்கப்படுவார்கள் எனறே பொதுவாக அனைவரும் கருதுகின்றனர்.

அது மிகமிகத்தவறு என்பதை சீனு காட்டியிருக்கிறது.

ஒரே ஒரு வாரத்தில், 37000 கடைகளையும், சர்க்கார் கைப் பற்றியது.

அவர்களுக்கெல்லாம் சர்க்காரின் கடைகளில் முன்புபோல, வேலைகள் தரப்பட்டன; கூட்டுறவு இயக்கங்களில் அமர்த்தப்பட்டனர்; பாக்டரிகளுக்குப் பலர் அழைத்தேகப்பட்டனர்; சாதாரண கணக்கப்பிள்ளைப்போலவும், சின்னஞ்சிறு கடைகளை வைத்துக்கொண்டு இருந்தோருக்கும் அவரவர் தரத்துக்கும் விருப்பத்துக்கும் தக்கபடி, ஆங்காங்கு வேலைகள் தரப்பட்டுள்ளன.

முன்பு இருந்தவர்கள்தான் இப்போதும் கடைகளிலிருப்பார்கள்! முன்பு கடை, அவர்களுடையது, இப்போது சர்க்காருடையது; முன்புதான்மட்டும், இலாபத்தைப் பெற்றுச் சென்று சுகமாத வாழலாம்; இப்போது அது இயலாது.

சமதர்மம், இதுதான்! இது முகிழ்க்க, திடமான உள்ளமும் செயல் வன்மையும் சீன அரசிடம் உள்ளது.

கடந்த ஜுலை 8-ல்தான், இந்தச் சீர்திருத்தம், செய்யப்பட்டிருக்கிறது. டீண்ட்சினில்.

இதுபோல, இங்கும் செய்யலாம — அதற்கு வேண்டிய உள்ளத் தூய்மை ஏது, காங்கிரஸ் ஆளவந்தார்களிடம்! இவர்களிலேயே பலர், ஆலைகளை நடாத்தவும், கடைகளை நடத்தவும், 'பெர்மிட்' பெறவும்தானே இன்றைய தினம் காங்கிரசுக்குள் புகுந்து கொண்டிருக்கிருர்கள்!

★

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது

831

3—8—58 | வார வெளியீடு | விலை 16 காசு

REGISTRAR OF BOOKS
1 SEP 1958
MADRAS
831
3-58

பாராயோ தமிழ் மறவா?

—(நா. தேசிகன்)—

போர்முரசம் கேட்டவுடன் புலியெனவே பொங்கியெழும்
பார்புகழும் தமிழ்மறவா பாராயோ? நின்னுட்டின்
பேர்கமழும் புகழெங்கே? பேசரிய திறமெங்கே?
தார்தவழும் மார்பெங்கே? தனித்தமிழர் வாழ்வெங்கே?

வரிப்புலியே குகைநீங்கி வெளியேவா! இருட்டறையில்
இருப்பதைநீ மறந்தாயோ? இன்னலுற்றே திருநாட்டார்
இரப்பதைநீ உணராயோ? இறப்பதையும் காணுயோ?
பொருப்புடைய தோளுடையாய் புறப்படடா வாழ்ந்திடவே!

புறங்கண்டாய் பகைவரைநீ; போரினிலே பகைவர்புகழ்
திறங்கண்டாய்! பாரிலுளார் செல்வமெனப் போற்றுதற்கே
அறங்கண்டாய்! மொழியினிலே அனைத்துலகும் இயற்ருத
புறங்கண்டாய்! அகங்கண்டாய்! புதைந்தனவோ நின்வாழ்வே?

வாழ்ந்திட்ட கதையுண்டு; வாழ்வெங்கே? இன்றேநீ
தாழ்ந்திட்ட வகையென்ன? தமிழ்மொழியின் உயர்வெங்கே?
வீழ்ந்திட்ட பகையெங்கே? வெல்புலியே நெடுந்துயிலில்
ஆழ்ந்திட்டாய் அதனுல்தான் அடைந்தாயே இந்நிலையே!

அமெரிக்கர்கள் ஒவ்வொரு ஆண்டிலும் 200 கோடி கோப்பைத் தேனீர் குடிக்கிறார்கள்.

உலகிலேயே அதிகமாகத் தேனீர் குடிப்பவர்கள் சீனர்கள். இரண்டாவது பிரிட்டிசாரும், மூன்றாவதாக இந்திய மக்களும், நான்காவதாக அமெரிக்கர்களும் அதிகமாகத் தேனீர் குடிக்கிறார்கள்.

தேயிலையை அமெரிக்கர்கள் ஒரு காலத்தில் ஆடம்பரப் பொருளாகக் கருதி வந்தார்கள். அமெரிக்காவில் ஒரு பெரிய சண்டை ஏற்படவும் தேயிலை காரணமாக இருந்தது. அந்த அமெரிக்கர்கள் தான் இப்பொழுது ஆண்டுதோறும் சாதாரணமாக 10 கோடி ராத்தல் தேயிலையைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

*

ஒன்றுபட்ட உள்ளங்கள் இணைவதை எவராலும் தடுக்க முடியாதன்றோ! எலிசபெத் என்பார், பிரிட்டனின் முன்னாள் அமைச்சர் ஸ்ட்ராச்சியின் திருமகள். அவர், இந்தகிழமை அமீத் அல்குவாதி எனும் பேராசிரியரைத் திருமணம் செய்துகொண்டிருக்கிறார். இப்பேராசிரியர், அண்மையில் புரட்சி நடைபெற்ற ஈராக் நாட்டைச் சேர்ந்தவர்! ஈராக்கைக் கடித்துத்தின்றுவிடலாமா என்கிற நிலையில், பிரிட்டிஷ் அரசு இருக்கின்ற நேரம், இது. இக்காதலர்களோ, அது எதையும் எண்ணவில்லை. எப்படி எண்ணுவர்? கண்ணும் கண்ணும் கலந்துவிட்டபிறகு, கடலும், மலையும், கூச்சலும், குண்டுமாரியும் ஒருபொருட்டோ!! புதுமணம புரிந்துகொணட இருவரும், விரைவில் ஈராக்குக்குப் போய், புது ஆட்சியின் நிழலில் பூரிபபோடு வாழப் போவதாகக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

*

உலகக் கோளத்தைப் பார்த்தால், வட அமெரிக்காவுக்கும் ருசியாவுக்கும்மிடையே சின்னஞ்சிறு கடல் மட்டுமே தடையாகயிருப்பது தெரியும். வட அமெரிக்காவிலுள்ள அலாஸ்காவிலிருந்து, ருசியாவிலுள்ள சைபீரியாவுக்கு "பேரிங்கடல்" எனும் சிறு கடலொன்றைத்



தாண்டிவிட்டால், போய்விடலாம். இந்தக் கடலுக்குள், பாதை அமைத்து, அந்தப் பாதைக்குள் இரயிலையும் கார்களையும் போகச்செய்யலாம் என்று சமீபத்தில் ருசிய விஞ்ஞானியொருவர் வெளியிட்டிருக்கிறார்! அமெரிக்காவையும் ஆசியாக் கண்டத்தையும் இணைக்கின்ற இத்திட்டம், அமெரிக்க விஞ்ஞானிகளின் மனதில் பரபரப்பை உண்டு பண்ணியிருக்கிறது. வாஷிங்டன் நகரைச்சேர்ந்த அமெரிக்க சட்டசபை உறுப்பினர் வாரன மெக்னுசான் என்பார், முழு விபரங்களையும் தருமாறு, ருசிய விஞ்ஞானிக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். இதையும் ஒரு வீம்புப் பிரச்னையாக எண்ணிடாமல் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ளவிழையும் அமெரிக்க செனடரின் பண்பு, எல்லா அமெரிக்கருக்கும் ஏற்பட்டால் ...? தகராறுகள் ஒழியும்; உலகம் பல உன்னதங்களைப் பெறுமே!!

*

ஈராக்கில் புரட்சி நடத்தி வெற்றிகண்ட காசிம, இதற்காக எத்தனை ஆண்டுகள் காத்திருந்தாராம் தெரியுமா? 25 ஆண்டுகளாம! 1934 முதல். முடியாட்சியில் சிக்கி மக்களடையும அவதியினை எண்ணி எண்ணி, தக்க தருணத்தையும சந்தர்ப்பதையும, இந்த 25 ஆண்டுகளக எதிர்பார்த்திருந்தாராம். கடைசியில் இராணுவத்தினருடைய, மனதை யெல்லாம் பதபபடுத்தித் தன், முயறசிக்கு நாடே நல் வாழ்த்து வழங்கும் என்கிற தீர்மானத்துக்கு வந்த பின்னரே, தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டாராம்

*

இரண்டு லட்சம் தமிழர்கள்!-கடந்த ஓராண்டில் மட்டும், குடியுரிமையற்றவர்களாக, இலங்கை சர்க்காரால் செய்யப்பட்டிருக்கின்றனராம். 1948-ல் நிறைவேற்றப்பட்ட இலங்கை குடியரசு சட்டப்படி, இதுவரை, நாடற்றவர்களாக ஆக்கப்பட்டிருக்கும் நான்கு லட்சம் தமிழர்களையும் சேர்த்தால், மொத்தம் ஆறுலட்சம் பேராகும். சர்க்கார் வசம், இன்னும் இரண்டுலட்சத்துக்கு மேற்பட்ட குடியுரிமை மனுக்கள் உள்ளன. இவை என்ன கதி ஆகுமோ!!

*

ஆமதாபாத்திலுள்ள சரித்திரபபிரசித்திபெற்ற நீலகண்ட மகாதேவர் ஆலயத்தை வெடி வைத்து தகர்க்க 50 தினங்களுக்கு முன் நடந்த முயற்சி கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையாக முடிந்திருக்கிறது. மகந்த் மகாராஜ் ராமநாத் குருஜி ஆலயத்திறகுள் இறந்து கிடந்தார். விஷத்தினால் அவர் இறந்திருக்கக் கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

பிரேத பரிசோதனை முடிவு இன்னும் தெரியவில்லை மகந்தின் மரணம் ஒரே மர்மமாக இருக்கிறது. ஏனெனில், கோவிலில் வெடி குண்டை வைக்கும் சதியில் மகந்தே சம்பந்தப்பட்டிருந்தார் என்று நவீன சந்திர திருவேதி என்பவர் கோர்ட்டில் கூறினார்.

சதித் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றினால் ரூ. 15,000 அல்லது 20,000 கொடுப்பதாக மகந்த் தன்னிடம் சொனனார் என்று திருவேதி கோர்ட்டில் கூறினார். மகந்து என்பவர் இங்குள்ள மடாதிபதிகளைப் போனறவர்! அவரே, வெடி வைத்தாராம்!!

தூத்துக்குடி

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [3-8-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 3

வெற்றி உறுதி! — என்கிற நம்பிக்கையை அதிகம் கொண்டிருந்த கழகத்தவருக்கு தோல்வி, துயரத்தையே தரும். இந்த முடிவை தூத்துக்குடி மக்கள்கூட எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். ஏனெனில், தேர்தலுக்கு சின்னாட்கள் வரையிருந்த நிலை வேறு—ஆனந்தமும் தெம்பும் நமக்கு அதிகம் வருமளவுக்கு இருந்தது! எனினும் கடைசி நேரத்தில் சூழ்நிலை மாறிவிட்டது!!

ஓர்து அம்மை போன்றவர்கள் தன்னை மந்திரியாக்கிய காமராஜைக் தன்னவருக்கு காட்டச் சந்தர்ப்பம் கிடைத்தது, பலர் காங்கிரஸ் அபேட்சகர் 'ஒரு நாடார்' என்று காட்டிட முனைந்தனர் — எல்லாவற்றிற்கும் மேலாகக் காமராசரும் அமைச்சர்கள் நால்வரும் அங்கு 'முகாம்' அமைத்தனர். உறுதிகளை அள்ளி அள்ளி வீசினர்! பணம் தரும் பக்கமேளங்களின் உதவியும் காங்கிரசுக்கு குவிந்தது! — தோற்காமல், பாதுகாத்துக்கொண்டுவிட்டார்கள்.

வெற்றி உறுதி! — என்கிற நம்பிக்கை அதிகம் கொண்டுவிட்டதால், நமது தோழர்கள் அந்த ஆர்வத்தில் இருந்திருக்கிறார்கள். வரவேண்டிய ஓட்டுகளைக்கூடச் சேகரம் செய்யும் வாய்ப்பு இல்லாமற் போயிருக்கிறது. அதிக ஆர்வம், சில சமயங்களில், அதிகத் தெம்பைத் தந்துவிடுகிறது. அந்த சமயமாகப் பார்த்து, மாற்றார், காரியசித்தியைப் பெற்றுவிடுகின்றனர். தூத்துக்குடியில் தோழர் சிவசாமிக்காக உழைத்தவர்கள், உற்சாகமும் குதூகலமும் கொண்டு, பயன் எதுவுமின்றி பாடுபட்டனர் என்பதை எவரும் மறப்பதற்கில்லை. எனினும், குற்றங்குறைகளைப் பரிமாறிக்கொள்வதன் மூலம்தான், ஜனநாயகச் சோதனையில் நாம் வெற்றிகாண முடியும். எனவேதான், "தேர்தல் களத்திலும் வெற்றி காண வேண்டுமென்றால், அதற்கான பயிற்சியையும் திறமையையும் நமது கழகத் தோழர்கள் பெற்றாக வேண்டும்......" என்று பொதுச் செயலாளர் அவர்கள், கழகத்தவருக்கு தெரிவித்துள்ளார்கள்.

தேர்தல் என்பது பண விளையாட்டாகக் கருதும் ஒரு கட்சிமைமோதிடும் சூழ்நிலையிலிருக்கும் நாம், இந்தத் துறையில், தக்கபயிற்சியைப் பெற்றிடவேண்டும். ஏராளமான வாலிபர்கள், பல இடங்களில், தங்களை வாக்காளர்களாகக்கூடப் பதிவு செய்யாமலிருக்கிறார்கள். கடந்த தேர்தலின்போது, இந்த வாலிபர்களுக்கெல்லாம் வாக்குரிமை இருந்திருக்குமானால், எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? இந்தத் துறையிலும் வாக்காளர்களைத் தனித்தனியே சந்தித்து விளக்கம் தருவதிலும், இடையறாத் தொடர்பை வைத்துக் கொள்வதிலும் தக்க நாட்டம் கொண்டிடவேண்டும் நாம்.

கொள்கைக் கோட்டையாக விளங்கிய தூத்துக்குடிக் கழகம், எத்தனையெத்தனை "இடி"களை அடிக்கடி பெற்று வருகிறது என்பதை நாட்டவர் அறிவார்கள். தீய சக்திகளுக்கு இடமளித்ததால், சாமியை இழந்தோம் — கழகத்துக்கேக்கூட வலிவு குறையும் அளவுக்குச் சிலரால் சூழ்நிலை உருவாக்கப்பட்டதுண்டு. இவையனைத்தையும் போக்கி, புது மெருகு பெற்று வரும் தூத்துக்குடிக் கழகம், இத்தேர்தலில் 882 ஓட்டுகளை முன்பைவிட இழந்திருக்கிறது! 882 ஓட்டுகள்தான் — எனினும், இந்தத் தோல்வி வரப்போகும் வெற்றிக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும் — நமது ஊக்கமும் உற்சாகமும் பன்மடங்கு அதிகமாகவேண்டும்!!

தேர்தல் மட்டுமே, தேசிய இயக்கமான நமக்கு குறிக்கோளில்லை என்றாலும்; பொதுத் தேர்தல்களில் போட்டியிடுமளவுக்கு சக்தி பெற்று வருவதே ஒருவிதத்தில் ஆனந்தத்துக்குரியது என்றாலும்; ஒவ்வொரு தோல்வியும் ஒரு விதத்தில், நமது எதிர்கால வெற்றிப் படிக்கட்டுகள் என எண்ணிப் பணியாற்ற வேண்டும். நம்மிடம், பணம் படைத்தவர்கள் இல்லை! கேரளம் போன்ற இடங்களில் நல்வாக்கு தரும் சர்க்காரும் நமக்குக் கிடையாது!! எதற்கும், நமக்கு நாம்தான். இத்தகைய சூழ்நிலையில், எதிர்காலத்தில், நாம் எப்படிப் பணியாற்ற வேண்டுமென்பதை, ஒவ்வொரு கழகத் தோழரும் எண்ணிப் பார்த்திடல் வேண்டும். ஆர்வம், வீணாகிவிடக் கூடாது; ஆக்கப் பணியாக அமையவேண்டும்.

நாட்டு விடுதலையைக் குறிக்கோளாகக்கொண்டு இருக்கும் நாம், பல துறைகளில் ஒவ்வொரு நாளும் பயிற்சி பெறவேண்டியிருக்கிறது என்பதை அடிக்கடி கவனப்படுத்தி வருகிறோம். அதையே மீண்டும் நினைவுறுத்துகிறோம். 14 ஆயிரத்துக்கு மேல், வாக்களித்த தூத்துக்குடி மக்களுக்கு நமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, கழகத்தவர்கள் உற்சாகமும் ஊக்கமும் குன்றாமல், நகரத்திலும் சரி இராமப் புறங்களிலும் சரி, கழகப் பணியைத் தீவிரமாக்க வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, கொள்கை வீரர்கள்! வளர்க தினசரி அவர்தம் இடையறாத பணி!!

—○—

இவர்கள் பேசினல்....!

M. S. வெங்கடாசலம் M. A.,

தேபர்

ஏழு நாட்கள்—சபர்மதியில்! ஆம்! காந்தியடிகள் விரும்பிப் பலகாலம் தங்கியிருந்த அந்தப் புனித ஆசிரமத்தில்தான் ஏழு நாட்களைக் கடத்தினேன், கடந்த மாதம்!

மன அமைதி பெறுவதற்காகத் தான் அங்கே சென்றேன் — பண்டித நேரு இமயமலைச் சாரலுக்குச் சென்றதைப் போல்! ஆனல்......! மன அமைதியா கிடைத்தது அங்கே? உள்ளத்தின் எங்கோ ஒரு மூலையில் அமிழ்ந்து, மறைந்து, ஒடுங்கியிருந்த எண்ணங்களெல்லாம் பீறிட்டெழுந்து என்னை அலைக்கழித்தன! என் உள்ளத்திலேதான் எத்தனையெத்தனை போராட்டங்கள்! எந்தெந்தவிதமான எண்ணங்கள்!! எடுத்துரைக்க முடியாத குமுறல்கள்!! என்றென்றைக்கும் அழிக்கமுடியாத வடுக்கள் !'

வழக்கறிஞராகப் பணியாற்றி வந்த நான், காந்தியடிகளின் அன்பால், அரவணைப்பால், அரும் பெரும் சாதனைகளால் ஈர்க்கப்பட்டு அரசியலுக்கு வந்தேன். நாட்டை மீட்கின்ற பணியில் நான் ஏற்ற பங்கு, எடுத்துக்கொண்ட ஆர்வம், அதற்காக நான் செய்த தியாகங்கள் இவை அனைத்தையும் ஒரு சிலரே அறிவர்! நாடறியும் என்று செல்வி என்னை நானே ஏமாற்றிக்கொள்ள நான் விரும்பவில்லை! விளம்பரப்படுத்தப்படாத பல்லாயிரக்கணக்கான தொண்டர்களிலே நானும் ஒருவனாக நீண்டகாலம் — நாடு சுதந்திரம் பெற்ற பிறகுகூட—இருந்து வந்தேன்.

விளம்பரப்படுத்தப்படாதது தவறென்று நான் அப்போதும் எண்ணியதில்லை — இப்போதும் எண்ணவில்லை.

> ## செய்தி
>
> மண்டல காங்கிரசு அமைப்போடு, காங்கிரசு பாராளுமன்ற உறுப்பினர்கள் நெருங்கிய தொடர்புவைத்துக்கொண்டு கொள்கைவிளக்கங்கள் தரவேண்டுமென்று இரண்டு மாதங்களுக்கு முன் தேபர் உத்தரவு பிறப்பித்திருந்தார், ஆனல் அந்த உத்தரவின்படி காரியங்கள் நடைபெறவில்லை.

விளம்பரம், ஆடம்பரம் இரண்டையுமே விரும்பாதவன் நான். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னலேகூட என்னை யானைமீது வைத்து கல்கத்தாவில் ஊர்வலம் வர ஏற்பாடுகள் நடைபெற்றபோது நானே மறுத்துவிட்டேன். கௌஹத்தி காங்கிரசிலேகூட, தவிர்க்க முடியாத நிலையிலேதான், அதே ஆடம்பரத்திற்கு ஒப்புக்கொண்டேன். அந்த அளவுக்கு எதிலும் எளிமை வேண்டுமென்று எண்ணுகின்ற நான், என்னை ஏன் விளம்பரப்படுத்தவில்லையென்று வருந்தப்போகிறேன்?

ஆனல் விளம்பரப்படுத்தப்பட்டால் நல்ல முறையில் செய்ய வேண்டும் — அந்த விளம்பரம் நல்ல நேரத்தில் கிடைத்திட வேண்டும். அதுதான் முறை!

ஆனல் எனக்குக் கிடைத்த விளம்பரம் காலம் தவறிக் கிடைத்த கனி! கருகிப்போன பிறகு மாலையாகத் தொடுக்கப்பட்டு அணிவிக்கப்பட்ட மலர்! அந்த மலர்மாலையை நான் அணிந்துகொள்ளும்போது ஆரவாரம் எழும் என்பதென்னவோ உண்மை. ஆனல் அந்த ஆரவாரம் மகிழ்ச்சியின் பிரதிபலிப்பா, கேலியின் அறிகுறியா? அதைத்தான் நான் திரும்பத் திரும்ப எண்ணுகிறேன்.

சுதந்திரத்திற்காகக் காங்கிரஸ் நடத்திய போராட்டங்கள் ஏராளம் — புரிந்த வீரச் செயல்கள் அனந்தம்—காவுகொடுத்த உயிர்கள் அனேகம்! எவரும் மறுத்திடவில்லை, இன்று கூட!

காந்தியடிகள், தான் அருமையாகக் கட்டிக்காத்துவந்த காங்கிரசைக் கலைத்துவிடச் சொன்னர்!

ஆனல் அப்போது அவர் வார்த்தையை யாரும் மதிக்கவில்லை! கட்சியிலே இருக்கிற கோளாறுகள் இன்னின்ன, கொள்கையிலே இருக்கின்ற கோணல்கள் எவையெவை, இயக்க அமைப்பிலே இருக்கிற தவறுகள் என்ன என்று அப்போதல்லவா ஆராய்ச்சி செய்திருக்கவேண்டும்! அப்போது காங்கிரசின் தலைமைப் பதவியிலே இருந்தது பண்டித நேரு அவர்கள்! அவர் அந்தப் புனித காரியத்திலே ஈடுபடவில்லை என்று அவரைக் குறை சொல்லுகிறேன் என்று பொருளல்ல! பாவம் அவருக்கு வேலைகள் அதிகம். அரசாங்கத்தைக் கட்டிக் காப்பதென்பது, நடத்துவதென்பது சாதாரணமா? ஆண்டுக்கு மூன்று மாதமாவது அவர் வெளிநாடுகளுக்கு வேறு செல்ல வேண்டியிருந்தது! அதற்கிடையில் கட்சியைச் சீர்படுத்துகிற பணியிலும் அவர் ஈடுபட்டிருக்கமுடியாதென்பதை நான் மனமார ஒப்புக்கொள்ளுகிறேன்.

ஆனல் நான் இப்போது எண்ணுவதெல்லாம், 1954ல் என்னைத் தேடிப்பிடித்து, காங்கிரஸ் தலைமைப் பீடத்தில் அமரவைத்து எனக்குப் புதிய அந்தஸ்தைத்

(13-ம் பக்கம் பார்க்க)

இரண்டு கடிதங்கள்!

அருமை நண்பர்

குப்புசாமி செட்டியார் அவர்களுக்கு,

வணக்கத்துடன் கந்தசாமி செட்டியார் எழுதும் கடிதம். நெடுநாள் இடைவெளிக்குப் பிறகு ஏதோ மன ஆறுதலுக்காக எழுதுகிறேன். எப்படி இருந்தாய், இப்போது எப்படியாகிவிட்டாய் என்று நீ கடிதம் எழுதியிருக்கிருய்! அவை எனக்கு ஆறுதல் ஊட்டும் என்றும் நீ எண்ணியிருக்கிருய்! தவறு; அவை அமைதி ஏற்படுத்துவதற்குப் பதில் என் உள்ளத்தில் அடங்காத புயலை எழுப்பிவிட்டிருக்கின்றன. என் பழைய வாழ்வை மீண்டும் நினைத்துப் பார்க்கிறேன். உண்மைதான். எப்படி இருந்தவன்? எப்படி ஆகிவிட்டேன்?

கட்டியிருக்கும் வேட்டியில் வெல்லக் கரையும் குங்குமக் கரையும் தேங்கிக்கிடக்கின்றன. காலைமுதல் இரவு வரை காலணு, அரையணு வியாபாரத்திற்காக ஓயாமல் கைகள் சுழன்றுகொண்டே இருக்கின்றன. வாய் அடுத்தக் கடைக்குப் போகிறவர்களை 'வாருங்கள், என்ன வேண்டும்?' என்று அழைத்தவண்ணம் உள்ளது. சிந்தனை, இந்த மாதமேனும் ஏதேனும் இலாபம் கிட்டுமா, அந்தச் சேட்டின் கடனை அடைத்துவிடலாமே என்று ஓயாமல் துளைத்துக்கொண்டே இருக்கிறது. விழிகளை ஏமாற்றிவிட்டு இரவும் பகலும் சரக்கு எடுப்பது, தண்டல் செய்வது என்று 'வேலை, வேலை' எனச் சுற்றிக்கொண்டே இருக்கிறேன். இவையெல்லாம் எப்படி ஏற்பட்டன? வைரக்கடை கந்தசாமி செட்டியாராக இருந்தவன் இன்று எப்படி மளிகைக்கடை கந்தசாமி செட்டியாராக மாறினேன்?

சென்ற இருபது ஆண்டுகளுக்கு முன்பு, சைனபஜாரில் சில்லென்ற விசிறியின் கீழ் அமர்ந்து, வைர வியாபாரம் செய்துவந்த நான் இன்று கொத்தவால்சாவடியின் ஒரு மூலையில் மளிகைக்கடை வைத்திருக்கிறேன். இருக்கும் கடன்தொல்லை அந்தக் கடைக்கும் விரைவில் ஒரு மூடுவிழாவைக் கொண்டுவந்து சேர்க்கும் என்று அஞ்சி நடுங்குகிறேன்.

> வடவர் வாழ்வு பெற்றனர்; தென்னவர் தேய்வு உற்றனர் என்பது வரட்டுவாதம் என்கிருர் கனம் அமைச்சர். சென்னையில் இருந்து இரண்டுபேர் தம் இரண்டு நண்பர்களுக்குத் தனிப்பட எழுதும் கடிதங்கள் கீழே உள்ளன. கற்பனைதாம் அவை என்ருலும் உண்மையின் சாயல் அவற்றில் மிகவாகப் படிந்து கிடக்கிறது. படியுங்கள். 'கனம்' சொல்வது சரியா? 'நாம்' சொல்வது சரியா? என்ற உண்மை புலப்படும்........

இப்பொழுதுதான் நான் என் பழைய செய்கைகளை நினைத்து நினைத்து வெட்கப்படுகிறேன். நம் ஊர் பழனி ஆண்டவன் கோயிலுக்குப் பத்து நாள் உற்சவத்திற்கென்று ஆயிரக்கணக்கில் ஆண்டுதோறும் பணம் செலவழித்ததை நினைத்துப்பார்க்கிறேன். கழுகுக்குன்றத்திற்குப் படிக்கட்டு அமைக்கக் கைங்கரியம், காசி விசுவநாதர் கோயிலின் மூலத்தானத்தைச் செப்பனிட அன்பளிப்பு, காமாட்சி அம்மன் கோயிலுக்குப் புதிய பள்ளியறை கட்ட நிதி என்று கேட்டபோதெல்லாம் வாரிவாரிக் கொடுத்ததை எண்ணிப்பார்க்கிறேன். 'எல்லாம் என் அப்பன் செயல்' என்று நான் என் கண்களை மூடிக்கொண்டு செக் புத்தகத்தில் கையெழுத்திட்டபோது, இப்படியெல்லாம் நிகழ்ந்துவிடும் என்று நினைக்கவில்லையே! ஆண்டவனுக்குச் செலவு செய்யும் அரைக்காசும் வீணுகாதே என்றுதான் அன்று என்னை அண்டியிருந்தோரெல்லாம் சொன்னர்கள். ஆனல் இன்று அவர்களெல்லாம் எங்கே? இலாபம் வரும் என்ற ஓரே நினைப்பில் மிக்க வரதட்சணையுடன் என் மகள் மணவிழாவைத் தடபுடலாக மூன்று நாள் நடத்தி முடித்தேன். ஆனல் இதற்குள் கடையிலிருந்த பொறுப்பாளர்கள் இப்படிக் காலைவாரி விட்டுவிடுவார்கள் என்றும், கடல் கடந்த மலேயாவில் இருந்தகடை இப்படித்திடீரென்று தீவாலாகி விடும் என்றும் நான எதிர்பாக்கவில்லையே!

ஆகவேதான் சைன பஜாரில் இருந்தவரைவிற்பனை நிலையத்தை ஒரு தள்ளு வண்டியில் தெருத்தெருவாக மிட்டாய் வியாபாரம் செய்துவந்த 'மூல்சந்த்' என்ற சேட்டுக்கு விற்றுவிட்டேன். என் கடைக்கு வாடிக்கையாக வந்து போய்க்கொண்டிருந்த அவன், இன்று பெரிய முதலாளியாகி

—கா. வேழவேந்தன்—

விட்டான். மாளிகை வாசியாக இருந்த நானே மளிகைக்கடை வியாபாரியாகிவிட்டேன். தெருவில் மிட்டாய் விற்றுவந்த அவன் இன்று வான் முட்டும் பல வீடுகளுக்குச் சொந்தக்காரனாகிக் கொட்டமடிக்கிறான்.

நண்பரே! மூல்சந்த் மட்டுமல்ல; இப்படி எத்தனை எத்தனையோ லால்சந்த்களும் கேவல் சந்த்களும் சைனா பஜாரையே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள்! அங்கே கடைகள் வைத்திருந்த நம் இனத்தவரின் சுவடே தெரியவில்லை. ஒருமுறை சென்னை வந்து பாரும்! இவையெல்லாம் விதியா, சதியா?

இங்ஙனம்,
கந்தசாமி செட்டியார்.

* * *

அன்புள்ள கிஷன்சந்துக்கு,

மூல்சந்த் நமஸ்காரத்துடன் எழுதும் கடிதம். நான் ஊரைவிட்டுப் புறப்பட்டபோது, "நீ எப்படி, எங்கே சென்று வாழப்போகிறாய்? அதுவும் குடும்பத்துடன் செல்கிறாயே?" என்றெல்லாம் கேட்டு என்னைப் பயமுறுத்தினாய்! உன் அச்சங்கலந்த குரல் கேட்டு நான் கூட முதலில் கலங்கிப்போனேன். அங்கே நம் ஊரில் போட்டிக்கும் பொறாமைக்கும் இடையே அஞ்சிச் சாவதைவிட எங்கேனும் சென்று பிழைத்துக்கொள்ளலாம் என்றுதான் புறப்பட்டுவிட்டேன். தமிழ்நாடு எங்களைக் கைநீட்டி வரவேற்றது. கள்ளமற்ற உள்ளமுடைய தமிழர்களை எப்படியும் ஆட்டுவிக்கலாம் என்பதை வந்தவுடன் புரிந்துகொண்டேன். பிறகு கேட்கவேண்டுமா?

அங்கு நம் நண்பர்கள் கற்றுக் கொடுத்த வியாபாரக்கலை அவ்வளவையும் பயன்படுத்திப் பணம் திரட்டத் தொடங்கினேன். இங்கே எவரையும் விருந்தாளிகளாக ஏற்கும் ஏமாளித் தமிழர்கள் என முயற்சிக்கு என் தடைசெய்யப்போகிறார்கள். கொண்டுவந்த கொஞ்சம் பணத்தில் மிட்டாய் வியாபாரம் தொடங்கிய நான், இன்று பெரிய வைரக்கடையின் முதலாளியாகிவிட்டேன். கேட்க உனக்கு விந்தையாக இருக்கும்! இந்தக் கடையின் பழைய உரிமையாளன் ஒரு பெரிய இலட்சாதிபதி! பாவம்! கோயிலுக்கும் குல கௌரவத்திற்கும் வாரியிறைத்துவிட்டு, இறுதியில் கடன் சுமையால் திண்டாடினான். மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் கடைசியில் என்னிடம் வந்து சேர்ந்தான். பிறகு சுவடே தெரியாமல் கடை என் பெயருக்கு மாற்றப்பட்டது. நானும் தேடி வந்த சீதேவியை ஏற்றுக்கொண்டேன்.

இதுமட்டுமல்ல, நண்பனே! நான் வாணிபம் நடத்தும் சென்னையின் பெரிய வீதியான சைனா பஜார் முழுவதுமே நம்மவர் குழுமிவிட்டார்கள்; செவிக்குத் தேனாக இனிக்கிறதல்லவா? துணிக்கடை, நகைக்கடை, உணவுக் கடை, கடிகார விற்பனைக் கடை என்பவை முதல் எல்லா வாணிப நிலையங்களும் நம்மவர் கைகளில் சிக்கிவிட்டன. ஏன்? நம்மவர்கள்தாம் இங்குள்ள எல்லாத் தமிழர்களுக்கும் கடன் கொடுக்கும் குட்டி ரிசர்வ் பாங்குகளாக ஆகிவிட்டார்கள். பொழுது விடிந்தால் நகைகளையும் பாத்திரங்களையும் அடகுவைக்க அத்தனை துறையிலிருக்கும் தமிழர்களும் நம்மவர் வட்டிக்கடைகளில் தாம் வந்து சேருகிறார்கள். தங்கசாலை வீதி முழுவதும் நமக்குப் பிடிபட்டு வருகிறது. இவ்வளவு ஏன்? கேகயன் ஆண்ட நாடு கேகய நாடு என்பதுபோல, நாங்கள் ஆளும் காரணத்தால் சென்னையில் 'சௌகார்பேட்டை' என்றே எங்களுக்குத் தனிப்பகுதி கம்பீரமாக விளங்குகிறது. இவ்வளவு சீரும் செல்வாக்கும் நிலைக்குமா என்று கேட்கத் தோன்றும்! உனக்கு மட்டும் இரகசியத்தைச் சொல்லிவைக்கிறேன். இங்கே நம்முடைய ஏக பாரதக்கொள்கையை வளர்த்து, எங்களுக்கு ஆபத்பாந்தவர்களாக இருக்கும் காங்கிரஸ் ஆட்சி இருக்குமவரை எங்களுக்கு என்ன குறை? வாழ்க காங்கிரஸ் பரிபாலனம்! வாழ்க பாரத ஒற்றுமை!

இங்ஙனம்,
மூல்சந்த்.

★

பாராட்டு!

"நான் கண்ட தொழிலாளர்களில் தமிழ் நாட்டுத் தொழிலாளர்கள் சிறந்த தொழிலாளர்கள். விசாலமான நோக்கு, நாணயம், சிக்கனம் முதலியவைகள் தமிழ் நாட்டுத் தொழிலாளர்களின் நற்குணங்களாகும்," என்று ஜூலை 10ம் தேதி மதுரை லயன்ஸ் கிளப் கூட்டத்தில் 'நான் கண்ட இந்தியா' எனும் தலைப்பில் பேசிய பிரபல பிரிட்டிஷ் இஞ்சினீயர் இ.எச் பார்ன்ஸ் என்பார், பேசியிருக்கிறார்.

இவர் கடந்த 25 ஆண்டுகளாக இந்தியாவில் இருந்த பிரபல இஞ்சினீயர் ஆவார். போர்க் காலத்தில், பர்மா முதலிய இடங்களில், பணியாற்றியிருக்கிறார்.

அவர், இப்படிப் பாராட்டுகிறார்! ஆனால், அப்படிப்பட்ட தொழிலாளர்கள், இன்றுள்ள காங்கிரஸ் ஆட்சியில்,

பெறும் பரிசு!!

கம்போடியா மில்லில், "பெருவாரியான ஆள் குறைப்பையும் தீர்ப்புகளை அமல் செய்யாததையும்" ஆட்சேபித்துப் போராட்டம்.

சாரதா மில்லில், "கதவடைப்பு' நடைபெறுவதால் 1400 பேர், வேலையிழந்துள்ளனர்.

பிரபல இஞ்சினீரிங் நிலயமான "டெக்ஸ்டூல்" கம்பெனியில் 3000 தொழிலாளர்கள், வாழ்க்கை வசதிகள் கோரிப், போராட்டம்.

கிட்டத்தட்ட 36 அச்சுக் கூடங்களில் வேலைபார்க்கும் 400 அச்சுப் கோர்ப்பவர்களுக்கு, சம்பளத் தீர்ப்பு அமுல் செய்யப்படாததால்' அறப்போர்.

இத்தனையும் ஒரே ஒரு ஊரில்! கோவையில்!! — என்று ஜூலை 11-ந் தேதி. வந்த செய்தி சொல்கிறது.

விசால நோக்கு — நாணயம்— சிக்கனம் உண்டு!

தீராத அல்லல்களும், வறுமைக் கடியும், வாதனையும் கூட உண்டு!

வயிற்றைக் காட்டிக் கேட்க ஆரம்பித்தால், கடைசியில் கிடைப்பதோ துப்பாக்கிக் குண்டு!!!

ஊதுவத்தியிலிருந்து இளம்புகை நெளிந்து நெளிந்து உயரப் பறந்து பறந்து காற்றோடு கலப்பது போலப் பூங்குன்றனின் சிந்தையிலிருந்து இளம்புகை சிந்தனை நெளிந்து நெளிந்து உயரப் பறந்து பறந்து ஆடலழகி மேகலையைச் சென்றடைந்தது. மேகலை! அவள் பத்தரைமாற்றுப் பசும் பொன்னின் வார்ப்படம்! பாடும் அருவிகளில், ஓடும் நதிகளில், பசும் பூஞ்சோலைகளில், பூவின் சிரிப்பில், பூவையர் மேனியில் மேடை அமைத்து ஆடிக்கொண்டிருக்கும் அழகுக் கன்னி.

இளங்கோ மன்றத்தாரின் ஆண்டு விழாவின்போது அவ்வூர்க் கலையரங்கிலே அந்த அழகு ஆடியது! அங்கும் இங்கும் ஓடி, அசைந்து அசைந்து ஆடி. அமர்ந்திருந்த ஆண்களின் உள்ளங்களைக் கொல்லையிலே பூத்த முல்லைப் பூவைப் பறிப்பதுபோல் கிள்ளிக் கிள்ளி அள்ளிக் குவித்து வேடிக்கை பார்த்த அந்தப் புள்ளிமான், பூங்குன்றனின் நெஞ்சக்காட்டில் உத்தரவு பெறாமலேயே ஓடி விளையாட ஆரம்பித்துவிட்டது. அந்தப் புள்ளிமானின் உள்ளத்தில் இந்தக் கலைமானுக்கு இடமிருக்குமா?

புத்தகத்தைப் புரட்டினான் பூங்குன்றன். சாலையை விட்டுச் சகதியிலே இறங்கிவிட்ட வண்டிமாடு மீண்டும் சாலைக்கு வர மறுப்பது போல அவனுடைய உள்ளம் சண்டி செய்தது.

கதவு ஓசையிட்டது. கனவு கலைந்தது. கண்களைத் திறந்தான். கனவா? நினைவா? நினைவுதான்! அவளா? அவள்! அவள்! அவளேதான்! 'மேகலை வந்துவிட்டாளா?' அவன் வாய் முணுமுணுத்தது. கைகள் குவிந்தன. அவள் கைகளைக் குவித்தாள். 'அந்தி நேரம் இன்னும் வரவில்லையே! செந்தாமரை அதற்குள்ளாகக் குவிகிறதே!' அவன் தடுமாறினான். 'வணக்கம்' என்று அவள் வாயிலிருந்து இன்னிசைநாதம் எழுந்து தணிந்தது. அவன் உள்ளம் வெட்டுவதும் ஒட்டுவதும் பொருத்துவதும் திருத்துவதுமான பழம் பண்டித வேலையில் ஈடுபட்டது. இல்லாவிட்டால் 'குழலினிது யாழினிது என்பர் இக் கன்னி அமுதச்சொல் கேளாதவர்' என்று குறளைத் தன் விருப்பத்திற்கு அவன் மாற்ற நினைப்பானா?

புலவர் பொன்னிவளவன்

"உட்காருங்கள்! இப்படி இருண்ட வீட்டில் குடும்பவிளக்கு குடிபுகுந்ததுபோல்...?

"இல்லை! இல்லை! அந்த வான நிலாவிடம் இந்த மின்மினி வரங் கேட்க வந்திருக்கிறது."

"வரமா? நான் என்ன ஆண்டவனா? நீங்கள் என்ன காரைக்கால் அம்மையாரா? எனக்கு என்னவோ இந்த ஆண்டான் அடிமை மனப்பான்மையே பிடிப்பதில்லை. இன்னும் எத்தனை நாளைக்கு இந்த உயர்வு தாழ்வு? இந்தக் காலத்தில் அடியவர்கள்தான் ஆண்டவனையே விழுங்கிச் சீரணிக்கிறார்களே! நீங்கள்கூட என்னைக் கண்களாலேயே விழுங்கப் பார்க்கிறீர்களே!" அவன் வார்த்தைகளை மென்று விழுங்கினான்.

"ஊம்... அப்படியா?" அவள் சிரித்தாள். அவள் சிரிப்பு, கீழே குனிந்த நேரத்தில் பையிலே இருந்த வெள்ளி ரூபாய்கள் கல் தரையிலே விழுந்து அடிபட்டுக் கலகலப்பது போலக் கலகலத்தது.

"என்ன இருந்தாலும் சீர்திருத்த நாடக மன்றத்தின் செயலாளர் அல்லவா? மன்றத்தின் பெயர்ப் பொருத்தத்திற்குத் தகுந்தாற் போலவே சொற் பொருத்தம். செயற் பொருத்தம், எல்லாம் இருக்கிறது."

"என் உச்சியைக் குளிரவைக்கும் முயற்சியில் ஈடுபடுகிறீர்களே! உங்களுக்கு என்னால் ஆகவேண்டிய வேலை ஏதாவது...?" கொஞ்சம் கடுமையைக் குரலிலே வரவழைத்துக்கொண்டான்.

பொற்கொடியாளின் பூங்குமுதச் செவ்வாயிலிருந்து புன்னகை ஒன்று கிளம்பியது. கருடனைக் கண்டதும் தன் தலையை உள்ளுக்கு இழுத்துக்கொண்டு புற்றுக்குள்ளே சுருண்டு மடங்கிக்கொள்ளும் பாம்பைப் போல அவன் கோப நடிப்பு அவளது புன்னகையைக் கண்டதும் நெஞ்சப் புற்றிலேயே சுருண்டு மடங்கிக்கொண்டது.

"கலையரங்கத்தில் நான் ஆடிய நடனத்தை நீங்கள் பார்த்தீர்களா?"

"பார்த்தேனா! அந்தக் காட்சிகள் இன்னும் என் கண்களை விட்டு நகரவே இல்லையே!"

"எனக்கு நடிக்கவும் தெரியும். பாடவும் தெரியும். உங்கள் நாடக மன்றத்தில் எனக்கு நடிப்பதற்கு வாய்ப்பு ஏதாவது தந்தால்...!" அவள் இழுத்து நீட்டினாள். அவன் சுருக்கமாக முடித்தான்.

"கண்டிப்பாகத் தருகிறேன். எங்கள் மன்றத்திற்கும் ஒரு புதிய நடிகை தேவைப்படுகிறது. அடுத்தவாரம் வருகிறீர்களா?"

"தவறாமல் வருகிறேன். நாடகத்தின் பெயர்...?"

"தானாக வந்தவள்."

அவள் இலேசாகச் சிரித்தாள். "எனக்காகச் சொல்கிறீர்களா? இல்லை! நாடகத்தின் பெயரே அது தானா?"

"நாடகத்தின் பெயரே அதுதான். உங்கள் முகவரியைத் தந்துவிட்டுப் போகிறீர்களா?"

முத்தெழுத்துக்களாலே முகவரியை எழுதி நீட்டினாள் மேகலை.

'அடுத்த சந்திப்பு வரும்வரையில் நான் உங்களுக்குக் கொடுத்துவிட்டுப் போகும் நினைவுச் சின்னமாக இதை எடுத்துக்கொள்ளுங்கள்' என்று சொல்லாமல் அவள் உதிர்த்துவிட்டுப்போன அந்த முத்துச் சிரிப்பு...! சந்தக் கவிதையைச் சந்தம் தவறாமல் நிறுத்தி நிறுத்திப் படித்து மனப்பாடம் செய்கிற பாடகனைப்போல அவள் எடுத்துவைத்த அடி ஒவ்வொன்றையும் எண்ணி எண்ணி அவள் நடையழகைச் சுவைத்தான் பூங்குன்றன். என்ன இருந்தாலும் நாட்டிய நடையல்லவா?

* * *

பூங்காவிலெல்லாம் புதுப்பொலிவை ஏற்றி நீங்காத தண்ணீரோடு வந்துகொண்டிருந்த பொன்னி நதி, கோடையில் வற்றி வறண்டதுபோல்— இசைவாணன் இடையறாது பொழிந்துகொண்டிருந்த இசைமழையை மங்களம் பாடி முடித்ததுபோல், அவளும் தன் கானக் குரலோசையை அடுத்தவாரம் வருகிறேன் என்ற மங்களப் பாட்டோடு முடித்துவிட்டுப் போய்விட்டாள். எப்பொழுதோ போய்விட்டாள்.

அவள் தன்னிடத்திலே பேசிய வார்த்தைகளை மீண்டும் நினைத்துப்பார்த்தான்; கணக்குத் தேர்விலே தான் போட்ட கணக்குகள் சரியா? தவறா? என்று நடுநடுங்கும் உள்ளத்தோடு சிந்தித்துப் பார்க்கும் மாணவனைப் போல அல்ல — வெற்றிகரமாகத்தான் பேசி முடித்த பேச்சில் சுவையான பகுதிகளை மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்க்கும் பேச்சாளனைப்போல. என்னதான் பிறருக்கு எதிரில் தன்னைப் புத்திசாலியாகக் காட்டிக்கொள்ள ஆசைப்பட்டாலும், மனிதன் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் சிந்தித்துப் பார்க்கையில் தன்னிடமுள்ள முட்டாள் தனங்களையும் உணருகிறான் அல்லவா? அதைப்போலத்தான் பூங்குன்றனும் உணர்ந்தான். 'அடுத்த வாரம் அந்த அழகி வரும் வரையில் நான் என்ன துடித்துக்கிடப்பதா? இல்லை! இதயம் வெடித்துச் சாவதா? மடத்தனமாக உளறிவிட்டேனே.

சீர்திருத்த நாடக மன்றத்தின் கதாசிரியர் 'தடந்தோளன்' எழுதிய 'தானாக வந்தவள்' நாடகச் சுவடியை அவன் எடுத்துப் பிரித்தான், "எத்தனையோ முறை படித்துப் பார்த்ததுதான்! இருந்தாலும் தானாக வந்தவளுக்கு நானாகக் கொடுக்க வேண்டிய பகுதியைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டுமே! இந்த மன்றத்தில் நான் போட்டது சட்டம்; நீட்டியது திட்டமாக இருப்பது இந்த நேரத்திற்குநல்லதுதான். கதாநாயகனாக நான்தானே நடிப்பேன்? கதாநாயகியாக நடித்துக்கொண்டிருக்கும் கனிமொழி...? இந்த நாடகத்தில் தோழியாக நடிக்கச் சொன்னால் போகிறது. நான் நாராக இருக்கிறேன். நாடக மன்றத்தின் நடிகர்களெல்லாம் உதிரிப் பூக்கள். உதிரியாக இருந்தால் மதிப்பில்லை என்றுதானோ அவர்கள் என்னிடம் வந்துஒட்டிக்கொண்டிருக்கிறார்கள். நாடக மன்றம் ஒருமாலை. அந்த மாலையிலே இந்த மேகலை புதியரோஜா. மற்றவர்கள் அல்லி, அலரி சம்பங்கி..."

"என்ன பூங்குன்றன்? சிந்தனையா?"

"யார்? தடந்தோளனா? வாருங்கள்! வாருங்கள்! நாடகத்தைப் பற்றித்தான் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன்."

"நானும் அதைத்தான் கேட்க வந்தேன். நமது புதிய நாடகத்தில் நடிகர்களுக்குப் பகுதி பிரித்து இன்னும் எழுதிக் கொடுக்கவில்லையே! எப்பொழுது ஒத்திகை நடத்துவது? எப்பொழுது அரங்கேற்றுவது?"

"கலை அரங்கத்தில் நடனமாடினாளே மேகலை! உங்களுக்குத் தெரியுமா தடந்தோளன்?"

"ஊர் முழுவதும் பேர் பரவிக்கிடக்கிறதே! அவளையா தெரியாது? ஆடலழகிமேகலை! ஆமாம்! அவளுக்கென்ன?"

"அவள்தான் நம்முடைய 'தானாக வந்தவள்' நாடகத்தில் கதாநாயகியாக நடிக்க இருப்பவள்."

"அப்படியா? கூட்டம் ஏராளமாகச் சேரும். நல்ல வசூல் இருக்கும். நமது மன்றத்திற்கும் நல்ல பெயர்! ஏற்பாடு செய்யுங்கள்."

*

மரங்களிலிருந்து இலைகள் தானாக உதிர்ந்து விழுகின்றன. ஆனால் 'காலண்டரில்' இருக்கிற தாள்கள் தானாக விழாமல் அடம் செய்து மனிதர்களுக்கு வேலை வைக்கின்றன. ஒவ்வொரு வீட்டிலும் தினக் காலண்டரிலிருந்து தொண்ணூறு பல்பொடி மடிக்கும் காகிதங்கள் உதிர்ந்தன. மாதம் மூன்று ஓடிவிட்டது.

"தானாக வந்தவளைப்பற்றி ஊரெங்கும் பேச்சு. அடடா! அந்த மேகலையின் நடிப்பு! நடிப்பா அது? அந்தப் பூங்குன்றன் நடிப்புக்குத்தான் என்ன குறைச்சல்? அவர்கள் மன்றத்து நாடகங்களிலேயே இந்த நாடகம் அருமை! அருமை! இப்படிப்பட்ட குரல்கள் என்றென்றும் எங்கெங்கும் ஒலித்துக்கொண்டே இருந்தன.

பூங்குன்றனும் மேகலையும் கடற்கரையிலே வீற்றிருந்தனர். மேகலையின் நெஞ்சில் வெற்றிப் பூரிப்பு! வானத்திலே தோன்றிய வானவில் அவளுடைய நெஞ்சை இழுத்தது.

"பூங்குன்றன்! அதோ பாருங்கள்! அந்த வானவில் எவ்வளவு அழகாக இருக்கிறது?"

"உன்னைவிடவா?"

"போங்கள்! உங்களுக்கு எப்பொழுதும் வேடிக்கைதான்!"

"என்ன மேகலை? வெட்கமாக இருக்கிறதா?"

"இல்லை! வேதனையாக இருக்கிறது. நீங்கள் ஏன் வரவர இப்படி மோசமாக நடந்துகொள்ளுகிறீர்கள்?'

மோசமாகநடக்கிறேனா? மேகலை! நான் உன்னை முழுக்க முழுக்கக் காதலிக்கிறேன்."

"நீங்கள் காதலிக்கலாம். ஆனால் நான் உங்களைக் காதலிக்கவில்லையே!"

"என்ன மேகலை? இது என்ன நடிப்பு! மணிமேகலைபோல் துறவியாகப் போகிறாயா?"

"துறவியாகவா?" அவள் சிரித்தாள், சிரிப்பு ஓய்ந்தது. மீண்டும் தொடர்ந்தாள் "மாதவி பிக்சர்ஸ் டைரக்டரை நான் காதலிக்கிறேன். உங்களுக்குத் திருமண அழைப்பு விரைவில் வரும், இது நடிப்புமில்லை, நாடகமுமில்லை!"

பூங்குன்றனுக்குத் தன்னைப் பம்பரமாக யாரோ சுற்றிவிட்டது போலத் தோன்றியது. அவன் வானத்தைப் பார்த்தான் அந்த வானவில்மறைந்துபோயிருந்தது. என் காதல் — அதுவும் தோன்றி மறைகின்ற வானவில்தானா? பக்கத்திலே பார்த்தான் மேகலையைக் காணோம். அவள் வீட்டை நோக்கி நடந்துகொண்டிருந்தாள். கடலைப் பார்த்தான், அது தன் ஆசைக் கரங்களை அவனை நோக்கி நீட்டியது.

துரோகி ★

வி. ஆர். துரை

பாலையும் பழரசத்தையும் பருகி, புத்தாடைகளை நாடோறும் விதவிதமாய் அணிந்து, பரிமீதும் கரிமீதும் உலா வந்து, கால் பிடிக்க, கை அமுக்க எதையும் எந்த நேரத்திலும் செய்து முடிக்க, பட்டு மேனிப் பாவையர் பட்டாளம் சூழ்ந்து காத்திருக்க, வெண்முகில் மிதந்திடும் வண்ண மாளிகையில் இன்பத்தில் மட்டுமே நீச்சலடித்து, உல்லாசமாக வளர்ந்த அவன்—சூராஜ் உத்தௌலா வங்காளத்தின் நவாப்பானான்.

துன்பமே என்னவென்று தெரிமல், உலகமே இன்னதென்று புரியாமல், வான் முட்டும் மாளிகையில் சுகபோகங்களுக்கு இடையே வளர்ந்துவிட்ட அவன், எல்லோரும் விரும்பிப் போற்றக்கூடிய முறையில் தமது ஆட்சியைச் செவ்வனே நடாத்துவதற்கு, அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ந்த பெரியார்களை அவசியம் துணையாகக் கொண்டிருக்க வேண்டும். அறிவுக் கூர்மை அற்ற அவன் அப்படிச் செய்யாதது ஒருபுறமிருக்க, வஞ்சகரையே துணையாகக் கொண்டான். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவார் தம் உறவு கலவாமை வேண்டும் என்பதை மறந்து, நயவஞ்சகர்பால் தாம் கொண்டிருக்கும் நட்பானது உடனடியாக இல்லாவிட்டாலும் எப்போதாவது ஒரு நாளைக்கு, தனது இன்ப வாழ்விற்கே ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்போகின்றது என்பதை அவன் எப்படி அறிவான்?

பெரும்பாலோருக்கு அவன் பட்டத்திற்கு வந்தது முதற்கொண்டு, பெருங்கசப்பு அவன் பேரில் இருந்து வந்தது, விரைவிலேயே அவனுக்கு எதிராக ஒரு சதிக்கும்பல் உருவாகிவிட்டது. அந்தக் கும்பல் தம் குழுவிற்கான 'நற்பணியைக்' குறைவின்றித் திறமையுடன் செய்யலாயது. பள்ளத்தில்நவாப்பைத்தள்ளுவதற்கு ஒரு வாய்ப்பு எப்பொழுது வாய்க்கும் என்று விழிப்பாய் இருந்த குள்ளநரிக் குணம் கொண்டவரும் பொறாமையெனும் நோய் பிடித்த வேறு சிலரும், அந்தப் பிரபல சதிக்கும்பலில் அங்கத்தினர்களாக இருந்தார்கள். அவனது ஆட்சியின் கீழிருந்து, அவன் உப்பைத் தின்று வாழும் மீர்ஜாபர் போன்றவர்களே, அவனுக்கு எதிராகத் துரோகம் செய்யக் காத்திருந்தார்கள்.

நவாப்பின்முக்கிய தளபதிகளாக இருந்த சிலருள், ஒருவனாக மீர்ஜாபர் இருந்தான். வெள்ளை உள்ளம் கொண்ட நவாப் அவனை மிகவும் நம்பினான். ஆனால் மீர்ஜாபரோ நஞ்சினும் கொடியவனாக இருந்தான். நவாப்பின்மேல் அவனுக்கு உட்பகை இருந்தது. வங்காளத்தின் நவாப்பாக வேண்டும் என்ற பேராசையை அவன் கொண்டிருந்தான். அந்த ஆசையை அவன் வெளியே காட்டிக்கொள்ளவில்லை. வஞ்சகத்தின் மொத்த உருவான அவனைப் பற்றி, சரியாக நவாப் புரிந்துகொள்ளவில்லை. அவன் பொய்வாய் என்னென்ன சொல்லுகின்றதோ அதை அப்படியே நம்பினான். அதோடு மட்டுமல்ல! அந்த நயவஞ்சக நரியின் நாக்குச் சொன்னபடி எல்லாம் ஆடினான். அந்த அளவுக்குத் தந்திரமாக மீர்ஜாபர் நடந்துகொண்டான். நம்பியவனை நட்டாற்றில் தள்ளிவிட்டுக் கைகொட்டிச் சிரிக்கப் பார்க்கும் மீர்ஜாபர், ஒருவருக்குத் தீமையை நாம் செய்யின், நமக்கொரு தீங்கினை மற்றொருவர் செய்யக் காத்திருப்பார் எனும் நீதியை மறந்துவிட்டான்போலும்!

'ஆங்கிலப் பேரரசின் அடிப்படை அமைத்த சிற்பி' என்ற பெயர் இராபர்ட் கிளைவிற்கு உண்டு. அதிர்ஷ்டக் காரனான அந்த வீரனுக்கும் நவாப்பிற்கும் பகை மூண்டுவிட்டது. வந்து நுழைந்த வெள்ளையரை அவர்களின் சொந்த இடத்திற்கே, அனுப்பிவைக்கவேண்டும் என்று நவாப் திட்டமிட்டார். ஆனால் தனக்குத் தெரியாமல் உருவாகியிருந்த சதியில் கிளைவ் சாமர்த்தியமாகக் கலந்துகொண்டு தம்மைத் திரும்பாத ஊருக்கு அனுப்பிவைக்கப் போகிறான் என்ற உண்மைநவாப்பிற்குத்தெரிந்திருக்க நியாயமில்லை!

மனதிற்குள் ஒருமுறை தற்போதைய நிலைமையை எண்ணிப் பார்த்து, மீர்ஜாபர் சிரித்துக்கொண்டான், யாருக்கும் தெரியாமல் ஆங்கிலேயரிடம் இரகசியமாக ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டான். தன்னை வங்கத்தின் அதிபதியாக்க வேண்டும் என்று, அயலானிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். அப்படிச் செய்தால் உங்கள் விருப்பம்போல், உரிமைகள் பலவற்றை வாரி வழங்குகின்றேன் என்று வாக்குறுதியும் அளித்தான். தம்முடைய எண்ணம் ஈடேற வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக, எதையும் துணிந்து செய்ய அவன் தயாராகக் காத்துக்கொண்டிருந்தான்.

எதிர்பார்த்திருந்தபடி நவாபிற்கும் கிளைவிற்கும் போர் மூண்டது. இப்படி ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்த மீர்ஜாபருக்கு, பழம் நழுவிப் பாலில் விழுந்த கதையாயிற்று. ப்ளாஸி என்ற இடத்திலே அந்தப் போர் நடந்தது. காலை எட்டு மணிக்கு ஆரம்பமாகியது. ஒருமணி நேரம் இடீரென்று பெருமழை பெய்தது. நவாப்பின் சேனை வெடி மருந்தை நனைய விட்டுவிட்டது. நனைந்து போய்விடாமல் மூடி வைத்துக்கொண்டது கிளைவின் படை. மழை நின்றது. மூவாயிரம் பேர் கொண்ட கிளைவின் சிறிய படைக்கும், ஐம்பதினாயிரம் பேர்கொண்ட நவாபின் பெரிய சேனைக்கும் சண்டை துவங்கியது. நம்பிக்கைக்குரிய நவாப்பின் முக்கிய தளபதி ஒருவன் படுகாயமடைந்தான். அவன் நிலை கண்டு இரக்கம் கொண்ட குதிரை ஒன்று, போர்க்களத்தினின்று அவனைச் சுமந்துகொண்டு ஓட்டமெடுத்தது.

இந்த இக்கட்டான நேரத்தில் நவாப் மிகவும் தத்தளித்தான். என்ன செய்வதென்று புரியாமல் விழித்தான். 'நல்ல சமயத்தை நழுவவிடலாமோ' என்று இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டான் மீர்ஜாபர். "இப்போது ஓடிப்போய்விடலாம்; இரவு இளைப்பாறலாம்; மீண்டும் நாளை வந்து போர் செய்யலாம்; யானே போரை முன்னின்று நடத்துகிறேன்" என்று ஒரு யோசனை கூறினான். 'வெளுத்ததெல்லாம் பால்' என்று கருதும்

மனப்பக்குவம் கொண்ட நவாப், அவனுடைய வஞ்சக உரைக்குச் செவி சாய்த்தான். மிக வேகமாகச் செல்லும் ஒரு ஒட்டகத்தின் மீது தாவினான். அவன் உள்ள மனதைப் புரிந்துகொண்டதுபோல், அந்த நல்ல ஒட்டகம் அதிவேகமாகப் பறந்து சென்றது.

"இதுதான் தக்க சமயம். உடனே வந்து தாக்குங்கள்" என்று மீர்ஜாபர் தூது அனுப்பினான் கிளைவ்வீரனுக்கு. நவாபின் பெருஞ்சேனை சின்னாபின்னமாகியது; சிதறி ஓடியது. வெற்றி கிளைவின் பக்கம் சாய்ந்தது.

'உலுத்தனான' மீர்ஜாபருக்கு ஒரு மகன் இருந்தான், ஒட்டகத்தின்மீதேறி ஓடிவந்த நவாபை, வழியிலேயே இரக்கமின்றிக் கொன்றுவிட்டான். தந்தைதான் பச்சைத்துரோகியாக இருந்தான். தனயனாவது உத்தமனாக—செய்ந்நன்றி மறக்காதவனாக இருக்கக் கூடாதோ? அவனும் துரோகியாகவா இருக்க வேண்டும்? சரியான தந்தை! சரியான மகன்!!

ஒன்பது மணி நேரம்தான் அந்த ப்ளாசிப் போர் நடந்தது. அந்த ஒரு சில மணித்துளிகளில் தலைகீழ் மாற்றங்களை அன்றோ, அந்தச் சண்டை உண்டாக்கிவிட்டது. அதிகாரம் வெள்ளையர் கைக்கு மாறியது. நவாப் சுராஜ் உத்தௌலா இருந்த இடத்திலே மீர்ஜாபர் பொம்மையாக உட்கார வைக்கப்பட்டான். இது கொஞ்ச நாள் வாழ்வுதான் என்பதை அவன் எப்படி அறிவான்? ஆங்கிலர் தம் கைப்பாவையாக இருந்துகொண்டு, அவர்கள் சொல்லியபடியெல்லாம் ஆடினான்.

காலம் ஓடியது. கசப்பும் வளர்ந்தது. எந்த வெள்ளையர் மீர்ஜாபரை உயர்ந்த இடத்தில்கொண்டுபோய் உட்கார வைத்தார்களோ, அந்த வெள்ளையரே அவனை அங்கிருந்து கீழே உருட்டி விட்டுவிட்டார்கள். வந்து கீழே விழுந்த அவன் அலறினான்; அனலிடைப் புழுவெனத் துடிதுடித்தான்; குருதிக் கண்ணீர் வடித்தான். இப்போது கண்ணீர் சிந்தி என்ன பயன்? அவனது மனச்சாட்சி அவனை அணு அணுவாய்க் கொன்று தின்றது.

'வஞ்சகர் வாழ்ந்ததில்லை' என்பது வரலாற்றுக் கண்ணாடி, நமக்கெல்லாம் தெற்றெனக் காட்டும் ஒரு நல்ல பாடமாகும். ✻

'தலை'யும் 'கை'யும்!

—[மாண்மகிழன்]—

"கவின்கலை மன்றம்" — இதனை அறியாதவர்கள் யார் இருக்கிறார்கள்? நாடகங்கள் — நடனங்கள்— —சொற்பொழிவுகள் இவைகளில் ஏதாவது ஒன்று வாரந்தோறும் அங்கு நடைபெறுவது வாடிக்கையாயிற்றே!

இவ்வாரம் அம்மன்றத்தில் தொழிலாளர்கள் மாநாடு. கலையழகை ரசித்துக்கொண்டிருந்த அம் மன்றம், நெருங்கிய கூட்டத்தை வேறு கூட்டிவைத்து, புன்னகை வெள்ளத்திலே மூழ்கி இருந்தது உண்மையிலேயே சிறப்பாகத்தான் இருந்தது.

மாநாட்டில் பல சிறப்பட்ட பொருள்களைக் குறித்து விவாதங்கள் நடைபெற்றன. முடிவுகளும் எடுக்கப்பட்டன. எடுக்கப்பட்ட முடிவுகள் ஒவ்வொன்றுக்கும், உழைத்து உழைத்து உருக்குலைந்துபோன கரங்களின் தட்டல்கள் உற்சாகமூட்டின.

தொழிலாளர்கள் புளகாங்கிதத்தில் மூழ்கி இருந்தார்கள்! அந்த நேரத்தில் அவர்களுடைய சிந்தனைக்கு ஒரு கேள்வி பிறந்தது. பிறந்த கேள்வி தொழிலாளர்களுக்குள்ளே சிறிது நேரம் அமைதியை தவழ்வித்தது.

அமைதிக்குப்பின் அதே கேள்வி அவர்களூடே ஒரு குழப்பத்தை மூட்டிவிட்டது. குழப்பம் தீர்க்க முடியாத பிரச்சனையாகி, உபத்திரவத்தைத் தர ஆரம்பித்தது.

உலகத்திலே எத்தொழில் சுலபமானது; எது கடினமானது? — இது அவர்களை அரித்துக்கொண்டிருந்த கேள்வி. தொழிலாளர்களுக்கிடையில் வினாவுக்கு விடை கூறும் ஆவல் அலைமோதியது! அதனால் உண்டான மாறுபட்ட கருத்து மோதல்கள் சொல்லி முடியா! அவ்வினாவை, மோதிய மோதல்களில் ஒன்றிலாவது நீதியோ, நேர்மையோ, உண்மையோ, தெளிவோ இல்லாமலே போயிற்று!

ஏனென்றால்......

'அ' வகைத் தொழிலாளி எழுந்தார். 'ஆ' வகைத் தொழில் மிகச் சுலபமானது என்றார். இதைக் கேட்டுக்கொண்டிருந்த 'இ' வகைத் தொழிலாளி சும்மா இருப்பாரா? உடனே "இரண்டுமே சுலபம், என் தொழிலே கடினம்" என்றார். 'ஈ' வகைத் தொழிலாளி பார்த்தார். இந்நிலையில் அவருக்கு அவருடைய எண்ணத்தை வெளியிட விருப்பம் இல்லாமல் போயிற்று! வடிவு பெறாத கற்பனைபோல் தன் எண்ணத்தை உள்ளுக்குள் வைத்திருந்தார். அந்த எண்ணமென்னவோ இதுதான்-"அனுபவமில்லாதவர்கள்! என் தொழிலை அறியமாட்டார்கள். அறிந்தால் இப்படி மோதிக்கொள்ளமாட்டார்கள்! கஷ்டப்படவே பிறந்தவன் நான்" இவரைப்போலவே ஏனைய தொழிலாளர்களும் தங்கள் தங்கள் தொழில்களே கடினமானவை என்று உள்ளூரக் கூறிக்கொண்டு அங்கலாய்த்துக் கொண்டிருந்தார்கள்.

எத்தனை நேரம் இப்படியே குழப்பிக்கொண்டிருப்பார்கள். முடிவின்மேல் அவர்களுக்கு அளவு கடந்த விருப்பம் உண்டாகிவிட்டது.

"முடிவெடுப்பது எப்படி?" — இந்தப் புதிய குழப்பம் அவர்களை வாட்டாமல் வாட்டியது! குழம்பி இருந்த ஒரு தொழிலாளி பொறுமையே இல்லாமல் மற்றொரு தொழிலாளியைப் பார்த்து "என்ன அண்ணே, உங்களுக்கும் புரியவில்லையா? என்னமோ, போங்கண்ணே, நீங்களும்தான் படிச்சுத் தொழில் செய்கிறீர்கள், இதற்கு ஒரு வழிசெய்ய அல்லது செய்விக்க இன்னும் யுக்தி பிறக்கவில்லையே" என்றார். அடுத்த விநாடியே அந்த கணக்காயத் தொழிலாளி விழிப்புற்றவராய், எந்தப்பொருள் பற்றியும் அருமையாகப் பேசக்கூடிய பேச்சாளர் 'க'விடம் ஒரு தாளில் "எத்தொ

ழில் கடினம், எத்தொழில் சுலபம்?" என்று எழுதிக்கொடுத்து, அதைப்பற்றி விளக்கிப் பேசுமாறு விண்ணப்பித்தார். பேச்சாளர் விருப்போடு விண்ணப்பத்திற்கு ஒருப்பட்டார். பிறகு......

அவர் பேச ஆரம்பித்தார்...... உலகத்திலே எத்தனையோ தொழில்கள் உள்ளன! அத்தனை தொழில்களையும் விளக்கிச் சொல்லி, இதில் இன்னது கடினம் —இதில் இன்னது சுலபம் என்று கூறிக்கொண்டிருக்க இயலாது; தேவையற்றது. கூறிக்கொண்டிருந்தாலும் அதில் உங்களுக்கும் விருப்பம் இருக்காது. எனவே நாம் ஒரு புதிய கண்ணோட்டத்தோடு தொழில்களைக்காண்போம்.

தொழில்களில் பல மாற்றங்கள் உள்ளன. ஆனால் அவை நாம் நோக்கப்போகும் பெரு நோக்கில் மாற்றங்களாகப் புலப்படாது. ஆனால் ஒரே ஒரு மாற்றம் மட்டும் எந்நோக்கில் நோக்கிக் கொண்டிருந்தாலும் அடிப்படை மாற்றமாகவே தெரிகிறது. அம்மாற்றத்தை முன்வைத்தால் ஒரு தெளிவு பிறக்கிறது. பிறந்த அத்தெளிவினால் தொழிலுலகம் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிபடுகிறது. இதைக்கொண்டு மொத்தத்தில் உலகத்தவர்கள் இரண்டு வகைத் தொழில்கள் செய்கிறார்கள் என்று துணிந்துகூற முடிகிறது.

அந்த இரண்டு வகைத் தொழில்கள்தான் கூரிய மூளை சம்மந்தப்பட்டதும், சீரிய கை சம்மந்தப்பட்டதும் ஆகும். அப்படியானால் கைத்தொழிலுக்கும் மூளைக்கும் சம்மந்தமில்லையா? மூளைத் தொழிலுக்கும் கைக்கும் தொடர்பில்லையா? என்று கேட்பீர்கள். இந்த ஐயம் சாதாரணமாக உண்டாக நியாயமே இல்லை.

ஏனென்றால் இந்த இரண்டு பிரிவுச் சக்திகள் இணையாவிட்டால் தொழிலே இல்லையே. ஆனால் இணைபயில் உழைப்பில் பேதம் இருக்கத்தான் செய்கிறது.

மூளைத் தொழிலாளர்க்கு, கையின துணை, கைத்தொழிலாளர்க்குப் பயன்படுவதுபோல் பயன்படுவது இல்லை. கைத்தொழிலாளர்க்கு, மூளையின் துணை மூளைத் தொழிலாளர்க்குப் பயனபடுவதுபோல் பயன்படுவதில்லை. மூளைத் தொழிலாளி கடினப்படுவது கரங்கள் ஓய்ந்துவிடுவதால் அல்ல. ஆனால் கைத்தொழிலாளி கடினப்படுவது கரங்கள் ஓய்ந்து, களைத்துவிடுவதால்.

இதைத்தான்எப்படிநோக்கினும் தோன்றும் மாற்றம் என்று குறிப்பிட்டது. இம்மாற்றத்தை வைத்துப் பார்க்கும்போதுதான் தொழிலுலகு இரண்டு பிரிவுகளாக உடைபடுகிறது.

இப்படித்தொழிலாளர்களை இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டதும், குழப்பம் இல்லாமல், சுலப, கடின ஆராய்ச்சியினைத் துவக்க உற்சாகம் பிறக்கிறது.

இருவகைப்பட்ட தொழில்களைக் கூர்ந்துநோக்கியதும், இருவகைத் தொழிலாளர்களை அழைத்து கைத்தொழிலாளியிடம் 'தலை'த் தொழில்தான் கடினம் என்றால் அதை கைத்தொழிலாளி ஏற்றுக் கொள்ளமாட்டார். அதுபோலவே 'தலை'த் தொழிலாளியிடம் கைத் தொழில் கடினம் என்றால் அதை 'தலை'த் தொழிலாளி ஒத்துக் கொள்ளமாட்டார். இருவரிடையே மாறுபட்ட கருத்துக்கள்! கைத்தொழிலாளர் நினைப்பார் 'தலை'த்தொழில் சுலபமே என்று. ஆனால் செய்யச் சொன்னால் நிச்சயம் துன்பத்தையே முத்தமிடுவார். அவ்வாறே 'தலை'த் தொழிலாளர் கைததொழிலாளர் கைத்தொழில் எளிதே என்று கருதிக்கொண்டிருந்து, அதனைச் செய்யப் புகுவாரானால் நிச்சயம் திணறத்தான் செய்வார். எனவே 'அக்கரைக்கு இக்கரை பச்சை' தத்துவம் அவ்விடத்தில் தாண்டவமாடுவது இயல்பாகி விடுகிறது. ஆனால்,இரண்டிலும் கடினம் இருப்பது தெளிவாகிறது. அப்படிக் கடினம் தோன்றக் காரணமாக இருப்பதும் அளவு மீறும் குற்றம் என்பது குறிப்பிடத்தக்கது. அளவுமீறின் எதில் துன்பமில்லை? இதொடு பல நியாயமானகாரணங்களும் உள்ளன. அநியாயமான காரணங்களும் உள்ளன. எனவே கடின துன்பம் உண்டாவது சூழ்நிலைகளால்தான் எனலாம். நல்ல நிலைகளில் செய்யும் போது இப்பிரச்னை உண்டாவதற்கு இடமே இல்லாமல் போகும்.

ஆனாலும் இவ்விரண்டுதொழில்களிலும ஒரு தனிபபட்ட கடின சுலபம் இல்லாமல் இல்லை. கடின சுலபம் என்றதும் உழைப்பைப் பொறுத்து என்று எண்ணவேண்டாம். ஏனென்றால் அந்நிலை அவைகளின் உயர்ந்த குறிக்கோளினைப் பொறுத்தது.

கைத்தொழிலைப்பொறுத்தவரையில் உண்மையானஉழைப்பையும், முயற்சியையும் போட்டால் பழக்கத்தால் கைத்தொழிலின் எல்லையைத் தொடலாம். இது எல்லோராலும் ஆகக் கூடியது. அப்படியே எல்லோராலும் முடியாவிட்டாலும் ஒரு சிலராலாவது நிச்சயம் முடியும். வெற்றி இத்துறையில் திண்ணமாக கிட்டும். வெற்றி பலர் கண்டிருக்கிறார்கள். காணுவார்கள்; காணப்போகிறார்கள். இது கைத்தொழிலைப் பொறுத்த மட்டில் உள்ள ஒரு சுபாவம்!

ஆனால் மூளைத் தொழிலில் முழுக்க முழுக்க மாறுபட்ட அனுபவமே கிட்டும். இத்துறையின் எல்லையைக் கண்டவர்கள் கிடையாது முழு அனுபவம் பெற்றவரும் கிடையாது. ஏனென்றால் முடியாதது.

எத்தகைய திறமையான தொழிலாளியும் இத்துறையில் எங்காவது தவறினைச் செய்தே தீருகிறான். எத்தனையோ காணாமலே இருக்கிறான். முழுமை இத் தொழிலாளிக்குக்கிட்டுவதேகிடையாது. எல்லையைக்காண அலைகிறான். முடியாமல் நிலைகுலைகிறான். அவன் இலட்சியம் நிறைவேறுவதில்லை. தான் இத்தொழிலில் பெற்றிருக்கும் அனுபவத்தைத் திரும்பிப்பார்க்கிறான. அழுகை அவன் குரல்வளையை நெரிக்கிறது. அவன் அனுபவமெல்லாம் கை மண் அளவினதாகவே தெரிகிறது. இப்புதிய அனுபவம் கைத் தொழிலாளியிடம் இல்லாதது. எனவே இவை இருவரிடையே உள்ள மாற்றம்—வேறுபாடு—சுலபம்—கடினம்!

முகவரி மாற்றம்

'சிதம்பரம் தோழரும் எழுத்தாளருமான மலர்மன்னன் சுரங்கத்தொழிற் பயிற்சி பெறும் நிமித்தம் மத்தியப் பிரதேசத்திற்குச் சென்றிருப்பதால் கழகத் தோழர்கள் பின்வரும் புதிய முகவரியினையே பயன்படுத்துமாறு வேண்டப்படுகின்றனர்.

K. Aravindan (Malar Mannan)
Room No. 9.
Hostel of The Miningtrainees
CHIRMIRI P. O.
Surguta District
MADYA PRADESH

அமைச்சரும் அதிகாரிகளும்

உங்களுக்கு மட்டும்தான் குறை சொல்லத் தெரியுமா என்ன—எங்களுக்கும் அந்தத் திறமை இருக்கிறது — இதோ தொடங்குகின்றேன்—பாரீர்—இல்லை இல்லை கேளீர் — என்று யாரிடத்திலோ சொல்லிவிட்டுப் புறப்பட்டவரைப் போல அமைச்சர் இராமய்யா அவர்கள் மதுரையிலே பேசியிருக்கின்றார்.

இருக்காதா என்ன — நாட்டிலே நலிவு—பசி, பஞ்சம் மலிந்திருக்கிறதே தவிர மக்களின் நல்வாழ்வுக்கான வழியும் காணோம், வகையும் தெரியவில்லை — இதற்கெல்லாம் காரணம் இங்குள்ள இளித்தவாயர்கள்தான் என்று எதிர்க் கட்சியினர் கூறிடும்போது, நாம் சும்மா இருப்பது கோழைத்தனம். நாமும் யார்மீதாவது குறை சொல்லியாக வேண்டுமே என்று எண்ணுகின்றார்கள். யாரிடத்திலே அவர்களுடைய கோபத்தைக் காட்ட முடியும்? யாரிடத்திலே காட்டினால் ஆபத்து வாராதோ அவர்களிடத்திலேதானே காட்டமுடியும்?

தமிழ்நாடு வாழ வழி இல்லை என்பதை உணர்ந்து அவர்கள் டெல்லியின்மீது கோபம்கொள்ள இயலாது. கொண்டால் இவர்களுடைய பதவியின் வயது ஒட்டலே இத்துணை நாள்தான் என்று தீர்மானமாகிவிடும். அதனாலே அமைச்சர் யார்மீது கோபத்தைக் காட்டலாம் என்று பார்க்கின்றார். முதலாளி கணக்கப்பிள்ளைமீது பாய்கின்றார். கணக்கப்பிள்ளைக்குக் கடும் கோபம் எழுகின்றது. ஆனால் அதை அவர் என்ன? கணக்குப்புத்தகத்தின் மீதுதான் காட்டிட வேண்டும். ஏன் என்றால் அது திருப்பிக் கேட்காது!

அதைப்போல அமைச்சருக்குக் கோபம் வருகின்றது. யார்மீது காட்டலாம் என்று பார்க்கின்றார்; எதிரே அதிகாரிகள் அமர்ந்திருக்கின்றனர். அவர்களைக் கண்டவுடனே முகத்திலே ஒரு பொலிவு தோன்றுகின்றது. அடுத்த தேர்தல்வரை நாம் சொல்வதைத்தானே இவர்கள் கேட்கவேண்டும், நம்மை மீறி ஒன்றும் சொல்லவோ செய்யவோ இயலாதே என்பதை உணருகின்றார். அவருடைய கோபத்தைக்காட்ட இவர்களைவிடத் தகுந்த இடம் வேறு ஏது என்று எண்ணி மனம் மகிழ்கின்றார். மக்களே நாட்டின் நலிவுக்கு நாங்கள்தான் காரணம் என்று எவரோ சொல்லிடுவதனைக் கேட்கின்றீர்களே — நான் சொல்லுகின்றேன் உண்மையில் யார் தெரியுமா காரணம்—இதோ இந்த அதிகாரிகள்தான்! என்கிறார். அந்த முறையில்தான் அமைச்சர் இராமைய்யா அவர்கள் மதுரையில் திட்டங்கள் சரிவர நடைபெறுதற்கு அதிகாரிகளே காரணம் என்று சொல்லியிருக்கிறார்.

இன்ன அதிகாரிக்கு இன்ன வேலை என்பது இன்னும் புரியவில்லை என்றும் ஆயாசப்படுகின்றார். தெரியவில்லை என்று சொல்லுவது மட்டும்தான் தன் கடமை என்று அவர் எண்ணுகின்றார் போலும்! தெரியாதவருக்குத் தெரிவிக்கும் கடமையும் அமைச்சரைத்தானே சார்ந்தது? இன்ன அதிகாரிக்கு இனன கடமை என்பதை இதுநாள்வரை தெரிவிக்காத குற்றம் அமைச்சரைத்தான் சாருகின்றது! ஆனால் அமைச்சர் அதிகாரியைக் குறைசொன்னதைப்போல அதிகாரி திரும்பி அமைச்சரைக் குறை சொல்லத்தான் முடியாதே! அவர் கணக்குப் புத்தகம்தானே?

ஒருவேளை அப்படிச் சொல்வதாக இருந்தால் எந்த வேளையில்தான் எந்த வேலையைச் செய்யத் தொடங்கினாலும் ஏதாவது ஒரு கதர்ச் சட்டை தன் கையைப் பிடித்து இழுத்துத் தடுபபதை அல்லவா சொல்லிட நேரிடும். சொன்னால் பிறகு அதிகாரி ஆடிக்காற்று இலவம் பஞ்சு போல அங்கும் இங்கும் அலைந்திட வேண்டுமே!

★

கவர்ச்சிகரமான அச்சக வேலைகள்!
அழகான 'பைண்டிங்' வேலைகள்!

அச்சு வேலையின் சகல துறைகளுக்கும்

முல்லை அச்சகம்

3—40. மவுண்ட் ரோடு
ஆயிரம் விளக்கு: சென்னை 6.

வெளியூர் தோழர்களும் தொடர்புகொள்க.
குறைந்த கட்டணம் :: சிறந்த வேலை.

முல்லை. சத்தி.
உரிமையாளர்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

தேடிக்கொடுத்த பண்டிதநேரு, அதைக் கொஞ்ச நாள் முன்னதாகவே செய்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்பதைத்தான் இங்கு குறிப்பிடுகிறேன். சிறு காயம், பெரும் புண் ஆகி, அதிலிருந்து சீழ் வடியத் தொடங்கி, இரத்தமெல்லாம் அசுத்தமாகி உடலெங்கும் புரையோடிய பிறகு, "ஐயா, நீங்களாவது வந்து பாருங்கள்," என்று டாக்டரை அழைப்பதைப் போல் என்னைக் காங்கிரசின் தலைமைப் பீடத்திலே அமர்த்தினர். பூசாரியையும், மாந்திரீகனையும், பச்சிலை அரைத்துத் தருபவனையும் தாயகத்துத் தயாரிப்பவனையும் அனுகிக்கொண்டிருந்த நேரத்திலேயே, டாக்டரை அணுகியிருந்தால்...! நோயாளி பிழைத்திருக்கக்கூடும் என்பது மட்டுமல்ல — டாக்டருக்கும் 'கைராசிக்காரர்' என்ற பெயர் ஏற்பட்டிருக்கும், அல்லது அந்தப் பெயர் முன்னமேயே ஏற்பட்டிருந்தால் நிலைத்திருக்கும்.

நோயை முற்றவைத்துவிட்டு, நோயாளி இறந்துவிட்டால், அல்லது அவனது நோய் குறையவில்லையென்றால் அதற்காக வருத்தப்பட்டுப் பலன்?

காங்கிரசு சீர்குலைந்து விட்டது —ஊழல்கள் மலிந்துவிட்டன — சுயநலக்காரர்கள் தொகை அதில் அதிகமாகிவிட்டது—பதவிப் பித்துப் பிடித்தோர் பெருகிவிட்டனர் —என்று பண்டிதநேரு மட்டும் பேசினால்கூட நான் வருத்தப்படமாட்டேன்; அப்படிப் பேசுவதிலே ஏதோ உட்பொருள் இருப்பதாகக்கூட எண்ணிக்கொளவேன்! நேற்றுவரை எப்படியெப்படியோ எங்கெங்கோ இருந்துவிட்டு, தேர்தல் காலத்தில் காங்கிரசிடம் சரண் அடைந்தவர்கள்கூட அல்லவா பேசுகிறார்கள்! இப்படிப் பேசுவதாலேயே தாங்கள் குற்றமற்றவர்கள் என்று உலகுக்கு நிரூபித்துவிட்டதாக அவர்கள் எல்லோருக்குமே எண்ணம்! பாவம்! உலகம் அவ்வளவா ஏமாந்துகொண்டிருக்கிறது!

இவ்வளவையும் பார்த்தால் யாருக்குத்தான் ஆத்திரம் பிறக்காது? அந்த ஆத்திரத்திலேதான் காங்கிரசு எம். பி. க்களைத் தேன், "நீங்கள் அனைவரும், காங்கிரசு இயக்கத்தோடும், மண்டலக் கட்சி உறுப்பினர்களோடும் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ளுங்கள்," என்று தாக்கீது விடுத்து மாதங்கள் இரண்டு ஆகின்றன! ஆனால் என்ன நடந்தது? பாராளுமன்ற உறுப்பினர் எவரும் இதுவரை என் ஆணைக்குக் கட்டுப்பட்டதாகத் தெரியவில்லை.

இவர்களெல்லாம், காங்கிரசு இயக்கத்தில் ஆரம்ப காலத்தில் இருந்தே, சிறைவாசம் அனுபவித்து, தடியடி பட்டு, துப்பாக்கிக்கு மார்காட்டி, இரத்தம் சிந்தி உழைத்தவர்களானால், அவர்களுக்குப் புரியும், கட்சி மெள்ள மெள்ளக் கரைந்து வருவதைக் காணும்போது அதைக் கட்டிக்காத்தவர்களது உள்ளம் எவ்வளவு வேதனைப்படும், என்று! ஆனால் இவர்களிலே எத்தனை பேர் அப்படிப்பட்டவர்கள்?

என் ஆணைக்குக் கட்டுப்படாதவர்களின் மீது நடவடிக்கை எடுத்திட என் கரத்திலே இருக்கிற ஒரே ஆயுதம், அவர்களைக் கட்சியிலிருந்து விலக்கிவிடுவதென்பது! அந்த ஆயுதத்தைப் பிரயோகித்தால், பண்டித நேருவே குறுக்கிட்டால்...?

குறுக்கிடமாட்டாரென்பதற்கு என்ன ஆதாரம்?

டாக்டரைக் கடைசி நேரத்தில் அழைத்ததுமல்லாமல், அவர் ஆபரேஷன் செய்தாகவேண்டுமென்று சொல்லும்போது, அதற்கும் ஒப்புதல் தரப்படவில்லையென்றால் டாக்டர் என்ன செய்ய முடியும் — 'விதி'யின் மேல் பழியைப் போடுவதைத் தவிர?

✱

பண்டித பந்த்

பாவம், தேபர்! நல்ல மனிதர்— ஆனால் நல்ல அரசியல் வாதியல்ல! வெளுத்ததையெல்லாம் பால் என்று நம்பிவிடுகிறார்! அதனாலல்லவா இபபடிப்பட்ட இக்கட்டான நிலை இன்று ஏற்பட்டுவிட்டது அவருக்கு!

காங்கிரசுக் கட்டிடம் கலகலக்க ஆரம்பித்த சமயத்தில் அதைக் கட்டிக்காக்கும் பொறுப்பை நேரு நல்ல அரசியல் வாதியாக இருந்திருந்தால், ஏற்றுக்கொண்டிருப்பாரா? நான் அவரது நிலையிலிருந்தால் நிச்சயமாக மறுத்திருப்பேன் ஏதாவது காரணத்தைச் சொல்லி! கட்டிடம் இடிந்து விழுந்துகொண்டிருக்கும்போது, தூணைத் தாங்கிப பிடித்துக்கொள்ள இன்னொருவரை அழைத்தால் என்ன பொருள்? அந்த அழைப்பையும் ஏற்றுக்கொண்டு சென்றால், செல்பவனது கதி என்ன ஆகும்?

அதே கதிதான் இன்றைக்குத் தேபருக்கு ஏற்பட்டிருப்பது. இவரைக்கொண்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தாக்கீது பிறப்பிக்கப்பட்டபோதே இவர் யோசித்திருக்கவேண்டாமா?

காங்கிரசு எம். பி. க்களிடம் இன்றைக்கு அதிகமானதொடர்பு கொண்டிருப்பது பண்டித நேருதான்! ஒவ்வொரு சனிக்கிழமையும் நேருவைச் சந்தித்து அவர்கள் பேச வேண்டுமென்று கூட ஏற்பாடாகியது. நேருவின் கண் பார்வை நம்பக்கம் திரும்பாதா— ஒரு புன்னகை கிடைக்காதா— இனிய வார்த்தை ஒன்று அவர் வாயிலிருந்து வாராதா — என்று ஏங்கிக் கிடப்பவர்கள்தான் அவர்களிலே பலர்! அவர்களுக்குப் பண்டித நேரு தாக்கீது விடுத்திருந்தால்—ஏன், வாய் திறந்து ஒரு வார்த்தை சொல்லியிருந்தால்கூட—ஓரளவு பலன் ஏற்பட்டிருக்கக்கூடும்.

அதைவிட்டு விட்டு, தேபரைப் பயன்படுத்தி ஏன் ஆழம் பார்க்க வேண்டும்?

"சட்ட சபையிலோ, பாராளுமன்றத்திலோ இடம் பிடித்தவுடன் காங்கிரசுக் கட்சிக்கும் தங்களுக்கும் தொடர்பு அற்றுப் போய்விட்டதாகப் பலர் எண்ணிக்கொள்ளுகிறார்கள்" என்றுசமீபத்தில் கூட லால் பகதூர் சாஸ்திரி பேசியிருக்கிறார். கட்சிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அந்த அளவு தொடர்பு அற்றுப்போன பிறகு, கட்சித் தலைவர்மூலம் அவர்களுக்குத் தாக்கீது பிறப்பிப்பதிலே என்ன பொருள்!

ஒரு சமயம் தேபருக்கு நாட்டில் எவ்வளவு செல்வாக்கு இருக்கிறதென்று பண்டித நேரு புரிந்துகொள்ள நினைத்திருப்பாரோ? சே! சே!! அப்படி இருக்காது! அப்படிச் செய்ய வேண்டிய அவசிய

கேட்டு, தொல்லை தருபவரல்லவே அவர்! அவரிடம்போய் நேரு அவ்வாறு நடந்து கொள்ளவேண்டிய காரணமென்ன?

கௌஹத்திக் காங்கிரசில் தேபரை யானைமீது வைத்து ஊர்வலமாக அழைத்து வந்தார்கள். அப்போது அவரைச் சுற்றியே மக்கள் கூட்டம் இருந்தது. நேருவை வரவேற்கக்கூட ஆளில்லை! ஒருசமயம் அதன் எதிரொலியாகக்கூட இது இருக்கக் கூடுமோ?

எது எப்படியிருந்தாலும், கட்சிக்கு முன்னிருக்கும் பிரச்னைகளைத் தீர்க்க இதெல்லாம் வழியல்ல! வேண்டுமானால் இத்தகைய வழிமுறைகள் தனிப்பட்டவர்களின் அரசியல் உயர்வு தாழ்வுகளுக்குப் பயன்படும்! நாமெல்லாம் தினமும் சொல்லிவருகிற பிரச்னைகளை, காங்கிரசில் மலிந்துவிட்ட பற்பல குறைபாடுகளை, அகற்ற வேறொரு வழி இருக்கிறது. அந்த வழிதான நலல முறையில் பயன் தரும் என்று நான் நம்புகிறேன். ஆனால் என் உள்ளத்திலே இருக்கிற கருத்தை வெளியே சொன்னால் என்மீதுமக்களுக்கேசந்தேகம் எழுமோ எனற பயம எனக்கு!

பண்டித நேரு ஆட்சிக்கு வந்து பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. அவருடைய செல்வாக்கு நாளுக்கு நாள் வெளியுலகில், யாருமே எண்ணிக்கூடப் பார்க்க முடியாத அளவில் வளர்ந்து வருகிறது. ஆனால், அதே வளர்ச்சி உள் நாட்டில் இருக்கிறதா என்பதுதான் எனக்கிருக்கிற சந்தேகம். இல்லையென்றால் தேபர் யானைமீது ஊர்வலமாக வந்த போது கௌஹத்திக் காங்கிரசில், இவரை வரவேற்க ஆளில்லாமல் போகக் காரணமென்ன?

உலக நாடுகளெல்லாம் புகழுகிற நேரத்தில்தான் சென்னைக்குப் போனார், இந்த ஜனவரி மாதத்தில். அவருக்கு இலட்சக் கணக்கானபேர் கறுப்புக் கொடி காட்டினார்களாமே! எப்படி முடிந்தது இது? நானும்தான் அவருக்குப் பிறகு சென்றேன். எனக்குக் கறுப்புக் கொடி காட்டவில்லை அவர்கள்! அவர் ஆத்திரப்பட்டுப் பேசிவிட்டார் என்பதால் அங்கே எதிர்ப்பு எழுந்ததற்கு முக்கிய காரணம். அவருக்கு இன்று இருக்கிற மதிப்பு, இந்த நாட்டின் பிரதமர் என்ற முறையிலேதான்-தேசியத் தலைவர் என்ற முறையிலே அல்ல!

காந்தியடிகளுந்தான் இருந்தார். அவருக்குஎப்படித்'தேசியத் தந்தை' என்ற பெயர் கிடைத்தது! அவர் எந்தப் பதவியையும் வேண்டாமென்று ஒதுங்கியிருந்ததுதான் முக்கிய காரணம்.

பதவி வேண்டாம் என்று ஒதுங்கியிருப்பவர்களுக்கெல்லாம் அத்தகையதொரு மதிப்பு ஏற்பட்டுவிடும் என்பதல்ல! அப்படியானால் ஜெயப்பிரகாஷ் நாராயணனுக்கு அந்த வாய்ப்புக் கிடைத்திருக்க வேண்டுமே. வினோபாவேக்கு அந்தப் பெயர் கிடைத்திருக்க வேண்டுமே!

ஆனால் இவர்களுக்கெல்லாம் இல்லாத பெயர், பண்டித நேருவுக்குக் கிட்டும் — அவர்மட்டும் பதவியிலிருந்து விலகினால்! "காந்தியடிகளின் வாரிசு" என்று நாம் கொடுத்திருக்கிற பெயருக்கு முழுப் பொருளும் ஏற்பட்டுவிடும. அப்போது அவர் சொல்லுகிற ஒவ்வொரு வார்த்தைக்கும் நிச்சயமாக மதிப்பு ஏற்படும்.

அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டு, பிறகு அவரே முயன்றாலொழிய காங்கிரசில் இன்று ஏற்பட்டிருக்கிற சீர்கேடுகளை அகற்ற முடியாது.

ஆனால் எப்படி நான் இந்தக் கருத்தைக் வெளியே சொல்வது? ஏற்கெனவே, என்னைப்பற்றி ஏதேதோ பரவி வருவதாகத்தெரிகிறது! அவருக்கு எதிராக நான்தான் வேலை செய்து வருவதாகப் பலரால் பேசப்படுகிறதாம். இந்தத் தள்ளாத வயதில் நமக்கேன இதெல்லாம்; நாமுண்டு நம் வேலையுண்டு என்று பேசாமல் இருந்துவிடுவதைத் தவிர வேறு வழி?

•

காங்கிரஸ் எம். பி.

மண்டல காங்கிரஸ்—மண்ணாங்கட்டிக்காங்கிரஸ்! இவர்களிடமெல்லாம் தொடர்பு. இதற்கொரு தாக்கீது! யார் செய்கிற வேலை இது?

யார் இந்தக் காங்கிரசு வேண்டுமென்று கட்டிக் கொண்டு அழுதார்கள்? தேர்தல் காலத்தில் வந்தார்கள்—நீங்கள்தான் கட்சியைக் காப்பாற்ற வேண்டும், இல்லையென்றால் இந்தத் தொகுதியிலே காங்கிரசு வரமுடியாது என்று கெஞ்சிக் கூத்தாடினார்கள்—சரி, போனால் போகிறது, நம் பரம்பரைச் சொத்தில் ஒரு இலட்சம் அல்லது இரண்டு இலட்சம் செலவாகும், அவ்வளவுதானே—அதை வேறு எப்படியாவது சரிக்கட்டிக் கொண்டால் போகிறது என்று காங்கிரஸ் டிக்கெட்டில் தேர்தலுக்கு நின்றேன்.

நான் தேர்தலுக்கு நின்ற காலத்தில், "சோஷியலிச சமுதாய அமைப்புத்தான் எங்கள் இலட்சியம்" என்று சொல்லிக்கொண்டா ஓட்டுக் கேட்டேன்? அப்படிச் சொல்லியிருந்தால் எத்தனை பேர் என்னை நம்பியிருப்பார்கள்? எனக்கு எப்படி ஓட்டு கிடைத்திருக்கும்? தட்டுவதைத் தட்டினேன்—என் பெட்டி திறந்தது—ஓட்டுப் பெட்டிகள் நிறைந்தன? யாருக்குத் தெரியாது இந்த உண்மை? அப்படியிருக்க, மண்டல காங்கிரசுக் கட்சியோடு தொடர்பு வைத்துக்கொள்ளுங்கள், கட்சியின் கொள்கைகளை உறுப்பினர்களுக்கு எடுத்து விளக்குங்கள், சமதர்ம சமுதாய அமைப்பைப்பற்றிச்சொல்லுங்கள், ஐந்தாண்டுத் திட்டங்களின மேன்மையை விவரித்துக் கூறுங்கள், என்று எனக்குத் தாக்கீது விடுத்தால் என்ன பொருள்? ஏனிந்த வீண் வேலை?

அப்படித்தான் தப்பித் தவறி மாவட்டக் காங்கிரசுக் கட்டிடத்துக்கோ, மண்டலக் காங்கிரசு அலுவலகத்துக்கோ போனால் என்ன ஆகிறது? என்னாலே ஏதாவது காரியம் ஆகக்கூடும் என்று நினைப்பவர்களெல்லாம் ஓடிவருகிறார்கள்—உளங்கனியப்பேசி உபசரிக்கிறார்கள்! தேனொழுகப் பேசுகிறார்கள்! மற்றவர்களெல்லாம், யாரையோ திருடனைப் பார்ப்பது போலல்லவா விழித்து விழித்துப் பார்க்கிறார்கள்! அவர்களுக்குக் கிடைக்கவிருந்த பதவியை நான் தட்டிப் பறித்துக் கொண்டதாக அவர்களுக்கெல்லாம் எண்ணம்! நான் மட்டும் தேர்தலில் நிற்காமலிருந்தால், என் பணம் செலவழியாமலிருந்தால், இவர்களுக்கு அப்போது தெரிந்திருக்கும் அவர்களுடைய செல்வாக்கு!

எங்களுடைய கொள்கைகளுக்கும் மற்றவர்களது கொள்கைகளுக்கும் இன்னின்ன வேறுபாடுகள், இப்படிப்பட்ட முறைகளிலே எங்களது கொள்கைகள் மேலானவை, என்று விளக்கி விடுவதாலேயா ஓட்டு கிடைத்து விடுகிறது? பணமில்லாத யாரையாவது தேர்தலுக்கு நிற்க வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் கூட அவர்களுக்குஏராளமாகஅல்லவா என்னைப் போன்றவர்கள் பணம் தருகிறோம், செலவுக்காக!

இப்படியிருக்க, மண்டல காங்கிரசுத் தலைவர்களோ, மாவட்டக் கமிட்டியின் முக்கியஸ்தர்களோ, என் மீது ஆத்திரப்படுவதிலே பொருளில்லை.

அவர்களிடம் போய்க்கொள்கை விளக்கம் தாருங்கள்—அவர்களோடு நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ளுங்கள்—என்று தாக்கீது பிறப்பிக்கப்படும் போதுதான் எனக்குச் சிரிப்பு வருகிறது!

ஒருசமயம் நம்மைக் கிண்டல் செய்வதற்காகத்தான் காங்கிரசுத் தலைமைப்பீடம் இப்படிச் செய்கிறதோ என்று கூட எனக்கு அடிக்கடி சந்தேகம் எழுகிறது.

ஆனால், நோக்கம் அதுவாக இருக்க முடியாது—காரணம் அடுத்த தேர்தலிலும் எனது தயவு தேவையாயிற்றே அவர்களுக்கு!

•

காங்கிரஸ் தியாகி

புற்றெடுப்பது கரையான் — புகுந்து வாசம் செய்வது பாம்பு! என்ன உலகமடா இது!

சின்ன வயதில், பள்ளிப் பருவத்தில், பெற்றோரையும் உற்றார் உறவினரையும் எதிர்த்துக் கொண்டு, படிப்பையும் உதறித் தள்ளிவிட்டு எவ்வளவு தீவிரமாக இறங்கிப பணியாற்றினேன், காங்கிரஸ் இயக்கத்தில் நான் அனுபவித்த தொல்லைகள்; அம்மம்ம! இப்போது எண்ணினாலும் நெஞ்சு நடுங்குகிறது! எனனைபபோன்ற பலர் கொட்டிய இரத்தம்தான், இப்படியொரு இயக்கமாக உருவெடுத்திருக்கிறதே தவிர, இன்று அதிலே புகுந்துகொண்டிருக்கிற பணமுதலைகளும், ஆலை அதிபர்களும், பட்டம் போயும் பணத்திலே குறைவற்று இருக்கிற ஜமீன்தார்களும் உழைத்ததாலே வளர்ந்ததல்ல! ஆனாலும் என்ன செய்வது? இன்று அவர்களுக்குத்தானே செல்வாக்கு இருக்கிறது! இப்படியொருவன் இருந்தானே, உழைத்தானே, உல்லாசத்தையெல்லாம் துறந்தானே, உருக்குலைந்து நலிந்துபோயிருக்கிறானே என்று திரும்பிப்பார்க்கக் கூட நாதியில்லை! ஆறுதல் சொல்ல ஆளெவரும் இல்லை. பாவிகள்! எப்படிச் செய்வார்கள்! செக்கிழுத்த சிதம்பரனாரையும்—புரட்சிக்கவி பாரதியையும்—கொடியைக்காக்க உயிரைவிட்ட குமரனையும்கூட — சுதந்திரப் போரைப்பற்றி எடுத்த படத்திலே சேர்க்க மனமற்ற கல்நெஞ்சர்கள் என்னைப்பற்றியெல்லாம ஏன் எண்ணப்போகிறார்கள்?

இவர்கள் எண்ணாவிட்டால் கூடப் போகட்டும்! பணக்காரர்கள்தான் இப்போது கட்சிக்குத் தேவை என்றுகூடச் சொல்லாமல் சொல்லிக்கொள்ளட்டும், பரவாயில்லை! என் உழைப்புக்கும் தியாகத்துக்கும் மதிப்பு, கௌரவம், அவற்றை உணரும் பண்பு தலைவர்களுக்கு ஏற்படவில்லையென்பதற்குக்கூட நான் வருந்தவில்லை!

என் நெஞ்சைக் குடைந்தெடுப்பதாகவல்லவா செய்தி வருகிறது! எனக்கும், என்னைப் போன்று இன்னமும் கட்சியிலிருந்து வெளியேறாமல் ஒட்டிக்கொண்டிருக்கிற சிலருக்கும், காங்கிரசு இயக்கத்தின் கொள்கை கோட்பாடுகளைப்பற்றி, இந்தத் தொகுதி எம். பி. விளக்கம் தருவதாம். அதற்கெனத் தாக்கீது பிறப்பித்திருக்கிறாராம் தேபர்!

ஆண்டாண்டு காலமாக காங்கிரசிலேயே ஊறி, அதிலே இணைந்துவிட்ட எனக்கும் என்னைப் போன்றவர்களுக்கும், காங்கிரசின் கொள்கை கோட்பாடுபற்றிய விளக்கத்தை, தேர்தல் சமயத்தில் 'ஞானஸ்நானம்' பெற்றவர்களா தருவது?

எங்களுக்குக் கொள்கைகள் புரியவில்லை — சமதர்மம் என்றால் விளங்கவில்லை— ஐந்தாண்டுத் திட்டங்களின் மேனமை எங்களது மூளைக்கு எட்டவில்லை — என்றே வைத்துக்கொள்வோம்? எங்களுக்கு யார் விளக்கம் தருவது? யாராவது தலைவர் வரட்டும்—விளக்கமளிக்கட்டும். அவர் பெரிய தலைவராக இருக்கட்டும், அல்லது சாதாரணத் தலைவராக இருக்கட்டும், அதைப்பற்றிக் கவலையில்லை.

ஆனால் நேற்றுவரை காங்கிரசை வெறுத்துவிட்டு, இலாப வேட்டைக்காக இன்று அதற்குள்ளே புகுந்துகொண்டிருப்பவர்களா எங்களுக்குக் கொள்கை விளக்கம் தருவது?

மீன் குஞ்சுக்கு தவறிப்போய் கிணற்றில் விழுந்துவிட்ட முயலா நீந்தக் கற்றுக் கொடுப்பது?

நீண்ட நாள் இயக்கத்திலே இருந்த பாத்தியதையை விட்டுக் கொடுத்துவிட்டு அந்தக் கொள்கை விளக்கத்தைப் பொறுமையோடு கேட்பதாகவே வைத்துக்கொள்வோம்!

"சமதர்ம சமுதாய அமைப்பே நமது இலட்சியம்" இன்று பண்டித நேருவும் மற்றும் பல தலைவர்களும் சொல்லுகிறார்கள்! நமது பாராளுமன்ற உறுப்பினர்களில் எத்தனை பேர் சமதர்மத்தைப் புரிந்து கொண்டவர்கள்? அப்படியே புரிந்து கொண்டாலும் எத்தனை பேர் ஆதரிப்பார்கள் அந்தக் கொள்கையை?

எனக்கும் என்னைப்போன்ற தியாகிகளுக்கும்—சமதர்மத்தை நன்றாகப் புரிந்துகொண்டு மனமார வரவேற்பவர்களுக்கும்—அவர்கள் பாடம் சொல்லிக் கொடுப்பது என்ற ஏற்பாட்டைத் தவிர வெட்கக்கேடு வேறென்ன வேண்டும்?

நல்லவேளை எம். பி. க்களிலே யாரும் தாக்கீதில் குறிப்பிட்டபடி நடக்கவில்லையாம்! நடந்திருந்தாலல்லவா தெரிந்திருக்கும் அவர்கள் பாடு!

அப்படி நடக்கவில்லை என்பதிலே ஒரு பக்கம் மகிழ்ச்சி இருந்தாலும், மற்றொரு பக்கம் வருத்தமும் ஏற்படத்தான செய்கிறது. நானும் என்னைப்போன்ற பல்லாயிரக்கணக்கானவர்களும் உழைப்பை மூலதனமாகக் கொடுத்து வளர்த்த கட்சியின் தலைவர் தாக்கீது விடுப்பது—நேற்று, கட்சிக்குள்ளே வந்து புகுந்து கொண்டவர்கள் அதை மதிப்பதில்லை — என்பதை எண்ணும்போது உள்ளம் குமுறுகிறது!

உம்! என்ன செய்வது? நடக்கிறபடி நடக்கட்டும்!

ஆங்கிலம் (இங்கிலீஷ்) திருத்தமாகக் கற்பதற்கென
சென்னையிலுள்ள மாபெருங் கல்வி அரங்கம்

The School of English Learning

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.



தமிழ்
எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

இங்கிலீஷ் இலக்கண ரீதியாக

சென்னையில் உள்ளவர்கள் நேர்முக வகுப்புகளில் சேர்ந்தும்
வெளியூர்களில் உள்ளவர்கள் தபால் மூலமும்
ஓய்வு நேர்த்தைப் பயன்படுத்தி சிறந்த முறையில் கற்கலாம்.

புதிய வகுப்புகள்
ஆரம்பம்:
12–8–1958
வகுப்பில் சேர மனு செய்ய
கடைசி தேதி:
11–8–1958

இங்கிலீஷில் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்குவரத்து செய்யவும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்—ஒப்பற்ற முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும். சென்னையிலுள்ளவர் காலையிலோ மாலையிலோ வசதிப்படி ஓய்வு நேரத்தில் வகுப்பிற்கு நாள்தோறும் ஒரு மணி நேரம் வந்து கற்றல் போதுமானது.

முழு விவரங்களைச் சென்னையிலுள்ளவர்கள் நேரில் வந்தும் வெளியூர்களில் உள்ளவர்கள் தபால் மூலம் எழுதியும் பெறலாம்.

முக்கிய அறிவிப்பு:—
16-வயதிற்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்புகளில் அனுமதிக்கப்படுவர். நேர்முக வகுப்புகளில் பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். சென்னையிலுள்ளவர்கள் வகுப்பிற்கு நேரில் வந்துதான் கற்கவேண்டும்; தபால்மூலம் கற்கும் சலுகை வெளியூர்களில் உள்ளவர்களுக்கும் பெண்களுக்கும் மட்டுந்தான். இங்கிலீஷ் வாசகங்களை ஓரளவு கூட்டிப் படிக்கத் தெரிந்தவர்கள் தபால்மூலம் கற்க இயலும். சென்னையிலுள்ள ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களுக்காகவும் இங்கிலீஷ் ஒன்றுமே தெரியாதவர்களுக்காகவும் தனித்தனியாக நேர்முக வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

ஓய்வு நேரத்தை வீணுக்காமல் நல்ல முறையில், பயன்படுத்தி உலக மொழியாக விளங்குகிற இங்கிலீஷைக் கற்க முன்வருக.

திராவிடநாடு

832

10—8—58 | வார வெளியீடு | விலை 16 காசு

832
MADRAS

எங்கே உன் வீரம்……?

(மு. சுந்தரமூர்த்தி)

பொங்கிடும் கடல்சூழ் தமிழக நாட்டில்
தங்கிடும் தமிழா எங்கே உன்வீரம்?
சிங்களர் செய்திடும் சிறுநரித் தனமதை
சிங்கமாய் மாறிநீ சிதைத்திடல் முடியுமோ?

ஆய்கலன் ஐம்பெரும் காப்பியம் அணிந்த
தாய்த்தமிழ் அணங்கைத் தடுத்திடும் அவரை
தடுத்திடும் வேலை தமிழனின் கடமை,
எடுத்தோத உண்டோ உனக் கதிகாரம்?

கடாரம் கொண்டவனும் கடல்கடந்து சென்றவனும்
கங்கையை எடுத்தவனும் 'கனகனை'ப் பிடித்தவனும்
சிங்களத்தில் தன்செங்கோல் செலுத்தி இருந்தவனும்
உன்னினம் அல்லவோ! உன்உதிரம் அல்லவோ!!

பழம்பெருமை பேசுவதால் பாருக்கு என்னபயன்?
அழல்போலும் துன்பமங்கே அறிவிலர் மூட்டுகிறார்
அடதமிழா! கொதித்தெழடா வாகை சூடடா
வடவர்தம் விலங்கொடிய, வீரம் காட்ட!!

கேட்டீரா! சேதி!

சென்னையில் முகாம் போட்டிருக்கும் காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரியார், சென்ற திங்களில், ஒரு இடத்துக்கு 'விஜயம்' செய்திருக்கிறார்! எந்தக் கோயிலுக்குப் போனார்' மும்மலம் நீக்கி முத்தி பெறும் உபதேசம் பொழிய எந்த சங்கத்துக்குப் போனார் என்றே கேட்பீர்கள். அவர் போனது இப்படிப்பட்ட இடமானால், நமக்குக் கவலையில்லை. எங்கு 'விஜயம்' செய்தாராம், தெரியுமா? பெரம்பூர் ரயில்வே கோச்பாக்டரிக்கு! அதிகாரிகள் மிகசிரத்தையோடு அழைத்துப்போய் காட்டியிருக்கின்றனர்! இவரும் ரயில் பெட்டி கட்டப்படும் அந்தத் தொழிற்சாலையைப் பார்த்து, "ஆகா! இங்கே வேலை செய்வது தேசத்துக்குச் செய்யும் பெருந்தொண்டன்றோ?", என்று மகிழ்ந்து வாழ்த்தினாராம்!! நவநாகரிக முறைகளை அனுபவித்தலாகாது—சினிமா பார்ப்பது தீது என்றெல்லாம் போதிக்கும் இந்த ஞானியார், ரயில்பெட்டி கட்டும் இடத்தைப்போய் பார்த்திருக்கிறார். யாரைத்தான் விடும் புதுமை? இனிமேல், பலர் தூக்க ஏறிச்செல்கிறாரே பல்லக்கு, அந்தக் கொடுமையையாவது நிறுத்திக்கொள்வாரா சங்கராச்சாரியார் என்று கேட்கிறான் அலுவலகச் சிறுவன்! செய்வாரா!!

*

தேங்காயைக் கண்டால் முதலில் எந்தக் கோயிலுக்குக் கொண்டுபோய் உடைக்கலாம் என்றே, எண்ணத்தோன்றும், பக்தர்களுக்கு. அந்தத் தேங்காயிலிருந்து, என்னென்ன பொருள்களைப் பெறலாம் என்பதை, டில்லிசர்க்காரின் மத்திய தேங்காய் கமிட்டியின் தொழில் நுட்ப உபகமிட்டி எர்ணாகுளத்தில்கூடி ஆலோசித்திருக்கிறது. கொட்டாங்கச்சியிலிருந்து, சக்தியூட்டப்பெற்ற கரியைத் தயாரிக்கலாமாம். பிண்ணாக்கை, மனித உணவுப் பொருளாக மாற்றலாமாம். தேங்காயிலிருந்து, 'புரோடீன்' பொருளைத்தயாரிக்கலாம். இளநீரிலிருந்து உயர்தரமான காடி (வினிகர்) தயாரிக்கலாமாம் இளநீரை, பலநாட்களுக்குவைத்திருந்து, கெடாமல் அருந்தும் வழிகளும் ஆலோசிக்கப்பட்டதாம்.

*

ஒரு ரூபாய்க்கு 99 ரூபாய் வட்டிகொடுக்கப்பட்டது என்றால் ஆச்சரியமாகத்தானே இருக்கிறது! அகமதாபாத்துக்கருகில், உண்மையாகவே இப்படியொரு சம்பவம் நடைபெற்றதாம். ஒரு ஆதிவாசி, 1916ல் சர்க்காரிடம் பெற்ற ரூ. 101 கடனில், செலுத்தியது போக மீதமாக ரூ. 1 இருந்ததாம். இதற்குத் தொடர்வட்டி, இதுவரை சேர்ந்து 99 ரூபாய் ஆகிவிட்டதாம். இப்போது, இத்தொகையைக் கட்டுமாறு, இவருக்குத் தாக்கீது பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற பல ஆதிவாசிகளுக்குத் தங்கள் கடன் பாக்கிகளை பிரமிக்கவைக்கும் வட்டியுடன் சேர்த்துக் கட்டுமாறு தாக்கீது பிறப்பிக்கப்பட்டுள்ளதாம்.

*

போர்க்காலத்தைப்போல "ரேஷன் ஆபீசு"களும், "ரேஷன் கூபன்"களும் வந்தாலும், ஆச்சரியப்படுவதற்கில்லை! கடந்த முதல்தேதியன்று பிரதமர் நேரு இது சம்பந்தமாக எச்சரிக்கை விடுத்திருக்கிறார். கோதுமைக்காரர்களுக்கு அல்ல, இந்த எச்சரிக்கை; அரிசி தின்போருக்குத்தான். நாட்டிலுள்ள உணவுத் கட்டுப்பாட்டைப் பார்க்கிறபோது, அரிசி தின்போர் தங்கள் உணவுப் பழக்கங்களை மாற்றிக்கொள்ளாவிடில் கூடிய விரைவில் சங்கடங்களுக்கு ஆளாக நேரும் என்றும், முன்பு போல கட்டுப்பாடுகள்வர நேர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்இல்லை யென்றும் அறிவித்துள்ளார்.

*

"வரவர தேய்ந்துகொண்டே போகிறது! 1950ல் இருந்தநிலை இன்றில்லை. நிர்வாகம், சீர்கேடு அடைந்துவிட்டது. தப்பித் தவறி, மூன்றாவது உலகப்போர் போல ஏதாவது வந்துவிட்டால், நிர்வாகம் எதற்கும் பயனற்றதாகிவிடும். அரசியல் வாதிகளின் ஊழல்கள், நிர்வாகத்தைக்கெடுத்துவருகின்றன" என்று டில்லி சர்க்காரின் காரியதரிசியாகயிருந்த வி.பி. மேனன் பம்பாயில் பேசுகிறபோது 'நற்சான்று" வழங்கியுள்ளார்.

*

துப்பாக்கிப் பிரயோகங்கள்—அடிதடிகள் — கத்திக்குத்துக்கள்—500 பேருக்கு மேல் சிறை —இவ்வளவும் நிகழ்ந்த பிறகு, கேரளத்தில், 'மாணவர் போராட்டம்' ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது! சர்க்கார் ஏற்றுக்கொண்டுள்ள படகுப் போக்குவரத்தில் தங்களுக்குச் சலுகை தரவேண்டுமென மாணவர் கோரினர். அரசு மறுத்தது. எனவேதான், இவ்வளவு அமளியும். இப்போது மாணவர் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டிருக்கிற கம்யூனிஸ்டு சர்க்கார், முன்பே ஏற்றுக்கொண்டிருந்தால் எவ்வளவோ நல்லதாயிருந்திருக்கும்! "பார், பார்! நாங்கள் சுட்டால் கண்டிக்கும் கம்யூனிஸ்டுகள் ஆட்சியைப் பார். அங்கு மட்டும், என்ன வாழ்கிறதாம். சந்தனத்தோப்பு தொழிலாளர்களைச் சுட்டார்கள் — மாணவர்களைத் தடியால் அடித்தார்கள்', என்று இங்குள்ள பக்தவத்சலங்கள் பேசாத ஒரு நிலைமையை உண்டு பண்ணியிருந்திருக்கலாம். அரசுக் கட்டிலில் ஏறினால், எவரும் இப்படித்தான் செய்வர்-என்று பேசும் நிலைக்கு, கம்யூனிஸ்டுகள், 'பலி'யானது, பரிதாபம் என்போம்.

*

பல, உள

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [10—8—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 4

"இல்லங்கள் தோறும், திராவிடர்தம் உள்ளங்கள் தோறும் உரிமை வேட்கைக் குரல் நுழைந்தாகவேண்டும். அந்நாள், வந்துவிட்டால், விடுதலை விரைந்துவரும்! அதற்கு முட்டுக்கட்டை போட, யாராலும், பிறகு முடியாது!!" என்று ஒவ்வொரு மாநாட்டிலும், பொதுச் செயலாளரும் பிறரும், எடுத்துரைப்பதன் பொருள் என்ன? இல்லங்கள் தோறும், திராவிடர்தம் உள்ளங்கள் தோறும் இன்னும் நமது விடுதலை வேட்கை நிரம்பவில்லையென்பதுதானே! அப்படி நிரம்பிவிட்டதெனின், அனுதினமும் நாம் ஏன் கழகங்களைப் புதிதாகத் துவக்குவதிலும், இவர் சேர்ந்தார் கழகத்தில் அவர் சேர்ந்தார் கழகத்தில் என்று சொல்லி பெருமைப்படுவதிலும், காலத்தைக் கழிக்கப்போகின்றோம்? முப்பதாண்டுகளுக்கு மேலாக விதைபோடப்பட்டு, சுமார் பத்தாண்டுகளாகக் கட்டுதிட்டங்களோடு வளர்க்கப்படும் அரசியல் கட்சியாக, உருவாகி வருகிறது நமது விடுதலை இயக்கம். பொன்போன்ற நமது புதுமைக் கருத்துக்கள், வெகு வேகமாகப் பரவுவதிலும், அதன்பக்கம் பலதரப்பட்டோர் வந்து சேர்வதிலும், ஐயமில்லை. எனினும், நாட்டில், நமது கழகமும் எண்ணமும் நிரம்பிடவேண்டிய இடங்கள், பல உள. இதனை நாம் மறந்தோமில்லை! தமிழகம் தவிர்த்த ஏனைய பகுதிகளான ஆந்திரத்திலும், கேரளத்திலும், கன்னடத்திலும் ஆங்காங்கு சிறுசிறு சிதர்கள் ஒளிவிடத் துவங்கியுள்ளனவேயொழிய, முழு ஒளியும் பரவிவிட்டதாகக் கூறும் நிலையில்லை. 'மூதுகளத்தூர்' ஏற்பட்டபோது, உள்ளத்தில் வேதனையிருந்தாலும், ஒளிவுமறைவின்றி தெரிவித்தோம் — "எமது கழகம் பரவாத பகுதி அது" என்று. தமிழகத்திலேயே, ஓய்வின்றி பிரச்சாரம் செய்தாலும், நமது கழகம் பரவாத பகுதிகள் பல உள— நமது எண்ணங்கள் நிரம்பாத இல்லங்கள் ஏராளம் உண்டு.

இந்த உண்மையை நாம் ஒத்துக்கொள்ளாதவர்கள்போலவும், எங்கும் பறக்கிறது எம் கொடி என்று இருமாந்து மார்தட்டுவோர் போலவும் கருதிக்கொண்டு, மாற்றார் 'தூத்துக்குடி தேர்தல்' பற்றி விமர்சனம் செய்யக் கிளம்பியுள்ளனர். "போச்சு! போச்சு! ஒழிந்து போச்சு!" — "இவர்களுக்கு ஏது இடம் இனி?"—இதுபோலப் பலப்பலக் கூறத்தலைப்பட்டுள்ளனர். நம்மை ஒரு கட்சியெனவே மதிக்க முடியாது என்றிடும் பெரியார் அவர்கள் கூட, விமர்சனம் செய்துள்ளார்கள்.

*

நிற்கின்ற இடங்களிலெல்லாம் வெற்றி பெறும் வாய்ப்பு இருந்திருந்தால், நாம், எதிர்க்கட்சியெனும் மிடத்தில் இரோம்; ஆளும் கட்சியாகியிருப்போம். பொதுத் தேர்தலில், 15-இடங்கள் மட்டுமே நம்மால் பெறமுடிந்தது என்பதையும், 17-இலட்சம் வாக்குகள் மட்டுமே நம்மால் பெற இயன்றது என்பதையும் நாம் மறந்திடவுமில்லை; பெருவெற்றியென்று கூறிக் களிப்பில் மாழ்ந்திடவுமில்லை. சட்டசபையில், மேருவென உட்கார்ந்திருக்கும் 150-காங்கிரஸ்காரர்களும், நம் கண்முன் வந்துகொண்டுதானிருக்கிறார்கள்! ஆளும் கட்சியாகவும், அறுபதாண்டுக்கு மேல் வளர்ந்த கட்சியாகவும், ஒரு அந்நிய ஆதிக்கத்தை விரட்டிய கட்சியாகவும் விளங்கும் காங்கிரசின் பலத்தை நாம் உணராமலுமில்லை!!

ஐசனோவர், பணக்கார நாட்டின் பூபதி — பலம் பொருந்திய தேசத்தின் அதிபதி என்பதாலேயே எகிப்தும் இராக்கும் மிரண்டுபோய் "அய்யனே! அடைக்கலம்" என்று சரணடைந்துவிடவில்லை. அமெரிக்கா விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், தன்னையும் தன் நாட்டினரையும் காப்பாற்றிக் கொள்ளவும், சுயமரியாதையோடு வாழவும், போராடிக்கொண்டுதான் உள்ளன. சூயஸ் கால்வாய் பிரச்னையில், வல்லரசுகளாம் அமெரிக்காவும் பிரிட்டனும் எதிர்த்தும்கூட, வாகைசூட முடிந்தது நாசரால்! சிறு நாடுதான், எனினும் அந்நாட்டின் நடவடிக்கையிலிருந்த நியாயமும், நியாயத்துக்காகப் போராடுகிறோம் என்று எகிப்து மக்கள் கொண்ட வீராவேசமும், உலக வல்லரசுகளையே புறமுதுகிடச் செய்தது.

"பெரிய கட்சி காங்கிரஸ்! பணபலமும் அதிகார பலமும்பெற்றகட்சி அது!! ஆகவே, அதோடு தாளம் போடுவதுதான் சரி" என்று கருதி போட்டியிடாது போவது பொறுப்பைத்தட்டிக்கழிப்பதும், வளர்த்து வரும் கொள்கையின்மீது நாமே நம்பிக்கை இழப்பதுமாகும். இப்படி ஒரு பயமும், மனசபலமும் ஏற்படுமானால், தனிக்கட்சி என்று சொல்லிக்கொள்வதும், எதிர்க்கட்சி என்று பேசிக்கொண்டு போர்க்கணைகளை தொடுப்பதும் அவசியமில்லை. பேசாமல், வல்லானுக்கு எடுபிடியாகி, கெஞ்சியோ கொஞ்சியோ காலத்தைப் போக்கிவிடலாம்.

எனவே, பெரிய கட்சி காங்கிரஸ், பணபலம் பெற்ற கட்சி என்று அஞ்சி ஒடுங்கிவிடுவது, அரசியல் நெறியுமல்ல; கொள்கையின் மீது நமக்குள்ள பற்றினை எடுத்துக் காட்டுவதுமல்ல. அப்படிப்பட்ட பெரிய கட்சியாக இருப்பினும், அதனால் நாடு அடையும் கேடு என்ன, அதன் சார்பில் நாடாள்வோரின் கரங்களும் அதிகாரங்களும் எங்கே கட்டுண்டு கிடக்கின்றன; அந்தத் தளைகளை எப்படி அறுப்பது, என்

ற விளக்கங்களைச் சொல்லி, மக்கள் மன்றத்தில் விழிப்பேற்படுத்த வேண்டிய பொறுப்பினை எவராவது செய்துதான் ஆகவேண்டும். "எவராவது" என்கிற இடத்தில், நானிருக்கிறேனே எனலாம் பொதுவுடைமைக்கட்சி! யானைக்குக் கோவணம் கட்டுவதுபோல, அகில இந்தியாவுக்கும் பொதுவுடமை என்று சொல்லி, அதற்கான வழிகளையும் வகைகளையும் காணுகின்ற கட்சி அது. அதன் போக்கும், வழிமுறையும், பிரச்னைகளுக்குரியவை. மாஸ்கோவில் இடி இடித்தால் மன்னார்குடியிலும் மழை பெய்ய வேண்டும் என்கிற குணம்கொண்ட அக்கட்சியின் 'அகில'க் கொள்கையால் வட்டாரங்களுக்கொரு அரசு அமைத்து வாழவேண்டுமெனும் கருத்துக்கொண்ட விடுதலை பூமிகளுக்கு, பலனில்லை. எனவே இந்த மண்ணைப் பொறுத்த அளவில், இழந்த நாட்டைப் பெறும் முயற்சியைச் செய்ய, நாம்தான் இருக்கின்றோம்! நாம்மட்டுமே இருக்கின்றோம்!!

*

வலிவுள்ள கொள்கைதான் நமக்குப் பலமேயன்றி, நாம் எதிர்த்து நிற்கும் மாற்றார்களுக்குள்ள பலங்கள் பல. ஐசனேவர் ஆதரவுண்டு என்பாரும், குருசேவின் குரல்வலிவு எமக்குண்டு என்பாரும், டாடா பிர்லாக்களைக் காட்டுவோரும், அண்டையிலுள்ள சீனவைக் காட்டுவோரும், நமக்கு மாற்றார்களாக உள்ளனர். நமக்குள்ள வாய்ப்பு எல்லாம், மக்களைச் சந்திப்பதுதான்! மாற்றுக் கட்சியினர் குறிப்பாக காங்கிரசினர் — பொதுக்கூட்டங்களில், மக்களைச் சந்திப்பதில்லை. வரவர, அந்த வாய்ப்பை இழந்து வருகின்றனர். எனினும், அவர்களுக்கு இன்னொரு மகத்தான பலம்குன்றாத பலம் கைவசமிருந்துகொண்டே உள்ளது. கிராமத் திண்ணைகளிலும், அரசமரத்தடிகளிலும், ஆலைகளுக்குள்ளும், ஏன்?—அடுக்களை வரையிலும், காங்கிரசின் பெயரைக் கொண்டு செல்லும், அந்த மகத்தான பலம்தான் பத்திரிகைப் பலம்!! வார ஏடுகள், மாத இதழ்கள், தினசரிகள்-இப்படி, பல்லாண்டுகளாக, மக்கள் உள்ளந்தோறும் காங்கிரசின் நினைவைப் புதுப்பித்துக்கொண்டே இருக்கும் பலமான சக்தி, இருக்கிறது அதனிடம். இதனை நாம், மறக்கவில்லை. நாட்டின் பெரும்பாலான ஓட்டர்களாக இருக்கும் தாய்மார்களின் உள்ளத்தை வசமாக்கும் ஏடுகள், அவர்கள் வசமே உள்ளன. ஒரோர் சமயம் காங்கிரசின் போக்கைக் கண்டிக்கும் விதத்தில் அவை விளங்கினாலும், நம்மை ஏசவும் தவருக விளக்கவும் அவை தயங்குவதில்லை! இந்தப் பலம், பொதுக்கூட்டங்களைவிட, பெரிய வாய்ப்பாக இருந்து வருகிறது காங்கிரசுக்கு. மக்கள் மன்றத்தின் ஒரு சாரார் உள்ளங்களை இடைவிடாது தடவிட இந்தப் பலம், இருக்கிறது. அதே சமயத்தில், இன்னொரு பலமும், இன்றைய காங்கிரசுக்கு இருக்கிறது—அதுதான், பணபலம்!!

ஏழ்மையையே சொத்தாகக்கொண்டு, நாள் ஒன்றுக்கு நாலணு எட்டணு கிடைத்தால் அதைப் பெரிதெனக் கருதும், மக்கள் ஏராளமிருக்கிறார்கள் நாட்டுப்புறங்களில். அவர்களுக்கு அவதி தெரியும்—காயும் வயறு புரியும்—'விதி'யினை அறிவர்—வேதனைப்பட்டு நோகவும் செய்வர்—அதே சமயத்தில், 'காசு' என்றால் அதன் அருமையும் அறிவர்! அவர்கள் மனதில், அன்றாடப் பிரச்னைகள் இடம்பெறுகிற அளவுக்கு, சிரந்தர பரிகாரம் பற்றிய எண்ணங்கள் எளிதில் இடம் பெரு. ஆள்வோரின் அக்கிரமங்களை விளக்கும்போது ஆனந்தம் பெறுவர்—அந்த அக்கிரமங்கள் ஒழிந்து புதுமை மலரவேண்டும் என்று சொல்லும்போது பூரிப்பர் — ஆனால், "காசை"க் காட்டி, இந்தப்பெட்டியில் போடு ஓட்டை என்று கூறும்போது, பேசாமல் போட்டுவிடுவர்! இதனால்தான், இன்றுள்ள அமைப்பில், பணம் படைத்தவர்களாலேயே தேர்தலுக்கு நிற்கவும் வெற்றி பெறவும் முடிகிறது. இந்த சூட்சுமத்தை நன்றாக அறிந்திருப்பதால்தான், காமராஜர் அவர்கள், ஆனந்தத்தோடு சொல்லிக்கொள்கிறார் **"தி. மு. க. வுக்கு கூட்டம் சேரும்! ஆனால், ஓட்டு காங்கிரசுக்குத்தான் விழும்!!"**, என்று. கூட்டம் ஒரு இடத்தில் சேர்வதும், ஓட்டு இன்னொரு பெட்டியில் விழுவதும், விசித்திரம்தான்! அறிவுத் தெளிவு பெற்ற நாடுகளில், நிச்சயம் காணமுடியாத காட்சிதான்!! ஆனால், இங்கு, காண்கிறோம். காரணங்கள் இரண்டு:- ஒன்று, வறுமை. இன்னொன்று, கருத்துத் தெளிவு இல்லாதது.

*

கருத்துத் தெளிவு மட்டும் ஏற்படும்படிச்செய்துவிட்டால், ஜனநாயகம் என்பதன் அருமையினையும், தாங்கள் போடும் ஓட்டுச் சீட்டின் மகத்துவத்தினையும் வெகு எளிதில் மக்கள் உணர்ந்துகொள்வார்கள். கடந்த பொதுத்தேர்தலின்போது, சென்னை நகரத்தில் வறுமையில் உழலும் தொழிலாளர்கள் ஏராளமிருந்தும் அவர்கள் மத்தியில் ஓட்டுப் பெறுவது நமக்கு எளிதானது இதனால்தான். நகரப்பகுதிகளைவிட, கிராமப்புற மக்களிடம், கருத்துத் தெளிவு ஏற்படச்செய்வது எளிதல்ல! கிராமப்பகுதிகளில், நாட்டாண்மைக்காரர்கள், பெரியதனக்காரர்கள் கட்டுப்பாடு, வறுமை என்று பலப்பல உள்ளன; இவைகளையெல்லாம் மீறுமளவுக்கு, கருத்துத் தெளிவு ஏற்படின், "தாத்துக்குடி"கள் ஏற்படாது—எவ்வளவுதான், பத்திரிகை பலத்தையும், பணபலத்தையும் கொண்டிருந்தாலும் காங்கிரஸ், வெற்றிபெற இயலாது.

இப்படிக் கருத்துத் தெளிவு மலர, ஜனநாயக யுகத்தில், 'காலம் வரும்' என்று காத்திருக்க முடியாது! வாய்த்த சமயம் ஒவ்வொன்றினையும், வல்லாளின் கொடுமைகளை விளக்கப் பயன்படுத்தத்தான் வேண்டும். "வல்லவனுச்சே! அதிகாரியாச்சே! ஆள்வோராச்சே!", என்று அடங்கினால், ஜனநாயக முறையை தாரகமந்திரமாக ஏற்றுக்கொண்ட ஒரு அரசியல் கட்சி, தன்னுடைய தலையில்தானே மண்ணைப் போட்டுக்கொள்வது போன்றதாகும். அதனால்தான், தி. மு. க. வாய்ப்பு கிடைக்கிற இடத்திலெல்லாம் காங்கிரசை எதிர்ப்பது என்று திருச்சி மாநாட்டில் முடிவெடுத்தது! அந்த முடிவை, தொடர்ந்து கடைபிடித்து வருகிறது!!

வெற்றி பெற்றோமோ—இல்லையோ, அதுவேறு. ஆனால், இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, ஜனநாயகம்பற்றிய கருத்துத்தெளிவையும், நமது கொள்கை விளக்கத்தையும் தரமுடிகிறதே!! ஏர்காடு, திருவாடானை போன்ற இடங்களில் நடைபெற்ற இடைத் தேர்தல்களிலும், இந்த எண்ணத்துடனேயே நாம் கலந்துகொண்டோம். வெற்றி பெறவில்லையென்பது

(13-ம் பக்கம் பார்க்க)

இலங்கைக்குரல்:

அந்தோ தாயகமே! சீறும் சிங்களத்திற்கு

மண்டியிடவா? மறையவா?

முருகு

1947-ம் ஆண்டிலே, இந்திய சுதந்திரத்தோடு இலங்கையும் சுதந்திரம் பெற்றது. அக்கால முதல் இலங்கைப் பௌத்த பிக்குகள் இலங்கையைப்பௌத்தநாடாகவும், சிங்கள மொழியே ஆட்சி மொழியாகவும், சிங்கள இனமே உரிமை பெற்ற இனமாகவும் செய்வதைக் கருத்திலே கொண்டார்கள்; இதற்காக "பிக்கு பெரமுண" "எக்சத் பெரமுண" "துட்டகைமுனு பெரமுண" "திரிசிங்கள பெரமுனை" எனப் பல சங்கங்களை அமைத்து அச் சங்கங்கள் மூலம் தமது வேலைத் திட்டங்களைச் சிங்கள மக்களிடையே பரப்பினார்கள். இதனோடு நின்றுவிடாது சிங்கள வகுப்புவாத அரசியல் தலைவர்களையும், சர்வகலாசாலையின் சிங்களப் பேராசிரியர்களையும், உயர் பதவியில் உள்ள சிங்கள உத்தியோகத்தர்களையும், சிங்கள ஆசிரியர்களையும் இவ்வாறே பல பகுதி மக்களையும் பௌத்த பிக்குகள் தமது வலையுள் வீழ்த்தி, மிகத் தீவிரமாகச் சிங்களப் பொது மக்கள் மத்திலே தமிழர்களைப் பற்றித் துர்ப்பிரசாரஞ்செய்துவந்தனர். மேலே கூறிய 3 திட்டங்களையும் செயலிலேகொண்டு வருவதற்காக அவர்கள் இன்னுஞ் சில வஞ்சனைத் திட்டங்களைத் தீட்டினார்கள், அவை:

1. இலங்கையில் வாழும் தமிழர்கட்கு வாக்குரிமை, பிரஜா உரிமை வழங்காது விடுவது.
2. வாக்குரிமையோ பிரஜா உரிமையோ இல்லாதவர்கட்கு இலங்கையிலே வசிக்கும் உரிமையை மறுப்பது.
3. வியாபாரஞ் செய்யும் தமிழரை குறிப்பிட்ட கால எல்லையுள் இந்தியாவுக்கு அனுப்புதல்.
4. சந்தேகப் பிரஜைகளை உடனேயே இந்தியாவுக்கு அனுப்புதல்.
5. இந்தியத் தமிழர் கடைகளைப் பகிஷ்கரித்தல்.

இந்த ஐந்து திட்டங்களும் 1-ம் படியாகும்; இவை நடைமுறைக்கு வந்ததும் இரண்டாவது படியான ஐந்து திட்டங்களை நடைமுறைக்குக்கொண்டு வருவதெனத் திட்டமிட்டனர். அவை:

1. இலங்கைத் தமிழரை அரசாங்க உயர்பதவிக்கு நியமித்தல் கூடாது; உயர் பதவியிலுள்ள தமிழரை இளைப்பாற்றல், சம்பளம் (பென்சன்) கொடுத்து வேலையைவிட்டு நீக்குதல்.
2. தமிழ்ப்பிரதேசங்களில்சிங்களவரை இலட்சக்கணக்காகக் குடியேற்றுதல்.
3. இலங்கைத் தமிழர் கடைகளைப் பகிஷ்கரித்தல்.
4. தென்னிலங்கையிலும் மற்றும் சிங்களப்பிரதேசங்களில் வாழும் தமிழரை யாழ்ப்பாணத்துக்கோ இழக்கிலங்கைக்கோ ஓடும்படி செய்தல்.
5. சிங்களமே அரசாங்க மொழியாகப் பிரகடனஞ் செய்தல்.

இந்த இரண்டாவது திட்டத்தை நிறைவேற்றும் பொழுது அரசாங்கம் தமது செல்வாக்கிலே நடைபெறவேண்டுமெனவும் பௌத்த பிக்குகள் திட்டமிட்டுச் செயலாற்றத் தொடங்கினர். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்த போது மலைநாட்டுத் தமிழர் (இலங்கைவாழ் இந்தியத் தமிழர்) வாக்குரிமை, பிரஜா உரிமைக்கு உலைவைக்கப்பட்டது. அவர்கள் சார்பாக இருந்த எட்டுப் பாராளுமன்ற அங்கத்துவமும் மறைந்தன. பௌத்த பிக்குகள் தமது திட்டத்தைத் தீவிரமாக்கினார்கள். 1956ம் ஆண்டில் பொதுத்தேர்தல் நடைபெற்றது. பிக்குகள் பல இலட்சக் கணக்கான ரூபாய்களைத் தேர்தலுக்காகச் செலவு செய்தார்கள். வீடு வீடாகச் சென்று சிங்கள மக்களிடத்தே வகுப்புவாத உணர்ச்சியைத் தூண்டினார்கள். புத்த மதமும், சிங்கள மொழியும், சிங்கள இனமும் (ஒரே மொழி, ஒரே இனம், ஒரே நாடு) இந்த நாட்டிலே ஆட்சி செய்யவேண்டுமானால் தாம் குறிக்கும் அபேட்சகர்களையே ஆதரிக்கவேண்டுமெனப் பிரச்சாரஞ் செய்தார்கள். இன்று சுகாதார மந்திரியாக இருக்கும் அம்மையாரை, இலங்கையின் பௌத்த சங்கங்களின் தலைமைத்தேரோ (பிக்கு) தன் சொந்தச் செலவிலே தேர்தலுக்கு நிற்கச்செய்து வெற்றியும் ஈட்டிக் கொடுத்து சுகாதார மந்திரியும் ஆக்கினார் என்ற பொருள்பட சிங்கள மக்களே பல பாடல்களைப் பாட்டு வடிவில் அச்சேற்றிப் பிரகடனஞ் செய்தார்கள். தேர்தலிலே பிக்குகள் வெற்றிமேல் வெற்றி கண்டார்கள். மக்கள் முன்னணி என்ற பெயரிலே ஆட்சியை நிறுவினார்கள். பிக்குகளின் திட்டங்களைக் கையேற்று அவர்கள் ஆதரவிலே, அவர்கள் தயவிலே பண்டார நாயக்கா அவர்கள் பிரதமர் ஆனார். உன்னத வகுப்புவாதத் தீவிரவாதிகள் மந்திரிகள் ஆனார்கள். எந்த ஒரு தமிழருக்காவது எவ்விதப் பதவியும் கொடுக்கப்படவில்லை. தமிழர் புறக்கணிக்கப்பட்டனர். 1956-க்கு முன், முதல் ஐந்து அம்சத் திட்டத்தை நிறைவேற்றியதோடு இரண்டாவது திட்டத்திலுள்ள இரண்டாவதுசரத்தை; அதாவது

தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களவரைக் குடியேற்றுவதிலும் வெற்றி கண்ட பிக்குகள் தமது பூரண ஆதிக்கமான மக்கள் முன்னணி அரசாங்கம் ஆரம்பமானபோதே 1956 யூன் 5-ம் தேதி சிங்களமே இலங்கையின் அரசாங்க மொழி என்ற தீர்மானத்தைப் பிரகடனஞ் செய்து பாராளுமன்றத்திலும் நிறைவேற்றினர்கள். அன்று இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் செல்வாக்கையும் நேர்மையையும் கொண்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினர் பாராளுமன்றத்தின் முன்னர் (1) தமிழையும் அரசாங்கமொழியாக்க வேண்டும், (2) இலங்கைவாழ் இந்தியத் தமிழருக்கு வாக்குரிமை பிரஜா உரிமை வழங்கவேண்டும், (3) தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களவரைக் குடியேற்றுவதை நிறுத்தவேண்டும். (4) இலங்கைக்கு ஒரு சமஷ்டி அரசியல்வேண்டும் என்ற நாலு கோரிக்கைகளை முன்நிறுத்திச்சத்தியாக்கிரகஞ் செய்தார்கள். பொறுப்புவாய்ந்த மந்திரிகள் பல ஆயிரக்கணக்கான சிங்களக் காடையர்களைக்கொண்டு வந்து சத்தியாக்கிரகிகளைத் தாக்கச் செய்தார்கள். தாக்கப்பட்டாலும் குறித்த நேரம்வரை சத்தியாக்கிரகஞ் செய்தார்கள். தமிழரசுக் கட்சியினர், இலங்கை தி. மு. கழக நண்பர்களும் பங்கு பற்றியமை குறிப்பிடத் தகுந்தது. 1956 யூன் 5ல் இருந்து சிங்களமே அரசியல் மொழி என்ற சட்டம் பிரகடனமானதிலிருந்து தென்னிலங்கையிலிருந்த தமிழரைச் சிங்களக் காடையர்கள் தருணம் வாய்க்கும் போதெல்லாம் தாக்கிவந்தார்கள். அதோடு "பறைசாதித் தமிழனே! உன் உயிரில் உனக்கு விருப்பமிருந்தால் உடனே உன் ஊருக்கு ஓடு" என்று சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களை தமிழருக்கு வாரத்துக்கு இருமுறை விநியோகஞ் செய்தார்கள். அதுமட்டுமின்றித் தென்னிலங்கையிலிருந்த சகல காரியாலயங்களிலும், வியாபார நிலையங்களிலும்வேலைபார்த்த தமிழருக்குப் பயமுறுத்தல்கடிதங்களை அவர்கள் வீடுகளிலே விநியோகஞ் செய்தார்கள். எவ்வித பயமுமின்றிப்பகிரங்கமாகவிநியோகஞ் செய்யப்பட்ட இத்துண்டுப் பிரசுரங்களைப்பற்றி அரசாங்கத்திற்கு அறிவித்தபோது "விபசாரியைக் கண்டுபிடிக்க முனையவேண்டாம். ஆனால் விபசாரத்தை கண்டியுங்கள்" என்ற தோரணையில் இவ்விதத் துண்டுப் பிரசுரங்கள் ஒருவருக்குக் கிடைத்தால் அதனை அடுத்தவருக்குக் காட்டுவாரும், அதைப்பற்றிப் பிறருடன் பேசுபவரும் குற்றவாளிகளாகக் கருதப்பட்டுத் தண்டனை விதிக்கப்படுவார்கள்" என்று அறிக்கை வெளியிட்டது அரசாங்கம். துண்டுப் பிரசுரங்கள் தினந்தோறும் விநியோகமாயின. தமிழரைத் தாக்குவதும் வளர்ந்து வந்தது.

கிழக்கு இலங்கையின் தமிழ்ப் பிரதேசத்தில் கல்லோயா என்ற பள்ளத்தாக்கில் அரசாங்கம் பல கோடி ரூபாய் செலவில் விவசாயக் குடியேற்றத் திட்டமொன்றை ஏற்படுத்தி, அக்குடியேற்றத் திட்டத்தில் குற்றவாளிகளாகிப் பல ஆண்டுகள்சிறையிலிருந்த சிங்களவரைப் பதினாயிரக்கணக்காகக் குடியேற்றஞ் செய்துவைத்தது. இக் கல்லோயாப் பள்ளத்தாக்கைச் சுற்றி, மட்டக்களப்பு, துறை நீலாவணை, கழுவாஞ்சிக்குடி, கல்முனை, காரைதீவு முதலிய தமிழ் நாடுகள் உண்டு. இப்பகுதிகளில் மானமே உயிரெனவும் மரணத்தைத் துச்சமாகவும் மதிக்கும் மறத்தமிழர் வாழ்ந்துவந்தார்கள். கல்லோயாப்பள்ளத்தாக்கில் மிகக் குறைவாகத் தமிழர்களும் குடியேற்றப்பட்டிருந்தார்கள். தென் இலங்கையில் ஆங்காங்கு தமிழர் தாக்கப்படுவதையும் சிங்கள ஆதிக்கம் செல்வாக்குடன் வளர்ந்து வருவதையும் கண்ட கல்லோயாக் குடியேற்றச் சிங்களக் காடையர்கள்கல்லோயாவிலிருந்த தமிழரைத்தாக்கினார்கள்; கல்லோயாவிலிருந்த போலீஸ் நிலையத்தை உடைத்து அங்கிருந்த துப்பாக்கிகளைக்கைப்பற்றித் தமிழ் அதிகாரிகளைச் சுட்டார்கள். தாக்குதலுக்குப் பயந்த தமிழ்க் குடிகள் காடுகளில் ஓடி ஒளிந்தார்கள். சிலர் மட்டக்களப்பு, துறை நீலாவணை முதலிய இடங்களுக்கு ஓடினார்கள். இந்நிகழ்ச்சி அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டது. கல்லோயாத் திட்டத்தின் தலைமை அதிகாரி சிங்களவராயிருந்ததால், அரசாங்கம் கலவரம் பற்றிய அறிக்கையை அனுப்புமாறு கேட்டதற்கு "சிறு கலகம் அது அடக்கப்பட்டுவிட்டது" என்று பதில் கொடுத்தார். கல்லோயாவின் அலங்கோலம் பற்றிப்பல திசைகளிலுமிருந்துபல பொறுப்பு வாய்ந்த தமிழ் அதிகாரிகள் அரசாங்கத்திற்கு அறிக்கைகொடுத்துச்சிங்களவரின் காடைத்தனங்களை அடக்குமாறு கேட்டனர். செவிடன் காதில் ஊதிய சங்கநாதம்போல் அரசாங்கம் அமைதியாக இருந்தது. கல்லோயா விவசாயத் திட்டத்தின் அரசாங்க லாரிகளில் சிங்களக் காடையர்கள் ஆயிரக்கணக்கில் மட்டகளப்பு, துறை நீலாவணை முதலிய இடங்கட்கு வந்து தமிழர் கடைகளைக் கொள்ளை அடித்தார்கள். கல்லோயாக் குடியேற்றத் திட்டத்திலிருந்த தமிழ் மாதரை அலங்கோலமான முறையில் அரசாங்க லாரிகளில் ஏற்றி மட்டக்களப்புக்குக் கொண்டுவந்து ஊர்வலம் நடத்தினார்கள். இன்னுமா பொறுமை எனக் கொதித்தெழுந்தார்கள், மட்டகளப்பு மறத் தமிழர். தாய்க்குலம் பட்ட அவமானத்தின் பின் உயிர்தரிப்பதா எனப் பொங்கி எழுந்தனர். கல்லோயா காடாகக் காட்சி கொடுத்தது. இது நடந்த மூன்றுவது தினம் இராணுவம் வந்தது. மட்டகளப்பு, துறை நீலாவணை முதலிய பிரதேசங்களிற் புகுந்து ஆசை தீரத் தமிழரைச் சுட்டுக் குவித்தது. ஆண்கள், பெண்கள், குழந்தைகள் முதல் சுடப்பட்டார்கள். கடைகள் தீ வைக்கப்பட்டன. பலரைச் சிறைபிடித்தார்கள். இது தான் மக்கள் முன்னணி அரசாங்கம், பௌத்த தர்ம அரசாங்கம், பிரதமர் பண்டார நாயகாவின் அரசாங்கம் தமிழருக்குச் செய்த இரண்டாவது பணியாகும். இந்தச் சோகச் சரிதை நடந்தது 1956ம் ஆண்டிலேயாகும். இதன் பின்னர் மட்டக்களப்புப் பகுதி அடக்குமுறைக்கு இலக்காயிது. கல்லோயாவை விட்டு ஓடிய சிங்களவர் மறுபடியும் கல்லோயாப் பிரதேசத்தில் வந்து குடியேறினார்கள். இன்னும் பல சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டன.

★

ஒருசித்திரத்தில் கண்களைமட்டும் அழகாக அமைத்து விட்டு பிற அங்கங்களை அழகு படுத்தாமல் விட்டு விட்டால் அந்தச் சித்திரம் எப்படிச் சோபிக்காதோ அதுபோல் ஒரு நாட்டில் ஒருசிலரை மட்டும் மகிழ்ச்சியை அனுபவக்க விட்டு விட்டு மற்றவர்களைத் துக்கப் படும்படி விட்டு விட்டால் அந்நாடு செழிப்பான நாடெனச் சொல்ல முடியாது.

'பவானி' பக்கத்திலே!

—(பரி)—

"உழவில்லையேல் உயிரில்லை உயிரில்லையேல் இவ்வுலகம் இல்லை உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்வர், — ஏற்றம் உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர், பழுதுண்டு வேறோர் பணிக்கு" என்று பாடிப் பாடிப் புகழ்ந்தார்கள் பழங்காலத்திலே பைந்தமிழ்ப் புலவர்கள் உழவனையும் உழவுத் தொழிலையும். அப்பேற்பட்ட உழவனின் நிலை இன்று நம் நாட்டிலே எப்படி உள்ளது?

உழவன் என்பவன் எப்படியிருக்க வேண்டும்? எவ்விதத் துன்பமும் இன்றி அவன் எல்லா வகையிலும் இன்பமுற்றிருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவன் செய்யும் வேளாண்மையும் அவனைப்போலவே நன்றாகச் செழித்து வளர்ந்து பலன் தரும். அப்படியில்லாமல் அவன் வறுமையால் வாடி, கவலையால் நொந்து இருப்பானானால், அவன் செய்யும் வேளாண்மையும் அவனைப்போலவே வாடி வதங்கிப் பாதிப் பலன் தந்தும் தராமலும் போய்விடும்.

உழவர் குழாம் ஒரு கவலையும் இன்றி இன்புற்றிருக்க அவர்களுக்கு யார் உதவி செய்ய வேண்டும். அறிவற்றவர்களை அறிவுக் களஞ்சியங்களாக மாற்ற வேண்டும். அவர்களுக்கு வேண்டிய எல்லா விதமான வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டும். பசி, பிணி முதலானவைகள் அவர்களை அணுகாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும்.

விளைவுக்குத் தகுந்த வரியைத்தான் அவர்களிடமிருந்து வாங்க வேண்டும். அவர்களுக்கு வேண்டிய உரங்கள், விதைகள், உழவுக் கருவிகள், மாடுகள் முதலியவற்றைச் சகாயமாகக் கொடுத்து அதற்கான தொகையை அவர்களிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக வசூல் செய்யவேண்டும்.

அவர்களிடமுள்ள தானியங்கள் ஒவ்வொன்றுக்கும் சராசரி விலையை நிர்ணயிக்க வேண்டும். நாட்டில் உள்ள நிலங்களையெல்லாம் மொத்தமாகக் கணக்கெடுத்து அதன் மூலம் நாட்டிலுள்ள எல்லா உழவர்களுக்கும் அதைச் சரிசமமாகப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். இதனால் நிலம் இல்லாத உழவர்களுக்கும் நிலம் கிடைக்கும். வேளாண்மை பட்டுப்போன காலத்தில் அரசாங்கம் உழவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கவேண்டும். இப்படியாக அரசாங்கம் உழவர்களுக்கு உதவி செய்யவேண்டும்.

நமது அரசாங்கம் இவ்வித நன்மை செய்கிறதா? இல்லை. வாயளவில் மட்டும் சொல்லி வருகிறது உழவுத் தொழிலை முன்னேற்றுகிறோம், உணவு உற்பத்தியைப் பெருக்குகிறோம் என்று. செயலளவில் அவர்களுக்குத் தீமையே செய்து வருகிறது. அரசாங்கம் செய்யும் தீமை என்ன?

ஏறக்குறைய நான்கு வருடங்களுக்குமுன் நமது அரசாங்கம் கீழ்பவானி என்ற ஒரு அணையைக் கட்டி, அதிலிருந்து கால்வாய்கள் வெட்டிச் சில மாவட்டங்களுக்கு நீர்ப்பாசன வசதியளித்தது. இது அப்பொழுது நன்மையாகத்தான் தெரிந்தது. ஆனால் பிறகுதான் தெரிய வந்தது அதனுடைய பலன். பற்றுக்குறை நீரால் பங்குகாரருக்குள் சண்டை. அதனால் கொலை இப்படி ஏராளம்! ஏராளம்!

அதுவுமன்றி இந்த அணைக் கட்டைக் கட்டி முடிக்க பதினொரு கோடி ரூபாய் செலவாயிற்றாம். இதில் கால்வாய்களுக்கும், அணைக்கட்டிற்கும் செலவிடப்பட்டது உண்மையில் ஏழு கோடி தான் இருக்கும். மீதி நான்கு கோடியும் இடையிலே ஏப்பமிடப்பட்டது. அரசாங்கம் கவனித்ததா? அதுதானே இல்லை இந்த ஆட்சியில்.

அதற்குப் பதிலாக ஒன்றும் அறியாத உழவர்களின் மீது, அந்தப் பதினொரு கோடி ரூபாயையும் ஈடு செய்ய, தண்ணீர் வரி, தண்டத் தீர்வை, அபிவிருத்தி வரி, செஸ்வரி, சர்சார்ஜ் முதலானவைகளைப் போட்டு அவர்களைத் தாங்கொணாக் கொடுமைக் காளாக்கியது. ஒரு ஏக்கர் நிலத்தில் வரும் வருமானம் நாநூறு ரூபாய் என்றால் (இரண்டு போகத்தில்) இவர்கள் வரியாக இருநூறைப் பிடுங்கிக் கொள்கின்றனர். மீதி இருக்கும் இருநூறு எட்டு மாதமாகப் பாடுபட்ட கூலி, எரு,விதை,உழவு, களையெடுத்தல், அறுவடை முதலியவைகளுக்கு.

இன்னொன்று, உழவன் தான் விரும்பிய பயிரைப் பயிர் செய்யக் கூடாதாம். இதற்குப்பயிர் கட்டுப்பாடு என்று பெயர். உரம்பு நிலத்தில்தான் நெல் வைக்கவேண்டும். மேட்டு நிலத்தில் நெல் வைக்கக் கூடாதாம். வைத்தால் வரி அதிகம் என்கிறார்கள். மேட்டுப் பாங்கான நிலத்தையுடையவர்கள் தங்களுக்கு வேண்டிய நெல்லுக்கு வேறொருவரைநாடவேண்டியுளது.

இந்தக் கட்டுப்பாடு எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இல்லை. ஏழைக்கு வேறு, பணக்காரனுக்கு வேறு. ஏழை நிலம் உரம்பாக இருக்கும். கணக்கன் வேண்டுமென்றே உழவனிடம் பணம் பிடுங்குவதற்காக அதை மேடு என்று எழுதுவான். அதைக் கண்காணிக்க வரும் அதிகாரியும் அப்படியே சொல்லிவிடுவார். பணக்காரனது அத்தனையும் மேடாக இருக்கும். கணக்கன் அதை உரம்பென்று எழுதுவான். வருகின்ற அதிகாரியும் அப்படியே சொல்லிவிடுவார். பணக்காரனது பசப்பு மொழியும் பிறவும் அவர்களது பகுத்தறிவை மாற்றிவிடுகிறது.

வீணாக ஓடும் ஓடைநீரை எவனும் தன் விருப்பப்படி நிலங்களுக்குப் பாய்ச்சக்கூடாதாம். அதற்கும் அரசாங்க உத்தரவு தேவையாம். பயிர் விளைந்தாலும் விளையாவிட்டாலும், தண்ணீர் நிலத்திலே பாய்ந்தாலும் பாயாவிட்டாலும் சர்க்காருக்குவரிகட்டவேண்டுமாம்.

எப்படி வரி கொடுப்பார்கள் உழவர்கள்? கொடுக்க முடியாவிட்டால் அவர்களுடைய ஆடு மாடு ஜப்தி, வீட்டிலே உள்ள தட்டுமுட்டு சாமான்கள் ஜப்தி. என்னே கொடுமை! இன்று கீழ் பவானி வாய்க்கால் பாயும் பிரதேசங்களில் இதுபோன்ற கொடுமைகள் ஏராளம்! ஏராளம்!!

பூனையைக் கொடுத்து ஆனையைக் கேட்கும் இந்த ஆட்சியில் ஆடிழந்து, மாடிழந்து, அருமை மனைவிகளின் மாங்கல்யம் இழந்து அவதியுறும் உழவர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்கா. உழவர்களெல்லாம் கதறுகின்றனர். கண்ணீர் வடிக்கின்றனர். இவைகளையெல்லாம் அரசாங்கம் கவனிக்குமா? ஆவன செய்யுமா?

✶

மலர்ப் பொய்கை

(தமிழவேள்)

மாலை நேரம், செங்கதிரோன் மேற்கே சென்று அப்பொழுது தான் மறைந்தான். இன்னும் உலகத்தை இருள் வந்து கவ்வவில்லை. வானத்தில் வெண்ணிலவு இருப்பதும் நன்ருகத் தெரிகிறது. அப்படிப்பட்ட நேரத்தில் ஒரு குளக்கரையில் புலவர் ஒருவர் அமர்ந்திருக்கிருர். அவர் அங்கு என்ன செய்கிருர்? குளத்தினுடைய அழகுக் காட்சியில் தன்னை மறந்து ஈடுபட்டிருக்கிருர்.

குளத்திலே நீர் நிறைந்திருக்கிறது. அந்த நீரும் பாசிபடர்தில்லாமல் தெளிந்து இருக்கிறது. தாமரைப் பூக்களும் அல்லி மலர்களும் இலைகளின் ஊடே ஊடே பூத்திருக்கின்றன. செங்கதிரோன் மறைந்து வெண்ணிலவோன் வருகின்ற நேரமாகையால் செந்தாமரைகள் எல்லாம் குவியத் தொடங்குகின்றன. அல்லி மலர்களோ அகமகிழ்ச்சியோடு அலரத்தொடங்குகின்றன. இவ்வளவு காட்சிகளுக்கு மேலும் ஒன்று. அந்தப் பொய்கையில் இரண்டு அன்னங்கள் நீந்தி வருகின்றன.

குளத்திலே இருக்கும் நீரிலும் தாமரையிலும் அல்லியிலும், எங்கோ இரண்டோர் இடத்தில் மட்டும் தலைகளை நீட்டிக்கொண்டிருக்கும் கோரைப் புற்களிலும் கருத்தைச் செலுத்தி மகிழ்ந்திருந்த புலவர் அங்கே இரண்டு அன்னங்களும் இருக்கக்கண்டு அவ்வன்னங்களின் இயக்கத்தையே உற்று நோக்கலாஞர்.

அந்த அன்னங்களிலே ஒன்று ஆண். இன்னென்று பெண். அவையிரண்டும் ஒன்ருேடொன்று இணைந்து தடாகத்து நீரில் தவழ்ந்து வருகின்றன. அன்பான அந்த இரண்டு அன்னங்களின் அமைதியான தூய வாழ்க்கையை எண்ணி எண்ணிப் புலவருடைய மனம் இன்புறுகிறது.

ஆண் அன்னம் ஒரு பக்கத்தில் குவிந்துகொண்டிருக்கும் தாமரையைப்பார்த்தபடியும், பெண் அன்னம் இன்னெரு பக்கம் மலர்ந்துகொண்டிருக்கும் அல்லியைப் பார்த்தபடியும் வந்துகொண்டிருந்தன. இடையிலே ஓரிடத்தில் கோரைப் புற்கள் குறுக்கிட்டன. பெண் அன்னம் அல்லியைப் பார்த்தபடியே கோரைப் புற்களின் ஒரு புறமாக வந்துகொண்டிருக்க, ஆண் அன்னம் தாமரையைப் பார்த்தபடியே கோரைப் புற்களின் இன்னெரு புறமாக சுற்றிக்கொண்டு வரலாயிற்று. பெண் அன்னம் பார்த்துக்கொண்டு வந்த அல்லிமலர் முழுதும் மலர்வதற்கும், ஆண் அன்னம் கோரைப் புற்களின் வேறு பக்கமாகச் சென்று மறைவதற்கும் சரியாக இருந்தது. "ஆகா! அந்த அல்லி முழுதும் மலர்ந்து விட்டது பார்த்தீர்களா?" என்று அன்னம் தன் பக்கத்திலேயே வந்துகொண்டிருந்த துணைவரைத் திரும்பிப் பார்த்தது! திடுக்கிட்டுவிட்டது! அங்கே துணைவரைக் காணேம்! அதனுடைய நெஞ்சமே கலங்கிவிட்டது! என்ன இது! இப்பொழுது நம் கூடவே இருந்தவர் அதற்குள்ளாக எங்கே போய்விடுவார்? என்று சுற்றும் முற்றும் பார்த்தது. எங்கும் காணேம்! அன்னச் சேவலைத்தான் கோரைப் புற்கள் மறைத்திருக்கின்றனவே!

ஒருக்கால் - நம்முடைய துணைவர் நமக்கு விளையாட்டுக்காட்டுவதற்காக வேண்டி நீருக்குள் மூழ்கியிருக்கிருரோ என்று நீரை உற்றுப்பார்த்தது. சற்றுத்தொலைவில் நீருக்குள் ஏதோ வெண்மையாக இருப்பது தெரிந்தது. அது வேறென்றுமல்ல, வானத்திலிருக்கும் வெண்ணிலவின் பிம்பம் தான். நெஞ்சம் கலங்கிய நிலையில் அது தன் துணைவரே என எண்ணியது. ஓடிப்போய் நீரில் மூழ்கி ஒளிந்துகொண்டிருக்கும் தன் துணைவரைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, "நீங்கள் எங்கே சென்ருலும் உங்களை நான் கண்டு பிடித்துவிடுவேனே!" என்று சொல்லிச் சிரிக்க நினைத்தது. அப்படியே தண்ணீரில் வெண்மையாகத் தெரிந்த அந்த இடத்தை நோக்கியும் ஓடியது. என்ருலும்! தண்ணீருக்குள் மூழ்கவில்லை! அதற்குள் தன் துணைவர் அசைந்தாடி எதிரே வரப்பார்த்தது. உடனே அதற்கு நாணம் வந்துவிட்டது. பெண்களுக்கு நாணம் வந்தால் என்ன செய்வார்கள்? முகத்தை மூடிக்கொள்வார்கள்! ஓடி ஒளிந்து கொள்வார்கள்! அந்த அன்னப் பேடும் அப்படித்தான் செய்தது. அருகே மலர்ந்திருந்த மலர்களினூடே புகுந்து தன் முகத்தை மறைத்துக்கொண்டது!

இப்படி ஒரு அருமையான காட்சியைக் கண்ட புலவரால் அதை மறக்கவே முடியவில்லை! அந்தக் காட்சி எப்போதும் காணக்கூடிய ஒன்ரு? அல்லது எல்லோரும் காணக்கூடிய ஒன்ரு? அல்லவே! எல்லோரும் எப்போதும் அந்தக் காட்சியைக் கண்டு மகிழும் வண்ணம் புலவர் அதைத் தம்முடைய பாடல் ஒன்றிலே வைத்துப் பாடியிருக்கிருர்.

"மணி நிற மலர்ப்பொய்கை
மலர்ந்தாடும் அன்னந்தன்
அணி மிகு சேவலை
அகலடை மறைத்தென
கதுமெனக் காணது
கலங்கியம் மடப்பெடை
மதி நிழல் நீருட்கண்(டு)
அதுவென உவந்தோடி
துன்னத்தன் எதிர் வரூஉம்
துணைகண்டு மிக நாணிப்
பன் மலர் இடைப்புகூஉம்
பழனஞ்சேர் ஊர! கேள்!
......................................"

★

காதல்

முதல் தோற்றம்

இடம்:- சேரன் ஆலோசனை மண்டபம்.

இருப்போர்:- செங்குட்டுவன், அமைச்சர்கள், வில்லவன், மற்றும் பல வீரர்கள்.

செங்குட்டுவன்:- சேர நன்ஞட்டு நல்லிளஞ் சிங்கங்காள்! தினவெடுத்த தோள்களும், திண்மை உள்ளமும் படைத்த வீரர்காள்! தமிழர் வாழ்வே காதலிலும் வீரத்திலும் கரை கண்டதென்பதை அறியச்செய்யும் பொன்ஞள் இது. வளம் கொழிக்கும் நம் நாட்டுப் பெருமையை வையம் அறியும். அதன் சிறப்பு மேலும் ஒருபடி உயர வழி வகுக்கும் நன்ஞள் இது. நம் கடற்கரைப் பகுதியிலே காத்துக் கிடக்கும் கலங்களைக் கண்டாலே போதும் நம் கவின்மிகு வளத்தை அளவிட. முத்தையும் மோனப் பொருள்களையும் — மயிற்பீலியையும் மணங்கமழ் பொருள்களையும் போட்டிபோட்டுவாங்கிச்செல்ல, பொன்னையும், மணியையும் நம் தாயகத்துக் காலடியிலே வைத்துக் காத்துக்கிடக்கின்றனர் யவனத்தாரும் கிரேக்கத்தாரும்.

செந்தமிழ் நாட்டார் சிந்தையால் தூயவர் என்பதனை அறிந்தவர்கள் அவர்கள். சேர நன்ஞட்டினர் தம்மறம் அவர்கள் அறியாததொன்றல்ல. ஆனல்... வீரத்தை இழி செயல்கட்குப் பயன்படுத்தும் இருண்டமதியினர் சிலரும் இருக்கின்ருர் இந்நாட்டுவடக்குக் கடற்கரைப் பகுதியில் என்பதை அறிந்து என் மனம் பெரிதும் நெகிழ்ச்சியடைகின்றது. பொருள்களை ஏற்றிச் செல்லும் மரக்கலங்களை வழிமறித்துக் கொள்ளையடிக்கும் அக்கொடியவர்கள் செயல் எண்ணிச்சேரநாடே அவமானத்தால் தலைகுனிகின்றது. தாயகத்துப் பண்பிற்கு மாசு கற்பித்துவிட்டார்கள் சிலர். அம்மாசு துடைக்கும் நற்பணியில் நானே தலைவணங்கி ஈடுபட எண்ணியுள்ளேன். என் எண்ணத்தை சீரிய முறையில் நிறைவேற்ற.........

[அமைச்சர்களை நோக்குகின்ருர்]

உருவாக்க உதவியது:

கி. பி. இரண்டாம் நூற்ருண்டுத் தொடக்கத்தில் இருந்த இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் வீரமைந்தனும், சிலம்பு தந்த செல்வன் இளங்கோவிற்கு அண்ணனுமாகிய கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் காலத்தைப் பின்னணியாக்கியும்—,

சேரநாட்டிற்கு வடக்கே கடற்கரை ஓரமாக இருந்து கொண்டு, சேரநாட்டகத்தினின்று பிற நாடுகட்குப் பொருள்களை ஏற்றிச் செல்லும் மரக்கலங்களை மறித்துச் சூறையாடி வந்த கொள்ளைக் கூட்டத்தாரை வன்மை மிக்க வீரர்களைக் கொண்ட கப்பற்படையுடன் செங்குட்டுவன் சென்று ஒழித்து மீண்ட வீர நிகழ்ச்சியையும் பிணைத்து—,

இந் நாடகம் உருவாக்கப் பெற்றிருக்கின்றது.

சா. தேவராசன்

அமைச்சருள் ஒருவர்:- மன்ன! தங்கள் வீரமும், தங்கள்முந்தையோர் பெருமையும் வையமெலாம் பரவிய ஒன்றன்ருே! தங்கள் தந்தையார் இமயம் வரை சென்று மீண்ட பெரும் வீரப் பயணத்தை யார்தான் அறியார்? தாங்களே இப் பணியில் முன்னிற்க முனைந்துவிட்டபின் தடைகூற வல்லார் யார் மன்னவா? தங்கள் கட்டளைகளை நிறைவேற்றத் தகுதியான வீரஞக வில்லவன் உள்ளான் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகின்ருேம் கொற்றவா! வாழ்க சேரநன்ஞடு! வாழ்க மன்னர் மன்னன்!!

செங்:- (வில்லவனை நோக்கி) வில்லவா! வீரர் கோட்டத்துப் பெருந் தலைவ! அமைச்சர்கள் எண்ணமும் என் முடிவையே ஒத்திருப்பதொன்றே உன்வீரத்தையும், தகுதியையும் அறியப் போதுமானது. இன்று மாலையே வேண்டிய ஆயத்தங்களைச் செய்வாயாக.

வில்:- (வணங்குகின்ருன்) மன்ன! பெரு மகிழ்ச்சி! நாட்டு மானம் காக்கும் நற்பணிக்கு என்னைத் தகுதியுள்ளவஞகக் கருதிய தொன்றே நான் பெற்ற பெரும் பேருகும் மன்னவ! தாயகத்து மாசு நீக்கத் தக்கவை செய்யச் சித்தம் இறைவ! தமிழகம் வாழ்க! என் தலைவர் வாழ்க!!

தோற்றம் இரண்டு

இடம்:- வில்லவன் இல்லம்

இருப்போர்:- வில்லவன், நற்கருணை —வில்லவன் மனைவி.

வில்லவன்:- கண்ணே நற்கருணை! மான் மருளும் கண்ணுடையாய் ஏன் மருட்சி விழிகளிலே? சேர நாட்டுப் புகழ் காக்கச்செல்கின்றேன் செருமுனைக்கென்ற சேதி கசக்கின்றதா கண்ணே? தமிழகத்து மகளிர் தடைகூறமாட்டார்கள் படையோடு செல்வ

தற்கு என்பதை அறியாதவளா நான்! அன்பே! சில நாட்கள் தான். சென்று வருக என்று கொவ்வைச்செவ்விதழ்விரித்து விடைகொடு ஆருயிரே!

நற்கருணை:- அத்தான்! சென்று வருக! வென்று வருக!! எனக் கூறுது வேறென்ன அன்பரே கூறப்போகின்றேன். செருமுகம் நோக்கிச் செல்கெனக் கூறும் செந்தமிழ்நாட்டுச்சேயிழைகட்கு மாசா கற்பித்துவிடுவேன்? கொள்ளைக் கூட்டத்தார் கொன்று 'குவிக்கப்பட்டதும் கொள்ளை இன்பமல்லவா பெறப் போகின்றேன்! சேரன் வாழ்க! என் வீரன் வாழ்க!! போதுமா அத்தான்!

[கலகலவென நகைக்கின்ருள்]

வில்:- இன்பமே! உன் வீரம் வாழ்க! காதல் வாழ்க!! களம் சென்று வருமட்டும் என் கண்ணைப் பிரிய வேண்டுமேயென்ற எண்ணம் என் இதயத்தைப் பிழிந்துதான் எடுக்கின்றது; இருப்பினும் நாடு காக்கும் நற்பணி எண்ணி என் கண்ணைப் பிரிகின்றேன். தளராத தமிழ் உள்ளம், எதையும் தாங்கும பண்புள்ளம் நின் உள்ளமல்லவா? எங்கே செருமுகம் சென்று மீளும்வரை தேவையான அளவு வழங்கு கண்ணே.

[ஒருவரை ஒருவர் கனிவோடு பார்க்கின்றனர். இன்ப உணர்வொடு பிரிவாற்றல் எனும் துன்ப உணர்வும் மேலிடப் பிரிகின்றனர்.]

மூன்றாந் தோற்றம்

சின்னாட்கள் சென்ற பின்னர் செங்குட்டுவன் பெற்ற பெரும் வெற்றியை நாட்டு மக்கள் மகிழ்வாகக் கொண்டாடுகின்றனர். நாடே விழாக் கோலம் பூண்டிருக்கின்றது.

நற்கருணை துன்பமே உருவாகத் தரையில் படுத்திருக்கின்ருள். அணிசெயும் அணிகலன்கள் இல்லை. மையிருட்டுக் கண்களிலே மை இல்லை. கருங்கூந்தல் கட்டவிழ்ந்து கிடக்கின்றது. மேனியெங்கும் பசலை படர்ந்திருக்கின்றது. உடல் தளர்ந்து அலங்கோலமாகக் கிடக்கின்ருள். அருகில் நற்கருணைத் தோழி மான்கண் மங்கை அமர்ந்திருக்கின்ருள்.

மான் கண் மங்கை:- அம்மா இந்தப் பாலையாவது பருகுங்களேன்! எத்துணை நாட்களுக்கு இப்படியே வாளா இருப்பது? களத்திலே புகழுடம்பு எய்தினார் காதலர் என்ருல், பெரும் பேறுதானே அம்மா? வருந்தி என்ன பயன்? மனத்தைத் தளரவிடாதீர்கள்! எழுந்திருங்கள் அம்மா!

நற்கருணை:- என்னை ஏதும் தொல்லை செய்யாதே மங்கை! காதலர் பிரிந்த பின்னும் இன்னும் உயிருடன் வாழ்கின்றேனே? என் இறப்பு விரைவில் நிகழாதா?

[தலையைத் தரையில் மோதிக்கொண்டு விம்மி விம்மி அழுகின்ருள். தோழி தடுக்கின்ருள்.]

என் துணைவரை இழந்த எனக்கு வாழ்வு ஏன்? வயிற்றுப் பசி போக்க உண்டி ஏன்? மங்கை! மன்ருடிக் கேட்டுக் கொள்கிறேன் என்னை விட்டு விலகிப் போ! என் துணைவரையே நினைந்து நினைந்தாவது மாளக்கூடாதா நான்? சிந்தையைவேறு திசைகளிலே திருப்பிச் சிதற அடிக்காதே மங்கை! அந்த இன்ப நினைவை யாவது எனக்குப் பெற வழி விடு. போ! போய்விடு!!

மான்:- அம்மா! வீண் சொற்கள் பல கூறி வேதனையுறல் வேண்டாம் அம்மா! சேரர்க்குப் புகழ் சேர்க்கச் சென்றுவிட்டார் என்றெண்ணித் துன்பத்தை மறந்துவிடுங்கள். நாடு காக்கும் நற்பணியில் நல்லுயிரீந்த நாயகனை நாளும் நினைந்து வருந்த வேண்டாம் தாயே! நாயகனைப் போலவே நாட்டிற்குப் பணியாற்ற முற்படுங்கள் தாயே! தமிழ் மகளிர் கூட்டத்தார் தகாதன செய்யார் என்பதனை அறியீரோ? அறத்தின் வழி நின்று பணிபுரியக் கூடாதா? அறத்தின்பாற்பட்டவர்க்குத் துன்ப நினைவுகூடத் தோன்றுமா அம்மா? எதையும் எண்ணிப் பாருங்கள் அம்மா! துன்பம் மறந்து எழுந்திருங்கள்.

நற்:- மங்கை! என்னைவிட்டு விலகிப் போய்விடு! எதையும் எண்ணிப்பார்க்க என்ருல் இயலவில்லையே! போ! போய்விடு!! போய்விடு!!

[களைப்பு மேலீட்டால் சோர்ந்து கண்களை மூடுகின்ருள் நற்கருணை. மான்கண் மங்கை சற்றுத் தள்ளி அமைந்திருக்கும் அறைக்குள் சென்று மறைகின்ருள்.]

தோற்றம் நான்கு

இருப்போர்:- வில்லவன்
நற்கருணை

நற்கருணை வானத்தில் மிதப்பதுபோல் உணர்கின்ருள். கீழே கடல் தெரிகின்றது. கடற்கரையிலே வில்லவன் நின்றுகொண்டு கை காட்டி அழைக்கின்ருன். ஆவலோடு நற்கருணை அவனை அடைகின்ருள். இருவரும் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிக்கொள்கின்றனர்.

நற்கருணை:- அத்தான்! (ஆவலோடு சென்று அணைக்க முயல்கின்ருள். அவனுடைய உடல் இவள் கைக்குள் சிக்காமல் தவிக்க வைக்கின்றது.) என்னை விட்டுப் பிரிந்துவிட எப்படி அத்தான் மனம் துணிந்தீர்கள்? புறமே துணையென்று நம்பிவிட்டீர்களா? அகத்தை மறந்தேவிட்டீர்களா அன்பே? காதல் புரிந்ததும் — கணமும் பிரியாது காதல் வாழ்வு வாழ்ந்ததும் இதற்காகத்தானு கண்ணளா?

[அவனுடைய உடல் கிடைக்கின்றதுகைக்குள்; இறுகத் தழுவி மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு, இரு கரங்களாலும் அவனுடைய வலிநிறைந்த தோள்களை ஆதுரமாகத் தடவுகின்ருள். முத்துப்போல் கண்ணீர்த் துளிகள் அவளுடைய கண்ணாடிக் கன்னங்களில் உருண்டோடி வருகின்றன.]

வில்லவன்:- ஆருயிரே! நீ இல்லா வாழ்வு எனக்கு நிலவில்லா வானுகும் கண்ணே! ஞாயிறின்றேல் திங்கள் தண்மையை இழக்கும் என்பதை அறிவேன் அன்பே! உனைக் கணமும் பிரிய ஒப்பியது ஒரு நாளும் இல்லை என்பதை அறியாயோ நீ? செருமுகத்தில் சேறு போல் குழம்பி ஓடிய செங்குருதி வெள்ளமெலாம் நாணத்தால்சிவக்குமே! காதல் களத்தில் உன் கண்ணாடிக்கன்னங்கள், அதன் செம்மையையும், கொவ்வைக் கனியென்று கொத்திச் சுவைப்பேனே உன் செவ்விதழ்களை; அவற்றையுமல்லவா எனக்கு நினைவு படுத்தின! கரிய மலைபோன்றுவந்த கூற்கொள்ளைக் கூட்டத்தார் உடல் வீழ்ந்த போதெல்லாம் காற்றிலசைந்தாடும் நின் கருங்கூந்தல் காண்கின்ற காட்சியன்ருே கண்டேன் நான்! நினைவெல்லாம் நீயேயானுய்! உடல்தந்தேன் என் நாட்டிற்கு!

நற்:- அன்பே! இனி என்னை ஒரு நாளும் பிரியேன் என்று உறுதி கூறுங்கள்! பிரிந்து உயிர் வாழ்தல் இயலாது அன்பே! இயலாது!! அன்புச் சரங்களால் துளைக்கப் பட்டு விட்ட உம் அழகு உடலைக் காண்கையில் இரத்தக் கண்ணீர் பெருக்குகின்றேன் அன்பே!

வில்:- உன் நினைவெனும் கூரிய அம்புகள்தான் எனைத் துன்பத்திலாழ்த்தி விட்டன கண்ணே! இந்த அம்புச் சரங்கள் என்னை என்ன செய்ய முடியும் மானே? என் தாய் நாட்டை எண்ணிவந்த என்னைக் கேவலம் இந்த அம்புகள் என்ன செய்துவிட இயலும்? காதலும், கடமையும் அல்லவா இவ் வலி போக்கிய மா மருந்துகள்!

[கரங்கள் நெகிழ்கின்றன. வில்லவன் வான வீதியில் எழுகின்ருன். நற்கருணை மட்டும் கடற்கரையில் நிற்கின்ருள். தானும் உடன் செல்ல முற்படுகின்ருள். இயலவில்லை]

நற்:- இன்பமே! என்னை விடுத்து மீண்டும் எங்கே செல்கின்றீர்கள்? நம் காதலை எண்ணி எண்ணி மடிய வேண்டியவள் தானு நான்? அன்பே என்னையும் அழைத்துச் செல்லுங்கள்.

[சற்று உயரத்தில் வில்லவன் தோற்றமளிக்கின்ருன்.]

வில்:- கண்ணே! தாயகம் என்னை அழைக்கின்றது! நாட்டிற்காக- நாட்டு மக்கள் நல் வாழ்விற்காக என்னை அழைக்கின்ருர்கள்! காதலையும்விடச்சிறந்ததென்று கூறி அழைக்கின்ருர்கள்! நானும் என்னையறியாமல் அங்கு இழுக்கப் படுகின்றேன். சென்றுவருகின்றேன்கண்ணே!

[மேலும் சற்று உயர்கின்ருன் வில்லவன்.]

நற்:- ஆருயிரே! என்னை மறந்தா செல்கின்றீர்கள்? நம் காதலை விடவா சிறந்ததைத் தேடிப் போகின்றீர்கள்? அடி வானத்திற்கப்பாலும் அப்படி ஒன்றும் கிடையாது அன்பே! வாருங்கள்! எனக்கு மீண்டும் அந்த இன்பவாழ்வு தாருங்கள்! வரமாட்டீர்களா? வாருங்கள் கண்ணளா?

வில்:- தமிழ் நாட்டார் மானத்தை வையம்போற்றவேண்டுமானல்- மனிதஇனம் என்றும் மதிக்க வேண்டுமானல் என் இன்னுயிரைத் தர வேண்டுமென்று கூவியழைக்கின்ருர்கள் தாயகத்தின் பெயரால்! தாய் நாட்டு மானமா? தன்னலமா? எது தேவை என்று எழுப்புகின்ருர்கள் கேள்வியை! நாட்டு மானம் பறி போகப் பார்த்துக் கொண்டிருப்பதாவெனப் பதறிக் கூவுகின்ருர்கள் என்னைநோக்கி! காதல் என்பது மனித இனத்திடம் அன்பு காட்டக் கற்றுத் தரும் ஆசான் என்பதைஅறியாதவளு நீஎன்று கேட்கின்ருர்கள். காதல் ஒரு சாதனமாயிற்றே! அதன் மூலம் உயர்ந்த குறிக்கோள்களை நீ பெறவில்லையா என்று கேட்கின்ருர்கள். உண்மை அவர்கள் உரையில் இருப்பதாக உணர்கின்றேன். நீயும் அதை உணர்ந்துகொள்! வருகின்றேன கண்ணே! வருகின்றேன்!!

[மேலும் உயர்கின்ருன்]

நற்:- அன்பே! காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம் என்பதைக் கூறிய தாங்களா இப்படிப் பேசுகின்றீர்கள்? நாட்டு மானத்தில் நாட்டமில்லாதவர்களா நந் தமிழ் நிலத்து நங்கையர்கள்? கண்ணளா! நானும் வருகின்றேன் அந் நற்பணி புரிய! மங்கையர்கட்கு மட்டும் மானம் கிடையாதா? வீரம் கிடையாதா? காதல் உயர்ந்ததுதான். நானும் வருகின்றேன். நிற்கமாட்டீர்களா? நில்லுங்கள்! நில்லுங்கள்!

வில்:- கண்ணே! சேர நன்னாட்டுச் சேயிழையர் குலத்திற்குச் சிறப்பினைச் சேர்க்கும் சீரிய முயற்சியிலீடுபடு என் செல்வமே! தலைவன் தானையொடு சென்று தாய் நாட்டிற்குத் தன்னுயிரை அளித்தான் என்ற செய்தி கேட்டுச் சிந்தை குளிர்வதற்குப் பதில், செத்துவிட்டாள் செய்தி கேட்டு என்ற இழி சொல்லை என் தாயகம் தாங்காது கண்ணே! அகத்தையும், புறத்தையும் அறிந்தது அரிவையர் கூட்டம் என்ற பெருமையைக் காப்பாயாக! தன்னையும்தன்சூழ் நிலையையும் மட்டும் கவனியாது உலகையே ஒன்ருக எண்ணும் உயர் நினைவை மனித குலத்திற்கு அளித்துள்ள மாபெருஞ் சக்தி காதல் என்பதை மாநிலம் அறியச்செய் கண்ணே!

நற்:- அன்பே! அறிகின்றேன் அனைத்தையும் அழைத்துச் செல்லுங்கள் என்னையும்!

[மேல்நோக்கித் தாவுகின்ருள்.]

வில்:- ஆருயிரே! என்னை நாட்டிற்கு அளித்துவிட்டேன்! அதில் பெறும் இன்பம் பெரும் இன்பம் என்பதை உணர்கின்றேன்! உனக்கெனத் துறை வேறு உளது துணைவியே! அதில் முழு வேகத்துடன் ஈடுபடு. நாட்டிற்காக உன் நல்லுயிரையும் அளிக்க முற்படு. மொழி காக்கும் நற்பணியில் ஈடுபடு! வடவர்கள் இங்கே வட்டமிட முற்பட்டுவிட்டனர். அந்த வாடைக்காற்றைத் தடுத்து நிறுத்தும் வடவேங்கடமாக மாறு! தாய்மொழி காக்கும் தலையாயபணிக்குத் தாய்க்குலம் தன்னை அர்ப்பணிக்கும் நேரம் இதுதான். அதில் தலைமை தாங்கும் பேறுபெறு! வருகின்றேன் கண்ணே! காதல் வாழ்க!

தமிழ்கூறு நல்லுலகம் வாழ்க!
என்றுமுள தண்டமிழ் வாழ்க!

[வில்லவன் மறைகின்றன். நற்கருணை "நானும் வருகின்றேன்!" என்று கூவியபடியே மயங்கிக் கீழே வீழ்கின்றுள்.]

ஐந்தாந் தோற்றம்

இடம்:- நற்கருணை இல்லம்

இருப்போர்:- மான்கண் மங்கை நற்கருணை.

[மான்கண் மங்கை, நற்கருணையைத் தன் மடிமீது எடுத்துவைத்து நீர் தெளிக்கின்றுள். நற்கருணை உடலிலேஅசைவு ஏற்படுகின்றது. "தமிழ் வாழ்க! தமிழ்காப்போம்!' என உதடுகள் அசைக்கின்றன.]

மா. க. மங்கை:- என்ன அம்மா? என்ன கூறுகின்றீர்கள்? நம் இன் தமிழ்மொழிபற்றி என்ன இப்பொழுது தங்களுக்கு நினைவு வந்துவிட்டது?

நற்கருணை:- மங்கை! என் அறிவு தெளிவு பெற்றுவிட்டதடி. நாட்டிற்குத் தன் நல்லுயிரை ஈந்து புகழ் பெற்றுர் என் தலைவர்! மொழிக்கு என் இன்னுயிரை அளிக்கும் எண்ணம் பெற்றேனடி தோழி! மொழி காக்கும் பணியே இனி என் முதற்பணி! என் தலைவன் இடத்தை நிரப்பத் தமிழன்னை ஒருத்திக்குத் தான் தகுதியுண்டு மங்கை! இனி என் காதலெல்லாம் தமிழ் மீதே! நீயும் அந்த நற்பணியில் என்னேடு பாடுபடு மங்கை! நம் தாய்மொழி காக்க தாய்க் குலத்தார் கடமையை நிறைவேற்றுவோம்! வா மங்கை, வா!

மா. க. மங்கை:- மிக்க மகிழ்ச்சி அம்மா! என் உள்ளமும் இப்பொழுதுதான் அமைதியுற்றது. தலைவன் தாயகத்து மானம் காத்து மாண்டான்--புகழெய்திஞன் என்ற பின்னரும், தலைவி தாய்மொழி காக்கப் புறப்பட்டாள் என்ற பெருமை தரும் செய்தி எனக்குப் பேருவகை தருகின்றது அம்மா! உங்கள் காதல் வாழ்க! வெல்க!! தமிழ் வாழ்க!!!

★

அவமானச் சின்னம்

—[ம. ப. பொற்செல்வன்]—

—பழநி—

தாய்—உன் தமிழ்த்தாய்—வந்தாரை வாழ வைக்கும் உன் சொந்தத்தாய்—வளம் மிக்க வாவிகளையும் வைரம் பாய்ந்த நெஞ்சினரையும் வளர்த்தெடுத்த பண்டைத் தமிழ்த் தாய்— 'உலகிலேயே முன்தோன்றிய மொழி—இலக்கணமும் இலக்கியமும் நிரம்பியது என் அன்னை மொழி' என்று இறும்பூதெய்துகின்றுயே, அம்மொழியைச் சங்கமெனும் தொட்டிலில் தாலாட்டிச் சீராட்டி வளர்த்தெடுத்த உன் தங்கத் திருநாடு — அந்தத் தேனூரும் செந்தமிழால் புகழ் கொழிக்கும் திராவிடநாடு பெற்றெடுத்த நான் கண்ணீர் சிந்துகிறேன்; நீயோ இங்கு கவலையற்றுத் துஞ்சுகிருய் 'எதை வேண்டுமேனும் கொடுப்பேன், என் தாய்த்திரு நாட்டின் மானங்காக்க உயிரைவேண்டினும் பணயம் வைப்பேன்' என்று சூளுரைத்த மறத்தமிழன் மரபில் வந்தவன் தான் நீ; ஆனால் கோழையாய்க் குழைந்து கிடக்கின்ருய். 'கங்கையும் கடாரமும் கொண்டவர்கள் பரம்பரை என்னுடையது; கடல் கடந்தும் புகழ்பெற்றேர் என் முன்னேர்' என்றெல்லாம் மார்தட்டிப் பேசுவாய்; அந்நிலை மாறி ஏன் இன்னிலையானேம் என்று சிந்தித்ததுண்டா?

பொறுமையை இழந்துவிட்டது என் மனம். சிறிது கோபமாகவே 'இதையெல்லாம் கூறும் நீ யார்?' என்றேன்.

"தெரியாது? இந்தத்தமிழ் மண்ணில் உதித்து உன் போன்றேரை ஈன்றெடுத்தற்காக வெட்கித் தலை குனிந்து வேதனை நெஞ்சைப்பிளக்க வெளியில் வரவும் அஞ்சிக்கிடக்கும் ஒரு பெண்"

"ஏனம்மா இந்நிலை?"

"எல்லாம் உங்களால்தான்' ஏன்னென்று என்னைக் கேட்கின்ற நீ, என் வரலாற்றை — இல்லை கட்டுக் கதையை நீ எத்தனையோ முறை படித்துமிருப்பாய்—கேட்டுமிருப்பாய். ஏன் இப்படிஎழுதிஞர்கள் என்று கேட்டதில்லை"

"வேதனைப் படுகுழியில் தள்ளாதீர்கள். விஷயத்தைச் சொல்லுங்கள் அம்மா!",

"சொல்லுகிறேன் கேள்; என் பெயர் மாயை."

மாயை என்ற பெயரைக் கேட்டதும் என் தலை சுழன்றது." ஆ! மாயையா? எந்தமாயை!'கண்டதும் மாயை — காணுததும் மாயை; அறிந்ததும் மாயை-அறியாததும் மாயை; உன் வாழ்வே மாயை—இந்த உலகமே மாயை, என்று முற்றும் துறந்த முனிவர்கள் கூறுகிருர்களே அந்த மாயையா" என்று சிறிது வியப்புடன் கேட்டேன்.

"அதெல்லாம் பொய்யடா மகனே! உன்னை இருட்குகையில் பூட்டிவைத்திருப்பதற்கு எத்தர்கள் செய்த சூழ்ச்சி"

"சூழ்ச்சி! எனக்கு ஒன்றுமே புரியவில்லையே"

"ஆம்! என் மகன்தான் என் வழிவழி வந்த இனத்தவன் தான் நீ!"

"உன் வழிவந்தவனு?"

"திகைக்காதே! அவுணர் என்றும் அரக்கர் என்றும், தானவர் என்றும், இராக்கதர் என்றும் எழுதிவைத்திருக்கிருர்களே புராணீகர்கள்; அவர்கள் யார்?"

"என் முன்னேர்கள்தான்"

"அவுணர் குலத்தை வாழ வைக்க முதன் முதல் சூழ் எடுத்துக்கொண்டானே சூரபதுமன்; அவன் தாய்"

"அம்மா! நீங்களா?"

"ஆம்! நானேதான். என்வாழ்க்கையைத்தான் திரித்து எழுதிவிட்டார்கள் இந்தப் புரட்டர்கள்"

"என்னம்மா மறுபடியும் புதிர் போடுகிறீர்கள்" என்றேன்.

"புதிர் அல்லடா மகனே! என் இதயக் குமுறல், ஒரு தாய் ஒரு இரவில்......வெட்கத்தை விட்டு மகன் என்றும் பாராது சொல்கிறேன். அப்பொழுதாவது உனக்குத் தன்மான உணர்ச்சி வருமென்ற எண்ணத்தில்.

காசிபன் என்ற முனிவருடன் முதலாம் ஜாமத்தில் கூடினேனும்' அங்கு சூரபதுமனும், நாங்கள் மனங் கனிந்தணைந்தபோதுண்டாகிய வியர்வையினுல் முப்பதினுயிரம் வெள்ளம் தானவரும் உதித்தனராம். அவர்களை அங்கேயே விட்டுவிட்டு மற்றொரு மண்டபத்தில் நான் பெண் சிங்க வடிவு கொள்ள அவரும் மடங்கலுருப் பெற்றுப் புணர அதனுல் ஆயிரந் தலைகளையும் இரண்டாயிரம் கைகளையுமுடைய சிங்கமுகாசுரனும், அவ்விடத்தில் எங்களிடம் பெருகிய வியர்வையினுல் நாற்பதினுயிரம் வெள்ளம் சிங்கமுகங் கொண்ட இராக்கதரும் பிறந்தனராம். அவர்களை அப்படியேவிட்டு மற்ருேரிடத்தில் நான் பிடியுருப் பெற்று நிற்க காசிபரும் மதயானையுருக்கொண்டு புல்கவும் யானைமுகமுடைய தாருகாசுரனும், வியர்வையால் நாற்பதினுயிரம் வெள்ளம் யானைமுக அவுணர்களும் தோன்ற, அவர்களை அங்கேயே நிறுத்தி; மற்ருேரிடத்தில் நான் செம்றியாட்டின் பேடாயுருக் கொள்ள முனிவரும் கெச்சை வடிவு கொண்டு கூட, அசமுகி என்ற பெண்ணையும், வியர்வையால் முப்பதினுயிரம் வெள்ளம் அசுரர்களையும் தோற்றி அவர்களை அங்கேயே விட்டு, யானை, புலி, குதிரை, கான் முதலிய மிருகங்களின் உருக்கொண்டு புணர பற்பல முகங்களையுடைய அறுபதினுயிரம் வெள்ளம் இராக்கதர்கள் பிறந்தனர். இவ்வாறு நான் சூரபதுமன் முதலான நான்கு பிள்ளைகளையும், இரண்டு இலட்சம் வெள்ளம் சேனையையும் ஒரே இரவில் புணர்ந்து அன்றே பெற்றேன் என்று எழுதி வைத்திருககிருர்கள், இந்தப் பொய்ச் சரடு திரிப்பதில் வல்ல புராணிகர்கள். அதைத்தான் நீங்கள்-தமிழர்கள் பல்லாண்டு காலமாய்ப் படிக்கிறீர்கள்-கேட்கிறீர்கள். 'ஒரு தாய் பத்து மாதம் சுமந்தால்தானே ஒரு மகவைப் பெறமுடியும். இவள் எப்படி ஒருவனைக் கூடின பொழுதே குழந்தையைப் பெற்று இருக்கமுடியும்? அதுவும் ஆயிரக்கணக்கில்' என்று ஒரு நாளாவது சிந்தித்ததுண்டா? நம் தாயின் மேல் இப்படி ஒரு மாபெரும் பழியை-கேட்கவும் சகிக்காத செய்தியை எழுதி வைத்திருக்கிருனே என்று எண்ணியதுண்டா? இவற்றையெல்லாம் எண்ணியிருந்தால் இன்று ஏன் மடமையில் மயங்கிக்கிடக்கிறீர்கள்? காதலையும் வீரத்தையும் கவினுறச் சித்தரித்த நம்மூதாதையர் எங்கே? இந்த மாசு படிந்த தூசுகளைப் பயின்று மதிகெட்டுழலும் நீங்கள் எங்கே?

"சொல் எனும் வேல்கொண்டு குத்தாதீர்கள். மாசு துடைத்துத் தாய்த்திருநாட்டு மானங்காத்திடுவேன், மன்னியுங்கள் அம்மா! இது உறுதி" கால்களைப்பற்றிக் கொண்டு விழித்தேன். ஒருவருமில்லை. கட்டிலிலிருந்து கீழே விழுந்துகிடந்தேன். எழுந்து விளக்கைப்போட்ட எனக்குப் படுக்கையில் கிடந்த கந்தபுராணம் கண்ணில்பட்டது. திரும்பினேன். மேஜைமேல் இருந்த அகநானூறும் புறநானூறும் கண்ணில்பட்டு உள்ளத்தை ஊடுருவிச்சென்றன.

இது என்ன 'பிரேமையா? கனவா?' என்று சிந்தித்த எனக்கு ஒன்றும் புலனுகவில்லை. விளக்கை அணைத்து மறுபடியும் படுத்தேன். 'புறத்தையும் அகத்தையும் வளர்த்தெடுத்த தமிழகத்திற்கு இந்தப் புராணங்கள் ஒரு அவமானச் சின்னம்' என்று என் வாய் மட்டும் முணுமுணுத்துக்கொண்டேயிருந்தது.

4-ம் பக்கத் தொடர்ச்சி

நாடு அறிந்ததே. தேர்தலில் நிற்காமலேயிருந்திருந்தால், வளர்ந்துவரும் நம் கொள்கைகள் சில பகுதிகளுக்காவது செல்லும் வாய்ப்பு கிட்டியிராதே! அந்தளவுக்கு, இலாபம்தானே, ஏழையியக்கமான நமக்கு!!

✱

உருகுவோர்போலக் காட்டிக்கொள்வோரின், உள்ளம் எப்படிப்பட்டதென்பதை அறிவோம், நாம். விமர்சனங்களை வழங்கும் அவர்கள், நாம் எப்போது அழிவோம் என்று விழி மூடாமல் காத்திருப்பவர்களாகும்! எனவே, அவர்தம் விமர்சனமும் விளக்கமும் நமக்குக் காட்டு நிலா — கதைக்குதவாது. வெற்றி பெற்றிருந்தால் மட்டும், பூமாலை கொண்டு வந்துபோட்டிருக்கவா போகிருர்கள்? ஒரு நாளுமில்லை! எனவே, அவர்களது, இந்த நேர அறிவுரைகள், நமக்குத் தேவையில்லை. எனினும், கழகத் தோழர்கள்,

தன் வலிமை
மாற்ருன் வலிமை

இரண்டினையும், நன்ருக எடை போட்டு, ஆக்க வேலைகளில் ஈடுபடவேண்டும். நமது வலிமை, மாற்ருர் வலிமை இரண்டையும் எண்ணிடும்போது, நமது எண்ணங்கள் செல்லவேண்டிய இல்லங்கள், நிரம்ப வேண்டிய உள்ளங்கள்,

பல, உள

என்பது விளங்கும். அங்கெல்லாம் நிரம்பிவிடின் நமது விடுதலை இயக்கம் வெல்லும்! வெல்லும்!!

அந்த வெற்றியை மனதிற்கொண்டு, கழகத் தோழர்கள், காலத்தையும் நேரத்தையும் பயன்படுத்திட வேண்டும். நம்வலி, நமக்குப் புரிகிறது. மாற்ருர் வலிவும் அறிவோம் நாம்!! வாய்க்கும் ஒவ்வொரு நேர மூலமும், எங்கெங்கு கழகம் முளைத்த[illegible] எத்தனை பேரிடம் கழக முழக்கத்தைச் செய்ய முடிந்தது என்பதுதான், நமக்கு இலாபம். அந்த இலாபம்தான், நமக்கு, இன்பத் திராவிடத்தை[illegible] கொண்டுவந்து தரும்! எந்நாளும் வாடாத கொள்கை மலர்களைத் தரும்!!

★

வீரம் காட்டிய மறவர்

[எம். எஸ். ஏ. மஜீது]

சீரும் சிறப்புமெய்திச் செம்மையுடனாண்ட பாண்டிய மன்னர்களில் தலைசிறந்தவர் முதலாவது மாறவர்மன் குலசேகரன். இவரின் காலம் கி. பி. 13-வது நூற்றாண்டின் பிற்பகுதி. அக்காலப் பாண்டிய நாட்டைச் சரித்திரக்காரர்கள் 'மாபார்' என்பார்கள். அராபிக் கடலோரத்திலுள்ள கொல்லம் முதற்கொண்டு, கருமணல் கரையோரத்தையடுத்த நெல்லூர் வரையும் இந்நாடு பரந்து நின்றது.

பாண்டிய மன்னனின் பிரதான தலைநகர் மதுரை. தென்னாற்காடு மாவட்டத்தைச் சார்ந்த வீரதாவலப்பட்டணம் பாண்டிய நாட்டின் இரண்டாவது தலைநகர். வீரதாவலப் பட்டணம் என்ற இது மற்காணம் என்று தற்போது அழைக்கப்படுகிறது.

மாறவர்மன் குலசேகரனின் இராணுவம் பிரசித்திபெற்றது. இராணுவத்தின் முக்கிய அங்கம் யானைப்படை. அதில் 1000 யானைகள் இருந்தன எனச் சரித்திரக்காரர்கள் குறிப்பிடுகிறார்கள். திரண்ட காலாட்படையுடன் புகழ்பெற்ற குதிரைப்படையுமுண்டு. குதிரைப் படையின் பெரும்பாகமானோர் முஸ்லிம்களே.

தமிழகத்துடன் அராபியர்கள் பல நூற்றாண்டுகளாகத் தொடர்பு கொண்டிருந்தார்கள். அத்தொடர்பு கி. பி. 6-வது நூற்றாண்டு முதற்கொண்டே இருந்ததென்று சொன்னால் மிகையாகாது. கடல் வழியாக ஏற்பட்ட வர்த்தகமே இத்தொடர்புக்குக் காரணம். வர்த்தகம் செய்யப்பட்ட பொருள்களில் அரபு நாட்டுக் குதிரைகள் முக்கியம் வாய்ந்தவையாகும். தமிழகத்தைச் சார்ந்த மன்னர்கள் இக்குதிரைகளை அதிகமாக வாங்கினார்கள். அவற்றைச் சரிவர மேற்பார்வையிட பல அராபியர்களை வேலைக்கும் அமர்த்திக் கொண்டார்கள். இதனால் அராபியர்கள் தமிழகத்தில் தங்க வாய்ப்பு ஏற்பட்டது. 7-வது நூற்றாண்டில் அராபியமக்கள் யாவரும் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவினார்களென்ற செய்தியைத் தமிழகத்தைத் தாயகமாகக் கொண்ட அராபியர்கள் கேட்டதும், அவர்களும் முஸ்லிமானார்கள். பாண்டிய மன்னர்களுக்குக் குதிரைகள் மீது அதிகப் பிரியம். இதுவே அவர்கள் நாட்டில் குதிரைப்படை வளர்ந்தோங்குவதற்கும் அடிப்படையில் முஸ்லிம்கள் அதிகமாக சேர்ந்து இருப்பதற்கும் காரணமாகும். பொதுவாகப் பாண்டிய நாட்டிலிருந்த முஸ்லிம்கள் அந்நாட்டின் மீது ஆழ்ந்த அன்பையும் ஆர்வத்தையும் காட்டி வந்தார்கள்.

*

நிற்க மாறவர்மன் குலசேகரன் தனது நாட்டின் வட எல்லையடுத்த வாரங்கல் அரசனை வென்றதுமல்லாமல் அவனைக் கிருஷ்ணா நதிக்கப்பால் விரட்டியுமோட்டினார். மேலுமவர் கொங்கு நாட்டு ஹொசலர்களைத் தாக்கி அவர்களின் நாட்டுத் தலைநகராகிய துவாரசமுத்திரத்திற்கு முற்றுகையுமிட்டார். குலசேகரனின் ஆட்சி நிலபாகத்தை மாத்திரம் தழுவி நிற்கவில்லை. அவரிடமிருந்த கடற்படையின் பலத்தால் இலங்கையிலும் அதையடுத்த பல தீவுகளிலும் ஆதிக்கம் செலுத்தினார். குலசேகரனின் சக்தியே பலகாலம் தில்லி சுல்தானின் படைகள் பாண்டிய நாட்டுப் பக்கம் வராமலிருந்ததற்குக் காரணம்.

ஆனால் இந்தச் சூழ்நிலை அதிக காலம் தொடர்ந்து நிற்கவில்லை. குலசேகரனுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள். சுந்தர பாண்டியன், வீரபாண்டியன் எனப்படுவோர். சுந்தரபாண்டியன் மன்னன் மணந்த மனைவியின் மகன். வீரபாண்டியன் அவரின் வைப்பாட்டியின் மகன். ஆனால் இருவரில் வீரபாண்டியன் அதிக புத்திசாலியாகவும் திறமையாகவும் இருந்ததால் அவனையே தனது பட்டத்திற்குரியவனென குலசேகரன் நியமனம் செய்தார். தகப்பனின் முடிவு சுந்தரபாண்டியனின் கோபத்தீயை மூட்டியது. அதனால் அவன் தகப்பனைக் கொலைசெய்து தானே பாண்டிய மன்னனென முடி சூட்டிக்கொண்டான். இது நிகழ்ந்தது கி. பி. 1309ம் ஆண்டு. மதுரையிலிருந்த சேனையை தன் வயப்படுத்தி இருந்த எல்லா பொக்கிஷங்களையும் திரட்டிக் கொண்டு 'மன்கூடல்' எனும் இடத்தை தனதுகேந்திர ஸ்தானமாக்கிக்கொண்டான். (மன்கூடல் நாமக்கலை எனும் நகரைக் குறிக்கிறது என்பது சரித்திராசிரியர் எலியட் என்பவரின் கருத்து. மதுரையை அடுத்திருக்கும் 'மங்களம்' எனும் பெயர் கொண்ட இரண்டொரு பட்டணங்களில் ஒன்றாக இருக்கலாமென்பது எஸ். கே. ஐயங்கார் அவர்களின் கருத்து) தகப்பனின் பழியைத் தீர்க்க வீரபாண்டியன் தானொரு படையைத் திரட்டி சுந்தரபாண்டியனைத் தாக்கினான். ஏற்பட்ட போரில் யாருக்கும் வெற்றி கிடைக்கவில்லை. ஆனால் வீரபாண்டியன் 'காரம் அத்தியை' ஆண்டுகொண்டிருந்த மன்னார் பெருமாள் என்பவரின் உதவியால் சுந்தரபாண்டியனை கடைசியாக வென்றான்.

பாண்டிய சகோதரர்களின் மத்தியில் ஏற்பட்ட கலவரத்தால் பாண்டிய நாட்டின் ஆட்சி மிகவும் சீர்குலைந்துவிட்டது. இந்நிலைமையில்தான் சுல்தான் அலாவுத்தீன் கில்ஜியின் மாபெரும் தளபதி மாலிக் காபூரின் படைகள் பாண்டிய நாட்டில் நுழைந்தன.

*

மாலிக் காபூர் இந்திய சரித்திரத்தில் பெயர்பெற்ற ஒரு வீரர். அவர் நடத்திச்சென்ற சேனையும் மிகவும் கீர்த்திவாய்ந்தது. அவர் சென்ற இடங்களிலெல்லாம் வெற்றிக் கொடியை நாட்டினாரென்றால் அது அவரின் படைபலமே காரணமென்று சொல்வதற்கிடமில்லை. அவரோடிருந்த உதவி தளபதிகளும் மிகவும் புத்திசாலிகளாகவேயிருந்தார்கள். அவர்களில் பஹராம்கர்ரா, கத்லா நெஹாங், மஹ்மூத் ஸர்திஹா, அபாஜிமுகல் முதலியோர் முக்கியமானவர்கள். இவர்களின் வேலை மாலிக்காபூர் சேனை புறப்படுவதற்கு முன்பாகவே படையெடுக்கும் நாடுகளுக்கு உளவாளிகளாகச் சென்று அந்நாடுகளின் அரசியலில் நிலை, சேனை பலம் அவற்றின் அமைப்பு இதுபோன்ற பூர்வாங்க விஷயங்களை சந்தேகமற விசாரித்துத் தங்கள் தளபதிக்கனுப்புவார்கள். தளபதி மாலிக் காபூர் தன் படையெடுப்புகளுக்கு இந்த விஷயங்களை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்வார்.

மாலிக்காபூர் சேனைகள் பாண்டிய நாட்டினுள் நுழைந்துவிட்டன. நாட்டின் தலைநகர் மதுரையையும் சமீபித்துவிட்டனர். மாலிக்காபூர் உடனே மதுரையைத் தாக்கவில்லை. மதுரை சமீபத்தில் பாளயமடித்து மதுரையின் நிலைமையை அறிந்துவர ஆட்களை அனுப்பிவைத்தார்.

மதுரையின் நிலைமை மோசமாகவேயிருந்தது. மாலிக்காபூரின் தொடர்ந்த வெற்றி வீரபாண்டியனுக்குப் பயத்தை உண்டுபண்ணியது. அவருடன் தானும் போராடுவதில் பிரயோஜனமில்லை. அவ்வாறு போரிட்டால் தன்னால் தோல்விதானடையமுடியும், மேலும், தனது நாட்டு மக்கள் மாபெரும் ஆபத்துக்குள்ளாவார்கள், அழகிய மதுரைமா நகரம் சூறையாடப்படும், தீக்கிரையாகும் ஆகவே நாட்டைவிட்டு ஓடி சில காலம் தலைமறைந்திருந்தால்தான் ஏற்பட்டிருக்கும் சூழ்நிலைக்குத் தக்க பரிகாரம் என வீரபாண்டியன் நினைத்தான். கடல் மார்க்கமாக இலங்கை போகலாமென நினைத்தால் கடல் கொந்தளிப்பாக இருந்தது. ஆகவே தன்னாட்டின் தென்பகுதியில் எங்காவது சென்று மறைந்திருப்பதென முடிவுசெய்தான். இம்முடிவை யாருக்கும் அவன் அறிவிக்கவில்லை. அவன் இராணுவ வீரர்களையழைத்து நாட்டின் நிலைமையை எவ்வாறு சமாளிப்பதென யோசனை செய்தான். மன்னனின் குதிரைப்படையைச் சார்ந்த முஸ்லிம் வீரர்கள் வீரபாண்டியனிடம் தெரிவித்தார்கள். 'மாலிக்காபூர் படையை தாக்குவதே பாண்டிய நாட்டுப் பெருமைக்கு பொருத்தமாகும். ஆகவே, போருக்கு உத்தரவு கொடுங்கள். விரோதிகள் மதுரைமா நகரில் கால் வைக்காது நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்.' மன்னர் இவ்வீர வார்த்தைகளைக் கேட்டு விரோதியைதாக்க உத்திரவிட்டார்.

மதுரையின் நிலவரத்தைத் தெரிந்துவந்த மாலிக்காபூர் தளபதியின் உத்தியோகஸ்தர்கள் அவரிடம் தெரிவித்தார்கள், 'வீரபாண்டியனின் போக்கு சரிவர விளங்கவில்லை. அவன் எதையோ எதிர்பார்த்துக்கொண்டிருப்பது போல், அறியவந்தோம். படையின் முழுபலமும் சரியாக விளங்கவில்லை. ஆனால் ஒரு முக்கிய விஷயத்தை நாங்கள் தெரிந்துகொண்டோம். அதாவது பாண்டிய மன்னனின் சேனையில் முக்கிய அங்கம் வாய்ந்து நிற்பது அவனின் குதிரைப்படை, அக் குதிரைப்படையில் முக்கியமாக விருப்பது முஸ்லிம்கள்' இதைக்கேட்ட மாலிக்காபூர் மிகவும் ஆச்சரியப்பட்டார். உடனே ஒரு தூதுவனை அனுப்பி வைத்தார்.

'தூதுவர் பாண்டிய மன்னனின் குதிரைப் படைத் தளபதியைச் சந்தித்து,

'சகோதரரே! உலகத்தை யாளும் சுல்தான் அலாவுதீனின் மாவீரர் மாலிக்காபூர் 'ஹிந்த்', முழுமையும் வெற்றி முரசு கொட்டியவர். அவர் தற்சமயம் மதுரையைத் தாக்கக் காத்து நிற்கின்றார். அவர் தாக்குதலை யாராலும் தவிர்க்க முடியாது. அது நிச்சயம். முஸ்லிம்களாகிய நீங்கள் அவரின் படைக்கு இரையாகாமல் இருக்கவேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் நீங்களிந்த போரில் பங்கு கொள்ள வேண்டாமெனக் கேட்டுக் கொள்கின்றார். ஆகவே நீங்கள் இங்கிருந்து விலகிச் செல்லுங்கள்' என தெரிவித்தார்.

இதைக் கேட்ட பாண்டிய முஸ்லிம் தளபதிக்கு கோபம் பொங்கியெழுந்தது.

'ஓ தூதுவரே! நாங்கள் முஸ்லிமகளாக இருப்பது உண்மை ஆனால் பாண்டிய நாட்டின் பிரஜைகள். இந்நாட்டின் வெற்றி எங்களின் வெற்றி. நாட்டின் தோல்வி எங்களின் தோல்வி. இஸ்லாம் எங்களது நாட்டிற்குத் துரோகம் செய்யக் கற்றுக்கொடுக்கவில்லை. இதுவே இஸ்லாம் இயம்பும் அரசியல் கருத்து. இன்று நாங்கள் இப்படையை விட்டு விலகுவோமானால் எங்கள் பரிசுத்த மார்க்கத்திற்கு ஹானி விளைவித்தவர்களாவோம். இதனால் ஏற்படும் பழி எங்கள் மீதும் எங்கள் சந்ததிகள் மீதும் ஊழூழி காலம் நிலைத்திருக்கும். தளபதி மாலிக்காபூர் அவர்களின் வீரத்தை நாங்கள் போற்றுகிறோம். ஆனால் நாங்கள் அவரின் வீரத்தைக்கண்டு அஞ்சவில்லை. அவர் எங்கள் தாயகத்தின் தலைநகரைத் தாக்குவாரேயானால் அவருடன் போரிட நாங்கள் தயாராயிருக்கிறோம்' என பாண்டிய முஸ்லிம் தளபதி தெரிவித்தார்.

தூதுவர் கொண்டுவந்த செய்தியைப் கேட்ட மாலிக்காபூர் ஒரு வகையில் பூரிப்பும் ஒருவகையில் கோபமும் கொண்டார். பாண்டிய நாட்டு முஸ்லிம்களின் உயரிய பண்பாட்டைக் கொண்டு அவர் பெருமிதம் கொண்டாலும் தனது சேனையை மதுரைமாநகரைத் தாக்காது பின்வாங்கச் செய்வது அவரின் பெருமைக்குக் குந்தகம் தான் விளையும் என நினைத்தார். ஆகவே அவர் மதுரையைத் தாக்கத் தனது சேனைக்கு உத்தரவிட்டார். ஒரு பகல் முழுமையும் கடும் போர். பாண்டியனின் சேனை பின்வாங்கியதாகத் தெரியவில்லை. இதற்கிடையில் சூரியனும் அஸ்தமித்துவிட்டான். யுத்தமும் ஓய்ந்தது. இருதர படைகளும் அவரவர் பாளையங்களுக்கு திரும்பிச் சென்றன.

இரவில் ஏற்பட்ட போர் நிறுத்தத்தைப் பயன்படுத்தி வீரபாண்டியன் தனது பொக்கிஷங்களையும், ஆட்கள், குதிரைகள் இவற்றையும் திரட்டிக்கொண்டு மர்மமாக மதுரையைவிட்டு வெளிக்கிளம்பி விட்டான். மறுநாள் காலையில் தான் இச்செய்தி வெளிவந்தது. இச்செய்தி பாண்டிய வீரர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை உண்டாக்கியது. மன்னனின் இச்செய்கை குறிப்பாக முஸ்லிம் குதிரைப்படையினரை மிகவும் சோர்வடையச் செய்தது. மறுநாள் நடந்த போரில் மாலிக்காபூர் வெற்றியடைந்தாரென்றால் அதற்குக் காரணம் வீரபாண்டியன் செயலேயாகும்.

சுல்தான் அலாவுத்தீன் கில்ஜி இந்தியாவை ஆண்ட காலத்தில் தென்னிந்தியாவில் பாண்டிய மன்னனின் முஸ்லிம் குதிரை வீரர்களின் சம்பந்தமாக நடந்த மேற்குறிப்பிட்ட ஒரு சிறிய சரித்திர நிகழ்ச்சி தமிழகத்தில் வாழும் முஸ்லிமகள் மத்தியில் ஒரு பெருமைக் குரிய நிகழ்ச்சியாகவே இன்றுமிருந்துவருகிறது.

ஆங்கிலம் (இங்கிலீஷ்) திருத்தமாகக் கற்பதற்கென
சென்னையிலுள்ள மாபெருங் கல்வி அரங்கம்

The School of English Learning

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.



தமிழ்
எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்
ஒரே
வருடத்தில்
இங்கிலீஷ் இலக்கண ரீதியாக

சென்னையில் உள்ளவர்கள் நேர்முக வகுப்புகளில் சேர்ந்தும்
வெளியூர்களில் உள்ளவர்கள் தபால் மூலமும்
ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி சிறந்த முறையில் கற்கலாம்.

புதிய வகுப்புகள்
ஆரம்பம்:
12–8–1958
வகுப்பில் சேர மனு செய்ய
கடைசி தேதி:
11–8–1958

இங்கிலீஷில் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்குவரத்து செய்யவும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்—ஒப்பற்ற முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும். சென்னையிலுள்ளவர் காலையிலோ மாலையிலோ வசதிப்படி ஓய்வு நேரத்தில் வகுப்பிற்கு நாள்தோறும் ஒரு மணி நேரம் வந்து கற்றால் போதுமானது.

முழு விவரங்களைச் சென்னையிலுள்ளவர்கள் நேரில் வந்தும் வெளியூர்களில் உள்ளவர்கள் தபால் மூலம் எழுதியும் பெறலாம்.

முக்கிய அறிவிப்பு:—
16-வயதிற்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்புகளில் அனுமதிக்கப்படுவர். நேர்முக வகுப்புகளில் பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். சென்னையிலுள்ளவர்கள் வகுப்பிற்கு நேரில் வந்துதான் கற்கவேண்டும்; தபால்மூலம் கற்கும் சலுகை வெளியூர்களில் உள்ளவர்களுக்கும் பெண்களுக்கும் மட்டுந்தான். இங்கிலீஷ் வாசகங்களை ஓரளவு கூட்டிப் படிக்கத் தெரிந்தவர்கள் தபால்மூலம் கற்க இயலும். சென்னையிலுள்ள ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களுக்காகவும் இங்கிலீஷ் ஒன்றுமே தெரியாதவர்களுக்காகவும் தனித்தனியாக நேர்முக வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

ஓய்வு நேரத்தை வீணாக்காமல் நல்ல முறையில், பயன்படுத்தி உலக மொழியாக விளங்குகிற இங்கிலீஷைக் கற்க முன்வருக.

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிட்டப்பட்டு வெளியிடப்படுகிறது.

திராவிடநாடு
833

17—8—58 | வார வெளியீடு | விலை 16 காசு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - SEP 1958
MADRAS

821
3-58

"தமிழ் வேந்தர்"

[செவ்வேள்]

நீள்வரையாம் இமயத்து நிமிர்ந்தபுலிக் கொடியேத்தி
தோள்வலிமை புலிகாணத் திகழுமிசைக் கரிகாலன்,

இகழுமிரு வடவர்தனை இடுப்பொடியக் கல்லேற்றி
தகவுடைய தேர்வேந்தன் தென்னகத்துச் சேரனும்,

வடவர்படை சினந்தெதிர்த்து வாகையணி நெடுஞ்செழியன்,
கடல்கடந்து கலமூர்ந்து கலைவளர்த்த பெருஞ்சோழன்,

பிழைகண்ட அக்கணத்தே பேருயிரை ஈந்தவனும்,
மழையன்ன கொடைதந்த மன்னவனும் குமணவள்ளல்,

வல்லவனும் விற்திறலின் வில்லாளன் ஓரியனும்,
நல்லதமிழ்க் கவிபாடும் நாவலனும் பாண்டியனும்,

பெற்றதொரு நற்கனியைப் பெரும்புலவர்க் களித்தவனும்,
உற்றதுயர் கேட்டவுடன் உளமகிழ உதவினதும்,

எங்கள் தமிழ்வேந்தர்; ஈடற்ற நல்லரசு!
எங்கும் கேட்டிலைகாண்! ஏற்றமிகு பொற்காலம்!

மக்கள் குறைகாணின் மன்னவனே துயர்கொள்வான்!
தக்கபல நன்றாற்றத் தயங்காரே தமிழ்வேந்தர்!

கடல்கடந்த தாயகத்தார் கண்டநிலை கேட்டிலோ,
இடர்பட்டுச் சாகின்றார், ஏனென்றார் அரசினரே!

பண்டைத் தமிழரசர் பாராண்ட நெறிமுற்றும்
கண்டதொரு கனவாகி, கவலைதான் எஞ்சினவோ?

கேட்டீரா சேதி!

ஆனைமலையில் தேயிலை ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நிறுவ, தென்னிந்திய தோட்ட முதலாளிகள் சங்கம் உத்தேசித்துள்ளது. இப்பகுதியில் பயிர் செய்யப்படும் தேயிலையின் தரத்தை உயர்த்த இந்நிலையம் முயலும். இதற்காக 150-ஏகர் நிலம் சர்க்காரிடமிருந்து வாங்க முயற்சிகள் நடக்கின்றன. சென்னை மாநிலத்தில் உற்பத்தியாகும் தேயிலையில் 50-சதவிகிதம் ஆனைமலையில்தான் உற்பத்தியாகிறது.

*

நாள் ஒன்றுக்கு சுமார் 60-லட்சம்பேர், இந்திய உபகண்டத்து இரயில்வேக்களில் பிரயாணம் செய்கிறார்களாம். 60-இலட்சம் என்றால் கிட்டத்தட்ட பம்பாய், டில்லி இரண்டின் மக்கள் தொகைக்குச் சமம். ஒரு ஆண்டில் இரயில்வே ஊழியர்கள் 66-இலட்சம்பேர் பிரயாணம் செய்கிறார்களாம்.

*

வடக்கே கட்டப்படும் ஹீராகுட் அணைத் திட்டத்தின் கீழ் 2,04,964 - ஏகரா நிலத்துக்குப் பாசன வசதி கிடைத்திருக்கிறதாம். 1958 மே மாதத்தில் மொத்தம் 1,52,13,810 'யூனிட்டுகள் மின்சாரம் கிடைத்ததாம்.

*

ஆயுர்வேத வைத்தியத் தொழில் முறை, அதற்கு அங்கீகாரம் அளிப்பதுபற்றி ஆராய டில்லி, ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறது. இமாசலப் பிரதேச ரண சிகிச்சை நிபுணர் டாக்டர் கே. என். உடுபா தலைமையில், திருவனந்தபுரம் சர்க்கார் ஆயுர்வேதக் கல்லூரி ஆராய்ச்சிப் பேராசிரியர் டாக்டர் காலடி பரமேசுவரன் கமிட்டி உறுப்பினர். யூனியன் சுகாதார மந்திராலய உதவிக் காரியதரிசி நரசிம்மன் உறுப்பினர் மட்டுமின்றி கமிட்டியின் செயலாளருமாகப் பணிபுரிவார். மூன்று திங்களில் இக்குழு, அறிக்கை சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

*

மூலப்பொருள் பஞ்சத்தினால் கைத்தறித் தொழிலுக்குப் பெரும்பாதகம் ஏற்பட்டு, நெசவாளர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்குமென, கைத்தறித் தொழிலில் சம்பந்தப்பட்ட 6-பிரமுகர்கள் அறிக்கை விடுத்துள்ளனர். உபயோகிப்போருக்கான இறக்குமதி லைசென்சின் மூலம் செயற்கைப்பட்டு, சாய வகைகள், ரசாயன வகைகள், முதலியவற்றை மில்கள் போதிய அளவு இறக்குமதி செய்துகொள்ள முடிகிறது. ஆனால் கைத்தறித் தொழில் இப்பொருள்களை பகிரங்க மார்க்கெட்டிலேயே வாங்க நேருகிறது. பகிரங்க மார்க்கெட்டிலேயோ, விலை தினம் ஏறுகிறது! இது மிகமிக அச்சமூட்டுகிறது என அ. இ. கை, விற்பனை கூட்டுறவு சங்கத் தலைவர் சோமப்பா, செ. கை. ச. தலைவர் எம். பி. நாச்சிமுத்து உள்ளிட்ட அறுவர், அவசர வேண்டுகோள், அனுப்பியுள்ளனர் டில்லிக்கு.

*

டில்லியில் இந்திய சுப்ரீம் கோர்ட்டுக்குப் புதிதாக ஒரு கட்டிடம் கட்டியிருக்கிறது, காங்கிரஸ் சர்க்கார்! இந்தக் கட்டிடம் கடந்த கிழமை, திறக்கப்பட்டது. இதற்கான செலவு என்ன தெரியுமா? 84-இலட்சம் ரூபாய்கள்!!

*

ஆண்டுதோறும் எலும்புருக்கி நோயால் 5-லட்சம்பேர் சாகிறார்களாம்! சுமார் 25-லட்சம் பேர், இந்நோயினால் அவதிக்கு ஆளாகிறார்களாம்.

*

ஜெர்மனியில் இந்துக்கோயில் கட்ட ஏற்பாடுகள் நடக்கிறதாம்! மேற்கு பெர்லின் நகரில் இக்கோயில் எழுப்பப்படுமாம். பெர்லின் நகரில் வசிக்கும் இந்தியர்கள் முயற்சிதான், இது. இக்கோயிலுக்கு ரூ. 10-இலட்சம் செலவாகுமாம். கோயிலில் மகாவிட்டுணு சிலை வைக்கப்படுமாம். மேற்கு பெர்லினில், 4000-இந்தியர்கள் வாழ்கிறார்கள். வெளிநாடு போயும், இந்த 'வேலை' போகவில்லை!!

*

வைகுண்டம் தாலுகா முறப்பநாடு எனும் கிராமத்தில் கடந்த மாதம் ஆதித்திராவிடர்களுக்குள் நடைபெற்ற அடிதடிச் சண்டையில், ஒருவர் மாண்டார் இருவர் படுகாயமுற்றனர். மேற்படியூர் ஆதித்திராவிடர்களுக்குச் சொந்தமான தெய்வம் காலசாமியைக் கும்பிடுவது சம்பந்தமாகத்தான் இச்சண்டை ஏற்பட்டதாம்!!

*

திருப்பதி ஏழுமலையானைத் தங்கத்தாலேயே பக்தர்கள் முழுக்க அடித்திருக்கிறார்கள்! கூரைக்கு ஓடு, தங்கத்தாலேயே கிணறு என்று இப்படியெல்லாம் செய்திருக்கிறார்களாம், சென்றகிழமை. வைரத்தாலே கிரீடம் இருப்பதும், இன்னும் பல லட்சம் பொருமானமுள்ள நவரத்னங்கள் நிறைந்து கிடப்பதும் நாடு அறியும். இருந்தும், இதுவேறு கிடைத்திருக்கிறது!!

*

இந்திய உபகண்டத்தின் நானுபகுதிகளிலும் நகைகளாகவும் வேறுவிதமாகவும் கிடக்கும தங்கத்தின் மொத்தமதிப்பு ரூபாய் 2500 கோடியாகும் என்று பார்லிமெண்டில் மொரார்ஜிதேசாய் இந்தகிழமை தெரிவித்தார்.

★

இதற்குத்தானா!

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [17-8-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 5

ஓராண்டல்ல, ஈராண்டல்ல, பதிேனாரு ஆண்டுகள் உருண்டுவிட்டன.

வெள்ளைக்காரன் இந்த மண்ணைவிட்டு, வெளியேறி, இன்றோடு பதினோரு ஆண்டுகள், ஓடிவிட்டன.

இந்திய உபகண்டத்தின் சிம்மாதனத்திலே காங்கிரஸ் தலைவர்கள், உரிமைப் பூரிப்புடன், உட்காரத் துவங்கி பதினோரு ஆண்டுகள், ஆகிவிட்டன.

பதினோரு ஆண்டுகளாயிற்றே, ஒழிய, சுதந்திரத்தின் பலனைப் பருகினரா, மக்கள், என்றால், பெருமூச்சே ஏற்படுகிறது!!

வெள்ளையன் விரட்டப்பட்டால் நாடு நலம் பெறும் என்றார்கள். உண்மைதான், அது. ஒரு நாட்டில் அந்நியன் ஆண்டால், அவனுக்கு நாட்டின் நன்மைகளிலும், வளர்ச்சியிலும் அக்கரையிருக்க முடியாதுதான். அதற்காகவே, எங்கெங்கு விடுதலைக் குரல் எழும்பிடினும், விவேகிகள் வரவேற்கிறார்கள்; நாமும், 'முதலாவது ஆகஸ்டை' அகமகிழ்ச்சியுடனேயே வரவேற்றோம்; பாராட்டினோம்; வீர வணக்கம் சொன்னோம்.

விளக்கொளிகள் மின்ன, வெடிகள் முழங்க, கீதங்கள் கேட்க, புதுக்கொடி பூரிப்புடன் பறக்க, 'இந்தியா' விடுதலைபெற்றது. ஆனால், இன்பம் பெற்றதோ எனின், பெருமூச்சுத்தான் வருகிறது! மக்கள் மன்றத்திலிருந்துமட்டுமல்ல, அந்த மக்களின் நம்பிக்கையைப் பெற்ற நேரு அவர்களே, அடிக்கடி, பெருமூச்சு விட்டுக்கொள்கிறார். அந்நிய நாட்டுத் தூதர்களுடனும், விவேக விளக்கங்களிலும் செலவழிந்த நேரம் போக, ஏனைய நேரங்களிலேயெல்லாம், நாட்டு நிலைமையைக் குறித்து, கவலை தெரிவிக்கிறார்.

இந்த ஆண்டு, சுதந்திர நாளை, காங்கிரசின் சாதனை நாளாகக் கொண்டாடும்படி தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர், வேண்டுகோள் விடுத்திருக்கிறார்! ஆனால், நேரு அவர்கள், வேதனையைத்தான் சுதந்திரப் பரிசாக வழங்கிறார்—மீண்டும் "ரேஷன் முறை" வந்தாலும் வரும் என்கிற செய்தியின் மூலம்!!

சித்தரஞ்சனைப்பாரீர்—தாமோதர் நதிப் பள்ளத்தாக்கைக் காணீர் — நெய்வேலி நேத்ரானந்தமாகயிருக்கிறது—80-இலட்சம் ரூபாயில் சுப்ரீம் கோர்ட் கட்டியிருக்கிறோம்—இதோ கப்பல் கட்டும் தொழிற்சாலை—என்று பட்டியல் தருகிறார்கள்! ஐந்தாண்டுத் திட்டம் தந்த பரிசு என்கிறார்கள்!! ஆனால், அதோ பிறந்த குழந்தை, கதறுகிறது — குழந்தையைப் பெற்ற தாய் தவிக்கிறாள், தேவையான பால் புட்டியும், இலகுவில் செரிக்கும் உணவுப் பொருள்களும் இல்லையே, என்று. பெரியவர்கள் மட்டுமே, வாடிடும் நிலை தொடர்ந்தது, கடந்த ஆண்டுச் சுதந்திர நாளின்போது. இந்த ஆண்டுச் சுதந்திர நாளோ, "இறக்குமதி கட்டுப்பாடு" என்ற பெயருடன் குழந்தைகளுக்குத் தேவையான பொருள்களும், பிணியாளர்களுக்கு வேண்டிய மருந்துகளும்கூட கிடைக்காமல் தவிக்கும் பயங்கரத்தோடு விளங்குகிறது! இறக்குமதிசெய்யப்பட்ட "ஆர்லிக்ஸ்" 4-ரூபாயிலிருந்து 10-ரூபாய்க்குப் போயிருக்கிறது! அதுமட்டுமல்ல, இங்கேயே கிடைக்கும் எண்ணெய் கூட, தினம் விலை ஏறிக்கொண்டேயிருக்கிறது!!

தறியும் தவிக்கும்! — என்று சஞ்சலக்குரல் கேட்கிறது, கைத்தறித் துணிப் பிரமுகர்களிடமிருந்து. இருப்பதா, சாவதா என்று தள்ளாடிக்கொண்டிடக்கும் தறித் தொழிலுக்கு, பேராபத்து வரும்—தறியாளர்கள், சங்கடத்துக்கு ஆளாக நேரும், என்கிறார்கள். தறியாளர் தம் நிலைதான் இதுவென்றால், பஞ்சாலைகளில் பாடுபடும் தொழிலாளர்களோ, "நாளைக்கு ஆலையிருக்குமா?" என்கிற அச்சத்தோடு உலவுகிறார்கள். ஆலையரசர்கள், பற்பல காரணம் காட்டி, ஆலைகளை மூடிக் காட்டுவதும் பிறகு திறப்பதுமாக, விளையாடிக்கொண்டிருக்கிறார்கள்.

உணவு! உடை!!—இரண்டும், மனிதனுக்கு இன்றியமையாதது. ஆண்டுகள் பதினொன்றாகிவிட்டன—ஐந்தாண்டுத் திட்டமும் இரண்டு போட்டாகிவிட்டது—ஐயகோ, என்றலறும் மக்களின் கண்ணீர் துடைக்கப்படவில்லை. மாறாக, தொல்லைகளும் துயரங்களும் வளர்ந்து கொண்டே போகின்றன.

*

"இன்பம் என்ன சாதாரணப் பொருளா? உடனடியாக வாங்கிவிட முடியுமா! நாங்கள் என்ன முயற்சிக்காமலாயிருக்கிறோம்," என்று கேட்கிறார்கள் அமைச்சர்கள். "ஆகா! ஊகூ! பாரதத்தின் புகழ், பாரெட்டும் கேட்கிறது!!", என்று வேறு நேரத்தில் முழக்கமிடுவார்கள். அவர்களே, நேருவைப்போல, பிரச்னையைக் கண்கூடாகப் பார்க்கிற நேரத்தில், இப்படிப் பெருமூச்சோடு கேட்கிறார்கள். இன்பம், எளிதான பொருளல்லதான்! உடனடியாகக்கொண்டு வர முடியாததுதான்!! ஆயினும், இருக்கிற இன்பத்துக்கும் இடையூறு வராமல் பார்த்துக்கொள்ளலாமன்றோ? அதுகூட, நடக்கவில்லை, ஆண்டுக்கொரு சஞ்சலம் கிளம்புகிறது என்பதுதான் வேதனையாயிருக்கிறது!!

உணவு—தொழில்—இரண்டுக்கும் அடுத்தபடியாக, ஆளும் அரசாங்கமே "இன்சால்வெண்ட்" நிலையிலிருக்கிறது என்கிறார்கள். கடந்த சில மாதங்களாக, யாரைப்பார்த்தாலும், "நாணயச் செலாவணி நெருக்கடி" என்று பேசுகிறார்கள். வெளிநாடுகளிலிருந்து வாங்கவேண்டியபொருள்களுக்குக் கைவசம் பணமில்லையாம்! கவலை தெரிவிக்கிறார்கள் ஒவ்வொருவரும்!!

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளையன் வெளியேறும்போது, டில்லிக் களஞ்சியத்தின் இருப்பாக சுமார் 1800 கோடி ரூபாய் ('ஸ்டர்லிங்' நிதி) வைத்திருந்தான்.

அதன்றி, கோடி கோடியாக, வெளிநாடுகளில் பணம் கடனும் வாங்கினர்கள்.

இருந்தும் இப்போது நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது! அளவுக்கு மிஞ்சி வெளிநாடுகளில் வாங்கிய ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களுக்கு மட்டும் அடுத்த ஆண்டு முதல், சுமார் 150 கோடி வரையில் திருப்பிக்கொடுக்க வேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் போடும்போது சுமார் 500 கோடி வரையில் அசலுக்காகவும் வட்டியாகவும் திருப்பிக்கொடுக்க வேண்டிய கட்டத்தில் இந்திய அரசு இருக்கிறது.

*

இருந்ததும் போய்,
கடனும் வாங்கி,
பலனுமில்லாமல்,
திருப்பிக்கொடுக்கவேண்டிய திண்டாட்டமான சூழ்நிலையில், இருக்கிறது, நாடு, இன்று.

என்ன காரணம் இதற்கு?—நாம் சொன்னால், கோபம் வரும், தேசியத் தோழர்களுக்கு! இதோ, பல அறிஞர்கள் சொல்கிறார்கள்!!

டில்லிப் பொருளாதாரப் பள்ளியின் முன்னாள் தலைவர்—சிறந்த பொருளியல் அறிஞர்,— திட்டக் குழுவின் பொருளாதார ஆலோசகர் — டில்லிப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ், *சொல்லுகிறார்:*

> மத்திய அரசாங்கமும், ராஜ்ய அரசாங்கங்களும் திறமையுடன் திட்ட அம்சங்களை நிறைவேற்றவில்லை.

முன்னாள் கவர்னர், சிறந்தவர் எனக் கருதப்படுகிறவர் கே. சந்தானம், *திறமைக் குறைவைப்பற்றி விளக்குகிறார்:*

> மத்திய அரசாங்க தொழில் வியாபார இலாகாவுக்கும் நிதி இலாகாவுக்கும் 1955—57ம் ஆண்டுகளில் ஒத்துழைப்பில்லாமல் கண்மூடித்தனமாகக் கொடுக்கப்பட்ட இறக்குமதிச்சீட்டுகளின் காரணமாக சுமார் ரூ. 500 கோடிக்கு இந்த நெருக்கடி உடனடியாக அதிகமாகிவிட்டது. இது வருந்தத்தக்கதே.

யாவருக்கும் அறிமுகமானவர் டாக்டர். சி. பி. ராமசாமி. *கடன் வாங்கிய பணத்தை எப்படியெப்படி, காங்கிரஸ் சர்க்கார் விரயம் செய்தது என்று எழுதுகிறார்:*

> முதல்திட்டத்தின் இறுதி ஆண்டில், நமது விமானப் படைச் செலவு மட்டும் ரூ. 35-கோடி ஆயிற்று என்று கணக்கு கொடுக்கப்பட்டது. இரண்டாவது திட்டத்தில் முதல் மூன்று ஆண்டுகளில் இந்த ஒரு இனத்தில் மட்டும் செலவு ரூ. 100-கோடிக்கும் அதிகமாகப் போயிருக்கிறது.

இப்படி வாங்கப்பட்ட தளவாடங்களும் எப்படிப்பட்டனவாம் தெரியுமா? அதனை முன்னாள் டில்லி நிதிமந்திரியாயிருந்த சி. டி. தேஷ்முக் *தெரிவிக்கிறார்.*

> "......இதில் வருந்தவேண்டிய விஷயம் என்னவென்றால் பாகிஸ்தானுடன் போட்டி போட்டுக்கொண்டு, இங்கிலாந்திலும் மேற்கு ஐரோப்பியநாடுகளிலும் இனிமேல் தங்களுக்குத் தேவையில்லை என்று ஒதுக்கிவிட்ட பழைய சம்பிரதாயத் தளவாடங்களை நாம் வாங்கிக் குவிப்பதுதான். இந்த விஷயத்தில் பாகிஸ்தான் அதிர்ஷ்டம் வாய்ந்தது என்றே சொல்லவேண்டும். அவ்விதத் தளவாடங்களை அமெரிக்காவிலிருந்து இனமாகப் பாகிஸ்தான் பெற்றுக்கொண்டிருக்கும் சமயத்தில், பாரதம் புராதன தளவாடங்களைப் பணம் கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது."

'கல்கி' ஏட்டில், இன்றுள்ள "இந்திய பொருளாதாரச் சிக்கல்" பற்றித் தீட்டப்பட்டு வரும் கட்டுரைகளில், கண்ட கருத்துக்கள் இவை!!

தேஷ்முக், ஒருபடி அதிகமாகப்போயே எழுதியிருக்கிறார்:

> "நிர்வாகத்தின் கவனக் குறைவும், திறமைக் குறைவும்தான் காரணம்."
>
> "ராஜ்யங்களிலும்கூட விவசாய இலாகாவை நிர்வகிக்கும் மந்திரிகளின் தரமும் அப்படி ஒன்றும் உயர்ந்தது, வன்மையுடையது என்று சொல்ல முடியாது."
>
> "அப்படியிருந்தும் நுணுக்க அறிவும், நிர்வாகத் திறனும் படைத்த அதிகாரிகள் செய்யும் வேலையில் இந்த மந்திரிகளின் அநாவசியமான தலையீடு கணிசமான அளவுக்கு இருப்பதாகவே தோன்றுகிறது."

*

பதினோரு ஆண்டுகளில் "பாரதம்" பெற்றிருக்கும் பலன்கள் இவை! இந்த லட்சணத்தில் எங்கிருந்து சுபிட்சமும், சுதந்திர இன்பமும் கிடைக்க முடியும்? தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவரோ, ஆனந்த நாளாகக் கொண்டாடும்படி அறிக்கை விடுகிறார்! எங்கிருந்து கிடைக்கும் ஆனந்தம்? பத்து ரூபாய்க்கு வாணமும், பதினைந்து ரூபாய்க்கு ஒலிபெருக்கியும், இருபது ரூபாய்க்குத் தோரணமும் கட்டி, கூட்டம் போட்டு "தி.மு.க. ஒழிக!" என்று திருப்பித்திருப்பிச் சொல்லிவிட்டால் போதுமா? ஏழையின் உள்ளத்திலிருந்தன்றோ இன்பம் எழவேண்டும்! அதற்கு இடமுண்டா இன்று—

"....இதற்குத்தானா இவ்வளவு பாடுபட்டு இந்தச் சுதந்திரத்தைப் பெற்றோம்......."

'கல்கி' எழுதுகிறது, இந்தச் சுதந்திரநாளைப் பற்றி! இதே கேள்விதான், நாடெங்கும் இன்று ஒலிக்கிறது!!

*

கேரள துப்பாக்கிப் பிரயோகம் பற்றி........

இவர்கள் பேசினால்.....!

நம்பூதிரிபாட்

ரஷ்யாவுக்கொரு லெனின் — சீனத்துக்கோர் மாசேதுங் — அதைப்போல், பாரதத்துக்கு நான் — என்றல்லவா கனவு கண்டேன்!

என் கனவு இப்படியா ஆக வேண்டும்! ஆசைக் கோட்டை இப்படியா தகர்த்தெறியப்பட வேண்டும்!

சூழ்நிலை, மனிதனைக் கோபுரத்திற்குத் தூக்கிவிடவும், அடித்தளத்தில் அழுத்திவிடவும் வல்ல அற்புதமான, கருவி — இயற்கையின் படைப்பு! அதனால்தான் நான் இந்த அளவு உயர்ந்தேன்! கேரளத்துக் கம்யூனிஸ்டு அரசாங்கத்தில் முதல் மந்திரியாக ஆகும் மகத்தான வாய்ப்பு — உலகமே அகலக் கண்திறந்து ஒவ்வொரு விநாடியும் இங்கே என்ன நடக்கிறதென்று பார்த்தறியத் துடிக்கின்ற நிலையில் கனவிலும் கண்டிருக்க முடியாத வளர்ச்சி — எனக்கு ஏற்பட்டது.

நான் இருமினாலும் தும்மினாலும் — யாரையாவது போற்றினாலும் தூற்றினாலும் — யாரிடமாவது அணுகினாலும், அவரை விட்டு விலகினாலும்—அவையெல்லாம் மகத்தான செய்திகளென்று கருதப்படும் நிலை! அந்தச் செயல் ஒவ்வொன்றுக்கும் காரணகாரிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்தோர் அநேகர்!

இத்தகையதோர் வளர்ச்சி ஜனநாயக நாட்டில் யாருக்கும் அவ்வளவு எளிதில் கிடைப்பதில்லை! பண்டித நேரு பேசுகிற ஒவ்வொரு வார்த்தைக்கும் எப்படி முக்கியத்துவம் தரப்படுகிறதோ, அதைப் போல், அல்லது அதற்கு அடுத்தபடியாக, என்னுடைய வார்த்தைகளுக்குத்தானே முக்கியத்துவம் தரப்படுகிறது!

இதையெல்லாம் நான் எண்ணி எண்ணி, இறுமாந்து, உள்ளம் பூரித்திருந்த சமயத்திலேதான், எனக்கு இத்தகையதோர் பேரிடி —என் ஆட்சிக்கே ஒரு பூகம்பம்!

இதைத் தாண்டி நான் நிலைப் பேனா—என் அரசு நிலைத்திடுமா —நான் சார்ந்திருக்கிற கட்சியின் கதி என்ன ஆகும்—என்று தினமும், ஆர்வத்தோடு ஆருடம் கணிப்பவர்கள் பலரைப் பார்க்கின்றேன்!

M. S. வெங்கடாசலம், M. A.

இத்தனைக்கும் காரணமான இந்தத் துப்பாக்கிப்பிரயோகம், மற்ற மாநிலங்களில் சாதாரண நிகழ்ச்சி தான்—ஆனாலும் அதுவே கம்யூனிஸ்டு ஆட்சியில் நடைபெறும் போது, அதற்கென்று தனி முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது, கண்டனக் குரல்கள் எங்கெங்கோ இருந்து வருகின்றன!

எதிரிகள் கண்டிப்பதைப்பற்றி நான் அதிகமாக வருந்தவில்லை— அதைப்பற்றிக் கவலைப்படாமல் கூட உதறித் தள்ளிவிட முடியும். இன்னின்ன காரணத்தால் இவர்கள் இப்படிப் பேசுகிறார்கள் என்றுகூட விளக்கம் தந்து தப்பித்துக்கொள்ள முடியும்!

ஆனால்......! கம்யூனிஸ்டு கட்சியிலேயே இருக்கிற டாங்கே கண்டிக்கிற வேகத்தைப் பார்த்தால்! உண்மையிலேயே பயமாக இருக்கிறது! பகிரங்கமாகவே இவ்வளவு கண்டிக்கிற இவர், கட்சிக்குழுவில் எந்த அளவு கண்டிப்பார் என்பதை எண்ணிப் பார்த்திடக்கூட என்னால் முடியவில்லை!

முந்திரித் தோட்ட முதலாளிக்கும் தொழிலாளிகளுக்குமிடையே நேர்ந்த தகராறுகளில், முதலாளிக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்காகப் போலீஸ் அனுப்பப்பட்டது. கம்யூனிஸ்டு ஆட்சியில் தொழிலாளிகளுக்கெதிராக முதலாளிக்குப் பாதுகாப்புத் தருவதா என்று பலர் கேட்கக்கூடும்! என்ன செய்வது? நமது அரசியலமைப்பு அப்படி? முதலாளிகளுக்குப் பாதுகாப்புத் தருகிற சர்க்கார் டில்லியில்! டில்லி சொற்படிதானே மாநில சர்க்கார்களெல்லாம் ஆடித்தீரவேண்டும்? இல்லையென்றால் சட்ட மன்றத்தில் மெஜாரிடியில் நிறைவேற்றப்பட்ட கேரளக் கல்வி மசோதா சுப்ரீம் கோர்ட் வரை போகவேண்டிய தேவை என்ன? இத்தகையதோர் வேடிக்கையான ஜனநாயகத்தை, வேடிக்கையான ஆட்சி முறையை வைத்துக் கொண்டிருக்கும்போது முதலாளிக்குப் பாதுகாப்புத் தராமல் என்ன செய்வது?

டாங்கே சொல்வதைப்போல் முந்திரித்தோட்டம் எரிந்தால் எரிந்து போகட்டும் என்று விட்டுவிட்டிருந்தாலும், விளைவுகள் விபரீதமாகத்தான் இருந்திருக்கும்! அந்த முதலாளியைத் தூண்டிவிட்டு அரசாங்கத்தின் மீது வழக்குத் தொடுக்க வைத்திருப்பார்கள்! அது ஆட்சிக்கு எவ்வளவு பெரிய அவமானம்!

அந்த அவமானத்தையேகூடப் பொறுத்துக்கொண்டாலும், மற்றொரு பெரிய சிக்கல் அதிலே இருக்கிறது! டாங்கே இதைப் புரிந்துகொள்ளாதவரல்ல! ஆனாலும் என்ன காரணத்துக்காகவோ என்னை இப்படிப்பட்ட இக்கட்டான நிலைக்கு ஆளாக்குகிறார்.

பிர்லாவோடு எமது அரசாங்கம் செய்துகொண்டிருக்கிற ஒப்பந்தம் அனைவருக்குமே தெரியும்! அதன்படி அவர் கேரளத்தில் துவக்கவிருக்கிற பேப்பர் மில்லுக்குப் பற்பல சலுகைகளும், பாதுகாப்பும் தரவேண்டியது எங்கள் கடமை! இப்போது முந்திரித் தோட்டத்து முதலாளிக்குப்பாதுகாப்புத் தரவில்லையென்றால், கேரளத்தின் கதி என்ன ஆவது?

ஏற்கனவே கேரளம் பின் தங்கியிருக்கிறது! அண்மையில்கூட நியூ ஏஜ் இதழ் நிருபரின் கேள்விகளுக்குப் பதிலளித்தபோது, கேரளத்திற்கு நியாயமாக 200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும்—ஆனால் அதில் பாதி அளவுக்குதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டேன்.

கட்சிக் கூட்டத்தில் இப்படிப் பேசியதுகுறித்துக்கண்டனக்குரல் எழுப்பப்படக்கூடும் என்று எதிர்பார்த்தேதான் அப்படிச் செய்தேன். இத்தகைய குறுகிய நோக்கம் கூடாது என்று பேசுவார்களென்று எனக்குத் தெரியும்!

ஆனாலும் பிறந்த இடத்துப் பாசம் எப்படி என்னை விட்டுப் போகும்? இரண்டு மாதங்களுக்கு முன்னால் கிருஷ்ணமேனன் என்ன சொன்னார்! அவர் கேரளத்தில் பிறந்தவர்தானே தவிர, அவரது வாழ்நாளில் பெரும்பகுதியை மற்ற இடங்களில்தான் கழித்தார். இங்கிலாந்திலே படித்தார். பொதுத் தேர்தலிலேகூட பம்பாயில் போட்டியிட்டார். அந்த அளவு அவருக்கும் அவர் பிறந்த மண்ணுக்கும் தொடர்பு அற்றுப் போயும்கூட, வெளிநாட்டு மாணவர்களிடையே பேசும்போது, "இந்தியாவிலேயே அழகான பகுதி கேரளம்தான்—காஷ்மீரல்ல," என்றல்லவா சொன்னார்! இது எதைக் காட்டுகிறது! அதே பற்றும் பாசமும்தான் என்னை அப்படிப் பேச வைத்ததே தவிர வேறல்ல!

கட்சிக் குழுவில் என் வாதத்திற் கெதிராகக் கண்டனக்குரல் எழுப்பப்பட்டாலும் கவலையில்லை என்று நான் எண்ணியதற்கு மற்றொரு காரணமும் உண்டு. எந்த மாநிலத்துக் கம்யூனிஸ்டுக் கட்சி, இத்தகைய பந்த பாசங்களுக்குக் கட்டுப்படாமல் இருக்கிறது? பம்பாயிலிருக்கிற கட்சி, மகாராஷ்டிர சமிதியோடு சேர்ந்துகொண்டு, மகாராஷ்டிரம் தனி மாநிலமாக அமைக்கப்படவேண்டுமென்று போராடுகிறது. இந்திதான் இந்தியாவின் ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமென்று கட்சிக் கூட்டத்தில் தீர்மானங்கள் போடப்பட்டும், தலைவர்களெல்லாம் பேசிவந்தும், வங்க சட்டமன்றத்தில் நடந்ததென்ன? ஆங்கிலம்தான் அதிக நாள் நீடிக்கப்படவேண்டுமென்ற தீர்மானத்தையல்லவா, அங்குள்ள கம்யூனிஸ்டுகள் ஆதரித்தார்கள்! அப்படியிருக்க நான், கேரளத்திற்காக வாதாடுவதில், — நியாயம் கேட்பதில் தவறென்ன?

கேரளம் தொழில் துறையில்—டில்லி விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், அது உதவி செய்தாலும் இல்லையென்றாலும் — முன்னேறியாக வேண்டும் என்ற கருத்தோடுதான் பிர்லாவோடு ஒப்பந்தம் செய்துகொண்டேனே தவிர, வேறல்ல!

ஆனால் அந்த ஒப்பந்தம், என்னை இப்படிப்பட்டதோர் இக்கட்டான நிலைக்குக் கொண்டுவந்துவிடுமென்று யார் கண்டார்கள்?

எப்படியோ, கம்யூனிஸ்டு கட்சியின் தலைமைப்பீடம் ஒரு அறிக்கை வெளியிட்டது—அந்த அறிக்கை, என் மீது தவறில்லை என்று வாதாடும் வகையில் இருக்கிறது.

அந்த அறிக்கை மனப்பூர்வமாகக் கொடுத்ததாக இருந்தால் நல்லதுதான்! அது வெளிப்பூச்சாக இருந்து, பின்னாலே எனது ஆட்சிக்கு ஏதாவது ஆபத்து வரக்கூடுமானால்......! நினைக்கவே ஆபத்தாக இருக்கிறது! ஆனாலும் ஒரு ஆயுதம்—மகத்தான வலிமை பொருந்திய ஆயுதம் — என் கரத்திலே இருக்கிறது! கேரளத்தில் கம்யூனிஸ்டு ஆட்சி கவிழ்ந்தால், பிறகு இந்தியாவிலேயே தலையெடுக்க முடியாது என்று திட்டவட்டமாக நானும் என்னைச் சேர்ந்தவர்களும் சொல்லுவோம்—என்ன ஆகிறது என்றுதான் பார்ப்போம்! வருவது வரட்டும்!

*

தாமோதரமேனன்

மகத்தான வாய்ப்பு இது கிடைத்தற்கரிய வாய்ப்பு! இதை நழுவவிட்டால் வேறு கதியில்லை. கிடைத்த வாய்ப்பை நழுவவிடுவதென்பது, தனிப்பட்டோர் வாழ்க்கையிலேகூட விரும்பத்தக்கதல்ல...! அதுவும் அரசியலில்!

துப்பாக்கிப் பிரயோகம்—மக்கள் மீது! சூழ்நிலை விளக்கங்கள் ஆயிரம் தரப்படலாம்! ஆனால் அதுவா முக்கியம்! எந்த அரசாங்கம் அத்தகைய விளக்கங்களைத் தரவில்லை! டயர் சுட்டபோதுகூடத்தான், வெள்ளைக்கார அரசாங்கம் விளக்கம் தந்தது. நாகி தூக்கிலிடப் பட்டதற்குக்கூடத்தான் காரணங்கள் பல காட்டப்பட்டன. ஆதலால், கம்யூனிஸ்டு கட்சியும், கேரள அரசாங்கமும் தருகின்ற விளக்கங்கள் முக்கியமல்ல. "துப்பாக்கியை ஏன் எடுத்தீர்கள்?" — இதுதான் நாம் அவர்களுக்கு விடுக்கவேண்டிய கேள்வி.

இந்தக் கேள்வியை எழுப்ப' யார்யார் துணை வருகிறார்களோ அவர்களெல்லாம் வரட்டும். எல்லைப் பிரச்சினையில் தமிழர்களைச் சுட்டுக்கொன்ற பனம்பள்ளி கோவிந்தமேனன்கூடத்தான் துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டிக்கிறார்! கிடைக்கிற ஆயுதம் கிடைக்கட்டும்—கிடைத்தவரை இலாபம்! ஆயுதம் பழையதாயிற்றே—நல்ல பலன் கிடைக்கக்கூடுமா — என்பதைப்பற்றியெல்லாம் யோசிக்க இப்போது நேரமில்லை! முழுமூச்சாக, கம்யூனிஸ்டுகளைக் கண்டிப்பதிலே இறங்கிவிட வேண்டியதுதான்!

ஆனால், இந்தச் சமயத்தில்—இத்தகையதோர் இக்கட்டான சூழ்நிலையில் — கிடைத்தற்கரிய மகத்தானதோர்வாய்ப்புக் கிடைத்திருக்கும்போது, பண்டித நேரு இப்படி நடந்துகொள்வார் என்று நான் கனவில்கூட நினைத்ததில்லை. "கேரளத்தில் நடைபெறுவது உள்நாட்டுப் போரல்ல — அது கட்சிகளுக்கிடையே நடக்கின்ற போராட்டம்" — என்று சொல்லவேண்டிய அவசியம் என்ன? அப்படிச் சொல்லுவதன் மூலம் காங்கிரசுக்காரர்கள் பலரது கண்டனக்குரலின் ஓசை குறைந்துவிடுமே என்று எண்ணவேண்டாமா அவர்!

நாட்டில், உள்நாட்டுப்போர் நிகழுகிறது என்று சொல்லுவது பண்டித நேருவுக்கு அவமானம்—அதனால் அவரது புகழ் பாதிக்கப்படும் — என்று அவர் எண்ணியிருக்கக்கூடும்!

அவர்போன்ற பெருந்தலைகளுக்கே புகழ் வேண்டுமென்ற ஆசையும் சுயநலமும் இருந்தால் என்னைப்போன்றவர்களுக்கு இருக்காதா என்ன!

கம்யூனிஸ்டு கட்சி கேரளத்தில் மந்திரிசபை, அமைத்ததிலிருந்து, அதைக் கவிழ்ப்பதற்கு நானும் என்னால் ஆனவரை முயன்று கொண்டுதான் இருக்கிறேன். கிடைத்த வாய்ப்புகள் அத்தனையையும், என் திறமைக்கும், இங்கிருக்கிற காங்கிரசுக் கட்சியின் வலிமைக்கும், மீறிய வகையிலேயே பயன்படுத்தினேன். அப்படியிருந்தும் 16 மாதங்கள் கம்யூனிஸ்டுகள் ஆட்சியில் இருந்துவிட்டார்கள். இனியும் இருப்பதற்கான வாய்ப்பு ஏராளமாக இருக்கிறது என்று எண்ணும்போது ஆத்திரம் பிறக்காமலா போகும்?

அப்படியிருக்க, கம்யூனிஸ்டுகள் நடத்தியிருக்கிற துப்பாக்கிப் பிரயோகத்தை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்ற முயலுவதிலே தவறு என்ன?

காங்கிரசுக் கட்சி ஆட்சிக்கு வருவது ஒருபுறமிருக்கட்டும்! நம்பூதிரிபாட் பற்றி எனக்குத் தெரிந்த அளவில் மற்றவர்களுக்கு—மற்ற மாநிலங்களில் உள்ளவர்களுக்கு—தெரிந்திருக்கமுடியாது. அவர் பெரிய அரசியல்வாதி — மிகவும் தந்திரசாலி! நினைத்ததைச் சாதிக்கக்கூடிய திறமை அவரிடம் உண்டு! அவர் சொற்படி கட்டுப்பட்டு நடப்பதற்கு, கட்சியிலே ஏராளமானவர் காத்திருக்கிறார்கள்!

இத்தகைய பக்கபலமும், பற்பல தந்திரங்களைக் கையாளக்கூடிய யுக்தியும் படைத்த இவரது செயல் ஒவ்வொன்றையும், அரசியல் வாதிகள் மிகவும் நுணுகி ஆராயவேண்டும். அதைச் செய்யத் தவறிவிட்டார்கள், காங்கிரசுத் தலைவர்கள் — அதற்கு முக்கிய காரணம் கேரளத்தில் நிலைமைகளை நன்றாகப்புரிந்துகொண்ட தலைவர்கள் தலைமைப்பீடத்தில் இடம் பெறவில்லை. கேரளத்தைச் சேர்ந்தவர் என்று கிருஷ்ணமேனனுக்குப் பெயர் — ஆனால் அவருக்குக் கேரளத்தைப்பற்றி ஒன்றும் தெரிந்திருக்க நியாயமில்லை! காங்கிரசும், பிரஜா சோஷியலிஸ்டுக் கட்சியும் கேரளத்தில் சேர்ந்து பணியாற்றுவதை, இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னாலே கண்டித்தாரே, அதிலிருந்து இந்த உண்மை நன்றாக விளங்குகிறதே!

தலைமைப்பீடம் கம்யூனிஸ்டு கட்சியும், ஆட்சியும் நடக்கிற விதத்தை நன்றாகக் கவனிக்கவில்லையென்றாலும், கேரளத்திலே உள்ள காங்கிரசுக் கட்சி அதைக் கவனித்துக்கொண்டுதான் வருகிறது.

அப்படிக்கவனித்ததன் பலனாக, எனக்கு ஒரு மகத்தான சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது — கம்யூனிஸ்டு கட்சி உண்மையிலேயே இந்திய ஒற்றுமைக்குப் பாடுபடுகிறதா என்பது எனக்கு ஏற்பட்டிருக்கிற ஐயப்பாடு!

"கேரளத்திற்கு ஐந்தாண்டுத் திட்டத்தில், நியாயமாகக் கொடுக்கப்படவேண்டிய தொகை கொடுக்கப்படவில்லை" என்று நம்பூதிரிபாட் பேசியிருப்பதற்கு வேறு என்ன பொருள்? இத்தகைய மனப்பான்மை, இவருக்கு ஏற்பட்டிருப்பதைக் காண நான் பயப்படுகின்றேன்—ஆனால் காங்கிரஸ் தலைமைப்பீடம் இன்னமும் இதைப் புரிந்துகொள்ளவில்லை.

ஆனால் என் சந்தேகத்தைத் தலைமைப்பீடத்திற்கும் நாட்டு மக்களுக்கும் எப்படி வெளிப்படையாகச் சொல்லுவது? இந்தச் சந்தேகம், சரியானதுதானா, இல்லையா என்பதல்ல, இப்போது எனக்கு முன்னாலே இருக்கிற பிரச்சினை! இத்தகையதோர் மனப்பான்மை வளருகிறதென்று காங்கிரசுத் தலைவர்களிடம் சொன்னால்தான் அவர்கள் விழிப்புக் கொள்வார்கள் என்பதென்னவோ திட்டவட்டமாகத் தெரிகிறது!

ஆனால் அதை வெளிப்படையாக மக்களிடம் சொல்ல ஆரம்பித்தால்...! நினைக்கவே பயமாக இருக்கிறது!

சந்தேகப்பட்ட பலரை கம்யூனிஸ்டுகள் என்று சொல்லி, சிறையில் தள்ளி, பலரை உண்மையிலேயே கம்யூனிஸ்டுகளாக்கியிருக்கிறோம்! அதைப்போல், "பிரிவினை வாதிகள்" என்று கம்யூனிஸ்டுகளின்மீது குற்றம் சாட்டச் சாட்ட அவர்கள் பிரிவினைவாதிகளாகி, காங்கிரசு என்றென்றைக்கும் தலையெடுக்க முடியாதபடி செய்துவிட்டால்...!

கம்யூனிஸ்டுகள் நாட்டுப் பிரிவினையை ஆதரிக்க ஆரம்பித்தால், அவர்களது ஆதிக்கம் மேலும் வலுவடையும் என்று நான் நம்புவதற்கு இடமிருக்கிறது.

காரணம், கம்யூனிஸ்டு இதழான "நியூ ஏஜ்" இதழில் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால், சென்னை கடற்கரையில் நடைபெற்ற தி. மு. கழகக் கூட்டத்தைப்பற்றி எழுதியிருந்ததைப் படித்த எவரும், தமிழ் நாட்டில் அது பெற்றிருக்கிற செல்வாக்கை சாதாரணமானதென்று கருதமாட்டார்கள். அந்தக் கூட்டத்தில் ஏறக்குறைய இரண்டு இலட்சம் பேர் இருந்தார்களாம்! கூட்டத்தில் பேசிய அண்ணாதுரை, "எழுந்திருங்கள்" என்றதும் அவ்வளவு பேரும் எழுந்து நின்றார்களாம்! "உட்காருங்கள்" என்றதும் அவ்வளவு பேரும் உட்கார்ந்தார்கள். அவர் பேசிய பேச்சின் நாதம் இசையைக் கேட்பதைப் போல் இருந்ததாம்! மக்கள் மெய்மறந்து, அடிக்கடி கையொலி எழுப்பிக்கொண்டு இருந்தார்களாம்! அதைப் படித்த எவரும் அவ்வளவு பெரிய தலைவனா என்று ஆச்சரியத்தோடு கேட்பார்கள்! அந்தக் கட்சி ஏற்பட்டுக்கூட இன்னமும் 10-ஆண்டுகள் நிரம்பவில்லையாம்! இருந்தும் இத்தகைய வளர்ச்சி ஏற்பட்டதற்கு முக்கிய காரணம், தாங்கள் பேசுகிற தேசியம்தான் — அதுதான் உண்மையான தேசியம்—என்று அவர்கள் சொல்லுகிறார்களாம்!

எனக்கிருக்கிற பயமெல்லாம், நம்பூதிரிபாட் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக, அவர் "பிரிவினை வாதி" என்று குற்றம் சாட்டப்போய், தமிழ் நாட்டில் வளர்ந்திருக்கிற தி. மு. க. வின் பாதையிலேயே அவரையும் நாம் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டால் பிறகு என்ன ஆவது என்பதுதான்!

நாட்டுப் பிரிவினை ஏற்படட்டும்—இல்லாமல் போகட்டும்—அதைப்பற்றிக் கவலையில்லை! கம்யூனிஸ்டுகள் அந்த அளவு

வளர்ந்துவிட்டால் பிறகு காங்கிரசின் கதி?

இத்தகைய குழப்பத்தில் நான் எந்த முடிவுக்கு வர—ஏதோ ஊதுகிற சங்கை ஊதினால், விடிந்தால் விடியட்டும், விடியாவிட்டால் போகட்டும் என்பதைத் தவிர?

இராமமூர்த்தி

தலைவலி போய் திருகுவலி வந்தது என்பார்கள்! அதைப் போலல்லவா கம்யூனிஸ்டுகளின் நிலைமை இன்று ஆகிவிட்டது!

காகி தாக்கிவிடப்பட்டதைப் பற்றி எதிர்க்கட்சிகளெல்லாம் எவ்வளவோ கண்டித்து எழுதிவிட்டன! அது இன்னமும் சரியாகக்கூட ஓயவில்லை! அதற்குள் கேரளத்தில் துப்பாக்கிப் பிரயோகம்! இந்தச் சிக்கலை எப்படிச் சமாளிப்பது?

"கேரளத்தைப் பாரீர்! கேரளத்தைப் பாரீர்!!" என்று சொல்லிக் கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கட்சியை, வளர்க்க முடியவில்லை என்றாலும், அழியாமல் காப்பாற்றிக்கொள்ள முடிந்தது! ஆனால் இப்போது? 'கேரளத்தைப் பாருங்கள்' என்று சொல்லும்போது, "அங்கே நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தைத்தானே!" என்றல்லவா மக்கள் கேட்பார்கள்!

துறைமுகத் தொழிலாளரைச் சுட்டு வீழ்த்திய காங்கிரசு ஆட்சியாளரைச் சும்மாவிடக்கூடாது என்று கண்டித்துக்கொண்டிருந்தோம். செப்டம்பரில் கூடவிருக்கிற சட்டமன்றக் கூட்டத்தில்கூட கல்யாணசுந்தரத்தைவிட்டுக் கண்டனக்குரல் எழுப்பவேண்டும், அப்படிப் பேசும்போது இயலுமானால் தி. மு. க.வை விட்டுத் தாக்கச் செய்யவேண்டும், என்றல்லவா எண்ணிக்கொண்டிருந்தேன்! என் எண்ணத்தில் இப்படி மண் விழுந்துவிட்டதே!

மண் விழுந்துவிட்டது மட்டுமல்ல — நாளைக்குக் கூடவிருக்கின்ற சட்ட மன்றத்தில், தி. மு. கழகம், துப்பாக்கிப் பிரயோகம் கூடாது என்று கண்டிக்கும்போது நம்மையும் குத்திக்காட்டுவதைப் போலல்லவா இருக்கும்! "துருக்கியில் மாபெரும் கூட்டத்தைக் கலைக்க அந்த நாட்டு அரசாங்கம் தண்ணீர்க் குழாயை உபயோகித்ததே! அந்த முறையை நீங்களும் ஏன் கைப்பற்றக்கூடாது"-என்று முதுகுளத்தூர்ப் பிரச்சினைபற்றி சட்டமன்றத்தில் பேசும்போது குறிப்பிட்ட அண்ணாதுரை, இப்போதும் அதே பாணியில் பேசமாட்டார் என்று எப்படி நான் நம்புவது?

"போலீஸார் கண்ணீர்ப்புகையை முதலில் உபயோகித்தார்கள். ஆனால் காற்றுச் சாதகமாக இல்லாததால் கூட்டம் கலையவில்லை. அதனால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டியதாயிற்று" என்று மிகவும் எச்சரிக்கையோடுதான் அகில இந்திய கம்யூனிஸ்டு கட்சி அறிக்கை விட்டிருக்கிறது. ஆனால் அதையெல்லாம் மக்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமே!

எப்படியிருந்தாலும், கேரளத்தில் கம்யூனிஸ்டு ஆட்சி மேலும் நீடிப்பதற்கு நம்மாலானதைக் செய்தாகவேண்டும். இல்லையென்றால், தமிழ்நாட்டில் கம்யூனிஸ்டு கட்சியின் நிலை......! நினைத்தாலே நெஞ்சம் நடுங்குகிறது.

ஆனால்.........இந்த நம்பூதிரிபாட்டையும் புரிந்துகொள்ள முடியவில்லை. எதை எதற்காகச் சொல்லுகிறார் என்பதையும், என்னாலேயே புரிந்துகொள்ள முடியவில்லை — சாதாரண கம்யூனிஸ்டுகள் எங்கே புரிந்துக்கொள்ளப் போகிறார்கள்?

கேரளத்திற்கு 200 கோடி ரூபாய் ஐந்தாண்டுத் திட்டத்திற்கென நியாயமாக ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும், என்று இவர் சொன்னது எவ்வளவு மகத்தான தவறு என்பது தமிழ்நாட்டுக்கம்யூனிஸ்டுகளுக்குதான் தெரியும். அதையே ஆதாரமாகக் காட்டியல்லவா, தி. மு. கழகத்தவர்கள் பேசுகிறார்கள்?

சில தலைவர்கள் பேசும்போது "நம்பூதிரிபாட் திராவிடநாடு திராவிடருக்கே என்ற கொள்கையை ஒப்புக்கொண்டுவிட்டார் என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் அவர் குறைபட்டுக் கொள்ளுவதற்கான காரணம்—அதன் பின்னாலே இருக்கிற நாட்டுப்பற்று— இதைத்தான் நாங்கள் கவனிக்கச் சொல்லுகிறோம்" என்று காரண காரிய ஆராய்ச்சியில் மிக ஆழமாக இறங்கி, நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறார்கள்! கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு கிளை இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் என்ன செய்ய முடியும்? கேரளமே, நீதான் வழிகாட்டவேண்டும் — தி. மு. க.களுக்கல்ல, எங்களுக்கு!

●

தமிழக நிதியமைச்சர்
சுப்பிரமணியம்

"சிந்திரித்தொழில் சிறக்கிறது வடக்கே! முந்திரித்தொழிலும் சிதைகிறது தெற்கே!" —என்று போஸ்டர் எழுதி ஒட்டிய தி. மு. க.க்களைக் கேட்கிறேன், "எங்கே முந்திரித் தொழில் சிதைந்துவிட்டது?" — இல்லையில்லை சவால் விடுகிறேன்! அதிகமாகப் போனால், "சவால் வீரர் சுப்பிரமணியம்" என்று கேலியாகச் சொல்வார்கள் அவ்வளவுதானே!

கேரளத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. "காங்கிரசு ஆட்சியிலும்தான் கம்யூனிஸ்டு ஆட்சியிலும்தான் நடக்கிறது! இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?" என்று வெங்கட்டராமன் கேட்டார்!

ஆனால் நான் அப்படிக்கேட்கப் போவதில்லை. "முந்திரித் தோட்டத் தகராறிலேதானே துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது! அப்படியானால் முந்திரித் தொழில் எங்கே சிதைந்துவிட்டது?" என்று கேட்பேன்! இன்னொரு முறை சவால்விடப் போகிறேன. இந்த முறையாவது அண்ணாதுரை வாய்திறந்து பதில்சொல்லுகிறாரா என்று பார்க்கிறேன். ஒவ்வொரு முறையும் "தம்பிமார்கள்" தானே எனக்கு பதில் சொல்லுகிறார்கள்? இவர் ஏன் பதில் சொல்லக்கூடாது? அந்த மோதிரக்கை குட்ட மறுக்கிறது—எந்தெந்தக் கரங்களோ குட்டுகின்றன!

ஆங்கில எழுத்தாளர் ஜான்சனைத் தாக்கி மேக்பர்சன் என்பவர் மிகவும் காரசாரமாக எழுதினாராம். அதற்கு ஜான்சன் பதில் சொல்லாமலிருப்பதைக் கண்டு, பல நண்பர்கள் அவரை ஏனென்று கேட்க, "நான் பதில் சொல்லவேண்டுமென்றுதான் அவன் அப்படிச் செய்கிறான்! அதனால் பதில் சொல்லாமலிருப்பதுதான் எனக்கு வெற்றி" என்று அவர் சொன்னாராம்!

ஒரு சமயம் இதை மனதிலே வைத்துக்கொண்டுதான் அண்ணாதுரை அப்படிச் செய்கிறாரோ என்றொரு சந்தேகம் எனக்கு! ஆனால் நான் அப்படி ஒன்றும் சாதாரண ஆளல்லவே—மந்திரி! அதுவும் இரண்டு மூன்று இலாகாக்களை என் கரத்திலே வைத்துக்கொண்கொண்டிருக்கிற மந்திரியாச்சே!

எப்படிச் சவால் விட்டால் அவரிடம் இருந்து பதில் கிடைக்கும் என்ற கேள்வி என் உள்ளத்தைக் குடைந்துகொண்டு இருந்தபோது கன்னிமாரா நூல்நிலையத்தில் ஒரு புத்தகத்தைப் பார்த்தேன். "சாலஞ்சர்ஸ் ஹிஸ்டரி" என்ற அந்தப் புத்தகத்தைப் பார்த்ததும் துள்ளிக் குதித்தேன். "சாலஞ்சர்" என்றால், 'சவால் விடுபவர்' என்றுதான் எனக்குப் பொருள் தெரியுமே! ஒரே விநாடியில் என்னென்னவோ எண்ணங்கள்! சவால்விட்ட பலரது வாழ்க்கைக் குறிப்புகள் அதிலே இருக்கும்—அது நமக்கு வழிகாட்டியாக இருக்கக்கூடும் — என்று ஆவலோடு எடுத்துப் பார்த்தேன்! ஆனால் என் எண்ணத்தில் மண் விழுந்தது. அது "சாலஞ்சர்ஸ்" என்பவர் எழுதிய வரலாறு— சவால்விட்டவர்களது வாழ்க்கைக் குறிப்பல்ல!

அது எப்படியிருந்தாலும் உண்மையில் சவால்விடுவதென்பது ஒரு கலை! அது எல்லோருக்கும் அமைந்துவிடுவதல்ல!

நான் சவால்விட்டதற்குக் காரணங்கள் பல! நான் சவால் விடுத்த ஓரிரண்டு வாரங்களில் "உத்தரப்பிரதேச மாநிலம் சாதகமான ஒரு இடத்தை வகித்து வருகிறது" என்றும் "சர்க்கரை ஆலைகள் பற்றிய கொள்கைகள் உருவாக்கப்படுவது டில்லியிலல்ல-லக்னோவில்" என்றும் அஜிகேசன் பேசியதை ஆதாரமாகக் காட்டி, அண்ணாதுரை "ஹோம் லண்ட்" இதழில் எழுதியிருந்தாராம்! ஆனால் எனக்கிருக்கிற வருத்தம், அவர் ஏன் என் சவாலை ஏற்றுக்கொண்டு அந்த விளக்கத்தைத் தந்திருக்கக்கூடாது! — நானொருவன் இப்படிப் பேசியிருக்கிறேன் என்பதைக்கூட அல்லவா அவர் கவனிக்காமல் விட்டுவிட்டார்— என்பதுதான்!

மோதிரம் விரலில் இருக்கிறது என்பதற்காக யாரையுமே, அதுவும் என்னைப் போன்றவர்களை, குட்டாமல் விடுவது, அவருக்கு அழகோ இல்லையோ, எனக்குப் பிடிக்கவில்லை,

★

செந்தாமரை

[வி. ஆர். துரை]

அப்போது யாருமே அந்த வழியில் இல்லை. பொன்னைப் பழிக்கும் கண்கவர் மேனியும், கோல மயில் சாயலும் கொண்ட அந்த முழுநிலா முகத்தழகி, காண்போர் மயங்கும் வண்ணம தன்னை அழகுபடுத்திக்கொண்டிருந்தாள்.

ஒரு இரவு முழுவதும் கண் விழித்து, நீண்டநேர ஆராய்ச்சிக்குப் பிறகு தீட்டி முடித்த, நான்கு பக்கங்கள் கொண்ட கடிதத்தை பெண்மையின் சுவை உணராத அந்த இளைஞன், அம்மங்கையிடம் ஆசையோடு கொடுக்கச் சென்றான். அந்தப் பச்சை மயில் சினத்தை முகத்தில் காட்டி. பெண் புலியாகி அவன்மேல் சீறி விழுந்து கோபம்கொண்ட மானைப் போல் ஒதுங்கிப் போய்விடவில்லை. செவ்விதழ் மேல் சிரிப்பை மேயவிட்டு, ஆணழகன் தந்த கடிதத்தை, வளைகரம் நீட்டி வாங்கிக் கொண்டாள்.

எப்படியோ ஒரு பெரிய காரியத்தை இன்றைக்கு அவன் சாதித்துவிட்டதைப்போல், கம்பீரமாக மேலே நடந்துகொண்டிருந்தான். சங்குபோன்ற தன் கழுத்தைத் திருப்பி ஒருமுறை பார்த்துவிட்டு, வீட்டிற்குள் மைதிகழ் கண்ணி நுழைந்தாள். மகிழ்ச்சி வெள்ளத்தில் அவள் மூழ்கிவிட்டாள். அப்பெண்ணரசியின் திருப்பெயர் செந்தாமரை. அந்த ரோஜாவின் இதயத்தைக் கொள்ளை கொண்டுவிட்ட, அந்த ராஜாவின் பெயர் தங்கராசன். அவன் உள்ளமும் மாசற்ற தங்கமாகத்தான் இருந்தது.

எல்லோரும் தூங்கிக்கொண்டிருந்தார்கள். பொற்சிலையாம் செந்தாமரை உறங்குவதுபோல் நடித்துக்கொண்டு இருந்தாள். வேலைப்பாடுடன் செய்யப்பட்ட கட்டிலின்மேல் விரிக்கப்பட்டிருந்த பஞ்சணையில் படுத்திருந்தும் கூட அவளுக்குத் துயில் வரவில்லை' நேரிழையாளின் நெஞ்சில் ஏக்கம் குடிகொண்டிருக்கிறது! அவளுக்குத் தூக்கம் வருமா? சுவரில் பேசிக்கொண்டிருந்த கடிகாரத்தின் முகத்தை, அவள் வெள்ளை விழிகள் பார்த்துக்கொண்டிருந்தன. அந்தக் கடிகாரத்தின் மீது அவளுக்குக் கடுங்கோபம் கூட வந்தது! அவளுடைய இதயமதைப் புரிந்துகொண்டிருந்தும், வேண்டுமென்றே அது மெதுவாக ஓடிக்கொண்டிருந்ததாம்! இது அவள் குற்றச்சாட்டு!

பன்னிரண்டு மணி அடிக்கப் பத்து நிமிடங்களே இருந்தன. படுக்கையைவிட்டு உற்சாகமாய் மெல்ல எழுந்தாள். ஓசைபடாமல் அடியெடுத்து வைத்துச் சென்று, ஆடியின்முன் போய் நின்றாள். ஒருமுறை தன்னைப் பார்த்துச் சரிபடுத்திக்கொண்டாள். அந்த நேரத்தில், நாகரிகமாகப் பின்னிவிட்டிருந்த கருமுகிற் கூந்தலில், அலங்காரமாக முல்லையை வைத்துக்கொண்டாள். அழகு செய்துகொள்ளுவது ஒரு கலை. அக்கலையில் அவளுக்கொரு அலாதியான இன்பம். வீட்டிற்கு வெளியே சாமர்த்தியமாக வந்துவிட்டாள். நள்ளிரவில் தனி வழியே பைந்தொடியாள் துணிச்சலாக நடந்துகொண்டிருந்தாள். இப்படி வீட்டைவிட்டு அந்த மணிப்புறு வெளியே பறந்து செல்வது, இதுதான் முதல் தடவை. எங்கிருந்து அவளுக்கு இந்தத் தைரியம் திடீரென்று பிறந்துவிட்டிருக்கும்? வேகமாகச் சென்று கொண்டிருக்கும் அந்தக் கோகிலத்தைத்தான் கேட்க வேண்டும்!

ஏரியின் மணல் மேட்டிற்கு அவள் வந்துவிட்டாள். ஆவலோடு அங்குமிங்கும் விழியால் தேடினாள். அவள் பளிங்கு

போன்ற இதயத்தில், உரிமையோடு வீற்றிருக்கும் வேந்தனைக் காணவில்லை. உடனே அவள் திரும்பிவிடவில்லை. அது என்ன அவ்வளவு சுலபமாக முடிகின்ற காரியமா? வானத்து நிலவுபோல் வனிதை மணல் மெத்தையில் அமர்ந்து எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். ஆண்களுக்கு அவசரக்காரர்கள் என்றொரு பட்டம் உண்டு! அந்தப் பட்டத்தைப் பெண்களுக்கும் சூட்டி மகிழலாம்!

காற்றாக அவன் வந்து சேர்ந்தான்; கண்டுகொண்டு தேன் மலரைக் களிகொண்டான். அவள் இன்மொழி கரும்பாக—தேனாக அவனுக்கு இனித்தது. அவன் மணிமார்பை சொந்தமாக்கிக்கொண்டிருந்த, அறிவுக்கினிக்கும் தித்திக்கும் தேனாகத்தான் இருந்தது. வானத்திலே பூத்திருந்த நிலவு பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தது. பொறுமை கொண்ட முகில் சிறு தூறல் போடலாயிற்று. தொடர்ந்து மின்னலும் பேரிடியும் தோன்றிப் பயமுறுத்தலாயிற்று. அடிக்கடி இல்லாவிட்டாலும் இந்த இன்பச் சந்திப்பு வாரத்திற்கோர் நாள் தவறாமல் நடந்துகொண்டிருந்தது. இவர்களின் கதையும் தெரிய வேண்டியவர்க்கெல்லாம் தெரிந்துவிட்டது.

மாமல்லபுரத்துச் சிற்பம்போல் தாமரை ஒரு பக்கத்தில் தலை கவிழ்ந்த வண்ணம் சோகமாக நின்றுகொண்டிருந்தாள். "இதுவரையில் போனது போகட்டும். இனியாவது புத்திசாலியாக நடந்துகொள். ஒரு பெரிய குடும்பத்தில் பிறந்துவிட்டு, இப்படியெல்லாம் செய்துகொண்டு திரியலாமா? உன்னால் அப்பாவுக்கு எவ்வளவு பெரிய அவமானம் என்பதை எண்ணிப் பார்த்தாயா? கேவலம், நம்மை யார் மதிப்பார்கள்? நம்முடைய சாதியிலே பிறந்த எவனையாவது காதலித்துத் தொலையக்கூடாதா? கல்யாணமாவது செய்துவிட்டிருக்கலாம். எந்த ஒரு முக்கிய நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ள விடாமல், நம் சாதியைச் சேர்ந்தவர்கள் ஒன்றுகூடி, நமது குடும்பத்தை விலக்கிவைத்துவிட்டால், அந்த அவமானத்தை எப்படிச் சகித்துக்கொள்வது? பூனையிடம் பிடித்துக் கொடுக்கவா கிளியை வளர்த்தேன்?"—இது தாயாரின் புலம்பல். கண்ணீரால் மகளின் மனதை மாற்றிவிட முடியுமென்று அவள் கனவு கண்டுகொண்டிருந்தாள்.

"இவளுக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதா? எப்போதிருந்து இந்த நாடகத்தை நடத்துகின்றாள்? ஆரம்பத்திலேயே இதைக் கிள்ளி எறிந்திருக்க வேண்டும். எந்த ஆடம்பரத்தைக் கண்டு இவள் மயங்கிவிட்டாள்? சீ! கழுதை! என் எதிரே நிற்க உனக்குவெட்கமில்லை! இங்கிருந்து ஓடிப்போ!" கனியே! கரும்பே! தேனே! என்றெல்லாம் வருணித்த தந்தையார்தான், இப்படி இழிமொழிகளால் வாழ்த்தினார்!

அதிகமாக இல்லாவிட்டாலும் ஓரளவுக்குத் தாமரை நன்கு கற்றவள். உலகத்தை அவள் நன்றாகப் புரிந்துகொண்டிருந்தாள். இடையிலே பிறந்துவிட்ட சாதி வரலாற்றையும் நன்கறிந்தவள். தாயின் உபதேசத்தையும், தந்தையின் இடிமுழக்கத்தையும் கேட்டுக்கொண்டிருந்த அவள், பொறுமையோடு இப்படிப் பதில் சொன்னாள்; "ஆடம்பரத்தைக் கண்டு மயங்கி அவர் வலையில் விழுந்துவிடவில்லை. அத்தகைய ஏமாளி நான் அல்ல! அன்பிற்கு அடிமையாகிவிட்டேன். நேசம் என்பது ஆக்கப்படும் பொருள் அல்ல என்பது உங்களுக்கே தெரியும்? நீங்கள் சொல்லுகின்றபடியெல்லாம் என்னால் நடந்துகொள்ள முடியாது. நான் அவர் மனைவி. அவர்தான் என் கணவர். இப்படி நான் அன்றே முடிவு செய்துவிட்டேன். இதை நான் மறப்பதென்பது முயல் கொம்பேயாகும். இப்பொழுது நான் கருவுற்றிருக்கிறேன். இரண்டு திங்கள்!"

அவள் பேசி முடிக்கவில்லை. டாக்டர் வீட்டிற்கு வந்தார். தாமரை, டாக்டரின் பரிசோதனைக்காளாக்கப்பட்டாள். அவள்கூறிய பொய் அம்பலமாகியது. புன்னகையோடு டாக்டர் திரும்பிப்போய் விட்டார்.

"என்னை ஒன்றும் தொந்தரவு செய்யாதீர்கள். அவரை மணப்பதற்கு நீங்கள் சம்மதம் தராவிட்டால், நான் ஒன்றுசெய்கின்றேன்; வீட்டிலேயே கன்னியாக இருந்துவிடுகிறேன். இதை வேண்டுமானால் என்னால் செய்யமுடியும்! எனக்கு வதுவையும் வேண்டாம்; வாழ்க்கையும் வேண்டாம்."

இதைக்கேட்டுத் தாயோ தலையில் அடித்துக்கொண்டாள். தந்தையின் விழிகளில் இரத்தச் சிவப்பேறிக் கொண்டது. தூண்போல் நின்றிருந்த தாய்மாமன் இடுப்பில் கட்டியிருந்த பெல்ட்டைக் கழட்டிக்கொண்டு, கை ஓயும் வரை பூவைப்போன்ற தாமரையை முரட்டுத்தனமாக அடித்தான்; மிருகம்போல் அவன் நடந்துகொண்டான். உளநூல் அவன் படித்ததில்லை!

> "காதல் அடைதல் உயிரியற்கை!—அது
> கட்டில் அகப்படும் தன்மையதோ?—அடி
> சாதல் அடைவதும் காதலிலே—"

புரட்சிக் கவிஞரின் இந்தப்பாடல், அவர்களின் மரமண்டைக்கு எங்கே புரியப்போகிறது?

*

ஒரு நாற்காலியில், சப் இன்ஸ்பெக்டர்கொங்கராயன் உட்கார்ந்துகொண்டிருந்தார். உதட்டில் ஒட்டிக்கொண்டிருந்த உயர்ந்த சிகிரட், அவருக்கு உற்சாகமளித்துக் கொண்டிருந்தது. எதிரே போட்டிருந்த ஒரு பழைய நாற்காலியில் தாமரையின் தந்தை உட்கார்ந்து கொண்டிருந்தார். சோகம் அவர் முகத்தில் கப்பிக்கொண்டிருந்தது. அவர்தம் மனைவியின் கண்களில், காவிரி போல் கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. அந்தக் குடும்பத்திற்கும் திரு. கொங்கராயன் அவர்களுக்கும் நெருங்கிய உறவு இருந்தது.

"அவன் பெயர் என்ன?"

"தங்கராசன், சார்!'

"வயது......"

"இருபத்திரண்டிற்கு மேல் இருக்காதுங்க; நல்ல சிவப்பு."

"செந்தாமரை வீட்டை விட்டுப் போய் எத்தனை நாள் ஆகிறது?"

"இன்றோடு நான்கு நாட்கள் முடிந்துவிட்டது."

"அப்போதே நீங்கள் வந்து, ஸ்டேஷனில் தகவல் கொடுக்கக் கூடாதா?"

"நாங்கள் மானத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். வெளியில் தெரிந்தால் அவமானம் என்று இரகசியமாகத் தேடிப்பார்த்தோம்."

"அப்படி நீங்கள் செய்திருக்கக் கூடாது? எதற்கும் நீங்கள் பயப்பட வேண்டாம். எல்லாம் ,நான் கவனித்துக்கொள்ளுகின்றேன்."

தீவிரமாக யோசித்தவண்ணம் சப் இன்ஸ்பெக்டர் எழுந்தார். உடன் வந்து வழியனுப்பிவிட்டு தாமரையின்பெற்றோர்கள் வீட்டிற்குள் சென்றார்கள்.

தேடாத இடமெல்லாம் போலீஸ் சுறுசுறுப்பாக வலை போட்டு அலசிக்கொண்டிருந்தது. பக்கத்திலேயே ஐந்து கல் தொலைவில் இருந்த காட்டில், அவர்கள் மறைந்துகொண்டிருந்தார்கள். எத்தனை நாளைக்குத்தான் கானகத்தின் நடுவண் ஓடிக்கொண்டிருந்த, ஆற்றை வீடாகக்கொண்டு தைரியமாக இருக்கமுடியும்? அந்த இரண்டுள்ளங்கள் தாமாகவே ஒரு முடிவிற்கு வந்து, துணிச்சலாக வெளியே வந்தார்கள். கெட்டிக்காரப் போலீஸ் அவர்களைக் கைது செய்து, கோர்டில் கொண்டுபோய் சாமர்த்தியமாக நிறுத்தியது!

இரண்டு வருடக் கடுங்காவல் தண்டனையை, தங்கராசனுக்கு நீதிமன்றம் 'சிபார்சு' செய்தது. அவன் நீதிபதியின் தீர்ப்பைக் கேட்டு, அங்கேயே மூர்ச்சை போட்டு விழுந்துவிட்டான். சொல் அலங்காரத்தாலும், ஆடம்பரத்தாலுமே செந்தாமரையை அவன் மயக்கி அழைத்துக்கொண்டு ஓடிவிட்டானும்! அவளுக்குப் பதினெட்டு வயதுகூடப் பூர்த்தியாகவில்லையாம்! அந்த வயதிற்குட்பட்ட ஒரு பெண்ணை, ஒரு ஆடவன் அழைத்துக்கொண்டு ஓடிவிடுவது சட்டப்படி குற்றமாகுமாம்! அவன் சிறைக்குள்ளே தள்ளி அடைக்கப்பட்டான். வீட்டிற்குப் பெற்றோர்கள் தாமரையை இழுத்துக்கொண்டுவந்து விட்டார்கள். அவள் அம்பு பட்ட மானின் நிலையடைந்தாள். பணக்காரர்கள் எப்படியும் தப்பித்துக்கொள்வார்கள். ஏழைகளைத்தான் இந்த உலகம் தண்டிக்கும்.

*

திருமணத்தை விரைவில் முடித்துவிட அவர்கள் திட்டமிட்டார்கள். மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டைத் தேடிச் செல்வது உலக வழக்கமாகும். அப்படியின்றி, பெண் வீட்டார் ஆடவரைத் தேடித்திரிவது, அதிசயங்களில் ஒன்றாகும். இந்தச் சாத்திரத்தையெல்லாம் அவர்கள் குப்பையிலே தள்ளிவிட்டார்கள். தம்முடைய சொந்தத்திலேயே ஒரு மாப்பிள்ளையை, வெட்கமில்லாமல்தேடிப்பிடித்துவிட்டார்கள். பேசும் பொற்சித்திரத்தை அவன் கண்டான். பேரழகில் உள்ளத்தைப் பறிகொடுத்தான். ஆனால், அவள் உள்ளத்தில் புகைந்துகொண்டிருந்த எரிமலையை, அவன் பார்க்கவில்லை. கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல், தானாக வரும் சீதேவியை எந்த அறிவிலிதான் தன் காலால் எட்டி உதைப்பான்? எல்லோருக்கும், இப்படி ஒரு பெரிய வீட்டு சமபந்தம் கிடைத்துவிடுமா? பொருளாசை அவன் கண்களை மறைத்துவிட்டது.

பெற்றோர்கள் ஏற்பாடு செய்த திருமணத்திற்கு, தடையேதும் தாமரை விதிக்கவில்லை. மனப்பூர்வமாக ஒத்துக்கொண்டாள். மூன்று திங்கள்கூடச் சரியாகமுடியவில்லை. அதற்குள்ளாகவா சிறையிலே செத்துக்கொண்டிருக்கும் அவனை மறந்துவிட்டாள்? பளிங்கு போன்றிருந்த அவள் இதயத்தில் இவ்வளவு சீக்கிரத்திலா மாசு படிந்துவிட்டது?

"நான் சென்னைக்கு போகின்றேன். உங்களுக்கு என்ன வேண்டும்?"

"இது தெரியாதா உனக்கு? நீதான் வேண்டும் எனக்கு!'—இப்படிச் சொன்ன அவனை உண்மையாகவே மறந்துவிட்டிருப்பாளா? நிச்சயமாக இருக்கமுடியாது.

பெண்களே மிகவும் பயங்கரமானவர்கள். அவர்கள் நினைத்தால், எதையும் மிகச் சுலபமாக முடித்துவிடுவார்கள். அவர்களால் வாழவைக்கவும் முடியும். வாடவிட்டுச் சாகவைக்கும் வித்தையையும் அவர்கள் கற்றிருக்கிறார்கள். ஆண்களின் உலகத்தை அவர்கள் மிகச் சுலபமாக ஏமாற்றி, தங்களின் விளையாட்டுப் பொருளாக ஆக்கிக்கொள்கிறார்கள்.

ஆருடக்காரன் வீட்டிற்கு வந்தான். அதையும் இதையும் பார்த்துத் தீவிரமாக ஆராய்ச்சி செய்தான். "வியாழக்கிழமை மூல நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபதினத்தில், காலை 7-30 மணிக்கு மேல் 9 மணிக்குள்ளாக மிதுன லக்கினத்தில், திருமணத்தை முடித்துவிடுங்கள்" என்று செப்பிவிட்டான். அவனுக்குக் கொடுக்க வேண்டிய 'கட்டணம்' கொடுத்து அனுப்பப்பட்டது.

மணப்பந்தல் அழகாகப்போடப்பட்டது. மற்றக் காரியங்களும் சரியாகக்கவனிக்கப்பட்டுவிட்டன. அனைவர்க்கும் திருமண அழைப்பு இதழும் வழங்கியாய்விட்டது. எல்லோருமே நாளை காலை திருமணம் என்றுதான் நம்பிக்கொண்டிருந்தார்கள். ஆனால், அன்று நடந்தது வேறு விதமாக இருந்தது. ஒரு பெரும் அதிர்ச்சியை எல்லோருக்கும் உண்டாக்கிவிட்டது.

அன்று வியாழக்கிழமை. நண்பகல் நேரம். அதோ! சரியாகச் செப்பனிடப்படாத அந்தப் பாதையில், கட்டை வண்டி ஒன்று சத்தம் போட்டுச் சென்றுகொண்டிருக்கிறது. துப்பாக்கியைத் தோளின்மேல் வைத்துக்கொண்டு, சோம்பலாக அந்த வண்டியின் பின்னால் போலீஸ்காரன் போய்க்கொண்டிருக்கிறான். அந்தவண்டியில் ஒரு பெண்ணின் பிணம் இருந்தது! சாகும் தருவாயிலிருந்த எருதொன்று, செத்துப் போய்விட்ட அந்த பெண்ணின் பிணத்தை இழுத்துக்கொண்டு, தள்ளாடிச் சென்றுகொண்டிருந்தது. தற்கொலையா, அல்லது அடித்துச் சாகடிக்கப் பட்டதா? இந்த உண்மை அறிய வேண்டி, பக்கத்திலிருந்த நகரத்திற்குப் பரிசோதனைக்காக அந்தப் பெண்ணின்பிணம் போய்க்கொண்டிருந்தது. அதைத் தொடர்ந்து தாமரையின் பெற்றோர்கள் அழுகுரல் எழுப்பிக்கொண்டிருந்தார்கள். அந்த ஒற்றைமாட்டு வண்டியில் வாழவேண்டிய தாமரைதான் பிணமாகக்கிடந்தாள்.

அந்த வியாழக்கிழமையே கொட்டை எழுத்தில் திடுக்கிடும் செய்தியொன்று, பத்திரிகையில் வந்தது. அதுதான் இது:—

> "சிறையிலே ஒரு கைதி செத்துவிட்டான். அந்தக் கைதியின் பெயர் தங்கராசன் என்று தெரிய வருகின்றது. மூன்று மாதத்திற்கு முன்னால், ஒரு இளம் பெண்ணைக் கடத்திச் சென்ற குற்றத்திற்காக, அவனுக்கு இரண்டு வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டதாம்."

செத்துப் போய்விட்ட இரண்டுள்ளத்திற்காக, சாகடித்துவிட்ட சமூகம் மெத்தவும் வருத்தம் தெரிவித்துக்கொண்டது! இந்தக் கருணையை அவர்கள் உயிரோடு இருக்கும்போதே கொஞ்சம் காட்டியிருந்தால்......?

*

சிறிய வயதில் பெரிய மனிதர்கள்!

[குறு]

இன்று அவனி புகழும் மேதைகளாகத் திகழும் அறிஞர் பெருமக்கள், தங்கள் இளவயதில் — பள்ளி நாட்களில் எப்படி இருந்தார்கள் என்பதை அறியும்போது வியப்பு மேலிடும்.

ஆல்பர்ட் ஐன்ஸ்டன்—விஞ்ஞானத்தின் தந்தை, அணு ஆராய்ச்சியாளர் இன்று. ஐன்ஸ்டன் ம்யூனிச் பள்ளியில் படிக்கும்போது, எந்த மாணவனோடு பழகவும் கூச்சமடைந்தவனாகவும், வகுப்பில் ஓர் தகுதியற்ற மாணவனாகவும் கருதப்பட்டார். பேச ஆரம்பிக்கவே தக்க பருவத்தை நீறி நெடுநாட்கள் ஆகிவிட்டனவாம். ஸூரிச், பொறியியல் கல்லூரியின் நுழைவுப் பரிட்சையிலேயே முதன்முறை தோல்வி அடைந்தார். இரண்டாம் முறையாகத்தான் தேர்வடைய முடிந்தது. இருந்தும் தன் இருபத்தாறும் வயதில் அணுவின் உண்மையை உலகுக்கு எடுத்துக்கூறிப் பெயர் பெற்ற மேதையாகிவிட்டார்.

ஐன்ஸ்ட்டனைப்போலவே பள்ளியில் ஓர் கடைமாணுக்கனாகக் கருதப்பட்டவர் ஐசக் நியூட்டன். கணக்கில் மிக்க மோசம் என்று பெயரெடுத்தார். படிப்பில் துளியும் கவனம் செலுத்தாது, காற்றாடி விடுதல், மற்றும் கைவேலைகளில் மிக்க கவனம் செலுத்தியதால், முட்டாள் என்ற பட்டத்தினின்றும் தப்பி, படிப்பிற்கு இலாயக்கற்றவன் என்ற பெயரை எடுத்தார்.

மனிதப்பிறவியின் உண்மையை உலகிற்கு உணர்த்திய விஞ்ஞான மேதை சார்லஸ் டார்வின். அவரும் பள்ளியில் பாடங்களை உதாசினம் செய்துவிட்டு, இயற்கைக் காட்சிகளிலேயே நேரத்தைக் கழித்தார்- எல்லா ஆசிரியர்களும், டார்வினை ஓர் முட்டாளென்றே கருதினர்.

இலக்கிய மேதைகளுள் தனக்கென ஓர் தனியான இடம்பெற்றுவிட்ட ஆலிவர் கோல்ட்ஸ்மித், கடைசிவரை ட்ரினிடி கல்லூரியில் பட்டம் பெருது போய்விட்டார். பள்ளி வாழ்வில், முட்டாளாகவும், கூச்சமுள்ளவனுகவும், குறிப்பிடத் தகுதி அற்ற மாணவனுகவும் இருந்தார்.

கோல்ட்ஸ்மித், பௌதிகம் படிக்க எடின்பர்க்குக்கும், சட்டம் படிக்க இலண்டனுக்கும், மருத்துவம் படிக்க லேடனுக்கும் அனுப்பப்பட்டு எதிலுமே வெற்றிபெறவில்லை. தன் இளமை நாட்களில், சமூக நடவடிக்கைகளிலும், பிச்சைக்காரர்களுக்குப் பாடல்கள் எழுதியும், பொறுப்பற்ற வாழ்க்கையை நடாத்திய கோல்ட்ஸ்மித் இன்று இலக்கியவானில் ஒளிவிடும் சுடர் நட்சத்திரமாகப் பிரகாசிக்கின்ருர்.

உலகம் புகழும் சரிதப் பேராசிரியக் எட்வர்ட் கிப்பன் தன் உடல்நிலை காரணமாகப் பள்ளியில் நன்கு சோபிக்கவில்லை. பள்ளியில் கணக்கு, ஆங்கிலம், இலத்தின் ஆகியபாடங்களில் மிகவும் மோசம் என்று பள்ளியிலின்று வெளிவந்து, வீட்டில் தனிப்பட்ட ஆசிரியர்களிடம் பயின்ருர்.

ஆங்கிலம் படிக்கத் தெரிந்த அத்தனை பேரும் போற்றிப் புகழும் சிறந்த இலக்கிய மேதையான வால்ட்டர்ஸ்காட்டிற்கு, 'முட்டாள்' என்ற பட்டம் பள்ளியில் ஒதுக்கி வைக்கப்பட்டது.

எந்தப் பாடத்தில் மோசமாக விளங்கினரோ, அந்தப் பாடத்தில் உலகம் புகழ விளங்கிய விந்தை தாமஸ் சாட்டர்னைச் சார்ந்ததாகும். உலக பாங்கின் நிர்வாகியாகவும், சிறந்த ஓர் பொருளாதார நிபுணராகவும் விளங்கத் தானே என்னவோ, பொருளாதாரத்தில் மட்டும் மிகக் குறைவு எண்கள் பெற்று தேர்வில் வெற்றி பெற்ருர்.

பள்ளியில் மிகவும் முட்டாளாகவும் அடங்காதவனுகவும் இருந்து தன்பிற்கால வாழ்வில் அறிஞர்களாகத் திகழ்பவர்களுக்கு மிகவும் சிறந்த ஓர் உதாரணமாக இருப்பவர் சர். வின்ஸ்ட்டன் சர்ச்சில் ஆவார். இந்த அரசியல் மேதைக்குக் கணக்கின்மீது ஓர் தனிப்பட்ட விரோதம் உண்டு.

"இந்த எண்களே ஒன்ருேடு ஒன்று கடன்படுபவை ஆகும். ஒன்று கடன் வாங்கவேண்டும். இல்லையேல் வாங்கிய எண்ணைக் கொடுத்துக் கடன் தீர்க்கவேண்டும்" — இதுதான் அவர் கணக்கின்மீதுகொண்ட தேர்ந்த ஓர் அபிப்பிராயமாகும்.

ஆஸ்காட், பள்ளியில் எத்தனையோ முறை பிரம்படி பட்டுள்ளார். பிரம்பால் அடித்த தலைமை உபாத்தியாயரைப் பழி வாங்கவும் எண்ணமிட்டார்.

பிறகு, இரண்டு மூத்த பெண்மணிகளால் நடத்தப்பட்ட பிரைட்டன் பள்ளியில் சேர்க்கப்பட்டார். அங்கும் முட்டாளாகத்தான் திகழ்ந்தார். அதோடன்றி, அவர் அந்தப் பள்ளியைவிட்டு வெளியேறிய நாளை அந்த ஆசிரியைகள் ஓர் பெரு விழாவாகக் கொண்டாடிய அளவிற்குப் பெயர் பெற்ருர்.

ஹாரோவில், தகுதிக்கேற்ப மாணவர்களை நிறுத்தியபோது சர்ச்சில் கடைசி இடத்தைப்பிடித்துக்கொண்டார்! இராணுவக் கல்லூரியில் நுழைவுப் பரிட்சையிலேயே வெற்றி பெற முடியவில்லை. முதல் முறை எடுத்த எண்களை விடக் குறைவு எண்கள் எடுப்பதற்காக இரண்டாவது முறை பரிட்சை எழுதித் தோல்வி கண்டார். மூன்ருவது முறையாக, எவ்வளவு குறைவு எண்கள் எடுத்துத் தேற முடியுமோ அந்த அளவு எண்கள் எடுத்து வெற்றி பெற்ருர்.

இந்தப் பெரிய மனிதர்களின் உதாரணங்களை எண்ணிப் பார்க்கும்போது வியப்பு மேலிடத்தானே செய்யும்!

★

எக்காளமிடுவோருக்கு!

திருவள்ளுவரின் கண்முன் இருவர் நிற்கின்றனர். இருவரும் வீரர்கள்தான். வேட்டைக்குச் சென்று திரும்பியவர்கள் அவர்கள் இருவரும். அந்த இருவருக்குள் யார் செயல் சிறந்தது என்பதிலே போட்டியோ என்னவோ, யார் கண்டார்கள்?

அவர்களில் ஒருவன் காட்டிலேயும் மேட்டிலேயும் ஓடித்திரியும் முயலைக் குறிபார்த்து அடித்து வீழ்த்தியவன். வீழ்த்திய அம்பும் அவன்கையில் இருக்கிறது.

மற்ருெருவன் எதிர்த்து வந்த யானைமீது வேல் எறிந்தான். குறி தவறியது, குஞ்சரம் தப்பிப் பிழைத்தது. எய்தவேலை எடுத்து வந்து தலை தாழ்ந்து நிற்கின்ருன் அவன்.

இவர்கள் இருவரையும் காணும் திருவள்ளுவர், முயலைக்கொன்று வெற்றியோடு வந்திருப்பவனைவிட, யானையைத் தப்பவிட்டுத் தோல்வியோடு வந்திருப்பவனைப் பாராட்டுஇன்ருர். 'அந்த அம்பினில் இந்த வேல் ஏந்துதல் இனிது' என்கிருர்.

ஏன்?

முயல், எய்தி வீழ்த்த எளிதான பொருள். அதைக் கொன்றவனுக்குப் புகழ் புல்லியதுதான்.

ஆனால் யானையை எதிர்த்தவனோ உள்ளத்திலே உரமும், துணிவும் கொண்டபின்னர்தான் எய்திட வேண்டும் என்ற எண்ணமே எழும். அதனால் அவன் பெரியது வேட்டுப் பிழை நேர்ந்தாலும், உள்ளத்து உணர்வு கண்டு அவனில் இவனே பெரியவன் என அவர் மொழி கூறுகின்றது.

காங்கிரஸ் பெரிய கட்சி உலகம் புகழும் நேருவின் புகழில் வாழ்ந்திடும் கட்சி. காந்தியின் பெயரைப் பயன்படுத்திடும் கட்சி. அதிகாரம் அதனிடத்தே. பணம் எவ்வளவு இருக்கிறது எனக் கணக்கெடுத்திட இயலாது. பயங்கரமான இந்தச் சூழ்நிலையில் தூத்துக்குடித் துணைத் தேர்தலில் போய் நிற்க நேரிட்டது.

தூத்துக்குடியில் தோற்று விட்டோம். ஆம், இதைச் சொல்லிக் கொள்வதிலே நமக்கு வெட்கமில்லை. தோற்ருேம் என்ருலும் மனம் துவளவில்லை. என்ன இதற்குக் காரணம்?

மாக்தச்சன்

யாரை எதிர்த்துத் தோற்ருேம், எப்படித் தோற்ருேம் என்பதனை உணரும்போது தூத்துக்குடியில் தோற்றது நமக்கு அவமானமன்று. வென்றதுதான் காங்கிரசுக்கு அவமானம் என்பதை நம்மோடு நாட்டுமக்களும் இன்றைய தினம் உணர்ந்திருக்கின்றனர்.

கடல்மடை திறந்தாற்போல் பணப்பை திறக்கப்பட்டது, அதிகாரம் அந்தகாரத்தில் அலைந்தது; பல்லிளிப்பு இன்னும் என்னென்னவோ—யாரால் அத்தனையும் அறிந்திட இயலும்?—அதற்குப்பின் வெற்றி.

வீரன்—வலிவானவில், கூர்மையான அம்பு, குறிதவருத பழக்கம். எதிரியோ ஒரு முயல்! வீரன் வில் எடுத்தான், வளைத்தான்; 'கணை தொடுத்தான் அம்பு விடுபட்டது முயல் வீழ்ந்திட்டது.

இது சாதாரணம்; இதைத்தான் காங்கிரஸ் செய்தது. நேருவைக் காட்டி, மேருபோல் குவிந்த பணத்தைக் காட்டி, காருக்குள் காணுததைக் காட்டி வாக்கு வேட்டையாடியது. வெற்றி இட்டியது.

ஆனல் நாமோ,

முயல் வேட்டைக்குப் போகவில்லை. யானையை எதிர்த்தோம்—காங்கிரசை எதிர்த்தோம்.

வீரன், வில், வேல் எல்லாம் எவ்வளவுதான் வலிவும் கூர்மையும் பெற்றிருந்தாலும் அத்தனையும் தாங்கிடும் வல்லமை மட்டுமன்று, தகர்த்திடும் ஆற்றலும் பெற்றது யானை. அதனை எதிர்த்துப் போராடினேம்; யானை தப்பியது என்ருலும்,பாராட்டுக்கிடைத்திட வேண்டும் என்பது வள்ளுவர் கூறிடும் முறை, நெறி.

காங்கிரஸ் வாக்கு வேட்டையில் இறங்கியது.

நாம் காங்கிரஸை எதிர்த்தோம்.

இரண்டுக்கும் இடையிலே இருக்கும் வேறுபாட்டை உணர வேண்டும். காங்கிரஸ் கட்சியின் கண்கள் வாக்குகளை 'வாங்கு'வதிலேயே பதிந்திருந்தன. முயலின் மீதே குறி வைத்திட்ட வீரனைப் போல்.

நாம் முயல் வேட்டைக்கு முனைிற்காமல், யானையை எதிர்த்திடும் பணியிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தோம்.

யானை தப்பிவிட்டது; முயல் செத்துவிட்டது.

அதனல்தான் அவர்களுடைய வெற்றியை விட நமது தோல்வியே பெருமைக்கு உரியது என்று நாம் சொல்லுகின்ருேம்.

இது நம்முடைய மனதுக்கு ஆறுதல் கிடைக்கச் சொல்லிக் கொள்ளும் சமாதானம் அன்று. உண்மையின் உருவம்.

எப்படியோ ஒரு வழியாகக் காங்கிரஸ் வெற்றிபெற்றுவிட்டது.

போதுமா இந்த வெற்றி? இதோடு அதன் வேலை முடிந்திடு

கின்றதா? இதிலே நமக்கு அக்கறை இல்லை என்றாலும், 'கல்கி'ப் பத்திரிகைக்கு அக்கறை இருக்கிறது. அதனால் அந்த இதழ் என்ன சொல்லுகின்றது? காங்கிரஸ் கட்சிக்கும், அமைச்சர்களுக்கும் சில எச்சரிக்கை விடுகின்றது.

......தி. மு. க. வினர் மீதும், கம்யூனிஸ்டுகள் மீதும் பேசச் சந்தர்ப்பம் கிடைக்கும்போது வசைமாரி பொழிவதல்ல. மக்களுக்கு நிரந்தரமான பயன் அளிக்கக்கூடிய நற்பணிகள் புரியவேண்டும். குறைந்த பட்சம், தீயபணிகள் செய்யாமலாவது இருக்கவேண்டும். நிர்வாகத்தைச் சர்க்கார் காரியதரிசிகளிடம் ஒப்படைத்துவிட்டு ஊர் ஊராகச் சுற்றுப் பிரயாணம் செய்வதுமட்டும் போதாது. மக்களின் கஷ்ட நஷ்டங்களை உணர்ந்து உடனுக்குடன் பரிகாரங்கள் தேடி நன்மை புரிந்தால் அதுவே காங்கிரசுக்குச் செல்வாக்கைத் தேடித்தரும்.

ஒரு சில நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் காங்கிரஸ் செல்வாக்கையும் பதவியையும் உபயோகிப்பதைவிட்டு, தங்களுடைய ஒருசில நண்பர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும் பெருவாரியான ஏழைமக்களுக்கு இலாபம் விளையக்கூடிய செயல்களை மந்திரிகள் புரிந்தாலே போதும்.

இதுதான் கல்கிப் பத்திரிகை காங்கிரசுக்குத் தரும் எச்சரிக்கை!

இன்றையதினம் ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்களிடம் என்னென்ன குற்றங்குறைகள் இருக்கின்றன என்பதற்கு இந்தப் பட்டியல் ஒரு சின்ன எடுத்துக்காட்டு. நாம் யாராவது இவ்வளவு சொல்லத் தேவையில்லை, இதிலே பாதி சொல்லியிருந்தாலும் எதிர்க்கட்சி எரிச்சலில் எதை வேண்டுமென்றே சொல்லுகின்றார்கள் — என்று சொல்லிடமுடியும்.

'கல்கி'ப் பத்திரிகை எதிர்க்கட்சியன்று. அவர்களுடைய சொந்தக் கட்சிக்குக் கடமைப்பட்ட ஏடு. அதிலே எச்சரிக்கை என்ற பெயரிலே

குற்றப்பட்டியல்!

வேடிக்கையாக இருக்கிறது; என்றாலும் காங்கிரஸ் வெற்றி பெறுகின்றது!

பேசச் சந்தர்ப்பம் கிடைக்கும் போது வசைமாரி பொழிவது.

காங்கிரஸ் அமைச்சர்களின் இயல்பு என்பதை இந்த ஏடு எடுத்துச் சொல்கிறது. வசையை அளந்து இங்கு இவ்வளவுதான் என்றில்லாமல் மழை(மாரி)போலத் தாராளமாகப் பொழிகின்றார்களாம். கல்கி சொல்கிறது.

நிரந்தர நற்பணிகள் புரியவேண்டும். குறைந்தபட்சம் தீயபணிகள் செய்யாமலாவது இருக்கவேண்டும்.

நரிவலம்போனால் நல்லதா, இடம்போனால் நல்லதா என்று கேட்டானும் ஒருவன். இடமும் போகவேண்டாம், வலமும் போகவேண்டாம், மேலே விழுந்து கடிக்காமல் இருந்தால் சரிதான் என்றானும் மற்றவன். இப்படிச் சிலபேர் இருக்கின்றார்கள்.

'நல்லது செய்தல் ஆற்றீர்
ஆயினும்
அல்லது செய்தல் ஒழிமின்'

என்று புலவர் பெருகனார் அறிவுரை கூறுகின்றார். அப்படிப் பட்டவர்களுக்கு அதை இன்று நாட்டுக்கு நன்மைசெய்திடவேண்டிய அமைச்சர்களிடம் எடுத்துக் காட்டவேண்டும் நிலையில் தமிழகம் இருக்கிறது. தீயபணிகள் செய்யாமலாவது இருக்கவேண்டுமாம்! இந்தச் சொல்லிலே புலப்படும்சோகம் எவ்வளவு ஆழமானது என்பதை நாட்டு நடப்பு அறிந்தவர்கள் உணர்ந்து கொள்வார்கள். கல்கி சொல்கிறது.

"நிர்வாகத்தைச் சர்க்கார் காரியதரிசிகளிடம் ஒப்படைத்துவிட்டு ஊர் ஊராகச் சுற்றுப் பிரயாணம் செய்வது மட்டும் போதாது."

நிர்வகிக்க வந்தவர்கள், இந்த அமைச்சர்கள். அதைச் செயலாளர்களிடம் ஒப்படைத்துவிட்டு,— ஒருவேளை ஓய்வு பெறுகின்றார்களோ என்று கருதவேண்டாம்,— ஊர் ஊராகச் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்களாம். அது மட்டும் போதாது என்று தான் கல்கி சொல்கிறது. கல்கிக்கு இருக்கும் அநுதாபத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தால் செய்து தொலையுங்கள், ஆனால் அது மட்டும் போதாது என்கிறது. அப்படியாயின் இப்போது அமைச்சர்கள் அதுமட்டும்தான் செய்கிறார்களோ?

இல்லை, அது மட்டும் இல்லை வேறு சில செயல்களும் செய்கிறார்களாம். அது என்ன அற்புதம் என்று திகைப்போருக்கு அந்த ஏடே பதில் சொல்கிறது.

ஒரு சில நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் காங்கிரஸ் செல்வாக்கையும் பதவியையும் உபயோகிப்பதை விட்டு......

என்னதான் சொல்கிறார்கள் அமைச்சர்கள் இதற்கு. ஒருவேளை இது நமது ஏடுகளில் வந்திருந்தாலாவது நாங்கள் மிகவும் உயர்ந்த இடத்தில் இருக்கிறோம், எங்கள் பார்வையில் இது படவில்லை என்று சொல்லலாம்.

இந்தக் குற்றச்சாட்டு, இல்லை— எச்சரிக்கை—கல்கியில் வந்திருக்கிறது. நேற்று அல்ல. 3-8-1958 இதழில் வந்திருக்கிறது. இன்று வரை இதை மறுத்து எந்த அமைச்சராவது, எங்காவது, எவரிடத்திலாவது, எப்போதாவது பேசியது உண்டா? மூச்சுவிட்டது உண்டா? ஏன் இன்னும் வாய் திறக்கவில்லை? மௌனம் சம்மதத்தின் அறிகுறியா? என்றெல்லாம் சிலர் மனதிலாவது எண்ணங்கள் எழும் அல்லவா?

இவ்வளவு இழிவு உள்ளே இருக்கிறது. வெளியிலே வெற்றி எங்களுக்குத்தான்என்று எக்காள முழக்கம் இடுகின்றனர் காங்கிரஸ் காரர்கள்.

எக்காள முழக்கம் இருக்கட்டும் —இதற்கு என்ன சொல்கிறீர்கள்? என்று மக்கள் கேட்கவேண்டும்.

கேட்டால்தான் உண்மை புலப்படும்.

✻

கொடுங்கோல் ஆட்சி எந் நாட்டில் நடைபெறுகிறதோ, அந் நாடு நோயினால் பீடிக்கப்பட்டிருக்கின்றதெனப் பொருள்.

✻

ஒரு நாட்டில் பிச்சைக்காரர்கள் இருந்தால் அங்கே திருடர்கள், கொள்ளை அடிப்பவர்கள் முதலியோர் இருப்பார்கள் என உறுதியாய் நம்பலாம் இவைகட்குக் காரணம் ஆட்சியின் ஒழுங்கீனமே.

சாத்தியமல்ல

—மதி—

திருவனந்தபுரத்திலே கூடி, தீர ஆலோசித்திருக்கிறார்கள்.

கட்சியின் மூளையென்று கருதப்படுகிறவர்கள்கூட, காரசாரமாகக் கண்டனமும் கிளப்பியிருக்கிறார்கள்.

"மாநில அரசின், விவகாரங்களில், மத்திய சர்க்கார் குறுக்கிடுவது தகாது; ஆகாது. நல்லதல்ல; அரசியல் சட்டத்துக்கு முரண்," என்று அறிக்கையும் விடுத்திருக்கிறார்கள். கம்யூனிஸ்டுகள்தான், இவ்விதம் செய்திருப்பவர்கள்!!

கேரளத்தில் நடைபெறும் கம்யூனிஸ்டு சர்க்காரைப்பற்றி பல விதப் புகார்கள் கிளம்பியுள்ளன. கட்சிக் 'காம்ரேடு'களை விட்டு, மாற்றுக் கட்சியினரைத் தாக்குகிறார்களாம் கேரளத்தில்! அதற்கு ஆதரவாக இருக்கிறதாம், கேரள அரசு!!

இந்தக் குற்றச்சாட்டை, நேரு பண்டிதரே, வீசியிருக்கிறார். இது, வேதனையைக் கிளப்பியிருக்கிறது, கம்யூனிஸ்டுத் தோழர்களுக்கு.

"மாகாண சர்க்காருக்கு எதிராக மத்திய சர்க்கார் நடக்கலாமா? ஒரு மாகாணத்தில் நடைபெறும் அரசைக் கவிழ்க்க, மத்திய சர்க்கார் முயற்சிக்கலாமா?"

கனலெனக் கிளம்புகிறது கேள்வி! கம்யூனிஸ்டுகள், கண்டனக் குரல் கிளப்புகிறார்கள்—தங்களுக்குப்பாதகம் ஏற்படுகிறதென்றதும்!!

✻

அகில பாரதத்துக்கும் அரசியலமைப்பைத்! தயாரித்தவர்கள், காங்கிரஸ் கட்சிக்காரர்கள்.

வடக்கும் தெற்கும், கிழக்கும் மேற்கும் ஒரே நாடாக இருக்க வேண்டுமென்பதில் அதிக அக்கறை கொண்ட, வடநாட்டுத் தலைமைதான், இந்த அரசியலமைப்பைத் தயாரித்தது.

எல்லோரையும் வசப்படுத்தும் நேருவும், இரும்பு மனிதரான பட்டேலும், அவர்களுக்கு உறுதுணையாயிருந்த காங்கிரஸ் காரியக் கமிட்டியும், காட்டிய வழிப்படி தயாரிக்கப்பட்டதுதான், இந்த அரசியல்.

டி. டி. கே, அல்லாடி போன்றோர் அந்த அரசியலமைப்புக் குழுவில் இருந்தார்கள்! கூலிக்கு மாரடிக்கும் கொள்கையுடைய இவர்கள், வடநாட்டுத் தலைமை இட்ட கட்டளையை, சரியாக முடித்துக்கொடுத்தார்கள். இந்தியா என்றும் ஒரே நாடாக இருக்க, எப்படியெப்படி அரசியல் முறைகள் இருக்கவேண்டுமோ, அப்படியே ஆக்கிக்கொடுத்தார்கள்.

அதில் ஒரு அம்சம்:- ஏதாவது ஒரு மாநிலம், எதையாவது விரும்பினால், மூன்றில் இரண்டு பங்கு 'மெஜாரிடி' பார்லிமெண்டில் இருக்கவேண்டும் என்பதாகும்.

உதாரணமாக, பம்பாய் தனக்கு வேண்டுமென்று மராட்டியர் ஆசைப்பட்டாலும், சென்னை தன் பெயரைத் தமிழ்நாடு என்று வைத்துக்கொள்ள விருப்பப்பட்டாலும், ஆந்திரம் — கேரளம் — தமிழகம் — கன்னடம் நான்கும் சேர்ந்து ஒரு தனியரசு பெற விழைந்தாலும், பார்லிமெண்டில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் ஒப்பம் அளிக்கவேண்டும். அப்போதுதான், சட்டப்படி, அந்தச் சலுகையைப் பெறமுடியும்.

✻

மூன்றில் இரண்டு பங்கு! — எப்படி முடியும்? எல்லா மாகாணங்களிலும் பெரும்பான்மையான செல்வாக்கு எந்தக் கட்சிக்கு இருக்கிறதோ, அதுதான் மூன்றில் இரண்டுபங்கைப் பெறமுடியும்.

இன்றுள்ள சூழ்நிலையில் இந்த வாய்ப்பு, காங்கிரசுக்குத்தானிருக்கிறது. கேரளம் தவிர்த்து, பிற மாகாணங்களில் எல்லாம், காங்கிரஸ் கட்சியினர்தான் ஆட்சி நடத்துகிறார்கள்.

சட்டம் கொணரவேண்டுமாயினும், சட்ட அமைப்பில் ஏதாவது மாறுதல்கள் செய்யவேண்டுமானாலும் காங்கிரசு மனம் வைத்தால் தான் முடியும். மாகாண அரசுகள் அவர்கள் வசம் இருக்கிறதென்பது மட்டுமல்ல, மத்யப் பார்லிமெண்டிலும் அவர்கள் தான், அதிகமாக இருக்கிறார்கள்.

எங்கே ஒரு மாற்றுக்கட்சி ஆட்சி அரும்பினாலும், அது டில்லியின் தயவை நாடவேண்டியதாக இருக்கிறது. டில்லி விரும்பினால் அதைச் சாய்க்கும்; அல்லது வாழவைக்கும்.

முன்பு கேரளத்தில் நிகழ்ந்தது இபபடி! ஆந்திரத்திலும், பஞ்சாபிலும்கூட இப்படி ஏற்பட்டன!! மாற்றுக் கட்சி ஆட்சியை ஒரே நிமிடத்தில், குடியரசுத் தலைவர் நீக்கிவிட்டு, கவர்னர் ஆட்சியைப்

பிரகடனம் செய்யக்கூடிய சட்டம், இருக்கிறது, அரசியலமைப்பில்.

இந்திய உபகண்டத்தில், காங்கிரசைப்போல இன்னொரு எதிர்க்கட்சி உருவாகி, பல மாகாணங்களில் அமர்ந்து, பார்லிமெண்டையும் கைப்பற்றினாலொழிய, எவ்வித மாறுதலும் செய்யமுடியாது. அப்படிப்பட்ட எதிர்க்கட்சி அகில இந்திய அடிப்படையில், உருவாகும் அறிகுறி உண்டா எனின், நிச்சயமாக இல்லை! இப்படியேற்படாது இனி, என்னும் தைரியத்தால்தான் போலும், இப்படிப்பட்ட அரசியலைக் காங்கிரசார் தயாரித்தது!

*

ஏன், இல்லை எதிர்க்கட்சிகள்? கம்யூனிஸ்டுகள் இல்லையா--இந்து மகாசபை இருக்கிறதே — சோஷலிஸ்டுகள் உள்ளனரே — பிரஜா சோஷலிஸ்டுகள் தென்படுகிறார்களே எனலாம்! உண்மை ஆனால் இந்தக் கட்சிகள், காங்கிரசு அளவுக்கு, வளரமுடியுமா என்பது நிச்சயம் சந்தேகப்படவேண்டியதாகும்.

அப்படி வளர்வதென்றாலும், எத்தனை ஆண்டுகள் ஆகுமென்பதும், அத்தனை ஆண்டுகளுக்கும் காங்கிரஸ்தானே இருக்கும் என்பதும், யோசிக்கப்படவேண்டியதாகும். மேலே குறிப்பிட்டப்பட்ட எதிர்க்கட்சிகள், இந்திய உபகண்டத்தின் ஒவ்வொரு வட்டாரத்தில் ஒவ்வொரு விதமாக வளர்ந்துள்ளனவேயன்றி, ஒருசேர காங்கிரஸ் அளவுக்குப் பலம்பெறும் என்று கூறிடும் அறிகுறியும் இல்லை.

இன்னொன்றும் இருக்கிறது— இந்தச் சூழ்நிலையில், ஒவ்வொரு மாநிலத்திலும் அந்த மாநிலத்தின் அடிப்படையில், பல அரசியல் கட்சிகள் உருவாகியிருக்கின்றன. கம்யூனிஸ்டுகள்—இந்துமகாசபை — சோஷியலிஸ்டு — பிரஜா சோஷியலிஸ்டு என்பவை தவிர்த்து, ஒரிசாவில் 'ஞானதந்திரபரிஷத்' இருக்கிறது; பஞ்சாபில் 'அகாலிதளம்' உள்ளது; பம்பாயில், 'மராட்டியசமதி' இருக்கிறது; குஜராத் பகுதியில், 'மகா குஜராத் இயக்கம்' உள்ளது— சென்ற கிழமை கேள்விப்படுகிறோம், பீகாரில் 'நாகவிதர்ப்ப அண்டோலன்' எனும் பெயரில் ஒரு இயக்கம் உருவாகி இருப்பதாக.

இப்படி அந்தந்த வட்டாரத்தின் மொழி, உரிமைகள், வளம் முதலியவைகளுக்காக வாதாடும் கட்சிகள்தான் வளர்ச்சி பெற்றும் வருகின்றன. எதிர்காலத்தில், இவைகள்தான் வளர்ச்சி பெறுமே ஒழிய, "அகில இந்தியம்" பேசுபவைகள், தாண்டவேண்டிய பள்ளங்கள் பல, தெரிகின்றன.

இந்த வட்டாரக் கட்சிகளிடம்தான், காங்கிரஸ் பலத்த தோல்வியைப் பெறுகிறது! ஒரிசாவில் ஆட்சியைக் கைப்பற்றுமளவுக்கு, ஞான தந்திர பரிஷத் இன்றேயிருக்கிறதல்லவா? இந்த வட்டாரக் கட்சிகள் வளர்ந்து, ஆங்காங்கும் அவைகளே ஆட்சியை நிறுவி அவைகளின் பிரதிநிதிகளே பார்லிமெண்டிலும் அமருகிற வாய்ப்பு அதிகம் இருக்கிறது. காங்கிரஸ் ஒன்றைத் தவிர, ஏனையவைகளுக்கு இந்த வாய்ப்புக் கொஞ்சம்தான் உண்டு.

காங்கிரசும் தோற்கடிக்கப்பட்டு, இந்த வட்டாரக் கட்சிகள் பலம் பெறுமானால், 'டில்லி' என்னவாகும்? டில்லியில் எந்தக்கட்சியின் ஆட்சி நீடிக்கும்?—கதம்ப ஆட்சியா! அல்லது, மெஜாரிடி ஆட்சியா!! என்பதெல்லாம் யோசிக்கவேண்டியவைகளே.

* * *

காலம் ஓடுகிறது! மாற்றங்கள் ஏராளம் மலருகின்றன!!—இந்நிலையில் 'அகில இந்தியம்' எத்தனை நாளைக்கு நிலைக்கும் என்பது ஐயத்திற்குரிய ஒன்றாகியே வருகிறது.

எதிர்காலத்தில், இந்திய உபகண்டத்தின் பல பகுதிகளில் பற்பல கட்சியின் அரசுகள் ஏற்பட்டு —மத்யபீடத்தில் 'மெஜாரிடி' யுள்ள ஒரு கட்சியின் ஆட்சி, அமைகிறதென்று வைத்துக் கொள்வோம்.

நிச்சயம், இன்று காங்கிரஸ் செய்கிற காரியங்களையே அவையும் செய்யும். இன்றாவது, காங்கிரஸ், ஒரே ஒரு கேரளத்தின்மீது தான் தன் கைவரிசையைக் காட்டுகிறது! நாளைக்குப் பல இடங்களில், பல கட்சி ஆட்சிகள் என்றால், "பல கேரளங்கள்" ஏற்படும்!!

அப்போது—தகராறுகள் சாதாரணமாகும்.

மத்யபீடம்—சாயுமளவுக்குச் சச்சரவுகள் கிளம்பும்.

எனவேதான், இவ்வளவு பெரிய பூமிப்பரப்பு, ஒரே ஆட்சிக்குள் நிலைப்பது சாத்யமல்ல என்கிறார்கள் அறிவாளிகள்.

★

விரைவில் வெளிவருகிறது!

"அன்னை"

ஆசிரியர்:
டாக்டர் சத்தியவாணிமுத்து M.L.A.

திங்கள் ஒருமுறை!
உங்கள் கரங்கட்கு வருமுறை!!

"வாள்தருவாள், வேல்தருவாள்,
வேகத்திற்குயிர்தருவாள்,
தாள்பணியாள், தலைகுனியாள்
தமிழ்காப்பாள் நம்மன்னை"

ஆண்டு சந்தா ரூ. 2—50 காசு
6-மாத சந்தா ரூ. 1—25 காசு
தனி இதழ் ரூ. 0—20 காசு

விபரங்கட்கு:—

"அன்னை"
179, போர்ச்சுகீஸ்சர்ச் தெரு,
சென்னை-1.

காஞ்சிபுரம் ... திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிட...

திராவிட நாடு

24—8—58 | வார வெளியீடு | விலை 16 காசு

834
3 18

நேருவின் சீலப்பஞ்சம்!

[தமிழ்ப்பித்தன்]

இந்தியர் நாமெலா மொன்றெனவே
இங்கிதம் பேசிடும் நேருபண்டிதர்
சிந்தினர் தமிழர்க ளாறெனவே
சிங்களத் தீவினில் குருதியெனும்
சிந்தையில் வேல்விடுந் தன்மைநிகர்

சேதியைக் கேட்டது மென்செய்தார்?
அண்டையி லிருக்கும் நாட்டினிலே
அண்டிப் பிழைத்திட சென்றவரை
பண்டார நாயகா ஆட்சியிலே
படுகொலை செய்தன ரென்றால்
"பண்டைநாள் நடைபெறும் கிளர்ச்சி

அங்குளோர் குடும்ப விஷயமாகும்
அதில்நாம் தலையிடக் கூடா"தென்றார்.
அங்கேரிப் பிரதமர் இம்ரேநாகி
அக்கிரமமாய் மாண்டா ரென்றபோது
வெங்கொடுமை யெனவெகுண் டெழுந்தே
வித்தகநேரு அறிக்கை விட்டார்.

செத்ததோ அவர்தம் பஞ்சசீலம்
அன்றிச் செல்லாதோ அதிங்கே!
இத்தரை மீதினில் சமாதானம்
எந்நாளுங் குன்றாது நிலைபெறவே
நித்தமும் பேசுவார் பஞ்சசீலம்
நெஞ்சினி லேனிந்த சீலப்பஞ்சம்?

கேளாய்! சேதி!

பாகிஸ்தானம் பிரிந்தபோது, இந்தியாவுக்குத் தரவேண்டியது என ஒதுக்கப்பட்ட தொகை 138-கோடி ரூபாய்களாகும். இந்தத் தொகை, ஆண்டுகள் பதினொன்றாகியும், டில்லியால் இன்னும் பெறமுடியவில்லை. இதற்குக் காரணம், அண்டை நாடாகயிருந்தும், ஆதிமுதல் ஒன்றைவிட்டு ஒன்று தொடர்ந்து தகராறுகள் வளர்ந்து கொண்டேயிருப்பதாகும் — பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும். ஒன்று இரண்டல்ல 138-கோடி ரூபாய்! அதாவது சென்னை அரசின் ஆருண்டு கரல வருமானம்!!

*

"புதிதாக ஒரு நீர்ப்பாசனத் திட்டம் நிறைவேற்றினார்கள்! எங்கே வடக்கேதான்? அதிலிருந்து, மின்சாரம் எடுக்கலாம் என்றும், ஏற்பாடு செய்தார்கள். அணைக்கட்டு திறக்கப்பட்டது—வேகமாக ஓடும் நீரிலிருந்து மின்சாரமும் எடுக்கப்பட்டது — விழுந்த நீர், வாய்க்கால்களின் வழியும் ஓடிற்று. ஆனால், ஒரு விவசாயிகூட அந்த நீரை வயலுக்குப் பாய்ச்சிக்கொள்ளவில்லை! வரப்பு போட்டு, தேக்கிக்கொள்ளவில்லை!! சர்க்கார், மிரண்டது. கழனிகளிலிருக்கும் பயிர்களோ, தண்ணீரின்றி வாடின. தண்ணீரோ, வாய்க்கால்களில் ஓடுகிறது. விவசாயிகளைப்போய், "ஏனய்யா, தண்ணீரைப்பாய்ச்சவில்லை? உங்களுக்காகத்தானே அணை கட்டினோம்?" என்று சர்க்கார் அதிகாரிகள் விசாரித்தார்கள். அதற்கு அவர்கள் என்ன பதில் சொன்னார்களாம் தெரியுமா! "தண்ணீரிலிருந்து மின்சார சக்தியை அகற்றிவிட்டபடியால், எங்கள் பயிர்களுக்குப் பிரயோசனமில்லையென்று கேள்விப்பட்டோம். எதற்கு, எங்களுக்கு அத்தண்ணீர்?" என்று மறுத்துவிட்டார்களாம், அந்தத் தண்ணீரைப் பயன்படுத்திப் பாருங்கள —மின்சக்தி எடுபபதால் நீரின பயன் கெட்டுவிடாது—என்று சிலரை மிகச்சிரமப்பட்டு இணங்கவைக்க நேர்ந்ததாம். அவர்கள் "மாதிரி" பார்க்கட்டும் என்பதற்காக நீர்வையில் கூட பாதியளவு தள்ளிக் கொடுக்க நேர்ந்ததாம். இத்தகவலை இந்தூர் கல்லூரியொன்றில் பேசிய மத்ய பிரதேச உணவு மந்திரி, கடந்த கிழமை வெளியிட்டிருக்கிறார். மூடநம்பிக்கையின் உச்சத்தைப் பார்த்தீர்களா!!

*

திருடியதற்காக ஒருவனுக்குத் தூக்குத்தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது! லட்சமோ ஆயிரமோ, அல்ல அவன் திருடியது; சுமார் 5-ரூபாய் அதற்குத்தான், இவ்வளவு பெரிய தண்டனை. வேறு யாராவது திருடியிருந்தால். ஏதாவது அபராதம் போட்டிருப்பார்கள். திருடியவன் ஒரு நீக்ரோ! அதுவும்ஒரு வெள்ளைக்காரியிடமிருந்து திருடினான்!! இப்படிச் செய்யலாமா—இதற்குத் தூக்குத் தண்டனைதான் அளிக்கப்பட வேண்டும் என்று அலபாமா உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. நிற வேற்றுமை, நீதிதேவனைக்கூட மயங்க வைக்கிறது! என்ன விபரீதம்!

*

இந்திய உபகண்டத்திலேயே கலியாணமாகாதவர்கள் அதிகமாக இருக்குமிடம் எது தெரியுமா? கேரளம்தானும்! நூற்றுக்கு அறுபது வீதம் ஆண்களும், 48-வீதம் பெண்களும் கலியாணமாகாமல் வசிப்பதாக அரசினரின் 1951 புள்ளி விபரம் தெரிவிக்கிறது. பிரமச்சாரிகள் அதிகம் இல்லாத இடம பீகார் மாநிலமாம. இந்த உபகண்டத்திலேயே, அதிகமாகப் படித்தவர்கள் உளள இடமும கேரளம் தான். இங்கு ஆணகளைவிடப் பெண்கள் கல்வி அதிகமாக உள்ளது; என்றும் கணக்கிடு கூறுகிறது.

*

50-லட்ச ரூபாய் செலவில் தங்கத்தாலே தண்ணீர்த் தொட்டிகட்டப்போகிறார்களாம் திருப்பதியில், சாமி குளிப்பதற்காக! 50-லட்ச ரூபாய்!! இட்டத்தட்ட பத்து கல்லூரிகள் கட்டலாம்—இரண்டு உயர்தர விஞ்ஞானக் கழகங்கள் வைத்து பலருக்குப் பயிற்சியளிக்கலாம்-- எனினும் ஆலயத்தைப்புரக்கும் அறநிலையத்தாருக்கு அந்த யோசனை வரவில்லை. தங்கம் வாங்கி, கிணறுபோலத்தொட்டி கட்டப்போகிறார்களாம். ஆண்டவர்களிலேயே, திருப்பதியான் தான், இப்போது டாடா பிர்லா போல இருப்பவர். தங்கமில்லை என்று தவிக்கிறது சர்க்கார். தாலிச் சரடையும், கம்மல்களையும்கூட தங்க செலாவணிக்காக "தானம்" தருமாறு, நேரு பண்டிதர் அடிக்கடி விண்ணப்பிக்கிறார். ஆனால், திருப்பதியில், 50 லட்சம் ரூபாய் தங்கத்தால் தொட்டி கட்டப்போகிறார்கள் தொட்டி!!

*

பால் மனிதனுக்கு சத்துள்ள ஆகாரம்! பால் தரக்கூடியது பசு!! — என்பது, யாவருக்கும் தெரியும். விஞ்ஞானத்தின் மூலம், பசு இல்லாமலே பால் உற்பத்தி செய்யமுடியுமென்று இலண்டனுக்கருகிலுள்ள கெர்போர்டு ஷயர் விஞ்ஞான நிலையத்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள். பசு தின்னும், புல் புண்ணாக்கு, பருத்தி முதலியவைகளை "பசுபோல் செய்யப்பட்ட ஒரு இயந்திரத்தின் வாயில்" போட்டு, மடியைத் திருகினால், பால் வடியுமாம். "பசுபோனற இன் வயிற்றில் அதற்கான இயந்திரங்கள்" வைக்கப்பட்டுள்ளனவாம். பாலில் இருக்கும் சத்துப் பொருள்களுக்குக் காரணம் பசு தினனும பொருள கள் எனக்கண்டுபிடித்து, அவைகளைக் கொண்டு பாலாக்கும முயற்சியில் வெற்றி பெற்றிருக்கின்றனர், மேலநாட்டார். கோழிமுட்டை, போனறவைகளைச் செய்யும ஆராய்ச்சியும் நடைபெறுகிறதாம்.

நினைப்பில் உள்ளதாம்!

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [24—8—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 6

உலகமுழுதும் ஒரே விதமான மொழியும், எல்லோரும் ஒரேமாதிரியான உடையணியும் பழக்கமும், ஒரே விதமான உணவுப் பழக்கமும் நடத்தையும் ஏற்பட்டுவிட்டால், 'எவ்வளவு நன்றாகயிருக்கும்! — என்று, மகாத்மாக்களும், கதாசிரியர்களும் நினைக்க முடியுமே யன்றி, இன்றுள்ள உலகில், நிச்சயமாக சாத்தியமில்லை. போட்டிகளிலும், சண்டை சச்சரவுகளிலும், நிறவேற்றுமையிலும் ஈடுபட்டுக் கிடக்கும் மனிதன், இந்த முயற்சியிலீடுபட்டாலும் ஆங்காங்கிருக்கும் பருவ நிலையும், இடத்தின் சூழமைப்பும் இடங்கொடுக்கும் என நம்புவதற்கில்லை. நான்குமுழம், நம்மவருக்குப் போதும்; கடும்பனி உறையும் காஷ்மீரத்தாருக்குக் கம்பளியில்லாமல் முடியாது! கொஞ்சம் இறைச்சியும் ரொட்டியும், வெள்ளையருக்குப் போதுமானதாயிருக்கலாம்; குஜராத்திக்குக் கோதுமை சப்பாத்தியும், இனிப்பும் வேண்டும்; தமிழ்நாட்டினருக்குச் சாம்பாரும் இட்லியும் அளிக்கும் ருசி தனிதான். இதைத்தவிர்த்து, மொழிவேறு உள்ளது! மொழித்துறையில், உலக முழுமைக்கும் ஒரே விதமாக உண்டுபண்ணுவதென்பது ஒருபோதும் இயலாது!!

எனவேதான் உலகில் ஒவ்வொரு மொழியின் பேராலும், ஒவ்வொருவரின் நடையுடைகளைக் கொண்டும், அவர்களின் புராதனப்பாரம்பரியத்தை வைத்தும், இந்தந்த நாடு என்று எல்லைக்கோடு இட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தந்தக் கோட்டுக்குள், அவரவர்கள் அரசமைப்புகள் ஏற்படுத்திக்கொண்டு, தன்னாடு, தன்மொழி, தன்மக்கள் என்று சொல்லிக்கொண்டு வாழ்கின்றனர். இந்த எல்லைகளையும் தாண்டி, சில கோட்பாடுகள் சென்றன! புத்தரின் பொன்மொழிகள், இலங்கை புகுந்தன—சீனம் சென்றன — ஜப்பானுக்குள் நுழைந்தன. இயேசுவின் கோட்பாடுகள், ரோமாபுரியைவிட்டு ஐரோப்பாவுக்குள் நுழைந்தன, இங்கிலாந்துக்குள் சென்றன, கடைசியில் அமெரிக்காவுக்கும் இன்னும் பல இடங்களுக்கும் போயின. நபிகள் நாயகத்தின் வாக்குகள், மத்திய கிழக்கை ஆக்ரமித்து, இந்தோனேசியா உள்பட பற்பல இடங்களுக்கும் சென்றன. இப்படி இந்தக் கோட்பாடுகள் சென்று, பலதேசங்களில் கொடி நாட்டியும், அந்தந்த தேசங்கள் தத்தமது எல்லைகளைவிட்டுவிடவோ, எல்லாம் "புத்த உலகம்" 'கிருஸ்துவ உலகம்" "இஸ்லாமிய உலகம்" என்று மாறிவிடவோ இல்லை! சீனம் இருக்கிறது—சிங்களமும் உள்ளது; இங்கிலாந்து உளது—ஜெர்மனியும் இருக்கிறது; எகிப்து இருக்கிறது — இந்தோனேஷியாவும் உள்ளது.

உலகின் ஆதிகால சரித்தையும், நாடுகள் உருவெடுத்ததையும், ஆங்காங்கு எப்படியெப்படி மொழிகள் உருப் பெற்றனவென்பதையும், எப்படி மனிதன் ஒரு சமுதாயமாக வாழத் துவங்கினான் என்பதையும் ஆராய்ந்தால், சுவையோடுமட்டுமின்றி சோக நிகழ்ச்சிகளையும் நாம் அறிய நேரும். வாழ்ந்தவைபல உண்டு! புதிதாக அரும்பியவை ஏராளமுண்டு! சரிந்த அரசுகள் ஏராளம்! முளைத்த, புது நாடுகள் பல!!

ஒரே மதம் — ஒரே பேச்சு மொழி — ஒரே நடையுடைபாவனைகள் இருப்பினும் கூட, தமது வசதிகள் வாய்ப்புகளை வைத்து, தனிநாடாக வாழ்ந்து வருபவைகள் உண்டு. அமெரிக்கருக்கும் ஆங்கிலேயருக்கும் எந்த விஷயத்திலும் அதிக வித்தியாசம் கிடையாது! அண்ணன் தம்பிகள்தான்; ஆயினும், இரு வல்லரசுகளாகத்தானே உள்ளனர். எனவே, மொழி, நடையுடை, மதம், பழையபண்பாடு இவைகள் மட்டுமின்றி தேவையும், வசதியும் கூடுகிறபோது, ஒன்றாகயிருப்பினும் கூட, நாடுகள் தனித்தனியாக உருவாக ஏதுவாகின்றது.

இந்த உண்மைகளை அறியாதவரல்ல, கிருஷ்ண மேனன்! நேருவின் சகாவான அவர், கிட்டத்தட்ட உலகத்தையெல்லாம் நேரில் சென்று கண்டவர். நீண்ட நாளாக ஏடுகளிலேயே எண்ணத்தையும் சிந்தனையையும் பதித்தவர். அதனால்தான், இந்த கிழமை, சென்னைப் பல்கலைக் கழகத்தார், அவரை யழைத்து, பட்டமளிப்பு விழாவில் அறிவுரையாற்றச் செய்திருக்கிறார்கள். அவர் பேசும்போது குறிப்பிட்டு இருக்கிறார்:—

> "ஒரு தேசத்தை உருவாக்குவது எது? நாம் அணிந்துகொள்ளும் ஆடைகள் ஒரே மாதிரியாக இருப்பதால் அல்ல, ஒரேவிதமான உணவுகளை உட்கொள்ளும் பழக்கப்பட்டவர்களாக இருப்பதால் அல்ல, ஒரே விதமான மொழியைப் பேசுவதாலோ அல்ல, ஒரே மதத்தைச் சேர்தவர்களாக இருப்பதாலே அல்ல. இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று நினைக்கிறோமே, அந்த நினைப்பால் உருவாவதுதான், தேசிய உணர்ச்சி. இந்த உணர்ச்சியால்தான் குமரி முதல் இமயம் வரையில் நமது நாடு என்கிற உணர்ச்சியால்தான் நாம் ஒன்றாகியுள்ளோம்."

இந்திய தேசீயம் பற்றி, கிருஷ்ணமேனன் அவர்கள் தரும் விளக்கம் இது! மொழி—உணவு—நடை

யுடைபாவனை — இவைகளாலே அல்லப்பா, நாம் மனதில் நினைக்கிறோமே, அந்த நினைப்பால்தான் இவ்வளவு பெரிய தேசம் உருவாகியிருக்கிறது, என்கிறார்! மேனனின் மேதாவிலாசத்தைப் பாராட்டுகிறோம். கடுகு, கடுகுதான் என்று சொல்ல முடியும் சாதாரணமானவர்களால். ஆனால், கடுகைக்காட்டி மலையென்று சொல்ல, மிகமிக வாக்குச்சாதுர்யம் வேண்டும். "இந்தியா ஒரே தேசம்! யாரே இதனை மறுக்கமுடியும்? இமயமுதல் குமரிவரை, எல்லோரும் பேசும் மொழி ஒன்றுதான்! நடையுடை பாவனைகள் ஒன்றுதான்! நாகரிகமும் பண்பாடும் ஒன்றுதான்!" என்று அடித்துச் சொல்ல முடியவில்லை. அதனால் பொதுவாக, ஒரு நாட்டுக்கு என்று கருதப்படும் அந்த வரையறைகளாலா, ஒரு தேசம் இருக்கிறது—என்று கேட்டு, உள்ளத்திலே இருக்கிற ஒற்றுமை நினைப்பால் உருவானதே நமது தேசம், என்கிறார்! இந்த ஒற்றுமை நினைப்பை என்று இழக்கத் துவங்குகிறோமோ அன்றே, இத்தேசம், சிதைந்தது, என்றும் எச்சரிக்கிறார்!!

ஒற்றுமை நினைப்பு — யாராரிடத்தில் உள்ளது, இந்திய உபகண்டத்தில் வாழும் எல்லா மொழியினரிடத்திலும் இருக்கிறதா, பற்பல பண்பாடுகளுடன் வாழுகின்றனரே ஒவ்வொரு மாநிலத்து மக்கள் அவர்களிடமெலாம் இருக்கிறதா, என்று கணக்கெடுத்தால், வட்டார உணர்ச்சிதான் ஒவ்வொரு இல்லத்திலும் அவர்தம் உள்ளத்திலும் ஒளிவிட்டுப் பிரகாசிப்பதை, மேனனர் காணமுடியும். குஜராத்தியர்—மராட்டியர்—வங்காளிகள்—ஆந்திரர் — பீகாரிகள்—இப்படித்தானிருக்குமே ஒழிய. யாவரும் இந்தியர் என்பது பிறகுதான் வரும்! தெரியாமலா பாடினர் தாகூர் — பஞ்சாப, சிந்து, குஜராட்ட மராட்டா திராவிட உத்கலவங்கா, என்று!!

தேசம் என்பதற்கு, புதுவிளக்கம் தரவந்த மேனனர், ஒரு உண்மையை மறைக்கவில்லை அதாவது "பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, மனிதன் வாழ்ந்த இடம், தென்னிந்தியாவாகும். வெகு காலத்திற்கு முன்பே, மனித சமூகம் வாழ்ந்த மண் இது. ஆதிகாலத்தைவிட்டாலும், இந்நாடு எப்படியிருந்தது என்பதற்கு 7000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சரித்திரம் இருக்கிறது."

தொன்மையான நாடு—தொன்மையான மொழியுடையோர்—தொன்றுதொட்டு வாழும் கூட்டம் தென்னவர், என்பதை மேனனர் மறைக்கவில்லை! ஒரேவிதமான மொழி—ஒரேவிதமான மக்கள் வாழுகின்றனர் — எனவே இது ஒரு நாடு — என்றும் வாதாடவில்லை! ஆனால், மனதில் நினைப்புவேண்டும், அந்த நினைப்பில்தான் இருக்கிறது 'இந்தியா' என்று உருக உருக உரைக்கிறார்—வாதாடுகிறார்!!

இந்த நினைப்பு, நிலைக்குமானால், நிலைத்து வந்திருந்தால் உலகத்திலே பல நாடுகள் உருவாகியிராது —நினைப்பை இன்னும் கொஞ்சம் விசாலப்படுத்தி, 'அகில உலகம்' என்று சொல்லிக்கொண்டு, பரந்த மனோபாவத்துடன் வாழ முயற்சிக்கலாம்! மனிதன் எல்லோரும் ஒரே மாதிரியாக—ஒரே அமைப்பாக—ஒரே உலகமாக ஏன் வாழக்கூடாது?—என்று மகாத்மாக்கள், நினைக்கலாம்; கதாசிரியர்கள் தீட்டலாம். ஆனால், இயலுமா?—என்றால், நிச்சயமாக இயலாதன்றோ! அதுபோலத்தான், நினைப்பால் மட்டுமே, ஒரு பரந்த பூபாகத்தை ஒரே நாடாக வைத்திருக்கவேண்டும் என்று ஆசைப்படுவதும்!!

மொழியாலும், நடையுடையாலும், புராதனப் பண்பாலும் மட்டுமின்றி வசதியும் தேவையும் நெருக்கும் போது, தனியரசு பெற்றவைகள், உலக அரங்கில் உள்ளன. அப்படியிருக்கும்போது, இந்திய உபகண்டத்தில்,

தொன்மையானவர்கள்.
பழம்பெரும் மொழி கொண்டவர்கள்.
தனியாக வாழ்ந்தவர்கள்.

நாம், ஏன், தனியரசு பெற்று வாழமுடியாது! இந்தத் தகுதிகளோடன்றி, சேர்ந்துவாழ்வதால், வசதிகளையும் வாய்ப்புகளையும் வேறிழந்து, ஏமாற்றப்பட்டுமன்றோ வருகிறோம்! இங்கிலையில், எப்படி வளரும், அகில இந்தியா—எப்படி 'பாரதம்' நீடிக்கமுடியும், நினைப்பினால் மட்டும்!!

சர்க்கரை ருசிக்கும் என்பது, நினைப்பு. நினைக்கும் போது, ருசி, தெரியும். ஆனால், ருசியை அனுபவிப்பது, தின்னும்போதுதானே. காகிதத்தில் சர்க்கரை என்று எழுதி சாப்பிடு, ருசிக்கும் என்கிறார், மேனன்! நினைப்பில்தான் உள்ளது என்கிறார், இந்தியா!! நினைப்பிலிருக்கலாமய்யா, ஆனால் வாழும் போது, எமது மொழி சாகும்போது, எமது பகுதி வாடும்போது, என்ன உமது பதில் என்று கேட்கின்றனர், ஒவ்வொரு பகுதியினரும். நினைப்பு, எத்தனை நாளைக்கு இனிக்கமுடியும்!!

★

"ஊர் சுற்றுதே!"

ஏடுகளைப் புரட்டினால் இந்த மந்திரி அங்கே போனார், அந்த மந்திரியின் சுற்றுப்பயணம் என்கிற சேதிகளுக்குப் பஞ்சமில்லை.

உபதேர்தல் என்றால் எல்லோரும் போய் "டேரா" அடிக்கிறார்கள்—ஏதாவது ஒரு சாக்கில், ஊர் சுற்றிக்கொண்டேயிருக்கிறார்கள்.

ஜனநாயகயுகத்தில், மக்களை மந்திரிகள் சந்திக்க வேண்டுமென்பதும், அதற்காக சுற்றுப்பயணம் செய்யவேண்டும் என்பதும் தேவைதான். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமன்றோ! அளவறிந்து மட்டுமல்ல, அநாவசியமாகவும் ஊர் சுற்றுகிறார்களாம்!!

நாம் சொன்னால் கோபம் வரும் நமது மந்திரிகளுக்கு; அவர்தம் தலைவர் நேரு அவர்களே, பஞ்சாப் தலைநகராம் சண்டிகாரில் கடந்த 10ந் தேதி பேசும்பொழுது, கண்டித்திருக்கிறார், "அமைச்சர்கள் அடிக்கடி சுற்றுப் பிரயாணம் செய்யக்கூடாது. மந்திரியாக வருமுன், தொண்டனாக ஒவ்வொரு இடத்துக்கும் போய்க் கொண்டிருக்கலாம். ஆனால் மந்திரியான பிறகு, மேஜையடியில் உட்கார்ந்து அந்த வேலையைச் சரிவரப் பார்க்கவேண்டும். அதைவிட்டு ஊர் ஊராக அலையக்கூடாது" என்று,

நேரு இவ்விதம் கூறுகிறார்! அமைச்சர்கள் பதவியின் பொறுப்பு அறிந்து நடக்கவேண்டும் என்கிறார்! இங்கென்ன காண்கிறோம்—பதவியிருப்பதே, ஒவ்வொரு ஊருக்கும் போய், தி. மு. க.வைத் தூற்றத்தான் என்று பவனி வருவதைத்தானே!!

★

அங்கே சிங்களம்! இங்கே இந்தி!!

இன்னல்கள் எதிர்வந்தாலும்

இதயந்தளராத இலங்கைத் தமிழா!

உருக்கமான உன்னுடைய கடிதங்களைக் கண்டு கண்ணீர் சிந்தினேன். நான் மட்டும் கண்ணீர் சிந்தவில்லை! ஜூன் 22ம் தேதி திராவிடமே கண்ணீர் சிந்திக் கதறியது! ஆனால் இவ்வளவையும் கேட்டுக்கொண்டே கேளாதவர் போல் அமர்ந்துள்ளார்கள் இந்நாட்டின் ஆட்சியாளர்கள்!

தென்னாப்பிரிக்கத் தமிழர்களின் இன்னல்களைத் துடைத்திடுவதற்காகத்தான் காந்தியார் முதன் முதல் சத்தியாக்கிரத்தை ஆரம்பித்தார். அதன் பின்னால்தான் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகப் புரட்சி செய்து, ஆட்சியைப் பெற்றுப் பண்டிதரின் கையிலே கொடுத்துவிட்டுச் சென்றார். ஆனால்ஐயகோ! நினைத்தாலேநெஞ்சம் குமுறுகிறது! கண்களிலே கண்ணீர் பெருகுகிறது! தென்னாப்பிரிக்கத் தமிழர்களைவிட, இலங்கைத் தமிழர்களாகிய உங்களைவிட இழிந்த நிலையிலே இன்று வடக்கனுக்கு அடிமைப்பட்டு வாழ்கிறோம். எங்கள் கரங்களிலும் பொன் விலங்கு பூட்டப்பட்டிருக்கிறது. சிங்களவர்களின் கொடுமைகளால் துடிதுடிக்கும் உங்களைப்போலவே நாங்களும் இங்குள்ள ஆட்சியாளர்களின் கொடுமைகளால் வாடுகிறோம்! இந்நிலையிலே உங்கள் நிலையை உயர்த்தும் வகை தெரியாது திகைக்கிறோம்!

"எட்டுத் திக்கும் முரசு கொட்டும் முத்தமிழ், இன்று ஈழத்திலே இன்னல்பட்டு இழுக்குற்ற நிலையிலிருக்கிறது. சீர்கெட்ட சிங்களம், சிறப்பிழந்த சிங்களம், சிங்காரத் தமிழ்மொழியைப் பார்த்துச் சீறுகிறது! சீறுகின்ற சிங்களத்திற்கும், சிங்களவர்களுக்கும் சாட்டையடி கொடுப்பாரில்லையே...! ஐயகோ! மங்காத தமிழுக்கு மாசு கற்பிக்கிறார்கள்"—என்று கொந்தளிக்கும் இதயத்துடன் நீ எழுதிய கடிதத்தைக் கண்டேன். 'வெற்றி, எட்டுத்திக்கும் எட்ட முரசு' கொட்டிய தமிழ் மன்னர்களின் பரம்பரையிலே வந்த நல் இளஞ் சிங்கமே! 'எதையுந்தாங்கும் இதயம்வேண்டு'மென்றுதான் உனக்குக்கூற விரும்புகிறேன்!

இளந்தமிழா! இலங்கையில் மட்டும்தான் தமிழர்களுக்கு இந்த நிலையென எண்ணுகிறாயா? இங்கேயும் அதே நிலைதான்! சிறப்பிழந்த சிங்களம் சிங்காரத் தமிழ்மொழியைப் பார்த்து சீறுவதைப் போலவே, இந்தியென்ற கொடுமொழி, அழகு தமிழைப்பார்த்து நையாண்டி செய்கிறது! அங்கே சிங்களத்திற்கு மணிமகுடம்! இங்கேயோ இந்திக்குத்தான் மணிமகுடமாம்!

உன் பெயர் (தமிழ் மன்னன்) என எழுதியுள்ளாய்— ஆனாலோ பயந்து நடுநடுங்கிக்கொண்டு எனக்குக் கடிதம் தீட்டவேண்டிய நிலையிலேஉள்ளாய்! உனக்குப்பேச்

இன்பபுரியான் பி.எஸ்சி. பி.டி.

சுரிமை எழுத்துரிமைகூடக் கிடையாது! தமிழகத்திலிருந்து உங்களுக்கு ஆதரவாகத் தலையங்கம் தீட்டுகிற பத்திரிகைகளுக்குக் கூட உங்கள் சர்க்கார் தடைவிதித்துள்ளது!

உன்னைப்போலவே பூண்டுலோயா என்ற இடத்திலிருந்து "தமிழரசு" என்ற அன்பர் எனக்கு ஓர் உணர்ச்சிமிக்க கடிதத்தைத் தீட்டியுள்ளார். அவர் எழுதிய கடிதத்தை அப்படியே கீழே தருகிறேன். படித்துப் பார்த்து, இலங்கையிலே நடக்கின்ற போராட்டத்தின் காரணத்தைச் சிங்கள அன்பர்களுக்கும் நீ விளக்க முடியுமல்லவா?

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!!

பூண்டுலோயா,
23—6—58

"அன்னை உளம்மகிழ ஆற்றும் கவிபாடி
கன்னல் தமிழைக் காத்திடுவோம்"

என் அன்பு கொழுமிய நண்ப!
வாழ்த்துக்கள் பல

இன்பங் கொழிக்கும் ஈழத் திருநாட்டில் முன் இராசசிங்கன் என்ற சிங்கள அரசனால் அரசு நடாத்தப்பட்டது. அப்பொழுது யாழ்ப்பாணத்தில் சங்கலி என்ற தமிழரசன் ஆண்டு வந்தான். ஆனால் அந்தத் தமிழரசனை சூழ்ச்சியால் கொல்லப்பட்டான். இராசசிங்கன் இலங்கையை ஆட்சி செய்யும் போது டச்சுக்காரர்கள் இலங்கைக்கு வியாபாரம் செய்ய வந்தார்கள். அவர்கள் இங்கிருந்து வாசனைத் திரவியங்களான ஏலம், கருவாப்பட்டை முதலிய பொருள்களைத் தங்கள்நாட்டிற்குக்கொண்டு சென்றார்கள்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு ஐரோப்பியர் இலங்கையைக் கைப்பற்றினார்கள். அவர்கள்தான் இங்கு தேயிலையை உண்டாக்கினார்கள். தேயிலையைச் செழிப்பாக்குவதற்காகத்தான் தென்னவர்களை அன்னவர்கள் இலங்கைக்குக் கொண்டுவந்தார்கள். அப்போதைய இலங்கை கவர்னர்ஜெனரலான ஐரோப்பியர் திரு. சோல்பரி பிரபு கண்காணிப்பில் விட்டார்கள். அவருக்குக் கீழ் தான் டி. எஸ். சேனநாயக்கா என்ற சிங்களவரை இலங்கைக்கு பிரதம மந்திரியாக நியமித்தார்கள். அதே சமயத்தில் இந்தியத் தமிழர்கள் சிலரும், இலங்கைத் தமிழர் சிலரும் இலங்கைப் பாராளுமன்றத்து உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டார்கள். அதில் முதன்மையாளர் திரு. சர். பொன். இராமநாதன். அப்பொழுதெல்லாம் சிங்களவர் தமிழரென்ற வேற்றுமையின்றிச் சகோதரர்களாக வாழ்ந்தார்கள். சில நாட்கள் சென்றபிறகு சோல்பரி பிரபு தன் வேலையிலிருந்து ஓய்வு பெற்றார். குதிரைசவாரி செய்த பொழுது எதிர்பாராதவிதமாகப் பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவும் இறந்தார். பிறகு அவர் மகனை திரு. டட்லி சேனநாயக்கா பிரதமர் பதவியை ஏற்றார். திரு. ஒலிவர் குணத்திலக்கா என்பவர் கவனர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார், திரு டட்லிசேனநாயக்கா, பதவியிலிருந்து விலகிய பிறகு திரு. சர். சோன் கொத்தலாவலை

பிரதமராகப் பதவி ஏற்றார். அப்பொழுது யு. என். பி. கட்சி அரசாங்கக் கட்சியாக வீற்றிருந்தது. திரு. கொத்தலாவலை ஓர் இராச தந்திரி. அரசாங்கத்தில் யாதொரு குழப்பமுமில்லாமல் ஆட்சிநடத்தினார். அவருக்குப் பிறகு இலங்கா சுதந்திரக்கட்சி தேர்தலில் வெற்றி பெற்றது. திரு. பண்டாரநாயக்கா பிரதமராகப் பதவி ஏற்றார். அவர் பதவி ஏற்பதற்கு முன் சிங்களவர்கள் மத்தியில் "சிங்களத்தையே அரசு மொழியாக்குவேன் இந்தியத் தமிழர்களை இலங்கையை விட்டு வெளியேற்றுவேன்" என்று முழங்கினார். 1956-ம் ஆண்டில் அதர் பதவி ஏற்றார். அப்பொழுது தமிழ் தலைவர்கள் சமஉரிமைகோரிப் பாராளுமன்றத்தின் முன் சத்தியாக்கிரகம் செய்தார்கள். அவர்கள் காடையர்களால் தாக்கப்பட்டார்கள். பலப்பல இடங்களிலும் சத்தியாக்கிரகங்கள் நடைபெற்றன. அப்பொழுது திரிகோணமலையில் ஏற்பட்ட புரட்சியில் சிங்கள வெறியர்களின் துப்பாக்கிக் குண்டுக்கு பலியானார் திரு. நடராசன் என்ற இளைஞர்.

திரு.பண்டாரநாயக்கா இலங்கை போக்குவரத்தைத் தேசியமயமாக்கினார். பஸ்களிலெல்லாம் சிங்கள ஸ்ரீ எழுத்தைப் பொறித்தார். அதனால் பெரியதொரு போராட்டம் நடைபெற்றது. அதில் மாண்டவர்கள் திரு. பிரான்சிஸ், அய்யாவு என்ற இரு இளைஞர்கள். வவனியாவில் சமஉரிமை கோரியும் சிங்கள ஸ்ரீ எழுத்தை எதிர்த்தும் தமிழ் முன்னணித் தலைவர்கள் மாநாடு நடத்தினார்கள். சிங்கள வெறியர்கள் மாநாட்டுக்குச் செல்லும் தமிழர்களைத் தாக்கினார்கள். இதனால் பல்வேறு இடங்களில் குழப்பங்கள் ஏற்பட்டுப் பலர் மாண்டனர். எங்கும் ஒரே இனவெறி தலைவிரித்தாடியது. நூற்றுக்கணக்கான தமிழர்கள் வீடுகள் நாசமாக்கப்பட்டன. இதனால்தான மே மாதம 28ந் தேதி முதல் இலங்கை முழுவதும் ஊரடங்கு சட்டம் அமுலாக்கப்பட்டது. நாட்டின் இனவெறி குறைந்தது. பத்திரிக்கைகளுக்கெல்லாம் கடும் விதிகள் விதித்தார்கள். அரசாங்கத்தைப் பற்றியோ குழப்பத்தைப் பற்றியோ செய்திகளைப் பிரசுரிக்கக்கூடாதெனத் தடை விதிக்கப்பட்டது. தமிழ் முன்னணித் தலைவர்களாக திரு. செல்வநாயகம், வன்னிய சிங்கம், அமிர்தலிங்கம், இராசதுரை, நவ இரத்தினம், இராவரோதயம், அழகக்கோன், செனநட்டர் நல்லையா, நாகநாதன் ஆகியோர் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

இலங்கைத் தமிழர்கள், யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும், திரிகோணமலையிலும், வசிக்கிறார்கள். இந்தியத் தமிழர்கள் மலைநாட்டுப் பகுதிகளிலே வசிக்கிறார்கள். ஆனால் இந்தியத் தமிழர் இலங்கைத் தமிழர் என்ற வேற்றுமை கிடையாது. போராட்டத்தில் எல்லோருமே கலந்துகொண்டார்கள். தமிழ் முன்னணிக் கட்சி, 1942ல் தோன்றியது. தமிழ்பேசும் மக்களின் உரிமைக் குரலை எழுப்பவே தோன்றியது.

இலங்கைத் தமிழர்கள் தொகை ...	963,000
இந்தியத் தமிழர்கள் தொகை ...	943,000
	1,906,000
சிங்களவர்கள் தொகை	6,004,000

அன்பன்,
தமிழரசு.

மேலே கண்ட கடிதம் இலங்கைப் போராட்டத்தை நன்கு விளக்கும். உன்னைப்போன்ற உணர்ச்சியுள்ள இளைஞர். "அன்னை உளம்மகிழ ஆற்றும் கவிபாடி கன்னல் தமிழைக் காத்திடுவோம்!" எனப் போர்முரசு கொட்டுகிறார்.

"கன்னல் தமிழுக்குக் கயமை விளைப் போரை வாளெடுத்துப் போர்தொடுக்க வண்டமிழா தயங்காதே!" எனப் போர்ப்பரணி பாடுகிறார். நாட்டின் விடுதலைப் போருக்கு "தமிழரசு" போன்ற இளைஞர்கள் ஆயிரமாயிரம் பேர் முனவரவேண்டும.

"மலைநாட்டிலே மக்கள் மாக்களாக்கப்படுகிறார்கள்; ஆனால் இப்பொழுது காளையர்கள் கண்ணியமற்ற முதலாளிகளின் முரட்டுக் கொள்கைகளை முறியடிக்கிறார்கள். ஆனால் இன்பத் தமிழ்மொழி இன்னல்படும் நிலையைக் கண்டால் குருதி சிந்துகின்றன கண்கள்! கவலைகொள்கிறது இதயம்! எதிர்த்தால் கடுங்காவல் தண்டனை! அல்லது துப்பாக்கிக் குண்டுக்குப் பலி! இங்கே நடக்கும் அரசு பாரபட்சமானதே; பிரதமர் பண்டாரநாயகாவும் அப்படியே. தமிழர்களுக்கு அநீதியும் சிங்களவர்களுக்கு நீதியும் வழங்கப்படுகிறது.........இங்கு ஊரடங்கு சட்டத்தை மீறுபவர் 500 ரூபாய் அபராதம் செலுத்த வேண்டும்; அல்லது 5 மாதம் கடுங்காவல் தண்டனையை அனுபவிக்க வேண்டும்" என்று அதே இளைஞர் முன்பு ஓர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

*

அன்புள்ள இலங்கை நண்பா! ......பண்டாரநாயகாவின் ஆட்சியைப்பற்றி நீ எழுதிய கடிதத்தைப் படிக்கும்போது இங்கே நடக்கும் பண்டிதரின் தடியடி ஆட்சி என் கண்முன்னே வருகிறது. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், அங்கே பண்டாவின் குண்டுக்குப் பலியானார்கள்; துறைமுகத் தொழிலாளர்கள் இங்கே பண்டிதரின் குண்டுக்குப் பலியானார்கள்! அங்கே சிங்களம் சீறுகிறது! இங்கே இந்தி போர் முரசு கொட்டுகிறது!

சிங்களவர்களின் ஆதிக்கத்திலிருந்து நீங்கள் விடுதலை பெற முயற்சிப்பது போலவே, வடவர்களின் ஆதிக்கத்திலிருந்து நாங்கள் விடுதலை பெற முயற்சிக்கிறோம்!

அந்தோ!...இலங்கைத் தமிழா! ...இந்தியத் தமிழா!...நீ இன்னலுற்று ஏங்கும்போதுகூட உன்னிடையே சில விபீடணர்கள் தோன்றி உன் எதிரிகளுடன் கைகுலுக்கிக் களிப்படைகிறார்கள்! **தமிழினத்திலே தோன்றிய தமிழனே தமிழர்களுக்குத் துரோகியாக மாறும்போது பண்டிதரையும் பண்டாரநாயக்காவையும் குறைசொல்லி என்ன பயன்?**

நமக்குள்ளேயே துரோகிகள் இருக்கும்வரை நம் நிலை எப்படிச் சீர்திருந்த முடியும்? எத்தனை துரோகிகள் தோன்றினாலும தமிழன்னையின ஆற்றல் பெரிது! தமிழ் என்றுமே அழியாது! அதை யாராலும் அழிக்கமுடியாது! அதுமட்டும் உறுதி!

ஆம்! உன் போன்ற ஓர் சில இளைஞர்களின் உடலிலே ஒரு சொட்டு இரத்தம் ஓடும்வரையில் தமிழ் மொழிக்கு ஒரு தீங்கும் நேர முடியாது! நீட்டோலை எட்டோரம் வந்துவிட்டது! "அன்னை உளம்மகிழ ஆற்றும் கவிபாடி கன்னல் தமிழைக் காத்திடுவோம்!" வணக்கம்.

அன்புள்ள,
இன்பபுரியான்.

மாசற்ற மருதாயி

ச. இராமலிங்கம்

பகலெல்லாம் சோவென்று பெய்து ஓய்ந்துவிட்ட மழையின் அறிகுறியாக அந்த வானம் நீலத்திரைபோல் காட்சியளித்தது. வானத்தில் காட்சியளிக்கும் விண்மீன்களையொப்ப, ஆயிரம் பொத்தல்களை உடைய குடிசையின் இடுக்குகளின் வழியே, சந்திரன் எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தான். புள்ளி, புள்ளியாகத் தெரிந்த அந்த நிலவொளி படுக்கவைத்திருந்த குழந்தையின்மேல் விழுந்து, புள்ளிமான் படுத்துறங்குவதுபோல் தோற்றமளித்தது. இன்னும் பத்து ஆண்டுகள் சென்றால் புள்ளிமானைத் துள்ளித்திரியும் அந்தக் குழந்தை தான் காய்ச்சலால், முக்கியும் முனகியும் படுத்துக்கொண்டிருந்தது. அந்தப் பிஞ்சுக் குழந்தையின் முகத்தைப் பார்த்துக்கொண்டே, முத்துக் கண்ணீரை சிந்திக்கொண்டே, ஆசை அத்தான் வரவை எதிர்பார்த்துக்கொண்டே, என்னசெய்வதென்று தெரியாமல் உட்கார்ந்திருந்தாள் மருதாயி. ஐந்து நிமிடத்திற்கு ஒருதரம் வெளியில் வந்து எட்டித் தெருவைப் பார்த்துவிட்டுப் போனாள். மழைபெய்த காரணத்தாலோ என்னவோ, மின்சார விளக்குகள்கூட எரியவில்லை. தெருவே ஒரே இருள்மயமாக இருந்தது.

காய்ச்சல் அதிகமாகவே குழந்தையின் முனகல் அதிகரித்துவிட்டது. வெப்பம் தாள முடியாமல் குழந்தை புரண்டு புரண்டு முனகிக்கொண்டிருந்தது. அவளுக்கு என்னசெய்வதென்றே தெரியவில்லை. யாரையாவது துணைக்குக் கூப்பிடலாம் என்றால் அக்கம்பக்கத்தார் எல்லோரும், தெருக்கூத்துக்குப் போய்விட்டார்கள். இந்த நிலையில் என்ன செய்வது என்று தெரியாமல் நினைத்துக்கொண்டிருந்தபோது, தெருவில் ஒரு நாய் அழும் சப்தம் கேட்கவே அவளுக்குப்பயமேற்பட்டுவிட்டது. நாய் கத்தினால் அபசகுனம் என்பார்களே என்ற எண்ணம் அவள் நினைவுக்கு வரவே வெளியில் வந்து நாயை ஓட்டலாம் என்று நினைத்தாள். குழந்தையின் காய்ச்சலைக் குறைக்க வழிசெய்ய முடியாத மருதாயி நாயைத் துரத்த வெளியே வந்தாள். நாய் இருக்கும் இடமே தெரியவில்லை — நாய் ஓலமிடும் சப்தம் நின்றுவிட்டது. ஆனால் எங்கோ ஒரு குழந்தை வீல் வீல் என்று அழும் சப்தம் கேட்கவே, அப்போதுதான் அவளுக்கு ஞாபகம் வந்தது, மூன்றாம் வீட்டு முருகாயியிடம் சென்று, கொஞ்சம் குழந்தைப்பால்வாங்கிக் கொண்டு வந்து தன் பெண் மருக்கொழுந்துக்குத் தலையில் நனைத்து போடலாம் என்று. உடனே தன் குடிசைக்குள் நுழைந்து மூலையில் இருந்து சங்கு பாலாடையைத் தேடி எடுத்துக்கொண்டு, இருட்டில் முருகாயியின் வீட்டிற்குத் தட்டுத்தடுமாறிப் போய்ச் சேர்ந்தாள். குழந்தை வீல் வீல் என்று அழுதுகொண்டிருந்த சப்தம் நிற்கவில்லை. மருதாயியைக் கண்ட முருகாயி "என்ன அக்கா...இந்த வேளையிலே வந்திருக்கீங்க" என்று கேட்டாள்.

"தங்கச்சி--என் பொண்ணு மருக்கொழுந்துக்குக் காலையிலிருந்து காய்ச்சல் அடிக்குது—இப்போது ரொம்ப அதிகமாய் இருக்குது. தலைக்குப் பத்துப்போட உன்னிடம் கொஞ்சம் குழந்தைப்பால் வாங்கிண்டு போலாம்னு வந்தேன்" என்றாள் மருதாயி.

"அக்கா! இதோ நீங்களே பார்க்கிறீங்களே! இவன் வீல் வீல்னு கத்துகிறதை. பால் இல்லாமே தானே இவன் கத்தறான்—அக்கா நான் சரியா சாப்பிட்டு ஏறக்குறைய 15-நாள் ஆச்சு — எப்படியக்கா பால் சுரக்கும் — என் மச்சான் யாரோடவோ சேர்ந்துகொண்டு குடிக்கும் பழக்கம்வேறே கத்துகிச்சு. வீட்டுக்குச் சரியாக வருவதும் இல்லை, பணம் கொடுக்கிறதும் இல்லை; நான் என்னக்கா செய்வேன்! ஈரத் துணியாவது நனைச்சுபோடு அக்கா" என்று கண்களில் நீர் சொரிய, சொன்னாள். எல்லா வீட்டிலேயும் இந்த நிலைதான் என்று நினைத்துக்கொண்டு சங்குப் பாலாடையுடன் வீட்டிற்கு ஓடி ஈரத்துணியினால் பத்துப் போட்டுவிட்டு மச்சானை எதிர்ப்பார்த்துக் குடிசையின் வாயிலையே நோக்கிக்கொண்டிருந்தாள்.

ஈரத்துண்டு பத்துப் போட்டதினால் குழந்தை சிறிது கண் அயர்ந்து தூங்கவே தானும் சிறிது கண் அயரலாம் என்று நினைத்து முந்தாணியை விரித்துப் போட்டு, முழங்கையை தலையணையாக வைத்துப் படுத்தாள்—குடிசையின் எங்கோ மூலையிலிருந்த ஒரு பல்லி "ச்...ச்...ச்" என்று சப்தம் செய்தது. பயந்து எழுந்து திரும்பவும் உட்கார்ந்துகொண்டாள். இந்தச் சகுனத்தினாலெல்லாம் பயந்த மருதாயி, ஒரு வெள்ளைத் துண்டு எடுத்து கிழித்து, மஞ்சள் நீரில் நனைத்து காலணா வைத்து முடிந்து, குழந்தைகையில் கட்டி 'எல்லம்மா தாயே குழந்தை சௌக்கியமா எழுந்தா கூழூத்திக் கும்பம் போடுகிறேன்' என்று வேண்டிக்கொண்டாள். வெளியில் வண்டி வரும் சப்தம் கேட்கவே வந்து பார்த்தாள். தெருமுனையிலிருந்து ஏதோ சிறிய விளக்கு வீட்டை நோக்கி வருவதுபோல் தெரிந்தது. அதனோடு மாட்டின் கழுத்துமணி சப்தம் கேட்கவே மச்சான் வரவை எதிர்நோக்கி நின்று

கொண்டிருந்தாள். வண்டி வீட்டின் வாயிலில் வந்து நின்றதும், செல்லப்பன் இறங்கி, மாட்டை வண்டியிலிருந்து பிரித்து வீட்டின் திண்ணையின் ஒரு ஓரத்திற்கு ஓட்டிக்கொண்டு சென்றான். அதற்குள் மருதாயி, வண்டியிலிருந்த விளக்கை எடுத்து, மாட்டுக்கு கொஞ்சம் வைக்கோல் கொண்டு வந்து போட்டுவிட்டு வீட்டிற்குள் சென்று தட்டைக் கழுவி வைத்து, சாப்பாட்டுக்கு தயார் செய்தாள். குடி போதையில் வந்திருந்த செல்லப்பன் 'எனக்கு அதெல்லாம் ஒன்றும் தேவையில்லை' என்று சொல்லவே, மருதாயி அருகில் சென்று வற்புறுத்தும்போது தான், சாராயவாசனை அவளுக்குத் தெரிந்தது. "சரி இந்த வேளையில் ஒன்றும் வற்புறுத்தக்கூடாது என்று", வண்டிக்குப்போட்டிருந்த கோணித்துண்டை உதறிப் போட்டு, புடவைகளை தலையணையாக வைத்து அவனுக்குப் படுக்கை போட்டாள். அவனும் அப்படியே தூங்கிவிட்டான். தன் மச்சானும் குடிக்க ஆரம்பித்து விட்டான் என்று நினைத்ததும் அவளுக்கு பகீரென்றது. இனிக் குடும்பம் பிழைக்க முடியுமா, முடியாதா என்ற எண்ணமே அவள் நெஞ்சை அரித்துக்கொண்டிருந்தது. ஒரு பக்கத்தில் காய்ச்சலால் முனகும் குழந்தையையும், மறு பக்கத்தில் குடிபோதையில் குளறிக்கொண்டு தூங்கும் மச்சானையும் பார்த்த அவளுக்கு கண்களில் மளமளவென்று கண்ணீர் வர ஆரம்பித்துவிட்டது. தேற்றுவாரின்றி, அவள் இதை நினைத்துக்கொண்டே எப்படியோ தூங்கிவிட்டாள்.

விடிந்தது காலை—என்று கொக்கரிக்கும் சேவலின் ஒலியைக் கேட்டவுடன் மருதாயி எழுந்து, குழந்தையைத் தொட்டுப்பார்த்தாள் இன்னும் காய்ச்சல் குறையவில்லை—எழுந்துபல்லைத்துலக்கிக் கொண்டு, மாட்டுக்குத் தண்ணீர் காட்டிக்கொண்டிருந்தபோது, செல்லப்பன் எழுந்து பல்லைத் துலக்கிக்கொண்டு புறப்பட்டுவிட்டான். வழக்கம்போல், காசு கொடுத்துவிட்டுப் புறப்படும் மச்சான், ஒன்றும் சொல்லாமல் வண்டியைக் கட்டிக்கொண்டு புறப்படவே, அவள் வண்டிக் கருகில் சென்று "மச்சான் எங்கே காசு கொடுக்காமே போகிறீங்க"

"காசா! நேத்து ஒண்ணும் வரும்படி இல்லே! இந்த சைகில் ரிக்ஷா காரங்க வந்து நம்ம பொழைப்புக்கே சீட்டுக்கொடுத்திடுவாங்கோ போலிருக்கு!"

"மச்சான் மருக்கொழுந்துக்கு நேத்தெல்லாம் ஒரே காய்ச்சல். டாக்டரிடம் போகலாம்ன்னு பணம் இல்லே, மச்சான், நமக்கு குழந்தை தானே முக்கியம்"

"அதுக்கு என்னை என்னசெய்யச் சொல்றே"

"காசு இருந்தா......"

"ஏய் காசு ஏதம்மே! உங்க மாமன் தோட்டத்திலேவிளையுதா. போடி போய் எதையாவது செய்து தொலை"

"மாமன் வீட்டுத் தோட்டத்திலே விளையாத முன்னேயே சாராயம் குடிக்க ஆரம்பிச்சுட்டாச்சு. இன்னும் முளைக்க ஆரம்பிச்சுட்டா..." என்று மெதுவாகச் சிறிது கோபத்துடன் சொல்லவே, செல்லப்பனுக்கு தன்னைக் குடிகாரன் என்று சொல்வது கோபம் வந்துவிட்டது.

"நீ யாரடி என்னைக்கேட்க, நான் சம்பாதிக்கிறேன் — குடிக்கிறேன்! கழுதை இனிமேல் பேசினே இந்த ஜாட்டியாலேயே விளாசிடுவேன்" என்று பயமுறுத்திவிட்டு அவன் வண்டியை ஓட்டிக்கொண்டு போய் விட்டான்.

முருகாயிக்கு ஏற்பட்டதுதான் இனி இந்த மருதாயிக்கும் என்று நினைத்துக்கொண்டு, உள்ளே நுழைந்து மருக்கொழுந்தைப் பார்த்தாள். சரி எப்படியாவது டாக்டரிடம் கெஞ்சியாவது மருந்தை வாங்கிவிடலாம் என்று நினைத்து, கலயத்தில் இருந்த கூழைக்கொஞ்சம் குடித்துவிட்டு, மருக்கொழுந்தைத் தோளின்மீது போட்டுக்கொண்டு டாக்டர் வீட்டை நோக்கி ஓடினாள். எந்த டாக்டர் வீட்டிற்குப் போவது என்ற பிரச்சனை வேறு. குழந்தை உயிரைக்காப்பாற்றவேண்டுமென்றால் கைதேர்ந்த டாக்டரிடம் போய் எப்படியாவது மருந்து வாங்கிக்கொடுக்கவேண்டும்என்று டாக்டர் இளங்கோவன் வீட்டிற்குச் சென்றாள். கைராசியுடைய டாக்டராதலால் வெளியில் கூட்டம் ஏராளம். எதற்கெடுத்தாலும் "க்யூவில்" நிற்கவேண்டும் என்ற பழக்கம் ஏற்பட்டுவிட்ட இந்தக் காலத்தில் அங்கும் ஒரு பெரிய 'க்யு' நின்றுகொண்டிருந்தது — உயிரே போனாலும் அந்த வரிசையாகத்தான் வரவேண்டும்—என்ற சட்டம். குழந்தையின் காய்ச்சல் தணிந்தபாடில்லை- மருக்கொழுந்து பசியால் வேறு துடிக்கவே எப்படி 'க்யூ'வை விட்டு போய்விடுவது என்று யோசித்தாள். பிறகு தனக்குப் பின்னால் இருந்த ஒரு கிழவியிடம் சொல்லிவிட்டு வெளியில் வந்து பக்கத்திலிருந்த பங்க்கடையிலிருந்து அரை கப் பால் வாங்கிக் கொடுத்துவிட்டு 'க்யு'வில் போய் நின்றுவிட்டாள். மணி ஏறக்குறையப் பத்து அடித்துவிட்டது. அவளும் டாக்டர் அறையில் நுழைந்தாள்.

"ஐயா தயவுசெய்து இந்தக் குழந்தையைக் காப்பாத்தணும்" என்று டாக்டரின் கால்களில் குழந்தையைப் போடப்போனாள்.

"அடேடே இதென்னம்மா! நான் என்ன கடவுளா? காலண்டை நீ குழந்தையைப்போட்டவுடன், நான் கையைத் தூக்கிக் காண்பித்தவுடன் குழந்தை குணமாக! எழுந்திருங்க! குழந்தையை எடுத்து இந்த டேபிள் மேலே போடம்மா'

உடனே அவளும் முந்தானையால் கண்களைத் துடைத்துக்கொண்டு குழந்தையைத் தூக்கி மேசைமீது வைத்தாள். டாக்டர் ஸ்டதஸ்கோப் வைத்துப் பார்த்துவிட்டு "அம்மா குழந்தைக்கு விஷசுரம் அடிக்கிறது. இதற்கு ஊசி போடவேண்டும். நான் மருந்து எழுதித் தருகிறேன் அதை வாங்கிக்கொண்டுவாங்கோ"

"ஐயா என்னிடம் தற்போது நாலணாதான் இருக்கிறது—நீங்களே ஊசிபோடுங்கள் நான் பிறகு கொடுத்துவிடுகிறேன்"

"அம்மா! நான் ஊசி போடுவதற்குப்பணம்கேட்கவில்லை—மருந்துக்குத்தான்! நீங்களாவது வாங்கிக் கொண்டுவந்து கொடுங்கள் குறைந்தது ரூபா 5-8-0 ஆகும்"

"ஐயோ 5½ ரூபாயா? நான் எங்கே போவது!"

"அதற்கு நான் என்னம்மா செய்வது? தயவுசெய்து போய் மருந்து வாங்கிக்கொண்டு வாருங்கள். இன்னும் நான்கு மணி நேரத்திற்குள் ஊசி போடவேண்டும் இல்லையென்றால்......"

திராவிட நாடு

"டாக்டர்...! கையிலே நாலணாவைத் தவிர வேறு காசு இல்லை டாக்டர். உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்... டாக்டர்" என்று அவர் காலில் விழுந்தாள்.

"என்னம்மா இது தர்மசங்கடமான நிலை—நான் ஏதோ தருமத்திற்கு ஊசிபோடலாம்; ஆனால் மருந்துக்கு என்னால் முடியாது—தயவுசெய்து நேரத்தை வீணாக்காமல் எப்படியாவது அந்த மருந்தைக் கொண்டுவாருங்கள். நீங்கள் போகலாம்" "அடுத்தது வாருங்கள்" என்று டாக்டர் கதவண்டை வந்து கூப்பிடவே மருதாயிக்கு அடுத்து இருந்த கிழவி உள்ளே போகவே, மருதாயி சிந்திய மூக்குடனும், அழுத கண்ணுடனும் குழந்தையைத் தூக்கிக்கொண்டு, கையில் சீட்டையும் எடுத்துக் கொண்டு தெருவிற்கு வந்தாள்.

மருந்து இன்னும் நான்குமணி நேரத்திற்குள் கொடுக்காவிட்டால் குழந்தை பிழைக்காது என்று சொன்னது அவளுக்கு ஞாபகம் வந்தது. எங்காவது தன் மச்சானைத் தேடிப் பிடித்துப் பணம் வாங்கலாம் என்ற ஆசையில் கடைத்தெரு நோக்கிப் போனாள் — கடைத்தெரு மணிக்கூண்டில் பதினொன்று அடித்தது. சுற்றுமுற்றும் பார்த்தாள் வண்டியைக் காணோம். ஏதாவது பக்கத்தில் உள்ள சந்துகளில் நிற்கிறதா என்று பக்கத்துச் சந்துக்கு போனாள்......அங்கேயும் காணோம்! மணியோ ஆகிவிட்டது தெருவில் ஆள் நடமாட்டமும் இல்லை—ஏறக்குறைய உச்சி நேரம் நெருங்கிக்கொண்டிருப்பதால் அப்போது எதிரே ஒரு சிறிய மூன்று வயதுக் குழந்தை கழுத்தில் சங்கலியுடன் வர "எப்படியாவது மருந்துகொண்டு வரவேண்டும்" என்று டாக்டர் சொன்னது அவளுக்கு ஞாபகம் வரவே...அந்தக் குழந்தை, எல்லம்மன்தான் தன்னைக் காப்பாற்ற இந்தக் குழந்தை வடிவில் சங்கலியுடன் வந்திருக்கிறாள் என்று அதை நெருங்கினாள்—எதிரே பால் வடியும் வதனமுள்ள குழந்தையின் கழுத்திலே பளபளக்கும் சங்கிலி—தோளிலே காய்ச்சலால் துவண்டு முனகும் குழந்தை மருக்கொழுந்து சிறிது. நேரம் யோசித்தாள். உடனே குழந்தையின் சங்கலியை அறுக்கச் கையெடுத்தாள்,.....அப்போது திடீரென்று ஒலிபெருக்கி சப்தம் கேட்கவே திடுக்கிட்டுத்திரும்பினாள்" அன்பர்களே, தாய்மார்களே உங்களாலான உதவியைச் செய்யுங்கள்—இது இரத்ததான வாரம். இரத்ததானம் செய்து பல்லாயிரக் கணக்கான உயிரைக் காப்பாற்றுங்கள். ஒருதடவை இரத்ததானம் செய்பவருக்கு ரூபாய் ஏழு கொடுக்கப்படும்'

இரத்தம் தந்தால் ரூபாய் ஏழு கிடைக்குமே என்று கேட்டதும், வண்டியிடம் ஓடிச்சென்று, எங்கே கொடுக்கிறார்கள் ரூபாய். இப்போதே கொடுப்பார்களா? எவ்வளவு இரத்தம் கொடுக்கவேண்டும் என்று கேட்டாள், பாவம்' அவளுக்கென்ன தெரியும் இரத்ததானத்தின் அருமையும் பெருமையும். இரத்ததானத்தின் அருமை தெரியவில்லை என்றாலும் தன் குழந்தையின் உயிரையே அருமையாக நினைத்தாள். இரத்ததானத்தின் பெருமையை உணரவில்லை என்றாலும், இந்த நேரத்திற்கு அவள் பணத்தின் பெருமையைத் தெரிந்துகொண்டாள். விஷயங்களை எல்லாம் தெரிந்துகொண்ட மருதாயி நேரே தன் பக்கத்து வீட்டு முருகாயியிடம் சென்று "சிறிது நேரம் குழந்தையைப் பார்த்துக்கொண்டிரு, நான் குழந்தைக்கு மருந்து வாங்கிக்கொண்டு வருகிறேன்" என்று போனாள்.

வழிநெடுக அவளுக்கு ஒன்றும் தோன்றவில்லை. சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷன் மணிக்கூண்டில் மணி பன்னிரெண்டு அடித்தது. அவளுக்கு இன்னும் இரண்டு மணி நேரத்திற்குள் மருந்துடன் வரவேண்டுமே என்ற அவசரத்தில், ஆஸ்பத்திரிக்கு சீக்கிரம் போகலாம் என்று சாலையின் குறுக்கே ஓடினாள். திடீரென்று "கிரீச்" என்ற சப்தமும் "அம்மா ஐயோ" என்ற சப்தமும் கேட்டது. அவ்வளவுதான் அவளுக்குத் தெரியும். அவள் கண் விழித்து பார்த்தபோது ஆஸ்பத்திரியில் ஒரு பெஞ்சின்மீது படுக்கவைக்கப்பட்டிருந்தாள். அவளைச் சுற்றி இரண்டு மூன்று நர்சுகள், யாரோ ஒரு டாக்டர். இவளுக்கு ஒரே குழப்பம் "நான் எங்கே இருக்கிறேன் என்று கேட்டாள்"

"ஒன்றுமில்லை, அம்மா அதிர்ச்சியினால் மயக்கம்போட்டு விழுந்து விட்டீர்கள். இங்குசிகிச்சைக்காகக் கொண்டுவந்தோம்"

"டாக்டர் அப்படியென்றால் நான் இங்கேயே இருக்கவேண்டுமா! டாக்டர் என் மகள் மருக்கொழுந்து அங்கு எந்த நிலையில் இருக்கிறாளோ! டாக்டர் என்னை உடனே வெளியே அனுப்புங்கள் டாக்டர் — நான் இரத்த தானம் கொடுத்து ரூபாய் வாங்கிக் கொண்டு செல்லவேண்டும் டாக்டர்"

டாக்டர் ஏனோ இதழின் கடையோரத்தில் புன்னகை புரிந்தார்.

"ஏன் டாக்டர் சிரிக்கிறீர்கள்"

"அம்மா இன்று நீங்கள் இரத்த தானம் கொடுக்க முடியாது; நாளை வேண்டுமென்றால் கொடுக்கலாம்"

"ஐயோ ஆண்டவனே வேலாத்தா தாயே இதுவும் உன் சோதனையா? நான் எப்படி டாக்டர் மருந்து வாங்கிக் கொண்டுபோவது? டாக்டர் எப்படியாவது உதவி செய்யுங்கள்! உங்களுக்கு ஒரு தங்கை இருந்து அவள் குழந்தை இந்த நிலையில் இருந்தால்......டாக்டர்" என்று அவர் கால்களைப் பிடித்துக் கொண்டாள்.

திடமான உள்ளத்தோடு இருக்க வேண்டிய டாக்டரின் உள்ளம் கரைந்தது. அவருக்குக் கல்யாணமாகி பதினைந்து வருடமாகியும் மழலைச் சொல் கேட்க முடியாத நிலையில் இருந்தார். குழந்தைகள் என்றாலே அவர் மனமிரங்கும். இப்படி ஒருதாய் கதறுவதைப் பார்த்தவுடன் அவருக்கே என்ன தோன்றிற்றோ தெரியவில்லை — "அம்மா எழுந்திருங்கள் நான் உதவி செய்கிறேன். எவ்வளவு பணம் வேண்டும்" என்றார்.

"ரூபாய் ஏழு கொடுத்தால் போதும் டாக்டர்; நான் எப்படியாவது உங்களுக்குத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்"

"அம்மா நீங்கள் முடிந்தால் திருப்பிக்கொடுங்கள். அவசரம் ஒன்றுமில்லை என்று ஏழுரூபாயை எடுத்துக்கொடுத்தார். அவள் அந்த ரூபாயை வாங்கிக்கொண்டு டாக்டருக்கு நன்றியறிதலைத் தெரிவித்துவிட்டு — "என் வீடு மண்ணடிக்கு அடுத்த சேரியில் இருக்கிறது, என்பெயர் மருதாயி" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.

[அடுத்த இதழில் முடியும்]

தேவை

"அன்பு"

மாலைப்பொழுது மறைந்தது. காலையில் தலையில் கட்டிய தலைப்பாகையை அவிழ்த்து உதறித் தோளில் போட்டுக்கொண்டு, பிறரது வீட்டிற்கு வேலைசெய்வதற்கென்றே இவ்வுலகில் பிறந்த அவன், தனக்கென்று இருந்த ஒரு வீட்டிற்குப் புறப்பட ஆயத்தமானான்.

வீட்டு வேலைகளெல்லாம் முடிந்துவிட்டது என்பதற்கு அறிகுறியாக முதலாளியின் முன் போய் நின்றான். அவரும் ஜாடையாக, எதையாவது மறைத்துச் செல்கிறானா என்று பரீட்சை செய்து முடித்தார். இது தினந்தோறும் வழக்கமாக நடப்பதுதான். கடைசியில் வீட்டிற்குப் போகலாம் என்று உத்தரவு கிடைத்தது.

சோர்ந்த உள்ளத்தோடு தன் வீடு நோக்கி நடந்தான் அவன். அன்றாவது முதலாளியைக்கேட்டு கொஞ்சம் அரிசி வாங்கிச் செல்லலாம் என்று எண்ணியிருந்தான். இந்த இரண்டு நாட்களாக அவனால் அந்த எண்ணத்தை வினாவாக முதலாளியின் முன் எழுப்பி வைக்கமுடியவில்லை. அப்படிக் கேட்டிருந்தாலும் 'அப்புறம் பார்க்கலாம்' என்ற பதில்தான் கிடைத்திருக்கும் என்பதும் அவனுக்குத் தெரியும். வீட்டிலே படுத்த படுக்கையாகக் கிடந்த அவன் மனைவி கடந்த சில நாட்களாகத்தான் எழுந்து நடமாடுகிறாள். தினந்தோறும் கேழ்வரகையும் கம்பையும் உண்டு ஜீரணித்த அந்த வயிறு அரிசிச் சோற்றை விரும்பியது. இதை அவனும் அறிவான். ஆனால் முதலாளியின் மனம் இதை அறிய வேண்டுமே!

*

பகல் முழுதும் வேலையாட்களைக் கசக்கிப் பிழிந்துகொண்டிருந்த அந்தவீடு இரவுவந்ததும் அமைதிகுடிகொண்டது. முதலாளி வீட்டைச் சுற்றி ஒருமுறை பார்வையிட்டுவிட்டு இரவு சாப்பாட்டுக்குச் சென்றார். அப்போதுதான் சமையற்காரன் சொன்னான், முதலாளியம்மா சாப்பிடாமல் படுத்திருக்கிறார்கள் என்று. "ஏன் சாப்பிடவில்லை? சமையல் சரியாக இல்லையா என்ன?" என்று கேட்டார். உடனே சமையற்காரன், குற்றம் தன்மீது திரும்புகிறதே என்றெண்ணி அன்றைய இரவு சாப்பாட்டின் பட்டியலைச் சில நிமிட நேரம் ஒப்புவித்தான். "இத்தனை வகை சமையலில் ஒன்று கூடவா பிடிக்கவில்லை" என்று மறுபடியும் கேட்டார்.

"ஒன்றுமே பிடிக்கவில்லையாம். இந்தச் சாப்பாட்டையே சாப்பிட்டுச் சாப்பிட்டு அலுத்துப்போய் விட்டதாம். சாப்பிட வந்தாலே திகட்டுகிறதாம்..." "என்ன...?" என்று உடனே முதலாளி ஆச்சரியமடைந்தவராய்க் கேட்டார். "ஆமாங்க! அப்படித்தான் சொன்னாங்க. தினந்தோறும் பால் என்றும் பழம் என்றும் இனிப்பு என்றும் சாப்பிட்டு வெறுப்புண்டாகி விட்டதாம். ஒரு சில நாளாவது கேழ்வரகு அல்லது கம்பைக் கூழாக்கிச் சாப்பிடவேண்டும் என்கிறார்கள்! நமக்கு எதுக்குங்க அதெல்லாம் என்று கூடச்சொல்லிப் பார்த்துவிட்டேன். கேட்கவில்லை"

"அப்படியென்றால் இப்பொழுது அவள் சாப்பிடவேயில்லையா" கடைசியாகக் கேட்டார். "இல்லேங்க, போய்ப்படுத்துவிட்டார்கள். அப்புறம் சாப்பிடுவார்களோ என்று நினைத்து பால்சோறு மட்டும் போட்டுப் பக்கத்தில் வைத்திருக்கிறேன்"

முதலாளி சாப்பிட்டுவிட்டு மனைவியிடம் சென்றார். அவள் பாதித் தூக்கத்தில் படுத்துப் புரண்டபடி இருந்தாள். பக்கத்தில் சுண்டக் காய்ச்சிய பால் கலந்த சோறு இருந்தது. அவர் அலட்சியத்தோடும் வெறுப்போடும் மனைவியைப் பார்த்தபடி காற்றுவாங்க மாடி நிலா முற்றத்திற்குச் சென்றார்.

*

முதலாளியின் வீட்டிலிருந்து சென்ற அந்தத் தொழிலாளி குடிசைக்குச்சென்றதும், அங்கு அவன் மனைவி அவனுக்காகக் காத்திருப்பதைப் பார்த்தான். அவன் அன்றாவது அரிசி வாங்கிவருவான்எனக்காத்திருந்தாள் அவள். அவனது வெறுங்கையோ அவளுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது. எனினும் அதை வெளியே காட்டிக்கொண்டவளாகத் தெரியவில்லை. சட்டியில் மிகுதிப்பட்டிருந்த கூழைக் கரைத்து குவளையில் ஊற்றி அவனைக் குடிக்க அழைத்தாள். அவனும் அவளை 'நீ சாப்பிட்டாயா' என்று கேட்க விரும்பவில்லை. அவளுக்குச் சில நாட்களாக, கூழ் உடலுக்கு ஒத்துக்கொள்ளவில்லை என்பதை அவன் நன்கு அறிவான். இருந்தும் மனம் கேட்காமல் "எனக்குப் பசிக்கவில்லை... கூழாக இருந்தாலும் பரவாயில்லை. என்ன செய்வது? எப்படியாவது இன்றைக்கு மட்டும் குடி. நாளைக்கு எப்படியாவது முதலாளியைக்கேட்டு அரிசி வாங்கிவந்து விடுகிறேன்......... வெறும் வயிற்றோடு இருக்காதே" என்று கூறிவிட்டு அதற்கு மேலும் அங்கு இருக்கமுடியாமல் வெளியே கிளம்பி வந்துவிட்டான். இருந்தும் அவன் மனைவியே அக்கூழை அவனுக்காக ஒரு பாத்திரத்தில் ஊற்றி வைத்துவிட்டுப் படுக்கச் சென்றுவிட்டாள்.

*

இரவு நிலவு தண்மையுடன் வெண்மையைப் பரப்பிக்கொண்டிருந்தது. ஊரின் ஓரத்தே இருந்த பொட்டல் வெளிக்குச் சென்று அசதியுடன் சாய்ந்து படுத்தான் அவன். எண்ணம் பூராவும் அவனுக்குத் தன் மனைவியைப் பற்றியே இருந்தது. சிந்தித்தவாறே நிலவைப் பார்த்தபடி இருந்தான். அதே நிலவைப் பார்த்தவாறே அவன் முதலாளியும் மாடி முற்றத்தில் படுத்திருந்தார்.

அவர்கள் இருவரது வீட்டிலும் இருவேறு உணவை விரும்பிய இரு உள்ளங்கள் உறங்கியபடி இருந்தன. அவர்கள் விரும்பிய இருவகை உணவும் இவ்வுலகில்தான் இருந்தது. ஆனால் அதை

விரும்பிய அவர்கள், சமூகத்தில் இருந்த 'இடம்'தான் வேறு வேறாக இருந்தது.

தன் மனைவிக்குத் தேவைப்பட்ட உணவைத் தேடித்தர முடியாத நிலையில் நிலவொளியில் பொட்டல் வெளியில் படுத்திருந்த தொழிலாளியும், தன் மனைவி விரும்பிய உணவை, அவள் சாப்பிட்டால் தன் அந்தஸ்திற்கு இழுக்கு என்று எண்ணியபடி மாடி முற்றத்தில் படுத்திருந்த முதலாளியும் தங்களை மறந்து சிறிது நேரம் கண்ணயர்ந்தனர். அச்சமயம் அவர்கள் இருவரையும் ஒரேவகை மனிதர்களாக்கியது நிலவொளி ஒன்றுதான்! அவர்கள் பிறந்த மண்கூட அவர்களை வேறுபடுத்தித்தான் வைத்திருந்தது—ஒருவர் மாடியில், மற்றொருவர் மண் தரையில்!

*

சமையற்காரன் முதலாளியை எழுப்பி இரவுப் பால் வைத்துவிட்டுச் சென்றான். ஊரின் நடுவே குலைத்த நாயின் ஒலி தொழிலாளியை எழுப்பியது. முதலாளி எழுந்து படுக்கைக்குச் சென்றார். போகும் வழியில் மனைவி படுத்திருந்த கட்டிலருகே பார்த்தார். அவளுக்காகச் சமையற்காரன் வைத்திருந்த பால் சோற்றை வீட்டுப்பூனை தள்ளி விட்டுச் சென்றுகொண்டிருந்தது. தொழிலாளி எழுந்து குடிசைக்குள் சென்றான். அங்கு அவன் மனைவி வைத்திருந்த கூழ்ப் பாத்திரத்தில் ஒரு விளக்குப் பூச்சி விழுந்து மடிந்திருந்தது.

தேவைப்பட்ட உணவு தனக்கு கிடைக்காததால் ஒரு உயிரும், கிடைக்கக்கூடிய நிலை இருந்தும் உண்டால் நிலைமைக்கு இழுக்கு என்று கருதக்கூடிய வகையில் வைக்கப்பட்டிருந்த மற்றொரு உயிரும், அன்று இரவு வெறும் வயிற்றோடு உறங்கின. "பழுக்கக் காய்ச்சிய பசும்பாலுக்குச்சர்க்கரை இல்லை, கரைத்துக் குடிக்கும் கம்பங் கூழுக்கு உப்பில்லை." என்னே உலகம்!! இந்த இறுவேறு முரண்பட்ட மாறுதலோடு கூடிய இந்த உலகம் ஒரு சார்பு பெறுவது என்நாளோ?

★

அன்றும்-இன்றும்

(இளஞ்செழியன்)

மார்படுப செம்பொன் பதிபடுப முற்றமிழ் நூல்
நீர்படுப வெண்சங்கும் நித்திலமும்—சாரல்
மலைபடுப யானை வயமாறன் கூர்வேற்
றலைபடுப தார்வேந்தர் மார்பு

இப்பாடல் முத்தொள்ளாயிரத்தில் வரக்கூடிய ஒன்று. இதன் மூலம் அக்காலத்தில் இருந்த அரசருடைய தன்மையையும், வீரத்தையும், நாட்டின் வளப்பத்தையும், ஆசிரியர் உரைக்கின்றார். அஃதாவது, பாண்டிய நாடு நிலவளமும், நீர்வளமும், மலைவளமும், மொழிவளமும் கொண்டது என்பதை விளக்குகின்றார். பாண்டிய நாட்டிலே பொன் கிடைக்கின்றது; கடலிலே சங்கும், முத்தும் கிடைக்கின்றன; மலையை அடுத்த காடுகளிலே, இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் தரக்கூடிய யானைகள் மிகுதியாக இருக்கின்றன; அத்துடன் சங்கம் வைத்து, இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் போற்றி வளர்த்து, காத்து வருகின்றோம். இவைகள் எல்லாம் பாண்டிய நாட்டிற்கே உரித்தானது. இவைகளில் எவற்றையாகிலும் மற்றொருவர் (மாற்றார்) கவர எண்ணின், பாண்டிய மண்ணிலே பொன்னும், கடலிலே முத்தும், மலையை அடுத்த காட்டிலே யானையும் கிடப்பதைப்போல் — மாற்றாராகிய அடுத்த அரசர்களுடைய தலையும் தனது கூரிய வேலுக்கு இரையாகி பாண்டி மண்ணிலே கிடக்கும் என்று தனதுவீரத்தையும், நாட்டுப்பற்றையும் பாண்டியன் கூறுவதாக —புலவர் பாடியுள்ளார்.

இப்படி எல்லா வளமும் பொருந்திய தமிழ்நாட்டை வீரம் பொருந்திய மன்னர்கள் அக்காலத்தில் ஆண்டுவந்தார்கள் என்பது மேலே உள்ள முத்தொள்ளாயிரப் பாடலின் மூலம் நமக்குத் தெரிய வருகிறது. அப்படி எல்லா வளமும் பொருந்திய தமிழ்நாடு இப்பொழுது எப்படி இருக்கிறது; இதனை ஆளும் அமைச்சர்கள், எவ்வாறு உள்ளார்கள்; அவர்கள் வீரம் எத்தகையது; மொழிப் பற்று எத்தகையது; நாட்டுப் பற்று எத்தகையது; என்பதை ஈண்டு ஆராய்வோம்.

அன்று பாண்டிய நாடாகிய தமிழ்நாட்டிலே இருந்த பொன்னும் மணியும் இன்றுள்ள சென்னை மாநிலமாகிய தமிழ்நாட்டிலும் இருக்கிறது. அன்று கடலிலே கிடைத்த சங்கும் முத்தும் இன்றும் கிடைக்கின்றன. அத்துடன் தோரியம், யுரேனியம் ஆகிய அணுஆயுத உற்பத்திப் பொருள்களும் இன்று கிடைப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் துறைமுக ஏற்றுமதி, இறக்குமதி மூலம் அளவற்ற வருவாயும் வருகின்றது. அன்று இருந்த காடுகள் இன்றும் இருக்கின்றன. அதில் யானைகளும் இருக்கின்றன. மேலும் மலைகளில் விளையக்கூடிய சந்தனம், அகில், தேக்கு, மூங்கில், மிளகு, ஏலம், கராம்பு, தேயிலை, காப்பி அத்தனையும் அளவற்ற வகையில் கிடைக்கின்றன. இவைகளை வெளிநாடுகளுக்குஏற்றுமதிசெய்வதன்மூலம் மிகுந்த வருவாயும் வருகின்றது. இருந்தும்அன்று வாழ்ந்த தமிழர்கள் உரிமையுடன் தன் நாட்டு வளத்தை அனுபவித்ததுபோல் இன்று இருக்கும் சென்னை மாநில வாசிகள் (தமிழர்கள்) தன் நாட்டு

வளத்தை உரிமையுடன் அனுபவிக்க முடியவில்லை.

இவற்றைக் காணும் பொழுது அதற்குரிய காரணத்தை ஆராயும் பொழுது, அன்று தமிழ் நாட்டை ஆண்ட மன்னர்களுக்கும், இன்று தமிழ்நாட்டை ஆளும் அமைச்சர்களுக்கும் உள்ள வேறுபாடு நமது அறிவுக் கண்களுக்குப் புலனாகிறது.

அன்று இருந்த தமிழ் மன்னர் நாட்டுப்பற்று உடையவராகவும், மொழிப்பற்று உடையவராகவும், வீரர்களாகவும், சுய உரிமையும் முழு அதிகாரமும் உள்ளவர்களாகவும், மாற்றார் ஆணைக்கு அடி பணியாமல் சுயேச்சையாக ஆண்டார்கள்.

இன்று உள்ள அமைச்சர்களுக்கு நாட்டுப்பற்று இல்லை, மொழிப்பற்று இல்லை, வீரமும் அவர்கள் வாய்ச்சொற்களிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டியதாய் இருக்கிறது. சுய உரிமை இல்லை, எந்த அதிகாரமும் இல்லை, எடுத்ததற்கெல்லாம் டில்லியின் ஆணையை எதிர்நோக்கிக் காவடி தூக்கும் நிலையில் உள்ளார்கள்.

நாட்டுப்பற்று எப்படியில்லை எனில், இந்நாட்டுச் செல்வம் சுரங்கப் பொருள், துறைமுக வருமானம், மலைபடு பொருள்கள் அனைத்தும் வடநாட்டிற்கு மத்திய அரசாங்கம் என்ற பெயரால் வரியாகப் போகிறது. ஆண்டு ஒன்றுக்கு அறுபத்து மூன்று கோடி ரூபாய்! அதைத் தடுத்து நிறுத்த இந்நாட்டு அரசுக்கு வலிவில்லை, துணிவில்லை, எண்ணமும் இல்லை. அதனால் நாட்டுப்பற்று இல்லை என்று கூறுவதில் தவறென்ன?

மொழிப்பற்று எப்படி இல்லையெனின், தமிழ் நாட்டிலே, அஞ்சல் அட்டைகளிலே, இரயில் நிலையங்களிலே, வானொலி நிலையங்களிலே எங்கு பார்க்கினும், அந்நிய மொழியாகிய இந்தி அரசோச்சுகிறது. சொந்த மொழியாகிய தமிழுக்கு அங்கெல்லாம் இடமில்லை. ஆட்சி மொழியும் இந்தியாகத் துடிக்கிறது. அதைத் தடுக்கவும் வக்கில்லை. தமிழ் நாடாகிய சென்னைக்குத் தமிழ்நாடு என்று பெயர்வைக்க மனம் இல்லை. அதனால் மொழிப்பற்றும் இல்லை என்று கூறுகிறோம்.

வீரத்தைப்பற்றி எண்ணும் பொழுதும், கேட்கும் பொழுதும் சிரிப்புத்தான் வருகின்றது. அன்னாளில் ஆண்ட பாண்டிய மன்னன் "என் நாட்டுச் செல்வத்தை, எந்நாட்டவனாகிலும் கவர எண்ணின், அவன் தலை, என் கூரிய வேலுக்கு இரையாகி என் நாட்டு மண்ணிலேயே உருளும்" என்று சூளுரைத்தான். இந்நாளில் அமைச்சர்கள் இந்நாட்டுச் செல்வத்தையெல்லாம் ஆண்டு ஒன்றுக்கு 63-கோடி ரூபாய் வரியாக வடநாட்டிற்கு வாரிக்கொடுத்துவிட்டு இந்நாட்டு மொழியையும் இந்திக்கு அடிமையாக்கிக்கொண்டு, "எங்களுக்கு மட்டும் வீரம் இல்லையா, நாங்கள் ஏன் வடநாட்டிற்குப் பயப்பட வேண்டும்" என்று கேட்கிறார்கள். "கீழே விழுந்தவன் மீசையில் மண் ஒட்டவில்லை" என்பதுபோல வீரம் பேசுகின்றார்கள்.

சுய உரிமை இல்லை என்பதாவது, இம்மாநில அமைச்சர்கள் இந்நாட்டுச் செல்வத்தை, வரியாக வாங்கப்படும் பணத்தை, இந்நாட்டிற்காகச் சொந்தமாகச் செலவு செய்ய முடியாது, சுரங்கம் வெட்ட முடியாது, அணைகட்ட முடியாது, தொழிற்சாலை அமைக்க முடியாது, எந்தத் திட்டத்தையும் டில்லியின் அனுமதி இன்றி நிறைவேற்ற முடியாது. அவைகளைச் செய்ய இந்த அரசிற்கு உரிமை இல்லை. இந்நாட்டுச் செல்வத்தை எல்லாம் வரியாக டில்லிக்கு வாரிக்கொடுத்துவிட்டு, அவர்களிடம் கையேந்தி நிற்கும் காட்சியைக் காணும்போது, நாட்டுப் புறத்திலே வழங்கும் ஓர் முதுமொழி நினைவிற்கு வருகின்றது. "உழக்கு மிளகு அளித்து, ஒளிந்திருந்து ஒரு சொட்டு மிளகுநீர் பெறுதல்" என்பது. அதாவது தன் வீட்டில் இருக்கும் மிளகில் ஒரு உழக்கு மிளகை அண்டை வீட்டுக்காரிக்கு கொடுத்துவிட்டு அவளிடமிருந்து அவள் வீட்டாருக்குத் தெரியாமல் கொஞ்சம்மிளகுநீர் பெறுவது போல இந்நாட்டுப் பணத்தையெல்லாம் மத்ய சர்க்காரிடம் வாரிக்கொடுத்துவிட்டு, எங்களுக்கும் கொஞ்சம் பணம் கொடுங்கள் என்று பிச்சை எடுக்கும் நிலையைப் பார்த்தால் பரிதாபமாகத்தான் இருக்கிறது. இந்நிலையில் இவர்கள் சுய உரிமை முழு அதிகாரம் இல்லாதவர்களாக இருக்கின்றார்கள்.

ஆகவேதான் "நம்நாட்டைத் தமிழ் அரசர்கள், நாட்டுப்பற்றுடனும் மொழிப்பற்றுடனும், வீரத்துடனும், முழு உரிமையுடனும், சுயமரியாதையுடனும் ஆண்டது போல் இக்கால அமைச்சர்களாகிய நீங்களும் நாட்டுப்பற்றுடனும், மொழிப்பற்றுடனும், முழு உரிமையுடனும், சுயமரியாதையுடனும் ஆளுங்கள்" என்று கூறுகின்றோம். அதற்காகத் திராவிட நாட்டை வடநாட்டுத் தொடர்பிலிருந்து பிரித்து விடுதலைபெற்ற மக்களாக வாழ வழிசெய்யுங்கள் என்று கூறுகின்றோம். அப்பொழுதுதான் நாம் உண்மையான சுதந்தர மக்களாக வாழ முடியும் என்றும் கூறுகின்றோம்.

இந்த நல்ல கருத்தினைக் காலப் போக்கிலாவது புரிந்து கொண்டு திராவிட நாட்டு விடுதலைக்காகப் போராடுவார்கள் என்னும் நம்பிக்கையுடன் எங்கள் விடுதலைப் பணியினைச் செய்து வருகின்றோம்.

★

மேலிடமேனும் செய்யுமா?

பரம்பிகுளம் தண்ணீரைத் தமிழகத்திற்குத் திருப்பிவிடுவது பற்றி கேரள சர்வகட்சி மாநாடு ஒரு முடிவெடுத்து விட்டது. தமிழகத்திற்குத் திருப்பு மளவுக்கு தண்ணீர் உபரியாக இல்லை என்பதே அம்முடிவு. இது விஷயத்தில் அதிகாரிகள் கொடுத்துள்ள அறிக்கையில் சந்தேகம் தெரிவித்துள்ளது சர்வகட்சி மாநாடு, இந்த முடிவு நாம் எதிர்ப்பார்த்ததே. பிரஸ்தாப சர்வகட்சி மாநாட்டில் கேரள காங்கிரஸ் கட்சி மட்டும் கலந்து கொள்ளவில்லை. ஆரம்ப முதலே, இந்தச் சண்டித்தனத்தை அனுஷ்டித்து வருகின்றது காங்கிரஸ் கட்சி. அந்தக் கட்சிமட்டும் சம்மதித்திருக்குமானால், பரம்பிகுளம் தண்ணீரை தமிழகத்திற்குத்திருப்பிவிட கம்யூனிஸ்ட் கட்சி உதவி புரிந்திருக்குமென்பதில் நமக்குச் சந்தேகமில்லை. கேரள காங்கிரசுக்கு ஓட்டுப்பிச்சை எடுக்க தேவிகுளம் தொகுதிக்கு ஓடிய தமிழக அமைச்சர்களுக்கு இது ஒரு நல்ல பாடம்!

கேரள சர்வ கட்சி மாநாடு அடியோடு கைவிரித்துவிடாமல், இந்தத் தண்ணீர் பிரச்னையை மேலிடத்து அரசின் மத்தியஸ்தத்திற்கு விடச் சம்மதித்திருப்பது ஓரளவு ஆறுதலைத் தருகின்றது. இனி பொறுப்பு மத்திய அரசாங்கத்தின் தலைமீது விழுந்திருக்கிறது. அதுவேனும் தமிழகத்தின் கோரிக்கை நிறைவேறும் வகையில் நடந்து கொள்ளுமென்று நம்புகின்றோம்.

"செங்கோல்"

வரலாற்று நாடகம்

சந்தேகம்

நிலை விளக்கம்

இரேக்கத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்த பெலொப்பொனேசியப் போர் துவங்கிவிட்டது. இரேக்கத்தின் இருபெரும் பிரிவுகளான ஏதென்சும், ஸ்பார்டாவும் தத்தமது சார்பு நாடுகளையும் துணைக்கழைத்துக்கொண்டு ஒன்றையொன்று குறை கூறிக்கொண்டு களத்தில் இறங்கிவிட்டன. ஏதென்சின் போர்க்கால நிர்வாகம் பெருநாவலனும் பேரறிஞனும், அரசியல் ஞானியுமான பெரிக்ளீஸுக்குத் தரப்பட்டிருந்தது. போருக்கான திட்டங்கள் தீட்டுவது, தளபதிகட்குப் போர் நுணுக்கங்களை விளக்குவது போன்ற எல்லாத் துறைகட்குமே அவன்தான் பொறுப்பாளியாக விருந்தான். ஸ்பார்டாவின் இரு அரசர்களுள் ஒருவனை ஆர்க்கிடாமஸ் ஸ்பார்டாவின் பட்டாளத்திற்குத் தலைமை வகித்துப் போரை முன்னின்று நடத்தும் பொறுப்பை ஏற்றிருந்தான்.

போர் இன்னும் மும்முரமாக நடைபெறத் துவங்கவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிறுசிறு சச்சரவுகளும், குழப்பங்களுமாக இருந்த அத்தருணத்தில்...

மலர்மன்னன்

[ஏதென்சு நாட்டு மக்கள் அவையால் ஏதென்சின் போர்க்காலப் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்ட பேரறிவாளன் பெரிக்ளீஸின் மாளிகை, அதன் அகன்ற நடு மன்றத்தில் பெரிக்ளீஸ் ஏதோ சிந்தித்தபடி உலவிக்கொண்டிருக்கிறான். வெகுநேரமாக உலவியவாறிருக்கும் அவனது வதனத்தில் ஏதோ இனந்தெரியாத வேதனையின் சாயலும் படர்ந்திருக்கவே அறையின் மூலையில் நிற்கும் அவனது அந்தரங்க நண்பன் மெல்ல அவனை அணுகுகின்றான்.]

தோழன்:- (மெல்லிய குரலில்) பெரிக்ளீஸ்...... மன்னித்துவிடு பெரிக்ளீஸ்...!

[உலவியவாறிருந்த பெரிக்ளீஸ் சிந்தனை கலைந்தவனாய் நிற்கிறான். திடீரென மன்னிக்குமாறு வேண்டிய தன் தோழனை வியப்புடன் நோக்குகிறான்.]

பெரிக்ளீஸ்:- என்ன தோழா? எதற்கு மன்னிப்பு...?

தோழன்:- ஒன்றுமில்லை; உன் சிந்தனையைக் கலைக்கின்ற காரணத்திற்காக முன்னதாகவே மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன் பெரிக்ளீஸ்......

பெரிக்:- ஏதேனும் செய்தி வந்திருக்கிறதா, நண்பா?

தோழன்:- இல்லையில்லை; வெகுநேரமாக எதுபற்றியோ நீ சிந்தித்தபடியிருக்கவே...

பெரிக்:- இன்று உன் போக்கு விசித்திரமாக இருக்கிறது நண்பா! நாள்தோறும் அந்தி மயங்கியது முதல் மீண்டும் ஆதவன் வரும்வரை உலவியவாறு சிந்தித்துக்கொண்டிருக்கும் எனக்குத் தொல்லை தரலாகாதென்பதற்காக ஒரு மூலையில் இரவெல்லாம் வாய் மூடி நின்றபடியிருப்பவனான நீ இன்று மட்டும் என் சிந்தனையில் குறுக்கிட்டது ஏன்?

தோழன்:- என்றும் உன் வதனம் தெளிவான தோற்றத்துடன் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருப்பதையே கண்டிருக்கிறேன். ஆனால் இன்றோ, ஏதோ கலக்கம் உன் முகத்தில் குடிகொண்டிருப்பதைக் காண்கிறேன்; அறிவொளிவீசும் உன் விழிகளில் இன்று ஏதோ வேதனை தென்படுகிறது; அறிவும் ஆற்றலும், நெஞ்சுரமும் மிக்க நீ போரைப்பற்றிச் சிந்திக்கையில் எதற்காகக் கவலைப்படப் போகிறாய்? எனவே உனது சிந்தனை போரைப்பற்றியது மட்டுமல்ல என்பதை உணர்ந்தேன்; ஆகவேதான் இடைமறித்து...

பெரிக்:- (மெல்ல நகைத்து) கூர்ந்த மதிபடைத்த தோழா! உன் ஊகம் சரிதான்; போரைப்பற்றி மட்டுமே நான் சிந்தித்துக்கொண்டிருக்கவில்லை. இன்னொரு விஷயம் என்னை வெகுவாகச் சிந்திக்கவைக்க விட்டது...

தோழன்:- அது என்னவென்பதை நான் அறிந்துகொள்ளத் தடையேதும் உண்டா பெரிக்ளீஸ்?

பெரிக்:- உள்ளத்தில் உள்ளதை உன்னிடம் உரைக்கையில் தானே நான் மனவமைதி பெறுகிறேன் துணைவா...... இந்தத் தகவலை உனக்குத் தெரிவிப்பதில் தடையென்ன? தோழா, ஸ்பார்டாவின் பெரும்படைக்குத் தலைமைபூண்டுள்ளவன்

னாரென்பதை நீ அறிவாயல்லவா?

தோழன்:- இதுகூட அறியாதவனா, நான்? ஸ்பார்டாவின் படையினை வழிநடத்திச் செல்லும் பொறுப்பை யேற்றுக் கொண்டிருப்பது ஸ்பார்டாவின் இரண்டு வேந்தர்களுள் ஒருவனான ஆர்க்கிடாமஸ்! அதுமட்டுமல்ல; அவன் உன் அறிவுத் திறமையைப் பெரிதும் மெச்சி உன்னை வெகுவாக மதித்துப் போற்றுபவன் என்பதையும் நான் அறிவேன், பெரிக்ளீஸ்!

பெரிக்:- (இனிய கனவு காண்பவனைப்போல்) ஆமாம், நண்பா ஆர்க்கிடாமஸ் எனக்குக் கிட்டிய நல்ல நண்பர்களுள் ஒருவன்; என்னோடு ஒன்றுகக் கல்வி பயின்றவன்; என்பால் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டவன். கல்வி கற்ற காலத்தில் நாங்கள் என்றுமே தனித்திருந்ததில்லை, தோழா; அரசியல்தான் இன்று எங்களைப் பிரித்ததுமின்றி இருவரையும் வெவ்வேறு துருவங்ளில் கொண்டுபோய் அமர்த்திவிட்டது!

தோழன்:- நண்பனை எதிரியாகக் கருதவேண்டியிருக்கிறதே யென்று வருந்துகிறாய்?

பெரிக்:- இல்லை நண்பா; சொந்த விருப்பு வெறுப்புகட்கு இடங்கொடுக்கும் சாதாரண நிலையில் நான் இப்போது இல்லை; எனது தாயகத்தைப்பற்றியே இனி என் எண்ணங்கள் இருந்தாக வேண்டும். தாயகத்தைக் கட்டிக் காக்கும் பொறுப்பினை நான் ஏற்றுள்ளேன். இனி எனக்கென்று தனிக் கவலைகள் இல்லை; தனி ஆசைகள் இல்லை; என்னைப்பற்றியோ எனது தேவைகளைப்பற்றியோ சிந்தித்துக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை......

தோழன்:- பின் எதற்குத்தான் கவலைப்படுகிறாய் பெரிக்ளீஸ்.

பெரிக்:- தோழா, நான் மக்களை நேசிக்கிறேன்; மக்கள் என்னை நேசிக்கிறார்கள்; என் பேரன்புக்குரிய ஆத்தீனிய மக்கள் என்மீது ஐயங்கொள்ளும் நிலைவந்து விடலாகாதே என்றுதான் வருந்துகிறேன்......

தோழன்:- பெரிக்ளிஸ், என்ன கூறுகிறாய் நீ? ஆத்தீனியர் உன்மீது ஐயங்கொள்ளும் நிலையா? கனவில்கூட அந்நிலை வராது பெரிக்ளீஸ்!

பெரிக்:- (மெல்லச் சிரித்து) இன்றைய நிலையைக் கண்டு நீ இப்படிப் பேசுகிறாய் நண்பா: மக்கள் என்னைப் பெரிதும் விரும்புகின்றனர்; என்மீது பேரன்பும் நம்பிக்கையும் வைத்துள்ளனர்; ஆனால் அவர்களது நெஞ்சங்களிலெல்லாம் சந்தேகப்புயலை உருவாக்கும் சம்பவம் ஒன்று நிகழக்கூடும்! அன்புடன் என்னை நோக்கிய அனைவரும் ஐயப் பார்வையை என்மீது பாய்ச்சும் நிலை ஏற்பட்டுவிடக் கூடும்...!

தோழன்:- புதிர்போடாதே பெரிக்ளீஸ்; புரியும்படி பேசு!

பெரிக்:- ஆர்க்கிடாமஸ் தனது மாபெரும் படையுடன் இன்னும் ஒரு கிழமைக்குள் அட்டிக்காவினுள் நுழையப்போவதாகத் தகவல் வந்துள்ளது; (அட்டிக்கா—ஏதென்சும், அதன் சுற்றுப்புறப் பிரதேசமும் அட்டிக்கா எனப்படும்.) நண்பா அட்டிக்காவின் எல்லைப் பகுதியில் எனக்குச் சொந்தமான நிலபுலங்கள் இருப்பதை நீ அறிவாயல்லவா?

தோழன்:- ஆமாம் அதற்கென்ன?

பெரிக்:- எப்போதும் ஒரு நாட்டுப் படைகள் தம் எதிரிநாட்டுக்குள் நுழைந்ததும் தங்களது வருகையை உணர்த்தும் வகையில் நிலபுலங்கள், கால் நடைகள் யாவினையும் அழித்துச் சிதைப்பது வழக்கம், ஸ்பார்டாப்படைகளும் இதற்கு விதிவிலக்கல்ல; அட்டிகாவின் விளைநிலங்களையெல்லாம் ஸ்பார்டாப்படைகள் சீரழிப்பது திண்ணம், ஆனால் தோழா படையினை நடத்தி வருபவன் என் நண்பன்; என்பால் பெருமதிப்பு வைத்திருப்பவன்; அட்டிக்காவின் எல்லையில் என் விளைநிலங்கள் இருக்கின்றன என்பதையும் அவன் அறிவான்; எனவே............நட்பின் காரணமாகவும், என்மீதுள்ள அளவு கடந்த மதிப்பாலும் அவன் என் நிலங்களைத் தவிர்த்து மற்ற நிலங்களை மட்டுமே அழிக்கத்தனது படைகட்கு அனுமதி அளிப்பான்; அட்டிக்காவில் என் விளைநிலங்களையும் கால் நடைகளையும் தவிர மற்றவை யாவும் எதிரிகளால் அழிக்கப்படும்...........

ஏதென்சு நாட்டவர் இதனைக் கேள்வியுறுவர்; ஆர்க்கிடாம்ஸ் அட்டிக்காவின் எல்லையில் பெரிக்ளிஸின் உடமைகளை மட்டுமே அழிக்காமல் விடுத்தான் என்பதை அறிகையில் அவர்களது நெஞ்சங்களில் ஐயத்தின் விதை இலேசாக ஊன்றப்படும்; என்பால் பொறாமைகொண்டுள்ள ஒருசில அரசியல்வாதிகள் மக்களிடையே எனக்கிருக்கும் அபரிமிதமான செல்வாக்கைப் போக்க இதுதான் தக்க தருணம் என்று கருதி, ஆர்க்கிடாமஸுக்கும் எனக்கும் ஏதோ தொடர்பு இருப்பதாகப் பறைசாற்றத் தொடங்குவார்கள், அவர்களது பிரச்சாரத்தால் அந்த விதை முளைத்தெழுந்து பெருமரமாக உயர்ந்தோங்கி வளர்ந்துவிடக்கூடும்! தோழா, இப்போது புரிந்ததல்லவா என் கவலைக்குக் காரணம்?

தோழன்:- புரிந்தது பெரிக்ளீஸ்; உனது தொண்டு இன்றைய ஏதென்சுக்கு இன்றியமையாதது; அரசியல் நுட்பங்களையும் போர் நுணுக்கங்களையும் நன்குணர்ந்தவனான நீ, போர்க்காலப் பொறுப்பாளனாகத் தொடர்ந்து பதவி வகித்தால்தான் ஏதென்சுக்கு வெற்றி கிட்டும்; ஆனால் நீ கூறியது போல் மக்களுக்கு உன்மீது அவநம்பிக்கை பிறந்துவிடின் மக்கள் சபை உன்னைப் பதவியினின்று அகற்றி வேறொருவனை அப் பதவிக்கு நியமிக்கும்; பெரிக்ளீஸ்,

தாழ்த்தப்பட்டோர் நிலை, நாடெங்கும் ஒரேமாதிரியாகத்தான் இருக்கிறது. விடுதிகளை ஆரம்பிப்பதன் மூலமோ அல்லது உபகாரச் சம்பளங்களை வழங்குவதன் மூலமோ தாழ்த்தப்பட்டோர் வகுப்பினர் குறைகள் தீர்ந்துவிடாது. மத உணர்ச்சி, சமூக பழக்க வழக்கங்கள். பொருளாதார அந்தஸ்து ஆகியவைகளில் மனமாறுதல் ஏற்படவேண்டும். இது சாத்தியமல்லாமல் போனால் சோஷலிஸபாணியில் சமுதாய அமைப்பைப்பற்றி பேசிப் பயனே இல்லை.

ஜகஜீவன்ராம்,
வேலூர், ஆக. 4

உனக்குச் சமதையான அரசியல் அனுபவம்பெற்ற அறிஞன் இன்று ஏதென்சில் இல்லை; எனவே அனுபவக்குறைவுள்ள பொறுப்பாளனது நிர்வாகத்தால் ஏதென்ஸ் தோல்வியே அடையும்!

பெரிக்:- மேலும் மக்களிடமிருந்து அவநம்பிக்கையைப் பெற்றுக் கொள்ள நான் விரும்பவில்லை நண்பா; ஏதென்சுக்கு துரோகம் புரிய நான் கனவிலும் கருதியதில்லை; ஆத்தீனியர்களின் — ஏதன்சின் — நன்மையே என் நன்மைஎன்றுகருதிவருகிறேன். களங்கமற்ற உள்ளத்தால் நான் ஏதென்சையும், ஆத்தீனியர்களையும் நேசித்துவருகிறேன். எனவே ஆத்தீனியர்களால் — ஏதென்சு நாட்டால்—வீண்பழி சுமத்தப்படுவேனாயின் என் இதயம் நொறுங்கிப்போகும்; புகழ் வரவேண்டும் என்பதில் எனக்கு விருப்பமில்லை, அத்துடன் பழியை ஏற்கவும் நான் விரும்பவில்லை; எந்த நாட்டவரை எனது உயிருக்குயிராகக் கருதி அன்பு செலுத்துகிறேனோ அவர்களிடமிருந்தேபழிச்சொல் ஏற்க என்னால் இயலாது. எந்த ஆத்தீனிய மக்கள் மன்றம் பேராரவாரத்துடன் என்னைப் போர்க்காலப் பொறுப்பாளனாகத் தேர்ந்தெடுத்ததோ, அதே மன்றம் என்னைக் கூண்டில் ஏற்றிக் குற்றவாளியெனப் பழி சுமத்தும் நிலை வருவதை நான் விரும்பவில்லை...

[பெரிக்ளீஸ் மீண்டும் சிந்தனையிலாழ்ந்து மெல்ல உலவத் துவங்குகிறான். அவனது தோழன் அவனை நோக்கியவாறு சலனமற்று நிற்கின்றான். சற்று நேரம் அமைதியிலேயே கழிகிறது; உலவியவாறிருந்த பெரிக்ளீஸ் சட்டென நின்று தன் தோழனை நோக்குகின்றான்.]

பெரிக்:- தோழா!

தோழன்:- என்ன பெரிக்ளீஸ்?

பெரிக்:- (மலர்ந்த முகத்துடன்) பழியேற்கும் இழிநிலை வராதிருக்க எனக்கொரு வழி புலப்பட்டு விட்டது நண்பா!

தோழன்:- (ஆவலுடன்) என்ன அது பெரிக்ளீஸ்? கூறு, உடனே கூறு!

பெரிக்:- நண்பா, ஆர்க்கிடாமஸின் படை ஸ்பார்டாவின் எல்லையில் உறையுள்களமைத்துக்கொண்டு தங்கியிருப்பதாகத் தகவல் வந்துள்ளது. ஆர்க்கிடாமஸும் அங்குதானிருப்பான்; அவனுக்கொரு முடங்கல் வரைந்து தருகின்றேன்; நம்பகமான ஆள் மூலம் நீ அதனை அவனுக்குச் சேர்ப்பிக்கவேண்டும்...

தோழன்:- பறவைகள் கீச்சிட்டவாறு இரைதேடப் பறந்து செல்வதற்குமுன் நமது ஆள் உன் முடங்கலுடன் ஸ்பார்டாவை நோக்கிப் பறந்துசெல்ல ஏற்பாடு செய்கிறேன், பெரிக்ளீஸ்; முதலில் பழிவாராதிருக்க நீ கண்டவழியினை விளக்கமாய்க் கூறு!

பெரிக்:- (நகை முகத்துடன்) கூறுகிறேன் நண்பா,கூறுகிறேன்...!

* * *

[இரவு நேரம்; ஸ்பார்டாவின் எல்லைப்புறம்; தேனடையை மொய்த்திருக்கும் தேனீக்களைப் போல் பல்லாயிரக் கணக்கான உறையுட்கள் காணப்படுகின்றன; அவற்றுக்கு நடுவில் மற்றவைகளைக் காட்டிலும் சற்று விசாலமாக உள்ள கூடாரம்; அதன் வாயிலில் உருவிய வாளுடன் காவலாளிகள் உலவியவாறுள்ளனர்; உள்ளே ஸ்பார்டாவின் மன்னன் ஆர்க்கிடாமஸ் போர்த் திட்டங்களைப்பற்றித் தீவிரமாகச் சிந்தித்தபடியிருக்கிறான்.

வெளியே ஏதோ அரவம்; யாரோ மெல்லிய குரலில் எதற்காகவோ வாதாடும் குரல் கேட்கிறது; ஆர்கிடாமெஸ் வாயிற்புறத்தை நோக்குகிறான்.]

ஆர்க்கிடாமஸ்:- (சற்று உரத்த குரலில்) யார் அங்கே?

[வாயிற்புறத்துக் காவலாளருள் ஒருவன் உள்ளே வந்து வணங்கிநிற்கிறான்]

ஆர்க்:- வெளியே என்ன சச்சரவு?

வாயிற்காப்போன்:- அந்நியன் ஒருவன் வந்திருக்கிறான்; ஆத்தீனியனைப்போல் காணப்படுகிறான்; தங்களைச் சந்திக்க வேண்டுமென்றான். 'தற்போது எவரும் அரசரைப் பார்க்கவியலாது' என்ற பிறகும் போக மறுக்கிறான்; உங்களைச் சந்தித்தாலன்றித் திரும்பிச் செல்ல மாட்டானாம்; பிடிவாதமாகக் கூறிவிட்டான்: அச்சுறுத்தியும் பயனில்லை......

ஆர்க்:- யார் அவன்? உள்ளே வரச்சொல்!

[வாயிற் காப்போன் வணங்கிவிட்டுச் செல்கிறான். சிறிது நேரத்திற்குப் பின் புதியவனொருவன் உள்ளே வந்து வணங்குகிறான்.]

ஆர்க்:- யார் நீ? எங்கிருந்து வருகிறாய்?

புதியவன்:- பேரறிஞரும், ஏதென்சின் போர்க்காலப் பொறுப்பாளருமான பெரிக்ளீஸின் அந்தரங்கப் பணியாளன் நான்: இதோ அவரது முத்திரை மோதிரம்; அவரிடமிருந்து தகவல் ஒன்று கொணர்ந்திருக்கிறேன் வேந்தே......

ஆர்க்:- (ஆவலுடன்) யார், பேறிவாளர் பெரிக்ளீஸ் அவர்களிடமிருந்தா தகவல் கொணர்ந்திருக்கிறாய்? அவரைப் பார்த்து உள்ளம் மகிழ உரையாடி எத்தனையோ நாட்களாகிவிட்டன; பெரிக்ளீஸ் நலமாகத்தானே இருக்கிறார்? ஏதென்சைக் கட்டிக் காக்கும் பொறுப்பை ஏற்றிருப்பதால் வேறெதைப்பற்றியும் சிந்திக்கப் பொழுதின்றித்தான் இருப்பார்; எனக்கு என்ன தகவல் தெரிவித்திருக்கிறார்? (சற்று ஏமாற்றத்துடன்) போரைப் பற்றியதாகத்தானிருக்கும்; இல்லையா?

பணியாளன்:- அதனை நான் அறியேன் அரசே; தங்களுக்கு ஒரு

'நெடுஞ்சாலை ஊழியன்'

11000 தொழிலாளர்களுக்கு ஈடுபட்டிருக்கும் நெடுஞ்சாலைத் தொழிலாளர் (Highways)களுடைய சங்கத்தின் சார்பாக தோழர் எஸ். இராமசாமியின் பெருமுயற்சியால் வெளிவரும் மேற்படி இதழைக் கண்டோம். ஏடு, தொழிலாளர் தம் குரலாக விளங்குமென நம்புகிறோம். வாழ்த்துகிறோம். திருச்சியில் அண்மையில் நடைபெற்ற மேற்படி சங்க மாநாட்டு மலராக விளங்குகிறது.

விலை 50 காசுகள்.

முகவரி:
நெடுஞ்சாலை ஊழியர் சங்கம்
திருச்சி-1

கடிதம் கொடுத்தனுப்பியிருக்கிருர்; இதோ—...

[மடியிலிருந்து ஒரு சுருளை எடுத்து நீட்டுகிருன். ஆர்க்கிடாமஸ் ஆவலுடன் அதை வாங்கிப் பிரிக்கிருன்]

ஆர்க்:- ஆகா, அந்த மேதையின் கையெழுத்தைப்பார்த்து எத்தனை நாட்களாகிவிட்டன!

[உரத்த குரலில் கடிதத்தினைப் படிக்கத் துவங்குகிருன்.]

ஆர்க்கிடாமஸ்—என் அன்பு நண்ப,

அவசர அவசரமாக இதனை எழுதி அனுப்புகிறேன். இன்னும் ஒரு கிழமைக்குள் உனது பெரும் படையோடு நீ அட்டிக்காவில் நுழையப்போவதாக ஒற்றர்களிடமிருந்து தகவல் வந்தது. அட்டிக்காவின் எல்லைப் பகுதியில் என் விளைநிலங்கள் இருப்பதை நீ அறிவாய் என்பது எனக்குத் தெரியும். என்பால் அன்பும் மதிப்பும் கொண்டவனை நீ என் நிலபுலங்களை அழிக்க உன் படைகட்கு அனுமதி அளிக்கமாட்டாய் என்பதை நான் அறிவேன், என் உடைமையினைச் சேரழிக்காமல் விடுவதன் மூலம் என்மீது உனக்கிருக்கும் பற்றையும், பாசத்தையும், பெருமதிப்பையும் காண்பித்துக்கொள்வாய் என்பதையும் நான் அறிவேன்; ஆர்க்கிடாமஸ், என் உடமைகளைத் தவிர மற்றவை யாவும் அழிக்கப்படுகின்ற சம்பவத்தால் என் நாட்டவர்கள் என் மீது ஐயங்கொள்ளும் நிலை ஏற்படும் என்பதை உணர்ந்தேன்; நண்பா, என் நிலங்களை மட்டும் நீ அழிக்காது விட்டுவைப்பதால் உனக்கும் எனக்கும் ஏதோ தொடர்பு இருப்பதாகவும், நான் என்து நாட்டுக்குத் துரோகம் புரிந்துவிட்டதாகவும் இங்கே பிரச்சாரம் செய்யப்படும்; வீண் பழியேற்க நான் விரும்பவில்லை; நீயோ நானேமிகவும் வற்புறுத்தி வேண்டிக்கொண்டாலும்கூட என்னுடைய சொத்துக்களை அழிக்கத் துணியமாட்டாய்; எனவே என் உடமைகள் யாவினையும் ஏதென்சு அரசாங்கத்திற் குரியதாக்கிவிடத் தீர்மானித்துவிட்டேன். இந்த முடங்கலை நீ படிக்கும்போது நான் ஏதென்சில் எனது உடமைகள் எல்லாவற்றையும் தேசியமயமாக்கிவிட்டதாகப் பிரகடனப் படுத்திவிட்டிருப்பேன்.

ஆர்க்கிடாமஸ்! எனக்கென்று இப்போது எவ்வித உடமையும் இல்லை; எனவே தயவு செய்து அட்டிக்காவின் இதர விளைநிலங்களையும், கால்நடைகளையும் சிதைத்துச் சீர்குலைப்பதைப் போலவே எனக்குச் சொந்தமாயிருந்த உடமைகளையும் அழித்துவிடுமாறு வேண்டுகிறேன்.

என் கோரிக்கையை மறுக்கவோ, மறக்கவோமாட்டாய் என நம்புகிறேன்.

அன்பன்,
பெரிக்ளீஸ்.

[முடங்கலைப் படித்த ஆர்க்கிடாமசின் விழிகள் கலங்குகின்றன. அதனைக் கொணர்ந்த பணியாளனும் கண்களில் நீர்மல்க நிற்கிருன்.]

ஆர்க்:- (கரகரத்த குரலில்) பெரிக்ளீஸின் பணியாளனுகவிருக்கும் பேறு பெற்றவனே, உனது எஜமானனிடம் நான் அவரது கோரிக்கையை நிறைவேற்றி வைப்பதாகக் கூறு; தாயகத்தவர் தன்மீது ஐயப்படலாகாது என்பதற்காக நெஞ்சுரம் மிக்க அந்தப் பேரறிஞர் புரிந்திருக்கும் செயலை சாமான்யனை ஆர்க்கிடாமஸ் பெரிதும் போற்றியதாகச் சொல்; பழிக்கு அஞ்சித் தன் உடமைகள் அனைத்தையும் அரசாங்கத்திற்கு உரிமையாக்கிவிட்ட அந்தப் பெருந்தகையாளருக்கு என் பணிவன்பான வணக்கங்களைத் தெரிவி; அவர்புரிந்த மாபெரும் தியாகத்தை உணர்ந்து ஆத்தீனியர்கள் என்றென்றும் அவரைப் பெருமையுடன் போற்றிப் புகழ்ந்தவாறிருப்பார்களாக!

[பெரிக்ளீஸின் பணியாளன் ஆர்க்கிடாமஸிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு திரும்புகிருன்.] ★

தி. மு. க. தலைமை நிலைய முதல் வெளியீடு!

"வளம் காண வழி"

அண்ணாவின்

அரிய கருத்துரை

சென்னை சட்டமன்றத்தில், 1958—59ம் ஆண்டின் வரவு செலவு பொதுவிவாதத்தின்போது ஆற்றிய பேருரைகளின் தொகுப்பு.

இந்நூல்....................

அரசியல் துறையினருக்கு அரிய விளக்கம் தரும் அறிவுக் களஞ்சியம்!

கொள்கை விளக்கப் பணியில் ஈடுபட்டுள்ள கழகத் தோழர்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டிய பெருந்துணைக் கருவி!!

விலை 8 அணு

குறிப்பு:— தனிப்பிரதி வேண்டுவோர், புத்தக விலையுடன், 15-புதுக் காசுகள் அஞ்சல் செலவிற்காக, அனுப்பவும். 50-பிரதிகளுக்கு அதிகமாக வேண்டுவோர்க்கு 20-சதவிகிதம் கழிவு உண்டு. வி. பி. பி. இல்லை. தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

விவரங்களுக்கு:—

தி. மு. க. தலைமை நிலையம் 'அறிவகம்' சென்னை-13.

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்

திராவிடநாடு

835

31—8—58

விலை 16 காசு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1- SEP 1958
MADRAS
835
3-14

ஓராண்டு! — ஓடிவிட்டது; உள்ளத்தைவிட்டு, உத்தமர் நாமம், ஓடுமோ! ஒருநாளுமில்லை; ஒருநாளுமில்லை.

இலங்கைக்குரல்

சிங்கள "சிறீ" எதிர்ப்புப் போராட்டம்

சூழ்ச்சி முறையான ஆட்சியைத் தமிழ் பேசும் மக்கள்மீது திணிப்பதையே இலட்சியமாகக்கொண்ட சிங்கள ஆட்சியாளர், மோட்டார் வண்டிகள், லாரிகள், பஸ்வண்டிகள் மீது புது இயக்கமொன்றைப் புகுத்தினார்கள். அவர்கள் இந்த இயக்கத்தை இட்டு தமிழ் பேசுவோர் சிரத்தை எடுக்கமாட்டார்கள் என ஆரம்பத்தில் எண்ணினார்கள். தமிழ் பேசும் மக்கள் அனைவரும் இலங்கை முழுவதிலும் ஒரே குரலோடு எதிர்த்து ஆட்சியாளரை அடிபணியச் செய்த பின்னரே ஆட்சியாளர் தமது புத்தியின் கூர்மையை எண்ணித் தமக்குள் தாமே பிணங்கினார்கள். இந்த வண்டிகளில் உள்ள இலக்கங்களின் முன் ஆங்கில எழுத்துக்கள் இருப்பது வழக்கம். ஆனால் நமது ஆட்சியாளர் ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலாக சிங்கள சிறீ (ஸ்ரீ) எழுத்தைப் போட்டு அதன் பின் இலக்கங்களைப் பொறிக்கும் சட்டத்தை இயற்றிச் செயலிலும் கொண்டு வந்தார்கள். முதலில் தமிழ்த் தலைவர்கள், ஆட்சியாளரிடம் இதன் வஞ்சனையை எடுத்துக் கூறினார்கள். தமக்கு நீதி வழங்கவேண்டும்; தமிழ் பரிகாசம் செய்யப்படுவதுமன்றித் தமிழன் தன்மானமிழந்த நிலையில் வாழும் அடிமைத் தனத்திற்கும் உங்கள் "சிறீ" வைத்துள்ளது. ஆதலால் அதனை மாற்றியமைக்க வேண்டுமெனக் கேட்டார்கள். "சிங்களமே இந்நாட்டின அரசியல் மொழி; எக்காரணத்தைக் கொண்டும் எமது திட்டத்தை மாற்றமாட்டோம்" எனறனர் ஆட்சியாளர். பல வகைகளில் முயன்றும் ஆட்சியாளர் நீதிக்குச் செவி சாய்க்க மறுத்ததும் தமிழர் தம் மோட்டார் வண்டிகளில் தமிழ் 'சிறீ' எழுத்தைப் பொறித்தார்கள். பஸ் வண்டிகள், லாரிகள் முதலியன வற்றிலும் தமிழ் சிறீ எழுத்தைப் பொறித்தார்கள். பஸ் வண்டிகள் தேசிய மயமானதால் ஆட்சியாளர் நடவடிக்கை எடுப்போம் என மிரட்டினார்கள்.

இலங்கையில் தமிழர் வாழும் பிரதேசங்கட்குச் செல்லும் பஸ் வண்டிகளில் சிங்கள 'சிறீ' எழுத்திருந்தால் பொதுமக்கள் வண்டியை நிறுத்தி தமிழ் 'சிறீ' எழுத்தை எழுதுவார்கள். இதே இயக்கத்தினாலே தான் மலைநாட்டுத் தமிழர் இருவர் போலிசாரால் சுடப்பட்டு மாண்டனர். அக்கிரமமாகச் சுடப்பட்டு மரணமடைந்த இரு தியாகிகளைப்பற்றிக் கேட்க நாவெழாத இந்தியமந்திரத் தூதுவர்தானா இன்றைய கோர சம்பவம் பற்றி நடவடிக்கை எடுக்கப் போகிறார்? ஸ்ரீ எதிர்ப்பு இயக்கம் வளர்ந்தது. சிங்கள 'சிறீ' எழுத்துப் பொறித்த பஸ் வண்டிகள் பின்னர் துப்பாக்கி தாங்கிய

முருகு

போலிசாருடன் வந்த போது மக்கள் அதில் பிரயாணஞ் செய்யாது புறக்கணித்தனர். தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள சிறீ பொறிக்கப்படாத ஆங்கில எழுத்துக்கள் பொறித்த பஸ் வண்டிகளில் பிரயாணம் செய்வதையே புறக்கணித்தார்கள் "தினமொன்றுக்கு லட்ச ரூபாய்கள் நஷ்டமேற்படுகிறது" என ஆட்சியாளர் கதறினார்கள். தமிழ் சிறீ இயக்கம் உச்ச நிலை அடைந்தது.

தமிழ் அழிப்பு இயக்கம் தீவிரமாக நடைபெற்றது. பெரும் அளவில் நடைபெற்றது. சிங்களப் பிரதேசங்களில் தமிழர் கடைகளிலுள்ள தமிழ் வார்த்தைகள் தாரினால் அழித்து மறைக்கப்பட்டன. இந்த இயக்கத்தை அரசாங்கம் எவ்வகையிலும் தடை செய்யவில்லை. ஆனால் பஸ் வண்டிகளிலுள்ள சிங்களசிறீ எழுத்துக்களை மாற்றி தமிழில் எழுதுவோர் மீது ஆட்சியாளர் நடவடிக்கை எடுத்து சிறைக்கும் அனுப்பினார்கள். சிங்களப் பிரதேசங்களிலுள்ள தமிழ் அழிப்பு இயக்கம் முடிந்ததும் சிங்களக் காடையர்கள் எல்லைப் பிரதேசங்களிலுள்ள தமிழ்க் கிராமங்களிலும் அரசாங்க லாரிகளில் வந்து தமிழ் அழிப்பு இயக்கத்தை நடாத்தி இரு கிராமங்களில் வெற்றி கண்டார்கள். மக்கள் பொலிசாருக்கு முறையிட்டார்கள். ஆட்சியாளருக்கு அறிக்கை கொடுத்தார்கள். எவ்வித பதிலோ, உதவியோ கிடைக்கவில்லை.

பாவற்குளம் என்பது தமிழ் நாட்டின் எல்லையிலுள்ள விவசாயத்திற்குச் சிறந்த இடம். இதனை ஆட்சியாளர் குடியேற்றத் திட்டமாக்கிச் சுமார் 3000 சிங்களவர்களைக் குடியேற்றி இருந்தார்கள். அதனை விஸ்தரிக்கும் வேலையில் சுமார் 500-சிங்களத் தொழிலாளர்கள் வேலைசெய்தனர். இந்தக் கூலிப்படையைக் கொண்டு தான் தமிழ்க் கிராமங்களில் தமிழ் எழுத்து அழிப்புத் தொண்டினைச் சிங்கள அதிகாரிகள் நிறைவேற்றினார்கள். இப்பாவற்குளம் என்ற இடத்திற்கு சுமார் 18-மைல் தூரத்தில் செட்டிகுளம் என்ற தமிழ்க் கிராமம் உண்டு. பாவற்குளக் கூலிப்படை செட்டிகுளத்தை நோக்கி தமிழ் அழிக்கும் தொண்டிற்கு வருவார்கள் என்பதைச் செட்டிகுள மக்கள் அறிந்து சில ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். எதிர்பார்த்தபடி நாலு அரசாங்க லாரிகளில் 80-பேர் செட்டிகுளம் நோக்கி வந்தார்கள். இம்முறை ஜீப் வண்டியொன்றும் கொண்டுவந்திருந்தார்கள். அதனுள் ஆசிட், எறிகுண்டு, பெட்ரோல், கத்திகள், துப்பாக்கிகள் முதலியன காணப்பட்டன. ஜீப் வண்டி முதலில் வந்து செட்டிகுளத்திற்கு அரைமைல் தொலைவில் நின்றது. ஐந்து நிமிடத்தின் பின் லாரிகள் வந்து ஜீப் வண்டிக்குப் பின்னே 600 அடி தூரத்தில் நிறுத்தப்பட்டன. சிங்களக்காடையர்கள் கையில் பிரஷ்,

(4-ம் பக்கம் பார்க்க)

★ "விழா" ★

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [31—8—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 7

ஆண்டு முழுவதும், ஏதாவது ஒரு 'வாரம்' கொண்டாடுவது என்பது இப்போதெல்லாம் மிகச் சாதாரணமாகி வருகின்றது. எந்த "வாரம்" கொண்டாடுகின்றார்களோ அந்த வாரத்திற்கு உரிய இடத்தில் அலங்காரங்கள் மிகுவதும், அதிகாரிகளின் நடமாட்டம் பெருகுவதும், வேடிக்கைகள் நிலவுவதுமாக ஒரு கிழமை அங்கே 'கோலாகலம்' கொலுவிருக்கிறது. அந்தக்கிழமை முடிந்ததும் பழையபடியே அங்கே வெறுமை வந்துவிடுகின்றது.

இரயில்வேயில் 'வாரம்' கொண்டாடுகின்றார்கள்; ஒவ்வொரு துறையிலும் 'மரியாதை வாரங்கள்' கொண்டாடுகின்றார்கள்; மரம் நடுவதற்கு வாரம் இருக்கிறது; ஐந்தாண்டு திட்டத்தைப் பிரச்சாரம் செய்யவும் வாரம்! இப்படி எத்தனை எத்தனையோ வாரங்கள், வளர்ந்துகொண்டே யிருக்கின்றன.

எந்த வாரமாக இருந்தாலும், அதைக் கொண்டாடுவதன் நோக்கம், ஆண்டு முழுவதும் அந்தச் செய்தியின் நினைவு மனதில் நிலைக்கவேண்டும், மக்கள் அதனால் பயன்படவேண்டும் என்பதேயாகும். ஆனால் நடைமுறையில் 'விழா' ஏதாவது பயனளிக்கிறதா என்று பார்த்தால், மறுபடியும் அந்த விழா வருகின்றபோதுதான் அதைப்பற்றிய நினைப்பே வருகின்றது பலருக்கு. இத்தனைக்கும் நடத்தப்படுகின்ற விழாக்களில் பல மக்களுக்கு உண்மையிலேயே பயன்படக்கூடியவையாகும். ஆனாலும் மக்களுடைய மனம் அந்த விழாக்களில் முழுதுமாக ஈடுபடவில்லை. மக்கள் மனம் மட்டும் என்ன, அதைக் கொண்டாடுகின்ற அதிகாரிகளின் மனமே அதில் ஈடுபடுமோ என்னவோ தெரியவில்லை.

இதற்கு என்ன காரணம்? இந்த விழாக்களையும், அவை கொண்டாடப்படும் முறையையும்பார்த்தால், இதனால் மக்கள் பயன்படவேண்டும் என்பதோ, திருந்தவேண்டும் என்பதோ நோக்கமாகத் தெரியவில்லை. மாறாக இதனால் பிரச்சாரம் நடந்தால் போதும் என்று கருதுவதுதான் நோக்கம்போலும் என்று நினைக்கக்கூடிய வகையில் அந்த விழாக்கள் அமைகின்றன.

அந்தப் பிரச்சாரமும், அந்தத் துறையைப் பற்றிய செய்திப் பிரச்சாரமாக இராமல், 'அரசாங்கத்தின் சாதனைகளை'ப்பற்றிய பிரச்சாரமாக முடிகின்றது. அதனால்தான் சர்க்கார், இந்தத் துறையில் எவ்வளவு உற்சாகமாக ஈடுபடுகின்றார்களோ, அவ்வளவு உற்சாகமாக மக்கள் இதிலே நாட்டம் கொள்ளுவதில்லை.

எனவே இந்த முயற்சிகளினால் உண்மையிலேயே பயன் விளையவேண்டுமானால், எந்த விழாவாக இருந்தாலும், அதில் சர்க்கார் பெறும் பங்கைவிடப் பொதுமக்கள் பெறும்பங்குபெரியதாக இருக்க வேண்டும். அதனால் தங்களுக்கு உண்மையிலேயே நன்மையிருப்பதாக மக்கள் கருதவேண்டும். இப்போது கொண்டாடப்படுகின்ற விழாக்களிலும் இரண்டொன்றில் மக்கள் கொஞ்சம் நாட்டம் கொள்ளுவதற்குக் காரணம், அவற்றினால் தாங்கள் நன்மை பெறுகின்றோம் என நம்புவதே ஆகும்.

எடுத்துக்காட்டாகக் கைத்தறி வார விழாவைக் காண்போம். மற்ற வார விழாக்களைவிட இதில் மக்களுடைய தொடர்பு மிகுதியாக இருக்கிறது. அதனால் மற்ற விழாக்களில் இருப்பதைவிட இதிலே மக்களுடைய அக்கரை மிகுந்திருக்கிறது.

இன்னொன்று: இந்த வாரங்களைக் கொண்டாடும்போது, இவற்றிற்கும் விழா என்று பெயர் அமைந்திருக்கின்ற காரணத்தினாலோ என்னவோ, இவற்றைக் கொண்டாடும்போது, மற்ற மத விழாக்களில் இருப்பது போன்ற ஆடம்பரங்களைக் கூட்டி விடுகின்றனர். பல இடங்களில் 'வாணங்கள்! அதிர் வேட்டுக்கள்!

விழா என்ற பெயர் வீண் வேடிக்கைகளைத் தருவதற்கு என்று பொது மக்கள் பொருள்கொண்டு விடாது பார்த்துக்கொள்ள வேண்டும். விழா என்றால் அதனால் என்ன விளைவு என்று பார்த்து, அந்த விளைவு நல்லதாகவும், நாம் விரும்புகின்ற வகையிலும் அமைய வேண்டுமானால், அதற்கு ஆன வழி துறைகள் என்னென்ன என்று கண்டறிந்து அந்த வகையிலும், முறையிலும் விழா கொண்டாடுவது தான் உண்மையிலேயே நல்ல விளைவு காண்பதற்கான வழியேயன்றி வெறும் வேடிக்கைக் களியாட்டமன்று.

இனி வரும் 'வார'ங்களாவது வேடிக்கைகளோடு முடியாமல், சம்பந்தப்பட்ட துறைபற்றிய விஷய விளக்கங்களைப் பொதுமக்களுக்கு உணர்த்தும் வழியிலும், வகையிலும் வரவேற்கப்படும் என நம்புகின்றோம்.

★

தார் முதலியன இருந்தன. லாரியை விட்டுக்கீழே இறங்கினார்கள். அவ்வளவுதான். லாரிகள் தீப்பற்றி எரிந்தன. சிங்களக் காடையர்கள் திகைத்தார்கள். காடுகளினுள் இருந்து (பக்கத்தே சோலைக்காடு) துப்பாக்கி வெடிகள் வந்ததைக் கண்டதும் திரும்பி ஓடினார்கள். இதற்கிடையே ஜீப் வண்டியைச் செட்டிகுள வாலிபர்களில் ஒரு பகுதியினர் சூழ்ந்து நின்றனர். ஜீப் வண்டியின் சாரதியும் தாக்கப்பட்டார். ஓட்டம் பிடித்த சிங்களக் காடையர்களை விரட்டிக்கொண்டு பாவற்குளம் வரை சென்று அங்கும் அவர்களை விடாது விரட்டி குடியேற்றக் காலனியையே தும்சம் செய்தார்கள், செட்டிகுளத் தமிழர். பாவற்குளமும், கல்லோயாவின் நிலைமையை அடைந்தது. தமிழ்எழுத்துஅழிப்பும் ஓரளவில் ஓய்ந்தது. இந் நிகழ்ச்சியின் பின் தமிழ்க் கிராமங்கட்கு அண்மையிலுள்ள குடியேற்றச் சிங்களவாசிகள் அக்கிராமங்களைக் 'காலி செய்துவிட்டு ஓடினார்கள். இன்று இராணுவ உதவியோடு மீண்டும் வந்து குடியேறுகிறார்கள். சிறீ பிரச்சனை கட்டுக்கடங்காதுபோகும் நிலைகண்டு போக்குவரத்து மந்திரி தமிழ்த் தலைவர்களை அழைத்து ஸ்ரீ பிரச்சனையில் தமிழர் கட்டுப்பாட்டை மீறியதாகவும், அரசாங்கத்தினைக் கவிழ்க்கச் சதி செய்வதாகவும், உடனடியாகவே பத்திரிகைகள் மூலம் அரசாங்கத்திடம் மன்னிப்புக்கோரவேண்டுமெனவும் கூறினார். அதைத் தமிழ்த் தலைவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்ததுமன்றி அரசாங்கத்தின் விதண்டாவாதப் போக்கையும் கண்டித்தார்கள். "செல்வநாயகம் பண்டார நாயக்கா ஒப்பந்தத்தில் பிரதேச சபை ஆட்சியும் ஒரு சரத்தாகச் சேர்க்கப்பட்டிருந்தது. மோட்டார் வண்டிகளின் எழுத்துக்கள் எது என்பதை அப்பிரதேச சபைகளே முடிவு செய்யும் அதிகாரமும் இருந்தது. இவ்வாறு ஒப்பந்தத்தை எழுதி வைத்துவிட்டு உடனடியாகவே சிங்கள சிறீ பொறித்த பஸ் வண்டிகளைத் தமிழ்ப் பிரதேசங்களுக்கு நூற்றுக்கணக்கில் அனுப்புவதும், மோட்டார் வண்டிகள், லாரிகள், அனைத்திலும் சிங்களசிறீ எழுத்துப்பொறிக்கும் சட்டத்தைத் தீவிரமாக்குவதும், தமிழ் ஸ்ரீ பொறித்த மோட்டார் வண்டிகளின் சாரதிகளைத் தாக்குவதும் அரசாங்கத்தின் அயோக்கியத்தனத்தையே பிரதிபலிக்கிறது" என்ற அறிக்கையையும் வெளியிட்டார்கள்.

தமிழ் எழுத்துக்கள் அழிப்பு இயக்கம் ஓய்ந்தபின் தமிழ்ப்பகுதியிலிருந்து தென்னிலங்கை செல்லும் எல்லாவித மோட்டார் வண்டிகளிலும் சிங்களக் கூட்டத்தார் சிங்கள சிறீ எழுத்தைத் தாரினால் எழுதத் தொடங்கினார்கள். இச் சந்தர்ப்பத்தில் எமது இந்திய மந்திரத் தாதுவர் மோட்டார் வண்டிக்கும் அக்கெதி நிகழ்ந்தது. எது நடந்தாலுமென்ன...? இந்த இயக்கம் சில இடங்களில் கைகலப்பிலும், கலவரத்திலும், கொலைகளிலும் முடிந்தது. தீக்கிரையான மோட்டார் வண்டிகளும் பல. எத்தனை இன்னல்கள் ஏற்படினும், எத்தனை ஆயிரம் மக்கள் அழிந்தாலும் சிங்கள சிறீயை ஏற்கமாட்டோமென உறுதியோடு, தமிழ் பேசுவோர் கொண்ட உறுதியைக் குலைக்க ஆட்சியாளரும் தம்மாலான அனைத்தையும் கையாண்டனர். எதிர்ப்பு உச்சநிலை அடைவதைக் கண்ட போக்குவரத்து மந்திரியாரின் அனுசரணையோடு போக்கு வரவுச் சபைத் தலைவர் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டார்: "சிங்கள சிறீயைத் தமிழர்கள்மீது திணிக்கவேண்டுமென்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல. பொதுமக்கள் சௌகரியமாகப் பிரயாணஞ் செய்யவேண்டுமென நாம் எண்ணியதால் சிறீ பொறித்த புதிய பஸ் வண்டிகளை அனுப்பினோம். மக்கள் விரும்பாவிடில் நாம் வற்புறுத்தாது புது வண்டிகளை அனுப்பாது விடுகிறோம்." என்பது. பிரதமர் பண்டார நாயக்காவின் அறிக்கை: "தமிழ்த் தலைவர்கள் இப்பிரச்சனையை ஆரம்பத்திலே என்னுடன் யோசித்திருந்தால் எந்தவித நெருக்கடியுமின்றி இதனைத் தீர்த்திருப்பேன்." என்பது. சிங்கள ஆட்சியாளர்கள் அறிக்கைகளை விட்டார்களே ஒழிய, பொது மக்கள் மத்தியில் கலவரங்களும், பகைமைகளும் வளர்ந்து கொண்டே வந்தன. இன்றும் வளருகிறது. சிறீ எதிர்ப்பில் பல நூற்றுக்கணக்கான தமிழர் சிறை சென்றார்கள். இன்னும் பலர்மீது வழக்குத் தொடர்கிறார்கள். ஆனால்...அரசாங்கக் காரியாலயங்களில் புகுந்து தமிழ் எழுத்தின் மீது தார்பூசியவர்கள் பேரில்கூட ஆட்சியாளர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

★

எமது ஏழாவது வெளியீடு!

வீரத்தாலும் விவேகத்தாலும்
வீழ்த்த முடியாத செயல் வீரனை
வீணர்கள் சதியால் சாகடித்தனர்!

இதன் எதிரொலி!..............

நீதி சதியை சாகடித்தது!!

......இத்தகைய அரும்பெரும் வீர உணர்ச்சிகளைக்
கொண்ட சிறந்த வரலாற்று நூல்!

சிந்தனை சிற்பி

சி. பி. சிற்றரசு அவர்களின்

"ரோம் நாட்டு வீரன்"

விலை ரூ. 1—50

எழுதுங்கள்:—

முத்துவேல் பதிப்பகம்,
77, மதுரை சாலை, திருச்சிராப்பள்ளி-1.

குறிப்பு: தனிப்புத்தகம் வேண்டுவோர் புத்தக விலையுடன் தபால் செலவிற்கென 25 புதிய காசுகள் M.O அனுப்புக!

உணர்ந்ததும், உணரவேண்டியதும்

M. S. வெங்கடாசலம், M. A.

"இந்தோ ஆரிய மொழிகள் உட்பட எல்லா மொழிகளுமே திருத்தம் பெருமல், பேச்சு மொழியாக மட்டுமே இருந்தன, துளசிதாசர், ஞானேஸ்வரர், சைதன்யர் ஆகியோரின் முயற்சியால்அவை வளர்ச்சியடைய வேண்டிய நிலையிலிருந்த அந்தக் காலத்திலேயே, தமிழ், பெருமைப்படத்தக்க அளவில் இலக்கிய வளத்தையும் இலக்கண வரம்பையும் பெற்றுத் திகழ்ந்தது."

—இந்தத் துணைக்கண்டத்தின் 'ஜனுதிபதி' இராசேந்திரபிரசாத், ஆந்திரத்தின் தலைநகராம் ஐதராபாத் நகரில் பேசிய பேச்சின் ஒரு பகுதிதான் இது.

தமிழின் தொன்மை பற்றியும்' வளம்பற்றியும் நாம் நன்கறிவோம்.

திராவிட இயக்கத்தவர், தமிழ் மக்களுக்கு அந்தத் தன்மைகளையெல்லாம் எடுத்துரைத்து, உள்ளத்தில் பதியவைத்திருக்கிருர்கள்.

ஆனுலும், இன்றுவரை உலகம் தமிழ் மொழியினைப் பற்றியோ, தமிழ்ப் பண்பாட்டைப் பற்றியோ, தமிழினத்தின் சீர்சிறப்புகளைப் பற்றியோ, சரியாக உணர்ந்திடவில்லை என்பது மறுக்கமுடியாத உண்மை.

உலகம் உணர்ந்திடவில்லை என்பது மட்டுமல்ல! "பாரதம் ஒன்றுதான்—பற்பல வேற்றுமை இங்கே இருந்திட்டாலும், அவற்றிற்கிடையே ஒரு அடிப்படை ஒற்றுமை இருக்கிறது" என்று பற்பலரும், நாள்தோறும், பேசி வருகிற கருத்து எவ்வளவு தவருனது என்பதனை எடுத்துக்காட்டும் வகையில், வட இந்தியாவில் உள்ளவர்களே, தமிழைப் பற்றியோ தமிழினத்தைப் பற்றியோ, தெரிந்திட இயலாத நிலை இருந்து வருகிறது.

அண்மையில் "சுயராஜ்யா" என்ற இதழில் K. A. அப்பாஸ் தீட்டியிருக்கிற கட்டுரை, இந்த உண்மையினை தெள்ளத் தெளிய விளக்கிடுகிறது.

"வட இந்தியாவில்:உள்ள ஒரு பல்கலைக் கழகத்தில் எம். ஏ. பட்டத்திற்காகப் பயிலுகின்ற ஒரு மாணவனை அணுகி, அப்பாஸ் கேட்டாராம், "மதராஸ் மாநிலத்தில் பேசப்படுகிற மொழி என்ன தெரியுமா?" என்று! அந்த மாணவன் உடனே பதில் சொன்னும், "இது தெரியாதா, மதராஸி மொழிதான் அங்கே பேசப்படுகிறது," என்று!

'தமிழ் நாட்டில் மதராஸிமொழி பேசப்படுகிறது' என்று சொல்லுவது, படிப்பறிவற்ற பாமரனல்ல! ஏற்கனவே பி. ஏ. பட்டம் பெற்றுவிட்டு, எம். ஏ. பட்டத்திற்காகப் பயிலுகின்ற மாணவன்!

அந்த அளவுக்கு, தமிழைப் பற்றி, வடநாட்டிலே உள்ளவர்களுக்கே தெரியாத நிலை இருக்கிறது!

தமிழ்நாட்டுக்கு "மதராஸ் மாநிலம்" என்று பெயர் இருப்பதால் இத்தகைய குழப்பம் ஏற்படுகிறது—"தமிழ்நாடு" என்ற பெயர் மாற்றிட இன்னமும் ஏன் நமது அரசாங்கம் முன்வரவில்லை—என்று கேட்டு, நமது அரசினர் மீது குற்றம் சாட்டுவதற்காக அல்ல இதைக் குறிப்பிடுவது!

அப்படிக்குற்றம் சாட்டுவதாலே காமராசருக்கும், அவர்தம் அமைச்சரவையிலே இடம் பெற்றிருக்கிற கனம்களுக்கும் மொழிப்பற்றும் இனப்பற்றும் ஊற்றெடுத்துப் பெருகி, இந்தத் தேவையானதோர் மாற்றத்தைச் செய்திட முன்வருவார்கள், என்று கருதி ஏமாறும் நிலையிலில்லை நாம்!

உறங்குபவர்களை எழுப்பிவிடலாம்—உறங்குவதைபபோல் பாசாங்கு செய்பவர்களை எழுப்ப முடியாது! இந்த உண்மையை உணராதவர்களல்ல நாம்!

நமக்கு ஏற்படுகின்ற எண்ணமெல்லாம், இந்த அளவு தமிழைப் பற்றி அறிந்திராத வெளியுலகம், இப்போது புரிந்துகொள்வதற்கு நல்லதோர் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது, இராசேந்திரரின் பேச்சு, என்பதுதான்! அந்த வகையிலே மகிழ்ச்சி!

தமிழின் சிறப்புக்களைப்பற்றித் தமிழர்கள் பேசுவதற்கும், மற்றவர்கள் எடுத்துரைப்பதற்கும் வேறுபாடு இருக்கிறது!!

மகன் நல்லவன் என்று தாய் புகழ்வதற்கும், ஊரிலுள்ள மற்றவர்கள் புகழ்வதற்கும வேறுபாடு உண்டல்லவா! தாய், பாசத்தின் காரணமாக, தன் பிள்ளை நல்லவன் என்று சொல்லிவிடக்கூடும்! ஆனல் ஊரார் அப்படியல்லவே! அவன் நடத்தையையும் பெற்ருேரிடமும் மற்ருேரிடமும் பழகுகிற பாணியையும் பார்த்துத்தான் அவன் நல்லவனு அல்லவா என்று தீர்ப்புச் சொல்லுவார்கள். அதைப்போன்றதுதான், இராசேந்திரர் போன்ருர் தமிழின் தொன்மைபற்றியும், பற்பல சிறப்புக்களைப்பற்றியும் புகழ்வது!

அதுமட்டுமல்ல! அவர் இருக்கும் இடம், அவரது சொல் ஒவ்வொன்றுக்கும், ஆழ்ந்த பொருளைத் தருவது—உலகின் கவனத்தையே ஈர்க்கவல்லது.

"இந்தியாவின் ஜனுதிபதியே சொல்லிவிட்டார்; தமிழ் மிகவும் சிறப்பு வாய்ந்த மொழி என்று. அதிலிருக்கும் சிறப்புத்தான் என்ன" என்று பற்பல மொழியாராய்ச்சி வல்லுனர்கள் இந்தப் பணியிலே இறங்கிடக்கூடும்.

"உலகத்திலே உள்ள மொழியியல் நிபுணர்கள் பலரும், திராவிட மொழிகள், இலக்கியங்கள், பண்பாடு, இவைபற்றிய ஆராய்ச்சிகள் வேண்டுமென்றே தவிர்க்கப்பட்டிருக்கின்றன என்பதை உணருகிருர்கள்"

—என்று செக்நாட்டு மொழியியல் நிபுணரான கமில் சுவெலபில் என்பார் கூறியிருக்கிருர்.

ஐரோப்பா கண்டத்தைச் சேர்ந்த சிறியதோர் நாட்டிலே இருக்கின்ற ஒருவர், வருந்தி, உளம் வெதும்பி, எடுத்துக்கூற வேண்டிய நிலையில், ஒதுக்கப்பட்டிருக்கிற ஆராய்ச்சி, இனித்

துவக்கப்படக் கூடும், மேல்நாட்டு நிபுணர்களால்.

தமிழைப்பற்றி, உலகம் புரிந்து கொள்ளும் விதத்தில் உண்மையை எடுத்துக் கூறியதற்கு, தமிழ் மக்களின் சார்பில், தமிழ்ப் பற்றுக் கொண்டோரது சார்பில், இராசேந்திரருக்கு நன்றி கூறிடக் கடமைப்பட்டிருக்கிறோம் நாம்!

நன்றி கூறுகிற அதே நேரத்தில் நம் உள்ளத்தில் மற்றொரு கேள்வியும் எழுகிறது!

இவ்வளவு சீரும் சிறப்பும், தொன்மையும் வளமும், பெற்றிருக்கிற ஒரு மொழியினைத் தங்கள் மொழியாகக் கொண்ட மக்கள், இந்த எண்ணிறந்த பண்புகளில் எதையுமே பெற்றிராத இந்தி மொழியை, ஆட்சி மொழியாக, ஏற்றுக்கொள்வார்கள் என்று இராசேந்திராலும், மற்றும் பல வடநாட்டுத் தலைவர்களாலும், எப்படி நம்பமுடிகிறது, எதிர்பார்க்க முடிகிறது, என்பதுதான்!

காலை இளம் பகலவனைக் காட்டுகின்ற பளிங்குருவம் — பட்டுப் போல் மேனி — துறுதுறுக்கும் கண்கள்—கொவ்வை இதழ்கள்—கொள்ளையின்பம் இங்கென்று கூறுமற் கூறுகின்ற மழலைமொழி — இத்தனையும் பெற்றிருக்கிற குழந்தையின் பெற்றோர்கள், இந்தப் பண்புகளில் எதையுமே பெற்றிராத ஒரு குழந்தையை வாரிசாக எடுத்துக்கொள்வார்கள், என்று எந்தக் கருத்துக் குருடனும் எதிர்பார்க்கமாட்டான்!

ஆனாலும் இந்தியை நாம் ஏற்றுக்கொள்வோம் என்று எதிர்பார்க்கின்றனர், வடநாட்டுத் தலைவர்கள்! எதிர்பார்ப்பது மட்டுமல்ல அதனை நம்மீது திணிப்பதற்காக எந்தெந்த வகைகளிலெல்லாம் முயலவேண்டுமோ, இயலுமோ, அந்தெந்த வகையிலெல்லாம்முயலுகிறார்கள்.

அழகான குழந்தை — அது சிரித்தால் சிந்தை நோய் தீரும் மழலைமொழி ஒன்றினைக் கேட்டால் மலைபோல வருகின்ற இடுக்கண்களை யெல்லாம் தூளாக்குகிற வலிமை மனதுக்கு ஏற்படும்— அதன் கண்ணொளி கருத்தைக் குளிரவைத்திடும் — என்ற நிலை இருக்கும்போது, அந்தக் குழந்தையை, எந்த நிலையிலும் எப்பாடுபட்டாவது காப்பாற்றித் தீரவேண்டும் என்ற எண்ணம் பெற்றோருக்கு எழுவதிலே தவறில்லை—இயற்கை! காக்கைக்கே தன்குஞ்சு பொன்குஞ்சாக இருக்கும்போது, இந்தக் குழந்தையைக் காப்பாற்றாமலா விடுவார்கள் அதன் பெற்றோர்கள்?

அந்தப் பெற்றோரின் நிலையிலே இருப்பவர்கள் தமிழர்கள்! தாய் மொழிக்கு ஆபத்து எந்த நேரத்திலும் வரக்கூடும் என்ற நிலை!

"ஆரிய மென்ப தொரு நாம்பு—அது
தமிழைக் கடிக்க வந்தப் பாம்பு"

என்கிறார் புரட்சிக்கவிஞர்! இன்று அந்தத் தாம்பு உருவத்தில், பாம்பாக வருகிறது!

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே பண்பட்டுத் திகழ்ந்த தமிழ்மொழி — இராசேந்திரர் போன்ற வடநாட்டுத் தலைவர்களாலேயே இப்போதாவது பாராட்டப்படுகின்ற மொழி — அழியாமல், மேலும் வளர்ச்சியுற வேண்டுமானால், இந்தி உருவில், அதற்கு வருகிற ஆபத்திலிருந்து அதைக் காப்பாற்றியாக வேண்டும். இது தன்மானம் கொண்டோர் அனைவரது கடமையுமாகும்.

இராசேந்திரர், தமிழின் சிறப்பியல்புகளை உணர்ந்திருக்கிறார். அவர் உணரவேண்டியதெல்லாம் அத்தகைய சிறப்பியல்புகளைக் கொண்ட மொழியினைக் காத்திட அதனைத் தங்கள் மொழியாகக் கொண்டவர்கள் எப்பொழுதும் பின்வாங்கமாட்டார்கள் என்பதைத்தான்.

தமிழ் மொழியின் தொன்மை, சிறப்பு ஆகியவைகளைப்பற்றி டாக்டர் இராசேந்திரபிரசாத் இப்போது கூறிவிட்டதாலேயே, அதற்கொரு தனிச்சிறப்பு ஏற்பட்டுவிட்டதாக எண்ணி அவரை நாம் பாராட்டவில்லை. தமிழை உணரும் வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டதற்காகவே அவரைப் பாராட்டி மகிழ்கிறோம். அதே நேரத்தில் அவர் தமிழுக்கு அழிவு தேடும் பாதைகளையும் சுட்டிக்காட்டி, அவருக்கும் அவர்தம் சகாக்களுக்கும் இருக்கும் குறுகிய மனப்போக்கைச் சிறிது விரிவாக்கி, இந்நாட்டுக்குத் தனியாக ஒரு பொதுமொழி தேவையா? அப்படித் தேவைப்படுமானால், அந்த இடத்தில் எந்த மொழி இருக்கலாம் என்பதனை விரிவுபடுத்தப்பட்ட மனப்போக்கைக் கொண்டு ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்பதற்காகவே இதனை எழுதுகிறோம்.

வறிதே இந்திதான் இந்நாட்டு மொழி என்று எப்போதோ யாரோ, எதற்காகவோ கூறியதைத வைத்துக்கொண்டு, அரசியல் அதிகாரம் தங்கள்கையில் இருப்பதாலேயே எதனையும் சாதித்து விடலாம் என்ற ஜனநாயகப் பண்பற்ற முறையைக் கையாள வேண்டாம் என்று கூற விரும்புகிறோம்.

இந்தி, இந்துஸ்தான் பற்றி அதிகம் பேசி வந்த காந்தியடிகள் கூட இப்போதிருந்தால்;- இந்தியைப் பொதுமொழியாக்கும் அரசியல் போக்கை அறவே வெறுப்பார் என்பது திண்ணம்.

அன்று, தண்டவாளம் பெயர்க்கப்பட்டது. தந்திக்கம்பிகள் அறுக்கப்பட்டன. அப்போது காந்தியாரும் இருந்தார். அச்செயல்களைக் கண்டு கடிந்தாரோ என்னவோ, ஆனால் அவை போன்ற ஆகாச்செயல்கள் அப்போது தேவைப்பட்டன என்று கருதுபவர்கள் இருந்தார்கள். ஆகையால் அப்படிப்பட்ட அக்கிரமச் செயல்கள் இன்றும் தேவைதான் என்று, அன்று கூறியவர்கள்கூடத் துணிந்து கூறமாட்டார்கள்.

இதுபோன்ற நிலைதான் இந்தி இந்நாட்டின் பொதுமொழி என்பதிலும்.

அன்று சுயராச்சியம் பெறுவதற்காகக் கையாளப்பட்ட பல்வேறு முறைகளில் இந்தி மொழியும் ஒன்று.

ஆனால், இன்றுள்ள நிலை வேறு; இப்போதுள்ள உலகச் சூழ்நிலைக்கேற்ப இந்நாட்டுக்குத் தேவைப்படும் பொதுமொழி எது என்பதை அறிவும் ஆராய்ச்சியும் நிரம்பிய பலரும் எடுத்துக் கூறி வருகிறார்கள்.

இதனை டாக்டர் இராசேந்திரரும் பிற இந்தி மொழிவிரும்பிகளும் நன்குணரவேண்டுமெனப்பெரிதும் விரும்புகிறோம்.

இந்த உபகண்டத்தின் தலைவரே தமிழைப்பற்றி பெருமையாகப் பேசிவிட்டார்; ஆகவே தமிழ்மொழியையே இந்த உபகண்டத்தின்பொதுமொழியாகஆக்குங்கள் என்று நாமகூறிக்கு தூகலிக்கவில்லை, அந்த அளவு குறுகிய—சுயநலமனப்பான்மை கொண்டவர்களுமல்ல. நம் மொழிக்கு உரிய இடத்தைக் கேட்கிறோம்! தவறு, இது!!

★

மாசற்ற மருதாயி

சென்ற இதழ் தொடர்ச்சி...

ஒரு டாக்டரிடம் இருந்து வாங்கிய ஏழு ரூபாயை மற்றொரு டாக்டரிடம் தந்து குழந்தை மருக்கொழுந்துக்கு ஊசிபோட்டுக் கொண்டு வீட்டிற்குப் போய்விட்டாள். குழந்தையைப் படுக்கையில் போட்டுவிட்டு, இருக்கிற பொருள்களைக்கொண்டு ஏதோ வயிற்றை நிரப்ப உணவு என்று ஒன்று தயார்செய்து,தானும் சாப்பிட்டு மச்சான் வரவுக்காக எதிர்பார்த்து இருந்தாள்.

இரவு மருக்கொழுந்துக்கு காய்ச்சல்குறைந்திருந்தது.குழந்தைகண்களைத் திறந்துபார்த்து "அம்மா... காபி..." என்றது. ஏதோ இருந்த தூளைக் கொட்டிக் கொஞ்சம் காப்பித் தண்ணீரைக் கொடுத்தாள். சூடான காப்பித் தண்ணீரைக் குடித்தவுடன் குழந்தை தூங்கிவிட்டது. செல்லப்பனும்வந்தான்; நேற்று நடந்ததுபோலவே இன்றும் நடந்தது. ஆனால் ஏதோ நாலணா கொடுத்துவிட்டுப் போய்விட்டான். குழந்தையைப் பற்றியோ அல்லது அவளைப் பற்றியோ ஒன்றும் கேட்கவில்லை. பாவம் எப்படி முடியும் அவனால்? அவனைப் பற்றியே அவன் நினைக்கும் நிலையில் இல்லையே! அவன் தான் உணர்ச்சியற்ற நிலையில் இருக்கின்றானே!

மறுநாள் குழந்தைக்கு ஜுரம் நின்றுவிட்டது. மருதாயிக்கு டாக்டர் கொடுத்த ஏழு ரூபாய் நினைவு வந்தது. இரத்த தானமும் நினைவு வந்தது. நேற்றுப் போல இன்று ஓடவில்லை. மெதுவாக, நின்று நிதானித்துத்தான் சென்றாள். ஆஸ்பத்திரிக்குச் சென்று இரத்ததானம் செய்யுமிடம் கேட்டாள். வழியைக் காண்பித்தார்கள். வழி காண்பித்த ஒரு சில கனவான்கள் அவள் போன வழியையே நோக்கிக்கொண்டிருந்தனர். ஒரு சிலர் "இவள் ஏன் இரத்தம் கொடுத்து ரூபாய் சம்பாதிக்கவேண்டும்—பைத்தியக்காரி,வாழத்தெரியாதவள்" என்று நினைத்துக்கொண்டனர்.

அவள் இரத்ததானம் செய்யும் இடத்திற்கு அருகே சென்றாள். வெளியே ஒரு பெரியவர், சுமார் ஐம்பதுக்கு மேலே நான்கு அல்லது ஐந்து வருடம்தான் ஆகியிருக்கும், அங்கிருந்து வந்து கொண்டிருந்தார், அவர் கழுத்தில் உருத்திராக்ஷம், நெற்றியில் மூன்று பட்டைத் திருநீறு. மும்மலங்களிலும் மூழ்கி எழும் ஈசன் பரம்பரை. ஆகையினால் இந்தக் கோலம். மண், பெண், பொன் இந்த மூன்றுக்கும் அடிமை

ச. இராமலிங்கம்

என்று அந்த முப்பட்டையைச் சாத்தியிருந்தார். அவர் எதிரே வருவதைப் பார்த்த மருதாயி,

"தாத்தா...... இரத்ததானம் செய்யுமிடம் இதுதானே" என்று கேட்டதும் அவருக்குக் கோபம் வந்தது. என்ன இருந்தாலும் குமரிமேல் கோபம்கொள்ளலாமா? அது தவறாயிற்றே.

"இந்தக் கிழவனைப் பார்த்துக் கேட்கும் வள்ளிக்குமரியே... இதுதான்" என்று ஒரு மாதிரியாக, இந்திரன் அகலிகையைப் பார்த்ததுபோல், பிரம்மன் பார்வதியைப் பார்த்ததுபோல், விஷ்ணு பிருந்தையைப் பார்த்ததுபோல் பார்த்தார்......

பாவம் அவளுக்கு என்ன தெரியும்,அதன் பொருள்-இவர்தானே புராணங்களைத் திரும்பத் திரும்பப் படிக்கிறார். பக்தி சிரத்தையோடு அல்லவா படிக்கிறார். இவருக்குத் தான் தெரியும், இவர்பேசிய பேச்சின் பொருள். மருதாயி "என் பெயர் வள்ளி இல்லை தாத்தா மருதாயி" என்று சொல்லிக் கொண்டே போய்விட்டாள். கிழவர் ஏதோ யோசித்தார்; சிறிது நேரம் நின்றார். எதிரே இருந்த வார்டில் ஒரு நர்ஸ் டக்... டக்... என்று நடப்பது கேட்டது; அப்போதுதான் நினைவுக்கு வந்தது. அவருடைய மனைவியைப்பற்றி. மெத்தையில் உள்ள ஸ்பெஷல் வார்டுக்குப் போய்விட்டார்.

மருதாயி உள்ளே சென்று எல்லாம் விசாரித்து, தான் இரத்த தானம் கொடுப்பதாகச் சொன்னாள். இரத்த பரிசோதனையிலிருந்து படிப்படியாக நடக்க வேண்டியவைகள் எல்லாம் நடந்தன. கடைசியாக அவளுக்கு ஒரு டம்ளர் நிறைய ஹார்லிக்ஸும் கொடுக்கப்பட்டது. குடித்துவிட்டு ரூபாய் வாங்க வந்தாள்.

மருதாயி, மாட்டுவண்டிக்காரன் மனைவி யென்றாலும், அவள் அழகுக்குக்குறைச்சல்இல்லை.இயற்கையாகவே கருத்திருக்கும் இறப்பைகளால் அவள் கண்கள் கருவண்டு போல் இருந்தன. தடித்த கீழ் உதடு துடிக்கும்போது பார்த்தால் பார்ப்போரின் இதயத்துடிப்பு நின்றுவிடும் போல் இருக்கும். சுருங்கச் சொன்னால் அவள் ஒரு அப்பழுக்கற்ற செப்புச் சிலைபோல் இருந்தாள். இந்தச் செப்புச் சிலை, காசு வாங்கவேண்டிய இடத்தில் கை நீட்டியதும், அங்கிருந்த அவனுக்கு மின்சாரம் தன் உடலில் பாய்வதுபோல் இருந்தது. ஒரு கணம் யோசித்தான்...... பிறகு ஏதோ உரத்த குரலில், "உன்பேர் என்ன? உன் அட்ரஸ் என்ன என்றான். "அதெல்லாம் எதற்கு... அதுதான் முதலிலேயே சொல்லிவிட்டேனே"

"இங்கேகூட ஒரு தடவை சொல்லணும், துட்டு கொடுக்கிறதுக்கு கணக்கு எழுதவேண்டாமா?"

அவள் தன் பெயரும் அட்ரசும் சொன்னாள். அவனும் ஏதோ எழுதிக்கொண்டு, அவளைப் பார்த்தபடி ரூபாயை எண்ணி அவள் கையில் வைத்து மெதுவாக அழுத்தினான்.

"என்னய்யா அப்படி பார்க்கிறே—என் நெற்றியிலே குங்குமம் சரியா யில்லையா அல்லது ஏதாவது கை பார்த்து ஜோசியம் சொல்வது போல முகம்பார்த்து ஜோசியம் சொல்றியா"

"உம்... அதுவும்...... தெரியும். அகத்தின் அழகு முகத்தில் தெரியுதே" என்று சொல்லிக்கொண்டிருந்த போதே அவள் போய் விட்டாள்.

அவனும் அந்த இடத்தைவிட்டு வெளியே வந்து அவள் போன வழியையே பார்த்துக்கொண்டு நின்றான். போன மருதாயி அவசர அவசரமாகத் திரும்பி ஓடிவந்தாள். அவள் ஓடிவரவே இவனிடம்தான் ஏதோ ஆசையாகப் பேச வருகிறாள் என்று நினைத்துக் கொண்டான்.

அந்த நேரத்தில் செல்லப்பன், யாரோ தன் சிநேகிதன் ஒரு விபத்தில் அகப்பட்டுச் சிகிச்சைக்காக வந்திருப்பதைக் காணவந்தான். அவன் அந்தப்பக்கம் போனபோது தொலைவில் மருதாயி போவதைப் பார்த்துவிட்டான். உடனே இவள் ஏன் இங்கு வந்தாள் என்று யோசித்தான். கூப்பிடலாமா என்று எண்ணினான். பிறகு என்ன தோன்றிற்றோ, மெதுவாக ஒரு சுவர் ஓரமாக அவள் பின்னாலேயே தொடர்ந்து சென்றான்.

மருதாயி அந்த ஆளிடம் வந்ததும், "என்னய்யா முகராசி பார்க்கற ஜோரிலே எட்டு ரூபாய் கொடுத்துட்டியே இந்தா ஒரு ரூபாய்..." என்று நீட்டினாள்

"அடடே எட்டு ரூபாய்தானே சரியாகத்தான் கொடுத்தேன். எனக்குத் தெரியும் — உன் முக விலாசத்துக்கு எட்டென்ன, எட்டு இலட்சமே கொடுக்கலாமே!"

"யோவ்! என்னய்யா நீ சொல்வது ஒன்றும் புரியவில்லை"

"எப்படிப் புரியும்—நீ படிக்காத பொண்ணு; என்ன இருந்தாலும் பெண்களுக்கு புத்திகூர்மைன்னு சொல்லுவாங்களே! பரவாயில்லை அட்வான்சா வச்சுக்கோ..."

"எதுக்கய்யா அட்வான்சு..."

"என்ன மருதாயி......நீதானே இப்போ சொன்னே அடுத்த மாதத்திலே மறுபடியும் இங்கே வந்து இரத்ததானம் தருவேன்னு. உன் பேச்சில் எனக்கு நம்பிக்கை இருக்குது.........போ, வச்சுக்கோ ஒரு ரூபாயை......"

"அடசே!... கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்கிறாப்போலிருக்கு...யோவ் ......இப்பத்தான் தெரியுது உன் சாமாசாரம், இந்தா உன் ரூபாய்..." என்று வீசிவிட்டுப் போய்விட்டாள்.

தூரத்திலிருந்த செல்லப்பனுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவள் கையிலே ரூபாய். அவன் மருதாயியைப் பார்த்த பார்வை அப்போதே அங்கே ஓடி இரண்டு பேரையும் ஏதாவது செய்துவிடலாமா என்றுகூட யோசித்தான். அல்லது மருதாயியையாவது கூப்பிட்டுக் கேட்கலாமா என்று யோசித்தான். பிறகுதான் அவனுக்கு தோன்றிற்று. இதைச் சிறிது வளரவிட்டுப் பார்ப்போம். பிறகு கவனித்துக்கொள்ளலாம் என்று. அவன் என்ன செய்வான் பாபம். காலையில் ஓரணா இட்டிலியுடன் அரையணா டீ குடித்துவிட்டு அந்த ஓரணாப் பேப்பர் படிக்கிறவர்கள் பரம்பரை ஆயிற்றே! அவனுடைய எண்ணமெல்லாம் அன்றைய தினம் படித்த "சோரம்போன சொர்ணத்தின்மேல்தான் இருந்தது" "பேப்பரிலே சொர்ணம், எதிரே மருதாயி" இப்படி ஏதேதோ நினைத்துக்கொண்டு போய்விட்டான்.

மருதாயி அங்கே ரூபாயை வாங்கிக்கொண்டு நேரே டாக்டரிடம் கொடுத்துவிடலாம் என்று யோசித்தாள். பிறகு அவளுக்கு என்னவோ எண்ணம் வந்தது. வீட்டிற்கு ஓடோடி வந்தாள். ஏதோ அரைகுறையாகச் சாப்பிட்டுவிட்டு, குழந்தையைச் சுத்தமாக வெந்நீரால் துடைத்து ஒரு துவைத்த சட்டையைப் போட்டு எடுத்துக்கொண்டு ஆஸ்பத்திரி நோக்கிப் போனாள். போகும் வழியில் எதிரே.

"சாத்துக்குடி — சாத்துக்குடி' என்று ஒருவன் பழம் விற்றுக் கொண்டு வந்தான்"

மருக்கொழுந்து "அம்மா பழம்" என்று கேட்டது. அவளுக்கும் அப்போதுதான் காலையில் செல்லப்பன் கொடுத்துவிட்டுப்போன நான்கணா தன் முந்தானையில் முடிச்சுப்போட்டது நினைவுக்கு வந்தது.

பழக்காரனைக் கூப்பிட்டு விலை கேட்டாள். ஏதோ திடீரென்று யோசித்தாள்; நான்கணாவுக்கு நான்கு பழங்கள் வாங்கினாள்.

ஒன்றை உரித்து மருக்கொழுந்துக்கு கொடுத்தாள். ஆஸ்பத்திரியும் வந்துவிட்டது. உள்ளே நுழைந்தாள் மற்றொருபுறமாக; நேரே அந்த டாக்டரைத் தேடிச் சென்றாள். ஒரு வார்டுக்கு வந்தாள்......சிறிது தயங்கித் தயங்கி எட்டிப்பார்த்தாள்..... அங்கிருந்த நர்ஸ் 'என்னவேண்டும்' என்றாள்.

"டாக்டர் வேண்டும்" என்று மருதாயி சொன்னபோதுதான், நர்சும் இவளை உன்னிப்பாகக் கவனித்தாள் பிறகுதான் நினைவு வந்தது. "ஓ, நேற்று ஏழு ரூபாய் கொடுத்தாரே, அவரா" என்றாள். "ஆமாம் அவரேதான்" என்று சொன்னபோதுதான் மருதாயிக்கு தான் நேற்றுப் பார்த்த நர்ஸ் என்ற நினைவு வந்தது.

"எதிரே இருக்கும் வார்டிலிருக்கிறார், இவள்தான் உன் குழந்தையா" என்று குழந்தையின் கன்னத்தை வருடினாள்;

"ஆமாம் நர்ஸம்மா...வணக்கம், நான் போய்ப் பார்க்கிறேன்" என்று எதிரேபோய் அங்கிருந்த நர்ஸிடம் சொல்ல, டாக்டர் வெளியே வந்தார்.

டாக்டர் வந்ததும் மருதாயி "டாக்டர் உங்களுக்குக் கோடி புண்ணியம், நீங்கள் நேற்றுக் கொடுத்த ஏழு ரூபாய் என் மகளையே காப்பாற்றியது. நீங்கள் நேற்று ரூபாய் கொடுத்திராவிட்டால் இன்று நானும் மகளுமாக இங்கு வந்திருக்க முடியாது. மருக்கொழுந்து, டாக்டர் காலிலே விழுந்து கும்பிடு" என்று இறக்கி விட்டாள். குழந்தையும் அவர் காலில் விழுந்து எழுந்தது.

டாக்டர் அன்புள்ளம் கரை புரண்டு ஓட, குழந்தையை எடுத்து அணைத்துக்கொண்டார்.

"டாக்டர், இந்தாருங்கள் நீங்கள் கொடுத்த ஏழு ரூபாய். என்னுடைய மனமார்ந்த நன்றி"

"நன்றி அம்மா...நன்றி" என்று வாங்கிக்கொண்டே குழந்தையைப் பார்த்து "உன் பெயர் என்ன?"

"அவள் பேர் மருக்கொழுந்து டாக்டர்"

"மருக்கொழுந்து நீ என் வீட்டிற்கு வர்றியா"

"ஊம்" என்று மருகொழுந்து தலையசைத்தது.

"நான் உனக்கு பழம், மிட்டாய், சொக்காய் எல்லாம் வாங்கித் தருகிறேன்"

டாக்டர் பழம் என்றதும், மருக்கொழுந்து அவள் அம்மாவைப் பார்த்து "அம்மா பழம்" என்று கேட்க அவள் உடனே மடியிலிருந்த பழங்களை எடுத்து "டாக்டரிடம் கொடுக்கவேண்டுமே, இவள் கேட்கிறாளே, எப்படிக்கொடுப்பது" என்று யோசித்துக்கொண்டிருக்க மருக்கொழுந்து அதை அவள் கையிலிருந்து பிடுங்கி டாக்டரிடம் கொடுத்தாள். மருதாயிக்கு உள்ளம் குளிர்ந்தது. குழந்தையின் உள்ளம் எவ்வளவு அன்புள்ளதாய் இருக்கிறது என்று யோசித்துக்கொண்டே "நீயே சாப்பிடு மருக்கொழுந்து" என்றார் டாக்டர்.

"டாக்டர் உங்களுக்குத்தான் வாங்கிக்கொண்டு வந்தேன்."

"ஏன்? என் ஏழு ரூபாய்க்கு வட்டியா"

"ரூபாய்க்கு வட்டியல்ல; உங்கள் அன்புள்ளத்திற்கு எங்கள் எளிய பரிசு"

"நன்றி அம்மா...இருந்தாலும் பரவாயில்லை.......ஒரு மனிதனால் செய்யமுடியாத உதவி ஒன்றும் நான் செய்துவிடவில்லை..." அப்போது நர்ஸ் வந்து, டாக்டர் பேஷண்ட் பெட்நம்பர் இருபத்து மூன்று உங்களை கூப்பிடுகின்றார். டாக்டருக்கு அப்போதுதான் நினைவு வந்தது ஏறக்குறைய ஒரு அரைமணி நேரம் பேசிக்கொண்டிருந்தாரென்று. மருதாயியும் "நாங்கள் போய்விட்டு வருகிறோம் டாக்டர், உங்களை என்றும் மறக்கமாட்டோம்"

"நன்றி அம்மா...வணக்கம்....., ஒரு வேண்டுகோள்; நீங்கள் தவறாக நினைக்கவில்லை என்றால் இந்தக் குழந்தையை அடிக்கடி எனக்கு அழைத்து வந்து காட்டுகிறீர்களா...இல்லையென்றால் உங்கள் விலாசம் தந்தால் நானே வருகிறேன்" என்றார்.

"நான் மண்ணடிக்கு அடுத்த இடைச்சேரியில் இருக்கிறேன்— என்பெயர் மருதாயி..." மருக்கொழுந்தைக் காட்டி "இவ அப்பாபேரு......செல்லப்பன்" என்று இழுத்துக்கொண்டே சொன்னாள்.

"சரி அம்மா, வணக்கம்" என்று சொல்லிவிட்டு டாக்டர் உள்ளே போய்விட மருதாயியும் குழந்தையைத் தூக்கிக்கொண்டு போய் விட்டாள்.

●

அன்று மாலை மருதாயி குழந்தையை வீட்டில் விட்டுவிட்டு ஏதோ பக்கத்துத் தெருவுக்குப் போயிருந்தாள். அப்போது அங்கு ஒரு கார் அந்தத் தெருவழியாக வந்து ஓரிடத்தில் நின்றது. பிறகு யாரோ ஒருவர் "யார் வேண்டும்" என்று கேட்க — "செல்லப்பன் வீடு எது" என்று உள்ளிருந்த டாக்டர் கேட்டார்.

"அதோ தெரியுதுங்களே, இரண்டாவது லைட் கம்பம், அதற்கு அடுத்த குடிசைங்க" என்று சொல்வதற்குள் அந்தச் சேரி மக்கள் யாவரும் அந்தக் காரைச் சூழ்ந்துகொண்டனர்.

ஒரு சிலர் "டேய் செல்லப்பனுக்கு என்னவோ கெட்டகாலம் —கார்லே வந்து தேடிவிட்டு போறாங்கோ — ஒரு சமயம் போலிஸ்காருங்கதான் இப்படி ஆம்பிடையான் பொண்டாட்டி வேஷம் போட்டுகிட்டு தேடிகிட்டு வரோங்களோ என்னமோ—டேய் தம்பிங்களா ஜாக்கிரதையா இருக்கணும்" என்று தங்களுக்குள்ளாகவே பேசிக்கொண்டனர்.

கார், லைட் கம்பத்துக்கு அடுத்த குடிசையின் பக்கம் வந்து நின்றது. டாக்டர் ஹாரன் அடித்தார், உள்ளிருந்து யாரும் வரவில்லை. அழுக்குப் படிந்த கைகால்களுடன் மருக்கொழுந்து ஓடிவந்தது. டாக்டர் உடனே இறங்கி அந்தக் குழந்தையைத் தூக்கிக்கொண்டார். அவர்மனைவியும் இறங்கிவந்தாள். மனைவியைப் பார்த்து டாக்டர்,

"பார்த்தாயா பார்வதி—இவள்தான் நான் சொன்ன மருக்கொழுந்து—எனக்குப் பழம் வாங்கிக்கொண்டுவந்து கொடுத்தாள்" என்று அணைத்துக்கொண்டே முத்தமிட்டார்.

அவருடைய வெண்மையான சட்டையெல்லாம் புழுதிபடிந்து அழுக்காகிவிட்டது.

"எங்கேம்மா அம்மா" என்று கேட்டுக்கொண்டிருந்தபோதே, தூரத்திலேயே கார் நிற்பதைப் பார்த்த மருதாயி "இதோ வந்துட்டேனுங்க டாக்டர்" என்று சொல்லிக்கொண்டே மேல் மூச்சு வாங்க ஓடிவந்தாள்.

டாக்டர் தன் மனைவிபக்கம் திரும்பி "இவள்தான் மருக்கொழுந்தின் தாயார்—மருதாயி" —என்று மருதாயிபக்கம் திரும்பி "என் மனைவி பார்வதி" என்று சொன்னார்.

"வணக்கம் அம்மா...வாங்க... உள்ளே வாங்க......எங்க குடிசையிலே உங்களுக்கு உட்கார ஒரு நல்ல பாய்கூட இல்லை" பங்களாவில் வாழும் உங்களுக்கு..."

"பங்களாவில் வாழும் எங்களுக்கு எல்லா வசதியும் இருக்கிறது; உண்மைதான். ஆனால் இதைப்போல் மழலைச் செல்வம் இல்லையே" என்று கண்ணீர் மல்க மருக்கொழுந்தை எடுத்து அணைத்துக்கொண்டாள் டாக்டர் மனைவி பார்வதி.

இதைக் கண்ட மருதாயிக்கு அப்போதுதான் தெரிந்தது டாக்டருக்கு குழந்தைகள் இல்லை என்பது.

"ஏனம்மா உங்களுக்கு குழந்தைகள்......"

"ஒரு குழந்தைபிறந்தது. பெண்தான், பெயர் அல்லி என்று வைத்தேன். மொட்டு பூவாகி, எங்கள் இல்லமெல்லாம் மணம் வீசுமென்று நினைத்தேன். ஆனால் மொட்டிலேயே கருகிவிட்டது...... ஏறக்குறைய இன்று இருந்தால் இவளைப்போல்தான் இருப்பாள் ...முகச்சாயல் ஏறக்குறைய அது போன்றே இருக்கிறது. இவளையும் நன்றாகக் குளிப்பாட்டிப் பட்டாடை உடுத்தினால் அல்லி போலாகிவிடுவாள்" என்று சொல்லிக்கொண்டே மருக்கொழுந்தின் கன்னத்தில் முத்தமிட்டாள். டாக்டர் உடனே வெளியே சென்று காரிலிருந்து ஏதோ பொட்டலத்தை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு இன்னும் சிறிதுநேரம் இருந்தால் எங்கு தன் மனைவிக்கு பழைய எண்ணங்கள் வந்து அதிகமாக அழ ஆரம்பித்துவிடுவாளோ என்று பயந்து, அவளை அழைத்துக்கொண்டு, மருதாயிக்கும் நன்றி தெரிவித்துவிட்டுப் போய் விட்டார்.

[அடுத்த இதழில் முடியும்.]

புரட்சி

—[அல்லி]—

என் பெயர் புரட்சி. நான் பழைய, செல்லரித்த, மக்கிப் போன அழுகிய எண்ணங்களை எரித்து நீருக்கி விட்டுப் புது வாழ்வை அமைப்பவள். நான் அழிவற்ற இளமையின் அடிப்படை; முதுமையை அழிப்பவள். நான் எங்கே இருக்கிறேனோ, அங்கேதான் வாழ்வும் இருக்கிறது; சாவும் இருக்கிறது. சமுதாயக் கொடுமைகளால் துன்புற்ற மக்களுக்கு நான் நம்பிக்கைக் களஞ்சியமாவேன். நான் அவர்களது மறுமலர்ச்சியின் இனிய கனவாவேன். கிழவர்கள் என்னைக்கண்டு அஞ்சி நடுநடுங்குகின்றனர்; இளைஞர் என்னை உவகையோடு வரவேற்கின்றனர். நான் எங்கே செல்கின்றேனோ அங்கே குப்பை கூளங்கள் நீங்கி, தூய ஒளி சுடர் விடுகின்றது. நான் சமுதாயக் கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து, துன்புற்ற உள்ளங்களுக்கு ஆறுதல் தருகிறேன். தாழ்ந்து இடக்கின்றவர்களின் விலங்குகளைத் தகர்த்து, அவர்களுடைய உரிமைகளை அவர்களுக்கு அளிக்கிறேன்; அவர்களுக்கு அமுதச்சாற்றைப் பருகக் கொடுக்கிறேன்.

நான் நிகழ் காலத்தை அழித்துப் பெரும் பேறுகிய எதிர்காலத்தை உருவாக்குகிறேன். இதுதான் வாழ்க்கையின் பண்டைத் தத்துவம். நான் அந்தப் பண்டை வழக்கத்தைக் காத்து வருகிறேன். இதனால் சமுதாயத்தில் புதுமையும் புதிய ஊக்கமும் ஏற்படுகின்றன.

நான் இயற்கை அன்னை. புயல், சூறுவளி மூலம் பழைமையை வேரோடு பிடுங்கி, புதுயுகமெனும் வண்ண மலர்களால் உலகப்பூங்காவை அழகு செய்கிறேன். நான் சமுதாயத்தின் எல்லாக் கொடுமைகளையும் — அவை தன்னலமுள்ள கொடியவர்களின் படைப்பாதலால் — ஒழித்துவிடுகிறேன். இக்கொடுமைகளின் அடிப்படை, கெடுதலே. மேலும் இவற்றின் பலனும் கேடுகளைப் பெருக்குவதே. இக்கொடுமைகளால் சமுதாயத்தில் பெரும் தொல்லைகளும், பெரிய பெரிய அக்ரமங்களும் நடைபெறுகின்றன.

எச்சரிக்கை செய்கிறேன்! உங்கள் கொடுமைக் குடம் நிரம்பிவிட்டது. நான் கொடியவர்களுக்குத் தண்டனை வழங்கும் பயங்கரப் புரட்சி. நச்சுப்பயிரை அழிக்கும் நேரம் வந்துவிட்டது; உயர்வு தாழ்வு மனப்பான்மையை அழிக்கும் நேரம் வந்துவிட்டது; தீண்டாமையை ஒழிக்கும் நேரம் வந்துவிட்டது, என்னிடம் புரட்சிக் கொம்பு உள்ளது; என்னிடம் கூட்டுறவின் சங்கு இருக்கிறது. நான் எல்லாவகையான ஏமாற்று வேலைகளையும் அழிப்பவள். எல்லா வகையான மூட நம்பிக்கைகளையும் ஒழிப்பவள்.

நினைவு வைத்துக்கொள்ளுங்கள்; நான் பொய்யர்களின் பெரும் பகையானவள். புரட்டர்களுக்கும் எத்தர்களுக்கும் மோசக்காரர்களுக்கும் நான் பயங்கர இடி போன்றவள். நான் 'தேவவாணி'யின் ஆதிக்கத்தைச் சுக்கு நூறுக்கி பகுத்தறிவு ஆட்சியை நிலைநாட்டுவேன். ஒருவன் பலரை ஆளும் உரிமையை நான் அடியோடு ஒழித்துவிடுவேன். நான் சோம்பேறிகள், சாப்பாட்டுராமன்கள், மதத் தரகர்கள் ஆகியோரின் ஆட்சியை மண்ணோடு மண்ணாக்கி விடுவேன். நான் விலங்குத் தன்மையின் கர்வத்தைத் தூள் தூளாக்கி, நன்னடத்தை, நேர்மை ஆகியவற்றின் ஆட்சியை ஏற்படுத்துகிறேன்; இயற்கையை ஆத்மாவின் அடிமையாக்குவேன். ஆணவக்காரர்கள், தண்டச்சோற்றுக்காரர்கள் ஆகிய 'பெரிய' மனிதர்களின் குற்றங்களை ஒழித்துக்கட்டிவிட்டு உழைப்பும்நேர்மையும் மிகுந்த தொழிலாளர்களை உயர்த்துவேன். சாத்திரத்தின் பெயரை வைத்துக்கொண்டு கொள்ளையடிக்கும் அகம்பாவத்தை அழிப்பது என் வேலையாகும். ஒவ்வொரு ஆணையும் பெண்ணையும் நான் தன்னம்பிக்கை உள்ளவர்களாக்குகிறேன். அனைவரும் தன் பொருட்டுத் தானே சிந்திக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். நான் தன்முயற்சியைக் கற்பிக்கிறேன்; ஒவ்வொரு மனிதனையும் தன்னைத்தானே ஆள்பவனுக்குகிறேன். ஏனெனில் தன் முயற்சியே தன்னாட்சியாகும்.

நான் சுதந்திரத்தாய், எல்லா வகையான அடிமை விலங்குகளையும் உடைத்தெறிபவள், நான் அனைவரையும் சுதந்திரர்களாக்குகிறேன். ஏனென்றால் சுதந்திரமே தூய்மையானது. சுதந்திரத்தை விட உயர்வானது வேறொன்றும் இல்லை. நான் சாதிக் கட்டுப்பாடுகளை உடைத்து, சமுதாயத்திற்கு விடுதலை அமுதை ஊட்டுவேன், பல நூற்றாண்டுகளாக அழுகிக் கொண்டிருக்கும் குருதியை அகற்றி, சமுதாயத்தின் நாடியில் புதுக் குருதியைப் பாய்ச்சுவேன்.

நான் செயலின் வழிகாட்டி. பிறப்பின் ஒழுங்கினத்தை நாசமாக்குபவள், நல்லியல்பாலும் செயலாலும் நான் சமுதாயத்தை நடத்துகிறேன். தகுதி படைத்தவரை அரியணையில் ஏற்றுவேன். சோம்பேறியை, தகுதியற்றவனைக் கீழே தள்ளி விடுகிறேன். நான் செயலுக்குத்தக்க பலன் அளிக்கும் 'விதி' ஆவேன். ஆண்மையும் உழைப்பும் மிக்க மனிதர்கள் என் வாழ்த்தைப் பெறுகிருர்கள்; உழைக்காதவரும் கால் மேல் கால் போட்டு உட்கார்ந்திருப்பவரும் என்னிடம் அடி வாங்குகிருர்கள். நான் தொழிலைப் பொறுத்து அமையும் பிரிவுகளை நிலைநாட்டுவேன். நான் கொடுமைகளை அடித்துச் செல்லும் கங்கையின் பெருவெள்ளம். என் வழியில் நிற்கும் கேடுகளைக் கடலில் இழுத்துச் சென்று ஒரேயடியாக மறைத்துவிடுவேன்.

என் பெயர்; சமுதாயப் புரட்சி. நான் நூற்றாண்டுகளாக இருந்து வரும் கெட்ட வழக்கங்களை அகற்ற வந்துள்ளேன்; பொதுமக்களிடையே உள்ள அசையாத மூட நம்பிக்கையை நீக்க வந்துள்ளேன்; சிலர் பலரை அடக்கியாள்கின்ற உரிமையை நீக்க வந்துள்ளேன்; கடவுளின் பிரதிநிதிகளின் ஆதிக்கத்தை ஒழிக்க வந்துள்ளேன்; நான் பொதுமக்களுக்கு உண்மையான, எளிய அறவழியைக் காட்ட வந்துள்ளேன். சமுதாயத்தில் அனைவர்க்கும் நியாயம் கிடைக்க வேண்டும், யாரிடத்தும் வஞ்சனை கூடாது என்பது என் குரல். நான் பொதுவுடைமைக் கொள்கையின் நேர்மையான பிரச்சாரிகை. என் கொடி சமத்துவம், சகோதரத்வம். கோடிக்கணக்கானவர் சிறுபான்மையோரின் கீழ்ப்படிந்துள்ள நிலைமையை ஒழித்துக்கட்டுவேன். ஏனெனில் அச்சிறுபான்மையோர் பணத்திற்கடிமையாகி, சமுதாயத்தில் கொடுமையைப் பரப்புகின்றனர். ஒற்றுமைக்குத் தடையாகவும்; உண்மை, நேர்மை ஆட்சியை ஏற்படுத்தவிடாமலும் இருக்கின்ற தீமைகளினின்று சமுதாயத்தைத் தூக்கிவிட விரும்புகின்றேன். நான் கைம்பெண்களின் கண்ணீரைத் துடைத்து, அவர்களுக்கு உவகைச் செய்தியைச் சொல்ல வந்துள்ளேன். அபலைகளைத் துன்புறுத்துகின்ற கொடியோர் இனி எச்சரிக்கையோடு இருக்கட்டும். என் கைத்தடி மிக அஞ்சத்தக்கது. நான் அனாதைகளை, துன்புற்றோரைக் காப்பேன். துட்டர்களுக்குக் கடுந்தண்டனை அளிப்பேன்.

கொடுமையால் தாக்கப்பட்டுள்ளோரே! எழுங்கள்! தீண்டத்தகாத சிறுவரே! எழுங்கள்! கைம்பெண்களே, விழித்துக்கொள்ளுங்கள்! என் ஆனந்தச் செய்தியைக் கேளுங்கள்! நான் இப்போது பழைய சமுதாய இயந்திரத்தை உடைத்து, புதிய அமைப்புண்டாக்கி, எல்லோர்க்கும் முன்னேற்றக் கதவைத் திறப்பேன். யார் என் படையில்சேர்ந்து தொண்டர்களாகிருர்களோ, அவர்கட்கு இன்பம் கிடைக்கும். ஆகவே மகிழ்ச்சிக்குரல் எழுப்பியவாறு எல்லா வகையான ஐயங்களையும் விடுத்து என்னைப்பின்பற்றுங்கள். எனக்கு எவரும் சிறியவரோ பெரியவரோ அல்ல; அனைவர்க்கும் நான் சமமான வகுப்பு அளிப்பேன்; என்னோடு வந்து என்படை வீரராகி, மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும் மறுமலர்ச்சிக்கும் என்னோடு ஒத்துழைப்பவர்தாம், தம் வாழ்க்கையைப் பயனுள்ளதாக்கி, இன்பத்தைப் பெறுவர். என்னை எதிர்த்து, என் வழியில் தடைபோடுவோரை நான் இரக்கமின்றிக் கசக்கி எறிவேன். ஏனெனில் கொடியவர்களை அழிக்கும், துட்டர்களை எரிக்கும், பழைய மக்கிப்போன முறைகளை நீக்கும் புரட்சி நான். நான் வாழ்க்கை— உற்சாகத்தின், முன்னேற்றத்தின் ஊற்று.

★

மாணவர்களிடையே நாம்

—○—

மலர்ச் சோலையிலே மணம் கமழ்கிறது. அடுத்துள்ள சாலையிலே சகதியின் நாற்றம் சோலையின் சீரைக் குலைக்க நினைக்கிறது. ஆனால் பொன்வண்டுகள் பூச்செண்டுகளை நாடி சோலைக்குச் செல்கின்றனவே தவிர, சாலைக்கு அல்ல. சாலையின் வழியே செல்வதால் 'நம்மை நாடித் தான் வருகிறது' என்று சாலை நினைத்தால் அறியாமை, ஏமாற்றம் என்று தான் சொல்லமுடியும்.

அறியாமையிலிருந்து அறிவாற்றல் வளரும்; ஆனால் அறிவாற்றலிலிருந்து அறியாமை தலைதூக்க முடியாது.

அறியாமையில் சிக்கியவர்களைக் கண்டு ஆனந்தப்படுவதும், மற்ற வரும் தம்மை நாடுவர் என்று மனப்பால் குடிப்பதும், சாலை நினைத்த கதையாக முடிந்துவிடும். அறிவுச் சோலைக்கு செல்வது உறுதியும் ஆகும்.

நம் தூய இலட்சியங்களினால் வளர்மதி போல வளர்ந்து வருகிறோம். இதனை மக்கள் உணர்வர். ஆனால் இதற்கு வக்கற்றவர்களாலும், மாற்றான் வாழ்ந்தாலும் உற்றான் வாழக் கூடாது எனும் மனம் படைத்தோராலும் சில பல மக்கள் உணராநிலையிலும் உள்ளனர்.

ஆனால் அவர்களையும் உணரவைக்கும் உள்ளம், உறுதி தூய்மை நம்மிடம் உண்டு. எனவேதான் மாற்றாரின் ஏசுதலைத் தாங்கி, மாசுகளைக் கண்டு மருளாது, மங்காது மக்கள் மத்தியிலே ஏற்றிய விளக்கென ஒளி விடுகிறோம். அவர்கள் கூறும் இழி பழிகளை நேர்மையற்றவை என்று எடுத்துரைத்தும் வருகிறோம்.

மாணவர்களிடையே சிந்திக்கும் ஆற்றலை, சீர்திருத்த நோக்கங்களை நம்மால்தான் வளர்க்க முடிந்தது என்றால் அது மிகையாகாது. இதை மாணவர் மன்றம் உணரும். பதினெண் கீழ்கணக்கைப் பாருங்கள், படியுங்கள்; கலிங்கத்துப் பரணியைக் காணுங்கள், கல்லுங்கள்; குறளின் பெருமையை உணருங்கள், உணர்த்துங்கள் என்று, மாணவர்கள் முன்னே முரசொலித்துத் தமிழ் முழக்கம் செய்வோர் நாம்தான். இதனால் மாணவர்கள் கெட்டுவிடுவர் என்று நல்லவர் கூற மறுப்பர். ஏடுகளைத் தந்தே நாடுதனைத் திருத்தி வருவோரும் நாம்தான், நாம் மாணவர்களின்பால் கொண்டுள்ள பொறுப்பு அதிகமானது என்பதால்தான் மாணவர் படையே நம் கழகத்தின் ஒரு அங்கமாக விளங்குகிறது.

மாணவர்களைப் பார்த்து "மாணவர்களே நாளுக்கொரு போராட்டம் நடத்துகிறோம் பாரீர்! ஆளுக்கொரு கொடியோடு வாரீர்! என்று கூறியது கிடையாது. மாருக, நம் தூய கொள்கைகள் மட்டும் அவர்கள் மனதிலே இடம் பெற்றுவிட்டன. நம்முடைய கொள்கைகள் மாணவர்களுக்கு நல்லெண்ணத்தையும், விடா முயச்சியையும், உறுதியையும், திறமையையும் வளர்த்து வருகின்றன என்பதை நம்மால் நிரூபிக்க முடியும். அதனால்தான் நம்மைப் பின்பற்றும் மாணவர்கள் எதிலும் பிற்போக்கின்றிக் காணப்படுகின்றனர். ஏசத்தெரிந்திருக்கமாட்டார்கள். ஆனால் அழகுற பேசத்தெரிந்திருப்பார், நல்லாட்சிக்கு நாவன்மை தேவை என்று உணர்ந்த காரணத்தால். "கத்தியைத் தீட்டுவதைவிட புத்தியைத்தீட்டுவது நலம்" என்பது அறிவர். 'சேனை முனையில் காணாத வெற்றி பேனாமுனையில் காணமுடியும்' என்பதற்கேற்ப எழுத்தாளர் பட்டியலில் இடம் பெறக் கூடியவர்களாக இருப்பர்.

"நல்லார் ஒருவருக்கு செய்த உபகாரம் கல்மேல் எழுத்துபோற் காணுமே" என்ற மூதுரைப்படி. மாணவர்கள் நம் கொள்கைகளைத் திக்கெட்டும் தேன் சொட்டும் செந்தமிழில் எடுத்துரைக்கின்றனர். இது நம் திறமையினால்தான் ஏற்பட்டது என்று கூறமாட்டோம்.

திறமை தூய்மையை வளர்க்காது; ஆனால் நம் தூய கொள்கைகள்தான் திறமையை மாணவர்களுக்கு அளித்திருக்கின்றன. நமக்கும் தந்திருக்கின்றன.

எனவே மாணவர்களிடையே நாம் கொண்டுள்ள பொறுப்பு சாலச் சிறந்தது. இதனை மாணவர் மன்றமும், மக்கள் மன்றமும் உணரும், உணர்ந்தும், தமிழகமே நம்மைப் பின்பற்றிச் செய்யும் என்பதனை நாம் நன்கு அறிவோம்; சலிப்பின்றிக் கடமைகளைச் செய்வோம்; அதிலேயே களிப்பும் கொள்வோமாக.

—இரெ. தென்னவமணி.

புகாரே எம் ஊர்

(தமிழவேள்)

ஒரு கடற்கரை. அங்கே புன்னை மரங்கள் நிறைந்துள்ளன. அம் மரங்களுக்கு அது பூக்குங்காலம், ஆகையால் அரும்பையும் பூவையும் இணர் இணராகப்பெற்று அவை அழகோடு விளங்குகின்றன. மரங்களிலிருந்து உதிர்ந்த மலரும் அரும்பும் மணற்பரப்பைக் கூட மலர்மயமாகக் காட்சியளிக்கச் செய்துள்ளது.

அந்த அழகான கடற்கரைக்கு ஒரு பெண் குழந்தை விளையாட வருகிறது. தனியாகத்தான். வந்த குழந்தை அலைகளால் நனைக்கப்பட்டு ஈரமாகியுள்ள மணலில் ஒரு வீடு கட்டுகிறது. நீண்ட நேரமாகக் கட்டி முடித்த தன் மணல் வீட்டைப்பார்த்துப்பார்த்து மகிழ்கிறது. இந்த உலகத்தில் மக்களுடைய மகிழ்ச்சிதான் நிலைத்து நிற்பதில்லையே! பெரிய அலை ஒன்று கரைநோக்கி வந்தது. வந்த அலை குழந்தையை நனைத்ததோடு, மணல் வீட்டையும் அழித்துவிட்டுப் போய்விட்டது. குழந்தை, தன்னை அலை வந்து தொட்ட உடனே எழுந்து சற்றுப் பின்னால் வந்துவிட்டது. தன் உடைகளை நனைத்த அலை, தான் கட்டிய மணல் வீட்டையும் அழித்துவிட்டுப் போனதைப் பார்த்து மனம் நொந்தது. சினம் கொண்டது.

தெருவில் விளையாடிக்கொண்டிருக்கும் இரு குழந்தைகளிலே ஒன்று மற்றொன்றை அடிக்க வந்தாலோ, அல்லது அடித்தாலோ, அது என்ன செய்கிறது? "அம்மா!" என்று கூக்குரலிடுகிறது. இல்லையேல், "இரு! இரு! என்னையா அடிக்க வருகிறாய்! எங்கள் அம்மாவிடத்திலே போய்ச் சொல்கிறேன்" என்று தன் அன்னையை நாடிச் செல்கிறது. இது குழந்தைகளிடம் காணப்படுகிற இயல்பு. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னமே இந்த அழியா உண்மையைப் புலவர் ஒருவர் தம்முடைய பாடலிலே அழகாக அமைத்துக் காட்டுகிறார்.

குழந்தையினுடைய வீட்டை அலை வந்து அழித்துவிட்டதல்லவா? குழந்தை கடலை நோக்கிச் சொல்கிறது, "இரு! இரு! கடலே! இதோ என் அன்னையிடத்திலே போய்ச் சொல்கிறேன். என்னுடைய அழகான மணல்வீட்டை அழித்துவிட்டா சென்றாய்? இரு! இரு!" என்று தன் வீடு திரும்ப இரண்டு அடி எடுத்துவைத்தது. அதற்குள் அது நினைக்கிறது. "நாம் சும்மாவே சென்று இந்தக் கடல் செய்த கொடுமையைப்பற்றி அம்மாவிடத்திலே சொன்னால், அம்மா ஒருக்கால் "மணல்வீடு தானே போய்விட்டது கண்ணே! போனால் போகிறது. மற்றொன்று கட்டிக்கொள்ளலாம். அந்தக் கடல் இருக்கிறதே, அது பொல்லாததுதான். எத்தனையோ அருந்தமிழ் நூல்களையெல்லாம், தமிழ் நகரங்களையெல்லாம்—தமிழ் நிலப்பரப்பையெல்லாம் அந்தக் கடல் தன்னுள் அடக்கிக்கொண்டதுண்டு. அதைப்பற்றி இன்றுள்ள தமிழர்கள் என்ன கவலையா படுகிறார்கள்? வருந்தாதே!" என்று நமக்கே அமைதி சொல்லிவிட்டால் என்ன செய்வது? என்று குழந்தை அழுகையைத் துணைக்கு அழைத்துக்கொண்டது' இன்னும் இரண்டு அடி எடுத்து வைத்தது வீடுநோக்கி. அழுதுகொண்டே தான்!

நாம் வீட்டிற்குச் சென்று அம்மாவிடத்திலே கடல் செய்த கொடுமையைப்பற்றிச் சொல்லி, அம்மா, தான் செய்யும் வேலையை முடித்துவிட்டு வந்து இந்தக் கடலுக்குத் தண்டனை தர இன்னும் எப்படியும் ஒருமணி அளவு ஆகிவிடும். அதுவரையில் இந்தக் கடல் சிரித்துச் சிரித்துக் குதித்துக்கொண்டுதானே இருக்கும். அன்னை வந்து பெரிய தண்டனையாகத், தருவதற்குமுன் நாமே ஒரு சிறு தண்டனையை இந்தக் கடலுக்குக் கொடுத்துவிட்டுச் சென்றால்தான் இதனுடைய கொட்டம் அடங்கும், என்று எண்ணியோ என்னவோ, குழந்தை கடலை நோக்கி எறிவதற்கு ஏதாவது கிடைக்குமா எனப் பார்த்தது. கடற்கரையில் கல் ஏது? எங்கும் மணல்தானே!

அப்போது அந்தக் குழந்தைக்குத் தன் கழுத்திலே இருந்த முத்துமாலைதான் கண்ணில் பட்டது. அதிலே இரண்டொரு முத்துக்களை அறுத்துக் கடலை நோக்கி வீசியது. குழந்தை வீசி எறியும் முத்து எவ்வளவு தூரம் செல்லும்? ஒரு அடி தொலைவு கூடச் செல்லவில்லை. அம்முத்துக்கள் மணற் பரப்பிலேயே விழுந்து விடுகின்றன. குழந்தை அழுதுகொண்டே சென்றுவிடுகிறது. ஏற்கனவே புன்னைமரங்கள் உதிர்த்திருக்கும் புன்னைப் பூக்களோடும் புன்னையரும்புகளோடும் குழந்தை அறுத்தெறிந்துவிட்டுச் சென்ற இரண்டொரு முத்துக்களும் மணலிலே விரவிக்கிடக்கின்றன. இவ்வளவும் காலையிலே நடந்த நிகழ்ச்சி.

மாலையில் அந்தக் கடற்கரைப் பக்கமாக உலவ வந்த ஒருவர், மணற்பரப்பில் புன்னை அரும்புகள் சிதறிக்கிடந்த அழகைக் கண்டபடியே அங்கு செல்கிறார். புன்னை அரும்புகள் முத்துக்களைப் போல் என்ன அழகாக இருக்கின்றன என்று கீழே குனிந்து ஒரு அரும்பைக் கையில் எடுக்கிறார், அதை உற்றுப்பார்க்கிறார், அவருக்கு வியப்பு மிகுகிறது. இது என்ன? முத்தாக இருக்கிறதே? புன்னையரும்பல்லவே! என்று அப்படியே அயர்ந்துவிடுகிறார். சற்று நேரத்திற்கெல்லாம், கீழே உதிர்ந்திருப்பவை எல்லாம் முத்துக்கள்தானோ என நினைந்தவராய் மீண்டும் குனிந்து இன்னொரு அரும்பை எடுக்கிறார். உற்றுப் பார்க்கிறார். அது முத்தல்ல! அரும்பேதான்! ஒன்றை எடுத்தால் முத்தாக இருக்கிறது. இன்னொன்றை எடுத்தால் புன்னை அரும்பாக இருக்கிறதே, என்று மயங்குகிறார். இப்படிப்பட்ட மயக்கம் விளைவிக்கும் கடற்கரையை உடையதாம் காவிரிப்பூம்பட்டினம். அப்படிப்பட்ட பூம்புகாரே அந்தப் புலவருடைய ஊராம்!

"முன்னைத் தம் சிற்றில் முழங்கு
கடல்ஓதம் மூழ்கிப்போக
அன்னைக்கு உரைப்பன்! அறிவாய்
கடலே! என்று அழுங்கிப் பேறும்
தன்மை மடவார் தளர்ந்து உகுத்த
வெண்முத்தம் தயங்கு கானல்
புன்னை அரும்பேய்ப்பப் போவாரைப்
பேதுறுக்கும் புகாரே எம் ஊர்"

★

இரும்புப் பெட்டி பேசினல்!

அப்பப்பா! ஒவ்வொரு நாளும் எத்தனை பேர் வருகிறார்கள் தெரியுமா? என் காது கூடச் செவிடாகிவிடும் போலிருக்கிறது, அப்படிப் போடுகிறார்கள் சத்தம். கோவிந்தா கோவிந்தா எனும் கூச்சல். நானிருக்கும் திருப்பதி மலையைக்கூடக் குடைந்துவிடும். தீராதவினையெல்லாம் தீர்த்துவைப்பான் — 'துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம்' செய்வான் — ஏழுமலையானை நம்பினால் எல்லாம் கிடைக்கும் எனும் நம்பிக்கையுடன் ஒவ்வொருநாளும் பல்லாயிரக் கணக்கில் வருகிறார்கள். தென்னாட்டிலிருந்து மட்டுமல்ல வடக்கே இருந்துகூட, திருப்பதி வெங்கடேசனைத் தரிசிக்க ஏராளமாக வருகிறார்கள் — வருபவர்களும் சும்மாவா வருகிறார்கள்? ஆயிரம் பத்தாயிரம் என்று ரூபாய்களை மூட்டைகட்டிக் கொண்டு வந்து உண்டியலில் போடுகிறார்கள்! அந்தப் பணத்தில் எவ்வளவு தொகை "இன்கம் டாக்ஸ்" கண்களில் தப்பியதோ யாருக்குத் தெரியும்!! பாமரர்கள் மட்டுமல்ல, படித்தவர்கள்கூட, "திருப்பதிக்குப் போனேன்" என்று சொல்லிக்கொள்வதென்பது, ஒரு 'பெரியமனுஷத்தனம்' என்கிற அளவுக்கு இப்போது நானிருக்கும் பதியின் கீர்த்தி பரவி இருக்கிறது. ஏனிவர்களெல்லாம் வருகிறார்கள், வருகிறவர் எங்காவது மரம் செடி கொடி பக்கம் உட்கார்ந்து ஆண்டவன் பெயரைச் சொல்லி 'தபசு' செய்கிறார்களா, என்றெல்லாம் பார்த்தால் இல்லை. என் கார் செவர்லே அவனது பிளிமித், அதோ இருப்பது பியட், இது இந்துஸ்தான், இப்படித்தான் பேசுகிறார்கள். பெண்களிடமோ கேட்கவேண்டியதில்லை—கோயில் பிரகாரத்துக்கு வந்தால்கூட, அவர்கள் கண்கள் ஆண்டவனிடமா இருக்கிறது? சரி, அது இடக்கட்டும்! நான் வந்த கதையை வாய்விட்டு உங்களிடம் சொல்ல வந்து, எதெதையோ சொல்லிக்கொண்டிருக்கிறேனே! திருப்பதிக்கு நான் வரவில்லை —கொண்டுவரப்பட்டேன். எல்லோரும் காணிக்கை செலுத்த, இங்கு வருவார்கள். ஆனால் எனக்குக் காணிக்கை செலுத்திய பிறகுதான், என் முதலாளி இங்கே அனுப்ப ஒப்பினார். 'ஸ்பெஷலாக' என்னைத் தயாரித்தார், என முதலாளி! என்னை உற்பத்தி பண்ண இரவு பகலாக எத்தனை தொழிலாளிகள் உழைத்தார்கள் தெரியுமா? ஆரம்பத்தில் நான் வெறும் இரும்பாய், மண்ணோடு மண்ணாகக் கிடந்த காலத்தில் என்னைத் தோண்டி எடுக்கப் பாடுபட்டவர்களை நினைத்தால் என் மனம் பதறுகிறது. இருநூறு அடி, முந்நூறு அடிக்குக் கீழ், பாறைகள் சரிந்து விழுமோ, எப்போது பூமிக்குள்ளேயே புதைந்துவிடுவோமா, சுரங்கத்துக்குள் நுழைந்த நாம் திரும்பிப்போய்ப் பெண்டு பிள்ளைகளைக் காண்போமா, என்கிற சந்தேகமும் சஞ்சலமும் தாக்க, சாண் வயிற்றுக்காகச் சாவுகூடச் சாதாரணம் எனும் எண்ணத்துடன், பாட்டாளிகள் என்னைத் தோண்டியெடுத்து, பிறகு சுத்தப்படுத்தி இரும்பாக்கினார்கள். மண்ணோடு கலந்துகிடந்த நான் இரும்பாக, எத்தனையெத்தனையோ இயந்திரங்களுக்குள்ளேல்லாம் புகுந்து வந்தேன்! அந்த இயந்திரங்களைச் செய்தவன் தேசத்தில், ஏழுமலையானே கிடையாதாம். விசித்திர விசித்திரமான இயந்திரங்கள்! அவைகளின் உதவியால் இரும்பானேன். என்னைக்கொண்டு "ஸ்பெஷலாக ஒரு பெட்டி" தயாரிக்குமாறு 'ஆர்டர்' கொடுத்தார்கள். யார் தெரியுமோ, 'ஆர்டர்'



கொடுத்தது? அந்த இடம் தான் ஆச்சரியத்துக்குரியது!! தீராத வினையெல்லாம் தீர்த்து வைப்பார்- ஏழுமலையான் சக்தியே சக்தி உண்டியலில் வேண்டிக்கொண்டு காசைப் போட்டால் எக் குறையும் தீர்த்துவைப்பார் — என்று பிரச்சாரம் செய்கிறார்களே அவர்கள் தான், 'ஆர்டர்' கொடுத்தவர்கள். திருப்பதி ஏழுமலையானுக்கு இருபது லட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்க வைர நகைகள் உள்ளனவாம். இவற்றைப் பூட்டிவைக்கத் தான், எனக்கு "ஆர்டர்" கொடுத்தார்கள். இருபது லட்சம்! ஆண்டவன், சர்வவல்லமையுள்ளவன், தயாபரன், உலகநாதன், அவனுக்கு இருபது லட்சம் என்ன, எத்தனை லட்சம் சேர்ந்தாலும் அவை ஒருபொருட்டா? இதெல்லாம், பக்தர்கள் கூற்றுப்படி, அவன் தந்ததுதானே! அவனன்றி ஓரணுவும் அசையுமோ? இருந்தும், அவனுக்குரிய இந்த இருபது லட்சத்தையும் பாதுகாக்க, கோயிலை ஆளுவோருக்கு ஏன் இவ்வளவு சிரத்தை வர வேண்டும்! ஸ்பெஷலாக ஆர்டர் கொடுத்துஏன் என்னைத் தருவிக்க வேண்டும்? "சார்! கள்ளச்சாவி போட்டால்கூடத் திறக்கமுடியாதபடி இருக்கவேண்டும்," என்றார்கள் கோயிலார். எவன் வருவான் ஈசன் பொருளைக் களவாட கள்ளச்சாவி கொண்டு? எம்பெருமான், கொஞ்சம் கோபக்குறியைக் காட்டினால், அவனுக்குக் குலை நோயென்ன, தலையைக்கூடக்சுக்கு நூறுக்க முடியுமே! அப்படிப் பட்ட சக்தியெல்லாம் ஐயனுக்கு இருப்பதாகத்தானே இந்தக் கோயிலார் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்—பக்தர்கள், பஜனை பண்ணிக்கொண்டுள்ளனர், நாள் தோறும். இருந்தும், இப்படி, அந்த ஐயனுடைய சொத்துக்களைப் பூட்டிப் பாதுகாக்க, என்னைக் கொண்டுபோகிறார்கள் என்றால் என்ன பொருள்? பெரிய பெரிய பணக்காரன் என்னைப் பொட்டிட்டுப் பூஜித்து எனக்குள் கத்தை கத்தையாகப் பணத்தையும் நகைகளையும் வைத்துத் திணிக்கிறான். அவன், மனிதன்,

ஆசைப் பேய்க்கு ஆளானவன். ஆதலால் அப்படிச் செய்கிறான். பிறர், எடுத்துக்கொண்டுபோய் விட்டால் திரும்ப வராதே என்கிற அச்சத்தில் செய்கிறான் அவன். ஆண்டவனுக்கு அந்த அச்சம் வருமா? ஆண்டவன் திருநாம மகிமையைச் சொல்லி வரும் பக்த கோடிகளுக்கு வரலாமா இந்த அச்சம்? தொட்டுப் பார்க்கட்டும் யாராவது வெங்கடேசனுக்குப் போட்ட நகையை—அவர்கள் கண்ணவிந்துபோவார்கள்! என்றல்லவா, தைரியத்தோடு சொல்லவேண்டும். ஏன் அந்தத் தைரியம், திருப்பதியான் புகழ்பாடுவோருக்கு வரவில்லை? என்னைக்கொண்டுவந்து, எனக்குள் பூட்டி, பத்திரப்படுத்துகிறார்கள்? திருப்பதியில் என்னை "ஸ்பெஷலா"க்கியிருக்கிறார்கள்—இட்டத்தட்ட ஒவ்வொரு கோயிலிலும் என்னைப்போல உருவிலும் சைசிலும் சிறிதான பல இரும்புப் பெட்டிகள் ஆண்டவர்களின் சொத்துக்களைப் போட்டுவைக்க இருக்கின்றனவாம்—பெரிய இரும்புப் பூட்டுகளைப் போட்டே ஒவ்வொருநாளும் பூட்டுகின்றனராம். ஏனிப்படிச் செய்கிறார்கள், பக்த கோடிகள்? ஒருவேளை, ஆண்டவன் சக்திபற்றி, இந்த நாத்திகர்களைப்போல அவர்களுக்கே சந்தேகம் இருக்குமோ!! தெரியாமல் கேட்கிறேன்—தயவுசெய்து விசாரித்து, "இரும்புப் பெட்டி—திருப்பதி கோயில்" என்கிற முகவரிக்கு எழுதுகிறீர்களா!!

★

தேசத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்றவன், அதிகார போதையில் நாம் இந்த உலகத்தில் எங்கேஇருக்கின்றோமென்று தெரியாத ஒரு நிலையில்கிடந்தால் அதனை நல்லவர் அனுமதிக்கக்கூடாது.

✱

நாட்டிற்குத் தீமையைத் தரக்கூடியது என்று தங்கட்குத் தோன்றினால் அப்படிப்பட்ட காரியத்தை எக்காரணத்தை முன்னிட்டும் யார் செய்யாமல் இருக்கின்றார்களோ அவர்களைத்தான் நாம் அரசோச்ச ஏற்படுத்தவேண்டும்.

கேட்டீரா சேதி!

தீபாவளி போன்ற பண்டிகைகளுக்கு குறைந்த செலவில் வாழ்த்துத்தந்திகள் அனுப்ப முடிகிறதல்லவா? அதுபோல, தமிழர் விழாவாகிய "பொங்கல் திருநாளுக்கும்" சலுகை தருமாறு, மதுரை, இராமநாதபுரம் வர்த்தகசங்கத்தினர், தபால் இலாகா அதிகாரியிடம் ஒரு விண்ணப்பம் தாக்கல் செய்திருந்தார்களாம். "பொங்கல் விழா, அகில இந்திய விழா! அல்ல! மாகாண விழா! ஆகவே, வாழ்த்து அனுப்ப சலுகைதர முடியாது", என்று அதிகாரி பதிலளித்திருக்கிறாராம்.

✱

இந்திய உபகண்டத்தில் ஒவ்வொரு மணிக்கும் சுமார் பதினாயிரம் குழந்தைகள் பிறக்கின்றன என்று கல்கத்தாவில் கடந்த திங்கள் கூடிய உலகத் தோழமை நாடுகள் மாநாட்டொன்றில் டாக்டர் சுசீலாநய்யார் எம். பி. தலைமை வகித்துப் பேசுகையில் சொன்னார். நகரங்களில் ஏராளமாகவும் இதைவிட அதிகமாகக் கிராமங்களிலும் குழந்தைகள் உற்பத்தியாவதாகவும் அவர் தெரிவித்தார்.

✱

"இந்தியா" முழுவதிலும் திரைப்படத் தொழிலில் மொத்தம் சுமார் 200 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளதாம். ஸ்டுடியோ சாதனங்களுக்காகச் செலவிடப்பட்டுள்ள தொகை 12 கோடியாம். படவிநியோகக் கம்பெனிகளில் . 10 கோடி முதலீடுள்ளதாம். ஓராண்டுக்குத் தயாராகும்படங்கள் 100. மொத்தம் இருக்கும் தியேட்டர்கள் 4000. தியேட்டர்களில் முடங்கியுள்ள தொகை 120 கோடி. கச்சாபிலிம் இறக்குமதிக்குத் தேவையான அந்நியச் செலாவணி $1\frac{1}{2}$ கோடி ரூபாய்! 1957-ல் தென்னாடுமட்டும் சம்பாதித்து தந்திருக்கிற அந்நியச் செலாவணி 90 இலட்ச ரூபாய்!!

✱

உலகிலேயே அதிகமாகத் தேநீர் குடிப்பவர்கள் யார்? சீனர்கள்தான்! இரண்டாவதாகப் பிரிட்டிஷாரையும், மூன்றுவதாக இந்தியாவினரையும், நான்காவதாக அமெரிக்கரையும் சொல்லலாம். அமெரிக்கர்கள் ஒவ்வொரு ஆண்டிலும் 200 கோடி கோப்பைத் தேநீர் குடிப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. தேயிலையை ஒரு காலத்தில் ஆடம்பரப் பொருளாகக் கருதி அமெரிக்கர்கள் குடித்துவந்தனர். சாதாரணமாக இப்போது ஆண்டுதோறும்10கோடி இராத்தல் தேயிலை அமெரிக்காவில் செலவாகிறதாம்.

✱

இந்திய உபகண்டம் முழுமையும் 9619 இரயில்வே இஞ்சின்கள் உபயோகத்திலுள்ளன. இவற்றில் 6,117 பிராட்கேஜ் மார்க்கங்களிலும், 3,502 மீட்டர் கேஜ்மார்க்கங்களிலும் உள்ளன. பிராட்கேஜில் 3,302 பிரயாணி வண்டிகளும், மீட்டர்கேஜில் 2,260 பிரயாணி வண்டிகளும் 30 ஆண்டுகளுக்குமேல் வேலை செய்தவையாகும்.

★

உபதேசம் ஓயவில்லை

—[ச. வெ. பாண்டியன்]—

"உணவு உற்பத்தி வேகம் இதே நிலையில் போய்க்கொண்டிருந்தால் வருடா வருடம் நாம் 30-லிருந்து 40 கோடி வரை இழந்துவிடவேண்டியதுதான்" எனக் கணக்குக் காட்டி கண்ணைக் கசக்குகிறார் திட்டக்குழு உதவித் தலைவர் வி. டி. கிருஷ்ணமாச்சாரியார்!

"நூற்றிற்கு எண்பதுபேர் விவசாயத்தில் ஈடுபட்டுக்கொண்டே உணவிற்காக வெளிநாட்டை எதிர்பார்த்திருப்பது வெட்கமாக இல்லையா?" பாபு இராஜேந்திர பிரசாத் நாட்டுத் தலைவர் — வினயமாக வினவுகிறார்!

அகிலம் புகழும் "நேருவோ" இப்படியே போய்க்கொண்டிருந்தால் அரிசிக் "கண்ட்ரோல்" கொண்டுவரவும் தயங்கமாட்டேன்" என அதட்டியே பேசுகிறார்!

திட்டக் குழுவிலிருந்துதேசியத் தலைவர்கள்வரை உணவு நிலை குறித்து இப்படியெல்லாம் அபாய அறிவிப்புச் செய்து வருகிறார்கள். காங்கிரஸ் ஆட்சியினர் தங்களது பதினொரு ஆண்டுகால ஆட்சியில் உணவுப் பிரச்சனையை ஒழிக்க வக்கில்லாமல் இப்படியாவது வாய்திறந்து பேச முற்பட்டிருப்பது கண்டு நாம் பாராட்டத்தான் வேண்டும். போகட்டும், வருந்தத்தக்க நிலை மாற என்னென்ன நடவடிக்கைகளைச் செய்யவேண்டும்?

இதற்கெல்லாம் பதில்சொல்வதைப்போல இம்மாதம் 9-ம்தேதிய "காமர்ஸ்" என்னும் பம்பாய் ஏடு கீழ்க்கண்டவாறு தனது தலையங்கத்தில் எழுதியுள்ளது. அது வருமாறு:-நமது நாட்டில் பயன்படுத்தப்படாத நீர்ப்பாசனத் திட்டங்கள் ஏராளம் இருக்கின்றன. இவைகளை உபயோகத்திற்குக் கொண்டுவராமல் இருப்பது, பண நெருக்கடியையும் உண்டாக்க வல்லது. எனவே எல்லா மாகாணங்களும் தாமதிக்காமல் நீர்ப்பாசன வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்க முயலவேண்டும்" "காமர்ஸ்" இந்த முறையில் விளக்கம் தந்திருக்கிறது!

சமீபத்தில் 'ஐதராபாத்'தில் கூடிய தெற்கு வட்டார மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய டில்லி மந்திரி "ஜெயின்" அவர்கள் "சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு முதலிடம் தரவேண்டும்" எனப் பேசியுள்ளார்கள்!

"உணவு உற்பத்தி பின் தங்கியுள்ளது. இது போக்கப்பட வேண்டுமானால் எல்லா மாகாணங்களும் உடனே எல்லா நீர்ப்பானத் திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டும். மேலும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு முதலிடம் கொடுக்கவேண்டும்" என்பவைகள் மேற்கண்ட அவர்களின் உபதேசங்களினின்றும் நாம் பெறுபவைகள்! ஆனால் நடைமுறையில் என்ன நடக்கிறது? இதற்கு நேர் எதிர்தான் நடந்துகொண்டிருக்கிறது.

நமது 'தமிழக மாகாணமே' இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். சமீபத்தில் நமது சென்னை சர்க்காரால் திட்டமிடப்பட்டு 'டெல்லி'யின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்ட சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் **20!** இதில் 'டெல்லி' தேவதைகள் பெரிய மனது பண்ணி ஒப்புக்கொண்டவைகள் **6**!

20க்கு 6

சிபார்சு செய்யப்பட்ட திட்டங்கள் பெரிய திட்டங்கள் அல்ல — சிறிய திட்டங்கள்! ஒவ்வொரு திட்டங்களுக்கும் செலவழிக்கப்படவேண்டிய ஒருசில லட்சங்களே! எனினும் 'டில்லிக்கு' மனம் இல்லை!

"தவறான முறையில் திட்டம் தயாரித்திருப்பார்கள்" என்றும் கூறிவிடுவதற்கில்லை. ஏனெனில் சின்னாட்களுக்கு முன் மராமத்து இலாகா தலைமைச் செயலாளர் எஸ். கே. செட்டூர் என்பார் சென்னை பொறியியல் வல்லுநர்களைப்பற்றிப் பேசும்போது, "நமது பொறியியல் வல்லுநர்களின் திறம் நாடு அறிந்ததாகும். இதனால்தான் மத்திய சர்க்காரும், மற்ற மாநில சர்க்கார்களும் தங்களது திட்டங்களை நிறைவேற்ற நம்மவர்களை அழைக்கிறார்கள்" என்னும் கருத்துப்படப் பேசியிருந்தார்கள். இப்படி இந்தியாவெங்கும்புகழ்பெறும் அளவுபெருமையுள்ள தமிழகப்பொறியிலர்கள்தான் இந்த இருபது திட்டங்களையும் பரிசோதித்து, லாப நட்டங்களைக் கணக்கிட்டுப் பார்த்து, உபயோகம் உள்ளது எனக் கண்டபின்புதான் சர்க்கார் சிபார்சு செய்துள்ளனர்!

என்றாலும் முயற்சி பலன்தரவில்லை! 20க்கு 6 தான் வழங்கப்பட்டுள்ளது! காமராசர் அரசும் "பெற்றதே பெரிது" என வாளா இருக்கிறது.

உணவுப் பற்றாக்குறை இருக்கத்தான் செய்கிறது! இதைப்போக்க நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு—சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு முதலிடம் அளிக்கவேண்டும் என மந்திரிகளும், ஏடுகளும் உபதேசம் புரியத்தான் செய்கின்றனர்!

நடைமுறையிலோ கொடுக்கும் திட்டங்களைத் தூக்கி எறிகிறது "டில்லி" 'சென்னை'க்கு என்றாலே 'டில்லி'யின் முகம் சுண்டிவிடுகிறது! வடக்கே 60 கோடி, 70 கோடி, 135 கோடி எனத் திட்டங்களுக்கு கொட்டியளக்கிறார்கள்! திட்டமிட்டபலன்கிடைக்காவிட்டாலும் மேலும் கொட்டிச் செலவழிக்கிறார்கள்! இதற்கெல்லாம் பணம் வருகிறது டில்லிக்கு! ஆனால் நமக்கு என்றதும் கை சுருங்கிவிடுகிறது! வடக்கின் 'வஞ்சனை' என்பதைத் தவிர வேறு என்ன?

தென்னாட்டில் வடநாட்டைப்போல செலவழிக்கத் திட்டம் எங்கே இருக்கிறது என்று பேசும் பெரிய மனது படைத்தவர்களோ, சென்னையின் ஒவ்வொரு திட்டத்திற்கும் சில இலட்சங்களே செலவாகக் கூடியவைகளுக்கும் அனுமதியளிக்க 'டில்லிக்கு' மனசு வராதது ஏன்? ஏன்? ஏன்?



காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது..

திராவிடநாடு

7—9—58 | வார வெளியீடு | விலை 16 காசு

வீழ்ச்சியில் வாழ்வாயே!

[தங்க நிழல்]

ஆண்ட பரம்பரை உன் நெஞ்சில்—பகை
ஆணவக் காரனுக் கிடமுண்டோ?
மாண்டு மடிந்தாலும் மானமே!—பெரும்
மாண்புயர் உன் பண்பு அல்லவோ?
பாண்டியன் பரம்பரை நீயன்றோ?—நீ
பகைவனைத் தொழுவதும் நியாயமோ?
வேண்டும் பொருளைச் சுரண்டிடும்—தீய
வடக்கினுக் கிரங்கலும் நீதியோ?
ஆண்டி மொழியெனும் இந்திக்கு—நீயும்
ஆசைப் படலாமோ கனவிலும்
தேன்மொழி தண்டமிழ் உன்னவே—உன்
தெளிவியல் நூறாய் பெருகுமே!
மீண்டும் உன் திராவிடம் வாழவே—உயர்
வான பணிசெய்வாய் இன்றேதான்
வேண்டும் வெற்றிக்கொடி தாங்கவே—நீ
விரைந்திடு வீழ்ச்சியில் வாழ்வாயே!

குறுந்தொகையில் ஒரு காட்சி

—[தென்னவன்]—

நம் தமிழ்மொழியின்கண் அகத்தையும், இன்ன பிறவற்றையும் கூறும் பாக்கள் பற்பல உள. அவை ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு தன்மையில் உயர்வும் சிறப்பும் பெற்று மிளிர்வன. படிக்கப் படிக்கத் திகட்டாதன. அத்தகு கீர்த்தி மிகப்பெற்ற இன்பக் குவியலிலிருந்து, இதோ ஒரு பாடலின் விளக்கம்.

தன் கணைக்குத் தப்பி, துள்ளியோடும் புள்ளிமானைத்தொடர்ந்து ஓடினன். மானும் ஓடியது. மீண்டும் மீண்டும் அவனும் ஓடினன். ஒரு கணம் தன் பார்வை தவறியது. மான் மறைந்தது. பின்பும் தன் முயற்சியைவிட மனமில்லாத அவ்விளங்காளை ஓடினன். எதிர்பாராத விதமாக ஒரு தினைப்புனத்துட் சென்று விட்டான்.

அங்கே ஒரு மானைக் கண்டான். ஆம் அது பேசும் மான். வட்ட நிலாவைத் தன் முகமாகக் கொண்ட மான். அம்முகமதியில் — அவன் கைவில்லைப் போன்ற புருவங்களையுடைய அழகிய மான். அப்புருவத்தின்கீழே காதுவரை நீண்டு—கயலெனப் புரண்டு— மருட்சியினைக் கொண்டு திகழும் கண்களையுடைய பெண் மான்— அவ்வழகிய மானைக் கண்டான். சிலைபோல நின்றான்.

இதற்குள் தோழி வந்துவிட்டாள், வந்த அவள் ஆணழகன் ஒருவனைத் தலைவியின் அருகே கண்டதால் ஒருமுறை அவனை முறைத்துப் பார்த்தாள்.

பயத்தால் சென்று விட்டான்— மானைத்துரத்தி, பெண் மானென்றினைக் கண்டுகளித்த—அவன்,

"ஏனடி அவரைத்துரத்தினாய்?"

"யாரம்மா அந்த "அவர்!" அவருக்கு இங்கு என்னம்மா வேலை?"

அதைக் கேட்பதற்குள்ளாகத் தானே விரட்டி விட்டாயடி கள்ளி!

"யாரம்மா கள்......ளி?"

"சரி சரி வேலையைப்பார்"

தன் தோழியைத் துரத்திவிட்டு ஒரு மரத்தின் அடியில் அமர்ந்தாள். அவளது உள்ளம் வேலை செய்யத் துவங்கியது. "யார் இந்த ஆணழகன். கண்டார் வியக்கும் மலைத்தோளினையுடைய அக்கள்வன் யார்? ஏன் இங்கு வரவேண்டும்? ஆராயத் தலைப்பட்டாள். அவன் நினைவால் தன்னையே மறந்திட்டாள். தோழியின் காலடிச் சத்தம் கேட்டுத்தான் உணர்வு பெற்றாள். இருவரும் இல்லம் ஏகினர்.

மறுநாள், தலைவன் வேட்டையாடிப்பிடிக்கும் மான் இல்லாமலே தினைப்புனத்திற்கு வந்தான். அவளும் சொல்லிவைத்தாற்போன்று அங்கே வந்திருந்தாள்.

இருவர் கண்களும் பேசின. வாய் பேசவில்லை. அவள் தன்னிலை மறந்து தனதுமேலாடையை நழுவவிடப் பார்த்தாள். ஆனால் அவனோ தனது வில்லையே விட்டுவிட்டான். அப்போது அவனுக்கு முன் குனிந்து அவள் வில்லை எடுத்தாள். அவன் வில்லினை வாங்குவதற்குப் பதில், அவள் கையினையே பற்றினான். அவன் வில்லினைப் பார்ப்பதற்குபபதில் அவளைத்தானே அள்ளி விழுங்குவதுபோல் பார்த்தாள்.

"ஆ"......என்றனர் இருவரும் —ஒரே நேரத்தில்.

நாட்கள் பல உருண்டோடின— அவர்கள் அன்பை வளர்த்துக் கொண்டு.

ஒருநாள். இரவு நேரம். அவள் எதிர்பார்த்ததுபோல் அவனும் வந்தான், தினைப்புனத்திற்கு.

" வாருங்கள் ", எனக்கூறினாள் புன்னகை பூக்க. அந்த ஆணழகனும் பதிலகூறும் வகையில் ஒரு வகையில் ஒரு சிறுநகையை இதழோரத்தில் முறுவலித்துக் காட்டினாள். தேன்விட்டுப் பிசைந்த தினைமாவை அவனுக்குக் கொடுத்தாள். அவனும் அன்பு பொங்கத் தின்றான்.

"அன்பே! உனது அன்பான பேச்சையும் இனிமையான உபசரிப்பையும் பெறயான் என்ன தவம் செய்தேனோ!"

" ஆணழகா! உம் பார்வை ஒன்றே என்னை உங்களுக்குச் சொந்தமாக்கி விட்டதே!"

"அன்று நீ என்ன துணிச்சலுடன் என் வில்லை எடுத்தாய்? உன் செயல் அன்று எனக்கு எவ்வளவு வியப்பைத் தந்தது தெரியுமா!"

"அது சரி, நீங்கள் மாத்திரம் என்னவாம். அன்று நீங்கள், உங்கள் வில்லை வாங்குவதற்குப் பதில், எனது கையையல்லவா பற்றினீர்கள். இது உங்கள் துணிவைத்தானே எனக்கு காட்டியது; அப்பொழுது உங்களது பார்வையைப் பார்த்தயான் எவ்வளவு மயக்கத்தில் இருந்தேன் தெரியுமா! இவ்வுலகையே மறந்து விட்டேன், அத்தான்.

சின்னாட்களின் பின்,

ஒருநாள், அவனது பேச்சிலிருந்து அவன் தன்னை விட்டுவிட்டு, அயலூர் செல்ல இருந்தது தெரிந்தது; அவளுக்கு. அவளது கண்கள் கலங்கின. தலைவியின் கருவிளமலர்போன்ற கண்ணை நீர்த்திரை மறைத்திருந்தது.

தலைவியின் நிலையைத் தெரிந்து கொண்ட அவன், அவளை எவ்வாறேனும் தேற்றி ஆறுதல் அளித்தபின்னரே வேற்றூர் செல்லவேண்டும் எனத் தீர்மானித்தான். அப்போது அவன், அவளிடம்;

"என்னருந் துணையே! என் தாயும் நின்தாயும் யார்யாரோ, இதுவரை நாம் அறிந்தோம் இல்லை! அதுபோலவே என் தந்தையும் உன தந்தையும் எவ்வித உறவுமுறையார் அல்லர்! அதுமட்டுமின்றி நானும் நீயும், நாம் ஒருவரைஒருவர் காணுதற்கு முன்பு எவ்வழியில் ஒருவரை ஒருவர் அறிந்திருந்தோம்? ஆனாலும் நம் இருவரது நெஞ்சமும் இன்று செம்மண் நிலத்தில் பெய்த மழைநீர் அம்மண்ணோடு இரண்டறக் கலந்து பிரிக்க முடியாதவாறு ஆகிவிடுதல்போல் தாமாகவே ஒன்று சேர்ந்துவிட்டன" என்று கூறித் தன் காதலியைத் தேற்றினான். இக்கருத்தமைந்த ஒரு பாடல் குறுந்தொகையில் காணப்படுகின்றது. அப்பாடல் பெரும் புலவர் "செம்புலப் பெயல் நீரார்" என்பவரால் ஆக்கப் பெற்றது. அது படிக்குந்தோறும் இனிமை பயக்கும் பான்மை பெற்றது. இதோ அக்கவி:—

"யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர்
யாரு நீயு மெவ்வழி யறிதும்,
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே"

★

சிறையில் தலைவா

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [7—9—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 8

தமிழ் மக்களை மனம்போன போக்கில் ஏசியும் பேசியும் நடந்துகொள்ளும் பண்டித நேருவின் போக்கினைக் கண்டிக்கும் முறையில் கடந்த ஜனவரித் திங்களில் நேரு அவர்கள் சென்னை வந்திருந்த சமயம் பல இலட்சக்கணக்கான மக்கள் கருப்புக் கொடி காட்டவேண்டுமென்ற ஏற்பாடு தி. மு. க. தலைமையினரால் செய்யப்பட்டு, கருப்புக்கொடி காட்ட வேண்டிய தன் அவசியத்தையும், அப்படிக் காட்டப்படும் போது பொதுமக்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகளையும் விளக்கிக் கூறுவதற்காக சென்னைக் கடற்கரையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்திற்குப் போலீஸ் தடை விதித்தது.

அந்தத் தடையை மீறுவதென்று தி. மு. க. முடிவு செய்ததன் காரணமாகப் போலீசாரால் ஒரு வழக்குத் தொடரப்பட்டது. அந்த வழக்கின் முடிவு, சம்பவத்தில் தொடர்புகொண்டவர்களாகப் போலீசாரால் கருதப்பட்ட பதினொரு பேருக்கும் 25 ரூபா அபராதம், தவறினால் 2 கிழமை சிறைவாசம் என்று தீர்ப்புக் கூறப்பட்டு,

நமது ஆசிரியரும், தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத் M.P., இரா. தர்மலிங்கம் M.P., ஏ. வி. பி. ஆசைத்தம்பி M. L. A., இரா. செழியன், மு. கருணாநிதி M. L. A., அன்பில் தர்மலிங்கம், இராம. அரங்கண்ணல், கரந்தை சண்முகவடிவேலு, திருச்சி முத்துகிருஷ்ணன், அரங்கசாமி.

ஆகியோரும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். டெல்லியிலும், சென்னையிலும் மக்கள் சபை கூட்டப்பட்டு, நாட்டு நலம்பற்றிய பல விஷயங்கள் பேசப்படும் இந்த நேரத்தில் இப்படி ஒரு செயலா என்று பொதுவாக எல்லோருமே கேட்கக்கூடும். என்ன செய்வது? இரண்டே இரண்டு கிழமைகள்—14 நாட்கள், இதற்குள் எதுவும் முழுகிவிடாது. எல்லாம் நன்மைக்கே!

★

அரசுக்கு

உற்பத்தி பெருகவேண்டும்! உணவுற்பத்தி பெருகவேண்டும்!!—என்கிறார்கள்.

இதற்காக, ஒரு ஆலோசனைக் கமிட்டியைக்கூட, சென்னை சர்க்கார் இந்தக் கிழமை நியமித்திருக்கிறார்கள்.

அமைச்சர்களும், அரசும் காட்டுகிற அவசரமும் ஆர்ப்பரிப்பும், புதிதல்ல; அடிக்கடி காட்டுவது தான்.

நாட்டின் விளைநிலம் அதிகம்! அவைகளை விளைச்சல் நிலங்களாக ஆக்காமையாலும், அதற்கான வசதிகள் விவசாயிகளுக்குக் கிடைக்காமையாலும், பல இடங்களில் மண் 'கள்ளி'யாகவே உள்ளது!!

கட்டாந்தரைகள் கழனிகள் ஆவதையும், தரிசுகள் தளிர் நிலங்களாவதையும், காண நிச்சயம் அரசு முயலவேண்டும்—அப்பேற்பட்ட முயற்சிகளில் ஈடுபடும் ஏழைகளுக்கு வேண்டிய வசதிகளைக் காமராசர் அரசு செய்துதரும், ஏனென்றால் உணவுப் பிரச்னை என்னை வாட்டுகிறது என்று நேருவே நொந்து கொள்கிறாரே, என்றே எவரும் எண்ணுவர்.

தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாடு வட்டத்தில் தாந்தோணி எனும் கிராமத்தில், புறம்போக்கு நிலத்தைக் கழனிகளாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர், கிராமத்தார். அவர்கள் சார்பில், ஐவர், கடந்த 21-ந்தேதி, புறம்போக்கு நிலம் நோக்கிச் சென்றிருக்கின்றனர். பூரிப்புத்தானே வரவேண்டும், ஆள்வோருக்கு! புறம்போக்குகளைக்கூடப்பண்படுத்திப் பயிர்த்தொழில் செய்யப் புறப்படுவோருக்கு பூமாலையும் வாழ்த்துக்களும்தானே வழங்கவேண்டும். அதைத்தானே உணவுப் பிரச்னையைப் பெரிதாக எண்ணும் ஒரு அரசில் எல்லோரும் எதிர்பார்ப்பர்!!

அந்த ஐவருக்கும் கிடைத்தது மலர்மாலையல்ல—போலீஸ் தடை! ஆம், புறம்போக்கு நிலத்துக்குள் பிரவேசிக்கக் கூடாதெனச் சொல்லி, தடைபோட்டிருக்கிறார், மாஜிஸ்டிரேட். "ஐயா! இப்போது மட்டுமல்ல, இந்தப் புறம்போக்கு நிலத்தில், ஏற்கனவே நாங்கள் பயிரிட்டிருக்கிறோம். எங்களைத் தடுக்க

வேண்டாம்" என்று அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். பலனில்லை! எனவே, தடையை மீறி, புறம்போக்கு நிலத்தில் எடுத்தடிவைக்க முயற்சித்தார்கள்—முதல் பிரிவாக ஒரு ஐந்துபேர் நுழைந்திருக்கின்றனர்—அவர்களைவரையும் போலீசார் கைது செய்து போய்விட்டதாகவும், அதைத் தொடர்ந்து அன்று முதல் தினசரி 'அறப்போர்' நடாத்தப்படுவதாகவும் செய்தி பெறுகிறோம்.

விவசாயத்தை விட்டுவிட்டு கிராமத்தார் பட்டணங்களை நோக்கி வருகிறார்கள் என்று பலரும் கொக்துகொள்கிற இச்சமயத்தில், பயிரிடவிரும்புகிறவர்களுக்கு, அதுவும் புறம்போக்கினைப் பயன்படுத்த முன்வருகிறவர்களுக்கு, ஆட்சியாளர் வசதிகளைச் செய்துதராவிட்டாலும், முட்டுக்கட்டையாவது போடாமலிருக்கவேண்டும்.

தாங்தோணி கிராமத்தில்மட்டுமல்ல, ஒவ்வொரு கிராமத்திலும் பயிர்த்தொழிலுக்குப் பாங்கான புறம்போக்குகள் வெளிப்பரப்புக் கிடக்கின்றன. அவைகளையும், நிலமில்லாத விவசாயிகளுக்கு ஒதுக்கி, ஆவன செய்யவேண்டும்.

ஊர்ப் பயணத்தில் சிரத்தைகொண்டுள்ள, அமைச்சர்கள், இதுநாள் வரையில் ஏதாவது பரிகாரம் செய்யாமலிருப்பார்களாயின், கிராமத்தாரின் குறை தீர்க்க ஆவன செய்யவேண்டுமென விரும்புகிறோம்.

சொல்வது ஒன்றும், செய்வது இன்னொன்றும் காங்கிரசாருக்குப் பழக்கப்பட்டுவிட்ட ஒரு குணம். அந்தப் பழியை, இச்சந்தர்ப்பத்திலாவது நீக்கிக் காட்டுதல் நல்லது.

உணவுக்கடுத்தபடி, குடியிருப்பு வசதி.

சென்னையைப் போன்ற நகரங்களிலே, வீடுகள் கிடைப்பதும், வீடுகள் கட்ட இடம் கிடைப்பதும், குதிரைக் கொம்பாயிருப்பது எல்லோரும் அறிந்ததே. பணம் படைத்தோரால்கூட, விருப்பப்படி, வேண்டிய வசதிகளைச் செய்துகொள்ள இயலாத அளவுக்கு இருக்கிறது.

இந்நிலையில் 21ம் தேதி, அரசினர், ஏடுகளின் மூலம் எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளார்கள். நகரத்தின் சில பகுதிகளில், சர்க்காருக்குச் சொந்தமான இடங்களில், அனுமதியில்லாமல் ஏழைகள் குடிசைகளைப் போட்டுக்கொண்டிருக்கிறார்களாம்.

இதுகூடாது—நிச்சயம் அனுமதிக்கமாட்டோம், என்று அரசினர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். இப்படிக் கட்டப்பட்டிருக்கும் குடிசைகள் அகற்றப்படும்—அவைகளுக்காக எவ்வித நஷ்டஈடும்கூடக் கொடுக்கப்படமாட்டாது, என்று வலியுறுத்தி, அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

எச்சரிக்கையிலுள்ள வன்மையும், நோக்கமும், ஏனென்று நமக்குப் புரியவில்லை, சர்க்கார் நிலம் — குடிசை அமைத்துக்கொண்டாவது வாழலாம் என்று ஏதோ வாழமுடியாதவர்கள் விரும்புகிறார்கள்—அவர்களுக்கு குடியிருக்க மாற்றுஇடம் தேடித்தராமல் துரத்துவதென்பதும், நகரசபைக் கமிஷனர் மூலம் நடவடிக்கைகள் எடுப்போம் என்பதும், இடித்து வீசப்படும் குடிசைகளுக்கு ஒரு புதுக் காசுகூட நஷ்டஈடு கொடுக்கமாட்டோம் என்று எச்சரிப்பதும், அப்படிக் கூறுவதில் தொனிக்கும் 'வேகமும்' என்னவென்று நமக்குப் புரியவில்லை,

சில சங்கங்களின் தூண்டுதல் பேரில், பலர் இப்படிப்பட்ட இடங்களில் குடிசைகளை அமைத்துக்கொண்டிருக்கிறார்களாம்! ஒருவேளை, 'சங்கம்' என்பதால், அரசுக்கு குத்துகிறதோ குடைகிறதோ, நமக்குப் புரியவில்லை!!

காரணம் எதுவாக இருப்பினும், உணவும்' இருக்க இடம் இரண்டும், சாதாரண குடிமகனின் இன்றியமையாத் தேவைகளாகும்.

அவைகளுக்கு, தானேவலுவில் ஏற்பாடு செய்துதர வேண்டியது, ஒரு அரசின் பொறுப்பாகும்.

இருக்கின்ற அரசால், அது இயலவில்லை எனும் போது, வாழமுடியாதவர்கள் ஏதோ தத்திக்குதித்து வசதிகளைச்செய்துகொள்கிறார்கள் என்றால், கைது செய்வதும், 'கபர்தார்' என்று எச்சரிக்கை விடுப்பதும், அழகாகவும் தோன்றவில்லை; அறமாகவும் இல்லை.

★

தி. மு. க. தலைமை நிலைய முதல் வெளியீடு!

'வளம் காண வழி'

அண்ணாவின்

அரிய கருத்துரை

சென்னை சட்டமன்றத்தில், 1958—59ம் ஆண்டின் வரவு செலவு பொது விவாதத்தின்போது ஆற்றிய பேருரைகளின் தொகுப்பு.

இந்நூல்....................

அரசியல் துறையினருக்கு அரிய விளக்கம் தரும் அறிவுக் களஞ்சியம்!

கொள்கை விளக்கப் பணியில் ஈடுபட்டுள்ள கழகத் தோழர்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டிய பெருந்துணைக் கருவி!!

விலை 8 அணா

குறிப்பு:— தனிப்பிரதி வேண்டுவோர், புத்தக விலையுடன், 15-புதுக் காசுகள் அஞ்சல் செலவிற்காக, அனுப்பவும். 50-பிரதிகளுக்கு அதிகமாக வேண்டுவோர்க்கு 20-சதவிகிதம் கழிவு உண்டு. வி. பி. பி. இல்லை. தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

விவரங்களுக்கு:—

தி மு. க. தலைமை நிலையம் 'அறிவகம்'
சென்னை-13.

கடன்பட்ட நோயாளி

"அவளுக்கு அடுத்த வீட்டுக்காரன்மீது கண்! அவனைப்பார்ப்பதிலும், கண்ணால் பேசுவதிலும் நேரத்தைப் போக்கிவிட்டாள். உழைக்கச் சென்ற கணவன், சாப்பாட்டுக்கு வந்துவிட்டான். என்ன செய்வது? திகைத்தாள்! பாய் ஒன்றை விரித்தாள்—படுத்துக்கொண்டு "ஐயோ அப்பா! வலிக்கிறதே வயிறறை! கொல்லுகிறதே என்னை! ஒரு வேலையும் செய்ய முடியவில்லையே!" என்று ஓலமிடத் துவங்கினாள். பசியோடு வந்த கணவன பதைத்தான். ஓடினான் மருத்துவரிடம். வியாதி இருந்தால் அல்லவோ சொல்வதற்கு? மருத்துவர், நாடியைப் பிடித்துப் பார்தது, நாக்கை நீட்டச் சொல்லிச் சோதித்து, உதட்டைப் பிதுக்கிவிட்டு, ஒன்றுமில்லை என்று போய்விட்டார்! ஒருநாளோடு இக்கூத்து முடிந்தால், பரவாயில்லை. தொடர்ந்து ஒவ்வொரு நாளும் நடந்தால், கணவனுக்கு, எனிப்படிச் செய்கிறாள் எனகிற சந்தேகம் ஏற்படவும், அதன் விளைவாக உண்மையை அறியும் ஆசையும் ஏற்பட்டு, கடைசியில் கட்டிய மனைவி காதகியாக ஆகிவிட்டாள் என்பதை அறியவும்தானே நேரும்.'

அன்பர் சுப்பிரமணியம் தான் காதகியல்ல என்று நிரூபிக்க முயற்சிக்கிறார்! அவர் சார்ந்திருக்கும் அகில இந்திய காங்கிரஸ் அரசு, குற்றம் தங்கள்மீதில்லை என்று காரணத்தை அடுக்கிட முயலுகிறது!'

ஓராண்டல்ல, ஈராண்டல்ல, இவ்வுபகண்டம சுதந்திரம்பெற்று ஈரைந்து ஆண்டுகளுக்கு மேல் ஓடிவிட்டன. இன்னும் நேரு முதல் சாதாரணத் தொண்டர் வரை பஞ்சப்பாட்டுப் பாடக் கேட்கிறோம். "ஆகா! ஊகூ! அந்நிய நாட்டுக்கு நம பணம போகிறது, அரிசியும் கோதுமையும் வாங்க. அதைத் தடுக்க, இதோ முதல் ஐந்தாண்டுத் திட்டம் போட்டுவிட்டோம். அணைகள் கட்டுகிறோம்: கால்வாய்களை வெட்டுகிறோம், உணவுற்பத்திக் குழுக்களை நிறுவுகிறோம், ஜப்பான் சாகுபடி முறையைப்பரப்புகிறோம், வெளிநாட்டுக்கு விவசாயிகளை (போனவர்கள், உண்மையான விவசாயிகளா என்பது ஐயம் தான்!) அனுப்புகிறோம்" என்று பறைசாற்றினார்கள். அதற்காகவே முதல் ஐந்தாண்டுத் திட்டம் போட்டதாகவும் ரூ. 2800 கோடியைச் செலவிட்டதாகவும் முரசொலி கிளப்பினார்கள். ஒன்றல்ல, இரண்டல்ல ரூபாய் 2800-கோடிசெலவிட்டார்கள்! அப்படிச் செலவிட்டதால், நாட்டில் உணவுத் துறையை ஒருமாதிரியாகச் சரிக்கட்டியாகிவிட்டது, அடுத்தது தொழில் துறைதான, அதற்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம போட்டிருக்கிறோம்; உணவுத் துறையிலும் வெற்றி, அடுத்தபடி தொழிலிலும் வெற்றி கண்டுவிட்டால், நாடு 'சுவர்க்க' லோகமாகிவிடும் என்று சொன்னார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம துவங்கி, ஆண்டுகள் இரண்டாகிவிட்டன. பழைய பெத்தான் பெத்தானாகவே இருக்கிறான்! 2800-கோடி ரூபாயைச் செலவிடுவதற்கு முன்னிருந்த நிலைமைதான், இன்னும் உள்ளது நாட்டில். அப்போது ஒலித்த பஞ்சநாதந்தான் இன்னும் ஒலிக்கிறது. அரிசிக்கும் சோற்றுக்கும் அப்போது திண்டாடியது போலத்தான், இப்போதும் மக்கள் திண்டாடுகிறார்கள்.

"பொய்! பொய்!! இந்த தி. மு. க.க்கள் இப்படித்தான பேசுவார்கள். அடுக்குச் சொல்லில் அழகாகப் பேசுவார்கள். பொது மக்களே, அவர்கள் கூறுவதை நம்பாதீர்கள். அவர்களுக்குப் பசி தெரியாது, துயரம் புரியாது நாட்டை உணரும அறிவு கிடையாது. எங்கள் காங்கிரஸ் ஆட்சியில் உணவுக்கு ஒன்றும பற்றாக்குறை வந்துவிடவில்லை" என்று காங்கிரசின் பிரச்சார பீரங்கிகளும் அவர்களைப்போற்றி அந்தாதி பாடி அனுப்பும் அமைச்சர்களும் எடுத்துரைக்க முன்வரக்கூடும்.

நாடு, உணவுப் பிரச்னையில் திண்டாடுகிறது'—என்று, நேரு அவர்களே சொல்கிறார். கடந்த கிழமை பெங்களூரிலே உணவுப் பிரச்னை சம்பந்தமாக நடைபெற்ற அகில உலக மாநாட்டுக்கு வந்து பேசிய போது, தெளிவாக வெளியிட்டிருக்கிறார். அதற்கு இரண்டொரு தினங்களுக்கு முன், டில்லி பார்லிமெண்டிலும், இதே விதம் அறிவித்திருக்கிறார். இப்போது எங்கு போனாலும், "உணவு! உணவு!!" என்றே, பேசியும் வருகிறார்.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் ஈராண்டுகள் ஓடிவிட்டன. முதல் திட்டத்தில் உணவுப் பிரச்னை, இனி இராது என்று முரசும் முழங்கப்பட்டது.

ஆனால் இப்போது, முகாரி எழும்புகிறது! மூலைக்கு மூலை போய் ஆபத்து — ஆபத்து — என்று அலறுகிறார்கள்!!

உடல் நலமில்லை என்று ஒரு நாள் சொன்னால், கைபிடித்தவன், நம்பலாம். தொடர்ந்தும், விட்டு விட்டும், இப்படியே சொல்லிக் கொண்டேயிருந்தால், காங்கிரசை வாழ்வின் துணையாக எண்ணியிருக்கும் குடிமகன் மனதில் அச்சமும் ஐயமும் ஏற்படத்தானே செய்யும்.

அதனால்தான், நாடு முழுவதிலும் காங்கிரஸ் ஆட்சியின் அலங்கோலங்களைப்பற்றியும், செயல் திறனில்லாத குறைகளைக் குறித்தும், நம்போன்றார் எடுத்துச் சொல்லும்போது மக்கள் ஆமோதிக்கிறார்கள். உண்மைதானே இவர்கள் சொல்வது, என்று உணருகிறார்கள். காங்கிரஸ் அரசு, ஏதோ தப்புத் தண்டாவில் இறங்கிவிட்டது என்று கருதுகிறார்கள். இக்குறைபோக நல்லதொரு ஆட்சி, நமக்கான ஆட்சி மலரவேண்டும் என்பதில் ஆவல் காட்டுகிறார்கள். நமது கழகத்தின் விளக்கம் கேட்க, கூடுகிறார்கள்— கழகத்துக்கு ஆதரவும் அளிக்கிறார்கள்.

இதனைக் காண்கிறபோது, எரிச்சலும் குடைச்சலும் ஏற்பட்டு, நமது அமைச்சர்கள் ஏதேதோ பேசுவதாகக் கேள்விப்படுகிறோம். இல்லாததையெல்லாம் கூடப் புனைந்துரைப்பதாக அறிகிறோம். முதலமைச்சர் காமராசர், என்ன செய்யவில்லை நாங்கள் என்று மார் தட்டிக் கேட்டு, "சுதந்திரத்தைக் கொண்டுவந்தது நாங்கள்தானே" என்ற பழைய பல்லவியை, உரத்த குரலில், ஒவ்வொரு ஊரிலும் உரைப்பதாகவும் ஏடுகளில் காண்கிறோம். அமைச்சர் பக்தவத்சலம் போன்றோர், "எங்களைக் குறை சொல்கிறார்களே தி.மு.க.க்கள்! இவர்களிடம் என்ன திட்டம் உள்ளது. உணவுப் பிரச்னை போன்றவைகளைச் சமாளிக்க உருப்படியான திட்டத்தைச் சொல்வார்களா?", என்று சவால் விடவும் செய்கிறார்களாம்.

காதகியாகிவிட்டேனய்யா — ஆதலால் சமைக்கவில்லை — நீ வேண்டுமானால் சமைத்துப்போடு — நானும் சாப்பிடுகிறேன், என்று சொல்வதுபோல, மக்கள் மன்றத்தைப் பார்த்து, திட்டம் கேட்கிறார்கள், இந்த அமைச்சர்கள். நிபுணர்கள் எல்லாம் கூடிவகுத்த, ஐந்தாண்டுத் திட்டங்களில், ஒன்றரையை முடித்தும், முகாரிதான் நாட்டிலுள்ளது என்றால், இவர்களால் எதைத்தான் சரியாகச் செய்யமுடியும்? — எதையும் செய்ய முடியாது! ஒருபோதும் முடியாது!!

ஏனெனில், இவர்கள் கண்ணும் கவனமும் வாழ்க்கையை அர்ப்பணித்ததாகக் கூறிக்கொண்ட நாட்டை எப்படி ஏமாற்றுவதில் என்பதில் இருக்கின்றதே ஒழிய, பிரச்னைகளைத் தீர்த்து சுகம் மலரச் செய்யவேண்டுமெனும் ஆசை, துளியும் இடையாது; அப்படி ஓரிருவருக்கு ஆசையிருந்தாலும், செயல் திறனின்மையால், இருப்பதும் கெட்டுக் குட்டிச்சுவராகிவிடுகிறது.

"எங்கள் தலைவர்களுக்கா செயல் திறனில்லை?", என்று காங்கிரஸ் தோழர் கர்ச்சிப்பார். உண்மைதான். பதினொரு ஆண்டுகளுக்கு மேல், ஆட்சிப்பீடத்தில் அமர்ந்து செங்கோல் செலுத்தியும், செயல் திறமை காங்கிரஸ் அமைச்சர்களுக்கு இல்லை. இதை, நாம் சொல்லவில்லை; டில்லி உணவு மந்திரியாக இருக்கும் அசீத் பிரசாத் செயின் அவர்களே, பெங்களூர் மாநாட்டில் சொல்லியிருக்கிறார்,

"நாட்டுக்கு எது முக்கியம்? எது நாட்டின் செல்வம்? உணவுதானே! — என்பதை நாங்கள் உணரத் தவறிவிட்டோம். அதை அவ்வளவு முக்கியமானதாகக் கருதாமல், திட்டத்தின் மேல் திட்டம் போட்டதால்தான், இன்று திண்டாட்டம் தெரிகிறது", என்று.

பசியின் அருமையினை, மறந்தனராம் மாட்சிக்குரிய தலைவர்கள்! ஒரு நாட்டின் உண்மையான செல்வம், மக்களுக்கான விளைபொருள்கள் என்பதை உணராமலேயே, திட்டத்தின மீது திட்டம்போட்டு விட்டார்களாம்!! "ஆகா, குற்றம் குற்றம் என்றறிந்ததும், அதை ஒப்புக்கொள்ளும் பெருந்தன்மையைக் கண்டீரோ எமது அமைச்சர்களிடம்?", என்று கூறக்கூடும், தேசியத் தோழர். பெருந்தன்மையை நாமும் பாராட்டுகிறோம். ஆனால், இந்தக் குற்றத்துக்காக, இந்த உபகண்டம் இந்த ஆண்டுகளில் இட்டத்தட்ட மூவாயிரம் கோடி ரூபாய்களைக் கொட்டி அழித்து, இன்று கடனாளியாகி இருக்கிறது என்பதை எண்ணும்போது இதயம் வெடிக்காமல் இருக்காது!!

இரத்ததானம் செய்கிற இடத்துக்கு ஒரு நோயாளியைத் தூக்கிக் கொண்டுபோகிறார்கள்-இரத்தம் கொடுக்கப்பட்டாலொழிய நோயாளி பிழைக்கமாட்டான் — வெளியே ஒரு ஐந்து பேர் உள்ளே கொண்டுசெல்லப்படும் நோயாளியை விழி மூடாமல் பார்த்துக் கொண்டிருப்பதோடு, ஒருவருக்கொருவர் பேசியும் கொள்ளுகிறார்களாம் — "ஐயையோ! நம்முடைய உடம்பிலிருந்தாவது இரத்தம் கொடுத்து, அந்த நோயாளியைக் காப்பாற்றவேண்டுமய்யா. இல்லாவிட்டால் நோயாளி, போய்விடுவான். அவன் செத்துவிட்டால், நாம் இதுவரை கொடுத்திருக்கிற கடன் வராது,' என்று. நோயாளியின் இடத்திலே, "இந்தியப் பொருளாதாரம்" என்று குறிப்பிட்டு, அந்த ஐவரையும், ஐந்து வல்லரசுகளைப் போலக்காட்டி, 27ந் தேதிய "மெயில்", ஒரு கேலிச் சித்திரம் போட்டிருக்கிறது! கடன் கொடுத்திருக்கிற அமெரிக்கா போன்ற நாடுகள், தாங்கள் கொடுத்திருக்கிற பணம் போய் விடக் கூடாது என்பதற்காகவாவது, ஏதாவது உதவி செய்யும் இக்கட்டான நிலையில் உள்ளன என்று படம் கூறுகிறது!!

பதினொரு ஆண்டுக்கால ஆட்சியில், "பாரதம்" பெற்றுள்ள உரு, நோயாளி! இந்த நோயாளிக்குச் சிகிச்சை செய்யும் பீடத்தில், தொடர்ந்து காங்கிரசே இருக்குமானால் என்ன ஏற்படும்? காமராசரும், சுப்பிரமணியமும், பக்தவத்சலமும் மேடையிலே ஏறி, ஏதாவது பேசலாம்-கித்தாப்பையும் கீர்த்தியையும் முழக்கலாம் — நாங்கள்தானே சுதந்திரம் கொண்டுவந்தவர்கள் என்று தொடை தட்டலாம். ஆனால், அவர்கள் பெற்ற சுதந்திரநாடு, இன்று எப்படியுள்ளது? நோயாளியாக உள்ளது! அதுவும், எந்த அந்நியர்களின் பிடியிலிருந்து விடுபட வேண்டுமெனக்குமரனையும் பகத்சிங்கையும் வ. உ. சி.யையும் தத்தம் செய்தனரோ, அந்த அந்நியர்களிடம் கடன்பட்ட நோயாளியாக ஆகியிருக்கிறது!!

(8-ம் பக்கம் பார்க்க)

வள்ளுவர் கூறுகிறார்!

—[கமுகுமலையான்]—

ஒருநாட்டின் ஆட்சிமுறை செவ்வனே நடைபெறுவதற்குப் பெரிதும் இன்றியமையாதவர்கள் வினையாளர்கள்தாம். வினையாளர்களை ஆட்சிக்கு உயிர்போன்றவர்கள் என்றும் சொல்லலாம். அத்தகைய வினையாளர்கள் பலதிறப்பட்டவர்கள், பலவகைப்பட்டவர்கள். அஞ்சல் நிலையச் சிப்பந்திகள், புள்ளிவிவரக் கணக்காளர்கள், இரயில்வே ஊழியர்கள், துறைமுகத் தொழிலாளர்கள், மின்சார இலாகா ஊழியர்கள், பள்ளி ஆசிரியர்கள், போலீஸ் உத்தியோகத்தர்கள், நகரசுத்தித் தொழிலாளர்கள்.

இவ்வாறு பல துறைகளிலும் தொழிலாளர்கள் பணியாற்றுவதன் காரணமாகத்தான் ஆட்சியாளரின் எந்தத்திட்டமும் செயல்பட முடிகிறது, அமுலாகிப் பரவுகிறது. சட்டங்களும் திட்டங்களும் சரிவரச் செயல்பட இத்தகைய வினையாளர்களின் ஒத்துழைப்புத் தேவை. அவர்கள் உளமார ஒத்துழைக்க வேண்டும் என்றால், அவர்களின் இல்லற— குடும்ப வாழ்வு — தொல்லையின்றி நடைபெறவேண்டும். அப்பொழுதுதான் நாடு கெடாமல், நாட்டை ஆளும் கட்சி அழியாமல் பார்த்துக்கொள்ள முடியும். இத்தகைய தொழிலாளர்களின் நிலைமையை நாள்தோறும் கவனிக்க வேண்டும். அவர்களின் குறையைப் போக்க வேண்டும். அவர்களுக்கு வாழ்க்கைத் தர உயர்வுக்கேற்ப ஊதியம் அளிக்கவேண்டும். அடிப்படை வாழ்வுக்குப் போதிய ஊதியமாவது அளிக்கவேண்டும். வள்ளுவர் கூறுவதைக் கேளுங்கள்.

நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு.

அக்காலத்தில் முடியாட்சி இருந்தமையால் அரசனுக்குச் சொன்னார். இக்காலத்தில் குடியாட்சிக்கும் இது பொருந்தும். ஆட்சியாளர்க்கு அவர் அறிவுறுத்துவது என்ன? நாள் தோறும் வினையாளர்களின் நிலைமையைக் கவனிக்கவேண்டுமாம். அவர்களின் குறையை அவ்வப்பொழுதே போக்கவேண்டுமாம். வினைசெய்வான் மனங்கோணுவானானால் நாடு கெடும். ஆட்சி அவல நிலைக்கு ஆளாகி அழியும் என்கிறார். "வினை செய்வான் கோடாமை கோடா துலகு" தொழிலாளர்கள் மனங்கோணுதிருப்பார்களானால் உலகமும் கோணாது. இதையே மாற்றிச் சொல்வதானால் 'தொழிலாளர்கள் உள்ளம் மாறுபடுவார்களானால் நாடும் கேடுறும்' என்று சொல்லலாம்—சொல்லவேண்டும்.

ஆனால் இன்றைய நிலை எப்படி இருக்கிறது பாருங்கள்! வினையாளர்களிடையேதான் வேதனைக் குரல். தொழிலாளர்களிடையேதான் துயரமும் சோகமும் நிலவக் காணுகிறோம். நாடெங்கிலும் நலிவு; துறைகள் தோறுமுள்ள தொழிலாளர்களிடையே அதிருப்தி, வேலை நிறுத்தம், அர்த்தால். அனுதாப ஸ்ட்ரைக் முதலின நடைபெறுவதைக் காணுகிறோம்.

சம்பள உயர்வு வேண்டும் என்ற கூக்குரல்ஒவ்வொருதுறைத்தொழிலாளர்களிடையேயும் எழுகிறது. ஊதிய உயர்வு வேண்டும் என்ற வர்களிடையே மட்டுமன்று; இந்த உபகண்டத்திலுள்ள பல மாகாணத்தில் உள்ளவர்களிடையேயும் எழத்தான் செய்கிறது. என்றாலும் இன்றைய டெல்லி ஆட்சி அவர்களுக்கு வழிவகை செய்யவில்லை. எவர்களைத் தினந்தோறும் கவனிக்க வேண்டும் என்று வள்ளுவர் சொன்னாரோ, எவர்களை அன்றாடம் அறிந்து குறையைப்போக்க வேண்டும் என்று வள்ளுவர் சொன்னாரோ, அவர்களின் அந்த வினையாளர்களின் கூக்குரலை — அழுகையை— இந்தக் காங்கிரஸ் ஆட்சி அசட்டை செய்கிறது. ஆட்சியாளர்களே சென்று வினையாளர்களின் நலத்தைக் கவனிக்க வேண்டும் என்று வள்ளுவர் சொல்லியிருக்க, மாறாக வினையாளர்களே தங்கள் தேவையை— சம்பள உயர்வு வேண்டுமென்ற கூக்குரலை — தெரிவித்தபோதும் இந்த நேரு ஆட்சி ஆவன செய்யவில்லை; அக்கறை காட்டவில்லை. பல நேரங்களில் அனுதாபமும் தெரிவிப்பதில்லை. மாறாக அக்கிரமத்தைச் செய்யக் காணுகிறோம். அதிகார ஆணவத்தால் அநியாயம் புரியக் காணுகிறோம்.

நியாயமான கூலியைப் பன்முறை கேட்டும் தராத காரணத்தினால் வேலை நிறுத்தமோ, அர்த்தாலோ செய்கின்றனர். அவ்வாறு செய்பவர்களைக் காட்டுமிராண்டிகள், முட்டாள்கள் என்று இழித்துரைப்பதும், அவர்களின் மேல் கண்ணீர்ப் புகையைச் செலுத்துவதும் குண்டாந்தடியைப் பிரயோகிப்பதும், துப்பாக்கியை நீட்டுவதும்தான் இன்றைய ஆட்சியில் இடம் பெற்றிருக்கிறது என்பதைக் காணுகிறோம். இந்த ஆட்சியாளர்களின் அக்கிரமத்தால் அநியாயமாகப் பலர் சாகடிக்கப்பட்டிருக்கிறார்கள். பலர் காயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இவ்வாறு சர்வாதிகாரப் போக்கால், தடியால், கண்ணீர்ப் புகையால், துப்பாக்கியால் தொழிலாளர்களின் கூக்குரலை — கோரிக்கையை-அடக்கிவிடப் பார்க்கிறார்கள். இத்தகைய செயலால் வெற்றிபெற்றுவிட முடியுமென்று நினைக்கிறார்கள். இவ்விதச் செய்கையால் வெற்றிபெற முடியாதென்று வள்ளுவர் கூறுகிறார் கேளுங்கள். "வேல் அன்று வென்றி தருவது" அக்காலத்தையொட்டி

'வேல்' என்றார். அவரே இக்காலத்தில் இருந்திருப்பாரேயானால் கண்ணீர்ப்புகையோ, குண்டாந்தடியோ, துப்பாக்கியோ வெற்றி தந்துவிடாது என்றுதான் சொல்லியிருப்பார்.

இப்படிப்பட்ட கொடுமைகளை எவ்வளவு செய்தாலும், அடுக்கடுக்காகச் செய்தாலும் தொழிலாளர் உலகம் அஞ்சப்போவது இல்லை; அடங்கப்போவதும் இல்லை. இத்தகைய அக்கிரம அடக்குமுறையால் ஆட்சியாளர்களுக்கு வெற்றியும் கிடைக்காது. பின் வெற்றிக்கு வழிதான் என்ன? அதனையும் வள்ளுவரே கூறுகிறார்.

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின்

கோல்தான்—ஆள்வோருடைய நிர்வாகந்தான்—வெற்றி தருமாம். அதுவும், அந்த நிர்வாகமும், ஆட்சியும் நேர்மைக்கு முரணாக, நீதிக்கு மாறாக, நன்மைக்குப் புறம்பாக, நாட்டிற்கு இழுக்காக இருக்கக் கூடாதாம். இந்நன்முறையை விடுத்துப் புன்முறையாம் அடக்குமுறையால் அமைதியோ வெற்றியோ கிட்டாது என்கிறார். இதனை இன்றைய காங்கிரஸ் ஆட்சி — இராமராஜ்யம் — உணருமா?

சம்பளம் போதவில்லை என்று கேட்பவர்களைத் தாறுமாறாக ஏசுவதும், கடுமொழி புகல்வதும், தடியால் அடித்துக் காயப்படுத்துவதும், உடலுறுப்புக்களைச் சிதைப்பதும், கண்ணீர்ப் புகையினால், உரிமைக் குரல் எழுப்புபவர்களை ஓட ஓட விரட்டுவதும், துப்பாக்கியால் சாகடிப்பதும் போன்ற கொடுஞ் செயல்கள், ஆட்சியைத் தேய்க்கும்— அழிக்கும் — அரம் ஆகும் என்கிறார் வள்ளுவர்.

கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்

இன்றைய காங்கிரஸ் ஆட்சியும் இந்த நிலையைத்தான் அடைந்து வருகிறது.

குண்டுக்கு இரையானவர்களின் குடும்பங்கள் விடும் கண்ணீரைப் பார்க்கிறோம். உடலுறுப்புச் சிதைந்தவர்களின் மனைவிமார்கள் அழும் கூக்குரலைக் கேட்கிறோம். கொடுமைகளைப் பொறுக்கமுடியாமல் குடும்பம் குடும்பமாக அழுகிறார்கள்.

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

(செல்வம் என்றால் இங்கு ஆட்சிச் செல்வத்தை — ஆட்சியை — குறிக்கும்) ஆட்சியை இந்த அழுகை அழித்துவிடுமாம்.

'எந்த வினையாளர்களை நாள்தோறும் கவனித்து அவர்களது குறையைப் போக்க வேண்டுமோ அந்த வினையாளர்களை—அரசாங்க நிர்வாகத்திற்கு உயிர் போன்ற வினையாளர்களை வேதனைக்கு உள்ளாக்கும் இந்தக் காங்கிரஸ் ஆட்சி சீக்கிரத்தில் சிதைந்து தேய்ந்து அழியத்தான் செய்யும்' என்று வள்ளுவர் கூறுகிறார் என்றால், அதை மறுக்க முடியுமா?

*

6-ம் பக்கத் தொடர்ச்சி

கண்ணுக்கு மையும், கொண்டைக்குத் திருகுபில்லையும், போட்டுக்கொள்ள இரவிக்கையும், கட்டி அழகுபார்க்கப் பட்டுப்புடவையும், வாங்க அயலானுக்குக் "கடன்"பட்டு, அவனுக்கு ஆட்பட்டு, அந்த 'மவுசில்' சொந்தக் கணவனை மறந்த நிலையில், இன்றுள்ள காங்கிரஸ் அரசு இருக்கிறது.

சுதந்திரத்தின் அழகைக் காட்டிக்கொள்வதிலும், வெளி ஆடம்பரத்திலும் தன்னுடைய 'உடல்' உறுதியை வெளிப்படுத்திக்கொள்வதிலும், வெளி ஆடம்பரத்திலும், காங்கிரசு சர்க்கார், இந்தப் பதினொரு ஆண்டுகளிலே அழித்திருக்கும் பணம் மிகமிக அதிகம்.

"வெளி நாடுகளில் நாம் வாங்கி இருக்கும் கடன்களில், பெரும் பான்மையான தொகை இராணுவ தளவாடங்களுக்காகவே செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஒரு போர்க்காலம் போலக் கருதியே வாங்கப்பட்டிருக்கிறது. பாகிஸ்தானை மனதிலெண்ணி இவைகளை நாம் வாங்கவேண்டியவர்களானோம்"

என்று 23க் தேதிய 'சுயராஜ்யா' இதழ் வருத்தத்தோடு குறிப்பிட்டிருக்கிறது! அந்த ஏடே வருந்துகிற அளவுக்கு 'வீண் பெருமை'க்காக இவ்வளவு பணம் விரயமாக்கப்பட்டிருக்கிறது'!

கடன்தான் பட்டோம் — இருந்ததையும் வாங்கியதையும் அழித்தோம் வீணாடம்பரத்துக்கு என்றால், நோயாளியாக ஏன் ஆக வேண்டும்? இருப்பதைக்கொண்டாவது, மக்களின் பசியைப் போக்க ஏதாவது செய்யலாமல்லவா! செய்யவில்லை—ஏனென்றால், மனிதனுக்குள் எதுமுக்கியமோ, எது உயிரோடாவது உலவச் செய்யுமோ, அந்த உணவுப் பிரச்னையையே நாங்கள் சாதாரணமாகக் கருதிவிட்டோம்— அது தவறு என்று இப்போதுதான் தெரிகிறது என்றார் டில்லி உணவு நிபுணர்கள் மத்தியில்!!

இப்படிப்பட்டவர்களிடம் எந்தத் திட்டம் கொடுத்தால்தான் உருப்படும்? அல்லது, எவ்வளவு வளமான நாட்டை ஒப்படைத்தாலும் தான் எப்படி உருப்பட வைப்பார்கள்?—நாம் கேட்கவில்லை, நாடே, இன்றையதினம் கேட்கிறது இக் கேள்வியை! நாயகர்களோ, நம்மை ஏசியும் பேசியும் பவனி வந்துவிட்டால் 'பஸ்பம்' கொடுத்ததாகி விடும்—காங்கிரசு ஆட்சி நீடித்து விடும்--குற்றங்களை மக்கள் மறந்து விடுவார்கள் என்று எண்ணி "நான்தானே உன் கட்டிய மனைவி! உனக்கு மாலையிட்ட மணாளன் நான்தானே!" என்கிற பல்லவியை மட்டும் அடிக்கடி பாடிக்கொண்டு வருகிறார்கள்.

பாட்டும் பலிக்காது! ,காதகி' யென்று உணர்ந்துவிட்ட பாமரனும், ஏமாறமாட்டான்!!

★

> மனிதன் தனது சக்தியில் நம்பிக்கை கொள்ளவேண்டும். தான் எதையும் சாதிக்கும் ஆற்றல் பெற்றவன் என்னும் நம்பிக்கை அவனிடம் வலுப்பெறவேண்டும். நம்பிக்கையே மனித முயற்சிக்கு அடிப்படை. அது பலமுடையதாயின் முயற்சி பயன்தரும்; மனம உழைக்கத் தூண்டும்; உழைப்பு உயர்ச்சிதரும்.

அன்றும் இன்றும்

ஓ பா. சரவணவேலு

இலங்கையில் தமிழர்களின் போராட்டம். தங்கள் மொழி, உரிமை, பாதுகாத்திடவேண்டும் என்ற உரிமைவேட்கை. இன்று பெறவேண்டும் புது உரிமைகளை என்ற நோக்கம் கொண்டவர்கள் அல்ல. பல நூற்றாண்டுகளாகப் பெற்றிருந்த உரிமைகள் சிங்கள அரசியலாரால் அண்மையில்பறிக்கப்பட்டுவிட்டது. இழந்த உரிமைகள் மீண்டும் பெற்றிடவேண்டுமென்ற நல்லார்வம்.

தமிழரின் குடியுரிமையை மறுத்தும், அவர்களின பேச்சுரிமை, கருத்துரிமையைத்தடுத்தும் பண்டார நாயகரின் அரசாங்கம் அடக்குமுறையினையை வீசியுள்ளது. அதன் விளைவு உயிரிழந்தோர் எண்ணிக்கை 300; கைதியாக்கப்பட்டோர் 6,302; அவர்களில் பாதுகாப்புக் கைதியாக வைக்கப்பட்டோர் 2 251; இன்னும் விடுதலை செய்யாமலிருப்போர் 524; வழக்குத் தொடரப்பட்டிருப்போர் 620.

தமிழரது போராட்டத்தை நடத்திய தலைவர்கள் சிறையில். சிங்களவர்களால் தாக்கப்பட்ட தமிழர்கள் ஏராளம். வகுப்புக் கலவரத்தால் தமிழரது வாழ்வு சிதைகிறது. வெளியேறு இத்தீவினைவிட்டு என உத்தரவு பிறக்கிறது.

இலங்கையில் காடு திருத்தி நாடாக்கி, நாட்டை நகராக்கினன். பொருள் வளம் செழிக்கும் தோட்டங்களை அமைத்தான். பல நூற்றாண்டுகளாக வாழ்ந்த தமிழினத் தோன்றல்கள் இன்று இலங்கையில் கேட்பாரற்றுச் சீரழிகிறார்கள்.

அன்று அவன் இனம் வாழ்ந்த வரலாற்றை நேரு எழுதிய நூலில் காண்கிறோன். "புத்தர் வாழ்ந்த காலத்தில் விஜயன் இந்தியாவிலிருந்து சென்று இலங்கையை வென்றதாகச் சொல்லப்படுகிறது. அஜந்தா குகைகளில் விஜயன யானைகளையும், குதிரைகளையும் கப்பல்களில் ஏற்றிக்கொண்டு இலங்கைக்குச் செல்வதைக் காட்டும் சித்திரம் ஒன்று இருக்கிறது என்றே நினைக்கிறேன். விஜயன் இலங்கைக்கு சிங்களத் தீவு என்னும் பெயரை அளித்தான். வட இந்தியாவைவிடத் தென்இந்தியா கடலோடு அதிக உறவு கொண்டாடியது. கிழக்குத் தீவுகளில் இந்தியக் குடியேற்றங்கள் ஏற்படுவதற்குக்காரணமாக இருந்த பெருமுயற்சியில் தென்னிந்தியாவே வழிகாட்டியாக இருந்தது. வேறு இடங்களில் சென்று குடியேறுவதற்கான திட்டங்கள் முன் யோசனையுடன் வகுக்கப்பட்டு அனைவரும் ஏக காலத்தில் சென்று குடியேறி இருக்கிறார்கள் என்பது தெளிவாகத்தெரிகிறது" (உலக சரித்திரம் நேரு எழுதியது. ஓ. வி. அளகேசன் தமிழ் மொழி பெயர்ப்பு.)

தினமணி 15-8-58 செய்தி.

இலங்கை வகுப்புக்கலவர சேத மதிப்பீடு.

நம் நாட்டின் பொறுப்பு குறித்து
நேருஜி பதில்.

புதுடில்லி, ஆக. 14:

"இலங்கையில் சமீபத்தில் நடைபெற்ற கலவரத்தின் விளைவாக ஏற்பட்ட நஷ்டத்தைக் குறிப்பிட்டு இதற்கும் இந்திய சர்க்காருக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்று லோக் சபையில் 22 மெம்பர்கள் கூட்டாகக் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் பிரதம மந்திரி ஸ்ரீ நேருஜி கூறினர்:

கலகத்தால் ஏற்பட்ட நஷ்டங்களை ஏற்பது இலங்கை சர்க்காரின் பொறுப்பாகும்."

இந்திய வமிசா வழியினருக்கு ஏற்பட்ட சேதம் குறித்தும், மரணங்கள் குறித்தும் இந்திய ஹைக்கமிஷனர் மதிப்பிட்டிருக்கிறாரா என்று கேட்டதற்குப் பிரதம மந்திரி பதிலளிக்கையில். "இந்திய வமிசா வழியைச் சேர்ந்த மூவர் மரணமடைந்த" தாக கூறினர். ஸ்ரீ. கே. டி. கே. தங்கமணி 300 என்று குறிப்பிட்டுருப்பதுபற்றிப்பிரஸ்தாபிக்கையில், இந்திய வமிசா வழியினரல்லாத மற்றவர்களும் அடங்கிருப்பதாயும், அவர்கள் நாடற்றவர்களாகக் கருதப்படுகிறார்கள் என்றும், அவர்கள் பிரஜா உரிமை விஷயம் நிர்ணயிக்கப்படாமல் இருப்பதாகவும்' இவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் சேதத்தை மதிப்பிடுவதற்கில்லை என்றும், இவர்கள் சார்பில் இந்திய ஹை கமிஷனர் ஒன்றும் செய்வதற்கில்லை என்றும் கூறினர்.

இந்தியாவுக்குத் தங்கள் உடமைப் பொருள்களுடனும், தட்டுமுட்டுச் சாமான்களுடனும் கலவரத்தின்போது வந்து சேர்ந்தவர்களைச் சிரமைக்கும் விஷயம் எழவில்லை என்றார்.

பாராளுமன்றத்தில் 22 உறுப்பினர்கள் இலங்கை வாழ் தமிழர்கள் பிரச்னையைக் கேட்டதற்கு நேரு தந்தபதிலைத் தெரிவிக்கிறது தினமணி. நேருவின் பதிலை "நம் நாட்டின் பொறுப்பு" என அறிவிக்கிறது. இதுதான் நம் நாட்டின் பொறுப்பா?

இந்து—முஸ்லீம் கலவரம். கலவரத்தால் வாழ்விழந்த இந்தியர்கள் அகதிகளாக வந்தனர். அவர்கள் இழந்த வாழ்வை மீண்டும் பெற, புதுவாழ்வு காணத் திட்டங்கள் வகுத்து, பல கோடி ரூபாய் தந்துதவியது டில்லி அரசாங்கம். அது நேருவின் பொறுப்பு! எனவே "நம் நாட்டின் பொறுப்பு" இதுதானே நாம் காண்பது!

சிங்களவர்--தமிழர் வகுப்புக் கலவரம். கலவரத்தால் வாழ்விழந்து தமிழர்கள் அகதிகளாக இந்தியாவிற்கு வருகிறார்கள். வந்தவர்கள் வாழ்வினைச் சீரமைக்கும் விருப்பம் எழவில்லை நேருவிற்கு. ஏன் இந்த வேறுபாடு தமிழர் விஷயத்தில்?

அன்று தமிழன் இலங்கை சென்றான், வென்றான். எனக் கூறிய நேரு, இன்று இலங்கை வாழ் தமிழர்களைக் கூறிடும் வார்த்தைகள் எவ்வளவு மாற்றம்! தமிழர்கள் தங்கள் தலைவர் நேரு எனக்கருதியவர்களுக்கு எவ்வளவு ஏமாற்றம்! ஏன் இந்த வேறுபாடு? சிந்திக்கவேண்டாமா தமிழர்கள்?

"ஒருவனைக் கொள்ளையடிக்கும் போதே அவனிடம் தங்களுக்கு நல்லெண்ணம் பொங்கித் ததும்புவதாக உறுதி கூறுவதும், ஒரு உயிரைக் கொல்லும்போதே உயிர்க்கொலை புரிவது பாவம், அதை ஓம்புவதே மேலான தருமம் என்று வாய்ப்பறை சாற்றுவதும் சாம்ராஜ்ய வல்லரசுகள் சிறப்பாகப் பயின்று வரும் ஒரு தனிக் கலையாகும்" என்று பிரிட்டிஷ் சாம்ராஜ்ய வல்லரசு குறித்து அன்று தன் மகளுக்கு எழுதினார் நேரு. இன்று......

இந்திய துணைக்கண்டம் ஒரு நாடு, வாழ்பவர்கள் இந்தியர்கள், அவர்களது மதம் இந்து மதம், தேசிய மொழி இந்தி, மருத்துவ முறை ஆயுர்வேதம். இவைகள் என்றும் நிலைத்திட வேண்டும் எனக் கொள்கை கொண்டோர் உருவாக்கி வரும் இந்து சாம்ராஜ்யம். இந்து சாம்ராஜ்ய தலைமை அமைச்சர் நேருஜி. அவர் சாம்ராஜ்ய வல்லரசு கொண்டிருக்கும் அக்கலையினைக் கொண்டுள்ளாரா?

அன்றும் தென்னவரை வடவர் வென்றதில்லை. போர்க்களத்திலே கலை என்றும் சமயம் என்றும், மொழி என்றும் கலந்து தங்கள் கொள்கையினை நிலைநாட்டியதை வரலாறுகள் கூறுகின்றன. இன்று கட்சி எனக்கூறி வடவர் தங்கள் கொள்கையினைச் செயல்படுத்தி வருகின்றனர்; இந்நிலையினை உணர வேண்டாமா காங்கிரஸ் கட்சித் தலைவர்கள், தோழர்கள்.

இலங்கை வாழ் தமிழர்கள் நிலையினைக் குறித்து மட்டுமல்ல நேருவின் வஞ்சனை, இந்திய துணைக் கண்டத்தில் ஒரு அங்கமாக இருக்கும் தமிழகத்திற்கும் வஞ்சனை.

கைத்தறியாளர் வாழ்வினைக் குறித்து ஒருமனதாகத் தீர்மானித்து, சென்னை சட்ட மன்றம் அனுப்பிய தீர்மானம் நிராகரிக்கப்பட்டது. தமிழகத்து முன்னேற்றத் திட்டங்கள் வகுத்து (இரண்டாவது ஐந்தாண்டு திட்டம்) எடுத்துச் சென்றார் நிதியமைச்சர். என்ன கண்டோம்? கேட்ட தொகை 400-கோடி! கொடுத்து உதவ இயலும் என்று கூறியதா நேருசர்க்கார்! "குறைத்துக் கொள்ளுங்கள்" என்றுகூறிப் பாதித் தொகைக்கு மேல் வெட்டு. "வெளி நாடுகளுக்குச் செல்லும் கலைக்குழுவில், தமிழகத்துக் கலைஞர்களுக்கு இடமில்லை" சொல்லுகிறார் நடிகர். ஔவை டி. கே. சண்முகம்.

"கச்சா பிலிம் கட்டுப்பாட்டிற்குப் பிறகும் வடநாட்டிற்கு அதிக பிலிம் கிடைக்கிறது. ஆனால் நமக்கோ நியாயமாகக் கிடைக்க வேண்டிய அளவுகூடக் கிடைக்கவில்லை. இது டெல்லியின் ஓர வஞ்சனைதான்; சொல்லுகிறார் திரு. பி. நாகிரெட்டி. வானொலி நிலயம் தமிழ் மொழிக்கு தொண்டு செய்திடும் நிலையில் இல்லை. வடமொழி இந்திப் பிரச்சார நிலையமாக விளங்குகிறது, எனத் தமிழார்வம் கொண்டோர் குறைபடுகிறார்கள்.

என். ஜி. ஓ. பிரச்னை, டில்லியைக் கேட்டுள்ளோம் என அமைச்சர்கள் பதில். சேலத்தில் அலுமினிய தொழிற்சாலை? நிலைமையை விவரித்து டில்லிக்கு எழுதியுள்ளோம் என்ற பதில். ஏன் இந்த அவல நிலை தமிழகத்திற்கு.

தமிழ் மக்களால் தேர்ந்தெடுத்தனுப்பிய சட்டமன்ற உறுப்பினர்கள் தீர்மானம் டில்லியால் நிராகரிக்கப்படுகிறது. பாராளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதில்லை.

தென்னகத்தில் வாழும் தமிழர்களை இந்தியர்கள் என நேரு கருதவில்லையா? வட பகுதியில் வாழும் மக்கள்தான் இந்தியர்களா? அவர்கள் வாழ வழிவகை செய்வதுதான் இந்திய அரசின் பிரச்னைஎனக் கருதிக்கொண்டாரா நேரு? இனப்பற்றின் செயல் இதுஎனச்சுட்டிக்காட்டவில்லையா

மக்கள் சபை லோக்சபா ஆயிற்று. தலைவர் ராஷ்டிரபதியானார், வானொலி ஆகாஷ்வாணியாயிற்று. ரூபா, அணா, பை மாறி நயா பைசா ஆயிற்று. இன்னும் பல இந்தி மொழிப் பெயர்களாகி வருகின்றன.

"நாற்றாண்டு சுதந்திர விழா செய்திப்படத்தில் தமிழகவிடுதலை வீரர்கள் இடம் பெறவில்லை" குமுறும் உள்ளத்தோடு எழுதியது கல்கி, ஆனந்த விகடன். எதிலும் தமிழகம் புறக்கணிக்கப்படுகிறது,

இந்திய நாடு ஒன்றென்றும்' இங்கு வாழ்வோர் இந்தியர்கள் என்றும், இந்திய தேசீயம் வளரட்டும் என்றும் நேரு கூறுவது, சாம்ராஜ்ய வல்லரசு சிறப்பாக பயின்று வரும் சர்வாதிகார மயக்கு மொழிகள் அல்லாமல் வேறென்ன? இதைத் தமிழர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அதில இந்தியக்கட்சிப்பற்றுக் கொண்டோர் தெளிவுபெறவேண்டும். தமிழர்களுக்கு தமிழகம்! தன்னுரிமை கொண்ட தனியரசு—திராவிடக் கூட்டரசு அமைய வழிவகை செய்ய ஒற்றுமை கொள்ளுங்கள் உழைத்திடுவோம்.

நாம் எத்தனையோ சந்தர்ப்பங்களில், 'அது சாத்தியமில்லை, இது சாத்தியமில்லை' என்று சொல்லுகிறோமே, ஒரு யோசனை சொல்லுகிறேன், கேளுங்கள்; கையில் ஒரு பென்சிலும் ஒரு காகிதமும் எப்போதும் வைத்திருங்கள். ஒன்று "முடியாத காரியம்" என்று தோன்றினால் உடனே அதைக் குறித்துக்கொள்ளுங்கள். அந்தக் காகிதத்தை அடிக்கடி கண்ணில் படும் இடமாகப் பார்த்து ஒட்டி வையுங்கள். ஒவ்வொரு நாளும் அதில் எந்த அம்சங்கள் கூடிய வரையில் சாத்தியம் என்று முயன்று பாருங்கள். நாலே நாளில் அதில் சில அம்சங்களையாவது செய்து முடித்திருப்பீர்கள். இதே மாதிரி சற்றுப் புத்தியைச் செலுத்தி முயன்று பார்த்தால் உங்களுக்கு எதுவும் சாத்யம் என்ற உறுதி பிறக்கும்.

—என். வி. பீல்.

மாசற்ற மருதாயி

சென்ற இதழ் தொடர்ச்சி...

அன்றிரவு டாக்டர் கொடுத்த சட்டையை குழந்தைக்குப் போட்டுவிட்டு, பிஸ்கட் கொடுத்து தூங்கவைத்துவிட்டு, கணவன் செல்லப்பனுக்காக வழக்கம்போல் காத்துக்கொண்டிருந்தாள். செல்லப்பனும் வந்தான். ஆனால் இன்று அவ்வளவாகக் குடிக்கவில்லைப்போலும்!

அவன் தன்னுடைய மாமூல் வேலைகளையெல்லாம்செய்துவிட்டு, கைகால்களைக் கழுவிக்கொண்டு சாப்பாட்டிற்குவந்து அமர்ந்தான். அப்போதுதான் பார்த்தான் அவனுடைய மகள் மருக்கொழுந்து ஒரு பட்டுச் சட்டை போட்டுக் கொண்டிருந்ததை. உடனே அவனுக்கு காலை நிகழ்ச்சி வந்தது. மருதாயியின் கையில் ரூபாய் — இப்போது மருக்கொழுந்து உடம்பிலே பட்டுச்சட்டை, மூளை வெகு வேகமாக வேலைசெய்யஆரம்பித்துவிட்டது, 'ஏய்—மருதாயி எத்தனை நாளா இந்த வேலை......"

"எந்த வேலைங்க... மச்சான்...'

"நீ பணம் சம்பாதிக்கிறவேலை...',

அவள் தான் இரத்ததானம் செய்து பணம் சம்பாதிக்கிறதைச் சொல்கிறானே என்று நினைத்து, "இன்றைக்குத்தான் அத்தான் முதல் நாள்"

"ஓஹோ... புது மவுசு இல்லே, அதுதான் அதிகமாகக் கிடைச்சிருக்கு"

"இல்லைங்கெ அத்தான், முன்பெல்லாம் அஞ்சுதான் இப்பத்தான் ஏழு......"

"ஓஹோ... ஐந்திலிருந்து வளருதோ--அடி தேவடியா...எத்தனை நாளாடி இந்த வேலை" என்று மொத்து மொத்தென்று அவளை அங்கிருந்த கட்டையால் சாத்தினான்.

"விபசாரி... இதைவிடத் தூக்குப் போட்டுச் சாவதுதானே... ஏண்டி மாட்டு வண்டிக்காரன் பொண்டாட்டின்னு மதிப்பு குறைஞ்சிடும் போலிருக்கு—ஆபீஸர் கூத்தியார் ஆகப்பார்க்கிறு"

"மச்சான் என்ன பேசறீங்க... ஐயோ நான் என்ன சொன்னேன்! நீங்கள் ஏதோ தப்பா அர்த்தம் கொண்டுவிட்டீர்களே"

"நான் ஏண்டி தப்பா அர்த்தம் கொள்றேன் — எனக்குத் தெரியாதா? நான்தான் என் கண்முன்னாலேயே பார்த்தேனே... அவன் சிரிப்பும் உன் பாசாங்கும்...ஹா... ஹா... லட்ச லட்சமா வாங்கிற அந்தச்சினிமாக்காரிங்ககூடநடிக்க மாட்டாங்களே...இப்படி, விபசாரி..."

ச. இராமலிங்கம்

"மச்சான் அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். இந்தக்குழந்தை சாட்சியா சொல்கிறேன். நான் காலையிலே இரத்ததானம் செய்தேன்"

"ஓஹோ! இரத்ததானமா...... ஏண்டி உன் உடல்தானம் பண்ணிட்டு இரத்ததானம்னு சொல்றே ......பேசாதேடி பேசினா தோலை உரிச்சுடுவேன் — இந்தக் கட்டையாலே பொளந்திடுவேன். என்னடி என்கிட்டே கரடி விடறே... இரத்ததானம் பண்றவளுக்கு வெளியிலே என்னடி அவனோட பேச்சு—எனக்கு அப்போதே தெரியும்! கையும் களவுமாகப் பிடிச்சி இருக்கணும். நீ சோரம் போன பணத்திலே என் செல்வத்துக்கு சொக்காயா" என்று சொக்காயைப் பிய்க்கப்போனான்.

"மச்சான்...அந்தச் சொக்காய் அந்தத்துட்டில்வாங்கியது இல்லை ...இது ஒரு டாக்டர்..."

"ஓஹோ அந்த ஆள் பத்தாமே ஒரு டாக்டர் கூடவா—அடிபாவி" என்று ஒரு மூங்கில் கழியினால் ஓங்கி அடித்தான், "...விபசாரி நீ இருப்பதைவிட இறப்பதேமேல். உன் புருஷன்னு சொல்லிக் கொண்டு உயிரோடு இருப்பதைவிட உன்னைக்கொன்று ஜெயிலுக்காவது போய்விடுவது மேல். உன்னைப் போன்றவர்களுக்கு இதுவாவது பாடமாக இருக்கட்டும்" என்று அவள் மயக்கம்போட்டு விழும்வரை அடித்துவிட்டு ஓடிவிட்டான். மருக்கொழுந்து கோவென்று அழுதாள். அக்கம் பக்கத்தார் ஓடிவந்து பார்த்தார்கள்.

உடனே ஒரு ஆள் டாக்டரிடம் ஓடினான். மற்றொருவன் செல்லப்பனைத் தேடிக்கொண்டு ஓடினான். டாக்டர் வந்து "இது உடம்பில் உள்காயம் பட்டுவிட்டது—ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு தூக்கிச் செல்லுங்கள்" என்றார். உடனே அவளைத் தூக்கிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு போய்விட்டார்கள். அங்கு விபத்துகளில் சிக்கியவர்களை பார்க்கும் வார்டுக்கு எடுத்துச் சென்றார்கள். அவள் ஆபரேஷன் அறைக்கு எடுத்துச்செல்லப்பட்டாள்.

அதே நேரத்தில் செல்லப்பன், தன் மனைவி சோரம் போனதாகவும், தான் அவளை அடித்துக் கொன்றதாகவும் போலீஸாரிடம் சரண் புகுந்தான். இதை விசாரித்து, பரிசோதனை செய்ய, போலீஸ்படை சேரிக்கு வந்து பார்க்க, அவளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றிருப்பதாகக் கூறினார்கள். உடனே போலிஸ்படை ஆஸ்பத்திரியை நோக்கிப் பறந்தது. ஆஸ்பத்திரியில் ஆபரேஷன் ரூம் வந்ததும், சப் இன்பெக்

டர் 'இது விஷயமாக டாக்டரிடம் பார்க்கவேண்டும்'' என்று சொன்ஞர், அங்கிருந்த நர்சிடம். அப்போதுதான் வந்துகொண்டிருந்த டாக்டர், சப் இன்ஸ்பெக்டரைப் பார்த்து, ''என்ன சப் இன்ஸ்பெக்டர்...... என்ன சமாச்சாரம்......'' என்று கேட்டுக்கொண்டே வந்தார்.

''ஒன்றுமில்லே: தினம் நடக்கிற கேஸ்-இவன் பெயர் செல்லப்பன்.

''என்ன செல்லப்பஞ...... அப்படியென்ருல் உன் மனைவி மருதாயி...

''அவளைத்தான் அடித்துக் கொன்றுவிட்டாஞம்''

அதற்குள் செல்லப்பன் இரத்தம் கொதிக்க ''ஹோ—ஹோ— நீங்கள்தான் அந்த டாக்டரா — இல்லையென்ருல் என் மனைவியின் பெயர் எப்படித் தெரியும்......'' என்று போலீஸ்காரர்கள் கையிலிருந்து ஜிம்பிக்கொண்டே ''டாக்டர், உங்களை மாத்திரம் நான் இவர்களிடம் சரண்புகாத முன்பு கண்டிருந்தேன்!! உங்களையும் கொன்றிருப்பேன் டாக்டர், கொன்றிருப்பேன் — டாக்டர் என்ற போர்வையைப் போர்த்தி எத்தனை குடும்பங்களை இப்படி அழித்திருக்கிறீர்கள்''

''செல்லப்பா....செல்லப்பா...... நிதானித்து பேசு. ஆத்திரத்தில் அறிவிழந்து பேசுகிருய் — முதலில் கோபத்தைத் தணி......நான் முதலில் அவளைப் பார்த்துவிட்டு வருகிறேன்...அது என் கடமை ....''

''கடமை......கடமை-....கடமை என்று சொல்லி கல்யாணமான பெண்களிடம் கொஞ்சுவதா கடமை...என் போகிருய் என்று எனக்குத் தெரியும். அந்தக் கிளியின் உயிர்போகு முன்பே அவளிடம் ஏதாவது இன்ப மொழி...'' என்று சொல்லும்போது சப் இன்ஸ்பெக்டர் அவன் கன்னத்தில் அறைந்தார்.

''நான்சென்ஸ்! இது என்ன சந்தையா கூச்சல்போட''

''சப்இன்ஸ்பெக்டர்...பேசட்டும் ......பேசட்டும்...... அவன்கோபம் தணியும்வரை பேசட்டும். நான் என் கடமையைச் செய்துவிட்டு வருகிறேன்...'' என்று உள்ளே நுழைய சப்இன்ஸ்பெக்டரும் ''நாஞும் வரலாமா'' என்று கேட்டார். மூர்ச்சை தெளிந்தவுடன் கூப்பிடுகிறேன், வாருங்கள்என்று சொல்லிவிட்டு உள்ளே போஞர்.

டாக்டர்மருதாயியின்முகத்தைப் பார்த்தார். உடலெல்லாம் ஒரே காயம்...பிழைக்கமாட்டாள்; இன்னும் எவ்வளவு நிமிடமோ'' என்ற நிலையிலிருந்தது. அவர்மெதுவாக ஏதோ இஞ்சக்ஷன் செய்தார். மெதுவாகக் கண்திறந்து பார்த்தாள்......அவளுக்கு ஒன்றும் தெரியவே இல்லை......மறுபடியும் ஆஸ்பத்திரியில் இருப்பதாகத் தெரிந்தது. ஆஞல் உடல் முழுக்க வலி அசைய முடியவில்லை.

''டாக்டர்......நீங்களா......தண்ணீர்...''

நர்ஸ் தண்ணீர் கொடுத்தாள். டாக்டர் உடனே சப்இன்பெக்டரை அழைத்தார்......சப்இன்ஸ்பெக்டர் உள்ளேவந்து மெதுவாக அவளைப்பார்த்து,

''உன் பெயர் மருதாயிதானே!''

''ஆமாம்''

''புருஷன் பேரு செல்லப்பன்''

அப்போது செல்லப்பனையும் அழைத்துக்கொண்டு வந்தார்கள்.

''இவன்தானே உன் புருஷன்''

''மச்சான்'' என்று திரும்பினுள்

''ஆமாம் இந்த டாக்டரைத் தெரியுமா...''

''தெரியும்''

''எத்தனை நாளா தெரியும்''

''முந்தாநாளிலிருந்து தெரியும்''

''புதுக்கிராக்கி...'' என்றுமுனகிஞன் செல்லப்பன்...

''ஆமாம், இந்த டாக்டரை உனக்கு எப்படித் தெரியும்.

அவள் மெதுவாக முக்கி முனகிக்கொண்டே முழுக்கதையையும் சொன்ஞள். செல்லப்பனுக்கு அப்போதுதான் உண்மை தெரிந்தது. ''மருதாயி நான் தவறு செய்துவிட்டேன். கண்டதையெல்லாம் படித்ததிஞல் என் மனமும் அப்படியே நினைத்துவிட்டது. மன்னித்துவிடு மருதாயி.

''மச்சான்......நான் என்ன மன்னிக்கிறது...அதோ இருக்கிருரே டாக்டர், அவர்தான் நம்முடைய குலதெய்வம். அவர் இல்லை என்ருல் இன்று நம் மருக்கொழுந்து இறந்திருப்பாள். உங்களுக்கு என்மேல் சந்தேகம்...... சாதாரணமாக ஒவ்வொரு ஆணுக்கும் உண்டாவதுதான்......நான் வீட்டைவிட்டு வெளியே வந்து மற்ருெரு ஆணுடன் பேசினதால் சந்தேகப்பட்டீர்கள். சந்தர்ப்பம் சதி செய்துவிட்டது. எத்தனை நாளாக இந்த வேலை என்றபோது கூட, இரத்ததானத்தைப்பற்றித் தான் கேட்டீர்கள் என்று நினைத்தேன் — அதஞல்தான் பதில் சொன்னேன். நீங்கள் நேராகவே கேட்டிருக்கலாம். இவ்வளவுவிபரீதம் ஏற்பட்டிருக்காது. அதைவிட இரத்ததானம் செய்ததற்கு ஒரு சீட்டு கொடுத்திருந்தால் நாஞும காட்டியிருப்பேன். இப்போது நாஞும்..........''மருதாயின் தலை சாய்ந்தது ''மருதாயி...'' செல்லப்பன் கதறிஞன். ''மருதாயி......நீ மாசற்றவள். நான்தான் அவசரக்காரன். டாக்டர்என்னைமன்னித்துவிடுங்கள் டாக்டர்...... டாக்டர் என்குழந்தையை அன்று காப்பாற்றினதுபோல் என்றும் காப்பாற்றுங்கள் டாக்டர்; நான் போகிறேன்.........மருதாயி......நீ மாசற்றவள்...நான் உன் புருஷன் என்று சொல்லிக்கொள்ளக்கூட யோக்யதையற்றவன். நான் செய்த பெருந்தவறுக்கு நானே அனுபவிக்கிறேன்....... இதோ போகிறேன்...''

★

மனிதனைப்போல மிருகங்களும் இயற்கையோடு போராடித்தான் வாழ்கின்றன. ஆஞல் அந்தப் போராட்டத்தில் இருவர்க்கத்திற்கும் இடையே பெரிய வேறுபாடு இருக்கிறது. மிருகம் இயற்கையின் தடைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள முயல்கிறது. மனிதனே அந்தத் தடைகளிலிருந்து தப்பித்துக்கொள்வதோடு மட்டுந் திருப்தியடைவதில்லை; அவற்றைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் முயல்கிருன்.

உண்மைக் காரணம்

— பழநி —

வடக்கு வாழுகின்றது; தெற்கு தேய்கின்றது என்பது இன்றைய தினம் மறுக்கமுடியாத அரசியல் உண்மையாக விளங்கிவருவதை நாம் காணுகின்ருேம். எத்துறையிலும் இந்த வடக்கு — தெற்கு பிரச்சினை இருப்பதனையும், அங்கு தெற்கை ஏய்த்து வடக்கு வாழுவதனையும் மக்கள் உணருகின்றனர். கலையாயினும் சரி; அரசியல் ஆயினும் சரி; எது ஆயினும் வடக்கு வடக்குத்தான்; தெற்கு தெற்குத் தான் என்பது இன்று நன்கு புலஞகியுள்ளது.

''நான் வடக்கு தெற்கு பேதம் பார்க்காதவன்,'' என்று பெருமையோடு சொல்லும் டாக்டர் சி. பி. இராமசாமி அவர்களும் கூட இந்தத் திங்கள் குடந்தையில் பேசும்போது இசையில் வடநாடு தென்ஞடு பேதம் இருந்துதான் தீரும் என்று அடித்துப் பேசியிருக்கின்ருர். அடித்துப் பேசியதோடு மட்டுமன்றி, இவ்விரண்டு துறைகளையும் ஒன்ருக்கிட நினைக்கும கேஸ்கரின் இணைப்பு முயற்சி பொருளற்றது என்று வேறு எடுத்துச் சொல்லுகின்ருர். இணைப்பு முயற்சி இயலுமா இயலாதா என்பது ஒரு பக்கம் இருக்கட்டும், அந்த முயற்சியே பொருளற்றதாக இருக்கிறது என்று வடக்கும் தெற்கும் வேறுவேறு என்பதனை சி. பி. ஒப்புக்கொள்ளுகின்ருர். சி. பி. அவர்களைப்போல் மெல்ல மெல்ல வடக்கையும் தெற்கையும் தெரிந்து, வேறுபாட்டைப் புரிந்துகொள்ளுகின்றவர்களின் தொகை நாளுக்கு நாள் பெருகுகின்றதேயன்றிக் குறையவில்லை. நேற்று எதிர்த்தவர் இன்று நெருங்கிவருவதைக் காணுகின்ருேம். கல் ஏந்தியவர்களின கரங்களில் மலர்மாலைகள் இருப்பது நித்தம் நடக்கும் நிகழ்ச்சியாகின்ற அளவுக்குக் கழகத்தின் கருத்து, அதிலே உண்மையும், உயிர்த்துடிப்பும் இருக்கின்ற காரணத்திஞல் வளர்ந்துகொண்டு வருகின்றது. நகரங்களில் மட்டுமன்று, கிராமப் பகுதிகளும் இன்று விளக்கம் பெற்றுத் திகழ்ந்திடக் காணுகின்ருேம்.

அகிலம் புகழும் நேரு என்ருலும், அவர் ஆட்சியில் நாம் அடையும் அல்லல் பெரிது பெரிது என்று இன்று குமுருதவர்கள் சிலரே. இந்தச் சூழ்நிலையைக் காணுகின்ற அமைச்சர்கள் மனங் கலங்கி, ஏதேனும் செய்து கழகம்

மாக் தசதன்

சொல்லும் கருத்துரைகளை மக்கள் ஏற்றுக்கொள்ளாமல் செய்துவிட மனப்பால் குடிக்கின்றனர். எதையாவது சொன்ஞல் போதும் என்று எண்ணிக்கொண்டு, சொல்லுவதில் உண்மையிருக்கின்றதா இல்லையா என்றும் ஆராயாமல் ஏதாவது சொல்லிக்கொண்டிருப்பதைக் கேட்கிருேம்.

''வடக்காவது, தெற்காவது அதெல்லாம் ஒன்றுமில்லை. தெற்கும்தான் வளர்ந்திருக்கின்றது'' என்று ஓரிடத்திலே பேசுகின்றனர்.

'என்னதான் செய்திருக்கின்றீர்கள் சொல்லுங்கள்' என்று எவராவது கேட்டால், என்ன செய்யவில்லை நாங்கள், இதோ பாருங்கள், திருவல்லிக்கேணியிலே அப்பளத் தொழிற்சாலை வைத்திருக்கின்ருேம்--என்று கணக்கெடுத்து மளமளவென ஒப்புவிக்கின்றனர்.

இவர்கள் சொல்லும் அத்தனை திட்டங்களுக்கும் ஆகியிருக்கும் மொத்தத் தொகையும் சேர்த்து, வடநாட்டில் எழும்பியுள்ள ஒரு அணையின் ஒரு பகுதிக்கு ஆகியிருக்கும் செலவில் பாதியும் வராத நிலையிருக்கிறது என்பதைப் புள்ளி விவரங்கள் சொல்லுகின்றன.

இப்படி ஒரு வாதம் செய்தானதும் வேறு வகையில் இன்ஞெரு வாதம் செய்து பார்க்கின்றனர்.

அண்மையில் முதலமைச்சர் காமராசர், மின்னல் வேகத்தில் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டுவந்திருக்கின்ருர். அங்கெல்லாம் அவர் வடக்கு தெற்கு 'பேதம்' பேசுவோர்க்குப் பதில் சொல்வதாக எண்ணிக்கொண்டு ''மூலப் பொருள்கள் உள்ள இடத்தில்தான் பணத்தைச் செலவு செய்யவேண்டும்'' என்ற அரிய ஒரு கருத்தைச் சொல்லிவிட்டு வந்திருக்கின்ருர்.

மூலப் பொருள்கள் எங்கு கிடைக்கின்றனவோ,அங்கெல்லாம் தொழில்கள் துவங்கப்படுகின்றனவா என்பதைக்கூடப் பின்ஞல் பார்க்கலாம். முன்ஞல் காமராசர் கூற்று எதைச் சொல்லுகின்றது என்பதை பார்ப்போம்.

தி. மு. க. கழகத்தினர் வடநாட்டில் மட்டும்தான் தொழிற்சாலைகள் அமைக்கப்படுகின்றன என்கின்றனர்.

தெற்கில் ஏன் ஏற்படவில்லை தெரியுமா, மூலப் பொருள்கள் கிடைக்கின்ற இடம் வடக்கு. அங்கு பணத்தைச் செலவிட்டால்தான் பலன் கிடைக்கும். அதனால்தான் வடக்கில் தொற்சாலைகளை அமைக்கின்றனர். இங்கே என்ன இருக்கிறது, தொழில் துவங்க? என்கிறார் காமராசர்.

இப்படிக் கேட்பதினால் தெற்கில் தொழில் துவங்காததற்கான காரணங்களை எடுத்துச் சொல்லி, வடக்கே தொழில் பெருகுவது நியாயம்தான் என்று நிலை நாட்டிவிட்டதாகக் கருதுகின்றார்.

இதனால் என்ன பெறப்படுகின்றது என்றால் வடநாட்டில்தான் தொழில் பெருகுகின்றது என்பதைக் காமராசரே ஒப்புக்கொள்ளுகின்றார், மறைமுகமாக.

ஏன் என்று கேட்டுக்கொண்டு, காரணம் சொல்லுகின்றார். காரணம் ஒரு பக்கம் இருக்கட்டும். அவர் சொல்வது தெற்கும்தான் வளர்ந்திருக்கிறது என்று சொல்வோருக்கு நல்ல மறுப்பாக அமைந்திருக்கின்றதைக் காணுகின்றோம் அல்லவா?

உண்மை எப்படியும் வெளிப்பட்டே தீரும். எவ்வளவுதான் தடைவிதித்தாலும், மூடி மறைத்தாலும், என்றேனும் ஒரு நாள் உண்மை, உள்ளேயே இருந்துவிடாமல், வெளிப்பட்டே தீரும் என்பதைக் காமராசரின் வாக்கு மூலம் வெளிப்படுத்துகின்றது.

அவர் மூலப் பொருள் இடைக்கும் இடத்தில் பணத்தைச் செலவு செய்தால்தான் பலன் கிடைக்கும் என்கிறார்.

செலவழிக்கின்ற பணமோ எல்லாப் பகுதிக்கும் சொந்தமான வரிப்பணம். கிடைக்கும் பலனோ ஒரே பகுதிக்கு; எனவேதான் நாம் வடக்கு மட்டும் வாழ்ந்தால் போதாது — தெற்குத் தேயாமல் இருக்கவேண்டும் என்று அடிக்கடி எடுத்துச் சொல்லுகின்றோம்.

இனி, மூலப்பொருள் கிடைக்கும் இடம் வடநாடு மட்டும்தான் என்பது காமராசரின் வாதமானால், இயற்கைப் பொருள்கள் எங்கு, எது, எந்த அளவு கிடைக்கிறது என்பதைக் கணக்கிட்ட வல்லுநர்கள் தென்னாட்டிலும் ஏராளமான மூலப்பொருள்கள் இருப்பதனை எடுத்துக்காட்டியுள்ளனர்.

சேலத்திலும், தென்னாற்காட்டிலும், காவிரியின் கரையிலும், தூத்துக்குடிப் பகுதியிலும், வேறு பல இடங்களிலும், உலோகப் பொருள்களும், எண்ணெய்ப் பொருள்களும் கிடைக்கின்றன என நம்பகமாகச் சொல்லப்படுகின்றது. வெளிநாட்டிலிருந்து வந்து அந்த இடங்களைக் காணுகின்ற வல்லுநர்களும் அதை உறுதிபடுத்திவிட்டுச் செல்லுகின்றனர்.

எனவே எந்தத் தொழில் தொடங்குவதானாலும் அதற்கு வேண்டிய மூலப்பொருள், தேவையான அளவு தென்னகத்திலேயே கிடைக்கும் வசதி இருக்க, இங்கு எத்தொழிலும் தொடங்க மத்திய சர்க்காருக்கு மனம் இல்லாமல் இருக்கின்றது.

ஆந்திரப்பகுதியில் உள்ள 'சிங்கரேணி' சுரங்கத் தொழிற்சாலையை விரிவாக்கவேண்டி நாலு கோடி ரூபாய் கடனைக் கேட்டதற்கும் மத்திய சர்க்கார் உதவிசெய்ய மனம் இல்லாதவர்களாயிருக்கின்றனர் என்று திரு. சஞ்சீவி ரெட்டி அவர்கள் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

ஆனால் வடநாட்டில் தொடங்கப்பெறும் எந்தத் தொழிலும், எழுப்பப்படும் அணையும் மூலப் பொருள்களையும், தேவையையும் உணர்ந்து தான் அமைக்கப்படுகின்றனவா?

மிக உறுதியான இடத்தில் தான் அணை கட்டவேண்டும் என்பது அடிப்படை விதி. ஆனால், உலகமே புகழுகின்றது என்று சொன்ன பக்ரா நங்கல் 'கால்வாய்' ஏராளமான பணத்தை வாரி விழுங்கிவிட்டு இன்று பல இடங்களில் விரிந்து வெடித்து மேலும் பல இலட்சங்களைக் கேட்டு வாய் பிளந்து நிற்கின்றது. அந்த அணைக்கு ஆதாரவாக இருக்கும் மலையைக் கெட்டிப்படுவதற்காக, அதற்குள் 'சிமண்ட்'டைப் புகுத்தி அதை உறுதியாக்குகின்றார்கள்!

சிமண்டை மலைக்குள் கொட்டி, காற்றின் அமுக்கும் சக்தியால் அதை உள்ளே பல இடங்களுக்கும் பரப்பி அங்கே 'மலை உண்டாக்கும்' வேலை நடக்கிறது!

பாலைவனம் பரவாமல் இருப்பதற்காகப் பெரிய அளவில் காடு வளர்க்கும் திட்டம் உருவாகின்றது அங்கே!

இயற்கையின் வழி கிடைக்க வேண்டிய மலையை மனிதன் சமைக்கின்றான்; இருக்கும் பாலையைச் சோலையாக்குகின்றான்.

இருந்தும், காமராசர் மூலப் பொருள் கிடைக்கும் இடத்தில் தானே பணத்தைச் செலவழிக்க வேண்டும் என்று, தமிழ் நாடு ஏதுக்கும் உதவாத நாட்டைப் போலவும், வடநாடுமட்டும் எல்லாம் கிடைக்கும் சுரங்கம் போலவும் எண்ணிக்கொண்டு காரணம் காட்டுகின்றார்.

உண்மை நிலையோ நேர்மாறாக, இருந்தும், ஏதும் செய்யாமலும் அங்கே ஏதும் இல்லாதபோது எல்லாம் செய்துவிடத் துடிப்பு இருப்பதையும் தான் பார்க்கின்றோம்.

இந்த உண்மையை மறைக்க வேண்டும் என்று எழுகின்ற ஆசைதான் அவர்களை ஒருவேளை தென்னாட்டிலும்தான் வளர்ச்சி இருக்கிறது எனப்பேசச்செய்வதும், இன்னொரு வேளையில் மறைமுகமாக வடநாடு மட்டும் தான் வளருகின்றது என்பதை ஒப்புக் கொள்ளச் செய்வதுமாக, இப்படியும் அப்படியுமாக அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது.

அவர்கள் இதனை உணர்ந்தாலும் உணராவிட்டாலும் மக்கள் உணருகின்றனர். இனியும் உணருவர்.

அப்படி உணரும்போது வடக்கு வாழுவதற்கான உண்மைக் காரணம் தெளிவாகத் தெரியும்.

★

எந்த நாட்டில் ஆள்வோர் ஆள வேண்டுமெனக் குறைவாக ஆசைப்படுவார்களோ அந்நாடுதான் திறமையுடையதாகவும் அமைதியுடையதாகவும் இருக்கும். எங்கே ஆள்வோரிடத்தில் ஆளவேண்டுமென்று ஆசை அதிகரிக்கின்றதோ அங்கே குழப்பந்தான் விளையும்.

பாராமுகம் ஏனய்யா?

[நன்னிலத்தான்]

தலைப்பைப் பார்த்தவுடன் பல காலமாய் தெய்வகிருபை கிடைக்குமென்றெண்ணியிருந்து ஏமாற்றமடைந்த பக்தன் வேண்டிக்கொள்வதோ எனத் தோன்றும். அது அல்ல இது. இது வேறு. அது கருத்துக்குப் பொருத்தமற்ற கற்பனை. இது கருத்துக்கொத்தது. வருத்தப்படத்தக்கது.

பக்தர்கள் கடவுளை நோக்கி "பாராமுகம் ஏனய்யா?" எனக்கேட்டதாகக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் "கடவுளே" அக்கேள்வியைக் கேட்கிறது. ஆச்சரியப்படுகிறீர்களா? வேண்டாம். 'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' எனும் வழக்குப்படி எழுத்தறிவிக்கும் இறைவனை ஆசிரியர் குழாம் அரசாளுவோரை நோக்கிக் கேட்கும் கேள்விதான். பீடிகை போதும், பின் நோக்குவோம்.

ஆசிரியர்கள் அவதிப்படுகிறார்கள், அல்லலுறுகிறார்கள், ஆதரிப்போர் காணோம். முற்காலத்திலே சித்தரிப்பார்கள் ஆசிரியர்களை விளக்க, குழி விழுந்த கன்னம், குடைந்துவிட்ட கண்கள், ஒற்றைக் காதறந்த கண்ணாடி கயிற்றில் கட்டி காதில் மாட்டியிருப்பார், தலையிலே தலைப்பாகை, கம்பி ஒடிந்த குடை, அறுந்த செருப்பு, கையிலே பிரம்பு, என்ன அழகாயிருக்கும் காட்சி? இக் காட்சியை மீண்டும் மீண்டும் பார்த்துப் பரவசமடைய விரும்புகின்றனர் பாராள்வோர். எவ்வளவோ கூறிப் பார்த்தனர், வேண்டிக்கொண்டனர், குறை தீர்ப்பார் கோலோச்சுவோர், குறை நிறைவடையும் என்று. இவர்கள் எழுப்பும் குரல் "அவர்கள்," செவிப்படவில்லைபோலும். தனித்திருந்தால் தரணியாளுவோர் தயவு கிட்டாது என எண்ணித்தான் ஒன்று சேர்ந்தனர். "கூட்டணி" அமைத்தனர். கூட்டணி வலுவை நாட்டினில் நிலைக்கச் செய்தனர். மாநாடு கூட்டினர். அமைச்சர்களைப் பார்த்தனர். தேர்விற்குச் செல்லும் மாணவன் பிள்ளையார் கோவிலில் நின்று கொண்டு "நான் பாசாகிவிட்டால்...!" என்று என்னென்னவோ வேண்டுகின்றானே, அதுபோலத்தான் ஆகிவருகிறது. குறை தீர்ந்தபாடில்லை, அதற்குப் பதில் வளருகிறது. சோதித்துப் பார்க்கிறார்கள் போலிருக்கிறது; என்ன சாதிக்கப்போகிறார்களோ பார்ப்போம்.

இப்பொழுது வந்துள்ள புதிய திட்டம் பெரிய கிளர்ச்சியை உண்டு பண்ணிவிட்டது. இருக்கின்ற ஆசிரியர்களையும் வீட்டிற்கனுப்பும் நல்ல திட்டம். முன்னர் 20 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் என இருந்தது. இப்போது ஒரு ஆசிரியருக்கு 35 பிள்ளைகள் வேண்டுமாம். பரிதாபத்திற்குரிய அமைச்சர் குழாம்- 'குடும்பக் கட்டுப்பாடு'—அதற்காக எவ்வளவு பிரச்சாரம்! எவ்வளவு பாடு! புத்தகம் வேறு அடித்துள்ளார்கள், அவர்கள் தான் இந்த 20ஐ 35 ஆக்கியதும். பேதை மனம் போலும்!

சாதாரணமாகப் பார்ப்போமானால் செல்வந்தனைவிட, வறுமையுடையோன்தான் பிள்ளை குட்டிகளைப் பெரும்பகுதி பெற்றிருப்பான். அதற்கு ஆசிரியன் என்ன விதிவிலக்கா? இவ்வாறு குறைந்த ஊதியத்தைப் பெற்றுக்கொண்டுதான், தன் ஆசை மனைவி, அன்புக் குழந்தைகள் அத்தனையும் மானத்தோடு வாழ வேண்டும். அது அறிகிறார்களா அமைச்சர்கள்? இல்லையே! முடிசூடா மன்னர், சமாதானத் தூதுவர், அகில உலகத் தலைவர், ஆசியாவின் ஜோதி, நம்நாட்டுப்பிரதமர்நேரு இருக்கிறாரே, அவர் கூறுகிறார், 'பாவம்' ஆசிரியர்கள் அவதிதான் படுகிறார்கள். உதவ வேண்டியதுதான், ஆனால் பணமில்லையே! எனக் கைவிரிக்கிறார்.

மற்றமற்றஉதவாக்கரைக் காரியங்கட்கெல்லாம் பணம் இருக்கிறது. இதற்கு மட்டும் இல்லையாம். 'பாடுபடும் பாட்டாளியிடம் பரமன் புகழ் பாடுவது பயனற்றது, அவன் குறை தீர்க்கப் பாடுபடவேண்டும்,' எனக் கூறிய அதேநேருசொத்தை வழியைக் காட்டுகிறார். நாட்டிலுள்ள எத்தனை ஆசிரியர்கள் அரை வயிறு நிரப்புகிறார்கள் என நேரு அறியாமலா இருக்கிறார்? அவருக்கு அறிவுறுத்துகிறோம், பாரதி சொன்ன 'தனியொருவனுக்கு உணவில்லை எனில் செகத்தினை அழித்திடுவோம்', என்பதனையும், பொய்யாமொழியார் புகன்ற 'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின், பரந்து கெடுக உலகியற்றியான்', எனும் குறளையும்.

பாடுபடுகிறார்கள், பலன் பெற விரும்புகிறார்கள். இதில் என்ன தவறு? அவர்கள்தான் கெஞ்சுகிறார்கள், வேண்டுகிறார்கள்-வேதனையோடு இரக்கிறார்கள், இறக்கவேண்டாம் என்பதற்காகப் பிச்சை கேட்கிறார்கள், இன்னும் இச்சை பிறக்கவில்லை அரசியலாருக்கு. கைநீட்டிக்கேட்கும் ஆசிரியர்கட்கு, கைவிரித்துக்காட்டும் மேலோருக்கு அறிவுறுத்துகிறோம், வள்ளுவர் தந்த 'சாதலின் இன்னாததில்லை இனிது அதூஉம் ஈதல் இயையாக்கடை' எனும் குறளை.

இவை இவ்வாறே நிற்க, மற்றொரு மந்த செயல்.

பணியாற்றிவரும் ஆசிரியர்கள் வேலையிழந்து வீடு நோக்கும் திட்டம். பயிற்சி பெற்று வரும் ஆசிரியர்கள் வேலையின்றித் திண்டாடும் திட்டம் இவற்றையெல்லாம் தீட்டும் தீரர்கள் தான் வருடா வருடம் பயிற்சிக்கு ஆசிரிய மாணவர்களையும் அனுப்புகிறார்கள்.

இருப்பவர்கள் விளக்கம் உள்ள அமைச்சர்களாக இருந்தால் பயிற்சிப் பள்ளிகளை மூடியிருக்க மாட்டார்களா கொஞ்சக் காலத்திற்கு. செய்தார்களா? இனியாவது செய்வார்களா? பார்ப்போம்.

இவ்வளவு இன்னலுக்கும், இடர்ப்பாடுக்கும்ஆளாகிவிடாமல்தான் 'இடுக்கண் வருங்கால் நகுக' என்பதனை மேற்கொண்டு வாழ்ந்து வருகிறார்கள் ஆசிரியர்கள், கட்டுப்பாடு தவறாக் கடமை வீரர்கள், கண்ணியம் மிக்கவர்கள். இவர்கள், இன்னல்கள் பல ஏற்று புன்னகைகொண்டு, கன்னல் மொழி தரும் இன்ப மழலைகளிடம் பழகும் ஆசிரியர்கள் அடங்கி ஒடுங்கிக் கிடக்கும் நிலை கண்டுதானோ என்னவோ பல ஏடுகள் இருட்டடைப்பு செய்கின்றன.

இவ்வளவிற்கும், இதயம் நொந்து உதயமாகும் உள்ளக் கிளர்ச்சிகளையெல்லாம் காட்டாற்றின் வெள்ளம் போல் கட்டவிழ்த்துவிடாமல் கரை கட்டிக் காத்து கடமையாற்றும் கடமை வீரர்கள், ஆசிரியப் பெருந்தகையோர். "குட்டக்குட்ட குனிபவனும் மடையன், குனிய குனியக் குட்டு

றவனும் மடையன்'' எனும் பழமொழியை மீண்டும் நினைவிற்குக் கொண்டுவந்துவிட்டார்கள். உறங்கிக் கிடந்தோர் அயர்வு நீங்கி விழிப் புணர்ச்சி பெற்றுவிட்டனர். உழைப்பிற்கேற்றஊதியம் பெறக்கண்ணியப் போராட்டம் நடாத்த முன்வந்துவிட்டனர்.

இனியாவது ஆசிரியர்களுக்கான வாழ்க்கை வசதிகளை வளம் பெற அமைத்து, அவர்களை நலம் பெறச் செய்வது நாடாள்வோர் கவனம் பெறும் என எண்ணுகின்றோம்.

தர்மராஜா! இந்த ஏழை முகம் பாரும் என்ற இந்த அவலக் குரல் அரசாள்வோர் செவி விழுமா? எங்கள் அவதி தீருமா? எங்கள் மனம் அமைதி பெறுமா? என ஐய வினா எழுப்பும் ஆசிரியர்களின் கொதிக்கும் உள்ளத்திலிருந்து உதிக்கும் கெஞ்சு மொழிதான் 'பாராமுகம் ஏனய்யா?' என்பது. இனியாவது அரசாளுவோர் ஏழை முகம் பார்ப்பாரா? ஏழை குறை தீர்ப்பாரா எனப் பார்ப்போம்.

''எல்லாம் 'அவர்கள்' செயல்''

★

யாரார் எங்கெந்த வேலைக்குத் தகுதியுடையவராய் இருக்கின்றாரோ அவரிடத்தில் அந்தந்த வேலையை ஒப்புவிக்க வேண்டும். ஏனென்றால் ஒருவனே பல தொழில்களையும் செய்து கொண்டால் எந்தத் தொழிலையும் சிறப்பாகச் செய்ய முடியாது.

✱

சிலர் சில மனிதர்களைப் பார்த்து, ''உங்கட்கு அறிவு இல்லை. நாங்கள் அதை உண்டுபண்ணித் தருகின்றோம்'' என்று சொல்லுகின்றார்களே, இது எவ்வளவு தவறு? கண்ணில்லாதானுக்குப் ''பார்வையைத் தருகின்றோம்'' என்று சொல்லுவது போலிருக்கின்றதில்லையா இக் கூற்று.

தமிழனாகப் பிறந்தது தவறு?

—[✱]—

அகதிகளுக்கென்று இந்திய அரசாங்கம் கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவிடுகிறது. நாட்டின் பல பாகத்திலும் பெரிய பெரிய 'காலனி'களைக் கட்டித் தருகிறது. ஒவ்வொருவருக்கும் மீண்டும் தொழில் நடத்த ஆயிரக்கணக்கான ரூபாய் கொடுத்து உதவி செய்கிறது.

இந்த அகதிகள் என்பவர்கள் யார்? கதி அற்றவர்கள். அந்நிய நாடாகிவிட்ட பாகிஸ்தானிலிருந்து வகுப்பு வெறிக்குப் பயந்து எல்லாவற்றையும் இழந்து ஓடி வந்தவர்கள். இந்தக் காரணத்துக்காகத்தான் இவர்களை இந்திய அரசாங்கம் ஆதரித்து வருகிறது.

''அப்படியானால் இந்தியாவிலிருந்து சென்று, இலங்கையில் வசித்து, அங்கே இனவெறிக்குப் பலியாகி சொத்துக்களையும் தொழிலையும் விட்டுத் தாய் நாட்டில் தஞ்சம் புகுந்தவர்களும் அகதிகள் தானே'' என்ற கேள்வி வருகிறதல்லவா? இந்தக் கேள்விக்கு ''இல்லை''யென்று மத்திய அரசாங்கம் பதில் சொல்லிவிட்டது.

இலங்கையர்கள் காட்டும் இன வெறிக்கும் அந்த அரசாங்கம் காட்டும் மாற்றாந்தாய் மனப்பான்மைக்கும் அஞ்சிச் சமீபத்தில் ஏராளமான தமிழர்கள் சொத்தையெல்லாம் விட்டுவிட்டு ஓடிவர வேண்டியதாயிற்று. இவர்களில் அநேகர் ''இந்தியப் பிரஜைகள், நாடற்றவர்கள்'' என்ற நாமதேயத்தோடும், ''கள்ளத் தோணிகள்'' என்ற பேரோடும் இக்கரைக்கு விரட்டப்பட்டவர்கள்.

சென்னை சர்க்கார் இவர்கள் நிலையை விசாரித்து இவர்கள் உதவிக்கு உரியவர்கள் என்று நினைத்து, இவர்கள் வசதியுடன் வாழ மத்திய சர்க்காருக்குச் சில சிபார்சுகளைச் செய்திருந்தது. திருநெல்வேலி ஜில்லாவில் கூட்டுறவு முறையில் நிறுவப்படும் இரண்டு நூல் மில்களுக்கு மானியம் அளிப்பது; வெளியேற்றப் பட்டவர்களுக்கு, ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாடுகளிலிருந்துவிலக்கு அளிப்பது; இரயில்வே, தபால், தந்தி இலாகாக்களில் காலியாகும் வேலைகளுக்குச் சலுகை காட்டுவது; அவர்கள் குழந்தைகளுக்கு கல்விச் சலுகை அளிப்பது ஆகியவற்றைச் சிபார்சு செய்திருந்தது. ஆனால் மத்திய அரசாங்கம் அவர்கள் உதவிக்கு உரியவர்களோ அல்ல என்று கூறிவிட்டது.

ஏன் அவர்கள் உதவிக்கு உரியவர்கள் அல்ல? அகதிகள் என்றால் பாகிஸ்தானிலிருந்து வருபவர்கள் மட்டும் தான் என்று நினைக்கிறார்களா? அல்லது ஓடிவந்தவர்கள் தமிழர்கள்தானே என்ற அலட்சிய பாவமா?

பாகிஸ்தானிலிருந்து வந்த சிந்திகளுக்கும், பஞ்சாபிகளுக்கும், தமிழ்நாடு தஞ்சமளிக்கும் போது, தங்கள் சொந்தச்சோதரர்களான இலங்கையில் இருந்து விரட்டப்பட்ட தமிழர்கள் மத்திய அரசாங்கத்தால் புறக்கணிக்கப் படுவதைக் கண்டு ஒவ்வொரு தமிழனின் மனமும் குமுறுகிறது.

—ஆ. விகடன்.

காஞ்சிபுரம், 93, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில் ... வெளியிடப்படுகிறது.

திராவிடநாடு

14—9—58 | வார வெளியீடு | விலை 16 காசு

MADRAS

வெல்வோம்

—[மான்]—

தீரத்தான் வேண்டும் இனி இரண்டிலொன்று
    திராவிடம் பிரியத்தான் வேண்டும் என்ற
கோரிக்கை இங்குள்ள ஏழெட்டுப்
    பேர் முன் அல்ல, டெல்லிப் பெரியவர்கள் முன்!
ஊராள்வோர் இதை உணர வேண்டும் டெல்லிப்
    பெரியவர்கட் கெடுத்தோத வேண்டும் புரட்சிப்
பேரேடு விரிகிறது தி. மு. க. புதிய
    அத்தியாயம் வரைகிறது தெற்கே என்று!

''பிரிவினையால் சிறிதாகும் நாடு மக்கள்
    பலம் குன்றிப் போகும்'' என்று பேசுகின்ற
பெரியோரைக் கேட்கின்றேன் 'ஐயாவே நீர்
    வரலாறு அறியீரோ வளர்ந்து வரும்
சரித்திரமும் புரியாதோ'' பரப்பளவில்
    உலகப் படத்தினிலே சிறிதாகத்
தெரிகின்ற நாட்டையெல்லாம் பருந்து வந்தா
    கொத்திற்று? போர்க்கரடி வந்து விழுங்கிற்று?

சின்னஞ் சிறு நாடு 'லக்சம்பர்க்'
    தனியாட்சிக் கொடிகட்டி வாழும்போது
தென்னன் புகழ்ச்சோலை திராவிடம்
    மட்டுமிங்கே தனித்திருந்தால் வாழாதோ?
வரலாறு தரும்பாடம் உரமேற்றும்
    தோள்களுக்கு. வளர்வோம், திராவிடம்
பிரிந்தே தீரும் அந்தத் திருநாளை
    எதிர்நோக்கிச் செல்வோம் வெல்வோம்.

பொன்முடி புகட்டும் பாடம்

[இரே. தென்னவழுணி]

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;
சான்றோ னாக்குதல் தந்தைக்குக்கடன்;
வேல் வடித் துக்கொடுத்தல்
கொல்லர்க்குக்கடன்;
நன்னடை நல்கல் வேந்தர்க்குக்கடன்;
ஒளிறு வாள் அருஞ் சமமு நுக்கி
களிறெறிந்து பெயர்தல்
காளைக்குக் கடனே"

இப்பாடலைப் பாடிய பொன்முடியார், தான் ஒரு பெண் புலவர் என்பதை முதலடியில் எடுத்துக் காட்டுகிறார். மேலும் நாட்டினரின் கடமையையும் ஆள்வோரின் கடமையையும் நன்கு விளக்கிக் கூறியுள்ளார்.

ஈன்ற மகவை குணநலனோடு குறையின்றிக் காத்தல் தாயின் கடமை; மகனை மற்றவர் போற்றும் மதிபடைத்தோனாக்குதல் தந்தையின் கடமை; நாட்டு நலனில் பொறுப்புக்கொண்டு நாட்டைக் காத்திடத் தேவையான கருவிகளைச்செய்து கொடுத்தல் தொழிலாளியின் கடமை; நல்ல வழியில் மக்களை அழைத்துச் செல்லுதல் நாட்டுத் தலைவனின் கடமை; தாயகத்துச் செல்வங்கள் கொள்ளை போகாமல் பகைவருடன் போரிட்டு நாட்டைக் காத்தல் காளையரின் கடமையென எடுத்துக் காட்டுகிறார்.

இப்பாடலைப்யும் படித்து நம் நாட்டையும் நோக்கினால் தேற்றுவாரற்றுத்தேம்பி அழும நிலை தான் ஏற்படும். பெற்ற குழந்தையை எண்ணிப் பெருமைபபட வேண்டிய தாய்க்குலம் தம் குழந்தைகளை விற்றிடும் குரல்தான கேட்கும். தன குழந்தையைக் காததிடல் கடமையெனறறிநதும் குளததிலும், ஆற்றிலும போட்டுக் கொன்றிடும பரிதாபமான காட்சிதான கண்ணெதிரே தெரியும்.

ஏன இந்த நிலை? என்ற வினவை எழுபபி விடைகாண முயனறால, வறுமையின வெட்மையைத் தாங்க இயலாததால் ஏற்பட்ட கொடுமைகள எனபது நன்கு விளங்கும்.

'மகனைச் சான்றோனாக்குதல் தந்தையின் கடமை' என்பதை அனைவரும் அறிவர். ஆனால் மகனை உயிரோடு வளர்த்தால் போதும் எனற மனநிலை தந்தைக்கு ஏற்படுகிறது. கதிரவன் உதிப்பதற்கு முன் வேலைக்குச் சென்று களைப்போடு இருள் கவ்விய பிறகே வீடு திரும்புகிறான். நாள் முழுதும் உழைத்தும் கிடைக்கும் பற்றுக் கஞ்சியை நினைத்து விழியைக் குளமாக்குகிறானே தவிர, மகனின் கல்விக்கு வழிகாண இயலாதவனாகிறான்.

இதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்து பார்த்தால், மேல் நாடுகளைப்போல உழைப்புக்கேற்த ஊதியமும், சம உரிமையும் சலுகைகளும் சரிவர வழங்கப்படாததே என்பது புலனாகும். தொழிலாளர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்திருக்கிறோம் என்று அரசு மார்தட்டிப் பேசலாம். அதற்கு உதாரணங்கள் வடநாட்டிலே காட்ட முடியும். ஆனால் தென்னாட்டிலே காட்ட முடியாது.

நாட்டின் நலனுக்குத் தொழிலாளர்களின் துணை அவசியம். ஆனால் சாதாரண தொழிலாளியின் தனிப்பட்ட பொருளாதார நிலை சீர்பட்டாலொழிய நாட்டின் பால் பொறுப்பேற்படுவது இயலாது. வேலையில்லாத் திண்டாட்டத்திலும், பணமுதலைகளின பிடியிலும், துப்பாக்கிக் குண்டிலும் சிக்கிப் பலியாகும் அவனுக்கு, நாட்டின் நலனை அறிய ஆவல் ஏற்பட முடியாது.

'மக்களை நல்ல வழியில் அழைத்துச் செல்லுதல் நாட்டுத் தலைவனின கடமை.' இந்த அரிய கருத்தை அறிந்தும் அறியாதவர்களாய் ஆளவோர் இருக்கின்றனர் எனறு நம்மால் சானறுகாட்ட முடியும். நல்வழிபபடுத்தும் ஆற்றலும, ஆசையும இருந்திருந்தால் சாதி வெறியில் சாக்காடாகும் முதுகுளங்கள தோனறாது.

இதை ஒழிக்க வேண்டுமானால் பசி, பட்டினி, வறுமை நீஙகவேண்டும். நாட்டின் பொருளாதாரநிலை போதுமானதாக வேண்டும். பொருளாதாரம் பற்றி நாம பேசினால் "இவர்களுக்கு பொருளாதாரம் தெரியுமா?" என்று ஆள்வோரும் மற்றவர்களும் கேட்கக் கூடும். இத்தகைய பொறுப்பற்ற பேச்சுகளுக்கு நாம் செவி சாய்ப்பவர்களுமல்ல. நாம் கூறுகிறோம் என்பதற்காக மாற்றார் மறுத்தாலும் உண்மையை மறைக்கமுடியாது. தீய சக்திகளுக்கு இடமளித்துவிட்டு, 'திருந்துங்கள்' என்று கூறுவது 'பாம்புக்கு பால் வார்த்துவிட்டு பாம்பு கடிக்கு மருந்து தயாரித்துத் தருகிறோம்' என்று பெருமைப்படுவது போலாகும்.

தன்நாடு, மொழி, பண்பாடு, செல்வம் இவை பகைவரால் பாழ்படும் என அறிந்தால் வாளெடுத்துப் போரிட்டு அவற்றைக் காத்தல் காளையரின் கடமையென ஈற்றடியில் கூறுகிறார். அன்று வாளைக்காட்டி நாட்டைக்காக்க வேண்டியநிலை. இன்று, கொள்ளையை விளக்கி ஆதாரங்களைக் காட்டி தாயகத்திற்குத்தற்காப்புத் தேடவேண்டிய நிலையில் இருக்கிறோம். அதனால்தான் இப்பணியை நாம் செவ்வனே செய்து வருகிறோம்.

அலைகடலும் அதிலே முத்தும், வளம்கொழிக்கும் வயல்களும், மண்ணடியில் பொன், வைரம், நிலக்கரி, எண்ணெய் போன்ற பொருள்களும், பசுமையான காடுகளும், அவற்றில் வேறெங்கும் காணாத அகிலும் தேக்கும், மிளகு ஏலம, கிராம்பு போன்ற வாசனைப் பொருள்களும் வழங்கும் வற்றாத தென்னகம் தேய்வதையும், வடநாடு வளர்வதையும காணும் போது, நாட்டுப் பற்றுடையவர்கள் தாய்நாடு மாற்றாரின் பிடியிலிருந்து விடுபடல் 'வேண்டும் எனறு கூறினால் 'தேசத் துரோகம' எனறு தெரிந்தவர்களும், சிந்திக்கும் மனம படைத்தவர்களும கூற மறுப்பர்.

ஒரு மொழியின்மீது மற்றொரு மொழி ஆதிக்கம் செலுத்தினால் தன மொழிக்கு ஊறுபல நேரும் என்பதை மொழி வல்லுநர்கள் கூறியுள்ளனர். திராவிட மொழிகளைப பற்றியும், அவற்றிற்கு

(13-ம் பக்கம் பார்க்க)

அதிலும் அலட்சியமா?

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [14—9—58] தனிப் பிரதி 16-காசு. [இதழ்

இரண்டாவது உலகப் பெரும்போரின்போது ஆவடியில் ஒரு பெரிய தளம் அமைத்துப் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்திருந்தனர். அந்தத் தளத்தில் வேலை செய்யும் வகையில் பல ஆயிரக்கணக்கான பேருக்கு வாழ்வுக்கான வழி இடைத்துக்கொண்டிருந்தது. இராணுவ முறையிலும் ஒரு நாட்டின் படை ஒரே இடத்தில் குவிந்திருப்பதைவிடப் பல பகுதிகளிலும் பரவி இருப்பதே எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் சரி என்று ஒப்புக்கொள்ளப்படும். அந்த வகையில் ஆவடியில் இருக்கும் தளம், இராணுவ முறையிலும், பொதுவாகவும் தென்னகத்திற்குப் பயன்பட்டு வந்தது.

இந்தியத் துணைக்கண்டம் தென்னகத்தை மாற்றாந்தாய் மனப்பான்மையில் பார்த்து வருகின்ற காரணத்தினால், கூடுமானவரை தென்னகத்தின் நல்வாழ்வைக்கண்டு மனந் தாங்காமல் அழிவு வேலையில் ஈடுபட்டுவருவதை நாம் பலமுறை சான்றுகளோடு எடுத்துக்காட்டியுள்ளோம். இந்த 'தளம்' இங்கு இருப்பது காங்கிரஸ்காரர்களின் காருண்யத்தால் அன்று; ஆனால் 'இதையும் இங்கு விட்டுவைக்கவா' என்று எண்ணி இன்றைய தினம் அத்தளத்தை டெல்லிக்குப் பெயர்த்தெடுத்துக்கொண்டு போய் விடத்தீர்மானித்திருக்கின்றது மத்திய அரசாங்கம்.

இந்தமாற்றம் நிறைவேற்றப்படுவதற்கு டெல்லியில் கட்டிடங்கள் கட்டுவதற்கும் பல புதிய அமைப்பு வேலைகளை முடிப்பதற்கும் ரூ. 200 கோடி செலவு செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாம். வடக்கிலேயே மேலும் மேலும் வாழ்வு இருக்கவேண்டும் என்று எண்ணுவதினால் 200 கோடி ரூபாய் செலவு செய்தேனும் இந்தத் தளத்தைத் தங்கள் மண்ணுக்கு மாற்றிக்கொள்ளத் தீர்மானித்துவிட்டனர். ஆவடியில் உள்ள தளம் 80-கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டது ஆகும். இவர்களுக்கு உண்மையிலேயே இராணுவத்தைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருக்குமானால், டெல்லியில் செலவு செய்ய இருக்கும் 200-கோடி ரூபாயையும் இங்கு ஏற்கனவே இருக்கும் தளத்தை விரிவாக்குவதிலோ, அல்லது புதிதாக்குவதிலோ செலவிடுதல் வேண்டும்.

ஆனால் இருக்கும் நிலையத்தை இடித்துவிட்டு இல்லாத இடத்தில் புதிய தளம் எழுப்ப முனைவதைப் பார்க்கும்போது, தென்னாட்டை எப்படியும் அழித்தே தீருவது என்று 'கங்கணம் கட்டிக்கொண்டு' அதே வேலையாக இருப்பதைக் காணுகின்றோம்.

இந்தத் தளத்தை மாற்றுதல் கூடாது என்று தனி நபர் தீர்மானம் ஒன்று சென்ற கிழமை சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. அந்தத் தீர்மானத்திற்கு சர்க்கார் தரப்பட்ட திருத்தம், ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேறியிருக்கிறது.

இப்போது நிறைவேறியுள்ள தீர்மானம், தளத்தை மாற்றினாலும், அந்த இடத்தில் தளவாட உற்பத்தி நிலையத்தை ஏற்படுத்துமாறு மத்திய சர்க்காரை வற்புறுத்தும்படி சென்னை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் முயற்சியாகும்.

சென்னை அரசாங்கம் சட்ட மன்றம் அளித்திருக்கும் இந்த ஒத்துழைப்பைப் பயன்படுத்திக்கொண்டு மத்திய சர்க்காரிடம் போராடி ஆவடியில் அழிவு ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

முன்னே பலமுறை சட்டமன்றம் செய்த தீர்மானங்களை டெல்லி அரசாங்கம் மதிக்காமல் தென்னகத்தைப் புறக்கணித்திருக்கிறது. அப்போதெல்லாம் சென்னை மாநிலத்து அமைச்சரவை பொங்கி எழுந்து நியாயம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் நியாயத்தைவிட 'நிழல்' தரும் இனிமை இனிது என்றிருந்துவிட்டனர். இம்முறையேனும் வாளா இருந்துவிடாமல், நாட்டு நன்மைக்கான முறையில் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றோம்.

ஆவடியாவது காவடியாவது எங்கிருந்தால் என்ன என்ற 'அபேத உணர்ச்சி' வேண்டாம், வேண்டவே வேண்டாம்.

எங்கிருந்தால் என்ன என்று இவர்கள் கருதுவதைப்போல் அங்கிருப்பவர்கள் ஏன் கருதவில்லை? டெல்லிக்கு எதற்காக அதைக் கொண்டுவர வேண்டும், ஆவடியிலேயே அந்தத் தளம் இருந்துவிட்டுப் போகட்டுமே என்று டெல்லி சர்க்கார் ஏன் எண்ணவில்லை?

அவர்களுக்கு இல்லாத 'அபேத உணர்ச்சி' இவர்களுக்கு மட்டும் ஏன் இருத்தல் வேண்டும்?

அவர்களுக்குத் தெரிகிறது வடநாடுதான் தங்கள் நாடு என்று. அதேபோல இவர்களும் தெரிந்துகொள்ள வேண்டும் தென்னாடுதான் தங்கள்

இவர்கள் பேசினால்.....!

எஸ். ஏ. டாங்கே

ஒரு கல்லில் ஒரு மாங்காய் அடிப்பவன் சிறந்த திறமைசாலி என்று பெயரெடுக்கலாம்—சாதாரண வாழ்க்கையில்! ஆனால் அரசியலில் அப்படியல்லவே!

கல் ஒன்று, கீழேவிழுந்த மாங்காய்கள் ஒன்றுக்கு மேற்பட்டன என்ற பெயர்தான், அரசியல்வாதியின் திறமைக்கு அத்தாட்சி! இதை மனதில் வைத்துக்கொண்டுதான் நான் சொன்னேன் "கேரளத்தில் உள்ள இடதுசாரிக் கட்சிகளெல்லாம் கம்யூனிஸ்டு அரசாங்கத்தோடு ஒத்துழைக்கவேண்டுமென்று! சொன்னேனா.... இல்லையில்லை...... அழைப்பு விடுத்தேன்.

நான் விடுத்த அழைப்பிலும் பொடி வைத்துத்தான் சொன்னேன்—எதிரிகளுக்கு இடம் கொடுத்துவிடவில்லை! ஏனென்றால் இராஜதந்திர முறைகளில் நான் எவருக்கும் தாழ்ந்தவனல்ல என்று உலகுக்கு நிரூபித்தாகவேண்டுமல்லவா?

இடதுசாரி எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்புத்தரவேண்டுமென்பதை எப்படி வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். கம்யூனிஸ்டு அரசாங்கத்திற்கெதிராகக் கிளர்ச்சிகளும் போராட்டங்களும் நடத்தாமலிருப்பதும் ஒத்துழைப்புத்தான்—கூட்டு மந்திரிசபை அமைப்பதற்கு ஒத்துவருவதும் ஒத்துழைப்புத்தான்! இதில் எந்த ஒத்துழைப்பை நான் விரும்பினேன், தேவையென்று கூறினேன், என்று எவராலும் திட்டவட்டமாகச் சொல்லிவிட முடியாதல்லவா?

> **செய்தி**
>
> இடதுசாரிக் கட்சிகள், கேரளத்தில் கம்யூனிஸ்டு அரசாங்கத்தோடு ஒத்துழைக்க வேண்டுமென்று எஸ். ஏ. டாங்கே அவைகளுக்கு அழைப்பு விடுத்தார். ஆனால் அழைப்பு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. கேரள முதலமைச்சரும், கேரளத்தில் கூட்டு மந்திரிசபை அமைப்பது என்ற பேச்சுக்கே இடமில்லையென்று டில்லியில் பத்திரிகையாளர் கூட்டத்தில் கூறினார்.

ஒத்துழைப்பைக் கோரிய விதத்திலே மட்டும்தான் என் இராஜதந்திரம் இருந்தது என்று பொருளல்ல! கோரிய ஒத்துழைப்புக் கிடைக்கப் பெற்றிருந்தால், அது இன்னமும் மகத்தான இராஜதந்திரமாக முடிந்திருக்கும்.

M. S. வெங்கடாசலம், M. A.

இதையெல்லாம் யார் புரிந்துகொள்ளுகிறார்கள்? பொதுமக்கள் புரிந்துகொள்ள மாட்டார்களென்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஆனால் எனக்கிருக்கிற வருத்தமெல்லாம் கம்யூனிஸ்டுக் கட்சியிலேயிருக்கிற அரசியல்வாதிகளிலேயே சிலர் — அதுவும் சிறந்த ஸ்தானங்களிலே இருப்பவர்கள் — இதைப் புரிந்துகொள்ளவில்லையே என்பதுதான்!

சிலவற்றைப் புரியவைக்க முடியும்—மற்றும்சிலவற்றை உணர்த்தத்தான் முடியும், வெளிப்படையாகச் சொல்லிவிட முடியாது! அத்தகைய விஷயங்களிலே இதுவும் ஒன்று!

இன்று கேரளத்தில் எதிர்க்கட்சிகளெல்லாம் ஒன்று சேர்ந்து, அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குத் தங்களாலே என்னென்ன செய்ய முடியுமோ அவற்றையெல்லாம், அவை நியாயம்தானா அல்லவா, ஜனநாயக விதிமுறைகளுக்கு உட்பட்டவையா அப்பாற்பட்டவையா, மனிதாபிமானத்திற்குப் பொருந்துவனவா பொருந்தாதனவா, என்பதைக்கூடச் சிந்திக்காமல் செய்து வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில் கேரள அரசாங்கம் கையாள வேண்டிய இராஜ தந்திரம் மிகச் சாதாரணமானதல்ல! ஒரே கல்லாலே பல மாங்காய்களை அடித்தாகவேண்டும்! அதனாலே இடதுசாரிக் கட்சிகளுக்கெல்லாம் இத்தகைய நேரார் அழைப்பை விடுத்தேன்.

சாம, பேத, தான, தண்டம் என்று எதிரிகளோடு நடந்துகொள்ளவேண்டிய வழிமுறைகளை வரிசைப்படுத்திக் கூறியிருக்கிறார் சாணக்கியர். சாணக்கியராவது இந்த முறைகளையெல்லாம் ஒவ்வொன்றாகக் கையாளவேண்டு

'டு என்பதனை. அந்த நல்ல நிலை மட்டும் ஏற்படு ரனுல், 'அதிலும் அலட்சியமா?' என்று உள்ளம் முறும் நிலை ஓரளவு நீங்கும்.

★

"திடீரென !!"

பேச்சுரிமையை நிலைநாட்டுமுகத்தான் சென்னைக் கடற்கரைக் கரையில் போடப்பட்ட தடையுத்தரவை மீறச் சென்ற தி.மு.க. தலைவர் களையும் தோழர்களையும் பிடித்துச் சென்று, அடையாறு' லாக் அப்பில் வைத்து, வழக்கும் தொடர்ந்து, இரு கிழமைகள் தண்டனையும் பெறும்படி செய்தது சென்னை அரசு.

சென்ற கிழமை அதுகுறித்து நாம் எழுதிய எழுத்துக்கள் அச்சாகி முடிவதற்குள்ளாகவே, தண்டனை பெற்றோரை "திடீரென" அரசு, விடுவித்தது என்கிற சேதியை நாடு அறியும்! தடுப்பானேன் — தள்ளுவானேன் — வழக்குத் தொடர்வானேன்—வாதாடச் செய்வானேன்— சிறைக்குக் கொண்டுசெல்வானேன் — "திடீரென" விடுவிப்பானேன்—என்கிற கேள்விக் குறிகள், மக்கள் மன்றத்தில் எழாமலில்லை!!

காலக்கொலை எவ்வளவு என்பதோடு; அரசு ஏன் இவ்வளவு ஆர்வமும் அச்சுறுத்த லும் காட்டவேண்டும், பிறகு "திடீரென" ஞானோதயம் பெறவேண்டும் என்று ஒவ்வொரு சிந்தனையாளனும் எண்ணத்தான் செய்வர்.

விடுதலை இயக்கத்தினரின் குரலுக்கும், பேனாவுக்கும் தடைகளைப் போட்டால் என்ன கதியாகும்என்பது, சரித்திரத்தின் நீண்டதொரு வரலாறாகும். காங்கிரஸ் அரசு, இப்படித் தடைகளைப்போட்ட நேரத்திலெல்லாம், திராவிட முன்னேற்றக் கழகம், மக்கள் தம் உரிமைகளை நிலைநாட்ட, அறப்போர் நடாத் திடத்தவறியதில்லை யாது. அறிவார் காமராசர்; ஆயினும், தடை விளம்பிற்று. தடியடி நடந்தது. வழக்குகள் பல உள்ளன, நமது தோழர்கள் மீது!!

பழிவாங்கும் வேகத்துடன்—தீர்த்துக்கட்டி விடுவோம் தி. மு. க.வை எனும் பெரும் எரிச்சலுடன் — அவிழ்த்துவிடப்பட்டன, அடக்கு முறைகள். தடைபோட்டால் — தடியடி செய் தால் — வழக்குகள் தொடர்ந்தால் — சிறைக் கதவுகளைத் திறந்து மூடினல்—மிரண்டு விடுவார் கள்! உரிமை முரசு, கிழிந்துபோய்விடும் என்று எண்ணிற்று அரசு!!

கடைசியில், "திடீர்" உத்தரவு பிறப்பித்து, விடுவிக்கும் கட்டத்துக்கு, அரசு வர நேர்ந்ததே ஒழிய, நியாயம் என்று கருதியதைப் பெறு வதற்காக எந்தத் தியாகத்துக்கும் தயாராக உள்ளோர் தம் கோட்டமே, தி. மு. க. என்கிற உண்மையை தடுத்து நிறுத்திவிட இயலவில்லை. எப்படி இயலும்? உண்மையின் நாடித்துடிப்பை நிறுத்தியதாகச் சரிதமே இல்லையே!!

★

கனியும் கன்னியும்

—[அ. தங்கசாமி]—

மாலை நேரம் — இளந்தென்றல் மலர் மணம் சுமந்து, கருமுதிர்ந்த தாய்போல மெல்லென உலவி வந்தது. நடை கற்கும் பூங்கொடியென, கால்போன போக்கிலே போய்க்கொண்டிருந்தாள், தமிழ்ச் செல்வி.

நீண்ட நேரம் நடந்து எழில் தவழும் இளமரச் சோலையை அடைந்தாள். ஆம்! எழில் தவழும் சோலைதான் அது. ஓடும் மான்—உலவும் தென்றல், பாடும் குயில்—பளிங்கு நிறப் பாறைகளினூடே பாய்ந்து செல்லும், சலசலக்கும் தேனருவி. இவைமட்டுமல்ல; முருக்கவிழ் முல்லை மலர் ஒரு புறம்; சண்பகம்; இருவாட்சி மற்றோர் புறம். இத்தனைக்கும் மத்தியிலே தாமரைபூத்த தடாகம் வேறு. கேட்கவேண்டுமா எழிலுக்கு!

வண்டறைந்து, தேனுர்ந்து வரிக் குயில்கள் இசைபாட தண் தென்றல் இடைவிடாது தவிய வரை முனிவுசெய்யும் பொழிலது. நடுவண் நின்ற அத்தலைவியின் மனம் மட்டும் எதிலும் செல்ல வில்லை. நீண்ட சிந்தனையில் ஆழ்ந்துவிட்டிருந்தாள்.

உலகத்து எழிலெல்லாம் ஒருங்கே திரட்டியெடுத்து உரு வாக்கப் பெற்றது போன்ற அவ் வழகி நின்ற நிலை......! வீதியிலே இப்பேதை நின்ற நிலையைப் பார்த்து கவிப்போதை ஏறப்பெற் றிருந்தால், அந்த புலவன் பாடி னுனே! என்னவோ! அவ்வளவு அருமையாக இருந்தது அந்தப் பாடல்.

கரிய குழலும்—பெரிய விழியும் —சிறிய இடையும் இணைந்து, அங்கமெல்லாம் தங்கமாக — மரகதச் சிலையென நின்ற அம்மங்கையின் முக அழகை எப்படிக் கூறுவது? பிறைமதியே நுதலாகவும், எட்சிப் பூவே நாசியாகவும் வெண் சங்கே கண்டமாகவும், அழகுற அமைந்திருந்தது அவள் உடலில்.

இளமைநலம் பூத்துக்குலுங்கும் அச் செல்விக்கு ஏற்பட்ட குறை ...! உண்ண உணவிற்கோ, அன்றி உடுக்க உடைக்கோ ஒரு குறையுமில்லை என்பதை, ஆழ் கடல் முத்து வேய்ந்த அரிய வேலைப் பாடுடன் கூடிய காற் சிலம்புகளே கழறிக்கொண்டிருந்தன.

சிந்தனை வரிகளுக்கோர், சிறு புள்ளி வைத்தாள். தாமரைத் தடாகத்தில் கைகால் முகங்கழுவி, வீடுசெல்ல விழைந்தாள். பளிங்கு போன்றநீரில் இறங்கி; தன் மலர்க் கரம் இரண்டையும் சேர்த்து, மெதுவாக நீரைமொண்டு முகத் தருகே கொண்டுபோனுள்.

என்ன ஆச்சரியம்! கயலிரண்டு காணப்பட்டது அந்நீரில். உடனே

(13-ம் பக்கம் பார்க்க)

மென்றார். நான் இரண்டாவது முறையையும், மூன்றாவது முறையையும் ஒரே சமயத்திலே கையாண்டிருக்கிறேன்!

"இடதுசாரிக் கட்சிகளே நீங்களெல்லாம் ஒத்துழைப்புத் தாருங்கள்" என்று நான் விடுத்த அழைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் காங்கிரசுக்கும் அவைகளுக்கும் இடையே மகத்தான பிளவு ஏற்பட்டிருக்கக்கூடும்—அவைகளுக்கிடையே ஒன்றையொன்று சந்தேகக் கண்கொண்டு பார்க்கவேண்டிய சூழ்நிலைகூட ஏற்பட்டிருக்கக்கூடும்! இது பேத முறை!

அழைப்பு அந்தக் கட்சிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்தக் கட்சிகளுக்கும், ஆட்சிக்கு வந்தாகவேண்டுமென்ற சபலபுத்தி மறைக்க முடியாத அளவு இருந்திருந்தால், அவை கம்யூனிஸ்டுக் கட்சியோடு பேரம்பேச, ஆட்சிப் பீடத்திலே ஒரு இடம் பெறமுயன்றிருக்கக் கூடும்! அப்படிப் பேரம் பேசியிருந்தும் அந்தப் பேரத்திற்கும், நானும், நான் சார்ந்திருக்கிற கம்யூனிஸ்டுக் கட்சியும் இணங்கியிருக்கக்கூடும்! எனவே இது தான முறை.

ஆட்சிப்பீடத்தில் அந்தக் கட்சிகளும் அமர்த்தப்பட்டால், காங்கிரசின் பலம் குறையும், கம்யூனிஸ்டு அரசாங்கத்தின் பலம் மிகும் என்பதுமட்டுமல்ல, இத்தகைய வழிமுறைகளை நான் கையாண்டதற்கான காரணம். அந்த வழிமுறைகளிலே மட்டும் கம்யூனிஸ்டுக்கட்சி வெற்றிபெற்றிருந்தால்-ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தாகவேண்டும் என்ற அளவு கடந்த ஆசையால்தான் அந்தக் கட்சிகள் எதிர்ப்பிரசாரம் செய்து வந்தன என்று உலகத்திற்கு வெகு எளிதிலே நிரூபித்திருக்க முடியும்!

ஆனால்...! அந்த வாய்ப்பு இப்போது நழுவிவிட்டது! கேரளத்தின் முதலமைச்சர் நம்பூதிரிபாட்டும், கூட்டு மந்திரிசபை அமைத்திடத் தேவையில்லை என்று திட்டவட்டமாக டில்லியில் ஒரு பத்திரிகையாளர் கூட்டத்தில் சொல்லிவிட்டார்!

அவர் இப்படிச் சொன்னது எவ்வளவு மகத்தான குற்றம்—அரசியல் அறியாமை — என்று என்னாலே புரிந்து கொள்ளமுடிகிறது! ஆனால் நாட்டு மக்கள் எவ்வளவுபேர் புரிந்துகொள்ளுகிறார்களோ, நானறியேன்!

"ஆட்சிப்பீடத்திலேஉங்களுக்கு இடமில்லை — ஆனாலும் நீங்கள் எங்களோடு ஒத்துழையுங்கள்" என்று சொல்வது எவ்வளவு மகத்தான தவறு! ஒத்துழைப்பு வேண்டுமென்று நாம் அழைப்பு விடுக்கும்போது, அத்தகைய ஒத்துழைப்பினால் நமக்கு என்னென்ன நன்மைகள் விளையக்கூடும் என்று அவைகளே கற்பனை செய்துகொண்டு மனப்பால் குடிக்கவேண்டிய அளவில் விட்டுவிடுவதுதான் இராஜ தந்திரம்! ஆனால்...! ஆனால்...! நம்பூதிரிபாட் திட்டவட்டமாகப் பேசி, அந்தக் கட்சிகளும் ஒத்துழைப்பைத் தர முடியாதென்று கூறிவிட்டன. இனி என்ன செய்ய இருக்கிறது?....உம்....நடக்கிறபடி நடக்கட்டும்.

ஆசாரிய கிருபளானி

அழைப்பாம் அழைப்பு! இடதுசாரிக் கட்சிகளெல்லாம் ஒத்துழையுங்கள் என்று பொதுவாக அழைப்பு விடுப்பதற்குப் பதிலாக டாங்கே, பிரஜாசோஷியலிஸ்ட் கட்சி எங்களோடு சேர்ந்து பணியாற்றினால் நன்றாக இருக்கும், என்று கூறியிருந்தால்கூட ஓரளவு பெருமைப்பட்டிருப்பேன்!

அப்போதும் பெருமைபட்டிருப்பேனே தவிர, நிச்சயமாக அழைப்பைஏற்றுக்கொண்டிருக்க மாட்டேன்.

தாய்க்கல்லவா தெரியும் தன் பிள்ளையின அருமை! அதைப்போல் பிரஜா சோஷியலிஸ்ட் கட்சியின் அருமை பெருமைகள் அதன் நிறைவுகள் குறைகள், இத்தனையும எனக்குத்தானே தெரியும்!

கட்சி என்பது அதற்கிருக்கின்ற எண்ணிறந்த தொண்டர்களாலும் ஆதரவாளர்களாலும மட்டுமே அமைவதல்ல! நல்ல தலைவர்கள் அதற்குக் கிடைத்தாக வேண்டும்! கட்சியை நடத்திச் செல்வதற்கு எனக்கிருக்கிற திறமையை, பாராளுமனறத்தில் எதிர்க்கட்சி ஸ்தானத்தில் அமர்ந்துகொண்டு நான் புரிகின்ற பணியால் வெளிப்படும் ஆற்றலை இதுவரை எவரும் மறுத்ததில்லை என்று நினைக்கிறேன் — மாறாக அநேகர் புகழ்ந்திருக்கிறார்கள்.

இத்தகையதொரு நல்ல தலைவர் கிடைக்காததாலே தான் சோஷியலிஸ்ட் கட்சிக்குள்ளே பிளவுகளும் பூசல்களும் வலுத்து வருகின்றன. கட்சியே மெள்ளமெள்ள உடைபட்டு வருகிறது. நான் நடத்திச் செல்லுகிற பிரஜா சோஷியலிஸ்ட் கட்சியோடு சோஷியலிஸ்டு கட்சியையும் இணைத்தாக வேண்டும் என்று மனதார நம்புகிற பல தலைவர்கள் அதிலே இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட ஒரு இணைப்பு ஏற்பட்டுவிட்டால் என்ன ஆகும்? பிரஜா சோஷியலிஸ்ட் கட்சி மேலும் வளர்ச்சி பெறும்—வலிவு அடையும்! ஆனால் சோஷியலிஸ்ட் கட்சியின் கதி? இப்படி ஒரு கட்சி இருந்தது என்று, பிற்காலத்தில் வரலாற்று ஆசிரியர்கள் எழுதித்தான் வருங்கால சந்ததிகளுக்குத் தெரிந்திட வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்!

இந்த உண்மையினை நன்றாக உணர்ந்திருக்கின்ற நான், என் கட்சி கம்யூனிஸ்டுகளோடுசேர்ந்து பணியாற்றுவதை எப்படி விரும்புவேன்? இணங்கிப் பணியாற்றுவது வேறு — இணைந்துவிடுவதென்பது வேறு என்பதை நான் நன்றாக அறிவேன்!

ஆனாலும் இணைந்துவிடுவதிலே இருக்கின்ற ஆபத்து, இணங்கிப் பணியாற்றுவதிலேயும் இல்லாமல் போகவில்லை என்பதை இந்த நாட்டின் பத்து ஆண்டுக்கால வரலாறு எனக்குத் தெளிவாகக் காட்டி இருக்கிறது.

> மனித வாழ்க்கையிலும் வசந்தம், கோடை, இலையுதிர்காலம், குளிர்காலம் ஆகிய நான்கு பருவங்கள் உண்டு. இந்த நான்கு பருவங்களும் மனதைச் சுற்றியே வளருகின்றன. வசந்தத்தில் மனிதன் இன்ப வெறியோடு எதையும் ருசி பார்க்கிறான். அழகின் ரசத்தை அள்ளிப் பருகுகின்றான்; கோடையில் வசந்தத்தில் கனிந்த பழங்களைத் தின்று இன்புறுகிறான்; இலையுதிர் காலத்தில் சிந்தனையில் ஆழ்ந்து, மௌனியாகி நிற்கின்றான்; பனி காலத்தில் மெய் சுருங்கி மனம் சுருங்கி மறைகிறான்.

"சீக்கிய சிங்கம்" என்று பெயர் பெற்றிருக்கும் மாஸ்டர் தாராசிங், தேர்தல் காலத்தில் காங்கிரசோடு கைகோர்த்துக்கொண்டார். ஆனாலும் அந்த உறவு மனக்கசப்பிலே முடிந்ததே தவிர, மனப்பூர்வமான ஒருமைப்பாடாக அமைந்திடவில்லை! மனக்கசப்பிலே மாஸ்டர் தாராசிங், "காங்கிரஸ் திருடர் குகை—துரோகிகளின் இருப்பிடம்—பொய்யர்களின் புகலிடம்" என்றெல்லாம், எவ்வளவு குற்றம் சாட்ட முடியுமோ, அந்த அளவு சாட்டிவிட்டு, வெளியேறிவிட்டார். இணக்கம் பிணக்கிலே முடிவுற்றது. ஆனாலும் தாராசிங் அரசியல் வானில் இன்று பிரகாசித்துக் கொண்டிருப்பதற்குக் காரணம், அவர் என்ன சொன்னாலும், எதைச் செய்தாலும், அவரை ஏனென்று கேட்காமல் பினபற்றுகின்ற பல்லாயிரக் கணக்கான சீக்கியர்கள் அவர் கட்சியிலே இருக்கிறார்கள். அதே நிலையில் நானும் எந்தச்சமயத்திலும் அரசியலில் வாழ்ந்துவிட முடியும் என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? கம்யூனிஸ்டுக் கட்சி ஏற்கனவே வளர்ச்சி அடைந்துள்ள கட்சி; அந்தக் கட்சியோடு, குழந்தைப் பருவத்திலுள்ள என் கட்சி சேர்ந்தால், இணைந்தால் அல்லது இணங்கிப் பணியாற்றினால், அதற்குப் பிறகு என் கட்சியின் கதி என்ன ஆகுமென்று எவரும் ஆரூடம் கணித்திடத் தேவையில்லை!

கம்யூனிஸ்டுகளுடைய அழைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டால் என் கட்சி திரும்பவும் தலைதூக்க முடியுமா என்ற பயம் எனக்கு ஏற்படுவதற்கான முக்கிய காரணம், மற்றக் கட்சிகளைப் போலல்லாமல் என் கட்சியில் தலைவர்கள் அதிகம்—தொண்டர்கள் குறைவு! இப்போது எங்கள் முன்னாலே இருக்கிற முக்கிய பணி, தொண்டர்களைத் தேடித் திரிவதுதான்! எப்படியும் தொண்டர்களைத் தேடிப் பிடித்தாக வேண்டும்—பல்லாயிரக்கணக்கில் சேர்த்தாக வேண்டும் — என்ற ஆர்வத்தில் நாள் கையாளுகின்ற இராஜதந்திரம் ஒன்றிரண்டல்ல!

இந்தச் சமயத்தில் இருக்கின்ற கொஞ்சம் தொண்டர்களையும் கேரளத்தில், கம்யூனிஸ்டுகளோடு ஒத்துழைத்திடச் செய்தால், என்ன ஆகும்? ஒன்று அவர்கள் கட்சியை விட்டு வெளியேறிவிடக்கூடும்! இல்லையென்றால், கம்யூனிஸ்டுகளோடு சில ஆண்டுகள் கைகோர்த்துப் பணியாற்றிய பின்னாலே, பி. சோ. கட்சி அவர்களிடமிருந்து பிரியும்போது, அவர்கள் நம்மோடு வரமாட்டார்கள்—கம்யூனிஸ்டு இயக்கத்தோடு இணைந்துவிடக்கூடும்.

கேரளத்தில் மட்டுமே இத்தகையதோர் நிலை ஏற்படும் என்பதல்ல — மற்ற மாநிலங்களிலும் இந்த இக்கட்டானநிலை கட்சியைப் பாதிக்கக்கூடும்.

கொள்கைகளைத் தலைவர்கள் எளிதிலே மாற்றிக்கொள்ளலாம்; அது இராஜதந்திரம் என்றுகூட மற்றவர்களாலே கருதப்படலாம்! ஆனால் தொண்டர்கள் அப்படியல்லவே!

இவ்வளவையும் புரிந்துகொண்டிருக்கிற நான் கம்யூனிஸ்டுகளின் வேண்டுகோளுக்கு எப்படி இணங்குவேன்? சோஷியலிஸ்ட் கட்சி என்னோடு சேர்ந்தால் எனக்கு இலாபம் — கம்யூனிஸ்டு கட்சியோடு என் கட்சி இணைந்தால் எனக்கு நஷ்டம்! இந்த இலாப நஷ்டக் கணக்கைப் போடாமல் காலை நடந்துகொள்வேன்? ஆழந்தெரியாமல் காலை விட்டுவிட, நானென்ன இராஜதந்திரம் தெரியாதவனா?

நம்பூதிரிபாட்

நண்பர் டாங்கே மிக நல்லவர் என்றுபலராலேபோற்றப்படுபவர்—இல்லையென்று சொல்லவில்லை. கம்யூனிஸ்டு இயக்கத்திலே இருக்கின்ற ஒரு மிதவாதி என்பது, இயக்கத்திற்குள்ளே இருக்கின்ற கருத்து! அவருக்குப் பொதுவாக நாட்டில் ஓரளவு மதிப்பு இருக்கிறது என்பதையும் உணருகிறேன். ஆனால் அவர் பேசுகின்ற பேச்சுகளின் உட்கருத்தைத்தான் என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை!

இடதுசாரிக் கட்சிகள் எல்லாம் கேரளக் கம்யூனிஸ்டுகளோடு ஒத்துழைக்கவேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தது எந்த விதத்தில்அரசியல் அறிவுடைமை என்று நானும் திரும்பத் திரும்ப எண்ணிப்பார்க்கிறேன் - எனக்குப் புரிந்தபாடில்லை!

வேண்டுகோள் விடுப்பது என்றால், அந்த வேண்டுகோளுக்கு எத்தகைய பதில் கிடைக்கும், அந்த பதில் எந்த அளவு நமக்குச் சாதகமாகும் அல்லது பாதகமாகும்,என்பதையெல்லாம் முதலிலேயே எண்ணிப்பார்த்திட வேண்டும்! அப்படி எண்ணிப்பார்க்காததாலேதான் இத்தகையதொரு மகத்தான தவறு ஏற்பட்டிருக்கிறது!

எங்களோடு ஒத்துழையுங்கள் என்று டாங்கே கேட்க, இல்லையில்லை, முடியாது என்று அவர்கள் பதில்தர, இத்தகைய தரம் குறைந்த நிலையை ஏற்படுத்துவது அரசியலிலே எத்தனை பெரிய இழுக்கு! கம்யூனிஸ்டுக் கட்சிக்கு எவ்வளவு மகத்தான தோல்வி—மானக்கேடு!

இந்த நிலையிலே நான் கூட்டு அமைச்சரவை அமைப்பதாக உத்தேசமில்லை என்று டில்லியில் பேசியதில் தவறென்ன?

சூழ்நிலை இக்கட்டானதென்று சொல்வதற்கு இதுமட்டுமல்ல காரணம்! அப்படியே பிரஜா சோஷியலிஸ்டுகள், டாங்கேயின் வேண்டுகோளுக்கிணங்கிக் கூட்டு மந்திரிசபை அமைத்திட முன்வந்தாலும் பிரச்சினைகள் அதோடு தீர்ந்துவிடுவதில்லையே!

நிலச் சீர்திருத்தம், கல்வியிலே சீர்திருத்தம், சிறைச்சாலை சீர்திருத்தம், இத்தகைய மகத்தான காரியங்களைக் கேரளத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி சாதித்திருக்கிறது. இத்தகைய சாதனைகளுக்கெல்லாம் நல்ல பெயர் கம்யூனிஸ்டுக் கட்சியைத்தானே சாரும்!

அப்படியல்லாமல் கூட்டு மந்திரிசபை அமைக்கப்பட்டு, நம்மாலே தீட்டப்பட்டிருக்கின்ற சில திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் அந்த நல்ல பெயரில் பிரஜா சோஷியலிஸ்ட் கட்சிக்கும் பங்கு இல்லாமலா போகும்!

ஒன்றல்ல, பல கற்களை எறிந்து, கிடைத்த மாங்காய் ஒன்று—அதிலும் மற்றொருவருக்குப் பங்கு

என்றால், அதை நானும் கேரளக் கம்யூனிஸ்டுக் கட்சியும் எப்படி ஏற்றுக்கொள்வது? மத்திய கம்யூனிஸ்டுக் கட்சி, தன் திட்டத்தை மேலும் மேலும் வலியுறுத்திவிருந்தால், அதன் ஆணைக்குக் கீழ்ப்படிய மறுப்பதைத் தவிர வேறு வழிதான் என்ன? ஆனால் நல்லவேளையாகக் கம்யூனிஸ்டுக்கட்சியின் மத்தியக் குழு அவ்வாறு செய்யவில்லை! அதுவரை அந்தக் குழுவிற்கு என் நன்றி!

கூட்டு மந்திரி சபை அமைப்பதற்கு பிரஜா சோஷியலிஸ்டுகள் முன்வந்து, அவர்களும் நம்மோடு ஒத்துழைத்தால், இத்தகையதோர் இக்கட்டான நிலை! அவர்கள் நம்மோடு ஒத்துழைக்காமற் போனாலும் தொல்லைதான் — நம்மாலும் எதையும் சாதித்திட முடியாது! அப்போது அடுத்த பொதுத் தேர்தலில், எதைச் சொல்லி மக்களிடம் ஓட்டுக்கேட்பது?

இன்னொரு சிக்கலும் என் மனக்கண் முன்னாலே தோன்றுகிறது! கூட்டு மந்திரிசபை அமைத்திடப் போகிறோம் என்று நான் திட்டவட்டமாகக் கூறிவிட்டால், இப்போது கம்யூனிஸ்டுக் கட்சியோடு ஒத்துழைத்து வருகிற சுயேச்சையினர், தங்களுக்கு உரிய இடம் அந்த அமைச்சரவையிலே கிடைக்குமோ இல்லையோ என்ற அச்சத்தாலே, இனி ஒத்துழைக்காவிட்டால் என்ன செய்வது?

இந்தக் கெடுபிடியான சூழ்நிலையில்தான் நானொரு திட்டவட்டமான முடிவை—கூட்டுமந்திரிசபை என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதை-மிகத் தெளிவாகச் சொல்லிவிட்டேன்! இதிலே தவறுஎன்ன! இதைத் தவிர எந்தப் பாதை சிறந்ததாக இருக்கமுடியும்?

வி. ஆர். கிருஷ்ண ஐயர்

கூட்டு மந்திரிசபையாம், கூட்டு மந்திரிசபை! அதை மனதிலே வைத்துக்கொண்டு, கம்யூனிஸ்டு இயக்கத்தில் முக்கிய பொறுப்பிலே இருக்கிற டாங்கே, இடதுசாரிக் கட்சிகளுக்கு மறைமுகமாக அழைப்பு விடுக்கிறார்! அழைப்பு மறைமுகமாக இருந்தாலும், அதனுடைய உட்பொருள் என்னைப் போன்ற அரசியல் வாதிகளுக்குப் புரியாமலாபோகும்?

இப்போது கூட்டு மந்திரிசபை அமைத்திட முயலவேண்டிய தேவை என்ன? அப்படி அமைக்கப்பட்டால், சுயேச்சையாக நின்று தேர்தலிலே வெற்றிபெற்று, இன்று அமைச்சரவையிலே இருக்கிற என்னுடைய கதி என்ன?

எனக்கு அண்மைவரை ஏற்பட்டிருந்த பயமெல்லாம், அப்படி மந்திரிசபை அமைக்கப்பட்டால், நான் வெளியேற்றப்படக்கூடுமோ என்பதுதான்!

அப்படி நான் கணக்கிட்டதற்கும் காரணமுண்டு! இரண்டு மாதங்களுக்கு முன்னாலே ஹங்கேரியாவின் பழைய பிரதமர் நாகி தூக்கிலிடப்பட்டு, உலகே அமளி துமளியானபோது, நான் எதுவும் பேசாமல் இருந்திருக்கலாம்! ஆனால் நான், என் மனச்சாட்சி என்னைக் குடைந்துகொண்டே இருந்த காரணத்தால், வெளிப்படையாகச் சொல்லிவிட்டேன், நாகியைத் தூக்கிலிட்டது மகத்தான தவறு என்று! அது மட்டுமா சொன்னேன்?

"கம்யூனிஸ்டுகள் சமுதாயத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் கருத்துக்களை நான் ஏற்றுக்கொள்ளுகிறேனே தவிர, அவர்களது பொருளாதாரக் கொள்கைகள் எனக்கு உடன்பாடு உடையன அல்ல" என்றேன்! இதைவிடக்கம்யூனிஸ்டுகளுக்கு ஆத்திரமூட்டக் கூடிய செய்கை வேறென்ன வேண்டும்?

இப்படி நான் பேசிவிட்டதாலே தான் கூட்டு மந்திரிசபை பற்றிய பிரச்சினையும், அதிலே என் கதி என்ன ஆகும் என்ற குழப்பமான சூழ்நிலையும் ஏற்பட்டது!

ஆனால் நல்ல வேளையாக என் குழப்பமும் பயமும் தீரும் வகையில், கூட்டு மந்திரிசபை என்ற பேச்சுக்கே இடமில்லை என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார் நம்பூதிரிபாட்!

அவர் அப்படிச் சொன்னதற்குக் காரணம் எது வேண்டுமானாலும் இருக்கலாம்—அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை!

ஆனால் இப்போதைய நிலையில் ஒன்றுமட்டும் நிச்சயமாகப் புரிகிறது. கேரளத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு இன்று ஏற்பட்டிருக்கிற இக்கட்டான சூழ்நிலையில், அது என்னைப் போன்றவர்களை நிச்சயமாகப் பகைத்துக்கொள்ள முடியாது—அப்படிச்செய்வது இராஜதந்திரமல்ல என்பது அவர்களுக்கா தெரியாது? அரசியலில் தந்திரத்தையே முதலாக வைத்துக்கொண்டு, கட்சியை நடத்தி வருபவர்களல்லவா அவர்கள்!

கேரளத்தில் ஒரு பொது விசாரணை நடத்தப்படவேண்டும்—அரசாங்கம் மக்களின் உரிமைகளைச் சிதைக்கின்ற முறையிலே நடந்துகொண்டிருக்கிறதா இல்லையா என்று ஆராய்ச்சி நடத்தியாகவேண்டும்—என்றெல்லாம் அகில இந்தியாவிலும் பேசப்பட்டு வரும்போது, "அகில இந்தியா" என்ற வாதத்தையே மூலதனமாக வைத்து கம்யூனிஸ்டுக்கட்சி பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளத் தீவிரமாக முயன்று வருகிற இந்தச் சமயத்தில், கூட்டு மந்திரிசபை அமைக்கப்பட்டாலும் மந்திரிசபை பெரிதாக்கப்படுமே தவிர, என்னைப்போன்றவர்களை வெளியேற்றிவிடுவார்களோ என்று நான் இதுவரை கொண்டிருந்த பயம் எவ்வளவு தூரம் பொருளற்றது என்று எனக்கு மிக நன்றாகப் புரிகிறது!

இந்தக் கண்டத்தில் தப்பினேன்! இனி? காலம்தான் எனக்கு வழிகாட்ட வேண்டும்--என் அனுபவம்தான் கொஞ்சம் அரசியல் நுட்பத்தை, நாவடக்கத்தை எனக்குப் புகட்டவேண்டும்!

பகுத்தறிவும், ஆழ்ந்த யோசனையும் மனிதர்களுக்கு மிக முக்கியமான சாதனங்கள். கண் பார்வையில் நல்ல பொருள்களைப் பொறுக்கி எடுப்பது போலவே, ஆராய்ச்சி அறிவின் மூலம் சிறந்த கருத்துக்களை அறியலாம். கண்பார்வையை அனைவரும் விரும்புவது போலவே, அறிவு வளத்தையும் அனைவரும் விரும்புவது இயற்கையாகும்.

துறவு

காட்சி 1

இடம்:- வீதி.

இருப்போர்:- சித்தார்த்தர், அரண்மனைப் பணியாள், மற்றவர்கள்.

(சித்தார்த்தர் பணியாள் ஒருவனுடன் நகர்வலம் வருகிறார்; மாற்றுடையில். நகரிலே நடைபெறும் நானாவிதமான காட்சிகள் அவருக்குப் புதுமையாகக் காணப்படுகின்றன. வியப்புடன் தன் பணியாளனிடம் கேட்டு வருகிறார்.

ஊமையும் செவிடுமான ஒருவனைப் பொதுமக்கள் சிலர் கேலி செய்துகொண்டிருக்கின்றனர்.

ஒருவன் காதில் ஊதுகிறான். மற்றொருவன் அவன் காதருகே சென்று பெரிய சப்தமிடுகிறான். வேறொருவன், 'பே, பே' என்று செவிடும் ஊமையுமான அவன் பேசுவதுபோலப் பேசிக் காட்டுகிறான். ஒன்றும் புரியாத நிலையில் மிரள, மிரள விழிக்கிறான். சுற்றியுள்ள எல்லோரும் சிரிக்கிறார்கள். சித்தார்த்தர் இக்காட்சிகளைப் பார்த்து ஒன்றும் புரியாதவராய் பணியாளனைக் கேட்கிறார்.)

சித்:- என்னப்பா; அங்கே? ஒரே கூட்டம்... கூத்தும், கும்மாளமும்.

பணி:- (சென்று பார்த்து வந்து) ஊமையும், செவிடுமான ஒருவனிடம் பரிகாசம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

சித்:- (விளங்காமல்) ஊமையா...? செவிடா...? அப்படின்னா?

பணி:- அதாங்க; ஊமை என்றால் வாய் பேசாமை. செவிடு என்றால் காது கேளாமை.

சித்:- உம்... என்ன விசித்திரம்...! மனிதருக்குள்ளே இப்படிப்பட்டவர்கள்கூட இருக்கிறார்களா?

பணி:- ஏராளம் பேர் வேந்தே...

[சித்தார்த்தர் முகத்தில் சோகம்கவ்வுகிறது. அதற்குள் அந்த ஊமை, 'பே, பே' என்று கத்திக் கொண்டு ஓடிவிடுகிறான். அவனைத்தொடர்ந்து கூட்டத்தினரும்ஓடுகின்றனர். ஓடும் கூட்டத்தைச் சித்தார்த்தர் பார்த்தவண்ணம் இருக்கிறார் எதிர்ப்புறமிருந்து குருடன் ஒருவன் கோலைத் தட்டிக் கொண்டு வருகிறான்.]

குருடன்:- ஐயா......இந்தக் கண்ணற்ற கபோதியைப் பாருங்கள் ஐயா.........கதியற்ற எனக்குக்

கரந்தை-கணேசன்

கருணைகாட்டுங்கள்... உங்கள் குலம் வாழ எனக்கோர் உதவி செய்யுங்கள் ஐயா!

சித்:- குருடனை மேலும், கீழும் உற்றுப்பார்த்துவிட்டு; பணியாள் பக்கம் திரும்புகிறார்.

பணி:- இவன் குருடன்... பார்க்கும் பார்வை இழந்த பஞ்சை; இவனுக்கு இவ்வையகமே இருள்தான். உலகில் காணும் காட்சிகள் அறியான், மாடமாளிகையும், மயானமும் உருவத்தில் ஒன்றுதான் இவனுக்கு.

குரு:- ஆமய்யா...... என்னைப் பொறுத்தவரையில் எல்லாம் ஒன்றுதான். நான் காண்பது எங்குமே இருள்தான்.

சித்:- (பெருமூச்சிட்டு) விநோதமான உலகம்... (தன் கழுத்தில் உள்ள முத்துமாலையைக் கழற்றித் தருகிறார்)

பணி:- அரசே...! ஆபத்து...!

சித்:- ஆபத்தா...?

பணி:- ஆம் அரசே! தாங்கள் செய்ய எண்ணிய காரியம் மிக மிக ஆபத்தானது. இவ்வளவு விலை உயர்ந்த முத்துமாலை இந்தப் பராரியிடம் எப்படி வந்தது என்று எண்ணமாட்டார்களா? பார்ப்போர், குருடனே எங்கோ களவாடி வந்திருக்கிறான் என்றல்லவா எண்ணுவர். நல்லது செய்யப்போய் நாசம் விளைவிக்கக் கூடாதல்லவா...?

சித்:- (நிதானித்து) என்ன விசித்திரம்...

பணி:- (குருடனுக்குக்காசு கொடுக்கிறான்) இவ்வளவுதானா இன்னும் எவ்வளவோ; வாருங்கள்.

திருப்புக்காட்சி

[எதிரே ஒரு நொண்டி வருகிறான். அவனைக்கண்டு ஆச்சரியமுறுகிறார் சித்தார்த்தர்]

சித்:- மனிதர்களில் முடமானவர்கள் கூடவா இருக்கிறார்கள்?

மணி:- இதில் ஒன்றும் அதிசயமில்லையே அரசே! கையிழந்தோர், காலிழந்தோர் என உறுப்புக்கள் குறைந்தோர் உலகில் ஏராளம் பேர் இருக்கிறார்கள்.

சித்:- இவர்களும் ஆண்டவன் படைப்புத்தானே?

பணி:- ஆம், அரசே! அதில் கூடவா சந்தேகம்?

சித்:- ஆண்டவன் கூடவா அநீதியானவன்?

பணி:- அவனைக் குறைகூற நாம் யார்?

சித்:- அப்படியானால், அவனுடைய படைப்பிலே இத்தனை வேற்றுமைகள் ஏன்?

பணி:- அது மட்டுமா... அதோ பாருங்கள்.

[அவன் சுட்டிக்காட்டும் வழியில் ஒரு தொழுநோயாளன் இருக்கிறான்]

சித்:- ஐயோ! என்ன கோரம்; இப்படியும் ஒரு மனிதனா? இவனும் அவன் படைப்பா? சித்திரவதையல்லவா படுகிறான்.

பணி:- எல்லாம் அவனவன் வினை. வந்த வழி. முன் ஜென்மத்தில் பாபம் செய்திருப்பான; அதன் பலனை இப்போது அனுபவிக்கிறான். அதற்காக நாம் அனுதாபப்பட்டு என்ன செய்வது அரசே! அதிலும் தாங்கள் இந்த மண்டிலத்தின் மன்னர். மணிமுடியைத் தாங்கிக்கொண்டிருக்கும் மகுடாதிபதி. இதையெல்லாம் பார்த்து இப்படியெல்லாம் மனம் இளகக்கூடாது. எதையும் ஏற்கும் இதயம பெறவேண்டும். மனதை இரும்பாக்கிக்கொள்ள வேண்டும்.

[மற்றொரு புறத்திலிருந்து சவ ஊர்வலம் வருகிறது]

சித்:- (சற்றுநேரம் பார்த்துவிட்டு) என்ன அது? ஒரே கூட்டம். இடையில் நாலுபேர் எதையோ தூக்கிக்கொண்டு வருகிறார்கள். சோக கீதம் வேறு பின்னணி செய்கிறது.

பணி:- சவ ஊர்வலம் வேந்தே! சவ ஊர்வலம். புரியவில்லையா அரசே! உடலைவிட்டு உயிர் பிரிந்துவிட்டது. உடலைக் கொளுத்த எடுத்துச் செல்கிறார்கள். இறுதி மரியாதை செய்கிறார்கள்.

சித்:- இறப்பு என்பது மனிதனுக்குக் கூடவா இருக்கிறது?

பணி:- நிச்சயமாக இருக்கிறது இறைவனே! உலகிலே மனிதன் என்று பிறக்கிறானோ அன்றே இறப்பும் அவனைத் தொடருகிறது. மனிதன் எதை அடைந்தாலும் அடையாவிட்டாலும், இறுதியில் அவன் நிச்சயமாக இறப்பை அடைகிறான். பிறந்து, தவழ்ந்து எழுந்து, மழலையாடி, வளர்ந்து, வாலிபபருவம் எய்தி, வயோதிகப் பருவம் அடைந்து இறுதியில், இறக்கத்தான் செய்கிறான். அதனால்தான் 'வாழ்வது நிலையல்ல, சாவது சதம்' என்று மகான்கள் பலர் கூறினர்.

சித்:- பணியாளனே...! இருண்ட குகையிலே உலவிய எனக்கு ஒளி கிடைத்துவிட்டது. கண்கள் திறந்துவிட்டன. குவலயம் அறியாக் குருடனாக இருந்தேன் நான், இனியும் அப்படி இருப்பதற்கில்லை பரந்து. விரிந்த உலகைப் பார்க்கிறேன், அங்கே காணப்படும் பல விதமான கோணல் மாணல்களையும் பார்க்கிறேன. இனி எனக்கு யாரும் திரையிட முடியாது. வா...... போவோம்...மேலே போவோம். விபரீதம் நிறைந்த இந்த உலகின் விநோதங்களையெல்லாம காண்போம்.

பணி:- தாங்கள் அரசர்......

சித்:- அரசு தடையாக இருந்தால் அதையும் இழக்கத் தயார். இனி என் மனம பொறுக்காது. கண்ணும் கருத்தும் அற்ற கபோதி அல்லவே நான்.

திருப்புக் காட்சி

[ஏழைகள் வாழும் குடிசைகள் நிறைந்த இடத்திற்குச் செல்கிறார்கள்.]

பணி:- பாருங்கள் பாராளும் வேந்தே பாருங்கள்! அரச மாளிகை, அந்தப்புரம், பூங்காவனம், பொழுதுபோக்கு மண்டபம், மாடகூடம், கோட்டை கொத்தளம் என்பவைகளை மட்டுமே பார்த்துப் பார்த்துக் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளித்திருப்பீர்கள். அந்தக் கண்களால் இதையும் சற்றுப் பாருங்கள். அங்கே சங்கீதம் வேண்டுமென்றால் இசைவாணர்கள் பலர் வருவர் இசைபாட (ஒருபுறம் அழுகை) இங்கோ, அதோ கேட்கிறதே அழுகைக் குரல், அதுதான் சங்கீதம். அங்கே நடன மாதர்கள் பலருண்டு நாட்டியமாட (மற்றொரு புறம் சண்டை) இங்கோ இவர்களுடைய போராட்டம்தான் நாட்டியம். (வேறொருபுறம் காட்டி) அதோ பாருங்கள்! கையே தலையணையாய், கட்டாந்தரையே படுக்கையாய், வானமே கூரையாய் வாழும் வகையற்றவர்களை, இவர்களும் மனிதர்கள்தான். மகேசுவரனால் படைக்கப்பட்ட மனிதர்கள்தான். இத்தனைக்கும் இவர்கள் இல்லை என்றால் உலகிலே புதுமையே இல்லை என்று கூறிவிடலாம். மண் மேட்டைஎல்லாம் மாடமாளிகையாக்கியவர்கள். சிதைந்து கிடந்த இடங்களையெல்லாம் சித்திரப் பூஞ்சோலை ஆக்கியவர்கள். காடு வெட்டி, நிலந்திருத்தி கழனிகண்டு, அதிலே கதிர் காண வகை செய்தவர்கள், ஆனால்......இவர்கள் நிலையோ ......அரசே......!

சித்:- போதும்...! பணியாளனே ......! போதும்...! பகவானின படைப்பிலே இவ்வளவு பாரபட்சமா? உயர்வு தாழ்வுகளா? களிபபு ஓர்புறம், கண்ணீர் ஓர்புறமா? சீர் ஓர்புறம் சிதைவு ஓர்புறமா? எண்ணிப் பார்க்க முடியவில்லையே என்னால். இவைகளை மாற்றவே மார்க்கமில்லையா? இதுவா எல்லாம் வல்லவனின் செயல்? இருக்காது......ஒருக்காலும் இருக்காது. இதற்கு மாற்று ஏதாவது இருக்கவேண்டும். உலகம் தவறான வழியில் சென்று கொண்டிருக்கிறது. அதைத் தடுத்தாக வேண்டும்.

பணி:- வேந்தே...!

சித்:- விசாரம் என்னைச் சூழ்ந்துவிட்டது; வெற்றிக்கு வழி தேடியாகவேண்டும். வா, போவோம், அரண்மனைக்கு.

காட்சி 2

இடம்:- அந்தப்புரம்
இருப்போர்:- சித்தார்த்தர், மாயாதேவி,

(மாயாதேவி யாழ் மீட்டியபடியே காதல் தாபம் தொனிக்கப் பாடல் ஒன்றைப் பாடி முடிக்கிறாள். சித்தார்த்தர் மனச்சோர்வோடு வருகிறார்; அவர் மனதில் நகர்வலத்தில் கண்ட காட்சிகள் திரையிடுகின்றன.)

மாயா:- அத்தான்......

சித்:- (மௌனம்)

மாயா:- அத்தான்......

சித்:- ....

மாயா:- (எழுந்துசென்று தொட்டு) அத்தான......

சித்:- (திடுக்கிட்டு) ஹ-ம்...

மாயா:- என்றைக்கும் அன்பே எனகிற அழைப்பைக் கேட்டிருக்கிறேனே தவிர, இந்த மௌனத்தைக் கண்டதில்லையே அத்தான். ஏன் இப்படி மௌனி ஆனீர்கள். ஏதோ... தாங்கள் மனதில்......

சித்:- ஒரே குழப்பம்......

மாயா:- காரணம்...?

சித்:- காரணம்...!

மாயா:- என்ன அத்தான் மனதில் ஏதோ ஒன்றை நினைத்துக் கொண்டு மறைக்கப்பார்க்கிறீர்கள்.

சித்:- அப்படியெல்லாம் ஒன்றுமில்லை மாயா!

மாயா:- என்ன அத்தான் நெற்றிப் பிறையோ நீண்டு இல்லை, நெரிபடுகிறது. விழிகளோ மலரவில்லை, கூம்பிக்கிடக்கின்றன. அதரங்களோ வெடிக்கவில்லை அடைபட்டுக் கிடக்கின்றன. அழகு முகத்திலோ பொலிவு இல்லை; அசடு தட்டுகிறது. மனதிலே வேறு குழபபம்; இதெல்லாம் என்ன கண்ணாளா? மனச்சோர்வு நீங்க மார்க்கம் சொல்லட்டுமா?

சித்:- மார்க்கம்......

மாயா:- ஆமாம், அன்பரே......... இதோ......(யாழெடுத்து மீட்டுகிறாள்)

சித்:- (குடிசையில் அழும் சிறு குழந்தையின் ஓலம் காதில் கேட்கிறது.)

இதுவா மார்க்கம்......இது இல்லை மாயா இது இல்லை......

மாயா:- (திகைப்போய்) ஆ........ அத்தான......... தங்களை......... தங்களை.........

சித:- (நிதானித்து) ஒன்றுமில்லை மாயா, ஒனறுமில்லை. பயப்படாதே. எதையோ எண்ணிக் கொண்டு எதையோ கூறிவிட்டேன். எல்லாம் உறங்கினால் சரியாகிவிடும் வா......

திருப்புக் காட்சி

(மஞ்சத்தில் சென்று துஞ்சுகிறார்கள். சித்தார்த்தர் தூங்கும் தன் குழந்தையைப் பார்க்கிறார், மீண்டும் ஓலம் கேட்கிறது- மனம் பேதலிக்கிறது. மாலையில் கண்ட காட்சிகளும தான்கேட்ட கேள்விகளும் பணியாளர் அளித்த விடைகளும நினைவுக்கு வருகின்றன. புரண்டு புரண்டு படுக்கிறார்.)

பணியாள்குரல்:- அதோபாருங்கள் கையே தலையணையாய், கட்டாந்தரையே படுக்கையாய், வானமே கூரையாக வாழும் வகையற்றவர்களை. இவர்களும் மனிதர்கள்தான், மகேசுவரனால் படைக்கப்பட்ட மனிதர்கள்தான்.

சித்-குரல்:- ஆண்டவனுடைய படைப்பிலே இவ்வளவு பாரபட்சமா?

பணி-குரல்:- அதை கேட்க நாம், யார் அரசே...?

காடு வெட்டி, நிலந்திருத்தி, கழனி பல கண்டு அதிலே கதிர் காண வகை செய்தவர்கள், செய்பவர்கள். ஆனால்...இவர்களின் கதியோ...! அரசே...!

சித்-குரல்:- களிப்பு ஓர்புறம் கண்ணீர் ஓர்புறம் அழுகை......

[சடக்கென எழுகிறார். தன் மனைவியையும், மகனையும் ஒருமுறை துயரத்துடன் பார்க்கிறார். பின்னர் நிம்மதியற்ற நிலையில் உலாவுகிறார். மீண்டும் எண்ணங்கள் பின்னணி செய்கின்றன]

எவ்வளவோ மக்கள், கோடானுகோடிபேர்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, படுக்கப் பாயின்றி, குந்தக் குடிசையின்றி எச்சில்பட்ட மிச்சப் பண்டங்களே உணவாகவும், கிழிந்த கந்தல்களே உடையாகவும், மண் மாதாவின் மடியையே தங்களின் மாளிகையாகவும் கொண்டு வாழும்போது நமக்குமட்டுமென்ன அரண்மனை, அந்தப்புரம், ஆடம்பர வாழ்வு! சே...சுகபோகமே உருவான சொர்க்கலோகம் ஒருபுறம், துனபமே உருவானநரகலோகம் ஒருபுறம. உலகில் மனிதர்கள் வாழத்தான் பிறக்கிறார்கள், வதைபட இல்லையே? வாழ ஒரு கூட்டம், வதைபட ஒரு கூட்டம்! சீர்பெற ஒரு கூட்டம், சிதைவுற ஒருகூட்டம். உண்ண ஓர் கூட்டம், உழைக்க ஓர் கூட்டம், நிம்மதிபெற ஓர் கூட்டம், நிலைகுலைய ஓர் கூட்டம் என்று ஆண்டவன் பேதப்படுத்தி மனிதகுலத்தைப் படைத்திருக்கிறான். ஆண்டவன் படைப்பில் யாவரும் ஒன்று என்றல்லவா யாவரும் கூறுகின்றனர். அப்படி இருக்கும்பொழுது இத்தனை பெரிய ஏற்றத் தாழ்வுகள் எப்படி வந்தன?

குரல்:- அதுதான் அவரவர்கள் தலைவிதி. வந்த வழி.

சித். குரல்:- விதியா...?

ஒரு குரல்:- ஆம் அவரவர்கள்முன் வினைப்பயனுக்கு ஏற்பவிதி அமைகிறது.

சித். குரல்:- முன் வினைப்பயனா? அதற்குக் காரணம்?

குரல்:- முன்ஜென்மத்தில் அவனவன் செய்த நன்மை தீமையே அதற்குக் காரணம்.

சித். குரல்:- நன்மையும் தீமையும் அவர்கள் செய்வது எப்படி?

குரல்:- அவர்கள் மனத்தின் கட்டளையால்.

சித். குரல்:- மனத்திற்குக்கட்டளை இடுவது யார்?

குரல்:- அவரவர்களே.

சித். குரல்:- அப்படியாயின் அவரவர்களாகவே அமைத்துக் கொண்டார்களா அவரவர்களை?

குரல்:- அவர்கள்தான் ஆண்டவனின் படைப்பாயிற்றே?

சித். குரல்:- படைக்கும் ஆண்டவன் ஏன் அவர்களை ஏறுமாறு கொண்டவர்களாகப் படைக்க வேண்டும்? எல்லோரையும் நல்லவர்களாகப் படைக்கக் கூடாதா? அல்லது அப்படி ஆண்டவனால் படைக்க முடியாதா?

குரல்:- முடியாது என்பதல்ல, முடியும். அவனால் ஆகாதது எது? அணுவிலிருந்து அண்ட சராசரங்கள் அத்தனையுமே அவனால் ஆனவைகள். ஆக்கவும் அழிக்கவும வல்லவன் அவன். போக்கவும் புதுப்பிக்கவும் வல்லவன் அவன. அப்படியிருக்க அவனால் ஆகாதது உண்டா? இதெல்லாம் அவனுடைய திருவிளையாடல்கள். புனிதமான லீலாவிநோதங்கள். அவ்வளவு தான்.

சித். குரல்:- ஆண்டவனுடைய ஆசாபாசங்களுக்கு அபலைகளா

ஆட்படவேண்டும்? ஏழைகளா இடர்ப்படவேண்டும்? இதுதான் அவனுடைய முறை, வழி, வகை என்றால்; அப்படி முறையுடைய, வழியுடைய, வகையுடைய ஆண்டவன் தேவை இல்லை; ஒருக்காலும் தேவை இல்லை.

குரல்:- நீயார் அதைச் சொல்ல? உன் கண்களை அகல விரித்து (காட்சிகளாக வருகின்றன) பார்த்து கிடக்கும் விரிந்த உலகைப்பார். அங்கே பரமனுக்குச் செய்யப்படும் பூஜாவினோதங்களைக் காண். நீ யாருக்காகப் பரிந்து பேசுகிறாயோ, எவருக்காக ஆண்டவனையே சந்தேகித்து அவனிடம் வினாதொடுக்கத் துணிந்தாயோ, அவர்கள் ஏழைகள், இல்லாதவர்கள், துன்பச் சூறுவளியால் அல்லலும் அவதியும் படுபவர்கள். பாசுரம்பாடிப் பரமனைத் தொழுவதைப்பார். உனக்கு ஏன இந்த வெட்டிவேலை? ஆளப் பிறந்தவன்நீ! அரசமுடி உன்னை நாடிக் கிடக்கிறது. யாரும் தேடிப் பெற அரிதான போக வாழ்வை இழக்கத் துணியாதே போ...! பொன்னார் மேனியாம் புதுப்பருவ மங்கை உன்னைக் கூடக் காத்துக் கிடக்கிருள். மண், பெண், பொன்மட்டுமா, மணிமுடிவேறு உனக்கு. போ... போ...போய்ப் படுத்துக்கொள்.

சித்:- (மனதைச் சமாளித்துக் கொண்டு) சே...இனியும் இங்கிருப்பது தவறு. இன்றிரவே இப்பொழுதே புறப்பட வேண்டும், இல்லாவிட்டால் மனம் மாறிவிடும். ஏழையின் கண்ணீர் நமக்குப் பன்னீராகிவிடும். சமுதாயம் மேலும் சகதி நிறைந்த சதுப்பு நிலமாக இருக்கக் கூடாது. புதுமை பூக்கும் புன்னகைப் பூங்காவாக மாற வேண்டும். என்ன ஆனாலும் இவ்வுலகில் இன்பமே எழில் பெற வழிதேட வேண்டும். அதற்கு ஒரேவழி......உலக பந்தம், பாசம ஏதும் அற்ற இடத்திற்குச்சென்று புதியதோர் பாதை காண்பதுதான். அதற்குத் தேவை...?...துறவு........ துறவு...

(என்றபடியே வெளியேறுகிருர்.)

★

அறியாமை!

பொ. மறைமலை

மாடமாளிகையும் கூடகோபுரமும் மாண்புடன் மிளிர்ந்திருக்கும் தோற்றம். பொலிவுடன் அமைந்திருக்கும் பரந்த வீதிகள். வீதிகள்தோறும் எழில் மாடம் அமைந்த எழடுக்கு வீடுகள். சிறு சிறு குடில்கள். வீட்டுக்குள்ளே அடைபட்டுக் கிடக்கும் பருவப்பாவையர்கள். அறிவும் திருவும் அமைந்த அணங்குகள்.

அன்பும் பண்பும் அழகும் படைத்த வீரப்பெருமகன் சேரன் வருகிருன். அவன் உலாவரும் காட்சி காணக் கண்கள் ஆயிரம் வேண்டும். மலையென அசைந்து வரும் களிறின் மீது சேரன் குன்றிலிட்ட விளக்குப்போல வருகிருன். பரந்த மார்பிலேபுரளும் மணிமாலைகள் ஒளி வீசித் திகழ்ந்தன.

சேரனைக் காணும் ஆவலுடன் சேல்விழியர் மாடிமீது நின்றனர். அவனைக்காண வேண்டும் என்ற ஒரே எண்ணத்திறல் அவன் அழகில் மயங்கி நின்ருள் ஒருத்தி. அவன் திருவுருவத்தைத் தன் இதயத்திரையிலே தீட்டிக்கொண்டாள்.

இரவிலும் பகலிலும் சேரனையே எண்ணி ஒரே ஏக்கம். தூக்கமே இல்லை. சேரனை அடைய வேண்டும் என்ற ஊக்கத்தில் உடல் தளர்ந்து நிற்கும் நிலை.

மகளின் மனமாற்றத்தைக் கண்டாள் அருமை அன்னை. ஆனல் அறியாமை சூழப்பெற்ற பேதை அன்னையவள்! அன்னை பதை பதைத்தாள். மகளின் வாட்டத்தைப் போக்க முற்பட்டாள். மகளின் உளக்கருத்தை அவள்பேதை உள்ளம் எங்கே அறியப்போகிறது?

வயதான கிழவியொருத்தியை அழைத்து மகளின் மனமாற்றத்தின் காரணம் என்ன என வினவினள்.

பழமையிலே,மூடநம்பிக்கையிலே ஊறிப்போன அம்மூதாட்டி இல்லாததையெல்லாம் கூறினள். இக்காலக் கிழவிகளுக்கும் இதேவேலை தான் என்பதைநாம் மறந்துவிடக் கூடாது. சாதாரணமாக நோய் வந்துவிட்டால் அதற்கு வைத்தியன் தேவைப்படமாட்டான்

பூசை செய்; பலிகொடு! நோய் தீரும். நோய்க்கும் கடவுளுக்கும் என்ன சம்பந்தம்? அறியாமையிலும் அறியாமை இது! அது போல அக்கிழவியும் கூற ஆரம்பித்தாள்.

"உன் மகளுக்குப் பேய்பிடித்து விட்டது...!"

"என்ன? பேயா...?"

"ஆமாம்! பின் என்னவாம்? இவள் இப்படி உருக்குலையக் காரணம் பேய்தான்! இதில் சந்தேகமில்லை, நான் சொல்வதைக் கேள்...!"

"சொல்லுங்கள் சொல்லுங்கள். இப்போதே செய்கிறேன்! என்ன செய்யவேண்டும்? ஐயோ! மகளே!"

"கவலைப்படாதே! தோட்டத்திலே மரத்தின் கீழ் சாணம் கொண்டு நன்றாக மெழுகிச்சுத்தம் செய். பிறகு வெள்ளாட்டின் இரத்தத்தைத் தெளித்து, ஒரு குடத்தில் தண்ணீருடன் மாவிலையை வை. உன் பெண்ணை அந்த இடத்தில் உட்காரவைத்து குடத்துத் தண்ணீரை அவள் தலையில் ஊற்று! பேய் தானகப் போய்விடும்...!"

"உண்மையாகவா? இதோ இப்போதே செய்கிறேன்...!" என்று கூறிக்கொண்டு அவள் ஓடினள்.

இதைக்கேட்ட அப்பெண் தனக்குள் தன் அன்னையின் அறியாமையை எண்ணி நகைத்துக் கொண்டாள்.

இவைகளைக் கண்ட அவள் தோழி, "ஏண்டி! என்ன இவைகளெல்லாம், ஒரே அமர்க்களமாயிருக்கிறதே!"

"எல்லாம் என் அன்னையின் அறியாமை! என் உள்ளத்தை அறியாத அவள் உருப்படாத காரியத்தில் இறங்கியிருக்கிருள். என் செய்வேன்? என் உள்ளத்திலே குடிகொண்ட என் காதலன் வராமல், என் காதல் நோய் "நீராட்டி நீங்கென்ருல் நீங்குமோ"

"காராட்டு உதிரம் நூஉய் அன்னை
நான் இறைத்து
நீராட்டி நீங்கென்ருல் நீங்குமோ—
போராட்டு
வென்று களங் கொண்ட வெஞ்சின
வேல் கோதைக்கு என்
நெஞ்சு களங் கொண்ட நோய்!"

எனவரும்முத்தொள்ளாயிரப்பாட்டால் அவள் அன்னையின் அறியாமையை அறியலாம்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

துள்ளியெழுந்து 'கெண்டை கெண்டை' என்று கூறிக்கொண்டே, கரையை நோக்கி ஓடினள். கரை சேர்ந்து பார்த்த கன்னி கலக்கமுற்ருள். கயலிரண்டையும் காணவில்லையே! என்ன மாயம் அது? அவளறியாள் தன் கண்ணின் சாயலே, நீரிலே தான் கண்ட கயலிரண்டும் என்பதை.

நேரே நடக்கலுற்ருள் வீடு நோக்கி. சிறிது தூரமே சென்றிருப்பாள். சம்பு மரமொன்று ஓங்கி வளர்ந்திருந்தது. அதன் அருகிலேயே முல்லைக்கொடி ஒன்று வெற்றிப் பெருமிதத்துடன் புது மலர்களைப் பூத்துக்கொட்டி நின்றது. மலர்க்கொடி கண்ட மங்கை சற்றே நின்ருள். அழகு முல்லையின் மணத்தை அப்படியே முகர்ந்தாள் அவ்வளவுதான்......! கருத்திலே சிந்தித்த காதலன் கண் முன்னேயே வந்துவிட்டான்...

"அத்தான்...! பூத்துக் குலுங்கும் புது மலர்களைப் பார்த்தீர்களா..."

"எங்கே...!"

"இதோ..." என்று கொய்யாத மலர்களைத் தன் கையாலணைத்துக் காட்டினள்.

"அதிலென்ன இருக்கிறது குறிப்பிடுமளவுக்கு?"

"அதிலென்னவா......?" அணிவகுத்து நிற்கும் வீரர்களைப்போல வரிசையாய்த் திகழும் இம்மலர்க்கொத்துத் தங்களுக்கு இன்பந் தரவில்லையா?

"சரிதான் கண்ணே! அவையென்ன, உனது முத்துப் பற்களின் மோகனத்தைவிடச் சிறந்ததா என்ன?

"களுக்..." சிரித்துவிட்டாளவள் வாய்விட்டே.

தலை நிலம் நோக்க விலகிச்சென்ருள். சம்புமரத்தினமீது சாய்ந்து நின்று மேலே பார்த்தாள். கிளையொன்றில் வெண் புறவு இரண்டு காதல்மொழிபேசிக் களிப்புற்றிருந்தன. அவ்வின்பக்காட்சி தன தனிமைத்துயரை அதிகப்படுத்த, அக்காட்சியைக் காணப்பொருது, சட்டெனக் கீழே பார்த்தாள்.

கனி குலுங்கும் சம்பு மரத்தில் சாய்ந்து நின்ற தலைவியின் கண்களில் பட்டது, மரகத மணியென ஒளி திகழும் பொருளொன்று; சம்புவின் கனி! ஆம் அப்படித்தான்பட்டது அவள் கண்களுக்கு.

சம்புவின் கனியை உண்ணலாமெனத் தன்கையாலெடுத்து மெதுவாகப் பார்த்தாள்.

சோலைமலர்த் தேனை வேண்டுமளவு குடித்துவிட்டு மயங்கிக் கிடந்த அவ்வண்டு, மங்கையின் மலர்க்கரம் தீண்டிய உணர்விலே, எங்கிருக்கிறேம் என்று கண் விழித்துப் பார்த்தது. தலைவியின் தளிர்க்கரம் பார்த்த வண்டு, தாமரை மலராகவே எண்ணிவிட்டது, மேலே நோக்கிற்று. தலைவியின் பிறைநுதல் கூடிய மதிவதனம். கார்மேகமன்ன கரிய குழல்.

கண் விழித்து பார்த்த வண்டினது போதை போய்விட்டது—மயக்கம் தெளிந்துவிட்டது!

ஐயயோ...! கார்மேகத்திடையே முழுமதி வந்துவிட்டதே! இன்னும் தாமரையிலேயே தங்கியிருக்கிறேமே! பகலவனைக் கண்டு மலரும் தாமரை, நிலவைக் கண்டு குவிந்துவிடுமே..............என்று துணுக்குற்றது.

"விர்ர்ர்........."

தியங்கிக் கிடந்த வண்டு மயக்கம் தெளிந்து பறந்துவிட்டது. கன்னியவள் கருவண்டைக் கனி என்று கையிலெடுத்ததும், அது காற்றிலே பறந்ததும் கண நேரத்தில் நடந்துவிட்ட நிகழ்ச்சி! கையிலெடுத்த கனி பறப்பதைப் பார்த்த தலைவி மயக்கமுறும் நிலைக்குப் பயந்துவிட்டாள். கையிடைப்பட்ட கயல் கரைவந்து பார்த்ததும் காணவில்லை அங்கு. கையிலெடுத்த கனியும் காற்றில் பறக்கிறது இங்கு.

ஐயமுற்று தலைவியின் கொவ்வைக்கனி இதழ்கள் பரபரப்புடன் அசைந்தன. "போனது வண்டா? அல்லது பழந்தான் பறந்ததா?" என்னும் வார்த்தைகள் வெளி வந்தன.

இதோ அந்தப் புலவனது வரிகளிலேயே......

தண்டுலாவிய தாமரை பொய்கையில்
மொண்டு நீரை முகந்தரு கேந்திஞள்,
கெண்டைகெண்டை யென்றக்கரை யேறிஞள்
கெண்டை காண்கிலள் நின்றுகலங்கிஞள்.

*

தேனுகர் வண்டு மதுதனை யுண்டு
தியங்கியே கிடந்ததைக் கண்டு
தானதை சம்பு வின்கனி என்று
தடங்கையி லெடுத்துமுன் பார்த்தாள்
வானுறு மதியம் வந்ததென் றெண்ணி
மலர்க்கரம் குவியுமென் றஞ்சி
போனது வண்டோ பறந்ததோ பழந்தான்
புதுமையே யிதுவெனப் புகன்ருள்.

*

2-ம் பக்கத் தொடர்ச்சி

நாளடைவில் ஏற்பட்ட விளைவுகளையும் வரலாறு படித்தவர்கள் நன்கு அறிவர்.

தமிழ்மொழியின் சொற்களை வடமொழி இரவல் பெற்றதோடு தன் மொழிக்கு உரியதாக்கிக் கொண்டது என்றும், அம்மாதிரியான நானூற்று இருபது சொற்களை எடுத்துக்காட்டுகிருர் கன்னட அகராதியைத் தொகுத்த டாக்டர் கிற்றல்.

'கிருத்து பிறப்பதற்கு முன்னும் ஆரியர் வருகைக்கு முன்னும் திராவிட இனம் பொருளாதார இலக்கிய திருமண முறைகளில் நன்கு வளர்ச்சி பெற்றிருந்தது' என்றும், இதன் மூலம் தான் ஆரிய நாகரிகம் செழிப்பும் ஆழமும் எய்தியது' என்றும், 'சம்கிருதம் என்ருல் நன்ருகச் செப்பனிடப்பட்டதென்றும், 'திராவிடர் ஒரே இனம் தென்னகம் முழுதும் பரவி இருந்தனர்' என்றும், டாக்டர் ஏ. கே. ஆனந்த குமாரசாமி, தாகூர், சட்டம் பி. சாமி, க. சி. கந்தையா போன்ற சிறந்த ஆராய்ச்சியாளர்கள் தெள்ளத் தெளிய விளக்கி இருக்கிருர்கள்.

இவற்றையெல்லாம் எடுத்துக் காட்டித்தான் நாமும் சொல்கிறேம். நம்முடைய குரலை அசட்டை செய்தாலும், ஆராய்ச்சியாளரின் சொல்லுக்கும் எழுத்துக்கும் நல்லறிவாளர்கள மதிபபளிக்க வேண்டும் என்பதாக.

பழம்பெருமை வாய்ந்த நம்நாடு அடிமைத்தளையால் கட்டப்பட்டிருக்கிறது. பண்பாடு சிறந்த திராவிட இனம் பர்மாவிலும், சிங்கப்பூரிலும், சிங்களத்திலுமசிக்கிச் சீரழிகிறது. மற்றைய மொழிகளுக்கு வழிகாட்டிய தமிழ்மொழி—திராவிட மொழி வளர்ச்சி குன்றி இருக்கிறது.

எனவே பொன்முடி புகட்டும் பாடத்தைப் படித்தாவது ஆட்சியாளர்களைக் கடமையைச் செய்யுஙகள் என்று கேட்டுக் கொள்கிறேம். அத்துடன் தாயகத்தை—திராவிடத்தைக் காத்தல் காளையரின் கடமை என்று கூறி "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற பொனமொழிக் கேற்பப் பணியாற்றுவதையே கடமையாகக்கொண்டு செயல்படுவோமாக.

★

புதுவயல் ★ காண அழைக்கிறார்!

உணவுப் பிரச்னை ஒவ்வொரு நாளும் வளர்ந்துகொண்டே போகிறது — பத்தாண்டுகளுக்கு முன்பிருந்ததைவிட இப்போது பல மடங்காக மக்கள் தொகை பெருகிவிட்டது—உலகத்தில் மூன்று பாகம் நீர், ஒரு பாகமட்டுமே நிலம் —அந்த நிலத்திலும் பாலைவேறு உளது, பண்படுத்த இயலாத மலைகள் உள்ளன, மணல் வெளிகள் உண்டு, இவைகள் போக எஞ்சிடும் நிலம் கொஞ்சம்!—அதிலும் காடுகள் பல, அந்தக் காடுகளை அழித்து கழனிகள் ஆக்கலாமா, இருக்கின்ற வயல்களிலே இன்னும் அதிகம் உற்பத்தியாக்க என்னென்ன செய்யலாம் என்று உலக அறிஞர்கள், கவலை தெரிவிக்கின்ற நேரம் இது! இச்சமயத்திலே, புதியதொரு 'வயல்' காண அழைக்கிறது, 'கல்கி' ஏடு!!

தங்கவயலா, வெள்ளிவயலா, இரண்டையும் மிஞ்சுமளவில் இடம்பெற்றுவரும் இரும்பு வயலா—காலைவிளைத்தால் மாலை விளையும் அற்புத வயலோ,— கரும்பு போட்டால் சர்க்கரைதரும் அதிசய வயலா—எதைக் காண அழைக்கிறார், இவ்வளவு ஆர்வத்தோடு என்று கேட்கத் தோன்றும். ஏனெனில், சின்னாட்களுக்கு முன், இந்த உபகண்டத்து அறிஞர்களைக்கொண்டு, இந்திய அரசின் நாணயச்செலாவணி குறித்து அலசி அலசி ஆராய்ச்சிக் கட்டுரைகள் பெற்று, நாட்டுக்கு அளித்த ஏடு, அது. புதுவயல் காண அழைக்கிறதென்றதும்,

நிருபர்கள்!!

சென்னை செப். 8

சைதன்ய மடத் தலைவரான திரிதண்டி சுவாமி, இன்று இங்கு வந்தார். அவர் நிருபர்கள் கூட்டம் ஒன்று கூட்டி, அவர்களிடம் பேசினார். பல கேள்விகளுக்குப் பதில் அளித்தார்.

அரங்கண்ணல்

நாட்டின் பொருளாதாரச் சிக்கல் ஒழியவும், பசிப்பஞ்சம் அழியவுமான ஒரு வயலைக்கண்டு சொல்கிறதுபோலும், என்றே எண்ணத் தோன்றும். பள்ளியில் சூரிய இரகணம் எப்படி ஏற்படுகிறது என்பதை விளக்கிவிட்டு, வீட்டுக்குப் போனதும் சூரியனை ராகு விழுங்குவதால் உண்டாவதே இரகணம் என்று கூறிக் கூறி நெஞ்சுரம் கொண்டவர்களால் உலாவவிடப்படும் ஏடல்லவா அது? அதனால், பொருளாதாரம்பற்றிய புள்ளி விபரங்களைக் காட்டிய அந்த ஏடு, இப்போது 'போகிற கதிக்கு புண்யம்' தேடச் சொல்கிறது! மக்களை, பக்தி வயலுக்கு அழைக்கிறது! திகைக்காதீர்கள், பக்திவயலாம்— அந்த வயலில் விளைந்த கருத்துக் கதிர்களை அறுத்தெடுத்து வழங்கவிருக்கிறதாம், தொடர்ந்து! அந்தக் கதிர்களைத் தின்றால் பசி அடங்குமா — கொதித்து அழும் குழந்தைக்கு "ஆஸ்டர் மில்க்" டின் கிடைத்துவிடுமா—அந்நியச் செலாவணி நெருக்கடி ஒழியுமா, என்று கேட்காதீர்கள். எங்கே அரசியலையும் பொருளாதாரத்தையும் அதிகம் சொன்னால் "ஆபத்து" உண்டாகிவிடுமோ என்று கருதி, உடனேயே அழைக்கிறது மக்களை, பக்திவயல் காணச் சொல்லி!!

'பௌராணிகர்' என்பார், பக்தி வயலை உழுது உழுது. அதில் கிடைக்கும் செல்வங்களை, அளிப்பாராம் நாட்டுக்கு. ஏரோட்டும் ஏகாம்பரம், காரோட்டும் கந்தன், மளிகைக்கடை மன்னார், மருத்துவர் மாரிமுத்து, இவர்களில் யாருக்கு என்ன இலாபம், இந்த வயலால்—அவர்களுக்கு ஏனிந்த வேதாந்த விசாரணை—என்று கோபத்தோடு. நீங்கள் கேட்பது, தெரிகிறது. என்ன செய்வது? நல்வழியை ஒருசமயமும், உடனடியாகவே கேணல் வழியையும் கூறிக் கூறித் திக்குமுக்காடச் செய்யும் திருப்பணிதானே, ஆச்சாரியார் அவர்களின் திருத்தொண்டாயிருந்து வருகிறது! அவரது ஆதரவு பெற்ற ஏடுதானே அது'!

ஆங்கிலம்பற்றி, குறள் தீட்டிக் காட்டுகிறார்—புதுப்பா செய்கிறார்—அதன் அருமை பெருமை பற்

றிப் பேசுகிறார்—அந்த ஆங்கிலத்தின் மூலம் வளர்ந்துள்ள அறிவு வளர்ச்சியை ஆதாரத்துக்கு அடுக்குகிறார் — ஆனால், அந்த ஆங்கிலத்தை மூல மொழியாகக் கொண்ட மேலைநாடுகள், என்னென்ன சாதித்துள்ளன, எப்பேற்பட்ட புதுமைகளை வாரி வாரி வழங்கியுள்ளன, அந்நாடுகளிலே 'சரஸ்வதி' இருக்கிறாளா, 'இலட்சுமி' படத்துக்குப் பூஜை நடத்துகிறார்களா என்கிற விபரத்தை மட்டும் சொல்ல மறுக்கிறார். தெரியாது என்பதல்ல; தெரியும். அதைச் சொன்னால்! பிறகு வேதாந்தம் ஏன், வேண்டாத விழாக்களேன், வீண் வம்பேன், என்று 'கேள்விகள் கிளம்பி "எங்கேயோ" இழுத்துச் சென்றுவிடுமே என்கிற அச்சத்தால், பேசிய பேச்சு உலருமுன்பே அழைக்கிறார் அனைவரையும் பக்தி வயலுக்கு! பாரீர், பக்தியின் பெருமையை, அறிமின் ஆன்மீக உண்மையை, கழிமின் கடவுள் திருநாமம் சொல்லி நாட்களை என்று 'பஜனை' செய்ய நாட்டை அழைக்கிறார்!!

ஆச்சாரியார்மட்டும்என்பதல்ல' அவர்போலப் புதுமைக்கும் பழைமைக்கும் இடையிலே தத்தளித்துக் கொண்டிருப்பவர்களால், எங்கே இப்படிச் சொன்னால் புதுமை வளர்ந்துவிடுமோ, அதைச்சொல்லாமல் விட்டால் நீதியை உரைக்காத பழி சாருமோ என்று அச்சத்துக்கும் ஆசைக்குமிடையிலே ஊசலாடிக்கொண்டிருப்பவர்களால், ஒரு நிலையில் இருக்க முடியவில்லை. மின்சார விளக்கிலிருந்துகொண்டே, அகல் விளக்கின் பெருமையைச் சொல்கிறார்! வளரும் விஞ்ஞானம்பற்றி விவரித்துக்கொண்டே, வேதாந்த விசாரணைக்கு அழைக்கிறார்!!

காவியுடுத்தி, கமண்டலமேந்தி, கானகம் ஏகி, "கந்தா! கடம்பா! கச்சி ஏகம்பா!", என்று துதிப்பவர்களைப்பற்றி, ஒரே வரியில், 'அவர்கள் விருப்பம்' என்று சொல்லிவிடலாம். இவர்கள், கந்தனையும் கச்சி ஏகம்பனையும் துதிக்கத் தவறுவதில்லை — காற்றில் பறக்கும் விமானத்தின் சிறப்பையும், கடுகுக்கும் நுண்ணியதான அணுவைபபற்றியும் அலசத் தயங்குவதில்லை.

ஒரு விந்தையான சேதி கேளுங்கள்—ஒருவர் உடுப்பி பெஜாவர் மடத்து அதிபதி, இன்னொருவர் கௌடியா மடத்து அதிபதி, மூன்றாமவர் சூரத் கோசுவாமி மடாதிபதி — இம்மூவரும் சென்னைக்கு வந்திருக்கிறார்கள், இந்த கிழமை. ஒவ்வொருவரும், ஒவ்வொருவகையில், பக்திமார்க்கத்தில் ஈடுபட்டவர்கள்; மதத்தலைவர்கள். சென்னைக்கு இவர்கள் 'விஜயம்' செய்திருப்பதன் நோக்கம், இந்து மதாச்சாரத்தின் அருமை பெருமைகளைபபற்றித் தங்கள் சீடகோடிகளுக்குச் செப்பி, அதன்பெருமைகளை நிலைநாட்டுவதுதான்.

"தர்மம் என்றால் என்ன? பக்தியில் தான் இருக்கிறது, தர்மம். பக்தி என்றால் என்ன? ஆன்மாவை ஆண்டவனிடம் அர்ப்பணிப்பது. எப்படி அர்ப்பணிப்பது? ஆசைகளைத் துறந்து, இகலோக இச்சைகளை மறந்து, ஈசனையே சதா நினைப்பது."

"எத்தனை மட ஆதீனங்கள், வெவ்வேறு பெயர்களில் விளங்கினாலும்; அவைகளெல்லாம் ஒரே பாதையைத்தான் காட்டுகின்றன. என்ன பாதை அது? அதுதான், ஈசன் திருவடியை அடையும் பாதை."

"சைதன்ய மகாப்பிரபு என்ன சொன்னார்? கலாச்சாரம் கலாச்சாரம் என்கிறீர்களே பாபிகளே, அது, மதத்தில்தானடா உள்ளது! மதத்தை இழந்தால் கலாச்சாரம் அழிந்துபோகும். நாசமாய்ப் போய்விடும்."

இப்படிப்பட்ட, 'அரியபெரிய புதிய கருத்துக்களை,' உதிர்த்திருக்கிறார்கள். அவர்கள் உதிர்ப்பதையும், அதை வரவேற்போர் ஏந்தி ரசிப்பதையும்பற்றி நாம் கவலைப்படவில்லை. ஆனால், இந்த உபன்யாசங்களை — ஆசையை அகற்று, ஆண்டவனை நினை, மதமே நல்வழி எனும் உபதேசங்களை, அவர்கள் எங்கேயிருந்து சொன்னார்கள் தெரியுமோ? மடாதிபதிகள், ஆண்டவனது ஆலயங்

ஒரு சித்தர்

சத்தியமின்றி, தனி ஞான
மின்றி பக்தியுமின்றி, பரன்
உண்மையன்றி ஊன்பித்தேறும்
மூடர் பிராமணர்தாம் அன்றே.

களிலே, பூஜைகளை [illegible] முடித்துவிட்டு, ஆசார அனுஷ்டானம் இம்மியளவும் குறையாது, எல்லோரும் பணிந்து நின்று கேட்கும்படியான மேடையிலேயிருந்து தானே மெய்ஞ்ஞானத்தைப் போதிப்பது வழக்கம் என்று எண்ணுவீர்கள்! அப்படி அவர்கள் போதனையைத் துவங்குமுன், புண்யம்விரும்பிகள், மதத்தலைவர்களுக்குக் காணிக்கையும் கர்ப்பூர ஆராதனையும் செய்வதுகூட வழக்கம்தான்!! ஆனால், சென்னைக்குவந்துள்ள மதாச்சாரியார்கள், எங்கேயிருந்து, இந்த உபன்யாசங்களை அருளினர் தெரியுமோ? மேலைநாட்டுப் பாணியில், பலதரத்தவரும், பலமாதிரியான காரியங்களுக்கு வந்து தங்கும் விடுதியாக விளங்கும் தாசப்பிரகாஷ் ஓட்டலில்!! பொய்யல்ல, உண்மை — செப்டம்பர் ஒன்பதாம் தேதியன்று நிகழ்ந்தது. சர். சி. பி. இராமசாமி அய்யர் தலைமை வகிக்க, பக்திப்பாலம் கட்டுவதில் தனது ஈடுபாட்டை உணர்த்திக்கொள்ளத் தவறாத அமைச்சர் சுப்ரமணியம் முன்னிலையில், சட்டசபைத் தலைவர் டாக்டர் கிருஷ்ணாராவ் வரவேற்க, இந்த வைபவம் நடந்திருக்கிறது. ஓட்டலுக்கு வந்திருக்கிறார்கள் மடாதிபதிகள்! அவர்களுக்குப் பூசைகள் செய்வதற்குப் பதில் பக்த கோடிகள், "வரவேற்பிதழ்கள்", வாசித்தளித்திருக்கிறார்கள்! அதற்கு, ஆங்கிலநாட்டுப்பாணியும், மிலேச்சர்கள் என்று வேதசாஸ்திரம் கூறும்வெளிநாட்டினருடன் கூடிக்குலவுவதோடு மட்டுமின்றி, அவர்தம் புதுமைகளை மனப்பூரிப்போடு ஏற்றுக்கொள்ளத் தயங்காதவருமான சர். சி. பி. இராமசாமியார் தலைமை வகித்திருக்கிறார்! அவரது தலைமையில், இந்த மதாச்சாரியார்கள், மாடிக்குமேல் மாடிகட்டும் தாசப்பிரகாஷ் ஓட்டல்கார் சீதாராமராவ் எனபவரையும், அடுத்த தடவை டில்லி அமைச்சர் பதவி கிடைக்குமா என்று கணித்துக் கொண்டிருப்பவரையும், அவர் போட்டிருக்கும் கடுக்கன் வைரமா, இமிடேஷனா, இமிடேஷனிலும் உயர்ந்ததா மட்டமா என்று கணக்குப்போடும் குணமகொண்ட சீமான்களையும், எதிரே வைத்துக் கொண்டு, "ஆசையை அகற்று. அதுவே நாதனை அடைய வழி" என்று சொல்லி, அடுத்த நிமிடமே "எங்களுக்கு ஒரே ஒரு ஆசையுண்டு—அது என்னவென்

ருல் மதம் தழைக்கவேண்டும். அதற்கு, அரசாங்கம், எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் மதத்தைப் பற்றிப் போதிக்கவேண்டும். இந்த ஆசைதான்", என்று பேசியிருக்கிறார்கள்!!

மதாச்சாரியர்கள், ஓட்டலுக்கு அழைக்கப்படுகிறார்கள் — ஓய்வு பெறும் நார்ட்டன் துரைக்கும், வெளிநாட்டிலிருந்து வந்த முகம்மது இஸ்மாயிலுக்கும் விருந்தும் வரவேற்பும் வழங்குவதுபோல— மதாசாரியர்களை, பக்தகோடிகள், பாராட்டி வரவேற்புப் பத்திரம் அளிக்கிறார்கள். இந்த மதாசாரியர்கள் வழங்கும் உபன்யாசத்துக்கும், ஒரு தலைவர் தேவைப்படுகிறார், தலைமைவகிக்க.

முறையில் ஏற்பட்டுள்ள புதுமையைக் கவனிக்கச் சொல்லவில்லை, நாம். பக்தி மார்க்கத் திருப்பணி, எந்தெந்த அளவுக்கு அவர்களை இழுத்து வருகிறது என்பதையே கவனிக்கச் சொல்லுகிறோம். இந்த இலட்சணத்தில், சங்கராச்சாரியார் ஒரு பக்கம் இருந்துகொண்டு, நாகரிக முறை கூடாது—என்னைத் தரிசிக்க வருவோர் சட்டை எதுவும் போடக் கூடாது (பெண்கள் மட்டும் விதிவிலக்கு!!!) — என்று பக்தியைப் பரப்பிக்கொண்டிருக்கிறார். அவரைப்போலவே, பக்தி மார்க்கத் தலைவர்கள்தாம் இவர்களும். உபன்யாசம், ஆலயத்தைவிட்டு, ஓட்டலுக்கு வருகிறது! பாதபூஜை செய்ததுபோய், பக்தர்கள், வரவேற்புப்பத்திரம் வழங்குகிறார்கள்!!

இதையும்விட ஒரு விநோதமான சேதி 9—9—58 தினமணி இதழின் கடைசிப் பக்கத்தில் கண்டிருக்கக் கூடும். திருவாவடுதுறை பண்டாரசன்னதிக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார் ஒரு தம்பிரான்! பண்டாரசன்னதி இடத்தில் வரவேண்டிய அளவுக்கு மார்க்கத்துறையையும், ஆசையை விடு, ஆன்மாவை ஐயனிடம்சேர்என்று போதிக்கவேண்டிய பொறுப்பையும் பெற்ற காவி கட்டிதான், அந்தத்தம்பிரான் என்பவரும்! அவர்வழக்குப்போட்டார். என்ன வழக்கு தெரியுமா? "1929-வாக்கில் ஆதின வழக்கப்படி தாம் தம்பிரானானதாகவும், பண்டாரசந்நதி ஒதுக்கிய பணிகளைத் தாம் செய்து வந்ததாகவும், 1944-ல் தாம் மடத்திலிருந்து விரட்டப்பட்டதாகவும், அது முதல் தாம் மடத்தில் சேர்க்கப்படவில்லை என்றும், எனவே வழக்கப்படியும் ஆதீன பட்ஜெட்டில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளபடியும் தமக்கு வாழ்க்கைப் பணமும், படிகளும் பண்டார சந்நிதி கட்டாயமாகக் கொடுக்க வேண்டும் என்றும், எனவே பண்டார சன்னிதி தமக்கு ரூ. 12,000மும் 1934 ஜூலை முதல் அதற்கு வட்டியும், எதிர்காலத்தில் வாழ்க்கைப் பணமாக மாதம் ரூ. 125ம் தரவேண்டும்" என்று வழக்குத் தொடர்ந்து, கீழ் மன்றத்திலிருந்து, உயர்நீதி மன்றம் வரைக்கும் வந்து தள்ளுபடியாகி இருக்கிறது.

தம்பிரான்! அதாவது சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் இப்போதிருக்கிற பண்டார சந்நிதியின் இடத்தில் வரவேண்டியவர்! அப்படிவந்திருந்தால், அமைச்சர் பக்தவத்சலம்முதல்சாதாரண அனைக்காவடி வரையில் அவரைப்போய் தரிசித்து ஆசையை எப்படி அகற்றி முக்திமார்க்கம் தேடுவது என்று விளக்கம் கேட்கும் இடத்தில் இருக்கவேண்டியவர்! எல்லோராலும், புனிதர், ஈசனுக்கு அடுத்த இடத்தில் இருப்பவர், மதக்காவலர், என்று கும்பிடவேண்டிய அருகதையைப் பெற வேண்டியவர். மும்மலம் நீக்கி, முக்தி மார்க்கம் ஒன்றே தன் வழியெனக் கொண்டு தம்பிரான் ஆனவர்! அவர், கேவலம் அஞ்ஞானிகள் ஆசைப்படும் பணத்திற்காக, உலக பந்தம் துறக்காத நீதிபதிகள் எனும் சடலங்களை நாடி வழக்குப் போடுகிறார் — கூண்டிலேறி, "உரிமைக்கிளர்ச்சி" செய்திருக்கிறார்!!

கடவுளைக் காட்டுவோர்—மதாச்சாரியார்கள்—இந்துமதக் காவலர்கள் என்பவர்களின் யோக்கியதை இது.

"கையொன்று செய்ய
விழியொன்று நாட
கருத்தொன்று எண்ண,
வஞ்சநாவொன்று பேச
மெய்யொன்று சார
செவியொன்று கேட்க
விரும்பி யான்
செய்கின்ற பூசை,
ஏவ்வாறு கொள்வாய்
வினை தீர்த்தவனே!"

என்று பட்டினத்தார், பாடினாராம். பூசை செய்வோருக்கு வழிகாட்டும் மதகுருமார்கள் நிலை, இது! அப்படிப்பட்டவர்கள் நிரம்பி வழியும், பக்தி வயலின் பெருமையைக் காண அழைக்கிறது, கல்கி!!

★

எது கடவுள்?

புது டில்லி செப். 8

அமெரிக்க "டைம்" பத்திரிகைக்கு மொரார்ஜி தேசாய் அளித்த பேட்டியில் "நேருவுக்கு கடவுள் நம்பிக்கை இல்லை" என்று கூறியது பற்றி மேல் சபையில் ஒருவர் கேள்வி கேட்டார்.

"கடவுளைப்பற்றி, நீங்கள் கூறும் விளக்கத்தைப் பொறுத்திருக்கிறது" என்று நேரு பதிலளித்தார்.

திராவிடநாடு

21—9—58 | வார வெளியீடு | விலை 16 காசு

பாரதி முழக்கம்!

உண்மையின் பேர்தெய்வம் என்போம்—அன்றி
ஓதிடும் தெய்வங்கள் பொய்யெனக் கண்டோம்
உண்மைகள் வேதங்கள் என்போம்—பிறி
துள்ள மறைகள் கதையெனக் கண்டோம்
கடலினைத் தாவும் குரங்கும்—வெங்
கனலில் பிறந்ததோர் செவ்விதழ்ப் பெண்ணும்
வடமலை தாழ்ந்தத னாலே—தெற்கில்
வந்து சமன் செய்யும் குட்டை முனியும்,
நதியினுள் ளேமுழு கிப்போய்—அந்த
நாகர் உலகிலோர் பாம்பின் மகளை
விதியுற வேமணம் செய்த—திறல்
வீமனும் கற்பனை என்பது கண்டோம்.
ஒன்றுமற் றொன்றைப் பழிக்கும்—ஒன்றில்
உண்மையென் றோதிமற் றொன்றுபொய் யென்னும்
நன்று புராணங்கள் செய்தார்;—அதில்
நல்ல கவிதை பலபல தந்தார்!
கவிதை மிகநல்ல வேனும்—அக்
கதைகள் பொய்யென்று தெளிவுறக் கண்டோம்.
புவிதனில் வாழ்நெறி காட்டி—நன்மை
போதிக்கும் கட்டுக் கதைகள் அவைதாம்!!

(பாரதியாரின், "உயிர்பெற்ற தமிழர்" எனும் பாடலின், பகுதிகள் இவை.)

5000-க்கு மேற்பட்ட உலக நாடுகளின் விஞ்ஞானிகள், இந்தக் கிழமை, ஜினீவா நகரில் கூடினர். 69 நாடுகளைச் சேர்ந்த இந்த விஞ்ஞானிகள், விஞ்ஞான உண்மைகளைப்பற்றி, இம் மாநாட்டில் ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டனர். எப்படி அணுசக்தியைக்கொண்டு, ஆக்கவேலைகளில் ஈடுபடலாம் என்பதும் விவாதிக்கப்பட்டது. இப்படி விஞ்ஞானிகள் எல்லாம் கூடிப்பேசி, முடிவுகளைச் செய்து கொண்டால், உலகம் எவ்வளவோ நன்மைகளைப்பெறும். அணுகுண்டுகளைப்பற்றிய பயம் ஒழியும், என்று எங்கும் நம்பப்படுகிறது.

*

செப்டம்பர் 15ம் தேதி முதல், அமெரிக்காவிலுள்ள நியுயார்க் நகரில் ஒரு மாநாடு நடக்கிறது. அகில உலக பெரிய நீர்த்தேக்கங்களின் மாநாடு, என்று இதற்குப் பெயராகும். பெரிய நீர்த்தேக்கங்களைக் கட்டியிருக்கிற நாடுகள், இம் மாநாட்டில் பங்கு கொள்ளும். ஹிராகுட் அணைக்கட்டுப் போன்ற அணைகளை, 'இந்தியா'வும் கட்டியிருக்கிறதல்லவா? அதனால், இந்திய உபகண்டத்து இஞ்சினீயர்களும் கலந்துகொள்ளப் போயிருக்கின்றனர்! அந்தப் பட்டியலில் தென்னாட்டைச் சேர்ந்த என்சினீயர் எவருமில்லை. இங்கே, ஏது பெரிய நீர்த்தேக்கம்? இருந்தாலல்லவா, பிரதிநிதி போக!!

*

"எங்கள் கட்சி நிதிக்கு 2000 ரூபாய் கொடுத்தால், உங்களுக்கு பெர்மிட் வாங்கித் தருகிறோம!", என்று கேரளாவிலுள்ள கம்யூனிஸ்டு கட்சிக் கிளைகள் சொல்லி, அதுபோலச் செய்கின்றன என்று டில்லி பார்லிமெண்டில் டி. எஸ். பட்டாபிராமன எனும்காங்கிரஸ் உறுப்பினர் வெளியிட்டார். தாம, இக்கூற்றை நிரூபிக்கத் தயாரென்றும, அதற்கான சான்றுகள் தம் வசம் உள்ளனவென்றும் அவர் தெரிவித்திருக்கிறார். லைசென்ஸ், பெர்மிட் என்று சொல்லிப் பணவேட்டையாடுவது காங்கிரஸ்

கேட்டீரா! சேதி!

பிரமுகர்களின் "பிழைப்பு வழியாக" இருந்து வருவது யாவரும் அறிந்ததே! இந்த வியாதி, கம்யூனிஸ்டுகளையும பிடித்திருப்பதாகப் பட்டாபிராமன் வெளியிட்டுள்ளார்!!

*

இட்டிலிக்குத் தொட்டுக் கொள்ளுகிறோமே — "சட்னி" அதுகூட இங்கிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதாம்! ஆண்டுக்கு 12½-இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 700-டன் சட்னி ஏற்றுமதி செய்யப்படுவதாக அதிகார பூர்வமான அறிக்கையொன்று கூறுகிறது. சட்னிக்கு வெளி நாடுகளில் கிராக்கியிருப்பதால், எப்படியெப்படி இந்த வியாபாரத்தை இலாபகரமாக்கலாம் என்பதுபற்றியும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறதாம்.

*

ஜோகன்னஸ்பர்க்கிலுள்ள விட்வாட்டர்ஸ்ராண்டு பலகலைக் கழக விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ள சாதனத்தின் மூலம் வலியில்லாமல் பிள்ளை பெறும் வாய்ப்பு அனைவர்க்கும் கிடைக்கும். அந்த நாள் அண்மையிலேயே வர இருக்கிறது.

அழுத்தம் நீக்கப்பட்ட பிளாஸ்டிக் ஆடைதான் அச் சாதனம். இப்புதுச் சாதனத்தால் பிரசவம் சிக்கிரம் ஆவதுடன் வேதனையும் குறையும்.

முதன்முதலாகத் தாய்மைப் பேறு எய்திய 1000 பெண்களுக்கு இச்சாதனத்தை உபயோகித்துப பார்த்ததில் அவர்களுக்கு வேதனை குறைந்தது. விரைவான பிரசவம், குறைவான வேதனையில் பிறக்கும் அக்குழந்தையும் அதனால் நலம் பெறுவதாகத் தெரிந்தது.

பிரசவிக்கும் பெண்களின் தசைகள் முடக்கப்பட்டு அவர்களின் அடிவயிற்றில் பிரயோகிக்கப்பட்ட வேதனை நீக்க மருந்துபோன்ற முயற்சிகளின் அடிப்படையில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பின்னர் நடத்திய பரிசோதனைகளில் பெண்களின் அடிவயிற்றை நெகிழ்த்துவதால் இலகுவில் வேலை முடியும் எனத் தெரியவந்தது. 1955ம் ஆண்டு இறுதியில் அடிவயிற்றின் முற்பாகத்தை மூடக்கூடிய சிறு அழுத்த நீக்கக்கூண்டைக் கண்டுபிடித்தனர்.

*

நாம் அனைவரும் குழந்தைகளாக இருந்தபோது ஈர மணலில் வீடுகட்டி விளையாடுவதுண்டல்லவா? ஆனால் இன்று மக்கள் வசிக்கக்கூடிய உண்மையான வீடுகள் வெறும் மணலால் கட்டப்படுகிறது என்பது நம்மில் பலருக்குத் தெரியாது.

சமீப ஆண்டுகளில் சோவியத் எஸ்தோனியாவின் தலைநகரான தாலின் நகரில் அதன் சுற்றுப் புறங்களில் ஏராளமான மணல் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இந்த மணலுக்கு "சிலிகால்ஸ்யேட்" என்று பெயர். சாதாரண மணலுடன் மிகவும் சிறிதளவு சுண்ணும்பைச் சேர்த்து உருவாக்கப்படும் புதிய கட்டடப் பொருள் இது.

ஜோன்ஸ் ஹின்ட் என்ற விஞ்ஞானி இதை உருவாக்கினர். இதை உற்பத்தி செய்வது எளிது. மேலும் இது மிகவும மலிவானதாகவும், உலோகத்தைப் போனற உறுதியுடையதாகவும் உள்ளது.

மணலால் உறுதியான மாளிகைகளைக் கட்ட முடியும் என்பது இப்பொழுது சோவியத் நாட்டில் உறுதியாகிவிட்டது.

இப்பொழுது லெனின்கிராடு கார்கி, காமஸமால்ஸ்க்-ஆன-அமூர் ஒர்யால், காபரோவ்ஸ்க் முதலிய சோவியத் நகரங்களில் சிலிகால்சியேட் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

*

வெற்றி நமதே!

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [21-9-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 10

"தேசீய உணர்ச்சி கொழுந்துவிட்டெரிகின்ற காலம் இது. பெரிய நாடானாலும் சின்ன நாடானாலும், அங்கங்கே விடுதலை உணர்வுகள் வளர்ந்து வருகின்றன. இதனை, எவ்வளவு பெரிய வல்லரசுகளாலும் அழித்துவிடவோ, அடக்கிவிடவோ முடியாது. மக்கள் தம் மனதில், எழுந்துள்ள விடுதலைத் தாகத்தை எவரும் மதித்தே ஆகவேண்டும்"

என்று, ஈராக் நாட்டில் சென்ற சில திங்களுக்குமுன் முடி மன்னன் வீழ்த்தப்பட்டுக் குடியரசு நிறுவப்பட்டது குறித்து உலகம்போற்றும் உன்னத நிலையில் உள்ள பண்டித நேரு அவர்கள் வெளியிட்டார்! அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து மட்டுமின்றி, உள்நாட்டிலேயுள்ள ஆதிக்கச் சக்திகளை வேரறுத்து எழும் புதுமைத் தாகத்துக்கும் தமது ஆதரவு உண்டென்பதைத் தெரிவித்துக்கொண்டார்!!

பண்டித நேரு மட்டுமல்ல, அவரைப்போல முன்னேற்ற எண்ணங்களும் முற்போக்குக் கொள்கைகளும் கொண்ட எவரும், பூத்திடும் புரட்சிகளையும், வெடித்திடும் தேசிய ஆர்வத்தினையும், வாழ்த்தவும் வரவேற்கவுமே செய்கின்றனர்.

கடல் கடந்து வியாபாரிகளாகச் சென்று, சென்ற இடத்தில் தந்திர சாகசங்கள் மூலம் அரியணைகளைப் பெற்று, ஆட்சித் தர்பார் நடத்தினர், பல அந்நியர்கள். இது கடந்த நூற்றாண்டின் கதையாகிவிட்டது. இந்த நூற்றாண்டிலே, அப்படி எங்கெங்கு அந்நியர்கள் ஆதிக்கம் பெற்றனரோ, அவர்களெல்லாம் விரட்டியடிக்கப்பட்டு, ஆங்காங்கே சுதந்திர நாடுகள் முளைத்துள்ளன!

டச்சுக்காரர்தம் பிடியிலிருந்த இந்தோனேஷியாவும், பிரெஞ்சுக்காரர் வசமிருந்த இந்தோ சீனவும், வெள்ளையர் தம் பிடியிலிருந்த பர்மாவும், இந்திய உபகண்டமும், இதுபோலச் சுதந்திரம் பெற்ற பூமிகளாகும். அந்நியன் ஆட்சியை அகற்றியது மட்டுமின்றி, உள்நாட்டில் அட்டகாசம் செய்த கொள்ளையர் தம் ஆட்சிக்கும் முடிவு கட்டப்பட்டது, எகிப்தில்! மணிமுடி பறிக்கப்பட்டு, ஒருவனின் தேவைக்கு ஒரு தேசம் என்கிற நிலைமாறி, மக்கள்குரலே சட்டம் என்கிற குடியாட்சிக் கோட்பாடு கோலோச்சத் துவங்கி இருக்கிற காட்சிகளைக் கண்ணாரக் கண்டு வருகிறோம்!

அந்நியர் தம் ஆதிக்கத்தை அகற்றுவதும், அட்டகாசம் செய்வோர்களிடமிருந்து மக்கள் மன்றத்துக்கு அதிகாரங்களைப் பறித்துக்கொள்வதும், நியாயமான ஒன்று; நீதியான ஒன்று என்று எல்லோரும் கருதுகின்ற காலம் இது. அப்படிக் கருதினால்தான் அவர்களை உலக மக்கள், உத்தமர்கள், நியாயவாதிகள் என்று ஏற்றுக்கொள்கிறார்கள். நேருவும், அதனால்தான், உலகத்தின் கண்களுக்கு உத்தமராகக் காட்சி அளிக்கிறார்.

*

சின்ன நாடானாலும், அது தன்னைப் பொறுத்தவரையில் சுதந்திரமாக வாழவேண்டும்—அதன் உள் நாட்டு விவகாரங்களில் தலையிட, எவ்வளவு பெரிய நாட்டுக்கும் அருகதையில்லை — அப்படித் தலையிடுமாயின், உலக சபை, தலையிட்டு நீதி பெற்றுத்தரவேண்டும்—என்கிற அளவுக்கு, இந்த நூற்றாண்டில், பேசப்படுகிறது. சுதந்திரம் என்கிற பெயருக்குள்ள மதிப்பையும் மரியாதையையும் நிலைநாட்டவேண்டும் என்கிற பேரார்வம், ஆங்காங்கும் காட்டப்படுகிறது.

மனிதனுடைய அடிப்படை உரிமைகள் பற்றியும், அந்த மனிதன் வாழும் நாட்டின் கவுரவம் குறித்தும், அந்த நாடு சுயேச்சையாக வாழவேண்டிய அவசியத்தை வலியுறுத்தியும், உலகத் தலைவர்களாயுள்ள ஒவ்வொருவரும் பேசாமலில்லை.

சுதந்திரம்பெற்ற ஒருநாடு, தவியாய்த் தவிக்கிறது என்றால், அதற்குத் துணைபுரிய வல்லரசுகள் முழக்கமிடுகின்றன! என்ன உதவி வேண்டும் என்று அமெரிக்கா ஒரு பக்கமும், நானும் உதவத் தயார் என்று ருஷ்யா இன்னொரு பக்கமும் வரிந்து கட்டிக் கொண்டு கிளம்புகின்றன. இந்த வல்லரசுகள் தவிர்த்துத், தம் சக்திக்கேற்றவகையில், வியாபாரத் தொடர்பு கொள்ளவும், தம்மிடமுள்ள இயந்திரச் சாதனங்களைப் பரிமாறிக்கொள்ளவும் ஒவ்வொரு நாடுகளும் முன் வருகின்றன.

இங்கேயே பார்க்கிறோம், அமெரிக்காவும் ருஷ்யாவும் அளிக்கின்ற உதவிகள் மட்டுமல்ல, ஜப்பானும் உதவுகிறது, ஸ்வீடனும் தன்னாலானதைத் தர முன் வருகிறது, சுவிஸ் நாட்டு நிபுணர்கள் வருகிறார்கள். இப்படி, ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வதும் ஒவ்வொரு நாடும் சுகமாக வாழவேண்டும் என்று எண்ணுவதும், இந்த காலத்தில் மலர்ந்துள்ள ஒரு புதுமையாகும்.

எனவே, புதிதாக ஒரு நாடு சுதந்திரம் பெற்றால் அது எப்படி வாழும் என்கிற ஐயமோ; அதனால்,

உலக நாடுகளுடன் எப்படித் தொடர்பு கொள்ள முடியும் என்கிற பயமோ; தனக்குவேண்டிய உதவிகளை அது எப்படிப் பெற்றுக்கொள்ளும் என்கிற கவலையோ, இன்றைய தினம் ஏற்பட நியாயமில்லை.

இருந்தாலும், காங்கிரஸ் தலைவர்கள். தனிநாடு கோரும் நம்மைப் பார்த்துக் கர்ச்சிக்கிறார்கள் — "திராவிடநாடு தனியானால், உலகத்தில் எப்படி வாழும்? உலகத்திலுள்ள பிறர், எப்படி மதிப்பார்கள்?" என்று. இஸ்ரேல், மிகச்சின்னநாடு! இலங்கை மிகச் சிறிய தீவு! இவைகளுக்கெல்லாம், உலகத்தின் உதவிகள் கிடைக்கின்றபோது, உலகத்தோடு தொடர்புகொள்ளும் சிறந்த அறிஞர்களையும், நெறி நூல்கள் பலவற்றினையும், நிலையான சரித ஆதாரங்களையும் கொண்டிருக்கிற திராவிடத்தாலா முடியாது? நிச்சயம் முடியும்! உலகத்தில் நிலையான இடத்தைப் பெறவும் முடியும்!!

எனினும், ஏன், காங்கிரஸ் தலைவர்கள் பேசுகிறார்கள்—தலைவர்களுக்கெல்லாம் தலைவராய், உலக நாடுகளின் உரிமைகளை முரசொலிக்கும் உத்தமராய் விளங்கும் நேரு அவர்கள்கூட, தனிநாடுக்கோரிக்கையைக்கண்டிக்கிறார் என்று எண்ணும்போதுதான் விந்தையாகஇருக்கிறது.'திராவிடநாடு'கோரிக்கையை மட்டுமல்ல, தனி மாகாணம் ஒன்று வேண்டும் என்கிற கோரிக்கையைக்கூட நேரு அவர்கள் மறுக்கிறார்! மராட்டிய மக்கள், இரண்டு மூன்றுண்டுகாலமாகத் தங்களுக்கென ஒரு மாநிலம் வேண்டும் என்கிறார்கள்—மறுக்கிறார், நேரு—"அந்தக் கோரிக்கைக்கு மக்களின் பேராதரவு இருப்பதை அறிவேன். எனினும், முடியாது" என்கிறார்! பேராதரவிருந்தாலும், முடியாது என்கிறார், நேரு!!

இப்படிச் சிறு சிறுபகுதிகளாக, மொழியின் பெயராலும், இனத்தின் அடிப்படையிலும் நாடுகள் ஆக்கப்பட்டால், "இந்தியா" சிதைந்துவிடும்—சிதறுண்டுபோய்விடும் என்று காரணம் காட்டுகிறார்கள் காங்கிரஸ்காரர்கள். சின்னதானாலும், பெரிதானாலும் எங்கெங்கு தேசிய உணர்ச்சி கொழுந்துவிட்டெரிகிறதோ, அந்த உணர்ச்சிக்குரிய மரியாதை எவரும் கொடுத்தேயாக வேண்டும் என்று ஒருசமயம் முழக்கமிடுகிறார் நேரு! அதே, தேசிய உணர்ச்சி, தனது ஆளுகைக்குட்பட்ட இடத்தில், தோன்றும்போது கண்டிக்கிறார்—'ஆகா, ஊகூ' என்று தாக்குகிறார்—நாடு, துண்டுதுண்டானால், சிதறுண்டுபோய்விடுமே என்று பயமுறுத்துகிறார்!!

"சொல்வது சுலபம்; செய்வது கடினம்" என்கிற பழமொழி, உண்மையாகிறது, நேருபோன்றவர்களிடம்! நீதிகளை, வெகுஎளிதில், மிகஅமைதியாகப் போதிக்கிறார்கள்—ஆனால், தனது ஆளுகைக்குட்பட்ட இடம் என்கிறபோது, அந்தப் போதனைகள், காற்றோடு போய்விடுகின்றன. கண்டிக்கின்றனர்!

•

ஆயிரம் ஏக்கர் நிலம் வைத்து வாழ்ந்த மிட்டாதாரிடம், உன் நிலங்களை ஏழைகளுக்கு இவ்வளவென்று பிரித்து தரப்போகிறோம் என்றால் கோபம் வரத்தான் செய்கிறது, மிட்டாதாருக்கு! ஜமீன் ஒழிப்புச் சட்டத்தை விரும்பி ஏற்கத்தான் மாட்டார்கள் ஜமீன்தார்கள். சுதேச மன்னர்களின் பிடியிலிருந்து சிற்றரசுகளை மீட்டபோது, அவர்கள் சிரும்பவில்லை! என்ன காரணம்? ஆதிக்கம் புரிந்த எவனுக்கும், அதனால் கிடைத்த சுகபோகங்களையும், இலாபத்தையும் எளிதில் இழந்துவிட மனம் வரத்தான் வராது.

அதே மனோபாவந்தான், நேருபோன்ற காங்கிரஸ் தலைவர்களிடம் இன்றைய தினம் உள்ளது. உரிமைகளைப்பற்றி, ஆதாரங்களை அள்ளியள்ளி வீசிப் பேசுகிறார்கள் — சிறுநாடுகளை மதிக்கவேண்டும் என்று மார்தட்டவும் தவறுவதில்லை—திராவிடநாடு வேண்டும் என்று நாம் சொன்னால், உடனே, கனல் கிளம்புகிறது கண்களில்! குரல் தடிக்கிறது! மிட்டாபோல, ஜமீன்போல, ஆதிக்க ஆசையும், "ஐயோ, போய்விடுமோ?" என்கிற கிலியும் கொண்டு கண்டிக்கவும், எதிர்க்கவும் கிளம்புகிறார்கள்!!

"சாதியாவது, நாதியாவது, எங்கே இருக்கிறது சாதி. எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்" என்று பொதுக்கூட்டத்திலே முழக்கமிடும் வேதாந்தாச்சாரியார், வீட்டுக்குப் போனதும், மகள் வேதவல்லி, பிற சாதிக்கார வாலிபனை விரும்புவது கேட்டு "என்னடி திமிர்? அவன் என்ன சாதி! நாம் என்ன சாதி!" என்று பாயத்தான் செய்கிறார். "ஏழையாவது, பணக்காரனாவது! ஏழை, பணக்காரனில்லாத சமுகமே, எமது குறிக்கோள்" என்று மார்தட்டிப் பேசும் மார்த்தாண்டர், கம்பெனிக்குப் போனதும், வேலையாள் போய் இரண்டு ரூபா கூலியுயர்வு கேட்கிறான் என்றதும் கோபிக்கத்தான் செய்கிறார். இப்படி, என்னமோ தெரியவில்லை—இன்றைய சமுகத்தில், வெளிவேடத்துக்கு ஒன்றும், நடைமுறைக்கு வேறொன்றுமாக ஒரு நிலை வளர்ந்து வருகிறது! வேதாந்தாச்சாரியார்—மார்த்தாண்டர் போன்ற தனி நபர்களிடம் மட்டுமல்ல, உலக வல்லரசுகளாக விளங்கும் அமெரிக்கா ருஷியா போன்றவைகளிடம்கூட, "இரண்டு முகங்கள்" உள்ளன. சுதந்திர சாசனம் என்று பறை கொட்டுகிறது, அமெரிக்கா! சுதந்திர ஒலி கேட்கிறது, ஈராக்கில் என்றால், படைகளை அனுப்புகிறது பாய்ந்து! மனித உரிமைகளை முரசொலிக்கிறது ருஷியா—இம்ரேநாகி போன்ற மனிதர்களையோ, தூக்கிலே தொங்கவிடுகிறது! இதேபோலத்தான், நேரு அவர்களும், ஒரு சமயம் சிறு நாடுகளின் உரிமைகளைப்பற்றிச் சங்கநாதம் செய்கிறார்; சொந்த விஷயம் என்றதும், சங்கநாதம் எல்லாம் போய்விடுகிறது—எதிரிடையாகப் பேசுகிறார்!!

எனினும், இவர்கள் எல்லாம், பெரியவர்களாக, உலகத் தலைவர்களாக, உத்தமர்களாகப் போற்றப்படுகிறார்கள்! புகழப்படுகிறார்கள்!!

ஊருக்கு உபதேசித்துவிட்டு, தன் விவகாரம் என்றால் அந்த உபதேசங்களைக் காற்றில் பறக்கவிடுவோருக்கு, காலம், புத்திபுகட்டத் தவறுவதில்லை. உண்மையும், உரிமைச்சக்தியும், எல்லாத் தடைகளையும் கடந்து வெல்லும். சுயநலக்காரர்களுக்குப் புத்தி போதிக்கும் என்பதை, இவர்கள் உணரவேண்டும்.

எகிப்து, சுதந்திரக்குரல் கிளப்பியபோது எதிர்த்தது அமெரிக்கா. இன்று, நேசக்கரம் நீட்டுகிறது. பாகிஸ்தான் கேட்டபோது, பாய்ந்தார்

(13-ம் பக்கம் பார்க்க)

வடக்கும் தெற்கும்

தமிழ்நாட்டு மக்களிடம் இருந்து இறக்குமதி வரி ஏற்றுமதி வரி எண்ணெய்வரி தேயிலைவரி காப்பி வரி சிமெண்ட்டுவரி துணிவரி சர்க்கரைவரி புகையிலைவரி தீப்பெட்டி வரி, ஏன் மரணவரி கூடவும் மற்றும் வருமானவரி, இப்படி வரிவரி என்று வசூலித்து வருகிறார்கள் டெல்லி ஆட்சியாளர்.

66-கோடி ரூபாயை ஆண்டு ஒன்றுக்கு இப்படித் தமிழ்நாட்டில் இருந்து வசூல் செய்யப்படுகிறது என்ற விபரத்தை டெல்லி சர்க்கார் வெளியிட்ட வரவு செலவு திட்டத்தில் கூறப்பட்டு இருக்கிறது.

'தமிழ் நாட்டுக்கு டெல்லி சர்க்கார் 66-ல் 6-கோடியை மட்டும் உதவிப்பணமாகத்தருகிறதென்று நிதியமைச்சர் சட்டசபையில் தைரியமாய்த் தகவல் தந்திருக்கிறார். "தமிழ் நாட்டில் செலவாணிக்கு" சென்ற 10-ஆண்டுகளில் 135-கோடியை ரூபாய் நாணயமாக்கிவிட்டு இருப்பதாக ரிசர்வ் பேங்க் வெளியிட்ட அறிக்கையில் கூறுகிறது. தமிழ் நாட்டில் 135 கோடியைவிட்டு அதன் மூலம் தமிழ்நாட்டு மக்களின் பொருளையும் உழைப்பையும் 135-கோடி அளவிற்கு டெல்லியார் கொண்டு போய் இருக்கிறார்கள்.

'டெல்லிக்குஎன்ன பணம்வண்டியிலா போகிறது' என்று வசைபாடி வருகிறார் முதலமைச்சர். உண்டியிலாக மாற்றி ரயில்வண்டியில் தபால் கட்டோடு போகிறதென்பதை அறியாத அமைச்சரா அவர்? உதவிப் பணமாகத் தரும் இந்த 6-கோடிதான் எப்படி டெல்லியில் இருந்து தமிழ் நாட்டுக்கு வருகிறது என்ற கேள்விக்கு தக்கபதில் இல்லை. ஆண்டு ஒன்றுக்கு 60-கோடி வீதம் கடந்த பத்து ஆண்டுகளில். 600-கோடியை டெல்லியார் தமிழகத்தில் இருந்து கொள்ளையடித்து இருக்கும்போது, தமிழ் நாட்டில் எத்தனை திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறார்கள்.

சேலத்தில் இருந்து இரும்பைத் தோண்டி எடுத்து அதில் இருந்துதொழில்படுத்த உருக்குத் தொழிற்சாலையை உண்டாக்கி, அங்கிருக்கும்பாக்ஸைட்டை பயன்படுத்தி அலுமினிய தொழிற்சாலையை நிறுவலாம். அதன் மூலம் ஏராளமான ஏழைத் தொழிலாளரின் துயரக் கண்ணீரைத் துடைக்கலாம்.தென்னகவளத்தை பெருக்கலாம்—என்ற, நமது கூக்குரலை அமைச்சர்கள் ஏன் உணரவில்லை? அந்த முறையில் முயற்சி செய்தார்களா? இல்லவே இல்லை. ஆனால் அங்கே — ஆம் வளங் கொழிக்கும் வடக்கேதான், "இந்திய துணைக்கண்டத்தில் இருக்கும் சர்க்கரை ஆலைகளில் 100-க்கு 92-ஆலைகளும், கான்பூரில் 29-நெசவாலைகளும் மற்றும் பல நூற்பு ஆலைகளும் இருப்பதாகவும், மற்றும் எஞ்சினியரிங் தொழிலும் வளர்கிறது" என்று உ.பி. முதலமைச்சர் கூறுகிறார்-பெருமையுறுகிறார். ஆனால்ஆவடியில் மின்சாரக் கருவிகள் உற்பத்திச் சாலையை ஆரம்பிக்கப் போவதாக முழங்கிவந்த அமைச்சர்கள் அத்தொழில் போபால் பகுதிக்கு மாற்றிவிட்டபோது டெல்லியாரிடம் ஏதாவது கூறியிருக்க வேண்டுமே?

உ.பி-யில் எடுத்துவரும் எரிவெள்ளி என்ற மெக்னீஷியம் தமிழ்நாட்டில் மட்டும் கிடைப்பதில்லையா?

அத்தொழிலை ஏன் தென்னகத்தே நிறுவலாமே......? அது பற்றி டெல்லியிடம் எந்த அமைச்சரானது முயற்சி செய்ய முனைந்தார்களா?

"பம்பாய் மாநிலத்தில் 10-லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்டு 10500-தொழிற்சாலைகளில், அபிவிருத்தி தொழிலில்முன்னின்றுவேலைசெய்கிறது" என்பதை பம்பாய் தொழில் அமைச்சர் கூறி இருக்கிறார். 'குஜராத்தி பிரதேசத்தில் உள்ள சாக்ராபர், உகாய், ஆகிய நீர்ப்பாசன மின்சாரதிட்டங்களால் ஏராள ஏக்ராக்கள் உணவு உற்பத்தியைப் பெருக்கும் என்றும் அவ்வமைச்சர் கூறி இருக்கிறார். ஆனால் நமது முதலமைச்சரோ புதுக்கோட்டையைத்தனிமாவட்டமாக்க முனைந்து வருகிறோம்; ஆனால் காவிரித் தண்ணீர் புதுக்கோட்டைப் பகுதிக்கு அனுப்ப முடியாது. சிறு நதிகள் மூலம் அவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கூறி இருக்கிறார். அதே நேரத்தில் தமிழ்நாட்டு காவிரித் தண்ணீர் மலையாளிகளுடைய தேவைக்குப்போக மீதத்தண்ணீர் கடலிலே போய் வீழ்கிறதே என்று கேரள முதல் அமைச்சரிடம் உறுப்பினர்கள் கேள்வி கேட்டு இருக்கிறார்கள்.

குஜராத்தியில் உள்ள சாக்ராபர் திட்டத்தால் 1·20 லட்சம் ஏக்க

கா. சு. அறிவுக்கொடி

ருக்குப் பாசன வசதி அளித்தது. மேலும் 6-லட்சம் ஏகருக்கு பாசன வசதி கிடைக்கும். இதன் மூலம் 1·60,000 டன் உணவும், 16,000 டன் பருத்தி உற்பத்தியும் பெருகும் என்று கூறி வருகிறார் உ. பி. முதல்வர், இதுமட்டுமா? கொனியா பிரதேசத்தில் பாக்சைட் நிறைய கிடைக்கிறது என்பதால் அலுமினியத் தொழிற்சாலையைத் துவக்கமுடிவு செய்து இருப்பதாக பம்பாய் தொழில் அமைச்சர் கூறி இருக்கிறார். விதர்ப்பா பிரதேசத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலையைத் துவக்கமுயற்சி எடுப்பதாகக் கூறினார்.

பீகாரிலுள்ள பொக்ரா என்ற இடத்தில் நான்காவது இரும்புத் தொழிற்சாலையை துவக்க டெல்லி முடிவு செய்து இருப்பதாகவும் அதற்கான ஆக்கவேலைகளில் முனைந்து வருவதாகவும் இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தில் 50-லட்சம் வரை ஒதுக்கி இருக்கிறார்கள், துர்காபூர் பிலாய் என்ற மிகப்பெரிய தொழிற்சாலைகளும் இங்குதான் நிறுவி இருக்கிறார்கள். 3-லட்சம் தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். 200-கோடிவரை செலவு செய்து பிரமாண்டமான தொழிற்சாலையை பொக்ராவில் நியமிக்க இருக்கிறார்கள் டெல்லியார். இது ஒன்றே வடக்கு வாழ்கிறதென்ற நமது கூற்றுக்கு சான்றாக அமையும்.

மேலும் தாபிகதிப்பாலம் கட்டுவதற்கு 28-லட்சம் செலவிட்டு வருகிறார்கள். இதனால் ஏராளமான பாசன வசதியால் உணவு உற்பத்தி பெருகும் என்று கூறி வருகிறார்கள் அவ்வமைச்சர்கள்.

1938-ல் மார்சு 3-ந் தேதியோடு முடியுமட்டும் புதிய தொழிற்சாலை துவங்க பம்பாய் சர்க்கார் 433 லைசென்சுகள் வழங்கியுள்ளதாம். இதில் 252 தொழிறசாலைகள் பம்பாய்நகரிலும் சுற்றுப்புறக் கிராமங்களிலும் நிறுவப்படுகிறது. கடந்த 3-ஆண்டுகளில் பம்பாய் மாநிலத்தில் கூட்டுறவு அடிப்படையில் 16, தனியார் துறையில் 3. ஆக 19 சக்கரை சாலைகளும் நிறுவபட்டு இருக்கிறதாம். இத்தகவலை பமபாய் தொழில் அமைச்சர்தான தந்திருக்கிறார்.

வடநாடு வாழ்கிறது என்ற கூற்று மறுக்க முடியுமா? எவ்வளவு தொழிற்சாலைகள் எவ்வளவுநீர்ப்பாசன உற்பத்திகள் மின்சார உற்பத்திகள்—வடக்கே, சிந்தித்துப் பாருங்கள்.

தமிழ் நாட்டில் இருந்து கோடி கோடியாய் கொண்டுபோகும் டெல்லியார் எவ்வசதியை அதிகமாய் அளித்திருக்கிறார்கள்? சிந்திரி உர உற்பத்தி சாலைகள், இரும்புத்தொழிற்சாலைகள், தபால் தந்தி, விமான போக்குவரத்து, பாங்க் இன்சூரன்சு, வெளிநாட்டு நாணயத்தின் மூலமும் பிறவும், பல வணிகக் கழகங்கள் மூலமும் திரட்டப்படும் 150 கோடிக்கு மேற்பட்டவை தமிழகத்திற்குத் தருவதில்லை.

ஏன் தென்னகத்தை வளமாக்க முடியாது? வடக்கையே வளமாக்கும் நோக்கம், ஒருகண்ணிலே வெண்ணெய் ஒருகண்ணிலே சுண்ணும்பா?

கேள்வியை எழுப்பும்போதெல்லாம் பண்டிதர் தரும் பதில் "இந்தியாவை ஒன்றுபட்டு வளமாக்கும் பிரச்சனையை உண்டாக்கும் மூலம்தான் நாடு சுபீட்சமடையும். அதற்கான வேலையை ஆராய்வதுதானே ஒழிய இங்கே வறுமை அங்கே செழுமை என்ற புறங்கூறும் சமுதாயத்தாரால் நாடு முன்னேற முடியாது". என்ற பதிலைப் பதமாகத் தந்துவிட்டுத் பறந்துவிடுகிறார். மேலும் சில அமைச்சர்கள் 'தென்னகத்தே நிறைய தொழிலை துவக்க அதற்கு வேண்டிய பொருள்கள் வசதிகள் அங்கு இல்லை' என்கிறார்கள்.

ஏன் உ. பி-யில் எடுத்துவரும் எரிவெள்ளி என்ற மெக்னீஷியம் தென்னகத்தே இல்லையா? விதர்பா பிரதேசத்திலும் பீகாரிலும் பொக்ரா பிரதேசத்திலும் துர்காபூர், பிலாய் பிரதேசத்திலும் எடுக்கப்படும் இரும்பும் இரும்பு உருக்குத் தொழிற்சாலையும்—அதறகுக் கோடிகோடியாய் கொண்டுபோய் கொட்டும் டெல்லி சேலம் சேர்வராயனமலை, கஞ்சமலைப் பகுதியில் எடுக்கக்கூடாது? தொழிற்சாலையைத் துவக்கக் கூடாது? தோரியம் தென்னகத்தே தேங்கிக் கிடக்கிறது தேவையான அளவிற்கு, மாங்கனீசமும் மாக்னைசைட்டும் மங்கிக் கிடக்கிறது தென்னகத்து மண்ணிலே, கொனியா பிரதேசங்களில் பூகர்ப்ப ஆராய்ச்சியாளர்களைக்கொண்டு ஆராயும்போது கண்ணாடிபோல் தெரியும் இப்பொருள்களை ஏன் எடுத்துத்தென்னகத்தேவளத்தை உண்டாக்கக்கூடாது டெல்லியார்? திராவிடத்தின் துறைமுகங்கள் மூலம் 33-கோடி ரூபாய் டெல்லி கஜானாவில் போய் விழுகிறது.

தென்னக உற்பத்தியிலேயே தொண்ணூறு பங்கு காப்பிக்கொட்டை விளைகிறது. அதற்குப் போடுகிற வரி போய்ச் சேரும் இடம் டெல்லி. இலங்கையை விட சிறப்பான தேயிலையும், அதிக தேயிலையும் விளைகிற இடம் இங்கேதான். அதற்குப் போடுகிற வரியும் போய்ச்சேருகிற இடமும் டெல்லிதான். இந்தியாவிலேயே மிளகு ஏற்றுமதி செய்யப்படுகிற இடம்தெற்குத்தான், அதன்மூலம் ரூ. 21-கோடியும் போகிற இடம் டெல்லி.

தங்கம் விளையும் பகுதியும், இரும்பு விளையும் பகுதியும், வெள்ளி விளையும் இடமும், மைக்கா மாங்கனீஸ் மாக்னைசட் அணுகுண்டுக்குரிய தோரியம் யுரேனியம், இராம்புரப்பர் தேக்கு ஏலக்காய் எல்லாம் இந்நாட்டின கடற்கரை மண்ணோடு கலந்து கிடக்கிறது.

இத்தகைய வசதிகளை டெல்லியார் அறியாததா? பயன்படுத்தலாமே? வளமாக்கலாமே?

இங்கிருந்து கோடி கோடியாய் கொண்டு சென்று, ஏன் வடக்கிலேயே கொட்டி வளமாக்க வேண்டும்? ஆதாரத்தை இபபடி நாம் எடுத்து இயம்பினால் நமக்கு பரிசு, நாடகமாடிகள், நாடுபற்றி அறியாதவர்கள்—இதுதான. இப்படிப்பட்ட ஆதாரங்களை ஆராய்ந்து அடுக்கடுக்காய் நம் அமைச்சர்களுக்கு எடுத்துஇயம்புகிறோம். எனறபோதிலும் அமைச்சர்கள் தம்வழியே செல்கிறார்கள்—அந்த வழி கல்லும் முள்ளும் காடுமாக இருக்கிறது — வேண்டாம்—நல்லவழி நமக்கிருக்கிறது— இப்படி வாருங்கள் என்று கூறினால், நீ சொல்வதா? நானா கேட்பதா? என்று விதண்டாவாதம் பேசிக்கொண்டே மேலும் வேகமாகப் போகிறார்கள்.

★

காட்டுமாங்கனி

கா. வேழவேந்தன்

தங்கத் தட்டிலே வாரிவைக்கப் பட்டிருந்த வைரக்குவியலை யாரோ குறும்புக்காரர்கள் தட்டிவிட்டு இருக்கவேண்டும். எங்கெங்கோ சிதறிக்கிடந்த தாரகைகள் கண் சாடை காட்டித் தாங்கள் இருக்குமிடத்தைச் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன. அவற்றின் இடையே நிலவு அழுதுகொண்டே நகர்ந்துகொண்டிருந்தது! என் துக்கம் இருக்காதா? ஏதோ பொறாமைச்சக்தி அதன் முகத்தைக் கிள்ளிவிட்டிருக்கவேண்டும்; மூளியாகிவிட்ட தன் முகத்தை வெளியே காட்ட வெட்கப்பட்டு முகில் திரையில் ஒளிந்து ஒளிந்து பயணம் செய்துகொண்டிருந்தது அது. நீர்மட்டத்தின்மேல் பறந்து செல்லும் நாரையைக் கண்டு பாசியிலே ஓடிஓடிப் பதுங்கிக் கொள்ளுமே கெண்டை மீன்கள், அதுபோல!

தூரத்திலே சில நரிகள்கூடி ஊளையிட்டுக்கொண்டு இருந்தன. பாவம்! இந்தக் காட்டிலே அவற்றின் வயிற்றை நிரப்ப இன்று ஒன்றுமே கிடைக்கவில்லை போலும்! அந்தக் குரல்களில் அவலத்தின் சாயை படிந்து கிடந்தது!

நான் அமர்ந்திருந்த பாறையை விட்டு எழுந்தேன், சுற்றுமுற்றும் பார்த்தேன். ஆடாமல் அசையாமல் மரங்களும் செடிகொடிகளும் நின்றுகொண்டிருந்தன. வாய்மூடிக்கிடந்த அந்த மரங்கள்தாம் என் இந்த மூன்று ஆண்டுகளாக உறவினர்கள்! ஏனோ ஒவ்வொன்றையும் கட்டித் தழுவ வேண்டும்போல இருந்தது எனக்கு. காரணம் மனிதர்களைப் போல இவற்றில் எந்த மரமும் எனக்குத் துணிந்து துரோகம் செய்வதில்லையே!

மெதுவாக நடந்தேன். தனிமையில் நடந்ததால் பழைய நினைவுகள் உயிர்பெற்று எழுந்து வந்து என் சிந்தனைப் பறையைத் தட்டத் தொடங்கின. சே! அந்த நச்சு நினைவுகளை ஒருகணம் எண்ணிக்கொண்டாலும் இன்று இரவு முழுவதும் தூக்கம்வராதே! என் தலையின் பின்புறத்தில் நானே ஒருமுறை அடித்துக் கொண்டேன். ஆனால்......

இந்தப் பாழும் உலகத்தில் நாம் விரும்புவதெல்லாம் நடப்பதில்லையே! தடாகத்தில் வலையை வீசுபவன் வரால் மீனுக்குத்தான் குறிவைக்கிறான் என்றாலும், சில வேளைகளில் சிக்குவது நீர்ப்பாம்பாகத்தானே இருக்கிறது!

நான் வேண்டாமென்று உதறித் தள்ளிய அந்தக் கொடிய நினைவுகள் காதிலே புகுந்துவிட்ட பூரானைப்போல இதயத்தைப் போட்டுக் குடையத் தொடங்கின.

முதலில் அந்த மாய்மாலக்காரியின் முகம்தான் என் எதிரிலே வந்து நின்றது. எந்த வரிச்சிரிப்பு என்னை வசீகரித்ததோ, அந்த மின்னல் சிரிப்பை நினைக்கும் போதே எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. 'அழகு ஓர் ஆபத்தான ஆயுதம்' என்று யாரோ ஒரு கவிஞன் சொன்னதை இப்போது நினைத்துப் பார்க்கிறேன். ஆனால் இதை அப்பொழுதே ஆழ்ந்து சிந்தித்திருந்தால்......

அவள் ஒரு நாடறிந்த திரைப்பட நடிகை என்று எனக்குத் தெரியத்தான் தெரிந்தது. என் நண்பன் என்ற பெயரிலே வந்தவன் அவளை அறிமுகப்படுத்திய போது அவற்றையெல்லாம் எங்கே நான் எண்ணிப்பார்த்தேன்? அவளுடைய நிலாமுகமும் கைதேர்ந்த சிற்பி பரிசுக்கெனச் செதுக்கிய சிலைபோன்ற உடற்கட்டும், சுண்டியிருக்கும் பார்வைச் சிரிப்பும்தானே என்னை மோகனக் கிறுக்கிலே தள்ளிப் படாதபாடு படுத்தின.

"செல்வம்! உன்னிடம் மட்டற்ற பொருட் செல்வம் இருக்கிறது. உன் இல்லற வாழ்க்கைக்கு ஓர் அழகுச்செல்வம் இப்போது தேவை; அவள் ஏன் மிஸ். நீலாவாக இருக்கக்கூடாது? ஒரு சில வாலிபர்களைப்போல நீ வரதட்சணை வாங்கித்தான் வாழ முடியும் என்றால், பணத்திற்காக ஏதேனும் ஓர் அவலட்சணத்தை தேர்ந்தெடுத்து விடலாம். ஆனால் நீயோ பிறவிப் பணக்காரன். உனக்கு ஏனப்பா அந்தக் கவலை. உனக்கு வாய்க்கப்போகிற வளைக் கண்டு மற்ற இளைஞர்கள் பொறாமைப்பட வேண்டுமென்றால் நீலாவைத்தான் நீ மணமுடிக்க வேண்டும்."

என் நண்பன் ஒவ்வொரு வார்த்தையையும் தேனிலும் பாகிலும் மாறி மாறித் தோய்த்து என் எதிரிலே வைத்தான். கட்டுக்கடங்காத என் வாலிப உணர்ச்சி அவன் சொல் ஒவ்வொன்றுக்கும் 'ஆமாம்' போட்டது.

இளமையிலே தாய் தந்தையரை இழந்து, இருக்கும் பணத்தைப் பாங்கில்போட்டுக் கல்லூரிப் படிப்பை முடித்திருந்த நான் முதல் வேலையாக நீலாவை எனக்கே உரியவளாக ஏற்றுக் கொண்டேன்! பெரிய மனிதர்களும் நண்பர்களும் ஓட்டல்களிலும் தங்கள் இல்லங்களிலும் விருந்து நடத்தி எங்களை வாழ்வாங்கு வாழ வாழ்த்தினார்கள்.

சென்னையின் சிங்காரப் பகுதி ஒன்றில் ஒரு பங்களாவில் குடியேறி எங்கள் இன்ப வாழ்வைத் துவக்கினோம். என்னை வலிய வளையச் சுற்றி வந்த நீலா ஒரு வழியாக வெளி உலகத்தையே மறக்கும்படி செய்துவிட்டாள்! எங்கு போனாலும் இருவரும் சேர்ந்தே போவோம். அப்பொழுதெல்லாம் வெளியிலே சுற்று

வதைவிட வீட்டிலே அவனுடன் இருப்பதைத்தான் அவள் மிகவும் வரவேற்றாள். அவள் காந்தக் கண்களுக்கு இமைப்பும் பிறழாமல் நான் ஆடிக்கொடுத்தேன்.

எங்களுக்கு மணி பிறந்தான். என்னையே கன்னம் வைத்துக் கொண்டு வந்திருக்கிறான் என்று நீலா பூரிப்புடன் சொல்வாள். நான் மகிழ்ச்சியால் என்னை மறந்துவிடுவேன். இன்ப நாட்கள் அல்லவா அவை? பறந்தன!

மணிக்கு மூன்றாம் ஆண்டு பிறந்தது. பிறந்த நாள் விழாவுக்கு யார்யாரோ வந்தார்கள்; இருந்தார்கள்; சென்றார்கள். ஆனால்......

அதைத் தொடர்ந்து நீலாவின் நடைமுறையிலும் ஏதோ இனம் தெரியாத மாறுதல்கள் பிறந்தன. சில நாட்களாக அவள் மட்டும் காரை எடுத்துக்கொண்டு தனியாக வெளியேசுற்றிவரத் தொடங்கினாள். அதேபோல இரவிலும் வெகுநேரம் கழித்து வருவாள். அவள் போக்கே எனக்குப் புரியாத புதிராக இருந்தது.

"ஏன் இப்படியெல்லாம் மாறி வருகிறாய்?" பொறுமையிழந்த நான் ஒரு நாள் கேட்டே விட்டேன். என் கேள்விக்கு அவளிடமிருந்து பதில் கிடைத்தது. பதிலா அது?

"செல்வம்! வீட்டில் ஒரே 'டல்'லாக இருக்கிறது. என் பழைய நண்பர்களின் எண்ணப்படி நான் மீண்டும் சினிமாவில் நடிக்கப்போகிறேன்" இந்த வார்த்தைகளைக் கேட்டதும், வழியிலே படுத்திருந்த செந்தேளை வால்புறத்திலேயே மிதித்தவன் போல் துடித்தேன்.

"வேண்டாம், நீலா இந்த விபரீதம்!" என்று எவ்வளவோ சொல்லித் தடுத்தேன். கெஞ்சினேன்.

மீன் உயிரோடு வாழவேண்டுமென்றுதான் நீர்த்தொட்டியில் பிடித்துப் பிடித்து விடுகிறோம்; ஆனால் சில மீன்கள் துள்ளிக் குதித்து தரையிலே வீழ்ந்து துடிதுடித்து மாளத்தானே செய்கின்றன!

வளர்த்துவந்தேன்; என் வீட்டுக்காரி மீண்டும் சினிமா உலக சிங்காரியானாள். அவளுக்கு விசிறிகளிடமிருந்து புகழும், எனக்கு நண்பர்களிடமிருந்து அனுதாபங்களும் குவியத் தொடங்கின.

பிறகுதான் நான் ஏதோ பெரிய தவறு செய்துவிட்டதாகவே எண்ணினேன். என் உள்ளமே எனக்குத் தீராப்பகைவனாக மாறியது. வெளியே தலை காட்டவே அஞ்சினேன். கால் முறிபட்ட நண்டு வளையினுள்ளேயே ஒண்டிக் கிடக்குமாமே, அதேபோல வீட்டினுள்ளேயே அடைந்துகிடந்தேன். என் நெஞ்சம் எதையெதையோ கொண்டு வந்து போட்டுக்கொண்டு ஜீரணிக்க முடியாமல் திண்டாடியது. இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தேன்.

அந்த முடிவுதான் இதோ இந்த பலேச்சரிவுக்கு — நகரவாசிகளே நினைத்துப்பார்க்க முடியாத இடத்திற்கு--மணியுடன் வந்து சேர்ந்துவிட்டேன். இங்கே கொஞ்சத் தூரத்தில் ஒரு குடிசையை அமைத்துக்கொண்டோம். சதிகாரப் பெண்கள் சமுதாயத்தின் வாடையே இங்கே கிடையாது. வேலையாள் வேலன்தான் எங்கள் இருவருக்கும் உற்றதுணை. இங்கு வந்த பிறகுதான் நான் உயிரோடு வாழ்வதாகவே உணர்கிறேன்...

சிந்தனை நீரிலே மூழ்கிக்கிடந்த என்னை "அம்மா, அம்மா" என்ற குரல் வெளியே இழுத்தது. எதிரே பார்த்தேன். என் மணி அழுதுகொண்டே வந்துகொண்டிருந்தான். பின்னால் வேலன் ஓட்டமும் நடையுமாகத் தொடர்ந்து வந்தான். இந்தக் காட்சி அந்த மந்தமான நிலவொளியிலும் தெளிவாகத் தெரிந்தது. "மணி..." என்ற குரலுடன் ஓடிப்போய் அணைத்துக்கொண்டேன். "இந்த வைரமணிப் பேழைக்காகத்தானேடா, இந்தச் செல்வம் உயிர் வாழ்கிறான்" என்று சொல்வதுபோல என்னிடமிருந்து ஒரு பெருமூச்சு வெளி வந்தது. மூவரும் குடிசைக்குள் நுழைந்தோம்.

* * *

வேனில் வெயில் தன் தீவிரத்தைத் காட்டிக் கொண்டிருந்தது. நான் சாரளத்தின் அருகே உட்கார்ந்துகொண்டிருந்தேன். எதிரே சில நூல்கள் சிதறிக்கிடந்தன. ஒன்றை எடுத்தேன். அது ஒரு நாவல். நான்காம் பதிப்பாக வெளிவந்திருந்தது. ஆவலுடன் படிக்கத் தொடங்கினேன.

பரிசுவாங்கும் புலவன் இல்லாததும் பொல்லாததுமாக அரசனைப் போற்றிச் சொல்வானே, அது போலப் பெண்களை அர்த்தமின்றி உயர்த்திப் பேசிக்கொண்டே போனான் அந்தக் கதாசிரியன். காதல் கோயிலில் வணங்கத்தக்க தேவதைகள் கன்னியர் என்று அவன் அடுக்கிக்கொண்டே சென்றபோது எனக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

"பாவம்! இவன் ஓர் அப்பாவி; மணமாகாதவன்" என்று எனக்குள்ளேயே சொல்லிக்கொண்டேன். ஆமாம், மங்கை, காதல், திருமணம் இவற்றைவிட்டால் இந்தக் கதாசிரியர்களுக்கு வேறு நாதியே இல்லைப்போலும். பெண்களே வராத நாவல் ஏதேனும் இருக்கிறதா என்று என் கைகள் தேடின.

வெளியே ஏற்பட்ட சிறு சலசலப்பும் அதைத் தொடர்ந்து எழுந்த இருவர் பேச்சும் என் கவனத்தை மடக்கின.

"சரி சரி. எசமான் உள்ளே இருக்கிறார். இங்கே வந்து மணி கிட்ட அரட்டை அடிக்க இது நேரமில்லே. சொல்லிவிட்டேன்" இது வேலனின் குரல்.

"பொழுதுக்குமா படிச்சிகிட்டு இருக்காரு. நீ வா மணி, நாம்போய் வெள்ளரிக்காய் பறிச்சிக்கிட்டு வருவோம்" அதைக் தொடர்ந்த ஒரு பெண்ணின் குரல்!

எங்கோ கேட்ட குரலாக இருக்கவே வெளியே எழுந்துவந்தேன். அவள் இரண்டொருமுறை இங்கே வந்து ஏதோ காய்கறி கொடுத்துவிட்டுச் சென்றதாக நினைவு. எதுஎப்படி இருந்தாலும் இந்த வார்த்தைகளை உதிர்க்கத்தான் அவளுக்கு எவ்வளவு தைரியம் இருக்கவேண்டும்?

வெறுப்புணர்ச்சியை முகத்தில் தேக்கிக்கொண்டு அவளையே உற்றுப் பார்த்தேன். என்பார்வை அவள்மேல் விழுந்ததும் கூடையைத் தூக்கித் தலைமேல் வைத்துக்கொண்டு ஒண்டி ஒதுங்கி நடக்கத் தொடங்கினாள்.

நான் மணியின் அருகே சென்றேன். "வா, உள்ளே போவோம்" என்று அழைத்தேன்.

"இல்லை, அதோ......அம்மா!" என்று தன் பிஞ்சு விரலைச் சுட்டிக் காட்டினான். அவள் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போனாள்.

"ஏய், வேலா! யார் இவள்? இங்கே ஏன் வருகிறாள்?" என் குரலில் வழக்கத்திற்கு மீறிய ஆத்திரத்தைக் கலந்தே கேட்டேன்.

"எனக்குக் கூட எங்கிருந்து வருகிறாள் என்று தெரியாது. கொஞ்சத் தூரத்தில் இவளுடைய வெள்ளரித் தோட்டம் இருக்கிறது; இவள் பெயர் செல்லமாம். நீங்கள் இல்லாத நேரத்தில், இந்த வழியே போகும்போது, இங்கே நம் வீட்டுக்கு அடிக்கடி வருவாள். 'ஆண்களே எப்படிச் சமைக்கிறீர்கள்?' என்று அனுதாபத்துடன் கேட்பாள். பொருளற்றமுறையில் உங்கள் படத்தையும் நூல்களையும் காட்சிப்பொருள்களைப் பார்ப்பதுபோலப் பார்த்துக்கொண்டே இருப்பாள். ஒரு நாள் நீங்கள் சமையல் நன்றாக இருந்தது என்று சொன்னீர்களே நினைவிருக்கிறதா? அன்றைய சமையல் செய்யும்போது எப்படிச் சமைப்பது என்று சொல்லிக்கொடுத்தவள் அவள்தான். அதுமட்டுமல்ல, தினந்தோறும் மணியை......"

"அவள் பின்னாலே அனுப்பிவிட்டு வேடிக்கை பார்க்கிறாய் போலும்! சீ, முட்டாள்! உன்னை இதற்காகத்தானா இங்கே வைத்திருக்கிறேன்? சமையல் தெரியவில்லை என்றால் வேறொரு சமையற்காரனை அழைத்துவந்தால் போகிறது. இவள் ஏன் இங்கு வரவேண்டும்? கவனத்தில் வை! இனிமேல் இங்கே நான் இவளைப் பார்க்கக் கூடாது. ஆமாம்......" சடசடவென்று பொரிந்து தள்ளிய நான் விவரிக்க இயலாத ஆத்திரத்துடன் மணியை இழுத்துக் கொண்டு உள்ளே போனேன.

●

மாலைக் கதிரவன் தெளித்திருந்த மஞ்சள் கதிர்கள் பச்சை நிற இலைகளுடன் உறவாடிக்கொண்டிருந்தன. பக்கத்திலிருந்த டவுனுக்குச் சென்று கால்நடையாகவே திரும்பிக்கொண்டிருந்தேன்.

எங்கோ கொஞ்சம் தூரத்தில் மரங்களிலிருந்து இரண்டு குயில்கள் மாறி மாறிக் கூவிக்கொண்டிருந்தன. நடையிலே எந்தவித ஆர்வமுமின்றி நடந்துகொண்டிருந்தேன்.

கையிலே இருந்த பொம்மைகளையும் பொட்டலங்களையும் பார்க்கும்போது மட்டும் என் கால்கள் விரைந்து சென்றன. காரணம் மணியின் நினைவு என்னை அந்த வேகத்திலே இழுத்துச் சென்றது.

எங்கள் குடிசைக்குக் கொஞ்சத் தூரத்திலும் வந்துவிட்டேன். தான் அனுப்பிய கதிர்களை வாரிச் சுருட்டிக்கொண்டு கதிரவன் மலைகளுக்கிடையே ஓடி ஒளிந்து கொண்டிருந்தான்.

குனிந்து கொண்டே நடந்து வந்த நான் திடீரென்று எதிரே நோக்கினேன். அந்தக் காட்சியைக் கண்டதும் என் கண்கள் தானாகச் சுருங்கின. அங்கே ஒரு ஜீப்கார் நின்றுகொண்டிருந்தது! என் பார்வையை மேலே செலுத்தினேன். எங்கள் குடிசைக்குக் கொஞ்சம் தொலைவில் நாலைந்து பேர் நின்றுகொண்டிருந்தது தெரிந்தது.

கொஞ்சத் தூரத்திலிருந்தே உற்றுக் கவனித்தேன். யாரோ வேட்டைக்கு வந்த சீமான்கள் வேலனுடனும் மணியுடனும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"சரி மிஸ்டர். நாதன்! பெரிய கைகாரன் போலிருக்கிறது இந்த ஆள்! அதனால்தான் அசைந்து கொடுக்கமாட்டேன் என்கிறான். நமக்குத் தேவை அந்தப் பையன். அந்தப் 'போர்ஷ'னில் நடிக்க இந்தச் சிறுவன்தான் தகுதியாக இருப்பான். அதனால் அந்த மனிதன் எவ்வளவு கேட்கிறானோ அந்தத் தொகையை எறிந்துவிட்டுப்பையனை அழைத்து வாருங்கள்!" இந்தக்குரல் கொஞ்சத்தூரத்தில் தாழ்ந்திருந்த ஒரு மரக்கிளையிலிருந்து ஒலித்தது.

என் பார்வை அங்கே தாவியது. கண்ணிலே கருப்புக் கண்ணாடி, உதட்டிலே இரத்தச் சாயம், இத்யாதி கோலங்களுடன் ஒய்யாரமாகச் சாய்ந்துகொண்டிருந்த ஒரு மங்கை அங்கிருந்த ஒரு மனிதருக்குக் கட்டளை இட்டுக்கொண்டிருந்தாள். அவளை அடையாளம் கண்டுபிடிக்க எனக்கு வெகுநேரம் பிடிக்கவில்லை. அவள்தான் என் மாஜி மனைவி—நீலா! நான் பிடித்திருந்த மரமே மலைப்பாம்பாக மாறிவிட்டதாக ஒரு பிரமை.

நான் அவளைக் கண்டுகொண்டேன். ஆனால் அவள் தான் பெற்ற செல்வனை அடையாளம் தெரிந்துகொள்ளவில்லை. விலைக்கு வாங்கத் துணிந்துவிட்ட அவள் ஆணவத்தைக் கண்டு எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. விரைந்து சென்று அவள் முகத்திலே ஓங்கி ஓர் அறைகொடுக்க என் கைகள் துடித்தன.

"அம்மா, தாயே! பணக்காரப் பரதேவதை, உனக்குப் பணம் இருக்கிறதே ஒழிய, புத்தி இல்லையே! நாங்கதான் குழந்தையையே பார்க்கக்கூடாது என்கிறோம். நீ கீரை வாங்குவது மாதிரி விலைக்கல்லவா கேட்கிறே. உன் பணத்திமிர் உன்னோடு இருக்கட்டும். முதல்லே இந்த இடத்தைக் காலிபண்ணு."

இந்தச் சூடான வார்த்தைகளை நான் உதிர்க்கவில்லை! எதிரே சேலையை வரிந்துகட்டிக்கொண்டு வந்த செல்லம் பொழிந்துகொட்டினாள். அவள் பதில் என்னையே திகைக்க வைத்தது. நான் அதிர்ந்தே போனன்.

ஆனால் இன்னும்கூட நான் மறைந்திருந்த மரத்தின் பின்புறமிருந்து வெளிவர எனக்குத் தைரியம் வரவில்லை. அந்தச் சீர்கெட்ட சினிமாக்காரியிடம் நான் யார் என்பதை ஏன் காட்டிக்கொள்ள வேண்டும்?

செல்லத்திற்கும் நீலாவிற்கும் இடையில்தான் எவ்வளவு இடைவெளி? காட்டு மாங்கனி எட்டிக் கனியைப்போல அழகாக இல்லை தான்; ஆனால் தின்பவரின் உயிரைத் தீர்த்துக்கட்டுவதில்லையே!

கொஞ்ச நேரத்தில் அவர்கள் எல்லோரும்போய் காரில் ஏறிக் கொண்டார்கள். கார் பறந்தது.

நான் குடிசையை நெருங்கினேன். மணி செல்லத்தின் அரவணைப்பில் இருந்தான். என்னைக் கண்டதும் அவள் மணியைக் கீழே இறக்கிவிட்டாள்.

"இங்கே வரக்கூடாது என்றீர்கள், வந்துவிட்டேன்--மன்னித்து விடுங்கள். இனிமேல் வராமல் போய்விடுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள் செல்லம்.

'எங்கே போகிறாய், செல்லம்? நீ போய்விட்டால் என் மணியை நான் ஒருநாள் இழந்தேவிடுவேன்' என் வாயிலிருந்து இந்தச் சொற்கள் வருவதற்குள் என் கைகள் அவள் கைகளைப் பிடித்து நிறுத்தின.

தாவி ஓடிவந்த மணி தெரிந்தோ தெரியாமலோ அவள் முந்தானைத் தலைப்பையும் என் வேட்டித் தலைப்பையும் முடிந்து கொண்டிருந்தான்.

அனாதை

உள்ளத்திற்கு உவகை ஊட்டும் அந்தக் கன்னியின் கட்டழகை ஒரு கவி கண்டிருந்தால், கவிதைகள் பல எழுதியிருப்பான்— சிந்தைகவர் அந்தச் சித்திரப் பாவையின் அங்கங்களைச் சின்னாபின்னமாக்கிப் பாயிரம் பல பாடியிருப்பான் — அவ்வளவு அழகு அவள்.

சதிராடும் கருவிழிகள், இசை பாடும் செவ்விதழ்கள், அன்ன நடை, சின்ன இடை, பின்னல் சடை.

அவளைக் கண்ட, என் கண்கள் வேறு எந்தப் பொருளிலும் அழகைக் காணவில்லை; ஏன் வேறு எதையுமே நாடவுமில்லை.

பலமுறை படித்தாலும் பாடங்களைப் பதியவைக்க முடியாத என் மனதில், மூன்று நாட்களாக பார்த்துக்கொண்டிருந்த அந்த உருவம் எப்படியோ பதிந்துவிட்டது. மறக்க நினைத்துக் கண்களை மூடினாலும் மனக்கண்ணில் தோன்றும் அவள் உருவம் என்னைப் பார்த்து ஏளனம் புரிவதுபோல் இருந்தது.

அவள் யார்? அவள் பெயர் என்ன? எனக்கே சரியாகத் தெரியாது! பேசியிருந்தால் அல்லவா தெரிந்திருக்கும். அவள் அல்லிக் குளத்திற்கு வருவாள் — நீர் மொண்டு செல்வாள். முதல் நாள் நீர் மொண்டுவிட்டு அல்லி மொட்டு ஒன்றை என்னைப்பார்த்தவாறே கிள்ளிக் கூந்தலில் செருகினாள் — அந்தப் பூவோடு என் உள்ளத்தையும் அப்படியே செருகிவிட்டாள்—அன்று முதல் என்நிலை எனக்கே புரியவில்லை.

எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. அவள் யார்? நான் யார்? நானோ இண்டர் வகுப்பில் படிக்கும் மாணவன், தோட்டக்காரன் மகன். அவள்! அந்த எழிலூரில் ஒரு பெரிய பணக்காரரின் மகள்!

என்னை அறியாமல் ஓர் உணர்ச்சி என்னை அவள்பால் ஈர்த்தது. ஒரு சமயம் இதுதான் காதலோ என்றுகூட எனக்குத் தோன்றிற்று. பல சினிமாப் படங்களையும், செய்தித் தாள்களையும், வார இதழ்களையும் படிக்கும் எனக்கு இது ஏதோ ஒரு புதுவித உணர்ச்சியாகவே தென்பட்டது. அந்த உணர்ச்சியே ஆசை, அவா, அன்பு இவை வளரவளரத்தான் காதலாகும் என்று எனக்குப் படித்த கதைகள் நினைவுபடுத்தின. ஆனால் என் மனம் ஏனோ ஏற்றுக்கொள்ளவில்லை.

அவள் நிலையையும்என் நிலையையும் சிந்தித்துப்பார்த்தேன்; மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடுதான் தோன்றிற்று: என் பூலோகத்து அல்லி வானுலகச்சந்திரனை

ச. இராமலிங்கம்

காதலிக்கவில்லையா? இப்படியும் ஒரு கேள்வி என் உள்ளத்தில் எழுந்தது. ஆனால் அது கவியின் கற்பனை. வாழ்க்கைக்கு ஒவ்வாதது. ஆம் அன்பு, காதலாக மலரும் என்றால், இதுபோன்ற இரண்டு துருவங்களுக்கும் இடையே ஏற்பட முடியாது. ஏற்பட்டாலும் சமுகம் ஏற்காது, சமுகம் ஏற்பதுபோல் பாவனை செய்தாலும் வாழ இடந்தராது.

ஏன் இந்த எண்ணங்கள்? இன்னும் இரண்டு நாட்களிலே எழிலூரைவிட்டுச் சென்னைக்குப் புறப்படப்போகும் எனக்கு ஏன் இந்த உணர்ச்சிவசப்பட்ட கருத்துக்கள்? சிந்தித்தேன், வெண்ணிலாவை மறைக்க நினைக்கும் மேகங்கள்போல் என் உள்ளத்தையும் சிறிது மயக்கமுறச் செய்துவிட்டது இங்கு நடந்த சம்பவங்கள்.

இப்படி எண்ணங்கள் வேரூன்றி என உள்ளத்தில் வளர்ந்த காரணத்தாலோ என்னவோ கனவு மலர்கள் பூத்துக் குலுங்க ஆரம்பித்துவிட்டன.

இப்படி என் மனம் எப்போதும் கனவு உலகிலேயே சஞ்சரித்துக் கொண்டிருந்தது.

"தம்பி...தம்பி"

யார் அது? என்று கனவுலகிலிருந்து விழித்துத் திரும்பிப் பார்த்தேன்.

எனக்குத் தெரியவில்லை, புதிய முகம்.

"தம்பி உன்னை இன்றிரவு எட்டு மணிக்கு அவர் தோட்டத்திற்கு வரச் சொன்னார், என் எசமானர்?

எனக்குச் சிரிப்பு வந்தது? வந்திருக்கும் ஆளே யார் என்று தெரியாதபோது, அவன் எசமானர் யார் என்று எப்படித் தெரியும்?

'ஏன் தம்பி சிரிக்கிறீரே! இது பெரிய இடத்து விஷயம், அந்த ஐயா வா என்றால் வரவேணும், போ என்றால் போகணும்; உனக்கு ஒண்ணும் தெரியாது. உன் அப்பனைக் கேட்டுப்பாரு"

"ஐயா நீங்களே யார் என்று தெரியவில்லை; உன் எசமானர் எனக்கு எப்படித் தெரியும்?"

"அப்படியா தம்பி! இந்த ஊர் புதுப் பணக்காரர் இருக்கிறாரே, கருணாகர முதலியார், அவர் வரச் சொன்னார்—அதுதான் தம்பி—நீ கூட அடிக்கடி பார்த்திருக்கிறாயாமே அவர் பொண்ணை-அல்லிக் குளத்தண்டை" என்றார்.

எனக்கு உடனே தூக்கிவாரிப் போட்டது. உடலெல்லாம் சில்லிட்டுவிட்டது. ஒருசமயம் நான் அவள் அழகைப் பார்த்து ரசித்ததை அவள் தவறாக எண்ணித்

தன் தந்தையிடம் சொல்லிவிட்டாளோ? எனக்கு என்றுமே தோன்றவில்லை.

"சரி நீ போ வருகிறேன்" என்று சொன்னேன்.

"தம்பி நினைவிருக்கட்டும்! பெரிய இடத்துப் பொல்லாப்பு வச்சுக்காதே...... வரலே........ அப்புறம்......" என்று சொல்லிக் கொண்டே போய்விட்டான்.

"பெரிய இடத்து விஷயம்"

உண்மைதான், அவளோ கொம்புத் தேன்; நான் முடவன் நிலையில் இருக்கிறேன். இந்த நிலையில் இவ்வளவு நேரம் முட்டாள்தனமாக எண்ணாத எண்ணமெல்லாம்எண்ணிக்கொண்டிருந்தேன்; என்ன அறிவீனம்?

இன்று இரவு எட்டு மணிக்கு அவர் தோட்டத்திற்குப் போக வேண்டும். எதற்காகக் கூப்பிட்டிருப்பார், அன்போடு கூப்பிட்டிருந்தால் வீட்டிற்கு அல்லவா கூப்பிட்டிருப்பார்!

"எதிர்பாராத முத்தத்தில்" பொன்முடியின் நினைவு வந்தது. ஐயோ! என் நிலை! நான் அவளை காதலிக்கிறேன் என்று சொல்லக் கூட இல்லையே! அவளோடு இதுவரை பேசினதுகூட இல்லையே! அவளைப் பார்த்தது ஓர் குற்றமா? அவளும்தானே பார்த்தாள்! அவள் பார்க்கவே நானும் பார்த்தேன்! இதில் என்ன தவறு?

போவதா, போகக்கூடாதா என்ற சிந்தனையிலேயே இரண்டு மணி நேரம் கழிந்துவிட்டது. குறித்த நேரமும் நெருங்கிக்கொண்டிருந்தது. போகவில்லை என்றால் என் தந்தையிடம் ஏதாவது சொல்லிவிடுவார்களா என்ற அச்சம்! போனால் பொன்முடியின் கதிதானா!

இந்த நிலையில் தந்தைக்கும் தெரியாமல் சென்னைக்கே ஓடிவிடலாமா என்றுகூட யோசித்தேன். எப்படியும் போனாலும் போகாவிட்டாலும் என் தந்தைக்கு இந்தச் செய்தி எந்தவிதத்திலாவது தெரிந்துவிடும். இனி இதை மூடிவைத்து என்ன பயன்! நான் செய்தது குற்றமாயின் அதன் விளைவால் வரும் இன்னல்களைத் தாங்கத்தானே வேண்டும்.

சரி, நான் போய் அந்தப் பணக்காரரிடம், உங்கள் பெண்ணை எந்த விதக் கெட்ட எண்ணத்துடனும் நான் பார்க்கவில்லை என்று சொல்வது-நம்பினால் நம்பட்டும்! இல்லையென்றால் அதன் பலனை ஏற்கத் தான் வேண்டும்.

ஏழையென்றால் ஒருபெண்ணைப் பார்க்கக்கூடவா உரிமையில்லை— ஆம், எப்படி இருக்கமுடியும்? காடு போன்ற நிலத்தைக் களைந்து சிங்காரப் பூங்கா ஆக்கும் தோட்டக்காரன் மகனுக்கு எப்படி உரிமை உண்டு? தோட்டத்தில் பல வண்ணப் பூக்களை மலரச்செய்யும் செடிகளைப் பராமரிக்கும் என் தந்தைக்கே அதைக்கிள்ளி அதன் அழகை அனுபவிக்க, மணத்தை நுகர உரிமையில்லையே — அவ்வளவு தாழ்ந்தவர்கள் இல்லையா? கேவலம், ஒரு தோட்டக்காரன் மகன் ஒரு பெரிய பணக்காரரின் பெண்ணைப் பார்ப்பதா? கூடாது தான்!

இப்படி எண்ணிக்கொண்டே தான் அந்தப் பெரிய பணக்காரரின் வீட்டுத் தோட்டத்தை அடைந்தேன். அங்கே அதே ஆள் காத்துக்கொண்டிருந்தான். "போய் அந்தப் புளியமரம் பக்கத்தில் இருக்கும் பெஞ்சில் உட்காரு தம்பி! ஐயா வந்திடுவாரு, நான் போய்ச் சொல்லிவிட்டு வருகிறேன்" என்று அவன் வீட்டின் உள்பக்கமாகப் போய்விட்டான்.

நான் மெதுவாக அந்த ஆள் சொன்ன புளியமரத்துக்குப் பக்கத்தில் சென்றேன். அங்கே ஒரு பெஞ்சும் இருந்தது. அதில் மெதுவாக அமர்ந்து, பத்தாம் நாள் நிலவின் ஒளியில் பார்த்தேன். புளியமரத்தின் அருகில் ஏதோ கயிறு சுருளாக வைக்கப்பட்டிருந்தது.

நான் திடுக்கிட்டேன்— இருதயமும் துடிதுடித்தது. மெதுவாக இன்னும் சுற்றுமுற்றும் பார்த்தேன்; பயத்தினால் எனக்கு அழுகை கூட வந்துவிட்டது. பெஞ்சின் மற்றொரு ஓரத்தில் மாட்டை அடிக்கும சவுக்கு இருந்தது. சரி இன்று இரவு நாம் திரும்புவது அவ்வளவுதான்! என்ன நேர்ந்தாலும் இனித் தந்தையின் கண்களில் விழிக்கவே கூடாது. என்று எண்ணிக் கொண்டு அந்த கயிற்றையும் சாட்டையையும் மாறி மாறிப் பார்த்தேன். அப்போது ரேடியோவிலிருந்து ஏதோ மெல்லிய இசை கேட்பதுபோல் இருந்தது. கூர்ந்து கேட்டேன் "அன்புக் கயிறு இதுதான் அறுக்க யாராலும் ஆகாதய்யா......" எனக்குச் சிரிப்பு வந்தது. எது அன்புக் கயிறு? இதுவா? என்று மெதுவாக எழுந்து அந்தக் கயிறிடம் சென்றேன், அப்போது யாரோ வரும் சப்தம் கேட்கவே திடுக்கிட்டுத் திரும்பினேன்—அதே ஆள் வந்து நான் கயிற்றைப் பார்ப்பதைப் பார்த்து "என்ன தம்பி பார்க்கறே — மூணு காளா ஒரு புதுக்காளை கொஞ்சம் இடக்குப் பண்ணிக்கொண்டே வருது, அதற்குத்தான் இந்தப் புதிய கயிறும் சவுக்கும்" என்று சொல்லிவிட்டு தோட்டத்தின்' மறுபக்கத்திற்குப் போய்விட்டான்.

"மூன்று நாட்களாகப் புதிய காளை" நம்மைத்தான் மறைமுகமாகச் சொல்கிறான் என்று தெரிந்துகொண்டேன்! இனி இன்னும் என்ன ஆதாரங்கள் வேண்டும்! இனிப் பொன்முடியின் கதிதான்! அதோடு சென்னைக்கு ஓடிவிடுவது! என்று யோசித்துக் கொண்டு பயத்தினால் கண்களில் நீர் மல்க, வரும் வழியையே பார்த்துக்கொண்டு அந்தப் பெஞ்சில் அமர்ந்தேன். கண் கலங்கி இருந்ததால் எதிரே காணும் உருவமெல்லாம் மங்கலாகவே தெரிந்தது. அந்த ஆள் சொன்ன "பெரிய இடத்து விஷயம் — பொல்லாப்பு எதற்குத் தம்பி" என்று சொன்னதும் ஒலித்துக்கொண்டிருக்கவே, கண்ணிருந்தும் குருடன் போல், காதிருந்தும் செவிடன் போல் அமர்ந்திருந்தேன்.

ஏதோ சல சலப்புக்கேட்டது உற்றுக் கவனித்தேன் — அவள் தான்! எவளைக் காணக்கூடாது என்று நினைத்தேனோ, அவளே வந்தாள்—அழகு பிம்பம் அன்ன நடை பயிலுவதுபோல் அசைந்தாடி வந்தாள்! முன்னே வரும் அழகு பின்னே வரும் ஆபத்தைக் குறிக்கிறது என்று நினைத்துக் கொண்டே அவளைக் கண்டுகொள்ளாமல், அவள் பின்னால் அந்தப் பணக்காரர் 'வருகிறாரா என்று பார்த்துக்கொண்டிருந்தேன் — அவள என்னை நெருங்கினாள் — நான் எழுந்து நின்று அவள் வந்த வழியின்மீதே விழிவைத்து நின்றேன்.

"உட்காரலாமே..."

"கண்ணியம் குறைந்துவிடும்"

"நான் பெண்தானே..."

"இருப்பினும் நீங்கள் செல்வந்தர் மகள்..." என்று அவள் வந்த வழியையே பார்த்துக்கொண்டு நின்றேன்.

"என்ன பார்க்கிறீர்கள்! யாரையாவது எதிர்ப்பார்க்கிறீர்கள்"

"ஆம் என்னை அழைத்தவரை..?

"நான்தானே வரவழைத்தேன்" என்று குழைந்து மெதுவாக நிலம் நோக்கிச் சொன்னாள்.

"என்ன நீங்களா! உங்கள் தந்தை கூப்பிட்டதாக..."

"ஆமாம்! நான் கூப்பிட்டேன் என்றால் எங்கே வராமல் போய் விடுவீர்களோ என்று..."

"என்றால் நம்பமுடியவில்லை..."

"இல்லை...... இது உண்மை— தந்தை இரண்டு நாட்களாக ஊரில் இல்லை...அதனால்தான்..."

"நீங்கள் செய்வது..."

"நீங்கள் என்று சொல்வதை விட என் பெயர் சொல்லியே அழைக்கலாம். என் பெயர் அல்லி"

"அழைக்கலாம்... ஆனால்..."

"ஆனால்... என்ன?..."

"நீங்களோ செல்வந்தர் மகள்; நானோ ஓர் ஏழை மகன்"

"அதனாலென்ன... அத்தான்"

"அத்தான்!! அம்மையே நீங்கள் செய்வது யாவும் விபரீதமாக இருக்கிறது—என்னை மன்னித்து விடுங்கள்"

"அத்தான் — நான் செய்வது என்ன விபரீதம்—மூன்று நாட்களாக உங்களை அல்லிக்குளத்தருகில் கண்டேன்—என்னை அறியாமல் ஓர் உணர்ச்சி என் உள்ளத்தில் ஏற்பட்டுவிட்டது. என்றும் எப்போதும் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்போல் இருக்கிறது......"

"அம்மணி நீங்கள் உணர்ச்சி வசப்பட்டுவிட்டீர்கள் — அதனை அடக்கவேண்டும் — கட்டுப்பாடு வேண்டும்..."

"உண்மைதான் நீங்கள் சொல்வது. நான் இதுவரை கண்டறியாத உள்ளக் கிளர்ச்சியல்லவா ஏற்பட்டிருக்கிறது அத்தான், இனி நீங்கள்தான் இதற்கு......" என்று நெருங்கி அவன் கையைப் பிடிக்கப்போனாள்.

"அல்லி......நீ வாழ்க்கையை விளையாட்டாக நினைக்கிறாய்...... வாழ்க்கை நீ நினைப்பதுபோல் அவ்வளவு சுலபமாக முடியச் சமுகம் இடம் தராது! நீ என்னை விரும்பலாம்! நானும் உன்னைக் காதலிக்கலாம்! ஆனால் இருவரும் சேர்ந்து வாழமுடியுமா! அது தான் நம் வாழ்க்கையின் பிரச்னை!

"ஏன் முடியாது?......"

"அல்லி நீ நினைப்பதுபோல் இன்றைய சமுகம் இல்லை. ஜாதி வேற்றுமை, பாட்டாளி பணக்காரன் என்ற வித்தியாசம் போன்ற பாசிகள் சமுகம் என்னும் தரையின் மீது படர்ந்து இன்றுவழுக்கு நிலமாகச் செய்திருக்கிறது. ஆகவே இதுபோன்ற வழுக்கு நிலத்தில், நாம் நடந்து செல்ல முடியாது, நீ சொல்லும் நிலையில்!"

"அத்தான்! இன்றையதினம் எவ்வளவோபேர்கள் இப்படி வாழும்போது நாம்மாத்திரம் வாழமுடியாதா?"

"எப்படி வாழ்கிறார்கள் அல்லி! நான் உன்னைக் காதலிக்கிறேன் என்றே வைத்துக்கொள் — உன் தந்தை இதற்குச் சம்மதிப்பாரா"

"சம்மதிக்கமாட்டார்..."

"சம்மதிக்கவில்லை என்றால் நாம் எப்படி வாழமுடியும — ஒளிந்து மறைந்து வாழச் சொல்கிறாயா?"

"ஆமாம் அத்தான்! இன்றைய செய்தித்தாளில்கூடப்படித்தேன். இருவர் தாய் தந்தையர்களுக்குத் தெரியாமல் ஓடிவிட்டார்கள் என்று"

"அல்லி — நீ அறியாப்பருவத்தினள்! இதைப்போன்ற செய்தித்தாள்களைப் படித்து நீ இந்த முடிவுக்கு வந்திருக்கிறாய்"

"ஆமாம் நாமும் ஏன் ஓடிவிடக் கூடாது"

"அல்லி எங்கே ஓடிவிடுவது— நீ உன் தந்தையின் கண்களினின்று தப்பலாம். ஆனால்சமுகத்திலிருந்து வேறு எங்கும் ஓடிவிட முடியாது. நீ சமுகத்தில் ஒரு அங்கம் என்பதை நினைவில் வைத்துக்கொள். சமுகத்தோடு ஒத்து வாழ்ந்தால்தான் நம்மால் வாழ முடியுமே தவிர, எதிர்த்து வாழ முடியாது..."

"இன்றையதினம் எதிர்த்து வாழ்பவர்கள் இல்லையா!"

"இல்லையென்றுசொல்லவில்லை; ஆனால் அவர்களுக்குப் பண வலிமை உண்டு"

"ஏன் நானும் பணம் எடுத்துக் கொண்டு வருகிறேன் — எனக்காகச் செய்திருக்கும் நகைகளே பத்தாயிரம் ரூபாய் பெறும்"

"அல்லி! நான் பணத்திற்காகச் சொல்லவில்லை — நீயோ இளம் பெண் உன் வயது......"

"பதினாறு ஆகிறது"

"பதினாறு ஆகிறது என்கிறாய்! இந்த நிலையில் நான் உன்னுடன் ஓடிவந்துவிட்டால், நான் உனைக் கடத்திவந்துவிட்டதாகக் குற்றம் சாட்டப்படும் — சிறைவாசம் அளிக்கப்படும்..."

"அத்தான்....அதெல்லாம் சொல்லாதீர்கள்"

"அல்லி—நான் சொல்லவில்லை. இப்படித்தான் சட்டம் சொல்லுகிறது! ஆகவே அல்லி—நீயே யோசித்துப்பார்—நீயோ வாலைப் பருவத்தினள்! நானோ இளங்காளை! நமக்குப் பருவத்துடிப்பு இருக்கத்தான் செய்கிறது! அந்த உணர்ச்சியின் வசத்திலே நாம் நம்மையும், நம் நிலையையும், சமுகத்தையும் மறந்துவிடக்கூடாது. வாழ்க்கையைக் கானல் நீராக்க வேண்டாம், அல்லி :நான்போய் வருகிறேன்; இன்னும் இரண்டு நாட்களில் இந்த ஊரைவிட்டே போய்விடுவேன்! அப்போது நீயும் என்னை மறந்துவிடுவாய்—அல்லி என்னை மறந்துவிடு! அதோடு இச்சைகளைக் கிளரச்செய்யும் செய்தித்தாள்களையும் வார இதழ்களையும் மாத இதழ்களையும் மறந்துவிடு! மறைத்துவிடு! நான் வருகிறேன்" என்று சொல்லி விட்டு கண்களில் நீர்மல்க நான் திரும்பியும் பாராமல் வந்துவிட்டேன்.

அடுத்து இருந்த இரண்டு நாட்களும் நான் வெளியே எங்கும் போகாமல் வீட்டின் மூலையிலேயே அமர்ந்து வாழ்க்கையைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்தேன். என் தந்தை கூட "ஏன் வெளியில் போவதில்லை" என்று கேட்டார். நான், "சலிப்பு ஏற்பட்டு விட்டது, நாளைக்கே சென்னைக்குப் போய்விட வேண்டும்" என்றேன். தந்தையும் சம்மதித்தார். இருவரும் மறுநாள் காலையே புறப்பட்டோம்! ஆனால் என் மனத்தில் ஏதோ ஒன்று உறுத்திக் கொண்டேயிருந்தது.

[அடுத்த இதழில் முடியும்

4-ம் பக்கத் தொடர்ச்சி

பண்டிதர். இன்று, அதே பாகிஸ்தான் பிரதமருக்கு நேசக்கரம் நீட்டி விருந்தளிக்கிறார். சமஸ்தானங்களை எடுத்துக்கொள்வதென்று முடிவு செய்யப்பட்ட போது, ஓங்காரக் கூச்சலெழுப்பிய ஐதராபாத் நைசாம், இன்று டில்லியின நண்பர்களில் ஒருவராக வாழுகிறார். இப்படி, ஒருசமயம், நீதியை எதிர்த்தோர், அந்த நீதி எப்படியாவது வெற்றி பெற்றுவிடின், அதற்குப பணிந்து நேசம்கொண்டு வாழ்வது உலக இயற்கை என்பதை நிகழ்ச்சிகள் பல சொல்லும்!!

எனவே, தேசிய எழுச்சிகொண்டு, 'திராவிட நாடு' வேண்டும் எனக்கூறும் நமக்கு, இன்று எவ்வளவு எதிர்ப்புகள் காட்டப்படினும், எதிர்காலத்தில் நேசக்கரமும் அன்பு மொழியும் கிடைக்காமற் போகாது. அது கிடைக்கவேண்டுமாயின்,

நமது சக்தி பலமுள்ளதாக வேண்டும் — எதாலும் தடுக்க முடியாது இந்த எழுச்சியை — என்று மாற்றார் உணரவேண்டும்.

ஒன்பதாண்டுபோய். பத்தாவது வயது அரும்புகிறது, திராவிட முன்னேறறக் கழகத்துக்கு! இந்தச் சமயத்தில், கழகப பொதுச் செயலாளர் அவர்கள், "நம்நாடு" இதழில், விடுத்துள்ள வேண்டுகோள், மேற்சொன்ன நிலை வளரவேண்டும் என்பதையே வலியுறுத்துகிறது.

கழகம் எப்படி அரும்பிற்று—எப்படியெப்படி வளர்ந்தது—இன்று எத்தகைய நிலையைப் பெற்றுள்ளது என்பதை நாடு அறியும். ஒரு வினாடி, கடந்து வந்த ஆண்டுகளைத் திரும்பிப் பார்த்திடின் புன்னகையும் பெருமூச்சும் நமக்கே ஏற்படும்.

வாலிபர்கள் நாம்! இளமைப் பருவத்தில் உள்ளது நமது கழகம்! பெரியவர்களின் அலட்சியம் தான், வழக்கமாக நமக்குக் கிடைக்கும் பரிசு!!— எனினும், உழைப்பையே ஊதியமாக வைத்து, உன்னதமான இலட்சியக் கோட்டையாகக் கழகத்தைக் கட்டிக்காத்து வருகின்றோம். நாமே, வியக்கின்ற அளவுக்கு, நாட்டவரின் உள்ளத்தில் எல்லாம் கழகக் கொள்கைகளைப் பதியவைத்து வருகின்றோம்.

இப்பணி,
இன்னும்,
சிறப்பாக,
அதிகமாக,
நடைபெறவேண்டும்!

இல்லந்தோறும் திராவிடர்தம் உள்ளந்தோறும் கழகம் இடம்பெற வேண்டும்!

விடுதலைபுரியின் தொண்டர்கள் நாம் — நமக்கு வேண்டிய, அடக்கம், ஊக்கம், தியாகஉணர்வு, மிக மிக அதிகம்!!

வளர்ப்போம்—
வளர்வோம்—
வெல்வோம்!!

தி. மு. க. தலைமை நிலைய முதல் வெளியீடு!

'வளம் காண வழி'

அண்ணாவின்

அரிய கருத்துரை

சென்னை சட்டமன்றத்தில், 1958—59ம் ஆண்டின் வரவு செலவு பொது விவாதத்தின்போது ஆற்றிய பேருரைகளின் தொகுப்பு.

இந்நூல்...................

அரசியல் துறையினருக்கு அரிய விளக்கம் தரும் அறிவுக் களஞ்சியம்!

கொள்கை விளக்கப் பணியில் ஈடுபட்டுள்ள கழகத் தோழர்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டிய பெருந் துணைக் கருவி!!

விலை 8 அணு

குறிப்பு:— தனிப்பிரதி வேண்டுவோர், புத்தக விலையுடன், 15-புதுக் காசுகள் அஞ்சல் செலவிற்காக, அனுப்பவும். 50-பிரதிகளுக்கு அதிகமாக வேண்டுவோர்க்கு 20-சதவிகிதம் கழிவு உண்டு. வி. பி. பி. இல்லை. தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

விவரங்களுக்கு:—

தி. மு. க. தலைமை நிலையம் 'அறிவகம்'
சென்னை-13.



புதிய வேலை

—[✻]—

"வாங்க! வாங்க!! ஏது, ஒவ்வொரு வீடா, நுழைஞ்சுகிட்டு வர்ரீங்க..."

"எனக்கு நூறு வீடு ஒதுக்கி யிருக்காங்க.........என்னைபோல மொத்தம் 40-பேர் இருக்கோம் இந்த மண்டலத்திலே...மொத்தம் 4000-வீடுகள் எங்கள் வசம் விடப் பட்டிருக்கு......இந்த நாலாயிரம் வீட்டையும் கவனிக்கிற பொறுப்பு எங்ககிட்டேயிருக்கு..."

"கவனிக்கிறதுன்னு எப்படிங்க '.........?

"...எங்க காங்கிரஸ் சர்க்கார் செய்திருக்கிற சாதனைகளை ஒவ்வொருத்தருக்கும் புரியும்படியா விளக்கிறதும், தினசரி மக்களோடெ தொடர்புவைச்சிருக்கிறதும்தான் எங்கவேலை..."

"அதாவது பொதுக் கூட்டம் போட்டுப் பேசினா, கேட்க மக்கள் வரமாட்டேங்கிறாங்க. அதனாலே, ஒவ்வொரு வீடாப்போய் பிரசங்கம் செய்யணுமங்கிறது, ஏற்பாடு போலிருக்கு..."

"என்ன அண்ணாச்சி! பேச்சிலே கழக வாடை வீசுது..."

"ஏன்யா தியாகி! உண்மையைப் பேசினா அதுக்குக் கழக வாடைன்னு பேரா? தெரியாமத் தான் கேட்கிறேன், இத்தனை நாளுமில்லாமெ ஏன் இப்படி திடீர்னு வீட்டுக்கு வீடுபோய் காங்கிரசின் சாதனைகளைப்பற்றி எடுத்துச் சொல்கிறதுன்னு கிளம்பியிருக்கீங்க! காங்கிரஸ் ஏதாவது சாதிச்சிருந்தா, அது எங்களுக்கே புரியாதா.........இதை ஒருத்தர் எடுத்து விளக்கவா வேணும்? அவ்வளவு புத்தியில்லாதவங்களா, நாங்க!"

"அண்ணாச்சிக்குக் கோபம் வருதுபோலிருக்கு! அன்பு முக்கியம், அன்புதான் உலகத்தை

[இது, செய்தி]

"........இப்புதிய வேலைத் திட்டப்படி ஒவ்வொரு காங்கிரஸ்காரர்களுக்கும் 100 வீடுகள் ஒதுக்கப்படும். மண்டலப்பகுதியிலுள்ள 40 காங்கிரஸ்காரர்கள் 4 ஆயிரம் வீடுகளில் கவனம் செலுத்துவர். வீட்டிலுள்ள ஒவ்வொருவரையும் சந்தித்து காங்கிரசின் சாதனைகளை விளக்கி, தொடர்பு கொள்வர்........"

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்

மதுரை—செப்.

வெல்லும்னு மகாத்மாகாந்தி கூடச் சொல்லியிருக்காரு. அந்த மகா உத்தமர் வளர்த்த கட்சி தான் காங்கிரஸ் கட்சி. அந்த அன்பு எங்கேயும் தழைக்கணும், உலவணும்னுதான் எங்க நேரு கூடப் பாடுபடுறாரு......"

"அதனாலேதான், சுதந்திரம் வந்த நாள்முதல், நாகர்களைச் சுட்டுக்கிட்டே யிருக்காங்கபோலிருக்கு பாகிஸ்தானுக்கிட்டே பாய்ஞ்சுகிட்டேயிருக்காங்க போலிருக்கு! எங்க..."

"கடிக்க வர்ற பாம்பை அடிக்காமெ யிருக்க முடியுங்களா?"

"பாம்பு விஷயத்திலே சரிய்யா! ஆறறிவுபடைச்ச மனிதர்களை, அன்பாலே, வாதத்தாலே வெல்லவா முடியாது? அதுபோகட்டும் உள்நாட்டிலேயே, ஒவ்வொரு மாதமும் எத்தனைபேரைச்சுட்டுத் தள்ளுது இந்த சர்க்கார்...... போனமாசம் சென்னைத் துறைமுகத்திலே ஆறு பேரை சுட்டாங்களே, அதுக்கு என்னய்யா சொல்றீங்க?"

"அண்ணாச்சி ரொம்பக் கோபமாயிருக்கீங்க போலிருக்கு! இன்னொரு சமயம் வர்ரேன்..."

* * *

"யாருங்க வீட்லே?"

"யாருய்யா கேட்கிறது! என்ன, என்ன விசயம்?"

"சகோதரி! நான் இந்த மண்டலத்துக் காங்கிரஸ் தொண்டன்... காங்கிரசின்சாதனைகளை உங்களிடமெல்லாம் எடுத்துச் சொல்லலாமென்று வந்திருக்கிறேன்... வீட்டில் ஒருவருமில்லையோ?"

"ஏன்யா! என்னமோ, உன் கூடப் பொறந்தவளாட்டம் சகோதரின்னே—சரின்னு இருந்தேன் ...கடைசியிலே வீட்டிலே யாருமில்லியோன்னு வெறிக்கப் பார்க்கிறீயே... என்ன, ஒண்ணும் புரியலியோ?"

"அடடா! தவறாக எண்ணிவிட்டீங்க போலிருக்கு... சகோதரி... வந்து, ஒவ்வொரு வீடாகச் சென்று காங்கிரசின் சாதனைகளைப் பேசுவது என் போன்ற தொண்டர்களின் கடமை. காங்கிரஸ், ஒரு ஆலமரம்! அதுதான், இந்திய நாட்டின் ஏக விருட்சம்! இந்தியாவுக்கு, சுதந்திரம் அதனாலேதான் வந்துது! சுபீட்சம் வரப்போறதும் அந்த விருட்சத்தாலேதான்!!"

"யோ! என்னய்யா, ஆலமரம், விருட்சம் அப்படி இப்படின்னு... சுருக்கமாச் சொல்லய்யா. எங்கேய்யா வந்தே? என்ன சொல்லணும்கிறே?"

"வெள்ளைக்காரனை விரட்டிட்டு, நம்ப நாட்டுக்குச் சுயராஜ்யம் கொண்டாந்தது காங்கிரஸ்..."

"சரி!"

"சுயராஜ்யம் கொண்டுவந்தது மட்டுமின்றி, ஒவ்வொருவரும் சுகமா வாழணும்கிறதுக்காக ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டிருக்காங்க..."

"சுகமா வாழ, அஞ்சாண்டு திட்டமா! ஏன் ஓராண்டு திட்டம்னு போட்டா என்ன..."

"அதாவது, ரஷ்யாவிலே போட்டமாதிரி இங்கேயும் போட்டோம்...... முதல் அஞ்சாண்டுத் திட்டம் முடிஞ்சி, இரண்டாவது திட்டமும் போட்டு வேலை செய்ரோம்..."

"யோ! சொல்லவந்ததை சுருக்கமாச் சொல்லிட்டுப் போய்யா...... அஞ்சு ஆறுன்னு என்னென்னமோ உளறிகிட்டு... போய் உலை வைக்கணும்... நேரமாச்சு..."

'வீட்டிலே பால் பொங்கணும்! குடும்பத்திலே சுகம் பொங்கணும்! எல்லாரும் சுகமாக வாழணும்! இதுக்காகவே, பாடுபட்டுக்கிட்டு வருது காங்கிரஸ் சர்க்கார்......... தாயில்லாதவங்களுக்குத் தாய் மாதிரி, தகப்பனில்லாதவங்களுக்குத் தகப்பன் மாதிரி, இருக்கிறது நம்ம சர்க்கார்...இதை நீங்க புரிஞ்சிக்கணும்......எலெக்ஷன் வரும் போது ஓட்டுப்போடணும்..."

"சர்க்கார் அனுப்பிச்ச ஆளா! ஐயா, புண்யவானே......இதைப் பார்த்தியா...என்ன இது?

"அரிசி!"

"ஒருபடி அரிசி...என்ன விலை தெரியுமா? ஒரு ரூபா!! என் புருசனுக்கு நாள் முழுசும் உழைச்சாக் கிடைக்கிறது முக்கால் ரூபா தான்...ஒரு நாளைக்கு என் குடும்பத்துக்கு 2-படி அரிசி தேவைப்படுது......பணம் இல்லாமெ பட்டினியா கிடக்கிரோம்......ஒரு வேளைதான் சரியாச் சாப்பிடுறோம் ....ரூபாய்க்கு மூணுபடி அரிசி கிடைக்குமாய்யா! கிடைக்குமா!!"

"கிடைக்கும்...கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் காங்கிரஸ் சர்க்கார் பாடுபட்டுக்கிட்டு இருக்கு..."

"ரூபாய்க்கு மூணுபடி அரிசி கிடைக்குமா! இந்தா, கூடை...... இந்தா ஒரு ரூபா......போய் உங்க சர்க்காரைக் கேட்டு மூணுபடி அரிசி வாங்கிட்டு வந்து கொடு... எங்கே பார்க்கலாம், போ..."

* * *

"ஐயா! அம்மா!!......யாருமில்லியா வீட்டிலே...அம்மா! ஐயா!!"

"செச்சே! பிச்சைக்காரங்க பெருத்துப் போயிட்டாங்க கொசு மாதிரி...பிச்சைப்போட ஒண்ணுமில்லே...போ, போ..."

"ஐயா, நான் பிச்சைக்காரனில்லே! கொஞ்ச நேரம் பேசிகிட்டுப் போகலாம்னு வந்தேன்! கொஞ்சம் வெளியே வர முடியுங்களா?"

"அடடே! மண்டல காங்கிரஸ் தொண்டர் மாரிமுத்தா? யாரோன்னு நினைச்சேன்! வா, வா ...உட்காரு......என், என்னமோ போலிருக்கே......"

"நூறு வீட்டிலே நாலு வீடு தான் ஆச்சு! இன்னும் தொண்ணுத்தாறு வீடுபார்க்கணும்......"

"என்? வீட்டையேன் பார்க்கணும்"

"வீட்டைப்பார்க்கலே......ஒவ்வொரு வீட்டிலேயிருக்கிறவங்களையும் தனித்தனியா சந்திச்சு, காங்கிரசின் சாதனைகளை விளக்கணும்னு ஒரு முடிவு செஞ்சிருக்காங்க......விளக்கிகிட்டு வர்ரேன் ......"

ரொம்பச் சிரமமான வேலைதான்! மக்கள், சொன்னதும் புரிஞ்சுக்குவாங்களே............"புரிஞ்சிக்கிறதா? அண்ணே! உன்கிட்டே சொன்னால் என்ன......ஒரு பொம்பிளை கூடையை தூக்கிக் கொடுத்தாங்க... ஒரு நெசவாளி சிலந்தி கூடு கட்டியிருக்கிற தறியைக் காட்டி, அடிக்கவே வந்துட்டாரு ......ஒரு விவசாயிக்கிட்டே போய் 'காங்கிரஸ்!'ன்னு ஆரம்பிச்சேன்... 'போறீயா இல்லியான்னு' பாஞ்சாரு..............வியாபாரிக்கிட்டே போனேன்; கடைக்குள்ளே ஏறவே விடலே, என்னை! ரொம்பத் தொல்லையாயிருக்கண்ணே இந்த வேலை!!"

"அவ்வளவு கஷ்டமாயிருந்தா விட்டுடுறதுதானே—..."

"சுலபமாச் சொல்லிட்டீங்க! மாதா மாதம் 40, 50-ன்னு பணம் தந்தாங்களே.......வேலையில்லாத இந்தக் காலத்திலே, இந்த வேலையையும் விட்டுட்டு என்னண்ணே செய்றது......"

"அப்ப, கூலிக்குத்தான் மாரடிக்கிறேன்னு சொல்லு!"

"வெளியிலே சொல்லலாமா... வர்ரேன்......ஜெஇந்த.......வந்தே பார்க்ரோம்......"

✻

பல்லவி

இனி ஒரு தொல்லையும் இல்லை!-பிரி
வில்லை குறையும் கவலையும் இல்லை-இனி.

ஜாதி

மனிதரில் ஆயிரம் சாதி-என்ற
வஞ்சக வார்த்தையை ஒப்புவதில்லை!
கனிதரு மாமரம் ஒன்று-அதில்
காய்களும் பிஞ்சும் கனிகளும் உண்டு;
பூவில் உதிர்வதும் உண்டு-பிஞ்சைப்
பூச்சி அரித்துக் கெடுவதும் உண்டு;
நாவிற் கினியதைத் தின்பர்-அதில்
நாற்பதி னாயிரம் சாதிகள் சொல்லார்.
ஒன்றுண்டு மானிடச் சாதி-பயின்
றுண்மைகள் கண்டவர் இன்பங்கள் சேர்வார்
இன்று படித்து நாளை-உயர்ந்
தேற்றம் அடையும்; உயர்ந்தது இழியும்
நந்தனைப் போல் ஒரு பார்ப்பான்-இந்த
நாட்டினில் இல்லை! குணம் நல்ல தாயின்,
எந்தக் குலத்தின ரேனும்-உணர்
வின்ப மடைதல் எளிதெனக் கண்டோம்.

—பாரதியார்.

மக்களின் தேவை

[10—9—'58 அன்று சட்ட மன்றத்தில் சி. என். ஏ. உணவுப்பிரச்னை குறித்து ஆற்றிய உரையின் பகுதி.]

"நான் சார்ந்திருக்கிற கட்சியின் சார்பாகச் சொல்வேன் — நாள் ஒன்றுக்கு மூன்று வேளைச் சோறு மக்கள் எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்யவேண்டும் ரூபாய்க்கு மூன்றுபடி அரிசி விற்கப்பட வேண்டும். விவசாயிகளுக்குத் தேவையான உபகரணங்கள் அவர்கள் கட்டுக்கு அடங்கிய விலையில் தரப்படவேண்டும். எந்த இடத்தில் நிலம் இருக்கிறதோ, அந்த இடத்திற்கு உரம் தரப்பட வேண்டும். இப்பொழுது உரம், இலாபவேட்டைக்காரர்களின் உள்ளக் குளிர்ச்சிக்காகத் தரப்படுகிறதே தவிர, நிலத்திற்குத் தரப்படவில்லை.

பல உறுப்பினர்கள் இன்றைய தினம் உரம் கள்ள மார்க்கெட்டுக்குத்தான் விற்கப்படுகிறது என்பதைச் சொல்லியிருக்கிருர்கள். அதற்கு மாற்றுயோசனை என்ன என்று சர்க்கார் எங்களைத் திருப்பிக்கேட்கலாம். கார்டு, கவர் விற்கப்படுவதைப்போன்று—கொய்னு மருந்து விற்கப்படுவதுபோன்று, தபால் இலாகா மூலம் அம்மோனியம் சல்பேட் போன்ற உரங்கள், எந்த எந்த விவசாயி கேட்கிருனே, அவனுக்குத்தான் நேரிடையாகக் கொடுப்பது என்று வைத்துக்கொள்ளலாம். இந்த யோசனை சிறுபிள்ளைத்தனமானது என்று தோன்றினுல்—அவர்களுக்கு இருக்கக் கூடிய நிறைந்த அனுபவத்தைக்கொண்டு வேறு ஏதாவது நல்ல முறைகளை அவர்கள் கையாளலாம். ஆனுல் இன்று இருக்கிற முறை விவசாயிகளுக்குத் தேவையான உதவியை அவ்வப்போது அளிக்கக் கூடியதாய் இல்லை. அவர்களது நல்வாழ்வுக்குப் பயன் அளிப்பதாய் நாட்டின் உணவு உற்பத்திக்கு அடிகோலியிருப்பதாய்த் தெரியவில்லை.

விவசாயத்திற்கு அதிகமாகப் பயன்படுகிற இயந்திரங்களுக்கு உபயோகிக்கும் டீசல் எண்ணெய்க்கு வரி போடுகிற நேரத்தில், இந்த வரி, விவசாயத்தை மிகவும் பாதிக்கக்கூடியது என்கிற விஷயத்தைப்பற்றிப் பல கட்சிகளைச் சார்ந்தவர்களும் குறிப்பிட்டார்கள். குறிப்பாக, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களே கட்சிக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு இந்தப் பிரேரணையை ஆதரித்தார்களே தவிர, பேசும்போதெல்லாம் —இந்த வரி குறைக்கப்பட வேண்டும்; நீக்கப்படவேண்டும்; போக்கப்பட வேண்டும் — என்று பலமாக எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள். நாங்கள் கூறியவை எல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் காதில் ஏருமல்போனதுபோலவேதான், காங்கிரஸ் கட்சிக்காரர்கள் சொன்னதெல்லாம் கூட கனம் அமைச்சர் அவர்களுடைய ஒரு காதின் வழியாக ஏறி மறு காதின் வழியாக வெளியே போய் விட்டது.

உழுபவனுக்கே நிலம் என்று இவர்கள் சொல்லுகிருர்களே, நிலத்தின் உச்சவரம்பைக் கட்டுப்படுத்தப்போகிருேம் என்று பேசி வருகிருர்களே, ஒன்றும் திட்டவட்டமாக, அவர்கள் எதுவும் பேசாத — கொள்கையை வகுக்காத காரணத்தினுல், அதன் விளைவு எப்படி இருக்குமோ என்கிற ஐயப்பாட்டினுல்—நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்கள் அவைகளைத் தரிசாகப்போட ஆரம்பித்துவிட்டார்கள். விவசாய உற்பத்தியில் ஊக்கம் காட்டுவதற்குப் பதிலாக ஊக்கம் குன்றிபோய் இருக்கிருர்கள் என்பதை அமைச்சர்கள் உணராமல் இருக்க முடியாது.

★

வயலுக்குப் போ!

வயலிலே இறங்கி மந்திரிகள் வேலை செய்யவேண்டும்! — என்று கம்போடிய அரசாங்கம், இந்தக் கிழமை முடிவெடுத்துள்ளது.

ஒரு ஆண்டில், ஒரு மாதமாவது இப்படிச் செய்யவேண்டும்!! — என்று, புதனன்று கூடிய மந்திரி சபைக் கூட்டத்தில், முடிவு செய்யப்பட்டது. சீனுவுக்குச் சென்று திரும்பிய பிரதமர் நாரோடாம் சிகனுக், தெரிவித்த யோசனையின் பேரிலேயே இவ்விதம் முடிவு செய்திருக்கிருர்கள்.

மந்திரிகள் மட்டுமின்றி, உயர்தர சிவில் அதிகாரிகளும், ஒரு மாத காலம் இப்படி உழைக்க வேண்டுமாம்.

இராணுவத்தினர் இருக்கிருர்களே! — அவர்களும், வயற்புரம் போய், கட்டாயமாக ஒருமாத காலம் உழைக்க வேண்டும்.

கழனிகளின் அருமைகளையும், விவசாயிகளின் பிரச்னைகளையும் அப்போதுதான் தெளிவாகப் புரிந்துகொள்ள இயலும் என்பதாலேயே இந்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுப்பிரயாணம் போவதிலும், கட்சிப்பிரசாரம் செய்வதிலும், கண்டபடி பிற கட்சிகளைத் திட்டுவதிலும் காலம் கழிக்கும் காங்கிரஸ் மந்திரிகள் இப்படிச் செய்வார்களா! முன்வருவார்களா!!

திருத்தம்

14—9—58-ல் வெளியிடப் பெற்ற "துறவு" என்ற கட்டுரையில் "மாயா தேவி" என்றிருப்பதை "யசோதரை" என்று திருத்திப்படிக்கவும்.

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
[illegible] வெளியிடப்படுகிறது.

திராவிடநாடு

28—9—58 | வார வெளியீடு | விலை 18 காசு

அந்நாள் என்றோ!

உலகமே மிரண்டுகொண்டிருக்கும் அணுசக்தியைக் கொண்டு நன்மைபயக்கக்கூடிய அற்புதமான சாதனைகளைப் பெறலாம் — இந்த முயற்சிகளையும் ஒரு பக்கம் அமெரிக்கா செய்துகொண்டுள்ளது. மேலே உள்ள படம், எப்படி ஆக்க வேலைகளுக்கு அணுசக்தியைப் பயன்படுத்தலாம் என்று கண்டறிந்து, ஆவன செய்யும் அறிஞர்கள் பணியாற்றும் நிலையம். அவர்களது முயற்சியின் விளைவாக, ஒரு நகரமே ஒளியமாகத் திகழ்வதை, கீழே உள்ள படம் காட்டுகிறது! பிட்ஸ்பர்க் எனும் அமெரிக்க நகரம், அணுசக்தியால் உண்டு பண்ணப்பட்ட மின்சாரத்தால் ஒளி நகராகத் திகழ்கிறது. மின்சாரசக்தி மட்டுமல்ல, இன்னும் ஏராளமான நன்மைகளை "அணுசக்தி மூலம்" மனித சமுகம் பெறலாமாம். வெறிக்குணம் மறைந்து, நன்மை நாடும் விவேகம் வல்லரசுகளுக்கு மலரும் என்கிற அறிகுறி சமீபத்தில் ஜினீவாவில் நடைபெற்ற அகில உலக விஞ்ஞானிகள் மாநாடுமூலம் கிடைக்கிறது. ஆக்க வேலைகளுக்கு அணுசக்தியை உபயோகிப்பதுபற்றி அம்மாநாட்டில் விஞ்ஞானிகள் பேசினர்களாம். பேச்சுச் செயலாகும் நாள் என்றோ பிடிவாதம் மறைந்து மனித இன்பம் நாடும் நாள் எந்நாளோ!!

பாரதி-யார்?

—[தென்னவன்]—

"பாரதி யார்?" எனும் தலைப்பைக் கண்டதும் யாரும் தவறாக எண்ணிடவேண்டாம். என்னடா! இருபதாம் நூற்றாண்டிலும், "பாரதி—யார்?" எனக் கேட்கும் ஒருவன் தமிழகத்தில் இருக்கின்றானே என அவசரப்பட்டுத தவறாக எண்ணிவிடவேண்டாம்.

தமிழகத்தில் முக்கியமாக-சிறப்பாக—பெருமையாகக் கொண்டாடப்படும் பாரதி விழாக்களில் மக்களுக்கு உண்மையான பாரதி காட்டப்படுவதில்லை. அங்கெல்லாம் தேசிய கவி பாரதிதான் காட்டப்படுகின்றார். ஆனால் பாரதியைத் தேசியகவியாக மாத்திரம் பார்த்தால், நாம் முழுப் பாரதியையும் பார்த்ததாகக் கூறிவிட முடியாது. எப்படி என்றால் — நாம் இன்னும் இலக்கியக் கவி பாரதி—சமயக்கவி பாரதி--சமுகக் கவி பாரதி ஆகியபல பாரதிகளைக் காணவேண்டியுளது.

தேசியக் கவி பாரதிக்கே இத்துணை சிறப்பளிக்கும் நாம், மேலே சொன்ன முழுப் பாரதியையும் பார்த்துவிட்டால், பாரதி இன்னும் புகழின் பலபடிகளைக் கடந்து, அதன் உச்சிக்கே சென்றிடுவார். ஏனோ இன்று கொண்டாடும் பெரியவர்கள் பாரதியை முழுவதுமாகக் காட்டாது விட்டுவிடுகின்றனர்!

இன்றைய நிலையில் பாரதியார் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு மாத்திரம் சொந்தமல்ல, அவர் ஒரு பொதுக்கவி, எல்லோராலும் கொண்டாடப்படவேண்டிய கவி. தமிழகத்தின் குறை, பாரதியைக் குறிப்பிட்ட ஒரு எல்லைக்குள்ளேயே காட்டிவிடுகின்றனர். பாரதியைப் பல கோணங்களிலிருந்தும் பார்த்தால்தான் அவரது முழு உருவத்தையும் பார்க்க முடியும்—பார்க்கவேண்டும். மாற்றார் போற்றக்கூடாது என எண்ணுகின்றனர் — இன்று பாரதிக்கு விழா எடுப்போர்.

பாரதியார் பாடிய சுயசரிதை, வசன கவிதை, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு முதலியன நல்ல இலக்கியங்களுக்குச் சான்றாம். இங்கே இலக்கியங்களெனக் குறிப்பிடுவது—கதை போலும் தொடர்த் தன்மை பெற்றவற்றை. பாரதியார் தன் "சுயசரிதை" எனும் கவிதைத் தொகுதியில் பெண்களைப்பற்றிப் பாடியிருப்பதைப் பாருங்கள்.

"பெண்ணிற்கு விடுதலைநீ ரில்லை யென்றால்
பின்னிந்த உலகினிலே வாழ்க்கை இல்லை"

"பெண்டாட்டி தனை யடிமைப்
படுத்த வேண்டிப்
பெண்குலத்தை முழுதடிமைப்
படுத்த லாமோ!"

"தாய்க்குமேல் இங்கேயோர்
பெண் தெய்வ முண்டோ?"

"வாக்குளதன் றேபெண்மை அடிமை யுற்றால்
மக்களெல்லாம் அடிமையுறல்
வியப் பொன்றாமோ?"

இதே கருத்தினை திரு. வி. க. அவர்கள் கூறுவதைப்பாருங்கள்:

"பெண்ணின்பால் எதில்லை? அவள் மாட்டு முகிலுண்டு; திங்களுண்டு; மலர்களுண்டு; குயிலுண்டு; மயிலுண்டு; மானுண்டு, பிறவும் உண்டு. இத்தகைய இன்பப் பொருளைத் துன்பப் பொருளாக எவன் கொள்வான்? காமுகன் — கீழ்மகன் — கயவன் கொள்வான்" எனக் கூறுகின்றார். இனிப் பாரதிதாசன் பெண்களைப் பற்றிக் கூறுவதையும் பார்ப்போம்.

"பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாம்
என்கின்றீரே
பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற் கொம்பே!
ஊமையென்று பெண்ணை உரைக்கு மட்டும்
உள்ளடங்கும்
ஆமை நிலைமைதான் ஆடவர்க்கும் உண்டு."

எனக் கூறுகின்றார் — சற்று அழுத்தமாக. பாரதியின் வழி வந்ததாலன்றோ இவர்களும் இவ்வாறு கூறியிருக்கின்றனர். இம்மூவரின் கருத்தும் நிலவுலகினில் மக்களினம் இருக்குமளவும் நின்று நிலைபெறுதல் ஒரு தலையல்லவா!

பாரதியின் பாஞ்சாலி சபதத்திலிருந்து ஓரிடம்:

சகுனியின் வார்த்தையில் மயங்கி—சூதின்மேலுள்ள பிரியத்தினால், தருமன் தன்னாட்டைப் பந்தயப் பொருளாக வைத்து இழந்திட்டான். இதைக் கண்டிக்கின்றார் பாரதியார்:

"கோயிற் பூசை செய்வோர்
—சிலையைக் கொண்டு விற்றல் போலும்
வாயில் காத்து நிற்போன்
—வீட்டை வைத்திழத்தல் போலும்
ஆயிரங்களான
—நீதியவை உணர்ந்த தருமன்
தேயம் வைத்திழந்தான்
—சீச்சீ!! சிறியர் செய்கை செய்தான்
ஆட்டு மந்தையா மென்
—றுலகை அரச ரெண்ணிவிட்டார்"

என்று மிகமிகச் சினந்து கண்டிக்கின்றார். இந்தப் பாரதியை—ஆப் பாரதத்தைக் கண்டிக்கும் இந்தப் பாரதியை — தமிழில் உயர்ந்த—நல்ல இலக்கியங்கள் தோன்றவேண்டும் எனப் பேரவாக்கொண்ட இந்த இலக்கியக்கவி பாரதியை, யாரும் மக்களின் முன்னர் கொண்டுவந்ததில்லை கொண்டுவரமாட்டார்கள்.

இனிச் சமயக்கவி பாரதியார் எப்படித் தோற்றமளிக்கின்றார் எனப் பார்க்கலாம்.

"செத்த பிறகு சிவ லோகம் வைகுந்தம்
சேர்ந்திடலா மென்றே எண்ணி யிருப்பார்
பித்த மனிதர் அவர் சொலும் சாத்திரம்
பேயுரை யாமென்றிங் கூதேடா சங்கம்'

(4-ம் பக்கம் பார்க்க)

★ அறிகுறி ★

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [28 9—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 1]

மக்கள் தொகை
நிலப்பரப்பு
மூலப்பொருள் வசதி
இவைகளிருந்தும்
போதுமான பங்கு
அளிக்கப்படவில்லை!

*

மின்சார உற்பத்தி
நீர்ப்பாசன வசதி
போக்குவரத்து
தொழில்கள்
இவைகளில் மற்ற
இடங்களைவிட
'தென்னாடுகள்'
பின் தங்கியே உள்ளன!!

* * *

ஆந்திரம், கேரளம், கன்னடம், தமிழகம் இந்நான்கு பகுதிகளையும் சேர்ந்த வியாபாரக் கழகத்தினர், முதன் முறையாக, கடந்த 19-ந்தேதி பெங்களூரில் கூடினர்.

இப்படி நான்கு மாநிலத்தினரும் ஒருசேரக் கூடுவது, இதுதான் முதல் தடவையாகும்.

இம் மாநாட்டில், ஏகமனதாக நிறைவேற்றப் பட்ட :தீர்மானத்தையே நாம் தலைப்பில் தந்துள்ளோம்! ஐந்தாண்டுத் திட்டங்களில், டில்லி, "மாற்றாந்தாய்" மனப்பான்மையுடன் நடந்து வருகிறது என்று ஒவ்வொரு பகுதியினரும், முழக்கமிட்டிருக்கின்றனர்!!

"முதல் திட்டத்தில் 12-சதவிகிதம் செலவிட்டார்கள், தென்னாடுகளுக்கு. இரண்டாவது திட்டத்தில் 11-சதவிகிதந்தானாம். மக்கள் தொகையையும் நிலப்பரப்பையும் வைத்துக் கணக்கிட்டால், மொத்த இந்தியாவில் நான்கு மொழி பேசும் நாமெல்லாம் கால் பகுதியாவோம். ஆனால் அந்த விகிதப்படி, உதவி தரவில்லை இந்திய அரசு" — என்று, ஆந்திர வர்த்தக சபைத் தலைவர் ஏகாம்பரம் என்பவர் கூற,

"அதிகாரம் நம்மிடமிருந்து வெகுதூரத்தில் டில்லியில் இருப்பதால் நம்முடைய தேவைகள் கவனிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை" என்று மைசூர் வர்த்தகக் குழுவைச் சேர்ந்த கே. சாரங்கபாணி என்பார் கூற, மேற்படி தீர்மானம் ஏகமனதாகப் போடப்பட்டிருக்கிறது, அந்த மாநாட்டில்.

"இந்த தி. மு. க.க்கள் பித்தலாட்டம் பேசுகிறார்கள்! வடக்காவது தெற்கை ஏமாற்றுவதாவது? எல்லாம் சரியாகத்தான் செய்கிறது எமது டில்லி" என்று காங்கிரஸ் அமைச்சர்கள் பேசலாம். ஆனால் உண்மை எங்கேயிருக்கிறது என்பதனையே, வர்த்தகப் பிரதிநிதிகளின் மாநாடு சொல்கிறது.

"கன்னடம், தெலுங்கு, தமிழகம், கேரளம், இந்நான்கும் வாணிபத் துறையில் ஒன்றுபட்டு நின்று போராடினால்தான், போதுமான நன்மைகளைப் பெறமுடியும்; அதற்கான ஒரு பொருளாதாரக் கவுன்சில் அமைக்கப்பட வேண்டும்" என்றும் மேற்படி மாநாட்டில் இன்னொரு தீர்மானம் போட்டுள்ளார்கள்.

இவர்களில் யாரும் தி. மு. க. அல்ல! மாற்றார் கூறுவதுபோல, நம்மைப்பற்றி இன்னும் சரியாகத் தெரிந்துகொள்ளாமலிருக்கிற பிற பகுதிகளைச் சேர்ந்தவர்களும் கூடிய மாநாடு, அது. அங்கு

வடக்கின் வஞ்சனை
அதைக் களையும் வழி

இரண்டு குறித்தும் பேசப்பட்டு, பேசப்பட்டதோடு நில்லாது தீர்மானங்களும் போடப்பட்டுள்ளன என்றால் என்ன பொருள்? தி. மு. க. கூறி வருவது உண்மை என்பதுதானே!!

காங்கிரசார் எவ்வளவுதான் மறுத்தாலும் வடக்கின் வஞ்சனையைச் சமயம்வரும்போது ஒவ்வொருவரும்உணரவேசெய்வர். அப்படி உணரும்போது ஒன்றுசேர்ந்து போராட எண்ணினால் இந்த நான்கு பிரதேசங்களுக்கும் ஒரு ஒற்றுமை ஏற்படுவதும், ஒன்றுபட்ட எண்ணம் உருவாவதும், யாராலும் தவிர்க்க முடியாததாகும். நாம் கூறுவதுபோல, இவை நான்கும் ஒன்றுக்கொன்று உடன் பிறப்புப் போன்ற

தொடர்புகொண்டவை மட்டுமல்ல, பாசமும் நேசமும் தன்னாலே உருவாகும் சூழ்நிலையும் கொண்டவை யாகும்.

வர்த்தகக் குழுக்களிடம் முளைத்துள்ள இந்த அறிகுறிவளராது என்று யார்தான் சொல்லமுடியும்? இதேபோல, இன்றுள்ள காங்கிரசு ஆட்சிக்குப்பதில் கேரளத்தைப்போல, ஏனைய பகுதிகளில் காங்கிரசல்லாத ஆட்சிகள் அமையுமாயின், இந்த எண்ணம், ஆட்சி புரிவோர் என்கிற அளவில் உருவாகாது என்பது என்ன நிச்சயம்? டில்லியால், படாதபாடு படுத்தப்படுகிறதே, கேரளம்! நாளைக்கு, ஏனைய பகுதிகளிலும், இன்னொருகட்சியின் ஆட்சி ஏற்படின், இதே நிலைதானே ஏற்படும்!!

நமது சுதந்திரக் குரலின் வலிவையும் உண்மையையும், காங்கிரஸ் அமைச்சர்கள் எவ்வளவுதான் தாழ்த்திக் கூறினாலும், நாம் சொல்லாமலே ஒவ்வொரு இடத்திலும் தன்னாலேயே ஒற்றுமையும் ஒன்றுபட்டுப் போராடி டில்லியின் வஞ்சகத்தைச் சாடவேண்டும் என்கிற உணர்வும், ஏற்படத்தான் செய்கிறது.

இந்த அறிகுறி காண மகிழ்கிறோம். அதே சமயத்தில், இப்படிப்பட்ட சூழ்நிலைகளை உருவாக்கி, தமிழகம் தவிர்த்த மூன்று பகுதிகளிலும் நமது குரலைக் கொண்டு செல்லவும், பரப்பவுமான வாய்ப்புகளையும் வசதிகளையும் நாம் எவ்வளவு சீக்கிரம் பெற வேண்டியிருக்கிறது என்கிற அவசரத்தையும் உணர்கிறோம்.

வாய்ப்பும் வசதியும் கிடைத்து, இந்தப் பகுதிகளுடன் தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பங்களும் அமைந்துவிட்டால், விடுதலைக் குரலை ஒடுக்க எவராலும் முடியாது. உண்மையைப்பிறரும் உணரத் தலைப்பட்டிருக்கிறார்கள்! இந்த உணர்ச்சி, வலுக்குமாயின், காங்கிரசார் எவ்வளவுதான் கதறினாலும், திராவிடக் கூட்டாட்சி தன்னாலே ஏற்பட்டே தீரும்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

என முதலடியிலேயே ஓங்கி அடிக்கின்றார். அடுத்து,

"ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள்!"

என அறிவுரை கூறி;

'மெள்ளப்பல தெய்வம் கூட்டி வளர்த்து
வெறுங் கதைகள் சேர்த்துப்—பல
கள்ள மதங்கள் பரப்புதற் கோர்மறை
காட்டவும் வல்லீரோ?"

எனச் சீறிக் கேட்கின்றார் — மதவாதிகளை. இதே கருத்தை இவர்தம் சீடரான பாரதிதாசன் கூறுவதைப் பாருங்கள்:—

"சேசு முகம்மது என்றும்—மற்றும்
சிவனென்றும் அரியென்றும்
சித்தார்த்த னென்றும்
பேசி வளர்க்கின்ற போரில்—உன்
பெயரையுங் கூட்டுவார்
நீஒப்ப வேண்டாம்
காசைப் பிடுங்குதற்கே—பலர்
கடவுளென் பார்! இருகாதையும் மூடு
கூசி நடுங்கிடு தம்பி!—கெட்ட
கோயிலென் றால்ஒரு காதந்தி யோடு!"

என இடித்துரைத்துத் திருத்துகின்றார்.

இனி சமூகக் கவி பாரதியைப் பார்ப்போம்.

"மனிதரில் ஆயிரம் சாதி—என்ற
வஞ்சக வார்த் தையை ஒப்புவதில்லை
ஒன்றுண்டு மானிட சாதி—பயின்று
உண்மைகள் கண்டவர்
இன்பங்கள் சேர்வர்"

"நந்தனைப் போல் ஒரு பார்ப்பான்—இந்த
நாட்டினில் இல்லை; குணம் நல்லதாயின்
எந்தக் குலத்தின ரேனும்—உணர்
வின்பம் அடைதல் எளிதெனக் கண்டோம்"

என்று, சாதி உயர்வு தாழ்வு பாராட்டும் சமூகத்தினர்கட்குப் பாடம் கற்பிக்கின்றார்.

இப்போது தெரிகின்றதல்லவ—நம்மிடமிருந்து மறைக்கப்பட்ட பாரதிகள் யார் யார் என்று. இன்றுவரை நாம் மேலே கண்ட பாரதிகளைக் கண்டோமா? காட்டினரா நமக்கு — இத்தகைய முழுப் பாரதியை, இனி மேலாவது காண, காட்ட முற்படுவார்களா? வாழ்க பாரதி பெயர்! ஓங்குக இமயமென அவர்தம் புகழ்!!

கடனுதவிகோரிப் பொருளாதாரத் தூதுக்குழுவொன்றை அமெரிக்காவுக்கு அனுப்ப வேண்டும் என்ற தீர்மானத்தை கயாறு மேல் சட்டசபையில் ஜெய் நாராயண் சிங் என்பவர் கொண்டுவந்தார். இவர் எதிர்க் கட்சிக்காரர். ஆளும் கட்சியானது, இப்படிக் கடன் வாங்கி ஆட்சி நடத்த வேண்டிய அவசியமில்லை, வயிற்றைக்கட்டி வாயைக்கட்டி நம்மை நாமே சமாளித்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லி 11 ஓட்டு வித்தியாசத்தில் இத்தீர்மானத்தைத் தோற்கடித்துவிட்டது! சம்பவம் செப். 20-ந் தேதி, நிகழ்ந்ததாகும். கயாறு, மிகவும் சின்னஞ் சிறிய நாடாகும்.

வளரும் வடக்கு காணீர்!

—[கோவி. இளந்திரையன்]—

"வடக்கு வாழ்கிறது—தெற்குத் தேய்கிறது" என்று 'ஏக இந்தியா'க்களின் செவிப்பறை கிழியுமாறு புள்ளி விவரங்களோடு, எடுத்தியம்பினாலும் இதயத்தில் ஏற்று, சிந்தித்து ஆராயமறுத்து, தமிழகத்தின்—திராவிடத்தின் வாழ்வை வடவருக்குக் காட்டிக் கொடுத்துவிட்டு, வடக்காவது, தெற்காவது எல்லாம் வெறும் கற்பனை" என்று பேசிக் கற்பனை உலகில் சஞ்சரிக்கிறார்கள்.

இந்திய உபகண்டத்தில் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு திட்டத்தையும் உன்னிப்பாக நோக்கினால்......இந்த அகில இந்தியாக்களின் ஒற்றுமைமக்கிதம் வடநாட்டு ஏகாதிபத்தியத்தால் மீறப்படுகிறது என்பதையும், தென்னக வளர்ச்சிக்கு மட்டும் ஒன்றுபட்ட இந்தியா வாதம் துச்சமென மதிக்கப்படுகிறது என்பதோடு, நம்முடைய வாதம் அப்பழுக்கற்றது—உறுதிபாடுடையது என்பது தெற்றென விளங்கும்.

வடநாட்டு ஏகாதிபத்தியம், ஐந்தாண்டுத்திட்டங்களில்திராவிடத்திற்கு இழைத்த அநீதியை மூடிவிட நினைப்போருக்கு வடக்கு வாழ்கிறது—தெற்குத்தேய்கிறது என்ற அங்கை நெல்லிக் கனி போன்ற உண்மைகளை இல்லையென மறுத்து, இண்டல் மொழி பேசித்திரிவோருக்குச் சில—பல எடுத்துக்காட்டுகள்.

தென்னகத்திற்கு வேண்டிய மின்சாரக் கருவிகள் உற்பத்தி செய்ய ஆவடியில் ஒரு மின்சாரக் கருவி உற்பத்தி நிலையம் ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்பது முடிவுக்கு வந்தது. ஆனால்...... திராவிடத்தைப் புறக்கணித்து—மாற்றாந்தாய் மனப்பான்மையில் கூத்திப் பழக்கப்பட்ட வடநாட்டு ஏகாதிபத்தியப் பேராசு, அந்தத் தொழிற்சாலையை வடநாட்டில்—போபால் நகரத்திற்கு மாற்றி விட்டார்கள். தொழிற்சாலைக்கு முதல்கட்டபணிக்கெனத்தேவைப் படக்கூடிய தொகை ரூ. 21-கோடியாம்! இத்தொகை முடிந்தவுடன் திட்டத்திற்கு ஏற்றவாறு மேலும் மேலும் செலவழிக்கப்படுமாம்!

வடக்கே உள்ள பீகார் மாகாணம் தொழில் கோட்டமாகிறது. அம் மாகாணத்தில் ராஞ்சி நகருக்கருகில் "அத்தியா" என்னும் இடத்தில் ரூ. 20 கோடி மூலதனத்தில் ஒரு கனவார்ப்படத் தொழிற்சாலை நிறுவுவதற்கான ஆரம்பப் பணிகள் நிகழ்கின்றன. இத்துடன் நில்லாது இரஷ்ய உதவியுடன் ஒரு கன இயந்திர உற்பத்திச் சாலையும், இரண்டு கனரகத் தொழிற்சாலையும், இங்கிலாந்தின் கூட்டுடன் நிகழ்ந்துகொண்டிருக்கின்றது. வளம் கொழிக்கும் வடநாட்டை மேலும் வளமாக்கும் வளமான திட்டங்களைத் தீட்டி உடனுக்குடன், பணத்தை பணமென்று பாராது வாரி இறைக்கப்படுகிறது.

கடிகாரத் தொழிற்சாலை நிறுவுவதற்கு ஏற்ற இடம் பெங்களூர் தான் என்று தெரிந்திருந்தும், அதனை வடக்கில்—பம்பாய் நகரத்தில் ரூ. 2 கோடி செலவில் ஜப்பான் நிறுவனம் ஒன்றின் கூட்டுடன் நிறுவ ஏற்பாடாகியுள்ளது. பால்பொடி, குழந்தை உணவு போன்ற பலவகை உணவுப் பொருள்களும் ரூ. 30 இலட்சம் செலவில் உற்பத்தி செய்ய ஏற்பாடாகிறது. இதுபோன்ற பல இலட்சம் பேர்களுக்கு வேலைதரக் கூடிய பல தொழிற்சாலைகளும் அமை[illegible] றன.

மத்தியப் பேரரசு தன் சொந்த நிர்வாகத்தில் ஐந்து பல்கலைக் கழகங்கள் நடத்துகின்றன. அந்தப் பல்கலைக் கழகங்களில் ஒன்று கூடத் தென்னகத்திற்குக் கிடையாது.

இதோ! "ஏக இந்தியாவே எமது இதய வாதம்" என்று சொல்லும் கம்யூனிஸ்டுகள் ஆட்சி செய்யும் கேரள அரசு, அங்கு கிடைக்கும் தென்னை மட்டையிலிருந்து நார் உரித்துத் தொழில் நடாத்த மத்திய அரசிடம் எமக்கு தேவை ரூ. 248 இலட்சம் என்று கேட்டது. வழக்கம்போல் வெட்டு கேட்ட தொகையில் என்று கூறி ரூ. 98 இலட்சம் குறைத்து ரூ. 150 இலட்சம் மட்டும் தர இயலும் என்று கூறிவிட்டது. பாரீர் வடக்கின் வஞ்சனைப் புத்தியை என்று நாம் சொன்னால், எங்கோ தன் மூளையை அடகு வைத்த இந்த "காம்ரேட்"கள் இதெல்லாம் பிரிவினைப்பித்து என்று கூறிவிட்டுக் கேரள நிகழ்ச்சியை மனதில் வைத்துக்கொண்டு, அறுவசியமாக மத்திய அரசு மாகாண அரசில் தலையிடுகின்றது என்கிறார்கள். ஏனோ இந்த இரட்டைப் புத்தி.

மொழியால் — கலாச்சாரத்தால் பண்பால்—பழக்க வழக்கத்தால் வேறுபாடு கொண்ட வடவருடன் நாம் ஒன்றாக இருக்கும் வரையிலும், தென்னகத்திலிருந்து நாம் வரிமூலம் செலுத்தும் ரூபாய் 66-கோடியில் ஏதோ கொஞ்சம் தருகிறோம் எனக்கூறிவிட்டுத்தன்னை வாழவிற்கே செலவிட்டுக்கொண்டிருப்பார்கள். வளரும் வடக்கைக் கண்டாவது தென்னகம் வாழ—திராவிடம் விடுதலை அடைந்தே ஆகவேண்டும் என்று கூறி, கடைசியாகப் பொருளாதாரநிபுணரான டிகோஸ்டா கூறியதை நினைவுபடுத்துகின்றோம்.

"டெல்லி எந்த ஒரு காரியமானாலும், தென்னாட்டைத் தன் பட்டியலின் கடைசியில்தான் நிறுத்துகிறது. எல்லாப் பெரிய தொழில்களும் வடநாட்டிற்கே ஒதுக்கப்படுகின்றன."

சுரங்க வாழ்க்கை

அன்பிற்குரிய நண்பா!

சுரங்க வாழ்க்கையைப்பற்றிச் சுவைபடத் தெரிவிக்குமாறு வேண்டியிருந்தாய். என் உள்ளம் சுரங்கத் தொழிற் பயிற்சியில் ஒன்றுகின்றதா என்றும் ஆர்வத்தோடு வினவியிருந்தாய்.

உலக வரலாற்றைப் புரட்டிய படி, இரேக்கம் சீரும் சிறப்புமாக வாழ்ந்த வரலாற்றையும், அது வீழ்ந்த கதையினையும், கோலாகலமாக வாழ்வு நடத்தி, இறுதியில், ஆடம்பரச்செலவால் அனைத்தையும் இழந்த ரோமர்களையும், இங்கிலாந்தில் ஜனநாயகம் அடைந்த படிப்படியான வளர்ச்சியையும், "சாமானியர்கள்" என்று அலட்சியப்படுத்தப்பட்டவர்களால் நிகழ்த்தப்பட்ட மாபெரும் பிரெஞ்சுப் புரட்சியையும் அகக் கண்களால் கண்டுகொண்டிருந்தவனை — பேரறிஞன் பிளேட்டோவின் "உரையாடல்களை"யும் நாடோடி வாழ்க்கை நடாத்திய ஞானி ரூஸ்ஸோவின் "சமுதாய ஒப்பந்தத்"தையும், இளம் இத்தாலியர்களை ஒன்றுகூட்டிப் புதிய இத்தாலியைச்சமைக்க அரும்பாடுபட்ட மேதை மாஜினியின் "மனிதர் கடமை"யினையும், உலக வரலாற்றில் நல்லிருக்கை பெற்ற இருபெரும் புரட்சிகளான பிரெஞ்சு — அமெரிக்கப் புரட்சிகளை நேரில் கண்ணுறும் வாய்ப்பைப் பெற்றவனான தாமஸ் பெயினின் "மனித உரிமைகளை"யும், ரஷ்யத்து ஞானி டால்டாயின் "நாம் இனிச் செய்யவேண்டியயாவை"யையும், நாத்திக இங்கர்சாலின் ஆணித்திறமான வாதங்களையும், அமெரிக்கத் தத்துவ ஞானி எமர்சனின் கனவு நடைக் கட்டுரைகளையும், நந்தம் முன்னோர் சிறப்புற நடாத்திய வீர வாழ்வையுணர்த்தி வலியூட்டும் "புறத்தை"யும், அறிவுடைப் பெருமக்கள் உலகோர்க்கு அன்பளிப்புகளாகத் தந்துவிட்டுப் போயிருக்கிற இன்னபிற நூல்களையும் படிப்பதிலேயே நாட்டம் கொண்டிருந்த ஒருவனை — அவனுக்கு முற்றிலும் புதிய துறையான சுரங்கத் தொழிற்பயிற்சியிலீடுபடுத்தினால் அவன் நிலை என்னவாகும்?

என்னரும் நண்பனே, என்னை நன்குணர்ந்தவனான உனக்கு, எனது நிலையைப்பற்றி இன்னும் விளக்கத் தேவையில்லையென்றெண்ணுகிறேன்.

'உன்னுடன் பயிலும் வடவர்கள் எப்படி நடந்துகொள்ளுகின்றனர்?' என வினவியிருந்தாய். விடுதியிலுள்ள வடநாட்டு மாணவர்களின் நடத்தையைக் கண்டு ஏக இந்தியம் பேசும் இதர திராவிட மாணவர்கள்கூட 'நாம் வேறு, அவர்கள் வேறு' என்ற உண்மையினை உணரத் தொடங்கியிருக்கின்றார்கள் என்ற செய்தியினை உன்னுடைய அந்தக் கேள்விக்கு விடையாகத் தருகின்றேன்.

புதுப்புது அனுபவங்களைத் தருகிற இந்தச் சுரங்க வாழ்க்கை என் உள்ளத்திற்கு நிறைவைத் தருவதென்னவோஉண்மைதான். "சாக்கடையைப்பற்றி எழுதுகிற எழுத்தாளன்" என்று பெயர் பெற்ற எமிலிஜோலாவின் தலைசிறந்த நாவலான "ஜெர்மினலை" (விதை முளைக்கும் நிலை) நான் படித்திருக்கிறேன், சுரங்கத் தொழிலாளர்களின் வாழ்க்கையைத் தெள்ளத் தெளியத் தெரிவித்திருக்கும் அந்த நாவலைப் படிக்கையில் சுரங்கத் தொழிலாளரிடையே வாழ்க்கை நடத்த வேண்டுமெனப் பெரிதும் விழைந்தேன்; எதிர்பாராதவிதமாக இப்போது என் ஆசை நிறைவேறிவிட்டது!

ஏராளமான நிலக்கரியைத் தன்னுள் புதைத்துவைத்திருக்கும் மத்தியப் பிரதேசத்தில் நான் பயிற்சி பெறுகின்றேன். எங்கு நோக்கினும் அடர்ந்த காடுகளும், குன்றுகளும், பாறைகளும், மண்டிக்கிடக்கும் புதர்களுமாகக் காட்சியளிக்கும் இம் மாநிலத்தில், நான் தங்கியுள்ள ஊரும் ஒரு குன்றுப் பிரதேசம்தான். சிர்மிரி என்பது சிறு குன்றின்மீது இலங்கும் ஒரு சிற்றூர், இக்குன்றையடுத்துள்ள மற்றொரு குன்றின் அடிவாரத்திலேயே நான் பயிற்சி பெறும் நிமித்தம் நாள்தோறும் செல்கின்ற சுரங்கம் வாயைப் பிளந்தபடி காட்சியளித்துக்கொண்டிருக்கிறது.

இயற்கை இப்பகுதியில் எழிலுறத் திகழ்கின்றாள். பசுமை விரித்துள்ள குன்றுகளில் இளமை தவழும் மரங்கள் எந்நேரமும் குளிர் காற்றை வழங்கியவாறிருக்கின்றன. குன்றுகட்கு நடுவே சிற்றோடைகள் சலசலத்துச் சென்றபடியுள்ளன. பாறைகளின் உச்சியிலிருந்து வீழ்ந்தபடியிருக்கும் அருவியைக் காண்கையில் உள்ளம் பெரிதும் உவகையுறுகின்றது. ஒற்றையடிப்பாதைகளின் வழியாகச் செல்கின்ற தருணத்தில் எங்கோ உற்பத்தியாகி எங்கோ சென்றுகொண்டிருக்கும் நீரின் ஓசை துல்லியமாகக் கேட்டவண்ணமிருக்கிறது. பேய் மழை பெய்து ஓய்ந்தவுடன வெகுஉயரத்திலிருந்து பேரிசைச்சலிட்டபடி கீழே விழுந்து சிதறும் நீர்வீழ்ச்சிகள் ஏராளமாகப் பிறக்கின்றன.

கதிரவன் ஒளிபட்டதும் சிலிர்த்து நிற்கும் மரங்களின் பசுமைநிறம் எங்கும் பிரதிபலிக்கக் காண்கின்றேன். இயற்கையின் பேரழகைப் பருகியவண்ணம் இப்பிரதேசத்தில் அலைந்துகொண்டிருக்கிறேன்.

பொழுது புலர்ந்ததும் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு சுரங்கத்திற்குப் புறப்படுவோம். சுரங்கத்தினுள் நுழையுமுன் வெளியிலுள்ள அலுவலகத்தில் ஒவ்வொருவரும் தம் பெயரைப் பதிந்துகொள்ளல் வேண்டும். அதன் பின்னரே உள்ளே செல்ல இயலும். சுரங்கத்தினுள் நாள் முழுவதும்—இருபத்து நான்கு மணி நேரமும் அலுவல் நடந்துகொண்டேயிருக்கும். அலுவல் நேரம் மூன்று பகுதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு பிரிவினர் காலை 7-மணிமுதல் பிற்பகல் 3-மணிவரையிலும், மற்றொரு பிரிவினர் பிற்பகல் 3-மணி முதல் இரவு 11-மணி வரையிலும், பிறிதொரு பிரிவைச் சேர்ந்தவர்கள் இரவு 11-மணிமுதல் காலை 7-மணி வரையிலும் பணிபுரிந்தாக வேண்டும்.

எங்கெங்கெல்லாமோ நீண்டு வளைந்து செல்லும் சுரங்கப்பாதைகளில் நடந்து செல்கையில், காச நோய்க் கிருமிகள் மனிதனது உடலத்தைச் செல்லாக அரித்தெடுத்து விடுவதுபோலவே, மனிதனும் கரியினைப் பெறுவதற்காக நிலத்தை அரித்துவிட்டதை உணர்கிறேன். நாங்கள் தங்கியுள்ள விடுதி, எங்களுக்குப் பாடம் போதிக்கப்படும் கல்விக்கூடம், இங்குள்ள மருத்துவவிடுதி, இதர அலுவலகங்கள், வாணிபம் நடைபெறும் கடைத்தெரு எல்லாவற்றிற்குக் கீழேயும் சுரங்கப்பாதைகள் மலைப்பாம்புகளென நீண்டு நெளிந்து செல்கின்றன!

சுரங்கப்பாதைகட்கு நடுவில் தண்டவாளம் படுத்துக் கிடக்கிறது. சுரங்கப்பாதை எங்கெல்லாம் செல்லுகின்றதோ, அங்கெல்லாம் தண்டவாளமும் கூடவே செல்லும். அவற்றில் விநாடிக்கொருமுறை கரியள்ளிச் செல்லும் வண்டிகள் பேரிரைச்சலிட்டுக்கொண்டு சென்றபடியிருக்கும். பாதையின் இருபுறத்துச் சுவர்களிலும் ஆங்காங்கே நான்கடி கொண்ட துவாரங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. பாதையில் செல்பவர்கள் விரைந்து வரும் இந்த வண்டிகளிடத்தினின்று தங்களைப் பாதுகாத்துக்கொள்ள 'Men hole' எனப்படும் இத்துவாரங்களில் பதுங்கிக்கொள்வார்கள்.

தொழிற் பயிற்சிபெறும் நிமித்தம் வந்துள்ள நான், இயந்திரங்களின் நுணுக்கங்களைக் கவனிப்பதற்குப் பதிலாக இங்குள்ள தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையினையே உன்னிப்பாகக் கவனித்து வருகின்றேன். சமுதாயத்தின் இயல்பையறிந்து, அதன் குறைகளை நிவர்த்திப்பதில் பேரார்வம் கொண்டுள்ள ஒருவனுக்கு, இயந்திரங்களின் இயல்பினை அறிந்து அவற்றின் குறைகளையும் கேடுகளையும் களைவதில் உள்ளம் ஈடுபடுமா நண்பா?

இங்கு வங்காளிகளே பெரும்பாலோராகக்காணப்படுகின்றனர். சில ஆண்டுகட்குமுன் இவர்களது ஆதிக்கமே இப்பகுதி முழுவதும் இருந்ததாம். வங்காளிகளே எல்லா இருக்கைகளையும் கைப்பற்றியிருந்தனர். கரியள்ளும் தொழில்புரிய வருபவன் வங்காளியாக இருப்பின், கூடிய விரைவில் அவன் பதவி உயர்ந்து விடும்; ஊதியமும் கூடிவிடும். தற்போது இவர்களது கொட்டம் சற்று ஓய்ந்துவிட்டது.

இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் நாகரிகமில்லாத பழங்குடியினர். இவர்கட்கென்று சர்குஜியமொழியென்று தனிமொழியொன்றும் உள்ளது. 'இந்தி பேசப்படும் மாநிலம்' என்று கருதப்படும் மத்தியப் பிரதேசத்தில்தான் இப்படியொரு மாவட்டமே இருக்கிறது! சர்குஜியன் ஒருவனிடம் இந்தியில்பேசினால், அதைஅவன் புரிந்துகொண்டு தன்மொழியான சர்குஜிய மொழியிலேயேதான் விடையிறுப்பான். ஏனெனில் இந்தி அவனுக்குப் புரியும் — ஆனால் பேசத் தெரியாது!

பலஆண்டுகளாக இந்தச்சர்குஜியர்களுக்குப் பணத்தின் அருமையே தெரியாமலிருந்ததாம். இப்பொழுதும், புகைவண்டி நிலையத்திலேயிருந்து கனமான பொருட்களைக் குன்றின்உச்சிக்குச் சுமந்து வரும் சர்குஜியப் பெண்கள் எட்டு அணாக்களுக்குள்தான் சுமைகூலி கேட்கின்றனர்! அதே சுமைகளைப் பெரிய புகைவண்டி நிலையத்துப் போர்ட்டர்கள், கூலி மூன்று ரூபாய்கட்குக் குறைவாக இருப்பின் தொடக்கூட மாட்டார்கள்!

நான் பயிற்சிபெறுகின்ற சுரங்கம் எவ்வித ஆபத்து மற்ற பாதுகாப்புச் சுரங்கம் (Safety Mine) தான். அசன்சால் போன்ற விபத்துக்களை வெகு எளிதில் உண்டாக்கிவிடும் பல்வேறு கொடிய ஆவிகள் வெளிப்படக்கூடிய ஆபத்தான சுரங்கம் (Gaseous Mine) அல்ல; எரியும் தீப்பந்தத்தைக்கூட உள்ளே எடுத்துச் செல்ல இங்கு அனுமதியுண்டு. பலவீனமடைந்த மேற்பகுதி இடிந்து விழுதல், மேற்பரப்பு, பாறையாக இராமல் சேறாக இருந்து, அது பாதையை மூடிவிடுதல் இவையே இங்குள்ள விபத்துக்கள்.

பலவீனமடைந்த மேற்பகுதி இடிந்து விழாமலிருக்கப்பல்வேறு வகையான உத்திர அமைப்புக்கள் (Timbering) கையாளப்படுகின்றன. கூரையின்கீழ் குறுக்கும் நெடுக்குமாக மரக்கட்டைகள் போடப்பட்டுள்ளன. அப்படியிருந்தும் கவனக்குறைவால் சில இடங்களில் சுரங்கப்பாதைகளின் மேற்கூரை அவ்வப்பொழுது இடிந்து விழுந்தவாறிருக்கின்றது.

சுரங்கப்பாதைகளில் ஆங்காங்கே மின்சார விளக்குகள் ஒளிவீசிக்கொண்டிருக்கும். இதர பகுதிகளிலெல்லாம் இருள் கவிந்து கிடக்கும்! சுரங்கத்தினுள் இளைப்பாறுவதற்காகச் சற்று விசாலமான அறைகளும் உண்டு.

> "மாடனைக் காடனை வேடனைப் போற்றி
> மயங்கும் மதியிலிகாள்—எதனூடும்
> நின்றோங்கும் அறிவொன்றே தெய்வ மென்று
> ஓதியறியீரோ!"
>
> —பாரதியார்

அவற்றில் குடிதண்ணீரும், முதலுதவிப் பெட்டியும், இளைப்பாறுவதற்கான மாப்பலகைகளும் இருக்கும்.

வெளியிலுள்ள தூயகாற்றை சுரங்கத்தினுள் செலுத்த, பிரும்மாண்டமான மின்சார விசிறி இயங்கிக்கொண்டேயிருக்கும். விசிறி இயங்குமிடத்தை விசிறிக் கூடம் (Fan house) எனக் குறிப்பிடுவார்கள்.

ஒவ்வொரு சுரங்கப்பாதையின் முடிவிலும் காட்சியளிக்கும்வெட்டியெடுக்கப்படுவதற்கான கரிச் சுவரை, கரிமுகம் (Coal face) என்றழைப்பார்கள். இக்கரிமுகம் வெடி வைத்தல் (Blasting) மூலமாகவே வெட்டியெடுக்கப்படுகிறது. கரியறுக்கும் யந்திரம் (Coal cutter) ஒன்று முதலில் கரிமுகத்தின் அடிவாரத்தை ஆறடி ஆழத்திற்கு அறுத்துவிட்டுச்செல்லும். பின்னர் துளைபோடும் கருவியால் கரிமுகத்தில் ஆறடி ஆழத்திற்கு மும்மூன்றாக ஒன்பது துளைகள் போடப்படும். துளைகளில் மருந்தைத்திணித்து, தொலைவிலிருந்தவாறு அத்துளைகளில் மின்சாரத்தைச் செலுத்திக் கரிமுகத்தைச் சிதற வைப்பார்கள். தொழிலாளர்கள் சிதறிய பெரிய கரித்துண்டங்களை அள்ளி அங்கு வந்து நிற்கும் வாகன்களில் நிரப்புவார்கள்.

ஒரு தொழிலாளி ஒரு வாகனை நிரப்பினால் அவனுக்கு ரூ. 2-10-0 ஊதியம் கிட்டும். கரியள்ளும் தொழிலாளர்கள் பல குழுக்களாகச் சேர்ந்து பல வாகன்களை நிரப்பிப் பின்னர் அவற்றிற்கான ஊதியத்தைப் பகிர்ந்து கொள்வர். கூரையைச் செப்பனிடுவது, தண்டவாளங்களைச் சீராக்குவது போன்ற தொழில்களைப் புரிவோர் நாளொன்றுக்கு ரூ. 1¼ வீதம் ஊதியம் பெறுகின்றனர்.

மதுவிலக்கு இப்பகுதியில் அமுலில் இல்லை. கரியள்ளும் தொழிலாளர்களது ஊதியத்தின் பெரும்பாகம் சாராயக் கடையிலேயே கரைந்துபோய் விடுகிறது. இத்தொழிலாளர்க்குச் சாராயம் இன்றியமையாதது என்பதில் ஐயமில்லை. சுரங்கத்தினுள் விலங்கைப்போல் — இயந்திரம்போல்— உழைக்கும் தொழிலாளி சாராயத்தின் துணை ஒன்றினால் மட்டுமே தன் களைப்பை மறைக்க முடியும்.

ஆனால் களைப்பை மறைக்கும் பொருட்டு ஒரு கோப்பை மது வருந்தும் தொழிலாளி பின்னர் களிப்பை எய்தும் பொருட்டுத் தன் ஊதியம் முழுவதற்குமே சாராயம் வாங்கி அருந்திவிடுகிறான். வீடு திரும்பியதும் இல்லாள் அழுகின்றாள். சிறார்கள் பசியால் வெம்புகின்றனர்; இல்லாமை இல்லத்தில் பேயாட்டம் போடுகிறது.

சுரங்கத் தொழிலாளர் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட அளவுதான் குடித்தல் வேண்டும் என்ற சட்டத்தை அரசு அமுலுக்குக் கொண்டுவந்து, அத்துடனின்றி, அச்சட்டம் மீறப்படாதவாறும் நன்கு கவனித்துக் கொள்ளுமாயின் தொழிலாளர்களது இல்லத்தில் இன்பம் நிரந்தரமாகக் குடியேறும்.

தோழா, 'உன் வாழ்க்கை எப்படியிருக்கிறது?' என்று வினவியிருந்தாய். கரித்தூள் கலந்த காற்றை வடிகட்டிச் சுவாசித்தபடி நீண்டுகிடக்கும் சுரங்கப் பாதைகளில் பயணம் புரிகின்றபோதெல்லாம் என் உள்ளத்தில் கொலுவிருந்தபடி எனக்கு வழிகாட்டியாகத் திகழும் என் தலைவன் "தாயக விடுதலையே உனது குறிக்கோள்-விரைவில் நடைபெறவிருக்கும் சுதந்திரப் போராட்டத்தில் பங்குகொள்ள மறந்துவிடாதே" என்று கூறியவாறிருப்பதை உணர்கிறேன்.

ஆதியந்தமில்லாத — இருள் மண்டிக்கிடக்கும்—சுரங்கப் பாதைகளில் மங்கிய ஒளியினை உமிழும் சிறு விளக்கைக் கரத்தில் ஏந்திய படி அலைகிற போதெல்லாம் என் உள்ளம் என் தாயகத்தையும், என்னுடன் பிறந்தோரான தாயகத்தவரையும் பற்றியே சிந்தித்தவாறிருக்கின்றது. அடிமைத் தளையுடன் திகழும் என் நாட்டையும், அடிமைகளாய் வாழ்வு நடாத்தும் உடன் பிறந்தோரையும் எண்ணிய படி சுரங்கப்பாதையில் நடந்து செல்கையில் 'என்று நம்மவருக்கு விடிவு காலம் பிறக்கும்? விடுதலை எப்போது கிட்டும்?' என்று என் உள் மனம் விநாடிக்கொருமுறை வினவியவண்ணமிருக்கிறது.

நடந்துகொண்டே இருக்கிறேன், இருளும், புழுக்கமும், மேடும் பள்ளமும் நிறைந்த பாதையில் நடந்துகொண்டே இருக்கிறேன்; இதற்கொரு முடிவேயில்லை; எங்கே எதற்காகப் போகிறோம் என்று தெரியாமல் நடந்து கொண்டே இருக்கிறேன்; பெரும் பயணம்......எல்லை எது என்று தெரியவில்லை; எல்லையினை எப்போது எய்துவோம் என்பதும் விளங்கவில்லை; 'இது சுதந்திரத்தை அடைவதற்காக நாம் செய்கிற பயணம்தானோ? என்ற பிரமை நெஞ்சில் பிறக்கிறது...

கதிரவனொளி படர்ந்த வெளிப்புறத்தைச் சுரங்கத்தினுள்ளே இருந்து பார்க்கையில் ஏதோ பேரொளிப் பிழம்பே சற்றுத் தொலைவில் நிற்பதாகத் தோன்றுகிறது. 'சுதந்திரத்தை அடைந்துவிட்டோம்; விடுதலையை அனுபவிக்கிறோம்' என்று உள்ளம் களிப்பினில் மூழ்குகின்றது. சிறிது நேரங்கழித்த பின்னரே விழிகள் பகுத்தறிவின் துணையால் எதிரே தெரிவது வெயிலில் மூழ்கியுள்ள வெளிப்புறம் என்பதைத் தெரிந்துகொள்கின்றன.

'நண்பா, முடங்கல் பெரிதும் நீண்டுவிட்டது; மற்றவைகளை மறுமுறை எழுதுகையில் குறிப்பிடுகின்றேன்.

"நம் கொடி உயர்த்தப்படட்டும்; நம் கொள்கை பரவட்டும்; தாயகம் விடுதலையுறும் நாள் விரைந்து வரட்டும்" என்ற கழகம் பிறந்த புனித நாளுக்கான வாழ்த்துடன் விடைபெற்றுக்கொள்கின்றேன்.

அன்பன்,

மலர்மன்னன்.

> வையகம் காப்பவ ரேனும்—சிறு
> வாழைப் பழக்கடை வைப்பவ ரேனும்
> பொய்யக லத்தொழில் செய்தே—பிறர்
> போற்றிட வாழ்பவர் எங்கணும் மேலோர்.
>
> —பாரதியார்.

அனாதை

சென்ற இதழ்த் தொடர்ச்சி

அழையாமலே வந்து கேட்காமலே சென்றுவிட்டன இரண்டு ஆண்டுகள். இப்போது நான் விஞ்ஞான இளைஞர் வகுப்பில் இரண்டாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்தேன். எப்போதும புதுமையில் பெண்களுக்கு நாட்டம் உண்டு என்பார்கள். அந்தக் காரணத்தாலோ என்னவோ, விஞ்ஞான வகுப்பில் அதிகமாணவிகள் இருந்தார்கள், கலை வகுப்பில் இருப்பதைவிட.

அதுவும் மாநிலக் கல்லூரி என்றால் கேட்கவேண்டியதில்லை. ஒரு வகுப்பிலிருந்து மறு வகுப்புக்குச் செல்லும்அந்தபபெண்கள்கூட்டத்தைப் பார்த்தால் மருண்டோடும் மான் கூட்டமோ, பட்டொளிவீசும் மயில் கூட்டமோ, அல்லது வாசனைகமழும் மலர்ச் செண்டோ என்று சந்தேகிக்கும் வகையில் இருக்கும்.

என் வகுப்பிலும் அந்த மானினம் இருக்கத்தான் இருந்தது. மானினத்தை வேட்டையாடும் ஒரு சில வேடர்களும் என்னுடன் படித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் இவர்கள் போட்ட வலையிலே சிக்கிய மான்கள் ஓரிரண்டு தான்—அவைகளுக்காக நான் மிகவும் வருந்தினேன.

நான் படித்துக்கொண்டிருந்த அந்த இரண்டு ஆண்டுகளில் எல்லோர் மனத்தையும் என்பால் ஈர்த்தேன். நான் அப்படி ஒன்றும் மன்மதன் இல்லை. சமுகசேவையில் ஈடுபட்டேன். பகலென்றும் இரவென்றும், மழையென்றும் வெயிலென்றும் பாராமல், சமுக சேவை செய்து வந்தேன். என்றும் சிரித்த முகத்தோடு யாவரோடும் பேசினேன்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசவில்லை. இந்தக் குணமே என்னை மற்றைய மாணவர்கள் மத்தியிலே உயர்ந்தவனாகக் காட்டிற்று.

வெளிக்காக வேடம்போட்டு ஒரு பெரிய பணக்காரன் மகன் என்று காட்டிக்கொள்ளவில்லை. என்றும், எதிலும் எளிமையையே கையாண்டேன்.

எனக்கே தெரியும், என்னோடு படிக்கும் பெண்கள் பெரும்பாலும் பெரிய பணக்காரர்கள் அல்லது பெரும் பதவியிலுள்ளவர்களின் புதல்விகள் என்று. ஆனால் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை.

என்னோடு படித்த மாணவிகளில் ஒருத்தி — நல்ல அழகி. பெரிய இடத்துப் பெண்கூட— அவளைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு அல்லியின் நினைவுவரும். அப்போதே நான் அல்லிக்கு சொன்ன அந்த வார்த்தைகளும் ஞாபகத்திற்குவரும்—"வாழ்க்கை கானல் நீராகக்கூடாது — சுனை நீராகவேண்டும்"

நான் எங்கள் விலங்கு நூல் சங்கத்திற்குச் செயலாளர் பதவி ஏற்றேன். அவள் — ஆம் அவளே தான்—லீலா — உதவிச் செயலாளர் ஆனாள். இரண்டு ஆண்டுகளாக அவளைப் பார்த்திருக்கிறேனே ஒழிய, அவளிடம் பேசியதில்லை — ஒரு சிறிது அச்சம்கூட இருந்தது.

ச. இராமலிங்கம்

எப்படியோ பேச ஆரம்பித்துவிட்டேன் — பேசிக்கொண்டே இருந்தோம். நாட்கள் ஓட ஓட, நாங்கள் பேசும் காலமும் அதிகரித்தது. எனக்கே விளங்கவில்லை ஏன் என்று.

அவள் ஒரு நாள் கல்லூரிக்கு வரவில்லை என்றால், நான் எதையோ இழந்தவன்போல் இருப்பேன்.

இப்படித்தான் ஓரிரண்டு மாதங்கள் உருண்டன. எங்கள்பால் நட்பு மலர்ந்தது. எனக்கு அப்போதுதான் நினைவுக்கு வந்தது பழைய எண்ணங்கள்.

"அன்பு காதலாக மலருமென்றால், இதுபோன்ற இரண்டு துருவங்களுக்கும் இடையே ஏற்பட முடியாது—ஏற்பட்டாலும் சமுகம் ஏற்காது—ஏற்றதுபோல் பாவனை செய்தாலும், சமுகம் வாழ இடம் தராது"

சிந்தித்தேன் — சிந்தித்தேன் இந்தச் சிந்தனையிலேயே நான் அவளிடம் பேசுவதையும் ஓரளவு குறைத்துக்கொண்டேன்.

ஆனால் அவளை நினைக்கும்போதெல்லாம், பார்க்கும்போதெல்லாம் அல்லியின் நினைவு வரும். இப்படித்தான் லீலாவும் அல்லியும் என் மனதில் மாறி மாறித் தோன்றினார்கள்.

இப்படி இருக்கையில் ஒரு நாள் எழிலூரிலிருந்து, என் அத்தை வந்தாள். நலம் விசாரித்துக் கொண்டோம். கடைசியாக வழக்கமாகக் கேட்பதுபோல் "அத்தை உங்கள் ஊரில் ஏதாவது விசேஷம் உண்டா" என்று கேட்டேன்.

எனக்குத் தெரியும் என்னபதில் வரும் என்று! வெள்ளித்தேர் அல்லது கருடசேவை இப்படித் திருவிழாவைப்பற்றி ஏதாவது சொல்லுவார்கள்! ஆனால் அன்று அத்தை ஏதோ பீடிகையுடன் கதை ஆரம்பித்தாள்.

"சந்திரா இந்தச் சமாசாரம் உனக்குத் தெரியுமா!"

"எந்தச் சமாசாரம் அத்தை சொன்னால்தானே தெரிந்து கொள்வதற்கு"

"இவ்வளவு மோசமாக நடக்கும் என்று நினைக்கவில்லை"

சரி இவர்கள் ஏதோ திருவிழா மிகக்கேவலமாக நடந்திருப்பதைக் குறித்துச் சொல்கிறார்கள் என்று நினைத்து,

"ஏன் அத்தை, பாண்டு, நாதஸ்வர கச்சேரி ஒன்றும் வைக்கவில்லையா?" என்றேன்.

"தம்பி அதெல்லாம் இல்லாமலேயே இன்று ஊரே சிரிக்குதே'

"என்ன அத்தை எனக்கு ஒன்றுமே புரியவில்லையே"

"தம்பி — அந்தப் புதிய பணக்காரர் இருக்காரே, அவர் மகள் அல்லி நேற்றுக் காலை ஒரு பையனோடு ஓடிவிட்டாள்"

அல்லி ஓடிவிட்டாள் என்றதும் நெருப்பை மிதித்தவன்போல் துடித்தேன். வானமே இடிந்து விழுவதுபோல் இருந்தது; கண்கள் சுழன்றன. ஆனால் உள்ள எழுச்சிகளை அத்தைக்குக் காட்டக் கூடாது என்பதற்காக "பாவம்" என்று சொல்லிவிட்டு கல்லூரிக்குப் போய்விட்டேன்.

கல்லூரியில் அன்று பாடங்கள் சிரமமாகத்தான் நடந்தது—லீலாவும் ஏதோ வந்து பேசிவிட்டுத்தான் போனாள். ஏன் சாதாரணமாகப் பேசுவதைவிட அன்று சிறிது அதிகமாகவே பேசினாள்—சிரித்துப் பேசினாள்—குழைவோடு பேசினாள்.

இருப்பினும் என் உள்ளமெல்லாம் அல்லியின் மீது சென்றது.

"அல்லி ஓடிவிட்டாள்"—ஓடிப்போனவள்! இதுதான் சமூகம் அவளுக்கு அளித்திருக்கும் அழிக்க முடியாத, மறுக்க முடியாத, மறைக்க முடியாத தழும்பு — அல்லி இவ்வளவு உணர்ச்சி வயப்பட்டவளாக இருப்பாள் என்று நினைக்கவில்லை — அல்லி ஒரு பையனோடு ஓடிவிட்டாள், ஐயகோ! நினைக்கக்கூட முடியவில்லையே!! அவ்வளவு உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாமல் பிறந்த அவள் இனி எப்படி வாழ முடியும்!

இந்த எண்ணம் என் மனதில் தோன்றியபோது ஒரு சந்தேகமும் ஏற்பட்டது—பெண்கள் எல்லோருமே ஒரு சமயம் அவ்வளவு உணர்ச்சி வயப்பட்டவர்களா! என்று தோன்றிற்று.

ஆயினும் ஒரு மூலையில் என் மனம் "இந்தச் செயலுக்குக் காரணம் நீதான்" என்று சுட்டிச் சொல்வதுபோல் இருந்தது. இது எப்படி என் குற்றமாகும்? அன்று ஓடி வந்திருந்தால் நானல்லவா சிறைக்கம்பி எண்ண வேண்டி இருந்திருக்கும். இன்று அப்படியல்லவே — அந்தப் பையனும் அவளும்சுதந்திரவானம்பாடிகளாகச் சுற்றிவரலாம்.

"அல்லி நீ வாழ்க" என்று என் மனதிற்குள்ளாகவே வாழ்த்தினேன்.

எப்படியோ இரண்டு நாட்கள் கழிந்தது. லீலாவும் என்னோடு அதிகமாக விளையாடினாள்; நானும் அதை ஏற்றுக்கொள்பவன்போல் இதழோரத்தில் புன்னகை காட்டி விளையாடினேன். எதிரே உள்ள "மரினா கேன்டீன்" இந்தக் கேளிக்கைகளுக்குத் தகுந்த இடமாக இருந்தது.

அன்று மாலை முதல்மணிக்கு வகுப்பு இல்லை; ஆதலால் நானும் லீலாவும் "மரினா கேன்டீன்" போயிருந்தோம் — பணம் என்னிடம் ஏது? அவள்தான் தந்தாள்! ஏதோ பசித்திருப்பவர்கள்போல் "சிப்ஸும் — காபியும்" சாப்பிட்டோம். விளையாட்டாக ஓரிரண்டு தடவை அவளே சிப்ஸை என் வாயில் போட்டாள்—இதெல்லாம் சர்வசாதாரண விளையாட்டு — ஆகையினால் நானும் இதைக் கண்டுகொள்ளவில்லை.

இப்படி விளையாடிக்கொண்டிருந்தபோது யாரோ ஒரு ஆள் ஓடிவந்து "யார் சந்திரன்" என்று கேட்டான் — அவன் பெருமூச்சு விட்டுக் கேட்பதைப் பார்த்து "என்னப்பா அவ்வளவு அவசரப்படறே, என்னமோ குடி முழுகி விட்ட மாதிரியல்லவா கேட்கிறாய்! நான்தான் சந்திரன்; என்னவேண்டும்" என்றேன்.

"தம்பி உன் தந்தை..."

"என் தந்தைக்கு என்ன?"

"ஒரு விபத்தில் அகப்பட்டுக் கொண்டார்..."

"ஐயோ அப்பா..." என்று தலையில் அடித்துக்கொண்டு சாய்ந்துவிட்டேன்—வேறொன்றும் எனக்குத் தெரியாது.

கண் விழித்து சுய நினைவோடு பார்த்தபோது, கார் வேகமாக ஜெனரல் ஆஸ்பத்திரியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது—லீலாதான் காரை ஓட்டிக்கொண்டிருந்தாள் — எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை, பைத்தியம் பிடித்துவிடும்போல் இருந்தது.

கார் ஜெனரல் ஆஸ்பத்திரிக்குள் சென்று நின்றது. மூவரும் இறங்கினோம். வந்த ஆள் முன் போக நானும் லீலாவும் பின் தொடர்ந்தோம்.

ஓடினேன் — துடித்தேன்—என் தந்தை எந்த நிலையில் இருக்கிறாரோ! ஐயோ—தாயின் அன்பைப் பெறாத நான் தந்தையின் அன்பையாவது வெகு நாளைக்குப் பெறுவதற்கு உரியவன் ஆகக் கூடாதா என்று நினைத்துக்கொண்டே தந்தையின் கட்டில் அருகே சென்றேன்—லீலா ஏனோ வெளியே நின்றுவிட்டாள்.

தந்தையின் காலைப் பிடித்துக்கொண்டு "ஐயோ அப்பா, அப்பா" என்று கதறினேன்; தலையிலே பெரிய கட்டு — இடது காலிலும் கட்டு—தந்தை ஏனோ கண்திறக்கவில்லை. ஆனால் அந்த வார்ட் நர்ஸ் என்னிடம் ஓடிவந்து,

"இப்படி பேஷண்டை அலட்டக் கூடாது — மயக்கம் இன்னும் ஒருசில நிமிடங்களில் தெளிந்துவிடும் — அதிகமாகப் பேசக் கூடாது—பேசினால் இரத்தக் கொதிப்பு ஏற்பட்டுவிடும்; ஆகவே அதிகம் பேசாதே" என்று எச்சரித்துவிட்டுப் போய் விட்டாள்.

நர்ஸ் போய்விட்டாள்; ஆனால் தந்தை ஏனோ இன்னும் கண் திறக்கவில்லை — ஐந்து நிமிடம் ஆகிவிட்டது — எனக்குப் பயம் அதிகரித்துவிட்டது. என் விரல்களை அவர் மூக்கின் அருகில் கொண்டு போனேன் — சூடான காற்று விரல்களின்மேல் பட்டது; ஒரு நிமிடம் கழிவது ஒரு யுகமாக இருந்தது.

தந்தை தலையசைத்தார். மெதுவாக, சன்னல் கதவுகள் திறப்பதுபோல் இமைகள் திறந்தன — மெதுவாகச்சுற்றுமுற்றும்பார்த்து "சந்திரா...நீ வந்துவிட்டாயா..." இனி என் அருகிலேயே இரு. எங்கேயும் போகவேண்டாம். என் உயிர் போய்விட்ட பிறகு..."

"அப்பா........." என்று அவர் வாயை மூடினேன் "அப்பா — அப்படியெல்லாம் சொல்லாதீர்கள் அப்பா! என்னை அனாதை ஆக்கிவிடாதீர்கள் அப்பா" என்று கதறினேன்.

தந்தை மெதுவாக புன்னகை புரிந்தார்.

"சந்திரா — நான் இறந்துவிட்டால்தான் நீ அனாதை என்று நினைத்துக்கொள்ளாதே—நீ பிறந்தது முதல்........."

"அப்பா......அப்படியெல்லாம் சொல்லாதீர்கள் அப்பா"

"ஆம் சந்திரா, உண்மையைத்தான் சொல்கிறேன்—சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் இரவு சென்ட்ரல் ஸ்டேஷன் பக்கத்தில் இருக்கும் பாலத்தின் மேல் நடந்து வந்துகொண்டிருந்தேன். அப்போது திடீரென்று ஒரு குழந்தை அழும் சப்தம் கேட்டது. சுற்றுமுற்றும் பார்த்தேன்; ஆட்கள் யாரும் இல்லை — ஆனால் பாலத்தின் அடியிலிருந்து வந்த அழும் சப்தம் ஓய்ந்தபாடில்லை. பாலத்தின் பக்கமாக இறங்கிப் போய் பார்த்தேன் — அங்குதான் நீ இருந்தாய் — சின்னஞ்சிறு குழந்தையாக—பெற்றெடுத்தவள் உரிமையின்றி உன்னைப் போட்டுவிட்டுப் போய்விட்டாள்.

"ஐயோ... அப்பா! ஏன் அப்பா இதையெல்லாம் சொல்லுகிறீர்கள்—என்னைப் பெற்றெடுத்த தாயே! நீங்கள் செய்த குற்றத்திற்கு நான் சமூகத்திலிருந்து விலக்கப்பட்டவனாக அல்லவா ஆகிவிட்டேன் அப்பா! என் தாய் செய்த தகாத செயலுக்கு நானா அனுபவிக்கவேண்டும்? மறுமுறை என்னை அனாதை என்று சொல்லாதீர்கள் அப்பா! அனாதை என்று மாத்திரம் சொல்லாதீர்கள்" என்று அவர் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டேன்.

அதற்குள் நர்ஸும் டாக்டரும் வந்துவிட்டார்கள். என்னை யார் என்று விசாரித்தார்கள். மகன் என்று சொன்னேன். அதிகமாகத் தொந்தரவு கொடுக்கவேண்டாம் —நன்றாகத் தூங்கினால் சரியாகிவிடும் — ஓரிரண்டு வாரங்களில் காயம் ஆறிவிடும் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள்.

தந்தைக்கு ஒன்றும் அபாயம் இல்லை என்று தெரிந்ததும், லீலாவிடம் போய் சொல்லலாம் என்று வெளியே ஓடினேன் — ஆனால் அவள் அங்கு இல்லை —என்னுடன் கூடவந்த ஆளைக்கேட்டேன், தந்தையும் நானும் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டுவிட்டு, ஒன்றும் சொல்லிக்கொள்ளாமல் ஓடிவிட்டாள் என்று சொன்னான்.

எங்கள் உரையாடலைக் கேட்டுத்தான் ஓடிவிட்டாள் என்றதும்—என் தலையில் சம்மட்டிகொண்டு அடித்ததுபோல் இருந்தது. ஐயோ! காலமே! பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும் என்பதுபோல் என் உள்ளத்திற்குத் தாக்குதல் மேல் தாக்குதலா!

நர்ஸ் என்னிடம் வந்து 'நீ போய் நாளைவா, அவருக்குத் தொந்தரவு கொடுக்கவேண்டாம்' என்று சொன்னதும், தந்தையிடம் விடை பெற்றுக்கொண்டு வீடு திரும்பினேன். ஆனால் வழியிலெல்லாம் என் மனம் ஏனோ லீலா ஓடிவிட்டதைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்தது.

"லீலா என்னை விட்டு ஓடிவிட்டாள்—ஆம்—ஏன் ஓடக்கூடாது? சமூகத்தில்உரிமையின்றிப்பிறந்து வளர்ந்த என்னோடு யார்தான் உறவாடுவார்கள்! இதைத்தான் நான் மறுபடியும் மறுபடியும் நினைத்துக்கொண்டிருந்தேன் — அனாதை — சாதாரண அனாதை கூட அல்ல — பிறந்தபோதே உரிமையின்றிச்சமூகத்தில் பிறந்த அனாதை-சாதாரணமாக அனாதை என்றால் பெற்றெடுத்தவள் யார் என்றாவது சொல்லலாம்; தந்தை யாரென்று தெரியாவிட்டாலும் கூட — ஆனால் நானோ! ஐயகோ! நினைத்தால்கூட மனம குமுறுகிறதே—நெஞ்சம் வெடித்துவிடும் போல் இருக்கிறதே-பெற்றெடுத்த தாய்கூட யார்என்று தெரியாதே! தாயே! எனை ஈன்ற தாயே! உன் குருதியிலும் ஊனிலும் பிறந்த எனக்கு நீ அளிக்கும் பட்டமா தாயே! அனாதை! ஈன்றெடுத்த தாய் யார் என்று தெரியாத அனாதை!

இப்படி என் எண்ணம் என்னைப் பெற்றெடுத்த தாயையும், கருவுக்கு காரணமாயிருந்த அந்தக் கயவனையும் சுற்றி வட்டமிட்டது-"தந்தைசொல் மிக்க மந்திரமில்லை —தாயினுக்கும் சிறந்த கோவிலுமில்லை"—அவர்கள் அன்று நடத்திய திருவிளையாடலுக்கு நானல்லவா, சமூகத்தில் தலைகுனிந்து வாழவேண்டியிருக்கிறது.

இப்படி எண்ணிக்கொண்டே அன்றிரவு சாப்பிடாமல் வீட்டிலேயே அமர்ந்திருந்தேன் — மணி பதினொன்று அடித்தது. திடீரென்று எனக்கு ஓர் எண்ணம் தோன்றிற்று. ஏன், நான் கண்டெடுக்கப்பட்ட இடத்தைப் போய்ப் பார்க்கப்படாது என்று. கையில் ஒரு டார்ச்சை எடுத்துக்கொண்டு புறப்பட்டேன்.

மின்விசை குறைந்தால் எரியும் விளக்குப்போல, அன்று நிலவு ஏனோமங்கலாகத்தான் இருந்தது. நானும் மெதுவாக நடந்துசென்று அந்தப் பாலத்தை நெருங்கும் போது சென்ட்ரல் ஸ்டேஷன் கோபுரக் கடிகாரம் பன்னிரண்டு அடித்தது. நான் மெதுவாக ஒரு பக்கமாக இறங்கிப் பாலத்தின் கரைக்கு வந்தேன்.

திடீரென்று ஏதோ கற்கள் உருளும் சப்தம் கேட்டது-பாலத்தின் மறுபக்கம், பாலத்தின் சந்துவழியாகவே பார்த்தேன்—ஏதோ ஒரு உருவம் ஓடிவருவதுபோல் இருந்தது.

எனக்கு உடனே பயம் தோன்றிவிட்டது—மணியோ இரவு பன்னிரண்டு — எதிரே ஒரு உருவம்—கையிலிருந்த டார்ச்சைப் போடக்கூட மனம் எண்ணவில்லை — உடலெல்லாம் வியர்த்து வெலவெலத்துவிட்டது என்ன செய்வது என்றே தெரியவில்லை — ஏதோ ஒரு உருவம்! ஒரு சமயம் பேய்! அம்மா என்று அலறிவிட்டேன்-கரைநோக்கி வந்த உருவம் அப்படியே நின்றுவிட்டது. எனக்குச் சந்தேகம். என் தாய்தான் பேய் உருவில் இங்கு உலவுகிறாளோ என்று—உருவம் அப்படியே நின்றுவிடச் சிறிது தைரியம்வந்தது. டார்ச்போட்டுப்பார்த்தேன்—ஒரு பெண் உருவம்.

தந்தை சொன்ன அந்த இடமும், அதே இடத்தில் ஒரு பெண் இருப்பதையும் கண்டு தாய்தான் என்று ஓடினேன்.

ஆனால்... அங்கே...... அல்லிதான நின்றுகொண்டிருந்தாள்—எனக்கே திடுக்கிட்டது.

"அல்லி......"

"அத்தான்......"

"அல்லி — யாரைப் பார்த்துக் கூறுகிறாய்"

"அத்தான் உங்களைப் பார்த்துத்தான்"

"ஓ... ஓடிப்போனவளே-வெட்கமில்லாமல் என்னை அத்தான் என்று கூப்பிடுகிறாய் விபசாரி" என்று அவள் கன்னத்தில் அறைந்தேன்.

"அத்தான்... நீங்களா விபசாரி என்று அழைக்கிறீர்கள்? சமூகம் சொன்னால்கூட அக்கறையில்லை. ஆனால் எதையும் சிந்தித்துப் பார்க்கும் நீங்களா...?"

"சிந்தித்துப் பார்த்துத்தான் கூறுகிறேன்—என் முன்னே நிற்காதே—எவனோடு ஓடிவந்தாயோ, அவனுடனேயே போய்விடு"

"அத்தான் என் உண்மைக் கதையைக் கேட்காமல் பழிசுமத்தாதீர்கள். யார் ஒருவரின் ஆசைக்காக ஓடிவந்தேனோ, அவரே இப்படி நிராகரித்தால்! அத்தான் நீங்கள் என்னோடு வாழவேண்டாம்—உங்கள் கல்லூரிக் காதலியோடு சுகமாக வாழுங்கள். ஆனால் தயவு செய்து விபசாரி என்றுமாத்திரம் என்னை அழைக்காதீர்கள்."

"அல்லி என்ன சொல்லுகிறாய்—எனக்குக் காதலி யார்?"

"அத்தான் எனக்கு எல்லாம் தெரியும். சிறிது என் கதை முழுவதும் கேளுங்கள்—

அறிவுரை தந்து திரும்பிய நீங்கள், ஏனோ எங்கள் ஊரைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை—ஆனால் என் உள்ளம் ஏனோ உங்களையே நாடிற்று—மறைமுகமாக வேலைக்காரன் மூலம் நீங்கள் மாநிலக் கல்லூரியில் படிப்பதாகத் தெரிந்துகொண்டேன்.

வீட்டிலே என் திருமணப்பேச்சு நடந்தது-எனக்குப் பிடிக்கவில்லை-எப்படியாவது உங்களைக் கண்டு இந்தச் சமாசாரத்தைச் சொல்லி, உங்களை எப்படியாவது திருமணம் செய்துகொள்ளவேண்டுமென்று ஆசை"

"அதற்குத்தான் மற்றொரு பையனோடு ஜோடி போட்டுக்கொண்டு வந்துவிட்டாயா?"

"அத்தான் தயவுசெய்து நிதானித்துக் கேளுங்கள் — இந்தப் பேச்சு நடந்துகொண்டிருந்த வேளையில் எழிலூரில் ஒரு வாலிபன் வந்திருந்தான். மலரைச் சுற்றி வட்டமிடும் வண்டுபோல் நான் அல்லிக் குளத்துக்கு செல்லும் போதெல்லாம் அங்கு வருவான்—இவன் தொந்தரவும் வீட்டில் திருமணப் பேச்சும் என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை—எப்படியாவது சென்னைக்கு வந்து உங்களைச் சந்திப்பது என்று திட்டமிட்டேன்.

நான்கு நாட்களுக்கு முன்பு, இரவோடு இரவாக யாருக்கும் தெரியாமல் இரயிலேறிவிட்டேன்—யாரும் பார்க்கக்கூடாது என்பதற்காக முகத்தை முக்காடு போட்டு மறைத்துக்கொண்டிருந்தேன்—இரயிலும் புறப்பட்டுவிட்டது. திடீரென்று ஒரு உருவம் என் பெட்டியில் ஏறியது—மெதுவாகத் தலைதூக்கிப் பார்த்தேன்—அதே வாலிபன்.

ஆயிரம் தேள்கள் ஒன்றாகச் சேர்ந்து கொட்டுவதுபோல் இருந்தது. அவன் அருகில் வந்து முன் பின் தெரிந்தவன்போல "அல்லி நீ என்னிடம் ஒருபேச்சுச் சொல்லியிருக்ககூடாது—இப்படி ஏன் பயந்துபயந்து வரவேண்டும்" என்றதும், அந்தப் பெட்டியிலுள்ளோர் கவனம் முழுவதும் எங்கள் பால் திரும்பியது. நான் ஒன்றுமே பேசவில்லை—அவனும் என் அருகிலேயே (இடம் இல்லாததால்) நின்றுகொண்டிருந்தான்.

எனக்கு ஒரே தூக்கம்! உடல் முழுதும் நகை!! பக்கத்தில் இவன்! எப்படிக்கண்மூட முடியும்? அப்படியும் ஏதோ சிறிது கண் அயர்ந்து தூங்கிவிட்டேன்—என் கையிலே டிக்கட்டும் சிறிது காசும் இருந்தது.

திடீரென்றுயாரோ டிக்கட்டைப் பிடுங்குவதுபோல் இருந்தது. 'டிக்கட் டிக்கட் யாரோ பிடுங்கிவிட்டார்கள்' என்று கத்தினேன். பக்கத்திலிருந்த ஒருவர் அவனை அப்படியே பிடித்துக்கொண்டார்—அந்தப் பெட்டியின் ஒரு மூலையில் டிக்கட் பரிசோதனை செய்துகொண்டிருந்தவர் ஓடிவந்தார். அவரிடம் சமாசாரம் சொன்னேன்—அடுத்த ஸ்டேஷனில் வண்டி நின்றதும் அந்த வாலிபன் இழுத்துச் செல்லப்பட்டான்.

இப்படி முதலில் புலிவாயிலிருந்து தப்பிவந்த நான் ஒரு ஓட்டலில் தங்கினேன். மறு நாள் உங்கள் கல்லூரிப்பக்கம் வந்தேன்—யாருக்கும் தெரியாமல் இருக்கவேண்டுமே என்று மறைந்து மறைந்து உங்களைப் பார்த்தேன் — நீங்கள் ஒரு பெண்ணிடம் மிகுந்த ஆசையோடு பேசிக்கொண்டிருந்ததைக் கண்டேன். என்னால் பொறுக்க முடியவில்லை, ஓடிவிட்டேன். மறு நாள்வந்தேன். உங்கள் கேளிக்கைகள் அதிகமாக இருந்தது — இன்று பகல்வந்தேன். என்னாலே சொல்ல முடியவில்லை—அவள்... அவள்...உங்கள் வாயில்...

"அல்லி...அல்லி....வேண்டாம் எனக்கு எல்லாம் தெரிந்துவிட்டது. இனி வாழ முடியாது என்று இந்தக் கால்வாயைத் தேடி வந்தாய் — அல்லி......நீ நிரபராதி—எந்த இடத்தில் நீ வாழ்க்கைக்கு முடிவுதேட வந்தாயோ அங்கேயே நம் வாழ்க்கை ஆரம்பமாகட்டும், அல்லி என்னை மன்னித்துவிடு" என்று அவள் கைகளைப் பற்றினேன்."

"அத்தான் நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள்"

"அனாதையென்று வந்தேன்; ஆனால் நீதான் துணைகிடைத்துவிட்டாயே! இனி நான் அனாதை இல்லை—வா—போகலாம்"

★

காலத்திற் கேற்ற கருத்தும், ஒழுக்கமும்
ஞாலம் முழுமைக்கும் ஒன்றாய்—எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்றும் இல்லை,
சூத்திரனுக்கொரு நீதி—தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி
சாத்திரம் சொல்லிடு மாயின்—அது
சாத்திரம் அன்று; சதியெனக் கண்டோம்!

—பாரதியார்

கடன்காரர்களாகிறோம்!

ஆனந்தம் தெரிவித்திருக்கிறார் அமைச்சர்.

வட்டி குறைகிறதாம்'50 இலட்சம் மிச்சமாம்!!—எனவே, அகமகிழ்ச்சியைத் தெரிவிக்கிறார், நிதியமைச்சர்.

பிச்சைப்பாத்திரம் ஏந்தி, அமெரிக்காவில் வலம் வரும், டில்லி மந்திரியல்ல, இப்படி ஆனந்தமும் அகமகிழ்ச்சியும் கொள்வது; நமது சுப்ரமணியனார் தான்!!

"நாம் வாங்கிய கடன்கள் சிலவற்றின் வட்டி விகிதங்களைக் குறைத்திருக்கிறார்கள். இதனால், நாம் செலுத்தவேண்டிய வட்டி ஆண்டுக்கு 50 இலட்சம் குறைகிறது", என்று சட்டசபையில் தெரிவித்திருக்கிறார், சுப்பிரமணியம்.

வட்டிக்கு, இவரெங்கே கடன் வாங்கினார்? அமெரிக்காவிலா! ரஷ்யாவிலா!! என்று கேள்வி எழலாம்.

அல்ல, தோழர்காள், அல்ல— மத்திய அரசிடம் வாங்கினோம், கடன்—அதற்கு வட்டியுண்டாம் —சில கடன்களுக்கு வட்டியைத் தள்ளுபடி செய்திருக்கிறதாம் டில்லி.

திகைப்பீர்கள்! — டில்லியிடம் பணம் வாங்குவது பெரும்பாடு, அப்படி வாங்கும் பணத்துக்கும் நாம் வட்டி கொடுக்கிறோம் — எனும் விபரம் கேட்டு.

மாநிலங்களுக்கு அதிபதி டில்லி! மத்திய சர்க்கார், மாகாணங்களுக்கு உதவவும், ஏக இந்தியா எனும் நிலை நீடிக்கவும் இருக் ...!!

இப்படியொரு மத்திய அரசு இருப்பது, மாநிலங்களுக்கு நல்லது — உடம்புக்கு மூளைபோல என்று உவமையுடன், விளக்கத் தவறமாட்டார்கள், காங்கிரஸ்காரர்கள்.

அந்த மத்திய அரசு, பணம் ஏதாயினும் கொடுத்தால், அதற்கு வட்டிபோட்டு வசூலிக்கிறது! வாரி வாரி மாகாணங்களுக்காக வழங்குவதில்லை!!

கிராமப் புறங்களிலிருக்கும் மார்வாடிகள், நகரத்திலிருக்கும் மாமன் மச்சானிடம் போய், பணம் வாங்கி வந்து, விவசாயிகளிடம் கொடுத்து, வட்டி வாங்குவதுண்டல்லவா? இந்த வேலையைச் செய்வதுதான், டில்லி! அமெரிக்கா போன்ற நாடுகளிடம் பணம்

அண்ணல்

வாங்கிவந்து, நமக்கெல்லாம் வட்டிக்குக் கொடுக்கும் திருப்பணியைச் செய்வதுதான் டில்லி — என்று விளக்கமளிக்கிறார் நிதியமைச்சர்!!

50 இலட்சம் மிச்சப்படுகிறதாம்! 50 இலட்சம் அதாவது அரைக்கோடி ரூபாய்கள் மீதப்படுவது மகிழ்ச்சிக்குரிய சேதிதான். ஆனால் ஒன்று, 50 இலட்ச ரூபாய் வட்டி கொடுக்குமளவுக்கு சென்னையிருக்கிறது எனின், வாங்கிய கடன் எவ்வளவு இருக்கவேண்டும்? வட்டி 50 இலட்சம்! வாங்கிய கடன் எத்தனை கோடி நூற்றுக்கணக்கிலா என்றால் இல்லை—சில கோடிகள் தான்!!

சுமார் 60 கோடி ரூபாய்க்கு சென்னை கஜானாவுக்கு வரி செலுத்துகிறோம் நாம்—வருமான வரி, கலால் வரி, சுங்கம், இரயில் மூலம் பலகோடிக் கணக்கான ரூபாய்களை, டில்லி கஜானாவுக்கு வரி செலுத்துகிறோம். நாம் செலுத்தும் வரிகளை, டில்லி வாங்கி, நமது நன்மைக்கான ஏற்பாடுகளைச் செய்கிறது—போதாத பணத்தை வெளி நாடுகளில் கடன் வாங்கிவந்து நமக்கெல்லாம் கொடுத்து உதவுகிறது என்றே கருதி வந்தனர் மக்கள்.

தெளிவுபடுத்துகிறார் நிதியமைச்சர்! சென்னை மாநிலம், எப்போதாவது தட்டுப்பட்டு டில்லியைப் போய்க் கெஞ்சினால், அது தருவது உதவியல்ல — கடன் என்று! அந்தக் கடனுக்கு ஆண்டுதோறும், வட்டியும் கட்டிக் கொண்டு வருகிறோம்.

கொடுத்த கடன்களையே, தள்ளுபடி செய்துவிட வேண்டுமென்று சென்னை அரசு கோரியதா? அல்லது வட்டியை மட்டும் குறைத்தால் போதுமானதெனக் கேட்டுக்கொண்டதா?" என்று, அகமகிழ்ந்த நிதியமைச்சரைப் பார்த்துக் கேள்வியொன்று போடப்பட்டது சட்டசபையில்.

கேட்கப்பட்டதன் நோக்கம், பெரிது பெரிதெனக் கொண்டாடும் டில்லி, ஏனிந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்யலாகாது எனும் எண்ணத்தால்தான்! நம்மிடமிருந்து வருமான வரி வாங்கிச் செல்வது டில்லி — கலால் வரி, சுங்க வரி கொண்டுசெல்வது டில்லி — இரயில் நடத்திப் பணம் சம்பாதிப்பது டில்லி—கார்டு கவர் விற்றுப்பணம் பெறுவது டில்லி—

அப்படிப்பட்ட டில்லியோ, நூறு கோடி இருநூறு கோடியெனப் பல அணைக்கட்டுகளை வடக்கில் தான்கட்டிக்கொண்டிருக்கின்றது. இதற்குக் தருவதோ, மிகமிகச் கொஞ்சம்! அந்தக் காரணத்தைச் சொல்லியாவது, வாங்கிய சில கோடி கடன்களையாவது தள்ளுபடி செய்யுமாறு கேட்பதில் தவறு என்ன? எதுவுமில்லையல்லவா! அதனால்தான் கேள்வி போடப்பட்டது.

அமைச்சர், அதற்குத் தந்த பதில், மிகமிகப் பரிதாபம் கலந்ததாகக், கூறியிருக்கிறார்.

"நாம் இன்னும் கடன் வாங்கவேண்டி இருக்கிறது. இந்நிலையில் கொடுத்த கடன்களைத் தள்ளுபடி செய்யக் கோரினால், இனிமேல் எதிர்காலத்தில் கடன் கிடைக்காதே" என்று.

இப்போது வாங்கி, வட்டி செலுத்துவது மட்டுமல்ல—இனியும் வாங்கவேண்டியிருக்கிறதாம் கடன். கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால், கைகொட்டிச் சிரியாரோ என்றார் கவியரசர் பாரதியார் — வரி வரியாகக் கொட்டிக் கொடுக்கிறோம் டில்லிக்கு! ஆனால் அதனிடமிருந்தோ உதவி பெறுவதற்குப் பதில், கடன் பெறுகிறோம் — அதுவும் வட்டிக்குக் கடன் வாங்குகிறோம்!!

* * *

"எனப்பா, ஆறுமுகம்! அந்தப் பெரிய மனிதனோடு சேர்ந்து கொண்டு திரிகிறாயே. பிள்ளை குட்டிகளைப்பற்றிக் கூடக் கவலைப்படாமல், அவனே சதம் என்று அலைகிறாயே"

"நான் என்ன புத்தியில்லாதவனு! அவன் பெரிய மனிதன். ஊரில் செல்வாக்கு அதிகம். அவனோடு சேர்ந்திருப்பதால் எனக்கும செல்வாக்கு வருகிறது"

"செல்வாக்கு சரி தம்பி! செல்வாக்கு இருந்தால், வீட்டில் அரிசி வந்துவிடுமா — பிள்ளை பெண்டாட்டி வயிறு நிறைந்துவிடுமா?"

"......போகப் போகப் பாருங்க! சமயம் பார்த்து, அவரைக்கேட்டு, ஒரு ஆயிரம் இரண்டாயிரம் வாங்கி, ஏதாவது தொழில் செய்யலாம் என்றுதான் பார்க்கிறேன். இன்னும் சந்தர்ப்பம் வரவில்லை"

* * *

பெரிய மனிதனுக்குத் துணை போவதால், இலாபம் வருமென்றால், சரிதான்! இலாபமுமில்லாமல், ஏதாவது காப்பிக்கு டீக்கு என்று தரும் ஒரு ரூபாய் அரை ரூபாய்களையும் கணக்குக் காட்டி, அதற்கு வட்டி வாங்கும் நிலையில் அந்தப் பெரிய மனிதன் இருக்கிறான் என்றால், ஆறுமுகம் ஏன் சேர்ந்திருக்கவேண்டும்!!

இந்தியாவுடன் இணைந்திருப்பதால் உலகத்தில் நமக்கு மதிப்பு, இப்படிச் சேர்ந்திருப்பதால் நமது மாகாணத்துக்கு நன்மை என்று சொல்லுகிறார்கள் காங்கிரஸ் காரர்கள்.

என்ன நன்மை கிடைக்கிறது என்று பார்த்தால், கொடுக்கும் சில கோடி ரூபாய்களுக்கும் வட்டி கேட்கிறது டில்லி! பிற மாகாணங்களுக்குத் தருவதுபோல, ஐந்தாண்டுத் திட்டத்தில் போதுமான மான்யம் நமக்குத் தரப்படுகிறதா என்றால் அதுவுமில்லை!!

ஆண்டுதோறும், சென்னை சர்க்கார், கடன் கேட்கிறார்கள், மக்களைப்பார்த்து. பத்துக்கோடி பெற்றோம், இருபதுகோடி கிடைத்தது என்று சொல்லி பெருமையும் அடைகிறார்கள்!! அதுபோதாதென்று, டில்லியிடம் கடனும் வாங்கிச் செலவழிக்கிறார்கள்; என்ன செலவுசெய்கிறார்கள் அப்படி? ஏனிவர்களுக்குப் போதவில்லை பணம், என்கிற கேள்விகள் கிளம்பலாம். அது ஒருபுறமிருக்க, இப்படி வட்டிக்குக் கடன் வாங்க வேண்டிய அவசியம் என்ன? கடன்தான் வாங்கவேண்டுமா என்பதை, நாம் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

வருவாய் வருவதற்கு இடமில்லாத நாடு அல்ல நம்முடையது. வளங்கள் ஏராளமுண்டு! மலைகளிருக்கின்றன, எதற்கும் உதவாத பனிமலைகள் அல்ல அவைகள்—உலக மார்க்கெட்டிலே விலை போகக் கூடிய காபியும் டீயும் விளையும் முந்திரியும் விளையும்மலைகள்!! நிலமுண்டு—வெறும் மணல் மட்டும் நிரம்பிய பாலைவனமல்ல நமது நிலம்—பாசன வசதியும், மற்ற வசதிகளும் கிடைக்குமாயின், நமது நிலம் வேண்டிய விளைச்சலைத்தரும். கனிப்பொருள்களுக்குப் பஞ்சமானதுமல்ல, நம் நாடு. எல்லாக் கனிப்பொருள்களும் இல்லையென்றாலும், முக்கியமெனக் கருதப்படக் கூடிய பல பொருள்கள் கிடைக்கின்றன. உலகத்திலேயே அபூர்வமான, பழுப்பு நிலக்கரி உண்டு, நமக்கு! அதைக் கொண்டு, இல்லாததையெல்லாம் கூடப் பெற்றுக் கொள்ளலாம்!!

இருந்தும் நம்நாடு, வளமற்றதாயிருக்கிறது--இருக்கும் தேயிலை காப்பித் தோட்டங்களோ, முதலாளிகளுக்குச் சொந்தம் — வயல்களுக்குப் பாசன வசதி செய்ய வேண்டுமானால், அதற்கு வேண்டிய பணம் தரவேண்டிய பொறுப்பு டில்லியிடம் — புதிதாகத் தொழில் துவங்கலாம், சுரங்கங்களை வெட்டித் தோண்டலாமெனிலோ, நமக்கு அதிகாரம் கிடையாது — டில்லியிடம் தான்—இருக்கும் ஒருடஜனுக்கு மேற்பட்ட துறைமுகங்களைப் பயன்படுத்தி வெளிநாடுகளுடன் வாணிபத் தொடர்பு கொண்டு பணம் சம்பாதிக்கலாம் என்றாலோ அதற்குள்ள அதிகாரமும் டில்லியிடம்தான் இருக்கிறது—இப்படி, எல்லாவற்றையும், டில்லியிடம்

யார் வீட்டுப்பணம்?

——[✻]——

இருநூறு கோடியிருக்குமாம்! இன்னும் பணக்காரர்களிடமிருந்து வசூல் செய்ய வேண்டிய வருமான வரி! இந்த 200 கோடியையும் இனிமேல் வசூல் செய்ய முடியாது என்றும், கைவிட்டுவிட வேண்டியது தான் என்றும், கடந்த வாரம் கூடிய காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சிக்கூட்டத்தில், டில்லி நிதி உதவி மந்திரிகளான கோபால் ரெட்டியும், தாரகேசுவரி அம்மையும் தெரிவித்தனராம்!!

ஒப்படைத்திருக்கிறோம்! எனவே, வருமானமில்லை — வருமானமில்லாததால் கடன் கேட்க வேண்டிய அவசியம் உண்டாகிறது — இப்படி எல்லா அதிகாரத்தையும் பெற்றிருக்கும் டில்லி, சங்கடம் ஏற்படும் சமயத்தில் ஏதாவது பணம் கொடுத்து உதவுகிறதா என்றால், ஐந்து கோடி பத்துக் கோடி வாங்குவதற்கும் படாத பாடுபடுகிறது — பலதடவைகள் பறந்துபோகிறார் நமது நிதி அமைச்சர் — அப்படிக் கெஞ்சிக் கூத்தாடி வாங்கி வருவதும், உதவியல்ல, கடன்! அதுவும் வட்டி போட்டுக் கொடுக்க வேண்டிய கடன்.!

* * *

"இவர்கள் செலவுகளுக்காக வாங்கும் கடனுக்குத்தான வட்டியே ஒழிய, ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு என்று அளிக்கிறதே பணம், அதற்குமா வட்டிபோட்டு வசூலிக்கிறது? ஏதோ, வட்டி கொடுக்கவேண்டும் என்று நிதியமைச்சர் சொன்னதை வைத்துப் பிரமாதப்படுத்துகிறாயே!" எனக் கூறக்கூடும் காங்கிரஸ் தோழர்கள்..

உண்மைதான், ஏக இந்தியா என்று சொல்லும் டில்லிப் பீடம், ஐந்தாண்டுத் திட்டம்போட்டு, அந்த ஐந்தாண்டுக்கும் 150-கோடி என்று சொல்லி, பிறகு 140-என்று வரையறுத்து வழங்க முன் வருவது உண்மைதான்! 140-கோடி என்றதும் பிரமிப்பாகயிருக்கும் — ஆனால், அந்த 140-கோடியும் ஐந்தாண்டுக்கு ஆகும், அப்படிப பார்த்தால் ஒரு ஆண்டுக்கு இட்டத்தட்ட 28-கோடி ரூபாய் தான் நமக்குத் தரப்படுகிறது—ஆனால், மேற்சொன்ன வருமானம் கலால், இரயில், வாணிபம், தபால் முதலியவைகள் மூலம் எவ்வளவு கொண்டுசெல்லுகிறது என்று பார்த்தால், நிச்சயம், இந்த 28-கோடியைவிட அதிகமாகயிருக்குமே ஒழியக் குறையாது!!

இப்படி, ஐந்தாண்டுத் திட்டத்துக்கு டில்லி பணம் தருவதும் எப்படியென்றால், சொந்தமாகச் சம்பாதித்துத் தருகிறதா, மாநிலங்களிலிருந்தெல்லாம் சுரண்டிச் செல்லும் பணங்களைப் பங்கு போட்டுத் தருகிறதா என்று பார்த்தால், இல்லை! இப்படிப் பேர்க்கும் பணத்தையெல்லாம், இராணுவம் பாதுகாப்பு என்று சொல்லி 300 கோடியை ஆண்டு தோறும் அழித்துவிட்டு, ஐந்தாண்டுத் திட்டத்துக்கு அமெரிக்கா பணம் தருமா, பிரிட்டன் வழங்குமா என்று ஓடி ஓடி அலைகிறார்கள்! அலைந்து ஏதாவது பெற்று, நமக்கும் தருகிறார்கள்!! அப்படி அவர்கள் கடன் வாங்கும் போது, நேருவின் மேதாவிலாசத்தைக் காட்டியோ, காங்கிரசின் கண்ணியத்தைச் சொல்லியோ, வாங்கவில்லை. அவனும், அதற்காகத் தரவில்லை. இந்த நாட்டின் எழில், வளம், முதலியவைகளை எண்ணியே வெளிநாட்டான் பணம் கடன் தருகிறான். டில்லி இப்படிக் கடன் வாங்குவதன் மூலம், நமது பூமியையும் அடகு வைத்து வருகிறது.

சென்னை—டில்லிக்கு, அடகுவைத்து வட்டிக்குக் கடன் வாங்குகிறது! டில்லி, நமது பூமியை, வெளிநாட்டானுக்கு அடகுவைத்துப் பணம் வாங்குகிறது வட்டிக்கு!!

மூட்டை கால்பணம், சுமைகூலி முக்கால்பணம் என்றொரு பழமொழி சொல்வார்களே, அது போல, காங்கிரஸ் ஆட்சியில், பெறுவது பசியும் பட்டினியும்தானென்றாலும், சுதந்திரம் வந்தது எனபதற்காக, உலக நாடுகளுக்கும் கடன்காரர்களாகிறோம்! டில்லிக்கும் "புரோ" நோட்டு எழுதித் தரவேண்டிய நிலைக்கு ஆளாகிறோம்!!

இரண்டு இடத்துக்கு 'கடன்'காரர்களாகி வருகிறோம் — இந்தக் காங்கிரஸ் ஆட்சியில்! எல்லாமிருந்தும், இப்படிக் கடன்காரர்களாகி வருகிறோம்!

போதாக்குறைக்கு, மேலும் மேலும் வேறு வட்டிக்குக் கடன்வாங்கவேண்டியிருக்கும் என்கிறார் சுப்பிரமணியம்!!

★

"இரண்டாவது 5-ஆண்டுத் திட்டத்தின். கீழ் சென்னை மாகாணத்தில் 13, புதிய இரயில் பாதைகளை அமைக்க வேண்டுமென, டில்லி சர்க்காருக்கு சென்னை சிபாரிசு செய்தது. ஆயினும் இந்த 13-பாதைகளில் ஒன்று கூட இரண்டாவது திட்டத்தில் சேர்க்கப்படவில்லை—" எனும் தகவலை, சென்னைமேல்சபையில் 20-ந் தேதி, அமைச்சர் பக்தவத்சலம் அறிவித்தார்.

•

"கோயம்புத்தூரில் மூடிக் கிடக்கும் காளீஸ்வரர் மில்லை ஏற்று நடத்த சென்னை சர்க்கார் தயாராக இருக்கிறது. ஆனால் சட்டம் விதிகள் எல்லாம் இடம்தரவில்லை. மில்லை ஏற்று நடத்துவதும், விடுவதும் மத்திய சர்க்கார் பொறுப்பிலிருக்கிறது. மத்திய சர்க்கார் மனம் வைத்தால் ஏற்று நடத்தலாம். சென்னை சர்க்கார் மத்திய சர்க்காரின் ஏஜண்டாக மில் நிர்வாகப் பொறுப்பை ஏற்கத் தயாராயிருக்கிறது" என்று 20-ந்தேதி சட்டசபையில் அமைச்சர் வெங்கட்டராமன் அறிவித்தார்.

•

"மாநிலத்திற்கு இரும்பு உருக்கு 'சப்ளை' செய்வது வரவர குறைவதுகண்டு சென்னை சர்க்கார்கூடக் கவலைப்படுவதாகத் தெரிகிறது. 'சப்ளை'யாகாமல் கோட்டா நின்றது உள்பட இப்போது 10,000-டன் வரை வர வேண்டியிருந்தும், வருவது மாதத்துக்கு 100-டன்தானும் ....செயற்கைப் பட்டு நெய்வதற்கான 'நூல்' இறக்குமதி செய்வதற்குரிய 'கோட்டா' முழுதும் பம்பாய் ஆலை முதலாளிகளுக்கே ஒதுக்கப்பட்டிருக்கிறது........தென்னாட்டு நெசவாளர்களுக்கு உண்மையில் கொஞ்சம் கூடக் கிடைக்கவில்லை...." என்று மெயிலில் ஒரு கடிதம் வந்துள்ளது.

ஆனால்
ஊர்சுற்றும் அமைச்சர்கள் உரத்துப் பாடுகிறார்கள்!
ஓங்காரக் கூச்சலிடுகிறார்கள்!!
எங்கே, ஏய்க்கிறது வடக்கு என்று?

இதுவும் "சுதந்திரம்" பெற்ற நாடுதான்!

நிலச் சீர்திருத்தங்கள் மூலமாக நிலப் பிரபுத்துவம் ஒழிக்கப்பட்டது. பிரபுத்துவ நிலவுடைமை விரிவடைய முடியாதபடி தடுக்கப்பட்டது.

பழைய ஆட்சியில் அடிமட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு நிலமே இருந்ததில்லை. இன்று பெரும்பாலான ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயிகளின் நிலைக்கு உயர்ந்துவிட்டார்கள். நிலமில்லாத விவசாயிகளே இன்று கிடையாது.

வியத்-நாம் மக்கள் செப்டம்பர் 2ம் நாளன்று வியத்-நாம் ஜனநாயகக் குடியரசின் 13வது ஆண்டு விழாவைக் கொண்டாடினார்கள்.

வியத்-நாம் ஜனநாயகக் குடியரசிற்குச் சமாதானவாழ்வு இடைத்து நான்கு ஆண்டுகளாகின்றன. இந்த நான்காண்டுகளில் மக்களுடைய வாழ்க்கைத்தரம் தொடர்ச்சியாக உயர்ந்து வந்திருக்கிறது. நிலச் சீர்திருத்தமும் பொருளாதாரப் புனரமைப்பும்தான் இந்த வளர்ச்சிக்கு வழிசெய்துகொடுத்த இரண்டு முக்கிய காரணங்களாகும்.

•

ஆகஸ்டுப் புரட்சிக்கு (1945) முன்பு விவசாயிகள் ஆண்டுதோறும் நிலச்சுவான்தார்களுக்கு சுமார் 6 இலட்சத்து 30 ஆயிரம் டன் நெல் அளக்கவேண்டியிருந்தது. இன்று இந்த நெல் பூராவும் விவசாயிகளுக்கே உரியதாகி விட்டது.

நகர்களிலும் கிராமங்களிலும் ஒவ்வொருவரின் வருவாயும் படிப்படியாக அதிகரித்து வந்திருக்கிறது. பிரெஞ்சுக் காலனி ஆதிக்க ஆட்சியில் 1939ம் ஆண்டில்தான் விவசாயப் பொருளுற்பத்தி மிகவும் அதிகமாயிருந்தது. 1939ம் ஆண்டு உற்பத்தி அளவுடன் ஒப்பிடும்போது 1957ம் ஆண்டில் விவசாய உற்பத்திகள் பெருகி விவசாயிகளுடைய வருவாய் அதிகரித்திருக்கிறதென்பது விளங்கும்.

கிராமாந்தர வேலைகளுக்கான மத்திய குழுவினர் 5 குக்கிராமங்களில் சேகரித்த புள்ளி விவரங்களின்படி, 1957ல் ஒவ்வொரு விவசாயிக்கும் சராசரி 586 கிலோ கிராம் நெல் கிடைத்தது. 1952ல் கிடைத்ததைவிட இது 192 கிலோ கிராம் (அதாவது 48.5 சதவீதம்) அதிகமானது.

செப். 2ந் தேதி, குடியரசு விழாக் கொண்டாடிய வியட்நாம் விடுதலை வீரர் ஹோசிமின்

★

பிரெஞ்சு ஆட்சியாளர்களின் காலத்தில் வடக்கு வியத்நாம் ஆண்டுதோறும் தென் வியத்நாமிலிருந்து ஒன்று முதல் இரண்டு இலட்சம் டன் வரை அரிசி வாங்க வேண்டியிருந்தது. ஆனால் இன்று வடக்கு வியத்நாம் தன் மக்களுக்குத் தேவையான அரிசி முழுவதையும் தானே உற்பத்தி செய்து கொள்வதுடன், பெரிய அளவில் அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் தொடங்கிவிட்டது. 1957ல் ஒன்றரை இலட்சம் டன் அரிசி ஏற்றுமதி செய்தது.

விவசாயிகளின் வருவாய் உயர்ந்து வருவதால் பழைய ஓட்டைக் குடிசைகளுக்குப் பதிலாக இன்று அவர்கள் வசதியான வீடுகள் கட்டிக்கொள்ள முடிகிறது. தவிரவும் மாடுகளும், விவசாயக் கருவிகளும் உரங்களும் வாங்க முடிகிறது.

சமாதானம் ஏற்பட்டதும், தொழிலாளர்கள், சர்க்கார் ஊழியர்கள் இவர்களுடைய சம்பளங்களை 50-சதவீதமும், 40-சதவீதமும் உயர்த்தியது.

பிறகு 1955-ல் ஒரு முறையும் 1956-ல் ஒரு முறையுமாகச் சம்பள விகிதங்கள் பெரிதும் உயர்த்தப்பட்டன. திரும்பவும் இவ்வருடம் மே மாதத்தில் சம்பளங்கள் 13-லிருந்து 50-சதவீதம் வரையிலும் சிற்சில பகுதினருக்கு 70-லிருந்து 80-சதவீதம் வரையிலும் உயர்த்தப்பட்டன.

விலைவாசிகள் உயராதபடி கட்டுப்படுத்தப்பட்டதுடன், குறைக்கப்பட்டுமுள்ளன. இந்நடவடிக்கைகள் யாவும் தொழிலாளர்கள், சர்க்கார் ஊழியர்கள் முதலியோரின் வாழ்க்கையைப் பன்மடங்கு வளமுடையதாக்கியுள்ளன.

வியத்நாம் ஜனநாயகக் குடியரசில் அரசாங்கத் தொழிற்சாலைகளில் வேலை செய்வோரின் தொகையில் 80-சதவீதத்திற்கு சமமானவர்கள் தனிப்பட்டோரது ஆலைகளில் வேலை செய்கிறார்கள். சர்க்கார் அமுலுக்குக் கொண்டு வந்திருக்கும் முதலாளிகள் தொழிலாளர்கள் பரஸ்பர நிலவுரிமைச் சட்டம், பொருளுற்பத்தித் துறையில் முதலாளிகளை ஈடுபடும்படி அவர்களுக்குத் தூண்டுதல் அளிப்பதுடன், தொழிலாளர்களுடைய நலன்களுக்கும் பாதுகாப்பு அளிக்கிறது.

தொழிற்சங்கச் சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு முதலாளிகள், தொழிலாளர்களுடன் கூட்டு ஒப்பந்தங்கள் செய்து கொண்டு 1957-ம் ஆண்டு முதல் இலாபத்தில் ஒருபகுதியைத் தொழிலாளர்களுடன் பகிர்ந்து கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

தொழிலாளர்கள், விவசாயிகள் இதர உழைப்பாளி மக்களின் வாழ்க்கைத் தரம் இடையறாது உயர்ந்து வருகிறது.

சோஷலிஸ நிர்மாணத்திற்கு வெற்றிமேல் வெற்றி கிடைத்து வருவதைக் கண்ணுற்ற பொது மக்கள் புத்துணர்வும் புதுச் சக்தியும் பெற்றுள்ளனர்.

57

திராவிடநாடு

5—10—58 | வார வெளியீடு | விலை 16 காசு

5 - OCT 1958
MADRAS

பொங்கட்டும் இன்றே....

[பே. ச. பாமணி]

எத்திசையும் செம்மையுறத் தங்க மாக
எழுந்தானச் செங்கதிரோன் இந்தக் காட்சி
இத்தரையின் மீதினிலே உறுதி யோடே
எந்தமிழின் தொண்டர்கள் எழுந்த மாட்சி
எத்திசையும் பரந்திருந்த இருளின் நீக்கம்
எந்தமிழர் அறியாமை இருளை ஒக்கும்
எத்திசையும் நீர்நிறைகள் பொன்னாய்த் தோன்றி
எந்தமிழின் புத்தொளியை எண்ண வைக்கும்

காலைவேளை வந்த அந்தப் பனியின் கூட்டம்
கடற்றமிழைப் பிடித்திருந்த 'வடநோய்' ஒக்கும்
சோலையிலே தாமரைத்தாள் விரிந்த காட்சி
சொல்லொண்ணுக் கவிதை கதை மலர்ந்தமாட்சி
சோலையிலே பூமணத்தை நுகரும் போழ்து
'தூயதமிழ்' மணமெங்கும் பரவக் காண்போம்
காலையிலே காகமது கரையுங் காலை
'கண்டிடுவீர் நால்களை'னும் ஆணை கேட்போம்

நிலையாது கார்க்கூட்டம் செல்லக் கண்டால்
நெடுந்தொலைவு தமிழரனை சென்றே யங்கு
மலையாது வணிக,மற்றும் போரில் எல்லாம்
மாற்றாரை விஞ்சியதை எண்ணிப் பார்ப்போம்!
பழையதுகாண் செய்தியிவை எனத்தள் ளாமல்
பழையகதை கேட்டவிரன் 'சேரன்' ஆவோம்
அலையாழி, எரிமலையாய்த் தமிழர் உள்ளம்
பொங்கட்டும்; குமுறட்டும் இன்றே! இன்னே!!

திருப்பதியில் அண்மையில் பெரிய திருவிழா நடைபெற்றதல்லவா? ஏழுமலையானைத் தரிசிக்கப் பலர் காத்திருந்தனராம்! அப்போது, 12 நாமங்கள் போட்ட வைணவர்கள் மட்டும், விசேஷமாக உள்ளே அனுமதிக்கப்பட்டனர். நெடுநேரம் காத்துக்கிடந்த ஒரு செட்டியார், இதைப் பார்த்து விரைந்து போய் பட்டை பட்டையாக 12 நாமங்களை உடம்பெல்லாம் போட்டுக்கொண்டு ஓடிவந்தாராம். வைணவர்களோடு சேர்ந்து தானும் உள்ளே போக முயற்சித்தார். ஆனால், அதிகாரிகள் அவரை அனுமதிக்கவில்லை. "நானும் அவர்களைப் போல உடம்பெல்லாம் 12நாமம் போட்டுத்தானே இருக்கிறேன்," என்று சண்டைக்குப் போனாராம், செட்டியார். உடனே அவர் உடம்பில் பூணூல் இல்லாததை நிர்வாகிகள் சுட்டிக்காட்டி, "அது" இருந்தால் தான் விடமுடியும் என்றும், நாமங்கள் போட்டுக் கொண்டதாலேயே பெரிய வைணவர்கள் ஆகமுடியாதென்றும் தெரிவித்தனராம்!!

*

பம்பாய் மாகாணத்திலுள்ள 3000 கோயில்களை ஆரம்பப் பள்ளிக்கூடங்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றனவாம் செப். 18-ந் தேதி, இத்தகவலை மாகாண உதவி கல்வியமைச்சர் நிர்மலா, பம்பாய் சட்டசபையில் வெளியிட்டார். புதிதாகக் கட்டிடங்கள் கட்ட, காலதாமதம் ஆவதைத்தவிர்க்கவும், பணச் செலவு இல்லாமல் பள்ளிகள் நடைபெறவும் வசதியாக இருக்கும் பொருட்டு, இந்தக்காரியம் மேற்கொள்ளப் பட்டிருக்கிறதாம், பம்பாயில். அங்குள்ள கோயில்களைவிட நமது ஊர்க் கோயில்கள் பெரியவை. இவைகளில், பள்ளிகள் என்ன, கல்லூரிகள் கூட நடத்தலாம்! மனம் வரவேண்டுமே காமராசர் அரசுக்கு!!

*

லோகியா ஒரு அருமையான யோசனையை 19-ந்தேதி ஐதராபாத்தில் வெளியிட்டிருக்கிறார் — அதாவது ஐந்தாண்டுத் திட்டம் என்று சொல்லிச் சொல்லி காலத்தையும் பணத்தையும் விரயமாக்கும் காங்கிரஸ் சர்க்கார், அந்தப் பணத்தைக் கொண்டு எங்கெங்கு மக்கள் பட்டினி கிடக்கிறார்களோ அங்கெல்லாம் 'இலவச சமையற்கட்டுகளை' ஆரம்பிக்கலாம் என்கிறார் அவர். இந்திய துணைக்கண்டத்தில் ஒரு நாளைக்கு ஒருவேளை சாப்பாடாவது பெறும் பாக்கியம் பெறுவோர் 15-கோடியிருக்குமென்றும், அதுகூட இல்லாது நித்தியப் பட்டினிமாகப் பசி பசியென்று அலைவோர் சுமார் 4-கோடியிருக்கும் என்றும் தெரிவிக்கிறார், அவர்.

*

வாழ்க்கைக்குத் தேவையான நவீன வசதிகளைப் பெற்று மனிதன் வாழப் பிறந்தானென்றே புது உலகம் காண்போர் எண்ணுவார்கள்! 'இல்லை இல்லை. மனிதன் தன்னடக்கத்தோடு இச்சா சக்திகளையெல்லாம் துறந்து ஒளியைப்போல் வாழ்வதே உண்மை வாழ்க்கை" என்று மனிதன் ஒவ்வொரு நிமிடமும் தனனை வேதனைப் படுத்திக்கொள்ளவே பிறந்தான், என்று எண்ணுவோரும் உண்டு!! காங்கிரசில வயதானவர்களாகிவிட்ட பலர் இரண்டாவது இரகத்தைச் சேர்ந்தவர்களாவார்கள். இவர்களில் ஒருவரான நிதி மந்திரி மொரார்ஜி தேசாய் இப்போது வெளிநாடு போய் வந்திருக்கிறாரல்லவா? அங்கு ஓரிடத்தில் பேசும்போது "என்னமோ: இயந்திரக்கலப்பைகளைக்கொண்டு விவசாயம் செய்யவேண்டும் என்கிறார்கள். எனக்குப் பிடிக்கவில்லை. பரம்பரையாகச்செய்ததுபோல, பழைய ஏர் கலப்பை முறையே நீடிக்கவேண்டும்" என்றாராம். இப்படிப்பேசிய இவர், டில்லியிலிருந்து அந்த நாட்டுக்குப் போயிருந்தது, கட்டை வண்டியிலல்ல! ஆகாய விமானத்தில் தான்!!

*

சோறுபோடு! உணவு விலையைக் குறை!!—என்றுசொல்லி, நேரு பிறந்த ஐக்கிய மாகாணத்தில், பெரிய அரசியல் போராட்டம் நடந்து வருகிறதல்லவா? அது சம்பந்தமாக இதுவரை மொத்தம் 5000 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்களாம்! இதேபோல விரைவில், மேற்கு வங்கத்திலும், கிளர்ச்சி ஆரம்பிக்கப்படும் என்று தெரிகிறது! ✻

ஈ. வே. கி. சம்பத்

நமது சம்பத், எம். பி. கடந்த 26-ந்தேதி காலை, புதுடில்லியிலிருந்து விமானமூலம், மாஸ்கோவுக்குப் பயணமானார்.

அவருடன் தேசிய இயக்கத் தோழரான கே. எஸ். இராமசாமி எம். பி-யும் போயிருக்கிறார்.

வெளிநாடு செல்லும் சம்பத்துக்கு ஏராளமான மலர் மாலைகள் அணிவித்தனர். வாழ்த்துக்கள் கூறி வழியனுப்பிவைத்த காட்சி, பெருமிதம் அளிப்பதாயிருந்தது.

அவர்கள் புறப்பட்ட 'அரியானு' என்ற விமானம் ஆப்கானிய நாட்டினதாகும்.

சம்பத், ரஷியாவின் முக்கிய இடங்களையும் நகரங்களையும் கண்டறியக்கூடும். லெனின்கிராடிலிருந்து, சுவீடன், பின்லாந்து, ஜெர்மனி, இங்கிலாந்து முதலிய ஐரோப்பிய நாடுகளுக்கு எல்லாம் போய்விட்டு வரக்கூடும்,

இந்த நாடுகளையெல்லாம்கண்டு பதினைந்து தினங்கள் கழித்து சம்பத், தாயகம் திரும்புவார்.

புதிய "சூரியன்!"

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [5 10—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 12

"போய்ப்பார்த்தேன், திடுக்கிட்டேன். அதிகாரிகளும், போலீசாரும், அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். என் சர்க்காருக்கு எதிராக இப்படி நடக்கின்ற காட்சிகளைக் கண்ட பின்னரே இந்த முடிவுக்கு வந்தேன். 1959 ஏப்ரலுக்குள் இன்னொரு பொதுத்தேர்தல் நடத்தவேண்டும். அதுவரையில் என் சர்க்காருக்குப் பதில் நீவின் சர்க்கார் நடக்கட்டும் என்கிற முடிவுக்கு வந்தேன்" என்று அறிவித்துள்ளார் 'பர்மாவின் பண்டித நேரு' எனக் கருதப்பட்ட யூநூ!! இராணுவத் தளபதியான "நீவின்" என்பாரையும் அழைத்து, நாட்டை நிர்வகிக்கும்படியும் கேட்டுக்கொண்டிருக்கிறார்!!

நாடாளும் ஒருவர், வலுவிலேயே, 'முடியவில்லை நீர் ஆளும்' என்று சொல்வது, ஒரு அதிசயமான சம்பவமாகும். அதனால் தான், இந்தக் கிழமை உலகத்தின் கண்களும் கவனமும் பர்மாவின் மீது பதிந்துள்ளன.

நாட்டில், தான் நடத்திய சுற்றுப்பிரயாணத்தின் விளைவாக இந்த முடிவுக்கு வந்ததாகக் கூறுகிறார் யூநூ! சர்க்காருக்கு எதிராக அதன் அதிகாரிகளே 'அரசியல் பூசல்'களைத் தூண்டிவிடுகிறார்கள் எனின், நிச்சயம் அந்த ஆட்சி நீடிக்க முடியாது — எவ்வளவு தான் செல்வாக்குள்ளவர்களாக இருந்தாலும், நிர்வாகம் நடத்த முடியாது!!

அதிகாரிகள் எனிப்படியானார்கள்--அவர்களால் எப்படி மக்கள் மத்தியில் பூசல்களை உண்டுபண்ண முடிகிறது—என், யூநூவால் அதிகாரிகளைச் சரிவரக் கட்டிக்காக்க முடியவில்லை என்று, யூநூவின் கட்சியைத் தவிர்த்து பர்மாவில் இயங்கும் 14-மாற்றுக் கட்சிகளும் கேட்கலாம், அந்தக்கேள்வியில் பொருள் இல்லாமலில்லை.

எனினும், யூநூ, பதவியை விட்டுக்கொடுத்தது மட்டுமின்றி, ஒரு இராணுவத் தளபதியின் பொறுப்பில் நாட்டை ஒப்படைத்திருக்கிறார்! அந்தத் தளபதி அமைக்கவிருக்கும் தற்காலீக சர்க்காரில், அரசியல் வாதிகளுக்கோ தேசீயத் தலைவர்களுக்கோ இடமளிக்கப் போவதில்லை என்று வெளியிட்டிருக்கிறார் --எனவே, வெள்ளையன் காலத்திலிருந்ததைப்போல வேண்டியவர்களைக் கொண்ட 'அட்வைசர் கவுன்சில்' ஆட்சியே நடக்கும் என்று தெரிகிறது!!

நீவின் என்பார், இன்று இராணுவத் தளபதியாயிருப்பினும், பர்மிய விடுதலைக்குப் போராடிய அவுன்சான் போன்றோருடன் சேர்ந்து பாடுபட்டவர்தான். 1950ல் இதே யூநூவின் மந்திரிசபையில், அமைச்சராயிருந்து, அமைச்சர் வேலையைவிட, இராணுவமே தனக்குப் பிடிக்கிறதென்று, விலகிப்போனவர். நீவின் என்கிற புனை பெயருக்குப் பொருள், "வெற்றிச் சூரியன்", என்பதாகும்! இவரது இயற்பெயர், தகின் ஷுமாங் என்பதாம்!!

ஒரு பக்கம் கரீனியர் குழப்பம், இன்னொரு பக்கம் உள்நாட்டுக் குமுறல்கள், இதற்கிடையே கிடந்து பர்மா தவிக்கிறதே என்று 1954ல் இவரைப் பேட்டிகண்டு கேட்டபோது, "இப்போது நினைத்தாலும் என்னால் சர்க்கார் அமைக்கும் சக்தியுண்டு. எனினும், தனிப்பட்ட புகழை நான் விரும்பவில்லை. எப்போதும் இராணுவ வீரனாக இருக்கவே ஆசைப்படுகிறேன்," என்றாராம். அப்படிபபட்டவர், இப்போது பர்மாவின் அதிபராகிறார்! அடுத்து வரும் பொதுத் தேர்தல்களை நடத்தும் பொறுப்பும் இவர் வசமே விடப்பட்டிருக்கிறது!!

இப்படி யூநூ செய்யலாமா — ஒரு இராணுவ அதிகாரியின் கையில் நாட்டை ஒப்படைக்கலாமா— என்று கேட்கக்கூடும். ஜனநாயக முறைப்படி, இதுபோலச் செய்வதற்குப் பதில், பலம் பொருந்திய அடுத்த எதிர்க்கட்சி எதுவோ அதன் வசம் ஆளும் பொறுப்பை அளித்துப் பார்ப்பதுதான் முறை. ஆனாலும், தானே தர்மகர்த்தா எனும் நிலையில், இந் நடவடிக்கையை எடுத்திருக்கிறார்! வெள்ளையனிடமிருந்து நாட்டைப்பெற்ற நேரு அவர்களுக்கும் இதே போன்ற எண்ணம் இங்கும் உள்ளதன்றோ? அவர் நண்பர்தானே, யூநூ!!

வெற்றிச் சூரியன்—அழகாயிருக்கிறது—பெயர்! —வேதனைச் சூரியனாக மாறாது, ஜனநாயகம் தழைக்கும் வகையில், பர்மிய மண்ணை ஆக்கிடவேண்டும். அடுத்த தேர்தலை நடத்தித் தனது நாட்டுப்பற்றை நிலைநாட்டிக்கொள்ளவேண்டும் என்றே, இன்றுள்ள நிலையில், நாம் எதிர்பார்க்கவேண்டும்.

சுதந்திரம் பெற்ற பர்மா, ஆதியில் அவுன்சான் போன்ற தனது அருந் தலைவர்களை இழந்தது. அன்றுமுதல், பல தொல்லைகளுக்காளாகித் தவித்துக்கொண்டே வருகிறது. நேருவின் சர்க்கார் கடன் வாங்காமல், கடன்கொடுத்திருக்கிற ஒரே ஒரு நாடு பர்மா! சுமார் 10-கோடிக்குமேல் பாக்கி நிற்கிறதெனலாம்!! அப்படிப்பட்ட ஒரு மண்ணில், இப்படியொரு இக்கட்டுத் தோன்றியிருப்பது, துயரத்துக்குரியதே. "சூரியன்" என்ன செய்யப் போகிறதென்று பார்ப்போம். ✻

"பக்கத்து வீட்டுக்காரியைப் பார்த்து!!"

"சிறுவயதில், என் தாயார் எனக்கொரு கதை சொல்வார்கள்,

ஒரு வீட்டில், ஒரு மருமகளிருந்தாளாம், அவளுக்கொரு மாமியார், அந்த மாமியார்மீது அந்த மருமகளுக்கு அபாரமான அன்பு! —ஆச்சரியத்தோடு எங்கே என்று கேட்காதீர்கள்! கதையல்லவா? அதனுல், அந்த மருமகளுக்கு மாமியார்மீது அன்பு!!—கணவனை விடக்கூட, மாமியாரிடம் ஆசையும் அன்பும் அதிகம். காலையில் எழுந்ததும் மாமியாருக்கு மரியாதை செய்யாமல் எந்த வேலையும் செய்யமாட்டாள், மத்தியானமும் அப்படியே, இரவும் வணங்கி அன்புகாட்டாமலிராள். வயதான மாமியார் ஆனதால், கொஞ்சநாளைக்கெல்லாம், இறந்து விட்டாள். மருமகளுக்கு ஏற்பட்ட சோகம் கொஞ்சமல்ல. மாமியாருக்குப் பதில் மரத்தாலே பொம்மை செய்தாள்! அந்தப் பொம்மையை வணங்குவாள், ஓய்ந்த நேரத்தில் அதுகூடவே உட்கார்ந்திருப்பாள். கணவன் வரும்போதுகூட பொம்மையுடனேயே இருப்பாள், ஒரு நிமிடமும் அந்தப் பொம்மையைவிட்டுப் பிரிவதில்லை.

"என்னடா, பெரிய தொல்லையாய்ப் போயிற்றே! சாவதற்கு முன்புதான், மாமி, மாமி என்று உயிராயிருந்தாள் என்று பார்த்தால், இப்போது அதுவே பெரிய பைத்தியமாகிவிட்டதே. நான் வந்தால் கூடக் கவனிக்காமல் பொம்மையைக் கும்பிடுவதும் கொஞ்சுவதுமாகவிருக்கிறுளே" என்று நினைத்தான் அவள் கணவன். கொஞ்சநாள் போனுல் சரியாகி விடுமென்றும் நினைத்தான். வரவர வளர்ந்ததே தவிர, குறையவில்லை — சதா சர்வகாலமும், பொம்மையை வைத்துக்கொண்டே இருக்கலானுள். எரிச்சல் அதிகமாயிற்று அந்தக் கணவனுக்கு. ஓர் இரவு, பொம்மையையும் எடுத்தெறிந்து, அவளையும் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினுன்! வீட்டைவிட்டு விரட்டப்பட்ட அந்த மனைவி, இருளிலே போகப் பயந்தாள். ஊர் எல்லைக்குப்போய், அங்கே ஒரு மரத்தினடியில் இரவைக் கழித்துவிட்டு, பொழுது விடிந்ததும் எங்காவது போகலாம் என்று தங்கினுள். அப்போதும், கூடவேயிருந்தது அந்தப் பொம்மை. படுத்த அவள், யாரோ வரும் காலடி கேட்டுப் பயந்துபோய் மரத்தின்மீது ஏறி, அங்கே ஒரு கிளையில், மார்போடு பொம்மையை அணைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். வந்தது வேறு யாருமல்ல! திருடர்கள்!!

அவள் எந்த மரத்தில் ஏறி உட்கார்ந்திருந்தாளோ, அதனடியிலேயே வந்து உட்கார்ந்து, தாங்கள் திருடிக்கொண்டுவந்த பொருள்களையெல்லாம் எடுத்து வைத்து, யாரார்க்கு, எவ்வெவ்வளவு என்று பங்குபோட்டுக்கொண்டு இருந்தனர். வைர அட்டிகையும், தங்க நகைகளுமாகப் பல பொருள்கள் இருந்தன.

வண்டு

மேலே உட்கார்ந்திருந்த அந்தப் பெண், பயத்தினுலோ அல்லது தூக்கக் கலக்கத்தினுலோ, கெட்டியாகப் பிடித்திருந்த மரப் பொம்மையை விட்டுவிட்டாள். அது நேராக, அந்தத் திருடர்கள் மத்தியில் வந்து விழுந்தது. திருடர்கள், அந்தப் பொம்மையைப் பார்த்தார்கள். காதறுத்தாலும், கன்னக்கோலிடத் தெரியுமென்றாலும், மூடநம்பிக்கை வசப்பட்டவர்கள்தானே திருடர்களும். அதனுல் குட்டிச்சாத்தான் வேலையோ, பேயோ பிசாசோ என்று திருடிய பொருள்களையெல்லாம் விட்டுவிட்டு ஓட்டம் பிடித்தனர். பொழுது புலர்ந்தது, அந்தப் பெண்ணும் மெதுவாக இறங்கி வந்து கீழே பார்த்தாள்,

பொம்மை கிடந்த இடத்தில், ஏராளமான நகைகள் கிடந்தன. திகைப்பு ஏற்பட்டது அவளுக்கு! மகிழ்ச்சியும் ஏற்பட்டது!! எல்லாவற்றையும் வாரிச் சுருட்டிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினுள். கணவனும்முதலில் முகத்தைத் திருப்பிக்கொண்டான். மனைவியின் கையிலேயிருக்கும் வைரத்தையும் தங்கத்தையும் கண்டதும் கோபம் எல்லாம்போய் விட்டது. பல கணவர்களுக்கு மனைவிமார் பிடிக்காவிட்டாலும் அவள் கொண்டுவரும் சீதனமும் செல்வமும் பிடிக்கிறதல்லவா? அந்த இனத்தைச் சேர்ந்த கணவன் என்று வைத்துக்கொள்ளுங்களேன்! கட்டினுன் — அணைத்தான் — கொஞ்சினுன் — குலவினுன்.

இதைப் பக்கத்து வீட்டுக்காரி பார்த்தாள். எப்படித் திடீரென இவ்வளவு செல்வம் வந்ததடி?— என்று இந்த மருமகளைக் கேட்டாள். மருமகள் நடந்த கதையைச் சொன்னுள். உடனே பக்கத்து வீட்டுக்காரி என்றுமில்லாதபடி தன் மாமியாரின் காலில் போய் விழுந்தாள். சீக்கிரம் சாவதற்கான வழிகளைச் செய்தாள். செத்ததும் பொம்மை ஒன்றைத் தயார் செய்தாள்; அதைக் கும்பிட்டாள்; கொஞ்சினுள்; அவள் கணவன் இவள் தன்னைக் கவனிக்காததைப்பற்றிச் சிறிதும் இலட்சியம் செய்யாதவன் என்றாலும், அவளிடம் பக்கத்து வீட்டில் நடந்ததைச் சொன்னுள். அதேபோலத் தன்னையும் கோபித்து, வெளியே துரத்திவிடுமாறு செய்தாள். எந்த மரத்தைக் குறிப்பிட்டுச் சொன்னுளோ, அதே மரத்தடிக்குத் தானும் அந்த மரப் பொம்மையுடன் போனுள். திருடர்கள் வருவது தெரிந்ததும் மரக்கிளையில் ஏறினுள். வழக்கம்போல அவர்கள் வந்தார்கள், திருடியதைப் பங்கிட்டுக்கொண்டார்கள். அந்தச் சமயம் பார்த்து, கையிலிருந்த

(14-ம் பக்கம் பார்க்க)

நெஞ்சு பொறுக்குதிலையே!

நாவலன்

செப்டம்பர் 11 இரவு கழிந்தது. வரவு கூறிவந்தான் புகலவன் 'பாரதி'க்கு அன்று பாரதியின் நாடு, மொழி, இவற்றின் பற்றுக் குறித்து எண்ணி மகிழ்ந்த இதயங்கள் எத்தனையோ? ஆனுல் பகட்டிற்கு விழாக் கொண்டாடும் பாரத புத்திரர்கள், பாரதி கூறிய பகுத்தறிவிற்கொத்த பண்புநிறை கருத்துக்களை சிந்தையிற் கொள்ளாமல் 'பாரதி விழா'விற்கு ஏற்பாடு செய்திருக்கிறுர்கள் என்பதை ஒலிபெருக்கி அறிவித்தது. உடனே என்னை அறியாமலே என் இதயம் 'நன்றிகெட்டவர்கள்' என இயம்பிற்று. அந்த எண்ணம் கலைய அதிக நேரமாகவில்லை எழிலிசை மன்னரின் 'கைம்மாறு செய்வதுண்டோ காந்திஜிக்கு' எனும் இசையை ஒலி பெருக்கி வழியே செவியுற்றேன். விழாக் கொண்டாடுவோர் அப்பாடலின் பொருளை நுண்ணிய அறிவோடு நுகரவா போகிறுர்கள்? நான் எண்ணினேன், இப்பாடல் கேட்டாவது காந்தி—யார்? அவர் செய்தது என்ன? நாம் அவருக்குச் செய்யும் கைமாறு யாது? என எண்ணிச் சற்றுச் சிந்தனைக்கு வேலை கொடுக்கக் கூடாதா என்று உடனே என் இதயம் இயம்பிற்று, 'நன்றி கெட்டதுகள்,' 'நல்லது உணராததுகள்,' 'நாடு கெடுப்பதுகள்,' 'கேடு கெட்டதுகள்,' 'கூடு விட்டுக் கூடு பாய்பவைகள்' நல்லவர்கட்கு கைமாறு செய்யும்? என்பதுதான். சிந்தனை சிதற நேரமில்லை. 'நன்றி மறந்த நாடு' எனும் இசை என் செவிப்பட்டது. ஆம்! நன்றி மறந்த நாடுதான். எந்த நாடும் நல்லவர்களை, உயர்ந்தவர்களை, உத்தமர்களை, அவர்கள் தம் கொள்கைகளை மறந்ததே கிடையாது. ஆனுல் இந்நாடே நாட்டு மக்களின் நலிவு போக்க நாடோறும் பாடுபடும் மக்கள் தொண்டர்களை முதலிலே போற்றியதோ புகழ்ந்ததோ இடையாது. 'நன்மை செய்யாவிடினும் தீமை செய்யாதே' என்பதற்கிணங்க, போற்றவேண்டாம் தூற்றுமலாவது இருந்தார்களா? இருக்கிறுர்களா?

வெளி நாட்டாருக்கும் நம் நாட்டாருக்கும் உள்ள வேறுபாடு அவர்கள் நல்லவர்களின் பெயரைச் சொல்லி நல்லது செய்பவர்கள். நல்லவர்கள் கொடுத்துச் சென்ற நல்ல பல 'கொள்கைகள் எனும் விதைகளை விதைத்துப் பலன் காண்பவர்கள். நம் பாரத புத்திரர்களோ நல்லவர்களின் பெயரைச் சொல்லி கேடு பல புரிபவர்கள். வாடும் ஏழைகளின் குறைதீர்க்க நாடும் சில நல்லோர்களைச்சாடும் கெடுமதி படைத்தவர்கள். காந்தியின் பெயரைச் சொல்லி 'காந்தியவாதிகள்' எனத் தம்மை தம்பட்டம் அடித்துக்கொண்டு காந்தியின் கருத்திற்கொவ்வாத செயல்களைச் செய்யும் சொல்வீரர்கள். காந்தீயம் எனும் போர்வையில் கள்ளச் செயல் புரியும் சுகபோகிகள் எப்படி காந்தீயத்தைப் பின்பற்ற முடியும்? காந்தியத்தைப் பின்பற்றுகிற தேசியவாதிகளாக இருந்தால் காங்கிரஸ் கலைக்கப்பட்டிருக்க வேண்டும், காந்தியின் எண்ணப்படி. காங்கிரஸ் கலைந்தபாடில்லை, அதில் களை வளருகிறது. காங்கிரஸ் எனும் எழுத்தாணியைக் கொண்டு காந்தியம் எனும் மையிட்டு பாரதம் என்ற புத்தகத்திலே முறையே வறுமை, கொடுமை, சாதித் திமிர், ஏழைக்கிரங்காமை, பசி நீக்காமை, நாடு காவாமை, நலிவு நீக்காமை, கேடு போக்காமை எனப் பல அதிகாரங்களை முன்னுரையாக வைத்து தொடர்கதை தீட்டி வருகின்றனர்.

பாரதியார் விழாவுக்கும் காந்தியாருக்கும் என்ன தொடர்பு, 'பாரதி விழா' பற்றி கூற வந்த நான் காந்தியாரைப் பற்றியும் காந்தீயத்தை மறந்த 'ஜனம்'களைப் பற்றியும் கூறக் காரணம் என்ன எனும் ஐயப்பாடு உங்களிடையே தோன்றக்கூடும். நம் நாடு வெள்ளையரின் அடிமையிலிருந்து விடுபட்டு அடிமை நிலை ஒழிய மூலகாரணமாய் இருந்த காந்தியாரின் கொள்கைகளையே மறந்துவிட்ட பாரத புத்திரர்கள், பாரதியாரின் கொள்கைகளை எங்கு எண்ணிப்பார்க்கப் போகிறுர்கள் என்று கூறவந்த நான் உள்ளக் கொதிப்பிலே வெள்ளமெனக் கொட்டிவிட்டேன். இனிப் பாரதியையும், பாரத புத்திரர்களையும் நோக்குவோம்.

சாதி ஒழியவேண்டும். அறியாமை நீங்கவேண்டும், பெண்

ணடிமை அகலவேண்டும், உள்ளத் திறம் வேண்டும், வலிமை வேண்டும், அடிமைத்தளை அறுபட வேண்டும், பொதுவாகவே பொதுவுடைமை பொலிவு பெறவேண்டும் என எண்ணக் கோட்டைகளை எழுப்பியவர்தான் பாரதி. ஆனால் இன்றுவரை பாரதியின் எண்ணம் எழுத்துருவிலே ஏட்டிலே மட்டும்தான் இருக்கக் காண்கிறோம். காங்கிரஸ்காரர்கள் ஏதோ பாரதியை நாமும் போற்றுவது போலாவது போற்றுவோம் என்பதற்காகத்தான் 'எங்கள் பாரதி' 'எங்கள் பாரதி', என்று வாயளவிலே பேசிவருகிறார்கள். ஆனால் பாரதியாரின் புரட்சிக் கருத்துக்கள் பல காங்கிரஸ்காரர்களையே கலக்குவன. ஆகவேதான் வாய்ச் சொல்லோடு இருக்கிறார்கள். அது கண்டுதான் பாரதியாரே 'வாய்ச் சொல் வீராடி வந்தே மாதரம் என்போர்,' என்று கூறியிருக்கிறாரே! சாதி ஒழியவேண்டும் என்றார். சாதி ஒழிந்தபாடில்லை; வளர்கிறது. தீண்டாமைக்கும், மதுவிலக்கிற்கும் சட்டம் தீட்டியவர்களாலே சாதி ஒழிப்பிற்குச் சட்டம் இயற்றமுடியாத காரணம் என்ன?

'காவிரிக் கரையிலே நடைபெறுகின்ற காரியங்களுக்கு கங்கைக் கரையின் உத்தரவை எதிர்பார்க்கக்கூடியவர்களாக, அடிமைகளாக, ஏவலாளர்களாக ஆட்சி புரிகின்றபோது இவர்களாக என்னதான் செய்ய முடியும்? ஆகவேதான் டில்லியை எதற்கும் எதிர்பார்க்கும் சென்னை சர்க்கார் சாதி ஒழிப்பையோ, இலங்கைத் தமிழர்களின் இன்னல்களைக் களைவதையோ சாதிக்க முடிவதில்லை. தமிழனை அரசுக் கட்டிலில் அமர வேண்டுமென்று ஆசைப்பட்டவர்களிலே பாரதியும் ஒருவர். ஆனால் இன்றோ தமிழ் ஆட்சி மொழியாகிவிட்டது என்று சொல்லளவில் செப்புகின்றது, சர்க்கார். நடைமுறையிலோ இந்தியின் திணிப்பை இதமாகச் செய்கிறது. எங்கு பார்த்தாலும் இந்தி சிரிக்கிறது.

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும்
—அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்ற வள்ளுவனின் வாய்மொழியைக் கல்வி மந்திரியார் அறிந்திருப்பார். ஆனால் மெய்ப்பொருள் காணாத அவர் கூறுகிறார், சென்னைக்குத் தமிழ்நாடு என்று பெயரிட வேண்டுமென்று எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லாதிருந்தால் அதனைச் செய்திருப்போம்' என்று. இதிலிருந்து அவர்கள் புரிவது 'சர்வாதிகார ஆட்சி'—'மக்கள் ஆட்சி' அல்ல என்பது புலனாகிறது. அவர் எதிர்க்கட்சிக்காரர்களை எல்லாம் எதிரிகளாகவும், பகைவர்களாகவும் கொள்கிறார்போலும்! இதுதான் நம்மை நாமே ஆண்டுகொள்ள வேண்டும் என்று பாரதி எண்ணிய எண்ணத்தின் சாயலோ!

வற்றாத உயிர் நதிகள் உண்டு, வளம் தரும் கழனிகள் உண்டு, செல்வம் பெருக வழி உண்டு. இவ்வளவும் நிறைந்த சிங்காரச் சோலையாம் சீர்மிகு செந்தமிழ் நாட்டிலே வாழவழியின்றிச் சொந்த நாடு விட்டு வெந்த மனத்தோடு நொந்து சென்று, காடு திருத்தி நாடு செழிக்க வைத்து இலங்கை மாநகரை இன்பபுரியாக்கிச் செல்வ வளம் கொழிக்கவைத்த பண்புடைத் தமிழர்கள் பதறித் துடிக்கின்றனர். அவர் துயர் துடைப்போர், இன்னல் களைவோர், ஆதரவு தருவோர், அன்புரை பகர்வோர் ஆள்வோரிலே ஒருவரையும் காணோம். நம் போன்றோர் அனுதாபப்படுகிறோம் வேறொன்றும் செய்யமுடியாத நிலையிலே. ஆனால் நம் இலங்கை வாழ் தமிழர் அங்கும் வாழ இடமின்றி துரத்தப்படுகின்றனர், கொடுமைப் படுத்தப்படுகின்றனர். ஆனால் நடு நிலைமையை, பஞ்சசீலத்தை பாருக்கு போதிக்கும் பாரத 'ஜோதி' பகருகின்றார் 'இலங்கை வாழ் தமிழர்கள் நாடற்றவர்கள், அவர்களுக்கு இங்கு இடமில்லை' என்று. நாடாண்ட பரம்பரைதான் இன்று ஓடாண்ட கூட்டத்திற்கு அடிபணிகிறது. 'பண்டிதர்' இதுவும் பகர்வார் இன்னமும் பகர்வார். இதனைப் பாரதியார் கண்டால், கேட்டால் 'மனிதர் நோக மனிதர் பார்க்கும் வாழ்க்கை இனியுண்டோ?' என்ற அடிகளை நீக்கிவிட்டு 'மனிதர் நோக மனிதர் பார்க்கும் வாழ்வும் வாழ்வாமோ?' என்று இணைக்கமாட்டாரா?

பஞ்சம் தலைவிரித்தாடுகிறது, பட்டினிச்சாவு பெருகுகிறது. பண்டிதர் பஞ்சசீலம் பேசுகிறார், பக்தவத்சலம் பகர்கிறார் 'மலையாளத்திற்கு அரிசி அனுப்புவதை நிறுத்த முடியாது' என்று. இங்கு இருக்கின்ற அரிசியோ மூட்டை மூட்டையாக வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகிறது. அதனை காரணமாக அரிசிவிலை உயருகிறது. அரை வயிறு நிரப்பியோரும், 'அது' அற்றுக் கிடக்கின்றனர். பிழைக்கவோ வழியில்லை, வறுமையோ தாங்க முடியவில்லை. அதன் காரணமாக 'பெற்ற பிள்ளையை விற்ற அன்னை' பட்டினிக் கொடுமையால் 'தற்கொலை' எனும் தலைப்புகள் உள்ள செய்திகள் காணாத செய்தித்தாளே கிடையாது. தாயும் சேயும் காயும் வயிற்றோடு பாயும் நதியிலே தாவிக்குதித்து ஆவி பிரிந்தனர், என்ற இவைபோன்ற பரிதாபச் செய்திகளைப் பார்த்தும் இன்றுவரை பாராள்வோர் நாட்டு மக்களின் நலிவு நீக்கினரில்லை. வள்ளுவர் சொன்னார், மக்கள் இரந்து வாழவேண்டும் எனும் நியதியை முதலோன் வகுத்திருந்தால் அம்முதலோன் அலைந்து அழியட்டும் என்று. ஆனால் பஞ்சத்தால் தவிக்கும், பட்டினியால் துடிக்கும் பாரோரின் பரிதாபநிலை மாறப் பாராள்வோர் செய்தது என்ன? இவர்கள் பாரதியைப் பற்றிப் பேச நியாயமென்ன?

ஹாலண்டிலிருந்து வந்திருந்த ஒருவரை ஓர் அமெரிக்கர் "உங்கள் நாட்டுக் கொடி எப்படி இருக்கும்?" என்று கேட்டார்.

"அதில் சிவப்பு, வெள்ளை, நீலம் ஆகிய மூன்று நிறப் பட்டைகள் இருக்கும். எங்கள் நாட்டு வரிகளைக் குறிக்கவே அந்த நிறங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். வரி நோட்டீஸ் வந்தாலும், எங்கள் முகம் சிவந்துவிடும்; வரியைச் செலுத்தத் தொடங்கினால் எங்கள் உடல் வெளுத்துவிடும்; வரி முழுவதையும் செலுத்தி முடித்தோமானால், நாங்கள் செத்துச் சவமாகி நீலம் பாரித்து விடுவோம்" என்றார் விருந்தாளி.

"எங்கள் நாட்டுக் கொடி விஷயமும் இதே கதைதான். ஆனால், அதை நோக்கி அண்ணாந்து நட்சத்திரங்களைப் பார்த்து வாயைப் பிளந்துகொண்டு நிற்கிறோம்" என்றார் அமெரிக்கர்.

—ஜே. எச். பி. எல்.,

'சுதந்திரம்' — ஆம்! யாருக்கு? ஐயம் நமக்கு. காரணம்—வெள்ளையன் ஆண்டான், அவன் வெளிநாட்டான் என்று விரட்டினோம்—இன்று! இவனுக்கு 'அவன்' மேலாகப்படுகிறது. எந்த எந்தக் காரணங்களுக்காக வெள்ளையன் விரட்டப்பட்டானோ அந்தக்காரணங்களெல்லாம் பன்மடங்கு பெருகி வருகிறதே தவிர, குறைந்தபாடில்லை. அப்படியிருக்க இதனை எப்படி 'நமக்குக் கிடைத்த சுதந்திரம்,' என்பது? விடுதலைக்கிளர்ச்சியை விளக்கவந்த பாரதியார் 'எண்ணமெல்லாம் நெய்யாக எம் உயிரினுள் வளர்த்த வண்ண விளக்கு', என்றார். தொடர்ந்து கூறுகிறார் 'ஓராயிர வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர் வாராது போல வந்த மாமணி', என்று. எலும்பை உருக்கி எருவாய் இட்டு வளர்த்த பயிரின் அறுவடைதான் இந்த 'சுதந்திரம்', என்று எண்ணி இறுமாந்து இன்பமுடன் இருக்கவேண்டிய நாம்,'குரங்குகை பூமாலையென ஆயிற்றே நம் சுதந்திரம்', என்று ஏங்கிக்கிடக்கிறோம்.

'எல்லோரும் ஒருதாய் ஈன்ற மக்கள்' 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற பாரதி பகர்ந்தவைகளை மட்டும் வாயளவில் பேசிக்கொண்டிருக்கின்ற பாரதத்தார், ஆதரவு அற்று வந்தவர்களை 'அகதிகள்' என ஏற்ற அரசாங்கத்தார், இன்று இலங்கை வாழ் தமிழர்கள் இன்னல் தாங்காது இதயம் நொந்து இன்பத் தமிழகமாம் தன் சொந்த நாடு நோக்கி வருகின்றபோது 'நீங்கள் நாடற்றவர்கள்' என்று கூறிச் சொந்த நாட்டினையே புறக்கணிப்பது ஏன்? கோயிலில் நடக்கின்ற அட்டகாசங்கள், திரைமறைவுச் செயல்கள் ஐயருக்குத் தெரியாமலா இருக்கும் வந்தேமாதர வரட்டுக் கூச்சல்காரர்களின் செய்கை உணர்ந்ததனாலேதான் பாரதியார்.

சொந்தச் சகோதரர்கள்
துன்பத்திற் சாதல் கண்டும்
சிந்தை இரங்காரடி! கிளியே!
செம்மை மறந்தாரடி!

என்று பகர்ந்தார்.

பொய்யும்
ஏமாற்றும் தொலைகின்ற
காலம் வந்ததே—இனி
நல்லோர் பெரியரென்னும்
காலம் வந்ததே—கெட்ட
நயவஞ்சகக் காரருக்கு
நாசம் வந்ததே

எனும் பாடலில் வந்துள்ள பொய்யும் ஏமாற்றும் தானே தம் தொழில், அதற்கழிவா? நம் அகராதியிலே பெரியோர் என்றால் நல்லவர் என்ற பொருளில்லையே, நயவஞ்சகம்தானே நமக்கு வாழ்வளிப்பது! அதற்கு நாசமா என்றெல்லாம் எண்ணிய காரணத்தாலும்தான் அப்பாடல்களை விலக்கி இருப்பார்கள் என எண்ணத் தோன்றுகிறதல்லவா?

'ஜாதிகளைப் பாரோம்' என்றார் பாரதி. ஆனால் நாட்டிலே சாதி வெறி பல உருவிலே தலைவிரித்தாடுகிறது. அரசியலிலேயும் சாதி புகுத்தப்படுகிறது. தேர்தல் சூதாட்டத்தின்போது சாதியை முன்வைத்து 'நாடார் ஓட்டு நாடாருக்கே' என்றும் 'வன்னியர் ஓட்டு அன்னியருக்கு இல்லை' என்றும் தம் சுயநலத்திற்காகச் சாதியைப் பயன்படுத்தி. 'சான்றோர் பழிக்கும் வினை'களை, சாதி ஒழிய வேண்டுமென்று பகட்டிற்குப் பேசுகின்ற பண்பற்றோர் செய்தனரே, அவர்களைக்கொண்ட அரசாங்கம் எப்படிச் சாதியை ஒழிக்கும் என்று நாம் நம்பமுடியும்?

பாரதி பகர்ந்தன யாவையும் மறந்து, தன்னலம் பேணலே பெரிதெனக் கொண்டு நாட்டினில் நல்லறம் நிலைகெட்டலை மறந்து 'பாரதி விழா'க் கொண்டாடுகிறார்களே!

சிந்தையிற் கள்விரும்பிச்
சிவசிவ வென்பது போல்
வந்தே மாதரமென்பார்!

என்று பாரதி நவின்றுள்ளதை நிலைநாட்ட, நாட்டின் பஞ்சம் நீக்க கொஞ்சமும் வழி காணாது, இஞ்சிற்றும் கவலையற்று இருக்கிறார்களே, அவர்களுக்கு ஒரு சூடு கொடுக்கிறார் பாரதியார்.

தாயைக் கொல்லும் பஞ்சத்தைத்
தடுக்க முயற்சி யுறார்,
வாயைத் திறந்து சும்மா—கிளியே!
வந்தே மாதர மென்பார்.

என்று மனம் வெதும்பிக் கூறுகின்றார். ஐயோ, பாவம்! பாரதியே உள்ளத்தைத் திறந்து காட்டக் கூடிய அளவிற்கு சுயநலத்தையும், சூதுமதியையும், வஞ்சனையையும், கெடுமதியையும் வளர்த்துக்கொண்டு பகட்டான வாழ்வு வாழும் பாரத புத்திரர்களே! தயவுசெய்து பாரதியார் எண்ணிய எண்ணங்களெல்லாம் நிறைவடைகின்ற அளவிற்கு உங்கள் நடை நல் மாற்றம் அடைகின்றவரை பாரதியார் பெயரைக்கூட நாவால் நவிலாதீர்கள். நெஞ்சத்தால் எண்ணாதீர்கள். பாரதி மட்டுமல்ல, நாட்டின் நல்வாழ்விற்கு உழைத்த, உழைக்கின்ற நல்லவர்களின் எண்ணங்கள் நிறைவடைய வேண்டுமென எண்ணுங்கள். வெறும் விழாவிலே மட்டும் இன்பம் காணாதீர்கள், என்று கூறத்தானே தோன்றுகிறது நமக்கு! பாவம்! இந்தத் தேசியக் கூடாரத்தாரை நினைக்கவே "நெஞ்சு பொறுக்குதில்லையே!"

★

நீங்கள் ஏற்கனவே சந்தித்துள்ள பரம ஏழையான அநாதையின் முகத்தை நினைவு படுத்திக்கொள்ளுங்கள். அப்புறம் நீங்கள் செய்ய உத்தேசித்துள்ள காரியத்தால் அவ்வேழைக்கு ஏதாவது நன்மையுண்டா எனச் சிந்தியுங்கள். உங்கள் காரியத்தினால் அந்த அநாதை மீண்டும் தன் வாழ்க்கையையும் விதியையும் நிர்ணயிக்க முடியுமா என யோசித்துப் பாருங்கள், வேறுவிதமாகச் சொல்வதாயின், ஆன்மீகத்தை இழந்து பட்டினியால் தவிக்கும் இலட்சக் கணக்கான நம் நாட்டு மக்களை உங்கள் செயல் மீண்டும் சுய ஆக்கத்திற்குக் கொண்டுவருமா என நினைத்துப் பாருங்கள். அப்போது உங்கள் சந்தேகங்கள் தாமாக அகன்றுவிடும்; சுயநலம் மறைந்துவிடும்.

ஜப்பானில்

பூர்வீகம்:— சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் மத்திய ஆசியாவிலிருந்து மஞ்சள் நிறத்தவர்களும், தெற்குத் தீவுகளிலிருந்து வெள்ளை நிறத்தவர்களும் ஜப்பானில் வந்து குடியேறினர். வரவர இரு நிறத்தவருக்கும் சம்பந்தங்கள் ஏற்பட்டன. இவர்களுக்குப் பிறந்தவர்கள்தான் ஜப்பானியர்கள்.

பழக்க வழக்கங்கள்:— பெண்களைச் சுவீகாரம் செய்துகொள்ளும் வழக்கம் ஜப்பானில் உள்ளது. திருமணமான தம்பதிகளையும் சுவீகாரம் செய்துகொள்வது வழக்கம். சுவீகாரம் செய்யப்பட்டவனுக்குத் தங்கள் பெண்ணை மணமுடிக்கும் பெற்றோர்களும் உண்டு.

குழந்தை பிறந்த ஏழாம் நாளில் பெயரிடுவார்கள். இரட்டைக் குழந்தைகள் பிறக்குமானால் இரண்டாவது பிறந்த குழந்தையே மூத்த பிள்ளையாகும். குழந்தையின் தலையை மொட்டையடித்துவிடுவார்கள். பல் முளைத்ததும் குழந்தைக்கு உணவு ஊட்டுவதற்காகச் சில சடங்குகள் செய்வார்கள். முதல் வருடக் கொண்டாட்டம் சிறப்பாக நடைபெறும்.

நாணயம்:— நூறு 'சென்' கொண்டது ஒரு 'யென்' ஒரு 'யென்' மதிப்பு சுமார் 12-அணா.

திருமணம்:— ஜப்பானியரின் சராசரி வயது 43. (நம்நாட்டு சராசரி வயது 27-என்பதை நினைவில் கொள்க. ஆண்களுக்கு 25-வயதிலும் பெண்களுக்கு 22-வயதிலும் பொதுவாகத் திருமணம் நடைபெறும். தரகர்கள்தான் திருமணத்தை நடத்திவைப்பார்கள்.

ஜப்பான் நாட்டிலுள்ள நல்ல இயல்புகளும், குணங்களும், ஏற்பாடுகளும், வசதிகளும், வாய்ப்புகளும் இந்நாட்டுக்கு உண்டாக-உண்டாக்க இன்னும் எவ்வளவு காலம் பிடிக்குமோ தெரியவில்லை. அங்குள்ள நல்ல முறைகளை எல்லாம் பார்த்து வந்து இங்கும் அப்படிச் செய்யவேண்டுமென்ற விருப்பம் இப்போது அங்கு சென்றிருக்கும் டாக்டர் இராசேந்திரபிரசாத் அவர்களுக்கு உண்டாகி, அந்த விருப்பத்தின் விளைவாக ஏதாவது முயற்சி எடுக்கப்பட்டால், அவர் அங்கு சென்று வந்ததற்கு உண்மையிலேயே நல்ல பலன் உண்டாகும். செய்வாரா? முயற்சியாவது எடுத்துக்கொள்வாரா? அல்லது உலகமெல்லாம் சுற்றி வந்தாலும் இங்குள்ள பரிதாபத்திற்குரிய நிலைமைகளில் ஒன்றையும் துளியும் மாற்ற மாட்டோம் என்ற போக்கில் நடந்துகொள்வாரா? பொறுத்திருந்து பார்ப்போம்.

இரா. இளந்தென்றல்

தற்பொழுது கல்யாணம் ஆவதற்கு முன்னதாகவே ஆணும் பெண்ணும் சந்தித்து விருப்பமறிந்தபிறகு திருமணம் புரிகின்றனர். திருமணச் சடங்குகள் மிகச் சொற்பம். மிகச் சுருங்கிய செலவில் திருமணம் முடியும்.

கல்வி:— 100-க்கு 99-57-பேர் படித்தவர்கள். செவிடர்களும் குருடர்களும் கூடப் படித்தவர்கள். குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாத பெற்றோர்கள் தண்டிக்கப்படுவர். சீன எழுத்துக்கள்தான் ஜப்பான் மொழியின் உயிர். இங்கு 6-முதல் 14-வயதுவரை படிக்கும் பருவம். குறைந்தது ஆறுவருடகாலம் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் படிக்கவேண்டும். ஆரம்பப் பள்ளியில் மாணவர்களும் மாணவிகளும் கலந்து படிக்கின்றனர். மாணவர்கள் ஒரேமாதிரி உடையணிகின்றனர். மாணவிகளும் அப்படியே. ஆடைகள் எளிமையானவை. மாணவர்களின் சம்பளம் மாதமொன்றுக்கு சுமார் இரண்டரையணாதான்.

குணம்:— ஜப்பானியர் நாணயமுள்ளவர்கள், பண விஷயத்தில் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். தந்தையும் மகனுமாயிருந்தபோதிலும், பண விஷயத்தில் சிறிது கடுமையாகவே நடந்துகொள்வார்கள். திருடுதல் மிகச் சொற்பம். இப்பொழுதுகூட நகரங்களில் சில வீடுகளுக்கும் கிராமங்களில் பல வீடுகளுக்கும் பூட்டு, தாழ்ப்பாள் கிடையாது. ஜபபானியரின் வியாபார நாணயம் போற்றப்படுகிறது.

வீதியிற் செல்லுகின்ற ஒரு ஜப்பானியனைப் பார்த்து ஒரு இடத்திற்கு வழி கேட்டால் உடனே அவன் ஒரு காகிதத்தை எடுத்து 'பிளான்' போட்டு நாம் போகவேண்டிய இடத்தைக் குறிப்பான். அது நமக்கு விளங்காவிட்டால் கை, கால் முதலியவைகளைக் காட்டி சைகை காட்டுவான். அதுவும் பயனில்லையானால் நம்முடன் கூடவந்து உதவி செய்வான். (நமக்கும் அவர்களுக்குமுள்ள பண்பைக் கவனியுங்கள்.)

உணவு:— சோறும், மீனும் முக்கிய ஆகாரம், பார்லியையும் உபயோகபபடுத்துகின்றனர். சர்க்கரை வள்ளிக்கிழங்கு மிகமலிவு. பழவகைகளைச் சிலர்தான விரும்புகின்றனர். பல பிரச்னைகளை மகிழ்ச்சியோடு உரையாடிக்கொண்டு உணவருந்துவது வழக்கம். உணவுக்குப்பின் பழங்கள். இவைகளையும் கையால் எடுத்துச் சாப்பிடுவதில்லை. சிறு குச்சிதான் கருவி.

ஆடையணிகள்:— முதன் முதலாக இவர்கள் மேல் நாட்டுடையை அணிந்த சமயத்தில் அரசாங்கத்தார் ஒவ்வொரு முக்கிய இடங்களிலும் அதிகாரிகளை நியமித்து ஆடையணியும்முறையைக் கற்பித்தனர். ஆண்கள அன்னிய நாட்டு உடைகளையே உடுத்துகின்றனர். அவை எப்போதும் சுத்தமாகவே இருக்கும். பெணகளுக்கு நகைப் பைத்தியம் அறவே கிடையாது.

பொழுதுபோக்கு சாதனங்கள்:— இங்கு நான்கு அல்லது ஐந்து "யென்"னுக்குக்கூட (சுமார் ரூ. 3½) ஒரு கிராமபோன் பெட்டி வாங்கலாம். பள்ளி மாணவர்களுக்கென பதினாயிரக் கணக்கான இசைத் தட்டுகள் வெளிவருகின்றன. இவைகளின் விலை சாதாரணமாக நான்கணாவாகும். ஒரு திங்களில் வானொலியை உபயோகிக்க கட்டணம் ஆறணாத்தான். வானொலிகளின் விலையும் சொற்பம். உள்நாட்டில் ஒரு அஞ்சலட்டைக்கு ஒன்றரை சென் தபால் தலையும், ஒரு அஞ்சல் உறைக்கு மூன்று சென் தபால் தலையும் கட்டணமாகும். (2 சென் காலணா) ஜபபான் மொழியில் ஒரு வார்த்தை தந்திக்கு இரண்டு சென்.

நாம் டெலிபோனில் "ஹலோ" என்று கூப்பிடுவதுபோல் அவர்கள் "மோஷி, மோஷி" என்று கூப்பிடுகின்றனர்.

மின்சாரம்:— உலகில் அதிக மின்சாரம் உபயோகிக்கும் நாடுகளில் ஜப்பானும் ஒன்று. சமைப்பதற்கு விறகையோ அன்றிக் கரியையோ உபயோகிப்பதில்லை. Gas உதவி கொண்டே ஏழை பணக்காரர் அனைவரும் சமையல் செய்கின்றனர். வியாபாரிகள் விளம்பரங்கட்கு மின்சாரத்தை அதிகம் உபயோகிக்கின்றனர்.

தீப்பெட்டிகள்:— தீப்பெட்டிகள் இங்கு ஏராளம். யாரும் இதை விலை கொடுத்து வாங்குவதில்லை. சாதாரணமாகக் கடைத்தெருவிற்குச் சென்று திரும்பினால் ஐந்தாறு தீப்பெட்டிகளுடன் வீடுவந்து சேரலாம். ஜப்பானில் துண்டுப்பிரசுரங்களுக்குப் பதில் தீப்பெட்டிகளைத் தருகின்றனர். பெட்டியின் மேலுள்ள காகிதத்தில் வியாபாரிகள் பெயர்கள் பொறிக்கப்பட்டிருக்கும்.

போலீஸ்:— வீதிகள் சந்திக்குமிடங்களிலே, டிராம், பஸ் முதலியவைகளை நிறுத்திவிட்டு கிழவிகளையும், குழந்தைகளையும் போலீசார் கையைப்பிடித்துச் செல்லும் காட்சியைக் காணலாம்.

பத்திரிகைகள்:— ஜப்பானிலுள்ள தினசரிகள் தினமொன்றுக்கு இரண்டுகோடிபிரதிகள் வெளியிடுகின்றன.

குருடர்களுக்காக "பிரைலி மைனிச்சி" என்ற வாரப்பத்திரிகை நடக்கிறது. இதன் ஆசிரியர் நாகமூரா ஒரு குருடர். தடவிப்படிக்கத் தகுந்த முறையில் இது அச்சிடப்படுகிறது. இது அச்சிடும் இயந்திரங்கள் விலையுயர்ந்தவை. இதன் விலை ஒன்றேகால் அணா.

"மைனிச்சி" பத்திரிகை தினசரி எட்டு முறை வெளியிடப்படுகின்றன. இதில் ஒரு பக்கம் முழுவதும் படங்கள். தினந்தோறும் 200 முழுப் பிளேட்டுகளில், பிளாக்குகள் செய்யப்படுகின்றன, இக்காரியாலத்தார் தங்கள் பத்திரிகை வசதிக்கெனப் பதினொரு விமானங்கள் வைத்துள்ளனர். செய்திகளை விரைவில் கொண்டு வரவும், பத்திரிகைகளை விரைவில் சேர்ப்பிக்கவும் இவை உபயோகமாகின்றன.

சாதாரணமாக, ஒரு ஜப்பானிய தினசரியின் விலை காலரைத் தம்பிடி. மாதச் சந்தா ஒன்பது அல்லது பத்து அணாவுக்குள் ஆகும்.

பத்திரிகைக்காரர்கள், தங்கள் தினப் பத்திரிகையைப் பக்கம் பக்கமாகக் கண்ணாடிபோட்டுத் தெருவில் மாட்டிவிடுவார்கள். பணம் கொடுத்துப் பத்திரிகை வாங்க முடியாத ஏழைகளும், செய்திகளை விரைவில் தெரிந்து கொள்ள விரும்புபவர்களும், கூட்டமாகக் கூடி நின்று இவைகளைப் படிப்பர். ஜப்பானியர் ஒருவர் பத்திரிகையை மற்றொருவர் பார்க்கவும் மாட்டார்கள்; படிக்கவு மாட்டார்கள். பத்திரிகையை இரவல் வாங்குவது கேவலம் என்று கருதுகிறார்கள். இரயில்களில் செல்வோர், விட்டு செல்லும் பத்திரிகைகளை யாரும் எடுக்கவோ படிக்கவோ மாட்டார்கள்.

★

அமெரிக்காவில் ஒரு தியேட்டரில், வயதான ஓர் அம்மாள் ஒரு நாள் நாடகம் பார்க்கப் போயிருந்தாள். அவளுக்கு அடுத்த ஆசனத்தில் ஐன்ஸ்டீன் என்ற பிரபல விஞ்ஞானியும் இன்னொரு பிரமுகரும் உட்கார்ந்திருப்பதைக் கவனித்ததும் அவளுக்கு வெகு மகிழ்ச்சி.

இடைவேளை மணி அடித்த போது விஞ்ஞானிகள் எழுந்து வெளியே போகவில்லை. அந்த அம்மாளும் அங்கேயே உட்கார்ந்திருந்தாள். இரண்டு விஞ்ஞானிகளும் ஒருவரோடு ஒருவர் ஏதோ மெதுவாகப் பேசிக் கொண்டார்கள். பிறகு ஒருவரின் பின்புறம் 'ஐன்ஸ்டீன்' ஏதோ குறித்து மற்றவரிடம் காட்டினார். அவர் அதைப் பார்த்துவிட்டு இன்னும் எதையோ அதில் குறித்து ஐன்ஸ்டீனிடம் கொடுத்தார். 'ஏதோ புதிய விஞ்ஞான அற்புதத்தைத்தான் இவர்கள் கண்டுபிடித்து இருக்கிறார்கள். அது என்ன என்று பார்க்கலாம்' என்று அந்த அம்மாளுக்கு ஆவல். அவள் நெருங்கி வந்து கவனித்தாள்.

வேறொன்றுமில்லை; இரண்டு விஞ்ஞானிகளும் மாறி மாறி 'டிக்-டா-டோ' என்ற கோட்டு விளையாட்டு ஆடிக்கொண்டு இருந்தார்கள்.

—டிகபென் மிக்கேல்.

அந்தக் கடிதம்!

ச. இராமலிங்கம்

நான் செய்வது குற்றம்தான்—சாதாரண குற்றமல்ல—மாபெரும் குற்றம் — மன்னிக்க முடியாத குற்றம் — மறுக்க முடியாத குற்றம். நான் இதை உணராதவன் அல்ல — அறியாதவனும் அல்ல — தெரிந்தும்தான் செய்தேன் இந்தக் குற்றத்தை.

இந்தக் குற்றத்திற்குத் தூண்டுகோல் என் மனிதத் தன்மையே தான்—என் மனச்சான்றே "அது குற்றம்; செய்யாதே!" என்று முதலில் தடுத்தது. ஆனால் அன்று காலை நடந்த சம்பவங்களை அடுக்கடுக்காகப் பார்த்து ஆராய்ந்த பிறகு, என் உள்ளம் "பரவாயில்லை அதைச் செய்யலாம்" என்று சொல்வதுபோல் இருந்தது;

குற்றம் செய்து பழக்கம் இல்லாதவன் அதனைச் செய்ய ஆரம்பித்தால் முதலில் கைகள் நடுங்கும்—உடலெல்லாம் வியர்க்கும்—கண்கள் இருளக்கூட ஆரம்பிக்கும்— இப்படித்தான் நான் படித்திருக்கிறேன்.

அதே நிலையில்தான் என் உடலெல்லாம் வியர்த்தது. லாந்தர் விளக்கின் மங்கிய ஒளியில், அந்தக் கடிதத்தைப் பிரித்துக்கொண்டிருந்தபோது என் கைகள் ஏனோ நடுங்கத்தான் செய்தது. சாதாரண ஒரு கவர்தான்—இருப்பினும் அது மாற்றாருக்கு வந்த கடிதம் — அதைத்தான் பிரித்துக்கொண்டிருந்தேன்.

மாற்றாருக்கு வந்த கடிதத்தைப் பிரிக்க நான் யார்? அதிகாரம் ஏது?

•

நான் ஒரு தபால்காரன், கடிதங்களை அவரவர்களுக்குக் கொடுக்க வேண்டியதுதான் என் தொழிலே தவிர, பிரிக்கவும் கூடாது--படிக்கவும் கூடாது. அது என் தொழிலுமல்ல—முறையும் அல்ல.

இருப்பினும் நான் அந்தக் கவரைப் பிரித்துக்கொண்டிருந்தேன். காரணம்! அன்று காலை நடந்த சம்பவங்கள் தான்.

வழக்கம்போல் தபால்களை ஒவ்வொரு வீடாகக் கொடுத்துக்கொண்டு வரும்போது ஒருகவர்—அதைக்கொடுக்க "அகிலாண்டம்மாள்" என்று அழைத்தேன். அந்த அம்மாளும் ஓடி வந்தார்கள், தன் உடலைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு.

அம்மா இந்தக் கடிதத்திற்கு ஓரணா 'டியூ' கொடுக்கவேண்டும் என்று சொல்லி அந்த அம்மாளிடம் கொடுத்தேன்.

அந்த அம்மாள் அதை வாங்கி கையெழுத்தைப் பார்த்துவிட்டு; "அந்தச் சிறுக்கி எழுதின கடிதத்தை ஓரணாக்கொடுத்து வாங்குவதா! அவளுக்கு என்ன வேலை — ஏதாவது உளறிக்கொட்டிக்கொள்வாள் எனக்கு வேண்டாமப்பா இந்தக் கடிதம்" என்று திருப்பிக் கொடுத்துவிட்டார்கள்.

நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன், திருப்பிக்கொடுக்கக் கூடாதென்று. தபால் அதிகாரிக்கு இதைத் தெரிவிப்பதாகவும் மிரட்டினேன். ஒன்றும் பலன் இல்லை; நான் சொன்னதைப் புரிந்துகொண்ட அந்த அம்மாள் திடீரென்று,

"ஐயோ! இந்தக் கடுதாசி யாரிடமிருந்து வந்ததென்றே எனக்குத் தெரியவில்லை; நான் எப்படிவாங்குவது" என்று கத்த ஆரம்பித்துவிட்டார்கள்.

என் நிலை மிக மோசமாகிவிட்டது. கூட்டமும் கூடிவிட்டது. "சரி இதில் ஏதோ இருக்கிறது" என்கிற எண்ணத்துடன் என் வேலையைத் தொடர்ந்து செய்ய ஆரம்பித்தேன்.

ஆனால் வழியெல்லாம் அந்த அம்மாள் தன் பேச்சில் கசப்போடு ஒரு பெண்ணைப்பற்றிப் பேசியது நினைவுக்கு வந்தது. ஒரு சமயம் அந்தப் பெண்ணிடமிருந்துதான் இந்தக் கடிதம் வந்திருக்குமோ என்று நினைத்தேன்—எனக்கு ஏனோ உடனே பச்சாதாபம் ஏற்பட்டுவிட்டது அந்தப் பெண்ணின்மேல்

"சரி இதற்குக் கொடுக்கவேண்டிய 'டியூ'வை கொடுத்து நாமே பிரித்துப பார்க்கலாம். ஏதாவது இக்கட்டான நிலையில் இருந்தால் உதவி செய்யலாம்" என்ற எண்ணத்தோடு, வேலைகளை எல்லாம் முடித்துவிட்டு வீடு திரும்பினேன்.

*

அந்தக் கவரைத்தான் இப்போது பிரித்தேன். உள்ளிருந்தது ஒரு கடிதம். ஒரு பெண் எழுதிய கடிதமாயிற்றே, எழுத்துக்கள் முத்து முத்தாக இருக்கும் என்று நினைத்தேன் — கடிதத்தைப் பிரித்தேன்--நொறுங்கிய முத்துக்கள் அலங்கோலமாக இருப்பதுபோல் இருந்தது:—

எந்த விலாசத்திலிருந்து வந்தது என்று பார்த்தேன்.

4, கடுத்தெரு, காஞ்சிபுரம் என்று இருந்தது. "அன்புள்ள சிற்றன்னைக்கு" என்று ஆரம்பித்து கடைசியில் "ஆசை மகள் தங்கம்" என்று முடித்திருந்தது.

தங்கம் — அவள் பத்தரை மாற்றுத் தங்கமா — அவள் அங்கம் தங்கமா—அவள் உள்ளம் தங்கமா இப்படியெல்லாம் என் மனம் தங்கத்தைச் சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருந்தது, கடிதத்தைக் கூடப் படிக்காமல்.

முதலில் வேகமாகப் படிக்க ஆரம்பித்த நான் போகப்போகத் தயங்கித் தயங்கிப் படித்தேன். படிக்கும்போது என் கண்களுக்குக் கண்ணீர் திரையிட்டது — மெதுவாக கசக்கிய கண்களுடன் படிக்க ஆரம்பித்த நான் போகப்போக துக்கமேலீட்டால் உரக்கப் படிக்க ஆரம்பித்தேன். என் குரல் தழுதழுத்தது. படித்துக்கொண்டே வந்த என்னால் திடீரென்று உணர்ச்சியை கட்டுப்படுத்த முடியவில்லை-"ஐயோ அம்மா இவ்வளவு கொடுமையா" என்று அலறிவிட்டேன்.

வெளியில் படுத்துக்கொண்டிருந்த என் தாய் அலறிக் கட்டிக்கொண்டு என்னிடம் ஓடி வந்து "என்னடா முத்து ஏதாவது தேள் கொட்டிவிட்டதா" என்றாள்.

"ஒரு தேள் இல்லை அம்மா ஓராயிரம் தேள்கள் — என் உடலைக் கொட்டவில்லை அம்மா, என் உள்ளத்தை" என்று சொல்லவேண்டும் போல் இருந்தது. இருந்தாலும் காலை எல்லாவற்றையும் விவரமாகச் சொல்வதாக தாயை அனுப்பிவிட்டேன்.

இரவெல்லாம் எனக்குத் தூக்கமே வரவில்லை. தூங்க நினைக்கும்போது "எதிரே ஒரு அபலை தற்கொலை செய்துகொள்ள ஆற்றோரம் ஓடுவதுபோல் இருந்தது." என் உள்ளம் குமுறிற்று, உடலெல்லாம் கொதித்தது. என்னால் பொறுக்க முடியவில்லை—புரண்டு புரண்டுப் படுத்தேன்—தூக்கமே வரவில்லை.

விலை கொடுத்து வினையை வாங்குவதுபோல்—நான் ஏன் அந்தக் கடிதத்தைப் படித்தேன் என்றாகிவிட்டது? படித்த நான் சும்மாவாவது இருந்திருக்கலாம் முடியவில்லை. அந்த மனிதத் தன்மை ஏனோ என்னை விடவில்லை. —ஆசை மகள் தங்கம் — இல்லை அந்த அப்பாவி மகள் தங்கத்தைப்பற்றி எண்ணியபடியே யிருந்தது.

நான் எப்பொழுது தூங்கினேனோ எனக்கே தெரியாது. வழக்கத்திற்கு மாறாக, சிறிது நேரம் கழித்து எழுந்தேன் என்று அப்போதுதான் தெரிந்தது.

காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, சாப்பிட உட்கார்ந்தபோது, என் தாய் "ஏண்டா அப்படி இராத்திரி சத்தம் போட்டே — ஏதாவது மோகினி அறைச்சுட்டதா" என்றாள். எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. பதிலுக்குக் கிண்டலாக "ஆமாம்மா, மோகினி அறையலே அம்மா! எனக்குக் கடுதாசி எழுதியிருக்கிறது" என்று சொன்னேன்.

"என்ன மோகினி கடுதாசி எழுதியிருக்குதா — என்னடா உளறுகிறாய்" என்று தாய் கேட்டார்கள்.

தங்கம் அந்தக் கடிதத்தில் கொட்டி இருந்த துயரங்களும், என் வாலிப உணர்ச்சியின் நப்பாசையும் ஒன்று சேர்ந்து என் அவளை மணந்துகொள்ளக் கூடாது என்று தோன்றிற்று.

உடனே என் தாயிடம் "உன் மருமகள் எழுதிய கடிதம் அம்மா. அவள் இங்கு சீக்கிரம்வர ஆசைப் படுகிறாள்" என்றேன். அவளுக்குத்தான் என்ன ஆசை. என்னைவிட என் தாய்க்குத்தான் பன்மடங்கு ஆசை, "ஏண்டா இவ்வளவு நாளா என்னிடம் சொல்லவில்லை—காலா காலத்திலே கல்யாணம் பண்ணாதது என் குத்தம் தாண்டா—உன அப்பா மாத்திரம் இருந்திருந்தா..." என்று கண் கசக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

நான் உடனே அவளைச் சமாதானப் படுத்தி "சீக்கிரம் வந்திடுவாள் உன் மருமகள்" என்று சொல்லி அனுப்பிவிட்டு நானும் சாப்பிட்டு எழுந்துவிட்டேன்.

என் உள்ளத்தில் நான் ஏதோ, யாரோ இதுவரை செய்யாத ஒன்றைச் சமூகத்தின் நன்மைக்காக செய்வதுபோல் தோன்றிற்று. துயரத்தில் உழன்று கஷ்டப்படும் ஒரு அபலையைக் காப்பாற்றுவதாக எண்ணினேன். ஆனால் என மனம் ஏனோ அப்போது எண்ணவில்லை, எப்படி முன்பின் தெரியாத ஒரு பெண்ணுக்கு உதவி செய்வது என்று.

அவளுக்கு, நான் வந்து அழைத்துச் செல்வதாக கடிதம் எழுதலாம் என்று நினைத்தேன். அப்போதுதான எனக்குத் தோன்றியது! அவள் யார்! நான் யார்!

அவளோ இளம் பெண்ணாக இருப்பாள் என்று தெரிகிறது! அவளைக் காப்பாற்ற நான் யார்! என்ன முறை! இப்படிக் கேள்விமேல் கேள்வி என் உள்ளத்திலிருந்து எழுந்தது. எல்லாவற்றிற்கும் பதிலளிப்பதுபோல் "அவள் காப்பாற்றப்படாவிட்டால் கட்டாயம் தற்கொலை செய்துகொள்வாள்" என்று யாரோ சொல்வதுபோல் இருந்தது.

ஐயோ! தற்கொலை! ஐயகோ! மாற்றாந்தாயின கொடுமை இப்படியா தலைவிரித்தாடவேண்டும்! சமூகத்தில் கேட்க ஆளில்லையா! சிற்றன்னை சிரித்துக் காலங்கழித்துக்கொண்டிருக்க, அவள் மகள், சக்களத்தி மகள், ஒரு வீட்டில் வேலைக்காரியாய், கழுதைபோல் கஷ்டப்படவேண்டுமா! இது கூடப் பரவாயில்லையே! ஆனால் அந்தச் செய்கை! இன்னும் பத்துநாட்களில் அந்த வீட்டுக்காரனின் மகன், கல்லூரி மாணவன் வந்தால் இவள் கற்பு சூறையாடப் படுமாமே!

ஐயோ! பொறுக்க முடியவில்லையே! உள்ளம் குமுறுகிறதே! மாற்றாந்தாயின் கொடுமைக்கு ஆளாக வேண்டாம் என்று நினைத்து அங்குபோனால் கற்பைச் சூறையாடும் காமுகன்! பாம்புக்கு பயந்து ஓடிப் புலியின் வாயில் சிக்கினதுபோல் அல்லவா இருக்கிறது தங்கத்தின் கதி!

இதையெல்லாம் மறுபடியும் மறுபடியும் சிந்தித்தேன். எப்படியோ ஒரு கடிதம் எழுதிவிட்டேன். நான்கு நாட்களில் வந்து அழைத்துப்போவதாக, அவள் மாற்றாந்தாய் சொல்லி ஒரு வாலிபன் எழுதுவதுபோல் எழுதினேன். கைகள் நடுங்கத்தான் செய்தது. ஏனெனில் இது நான் செய்யும அடுத்த குற்றம். கடிதத்தையும் அஞ்சலில் போட்டுவிட்டேன்.

அடுத்த மூன்று நாட்கள் கழிவது எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. எனக்கு வேலையிலேயே கவனம் ஓடவில்லை. நினைக்கும் போதெல்லாம் "தங்கம் தங்கம்" என்ற நினைவுதான் வரும். அவளை இதுவரை கண்டிராவிட்டாலும் ஏதோ ஒரு பாசம் என்னை அவளிடம் ஈர்த்தது. நானும் அவளைக் காணும் நாளை எதிர்பார்த்திருந்தேன்.

[அடுத்த இதழில் முடியும்]

பெருமாட்டி வழங்கிய ‘பிரசாதம்’!

o—o—o—o—o—o—o—o—[அரங்கண்ணல்]—o—o—o—o—o—o—o

கொடுமுடி கோகிலம் கே. பி. சுந்தராம்பாள் அவர்கள், சென்ற கிழமை சென்னை மேல்சபைக்குள் போய் அமர்ந்தார்கள்.

நாடக மேடையிலும் இசை அரங்குகளிலும் கானரசம் பொழியும் அவர்களைச்சபை அகமகிழ்ச்சியுடன் வரவேற்றிருக்கிறது.

பெருமாட்டியாருக்கு வழங்கப்பட்ட 'கவுரவம்' பெருமைக்குரிய ஒன்றாகும்! இசைத் துறையில் மட்டுமின்றி, விடுதலைப் போராட்டத்தின் போதும் தன்னாலான உதவியைச் செய்தவர், அவர்!!

உருக்மணி அருண்டேல் என்பாரை டில்லிக்கு நியமித்தபோதே நாம் எண்ணினோம், அந்த இடத்தைப் பெறவேண்டிய அம்மை சுந்தராம்பாள் என்று. மார்வாருக்கோ பட்டமளிப்பும் பரிசளிப்பும் வழங்கும் டில்லி, 'பண்டித மோதிலால் நேரைப் பறிகொடுத்தோமே' என்றும், 'சிறைச்சாலை என்ன செய்யும்?' என்றும் தனது வெங்கலக் குரலில் தமிழிசை முழக்கிய இத்தங்கத்தை மறந்துவிட்டதே என்று, சோகமும் அடைந்ததுண்டு நாம்.

விடுதலைப் போராட்ட காலத்தில், நாடகமாடிகள், இசைக் கவிஞர்கள் எந்தளவுக்குப் பயன்பட்டனர் என்பது 'பழைய' தேசியவாதிகளுக்குத் தெரியும். ஆச்சாரியார், சத்தியமூர்த்தி, திரு. வி. க., வ. உ. சி. போன்றவர்களையே மறந்துவிட்ட டில்லிக்கு இவர்களைப்பற்றி எங்கே நினைவுவரப் போகிறது!!

டில்லி தவறியதை, சென்னை செய்து, பழியைத் துடைத்துக்கொள்ள முயற்சித்திருக்கிறது. அம்மையார் அவர்கள், மேல்சபை உறுப்பினராகப் போய் உட்கார்ந்திருக்கிறார்கள் — கொஞ்சநேரம் கழித்து தாழ்வாரத்தில் வந்து உட்கார்ந்திருக்கிறார்கள்.

* * *

"வாங்கம்மா, வாங்க!"

"நீங்கள் எல்லாம் இங்கே வருவது, எங்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது"

"அம்மா, நீங்கள் பாடும்போது' தமிழ் புது உயிர் பெறுகிறது. பூரித்துப்போகிறோம், நாங்கள்"

"எம்மா! இசைக்கலை, இலைமறை காயாக ஆகிக்கொண்டு வருகிறது. இத்துறையில் சர்க்கார் கவனம் செலுத்தவேண்டும். ஆவனசெய்ய நீங்கள் தவறக்கூடாது"

"நாதசுர இசையினை நத்துவாரில்லை—குழலைக் கொஞ்சுவோர் கொஞ்சமாகி வருகிறார்கள்..."

"தமிழிசைக்கு இடமில்லை, வானொலியில். தங்களைப் போன்றோரின் குரலைக் கேட்கும் வாய்ப்பே, கிடைப்பதில்லை."

"அம்மா! அழகிய வானொலி என்கிற பெயரை 'ஆகாஷ் வாணி' என்றாக்கிவிட்ட அக்கிரமத்தை அவசியம் சபையில் எடுத்துக் கண்டிக்கவேண்டும்..."

* * *

தாழ்வாரத்திலமர்ந்த தமிழ்ச் செல்வியைச் சந்திக்க, சட்டசபைச் சிப்பந்திகள் ஆர்வத்தோடு வந்திருக்கிறார்கள்.

அம்மையாரை அவர்கள் சந்தித்தபோது இப்படிப் பேசாவிடினும், சந்தித்த ஒவ்வொருவர் உள்ளத்திலும் இதுபோன்ற எண்ணங்களே, மின்னிக்கொண்டிருந்திருக்க வேண்டும்.

அரசியலைவிட இசைக்கலையில் தேர்ந்த பெருமாட்டியன்றோ? அதனால், தன்னை வளர்த்த தமிழுக்கு, தான் பாடுபட்ட காங்கிரசிடம் வாதாடி நன்மைகள் பெற்றுத்தரவேண்டும் என்று சிப்பந்திகள் எதிர்பார்ப்பதில் தவறில்லை.

சட்டசபைச் சிப்பந்திகள் ஒருவேளை, தங்களுக்குள்ள பிரச்னைகளால், இவைபற்றி எண்ணாவிடினும், அம்மையாரிடமிருந்து மக்கள் மன்றம், இந்தச்சேவையை நிச்சயம் எதிர்பார்க்கிறது.

சட்டசபையும் ஜனநாயகமும் அரும்பாத காலத்துக்குச் சென்றோமானால், அம்மையார் போன்றோர் மக்களின் தூதர்கள் என்கிற மதிப்பினைப் பெற்றிருக்க மாட்டார்கள்.

ராஜாதிராஜ ராஜ மார்த்தாண்டர்கள் காலமெனின், அம்மையாருக்கு அழைப்புவரும். போய் ஆலாபனமும் அவாரோகணமும் செய்துவிட்டு, வாங்கிய பரிசினைப் பெற்றுக்கொண்டு, வரலாம். இது மக்களாட்சிக்காலம்! செங்கோலுக்குப் பதில் 'மக்களின் ஓட்டுகள்' ஆட்சி நடத்துகின்ற காலம்!!

"மக்கள்தானே! கேட்டால் வரி கொடுக்கவேண்டியது அவர்கள் கடமை. கூப்பிட்டால், ஆயுதங்களைத் தீட்டிக்கொண்டு, யுத்தத்துக்கு வரவேண்டியது அவர்கள் கடமை. நாடாளும் மன்னனை எனக்காகப் பாடுபடவேண்டும்; என் தலையைக் காப்பாற்றுவதற்காகத் தங்கள் தலைகளைப் பலி கொடுக்கவேண்டும்" என்று மன்னர்கள் எண்ணிக்கிடந்த, காலம் ஒன்றிருந்தது. புழுக்களாய், பூச்சிகளாய், மக்கள் கருதப்பட்டுக் கிடந்த காலம் அது. அந்தக் காலமல்ல, இப்போது இருப்பது! இது மக்கள் காலம்!!

"யாரில்லை என்றீர்கள்? மக்கள் காலம் மலர வேண்டுமென்பதற்குத்தானே வெள்ளையனை விரட்டியடித்தோம். நாட்டுக்குச் சுயராஜ்யம் தேடிக்கொடுத்தோம். எல்லோருக்கும் ஓட்டுரிமை பெற்றுக் கொடுத்தது, எங்கள் காங்கிரஸ் தானே" என்று தேசியத் தோழர் பெருமிதத்துடன் சொல்லலாம். பலர் அதுபோல மேடைகளில் இன்னும் பேசத்தான் செய்கிறார்கள்.

வெள்ளையனை விரட்ட, காங்கிரஸ் பாடுபட்டது, உண்மை. ஆனால் மக்கள் சமூகத்துக்கு ஓட்டுரிமை கிடைத்தது தங்களால்தான் என்கிறார்களே, அது முற்றும் உண்மையல்ல.

காங்கிரஸ் கட்சியின்றி, வேறெந்தக் கட்சி வந்திருந்தாலும், மக்களுக்கு ஓட்டுரிமை தந்திருக்கத்தான் வேண்டும். ஏனெனில் இந்த நூற்றாண்டில், எந்த நாட்டில் 'ஜனநாயகம்' இருப்பதாகச் சொல்கிறோமோ, அந்த நாட்டையும் அந்த நாட்டையாளும் சர்க்காரையும்தான் உலகம் மதிக்கும். தனிமனிதராட்சி நடைபெறுவதாகச் சொல்லப்படுகிற ரஷியாவானாலும், மனித உழைப்பை மதிக்காதது எனக்குற்றம் சாட்டப்படுகிற அமெரிக்காவானாலும், இரண்டிலும் சேராத இரண்டுங்கெட்டான் நாடுகளானாலும், தாங்கள் ஜனநாயகத்தோடு நடக்கிறோம் என்று சொல்லுவதிலும், அது உண்மை என்று பிற நாடுகளை ஒத்துக்கொள்ளச் செய்வதிலும் பேரார்வம் கொண்டிருப்பதை அறிவோம் நாம்.

மக்களுக்கு ஓட்டுரிமை அளித்து அந்த ஓட்டுகளைப் பெரும்பான்மையாகப் பெற்று வந்த அரசுக்குத்தான், இந்தக் காலத்தில் மதிப்பும் மவுசும் இருக்கிறது. ஒவ்வொரு நாடுகளும் மதிக்கின்றன.

இப்படிப் பொன்னெனப் போற்றப்படும் ஜனநாயகமுறை, காங்கிரசு ஆட்சிக்கு வருமுன்னரே மலர்ந்துவிட்டது. மணிமுடிகளிடமிருந்து மக்கள் கரங்களுக்கு 'பிடி' வர நடைபெற்ற போராட்டம் பெரிது' இங்கிலாந்தின் சரித்திரத்தைப் படித்தவர்களுக்குத் தெரியும், இந்த உரிமையினைப் பெற அந்த நாட்டு மக்கள் எத்தனை ஆண்டுக்காலம் வேதனை நிரம்பிய போராட்டங்களை நடத்த வேண்டி இருந்தது என்பது.

காட்டுத்தர்பார் நடத்தியவனுக்கு கடிவாளம் பூட்டப்பட்டது. சிம்மாசனம் என்னுடையதல்ல, மக்கள் தலைவனுடையது என்கிற புதுயுகம் பூத்தது. ஒருவனின் தேவைக்கே ஒரு தேசம் உண்டென்றால், அத்தேசம் ஒழிதல் நன்று என்று கவிவாணர்கள் பாடலாயினர். கலைக்கூடங்களிலே ஜனநாயக தத்துவங்கள் போற்றப்படலாயின,

கூனன் நிமிர்ந்தான்! ஏழை ஏறெடுத்துப்பார்த்தான்! கோழையும் கண்களைத் திறக்கலானான்! அரசு என்பது தங்களது 'ஓட்டுக்'களால்தான் நடைபெறுகிறது, அந்த ஓட்டினால் அரசுகளை ஆக்கவும் அழிக்கவும் முடியும் என்கிற எண்ணம் வளர்ந்தது. அந்த எண்ணத்தை உருவாக்கி, மக்களை ஒன்று திரட்டக்கூடிய அரசியல் கட்சிகள் வளர்ந்தன. இந்தக் கட்டத்துக்குப் பிறகு, ஏற்பட்ட கட்சிதான் காங்கிரஸ்! இது, ஜனநாயகப் பாதையைவிட்டு நழுவ முயன்றிருந்தால், இங்கும் ஒரு 'இங்கிலாந்து' ஏற்பட நேர்ந்திருக்கும்; உலகமும் கேலியும் கண்டனமும் இளப்பியிருக்கும். எனவே, 'ஓட்டுகளை'ப் போட்டு ஆள்வோரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் புதிதாகப் பெறப் போராடிய கட்சியல்ல காங்கிரஸ். அந்த உரிமைகளைத் தரும் எஜமானாக இருந்த வெள்ளையனை, விரட்டிய கட்சி காங்கிரஸ்.

முள்வேலி! மரத்தைச் சுற்றிக் கருநாகம்! இலையிலோ கனி!! — அக்கனியைக் கொய்யவேண்டுமாயின், வேலியைக் கடக்கவேண்டும், கருநாகத்திடமிருந்து தப்பவேண்டும். இவ்வளவு சிரமத்துக்கிடையே கொய்து சுவைக்கும் போதுதான், கனியின் சுவை அதிகமாகத் தெரியும். கனியைப் பொறுத்துமட்டுமல்ல, காதலில் கூட, கண்டேன் — கண்டார் — கண்ணசைத்தேன் — கட்டிலுக்கு வந்தாள் எனில், சுவை இடையாது என்று சொல்லுவார்கள் அனுபவசாலிகள். எட்டாதது இட்டியபோதும், அதுஇட்டுவதற்காக நடாத்திடும் வீரச் செயல்களின் போதும்தான், உண்மையான இன்பம் ஏற்படும்! பெற்றதைப் பாதுகாக்கவும், நல்லமுறையில் பேணவும் விரும்புகிறான் மனிதன். கிளைத்ததும் வாயில் வந்து விழும் கனியும் சாதாரணமாகிவிடுகிறது — கண்ணசைத்ததும் கட்டிலுக்குவருகிறவளும் சாதாரணப் பட்டியலில்தான சேர்க்கப்படுகிறாள்.

இந்த உபகண்டத்து மண்ணுக்கு ஜனநாயகம் வெள்ளையன் அறிமுகப்படுத்தியதானாலும் சரி, காங்கிரஸ் புகுத்தியதானாலும் சரி, கடினமில்லாமல் கிடைத்த கனியாகும்! சிக்கலில்லாமல் அடைந்த காதலாகும்!! சமையல் செய்து வைத்த சாப்பாட்டை எடுத்துப் போட்டுக்கொண்டு, சாப்பிடுவது எளிது. ஆனால் அந்தச் சாப்பாட்டைத் தயாரிக்குமுன், என்னென்ன சங்கடங்களை வீட்டரசி அடைந்திருப்பாள் என்று எண்ணுகிற போதுதான், அதன் கஷ்டம் தெரியமுடியும்.

*

சட்டசபைகள் ஏன் ஏற்பட்டன, எதற்காக நாம் அனுப்பப்படுகிறோம், நம்மையனுப்பும் ஓட்டுக்குள்ள சக்தி என்ன? அங்கே போய் நாம் என்னென்ன செய்ய வேண்டும்—என்கிற ஒரு கடமைப் பொறுப்பு. இன்று பலருக்கு விளங்காததற்குக்காரணம், ஜனநாயகம் தந்துள்ள சுவையுள்ள கனியினைப் பற்றிச் சரியாக அறியாததுதான்.

அறிந்திருந்தால், மேல்சபைக்கு மக்கள் மனமகிழ, நியமிக்கப்பட்ட இந்தப் பெருமாட்டியார், தன்னைச் சந்திக்கவந்த சிப்பந்திகளுக்கு விபூதிப் பிரசாதமா வழங்கியிருப்பார்கள்!!

சின்னஞ்சிறு தீவு, சைப்ரஸ்— அதற்கு விடுதலை வாங்கித்தர வேண்டுமெனப் போராடுகிற மகாரியாஸ் ஒரு பாதிரி. பெருமாட்டியார், சந்நியாசினியல்ல! மும்மலமும் நீக்கி, மூலையில்போய் உட்கார்ந்து "கந்தா, கடம்பா" என்று முணுமுணுப்பவரல்ல!! "மைக்"கில்தான் பாடுகிறார்—சினிமாவில் நடிக்கிறார் — வருமானமும் பெறு

கிறார் — பணமெனும் 'பேயினை'த் தள்ளுவதாகவும் தெரியவில்லை— சாப்பிடாமல் விபூதியைப் பார்த்துக்கொண்டே ஒவ்வொரு நிமிடத்தையும் ஓட்டுவதாகத் தெரியவில்லை — எனினும், சட்டசபைத் தாழ்வாரத்தில், விபூதிப் பையினைத் திறந்து, ஒவ்வொருவர் கையிலும் அள்ளிப் போட்டிருக்கிறார்! அதன் மூலம், மகத்தான சாதனை புரிந்ததாக அகமகிழ்ந்துமிருக்கிறார்!!

அந்த இடத்தில்கூட அம்மையார் மறக்கவில்லை, பக்திப்பாலை, என்று பாராட்டக்கூடும் சிலர்! ஆனால், உரிமைகளைப் பெறப் போராடிய மக்களின் சரிதமறிந்தோர், "என்னே பரிதாபம்!", என்றே கருதுவர்!!

சட்டசபைத் தாழ்வாரத்தில் தன்னைச் சந்திக்க வந்தவர்களுக்கெல்லாம் அம்மையார் வழங்கிய விபூதிப் பிரசாதக் காட்சியினைப் படமெடுத்து, வெளிநாடுகளுக்குக் கொண்டுபோய்க் காட்டினால், முதலில் விழிப்பார்கள் வெளிநாட்டார்; விஷயத்தை விளக்கிய பின்னே, விழுந்து விழுந்து சிரிப்பதோடு விடமாட்டார்கள் — பரிதாபப்படவும் செய்வார்கள்.

கூந்தலில் செருக வேண்டியதைக் குப்பையில் போடுவதும், கொல்லையில் கிடக்கவேண்டியதைக் கொண்டுவந்து கூடத்தில் வைப்பதும், கேலிக்குரியது மட்டுமல்ல; ஈடுபடுகின்ற ஆளைப் பற்றிய ஐயங்களையும் எழுப்பும்.

அம்மையார், இதே திருப்பணியைப் பழனி ஆண்டவனின் படிக்கட்டில் நின்றுகொண்டோ, சட்டசபைக்குப் போகின்ற சந்தியில் நின்றபடியோ செய்வதைப் பற்றி யாருக்கும் அக்கறையில்லை —காவி கட்டியவனும், கமண்டலமேந்தியவனும், கோயில் குருக்களும், வேலாத்தாகோயில் பூசாரியும், தினம் தினம் இந்தக் காரியத்தைச் செய்துகொண்டுதானிருக்கிறார்கள்! அதேபோல அம்மையாரும் செய்வதைப்பற்றி, அக்கறையில்லை நமக்கு — ஆனால், வந்த இடம் சட்டமன்றம் — செய்வதோ பூசாரிவேலை எனும் போதுதான், சிரிப்பும் சிந்தாகூலமும் அதிகமாகிறது!!

பக்தியைப் பொறுத்தவரையில் பெருமாட்டியாருக்கு எந்தக் கருத்து வேண்டுமாயினும் இருக்கட்டும்; நாம் அவர்களுடைய மனதைப் புண்படுத்தவோ, கண்டிக்கவோ விரும்பவில்லை. அது அவர் விருப்பம். ஆனால், சட்டங்களை ஆக்கவும், சமுகத்தின் குறைகளை எடுத்துச் சொல்லிப் போக்கவும், உண்டான மாமன்றத்தில் கூட, விபூதிப் பிரசாதம் வழங்கவா இவர்கள் வந்தார்கள்! இந்த வேலையை ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு ஊராகத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு விடாகப போய்......"என் கையிலிருப்பதென்ன, அந்தப்பைக்குள்ளிருப்பதென்ன......... என்ன! என்ன!! என்னென்னென்ன......" என்று பாடிப்பாடி, திருநீற்றின் மூலம் பக்தியை வளர்க்கலாமே? அதைவிட்டு, அநாவசியமாக, இப்படி இகலோக இச்சைகளில் ஒன்றான எம். எல். சி. பதவியில் இருப்பதும் — அங்குபோயிருந்துகொண்டு, வந்தவேலையை மறந்து ஏதேதோ செய்வதும்—இருசாராருக்கும் நல்லதல்ல.

தமிழால் வளர்ந்த இசைக் குயிலிடம் மக்கள் எதிர்பார்ப்பவை பல.

அவரோ மக்கள் நெற்றியெல்லாம் விபூதிப்பட்டை விளங்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

வீணாக மாமன்றம் சென்று உட்கார்ந்திருக்கும் ஒரு சில மணி நேரத்திலும் ஏழெட்டுப்பேருக்கு விபூதிப்பிரசாதம் வழங்கி, விண்ணுலகப் பாதைக்கு வழிகாட்டுவதேமேல் எனும் ஆசை அதிகமாயிருப்பின் — அதைச் செய்ய வேண்டும், அம்மையார்.

அல்லது, தனக்குக் கிடைத்த வாய்ப்பின் மூலம், தன் துறைக்கும், தமிழுக்கும் ஏதாவதுசெய்ய முடியுமாயின், அதைச் செய்யவேண்டும் அவர்கள்.

இரண்டையும் குழப்புவது, அவருக்கும் நல்லதல்ல! அவர் விரும்பும் பக்தி மார்க்கத்துக்கும் ஏற்றதல்ல!!

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

மரப்பொம்மையை நழுவவிட்டாள்' பார்த்தார்கள் திருடர்கள்; முன்பு போல பயந்துவிடவில்லை! "இதென்னடா போன வெள்ளிக்கிழமையும் இப்படி நடந்தது; இப்போதும் இப்படி நடக்கிறது. இதில் ஏதோ சூது இருக்கிறது" என்றுசந்தேகத்தைக்கிளப்பினான் ஒருவன். மரத்தை அண்ணாந்து பார்த்தார்கள் — மாட்டிக்கொண்டாள் இவள். நையப்புடைத்து அவளிடம் இருந்ததையும் பிடுங்கிக்கொண்டு ஓட ஓட விரட்டியடித்தார்கள்! வெட்கப்பட்டு அவளும் வீடு திரும்பினாள்!!"

* * *

"தி. மு. க, எப்படி வளர்கிறது? ஓகோ கூட்டம் போடுவதால்தான் வளர்கிறது — கூட்டம் போடும் நமக்கோ கூட்டம் சேரவில்லையே. என்ன காரணம்? ஓகோ மாநாடு போட்டு அதில் நடிகர்களைக்கலந்துகொள்ளச் செய்தால் சேரும். அப்படியும் நடத்தினோம்; ஆனாலும் மக்கள் மன்றத்தில் நம்மைவிட, தி.மு.க.வுக்குத்தானே ஆள் சேருகிறது என்று நாம் எப்படிச் செய்கிறோமோ அப்படியெல்லாம் செய்தாவது வளரலாம் என்று முயற்சிக்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள். அவர்கள் போக்கைப் பார்க்கிறபோது எனக்குச் சிறுவயதில் என் தாயார் சொன்ன இந்தக் கதைதான் நினைவுக்கு வருகிறது. நம்மைப் பார்த்து, நம்மைப் போலவே நடக்க முயற்சிக்கும் காங்கிரஸ்காரர்களுக்குச் சொல்லுவேன். உங்களுக்கு பக்கத்து விட்டுக்காரி பெற்ற பாடம்தான் கிடைக்கும்" என்று சென்னை மவுண்ட்ரோடு 'மிட்லண்டு' திரைப்பட அரங்குக்கெதிரில் 39-வது வட்டச் சார்பில் நிகழ்ந்த பிரிவினை விழாக் கூட்டத்தில் பேசிய சி. என். ஏ. குறிப்பிட்டார்.

கூறிய கதையும், காங்கிரசாரின் போக்கும் மக்கள் மன்றத்தில் 'கலீர்' என்ற சிரிப்பையும் கைதட்டுதலையும் எழுப்பிற்று! காங்கிரசார், இப்போது கூட்டம் சேர்க்கவும், பேசவும் பெருத்த முயற்சியிலீடுபட்டு வருகிறார்கள்.

அப்படி ஒவ்வொரு முயற்சியிலீடுபடும்போதும், நமது கவனம்தான் முதலில் வருகிறது அவர்களுக்கு. உடனே இப்படி நடக்கலாமா, அப்படிச் செய்யலாமா என்று ஆசைப்பட்டு அதுபோலவெல்லாம் நடக்க முயற்சிக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் வெகு வேகமாகப் பரவுகின்றன என்றால், அதற்குக் காரணமென்ன? ஆயிரமாயிரம் நம பொதுக்கூட்டங்களில் நாம் கூறிவருவதுபோல, அழகு தமிழில் நாம் பேசுகிறோம் என்பதல்ல! நாடக மேடையிலும் கலைத்துறையிலும் நேரிய ஈடுபாடு நாம் கொண்டிருக்கிறோம் என்பதல்ல!! இவையெல்லாம் ஒருவேளை ஓரளவுக்குச் சாதனங்கள் என்று கருதப்பட்டாலும், இதையும் மிஞ்சி ஒன்று இருக்கிறது. அதுதான் நாம் சொல்லுகிற கருத்துகள்!! ஆகாயத்தில் கோட்டை கட்டி, அங்கே மதிற்சுவர் எழுப்பி ஒரு புறத்திலே வண்ணப்பூங்காவும், இன்னொருபக்கத்திலே தாமரைத் தடாகமும் அமைக்க வேண்டும் என்று அழகு தமிழிலும் ஆயிரம் சினிமாக்கள் மூலமாகவும் சொன்னாலும் ஏற்றுவிடுவார்கள் மக்கள்? செச்சே! இவன் பித்தனய்யா, என்று போய்விடுவார்கள்.

நாம் சொல்லுகிற கருத்துகளில், உண்மையிருக்கிறது; அந்த உண்மைகளை நாம் உணருகிற காரணத்திலேதான் நமது பேச்சிலே உறுதி தொனிக்கிறது; உறுதியிருப்பதாலேயே, கேட்கும் மனிதர்களின் இதயத்துக்குள்ளும் ஊடுருவிச் செல்லும் சக்தி ஏற்படுகிறது; அந்தச் சக்தியே, நமக்கு மகத்தான பலத்தை உண்டுபண்ணுகிறது.

சி. என். ஏ. மவுண்ட் ரோடில் பேசிய அதே நாளில், ஓரிடத்தில் மனோகரன் பேசினார், இன்னொரு இடத்தில் கருணாநிதி கலந்துகொண்டார், வேறொருடத்தில் நடிப்பிசைப் புலவருக்கு ஒரு நிகழ்ச்சியிருந்தது, மற்றொரிடத்தில் புரட்சி நடிகர் சொற்பொழிவாற்றினார். இத்தனையும் ஒரே நாளில், ஒரே மாலைப்பொழுதில் — மாநகரின் பல்வேறு பகுதிகளில்! மழைவேறு'! இருந்தும ஒவ்வொரு இடத்திலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு நம் உரையினைக் கேட்டிருக்கிறார்கள்.

கடந்த ஒரு கிழமையில், சென்னை நகரில் மட்டுமல்ல, மாநில முழுதும் பல்வேறு இடங்களில், 'ஏதோ தேர்தல் கூட்டம்' நடப்பதுபோல, கழகக் கிளைகளின் சார்பில் பிரிவினை விழாவைக்கொண்டாடி இருக்கிறார்கள். உற்சாகமோ, ஊக்கமோ ஒரு சிறிதும் குன்றாத அளவில் கொண்டாடப்பட்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

இந்தளவுக்குச் சக்தி வளரக் காரணம் என்ன? நிச்சயமாகக் கொள்கையிலுள்ள வலிவுதான்! அந்த வலிவென்ன?—என்பதை ஒவ்வொருதடவை சட்டசபை கூடுகிறபோதும், நன்றாகக் காண முடிகிறது நம்மால்.

இருப்பவர்கள் 15 பேர்தான் சட்டசபையில்! எனினும், நமது உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் விவாதங்களில் கலந்து கொள்கின்றனரா, கேள்விகளைக் கேட்கின்றனரா, என்னென்ன பேசுகின்றனர், என்று பார்த்திடின், தெளிவாக விளங்கும்.

எல்லோரும் பங்கு ஏற்கிறார்கள்.

எல்லோரும் நாட்டின் நன்மைகளைப் பற்றித்தான் பேசுகின்றனர்.

அப்படிப் பேசுகின்ற பேச்சுக்கு, நேரடியாக அமைச்சர்கள் பதிலளிக்கிறார்களோ எனின், கிடையாது! என்ன பதிலை அளிக்க முடியும்!!

நமது உறுப்பினர்கள், பேசுவதையெல்லாம் பேசிவிட்டு, **"ஏன் இப்படியெல்லாம் திண்டாட நேருகிறதென்றால் நாம் டில்லிக்கு அடங்கியிருப்பதுதான். டில்லி, அதிகாரங்களையும், வரி இனங்களையும் தன் வசம் வைத்துக்கொண்டு, நம்மைப் பிச்சாண்டியாக்கி இருப்பதனாற்றான் நாம் ஒவ்வொரு விஷயத்துக்கும் திண்டாட நேருகிறது. அந்த டில்லியிலிருந்து விடுபடவேண்டும் என்பதே எம் குறிக்கோள்,"** என்று முடிக்கிறார்கள். இலங்கைத் தமிழர் பிரச்னை — நிறுத்தலளவைச் சட்டம் — நிலவரம்புச் சட்டம்— இப்படிப்பட்ட பொது விஷயங்களில், டில்லியின் கடிவாளம், இவ்வளவு இழுத்துப் பிடித்துத் தொல்லை தருகிறது என்பதனை மதிமுக மந்திரிகள் மறைக்க முயற்சித்தாலும், மக்களுக்கு நன்றாகத் தெரிந்துதானே இருக்கிறது.

மக்களின் பிரச்னைகளைப் பேசுகிறோம் நாம்

அதற்கு மருந்தெது என்பதையும் கூறுகிறோம் நாம்.

இதனைச் சரிவர உணராமல், ஏதோ எப்படியோ என்ற கருத்தில், இப்படிச் செய்யலாமா, அப்படிச் செய்வதால்தான் அவர்களுக்குச் செல்வாக்கு வளருகிறது என்று நினைத்துக்கொண்டு, அதுபோலவெல்லாம் செய்துபார்த்து என்ன பயன்!

திராவிடநாடு — புதிய தாயகம் அமையும் என்கிற உறுதியிருக்கிறது நமக்கு- அதைக்கண்டு கொஞ்சி மகிழும் நாள் தூரத்திலில்லை என்கிற அறிகுறியும் தெரிகிறது நன்றாக. டில்லி தரும் 'பரிசு'களும், நம்மை நடத்தும் முறையும் நாம் எந்தக் கட்டத்திலிருக்கிறோம் என்பதைத் தெளிவுபடுத்துகிறது நாள்தோறும்.

காங்கிரசாருக்குப் புதிய தாயகம் காணும் வாய்ப்பு ஏது—அவர்கள் 'அகில இந்தியா'வைக் கண்டுவிட்டோம் என்கிற ஆனந்தத்திலன்றோ மிதந்து கொண்டிருக்கிறார்கள்—அதே மிதப்பில், நலம் நாடும்போக்கினைக்கூடக்கைவிட்டு வருகிறார்கள்.

நமக்குப் பிரச்னைகள் உள்ளன பேச! அவர்களுக்கு, எதுவுமேயில்லை வாதாட!!

நம்மிடம் புதிய நாடு காணும் ஆவலிருக்கிறது — அவர்களிடம், தேசிய உணர்ச்சியை எழுப்பும் எத்திட்டமும் கிடையாது—இருந்தாலும் முடியாது; ஏனெனில், இந்தியா என்பது ஒரே தேசமல்ல!!

நாம் சொல்லும், விஷயங்களில் உண்மையிருக்கிறது; அவர்களுக்குச் சொல்ல அப்படி ஏதும் கிடையாது!!

இந்த இலட்சணத்தில், 'பக்கத்து வீட்டுக்காரியைப் பார்த்து'தானும் நடக்க முயற்சிப்பதிலும், எடுபிடிகள் தேடுவதிலும், இப்படியா அப்படியா என்று யோசிப்பதிலும் என்ன இலாபம்?

★

தற்பொழுதுகூட நேர்முக வகுப்புகளில் மட்டும் 700-க்கு மேற்பட்டவர்கள் இங்கிலீஷ் மொழிப் பயிற்சி பெறுகின்ற சென்னையின் மாபெரும் கல்வி அரங்கம்!

The School of English Learning

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.

KNOWLEDGE IS POWER

தமிழ்
எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்
ஒரே வருடத்தில்
ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி

அடிப்படையோடு இலக்கண ரீதியாக திருத்தமான முறையில்
இங்கிலீஷ் தபால் மூலம் கற்கலாம்

சேர்வதற்கு அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து **17–10–58-ந் தேதி** வரை அனுப்பலாம்.

அச்சிடப்பட்ட பாட விளக்கங்கள் **21–10–58-ந் தேதி** முதற்கொண்டு தொடர்ந்து அனுப்பப்பட்டு, கற்கும் போது ஏற்படும் சந்தேகங்களுக்கு முறைப்படி அவ்வப்போது தெளிவுரைகள் வழங்கப்படும்.

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்குவரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும்—சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும். "தபால் மூலம் அனுப்பப்படும் பாடங்கள் ஒரு நீண்ட தொடர் நாவலைப் படிப்பது போன்று ஆர்வத்தை ஊட்டுவதாக இருக்கும்" எனில் மிகைப்படுத்திச் சொல்வதாகாது.

முக்கிய அறிவிப்பு:—

1. 16-வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள்.
2. ஆதாரபூர்வமான ஒப்பற்ற இலக்கணப்பயிற்சி அளிக்கப்படுவதால் ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக்கொள்ளலாம்.
3. இத்தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விவரங்களையும், எட்டு நயே பைசே (8-புதிய காசுகள்) தபால்தலை அனுப்பிப் பெறுக.

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி நல்ல முறையில், உலக மொழியாம் ஆங்கிலத்தைக் கற்க முன்வருக.

திராவிடநாடு

12—10—58 | வார வெளியீடு | விலை 16 காசு

OFFICE OF THE REGISTRAR ... MADRAS
29 OCT 1958

பிரித்திடுவோம் திராவிடத்தை

[களிற்றண்ணல்]

தேன்கொழிக்கும் திராவிடமாம் தென்ன கத்தைத்
திருநாடாய்ப் போற்றிவரும் மக்காள் கேளீர்!
வான்பொழியும் மழையெல்லாம் வரையி னின்றும்
வழிந்தோடிக் கடலணைந்து வீணாய்ப் போகும்.
கான்யாறு ஓடுகின்ற வடவர் நாட்டைக்
கவினுற்ற நன்னாடாய் ஆக்கி விட்டீர்
ஏனின்னும் திராவிடத்தில் எதையும் செய்ய
இயலாமல் இருக்கின்றீர் என்று கேட்டால்;

"ஐந்தாண்டுத் திட்டத்தில் பக்ரா நங்கல்
அணைபோடும் வேலையின்னும் முடிய வில்லை
இந்நாட்டின் பொதுமொழியாய் இந்தி தன்னை
இருக்கவிடம் செய்வதற்கே ஓய் வில்லை
நம்நாட்டுத் தூதர்களுக் கின்ப வாழ்க்கை
நாமமைத்துக் கொடுப்பதற்கே நாளு மில்லை
இந்நாளில் இயலாது எதையும் செய்ய
இனிவருமோர் திட்டத்தில் இயற்று விப்போம்"

என்றுசொல்லி அன்றுநமை ஏய்த்து விட்டார்
ஏங்கிமுறை யிட்டோரைத் தூங்க வைத்தார்
இன்றுமொரு திட்டமுமே துவங்கி விட்டார்
இதிலேயும் சென்னைக்கு நாம மிட்டார்
என்றுமொரு நெய்வேலித் திட்டங் காட்டி
ஏமாற்றப் பார்க்கின்றார் நம்மை வாட்டி
நன்றாக நம்வாழ்வு அமைய வேண்டில்
நல்வழியில் பிரித்திடுவோம் திரா விடத்தை.

வஞ்சிக்கப்படும் தென்னாடு!

[பா. சரவணன்]

"சென்னை அரசியலார் 13-திட்டங்கள் இரயில்வே அபிவிருத்திக்குச் சிபாரிசு செய்து டில்லி சர்க்காருக்கு அனுப்பியவை ஒன்றும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை" இது நிதியமைச்சர் தெரிவித்துள்ள செய்தி.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் போக்குவரத்தின் அபிவிருத்திக்கு ஒதுக்கியுள்ள தொகை ரூ. 1385-கோடி.

இரயில்வே அபிவிருத்திக்கு ரூ. 900-கோடி.

சாலைகள், சாலை போக்குவரத்திற்கு ரூ. 266-கோடி.

கப்பல் கட்டுவதற்கு, துறைமுகங்களுக்கு ரூ. 100-கோடி.

விமானப் போக்குவரத்திற்கு ரூ. 43-கோடி.

செய்தித்துறை ஒலிபரப்பிற்கு ரூ. 76-கோடி.

எனத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது.

தென்னகமொழிமாநிலங்களான சென்னை, ஆந்திரா, கேரளம், கன்னட மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகைகள்:

சென்னை	807·50	இலட்சம்
ஆந்திரம்	546·71	,,
கேரளம்	317·30	,,
கன்னடம்	475·00	,,

செலவு செய்யப்படும் தொகை ரூ. 138492·89-இலட்சம். அதில் தென்னகத்திற்கு ரூ. 2146·51. ஏறக்குறைய ரூ. 21½-கோடி. ஒதுக்கியுள்ள தொகை ரூ. 1385-கோடி. தென்னகத்தில் அபிவிருத்திக்கு ரூ. 21½-கோடி. ஏன் இந்த வேற்றுமை? மக்கள் தொகை 40-கோடி எனக் கொண்டாலும், தென்னகத்தில் வாழும் மக்களின் தொகை 10-கோடி இருக்கக் கூடும். ஒதுக்கியுள்ள தொகையில் 4-ல் ஒரு பங்கு ஏன் ஒதுக்கக் கூடாது. எல்லைப் பரப்பளவு எனக்கொண்டாலும் கிடைக்க வேண்டிய தொகை அதிகம். வஞ்

குறுகிய இரயில்வேத்தொடரை (Metregauge) அகலப்பாதை (Broadgauge) யாக செய்வது; மின்சார உதவியுடன் இரயில் செல்ல வசதிசெய்வது, டீசல் என்ஜின் பொருத்தி இரயில் செல்ல வசதிசெய்வது; புதிய இரயில்வேத் தொடர்கள் அமைப்பது, பழைய இரயில்வேத்தொடர்களைப் புதுப்பித்தல்; இரயில் என்ஜின்கள் உற்பத்தி செய்வது; வாகன்கள் இரயில் பெட்டிகள் உற்பத்தி செய்வது; திட்டத்தின் நோக்கங்கள்!

புதிய இரயில்வேத் தொடர்கள் 842-மைல்கள் அமைக்கப்படும் எனத் திட்டம் அறிவிக்கிறது.

கிழக்கு இருப்புப்பாதை:-	
பெரேசட்—பசிரட்	44
தென்கிழக்கு இருப்புப்பாதை:-	
பர்க்காகான—பிர்மித்ராபூர்	124
ரூர்கலா—தால்தி—துரமாரோ	30
கௌமுந்தி—பன்சாபரணி	18
பிலாய்—தாலிராஜ்ஹாரா	60
கூவா—மனோகர்பூர்	30
கரன்பூரா—ரம்கார்க்	75
மத்திய இந்தியா நிலக்கரி சுரங்கம்	125
கொர்பா விஸ்தரிப்பு	5
மத்திய இருப்புப்பாதை:-	
குணா-உஜ்ஜெய்ன்	175
வடக்கு இருப்புப்பாதை:-	
ராபர்ட்ஸ்கன்ஜ்-கர்வாரோடு	100
வடகிழக்கு இருப்புப்பாதை:-	
முஜாபர்பூர்-தர்பங்கா	35
ரம்ஜெய்-பின்னகுரி	20
	842

842 மைல்களுக்கு அமைக்கப்படும் இரயில் தொடர்கள் அத்தனையும் வடநாட்டில். தென்னாட்டில் ஒரு மைல்கூடப் புதிய இரயில் தொடர் அமைக்கும் திட்டம் இல்லை. சில நாள் கூடத்திற்கு ஆவடியிலிருந்து சத்தியமூர்த்தி நகருக்குபோடப்பட்டது. அதனால் காங்கிரஸ் கட்சியின் மாநாட்டிற்கு உதவியதேயன்றி வேறெதற்குப் பயன்பட்டது?

"தென்னகத்திற்கு உரிய இரும்பு உருக்கு சப்ளை உரிய காலத்தில் அனுப்பிவைக்க இரயில்வசதி குறைவாகஇருக்கிறது" என [illegible] தூத்துக்குடியில் பேசிய நேரத்தில் குறிப்பிட்டார். "தென்னகத்தில் இருப்பவர்கள் ஒன்றுகூடி மத்திய அரசியலாரை வற்புறுத்த வேண்டும்" என்றும் பேசினார்.

சென்னை அரசியலாரின் திட்டத்தையே நிராகரிக்கிறது மத்திய அரசு. ஆயினும் முதலமைச்சர் காமராசர் பேசுகிறார் "நாடு முன்னேற நாம் நேருஜி தலைமையை ஏற்றுக் கொண்டுள்ளோம், நாட்டிற்குத் தேவையான நல்ல திட்டங்களை எதிர்க்கட்சிகள் எடுத்துக் கூறாமல் தொல்லை தருகின்றனர்," என்று. காங்கிரஸ் கட்சியின் பெருந்தலைவர்களில் ஒருவர், சென்னை மாநிலத்தின் முதலமைச்சர் காமராசர். அவரது அரசு சிபாரிசு செய்து அனுப்பிய திட்டங்களே காங்கிரஸ் கட்சியின் மத்திய அரசு நிராகரிக்கிறதுஎன்றால், எதிர்க்கட்சியின் திட்டங்கள் என்னவாகும்? நேருஜியின் தலைமையில் தமிழகம் காணும் இரயில்வேயின் அபிவிருத்தியின் முன்னேற்றமும் இதுதான்!

ரூ 10 கோடியளவில் பெரம்பூரில் இரயில்பெட்டி தொழிற்சாலையைப் பாரீர் என்கிறார்கள். செலவு செய்யும் தொகை ரூ. 900-கோடி என்பதையும் பார்க்கிறோம். இதைப் பாரீர்என்று கூறினால் 'பிரிவினையை வெறுத்தவன் பாரதி' என்று துணைக்கழைக்கிறார் நிதியமைச்சர் பாரதியாரை. கல்வியமைச்சர் வினாவிற்கு ஏற்ற விளக்கம் தருகிறார்!!

★

விழாவும் வினாவும்

[மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [12-10-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 13

சென்ற கிழமை முழுவதும் ஒரே விழாக்கோலம். நாடு, நகரம் எங்கும் விழா என்பதே பேச்சாக இருந்தது. எதற்கு இந்த அலங்காரம், என்ன விழா இது என்று இனந்தெரிந்து சொல்ல இயலாத வகையில் விழா மலிவுப் பொருளாக இருந்திடக் கண்டோம். விழா என்ற சொல்லுக்கே, சிறப்புடன் நடைபெறும் நிகழ்ச்சி என்று பொருள். ஆனால் இன்றையதினம் நாட்டில் நித்த நித்தம் நிகழும் விழாக்கள் அந்தச் சிறப்பினை இழந்து சாதாரண நிகழ்ச்சியாக மாறி வரக் காண்கிறோம். எதற்கெடுத்தாலும் ஒரு விழாக் கொண்டாடிவிட்டால் போதும் என்று கருதுகின்ற நிலைமைக்கு ஆட்சியாளர் வந்திருக்கின்றார்கள்.

மரியாதைக்கு ஒரு விழா, மரம் நட ஒரு விழா, கைத்தறிக்கு ஒரு விழா, கதருக்கு ஒரு விழா என்று விழா நடத்திவிட்டால் அது ஏதோ செயற்கரிய செய்ததாகிவிடும் என்று எண்ணியிருப்பதாகத் தோன்றுகின்றது. அவர்கள் அப்படி எண்ணுகின்றனரோ, அல்லது நாட்டு மக்கள் அப்படி எண்ணி ஏமாந்து போவார்கள் என நினைக்கின்றனரோ தெரியவில்லை.

அந்த நினைப்பில்தான் இந்தக் கிழமை காந்தியின் நினைவு விழாவினைக் கொண்டாடியிருக்கின்றனர் காங்கிரஸ் கட்சியினர்.

காந்தியடிகள் தம் வாழ்நாளில் வாழ்ந்து காட்டிய உயர்ந்த நெறியையும், போற்றிய கொள்கைகளையும், காட்டிய உறுதியையும், செய்த தொண்டினையும் உலகம் பாராட்டுகின்றது. உலகத்தின் உத்தமராக அவரை மக்கள் போற்றுகின்றனர். அவருக்கு உண்மையான விழா எடுக்கவேண்டுமானால் அவருடைய வாழ்க்கையில் அவர் போற்றிய நெறிமுறைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். அவர் விரும்பிய சமுதாயம் மலரப் பாடுபடுதல் வேண்டும். அவர் காட்டிய வழி நிற்றல் வேண்டும். இன்றைய காங்கிரஸ் கட்சியினர் அந்த நெறி நிற்கின்றனரா எனின் இல்லை என்பதனைப் பண்டித நேருவிலிருந்து அனைவரும் அன்றாடம் சொல்லிவருகின்றனர்.

போட்டியிலும் பொறாமையிலும் பல காங்கிரஸ்காரர்களின் வாழ்நாள் கழிந்துகொண்டிருக்கின்றது.

கொல்லாமையை நோன்பாகக் கொண்டு போற்றிய அடிகளாரின் அடிச்சுவட்டில் நடப்பதாகச் சொல்லிக் கொள்வோரின் ஆட்சியில், நித்த நித்தம் துப்பாக்கியின் வெடியோசை கேட்கின்றது. தடிகள் அடக்குமுறைக்குப்பயன்படுவது சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டிருக்கிறது.

ஏழையைப் போற்றவேண்டும் என்றுகூறியவரின் தொண்டர்களின் நிழலில் ஏழை அழும் குரல் மெலத் தேய்ந்து, அழவும் ஆற்றல் அற்றுவருகின்றது. இல்லாமையும் இன்னலும் நான் நீ எனப் போட்டியிட்டு எளியோரை வாட்டி வதைக்கின்றன. பணம் பேசும் சக்தி படைத்து வருகின்றது.

அன்பு நெறியில் அறத்தொண்டு ஆற்ற வேண்டியவர்கள் ஒருவரோடு ஒருவர் பகைகொண்டு பதவி மோகம்கொண்டு வம்பு வளர்த்துத் துன்புறுகின்றனர்.

இதனைக் கண்டு மனம் பொறாமல், நேருவும், தேபரும் காங்கிரஸ்கட்சி ஊழல் மலிந்ததாகிவிட்டது, தொண்டுள்ளம் துவண்டுவிட்டது, புதிய ஊக்கம் கிடைத்தாக வேண்டும் என்று நாள்தோறும் 'இதோபதேசம்' செய்த வண்ணம் இருக்கின்றனர்.

மற்றத் தலைவர்களும் காங்கிரசில் படிந்திருக்கும் மாசுகளை எடுத்துக்காட்டி இடித்துரைக்கின்றனர்.

இந்த நிலைமையில் இந்தக்கிழமை காந்தி நினைவு விழாவும் வந்து சேர்ந்தது.

இரவெல்லாம் கனவு கண்டு கலங்கி இருந்தவன் பொழுது புலரும்போது எழுஞாயிற்றின் கதிர்கண்டு உண்மைநிலை உணருகின்றான். அதுபோல் பதவியும் பணமுமே குறியாகக் கொண்டிருந்த காங்கிரசார் காந்தியின் நினைவு என்ற எழுஞாயிறு கண்டதும் திடுக்கிட்டு விழித்து காந்தி அண்ணல், காந்தி அண்ணல் எனப் பலமுறை ஒலிக்கின்றனர்.

இதனால் மக்களை ஏமாற்றிவிடலாம் என மனப்பால்குடிக்கின்றனர். காந்தியாரின் பெயரைச்சொன்னவுடன் மயங்கி, மாசுகளை மறந்த காலம் இன்று இல்லை. ஆனால் அந்த நிலையை உணராததால் காங்கிரஸ் கட்சியினர் காலமெல்லாம் கயமைச் செயல்களில் மூழ்கியிருந்துவிட்டு, காலை புலர்ந்ததும் காந்தி வாழ்க எனக் கரைகின்றனர். இந்த ஆண்டு அதிலும் வேடிக்கை; பாதயாத்திரை என்று புதிய உத்தி ஒன்றனைக் கண்டுபிடித்தனர்.

காந்தியார் பெரும் புகழும் பெற்றதற்கான பல காரணங்களில் அவர் மேற்கொண்டிருந்த எளிய வாழ்க்கையும் ஏழ்மைத் தோற்றமும் ஒன்று. அதைக் கண்ட இன்றைய காங்கிரசார் தாங்களும் எளிய வாழ்க்கையை மேற்கொள்ளுவதாகக் காட்டிக் கொள்ளுவதாகச் சில நாட்கள் பாத யாத்திரை நடத்தினர்.

காந்தியார் உண்மையாகவே எளிமையாக இருந்தார்.

இவர்கள் எளிமையாக இருப்பதுபோல் காட்ட முனைகின்றனர்.

அந்தப் பாதயாத்திரையும் ஆளுக்கு ஆள் முறையால் மாறுபட்டு இருந்திடக் கண்டோம். உள்துறையமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் தம்முடைய தொகுதியில் பல இடங்களில் பாத யாத்திரைப் பவனிவந்தார். வரும்போது அன்பர்கள், நண்பர்கள், வேண்டியவர்கள், இனி வேண்டியவர்களாக விரும்புகின்றவர்கள் இவர்கள் புடைசூழ, கோயிற்குடை வெயில் மறைக்க நடந்துவந்தார். குறிப்பிட்ட இடம் வந்ததும் சற்று நேரம் இளைப்பாறி, காரில் திரும்பச் சென்றார். வந்த சிலகல் தொலைவுக்குள் ஓரிடத்தில் செவ்விளநீரும், இன்னொரு இடத்தில் சிற்றுண்டியின் வகையில் சிலவும், இறுதியில் இன்னமுதுப் படையலும் முன்னமே காத்திருந்தன.

இராம மக்கள் எதனையும் எடைபோட்டுப் பார்ப்பதில் வல்லவர்கள். இந்தக் கோலம் கண்ட அவர்கள் இத்தனை இடங்களில் இவ்வளவு உபசரிப்பு என்றால், நடந்தென்ன! படுத்து உருண்டே வரலாமே என எண்ணியதோடு, 'வரும்போது நடை! போகும்போது கார்!! இதுவோ பாதயாத்திரை'? என்று கேலி பேசிய காட்சி அருங்காட்சியாகும்.

உண்மையிலேயே பாதயாத்திரையில் பக்தி சிரத்தையோடு ஈடுபடுகின்றார்கள் என்றே வைத்துக் கொண்டாலும், அதனால் மக்களுக்கு என்ன நன்மை என்பதுதான் தெரியவில்லை! வாழ்நாள் முழுவதும் பொய்யே பேசித் திரிபவன் ஒருநாள் நாடகத்தில் அரிச்சந்திரன் வேடம் புனைந்துவிட்டால், அதனால் அவன்பேசிய பொய்கள் காற்றிலே கரைந்துவிடாது. அதைப்போல் காந்தி நெறியைக் கைக்கொள்ளாமல், காற்றோடு காற்றாகக் கலக்கவிடுத்து 'ஒருநாள் கூத்துக்கு' உண்மையை விலைக்கு வாங்கிவிடலாம் என எண்ணுவார்களாயின், மக்களை அவர்கள் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை என்பதுதான் பொருள். அதனால்தான் இந்தக்கோலம் காட்டி ஏய்த்துவிடலாம் என எண்ணிவிட்டனர்.

ஆனால், அவர்கள் நோக்கம், நிலை இதுதான் என்பதனைக் காங்கிரஸ் கட்சியின்பால் அக்கரையும் அநுதாபமும் கொண்ட ஏடுகளே இடித்துக் காட்டியுள்ளன. கல்கியும் ஆனந்தவிகடனும் காந்தி வாரத்தில் காங்கிரசார் செய்யும் ஆர்ப்பாட்டங்களை எடுத்து விளக்கியுள்ளன. விழா அன்றைக்கு மட்டும் கூடிக் குலவிப் பின்னர் பிரிந்து வேறு வழி சென்றுவிடுவதனை அந்த ஏடுகள் எடுத்துக்காட்டியுள்ளன.

இந்த அளவோடு இருந்திருந்தாலும்கூட ஒருநாளேனும் உத்தமர் பெயரை வாழ்த்தினரே எனக் காங்கிரஸ்காரர்களைப் போற்றிடலாம். ஆனால் அவர்களோ அந்த ஒரு நாளிலும் 'எங்கள் இயல்பு எங்கு செல்லும்' என்று கேட்பதுபோல், ஊருக்கு ஊர் கூட்டிய காந்தி விழாவில் கழகத்தினை ஏசுவதையும் தூற்றுவதையுமே தொழிலாகக் கொண்டிருந்தனர். இதனால் கழகம் அழிந்துவிடாது என்பது உண்மைதான். ஆனால் காந்தியின் பேரைச் சொல்லக்கூடிய இடத்திலும் கழகத்தைக் காய்வதை விடமுடியாதவர்களாக அவர்கள் ஆகிவிட்டிருக்கின்றனரே என்பதனை எண்ணும்போதுதான் அவர்கள்மேல் பரிதாபம்கூடப் பிறக்கின்றது.

விழா கொண்டாடுவது என்பது மிகவும் எளிது. ஆனால் அதிலேயிருந்து விளைவு ஏதாவது பெற்றாக வேண்டும். இல்லையெனின் விழாக்கொண்டாடியதை விடக் கொண்டாடாமலிருப்பதே மேல் எனலாம்.

காங்கிரசார் கொண்டாடிய விழாவின் விளைவு என்ன என்பதை ஒருமுறை எண்ணிப்பார்த்தாலே போதும், காந்தியின் பெயரைக்கொண்டு மக்களை ஏய்க்க நினைத்து, மாற்றாரைத் தூற்றி, பொய்பல உரைத்து ஏற்றம் பெற முனைகின்றனர் என்பது தெள்ளிதின் விளங்கும்.

அது இனி இயலாது. மக்கள் இன்று எதையும் எண்ணிப்பார்த்துத்தான் ஏற்கின்றனர், ஏமாறுதல் இல்லை என்பதைத் தெரிந்துகொள்ளட்டும் விழாக் கொண்டாடும் காங்கிரஸ்காரர்கள்.

போலிவேடம்

கடந்த கிழமை, தமிழகத்தில் பாரதியார் நினைவுநாள்—பாரதி விழா எனும் பெயரால் கொண்டாடப்பட்டது. இவ்விழா எட்டயபுரத்தில்மிகமிகச்சிறப்பாகக்கொண்டாடப்பட்டது—அவர் பிறந்த ஊர் என்பதால். இங்கு கொண்டாடப்பட்ட இவ்விழாவைப்பற்றிக் கடந்த சில தினங்களாக எழுதாத தினத்தாள்கள் இல்லை. அதுபோலவே இதைப்பற்றிப் பேசாத நாட்களும் இல்லை.

இவ்வாண்டு, இவ்விழாவை திரு. சிவாஜி கணேசன் அவர்கள், ஏனைய நடிகமணிகளின் உதவியால் கொண்டாடினர். ஆகவே இவ்விழா நடிகர் குழாத்தால்—கொண்டாடப்பட்ட விழாவாயிற்று. அவர்களது அழைப்பிற்கிணங்கித் திரைவானில் மின்னும்—திரைப்பட எழுத்தாளர்கள், இசை இயக்குநர்கள்—இசைவல்லுநர்கள் முதலியோரும் இன்னும் திரைப்படத் தொழில் அதிபர் சிலரும் பங்கேற்றனர்.

தவிர, தமிழகத்துத் தமிழறிஞர் சிலரும், மந்திரிமார்கள் சிலரும், அரசியல் தலைவர்களில்ஒருசிலரும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்—அவ்விழாவை.

விழாவில் கலந்துகொண்ட மந்திரிகள் மூவரும் முக்கியமானவர்கள். அவர்கள் மந்திரி சபையின் முதல்வர்கள் போன்றவர்கள், தங்களாலேதான் "எதிர்க்கட்சிகள் எல்லாம அடங்குகின்றன" என எண்ணிக்கொண்டு உள்ளவர்கள். ஆம் முதன்மந்திரி திரு. காமராஜ், நிதி, மதி ஆகியவற்றின் மந்திரி திரு. சுப்பிரமணியம், காவல் மந்திரி கனம் பக்தவத்சலம் ஆகியோராவர்.

இம்மந்திரிகள் ஒருபோது "தி. மு. க.வினர் எல்லாம் கூத்தாடிகள். அவர்களுக்குச் சினிமா, எழுத முடியும். முகத்தில் கலர்ப் பொடி பூசிக்கொண்டு நடிக்க—அல்ல, கூத்தாடத்தான்—தெரியும்?" என ஏளனம் பேசினர்.

ஆனால் இன்று, தி.மு.க.வினர் இல்லை. வேறு சில கூத்தாடிகளுடன்—(ஆம் மந்திரிகளின் அகராதிப்படி) — சேர்ந்துகொண்டு அவர்களால் கொண்டாடப்பட்ட பாரதி விழாவில் கலந்து சிறப்பித்தார்கள்—மந்திரிமார்கள். பெருமைப்படுகின்றோம். பாராட்டுகின்றோம், மகிழுகின்றோம் — அவர்கள் செயல் கண்டு.

இன்று, எட்டயபுரத்தில் பாரதியின் புகழ் பேசிய மந்திரிகள்

தென்னவன்

உண்மையாகவே பாரதியின் புகழைப் பேசினரா, அன்றி மக்களை ஏமாற்ற — கண்துடைப்புக்காக, அவர் புகழைப் பேசினரா என்பதை நாம் முதலில் தெரிந்துகொள்ளவேண்டும்.

முன்னர் ஒருதடவை சென்னை சட்டமன்றத்தில், "சென்னைக்குத் தமிழ்நாடெனப் பெயர் சூட்ட வேண்டும்" என ஒரு தீர்மானம் எதிர்க்கட்சிகளால் கொண்டுவரப்பட்டது. அதை எதிர்த்த நிதி மந்திரி அவர்கள், அப்போது, "நீங்கள் சொல்வதால் (எதிர்க் கட்சிகள்) தமிழகம் எனப் பெயர் சூட்டமுடியாது" என்றார்.

திரு. பக்தவத்சலம் அவர்கள் ஒரு தடவை சென்னையில் பேசிய பொழுது, "நம் மாகாணத்தை சென்னை (Madras) என்றழைத்தால்தான் உலகிற்குத் தெரியுமேயன்றி, தமிழ்நாடென அழைத்தால் யாருக்கும் தெரியாது! ஆகவே தமிழ்நாடெனப் பெயர்

கனம் காமராஜ் அவர்கள் தனக்கு எந்தப்பற்றும் கிடையாது எனக் கூறுபவர். ஆகவே அவர்களிடம் மொழிபற்றோ—நாட்டுப்பற்றோ நாம் எதிர்பார்க்க முடியாதது. அவர்கட்கெல்லாம் மேலிடம் தங்களைப் போற்றவேண்டும் என்ற ஒரே பற்றுத்தான் உண்டு. ஆகையால், அவர்கள் பெயர் மாற்றத்தால் என்ன ஏற்படப் போகின்றது என இருப்பவர்கள்.

இவர்கள்தான், தாய்நாட்டுப் பற்று, தாய்மொழிப்பற்று, தமிழினப் பற்று அனைத்தும் ஒருங்கே அமைந்த பாரதியின் புகழைப் பேசுகின்றனர்-தங்களுக்கு எந்தப் பற்றும் இல்லாமல்.

பாரதியார், "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" "சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே—அதைத் தொழுதுபடி பாப்பா" எனத் தமிழ்மொழியின் சிறப்பையும்,

"செந்தமிழ் நாடெனும் போதினிலே-இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே"—
"வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"—
"தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா—

எனத் தமிழ்நாட்டை — அதன் சிறப்பைப் பற்றியும்,

"விதியே! விதியே! தமிழ்ச் சாதியை
என் செயக் கருதி யிருக்கின்றாயடா!"

எனத் தமிழினத்தைப் பற்றியும், மிக அருமையாக அவாவோடும் — உரிமையோடும் பாடியிருக்கின்றார்.

பாரதியார், இன்று சென்னைக்குத் தமிழகமெனப் பெயர் சூட்ட வேண்டுமெனக் கோரும் எதிர்க்கட்சிகளெல்லாம் தோன்றுதற்கு

"செந்தமிழ் நாடெனும் போதினிலே—
இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே"

எனப் பாடியுள்ளார்.

யாருக்கு எதில் பற்று இருக்குமோ அதைப்பற்றிப் பேசுவதிலே அவருக்கு விழைவும் இருக்கும். அதுபோலத்தான் பாரதியாருக்குத் தமிழ்நாட்டின்மீது பற்றும் பாசமும் இருந்திருக்கின்றது. ஆகவே அவர், "சென்னை நாடெனும் போதினிலே"—எனப் பாடாது, "செந்தமிழ் நாடெனும் போதினிலே" எனப்பாடிச் சென்றார். அவர் வாழ்ந்தகாலம் சென்னை எனும் பெயரைப் போற்றிய வெள்ளையன் வாழ்ந்த காலம். அப்போதும் கூட அவர் தமிழ் நாடெனத்தான் பாடினார். தன் நாட்டுப் பற்றை — மொழிப் பற்றைக் காட்டினார்.

அத்தகைய இன்பத் தமிழ்நாடு தான் — பாரதியின் காதினிலே தேனைச் சேர்த்த செந்தமிழ் நாடு தான் — இன்று அவர்தம் புகழ் பாடும், இத்தமிழ்ப் புலிகளின் ஆட்சியில் எஞ்சிய சென்னை எனப் பெயர் பெற்று அனாதை போல் காட்சி அளிக்கின்றது. ஆம் சாலையின் ஓரத்திலே வேலை யற்றுத்திரியும் அனாதையை யார் என்ன பெயர் கொண்டழைப்பர்? அங்ஙிலேதானே இன்று தமிழகத்திற்கும்!

இந்தியத் துணைக்கண்டத்தில் ஒவ்வொரு மாநிலமும் மொழிவழி வந்த பெயரைப் பெற்று, வங்காளம், பஞ்சாப், ஆந்திரம் கேரளம் என—அருமையாய்க் காட்சி தருகின்றது. ஆனால் நமதருமைத் தமிழகம் — பன்னூறாண்டுகட்கு முன்னரே தனக்கென ஒரு பெரிய ஒப்பற்ற மொழியினைத் தமிழெனும் பெயரால் பெற்றிருந்தும், அதன் வழி தன்னை அழைக்க நாதியற்றிருக்கின்றது.

முன்னர் சென்னையோடிருந்த தெலுங்குப் பகுதி, சென்னையிலிருந்து பிரிந்ததால் ஆந்திரமாயிற்று. முன்னர் சென்னையுடன் இருந்த கன்னடம் பேசும் பகுதி—சென்னையிலிருந்து பிரிந்ததால் கன்னடமாயிற்று. அதுபோலத்தான் மலையாளம் பேசிய பகுதி இன்று கேரளமெனும் பெயரைப் பெற்றுத் தலை நிமிர்ந்து நிற்கின்றது. அவைகளுடன் இருந்த தமிழ்ப் பேசும் பகுதி அவைகள் எல்லாம் பிரிந்துவிட்ட இன்று—தமிழகமெனும் பெயரை — பாரதியார் விரும்பி அழைத்த—அந்தப் பெயரைப் பெறவில்லை. ஏன் பெறவில்லை?

இங்குள்ள மந்திரிகள் தமிழ் பேசவில்லையா? அல்லது தமிழகமென அழைக்க மொழி வரலாறு தெரியாதவர்களா? இல்லவே இல்லை.

தமிழ் முன்னிலும் சிறப்பாகப் பேசப்படுகின்றது —அவர்களால். தமிழின் தொன்மையையும் முன்னரே அறிவர். பின் ஏன் இந்நிலை? அவர்கள் அரசியல் உரிமையற்ற அனாதைகளாக இருக்கின்றார்கள். தாங்கள் எண்ணியபடி எதையும் செய்ய இயலாதவர்களாய், "கடிவாளம் மாட்டப்பட்ட குதிரை போல்" இருக்கின்றனர். ஆகவே தமிழகமும் அனாதைபோல் காட்சி தருகின்றது.

"சென்னை என்றால் உலகினுக்குத் தெரியும்--தமிழ்நாடென்றால் யாரும் அறியார்" என்கின்றனர் — பாரதியின் புகழைப் பார் முழுவதும் பேசும் பக்தவத்சலனார் போன்றார்.

ஆனால் அவர்களை ஒன்று கேட்போம். முன்னைய இந்தியா, "பாரதம்" ஆயிற்றே! யாரும் அறியாமலா இருக்கின்றனர்? வெளி நாட்டவரெல்லாம் நன்கு அறிந்துகொண்டு கடனையும் அளிக்கின்றனரே. இன்னொன்று இந்தியப் பாராளும் மன்றம் "லோக்சபா" ஆயிற்றே — அதை எத்தனை பேர் அறியாதிருக்கின்றனர்?

ஆகவே இன்று பாரதி விழாவில் பங்குகொண்டு, பாரதியின் புகழை உண்மையாகவே பேசுவதாக இருந்தால்—நம் மந்திரிமார்கள் உடனே சென்னையைத் தமிழ்நாடென அழைக்க வேண்டும். அவ்வாறு செய்யாது அரசியல் அனாதைகளாக இருந்துகொண்டு கண்துடைப்பிற்காக அவர்தம் புகழைப் பேசினால் பாரதியின் விருப்பம் உருப்பெறாது. தமிழ் மக்களும் மந்திரிகளின் போலி வேடத்தைக் கண்டு மயங்கிவிட மாட்டார்கள்.

★

நிதி தாரீர்!

மறைந்த வீரர் பி. பாலசுப்பிரமணியம் அவர்களுடைய அருந்தொண்டைப் போற்றும் அறிகுறியாக, அவரது குடும்பத்தாருக்கு உதவிசெய்யும் வகையில், திரு. பி. டி. இராசன் எம். எல். சி. அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. சி. என். ஏ., வி. வி. இராமசாமி எம். எல். சி. அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் எம். இரத்தினசாமி, டாக்டர் மதுரம் எம்.எல்.ஏ. ஆகியோர் துணைத் தலைவர்களாகவும்; செயலாளராக க. அன்பழகன் எம். எல். ஏ-யும்; செயற் குழுவினராக இரா. நெடுஞ்செழியன், வாணியம்பாடி வே. ச. விசுவநாதன், வேலூர் ஞ. மு. அண்ணல்தங்கோ, வழக்கறிஞர் கோகுலகிருஷ்ணன், சேலம் க. இராசாராம் ஆகியோரும் உள்ள இந்நிதிக் குழுவின் பொருளாளர், சென்னை 7. வேளாளர் தெரு 39-ம் இல்லத்திலுள்ள என். ஆர். சடகோபன் அவர்களாகும்.

மறைந்த 'அண்ணனின்' குணங்களைக் குறித்தும், திராவிட சமுகத்துக்கு அவராற்றிய தொண்டு பற்றியும், நாம் எடுத்துரைக்க வேண்டியதில்லை.

அத்தகைய ஒருவரைப் பெற்றிருந்து இன்று அவரில்லாததால் அவதியடையும் நிலையிலிருக்கிறது, அவரது குடும்பம். தமிழகம், தன் நன்றியைக் காட்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

பல துளி பெருவெள்ளமாகும்! இயன்றதை, நிதிக் குழுவின் பொருளாளருக்கு அனுப்பியுதவுங்கள் என்று 'திராவிடநாடு' சார்பில், கேட்டுக் கொள்ளுகிறோம்.

சிறுகதை

அந்தக் கடிதம்!

ச. இராமலிங்கம்

சென்ற இதழ் தொடர்ச்சி...

அந்தத் தினமும் வந்தது. தாயிடம் தைரியமாக "அம்மா உன் மருமகளை அழைத்துவரப்போகிறேன்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டேன்.

ஆனாலும் என் உள்ளத்தில் ஏனோ அச்சம். நான் அவளை என்னுடன் புறப்படு என்றால் எப்படி நம்புவாள்—அவள் எழுதிய கடிதம் ஒன்றுதான் என்னிடமிருந்தது. வேறு ஒரு ஆதாரமும் இல்லை; அத்தாட்சியும் இல்லை, நான் அவள் மாற்றாந்தாய் அனுப்பிய ஆள் என்பதற்கு.

இருப்பினும் சிறிது தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, போய்ப் பார்த்து, அவள் நிலைமையை அறிவது—அவளே புறப்பட்டு வருவதாக இருந்தால் அழைத்துக்கொண்டு வந்துவிடுவது--இல்லையென்றால் அங்கேயே விட்டு விட்டு, ஏதாவது அறிவுரை சொல்லிவிட்டு வந்துவிடுவது என்று திட்டமிட்டேன்.

அதற்கு ஏற்றாற்போல் தயார் செய்துகொண்டு அந்த வீட்டிற்கும் சென்றேன்! வெளியில் ஒரு சிறு பையன் விளையாடிக் கொண்டிருந்தான். அவனைக் கூப்பிட்டு "தம்பி தங்கம் இங்கேதானே இருக்கிறாள்" என்று கேட்டேன். "அக்கா யாரோ கூப்பிடறு" என்று அந்தப் பையன் உள்ளே கத்திக்கொண்டுபோக, ஒரு பெண் அல்ல — அல்ல — ஒரு அழகுரு ஓடி வந்தாள். நான், அவள் வீட்டு குட்டி எசமானி என்று நினைத்து மெதுவாக தலையைச் சொரிந்து கொண்டே "நான் வந்து...சென்னையிலிருந்து வர்ரேன். தங்கம் இல்லே...அவள் சின்னம்மா என்னை அனுப்பினாங்க" என்று அடக்கம் ஒடுக்கமாகப் பதில் சொன்னேன்!

அவள் சிரித்துக்கொண்டே "வாங்க அண்ணா நான்தான் தங்கம்" என்றாள். தங்கம் என்னை "அண்ணா" என்று அழைத்ததும் என்மேல் இடிவிழுந்ததுபோல் இருந்தது — "அண்ணா" என்று அவள் கூப்பிட்டதும் அவளைப் பின்தொடர எனக்கே வெட்கமாக இருந்தது. நான் எழுதிய கடிதத்தைக்கண்டு, சிற்றன்னை அனுப்பிய ஒருவன் ஆசை அண்ணனாக வந்து அழைத்துப் போகிறான் என்றல்லவா நினைத்துக்கொண்டிருக்கிறாள் அந்தப் பேதைப் பெண்!

வெட்கத்தோடும், உள்ளத்தில் வேதனையோடும் அவளைப் பின் தொடர்ந்தேன். அவளுக்கென்றே ஒதுக்கப்பட்ட ஒரு அறையில் என்னை உட்காரவைத்தாள். நானும் அமர்ந்தேன். அவள் மெதுவாகக் கதவை மூடினாள். எனக்கே சபலம் ஏற்பட்டுவிட்டது. நெருங்கி "அண்ணா! எனக்கு இங்கு இருக்கவே பயமாக இருக்கிறது! சின்னம்மா இவ்வளவு சீக்கிரம் ஆள் அனுப்புவார்கள் என்று நினைக்கவில்லை" என்று எனது காதின் அருகில் சொன்னாள்.

அவள் விட்ட மூச்சு என் கழுத்தின் மேல் பட்டதும் என் உள்ளத்திற்கு கிளர்ச்சி யூட்டுவதுபோல் இருந்தது—கதவு சாத்தியிருக்கும் அறை—காளைப் பருவத்தில் ஒரு வாலிபன் — பக்கத்தில், பருவப் பெண் — உணர்ச்சி மேலிடுவது போல் இருந்தது. எனக்கே என் மனச்சான்றை நம்பமுடியவில்லை. என் கைகள்... எனக்கே துரோகம் செய்துவிடுமோ என்றபயம்! இந்த நிலையில் நான் ஒரு காமுகனாகிவிட்டேன் என்றே நினைத்த அந்த வேளையில், திடீரெனக் கதவு திறந்தது. அந்தச் சிறிய பையன் ஓடி வந்தான்.

அந்தக் கிள்ளையைப் பார்த்ததும் இவள் துள்ளி ஓடி அவனைத் தூக்கிவந்தாள் "அண்ணா! இவனால்தான் நான் இங்கு இருக்கிறேன்! இப்போது நினைத்தால் கூட எப்படி இவனைப் பிரிந்து இருப்பதுஎன்றுதோன்றுகிறது" என்றாள்.

"ஏன் அவனையும் அழைத்துக் கொண்டு வரலாமே!" என்றேன்.

"வர்ரியா கண்ணு என்னோட—வந்தா மிட்டாய் எல்லாம் வாங்கித் தருவேன்" என்றாள்.

"நான் வரமாட்டேன் போ! நீ கூடப் போகக்கூடாது" என்றான்.

"சரி ஏது உன்னைவிடமாட்டான் போலிருக்கே! சின்னவனே இப்படி உரிமை கொண்டாடும்போது பெரியவன் ஏன் உரிமை கொண்டாட மாட்டான்."

"போங்க அண்ணா உங்க கேலி! இவன் பெரிய அண்ணாவைப் பார்த்தால்தான் ஒரேபயமா இருக்குது! இப்போ தீபாவளிக்கு வரப் போறானாம்! அவன் கையிலிருந்து எப்படியோ தப்பித்துக்கொண்டு வந்தேன் இதுவரை. அவனுக்குப் பயந்துகொண்டே அவன் தங்கையோடவே சுற்றிக்கொண்டிருக்கேன். அவளுக்குக்கூட ஆவணியிலே கலியாணம் ஆகிவிட்டது. இந்த லீவுக்கு வந்தா..."

"அதற்குள்தான் நான் வந்துவிட்டேனே! ஏன் தங்கம் நீ இங்கேயே எப்படியாவது சமாளித்துக் கொண்டிருக்க முடியாதா!

"அண்ணா! நான் கஷ்டப்படுவதற்குப் பயப்படவில்லை; ஆனால்

நான் சமூகத்தில் வாழமுடியாதவளாக வாழக்கூடாது என்பது தான். எனக்கு அங்கு போனாலும் இதைவிடக் கஷ்டம்தான்; தெரியும். இருப்பினும் என் மானத்தை விலைபேசும்நிர்பபந்தம்ஏற்படாது''

"எப்படித் தங்கம் சொல்லமுடியும்! அங்கு யாராவது ஆசை காட்டி மயக்கிவிட்டால்!''

"யாராவது இருக்கலாம்! ஆனால் அண்ணா உன்னைப்போன்றவர்கள் எனக்கு உற்ற துணையாக இருக்கும்போது, எனக்கு ஒன்றும் ஏற்படாது என்று நம்புகிறேன்; இல்லையா அண்ணா!'' என்றதும் நானே என்னை நொந்துகொண்டேன்! வெளுத்ததெல்லாம் பால் என்று நினைக்கும் இந்தப் பெண்ணின் மேல் வீணாக ஆசைப்பட்டு விட்டோமே. தங்கம் எனக்குத் தகுந்த அணிகலன் ஆவாள் என்று நினைத்தஎனக்குப்பெருத்த ஏமாற்றம் ஏற்பட்டுவிட்டது. இருப்பினும் ஒருபுறம் அவள் அழகையும், உடல் வனப்பையும் கண்ட என் மனம் ஏனோ விட்டுக்கொடுக்கச்சம்மதிக்கவில்லை. எப்படியாவது மெதுவாக அவள் உள்ளத்தை மாற்றிவிடலாம். ஊருக்கு அழைத்துச்சென்று உண்மையைக் கூறிவிட்டால் கட்டாயம் மாறிவிடுவாள் என்ற எண்ணத்துடன், "தங்கம் எப்போது புறப்படுவது? நீ உன் எசமானரிடமெல்லாம் சொல்லியாகிவிட்டதா'' என்றேன்.

"நான் நீங்கள் எழுதியிருந்த கடிதத்தையே காண்பித்தேன் அண்ணா! அவர்கள், "சரி போய் விட்டு வா'' என்று காலையிலேயே சொல்லிவிட்டார்கள். நாம் எப்போது வேண்டுமென்றாலும் புறப்படலாம். சாயங்காலமாகப் புறப்படலாமே! நீங்களும் காப்பி சாப்பிட்டுவிட்டு, வரதராசப் பெருமாள் கோவிலுக்குப் போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள். இங்கு வருபவர்கள் யாரும் பார்க்காமல் போவதில்லை'' என்றாள்.

"சரி'' என்று சொன்னதும் அவள்போய் காபி கொண்டுவந்து கொடுத்தாள்.

*

காபியைக் குடித்துவிட்டு நான் வரதராசப் பெருமாள் கோவிலுக்குப் புறப்பட்டேன். கூட்டத்திற்கு குறைவில்லை! எனக்குக் கோவில் என்றாலே பிடிக்காது; இருப்பினும் ஏதாவது நல்ல சிற்பங்களைப் பார்த்துவிட்டு வரலாம் என்று தான் உள்ளே நுழைந்தேன்.

ஏதோ மண்டபமாம்! ஏறக்குறைய நூறு தூண்கள் இருக்கும். அதில் செதுக்கி இருக்கும் சிலைகள் அதைச் செதுக்கிய சிற்பியின் கைத்திறனையும் உள்ளக் கிளர்ச்சியையும் காட்டுவதுபோல் இருந்தது. விதவிதமான மங்கையர்கள்—சிற்பிகள் நிர்வாணத்தை ரசிப்பவர்கள்போல் இருக்கிறது! எந்த இடத்தில் உள்ளத்தின் உணர்ச்சிகளை அடக்கி ஆண்டவனை நாடவேண்டும் என்று சொல்கிறார்களோ, அங்கேதான் காமத்தை மூட்டும் கற்சிலைகள். இதைவிடக் கோவில் வாயிலின் கற்தூண்களில் காணப்பட்ட அந்தச் சிற்பங்களை ஏன் இன்னும் அழிக்காமல் வைத்திருக்கிறார்கள்! ஆத்திகத்திற்கு ஆதரவு தரும் தோழர்களுக்கு இது கண்ணில் படவில்லைபோலும்! பட்டும் அதை ரசிப்பதற்காகவே விட்டு வைத்திருக்கிறார்கள்போலும்!!

இதையெல்லாம் நினைத்த என் உள்ளம் ஏனோ மேலும் உள்ளே செல்ல மறுத்துவிட்டது; வீட்டிற்குத் திரும்பினேன்.

"என்ன அண்ணா இவ்வளவு சீக்கிரம் சாமிகும்பிட்டுவிட்டுவந்துவிட்டீர்களா'' என்றாள் தங்கம்.

"இல்லை தங்கம், வழியில் ஒரு நண்பர் கிடைத்தார், அவருடன் பேசிக்கொண்டே வந்துவிட்டேன்'' என்று ஒரு பொய் பேசினேன்'' அவளும் நம்பிவிட்டாள்.

அன்றுமாலை பஸ்ஸில் புறப்பட்டோம். நான் தனியாகத்தான் உட்காரலாம் என்று நினைத்தேன். பஸ்ஸில் இருந்த சூழ்நிலை இடம் தரவில்லை; நான் அவள் பக்கத்தில் உட்காரவேண்டியிருந்தது.

பஸ் திரும்பும்போதும், திடீரென்று நிற்கும் போதும். அவள் உடல் என்மேல்பட்டது. எனக்கு உடலெல்லாம் புல்லரித்தது. ஆனால் அவள் இந்த உணர்ச்சிக்கெல்லாம் வசப்பட்டதாகத் தெரியவில்லை! அவள்தான் என்னை அண்ணா என்று அழைத்துவிட்டாளே!

வழியெல்லாம் என் கடிதம் எழுதும் திறனை நானே மெச்சிக்கொண்டேன்! எவ்வளவு பக்குவமாக எழுதியிருந்தால் வீட்டு எசமானர் முதல் ஏமாந்திருப்பார்கள்!!

சென்னை வந்ததும், பஸ்ஸை விட்டிறங்கி ஒரு ஆட்டோ ரிக்ஷா பேசிப் புறப்பட்டோம்!

"எங்கே அண்ணா நேரே சின்னம்மா வீட்டிற்குத்தானே''

"இல்லை தங்கம் முதலில் என் வீட்டிற்குப் போய்விட்டுப் பிறகு அங்கிருந்து போய்விடலாம். முதலில் என் அம்மா உன்னைப்பார்க்க ஆசையோடு இருக்கிறாள்''

"அண்ணா! நீங்கள் செய்யும் இந்த உதவிக்கு நான் எப்படி நன்றி செலுத்துவது என்று தெரியவில்லை'' என்றுகண்கலங்கச் சொன்னாள். என் கண்களும் சிறிது கலங்கத்தான் செய்தது.

வீடு வந்ததும், பெட்டியை எடுத்துக்கொண்டு தங்கம் இறங்கினாள். நான் ஆட்டோ ரிக்ஷாக்காரனுக்கு காசைக் கொடுத்துவிட்டு "அம்மா அம்மா நான் அழைத்துக்கொண்டு வந்துவிட்டேன்'' என்றேன்.

"அங்கேயே இருடா ஆலம் கொண்டு வருகிறேன்'' என்று அம்மாஉள்ளிருந்து சொன்னதும்,

"என்ன அண்ணா இது? விளையாட்டாக இருக்குது'' என்றாள் தங்கம்.

"பாரேன் இன்னும் வேடிக்கையை, போகப் போகத்தான் தெரியும்'' என்று நான் சொல்வதற்குள், தாய் ஆலம் கரைத்துக்கொண்டு அதில் கற்பூரம் ஏற்றி வைத்துக்கொண்டு,

"நில்லும்மா கண்ணு, டேய் பக்கத்திலே சரியா நில்லேண்டா'' என்று ஆலம் சுற்ற ஆரம்பித்தாள். ஆலம் அவள் முகத்தருகில் சுற்ற ஆரம்பித்ததும், என் தாய் அவளையே உற்றுக் கவனித்தாள்.

சரி மருமகள் அழகை பார்க்கிறாள்போலிருக்கிறது என்று நான் சும்மா இருந்துவிட்டேன். திடீரென்று தட்டை அப்படியே வைத்துவிட்டுத்தங்கத்தின்இடது முழங்கையின் பின்புறம் பார்த்தாள். அங்கு ஒரு பெரிய மச்சம் இருந்தது. உடனே "ஐயோ என் மகளே! தங்கம்'' என்று அப்படியே சேர்த்துக் கட்டிக்கொண்டாள்.

(12-ம் பக்கம் பார்க்க)

விடுதலை வீரன் ரிசால்

மு. கோதண்டன்

பிலிப்பைன் நாடு இயற்கை வளம் நிறைந்த நாடு. உழைக்கும் நல்வீரர்கள் உலவும் நாடு. அன்று வெள்ளையர் தம் அடிமைக்காடாய் இருப்பதை நினைக்கவே முடிய வில்லை அவனால்! சோகமும் கோபமும் பீறிட்டெழ 'அம்மா' வென்றோடினான் ரிசால்! 'என்ன மகனே!' என்று அன்போடு கேட்டாள் அவன் தாய். 'நாம் வாழும் இந்தப் பிலிப்பைன் நாடு, நமது நாடுதானே அம்மா என்றான். 'ஆமாண்டா, கண்ணே!' என்றாள் அன்னை. 'பின் ஏனம்மா நம் நாட்டை அந்நியரான வெள்ளையர் ஆள்கிறார்கள்' என்று ஆத்திரத்தோடு கேட்டான் ரிசால். 'நம் நாட்டைப் போரிலே வென்று விட்டார்களாம் ஒரு காலத்தில் வெள்ளையர்கள். இன்று நம்நாடு சுதந்திர நாடல்ல கண்ணே! அடிமை நாடு! அடிமை நாடு!!' என்று ஆவேசமாய்க் கூறினாள் அவள். 'அம்மா! அடிமை வாழ்வை அகற்றுவேன், அந்நியரை விரட்டுவேன்!' என்று வீர முழக்கமிட்டான ரிசால். 'கண்ணே நீ இன்று சிறியவன்! நாளை பெரியவனானால் செய்வாய்!' என்று அன்போடு மார்பில் அணைத்துக் கொண்டாள் தன் அன்பு மகனை!

1861-ம் ஆண்டு ஜூன் மாதம் 19-ம் தேதி ஓர் புகழ்பெற்ற வீரக் குடும்பத்தில் பிறந்தான் ஜோசி ரிசால்! அவன் தாய் ஒரு சிறந்த கவியரசி. நாட்டு உணர்ச்சியைத் தூண்டும் உயர்ந்த கவிதைகளை எழுதும் ஆற்றல் பெற்றவள். அவன் தந்தை ஓர் புகழ்பெற்ற அறிஞன்.

ரிசால் இயற்கையில் எதையும் ஆழ்ந்து நோக்கும் சிந்தனைத் தெளிவும், எதையும் கூர்ந்து கவனிக்கும் உயர்ந்த அறிவும், நினைத்ததைச் செய்து முடிக்கும் பேராற்றலும் உடையவன். அப்பொழுது பிலிப்பைன் ஸ்பானியர் என்னும் வெள்ளையரது அடிமை நாடாய் இருந்தது. தன் நாட்டின் பொன்னும் பொருளும் அந்நியரால் சுரண்டப்படுவதையும், அதனால் தன் நாட்டவர் வறுமையிலிருந்து மீளாமல் செத்துக்கொண்டிருப்பதையும், ஸ்பானிய அதிகாரிகள் செய்யும் கொடுமையையும் எண்ணி எண்ணி மனம் புழுங்கிக்கொண்டிருந்தான். அப்போது ரிசாலுக்கு பதினொரு வயது. ஆயினும் தன் தாய் எழுதிக்கொடுக்கும் தேசிய எழுச்சிமிக்க பாடல்களை, இனிமையாகப் பாடும் ஆற்றல் பெற்றிருந்தான். தானே வீரமிக்க கவிதைகளை இயற்றும் அறிவும் பெற்றிருந்தான். தான் எழுதிய கவிதைகளைத் தன் நண்பர்களிடம் இனிய இசையோடு உணர்ச்சி பொங்க அழகாகப் பாடிக் காட்டுவான்!

ஸ்பானிய ஆட்சியைக் கவிழ்க்க பிலிப்பைன் மக்களைத் தூண்டியதாகக் குற்றம் சுமத்தி ரிசாலின் தந்தையைச் சிறையில் அடைத்தனர் ஸ்பானியர். நாட்டுணர்ச்சியைத் தூண்டும் புரட்சிக் கவிதைகளை இயற்றியதாகக்கூறி அவனது தாயையும் சிறையில் பூட்டினர். ரிசால் தணலில் விழுந்த புழுவெனத் துடித்தான்! அலையிலகப்பட்ட துரும்பெனத் தவித்தான்! செய்வதொன்றும் புரியாது விழித்தான். இது போன்ற அதிர்ச்சிகளை அவன் இதுவரையில் தாங்கியதில்லை. அந்நியரின் செயல் கண்டு ஆத்திரம் எய்தியது அவனுள்ளம். சூதுக்காரர்களைச் சும்மாவிடுவதா என்று துடிதுடித்தான். தன்னந் தனியாகத் தான் ஒருவன் மட்டும் எதிர்த்தால் நாட்டிற்கு நம்மால் நன்மை ஏதாகிலும் பயக்குமா என்று யோசித்தான். 'இன்றைய நிலையில் உருவான பயன் ஏதும் ஏற்படாது. நாட்டுணர்ச்சியைத் தூண்ட வேண்டும்; நானிலம் புகழும் நல்லறிவு பெறவேண்டும். பரங்கியரே அதிசயிக்கும்படி படித்துப் பட்டம் பெறவேண்டும். பிலிப்பைன் நாட்டைப்பற்றிப் பாரறியச் செய்யவேண்டும்' என்று எண்ணினான். எண்ணியபடி செயல்படவும் தொடங்கினான்!

ஆண்டுகள் சில கழிந்தன. ரிசால் மணிலாக் கல்லூரியில் ஊக்கமுடன் படித்துக்கொண்டிருந்தான்! அப்போது சிறையிலிருந்து விடுதலை அடைந்தாள் அவன் அன்னை. தன் மகனின் அறிவு வளர்ச்சியும், நாட்டு உணர்ச்சியும் கண்டு அவனது தாய் புத்துணர்ச்சி பெற்றவளாய் புளகாங்கிதமடைந்து அவனைக் கட்டி அணைத்துக்கொண்டாள்.

"மகனே! நீ நன்கு படிப்பாய், நாடு விடுதலைபெற உழைப்பாய் என்று ஒவ்வொரு விநாடியும் சிறையிலிருக்கும்போது நினைத்துக்கொண்டிருந்தேன். அந்த

நினைப்பு வீண் போகவில்லை கண்ணே, நீ முதலில் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்க வேண்டும்! பட்டம் பெறவேண்டும்; பார் புகழவேண்டும்! உன்னால் இந்நாடு விடுதலை அடைய வேண்டும்; அன்னையின் கைவிலங்கு அறுபடவேண்டும்!"

"அன்னையே! அன்னை நாடு அடிமை நாடு என்பதை ஒவ்வொரு நிமிடமும் நினைக்காமலிருப்பதில்லை. இந்நாட்டவர் வாழ இயற்கை வளமெல்லாம் தந்தாள் என் அன்னை. இந்நாடு உரிமையற்றிருக்க நாங்களென்ன உலுத்தர்களா? உதவாக்கரைகளா? சொல்லுங்கள் அன்னையே!"

"மகனே! நீ பேசும் பொற்சித்திரமாக இருக்கும்போது உனக்குப் பாலை மட்டுமா ஊட்டினேன்? பாலோடு நாட்டுப் பற்றையும் கலந்தல்லவா ஊட்டினேன்? பிலிப்பைன் நாட்டின் விதியை நிர்ணயிக்க வேண்டியவனல்லவா நீ? நன்கு படி கண்ணே!" என்று ஆசிகூறி உரையாடலுக்கு முற்றுப் புள்ளி இட்டது அவனது அன்னையின் அன்புள்ளம்.

காலச் சக்கரம் சுழல, கல்லூரிப் படிப்பை முடித்துக்கொண்டு, ஆசிரியர்களின் நன்மதிப்பையும் பெற்றுக்கொண்டு, மாட்ரிட் பல்கலைக் கழகத்திற்குச் சென்று பொறியியல் துறையில் முதல்வனாகத் தேர்வுபெற்று, பிரெஞ்சு நாட்டிற்குச் சென்று பிரெஞ்சு மொழியும், மருத்துவமும், ஜெர்மனிக்குச் சென்று ஜெர்மனியும், இரசாயனக் கலையும், இயந்திரக் கலையும் கற்றுக்கொண்டான். இவ்விதம் அவன் பல பல்கலைக் கழகத்திற்குச் சென்று மருத்துவத் துறை, சட்டத் துறை, கலைத் துறை ஆகிய பல துறைகளில் சிறந்து விளங்கி உயர்ந்த அறிவைப் பெற்றான்.

இந்த நேரத்தில்தான் ரிசால், "பிலிப்பைன்" என்றொரு ஆராய்ச்சி மிகுந்த நூலை எழுதினான். அந் நூலில் பிலிப்பைன் நாட்டின் இயற்கை வளத்தைப் பற்றியும், அந்நாட்டின் சிறந்த துறைமுகங்களைப் பற்றியும், விரிவாகவும், விளக்கமாகவும் எழுதியிருந்தான். அதில் பிலிப்பைனரின் முன்னோர்கள் ஒரு காலத்தில் எப்படி வீரமும், தீரமும், சுதந்திரமும் பெற்றுச் சிறந்து வாழ்ந்தனர்; இன்று அவர்களின் சந்ததியினர் அந்நியர் ஆட்சியில் சிக்கி எப்படி அல்லற்படுகின்றனர். என்பதைப் பற்றியும் எழுதியிருந்தான். "பிலிப்பைனரின் முன்னோர் சிறந்த கவிஞர்கள், கல்லைச் சிலையாக்கிக் கருத்தைக் கிளரச் செய்யும் உயர்ந்த சிற்பிகள். அந்நியருக்கு அடிபணியாத ஆண்மையாளர்கள். அந்நாட்டின் பெண்கள் அடக்கமும், அன்பும், கற்புநெறி தவறாத பண்பும்மிகுந்தவர்கள். இத்தகைய ஓர் சிறந்த பண்பாடும், நாகரிகமும் மிக்கவர்கள் அந்நியரிடம் அடங்கியிருக்க, நாமென்ன ஆமைகளா? ஆண்மையற்றவர்களா? ஆர்த்தெழுங்கள் தோழர்களே! அந்நியரை விரட்டுவோம்! அன்னை நாட்டை மீட்போம்!" என்று புரட்சிக் கனல் தெறிக்க உரிமை முழக்கம் செய்திருந்தான் ரிசால்!

1887-ம் ஆண்டில்தான் அதை முதல் முதலில் வெளியிட்டான். அந் நூலைக் கண்டு ஆட்சியே அலறியது. அந்த நூல் நாட்டினுள்ளே வரலாகாது என்று தடை விதித்தனர் ஸ்பானியர். அந்த நூலைப் படித்தாலோ, அல்லது படிப்பவர் பக்கமிருந்து கேட்டாலோ, அவர்கள் செல்வம் முழுவதும் பறிமுதல் செய்வதோடு, நாடு கடத்தப்படுவார்கள். அந் நூலை வைத்திருப்பவர்களைத் தெரிவித்தால் அவர்களுக்கு நிறையப் பரிசளிக்கப்படும் என்று ஓர் சட்டமிட்டு அதை நாடறியச் செய்தார்கள். ஆயினும் இரவு நேரங்களில் யாருமறியாவண்ணம் பிலிப்பைனர் பலர் அந் நூலை மறைவாகப் படித்தனர். படித்து நாட்டுணர்ச்சி பெற்றனர். பெற்றவர்கள் ஒன்றுகூடித் தனியரசுக் கழகம் ஒன்றை உருவாக்கி அதன் தலைமைப் பதவியை ஏற்கும்படி ரிசாலுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினர். அதற்கு ரிசால் "நான் தலைவனாக இருக்க விரும்பவில்லை; சாதாரணத் தொண்டனாகவே இருக்க விரும்புகிறேன்! என்னை மன்னியுங்கள்!" என்று பதில் எழுதி அனுப்பிவிட்டான்!

ரிசால் அழகிய தோற்றமும்' அகன்ற நெற்றியும், அன்பு சொரியும் கண்களும், எவரையும் விரைவில் மயங்கவைத்துவிடும். நகைச்சுவையுடன் தெளிவாகவும், அழகாகவும் பேசுவதில் ஈடு இணையற்றவன். அவனுடைய அழகிய உருவத்தைக் கண்டு பிலிப்பைன் நாட்டு அழகி ஒருத்தி தன் உள்ளத்தையும், உடலையும் அவனிடம் ஒப்படைத்தாள். ரிசாலும் அவளை உயிரினும் மேலாக நேசித்து வந்தான். வெளிநாடுகட்குப் படிக்கச் சென்றிருந்தபோதும் அடிக்கடி அவளுக்குப் பல காதற் கடிதங்கள் எழுதிக் குவித்துக்கொண்டிருந்தான். ஆனாலும் அந்த அழகியின் தாய் அவனை வெறுத்தாள்; ஏனெனில் அவனொரு புதுமையாளன், புரட்சியாளன்; அவனைச் சாவு எந்த நேரத்திலும் அணைத்துக்கொள்ளும் என்ற அச்சத்தால். ரிசால் எழுதும் காதற் கடிதங்கள் அனைத்தையும் படித்துப் பார்த்துவிட்டுத் தீயிலிட்டுப் பொசுக்கிவிடுவாள் அந்த அழகியின் அன்னை. தன் அருமைக் காதலனிடமிருந்து ஒரு கடிதம்கூட வரவில்லையே என்று கசிந்துருகிக் கண்ணீர் சொரிந்துகொண்டிருந்தாள் அந்தக் கட்டழகி. அந்நிய நாட்டு ஆடலழகிகளின் வலையில் சிக்கிவிட்டானோவென்று ஐயப்பட்டாள் அந்த ஆரணங்கு. ரிசாலைப்பற்றிப்பொய்யுரைகளைவிடாது புனைந்துரைத்துக்கொண்டிருந்தாள் அவளுடைய தாய். அதை அவளால் நம்பமுடியவில்லை — ஆயினும் ஒன்றும் புரியாது குழம்பினாள். இந்நேரத்தில் அவள் தாய் அவளைக் கட்டாயப்படுத்தி வேறொருவனுக்கு மணம்செய்து வைத்தாள். மங்கையின் மனம் மாறவில்லை. மனதுக் இசைந்தவனை மணக்க முடியவில்லையே என்ற மாறாத மனக்குழப்பத்தால் நாளுக்கு நாள் மெலிந்தாள். ரிசாலின் நினைவால் உடல் தளர்ந்தாள். சில மாதங்களில் நோயுற்று அந்த எழிலும் இளமையும் நிறைந்த இளநங்கை இறந்தாள்.

தன் காதலி இறந்தாள் என்ற செய்திகேட்டு உலகமே இருண்டுவிட்டதுபோல் கலங்கினான், மலை குலைந்தாலும் நிலைகுலையாத மாவீரன் ரிசால்! அப்பொழுது மனக்கலக்கத்துடன், கருகிய தன் காதலைப் பற்றியும், கயவர்தம் கையில் சிக்கிய தன் நாட்டைப் பற்றியும் மிக உருக்கமாக "எல் பிலிபஸ்ட் ரிஸ்மோ" என்ற ஓர் புகழ்பெற்ற நாவலை உருவாக்கி 1891-ம் ஆண்டு வெளியிட்டான். அந்நேரத்தில் அவன் தாயிடமிருந்து அவனுக்கு ஒரு கடிதம்

வந்தது. அதில் "மகனே! உடல் நலிவுற்று இருக்கிறேன். என் வாழ்வில் ஒளியேற்ற ஓடிவா!" என்றிருந்தது. கடிதத்தைக் கண்டதும் தன் தாயைக்காணத் தாயகம் திரும்பினான். தாயின் உடலையும் சீர்ப்படுத்தினான்.

1892-ம் ஆண்டு ஜூலை மாதம் ரிசால் தன் வீட்டில், பிலிப்பைன் தேசத்து இளைஞர்களையும், தொழிலாளர்களையும் ஒன்று திரட்டித் தன் திட்டத்தைக் கூறினான். "பிலிப்பைனர் இரகசிய சங்கம்" என்றொரு அமைப்பை ஏற்படுத்தி குழுக்கள் அமைத்து நாடு முழுதும் சூறுவளிப் பிரசாரம் செய்துவந்தான். திடீரென்று ஒரு நாள் ரிசால் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டான். அப்போது அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்குச் சென்று தன் நாட்டில் அந்நியர்கள் செய்யும் கொடுமைகளை எடுத்துரைத்தான். பின்னர் சீனாவிற்குச் சென்று ஹாங்காங்கில் கண்வைத்தியத் தொழிலை நடத்தி அதில் வந்த ஏராளமான பணத்தையும் தன் நாட்டிற்காகவே செலவு செய்தான். அந்தச் சமயத்தில் விடுதலை எழுச்சி மிக்க பல நூல்களை இயற்றி வெளியிட்டான். பல பத்திரிகைகளில் நாடு விடுதலை பெறவேண்டிய அவசியம் குறித்து உணர்ச்சிகரமான கட்டுரைகளை எழுதினான். இதைக் கண்ட ஸ்பானியர் ஆட்சி மீண்டும் அலறியது. கடைசியில் ரிசாலின் உறவினர்களையெல்லாம் சிறையில் தள்ளிக் கொடுமைப்படுத்தினர் ஸ்பானியர்.

"என்மேல் உள்ள கோபத்தால் என் உறவினர்களைச் சிறையில் அடைத்துக் கொடுமை செய்கிறதே இந்தக் கொடுங்கோலர் ஆட்சி" என்றெண்ணி, மணிலா நகர் வந்தடைந்தான் அந்த மாமேதை! சிங்கம் தானே வந்து கூண்டிற்குள் சிக்கிவிட்டதே என்ற பூரிப்பால் ரிசாலைச் சிறைப் பிடித்து டாபிடான் என்ற ஊரில் சிறைவைத்தனர். அந்த ஊரைச் சுற்றிப் பார்க்க மட்டும் அவனுக்கு அரசாங்கம் அனுமதியளித்தது.

இங்கிலையில் கண் வைத்தியத்திற்காக ஓர் ஆரணங்கு அவனிடம் அடிக்கடி வந்துகொண்டிருந்தாள். அம்மலர் விழியாள் அவனை விரும்புவதை அறிந்ததும், அவனுள்ளத்தில் மங்கி மறைந்திருந்த காதலுணர்வு மீண்டும் மலர ஆரம்பித்தது. சிறிது காலத்தில் அந்த மனங்கவர்ந்தாளையே மணந்துகொண்டான். கருத்தொத்த அக்கட்டழகியும் கணவனுடன் பொது வாழ்வில் ஈடுபட்டாள்.

புரட்சிப் பாக்களை இயற்றி இரகசியமாக நண்பர்களோடு நாடறிய வெளியிட்டான் ரிசால்! அதில் "புறப்படுங்கள் களம் நோக்கி, என்னரும் பிலிப்பைனர்களே! புதுவாழ்வு பெறுவோம்! புல்லர்களை விரட்டுவோம்! புனிதப்போர் தொடுப்போம்!" என்று விடுதலைப் பண் பாடினான். இக்கருத்துக்கள் பிலிப்பைனரின் நரம்புகளிலே சென்று முறுக்கேற்றின. கோழை வீரனானான்! நாடு கொந்தளித்தது! புரட்சி! எங்கும் புரட்சி!!

1896-ம் ஆண்டு ரிசாலும், அவன் மனைவியும் டாபிடானிலிருந்து மணிலா நகர் வந்தடைந்தார்கள். அரசாங்கம் விடுதலை வீரர்களைப் பிடித்துக் கடுமையாகத் தண்டித்தது. பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். ரிசாலைக் கைதியாக்கிச் சிறையில் அடைத்தனர். இராணுவ நீதிமன்றத்தில் வழக்கு நடந்து அவன்மீது இரண்டு குற்றங்கள் சாட்டப்பட்டன. "அரசியல் சட்டத்திற்கு விரோதமாக "பிலிப்பைனர் இரகசியசங்கம்" என்றொரு அமைப்பை ஏற்படுத்தியது முதல் குற்றம். எங்கள் ஆட்சியின் துப்பாக்கியை எதிர்க்கின்ற அளவுக்கு பெரும் புரட்சியை உண்டாக்கியது உன் பேனா — இது இரண்டாவது குற்றம்."

இந்த இரண்டு குற்றங்களுக்கும் நாளை 1896-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30-ம் நாள் காலை கதிரவன் எழ ரிசால் சுட்டுக் கொல்லப்படவேண்டும் என்று இராணுவக் கோர்ட் தீர்ப்புக் கூறியது.

காலை மலர்ந்தது. சாண்டியாக்கோ கோட்டையிலிருந்து தூக்குமேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டான் கால்நடையாக. தூக்குமேடையில் ஏறி ஒளி பொருந்திய கண்களோடு நிமிர்ந்து பார்த்தான் ரிசால்! ஒரு பக்கத்தில் அவனது அன்னையும், அருமை மனைவியும், அன்புத் தந்தையும் அழுதபடியே நின்றிருந்தனர். மற்றொரு பக்கம் உறவினர்களும், நண்பர்களும், பிலிப்பைனர்களும் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தனர். இந்நிலையில் ரிசாலை நோக்கி "நீ ஏதாவது பேசுவதாயின் சிறிது நேரம் பேச அனுமதி இருக்கிறது," என்றான் ஸ்பானிய அதிகாரி. ரிசால் மிகவும் உருக்கமுடன் பேச ஆரம்பித்தான்.

"என்னரும்பிலிப்பைன்மக்களே! இன்னும் கொஞ்ச நேரத்தில் என்னை, அந்நியர் ஸ்பானியர் சுட்டுக் கொல்லப் போகிறார்கள். அதைக்கண்டு நான் அஞ்சவில்லை. அன்னை நாடு அடிமை நாடாய் அந்நியர் பிடியில் இருக்கக் கண்டும் வாளா இருப்பவன், அம்மண்ணில் பிறந்தவன் என்று நினைத்துக் கொள்வதற்கும், தன்னை ஒரு மனிதன் என்று கூறிக்கொள்வதற்கும் அருகதை அற்றவன்

மகா கவிகளைப்போலக் கனவு கண்டவர்களை எங்குமே காணமுடியாது. நம்முடைய அறிவுக்கெல்லாம் எட்டாத எத்தனையோ அற்புதமான கனவுகளை அவர்கள் கண்டுகொண்டே இருப்பார்கள். உலகிலே எங்கும் காணமுடியாத ஒரு மனோரம்மியமான நாட்டை மகாகவிகள் தங்கள் காவியத்திலே உண்டாக்கி விடுவார்கள். கோடானுகோடி செலவில், நூற்றுக்கணக்கான தச்சர்கள்கூடிப் பல்லாயிரக்கணக்கான வேலையாட்களைக் கொண்டு நிர்மாணிக்கிற பெரிய பெரிய நகரங்களும், அங்கு காணப்படும் அழகோவியங்களும் சிதைந்து அழிந்துமறைந்து மண்ணோடு மண்ணாய்ப் போனாலுங்கூட, இந்தக் கவித்தச்சர்கள் கட்டிய மாளிகைகளும் உயிரோவியங்களும் அழியாத நிலையைப் பெற்றுவிடுகின்றன. ஆகவேதான் அறிஞர்களைப் பாராட்டுகிற உலகம் மேதைகளை வணங்குகிறது; புலவர்களை வாழ்த்துகிற உலகம் கவிஞர்களை ஏத்துகிறது.

என்பது என் கருத்து. கடைசியாக இந்த அற்ப ஆசைக்காரர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். விடுதலை வீரர்களை, யாராவது துப்பாக்கியைக் காட்டியோ, தூக்குமேடையில் நிறுத்தியோ அவர்கள் உள்ளத்தை மாற்றமுடியும் என்று நினைத்தால், அது அவர்கள் அறியாமையையே எடுத்துக்காட்டும். தாயக உணர்ச்சியுடையவர்களை, ஆணவக்காரர்களே! அவர்களின் அங்கங்களை அணுவணுவாக அறுத்தெறிந்தாலும் "விடுதலை, விடுதலை விடுதலை" என்ற உரிமைத்தாகம் தணியாது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

அடிமையாய் அந்நியருக்கு அடி பணிந்து, ஆமையாய் ஆண்மையற்றவர்களாய் வாழ்வதைவிட ஆதிக்கக்காரர்களை எதிர்த்து அழிவதே மேல்! விடுதலை என்பவரை, வீணர்களே! சுட்டு வீழ்த்தலாம். சுதந்திரம் வேண்டும் என்போரை, சூதுக்காரர்களே! தூக்கு மேடைக்கு அழைத்துச் செல்லலாம். நாடு என்பவரை ஓடு என்று நாடுகடத்தலாம். உரிமை என்போரை உயிர் போகும் வரை உதைக்கலாம். உலுத்தர்களே! அவர்களின் உள்ள உறுதியை மாற்ற முடியுமா உங்களால்?

தணலின்மேல் நிறுத்தி, தடியால் அடித்து மண்டையை உடைத்து, இரு விழிகளையும் பிடுங்கி, நாடு கேட்பாயா? என்றால் அப்பொழுதும், நான் மட்டுமல்ல, என் உடலிலிருந்து வழியும் ஒவ்வொரு துளி இரத்தமும் நாடு நாடென்றே முழங்கும். இன்று இந்த ரிசாலைச் சுட்டு வீழ்த்தலாம். ஆனால் அவன் கூறிய கருத்துக்கள் உலவிக்கொண்டே இருக்கும் கடைசி பிலிப்பைனன் ஒருவன் இருக்கும் வரை! என்னைப்போல் தோன்றிக்கொண்டே இருப்பார்களே, அவர்களுக்கெல்லாம் நீங்கள் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்........

அன்னையே!... அறிவிற் சிறந்த தந்தையே!...... அறுசுவை உணவளித்து அறிவைப் புகட்டி அன்புடன் வளர்த்தீர்கள் என்னை. உங்கள் அன்புத் திருமகன் அன்னை நாட்டை மீட்கத் தன் ஆவியைத் துறந்தான் என்று கூறிப் பெருமைப்படுங்கள்! புளகாங்கிதம் எய்துங்கள்!

என்னரும் மனைவியே! என்னுயிரே! கலங்காதே! கண்ணீர் விடாதே. தன் கணவன், தாய் நாட்டிற்குத் தன்னுயிரைத் தருவதையே கடமையாக, பெருமையாக எண்ணுகிறேன் என்று எண்ணிப் பூரிப்படை!

நண்பர்களே! அன்னை நாட்டில் அந்நியர்கள் அரைக்கணமும் இருக்கச் சம்மதிக்காதீர்கள்! நாடு மீட்டு நலம்பெற்று வாழுங்கள்! நான் செய்யவேண்டிய கடமை முடிகிறது. தொடர்ந்து செயலாற்றுங்கள். என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்!

அன்னைத் திருநாடே! இதுவரை உன் அடிமைத்தளையை அறுக்கப் பாடுபட்டேன். இன்று உன்னைப் பிரிகிறேன். விடுதலை பெற்று நீ நீடுழி வாழ்க!

என்று ஆவேசமாகப்பேசி முடித்தான். ஸ்பானிய இராணுவ அதிகாரி உத்தரவிட்டதும் சிப்பாய்கள் ரிசாலை நோக்கிச் சுட்டார்கள். மாவீரன் கீழே சாய்ந்தான்.

அடங்கியிருந்த புரட்சி மீண்டும் அனல் கக்கியது. அந்நியர்களைக் கண்ட இடங்களில் அடித்தார்கள்; சுட்டார்கள். அவர்கள் வாழும் இடங்களைச் சுட்டுப் பொசுக்கினார்கள். இந்தப் புரட்சிக்கு ரிசாலின் மனைவியே தலைமை வகித்தாள். ஆயுத நிலையங்களைப் பிடித்துக்கொண்டனர். விடுதலை வீரனைத் தூக்கிலேற்றிய தூக்குமேடை சுக்குநூறாக்கப்பட்டது. சூதுக்காரர்கள் ஒழிந்தார்கள்; சுதந்திரம் பெற்றார்கள்.

ரிசாலின் கல்லறையின் அருகே வானளாவிப் பறந்துகொண்டிருந்த சுதந்திரக்கொடியைக் கண்டதும் எல்லோரும் தலைவணங்கி, கல்லறைமீது மாலை அணிவித்து மரியாதை செய்தனர். ரிசாலின் மனைவியின் கண்களில் மட்டும் நீர் தாரைதாரையாக வழிந்துகொண்டிருந்தது. தன் கணவன் மட்டும் மடியாமலிருந்திருந்தால் நாடு சுதந்திரம் பெற்றிருக்க முடியுமாவென்று நினைத்ததும், அவளையும் அறியாமல் ஒருவித இன்பம் அடைந்தாள்!

8-ம் பக்கத் தொடர்ச்சி

எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. தரையே பிளந்து நான் அதில் விழுவதுபோல் இருந்தது. மூச்சு நின்றுவிடுமோ என்றுகூட ஆகிவிட்டது. தங்கம் ஒன்றும் புரியாமல் திடுக்கிட்டாள்.

"தங்கம் நீ என் மகள்தானம்மா—இந்தப் பாவி பெற்றெடுத்த மகளம்மா! வாம்மா நான் எல்லாம் விபரமாகச் சொல்கிறேன்" என்று சொல்லி அவளை! அழைத்துச் சென்றாள்.

"ஏண்டா உன் தங்கச்சியையே கலியாணம் செய்துகொள்ளப் பார்த்தியேடா முட்டாளே! இதற்குத்தாண்டா எதற்கும் பெரியவங்களுக்குத் தெரியாமே ஒன்றும் செய்யக்கூடாதுன்னு சொல்வது" என்று சொல்லிக் கொண்டே உள்ளே போய்விட்டாள்.

தங்கத்தைப் பாயில் உட்கார வைத்துக் காப்பியைக் கொடுத்து தன் கதை முழுவதும் சொன்னாள். நான் வெளியிலிருந்தே கேட்டுக் கொண்டிருந்தேன். ஏனென்றால் எனக்கே வெட்கமாக இருந்தது நான் செய்தது ஒவ்வொன்றும்.

இருப்பினும் நான் இழந்த தங்கையைப் பெற்றுவிட்டேன், தந்தையைப் பெறாவிடினும்!

என் தந்தை நானும் தங்கமும் சிறுவர்களாக இருக்கும்போது அடிக்கடி வீட்டைவிட்டுப் போய் விடுவாராம். என் தாய்க்குப் பிறகுதான் தெரியவந்தது, அவர் மற்றொருத்தியிடம் சிநேகிதம் கொண்டிருக்கிறார் என்பது. மறைமுகமாகச் சொல்லிப் பார்த்தார்களாம் என் தாய். கேட்கவில்லையாம் அவர்.

என் தந்தைக்கு என்னைவிடத் தங்கத்தின்மீது அதிக ஆசையாம். ஆசையின் காரணத்தால் அவளைத் தூக்கிக்கொண்டு போனவர் ஒரு நாள், திரும்பி வரவேயில்லையாம். சில நாட்கள் கழித்து அவர்கள் ஊரைவிட்டே புறப்பட்டுப் போய்விட்டார்கள்—பிறகு அவர்களின் செய்தி ஒன்றுமே தெரியவில்லையாம். தந்தையாரின் ஆசை நாயகியின் பெயர் "அகிலாண்டம் அம்மாளாம்;"

எனக்கு எல்லாம் புரிந்தது—வெட்கத்தினால் என் தலையும் குனிந்தது—இனி தங்கம்—என் தங்கத் தங்கை.

பண்ணைக்காரன்!

—[வேலை. எஸ். எழில்]—

முதலாளித்துவத்தை எந்த மனிதனும் எக்காலத்தும் முழுமனதாக ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. உழைப்பை வாழ்வாக்கும் மனிதன் முதலாளித்துவத்தைச் சுக்குநூறாக்க முடியாத சமயங்களில் முணுமுணுத்தும்—வரட்டுச் சிரிப்புச் சிரித்தும் எதிர்த்து வந்திருக்கிறான். காலத்தையும் இடத்தையும் கடந்து—உலக முழுவதும் இந்த நிலை உயிர்த் துடிப்போடு நிகழ்ந்தபடிதானுள்ளது.

எதையும் எதிர்ப்பதில் மனிதர்களில் இருவகை உண்டு. ஒன்று—எடுத்தேன் கவிழ்த்தேன் என்று நேருக்கு நேர் புலியெனப் பாய்பவர்கள். மற்ற வகையினர்—என்னதான் தலைபோவதானாலும், போனதைச் சிரிப்போடு, நயந்து நெளிந்து சமயம் வாய்க்கும் போது பழிவாங்குபவர்கள். இத்தகு மனிதர்களை நாம் நிதமும் வாழ்வுச் சந்தையில் சந்திக்கத் தவறுவதில்லை. எழுத்தாளர்களும் இவர்களைச் சித்தரிக்காமல் விட்டதில்லை.

முதலாளி வர்க்கத்தை 'முகமன்' கூறி வரவேற்று, வணங்கி—கேலியும் கிண்டலும் செய்த மனிதர்களை நாம் சந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்தச்சக்தி வாய்ந்த பூர்சுவாக்களை எதிர்க்க முடியாத எளியவர்கள் — எள்ளி நகையாடியிருக்கிறார்கள். நகையாடிய உழைப்பாளர்களை—நல்லவர்கள் என்றே நம்பினர் அந்தப் பூர்சுவாக்கள். முதலாளி என்றதுமே ஒரு பயங்கரமான தோற்றம் தோன்றுவது இயற்கை.

ஏழை எளியவர்களின் எசமான் எப்படிப்பட்டவன் என்பதை நாமறிவோம். என்றாலும் அந்த எசமானனை அந்த எளிய உழவர்களின் வாயால் கேட்பது சுவையுடையது அல்லவா?

17-ம், 18-ம் நூற்றாண்டுக்காலங்களில் தமிழகத்தில் பண்ணைக்காரர்கள் எனும் நிலப்பிரபுக்கள் வாழ்ந்துவந்தனர் என்பது வரலாறு. இன்றும் அவர்கள் மிட்டா மிராசு ஜமீன்தார்கள் என உலவுவது தெரிந்ததே. அன்றைய பண்ணைக்காரர்களை — பள்ளர்கள் அதாவது விவசாயப் பெருங்குடி மக்கள் வரவேற்று வணங்கிய முறைகளைச் சிறிது கவனிப்போம். அப் பண்ணைக்காரர்களை நாம் இன்று காவிய உருவில் கண்டு களிப்போம்.

நிற்க, இதற்கு முன் சில வார்த்தைகள். கவிதைகளை ஓர் ஆவலோடு சுவைப்பதில் தணியாத ஆசை. கவிதை எப்பொருளைக் குறித்து எழுதியிருந்தாலும் சரி முதலில் அதன் நயங்களை அனுபவிப்பதில் ஆர்வமுண்டு. குறிப்பாக ஏழை எளிய மக்களைக் குறித்துவரும் பாக்களை மிகுந்த ஆவலோடு படிப்பதில் தனிப் பிரியம். சில மேதைகள் சொல்வதைப் போன்று சாதாரண மக்களின் சாதாரண நிகழ்ச்சிகளை, உணர்ச்சிகளை — உருவகித்து உயிருட்டிப் பாக்களியற்றுவது 'பேதைமை' எனும் கொள்கையை ஒப்பமுடியவில்லை. ஏழை எளியவர்களின் 'சாவா-வாழ்வா'ப் போராட்டங்கள் சிலருக்கு விளையாட்டாகத் தோற்றலாம். ஆனால் எம்போன்றார்க்கு அந்த வாழ்வின் வேதனையை உணரும் உள்ளம் இருக்கிறது. அசாதாரண கற்பனைகளையும் காணாததையும்—வேண்டாததையும் கவிகளாக்கும் 'பண்பு' அந்த மேதையர்க்கே உரித்தாகட்டும்.

முதலில்குறித்தபடி முதலாளித்துவத்தைக் கேலிக் கணைகளால் துளைக்க முயன்றவர்கள் ஏழை உழவர்கள். நேருக்குநேர் எதிர்க்க முடியாத பண்ணைக்காரர்களை—நகைசொட்டும் பாடல்களால் எதிர்த்த இரண்டாம் வகையினர் இந்தப் பள்ளர்கள். இந்த ஏழை எளியவர்கள் எங்ஙனம் தங்கள் உணர்ச்சிகளைச் சாதாரண 'பாவனை'யில் வெளிப்படுத்திக் கொண்டார்கள் என்பதை அனுதாப இதயங்கொண்டோர் காண்பார்களாக. சாதாரண மக்களின் உணர்வுகளைக் கவிதையாக்கியுள்ள புலவரை—சாதாரண மக்கள், சாதாரண மனமகிழ்வோடு வாழ்த்துவார்களாக.

'முக்கூடற்பள்ளு' எனும் நூலின் பெயரைப் பலர் அறிந்திருக்கலாம். அதன் காலம் ஏறக்குறையப் பதினேழாம் நூற்றாண்டின் முடிவுக்காலம். திருநெல்வேலிச் சீமையில் முக்கூடல் எனும் சிற்றூர் அப்பொழுது சிறப்புடன் திகழ்ந்தது. முக்கூடலில் வாழ்ந்த ஒரு பண்ணைக்காரனை — அவன் பண்ணையில் பயிர் செய்யும் பள்ளர்கள் போற்றி வணங்கினர். பள்ளு நூலில் பலவித நயங்கள் தெறிக்கின்றன. எனினும் இங்கே நாம் பண்ணைக்காரனை மட்டுமே கவனிப்போம். பள்ளர்கள் வணங்கி வரவேற்ற 'நயத்தை' பாடலாக்கிய புலவரின் பெயர் தெரியவில்லை.

பண்ணைக்காரர் வருகிறார். வயலில் வேலை செய்யும் பள்ளரும் பள்ளியரும் எச்சரிக்கையாகின்றனர். விறுவிறுவென்று வேலைகளைச் செய்கின்றனர். இத்தனை நேரமும் இருந்த துடிப்பும் பிடிப்பும் பறந்துபோகிறது. ஓரக்கண்களால் பண்ணையாரைப் பார்த்து உதட்டுக்குள் சிரித்துக்கொள்கின்றனர். 'முசுமுசு'வென்று பேச்சொலி ஊர்கிறது. பண்ணையார் அசைந்து அசைந்து வரப்பின் மேல் வருகிறார். அவர் வந்து வேலை செய்வோரை அடைவதற்கு. இன்னும் சிறிது நேரமாவது ஆகும். அதற்குள் செம்மி

மகன் பண்ணையாரை வரவேற்கத் தயாராகிருன். ஏன் பாடவே செய்கிருன.

மாறு கண்ணும் பருத்திப்பையின்
கூறை வயிறும்—கீரை
மத்துப்போல் தலையும் சுரை
வித்துப் போல் பல்லும்
நீறுபோல் வெளுத்த ஊளை
யூறு நாசியும்—தட்டி
நெரித்தமாங் கொட்டைபோல் ஈ
அரித்த வாயும்
தாறு மாருய் மீசையில் அஞ்
சாறு மயிரும்—தூங்கற்
சண்டைக் கிடாப்போல் நடையும்
மொண்ணை முகமும்
வேறு கீறி ஒட்டவைத்த
ஏறு காது மாய்—நேமி
வீரனுர் முக்கூடற் பண்ணைக்
காரனுர் வந்தார்.

பண்ணைக்காரனுர் வந்தார்! வந்தார்! வந்தார்! என்று மேல்ஸ்தாயில் பாடி நிறுத்திஞன். பண்ணைக்காரர் வெகு மகிழ்ச்சியோடு வந்து சேர்ந்தார். பள்ளர் முகங்களில் ஒரே கேலிக்குறி. "யாரடா வந்தார்! வந்தார்! என்று எக்களிக்கிருய்?" குரல் கொடுத்தார் பண்ணையார்.

"வேறுயாரு சாமி வருவார்! எங்க முக்கூடல் பண்ணை வீரஞர் தான் வந்தார்! வந்தார்!" என்ருன் செம்மி மகன். பண்ணையாருக்கு ஏற்பட்ட சந்தோஷத்தில் ஒரு சுத்து பருத்தது. பள்ளியர்கள் பல் தெரியச் சிரித்தனர். பண்ணைக்காரர் எல்லோரையும் ஒரு நோட்டம் விட்டு மோப்பம் பிடிக்கலாஞர். அதற்குள் அவரை நாம் ஒரு நோட்டம் பார்ப்போம்.

அடடா, அந்த செம்மி மகனுக்குத்தான் எத்தனை நல்ல சாரீரம், அந்தப் பாடலில்தான்...சித்திரக்காரனின் கை வண்ணத் துடிப்பு வெடிக்கிறதே! பண்ணைக்காரரின் ஓரக்கண்ணையும்; பருத்தி மூட்டை வயிறையும்! மத்தன்ன தலையையும்; சுரைவித்தன்ன பல்லையும்; ஊளையொழுகும் மூக்கையும்; மாங்கொட்டை வாயில் ஈ மொய்ப்பதையும்; அங்கும் இங்குமாக முளைவிட்டுள்ள மீசை வரிசையையும்; கொழுத்த கிடா நடையையும் மொண்ணை முகமும்; ஏறுமாருன காதுகளும்..." பண்ணைக்காரனை நம்முன்னே கொணர்ந்து சிரிக்க வைக்கிறது அல்லவா? அந்தச் செம்மி மகன் வார்த்தைகளில் தான் எத்தனை கேலி! எவ்வளவு கிண்டல்! இப்படியொரு உருவம் உயிர்பெற்று நம்முன்னே வருமாயின் — நாம் என்ன செய்வோம்? நாடகத்திலோ சினிமாவிலோ— இப்படியொரு பண்ணைக்காரர் வந்தால் நாமெல்லாம் சிரிப்போம்! வயிறு வலிக்கும்வரை சிரிப்போம்! கொஞ்சம் சிந்தியுங்கள், கற்பனையைச் சிறிது பறக்கவிடுங்கள். மனக் கண்களில் இப்படியொரு உருவைச் சமையுங்கள், தாஞக வாய்விட்டுச் சிரிப்பீர்கள். அந்த ஏழைப் பாட்டாளி எத்தனை தத்ரூபமாகச் சிருஷ்டித்து விட்டான் அவரை. எளிமையான வர்ணனை-எள்ளிநகைசொட்டும்சொல்லடுக்கு பழிவாங்க முடியாத பள்ளர்கள்— பண்ணையாரை இப்படிப் பழி வாங்குகின்றனர்.

பண்ணைக்காரர் தன் கண்ணோட்டத்தை முடித்துக்கொண்டார். பள்ளர்களிடையே ஒரு கலகலப்பு ஏற்பட்டது. கறுப்பி உதட்டில் சிரிப்புத் தவழக் கூட்டத்திற்கு முன்னே வந்தாள். பண்ணைக்காரர் அவளை அப்படியே அள்ளி விழுங்கிஞர். அவள் நமட்டுச் சிரிப்புச் சிரித்தாள். சுரைவித்துப் பற்களை வெளிச்சத்தில் காட்டிக் கெக்கலித்தார் பண்ணையார். அந்தச் சிரிப்பினூடே கறுப்பி தன் குயில் குரலை தடவிவிட்டாள். பாடல் ரீங்காரமிட்டது.

மூத்தபள்ளி முகம் பார்த்து
வார்த்தை சொல்வா ராம்—பெரு
மூச்சுக் கொண்டிளைய பள்ளி
பேச்சுக் கேட்பா ராம்.
சாத்தி மகள் காத்தி தன்னைப்
பேத்தி என்பா ராம்—மெல்லச்
சன்னையாய்க் களத்தில் வாடி
பின்னை என்பா ராம்.
வாய்த்த தடிக் கம்பை யூன்றிச்
சாய்த்துப் பார்ப்பா ராம்—ஊத்தை
வாய்க்கு மெல்லப் புகை குடிக்கத்
தீக்குப் போவா ராம்.
காத்தி ராத பள்ளன் பர
மார்த்தி என்பா ராம்—குச்சிற்
கண்ணைச் சாய்ப்பா ராம் முக்கூடற்
பண்ணைக் காரனுர்.

(சன்னை—சைகை
பரமார்த்தி—உலகம் அறியாதவன்.)

சிந்து முடிந்தது. கறுப்பி தலை குனிந்து கொண்டாள். பள்ளர்கள் பல்லெல்லாம் பளிச்சிடச் சிரித்தனர். பண்ணையார் இளித்தார். பருத்தி மூட்டை வயிறு குலுங்கியது. நிலம்கூட ஒருமுறை சிரித்தது.

"கறுப்பி, மகாகுறும்புக்காரியடி நீ" சிரித்துச் சொன்ஞர் பண்ணையார். எல்லோரும் கறுப்பியைக் கவனித்தனர். அவள் கேலிக்குறியுடன் கூட்டத்திஞள் புகுந்தாள்.

பணக்காரர்கள் பணத் திமிரிஞல் எதையும் செய்யலாம் என்ற மமதை கொண்டவர்கள் என்பது வழக்கு. பண்ணைக்காரரின் செருக்கை, செயல்களைப் பாடலில் சித்தரித்தாள் கறுப்பி. பாடலில் சிரிப்பு நெளிந்தது. அவர் யார் யாரை எப்படியெப்படி எல்லாம் அழைப்பார், அனுபவிப்பார் என்பதைத் தெள்ளிதின் புலஞக்கிஞள் கறுப்பி. அவரோ, அதில் தான் தம்முடைய மதிப்பும், சிறப்பும் இருப்பதாக எண்ணி மகிழ்ந்தார்.

சாதாரண ஒரு உழத்தி தன் எசமானின் செயல்களை உருவாக்கிய முறையே அலாதிதான். மனத்தில் பீறிட்டுக் கிளம்பும் உணர்ச்சிகளை நகைச்சுவையோடு குழைத்துப் பாடிஞள் அவள். அடக்கி ஒடுக்கப்பட்ட பழியுணர்ச்சி--சிரிப்பாக, சிந்தனையாக வெடித்தது அங்கே. இதயத்தில் குமுங்கிய வேதனைத் தீ—உவகைப் பொறிகளாகக் கிளம்பிற்று. கேலியும் கிண்டலுமாக உந்திக் கிளம்பிய உரிமையுணர்ச்சி அது!

உழவர்களின் உள்ளங்களில் பற்றியெரிந்த உரிமைத் தீ — அன்று நகைச்சுவையாக, கேலி, கிண்டல் கணைகளாகப் பாய்ந்தது. இன்ரு—புரட்சித் தீயாக பற்றி எரிகிறது. காலத்தின் கோலம் நிலைமைகளை மாற்றி அமைக்கிறது. பல்லிளித்து பண்ணையாரைப் பார்த்துப் பதுங்கிய காலம்மாறி, பாயத் துடிக்கும்-பரிகாரம் தேடும் பக்குவம் வளர்ந்திருக்கிறது. பண்ணையாரைக் கண்டு முணுமுணுக்கும் காலம் மறைந்து — முழக்கமிடும் காலம் வந்திருக்கிறது.

முக்கூடற்பள்ளுப்பாடிய புலவர் --உழவர்களின் உள்ளத்தெளிவை உணர்ந்திருக்கிருர். அவர்களிடையே நிலவிய உணர்ச்சி மயமான கொச்சை மொழிப் பாடல்களை இலக்கிய நயத்தோடு உருவகித்து உயிரூட்டியிருக்கிருர் புலவர். சாதாரண மக்களின் மன நெகிழ்வுகளை, உணர்வுகளை நீங்கள் சுவைக்கத்தான் செய்வீர்கள். நயத்தோடு பாடிய புலவரை நீங்கள் மறக்கப்போவதில்லை. அதோ பண்ணைக்காரர் வருகிருர் — வரவேற்றுப் பாடுங்கள்!

★

வாளும் வலிமையும்

சென்னைப்பட்டணத்து 'மூர் மார்க்கட்' கடை ஒன்று. பழைய சாமான்கள் பலவகைப பட்டவை அங்கே கூறு கூருகக் குவிக்கப் பட்டிருக்கின்றன. ஒடிந்த துண்டுகள் ஒட்டவைத்த பகுதிகள், பயனற்றபாகங்கள், மினுமினுப்புக் குன்ருதவை, சொட்டையுடையன, இப்படி எத்தனை எத்தனையோ வகையானவை அங்கே கிடக்கின்றன. இன்னது இருக்கிறது இன்னது இல்லை என்று கடைக்காரனுக்குத் தெரியுமோ என்னவோ, புதியதாய்ப் பார்க்கின்றவர்களுக்குத் தெரியாது. இதன் பக்கத்தில் இது என்ற நியதியும் காணேம்; எதை எதையோ எப்படி எப்படியோ போட்டுவைத்திருக்கின்ருன். ஒருக்கால் பேத உணர்ச்சியற்றவஞே!

ஒரு மூலையில் ஒடிந்த வாளின் துண்டு ஒன்று கிடக்கின்றது. அதன் பக்கத்திலே எழுத்தாணி ஒன்று இருக்கிறது. கடைக்காரன் எங்கோ திரும்பிப் பார்த்தபோது எழுத்தாணி வாளை நிமிர்ந்து பார்த்தது. "என்ன?" என்று கேட்பதுபோல வாள் குனிந்து பார்த்தது. "என்ன இருந்து என்ன, உன்னைவிட நானே பெரியவன்" என்றது எழுத்தாணி. "ஆமாம்" என்பதுபோல் வாள் வாளா இருந்துவிட்டது.

சில நாட்கள் சென்றன.

யாரோ ஒருவன் ஒருநாள் அந்த ஒடிசல் கடையைத் தேடிவந்தான். எதை எதையோ துழாவிஞன். வாளின் பக்கத்தில் இருந்த எழுத்தாணியை எடுத்துக் கடைக்காரனிடம் நெடுநேரம் மல்லுக்கு நின்று கொஞ்சம் சில்லறையைக் கொடுத்துவிட்டு அதை எடுத்துக் கொண்டு போனுன். போகின்றபோது எழுத்தாணி வாளின் பக்கம் அலட்சியமாகப் பார்த்தது. "பார்த்தாயா உன்னை வேண்டுவார் இல்லை." என்று சொல்வது போல் இருந்தது அந்தப்பார்வை.

வாள் வாளா இருந்தது; சில நாட்கள் சென்றன.

முன்னே பெருமையோடு வெளியேறிய எழுத்தாணி மறுபடியும் வாளின் பக்கத்திலே வந்து முடங்கியது. இப்போது அது நசுங்கியிருந்தது; முனை முறிந்துபோயிருந்தது; கோணல் மாணலாக இருந்தது. இந்த முறை அது வாளைப் பார்க்கவே ஆசைப்படவில்லை. அது பேசும் பேசும் என வாள் காத்துக்கிடந்தது. பேசவே இல்லை.

தானே பேச்சைத் தொடங்கலாம் என்று எண்ணியது வாள். "என்ன, எழுத்தாணியாரே—ஒரே மோன நிலை?" ஊகும்...... பதிலே இல்லை. "என்ன எழுத்தாணியாரே போகின்றபோது மிடுக்கோடு போனீர், வந்தபோது ஒடுங்கிப் போய் வந்தீரே, ஏன்?" என்றது.

பின்னும் இரண்டொரு முறை வற்புறுத்திக் கேட்ட பின்னர் தான் எழுத்தாணி வாய் மலர்ந்தது.

"ஒன்றுமில்லை நண்பரே; சண்டை" என்றது.

"என்னது சண்டையா?"

"ஆமாம்'

"எந்தக் களத்திலே போர்? யார் யாருக்கு? உம்மை ஏன் போர்க்களத்திற்குக் கூட்டிப்போஞர்கள். பாட்டுப் பாடப்போனப் புலவர்களோடு நீரும் போனீர் போலும்"

"புலவர்களோடு போனது என்னவோ உண்மைதான் வாளாரே. அந்தப் புலவர்கள் போரைப் பற்றிப் பாடுவதை விட்டுவிட்டு யார் பாட்டுப் பெரியது என்று ஒருவருக்கொருவர் போர் இட்டுக் கொண்டனர்"

"போரிட வார்த்தை இருக்கிறது; வார்த்தை முற்றிஞல் நாங்கள் இருக்கிரேம், (வாள் இருக்கிறது) உமக்கென்ன இடையிலே காயம்?"

"அதுதானே அங்கே நடந்தது. அவர்கள் எழுத்தாணிகளாலேயே அடித்துக்கொண்டனர்; நான் இப்படி ஆனேன்" என்று சொல்லி இரண்டு துளி கண்ணீர் விட்டது.

கலகலவென நகைத்தபடி வாள் சொன்னதாவது: அட மனிதா சண்டைபோட நான் இருக்கும் போது எழுத்தாணியை ஏன் வாங்கிப் போஞய்?"

•

பழமொழி: வாளைவிட வலியது எழுத்தாணி.

புது நீதி: எழுத்தாணி ஒன்றுக் கொன்று வலியது.

★

காதல் வயமாவதால் ஒரு பெண்ணின் கவர்ச்சி அதிகரிக்கிறது. ஆனல் காதல் வயப்படும் ஆணே உலகினர் கண்களில் மதிப்பிழந்துவிடுகிருன். நண்பர்களைத் தொணதொணக்கிருன். பிற மாதரின் நகைப்புக்கு அடிக்கடி அவன் இலக்காகிருன். மனிதன் அளவுக்கு மீறிய ஒருமையுள்ளம் படைத்தவனுதலால் காதலில் அவன் தன்னையே மறந்துவிடுகிருன். சில சமயம், அவனுடைய தீவிரப் போக்கு அவனை ஓர் அசடாகக் கூட ஆக்கிவிடுகிறது. தான் காதல் கற்பனை செய்துள்ள பெண்ணின் உருவம் ஒன்றையே அவன் காண்கிருன்.

இல்லம்....118

தற்போதுங்கூட நேர்முக வகுப்புகளில் மட்டும் 700-க்கு மேற்பட்டவர்கள் இங்கிலீஷ் மொழிப் பயிற்சி பெறுகின்ற சென்னையின் மாபெருங் கல்வி அரங்கம்!

The School of English Learning

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.

KNOWLEDGE IS POWER

தமிழ்

எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி

அடிப்படையோடு இலக்கண ரீதியாக திருத்தமான முறையில்

இங்கிலீஷ் தபால் மூலம் கற்கலாம்

சேர்வதற்கு அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து

17-10-58-ந் தேதி

வரை அனுப்பலாம்.

அச்சிடப்பட்ட பாட விளக்கங்கள்

21-10-58-ந் தேதி

முதற்கொண்டு தொடர்ந்து அனுப்பப்பட்டு, கற்கும் போது ஏற்படும் சந்தேகங்களுக்கு முறைப்படி அவ்வப்போது தெளிவுரைகள் வழங்கப்படும்.

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்குவரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும்—சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும். "தபால் மூலம் அனுப்பப்படும் பாடங்கள் ஒரு நீண்ட தொடர் நாவலைப் படிப்பது போன்று ஆர்வத்தை ஊட்டுவதாக இருக்கும்" எனில் மிகைப்படுத்திச் சொல்வதாகாது.

முக்கிய அறிவிப்பு:—

1. 16-வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள்.
2. ஆதாரபூர்வமான ஒப்பற்ற இலக்கணப்பயிற்சி அளிக்கப்படுவதால் ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக்கொள்ளலாம்.
3. இத்தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விவரங்களையும், எட்டு நயே பைசே (8-புதிய காசுகள்) தபால்பில்லை அனுப்பிப் பெறுக.

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி நல்ல முறையில், உலக மொழியாம் ஆங்கிலத்தைக் கற்க முன்வருக.

காஞ்சீபுரம், ௯௫, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்

405

திராவிடநாடு

19—10—58 | வாரவெளியீடு | விலை 16 காசு

OFFICE OF THE REGISTRAR 29 OCT 1958 MADRAS

நல்ல தமிழ்த் தோழா!

[ஆ. ஆரிது]

—●—

நாட்டிலே நடப்பதென்ன நல்லதமிழ்த் தோழா
நாடகமோ நல்லரசோ நல்லதமிழ்த் தோழா
வீட்டிற்குச் சுவர்கேட்டால் நல்லதமிழ்த் தோழா
வீணனென்று ஏசுகிறார் நல்லதமிழ்த் தோழா (நாட்)

வடவருக்குத் தாள்தொழுதால் நல்லதமிழ்த் தோழா
மானமுடன் வாழ்வதெப்போ நல்லதமிழ்த் தோழா
திடங்கொண்ட தூயவனே நல்லதமிழ்த் தோழா
திருட்டுநரிக் கிடங்கொடாதே நல்லதமிழ்த் தோழா (நாட்)

'இந்தி'யா அண்ணன்மொழி நல்லதமிழ்த் தோழா
இல்லையது செந்தீயடா நல்லதமிழ்த் தோழா
இந்தியா ஒருநாடா நல்லதமிழ்த் தோழா
சிந்தித்துத் தீர்வுகாண்பாய் நல்லதமிழ்த் தோழா (நாட்)

பெருமொழியின் தலைமகனே நல்லதமிழ்த் தோழா
பெருமையுடன் வாழ்ந்தவன்நீ நல்லதமிழ்த் தோழா
திருவிடம் பிரித்தெடுத்தே நல்லதமிழ்த் தோழா
சீரியநல் வாழ்வுகாண்போம் நல்லதமிழ்த் தோழா (நாட்)

கேட்டீரா சேதி!

விடுதலைபெற்று வாழவேண்டும் என்கிற ஆர்வம் வந்துவிட்டால் அதைத்தடுத்திட, எந்தச் சக்தியாலும் முடியாது என்பதை உலகசரித்திரம் தொன்றுதொட்டுச் சொல்லிக்கொண்டே வருகிறது. இந்திய உபகண்டத்தில் அசாம் எல்லையிலுள்ள மக்கள் நாகநாடு கேட்டுவருவது யாவரும் அறிந்ததே. அதற்கான தீவிர கிளர்ச்சிகளையும் அவர்கள் செய்து வருகிறார்கள். அந்தக் கிளர்ச்சிகளைக் கிள்ளி எறிந்திடவேண்டும் என்று, டில்லி படாதபாடுபட்டு வருகிறது. வரவர, நாகர் தம் கிளர்ச்சி குன்றிவருவதாகவும், அவர்கள் பலமிழந்து விட்டதாகவும், அடிக்கடி பார்லிமெண்டில் அறிவிக்கிறார்கள் காங்கிரஸ் மந்திரிகள். உண்மை என்ன தெரியுமோ? அக். 4ந் தேதி நடந்த ஒரு நிகழ்ச்சியைக் கேளுங்கள்! இராணுவத்தினர் காவல் புரிய, மூன்று நான்கு லாரிகளும் 'ஜீப்'புகளும் போய்க் கொண்டிருந்தன. அவைகளை வழி மறித்து, ஒரு சுபேதார் கையிலிருந்த துப்பாக்கியையும் பிடுங்கிக்கொண்டு, லாரியிலிருந்த ரூ. 5000க்கு மேற்பட்ட பணமூட்டைகளையும் பறித்துக் கொண்டு போயிருக்கிறார்கள் கிளர்ச்சிக்காரர்கள். இராணுவ பாதுகாப்பையும் துச்சமென மதிக்கிற அளவுக்கு, அங்கே வளர்ந்திருக்கிறது விடுதலைத் தாகம்.

*

டில்லியிலே இந்தக் கிழமை நடக்கிறதல்லவா, உலக பாங்க், அகில உலக நாணயச் செலாவணி பாங்க் ஆகியவைகளின் கூட்டம். இந்தப் பாங்கிலும், நிதி உதவிச் சபையிலும் சேராத நாடு, நியுஜிலந்தாகும். இவைகளில் 'மெம்பராக'ச் சேர்ந்து, அதற்கான 'பங்குத்தொகை'யைச் செலுத்தினால், வேண்டும்போது இவைகளிடமிருந்து கடன் வாங்கிக் கொள்ளலாம். எனினும், நியுஜிலந்து, இவையெதிலும் சேரவில்லை! சமீபத்தில், அந்நாட்டுக்குக் கொஞ்சம் பணம் தேவைப்பட்டது. உடனே நியுஜிலந்து ரிசர்வ் பாங்க் என்ன செய்ததாம் தெரியுமா? தன் வசம் இவ்வளவு 'தங்கம்' இருக்கிறதென்றும், அந்தத் தங்கத்தை அடகு வைத்துக் கொண்டு, யாராவது நம்பிக்கையின் பேரில் பணவுதவி செய்ய முடியுமா என்றும் நியுயார்க்கிலுள்ள பிரபல முதலாளிகளைக் கேட்டதாம். சந்தேகமிருந்தால் தன் வசமுள்ள 'தங்கத்தை'ப் பார்வையிட்ட பின், பணம் தரலாம் என்றும் வெளியிட்டதாம். நியுயார்க் முதலாளிகள், நியுஜிலந்துக்குத் தேவையான பணத்தைக் கொடுத்திருக்கிறார்கள். நியுஜிலந்து மட்டுமல்ல, ஆஸ்திரேலியா, கனடா போன்றவைகள்கூட நியுயார்க் முதலாளிகளிடம் கடன் எழுப்பியிருக்கின்றனவாம். அவை, நியுஜிலந்தைப்போலத் தங்கத்தைக் காட்டிக் கடன் கேட்கவில்லை. தங்கள் நாட்டினை நம்பி, கொடுக்குமாறு கேட்டனவாம்! முதலாளிகள் கொடுத்தார்களாம்! நாடுகளுக்கே, முதலாளிகள் கடன் கொடுக்கிறார்கள் எனின், அமெரிக்க முதலாளிகளின் வளம் எத்தகையதாயிருக்கவேண்டும்?

*

உலகத்துக்கு "உதவும்" நோக்குடன் பணியாற்றி வருவதாகக் கூறப்படும் மேற்கண்ட இரு பாங்குகளும், எங்கே பணம் பெறுகின்றனவாம் தெரியுமா? மெம்பர் நாடுகள் செலுத்தும் கட்டணம், கேட்கும் நாடுகளுக்கெல்லாம் கடன் கொடுக்க எப்படிப் போதும்? எனவே, தனிப்பட்ட முதலாளிகளிடமிருந்து பணத்தை வட்டிக்கு வாங்குகிறதாம்! இப்படி அந்தப் பாங்குக்கு வட்டிக்குப்பணமளிப்பவர்களில் பாதிப் பேருக்கு மேற்பட்டவர்கள் அமெரிக்க முதலாளிகள் தானாம்!! அவர்களிடமிருக்கும் பணத்தை வாங்கி, பிற்பட்ட நாடுகளுக்கு உதவும் பெரும் சேவையை இவை செய்கின்றன.

*

"சிறு நாடுகளாயிருந்தால், எப்படிவாழமுடியும்? இந்தியாவைப்போலப் பெரிதாகயிருந்தால்தான், அமெரிக்கா ரஷியா போன்றவைகளிடம் கடன்வாங்கவும், காரியங்களைச் செய்யவும் முடியும்?" என்று காங்கிரஸ்வாதிகள் வாதிக்கிறார்களல்லவா! மேற்சொன்ன சர்வதேச பாங்குகளிடமிருந்து, கடன் பெற்றிருப்பது இந்தியா மட்டுமல்ல. கடந்த ஆண்டில், கனா, அயர்லார்ந்து, மலேயா, மொராக்கோ, சூடான், டுனிஷியா போன்ற மிகச் சின்னஞ்சிறு நாடுகளும், உறுப்பினராகி உதவிகோரியுள்ளன.

*

கடன்! கடன்! என்று அலையும் இந்தியாதான் உலகத்திலேயே, சர்வதேச பாங்கிடமிருந்து, அதிகம் கடன் வாங்கியிருக்கின்ற நாடாம். சுமார் 68-கோடிக்குமேல், இந்தப் பாங்குகளிடமிருந்து, இந்திய உபகண்டம் பெற்றிருக்கிறதாம். சுதந்திரம் பெற்ற 11-ஆண்டுகளுக்குள் ஸ்டர்லிங்காகயிருந்த 1800-கோடி மிச்சத்தையும், ரிசர்வ் நிதியாகயிருந்த 800-கோடி சேமிப்பையும் எடுத்து இறைத்ததுமல்லாமல், இந்தப் பாங்குகளிடமும் கடன் வாங்கி, அமெரிக்கா, ருஷியா, ஜெர்மனி ஜப்பான் என்றெல்லாம் உதவி வாங்கி, அதுவும் போதாமல் அலைகிறது இந்தியா! டில்லி நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய், அமெரிக்காவுக்குப போய், ஊழைக்குப்பிடு போட்டு விட்டு இந்தக் கிழமைதானே திரும்பியிருக்கிறார்!!

★

கலைவடிக்கும் கண்ணீர்!

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [19-10-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 14

தமிழகத்தின் தலைசிறந்த நடிகமணிகளும் ஆந்திரத்தின் உன்னத நடிகர்களும் தலைமை தாங்கிச் செல்ல, எண்ணற்ற துணை நடிகர்களும், தொழிலாளர்த் தோழர்களும் திரண்டுவர, சென்னையின் வீதிகளிலே ஊர்வலமாகச் சென்றார்கள் 7-ந்தேதி! தவிக்கும் அவர்தம் நிலைகண்டு, கண்ணீர் பொழிவது போலிருந்தது, விடாது பெய்த மழை!!

கலை வளர்வதாகப் பறைசாற்றிக்கொள்ளத் தவறுவதில்லை; கலைமாமணிகளைக் கவுரவிப்பதாகக் காட்டிக்கொள்ளத்தவறுவதில்லை; கலைநிகழ்ச்சிகளில் பங்குகொண்டு வாழ்த்தவும், புகழவும் தவறுவதில்லை—நாடாளும் அமைச்சர்கள். எனினும் அவர்களது ஆட்சியிலே கலையுருவங்கள் வீதிகளிலே, வலம்வர நேர்ந்திருக்கிறது! பொதுக்கூட்டம் போட்டுக் குமுறும் கட்டம் உருவாகியிருக்கிறது!!

திரைப்படத்தொழில், பெரியமனிதர்கள் எனும் 'வயதானவர்களின்' சாபத்திற்கும், சங்கடத்திற்கும் உள்ளாகியிருந்தாலும், இந்த நூற்றாண்டில் ஏழை மக்கள் இன்பம் பெறுவதற்கான எளிய சாதனம் என்பதை எவரும் மறுக்க முடியாது. காலைமுதல் மாலைவரை உழைக்கும் கந்தனும் முருகனும் காலணாவுக்குள், 'கலைமணம்' பெறுகிறான்—கவலைகளையெல்லாம் இரண்டு மூன்று மணி நேரம் மறந்து இருக்கிறான். நாள் வளரவளர, சுவையும் வளர்கிறது! புதுப் புதுக் கதைகளையும் கீதங்களையும் கேட்க விரும்புகிறான்!!—எனவே, அடிக்கடி புதுப்புதுப் படங்களைத் தயாரித்தளித்து அதன்மூலம், தனக்கும், தன்னைச் சார்ந்தவர்களுக்கும் வருவாய் தேடிக் கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறார்கள், தயாரிப்பாளர்கள்.

சட்டசபையில் ஒரு சமயம் தி. மு. க. சுட்டிக் காட்டியதுபோல, இத்தொழிலைச் சர்க்காரே ஏற்றுக் கொண்டு, தொழிலில் ஈடுபட்டிருப்போரைக் காப்பாற்றத் துணியுமாயின், மிகமிக வரவேற்கத்தக்க ஒன்றாகும். அந்த முயற்சிக்குத் தன்னை அர்ப்பணிக்க, இப்போதுள்ள அரசுக்குத் தகுதியில்லையாயின், அந்தத்துறையில் ஈடுபட்டிருப்போருக்குத் 'தொல்லை'யாவது தராமலிருக்கவேண்டும். கேளிக்கை வரி— வருமான வரி —என்பவைகள் சினிமாத்தொழில் மூலம், வருமானம் பெறுவதாகும் சென்னை—டில்லி அரசுகள்! அதுமட்டுமின்றி தந்நாட்டில் கலைவளம் பெருகிவருவதாகக் காட்டிக் கொள்ள அடிக்கடி கலாச்சாரத் தூதுக்குழுக்களை அனுப்பி, பெருமையை விளக்கவும், முயற்சிக்கிறது டில்லி!! எனினும், இத்தொழிலுக்கு, இது நாள் வரை, ஏதாவது ஒரு உதவிசெய்திருக்கிறதாயின் பெருமூச்சே ஏற்படும்.

"செச்சே! சினிமாவா?" என்று தள்ளிவிடக் கூடிய நிலையிலாவது, இத்தொழில் உள்ளதா எனின், கிடையாது. இந்திய உபகண்டத்திலேயே, மூன்றாவது பெரிய தொழில் என்று கருதத்தக்கவிதத்தில், இத்தொழில், சரியோ தப்போ, வளர்ந்திருக்கிறது! இலட்சக் கணக்கானவர்கள் இதன் மூலம் பிழைத்து வருகிறார்கள்!! சினிமா என்றதும், புகழ் பெற்ற பெரிய நடிகர்களும் நடிகைகளும், அவர்தம் உல்லாச வாழ்வும்தான் கண்ணுக்குவரும் பலருக்கு. ஆனால், அவர்கள் அவ்விதம் 'ஜொலிக்க' பல இடங்களில், பலவகையில் பணியாற்றும் தொழிலாளர்கள் யாரார், அவர்கள் செய்யும் தொழில்கள் என்னென்ன என்று விவரித்தால், 'ஏ, அப்பா!' என்று சொல்லத் தோன்றும். ஸ்டுடியோவிலிருக்கும் "லைட்பாய்"லிருந்து, 'கலர் சுவரொட்டி' அடிக்கிறாரே, "மிஷின்மேன்" அவர் வரையில், பலனும் பயனும் பெறுகிற ஒரு தொழில் இது!!

இத்தொழிலுக்கு, கடந்த சில மாதங்களாக, பேராபத்து வந்திருக்கிறது. அந்நியச் செலாவணி நெருக்கடி என்று சொல்லி, கச்சாபிலிம் இறக்குமதியில் 30-சதவிகிதம் 40-சதவிகிதம் என்று கூறி, 'வெட்டிக்கொண்டே' போகிறது, டில்லி. இதனால் சென்னையிலுள்ள பெரிய ஸ்டுடியோக்கள் மூடப்படுகின்ற கட்டத்தில் ஊசலாடிக்கொண்டிருக்கின்றன! பல இலட்ச ரூபாய்களைப் போட்டுப் படத் தயாரிப்பிலீடுபட்ட பலர், தவித்துத் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர்! இதனால், துணை நடிகர்கள் பலரும் தொழிலாளர்களும் ஆயிரக்கணக்கில், அடிவயிற்றில்

நெருப்பைக் கட்டிக்கொண்டு, "நமது தொழில் சதமா?" என்று அலைந்துகொண்டிருக்கின்றனர்!!

ஆண்டுக்குக் கோடி கோடியாக வெளிநாடுகளுக்குக் கொட்டிக்கொடுத்துக் குண்டும்விமானமும் வாங்க முடிகிறது, இராணுவத்துக்கு — கோடி கோடியாக வெளிநாட்டுத் தூதுவர்களுக்கென்று செலவழிக்க முடிகிறது, டில்லியால் — தனிப்பட்ட முதலாளி டாடாவுக்கு அமெரிக்காவிலிருந்து 50-கோடி 60-கோடி என்று கடன் வாங்கி ஆலைத்தொழில் வளர்ச்சிக்கென்று கொடுக்க முடிகிறது, நேரு சர்க்காரால்! அந்தோ பரிதாபம், கலைத்துறைக்கு கச்சா பிலிம் தாராளமாகக் கிடைக்கச் செய்தால், அந்நிய செலாவணிக்கு ஆபத்து வந்துவிடுமாம் — இந்தக் கச்சாபிலிமைத் தாராளமாக இறக்குமதி செய்தால், எவ்வளவு ரூபாய் நெருக்கடி வந்துவிடும் என்று கணக்கிட்டுப் பார்த்தால் இரண்டு கோடிக்கும் குறைவாகத்தான் வருகிறது!!

4800-கோடி, 2400-கோடி என்று ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் புள்ளிவிபரம் காட்டும், ஒரு அரசுக்கு 2-கோடி பெரிதல்ல; எனினும் சினிமா கீதமே பிடியாதவர்களும், நாகரிகமாக வாழ்வதே தவறு எனக் கருதும் மொரார்ஜிதேசாய் போன்ற சந்நியாசிகளும், ஆள்வோராக இருப்பதும், அவர்கள் இத் தொழிலைப்பற்றி அலட்சியமாக இருப்பதுமே காரணம், என்று எண்ணுகிறோம்.

இதிலும், வடக்கு தெற்கு என்று பாகுபடுத்தப் படுவதாக, புள்ளிவிபர மூலம் தெரிய வருகிறது — கடற்கரையில் முழக்கமிட்ட கலைமாமணிகள் அனைவரும், இதனை எடுத்துச் சொன்னதாகவும் அறிகிறோம். இந்த உபகண்டத்தில் மொத்தம் 4000-சினிமாக் கொட்டகைகள் உள்ளனவென்றால், அவற்றில் 2000-கொட்டகைகள் மட்டும் தென்னகத்தில் உள்ளன. அப்படியிருந்தும் பம்பாய்க்கு 53-சதவிகிதம் பிலிம் வழங்கப்படுகிறதாம். எல்லா வகைகளிலும் பாரபட்சம் காட்டும் டில்லி, இத்துறையிலுமா காட்ட வேண்டும்! இந்திய உபகண்டத்திலேயே— ஏன், ஆசியாவிலேயே — தரத்திலும் வகையிலும் பெரிய ஸ்டூடியோ உள்ள இடமும் நம்முடையது தான். இருந்தும் கலை, கண்ணீர் விடவேண்டிய கட்டத்தில் உள்ளது!!

கச்சாபிலிம் இங்கேயே உற்பத்தியாகிறது என்கிற நிலைமை உண்டான பிறகு அரசினர் எவ்வளவு 'வெட்டினாலும்' சரி; ஆட்சேபமில்லை. அதுவும் இல்லாதபோது, கழுத்தைப் பிடித்தா கொள்வது? சென்ற சில திங்களுக்கு முன் டில்லி பார்லிமெண்டில் நமது கழக உறுப்பினர் இரா. தர்மலிங்கம், M.P. கேள்வி கேட்டதும், விரைவில் முயற்சிக்கிறோம் என்றுபதில் சொன்னதும், பலருக்கு நினைவிருக்கலாம். 'விரைவில்', 'ஆகட்டும், பார்க்கலாம்' என்கிற வார்த்தைகளுக்குத்தான், காங்கிரசாட்சியில், புதுப்பொருள்கள் ஏற்பட்டுள்ளனவே! இங்கிலையில், எப்போது கச்சாபிலிம் தொழிற்சாலை ஏற்படும் என்கிற உறுதியில்லை—அதிலும் இந்தத் தொழிற்சாலை அமைப்பதற்கு ஏற்ற இடம் நமது உதகமண்டலம் என்று வெளிநாட்டு நிபுணர்கள் சொல்லியிருப்பதால், டில்லி நிறைவேற விடுமோ விடாதோ என்கிற அச்சமும் நமக்கு இருக்கிறது!!

எனவே, இந்தச் சந்தர்ப்பத்தில், தவிப்போருக்கு வாழ்வளிக்கும் வகையில், கச்சாபிலிம் கட்டுப்பாட்டினை, டில்லி அரசு ரத்து செய்யவேண்டும்.

டில்லி, தயக்கம் காட்டுமேயானால், சென்னை அரசாவது, விபரத்தை எடுத்துச்சொல்லி, டில்லியிடமிருந்து நீதி பெற்றுத்தர வேண்டும்.

'நமக்கென்ன', என்று சென்னையும், 'சே! அவர்களா?', என்று டில்லியும், அலட்சியம் காட்டுமேயானால், சிறுபொறி, பெருந்தீயாக மாறவேண்டிய கட்டம் ஏற்பட நேரும் என்பதை எச்சரிக்கிறோம்.

அதே சமயத்தில், ஒரு பொதுவான நெருக்கடி ஏற்பட்டபோது, கட்சியலைகளுக்கும் கருத்து மாறுபாடுகளுக்கும் இடங்கொடாமல், ஒன்று திரண்டு போராடுவோம் என்று முழக்கம்எழுப்பும் கலையுலகையும் பாராட்டுகிறோம். இந்தப் பண்பும், ஆர்வமும் நீடிக்குமானால், கண்ணீர் விட வேண்டிய கட்டம் நீண்டநாள் நீடிக்காது என்பதையும் தெரிவிக்க விரும்புகிறோம்.

சினிமாக்கலை பொதுவாக அனைவருக்கும், சிறப்பாக வசதியும் வாய்ப்பும் அற்ற ஏழை மக்களுக்கும் இன்றியமையாத ஒரு பொழுதுபோக்குச் சாதனம், இதன் வளர்ச்சியில் ஊறு உண்டாகுமானால் — உண்டாக்கப்படுமானால், உழைப்பாளர் உலகம் உற்சாகம் குன்றிப்போகும்—உற்சாகம் குன்றுமானால், ஊதியம் குறையும், ஊதியம் குறையுமானால், அரசுக்கு ஆளும் பலம் குறையும் என்பதை அரசியலறிவும் அனுபவமும் படைத்த எவரும் மறுக்க முடியாது.

எனவே சினிமாக் கலையை ஏனோதானோ என்று தள்ளிவிடாமல் அத்துறைக்கு ஆவன செய்வது அரசின் கடமையாகும்.

அடிமைத்தனம்

வேலை. எஸ். எழில்

அடிமை! அடிமை!! இந்தச் சொல்லின் பொருள்தான் என்ன? தனி மனித சக்திகள் முதற்கொண்டு அரசுகள் ஈருக ஒவ்வொன்றும் ஒன்றையொன்று அடிமைப்படுத்தி ஆளவே ஆசைப்படுகின்றன. ஆதி சமுதாயத்திலிருந்து இன்று வரை உள்ள சரித்திரத்தில் 'அடிமை — ஆண்டான்' எனும் நேரெதிரான உணர்ச்சிகள் வாழத்தான் செய்கின்றன. தனி மனிதன் பலவானாக இருக்கும் பொழுது, எளியவனை — எளியவர்களை அடக்கி ஆள்கிருன். அப்படியேதான் இன சக்திகளும் ஆள்கின்றன. தனக்கு எடுபிடிகள் இருக்க எந்த இனமும் விரும்புகிறது. எந்த அரசும் அதையே செய்ய ஆசையுறுகிறது. பெருவாரியான மக்களின் பலத்தை நம்பியதாக நவிலப்படும் அரசாங்கம் பெருவாரியல்லாதாரின் உரிமைகளை அடக்கிவைப்பது வழக்கமாகி வருகிறது. அடிமைத்தனம் நிலைத்திருக்க என்றும் பலசக்தி — பண சக்தி விரும்பியே வந்திருக்கின்றது. ஆயுதபலம் நிரம்பிய வல்லரசுகள் அடிமைகளை உண்டாக்குவதில் பெருமைப்படுகின்றன.

பலசாலி எளியவனை அடக்கியாள்வதும், பெருவாரியான சமுகம் — சிறுபான்மை சமுகத்தை அடக்கி ஆளுவதும் நியாயமாகுமா? அப்படியே, சந்தர்ப்ப வசத்தால் எளியவன் பலசாலியை ஆளுவதும், பெரும் சமுகத்தை சிறிய கூட்டம் அரசோச்சுவதும் நியாயமாகுமா? ஆளும் நிலையில் உள்ள சக்தி எதுவாகினும் அவை நியாயம் என்கின்றது. அந்தச் சக்தி அரச பரம்பரையின் பிரதிநிதியாக இருந்தால் திமிரோடு சொல்கிறது — 'அது என்னுடைய உரிமை' என்று! ஆளுகிற சக்தி தற்போதைய ஜனநாயகப் போர்வையில் இருந்தால் — பெருவாரியானவர்களின் தீர்ப்பு! 'நான் ஆள்கிறேன்' — 'அது என் உரிமை' என்கிறது.

ஆனால் இதெல்லாம் நியாமான உரிமைகள்தானா? ஜனநாயகம் என்பதினாலேயே குறைவானவர்களின் உரிமைகளை உதாசீனம் செய்வதும், பறிப்பதும் நியாயம்தானா? பலமுள்ளதாலேயே எளியோரை அடிமைகளாக நடத்துவது நீதிதானா? இதில் வேடிக்கை என்னவென்றால் — இன்றைக்கு ஆள்பவர்கள் எல்லாம் தங்களைப் பலசாலிகள் என்றே கருதுகின்றனர். தானும் தன் கட்சியும் மட்டும் ஆளப்பிறந்தவர்கள்—ஆளும் கட்சிகளாகப் பிறந்தவை என்று தவருக முடிவெடுத்துச் செயல்படுகின்றனர். தங்களுடைய ஆயுத அதிகாரபலத்தைக் காட்டி அடக்க முற்படுகின்றனர். பல சக்தியைக் கொண்டு 'அடிமைத் தனத்தை' வலியுறுத்தி நிலைநிறுத்த முற்படுவது எவ்வளவு தீதானது; அநீதியானது என்பதை அனைவரும் தெளிதல் அவசியம்.

சிலர் அடிமைத் தனத்தைத் தவருக விமர்சனம் செய்கின்றனர். மாற்ருன் நம்மை ஆளுவது மட்டுமே அடிமைத்தனம் என்று நினைக்கின்றனர். தன் நாட்டான் அடிமையாக நடத்துவதைப்பற்றிப் புகழவேண்டும் என்று விளக்கங்கள் தருகின்றனர். இதுபோன்ற தவருன பிரச்சாரங்களால்தான் பிரஞ்சுப் புரட்சியும், ருஷ்யப் புரட்சியும் நடந்தது என்பதை மறந்தேவிடுகின்றனர். அடிமைத்தனம் எங்கே பயிரிட்டு வளர்க்கப் படுகிறதோ, அங்கே நிச்சயம் பூகம்பம் தோன்றத்தான் செய்யும்.

ரூஸ்ஸோ என்னும் பேரறிஞன் இதைத்தான் விளக்குகிருன். "வலிவுள்ளவர்கள் செய்யும் காரியமும் நியாயம் என்று கருதப்படுகிறபோது, யாருமே தாங்கள் பலசாலிகளாக இருக்கும்படிக்கே காரியங்களைச் செய்வர். ஆனால் அந்த நியாயம் பலத்தின் துணையில்லாதபோது—பலாத்காரத்தின் துணையில்லாதபோது வலிவிழந்து போகிறது. அப்படிப்பட்ட நியாயம் என்ன நியாயம்?"

என்ன நியாயமா? இன்றைய உலகில் நடைபெறும் காரியங்களின் நிலை என்ன? நியாயத்தை பலசாலிகள்தானே நடத்துவதாக அளக்கின்றனர். தீய காரியங்களையும், அவற்றைச் செய்யும் மனிதர்களைப் பொறுத்துத்தானே தீர்மானிக்கின்றனர். வலிவிழந்தவன் நன்மையே செய்யினும், அது பலசாலியின் வன்மையால் தீமையாக மாற்றப்படுகிறதன்றே? ஆனால், பலசக்தியின் வலிவு குறைந்து — அதன் இடமும் தரமும் மாறியபோது— அதன் செயல்களின் தீமைகள் விரிவாக்கப்படுகின்றன. பலசக்தியின் அன்றைய நியாயங்கள் எல்லாம் இன்றைக்கு அநியாயங்கள் என்று விமர்சிக்கப்பட்டு இகழப்படுகின்றன. அந்தஸ்தும் அதிகாரமும் பல சக்தியைவிட்டு விலகியதும் — அதன் அளவிலாக் கொடுமைகள் கொட்டியளக்கப் படுகின்றன. அதே சமயம் வலிவில்லாச் சக்தியின் நன்மைகள் பிரமாதமான அளவுக்கு வரவேற்கப்படுகின்றன.

உலகில் முதலில் பல சக்திக்கே வரவேற்புக் கிடைக்கிறது. காரணம், அதற்குள்ள வலிவும் பொலிவும் தூய்மையானது என்பதனாலா? இல்லை! இல்லை! அதற்குள்ள வசதிகளும் வாய்ப்புகளும் அப்பேற்பட்டவை. ஆனால் அது எப்பேற்பட்ட வரவேற்பு? வலிவு குறையும் சமயமே அதன்

செயல்களும் இழைப்படுகின்றன. பலமிழந்ததும் அந்தச் சக்தியின் நேற்றைய நியாயங்கள் — அநியாயங்கள் என்று அலசப்படுகின்றன. பலத்திற்கும் நியாயத்திற்கும் ஏதேனும் ஒற்றுமை இருக்கிறதா? வரிப்புலிக்கும் வளையவரும் ஆட்டுக்குட்டிக்கும் ஒற்றுமை இருக்குமா? இருக்காதே! உரிமைக்கும் நியாயத்திற்கும் உண்மைக்கும் நியாயத்திற்கும் உறவு இருக்கிறது — பொருளுமிருக்கிறது.

பலமுள்ள சக்தி—தன்னுடைய அதிகார பலத்தால், அந்தஸ்து போதையில் தன்னுடைய தவருன செயல்களுக்கெல்லாம்கூடப்பெரும் வியாக்கியானம் செய்கின்றது. ஒரு இனத்திடம் அடிமைத்தனத்தை வலியுறுத்தும்போதும் நியாயம் பேசுகின்றது. அடிமைப்பட்ட இனம் தனக்கு 'முறிச்சீட்டு' எழுதிக் கொடுத்து விட்டதாகப் பறையறைகிறது. அதைவிட ஒருபடி மேலே சென்று, "அடிமைப்பட்ட இனம் தன்னைக் காத்துக் கொள்ளவே எமக்கு அடங்கி நடக்கிறது. அடிமைச் சமுதாயம் அதனுடைய பாதுகாப்புக்காகவே எம்மிடம் தன் உரிமைகளை, உடைமைகளை ஒப்படைத்துள்ளது", என்று பேசுகிறது. ஆனால், உண்மை அதுதானு? தனி மனிதன் எவனும் தன்னைப் பிறருக்கு ஒப்புவிக்கிருன் என்பது எவ்வளவு தூரம் பிரதி உபகாரங்களைப் பொறுத்திருக்கிறதோ? சிந்திக்கிறவர்களுக்கு மட்டுமே தெரியும். ஆட்டுக்கடா புலியிடம் தன்னைப் பாதுகாக்கக் கேட்டுக்கொள்ளுமா? இதைத் தெளிவாக விளக்குகிருன் ரூஸ்ஸோ!

"ஒரு சமுகம் எவ்வித பிரதிபலனுமில்லால் தன்னைப் பிறருக்கு ஒப்புக்கொள்கிறது என்று சொன்னுல் — அந்த இனம் முட்டாள்கள் நிறைந்ததாகத்தான் இருக்கவேண்டும். அப்படி ஒப்புக்கொள்வது நியாயமற்றதுங்கூட. அது செல்லுபடியும் ஆகாது. மீறி ஒப்புக்கொள்வது பைத்தியக்காரத்தனமாகும்"

பைத்தியக்கார சமுகம் தன்னை ஒருமுறை மாற்ருருக்கு ஒப்படைத்து விட்டதாகவே வைத்துக்கொள்வோம். அந்தத் தலைமுறையினர் செய்துகொடுத்த அடிமைத்தன முறிச்சீட்டுக்கு வரும் தலைமுறைகளும் உடன்பட்டுத் தீரவேண்டும் என்பது என்ன நியாயம்? பாட்டன் செய்த தவறுக்கு பேரன் பழிவாங்கப்படுவது அநியாயமல்லவா? ஜனநாயகயுகம் என்றும், குடியரசு நாடு என்றும் பேசும் அரசசக்தி நீதி தவறக்கூடாது அல்லவா? **வெள்ளையரிடம் அடிமைப்பட்ட திராவிடம் வடநாட்டாரிடமும் அடிமையாகவே வாழவேண்டும் என்பது என்ன நியாயம்?** தன்னுடைய தலைமுறையினர்பட்ட அடிமை வாழ்வைத் தற்கால தலைமுறையினரும் ஏற்கவேண்டும்என்பது நியாயமல்லவே ...குடியரசு அரசாங்கம் என்ன செய்யவேண்டும்? அதைத்தான் ரூஸ்ஸோ தெளிவாக விவரிக்கிருன்.

"தர்ம நியாயமான அரசாங்கமாக இருக்குமானுல்—அந்த அரசாங்கம் — தன்னை ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ ஒவ்வொரு தலைமுறையினருக்கும் உரிமை அளிக்கவேண்டும்"

உரிமையை மற்றவனிடமிருந்து பெறுகிறவரை சமத்துவம், சகோதரத்துவம் பேசும் சக்தி—உரிமையைப் பெற்றதும் அவைகளை மறந்து, பழைய ஆட்சியின் ஆணவப் போக்கையே மேற்கொள்கிறது. தன்னைவிடப் பலசாலியை எதிர்க்க தன்னொத்தவர்களை ஒன்று சேர்க்கிறது. பலசாலியை வீழ்த்தியதும் தன்னைவிடப் பலவீனர்களை அடக்கி ஆள்கிறது. அதற்குத் தன்னுடைய பெருவாரியான பலத்தையும் காட்டுகிறது. கத்தியை, பழம் நறுக்கவும் பயன்படுத்துவார்கள்; கழுத்தை அறுக்கவும் பயன்படுத்துவார்கள். கத்தி போன்ற ஜனநாயகத்தை கழுத்தை அறுக்கவும் பயன்படுத்துவார்கள். கத்தி போன்ற ஜனநாயகத்தை கழுத்தை அறுக்க மட்டுமே பயன் படுத்துதல் எவ்வளவு இழிவு?

அடிமைத் தனத்தை விலக்கத் துடிக்கும் விடுதலை வீரர்களைப் பார்த்து ஜனநாயகக் கத்தியை நீட்டுகிருர்கள். சட்டப்படி பெருவாரியான அவர்களின் தீர்ப்புப்படி நீங்கள் விடுதலை கேட்பது குற்றம் என்கின்றனர். ஆளும் சக்தியின் பலத்தால் எதிர்சக்திகள் ஒற்றுமை இன்றி நலிவடைகிறது. சிறுபான்மையோரை அடக்கி ஆள்வதே பெரும் பிழை என்கிருன் ரூஸ்ஸோ......! சிறுபான்மையோரின் உரிமைகளைத் தெளியவைக்கிருன்.

"பத்துப்பேர் விருப்பப்படாதபோது, தொண்ணூறுபேர் மட்டும் ஒன்று சேர்ந்து ஓர் எசமானைத் தேர்ந்தெடுக்கிற உரிமையை எங்கிருந்து பெற்ருர்கள்? அத்தேர்தலை அங்கீகரியாத சிறுபான்மையான மக்கள் மேற்படி பெரும்பான்மையோருடைய முடிவுக்குக் கட்டுப்பட வேண்டும் என்று கூறுவதில் என்ன நியாயமிருக்கிறது?"

ஜனநாயகத்தைச்சரியாக அலசுகிருன் ரூஸ்ஸோ. 'பெரும்பான்மை' எனும் பேதத்தால் எத்தனை இடர்ப்பாடுகள் ஜனநாயகத்தில்...! இதற்கு விமோசனம் தான் என்ன?

விடுதலை விரும்பும் சமுகத்தை நிபந்தனை இன்றி அடிமைத் தனத்திலிருந்து விடுவிப்பதேயாகும். இருபதாம் நூற்ருண்டின் நவீன போர்க் கருவிகளைக் காட்டி ஏய்ப்பது நாகரிகமல்ல! எந்த நாடும் இக்காலத்தில் தனித்து வாழ முடியும்! அல்ஜீரிய புரட்சி எதைக் காட்டுகிறது? அங்கேரி எழுச்சி எதை நிரூபிக்கிறது? சூடான் சுதந்திரம் எதை விளம்புகிறது? டாங்கனீகாவின் விடுதலை எதை நிருபித்தது? இந் நூற்ருண்டில் தனித்து வாழ முடியாது என்பதையா? மாற்ருர் நமக்குக் கடன் கொடுக்கமாட்டார்கள் என்பதையா?

ஜனநாயகத்திற்குத் தூய்மையானகடமையைச்செய்வதென்பது பெரும்பான்மையில் இல்லை. அதிகார பலத்தில் இல்லை. அன்பான பண்பில் மின்னுகிறது. அடிமைத் தனத்தை அகற்றுவதில்தான் ஜனநாயகத்தின் உண்மையான உருவமும் உயிரும் வாழ்வது தெரியும்.

தனது பிறப்பாலும்வழிமுறைப்படியும் தமக்கே ஆளும் பாத்தியதை உண்டு என்று நடக்கின்றனர் சிலர். "ஒவ்வொருவனும் தனது பிறப்பால் ஒரு குறிப்பிட்ட பதவியைப் பெறுகிருன்", என்று

(11-ம் பக்கம் பார்க்க)

அழகு ஆடுகிறது

வானத்தில் வட்டமிடும் வெண்ணிலவைப் பார்த்துக்கொண்டே இரவு உணவுக்குப் பின் சாய்வு இருக்கையில் சாய்ந்திருந்தேன். தென்னகத்து நல்முத்துக் கடல் அலையின் உச்சி மோந்து வரும் தென்றல் உடலுக்கு இதமளித்தது. உள்ளமும் உடலும் ஒருங்கே மகிழ்ச்சிக்கடலில் மூழ்கி இருந்த அந்த நேரத்தில் "புதுப்பைத்தியம் நம் ஊருக்கு வந்திருக்கிறதாம் அடுத்த வீதியில். போய்ப் பார்ப்போம் வா' என்று சிறுவன் ஒருவன் தன் இளம் தோழர்களை அழைக்கும் குரல் கேட்டது. வானத்து வெண்ணிலவும், பொதியத்தின் தென்றலும் எனக்களித்த இன்பத்தை 'பைத்தியம்' என்று பையன் சொல்லிச் சென்ற சொல்லால் தொடர்ந்து அனுபவிக்க முடியாதவனுக ஆகிவிட்டேன். என் நினைவு சட்டென்று "இள்ளை" என்ற ஊருக்குப் பயணமாயிற்று.

இளிகள் அதிகமாக இருந்ததாலோ என்னவோ அந்தச் சின்னஞ் சிறிய ஊருக்குக் இள்ளை என்று தமிழர்கள் பெயரிட்டிருந்தார்கள். வரப்பெடுத்த வயலும் —ஆறு தேக்கிய நல் வாய்க்காலும், நெடிது நிற்கும் தென்னைகளும், கனி குலுங்கும் மாமரங்களும் அந்த ஊருக்கு அழகைச் சேர்த்தன. நகரத்து வாடையே வீசாத இள்ளையில், நெற்றி வியர்வை நிலத்தில் விழ, மேனி கருகக்கருகப் பாடுபடும் உழவர் பெருமக்கள்தான் அதிகம் வாழ்ந்து வந்தார்கள். கலப்பை தூக்கி முன்னுலே செல்லும் காளையரையும்—கஞ்சிக் கலயம் தாங்கிப் பின்னுலே செல்லும் மறக்குல மங்கையர்களையும் காணும்போதெல்லாம், பண்டைய தமிழகத்துக் காட்சிகள் பலவும் என் நினைவுக்கு வரும். கள்ளமற்ற உள்ளமும், கடமையைச் செய்யும் பண்பும் கொண்ட மக்கள் வாழ்ந்த அந்த ஊருக்குத்தான் ஓராசிரியனுகப் பணியாற்றச் சென்றிருந்தேன்.

உணவுச் சாலையோ — உறைவிடமோ இன்றித் தவித்த எனக்கு அஞ்சலையின் வீடுதான் புகலிடமாயிற்று. உணவும் உறையுளும் தன் இல்லத்திலேயே வைத்துக்கொள்ளும்படி அஞ்சலையின் அப்பா கந்தன், சொன்னுர்.

அஞ்சலையைக் காணும்போதெல்லாம் "அழகு ஆடுகிறது" என்ற புத்தகம்தான் என் நினைவுக்கு வரும். ஆம்! அவள் நடையில், உடையில், மொழியில், பார்வையில், சிரிப்பில்—எல்லாவற்றிலுமே தனியானதோர் "அழகு" ஆடிக்கொண்டுதான் இருந்தது!

ஜே. எஸ். இராசு

"வாத்தியார் தம்பி! இந்தக் கடுதாசியைப் படித்துச் சொல்லுங்க" என்ருர் அஞ்சலையின் அப்பா என்னிடம் ஓர்நாள். நான் கடிதத்தைப் பிரிப்பதற்குள் அசைந்தாடும் பூங்கொடிபோல், தன் தன் தாயுடன் வந்தாள் அஞ்சலை.

"அன்புள்ள மாமாவுக்கும், அத்தைக்கும், அஞ்சலைக்கும் மருமகன் பணிவாக எழுதுவது, நலம். அடுத்த மாதம் தமிழுக்குப் பதினைந்தாம் நாள் நல்லூருக்கு எல்லப்பன் மகன் செல்லப்பன் இங்கிருந்து வருகிருர். ஐந்து புதுச் சேலைகளும், பத்துச் சாக்கெட்டுத் துணிகளும், பணம் இருபது ரூபாயும் அவரிடம் கொடுத்தனுப்புகிறேன். பெற்றுக்கொண்டு பதில் எழுதவும். அவைகள் அனைத்தையும் அஞ்சலைக்கே கொடுத்துவிடுங்கள். உங்கள் இருவருக்கும் பின்பு வருவோர் வசம் கொடுத்து அனுப்புவேன். இப்படிக்கு மருமகன் அழகன்.

கடிதத்தின் கடைசி வரிகளைப் படிக்கும்போதே அஞ்சலையை அவள் அம்மா கடைக்கண்ணுல் பார்த்துச் சிரித்தாள். "எங்களைப் பற்றிய நினைவே இல்லாமல் உன்னையே நினைத்துக்கொண்டிருக்கிருன்போலிருக்கிறது. கல்யாணம் நடந்துவிட்டால் எங்களை அடியோடு மறந்துவிடுவான்" என்று மகளிடம் தாய் செல்ல வார்த்தைகள் பேசினுள். "போ அம்மா, உன் தம்பி அப்படி எழுதினுல் நான் என்ன செய்வேனும். எல்லாவற்றையும் எனக்கே கொடுக்கும்படி நானு அவருக்குச் சொன்னேன்" என்று தாய்க்கு மகள் கொஞ்சலாகப் பதில் சொன்னுள்.

அபிநய மொழியாள் அஞ்சலையும், அஞ்சலையைப் பெற்றெடுத்த அஞ்சுகமும் அங்கிருந்து சென்ற பின்னர் "என் மைத்துனனுக்குத்தான் அஞ்சலையைக் கல்யாணம் செய்துகொடுக்கப் போகிருேம். அழகன் போன ஆண்டு இங்கு வந்திருந்தான். இந்தப் பெண்ணைக் கட்டிக்கொண்டு இங்கேயே இருந்துவிடப்பா என்று எவ்வளவோ படித்துப் படித்துச் சொன்னேம். ஏதோ சிலோனிலே கொட்டி வைத்திருப்பதை அள்ளி வரப்போனவன்போல "அடுத்த ஆண்டு வந்து திருமணம் செய்துகொள்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் போனுன். வருகிறேன், வருகிறேன் என்று கடிதம் போடுகிருனே தவிர, வந்த பாட்டைக் காணேம். முன்பெல்லாம் அங்கிருந்து நினைத்தால் புறப்பட்டு வரலாம். இப்போது சட்டம் மாறிவிட்டதுஎன்று எழுதியிருக்கிருன். வயது வந்த பெண்ணை எத்தனை நாளைக்குத் தம்பி வீட்டில் வைத்

திருப்பது? நெருப்பை மடியில் கட்டிக்கொண்டிருப்பது போல நானும் அவளும் இருக்கிறோம். இந்தப் பெண்ணும் அழகனையே கட்டிக்கொள்வேன் என்று பிடிவாதமாக இருக்கிருள். இல்லை என்ருல் எத்தனையோ பேர் வந்து பெண் கேட்கிருர்கள். எவனுக்காவது பிடித்து மூன்று முடிச்சுப் போட்டுவிட்டு நிம்மதியாக இருப்பேன். அந்தப் பயலுக்குப் புத்தி இல்லை. வந்தபோதே கழுத்தில் தாலியைப் போட்டிருந்தால் எனக்கு இந்தக் கவலையெல்லாம் இருக்காது.'' என்று கந்தன் என்னிடம் கூறினர்.

''அழகனையே மணந்துகொள்வேன் என்று உறுதியோடு இருக்கும் உங்கள் மகளைப்பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள்'' என்றேன்.

''என்னமோ போ தம்பி, அஞ்சலையின் கல்யாணம் நடந்தால்தான் எனக்கு நிம்மதி'' என்று சொல்லியவாறே வயலைச் சுற்றிப்பார்க்கச் சென்ருர்.

பகல் உணவைக் காலையிலேயே சமைத்துவைத்துவிட்டு, அஞ்சலையும் அவள் பெற்ருேர்களும் அன்று கழனிக்குச் சென்றிருந்தார்கள். உச்சிப் பொழுதில் எனக்கு உணவு படைக்க அஞ்சலை அவசர அவசரமாகத்திரும்பி வந்தாள் ''கொஞ்சம்நேரமாயிட்டதுங்க, ரொம்பப் பசிமா இருக்கும்! மன்னிச்சுக்குங்க'' என்று சொல்லிக்கொண்டே உணவு பரிமாறினள். ''அதனலென்ன பரவாயில்லை''. என்றவாறே சாப்பிட்டுக்கொண்டிருந்தேன், இறுதியில் மோர் சோற்றை நான் பிசைந்து கொண்டிருக்கையில், மோரைப் போட்டுக்கொண்டே, ''சார், உங்களை ஒன்று கேட்கிறேன்'' — என்று இழுத்தாள் அஞ்சலை.

''என்ன அஞ்சலை? கேள், தருகிறேன்'' என்றேன்.

''ஒன்றுமில்லைங்க. என் மச்சானுக்குத் தனியாக் கடுதாசி எழுதணும் என்று ரொம்ப நாளா எண்ணம். ஆனல் எழுத உங்களைப் போல் தெரிந்தவர்கள் கிடைக்கவில்லை. எனக்கும் எழுதத் தெரியாதுங்க, நான்சொல்றபடி கடுதாசி எழுதித் தந்திங்கண்ணு அதை மச்சானுக்கு அப்படியே அனுப்பி விடுவேன். ஆனல் அப்பா அம்மாவுக்குத் தெரியக்கூடாது'' என்ருள்.

மாகடலுக்கு நடுவினிலே—அங்கோர் கண்ணற்ற தீவினிலே இருக்கும் தன்னுடைய காதலனை எண்ணி எண்ணி ஏங்கும் அஞ்சலையின் எண்ணத்தை நான் முழுதும் அறிந்துகொண்டேன். அவளுடைய மச்சானுக்கு நான் கடிதம் எழுதியதே ஒரு தனியான அனுபவம். வேண்டுமென்றே அவளிடம் ''எப்படி எழுதுவது'' என்றேன். ''முதலில் வணக்கம் வைத்து எழுதுங்கள்'' என்ருள். ''வணக்கம் எழுதியாயிற்று, அப்புறம்'' என்றேன். ''நல்ல வணக்கமாக எழுதினீர்களா'' என்ருள். இரண்டு முறை 'வணக்கம்' என்ற தூய தமிழ்ச்சொல் அந்தப் பட்டிக்காட்டுப் பாவையின் வாயிலிருந்து வந்தபோது மிகவும் மகிழ்ந்தேன். அதோடு தன்னைமணக்கப்போகும் மச்சானுக்குத் தரவேண்டிய மரியாதையில் எள் அளவும் தவறக்கூடாது என்ற அவளின் பண்பை எண்ணிப் பெருமைப்பட்டேன். ''போனவுடன் வந்து கல்யாணம் செய்துகொள்கிறேன் என்றீர்களே. ஏன் இன்னும் வராமல் இருக்கின்றீர்கள். என்னை மறந்துவிட்டீர்களா?'' என்று சொல்லிக்கொண்டே வந்தாள். எழுதுவதைச் சற்று நிறுத்தி ''உன் நினைவு இல்லாமலா புடவையும் சட்டைத் துணியும் கொடுத்தனுப்பினர்'' என்றேன், சிரித்தவாறே. பற்களால் விரலைக் கடித்துக்கொண்டே, நாணத்தால் தலை குனிந்தாள். எழுதி முடித்ததும் படித்துக் காண்பிக்கச் சொல்லி, குமுத விழிகளை அகலத் திறந்து ஆர்வம் பொங்கப் பார்த்துக்கொண்டிருந்தாள். படித்து முடித்ததும், ''நான் நினைத்ததைவிட நல்லா எழுதியிருக்கிறீர்களே'' என்று தனது பாராட்டுதலைத் தெரிவித்து, அஞ்சலில் தபாலைச் சேர்க்க அஞ்சலை சிட்டாகப் பறந்தாள். காதல் உலகிலே கானம் பாடத் துடித்து நின்ற அஞ்சலையின் ஆசை விரைவிலே கைகூடட்டும் என்று எனக்குள்ளே வாழ்த்தினேன்.

அவளுடைய அஞ்சல் இலங்கையைச் சேர்ந்த ஒருகிழமை கழித்து, அப்பாவுக்கும் மகளுக்கும் அழகன் தனித்தனியே கடிதம் போட்டிருந்தான். ஊருக்கு வருகிற தபால்கள் எல்லாவற்றையும் அஞ்சலாளர் என்னிடமே தந்து போவாராதலால், அஞ்சலைக்கு வந்த கடிதத்தை தனியே எடுத்து வைத்திருந்தேன்.

அப்பாவுக்கு வந்த கடிதத்தில் தனக்கென்று சிறப்பான பகுதிகள் இல்லை என்று கண்டதும், அஞ்சலையின் முகம் கறுத்துச் சுருங்கியது. அவள் பெற்ருேர் இல்லாதபோது அழகன் அஞ்சலைக்கு எழுதியகடிதத்தைப்பற்றிச் சொன்னேன். படித்துக் காண்பிப்பதற்குள் அவள் முகத்தில் இழைவிட்ட மகிழ்ச்சி ரேகைகளை என்னல் எண்ணவேமுடியவில்லை.

''விரைவில் வருகிறேன்; மணம் புரிவோம்; மகிழ்வோம்.'' என்ற அழகனின் கடிதம் வந்தது முதல் அஞ்சலை தனிக் களையுடன் விளங்கினள். ஈழத்துப் புடவைகளைத் தன் தளிர் மேனியில் உடுத்திக்கொண்டு அந்த ஊரில் அவள் நடமாடும்போது ''ஏது அஞ்சலை புதுச்சேலை'' என்று கேட்பவர்களுக்கு ''என் மச்சான் அனுப்பினர்'' என்று பெருமையுடன் சொல்லி மகிழ்வதை நானே சில நேரங்களில் பார்த்திருக்கிறேன்.

✱

திடீரென்று ''இலங்கையில் குழப்பம்'' என்று பத்திரிக்கைகள் எல்லாம் செய்திகளைத் தாங்கி வந்தன. எனக்கு நாளிதழ்கள் வருமாதலால், இலங்கையில் நடக்கும் சம்பவங்களை அறியமுடிந்தது. இலங்கையில் குழப்பம் துவங்கிப் பத்து நாட்கள் கழித்து அழகன் எழுதி இருந்த கடிதம் இலங்கையின் உண்மையான நிலைமைகளை மேலும் விளக்கிற்று. ''இலங்கையில் உள்நாட்டுக் குழப்பம் நடந்துகொண்டிருக்கிறது. தமிழுக்கு உரிய இடம் தரவேண்டுமென்று இங்குள்ள தமிழர்கள் கேட்பதற்காகச் சிங்களவர்கள் கோபித்துக் கொள்கிருர்கள். சிங்கள வெறியர்கள் தமிழர்களை மனிதர்களாக இங்கு கருதுவதில்லை. சிங்கள அரசாங்கம் தமிழ்த் தலைவர்களை இரவோடு இரவாகக் கைதுசெய்து விட்டார்கள். தமிழர்கள் வாழும் பகுதிகளில் மட்டும் ஊரடங்குச் சட்டம் போட்டுச் சிங்களவர்களை நடமாடவிட்டிருக்கிருர்கள். தமிழர்களிடமிருந்த தற்காப்பு ஆயுதங்களைப் பறித்துக்கொண்டார்கள். தமிழர்களை அடித்து விரட்டுகிருர்கள்; சுட்டுத் தள்ளுகிருர்கள். தமிழர்கள் வாழும் வடபகுதி கிழக்குப் பகுதிகளில் பயங்கர ஆயுதம் தாங்கிய இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளது. கொழும்பிலே தமிழர்களின் கடைகள் கொள்ளையடிக்கப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் தமிழர் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. தமிழ்ப் பெண்களின் மேலாடைகளைக் கழற்றி அவர்கள் முதுகில் ''சிறீ'' என்ற வார்த்தையைத் தாரினல் எழுதுகிருர்கள். ''உன் வயிற்றில் இருப்பது தமிழ் மகன் தான். எனவே அவனையும் கொலை செய்வேன'' என்று கற்பவதியாக இருந்த தமிழ்ப்பெண்ணைச் சிங்களவர் குத்திக் கொன்றிருக்கிருர்கள். இங்கு தமிழர்களின் உடலுக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு இல்லை. எந்த நேரத்தில் என்ன நேருமோ என்ற கவலைதான். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானல், பக்கத்து மளிகைக்கடைக்குச் சென்று உப்புப் புளி போன்ற சாமான்கள் வாங்கிவரவேண்டும் என்பதுகூட, உயிரைப் பயணம் வைத்து ஈடுபடும் காரியமாக இருக்கிறது. தபால்கள் பரிசீலிக்கப்பட்டுத் தாமதமாகவே கிடைக்கின்றன. தமிழ்நாட்டுப் பத்திரிக்கைகள்கூட இங்கு தடைசெய்யப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டுக்குவர இலங்கை அரசாங்கத்தில் விண்ணப்பித்துள்ளேன். உத்தரவு கிடைத்ததும் வந்துவிடுகிறேன்'' என்று எழுதியிருந்தான்.

அழகனுடைய நிலைமை விளக்கக் கடிதம் இவ்வூரில் பெரிய பரபரப்பையும் திகிலையும் உண்டாக்கிவிட்டது. சிலோனில் இருப்பவர்களின் உறவினர்கள் பலரும் ''மட்டக்களப்பில்'' என்ன ஆயிற்று, ''கொத்தமல்லியில் கொலை நடந்ததா'' என்று கேள்விக் கணைகளால் என்னைத் துளைத்தவண்ணம் இருந்தார்கள். வியாபாரம் காரணமாகவும், நிலத்திற்கு இராசாயன உரம் வாங்கச் சென்றதின் பேரிலும் மாவட்டத் தலைநகருக்குச் சென்று திரும்பியவர்கள் இலங்கையில் நடக்கும் அட்டூழியத்தைப்பற்றித் தாங்கள் அங்கு கேட்டறிந்தவைகளைக் கதை கதையாகச் சொன்னர்கள். இவைகளைக் கேட்ட அஞ்சலையின் பெற்ருேர்களும், குறிப்பாக அஞ்சலையும் அதிகம் கலங்கிப் போனர்கள். ''உடனே புறப்பட்டு வா. கலாட்டாவில் தலையிடாதே'' என்று கந்தன் அழகனுக்குக் கடிதம் எழுதச் சொன்னர். அதோடு அஞ்சலை சொன்ன செய்திகளையும் சேர்த்து அழகனுக்குக் கடிதம் எழுதினேன்.

இலங்கையில் கலகம் நாளுக்கு நாள் வளர்ந்த வண்ணம் இருந்தது. அன்பையும் அறத்தையும் பரப்பி 'ஆசியாவின் சோதி' என்று உலகத்தவரால் அழைக்கப்படும் புத்தரின் பெயரைச் சொல்லிக்கொண்டு, புத்த சந்நியாசிகள் கொலைவாளும் கையுமாகத்திரிந்து கலகத்தைப் புதுப்பித்தவண்ணம் இருந்தார்கள். பண்டாவின் அரசு கடமை தவறிச் சிங்கள வெறியர்களுக்கு ஆதரவு அளித்து வந்தது.

இலங்கை வாழ் தமிழர்களின் இயம்பவொண்ணு இன்னல்களைப் பற்றி எண்ணிய வண்ணம் அஞ்சலையின் வயல் பக்கம் போனேன். மாலை நேரத்தில் மரத்தின்மேல் இருந்து, கம்பங்கொல்லைக்காவல் புரிந்தபடியே பாடிக்கொண்டிருந்தாள் அஞ்சலை.

தன் இதயத்து எண்ணங்களை-ஆசைகளை நாட்டுப்புறத் தமிழில் கள்ளம் கவடமின்றி — கட்டுப்பாடற்ற சூழலில் அஞ்சலை பாடியது தன் மச்சானின் வருகையைத் கணம்தொறும் எதிர்நோக்கிய வண்ணம் இருக்கிருள் என்பதைக் காட்டிற்று. என்ருலும், குரலில் சோகமும், ஏக்கமும் கலந்திருந்தது. குழப்பம் நடந்த நாட்களில் அஞ்சலையின் அழகு முகம் களையிழந்து காணப்பட்டது. அவள் கண்களில் எப்போதும் மின்னிடும் ஒளி குன்றியிருந்தது. நடையில் மிடுக்கோ, பேச்சில் சுவையோ, பார்வையில் உணர்வோ இல்லாது இருந்தாள். ஒரு நாள்,

''ஏன் சார்! என் மச்சான் எப்போது வருவார்'' என்ருள் ஏக்கம் நிறைந்த குரலில்.

''வந்துவிடுவார் அஞ்சலை. கவலைப்படாதே'' என்றேன். என்னுடைய பதில் அந்த நேரத்தில் மட்டும் அஞ்சலைக்கு ஆறுதல் அளித்தது என்பதையும், மற்ற நேரங்களில் கவலையோடுதான் இருக்கிருள் என்பதையும் கண்டேன்.

அழகன் வந்தவுடன் திருமணம் செய்துவிடவேண்டும் என்ற முடிவால் கந்தன், நல்ல விலை விற்ருலும் நெல்லைப் போடாமல் அரைத்து அரிசியாக்கி வைத்துக்கொண்டார். வெங்காயம், கொத்தமல்லி போன்ற பண்டங்களை மட்டும் விற்றுத் திருமணச் செலவுக்குக் கொஞ்சம் தொகை சேர்த்தார். முக்கியமான சாமான்களை வாங்கிப் பத்திரப்படுத்தினர். திருமணத்திற்கு வேண்டிய துணிகளை அழகனே கொண்டுவருவான் என்ற நம்பிக்கையில் அவைகளை வாங்காமல் விட்டுவிட்டார். கூரையைப் புதிதாக வேய்ந்தார். சுவருக்குச் சுண்ணம் அடிக்கும் வேலையை அஞ்சலையின் அம்மா செவ்வனே செய்துமுடித்தாள். அஞ்சலையை அவள் தோழியர்கள் கேலி மொழிகளால் அர்ச்சனை

பொதுநலப் போர்வைக்குள்ளே திரியும் வேஷதாரிகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். தங்களைச் சீர்திருத்திக்கொள்ள வழி தெரியாதவர்களெல்லாம் உலகத்தைச் சீர்திருத்தப் புறப்பட்டுவிடுகிருர்கள்! என்னதான் வெளியில் கம்பீரத்தை அவர்கள் பாவனை செய்துகொண்டாலும், அவர்களுடைய ஊழல் அவர்களே அறியா வண்ணம் அவர்கள் தேடிக்கொள்ளும் புகழுக்கு முன்னே வெளி உலகுக்கு எட்டிவிடுகிறது. பாவம்! அடிப்படையில் ஒழுக்கம் அற்றவர்களின் சொல்லுக்கும் செயலுக்கும் மற்றவர்கள் எங்ஙனம் மதிப்புக்கொடுக்கிருர்கள் என்பது அவர்களுக்கே தெரியாது.

முகவரி மாற்றம்
"திராவிடன்"
(சோமு அச்சகம்)
16/17, திருநாவுக்கரசு முதலி தெரு,
பெரம்பூர், சென்னை-11.
(ரயில் நிலையம் அருகில்)
குறிப்பு:— என். வி. நடராசன் அவர்களுடன் அஞ்சல் மூலமோ நேரிலோ தொடர்புகொள்ள விரும்பும் தோழர்கள், இனி இம் முகவரிக்கே தொடர்புகொள்ளுமாறு வேண்டிக்கொள்ளப்படுகிருர்கள்.
நிர்வாகி
திராவிடன், சென்னை-11.

செய்யத் துவங்கினார்கள். அழகன் வராமலே அஞ்சலையின் திருமணம் நன்கு விளம்பரமாகிவிட்டது. இவ்வளவு வேலைகளையும் செய்து முடித்துவிட்டு, "இனி, மேளம் கொட்டித் தாலிகட்ட வேண்டியது தான் தம்பி பாக்கி" என்றார் கந்தன் என்னிடம்.

எல்லோரும் எதிர்பார்த்ததைப் போல் புறப்படும் தேதியையும் தமிழகம் வரும் தேதியையும்குறிப்பிட்டு அழகன் கடிதம் அனுப்பினான். அன்று முதல் அஞ்சலை அகமும் முகமும் மலர விளங்கினாள். எதிர்பார்த்த ஒன்று இனிதே நடைபெறப் போவதைப் பற்றிப் புதிய மனக்கோட்டைகள் கட்டிவந்தாள் என்பதை அவளது புதிய போக்குக் காட்டிற்று.

அந்த நாளும் வந்தது. அதற்கு முதல் நாளே அழகன் வந்து இறங்கும் நகரத்திற்கு கந்தன தன் உதவி ஆளுடன் சென்றார். அழகனை அப்பா அழைத்துவரும் போது வீடு அழகாக இருக்க வேண்டும் என்று அஞ்சலை திண்ணைகளிலும் முற்றத்திலும், உள் வீட்டிலும் கோலம் போட்டாள். அழகன் ஊரை நெருங்கிய உடனே வீட்டில் விளக்கேற்றி வைக்கவேண்டும் என்பதற்காக அழுக்கேறி இருந்த வெண்கல விளக்கைத் துலக்கி எண்ணெயும் திரியும் இட்டுத் தயாராக வைத்தாள். ஆனால் மூன்று நாள்வரை விளக்கேற்ற வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. கந்தனுக்குத் துணையாகச் சென்றவர் மட்டும் சோர்வுடன் திரும்பினார். "அழகன் வரவில்லை. இன்றோ நாளையோ வந்தால் அழைத்து வருகிறேன் என்று சொல்லி என்னை அனுப்பி விட்டார்" என்றார். அவருடைய வருகைக்குப் பிறகு தாயும் மகளும் கண்ணீர் விட்டபடியே இருந்தார்கள். உணவுகூடச் சமைக்கவில்லை. நான் மட்டும் ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தேன்.

இரண்டு நாள் சென்று கந்தன் மட்டுமே திரும்பி வந்தார். "காத்துக்காத்துக் கண் இரண்டும் பூத்துப்போச்சு, காணவில்லை. என்ன தடங்கலோ — ஏதோ தெரியவில்லை" என்று அவரும் புலம்பியபடி சொன்னார். அன்று மாலை சிலோனிலிருந்து தபால் வந்தது. விரைவாக உடைத்துப் படித்தேன்;

அன்புள்ள கந்தன் அவர்கட்கு,

அழகனின் நண்பன் குமரன் எழுதியது.

"அழகனும் நானும் தமிழ் நாட்டுக்கு வரப் புறப்பட்டுத் தோட்டத்திலிருந்து இரயில் நிலையம் நோக்கி வந்துகொண்டிருந்த போது, சிங்களக் குண்டர்களும், புத்த சந்நியாசிகளும் திடீரென்று கொள்ளைக்கூட்டம் போல் வளைத்துத் தாக்கினார்கள். ஒரு நொடியில் எங்களோடு வந்தவர்களில் நால்வரை ஆயுதங்களால் குத்தினார்கள். பயந்து ஓடிய எங்களையும் தாக்கினார்கள். பொருள்களையும் பணத்தையும் பறித்துக் கொண்டு ஓடினார்கள். கத்தியால் குத்தப்பட்டவர்களில் நமது அழகனும் ஒருவன். அவனை உடனே வீட்டுக்கோ--மருத்துவ மனைக்கோ தூக்கிச்செல்ல என்றால் முடியவில்லை. காரணம் என் வலது காலை குண்டன் ஒருவன் கழியால் அடித்ததால் அது முறிந்து போயிற்று. தள்ளாடித் தள்ளாடி அழகன் குற்றுயிராய்க் கிடக்கும் இடத்திற்குப் போனேன். அதற்குள் கொடுவாள் வெட்டுகளுக்குப் பலியானவர்கள் மூன்று பேர் இறந்துவிட்டார்கள். அழகன் உடலெங்கும் வெட்டுக்காயங்களுடன் கிடந்தான். இரத்தத்தைக் கண்டதும் எனக்கும் மயக்கம் வந்துவிட்டது. கால் வலியோடு அவன் அருகில் நானும் கத்திக்கொண்டு கிடந்தபோது 'அஞ்சலை அஞ்சலை' என்று வாய்விட்டுக் கதறினான். மயக்கம் தெளிந்து நான் எழுந்த போது அழகன் இறந்துவிட்டிருந்தான். பிறகு அப்பக்கம் வந்த நமது தோட்டத் தொழிலாளர்களைக் கொண்டு அழகனையும் பிறரையும் அடக்கம் செய்தேன். முறிந்துபோன என் காலுக்குச் சிகிச்சை செய்யக்கூட இங்குள்ள அரசாங்க மருத்துவர்கள் சிங்களவர்களாக இருப்பதால் மறுத்துவிட்டார்கள். தோட்டத்துத் துரைக்கு எழுதினேன். அவரும் இதுவரை கவனிக்கவில்லை. நாட்டு முறையில் கட்டுக்கட்டி வருகிறேன். இனி நமது தாய்ப்பூமிக்கு வருவேன் என்பது சந்தேகந்தான். இந்த உலகில் தமிழர்களாகப் பிறந்துவிட்டோம் என்ற ஒரே காரணத்திற்காக--குற்றத்திற்காக நமது மக்கள் இப்படி நாயினும் கீழாய் நலியவேண்டி இருக்கிறது. அழகன் இறந்ததைப்பற்றி வருத்தப்படுவீர்கள். என்ன செய்வது? எப்படி ஆறுதல் சொன்னாலும் அது வீணானது என்பதை அறிவேன்".

அழகன் இறந்துவிட்டான் — சிங்கள வெறியர்களால் குத்திக் கொல்லப்பட்டான் என்று படிக்கும் வரைதான் எல்லோரும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். பிறகு அழ ஆரம்பித்து விட்டார்கள். நான் மட்டும் கலங்கியவாறே முழுவதையும் படித்தேன். காட்டிலிருந்து வந்த அஞ்சலைக்கு யாரோ வழியிலேயே செய்தியை அறிவித்து விட்டார்கள். 'மச்சான்— மச்சான்' என்று கத்தியபடியே ஓடிவந்தாள். அம்மாவையும் மற்றப் பெண்களையும் கட்டிப்பிடித்துக் கதறினாள். கதறிய பின் மயக்கம்போட்டுக்கீழே சாய்ந்தாள். தம்பி இறந்ததைக்கூடக் கொஞ்சம் மறந்துவிட்டு மகளுக்கு ஆறுதல் சொல்ல ஆரம்பித்தாள் அவள் அம்மா. முகத்தில் நான் நீர் தெளித்தேன்--பயனில்லை. என் சொந்த உபயோகத்திற்கு வைத்திருந்த தைலத்தைத் தேய்த்துவிடச் சொன்னேன். காற்றோட்டமான இடத்தில் படுக்கவைத்தோம். அன்றிரவு முழுதும் பேசாமல் இருந்தாள். காலையில் பக்கத்துஊர் நாட்டு வைத்தியர் வந்து கலிக்கம்போட்டார். கண்ணீர் வந்தது; சிறிது அசைந்து கொடுத்தாள். விழித்துவிழித்துப் பார்த்தாள். பெற்றோர்கள் துடித்தார்கள். ஊரார் கலங்கியதோடு பரிதாபப்பட்டனர். அஞ்சலை உணவைத்தள்ளினாள். அடுத்த நாள் இரவு நடுச்சாமத்தில் பாடினாள். கம்பங் கொல்லைக் காவலின் போது மரத்தில் உட்கார்ந்து பாடிய பாட்டு அவளுடைய நினைவுக் கடலில் அலைமோதிக் கொண்டிருப்பதை உணர்ந்தேன்.

> தனக்காகாகத் தானே உழைக்கையில் மனிதன் ஒரு துரும்புபோல் இருக்கிறான். ஆனால் அருள், அன்பு, நீதி போன்ற அறங்களை எடுத்துரைப்பவனாக மாறியவுடன் தலைவனைப் போலாகிவிடுகிறான். அவன் சொல் எல்லா நாடுகளிலும் செலவாணியாகின்றது; எல்லா மனிதர்களும்—அவனுடைய பகைவர்கள்கூட—அவனுடைய நண்பர்களாகி அவனுடைய சொல்லுக்குச் செவிசாய்க்கிறார்கள்.

அடுத்து வந்த நாட்களில் அஞ்சலை தன்னுடைய நிலை மறந்தாள், ஆடை நெகிழ்வதைக்கூட அறியாத நிலை பெற்றாள். யாரையும் அடையாளம் கண்டு கொள்ளாதவள் போல் உளறினாள். பைத்தியம் என்ற சொல்லுக்குப் பாத்திரமானாள். தன் ஒரே மகளின் வாழ்வு சிதறிப் போனதைப் பார்த்துப் பார்த்து அஞ்சலையின் பெற்றோர்கள் அலறினர். இவர்களைப் பார்த்துக் கொண்டிருப்பது எனக்கு வேதனையாக இருந்தது. சென்னை பைத்தியக்கார மருத்துவ மனைக்கு அனுப்புமாறு கந்தனை வேண்டினேன். என் யோசனையை அவர்கள் கேட்கும் நிலையில் இல்லை. எனவே, இப்போது, நான் இருக்கும் ஊருக்கு மாற்றிக் கொண்டேன். அஞ்சலையை நான் கடைசியாகப் பார்க்குப்போது முழுப் பைத்தியமாக மாறி இருந்தாள். அப்போதும் "மச்சான் வருவாரென்று... ...." அவள் முன்பு வயலில் பாடிய பாட்டைத்தான் பாடிக் கொண்டிருந்தாள்.

அழகு 'ஆடுகிறது' என்ற வார்த்தைகளுக்கு இலக்கியமாகத் திகழ்ந்து, மலர்ந்து மணம் வீசிக்கொண்டிருந்த அஞ்சலையை சென்னைக்குப் போனபோதுபார்த்தேன். ஆனால் திரும்பி வரும் போது அந்த 'ஆடும் அழகைக்' காண முடியவில்லை. அன்று அஞ்சலையிடம் 'அழகு' அழகாக ஆடிக்கொண்டிருந்தது. இன்று அந்த 'அழகு' அலங்கோலமாக அவலட்சணமாக ஆடுகிறது.

அஞ்சலையின் வரலாற்றைப் புரட்டிப்பார்த்தவுடன் சிந்தனையில் ஆயிரமாயிரம் அஞ்சலைகள்தோன்றினர். அஞ்சலையைப் போன்று எத்தனை ஆரணங்குகள் இலங்கையிலே தங்கள் இல்லத்துத் தலைவர்களை — காதலர்களை இழந்து தவிக்கிறார்களோ? எத்தனை காதலர்களுக்கு அழகனுக்கும் அஞ்சலைக்கும் கிடைத்த கசப்பான அனுபவங்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றனவோ? ஒரு காலத்தில் உலகிற்கு கடல் முத்தை விற்கச் சென்ற தமிழர்களின் வழித்தோன்றல்கள் இன்று இத்தனை கொடுமைகளுக்கும ஆளாகித் தவிக்கின்றார்கள். இவைகளை ஏன் என்று கேட்க நாதியில்லை. "ஆனால் அகில இந்தியா" பேசவும் டெல்லிப் பெரு நகரத்திலிருந்து உலகத்து நாடுகளுக்கெல்லாம் வெண்புறுக்களை பறக்கவிடவும், பாருக்கெல்லாம் பஞ்சசீலம் போதிக்கவும் நேருவுக்கு நேரமிருக்கிறது. "அவருடைய அரசியல் அடிமையாக இருப்பதுதான் பச்சைத் தமிழனாகிய எனக்கு இச்சையாக இருக்கிறது" என்று சொல்லக் காமராசருக்கு இனிக்கிறது. அல்லற்படும் அஞ்சலைகளின் கண்ணீரைப் போக்க நேரு — காமராசர் போன்றவர்களின் கருத்துக்கள் விளக்கமுறத் தாயகத்து வீரர்களின் விடுதலைப் போரினால்தான் முடியும் என்று எண்ணியபடியே மீண்டும் சாய்வு இருக்கையில் சாய்ந்திருந்தேன். முகிலைக் கிழித்து வெளிவந்த நிலவு மங்கை தனது தோழிகள் — நட்சத்திரங்கள் உறங்கிவிட்டார்களா என்று பார்த்துக்கொண்டிருந்தாள். பைத்தியத்தைப் பார்க்கச் சென்ற சிறுவர்கள் தங்கள் இல்லங்களுக்குத் திரும்பிச் சென்றுகொண்டிருந்தார்கள்.

★

> ஆபிரிகக் கண்டத்தில் 'சுண்டைக்காய்'போலிருக்கும் சின்னஞ் சிறிய நாடுகளில் ஒன்று கினி. பிரெஞ்சுப் பிடியிலிருந்து அண்மையில், விடுபட்ட இந்நாடு ஒரு உறுப்பினராகச் சேரப்போகிறது, ஐக்கிய நாடுகள் சபையில். இந்நாட்டினையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று, தீர்மானம் கொண்டுவரப் போகிறது, கனா. கனாவும் ஒரு சிறுநாடென்பதும், இரண்டாண்டுகளுக்கு முன்புதான் விடுதலை பெற்றதென்பதும் யாவருக்கும் தெரியும். திராவிடத்தோடு ஒப்பிடும்போது, இவை மிகச்சிறிய நாடுகளாகும்! இவையெல்லாம், ரஷியா, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற பெரிய பெரிய நாடுகளுக்குச் சமமாக ஐக்கிய நாடுகள் சபையில் அமரப்போகின்றன. ஏன் திராவிடம் விடுதலைபெற்று இந்நிலை பெறமுடியாது? உலக அரங்கில் உன்னத இடம் வகிக்க முடியாது?

6-ம் பக்கத் தொடர்ச்சி

அறுதியிட்டு கூறுகிறான் சாணக்கியன். இப்படிச்சொல்வதின்மூலம் அடிமைத்தனத்திற்கு ஆழ்ந்த ஆதரவைத் தருகிறான் சாணக்கியன். சமுகத்தில் ஆளவும் ஆளப்படவும் பிறப்பால் கற்பிப்பது எத்தனை பயங்கரம்?

அடிமைத்தனத்தை எந்தவிதமெல்லாம் உருவாக்குகிறார்கள்! பலமுள்ள சக்தி தன்னுடைய அதிகார ஆயுத பலத்தால் பலமில்லாத சக்தியை, நியாயத்தைக் கற்பித்து அடிமைப்படுத்துகிறது. பெரும்பான்மை ஜனநாயகம் என்று சொல்லிச் சிறுபான்மை சமுகத்தை அடிமை செய்கிறது. சிறுபான்மை சந்தர்ப்பவசத்தால் போலிப்பலம் பெற்றுப் பெரும்பான்மை சமுகத்தை அடிமைப் படுத்தி ஆளுகிறதே......! இப்படியெல்லாம் அடிமைத்தனம் எனும் கொடுமை வளர்க்கப்படுகிறது.

அடுத்து... சாதி, சமயங்களின் பெயரால் ஆண்டான் அடிமை முறை அமுலாக்கப்படுகிறது. பிறப்பிலேயே ஆண்டான் அடிமையைக் கற்பித்து — ஆளும் உரிமையை ஒருவனுக்கும், அடிமை உரிமையமற்றவனுக்கும் வழங்குகிறது. ஆண்டவனின் நியதி அப்படி! அவன் தலைவிதி ஆள்கிறான்! உன் தலைவிதி அடிமையாக இருக்கிறாய்...! உன் சமுகம் அடிமைச் சமுகம்...! இவ்வாறெல்லாம் மனித சக்தியின ஒருமித்த வலிவைப் பிரித்துச் சதிசெய்து விட்டார்கள். அடிமைத் தனத்தின் வளர்ச்சி இப்படியெல்லாம் வளர்ந்து வந்திருக்கிறது. ஆள்வதும் அடிமையாவதும் ஆண்டவனின் நியதி என்பேரை ரூஸ்ஸோ வேடிக்கையாக-குத்திக் குடைகிறான் தன் கேள்வி மூலம்.

"எல்லா அதிகாரங்களும் ஆண்டவனிடமிருந்துதான் வருகிறது என்று சொல்கிறார்கள், நிரம்பசசரி! ஆனால், எல்லா நோய்களுங்கூடக் கடவுளிடமிருந்து தான் வருகின்றன...! அதனால் நாம் ஒரு மருத்துவனைக் கூப்பிடாமல் இருக்கிறோமா?"

இதற்கு என்ன சொல்கிறார்கள் ஆளப்பிறந்தவர்கள்? அடிமைகள் ஆர்த்தெழுவதை எப்படித் தடுக்கப் போகிறார்கள்?

★

அமெரிக்காவில் ★ வானொலி ★

வானொலியா? சேச்சே! பெரிய தலைவலியாப் போச்சே இங்கே!!—என்று சலித்துக்கொள்வோர், ஏராளம் உண்டு நம் நாட்டில்.

ஆகாஷ்வாணிதானே! அது, ஆகாயத்திலிருக்கிறதே ஒழியத் தரைக்கு எங்கே வருகிறது — மக்களுக்கெங்கே பயன்படுகிறது?— என்று, எரிச்சல் வரும் நமக்கு இங்குள்ள வானொலியைப் பற்றி நினைத்தால்.

இங்கு வானொலி இந்திக்கு ஒலி பரப்பி! வைதீகத்துக்கு வக்கீல்! இன்பத்தைக் கொலை செய்யும் இயந்திரம்! — எல்லாவற்றையும் விடச் சர்க்கார் தன்னைப்பற்றிப் பிரசாரம் செய்ய வைத்திருக்கும் ஒரு சாதனம்!

அமெரிக்காவில், வானொலி அமைப்பு இங்குபோல இல்லை.

இங்கு எல்லாம் சர்க்காருடையதாயிருக்கிறது — ஒரு 'தாசரி' அமைச்சராக வந்தால் 'பஜனை'களையே கேட்கச் சொல்வார் மக்களை—ஒரு 'சந்நியாசி' மந்திரியானால், சதா, சரபுர சப்தங்களையே கேட்டுச் சாக வேண்டும், நாம். ஒரு 'தர்பார் விரும்பி' சர்வாதிகாரி யென்றால், அவருடைய வீரப்பிரதாபங்களைத்தான் மணிக்கணக்கில் ஒலிபரப்புவார்கள்.

அமெரிக்காவில், இப்படியில்லை! அங்கு வானொலி தனிப்பட்டவர்களால் நடத்தப்படுகிறது. ஒன்று இரண்டல்ல, மொத்தம் 399-ஒலி பரப்பு நிலையங்கள் உள்ளன! இவைகள், ஒரு சங்கம் அமைப்பதுபோல நான்கு கம்பெனிகளாக இருந்துகொண்டு ஒலிபரப்பி வருகின்றன!!

இங்குபோல, ஆண்டுதோறும் 'லைசென்சு' என்று, சர்க்காருக்கு 'அழ'வேண்டியதில்லை. வானொலிகளுக்கு என, தனிப்பட்ட முறையில், கட்டணம் கட்டவேண்டிய அவசியமும் இல்லை.

அப்படியானால் எப்படி இந்த வானொலி நிலையங்களுக்கு வருமானம் வரும்? எப்படி இவைகள் இயங்கமுடியும்? என்று கேட்கலாம்.

விதவிதமான நிகழ்ச்சிகளைக் கேட்கலாம்! 399 நிலையங்கள் என்பதால், எந்த விநாடியில் வேண்டுமானாலும், ஏதாவது ஒரு நிகழ்ச்சியைக் கேட்கலாம்!! இதனால், தனது நிலையத்துக்கு நல்ல பெயர் வரவேண்டுமெனும் ஆசையில், ஒவ்வொரு நிலையமும் போட்டி போட்டுக்கொண்டு, நல்ல நல்ல நிகழ்ச்சிகளைத் தயாரிக்கின்றன.

இப்படி நல்ல நிகழ்ச்சிகளைத் தயாரிக்கவேண்டுமாயின், நல்ல எழுத்தாளர்கள், நல்லகவிஞர்கள், நல்ல நடிகர்கள் வேண்டுமல்லவா? அதனால், சினிமாத் துறைக்கு அடுத்தபடியாக, இத்தொழிலிலீடுபடும் கலைஞர்களுக்கு, ஒவ்வொரு நிலையமும் ஏராளமான சம்பளம் கொடுத்துவைத்திருக்கின்றன.

இத்தனைக்கும் ஏது பணம்?— என்று, மீண்டும் கேட்கத்தோன்றும். இத்தனையையும் கொட்டித் தருகிறவர்கள், வியாபாரிகள்தானும்! தங்கள் தங்கள் வியாபாரப் பொருள்களை விளம்பரம் செய்யுமாறு சொல்லி, வழங்கும் பணத்தைக்கொண்டுதான், இந்த நிலையங்கள் வாழுகின்றன!!

ஏதாவது ஒரு நிகழ்ச்சி நடக்கும்போது, "தலைவலியா? ஆஸ்ப்ரோ சாப்பிடுங்கள்!!", "எல்லோரும் குடிப்பது ஓவோமால்டி," என்பது போன்ற, உரத்த கூச்சல்கள், காதுகளையும் மனதையும் குடைகின்றன வென்றாலும், இதை நம்பித்தான் அவை பிழைக்கின்றன.

சில சமயங்களில், பெரிய கம்பெனிகள், தாங்களே ஒரு இசை நிகழ்ச்சியைத் தயாரித்து, அதை ஒலி பரப்பும்படி செய்வார்களாம்.

இதனால், வானொலி, வியாபாரிகளின் சாதனமாகவும்—அதே சமயம், மக்களின் விருப்பத்திற்கேற்ற இசைகளை அளிப்பதாகவும் இயங்கிவருகிறது.

சில வானொலி நிலையங்கள், இங்கே, 'ஆனந்த விகடன்' நடத்தியது போன்ற பகுத்தறிவுப் போட்டிகளையும் நடத்திப் பரிசுகள் வழங்குவதும் உண்டாம்.

இப்படியிருக்கலாமா! இது நல்லதா!!—என்று சிலருக்குக் கேட்கத் தோன்றும். நல்லதோ, கெட்டதோ, மக்களுக்குத் தொல்லையில்லாமல், இலவசத்தில், இன்னிசை கிடைக்கிறது அங்கே. இங்குபோல் தொல்லை கிடைக்கவில்லை.

★

அதிகமாக உணர்ச்சி வசப்படும்போது மனிதன் தன்னை மீறிச் சிரிக்கிறான், அழுகிறான், ஆத்திரப்படுகிறான். பெரும்பாலான மனிதர்கள் இந்தமாதிரி எப்போதாவது உணர்ச்சி வசத்தால் தன்னை மீறுகிறார்கள். ஆனால் இவர்களைத் தவிர எப்போதுமே தன்னை மீறிப் போய்க்கொண்டிருக்கும் சில தனி ரகத்தைச் சேர்ந்தவர்களும் உண்டு. இவர்கள் கட்டுக்கடங்காதவர்கள். எப்போதும் ஏதாவது ஒரு வகையில் கடிவாளமற்ற குதிரை மாதிரி கனவேகத்தில் போய்க்கொண்டு இருப்பார்கள். படிப்பினாலும் பண்பாட்டாலும், பழக்க வழக்கத்தாலும் தன்னை மீறுகிற இந்தச் சுபாவத்தை நாசூக்காக மறைக்கவோ, அல்லது கட்டுப்படுத்தவோ இவர்களுக்குத் தெரியாது.

திருப்பார்வை திரும்பாததேனே!!

"ஒரு காலத்தில், ஏற்றத்தோடு வாழ்ந்தோம்; கடலோரங்களிலே வெளி நாட்டுக் கப்பல்கள் நின்றன எங்கள் நாட்டுப் பொருள்களை ஏற்றிச்செல்ல! ஓகோ, எங்கள் நாட்டுப் பொருள்கள் என்றதும் பூமித்தாய் வழங்கும் மிளகு பருத்தி போன்ற விளைபொருள்களை நாம் குறிப்பிடுவதாக எண்ணவேண்டாம். தொழிலிலும் சிறந்து விளங்கியவர்கள் நாங்கள். எங்களது ஆடையும், அணிகலனும், உங்கள் நாடுகளில் போட்டி போட்டுக்கொண்டு வாங்கப்பட்டன. தொழில் செய்வதில் மட்டுமல்ல, அதை விற்றுப் பொருளீட்டும் வியாபாரிகளாகவும் இருந்திருக்கிறோம். ஆனால், இன்றோ! இன்றோ!!"

* * *

பெருமூச்சுடன் பேசியிருக்கிறார் — பெருமையுடன் வாழ்ந்தோம் என்பதற்கான விளக்கங்களை எடுத்து வழங்கி இருக்கிறார்— 300 ஆண்டுகளுக்கு முன்பே, ஐரோப்பிய நாட்டினரே, அன்புள்ள அமெரிக்கரே, நீங்களெல்லாம் வளர்ச்சி அடையாததற்கு முன்பே தொழில் செய்தவர்கள் நாங்கள் என்று முன்னாள் பெருமையை எடுத்துச்சொல்லி முழக்கமிட்டிருக்கிறார்.

நெய்யும் தொழிலும், நெஞ்சைக் கவரும் கைத்தொழில்கள் பலவும் கொண்டிலங்கிய நாடு இது; அத்தொழில்கள் மூலம் உற்பத்தியானவைகளுக்கு 'மார்க்கெட்' பிடித்துக் கப்பல்களில் ஏற்றி வாணிபம் நடாத்திய வல்லவர்கள் வாழ்ந்த நாடு இது; வளமெல்லாம் இன்றும் கொண்டிலங்கும் நாடு என்று உருக்கமாகவும் உணர்ச்சி வேகத்தோடும் எடுத்தோதியிருக்கிறார்.

68-வெளிநாட்டு விற்பன்னர்கள் அமர்ந்திருக்கிறார்கள் —பொருளாதார மேதைகள், பொன்னால் இப்பூமண்டலத்தை வளைக்கும் வாய்ப்புப்பெற்ற அதிபதிகள், உலக அரசியலையே உருவாக்கும் சக்திகொண்ட பிரபுக்கள் —அவர்களுக்கு மத்தியிலே நிமிர்ந்து நின்று, நிலவளத்தையும் ஒரு காலம் சிறந்திருந்த தொழில் வளத்தின் பெருமையையும் பன்னிப் பன்னிச் சொல்லியிருக்கிறார்.

ஏற்றம் பெற்றிருந்தோம்; இன்று வீழ்ந்தோம்!

300 ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் பொருள்களை ஏற்றிச்செல்ல உங்கள் கப்பல்கள் காத்துக்கிடந்தன.

அன்று நாங்கள் எசமானர்களாயிருந்தோம்! இன்று அலைகிறோம்.

என்று இன்றுள்ள வீழ்ச்சியையும் வெட்கப்படாமல் வெளியிட்டிருக்கிறார். ஒரு காலத்தில் ஏற்றம் பெற்றிருந்த இந்நாடு ஏன் இந்தச் சதிக்கு ஆளாயிற்று? வாழ்ந்த நாங்கள் வீழ்ந்த வகையென்ன? என்பதையும் உலகப் பேரறிஞர் முன்னிலையில் விளக்கத் தவறவில்லை. வாழ்ந்த நாடு ஏன் வீழ்ந்தது? ஆண்டவன் செயல் என்பார் நமது குருக்கள்! அவரும் அப்படித்தான் கூறுகிறார் "கடவுள் செயல்" தான் எங்களைப் பின் தங்கியவர்களாக்கிற்றென்று. ஆனால் அவர் கூறும் கடவுள் எது தெரியுமா? அக்கார வடிசிலும், ஆறுகாலப் பூசையும் கற்பூர ஆராதனையும், ஆயிரங்கால் மண்டபமும் கேட்கும் கடவுள் அல்ல!!

"இன்றுள்ள உலகில் எது கடவுள் தெரியுமா? தொழில் வளம்தான்! கம்யூனிஸ்டு நாடானாலும் சரி, கர்த்தரை வணங்கும் மேற்கத்தி நாடுகளானாலும்சரி, இன்று கடவுளைவிட மேலாகப்போற்றி, கவனம் செலுத்துவது, தொழில் வளம் பெருகுவதில்தான்."

தொழிற் கூடங்களே இன்று ஆலயங்கள்! உற்பத்தி செய்வதே அர்ச்சனை! உருவாகும் பொருளே கடவுள்! — என்று, ஒவ்வொரு நாடும், தொழில் வளர்ச்சியில் காட்டும் அக்கறையைச் சுட்டிக் காட்டுகிறார்.

அந்தக்கடவுள் இருக்கிறாரே, தொழில் எனும் பரமன், அவர் காணோம் இங்கு; இந்த 300 ஆண்டுக் காலத்தில், அந்தக் கடவுளை மறந்து விட்டோம். எனவே, வீழ்ந்தோம்—இன்று ஏங்கி நிற்கிறோம் என்று விளக்கமளிக்கிறார்.

ருஷ்யாவும் சரி, மேற்கத்திய நாடுகளும் சரி, வீரம் பேசிக்கொண்டாலும், விட்டேனா பார் என்று வீம்பு அடித்துக்கொண்டாலும், ஒவ்வொரு நாடும், தன்னிடமுள்ள தொழில் வளத்தை வைத்தே தத்தமது இத்தாப்பையும் கீர்த்தியையும் காட்டிக்கொள்கின்றன. அந்தளவுக்கு இன்றைய உலகில் தொழில் வளர்ச்சி முக்கியமானதாகி விட்டது.

அந்தத் தொழில் வளர்ச்சி, எமக்கில்லை.

பின் தங்கிவிட்டோம்.

எப்படிப் பின்தங்கினேம் எனின் —தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாததான, விஞ்ஞான அறிவும், தொழில்துறைக் கண்டுபிடிப்புக்களும் எமக்கு ஏற்படவில்லை.

✱

"தொழில் வளர்ச்சி ஏன் ஏற்படவில்லை தெரியுமா? எங்கள் நாடு ஒன்றும் பாலைவனமல்ல!"

"எல்லா வசதியும், வளமும் உடையதல்லவா?"

"எல்லாமுண்டு!"

"பிறகென்ன! அவைகளைப் பயன்படுத்துவதற்குப் போதுமான மனிதசக்தி கிடையாதோ?"

"சரிதான்! அதுவும் ஏராளமாகவுண்டு"

✱

வளமுண்டு! மனித சக்தியுமுண்டு!! — இருந்தும், தொழில் வளர்ச்சி ஏற்படாமைக்குக் காரணம், மேல்நாடுகளில் வளர்ந்த விஞ்ஞான அறிவும், தொழிலறிவும் இங்கு வளராததுதான்.

இப்படி வளர்ச்சியடையாமல் 300-ஆண்டுகள் ஓடிவிட்டன.

மேனாடுகள், மிகவும் உயர்ந்துவிட்டன — நாங்களோ, வீழ்ச்சியுற்ற நிலையிலேயே இருக்கிறேம். வீழ்ச்சியுற்ற எமக்கு எழுச்சி உண்டா, இல்லையா? எமது நாடும் உங்களைப்போல ஆகவேண்டுமா, இல்லையா?

"300-ஆண்டுகளில் நீங்கள் பெற்றுள்ள வளர்ச்சியை, ஒரு சில ஆண்டுகளிலேயே அடையவேண்டியவர்களாயிருக்கிறேம்.

இதற்கென்ன சொல்லப்போகிறீர்கள்? உங்களிடமிருந்து எங்களுக்குக் கிடைக்கப்போகும் உதவியென்ன? பின்தங்கிக்கிடக்கும் நாங்கள், இப்படியே கிடந்துவிட வேண்டியதுதானு? வளமும், மக்கள் செல்வமும் கொண்டிருக்கும் நாங்கள் மக்கி மடியவேண்டியதுதானு? ஆமாம், என்று கூறுவீர்களேயானுல், வாயால் சொல்லாமல் எங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யாமல் காரியத்தின்மூலம் காட்டுவீர்களேயானுல், மனிதத் தன்மைக்குத்தான் பொருளென்ன? நாட்டுக்கு நாடு, மனிதனுக்கு மனிதன் உதவி செய்துகொண்டு வாழவேண்டும் என்று பேசுகிறேமே—அதெல்லாம் பொய்தானு? இருப்பதையே போதுமென எண்ணி, உங்கள் வளர்ச்சிபோல நாங்களும் வளர்ச்சி பெருமலிருக்க வேண்டும் என்று நினைப்பீர்களேயானுல், பணிவுடன் கேட்கிறேன். எங்கள் மக்கள் செய்த தவறென்ன? என்ன குற்றம் செய்தது, இந்தப் பகுதியில் வாழும் மனித சமுதாயம்?"

✱

டில்லியிலே, இந்த கிழமை கூடியிருக்கிருர்களல்லவா, உலக பாங்குத் தலைவர்கள்.

அவர்கள் முன்னிலையில் இப்படி உருக்கமும் விளக்கமும் கலக்கப் பேசியிருக்கிறவர் வேறுயாருமல்ல; நேருபண்டிதர் அவர்கள்தான்.

இந்திய உபகண்டம் பின்தங்கிக் கிடக்கிறது! 300-ஆண்டுகளுக்கு முன்பு, சிறந்துவிளங்கியது! தொழில் வளர்ச்சியில் முன்னேற நீங்கள் எல்லாம் உதவ வேண்டும்! — என்று வேண்டுகோள்விடுக்கிருர்.

300-ஆண்டுகளுக்கு முன்பல்ல; மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஏற்றம் பெற்றிருந்த நாடு தமிழகம். பாண்டிநாட்டு முத்தும், சோழநாட்டு ஆடையும், சேரநாட்டுத் தந்தமும், ரோமாபுரியிலும் கிரேக்கத்திலும் விலைபோயின. வியாபாரம் கொழித்தது! வெளிநாட்டினரெல்லாம், வந்துவந்து வாங்கினர்!!

அத்தகைய நாட்டைக் காட்டிக் கேட்கிறேம்—

அத்தகைய நாட்டின் வளத்தைச் சொல்லிக் கேட்கிறேம்—

அத்தகைய நாட்டின் மனிதச் செல்வத்தை உணர்த்திக் கேட்கிறேம்.

ஆலை வளர்ச்சி வேண்டாமா—என்று கேட்டவாறே இருக்கிறேம்.

தொழில்தான் கடவுள் என்கிருர்—தொழில் வளர்ச்சியில்தான் ஒரு நாட்டின் பெருமை இருக்கிறதென்கிருர் — அந்தத் தொழில்வளர்ச்சியில்மேல்நாடுகள் முன்னேற்றம் பெற்றுவிட்டன— அந்த முன்னேற்றத்தை நாங்கள் எப்போது பெறுவது என்று கேட்கிருர்—என்ன குற்றம் செய்தோம், எங்களுக்கு உதவமாட்டீர்களா, என்று உருக்கமுடன் கேட்கிருர்.

இப்படிக் கேட்கும் பண்டிதநேருவின் நாட்டிலே, சிந்திரியிருக்கிறது, சித்தரஞ்சனிருக்கிறது, எண்ணெய் தோண்டும் இடங்களுண்டு, இலண்டனையே மிரளவைக்குமளவுக்கு வளர்ந்துள்ள ஆமதாபாத்தும் பம்பாயும்உண்டு, உலகத் தலைவர்கள் எல்லாம் புகழ்ந்து போற்றும் பக்ராநங்கலுண்டு, தாமோதர் நதிப் பள்ளத்தாக்கு உண்டு, தொழில் வளர்ச்சிகள் ஏராளமாக உண்டு.

இருந்தும், வாதாடுகிருர், உலக நாடுகளிடம்! இன்னும் முன்னேற வேண்டுமே என்கிருர்!!

நாம், இவரைப்பார்த்து, இவர் கூறும் இதே காரணங்களைக் காட்டி, எமது தென்னுட்டுக்கும் 'பிச்சை' போடுங்கள் என்று கேட்கிறேம்.

"வருமான வரி செலுத்துவோரின் தொகையையும் பட்டியலையும்பார்த்தால், தென்னுட்டைவிட வடநாட்டில்தான் அதிகம். அதுவே போதும், தென்னுடு செல்வத்துறையில் எவ்வளவு தூரம் பின்தங்கியிருக்கிறதென்று காட்ட."

என்று, நாமல்ல, பெங்களூரிலே அண்மையிலே கூடிய, ஆந்திர—தமிழக—கேரள—கன்னட வாணிபக் கழகத்தினர் ஏகமனதாகத் தீர்மானம் போட்டிருக்கிருர்கள்.

"வடக்கோடு ஒப்பிட்டால், தென்னுட்டில் போதிய தொழில் வளர்ச்சித் திட்டங்கள் கிடையாது."

என்று நாமல்ல, பல பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசிப்பேசி வருகிருர்கள்.

நேரு அவர்கள் கூறும் 300-ஆண்டுகளல்ல, 3000-ஆண்டுகளுக்கு முன்பே எழிலும் பொழிலும் குலுங்கிய பூமி, திராவிடம்! ஆனுல் இன்று இருநூறு போடு—150-கோடிதானு—என்று கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டு, அஞ்சியஞ்சிச் சாகிறது!!

இவ்வளவு உருக்கமாக வெளிநாட்டாரை வேண்டுகிருர், நேரு.

இதைவிட உருக்கமாக நாம் வேண்டுகிறேம் நேருவை.

தொழில் வளர்ச்சி ஓரளவுக்கு இருந்தும், பஞ்சப்பாட்டுப் பாடுகிருர் பண்டிதர்.

அத்துறையில் 'சுத்தசைபராக' இருக்கும் நமக்கோ காது கொடுக்க மறுக்கிருர்.

வேண்டிய உதவி செய்யாவிடின் உலக சகோதரத்துவம் பேசி என்ன பயன்? — என்கிருர் நேரு.

அதையே நாமும் கேட்கிறேம், எம்மை இப்படிப் பின்தங்க வைத்துவிட்டு அகில இந்தியம் பேசி என்ன பயன் என்று.

அவர்களுக்காக வாதாடுகிருர் —அழகாக அருமையாக வாதாடுகிருர்.

அதே உண்மைகளைச் சொல்லிக் கெஞ்சுகிறேம் நாம்.

திருப்பார்வை திரும்பவில்லை!— தினையளவும் பலனில்லை!!

வாதாடும் வக்கீல் என்பதால் நம் நிலை தெரியாதவர் என்பதல்ல.

மோசமான வாழ்வில் தென்னகம் உள்ளது என்பது தெரியாதவரல்ல.

எனினும் செய்பவைகளை வடக்கேயே செய்கிருர்கள்!

தெற்குக்கோ, "தேசீயத்தை" தருகிருர்கள்; நாமத்தைப் போடுகிருர்கள்!!

ஏன்?
என்ன காரணம்?
இது நியாயம்தானு?

இதென்ன, புதுக்குழப்பம்!!

✱

[M. S. வெங்கடாசலம், M. A.,]

"பீம்சிங்!"

"மகராஜ்!"

"இது என்ன புதுக் குழப்பம்"

✱ ✱ ✱

பழைய தமிழ்ப்படம் ஒன்றில், அரசனுக்கும் அவனது அத்தியந்த நண்பனுக்குமிடையே அடிக்கடி நடைபெறுகிற உரையாடல் இது!

காங்கிரசார் ஆட்சிப்பீடம் ஏறி இந்தப் பதினெரு ஆண்டுக்காலங்களில் நிறைவேற்றிக்கொண்டு வரும் புதிய புதிய சட்டங்களை எண்ணும்போது, இந்தக் காட்சிதான் நம் கண் முன்னுல் வந்து நிற்கிறது!

புதுமை! புதுமை! புதுமை! ஆட்சியாளர் விரும்புவதெல்லாம் புதுமை!

அளவுகடந்த புதுமைப் பசி அவர்களுக்கு! பசி வந்திடப் பத்தும் பறந்துவிடுமல்லவா? அதனுல்தான் எல்லாவற்றையும் மறந்து பசியைத் தணித்துக் கொள்ளப் புறப்பட்டிருக்கிருர்கள்.

"பசி காதை அடைக்கிறது. உடனே சோறுபோடு!" என்று சொல்லிக்கொண்டே இலையில் (இலைக்கருகே என்று பொருள்) உட்காருபவன், உணவை வகைப்படுத்தி, சுவைபார்த்துச் சாப்பிடுவான் என்ரு எதிர்பார்க்க முடியும்?

டில்லி, ஆதிபத்யத்துக்கு, 'ஏக இந்தியா' எனும் பசி அதிகமாக உள்ளது.

டில்லிக்கு எடுபிடிகள்தானே இங்கே ஆட்சிப்பீடத்தில் அமர்த்தப்பட்டிருப்பவர்கள்! எதிர்க்கட்சிகளின் யோசனைகளைக் காதில் வாங்கிக்கொள்வதே அவர்களுக்கு மரியாதைக்குறைவாகப்படுகிறது!

✱

நிறுத்தலளவையிலும், நீட்டலளவையிலும் புதிய முறைகளைப் புகுத்தியிருக்கிருர்கள்!

கிராம்
கிலோகிராம்
ஹெக்டோகிராம்
மீட்டர்
மில்லிமீட்டர்

—இவைதான் இனி வழக்கத்தில் இருக்கப்போகின்றவை — இருக்க வேண்டியவை!

ஏற்கனவே நாணயத்திலே நாடு கண்ட புதுமையே இன்னும் மாறவில்லை. "நயா பைசா" இன்னமும் நயா பைசா (புதுக்காசு) ஆகத்தான் இருக்கிறது — பழையதாகவில்லை!

✱

திருச்சியிலுள்ள ஒரு கல்லூரியில் பத்து ஆண்டுகளுக்கு முன் ஒரு மாணவர் விடுதியைக் கட்டினுர்கள். ஏற்கனவே அந்தக் கல்லூரியைச் சேர்ந்த ஒரு விடுதி இருந்ததால், புதிய விடுதிக்கு "புதிய ஹாஸ்டல்" என்று பெயரிட்டார்கள்! விடுதி பழையதாகிவிட்ட போதிலும், அதன் பெயர் இனுனும் மாறவில்லை! என்றும் புதியதுதான் அது! நயா பைசாவும் என்றும் புதியதாகத்தான் இருக்கப்போகிறது!!

மார்க்கண்டேயனுக்கு "என்றும் பதினுறு" என்று சொல்லிக்கொள்வதிலே புராணிகர்கள் எவ்வளவு பெருமை காட்டுகிருர்களோ, அந்தப் பெருமை நமது ஆட்சியாளர்களுக்கும் இல்லாமலா போகும்!

புதுமையும் பெருமையும் இருக்கவேண்டியதுதான்! "அணுவுக்கு எத்தனை தம்படிங்க தம்பி!" என்று கேட்பவர்கள் இன்னும் இருக்கிறார்கள்! அதுகூட அதிசயமில்லை! நயாபைசா "நாய் பைசா"வாகவும் "நையா பைசா" வாகவும் ஆகிறதே, அதுதான் அதிசயம்!

"நாய் பைசா" என்று அழைப்பவர்களுக்கு அந்தக் காசுகளின் மீது கோபம் என்று பொருளில்லை! பாவம்! அவர்களென்ன செய்வார்கள்? நாக்கு அவர்களோடு ஒத்துழைக்கவில்லை. அல்லது அவர்களது நாவிற்குள் இந்தப் புனித, இல்லையில்லை, புதிய வார்த்தை நுழையவில்லை! எது எது புனிதமானது என்று தேடிக் கண்டுபிடித்து, ஐம்புலனையும் அடக்கி, வணக்கம் செலுத்துகிற நாட்டைச் சேர்ந்தவர்களல்லவா நாம்.

"நயாபைசா" என்பதையாவது "புதுக் காசு" என்று சொல்லி நாம் தப்பித்துக்கொள்ளலாம். "கிராம்" என்பதற்கு வேறு என்ன சொல்லமுடியும்?

"10 கிராமம் நெய் வேண்டும்"

"7-கிராமம் விளக்கெண்ணெய் வேண்டும்"

"15-கிராமம் பைத்தம் பருப்பு போடுங்கள்"

—என்றெல்லாம் நம்மில் எத்தனைபேர் கிராம் என்பதைக் கிராமமாக்கிச் சொல்லப் போகிறார்களோ, யாரறிவார்!!

பதினொரு ஆண்டுக் காலத்தில், காங்கிரசு ஆட்சி நமது நாட்டைப் புதிய நாடாக ஆக்கியிருக்கிறது என்பதற்கு மகத்தான அத்தாட்சிகள் திரட்டப்படுகின்றன!

எதிலே புதுமை இல்லை, காங்கிரசாரின் சிந்தனையைத் தவிர?

காசில் புதுமை!
காலண்டரில் புதுமை!
கல்லூரிப் படிப்பில் புதுமை!

எப்படியோ, காலண்டரில் நுழைக்கப்பட்டிருக்கிற "புதுமை" இன்னமும் நமக்குத் தொல்லைதர ஆரம்பிக்கவில்லை! அவ்விதம் தொல்லைதர ஆரம்பிக்காதது நல்லதா அல்லது கெட்டதா என்று காலண்டர் தயாரித்தவர்களைக் கேட்டால்தான் தெரியும். காரணம், பஞ்சாங்கம் தயார்செய்யும் பண்டிதர்களின் கரம்பட்டுத்தான் இந்தக் காலண்டர் தயாரிக்கப் பட்டிருக்கிறது! அவர்களுக்கு நல்ல வேளையும், கெட்ட வேளையும் தெரியாமலா போகும்?

பல்குனு
சைத்ரா
வைசாகா
அச்வனு

—இப்படி ஓடுகின்றன மாதத்தின் பெயர்கள்! இவை மக்களுக்குப் புரிகின்றனவோ இல்லையோ, மக்களது ஓட்டுக்களைப் பெற்று ஆட்சிப்பீடத்தில் இருப்பவர்களது புதுமைப் பசி தணிகிறது. இவையெல்லாம் புதுமைகளா என்று யாரும் கேட்கக் கூடாது! "முயலுக்கு மூன்று கால்கள்" என்றால், "ஆமாம்! மூன்று கால்கள்தான்!" என்று சொல்வதுதான் மக்கள் கடமை என்பது ஆட்சியாளர்களின் அசைக்கமுடியாத கருத்து! என்ன செய்வது? அவர்கள் சொன்னதெல்லாம் சரியென்று மக்கள் தலையாட்டிவிட்டார்கள். இன்னும் அப்படித்தான் நடக்கும் என்றுதானே அவர்கள் எண்ணுவார்கள்?

தூத்துக்குடியிலே சுட்டாலும் ஓட்டு விழும் — வால்பாறையிலே சுட்டாலும் "ஓட்டு வாங்குவது" காங்கிரசுக்குக் கஷ்டமில்லை — எட்டுரவுண்டுகள் சுட்டாலும் பரவாயில்லை — எண்பது ரவுண்டுகள் சுட்டாலும் கேட்பாரில்லை — என்று அவர்கள் மனதார நம்புகிறார்கள். அப்படி அவர்கள் நம்பும்படி நாம் நடந்துகொண்டோம்!

இத்தகைய "புதுமைப் பசி" யால்தான் இந்திமொழியைத் தலையிலே வைத்துக்கொண்டு கூத்தாடுகிறார்கள்! இது தெரியாமல் எதிர்ப்பவர்கள் எதிர்க்கட்டும்! எதிர்ப்பவர்களுக்கெல்லாம், ஓட்டு 'வாங்கத்" தெரியாதே!

ஆங்கிலம் — இந்தி இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால் எது புதிய மொழி? இந்திதான்! அதனால்தான் அவர்களுக்கு இந்திமேல் "மோகம்". "ஆசை அறுபது நாள்' என்ற"பழமொழியை" எவரும் நினைவுபடுத்திப் பயனில்லை! அது பழமொழிதானே! புதுமொழி ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்! இல்லையென்றால் சொல்லிப் பயனில்லை!

புதுமையாவது—பசியாவது — அப்படியிருந்தால் இன்னும் கைராட்டையில் காங்கிரசுக்காரர்களுக்கு ஆசை இருக்குமா — என்று யாரும் கேட்கக்கூடாது!

இது ஒருவகைப் புதுமை! புதுமை என்றால் புதுவழி நடப்பது என்றுதானே பொருள்! எல்லோரும் ஒரு வழியில் நடந்து கொண்டிருந்தால், இவர்கள் ஒரு வழியில் நடப்பார்கள்! அதற்குப் பெயர் புதுமைதானே!

அணுகுண்டு யுகத்தில் அமைச்சர்கள் கும்பமேளாவுக்குச் செல்லுவது புதுமை!

அகில உலகத்துக்கும் பொதுவான காலண்டர் வேண்டும் என்று வற்புறுத்தப்படும்போது, இந்த 'அகில இந்தியாக்கள்' இங்கொரு காலண்டரைப்பயன்படுத்த முனைவது ஒரு புதுமை!

போக்கு வரத்துச் சாதனங்கள் நாளுக்கு நாள் பெருகியும், விஞ்ஞான நுணுக்கங்கள் வளர்ந்தும் வருகிறபோது, 'பாதயாத்திரை' செல்வது ஒரு புதுமை!

இருபதாம் நூற்றாண்டில் ஆதாரக் கல்வியைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு, "இதன் மகிமை பாரீர்! மகத்துவம் காணீர்" என்று கூத்தாடுவது மற்றொரு புதுமை!

ஆலையுகம் என்று அழைக்கப்படும் இந்த யுகத்தில் "கைராட்டை" பள்ளிப்பாடத்தில் ஒரு பகுதியாக ஆக்கப்பட்டிருப்பது மகத்தான புதுமை!

ஓட்டு "கேட்பது" மற்ற ஜனநாயக நாடுகளில்;

ஓட்டு "வாங்குவது" காங்கிரசுக் கட்சி. இது என்றென்றைக்கும் மறக்கமுடியாத புதுமை!

அப்பப்ப! எத்தனை புதுமைகள்! புதுமைக் காட்டிலல்லவா நம்மை நுழைத்துவிட்டார்கள் ஆட்சியாளர்கள்!

★

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணுதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

திராவிடநாடு

26—10—58 | வார வெளியீடு | விலை 16 காசு

OFFICE OF THE REGISTRAR OF ...
29 OCT 1958
MADRAS

வெள்ளம் வருமுன் அணைபோடு!

"கொஞ்சம் கொஞ்சமாய் உந்தி—நாங்கள்
கொண்டு வருகின்றோம் இந்தி!"—என்று
வஞ்சமாய் செய்கின்றார் சூழ்ச்சி—மக்காள்
மயங்காதீர் இதுநேரு ஆட்சி!—இன்று
செய்திப் படமெலாம் இந்தி!—வந்தே
மெய்சிலிர்த்திடச் செய்யுதே முந்தி—கரும்பை
மொய்த்திடும் ஈயெனக் குந்தி—தமிழை
உறிஞ்சிடப் பார்க்குதே இந்தி!—செய்தி
அஞ்சல் முகவரி இந்தி!—நாம் பணம்
அனுப்பிடும் அட்டையும் இந்தி!—மற்றும்
எஞ்சிய தந்தியும் இந்தி!—வானொலி
எங்கும் எதிலுமே இந்தி!—தமிழா!
இனியும் உனக்கேன் பொறுமை?—நீ
இப்படி இருப்பது சிறுமை!—செந்தமிழ்க்
கனிச்சுவை இருக்க, தமிழா!—இந்தி
கசக்கின்ற எட்டிதான் எதற்கு?—வலிந்து
அழையாத விருந்தென போந்து—இந்தி
அளவின்றி செய்யுதே வந்து!—வாலைக்
குழைத்துடன் வருகின்ற நாயாய்—இந்தி
கூடவே சுற்றுது பேயாய்!—தமிழ்
மாலையைப் பற்றிட இந்தி—இங்கு
மரம்பல தாண்டுது மந்தி!—தமிழ்ச்
சோலையுட் புகுந்துமே இந்தி—எங்கும்
சுற்றியே வைக்குது செந்தீ—"இந்தி
கட்டாயம் கற்றிடல் வேண்டும்—ஆண்டும்
கற்றோர் பெருகிட வேண்டும்!—இந்தி
பட்டங்கள் பெற்றிடின் கண்டு—அவர்க்குப்
பற்பல நல்வேலை உண்டு!"—என்று
மந்திரி தடவியே தொந்தி—சட்டம்
மதியின்றி தீட்டுகிறார் குந்தி!—மக்கள்
பலருக்கும் புரியாத இந்தி—ஆட்சி
மொழியாகின் பந்தாக எந்தி—நாம்
கலங்கிடச் செய்குவோம் வாரீர்!—வெள்ளம்
கரையின்றி வந்தபின் பாரில்—அணை
கட்டிடுற் பயனுண்டோ கூறுவீர்!—முன்பே
தடைபோட்டு நிறுத்துவோம் சேர்வீர்!—மனை
விட்டுச் சிறைசென்ற போதும்—கொள்கை
விட்டுக் கொடுக்கோம் நாம் எப்போதும்! —மாறன்

திட்டத்தின் வெற்றி?

Dr. பா. சரவணன்

“இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றி அடைய அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்” என்று சென்னை மாநில பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. பி. கக்கன் அவர்கள் அண்மையில் மேலூரில் பேசியிருக்கிறார். அமைச்சர்களும், காங்கிரஸ் இயக்கத் தலைவர்களும் மற்றவர்களும் போற்றிப் புகழ்ந்திடும் திட்டம்பற்றி அறிந்துகொள்ள ஆர்வம் அனைவருக்கும் உண்டு. திட்டத்தின் வெற்றி சமுதாயத்தின் வெற்றி! திட்டத்தின் வெற்றி எங்கே? எந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கு வெற்றி? என்பதை, புள்ளி விவரங்கள், திட்டங்கள்; தெளிவாக எடுத்துக் கூறும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கெனச் சர்க்கார் துறையில் வகுக்கப்பட்டுள்ள திட்டங்கள் செலவுத் தொகைகள்:—

	இனம்		செலவுத் தொகை	
1.	விவசாயம், சமுதாயம் அபிவிருத்தி	ரூ.	568	கோடி
2.	நீர்ப்பாசனம், மின்சாரம்	ரூ.	913	,,
3.	தொழில் வளர்ச்சி	ரூ.	890	,,
4.	போக்குவரத்து	ரூ.	1385	,,
5.	சமூக சேவை	ரூ.	945	,,
6.	வேறு பல திட்டங்கள்	ரூ.	99	,,
			4800	

இனவாரியாகத் தென்னக மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள திட்டங்கள், அவைகளுக்குரிய செலவுத் தொகைகள்:—

இலட்சங்கள்

	இனம்	ஆந்திரம்	சென்னை	கேரளம்	மைசூர்
1.	விவசாயம், சமுதாயம்	2564·22	3535·50	1070·09	1393·51
2.	நீர்ப்பாசனம், மின்சாரம்	5330·40	7125·00	2802·40	3791·25
3.	தொழில் வளர்ச்சி	950·80	1520·00	625·10	684·50
4.	போக்கு வரத்து	546·71	807·50	317·30	475·00
5.	சமூக சேவை	2181·76	4065·95	1967·17	1666·05
6.	வேறுபல திட்டங்கள்	323·07	252·10	413·25	50·94
	மொத்தம்	11896·96	17306·05	7195·31	8061·25

திட்டக்குழுவினர்: வெளியிட்டுள்ள இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட விளக்க நூலில் 620வது பக்கத்திலிருந்து 643 பக்கம் வரையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் “முதலீடு—பங்கீடு” என்பதில் விளக்கங்கள் காணலாம்.

தென்னக மொழி மாநிலங்களுக்குப் பங்கீடு முறையால் கிடைத்திடும் தொகை:

ஆந்திரம்	11896·96	இலட்சம்
சென்னை	17306·05	,,
கேரளம்	7195·31	,,
மைசூர்	8061·25	,,
மொத்தம்	44459·57	

திட்டத்தில் செலவிடப்படும் தொகை ரூ. 4800 கோடி. தென்னகத்திற்கு ரூ. 44459·57 இலட்சம்.

இந்திய அரசியலார் திட்டங்கள் வகுத்து செலவுக்கென ஒதுக்கியுள்ள தொகை ரூ. 2560 கோடி. திட்டங்களில் இரும்பு எஃகு உருக்கு ஆலைகள் துவக்குவது, இருக்கும் தொழிற்சாலைகளை விரிவுபடுத்துவது.

மூன்று ஆலைகள்:— ரூர்கலா 128 கோடி; பிலாய் (மத்திய பிரதேசம்) ரூ. 110 கோடி; துர்க்காபூர் (மேற்கு வங்கம்) ரூ. 115 கோடி என ஒதுக்கப்பட்டுள்ளது. தென்னகத்தில் மைசூர் மாநிலத்தில் உள்ள மைசூர் இரும்பு எஃகு தொழிற்சாலை வளர்ச்சிக்கு ரூ. 6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இரும்பு எஃகுத் தொழிற்சாலை அமைபபுத் திட்டங்களால் பயன் ஏற்படுவது எங்கே? சமுதாயத்தின் வெற்றி எங்கே? வருங்காலத்தில் இரும்பு எஃகு பொருள்களை விற்பனை செய்யப்போவது வடநாடு, அவைகளை வாங்கும்

(14-ம் பக்கம் பார்க்க)

ஓட்டும் வேட்டும்

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [26–10–58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 15

தளபதி நகிப் என்பார் பரூக் மன்னனை வெளியேற்றிவிட்டு எகிப்தில் புது அரசு மலரச் செய்தார், —பிரான்சு நாட்டில் தளபதி டிகாலே ஆட்சியின் பொறுப்பேற்றார்—பர்மியப் பிரதமர் யூநூ, இராணுவத் தளபதியைக் கூப்பிட்டு ஆளச் சொல்லியிருக்கிறார், தான் விலகிக்கொண்டு—இப்போது பாகிஸ்தான் தலைவர் மிர்சா தளபதி அயூப்கானை அழைத்து நாடு உன் பொறுப்பில் என்று விட்டுவிட்டார்—இந்தோனேஷியத் தலைவர் சுகர்ணோவும் இப்படிச் செய்யக்கூடுமோ என்கிற பேச்சு அடிபட ஆரம்பித்திருக்கிறது.

மன்னராட்சிமுறியடிக்கப்பட இராணுவம்அழைக்கப்பட்டது எகிப்தில்— அரசியல் குழப்பங்களுக்கு முடிவு ஏற்பட டிகாலேயைத் தவிர வேறு ஆளில்லை என்று எண்ணிற்று பிரான்ஸ்—பொதுத் தேர்தலை நடத்தப் பொறுப்பான அரசு இராணுவ அரசுதான் என்கிறார் யூநூ—இலஞ்சமும் ஊழலும், அரசியல் வேட்டையும் மிகுந்துபோய் விட்டது பாகிஸ்தானில், அயூப்கானைத் தவிர வேறு வழி தென்படவில்லை என்கிறார் மிர்சா.

தொடர்ந்து நடந்துவரும் இந்த நிகழ்ச்சிகள் உலக அரங்கில் பரபரப்பை உண்டுபண்ணியுள்ளன. “இந்தியாவுக்கும் அக்கதிதானா?” என்று கேட்கப்படுகிறது. “இன்றுள்ள காங்கிரஸ் ஆட்சியின் போக்கு நீடித்து, நேருவுக்குப் பிறகு தக்க தலைமையில்லாமல் போகுமானால், என்ன நேரும்? இப்போது பல நாடுகளில் நடைபெற்றுள்ளதுபோல இங்கும் ஒரு இராணுவக் கிளர்ச்சி நடக்குமானால் அதன் விளைவுகள் எப்படியிருக்கும்?”, என்று கேள்விகளை எழுப்பி, பதிலும் அளிக்கப்படுகிறது.

எகிப்து,பிரான்சு,பர்மா,பாகிஸ்தான்,தாய்லாந்து போன்ற இடங்களிலாவது, இராணுவத்தினர் என்றால் ஒரேநாட்டினர் ஒரே மதத்தவர் என்கிற ஒரு கட்டுப்பாடு இருக்கிறது. பலதரப்பட்ட இனத்தவர்களைக் கொண்ட இந்த உபகண்டத்திலுள்ள இராணுவத்தில் ‘பலரும்’ உள்ளார்கள். சீக்கியர்—மராட்டியர்—வங்காளிகள்—பீகாரிகள்—தமிழர்கள்— மலையாளிகள் கன்னடியர்—தெலுங்கர், இப்படி ‘பற்பலர்’ இருக்கிறார்கள். நாளைக்கு ஒரு இராணுவ தர்பார் ஏற்படுமானால்! இவர்கள் ஒவ்வொருவரும், தனித்தனியாகக் கிளர்ச்சி செய்தால்!—விளைவு, எப்படியிருக்கும் என்பதை மனக் கண்ணால்கூட, நினைக்க முடியவில்லை. எனினும், இப்படியேற்படவே முடியாது என்று, இன்றுள்ள உலகில், உறுதி கூறும் நிலையும் இல்லை.

பிற நாடுகளின் படையெடுப்பிலிருந்தும், உள்நாட்டில் போலீசால் முடியாதபோதும் அழைக்கப்படக் கூடியதாகவும், கருதப்பட்டது இராணுவம். ஆனால், இன்று, அந்த இராணுவம் வைத்ததே சட்டம் என்கிற ஒரு புதுநிலை உண்டாகி வருகிறது. இராணுவ ஆட்சி சுமத்தப்பட்டுள்ள நாடுகளைப் பற்றியும், அங்கு இந்நிலைமை ஏற்பட்டதற்கான காரணங்களைப் பற்றியும் பலதரப்பட்ட விளக்கங்கள் தரக்கூடும். எனினும், ஜனநாயக விரும்பிகள் மனம், நிச்சயம் சஞ்சலம் கொள்ளவே செய்யும்.

சரியோ, தவறோ, ஒரு நாட்டின் எதிர்கால அரசியலை நிர்மாணிக்கும் பொறுப்பு, அந்த நாட்டு மக்கள் வசம்தான் விடப்படவேண்டும். அதற்குள்ள ஒரு வழி, ஒரு தேர்தலை நடாத்தி, அதன்மூலம் பலமாக வரும் கட்சியின் வசம், ஆளும் பொறுப்பை அளித்தல் வேண்டும். அதற்குப் பதில், “எல்லாக் கட்சிகளுமே மோசம், நான் ஒருவன்தான் யோக்கியன்”, என்று சொல்லிக்கொண்டு, ஒருவன் தேவைக்கே ஒரு தேசம் என்கிற நிலை மலருவது, ‘இட்லர்’பாதையாகும். இந்த நிலைமையினை, அறிந்தோ, அறியாமலோ, “காங்கிரசே, ஏக கட்சி” என்று சொல்லி வளர்த்து வருகிறார்கள் காங்கிரஸ் தலைவர்கள்! இந்த “ஏகபோக” உரிமை என்றும் ஆபத்து. இது சர்வாதிகாரத்தில்தான் கொண்டுபோய் விடும். நல்லதோ, கெட்டதோ அதைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு மக்கள் மன்றத்திடம்தான் இருக்கவேண்டும். ஒருவர் உத்தமராயிருக்கலாம் — புதிய புத்தராகக்கூடக் கருதப்படலாம்-எனினும்,அவர்விருப்பத்திற்கு மாறாக, மக்கள் இன்னொரு கட்சியை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்துவார்களானால், அதன் பலனை

தேர்ந்தெடுத்த மக்கள் அனுபவித்து, அடுத்த முறை அத்தவறைச் செய்யாமல் தவிர்ப்பதுதான் ஜனநாயகம். இந்த ஜனநாயக யுகத்தில், நெப்போலியனுக்கும் இடமில்லை, சீசருக்கும் இடமில்லை, "மக்கள் தம் ஓட்டுச் சீட்டு"க்குத்தான் இடமிருக்கிறது. எகிப்தின் விஷயத்தில், மன்னன் அட்டகாசம் ஒழிய வேண்டுமென்பதிலும், மக்கள் குரலுக்கு மதிப்பு உண்டாக வேண்டுமென்பதிலும், பொதுமக்கள் மத்தியிலேயே பொங்கிக்கொண்டிருந்தது குமுறல். நகிப் வந்தார். அவர்போலத் தளபதி நாசர் வந்தார். அந்நிலைமைக்கும் ஏனைய நாடுகளில் ஏற்பட்டுள்ள சூழ்நிலைக்கும் நிரம்ப வேற்றுமையுண்டு. மன்னனா! மக்களா!!—என்பது எகிப்துப் பிரச்னை. இந்த நாடுகளிலோ மக்களா! இராணுவமா!! என்கிற சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

ஓட்டுச் சீட்டுகள் ஆட்சி நடத்த வேண்டிய பொன்யுகம் இது. வேட்டுச் சப்தம் வெடிக்கும், கபர்தார்! — என்று கர்ச்சிப்பது, முறையுமல்ல; நெறியுமல்ல. ஏகபோக உரிமையும், என் ஒருவனுக்குத்தான் நாட்டின் வளர்ச்சியில் அக்கரையுண்டு எனப் பேசி ஏனையோரையெல்லாம் தேசத்துரோகிகளாக்குவதும், அந்த விநாடிக்கு ஆனந்தமாகயிருக்கலாமே ஒழிய, மனித உலகம் விரும்பும் எதிர்காலத்துக்குச் சற்றும் பலனளிக்காது.

இந்தியத் துணைகண்டத்தில், நேரு அவர்கள் ஒரு ஜனநாயக வாதியாக விளங்குகிறார் — பெரும்பாலும். பம்பாய்—தமிழ்நாடு—மராட்டியம் — கூர் ஜ-ரம் என்று இப்படி, அவரவர்கள் பிரச்னை வருகிறபோது மட்டும், எரிச்சலுக்கு இடங்கொடுத்து, ஜனநாயகத்தைச் 'சற்றே விலகியிரு!' என்று சொல்லிவிடுகிறார். இது, 'இந்தியா ஒன்றாயிருக்க வேண்டும்' என்கிற அவருடைய ஆசையால் ஏற்படும் ஆத்திரமாகும். இது தவிர்த்து, பிறவற்றில் அவர் ஒரு உண்மையான ஜனநாயக வாதியாகவே தோன்றுகிறார்! அவரளவுக்கு ஓரளவு ஒத்துப் போகும் நபர், காங்கிரஸ் மேலிடத்தில் உண்டா எனின் சந்தேகம்தான். அவருக்குப் பிறகு, முரட்டுச் சுபாவம் படைத்த ஒருவரோ, ஆத்திரப் புத்திகொண்ட ஒருவரோ, அந்த இடத்துக்குவந்து உரிமை கோருவோர் குரல் அதிகமாக ஒலிக்க ஆரம்பித்து, அதன் விளைவாக ஒரு தகராறு உருவாகுமானால், விளைவு மிகமிக விபரீதமாகவே நேரும்.

அதனால்தான் ஆச்சாரியார் பலமுள்ள எதிர்க்கட்சி வேண்டும் என்கிறார்—அந்த எதிர்க்கட்சிகளுக்கான வாய்ப்புகளையும் வசதிகளையும் அளித்து, வேட்டு அல்லது ஓட்டுத்தான் நாடாளும் என்கிற உன்னத நிலையை உருவாக்கும் பொறுப்பு, இந்தத். தலைமுறையிலுள்ள தலைவர்கள் வசம் இருக்கிறது

ஆனால், அண்மையில் நிறுவப்பட்டுள்ள 'இராணுவ அரசுகள்' அச்சத்தை அதிகமாக்குகின்றன. அந்த அச்சத்தைத் துடைக்கும் வகையில், நேரு போன்றவர்கள், இப்போதுமுதல் மக்கள் குரலுக்கு மதிப்பளித்து, ஜனநாயகத்தின் பெருமையை நிலைநாட்ட வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள சகல எதிர்க்கட்சிகளும் 'தமிழ்நாடு' என்று பெயர்வைக்கவேண்டுமென்கிறனவா—மராட்டியர், தனி மாநிலம் கோருகின்றனரா—சரி, யோசிப்போம், என்று எண்ண வேண்டும். ஒரேயடியாக, 'இவர்கள் கையில்தான் இந்தியா இருக்கப்போகிறது' என்றெண்ணி, பேசுவதும், ஆடுவதும் கூடாது.

நாட்டில் ஏற்படும் பலவகைப்பட்ட அதிருப்திகளும் குமுறல்களும் ஆட்சியில் இருப்போரை நிலை கலங்கச் செய்வதன் காரணமாக இராணுவப் புரட்சி ஏற்பட்டு அரசாங்கத்தைக் கைப்பற்றும் நிலை உண்டாகிறது. சில நாடுகளில் முறையில் சிற்சில மாறுதல்கள் உண்டென்றாலும், பொதுவாக இராணுவ ஆட்சி ஏற்படுவது இதனால்தான் என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனால் ஜனநாயக நாடுகளில்கூட இராணுவ ஆட்சி ஏற்படுகிறதே என்றால், அது, ஜனநாயகம், அந்த நாட்டில் சரியானபடி பின்பற்றப் படவில்லை என்பதையே காட்டுவதாகும். ஜனநாயக வாதிகள் என்று தங்களைக் கூறிக்கொண்டு சர்வாதிகாரப்போக்கில் நடந்துகொள்ளும் மோசமான நிலை ஏற்படும்போது மக்களின் அதிருப்தியும் குமுறலும் உண்டாகின்றன. அந்த நேரத்தில் பலம்பொருந்திய இராணுவம், மக்கள்பால் மனமிரங்குவதாகக் காட்டிக்கொண்டு அரசைக் கைப்பற்றும் வாய்ப்பைப் பெற்றுவிடுகிறது. அதற்கேற்ப மக்களுக்கு மறுக்கப்பட்ட—மறைக்கப்பட்ட சில உரிமைகளை அதாவது தேவைகளைச்செயல்படுத்தித்தன்பக்கம் ஆதரவைத் தேடிக்கொள்கிறது.

ஆனால், இப்படிப்பட்ட ஆட்சிமுறை நாட்டுக்கு உகந்ததுதானா? தேவைதானா என்பதையே இன்றுள்ள அரசியல் மேதைகள் சிந்திக்கிறார்கள்.

ஜனநாயகப் பண்பு மலர, ஒவ்வொருவர் கையிலும் பொறுப்பு இருக்கிறது. அந்த உன்னத ஏற்பாடு, சிறக்க, பாடுபடவேண்டும் ஒவ்வொருவரும். இல்லையெனில், வல்லான் வகுத்ததேவழி! துப்பாக்கியால் நன்றாகச் சுடக்கூடியவனே முதல் மந்திரி!! என்கிற சூழ்நிலை ஏற்படத் துவங்கும். இது நல்லதல்ல. உலகில் தோன்றும் இந்தப் பயங்கரக் குறிகளுக்கு விரைவில் ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு, அந்தந்த நாடுகளிலும் ஜனநாயக மணம் கமழுமென நம்புவோமாக.

★

சி.என்.ஏ. அமெரிக்கப் பத்திரிகை நிருபர் சந்திப்பு

★

எம். எஸ். வெங்கடாசலம் தொகுத்தது.

9—10—58 அன்று காலை 11-மணியளவில், "சிகாகோ டெய்லி டைம்ஸ்" (Chicago Daily Times) இதழின் நிருபர், பிரீடன்பர்க் (Friedenberg) என்பார், சி. என். ஏ. அவர்களை அவரது இல்லத்தில் கண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சி, கொள்கை, கோட்பாடுகள் பற்றிப் பற்பல விபரங்களைக் கேட்டறிந்து சென்றார். அந்தப் பேட்டியின் முழுவிவரமும் இங்கே தரப்பட்டிருக்கிறது:-

[❋]

நிருபர்:- நீங்கள்தானே சட்ட மன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர்?

சி. என். ஏ:- இல்லை! எதிர்க்கட்சித் தலைவர் வி. கே. இராமசாமி (முதலியார்) பல சுயேச்சையாளர்களைக் கொண்ட கூட்டு அமைப்பின் தலைவர் அவர்!

நிருபர்:- தி. மு. க.வைச் சார்ந்த உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் எத்தனைபேர் இருக்கிறார்கள்?

சி. என். ஏ:- 15 பேர்!

நிருபர்:- அப்படியானால் நீங்கள்தான் பலமான எதிர்க்கட்சி...! தி. மு. க.வின் வரலாற்றைச் சுருக்கமாக எனக்கு விளக்க இயலுமா?

சி. என். ஏ:- 10 ஆண்டுகளுக்கு முன்னால் திராவிட கழகம்தான் இருந்தது--திராவிட முன்னேற்றக் கழகம் இல்லை. இப்போது தி. மு. க.வில் உள்ள பலர் தி. க.வில் இருந்தோம். தி. மு. க. துவங்கிய பிறகு ஏராளமானவர்கள் புதிதாகக் கட்சியில் சேர்ந்திருக்கிறார்கள். எங்களுக்கும் தி. க. வுக்குமிடையே இருக்கின்ற முக்கிய வேறுபாடு தி. க. ஜனநாயகக் கோட்பாட்டையோ நடைமுறையையோ, ஏற்றுக்கொள்வதில்லை—நாங்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்திருக்கின்றோம்.

நிருபர்:- நீங்கள் தி. க. வில் உறுப்பினராக இருந்திருக்கிறீர்களா?

சி. என். ஏ:- பொதுச்செயலாளராகவே இருந்திருக்கிறேன்.

நிருபர்:- 'திராவிடநாடு' கோரிக்கையை முதலில் துவங்கியது யார்? துவங்கப்பட்டு எவ்வளவு நாட்கள் ஆகின்றன?

சி.என்.ஏ:- தி.க.தான்! கோரிக்கை ஆரம்பித்து நீண்ட நாட்கள் ஆகின்றன. இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்னாலிருந்தே திராவிடநாடு விடுதலை பெற வேண்டும் என்று கோரியிருக்கிறோம். சுருக்கமாகச் சொன்னால் பாகிஸ்தான் கேட்கப்படுவதற்குமுன்பே நாங்கள் திராவிட நாடு கேட்டிருக்கிறோம்.

நிருபர்:- இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னால் காங்கிரஸ் பலம் வாய்ந்த இயக்கமாக இருந்தது. அப்போதே நீங்கள் திராவிட நாடு கேட்கவேண்டிய காரணம் என்ன?

சி. என். ஏ:- வெள்ளையர்களை விரட்டக் காங்கிரஸ் பாடுபட்டதாலே அதற்குப் பலம்வந்ததே தவிர வேறல்ல! எனவே காங்கிரசின் பலம் திராவிடநாடு கோரிக்கைக்கு எதிராகத் திரட்டப்பட்டது அல்ல! இன்னும் சொல்லப்போனால் திராவிட கழகத்தின் தலைவர் பெரியார் அவர்களே காங்கிரசில் இருந்தவர்தான்!

நிருபர்:- தி. மு. கழகம் ஏன் துவக்கப்பட்டது.

சி. என். ஏ:- தி. கழகத்துக்கு ஜனநாயகக் கோட்பாட்டிலும் நடைமுறையிலும் நம்பிக்கையில்லை. கட்சி அமைப்பிலும், அரசியல் அமைப்பிலும் அது ஜனநாயகத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தது. எங்களுக்கும் அவர்களுக்குமிடையே இருக்கின்ற மற்றொரு முக்கிய வேறுபாடு, ஜாதிப் பிரச்சினையைப் பொறுத்தது. அவர்கள் பார்ப்பனர்களை அடியோடு அழித்தாகவேண்டும், அல்லது அவர்களை இந்த நாட்டைவிட்டே துரத்தவேண்டும் என்கிறார்கள். நாங்கள் அந்தக் கருத்தை ஏற்கவில்லை-- பார்ப்பனீயம்தான் அழிக்கப்பட வேண்டும் என்கிறோம். நாங்கள் ஈடுபடுகிற எந்தக் காரியத்திலும், அமைதியான முறைகளில் நம்பிக்கை வைத்தே பணியாற்றுகிறோம்.

நிருபர்:- கடந்த தேர்தலில் திராவிட கழகம் போட்டியிட்டதா?

சி. என். ஏ:- போட்டியிடவில்லை! காங்கிரசுக்கு ஆதரவு தந்தது. "நாங்கள் காங்கிரசை வெறுக்கிறோம். ஆனால் காமராசர் நல்லவர் — பார்ப்பனரல்லாதாரின் தலைவர்" என்று காரணம் காட்டி, காங்கிரசுக்கு ஆதரவாகப் பணிபுரிந்தது.

நிருபர்:- அப்படியானால் காமராஜ் தி. க.வின் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளுகிறாரா?

சி. என். ஏ:- அதுதான் இல்லை. திராவிட கழகத்திடமிருந்து எவ்வளவு நன்மைகளைப் பெற்றுக் கொள்ளமுடியுமோ, அவ்வளவையும் பெற்றுக்கொள்ளுகிறார், அவ்வளவுதான்!

நிருபர்:- தி. க. "தமிழ்நாடு" கோரிக்கையை எவ்வளவு நாளாக எழுப்பி வருகிறது?

சி. என். ஏ:- ஏறக்குறைய ஆறு மாதங்களாக!

நிருபர்:- தி. மு. க.வின் கிளைகள் தமிழ்நாடு தவிர மற்ற மூன்று மாநிலங்களிலும் இருக்கின்றனவா?

சி. என். ஏ:- ஆம்! கேரளத்திலும், மைசூர் மாநிலத்திலும் ஓரளவு இருந்துவருகின்றன. ஆந்திரத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டு எல்லைக்கு அருகில் உள்ள பகுதிகளில் கிளைகள் இருக்கின்றன.

நிருபர்:- நீங்கள்தான் கட்சியின் தலைவரா?

சி. என். ஏ:- இல்லை! கட்சியில் மூத்தவனாகக்கருதப்படுகிறேன். பொதுச்செயலாளர், நெடுஞ்செழியன்.

நிருபர்:- தி. மு. க.விற்கு எந்த வகுப்பாரிடம் நிறையச் செல்வாக்கு இருக்கிறது? தொழிலாளர்களிடமா, படித்தவர்களிடமா?

சி. என். ஏ:- எல்லா வகுப்பாரிடமும் செல்வாக்கு இருக்கிறது.

நிருபர்:- கட்சியில் இப்போது எத்தனை உறுப்பினர்கள் இருக்கிறார்கள்? முழுநேர உழைப்பாளிகள் எத்தனை பேர், மற்றவர்கள் எத்தனை பேர்?

சி. என். ஏ:- ஏறத்தாழ 2 இலட்சம் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். முழுநேர உழைப்பாளிகள் என்றும் மற்றவர்கள் என்றும் நாங்கள் பாகுபாடு செய்வதில்லை.

இராமன்:- ஆளும் கட்சியாக இருந்தால் அதிலுள்ள சிலர் முழுநேர உழைப்பாளர்களாக இல்லாமலிருக்கலாம்! ஆனால் எதிர்க்கட்சியில் அப்படியல்லவே!

நிருபர்:- உங்கள் கட்சிக்கென்று பத்திரிகைகள் இருக்கின்றனவா?

இராமன்:- "நம் நாடு" என்றொரு தினத்தாள் இருக்கிறது. அது கட்சியின் அதிகாரபூர்வமான பத்திரிகை. வார இதழ்கள் இருக்கின்றன—'ஹோம்லண்ட்' என்ற ஒரு ஆங்கில இதழும் இருக்கிறது!

நிருபர்:- ஆங்கில இதழின் ஆசிரியர் யார்?

சி. என். ஏ:- நான்தான்.

நிருபர்:- நீங்கள் (சி. என். ஏ.வைப் பார்த்து) காங்கிரசில் இருந்திருக்கிறீர்களா?

சி. என். ஏ:- இல்லை! ஆனால் காங்கிரசில் இருந்த பலர் இப்போது தி. மு. க.வில் இருக்கிறார்கள். உதாரணமாக, கட்சியின் துணைப் பொதுச்செயலாளராக இருக்கும் தோழர் என். வி. நடராசன் காங்கிரசில் இருந்தவர்.

நிருபர்:- பண்டித நேரு மிகவும் செல்வாக்கு உள்ள தலைவராக இருக்கிறார். அவர் இந்தியா ஒன்றாக இருக்க வேண்டும் என்று அடிக்கடி சொல்லி வருகிறார். சென்னைக்கு வந்தபோது கூட, நாட்டுப் பிரிவினையைக் கோருகிற பெரியாரைக் காரசாரமாகத் தாக்கினார். மேலும், இந்திய அரசியலமைப்பு, பிரிவினைக்கு இடந்தரவில்லை. சமுதாய நலத்திட்டம்போன்ற திட்டங்கள் வேறு நிறைவேற்றப்படுகின்றன. இவைகள் நல்ல முறையில் நிறைவேற்றப்பட்டால், உங்கள் கோரிக்கைக்கு ஆதரவு மங்காதா?

இராமன்:- பொருளாதார முன்னேற்றம் விடுதலை உணர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக என்றும் இருந்ததில்லை. அப்படி இருந்திருக்குமானால் இன்று இந்தியா சுதந்திரம் பெற்றிருக்க முடியாது. ஆங்கிலேயர்கள்தான் இரயிலையும், ஆகாய விமானத்தையும், மற்றும் பல முன்னேற்றச் சாதனங்களையும் இந்த நாட்டிற்கு அறிமுகம் செய்தவர்கள். அந்த முன்னேற்றங்கள் விடுதலை உணர்ச்சிக்குப் பாதகமாக அமையவில்லையே!

சி. என். ஏ:- அதுமட்டுமல்ல! பண்டித நேரு மனநிலைகட்கு ஆட்பட்டவர் (Man of Moods) இந்தியா சுதந்திரம் பெற்றுப் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, அதன் பகுதிகளுக்கு சுயநிர்ணய உரிமை (Self-determination) தரப்படவேண்டும் என்று அவர் கூறியிருப்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. அவருடைய செல்வாக்கு விடுதலை வேட்கைக்கு இடையூறாக இருக்கக்கூடுமானால், பாகிஸ்தான் பிரிவினை ஏற்பட்டிருக்காதே!

உங்கள் கேள்விக்கு வேறு வகையில்கூடப்பதிலளிக்க முடியும். நேருவை நாங்கள் ஒரு ஜனநாயகவாதி என்று கருதுகிறோம். சட்ட மன்றத்தில் திராவிடநாடு கோரித் தீர்மானம் நிறைவேற்றினால் நேரு அந்தத் தீர்மானத்திற்கு மதிப்பளித்து, பிரிவினையை ஏற்றுக் கொள்வார் என்று கருதுகிறோம்.

நிருபர்:- ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லாத தலைவர்கள் வடக்கே ஆட்சிக்கு வந்துவிட்டால்?

சி. என். ஏ:- இங்கு அதற்குத் தகுந்தபடி முறைகள் மாறிவிடும். வேறு சில கட்சிகள் புதிய முறையில் வேலைசெய்ய முனையக்கூடும்.

நிருபர்:- உங்கள் கட்சி துவங்கப்பட்டு 9-ஆண்டுகள்தான் ஆகின்றன என்கிறீர்கள். அதற்குள் சட்ட மன்றத்தில் 15-இடங்களைக் கைப்பற்றி இருக்கிறீர்கள். அடுத்த தேர்தலில், உங்கள் கட்சிக்கு எத்தனை இடங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறீர்கள்.

சி. என். ஏ:- சென்னை சட்ட மன்றத்தில் இப்போது இருப்பதைப்போல் குறைந்தது மூன்று மடங்கு இடங்களையாவது கைப்பற்றக்கூடுமென்று நினைக்கிறேன். ஆனால் மற்ற மாநிலங்களைப் பொறுத்தவரையில் அதிக இடங்களுக்குப் போட்டியிட முடியும் என்று நான் நம்பவில்லை.

நிருபர்:- உங்கள் திராவிட நாட்டில் அரசியலமைப்பு எப்படிப்பட்டதாக இருக்கும்? சமுதாய அமைப்பு எப்படி இருக்கும்?

சி. என். ஏ:- அரசியலமைப்பு ஜனநாயகமாகவும், சமுதாய அமைப்பு சாதி பேதங்களற்ற சமதர்ம அமைப்பாகவும் இருக்கும்.

நிருபர்:- இப்போது டில்லியில் இருப்பதைப்போல் அப்போதும் மத்திய பாராளுமன்றம் ஒன்று இருக்குமல்லவா?

சி. என். ஏ:- இருக்கும்! ஆனால் மாநிலங்கள் தம் நிறைவு (autonomy) பெற்றனவாய், விரும்பினால் பிரிந்து போகும் உரிமையும் தரப்பட்டு இருக்கும்.

நிருபர்:- திராவிடம் பொருளாதார பலம் வாய்ந்ததாக இருக்க முடியுமா?

சி. என். ஏ:- நிச்சயமாக முடியும்.

நிருபர்:- பெரிய பெரிய ஆலைகள் எல்லாம் வட இந்தியாவில் இருக்கின்றன. இங்கே தொழில் வளர்ச்சி மிகவும் குறைவு. அப்படியிருக்க, திராவிடத்தில் தொழில் வளத்தைப் பெருக்குவதற்கு என்ன செய்வீர்கள்?

சி. என். ஏ:- இங்கே இருக்கின்ற மூலப் பொருள்களே தொழில் வளத்தைப் பெருக்குவதற்குப் போதுமானவை.

நிருபர்:- இந்தியா பெரியதாக இருப்பதால் வெளிநாட்டு உதவி ஏராளமாகக் கிடைக்கிறது. திராவிடநாடு அந்த அளவு வெளிநாட்டு உதவியை எதிர்பார்க்க முடியாதே!

சி. என். ஏ:- வெளிநாட்டு உதவி நமக்கு வலிவு ஊட்டுவதாக இருக்கிறதா, அல்லது பளுவாக ஆகிறதா என்பதைப் பொறுத்துத்தான், வெளிநாட்டு உதவியின் இலாப நஷ்டங்களைக் கணக்கிட்டாக வேண்டும்.

நிருபர்:- அப்படியானால் வெளிநாட்டு உதவி பளுவாகத்தான் அமையும் என்கிறீர்களா?

சி. என். ஏ:- அப்படித்தான் இருக்கவேண்டும் என்பதில்லை. அது அந்த உதவி எப்படிப் பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பொறுத்து இருக்கிறது. இந்திய அரசாங்கம் உதவியைப் பயன்படுத்துகிற முறையில் உதவிகள் உண்மையிலேயே பளுவாக அமைகின்றன.

நிருபர்:- எப்படி?

சி. என். ஏ:- அரசாங்கம் எதை முதலில் செய்யவேண்டுமோ அதை முதலில் செய்யவில்லை. மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படுவதற்கு முன், கனரக ஆலைகளில் பணத்தை முடக்கியிருக்க வேண்டியதில்லை.

நிருபர்:- "அடிப்படைத் தேவைகள்" என்று எதை நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்?

சி. என். ஏ:- உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்றையும் தான்.

நிருபர்:- திட்டங்களின் மூலம் நிறைவேற்றப்படும் விவசாய அபிவிருத்தியைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

சி. என். ஏ:- விளை நிலங்களின் பரப்பை விரிவாக்குவதிலேயே கவனம் செலுத்தப் படுகிறதே தவிர, விஞ்ஞான சாதனங்களைப் பயன்படுத்துவதில் அரசாங்கத்தின் கவனம் அவ்வளவாகச் செல்லவில்லை.

நிருபர்:- மக்களின் வாங்கும் சக்தி குறைவாக இருக்கும்போது, அன்றாட உபயோகத்திற்கான பொருள்களைப் (Consumer goods) பெருக்குவதால், எப்படிப் பலன் கிடைக்கும்?

சி. என். ஏ:- தொழில் வளர்ச்சியின் மூலமாக வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட முடியும். தொழில் வளர்ச்சியும், அன்றாடத்தேவைக்கான பொருட் பெருக்கமும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்திப் பார்க்கவேண்டியவையே தவிர, — தனித்தனியாகக் கவனம் செலுத்துவதில் பொருளில்லை,

இராமன்:- (நிருபரைப் பார்த்து) இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

நிருபர்:- அது தவறான முறையில் தீட்டப்பட்டிருக்கும் திட்டம் (Misplan) என்று கருதுகிறேன்.

சி. என். ஏ:- (நிருபரிடம்) புதிய புதிய நீர்ப்பாசனத் திட்டங்களில் ஏராளமான பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆண்டுதோறும் பல கிராமங்களும் நகரங்களும் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படுகின்றன. வெள்ளத்தைக் கட்டுப்படுத்தும் திட்டங்கள் முதலில் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும்.

நிருபர்:- திராவிடநாட்டில் எந்த மொழி ஆட்சி மொழியாக இருக்கும்.

சி. என். ஏ:- மாநிலங்களுக்குள் அந்தப்பகுதி மொழியும், மாநிலங்களுக்கிடையேயும் வெளியிலும், தொடர்பு கொள்ளுவதற்கு ஆங்கிலமும் பயன்படுத்தப்படும்.

நிருபர்:- இந்தியைப்பரப்புவதற்கு அரசியல் அதிகாரம் பயன்படுத்தப்படுகிறது என்று நீங்கள் கருதுகிறீர்களா?

சி. என். ஏ:- அரசியல் அதிகாரம் பயன்படுத்தப்படுவது மட்டுமல்ல! மற்றும் பல்வேறு முறைகள் கையாளப்படுகின்றன. இந்திப் பள்ளிகளுக்கு அரசாங்கத்தின் நிதி உதவி மிகத் தாராளமாகக் கிடைக்கிறது. உத்தியோக உயர்வு பெறுவதற்கு இந்தி தெரிந்திருக்கவேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. இந்திப் பண்டிதர்களுக்கு வசதியச் சலுகை கொடுக்கப்படுகிறது.

அரசியல் அமைப்பில் 1965-க்குள் ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தி பயன்படுத்தப் படவேண்டும் என்று இருக்கிறது! ஆனால் தென்னாடு முழுவதும் இந்த ஏற்பாட்டை எதிர்க்கிறது.

நிருபர்:- இந்த மாநில சர்க்கார் இதைப்பற்றி எந்தக் கருத்தையும் அறிவிக்கவில்லையா?

சி. என். ஏ:- அச்சம் கலந்த எதிர்ப்பை இந்த அரசாங்கம்

வெளியிட்டிருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர்களையும் கலந்து ஆலோசித்தார்கள். முடிவில், காலம் குறிப்பிடாமல், ஆங்கிலம் இன்னும் நீண்ட காலத்துக்கு ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் இந்த ஒப்பந்தத்திற்குக்கூட மத்திய அரசாங்கம் இணங்குமா என்பதுதான் சந்தேகமாக இருக்கிறது.

நிருபர்:- அதுசரி! நீங்கள் திராவிட நாடு கேட்க வேண்டிய தேவை என்ன?

சி. என். ஏ:- மனிதனுக்கு இயற்கையாக எழுகின்ற உரிமை உணர்ச்சி. நாங்கள் பல நூற்றாண்டுகளாகத் தனித்து வாழ்ந்தவர்கள். எங்கள் முன்னோர்கள் பெயரோடும் புகழோடும் வாழ்ந்திருக்கிறார்கள். ஆங்கிலேயர் இங்கே வந்து, தங்கள் நிர்வாக சௌகரியத்திற்காக ஒரு 'போலி ஒற்றுமை' ஏற்படுத்துவதற்கு முன்னால், திராவிடம் என்றுமே வடநாட்டோடு இணைந்து இருந்ததில்லை.

அது மட்டுமல்ல! இணைந்து இருப்பதால் வடநாடு எங்கள் மீது அரசியல், பொருளாதாரம் கலாச்சாரம் ஆகியபலவற்றிலும் ஆதிக்கம் செலுத்துகிறது. இந்த ஆதிக்கத்தை நாங்கள் வெறுக்கிறோம்.

நிருபர்:- பெரிய பெரிய சாம்ராஜ்யங்கள் இந்தியாவில் இருந்திருக்கின்றனவே!

சி. என். ஏ:- எல்லாம் விந்தியத்திற்கு வடக்கேதான்! தமிழகத்தின் மீது படையெடுத்து எந்த வடநாட்டு அரசனும் இங்கே ஆட்சியை அமைக்க முடியவில்லை.

இராமன்:- சாம்ராஜ்யங்களுள் பெரியது ஔரங்கசீப் சாம்ராஜ்யம். ஆனால் ஔரங்கசீப்கூட தென்னாட்டைக் கைப்பற்ற முடியவில்லை.

நிருபர்:- தென்னிந்தியாவை 'திராவிடம்' என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். அப்படியானால் வடக்கே திராவிடர்களே இல்லை என்று கருதுகிறீர்களா?

சி. என். ஏ:- சிலர் அங்கேபோய்க் குடியேறி இருந்திருக்கலாம்.

நிருபர்:- வடநாடு உங்கள்மீது அரசியல் துறையிலும் பொருளியல் துறையிலும் ஆதிக்கம் செலுத்துகிறது என்று நீங்கள் சொல்வதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் கலாசாரத் துறையில் எப்படி ஆதிக்கம் செலுத்துகிறது என்பது எனக்குப் புரியவில்லை.

சி. என். ஏ:- கொஞ்சம் கொஞ்சமாக வடநாட்டு நாகரிகமும் பழக்க வழக்கங்களும் இங்கே நுழைகின்றன. உதாரணமாக 10 அல்லது 15 ஆண்டுகளுக்கு முன்னால் கோதுமை சாப்பிடும் பழக்கம் மிகவும் அரிதாக இருந்தது. இப்போது கோதுமை உணவு ஓரளவு பெருகிவிட்டது. (உரையாடலின் போது நிருபர் "அச்சா" "அச்சா" என்று சொல்லிவந்ததைக் குறிப்பிட்டு) வெளிநாட்டிலிருந்து வந்திருக்கிற நீங்களே "அச்சா" என்ற இந்தி வார்த்தையை அடிக்கடி உபயோகப்படுத்துகிறீர்கள்.

நிருபர்:- அதிலென்ன தவறு?

சி. என். ஏ:- தவறென்று நான் சொல்லவில்லை. ஆனால் உங்களைப் போன்றவர்களின் கண்களுக்கு இந்திமொழிதான் தெரிகிறதேயொழிய, எங்கள் மொழி தெரிவதில்லை.

நிருபர்:- நான் இங்கே வந்து ஐந்து நாட்கள்தான் ஆகின்றன.

சி. என். ஏ:- ஆண்டாண்டு காலமாக இங்கே இருக்கிற வடநாட்டுக்காரர்கள் திராவிட மொழிகளைத் தெரிந்துகொள்வதில் அக்கறை காட்டுவது இல்லை. உதாரணத்திற்கு, சென்னையில் சௌகார்பேட்டை என்று ஒரு பகுதி இருக்கிறது. அந்தப் பகுதிக்குச் சென்று பார்த்தீர்களானால், பம்பாயின் ஒரு பகுதியில் இருப்பதைப்போன்ற உணர்வுதான் உங்களுக்குத் தோன்றும். அங்கிருக்கிற கடைகளெல்லாம் வடநாட்டுக்காரர்களுடையவை. அங்கிருக்கிற கூலிகளெல்லாம் வடநாட்டுக்காரர்கள் — சலவைத் தொழிலாளிகளும்கூட வடநாட்டைச் சேர்ந்தவர்கள். அதனால் அவர்களுக்கு இந்த நாட்டு மொழியை அறிந்துகொள்ள வேண்டுமென்ற அக்கறை இருப்பதில்லை.

நிருபர்:- என்னுடைய தந்தை ரஷ்யாவைச் சேர்ந்தவர்—தாய் போலந்து நாட்டைச் சேர்ந்தவர். அவர்களுக்கிடையே தொடர்பு ஏற்பட முடிந்தது. அத்தகைய தொடர்புகள் இங்கே ஏற்படுவதில்லையா? அத்தகைய தொடர்புகளுக்கு இந்தியா ஒன்றாக இருப்பது சாதகமானதல்லவா?

சி. என். ஏ:- எனக்குத் தெரிந்த அத்தகைய ஒரே தொடர்பு இராஜாஜியின் மகளுக்கும், காந்தியின் மகனுக்கும் நடந்த திருமணம்தான்.

நீங்கள் சொல்லுகிற வகையில் பற்பல தொடர்புகள் ஏற்பட்டாலும் இங்கிலாந்து இங்கிலாந்தாகத்தான் இருக்கிறது—பிரான்சு பிரான்சாகத்தான் இருக்கிறது—இணைந்துவிடவில்லை.

மேலும் திருமணம் மனத்தைப் பொறுத்ததே தவிர, மண்ணைப் பொறுத்ததல்ல!

எனவே இந்த வாதம் பிரிவினை வாதத்துக்குப் பதிலோ மறுப்போ ஆகாது.

நிருபர்:- திராவிடநாடு பிரிக்கப்பட்டால் இப்போது திட்டங்களின் மூலம் உங்களுக்குக் கிடைக்கும் பயன் கிடைக்காதல்லவா?

இராமன்:- திட்டங்களின் மூலம் எங்களுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய தொகை கிடைக்கவில்லை—நாங்கள் வஞ்சிக்கப்படுகிறோம். தென்னாட்டின் மக்கள் தொகை, மொத்த மக்கள் தொகையில் ஏறக்குறைய 25%. ஆனால், இரண்டாவது திட்டத்தில், எங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை மொத்தத்தொகையில் 11% தான்!

நிருபர்:- தென்னாட்டைச் சேர்ந்தவர்கள் மத்திய அமைச்சரவையில் எத்தனை பேர் இருக்கிறார்கள்?

இராமன்:- 3 பேர். சென்னையைச் சேர்ந்த எஸ். வி. இராமசாமி—ஆந்திராவைச்சேர்ந்த கோபால ரெட்டி—மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த கே. சி. ரெட்டி. ஆனால் இவர்களில் இருவர் 'காபினெட் தகுதி' பெற்றவரல்ல!

நிருபர்:- இங்கே திறமை வாய்ந்தவர்கள் இல்லையோ?

இராமன்:- அது தவறு! ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், டாக்டர் சுப்பராயன், மாநில முதலமைச்சராகவும், வெளிநாட்டுத் தூதுவராகவும் இருந்தவர். இப்போது அவர் பாராளுமன்ற உறுப்பினராக மட்டுமே இருக்கிறார்.

சி. என். ஏ:- (நிருபரைப் பார்த்து) உங்கள் கேள்விக்கு நான் வேறு விதமாகக்கூடப் பதில் சொல்வேன். தென்னாட்டில் திறமை வாய்ந்தவர்கள் இருக்கிறார்களா இல்லையா என்று தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு வடநாட்டுத் தலைவர்களிடம் சிக்கியிருப்பது, எங்கள் பிரிவினைக் கோரிக்கைக்கு நல்ல காரணமாக அமைகிறதல்லவா?

நிருபர்:- டாக்டர் சுப்பராயனுக்கு அமைச்சர் பதவி ஏன் கொடுக்கப்படவில்லை என்று கருதுகிறீர்கள்?

இராமன்:- இந்தியை ஆட்சிமொழியாக ஆக்குவதைப்பற்றி ஆராய கேர் கமிஷன் என்றொரு குழுவை அரசாங்கம் அமைத்தது. அந்தக் குழுவில் டாக்டர் சுப்பராயனும் இடம் பெற்றிருந்தார். அந்தக் குழுவின் அறிக்கையில் சுப்பராயன் மாறுபட்ட கருத்தைத் (Minute of Dissent) தெரிவித்தார். அதனால் அமைச்சர் பதவி கிடைக்காமல் போயிருக்கக்கூடும்.

நிருபர்:- ஆட்சிமொழிப் பிரச்சினை எந்த முறையில் தீர்வு காணப்பட வேண்டுமென்று நீங்கள் கருதுகிறீர்கள்.

சி. என். ஏ:- மத்திய ஆட்சிமொழியாகவும், மாநிலங்கிடையே தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளவும், வெளிநாட்டுடன் தொடர்பு கொள்ளவும் ஆங்கிலம்தான பயன்படுத்தப்பட வேண்டும். இந்தி பேசப்படுகிற மாநிலங்களில் அது ஆட்சிமொழியாக இருக்கலாம்--மற்றப்பகுதிகளில் அல்ல!

நிருபர்:- மத்திய மாநில அதிகார வரம்புகளில் நீங்கள் மாற்றம் காண விரும்புகிறீர்களா?

சி. என். ஏ:- பிரிவினை விஷயத்தில் நாங்கள் விட்டுக்கொடுப்பதாக இல்லை. எங்களுக்கு வேண்டியது சுதந்திரம் — சிற்சில அதிகார வரம்பு மாற்றங்களல்ல! மாநிலங்கள் பிரிந்து போகும் உரிமை அரசியல் அமைப்பின் மூலம் வழங்கப்பட்டால், அந்த மாற்றத்தை நாங்கள் வரவேற்போம்.

நிருபர்:- கொஞ்ச நாட்களுக்கு முன் சென்னையில் ஜன சங்கக் கட்சி துவங்கப்பட்டது. அந்தக் கட்சியும் வளர்ந்தால் உங்கள் கோரிக்கைக்கு இடையூறு ஏற்படாதா?

சி. என். ஏ:- ஜன சங்கம் இங்கே தழைக்கவே முடியாது.

இராமன்:- 'இந்துஸ்தானத்தை' அமைப்பதுதான் ஜனசங்கத்தின் திட்டம். மதத்தையும் அரசியலையும் அந்தக் கட்சி வேறுபடுத்திடவே விரும்பவில்லை.

நிருபர்:- ஜன சங்கம் புராணத்தை அடிப்படையாகக் கொண்டது. புராண காலம் பொற்காலம் என்றுகூறி வருகிறது. மற்றும் இஸ்லாமிய எதிர்ப்புக் கொள்கையை அதுகைவிட்டுவிட்டது. மதத்தையும் அரசியலையும் ஒன்றாக்கத்தான் பாடுபட்டு வருகிறது. அப்படியிருக்க அதற்கு ஏன் ஆதரவு கிடைக்காது என்று கருதுகிறீர்கள்?

சி. என். ஏ:- மதத்தையும் அரசியலையும் ஒன்றாக்கிய பிறகு இந்து தர்மம்தான் நாட்டை ஆளும். அப்போது இஸ்லாமிய எதிர்ப்புணர்ச்சி ஏற்படாமலா போகும்?

நிருபர்:- இந்து தர்மத்தின் வழியில் நாடு ஆளப்படுவதை நீங்கள் ஏற்கவில்லையா?

சி. என். ஏ:- இல்லை.

நிருபர்:- அப்படியானால் நீங்கள் இந்துக்களல்லவா?

சி. என். ஏ:- அல்ல! திராவிடர்கள்! நால் வருணத்தை ஏற்றுக் கொள்பவர்கள் இந்துக்கள். திராவிட கலாசாரம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

நிருபர்:- திராவிடர்கள் ஜாதிகளை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், சாதிகள் இங்கே எப்படி வந்தன?

சி. என். ஏ:- கிருமிகள் நோயைச் சுமந்து செல்வதில்லையா! அதைப்போல, இங்கே வந்து குடியேறியவர்கள் இந்த நோயைக் கொண்டுவந்து விட்டார்கள்!

நிருபர்:- (சி.என்.ஏ.யைப் பார்த்து) நீங்கள் எந்தஜாதியைச் சேர்ந்தவர்கள்?

இராமன்:- "எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள்?" என்று கேளுங்கள்—பதில் தருகிறோம்.

சி. என். ஏ:- நாங்களெல்லோரும் திராவிடர்கள். குடிமதிப்புப் பதிவுகளிலும் திராவிடர்கள் என்றுதான் குறிப்பிடுகின்றோம்—ஜாதியைக் குறிப்பதில்லை.

நிருபர்:- வடநாடு, — தென்னாடு என்று எந்த அடிப்படையில் பாகுபாடு செய்கிறீர்கள்?

சி. என். ஏ:- இனவாயிலாக ஏற்படுகின்ற கலாச்சார அடிப்படையில்!

நிருபர்:- நீங்கள் "ஒரு கடவுள்" இருக்கிறதென்று நம்புகிறீர்களா?

இராமன்:- "ஒரு கடவுள்" என்று ஏன் சொல்லுகிறீர்கள்?

(11-ம் பக்கம் பார்க்க)

கற்றல்

வாசித்தல் என்பது எழுத்து வடிவில் கண்ணுக்குக் காணும் பொருளை நாவால் ஒலித்தல் என்று மட்டுமே பொருள்படும். பலர் தாம் என்ன வாசிக்கிறோம் என்பதை அறியாமல் வாசிக்கிறார்கள். கண் காண்பதை நா ஒலிக்கிறதேயன்றி உள்ளம் அதில் ஈடுபடுவதில்லை. வேறு சிலர் வாசிப்பதை மனத்தில் படியவைத்துக் கொள்கிறார்கள். இது படித்தல் ஆகும். வாசித்தலை விட இது ஒருபடி மேலாயினும், இதில் மனத்தின் நினைவாற்றல் மட்டுமே செயலாற்றுகின்றது. நூலிலுள்ளதை உள்ளத்தில் கொள்வதன்றிச் சிந்தனைக்கு இடமில்லை. கற்றல் என்பது வாசித்து, படித்துச் சிந்தித்து மனத்தில் புதுக் கருத்துக்களை உருவாக்குவதாகும்.

முத்துக்களும், முட்களும்

—[இரெ. தென்னவமணி]—

முத்துக்கள் என்றாலே நம் மூதாதையர்களின் வரலாறுகள் வெளிப்படுகின்றன. எகிப்து, ரோமாபுரி போன்ற நாடுகளில் கடல் வாணிபம் செய்த காட்சிகள் நினைவுக்கு வருகின்றன. இவற்றால் ஏற்படும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சிந்தனையைச் சிறிது உயர்த்தினால் முத்துக்களின் தூய்மை, ஏழைகளின் வாழ்வை வளமாக்கும் குணம், அணிபவர் அழகை எடுத்துக் காட்டும் இயல்பு, மதிப்பு முதலியவை தெரிய வரும். இதனால் தான் அறிஞர்களின் சொற்களை, அரசியல் மேதைகளின் வாசகங்களை, ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்களை புலவர்களின் கவிதைகளை முத்துக்கள் என மக்கள் போற்றுகின்றனர்.

முட்கள் வழியைக் கடக்க தடையாகின்றன, பட்ட இடத்தில் புண் ஏற்படுத்துகின்றன. பார்ப்பவர் வெறுப்போடு, எடுத்தெறிய நேரிடுகின்றது. இக்காரணங்களால் நாட்டுக்குத் தீயவை விளைவிக்கும் சொற்களையும், மனதைப் புண்படுத்தும் வார்த்தைகளையும் எத்தகையவர் கூறினாலும் முட்களெனக் கூறுதல் குற்றமாகாது.

ஆட்சியில் அமர்ந்திருப்பவர்கள முத்துக்களை உதிர்த்தால் அங்கு வாழும் மக்களின் துயரைத் துடைக்க உதவும். நாட்டின் வளத்தைப் பெருக்க வழி செய்யும். முட்களைக் கொட்டினால் வறுமையை நீக்கத் தடையாகும்; வளம் காண வழி செய்யாது.

உலகத்திற்கு முப்பாலாய், எக்காலத்திற்கும் ஏற்றதாய் நீதி முறைகளை வகுத்துத்தந்து இணையிலாக் கவிஞராய்த் திகழ்கிறார் வள்ளுவர். சர்வாதிகாரிகளின் ஆட்சியைப் பேனா முனையால் ஓட்டினர் வால்டேர், ரூஸ்ஸோ போன்றவர்கள். அரசியல் மாளிகையின் அடிக்கல்லை அமைத்தனர் அரிஸ்டாட்டில், பிளாட்டோ போன்ற அரசியல் மேதைகள். எதையும் ஏன்? எதற்காக என்ற வினாக்களை எழுப்பிச் சிந்தியுங்கள் என்று அறிவுப் பிரச்சாரம் செய்தார் கிரேக்கப் பெரியார் சாக்ரடீஸ். சுயநல வாதிகளின் சூதாட்டத்திற்கு இரையாகி அவர்களின் கரங்களிலே கருகிய துருக்கியை மீட்டார் கமால்பாட்சா. ஷெல்லியும், ஷேக்ஸ்பியரும் செதுக்கிய சொற்கள் செங்கரும்பைவிட இனிக்கின்றன.

இப்பேரறிஞர்களின் முத்து நிகர் கருத்துக்கள் அடிமையை அகற்றவும், அரசியலில் புது மலர்ச்சி தோன்றவும் வழி செய்தன, "உன்னையே நீ புனிதமாக்குக்கொள்" என்ற ஏசு, நபி, புத்தர் போன்றவர்களின் அறிவுரைகள்சமுதாயத்தில்மறுமலர்ச்சியை ஏற்படுத்தின. இவர்களின் கருத்துக்கள் பரவவும், மக்கள் ஏற்கவும் ஓயாத பிரச்சாரங்களும் ஓதுகின்ற ஏடுகளும்தான்காரணம் என்பதை உலகறியும்.

ஆனால் இன்று பெயரளவிலே வெளிவரும் ஏடுகளில் பலவும், பிரச்சாரங்களில்பலவும் கொள்கைகளை விளக்கவோ, இலட்சியங்களை எடுத்துரைக்கவோ, குறிக்கோள்களை நிலைநாட்டவோ கூடியதாய் இல்லை, 'யாரைப்பற்றித் தலைப்புத் தந்தால் ஏடுகள் விலையாகும்', 'யாரைப்பற்றிப் பேசினால் கூட்டம் கூடும்' என்ற குருட்டு நம்பிக்கையிலேவெற்றியையும்மனத்திருப்தியையும் பெறவேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றன. "நல்லாவின் பாலிலே நஞ்சைக் கலப்பதைப் போல" நாடாள்வோரில் சிலர் முன்பு முத்துக்களை உதிர்த்தவர்கள் இன்று முட்களைக் கொட்டுகின்றனர். "எரியும் நெருப்பில் எண்ணெயை வார்ப்பது போல," "வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதுபோல", வறுமையில்வாடிடும் மக்களின் பொறுமையைச் சோதிக்கின்றனர்.

ஆங்கிலேயரிடமிருந்து இந்திய துணைக் கண்டத்தின் சாவியை கையில் வாங்கிய ஜவஹர், "ஒருவன் ஒருதுளி 'இரத்தம் சிந்தினாலும் நாம் பெற்றது சுதந்திரமாகாது" என்றார். ஆனால் சிங்களத்தில் செந்தமிழர் சிந்திய இரத்தத்தைக்கண்டு அனுதாபம் தெரிவிக்கக்கூட மனமில்லாதவராய் "அதைப்பற்றி வாதிடுவது வெளிநாட்டு விவகாரங்களில் தலையிடுவதாகும்" எனக் கூறுகிறார். தொழிலாளிகளின்தொல்லைகளைப் போக்குங்கள், நீக்குங்கள் என்று கூறினால் 'பல குரல்கள் ஒலிக்கும் இடங்களில் படைகளை ஏவுங்கள்' எனச் சொல்லாமல் சொல்கிறார்; மக்களைக் கொல்லாமல் கொல்கிறார்.

"திராவிடர்கள் தொன்மையான நாகரிகமும் அறிவாற்றலும் உடையவர்கள்" என்ற முத்துக்களை உதிர்த்த ஆசியாவின்சோதி, அத்திருவாயையே திறந்து "நான் சென்ஸ்" "காட்டுமிராண்டிகள்" என்ற முட்களையும் கொட்டுகிறார்.

'இராமாயணம் என்றால்என்ன?' என்ற மகள் இந்திராவின் வினாவுக்கு சிறையிலிருந்த தந்தை, இராமாயணம் என்பது ஆரியருக்கும் திராவிடருக்கும் இடையே ஏற்பட்ட பூசல் என்று ஆராய்ந்து கூறியவர்,மறவர்குலத் தலைவனும் இராவணனைத் தீயிலிட்டுப் பெருமைப்படும் வடவரின் கோர விழாவைக் கண்டு களித்து "இது அல்லவோ சிறந்த விழா" என்று புகழ்பாடுகிறார். மன்னரின் ஆட்சிக்கும், சர்வாதிகாரப் போக்கிற்கும் முடிவுகட்டிய ஈராக், லெபனான் போன்ற நாடுகளுக்கு ஆதரவளிக்கும் இந்தியாவின்முதல்வர், பார்மோசா, குமாய் தீவுகள் செஞ்சீனாவுக்கு உரியவை என்று அவர்களின் உரிமையைப் பாதுகாக்கும் காவலர், "சிறிய நாடுகளின் சுதந்திரத்தில் வேற்று நாடுகள் தலையிடக் கூடாது என்ற மாணிக்க வாசகங்களை உதிர்க்கின்றவர், "தென்னகம் திராவிடர்க்கு உரியது—விடுதலை தாருங்கள்" என்றால் "நாட்டைப் பிரிப்பது கேட்டை விளைவிக்கும்" என ஆருடம் கணிக்கிறார். இதையெல்லாம் காணும் பொதுமக்கள் முத்துக்களைச் சிந்திய செவ்வாய் ஏனோ முட்களையும் கொட்டுகின்றது என்று கேட்காமலில்லை.

எதிர் வீட்டுக்காரன் ஒரு அடி கொடுத்தால் அடுத்த வீட்டுக்காரன் ஆறடி கொடுப்பதுபோல நம் தாயகத்து அமைச்சர்களும், அதிபதிகளும் பேசும் மேடைகளிலெல்லாம் அர்ச்சிக்கும் முட்கள் ஏராளம்! நம்மைப் பார்த்து, இவர்களெல்லாம் மனிதர்கள் தானா? என்று ஆச்சரியத்தோடு கேட்கிறார் காங்கிரஸ் கட்சியின் தலைவர். 'புரியாதவர்கள்' 'அறியாதவர்கள்', 'துரோகிகள்'என்று பூசிக்கின்றனர் அமைச்சர்கள். இம்முட்கள் மேனியைத் துளைத்தாலும் நாம் "எதையும் தாங்கும் இதயத்தைப்" பெற்றதால் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் மக்கள் மன்றம் ஏற்காது என்பதை மறந்துவிடாதீர்கள் என்று ஆட்சியாளரைக் கேட்டுக்கொள்கிறோம். முட்கள் வேண்டாம்! முத்துக்கள்தான் வேண்டும் என்று மக்கள் கூறும் நாளும், முட்களைத் தரும் செடிகளை அறுத்தெறியும் நாளும் ஒன்று உண்டு என்பதையும் குறிக்கொள்கிறோம்.

★

பழக்கம்

குழந்தைக்கு ஒவ்வொரு பழக்கம் உண்டாவதற்கும் ஒவ்வொரு பருவம் உண்டு. அந்த அந்தப் பருவம் வந்த பிறகு தாய் சற்று உதவி செய்தால் போதும். ஒரு தொல்லையும் இல்லாமல் அதற்கு அந்தப் பழக்கம் தானாகவே வந்து விடும். இப்படியில்லாமல், உரிய பருவம் வருவதற்கு முன்பு எந்தப் பழக்கத்தைக் குழந்தைக்கு ஏற்படுத்த முயன்றாலும், குறிப்பட்ட பழக்கமும் சரியாக உண்டாகாது, மேற்கொண்டு தீங்கும் விளையும். வற்புறுத்தி ஒரு பழக்கத்தை உண்டாக்க முயல்வதால் குழந்தைக்குச் சிடுசிடுப்பு, வீண் பிடிவாதம், பெற்றோர்மீது வெறுப்பு முதலிய பல மனக்கோளாறுகள் ஏற்படும். இதனால் பிற்காலத்தில் குழந்தையின் வாழ்க்கையே கெட்டு விடும்.

9-ம் பக்கத் தொடர்ச்சி

சி, என். ஏ:- நமது கருத்துக்கு எட்டாத ஒரு "பெரிய சக்தி" (Supreme Power) இருக்கிறதென்பதை ஒப்புக்கொள்கிறோம்.

நிருபர்:- வடநாட்டில் உள்ள கடவுள்களுக்கும் தென்னாட்டில் உள்ள கடவுள்களுக்கும் பெயரில் ஒற்றுமை காணப்படுகிறதே!

இராமன்:- திராவிடர்கள் இயற்கைச் சக்திகளை வணங்கி வந்தார்களே தவிர — வயிறு பெருத்த கடவுளையும், மற்றும் பல தெய்வங்களையும் அல்ல! இந்தக் கடவுள்களெல்லாம் புராண காலத்தில் வட இந்தியாவில் உற்பத்தி ஆனவை; மெள்ள மெள்ளத் திராவிடத்திற்குள் நுழைந்திருக்கின்றன.

சி. என். ஏ:- இதிகாச புராணங்கள் எதுவும் தமிழில் எழுதப்படவில்லை—எல்லாம சமஸ்கிருதத்தில்தான். இதை நாங்கள் எடுத்துச் சொல்லும்போது இதிகாசக் கடவுள்களெல்லாம வடக்கேயிருந்து இங்கே இறக்குமதியானவை என்பதை மக்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

நிருபர்:- பைபிள் ஆங்கிலத்தில் வெளியிடப்படவேண்டுமென்று ஆங்கிலேயர் போராடியதைப் போல், தமிழர்கள் போராடுவதில்லையா?

சி. என். ஏ:- கிறிஸ்து மதத்தை ஏற்றுக் கொண்டபிறகு ஆங்கிலேயர் அத்தகைய போராட்டம் நடத்தினார்கள். நாங்கள்தான் வர்ணாஸ்ரம தர்மத்தையே ஏற்கவில்லையே!

நிருபர்:- திராவிடத்தின் "பொற்காலமாக" எதைக் கருதுகிறீர்கள்.

இராமன்:- மூவேந்தர்கள் ஆண்ட காலத்தை. அப்போது செங்கோலாட்சி நடைபெற்றது — நாடு செழிப்புற்றுத் திகழ்ந்தது.

சி. என். ஏ:- பழைய தமிழ் இலக்கியங்களில் பற்பல புலவர்களின் பெயர்களும், மன்னர்களின் பெயர்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்தப் பெயர்களில் ஒன்றிலாவது ஜாதியைக் குறிப்பிட எந்தச் சொல்லும் இல்லை. ஆனால் வடநாட்டுப் புலவர்களின் பெயர்களில் ஜாதி அடைமொழிகள் இருக்கின்றன.

இன்னும் சொல்லப்போனால் "ஜாதி"யைக் குறிப்பதற்கு நேரான சொல் தமிழில் இல்லை. "ஜ" என்னும் ஒலிகூடத் தமிழ் மொழியில் இல்லை. எனவே சாதிகள் திராவிடத்தில் இறக்குமதியானவை என்பது தெளிவாக விளங்குகிறது.

"பண்டிட்" "முன்ஷி" "ஜோஷி" என்னும் பல அடைமொழிகள் ஜாதியைக் குறிப்பவை.

எங்கள் தனித்திராவிடத்தில் சாதியற்ற சமுதாயம் அமைத்துக்கொள்ள முடியும்—வடநாட்டோடு இணைந்து இருந்தால் அது அவ்வளவு எளிதானதல்ல!

நிருபர்:- எனவே வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் எந்தவிதத்திலும் ஒற்றுமை இல்லை— இருக்க முடியாது என்கிறீர்கள்!

சி. என். ஏ:- ஆம்!

நிருபர்:- கம்யூனிஸ்டுகளுக்கும் உங்களுக்கும் நெருங்கிய உறவு இருக்கிறதா?

இராமன்:- அவர்கள் அகில இந்தியவாதிகளோடு உறவு கொள்ளுகிறார்களே தவிர, எங்களோடு இல்லை, அமிர்தசரஸ் மாநாட்டில்கூட தி. மு. க.வைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள்!

சி. என். ஏ:- எங்கள் கழகப் பொதுச்செயலாளர் தேர்தலில் தோற்றதற்கு, கம்யூனிஸ்டுகளும் ஒரு காரணம்! இதிலிருந்து எங்கள் உறவை நீங்கள் புரிந்துகொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

[கடைசியாக நிருபர், பேட்டி அளிததத்ற்கு சி. என். ஏ.-க்கு நன்றி செலுத்திவிட்டு, "ஹோம்லண்ட்" இதழ்கள் சிலவற்றைப் பெற்றுக் கொண்டு சென்றார்.]

★

உதிர்ந்த நட்சத்திரம்

—"அன்பு"—

அன்றைய கடமைகளை உலகுக்குஉணர்த்தக்காலையில் தோன்றிய கதிரவன் மாலை வந்ததும் தன் கடமையை முடித்துக்கொண்டு அடிவானில் மறைந்தான். பகலின் கடைசிப் பகுதிக்குப் பின்பும், இரவின் முதற் பகுதிக்கு முன்பும் இடைப்பட்டிருக்கும் அந்த ஒளி பொருந்திய நேரத்தை என்ன என்று சொல்வது! கதிரவன் 'என் மறைவின் சாயல்தான் அத்தகைய ஒளி' என்று சொல்லாமல் சொல்லுகிறான். வரப்போகும் வெண்ணிலவோ "நான் தோன்றப் போவதன் அறிகுறிதான் அந்த ஒருவகை ஒளிக்குறி" என்று கூறுகிறது. தன் நீல ஆடைக்குள் சூரியனை மறைத்துக்கொண்ட அகண்டவானமோ அந்த இடைப்பட்ட நேரத்தின் ஒளி என்னுடைய நிறத்தால் உண்டாவதுதான் என்கிறது.

இப்படிப்பட்ட அந்த மகத்தான இடைவெளிநேர ஒளிக்குப்பிறகுதான் கதிரவனைத் தந்த நீலவான் தண்ணொளி பெருக்கும் வெண்ணிலவையும் இவ்வுலகுக்கு அளித்தது. நீலநிறத் தட்டில் ஊற்றப்பட்ட தங்கக்குழம்புபோல, மங்கையர் வதனத்துத் திலகம் போல வெண்ணிலவு உலாவரத் தொடங்கியது. அதன் வரவால்தான் இப்பூவுலகு எத்துணை பூரிப்பும் புத்தெழிலும்பெறுகிறது! முள்ளையும் மலராக்கும் அந்நிலவொளியின் மகத்துவம்தான் என்னே!

களங்கமில்லா முழுமதி என்கிறார்கள். அதன் வட்ட வடிவ முகத்தில் களங்கமா இல்லை? இருக்கிறதே! அக்களங்கம் எவ்வாறு தோன்றியிருக்கமுடியும்? தலைவன் தலைவியின் முழுமதி போன்ற முகத்தருகே வந்து அன்புடன் உற்று நோக்கும்போது 'நோமை'க் கொடுப்பதும் நோய்க்கு மருந்து ஆகும் தன்மையதுமான அவளது இருநீலக் கருவிழிகளில், அவனது உருவம் பட்டு எதிரொளி தருகிறதே, அது அவளது புதுக் கண்ணாடி போன்ற முகத்திற்கு ஒரு 'களங்கம்'தானே! அத்தகைய களங்கம் தான் நிலாப் பெண்ணாள் வெண்மை முகத்தில் தெரிவதும்! இப்பூவுலகாகிய காதலனது பிம்பம்தான் அந்நிலாப் பெண்ணாளது பளிங்கு முகத்தில் தெரிவதும்!

அப்பப்ப! நிலவுக்குத்தான் எத்தனை இலட்சம் தோழிகள்! தோழிகள் என்றால் இப்படியன்றோ இருக்கவேண்டும்! நிலவுக்கேற்ற தோழிகள். அவள் பவனிவரத் தொடங்கியதும் கூடவே அவைகளும் 'மினுக் மினுக்' என்ற ஒளியுடன் தோன்றிவிடுகின்றனவே! அவைகளுக்குள்ளேதான் எத்தனை எத்தனை கூட்டங்கள், பிரிவுகள்! அத்துணையும் பற்பல தோற்றங்களோடல்லவோ மிளிர்கின்றன!

ஆனால் அந்த ஒரே ஒரு நட்சத்திரம் மட்டும்...ஆம்...அதுமட்டும் ஏன் அப்படி வாய்விட்டுச் சிரிக்கிறது? அதை, வாய்விட்டுப் பொருமைச் சிரிப்புச் சிரிக்கிறதென்றுகொள்வதா, அல்லது கண்சிமிட்டிக் கோபக் கனலை அள்ளித் தெளிக்கிறது என்று கூறுவதா? இன்று மட்டும் அதன் தோற்றத்திலேஓர் தனித்தன்மை; அதன் கண்ணசைப்பிலே ஓர் பொருமையின் அறிகுறி! எதனாலும் பொருமை கொண்டவர்கள் நிலைத்து நின்றதில்லையே. இந்நட்சத்திரமும் அப்படிப்போய் விடுமோ?

அதோ அது நிலவை நோக்கிப் பொருமையினால் ஏதேதோ பேசுவது கேட்கிறதே:

"பதினைந்து நாட்களுக்கு ஓர் முறை முழுமையாகத் தோன்றும் உன்னைவிட நான் எவ்வகையில் தாழ்ந்தவள்? போயும் போயும் உன்னைப் புகழ்கிறார்களே! என்றும் முழு உருவத்தைக் கொடுக்காத உனக்கு எத்தனை பெயர்கள்? வெண்ணிலவு,...தண்ணிலவு,... முழுமதி,...சந்திரன்...திங்கள்...... இனனும் எத்தனை பெயர்கள் தான் கிடைக்குமோ? அப்படி என்ன நீ என்னைவிடப் பிரமாதமான அழகாயிருக்கிறாய்? அழுது வடியும் உருண்டை முகம்; அதுவும் முழுவதுமாக வெண்மையாக இருப்பதில்லை. நடுநடுவே இருள் போன்றகண்ணுக்குப் புலப்படாத ஒருவகை நிழல். என்னைப்போன்ற கண்ணசைவாவது இருக்கிறதா? என்னைவிட அதிக உயரத்திலாவது உள்ளாயா?

இதோ என் காலடியில் இடக்கும் நீலக்கடலுமல்லவா நீ தோன்றியதும் உன்னை நோக்கி ஆர்ப்பரித்து முழங்குகிறது? என்றுமிருக்கும் என்னை மதிப்பதுமில்லையே! இதையெல்லாம் நான் என்னைப் போன்றிருப்பவர்களுக்கு எடுத்துச் சொல்லியும் கேளாக்காதினர்களாகவே இருக்கிறார்கள். இவர்கள் வேண்டுமானால் இப்படித் தாழ்மையாகவே இருந்து மடியட்டும்...இன்று என்ன ஆனாலும் இந்த நிலவோடு போட்டியிட்டுத்தான் தீரவேண்டும்! வெற்றியடைந்துதான் ஆகவேண்டும்! நான் உயர்வா, அல்லது அது உயர்வா? இரண்டில் ஒன்று; அதன் முடிவு இன்று! இது உறுதி! இது உறுதி!!...ஐயோ!... இதென்ன இன்று திடீரென்று என் பாதை மாறுபடுகிறாப்போல் தோன்றுகிறதே! என் இயக்கம் வேறுபடுகிறாப்போல்தெரிகிறதே! ஐயோ!......கண் சுழலுகிறதே!... ஒன்றுமே தெரியவில்லையே!...நீலவானில் ஒளியே அற்றுப்போய் விட்டதா?...இதென்ன இவ்வளவு வேகமாகக் கீழ்நோக்கிப்போகிறேன்?...

ஆ! அந்நட்சத்திரம் என்ன அப்படிச் சிரிக்கிறது? என்றுமில்லாத தோற்றத்தையல்லவோ கொடுக்கிறது அதன் சிரிப்பு! இது எதில் முடியுமென்றே தெரியவில்லையே! மற்ற நட்சத்திரங்களுமல்லவா ஒரு கணம் தங்கள் இயக்கத்தையும் மறந்து அதையே உற்று நோக்குகின்றன!...அதோ திடீரென அதன் ஒளியில் ஒரு மாற்றம்! உடன் ஒளிப்பிழம்பொன்று விண்ணிலிருந்து மண்ணிற்கு விரைந்துவருவதுபோன்ற தோற்றம்! ஆனால் அதுவும் பின் தெரியாமல் நடுவிலேயே மறைந்தது.

நிலவோ எதையும் கவனியாததுபோல் தண்ணொளி பெருக்கிக் கொண்டிருந்தது. உதிர்ந்த அந்நட்சத்திரம் இல்லாத பொருள் போல் இல்லாமல் போயிற்று. பொல்லாத பொருமையால் வானில் நில்லாது வீழ்ந்தது. உதிர்ந்த அந்நட்சத்திரத்தைப் பார்த்து இப்போது மற்ற நட்சத்திரங்கள் கண்சிமிட்டிச் சிரித்தன. நீலவானமோ அந்நட்சத்திரம் இருந்த இடத்தை தன்னுடைய தாக்கிக்கொண்டது.

அரசியல் வானிலும் இந்நிலையை அவ்வப்போது காண முடிகிறதல்லவா?

✻

"இப்படியும் இருக்கிறார்கள்!!"

"என்னப்பா, காத்தமுத்து! எங்கே காலங்காத்தாலே, டாக்டர் வீட்டுக்கு வந்திருக்கே?"

"என் மவளுக்கு ஒரு ஏழெட்டு மாசமாவே உடம்பு சரியாயில்லை சாமி......திடீர் திடீர்னு கூச்சல் போடுது, ஆவேசம் வந்தமாதிரி குதிக்குது, அப்படியே மரம்போல நின்ன நின்னபடி சாயுது......... அதான் டாக்டர் கிட்டே வந்திருக்கேன்"

"என்னப்பா! பேய் ஓட்டுறதிலே பெரியவன்னு உன்னைப்பத்தி இந்தச் சுற்றுவட்டாரம் எல்லாம் சொல்லுது. போனமாசம் கூட, பொன்னுக்கோனார் பொஞ்சாதிக்குப் பேய் ஓட்டினேஎன்னு சொன்னாங்க... அந்த வியாதிதானே உன் பொண்ணுக்கும்? ஏன், ஓட்டுறது தானே!!"

"உங்ககிட்டே உண்மையைச் சொன்னா, என்னங்க. என்னமோ ஊர்லே நம்புறாங்க...அவுங்க நம்பிக்கைக்குத் தகுந்தபடி நடந்து கிட்டு வந்திடுறேன். பிழைப்பும் நடக்குது. தலைவலியும் காய்ச்சலும் தனக்குவந்தாத்தானுங்களே தெரியும். உங்களைப்போல ஊரிலே நாலுபேரு பரிகாசம் செய்யத்தான் செய்வாங்க.........அதுக்காக பொண்ணு அலர்ற கண்றாவியைப் பெத்த அப்பன் எப்படிங்க பார்த்துக்கிட்டிருக்கமுடியும்? டாக்டர் கிட்டேவந்தேன். என்னமோ, 'இஸ்டிரியா'ன்னாரு....நாலுநாளா வர்ரேன்...கொஞ்சம் குணம் தெரியத்தான் தெரியுது"

"என்னங்கசார்' ஆற்றிலே வந்து குளிச்சிட்டுப் போறீங்களா......"

"ஆமாண்டா! ஸ்நானம் பண்ணிண்டு போறேன்...இன்னிக்கு கிராகணமோன்னோ......ஏண்டா, நேத்து "ஹோம் வொர்க்" கொடுத்தேனே, எல்லாம் முடிச்சிட்டியா........."

"அது முடிஞ்சிட்டுது சார்! ஒரு பெரிய சந்தேகம், சயன்சிலே...

"என்ன சந்தேகம்! கேளுடா, இப்படி எந்தச் சந்தேகம் வந்தாலும், பாப்பட்டாம கேட்கிற பசங்களைத்தான் நேக்குப் பிடிக்கும்... உன் ஆத்திலே நல்ல புடலங்காய் இருக்கா! மறந்துடாமே 'ஸ்கூலு'க்குப் போறபப ஒரு இரண்டு கொடுத்துட்டுப்போ.........ஆமா, என்ன சந்தேகம் நோக்கு"

வண்டு

"அதாவது சார், சூரியனோடே பாதையிலே சந்திரன் வர்றதாலே வெளிச்சம் மறையுது. பூமியிலே இருட்டுப்படுது. இதுதான் கிரகணம் ஏற்படக்காரணம்னு சொன்னீங்களே..."

"ஆமாம், யார் இல்லேன்னா!"

"இல்லே, ராகு ஆதவனைத் தீண்டறான்...அதான் காரணம்... அந்தத் தோஷம் கழியத்தான் தர்ப்பணம் பண்றதுன்னு அங்கே ஆற்றிலே பேசிக்கிட்டு இருந்ததைக் கேட்டேன். எது உண்மை? பள்ளிக்கூடத்திலே சொன்னதா- ஆற்றங்கரையிலே சொன்னதான்னு எனக்குச்சந்தேகம் வந்துடுச்சு, சார்..."

"பள்ளிக்கூடத்திலே சயன்ஸ்! வீட்டிலே, சாஸ்திரம்!! அது, அங்கே. இது, இங்கே. இப்படி, எதெது எந்தெந்த இடத்துக்குப் பொருந்துமோ அதுபடி, 'அட்ஜஸ்' பண்ணிண்டு போகவேண்டியது தாண்டா......சாஸ்திரப்படி நடந்துக்கலேன்னா சொந்தக்காரா தாத்துவா. சயன்ஸிலேருக்கிறதைச் சொல்லித் தர்ரேலேன்னா உத்தியோகத்துக்கு 'சீட்டு' கிழிச்சிடுவா, ஸ்கூல்லே..."

✻

"வணக்கம்..."

"நமஸ்காரம்..."

"எங்கேருந்து வர்ரீங்க..."

"ஒரு பொதுக் கூட்டத்திலேருந்து வர்ரேன்..."

"என்ன பொதுக்கூட்டம்? மண்டலப் பிரசாரம்தானே...?"

"இல்லே! இப்ப, 'லேபர்விங்' இருக்கு பாருங்கோ — அதான் தொழிலாளர் சங்கம்—அதையெல்லாம், காங்கிரஸ் சார்பிலே கொண்டுவந்து விடுவதுன்னு இரகசியமா, ஒரு திட்டம் போட்டு வேலைசெய்றோம். அது சம்பந்தமாத்தான் போயிட்டு வர்ரேன்..."

"இது எத்தனை ஆண்டுத் திட்டம்? ஐந்தாண்டுத் திட்டமா, இல்லே, 'தேர்தல்வரை'த் திட்டமா!!"

"பார்த்தீங்களா, பார்த்தீங்களா நறுக்குன்னு, கேட்கிறீங்களே? தேர்தல்தானா, எங்களுக்கு இலட்சியம்? தொழிலாளர் நன்மையிலே எங்களுக்கு ஆர்வமில்லேன்னா நினைக்கிறீங்க. சேலை நெய்கிறான் தொழிலாளி! ஆலைஉருள்வது அவனாலே! அவன் வியர்வை சிந்தி உழைக்காவிட்டால், அரிசி ஏது, ஆடை ஏது, இரயில் ஏது, கார் ஏது..."

"ஏது ஏது! பெரிய பிரசங்கியா ஆயிட்டீங்க போலிருக்கே..."

"இன்னும் கேளுங்க! இயந்திரம் சுழல்வது அவனாலே......ராஜதந்திரி வாழ்வது அவனாலே...... தேசம் செழிப்பது அவனாலே... காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான். அவன் காணத் தகுந்தது வறுமையா? பூணத்தகுந்தது பொறுமையா!!"

"ஆகா! பாரதிதாசனைக்கூட இழுக்கிறீங்களே, பேச்சிலே..."

"கொஞ்சங்கொஞ்சமா இப்பத்தானே இழுத்துக்கிட்டு வர்றோம்! அடுத்த தேர்தலுக்குள்ளே, 'குளோஸ்' பண்ணிடமாட்டோம்!"

"குளோஸ் பண்ணிடுவீங்களா? எதை! அவர் ஆர்வத்தையா! கவிதை வேகத்தையா!!"

"சச்சே! நூல்களைப் படிச்சு முடிச்சுடுவோம்னு சொன்னேங்க ......"

"ஆமாம்! போன மாசத்துக்கு முதல் மாசம் நீங்க, மில் முதலாளிகள் சங்கத்திலேகூடப் பேசினதாகப் பத்திரிகையிலே பார்த்தேன்......"

"நிறையப் போட்டிருந்தாங்க முழுதும் படிச்சீங்களோ?"

"படிச்சேன், படிச்சேன்!"

"நாட்டிலே தொழில்வளம் பெருகணும்னு, என்ன செய்யணும்னு ஒரு 'ஐடியா' சொல்லியிருந்தேனே, கவனிச்சீங்களோ? யாரும் அந்தப் 'பாயிண்டை' இன்னும் 'டச்'பண்ணலே...நான்தான் பண்ணினேன் ......என்ன 'பாயிண்ட்' தெரியுங்களா?"

"தெரியலியே!"

"கதைகூடச் சொன்னேன் — அதாவது இராமராஜ்யத்திலே, புலியும் பசுவும் ஒரு துறையிலே இறங்கி, தண்ணி குடிக்குமாம். அதுபோலே, தொழிலாளிகளும் முதலாளிகளும் சமரசமா ஒண்ணா வாழணும்னு சொன்னேன்..."

"அப்படியா! ஆமாம் தொழிலாளர்கள் சங்கத்திலே நீங்க என்ன?"

"நான் தான் எல்லாம்! அவுங்களை இயக்கிற சக்தியே நான்தான் ...நான நில்லுன்னா நிப்பாங்க, விழுணும்னா விழுவாங்க..."

"அவ்வளவு செல்வாக்கு இருக்கா?"

"இதென்ன இப்படிக்கேட்டுட்டீங்க! அடுத்த மாசம் பாருங்க... ஐயா மில் முதலாளிகள் சங்கத்திலே ஒருபலமான இடத்தைப் பிடிச்சிடுவாரு...அப்ப இரண்டு சங்கமும் என்பையிலேதான் இருக்கும்...இந்தப்பையிலே முதலாளிகள் சங்க 'லெட்டர்பேட்'...இதிலே தொழிலாளிகள் சங்க நோட்டு... மாடல் சோஷியலிசத்துக்கு நடமாடும் 'மாடலா' நானே விளங்குவேன்...."

கோவை: அக் 12-

"இருபது இலட்ச ரூபாய்களைச் செலவழித்து தென்னிந்திய நெசவாலை ஆராய்ச்சிச் சங்கத்தார் கட்டியிருக்கும் இந்தக்கூடத்தைத் திறந்து வைக்கப்பெருமைப்படுகிறேன். இப்படியெல்லாம் ஆராய்ச்சிகள் பெருகப் பெருகத்தான், உற்பத்திச் செலவு குறையும்; நல்ல பொருள்களை நாம் தயாரிக்க முடியும். புதிய புதிய ஆராய்ச்சிகளை நாம் செய்துகொண்டேயிருக்க வேண்டும். அப்பொழுதுதான் நாடு நலம் பெறும்"

சென்னை அக் 13-

"ஒன்றுமட்டும் சொல்வேன். இந்திய மாதர் சங்கத்தின் 41-வது மாநாட்டைத் துவக்கிவைக்கும் சமயத்தில் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். என்னதான் நாம் அணைக்கட்டுகளையும், பெரிய பெரிய ஆலைகளையும் அமைத்தாலும்சரி, அவையெல்லாம் வெளியழகுக்குத்தானே ஒழிய, உள்ளத்திலே அழகு உண்டாகவேண்டும். வெளியழகைவிட உள்ளத்து அழகு முக்கியமென்று சொல்வேன். அந்த அழகு ஏற்பட வேண்டுமானால் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் மதக்கல்வி இருக்க வேண்டும். அப்போதுதான், நம் நாடு முன்னேறும், பெருமை பெறும்."

இரண்டு இடத்திலும், இவ்வளவு முரண்பாடாகப் பேசிவிட்டு டில்லிக்குப் போய்விட்டார் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன்! உலகம் போற்றும் மேதை — இந்திய துணைக்கண்டத்தின் துணைத் தலைவர்!!

❋

2-ம் பக்கத் தொடர்ச்சி

இடமாக (Market) அமையப் போவது தென்னாடு!

உர உற்பத்திப் பெருக்கத்திற்கு வகுக்கப்பட்டுள்ள திட்டங்கள்:

சிந்திரி உர உற்பத்தி 1956 ஆண்டு மார்ச் மாத இறுதிவரை முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 28 கோடி; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது ரூ. 7 கோடி; மொத்த முதலீடு ரூ. 35 கோடி.

நங்கல் உரஉற்பத்தி ஆலை ரூ 22 கோடி; **ரூர்கலா** உரஉற்பத்தி ஆலை ரூ. 8 கோடி. சிந்திரி; நங்கல்; ரூர்கலா உர உற்பத்தி ஆலைகளுக்கு ரூ. 65 கோடி செலவிடப்படுகிறது. தென்னகத்தில்? திட்டங்கள் இடம் பெறவில்லை. (இரண்டாவது ஐந்தாண்டு திட்டப் புத்தகம் பக்கம் 417 & 418) மூன்று இரும்பு எஃகு ஆலைகள் ரூ. 350 கோடி; தென்னாற்காடு பழுப்பு நிலக்கரி (நெய்வேலித் திட்டம்) ரூ. 52 கோடி; (56 கோடி 1951—56 வரை) (மொத்த மதிப்பீடு 68·85 கோடி) இந்துஸ்தான் கப்பற் கட்டுமிடம் ரூ. 6 கோடி; (1951—56 வரை செலவிடப்பட்டது) இரண்டாவது திட்டத்தில் 9·8 கோடி; கனரக மின்சாரக் கருவிகள் உற்பத்திக்கு ரூ. 20 கோடி எனப் பலவகைத் திட்டங்கள்.

தென்னகத்தில் நெய்வேலித் திட்டங்களுக்கு 1956 ஆண்டுவரை 5 கோடிதான் செலவிடப்பட்டுள்ளது. ஆனால் சிந்திரிக்கு செலவிடப்பட்டுள்ளது, ரூ. 28 கோடி.

"சிந்திரி தொழிற்சாலை சிறக்கிறது வடக்கே! முந்திரி தொழிற்சாலையும் சிதைகிறது தெற்கே!" என்று கூறினால் அடுக்குமொழி என்றுகூறுவதால் ஏற்படும் பலன் என்ன? அடுக்குமொழிஎன்று கூறிடுவோர் அதில் உள்ள பொருளை உணரவேண்டாமா? பலன் காணும் திட்டங்கள் பல நூறு கோடிகளில் நிறைவேற்றப்படுகிறது வடக்கே! திட்டத்தின் வெற்றி வடக்கின் வெற்றி! திட்டத்தால் வியாபார இடமாக (Market Place) மாற்றப்படுகிறது தென்னகம். தென்னகத்தில் உருவாகும் திட்டங்களை எடுத்துச் சொல்லுங்கள்! அமைச்சர்கள் புள்ளி விவரங்களுடன் எடுத்துச் சொல்லட்டும். தமிழகத்திற்கு பயன்தரும் திட்டங்களை, அதில் காணும் வெற்றிகளை, திட்டங்களை எடுத்துச் சொல்லாமல் திட்டத்தின் வெற்றி! மக்களின் வெற்றி! என்று கூறுவது வீதிகளிலே கழைக்கூத்தாடி மந்திரத்தால் மாஞ்செடி வரவழைத்தல் போலாகும். மந்திரமல்ல மாஞ்செடி வருவது கழைக்கூத்தாடியின் தந்திரம் என்று அறிந்திடும் வரை கழைக்கூத்தாடிக்குவெற்றி! வாடும் மக்களுக்கு வருங்காலம் வளம் தரும் காலம் என்று கூறும் தந்திரத்திற்கு வேண்டுமானால் பயன்படும் இந்தத் திட்டத்தின் வெற்றி!!

★

பதவியிலிருந்துகொண்டே!

காங்கிரசைக் காப்பாற்ற, ஒரு யோசனையை வெளியிட்டிருக்கிறார் பம்பாயின் இரும்பு மனிதர் என்று பாராட்டப்படும் எஸ். கே. பட்டீல்! இரண்டு மூன்றாண்டுகளுக்கு முன் வரை, பம்பாய் மாகாணக் காங்கிரஸ் தலைவர் அவர்; இப்போது டில்லி சர்க்காரில் ஒரு மந்திரி!! மந்திரிப் பதவி போன்றவைகளில் ஒட்டிக்கொண்டிருக்கும் பெரிய தலைவர்கள், ராஜிநாமா செய்துவிட்டுக் கட்சி வேலைகளில் ஈடுபட வேண்டுமாம் — அப்போதுதான் காங்கிரசைக் காப்பாற்ற முடியுமாம். பட்டீல், ஒரு மந்திரி! தன் பதவியை ராஜிநாமாச் செய்து காட்டி — "இப்படிச் செய்யுங்கள், தோழர்காள்!" என்று கூறவில்லை. மந்திரிப் பதவியிலிருந்துகொண்டே, யோசனையைக் கூறுகிறார். அவரை 'ராஜிநாமா' செய்ய வேண்டாமென்று, யார் கையைப் பிடித்துக்கொண்டார்களோ, காலில் விழுந்து கெஞ்சினார்களோ, யாமறியோம். தென் பம்பாய் காங்கிரஸ் தொண்டர்களைக் கூட்டி வைத்து இந்தப் போதனையைப் புரிந்திருக்கிறார்!!

தான் முதலில் செய்துகாட்டி, "பார்! பார்!! என்னைப்போல், நேருவும் பந்தும் காமராஜும் மகதாபும் செய்யவில்லை. இப்படிப் பதவியாசையிருந்தால் எப்படி உருப்படும்?" என்று தொண்டர்கள் மத்தியில் துயரகீதம் எழுப்பியிருந்தாராயின், பாராட்டும் நாடு. நல்லோர் மெச்சுவர். பதவியிலிருந்துகொண்டே, தொண்டர்களிடம் போய், யோசனையை வழங்குகிறார். தொண்டர்களிடம் எங்கேயிருக்கிறது பதவி? பதவியில்லாததால்தானே தொண்டர்களாயிருக்கிறார்கள் அவர்கள்!

*

"பட்டீல் சொல்வதுதானா, காங்கிரசின் அழிவுக்குக் காரணம்?"

"இருக்கலாம் அப்படியும்!"

"சச்சே! இன்று காங்கிரஸ் பிழைப்பதே, பெரிய தலைவர்களாயிருப்பவர்கள், பெரிய பெரிய மந்திரிகளாயிருப்பதால்தான்"

"அது எப்படி?"

*

இந்தக் கிழமை செய்தியொன்று வந்திருக்கிறது ஏடுகளில்—விரைவில், கோபிச்செட்டிபாளையத்தில் கூடப்போகும் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் அரசியல் மாநாட்டின் வரவேற்புக் கமிட்டித் தலைவராக நிதியமைச்சர் சுப்ரமணியத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்களாம். நல்ல பொறுப்பு — தமிழ்நாட்டு அரசியல் மாநாட்டையே நடத்துவிக்கும் பொறுப்பு அவர் வசம் விடப்பட்டிருக்கிறது. "என்னே, நான் பெற்ற பேறு! இதன்றோ என் தொண்டாற்றுந் திறனுக்கு வாழ்த்து. மாநாட்டை வெற்றிகரமாக நடத்துவேன். கட்சியை, அந்த வட்டாரத்தில், மாநாட்டு மூலம் கோட்டையாக்கிக் காட்டுவேன்" என்று அந்தக் கொங்கு நண்பர், தான் வகித்துவரும் பதவிகளைப் பட்டீலின் கூற்றுப்படி, இத்தனை நேரமும் துறந்திருக்கவேண்டும். செய்யவில்லை. செய்யவும் மாட்டார்.

ஏனெனில், அவர் 'நிதிமந்திரி'யாக இருக்கிறார் என்பதால்தான், இந்தப் பொறுப்பை அவர்வசம் விட்டிருக்கிறார்கள், காங்கிரஸ் கமிட்டியினர். அவர் அந்தப் பதவியிலிருப்பதால்தான், அடிக்கடி ஒவ்வொரு ஊருக்கும் கூப்பிடுகிறார்கள்—அவரும், 'சுற்றுப் பிரயாணம்' போட்டுக்கொண்டு அதிகாரிகள் சூழப்போகிறார். பொதுக் கூட்டங்களில் பேசுகிறார். அவர் 'நிதிமந்திரி'யாயிருப்பதால், மாநாடு கண்காட்சி அது இது என்றால், எதுவும், கிடைக்கும். அதனால்தான், தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். பட்டீலின் கூற்றுப்படி, அவர் தேசசேவையில் ஈடுபட்டால், அவரும் ஒரு தொண்டராயிருக்க முடியுமே தவிர, எப்படித் தலைவராக முடியும்?

*

"அப்படியானால், என்ன சொல்கிறாய்? மந்திரிப் பதவிகளில் இருப்பதால்தான் இவர்கள் எல்லாம் 'மவுசு' பெறுகிறார்கள் என்கிறாயா?"

"ஆமாம்! நிச்சயமாக, அப்படித்தான் கருதுகிறேன்"

"மந்திரிப்பதவி இல்லாவிட்டால், இவர்களால், தலைவராகவும் விளங்க முடியாது. ஊர்தோறும் போய்ச் சண்டப்பிரசண்டம் செய்யவும்மாட்டார்கள்?"

"அது எப்படி?"

*

எஸ். எஸ். இராமசாமி, அமைச்சராயிருந்தார் — நேற்றுவரையில்,

அண்ணல்

காங்கிரசை எதிர்த்துக் கட்சி நடத்தியவர் — மந்திரியானதும், பல ஊர் கமிட்டிகளை நடத்தினர், காங்கிரசை ஆரம்ப முதல் கட்டிக் காத்தவர்போலப் பேசினர் — எதிர்க்கட்சிகளுக்கு யோசனைகளைப் பொழிந்தார்-எத்தனையோ ஊர்க்காரர்கள் அவர் தலைமையில் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டங்களைக் கூட்டினர்கள். காங்கிரசுக்காகத் தடியடி பட்டவனும், 'உப்பு' அள்ளப் போய் உதைகளைப் பரிசாகப் பெற்றவனும், அவர் தலைமையில் கூடலாயினர். ஏன்? அன்று ஒர் மந்திரி! அதனல்!! அதைவிடப் பெரிய அதிசயம், டில்லியில் கூடிடும் காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு மந்திரி மாணிக்கவேலர் போய்வருகிருர் என்பது. 'அ. இ. கா. க.' என்பது, கட்சியின் மூளை மாதிரி. அந்த மூளைகளில் ஒருவராகும் 'பாக்கியம்' எப்படிக் கிடைத்தது மாணிக்கவேலருக்கு? எத்தனை ஊர்களில், மந்திரியாகுமுன், காங்கிரஸ் கமிட்டிகளை நிறுவினர் இவர்? எந்தெந்தச் சத்யாக்கிரகங்களில் ஈடுபட்டு அடியும் உதையும் வாங்கினர்? காங்கிரசில் மந்திரியாகச் சேர்வதற்கு முன்னுள்வரையிலும், அருமையான மல்லும் அழகான 'லங்காஷியரும்' போட்டுக்கொண்டிருந்தவர். மந்திரியானர்! 'மாபெரும்' தலைவர்களுடன் உட்காருகிருர்—அந்த மாபெரும் தலைவர்களும் இவருக்கும் சரி அந்தஸ்துத் தருகிருர்கள். ஏன்? இவர் ஒரு மந்திரி என்பதால்தான்!!

* * *

"மந்திரி என்பதால்தான், ஒவ்வொரு நகரக் காங்கிரஸ் கமிட்டியும் பலரைப் போற்றுகின்றன, என்கிருயா?"

"போற்றுகின்றன என்பதற்குப் பதில், 'பயப்படுகின்றன' என்று சொல்லலாம்..."

"ஏன் பயப்படவேண்டும்? இவர்களைவிடத் தியாகம் செய்தவன், உடம்பை உருக்குலைத்தவன், வெள்ளையனையே விரட்டியவன், இவர்களுக்கா பயப்படுவான்?"

"ஏன் பயப்படமாட்டான்! நேருவும், பந்தும் இவர்களைக் கூப்பிட்டுத்தான் ஆலோசனைகள் செய்கின்றனர் — காங்கிரஸ் காரியக் கமிட்டியில் போய் சட்டம் செய்யக் கூடியவர்கள் எனும்போது, அச்சம் தானுக வந்துதானே சேரும்."

"இவர்கள் மந்திரிகளாயிருப்பதால்தான் மக்கள் மன்றத்துக்குப் போக முடிகிறது. காங்கிரஸ் கட்சிக்குள்ளும், செல்வாக்காக இருக்கமுடிகிறது. மேலிடத்திலும், மினுமினுப்புப் பெறமுடிகிறது."

"ஆமாம்!"

"ஏன்? இதே புகழை, இதே பொறுப்பை, இவர்கள் காங்கிரஸ் தொண்டர்களாகிப் பெற முடியாதா? காங்கிரசுக்காகப் பாடுபட்டு இவர்கள் தலைவர்களாக முடியாதா!!"

* * *

குறுக்கெழுத்துப் போட்டியில் இலட்சம் பத்தாயிரம்என்று சம்பாதிக்க நினைப்பவன், மண்வெட்டியைத் தோளில் தூக்கிக்கொண்டு போக முன்வரமாட்டானல்லவா? அதுபோல, 'குறுக்கு'வழியில் பதவியும் பவிசும் பெற மார்க்கம் எது வென்பதை இன்றைய காங்கிரஸ் பலருக்குக் காட்டிவிட்டது! அதனலேயே, பிரபுக்களும், பெரிய பெரிய மிராசுதார்களும்,காங்கிரஸ் கோட்டைக்குள் வலம் வருகின்றனர். அவர்களுக்கு மிக எளிதில் எம். எல். ஏ., எம். பி. போன்றவைகள் கிடைத்துவிடுகின்றன. அப்படிப் பணக்காரர்களின் உறவு இருந்தால்தான், தேர்தல்களில், இலட்சக் கணக்கில் பணத்தைச் செலவிடமுடியும் என்று கருதுவதால், காங்கிரஸ் தலைவர்கள் — அதாவது தலைவர்களாயிருக்கிற மந்திரிகள்—அவர்களை நாடுகிருர்கள். ஒவ்வொரு ஊரிலும் யாரார் வசதி படைத்தவர்களோ, அவர்களையெல்லாம் காங்கிரஸ் முகாமுக்குள் கொண்டுவரவேண்டுமென்று துடிக்கிருர்கள் மந்திரிகள். அப்போதுதானே, தேர்தலுக்குப் பணம் புரளும்—வெற்றிபெற முடியும்—வெண்சாமரம் தாங்கிகளாக வீற்றிருக்க முடியும்.

* * *

"நெடும்பலமா! சார், இந்தத் தடவை 'பெரியவர்' உங்க வீட்டிலேதான் வந்து தங்கப்போறதாக எழுதியிருக்கார்..."

"அப்படியா? அடியேன் செய்த பாக்கியம்தான்! வரட்டும்... ஓய், பிரமாதமா விருந்து வைக்கிறேனய்யா..."

"விருந்துக்குச் சுற்றுவட்டாரத்திலிருக்கிற எல்லாப் பணக்காரர்களையும் சாப்பிட வேண்டுங்க..."

* * *

தொண்டர்தம்பணி, இப்படியாகிவிட்டது. தூதுபோதல்,ஆள் சேர்த்தல், பராக்குக் கூறுதலே, காங்கிரஸ்தொண்டர்களின் வேலையென்ருகிவிட்டது — இப்படி 'வேலை' செய்யாமல் காந்தியடிகளையும், பழைய நாள் காங்கிரசையும் நினைத்துக்கொண்டு இடப்பவர்களோ, நொந்து நொந்து சாகிருர்கள். ஆள்பிடிக்கும் பணியிலீடுபடுபவர்களோ, அமைச்சர்களோ, பணமூட்டைகளை, நாடுகின்றனர். பணமூட்டைகளோ, இப்படிப் பட்டவர்களை அமைச்சர்களாக வைத்திருப்பதன் மூலம் 'பலம்' பெறலாம் என எண்ணுகின்றனர். இப்படி, ஒருவருக்கொருவர் தொடர்புகொண்டு வாழவேண்டிய கட்டத்தில் நாடு உள்ளது. இது, தெரியும், எஸ். கே. பட்டீலுக்கு. எனினும் பெரிய தலைவர்கள் பதவிலிருப்பதால்தான் காங்கிரஸ் வேலை நடக்கவில்லை யென்கிருர்! அதுவும் பதவியிலிருந்து கொண்டே சொல்கிருர்!!

★

எங்கு அறியாமை இல்லையோ, எங்கு ஆண் பெண் வேற்றுமை இல்லையோ, எங்கு வேலையில்லாத் திண்டாட்டம் இல்லையோ, எங்கு பட்டினியும் பஞ்சமும் இல்லையோ, எங்கு வைதீகமும் முதலாளித்துவமும் இல்லையோ, எங்கு சுயநலமும் சுரண்டலும் இல்லையோ, எங்கு ஆதிக்க வெறி இல்லையோ, அங்குதான் சமுதாயத்திலுள்ள புன்மைகளும் புரட்டுகளும் பீடைகளும் இல்லாமல் ஒழியும், அங்கேதான் நிச்சயமாக நல்லதொரு சமுதாயம் ஏற்பட முடியும்.

[illegible] திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில் [illegible] அண்ணதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

திராவிடநாடு

2—11—58 | வார வெளியீடு | விலை 16 காசு

உணர்ச்சி வேண்டும்

(புத்தொளி அகமத்)

கதர் வாங்க வாரம், விழாக்களுண்டு
கதறுகின்ற ஏழைக் கண்ணீர்துடைத்தாரில்லை
பதரையும் ஏற்றுமதி செய்துவிட்டார்
பசிதீர வழி ஒன்றும் செய்தாரில்லை.

எதிர்க்கட்சி வளம் அடையும் பயத்தினலே
எழுந்துவிட்டார் "கால் நடையால்" கொள்கைமூட்ட
இதமாகப் பேசுகின்ருர் கெஞ்சுகின்ருர்
இனிவரும் "தேர்தலிலே" இடம் பிடிக்க.

மிதமாக இருக்கலாமோ இனியும் நாமும்
மீதமுள்ள குருதியையும் இழக்க நேரும்
நலமாக நாம் வாழ வேண்டுமானல்
நம் நாடு நமக்கெனும் "உணர்ச்சி வேண்டும்"

கேட்டீரா! சேதி!

ஒருதரம்! இரண்டுதரம்! உலகளந்த பெருமாளாம் — ஊருக்கெல்லாம் படியளப்பாராம்—'துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்பவராம் — மகாவிஷ்ணு, இதோ—கேளுங்கள், பெருமக்களே, ஒருதரம்! இரண்டுதரம்! என்ன? 21,000 ரூபாயா!! இன்னொருதரம் பாருங்கள், பளபளவென்று இருக்கிறது மேனி, கைவண்ணத்தையும் காலழகையும் பாருங்கள், மாளிகைக்குள்ளே வைக்கலாம், மவுசாக இருக்கும், காண்போர் ரசிக்கும் கலையழகு, இந்திய உபகண்டத்துச் சிற்பி செய்தது, அங்கே இந்தச்சிலை அகப்பட்டிருந்தால் கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்து பாலும் தேனும்கொட்டி கும்பிடுவார்கள்! நீங்கள், 'மியூசியத்தில்' வைக்கலாம்—அழகுப் பொருள்களில் ஒன்றாகமாளிகையின்வாயிலில்வைத்திருக்கலாம் என்ன சொல்லுகிறீர்கள்? ஒருதரம்! இரண்டுதரம்! மூன்றுதரம்! 21,000-க்குவிட்டாயிற்று!! —என்று இலண்டனில், கடந்த 20-ந்தேதி, மகாவிஷ்ணு சிலையை ஏலம்போட்டார்களாம். இது 1200-ம் ஆண்டில், செய்யப்பட்ட சிலையாம். இலட்சுமியைக் கட்டியணைத்துக்கொண்டிருப்பது போலிருக்கும் இச்சிலையை, நியுயார்க்கைச் சேர்ந்த ஒரு அமெரிக்கமாது அந்தவிலை கொடுத்து ஏலம் எடுத்திருக்கிறாள்!! எதற்கு? பூஜைசெய்ய அல்ல, அரை நிர்வாணக் கோலத்துடன் விளங்கும் அழகுச்சிலைகளுக்கு அருகேவைக்க!!

*

முடியாது! முடியாது! குறைந்த நேரம் வேலைசெய்ய மாட்டோம் — அதிக நேரமே வேலைசெய்வோம்!! என்று, முழக்கமிட்டு முடிவுதெரிவித்திருக்கிறார்கள், ஸ்விட்சர்லாந்து நாட்டுத் தொழிலாளர்கள். ஓய்வு தேவை! உழைத்துக் களைத்த எமக்குக் கொஞ்சமாவது ஓய்வு கொடு!—என்று முழக்கமிட்டவண்ணம், வேலைநிறுத்தம் செய்யும்நிலையில் நம்ம சர்க்கார், இந்த நாட்டுத் தொழிலாளர்களை வைத்திருக்கிறது. ஸ்விஸிலோ, ஒவ்வொரு தொழிலாளியும் 48-மணிக்குப் பதில் 44-மணி நேரம் — ஒரு வாரத்தில்!—வேலைசெய்தால் போதும் என்று அரசு, தெரிவித்ததாம். இதன்மீது, தத்தமது கருத்தைச் சொல்லும்படி தொழிற் சங்கங்களைக் கேட்டதாம். தொழிலாளிகள் கருத்தை அறிய, அந்த நாட்டுத் தொழிற் சங்க யூனியன்தேர்தல் நடத்தியதில் பெரும்பாலான தொழிலாளர்கள் அதிகநேரம் வேலைசெய்வோம் என வாக்கு போட்டிருக்கிறார்களாம். இங்கு, உழைப்பது ஒரு 'சுமை'யாக—வாடும் கருவியாக உள்ளது! உழைப்பது அங்கு இன்பமாக உள்ளது!!

*

யாரோடும் சேர்ந்து வாழ அவர்கள் விரும்பவில்லை! தனியாக இருப்பதையேசுகம் என்று நினைக்கிறார்கள்!!—என்று, ஆச்சரியத்தோடு, தெரிவித்துள்ளார் நேரு. அவர்கள் நாட்டில், இந்த விமானகாலத்தில் கூட ஒரு வண்டியோ, வாகனமோ இடையாது, கோவேறு கழுதையும், 'யாக்' எனும் எருமை மாடும்தான், சவாரிக்கு இருக்கின்றன. சாதாரண ஒருகுதிரை வண்டிகூடக் கிடையாது. அதைப்பார்த்தபோது, எவ்வளவு விந்தையான இடத்திலிருக்கிறோம் என்று நினைத்தேன்! என்றாலும், அந்த மக்கள், யாருடைய தொல்லையும் இல்லாமல், நாகரிகமடைந்தோர் என்போரின் எவ்வித தூண்டுதலும் இல்லாமல் நிம்மதியாகத் தானிருக்கிறார்கள்! — என்று புதுடில்லியில் 27-ந்தேதி நடந்த அகில உலக விமானப்போக்குவரத்து சங்கக் கூட்டத்தில் பேசியபோது, தான் அண்மையில் சென்றிருந்த பூடானைப்பற்றிக் குறிப்பிட்டார், நேரு.

*

ஒன்றாக உழைத்து, கிடைத்ததை ஒரு இடத்தில் சேமித்து வைத்து, தேவையானபோது அதையெடுத்து ஒருவருக்கொருவர் பங்கிட்டுக்கொண்டு, சண்டை சச்சரவு இல்லாதவன் இருப்பவன், பேதமே இல்லாமல் வாழும் கூட்டம் ஒன்றைக் கண்டாராம், ஜயப்பிரகாஷ்நாராயண்! இப்போது பேசப்படுகிற சோஷலிசமுறைகள் அந்தக் கூட்டத்தாரிடம் நெடுநாட்களாகவே, பழக்கமாயிருந்து வருகிறதாம். இந்தக் கூட்டம், சில ஆண்டுகளுக்கு முன் புதிதாக உருவாக்கப்பட்ட இஸ்ரேல் நாட்டில் உள்ளதாம். இவர்கள் பெயர் கிப்புஸ் என்பதாம். இஸ்ரேல் பிரதமரான பென்குரியன், இந்தக் கிப்புஸ்களைச் சேர்ந்தவர்தானும். இவர்களைப்போலவே, ஒவ்வொரு ஊரிலிருக்கும் மக்களும், ஒன்றாக உழைத்துச் சேமித்துப் பங்குபோட்டு வாழ்ந்தால் எப்படியிருக்கும் உலகு! இவ்வளவு போராட்டங்களா தேவைப்படும்!!

*

போராட்டமோ இரத்தம் சிந்துதலோ இல்லாமல், இரண்டு இராணுவத்தளபதிகள் இந்த கிழமை, அரசாங்கத் தலைவர்களாகியிருக்கிறார்கள். ஒருவர், சென்ற சிலநாட்களுக்கு முன் பிரதமராக ஆக்கப்பட்ட அயூப்கான். இவர், பாகிஸ்தானின் தலைவராக ஆகிவிட்டார். இன்னொருவர், பர்மாவின் முன்னாள் பிரதமர் யூநூவின் விருப்பப்படி, பிரதமராக பதவி பெற்றிருக்கும் ஜெனரல்நூவீன் என்பவராகும். இரண்டு நாடுகளிலும், இப்படி இராணுவத்தினர் அரசுக்கு வரக்காரணம், திரைமறைவில் கிளர்ச்சிக்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்ததுதான், என்று தெரிகிறது. பர்மாவில், ஆறு மாதம் கழித்துப் பொதுத் தேர்தல் நடத்தப்படுமென்று தெரிகிறது! பாகிஸ்தானில்...? கேள்விக்குறிகள் தான, பதிலாகக் கிடைக்கின்றன.

★

இருமுகம்

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [2—11—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 16

பால் வடியும் முகம் — அந்தப் பசுங்கிளி, உட்கார்ந்திருந்தாள், தவக் கோலத்தில்.

முடியாத சடையும், மூடிய கண்களும், வெள்ளை உடையும், அவளழகை அதிகப்படுத்திக்கொண்டிருந்தன.

முற்றும் துறந்தவள் நிலைக்கு அவள் வந்துவிட்டது, வயோதிகத்தால் அல்ல! வாலிபத்தின் வசீகரம், அவளது அங்கங்களில், புதுச்சாயலை பூசியிருந்தது. வடிவழகி! நிலத்து நிலா!!

கண்களை இந்நேரம் மூடிக்கொண்டேயிருந்தவள் கொஞ்சம் திறக்கிறாள்.

மெதுவாக எழுந்திருக்கிறாள். புறாக்களிரண்டு பூமியில் அசைவதுபோலிருக்கும், இரண்டுகால்களையும் மெதுவாக எடுத்து வைத்தபடி அந்த மண்டபத்தைவிட்டு, வெளியே எட்டிப்பார்க்கிறாள். மண்டபத்தைச் சுற்றி அடர்ந்த மரக்கா. ஆகவே, யாராவது வந்தாலும், கீழே உதிர்ந்து கிடக்கும் சருகுகளில் கால்கள்படுவதால் எழும்ஒலி, 'சரசர'வென்று கேட்கும். அப்படி ஏதோ கேட்கிறது! ஓடுகிறாள், உள்ளே அந்த அழகி. பழையநிலை. யோகீஸ்வரர் போல உட்கார்ந்துகொண்டு யாராவது வருகிறார்களா என்று ஓரக்கண்ணால் பார்ப்பதும், பிறகு மூடிக்கொள்வதுமாக இருக்கிறாள்.

*

பேரறிஞர் என்கிறார்கள் அவரை—அவர்மட்டும் வெளியில் வந்து வேலைசெய்யட்டும், பிறகு பாருங்களேன் என்று பெருமையுடன் பேசுகிறார்கள் — நேருவுக்கு வேண்டியவர், நினைத்தால் பிரதமராகக் கூடவரலாம் என்று வர்ணிக்கிறார்கள்—அவர் சென்னைக்கு வரப்போவதைப்பற்றி ஏடுகள் எழுதின—என்னவோ இப்படியெல்லாம் சொல்கிறார்களே, அவர் என்ன வழங்கப்போகிறார் நாட்டுக்கு என்று ஆவலோடு எதிர்பார்த்தோம்! ஆசைக்கும் அச்சத்துக்குமிடையிலே திண்டாடும் 'அழகி'யின் கதைதான் கவனத்துக்கு வந்தது!!

சென்னைக்கு வந்து சில இடங்களில் சொன்மாரி பொழிந்துவிட்டுப் போய்விட்டார், தோழர் ஜயப்பிரகாசநாராயண். வெளிநாடுகள் பல சென்று, புதிய வேகத்துடன் வருகிறார், விவேக விளக்கங்கள் தரப்போகிறார் என்றே எதிர்பார்த்தோம். காங்கிரசின் போக்கையும், அதைக்கட்டியிழுக்கக்கடிவாளம்போல ஒரு எதிர்க்கட்சியிருக்க வேண்டியது குறித்தும், யோசனைகள் நல்குவார் என நம்பினோம். முற்றுந் துறந்த விநோபாவுடன் அடைக்கலம் புகுந்த ஞானி போல ஒருசமயத்திலும், இன்னும் அரசியல் சபலம் விடாதவராக இன்னொரு சந்தர்ப்பத்திலும், அச்சத்துக்கும் ஆசைக்கும் இடையில் அல்லாடும் உருவத்தையே கண்டோம்! எதிர்பார்த்த பிரகாசரைக் கண்டோமில்லை!!

எதிர்க் கட்சிகளையெல்லாம் காங்கிரஸ் இழுத்துக்கொண்டு, அவைகளின் கூட்டுறவோடு நாட்டுப் பணியைச் செய்யவேண்டும் என்றார். மண்டபத்தைவிட்டு வந்து எட்டிப் பார்க்கும் அழகி, கவனத்துக்கு வந்தாள்! கிராமங்கள்தோறும் தொண்டர்களைத் திரட்டி விநோபாபோல் பணிசெய்வதே பலன் தரும் என்றார்—பயந்து ஒதுங்கும் அழகியின் காட்சி கவனத்துக்கு வந்தது!!

காங்கிரசை எதிர்த்துக் கச்சைகட்டிக் கொண்டு கிளம்பியவர்களில், பிரகாசரும் ஒருவர்! சோஷியலிஸ்டுக் கட்சியின் தந்தை எனக்கூடச் சொல்லலாம். அவர் என்ன செய்யவேண்டும்? கட்சியில் பொறுப்பேற்று, வலிவுள்ளதாக்கி, காங்கிரசுக்கு ஒரு கடிவாளமாக விளங்கவேண்டும்! இல்லாவிட்டால், விநோபாவின் வழியே நல்வழி என்று, அதே வேலையில் இருந்துவிட வேண்டும். அதையும்விட்டு, இதையும்விட்டு, புதுவழி ஒன்று சொல்லுகிறார் —எல்லா எதிர்க்கட்சிகளும், ஒரு ஐக்கியமாகக்கூடி, காங்கிரசோடு போய்ச் சேர்ந்து நாட்டு நலனுக்குப் பணியாற்ற வேண்டுமாம்! ஏதோ மிகப் பலம்பெற்று இங்கே கம்யூனிஸ்டுக் கட்சி விளங்குவதுபோலக் கருதிக்கொண்டு. அப்போதுதான் அதை எதிர்க்க முடியும், ஆகவே கூடுவீர் என்கிறார்! சுருங்கச் சொன்னால், "காங்கிரஸ் தலைவர்களே! எங்களை எல்லாம் இழுத்துவைத்துக்கொள்ளுங்களேன்" என்பது போல் தொனிக்கிறது குரல். உடனே அச்சம் குறுக்கிட, "அடடா! காந்தியடிகள் என்ன சொன்னார் தெரியுமா? கிராமந்தான் முக்கியம்! கிராம சேவைக்குத் தொண்டர்களைத் தயார் பண்ண வேண்டும்" என்கிறார்.

இந்திய உபகண்டத்தின் அரசியல் உலகில், ஒரு இடம் வகிக்கிறவர் இவர்! ஏடுகளும் வெளிநாடுகளும் மிகப் பெரியவர் எனக் கருதிப் போற்றும் கட்டத்திலிருப்பவர் — இவர்கள் எல்லாம், வெளியில் வந்து காங்கிரசின் ஊழல்களை விளக்கி, பலமான ஒரு கட்சியை நிறுவிக் காட்டினால் பலனிருக்கும். அந்த இடம் வரும்போது மட்டும், அச்சமுற்ற பெண்ணாகி விடுகிறார்கள்! ஆசை மோதும்போது, பேரம் பேசவும் துணிந்து விடுகிறார்கள்!!

★

ஏழையாக நுழைந்தேன்! போகிறேன்!!

ஏழையாகவே நுழைந்தேன்! ஏழையாகவே வெளியேறுகிறேன்!

பத்தாண்டுகள் பிரதமராக இருந்தேன்! இன்று பாமரனுகப்போகிறேன்!!

பைகளைப் பாரீர்! கைகளைப் பாரீர்! —எதுவும், கொண்டுவரவில்லை, எதையும் கொண்டுபோகவுமில்லை.

நூல்கள் எழுதினேன்! சம்பாதித்தேன்! அனைத்தையும், நல்ல காரியங்களுக்கு அளித்திருக்றேன். விபரம் வேண்டுமா? அதோ, அதையெல்லாம் விநியோகித்த அறக்கமிட்டி! கேட்டுக் கொள்ளுங்கள்! அதன் தலைவர் சாதாரணமானவரல்ல; நமது முன்னுள் தலைமை நீதிபதி!

பரிசுகள் பல வந்தன; வெளிநாட்டினர் தந்ததும் அதோ உள்ளன. எல்லாவற்றையும் சர்க்காருக்கும், என்னுடைய கட்சிக்கும் கொடுத்துவிட்டேன். நான் ஒன்றும் எடுத்துக்கொள்ளவில்லை.

கைவசம் சில 'சூட்'டுகள் உள்ளன—சர்க்காரின் பிரதமராயிருந்தபோது தைத்தது இவை. இனித்தேவையில்லை எனக்கு. பத்திரிகாசிரியர்களோ அல்லது நிருபர்களோ விரும்பினுல், எடுத்துப்பயன்படுத்திக்கொள்ளட்டும்.

கடைசியாக ஒன்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். என் ஆட்சிக் காலத்தில்—இந்தப் பத்தாண்டுகளில், நானே அல்லது என் மனைவியோ, ஏதாவது தவறு செய்தோமா — பதவியை உறவினர்களுக்கோ, வேண்டியவர்களுக்கோ பலன்தரப் பயன்படுத்தினேமா என்பதை விசாரித்து அறிவிக்க ஒரு கமிஷனை நியமியுங்கள். என் ஆத்ம சோதனைக்காக, இதைச் செய்யுங்கள்.

புல்லரிக்கிறது, படிக்க — பத்தாண்டுக்காலம் ஆட்சிப்பீடத்திலிருந்து பர்மிய நாட்டின் முடிசூடா மன்னனென விளங்கிய யூநு; பதவியைத் துறந்துவிட்டார்! இப்படியொரு அறிக்கையும் விடுத்திருக்கிருர்!!

கட்சிக்குள்ளேயே கட்சி—சண்டை சச்சரவு—எதிர்க்கட்சிகளின் ஏசல்—இந்தச் சூழ்நிலையில், யாரோ இராணுவத்தின் மூலம் அரசைக் கைப்பற்றப் போவதாகத்தகவல் கிடைக்கவே தானே தன் பதவியை நூவின் எனும் தளபதி வசம் ஒப்படைத்துவிட்டு, விலகிக் கொண்டிருக்கிருர்.

அரசியல் உலகில் கொலுவீற்றிருந்தோர் குப்புற வீழ்வதும், சாமரம் வீசியவன் சர்க்காரில் அமர நேர்வதும் வியப்புக்குரியதல்ல. கடந்த பத்தாண்டுக் காலத்துக்குள், உலகத்தில்—ஏன்?—இந்த இந்தியத் துணைக் கண்டத்துக்குள்ளேயே, யாரார் வந்தார்கள், அவர்கள் எப்படியெப்படிப் போனுர்கள் என்கிற பட்டியலை எடுத்தால், வேதனையும் விசித்திரமும் கலந்து விளங்கும்.

முதல் மாதம் அமைச்சராகப் பணி புரிந்தவர், அடுத்த மாதமே கேட்பாரற்றுப் போனதையும்; நிகரெனக் கிங்கெவருமிலையென விளங்கியவர்கள் நிற்க இடமில்லாமல் போனதையும் கண்டிருக்கிறேம். கொடுமைக்காரனுக விளங்கிய பரூக் மன்னன் முதல், உத்தமர்எனப் போற்றப்பட்ட ஓமந்தூரார் வரை, அரசியல் வீழ்ச்சி, தன் முத்திரைகளைப் பதித்துக் கொண்டு சென்றிருக்கிறது.

கொடியவர்கள்வீழ்ந்தபோது, குதூகலித்தது உலகம். நல்லவர்கள் வெளியேற்றப்பட்டபோது, ச்சு, ச்சு, கொட்டிற்று. இரண்டாவது இடத்தை, உலகின் இதயத்தில் பெற்றிருக்கிருர், யூநு. அதுவும், பதவியைத் துறந்து, அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கை, பலருடைய கண்களையும் கருத்தையும், கவரக்கூடியதாகும்.

பதவியிலிருந்து விரட்டப்பட்ட பரூக் மன்னனின் மாளிகையில் இரண்டாயிரம் கைக் கெடியாரங்களிருந்தன— மூவாயிரம் கைத்தடிகளிருந்தன. சீட்டுக் கட்டுகள் தங்கத்தால் இழைக்கப்பட்டது கிடந்தது, என்று பட்டியல்கள் தந்தார்கள். இதோ, பாகிஸ்தானில் பல மந்திரிகள் மீது, 'இவர் செவர்லட் கார் வாங்கினுர்,' 'அவர், கடைக்கு சரக்குகளை குறைந்த விலையில் கொண்டுவந்தார்,' என்பது போன்ற குற்றச்சாட்டுகள் சாட்டப்படுவதைக் கேள்விப்படுகிறேம். நமது உபகண்டத்திலும், இப்படி வெளிப்படையாகத் தெரியவில்லையே தவிர, மந்திரியான ஒவ்வொருவரைப்பற்றியும், ஒவ்வொருவித வர்ணனை தந்த வண்ணம்தான் இருக்கிருர்கள், மக்கள்! மறைந்த பிரகாசம் அவர்களால் இன்று உயிரோடுள்ள பல மந்திரிகள் மீதே, பகிரங்கமாக இலஞ்ச ஊழல் குற்றங்கள் சாட்டப்பட்டு, சந்தி சிரித்தது கவனமிருக்கும். இப்போதும், காங்கிரசைவிட்டு வெளிவந்த பலர் "ஏ! வெங்காய பெர்மிட்", "ஏ, மிளகுபெர்மிட்", "ஏ! காண்டிராக்ட்" என்று இப்படி, பலரைப் பெயர் சொல்லி அழைக்கக் கேட்கிறேம். மந்திரிகளாயிருப்போரைக்கூட, 'பத்துஇலட்சம்', 'மாடிவீடு'என்றெல்லாம், பலமாதிரியான பெயர் சொல்லுகிருர்கள்.

. உத்தமர் காந்தியோ, சன்மார்க்க போதனை புரிந்தவரோ இல்லாத இடம் பர்மா. அந்தப் பரம்பரையுமல்ல, யூநு! எனினும், இன்று பதவியை விட்டு வெளி வந்ததும், பயமின்றித் தனது பத்தாண்டுக்கால நடவடிக்கைகளை விசாரித்துப்பார்க்கச் சொல்கிருர்—ஏழையாக நுழைந்தேன், ஏழையாகவே போகிறேன் என்று கூறுகிருர்!!

அரசியல் வாழ்வு என்பது, இன்று, அடாவடிக்கும், பலனும் பயனும் பெறுவதற்குமான சாதனமாகக் கருதப்படுகிறது. சட்டசபை — எப்படியாவது அங்கே ஒரு குழு — அதன் மூலம் மந்திரிப் பதவி — பிறகு...... பிறகு...... என்று கருதப்படக்கூடிய அளவுக்கு, காங்கிரசாட்சியில் ஆகிவிட்டது. மந்திரி என்ருல், மக்கள் தொண்டன் என்பதுபோய்,"இரண்டு பை வைத்த சட்டை போட்டவர்கள்" என்று கூறுகிற அளவுக்கு, வந்துவிட்டது.

தூயவர்களும், தொண்டுள்ளம் கொண்டவர்களும் இருக்கலாம். எனினும் எப்படியோ, இந்தப் பத்தாண்டுக் காலக் காங்கிரசாட்சியில், இப்படியொரு இழுக்கும், கெட்ட பெயரும் ஏற்பட்டுவிட்டது. பொறுப்பான இடத்தில் உட்காரவைக்கப்பட்ட பலர், அந்த இடத்துக்கு இழுக்கும் பழிச் சொல்லும் வருமளவுக்கு நடந்துகொண்டிருக்கின்றனர்.

"இதை விசாரிக்க வேண்டும்! சுதந்திரம் வருவதற்கு முன் சாதாரணமாயிருந்த எத்தனை பேர் பணக்காரர்களாயிருக்கிருர்கள்? மந்திரியான பிறகும், அதற்கு முன்னும் இருந்த சொத்தின் தராதரம் என்ன? இதையெல்லாம் கண்டுபிடிக்க வேண்டும்" என்றுகூட, காங்கிரஸ் கட்சியில் சில தூய்மை விரும்பிகள், தீர்மானங்கள் கொண்டு போனதுண்டு. ஏனே! பெரிய உத்தமர்களிருந்தும் இந்த 'ஆத்ம பரிசோதனை'க்குத் தங்களை ஆட்படுத்திக்கொள்ளவில்லை!

யூநு அறிவிக்கிருர் — அவர் எப்படியோ, தெளிவாக அறியோம்— ஆனல் இப்படி வெளிப்படையாக மனந்திறந்து அறிவித்திருப்பதே, ஒரு புதுமையாகும்.

அதனாலேயே, "ஏழையாகவே நுழைந்தேன்! ஏழையாகவே போகிறேன்!" என்பதைப் படிக்கும்போது, நம்மை அறியாமலே வியக்கத் தோன்றுகிறது. பாராட்டவும் தோன்றுகிறது. ★

சிறுகதை ★

வீடும் வெளியும்

சதானந்தம் வீட்டைத் திறந்து உள்ளே சென்ருர். வீடு வெறிச்சோடி இருந்தது. கலையிழந்து போன ஒரு உருவம் தன் முனுல் நின்ருல் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது அவருக்கு அந்த வீட்டைப் பார்த்தவுடன்.

சற்று முன்புவரை ஒளிவீசிக் கொண்டிருந்த விளக்கு மறைந்து விட்டது. மறைந்துவிட்டதா? இல்லை, இல்லை. சிறு குன்றின்மீது சுடர்விட்டுக் கொண்டிருந்த விளக்கு மலைமீதிருந்து ஒளிவிடப் போகிறது; அதன் ஒளி அருகாமையிலுள்ள இந்தக்குன்றுக்கு மட்டுமல்ல, நெடுந்தூரத்திலிருக்கும் வேறு பல இடங்களுக்கும் பரவப்போகிறது. இதை எண்ணியவுடனேயே அவருடைய உள்ளத்தில் ஏற்பட்ட சோர்வான எண்ணங்களெல்லாம் பறந்து போய் ஒருவகை குதுகுதுப்பு ஏற்பட்டது. மனிதன் ஒன்றை அடைய வேண்டுமானுல், மற்றென்றைத் தியாகம் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் எண்ணியதை அடைய முடிவதில்லை. இதை அவர் தனக்குத் தானே சொல்லிக்கொண்டார்!

அவர் வலது புறம் திரும்பிப் பார்த்தார். எதிரே தன்மகனுடைய நிழற்படம் பெரிய அளவில் சிரித்துக்கொண்டிருந்தது. இனி அவருக்கு இந்தப் படந்தான் துணை. ஏதேனும் தன் மகனுடன் பேச வேண்டுமென்ருல் இந்தப் படத்துடன்தான் பேச வேண்டும். இதை எண்ணியவுடன் மீண்டும் அவர் மனம் துணுக்குற்றது. மெள்ளத் தலையைக் குனிந்து கொண்டார். கடல் அலைகளிடையே சிறு மரத்துண்டு சிக்கிக் கொண்டால் எப்படி அலைப்புறுமோ அதைப்போலத்தான் அவர் மனமும் ஆகிவிட்டது. குனிந்த தலையை நெடுநேரம் வரையிலும் குனிந்தே வைத்திருக்கும் நிலையிலும் அவர் இல்லை. மீண்டும் தலையை நிமிர்த்தித் தன் மகன் படத்தைப் பார்த்தார். 'அப்பா நான் எங்கிருந்தாலும் உங்களவன்தானே' என்று கூறுவது போலிருந்தது அவருக்கு. கண்களிலிருந்து இரண்டுசொட்டு நீர்த்திவலைகள் உருண்டு ஓடின. இந்தக் கண்ணீருக்குக் காரணம்? பிரிவா? அன்பா? பாசமா? அல்லது ஆனந்தமா? இதில் எது என்றே அவரால் நிதானிக்க முடியவில்லை. நிதானிக்கும் நிலையிலும் அவர் இல்லை. மனம் என்பது ஒரு குழந்தையைப் போன்றது. அதற்குச் சில வேளைகளில் அழுவதும சிரிப்பதும் எப்போது

கரந்தை—கணேசன்

என்பதே தெரிவதில்லை. இல்லாவிட்டால் சதானந்தம் தன் மகன் வேலை பார்க்க வெளியூர் செல்லப் போகின்ற இந்த நல்ல வேளையில் இப்படிப் பதைப்புறுவாரா?

மூன்ருவது முறையாக தன் மகனுடைய படத்தைப் பார்க்க வேண்டுமென்று அவர் மனம் எண்ணியது. அதற்குள் வேறு ஒரு மனம் அதைத் தடுத்துவிட்டது. தன்னுடைய இந்த நிலையை வேறு யாராவது கண்டுவிட்டால் என்ன நினைப்பார்கள்...? என்ன நினைத்தால் என்ன? நம் மனத்தின் நிலையில் அவர்கள் இருந்தால் அல்லவா தெரியும்? கேள்வியைத் தானுக எழுப்பி அதற்கு மறு கேள்வி தொடுத்தாரேஒழிய மற்றவர்கள் பார்த்தால் இப்படிப் பட்டமனம் இளகக்கூடிய நம்மைப் பார்த்து நகைக்கத்தானே செய்வார்கள் என்று எண்ணியபடியே மகனுடைய நிழற்படமிருந்த அந்த இடத்தைவிட்டு வெளியேறினுர்.

ஏதாவது புத்தகத்தை எடுத்துப்படித்தால்தான் மனம் அமைதியுறக்கூடுமென்று எண்ணியவராய் அலமாரியின பக்கம் சென்று ஒரு புத்தகத்தை எடுத்தார். புத்தகத்தை எடுக்கும் போதே அலமாரியினவேறு புறத்திலே தன் மகன் படித்த புத்தகங்கள் சில கண்ணிலே பட்டது. அதிலே ஒன்றை எடுத்துப் பார்க்கவேண்டுமென்ற எண்ணம் தானுகவே உண்டாயிற்று. ஒன்று ......இரண்டு......மூன்று எல்லா நூல்களுமே ஆங்கிலமாக இருந்தன. இவருக்கோ ஆங்கிலம் என்ருல் அதுஒரு மொழி என்பதைத் தவிர, வேறு எதுவும் தெரியாது. இருந்தாலும அந்த நூல்களைக் கையிலே எடுத்துப புரட்டும் போது தனி இன்பம் இருக்கத்தான் செய்தது. இவ்வளவையும் படித்துத்தான் பட்டம் பெற்றிருக்கிருன் தன் மகன் என்று எண்ணியவுடன், மேலும் இன்பத்தின் வேகம் அதிகபட்டது. உறவினர்கள் இறந்தவர்களின் பொருள்களை ஏன பத்திரமாகப் பாதுகாக்கிருர்கள் என்ற உண்மையை இப்பொழுது அவரால் உணர முடிந்தது. தொலைதூரம் வேலைக்குப் போயிருக்கிற தன் மகனைப்பற்றித் தன் நினைவே இப்படியென்ருல்...? என்றது அவர் மனம். இன்பத்தின் உச்சம் பேரின்பம் என்பார்கள். ஆனல்

இப்போதோ..........இன்பத்தின் உச்சம் பெருந் துன்பமாகத்தான் ஆயிற்று சதானந்தத்திற்கு. இவ்வளவு நூல்களையும் இனி யார் வந்து தினம் தினம் எடுத்துப் படிக்கப் போகிறார்கள்? இதை எண்ணியவுடன் யாரோ முள் கொண்டு தன்னைக் குத்துவது போன்று பட்டது அவருக்கு. புத்தக அலமாரியை விட்டு நீங்கியவராய் மெல்லச் சென்று நாற்காலியில் அமர்ந்தார். ஆனால் அவர் மனம் பறந்துகொண்டே இருந்தது. மனம் என்பது இலவம் பஞ்சைப்போன்றது. எண்ணங்களாகிய காற்றுச் சுழலும் திசையிலேயே அதுவும் சுழலத் தவறுவதில்லை.

நாற்காலியில் அமர்ந்தவாறே அவர் நினைவுக் கனவுகளிடையே மிதக்க ஆரம்பித்தார்.

எத்தனையோ ஆண்டுகளாகக் கொண்டுருந்த தன் ஆவல் இன்று நிகழ்ந்துவிட்டது. அதற்காகத்தான், தான் ஒருவனே ஆகி தன் மகன் வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் கண்காணித்துப் பெரியவனாக்கினார். தன் மகன் பிறந்த அன்றே மனைவி காலமாகி விட்டாள். அதற்குப்பிறகு, அவர் திருமணமே செய்துகொள்ளவில்லை. மறுமணம் குறித்து யார் யாரோ, ஏதேதோ சொல்லிப் பார்த்தார்கள். அவரிடம் ஒன்றும் பலிக்கவில்லை. அவர்களிடமெல்லாம், தன்னுடைய குழந்தையைக் காட்டி 'இந்த இரத்தினத்தை ஒளிபெறச் செய்வதிலே தான் என்னுடைய வாழ்வின் இன்பம் நிறைவு பெறுகிறது' என்று கூறிவிட்டார். தன் மகன், தான் என்ற இரண்டே அங்கங்களைக்கொண்டு எழுதப்பெற்றது, தன் வாழ்வின் பிற்பகுதி என்பதிலே அவருக்கு அழுத்தமான நம்பிக்கை, அதில் மற்றவர்களுக்கு இடமில்லை.

குழந்தைப் பருவத்திலிருந்து வளர்த்துப் பெரியவனாகி வாலிபப் பருவம் எய்தியுள்ள தன் மகனுடைய இந்தப் பருவம் வரை நடைபெற்றவைகளை அவர் ஒரு முறை எண்ணிப்பார்த்தார். 'அப்பாடா, எவ்வளவு கஷ்டங்கள்' ஆனாலும் அவைகள் யாவும் தன் மகனுடைய முன்னேற்றம் என்கின்ற இனிய கனவிலே கரைந்து மறைந்தே போயிருக்கின்றன. இன்று அந்தத் துன்பங்களை எண்ணிப் பார்ப்பதிலே ஒரு இன்பம்.

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி,
அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

இவர் அடிக்கடி மனத்துக்குள் சொல்லிக்கொள்ளும் பொன்மொழி. இந்தப் பொன்மொழி பல நேரங்களில் உள்ளத்தில் தளர்ச்சி நேரும் போதெல்லாம் பயன்பட்டிருக்கிறது. 'தந்தை மகற்காற்றும் உதவி' முடிந்துவிட்டது. தன் கடமை முடிந்துவிட்டது. இனி நடைபெறவேண்டுவது, 'மகன் தந்தைக்காற்றும் நன்றி' தான். அந்தக் குறளையும் ஒரு முறை வாய்விட்டே கூறினார்.

"மகன் தந்தைக்குஆற்றும் உதவி,
இவன் தந்தை
என்நோற்றான்கொல் எனுஞ்
சொல்"

அந்தச் சொல்லுக்காகத்தான் தன் மகன் தன்னை விட்டுப் பிரிந்து சென்றிருக்கிறான். அந்தச் சொல் தன் காதிலே விழுந்து விட்டால்......... இந்த உலகமே சதானந்தத்திற்குச் சுவர்க்கமாகி விடும். 'சுவர்க்கமென்பதுகற்பனை. இது கண்கூடு' அதைவிட இது தானே சுகமானது என்று எண்ணினார்.

நாளை மறுநாள் கழித்துத் தன் மகனிடமிருந்து கடிதம் வரும். அதில்தான் பணியாற்ற ஒத்துக் கொண்டதும், திட்டமிட்டுச் செயலாற்ற முனைந்திருக்கும் முறையும், தான் கண்டதும், கேட்டதும். இன்னும் இவைபோல்வன பலவும் இருக்கும். அதைத்தான் படிக்கும் பொழுதே...... இதை எண்ணியவுடனே வான ஊர்தியிலே பறப்பது போன்று இருந்தது சதானந்தத்திற்கு.

இதுவரை தன் மகன் தனக்கு ஒரு கடிதம்கூட எழுதியதில்லை எனபதை எண்ணினார். எண்ணியவுடனேயே அவரை அறியாமலேயே அவருக்கு மெல்லிய நகை தோன்றியது. 'எங்கே நம் மகனை வெளியில் விட்டோம்! பள்ளிப் படிப்பிலிருந்து கல்லூரிப் படிப்பு வரை உள்ளூரிலேயே முடிந்து விட்டது. அதுமட்டுமல்ல, பொற் கூண்டுக்குள்ளே பூட்டிவைத்து வளர்க்கும் கிளியைபோல வளர்த்துவிட்டிருக்கிறோம். துன்ப நிழலே அவனைத் தொட்டது கிடையாது. தாயற்ற பிள்ளை, ஒரே பிள்ளை. அப்படி இருக்கையில்அவன் வெளியூர் செல்லவோ, கடிதம் எழுதவோ சந்தர்ப்பம் இல்லையே" என்று கூறிக்கொண்டார்.

ஆனால் ஏதோ ஒரு சமயம் தன் மகன் கடிதங்கள் எழுதியதுபோல நினைவு வந்தது. ஆம், மூன்று கடிதங்கள்......கல்லூரியில் மாணவர்கள் யாவரும சுற்றுலாச் சென்றபொழுது எழுதப்பட்டது. சுற்றுலாக்கூட ஐந்து நாட்கள் தான். போக ஒரு நாள், வர ஒரு நாள், மீதம் சுற்றிய நாட்கள் மூன்று. இந்த மூன்று நாட்களிலும் மூன்று கடிதங்கள் எழுதப்பட்டன. கடிதங்களா அவைகள், கரும்புத்துணுக்குகள். இல்லை, இல்லை; கற்கண்டுக் கட்டிகள். கரும்புகளில் துணுக்குக்குத் துணுக்கு சுவை குன்றவும்கூடும். அவைகள் கற்கண்டுக் கட்டிகளே. அப்பொழுதுகூடச் சதானந்தத்திற்கு மகனை அனுப்பிவைக்கப் பிரியம் ஏற்படவில்லை. ஆனால் அவன் ஒற்றைக்காலில் நின்றான். அதன் பிறகு பிரிவினால் பட்ட வேதனை அவருக்கல்லவா தெரியும். அவனுடைய மூன்று கடிதங்களும்கூட, சுரம் வந்தவனுக்கு 'யுடிகோலனில்' நனைத்த துணியை நெற்றியில் போடுவது போல் இருந்ததே தவிர, முழுமையும் தனிமையின் துயரை அகற்றி விடவில்லை. கற்கண்டும் வாயில் இருக்கும்வரை தானே சுவைக்கிறது.

அந்த மூன்று கடிதங்களையும் மறுமுறையும்எடுத்துப் படித்தார். முதற் கடிதத்தில், "சுற்றுலா செல்வது எனபது மிகவும் இன்பகரமாகத்தான் இருக்கிறது. சகோதர மாணவர்கள் பலருடன் பலப்பல பேசிச் செல்லுவது, புதுப்புது இடங்களைப் பார்ப்பது எல்லாம் இன்பம்தான். ஆனால், அப்பா!...... அடிக்கடி உங்கள் நினைவு வந்துவிடுகிறது. அப்பொழுதெல்லாம் இந்தச்சுற்றுலா சற்றுக் கசந்துவிடுகிறது. அதோடு தங்களைப் பார்க்க இன்னும் மூன்று நாட்கள் ஆகுமே என்று எண்ணும் பொழுது என் மனத்திற்கு என்னவோபோல் இருக்கிறது. உடனே விமானமேறிச் செல்லலாமா என்றுகூட எண்ணுகிறேன். இருந்தாலும், ஒன்று...... இரண்டு...... மூன்று விரல்களை மடக்கிக்கொண்டே இருக்கிறேன்" என்று எழுதியிருந்தான்.

இரண்டாவது கடிதத்தில், "அப்பா இன்னும் இரண்டே இரண்டு நாட்கள்தான். நேற்றிரவு "அப்பா...... அப்பா...... என்று அழைத்தேனாம். எல்லோரும் என்னைக் கேலி செய்கிறார்கள். அவர்கள் இடக்கிறார்கள்" என்று எழுதி இருந்தான்.

மூன்றுவது கடிதத்தில், "நாளை நான அங்கே, உங்கள் முன்னே இருப்பேன். நான் கண்டதெல்லாம் கூறுவேன். இந்த நான்கு நாட்களில் எவ்வளவு செய்திகளை நாம் பேசாமல் விட்டுவிட்டோம். எவ்வளவு செய்திகளைத் தெரிந்து கொண்டிருக்கிறேன். வருகிறேன். நாளை இரவு நல்ல கச்சேரிதான். தேனீர் போட மறந்துவிடக் கூடாதப்பா" என்று தீட்டியிருந்தான். யாழின் மூன்று நரம்புகளிலிருந்தும் எழும் இனிமையான கானத்தைப் போன்ற இந்தக் கடிதங்களிலேயே நாளை மறுநாள் காலைவரை கழித்துவிடலாம் என்று சதானந்தம் முடிவு செய்தார்? மூன்றும் நாள் கடிதத்தை எதிர்பார்த்தார். தபாற்காரன் வேறு எதையோ கொடுத்து உபத்திரவத்தை அதிகப்படுத்தினானே தவிர, இவர் எதிர்பார்த்த கடிதத்தைத் தந்தானில்லை. மெல்ல தனக்குத்தானே சமாதானம் செய்துகொண்டார்; "உத்தியோகப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுவதற்கே நேற்றைய பொழுது கழிந்திருக்கும்" என்று.

மறுநாள் அஞ்சல் நிலையத்திற்கே காலையில்சென்றுவிட்டார். உள்ளே அஞ்சல்களைப் பிரித்துக் கட்டிக்கொண்டிருக்கும் தபால்காரனை 'பசித்தவன் பிறர் முகம் பார்ப்பது போல' பார்த்துக் கொண்டிருந்தார். அஞ்சலாளன் உதட்டினாலேயே பதில் சொன்னான். அன்றும் கடிதம் வரவில்லை. கடிதம்வரவில்லை என்றவுடனேயே மனம் திகீரென்றது. "போன இடத்தில் எதிர்பாராத விதமாக ஏதாவது"...! தந்தியாவது அடித்துக் கேட்கலாமா என்றுகூட எண்ணினார். மனதை ஒருவாறு தேற்றியவராய், நாளை கடிதம் வரவில்லை என்றால் போய்ப் பார்த்துவிட்டு வந்துவிடுவது என்ற முடிவுடன் வீடு திரும்பினார்.

*

கடிதம் கையிலே கிடைத்தவுடன் தன் மகனே முன்னே வந்து நிற்பதுபோல நினைவு எழுந்தது சதானந்தத்திற்கு. பசித்துக் கிடந்தவனுக்கு பாலும் சோறும் கிடைத்தால் எப்படி இருக்குமோ அந்த நிலையில் கடிதத்தைப் பிரித்தார்.

கடிதம் மிகப் பெரியதாக இருக்கும், காவியத்தின் உருவம் அதிலே தெரியும், அவர் எதிர்பார்த்தபடி இத்தனை நாட்களாகக் கடிதம் எழுதாமைக்கு மன்னிப்புக் கேட்டிருப்பான் என்றெல்லாம் எண்ணியபடி கடிதத்தைப் பார்த்தார். கடிதம் முற்றிலும் வேறானதாக இருந்தது.

அப்பா!

நான் உடன் கடிதம் எழுதவில்லை என்று என் மீது கோபிப்பீர்கள், அதற்காக நான் தங்களிடம் மன்னிப்புக் கேட்கப் போவதில்லை. ஏன் தெரியுமா? கடிதத்தை முழுதும் படித்தவுடன் அதற்கான காரணத்தை நான் கூறாமலேயே தெரிந்துகொள்வீர்கள்.

நான் முன்பெல்லாம் நமது வீட்டைப் பொன் மாளிகை என்று எண்ணுவதுண்டு. அந்தப்பொன் மாளிகையிலே, எல்லை கடந்த சுகமிருக்கிறது; அந்தச் சுகம்தான் மனித வாழ்வு என்று எண்ணியிருந்தேன். இன்று என் அனுபவம் வேறு......

நான் பிறந்தது முதல் துன்பத்தின் சாயலே படியாமல் என்னை வளர்த்தீர்கள். எதைக் கேட்டாலும் இல்லை என்னாது தந்தீர்கள். என் பின்னாலே நிழல் போலத் தொடர்ந்து இதம் தந்தீர்கள். என்னைக் கலைமுதல்வனாக்கினீர்கள். ஆனால் ஒன்றை மட்டும் நான் பெறாமல் செய்து வைத்திருந்தீர்கள். நான் இதைக் குற்றமாகக் கூறி உங்களைக் குற்றக் கூண்டிலே நிறுத்துகிறேன் எனக்கருதிவிடவேண்டாம். அந்த ஒன்றை நான் பெறாமல் போனதற்குக் காரணம், தங்களின் தலையாய அன்புதான். அன்பு சில வேளைகளில் தவறான விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்பதைத் தற்பொழுதுதான் உணர்கிறேன். இல்லாவிட்டால் இது நாள் வரை குவலயம் அறியாக் குருடனாக இருந்திருப்பேனா? நம் வீட்டைப் போலவேதான் வெளியும் இருக்கிறது என்று கருதிக்கொண்டிருப்பேனா?

நான் வேலையை ஒத்துக் கொண்ட அதே அலுவலகத்தில் என்னோடு படித்த, என்னோடு ஒத்த பட்டம் பெற்ற என் நண்பனைக் கண்டேன். அவன் எனக்குக் கீழ வேலைசெய்யும் சாதாரண எழுத்தாளன். நானோ அவனுடைய அதிகாரி. அவன் என்னோடு பேச எத்தனித்தாலும், எனக்கு அவனோடு பேச மனம் கூசுகிறது. வேலை பல தேடிக் கிடைக்காததால், கடைசியில் கிடைத்த இந்த வேலையையும் விடமுடியாமல் வந்திருக்கிறான். ஒரே படிப்புக்கு இத்தனை வேற்றுமையா? சே...!

மறுநாள் நான் ஒரு குக்கிராமத்திற்குப் போகவேண்டியிருந்தது. அங்கே என்னை மிகவும் மரியாதையுடன் வரவேற்றார்கள். அவர்களுடைய குடிசையாகிய மாளிகைக்குச் சென்றிருந்தேன். 'தென்றல் உள்ளே வர மறுக்கிறது என்றுதான் இப்படிக் கூரையைப் பொத்தல்களிட்டு வைத்திருக்கிறார்கள்' என்றுவது காவிய உள்ளம் படைத்திருந்தால் நினைத்துக் கொள்ளலாம் — அந்தக் கற்பனையில் என்னால் மிதக்கமுடியவில்லை. குடிசைக்குள்ளே சென்றேன்; ஒரே குமட்டல்—துர்நாற்றம். அவர்கள் உழைப்பதோ கழினியில்; அவர்கள் நமக்கு உணவு இடுகிறார்கள். அவர்களின் நிலையோ...வறுமையும் அறியாமையும் சேர்ந்து அவர்களை வதைக்கும்நிலை. அவர்களும் நம்மவர்கள்தானே என்று எண்ணும்போது என் உள்ளம் பதறுகிறது.

அந்தக் கிராமத்திலுள்ளவர்கள் அனைவரும் காலை முதல் மாலை வரை உழைக்கிறார்கள். பின் ஏன் இப்படி இருக்கிறார்கள்? இந்தக் கேள்விக்கு விடை? என் மனம் ஓயாமல் குடைகிறது. பிறப்பிலே உயர்வு தாழ்வு இல்லை என்கிறோம். வெளியிலே எத்தனை குழந்தைகள் கையேந்தி நிற்கின்றன. அக்குழந்தைகள் எல்லாம் இந்நாட்டுச் செல்வங்கள். செல்வங்களே இப்படிச் சீரழிந்தால், நாட்டு நிலை எப்படி? செல்வமாகிய பணத்திற்கு இருக்கிற பாதுகாப்பில் துளிகூட இந்தப் பிறவிச் செல்வங்களுக்கில்லையே!

அப்புறம் ஒரு விசித்திரமான வழக்கைச் சந்தித்தேன். ஒருவன் மிகவும் நல்லவனும்; வசதியானவனும்கூட. ஆனாலும் திருடியிருக்

றான். கேட்டதிற்கு 'அப்பொழுதுதான் தனக்கு வாரிசு இருக்கும். ஏனென்றால் அது குலத் தொழில்; குலத் தொழிலை மறக்கக் கூடாது. அது தொன்று தொட்டு வரும்முறை' என்கிறான். சமுதாயத்தினுடைய கண்கள் எப்படித் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன?

'மன்னித்துவிடவா' என்றேன். 'இல்லை, இல்லை; இப்பொழுது மட்டும் சிறைக்கு அனுப்பிவிடுங்கள். சிறையில் சில நாட்களாவது இருக்கவேண்டும். இனி அவ்வாறு செய்யமாட்டேன்' என்றான். எப்படியப்பா வழக்கு?

இதையெல்லாம் எண்ணிப் பார்க்கும்பொழுது இதுவரையிலும் இருண்ட குகையிலே உலவிக்கொண்டிருந்தோமோ என்ற ஐயம்கூட எழுகிறது.

அப்பா! நமது வீடு நல்ல குதுகுதுப்பாக இருக்கிறது; ஆனால் வீட்டுக்கு வெளியே எவ்வளவு பெரிய அனல் வீசிக்கொண்டிருக்கிறது தெரியுமா? இந்த அனலில் மற்றவர்கள் — நம்மவர்கள் அவதிப்படும்பொழுது நாம் மட்டும் சுகமாக இருப்பதா? இந்தச் சுகம்தான் நமக்கு எத்தனை காலத்திற்கு நிலைக்கும்? அனல் நம்மையும் அடைய எவ்வளவு காலம் ஆகும்? சூறாவளி சுழன்று அடிக்கும் பொழுது பெரிய தீபமாக இருந்தாலும் அது பிழைத்து விடவா முடியும்? முடியாதப்பா, முடியாது" எனக்குத்தற்பொழுது இரண்டே இரண்டு பாதைகள் தான் தெரிகின்றன. ஒன்று அந்த அனலை மாற்றித் தென்றலைக் கொணர முயன்று வெற்றி பெறவேண்டும், அல்லது அந்த முயற்சியிலேயே அழியவேண்டும்.

அன்பான மகன்,
மணிவண்ணன்.

●

சதானந்தம் அந்தக் கடிதத்தை மறுமுறையும் படித்தார். கண்களை அகலவிரித்து மூடிக்கொண்டார். மூடிக்கொண்ட அவர், கடிதத்திலுள்ள நிகழ்ச்சிகளைத் திரையிட்டுப் பார்த்தார். திரையிடும்போது 'வீடும் வெளியும்' என்ற மணிவண்ணனின் இரக்கமான குரல் அவரை எங்கோ அழைத்துப் போவதுபோல இருந்தது.

★

"வரி"க் கொள்ளை!

—[கா. வேழவேந்தன்]—

"எழில்வளை! ஈரிரண்டு நாட்களாக நீ ஏன் என்னிடம் சரிவர உரையாடுவதில்லை? நாடெல்லாம் தான்கண்ட வெற்றியின் பீடு நோக்கி மகிழ்ச்சியில் ஆழ்ந்து கிடக்கிறது; உனக்கு மட்டும் என்ன நேர்ந்துவிட்டது? ஒரு வேளை கடந்துபோன தென்பாண்டிப் போரில் சோழவள நாட்டின் மானங்காக்கத் தன் உயிரைக் காணிக்கையாக்கிய உன் அண்ணனை எண்ணி வருந்துகின்றாயா? உண்மைதான். அவர் மட்டும் இருந்திருந்தால் சோணாட்டுக்குக் கிடைத்திருக்கும் இந்த மாபெரும் வெற்றிகண்டு எத்தனை பூரிப்படைந்திருப்பார்?... உம்..."

"தேன் குழல்! என் கவலை அதுவல்ல; சிங்காரத் தாயகத்தின் சீர் காக்கத் தன் மூச்சினையே பணயமாக்கியஎன் அண்ணன் தான் என் நெஞ்சத்திலேயே குடிகொண்டிருக்கிறாரே, அவரைப்பற்றி நான் ஏன் கவலைப்படப் போகிறேன்?"

"பின் உனக்கு என்ன வந்தது? ஒரு வேளை கடற்கொள்ளையரைத் தோற்கடித்து வந்த பொன்னி நாட்டு வீரரில் தன் குடிக்கென்று ஓர் ஆண்மகன் இல்லாமற் போனானே என்று வருந்துகின்றாயா?"

"அதுவும் அல்ல. வேழமடை வேந்தனும் நம் சோழ மன்னன் தன்படையில் ஓரிரண்டு வீரர்கள் குறைந்துவிடுவதால் மட்டும் வெற்றியை நழுவவிட்டுவிடுவதில்லையே! உறக்கத்திலும் போர்க்கனவு காணும் பொன்னிவள நாட்டு வீரரும், ஒப்பிலா வளவனும் இருக்கும்வரை தோல்வி என்ற சொல்லே காவிரி நாட்டின் எல்லைக்கப்பால் அல்லவா உலவ முடியும்!"

"நன்று நன்று. எழில்வளை! பின் நீயே சொல்லிவிடு. உன் தங்க முகத்தில் வழக்கமாக ஒளிரும் புத்துணர்ச்சியைக் காணோமே, ஏன்? ஒருகால் உன் அன்னையார் அங்காடியிலே வாங்கி வந்த பிறைச்சிந்தாக்கு உன் கழுத்துக் கேற்ற அணியாக அமையவில்லையோ? ஆமாம். உன் அன்னை உன்னையும் உடன் அழைத்துச் செல்ல மறந்துவிட்டார்கள். இதற்கெல்லாம் ஏன் வீண் கவலைப்பட வேண்டும்?"

"போதுமடி! பிறைச்சிந்தாக்கில் ஒன்றும் பிழை இல்லை; அருமையாக அமைந்திருக்கிறது அந்த அணி; ஆனால் இந்த நாடு செல்லும் போக்கைக்கண்டால்தான்.."

"ஏன் உனக்கு இந்தப் புதுவித ஐயப்பாடு? நாடு செல்லும் பாதையிலே என்ன கேடுறும் முறையைக் கண்டுபிடித்து விட்டாய்? இத்தனைநாள் மொத்தமாகப்பழகி வரும் என்னிடம்கூடச் சொல்லாமல் அப்படி எதைப்போட்டுக் குழப்பிக்கொள்கிறாய்?"

"நாடு என்றால் இந்த நாட்டிலே வாழும்ஒவ்வொருவரையும்பற்றித் தான குறிப்பிடுகிறேன்!"

"கொஞ்ச நேரத்திற்கு முன்பு தானே சொன்னாய்! மன்னன் மறவர்குல திலகம்; மங்காப்புகழ்

(11-ம் பக்கம் பார்க்க)

கால்மணி நேரமாவது.....

(மாண்மகிழன்)

படிப்பது ஒரு உன்னதக் கலை. உள்ளத்தைப் பண்படுத்தும் ஒரு உயரிய கலை. உலகின இயக்கங்களை ஆழ நோக்க உதவும் ஒரு அற்புதக் கலை. இக்கலை கருக்கொண்டுள்ள பயன்களோ அதிகம்! அவை படிப்பவர்க்கு வெளிச்சம் தருவன. படிப்பவர்கள் உணர்ந்து உண்மையைச் சொல்லுகிறார்கள். உலகில் உண்மைகளைக்கூடப் பதம் பார்க்கும் சக்திகள் இல்லாமலா இருக்கின்றன? இருந்தாலும் இவ்வுண்மையைப் பொறுத்தமட்டில் அச்சக்திகளும் நெருங்க நாணுகின்றன. எத்தனையோ படிக்க வேண்டுமென்று ஆவல் தான்; என்ன செய்வது? தொல்லைபடர்ந்த நிலை என்று அங்கலாய்க்கின்றன. இப்படித்தான் இவ்வுண்மையை ஒத்துக்கொள்ளும் ஒவ்வொன்றும் பகர்கின்றன. அனுபவமே இல்லாத அவை இவ்வொழுங்கில் 'கற்றல் நன்று... கற்றல் நன்று' என்று வேறு கதைக்கின்றன. புரிந்துகொண்டு அத்தகையவைகளை அணுகி, "ஏன் படிப்பதைத் தொடரவில்லை?" என்று கேட்டுவிட்டால் போதும், உடனே கடைமடை வெள்ளமபோல் தொல்லைகளின் விரிவான வியாக்கியானம் ஆரம்பித்துவிடும். ஒருங்கே அத்தகைய பட்டியம் அடிப்பவர்கள் 'நேரமின்மை'யின் மேல் பழியைப் போடுகிறார்கள்! அதே நேரத்தில் வீணாக்குவதெல்லாம்நேரத்தையே! ஆனால் உண்மை அதுவல்ல. மனமில்லை! படித்தவர்கள் எல்லாம் என்னவாரிக்கொண்டார்கள்என்ற அபூர்வதத்துவத்தின்மேல் இருக்கும் அளவு கடந்த நம்பிக்கை!

படிக்கவேண்டும் என்று ஆவல் இருந்தால், ஒரு நாளைக்குப் பதினைந்து நிமிடங்களைச் சிறப்பாக உபயோகித்துக்கொண்டால் போதுமே. எல்லோராலுமே பதினைந்து நிமிடங்களைப் படிப்பதற்கென்று ஒதுக்க எளிதாகுமே! அப்படி உபயோகப்படுத்திய அப் பதினைந்து நிமிடங்கள் பெரும்பயனைத் தருமே'

ஒரு நடுநிலை வாசகர், ஒரு நடுநிலைப் புத்தகத்தை நிமிடத்திற்கு 300 சொற்கள் வேகத்தில் படிக்கலாம். படிப்பதை வழக்கமாகக் கொண்டாலொழிய இந்த வேகத்தைப் பிடிப்பது கடினம்! நுட்பமான விஞ்ஞான நூல்களையோ, விவசாய நூல்களையோ, வர்த்தக நூல்களையோ படிக்கும் போது குறிப்பிட்ட வேகத்தில் செல்ல முடியாது. அரும்பொருள் புதைந்துள்ள கவிதைத் துணுக்குகளைப் படிக்கும்போதும் அந்தத் துரிதம் வராது. ஆனால் நல்ல நாவல்களையோ, சுவையான வரலாறுகளையோ புரட்டும்போது அந்த வேகம் எளிதாக அமையும்! முழுப்பொருளைப் புரிந்துகொள்ள இன்னலும் இருக்காது. ஒருமணியில் ஒரு விநாடிகூட வீணாக்காமல் இத்தகைய நூல்களைப் படிக்க முடியும்.

ஒரு நடுநிலை வாசகர் நிமிடத்திற்கு 300 சொற்களைப் படிப்பாரானால், பதினைந்து நிமிடங்களில் 4,500 சொற்களைப் படிப்பாரல்லவா? ஒருவாரத்தில் நாளொன்றுக்கு பதினைந்து நிமிடங்களைப் படிக்கச் செலவழித்திருந்தால் 31,500 சொற்களைக் கடந்திருப்பாரல்லவா? வாழ்நாளில் ஒரு மாதத்தை இழந்ததும் 126,000 சொற்களின் பயனைத் துய்த்திருப்பாரல்லவா? ஒருஆண்டு இறந்ததும் திரும்பிப்பார்த்தால் 1,512,000 சொற்களின் இனிப்பு உயிர் பெற்றுலவுமல்லவா? ஒரு நாளில் பதினைந்துநிமிடங்களைப்பயன்படப் படித்தால் எத்தனை திருப்தி! ஒரு ஆண்டில் அது வழங்கும் உவகைதான் எத்தனை! வளர்ச்சி தான் எத்தனை!

நூல்கள் பொதுவாக 60,000 சொற்களிலிருந்து 100,000 சொற்கள் வரை நீளத்தில் மாறுபடும். சராசரியில் ஒரு புத்தகத்தின் பொது நீளம் 75,000 சொற்களின் கூட்டு. ஒரு நாளில் கால்மணி நேரத்தைப படிக்க ஒரு நடுநிலை வாசகர் தவறாமல் பயன்படுத்துவாரானால், ஒரு ஆண்டில் 20 நூல்களையாவது படித்திருப்பார். ஆண்டொன்றுக்கு 20 புத்தகங்களைப் படித்தால்... எத்தனையோ சேதிகளை உணர்ந்துகொள்ளலாம்! மண்ணில் தவழும் எத்தனையோ விந்தைகளை அறிந்திருக்கலாம்! பயனுள்ள அந்த நூல்கள் தந்த இன்பம் கொள்ளையாக இருந்திருக்கும்! இவ்வளவும் துன்பமே இல்லாமல் பெறும்பயன்! விளையாட்டுத்தனமாகக் கொழித்துக்கொள்ளும் அறிவு வினை!

அமெரிக்காவில் பொது நூல் நிலைய வாசகர்கள் ஆண்டொன்றில் 80 புத்தகங்களைப் படிக்கிறார்கள்! இத்தனை பெரிய சாதனைக்கு அவர்கள் செய்த முயற்சி—தந்த உழைப்பு எவ்வளவு தெரியுமா?... ஒரு நாளில் ஒரே ஒருமணி நேரத்தைப் படிக்கச் செலவழித்தது தான்! எத்தனை குறைவான மூலதனம்! எத்தனை அதிகமான இலாபம்! ஒரே ஒருமணி நேரம் படிக்க ஒதுக்கி அடைந்த பயன் எவ்வளவு! எத்தனை எளிதானது. நாமும் பயனுள்ள காரியத்திற்கு ஒரு மணி நேரத்தை ஏன் செலவிடக் கூடாது? நாளெல்லாம் சிற்றுரை ஆடி...... சின்னவற்றோடு கழிக்கும் நேரத்தை இப்படிப்பயன் படுத்தினால்...... கற்பனைக் கோட்டிற்கு அப்பாலே போகிறதே பயன்! விரயமாகும் நேரத்தை அப்படியேகூடக்காப்பாற்றவேண்டாம் ...அதில் ஒரே ஒருமணி நேரத்தைக் காப்பாற்றினால்...... பயன் படுத்தினால்...எத்தனை இன்பம்!... பிறந்த பயனைப் பெறுவதற்கு எங்கோ போகிறார்களே... கொஞ்சம் உணர்ந்தால் மிக எளிதாகக் குறிக்கோளைப் பெற்றுவிடலாமே...!

எத்தனைதான் கடினமான வேலைகளில் ஈடுபாடு கொண்டிருந்தாலும்......எவ்வளவுதான் சிக்கலிலே குழப்பச்சேற்றிலே உழன்று கொண்டு இருந்தாலும் படுக்கைக்குப் போகும்போதாவது...மனச்சாந்தி பெறவும்...நல்ல மனோபாவம் வரவும்...ஒரு நல்ல நூலைப் பதினைந்து நிமிடங்கள் செம்மையாகப் படிக்க இயலாமலா போகும்? கடினமற்ற வேலையல்லவா? அதோடும் களைப்புக்கு ஒரு மாற்று — மாமருந்தாக அமையுமே. நெஞ்சத்தில் ஒருவிறுவிறுப்பு உண்டாகுமே! உணர்விலே ஒரு அமைதி பயிலுமே! உடலுக்கு ஒரு உற்சாகம் ஊற்றெடுக்குமே! ஒரு இன்பகரமான பொழுதுபோக்காகவும் அமையுமே! இதைவிட வேறு என்ன வேண்டும்? கரும்பைச் சுவைக்கும்போது உண்டாகும் சிரமம் ஒரு சிரமமா? வாழ்க்கையிலேயே அழியாத ஒரு பயனுள்ள செல்வத்தினை கூடுதல் ஒவ்வொரு நாளும் செலவிடும் அந்தச் சுவையான பதினைந்து நிமிடங்கள்! பெரும் முயற்சிகளாலும் பெறமுடியாத கொழுத்த மனச்சாந்தியைத் தருவது அந்தப் பதினைந்து நிமிடங்கள்! இத்தனையும் இருக்கின்றன...மனம் வேண்டுமே......மார்க்கம் மலர்!

ஆகையினால், நேரங்கிடையாது என்று சொல்லுவது பொய்; நேரமென்னவோ கிடைக்கிறது, படிக்க முடிகிறதுதான் இல்லையென்று சொல்லுவது மெய்! படிக்க முடியவில்லை எனபதற்குத்தளம் மனமின்மை! ஆசையின்மை! அதைக்கூடத் துணிந்து சொல்ல முடியாது. ஏனென்றால் மனிதன் ஆசைகளின் கோட்டம்! எந்த மனிதன் புகழை விரும்பவில்லை? எவன் தான்மதிக்கபட வேண்டும் என்று விழையவில்லை? ஆகையினால் சோம்பேறித்தனம்தான் தளம் என்று கூறவேண்டும்! புத்தகத்தை எடுத்தாலே என்னவோ ஒரு பரம்பரைப் பகை! அத்தகைய கெழுதகை நண்பர்கள் சுவையான சிறுகதைகள், நாவல்கள் முதலானவற்றைப் படித்தால்,படிக்கும் ஆவல்வரும்...வளரும்...பிறகு பயனை அடையலாம்! பொது அறிவை நிறையப் பெறலாம்! ஒவ்வொருவரும் ஒரு அறிவுக் களஞ்சியமாக விளங்கலாம்!

உலகில் எத்தனையோ புதுமைகள் பூக்கின்றன! நாமும் புதுமைப் பித்தர்களாய்த் திரிகிறோம்! புதுமைகாண விரும்புகிறோம்! அதோடு நின்றுவிடுகிறோம்...... புதுமைகள் கிடைக்கவில்லையே என்று ஏங்குகிறோம்! அந்த ஏக்கம் அறியாமையின் அச்சாரம், இந்நிலையினை நீக்க வேண்டாமா?

வைர நெஞ்சிருந்தால் முடியாதது உளதா? உணர்வுகளை நாம் கட்டுப்படுத்த வேண்டாமா? உணர்வுகளுக்கு நாம் அடிமைப்படுவதா? அந்த அடிமை மனப்பான்மையினின்று வெளியேறிக் கிளர்ந்தெழ வேண்டாமா? அத்தகைய புதிய கிளர்ச்சிக்கு நல்லவழி படித்தல்தானே! வாழ்க்கை முழுவடிவம் பெறுகிறதா? காலம் ஓடுகிறதே! பாதி கங்குல் அரித்து, செரித்துக் கொள்கிறதே. மீதி பாதியில் உலகம்அறிய...முதுமை...பிணி...இப்படி எவ்வளவு விரயமாகிறது! இருக்கும் நல்ல காலத்தை விழலுக்கிறைத்த நீராக்குவதா...பழக்கமில்லை என்றால் எப்போதுதான் பழக்கப்படுவது...? நம்மை நாம் ஆள்வது எப்போது? நிலையாமை உண்மையல்லவா? நாளைக்கு நாம் எப்படியோ? நம் ஒளிவிளக்குகள் நிலைத்திருக்கும் என்பது சதமா?...உள்ளத்தில் உறுதி தழைக்க வேண்டாமா?

ஒழியாத தொல்லைகளிலும் — குறையாத வேலைகளிலும் ஈடுபாடு கொண்ட அருமை நண்பர்களே... படிக்க நேரமில்லை என்கிறீர்களா? உண்மை அதுவா...? உங்களுக்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டு...

அமெரிக்க நாட்டின் அரும்பெரும் மருத்துவப் தலைவர் சர். வில்லியம் ஊஸ்லர் ஜான்ஸ் ஆப்கின்ஸ் மருத்துவப் பள்ளியிலும் பிறகு மேக்கில் பல்கலைக்கழகத்திலும் மருத்துவம் கற்பித்துவந்தவர். நவீன மருத்துவத்தில் மூத்தவர். புகழ்பெற்ற இன்றைய அமெரிக்க மருத்துவர்கள் எல்லாம் அவருடைய மாணவர்கள். அவரிடம் வித்தை கற்றவர்கள்; அவருடைய மருத்துவ நூல்களின் அறுவடைகள்! மனிதன் ஏன் இறந்துவிடுகிறான் என்பதற்குரிய நுட்பமான அவருடைய ஆராய்ச்சிக் குறிப்புகள் மருத்துவ உலகிற்கு மாபெரும் பேறுகள்!

மருத்துவத்தில் மட்டும் அவர் சமர்த்தரல்லர்; பொது அறிவிலும் வித்தகர்; நடமாடும் பல்கலைக்கழகம்! மனிதன் வாழ்நாளில் என்னென்ன நினைத்துக்கொண்டு போகிறான் என்பதை அறிய விரும்பினார் அவர்! அதற்குச் சிறந்த வழி ஒன்று உண்டென்றால், அதுவே மனிதன் படைத்த நூல்களைப் படித்தல் என்பதை அவர் கணித்தார். மருத்துவ ஆய்வுச்சிக்கல்களிலே மும்முரமாக ஈடுபாடு கொண்ட அவருக்கு நூல்களைப் படிக்க நேரத்தைக் காண்பது எப்படி? இது ஒரு பெரும் குழப்பமாகப் போய்விட்டது! 24-மணிகளில் உறக்கத்திற்கும்......உணவு கொள்வதற்கும் ....மற்றவற்றிற்கும் சில மணிகளை ஒதுக்கவே அவருக்குமெத்தக் கடினமாக இருந்தது. இந்நிலையில் நூல்களைப் படிக்க அவரால் எங்ஙனம் நேரத்தைக் காண முடியும்? அவருக்கு ஒன்றுமே புலப்படவில்லை. மனமோ வெதும்பிக் கொண்டிருந்தது. முடிவில் ஒரு துணிவுக்கு வந்தார். படுக்கப் போவதற்குமுன் 15-நிமிடங்களைப் படிக்கச் செலவழிக்கத் துணிந்தார். இரவு 11-மணிக்குப் படுக்கப் போகும்போது 15-நிமிடங்கள் படித்துவிட்டு 11-15 மணிக்கே படுக்கச் செல்லுவார். ஆராய்ச்சிகள் இரவு 8-மணி வரை நீடிக்குமாயின் 15-நிமிடங்கள் படித்துவிட்டு 2-15 மணிக்கே படுக்கப்போவார். அதாவது தன் உறக்க நேரத்தில் 15-நிமிடங்களைப் படிக்க எடுத்துக்கொண்டார். என்று இப்படி ஒரு உறுதியை எடுத்துக்கொண்டாரோ அன்று முதல் அந்த உறுதியை அருமையாகக் காப்பாற்றினார். எந்தக் காரணத்திற்காகவும் உறுதியை நழுவவிடமாட்டார். எது எப்படிப் போனாலும் 15-நிமிடங்கள் படிக்கச் செலவு செய்துவிடுவார். அப்படிச் செய்தாலொழிய அவருக்கு உறக்கம் பிடிக்காதாம்!

இப்படி 15-நிமிடங்களை நாள்தோறும் தவறாமல் படிக்க உபயோகப்படுத்தியது அவரை ஒரு மாபெரும் கல்விமானாக்கியது! ஆங்கில இலக்கியப்பொழிலானார்! பதினேழாம் நூற்றாண்டின் ஆங்கில உரைநடை மன்னன் சர் தாமஸ் பிரஷன்தம் உரை நடை அனுபவம் அவருக்கு எளிதாயிற்று! அவ்வுரை நடையில் வல்லரானார்! அவ்வுரை நடையின் களஞ்சியமானார்! சர் தாமஸ் பிரவுனின் நூல்களுக்குப் புகழ்பெற்ற நூல்நிலையமே அவருடைய நூல் நிலையம்தானாம்! ஆராய்ச்சிக் கடலிலே மூழ்கி மூழ்கி நேரம் போதாமல் வருந்தி இருந்த அவரே இப்படி, படிக்க நாள்தோறும் ஒரு கால் மணி நேரத்தை ஒதுக்கிக் கொண்டாரென்றால், நாம் ஏன் பல தொல்லைகள் இருந்தாலும் தினம் ஒரு கால் மணி நேரத்தை படிக்க ஒதுக்கக்கூடாது? அவர் பெற்ற அத்தனை பயனைப் பெறக்கூடாது? நாம் உறக்க நேரத்தைக் கூடக் குறைக்க வேண்டியது இல்லை.........நேரத்தை வீணாக்குவதைக் குறைத்தால் போதுமே... ஒரு பதினைந்து நிமிடங்களை ஒதுக்கி ஒரு விநாடிகூட விரயமாக்காமல் செவ்வனே பயன்படுத்தினால் கொழிக்கும் அறிவுச் செல்வம்தான் எத்தனை உயர்ந்தது! அந்த ஆர்வம் வர வேண்டுமே......

படிக்கும் ஆசை மேல் நாடுகளில் கொழுந்துவிட்டெரிகிறது. பிறந்ததும் அவர்களுடைய அறிவுப் பசி 'யானைத் தீ'யாகிறது! இளம்பிராயத்திலேயே படிக்கும் பழக்கம் அவர்களோடு இரண்டறக் கலந்துவிடுகின்றது. எங்கெங்கு நேரங்கிடைக்கிறதோ அங்கெல்லாம் படிக்கிறார்கள்! ஒரு விநாடியைக்கூட அவர்கள் வீணாக்க விழைவதில்லை! இந்த விஷயத்தில் மட்டும் அவர்கள் படுகஞ்சர்கள்! இல்லையென்றால் சட்டைப் பையில் எப்போதும் புத்தகம் வைப்பார்களா?...படுக்கையில் தலையணையோடு சேர்த்து நூலை வைத்திருப்பார்களா?...... குளிக்கும் அறையில் இருக்கும் மாடத்தில் புத்தகத்தை வைத்திருப்பார்களா ?.........சாப்பிடும் மேஜையின்மேல் நூல் வைத்து அழகு செய்வார்களா? இப்படி, கண்ட இடங்களில் நூல்களென்னும் அகல் விளக்குகளை வைத்து அணி செய்வார்களா?......அதை ஒரு சம்பிரதாயமாக மாற்றிக் கொள்வார்களா?

நாம்தான் சரசுவதியை நம்பிப் புத்தகங்களை எல்லாம் மாடிப்படியிலோ பரணையிலோ அடுக்கி அழகு பார்த்தாலே, படிப்புத் தானாக வந்துவிடும் என்ற சம்பிரதாயத்தை அடிப்படையாகக் கொண்டவர்களாயிற்றே! முடியுமா இப்படியெல்லாம் செய்ய...!!

★

8-ம் பக்கத் தொடர்ச்சி

பெற்ற சோழவளநாட்டு மக்கள் மானங்காப்பதில் தலைசிறந்தவர்கள் என்று! இதற்குள் ஏனிந்த மாற்றம்?"

"உண்மைதான்! உங்கள் சோழன் திண்டோள் காட்டி வெற்றிதேடும் திறல்வேந்தன் என்று மட்டும் கூறி நிறுத்தியது மிகமிகத் தவறுதான்..."

"பின்..."

"அந்தக் கெழுதகை வேந்தன் இப்போது ஆட்சி நெறியிலிருந்து தவறி நடக்கும் கொடுங்கோலனாகவும் மாறிவருகிறான். இமய நெற்றியிலே கொடிபொறித்த சோழ மரபுக்கு இழுக்குத் தேடுவோனாக அமைந்து வருகிறான், ஆளும் சோழ மன்னன்."

"மூச்சு விட்டுக்கொள், மொய்குழலே! அப்படி என்ன நாட்டுக்கும் ஏனைய நன்னெறியாளருக்கும் தெரியாத குற்றம் உனக்குத் தெரிந்துவிட்டது? கோல்வளையாக் கோனாட்சி செலுத்தும் சோழன் யாருக்கு எந்த நேரத்திலே நீதி வழங்கத் தவறிவிட்டான்? அறம் செய்யத் தவறினானா? புறங்காட்டி ஓடினானா? அடுத்தவர் துயருற்ற காலை துணை செய்ய எடுத்த கையைத் தடுத்து நிறுத்தினானா? புலமையைப் போற்ற மறந்தானா? என்ன குற்றம் செய்தான், ஏந்திழையே? என்ன குற்றம் செய்தான்?"

"போதுமடி, வீரம்! ஆளும் காவிரி நாடன் அவன் முனனோருக்கு அடுக்காத செயலொன்றைச் செய்துவிட்டான்; அதனால் தீராத களங்கம் வந்து சேர்ந்துவிட்டது. ஆமாம். அளவோடு வரிகொள்ளத் தவறிவிட்டான் உங்கள் அருமை மன்னன்!"

"வரி பெறுவதிலே தவறிழைத்தானா? புலிக்கொடி பறந்திடும் பொன்னாட்டிலே வரிச்சுமை இதுவரை வாட்டியதில்லை என்பதுதானே வரலாறு! என்ன இங்கே புதிரான செய்தியை எடுத்து விரித்திருக்கிறாய்? புரியத்தான சொல்லேன்!"

"தேன் குழல்! உனக்குத் தெரியுமே! வற்றாத காவிரிபாயும் வளநாட்டு மக்கள் இதுவரை ஆறிலொரு பங்கைத்தானே வரியாகச் செலுத்தி வருகிறார்கள்? ஆனால் தீரா விருப்பக்காரன் உங்கள் வளவன் இப்போது அவ்வழக்கிலிருந்து பிறழ்ந்து வரிக்கொள்ளையிடுகிறான்; மிச்சமின்றிமீதமின்றிப் பொருள்களைக் களவாடிச் செல்கிறான்!"

"எங்கே எழில்வளை? யாரிடமிருந்து பறித்தான் அப்படி? உன் தந்தையிடத்திலா, அல்லது உன் தாய் மாமன் வீட்டிலா? விளங்கத்தான் சொல்லேன்!"

"தந்தையிடமிருந்து பறித்தாலென்ன? என்னிடமிருந்தாலென்ன? கொள்ளும் முறையிலே மன்னன் கொடுமைக்காரனாகி விட்டான்!"

"உன்னிடமா? நீ எப்பொழுது வரி செலுத்தத் தொடங்கினாய்? என் அன்புத் தோழியே! என்ன தொழில் செய்கிறாய்?"

"ஆமடி! சோணாடன் நம் வீதி வழியே உலா வந்தபோது, என் காதற்களத்திலே புகுந்ததுமட்டுமின்றி, நான் நலமுடன் பயிரிட்டு வந்த உள்ளம்,நாணம், அழகு ஆகிய அணிகலன்களையெல்லாம் முறை தவறிப் பறித்துச் சென்றானடி! அதனால் நான் இங்கே பித்துப் பிடித்து வாடுகிறேன். இது அடுக்குமா? நீயே சொல்! புனல்நாடன் இழைத்த இந்தப்பொல்லாங்கினை யாரால் பொறுத்துக்கொள்ள முடியும்? ஐயோ! அறம் என்பதே இனி அழியத்தான் வேண்டுமா?"

"ஓ......ஓ......வழக்கு இப்படிப் போகிறதா? இரு, இரு இதோ ஒரு நொடியில் வந்துவிடுகிறேன்.

'கலகல'வென்று வெண்முத்துப்பல்சிந்தச்சிரித்துக்கொண்டே ஓடிய தேன்குழல் கொஞ்ச நேரத்திற்குள் எழில் வளையின அன்னையிடம் எதையோ கூறிக்கொண்டிருந்தாள்!

எழில்வளையின் அந்த வழக்குரை படலம் 'முத்தொள்ளாயிரம் 89-வது பாடலாக உருப்பெற்று இருக்கிறது.

அது இது:—

என் நெஞ்சு நாணு நலனு மிவையெல்லாம்
மன்னன் புனனாடன் வௌவினான்—என்னே
அரவகலல்குலாய்! ஆறிலொன்றன்றோ
புரவலர் கொள்ளும் பொருள்.

"எட்கார் ஆலன்போ"

—[கி. சோழன்]—

3650-நாட்கள் இரவென்றும் பகலென்றும் பாராமல் உழைத்து உருவாக்கிய ஓர் பெருங் காவியத்தை இரண்டு டாலர்களுக்கு விற்றுத் தன் பசியைப் போக்கிக் கொண்டான் ஓர் மாபெரும் இலக்கிய மேதை!

யார் அந்த கவிஞன்?

அமெரிக்க இலக்கிய உலகில் தனக்கென ஓர் தனியிடம் தேடிக் கொண்ட "எட்கார் ஆலன்போ" என்ற அந்தக் கவிஞன் தன்னுடைய வாழ்நாட்களில் பட்டதுன்பம் கொஞ்சமல்ல! உலகில் தனக்குக் கிடைத்தற்கரிய மாபெரும் செல்வம் என்று எண்ணி உயிரினும் மேலாக அவன் நேசித்து வந்த அவனுடைய அருமை மனைவி வறுமையாலும், நோயாலும் மாண்ட நேரத்தில் அவளுடைய உடலைப் புதைப்பதற்குக் கூட அவனிடம் காசில்லை!

1809-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 19-ம் தேதியன்று போஸ்டன் நகரில் இவர் பிறந்தார். தனது இளமைப் பருவத்திலேயே தந்தையை இழந்து இவர் அனாதையானார்! அந்த அனாதைச் சிறுவனை, ரிச்மன்டில் வாழ்ந்துவந்த புகையிலை வியாபாரியான ஜான் ஆலன் என்பவர் தன்னோடு அழைத்துச் சென்றார்! அன்று முதல் அவர்தான் அவனுக்கு வளர்ப்புத்தந்தை! ஜான் ஆலன் அவனுக்குக் கல்வி கற்பித்தான். சிறுவன் வளர்ந்து பெரியவனானன். அவன் வளர்ச்சியோடு தீய பழக்கங்களும் வளர்ந்தன! சூதாடுவதிலும், மதுவருந்துவதிலும் அவனுடைய நாட்டம் சென்றது! அவன வர்ஜீனியா பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டிருந்த போது ஒரு நாள் அவன் மது வருந்திவிட்டுக் கல்லூரிக்குச் சென்றான்! அவனுடைய ஒழுக்கக் கேடான செயலைக்கண்ட கல்லூரி நிர்வாகிகள் அவனைக் கல்லூரியில் இருக்கத் தகுதியற்றவன் எனக்கூறி அங்கிருந்து நீக்கிவிட்டனர்! செய்தியறிந்த அவன் வளர்ப்புத் தந்தை கடுஞ்சினம் கொண்டார். வீட்டிற்கு வந்த அவனை நையப்புடைத்து வீட்டை விட்டுத் துரத்திவிட்டார்!

அதுவரையில் தனது வளர்ப்புத் தந்தையுடன் ரிச்மன்டில் வாழ்ந்துவந்த ஆலன்போ தான் பிறந்த ஊராகிய போஸ்டனுக்கு 1827-ல் திரும்பிவந்தான். வீட்டிற்கு வந்ததும் தான் முதன் முதலில் எழுதிய "தாமர்லேன் அண்டு அதர்போயம்ஸ்" என்ற தனது கவிதையை வெளியிட்டார்! ஆனல் அது அவருடைய வறுமையைப் போக்கவில்லை. பிறகுதான் அவர் அமெரிக்க இராணுவத்திலே சேர்ந்துகொண்டார்! ஆனல் துப்பாக்கி ஏந்திப் போர்க்களத்திலே நிற்கவேண்டிய அவன் தன் அறையிலே உட்கார்ந்துகொண்டு கவிதைகளை இயற்றிக்கொண்டிருந்தான்! எனவே இராணுவ அதிகாரிகள் அவன் இலாயக்கற்றவன் எனத் தீர்மானித்து இராணுவத்திலிருந்து அவனை நீக்கிவிட்டனர்!

வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஆலன்போ நேராகத் தன் அத்தையின் ஊரான பால்டிமோருக்கு வந்து தங்கினன். தன் அத்தை மகளான "வர்ஜீனியா" என்பவளை அவன் காதலித்தான். திருமணமும் நடந்தது. வர்ஜீனியாவோடு அவன் வாழ்ந்த காலத்தில் ஏராளமான கவிதைகளையும், சிறுகதைகளையும் எழுதினன். என்றாலும் அவன் வாழ்வு உயரவில்லை! 1835-ம் ஆண்டு அவன் திரும்பவும் தன் மனைவியோடு ரிச்மன்டிற்குவந்தான் "மெசஞ்சர்" என்ற ஓர் இலக்கிய ஏட்டின் துணை ஆசிரியனுகச் சிறிதுகாலம் பணியாற்றினன். சில நாட்களில் அதையும் விட்டுவிட்டு "பிலடல்பியா"வில் சிறிதுகாலம் வாழ்ந்தான். பிறகு "நியூயார்க்" நகருக்குச் சென்றான் தன்மனைவியுடன்.

நியூயார்க் நகரில் ஒரு சிறு குடிசையை மாதம் பன்னிரண்டு ரூபாய் வாடகைக்கு எடுத்துக் கொண்டு அங்கே வாழ்ந்தார்கள். பலமாதங்கள் அவர்களால் வாடகை தரமுடியவில்லை—அவ்வளவு வறுமை! அந்தக் குடிசையில் தான் உலகப் புகழ்ப்பெற்ற மாபெரும் இலக்கியமாகிய "தி ரேவன்" என்ற காவியத்தை உருவாக்கினன்! ஆனல் அந்தோ! வறுமையின் கொடுமை அந்தச் சாகாத இலக்கியத்தை இரண்டே டாலர்களுக்கு விற்றுத் தங்கள் பயங்கரப் பசியைப் போக்கிக் கொண்டார்கள்.

1847-ம் ஆண்டு அவன் ஆசை மனைவி வறுமையின் கொடுமையாலும் தீராத நோயாலும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தவள் வறுமையின் கொடுமையிலிருந்து மட்டுமல்ல இந்த உலகத்திலிருந்தே விடுதலை பெற்றுக் கொண்டாள்!

வசந்த காலம் வந்தது. அவன் வீட்டு முற்றத்தில் ஏராளமாக பூத்துக்குலுங்கும் "டாண்டலியன்" என்ற அந்த மஞ்சள் பூச்செடிகள் பூக்கத்துடங்கின. எத்தனையோ முறை பசியின் கொடுமையைத் தாங்கமுடியாமல் அந்தத் தம்பதிகள் அந்த மஞ்சள் பூக்களை வேகவைத்துத்தின்று தங்கள்பசியைப் போக்கிக்கொண்டிருக்கிறார்கள்! இன்று அந்த பூக்கள் அவனுக்கு தாங்கொணு வேதனையைத் தந்தது! எங்குமகுலுங்கி நிற்கின்ற வசந்தத்தின் எழில் தோற்றம் அவனைப் படாத பாடுபடுத்தியது. அவன் தன் அன்பு மனைவியோடு வாழ்ந்த நாட்களை எண்ணிப்பார்த்தான். அவளோடு கொஞ்சிக் குலவிய நாட்கள்! அவளின் அன்புப் பார்வை அத்தனையும் அவன்முன் நர்த்தனமாடியது. அந்த நினைவிலேயே அவன் பலகவிதைகளை எழுதினன். அவைகள் அத்தனையும் இன்று இலக்கிய உலகில் அழியா இடம் பெற்றவைகளாகி விட்டன! 1849-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ந் தேதி ஆலன்போ தனது முன்னாள் காதலியொருத்தியைக்காண ரிச்மன்டிற்குப்போய்த் திரும்பி வரும் வழியில் பால்டிமோரின் வீதியொன்றில் நினைவிழந்து விழுந்தார். அங்கேயே அவர் உயிர் போயிற்று!

சில ஆண்டுகளுக்கு முன்னல் அமெரிக்க அரசாங்கம் நியூயார்க்கில் அந்த இலக்கிய மேதை வாழ்ந்த இடத்தைவாங்கி அங்கே அவருக்கோர் நினைவு மண்டபம் எழுப்பியுள்ளார்கள்!

பாசவலை தவறினால் மோசவலை!

"வீட்டரசியல்லப்பா, அவள்! விழியாசி!! பாகுமொழியும், பனிப் பார்வையும் வளைக்கவே ஒழிய, உன்னை வளர்க்க, அல்ல. இன்னும் வரக்காணேனே! — என்கிற பாடலை இசையுடன், பாடக்கேட்கலாம், நீ அவளிடம். ஆனல் 'என அத்தான் வரவில்லையே இன்னும', என்கிற ஏக்கத்தை நீ உனக்குரியவளிடம்தான் காண முடியும். நீ வாடினல், வாடுபவள் உன்னுடையவள்! நீ வாழ்ந்தால் உன்னை நாடுபவள், அவள்! 'அன்பே—உம்மைக் காணவிடில் என மனம் திக்திக்கென்று அடித்துக் கொள்கிறது — உம்மைப் போலுண்டோ உலகில்'—என்று, உதடுகளைத் திறந்து, உன் உதடுகள் திறக்கமுடியாத அளவுக்கு 'இச்இச்' என்று முத்தங்களைச் சொரிவாள், அவள். எல்லாம் எதற்கு? உன் பை காலியாகி, தன்கைக்கு யாவும் வரவேண்டுமே என்பதால்! உனக்குரியவள் இருக்கிருளே, இவள் பேசமாட்டாள்—தன் அன்பையும், உன்னைக் காணமல் தவிப்பதையும் வாய்திறந்தும் சொல்லமாட்டாள் — வலியக்கூட முத்தம் தர முகம் நாணுவாள்—ஆனல், இவள் இதயம மட்டும் உள்ளிடம்மட்டும்தான இருக்கும்! இந்த உண்மையை நீ அறிய வேண்டும். அப்போதுதான், மயக்கு மொழியாளின் மோசவலை தெரியும்; மாண்புமிக்க மனைவியின் மேன்மை புரியும்."

* * *

மையல் கொண்ட மைனர்! தவிக்கும் தையல்! பணம் பறிக்கும் வலைக்கண்ணாள்! — பையன்மீது, அன்பு கொண்டவர், பரிதாபத்தோடு பேசுகிருர், இப்படி.

மைனர், அறிவுக் கண்களோடு உலகைப் பார்ப்பவனானல் உண்மையை உணருவான் — தளுக்கிக்கும் தாரததுக்குமிடையிலேஉள்ள வேற்றுமைகளை எண்ணுவான். தொடர்பை, அக்கணமே அறுத்துக் கொள்வான். சொந்த மனை, சொந்த மக்கள், என்று ஓடோடி வந்து இன்பம் பெறுவான்.

விலைமாதின் இடத்துக்கு இன்றைய உலகில், எல்லாம்வல்ல ஏகாதிபத்யங்கள் வந்துள்ளன. ஒரு போது வாளையும் குண்டுகளையும் நம்பிய வல்லரசுகள் இன்றைய தினம, வசீகரத்தையும் வாக்கு சாதுர்யத்தையும், வீசியே நாடுகளை வளைக்க முயலுகின்றன.

வெளிநாடுகளை மட்டும் நாம் குறிப்பிடவில்லை, இந்திய உபகண்டம் என்று அழைக்கப்படும் இம் மாபெருநிலப்பரப்பினைக் கட்டியாளத் துடிக்கும், டில்லி ஏகாதியத்தியமும், இந்தத் தளுக்கு மினுக்கு வேலையைத் திறம்படச் செய்து வருகிறது.

அரங்கண்ணல்

கோபித்துக்கொண்டு போய்விடுவான், மைனர்! அவனுக்குக் கொஞ்சங் கொஞ்சமாக மயக்கம் தெளிய ஆரம்பித்திருக்கிறது!!— என்பதை, உணரும்போது, வலை வீசி வாழ்பவள், அவனை எது குளிர்விக்கும், எது தன் வசமே இடக்கச்செய்யும் என்பவைகளையெல்லாம் சிந்தித்து, சந்தர்ப்பத்துக்குத் தகுந்த அம்புகளை ஏவி, அடைக்கலம் கொள்ளச் செய்வாள். அதேபோல, இம்மாபெரும் நிலப்பரப்பினைக் கட்டியாளும் டில்லி ஆதிக்கமும், ஒரு மாநிலம் முரண்டுகிறதென்ருல்,உடனேஅந்த மாநிலத்தின் புகழ்—அதன் தரம்—மொழிவளம் ஆகிய பெருமைகளை யாரையாவது ஒரு பெரிய ஆளை அனுப்பி, புகழ்பாடச் செய்வதும, அந்தப் புகழெல்லாம் ஒளிவிட வேண்டுமானல், ஒற்றுமையுடன் இந்திய அரசிலிருக்க வேண்டுமெனவும், பல்லவிபாடச் செய்வது, வழக்கமாகி வருகிறது.

ஆண்டுக்குப் பலதடவை குடியரசுத் தலைவர் இராசேந்திரரும், அவரது சகாக்களும், இங்கெல்லாம் வந்து, நம் எழிலையும் திறனையும் வியந்து வியந்து உரைத்துவிட்டுச் செல்வது இதற்குத்தான்! "மச்சான் உன்னைப் பார்த்து, மயங்கிப்போனேன் நேத்து" என்று, இந்த உபகண்டத்தை கட்டியாண்ட வெள்ளையனும் பாடாமலில்லை— தாசர்களைத் தயாரிக்காமலில்லை — அவன் இருந்தஅதே இடத்திலமர்ந்தபடி அரசாங்கம் நடத்துகிறவர்களல்லவா, இவர்கள்? அதே முறைகளை அணுவளவும் பிசகாமல், பல் இனத்தவரும், மொழியினரும் வாழும் இந்த நிலப்பரப்பில் காட்டி வருகிருர்கள்!!

* * *

"ஏனிப்படி, ஒரு மோசவலையில் சிக்கி உழல வேண்டும்? இதே பாகுப் பேச்சையும், பரவசத் துதியையும், நாளைக்கும் நாம் பெறமுடியாதா? தனியாக நாமிருக்கிறோம் என்ருல், தேடித்தேடி ஓடி வருவார்களே! தேவையென்ருல்-விலைமாதின் சங்கீதம்ரசிக்கத் தகுந்தது என்ருல் அதை ரசிப்பதோடு தொடர்பை வைத்துக் கொள்வதுபோல வைத்துக் கொள்ளக்கூடாதா? அது தவரு?

கூடி நின்று கொட்டமடித்தால் தானா, ஒற்றுமை என்று பெயர்? விலகி நின்று, இன்ப துன்பங்களைப் பங்கிட்டுக்கொள்ள முடியாதா, என்ன?

*　　*　　*

காங்கிரஸ் ஆதிக்கபுரியின் தலைவர்கள் அமர்ந்திருக்கும் டில்லியினைப்பற்றி இதுபோல நாம குறிப்பிடும்போது காங்கிரஸ்காரர்களுக்குக்கூட அவ்வளவு கோபம் வருவதில்லை; நமது கம்யூனிஸ்டுத் தோழர்களுக்கு நம்மீது கடுமையான கோபம் பிறப்பதுண்டு.

ஏனப்பா! இப்படிப் பேதம் காட்டிக் காட்டிப் பேசுகிருய்? விலைமாதோடு ஒப்பிடுகிருயே, நம்ம டில்லியை! அதுதானே தாரம்! பார்த்தாயா நம்ம பண்டித நேரு ஓடோடி வந்தார் கேரளத்துக்கு—உயர் கலைகளை ரசித்தார்—கவியரசர் வள்ளத்தோல் நடாத்திய நாட்டிய மண்டலிக்குக்கூட மத்திய சர்க்காரின் மான்யம் உண்டென்ருர். ஏன்? தமிழ் நாட்டுக்கு இந்திய ஜனதிபதி வரவில்லையோ! தமிழைப்பற்றியும், தமிழரின் தொன்மை குறித்தும், உருக உருகப் பேசியதை மறந்துவிட்டாயோ? ஏனப்படிப் பேசுகிருர்கள் — உன்னை வளைத்துப் போடவா? அல்ல! அல்ல!—உன்னேடு இணைந்து நின்று 'இந்தியா வெனும் இப்பாரதம் எழில்பெற வேண்டுமெனும் ஆசையால் தானே'—என்று, அழகு தமிழால் அல்ல ஆத்திரங்கலந்த சொற்களால் ஏசுவதுண்டு, கம்யூனிஸ்டுத் தோழர்கள்.

மத்திய சர்க்கார் ஏமாற்றுகிறதாமய்யா, இவர்களை? வடக்கு வாழ்கிறதாம்! தெற்குத் தேய்கிறதாம்!! வஞ்சிக்கிறதாம் டில்லி! வாடுகிருர்களாம் இவர்கள்!—என்று, கேலி மிகச் செய்வதும் உண்டு காம்ரேடுகள்.

> **"உணவுப் பொருள்கள் அனுப்புவதை அடியோடு நிறுத்திவிட்டார்கள் — கேரளத்துக்கு இப்போது, மத்திய அரசு, உணவுப் பொருள் அனுப்புவதே கிடையாது."**

கண்டனக்குரல் எழுப்புகிருர்கள்! வேறுயாருமல்ல; யார்நம்கூற்றைக் கொடிதென்றும் கூடாதென்றும் கேலியும் கண்டனமும் கிளப்புவார்களோ அதே கம்யூனிஸ்டுகள்!

கடந்த அக். 14-ந்தேதி சென்னையில் கூடிய அவர்களது கட்சிக் கமிட்டிக் கூட்டத்தில் இப்படி, கண்டனத் தீர்மானம் போட்டிருக்கிருர்கள்.

கேரளத்துக்கு அடியோடு உதவுவதில்லை.

ஏனிப்படிச் செய்கிறது, மத்திய சர்க்கார்? கேரளத்து மக்கள் என்ன பாவம் செய்தார்கள்? வரி கட்டவில்லையா—உப்புச்சத்யாகிரகம் நடாத்தி உபத்திரவம் கொடுக்கிருர்களா — அருகிலிருக்கும் அராபிக் கடலில் கேரளத்தை வெட்டி வெட்டி வீசிக்கொண்டிருக்கிருர்களா—என்ன காரணம் என்று பார்த்தால், அதற்கும் விளக்கம் தந்திருக்கிறது, கம்யூனிஸ்டுக் கட்சியின கமிட்டி.

"கேரளத்தை, எரிச்சலோடு பார்க்கிருர்கள்."

"வேற்றுமைப்படுத்தி நடத்துகிருர்கள்."

"இந்திய உபகண்டத்திலேயே, காங்கிரசு கட்சி இல்லாமல் நடைபெறும் ஒரு சர்க்கார் என்பதால், அதற்குத் தொல்லைதர முயலுகிருர்கள்."

கேரளத்தில் கம்யூனிஸ்டுகள் ஆட்சி நடக்கிறதென்பதால் இத்தனை தொல்லைகளையும் தருகிறதாம், டில்லி. கம்யூனிஸ்டு கட்சி சொல்கிறது.

தங்களது காங்கிரஸ்கட்சி ஆளவில்லையென்பதால், மக்களை அவதிக்கு ஆளாக்குகிறதாம், டில்லி. கம்யூனிஸ்டுத் தலைவர்கள் தருகிருர்கள் விளக்கம்.

என்னதான் உலக சகோதரத்துவம் பேசினாலும், அண்டை வீட்டுக்காரனோடு ஒத்துப்போக வேண்டும் என்று 'பஞ்சசீலம்' போதித்தாலும், தன் காரியம் என்று வரும்போது போதனைகள் மறைந்துவிடத்தான் செய்கிறது, நேருவுக்கு. கட்சியும், அதன் பெருமையும் கண்முன்னால் நிற்கிறதே ஒழிய, நீதியும் நேர்மையும் தெரிவதில்லை, கண்ணுக்கு.

பாவம்! நம்பூதிரிபாட், மந்திரி சபை அமைத்த நாள்முதல், எப்படியாவது இந்த வாய்ப்பின்மூலம் தனக்கும் தன் கட்சிக்கும் நல்ல பெயர் சம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்று படாதபாடுபட்டு வருகிருர்.

டில்லிக்காரர்கள் கூப்பிட்டால், உடனே பறக்கிருர்—ஆலோசனைகளைக் கேட்கிருர்— அதன்படி நடக்கவும் முயற்சிக்கிருர்.

காங்கிரஸ் கட்சிக்காரர்கள், அவரைக் கோர்ட்டில் கொண்டுபோய் நிறுத்துகிருர்கள்—அறிக்கைவிட்டார், அது தவறு; கோர்ட்டை அவமதித்ததாகும் என்று குற்றம் சுமத்துகிருர்கள். தவறு என்ருல் வருந்துகிறேன், மன்னியுங்கள்!—என்று மனங்கனிந்து கேட்கிருர். மார்தட்டிப் பேசுகிறவர், நம்பூதிரிபாட்! எனினும் சிரம் வணங்கி, வருத்தம் தெரிவிக்கிருர்!!

எப்படியும் நல்ல பெயர் எடுக்க வேண்டும்—காங்கிரஸ் கட்சியின் ஆட்சியைவிட கம்யூனிஸ்டு ஆட்சி தரம் வாய்ந்தது என்பதை நிரூபிக்கவேண்டும் — என்று படாத பாடுபடுகிருர். முதலாளிகள் கூக்குரல்! மதவாதிகள், ஆத்திரம்! தூண்டிவிடுவோர் தாபம்! தொல்லைகள்! துப்பாக்கியை முடுக்கிவிட வேண்டியநிலை!—இப்படி, ஏராளமான இடுக்கித் தாக்குதல்களுக்கிடையே மாட்டிக் கொண்டு, மல்லுக்கு நிற்கிருர்.

எனினும், டில்லி, இரங்கவில்லை!

அவர் கட்சியைப் பாராட்ட வேண்டாம்; மக்களுக்குத் தேவையான உணவை அனுப்பலாமன்ருே? செய்ய வில்லை!!

*

மைனர், வர மறுக்கிருன்! மையல் தெளிந்து, தன்மனையாளையும் குழந்தை குட்டிகளையும் கவனிக்க ஆரம்பித்துவிட்டான்! கழனிகளையும் சொத்தையும் கவனிக்கத் துவங்கிவிட்டான்!—எனும்போது, சராசரித் தளுக்கிகள், முதலில் தூதனுப்புவார்கள். செ, செ! தூ, தூ!! போ! போ!!—என்று, அவன், திரும்பியும் பாராமல் தன் காரியத்தைக் கவனிக்க ஆரம்பித்துவிட்டால், வழக்குப்

தி. மு. க. செயலாளர்களுக்கு

வேண்டுகோள்

1959-ம் ஆண்டிலும் வழக்கம் போல் "போர்வாள்" வெளியீடான திராவிடர் நாட்குறிப்பு வெளியிடப் படுகிறது. எல்லா ஊர்களிலுமுள்ள தி. மு. கழக செயலாளர் துணைச் செயலாளர் பெயர்களை எழுதி 15—11—58க்குள் கிடைக்கும்படி அனுப்பிவைக்குமாறு செயளாலர்களை வேண்டுகிறேம். அதன்பின் கிடைப்பவை டயரியில் இடம்பெற முடியாது.

மேலாளர், போர்வாள்,
147, பவழக்காரத் தெரு,
சென்னை-1

போடுவார்கள்—வம்படிக்குப் போவார்கள் — அடியாட்களைத் தேடிப் பிடித்து ஆட்டையும் மாட்டையும் ஓட்டிவரவும் செய்வதுண்டன்ருே, தைரியமும் சண்டியர்களைச்சதா அருகிலும்வைத்திருப்பவர்கள். இப்போது, தன் சொல்லுக்குக் கட்டுப்படாது, தன் காரியங்களைக் கவனிக்கத் துவங்கிவிட்ட, நம்பூதிரிபாட்டின் மீது, இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்திருக்கிறது, டில்லி.

"டேய்! எழுது கோலும் பேப்பரும் இருக்கிற காரணத்தால், இப்படி, எமது டில்லிமீது குற்றம் சாட்டுகிருய்— குடிகேடனே!", என்று நம்மீது கோபங் கொள்ளக்கூடும், காங்கிரஸ் நண்பர்கள், கேரளத்தில் நடக்கும் ஆட்சியை, டில்லி ஏனிப்படி நடத்துகிறது, என்னவெல்லாம் செய்கிறது என்பதை, அவர்களுக்கே வேண்டியவரான ஒருவர், இதோ எடுத்துச் சொல்கிருர்,-

மத்திய சர்க்காரிலிருக்கும் கட்சியில் இல்லாத இன்னெரு கட்சி, ஒரு மாநிலத்தை ஆளுகிறது.

எனவே மத்தியஅரசு இடும்கட்டளைகளை அப்படியே ஏற்கத்தயாரில் இல்லை! அது மட்டுமின்றி, மத்திய சர்க்கார் கொடுத்ததை வாய் பேசாமல் வாங்கிக் கொள்ளாமல், தன் மாகாணத்துக்கு இது வேண்டும் அது வேண்டும் என்று கேட்டும் வருகிறது!!

இது, மத்திய சர்க்காருக்கு எரிச்சலைத் தருகிறது.

தன் சொற்படி, கேரளம் கேட்கவில்லை என்றதும்; மாகாண நலனைப் பெரிதாக எண்ணி வற்புறுத்துகிறது என்றதும், 'கட்சி கோதா'விலிறங்கி, காரியத்தைச் சாதித்துக் கொள்ள முயலுகிருர்கள்.

எனவே, ஐதாராபாத்தில் கூடியபோதும் சரி, அகில இந்தியக்காங்கிரஸ் காரியக் கமிட்டியிலும் சரி, கேரள ஆட்சியைக் கண்டித்துத் தீர்மானம் போடுகிருர்கள்,—அதற்கு முன்பே, அராஜகமும் அட்டகாசமும் கேரளத்தில் நிலவுவதாகப் பறைசாற்றிவிட்டார், பண்டித நேரு — பாராளுமன்றத்திலும் கேரளத்தைப்பற்றி விவாதிக்கப் போகிருர்கள் — தங்கள் கைவசம் என்னென்ன 'சக்தி'கள் உள்ளனவோ, அவ்வளவையும் இந்த ஒரு சர்க்காரை அகற்றப் பயன்படுத்தப் போகிருர்கள், காங்கிரஸ் ஆதிக்கபுரியினர்.

இது, ஏன்?-விளக்கம் தருகிருர், மேலே குறிப்பிட்டவர். என்ன காரணமாம் தெரியுமா!!

"கேரளத்தில் முளைவிட்டிருக்கும் சுதந்திர உணர்ச்சியும், இன்னெருவர் யோசனையில்லாமல் தங்களைத் தாங்களே நன்ருக ஆண்டு கொள்ள முடியும் என்று ஏற்பட்டிருக்கிற நிலைமையும் மத்திய சர்க்காருக்குப் பிடிக்கவில்லை!!

ஏன் பிடிக்கவில்லை — தொல்லை விட்டது, என்றுதானே இருக்க வேண்டும் — இருக்குமா, டில்லி? அதுதான், ஏக இந்தியாவையும் ஒரே கட்டுப்பாட்டில் மட்டுமல்ல, ஒரே கட்சி ஆட்சியிலும் வைக்க வேண்டுமென விரும்புகிறதே! அந்த விவரத்தையும், மேலே குறிப்பிட்டவரே கூறுகிருர் — அவர் யார் என்பதை அறிந்தால் ஆச்சரியம் இன்னும் அதிகமாகும் இந்திய உபகண்டத்தின் சமஸ்தானங்களையெல்லாம் டில்லிக்குக் கட்டுப்படுத்தி வைக்கக்காரணமாயிருந்தவரும், இரும்பு மனிதர் என்று போற்றப்பட்ட சர்தார் பட்டேலின் இலாகாவை ஆட்டிப் படைத்தவருமான, வி. பி. மேனன் தான், இவ்வாறு இந்தக் கிழமை 26ந் தேதி பெங்களூரில் பேசியிருக்கிருர்.

*　　*　　*

"ஒரே இடத்தில் அதிகாரங்கள் எல்லாம் குவிந்துவிட்டன. மாகாணங்களை ஆள்வதும், மத்திய சர்க்காரை ஆள்வதும் ஒரே ஒரு கட்சிதான் என்பதால், மத்திய பீடத்துக்கு ஏராளமான வலிவு வந்துவிட்டது."

"அரசியலமைப்புப்படி மாகாணங்களுக்கென வரையறுக்கப் பட்டிருக்கிற அதிகாரங்களைக்கூட, தன்னுடைய கட்சி என்பதால், செல்லாக் காசாக்கித் தன் விருப்பப்படி ஆக்கிக் கொள்கிறது, மத்திய அரசு."

"எது வேண்டுமானாலும், தங்கள் எஜமானனைக் கேட்கவேண்டியிருப்பதால், மாகாணங்கள் தங்கள் மதிப்பையும்மரியாதையையும் இழந்து நிர்வாகத் திறமையையும் சக்தியையும்கூட விரயமாக்கி வருகின்றன."

"இதன் மூலம், மாகாணங்களை ஆட்டிப்படைக்கும் வலுவான சக்தியாக, உருவாகி வருகிறது மத்யபீடம்."

*　　*　　*

கட்சி ஒன்று! கட்சிக் கட்டுப்பாடு!!—என்பவைகளைக் காரணமாக வைத்து, அகில இந்தியாவையும் ஆட்டிப்படைக்கும் வலுவான பீடமாக வளர்ந்து வருகிறது டில்லி, என்கிருர் மேனன.

எங்காவது தமது கட்சியைத் தவிர்த்து ஒரு கட்சி வந்தால், அதனைச் சாய்க்கத் தம்வசமுள்ள அதிகாரம்—ஆள்பலம் — அனைத்தையும், செலவழிக்கும் டில்லி என்பதை இதோ கேரளத்தில் பார்க்கிறேம்.

உணவுப் பொருளைக்கூட அனுப்ப மறுக்கிறது, மத்திய சர்க்கார் — என்கிருர்கள் கம்யூனிஸ்டுகள்.

இந்தியா முழுவதையும் ஒன்ருக வைத்துத் தமது காங்கிரஸ் கட்சியை 'ஏஜண்டாக' வைத்து ஆளவேண்டும் என்பதுதான் டில்லியின் ஆர்வமாகும்.

எங்காவது தன்னினம், தன் மொழி, தனது சர்க்கார் என்கிற உணர்ச்சி தலைதூக்குமாளுல் சாகசம் வீசப்படுகிறது—சரசத் தூது நடத்தப்படுகிறது. அதையும் மீறி மாற்றுக்கட்சி பலமுள்ளதாகிவிடின், அதைச் சாய்க்க டில்லிச் செங்கோலை வீசுகிருர்கள்.

இந்திய உபகண்டத்தைத் தம் வசத்தில் வைத்திருக்க, உலக நாடுகளிலுள்ள ஏனைய ஏகாதிபத்தியங்களைவிடச் சரியானதும், பலமுள்ளதுமான ஆயுதத்தை வைத்திருக்கிறது, டில்லி ஆதிக்கம். அந்த ஆயுதம்தான், இந்திய ஒற்றுமை எனும் சொல்! அதை ஏந்தும் எடுபிடிதான் காங்கிரஸ் கட்சி!!

இந்த உண்மையை இப்போதாவது, 'காம்ரேடுகள்' உணர வேண்டும். வட்டாரத்துக்கான முழு சுதந்திரமும் பெற்றுத்தரப் பாடுபடவேண்டும்.

கேரளம், இதைத்தான் காட்டுகிறது.

பிறப்பு

மதுராந்தகம் வட்டம் கொளத்தூர் கோதண்டம் துணைவியார் தோழியர் பிரபாவதி 27—10—58 திங்களன்று ஒரு ஆண் மகனுக்குத் தாயானுர்கள்.

★ கண்ணீர் பேசுகிறது! ★

"நாடா இது காடா?" என்ற கேள்வி பிறந்து "ஆட்சி நடக்கிறதா?" என்ற அவல ஒலி எழும்பிக் கூக்குரலும் சாக்குரலும் பேய்க் குரலும், பல்லிப் பெருகி இன்று எல்லாம் ஓரளவு ஓய்ந்து அமைதிநிலவுகிறது இலங்கையில். இந்த அமைதி தொடர்கதையாக இருக்கவேண்டும்; அதுவே எல்லோரது அவாவுமாகும்.

என்றாலும் சென்றுபோன நிகழ்ச்சிகள்! கண்கண்ட வேதனைகள்! அம்மவோ! எண்ணிலே இதயம் வலிக்கிறது! உள்ளம் குமுறுகிறது!

* * *

எட்டுத் திக்கிலும் கொடிகட்டிப் பறந்தானும்! ஆனால் வெட்டிப் போட்ட பிறகும் கேட்க நாதியற்ற தமிழனைத்தான் நாம் கண்டோம்! கொழுந்துவிட்டெரியும் தீ நாக்குகள் தமிழன் குடிசைகளை மட்டுமே சுற்றி வளைத்தன! கடைகள் சூறையாடப்பட்டன! வெறித்தனம் தலைவிரித்தாடியது! வேதனையின் எல்லையிலே நின்று தடுமாறினான்! தத்தளித்தான்! தமிழன் செத்தொழிந்தான்! பகலிலே கொள்ளை! தீவட்டிக் கொள்ளை! மாடுகள் மேய்ந்தன! வேலிகளும் கூடவே மேய்ந்தன! அலறித் துடித்த தமிழர்களின் அவல ஒலி நாடெங்கும். தெருவிலே! நடு வீதியிலே! நகர மத்தியிலே! பலர் பார்த்திருக்கத் தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். படையெடுத்து வருவது போல் கொலைக்கருவிகளேந்திய கொடியவர் கூட்டம் நகரெங்கும் வலம் வந்தது.

தலையில் கல்வைத்தான், மலையில் கொடி வைத்தான், கொடியில் வில் வைத்தான் தமிழன்! இன்றவன் தமிழன் என்ற சொல்லை வைத்த காரணத்தால் அவன் தலையை மண்ணில் வைத்தான் ஈழத் திருநாட்டான். வெங்கொடுமைச் சாக்காட்டில் வீழ்ந்திட்ட தமிழன் இரத்தம் காவிரிபோல் தெருவெங்கும் ஓடியது.

கிடைத்திட்ட சேதியெல்லாம் நம் நெஞ்சைத் துளைத்திட்ட தீ! செந்தீ! குந்தியிருந்த கிழவியொருத்தி கொள்ளையர்கள் இட்ட தீயால் குடில் எரியும் போது கூடவே எரிந்தாள்!

*

தொட்டிலிலே தூங்கிக்கொண்டிருந்த தங்கக் கட்டியைத் தீயவர்கள் சிலர் சேர்ந்து தூக்கியெறிந்ததைக் கண்டு ஓடிவந்த தாயொருத்தி நிலைப் படியில் தலை இடித்த காரணத்தால் விழுந்தாள்; செத்தாள்!

பற்றியெரியும் வீட்டுக்குள்ளிருந்த பெற்றவளைப்பார்க்கப்பள்ளியிலிருந்து ஓடிவந்த சிறுவன் பாதையிலே புறமுதுகில் குத்தப்பட்டான்; விழுந்து துவண்டான்; மாண்டான்.

புல்மலையிலே பதுங்கி மறைந்திருந்த தோட்டத்து முதியவர் தன் பேத்தியைப் பாதுகாக்க ஓடிவந்தார்; ஓங்கிய பெருந்தடி அவர் கழுத்திலே ஒய்ந்தது!! ஓடிவந்தவர் சாய்ந்தார் மாய்ந்தார்.

கொழும்புத் தோழர்
பூங்கா. மான்
தீட்டியது.

பதுளைமாநகரிலே பாங்கில் பணம் போடச்சென்ற ஒரு சிறுவன் இருபது வயதுகூட நிரம்பாத இளங்குருத்து, அடிவயிற்றிலேயிருந்து நழுவிக்கொண்டிருந்த குடலைக் கையால் தாங்கிப் பிடித்துக்கொண்டே ஓடிவந்தான்! தெருவெங்கும் சாரையைப்போல் விரியன்போல் குடல்மாலை இழுபட்டது! அந்தக்கொழுந்து விழுந்தான்; செத்தான்!

பள்ளி சென்ற தங்கை பாதையிலே மறிக்கப்பட்டாள் என்ற சேதி கேட்டு வீட்டில் மறைந்திருந்த அண்ணன் வெளியே ஓடிவந்தான்! அதற்குள்ளே வீடு பற்றி எரிந்தது! பற்றி எரியும் வீட்டுக்குள்ளே பெற்றெடுத்த தாய்! வெளியே உடன்பிறந்தவளை அள்ளவரும் 'பேய்!' என்ன செய்வான்? யாரைக் காப்பாற்றுவான்.........!

*

ஐயகோ! கொடுமை இம்மட்டோ! எண்ணவும் எழுதவும் முடியாத கோரங்கள் எத்தனை எத்தனையோ! இத்தனைக்கும் காரணம் இலங்கையின் ஆட்சிப்பீடமேறியவர்கள்தான். புதுமலர்ச்சி பெற்ற பூங்காவில் மதயானை புகுந்ததுபோல் நாடு காடாகி விட்ட நிலைக்கு முழுக்காரணமும் அவர்கள்தான். ஈழத்திருநாட்டில் தமிழ்முரசு ஒலிக்கவே கூடாது என்ற எண்ணத்தோடு ஆணவத்தின் கொடுமுடியில் நின்று கூத்தாடியது அரசு. நாடோடிமன்னர்கள் அவர்களின் தோளிலே தொத்திக்கொண்டார்கள். நாடு காடாகியது. இன்னும் கூட கொடுமையின் முழு உருவும் நமக்குப் புலப்படவில்லை. சட்டத்தின் துணைகொண்டு ஊரையே ஊமையன் கோட்டையாக்கிவைத்துள்ளார்கள் ஊரான்வோர். எனவேதான் என்னென்ன கொடுமைகளோ எங்கெங்கு நாசமோ என்று எண்ணித் தவிக்கிறோம் நாம்.

ஆயிரத்து முன்னூற்று அறுபத்தொருவீடுகள் நாசமடைந்தனவாம்! அதிலே ஒண்ணுமில்லாமல் மண்ணாகி அடியோடு நாசமாகி விட்டவைகள் எழுநூற்று எண்பத்திரண்டு. தொழிலைவிட்டுக் கைப்பொருளை இழந்து தெருவிலே நின்று திண்டாடுகிறவர்கள் இருநூற்று இருபத்தாறுபேர். குட்டிச்சுவர்களாகிக் காட்சியளிக்கும் நகரை அழகுபடுத்திய வர்த்தக நிலையங்கள் தொளாயிரத்து ஏழாம்! கொள்ளையிடப்பட்டுத் தீயிடப்பட்டுச் சேதமுற்று நாசமுற்ற பொருட்களின் மொத்த மதிப்பு ஏறத்தாழ எழுபத்துஐந்து இலட்சமாம்! இன்னும் எவ்வளவோ நாமறியோம். கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதைப் புள்ளிவிவரமாக்கிப் பாராளுமன்றத்தில் வெளியிட்டுள்ளார் பிரதமர்.

இவ்வளவுதானா என்று கேட்கத் துணியவில்லை நாம். எவ்வளவாயினும் சரியே, இருள் விலகினால் போதும். அமைதி நிலைக்கட்டும். நல்லெண்ணமும் நல்லுறவும் வளர ஆட்சியாளர் முன்வந்து செயலாற்றினால் போதும்.

★

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

திராவிடநாடு

9—11—58 | வார வெளியீடு | விலை 16 காசு

நாட்டை மீட்பீர்!

(கும்பகோணத்தான்)

எந்நாட்டார் அந்நாளில் கடல்க டந்து
எழிலான தொழில்செய்து; உலகோர் போற்ற
பொன்னோடும் பொருளோடும் பண்பும் சேர்த்துப்
புகழ்மிக்க முத்தெடுத்து, கிரேக்க நாட்டுக்
கன்னியரின் மேனிதனில் பூட்டி யின்பங்
கண்டிட்டார்! அறிந்திடுவீர் உண்மை தன்னை!
என்றேநீர் இன்றிங்கே தென்ன கத்தீர்!
இயம்புவதில் பயனில்லை! உண்மை ஓர்மின்!

காலத்தின் வேகத்தால் கரைந்தி டாத
கவினாறும் புகழதுவாம்! எனினு மிந்த
ஞாலத்தில் எத்தனையோ மாறு தல்கள்
நாள்தோறும் நடப்பதனை ஏன்ம றந்தீர்!
பாலொத்த மொழிபேசும் பண்பு ளாரைப்
பலகாலும் பெற்றிட்ட தமிழ மக்காள்!
சீலமெலாம் இழந்தின்று வடவர் தம்தாள்
சிரமீது கொண்டிருத்தல் நன்றோ சொல்வீர்!

எத்தனைதான் எடுத்துரைத்தும் ஏனோ கேளீர்!
இன்னமுமா உம்போதை தீர வில்லை?
கத்துகிறோம் நாவரள யாருக் காக;
களங்கண்டு புகழ்கொண்ட தமிழர்; தங்கள்
முத்தனைய வாழ்வுதனை மீண்டும் பெற்று
முழுமதிபோல் இவ்வுலகில் புகழ டைந்து
சித்தமெலாம் களித்திடவே யன்றோ! இந்தச்
சிறுஉண்மை மனங்கொள்வீர்! நாட்டை மீட்பீர்!!

அமெரிக்காவிலும் ஒரு 'கோட்சே'!

அணுகுண்டு!

நீர்வளிக்குண்டு!

செயற்கைக் கோளங்கள்!

சந்திரனை எட்டிட ஓர் கருவி!

அதனை முட்டிப் பிளந்திட மற்றொன்று!

சூரியனின் வெப்பத்தைச் சேர்த்துவைத்து, உலகிற்குப் பயன் தரத்தக்க சிட்டா!

—இத்தகைய வியத்தகு சாதனைகளைச் செய்துகொண்டிருக்கிறான் மனிதன்! இயற்கையை எந்தெந்த வகைகளிலே வெல்ல முடியும்—அதன் பல்வேறு சக்திகளை, படைப்புகளை, எப்படியெப்படி எல்லாம் வாழ்க்கைக்குப் பயன்படுத்திட இயலும் — என்ற ஆராய்ச்சிகள் விநாடிக்கு விநாடி வேகமாக, நமது கற்பனைச் சக்தியையும் கடந்து வளர்ந்து வருகின்றன.

நம்மாலே நம்ப முடியாதவையெல்லாம் நடத்திக் காட்டப்படுகின்றன — மந்திர சக்தியாலல்ல! மனிதனின் ஆராய்ச்சித் திறனின் விளைவாக!

வானுலகில் திகழ்கின்ற பற்பல கோள்களுக்கும் நமக்குமிடையே இருக்கின்ற தூரமென்ன என்று ஆராய்ச்சி செய்து, இந்தத் தூரத்தை எவ்விதம் கடந்து விண்ணுக்கும் மண்ணுக்கும் பாலம் அமைப்பது என்ற ஆராய்ச்சிகளில் அதி தீவிரமாக ஈடுபட்டிருக்கிறான் மனிதன்.

ஆனால் ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்குமிடையேயிருக்கின்ற தூரத்தை, ஒரு நிறத்தான் மற்றொரு நிறத்தானுடன் பழகவோ, தொடர்பு கொள்ளவோ கூடாது, இயலாது, என்றிருக்கிற நிலைமை, மாற்றியமைத்திட இன்னமும் ஏனோ போதிய அளவு முயற்சிகள் எடுக்கப்படவில்லை!

* * *

நிற வேற்றுமை

இந்த வேற்றுமை இன்று உலகின் பற்பல மூலைகளில் தலைவிரித்து ஆடுவதைப் பார்க்கிறோம்.

அமெரிக்காவில்!

இங்கிலாந்தில்!

ஆப்பிரிக்காவில்!

ஆஸ்திரேலியாவில்!

— இங்கெல்லாம் நிறவேற்றுமையும், அதன் பயனாகப் பற்பல போராட்டங்களும், நாகரிக சகாப்தம் என்று கருதப்படுகிற இந்த இருபதாம் நூற்றாண்டில் இருப்பதனைக் காண்கிறோம்.

மலான், கிரிப்ஸ், ஸ்டிரிட்ஜடம் இவர்களின் நிறவெறிக் கொள்கைகளால் வெள்ளையர்களுக்கும் நீக்ரோக்களுக்கும் இடைவிடாத போராட்டம் நடைபெறுகிறது, ஆப்பிரிகாவில்!!

"வெள்ளை அறிக்கை"யின் மூலம் வெள்ளையரல்லாத மற்றவர் குடியேறுவது தடுக்கப்பட்டிருக்கிறது ஆஸ்திரேலியாவில்!

M. S. வெங்கடாசலம், M. A.

அண்மைவரை நிறவெறிப் போராட்டங்களிலிருந்து விடுபட்டிருந்த நாடான இங்கிலாந்திலும் இப்போது கலகங்கள், கிளர்ச்சிகள்!

வெள்ளையர் பள்ளிகளில் நீக்ரோ மாணவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை, அமெரிக்காவின் சில பகுதிகளில்!

வெள்ளையர்களுக்கும் நீக்ரோக்களுக்குமிடையே இருக்கிற போராட்டம் ஆப்ரகாம் லிங்கன் காலத்தில் ஏற்பட்டதைப்போல், மற்றொரு உள்நாட்டுப்போரை அமெரிக்காவில் ஏற்படுத்திவிடுமோ என்று அஞ்சத்தக்க அளவுக்கு சூழ்நிலைகள் நாளுக்கு நாள் ஏற்பட்டு வருகின்றன.

அமெரிக்க மத்திய அரசாங்கத்துக்கும், நிறபேதத்தை நீடிக்க விரும்புகின்ற மாநிலங்களுக்குமிடையே மிகப் பெரியதோர் போராட்டம், மறைமுகமாகவே நடைபெற்று வருகின்றது.

ஏறக்குறைய 5 ஆண்டுகளுக்கு முன், நிறவேற்றுமை சம்பந்தப்பட்ட வழக்கொன்று அமெரிக்க உயர்நீதி மன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

"பள்ளிகளில் வெள்ளையர்களின் குழந்தைகள், கருப்பர்களின் குழந்தைகள் எனப் பாகுபாடு செய்வது சமத்துவ வாய்ப்புக் கொள்கைக்கும், அமெரிக்க அரசியலமைப்புக்கும் முரண்பாடானது" என்று ஒருமித்த தீர்ப்பளித்தது நீதிமன்றம்!

அவ்வளவுதான்! ஆத்திரம் கொண்டனர் வெள்ளையர்கள்! "ஆகா, இது அடுக்குமா! நாமெங்கே, நமது எடுபிடிகளாக நேற்றுவரை இருந்து வந்த கருப்பர்களெங்கே! இருவரும் ஒன்றுவதாம்! இயலுமா இது!" என்று வெளிப்படையாகவே, பேசப்பட்டது பலரால்!

அங்கங்கே "வெள்ளையர் சங்கங்கள்" நிறுவப்பட்டன, நிறவேற்றுமைக்கு ஆதரவு திரட்டுவதற்காக! வர்த்தகர்களும் வழக்கறிஞர்களும் அரசாங்கப் பணியாளரும் ஆலைத் தொழிலாளரும், மதத் தலைவர்களும் மற்றுமுள்ளோரும், இந்தச் சங்கங்களில் இடம் பெற்றார்கள். தனித்து வாழ்தல் தங்கள் பிறப்புரிமை என்று வாதாடத் துவங்கினார்கள்!

வாதாடுவதோடு அவர்களது பணி முடிந்துவிட்டதாகக் கருதவில்லை அவர்கள்! அணுகுண்டை முதன் முதலில் உபயோகித்த வாய்ப்பைப் பெற்றுக்கொண்ட நாட்டின் புத்திரர்களாயிற்றே அவர்கள்! 'அமைதி'யான வழிகளையா கடைபிடிப்பார்கள்?

எங்கெங்கோ இருந்து கலகம் விளைவிப்போரையும், குண்டர்களையும் வரவழைத்து, நீக்ரோக்களுக்கு எதிராக அவர்களைத் தூண்டிவிட்டார்கள் என்று, இங்கிலாந்திலிருந்து வெளிவரும் "மான்செஸ்டர் கார்டியன்" என்னும் இதழில் (18—9—58) அலிஸ்டார் குக் என்பவர் வெளிப்படையாக ஒப்புக்கொள்கிறார்!

(4-ம் பக்கம் பார்க்க)

பதவி ஆசை!

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [9—11—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 1

இன்றைய ஆட்சியில் மிகச் சுலபமாகக் கிடைக்கின்ற பொருள் 'அறிவுரை' ஒன்றுதான். மக்களுடைய பசித்த வயிற்றுக்கு உணவு, வாழ்க்கைக்கு வேண்டிய பிற தேவைகள் இவை கிடைக்கின்ற வழி காணோம். ஆனால் அறிவுரை மட்டும் அளவின்றிக் கிடைக்கின்றது. ஆட்சிப்பொறுப்பு ஏற்றவர்கள் நாட்டை நல்ல முறையில் ஆளுவதைவிட அறிவுரை வழங்குவதே தங்கள் கடமை என்று எண்ணியவர்களைப்போல மடைதிறந்த வெள்ளம்போல் தடையேதுமின்றி அறிவுரை மழையெனப்பொழிகின்றனர்.

மரத்திலே செல்லரிப்பதுபோல், காங்கிரஸ்காரர்களின் மனத்திலே தீமை புகுந்துவிட்டது. செல்லரித்த பகுதியைச் செதுக்கிக் கீழே தள்ளிவிட வேண்டும். மனத்தைத் தூய்மைப்படுத்தினால் போதும். இது மிகச் சிரமமான பணி செல்லுக்கு மருந்துபோட்டால் அது ஒழியும். ஆனால் மனமோ அத்துணை விரைவில் தூய்மை பெறுவதில்லை. அதிலும் இன்று உள்ள நிலைமையில் காங்கிரஸ் கட்சிக்குள் இருப்போர் மனத்திலே தீமை புகுந்தவர்களாக அல்ல, மனமே இல்லாதவர்களாக மாறிவிட்டனர். எனவேதான் அவர்களுக்கு எந்த மருந்தும் இனிப் பயன்படாது என்ற நிலைக்கு முற்றிவிட்ட நோய்போல், இனித் திருந்த இடம் இல்லை என்று சொல்லும் அளவுக்கு அவர்கள் வந்துவிட்டனர்.

ஆனாலும் வீட்டுக்குரியவனுக்கு எப்படியாவது செப்பனிட்டுவிடலாம் — புதிய வீடு கட்டுவதைவிட அது எவ்வளவு செலவும் குறைவு, உழைப்பும் குறைவு—என்று தோன்றுவதைப்போல், காங்கிரஸ் தலைவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சீர்திருத்திவிடலாம் என்று அறிவுரை மருந்து தருகின்றனர்.

இதிலே பரிதாபமான நிலைமை என்னவென்றால் ஆளுக்கு ஒருவகையான அறிவுரை — நேரத்துக்கு ஒருவகையான அறிவுரை தருகின்றனர். இத்தனை குழப்பம் ஏனோ தெரியவில்லை?

காங்கிரஸ் கெட்டுவிட்டது என்பதை இன்று காங்கிரஸ் தலைவர்களே பலமுறை சொல்லுகின்றனர். நேரு சொல்லுகிறார்; தேபர் சொல்லுகிறார்; முன்ஷி சொல்கிறார்; மற்றவர்களும் சொல்கிறார்கள். அவர்கள் சொல்வதைக் கேட்கும்போது, சொல்லும் அந்த ஒருவர் நீங்க மற்றக் காங்கிரஸ்காரர் அத்தனை பேரும் கெட்டுவிட்டதாகத் தோன்றும். ஆம் நடுநிலையோடு பார்க்கும் ஒருவர்க்கு ஒருவரும் ஒழுங்காக இல்லை என்பது தெளிவாகத் தெரியும்.

அது எப்படியேனும் போகட்டும், சொல்லுகின்ற அறிவுரையையேனும் ஆளுக்கு ஒருவகையாகச் சொல்லாமல் அனைவரும் ஒரே அறிவுரை சொல்கிறார்களா எனின் அதுவும் இல்லை.

இதோ இற்றுப்போய்விட்டதே, இந்தத் தூணை எடுத்துவிட்டுப் புதிய தூண் வைக்கலாம் என்று ஒருவர் சொல்கிறார். உடனே இன்னொருவர் கூடாது, 'அது தப்பு, முதலில் புதிய தூணை வைத்துப் பொருத்திவிட்டுத்தான் பழைய தூணை எடுக்க வேண்டும்' என்கிறார். இன்னொருவர் 'இல்லை, இல்லை தூணுக்கு என்ன இப்போது அவசரம்! முதலில் துண்டு துண்டாக உதிர்கிறதே உத்திரம் அதைக் கவனியுங்கள்' என்று ஆளுக்கு ஒரு அறிவுரையை வழங்குகின்றனர். இப்படிப்பட்ட நிலைமையில், வீடு என்ன ஆகுமோ, அந்த நிலைக்குக் காங்கிரஸ் கட்சி விரைவில் வந்துசேரும்.

இந்தூரில் நடந்த காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டத்தில் பேசும்போது நேரு பண்டிதர் காங்கிரஸ் ஸ்தாபனத்தில் இளைஞர்கள் பணியாற்ற இடம் தர வேண்டும் என்று அறிவித்திருக்கின்றார்.

இன்று காங்கிரசில் வயோதிகரே மிகுந்திருக்கின்றனர். வாலிபர் அந்த நிறுவனத்தை நாடுவதும் இல்லை. அதனால் நாளுக்கு நாள் அது தண்ணீரில் கரையும் மண் குதிரையைப்போல் கரைந்துகொண்டிருக்கின்றது. இதே கவலையால் நேரு இளைஞர்கள் வந்து வளர்க்கவேண்டும் என்று கவலையோடு அழைப்பிதழ் தயாரிக்கின்றார்.

எந்த ஒரு அமைப்புக்கும் இளைஞர்களே இன்றியமையாத வலிவைத் தருபவர்களாகும். ஏன் எனின் வற்றாத ஊற்றுப்போல் இளைஞர்கள்தான் ஆற்றலைச் சேர்த்துத் தருபவர்கள். அதை உணர்ந்த நேரு பண்டிதர் வயோதிகர்களின் காலத்திற்குப் பின் காங்கிரஸ் கட்சி வளரவேண்டுமானால் அதற்கு இளைஞர்களின் கூட்டுறவு தேவை என்பதை உணர்ந்து ஊழியர்களிடையில் போகும்போது இளைஞர்கள் பணியாற்ற இடம் தரவேண்டும் என்று பேசுகிறார்.

'இளைஞர்களே, எதிர்காலத் தலைவர்களே வாருங்கள் — நாடு உங்கள் உழைப்பைத் தேடுகின்றது' என்று அவர் கூறியழைக்கவில்லை.

இளைஞர்களுக்கு இடம் தரவேண்டும் என்று சொல்கிறார். இடம் தரவேண்டும் என்றால் இப்போது அந்த இடத்திலே சிலபேர் குடிகொண்டிருக்கின்றார்கள்; அவர்கள் அதனை உரிமையாக்கிக் கொள்ளாமல் நகர்ந்து வழிவிட்டு இளைஞர்களுக்கு

(15-ம் பக்கம் பார்க்க)

2-ம் பக்கத் தொடர்ச்சி

ஆனால் வெள்ளையர்களுடைய இந்த முயற்சிகளெல்லாம் தோல்வியடைந்தன.

எனினும் போராட்டங்கள் முடிவடைந்தபாடில்லை. நிறவேற்றுமைக்கு ஆதரவாக இருக்கின்ற வர்ஜீனியா போன்ற மாநிலங்கள், அமெரிக்க மத்திய அரசாங்கக் கட்டளையை ஒதுக்கித் தள்ளிவிட்டு, தங்களுடைய சட்டங்களையும், தங்கள் பகுதிகளிலுள்ள பழக்க வழக்கங்களையும் நடைமுறைக்குக்கொண்டு வருவதற்கான உரிமை, சிற்சில துறைகளில் மாநிலங்களுக்குத் தரபடவேண்டும் என்று வாதாடத் துவங்கின.

இத்தகைய மறைமுகமானதோர் போராட்டத்தின் மற்றொரு கட்டத்தை அண்மையில் உலகம் கண்டிட நேரிட்டது!

அர்கன்சாஸ் பகுதியைச் சேர்ந்த "லிட்டில்ராக்" என்னுமிடத்திலுள்ள ஒரு உயர்நிலைப்பள்ளி, நீக்ரோ மாணவன் ஒருவனுக்கு இடமளிக்க மறுத்தது. எனவே அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசாங்கம் அந்தப் பள்ளியின் நிர்வாகக் குழுவின் மீது வழக்குத் தொடுத்தது!

வழக்கின் முடிவு என்ன ஆகுமோ என்று அகில உலகமும் ஆவலோடு எதிர்பார்த்தது!

"அர்கன்சாஸ் அரசாங்கம், தன்னால் நடத்தப்படுகிற பள்ளிகள் அனைத்திலும் உடனடியாக நிற ஒற்றுமையை ஏற்படுத்தியாக வேண்டும்" என்று தீர்ப்பளித்தது உயர்நீதிமன்றம்!

தனித்து வாழ்ந்திட இயலும்' கறுப்பர்களோடு கலந்து உறவாட வேண்டிய சூழ்நிலையை எப்படியும் தவிர்த்திட முடியும் என்று இதுவரை ஓரளவாவது நம்பிக்கை கொண்டிருந்த அனைவரது ஆசையிலும் மண் விழுந்தது.

அமெரிக்க உயர்நீதிமன்றத்தை அகில உலகும் போற்றியது! இனி நிறவேற்றுமைகள் அமெரிக்காவில் ஒழிக்கப்பட்டுவிடும் என்று, ஆர்வத்தோடு ஆருடம் கணித்தவர் பலர்!

ஆனால் வெள்ளையர்கள் அவ்வளவு எளிதில், விரைவில் விட்டுக்கொடுப்பதாக இல்லை! இன்னமும் என்னென்ன ஆயுதங்களைப் பயன்படுத்திட முடியும், எப்படியெப்படியெல்லாம் தங்களது தனித் தன்மையைக் காப்பாற்றிக் கொள்ள இயலும், என்றெல்லாம் ஆராய்ச்சி செய்வதில், அளவு கடந்த ஆர்வம் காட்டினார்கள்!

அதன் பயனாக அர்கன்சாஸ் மாநில சட்டமன்றத்தில் புதிய தோர் சட்டம் நிறைவேற்றப்பட்டது!

அந்தச் சட்டத்தின் மூலம் அந்த மாநில கவர்னர் பாபஸ் என்பவருக்குப் புதிய புதிய அதிகாரங்கள் வழங்கப்பட்டன — அனைத்தும் நிறைவேற்றுமையை நீடிப்பதற்காக!

* * *

இவ்வளவு தூரம் திட்டமிட்டு வெள்ளையர்களால் இழைக்கப்படும் அநீதியை எதிர்த்து நீக்ரோக்களும் ஆங்காங்கே கிளர்ச்சிகளை நடத்திக்கொண்டுதான் வருகின்றனர்.

ஆனால் அண்மைவரையில் அவர்களுடைய உரிமைக்காகப் போராடுவதற்கான பலம் வாய்ந்த அமைப்புக்களோ, திறமையான தலைவர்களோ கிடைத்திடவில்லை!

"கறுப்பர்கள் முன்னேற்றச்சங்கங்கள்" ஆங்காங்கே நிறுவப்பட்டன! ஆனால் அவற்றின் செல்வாக்குப் போதுமான அளவு வளரவில்லை! நீக்ரோக்களுக்கு நம்பிக்கையும் பற்றுதலும் ஏற்படும் வகையிலே அவற்றால் பணியாற்றிட இயலவில்லை!

எனவே அவர்களும் பற்பல இடங்களில் போராட்டங்களில் இறங்கினார்கள்!

அவற்றில் ஒன்று மான் காமரி என்ற மாநிலத்தில் நடைபெற்ற போராட்டம்!

அந்த மாநிலத்தில் ஒரு வழக்கம் உண்டாம்! நீக்ரோக்களெல்லாம் பஸ்களின் பின் பகுதியிலேதான் அமரவேண்டுமாம்— முன் பதிக்கு வரக்கூடாதாம்!

இந்த வழக்கத்தை உடைத்தெறிவதற்காக "பஸ்களின் முன் பகுதிகளில் இடம் பிடித்துக் கொள்ளும் போராட்ட"த்தில் ஈடுபட்டனர் பல நீக்ரோக்கள்.

(13-ம் பக்கம் பார்க்க)

ஒரு வேண்டுகோள்

சில பதிப்பகங்கள் என் அனுமதியும், ஒப்புதலும் பெறாமல், நான் எழுதியுள்ள கதைகள், கட்டுரைகள் ஆகியவற்றினைப் புத்தகங்களாக வெளியிட்டிருக்கிறார்கள்.

இதுகுறித்துச் சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதுபோல் வெளியிடப்பட்டுள்ள புத்தகங்கள், பெரிதும் நான் எழுதாததையும், எழுதியதைத் திரித்தும் தாறுமாறான முறையில் வெளியிடப்பட்டு வருகின்றன.

ஆகவே என் அனுமதி பெறாமல் வெளியிடப்படும் மேற்படி புத்தகங்களில் காணப்படும் கருத்துகளுக்கு நான் பொறுப்பு அல்ல என்பதைப் பொதுமக்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட போலிகளைப் பொதுமக்கள் ஆதரிக்கக் கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

சில தினங்களுக்கு முன்பு, மதுரை செல்வம் பதிப்பகம், **பரிசு — அன்பளிப்பு — வாழ்வு — வாழ்த்து** என்ற பெயரில் நான் எழுதியதாகப் புத்தகங்கள் வெளிவருவதாக விளம்பரப்படுத்தி இருக்கிறார்கள்.

மேற்படி பதிப்பகத்தாரிடம் நான் எந்தப் புத்தகம் வெளியிடும்படியும் அனுமதி அளித்ததில்லை. பொதுமக்கள் போலிகளை ஆதரிக்காமலிருக்க வேண்டுகிறேன்.

சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அன்பன்,

அண்ணாதுரை

கல்விவளர வழிசெய்யுங்கள்

மக்கள் செல்வன்

ஒரு தாய் பல ஆண்டுகள் குழந்தையில்லாமல் இருந்து பல சிகிச்சைகளுக்குப்பின் ஓர் குழந்தையைப் பெற்றாள். பிறந்த குழந்தையோ ஊமையாகவும், குருடாகவும் இருந்தது. அதைக் கண்டு தாய் வருந்தவில்லை, ஆனால் உற்றாரும், மற்றோரும் வருந்தாமல் இருக்க முடியுமா? அந்தத்தாயைப்போலநமது கல்வி அமைச்சரும் பல ஆண்டுகள் பரிசீலனை செய்து ஓர் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார். தாய் பெற்ற குழந்தையைப் போல இக் கல்வித்திட்டமும் நாட்டிற்கு நன்மை பயக்கக்கூடிய நல்லதோர் கல்வித்திட்டமாக அமையவில்லை. இது குறித்து அமைச்சர் மகிழலாம்! ஆனால் நாடும் நாமும் மகிழ முடியுமா?

இத்திட்டத்தால் இப்பொழுதிருக்கிற கல்வியின் தரம் இனனும் குறையும். ஆசிரியர் சமுகத்தில் வேலை இல்லாத் திண்டாட்டம் நீடிக்கும். கிராமாந்திரங்களில் கல்வியின் வளர்ச்சி குறைய வழி இருக்கிறது.

முன்பு ஓர் ஆசிரியருக்கு 20-மாணவர்கள் எனற விகிதம் இருந்தது. மாணவர்கள் குறைவாக இருந்ததால் போதனை செய்ய இலகுவாக இருந்தது. முன்பு இருவர் போதிக்கவேண்டிய எண்ணிக்கையுள்ள மாணவர்களுக்கு இப்பொழுது ஒரு ஆசிரியர்தான் போதிக்கவேண்டும். இதனால் கல்வியின் தரம் குறையும் என்பதில் ஐயமில்லை.

அரசியலாரின் புதிய உத்தரவில் ஒரு ஆசிரியருக்கு 35-என்ற மாணவர்விகிதம் உள்ளது. அந்த வகுப்பில் 35-க்குமேல் 70-க்குக்கீழ் எத்தனை மாணவர்கள் இருந்தாலும் அந்த ஒரு ஆசிரியரே போதிக்க வேண்டும. முன்பு 36-மாணவர்கள் இருந்தால் இருவர் வேலை செய்யலாம. இப்பொழுது 70-மாணவர்கள் இருந்தால்தான இருவர் வேலைசெய்ய முடியும். எனவே ஒரே ஆசிரியர்தான் 35-முதல் 69-மாணவர்கள் வரை போதிக்கவேண்டும். இது சாத்தியமா? சிந்தித்துப் பாருங்கள்? நீங்கள் எண்ணக்கூடும், உயர்நிலைப்பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் அதிக எண்ணிக்கையுள்ள மாணவர்களுக்குப்போதிக்கவில்லையா என. உண்மைதான், அம்மாணவர்கள் நிலைமைவேறு, அவர்கள் உலகம் புரிந்தவர்கள், ஆசிரியர் போதனை செய்யாவிட்டாலும் தாமாகவே படித்தறியக்கூடிய தகுதி பெற்றவர்கள். ஆனால் ஆரம்பப் பள்ளிகளில் அப்படியல்லவே! அதுவும் முதல் மூன்று வகுப்புகளில் ஆசிரியர் உடனிருந்தே ஒவ்வொரு மாணவனை படிக்க, எழுதக் கவனிக்கவேண்டும். அவர்கள தாமாக எதுவும் செய்ய இயலாது. இதில் 70-மாணவர்களுக்குப் போதிப்பதென்பது முடிகிற காரியமா? என மீண்டும் சிந்தித்துப் பாருங்கள்?

முன்பு 1:20-என்ற மாணவர் விகிதம் இருந்தபோதே பள்ளி இலாபம் 30%, நட்டம் 40%. என்றும் திருப்திகரமான தேர்ச்சி இல்லை என்று அரசியலார் புள்ளி விபரம் கூறுகிறது. இப்பொழுது 1:35 என்று மாணவர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கினால் தேர்ச்சி மிகக் குறைவதுடன் பொது மக்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இடையில் வெறுப்புணர்ச்சிதான் அதிகரிக்கும். அரசினர் கணக்கில் பள்ளி செல்பவர் தொகை ஏறுமேதவிரக் கல்வியின் தரம் உயராது.

கீழ்நிலைக் கல்வி சரியில்லையேல் மத்தியதரக் கல்வியும், மேல்நிலைக் கல்வியும், பல்கலைக் கழகக் கல்வியும் எதிர்பார்க்கும் பலனை நாட்டிற்கு வழங்க இயலாது. இது அரசியலாரின் கல்வி சீர்திருத்தக் கொள்கையின் குறையேயன்றி ஆசிரியர் குறையிலலை. நிதிநிலை குறைவென்றும், ஒரு பிள்ளைக்கு ரூபா 24-செலவாகிறது என்றும் கூறப்படுகிறது. இதில் மராமத்து இலாக்கா ஏற்கவேண்டியகட்டிடச் செலவும், உணவு இலாக்கா ஏற்க வேண்டிய பகல் உணவுச்செலவும் சேர்க்கப்படுகின்றன. இவை நீக்கப்பட்டு விதாச்சாரம் உயர்த்தப்படாமல் அதிகப்படி ஆசிரியர்களை நியமித்து அதிக மாணவர்களுக்குக் கல்வி புகட்ட முடியும். கல்வியின் தரமும் உயரும.

ஒத்த கல்வி, ஒரே பயிற்சி, ஒருமித்த பணி இவ்வடிப்படையை மையமாகக்கொண்ட இடைநிலைத் தகுதிபெற்ற (செகண்டரிகிரேடு) ஆசிரியர்கள் 75%க்குமேல் நாட்டாண்மைக் கழகம், நகராண்மைக் கழகம், ஊராண்மைக் கழகப் பளளிகளில் பணியாற்றி வருகின்றனர். அவர்களுக்குத் தொடக்கநிலை ஆசிரியர்களுக்குரிய (ஹையர் கிரேடு) ஊதியமே கொடுக்கபபடுகிறது. (இந்த நிலைமை தஞ்சை மாவட்டத்தில் உள்ளது. மற்ற மாவட்டங்களைப்பற்றி ஒன்றும் சரிவரத்தெரியவிலலை) இதேதகுதியுள்ள இடைநிலை ஆசிரியர்கள் தனியார் துறை (மேனேஜ்மெண்ட்) பள்ளிகளில் பணியாற்றினால் முழு ஊதியம் கிடைக்கிறது. இதைப பார்க்கும் இடைநிலை ஆசிரியர்களுக்கு உண்மையாக உழைக்க எபபடி மனம் வரும்? ஏதோ நேரத்தைப்போக்கத்தானே தோன்றும். பழிஓர்இடம் பாவம் ஓரிடம் என்பதுபோல் இதனால் பாதிக்கப்படுவது அவர்களிடம் பயிலும் மாணவர்கள்தான். இடைநிலை ஆசிரியர்கள் எந்த நிர்வாகத்தின் கீழ பணியாற்றினாலும் அரசியலார் விதிதப்படி ஊதியமளிக்க வேண்டுமென்று உத்தரவிருந்தும் மேற்படி நிர்வாகத்தினர் கொடுக்க மறுக்கின்றனர். காரணம், முழு ஊதியம் கொடுக்க நிதியில்லை எனற பாட்டைப் பாடுகின்றனர். இதை ஆட்சியாளர் உடன் கவனித்துத் தகுந்த பரிகாரம் செய்யாவிட்டால் இந்த நாட்டு மாணவர்களின கல்வி வெகுவாகப் பாதிக்கப்படும்.

ஒத்த கல்வி, ஒரே பணியாற்றும் தொடக்கநிலை ஆசிரியர்கள் எந்த நிர்வாகத்தின் கீழ்ப்பணியாற்றினாலும் ஒத்த உரிமை, ஊதியம், ஊதிய உயர்வு, விடுமுறை இவை அனைத்திலும் பாகுபாடுகாட்டாது சமமாக நடத்தவேண்டும். நமது அரசு அவ்விதம் செய்யாமல் ஒரு கண்ணில் வெண்ணெயும் மற்றொரு கண்ணில் சுண்ணாம்பும் வைப்பதுபோல் தொடக்கநிலை ஆசிரியர்களிடையே ஊதியஉயர்வு தாழ்வு வைத்துள்ளது. இதனை அரசினர் கவனித்து உடன் மாற்றம் செய்யவேண்டும். இது அவசரமும், அவசியமுமாகும். இதனை அலட்சியமாகக் கருதிக் கொண்டிருந்தால் கல்வியின் வளர்ச்சி பாதித்துக்கொண்டே போகும்.

ஆசிரியர் சமுகத்தைத் தவிர, மற்றெங்கும் வேலையில்லாத் திண்டாட்டம் நீடித்துள்ளது- தமது கல்வி இலாக்காவில்மட்டும் வேலையில்லாத் திண்டாட்டம் இல்லாவிட்டால் தமக்கும், தமது இலாகாவிற்கும் பெருமை இருக்காது என்ற எண்ணத்துடனே என்னவோ, ஆசிரியர் சமுகத்திலும் வேலை இல்லாத்திண்டாட்டத்தை உண்டாக்கிவிட்டார் நமது கல்வி அமைச்சர்! இன்று தமிழகத்தில் குறைந்தது பத்தாயிரத்திற்கு மேற்பட்ட இளம் ஆசிரிய, ஆசிரியைகள் கடன் வாங்கிப் படித்துவிட்டு வேலையில்லாமல் கண்ணீரும் கம்பலையுமாய் வாழ்கின்றனர். இதற்குக் காரணம் மாணவர் விகிதாச்சார உயர்வேயாகும்.

தற்போது ஒரு ஆசிரியருக்கு 35 மாணவர்கள். 70 மாணவர்களுக்கு மேல் இருந்தால்தான் இருவர் வேலை செய்யலாம். 35 முதல் 69 மாணவர்கள் இருந்தாலும் ஒரு ஆசிரியர்தான் வேலை செய்யவேண்டும். இதனால் இரண்டுஆசிரியர்களுடைய வேலை பாதிக்கப்படுகின்றது. ஆசிரியர்களுக்கு வேலை இல்லாததற்கு இதுதான் அடிப்படைக்காரணம்.

பணியாற்றும் ஆசிரியர் ஒருவர் ஒரு திங்களோ, இரு திங்களோ, விடுமுறையில் சென்றால் அந்த ஆசிரியருக்குப் பதில் வேறு ஆசிரியர் யாரையும் போடக்கூடாது. இதனாலும் வேலை இல்லாத் திண்டாட்டம் நீடிக்கிறது.

ஓர் ஆசிரியர் வேலையிலிருந்து விலகினாலோ, ஓய்வு பெற்றாலோ, அல்லது இறந்துவிட்டாலோ அந்தக்காலிஇடத்திற்குஆசிரியர் போடவேண்டுமென்றால், அந்த வகுப்பிலும், மற்ற எல்லா வகுப்புகளிலும்35மாணவர்கள் இருந்தால்தான் புதிய ஆசிரியர்கள் போடலாம், இன்றேல் புதிய ஆசிரியர் போடமுடியாது. பள்ளியில் உள்ள இதர ஆசிரியர்கள் தான் அந்த வகுப்பு மாணவர்களையும் கவனித்து வரவேண்டும். நாட்டின் கல்வியின் தரத்தை உத்தேசித்தும், ஏழை ஆசிரியர்களின் வாழ்வை உத்தேசித்தும் இந்தப் புதிய மாணவர் விகிதத்தை உடன் மாற்ற அரசியலார் முன்வரவேண்டும்.

500 மக்கள் தொகை உள்ள இடங்களில் ஓர் தனியாசிரியர் (ஓராசிரியர்) பள்ளி நடைபெற்று வருகின்றது. அப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 20 முதல் 30 இருக்கும். இப்பள்ளிகளில் மாணவர் வருகை 20 ஆகக் குறைந்தால் அப்பள்ளி மூடப்படும் என்பது புதிய கல்வித் திட்டத்தில் உள்ள விதி. இதனால் பாதிக்கப்படும் கிராமங்கள் பல இருக்கும் நாட்டில். இந்த நிலை ஏற்படலாமா கிராமங்களுக்கு? கிராமங்களின் சுபீட்சமே எங்கள் ஆட்சியின் இலட்சியம் என முழங்கும் அரசுக்கு இது அழகா? பள்ளி மூடினால் வசதி உள்ள பெற்றோர்கள் பக்கத்து ஊர்ப் பள்ளிகளுக்கு அனுப்பிப் படிக்க வைக்க முடியும். வசதியில்லாதவர்கள் படித்தது போதும் வாடா வயலுக்கு என்னுடன் என்பார்கள். பிறகு ஆடு, மாடு மேய்க்க வேண்டியதுதானே?

பள்ளிக்கூடமே ஆரம்பிக்காத கிராமங்களில், பள்ளிக்கூடம்ஆரம்பிக்க வேண்டுமென்றால்அவ்வூரில் 45 மாணவர்களுக்கு மேல் இருக்க வேண்டும். 45-க்குக் குறைவாக இருந்தால் பள்ளி திறக்க இயலாது. இன்று நாட்டில் 45 மாணவர்கள் இல்லாத கிராமங்கள் பல உள. அப்படி இருந்தாலும் ஆடு மாடு மெய்த்தல் உழவு வேலைக்கு உதவி செய்தல் இதுபோன்ற குடும்ப வேலைகளில் ஈடுபட்டவர்கள் போக மீதமுள்ள 25, 30 மாணவர்கள் இருப்பார்கள். அவர்கள் படிக்க முன்வரக்கூடும். அவர்கள் படிக்ககூடாதா? அவர்கள் படிக்க இந்த நாட்டில் வசதியில்லையா? இந்தச்சுதந்திர ஆட்சியில் கூடவா படிக்கக்கூடாது? எனவே இந்த நிலையில் உள்ள கிராமங்களின் வருங்காலவாழ்வை உத்தேசித்தாவது மாணவர் விகிதத்தை மாற்றியமைக்கவேண்டும்.

ஓராசிரியர் பள்ளிகளில் 70-மாணவர்களுக்குக் குறைவாக இருந்தால் ஒரு ஆசிரியர் தான் வேலை செய்ய முடியும். அப்பள்ளிகளில் ஒன்றுமுதல் ஐந்து வகுப்புகள் இருக்கும். அந்த ஐந்து வகுபபிற்கும் அந்த ஒரு ஆசிரியர்தான் போதிக்க வேண்டும்? இது முடிகிற செயலா எனச் சிந்தியுங்கள். கிராமப் பள்ளிகளில் கல்வியின் தரம் குறைகிறது என்றால், குறையாமல் என்ன செய்யும்? இதற்குக் காரணம் யார்? கிராமங்களுக்கு எந்த வசதியும்தான் கிடைக்கவில்லை என்றால், கல்வி வசதி கூடவா கிடைக்கக் கூடாது? உண்மையிலே கிராமங்களிடத்தில் நல்ல மதிப்பும், கிராமங்களுக்கு நல்ல வசதி கிடைக்கவேண்டும், கல்வியின் தரம் உயரவேண்டும் என்றநல்ல எண்ணமும் இந்த அரசுக்கு இருக்குமேயானால்! உடனடியாக இந்த மாணவர் விகிதத்தை மாற்றியமைக்க வேண்டும். இது அவசரமும் அவசியமுமாகும்.

நாடு முழுதும் மாநாடுகள் கூட்டப்பட்டது. அமைச்சரையும் அதிகாரிகளையும் அழைத்துக் கல்வியில் உள்ள குறைபாடுகள் கூறப்பட்டன. நாட்டின் பல இடத்திலிருந்தும் ஆசிரியர்கள் தூதுக்குழு சென்னைக்கு சைக்கிளிலே சென்று அமைச்சர்களைக் கண்டு, மௌனம் போதும், வழி வகை செய்யுங்கள் எனக் கெஞ்சியும், ஏழையின் சொல் அம்பலம் ஏறாது என்பார்களே, அதைப் போல ஆகிவிட்டது.

ஆசிரியர்கள் வேலை முடிந்துவிட்டது. இனிமேல் பொறுப்புப் பொதுமக்களுடையது. கல்விப் பிரச்சனை ஆசிரியர்களின் சொந்தப்பிரச்சனையல்ல. இந்த நாட்டின் பிரச்சனை! ஒவ்வொரு பெற்றோர்களின் சொந்தப்பிரச்சனை. இந்தக் கல்வித் திட்டத்தால் பாதிக்கப்படுவது ஆசிரியர்கள் மட்டுமல்ல, உங்கள் குழந்தைகளும்தான். உங்கள் குழந்தைகள் நல்ல கல்வி அறிவு பெறவேண்டு மென்றால் இந்தக் கல்வியில் உள்ள சிக்கலைப் போக்கி நல்ல கல்வித்திட்டம் அமைக்கும்படி உங்கள் கோரிக்கையை அரசுக்குத்தெரிவியுங்கள். அத்துடன் உங்கள் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களிடம் சொல்லி, இந்த நாட்டிற்கு நல்ல தோர் கல்வித்திட்டம் கிடைக்க வழி வகை தேடுங்கள்!

துறைமுகங்களின் அபிவிருத்தி!

[Dr. பா. சரவணன்]

போக்குவரத்துக்குப்பயன் தரும் மார்க்கங்கள்: 1. நிலமார்க்கம், 2. கடல் மார்க்கம், 3. ஆகாய மார்க்கம் என மூவகைச் சாதனங்கள்.

வெளிநாடுகளிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்வதற்கும், உள்நாட்டுப் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் பயனுள்ளதாக அமைந்துள்ளது கடல்மார்க்கபோக்குவரச்சாதனங்களே! கடலில் சென்றிடும் கப்பல்கள் தங்குவதற்கும்; ஏற்றுமதி, இறக்குமதி செய்வதற்கும் இடமாக அமைவது துறைமுகங்கள். துறைமுகங்கள் அபிவிருத்திக்கும் கப்பல் கட்டுவதற்கும் இந்திய அரசு இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 100-கோடி ஒதுக்கியுள்ளனர்.

துறைமுகப்பட்டினங்கள்; பம்பாய், சென்னை, கல்கத்தா, விசாகப்பட்டினம், கொச்சி இவைகளே முதல்தரமான துறைமுகங்கள். கரையோரமாகப் பல சிறு துறைமுகங்கள் உண்டு. நாகப்பட்டினம், தூத்துக்குடி, தனஷ்கோடி, ஆலப்புழை, கொச்சி, கொல்லம்: இவைகளில் மத்திய அரசியலாரின் நேரடி நிர்வாகத்திலுள்ளவை, சென்னை, விசாகபபட்டினம், கொச்சி துறைமுகங்களாகும்.

இந்த உபகண்டத்திலுள்ள துறைமுகங்களை இருவகையாகப் பிரித்துள்ளது. 1. பெரிய துறைமுகங்கள், 2. சிறு துறைமுகங்கள். பெரிய துறைமுகங்கள் மத்திய அரசியலாரின் நேரடி நிர்வாகத்தில் நடைபெற்று வருகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்கள்:

1. பாகிஸ்தான் பிரிவினையால் காராச்சி துறைமுகம் பாகிஸ்தானைச்சேர்ந்துவிட்டதால் கச் கடற்கரையில் கண்டலா துறைமுகம் கட்டப்படுவது.
2. பம்பாய் துறைமுக எண்ணெய் வசதி கிடைத்திட எண்ணெய் சேமிப்பு நிலையம் அமைப்பது.
3. துறைமுகங்களுக்கு நவீன அமைப்புகளை அமைத்தல்.
4. கல்கத்தா, சென்னை, கொச்சி துறைமுகங்களை விரிவாக்குதல்.
5. சிறு துறைமுகங்களைக் கண்டாராய்தல், அவைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவைகளை அபிவிருத்தி செய்து பெரியதுறைமுகங்களுக்குத் துணையாக ஒத்துழைக்க அமைத்தல்.

முதல் திட்டம் நிறைவேறிய பின்னர் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வகுக்கப்பட்ட திட்டங்களை நிறைவேற்றப்பட்டதா? இரண்டாவது திட்டத்தில் பெரிய துறைமுகங்கள் அபிவிருத்திக்கு:-

கல்கத்தா	...	ரூ. 19·9	கோடி
பம்பாய்	...	,, 29·3	,,
சென்னை	...	,, 9·2	,,
கொச்சி	...	,, 4·0	,,
கண்டலா	...	,, 14·0	,,

என ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறிய துறைமுகங்கள் 150க்கு மேலாக இருப்பவைகளில் 18 துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப்படவேண்டிய நிலையில் இருப்பவைகள் என்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இவைகளின் அபிவிருத்திக்கு ஒதுக்கியுள்ள தொகை ரூ. 5 கோடி. கலங்கரை விளக்குகள் அபிவிருத்திக்கு ரூபாய் 4 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

தென்னகத்தில் இருந்திடும் துறைமுகங்கள் அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டுள்ளது:—சென்னைக்கும் கொச்சிக்கும் சேர்த்து ரூ. 13·2 கோடி. வடநாட்டில் புதிய துறைமுகம் கண்டலா 14·0 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டு வருகிறது.

தூத்துக்குடித் துறைமுக அபிவிருத்திக்குப் பல வேண்டுகோள்கள் கொடுக்கப்பட்டன. பெரிய துறைமுகமல்ல என்றதால் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. சென்னை மாநில அரசு நிர்வாகத்தில் இருப்பதால். சென்னை அரசியலாருக்கு நிதிவசதி இல்லை என்று கூறி அபிவிருத்தி செய்ய இயலவில்லை. நிலவிடும் நிலைமை இது. புதிய துறைமுகம் உருவாக்கிடும் ஆர்வம் இந்திய அரசுக்கு இருப்பினும் தென்னகத்தில் இருந்து வரும் துறைமுகங்கள் அபிவிருத்தியில் ஆர்வம்கொள்வதில்லை. உலக நாடுகள் பலவற்றுடன் தொடர்புகொண்ட தென்னவர்கள் உருவாக்கிய பூம்புகார்'பற்றிய சிறப்புகளை, காவியம்கூறுவதைப்படித்தறிந்தவர்கள் இன்று இந்திய அரசு கொண்டிடும் வேற்றுமை மனப்பான்மையைப் பற்றி 'புகார்' சொல்லும் நிலைதான் உள்ளது. "இந்தியா ஒன்று" என்பதால் வந்த விளைவு இது!

விடுதலைக்கு முன்னர் கப்பல் வியாபாரம் பிரிட்டிஷார் வசம் இருந்ததைக் கண்டித்து முதன் முதலாக இந்திய மாநிலத்தில் தமிழ்நாட்டில் இந்திய நாட்டு வியாபாரம் இந்தியக் கப்பல்கள் மூலமே இயங்கவேண்டுமென்று பாடுபட்டுப் போராடி செக்கிழுத்தவர் வ.உ. சிதம்பரனாரவார் 'கப்பல் ஓட்டிய தமிழன்' எனப்புகழ் பெற்றவர். ஆனால் இன்று அவர்போராடிய விடுதலை கிடைக்கவில்லை. தமிழ் நாட்டு வியாபாரம் தமிழர்களின் கப்பல்கள் மூலம் நடைபெறவில்லை, மாறாக வடநாட்டுப் பெயர்கள் கொண்ட கப்பல்கள் மூலம்தான் நடைபெறுகின்றன. என்றுதான் அவர் எண்ணம் நிறைவேறுமோ?

★

சிந்தனை சந்தேகத்தை வளர்க்கிறது; சந்தேகம் ஆராய்ச்சியை வளர்க்கிறது; ஆராய்ச்சி உண்மையை வளர்க்கிறது: உண்மையோ குருட்டு நம்பிக்கைகளையெல்லாம் குழி தோண்டிப் புதைக்கிறது.



யார் மகள் இவள்?

—[தமிழவேள்]—

—ப்டிரி—

ஊரை அடுத்துள்ள ஆற்றில் வெள்ளம் வருவது அறிந்து ஊரார் எல்லாரும் புனல் விளையாடச் சென்ருர்கள். அந்தக் காலத்துத் தமிழகத்தில் புனல் விளையாட்டு என்ருல் அவ்வளவு கொண்டாட்டம். ஆண்களும் பெண்களும்—சிறுவர்கள் முதல் கிழவர்கள்வரை — எல்லோருமே தண்ணீரில் நீந்தி விளையாடப் போவார்கள். அத்தகைய நீர் விளையாட்டின்போது அணிவதற்கென்றே தனியான உடைவகைகளும் இருந்து வந்ததைப் பரிபாடல் முதலான சங்க நூல்கள் நமக்குச் சொல்கின்றன.

புது மணமக்களான ஒரு தலைவனும் தலைவியும் அந்தப் புனல் விளையாட்டுக்குச் செல்கிருர்கள். இருவரும் ஊர் எல்லைவரையில் ஒன்ருகவே சென்றனர். அங்கிருந்து, ஆண்கள் நீராடும் துறைப்பக்கமாகச் செல்லத் தலைவன் ஒரு வழியாகவும், பெண்கள் நீராடும் துறைப்பக்கமாகச் செல்லத் தலைவி ஒருவழியாகவும் பிரிய வேண்டியிருந்தது. பிரியுமுன் ஓர் இடத்தைக் குறிப்பிட்டு, யார் முன்னதாகத் திரும்பி வரினும், அந்த இடத்தில் இன்னொருவருக்காகக் காத்திருப்பது என்று தங்களுக்குள் பேசிக்கொண்டு அவர்கள் பிரிந்து சென்றனர்.

ஆண்கள் நீராடும் துறைப்பக்கமாகச் சென்ற தலைவன் அதிக நேரம் நீரில் ஆடவில்லை. எங்கே தலைவி தனக்கு முன்ஞல் சென்று குறித்த இடத்தில் காத்துக்கொண்டிருக்கிருளோ என எண்ணியவனுய்த் தன் நீராடலைக் கொஞ்ச நேரத்திற்கெல்லாம் முடித்துக்கொண்டு திரும்பிவிட்டான். குறித்த இடத்திற்கு வந்து பார்த்தான். தலைவி இன்னும் வரவில்லை. அவள் முன்னேவந்து காத்திருப்பதைவிடத் தான் முன்னதாகவந்து காத்திருப்பதே நல்லது என்று இருந்தான்.

கால்மணிநேரமாயிற்று. தலைவி வரவில்லை. அரைமணிநேரமாயிற்று. அவள் வருவதாகக் காணேம். முக்கால் மணிநேரமாயிற்று. அந்தப் பக்கத்திலிருந்து வருபவர் ஒருவரையுமே காணேம். ஒரு மணிநேரமும் ஆயிற்று. அவளேப்பற்றிய செய்தி ஒன்றுமே தெரியவில்லை. அந்தத் துறைப்பக்கமாகச் சென்று பார்த்துவிட்டு வரலாம் என்ருலோ அது பெண்கள் துறையாயிற்றே! ஆண்கள் செல்லலாமா? "தன் தோழியர்களோடு அவள் நீண்ட நேரமாக நீரில் ஆடிக்கொண்டிருக்கிருள் போலிருக்கிறது. நன்ருக ஆடிவிட்டு மெதுவாகத்தான் வரட்டுமே" என்று மிக்க பொறுமையோடு காத்திருந்தான் தலைவன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அந்தப் பக்கமாக யாரோ ஒரு பெண் வருவது தெரிந்தது. அருகில் வர வர, அந்தப் பெண் வேறு யாருமல்ல, தன் தலைவியே என்று அறிந்தான். அவள் வந்து தன்னைப் பார்த்து, "இங்கே நீண்டநேரமாகக் காத்திருக்கிறீர்களோ?" என்று, அவள்கேட்க, தான் "ஆமா" என்று சொல்ல, "ஐயோ! நம் தலைவரை நீண்ட நேரம் காக்கவைத்துவிட்டோமே என்று அவள் மனம் எங்கே வருந்தப்போகிறதோ!— என எண்ணி, அவள் அப்படிக் கேட்டு மனம் வருந்தாதிருக்க என்ன செய்யலாம்என்று யோசித்தான். அவள் வந்து தன்னிடம் பேசுமுன் தானே அவளிடம் ஏதையாவது விளையாட்டாகப் பேசி அங்கே நெடுநேரம் காத்திருப்பதுபற்றிச் சொல்லாமல் விட்டுவிடுவது என்று முடிவு கட்டினன்.

*

தனியாகக் கீழே அமர்ந்து, அப்பா நாள் இதழைப் படித்துக்கொண்டிருக்கையில், உள்ளே இருந்து குழந்தை அப்பாவிடம் வருகிறது. வந்த குழந்தை அமைதியாக அப்பாவின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, "நம்மைப்போல் பொம்மைகளை வைத்துக்கொண்டு விளையாடாமல் அப்பா என்னமோ காகிதத்தை வைத்துக்கொண்டுஇப்படிப்பார்த்துக்கொண்டிருக்கிருரே! அதில் என்ன அப்படியிருக்குமோ?" என்று வியந்தபடி அப்பாவையே பார்த்துக்கொண்டிருக்கிறது. திடீரென்று, குழந்தை தன் பக்கத்தில்வந்து அமைதியாக அமர்ந்திருப்பதை, அப்பா கவனிக்கிருர். உடனே அவருக்குக் குழந்தையின் மீது அன்பு மேலிடுகிறது. அதனல் குழந்தையோடு விளையாடத் தோன்றுகிறது, அந்தக் குழந்தையைத் தனக்கு முன்பின் தெரியாததுபோல், "அடடே! யார் இது? யார் வீட்டுக் குழந்தையோ தெரியவில்லையே! நம்பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டிருக்கிறதே!" என்று குழந்தையைப் பார்த்து கூறுகிருர். குழந்தை "அப்பா!" என்று சிரித்துக் கொண்டே அவரிடம் தாவுகிறது, அப்பாவும் குழந்தையை எடுத்து வைத்துக்கொண்டு கொஞ்சி மகிழ்கிருர். தன்னுடைய குழந்தையைப் பார்த்தே "இது யார் வீட்டுக் குழந்தையோ தெரியவில்லையே!" என்பது பெற்ருேர் தம் குழந்தைகளிடம் விளையாட்டாகப் பேசும் ஒரு முறை.

*

இந்த முறையைத் தலைவன் தலைவியருக்கு இடையே வைத்துக்காட்டுவதில் ஒரு தனியான சுவை இருக்கத்தான் செய்கிறது. அதைப் புலவர் நமக்குக் காட்டுகிருர்.

தலைவி அருகில் வந்த உடனே தலைவன் தானே சற்று முன் சென்று அவளது கையைப் பற்றிக்கொண்டு, "கண்கள் எல்லாம் சிவந்து போகும்படி புது

(12-ம் பக்கம் பார்க்க)

சிறுகதை

நீதியின் கண்ணீர்

கமுகுமலையான்

ஊர்க்கோடியில் தனித்து இருக்கும் அந்த ஓட்டைக் குடிசையின் முன்பு ஏழுமலை சோர்ந்த மனத்தோடு தலையில் கை வைத்தபடி உட்கார்ந்துகொண்டிருந்தான். பக்கத்தில் பசியால்அழுதுகொண்டிருந்த அவனுடைய ஐந்துவயது மகன் வேலன் அப்படியே அலுத்துத் தூங்கிவிட்டான். அழுவதற்கும் அவன உடலில் சத்தில்லை போல் இருக்கிறது! குடிசையினுள பிரசவ வேதனை தாங்கமாட்டாமல் அவனுடைய மனைவி காத்தாயி முனகிக்கொண்டிருந்தாள்.

ஏழுமலைதான் என்ன செய்வான் பாவம்! பக்கத்திலுள்ள ஊர்களுக்குச் சென்று இரண்டு மூன்று டாக்டர்களைக் கேட்டுப்பார்த்துவிட்டான். அவர்கள் யாரும் பணம் இல்லாமல் வரமுடியாது என்று சொல்லிவிட்டனர். மூன்று மைலுக்கு அப்பாலுள்ள மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லலாமென்ருலோ, அதற்கு அவள் உடல்நிலை இடங்கொடுக்கவில்லை. எப்படியாவது அழைத்துச் செல்லலாம. ஆனல் அங்கே தான் என்ன வாழ்கிறது? கிராமங்களில் இப்பொழுது இருக்கின்ற மருத்துவ மனைகளில் டாக்டர் இருந்தால் மருந்து இராது; மருந்து இருந்தால் டாக்டர் தங்க மாட்டார். அப்படி டாக்டரும் இருந்து மருந்தும் இருக்கிறதென்ருல், அந்த மருந்து தண்ணீராக இருப்பதைத்தான் காணுகிருேம். பெயருக்கு ஒரு கட்டிடம்; அவ்வளவுதானே! ஆட்சியாளர்க்கென்ன இதைப்பற்றி எல்லாமா கவலை? சிறிய நோய்களுக்கெல்லாங்கூட ஸ்பெஷல் டாக்டரை நாடிச் செல்லும் வசதிபடைத்த இவர்கள், இப்படிப்பட்ட மருததுவமனைகளை ஏன் கண்ணெடுத்துப் பார்க்கப் போகிருர்கள்? திறந்து வைப்பதற்கு "ஐந்தாண்டு"த் திட்டங்களில் கட்டிடங்கள் தாம் கணக்கேயொழிய, அங்கே வேலை நடைபெறுகிறதா என்று ஏன் கவனிக்கப் போகிருர்கள இந்தத் திறப்பு விழா மந்திரிகள்.

காலையிலிருந்து காத்தாயியின் நிலை கவலைக்கிடமானதாகி விட்டது. பணம் இருந்தால் எந்த டாக்டரையாவது அழைத்து வரலாம். பணத்திற்கு எங்கே போவது? காலையிலிருந்து பல இடங்களில் அலைந்தான. இந்த ஏழையை நம்பிக் கடன் தர யார் முன்வருவார்கள்? தான் வேலை பார்க்கும் முதலாளி காத்தமுத்துவிடமும் கேட்டுப்பார்த்து விட்டான. அவரா மனம வந்து கொடுப்பார்! அவரைப்பற்றித் தான் ஊரே அறியுமே, ஈயாத லோபி என்று. உயிர் போவதாகச் சொன்ஞலும் ஒரு புதுக்காசு தர முன்வரமாட்டார். "ஏதோ செலவு என்று சொல்லி, இந்த மாதம் ஒரு ரூபாய் அதிகமாகக் கூட வாங்கிக்கொண்டாயே, இன்னும் என்ன, போ... போ கையில் செல்லாக்காசு இல்லை" என்று முடிவாகச் சொல்லிவிட்டார்.

இந்த இலட்சணத்தில் காலையிலிருந்து ஒருபிடி சோற்றுக்கும், இல்லை! ஒரு குவளை கஞ்சிக்கும் வழியில்லை. நாலைந்து நாட்களாகவே கால் வயிறு சாப்பாடுதான். இன்று காலையிலிருந்தோ அதற்கும் வழியில்லை. கேட்கவேண்டிய இடமெல்லாம் முன்பே கேட்டு வாங்கியாகிவிட்டது. திருப்பித் தாராமல் மீண்டும் கடன் கேட்டால் யார் தருவார்கள்? பாவம்! பையனும் பசி தாங்கமாட்டாமல் அழுது அழுது தொண்டை வற்றி அப்படியே தூங்கிவிட்டான். அவன் எழுந்துவிடுவதற்குள்ளாக ஏதாவது வழிசெய்தாகவேண்டும்! என்ன செய்வது? மணியோ ஒன்று இருக்கும். இந்த நள்ளிரவில் யாரைப்போய்க் கேட்பது? கேட்காத இடமில்லை; செய்யாத முயற்சியில்லை. ஒரு வழியும் தோன்ருமல் அப்படியே தலையில் கைவைத்தபடி யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

"ஐயோ! அம்மா!" என்ற முனகலைக் கேட்டு எழுந்து குடிசையினுள் நுழைந்தான. "என்ன காத்தாயி, உடம்புக்கு என்ன செய்கிறது? கவலைப்படாதே. மனதைத் தைரியமாக வச்சிக்கோ, உனக்கு ஒன்றும் இல்லை. நல்லபடியா குழந்தை பிறக்கப்போகுது பாரேன், கடவுள் காப்பாற்றுவார். திக்கற்றவர்களுக்குத் தெய்வந் தான துணை" என்று சொல்லிய பொழுது அவன் கண்கள் கலங்கிக் குளமாயின. அவளுக்குத் தான் ஏதோ நம்பிக்கை ஊட்டுவதற்காகச் சொன்ஞனேயொழிய, அவனுடைய தைரியமெல்லாம் கரைந்து கண்ணீராகத்தான் வெளிப்பட்டது. அப்படியே அவள் பக்கத்தில் சோர்வுடன் உட்கார்ந்து அவளுடைய கூந்தலைக் கோதிவிட்டுக்கொண்டு இருந்தான்.

'திக்கற்றவர்களுக்குத் தெய்வம் தான் துணை'யாம் பாவம்! எப்போதுமே தெய்வம் யாருக்கும் துணையிருந்ததில்லை என்பது அவனுக்கு ஏன் தெரிந்திருக்கப் போகிறது! அந்தப் பழமொழி செய்கிற துணையைக்கூட அந்தத் தெய்வம் செய்வதில்லையே! ஒருவேளை அந்தப் பழமொழிதான் இப்போது அவளுக்கு ஒருவாறு ஆறுதலளிக்கக்கூடும் என்று எண்ணி அப்படிச் சொன்ஞனே?

"வலி தாங்கமுடியலே. ஒரே மயக்கமா... இருக்...குது, டாக்...

டரைக் கூட்டி...வரலிங்களா?" என்று வெகு பிரயத்தனப் பட்டுச் சொற்களை உருவாக்கிக் கூறி முடித்தாள்.

"கையில் பணம் கொடுத்தால் தான வருவாங்களாம். இன்னும் ஐந்து நாளிலே எப்படியாவது சம்பாதித்துக் கொடுத்துவிடுகிறேன்; தயவுசெய்து வாங்க, உங்களுக்குப் புண்ணியமுண்டு, என்று கூடக் கெஞ்சிக் கேட்டுப் பார்த்துவிட்டேன். எல்லா டாக்டரும், வரமுடியாதென்று முடிவாகச் சொல்லிட்டாங்க. அதற்காகத் தான் யோசித்துக்கிட்டிருக்கேன். எப்படியாவது ஐந்து ரூபாய் கெடச்சுதுன்னு போதும்" என்று சொல்லிவிட்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்தவன், சட்டென எழுந்து கூரையில்செருகி இருந்த கத்தியை எடுத்துத் தன் இடுப்பில் செருகிக்கொண்டான். ஒரு தீப்பெட்டியையும் இரும்புக் கம்பி ஒன்றையும் எடுத்துக்கொண்டு வெளியே வந்தவன், ஒருமுடிவுக்கு வந்தவனைப்போல் தன முதலாளி வீட்டை நோக்கி நடந்தான.

திருடுவதைத் தவிர அவனுக்கு வேறு எந்த வழியும் இல்லை. அந்த எண்ணத்தோடுதான அவன் நடந்துகொண்டிருந்தான். 'தெரிந்துவிட்டால் வேலை போவதோடு, ஜெயிலுக்கும் அல்லவா போக நேரிடும்' என்று முதலில் நினைத்தபோதிலும், வேறு வழி இல்லை என உணர்ந்தான். 'இதற்கெல்லாம் பார்த்தால் இங்கு இரண்டு உயிரின் வாழ்வல்லவா அநியாயமாக அழிந்துவிடும்! அவர்கள் செத்த பிறகு நாம மட்டும வாழ்ந்து என்ன பயன்? கூடாது. என்ன வந்தாலும் வரட்டும். எப்படியும் திருடித்தான் ஆகவேண்டும்" என்ற துணிவோடுதான அவன் இந்தச் செயலில் ஈடுபட்டான.

அன்று அமாவாசைக்கு மறு தினம். ஆதலால் எங்கும் ஒரே இருட்டு. அந்தக் குமமிருட்டிலும் கண்ணையும் காதையும் கூர்மையாக வைத்துக்கொண்டு முன்னும் பின்னும இப்படியும் அப்படியுமாகத திரும்பிச் சுற்றுமுற்றும் பார்த்தபடியே நடந்தான். மணி ஒன்றுக்கு மேல் இருக்குமாதலால் தெருவில் இங்கொன்றும் அங்கொன்றுமாகக் 'கல்' கம்பங்களின் மேல் எரிந்துகொண்டிருந்த மண்ணெண்ணெய் விளக்குகளும் அணைந்துவிட்டிருந்தன. ஊர் முழுதும் மயான அமைதி குடிகொண்டிருந்தது. அந்த அமைதியைக் கிழித்துக்கொண்டு ஆந்தையொன்றின் அலறல் காற்றோடு கலந்து எங்கும் பரவியது. சில வண்டுகளின் ரீங்காரம் தம்பூராவின் சுருதியைப்போல் கேட்டுக்கொண்டிருந்தது. எங்கோ குரைத்துக் கேவிக்கொண்டிருந்த ஒரு நாயின் கூக்குரல் மெதுவாகக் கேட்டது.

நேராக நடந்தவன் இரண்டு தெருக்களைக் கடந்து ஒரு சிறிய ஒற்றையடிப் பாதை வழியாகப் போனான். சிறிது நேரத்தில் தன் எசமானர் காத்தமுத்துவின் வீட்டுத் தோட்டத்தை அடைந்தான். ஒருமுறைசுற்றிலும்பார்த்துவிட்டு வேலியைத் தாண்டி உள்ளே குதித்தான். பூமியில் ஏற்பட்ட அதிர்ச்சி அவன் உள்ளத்திலும் ஏற்பட்டிருக்க வேண்டும். அஞ்சிப் பயந்து நடுங்கிக்கொண்டு மெதுவாக நடந்தான். இருட்டிற்காகவோ, இந்தத் தனிமைக்காகவோ அவன பயப்படவில்லை, செய்யப்போகும் திருட்டுக் காரியம்தான் அவன் மனதிலே பெரியதொரு இருட்டைக் கப்பும்படியாகச் செய்துவிட்டது. அவன் என்றுமே செய்ய எண்ணாத புதிய செயல் இது. ஆபத்தான செயலுங்கூட; என்றாலும் குடும்பநிலை, அவனை இந்தச் செயலில் இறங்கும்படி துணியவைத்தது.

வீட்டைச் சுற்றி இருந்த மதில் சுவரை நெருங்கினான். வாசற்படியண்டை சென்றான். கதவு உள் தாழ்ப்பாள் போடப்பட்டிருந்தது. மதிலைத் தாண்டுவதற்கு யோசித்தான். சுவரையடுத்துத் தோட்டப் பக்கமாக ஒரு வேப்பமரம் இருந்தது. அதன் மீது ஏறிக் கிளையைப் பிடித்துத் தொங்கிக்கொண்டே மதிலின்மேல் காலைத் தூக்கிவைத்து நின்றான், பிறகு அப்படியே உட்கார்ந்து, மதிலைப் பிடித்து உராய்ந்துகொண்டே சறுக்கி உட்பக்கமாகக் கீழே இறங்கினான். அடிமேல் அடி வைத்து வலது பக்கமுள்ள கட்டடத்தை நோக்கி நடந்தான். கட்டடததை நெருங்கியதும் அப்படியே ஸ்தம்பித்து நின்றான். வியப்பும் பயமும் அவனைக் கவ்வின. அவன் எந்தக் கட்டடத்தை நோக்கிச் சென்றானோ அந்தக் கட்டடத்தின் கதவுகள் திறந்துகிடந்தன. 'இந்நேரத்தில் யார் திறந்து வைத்திருக்கப் போகிறார்கள்?' என்று எண்ணியபடியே கதவை நெருங்கி உள்ளே எட்டிப்பார்த்தான்.

என்ன ஆச்சரியம்! அங்கு முதலாளி இல்லை. அவருக்குப் பதிலாக இரண்டு திருடர்கள் தாம மௌனமாகவும் துரிதமாகவும் தங்கள் திருட்டுத் தொழிலை நடத்திக் கொண்டிருந்தனர். ஒருவன் எரியும் மெழுகு வர்த்தியைப் பிடித்துக்கொண்டு குனிந்திருக்க, இன்னொருவன் அவசர அவசரமாக ஒரு மூட்டையைக் கட்டிக் கொண்டிருந்தான்.

ஏழுமலைக்குஒன்றும்புரியவில்லை. இவர்களை இப்படியே பிடித்துக் கொடுத்துவிடலாமா என்றுகூட ஒருகணம் நினைத்தான். மகனின் பட்டினியும் மனைவியின் ஆபத்தான நிலையும் அந்த எண்ணத்திற்குத் தடைபோட்டன. அவனுக்குத்தேவை ஐந்து ரூபாய்கள். அது கிடைக்காமலா போகும்? பார்பபோம்! என்று எண்ணிக்கொண்டிருந்தபோது திருடர்கள் வெளியேவர முற்பட்டனர். அவர்களைப் பார்த்ததும் ஏழுமலை இரண்டடி பின்வாங்கித் திரும்பிச் சுவர் ஓரமாகப் பதுங்கி உட்கார்ந்தான். இடுப்பில் கத்தி இருக்கிறதா என்று தொட்டுப் பார்த்துக்கொண்டான், கையிலிருந்த மெழுகுவர்த்தியை அணைத்துவிட்டு இரண்டு திருடர்களும் சந்தடி செய்யாமல் வெளியேறிவிட்டனர்.

அவர்கள் போனபிறகு ஏழுமலை அந்தக் கட்டடத்தினுள் நுழைந்தான். இடுப்பிலிருந்த தீப்பெட்டியை எடுத்துக் குச்சியைக் கொளுத்தினான். சற்றுமுற்றும் பார்த்தான். அவனுடைய கண்கள் அடிக்கடி இடதுபுறமுள்ள எதிர்க் கட்டடத்தையே நோக்கின. ஏனெனில், அக்கட்டடத்துள்தான் காத்தமுத்து உறங்குவது வழக்கம். அவர் இரவில் எப்போதாவது சிறுநீர் கழிக்க வெளியே வந்தால் இந்தக் கட்டடத்தின் பூட்டையும் ஒருமுறை சரிபார்க்கத் தவறமாட்டார். சில நாட்களில் அதிகமான வேலைகள் இருந்தால் இரவு வேளைகளிலும் ஏழுமலை அங்கேயே தங்கிவிடுவான். அதனால்தான் இந்த விபரமெல்லாம் அவனுக்குத் தெரிந்திருந்தது.

தீக்குச்சி அணைந்துவிடவே இன்னொரு குச்சியை ஏற்றிப் பார்த்தான். அந்தப் பெரிய பெட்டி திறந்துகிடந்தது. உள்ளே பார்த்து, ஒன்றுமே இல்லாததை அறிந்துகொண்டான. அந்தப் பெட்டியில் தான் தனது எசமானர் காத்தமுத்து, பணத்தை வைப்பார் என்பதை அவன் அறிந்திருந்தான். அந்த நேரத்திலும் அவனுடைய உள்ளம் முதலாளிக்காக இரங்கியது. 'எசமானர் இந்தப் பெட்டியைப் பார்த்தால் உயிரையே விட்டுவிடுவாரே' என்று எண்ணிக்கொண்டே இன்னொரு குச்சியை ஏற்றி அரிசி மூட்டைகளின் பக்கமாகச் சென்றான். இடுப்பிலிருந்த கத்தியை எடுத்து மூட்டையைக் கிழித்தான். அரைப்படி அளவு அரிசியை எடுத்துத் தன மடியில் கட்டிக்கொண்டு நிமிர்ந்தபோது, எதிர்க்கட்டிடத்தினுள் யாரோ நடப்பது கேட்டு அவசர அவசரமாக வெளியே வந்தான். மதில் சுவரின் கதவைத் திறந்து கொண்டு தோட்டப் பக்கமாக ஓடினான். இதற்குள் எதிர்க்கட்டடத்தின் உள்தாழ் திறக்கப்பட்டது. பேட்டரி லைட்டை ஏற்றிய காத்தமுத்து, எதிரே திறந்து கிடந்த கதவுகளைப் பார்த்து அப்படியே அதிர்ச்சி அடைந்தவரைப் போலச் செயலற்று நின்றார். லைட்டை மதில் சுவரின் கதவுப் பக்கமாகத் திருப்பினார். அதுவும் திறந்துகிடப்பதைப் பார்த்து வேகமாக ஓடினார். வாசற்படியின மேல் நின்றுகொண்டு தோட்டத்தைச் சுற்றிப்பார்த்தார்.

ஏழுமலை அப்போதுதான் காலில் பொத்துக்கொண்ட முள்ளை எடுத்துவிட்டு வேலியைத் தாண்டி வெளியே குதித்துக் கொண்டிருந்தான். அவனமேல் 'பேட்டரிலைட்'டின வெளிச்சம் பட்டது. 'என்ன! ஏழுமலை அல்லவா வேலியைத் தாண்டி ஓடுகிறான்? இந்த நேரத்தில் அவனுக்கு இங்கென்ன வேலை? காலையில் பணந் தர வேண்டுமென்று கேட்டானே' என்று நினைத்தவர் வேகமாகத் திரும்பி வந்தார். திறந்துகிடந்த கட்டடத்தினுள் நுழைந்தார். "ஐயோ! பணமெல்லாம் போச்சே" என்று திறந்துகிடந்த பெட்டியைப் பார்த்து அலறிக்கத்தினார். அவர் போட்ட சத்தத்தைக்கேட்டு அவருடைய மனைவி திகிலடைந்தவளாய் வெளியே வந்தாள். அவளிடம் விஷயத்தைத் ஒன்றும் பாதியுமாகச் சொல்லிவிட்டு வண்டியைக் கட்டிக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனை நோக்கி விரைந்தார்.

ஏழுமலை மனப் பீதியோடு குடிசையை நோக்கி நடந்துகொண்டிருந்தான். 'நம்மேல் வெளிச்சம் பட்டதே. எசமான் நம்மை அடையாளங் கண்டுகொண்டிருப்பாரோ' என்ற சந்தேக எண்ணத்தின் சுழலிலே அவன் அகப்பட்டுச் சிக்கித் தவித்தான். அந்த நேரத்தில்தானா காலில் முள்பொத்துக் கொள்ளவேண்டும்? காலில் குத்திய முள்ளா அது? நெஞ்சில் பாய்ச்சிய ஈட்டி அல்லவா? என்ன கெட்ட காலமோ தெரியவில்லையே; அந்தத் திருட்டுப் பயல்கள் இன்றைக்குப் பார்த்துவந்து தொலைத்தான்களே! ஒரு காலணுவுக்கு வழியில்லை. 'இன்னும் டாக்டர் வரவில்லையா' என்று காத்தாயி கேட்டால் என்ன சொல்வது? என்றெல்லாம் எண்ணிக்கொண்டு வந்த அவன் எண்ணத்திற்குத் தடையாக, ஒரு பச்சிளங் குழந்தையின் வீறிட்ட அழுகை காற்றோடு கலந்து வந்தது. அந்த ஒலி அவன் குடிசையின் பக்கமாக இருந்து கேட்கவே, ஏழுமலையின் முகம் மலர்ந்தது.

குழந்தைதான் பிறந்திருக்கும் என்று எண்ணினான். இனிமேல் டாக்டருக்கு என்னவேலை? பணத்திற்கும் அலையவேண்டியதில்லை. மடியிலிருக்கும் அரிசியே போதுமென்று நினைத்தான். இந்த வறுமையிலும் ஒரு உயிரின் பிறப்பு அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. ஆணகுழந்தையா, பெண் குழந்தையா என்று தெரிந்து கொள்வதில்தான் அவனுக்கு எவ்வளவு ஆவல்! குழந்தை ஆணாக இருந்தால் என்ன பெயர் வைப்பது, பெண்ணாக இருந்தால் என்ன பெயர் வைபபது என்றெல்லாம்கூட அவன் மனம் எண்ணத் தொடங்கியது. அவசர அவசரமாக நடந்தான். வீட்டை நெருங்க நெருங்க அந்த அழுகை ஒரு பிறந்த குழந்தையின் அழுகையாக இல்லாததை அறிந்தான்.

வேலன்தான் தூக்கத்திலிருந்து எழுந்து அழுகின்றானோ என்று எண்ணும்படியாக அந்த அழுகை ஒலி வரவரப் பெரியதாகக் கேட்டது. 'அம்மா, ஐயோ!' என்று சொல்லி அழுவது இப்போது அவன் காதில் நன்றாகக் கேட்டது. ஏழுமலை பீதி அடைந்தவனாய்க் குடிசையை நோக்கி ஓடினான். உள்ளே நுழைந்தான். "ஆ! ஐயோ! காத்தாயி! போய்விட்டாயா!" என்று தலையில் அடித்துக்கொண்டு கதறியவன் துவண்டு கீழே விழுந்தான. மடியிலிருந்த அரிசி கொட்டிச் சிதறியது. அவன் எண்ணங்களும் அப்படித்தான் சிதறியிருக்க வேண்டும்! கோவென ஓலமிட்டு அழுதான். தாயின் மேல் புரண்டு அழுதுகொண்டிருந்த வேலனும் அழக்கூடச் சக்தியில்லாமல் கேவிக்கொண்டிருந்தான். ஏழுமலையும் சிறிய குழந்தைபோல் விக்கி விக்கி அழுதான்.

வெளியிலிருந்து "டேய் ஏழுமலை ஏழுமலை" என்று யாரோ அழைப்பதைக்கேட்டு அதிர்ச்சி அடைந்தவனாய் ஏழுமலை வெளியே வந்தான். ஒரு இன்ஸ்பெக்டரையும் இரண்டு போலீஸ்காரர்களையும் கண்டு திடுக்கிட்டு நின்றான். ஒரு போலிஸ்காரன், பேட்டரி லைட்டின் வெளிச்சத்தால் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டிருந்தான்.

'டேய், திருடிவந்த பணத்தைக் கொண்டுவாடா' என்றார் இனஸ்பெக்டர். அவர் பேச்சில் கோபமும் அதிகாரமும் கலந்திருந்தது.

'சாமி, சத்தியமாச் சொல்றேனுங்க, நான் பணம் எதுவும் திருடலீங்க. நான் போகிறதற்கு முன்னாடியே இரண்டு திருடனுங்க திருடிக்கிட்டிருந்தாங்க. அதற்கப்பாலே தானுங்க நான் உள்ளே போனேன், கொஞ்சம் அரிசிமட்டும் தானுங்க எடுத்துவந்தேன். என்னை ஒன்றும் செய்யாதீங்க. கெஞ்சிக் கேட்டுக்கொள்றேனுங்க. என் பெண்சாதி செத்துக்கிடக்கிறாளுங்க. நாலுநாளாப் பட்டினி கிடக்கிறேனுங்க" என்று அழுதுகொண்டே சொல்லிமுடித்தான.

இன்ஸ்பெக்டரின் கண்கள் கோபத்தால் சிவந்தன. "டேய், ராஸ்கல். யார் அப்பன் வீட்டுப் பணத்தைத திருடிக்கிட்டு இப்படி வேஷம்போடுகிறாய்? பட்டினி கிடந்தால் திருடச் சொல்லுதா? திருடிக்கிட்டதுமில்லாமே, கதை வேறே கட்டுகிறாயா, திருட்டுப் பயலே. ஸ்டேஷனுக்குவந்து உன வேஷத்தைக்காட்டு. உங்களை எல்லாம் தோலை உரித்தால்தாண்டா மெய்யைச் சொல்லுவீங்க. நட,

நட" என்று சொல்லிவிட்டுப் பக்கத்திலிருந்த போலீஸ்காரர்களைப் பார்த்தார்.

அவர்கள் இருவரும், தயங்கி நின்ற ஏழுமலையின் கையைப் பிடித்து இழுத்தனர். ஏழுமலை எவ்வளவோ கெஞ்சினான். ஆனாலும் அவர்கள் விடவில்லை. பக்கத்தில் அழுதுகொண்டிருந்த அவனுடைய மகன் வேலன், "ஐயா, ஐயா, எங்க அப்பாவை விட்டு விடுங்கையா, அவரு ரொம்ப நல்லவரையா, விட்டுவிடுங்கையா, என்று அழுதுகொண்டே தந்தையின் இடுப்பைச் சேர்த்துக் கட்டிக் கொண்டான். இதைக் கண்ட போலீஸ்காரன், டேய், விடுகிறாயா, இல்லை உதைக்கட்டுமா" என்று மிரட்டியும் அவன் அஞ்சாதது கண்டு அவனைப் பிடித்திழுத்துக் கொண்டுபோய்க் குடிசைக்குள் விட்டுவிட்டு வந்தான். இரண்டு போலீஸ்காரர்களும் ஏழுமலையைப் பிடித்துக் கடத்திக்கொண்டு சென்றனர். குடிசையினுள் விடப்பட்ட வேலன் மீண்டும் வெளியே வந்து, "அப்பா, எங்கேயப்பா போறீங்க? இந்த இராத்திரியிலே என்னைத் தனியா விட்டுட்டுப் போவாதிங்கப்பா, பசிதாளமுடியலேப்பா! மயக்கமா இருக்குதப்பா, அப்பா! அப்பா! அம்மாவும் செத்துட்டாங்க, நீயும் போகிறாயே அப்பா" என்று கூவிக்கொண்டே கொஞ்சத் தூரத்தில் போய்க் கொண்டிருந்த தந்தையை நோக்கி ஓடினான்.

தாயை இழந்த துயரமும், அடங்காத பசியும சேர்ந்து அவன் உடலில் கொஞ்சமும் வலுவில்லாமல் செய்துவிட்டன. தள்ளாடிக்கொண்டே ஆவேசமாக ஓடினான். ஒரு 'கல்' தடுக்கிக் கீழே விழுந்தான். 'ஐயோ அம்மா' என்று முனகியதோடு அவன் ஆவியும் பிரிந்தது. நீக்கமுடியாத பிள்ளைப் பாசத்தால் நீர் வடியும் கண்களோடு திரும்பிப் பார்த்த ஏழுமலையின் கனனத்தில் 'பளிர்' என்று ஒரு அறை விழுந்தது. அந்த அறையை வாங்கிக் கொண்ட ஏழுமலை, 'ஐயா, ஐயா என்னை விட்டுவிடுங்களய்யா. நாளைக்கு வேண்டுமானால் வந்து விடுகிறேன். இரண்டு உயிர்கள செத்துக் கிடக்குதே ஐயா' என்று சொல்லிப் போலீஸ்காரர்களின் பிடியிலிருந்து திமிறிக்கொண்டு திருமபி ஓடிவந்தான. செத்துக் கிடந்த மகன்மேல் விழுந்து அழுதான். புரண்டான். 'ஐயோ, கண்ணே! பசியோடு போய்விட்டாயே. நீயும் உன் அம்மாவும் என்னைத் தனியாக விட்டுவிட்டுப் போய்விட்டீர்களேடா, நான் மட்டும் வாழ்ந்து என்னடா காணப் போகிறேன்" என்று சொல்லிக் குமுறிக் கதறி அழுதான்.

தங்கள் பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டு ஓடிவந்ததைப் பொறுக்கமுடியாமல், போலீஸ்காரர்கள் கோபத்துடன் திரும்பி வந்தனர். விலங்கிடாமல் வைத்ததே தவறு என்று கருதினர். ஏழுமலையை மகனிடமிருந்து பிரித்து இழுத்தனர். அவன் அதற்கும் அஞ்சாமற்போகவே, ஒரு போலீஸ்காரன், கையிலிருந்த 'லட்டி'யால் அவன் முதுகின்மேல் ஓர் அடி போட்டான். அவ்வளவு தான். ஏழுமலை அப்படியே தரையில் புரண்டான். ஆவேசத்தோடு கத்தினான். "வரவே முடியாது என்னைக்கொன்றாலும் என் மகனை விட்டு நான் வர முடியாது" என்று சொல்லிவிட்டு எழுந்து குடிசைக்கு ஓடினான். மனைவியின் மேல் விழுந்துபுரண்டு அழுதான்.

அவ்வாறு அவன் மறுத்துப் பேசுவது தன்னை அவமதிப்பதாக இன்ஸ்பெக்டர் கருதினார். அவமானம் தாங்கமாட்டாமல் குடிசைக்குள் நுழைந்து கையிலிருந்த தடியால் ஓங்கி அவன் பிடரியின் மேல் அடித்தார். கருத்தில் இருந்த கோபம் கையில் புகுந்து கொண்டதோ என்னவோ! "ஐயோ, அம்மா! காத்தாயி" என்று அலறியபடி ஒருமுறை புரண்டான். அவ்வளவுதான் அவன் உயிர் நீங்கியது. உள்ளே எண்ணெய் இல்லாமல் படர்ந்து கொண்டிருந்த விளக்கின் சுடர், கடைசி முறையாகத் துடித்து அணைந்தது. அவன் தன் குடும்பத்தோடு இறப்புலகுக்குப் பிரயாணமானான். இந்தக் குடும்பப் பிரயாணத்தைக் கண்டு, வறுமை ஒன்றையே ஆட்சிசெய்யும் அநீதி, தன் கோரப் பெருவாயைத்திறந்து ஆங்காரச் சிரிப்புச் சிரித்தது. அந்தச் சிரிப்பின் பயங்கரப் பேரொலியில் நீதியின் ஓலம் ஒடுங்கி மறைந்தது. ஏழுமலையின் பிடரியிலிருந்து பீறிட்டு ஓடிய இரத்தம் அந்த நீதி வடித்த கண்ணீர்தானோ?

8-ம் பக்கத் தொடர்ச்சி

வெள்ளத்தில் நீண்ட நேரம் ஆடியிருக்கிறாள்போல் இருக்கிறதே இந்தப் பெண்! யாருடைய மகளோ இவள்?" என்று கேட்கிறான், அவளை முன்பின் தெரியாததுபோல்?

இந்தக் காலத்தில் கணவன் விளையாட்டாகப்பேசுகிறபொழுதே மனைவி காய்ந்து விழுகிறாள். மனைவி விளையாட்டாகப் பேசுகிற பொழுதோ கணவன் எரிந்து விழுகிறான். காதலித்து மணம் புரிந்துகொண்டு உளம் ஒன்றி வாழ்ந்த அந்தக் காலத்தில், கணவனுடைய விளையாட்டில் மனைவியும் பங்கு கொள்வாள். மனைவியினுடைய விளையாட்டில் கணவனும் கலந்துகொள்வான்.

தன் கையைப் பற்றியவண்ணம் யாருடைய மகளோ இவள்?' என்று கேட்கும் தலைவனைப் பார்த்துத் தலைவி என்ன சொல்கிறாளாம்! — நான் யாருடைய மகள் என்பது உங்களுக்குத் தெரியாது! நான் இந்த ஊருக்கே புதியவள். அது இருக்கட்டும். வழியில் போகிற முன்பின் தெரியாத ஒரு பெண்ணைப் பார்த்து, முன்னால் வந்து அவளுடைய கையைப் பற்றிக்கொண்டு, 'யாருடைய மகளோ?' என்று கேட்கிறீர்களே! தெருவில் போகிற யாரோ ஒருத்தியினுடைய கையைப் பிடிப்பதென்றால் என்ன துணிவு இருக்கவேண்டும் உங்களுக்கு? இவ்வளவு துணிவுடைய நீங்கள் யாரோ? யாருடைய மகனோ? அதைச் சொல்லுங்கள் முன்னே" என்கிறாளாம்.

எவ்வளவு அன்பும் அறிவும் ஒருங்கு அமைந்த பெண்ணாக இருந்தால் அப்படிப் பேசியிருப்பாள்! அதைக்கேட்ட தலைவன் என்ன சொன்னான்? அல்லது என்ன செய்தான்? என்பதைப் பற்றி எல்லாம் புலவர் அதற்கு மேல் ஒன்றும் சொல்லாமல் நம்முடைய கற்பனைக்கே விட்டுவிடுகிறார். அவன் இப்படிக்கேட்க, அவள் இப்படிக் கேட்டாள் என்ற அளவோடு நிறுத்திவிடுகிறார்:

"புதுப்புனல் ஆடி அமர்த்த கண்ணள்,
யார் மகள் இவள்? எனப் பற்றிய மகிழ்ந!
யார் மகள் ஆயினும் அறியாய்!
நீ யார் மகனை எம் பற்றி யோயே?!"

4-ம் பக்கத் தொடர்ச்சி

அதன் பயனாக ஏற்பட்ட கலகங்கள் அநேகம்.

இந்தச் சூழ்நிலையில்தான் அவர்களுக்கு ஒரு தலைவர் கிடைத்தார்!

அமைதியான பாதையிலே நாட்டம் கொண்டவராம அவர்.

"உலகத்தின்முன் இன்றிருக்கிற பிரச்சினை அமைதியான பாதையை மேற்கொள்வதா அல்லது பலாத்காரத்திலே இறங்குவதா என்பதல்ல! அமைதி அல்லது அழிவு—இந்த இரண்டில் ஒன்றைத்தான் உலகம் தேர்ந்தெடுத்தாக வேண்டும்" என்கிறார் அவர்!

அவர் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தென்பகுதியைச் சேர்ந்தவர்—"தென்னகத்துக் காந்தி" என்று நீக்ரோக்களால் மட்டுமல்ல, வெள்ளையர்களில் பலராலும், அன்போடு அழைக்கப்படுபவர்!

அவரது சொந்தப்பெயர் டாக்டர் மார்டின் லூதர் கிங் என்பது! "மதிப்பிற்குரிய" என்ற அடைமொழியையும் சேர்த்துத்தான் அவரைக் குறிப்பிடுவார்களாம்!

இவ்வளவு கௌரவத்தைப் பெற்றிருக்கிற அவர் நரை, திரை, மூப்பு, எய்தியவராக — குறைந்தது நாற்பது ஐம்பது ஆண்டுகளைக் கடந்தவராக — இருந்திட வேண்டும் என்றுதான் எண்ணிடத் தோன்றும், நம் போன்றாருக்கு!

ஆனால் அவர் இளைஞர்—29 ஆண்டுகளே நிரம்பப பெற்றவர்!

மான்ட்காமரி மாநிலத்தில் நீக்ரோக்களில் "பஸ் போராட்டம்" நிகழ்த்திக்கொண்டிருந்ததை நிறுத்திவிடுமாறும், பஸ்களையே பகிஷ்காரம் செய்யுமாறும் இவர் வேண்டுகோள் விடுத்தார்! மறுநாளே போராட்டம் நிறுத்தப்பட்டது!

உலகத்தின் பற்பல பகுதிகளில், வாழ்ந்த, வாழ்கின்ற தலைவர்கள் பலர் இத்தகைய செல்வாக்கைப் பெற்றிருக்கின்றனர் என்பது உண்மை — ஆனால் அவர்களில் எவரும் இவ்வளவு சிறிய வயதில் இப்படிப் பல்லாயிரக் கணக்கான மக்களின் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்றாரில்லை!

•

காலம் மாறுகிறது!

கருத்துக்கள் மாறுகின்றன!

அரசியல் முறைகள்—பொருளியல் தத்துவங்கள் — சமுதாய அமைப்புக்கள் — அனைத்திலும் மாறுதல்கள்!

ஆனால், இன்றளவும் மாறாமல் இருக்கிற ஒரே பொருள் மனிதனின் இதயம்தான!

சாக்ரடீசுக்கு விஷம் கொடுத்த மனித இனம் — கலீலியோவைக் கொடுமைக்கு உள்ளாக்கிய மனித இதயம் — மார்டின்லூதருக்குக் கேடிழைத்த மனித உள்ளம்— ஆப்பிரகாம் லிங்கனைச் சுட்டுக் கொன்ற மிருக வெறி — காந்தியாரைப் பலிகொண்ட விலங்கு மனப்பான்மை—இன்னமும் மாறிடவில்லை என்பதற்கு "அமெரிக்காவின் காந்தி" பெற்றிருக்கும் பரிசு நமக்கு வேதனை தரும் விளக்கமாகத் திகழ்கிறது!

ஆண்டாண்டு காலமாக அடிமைப்பட்டு, ஆற்றொணாத் துயரத்துக்கு ஆளாகி, அல்லலுற்றுக் கிடந்திருக்கும் நீக்ரோக்களின் உரிமைக்காகப் போராடிய மாவீரனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் "பரிசு' அம்மவோ, நினைத்திடவே நெஞ்சம் கூசுகிறது.

ஒரு மாதத்திற்கு முன்னால் அவர் "ஹார்லெம்" என்ற நகரத்திற்கு வந்தாராம்! அந்த இடத்தில்தான், இந்த அரும் பெரும் தலைவனுக்குப் "பரிசளிப்பு விழா" நடந்தேறியிருக்கிறது!

தலைவன் வந்திருக்கிற செய்தி கேட்டதும், மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்த பலர், அவரைக் கண்டு களித்திடவும், அவர் கரத்தாலே எழுதப்பட்ட கையெழுத்தினைப் பெற்றுத் திரும்பவும், அவர் தங்கியிருந்த இல்லத்தின் முன்னால் கூடினராம்!

கூடியிருந்தோர், ஒழுங்காக, ஒருவர்பின் ஒருவராக அவரைச் சந்தித்தார்களாம்!

இந்தச் சந்தர்ப்பத்தில் அங்கோர் அம்மையார் தோன்றினார். ஐசோலா கரி என்பது அவரது பெயர்!

நீக்ரோ வகுப்பைச் சேர்ந்தவர் தான் அவர்! ஏறக்குறைய 40 ஆண்டுகள் ஆகின்றனவாம் அவருக்கு!

அவர் குழுமியிருந்த அனைவரையும் தள்ளிக்கொண்டு முன்னாலே வந்து நின்றாராம்.

வந்தவர் கேட்டார் "நீங்கள் தானே மார்டின் லூதர் கிங் என்பது?" என்று!

"ஆம்! நாம்தான்" புன்னகையும் பதிலும் சேர்ந்தாற்போல் வந்தன.

அவ்வளவுதான்! அடுத்த விநாடி! அந்த அம்மையார், தான் ஒளித்து வைத்திருந்த ஒரு வாளை எடுத்துக் குத்திவிட்டார்! வாள் கழுத்துப்புறம் பாய்ந்தது!

அந்த அம்மையார் தலைவரைப் பார்க்க ஆர்வத்தோடு ஓடி வருகிறார்கள் என்று குழுமியிருந்தோர் கருதிவிட்ட காரணத்தால், தங்கள் தலைவருக்கு இத்தகையதொரு ஆபத்து ஏற்படக்கூடும் என்று அவர்களில் எவரும் எதிர்பார்க்கவில்லை!

எவரும் காப்பாற்ற முன்வருவதற்கு முன்னாலே காரியம் முற்றிவிட்டது—வாளால் தாக்கப்பட்ட அந்த வீரன் மூர்ச்சையாகி விழுந்துவிட்டான்!

யார் செய்த சதியோ, என்ன காரணத்தால் அந்த அம்மையார் ஈட்டியைப் பாய்ச்சிடத் துணிந்தாரோ, என்ற கேள்விகளுக்கு இன்னமும் சரியானவிடைகிடைத்திட வில்லை!

ஆனால் "அமெரிக்காவின் "காந்தி" மருத்துவ விடுதியில் இருக்கிறார்—"கோட்சே"யைத் தியாக்கார விடுதியில் இருக்கிறார்!

ஓலம்!

தேவையில் பாதி கூட, உணவுப் பொருள் உற்பத்தி செய்ய முடியவில்லை எங்களால். நிலவளமோ, முயற்சியோ இல்லாதது அல்ல இதற்குக் காரணம். மிளகு, இரப்பர், தேயிலை, தேங்காய், இஞ்சி போன்ற 'டாலர்' சம்பாதிக்கும் பயிர்களைப் பயிரிடுகிறோம், இவைகளை நிறுத்திவிட்டு, நெல்போடுவோமானால், இந்தப் பயிர்கள் அழியும். இதனால், வருமானம் குறையும்; இது நல்லதுமல்ல. எனவே, வருமானம் தேடித்தரும் பயிர்த் தொழில்களில் ஈடுபடும் எங்களுக்கு அரிசி தந்து தவ வேண்டியது, மத்தியசர்க்காரின் பொறுப்பாகும். இந்தப் பொறுப்பை, மத்திய சர்க்கார் நிறைவேற்றவில்லை. அது மட்டுமின்றி, மாகாண சர்க்கார் ஏதாவது செய்யலாம் என்றாலும் தடைகளைப் போடுகிறது," என்று கேரள கம்யூனிஸ்டுக்கட்சியின் செயலாளர் எம். என். கோவிந்தன் பம்பாயில் அக். 20-ந் தேதி, வேதனையோடு, குமுறியிருக்கிறார்.

சிறுகதை

ஐந்து விரல்களும்....

—[மான்மகிழன்]—

மனிதன் இதயத்தைப் பெற்றிருக்கக்கூடாது. அப்படி இல்லையல்லவா? நினைக்கையிலே எத்தனை சுழல்கள்! பகுத்தறிவை மட்டுமே அவன் பெற்றிருந்தால்... துன்பக் குழப்பங்கள் விலகி இருக்கும். உயிர் நடை பயின்றிருக்கும். எப்பொழுதும் இன்பமே தவழ்ந்திருக்கும்......... இப்படியெல்லாம் நினைக்கும்போது எப்பொழுதும் மகிழ்ந்திருக்க வேண்டும் என்ற என் உறுதி தவிடுபொடியாகிறது. இதயமே என்னைப் பொறுத்தவரை கிடையாது என்று கற்பனை செய்தும் பார்க்கிறேன். கற்பனை வேலிகளை எல்லாம் ஒரு புதுச் சக்தி தகர்த்தெறிகிறது.

அந்தப் புதுச்சக்தி குற்றத்தை அலசுகிறது. அலசலில் குழப்பம் உருவெடுக்கிறது............'தவறு என்ன?' என்கிறது சிந்தை. பதிலையே காணோம்......பாலைவனம் தென்படுகிறது...........நோக்குத் திரும்புகிறது...அப்பா தென்படுகிறார்... அவர்மேல் வாஞ்சை எழுகிறது. 'பெற்ற மனம் எங்கே?' என்கிறது இதயத்தில் ஒருவினா. அவர் ஆத்திரம் என்னை அச்சுறுத்துகிறது........அவருடைய வைராக்கியம் வீரியமாக வளர்கிறது. 'பெற்ற மகளா நீ' என்ற தோரணையில் அவர் போவதாகத் தெரிகிறது......தவறு என்மேல் திரும்புகிறது......நான் என்னைப் பார்க்கிறேன்...என்மேல் குற்றம் இருப்பதாகவும் உணர்கிறேன்... இல்லாததாகவும் நினைக்கிறேன்...வளர்மதியைப்போல வருடம் வளர்ந்து வருகிறது......இன்னும் நான் இப்படியே...

உலகில் எத்தனையோ தவறுகள் நடக்கின்றன. ஆனால் அவையெல்லாமே தவறுகளாகப் புலப்படுவதில்லை. தவறுகள் எப்படி எப்படியோ ஒடிமறைகின்றன. மறையாத தவறுகள் 'ஓகோ'வென்று பேசப்படுகின்றன. இடித்துரைக்கப்படுகின்றன, வெளிச்சத்திற்கு வராத தவறுகள் ...தவறுகளின் சந்ததியைவிருத்தி செய்கின்றன......நேற்றைக்கு முந்திய தினம் என்று நினைக்கின்றேன்....நானும் என் கணவரும் சினிமாவுக்குச் சென்றுகொண்டிருந்தோம்...பழக்கப்பட்ட முகங்கள் என்னைக் கண்டு எப்படி எப்படி மாறின! அத்தனை அருவருப்புக்கு நான் செய்துவிட்ட தவறு மட்டும் எனக்குப் புலப்படவே இல்லை. அவர்களுக்கு மட்டும் இதயமென்பதிருந்தால்......இதயமெதற்கு(?) அறிகின்றசாதாரணத் தெளிவு இருந்தால்... அப்படிச் செய்திருப்பார்களா? இந்தக் கேள்வி என் உள்ளத்தே பிறந்ததும் என்மேலே எனக்கே சந்தேகம் தோன்றியது. ஒருவேளை நாம் நிலைமை மாறி இருக்கிறோமோ என்ற ஐயப்பாடு வந்தது. அப்போது என்விழிகளில் பட்டுவிட்ட வைத்தியக்காரன் என் சந்தேகத்தை வலிமைப்படுத்தினான்......

வெதும்பியவாறு சைக்கில் ரிக்ஷாவில் சென்றுகொண்டிருந்தேன். விசையாக அது திரும்பியது என்னை ஒரு குலுக்கு குலுக்கிவிட்டது. அந்த குலுக்கல் சிந்தை நோயிலிருந்து எனக்கு விடுதலை நல்கியது. பெருமூச்சோடு நிமிர்ந்துப் பார்த்தேன்... ஐயோ! நான் குறுகுறு நடை பயின்ற வீதி...! சின்னஞ்சிறு வயதிலே அண்டை வீட்டுப் பெண்களோடு 'கண்ணாமூச்சி' ஆடிக் களித்த வீதி........! என் கணவருடைய சூடான மூச்சு என் கன்னத்தைத் தகித்தது...வற்றிப்போன சிரிப்பை வலிய வலிய முகத்திற்கு இழுத்தேன். பூரித்துப் போனார் என் கணவர்........ மகிழ்ச்சியின் அப்பட்ட முத்திரைகள் அவருடைய குழிவிழும் சிரிப்பில் மின்னிற்று...அது மனோகரமாக இருந்தது...எத்தனையோசனைகளை அது கருக்கொண்டிருந்தது. இடம் மட்டும் வேறாக இருந்திருந்தால் எத்தனையோ மகிழ்ந்திருப்பேன். வீதி! ஒவ்வொரு விநாடியும் அதைக் கவனப்படுத்திக்கொண்டே இருந்தேன். என் அவசர உள்ளத்தின்மேல் எனக்கு அத்தனை அச்சம்! நான் பிறந்து வளர்ந்த வீதியல்லவா? என் கணவரோடு ஜோடியாக ரிக்ஷாவில் செல்ல எனக்கு நாணமாய் இருந்தது. தெரிந்திருந்தால் அங்கேயே தடுத்திருப்பேன். விஷயம் மிஞ்சிவிட்டதே... பழைய முகங்கள்— பழகிய முகங்கள் தென்பட்டன. பழகிய பாசத்தில் சில பூரித்தன. மறுகணமே அவைகளும் கவிழ்ந்தன! என் நெஞ்சு வெந்துபோய் விட்டது.

என் தம்பி அப்போது வீதியிலே விளையாடிக்கொண்டிருந்தான். அவன் என்னைக் கண்டுவிட்டான். பூரித்தல்லவா இருக்க வேண்டும்? குழம்பிய முகத்தோடு ......அவமான பாவத்தோடு...... அவன் ஓடோடி வீட்டிற்குள் புகுந்துகொண்டான். என்ன தவறு செய்துவிட்டேனோ? ஆண்டுக்கணக்கில் இதயத்தோடு இதயமாய்ப் பழகியபாசத்தையெல்லாம் அவனை மறந்துவிடச் செய்தது. நினைத்தேன். வேதனையாக இருந்தது... "எனக்கு மனது சரியில்லை; வீட்டிற்குப் போவோம் வாருங்கள்" என்று என் கண்ணாளரைக் குழறியவாறு கேட்டேன்... அவரும் என் நிலைமை உணர்ந்திருக்க வேண்டும்... அவராலும் வார்த்தைகளை வெளிப்படுத்த இயலவில்லைப் போலும்... கல்லாகிவிட்டிருந்தார்...... எங்கள் இருவரிடையே எத்தனை நேரம் சூனியப் பிரதேசம் நிலவியதோ. ரிக்ஷாக்காரன் வண்டியை நிறுத்தினான்.

இயந்திரம்போல நேராகப்போய் டிக்கட் வாங்கினார் அவர்.

இவையெல்லாம் என் வாழ்வில் உதயமாகிய திருவிளையாடல்கள்! வருத்தமாக இருந்தது. இதற்குத்தான் சிந்தையொன்று இல்லாமல் பிறந்திருந்தால் எத்தனை நன்றாக இருக்கும் என்று நான் கணித்தது. எதையெல்லாமோ நினைவுச் சுழலில் புரட்டிக்கொண்டு அமர்ந்திருந்தேன். என் எண்ணத்தில் கலந்துவிட்டவர் வரும் சந்தடிகூட எனக்குத் தெரியாமலே போயிற்று. அவர் எனக்குப்பின்னால் எத்தனை நேரம் நின்றுகொண்டிருந்தாரோ.........

"திலகா, ஏன் ஒரு மாதிரியாக உள்ளாய்?"—என்றார் மெதுவாக.

நான் எதையென்று சொல்லுவேன்!

"திலகா, உடம்புக்கு-என்ன?" அவருடைய கண்களிலே திகில் வட்டமிட்டவாறு இருந்தது.

இத்தகைய உள்ளம் உள்ளவரா பயங்கரப் போக்கிரி என்று பெயர் சம்பாதித்திருக்கிறார் என்று நான் வியந்தேபோனேன் ...அதை ஏன் நினைத்தேனோ...... என் எதிர்காலம் பயமுறுத்தியது ......நிகழ்காலம்தான் உங்களுக்குத் தெரியுமே......அப்பால் என் நிலை...?

"அம்மா ஏதாவது சொன்னார்களா?"—அவர் தொடர்ந்தார்.

பேசாமல் இருக்க முடியவில்லை. அவர் எங்கோ சென்றுகொண்டிருந்தார். வீண் குழப்பத்திற்கு வழியை நிச்சயம் திறந்திடுவார் என்று எனக்குத் தெரியும். அந்த அம்மையோ மிக நல்லவர்! அநியாயமாகத் தொல்லைகள் அவர்களுக்குத் தந்திடுவாரோ என்று அஞ்சினேன்!

"செச்சே! இன்னொரு முறை அப்படிக் கேட்காதீர்கள்...எனக்கு ஒரே தலைவலியாக இருக்கிறது" என்றேன்.

அவர் பேசாமல் போய்க்கொண்டிருந்தார். அவரும் குழப்பமாகவே தென்பட்டார். எனக்காக எத்தனை மகிழ்ச்சியோடு வேலைகளை முடித்துவிட்டு வந்தாரோ! பாவம்...குழம்பியவாறு சென்று கொண்டிருந்தார்.

அவர் குழப்பம் என் இதயத்தைப் புரட்டியது. பயங்கரம் தொனித்தது. குழப்பம் என் உள்ளத்துக்குள் பட்டுமே புதைய வேண்டும். அது ஒருவருக்கும் தெரியவே கூடாது. அப்படி இருந்தால்தான் ஒரு திருப்தியாவது இருக்கும் என்று எண்ணினேன். குழப்பங்களை எல்லாம் விழுங்கிவிட்டு, சுறுசுறுப்பாக எழுந்தேன்.

என் கணவரின் திருப்திக்காகத் தலைவாரி, பூச்சூடி ஒயிலாகஅமர்ந்திருந்தேன். அவர் எழுந்தார். என் மலர் முகத்தைக் கண்டதும் அவரிடம் தென்பட்ட தெம்புதான் எத்தனை!

அப்பொழுது என் தம்பி பன்முறை நாங்கள் இருந்த வீட்டுச் சன்னலைப் பார்த்தவாறு அப்படியும் இப்படியும் ஏகிக்கொண்டிருந்தான். அவன் விழி மலர்களில் வரட்சி துலங்கியது... முகத்திலே பாசம் துடித்துக்கொண்டிருந்தது ...எல்லாவற்றிற்கும் மேலாக அவனுடைய நடமாட்டத்திலே அழியாத பாசம் பாய்ந்து பரவிக்கொண்டிருந்தது. என்னை ஒரு முறையாவது பார்க்கவேண்டும் என்று அவன் துடிப்பதுபோல்

3-ம் பக்கத் தொடர்ச்சி

இடம் தரவேண்டும் என்பதுதானே பொருள்? இப்போது உள்ள நிலைமையில் இடத்தைப் பிடித்துக் கொண்டிருப்போர்கள் அதனைப் பிறர்க்குத் தர மறுக்கிறார்கள். நேரு அதனை வலிய இளைஞர்களுக்குத் தர விரும்புகின்றார். இந்த நிலையில் நேருவின் அறிவுரை கிடைத்தவுடன் காங்கிரஸ் தலைவர்கள் என்ன செய்கின்றனர்? நேரு சொல்லிவிட்டாரே என்பதினால் உடனே இளைஞர்களுக்கு இடம் தந்துவிட்டார்களா? இல்லை, இடம் தராதது மட்டுமன்று. 'இடம் கேட்பது தபபு' என்று அவர்கள் அறிவுரை சொல்லத் தொடங்கிவிட்டார்கள்.

பரோடாவில் இளைஞர் காங்கிரசின் கூட்டத்தில் பேசிய மொரார்ஜிதேசாய் தன் பங்காக அவர்களுக்குச் சில அறிவுரைகளைச் சொல்லும்போது 'பதவி ஆசைவேண்டாம்' என்று அறிவுரை வழங்கியிருக்கின்றார்.

முன்தினம் நேரு 'இளைஞர்களுக்கு இடம் தாருங்கள்' என்று முதியவர்களுக்கு சொன்னார். மறுநாள் முதிய தலைவர் ஒருவர் இளைஞர்களிடையிலே நின்று பதவி ஆசை வேண்டாம், அது 'பாபம்' என்று பேசிவிட்டு வந்திருக்கின்றார்.

இதற்கு என்ன பொருள்? 'நேரு சொல்லிவிட்டாரே இளைஞர்களுக்கு இடம் தாருங்கள் என்று. அதனால் நாங்கள் இடம் தந்துவிட்டோம் என்று கருதாதீர்கள்' என்று இளைஞர்களுக்கு உண்மையை எடுத்துச் சொல்கிறார் என்பதுதானே! அல்லது நேரு மிகப் பெரியவர் அவர் எதைவேண்டுமானாலும் சொல்லிவிடுவார். உடனே நாங்கள் அதைக்கேட்டு அதன்படி நடப்போம் என்று எதிர்பார்க்கவேண்டாம் என்று நேருவுக்கே எடுத்துச் சொல்வதாகவும் இருக்கலாம்.

எதுஎப்படியோ, நேருவும் அறிவுரை சொல்கிறார், மொரார்ஜியும் அறிவுரை சொல்கிறார். இருவரும் இரண்டு கோணங்களில் நின்று வேறுவேறான கருத்துக்களைச் சொல்கின்றனர்.

ஆனால் இவர்கள் இருவரையும் பார்த்து வேறு ஒருவர் சிரிக்கின்றார். பதவியில் இருக்கும் அவர்களைக் கையைப் பிடித்து இழுக்கின்றார்.

ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் நேரு போன்ற பெருந்தலைவர்கள் பதவியை விட்டு விலகி மக்களோடு இணைந்து தொண்டு செய்யவேண்டும் என்றார். ஆனால் நேரு, அவர் சொல்லிவிட்டாரே என்பதற்காக உடனே பதவியை உதறிவிட்டு எங்கே தொண்டுசெய்யவேண்டும்? எப்படிச் செய்யவேண்டும் என்று கேட்கவில்லை. • ஆனால் இளைஞர்களுக்கு இடம் தாருங்கள் என்று மட்டும் வேண்டுகோள் விட்டிருக்கின்றார்.

'அவர் சொன்னால் அது சட்டமா என்ன, இளைஞர்களே உங்களுக்குப் பதவி ஆசை வேண்டாம்' என்று உடனே மொரார்ஜி கூறுகின்றார்.

இடிந்து விழ இருக்கின்றது கட்டிடம் இதற்கிடையில் பலர் பலவகையான யோசனைகளைச் சொல்கின்றனர். ஒருவர் சொல்வதை இன்னொருவர் கேட்பதாகக் காணோம். இவர்கள் பூசல் தீர்ந்து தூணை எடுக்கவா, வைக்கவா என்பது தீர்மானம் ஆவதற்குள் கூரை சரிந்து விழும். சுவர் கூரையின்றி நெட்டை மரம் என நிற்கும்! அந்தக் கூரையில்லாத சுவருக்குப் பெயர் வேறு! ❀

தெரிந்தது. இரத்தபாசம் அவனைக் கொன்று கூறுபோட்டுக் கொண்டிருந்ததை நினைத்து நான் கசிந்துகொண்டிருந்தேன். என்னை அடுத்து அவர் அமர்ந்திருந்தார். அதனால், அவனால் என்னைப் பார்க்க இயலவில்லை. அப்படியே கண்டுகொள்ளாமல் இருந்திருப்பேன்... என்னமோ மனம் கேட்கவில்லை. அவரைக் கொஞ்சம் தள்ளி உட்காருமாறு கேட்டுக்கொண்டேன். உடனே அவர் குறும்பாக "எதற்கு?" என்றார்.

"என் தம்பி என்னைப் பார்க்க வந்திருக்கிறான்" என்றேன்.

"அப்படியா...!" என்று ஆவல் கமழக் கூறிவிட்டு அவர் அங்கிருந்து எழுந்தார்.

என் தம்பி என்னைக் கண்டான். அவன் முகம் மலர்ந்து விரிந்தது! அதே நேரத்தில் அவரைக் கண்டான். அவன் நடக்க ஆரம்பித்தான்!

"சேகர்!" என் இதயம் கிழியக் கிழியக் கத்தியது.

அவனோ திரும்பிக்கூட பார்க்கவில்லை!

*

என் நெஞ்சத்தில் நீங்காது இழைந்துவிட்டவர் அவருடைய நண்பர் ஒருவரோடு மிகக் குறும்பாகப் பேசுவது வழக்கம்!...... அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்!

அச்சமயத்தில் கேலியாக "மாமியார் வீட்டுச் சோறு அபாரம் போலிருக்கு...மனுஷன் ரொம்பவும் 'இளைத்'திருக்கின்றாயே" என்றார் அவர்.

இச்சொற்கள் என்மேல் வீசப்பட்ட கற்களாக இருந்தன. நான் மெதுவாக அவருடைய முகத்தைக் கவனித்தேன். பழைய தெம்புகளில் ஒன்றைக்கூடக் காணோம்...ஏதோ ஒரு உணர்ச்சி அவர் முகத்தில் பொங்கிக்கொண்டிருந்தது...நான் என்னையுமறியாமல் கடந்த காலத்தைத் திருப்பிக் கொண்டிருந்தேன்...

அவர் எங்கள் வீட்டுக்குப் பால் ஊற்றுவது வழக்கம். எங்கள் வீட்டு வாசலில் உள்ளவர்கள் யாவரும் பால் கறக்கும்போது அருகில் இருப்பது வழக்கம்! ஏனென்றால் பால்காரர்கள்... கலந்துவிடுவார்கள் என்ற பயம்! அப்பட்டமான பாலுக்கு எல்லோரும் செய்யும் "தவம்" இது!

அந்த முறையில் எங்களுக்குள்ளே உறவு......வளர்ந்தது... முதிர்ந்தது...விஷயம் சிதறியது ...தந்தை அஞ்சினார்...என் கணவர் எத்தகையவர் என்பது அவருக்குத் தெரியும்......என்னை எச்சரித்தார்...புத்தி சொன்னார்...... அவருடைய உள்ளத் தூய்மையின்மேல் இருந்த நம்பிக்கை என்னைக் கவர்ந்தது. நான் ஒன்றுக்குமே மசியவில்லை.

என் தந்தை "பார்க்கிறேன் ஒருகை" என்றார். அதற்குப் பிறகுதான் நாங்கள் எங்களைக் காத்துக்கொண்டோம். ஒருவரை ஒருவர் பிணைத்துக்கொண்டோம்!

என்னைக் காணாது போனது ஒரு பரபரப்பை உண்டாக்கி விட்டது.

'போலீசில்' என் கணவர் பிடிபட்டார்! உதைபட்டார்! முழங்கால்கள் சிதற அடிக்கப்பட்டார். கொடுமைக்காரர்கள் என் கண்மணியை நன்றாகப் பதம்பார்த்தார்கள்! அவர் சௌந்தர்ய முகம் உப்பிவிட்டது.........அது அவர்களுக்குப் பயத்தை தந்திருக்க வேண்டும். விட்டுவிட்டார்கள்... வழக்குப் போட்டார்கள்...

வழக்கு மட்டும் என் செய்யும்? நாங்கள் பதிவுத் திருமணம் செய்துகொண்டோம். என்றால் அவர்கண்ட சுகம் என்ன? எத்தனை துன்பங்களைத் தழுவினார்! எத்தனை இக்கட்டுக்களைத் தாண்டினார்!

இத்தனைக்கும் அப்பால் அவர் என்னிடம் எத்தனை அன்பாக நடந்துகொள்கிறார்......அவரை மணவாளராகப் பெற நான் என்ன பேறு செய்திருக்கவேண்டுமோ! இதை நினைக்கையிலே அவர்மேல் எனக்குப் பரிதாபம் ஏற்படுகிறது ...ஆற்றாமை அரும்புகிறது...மாப்பிள்ளை அனுபவம்......விருந்து வைபவம்...இப்படி ஏதாவது ஒரு அனுபவம் கண்டிருப்பாரா? என் இதயம் எண்ண எண்ண வலிக்கிறது...குபுகுபுவென்று உகுநீர் கொட்டுகிறது!

விரும்பியவனை அடைந்தேன்... அதனால் தூய்மையினைக் காப்பாற்றிக் கொண்டேன். இது நான் செய்த குற்றம்?

இதற்குத்தான் எல்லோரும் என்னைக் கடுகடுப்போடு கொடு நோக்கு நோக்குகிறார்கள்! அப்பா என்னை மறந்தே போனார்! இறந்துவிட்டதாக என்னைத் தலைமுழுகி விட்டார்! என்மேல் இருந்த ஒரு சிறிய சங்கிலி என்ன செய்யும்...? அவர் மனது அதைக்கூட விட்டு வைக்கவில்லை!

*

நான் மரண வேதனையில் இருந்திருக்க வேண்டும். என்னைச்சுற்றி என் கணவர்......அத்தை...டாக்டர் முதலியவர்கள் நின்றிருந்தார்கள்...என் நிலைக்குக் காரணம் அவருக்குத் தெரிந்திருக்கும். அப்பாவை எப்படியேனும் அழைத்து வந்திருப்பார் என்றுதான் எண்ணியிருந்தேன்...நிச்சயம் இச்சமயத்தில் அவர் சிந்தை இளகத்தான் செய்யும் என்று கருதி இருந்தேன்...கண்களை அகலத்திறந்து நாற்புறமும் பார்த்தேன்...என் கணவர் மட்டும் துக்கம் தாளமுடியாமல் கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தார்.

எல்லோரும் அப்புறம் போனார்கள்!

"கண்ணே, உன் அப்பாவை எவ்வளவோ கெஞ்சினேன்... அவர் மசியவில்லை" என்று என் பார்வையின் பொருளைப் புரிந்து, கொண்டு வியர்க்க வியர்க்க அருகில் வந்து கூறினார். கன்னத்தில் ஐந்து விரல்களும் பதிந்திருந்ததை அப்போது கவனித்தேன் ...மெல்லக் காரணத்தைக் கேட்டேன்...

"என் மாமனார் தந்த பரிசு" என்றார் மெல்லச் சிரித்துக் கொண்டே.

என்னால் அவருக்குக் கிடைத்த அடுக்கடுக்கான பரிசுகளைக் காண முடியவில்லை. என்னால் அவர் பெற்ற கடைசிப் பரிசை மெதுவாகத் தடவிப் பார்த்து கொண்டிருந்தேன். அப்போது என் தம்பி வாசலில் தயங்கித் தயங்கி நின்றுகொண்டிருந்தான்! அன்பாக "தம்பி..." என்று இனிமை தெறிக்க அழைத்தேன்! "அக்கா" என்று கதறியவாறு முகம் புதைத்து என்மேல் சாய்ந்தான்!

நான் விழிகளை மூடிக்கொண்டிருந்தேன். கார் ஒன்று வந்து நின்ற சப்தம் கேட்டது!

★

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணுதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

திராவிடநாடு

23—11—58 | வார வெளியீடு | விலை 16 காசு

கேள்!

கா. வேழவேந்தன்

நீதானே தமிழன்? உன்றன்
நிலந்தானே மறவர் பூமி?
நீதானே ஈழம் வென்றோன்?
நெடுங்கடல் கடந்தோன்? அன்று
நீதானே 'புற'த்தைக் கண்டோன்?
'நெடுந்தொகை' கண்டோன்? இங்கே
நீதானே அறத்தைப் பண்பை
நிலைபெறச் செய்தோன் மண்ணில்?

எங்கேஉன் வீரம்? தில்லி
எடுஎன்றால் எடுக்கின் றாயே!
எங்கேஉன் ஆண்மை? இந்தி
ஏல்என்றால் ஏற்கின் றாயே!
எங்கேஉன் பெருமை? சும்மா
இருஎன்றால் இருக்கின் றாயே!
எங்கேஉன் வண்மை? சோறு
இலைஎன்று அலைகின் றாயே!

குற்றாலம் இருந்து என்ன?
கொடைக்கானல் இருந்து என்ன?
வற்றாத நதிகள் நூறு
வளமுடன் பாய்ந்து என்ன?
சற்றேனும் தரத்தில் தாழாச்
சரித்திரம் பெற்று என்ன?
புற்றாகி, அடிமைப் பட்டுப்
புல்லாகி வதைகின் றாயே!

இன்னுமா சுரண்டல் ஆட்சி
இந்நாட்டில் நிலைத்தல் வேண்டும்?
இன்னுமா மொழியும் வாழ்வும்
இழிநிலை அடைய வேண்டும்?
இன்னுமா புரிய வில்லை?
இனியுமா வெட்கம் இல்லை?
இன்னுமா உணர்ச்சி இல்லை?
இரத்தத்தில் சூடு இல்லை?

★

கேட்டீரா? சேதி!

டாக்டர் சிவாகோ எனும் நூலை எழுதியமைக்காக பாஸ்டர் நாக் எனும் கவிஞரைக் கண்டித்தது அல்லவா, ரஷ்யா? இதைப் பற்றி, உலகமே கண்டனமும் கேலியும் கிளப்பியிருக்கிறது! அது மறைவதற்குள்ளாகவே, திடுக்கிடும் செய்தி இன்னொன்றும் வந்துள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு, மிகவும் சிறப்போடு இங்கு 'விஜயம்' செய்து போனாரே புல்கானின் அவரை மூலைக்கு அனுப்பிவிட்டார்களாம் இப்போது! ரஷ்யாவின் பிரதமராகயிருந்த அவரைக் குற்றவாளியாக்கியிருக்கிறார், குருஷேவ். நாட்டின் நலம் விரும்பாதவர், என்று கட்சி முன், குற்றம்சாட்டியிருக்கிறார் இந்தக் கிழமை.

*

ஸ்டாலினுக்குப் பிறகு ரஷிய நட்சத்திரமானார் மாலங்கோவ்! ஸ்டாலின் காலத்திலேயே உலகப் புகழ்பெற்ற அரசியல்மேதையாக விளங்கினார் மொலடாவ்! ரஷியாவின் பெரிய தலைவராக விளங்கினார் காகனோவிச்! மிகப் பெரிய தளபதி எனப் புகழ்பெற்றவர் ஜுகாவ்!—இவர்கள் எல்லோரையுமே, ஒருவாறாக, அரசியல் மேடையிலிருந்து 'சீட்டு'க் கிழித்துவிட்டார் குருஷேவ். இப்போது, அவர்களோடு, புல்கானினும் சேர்க்கப்பட்டு விட்டார்

*

கோவார்டுவாஸ்டு என்பவர் பிரபல அமெரிக்க நாவலாசிரியர்! உரிமை இழந்த மக்களைப்பற்றி அவர் எழுதிய நூல்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தீப்பொறி எனலாம். இப்படி இவர் எழுதுவதைக் கண்ட, அமெரிக்க சர்க்கார், அவரை ஒரு கம்யூனிஸ்டு என்று குற்றம் சாட்டியது. அவர் அஞ்சவில்லை. அந்த கோவார்டுவாஸ்டுக்கு, ஸ்டாலின் பதக்கம் அளித்து, 1953-ல் கவுரவித்தது ரஷ்யா. அவர் ஒரு பெரிய ஆசிரியர்! முற்போக்குவாதி! உலக சமாதானம் விரும்பி! என்றெல்லாம், வாழ்த்துப் பாடியது ரஷ்யா. ஆனால், இப்போது, அவரைப் பற்றி அதே ரஷ்யா என்ன சொல்கிறது தெரியுமா? பூர்ஷ்வா என்கிறது! அங்கேரிக்குள் ரஷ்யா தலையிட்டதை, அவர் கண்டித்தாராம். உடனே, அவருடைய எழுத்துத் திறமை போயிற்று—முற்போக்குவாதி எனும் பட்டம் பறந்தது—பூர்ஷ்வா ஆகிவிட்டார்!!

*

தமக்கு பிடிக்காதவரை பழி வாங்குவது ரஷியாவில் மட்டும் தானா நடக்கிறது? மிகப்பெரிய பாடகர் பால்ராப்சனை என்ன செய்தது அமெரிக்க சர்க்கார்? ஆர்தர்மில்லர் எனும் நாவலாசிரியரைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தவில்லையா?—என்று, கேட்கத் தோன்றும் நமக்கு. பால்ராப்சனை, ஒரு கம்யூனிஸ்டு என்று படாத பாடுபடுத்தினார்கள், அமெரிக்கர்கள். அவருக்கு ஸ்டாலின் பதக்கம் வழங்கப்பட்டதும் அமெரிக்க சர்க்காரே ஆத்திரப்பட்டது உண்மை. அவரை, வெளிநாடு போக அனுமதி மறுத்ததும் உண்மை. ஆனால் பரிசைத் திருப்பி அனுப்புமாறு யாரும் செய்யவில்லை! அதோடு அவர் சர்க்காரின் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்காடும் உரிமை இருந்தது. வழக்காடினார். வெளிநாடு போக அனுமதியும் பெற்றார். ரஷ்யாவிலுள்ள, 'பாஸ்டர்நாக்'குக்கு இந்த உரிமைகளிருக்கிறதா, என்று யாராவது அமெரிக்கர் கேட்டால், நாம் விழிக்கவேண்டியதுதான்!

*

சைப்ரஸ் தீவுக்குச் சுதந்திரம் வாங்கித்தரப் பாடுபடும் மகாரியாஸ் பாதிரியார் இந்தக்கிழமை அமெரிக்காவுக்குப் போயிருக்கிறார்! நியுயார்க்போய், ஐக்கிய நாடுகள் சபையில், சைப்ரஸ் பிரச்னையை எழுப்பப்போகிறார். அவருக்குக் கிரீஸ், பக்கத்துணை இருக்கிறது. உலக நாடுகள் சபைமுன் தன்னாட்டு விடுதலைக் கோரிக்கையை வைத்து, நியாயம்பெறப் போயிருக்கிறார் அவர்! "இப்படி ஏன் ஒரு நாளைக்கு நாமும் செய்யக் கூடாது" என்று இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தி. மு. க. சொன்னபோது, "ஐ. நா.வுக்குப் போகப்போகிறார்களாமே! இவர்களுக்கு ஐ. நா. சபையைப்பற்றி ஏதாவது புரிகிறதா?" என்று குத்திவிடும் குரலில் கொக்கரித்தது, கவனத்துக்கு வரக்கூடும், நமது தோழர்களுக்கு. சைப்ரஸ் போகிறது! பலம் பெற்றால் நாமும் ஏன் போகமுடியாது!!

★

தங்களுடைய முயற்சியினால் முன்னுக்கு வந்தவர்களை, அவர்கள் எப்படி முன்னுக்கு வந்தார்கள் என்று மக்கள் கவனிப்பதில்லை. "அவனுக்கு அதிர்ஷ்டம் அடிக்கிறது" என்று சுலபமாய்ச் சொல்லிவிடுகிறார்கள். இதனால் முன்னுக்கு வந்தவர்களின் சாமர்த்தியங்கள் மக்களுக்குத் தெரியாமல் போகிறது. அதே மாதிரி தாங்களும் ஏன் முயற்சி செய்யக் கூடாது என்ற தூண்டுதல் ஏற்பட வழியில்லாமல் போகிறது. முன்னுக்கு வந்தவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்களைக் கற்றுக்கொள்ளாமல், அதிர்ஷ்டம் என்ற வார்த்தையை உபயோகித்து அந்த அரிய பாடத்தைை இழந்துவிடுகிறார்கள்.

வியர்வையும் இரத்தமும்!

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [23-11-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 19

கோடி கோடியாகக் கொட்டிக்கொடுக்கலாம் நீர்—கோபுரத்தின்மீது ஏற்றி உட்காரவைக்கலாம்—ஆனால், அதற்குப் பரிசாக எனது கற்பையன்றோ கேட்கிறீர்? உமது காசு எனது கால் தூசுக்குச் சமானம்! கல்லுடைப்பேன்—மரம் பிளப்பேன்—கால்படி அரிசி கிடைத்தாலும் அதைக்கொண்டு என் குடும்பத்தைக் காப்பாற்றுவேன். பணத்துக்காக உமது பல்லிளிப்புக்கு ஒருநாளும் பலியாகிவிடமாட்டேன். இரத்தம் சொட்ட உழைத்து, வியர்வை ஓடப் பாடுபட்டாலும், தன்மானத்தோடு நான் வாழ்வதையே விரும்புகிறேன்!!—என்றுதான், எந்தப் பெண்ணும் கூறுவாளே யொழிய, கணவன் ஏன், இக்கனவான் தேவலாமே என்று எண்ணமாட்டாள். அப்படி நினைப்பது கேவலம்! மானம்போயினும், மவுசுதான் முக்கியம் என்று நல்ல பெண்மணி ஒருநாளும் எண்ணமாட்டாள்!!

அரசியல் உலகில், இரத்தமும் வியர்வையும் சிந்தி, நல்வாழ்வில் ஈடுபடும்போது பிறக்கும் தன்மதிப்பின் சிறப்பே சிறப்புத்தான். கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்குதல்போல, நாட்டின் வாழ்வை அடகுவைத்து, நலம்பெற எந்த நல்லவனும் முயலமாட்டான். அமெரிக்கா கொட்டிக் கொடுக்கிறது—பிரிட்டன் பிரியமொழிகளைக் கொட்டுகிறது—அதன் வசமே நம் நாட்டை ஒப்படைத்து விடுவோம் என்று யாரும் சொல்லார்.

கூழானாலும் கூடிக் குடிப்போம்! கஞ்சியானாலும் நம் கலயத்தில் குடித்து மகிழ்வோம்! பீதாம்பரமும், வெண்பட்டும், எவ்வளவு அழகாயிருந்தாலும் இரவல் சரக்காயிருந்து, என்ன பெருமை? கந்தையாயினும் 'எனது' என்றிருப்பதிலிருக்கும் களிப்புக் களிப்புத்தானே!!—என்றே, எந்த விடுதலை வீரனும், எண்ணுவான்.

"ஐயோ! நம்முடைய நாட்டில், இரயிலை ஓட்டிவிட்டவர்களாச்சே. தபாலைக் கண்டுபிடித்தவர்களாச்சே. தந்திக் கம்பிகளை வைத்தவர்களாச்சே. இவர்களை விரட்டலாமா?", என்று எந்தக் காங்கிரஸ்காரரும் கேட்கவில்லை. அதற்குப் பதில், "சரிய்யா! இதெல்லாம், எமது வரிப்பணத்தைச் சுரண்டித்தானே செய்தாய்? போ! போ!!", என்றே முழக்கமிட்டனர்.

"எப்படி உங்களால்வாழமுடியும்? கொஞ்சங்கூட அரசுப் பழக்கம் கிடையாதே! திடீரென உங்கள் கையில் ஒப்படைத்தால், தேசம் திக்குமுக்காடிப் போய்விடுமே. அதனால்தான் பார்க்கிறோம். இப்போது, உங்களிடம் இந்தியாவைத் தர விரும்பவில்லை", என்று வெள்ளையன் பதிலளித்தபோது, "நாங்கள் வாழ்கிறோமோ, சாகிறோமோ எங்கள் நாட்டை எங்கள் வசம் கொடு! எல்லோரும் எதுவுமற்றுச் சாகும்படி நேர்ந்தாலும் எங்கள் மண்ணில் சுதந்திர புருடர்களாகவாவது சாகிறோம்," என்றே சங்கநாதம் செய்தார்கள் சுதந்திர வீரர்கள்.

இந்தச் சுதந்திர உணர்ச்சியின் முன்னால், இந்நாள்வரை, எந்தப் பீரங்கியும் நின்றதில்லை! பெரிய பெரிய வல்லரசுகளும், எதிர்த்து வெற்றிகண்டதில்லை!! மூர்க்கன்—முரடன்—ஒரு பிடி பிடித்தால் செத்தோம்—சரி, அவன் விருப்பப்படி இருந்துவிடுவோம் என்று கையாலாகாத பெண்ணும் எண்ணமாட்டாள். கத்தி கிடைக்காவிடில் நகம், அதுவும் பயன்படவில்லையெனில் பல், இப்படி எது கிடைத்தாலும் அதைக்கொண்டு மூர்க்கனை எதிர்ப்பாள்; மூச்சுப்போகும் நேரம்வரை, மானங்காக்கப்போராடத் தயங்காள். அதே மனநிலைதான், ஒருநாட்டு விடுதலை வீரர்களுக்கும் ஏற்படுவதாகும். எதிரியின் பலம் படாது கண்ணில்! தான் அடிமையாக வாழ்வதா எனும் ஆத்திரமே பிறக்கும்! எதிரி இவ்வளவு பெரியவனாயிற்றே, அவனை எப்படி எதிர்ப்பது என்கிற சந்தேகம் தோன்றாது மனதில்; எப்படியோ எதிர்த்தே தீருவேன் எனும் வெஞ்சினம்தான் பிறக்கும் உள்ளத்தில்!!

இப்படி வீரமும் வேகமும் கொண்டவர்களை, நீண்ட நாட்கள், அடிமைகளாக வைத்திருக்கமுடியாது என்பதுதான் உலக சரித்திரமாகும்.

இத்தகைய உள்ள உரங்கொண்ட வீரர்கள் எண்ணற்றோர் உண்டு திராவிடத்தில்! பழைய நாள் புகழையும், இற்றை நாள் அழிவையும் எண்ணி எண்ணிக் கொதித்துக்கிடக்கும் கொள்கை வீரர்கள், ஏராளம் இருக்கிறார்கள் திராவிடத்தில்!! சாவாயினும் சரி, எமது தன்மானம் தழைக்க, எமது மொழி பிழைக்க, எமது மக்கள் வாழ எதையும் செய்யச் சித்தமாயிருக்கிறோம் என்று சூளுரைக்கும் தொண்டர்கள், பெருகி வருகிறார்கள், ஒவ்வொரு நாளும்.

கேட்கிறார்களாம், அமைச்சர்கள், "**எப்படிய்யா வாழ முடியும்? திராவிடநாடு தனித்து வாழ்ந்தால், என்ன இருக்கிறது வாழ? அணை கட்ட வேண்டுமென்றால் பணம் வேண்டாமா? ஆலை கட்ட வேண்டுமென்றால் யார் உதவ முன்வருவார்கள்?**

சிறு நாட்டை யாராவது மதிப்பார்களா?" என்று.

இதே கேள்வியைத்தான் கேட்டார்கள், அவரைப் பார்த்து!

கேட்டது மட்டுமல்ல, மிரட்டக்கூடச் செய்தார்கள்.

"முடியுமோ உன்னால்! உன் நாட்டில் எவ்வளவு இடத்துக்கு நீர்ப்பாசன வசதி கிடையாது என்பது எங்களுக்குத் தெரியும். பாசன வசதி இல்லையெனில் கழனிகள் எப்படி விளையும். உனக்கு வேண்டிய உணவுப் பொருள்களுக்கு எங்கே போவாய்?"

ஆதாரங்களை அள்ளியெறிந்து சொன்னார்கள்—ஆகவே எமது தயவைப்பெறு, எங்களுக்கு 'குலாமாக' இரு, சூயஸ் கால்வாயை எமக்குச் சொந்தமாக்கு என்றெல்லாம் சொன்னார்கள்.

நாசர், நகைத்தார்! கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கும் கபோதி நானல்ல என்று உரைத்தார்!

எகிப்து, இங்கிலாந்தின் பிடியைவிட்டு விலகத் துடித்தபோது, பயமுறுத்தினர் முதலில். நாசரின் சங்கநாதம் கிளம்பியதும், சூயஸ் கால்வாய் எமக்குச் சொந்தம் என்று மிரட்டிப் பார்த்தனர், துப்பாக்கிகள் துளைத்தாலும் சரி, போர்க்கப்பல்கள் ஆயிரம் வந்து இறங்கினாலும்சரி, எமது மண்ணில் இனியும் அந்நியர் ஆதிக்கம் நீடிக்கவிடமாட்டேன் என்றார் நாசர். பிணங்கள் விழுந்தன! பயப்படவில்லை எகிப்து மக்கள்! பேச்சும் மூச்சும், மானம் — மானம் — தன்மானம் என்றே முழக்கமிட்டனர்.

"திமிர் கொண்டவனே! உன்னைத் திக்குமுக்காட வைக்கிறோம். உன் நாட்டுக்குக் கட்டித்தருவதாக இருந்தோமே, மிகப்பெரிய அணைக்கட்டு, அதைக் கட்ட உதவமாட்டோம். எங்கள் உதவியில்லாமல் நீ என்ன செய்யமுடியும்? இருபது இலட்சம் ஏக்கர்களுக்கு அந்த அணையால் பாசன வசதி கிடைக்கும். அதை இழக்கப்போகிறாய்! உன் நாடு, திண்டாடப் போகிறது!" என்று எச்சரிக்கை விடுத்தது பிரிட்டன். உதவி தருவதாக வாக்களித்திருந்த அமெரிக்கா, தம்பி 'பிரிட்டன்'சொல்கிறானென்றதும் 'ஆமாம்' என்று தலையாட்டிற்று.

என்ன செய்வது?

அசுவான் அணைகட்ட பலநூறு கோடிகள் வேண்டும்!

இயந்திரங்கள் வேண்டும். என்ன செய்வது!

அமெரிக்கா கைவிட்டுவிடுகிறதே! இருபது இலட்சம் ஏகர் உற்பத்தியில்லாமற் போனால், என்ன செய்வார்கள் மக்கள்?

வேலையிலாத விவசாயிகள் பெருகுவரே!

அவர்தம் விழிகளில் பசிக்கனல் தெரிய ஆரம்பித்தால், பாடுபட்டுப்பெற்ற சுதந்திரம் நிலைக்காதே!

அச்சமும், குழப்பமும் நாசரையும் அவர்தம் தோழர்களையும் பிடித்தாட்டிற்று. அதற்காக, கற்பை இழந்துவிடமுடியுமா? உரிமையை விற்றுவிடவா இயலும்?

முழக்கமிட்டார் நாசர் — உங்கள் உதவியில்லாமலே கட்டுகிறோம், என்று!

எப்படி? பார்க்கிறோம்!—என்றது அமெரிக்கா.

தன் பிடியிலிருந்து சுதந்திரம் பெற்ற எகிப்து, திண்டாடப்போவதைக் கண்டுரசிக்கத்தயாராகயிருந்தது, இங்கிலாந்து!!

ஆனால், நடப்பது என்ன தெரியுமா? அசுவான் அணை கட்டப்பட்டுக்கொண்டிருக்கிறது! எந்த இடம் அதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டதோ அந்த இடத்தில் வேலை ஆரம்பமாகிவிட்டது!!

இந்தக் கிழமை 14-ந்தேதி, நாசர், மிக மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளார்—"பணம் எது என்றார்கள்! இதோ பணம்—இதுதான் எமது பணம்!!" என்று தன்னாட்டு மக்களைக் காட்டி, பூரிப்புடன் வெளியிட்டுள்ளார்.

எங்கள் பணம்—எங்கள் சொத்து—எது தெரியுமா? எங்களுடைய இரத்தமும் வியர்வையும்தான்!!

இரத்தத்தையும் வியர்வையையும் கொண்டே அசுவான் அணையைக் கட்டிக் காட்டுகிறோம்.

என்று முழக்கமிட்டுள்ளார். வேண்டிய இயந்திரக் கருவிகளை வழங்குகிறது ரஷ்யா. தேவையான பணத்தையும் உழைப்பையும், பங்குபோட்டுக் கொண்டு தருகிறார்கள் எகிப்து மக்கள்.

வெளிநாட்டினரின் சூது புரிந்துவிட்டது அவர்களுக்கு—அசுவான் அணை கட்டப்பட்டால், வீணே சிதறும் நீர், கழனிகளுக்குக் கிடைக்கும் — சலசலவென்று ஓடிவரும் தண்ணீர் தரும் மின்சார சக்தியால் பல ஆலைகள் இயங்கும்; தொழில் வளம் பெருகும்—பிறகு, பெற்ற சுதந்திரத்தை, யார் தயவுமின்றி நாம் காப்பாற்றிக்கொண்டு தன்மானத்தோடு வாழமுடியும்—அப்படி வாழவொட்டாது தடுக்கவே வல்லரசுகள் சதிசெய்கின்றன என்பது புரிந்துவிட்டது எகிப்து மக்களுக்கு.

மேற்படி அணை கட்ட நாள் ஒன்றுக்கு முப்பதினாயிரம்பேர் உழைக்கிறார்களாம்!!

அவர்கள் சிந்தும் 'ஒவ்வொரு துளி வியர்வையும் இரத்தமும், கூலிக்கு மாரடிப்பதல்லவே? மானம், மானம் என்று தானே மார்தட்டும்!

அதனால்தான் நாசர் பெருமிதத்துடன் வெளியிடுகிறார், இரத்தத்தையும் வியர்வையையும் கொண்டே இந்த அணையைக் கட்டி முடிக்க முடியும் எம்மால் என்று.

அசுவான் அணை மட்டுமல்ல, ஒரு நாட்டு மக்களின் உள்ளத்தில், வீரமும் வேகமும்மட்டும் இருந்துவிட்டால், எத்தனை அணை வேண்டுமானாலும் கட்ட முடியும்! முடியுமா--என்று நினைத்திருந்தால் இன்று அந்நியர் தம் பிடியிலிருந்து பல நாடுகள் விடுபட்டு, சுயராஜ்ய முழக்கம் செய்திருக்கவே முடியாது!!

ஒரு நாட்டின் வாழ்வுக்கு, முக்கியம், எதிரியின் தயவல்ல. தன்மானமும், தன்னாடு எனும், வேகமும் தான். இதையிரண்டும் இழந்தால் பிறகு அந்நாடு கால்தூசுக்குச் சமானம்!!

★

கைப்புண்ணுக்குக் கண்ணாடியா?

"நெய்வேலித் திட்டமா — நெடு நாட்கள் ஆகாது."

"அலுமினிய ஆலையா--அடுத்த திட்டத்தில் பார்த்துக்கொள்ளலாம்!"

"காகித ஆலையா — கொஞ்சம் பொறுத்திருங்கள்!"

"கோதாவரித் திட்டமா — கொள்ளை கொள்ளையாகப் பணம் தேவைப்படுமே!"

"அணுசக்தி ஆலை வேண்டுமா —அதற்கென்ன அவசரம்?"

"சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டமா--செலாவணித் தொல்லை குறையட்டும்!"

"துறைமுக அபிவிருத்தியா—துரிதமாகச் செய்யக்கூடிய காரியமல்லவே!"

"மால்நாடு (மைசூர்) பகுதி வளர்ச்சிக்கு வழிசெய்ய வேண்டுமா—மெள்ள மெள்ளத்தானே முடியும்!"

— இப்படி, தென்னகத்தின் திட்டங்களுக்கு, பதில்கள் வந்த வண்ணம் இருக்கின்றன—பணம் தான் வரவில்லை!

* * *

"வடக்காவது, தெற்காவது, எல்லாம் பைத்தியக்காரத்தனம்! மகாஜனங்களே, இதை நம்பாதீர்கள்! மோசம் போகாதீர்கள்!"—என்று அபாயச் சங்கு ஊதுகிறார் ஒரு அமைச்சர்!

"எப்பொழுது பார்த்தாலும் வடக்கு தெற்குத்தானா? இவர்களுக்கு இதைத் தவிர வேறென்ன தெரியும்?"—என்று காரசாரமாக முழங்குகிறார் 'எல்லாம் தெரிந்த' காமராசர்!

"இதோ சவால் விடுகிறேன்! வடக்கும் வளரவில்லை—தெற்கும் தேயவில்லை! அண்ணாதுரையின் அரசியல் வாழ்வையும், என் அமைச்சர் பதவியையும் பந்தயமாக வைப்போம்! என் வாதத்தை எவரேனும் தவறென்று நிரூபிக்கட்டும், பார்க்கலாம்!" — இது 'சவால் வீரர்' சுப்ரமணியத்தின் சண்டமாருதப் பிரசாரம்!

"வடக்கு வளருகிறது என்கிறார்கள்! ஏன் அங்கே ஏழைகள் இல்லையா? அல்லது இவர்கள், சொல்லும் 'திராவிட நாட்டில்' பணக்காரர்கள் இல்லையா? இதெல்லாம் எதார்த்த வாதத்திற்குப் பொருந்தாது! கார்ல்மார்க்ஸ் என்ன சொன்னானென்றால்......!" இது, கார்ல்மார்க்ஸின் 'தத்துப் பிள்ளைகள்' என்று கூறிக்கொள்ளும், கம்யூனிஸ்டுகளின் கண்டனக் கணை!

M. S. **வெங்கடாசலம்,** M.A.

அப்பப்ப! இத்தனையும் பார்க்கிறோம்! எள்ளி நகையாடத் தோன்றுகிறது! ஆனால் உள்ளத்துக்குள்ளே சிரித்துக் கொள்ளுகிறோம்; பாவம், உண்மையை மறைப்பதற்கு இவர்களெல்லாம் படுகிற பாடென்ன, எடுத்துக் கொள்ளுகிற முயற்சிகள் எவ்வளவு? ஆனாலும், இவர்கள் அடைகின்ற ஏமாற்றத்தின் அளவென்ன? இவர்களுக்குக் கிடைக்கின்ற தோல்வி எத்தகையது, என்று எண்ணிடும்போது!

"காரிருளால் சூரியன் தான் மறைவதுண்டோ, கரை சேற்றால் தாமரையின் வாசம் போமோ?" என்று மெள்ள, மகிழ்ச்சியால் பாடிக்கொள்ளுகிறோம்.

* * *

"பஞ்சபாண்டவர்கள் எத்தனை பேர்?" என்று ஒருவன் கேட்க, "இது தெரியாதா, கட்டில் காலைப் போல் மூன்று" என்று சொல்லி, இரண்டு விரலைக்காட்டி, ஒன்று என்று எழுதி, கடைசியில் அதையும் அழித்துவிட்டானாம் மற்றொருவன்!

அதைப்போல், டில்லி ஆட்சிப் பீடம் 'திராவிடத்திற்கென்று 'பெரிய மனம்' வைத்துப் போட்டிருக்கின்ற திட்டங்களே மிகச் சில! அவற்றிலும் பெரும்பகுதி கைநழுவி விடப்படுகின்றன பற்பல காரணங்களைக் கூறி!

"பாரதம் படும் துயரம் பாரீர்! கடைக் கண்ணால் எங்கள் கஷ்டங்களைக் காணீர்! நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர், நிதி குறைந்தவர் காசுகள் தாரீர், அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர்" என்று முன்னாள் நிதியமைச்சர் கிருஷ்ணமாச்சாரியும், இந்நாள் நிதியமைச்சர் மொரார்ஜி தேசாயும், 'பசை' மிகுந்த நாடுகளுக்கெல்லாம் சென்று, பக்குவமாகப் பேசி, பெற்றுவந்த தொகைகளையெல்லாம் சேர்த்து மொத்தமாக, இந்தத் திட்டத்தில் செலவிடப்பட இருப்பது ரூ. 4500 கோடி!

ஆனால் தென்னகத்துக்கென்று இதில் ஒதுக்கப்பட்டிருப்பதோ ரூ. 560 கோடிதான் — மொத்தத்தில் ஏறக்குறைய 12%!

இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும் வாழுகின்ற மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதிக்கு மேல் திராவிடத்தில் இருக்கிறார்கள்! ஆனால் அதற்கென்று இரண்டாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கின்றதொகை எட்டில் ஒரு பங்கிலும் குறைவு!

அதுமட்டுமல்ல! தென்னகத்தில் திட்டங்கள் நிறைவேற்றப் படுகின்ற அளவையும் வேகத்தையும் பார்த்திடும்போது, எட்டில்

ஒரு பங்காக இருக்கின்ற அந்தத் தொகையாவது செலவிடப்படுமா என்று ஐயப்படவேண்டிய நிலை ஏற்படுகிறது!

நெய்வேலித் திட்டத்திற்கென்று ஒதுக்கப்பட்டிருந்த ரூ. 70 கோடியில் பெரும்பகுதி அடுத்த திட்டத்திற்கென்று ஒத்திவைக்கப்பட்டுவிட்டது!

அகில இந்தியாவிலும் ஏறக்குறைய 600 மைல் நீளத்திற்கு இரயில் பாதை போடத் திட்டம் வைத்துக்கொண்டு, தென்பகுதி இரயில்வேக்கு 31 மைல் நீளம் தான் போடமுடியும் என்று, தமிழகத்திலிருந்து சென்று டில்லி ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருக்கின்ற அமைச்சரே கூறிவிட்டார்!

இப்படியெல்லாம் திட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டும், கைகழுவி விடப்பட்டும் வருவதன் பலனை, மொத்தமாகத் தென்னகத்திற்கென்று போடப்பட்டிருக்கும் திட்டத்தில் 48% தான் நிறைவேற்றப் பட்டிருக்கிறது—கடந்த 3 ஆண்டுகளில்!

3 ஆண்டுகள்!
48 சதவீதம்!

இதே வேகத்தில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், தென்னகத்திற்குச் செலவிடப் படக்கூடிய தொகை, ரூ. 448-கோடிதான்!

ஆனாலும் மொத்தத் திட்டம் என்னவோ ரூ. 4500 கோடிக்குத் தான்!

அப்படியானால் தென்னகத்தின் பங்கு, 12-சதவீதத்திலிருந்து, 10-சதவீதத்திற்குக் குறைகிறது!

பஞ்சபாண்டவரின் தொகையைச் சொன்னவனுக்கும், தென்னகத்திற்குத் திட்டம் தரும் டில்லிக்கும் என்ன வேறுபாடு?

தென்னாட்டிற்கென்று போடப் பட்ட திட்டங்கள், இவ்வளவு தாமதமாக நிறைவேற்றப்படக் காரணம் என்ன என்று யாராவது கேட்டால், டில்லியிலே உள்ள மூலவர்கள்கூடப் பதில் சொல்ல வேண்டியதில்லை. நம்மவர்களே முந்திக்கொள்ளுகிறார்கள்—என்னென்னவோ விளக்கங்களைத் தருகின்றார்கள்!

"அந்நியச் செலவாணியிலே உள்ள சிக்கலை அறிவீர்களா நீங்கள்! அதனால்தான் திட்டங்களை நிறைவேற்றுவதில் காலதாமதம்" என்று விபரீதமான ஒரு விளக்கம், அடிக்கடி நமது காதில் வந்து நுழைகிறது!

அந்நியச் செலாவணியிலே சிக்கல்கள் அநேகம், உண்மைதான்! ஆனாலும் அந்தச் சிக்கல்கள் வடநாட்டிலே போடப்பட்டிருக்கின்ற எண்ணிறந்த திட்டங்களுக்கு இடையூறாக இருக்கவில்லையே, ஏன்?

இந்தக் கேள்வியைக் கேட்டால் நிச்சயமாக ஆத்திரம் வரும் நமது அமைச்சர்களுக்கு! ஆனால் நாம் தென்னகத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் நம்மை அர்ப்பணித்துவிட்டிருப்பதால், இயற்கையாகவே இந்தக் கேள்வி நம் உள்ளத்திலே எழுகிறது — இதே கேள்வியைத் தென்னகத்து மக்கள் அனைவரது உள்ளத்திலும் எழுப்புகிறோம், அச்சம், தயை, தாட்சண்யத்திற்குக் கட்டுப்படாமல்!

தென்னகத்தில் செலவிடப்பட்டிருக்கிற தொகை, செலவிடுவதென்று மதிப்பிடப்பட்ட தொகையில் 48% — ஆனால் வடநாட்டில் இந்தத்தொகை 50-சதவீதத்துக்கும் அதிகம்!

"48-சதவீதத்துக்கும் 50-சதவீதத்திற்குமிடையே இருக்கின்ற வித்தியாசம் சதவீதம்தானே! இதை வைத்துக்கொண்டு வடநாட்டின் திட்டங்கள் வேகமாக நிறைவேற்றப்படுகின்றன என்று வாய்வலிக்கக் கத்துவதிலே என்ன பொருள்?" என்று அமைச்சர்களும், அவர்தம் பரிவாரங்களும், மிகவும் சாமர்த்தியமாக வாதிடுவதாக எண்ணிக்கொண்டு நமது வாதத்திற்கு மறுப்புரைக்க முயலக்கூடும்!

"புள்ளி விவரம் சில சமயங்களில் கண்களை மறைக்கக்கூடும்" என்று கூறுவதுண்டு! அந்தக் கூற்றுக்கு நல்லதோர் உதாரணம் இது, இவ்வளவுதான்!

தென்னகத் திட்டத்தின் 48-சதவீதம் ரூ. 266-கோடி! வடநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கிற திட்டத்தின் சதவீதம் 50-ஆனாலும், அதன் தொகை ஏறக்குறைய ரூ. 2000-கோடி.

2000-கோடி எங்கே!--266-கோடி எங்கே!

"வடக்கு வளருகிறது, தெற்குத் தேய்கிறது" என்று நாம் கூறுவதற்கு இதைவிட வேறென்ன ஆதாரம் தேவை!

ஐந்து ஆண்டுகளில் தென்னகத்தில் நிறைவேற்றப்படவேண்டிய திட்ட அளவு, திட்டக் குழுவின் மதிப்பீட்டின்படி ரூ. 560-கோடி.

அப்படியானால் 3-ஆண்டுகளில் ரூ. 336-கோடி செலவிடப்பட்டிருக்க வேண்டும்!

ஆனால் செலவிடப்பட்டிருப்பதோ ரூ. 266-கோடி!

அப்படியானால் இன்னும் ரூ. 70 கோடி செலவிடப்படாமல் இருந்திடக் காரணம் என்ன? இதற்கு யார் பொறுப்பாளி—மாநிலங்களா? மத்திய அரசாங்கமா?

மாநில அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்தைக் குறைகூறுகிறது — மத்திய அரசு மாநில அரசுகளைக் குற்றம் சாட்டுகிறது — இன்னும் சிலர் மக்களைக் குற்றம் சாட்டுகிறார்கள்!

ஆனால் குற்றம் உண்மையிலே எவருடையது, என்ன காரணத்தாலே அத்தகைய குற்றம் நேருகிறது என்பதை நாம் விளக்கிக் காட்டத் தேவையில்லை — புள்ளி விவரம் பேசுகிறது!

தென்னகத்திற்கெனத் தீட்டப் பட்டிருந்த ரூ 560-கோடி திட்டத்தில், மத்திய அரசின் பங்கு ரூ 330 கோடி, மாநில அரசுகளின் பங்கு ரூ 230-கோடி!

மாநில அரசுகளின் பங்கில் செலவிடப்பட்டிருக்கவேண்டிய தொகை (3 ஆண்டுகளில்) ரூ 138 கோடி — செலவிடப்பட்டிருக்கிற தொகை ரூ 116 கோடி — எனவே துண்டு விழுகிற தொகை ரூ 22 கோடி!

மத்திய அரசின் பங்கில் செலவிடப்பட்டிருக்கவேண்டிய தொகை (3 ஆண்டுகளில்) ரூ 198 கோடி — செலவிடப்பட்டிருக்கிற தொகை ரூ 150 கோடி — துண்டு விழுகிற தொகை ரூ 48 கோடி!

மாநிலங்களின் பங்கில் துண்டு விழுகிற தொகை ரூ 22-கோடி — மத்திய அரசின் பங்கில் துண்டு விழுகிற தொகை ரூ 48-கோடி!

எனவே தென்னகத்தின் திட்டங்கள் சரிவர நிறைவேற்றப் படாததற்கு முக்கிய காரணம் மத்திய அரசாங்கம்!

தென்னகம் வஞ்சிக்கப்படுகிறது என்று நாம் சொல்லுவதற்கு இதைவிட வேறென்ன ஆதாரம் வேண்டும்? கைப்புண்ணுக்குக் கண்ணாடியா தேவை?

"எலியும் புலியும்"

—[வித்துவான்—பா. தங்கவேலன்]—

காட்டைவெட்டினான்; மேட்டைத் திருத்தினான்; கற்களைக் களைந்தான்; முட்களை எடுத்தெறிந்தான்; கடும் உழைப்பிற்குப்பிறகு கழனி ஆக்கினான் உழவன். கிணறு வெட்டி நீர் இறைத்து நிலத்தை உழுதான். எரு இட்டான். விதைகளை விதைத்தான். பகல் இரவு பாராது நீர்பாய்ச்சினான். முளைத்த விதைகள் பயிர்களாகக் கிளைத்தன. களை எடுத்தான். பயிர்கள் வளர்ந்தன; பூத்தன; காய்த்தன. உழவன் நாலாபக்கமும் வேலி அடைத்தான். அவன் அறுவடைக்கு உரிய நாளை ஆவலுடன் நோக்கிக்கொண்டு இருந்தான்.

கழனி வரப்புக்களில் எலிகள் பல வளைகளை அமைத்து வாழ்ந்தன. அவைகள் கதிர்களைக் கண்டுவிட்டன. உழவன் இல்லாத நேரமாக எலிகள் எல்லாம் புறப்பட்டன. வயிறுபுடைக்கத்தின்றன. அதுமட்டுமா? வேண்டிய அளவு கதிர்களைக் கள்ள எலிகள் கொள்ளை இட்டன. இவ்வாறு பல நாள் — பல முறை கோழை எலிகள் ஏழையின் நெற்கதிர்களை எடுத்துப் போயின.

வயல் புறத்தை அடுத்து காடு. அக்காட்டில் ஆண் புலி ஒன்று வாழ்ந்தது. அது வேட்டை ஆடிய போதிலும் வேண்டிய உணவைப் பெறவில்லை. பல நாள் உணவின்றிப் பசியால் வாடியது. ஓர் நாள் வேட்டையில் காட்டுப் பன்றியைக் கண்டது. ஓடியது— உறுமியது — ஓங்கி அறைந்தது அதன் கன்னத்தை. காட்டுப் பன்றியும் வீழ்ந்தது கட்டாந் தரையில். ஏனோ புலி அதைக் கண்டு அகமகிழவில்லை—தின்னவுமில்லை. "இப்பன்றி அடிபட்டு வலப்பக்கமாக வீழாமல் இடப் பக்கமாக வீழ்ந்தது. இதைப் புசித்துப் பசி போக்கிக்கொள்வது அடாத செயல்— இழி செயல்" என்று வீரப்புலி எண்ணி வறிதே மீண்டது.

பகலவன் உதித்துவிட்டான். புலியின் இதயமும் பூரித்தது. இன்றேனும் உணவு கிட்டாதா என்று. புலியின் எண்ணமும் பொய்த்துப் போகவில்லை. அன்றைய வேட்டையில் போர்முகத்திலும் புறங்கொடாத ஆண் யானையைக் கண்டது. பெரும் போரிட்டது. வலம்பட வீழ்த்தியது. உளம் மகிழ உண்டு போனது.

வயலிலே—வயலை அடுத்தகாட்டிலே இக்காட்சிகளைக் கண்டோம். இனி நாட்டுக்குப் போவோம்—புறப்படுங்கள்.

கொட்டும் பனி என்றும், வாட்டும் வெயில் என்றும் பாராமல் உழவன் உழைக்கின்றான். அவன் உண்ண உணவு உண்டா? காலை முதல் மாலைவரை, மனைவி மக்களுடன் தறிக்குழியில் காலம் தள்ளுகின்றான் நெசவாளி. உலகோர் மானம் காக்க உடைதருபவனுக்கு ஆடை உண்டா? எழில் மிக்க மாடத்தை எழுப்பித் தருகின்றான் தொழிலாளி. அவனுக்கு அங்கே இடமுண்டா? மூச்சை அடக்கி ஆழ்கடலுக்குள்ளே மூழ்கி முத்தெடுக்கின்றான் முனியாண்டி. அவனோ முத்தை அணிய முடிவதில்லை. சாண்வயிறு நிரப்பச்சாகத்துணிந்தும் தங்கம் தோண்டுகின்றான் அச்சரங்கத் தொழிலாளி. அவன் அங்கம் கண்டதா தங்கத்தை? இவர்போல்வார் இடைவிடாமல் உழைத்தும் ஒட்டாண்டி ஆனதேன்? ஆவதேன்?

வயலிலே எலிகள். நாட்டிலும் எலிநிகர் மாந்தர்கள் இருப்பது தான். மனித எலிகளும் உழைக்காமல் பிறர் உழைப்பின் பயனைச் சுரண்டி வாழ்வதுதான்.

பெரியோர் சிலர் பொருள் சேர்க்க அரும்பாடு படுகிறார்கள். ஆனால்... துன்பத்தைப் பரிசாகப் பெறுகிறார்கள். வறுமை வாட்டுகிறது. கொடுமை கொட்டுகிறது. எனினும் வஞ்சக நெறியில் வருவாய் தேடுவதில்லை. இன்னும் சிலர் உயர்ந்த குறிக்கோளுக்காக —உயர் இலட்சியத்திற்காக உடல் —பொருள் — உயிர் அனைத்தும் தத்தம் செய்கிறார்கள். ஆனால் எல்லை மீறிய தொல்லை அடைகிறார்கள். எனினும் அறநெறி பிறழ்ந்து இலட்சியத்தை அடைய எண்ணுவதில்லை. சாண் ஏற முழம் சருக்கினும் ஓர்நாள் அந்த உன்னத இலட்சியத்தை அடைகிறார்கள் இவர் போல்வார். இத்தகைய இன்னல் உற்று இலட்சியம் அடைவது ஏன்?

காட்டிலே வீரப்புலி. நாட்டிலும் புலிநிகர் மாந்தர்கள் உலவுவது தான்.

சமுதாயத்தில் — அரசியலில்— பொருளியலில் எலி நிகர் மாந்தர்கள் பலர். புலி நிகர் பெரியோர்கள் சிலர். நீங்கள், எலிகளுடனா? —இல்லை—புலிகளுடனா உறவு கொள்ளப்போகின்றீர்கள்? நான் கேட்கவில்லை. நல்லுருத்திரனார் எனும் தொல் புலவர் கேட்கின்றார். கூறுங்கள் பதிலை.

"விளைபதச் சீறிடம் நோக்கி, விளைகதிர்
வல்சி கொண்டு அளைமல்க வைக்கும்
எலிமுயன் றனையர் ஆகி, உள்ளதம்
வளன் வலி உறுக்கும் உளம் இலாளரொடு
இயைந்த கேண்மை இல்லாகி யரோ?
கடுங் கண் கேழன் இடம்பட வீழ்ந்தென,
அன்று அவண் உண்ணுதாகி, வழிநாள்
இருங்களிற்று ஒறுத்தல் நல்வலம்படுக்கும்
புலிப்பசித்தன்ன மெலிவில் உள்ளத்து
உரனுடை யாளர் கேண்மை யொடு
இயைந்த வைகல் உளவாகி யரோ?"

(புறநானூறு—190)

ஒரு சமுதாயத்தின் நாகரிகத்தையும் பண்பாட்டினையும் அளக்கும் கருவிகளில் இலக்கியம் இன்றியமையாதது. தமிழ்இலக்கியத்தைப் பொறுத்த வரையில் இன்று மறுமலர்ச்சி அரும்பியுள்ளது உண்மையே. இம் மறுமலர்ச்சி, சங்ககால இலக்கியங்களை—அதாவது அயலார் கலப்பு அதிகம் நிகழாத காலத்து இலக்கியங்களைக் கண்டறிந்து வாழ்க்கையை மீண்டும் புதுப்பித்துக்கொள்ளும் ஆர்வமாக ஒரு பக்கம் எழுந்துள்ளது. இன்னொரு பக்கம் நமது இலக்கியப் பழைமையையே வேராகக்கொண்டு புதுமை இலக்கியம் காணத்துடிக்கும் ஆர்வமாகவும் எழுந்துளது. இவ்விரண்டிற்கும் இடையில் இடைக்கால இலக்கியங்களையே விடாமல் போற்றிப் புகழும் ஆர்வமும் வாழ்கின்றன.

இலக்கியத் துறையை இம் மூவகை நோக்கத்துடனும் அணுகுவோர் இன்று நாட்டில் பலர் உண்டு.

இலக்கியத்தை அணுகும் முறையிலும், அதனுல் நாம் எதிர்பார்க்கும் நோக்கத்திலும் நன்மையே விளைதல் வேண்டும். இதற்கு முதலாவதாக இலக்கியத் துறையில் கிலவிவரும் தீய பண்புகள் களையப்படுதல் வேண்டும். குறிப்பிட்ட இலக்கியங்களையே கண்மூடிப் போற்றுதலும், கண்மூடித் தூற்றுதலுமாகிய பண்புகள் இலக்கியத் துறையில் வளரும் களைகளே என்பதில் ஐயமில்லை. இத்தீய பண்பு இன்று நேற்று நம்மிடையே வளர்ந்ததல்ல. கலிங்கத்துப் பரணி ஆசிரியர் செயங்கொண்டார் காலத்திலிருந்தே வளர்ந்து வந்திருக்கின்றது.

இராமகாதை, பாரதம் இவற்றைத் தவிர, மற்ற நூல்களைப் போற்றவோ, உயிர் இலக்கியம் என்று நினைக்கவோ செய்யாத பலரை இன்று காண்கின்றோம். செயங்கொண்டார் காலத்திலும் இம்மனப்பான்மை கொண்ட பலர் இருந்திருக்கின்றனர். தீய விளைவுகளை விளைவிக்கும் இம்மனப்பான்மை செயங்கொண்டாரின் சிந்தனையைத் தூண்டியது. இலக்கிய உலகில் இவ்வழிபாட்டுக்

வித்துவான். இரா. சொக்கலிங்கம்

கொள்கையைத் தூரத்த வேண்டுமென்ற எண்ணம் கொண்டவராய் இருந்த அவர், தாம் இயற்றிய கலிங்கத்துப் பரணியில் தமது கருத்தை வலியுறுத்த வாய்ப்பேற்படுத்திக்கொண்டார். அவர் காலத்தில், தமிழில் சிறந்த இலக்கியங்கள் எவை? என்றவினுவிற்கு இராமகாதையும் பாரதமும் தான் விடையாக இருந்தன. அவற்றை விடையாகக் கூறுவோர்தான் அக்கால இலக்கிய உலகில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். தமிழக மண்ணில்-தமிழ்ப் பண்பாட்டில் விளைந்த காப்பியங்களாகச் சிலம்பையோ — மேகலையையோ பெருமையுடனும் உரிமையுடனும் கூறிக்கொள்வோர் மூலையில் ஒதுங்கிவாழ்ந்தனர் போலும்! ஆனுல் செயங்கொண்டார் அவ்வாறு தன் இனம் பழிக்கும் இழிநிலையில் அகப்படவில்லை. தமிழாசன் குலோத்துங்கனின் போர்க்களம் பாடவந்தவர், இராமாயண-பாரத அடிமைகளுக்கு முதலில் எதிர்க்குரல் கொடுக்கின்ருர்.

> “இராமாயண மாபாரத முளவென்று
> ஓவாவுரை பொழியும்படி யுளதப்
> பொருகளமே.”

[ஓவாவுரை—நீங்காத பேச்சு. பொருகளம்—போர்க்களம்]

'போர்முறை இலக்கியம் எமது புறநானூறு' என்னும் உரிமையுரை செயங்கொண்டார் காலத் தமிழகத்தில் இல்லை. 'இராமாயணமும் பாரதமும் உள்ளனவே' என்ற அடிமையுணர்வுக் குரலே செயங்கொண்டாரின் செவியைத் துளைத்தது! அந்த இரண்டு நூல்களின் புகழைப்பற்றிய ஒழியாத பேச்சே (ஓவா உரை) அவர் சிந்தனையைக் கிளறியது! இந்த ஒழியாப் பேச்சு ஒழியாதா? என எண்ணினுர். அந்த எண்ணத்திலிருந்த அவருக்குச் சிறந்த போர்க்களம் பாடும் வாய்ப்புக் கிட்டியது. இனி, அயலாரின் போர்க்களத்தைப்போற்றிப் புகழ் பாடும் ஓவாவுரை ஒழியட்டும் என்கிருர்!

பாரத — இராமாயணப் போர்க்களங்களைவிட உரிமையுடன் போற்றிப் பேசுவதற்கு இதோ குலோத்துங்கன் போர்க்களம் உளது என்கிருர்! செயங்கொண்டாரின் இவ்விரண்டு வரிகள், அவர் காலத்து இலக்கிய உலகில் காணப்பட்ட கண்மூடிப் பழக்கத்தையே (குறிப்பிட்ட சில இலக்கியங்களை மட்டும் அளவு கடந்து போற்றுதல்) குறிப்பிடுகிறது என அறிதல்வேண்டும். அறிந்து அத்தீய பண்பு தற்கால இலக்கிய உலகில் நுழையா வண்ணம் தடுத்தல் அறிஞர் கடனும்.

★

> கலைகள், விஞ்ஞானப் பிரிவுகள் யாவும் ஒரே மரத்தின் பல்வேறு கிளைகளே. மனித வாழ்க்கை வெறும் உடலளவில்—உலகாயத நிலையில் இருக்கின்றது. இந்த நிலையிலிருந்து மனித வாழ்க்கையைச் சால்புடையதாக உயர்த்தி, கட்டற்ற விடுதலை தரும் அறநெறிக்கு ஈர்த்துச் செல்வதற்காகவே மேற்குறித்த நிலையங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

பாத யாத்திரை

—[நா. புகழேந்தி]—

வளைந்து நெளிந்து செல்லும் ஆற்றைப்போல் காட்சியளித்துக்கொண்டிருந்த புதூர்ச்சாலை வெறிச்சோடிக்கிடந்தது. இராணி மங்கம்மாள் காலத்தில், வழிப்போக்கர்கள் தங்கி இளைப்பாறுவதற்காக நட்டு வளர்க்கபபட்ட புளிய மரங்கள் சாலையின இரு பக்கங்களிலும் நின்று தங்கள் முதுமைக்கோலத்தை வெளிக்குக்காட்டிக்கொண்டிருந்தன. கண்ணுக்கெட்டிய தூரம்வரை ஒரே கரிசல் காடுகள் மயம்தான். பயிர் பச்சைகளை மருந்துக்குக்கூட காண முடியவில்லை. சித்திரை மாதம் அடிக்கவேண்டிய வெயில் புரட்டாசி மாதம் அடித்துக்கொண்டிருந்தது. மழைபெய்ய வேண்டிய காலத்தில் அனல் வீசிக்கொண்டிருந்தது.

அந்தச் சாலையில்--அனல்வீசும் நடுப்பகலில் ஒரு பெரியவர் சுமார் அறுபது வயது நிரம்பியவர் — எட்டு வயதுச் சிறுமி ஒருவளைக் கையில்பிடித்துக்கொண்டு நடந்து கொண்டிருந்தார். நீண்ட காலமாகச் செபபனிடப்படாத அந்தச் சாலையில், எழும்பிக் கொண்டிருந்த வெண் புழுதியில் கால் தூக்கி வைத்து நடக்கமுடியாமல் சிறுமி திண்டாடிக்கொண்டிருந்தாள்.

“தாத்தா... என்னல் இனி ஒரு அடிகூட எடுத்துவைத்து நடக்க முடியாது. என்னை இந்தக் காட்டிலேயே விட்டுவிட்டுப் போய் விடுங்கள். நான் பட்டினி கிடந்து செத்துப்போகிறேன்” கண்களிலிருந்து கண்ணீர் பொல பொலவென உதிர அழுதுகொண்டே ஒரு மொட்டைப் புளிய மரத்தின் அடியில் நின்றுவிட்டாள் சிறுமி. பெரியவரின் பாடு சங்கடமாகிவிட்டது. சிறுமியைப்பெற்றெடுத்துப்போட்டுவிட்டுத் தாய் கண்ணை மூடியபோதுகூட இப்படிக் கலங்கியதில்லை. அதைத் தொடர்ந்து இரண்டாவது ஆண்டில் மனைவி சென்ற இடத்துக்கே சிறுமியின் தந்தையும் சென்ருர். இரண்டு உயிர்களும் அனுதையாகச் சிறுமியைப் பெரியவரிடம் விட்டுவிட்டுச் சென்றபோதுகூட இப்படிக் கலங்கியதில்லை. ஆனுல்... இப்போது பெரியவரின் கண்களிலிருந்து நீர் ஊற்றுப்போல கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. அதை வெளிக்குக்காட்டிக்கொள்ளாமல் “கண்ணு ...... அதோ பாரு... அதுதான குளத்தூர். ஊருக்குள் போனதும் உனக்குப் பலகாரம் வாங்கித் தருகிறேன். அழாமல் சீக்கிரமாக நடந்தால் இப்பவே போய்விடலாம்” என்று சிறுமிக்குத் தைரிய மூட்டிப் பார்த்தார். அதற்கு அவள் அசைவதாக இல்லை!

பலகாரம் தின்ருல் வயிறு தானே நிறையும், கால்வலி தீராதே...” என்றுகூறிக்கொண்டு மீண்டும் கண்களைக் கசக்கினுள். சிறுமிக்கு எவ்வளவு தைரியமூட்டினுலும் சரி — சமாதானப் படுத்தினுலும் சரி, இனி ஒரு அடிகூட எடுத்துவைத்து நடக்கமுடியாது, நடக்கவும் மாட்டாள். காரணம் சுமார் இருபது மைல்கள் நடந்து அவள் கால்கள் இரண்டும் வீங்கிப்போயிருந்தன.

வேறு வழியில்லாததால் சிறுமியைத் தூக்கித் தோளிலே வைத்துக்கொண்டு பெரியவர் தள்ளாடித் தள்ளாடித் நடக்கலானுர். அவர் நடந்துபோய்க்கொண்டிருக்கும் பொழுதே புழுதியை வாரி இறைத்துக்கொண்டு கடபுடாச் சத்தத்தோடு இரண்டு மூன்று பஸ்கள் அவரைத் தாண்டிப் போய்க்கொண்டுதான் இருந்தன. அதில் ஏறிப்போகப் பெரியவர் கையில் பணமில்லை!

பசி காதை அடைத்தது. கண்கள் மங்கின; கால்கள் முன்பைவிட இப்போது பலமாகத் தள்ளாடலாயின. நடக்கவே முடியவில்லை. சிறுமியின் சுமை வேறு அழுத்திற்று! அதோ இருக்கிறது 'இதோ, வந்துவிட்டது' என்று மனதைத் தேற்றிக்கொண்டு ஊக்கத்தைக் கைவிடாமல் குளத்தூரை நெருங்கி, ஒரு வேப்பமரத்தடியில்போய் நின்ருர். அவர் தோளிலிருந்து இறங்கினுள் சிறுமி. “தாத்தா தாத்தா...... பலகாரம் வாங்கிக்கொடுப்பதாகச் சொன்னீங்களே... எனக்கு வயிறு பசிக்கிறது, வாங்கிக்கொடுங்கள் தாத்தா” என்று கெஞ்சினுள் சிறுமி. வேட்டியில் இருந்த முடிச்சைத் தடவிப் பார்த்தார் பெரியவர். அவளுக்கு என்ன பதில் சொல்வது? முடிச்சு அவிழ்ந்திருந்தது. அவர் கையில் காலணக்கூட இல்லை என்பதை அது காட்டிற்று. ஆனுல் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை சிறுமியால்!

அந்தப் பக்கமாக நடமாடிக்கொண்டிருந்த சிலருக்கு எப்படியோ பெரியவரின் நிலை தெரிந்துவிட்டது. பெரியவருக்கு விளாத்திகுளத்துக்குப் பக்கமுள்ள ஏதனப்பட்டிக் கிராமம்தான் சொந்தவூர்-பிறந்த ஊர்! அந்தப்பகுதி வானம் பார்த்த பிழைப்புத்தான். மழை பெய்தால்தான் செழிப்பு ஏற்படும். மழையின்றேல் உழவில்லை — உழவின்றேல் விளைவில்லை? — விளைவின்றேல் உணவில்லை-உணவின்றேல்... என்ன ஆவது? இருக்கிற பொருளும் விலை ஏறிக்கொண்டே இருக்கிறது. இந்த நிலையில் அந்தக் கிராமத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் வேறு. ஆக எல்லாம் சேர்ந்து பெரியவரையும் அவர் பிரியமாக வளர்த்து வரும் பேத்தியையும் ஊரைவிட்டுக் கிளம்பும்படி வைத்துவிட்டது. காலையில் புறப்பட்டவர் இந்நேரம் வரை நடந்து வந்திருக்கிருர். களைப்பாகவும் இருக்கிருர் என்பதைப் புரிந்துகொண்ட அவர்கள், தங்களுக்குள் பணம் பிரித்துப் பெரியவருக்கும் சிறுமிக்கும் சாப்பாடு வாங்கிக் கொடுத்தார்கள். அன்று இரவு முழுவதும். அங்கேயே தங்கி, காலையானதும் போகும்படி கூறிக் கையிலேயும் எட்டணு கொடுத்தார்கள். பெரியவருக்கு இது மிகவும் பேருதவியாக இருந்தது.

காலை மலர்ந்தது...கதிரவனும் உயர ஏறிக்கொண்டே இருந்தான். பெரியவரும் சிறுமியும் தங்கள் இறுதி இலட்சியத்தை

(11-ம் பக்கம் பார்க்க)

தோற்றவர் வென்றார்!

—[அன்பு]—

"கண்ணே! பிரிவு காலம் நீண்டுவிட்டது கண்டு கோபமா? வேண்டாம்; குற்றம் என்மீதல்ல. காலத்தின் மீதுதான் குற்றம். அது ஏன் வேகமாகச் செல்ல வேண்டும்? மெதுவாகச் சென்றிருந்தால்! எப்படியிருந்தபோதிலும் இடமும் தூரமும்தான் நம் உடலைப் பிரித்ததே தவிர, நம் உள்ளத்தை எதனாலும் பிரிக்க முடியவில்லை. நான் உன்னைவிட்டுப்பிரியும்போதும், உடல்தான் என்னுடன் வந்ததே தவிர, உயிர் உன்னிடம் தானே இருந்தது. பிரிவுக் காலத்திலும் கண்ணிமைக்கும் நேரமளவுகூட நான் உன்னை நினையாமல் இருந்தது கிடையாதே."

"போதும், போதும் யாராவது அறிவற்றவளிடம்போய்க் கூறுங்கள் இக்கதையை! உயிரைத்தான் என்னிடம் விட்டுச் சென்றதாகக் கூறினீர்களே; பின், பிரிந்திருக்கும்போது எப்படி உயிர் வாழ்ந்தீர்கள்?

உன்னை விட்டுச் சென்றதும் முடங்கல் எழுதலாமென்றுதானிருந்தேன். ஆனால் உடன் நிகழ்ந்த சில எதிர்பாராததும் முக்கியமானதுமான அலுவல்களால் முடியாமல் போய்விட்டது!!

"அப்படியென்றால், அருந்தும் உணவில் உன் முகம், பருகும் நீரில் உன் வதனம், என் முகம் பார்க்கும் ஆடியில் உன் எழிற் பிம்பம் என்றெல்லாம் எழுதியிருந்தது பொய்தானா?"

"முன்பு நான் உன்னைப் பார்க்கும்போது இலக்கியப் பாவை போல்இருந்தாயே! பிரிவாற்றாமை உன்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்துவிட்டதே! என் கண்களால் இதை நம்பவே முடியவில்லையே!

"ஆ! என்னை நம்பமுடியாதவள் என்றா கூறினீர்கள்? அப்போது நம்பக்கூடியவள் உங்களுக்கு வேறொருவள் உள்ளாள்போலிருக்கிறது!"

"இளைத்திருக்கும் உன் உடலை என் கண்கள் நம்ப மறுக்கிறது என்றுதானே கூறினேன்! இதைத் தவறாகப் புரிந்துகொண்டு இப்படிச் சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய்?...நீ இப்படி அழுவதிலும் எனக்குத் தனி இன்பம் கிடைக்கிறது; அதிலும் ஓர் அழகைக் காண்கிறேன். உனது நீல விழிகளிலிருந்து கண்ணீர்த் திவலைகளைக் காணும்போதெல்லாம் அது எனக்கு நீர் நிறைந்த நீலக்கடலைத்தான் நினைவுபடுத்துகிறது!"

"பார்த்தீர்களா? நான் மனம் நொந்து அழுகிறேன்; அதை நீங்கள் உணராமல் கற்பனை பேசுகிறீர்கள்! என் மனக்கொதிப்பு உங்களுக்கு அழகாகப்படுகிறது! இவ்வளவு சுயநலமா? 'உன் கண்ணீர் என் கண்ணீர், உன் துன்பம் என் துன்பம்' என்று பேசியதெல்லாம் வெறும் பேச்சுத்தானா?"

"கண்ணே! உன்னை விட்டுப் பிரிந்து ஒருகண நேரம்கூட அப்பால் செல்லாதே. நீ பிரிந்து செல்லும்போதே என் உயிரும் உடலினின்றும் பிரிந்து சென்று கொண்டிருக்கும்!"

"ஓகோ! உங்கள் உயிரை நீங்கள் இழக்க விரும்பவில்லை என்பதற்காகத்தான் என்னை உங்களுடனேயே இருக்கச் சொல்கிறீர்களோ? இதிலும் தன்னலந்தான்"

"மனிதனுக்குத் தனிமைதான் சிந்தனையை வளர்க்கிறது என்கிறார்கள். அதுதான் எத்துணை உண்மை! இயற்கையின் மோன நிலையில்தான் எவ்வளவு அழகு காணப்படுகிறது. மனித நடமாட்டத்திற்கப்பாற்பட்ட இத்தனிமையிலன்றோ உள்ளம் புத்துணர்வு பெறுகிறது! இத்தனிமையை நான் மிகவும் விரும்புகிறேன்."

அப்படியென்றால் என்னை இங்கிருந்து போகச் சொல்கிறீர்களா? சற்றுமுன்தானே கூறினீர்கள், 'உன்னைப் பிரிந்திருக்கும்போதெல்லாம் உயிரைப் பிரிந்திருப்பதைப் போன்று இருக்கிறதென்று?

"வாதத்திலும் உனக்கு நிகர் நீயேதான். நான் எவ்வளவுதான் உனக்குச் சாதகமாகப் பேசினும், அதை வேறு பொருளில் எடுத்துக் கொண்டு கேள்விக்கணைகளால் என்னைத் தோற்கடித்துவிடுகிறாயே?"

"ஆ! என்னை வாயாடி என்று சொல்லாமல் சொல்லுகிறீர்களா? வீண் வம்பு பேசுபவள் என்று கருதுகிறீர்களா?"

"அன்பே! உன் பேரழகு என்னை......"

"எப்படி நான் பேரழகுடையவள் என்று கண்டுபிடித்தீர்கள்? மற்றப் பெண்களையும் பார்த்ததால்தானே அவர்களுள் நான் பேரழகு என்று கண்டுபிடிக்க முடிந்தது? மற்றவர்களை எதற்காக நோக்கினீர்கள்?"

"கண்ணே! கலை தெரிந்த சிற்பி வடித்த சிலைபோன்ற உன் உருவம்..."

"உணர்ச்சியற்ற கல் என்றா என்னைச் சொல்லுகிறீர்கள்?"

"உன் அழகு முகம் நாணம் கொள்வதில் காணப்படும் ஓர் தனியழகு..."

"நான் வெட்கப்படுவது உங்களுக்குப் பார்க்க இன்பமாக இருக்கிறது போலும்?"

"மாதே! உன் கயல் விழியில் சுரக்கும் பார்வை எனக்கு ஒருவித மயக்கத்தை உண்டு பண்ணுகிறது!"

"அப்படியாயின் என்கண்களில் மயக்கம்கொடுக்கும் மது இருக்கிறதென்றா கூறுகிறீர்கள்?"

"மங்கையே! உன் வதனம் ஓர் முழு நிலா!"

"இன்னும் பதினைந்துநாட்களில் என் முகம் இருண்டுவிடும் என்று சொல்கிறீர்களா?"

"பாவையே! மாந்தளிரையொத்தது உன் மென்மையான உடல்!"

"எதையும் தாங்கும் வலிவற்றது என்கிறீர்களா?"

"தையலே! செந்தாமரையிதழ் போன்றது உன் வாயுதடுகள்!"

"பகலவன் மறைவுடன் தானும் மறையும் செந்தாமரைக்கா ஒப்பிட்டீர்கள்?"

"பெண்ணே! மலர்களைப்போன்ற அவயவங்களை உடைய அசைந்தாடும் கொடிபோன்ற உன் உடல்..."

"கொழுக்கொம்பைப் பற்றமுடியாத கொடியின் நிலையாகிவிடுவேன் என்று நினைக்கிறீர்களா?"

* * *

தோல்வி! தோல்வி!! ஆம்! அவன் தோல்வியை அடையுமுன், தோல்வி அவனை நோக்கி வந்த வண்ணமிருந்தது! அவள் ஊடினாள். அவ்வூடலில் அவளுக்கு வெற்றிமேல் வெற்றி கிட்டியது. அவள் முகத்தில் குறும்பின் சாயல்கொண்ட வெற்றிப் பெருமிதம் குடிகொண்டது. ஆயின் அவன் தோல்வியடைந்தவனாகக் காணப்படவில்லை! அவள் வீசும் சொல்லம்புகளை அவன் மகிழ்வு பொங்க ஏற்றுக்கொள்கிறான். ஒருவேளை அவைகளெல்லாம் ஊடல் என்னும் வில்லினின்றும் எழும் அனபு என்னும் கணைகளோ? ஆம், அப்படித்தான் இருக்கவேண்டும். இல்லையாயின் அவ் ஆண்மகன் ஏன் இப்படி வெளிப்படையாகத் தோல்வியை ஒப்புக்கொள்கிறான்! அவள் அவனைக் கேள்விக் கணைகளால் வெல்லும்போதெல்லாம் பார்வையில் ஒருவித பொருள் தொனிக்க அவைகளைமெல்லாம் ஏற்றுக் கொள்கிறானே? வெற்றியை வேண்டுமென்றே அவள் பக்கம் விட்டுவிடுகிறானோ?

காலம் சிறிது சென்றது. அவள் மேன்மேலும் ஊடினாள். அவனும் அவ்வூடலில் தோல்வியை, ஏதோ ஓர் எண்ணத்துடன் ஏற்றுக் கொண்டே வந்தான். உணவுக்கு உப்பு எந்த அளவில் அமைய வேண்டுமோ, அந்த அளவிலன்றோ வாழ்க்கையில் ஊடலும் அமையவேண்டும்! எனவே அவர்களது ஊடலும் அத்துடன் ஒரு முடிவுக்கு வந்தது.

அவள் அவனைப் பார்த்தாள். இதுவரை தான் அடைந்து வந்த தோல்வியை அவளுக்குஅளிக்கப் போகும் நோக்குடன் அவனும் அவளைப் பார்த்தான். அவர்கள் பார்வையின் மொழிஅவர்களுக்கே புரிந்தது! அவன் இனியும் தோல்வியைத் தாங்கத் தயாராயில்லை. அதை அவளுக்கு அளிக்க எண்ணினான்; அவள் கரம் பற்றி நெருங்கினான். இதுகாறும் அவளிடமிருந்த வெற்றிப் பெருமிதம் எங்கோ ஓடி ஒளிந்தது. அவள் உடலும் உள்ளமும் ஒருசேரத் துவண்டு நெகிழ்ந்தது.

இப்போது ஆண்மை வெற்றிப் புன்னகை புரிந்தது. பெண்மையும் அவ்வெற்றியைக் கண்டு தோல்வியை ஒப்புக்கொண்டு இன்பம் பெற்றது; இன்பம் அளித்தது. இத்தடவை பெண்மையின் தோல்வியிலும் ஏதோ ஒரு உட்பொருள் இருக்கத்தானே செய்கிறது?

ஊடலிற் றோற்றவர் வென்றார்
அதுமன்னும்
கூடலிற் காணப் படும்.

9-ம் பக்கத் தொடர்ச்சி

எட்டிப் பிடித்துவிட்டார்கள். அதாவது தாத்துக்குடி எல்லையைத் தொட்டுவிட்டார்கள். அப்பாடா...நம்மைப்பிடித்த தொல்லை சிறிது குறைந்துவிட்டது. இனி ஏதாவது ஒரு வேலையைத் தேடிப் போகவேண்டியதுதான்" என்று பெரியவர் மனதைச் சற்றுத் திடப்படுத்திக்கொண்டார்.

காந்திஜிக்கு ஜே! காங்கிரஸ் மகாசபைக்கு ஜே! என்று முழக்கமிட்டபடி சிலர் தெருவிலே சென்றுகொண்டு இருந்தார்கள். அந்த வேடிக்கையைப் பார்க்க வீதிகளில் கூட்டம் கூட்டமாக மக்கள் நின்றுகொண்டிருந்தார்கள். பெரியவரும் சிறுமியும் மக்கள் கூட்டத்துக்கு முன்னால் போய் நின்றுகொண்டு ஊர்வலத்தை ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

பக்கத்தில் நின்ற ஒருவரிடம் ஊர்வலத்தைச் சுட்டிக்காட்டி 'இது என்ன கூட்டம்?' என்று கேட்டார் பெரியவர். அதற்குப் பக்கத்தில் நின்றவர் "இதுதான் காங்கிரஸ் கூட்டம். இந்தப் பகுதியிலுள்ள காங்கிரஸ் தலைவர்களும் எம். எல். ஏ.க்களும் ஊர்வலமாகப் போகிறார்கள்" என்று பதில் சொன்னார்! "சம்பளம் காணாதென்று ஊர்வலம் போகிறார்களா" என்று மீண்டும் பெரியவர் கேட்டார். பக்கத்தில் நின்றவர் பெரியவரை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்தார்; புரிந்துகொண்டார். அசல் பட்டிக்காடு, அதனால்தான் இப்படிக் கேட்கிறார். இருந்தாலும் கேள்வியில் பொருளும் இருக்கிறது என்று தனக்குள் எண்ணிக்கொண்டு "மக்களின் குறைகளை நேரில் கேட்டு அதைப் போக்குவதற்காகப் "பாதயாத்திரை" போகிறார்கள் என்று கூறினார்.

ஐயோ! எங்கள் கிராமத்தில் கூட ஏராளமாகக் குறைகள் இருக்கின்றனவே! நான் கூட அங்கே பிழைக்க வழி இல்லாமல் தானே இங்கே வந்தேன். உங்களுக்குக் கோடி புண்ணியம்; இதை அவர்களிடம் கொஞ்சம் சொல்லமாட்டீர்களா...? என்று கெஞ்சினார் பெரியவர்! அட பைத்தியம்பிடித்த மனிதா, உங்கள் கிராமத்தில் மட்டும்தானா? எல்லாக் கிராமங்களிலும் குறைகள் மலைபோல் குவிந்து கிடக்கின்றன. போட்ட கடுதாசிகளுக்குக் கூடப் பதில்இல்லை. என்னைப்பார்! நானும் ஒரு மில் தொழிலாளி, ஆள்குறைப்புச் சட்டத்தை அமுல் நடத்தி என்னை வேலையிலிருந்து தள்ளிவிட்டார்கள். என்னை மட்டுமா...என்னைப்போல நூற்றுக்கணக்கான தொழிலாளர்களை வீதியிலேவிரட்டிவிட்டார்கள்......இதை எல்லாம் யார் கவனிக்கிறார்கள்? என்று வேதனையோடு பேசினார் பக்கத்தில் நின்றவர்!

அப்படியானால் இவர்கள் எதற்காகப் பாதயாத்திரை செய்கிறார்கள் என்று மீண்டும் கேட்டார் பெரியவர். இதுவரை கார்களிலே சென்று சென்று அலுப்புத் தட்டிவிட்டது. சிறிது தூரம் காலாற நடந்து பார்க்கலாம் என்று பாதயாத்திரை செய்கிறார்கள் என்று பதில் சொன்னார் பக்கத்தில் நின்றவர்!

நம்பிக்கை உண்டு; நலிவு இல்லை

[இரா. தென்னவமணி]

தனிப்பட்டோர் வாழ்க்கையானாலும், மக்களின் ஆதரவு பெற்ற ஒரு இயக்கத்தின் முன்னேற்றமானாலும் நம்பிக்கையிருந்தால்தான் பொலிவும், வலிவும் ஏற்படும். நம்பிக்கை இழந்தால் நலிவும் மெலிவும்தான் ஏற்படும். இறந்த காலந்தொட்டே புகட்டி வரும் பாடங்கள் இவை.

தலைவன்மேல் தலைவி நம்பிக்கை இழக்க நேரிட்டால், தலைவி மீது தலைவனுக்கு நம்பிக்கை குறைந்தால் இல்லறம் இருபிரிவாகும்; இன்னல் அடையநேரும்; இருள் சூழும் என்பதனை அன்றாட வாழ்க்கையில் காண முடிகிறது. இயக்கத்தின் கொள்கையின்பால் நம்பிக்கை குறைந்தால் அடிப்படை மாற்றங்கள் ஏற்படும்; அழிவுசக்தி நாடிவரும்; பிளவுகள் காணப்படும். இவற்றைச் சென்ற காலக் கட்சிகளின் வரலாறுகளும் இன்றைய இயக்கங்களின் நடவடிக்கை சம்பந்தமான நாட்குறிப்புகளும் நன்கு உணர்த்தும்.

நம்பிக்கையானது விடா முயற்சியையும், திறமையையும், வெற்றியையும் அடைய ஏணிபோன்றது என்பதை நாம் உணர்ந்தகாரணத்தால்தான், நம் தூய இலட்சியங்களை மக்கள் ஏற்பார்கள் என்ற நம்பிக்கையிலே பணியாற்றிவருகிறோம். இருபத்தைந்து ஆண்டுகளாக கட்டிக்காக்கப்பட்ட கொள்கைகளை, குறிப்பாக ஒன்பது ஆண்டுக் காலமாய்ப் பட்டிதொட்டிகளிலும், மூலை முடுக்குகளிலும், மக்களைச் சந்திக்கும் எந்த இடத்திலும் விளக்கி, ஆதாரங்களைக் காட்டி ஆவன செய்து வருகிறோம்.

உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பேதங்களை வளர்க்கும் இழிவான நோக்கங்களை, முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைபோடும் மூடப் பழக்க வழக்கங்களை, சாதியைக் காப்பாற்றும் சர்பிரதாயங்களை விட்டகற்றவேண்டும்; அறுத்தெறியவேண்டும்; நாட்டை மீட்க, இனத்தைக்காக்க ஒன்று திரளுங்கள்! என்பனபோன்ற இலட்சியங்களை ஏற்றவர்கள், ஏற்று நடப்பவர்கள்; நாடி வருபவர்கள் எவரானாலும் வரவேற்கின்றோம்.

இத்தகைய சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்குத் தடையாக உள்ள தீயநோக்கங்கள் ஒரு சாராரிடம் மட்டும் இருப்பதாகக் கூற முடியாது. வடக்கிலிருந்து வந்தவர்களால் வகுக்கப்பட்ட அத்தனை சாதிகளிடமும் பழைமை விரும்பிகளிடமும் குடிகொண்டிருக்கின்றன என்றால், அது மிகைபடக் கூறியதாகாது. இதற்காக மூன்று சதவீதம் உள்ளவர்களை ஒதுக்குதல், ஒட்டுதல் நீதியென்று கூறமாட்டோம். அது அரசியல் நாகரிகமல்ல என்பதால்தான், இத்துணைக் கண்டத்தின் முதல்வர் "பிடிக்காவிட்டால் நாட்டைவிட்டு வெளியேறுங்கள்" என்று கூறியதைத் தவறு என்று எடுத்துக் காட்டிக் கண்டனக்குரல் எழுப்பி, கருங்கொடி காட்டி, இருவரைபலி கொடுத்ததோடு, ஏனையோர் துன்பப்படவும் நேர்ந்தது என்பதை நாடறியும்.

"மாமியார் உடைத்தால் மண் சட்டி, மருமகள் உடைத்தால் பொன் சட்டி" என்ற பழைய மொழிக்குப்பாத்திரமானவர்களும் நாம்சிந்தும் செந்நீரைப் பன்னீராக மதிக்கும் மனம்படைத்தவர்களும், நாம் ஒரு சாராரை வெறுத்தது போலவும், இன்று ஆதரவுகொடுப்பதுபோலவும் குற்றம் சுமத்தி வருகிறார்கள். நாம் யாரையும் வெறுப்பதோ விரும்புவதோ கிடையாது என்பதோடு, கொள்கை விரோதிகளுடன் கூடிக் குலாவும் பழக்கம் நமக்கில்லை என்பதையும் பொதுமக்கள் நன்கு உணர்வர்.

அன்று, நம் இயக்கம் உழைப்பினாலும் வியர்வையினாலும் உருவாக்கப்படல்வேண்டும் என்று சொன்னதை இன்று நினைவுபடுத்துகிறோம். காட்டையும் மேட்டையும், மடுவையும் மலையையும், புனலையும் அனலையும் கடந்து வந்திருப்பதை எண்ணி மகிழ்கிறோம். அதே நேரத்தில் கடக்க இருக்கும் பாதையை எண்ணிக் கடமையையும், பொறுப்பையும் உணர்கிறோம்.

உண்மைக்குத் திரைபோடும் திறமைகொண்டவர்களும், அண்டிப் பிழைக்க ஆசைகொண்டவர்களும், வடக்கிற்கு வக்காலத்து வாங்குபவர்களும், கேரளம், கன்னடம் ஆந்திரத்தோடு தமிழகத்திலும் இருக்கிறார்கள் என்பதை மறுக்கமுடியாது. சேய்கள் தாயின் பேச்சைக் கேட்கவில்லை என்பதற்காகத் தாய் பிள்ளைகளை மறந்துவிடமாட்டாள்; பிரித்திடவும் மாட்டாள். அப்படிச் செய்வது தாய்மையுமல்ல. காகிதப் பூவின் தன்மையை உணர்ந்தவன் மணம் கமழும் மல்லிகையை நாடுவதைப் போல, அறியாமைப் படுகுழியில் வீழ்ந்தவன் கரையேறி அறிவாற்றல் பெற ஆசைகொள்வதைப் போல, தாய்மையின் பண்பை உணர்ந்து தாயை நாடுவான். மாற்றார்களின் மதிமயக்கும் செயல்களைப் புரிந்தவர்கள், நம் பணியை அறிந்தவர்கள் நம்மைப்பின்பற்றுவார்கள் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு. எனவே கொள்கைகளை எடுத்துரைக்கும் வாய்ப்புகள் எங்கெங்கு கிடைக்கின்றனவோ அங்கெல்லாம் தொடர்பு கொள்கிறோம்.

நோய் வாய்ப்பட்டவன் மாங்கனியொன்று தின்றால் உடற்குறை ஏற்படும். நல்லுடல் கொண்டவன் அக்கனியை அருந்தினால் இனிமையை காண்பானே தவிர, இன்னல் அடையமாட்டான். எனவே உண்ணும் உணவு உடலைச்சார்ந்ததாகுமே அல்லாமல் மாங்கனி தீதெனக் கூறமுடியாது. இதைப் போன்றதுதான் தேர்தல். நாம் தொடர்புகொண்ட வகையில் தேர்தல் கொள்கைகளை விளக்க ஒரு வாய்ப்பு; வெற்றியெனும் இல்லத்தை நாட ஒருபடி; நம் முடையநோக்கங்கள் எந்த அளவு பலன் பெற்றிருக்கின்றது என்பதை அறிய ஒரு அளவுகோல்.

'நஞ்சுண்ட தேனீக்கள் இருக்கின்றன என்பதற்காகத் தேனை எடுக்காமல் விடுவதில்லை' பணம், பட்டம், பதவி தேர்தலில் விளையாட்டுப்பொம்மைகளாகவிளையாடுகின்றன என்ற காரணத்தால் ஈடுபாடு கொள்ளாதிருத்தல் ஏற்புடையதல்ல. நாம பணத்தையும பதவியையும் அடையத்தேர்தலில் ஈடுபடுகிறோம் என்று நேர்மையானவர்கள் கூறமாட்டார்கள். எதிர்த்துப் பணமோ, பதவியோ பெறுவது கடினம். இணைந்து அடைவது எளிது என்பதை நன்கு அறிந்தவர் உணர்வர்.

நாம் கூறிவரும் கொள்கைகளையும், கொண்ட செயல் முறைகளையும் தூற்றியவர்கள், அறிந்தும் அறியாமலும் இருந்தவர்கள் இப்போது நம் கொள்கைகளை ஏற்றிடும் நிலையைக் காண்கிறோம். "நாம் அடிமைகளாக நடத்தப்படுகிறோம் என்று கூறுவதும், இந்தியாவிலிருந்து பிரிந்துவாழ ஆசைப்படுவதும இகழக்கூடியதாகும்" என்று கூறிடும் தமிழரசுக் கழகத் தலைவர் கூடப் பாரதி விழாவிலே பங்கு கொண்டபோது "சீனாவிற்கு இருபத்தைந்து கலைஞர்கள் போயினர். ஆனால் தமிழ் நாட்டிலிருந்து ஒருவர்கூட அனுப்பப்படவில்லை. இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு இந்திய கலைஞர்களை சோவியத் சர்க்கார் கூப்பிடவில்லை. காரணம் இந்தியா அடிமைநாடு. இன்று கூப்பிடுகிறது; காரணம் சுதந்திரநாடு!" என்று கூறுகிறார். தமிழ்நாட்டுக் கலைஞர் செல்லவில்லை என்பதன் வாயிலாக தமிழ்நாடு வடவரிடம் அடிமைப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லாமல் தெளிவுபடுத்துகிறார். "சிவாஜி பாரதி ஆவது இருக்கட்டும்; பின்னால் பார்த்துக்கொள்ளலாம், முதலில் "சென்னை" தமிழ்நாடு ஆகட்டும்" என்று எடுத்துக்காட்டி இடித்துரைக்கிறார். இதனைப்போல ஆங்காங்கு உள்ளவர்களும் அறிந்திடும் நாள் அருகில் வந்துவிட்டது.

எனவே நாம் ஆற்றிவரும் பணிகளை, நமது தூய இலட்சியங்களை மக்களின முன்னே வைக்கிறோம்; சிந்தித்துச் சீர்தூக்கி ஆதரவுதருவார்கள் என்று நம்புகிறோம். திராவிட இனம் இன்று இல்லாவிட்டாலும் நாளை திருந்தும், தெளியும் என்ற நம்பிக்கை உண்டு; நலிவு இல்லை! இது திண்ணம்! உறுதி!

★

தெவிட்டாத தேன்

—[ஆர். அண்ணாமலை]—

ஒரு நூலின் பெருமை கால வெள்ளத்தில் மூழ்காமலிருப்பதனால் காணப்படும் என்பது அறிஞர்கள் கூறும் உண்மையாகும். காலம் என்னும் பெருங்காற்றில் அகப்பட்டு, அதனை எதிர்த்து நிற்கத் திறமையற்று, ஆழ்ந்து அழிந்து போகின்ற நூல்கள் பல.

ஆனால் உயரிய உண்மைகள் அமைந்த நூல்கள் காலம் செல்லச் செல்ல வளர் பிறைபோல் வளர்ந்தோங்கி எங்கும் ஒளி பரப்பிச் சமுகம உள்ளளவும் தன் ஒளி மங்காமல் வாழையடி வாழையெனத் தனது வன்மையையும வளத்தையும அளித்து மேம்படுகிறது.

திருவள்ளுவர் செய்த "தமிழ் மறை" இத்தகைய நூலாகும். முக்காலத்திற்கும் பொதுவாகக்காணப்படும் நூல்களுள் நல்ல கருத்துக்கள் திகழ்கின்ற காரணத்தால், திருக்குறளைப் போற்றுகின்றனர். ஒவ்வொரு காலத்திலும் எழுதப்படுகின்ற நூல்கள் பல. அக்காலத்தில் வாழும் மக்கள், நடை, உடை, பழக்க வழக்கங்கள் முதலியவற்றை ஒட்டியே எழுதப்படுவதனால், அவை பிற்காலத்தில் பயன் குன்றியே பாழ்பட்டுப் படிப்பார் இன்றிக், கேட்பார் இன்றிக் கீழ் நிலை அடைந்து விடுகின்றன.

உலக மக்களைப் பொது நோக்குடன் உணர்ந்து அவர்கள் உயர் நெறியறிந்து உய்வதற்குரிய உண்மைப் பொருளாகிய அறம், பொருள், இன்பம்ஆகிய மூன்றின் வன்மை தெரிந்து வள்ளுவர் செய்த நூலைத் தமிழ் மக்களாகிய நாம் நன்கு உணர்ந்து கற்றோமானால் எக்காலத்திலும் அழியாப் பயன் அடைவோம். மக்கள் தம் வாழ் நாளில் திருக்குறளைப் பல முறை படிப்பாராயின் அவர்களுடைய மனம் தெளிவு பெறவும், அறிவு வளர்ச்சி அடையவும் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையும் தெளிவாகக்காணவும் எளிதாய் இயலும்; எல்லோருக்கும் பயன்படும். மேலும் பொதுவாகவே உலகத்திலே காணும் மனப்பாங்கிற்கு ஏற்றதாவே வள்ளுவர் குறள் அமைந்து இருக்கிறது.

வள்ளுவர் வகுத்த பல வழிகளைக் காணுந்தோறும் நாம் களிப்படைகின்றோம். அவருடைய ஆழ்ந்த அநுபவத்தின் பயனாய் வெளிவந்த ஒவ்வொரு சொல்லும் நம்மை நல்வழிப்படுத்துகின்றது.

வாழ்க்கையில் ஒவ்வொரு நேரத்தில் நடைபெறும் நெருக்கடிகளில் இன்னவாறு செய்க — இன்னது செய்யவேண்டாம். இதனால் இது வரும் என்று ஆராய்ந்து சொல்லும் நல்லுரையைத் திருக்குறள் முழுவதும் காணுகின்றோம்.

இனிய பழங்களில் கூட இனிக்காத தோல் இருக்கும். ஆனால் திருக்குறளில் தெவிட்டாத தேன், நூல் முழுவதும் நிரம்பியிருக்கிறது. ஆற்றல் உடையவர்கள் மட்டும் அல்லாமல் அனைவரும் அந்தத் தேனின் சுவை காண முயல வேண்டும். முயன்றால் பயன் உண்டு.

★

கப்பல் வந்தது!

மா.கி. தசரதன்

உச்சி வேளையில் கொதிக்கும் வெயிலில் தார்ச்சாலையில் மிதியடி இன்றி நடந்து செல்லுகின்றான் ஒருவன். இட்ட அடிபெயர்த்து எடுத்த அடி வைப்பதற்குள் வெயில் கொளுத்திய வெப்பம் தணியுமா என ஏங்குகின்றான். ஆனால் ஒரு அடி பெயர்த்து மறு அடி வைக்கும்போது சூடு உடலை வேகச் செய்கின்றது. மேலே கொளுத்தும் வெயில் மறைக்கக் கையில் குடையும் இல்லை. தவித்துச் செல்லுகின்ற அவன் கண்கள் பூத்துப்போகின்றன, காற்றில் மிதந்த தூசி வந்து விழுகின்றது. அதைத் துடைக்கலாம் எனக் கையை உயர்த்தும்போது கால், யாரோவிட்டெறிந்த வாழைப்பழத் தோலின் மீது நிற்கமுயன்று, முடியாமல் சறுக்கிக் கீழே சாய்கின்றான். எழ முயலும்போது எதிரே ஒரு முரட்டுக் காளை முட்ட வருவேன் என்பதுபோல் கூர்மையான கொம்புகளை முன் நிறுத்திக் காட்டுகின்றது.

இப்படிப்பட்ட இன்னலில் ஒருவன் இருக்க நேர்ந்தால் அவன் நிலை எப்படி இருக்கும்?

அவன் எப்படி இருப்பானோ— ஆனால் இன்றைய தினம் தமிழரின் நிலை இதுவாகத்தான் இருக்கிறது.

*

சில தினங்களுக்கு முன் சென்னைத் துறைமுகத்தில் மலேயாவிலிருந்து ஒரு கப்பல் வந்து நங்கூரம் பாய்ச்சியது. அந்தக் கப்பலிலிருந்து சுமார் ஆயிரம் தமிழர்கள் தங்கள் சொந்த நாட்டு மண்ணை வந்தடைந்தனர். தங்கள் திருநாட்டைவிட்டு சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் மலேயாவுக்குச் சென்ற அவர்கள் மறுபடியும் சொந்த ஊருக்குத் திரும்பி விட்டனர்.

மலேயாவில் சுமார் முப்பது ஆண்டுகள் வாழ்ந்த, உழைத்த அவர்கள் ஊருக்குத் திரும்பியிருக்கின்றனர். மனைவி மக்களுடன் வந்திருக்கின்றனர்.

முப்பது ஆண்டுகளுக்கு முன் அவர்கள் ஏன் அங்கு சென்றனர்? படைவீரர்களாகப் போர்க் கருவிகள் சுமந்து செல்லவில்லை. வயிற்றில் தோன்றித்தோன்றி வாட்டிய பசியைத் தணித்துக்கொள்ள 'ஏதேனும்' கிடைக்கிறதா என்று தமிழ் நாட்டில் 'சுற்று முற்றும்' பார்த்து ஏதும் கிடைக்கவில்லை என்பதை உணர்ந்த பின்னால் திரைகடல் ஓடித் திரவியம் தேடாவிட்டாலும், அரை வயிற்றுப் பசியாவது ஆறும் என்று துணிந்து கப்பல் ஏறினர். கடலுக்கு அப்பால் சென்று கையில் வலிவிருந்த வரை அலுக்காமல் சலிக்காமல் உழைத்தனர். ஒன்றல்ல, இரண்டல்ல — முப்பதாண்டுகளுக்கு மேலாகவே பாடுபட்டனர். மறுபடியும் தங்கள் நாட்டிற்குத் திரும்பிவிட்டனர்.

ஏன்? அளவில்லாத செல்வம் சேர்ந்துவிட்டதனால், 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்றுமனதைத்திடப்படுத்திக்கொண்டு, இனி இங்கிருக்கத் தேவையில்லை' என்று எண்ணி வந்துவிட்டனரோ? அல்லது இனி உழைக்கமாட்டோம் என்று சோம்பல் கொண்டு வந்துவிட்டனரோ? அல்லது தமிழ்நாடு செல்வத்தில் திளைக்கிறது, இனி அங்கேயே சென்று வாழலாம் என வந்து விட்டனரோ?

இல்லை. தாங்களாக வரவில்லை. வர அவர்களுக்கு விருப்பம் இருந்ததோ இல்லையோ, 'இனி நீங்கள் இங்கு இருக்கத் தேவையில்லை' என்று மலேயாசர்க்கார் அவர்களை வெளியேற்றிவிட்டனர். 'நாங்கள் உழைக்கின்றோம்' என்று இவர்கள் பசித்த வயிற்றைக்காட்டிக் கேட்டிருப்பார்கள். ஆனால்அவர்கள் பசித்த வயிற்றை மட்டும் பார்க்கவில்லை — முப்பது ஆண்டுகளாக உழைத்துத் தளர்ந்து போன உடலை — தேய்ந்துபோன உடலைக் கண்டார்கள். 'போதும் போய்வாருங்கள்' என்று வழியனுப்பிவைத்துவிட்டார்கள். இவர்களும் சென்னைத் துறைமுகத்தை வந்து சேர்ந்துவிட்டனர்.

இடையிலே முப்பது ஆண்டுகள். இரப்பர்த் தோட்டங்களில் உழைத்தனர்— பிழைத்தனர். இன்று தம் நாடு வந்திருக்கும் அவர்கள் நிலைமை என்ன? முப்பதாண்டுகளில் வந்து சேர்ந்த முதுமையும் இயலாமையும் மட்டும்தான் அவர்கள் கொண்டுவந்திருக்கும் 'முதல்', அன்று சென்ற நிலைக்கு அழிவில்லாமல் வந்திருக்கின்றனர்.

அவர்களை 'வரவேற்ற' அதிகாரி ஒருவர் நிலையை விளக்குகின்றார்: அவர்கள் சென்னையில் தங்கும் போது அவர்களுக்கு இலவசமாக உணவு அளித்து வருவதாகவும், பிறகு அவரவர் ஊர்போய்ச் சேர இலவசமாக இரயில்வே டிக்கட் தருவது வழக்கம் என்றும் அவர் சொல்லியிருக்கின்றார்.

'சர்க்கார் ஏழைகளுக்கு ஒன்றுமே செய்வதில்லை என்கிறீர்களே, என்ன அக்ரமம்! இதோ பாருங்கள். அகதிகளாக வந்துவிட்டவர்களுக்கு சென்னையில் தங்கும் வரை இலவச உணவும், ஊர் போய்ச்சேர இலவசப் பயணமும் தருகிறார்களே—எதிர்க்கட்சிகளின் கண்களில் இது படுவதில்லையா' என்று கேட்கத்துடிக்கும் நண்பர்கள் இருப்பார்கள். சர்க்கார் மிகவும் தாராள மனது படைத்தவர்கள்தான். இல்லாவிட்டால் இந்தப் பேருதவியைச் செய்ய முன்வருவார்களா? அதுவரை அவர்களைப் பாராட்ட வேண்டியதுதான்.

ஆனால் இதிலே சர்க்காரைப் பாராட்டுவது ஒருபக்கம் இருக்கட்டும், இதன் மூலம் பெறவேண்டிய பாடம் ஒன்று இருக்கின்றது. காணவேண்டிய உண்மை ஒன்று இருக்கின்றது. அதைக் காண வல்லவர்களாகவேண்டும்.

முப்பது ஆண்டுகள் உழைத்து வந்திருக்கின்றார்கள் அவர்கள். ஆனால் அவர்களுக்கு, முப்பது ஆண்டுகள் உழைத்த அவர்களுக்கு இன்னும்,

சொந்தமாகச் சாப்பிட வசதி இல்லை. இரயிலில் போகப் பணம் இல்லை.

ஆனால் இடையில் முப்பது ஆண்டுகள் உழைத்திருக்கின்றனர்.

இங்கிருந்து கப்பல் ஏறுகின்ற போது என்ன நிலைமை இருந்ததோ, அதே நிலைமை இன்றும் இருக்கின்றது. சர்க்கார் சாப்பாடும், இரயில் பயணமும் கிடைக்குமா என ஏங்கிடும் நிலை இருக்கிறது.

'வெளிநாடு சென்று வந்தால் எவ்வளவு பணம் சேர்த்துவருகின்றனர்' தெரியுமா ஒவ்வொருவர். இவர்கள் ஏதோ கண்டதே காட்சி கொண்டதே கோலம் எனச் செலவழித்துவிட்டுவந்து நிற்கின்றனர் என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளவும் இயலாது. ஏனெனில் இலவசச்சாப்பாடும், இரயில் பயணமும் அளிப்பது வழக்கமாக இருக்கிறதாம்! வழக்கமாக இருக்கிறது என்றால் என்ன பொருள்? வருகின்றவர்கள் அத்தனைபேரும் இப்படித்தான் வருகின்றனர் என்பது தானே?

அதுதான் போகட்டும், வந்தது தான் வந்தார்களே, வடநாட்டு அகதிகளாகவாவது வந்திருக்கக் கூடாதா? தமிழ் அகதிகளாக அல்லவா வந்து தொலைந்தார்கள். அவர்களுக்கும் 'சென்னையில் தங்கும்போது இலவசச் சாப்பாடு, ஊருக்குப்போக இரயில் டிக்கட்' இரண்டும் தரப்படுகின்றது.

சென்னையில் எத்தனை நாட்களுக்கு அவர்கள் தங்குவார்கள். இரயிலில் இடம் கிடைக்கிறவரை இரண்டொரு நாட்கள் தங்குவார்கள் — இரயிலில் இரவு ஏறினால் மறுநாள்காலை இறங்கிடவேண்டும் —அதற்குள் ஊர் வந்துவிடும்— இந்த உதவியைச் சர்க்கார் தாராளமாகச் செய்கின்றனர். ஆனால் வடநாட்டு அகதிகளுக்குப் 'புனர் வாழ்வு' அளிக்க என்னென்ன திட்டங்கள்—எத்துணை சலுகைகள் — எத்துணை கோடி இது வரை செலவு — இனி எவ்வளவுக்கு எண்ணம் — எல்லாம் 'வடக்கு' மகிமைதான்!

அகதியானாலும் வடநாட்டு அகதியாகவேண்டும்.

இவர்கள் நிலைமை...

*

மலேயாவிலிருந்து விரட்டப்படுவது போலவே இலங்கையிலிருந்தும் தமிழர் பலரை — பல இலட்சக் கணக்கானவர்களைத் துரத்த அந்த அரசு முயன்றுகொண்டிருக்கின்றது. அவர்களில் எஞ்சி நிற்கும் சிலர் தலைமீதும் கல்லைத் தூக்கிப் போடத் தீர்மானித்திருக்கிறது.

தோட்டத் தொழிலுக்கு இனி மேல் பெரும்பான்மையான இடங்களுக்குச் சிங்களவரையே வேலைக்கு எடுக்கவேண்டும் எனத் தீர்மானித்திருக்கின்றனர்.

குடியுரிமையின்றிக் குடிபெயர்ந்தோர் போக எஞ்சி நிற்போரையும் வயிற்றில் அடித்து வெளியேற்ற இது மறைமுகமான வழியாகும்.

தொழில் கிடைக்கிறதோ இல்லையோ—படிப்பாவது படிக்கலாம் என்று யாரேனும் இலங்கைத் தமிழர் கருதினாலும் இனி அதற்கும் வாய்ப்பில்லை. கொழும்பு நகரத்தில் துவங்கப்பட இருக்கும் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானப் பிரிவில் உள்ள அத்தனை இடங்களையும், இது இயலாவிட்டால் 75-சதவீத இடங்களை, சிங்கள மாணவர்க்கு என்று ஒதுக்கிட வேண்டும் என இலங்கைக் கல்வியமைச்சர் டபிள்யூ. தகநாயகா, 'சிபார்சு' செய்திருக்கிறார்.

அந்தப் பிரிவு இனித்தான் அமைய இருக்கிறது. ஆனால் இதற்குள், அமைய இருக்கும் அந்தப் பிரிவில் தமிழரைச் சேர்க்காமல் துரத்திடத் திட்டம் தயாராகிவிட்டது.

*

இந்த நிலை இப்படியே இருக்கலாமா? கூடாது.

விழுந்தவன் எழுந்து நிற்க வேண்டும்.

எழாவிட்டால் கொதிக்கும் வெயில் தகிக்கும் — முட்டவரும் மாடு மோதிவிடும். எழவேண்டுமானால் உடலில் அதற்காவது ஆற்றல் இருக்கவேண்டும். அந்த ஆற்றல் முயன்றால் பெறக்கூடிய ஆற்றல்தான். மூச்சைப்பிடித்து எழுந்தால் போதும்.

எழுந்தபின் மறுபடியும் விழாமல் இருக்கவேண்டும். அதற்கு முன்னாலே விழுந்ததற்குக் காரணங்கள் என்னென்ன என்பதனைத் தெரிந்துகொள்ளவேண்டும். தெரிந்துகொண்டால் மறுபடியும்அந்தப்பிழைகளைச் செய்யாமல் விழிப்பாக இருக்கலாம்.

வீட்டிலிருந்து புறப்பட்டபோது கையில் குடையிருந்தது—காலில் நடையன் இருந்தது — கண்ணுக்குக் குளிர்ச்சிக் கண்ணாடி இருந்தது. கொஞ்சத்தூரம் வந்ததும் யாரோ ஒருவன் உடன் வந்தான். அவன் மெல்ல மெல்ல நெருங்கியும் வந்தான். 'இது என்ன குடையா' என்றான்! 'ஆமாம்' என்றான். இப்போது 'இது எதற்கு? மழை வந்தால்தானே தேவை! அதுவரை இது சுமை தானே. உங்களுக்கு ஏன் அந்தத் தொல்லை? நான் சுமந்து வருகின்றேன்' என்று வலிய வந்தான். பகலவன் உச்சிக்கு வரும்போது தேவைப்படுமே என்பதை மறந்து குடையை அவன் கையில் கொடுத்தான்.

பின்னும் கொஞ்சத்தூரம் வந்தான்.

நடையினில் ஒருவர் அறுந் தது. அறுந்த வாருடன் எப்படி நடப்பது என்று திகைத்தான்.

வழியில் வந்தவன் 'நான் எடுத்து வருகின்றேன்' என்று சொல்லித் தயங்காமல் அதை எடுத்துக் கையில் சுமந்து வந் தான்.

பின்னும் கொஞ்சத்தூரம் சென் ருன்.

'நான் இவ்வளவு உதவி செய் திறேனே—அந்தக் கண்ணாடியைக் கொஞ்சம் காட்டுங்களேன், பார்க் கலாம்' என்று கெஞ்சினன்.

இளகிய மனது அவனுக்கு. 'சரி' என்று கொடுத்தான். பின் னும் கொஞ்சத்தூரம் சென்ருன்.

வாழைப்பழத்தோல் வழுக்கி யது. வீழ்ந்தான், மாடு முட்ட வந்தது.

இப்போதுகூட ஒன்றும் மூழ் கிடவில்லை. துணிந்து எழுந்தால் மாட்டை விரட்டிவிட்டு, ஏய்த்த வனிடமிருந்து தன் உடைமைகளை மீட்டுக்கொள்ளலாம் அவன்.

என்ருலும் துணிவு இருந்தால் போதும், எழுந்திடலாம்—ஏற்றம் பெற்றிடலாம்.

அந்தத் துணிவு வருவதற்கு என்ன வழி—எத்துணையோ வழி கள் இருக்கின்றன. ஆனல் முக்கியமான ஒருவழி இருக்கிறது. அதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

மலேயாவிலிருந்து ஏன் தமிழர் களை விரட்டுகின்ருர்கள்.

மலேயாவில் இருப்போர் தமி ழர்களை அந்நியர் என்று கருது வதினுல்:

இலங்கையிலிருந்து தமிழர் களைத் துரத்தக் காரணம் என்ன?

இலங்கை சிங்களவருக்குத் தான் சொந்தம் என்று கருது கின்ற காரணத்தால்.

இந்த இரு காரணங்களும் சரியா தவரு என்பது அல்ல பிரச்சினை. தமிழர்கள் அந்நியர் என்றும், சிங்களவர்க்குச் சொந் தம் என்றும் கருதுகின்ருர்கள்,

அதனுல் தமிழர்களை அவர்கள் நாட்டுக்குத் திரும்ப அனுப்பு கின்றனர்.

மலேயா மக்கள் வாழ, சிங்கள மக்கள் வாழ,அவர்கள், "நம்மவர்-அந்நியர், நமக்குச் சொந்தம், பிறர்க்கென்ன இங்கு வேலை" என்று கருதுகின்றனர்.

தமிழர்—திராவிடர்—வாழ நாம் தமிழ்நாடு, திராவிடநாடு, தமிழர்க்கு, திராவிடர்க்குச் சொந் தம்— இங்கு பிறர்க்கு என்ன வேலை? என்று கருதவேண்டாமா?

கருதினுல் எழுந்து நிற்போம். எழுந்து நின்ருல் எதிர் நிற்கும் காளை தாக்கினுலும் தடுத்துக் கொள்ளலாம்.

இன்றேல்......

இரயிலில் இடங்கிடைக்கின்ற வரை இலவசச் சாப்பாடும், இடங் கிடைத்தபின் இலவச டிக்கட்டும் தந்தாலே போதும் என்றுதான் ஏங்கவேண்டும்.

★

தமிழர்கள் இன்று இருக்கும் நிலையும் இதுதான். இருந்த பொருள்களை, ஏமாளி, குடையும் செருப்பும் இழந்ததுபோல் எவர்க்கோ எல்லாம் தந்துவிட்டு வறிஞர்களாக இருக்கின்ருேம்.

இல்லாமை வெயிலைவிட வெம் மையாக வயிற்றில் வேதனை தரு கின்றது.

அணிந்திருந்த கண்ணாடியும் இழந்து, தூசி கண்ணிலே பட இடந்தந்ததுபோல் நம்முடைய கருத்துக்களிலும் மாசு படிந்திட லாயிற்று. கண்ணில் விழும் தூசியை ஊதி எடுத்துவிடுவது போல் நம்முடைய இலக்கியத்தை யும் ஆராய்ந்து ஊதினுல் மாசு மறைந்துவிடும்.

ஆனல் அதே நேரத்தில் முட்ட வரும் மாடுபோல் தமிழர்க்கு இன் னல் இலங்கையிலிருந்து, மலேயா விலிருந்து, மற்ற இடங்களி லிருந்து வந்த வண்ணம் இருக் கின்றது.

என்னே மாற்றம்!

தாராசிங்—கிழப்புலி! சீக்கியர்கள் உள்ளத்திலே, வீரம் எழச் செய்த பெரிய தலைவர். பஞ்சாபில், காங்கிரசுக்கு, இடியெனயிருந்தவர். எவ ரும் அசைக்கமுடியாது எனுமளவுக்குச் செல்வாக்கு பெற்றவர். நீண்ட நாள் தொண்டாற்றியவர். அவர், குருத்வார சிரோமணி தலைவராக நின்ருர், அவரை எதிர்ப்பதற்கே, ஒரு சமயம், ஆள் கிடையாது குருத் வாரத்தில். அப்படிப்பட்டவரை எதிர்த்தார் இன்னொருவர்; மூன்று ஓட்டு வித்தியாசத்தில் தாராசிங்கைத் தோற்கடிக்தும்விட்டார்! சீக்கியர் தம் உள்ளத்தில், உணர்ச்சி அலைகள் எழக் காரணமாயிருந்த இவர், இரண்டு ஆண்களுக்குள்ளாக, எந்தக் காங்கிரசைக் குழிதோண்டிப் புதைப்பேன் என்ருரோ, அதே காங்கிரசுடன் கூடிக் குலாவ முற்பட்ட தையும், தன் கட்சிக்காரர்களையெல்லாம் காங்கிரசில் இணைந்து பணி யாற்றக் கட்டளையிட்டதையும், நாடு அறியும். டில்லிமீது படையெடுப் பேன்!—என்று கர்ச்சித்த இவர், நேருவைப் போய்ப் பேட்டி காண்பதே பெருமை எனும் அளவுக்கு வந்தார். ஆனல், கடந்த சில மாதங்களாக, மீண்டும், பழையபடி இவருக்குக் காங்கிரஸ்மீது எரிச்சல் வரும் அறி குறிகள், இவர் பேச்சில் தென்பட்டன. எனினும், குருத்துவார நிர்வா கத் தலைவர் தேர்தலிலேயே, வெற்றிபெருமற் போய்விட்டார்.

...ஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில் ... அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

879

திராவிடநாடு

30—11—58 | வார வெளியீடு | விலை 16 காசு

அவர் மறந்தார்

(தமிழ்க்கனல்)

சொல்மறவாதவார்த்தை ஒன்று இருக்கும்:—ஆனல்
சொல்லிடம றந்தவார்த்தை வேறு இருக்கும்!—தம்மைச்
சொல்லிக்கொண்டு திரியும்பெயர் "காங்கி ரசினர்"—ஆனல்
சொல்லிக்கொள்ள மறந்தபெயர் "தீங்க ரசினர்!"—இன்று
சொல்லிடுவார் "ஆட்சிசன நாயகம்" என்று—ஆனல்
சொல்லமறந் தது"பண நாயகம்" என்று!—அவர்
சொல்லமற வார்"வந்தே மாதரம்" என்று—ஆனல்
சொல்லமறந் தார்" வந்தே மாத்துரேம்" என்று!!

"சுதந்திரம் வந்த"தென்று சொல்ல மறவார்—"வடக்கே
சொந்தமாகி விட்ட"தெனச் சொல்ல மறப்பார்!—இங்கு
"மதம்இல்லை சாதியில்லை" என்ன மறவார்—"ஓட்டுக்
கேட்கையிலே உண்டு"என்று சொல்ல மறப்பார்!—"வெள்ளையர்
நிதம்நமைச் சுரண்டினர்" என்ன மறவார்—"இன்று
நாங்கள்உமைச் சுரண்டுவோம்" என்ன மறப்பார்!—"நாட்டில்
கதர்வாரம் அனுசரிக்கச் சொல்ல மறவார்—பசியால்
கதறும்வாரம் அனுசரிக்கக் காண மறப்பார்!!

வாழ்வுயரும் ஐந்தாண்டுத் திட்டத்தா லென்பார்—அது
வடக்கினிலே மட்டுமெனச் சொல்ல மறப்பார்!—நாடு
பாழ்படுமே பிரிவினையால்! பாரதம் ஒன்றே—நீங்கள்
பேசும்திரா விடஞ்சிறிதே என்ன மறவார்—ஆனல்
ஆழ்கடல்தா லாட்டும்பெரும் பூமி தனிலே—இவர்
ஆளும்பா ரதம்சிறிதே என்ன மறப்பார்!—நம்
தாழ்ந்தநிலை நம்மவர் மறப்பதற் கில்லை!—வளத்
திராவிடத்தைப் பிரித்துவிடின் தீர்ந்திடும் தொல்லை!!

வேளாண்மை

(Dr. பா. சரவணன்)

உலகில் உழவுத் தொழிலைக் கண்டறிந்த முதல்வன் தமிழன். வேளாண்மைக்குரியவர்கள் வேளாளர்கள். இவர்களுடைய சிறப்பினை ஏறக்குறைய நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. வள்ளுவரும் "உழுவார் உலகத்தார்க்கு ஆணி" என உழவர்கள் உலகத்தில் பெற்றுள்ள சிறப்பினையும், அவசியத்தையும் கூறியுள்ளார். ஆனால் இன்று;

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின் செல்பவர்"

என்பதுபோல் இல்லை.

தென்னகத்தில் வாழ்ந்திடும் மக்களில் பெரும்பாலோர் 100-க்கு 80-பேர்களுக்குமேல் வேளாண்மைத் தொழில் புரிகிறார்கள். அவர்கள் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டு, வாழ்வில் வறுமையின்றி வாழ முடிவதில்லை. மக்கட் தொகுதியில் பெரும்பகுதியினரிடம் உணவுப் பற்றாக்குறையே நிலவுகிறது. உணவுப் பொருள்கள் வெளிநாடுகளிலிந்து இறக்குமதி செய்யப்படுகிறது.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்களைச் சிறுகச் சிறுகக் குறைத்திட, நாட்டின் உற்பத்தியைப் பெருக்குவது; நாட்டின் தேவையைப் பூர்த்திசெய்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது என்ற கருத்துடன் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

தென்னக மாநிலங்களுக்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ள தொகைகள்:-

இலட்சங்கள்

இனம்	ஆந்திரம்	சென்னை	கேரளம்	மைசூர்
விவசாயம், சமுதாயம்:	2564·22	3535·50	1070·09	1393·51
நீர்பாசனம், மின்சாரம்:	5330·40	7125·00	2802·40	3791·25

இந்திய மாநிலத்தில் நிறைவேறியுள்ள அணைக்கட்டுத் திட்டங்கள்; மின்சார விசைத் திட்டங்கள் நிறைவேறியவைகளும் நிறைவேறிக்கொண்டு வருபவைகளும்:-

1.	துங்கபத்ரா—மைசூர், ஆந்திரம் ரூ.	60	கோடி
2.	பக்ராநங்கல்—பஞ்சாப்	173·54	"
3.	மச்குண்டு—ஒரிசா	36·32	"
4.	மயூராக்ஷி—மேற்கு வங்காளம்	16·1	"
5.	பத்ரா—மைசூர்	24 42	கோடி
6.	ஹீராகுத்—ஒரிஸ்ஸா	70·78	"
7.	காக்கிரபாரா—பம்பாய்	11·65	"
8.	கீழ்பவானி—சென்னை	9·51	"
9.	தாமோதர்—தில்லையா அணை	3·66	"
10.	கோனார்	9·94	"
11.	மைதான்	16 74	"
12.	பஞ்சட்குன்று	18 25	"
13.	துர்க்காபூர் அணைப்பு	22 86	"
14.	பொகாரோ—பீகார்பிரதேசம்	14 64	"
15.	ரீகாண்ட்—உத்தர் பிரதேசம்	45·26	"
16.	சம்பல்காந்திசாகர்மத்தியபிரதேசம்	22·44	"
17.	கோடா அமைப்பு--ராஜஸ்தானம்	25 59	"
18.	கோய்னா—பம்பாய்	42·76	"
19.	நாகார்ஜின சாகர்—ஆந்திரம்	88·18	"
20.	பெரியார்—சென்னை	6·75	"
21.	மகாநதி—ஒரிசா	14·92	"
22.	கங்கை அணை—மேற்குவங்காளம்	25·26	"
23.	குண்டா—சென்னை	35 44	"
24.	சராவதி—மைசூர்	22 97	"
25.	கடாணு—பம்பாய்	14·07	"
26.	கோர்பா—மத்தியபிரதேசம்	12 34	"
27.	கோசி—பீகார் பிரதேசம்	44 6	"
28.	தாவா—மத்தியப் பிரதேசம்	18·34	"
29.	யமுனை—உத்தரப் பிரதேசம்	19·59	"

"உழவின் மிகுந்த ஊதியம் இல்லை" என்பது தமிழகத்தின் பழமொழி. தமிழகத்தில் வாழும் மக்கள் பெரும்பாலோர் கிராமங்களில் வாழ்பவர்கள், அவர்கள் ஈடுபடும் தொழிலும் உழவு. நாட்டில் பெரும்பாலோர் விவசாயத்தினாலேயே பிழைக்கின்றனர். விவசாயத்திற்கு நிலவளம் இன்றியமையாதது. நிலவளம் மட்டுமல்ல, நீர்வளமும் அவசியம். "நீர் உயர்ந்தால் நெல் உயரும்" எனவே மக்களுக்கு உழவுத்தொழிலுக்கு அவசியமான நீர் கிடைத்திட நீர்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டும்.

பிறமொழி மாநிலங்களிலிருந்து நீர் கொண்டுவர சென்னை அரசியலார் திட்டம் வகுத்தனர். ஆயினும் இன்றளவும் முடிவு காணாத பிரச்சினையாக உள்ளது. மக்கள் வாழ்வுப் பிரச்னை! என்றாலும் முடிவுகாண முடியவில்லை. உலகப் பிரச்னைக்கு ஓடோடியும் சென்று யோசனை கூறிடும் நேரு அவர்கள் இதில் முடிவுகாண முன்வரவில்லை.

எத்தனை கிராமங்களில் நீர் கிடைத்திடாமல் நிலங்கள் பயிர் செய்யாமல் விடப்படுகிறது?

(4-ம் பக்கம் பார்க்க)

என்றைக்காவது ஒரு நாள்

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 5 [30-11-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 20

டில்லி சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்படும் எந்தத் திட்டமும் சரியான முறையில் உருவாவதில்லை—உருவாக்கப்படுவதில்லை என்று நாம் பல காலமாகவே கூறிவருகிறோம். முன்பின் யோசனையின்றித் திட்டங்களைத் தீட்டுவதும் அவை தம்மால் எல்லாம் ஊழல்கள் மலிந்து காணப்படுவதும் அன்றாட நிகழ்ச்சிகளாக ஆகிவிட்டன. இவற்றை நாம் எடுத்துக்காட்டிப் புள்ளி விபரங்களை முன்வைத்துக் கூறும்போதெல்லாம் அகில இந்தியம் பேசித் தேசியம் வளர்ப்போர் நம்மீது சீறிவிழுவதன் வாயிலாகத் தாங்கள் வெற்றிகண்டுவிட்டதாக எண்ணி நிமிர்ந்து நின்று பேச முன்வந்து விடுகிறார்கள்.

யார் ஏக இந்தியம் பேசித் தேசியம் வளர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்களோ, அவர்கள் முகாமிலிருந்தே நாம் கூறும் ஆதாரங்களுக்கு ஆதரவு கிடைக்கின்ற நிலை இப்போது உண்டாகியிருக்கிறது. புண்ணைப் புனுகால் மறைக்க முயல்வதைப்போல் உண்மையை எவ்வளவு காலத்துக்குத்தான் மறைத்துவைக்கமுடியும்?

டில்லி சர்க்காரால் நடத்தப்படும் உருக்குத் தொழிற்சாலைகளில் ஏற்பட்டுள்ள ஊழல்கள் பற்றியும் ஊதாரிச் செலவுகள் பற்றியும் அண்மையில் டில்லிப் பாராளுமன்றத்தில் பேசப்பட்டது நினைவிருக்கலாம்.

1. "தொழிற்சாலைகள் பற்றியவரை, செலவு அதிகரிப்புக்கு, பெருவாரியான தொகை சரியான முறையில் செலவழிக்கப்படாதது முக்கிய காரணம்".
2. "நிபுணர்கள் என்ற பெயரில் தேவைக்கு அதிகமான பேர்வழிகளை அமர்த்துவது."
3. "தொழில் நுணுக்கம் தெரியாதவர்களிடம் அதிகாரத்தை ஒப்படைப்பது."
4. "அற்ப காரியங்களுக்கெல்லாம் அதிகாரிகள் வீணாகத் தாமதம்செய்து இழுக்கடிப்பது."
5. "வேலைக்கு இலாயக்கற்ற காண்ட்ராக்டர்களிடம் வேலையை ஒப்படைப்பது."

ஆகிய இவ்வினங்களில் பெருந்தொகை விரயமாகி வந்திருக்கிறது என்ற இக்குற்றச்சாட்டுகள் நம்மால்—தேசியம் தெரியாதவர்கள் என்று கருதப்படும் நம்மால் கூறப்படுவன அல்ல. அசல் தேசியம் பேசும் கூடாரத்திலிருந்து கிளம்பும் குமுறல்கள் தாம் மேலே குறிப்பிட்டிருப்பவை.

தேசியத்தை வளர்க்கப் பாடுபடும் ஏடுகளில் ஒன்றான "சுதேசமித்திரன்" "ஊழலும் விரயமும்" என்ற தலைப்பிட்டு எழுதியிருக்கும் தலையங்கத்தின் ஒரு பகுதியே இது:

"சர்க்கார் உருக்குத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தும் விஷயத்தில் காணும் ஊழல்களைப் பற்றி லோக் சபையில் மிகக் காரமான விவாதம் நடந்திருக்கிறது............இத் தொழிற்சாலைகள் விஷயத்தில் தக்க முன்னோக்குடன், தெளிவான விவரங்களுடன் சர்க்கார் திட்டமிடவில்லை. நமது எதிர்காலத் தொழில் வளர்ச்சி முக்கியமாக இவ்வுருக்குத் தொழிற்சாலைகள் கூடியவரை துரிதமாக உருப்பெறுவதையே பொறுத்திருக்கிறது. எனினும் அதற்கேற்ற ஒரு பொறுப்பு உணர்ச்சி இவை சம்பந்தமான அதிகாரிகளின் நடவடிக்கைகளில் காணவில்லை. முதலில் திட்டம் அமைத்ததிலிருந்து, செலவு மதிப்பீடுகளை மீண்டும், மீண்டும் உயர்த்திக்கொண்டு வந்திருக்கின்றனர். இதுவரையில் மட்டும் அசல் செலவு மதிப்பீடு 45-சதவிகிதம் உயர்ந்துவிட்டதென்பதை ஒரு அங்கத்தினர் எடுத்துக் காட்டியுள்ளார். அத்தகைய மதிப்பீடு எதிர்பாராத விலைவாசி உயர்வால் அதிகரிப்பதை நாம் புரிந்துகொள்ளமுடியும். ஆனால் இத்தொழிற்சாலைகள் பற்றியவரை செலவு அதிகரிப்புக்கு பெருவாரியான தொகை சரியான முறையில் செலவழிக்கப்படாதது ஒரு முக்கிய காரணமாகும். நிபுணர்கள் என்ற பெயரில் தேவைக்கதிகமான பேர்வழிகளை அமர்த்துவது, தொழில் நுணுக்கம் தெரியாதவர்களிடம் அதிகாரத்தை ஒப்படைப்பது, வேலைக்கு இலாயக்கற்ற காண்டிராக்டர்களிடம் வேலையை ஒப்படைப்பது, அற்ப காரியங்களுக்கெல்லாம் அதிகாரிகள் வீணாகத் தாமதம் செய்து இழுக்கடிப்பது முதலிய இனங்களில் பெருந்தொகை விரயமாகி வந்திருக்கிறது. ஜெர்மனியிலிருந்து தச்சு வேலை செய்வதற்காக வரவழைக்கப்பட்ட 32-பேருக்குத் தலைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 5,000 சம்பளமாம். குறைந்த சம்பளத்திற்கு வர மறுத்தால் அவர்களில் ஒரு சிலரை மட்டும் வர

(14-ம் பக்கம் பார்க்க)

2-ம் பக்கத் தொடர்ச்சி

பாலாற்றில் தண்ணீர் கொண்டுவரும் பிரச்னை? கேள்விக் குறியுடன்தான் அமைந்துள்ளது. பல நூறு மைல்கள் கால்வாய் வெட்டப்பட்டு நீர் கொண்டுவரப்படுகிறது வடநாட்டில்.

சட்லெஜ் என்ற நதி பஞ்சாப் மாநிலத்தில் ஓடுவது; அந்நதியில் தடைபோடப்பட்டு, தேங்கி இருக்கும் நீரைத் திருப்பி 425 மைல் தூரம் கால்வாய் வழியாகக் கொண்டுசெல்லப்பட்டு ராஜபுதனத்துக்குரிய நீர்ப்பாசனம் செய்யப்பட்டுள்ளது. உலகிலேயே இந்தத் திட்டம், தனிப்பட்ட கால்வாய் என்பதில் மிகப் பெரியதாக விளங்குகிறது. 66½ கோடி ரூபாய் செலவில்; "ராஜபுதனப் பாலைவனம்" என சரித்திரத்தில் குறிப்பிடப்பட்டது, இன்று சோலைவனமாக காட்சி தருகிறது. வருங்கால வரலாற்றில் இடம் பெறுகிறது. "பாலைவனத்தைச் சோலைவனமாக்கிய செயலைப் பாரீர்" என்ற புகழுரை அரசியலாருக்கும் கிடைக்கும்.

ஆனால்? தமிழகத்தில் பாலாற்றில் தண்ணீர் ஓடவில்லை. "இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் விவசாயத்திற்கு ஒதுக்கிய தொகை முழுதும் பயன்படுத்த இயலாததால் மற்றத் துறைகளுக்குப் பயன்படுத்தப்படும்" என்று அறிவிக்கிறார் நிதியமைச்சர் சுப்பிரமணியம்.

பெப்சு மாநிலத்தில் நூற்றுக்கணக்கான மைல்கள் முட்புதர்களாக இருந்த காடு மேடு பள்ளங்களை சமமாக்கி; சோளமும், கரும்பும், நெல்லும், கோதுமையும் பலவகையான தானியங்களும் பயிர் செய்திடும் முயற்சி. புதிய கால்வாய்கள் வெட்டப்பட்டு நீர் கொண்டுவரும் திட்டங்களை உருவாக்கி செயலாற்றிடும் அமைச்சர்கள் அங்கே! காந்தி பிறந்தவாரக் கொண்டாட்டம், பாதை யாத்திரை செய்து, கதர் விற்பனை செய்திடும் அமைச்சர்கள் இங்கே!

மக்கள் வாழ்வில் வளம் காண ஏதாவது செய்ய வேண்டும்; அவர்களின் பொருளாதார உயர்வுகாண வேண்டும் என்பன போன்ற சிறந்த தேவைகளைச் செயலாற்ற விரும்பும் அரசு, அவ்விருப்பங்களை நிறைவேற்றத்துணைபுரியும் வேளாண்மையைச்சிறப்புறச் செய்யவேண்டும். அதன் வளர்ச்சிக்குரிய திட்டங்களை வகுத்துச் செயலாற்றவேண்டும்.

உழவுத் தொழிலுக்கு உயிர்நாடி என விளங்கும் நீர்ப்பாசனம் எளிதாக எக்காலத்திலும் கிடைத்திட வழிவகைகள் செய்தல் அவசியம். "சீரைத்தேடின் ஏரைத்தேடு" என்பது பழமொழி. எனவே அரசு சீருடன் விளங்கவேண்டுமானால் ஏரைத்தேடிச் செல்லவேண்டும். ஏர் உழுதிட அவசியம் தேவைப்படும் நீரைப் பிற மாநிலங்களிலிருந்து கொண்டுவரும் பிரச்னைகளில் முடிவுகண்டு விரைவில் நிறைவேற்ற வேண்டும்.

இந்திய மாநிலத்தில் நிறைவேற்றிவரும் திட்டங்களையும், புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டிருப்பவைகளையும் கண்டால் தென்னாடு, குறிப்பாகத் தமிழகம் எவ்வளவு திட்டங்களில் புறக்கணிக்கப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டும். நூறு கோடிகளுக்கு மேல் செல்லும் திட்டங்கள் அனைத்தும் வடநாட்டில் தான் நிறைவேற்றப்படுகிறது என்பதை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

புதிய திட்டங்கள்

திட்டங்களின் பெயர்	மாநிலம்	மொத்த செலவு	2வதுதிட்ட ஒதுக்கிய தொகை
ஊகை	பம்பாய்	60கோ	6·50
நர்மதா	,,	25 ,,	4·00
பனஸ்	,,	7·37	3·00
மூலா	,,	8·39	3·50
கீரானு	,,	8·08	5·50
காதக்வன்லா	,,	11·82	4·00
தாவா	மத்திய பிரதேசம்	18·39	7·11
சந்திரசேகர்	மத்திய பாரத்	75	75
பூர்னு	ஐதராபாத்	7·73	5·00
வாமசாதரா	ஆந்திரா	12·56	1·00
புதுக்கட்டளை	சென்னை	1·49	1·48
விதுரா	,, பாண்டிச்சேரி	61	61
சாவண்டி	ஒரிஸ்ஸா	4·45	4·25
காபினி	மைசூர்	2·50	2·50
குர்கான் கால்வாய்	பஞ்சாப்	2·30	1·54
கங்க்சபதி	மேற்கு வங்கம்	25·14	5·00
பானுன்	ராஜஸ்தானம்	4·80	2·80
பாதர்	சௌராஷ்டிரம்	4·00	1·06
பூதாதன்கட்டு	கேரளம்	3·48	3·48
லிட்டர் கால்வாய்	ஜம்மு காஷ்மீர்	75	58
பார்னு அல்லது கோபால்	பூபால்	4·00/ 5·00	2·30
லட்சுமனதீர்த்தா	கூர்க்	25	25
கசாயரி	விந்திய பிரதேசம்	1·60	25

நிறைவேறிவரும் திட்டங்கள்

திட்டங்களின் பெயர்	மாநிலம்	மொத்த செலவுத் தொகை	2வதுதிட்ட ஒதுக்கிய தொகை
பக்ராநங்கல்	பஞ்சாப்,பெப்சு, ராஜ.	160கோ	28·83
தாமோதர்	மேற்கு வங்கம் பீகார்	86 ,,	9·93
மயூராக்ஷி	மேற்கு வங்கம்	16·11	2·12
ஹீராகுட்	ஒரிசா	85·70	21·94
சாம்பல்	மத்திய பாரத்	48·03	21·05
துங்கபத்ரா	ஐதராபாத், ஆந்திரம்	60	5·50
பத்ரா	மைசூர்	17·75	11·02
கோசி	பீகார்	45·95	17·00
நாகா அர்ஜினசாகர்	ஆந்திரம், ஐதராபாத்	75·08	34·00
துங்கபத்ரா கால்வாய்	,, மைசூர்	18·96	6·20
கக்ராபர்	பம்பாய்	11·01	3·86

புதிய திட்டங்கள் செயலாற்றப்படுவதில் முதலிடம் பெறுவது பம்பாய் மாநிலம். திட்டங்கள் நிறைவேற 120 கோடிகளுக்கு மேலாகச் செலவுத் தொகைகள். பலத்துறைகளிலும் முன்னணியிலுள்ள பம்பாய் மாநிலம் வருங்காலத்தில் வேளாண்மையிலும் முதன்மை பெற்று விளங்கும். வேளாண்மைத் தொழில் துறையை முதலில் கண்டறிந்த தமிழகம் பம்பாய் நிலைக்கு என்றுதான் வருமோ? என்ற வினாதான் எழுகிறது! ○

★ பத்தாண்டுகளுக்குப் பிறகு! ★

ஜனகணமன கீதம் கேட்கிறது —வந்தேமாதரம், ஜேஇந்த் முழக்கம் ஒலிக்கிறது — தாயின் மணிக்கொடியைப் பார்க்க அழைக்கிறார்கள் — அதிகார மாற்றம் நடந்து அரசியல் தர்பாரில் தலைவர்கள் அமர்ந்திருக்கிறார்கள் — அமெரிக்காவும் பிரான்சும் கை குலுக்குகிறது. எல்லாம் சரி! எனினும், இத்தனை அமளிகளுக்கிடையே, மஞ்சள் ஏகாதிபத்தியம், மெள்ள மெள்ளக்கொலுவில் அமருகிறது; கூர்ந்து நோக்குவீர் பெரியீர், என்று அறைகூவல் விடுத்தோம்!

அல்லாடியும், டி. டி. கே.யும், அவர்கூடச் சென்ற காங்கிரஸ் அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்களும், மாளிகை வாசத்தையும் அதைவிடப் போதை தந்த அதிகார பானத்தையும் அருந்திக் களித்துக்கொண்டு, "ஆகா! ஊகூ!" என்று தலையாட்டிக் கொண்டிருந்த நேரம். நாம் தவித்தோம்! தாசர்களாக்கப்படுகிறோம் என்றுரைத்தோம்! குரலொலிப் போரில்லையே, அந்தக் கொலு மண்டபத்தில் — வெள்ளையனிடமிருந்து அதிகாரம் பெற்ற காங்கிரசின் எசமானர்கள் இந்தப் பரந்த உபகண்டத்தில் இன்னொரு 'பாதுஷா தர்பார்' உண்டாக்க முயல்கிறார்களே! அக்பர் முயன்று பார்த்து முடியாததை, அவுரங்கசீப்பால் சாதிக்க இயலாததை, வெள்ளையன் உண்டாக்கியதை, காங்கிரஸ் கட்சியின் பெயரால் தங்கள் வசம் "மாற்றி"க்கொள்கிறார்களே என்று குமுறினோம்.

முன்பு, இலண்டன்! இப்போது டில்லி!!

முன்பு இந்தியா மந்திரி தேம்ஸ் நதிக்கரையிலிருந்தார்! இப்போது டில்லிப்பட்டணத்தில் இருக்கிறார்! முன்பிருந்த கவர்னர், வெள்ளையனின் எடுபிடி! இப்போது கவர்னருண்டு—இவருடைய எசமான் வெள்ளையன் இல்லையே ஒழிய, அவன் விட்டுப்போன பீடத்தில் இருப்பவர்கள்தாம்!— கவனித்தீரோ என்று கவலையோடு கேட்டோம்.

நம் உரைகளைக் கேட்டோர், 'உண்மைதானே' என்றனர்— ஏடுகளில் படித்தோர், 'ஆமாம், ஐயா!' என்றனர் — ஆனால் இதைச் சொல்ல நாம் அரசியல் நிர்ணய சபையில் இல்லை! அப்போது, திராவிட முன்னேற்றக் கழகமும் இல்லை! அதனால் காங்கிரஸ் எசமானர்கள் தமது விருப்பப்படி அரசியலை அமைத்துக் கொண்டனர். இந்திய உபகண்டத்தில் இன்னொரு 'சாம்ராஜ்யம்' உருவாக்கத் திட்டம் போட்டனர்.

"இதென்ன அரசியல் திட்டம்? மாகாணங்களுக்கு உரிமையில்லையே! எல்லாவற்றையும் மத்திய சர்க்காரே சுரண்டிவைத்துக் கொள்கிறதே!" என்று உலகப் புகழ்பெற்ற ஐவார் ஜென்னிங்ஸ் போன்ற அறிஞர்கள் கூறலாயினர், அங்குமிங்குமாயிருந்த பெரியவர்கள் பலரும், முணுமுணுத்தனர். எவர் குரலும், டில்லிக்கு எட்டுவதாகவுமில்லை! இங்கிருந்துபோன காங்கிரஸ் தலைவர்கள் போட்ட 'ஜே' முழக்கத்தில் நியாயக்குரல் அமுங்கி விட்டது!

அதன் பிறகு சந்தர்ப்பம் வரும் போது, அமைச்சர்கள் மட்டுமல்ல, அறிஞர்கள் பலரும், நாம் அன்று சொன்னதை எடுத்துச்சொல்லத் தவறவில்லை.

மாகாண சர்க்கார்கள் சாதாரண பஞ்சாயத்துக்களாகிவிட்டன.

எதற்கெடுத்தாலும் இங்குள்ள மந்திரிகள் காவடி தூக்குகிறார்கள்!

ஓடிப்போய் அடிக்கடி ஆலோசனை பெற்றுவர ஒரு தனி விமானமே வாங்கினார்கள்.

எந்த ஒருமுடிவு செய்வதாயினும் சரி மேலிடம் சம்மதிக்க வேண்டும்.

இது தேவையா!!

சுதந்திர சர்க்காரின் 'சதி' கொஞ்சம் கொஞ்சம் துலங்க ஆரம்பித்ததும், பேச்சுகள் கிளம்பலாயின. உறவுக்கு இமயம் எனும் ம. பொ. சி. முதல், இப்படி ஒரு எண்ணத்தை வெளியிடுவதே பஞ்சமாபாதகத்தில் ஒன்றுஎன்று கருதிய ஏடுகள் வரை, இந்தக் கருத்தை எதிரொலிக்கலாயின.

சென்னை மாநிலத்தின் ஆள்வோராக வந்த பிரகாசம் — ஓமந்தூரார்—குமாரசாமிராஜா— ஏன்? கடைசியில் ஆச்சாரியார்கூட இந்த அதிருப்திக் குரலைக் கிளப்பத் தவறவில்லை.

ஓமந்தூரார் காலத்தில், மேலிடத்துப் பிடியில் பட்டபாடு நாடு அறியும்! ஒளித்துவைத்துப் பேசும் அவசியமும், அந்தக் குணமும் அமையாததால், மாகாணங்களின் உரிமைகளையெல்லாம் மத்யசர்க்கார் பறித்துக்கொண்டிருக்கிறது என்று வெளிப்படையாகவே பேசலானார் அவர்! சான்றுகளைக்கூடச் சொன்னார்— பழைய ஏடுகள் சொல்லும் அவைகளை!!

ஆண்டுகள் ஓட ஓட, இது போன்ற பேச்சுகள் அதிகமாயின. தமிழ்நாடு மட்டுமல்ல, பிற பகுதிகளும்கூட, டில்லியின்மீது இந்தக் குற்றச்சாட்டைச் சுமத்தலாயின.

எதிர்க்கட்சியினர் மட்டுமல்ல, ஆளும் கட்சியைச் சேர்ந்த அன்பர் அழகேசன் போன்றார்

கூட (அவர் மந்திரியாக வரும் வரையில்) பார்லிமெண்டில், பேசினர் இதுபோல! பல அரசியல் மேதைகளும், வெளிப்படையாகச் சொல்லலாயினர்!!

'பெடரல் சர்க்கார்'!

'இது பெடரல் சர்க்காரா? அப்படி என்ருல், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தரப்பட்டிருக்க வேண்டுமே!'

'ஓகோ, அப்படியா? இது பெடரல் சர்க்காரல்ல — யூனியன் சர்க்கார்'

இப்படிக்கேள்வியும் பதில்களும் இளம்பலாயின.

கூட்டாட்சி — ஏக ஆட்சி, அது, இந்திய உபகண்டத்தில் நடப்பது என்று, வாதப் பிரதிவாதங்கள் இளம்பலாயின. இரண்டும் கலந்தது போலத் தோன்றும் ஒரு ஏகாதிபத்திய ஆட்சி, என்ருராம். சொன்னல் மட்டும், அவர்களால் எளிதில் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

"எதாயிருந்தால் என்ன! நம்ம நேரு இருக்கிருர்—நம்ம ராஜாஜி உண்டன்ரே! — தேசமே, நம்மதுதான். இதிலென்ன பேதா பேதம் வேண்டிக்கிடக்கு. தள்ளுங்கோன்ன."

"வருமான வரியில் பங்கு தர்ரு நூத்துக்குப் பதினெட்டுத்தான் என்ருலும் தர்ருளா, இல்லேயோ! இவா கேட்டா, அவா, உதவி ஒத்தாசை செய்யருளோ, இல்லீயோ! அது போதாதோ — அதைவிட, என்ன வேணுமாம்..."

"கேட்டீராய்யா, ஓய்! அண்ணுதுரை சொல்றதை — நிலவரியையும் விற்பனைவரியையும் தவிர்த்து மிச்ச எல்லா வரிகளையும், இன்கம்டாக்ஸ் கஸ்டம்ஸ் வியாபாரம் எல்லாத்தையும் டில்லிக்காரா கொண்டுபோயிடுருன்களாம். இங்கேயிருந்து வருடா வருடம் கோடிக் கணக்கில், டில்லிக்காரா கொட்டிண்டு போருன்னு பேசருய்யா..."

இப்படி, விமர்சனங்களும், கேலி உருவத்தில் விளக்கப் பேச்சுகளும் நடக்கலாயின.

"என்ன இருந்தாலும், பாருங்கோ! வரிகளை வாங்கிப் போனுத்தான், என்ன? நமக்கு ஒரு கஷ்டம்னு உதவாமப் போவாங்களோ! அஞ்சாண்டுத் திட்டம் போட்டுக் காரியம் செய்யப் போருங்க. என்னென்ன நமக்கு கிடைக்கப்போவுதுன்னு பாருங்களேன். அப்பத் தெரியும், நேத்து முளைச்ச தி. மு. க. பேச்சிலேயிருக்கிற பித்தலாட்டம் எவ்வளவுங்கிறது!!"

இவ்வாறு, காங்கிரஸ் நண்பர்கள், கர்ச்சித்தார்கள். காலம் ஓடிற்று — கர்ச்சனை எழுப்பிய குரல்கள் கம்மலாயின-ஆமாய்யா! அங்கே, தாமோதரும்—பக்ராநங்கலும்—சித்தரஞ்சனும் —ஹீராகுட்டாம்—சந்திகாராம்-சாம்பல் நதித் திட்டமாம்-நூறுகோடி இருநூறு கோடி என்கிருர்கள். இங்கே, அப்படியொன்றும் இல்லையே!!— என்கிற குமுறல், ஒவ்வொரு இடத்திலும் கேட்கலாயிற்று.

இந்த மந்திரிகளைக் கேட்டால், "டில்லி, அதோ!", என்கிருர்கள்.

எதற்கும், 'டில்லி! டில்லி!!' என்று, இன்னும் சொல்கிருர்கள்.

மக்கள் மன்றத்திலும், இப்போது உண்மை பளிச்சிட ஆரம்பித்துள்ளது.

இதுபோது, எங்கெங்கிருந்தெல்லாமோ, டில்லியின் ஆதிக்கம் பற்றிய குரல்கள் ஒலிக்கின்றன.

"பலதரப்பட்ட பழக்க வழக்கங்களும், குணங்களும்கொண்ட ஒரு பெரிய நாட்டில், எல்லா அதிகாரங்களையும் தன் தலையில் போட்டுக்கொண்டு, ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு இடத்திலும், என்ன நடக்கிறதென்று கட்டுப்படுத்துவதென்பது, சாத்யமல்ல என்பது மட்டுமல்ல, கூடவும் கூடாது. ஒவ்வொரு பகுதியும் தன் விருப்பப்படி பார்த்துக்கொள்ள விட்டுவிடவேண்டும்."

"மாகாண உரிமைகளைச் சாகடிக்கும் வகையிலேயே, இன்றுள்ள அரசியலமைப்பு இருக்கிறது; இயங்கி வருகிறது. இதற்குக்காரணம், என்னசெய்யவேண்டுமென்பது, மத்திய பீடத்திலேயே முடிவு செய்யப்படுகிறது. அரசியல் எண்ணங்களும், கொள்கைகளும் ஒரே இடத்திலேயே உட்கார்ந்து நிர்ணயிக்கப்படுவதால், நாட்டின் ஒவ்வொரு பாகத்திலும் உற்சாகமும் வேகமும் உண்டாக வழியில்லை."

"சின்னஞ்சிறு விஷயத்தில் கூடத் தன்னிச்சைப்படி எனதயாவது செய்யலாம் என்ருல் வழியில்லை. எல்லாம் இந்திய சர்க்காரின் பொறுப்புத்தான். அரசியல் சட்டத்தில், இந்த இடம் சரியில்லை. சிலபேர் சொல்வார்கள், அதிகாரம் ஒரே இடத்திலிருக்கவேண்டும் என்று. இப்போதே பார்க்கிருேம், தங்களால் ஏதாவது காரியம் செய்யமுடியவில்லை என்ருல், மாகாண மந்திரிகள் மத்திய சர்க்கார் மீது பழி போட்டுவிடுகிருர்கள்; மத்திய சர்க்கார், 'நாங்களென்ன செய்வோம். அது மாகாணத்தின் கடமை' என்று பதில் அளித்துவிடுகிறது. இதனுல், மாகாண மந்திரிகளுக்கு பொறுப்பின்மை அதிகரித்து வருகிறது."

"மத்திய பீடத்திலும், மாகாணங்களிலும் ஒரு கட்சியே உட்கார்ந்து கொண்டிருக்கிறது. சரியான கட்சிகள் இல்லை. இதனுல், அரசில், ஏகபோக மிராசே வளரும். காலப்போக்கில், இது ஜனநாயகத்துக்கு உலைவைக்கும். அதோடு, தேசீய எண்ணம் மங்கிவரும் அறிகுறியும் ஆங்காங்கு தெரிகிறது. மொழி, வட்டார உணர்ச்சிகள் தலைதூக்கிவருகின்றன"

"இன்னும் பத்தாண்டுகளுக்கு இன்றுள்ள அரசியலமைப்பு நீடிக்க வேண்டும் (?) அதன் பிறகுதான், இந்தியாவின் எதிர்காலத்தைப்பற்றிக் கவனிக்கவேண்டும்."

வழக்கறிஞர்—காந்தியடிகள் குரல்கேட்டுத்தியாகத்தீயில்குதித்தவர்—அலிகார் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்தவர்—திருச்செங்கோட்டில் ஆச்சாரியார் நிறுவிய காந்தி ஆசிரமத்தின் காரண கர்த்தாக்களில் ஒருவர்—'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆசிரியராகஇருந்தவர் — எழுத்தாளர்—மத்திய சட்டசபையில் உறுப்பினராயிருந்தவர் — சுயராஜ்ய சர்க்காரின் டில்லி மந்திரியாகவுமிருந்தவர் — பிறகு லெப்டினன்டு கவர்னராகப் பதவி வகித்தவர்—அண்மையில் டில்லி நியமித்த மாநில நிதிக் கமிஷனின் தலைவராகவுமிருந்தவரான கே. சந்தானம் அவர்கள்தான், மேற்கண்டவாறு பேசியிருக்கிருர்.

(8-ம் பக்கம் பார்க்க)

வில்லியம் காக்ஸ்டன்

ஒருமணி நேரத்தில் பல்லாயிரக் கணக்கான பிரதிகளை அச்சிடக்கூடிய மாபெரும் அச்சு இயந்திரங்கள் மலிந்துள்ள இந்த இருபதாம் நூற்ருண்டில், அச்சுப்பொறியின் அருமை பெருமைகள் பற்றியோ, அது முதலில் கண்டுபிடித்த பெருமேதைகள் அதற்காகப் பட்ட துன்பங்கள் பற்றியோ சாதாரண மக்களில் பெரும்பாலோர் அறிந்து கொள்ளாமலேயே இருக்கிருர்கள்! ஆனுலும் அந்த அச்சு இயந்திரம் மனித சமுதாயத்திற்குச் செய்து வருகின்ற தொண்டு மகத்தானதாகும்! மாபெரும் இலக்கியங்கள் பலவும் கையெழுத்துப் பிரதிகளாக--மேட்டுக் குடியினர் மட்டுமே ஏராளமான பொருள் கொடுத்து வாங்கிப்படிக்கும் நிலையில் இருந்தது! அந்த நிலையை மாற்றி ஏழை எளியவர்களும் அத்தகைய இலக்கியங்களை வாங்கிப் படித்துப் பயன்பெறும் வண்ணம் செய்த பெருமை அச்சுப் பொறியையே சாரும்! அந்தப் பெரும்பணியிலே ஈடுபட்ட பெருமேதைகள் இருவர்! ஆங்கில நாட்டில் அந்தப் பெரும் பணியை வெற்றிகரமாக நடத்தி அழியாப் புகழைத் தேடிக்கொண்டவர் "வில்லியம் காக்ஸ்டன்" என்ற பெருமேதையாவர்!

•

இங்கிலாந்து நாட்டில் "கென்ட்று" என்ற மாவட்டத்தில் அவர் பிறந்தார். இன்று வண்ண ஓவியங்கள் பலவும் நம் கண்ணைப் பறிக்கும் வண்ணம் அச்சிட்டுத் தருகிருர்களே, அதைத் தோற்றுவித்த அந்த பெருமேதை பிறந்தது நாகரிகமே பரவாத ஒரு சிறு கிராமம்! அவர் எங்கே கல்விகற்ருர்? எவ்வளவு கல்விகற்ருர்? என்பதைப்பற்றிச் சரியான வரலாறு கிடையாது! ஆனுல் அவர் ஓரளவு கல்வி பயின்றிருந்தார் என்பது மாத்திரம் அவர் மொழிபெயர்த்த தனது முதல் நூலில் "என்னைப் பெற்றுவளர்த்துக்கல்வியறிவைப் போதித்துத்தந்த எனது அன்பான பெற்ருேர்களுக்கு என் அன்பு வணக்கங்கள்" என்று தனது முன்னுரையில் கூறுகிருர்!

அவர் தமது பதினைந்தாவது வயதில் இலண்டன் மாநகருக்குச் சென்று அங்கே பெருவணிகராயிருந்த "வில்லியம் லார்ஜ்" என்பவரிடம் வேலைக்கமர்ந்தார். அந்த வணிக நிலையத்தில் பல்வேறு பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன! அவற்றில் பல விலையுயர்ந்த கையெழுத்து நூல்களும் இருந்தன! காக்ஸ்டன் தன்னுடைய ஓய்வு நேரத்தில்

கி. சோழன்

அந்த நூல்களைப் படிப்பார் — சுமார் ஏழு ஆண்டுகள் அந்த வணிகரிடத்திலே காக்ஸ்டன் தொழில் செய்தார். பிறகு அந்த வணிக நிலையத்தைவிட்டு விலகிக் கொண்டார். பிறகு ஏழு ஆண்டுகள் அவர் என்ன செய்தார் என்பது யாருக்கும் தெரியவில்லை!

1441-ம் ஆண்டு வில்லியம் லார்ஜ் என்ற அந்த வணிகர் காலமானுர். அவருக்கிருந்த சொத்தில் ஒரு சிறு பகுதியை அவர் காக்ஸ்டனுக்காக எழுதிவைத்திருந்தார்.

1442-ம் ஆண்டு காக்ஸ்டன் இங்கிலாந்து தேசத்தைவிட்டுப் புறப்பட்டு ஆலந்து, பெல்ஜியம், முதலிய நாடுகளுக்குச் சென்ருர். அங்கே அவர் பல்வேறு வியாபார முறைகளில் ஈடுபட்டார். அத்தோடு பிரஞ்சு மொழியைக் கற்றுக்கொள்ளவும் செய்தார். பிரஞ்சு மொழியிலுள்ள பல இலக்கியங்களை அந்தக் காலத்தில் அவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்! அங்கே இருந்த ஒரு சிற்றரசின் கீழ் மொழி பெயர்ப்பாளராகவும் பணியாற்றினுர்!

ஓயாமல் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருப்பது காக்ஸ்டனுக்கு வெறுப்பைத் தந்தது. ஜெர்மனியில் அச்சடிப்புத் தொழில் நடைபெறும் செய்தி காக்ஸ்டனுக்கு எட்டியது. அவர் எண்ணம் ஜெர்மனியை நாடியது!

அச்சுத் தொழிலை முதன் முதலில் கண்டுபிடித்தது யார் என்பதில் இன்னமும் கருத்து வேறுபாடுகள் இருந்தவண்ணமுள்ளது. கீழே தருவதுபோன்ற இரு கதைகள் கூறப்படுகின்றன!

"காஸ்டர் என்ற ஒரு மனிதர் கானகங்களிலேயே சுற்றித் திரிந்தார் என்றும், அவர் முதன் முதலில் மரப்பட்டைகளாலான எழுத்துக்களைச் செய்து ஒருவிதமான மரத்தின் பாலில் அதனைத் தேய்த்து, பிறகு காகிதத்தில் ஒத்திப் பதியவைத்து அந்த எழுத்துக்களைக்கொண்டு தனது குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்தார் என்றும், சில காலத்திற்குப் பிறகு அவர் தகரத்தாலும் ஈயத்தாலும் எழுத்துக்களைச் செய்து அந்த முறையை விரிவுபடுத்தினுர் என்றும், அது நல்ல பயன்தரவே, சில வேலையாட்களை வைத்துக்கொண்டு ஒரு அச்சகத்தை நடத்தியதாகவும், ஒரு நாள் யாரும் அச்சகத்திலில்லாத நேரத்தில் "யோவான்" என்ற ஒரு வேலைக்காரன் அந்த அச்சு எழுத்துக்களை எல்லாம் களவாடிக்கொண்டு ஜெர்மனிக்கு ஓடிவிட்டதாகவும், அவன் ஜெர்மனியிலே அச்சுத் தொழிலை நிறுவியதாகவும்" ஒரு கதை சொல்லப்படுகிறது.

'கட்டன்பர்க்' என்பவன் முதன் முதலில் அச்சுப் பொறியைக்

கண்டுபிடித்தான், அவன் முதன் முதலில் அச்சியற்றிய நூல் கிருத்துவ வேத நூலாகிய "பைபிள்" தான் என்றும் கூறுகிறார்கள்" பொதுவாகக் கட்டன்பர்க்கையே உலகம் ஒப்புக்கொண்டுள்ளது! கட்டன்பர்கினுடைய பெயரும் புகழும் ஜெர்மானிய தேசமெங்கும் பரவியது. அந்தச் செய்தி காக்ஸ்டனுடைய காதுகளுக்கு எட்டியது.

1470-ம் ஆண்டு காக்ஸ்டன் அச்சடிப்புத் தொழிலைக் கற்றுக் கொள்ளும் பொருட்டு "கோலன்" என்னும் நகரத்திற்குச் சென்றார். அங்கே ஒரு சிறு வீட்டில் அவர் அச்சுத் தொழிலைப் பயின்றார்! சில நாட்களில் நல்லமுறையில் பயிற்சிபெற்ற காக்ஸ்டன், பிரஞ்சு மொழியிலிருந்த பேரிலக்கியமான "எவன் ஆப்டிராய்" என்ற நூலை மொழிபெயர்த்து அதனை அச்சிட்டார். அதுதான் காக்ஸ்டன் அச்சிட்ட முதல் புத்தகமாகும்.

ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகள் நாடு பல சுற்றி, தான் கற்ற அரிய கல்வியோடு—தொழிலோடு அவர் தனது சொந்த நாடான இங்கிலாந்திற்குத் திரும்பினார்! ஊர்திரும்புகிற நேரத்தில் அவரிடமிருந்ததெல்லாம் ஒரு சாதாரண அச்சுப் பொறியும், தான் மொழிபெயர்த்த சில நூல்களும்தான்! தன் நாடு திரும்பிய காக்ஸ்டன். தான்கற்ற அச்சுத் தொழிலை விரிவுபடுத்தினார். "சாசர்" என்ற ஆங்கிலப் பெரும் கவிஞன் எழுதிய பல அரிய நூல்களை அவர் அச்சிட்டார்! அவை ஆங்கில மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டது! ஆனால் இங்கிலாந்திலே இருந்த செல்வச் சீமான்கள் காக்ஸ்டனுடைய முயற்சிக்கு ஊக்கம் தந்திருந்தால், அன்றே அச்சு முறை மேலும் பல மடங்கு வளர்ச்சியடைந்திருக்கும். அவர்களுடைய கவனமெல்லாம் வெறும் அரசியல் துறையில் சென்றதே தவிர, காக்ஸ்டன் பக்கம் திரும்பவில்லை! பணம்படைத்தோரின் ஆதரவு கிடைக்கவில்லை என்பதற்காக அவர் தமது முயற்சியில் தளரவில்லை! தனது நேரத்தை எல்லாம் அந்த அச்சுப் பொறியிலேயே செலவிட்டார். பல்வேறு மொழிகளைக் கற்பதிலும், அந்த மொழிகளிலுள்ள மாபெரும் இலக்கியங்களையெல்லாம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தலும், அச்சிடலுமே தனது வேலையாகக் கொண்டிருந்தார்!

காலம் அவரை வயோதிகப் பருவத்திற்கு இழுத்துத் தள்ளியது. தன்னுடைய கை, கால்கள் நடுங்கிக்கொண்டிருந்த நேரத்திலும் அவர் தமது அச்சகத்தில் உட்கார்ந்து கொண்டு வேலை செய்வோருக்கு உற்சாகமூட்டிக்கொண்டும், தானும் எதையாவதுசெய்து கொண்டுமே இருந்தார்!

கோடைகாலத்தில் ஓர் நாள் அவர் "வெஸ்ட்மின்ஸ்டர்" என்ற ஊரிலே உள்ள அவரது இல்லத்தில் காலமானார்!

காக்ஸ்டனுடைய மறைவுக்குப் பின் அவருடைய அச்சகத்திலே வேலை செய்துகொண்டிருந்த நான்கு தொழிலாளர்களும் மனந்தளராது காக்ஸ்டன் செய்து வந்த அந்த அச்சக வேலையைச் செய்து மேலும் பல வெற்றிகள் பெற்றனர்!

அச்சுப்பொறியின் முழுப்பயனையும் அனுபவித்துவருகின்ற இந்த இருபதாம் நூற்றாண்டில் வாழ்கின்ற நாம் அந்தப் பெருமேதையை என்றும் நினைவில் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம் அல்லவா.

★

6-ம் பக்கத் தொடர்ச்சி

கடந்த நவம்பர் 12-ந்தேதி, சென்னையில்தான், இவ்வாறு பேசியிருக்கிறார்.

அவர் தி. மு. க. அல்ல! அவரது தொடர்பும் நமக்கில்லை!!

ஐந்தாண்டுகளுக்கு முன்பு, இதையே நாம் சொன்னோம், சீறினர்—சினந்தனர்.

இப்போது அவரே, இன்னும் பத்தாண்டுகளுக்குப் பிறகுதான், இந்திய அரசியல் சட்டத்தின் கதியைப்பற்றிப் பேசவேண்டும் என்கிறார்.

என்ன பொருள்? பல தரப்பட்ட பழக்கவழக்கங்கள் கொண்ட நாட்டில் ஒரு மத்யபீடம் இருத்தல் சிரமம்! அது ஜனநாயகத்தைச் சாய்க்கும்! மொழி, வட்டார உணர்ச்சிவலுக்கிறது! எனவே...! என்று இழுக்கிறார்.

சாதாரணமா இது! சந்தானம் எப்பேற்பட்டவர்? அவர் உள்ளத்திலிருந்து கிளம்புகிறது சந்தேகம்.

பத்தாண்டுகளுக்கு!!—இன்றுள்ள, இந்தியா, அப்படியேயிருக்குமா—இந்த அரசியல் சட்டம் நீடிக்குமா என்று சந்தேகம் கிளம்பியுள்ளது அவர் மனதில்.

இப்படி மத்யசர்க்காரே 'எஜமானனாக' இருந்தால், வலுத்து வரும் வட்டார உணர்ச்சியின் விளைவு எங்கே கொண்டுபோய் விடும்? — என்று யோசிக்கிறார். காங்கிரசுக்குஎதிரியல்ல, நேருவை விரும்பாதவரல்ல, எனினும் உள்ள நிலைமை உள்ளத்தைக் கிளறுகிறது.

உரைக்கிறார்! சந்தேகக் குரல் எழுப்புகிறார்!!

ஒரே இடத்தில் அதிகாரங்கள் குவிந்துவிடுகிறது — அங்கிருந்து அகில இந்தியாவையும் ஆட்டிப் படைக்கும் கட்சியாக இருக்கிறது காங்கிரஸ்—அது அகில இந்திய கட்சியாக விளங்கினாலும், செல்வாக்குப் பெற்று வருவது, வட்டார உணர்ச்சிதான்—இந்த வட்டார உணர்ச்சி வலுத்தால்!!—என்கிறார் சந்தானம்.

அறிஞர் — உலக சரிதம் அறிந்தவர்—அதையெல்லாம்விட இந்த நாட்டுத் தியாகத் தொண்டில் மிக மிக ஈடுபட்டவர் — அவர் மனதில் இந்தச் சந்தேகமும், ஆதிபத்யம் உருவாகிறதே எனும் அச்சமும் கிளம்பியுள்ளது.

மாற்றுக் கட்சியினருக்கு நாம் சொல்லும்போது கேலிக்குரியதாகயிருக்கலாம். அமைச்சர் சுப்ரமணியம் போன்றோர், இடி இடித்தாலும், எரிமலைகள் குமுறினாலும் 'ஏக இந்தியா'வை, விடோம் என்று எக்காளமெழுப்பலாம். ஆனால், வளரும் உணர்ச்சி வலுத்தால்! டில்லியின் ஆதிக்கம்பற்றி உணரும் 'சந்தானங்கள்' அதிகமானால்!!

பதிலை, நமது உரிமைக் குரலைக் கண்டிக்கும் உத்தமர்கள் சிந்தனைக்கேவிட்டுவிடுகிறோம்.

பூரித்தேன்

(இளங்கோ)

மாலை நேரம்—மன அயர்வுடன் மாளிகையுள் ஓர் அறையில் மங்கை படுத்திருந்தாள். சிட்டுக் குருவியொன்று அவள் கண்ணில் பட்டுத் தெறித்தது. "வாளரக்கர் காவல் உண்டெனினும் சாளரத்தின் வழி வருவேன் — வானுலகம்—விரிந்த இம் மண்ணுலகம், அனைத்துலகும் பொதுவென்பேன்—ஆடிவரும் தென்றலுடன் பாடிவரும் பறவையினம் — அச்சமின்றி வாழ்ந்திடுவேன் — அச்சமின்றி வாழ்ந்திடுவேன் — குச்சு, மச்சு—கோபுரத்தின் உச்சி—குந்தாத பகுதியில்லை—இன்பத்தின் எல்லையினை எட்டிப் பிடித்திடுவேன்--துன்பத்தின் கரைகாணத் துணிவில்லை உந்தனுக்கு—பகுத்தறிவு, பண்பாடு, என்றெல்லாம் பகல்வேடம் போடுகிறாய் — எண்ணிப்பார்! வண்ணமலர் விரிக்கும் வானம் அழைக்கிறது வருகிறேன் —வணக்கம்!" ஏளனம் செய்துவிட்டு மீளவும் வந்தவழி சென்று வானத்தில் மறைந்ததுகாண்!

மானம் பெரிது — மண்ணகம் சிறிதெனினும் மறக்குடி மகளவள். குருவியின் சொல் கேட்டுக் குமுறினாள் — மேற்றிசையில் சிதறிய செவ்வானம் அவள் சிந்தையைப் படம் பிடித்துக் காட்டிற்று. சிறிது நேரத்திற்குள் இருட்குட்டம் வீழ்ந்த இரவிபோல் மருட்குட்டம் வீழ்ந்தாள் அம்மங்கை.

அஞ்சற்க என்பதுபோல் அமுது பொழி நிலவு அனலைக் கக்கும் முகத்தோடு ஆழியிற் குதித்து, அதை மிதித்துக் கரையேறிக் கொண்டிருந்தது. கண்டதுதான் தாமதம் — போருக்குச் சென்ற இளமகனைப்போய்க் காண்போம் என வேல்கைக்கொண்டு விரைந்து நடைபோட்டாள் அவ்வீரமாது. அவள் எதிரே வந்த அன்பு மகன் தலை வணங்கினான். 'எலியென நம்மை இகழ்ந்தவர் நடுங்கப் புலியெனச் செயல் செய்யப்புறப்படு என்றனை! போர் முகம் நோக்கினேன்; பொழுதிறங்கியும் போருக்குச் சென்ற கட்டிளங்காளை பொட்டிட்டு வரவில்லையே! யாது நேர்ந்ததோவெனக் கிலியெழுந்ததா தாயே' என்றான்.

கேட்டதுதான் தாமதம்! கிளர்ந்தெழுந்தாள்! 'கிலியெழவில்லை; கிளியினந்தான் எழுந்து வந்து என்னை ஏசிற்று—பேசிற்று—எனவேதான், ஓடிவந்தேன் உருவிய வேலுடன் — நற்றாய் நாடிவந்த காரணத்தால் நம்பவில்லை வீரத்தை என வெம்புகிறாய்; குடி தழுவி நிற்கும் கோலோன் நம் வேந்தன் — அவன் அடி தழுவி நிற்கின்றதுலகு — முரசொலி கேட்டதும் மூண்டெழுந்தீர். செருக்களம் சென்றீர்! செருநரைக் கொன்றீர்! தூண்டிற் புழுப்போல் துடிக்கத் துடிக்கப் பகைப் புலத்தை வென்றீர்! வாகையும் சூடினீர்! மற்றும், மாண்டவர் போக மீண்டவர் தம்மைக் கொட்டடியில் இட்டுவிட்டு வேலுக்கு நெய்பூசும் வேடிக்கை பற்பலவும் கண்டேன்! வெற்றி பெற்று மீண்ட வீரர் தமக்கு முதல் நாள், மாளிகையின் முன்னர் மன்னர் மண்டையில் மதுரசமும் தரக்கண்டேன். மற்றவர் இருக்கக் கொற்றவன், கள்ளுண்ண உன்னை உவந்தழைத்த காட்சி என் கண்விட்டகலவில்லை. ஆயினும், அதே சமயத்துப்போரில் புரந்தார்கண்ணீர் மல்கச் சாக்காட்டை இரந்துபெற்ற வீரரையும் கண்டேன். அவரைப் பாவாடை போர்த்திப் பாடையிலே கொண்டுசெலப் பாராளும் வேந்தன் பாசத்தால் நீர் சொரிந்தான். செயற்கரிய செயலது காண்! வேறு பெறற்கரிய பேறுமிலை. அப்பேறு பெற்றிலனே அன்பு மகனென்று என்புருகி நிற்கின்றேன். எனைப்பார்த்துக் கேட்கின்றாய் எள்ளளவும் நினையாமல்! தங்கள் மகனெங்கே என்றவுடன், 'புலியிருந்த குகையன்றோ என் வயிறு! பெற்றதறிவேன்; பிறிதொன்றும் நானறியேன்' எனக் கேட்டவன் தலைகுனிய நிலையுணர்த்திய தாய் வழி வந்த என்னைப் பார்த்தா எழுந்ததிக் கேள்வி? என்றவள் பொன்றவில்லையெனப் 'புறம்' கூறப் பூரித்தேன்!

★

ஒரு குறிப்பிட்ட முறையில் ஒருவர் தவறிவிட்டால் வேறொருவர் அதில் வெற்றி பெற முடியாது என்று முடிவு செய்துவிடமுடியாது. "பெரிய பெரிய மனிதர்கள் எல்லாம், சாதிக்க முடியாத ஒன்று நம்மாலா ஆகப்போகிறது?" என்று நிபுணர்கள் தயங்கியபோது, சிறிதும் பழக்கமில்லாத சில சாதாரணத் தொழிலாளர்கள் குருட்டுத்தனமாகச் செய்து வெற்றிகரமாக முடித்திருக்கிறார்கள்.

* * *

சித்திரக்கலையில் உண்டாகும் தேர்ச்சி கைப்பழக்கத்தால் வருவது; செந்தமிழ் வன்மை நாப்பழக்கத்தால் அமைவது; சிறந்த கல்வியோ மனப்பழக்கத்தால் பெறுவது; தினமும் நடக்கும் நடை, நடக்கும் பழக்கத்தால் ஏற்படுவது. ஆனால் பிறரிடம் நட்புப் பூண்பதும் தயையும் கொடையும் பிறவியிலேயே அமைய வேண்டிய குணங்கள்.

இங்கும்-அங்கும்!

பெரியாறு மின்சக்தி நிலையத் திட்டத்தின முடிவுபற்றிப் பெருமையோடு பேசாதார் இல்லை எனலாம் — இங்கு! மந்திரிகளிலிருந்து — சாதாரண மக்கள்வரை அதன் பீடுபற்றிப் பேசுகிறார்கள்! நமது தமிழக மந்திரிகள் இத் திட்டத்தைக் காட்டி "இது எதனால் முடிந்தது என்கிறீர்கள்? இந்தியாவோடு சேர்ந்திருப்பதினால்தான்" என்று தங்களுக்குச் சாதகமாகப் பேசிக்கொள்கிறார்கள்!

"ஆனந்தவிகடன்" "பெரியாறு ஒரு பெருஞ்சாதனை" என்று தலையங்கம் தீட்டுகிறது. இத்திட்டத்தினால் தமிழகத்தின் பொருளாதார நிலை உயரும்" என்று அந்த ஏடு கூறுகிறது. நாடு காக்கும் 'காவலர்'களும் இதைக்கூற மறந்தது கிடையாது. மின் சக்தி குழுத்தலைவர் எஸ். கே. செட்டூர் அவர்கள் திட்டத்தின் சிறப்புப் பற்றி "இந்து" ஏட்டிலே கட்டுரை தீட்டுகிறார் — பெருமகிழ்வோடு! எல்லாத் தேசியப் பத்திரிக்கைகளுமே பெரியாறு திட்டத்தைப் பற்றிப் புகழ்ந்து எழுதியும், படங்கள் வெளியிட்டும் தங்கள் தங்களது நன்றியைத் தெரிவித்திருக்கின்றன!

எல்லோரும் புகழ்கிறார்கள், உண்மைதான்! எல்லோராலும் மதிக்கப்படத்தக்க அளவிற்கு உயர்ந்த திட்டம் அது — மறுப்பதற்கில்லை! சாதாரணத் திட்டம் அல்ல — சிறந்த திட்டம்தான்! தமிழகத்தில் இலட்சக்கணக்கிலே தான் திட்டங்கள் திட்டமிடப்பட்டு முடிக்கப்பட்டதாகப் பத்திரிக்கைகளில் படித்திருக்கிறோம்! ஆனால் இத்திட்டமோ பல கோடிகளை விழுங்கியிருக்கிறது!

1955, பிப்ரவரி மாதத்தில் கனம் காமராஜர் அவர்களின் "திருக்கரத்தாலே அடித்தளக்கல் நாட்டப்பட்டு, 1958, அக்டோபர், 12ம் தேதி மாலை அவராலேயே தொடங்கிவைக்கப்பட்டிருக்கிறது! கிட்டத்தட்ட 3 வருடம் 8 மாதங்கள் ஆகியிருக்கின்றன இத்திட்டம் முடிவதற்கு! இத்திட்டத்திற்கு முழுவதுமாக ஒதுக்கப்பட்ட தொகை 10 கோடியாகும். ஆனால் அடுத்த வருடத்தோடு முடிவடைய இருக்கும் இதோடுசேர்ந்த மற்ற வேலைகளையும் கணக்கிட்டுப் பார்க்கும்போது ஒரு கோடி மீதப்படும் என்றும் நம்பப்படுகிறதாம்! இதை முடித்ததின் மூலம் கண்ட பலன் மேற்கொண்டும் 35000 'கிலோவாட்' மின்சாரம் கிடைக்கும்.

ச. வெ. பாண்டியன்

இதோடு இணைந்த மற்ற இரு இயந்திரங்களின் உற்பத்தியையும் கணக்கிட்டால் சென்னைக்கு மேலும் 1,05,0000 'கிலோவாட்' மின்சக்தி கிடைக்கும்!

'ஆனந்தவிகடன்' (16—10—58) கூறியிருப்பதுபோன்று இப்பெரிய சாதனையை இவ்வளவு சிக்கனத்தோடும், திறமையோடும் முடித்துத்தந்திருக்கிற நமது பொறியியலர்களின் செயல் 'அவர்களின் திறமைக்கும், ஊக்கத்திற்கும் சிறந்த சான்றாகும்'. இதிலே வேறு கூறுவதற்கு ஒன்றும் இல்லை! நாமும் அவர்கள் திறமை கண்டு பூரிக்கிறோம் — பாராட்டுகிறோம்!

ஆனால்...!

பெரியாறு மின் திட்டத்தைக் கண்டு அகமகிழ்வும்; பெருமையும் கொண்டிருக்கிற அதே நேரத்தில் வடக்கே இருந்து—"டில்லி" பீடத்திலிருந்து வடக்கேஉள்ள திட்டம் பற்றிய செய்தி ஒன்று கிடைத்திருக்கிறது!

பெரும்பாடுபட்டு, உண்ணாமல், உறங்காமல் உழைத்து — பணத்தைச் சேர்த்து 400 ரூபாய்க்கு ஒரு மாட்டுவண்டி வாங்கிய குடியானவனிடம் போய், ஒருவன் "போப்பா போ! என்ன வெகுவாகப் பீத்திக்கொள்கிறாயே! பூ! 400 ரூபாய் வண்டி அவ்வளவு பிரமாதமா? இதோ பார் நானும் உன்னைப்போல் வண்டியை அல்ல, 'கார்' வாங்கியிருக்கிறேன்! உசத்தியான "கடிலாக்"கார்! விலை என்ன தெரியுமா? இருபத்து ஒன்பதினாயிரம் ரூபாய்! இருபத்து ஒன்பதினாயிரம் எங்கே! நானூறு எங்கே! பெருமைப்படுகிறாயே பெருமை" என்று கூறினால் எப்படியிருக்குமோ அப்படியிருக்கிறது அச்செய்தி!

"பெரியாறு திட்டம்" 1955ம் ஆண்டில் துவங்கப்பட்டதல்லவா? அதே ஆண்டிலேதான் வடக்கே அந்தத் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது! பெரியாறு திட்டம் அதிக மின்சக்தியைப் பெறுவதற்காகத் துவக்கப்பட்டது. ஆனால் வடக்கே நிர்மாணிக்கப்பட்ட திட்டமோ "அதிக உருக்கு" உற்பத்தி செய்வதற்காகும்!

தமிழகத் திட்டத்தின் மூலம் கிடைக்கும்பலன்மேலும் 1,05,0000 "கிலோவாட்" மின்சாரமாகும்! வடநாட்டுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் நன்மை, நல்லரக "உருக்கு" கடந்த வருடத்தில் 0·78 மில்லியன்டன்னாக இருந்தது. இப்போது உற்பத்தி பெருக்கப்பட்டு அது 1·50 மில்லியன் டன்னாகிறது; சாதாரண உருக்கின் உற்பத்தி 1·1 மில்லியன் டன்னிலிருந்து 2 மில்லியன் டன்னாகப் பெருகுகிறது!

பெரியாறு திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை 10 கோடியாகும்! ஆனால் செலவழித்திருப்பதோ 9 கோடிதான்! ஆனால் வடக்கே உள்ள உருக்கு உற்பத்தித் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டதும், செலவழிக்கப்பட்டதும் 133 கோடி ரூபாய்!

ஆச்சரியப்பட்டுவிடாதீர்கள்!!

பெரியாறு மின் திட்டத்தில் மூன்று கட்டங்கள் உண்டு! அதாவது, 35000 கிலோவாட் உற்பத்தியாகும் பொறி இயந்திரங்கள் மூன்று அமைக்கப்படவேண்டும். இதைப்போலவே உருக்கு உற்பத்தி அதிகரிப்புத் திட்டத்திலும் பல கட்டங்கள் உண்டு! முதல் கட்டம் ஒரு மின் உலை அமைப்பதாகும்! இதற்கு மாத்திரம் ஏழு கோடி ரூபாய் ஆகியிருக்கிறது! மற்றும் 'கரியடுப்பு' 'மூலப்பொருளைப் பிரிக்கும் இயந்திரம்' 'உருக்கு காய்ச்சும் உலை' 'பூமிங் ஆலை' ஆகிய திட்டங்களும் இதோடு இணைந்தனவாகும்!

ஆட்சியாளரால் அமைக்கப்பட்டது—பெரியாறு திட்டம்! வடநாட்டு உருக்கு உற்பத்தித் திட்டமோ ஒரு தனிப்பட்ட 'கம்பெனி'யால் உண்டாக்கப்பட்டதாகும்! பெரும் இலட்சாதிபதியாம் டாட்டாவிற்குச் சொந்தமான "தி டாட்டா ஐயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி"யே இத்தகைய மகத்தான திட்டத்தை நிறைவேற்றியுள்ளது!

இத்திட்டத்தை நிறைவேற்ற இக் கம்பெனி, டெல்லி சர்க்காரின் உதவியை மிகவும் நாடியிருக்கிறது! டில்லி சர்க்கார் மாத்திரம் 'சர்க்கார் உருக்கு நிதி'யிலிருந்து ரூபாய் 10 கோடி கடன் வழங்கியுள்ளது. இதோடு நின்றுவிடாமல் வெளிநாட்டுப் பண உதவிக்கும், தொழில் வல்லுநர்களுக்கும் நன்றாகப் பாடுபட்டிடுகிறது டில்லி! அமெரிக்காவிடமிருந்து மாத்திரம் இக்கம்பெனி இத திட்டத்திற்காக, கடனாகப்பெற்றுள்ள பணம் 61 கோடி ரூபாயாகும்! மொத்தம் 133 கோடி ரூபாயில் 75 கோடி ரூபாய் கடன் மூலம் திரட்டப்பட்டிருக்கிறது!

தினம் 600 டன் உருக்குத் தயாரித்துக் கொண்டிருந்த இக் கம்பெனி இவ்வளவு பணம் செலவழித்து முடித்துள்ள திட்டத்தின்படி இனி நாள் ஒன்றுக்கு 1500-டன் உருக்கு உற்பத்தியாக்கும்!

'பெரியாறு' திட்டத்தைப்பற்றி புளகாங்கிதமடைந்து கொண்டிருக்கும்நேரத்தில், நாம் 'உருக்குத்' திட்டத்தையும் பார்க்கவேண்டியிருக்கிறது! வடநாட்டுத் திட்டத்தின் செலவும், வளர்ச்சியும் நம்மைப் பிரமிக்கச்செய்து விடுகிறது!

வடநாட்டுத் தனி நபர் திட்டம் அக்டோபர் 10-ம் தேதி திறந்து வைக்கப்பட்டிருக்கிறது! பெரியாறுத் திட்டமும் அக்டோபர் 12-ம் தேதியில் தொடங்கிவைக்கப்பட்டிருக்கிறது!

நாம் ஏடுகளில் 'தென்னாட்டுப் பெரிய மின்நிலையங்களில் இதுவும் ஒன்று" என்றுதான் பெரியாறு திட்டம்பற்றி எழுதியுள்ளதாகப் படித்தோம். ஆனால் வடநாட்டு உருக்குத் திட்டமோ "இந்தியாவிலேயே பெரியதும், உலகத்திலேயே மிகப் புதிய முறைப்படி அமைக்கப்பட்டதும் ஆன 'உலை, இதுதான்" என்று 'காமர்க' என்ற பம்பாய் ஏடு தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுக் காட்டுமளவு உயர்ந்த திட்டமாகும்!

சென்னைத் திட்டம் "சென்னைக்குப் பெரியது! வடநாட்டுத் திட்டமோ இந்தியாவிலேயே பெரிது! ஏன் ஆசியாக் கண்டத்திலேயே பெரிது! உலகத்தின் நவீன அமைப்புகளில் இதுவும் ஒன்று! இதிலிருந்தே 'சென்னை'த் திட்டத்தின் 'சிறிய அளவும்' வடநாட்டுத் திட்டத்தின் பெரிய அளவும் நன்கு புலனாகும்!

எனவே நாம்இதன்மூலம் பெறுவது, வடநாட்டில் தொழில்துறை எவ்வளவுதூரம் கொடிகட்டிப்பறக்கிறது என்பதுதான்! தென்னகத்தின் வளர்ச்சி வடநாட்டு வளர்ச்சிக்கு ஈடாகாது! வடநாட்டு வளர்ச்சி 'கடிலாக்'கார் வைத்திருப்பவர் போன்றது என்றால் நமது வளர்ச்சி வண்டிக்காரர் வளர்ச்சி போன்றதே!

9-கோடித் திட்டத்தின் முடிவால் தமிழகத்தின் பொருளாதார நிலை உயரும் என்று மந்திரி 'இராமையா' அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளார்கள். அப்படியானால் 133-கோடித் திட்டம் எத்துணை அளவு உயர்ந்த பொருளாதார நிலைக்கு வடக்கே அடிகோலும்?! காய்பவர் கணக்கிட்டுப் பார்ப்பார்களாக!

★

தலைமை நிலையச் செய்தி;

'நாத்திகம்'
பற்றிய அறிவிப்பு

'நாத்திகம்' என்ற பத்திரிகை 'தி. மு. க. ஏடு' என்ற பெயரில் வெளியிடுவது குறித்தும், அதில் காணப்படும் கருத்துக்கள் குறித்தும், திகைப்பும் வருத்தமும் கலந்த முறையில் பலர், கடித மூலமும், நேரிலும் தமது எண்ணத்தை எடுத்துக் கூறியுள்ளனர்.

அந்த இதழ் தி. மு. கழகத்தால் நடத்தப்படுவது அல்ல என்பதையும், அதில் வெளிவரும் கருத்துக்களை தி. மு. கழகம் ஆதரிக்கவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

'தி. மு. க. ஏடு' என்று பெயரிட்டுக்கொள்ளக் கூடாது என அதன் ஆசிரியர் முறைப்படி எச்சரிக்கப்பட்டிருக்கிறார்.

கழகத்திற்குக் கேடு பயக்கும் வகையில் வெளிவரும் அத்தகைய இதழுக்குக் கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் எவ்வித ஆதரவோ, ஊக்கமோ தரவேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

"கானல் நீர்!"

(பொ. மறைமலை)

உறையூர்!

ஒரு கோழியின் வீரச் செயலுக்காக 'கோழியகம்' எனப் பெயரிடப்பட்ட உறையூர்!

உறையூரை ஆண்ட சோழப் பெருவளத்தான்—எட்டுத்திக்கும் வெற்றி முரசு கொட்டிய திண்தோள் வீரன், அறிவும் திருவும் பெற்ற பண்பாளன்.

உறையூரில் உறையும் ஓர் மூதாட்டி. அவளுக்கு ஒரே ஒரு பெண். அழகே உருவான அணங்கு. கண்ணிமைபோலக் காத்து அவளை வளர்த்து வந்தாள் அவள் அன்னை.

"கண்ணே! இப்படி வாம்மா!..."

"என்னம்மா!..."

"உனக்குக் கல்யாணம்!..."

"போம்மா!......பத்து வயசிலே கல்யாணமா!..."

"இப்போ இல்லை! நீ பெரிய பொண்ணு ஆனதும்... உனக்கும் நம்ப இராசாவுக்கும்!..."

"போம்மா!..."

அவள் ஓடிவிட்டாள்.

காலம் மாறியது. கன்னியானாள் அவள். கட்டழகு மங்கையாக, தோற்றமும், வலிவும் பொலிவும் மிக்கஅவள் இப்படித்திகழ்ந்தாள்

"...அறல் போல் கூந்தல் பிறைபோல்
திரு நுதல்
கொலைவில் புருவத்துக் கொழுங்கடை
மழைக்கண்
இலவிதழ் புரையும் இன்மொழித்துவர் வாய்ப்
பல உறு முத்தின் பழிதீர் வெண்பல்..."

திங்கள்போல் திகழ்ந்த திருவுடைய வதனத்தின் வனப்பு, எல்லோரையும் வசீகரிக்கும் விதத்திலே விளங்கியது.

சின்னஞ்சிறு வயதிலே அன்னையவள் கூறிய "அந்த வார்த்தை" இப்போது காயாகிக் கனியாகிக் கன்னியாகி இருக்கும் — இப்போது நினைவுக்கு வந்தது. அன்று வெட்கத்திலே வேண்டாம் என்று சொன்னேன். இன்று பருவம் விட்டால்தானே!

"உன்னை நம்ப இராசாவுக்குத்தான் திருமணம் செய்யப்போகிறேன்!" ஆம். அன்று அன்னை கூறிய தேன்மொழி.

"உறையூர்க் கோமான் சோழனைக் காணவேண்டும். அவனைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும்..." இப்படி அவள் எண்ணினாள்.

ஒருநாள் சோழன் எழில்மிக்க வீதியின் வழியாக வருகிறான். வண்ணப் பொருள்களால் தன்னை அலங்கரித்துக்கொண்டு, எழில்மிக்க காளையாக வருகிறான். அவனது எழில்மிக்க உருவந்தன்னைப் பருக எத்தனையோ ஏந்திழைகள் ஏங்கிக்கிடக்கிறார்கள். வான் கொஞ்சும் மாடியிலே—மச்சு வீடுகளிலே சிறையிருக்கும் சிங்காரப் பெண்மணிகள் ஆவலுடன் ஓடி வந்து அழகனைக் காணுகின்றனர்.

அவளும் மயிலென ஒயிலாக வந்தாள். நின்றாள்; பார்த்தாள்; அவன் சென்றான். பார்த்துக்கொண்டே நின்றாள். அன்னையும் இவள் காதல் நோக்கைப் பார்த்துக்கொண்டே நின்றாள்.

அன்று முதல் அவளுக்குத் தண்டனை! ஆம். வெறுங்காவல்! அவளுக்கோ அது கடுங்காவல்!

மணமாகாத மங்கை வேற்று ஆடவனைக் கண்டது குற்றம்! அக்குற்றத்திற்குத் தண்டனைதான் சிறைக்காவல்! வெளியே வரக்கூடாது! எதையும் பார்க்கக் கூடாது! இது அன்னையின் ஆணை.

எண்ணமெல்லாம் மண்ணாகி விட்டது; கட்டிய மனக்கோட்டை சுக்கு நூறாயின. இன்பக்கனவெல்லாம் நனவாகும் என்ற எண்ணம் அழிந்துவிட்டது. அழுதாள். அன்னையைத்தொழுதாள். என்ன செய்யமுடியும்?

"ஆசை காட்டி மோசம் செய்தாளே அன்னை!...என் எண்ணமெல்லாம் கானல் நீர்தானா? ஆம். கானல் நீர்தான்! நீரென்று நினைத்துக் கூட்டமாக ஓடிவந்து தாகத்தைத் தீர்த்துக்கொள்ளலாம் என்று வந்த விலங்கினங்கள், 'நீரல்ல அது, கானல் நீர்' என அறிந்தால் அதன் நிலை எப்படியிருக்குமோ அப்படி இருந்தது அவள் நிலை.

என் காதல்—கானல் நீர்!

அவள் சோகமாகக் கூறும் இம் முத்தொள்ளாயிரச் செய்யுளைக் காண்போம்.

"குதலைப் பருவத்தே
கோழிக் கோமானை
வதுவை பெறுகென்றாள்
அன்னை—அதுபோய்
விளைந்த வா இன்று
வியன் கானல் வெண்தேர்த்
துளங்கு நீர் மாமருட்டி அற்று"

★

காதலித்துத் திருமணம் செய்துகொள்ளும் தம்பதிகள் திருமணத்தை மாயா ஜாலங்கள் நிறைந்த ஒரு கற்பனை உலகத்துவாழ்க்கை போன்றது என்று எண்ணிவிடக் கூடாது. அவர்கள் வாழப்போவது விருப்பு வெறுப்புகள் நிறைந்த உண்மையான ஒரு நடைமுறை உலகம் என எண்ணினால்தான் அவர்களால் மணவாழ்வு வாழமுடியும்.

சிறுகதை

"தபால்காரன்"

வி. ஆர். துரை

மங்கலக் காலை இனிதாக மலர்ந்தது. திரைகடல் மேலே செங்கதிர் எழுந்தான். காதலனும் கதிரவன் வருகையால், காதலியாம் தாமரையாள் குறுநகை புரிந்தாள். இசைபாடி உணவைத் தேடி, அங்குமிங்கும் பறவைகள் அலைந்துகொண்டிருந்தன. கலப்பையைத் தூக்கி மலைத்தோளின் மேல் உட்கார வைத்துக்கொண்டு, மாடுகளை விரட்டிய வண்ணம் நாட்டின் முதுகெலும்பாம் உழவர்கள், நிலத்தைப் பண்படுத்த வேகமாகப் போய்க்கொண்டிருந்தார்கள். அந்த நல்லவர்கள் இன்றேல் இந்தப் பொல்லாத உலகம் ஏது? கடுமையாக உழைக்கும் அந்த உழைப்பாளிகளைக் கணவராகக்கொண்ட இல்லத்தரசிகள், பம்பரம்போல் வீட்டு வேலைகளை உற்சாகமாய்ச் செய்யலாயினர். அத்தானுக்கு நண்பகல் உணவை, அந்த மூங்கில் கூடையில் கட்டழகு பொம்மைகள் கொண்டுபோக வேண்டுமல்லவா?

அந்த அழகான சிற்றூர் அவனுக்கு மிகவும் பிடித்துவிட்டது. செயற்கை அழகு நிறைந்த பட்டணத்தைவிட, இயற்கை எழில் கொஞ்சும் சிற்றூர், அவன் மனத்திற்கு அமைதியையும் இன்பத்தையும் அளித்தது. சாளரத்தின் அருகில் போட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, "திருக்குறளை" அவன் புரட்டிக்கொண்டிருந்தான். நல் அமுதாம் தமிழ்மீதில் அவனுக்கு உயிர். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த தமிழ் அல்லவா! முடியுடை மூவேந்தர் ஆண்ட நாட்டில் பிறந்தவன் அல்லவா?

பொற்புடைய அவன் தங்கை முல்லை, அன்புடன் சிரித்துக்கொண்டே வந்து, காபியைக் கொடுத்துவிட்டுச் சென்றாள். சுவையாக இருந்த அந்தக் காபியை மெதுவாகக் குடித்துக்கொண்டே, தெருப் பக்கமாக அவன் கண்களை மேயவிட்டுக் கொண்டிருந்தான். காலைக் காட்சி அவன் கண்களுக்கு ஒரு நல்ல விருந்தாக இருந்தது. திரும்பவும் கையில் புத்தகத்தை எடுத்துக் கொண்டான். காலை இளம் பகலவனின் தங்க ஒளி, சன்னலுக்குள் சுதந்திரமாக வந்து விளையாடிக் கொண்டிருந்தது.

"அண்ணா! ஆராய்ச்சி இன்னும் முடியலியா?"

"முல்லை......! நல்ல நேரத்தில் தொல்லை!"

"ஆராய்ச்சிக் கடலிலிருந்து பேசுகிறீர்களா அண்ணா' அப்படியென்றால், அஞ்சல் கொடுக்கின்ற இந்த வேலைக்கு ஏன் வந்தீர்கள்?"

"பெண்டிர்க்கு அழகு எதிர் பேசாதிருத்தல். அப்படி நான் சொல்லவில்லை தங்கச்சி; அதிவீர ராம பாண்டியர் சொல்லுகிறார்."

"அப்படிச் சொல்லித்தானே பெண்களை ஊமையாக்கிவிட்டார்கள். அடடே! வலது கையில் கடிகாரம் ஏறிக்கொண்டிருக்கிறதே...!"

"ஏன் முல்லை, இடது கையில் தான் கட்ட வேண்டுமென்று, எந்தச் சட்டப் புத்தகத்தில் எழுதி வைத்திருக்கிறது?"

"போதும், உங்கள் விளக்கம். போய்ப் பாருங்கள் வேலையை. அஞ்சல் பைகூட இரயிலடியிலிருந்து வந்துவிட்டது."

அவசர அவசரமாக அவன் நடந்துகொண்டிருந்தான். பலாப் பழத்தை ஈ மொய்ப்பதுபோல், அஞ்சல் நிலையத்தை மக்கள் கூட்டம் மொய்த்துக்கொண்டிருந்தது. அங்கிருந்தவர்களை ஒருவாறு சமாளித்துவிட்டு, வந்திருந்த ஒரு சில மணியார்டர்களையும் தூக்கிக் கொண்டு, சுறுசுறுப்பாக அவன் புறப்பட்டான்.

ஒரு பெரிய மெத்தை வீடு. அந்த வீட்டின் வழவழப்பான திண்ணையில், கால்களைத் தொங்க போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த கிழவி, அவனைக் கண்டதும் எழுந்து நின்றாள். "பாவம், பழங்காலம்! மரியாதை போலும் நமக்கு!" அவன் கற்பனை செய்துகொண்டான். சிப்பாயில் சேர்ந்துவிட்டிருந்த பேரனிடமிருந்து, தன் பெயருக்கு வந்திருக்கும் கடிதத்தை வாங்கிக் கொள்ளத்தான், ஆர்வத்துடன் அவள்காத்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு பேரப்பிள்ளையின் மேல் அத்துணை ஆசை. இந்த உண்மை அப்போது அவனுக்கு தெரியாது. பின்னால்தான் அந்தக் கதை புரிந்தது.

அவளைக் கண்டும் கவனியாமல் மேலே அவன் நடந்துகொண்டிருந்தான். அது அவன் குற்றம் அல்ல! அந்த ஊருக்கு அவன் புதியவன். ஒன்றிரண்டு நாட்களே முடிந்திருந்தன. ஊரின் முழு விவரம் அவனுக்கு எப்படித் தெரிய

முடியும்? அந்தப் பாட்டிக்கு அவன் மேல் அளவு கடந்த ஆத்திரம் வந்துவிட்டது. அதற்குப் பிறகு நடந்த சோக வரலாறு இது.

"யோ...டபாலு! எங்கே தபாலு? நிக்கிறதுகண்தெரியலியா? எங்கே உம்பாட்ல ஓடறே!"

"ஏ, பாட்டி! உனக்கு வயசு தான் அதிகமாக ஆய்விட்டிருக்கிறது. மரியாதையாகப் பேசத் தெரியவில்லை இனிமேலாவது கற்றுக்கொள்!"

கிழவி எழுப்பிய கூச்சலுக்குப் பதிலாக அவன் முழங்கிவிட்டான். அவள் அளவுகடந்த ஆத்திரத்தோடு வாயால் வாழ்த்தினுள்; அவனை அடிக்க முகத்தருகே கையையும் கொண்டுவந்துவிட்டாள். ஒரு சிறு கூட்டமே அங்கு வேடிக்கை பார்க்கக் கூடிவிட்டது. எல்லோருடைய வாயும் அவனைத் திட்டித்தீர்த்தன. குனிந்திருந்த அவன் முகத்தில் அசடு ஆறும் வழிந்துகொண்டிருந்தது. அந்தக் கண்கொள்ளாக் காட்சி கிழவியின் இரு கண்களுக்கு விருந்தாக இருந்தது. அவனுல் தலைநிமிர்ந்து பார்க்கமுடியவில்லை. அது எப்படி முடியும்? சூழ்ந்துகொண்டிருந்த ஆண்களைப்பற்றிக்கூட அவன் கவலைப்படவில்லை. சன்னலுக்குள் புது ரோஜாமலர் போன்ற, மங்கையொருத்தி நின்று இரசித்துக் கொண்டிருந்தாள். அங்கிருந்து பருவமங்கைபோல் தலை கவிழ்ந்து நடந்தான். இந்த வேலையைவிட்டு விடலாம் என்றுகூட அவன் எண்ணிவிட்டான். அந்த உத்தியோகத்தை எட்டிப்பிடிக்கவே, அவன் 'பெரிய மனிதர்கள்' என்பவர்களுக்குக் கொடுத்த 'கிம்பளம்' நினைவிற்கு வந்ததும், ராஜினமா எண்ணத்தை இழந்துவிட்டான்.

அங்கு கண்ட சன்னல் அழகியைப்பற்றி, அவன் தப்புக்கணக்குப் போட்டுவிட்டான். அவள் அந்தக் கிழவியின்மீது ஆத்திரமும், அவன் மீது அனுதாபமும் அடைந்தாள். இந்தச் சுவையான சேதி அவன் செவியில் விழுந்தபோது, பொங்கிவிட்டது உள்ளத்தில் மகிழ்ச்சி வெள்ளம். பூரித்துப் விட்டான்.

கதிரவன் உச்சிக்குவந்து நெருப்பைக் கக்கிக்கொண்டிருந்தான். வியர்வைக் குளத்தில் நீச்சலடித்துக் கொண்டிருந்த அவன், வீட்டிற்குள் காலெடுத்து வைத்தான். அந்தச் சோகம் இன்னும் அவன் முகத்தில் உறவாடிக்கொண்டு தான் இருந்தது.

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்."

அவனுக்குச் சுருக்கென்று முள் தைத்தது போலாகியது. அதற்குள் யார் மூட்டைகட்டிக்கொண்டு வந்து, தங்கையிடம் சொல்லிவிட்டார்கள்? அவன் தலைநிமிர்ந்து பார்த்தான். ஊஞ்சலில் அவன் தங்கை. பக்கத்தில் ஒரு தங்கச் சிலை. கண்டவர் உயிர் உண்ணும் அந்தப் புதிய காரிகை யார்? அங்கவன் பார்த்த அதே பூங்கொடி; இங்கெதற்கு வந்தாளோ?

அவனைக் கண்டதும் திடுக்கிட்டு எழுந்து, சிலைபோல் நின்ருள். தேன்மலர்ச் சோலையில் கொழு கொம்பைக்கட்டி அணைத்து முத்தமிட்டுக் கொண்டிருக்கும் முல்லைக் கொடிபோல், வளை கரத்தால் தூணைத் தழுவிக்கொண்டு, சில விநாடிகளே வரிவிழியாள் ஒயிலாக நின்றிருந்தாள். நாணத்தால்

3-ம் பக்கத் தொடர்ச்சி

வழைத்து, அவர்களுக்கு உதவியாக பல இந்தியத் தொழிலாளரை அமர்த்தி, இன்னும் குறைந்த செலவில் அவ்வேலையை நடத்துவது சாத்தியமில்லையா?

சர்க்காருக்கு ஆலோசனை கூறுவதற்கென ஏராளமான ஊதியத்தின்பேரில் வரவழைக்கப்பட்ட அந்நிய நிபுணர்கள் உண்மையில் நமக்குத் தேவையான விஷயங்களில் ஆலோசனை கூற அருகதையற்றவர்கள். மேலும் அவர்களில் பலர் நமக்குத் தளவாடங்கள் சப்ளை செய்யும் அந்நியக் கம்பெனிகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நமக்குத் தக்க ஆலோசனை கூறவேண்டுமென்பதைவிட அக்கம்பெனியின் தளவாடங்களை நமது தலையில் கட்டுவதிலேயே அவர்கள் அதிக அக்கரை காட்டி வந்திருப்பாராயின், அதில் சிறிதும் ஆச்சரியத்துக்கிடமில்லை. இத்தொழிற்சாலைகள் சம்பந்தமாக அமர்த்தப்பட்டுள்ள அந்நிய எஞ்சினீயர்கள் தங்கள்வேலையில் இந்தியருக்குப் பயிற்சி அளிக்கவும் தக்க ஏற்பாடு செய்யப்படவில்லை. மேலும் ஏற்கனவே மேற்கொண்ட வேலையைச் சரியாகச் செய்யாததற்காகச் சர்க்காரால் கண்டிக்கப்பட்ட சில காண்டிராக்டர்களிடமே இந்த உருக்குத் தொழிற்சாலைகள் வேலைகள் சம்பந்தமான அதிகாரிகள் ஒப்படைத்திருப்பதற்கு என்ன சமாதானம் கூற முடியும்? இத்தொழிற்சாலைகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட பல தளவாடங்களில் ஒரு கணிசமான பகுதி போதிய கண்காணிப்பு இல்லாதது காரணமாகத் திருட்டுப் போவது பற்றியும் ஸ்ரீ என். ஜி. ரங்கா குறிப்பிட்டுள்ளார். லோக்சபை விவாதத்தின் பலனாக மேற்குறித்த ஊழல்கள் எப்போது, எந்த அளவு மறைந்தொழியும் என்று நாம் திட்டமாகச் சொல்வதற்கில்லை."

நாம் உண்மையைக் கூறும்போது உறுமுவோர் இதை ஒருமுறைக்கு இருமுறை படித்துப்பார்த்துத் தெளிவு பெறட்டும் என்பதற்காகவே இதனை எழுதுகிறோம். காய்வோர் காயட்டும்—காலம் அவர்களுக்குக் கண் திறக்கும் என்ற நம்பிக்கையோடு நாம் கடமையை—மக்களின் நன்மை ஒன்றையே குறிக்கோளாகவைத்துச் செய்துவருகிறோம்.

சர்க்காரின் கண்மூடித்தனமான செயல்களை அவ்வப்போது எடுத்துக்காட்டி மக்களை விழிப்படையச் செய்யும் நம்மை ஏசுவோர் ஏராளம் உண்டு என்பதை நாம் அறிவோம். அதற்காக நாட்டின் நலம் காக்கும் பணியில் இருந்து விலகிவிட முடியுமா? என்றைக்காவது ஒருநாள் நாம் கூறும் குற்றச்சாட்டுகள் எல்லாம் மக்கள் மத்தியில் ஒப்புக்கொள்ளப்பட்டே தீரும் என்ற நம்பிக்கை மட்டும் நமக்குண்டு.

★

அவள் முகத்தாமரை நிலம் நோக்கிக் கவிழ்ந்தது. கவிதை நெய்யத் தெரியாதவன்கூடக் கவிஞன் ஆகிவிடுவான். வானத்துத் தாரகை வையகத்து மண்ணிற்கு ஏன் வந்தது? சிங்காரச் சிட்டுப் போல், தீராத நோயைப் பார்வையால் தந்துவிட்டு, பட்டு மேனியாள் பறந்துவிட்டாள். அவள் தந்த நோய்க்கு அவளிடமே மருந்து இருப்பதை, அவன் கண்டுகொண்டான். அந்த அன்னம் மேகத்து மின்னலெலன மறைந்தும், அசையாத பதுமைபோல் ஓரிடத்திலே நின்றிருந்தான்.

"வாடாமலர் மேனி. வட்ட மதி முகம். வண்டுவிழிகள். வானேடும் மின்னல் இடை. கொத்து முல்லை கூந்தலில். முத்துப் பற்கள். தென்றல் நடை. அரம்பையாம் ஊர்வசியாம்—பேரழகிகளாம் அவர்கள். பக்த சிகாமணிகள் கதை கதையாகச் சொல்லுகிருர்கள். அழகின் இலக்கணமாகத் திகழும் இவளுடைய கால்தூசுக்கு ஈடாகச் சொல்ல முடியுமா? ஆயிரம் நிலவு இவளெதிரே என் செய்யும்? ஒரு அழகான பெண்" அவன் வாய்திறந்தே பேசிவிட்டான்.

"ஒரு பெண்ணை அதற்குள்ளாகவா எடை போட்டுவிட்டீர்கள்?"

பழைய நிலைக்கு அவன் திரும்பி வந்து, சூழ்நிலை உணர்ந்து அறைக்குள் நுழைந்து, சிரித்த வண்ணமே உட்கார்ந்தான். தொடர்ந்து அவன் அழகு தங்கையின் கிண்டலும் வந்து சேர்ந்தது.

"பொங்கு கடல் ஆழத்தையும் எளிதாகக் கண்டுகொள்ளலாம். பூவைமார் உள்ளத்தைக் காண்டல் முயற்கொம்பேயாம். நினைத்தபடியெல்லாம் எழுத்தாளர்கள் தேனுக வருணித்து, பெண்ணினத்திற்குப் பெருமை தேடித் தந்துவிட்டார்கள். நான் மட்டும் ஓர் எழுத்தாளனுக இருந்தால் ......? முனிபுங்கவர் வேடம் கலைந்ததா?"

முல்லை பிரசங்கத்தை முடித்தாள். ஒரு பெருமூச்சுவிட்டு அண்ணன் பீரோவைத் திறந்தான். இரண்டு பெரிய மாங்கனி. ஒரு அழகான கைக்குட்டையில், முடி போட்டு வைக்கப்பட்டிருந்தது. அதை அவிழ்த்தால் அதனுள்ளே ஒரு கடிதம்! அவன் ஆச்சரியப்பட்டான். அண்ணனின் நிலையையே முல்லையும் அடைந்தாள்.

அன்புள்ள அரசே!

நான் உங்கள் சொத்து' என்னைப்பேரழகால் வென்று அடிமையாக்கி விட்டீர்கள். ஒரே விநாடியில் என் இதயத்தைத் திருடிக்கொண்டீர்கள். மாசற்ற உங்களின் இதய சிம்மாசனத்தில் எனக்கொரு இடம் கிடைக்காதா?

காலையில் என் பாட்டி, தவருகக் கோபித்துக்கொண்டு அவமானப்படுத்தி விட்டாள். கண்டிக்கத் தவறவில்லை நான். அவளே அதற்காக மிகவும் வருந்தினள்: திருப்பதி வெங்கடாஜலபதியைக் கண்டு பேசிவர, தாயும் தந்தையும் சென்றிருக்கிருர்கள். எனக்குள்ள ஒரே அண்ணன் மலையமான், கோபித்துக் கொண்டுபோய் சிப்பாயில் சேர்ந்துவிட்டார். சண்டை நின்றுவிடும் சூழ்நிலையில் உள்ளதாம். ஒரு சில தினங்களில் வருவதாகக் கடிதம் எழுதி இருக்கிருர். நக்கீரன் என்னும் பெயர்கொண்ட தம்பி, நான்காம் வகுப்பில் வாசிக்கிறன்.

வீட்டில் எனக்குத் துணையாக, பாட்டி மட்டுமே இருக்கிருள். நாளை மயக்கும் மாலைப் பொழுதில், அவசியம் நீங்கள் வருகை தரவேண்டும். எதற்கும் நீங்கள் அஞ்ச வேண்டாம். ஆவலுடன காத்திருப்பேன். பேசவும் பேரழகை இரசிக்கவும் ஆவல். என் ஆசையில் மணலைப்போட்டு விடாதீர்கள். ஏமாற்றத்தை மறந்தும் பரிசாக எனக்களிக்க எண்ணுதீர்கள். வாடிவிடுவேன்.

அன்புள்ள,
உங்கள் கலாவல்லி

"அழகான முத்தெழுத்து! அச்செழுத்து என் செய்யும்!" கடிதத்திற்குச் சொந்தக்காரன் வாய் திறந்தான். அதைத் தொடர்ந்து முல்லை பேசினுள்.

"சரியான கள்ளி! எனக்குத் தெரியாமலேயே வைத்துவிட்டு சாமர்த்தியமாகப் போயிருக்கிருள். அப்படியில்லாமலா ஒரே நொடியில் என் அண்ணனைத் திருடிக்கொண்டாள். அறைகுள் நுழையும் போதே நான் சந்தேகப்பட்டேன்!"

அவன் சிரித்தேவிட்டான். கடிதத்தில் அவனைக் கட்டாயம் வரச் சொல்லி, கட்டழகி வேண்டியிருக்கிருள். கரும்பு தின்னக் கூலியா?

அரை நொடியில் கடைக்கண்ணைக் காட்டாமல் காட்டிப்பேசி, அவனைப் பாழ்படுத்திவிட்டாள். அசைக்கமுடியாத அவன் உறுதியை தூள்தூளாக்கிவிட்டாள். இல்லாதிருந்த நோய்க்கு அவனைச் சொந்தக்காரனுக்கிவிட்டு, மின்னலென மறைந்துவிட்டாள். அவள் மிகவும் கெட்டிக்காரி, அப்படியில்லாமலா அவனை ஒரே நொடியில் விலைக்கு வாங்கிவிட்டாள். ஏன்? பெண்களே மிகவும் கெட்டிக்காரிகள்தான். "மயக்கும் உன் அழகிற்கு நான் அடிமை அல்லன்' அந்தோனி இப்படித்தான் எக்காளமிட்டான். ஆனலும் அவன் வென்ருன் இல்லை. அழகி கிளியோபாட்ராதான் வெற்றிகொண்டாள். எல்லாம் மறந்து அவள் மடியே இன்பபுரியாகக் கொண்டான். அழகின் கதை அப்படியிருக்க, அரும்பு மீசை வாலிபனை இவன் எம்மாத்திரம்? ஒரு மாங்கனியை ஆசையோடு எடுத்து, வாயில் வைத்துக் கடித்தான. அவளின் கரம் பட்டதால், எவ்வளவு சுவை!

அந்த மயக்கும் மாலை வந்தது. பெண்ணின் இதழ்போல் வானம் சிவந்திருந்தது. மனதைக் கவர்ந்த மங்கையர்க்கரசியின் இல்லம் நோக்கி, இன்பமாக அவன நடந்து கொண்டிருந்தான். ஆசை எண்ணங்கள் பல அலைமோத, வீட்டிற்குள் அடியெடுத்து வைத்தான்.

"தமிழ்த்திரு நாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா;
அமிழ்தில் இனியதடி பாப்பா—எங்கள்
ஆன்ரேர்கள் தேசமடி பாப்பா"

தேன் குரலால் நக்கீரன் வாசித்துக் கொண்டிருந்தான். தட்டில் பால்சோறு தம்பிக்காக, அவனுக்

பிறப்பு

'திராவிடநாடு' அலுவலக அச்சுப் பொறி இயக்குனர் தோழர் மாணிக்கத்திற்கு 6—11—58-ல் ஓர் ஆண் குழந்தை பிறந்து நலமே உள்ளது.

ர்சை மூட்டிவிட்டவள் பிசைந்துகொண்டிருந்தாள். தரையிலடித்த பந்தைப்போல் அவனைக் கண்டதும், துள்ளிஎழுந்து தலைகுனிந்து நின்றாள். அழகை இரசிக்கவும் ஆசையோடு பேசவும் அழைத்தவள், அருகே அவனைக் கண்டதும் மானென மிரள்கிறாள். ஆசை இருந்தும் பேச நா அசையவில்லை. எழுத்தில் இருந்த வேகம் செயலில்! காணோம்! அவள் பேசவே இல்லை! அந்த விரதத்தையே அவனும் மேற்கொண்டான். அமைதி அவர்களுக்கிடையே அரசோச்சிக்கொண்டிருந்தது. சங்கடமான ஒரு சூழ்நிலை. நல்ல வேளையாகத் தட்டில் தேங்காய் பழத்துடன், ஒரு கிண்ணத்தில் எண்ணெயோடு கிழவி வந்து சேர்ந்தாள்.

"வா, தம்பி! தெரியாம கோவிச்சிகிட்டேன். மனசில் ஒன்னும் வித்தியாசமா வச்சுக்காதே. நம்ம ஜாதின்னு கலாவல்லி வந்து சொன்னாள். நிறையச் சந்தோஷப்பட்டேன். ஆமா, நாமம் போடறதில்லையா?"

"யாருக்கும் எப்போதும் நான் நாமம் போட்டுப் பழக்கமில்லீங்களே!"

"பல வருஷமா வியாபாரம் செய்தும், இலாபம்கண்ணுக்குத்தெரியலியாம்! எல்லோரும் திருப்பதிக்குப் போயிருக்காங்க! மொட்டையடிச்சுத் திரும்பிவர, இன்னும் மூன்று நான்குநாட்கள் செல்லும்"

"பணக்கார வெங்கடாஜலபதியை நாடித்தான் ஓடியிருக்காங்க! பலன் கிடைச்சாலும் கிடைக்கும்."

"நல்லா பேசற, போ தம்பி. பேசிகிட்டே கோயில் வரையில போயி கும்பிட்டுவரலாம் வாயேன். இன்னிக்கு வெள்ளிக்கிழமை."

"அதெல்லாம் எனக்குப் பழக்கமில்ல பாட்டி! மேலும் எதைப் போய் கடவுளென்று வணங்குவது? உண்ணுவதும் உறங்குவதுமாக இருக்கின்ற தமிழர்கள், இந்தக் கடவுள் சம்பந்தப்பட்ட வரையில் எத்துணை சுறுசுறுப்பாக இருக்கின்றார்கள். கடன் வாங்கியாவது கடவுளுக்கு விழா கொண்டாடிவிட்டு, கையிரண்டையும் தலைமேல் வைத்துக்கொள்ளுகின்றார்கள்."

"இங்கேயே கலாவல்லிக்குத் துணையாகக் கொஞ்ச நேரம் இரு தம்பி. நான் சீக்கிரம் திரும்பிடுவேன்."

திராட்சைத் தோட்டத்திற்கு நரி காவலா? 'நானும் வருகிறேன்' என்று நக்கீரன் பாட்டியைத் தொடர்ந்துவிட்டான். ஒட்டிக்கொண்டிருந்த தொந்தரவும் கழிந்தது. பழத்தோட்டம் பக்கத்தில்—பசிகாரனும் அருகிலேயே இருக்கிறான். பொம்மையாக எவ்வளவு நேரம் இருக்க முடியும்? "கசக்குமா இல்லை இனிக்குமா" என்ற பாட்டு அவன் காதில் விழுந்துகொண்டிருந்தது. மலர்க்கையாலே காபியை எடுத்து வந்தாள். அன்னந்தானோ அவள். ஒருவேளை, அன்னந்தான் அவளிடம் நடை பயின்றதா?' அவன் கற்பனை உலகத்தில் மிதந்தான்.

"இந்தாங்க காபி சாப்பிடுங்கள் நாளாகப் போட்டது."

"அப்படியென்றால் எனக்குச் சுவையாகத்தான் இருக்கும். இதற்குள் காபி போட்டாகிவிட்டதா? மிகவும் கஷ்டத்தைக் கொடுத்துவிட்டேன்."

"பேச்சுப் பின்னால்! முதலில் குடியுங்கள்."

"உம்...நீ முதலில்!"

"போதும் உங்கள் குழந்தைப்பிடிவாதம்! வம்பளக்காமல் சாப்பிடுங்கள். ஏன் அப்படியும் இப்படியும் விழிகள் அலைகின்றன. இவ்வளவு சீக்கிரத்தில் பாட்டி திரும்பிவிட மாட்டார்கள். அப்படி வந்துவிட்டாலும் வெளியிலிருந்தே குரல் கொடுப்பார்கள். காலை அலம்பிக்கொண்டுதான் வீட்டிற்குள் நுழைவார்கள். மேலும் அவர்களுக்குக் காது சரிசரியாகக் கேட்காது."

"சரியான பழங்காலம் உங்கள் பாட்டி. எல்லாம் கொடுத்த 'ஆண்டவன்' ஏனோ காதைக் கொடுக்க மறந்தான்!"

"தங்களின் பெயரை நான் தெரிந்துகொள்ளக்கூடாதா?"

"தொண்டைமான் என்று அழைக்கிறார்கள். ஒரு தமிழாசிரியர் வைத்த பெயராம் அது! வேறு யாராவது பெயர் சூட்டியிருந்தால், முருகன், விநாயகன் என்று டசன் கணக்கிலே இருக்கிற எந்தக் கடவுள் பெயரையாவது வைத்துவிட்டிருப்பார்கள். நல்ல வேளையாக என் பெயர் தப்பியது."

"நகைச்சுவையாகப் பேசுகிறீர்கள். காதில் தேன் பாய்வது போல் இருக்கிறது. எங்குதான் கற்றீரோ?"

"அழகே! எனக்கும் அப்படித்தான் தேன் மழை! தித்திக்கும் வெல்லம்!"

"அரசே! தொடர்ந்து நிறுத்தாமல் பேசிக்கொண்டே இருங்கள்."

"இந்த இரண்டு கண்கள் போதாது. உங்கள் பூரண அழகையும் என்னால் இரசிக்கமுடியவில்லை. தேவேந்திரனுக்கு உடம்பெங்கும் கண்களாம்! ஒரு கண் எனக்கு கடனாகத் தந்தால் என்ன முழுகிப் போய்விடும்?"

அவள் சாய்ந்துவிட்டாள். அவன் இந்த உலகத்தை மறந்துவிட்டான். பின்னே யானை வந்தால் முன்னே மணியோசை வரும் என்பதுபோல், நக்கீரன் வந்து சேர்ந்தான். நல்ல பாட்டியும் வந்தாள். இதற்குமேல் அவனுக்கென்ன அங்கே வேலை!

"அடிக்கடி வந்துபோ தம்பி. உன் சொந்த வீடுமாதிரி."

'இதற்குமேல் அடிக்கடி வராமல் இருக்க முடியுமா? நமக்குள் இவ்வளவு வளர்ந்துவிட்ட பிறகு!'

(அடுத்த இதழில் முடியும்)

பொங்கல் வாழ்த்துக்கள்

கண்ணைக் கவரும்
வண்ண வாழ்த்துக்கள்
தயார்.

மாதிரிக்கு 75-புதிய காசு மணியாடர் செய்யவும்.

முத்துப் பதிப்பகம்
1759. கிருஷ்ணன் கோவில்
மூன்றாம் தெரு,
தஞ்சாவூர்.

திராவிடநாடு

7—12—58 | வார வெளியீடு | விலை 16 காசு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
DEC 1958
MADRAS

திராவிடம் பிரியும் நாள்

(பா. கரிகாலன்)

அலைகடல் தாண்டி நம்புகழை நாட்டினான்;
அரசர் போற்றவே;—பிறபகை
அரசர் போற்றவே.

கலைகள் பலவே கற்றுத் தெளிந்தான்;
காவியம் கண்டான்;—அற்புதக்
காவியம் கண்டான்.

முன்னம் நம்நிலை யாதென்றே மறந்தோம்;
முக்காடிட் டமர்ந்தோம்;—மூலையில்
முக்காடிட் டமர்ந்தோம்.

தென்னவன் தலைவணங்கான் என்பதை உணரவில்லை;
தேய்ந்த பிறையானோம்;—வளர்ந்து
தேய்ந்த பிறையானோம்.

ஆரியர் சொற்கேட்டே அறிவை இழந்தோம்;
அந்தகராய் மாறினோம்;—கல்தொழும்
அந்தகராய் மாறினோம்.

சீரிழந்த நாம்சிந்தித் தாலே போதும்;
திராவி டம்பிரியும்;—அன்றே
திராவி டம்பிரியும்.



"மலையேறப் போவுது, சாமி!"

"என்னடா, மானமா..."

"அது இருந்தாலல்லவோ சாமி, ஏறு! போடு 'தோப்பு'ன்னு இப்ப மீசு போட்டுக்கிட்டுதானேயிருக்காங்க நல்லீக்கு. நான் மானத்தைச் சொல்லலே சாமி, நம்ம சர்க்கார், மலையேறப் போவுதாம்."

"என்னடா! சர்க்கார், என்ன, சாமக்காலத்திலே உடுக்கடிச்சி உரக்கச் சப்தம் போடுவானே பூசாரி, அவனா? அதுக்கு எப்படா 'சாமி' வந்தது—எப்படா, மலையேறப் போவுது..."

"வெயில் காலம் வந்ததும், மலையேறப் போவுதுங்களாம் சாமி! உதகமண்டலத்துக்குப் போகப் போவுதாம்..."

"சர்க்காரா! சட்டசபையா!! சட்டசபையேதான், இனிமே, கோடையிலே உதகமண்டலத்திலே நடத்தணும்னு முடிவு செஞ்சிக்கிறதாப் பேப்பரிலே பார்த்தேன்."

"சட்டசபைன்னு என்னசாமி! சர்க்காரை நடத்துறதுதானே மந்திரிங்க, அதிகாரிங்க! அவுங்க இவுங்கன்னுட்டு எல்லாரும் போய்த்தானே ஆகணும்..."

"நீ, அதைச் சொல்லிறியா?"

"சொல்றதாவது! வயத்தெ எரியுது சாமி—அதெப்பாருங்க—அது என்னுது?"

"முக்கில் பாலம்! ஆற்றைக்கடந்து வயலுக்குப் போறதுக்காகக் கிராமத்தார் போட்டது..."

"நாறுபோசாமி, அதுக்குச்செலவு! எப்படித் தொங்குது பார்த்தீங்களா—போன மாசம் நாத்து எடுத்துக்கிட்டுப் போனப்ப தவறி, ஆத்துலேயே விழுந்துட்டேன்..."

"அதுக்கும், சட்டசபை, மலையிலே நடக்கிறதுக்கும் என்னடா, காத்தான், சம்பந்தம்?"

"சொல்லாக் கேட்டீங்க சாமி! இப்படி ஊரிலேருக்கிற நம்ம, வாயைக்கட்டி, வயத்தைக் கட்டி, பாலம் போட்டுக்கணும்; பாதை அமைக்கணும்; பள்ளிக்கூடம் கட்டிக்கணும்; இவங்க மலைவாசம் போவாங்க, மலைவாசம்."

"போகுது, என்னடா! சட்டம் செய்றவங்களெல்லாம் குளிர்ச்சியாய் இருக்கத்தானே, நல்ல யோசனை உதிக்கும். மெட்ராசிலேயிருந்தா வெயில் கொளுத்தாதோ?"

"ஆமாம்! இங்கிலாந்திலே பிறந்து, பிரான்சிலே பால்குடிச்சி, அமெரிக்காவிலே படிச்சு, ஆஸ்திரேலியாவிலே கலியாணமான பிரபுக்க — வெயில் பட்டா, செத்துப்பூடுவாங்க!! ஏன் சாமி, இந்தப்பத்து வருஷமா என்னென்னமோசட்டமேலாம்செஞ்சாங்களே...அதெல்லாம் மலைக்கொடிப் போய்டாதான் செஞ்சாங்கன்னுசொல்றீங்களா?"

"நீ, என்ன அந்த தி. மு. க. வாட்டம் பேசறே?"

"அவுங்க கட்சி ஒண்ணுதான்சாமி, இந்த யோசனைக்குச் சம்மதிக்கலே! சர்க்காரிலே, என்னென்னமோ சொன்னாங்களாம். கடைசியிலே, மலையேறிடுவோம்னு, முடிவு செஞ்சிருக்காங்க..."

"ஏன்டா, கம்யூனிஸ்டு, ஜனசங்கம், சோஷலிஸ்டு மத்தவங்களாம் மட்டும் மலைக்குப்போக சம்மதிச்சாங்களா?"

"அதான் சாமி வேடிக்கையாயிருக்கு! ஏழைங்க கட்சிங்கறாங்க. "ஊஹும்"னாலும், "ஆகா"ன்னுருக்காங்க......சாமி! சட்டசபைக்குப் போறாலே சம்பளம் தட்டுமோ, சாமி!!"

"ஏன்டா! அந்தச் சம்பளம் அன்னுவரை ஆசாமிகளுக்குத் தட்டலேங்கிறியே!!"

"ஆமாம், சாமி! நிசமாச் சொல்றேன்—! அவங்கதான், எங்களைப்பத்திப் பேசறாங்க, கிளைக்கிறாங்க—அதனாலே, ஏன் ஏழைங்க வரிப்பணம் வீணாகணும்னு கிளைக்கிறாங்க......"

"ஏன்டா! ஊட்டிக்குப் போறதாலே செலவு அதிகமாகுமோ?"

"ஆகாதா, சாமி! எத்தினபேரு? அப்படியே அதிகம் ஆகலேன்னே வைச்சுக்குங்க...ஒரு பத்து ரூபாயைச் சொல்லுங்க சாமி...ஏழை கொடுத்த வரிப்பணம்தானே?"

"காத்தான்! நீ சொல்றது, சரியாத்தான்டாபடுது. ஏன், இப்ப, ஊட்டிக்குப் போகணும்னு முடிவுசெஞ்சா...?"

•

"ஏன், முடிவுசெஞ்சாங்க தெரியுமா? 'ஊட்டி'யோடே பெருமையே மங்கிட்டுவருது! வெள்ளைக்காரன் இருந்தப்ப இருந்த செழிப்பு இல்லே! அதனுல்தான் போறாங்க..."

"அப்பவன்னு, அந்தச் செழிப்பு இருக்கட்டும்—போகட்டும், வெள்ளைக்காரனே கூப்பிட்டு அந்த இடத்துக்கு மட்டும் 'ஸ்தாபித்தா'ன்னு விட்டிடலாமே..."

"கோபம் கூடாது. அதெல்லாம்—சாக்கம்னு சொல்லிகிருக்கிறே, மகாத்துமா..."

"இப்படி அசாவியமா ஊரான் பணத்திலே பட்டாக்கடலாம்னு அவரு சொல்லிகிருக்காரோ...?"

"ஒரேயிடத்திலே, சென்னையிலேயே சட்டசபை நடக்கிறதுக்குப் பதில், ஒவ்வொரு ஊரிலேயும் நடக்கிறதாலே அந்த ஊருக்கும் பெருமை! சென்னை ராஜ்யத்திலேயிருக்கிற ஊர்களைப்பத்தி எல்லா மெம்பர்களும் தெரிஞ்சிக்கமுடியும் பாருங்கோ!! அதனுலேதான்..."

"அப்ப இப்படி முடிவுசெய்யறும்—தூத்துக்குடியிலே ஒருதடவை—தேப்புத்துறையிலே அடுத்ததடவை—கந்துவார்சத்திரத்திலே மறுபடி அப்படின்னு...அப்படிச்செய்யலியே! 'ஊட்டி'ன்னுதானே போட்டுருக்காங்க! யாராவது உங்களுக்கு வேண்டியவங்க, 'போர்டிங் அண்ட் லாட்ஜிங்' வைச்சிருக்காங்களோ?"

"தப்பாப் பேசறீங்க. பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு..."

"இதை நான் சொல்லணும்! நாற்சட்டையைப் போட்டிருக்கிற நீ சொல்லக்கூடாது!!"

•

"பாப்பா! பாப்பா!! நேத்து சினிமாப் பார்த்தோமே, அந்தக் கோட்டை எவ்வளவு அழகாயிருந்தது பார்த்தியா..."

"அங்கே சட்டசபையிருந்ததாம் தங்கச்சி! புதுசா கட்டினாங்களாம். அப்புறம், அதுவேணும்; இருக்கட்டும்னு சினிமா பார்க்கட்டும்னு, கோட்டைக்குப் போயிட்டாங்களாம்..."

"ஒண்ணு இருக்கப்ப, ஏன் இன்னொண்ணு கட்டிணுங்க? ஒரு பொம்மை யிருந்தா இன்னொரு பொம்மை வாங்கித்தர மாட்டேங்குதே அம்மா?"

"அம்மாவுக்குப் பணக் கஷ்டம் தெரியும்! அது அரசாங்கம் பாரு, இஷ்டம்போல, 'செலவழிக்கும்; பணம் இல்லேன்னு, வரிபோடும்; கட்டாட்டா, சொத்தைப்பறிக்கும்...'"

"ஏன் பாப்பா! இப்படிப்பட்ட ஒரு அரசாங்கமே இருக்கிறதுக்குப்பதில்......"

"வாயை மூடு! அப்பா, வர்றார்..."

★

ஒரே செடியின் மலர்கள்!

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 . [7–12–58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 21

தமிழகத்திலே காங்கிரசு அரசு. கேரளத்திலே தேபரின் 'சாபம்' பெற்ற பொதுவுடைமை அரசு.

இரண்டும் எதிர்க்கட்சிகள்! ஒன்றையொன்று எதிர்த்துக்கொண்டிருக்கும் கட்சிகள்!!

"பரம்பிகுளம்" தண்ணீரைப் பெறுவது சம்பந்தமாக இரு சார்பினரும் கூடினர்; பேசினர். நல்லுறவோடு கூடிய முடிவும் கண்டிருக்கின்றனர்.

வெற்றி பெற்றோம் என்கின்றனர், தமிழக அமைச்சர்கள்! நாங்களும் வெற்றி கண்டோம் என்கின்றனர் கேரள அமைச்சர்கள்!!

வீணாகிக்கொண்டிருந்த பரம்பிகுளம் ஆற்று நீர், இனி அரபிக் கடலுக்குப் போகாது. தமிழகத்துக்குக் கிடைக்கும், கோவை மாவட்டத்தின் பல பகுதிகள், வளம்பெறும். இதனால் தமக்கு வெற்றி என்கின்றனர் தமிழகத்தார்! காங்கிரசு அரசுடன் கூடிப்பேசிச் சமரசம் கண்டதால், தமக்கு வெற்றி என்கின்றனர் கேரளத்தார்!!

இருவருக்கும் வெற்றி என்போம். இருவர்தம் பெருந்தன்மைக்கும், அரசியல் கண்ணியத்திற்கும் கிடைத்த வெற்றி என்போம். இரண்டு அரசுகளையும் மனமாரப் பாராட்டுவோம்.

*

"பரம்பிகுளத்தில் வெற்றி கண்டுவிட்டோம் — கன்னடத்துடன் பேசிப் பலாற்றிலும் நீர் ஒடச்செய்வோம். ஆந்திரத்துடன் பேசி, வீணாகும் கிருஷ்ணா, கோதாவரி நீரையும் பெறுவோம்" என்கிறார் அமைச்சர் சுப்ரமணியம். உறுதியும் ஆர்வமும் அகமகிழ்ச்சிக்குரியதே.

கேரளம்—கன்னடம்—ஆந்திரம்—தமிழகம் நான்கும் ஒன்றையொன்று, அடுத்துள்ள பகுதிகள். பரிமாறிக்கொண்டும், சுகதுக்கங்களைப் பங்குபோட்டுக்கொண்டும் வாழ வேண்டிய பகுதிகள். நம்பூதிரிபாட்டுடன் உட்கார்ந்து—மாற்றுக் கட்சித் தலைவராயினும்! — உடன்பாடு காணமுடியும், காமராஜரால். சஞ்சீவி ரெட்டியாருடனும் சமரசம் செய்துகொள்ள முடியும் — எல்லைப் பிரச்னையில் முன்பே இதைச் சாதிக்க முடிந்தது. கன்னட அரசினருடனும் கூடிப் பேசி ஒரு முடிவு காண்பது சாத்தியமே. முன்பு கன்னட முதல்வராயிருந்த அனுமந்தையா, சென்னை நகராட்சி மன்றத்தில் பேசியபோது குறிப்பிட்டார்—

"நாம், அண்ணன் தம்பிகள். நமது சுகதுக்கங்களை எப்போதும் பகிர்ந்துகொண்டு வாழலாம்" என்று.

கூடிப்பேசவும், ஒருவருக்கொருவர் இன்பதுன்பங்களை எப்போதும் பகிர்ந்துகொள்ளவும், இந்த வட்டாரங்களால் முடியும். இன்று மட்டுமல்ல, என்றும் பொதுப்பிரச்னைகளில்கூட உட்கார்ந்து முடிவுகளைக் காணமுடியும். ஏனெனில் நான்கு பகுதிகளுக்கிடையிலும் 'ஒடுகின்ற இரத்தம்' ஒன்றுதான்! அதனையே இனவுணர்வு என்போம்—மொழியுணர்வு என்போம்—பண்பு நிலை என்போம்!!

*

"சொல்லலாம், சொல்லலாம். கன்னடமும் களி தெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும் உன் உதிரத்துதித்தெழுந்தது, என்று இங்கு வேண்டுமானால் பாடலாம். பெருமை பேசிக்கொள்ளலாம். கேரளத்திலும், கன்னடத்திலும், ஆந்திரத்திலும் போய்ச் சொல்லிப் பாருங்கள். அவர்களுக்கு இந்த விவரமே தெரியாது! விழிப்பார்கள்!!" என்று ஆந்திரர்கள் என்போர் ஆபிரிக்காவிலிருந்துவந்தவர்கள் போலவும், மலேயாவிலிருந்து வந்து குடியேறியவர்களே மலையாளிகள் எனவும், கன்னடியர் என்போர் கனடாவின் ஆதிக்குடிகள் என்றும்கருதிக்கொண்டு, எடு வாளை, கிளம்பு போருக்கு, மலையாளிகள் அக்கிரமம் என்று மார்தட்டிப் பேசுவோர் இங்குண்டு.

இந்த நான்கு பகுதிகளில் வாழ்வோர் மீது வெறுப்புணர்ச்சியையும் வீம்பையும் உண்டுபண்ணுவதால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் குரல்வளையை நெறித்ததாகும் என்பதே அவர்தம் கருத்தாகும். விரோதத்தை அதிகமாக்க அதிகமாக்க, இன உணர்வும், பாசமும் ஏற்படாமற் செய்யலாம் என்பதே அவர்தம் ஆசையாகும்.

கன்னடத்திலும், கேரளத்திலும், ஆந்திரப்பகுதிகளிலும் ஆர்வமிக்க இளைஞர்கள் பாடுபட்டுக்கொண்டு வருகிறார்கள். கன்னடத் தோழர்கள், களிப்பூட்டும் வகையில், பல சார்பினருடனும், தொடர்புகொண்டு கழகக் கொள்கைகளைப் பரப்பி வருகிறார்கள். இதுபோல, எண்ணற்ற தோழர்கள் — திறமைசாலிகள் — பழகும் பாங்கு கொண்டோர், கொள்கையுறுதி கொண்டோர், கிளம்ப வேண்டும்! நான்கு பகுதிகளிலும் எண்ணங்களைத் திரட்டுமளவுக்குச் சக்திபெற்ற "தலைவர்கள்" ஆங்காங்கும் உருவாகவேண்டும். இப்படியெல்லாம் முயற்சித்தும், பிறகு முடியவில்லையெனின், இன்று

கண்டனமும் கேலியும் கிளப்புவோர் கூறுவதில் பொருளுண்டு. தமிழகத்தின் எல்லையைத் தாண்டி நாமிருப்பதை ஓரளவுக்குச் சொல்ல, இருப்பதே, ஒரே ஒரு ஆங்கில ஏடு, "ஹோம்லண்டு" தான்! அதுவும் வெளிவருவதென்றால், ஒருசில நண்பர்களின் ஒத்துழைப்பிலும், அவர்கள் வழங்கும் கட்டுரைகளிலும்தான் இருந்துகொண்டிருக்கிறது!! திக்கெட்டிலிருந்தும் செய்திகளும் ஆதரவும் நமதியக்கத்துக்கு வரவேண்டும் — இதற்கான முயற்சிகள் செய்யப்பட்டாகவேண்டிய கட்டத்திலிருக்கிறோம்.

உண்மை இது! இதைச் சொல்ல நாம்வெட்கப்படவில்லை!! எங்கேயோ முளைத்த தீ, இந்தஉபகண்ட முழுவதும் பரவுமென்று அந்த நாள் காங்கிரஸ் தலைவர்கள் எண்ணி இருப்பார்கள்? இன்றில்லாவிடில் நாளை, நாளையில்லாவிடில் இன்னொரு நாள், இந்த எண்ணங்கள் அங்கெல்லாம் பரவாது என்று யாரும் கூறமுடியாது.

இந்த நம்பிக்கை உங்களுக்கு மட்டுமிருக்கிறது-- இப்படியொரு ஆழ்ந்த பற்று இருக்க அடிப்படைக் காரணமென்ன—கூட்டுப் பொறுப்புடன் கூடிவாழ முடியும் என்று எவ்வண்ணம் கருதுகிறீர்கள் என்று கேட்போர் இருக்கிறார்கள். இப்படி நாம், திராவிடக் கூட்டாட்சி என்று கூறிவருவதற்கு, எது அடிப்படையான காரணமோ, அதன் சரியான ஒளி, இந்தப் பகுதிகளுக்கெல்லாம் பரவவில்லை; அதிக அளவில் பரவும் வாய்ப்பும் ஏற்படவில்லை; எனினும், "நாமெல்லாம் ஒன்று" எனும் எண்ணம், எப்படியோ அங்கெல்லாம் ஒளிவிட்டு வருகிறது எனும் அறிகுறி மட்டும் தென்படுகிறது.

*

இந்தக் கிழமை, சென்னையில், கேரள சாகித்திய பரிஷத் எனும் அமைப்பின் பெயரால், பெருமித விழா ஒன்று கொண்டாடியிருக்கிறார்கள்.

கேரளத்தைச் சார்ந்த எழுத்துச் சிற்பிகளும் இலக்கிய விற்பன்னர்களும் ஒன்றுகூடிக், கொண்டாடிய விழா இது. கேரளத்தின் எல்லையைத் தாண்டி சென்னை போன்ற இடத்தில் இவ்விழா நடைபெறுவது இதுதான் முதல்தடவையாம்.

இந்த இலக்கிய விழாவில், கேரளத்து அமைச்சர்களும் பங்குகொண்டார்கள்; நமதுநிதியமைச்சரும் கலந்துகொண்டார். நடாத்திய வரவேற்புக் குழுவின் தலைவர், முன்னாள் சென்னைப் பிரதம காரியதரிசியான இராமுன்னி மேனம் ஆகும்.

இந்த விழா, இங்கே நடைபெற்றதும், அதில் பலர் பங்கெடுத்துக்கொண்டதுமல்ல நம் கவனத்தைக் கவர்ந்தது! அவர்கள், "திராவிட மொழிகளின் அரங்கு" ஒன்றும் நடத்தினார்கள்!!

அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் சிதம்பரநாதனார், பேராசிரியர் இரா. பி. சேது ஆகியோரது தலைமையிலும்முன்னிலையிலும் இந்த அரங்கினை நடத்தியிருக்கிறார்கள்! தமிழகம் — ஆந்திரம் — கன்னடம் இந்த மூன்று திராவிடமொழி எழுத்தாளர்களையும் அழைத்து அந்த அரங்கில் பங்கேற்கச் செய்திருக்கிறார்கள்!!

திராவிடமாவது! ஆரியமாவது!!

திராவிட மொழிகளாவது-இதைப்பிறர் ஏற்பதாவது?

இப்படிப் பேசுவோர், இதற்கு என்ன பதில் தருவர்? திராவிட மொழிகளில் ஒன்று மலையாளம்-அதற்குத் தாய் தமிழ்மொழி என்கிற உணர்வு, அவர்களுக்கும் உண்டு—அது, காட்டப்படும் சந்தர்ப்பம் இல்லையே தவிர, அனைவரும் அதனை உணராமலில்லை.

தமிழே, தாய் மொழி.

நான்கு மொழிகளுக்கும் நெருங்கிய தொடர்புண்டு.

ஒன்றோடொன்றும் இன்னும் நெருக்கமாக உறவாடி வாழ வேண்டும்.

இந்த நான்கு மொழி வட்டாரங்களுக்கிடையே இருக்கும் தனித் தன்மை, வேறெங்கும் இல்லை.

இவ்வண்ணம், அந்தக் கருத்தரங்கில் பேசியிருக்கிறார்கள்! அமைச்சர் சுப்பிரமணியமும், இந்த ஒற்றுமைகளைப்பற்றிப் பேசியிருக்கிறார் — ஆந்திர, கன்னட, மலையாள எழுத்தாளர்களும் பேசியிருக்கிறார்கள்!!

* * *

அமைச்சர் சுப்பிரமணியம் ஒப்புக்கொள்கிறார்— கேரள அமைச்சர் முண்டசேரி பேசுகிறார்—திராவிட மொழிகள்!—அண்ணன் தம்பிகள் என்று!!

அதே சமயம், "**இல்லை! இல்லை!! தாய்மொழி தமிழா? ஒருபோதும் இல்லை. எல்லாவற்றிற்கும் தாய்மொழி எங்கள் சமஸ்கிருதம்தான்**" என்று ஒருவர் கூறுகிறார் என்றால் அவரைப்பற்றி என்ன எண்ணுவீர்கள்? விஷயம் தெரியாதவர்! விளக்கம் பெறாதவர்!—என்றே கருதத் தோன்றும். தேபர், அப்படிப்பட்டவரா? ஒருபோதுமில்லை! அகில இந்தியக் காங்கிரசுக்கே தலைவர்!! அவர், நவம்பர் 16-ந்தேதி போபாலில் பேசுகிறபோது, அழுத்தந்திருத்தமாக, "**இந்தியாவிலுள்ள எல்லாமொழிகளுக்கும் சமஸ்கிருதம்தான் தாய்மொழி**" என்று கூறியிருக்கிறார்.

இங்கே சுப்ரமணியம் சொல்கிறார் மலையாளமும் கன்னடமும் தெலுங்கும் தமிழின் குழந்தைகள் என்று! தேபர் அப்படிச் சொல்கிறார்!!

என்ன காரணம்?

சுப்ரமணியத்தைவிட, தேபர் மட்டமானவர் என்பதா!! அல்ல, அல்ல. இங்குள்ள பாசத்தையும ஒப்புரவையும், சுப்ரமணியம் அறிந்திருக்குமளவுக்கு, தேபர் அறிந்திருக்கக் காரணமில்லை. அவர் கண்ணிலும் கருத்திலும் நடமாடுவதெல்லாம், வடக்கும அங்குள்ள மொழிகளும்தான்! அவைகளைப் பார்க்கிற பொழுது சமஸ்கிருதம் தெரிகிறது — உடனே,

இந்திய மொழிகளுக்கே இதுதான் தாய் என்று முடிவுகட்டிவிடுகிறார்!!

மொழிப் பிரச்னையில் மட்டுமல்ல, எதையெடுத்துக்கொண்டாலும், நமக்குள் ஏற்படுகிற பாசமும் பரிவுமே வேறுதான். வடக்கோடு குலாவும்போது, ஏற்படுத்திக்கொள்கிற நட்பும் சிநேகமுமே வேறுதான். ஒரே செடியின மலர்கள் இவை! இந்த உண்மையினை யாரும் மறைத்திட முடியாது!

★

சிறுகதை

"தபால்காரன்"

சென்ற இதழ் தொடர்ச்சி......

அவன் அவளைப்பார்த்துச் சொல்லிவிட்டு, விழியின் உதவியால் விடை பெற்றுக்கொண்டு நடந்துகொண்டிருந்தான் சாலையில். நடந்து முடிந்த இன்ப விளையாட்டு, நிழற்படம்போல் அவன் கண்களுக்கு முன்னால் ஓடி மகிழ்வூட்டிக் கொண்டிருந்தது. அவனுக்கே தெரியாமல் அவன் இதழ்மேல், சிரிப்பு மேய்வதும் மறைவதுமாய் இருந்தது. பார்ப்பவர்கள் இவன்ஒரு பைத்தியக்காரன் என்று பட்டம் கட்டிவிட்டுப் போய்க்கொண்டிருந்தார்கள். அவளைப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டுமென்று, அவன் மனம் எண்ணுகின்றது. சீவிச் சிங்காரித்துத் தன் கையால் மலர் சூட்டி, மணிக்கணக்கில் எதிரே உட்கார வைத்துக்கொண்டு,அழகு பார்க்க ஆசை எழுகின்றது.

இன்னதென்று சொல்லமுடியாத ஒரு அபூர்வசக்தி, பெண்ணிடம் அடங்கி இருக்கிறது. பெண் துணையிருத்தி இல்லாத வாழ்க்கை, நிலவு இல்லாத இருண்ட வானமேயாம். பெண்பிறப்பே ஒரு பெருமையுடைய பிறவிதான். அவர்கள் இன்றேல் ஆண்கள் வெகுசீக்கிரத்தில் மிருகங்களாகி விடுவார்கள்.

"ஒரே ஒரு நாள்தான். நாங்கள் இருவரும் கூடி இன்பத்தைப் பங்கிட்டுக்கொண்ட--அந்த இன்ப நாளைத்தான் கூறுகின்றேன். அதற்குள்ளாகவா திங்களைப் பாம்புகொண்ட பொய்க்கதை போல், ஊரெங்கும் எங்கள் சேதி பரவிவிடுவது! என்றாலும் அஞ்சாமல், கிலவுபோல் தேயாமல் பல்லோரின் தூற்றலையே எருவாகவும், பெற்றோரின் கடுஞ்சொல்லையே நீராகவும் கொண்டு, எங்கள் காதல் வளர்ந்தது. பொதுவாகப் பெரும்பாலோருக்கு ஏற்படுகின்ற இந்தப் பரிதாபகரமான நிலை, நம்மிருவர் வாழ்விலும் நிகழாமல் போய்விட்டதை, ஒரு பெரிய வாய்ப்பு என்றே கூறுதல் வேண்டும்" அவர்கள் தங்களுக்குள் பேசிப் பெருமை அடித்துக்கொண்டார்கள். மலர்த்தோட்டத்தில்—மாந்தோப்பில்—மணல் வெளியில் -மக்கள் நடமாட்டமில்லாத இடத்தில் நிலவானும் கோலமதியும் போல், குறைவின்றி வெற்றிகரமாக அவர்கள் காதல் வளர்ந்தே வந்தது.

தொண்டைமான் விரும்பாவிட்டாலும், பலர் அவனை நண்பனாக்கிக்கொள்ள முயற்சித்தார்கள்.

வி. ஆர். துரை

அதற்குரிய காரணமும் அவனுக்குப் புரியாமல் இல்லை. அழகான தங்கை முல்லையை ஊருக்கு அனுப்பிவிட்டான். பலர் அவன் தொடர்பை, சொல்லாமல் அறுத்துக்கொண்டார்கள். எப்போதும் போலவே இளந்திரையன், அவனிடம் நட்பு வைத்துக்கொண்டிருந்தான். இப்போது அந்த உண்மையானவன்தான் அவனுடைய உயிர்த்தோழன்.

* * *

நடந்துகொண்டிருந்த சண்டை எதிர்பாராவிதமாக திடீரென்று நின்றுவிட்டது. இனியும் இங்கு உங்களுக்குச் சாப்பாடும் சம்பளமும் கொடுப்பது தண்டமாகும். இதற்குமேல் வீட்டில்தான் உங்களுக்கு வேலை. இங்கில்லை! திரும்பவும் சண்டை துவங்கினால், அப்போது உங்களை மறுபடியும் அழைத்துக்கொள்ளுகின்றோம். வேண்டும்போது அழைப்பு! வேண்டாதபோது துரத்தல்!! அரசாங்கம் இப்படித்தான் அவர்களைப் பார்த்துச் சொல்லாமல் சொல்லி, கொல்லாமல் கொன்றது. பாவம், சிப்பாய்கள் பறந்தோடி வீடுவந்து சேர்ந்தார்கள்.

அப்படி வந்தவர்களில் கலாவல்லியின் அண்ணன் மலையமானும் ஒருவன். அவன் மட்டும் வரவில்லை; தன்னுடன் மற்றொரு வாலிபனையும் அழைத்து வந்து, திரிந்துகொண்டிருந்தான். அவனுக்கு நண்பனும் அவன். அந்தப்புதியவனை ஊருக்கு, மலையமான் அழைத்துவந்ததற்குக் காரணமும் இல்லாமலில்லை.

ஆரம்பத்தில் மலையமான் அன்பாகவும் பிரியமாகவும், அதே நேரத்தில் மரியாதையுடனும் தொண்டைமானிடம் நடந்துகொண்டான். அந்த நிலை நீடிக்கவில்லை. வெகு சீக்கிரத்திலேயே வெறுப்புடன் நடந்து, அவனுடன் பேசுவதையும் நிறுத்திக்கொண்டான். மனிதனுடையகெட்ட சுபாவங்களில் இதுவும் ஒன்று. அதுகுறித்துத் தொண்டைமான் ஒன்றும் கவலைப்படவில்லை. அந்த அற்பமான விஷயத்தை, அதிகமாக எடுத்துக்கொள்ளாமல் அலட்சியமாக இருந்துவிட்டான். கெட்ட எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு, ஊமைபோலிருந்து ஒரு சரியான ஆபத்தை, மலையமான அவனுக்கு உண்டாக்கிவிட்டான். அதற்கு ஏமாந்து அவனும் பலியாகிவிட்டான்.

'ஊமை ஊரைக் கெடுக்கும்' என்று தெரியாமலா சொல்லியிருக்கிறார்கள்! அடிக்க ஓடிவருகின்றவனைச் சமாளித்துக்கொள்ளலாம். ஆனந்தமாகப் பேசிக்கொண்டே, குழிபறிப்பவன் எதிர்ப்பு அபாயகரமானதாகும். வேழத்தினும் கொடிய அவனை வெற்றி கொள்ளுவதும் கடினமேயாம்.

*

கலாவல்லி சமையல் அறையில் வேலையாக இருந்தாள்.

"கலாவல்லி, இங்கே கொஞ்சம் வந்துவிட்டுப் போகிறாயா?" அண்ணன் மலையமான் அழைத்து வாய் மூடுவதற்குள், அவள் அறைக்குள் நுழைந்தாள். அறையின் உள்ளே மலையமான் இருந்தான். கூட்டிவந்திருந்த அந்தப் புதிய நபரும் குந்திக்கொண்டுதான் இருந்தான். "குடிக்கத் தண்ணீர் கொண்டுவாம்மா; எனக்கு மட்டும் அல்ல! இரண்டு பேருக்கும்......" வெள்ளை உள்ளத்தோடு தண்ணீர் கொண்டு சென்றாள். "எனக்கொன்றும் அவசரம் இல்லை. முதலில் உனக்குச் சொந்தக்காரனாகப்போகிற, அவரை முக்கியமாகக் கவனிச்சுக்கோ கலாவல்லி" மலையமான் சொல்லி முடித்ததும் அவன் பல்லைக் காட்டினான். அவள் புரிந்துகொண்டு நொந்தாள். அழகிக்கு அந்த அறையில், முள்ளின்மேல் நின்றுகொண்டிருப்பதுபோல் இருந்தது. வெறுப்புடன் நோக்கினாள். தங்கத் தாமரையை முகமாகக் கொண்ட அவளுக்கு, அண்ணனின் கேவலமான போக்குச் சினத்தை மூட்டியது.

"கலாவல்லி! இவன் என் நண்பன். குணத்திலே தங்கம். ஏராளமான சொத்திற்கு இருக்கும் ஒரே தலைவன். உன் எதிர்கால வாழ்க்கைத் துணைவன்!"

வெட்கங்கெட்ட விமர்சனத்தைக் கேட்கச் சகிக்காமல், வெறுப்புடன் அலட்சியமாக அறையைவிட்டு அவள் வெளியேறினாள். "முப்பது பவுன் நகை உனக்கு! இருக்கின்ற சொத்து முழுதும் உன பெயருக்கு!" இந்தக் கத்தல் அவள் காதில் வந்து விழுந்தது. அத்துடன் முடிந்துவிடவில்லை கதை. அதற்கு மேலும் அந்த விவகாரம் தொடர்ந்தது.

கலாவல்லி பூ கட்டிக்கொண்டிருந்தாள். அது மாலை நேரம். வீட்டில் யாரும் இல்லை. அவன் மட்டும் மலையமானின் அறைக்குள் இருந்தான். மரம் பக்கத்தில் இருப்பதால் எப்படியாயினும் அதில் முல்லைக்கொடி படரும் என்று, தப்புக்கணக்குப் போட்டுவிட்ட மலையமானின் முட்டாள்தனமான ஏற்பாடு அது.

"நீ இங்கேயா இருக்கிறாய். கலாவல்லி! நான்போய் எங்கெங்கோ தேடுகிறேன்."

"............"

"எல்லோரும் எங்கே போய்விட்டார்கள்?"

"என்னிடம் வந்து சொல்லிவிட்டா போகிறார்கள்? உங்களுக்கு வேறு வேலை இல்லையா?"

"இந்த வேலை முதலில்! இதற்குப் பின்னால்தான் மற்ற வேலை!"

அதற்கு மேல் அவள் பேசவில்லை. அத்துடன் அவன் தொலைந்து சென்றான் இல்லை. அவன் நெருங்கி வந்து, பூவாகிய அவள் கையைப் பிடித்துக்கொண்டான். அவள் வீராங்கனையாக மாறி, கன்னத்தில் 'பளார் பளார்' என்று அறைந்து, கண்டபடி திட்டிவிட்டாள். உண்மையாகவே அவன் அழுதுவிட்டான். ஆனால் மிருக இதயம் மட்டும் மாறவில்லை. பரிதாபமாக நின்றவனைப் பார்த்து, "நான் உங்களைத் திருமணம் செய்து கொள்வேன்..." ஆவலுடன் அவன் தலை நிமிர்ந்து பார்த்தான். "ஆனால் என் செய்வது? நான் ஒருவருக்குச்சொந்தக்காரி." அழகி சொல்லி முடித்தாள். அவன் தலை கீழே விழுந்துவிட்டது. மறுநாளே தன் சொந்த ஊருக்கு, அவன் பிரயாணம் வைத்துவிட்டான். பார்க்கவே சோகமாக இருந்தது அவன் நடை. மலையமான் மட்டும் கலாவல்லியின்மீது எரிந்து விழுந்துகொண்டே இருந்தான்.

*

கலாவல்லி, அவன் மூக்கறுபட்ட சம்பவத்தை, சொல்லி மகிழ்ந்திடத் துடியாய்த் துடித்துக்கொண்டிருந்தாள். தம்பி நக்கீரன் பள்ளியிலிருந்து திரும்பி வந்ததும், தொண்டைமானிடம் தூதாக அனுப்பிவிட்டாள். சந்திக்க வேண்டிய இடத்தையும் சொல்லி இருந்தாள்.

"கண்ணின் கடைப்பார்வை
காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரர்க்கு
மாமலையும் ஓர்கடுகாம்"

வெள்ளி நிலவு எரிந்துகொண்டிருந்தது. நீலவான் கூரையெங்கும் ஒரே வைரக்குப்பை. கலா, அவனை அங்கு வரச்சொல்லி, அன்புக்கட்டளை போட்டிருந்தாள் அல்லவா? அவன் சென்றான். அவளும் தவறவில்லை. பாழும் மழை வந்து அந்த நேரத்திலா தலைமேல் கொட்டவேண்டும்!

"கடவுள் பயம்போலும். கவலைப்படாதே—கத்தி வந்து கழுத்தை வெட்டிவிடாது. ஆண்டவன் திருப்பள்ளி கொண்டிருக்கும் ஆலயங்களெல்லாம், பெரும்பாலும் இதுபோன்ற இன்பச் சந்திப்புகளுக்குத்தானே பயன்படுகின்றன!"

வெற்றி அவனுக்கு. தோல்வி அவளுக்கு. அன்றிரவு அவளந்தச் சுவைமிக்க சம்பவத்திற்கு, மெருகேற்றி அழகாகச் சொல்லி முடித்தாள். அதற்கு அவன் ஒரு பெரிய சிரிப்பைப் பரிசாகத் தந்தான். அத்துடன் அழகரசிக்கு விடுதலையும் கொடுத்தான். அதாவது அவர்கள் பிரிந்து பறந்தார்கள். அன்றிரவு அவளதைச் சொல்லாமல் இருந்திருந்தால்...? உண்மையை அவன் யூகித்து உணர முடியாமலேயே போய்விட்டிருக்கும்.

*

ஒருநாள், மஞ்சள் வெயில், மாலை நேரம். சாலையின் பள்ளமொன்றில் தேங்கிக்கிடந்த மழைநீரை, இரண்டு குரங்குகள் குனிந்து வாய்வைத்துக் குடித்துக்கொண்டிருந்தன. ஒரே குழியில் அவை இரண்டும் தண்ணீர் அருந்தும் காட்சி, பார்த்து மகிழ்வதற்கு அழகாக இருந்தது. ஒன்று ஆண் குரங்கு, மற்றொன்று பெண். தலைவன் தலைவிபோலும்! அவன் அப்படி நினைத்துக்கொண்டு மகிழ்வடைந்தான். திடீரென்று அவையிரண்டும் போர் செய்ய ஆரம்பித்தன. ஒரு வழியே ஒன்றும், மற்றொரு வழியே வேறொன்றும் போய்க்கொண்டிருந்தன. ஒற்றுமையாய் இருந்த அவைகளுக்குள், எத்துணை சீக்கிரத்தில் வேற்றுமை எண்ணம் முளைத்துவிட்டது! அதை நினைத்துத் தொண்டைமான் மிகவும் வருத்தப்பட்டான். நக்கீரன் அறைக்குள் வந்து நுழைந்ததையும் அவன் கவனிக்கவில்லை. அந்தக் காலைப் பகலவன் முதுகின்மேல் வந்து விழுந்தபோதுதான், திரும்பிப் பார்த்து வாரித் தழுவிக் கொண்டான்.

"என்னிடம் எட்டணா இருக்கிறது. உங்களுக்கு வேண்டுமா?"

"அரை ரூபாய்க்கு இப்பொழுது நீ முதலாளியா? அது சரி—நக்கீரா! உனக்குத் தருமம் செய்த அந்த வள்ளல் யார்?"

"அண்ணனுக்குக் காசு கொடுக்கிற பழக்கமே கிடையாது. அக்கா முல்லை, ஏதாவது விசேஷ நாளுன்னு ஒரு இரண்டணா எடுத்துக் கொடுப்பாங்க. அதுவே அதிகம்! ஒரு அரைமணி நேரமாவது ஒப்பாரி கஷ்டப்பட்டு நடத்தினால் தான், அப்பா அம்மாவிடம் காசே வாங்க முடியுது. அதுவும் இப்படி ஒரு எட்டணா முழுசாக் கிடைக்குதா? சாயங்காலம் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வரும்போது, இளந்திரையன் அண்ணா கூப்பிட்டுக் கொடுத்தாரு."

"அந்த அண்ணா உனக்கெதுக்குக் கொடுத்தாரு? மேலும் யாருக்கும் அவர் காசாகக் கொடுக்கிற பழக்கம் கிடையாதே!"

"காலையிலே எங்கிட்டே ஒரு கடிதம் கொடுத்து, அக்காவிடம் யாருக்கும் தெரியாமல் கொடுக்கச் சொன்னாரு. நான் அதைக் கொண்டுபோய் அக்காவிடம் தவறாமல் கொடுத்தேன். படித்துப் பார்த்ததும், அக்காவுக்கு ஒரே ஆனந்தமயம். அப்பொழுதே அக்காவும் ஒரு கடிதம் எழுதிக் கொடுக்க, நான் இளந்திரையன் அண்ணாகிட்ட கொடுத்தேன். அவர் பேரானந்தக் கடலிலே மூழ்கிவிட்டார். இந்தத் தபால்காரன் வேலைக்கு, கிடைச்ச கூலிதான் இந்த எட்டணா! இல்லாமப் போனா அவருக்கு மட்டும்கொடுக்க மனசு இடங்கொடுக்குமா?"

இராட்டினம்போல் அவன் தலை கிர்ரென்று சுழன்றது. உடலெங்கும் வியர்வை குபுகுபுவென்று கொட்டியது. உயிரே உடலைவிட்டுப் போய்விடும்போல் தோன்றியது. நகக்கண்களில் ஆயிரம் ஊசி கொண்டு, குத்திக்குத்தி எடுப்பதுபோல் வேதனைப்பட்டான். 'தற்கொலை செய்துகொள்ளுவது கோழைத்தனம்' என்றுதான் பலரும் பாடம் ஒப்புவிக்கிறார்கள். அவனும் அப்படித்தான் இதுவரையில் தெரியாமல் சொல்லிக்கொண்டிருந்தான். அந்த வேதாந்தம் தன் சொந்த வாழ்க்கையில், பலன் அளிக்காமல் போய்விடும்போல் தோன்றியது.

"உண்மையானவன் என்று நான் நம்பினேன். உடன் பிறந்த சகோதரனாகவே எண்ணிக்கொண்டிருந்தேன். உள்ளத்தில் கெட்ட எண்ணத்தை வைத்து மூடி மறைத்துக்கொண்டே, உறவாடி இருக்கிறான்.

ஆம்! அவனிடம் நான் ஆராய்ந்து ஆராய்ந்து நட்புச்செய்யாமல் போய்விட்டேன், அவசரப்பட்டு நண்பனைக் கொண்டேன். நான் சாவதற்குக் காரணமான துன்பத்தை, அவன் எனக்கு

குறைந்த விலையில்! சிறந்த முறையில்!!

"திராவிட நாடு"

பொங்கல் மலர்

சி. என். ஏ. தரும் கருத்துப் படையல்கள்.

வண்ண முகப்புடன், எண்ணத் தொகுப்புகளுடன்

ஜனவரி 14-ந் தேதி எங்கும் கிடைக்கும்

விலை 8 அணாதான்!!

★

உண்டாக்கிவிட்டான். "சேரிடமறிந்து சேர்" இந்த ஆத்திச்சூடியை மறந்து பிழைசெய்துவிட்டேன். நான் அவளைக் காதலிக்கிறேன் என்பதை நன்றாகத் தெரிந்திருந்தும், அவன் எனக்குப் பச்சையாகவே நன்றிமறந்து துரோகம்செய்துவிட்டான். கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும், புலவர் கபிலரும் பாரி வள்ளலும் வாழ்ந்த நாட்டில் ஏன் இவனும் பிறந்தான்?"

அவன் யாரோடு பேசுகிறான். சுவரிடமா? அல்லது சுவரில் மாட்டியிருக்கும் படங்களிடமா?

மோசக்காரி! என்னை நேசித்து நாசம் செய்துவிட்டாள். உத்தமி போல் என்னிடம் நடந்துகொண்டாள். உள்ளத்தில் மற்றொருவனை வைத்து மகிழ்ந்துகொண்டே இருந்திருக்கிறாள். கற்பைச் சந்தைப் பொருளாகக் கருதிவிட்டாள். பாவையர்க்கழகு கற்பினின்றும்வழுவாமையே என்பதை அறியாள் போலும்! அவள் கபட நாடகத்தின் முகத்திரை, இப்போது கிழிக்கப்படாமலேயே இருந்திருந்தால்...? நினைத்தாலே என் நெஞ்சம் நடுநடுங்குகின்றது. அவமானம் பிடுங்கித்தின்னுகின்றது. பலர் என்னைக் கேலியாகப் பேசி, எள்ளி நகையாடி இருப்பார்கள். இந்த மோசக்காரியை நான் திருமணம் செய்துகொள்ள வேறு திட்டமிட்டுக் கொண்டிருந்தேன். திருமணம் என்பது என்ன ஒருநாள் கூத்தா? பாறை மோதிய கலமாக என் வாழ்வு முடிந்திருக்கும். காலமெல்லாம் வருந்தி வருந்திச் சாகவேண்டி இருந்திருக்கும். நல்ல வேளையாக இப்போதே நான் தப்பித்துக்கொண்டேன். முட்டாள்தனமான உயிரைப் போக்கிக்கொள்ளக்கூட முடிவெடுத்தேன். அந்த எச்சில் பண்டத்திற்காக, அழியா என் இளமையை நான் ஏன் பாழ்படுத்திக்கொள்ள வேண்டும்? இவளைப் போன்ற அழகரசிகளுக்கு நாட்டிலென்ன பஞ்சமா? ஒன்றுமறியாதிருந்த எனக்கு இன்பத்தை வாரி வாரித் தந்து, உயிரின் மேல் ஆசையை உண்டாக்கிவிட்டாள். நினைக்க நினைக்க எனக்கு இனித்த அவளே, தாங்க முடியாத துன்பத்தைக் கொடுத்து வருத்திவிட்டாள்."

குமுறும்தன் மனத்திற்கு இப்படிப் பேசிப்பேசி, அவன் ஆறுதல் கூறிக்கொண்டான். அப்பொழுதே ஓடிச் சென்று அவனையும் அவளையும் கத்தியால் குத்திச் சாகடித்துக் குடலைப்பிடுங்கி மாலையாகப் போட்டுக்கொள்ள வேண்டும்; கண்டதுண்டமாக வெட்டி, காக்கைக்கும் கழுகிற்கும் விருந்து வைக்கவேண்டும் என்று ஆத்திரப்பட்டான். ஆத்திரத்தால் அறிவிழந்து நல்ல வேளையாக அப்படிச் செய்துவிடவில்லை. கொடுமைகளுக்கெல்லாம் தாய் தந்தையாம் கோபத்திற்குப் பலியாகி, அப்படியே அவன் செய்துவிட்டிருந்தால், கையிலே தங்கச் சங்கலியாம் விலங்கு மாட்டிக் கொண்டு, சிறைச்சாலைக்குச் சொந்தக்காரனாக இருந்திருப்பான்.

ஒரு பெண் மிக இலகுவாகத் தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டு வெற்றியும் அடைந்துவிடுகிறாள். உறுதியான இதயத்தை அரிவையரிடம் பார்க்க இயலாது. சந்தர்ப்பத்திற்கேற்றபடி வளைந்து கொடுக்கும் தன்மையை, பெண்களிடம் பரக்கக் காணலாம். காம போதையில் அவர்கள் உளறுகிறார்கள். மடியில் படுத்துப் புரண்டு, மயக்கு மொழி பேசும் மங்கையர் சொல் கேட்டு, எதையும் துணிந்து செய்து ஆண்கள் முட்டாள்களாகிறார்கள்.

"பகைவனுக்கருள்வாய் நன்னெஞ்சே" கற்ற வழியில் நின்று வெற்றி அடையத் தொண்டைமானால் இயலவில்லை. என்னுடன் பேசுவதையும், அத்துடன் வீட்டிற்கு வருவதையும் நிறுத்திக்கொள் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டான். அதற்கு இளந்திரையன் காரணம் கேட்காமலில்லை. பதிலாகக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டான். அழுதே விட்டாள் முல்லை. வெளியிலிருந்து திரும்பவும் அவள் வந்துவிட்டிருந்தாள். இந்தப் பேதைப் பெண் ஏன் அழுகிறாள்? அமைதியாக ஒருமுறை திரும்பி, அவளைப் பார்த்துவிட்டு இளந்திரையன் போய்விட்டான்.

[அடுத்த இதழில் முடியும்]

பொங்கல் மலர்

விற்பனையாளர்களுக்கு

இந்த ஆண்டுப் பொங்கல் மலர் வழக்கம்போல் 14—1—59-ல் வெளிவருகிறது.

விலை:- எட்டணா

ஏஜண்டுத் தோழர்கள் தங்களுக்குத் தேவையான மலர் எவ்வளவென்பதை 20—12—58-க்குள் தெரிவிப்பதுடன், மலருக்குரிய தொகை முழுவதையும் (கழிவு 25% நீக்கி) 28—12—58-க்குள் இங்கு கிடைக்கும்படி அனுப்பி வைக்கவேண்டும். அதோடு டிசம்பர் பட்டியல் பாக்கி முழுவதையும் 10—1—59-க்குள் அனுப்பவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குறிப்பு:— மலர் ஒன்றுக்கு 12-புதிய காசு கழிவு போக மீதி 38-காசு வீதம் கணக்கிட்டு முழுத் தொகையும் அனுப்பிவைக்கவும்.

"காதலுக்குக் கண்ணில்லை!"

★ "அன்பு" ★

வாலிப வயதில் மிதந்துகொண்டிருக்கும் இளம உள்ளங்களுக்குத் துடிதுடிப்பு அதிகம். அதிலும் பெரும்பாலானவர்களுக்குச் செயலுக்குப் பின்னரே எண்ணம் தோன்றும்; இத்தகையதைச் செய்துவிட்டோமே என்று செய்தவுடன தவறாமல் வருந்துவர்! உடலும் உள்ளமும் ஒருசேரப் பக்குவப்படாதிருத்தலே இத்தகைய துடிதுடிப்பிற்குக் காரணம் என்று பெரியோர் கூறுவர், உடனே தங்களது இளமைப் பருவத்து நிகழ்ச்சிகளையும் சுவைத்துச் சொல்லத் தவறமாட்டார்கள்!

சாதாரண வாலிப உள்ளங்களே இப்படி என்றால் காதலில் சிக்குண்டிருக்கும் இள வயதினர்களைப்பற்றிக் கூறவேண்டியதில்லை. அவர்களது ஒரேகுறி, தங்கள் காதலில் வெற்றி என்னும் இடத்தை அடைந்தே தீரவேண்டும என்பதுதான். இதற்கு நடுவில் அவர்களுக்கு எவை குறுக்கிட்டாலும், அவை அவர்களுக்குப் பொல்லாத எதிரிகள் தான். அவைகள்மீது வெற்றி கண்ட பினனரே தங்கள் காதலில் வெற்றியடையத் துணிவர்.

அவர்கள் மேற்கொண்டிருக்கும் காதல் சரியானதா தவறானதா என்பது வேறு பொருள். ஆனால் அதை அடையும் முறையில் தான் ஏறக்குறைய எல்லா உள்ளங்களும் ஒத்திருக்கின்றன; சிலர் இதற்கு வேறுபட்டுத் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் எவ்வித இன்னல்களும் உண்டாக்கிக் கொள்ளாமல், அதேபோது தங்கள் காதலிலும் வெற்றி உண்டாக்கிக்கொள்வர். இத்தகையவர்கள், பெரியோர்கள் குறிப்பிடுவது போல ஓரளவு உடலாலும் உள்ளத்தாலும் பக்குவப்பட்டவர்களாக இருப்பர். இப்படிப்பட்ட சிறுபான்மையினரைத் தவிர, காதல் விவகாரங்களில் ஈடுபட்டிருக்கும் பெரும்பான்மையினர், முன்பு குறிப்பிட்டதுபோல் துடிதுடிப்பு மிக்கவராகவும், இன்னது செய்துவிட்டோமே என்று செய்த பின்னர் கவலையுறுபவர்களாகவும் தான் இருப்பார்கள்.

அஞ்சுவது அஞ்சாதவர்கள், தங்கள் காதல் வெற்றிபெறச் செய்யாதவாறு நடுவில் நிற்கும் எவரையும் அழித்தொழித்து அவர்கள் அழிவிற்குப்பின், தங்கள் வாழ்வையடைந்து இன்பம் காணுவர். எதற்குமே அஞ்சும் சுபாவம் படைத்தவர்கள், தங்கள் காதல் வெற்றிபெறாது என்று தெரிந்த மறுகணமே, தன்னோடு சம்பந்தப்பட்டிருக்கும் மற்றொரு உயிர் என்ன ஆவது என்றும் யோசியாது, தங்கள் உயிரை நீக்கிக்கொள்வர். இத்தகைய இரு தரத்தினர்க்கும் இடையில், நடுத்தரத்தினர் சிலர் இருக்கின்றனர். அத்தகையவர்கள் காதல்துறையில் தோல்வியுறறதும் வாழ்வில் எத்தகைய பற்றும கொள்ளாது, காதல் பற்றியும் மீண்டும் சிந்திக்காது பற்றற்ற துறவிபோல் நடமாடும்சடலங்களாய்உலவிவருவர். மேற்கூறிய மூவகைப் பிரிவினர்க்கும் தனிமனிதர் முதல், பொது மனிதர்கள் வரை சரித்திரச் சான்றுகள் கூறலாம்.

*

காதலால் சிக்குண்டு, அத்துறையில் நேரிய வழியில் வெற்றி காணத் தெரியாமல் பிறருக்குத் தீங்கிழைத்து, தங்களுக்கும் துன்பம் தேடிக்கொண்ட சில வாலிப உள்ளங்களை இங்கு நோக்குவோம்:

பிரான்சில், ரென்ஸ் என்ற இடத்திலுள்ள 16-வயதுப் பெண்ணொருத்தி, வாலிபன் ஒருவனோடு காதல் கொண்டாள். ஆனால் அவனோ அவளுக்குப் பதினாறே வயதுதான் நிரம்பியிருக்கிறதென்பதைச் சுட்டிக்காட்டி, இன்னும் சிலகாலம் பொறுத்திருக்குமாறும், பின்னர் மணம் செய்துகொள்வதாகவும் உறுதியளித்ததோடு, அதுவரையில் கூடுமான வரையில் அடிக்கடி சந்திக்காமலிருக்குமாறும் வேண்டிக் கேட்டுக்கொண்டான. அவளோ அவனது நல்லுரையைக் கேட்கவில்லை. அவனை அடிக்கடி, வேறு ஏதாவது ஒரு காரணம் காட்டித் தன்னிடம் வரும்படி வைத்துவிட்டாள். அவனுக்கு வாயுத் தொழிற்சாலை ஒன்றில் வேலை. எனவே, தன் வீட்டிலுள்ள வாயுக் குழாய்கள் பழுது என்றும், அதை வந்து சரிசெய்ய வேண்டும் என்றும் அவனது நிலையத்திற்குத் தகவல் அனுப்புவாள். அவனும் வந்து பழுது பார்த்துவிட்டுச்செல்வான். இதன் மூலம் அவர்களது சந்திப்பு நிகழ்ந்துவந்தது! ஆனால் அவளோ பின்னர் வேண்டுமெனறே வாயுக் குழாய்களைச் சேதம் செய்துவிட்டு, அவனது நிலையத்திற்குத் தகவல் அனுப்புவாள் — அவனும் இதுபோல் பதினேழு தடவைகள் வந்து சரிசெய்துவிட்டுச் சென்றான். இதன் மூலம் அவளும் அவனது சந்திப்பைப் பெற்றுவந்தாள். ஆனால் இது வெளி உலகிற்குத்தெரியவே, நீதிமன்றம் இவள் மீது குற்றம் சுமத்தி ஒரு வாரச் சிறை தண்டனையையும் அளித்தது. அவளது இளம் உள்ளத்தின் காதல் துடிப்பையும் உறுதியையும் உணர்ந்த அவளது காதலன் ஓராண்டுக்குப் பின்னர் அவளை மணம் செய்துகொண்டான்.

அமெரிக்காவில் அலபாமா என்ற இடத்தில் வசித்த ஒரு பெண் தன் எதிர்வீட்டில் வசிக்கும் சட்ட நிபுணர் ஒருவரோடு காதல் கொண்டாள். அவர் அவளை விரும்புகிறாரா என்பதை அறியாமல் அவள் அவரை விரும்பினாள். அவருக்கு, தன் உள்ள எழுச்சியைக் காதற்சொற்களாக வரியமைத்து, முடங்கல் விடுத்தாள். இதுபோல் ஒரு மணிக்கு ஒரு கடிதமாக ஒரு நாளொன்றுக்கு பன்னிரண்டு கடிதங்கள் வரை எழுதிவந்தாள். இவ்வளவுக்கும் அச்சட்ட நிபுணர்

அவள் பக்கம் திரும்பியும் பார்க்கவில்லை. அவளோ அடுத்தபடியாக அவரைத் தொலைபேசி மூலம் அடிக்கடி அழைத்துப் பேசினுள். அச்சட்ட நிபுணர் அவளது இவ்வளவு தொந்தரவுகளையும் பொறுத்து வந்தாரே தவிர, அவளது காதலை ஏற்றவராகத் தெரியவில்லை! அவளோ ஊக்கம் குன்ருது தன முயற்சியில் இன்னும் சற்றுச் சிரத்தைகாட்டத் தொடங்கினுள். எந்நேரமும் அவர் கண்களில் படும்படி வெளியில் வந்து நிற்பாள். அப்பொழுதும் இராமபோன் மூலம் காதல் கீதங்களைப் பாடவைத்துக்கொண்டே இருப்பாள். இவ்வாறு இரவும் பகலுமாக அவளது இராமபோன் எழுப்பிக்கொண்டிருந்த காதல்கீதங்கள் அண்டை அயலார்க்குத் துன்பகீதமாக மாறியது. அவள் மீது புகார் இளம்பியது. முடிவாக, அக்குற்றத்திற்காக அவளுக்கு மூன்றுமாதச் சிறைத்தண்டனை தரப்பட்டது. இவ்வளவிற்கும் பிறகுதான் அச்சட்ட நிபுணர், தன் காதலைப் பெறுவதற்காகத்தான் அவள் இத்தகைய செயல்களைச் செய்து துன்பம் தேடிக்கொண்டாள் என்பதை முழுமையாக உணர்ந்தார். அதன் பலனுகத்தான் அவள் அம்மூன்று மாதச் சிறைதண்டனையிலிருந்து விடுதலையான மறுகணமே அச்சட்ட நிபுணரது மனச்சிறைக்கு ஆயுள் தண்டனைக் கைதியாக மாற்றப் பட்டாள்!

"உன்மேல் காதல் கொண்டேன் காரிகையே" என்று, படாத இன்னல்கள் பட்டுத், தான் விரும்பிய மருத்துவத் தாதியின் முகவரியைக் கண்டுபிடித்துக் காதல் நீட்டோலை விடுத்தான் 19 வயதுடைய ஜான் வெர்னர் என்ற ஜெர்மானிய மாணவன். காதல் கடிதத்தோடு ஒவ்வொரு ரோஜா மலரும் உடன் சென்றது. அக்கடிதம் கிழித்தெறியப்பட்டிருக்கவேண்டும்; அம்மலர் கசக்கி எறியப்பட்டிருக்கவேண்டும்! ஏனெனில் அவன் அவளிடமிருந்து தன் எண்ணம்பற்றி, எவ்வித உடன்பாட்டு ஒப்புதலோ, எதிர்மறைப் பதிலோ அடையவில்லை! அவனும் சலிப்படையவில்லை. 13 கடிதங்கள் வரை எழுதிக்கொண்டே இருந்தான்! கடைசியில், கடித முறையில் அவனுக்குத் தோல்வியே இட்டியது. அவன் மனதில் திடீரென ஓர் உபாயம் தோன்றியது. எண்ணத்தைத் திடப்படுத்திக் கொண்டான். கைத்துப்பாக்கியை எடுத்துக் குண்டுகளை நிரப்பினுன். தனது ஒரு காலுக்கு நேராகக் குறிவைத்துச் சுட்டுக் கொண்டான்! எதற்காகச் சுட்டுக் கொண்டானே, அந்த எண்ணம் அவ்வலியைப் பொறுத்துக் கொள்ளச் செய்தது! காலினின்றும் செங்குருதி வடிந்தது. மருத்துவ நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டான். அங்கே இரு செந்தளிர்க்கரங்கள் காயமடைந்த இடத்திற்கு மருந்திட்டுக் கட்டியது! அக்கரங்கள் வேறு யாருடையதுமல்ல; அவன் மனம் கவர்ந்த காரிகையினுடையதுதான்! யாரிடம் நேருக்கு நேர் சந்தித்துப் பழகிக் காதல் கொள்ளவேண்டுமென்று எண்ணினுனே, அவளிடமே மருத்துவச் சிகிச்சை செய்து கொண்டான்! அக்காயம் அவனுகத் தேடிக்கொண்டதுஎன்ருலும், அவன் தேடிய காலியை அதன் மூலம் தானே சந்திக்க முடிந்தது!

அவன் எண்ணம் நிறைவேறியது. எனினும் அவன் தன் காலில் தன்னைத்தானே சுட்டுக்கொண்டதற்காக விளக்கம் தருமாறு நீதிமன்றம் பணித்தது. ஒரு எலியைச் சுடும்போது தன்காலில் எதிர்பாராதவாறுகுண்டுபாய்ந்துவிட்டதாக அவன் கூறிய விளக்கம் கேட்டு நீதிபதி புன்முறுவல் பூத்து, அவனை மன்னித்தார்! ஏனெனில் அவர் அவனது காதலியின் தந்தையல்லவா! பின்னர் அவன் எண்ணம் சுலபமாக நிறைவேறியது!

காதல் தீ என்று சொல்கிருர்கள்; காதலில் சிக்குண்டிருக்கும் உள்ளங்களுக்கு அதில் வெற்றி பெறும் வரையில் உள்ளம் கனலாக எரிக்கும் போலிருக்கிறது! ஆனல் ஒரு காதல் நிகழ்ச்சி உண்மையான தீயிலேயே — தீவிபத்திலேயே—முடிந்திருக்கிறது. மென்டோசா என்ற இளைஞன் ஒரு பெண்ணேடு காதல் கொண்டான். ஒரு நாள் அவனுள்ளத்தில் அன்று எப்படியும் தன் காதலியைச்சந்தித்தாகவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அவளைச் சந்திக்கப்புறப்பட்டான். காதலர்கள் நூலேணி மூலம் சந்தித்துக்கொண்டதாயும், பிரிந்திருப்பவர்கள் தென்றலையும் பறவையினங்களையும் தூது அனுப்பியதாகவும்தான் நாம் இலக்கியங்களில் படித்திருக்கிறோம். ஆனல் இவர்களது சந்திப்பும் தூது அனுப்பும் முறையும் வேடிக்கையாக அமைந்திருக்கிறது.

காதலியைச் சந்திக்கச் சென்ற மெண்டோசா தனது வரவை அவள் எதிர்பாராது நல்ல நித்திரையிலிருப்பதைக் கண்டான்! பிறர் அறியாதவாறு அவளைத் தாழ்ந்த குரலில் அழைத்தான். அவளோ ஆழ்ந்த நித்திரையிலேயே இருந்தாள்! நேரமோ நடுநிசி; உள்ளத்திலோ காதல் பசி. அவள் இன்னும்எழுந்தபாடில்லை. தன்னிடமிருந்த தீக்குச்சியை எடுத்து நெருப்புண்டாக்கி அவளருகில் போட்டான் அப்படியாவது எழுந்திருக்க மாட்டாளா

(12-ம் பக்கம் பார்க்க)

பொங்கல் மலர்

சந்தாதாரர்களுக்கு

இவ்வாண்டுப் பொங்கல் மலரின் விலை ஐம்பது (0—8—0) காசு. எனவே சந்தாதாரர்கள் மலருக்கெனத் தனியாகப் பணம் எதுவும் அனுப்ப வேண்டியதில்லை.

மலரைப் பதிவுத் தபால் மூலம் பெற விரும்புவோர் மட்டும் ஐம்பது காசு (0—8—0) அனுப்பினுல் போதும்.

பொறுப்பாளர்.

சுவைதரும் சொற்கள்

—[தி. தாயுமானசாமி]—

ஒரு மொழியின் உரைநடை இனிமையாகவும், செழிப்பாகவும் வளர்வதற்கு உவமை, அணி இவைகளோடு புதிய புதிய சொற்களும், தொடர்களும் ஏற்படவேண்டும். தினமும் பல புதிய சொற்களையும், தொடர்களையும் தன்பால் ஈர்த்து ஓங்கி உலக மொழியாக விளங்குவது ஆங்கிலம். சரித்திரம் சம்பந்தமான சில நிகழ்ச்சிகளையும், சிறந்த இலக்கியங்களின் பாத்திரங்களுடைய குணசித்திரத்தையும் பயன்படுத்திப் பல கருத்துக்களை எளிய முறையில் வெளிப்படுத்துவதற்கு ஏற்ற முறையில் ஆக்கிக்கொள்ளும் தன்மையில் சிறந்து விளங்குகிறது ஆங்கிலம்.

சமீபத்தில் மொழிப் பிரச்சினை பற்றி எங்கும் விவாதம் நடந்து கொண்டிருக்கையில், அரசியல் சட்டத்தில் காலவரை குறிப்பிட்டிருப்பதைவிளக்குவதற்கு, "டாமஇன்ஸ்ஸின் வாள்" என்ற தொடர் கையாளப்பட்டது. தயாராக இருக்கும் ஒரு ஆபத்தைக் குறிக்கவே இத்தொடர் கையாளப்படுகிறது. கி. மு. 5-ம் நூற்றுண்டில் சிராகஸின கொடுங்கோலன் டையோனிசியஸ் என்பவனுடைய பெரும் புகழும் கண்டு அவனுடைய நண்பன் டாமகின்ஸ் பொருமை கொண்டான். அதையறிந்த டையோனிசியஸ் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்து டாமகின்ஸையும் வரவழைத்தான். விருந்து உண்ணும்போது டாமகின்ஸ் அண்ணுந்து பார்த்தான். குதிரை மயிரில் ஒரு வாள் கட்டித் தொங்க விடப்பட்டிருந்தது! எந்த நேரமும் அது விழுந்துவிடும்போல் இருந்ததால், பயந்துகொண்டு டாமகின்ஸினுல் சரியாகக் கூட விருந்து உண்ண முடியவில்லை. அப்போது டையோனிசியஸ் டாமகின்ஸைப் பார்த்து "நண்பா, என் நிலை இதுதான். எந்த நேரமும் ஆபத்துச் சூழ இருக்கிறது" என்ருன். ஏறக்குறைய இந்தக் கருத்துக்கொப்ப தமிழில் "நித்திய கண்டம்" என்று கூறுவதுண்டு.

எந்த ஒரு பொதுக் காரியத்தைச் செய்தாலும் அதன் தூய்மை குறித்து ஐயம் எழ இடமில்லாமல் செய்யவேண்டும் என்ற கருத்தைக் குறிக்க, "சீஸரின் மனைவி ஐயத்திற்கு அப்பாற்பட்டவளாக இருக்கவேண்டும்" என்று சொல்வதுண்டு. சீஸரின் மனைவி பாம்பியாவையும், கிளாடியஸ் என்ற அரசியல்வாதி ஒருவனையும் இணைத்துக் களங்கம் ஏற்படுத்த முயன்றனர். தீர விசாரித்தபின் பாம்பியா களங்கமற்றவள் என்றே தெரிந்தது. இருந்தாலும் சீஸர் அவளை மணவிலக்குச் செய்துவிட்டான். அதற்கு அவன் கூறினுன், "நான் பாம்பியாமீது ஐயம்கொள்ளவில்லை. ஆனல் சீஸரின் மனைவி ஐயத்திற்கு அப்பாற்பட்டவளாக இருக்கவேண்டும்" இதிலிருந்தே மேலே சொன்ன தொடரை ஆக்கிக்கொண்டனர். தமிழில் 'பனைமரத்தடியிலிருந்து பால் குடிப்பது போல்' என்று கூறுவதுண்டு. பால் குடிப்பவனுக்குப் பனைமரத்தடிதானு கிடைத்தது!

கடுமையான தண்டனைகள் கொண்ட சட்டத்தை "டிராகோனியன் சட்டம்" என்று கூறுவார்கள். கி. மு. ஏழாம் நூற்றுண்டில் டிராகோ என்ற சட்ட நிபுணன் ஏதன்ஸ் மக்களுக்கு முதன் முதலாகச் சட்டங்களை வகுத்துக் கொடுத்தான். ஏறத்தாழ எல்லாக் குற்றங்களுக்கும் கடுந்தண்டனை என்ற தன்மையில் அந்தச் சட்டம் இருந்தது, அடுத்துவந்த அரசியல்வாதி ஒருவன் டிராகோவின் சட்டம் இரத்தத்தால் எழுதப்பட்டது என்று வர்ணித்தான்.

சில கடைக்காரர்கள் அரிதான பொருள் விற்கும்போது, கூடஏதாவது வேறுபொருளையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவார்கள். இதைக் குறிக்க "ஹாப்ஸனின் விருப்பம்" என்று கூறுவதுண்டு. 15-ம் நூற்றுண்டில் ஹாப்ஸன் என்பவன் குதிரை இலாயம் ஒன்று வைத்துக் குதிரைகளை வாடகைக்கு விட்டு வந்தான். அங்கு வருபவர்கள் கதவின் அருகில் எந்தக் குதிரை இருக்கிறதோ அதைத்தான் பெற்றுக்கொள்ள வேண்டும். குதிரையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை அவர்களுக்கில்லை. இதனுல் இலாயத்திலுள்ள எல்லாக் குதிரைகளுக்கும் சவாரி கிடைக்கும் என்று அவன் நம்பிவந்தான். அதிலிருந்துதான் மேலே சொன்ன தொடரை உபயோகப்படுத்துகிருர்கள். ஹாப்ஸனைப் பற்றி மில்லன்கூட இரண்டு நினைவுப் பாட்டுகள் எழுதியிருக்கிருர்.

யாராவது தங்களுக்குச் சிறிதும் சம்பந்தமில்லாத அமைப்புகளின் சார்பாகவோ, அல்லது தங்களைப் பொதுமக்களின் பிரதிநிதிகள் என்று கருதிக்கொண்டோ ஏதாவது காரியம் செய்ய முனைந்தால் அவர்களை "டூலித்தெருவின் மூன்று தையற்காரர்கள்" என்றழைக்கும் தொடர் ஒன்று உள்ளது. இங்கிலாந்தில் செளத்பாக்கில், டூலித்தெருவில் மூன்று தையல்காரர்கள் இருந்தார்கள். அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட சில குறைகளைத் தீர்ப்பதற்குப் பாராளுமன்றத்திற்கு ஒரு மனு கொடுத்தார்கள். அதன் ஆரம்பத்தில் "இங்கிலாந்து மக்களாகிய நாங்கள்......" என்று எழுதியிருந்தார்கள்!

ஒரு பெரிய சிக்கலைச் சுலபமான உபாயத்தால் வென்றுவிடுவதை 'கார்டியஸ் முடிச்சை அவிழ்த்தல்' என்று கூறுவதுண்டு. கார்டியஸ் என்ற குடியானவன் பிரைஜியா என்ற இடத்திற்கு அரசனுக்கப்பட்டான். அவன் அரசனுக வந்தவுடன் தன் வண்டியை ஜுபிடர் தெய்வத்திற்கு அர்ப்பணித்து, அதன் நுகத்தடியை அவிழ்க்க

முடியாத முடிச்சால் வண்டியோடு கட்டிவைத்தான். அந்தமுடிச்சை அவிழ்ப்பவன் கிழக்கு நாடுகளனைத்தும் கொடிகட்டி ஆள்வான் என்று அறிவித்தான். அங்கு வந்த மகா அலெக்ஸாண்டர் அதைக் கேள்வியுற்ருன். உடனேகொஞ்சமும்தாமதமின்றித் தன் கத்தியினுல் அதை அறுத்து முடிச்சை அவிழ்த்தான். இது அவனுடைய உபாயத்தையே குறிக்கிறது.

தாங்க முடியாத செலவுகளைத் தரும் ஒன்றை "வெள்ளை யானை" என்று கூறுவதுண்டு. பட்சட் சமயத்தில் சில செலவினங்களை அப்படிக் குறிப்பிடுவதுண்டு. இதற்கும் ஒரு சம்பவமே காரணம். சையாம் தேசத்து மன்னனொருவன் தனக்குப் பிடிக்காத பிரதானிகளை அழிக்க நினைத்தால் அவர்களுக்கு வெள்ளையானை ஒன்றைப் பரிசாக அளிப்பானும். யார்தான் யானையைக் கட்டித் தீனிபோட முடியும்!

நெப்போலியன் "வாட்டர்லூ' என்ற இடத்தில் தோற்றதால்' யாராவது ஒருவன் ஒரு காரியத்தில் தோற்றுவிட்டால், அவன் தன் "வாட்டர்லூ"வை அங்கு சந்தித்தான் என்று கூறுவதுண்டு. "டன்கிர்க்" என்ற இடத்தில் ஆங்கிலப் படைகள் பின் வாங்கியதால், ஒரு காரியத்தில் ஒருவர் பின்வாங்க நேர்ந்தால் "டன்கிர்க்" ஆனுர் என்று கூறுவதுண்டு.

சில அரிய நூல்களின் கதாபாத்திரங்களைக்கொண்டு சில மனிதர்கள் குணங்களைச் சித்தரிப்பதுண்டு. ஒரு மனிதன் ஒரே சமயத்தில் ஒருபுறம் நல்ல மனிதன் போலவும், மற்ருெருபுறம் கெட்டவனுகவும் நடந்தால் அவனை "டாக்டர் ஜெனகல் அண்டு மிஸ்டர் ஹைடு" என்று அழைப்பதுண்டு. ஆர். எல். ஸ்டீவன்ஸன் எழுதிய டாக்டர் ஜெனகல்அண்டு மிஸ்டர் ஹைடு என்ற நூலில் ஒரு மனிதன் இருவேறு மாறுபட்ட குணங்களுள்ள இரு சித்திரங்களாகச் சித்தரித்துக் காண்பித்திருக்கிருர். "டான் குக்ஸாடிக் என்ற குணசித்திரத்தைப் பற்றி அறியாதவர் இருக்கமுடியாது. ஸெர்வாண்டிஸின் அபூர்வப் படைப்பு "டான் குக்ஸாடிக்" எல்லா விஷயங்களையும் கற்பனை செய்துகொண்டு தாறுமாருக நடக்கும் அதிசயப் படைப்பு. சமீபத்தில் இந்தப் பெயர் சென்னைச் சட்டமன்றத்தில் அடிபட்டது.

இவைகள் தவிர சில புதிய சொற்களும், தொடர்களும் அவ்வப்போது கையாளப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகின்றன. விசாரணையில்லாமல் முதலில் காவலில் வைப்பதை "தடுப்புக் காவல்" என்று சொல்லும் சொல் பிற்காலத்திய கண்டுபிடிப்பே. ஹைதராபாத் மீது இந்தியா நடவடிக்கை எடுத்ததையொட்டி ஐக்கிய நாட்டுச் சபையில் விவாதம் நடந்தபோது சர். ஏ. இராமசாமி அதை "போலீஸ் நடவடிக்கை" என்று வாதித்தார். அதுமாதிரி குறிப்பிடுவது அதுதான் முதல்தடவை. சமீபத்தில் சென்னையில் தடையுத்தரவு குறித்து நடந்த வழக்கொன்றில் நிரந்தரத் தடையுத்தரவைக் குறிக்க "நிரந்தரத் தடை" என்ற பதம் உபயோகிக்கப்பட்டது. அணுகுண்டு சோதனையின் விளைவாக உலக மக்களின் உடல் நலம் பாதிக்கப்படுகிறது என்று குரல் எழும்பியபோது, அமெரிக்கா இனிமேல் சோதனைக்கு "சுத்தமான குண்டு" உபயோகப்படுத்தப் போவதாக அறிவித்தது.

புதிய வார்த்தைகள், தொடர்கள் இவைகளை அப்படியே விட்டுவிடாமல் அடுத்து வரும் அகராதிகளிலும், கலைக்களஞ்சியங்களிலும் ஏற்றித் தகுந்த விளக்கமளித்து விடுகின்றனர். சமீபத்தில் ஆங்கிலேயர்களைப் பற்றி ஒரு அறிஞர் குறிப்பிடுகையில், "உலகத்தில் நாட்டு ஆதிக்கத்தை இழந்த ஆங்கிலேயர்கள் மொழியில் ஆதிக்கம் பெற்றுவிட்டனர்" என்றது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது.

> உன் உள்ளத்தைப் பண்படுத்திக் கொள். அதற்காகக் கானகம் செல்லத் தேவையில்லை. உள்ளமாகிய தனி ஆசிரமத்தில், அந்த மோன குடிசையில் அமர்ந்து அற்ப ஆசைகளுக்கும் அற்ப விஷயங்களுக்கும் இடமளிக்காது உயர்ந்த சிந்தனை செய்.

10-ம் பக்கத் தொடர்ச்சி

என்று! காதல் தீயைத் தணிக்க உண்மைத் தீ தூதுசென்றது! ஆனுல் அவளோ இன்னும் நித்திரை கலையவில்லை. எனினும் அவன் தீத்தூது அனுப்பிக்கொண்டே இருந்தான். ஐந்து நெருப்புக் குச்சிகள் எரிந்துகொண்டே ஒன்றன்பின் ஒன்ருக அவள் படுக்கையருகில் போய் விழுந்தன! ஆருவது குச்சியை எடுத்து நெருப்புண்டாக்கப் போகும் சமயம்...... அவளிருந்த அறையிலிருந்து நெருப்பு வாடை வீசியது! சிறிது நேரத்தில் பெருநெருப்பின் தீ நாக்குகள் விண்ணை நோக்கித் தாவிக்கொண்டிருந்தன. அவ்வீடு முழுவதும் தீ பிடித்துக் கொண்டது. பெற்ருேர்கள் வந்து பார்த்து அலறி, காரணம் அவன்தானெனக் கண்டு, வீடு தீப்பற்றி எரிவதையும் கவனியாது அவன் மீது எரிந்து விழுந்தனர்! தெரு மக்களே கூடிவிட்டனர். ஆனுல் அக்காதலியோ அப்போதும் பாதித் தூக்கத்திலேயே இப்படியும் அப்படியுமாகப் புரண்டுகொண்டிருந்தாள்! காதலனுக்கு ஓர் சந்தர்ப்பம், காதலியை எரி நெருப்பினின்றும் மீட்டுத் தன் உண்மைக் காதலை உலகுக்கு உணர்த்திக்கொள்ள! எனவே நெருப்பினுள் பாய்ந்து தன் காதலியைச் சாவினின்றும் மீட்டு வந்தான். அப்போதுதான் அக்காதலியின் நெடுந்தூக்கம் கலைந்திருக்க வேண்டும்!

காதல் தீயைத் தணித்துக் கொள்ளக் காதலி வீடு சென்ற அவன் மீது உண்மைத் தீயை உண்டாக்கியதற்காகப் பத்து நாள் சிறைவாசம் வாங்கித் தரப்பட்டது! ஆனுல் அக்காதலியோ, வேறு எப்படியோ தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்த வீட்டிலிருந்து, தற்செயலாக அங்கு வந்த தன் காதலன் தன்னை மீட்டுச் சாவினின்றும் தப்புவித்தான் என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தாள்!

உடற்கண்களால் ஒருவரை ஒருவர் நோக்கி உள்ளக்கண்களால் ஒருவர்மீதொருவர் அன்பை வாரி வழங்கிக்கொள்ளும் தூய காதலுக்குக் கண்ணில்லை என்று சிலர் கூறுவது இத்தகையவர்களது செயல்களைக் கண்டுதானே?

★

தற்போழுதுகூட நேர்முக வகுப்புகளில் மட்டும் 700-க்கு மேற்பட்டவர்கள் இங்கிலீஷ் மொழிப் பயிற்சி பெறுகின்ற சென்னையின் மாபெருங் கல்வி அரங்கம்!

The School of English Learning

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.

KNOWLEDGE IS POWER

தமிழ்

எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி

அடிப்படையோடு இலக்கண ரீதியாக திருத்தமான முறையில்

இங்கிலீஷ் தபால் மூலம் கற்கலாம்

சேர்வதற்கு அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து

24–12–58-ந் தேதி

வரை அனுப்பலாம்.

அச்சிடப்பட்ட பாட விளக்கங்கள்

25–12–58-ந் தேதி

முதற்கொண்டு தொடர்ந்து அனுப்பப்பட்டு, கற்கும்போது ஏற்படும் சந்தேகங்களுக்கு முறைப்படி அவ்வப்போது தெளிவுரைகள் வழங்கப்படும்.

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்குவரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும்—சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும். "தபால் மூலம் அனுப்பப்படும் பாடங்கள் ஒரு நீண்ட தொடர் நாவலைப் படிப்பது போன்று ஆர்வத்தை ஊட்டுவதாக இருக்கும்" எனில் மிகைப்படுத்திச் சொல்வதாகாது.

முக்கிய அறிவிப்பு:—

1. 16-வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள்.
2. ஆதாரபூர்வமான ஒப்பற்ற இலக்கணப்பயிற்சி அளிக்கப்படுவதால் ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக்கொள்ளலாம்.
3. இத்தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விவரங்களையும், எட்டு நயே பைசே (8-புதிய காசுகள்) தபால்தலை அனுப்பிப் பெறுக.

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி நல்ல முறையில், உலக மொழியாம் ஆங்கிலத்தைக் கற்க முன்வருக.

அங்கே சுகம்--இங்கே சோகம்

[M. S. வெங்கடாசலம், M. A.]

காடு வெட்டி, மேடு திருத்தி, உரமபல சேர்த்து மண் வளம் பெருக்கி விளைநிலத்தைப் பெருக்கிடுதல்,

ஆறு தேக்கி, அணைகள் கட்டி, வாய்க்கால்கள் வெட்டி, விளைநிலத்துக்கு வேண்டுமான நீரைப் பாய்ச்சிடுதல்,

தேக்கிய நீரினைக்கொண்டு தேவையான அளவு மின்சாரம் உற்பத்தி செய்து, வேளாண்மைக்கும் வேறு பல தொழில்களுக்கும் பயனபடச் செய்தல்,

விளைபொருள்களை விற்றிடவும், வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பிடவும் சந்தை வசதிகள், சாலை வசதிகள்,

வெளியிடங்களோடு தொடர்பு கொள்ளப் புதிய புதிய இரயில் பாதை வசதிகள்,

விரைவில் ஆகாய விமான நிலையமும் நிறுவப்பட இருக்கிறது, ஆகவே அஞ்சாதீர், என்ற உறுதிமொழிகள்,

கைத்தொழில்கள் பெருகிடற்குப் பொருளுதவி,

வாழ்வதற்கு வசதியான வீடுகள்,

சுற்றுப்புறம் காடுகளாயிற்றே! அதனாலே என்ன தீங்கு நேருமோ என்று எவரும் அஞ்சிடத் தேவையில்லை. இதோ அதற்கும் ஆவன செய்கின்றோம் என்று கூறியபடி அதற்காக, மலேரியா தடுப்புப் போன்ற பற்பல பாதுகாப்புகள்,

—இத்தனையும் செய்து தரப்படுகின்றன, அங்கே!

"இத்தனை வசதிகளா செய்து தரப்படுகின்றன? அந்த இன்பபுரி எங்கே இருக்கிறது? அது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட நாடா? அல்லது போர்க்காலத்தில் ஏராளமானபேரைப் பலி கொடுத்துவிட்டு மக்கள் தொகையில்லாமல் கஷ்டப்படுகின்ற பூமியா? அந்தப் 'புண்ணிய பூமி' இருப்பது நாம் வசிக்கின்ற உலகத்தில்தானா? அல்லது சந்திர மண்டலத்திலா?' என்று, சாதாரணமாக அல்ல, சற்றுத் துடிப்போடும் பதட்டத்தோடும் கேட்கத் தோன்றும் நமக்கு!

தங்கிட வீடு
விளைந்திட நிலம்
பிழைத்திடத் தொழில்
வாழ்ந்திடப் பற்பல வசதிகள்
தொடர்புகொள்ளச் சாதனங்கள்

—இத்தனையும் தாராளமாகத் தரப்படுகிறதென்றால், ஆகா, அதுவல்லவா நாடு! பிறந்தாலும் அந்தப் 'புண்ணிய பூமி'யிலல்லவா பிறக்க வேண்டும். நாமும்தான் பிறந்தோம் இந்தத் தமிழ்நாட்டில்! என்னென்னவோ இருக்கின்றனவாம் இங்கே! இரும்பு இருக்கிறதாம்! நிலக்கரி இருக்கிறதாம்! வற்றாத ஆறுகள் உண்டாம், வளம் மிக்க வயல்கள் உண்டாம், காடுண்டாம், கழனியுண்டாம், மலைகளுண்டாம். மற்றும் பல செல்வங்கள் உண்டாம், கடலில் முத்து கிடைக்கிறதாம், காடுகளில் அகிலும், தேக்கும், இன்னபிறவும் கிடைக்கின்றனவாம்! என்ன இருந்து என்ன? நமக்கு வாழ்ந்திட வகையில்லை! கட்டிடக் கந்தை இல்லை! உண்ண உணவில்லை! கட்டாந்தரைதான் பஞ்சு மெத்தை, கருங்கல்தான் தலையணை! நோய்வந்தால் கவனித்திட ஆளில்லை! இங்கிருந்து அணு அணுவாய் மடிந்து கொண்டிருப்பதைவிட, அந்த இன்பபுரி எங்கேயிருந்தாலும்சரி, அங்கேபோய், நம் குருதியை நீராக்கிக் கொட்டித்தந்து, வாழ்ந்திடலாம்!" என்று எண்ணக்கூடியவர் இலட்சக்கணக்கானோர்!

இத்தகையதோர் இன்பபுரி அமைக்கப்பட விருப்பது வேறெங்கோ அல்ல; வடநாட்டில்! — தண்டகாரண்யப் பகுதியில் — ரூ. 100 கோடி செலவில் — 80,000 சதுரமைல் பரப்புள்ள இடத்தில்!

சென்னை மாநிலத்தின் மொத்தப் பரப்பளவே 50,000 சதுர மைல்தான்! ஆனால் அகதிகள் குடியேற்றத்திற்கென முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்லப்படும் பகுதியின் பரப்பு 80,000 சதுரமைல் — ஏறக்குறைய 1½ சென்னை மாநிலம்!

இராமபிரான் திருவடிகள் பட்ட இடமாம் அது—'ஸ்தல புராணம்' பாடப்படுகிறது! இந்த இடத்திற்கு வாரீர், உங்களுக்கு எந்தக் குறையும் இருந்திடப் பொரோம், என்னென்ன வேண்டுமோ, அவற்றையெல்லாம் செய்து தருகிறோம், என்று மன்றாடி அழைக்கிறார்கள் அகதிகளை!

35,000 குடும்பங்கள்—ஏறக்குறைய 1-இலட்சம் பேர்!

இந்த ஒரு இலட்சம் பேருக்கு வாழ்வு அளிப்பதற்காக இந்திய அரசு கொட்டிக் கொடுக்கப் போகிற பணம் ரூ. 100 கோடி—சராசரி கணக்கிட்டால் ஒரு அகதிக்கு ரூ. 10,000 ஆகிறது!

ஆனாலும் இந்திய அரசு வருந்தி அழைக்கிறது "வாருங்கள்! இங்கே வந்து குடியேறுங்கள்" என்று!

அவர்களோ, இயலாது முடியாது, என்கிறார்கள்—ஐந்து ஆறு மாதங்களுக்குமுன் ஆர்ப்பாட்டங்கள் கூட நடத்தினார்கள் வங்கத்தில்!

"வங்கத்தைவிட்டு எங்களை அனுப்பாதீர்கள்" என்ற குரல் எழுப்பப்பட்டது! அகதிப் பெண்கள் பலர் — கோஷக்காரர்கள் தான்—ஆனாலும் சிறை சென்றார்கள், தண்டகாரண்யத்தில் குடியேற்றுவதை எதிர்த்து!

இன்பபுரி அமைத்துத் தரப்படுகிறது அவர்களுக்கு, அங்கே போய்ச் சுகவாசிகளாகக் காலந்

தள்ளலாம், இருந்தும் ஏன் மறுக்கிறார்கள், திட்டத்தைச் சொன்னவுடன் ஏன் கொதிப்படைகிறார்கள் என்ற கேள்வி எழுந்தது எண்ணற்றோர் உள்ளங்களில்!

அந்தக் கேள்விக்குப் பதிலும் கிடைத்தது, ஆறு ஏழு மாதங்களுக்கு முன்னால், மத்திய அரசாங்க அமைச்சர் மெகர்சந்த் கன்னு நிகழ்த்திய பாராளுமன்றச் சொற்பொழிவில்!

"அகதிகளில் பலர் அரசாங்கத்தை இதுவரை ஏமாற்றியே பணம் பெற்றிருக்கிறார்கள்."

"விதவையர் என்று தங்களைத் தாங்களே அழைத்துக்கொண்டவர்களில் பலர் உண்மையிலேயே விதவைகள் அல்ல."

"உற்றார் பெற்றோர் எவருமில்லை என்று பலர் பொய்சொல்லியிருக்கிறார்கள்."

"தாய் ஓரிடத்தில், மகன் ஓரிடத்தில், தந்தை ஓரிடத்தில், இப்படித் தனித்தனியாக அகதிமுகாம்களிலே தங்கினார்கள்."

"சில அகதிகள் கிழக்குப்பாகிஸ்தானிலுள்ள தங்கள் உறவினர்களின் வீடுகளுக்குப் போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருந்தார்கள்."

"சில அகதிப் பெண்களின் கணவர்கள் கிழக்குப் பாகிஸ்தானத்தில் இன்னும் சம்பாதித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களை இந்தப் பெண்கள் அடிக்கடி பார்த்துவந்தார்கள்."

"மற்றும் சில அகதிகள் பெயரை மாற்றிச் சொல்லியே அரசாங்கத்திடமிருந்து உதவிப்பணம் பெற்றார்கள் — அவர்கள் இப்போது எங்கிருக்கிறார்கள் என்றே புரியவில்லை—அந்த வகையில் நஷ்டமான பணம் ஏறக்குறைய ரூ. 20 இலட்சம்."

—இவை அந்த அமைச்சர்—அகதிகளின் புனர்வாழ்விற்காகவே நியமிக்கப்பட்டிருக்கிற அமைச்சர்—அவர் பேசிய பேச்சின் சிற்சில பகுதிகள்!

எப்படியெல்லாம் அரசாங்கத்தை ஏமாற்றி வந்திருக்கிறார்கள் என்பதைக் கேட்டிடும்போது உள்ளம் கொதிக்கிறது!

இப்படி "கணவன்" இல்லையென்று கதையளக்கிறவர்களும் — தனயன் இல்லை, நானோர் அனாதை என்று கூறிவிட்டுத் தண்டச்சோறு சாப்பிடுபவர்களும் —தாயும் தந்தையும் பாகிஸ்தானத்தில் நிகழ்ந்திட்ட கலவரத்தில் இறந்துபட்டனர், நான் தனியனானேன், என்று சரடு விடுபவர்களும், வங்கத்தை விட்டுப் புறப்பட மறுக்கிறார்கள் என்று, அவர்களுக்காகவே நியமிக்கப்பட்டிருக்கின்ற அமைச்சரே கூறுகின்றார்--ஆனாலும் ஓர் இன்பபுரி அவர்களுக்காகவே அமைகிறது!

வெள்ளையன் வெளியேறிய நாள் முதல் இன்றுவரை அகதிக்களுக்காகச் செலவிடப்பட்டுள்ள தொகை ஒரு கோடி, இரண்டு கோடியல்ல, ஐம்பது கோடி, நூறு கோடியல்ல—ரூ. 345 கோடி!!

ரூ. 345 கோடி செலவிடப்படுகிறதென்றால் என்ன பொருள்? நாம் ஒவ்வொருவரும் ஆளுக்குப் பத்து ரூபாய் அகதிகளுக்காகத் தந்திருக்கிறோம் என்று பொருள்—திராவிடத்திலே இருந்துமட்டும், ரூ. 95 கோடி இவர்களுக்கு வாழ்வு அளிப்பதற்காக எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது என்று பொருள்!—இன்னும் ஆளுக்கு ரூ. 3 தர இருக்கிறோம், தண்டகாரண்யத் திட்டத்திற்கு!

வெளிநாடுகளிலேயிருந்து துரத்தப்பட்டு, தமிழர்களும்தான் வந்தார்கள் ஆயிரக்கணக்கில்!

ஓரிரண்டு வாரங்களுக்கு முன்னாலே கூட மலேயாவிலிருந்து ஒரு கப்பல் 1000க்கு மேற்பட்ட தமிழர்களை ஏற்றிக்கொண்டு வந்தது!

அவர்களிலே பெரும்பாலோர் வயோதிகர்கள்! வாழவேண்டுமென்ற ஒரே ஆசையால் தாயகத்தை விட்டுச் சென்று, அங்கே கொதிக்கும் வெயிலிலும் கொட்டும் மழையிலும் இடுப்பொடியப் பாடுபட்டோர்—குருதியை நீராக்கிக் கொட்டித்தந்தோர்; கொள்ளையடித்தவர்களல்ல!

அவர்கள் வயோதிகர்களானார்கள்—இனி அவர்களால் உழைத்திட முடியாது—என்ற நிலை ஏற்பட்டதும், அவர்களைக்கப்பலேற்றி அனுப்பிவிட்டது மலேயா சர்க்கார்!

கடந்த ஆண்டிலேகூட இப்படிக் கப்பலேற்றி ஏறக்குறைய ஈராயிரம் தமிழர்கள் அனுப்பப்பட்டார்கள்!

இங்கே வந்தார்கள், தாய்த்திருநாட்டிற்கு! ஏனென்று கேட்க நாதியில்லை!

இவர்களின் எதிர்காலம்என்ன? எப்படி இவர்கள் வாழப்போகிறார்கள்? பிச்சையெடுப்பார்களா? அல்லது பிழைத்தது போதும், இனி இருந்து அனுபவிக்கப் போவது என்ன என்று முழக்கயிற்றையோ, ஆற்றையோ, குளத்தையோ நாடி, 'அமைதி' தேடிக்கொள்ளப் போகிறார்களா, என்று எண்ணிக் கண்ணீர் வடிக்கின்ற தமிழர்கள் ஏராளம்!

இவர்களுக்கு வாழ்வு அளித்திட வகை என்ன, என்ன என்று கேட்டவண்ணம் இருக்கின்ற இதயங்கள் எண்ணிறந்தன!

ஆனால் அவர்களது நிலையை உணருகிற டில்லி மூலவர்களுக்கு உணர்த்தி, அவர்கள்தம் நிலை உயரப் போராடுகின்ற அரசுதான் இல்லை!

"ஏறக்குறைய 5,000 பேர் வந்திருக்கிறார்களே, இவர்களின் கதி என்ன, இவர்களுக்கு நாம் வாழ்வளிக்க வேண்டாமா, ஆகவே தூய மனம் கொண்டோரே, உங்களால் இயன்றதைத் தாருங்கள்! திருப்பதி உண்டியலிலும், தேவாலயப் பூசைகளிலும் போடுகின்ற பணத்தை இங்கே தாருங்கள், நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்" என்று அரசாங்கம் பொது மக்களுக்கு ஒரு வேண்டுகோள்—உருக்கமான வேண்டுகோள் — விடுத்திடலாகாதா? விடுத்தால் பணம் கிடைக்காமலா போகும்! வடநாட்டு அகதிகளுக்காக நம் ஒவ்வொருவர் கையிலிருந்தும் பத்து ரூபாய் பறிக்கப்பட்டிருக்கிறது, இன்னமும் மூன்று ரூபாய் பறிக்கப்படவிருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்கின்ற எந்தத் தமிழன் நிதியளித்திடத் தயங்குவான்—பின்வாங்குவான்?

இதிலும் ஏன் இந்தக் குறுகிய மனப்பான்மை, என்று கூடக் கூறி ஆட்சியாளர்கள் தப்பித்துக் கொள்ள முயலக்கூடும்!

தமிழ்நாட்டில் மட்டும் ஏன், அகில இந்தியாவிலும் இத்தகையதோர் வேண்டுகோள் விடுக்கட்டும், பாகிஸ்தானத்திலிருந்து வந்திருக்கிற அகதிகளுக்கு நாங்களும் பொருள் தந்திருக்கிறோம், எனவே எங்கள் நாட்டிற்கு வந்திருக்கிற அகதிகளுக்கு நீங்களும் தாருங்கள், என்று வடநாட்டிலும் வேண்டுகோள் விடுக்கட்டும்!

இதை நாம் எடுத்துச் சொல்ல வேண்டி இருப்பதற்கான காரணங்கள் இரண்டு!

ஒன்று:- எப்படிப்பட்ட உருக்கமான. வேண்டுகோள் விடப்பட்டாலும் வட நாட்டிலே இருந்து பணம் பெயராது!

இரண்டு:- அப்படி வேண்டுகோள் விடுமளவுக்கு, தன்மானமும் அகதிகளாக்கப்பட்ட தமிழர்களின் நிலையை உணர்ந்து கொள்ளும் தன்மையும் பெற்ற ஆட்சி இன்று இல்லை தமிழகத்தில்!

எனவேதான் சொல்லுகிறோம் வடநாட்டு அகதிகளுக்கென அங்கே சுகபுரி அமைகிறது— இங்கே சோகம் கப்புகிறது என்று!

அங்கே அமைக்கப்படுகிற இன்பபுரி ரூ. 100-கோடி செலவில் — 80,000 சதுரமைல் நிலப் பரப்பில்—என்பது மட்டுமல்ல!

மன்னர்கள் பலர் தங்கள் மனதுக்கிசைந்த மாதர்களுக்கு மாடமாளிகைகள்! கட்டித் தந்திருக்கிறார்கள் என்று வரலாறு செப்புகிறது! மாடமாளிகை மட்டுமல்ல. அதிலே மலர்த்தோட்டம் அமைத்திட ஒருவர், மஞ்சத்தில் மலர்தூவ மற்றொருவர், மை தீட்டிட, ஒரு தாதி, மங்கை நல்லாளின் கூந்தலை வாரி முடித்திட, மற்றொருத்தி, அடுக்களைக்கு ஒருத்தி, 'அந்தரங்கம்' பேசிட மற்றொருத்தி—துதிபாட ஒருத்தி, தூதனுப்ப வேறொருத்தி — இப்படி எண்ணிறந்தோர் அமர்த்தப் படுவர்!

அதைப்போல், அகதிகளுக்கென அமைத்திடப்படும் சுகபுரியில் — தண்டகாரண்யத்தில் —ஏராளமான பணியாட்கள் ஏற்கனவே இருக்கிறார்கள்.

அந்தப் பகுதியில் இப்போது குடியிருப்போர் தொகை 30-இலட்சமாம்! அவர்களில் 14-இலட்சம்பேர் மலைவாசிகளாம் — ஏறக்குறைய 5-இலட்சம்பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பார்களாம்!

இந்த அகதிகளாலே அவர்களுக்கு ஓரளவு வசதிகள் கிடைக்கின்றன என்ற நன்றியுணர்ச்சியோடு இருக்கப்போகிறவர்கள் அவர்கள்!

அவர்களை "அகதிகள்" எனப்பட்டோர் எப்படி நடத்திடுவர்? எவ்வகையில் அவர்களோடு பழகிடுவர்? என்பதை நம்மாலே எண்ணிப்பார்க்க முடிகிறது!

நாமும் பார்த்திருக்கிறோம் அகதிகளை! அவர்களது மிடுக்கென்ன, நீங்களெல்லாம் எங்களுக்கு சாதாரணம் என்று சொல்லாமற் சொல்லுகின்ற பார்வையின் கூர்மையென்ன!

"அகதி" என்ற பட்டம் எத்தனையெத்தனை அக்ரமங்களுக்கு 'அனுமதித்தாளா'கப் பயன்படுத்தப்பட்டது!

அவர்கள் யாசகம் கேட்ட இடங்களில் ஐந்தோ பத்தோ கொடுத்தால், கொடுத்தவர்கள் தப்பலாம்; இல்லையென்றால் 'சீ இவ்வளவுதானா!' என்ற போக்கில் ஒரு பார்வை — புருவம் மேலே ஏறும் —நெற்றி சுருங்கும் — சிற்சில வார்த்தைகள் — இந்தியில்தான்! அவர்கள் வாழ்த்துகிறார்களா அல்லது வைகிறார்களா என்பது அவர்கள் கண்களிலிருந்து நமக்குப் புரிந்துவிடும்! ஆனாலும் என்ன செய்ய? அகதிகளாயிற்றே!

பிழைத்திட இன்று வழியிருக்கிறதோ இல்லையோ, போற்றற்குரிய பண்பாடு இருக்கிறது நம்மிடம்! தண்டகாரண்யத்தில் உள்ள மலைவாசிகளும், தாழ்த்தப்பட்டோரும், நாகரிகம் இன்னதென்றே அறியாதவர்களாம்!

அவர்களுக்கு நாகரிகமும், பண்பாடும் அகதிகளாலே சொல்லிக்கொடுக்கப்படும், அதன் மூலமாக அவர்கள் முன்னேற்றப் பாதைக்கு இட்டுச்செல்லப்படுவர் என்று தண்டகாரண்யத் திட்டத்தைத் தீட்டியவர்களே குறிப்பிடுகின்றார்கள்!

அவர்களையெல்லாம் பணியாட்களாக நடத்தாமல் "பாரதத்தின் புத்திரரே! எங்கள் சோதரரே! இந்தப் பகுதியின் பூர்வீக குடிகளே! நாமெல்லாம் ஒன்று! ஒரு நாட்டைச் சேர்ந்தவர்கள், ஓரினத்தைச் சேர்ந்தவர்கள்!" என்று அவர்களோடு சமத்துவமும் சகோதரத்துவமுமா போதிப்பார்கள் அகதிகள்?

வீடும் நிலமும், இன்ன பிறவும், வேலைக்கு ஆட்களும், வேறு பல வசதிகளும் கிடைக்கின்றன வடநாட்டு அகதிகளுக்கு!

சுகம் அமைகிறது அங்கே — சோகம் கப்புகிறது இங்கே!

பொங்கலன்று வெளிவருகிறது
அண்ணாவின் அணிவகுப்பில்
புதியதோர் படைக்கலன்!
தென்னகம்
(வார இதழ்)
ஆசிரியர்: K.A. மதியழகன்
தனி இதழ் 16 காசு ... ஆண்டுசந்தா ரூ. 8
முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை
விபரங்கட்கு:
தென்னகம்: சென்னை, 1

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்

திராவிடநாடு

1266

14—12—58 | வார வெளியீடு | விலை 16 காசு

12/4/58 MADRAS

ஓர் வழி

(இளவழகன்)

ஈழத்தில் வாழுகின்ற இன்றைத் தமிழர்
வாடுகின்றார், துன்பம் நாடுகின்றார்,
பாழ்பட்ட பூமியுடை ஈழத்தை நன்னிலம்
ஆக்கினார், கழனியாய் ஊக்கினார்,
வேழமும் வெற்றி வேங்கையும் வாழ்காட்டை
வெட்டினார், முரசு கொட்டினார்,
ஈழத்தைத் தோற்றுவித்த தமிழரை சிங்களவர்
விரட்டுகின்றார், வீணில் மிரட்டுகின்றார்.

என்றுமுள தென்றமிழர் வாழும் தமிழ்நாட்டை
ஆளுகின்ற இன்றை ஆட்சியும்,
இன்றுவரை இலங்கைத் தமிழரிடம் கவலை
கொள்ளவில்லை, சில்லுதவி செய்யவில்லை,
கன்னெஞ்ச நேருவின் புண்ணாட்சி உதவிசெய
மறுக்கிறது, வாழ்வு பறிக்கிறது,
இன்னிலை மாறவே நன்னிலை தோன்றவே
திராவிட விடுதலையே ஓர்வழி.

பாசறையும் பள்ளியறையும்

—[சுகுண]—

கார்காலத்தின் துவக்கம். குறிப்பிட்ட காலத்தில் திரும்பி வருவதாக உறுதிகூறிச் சென்ற தலைவன் இன்னும் திரும்பவில்லை. பகை நாட்டின் மேற் படையெடுத்துச் சென்ற தலைவனுக்குத் தலைவியின் நினைவு இல்லாமல் இல்லை. மறக்குல வீரனுக்கு, காதலும் வீரமும் இரண்டு கண்கள் தானே! அவற்றுள் ஒன்று பாதிக்கப் படும்போது, வருத்தமளிக்கும் கண்ணின் மீது கவனம் செல்லுமே தவிர, நல்ல கண்ணின்மீதல்ல. அப்படித்தான் தலைவன் நிலையும்.

தலைவன் உள்ள இடமோ பாசறை. அதனுள் அமைக்கப்பெற்ற கூடாரத்துள் தலைவன் படுத்துக்கொண்டுள்ளான். கூடாரத்தினைச் சுற்றி மெய்க் காப்பாளர்கள் காவல் புரிகின்றனர். குழல் அசைந்தாடும் அழகிய முதுகினையுடைய மங்கைப் பருவத்துப் பணிப்பெண்கள், இரவைப் பகலாக்கிக் காட்டும் ஒளி பொருந்திய வாட்களை இடையில் செருகிய வண்ணம், அங்கு ஏற்பட்ட மணி விளக்குகள் அவியுந்தோறும் அவற்றை ஏற்றிக் கொண்டுள்ளனர்.

தலைவன் படுக்கிறான், உறக்கம் வந்தால்தானே? மறுநாள் செய்ய வேண்டியிருக்கும் பெரும் போர், புண்பட்ட யானை, குதிரைகள், இறந்துபட்ட வீரர்கள் — இந்த நினைவின் நடுவே உறக்கம் எங்கிருந்து வரும்? ஒரு கையைப் படுக்கையின் மேல் ஊன்றி, மறுகையைத் தலையின் கீழ் வைத்துப் படுத்துக்கொண்டுள்ளானே தவிர, உறங்கவில்லை தலைவன்.

மறுநாள்...! போரில் வெற்றி காண்கின்றான் தலைவன். தேனெனத்தித்திக்கும் சேதி, 'வெற்றி'யென்ற இன்ப ஒலி, தலைவனின் செவிகளில் பாய்கின்றது. பகையரசர் நடுங்க அவன் பாசறைக்கண் வெற்றி முரசம் முழங்குகின்றது.

நேற்றிருந்த, உள்ள அலைச்சல் இன்று இல்லை. நிம்மதியான பெருமூச்சுக்கள் வெளிவந்தன. தலைவியின் நினைவு இப்போதுவராது இருக்குமோ தலைவனுக்கு? இனிய நினைவுகள், தலைவியைப்பற்றித்தான். திடீரெனச் சென்றதும், ஊடல் புரியப்போகும் தலைவியின் முகம்தான் எவ்வளவு அழகு பொருந்தியது!

அழுதழுது அவள் கன்னங்கள் கோவைக் கனிகளாகிவிட்டனவோ என்னவோ! வீர முகத்தைக் கண்டதும் உள்ளம் மலர்ந்து முகமும் மலரத்தானே போகின்றது! மறுநாள் மாலையில் தலைவியைக் காணலாம் என்ற மகிழ்ச்சியில் தன் பாசறைப் பள்ளியில் இனிய துயில்கொள்ளுகின்றான் தலைவன்.

வீரத் தலைவனது பாசறையமைப்பையும், வெற்றி முரசங் கொட்டுதற்கு முன்னாள் தலைவன் இருந்த நிலையினையும், வெற்றி பெற்றதும் தலைவியை நினைத்து இனிய உறக்கம் கொள்ளும் நிலையினையும் முல்லைப்பாட்டில் ஆசிரியர் நப்பூதனார் கூறும் அழகே ஓர் தனிச் சிறப்பு வாய்ந்ததாகும்!

'வைந்நுனைப் பகழி மூழ்கலின் செவிசாய்த்து
உண்ணுது உயங்கும் மாசிந்தித்தும்,
ஒரு கை பள்ளி ஒற்றி ஒருகை
முடியொடு கடகம் சேர்த்தி நெடிது நினைந்து
பகைவர்ச் சுட்டிய படைகொள் நோன்விரல்
நகை தாழ் கண்ணி நல்வலம் திருத்தி
அரசு இருந்து பனிக்கும் முரசு முழங்கு
பாசறை''

(வைந்நுனைப் பகழி— கூரிய முனையினுடைய அம்புகள்.)

நாளை தலைவன் வெற்றிமுரசம் கொட்டி வரப்போவது தலைவிக்கு எப்படித் தெரியும்? கார்காலம் வந்துவிட்டது என்பதை பறைசாற்றுவதைப் போன்று, முதற்பெயல் பொழிந்து கொட்டுகின்றது. கார்காலத் துவக்கத்தில் வருவதாகக் கூறிச் சென்ற தலைவன் இன்னும் வரக்காணேமே என்ற ஏக்கம் தலைவிக்கு. தலைவியின் துயரோ சொல்லுந் தரமன்று. பிரிவாற்றுமையின் கொடுமை தாளாது அழுது அழுது வருந்துகின்றாள் தலைவி. உடன் வாழும் பெண்டிர் எவ்வளவோ ஆறுதல் கூறுகின்றனர். வந்துவிடுவான் தலைவன் என்று கூறித் தேற்றுகின்றனர். ஆனாலும் தலைவியின் உள்ளம் கேட்டால்தானே! ஆறுதல் கூறக் கூற வருத்தம் மிகுதல் இயல்புதானே! மலர் போன்ற கண்களினின்றும் முத்துமுத்தாகக் கண்ணீர்த் துளிகள் கொட்டுகின்றன.

தனிமையின்கொடுமையிலுங்கூடப் பிரிவின் கடமையை உணர்ந்து ஒருவாறு உள்ளம் தேற்றிக் கொள்கின்றாள். ஊணின்றி உறக்கமின்றி உடல் வாடிவிட்டது.

கழன்று விழும் வளைகளைச் சரிப் படுத்திக் கொள்கிறாள். மீண்டும் பிரிவின் வேதனை சூழ்ந்துகொள்ள, அம்பு தைத்த மயில்போல் நடுங்க, நடுக்கத்தால் மீண்டும் அணிகலன்கள் நெகிழப் படுக்கையில் கவலையுடன் கிடக்கிறாள் தலைவி.

எழுநிலை மாடத்தில் வாழ்ந்துதான் பயன் என்ன? பொன்னாலும் மணியாலும் சிறந்து விளங்கும் மாளிகைதான். மாலை நேரமாகிவிட்டதால் படுக்கையறையின் ஓர் பக்கத்தில் பாவை விளக்கு எரிகின்றது. இருந்தும் தலைவிக்கு உறக்கம் கொள்ளவில்லை.

உறக்கம் வராது வாடும்போது கார்காலத்தில் முதற் பெயல் பொழிதலினால் கூடல்வாய்களில் மழை நீர் வெவ்வேறுஒலிகளுடன் அருவிபோல் ஒழுகுகின்றது.

அவை தன் செவிகளில் விழ, உள்ளம் தலைவனின் வரவை எதிர்நோக்கிக் கிடக்கின்றது. ஒழுகுநீர் வரும் ஓசையுடன் மற்றோர் ஓசையும் கேட்கின்றதே, அது என்ன? குதிரைகளின் குளம்பொலி, தேரின் மணிச்சத்தம், வெற்றிப்பண், ஆம், தலைவன் வருகிறான் —வெற்றிக் கீதமிசைத்து வருகிறான் தலைவன். சந்தேகமேயில்லை. தெளிவாகக் கேட்கின்றதே ஒலி!

தலைவியின் அகச் செவி நிரம்பும்படி தலைவன் வருகின்ற தேரிற் பூட்டிய குதிரைகள் திடுமென ஆரவாரித்தன.

பாசறையில் தலைவன் நிலையை விவரித்த ஆசிரியர் எழுநிலை மாடத்தில் தலைவி வாடும் நிலையினையும் அழகாகச் சித்தரித்துச் காட்டுகின்றார்.

அங்கு பாசறை, இங்கு படுக்கையறை, அங்கு மணிவிளக்கென்றால் இங்கு பாவைவிளக்கு, அங்கு போரின் ஒலியைக் கூறினார், இங்கு மழை நீர் கூடல் வாயில் ஒழுகும் ஒலியைக் கூறுகின்றார்.

''இன்துயில் வதியு நன் காணுள் நுயர்உழந்து
நெஞ்சு ஆற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடு நினைந்து தேற்றியும் ஓடுவளை திருத்தியும்
மையல் கொண்டும் ஒய் என உயர்த்தும்
ஏஉறு மஞ்ஞையின் நடுங்கி இழை நெகிழ்ந்து
பாவை விளக்கின் பரு உச்சுடர் அழல
இடம் சிறந்து உயரிய எழுநிலை மாடத்து
முடங்கு இறைச் சொரிதரு மாத்திரள் அருவி
இன்பல் இமிழ் இசை ஓர்ப்பனள் கிடந்தோள்
அஞ்செவி நிறைய ஆலின;.........
....
வினை விளங்கு நெடுந் தேர்பூண்ட மாவே''

[நிறைதபு புலம்பு— நிறைகெடுதற்கு ஏதுவான தனிமை. ஏவுறு மஞ்ஞையினடுங்கி—அம்புதைத்த மயில்போல் நடுங்கி. அஞ்செவி—அகச்செவி.] ★

சுதந்திரத் தீ!

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [14-12-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் :

ஆயுதங்கள் வேண்டாம் நமக்கு; அன்பு முறைகள் போதும்!

இரத்தக்களரி ஏற்படவேண்டாம்; இதய பலம் அதிகமானல் போதும்!!—என்று, இந்தக்கிழமை, ஆபிரிக்காவிலுள்ள 25-சிறு நாடுகளின் விடுதலைத் தூதர்கள் அடங்கிய மாநாடு ஒன்றினைக் கூட்டி, முழக்கமிட்டிருக்கிறார் டாக்டர் நிக்ருமா. இவர் ஆபிரிக்காவிலுள்ள சிறு நாடாம் கனவின் பிரதமர்.

தன்னைவிட மூன்று மடங்கு பெரிதான ஆபிரிக்காவை, ஐரோப்பா, பன்னெடுங்காலமாகவே அடிமையாக வைத்து வருகிறது. காலனி ஆதிக்கமும், ஏகாதிபத்திய வெறியும், ஆபிரிக்காவை என்ன பாடு படுத்தி வருகின்றன என்பதை உலகம் அறியும். குடியேறிய வெள்ளையர், தென் ஆபிரிக்காவில் நடாத்திடும், நிறவெறியின் அளவு நெஞ்சைக் குமுறச் செய்யும்! நிறவெறி மட்டுமல்ல, தள்ளாடும் பிரான்சு ஆபிரிக்காவில் தனக்கென ஒரு காலனி ஆதிக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு, கும்மாளம் போட்டு வருகிறது. இந்தக் கொடுமையினை ஒழித்து, ஆபிரிக்காவிலுள்ள ஒவ்வொரு பகுதியினரும், தன்னாட்சி பெற வேண்டுமென வீராவேசம் கொண்டுள்ளனர், தலைகள் வீழ்த்தப்பட்டாலும், பீரங்கிகள் சுட்டாலும், தயங்கோம் எனப் போராடுவோர் ஒருபுறம்; பயங்கர இயக்கங்கள் துவங்கி அதன் மூலமாவது விடுதலை பெற மாட்டோமா என்று பாடுபடுவோர் இன்னொரு பகுதியில்; உரிமைக் கிளர்ச்சிகள் நடத்தி அப்படியாவது ஆதிக்கங்களை அகற்றப் பார்ப்போம் என்று முயற்சிப்போர்—இப்படி, ஆபிரிக்காவின் பல பகுதிகள், இன்று 'அனல்' கக்கும் இடங்களாக இருந்துகொண்டிருக்கின்றன! சிலசில இடங்கள், ஓரளவுக்காவது, சுதந்திரம் பெற்று வருகின்றன— கடந்த ஓரிரு ஆண்டுகளில்.

இப்படி உரிமைத்தாகம் கொண்ட 200க்கு மேற்பட்ட பல பகுதித் தூதுவர்களையும் இந்தக்கிழமை 'அக்ரா' எனுமிடத்திலே கூட்டியிருக்கிறார் நிக்ருமா! ஓடு ஆபிரிக்காவைவிட்டு— அந்நிய ஆதிக்கம் ஒழிக— எனும் முழக்கங்கள் பொறிக்கப்பட்ட அட்டைகள் தொங்க, ஆர்வக்கடலாகக் காட்சியளித்ததாம், மாநாடு கூடிய மண்டபம். அழகு செய்யப்பட்டிருந்ததாம், ஒரு ஆபிரிக்காவின் நிலப்படம்போட்டு! சுதந்திரத் தீ, எரிவதாக அந்தப்படம் வரையப்பட்டிருந்ததாம்!!

உண்மையில், இன்று எங்கெங்கு விடுதலைக்குரல் ஓயாமல் ஒலித்துக்கொண்டிருக்கிறது என்று பார்த்தால், ஆபிரிக்காவில் கிடக்கும் பல இடங்களே, கண்முன்னால் தெரியும். அவைகளின் உணர்ச்சிக்குரலை ஒலித்திருக்கிறார், டாக்டர் நிக்ருமா. அந்த மாநாட்டில் அவர் கூறியுள்ள ஒரு சொல், மிகவும் ஆழமானது; விடுதலை விரும்பிகள் எண்ணிப்பார்க்க வேண்டியது.

விடுதலை கேட்கிறோம்! தன்னாட்சி பெற்று, அந்நியன் பிடியின்றி வாழ விரும்புகிறோம்! இதனால் என்ன நஷ்டம்? எதை நாம் இழந்துவிடப்போகிறோம்?—ஓ! ஓ! உங்களுக்குப் பெருமையிலாது போய்விடும், பெரிய நாடு என்கிற அழகு இல்லாமற் போய்விடும், அந்நிய உதவி கிடைக்காமற் போய்விடும், என்று மிரட்டுகிறார்கள், ஆதிக்கம் செலுத்துவோர்.

ஆதிக்கம் செலுத்துவோரின் தாசர்களாயிருப்போரும், "ஆம்! ஆம்! அதெல்லாம் கிடைக்காமற் போய்விடும். ஆகவே, இப்படியே நத்தியும் தொத்தியுமே வாழ்ந்துவிடுவோம்," என்கின்றனர்.

"அல்ல! அல்ல! — சுதந்திரம் பெற்றால், நாம் இதையெல்லாம் இழந்துவிடமாட்டோம். இப்படியெல்லாம் சொல்வது தவறு"—என்று சொல்கிறார் நிக்ருமா, மிகமிகச் சிறு நாட்டுக்காரர். திராவிடத்தைவிட எவ்வளவோ வளங்குறைந்த பகுதியை உடையவர். பலருடைய தயவை எதிர்பார்க்கவேண்டிய கட்டத்திலிருப்பவர். அவரே சொல்கிறார், எதையும் இழந்துவிடமாட்டோம்—எதை இழப்போமென்றால், நம்மைக் கட்டிப் பிணைத்திருக்கிறதே சங்கிலி, அதை மட்டுந்தான் இழப்போம் என்று!!

நினைத்துப் பார்த்திடின், அந்த அடிமைச் சங்கிலி ஒன்றுதான் அகலுமே ஒழிய, வேறென்ன போய்விடும்? சங்கிலி விடுபட்டு, தன்னிச்சையாக உலவும் நிலை உண்டானல் ஆடலாம், ஓடலாம், நம்மை நாம் காப்பாற்றிக்கொள்ளலாம், இன்பமாக வாழலாம்! இப்படித்தான் இருக்கின்றன அடிமைச் சங்கிலிகளை அறுத்தெறிந்த ஒவ்வொரு நாடுகளும்!! சங்கிலி, பொன்னாலானதாக இருந்தாலும், கட்டப்பட்டிருப்பது நம்உடல்தானே! இரும்போ, பொன்னோ சங்கிலி சங்கிலிதானே! அது இருப்பதால் என்ன பெருமை!!

நிக்ருமாவின் இந்தச் சொல், நமக்கும் பொருந்தும் — திராவிடநாடு கிடைத்துவிட்டால், எதையெதையோ இழந்துவிடுவோம் என்கிறார்களே, அவர்களுக்கும் பொருந்தும். ஒருநாடு விடுதலை பெறுவதால், இலாபம் அடையுமே ஒழிய, இழக்கப் போவது ஒன்றே ஒன்றுதான் — அது, அடிமைச் சங்கிலிதான்! அந்தச் சங்கிலியால் கட்டப்பட்டு இருப்பதா பெருமை? அல்லவே!! ●

கபீர் செய்யும் காலட்சேபம்!

அவர் அறிஞர்! பல்கலைகளையும் கற்றவர்!!—அதனால், டில்லி அரசின், கலாச்சார விஞ்ஞான அமைச்சராக இருக்கிறவர்.

காலட்சேபம் செய்கிறார்! அதுவும், கலைபயில் கழகத்தில்!!

கபீராவது, காலட்சேபம் செய்யவாவது என்பீர்கள்! ஆமாம் தோழர்களே, ஆமாம் ஹுமாயூன் கபீர் தான், பாகவதப்பிரசங்கிபோல் காலட்சேபம் நடத்தியிருக்கிறார்!!

அலிகார் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவுக்குச் சென்றார், பேசினார். பேச்சா அது! அல்ல, அல்ல--பிரச்சார முழக்கம்! கதா காலட்சேபம்!!

மாணவர் மத்தியிலே, அரசியல் நுழையக்கூடாது என்கிறார்கள். எது அரசியல்? — கருத்து மாறுபாடுகள் உண்டு. எனினும், கல்வி தவிர ஏனைய கருத்துக்களை மாணவர்தம் மனதில் புகவிடக்கூடாது, என்கிறார்கள், காங்கிரஸ் தலைவர்கள்.

அமைச்சர் இவர்! சென்றது பட்டமளிப்புக்கு! பேசியது எதைப் பற்றித் தெரியுமா? ஆரியர்—திராவிடர் பற்றி!!

'திராவிடம்'-என்றொரு சொல்லை இங்கிருக்கும், பேராசிரியர்கள் வகுப்பறையில், கொஞ்சம் அன்போடு உச்சரித்துவிட்டதாகத் தெரிந்தாலே, 'கனம்' சுப்பிரமணியம் கனைப்பார்; கல்லூரி பாழாகிவிட்டது என்பார்! ஏனையோரையும் கூட்டிவைத்து, சமரச போதனைகள் நடாத்தி, சன்மார்க்க வழி காண வேண்டுமெனத் துடிப்பார்!!

ஆரியர் — திராவிடர்பற்றி, அமைச்சர் கபீர், பேசிய இடம் மாணவர் மண்டபத்தில்! பட்டம் பெற்றோர் 'நூறு' பேர் எனின், படிப்போர்தான் அங்கே ஆயிரக் கணக்கில் கூடியிருந்திருப்பர்; ஆரியர் திராவிடர்பற்றிப் பேசுகிறார் அமைச்சர்.

திராவிடர்கள் யார்? ஆரியர் வருமுன்பே நாகரிகத்துடன் வாழ்ந்தவர்கள்!! இதனை, இராமாயணமும், மகாபாரதமும் சொல்கிறது.

தெற்கிலும், கிழக்கு இந்தியாவிலும் இந்தத் திராவிடர்கள் என்போர் இருந்தார்கள்.

விளக்கமளிக்கிறார், கபீர்! நான் சொல்லவில்லை—சரித்திரம் இப்படிச் சொல்கிறது என்கிறார்!!

அலிகார் பல்கலைக் கழகத்துப் பட்டமளிப்பு விழாவில், அன்பருக்கு இந்த 'பிரச்னை' தானா பேசக் கிடைத்தது? வளரும் விஞ்ஞானம், எதிர்காலக்கடமைகள், படிப்போர் ஆற்றவேண்டிய பணிகள், இவை பற்றிப் பேசாமல் ஏனிந்த 'ஆரிய திராவிடம்' கவனத்துக்கு வந்திருக்க வேண்டும்!!

அந்தளவுக்கு இன்றையதினம்' இந்தப் பிரச்னை, உருவெடுத்திருக்கிறது. ஆரியமாவது, திராவிடமாவது என்றோர்கூட, நிதானித்துப் பேசவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

மறுத்தார்கள் முன்பு! மறைத்தார்கள் கொஞ்சக்காலம்! இப்போது ஒத்துக்கொள்கிறார்கள்; அதேசமயத்தில், புதுவித போதனையும் செய்கிறார்கள்.

திராவிடம் சிறந்து இருந்தது, சரி! அதற்குப் பின்னால் ஆரியம் வந்தது, சரி!!—ஆனாலும், இரண்டும், ஒன்றாய்க் கலந்து போய்விட்டது — இன்று யாராலும் பிரிக்க முடியாது என்கிறார்கள்.

இது ஆரியமா அல்லது திராவிடமா!!—என்று யாரும், இந்தப் பரிசோதனைக்குப் போக விரும்பவில்லை. அது தேவையுமில்லை. ஆரியம், திராவிடம் என்பது, இரண்டு பண்பாடுகளுக்கிடையேயுள்ள வேற்றுமைகளை எடுத்துக் காட்டும் சொற்களாகிவிட்டன. அந்த வேற்றுமைகள் உண்டா! இல்லையா!!

ஆரியமும் திராவிடமும் கலந்துவிட்டது என்றால், பூணூலேன ஒருசாராருக்கு? புரியாத மொழி ஏன், வீட்டில் வேதமோத? புண்ணிய மொழி சமஸ்கிருதத்தில் ஓதினால்தான் ஆண்டவனுக்குப் புரியும் என்கிற வித்தை ஏன்? பஞ்சகச்சம் ஏன்? தனி இடம் ஏன்? தாங்கள் எல்லாம் ஒரு தனிக்கூட்டம் என்கிற நினைப்பேன்? — 'கலந்து'விட்டது என்போர் கவனிக்கவேண்டும்! இந்தப் பிரிவினைகள், சமுகத்தில் இல்லாமலா உள்ளன!!

"செச்சே! இதையெல்லாம் யார் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நான் தமிழ்தான் பேசுவேன். பூணூல் போடமாட்டேன்," என்போரும் உண்டு. அவர்களைப்பற்றி நமக்குத் தொல்லையில்லை. அவர்கள் ஆரிய முறைகளை விட்டுவிடின், நமக்கு எவ்விதப் பிரச்னையுமில்லை. ஒரு பக்கம், ஆரியமொழி ஆரியமுறைகள், ஆகியவைகளுக்கு வெண்சாமரம் வீசப்படுகிறது! இன்னொரு பக்கம் ஆரியமும் திராவிடமும் கலந்துவிட்டது என்று பேசப்படுகிறது!!

எங்கே கலந்துவிட்டது இரண்டும்? கலந்துவிட்டதெனின் சாதிப் பாகுப்பாடுகளை உண்டாக்கும் வர்ணாசிரம தர்மமும், அந்த முறைப்படி அய்யரே மேல்சாதி என்கிற வாதமும் ஒழிந்திருக்க வேண்டுமே? எங்கே ஒழிந்திருக்கிறது! இன்னும் சமுகத்தில், யார் ஆரியர்கள் எனக் குறிக்கப்படுகிறார்களோ, அவர்கள்தானே முன்னிலையிலிருக்கின்றனர்! முதல் 'தாம்பூலம்' பெறுகின்றனர்!!

(14-ம் பக்கம் பார்க்க)

வாழ்வளியுங்கள்

இமயம் முதல் குமரி வரை ஒரே நாடு! இதில் எந்தப் பிரிவினையும் இடையாது. பிரிவினை கேட்பவர்கள் துரோகிகள், காட்டுமிராண்டிகள் எனக் கர்ச்சிக்கும் பண்டிதர் ஆட்சியிலே ஆசிரியர்கள் ஊதியத்திலே மட்டும் ஏன் இவ்வளவு உயர்வு தாழ்வு? ஏன் இத்தனை பிரிவுகள்? மாநிலங்களுக்கு மாநிலம் ஏன் இந்த வித்தியாசம்? ஒரே கல்வி, ஒரே பணி, ஒரே நாட்டில் இருப்பவர்கள். ஒரே அரசின் கீழ் வாழ்பவர்கள். எல்லோரும் பாரதமாதாவின் புதல்வர்கள் தானே! அப்படி இருக்க, பிரிவினை காட்டலாமா நேரு அவர்கள்.

வடமாநிலங்களில் உள்ள ஆசிரியர்களை விட, தென் மாநிலங்களில் உள்ள ஆசிரியர்கள் குறைந்த ஊதியத்தின் கீழ் பணியாற்றுகின்றனர். அதிலும் தமிழ்நாட்டிலுள்ள ஆசிரியர்களுக்கு மிகக் குறைந்த ஊதியம் கொடுக்கப்படுகின்றது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டு ஆசிரியர்கள்தான் மிகமிகக் குறைந்த ஊதியம் பெறுகின்றனர். வேறு எந்த மாநிலத்திலும் இவ்வளவு குறைந்த ஊதியம் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இதை நமது கல்வி அமைச்சர்கூட மறுக்கமுடியாது. வடக்குவாழ்கிறது, தெற்குத்தேய்கிறது என்று சொல்லுவதில் என்ன தவறு? தமிழ்நாட்டு ஆசிரியர்கள் உழைக்கவில்லையா? மற்ற மாநிலங்களைவிட இங்கு கல்வியின் தரம் உயரவில்லையா? ஏன் தமிழ்நாட்டு ஆசிரியர்களுக்கு மட்டும் குறைந்த ஊதியம் கொடுக்கவேண்டும்? பஞ்சசீலம் பேசும் பண்டிதருக்கு இது தெரியாதா?

தென்னிந்திய மாநிலங்களில் ஆசிரியரது சம்பள விகித அமைப்பு அரசியலார் பள்ளிகளில் மட்டும் 1957ல்,

ஹையர்கிரேடு ஆசிரியர்:
தமிழ்நாடு ரூ 30 to 45
கேரளம் ,, 40 to 80
மைசூர் ,, 40 to 80

செகண்டரிகிரேடு ஆசிரியர்:
தமிழ்நாடு ரூ. 45 to 90
கேரளம் ,, 60 to 120
மைசூர் ,, 50 to 100

இதிலிருந்து தமிழ்நாட்டு ஆசிரியர்கள் எவ்வளவு குறைந்த ஊதியம் வாங்குகின்றனர் எனச் சொல்லாமலே தெரியும். அரசினர் பள்ளிகளிலே இவ்வளவு குறைந்த ஊதியம் என்றால், பிற நிர்வாகங்களில் உள்ள ஆசிரியர்களின் ஊதியத்தைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

கோ. சனுர்த்தனன்

தமிழ்நாட்டில் கல்விப் பணி ஏற்று நடத்திவரும் நாட்டாண்மைக் கழகம், நகராண்மைக் கழகம், அரிஜனப் பள்ளி (லேபர் ஸ்கூல்) T. E. L. C. பள்ளிகள் (மிஷன் நிர்வாகத்தில் உள்ளவை) இந்த நிர்வாகத்தின் கீழ் பணியாற்றும் ஆசிரியர்களுக்கிடையே பலதரப்பட்ட சம்பள உயர்வு, தாழ்வுகள் உள்ளன. யாவரும் செய்வது ஒரே பணிதான். இருப்பினும் ஏன இந்தப் பிரிவினை? ஏக இந்தியாவில் இருக்கலாமா இந்த அநீதி?

தமிழ்நாட்டில் உள்ள ஆரம்ப ஆசிரியர்களிலே மிகமிகக் குறைந்த ஊதியம் வாங்குபவர்கள் தனியார் துறைப்பள்ளி ஆசிரியர்களும், ஊராண்மைக்கழகப பள்ளி ஆசிரியர்களும்தான. தனியார் துறைப் பளளி ஆசிரியர்களுக்கு ரூ. 30 to 33. ஊராண்மைக்கழகப் பள்ளி ஆசிரியர்களுக்குரூ. 30 to 33 இந்தக்குறைந்தவருவாயில் இந்தக் காலத்தில் ஒரு குடும்பம் நடத்த முடியுமா? ஆட்சியாளர்கள் சிந்திக்கா விட்டாலும், நீங்களாவது (பொதுமக்களாவது) சற்றுச் சிந்தித்துப் பாருங்கள், உண்மை விளங்கும்.

ஒரு ஆசிரியர் ஊராண்மைக் கழகப்பள்ளிக்கோ அல்லது தனியார் துறைப்பள்ளிக்கோ பணியாற்ற அமர்ந்தால் அந்த ஆசிரியருக்கு ரூ. 30/- அடிப்படைச் சம்பளம் (Basic Pay) கொடுக்கப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு எட்டு அணா வீதம் ஆறு ஆண்டுகளுக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்படுகிறது. ஒரு ஆசிரியர் 20 வயதில் பணியாற்ற அமர்ந்தால் 60 வயது வரை பணியாற்றி வரலாம். இந்த 40 வருட காலத்தில் வாங்கும் உச்சசம்பளம் 33 ரூபாய்தான். சம்பளம், பஞ்சப்படி, இடைக்கால சம்பள உயர்வு எல்லாம் சேர்த்து ஓய்வுபெறும் வரை வாங்கும் சம்பளம் (33—19—12=64) இதுதான். இடைக்கால சம்பள உயர்வு நிலையானதல்ல, நினைத்தால் நாளைக்கே எடுத்துவிடலாம்.

இந்த வருமானத்தைக் கொண்டு தண்ணீர் முதல் எல்லாவற்றையும் விலை கொடுத்து வாங்கித்தான் வாழவேண்டும். நெல் மூட்டை ரூ. 20 விற்கிறது. (தமிழ்நாட்டுச்சரித்திரத்திலே இவ்வளவு விலை ஏற்றமாக விற்றது கிடையாது) அரிசி ரூபாய்க்கு ஒருபடி கூடக் கிடைக்கவில்லை(பெரிய படி) மற்றும் விறகு, மளிகைச் சாமான்கள் மட்டும் விலை மலிவாகவா விற்கிறது? காப்பிக்கொட்டை, சர்க்கரை விலை குறைவாக கிடைக்கிறதா? காப்பிக்கொட்டையும் சர்க்கரையும் அதிகவிலை விற்றால் என்ன? அது உணவுப் பொருளா என்பார்கள் ஆட்சியாளர்கள். ஆசிரியர்கள் உணவுயின்றி ஒரு வேளை, இருவேளை இருந்தாலும்

காப்பியாவது ஒருவேளை இருக்க வேண்டாமா? காரணம், ஆவி போக்கும் அவர்களுக்கு காப்பி குடித்தால் கொஞ்சம் ஆறுதல் அளிக்கும். சொந்த வீடு இல்லாதவர்கள், வீட்டு வாடகை வேறு கொடுக்கவேண்டும். குடும்பத்திற்கு வேண்டிய உடைகள் வேறு வாங்கவேண்டும். பால், தயிருக்குக் கொடுக்கவேண்டும். இவை எல்லாம் போக ஓய்வுகால உதவிக்காகச்சேமிப்பு நிதி (பிராவிடெண்ட் பண்டு) உயிர் பாதுகாப்பு நிதி, (ஆயுள் இன்சூரன்சு) இவற்றிற்கெல்லாம் பணம் கட்டவேண்டும். மற்றும் நன்மை, தீமைகள் (கல்யாணம், இறப்பு) வேறு செய்யவேண்டும். இவற்றிற்கெல்லாம் மேற்படி ஊதியம் போதுமா? சற்றே சிந்தித்துப் பாருங்கள்? ஆண்டிற்கு ஆண்டு ஊதியம் உயராவிட்டாலும் கடன் உயரும் என்பதில் ஐயமில்லை.

1953-ம் ஆண்டு காமராசர் அவர்கள், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்தபோது, அவர்கள் ஆசிரியர்பால் அப்போது கொண்டிருந்த அன்பினால் ஆரம்ப ஆசிரியர்களின் நிலையைப்பரிசீலனைசெய்வதற்காக காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒரு கல்வித் துணைக்குழு நியமித்தார்கள். அத்துணைக்குழு ஈராண்டுகள் தன் அலுவல்களைச் செய்து ஆராய்ந்து இறுதியில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குத் தன்னுடைய கீழ்க்கண்ட முடிவுகளைத் தெரிவித்துள்ளது.

சுதேசமித்திரன்
19—15—54

ஆசிரியர்களின் ஊதிய நிலை.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் கல்வித் துணைக்குழு சிபாரிசுகள்:—

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினால் ஏற்படுத்தப்பட்ட சப்கமிட்டி பள்ளிக்கூட ஆசிரியர்களின் சம்பள நிலைபற்றிப் பரிசீலித்துக்கீழ்க்கண்ட சிபாரிசுகளைச் செய்துள்ளது.

கீழ்க் கண்டபடி அடிப்படைச் சம்பளம் உடனடியாகக்கொடுக்கப்பட வேண்டுமென்று கமிட்டி சிபாரிசு செய்துள்ளது.

1. ஹையர்கிரேடு ஆசிரியர்களுக்கு ரூ. 50 அடிப்படைச் சம்பளம் கொடுக்கவேண்டும்.
2. செகண்டரிகிரேடு ஆசிரியர்களுக்கு ரூ. 70 அடிப்படைச் சம்பளம் கொடுக்கவேண்டும்.
3. ஆரம்ப ஆசிரியர் பிராவிடெண்ட் நிதிக்குச் செலுத்தும் கட்டணத்தை ரூபாய்க்கு 1 அணுவிலிருந்து 2 அணுவாக உயர்த்துவதுடன் அதே தொகையைச் சர்க்காரும் கொடுக்கவேண்டும்.
4. ஆசிரியர்களின் தபாலாபீஸ் பிராவிடெண்ட் நிதிப்பணத்துக்கு 2% சதவீதத்திலிருந்து $3\frac{1}{2}$% சதவிகிதத்துக்கு உயர்த்த வேண்டும்.

இப்படிக்கமிட்டி சிபார்சு செய்து ஆண்டு நான்காகிறது. அத்துடன் காமராசர் முதல் மந்திரியாகி நான்கு ஆண்டிற்குமேல் ஆகின்றது. என்றாலும் தாம் முன்பு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்தபோது ஆசிரியர்களின் நிலையைப் பரிசீலிக்க ஓர் கல்வித்துணைக்குழு அமைத்ததையும், கமிட்டி செய்துள்ள சிபாரிசுகளையும் மறந்துவிட்டார்போலும்?

ஆசிரியர்களுக்கு மாத ஊதியம் ரூ. 100 கொடுங்கள், 150-கொடுங்கள் என்றோ, வீட்டிலிருந்து பள்ளிக்குவர ஜீப் வேண்டும், வசிக்க பங்களா வேண்டும். கோடையில் குடும்பத்துடன் உதகையில் தங்க வேண்டும். பட்டுடையும், பளபளவென்று மின்ன, வைரம் சொலிக்கும்படியான வாழ்வும் வேண்டும் என்று கேட்கவில்லை. பசி பட்டினி இல்லாத வாழ்வும், பட்டு இல்லாவிட்டாலும் பருத்தி உடையும், மாளிகை இல்லாவிட்டாலும், நல்ல மண்குடிசையாவது வேண்டும். உயர்ந்த வாழ்வு இல்லாவிட்டாலும், உன்னத வாழ்வு வாழ இன்றைய கால நிலையை அனுசரித்து ஊதிய உயர்வு அளிப்பது இன்றைய ஆட்சியாளரின் கடமையாகும். இது மிகமிக அவசியமாகும். இதைத்தான் ஆசிரியர்கள் கேட்கின்றனர்.

ஆசிரியர்களுக்கு கொடுக்கப் பணமில்லை என்ற பல்லவியைப் பாடும் நமது அமைச்சர்களுக்கு, தேவையற்ற கவர்னருக்கு இலட்சம், இலட்சமாக கொட்டிக் கொடுக்கப் பணமேது? மண்குடிசையே மாளிகை என்று ஊருக்கு உபதேசித்துவிட்டு உல்லாசநகர் ஊட்டியில் சட்டசபைக் கூட்டம் நடத்த "அரன்மோர் அரண்மனை" வாங்க எங்கிருந்து பணம் வந்தது? இதுபோன்ற அவசியமற்றவைகளுக்கெல்லாம் பணம் இருக்கும்போது, வறுமையில் வாடும் ஆசிரியர்களுக்குக் கொடுக்கத்தானா பணமில்லை?

தமிழ்நாட்டு ஆசிரியர்களின் வாழ்வு பரிதாபத்துக்குரிய நிலையில் உள்ளது. அவர்கள் வகுப்பிற்குச் சென்றால், போதனையைப் பற்றியோ, மாணவர்களைப்பற்றியோ, நினைக்கநேரமில்லை. குடும்ப நிலைமையைப்பற்றி எண்ணி ஏங்குகின்றனர். காலைக்கு அரிசியில்லை, இன்றைக்கு விறகு இல்லை, பால்காரனுக்குப்பாக்கிகொடுக்கவேண்டும், மகளுக்கு மாப்பிள்ளை கிடைக்கவில்லை, மனைவிக்குப் புடவை இல்லை, வாடகை கொடுக்க வழியில்லையே என எண்ணி ஏங்கிக்கொண்டிருக்கும் ஆசிரியர் உள்ளத்திலே மகிழ்ச்சி ஏது? வாழ்வில் பொன் நகைக்குத்தான் வழி இல்லை என்றால், புன்னகையைக்கூட அல்லவா காணமுடியவில்லை? இந்த நிலைமை நீடிக்குமேயானால் இந்த நாட்டின் கல்வி பெரிதும் பாதிக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே இந்த அவலநிலையைப்போக்கி ஆசிரியர்களுக்கு நல்வாழ்வு அளிக்க அரசியலார் உடன் முன்வரவேண்டும்.

அலைமோதும் கடலிலே திசை தெரியாது தத்தளிக்கும் மாலுமிகளுக்குக்கலங்கரைவழிகாட்டுவது போல, வறுமை என்னும் கடலிலே சிக்குண்டு தவிக்கும் ஏழை ஆசிரியர்களுக்கு அரசியலார் வழிகாட்டவேண்டும். அவர்களை அணுகியுள்ள பசி, பஞ்சம், பட்டினி, வறுமை, ஏழ்மை இன்னும் பிறவற்றிலிருந்து அவர்களை விடுவித்து, அவர்களுக்கு நல்வாழ்வு அளித்தால், அவர்கள் கல்வி என்னும் கலத்திலே (கப்பல்) செல்வங்கள் என்னும் குழந்தைகளை ஏற்றிக்கொண்டு, போக வேண்டிய இடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள் என்பதில் ஐயமில்லை!

நாட்டுப்பிரிவினை தீது—கொடிதென்று கூறிவிட்டு, நாட்டின செல்வங்களை (குழந்தைகளை) நல்ல அறிவுள்ளவர்களாக்கும் ஆசிரியர்களின சம்பளத்தில் மட்டும் பிரிவினைகாட்டுவது பேதமையைக் கடந்த பெருஞ்செயலா என்று கேட்பதில் தவறுகாண முடியுமா?

★

யானை புகுந்த வயல்

—[அரூர்—செல்வன்]—

“ஒரு அரசாங்கத்தின் திறமை மக்களிடம் எவ்வளவு வரிவசூல் செய்கின்றது என்பதைப்பொறுத்தல்ல, வசூலிக்கப்பட்ட வரியில் இருந்து எவ்வளவு பொதுமக்களுக்குத் திரும்பி வருகின்றது என்பதைப்பொறுத்தே அமைகிறது” என்பது ஒரு அறிஞரின் கருத்து. அரசாங்கம் நடத்த வரி வசூலிக்கப்பட வேண்டியதுதான். ஆனால் வரம்புக்கு மீறி வரி வசூலித்தல் மக்களுக்கு அடிமேல் அடி, வெந்த புண்ணிலே வேல், நொந்த உள்ளத்திலே நுழையும் ஈட்டியாகத்தான் இருக்கும்.

அரசாங்கம் நல்ல திட்டங்களை இயற்றவேண்டும்; அதனால் பொருளை அழியாமல் ஈட்டவேண்டும்; அதனைச் சோர்வின்றிக்காக்க வேண்டும்; காத்த அதனை வேண்டுவனவற்றிற்குப் பகுத்தளிக்கவேண்டும். அதுதான் ஒரு சிறந்த அரசு எனலாம். இதனை,

“இயற்றலும், ஈட்டலும்
காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு”

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கால் அறியலாம். பொருளை ஈட்டுவதற்கு “வரி போடுதல்” என்ற ஓரே தாரக மந்திரத்தை ஒரு அரசு கைக்கொண்டிருக்கக்கூடாது. சமீபத்தில்,

“மக்களிடம் மேலும் மேலும் அதிக வரிகளை எப்படி வசூலிக்கலாம் என்பதிலே நான் அதிக கவனம் செலுத்திவருகிறேன்” என்று பம்பாயில் தீபாவளிக் கூட்டத்தில் டில்லி நிதியமைச்சர் மொரார்ஜிதேசாய் அவர்கள் பேசியுள்ளார்கள். நிற்க, “நீங்களாக உதவி செய்கின்றீர்களா, அல்லது வரி போடட்டுமா?” இது நம் மாகாண நிதியமைச்சர் திரு. சுப்ரமணியம் அவர்கள் துறையூரை அடுத்த காவேரிப்பட்டியில் மக்கள்பால் கேட்ட கேள்வி. எதற்கு? பள்ளியில் பிள்ளைகளின் பகலுணவிற்கு, பொதுமக்கள் உதவிசெய்ய வேண்டுமாம், இல்லை மேல் வரிபோடுவாராம். வட்டி வாங்குபவன் வீட்டுச்செலவு அதிகம் ஆகிறது என்பதற்காக வட்டியை அதிகப்படுத்தினால், வாழ்வது வட்டி வாங்குபவனா? இல்லை வட்டி கொடுப்பவனா?

எனவே வருவாய் குறைவாய் அடைந்து வாழும் மக்களிடத்தே ஆள்வோன் அரசிறையை குறைத்து நெறியறிந்து கொண்டால், நாடு நலம் பெறும், செல்வத்தால் பீடுறும். அஃதன்றி, ஆள்வோன் தரமறியாது, வகையறியும் திறமில்லாது அறிவால் மெல்லியனாகிக் குடிகள்பால் மேலும் மேலும் வரியை வாங்குவானாயின், அவன் நாடு, யானை புகுந்த விளை நிலம் போல ஆகும். நாடு கெட்டொழியும் என்று நாம் கூறவில்லை, பண்டைய பாண்டிய நாட்டில் மிகையாக இறைவாங்கி, மக்களைப் புண்படுத்தி, வாழ்ந்தான் பாண்டியன் அறிவுடைநம்பி. அவன் கொள்கைக்கு ஆதரவளித்து ஆரவாரித்தது ஓர் கூட்டம். இவர்களை நோக்கி செவியறிவுறுத்தியுள்ளார் பிசிராந்தையார் என்னும் சங்ககாலச்சான்றோன்.

பாண்டி நாட்டுச் சான்றோன் பிசிராந்தையார். அவர் நாட்டு மன்னன் அறிவுடை நம்பியின்பால் நட்புக்கொள்ளாது, சோழநாட்டு உறையூர் வேந்தன்பால் நட்புக் கொண்டு இருந்தார் என்றால், மிகையாக வரியைப் பெற்ற பாண்டியன் அறிவுடைநம்பி சான்றோர் வரிசையிலே வைத்தெண்ணப்படாத இயல்புடையானும் இலங்கினன் என்றுதானே பொருள்!

குடிகளின்பால் நேர்மையின்றி அதிக வரி வசூலித்தான் பாண்டியன் அறிவுடைநம்பி. நீர் போகும் வழிச் சாயும் புல் அனைய அறிவுடை நம்பியைச் சூழ்ந்த அரசியற் சுற்றத்தார், குடிமக்களைக் கொடுமைக்குள்ளாக்கினர். மக்கள்பால் வேந்தனுக்கு அன்பு குறைந்தது. வரி மேல் வரி விதித்து மக்களை வாட்டினான் பாண்டியன். இதனைக் கண்ட சான்றோர் கலங்கினர். வரியென்ற பாரந் தாங்காது துன்பச் சுமைதாங்கும் புழுக்களாய்த் துடித்தார்கள் குடிகள்.

இந்நிலையிலேதான் மக்களின் கண்ணீர் வெள்ளத்தைக் காணச் சகியாத சில சீர்திருத்தப் பெரியோர்கள் பிசிராந்தையாரை அணுகி, மிகுத்து இறை வாங்கும் முறைகெட்ட மன்னனுக்கு அறிவுரை புகட்டுமாறு வேண்டினர். புலவரும் அரசன் பொருள் ஈட்டும் முறையினை ஆராய்ந்தார்; குற்றம் அரசனிடமும், அவனுக்குத் துணை செய்யும் அரசியல் கூட்டத்திடமும் இருப்பதைக் கண்டார்; குற்றம் களைவது நாட்டிற்கு இன்றியமையாப் பணியென்று உணர்ந்தார்; சான்றோர் இட்ட கட்டளையை நிறைவேற்றுவது கடமையென எண்ணினார்; விரைந்தார் பாண்டியனிடம்.

அரசனும் செந்தமிழ்ப்பாவலன் என்பதனாலும், சோழன் சிந்தைக்கு, சிந்தையின் அன்பிற்குப் பாத்திரமானவன் என்பதனாலும் வரவேற்றான் வண்டமிழ்ப் புலவரை! அறிவுரையைத் துவங்கினார் புலவர். அரசே! யானைக்கு நெல் உணவாகும். விளைநிலத்திலிருந்து நெல்லைக் கவளம் கவளமாகக் கொண்டுவந்து கொடுப்போமானால், நிலம் குறைவாக இருந்தாலும் பல நாட்கள் அக்களிற்றுக்கு அளிக்கலாம். நெல் முற்றிப் பயிர் சாய்ந்து கிடக்கும் பலவேலி நிலத்திடையே (பல ஏக்கர் நிலம்) யானையைத் தனியே மேயவிட்டால், அது வாயால் உண்பது குறைவாயினும், தன் காலால் மிதித்துப்பயிரையும், நெல்லையும் அழிப்பது மிகுதியாகும்; அதுபோலவே வேந்தனும் அரசிறையை நெறியறிந்து குறைத்துக்கொள்வானாயின்வளம் படைக்கும் நாடு, செல்வம் கொழிக்கும் தேசமெங்கும். அவ்வாறில்லாது அரசன் குடிகள்பால் அன்பில்லாது மேலும் மேலும் வரியை வாங்குவானாயின் யானை

(11-ம் பக்கம் பார்க்க)



இலக்கிய உலகில்...(2)

—ப்டிநி—

இலக்கியத்தால் என்ன பயன்? இப்படித் திடீரென வினவுவோர் கூட நம்மில் பலர் உண்டு. அவர்கள் வினவில் கேலியும் அக்கறையின்மையும்கூட வெளிப்படும்; ஆனால் ஒன்று மட்டும் தெளிவு; இங்ஙனம் வினவுவோருக்கு இலக்கியப் புலமை இருப்பதில்லை. இலக்கியத்தைப்பற்றிய அடிப்படை அறிவும் இருப்பதில்லை.

பயனற்ற எப்பொருளும் உலகில் தொடர்ந்து இருக்க இயலாது, ஒரு பொருளின் பயனின்மை கண்டால், உலகம் அப்பொருளைக் கூடிய விரைவிலேயே கால வெள்ளத்தில் மூழ்கடித்து விடுகிறது. இவ்வுண்மையைக் கண்டறிந்த நாம் தமிழ் இலக்கியம், பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்து செழித்திருப்பதைக் கண்டு இலக்கியத்தால் ஏதோ நிலைத்த பயன் இருக்கத்தான் செய்கிறது என்ற உண்மையை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

இனி அந்தப் பயன் என்ன என்று காண்பதில்தான் கருத்து வேறுபாடுகள் எழுகின்றன.

கலை கலைக்காகவே என்போர், இலக்கியம் இன்பமூட்டுவதற்கே எனக்கூறுவர். இவர்கள் கூற்று முற்றிலும் ஏற்கத்தக்கதுமல்ல; முற்றிலும் மறுக்கத்தக்கதுமல்ல; ஏனெனில் இலக்கியத்தின் பயன் இயல்பாகவே கால நிலையால் வரையறுக்கப்படுகின்றது.

ஒரு சமுதாயம் செல்வநிலை, நாகரிக நிலை முதலிய அனைத்துத் துறைகளிலும் குறைவற்று இருக்கும் காலத்தில் அச்சமுதாயம் இலக்கியத் துறையில் இன்பத்தையே எதிர்பார்க்கவும் பெறவும் செய்கிறது. ஆனால் சமுதாயத்தில் குறைகள் பல — தேவைகள் பல இருக்கும் காலத்தில் இலக்கியத்தின் பயன் இன்பமாக இருக்க இயலுமா? அக்காலத்தில் இலக்கியத்துறை சமுதாயத்திலுள்ள நோய்களை அகற்றும் மருத்துவச் சாலையாகவே காட்சியளிக்கும். ஆகவே இலக்கியத்தின் பயன் பற்றி இங்கு கூறப்படும் கருத்துக்கள் நமது இன்றைய நிலையை மனதில் எண்ணிக் கூறப்படுவனவாகும்.

இலக்கியத்தின் பயன் இருவகைப்படும்; முதலாவது இலக்கியம் படைப்பவன் எதிர்நோக்கும்

வித்துவான். இரா. சொக்கலிங்கம்

பயன், இரண்டாவது படைப்பவன் எதிர்பார்க்கும் பயனுக்கு முரணாகாதவாறு இலக்கியத்தைச் சுவைப்பவன் காணும் பயன். இலக்கியத்தில் ஈடுபாடுகொண்டு பயில்பவன் அவ்விலக்கியத்தைத் தன் காலத்துக்கேற்றவாறு பயன் கொள்வதில் தவறு என்ன?

தமிழரின் முதற்காப்பியமாக சிலப்பதிகாரம் உள்ளது. இதனை இயற்றிய இளங்கோவடிகளின் நோக்கம், மூன்று பேருண்மைகளை உலகம் அறியவேண்டும் என்பதே. ஆயினும் இந்நூலில்வரும் சேரன் செங்குட்டுவனது இயல்பைக் காட்டி நமது இன உணர்ச்சியை வளர்த்துக்கொள்வதிலோ அல்லது தமிழ் இனம் அன்று வடபுலத்தை வென்று வாழ்ந்ததையும் இன்று பொது வாழ்வில் வடபுலத்திற்கு அடிமையாகிக் கிடப்பதையும் காட்டி உரிமையுணர்வு ஊட்டுவதிலோ தவறுண்டா? அன்றியும் இத்தகைய முயற்சிகள் மூல ஆசிரியரின் கருத்திற்கு முரணானவையல்ல. ஆகையால், பழைய இலக்கியத்தைப் பயன்கொள்வதில் புதுமை கண்டு "அந்தோ! இலக்கியத்தில் கொள்கைப் பரப்பீட்டைப் (பிரசாரம்) புகுத்திவிட்டார்கள" என்று புலம்புவதில் பயனில்லை! அன்றியும் எல்லா இலக்கியங்களுமே ஒருவகைக் கொள்கைப் பரப்பீடு-பிரசாரம்தான் என்பதும் அவ்விலக்கியங்கட்கு விளக்கமும் உரையும்காணவந்த பலரும்கூடத் தாங்கள் அறிந்தோ அறியாமலோ தங்களின் குறிப்பிட்ட கொள்கைகளை நிலைநாட்டியுள்ளனர் என்பதும் தமிழிலக்கியம் கண்டஉண்மை. இதற்கு எடுத்துக்காட்டாகத் தொல்காப்பியம், சேனாவரையம், திருக்குறள்-பரிமேலழகர் உரை முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

> திருவாய் மொழி கல்லாதாரை
> இருகால் மாடுகளாக்கித்
> தீத்தீ யென்று மூக்கோலால்
> சாத்துவே னுண்டே!

என்கிறார் முக்கூடற்பள்ளு ஆசிரியர். இலக்கியத்தில் கொள்கை பரப்பப்படுவதற்கு இல்லை — வற்புறுத்தப்படுவதற்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டு வேண்டுமா? ஆகவே. இலக்கியம், கலை இவற்றைப் பயன்கொள்ளும் போது புதுக்கருத்துக்கள் பரப்பப் படுதல் கண்டு சிலர் கூக்குரல் எழுப்புதல் தங்கள் கருத்திற்கு மாறான கருத்துக்கள் வளருகின்றனவே என்ற அச்சத்தின் விளைவே என்பது அறிதற்பாலது. இம்முறையில் பார்க்கும்போது இலக்கியத்தைப் பயன்கொள்ளும் முறையில் புதுமை கண்டு—இனவெழுச்சி — மொழிப்பற்று இவை மக்களிடையே வளரக் காரணமாயிருப்போர்—தனிப்பட்டோர்களாயிருப்பினும் — குறிப்பிட்ட இயக்கத்தாராயிருப்பினும் அன்னார் போற்றற்குரியவர்களே என்பதில் ஐயமில்லை.

சிறுகதை

"தபால்காரன்"

சென்ற இதழ் தொடர்ச்சி.....

சோலையூர் என்ற ஊருக்கு தொண்டைமானை மாற்றிவிட்டார்கள். அவனும் எதிர்பார்த்துக்கொண்டுதான் இருந்தான். இந்த ஊரில் இருப்பது அவனுக்கு சொல்லொணாத் துன்பமாக இருந்தது. மகிழ்ச்சியோடு தங்கையுடன் சோலையூரில் குடியேறிவிட்டான். அந்தக் கள்ளியை அடியோடு மறந்துவிட, முயற்சித்துக்கொண்டிருந்தான். அவனால் வெற்றி காணத்தான் முடியாமல் இருந்தது. அடிக்கடி அவளைப பற்றிய நினைவுகள் வந்து வந்து. மண்டையைச் சேருக்கிப் பைத்தியக்காரனாக்கிவிடும்போல் இருந்தது. நல்ல தங்கை முல்லையும் மகிழ்ச்சியற்றே இருந்தாள். அவன் சிலை நிகர் வடிவத்தாள்மீது ஐயம் கொண்டான். ஆனாலும் அவளை எதுவும்கேட்டுத்துன்பம் கொடுக்கவில்லை.

பல கடிதங்கள் அவளிடமிருந்து அவனுக்கு வந்தன. அவ்வளவையும் படித்துப்பார்க்காமலேயே கிழிதெறிந்து குப்பைக் குழியிலே போட்டுவிட்டான். இனியும் அவளின் ஏமாற்றுக் கடிதங்களைப் படிப்பது ஒரு கேடா? வேதனைச் சுமையோடு வேலைசெய்ய இயலாமல், ஒரு பத்து நாட்கள் ஓய்வு எடுத்துக்கொண்டான். ஒன்பது நாட்கள் கழிந்தது. பத்தாவது நாள் அவன் பெயருக்கு வந்த மூன்று கடிதங்களை, தற்காலிகமான அஞ்சல்காரன் கொடுத்து விட்டுச் சென்றான். வெறுப்புடன் ஒரு கடிதத்தைக் கையில் எடுத்தான்.

"உனக்கென்றேதான் அவள் பிறந்திருக்கவேண்டும். ஒரு தங்கப் பதுமை. நீ பார்த்தால்கூட அப்படித்தான் சொல்லுவாய். அந்தப் பெண்ணைத்தான் உனக்குத் திருமணம் செய்துவைக்க வேண்டுமென்று, நானும் உன் தாயும் ஏகமனதாகத் தீர்மானம் செய்துவிட்டோம், பெண் வீட்டாரின் சம்மதத்தையும் பெற்று விட்டோம். இனியும் நீ திருமணம் வேண்டாமென்று பிடிவாதம் செய்வது அழகல்ல. இப்படியே எத்தனை நாளைக்கு இருக்கமுடியும்? உன் அன்னை ஒரே ஆவலாக இருக்கிறாள். ஒருமுறை ஊருக்கு வந்து முகத்தைக் காட்டிவிட்டுப் போகவும்."

செல்வமாக அவனை வளர்த்துப் படிக்கவைத்து. ஒரு உத்தியோகத்தையும் வாங்கித்தந்த அன்புத் தந்தைதான் எழுதி இருந்தார்.

வி. ஆர். துரை

"நான் திருமணம் செய்துகொள்ளப் பூரண சம்மதமாக இருக்கிறேன். திருமணம் செய்து கொள்ள வேண்டிய அவசியத்தை, நான் உணர்ந்துகொண்டேன். நீங்கள் பார்த்திருக்கின்ற பெண் நிச்சயமாக எனக்குப் பிடிக்கும்." அப்பொழுதே அவன் தந்தைக்கு கடிதம் எழுதிப் போட்டுவிட்டான். எதை நினைத்தோ அவன் விழிகள் கண்ணீரைச் சிந்தின. அடுத்த கடிதத்தை இளந்திரையன் மிக உருக்கமாக எழுதி இருந்தான். முல்லையை அதிகம் விசாரித்து எழுதி இருந்தான். மூன்றாவது கடிதம் அவன் மாஜி காதலி தீட்டியிருந்தாள்.

வேதனைப்படுவதாகவும் வரச் சொல்லியும் தெரிவித்து, கடிதம் எழுதாமைக்கு காரணமும் கேட்டிருக்கிறாள். பதில் வேறு எழுத வேண்டுமா? இரவில் பலமுறை சந்தித்துப் பேச ஆவலுடன் வந்தும், புழுக்கத்தையும் பாராமல் வேண்டுமென்றே கதவையும் சன்னலையும் மூடிக்கொண்டு திறக்காமலிருந்ததாகக் கூறி, அதற்காக என்மீது கோபம் இல்லை என்று செப்பி, முக்கியமாகத் திருமணத்தை வற்புறுத்தி இருக்கிறாள். யார் இந்த நடத்தை கெட்டவளைப் போய்க் கட்டிக் கொள்வது? யாருக்கோ அவளை விற்கப் பெற்றவர்கள் சம்மதம் தெரிவித்துவிட்டதால், என் தாய் தந்தையை அனுப்பிப் பெண் கேட்கச்சொல்லி யோசனை வழங்கி இருக்கிறாள். இளந்திரையன் கைகழுவி விட்டான் போலும். என் காலைக் கட்டிக்கொண்டு அழுகிறாள்".

அவன் முணுமுணுத்துக் கொண்டே அந்தக் கடிதத்தை கசக்கி, நெருப்பில் போட்டுவிட்டுத் திரும்பினான். மேசை மேல் இருந்த இளந்திரையன் கடிதம் காணப்படவில்லை. தங்கையை அழைத்துக் கேட்டான். அவள் எடுத்துவைத்துக்கொண்டிருந்து, கீழே விழுந்துவிட்டதாகக் கூறிக் கொடுத்தாள். தபால்காரன் திரும்பிவந்தான். முன்பே கொடுக்கத் தவறிவிட்டதாகக் கூறி, மேலும் ஒரு கடிதம் கொடுத்தான். அவனுக்குச்சிரிப்புவந்துவிட்டது, தவறு செய்த அவனும் சிரித்தான்.

அது கடிதம் அல்ல! அவனைக் கொல்ல வந்த கத்தி. இரும்பவும் பழைய இடத்திற்கே, அவனை மாற்றி இருந்தார்கள். என்ன

செய்வது? நொந்த உள்ளத்தோடு திரும்பவும் பழையபடி வந்து சேர்ந்தான். சுலபமாக அங்கும் இங்குமா மாற்றிவிடுகிறார்கள். அப்படிச் செய்வது மாற்றுபவர்க்கு விளையாட்டு; குடி தூக்குவோருக்கு பெருந்தொல்லை. முல்லை வழக்கத்திற்கு மாறாக மகிழ்ச்சியுடன் காணப்பட்டாள். எந்தவிதமான சம்பந்தமும் கலாவல்லியுடன், வைத்துக் கொள்ளக் கூடாதென்று தொண்டைமான் எச்சரித்திருந்தான். அப்படியே அவளும் நடந்து வந்தாள்.

*

பகல் ஓடிப்போயது. இன்ப இரவு பாடி வந்தது. அதில் பாதி காலமும் ஆயது. அப்போது முல்லை வீட்டில் இல்லை. பக்கத்து வீட்டுப் பருவமங்கை வசந்த கோகிலம்; இரண்டாவது ஆட்டத்திற்கு முல்லையை வந்து விருப்பமாக அழைத்தாள். பிரமாதம் என்று தமிழகமெங்கும் ஒரே பேச்சாக இருக்கும் 'நாடோடி மன்னனை''ப் பார்க்க, தங்கையைத் தொண்டைமான் அனுப்பிவிட்டான். பாதி இரவுக்கு மேலாகியும் தூக்கம் பிடிக்கவில்லை. கதவைச் சாத்தித் தாளிட்டிருந்தான். சன்னல் மட்டும் திறந்தே கிடந்தது. விளக்கு ஒளி உமிழ்ந்துகொண்டிருந்தது. வளை ஓசை கேட்டது. மூடியிருந்த விழிகளைத் திறந்து, தலையைத் தூக்கிப் பார்த்தான. சன்னலின் கம்பியைப் பிடித்துக் கொண்டு, ஒரு பெண் நின்றிருந்தாள்.

"முல்லை!"

"........."

"அங்கே மரம்போல் நிற்பது யார்?"

"மரம் அல்ல! மங்கை! நாளைய மணாளனைத் தேடி இன்று வந்திருக்கிறாள். குரல்கூட ஞாபகத்தில் இருக்காது! கலாவல்லி வந்திருக்கிறேன்.'

"ஓஹோ, அந்தச் சித்திரம்! பேசத் தெரியாச் சிங்காரியா? இங்கென்ன உனக்கு வேலை! எங்கோ இருக்கவேண்டிய இராணியல்லவா நீ?"

"என்மீது ஏன் அப்படி எரிந்து விழுகிறீர்கள். என்ன தவறு செய்துவிட்டேன் நான்? கதவைக் கொஞ்சம் திறந்துவிடுங்கள். உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகின்றேன். பேசவேண்டிய விஷயம் நிறைய இருக்கிறது."

விளக்கை அவன் இறக்கிவிட்டான். அவள் உளறிக்கொண்டே இருந்தாள். கவிழ்ந்து படுத்துப் போர்வையால் மூடிக்கொண்டான். அவள் ஒப்பாரி வைத்துக் கொண்டே இருந்தாள். தலையைக் கம்பிகளில் மோதி அடித்துக் கொண்டாள். உறுதியை இழந்து மெல்ல எழுந்து தொண்டைமான் கதவைத் திறந்தான். அந்த 'எட்டணு' கண்முன்னே வந்து நின்றது. அறைக்குள் ஆவலுடன் அடியெடுத்து வைத்த அவளை, பிடித்து வேகமாக வெளியே தள்ளிவிட்டான். கால் இடறி அவள் பொத்தெனத் தரையில் போய் விழுந்தாள். பல் போயிருக்குமா? தெரியாது அவனுக்கு. இரும்பாகிவிட்டது அவன் இதயம். அத்துடன் அவள் அவனை விட்டுத் தொலைந்தாளில்லை. திரும்பவும் தன் புராணத்தை அவள் துவங்கிவிட்டாள்.

"நான் என்ன அப்படிப் பெரிய குற்றஞ்செய்துவிட்டேன். வேண்டுகின்றேன்; தயவுசெய்து கூறுங்கள். கெஞ்சுகிறேன், இரக்கம் பிறக்கவில்லையா? அத்தான்! எனக்காகக் கதவைக் கொஞ்சம் திறக்கமாட்டீர்களா? அன்பு—பிற உயிர்க்கு துன்பம் செய்யாது. பிறரின் வாழ்வைப் பாழ்படுத்தாது. மற்றவர்களின் அழுகுரலை சங்கீதமாகக்கொள்ளாது. எல்லோரையும் வாழவிடும். வெறும் வார்த்தை அலங்காரம் தான். உண்மை வாழ்வில் இவை எதுவுமே உதவுவதில்லை."

அவள் பேசிக்கொண்டே இருந்தாள்.

"பரத்தையே! நானா உனக்கு அத்தான்? இங்கிருந்து மரியாதையாக ஓடிப்போய்விடு!"

ஆவி குடிபோன அவ்வடிவத்தாள், தலையைக் கம்பியில்போட்டு அடித்துக்கொண்டாள். இரத்தம் குபுகுபுவென்று கொட்டியது. கம்பியைப் பிடித்திருந்த கைநழுவ கீழே சுருண்டு விழுந்தாள். கதவைத் திறந்த அவன் அலட்சியமாகத் திரும்பிப்பார்க்காமல்நடந்து கொண்டிருந்தான். அவள் விழுந்து கிடக்கும் திக்கில் தலையைக்கூடத் திருப்பவில்லை. பூங்காவிற்கு அருகில் நடந்து வந்துவிட்டான். வழி மூடப்பட்டிருந்ததால் சுவரைத் தாண்டிக் குதித்தான். இருவர் மெல்லப் பேசும் அரவம் கேட்டது. அந்த இரகசியத்தைத்தெரிந்துகொள்ள அவா எழுந்தது. மலர்ப்புதரின் பக்கம்போய்த் தொண்டைமான் மறைந்து நின்று காதைச் சரியாகத் தீட்டிக்கொண்டான். அவர்களில் ஒருவன் மலையமான். அடுத்தவன் யாரென்று தெரியவில்லை, அவன் கண்கள் கண்டுபிடித்துவிட்டன.

"ஒரு புரு. நாடோறும் ஆற்றுக்குப் பறந்து வருகிறது. குடத்தில் நீர் சுமந்து, கொடி இடையில் வைத்துக்கொண்டு திரும்பிப் பார்க்காமலேயேபோய்விடுகிறது"

"வலை விரித்தால் தானாக வந்து விழாத புருக்கூட இந்த ஊரில் உண்டா?"

"அந்தத் தபால்காரன் தங்கை முல்லையைத்தான் சொல்லுகின்றேன். அவள் அழகு என்னை ஒரு கலக்குக் கலக்கிவிட்டது. என்ன செய்வது?"

"அதற்கொன்றும் அபாரயோசனை தேவையில்லை. ஒரு கடிதம் எழுதி என் தம்பி நக்கீரனிடம் கொடுத்து, முல்லையிடம் கொடுக்கச் சொல்லுவோம். காரியம் சுலபமாக முடிந்துவிடும்."

"அவள் அண்ணனிடம் நக்கீரன் கொண்டுபோய்க் கொடுத்து, அம்பலம் ஆகிவிட்டால் அவஸ்தையாக அல்லவா கதை முடிந்துவிடும்!"

'அவன் கெட்டிக்காரன். சொல்லுகிறபடி செய்து வெற்றிகரமாக முடித்துவிடுவான். ஒரு விஷயம் கேள். என் தங்கைக்கும் அந்தத் தபால்காரனுக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிந்தது. துண்டிக்க விரும்பினேன் நான். தம்பி நக்கீரனிடம் ஒரு எட்டணுத்தந்து சரிப்படுத்திக்கொண்டேன். "இளந்திரையன் அக்காவுக்கு ஒரு கடிதம் கொடுத்தார். நான் கொண்டுபோய் கொடுத்தேன். அக்காவும் ஒரு கடிதம் எழுதி இளந்திரையனுக்கு தந்தது. கொண்டுபோய்க் கொடுத்ததற்கு கூலி எட்டணு கிடைத்தது" இப்படிப்போய் தபால்காரனிடம் சொல்லச் சொன்னேன். அறுக்கமுடியாத அன்புக் கயிற்றை அறுத்துவிட்டேன. எப்படி? இந்த முறையைக் கையாண்டு பார்ப்பது; முடியாவிட்டால்......"

மலையமான் சொற்பொழிவை முடித்தான். மண்டையில் ஆயிரம் தேள் மாட்டுவதுபோல் அவனுக்கு இருந்தது. சுவரைத்தாண்டிக் குதித்துத் தொண்டைமான் தலை தெறிக்க ஓடினான். வழியில் வந்துகொண்டிருந்த சைக்கிள் ஒன்றை, சீக்கிரம் போகலாமென்று மடக்கினான். அந்த ஈருருளியை ஓட்டிவந்தவன் இளந்திரையன். பின்பக்கத்தில் முல்லை, அவன் தோளைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவன் ஈருருளியில் இளந்திரையனையும் அழைத்துக்கொண்டு, காற்றுடன் போட்டியிட்டான். பின் தொடர்ந்து முல்லைஓடிவந்து கொண்டிருந்தாள். அவர்கள் வீட்டிற்குள் நுழைந்தார்கள். "கர்...கர்...கர்" ஒரே சத்தம் கேட்டது. கொய்யாமரத்திற்கு பாட்டரி அடித்தான் இளந்திரையன். கயிறு கழுத்தை இறுக்க, உயிருடன் கலாவல்லி போராடிக் கொண்டிருந்தாள்.

*

கதவைத் திறந்து கத்தி எடுத்துக்கொண்டு தொண்டைமான் ஓடிவந்தான். காலிரண்டையும் சேர்த்து இளந்திரையன் தூக்கிப் பிடித்துக்கொண்டிருந்தான். கயிற்றை அறுத்துவிட்டான். கட்டழகியைத் தூக்கியவண்ணம், அறைக்குள் கொண்டுவந்து சேர்த்தார்கள். கற்றிருந்த முதலுதவி முழுதும் நண்பன் பயன்படுத்தினான். கொஞ்ச நேரம் கழிந்தது. 'கர்...கர்' என்ற சத்தம் நின்றது. கண்களைத் திறப்பதும் மூடுவதுமாக அவள் இருந்தாள். மலரும் அவன் முகத்தைக் கண்டும், மடிமீதில் இருப்பதை உணர்ந்தும், ஒரு உணர்ச்சி அவள் உள்ளத்தில் பொங்கிவிட்டது போலும். அவள் பேசுவதற்கு முயற்சித்தாள்.

"பேசு கலா! வாய் திறந்து பேசு! இந்தப் பாவியோடு ஏன் பேசவேண்டும் என்று நினைக்கிறாயா? என்னை மன்னித்து ஒரு வார்த்தை பேசமாட்டாயா!"

"அத்தான்! நீங்கள் வெறுக்கும்படி...என்ன...குற்றம் செய்துவிட்டேன்? சொல்லமாட்டீர்களா......?"

"அன்பே குற்றமெல்லாம் என்னுடையதுதான். நீ தவறு செய்யவில்லை. மாற்றுக் குறையாத் தங்கம் நீ. என் ஒளிவீசும் வைரம்! வலம்புரி முத்து!"

"அரசே' என்...இதயம்...... குளிர்ந்தது..."

அதற்குமேல் அவள் பேசவில்லை. உடலைவிட்டு இன்னுயிர் போய்விட்டது. ஆம்! அவள் செத்துவிட்டாள். முல்லை தரையில் புரண்டு ஓவெனக் கதறினாள். தொண்டைமான் தலையைத் தரையில் மோதி அடித்துக்கொண்டான். "தங்கமே! என் செல்வமே! என்னை இங்கே விட்டுவிட்டு, நீ எங்கே போய்விட்டாய்?" அவன் கூச்சல் அடங்கியது. ஒரு மாதிரியாகத் தென்பட்டான்.

"நண்பா! நீ மிகவும் அதிர்ஷ்டக்காரன். முல்லையின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு விட்டாய். சந்தேகம் ஒரு சங்கடமான வியாதி என்று சொல்லிக்கொண்டே, மனிதர்கள் தவறு செய்கின்றார்கள். மிருகத்தை விடக் கேவலமாக நடந்துகொண்டு, தங்களின் இன்ப வாழ்வைப் பாழ்படுத்திக்கொள்ளுகின்றார்கள். அந்த உண்மைக்கு நானே எடுத்துக்காட்டு. எப்போதும் நீ அந்தத் தவறை, மறந்தும் செய்துவிடாதே என்று கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன். நம்பி விட்ட தங்கையைக் கைவிடாமல், திருமணம் செய்துகொண்டு இன்பமாகப் பல்லாண்டு வாழ்க!"

அவன்பேசிக்கொண்டே போய்க்கொண்டிருந்தான். இனி யாரும் அவனைத் தடுத்து நிறுத்த முடியாது. நடை நின்றது. ஓட்டம் எடுத்தான். எங்கே ஓடுகிறான்? அவனுக்கே தெரியாது! இரவு முழுதும் ஓடிக்கொண்டே இருந்தான். காலை உணவை எச்சில் தொட்டிகளில் இருந்த இலைகளிலிருந்து, பொறுக்கி எடுத்து திருப்திகரமாக உண்டான். ஆடையெல்லாம் கிழிந்திருந்தது. ஒரு சிறுவர் படை, அவனைப் பின்தொடர்ந்து கல்லால் அடித்து விளையாடியது. அவன் ஓடினான். சிறுவர் கைதட்டிச் சிரித்தார்கள். பாவம், பைத்தியக்காரன்!

(முற்றும்)

“உரிமை வேட்கை கொண்டோரைத் தடுத்து நிறுத்தும் சக்தி உலகத்திலேயே இல்லை! இருந்திருந்தால், எப்போதோ, நான் அழிந்திருப்பேன்” என்கிறார் 74-வயதான, சர்தார் பகவான்சிங் என்பார். 50-ஆண்டுகளுக்குமுன்பு, 1909-ல் வெள்ளையருக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார் என்று இவரை அமெரிக்காவுக்கு கப்பலேற்றி அனுப்பினார்கள்! அவர், சென்ற கிழமை, பம்பாய் வந்து சேர்ந்திருக்கிறார்—இனி இங்கேயேதான் வாழப்போகிறாராம். அமெரிக்கா போன்ற இடங்களுக்கு அனுப்பிவிட்டால், இவர் என்ன செய்வார்? — என்றுதான், பிரிட்டிஷ் சர்க்கார், அனுப்பிற்று. ஆனல், போன இடத்திலும், அங்குள்ள 'இந்தியரை' திரட்டி வைத்து, இதே வேலையைத்தான் செய்துகொண்டிருந்தாராம். காங்கிரஸ் இங்கே சுதந்திர இயக்கம் நடாத்திய காலத்தில், வெளிநாடுகளில் மக்களின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெற, இவர்களெல்லாம் பட்டபாடு கொஞ்சமாகவா இருந்திருக்க முடியும்?

7-ம் பக்கத் தொடர்ச்சி

புகுந்த நிலம் போல அவனுக்கும் பொருள் சேராது; நாடும் கெட்டொழியும்!" என்று எடுத்தோதி நன்னெறிப் படுத்தப்பட்டான் பாண்டியன் அறிவுடைநம்பி. அவர் எடுத்தியம்பிய பாட்டைப் பாருங்கள்.

காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மா நிறை வில்லதும் பன்னாட் காகும்
தாறுசெறு வாயினும் தமித்துப்பக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கும்.
அறிவுடை வேந்த னெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானு முண்ணா னுலகமுங் கெடுமே.

இது, வருவாய்க்கு வழிதேட அறியாமல் — முயற்சியும் எடுக்காமல், எதற்கெடுத்தாலும் வரி வரி என்று வறிதே பேசும் இன்றைய அரசியலாருக்கு ஒரு நல்ல பாடமாக அமைந்து அறவழி நடக்கச் செய்யுமென்று நம்புகிறோம்.

★

பலியானார்கள்

(அரவொளி)

நாகரிகத்தின் கடைசி விநாடியில் கண்டுபிடிக்கப்பட்டு எழுப்பப்பட்ட மாளிகைதான் அது. அதன் செல்வாக்கை, சடைநாயின்சிகைக் கற்றைபோல தங்கள் இலைகளைத் தொங்கவிட்டு நின்ற அங்குள்ள "குரோட்டன்ஸ்" செடிகள் ஒருவாறு விளம்பரப்படுத்தின. "அல்சேஷ்யன்" இல்லாவிட்டால் அநாகரீகமல்லவா! ஆகவே அதுவும் முன்னால் கட்டிக்கிடந்தது.

வழக்கம்போல் வரும் பிச்சைக்காரன்—பிச்சைக்கார உலகத்தின் வருங்காலப் பிரஜை அவன் மகன், இருவரும் பங்களாவின் வாசலிலே நின்றனர். எப்பொழுதோ சமுதாயத்தைச் செவிடாக்கிய அந்த ஈனக்குரலை இப்பொழுதும் வழக்கம் போல் எழுப்பினார்கள்-அம்மா, தாயே, எஜமானர்களே என்று.

அருகிலே நாய்க்குத் தன்னுடைய ரொட்டியைக் கொடுத்துக் கொண்டிருந்த இளம் வாரிசு — மாளிகைச் சொந்தக்காரரின் பையன் ஏறிட்டுப் பார்த்தான். பிச்சைக்காரப் பையன் அவனையும் அவனுடைய ரொட்டியையும் மாறி மாறிப் பார்த்தான்.

இருவரும் சிரித்தனர்—இரண்டு தாமரை மொக்குகள் விரிவது போல இருந்தது அந்தச் சிரிப்பு! ஏற்றத்தாழ்வற்ற ஒரேவிதமான சிரிப்பு!! சமுதாயம் தெரிந்து கொள்ளவேண்டிய சிரிப்பு!!

பிச்சைக்காரப் பையன் கையை நீட்டினான். "டேய்! டேய்! எனக்கும் கொஞ்சம் குடுக்கிறியா" என்றான். மாளிகைப் பையன் ஒரு ரொட்டித் துண்டை நீட்டினான். உள்ளே ஓடினான் பிச்சைக்காரப் பையன். அவன் கையிலிருந்த ரொட்டியை அவசரமாகப் பிடுங்கினான்.

ரொட்டி தவறி நாயின் அருகில் விழுந்தது. நாய் ரொட்டிக்காகத் தாவிற்று. அதற்குள்ளாகப் பிச்சைக்காரப் பையன் ரொட்டியை எடுத்தான். ஏமாந்த நாய் சும்மா விடுமா! அதிலும் அல்சேஷ்யன்! அவனுடைய கழுத்திலிருந்து ஒரு வாய்ச் சதையைப் பிடுங்கித் தன ஆத்திரத்தைத் தீர்த்துக்கொண்டது.

இரத்தம் பெருக்கெடுத்தோடிற்று. பிச்சைக்காரப் பையன் மூர்ச்சையானான். இதைக்கண்ட பணக்காரப் பையன தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்துவிட்டான். பணத்தின் கர்வமும் திமிரும் மீசை முளைப்பதுபோல ஒரு குறிப்பிட்ட பருவத்தில்தான் வரும் போலும்! அதனால்தான் பிச்சைக்காரப் பையனை நாய் கடித்தது கண்டு அழுவதோடு மட்டும் நிறுத்திக்கொள்ளாமல், அதை ஓங்கியும் அடித்தான். கோபத்திலே சிறு தாக்குதலையும் மனிதனாலேயே தாங்கமுடியாது! நாயால் தாங்க முடியுமா! தன்னுடைய சின்ன எஜமானின் கரத்தையும் கடித்து விட்டது. இவனும் வீறிட்டுக் கதறினான்.

பரமசிவன் மேல் ஒரு அடி விழுந்ததும் உலக ஜீவராசிகள் அத்தனையிலும் அந்த அடியின் தாக்குதல் பட்டதாமே. அதுபோலத்தான் பையனின் அழுகுரல் கேட்டதும் மாளிகைச் சொந்தக்காரர், மனைவி, சுற்றம், ஆள், அம்பு அத்தனை பேரும் ஓடிவந்தனர்.

பிச்சைக்காரன் தன் மூர்ச்சையான மகனை இரத்தத் தடாகத்திலிருந்து தூக்கிக்கொண்டிருந்தான.

"ஏன் அழுகிறாய்?" என்ற ஒரு முகக் குரலுடன் ஓடிவந்தவர்கள் கேட்டார்கள்.

கையிலிருந்து குருதி கொட்ட நாயைக் காண்பித்தான் சிறுவன்.

"என் மவனையும் நாய் கடிச்சிரிச்சய்யா—மயக்கமாயிட்டானய்யா— மயக்கமாயிட்டானய்யா — கொஞ்சம் தண்ணிகொண்டாங்கய்யா..." பிச்சைக்காரன் கத்தினான்.

"எண்டா உள்ளே வந்தே பிச்சைக்கார நாயே! கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளுங்கடா" என்று கத்தினார் மாளிகைக்காரர்.

பிச்சைக்காரன் வெளியே தள்ளப்பட்டான். பையனைத் தூக்கிக் கொண்டு மருத்துவ மனைக்கு வேக வேகமாக ஓடினான்--பிள்ளைப் பாசம் பிச்சைக்காரனையும் உந்தித் தள்ளிற்று. ஏற்றத் தாழ்வு இருக்கக் கூடாதா! பிச்சைக்காரனுக்கும் பிரபுவிற்கும் பாசமும் பிறவும் ஒரே அளவுதானா அமையவேண்டும்!

"டிரைவர் காரை எடு--தம்பியை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக வேண்டும்" மாளிகைக்காரர் கூறினார்.

"டாக்டரை இங்கு வரச்சொல்லி 'போன்' செய்வோமே" என்றாள் மாளிகைக்காரரின் மனைவி.

பிச்சைக்காரன் மருத்துவ மனைக்குள் போனான். கம்பவுண்டரிடம் தன் மகனைக் காட்டினான். 'டாக்டர் அவசர கேஸ் பார்க்கக் காரிலே போயிருக்கார்—இப்ப வந்திடுவார் -வச்சிட்ரு' என்றான் கம்பவுண்டர்.

பிச்சைக்காரன் சுற்றிச் சுற்றிப் பார்த்தான், டாக்டர் வருகிறாரா வென்று. "அரசாங்கப் பொது மருத்துவ மனை" என்று எழுதப் பட்ட பலகை அவன் கண்ணில் படாமலில்லை. யாரை யார் கேட்பது......

கழுத்தறுபட்ட பறவைபோலப் பையன் வலி தாங்காமல் துடியாய்த் துடித்துக்கொண்டிருந்தான். கண்கள் இறுக மூடிக்கிடந்தன. இரத்தமும் ஒழுகிக்கொண்டே இருந்தது. ஈனக்குரலில் முனகிக் கொண்டேயிருந்தான்.

கார் வந்து நின்றது. டாக்டர் இறங்கினார், பிச்சைக்காரன் அவசர அவசரமாகப் பையனைத் தூக்கிக் கொண்டுபோய் டாக்டரிடம் காண்பித்தான். "அங்கே சொன்னார்கள்—அந்த நாய்தான் இவனையும் கடித்ததா — அவனுக்குக் கையில்தான் கடித்தது—சரியாய் போய்விடும்" என்று சாவதானமாகப் பேசிக்கொண்டே டாக்டர் பையனின் கரத்தைப் பிடித்துப் பார்த்தார்.

பையன் திடீரெனக் கண்களைத் திறந்தான். மறுவினாடியே கண்கள் மூடிக்கொண்டன — நிரந்தரமாகத்தான்!

டாக்டர் உதட்டைப் பிதுக்கிக் கொண்டே பிச்சைக்காரனை நோக்கி "அவ்வளவுதானப்பா" என்றார்.

"ஐயோ" என்ற பேரிரைச்சலுடன் மகன் மேலேயே விழுந்தான் பிச்சைக்காரன்.

நாயின் கடிக்குச் சிறுவனும், நாயினும் கேடான சமுதாயக் கடிக்குப் பெரியவனும் பலியானார்கள்!

தற்பொழுதுகூட நேர்முக வகுப்புகளில் மட்டும் 700-க்கு மேற்பட்டவர்கள் இங்கிலீஷ் மொழிப் பயிற்சி பெறுகின்ற சென்னையின் மாபெருங் கல்வி அரங்கம்!

The School of English Learning

ஆங்கிலக்கல்வி நிலையம்

60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.

KNOWLEDGE IS POWER

தமிழ்
எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்
ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி

அடிப்படையோடு இலக்கண ரீதியாக திருத்தமான முறையில்

இங்கிலீஷ் தபால் மூலம் கற்கலாம்

சேர்வதற்கு அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து **24–12–58-ந் தேதி** வரை அனுப்பலாம்.

அச்சிடப்பட்ட பாட விளக்கங்கள் **25–12–58-ந் தேதி** முதற்கொண்டு தொடர்ந்து அனுப்பப்பட்டு, கற்கும் போது ஏற்படும் சந்தேகங்களுக்கு முறைப்படி அவ்வப்போது தெளிவுரைகள் வழங்கப்படும்.

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்குவரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும்—சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும். "தபால் மூலம் அனுப்பப்படும் பாடங்கள் ஒரு நீண்ட தொடர் நாவலைப் படிப்பது போன்று ஆர்வத்தை ஊட்டுவதாக இருக்கும்" எனில் மிகைப்படுத்திச் சொல்வதாகாது.

முக்கிய அறிவிப்பு:—

1. 16-வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள்.
2. ஆதாரபூர்வமான ஒப்பற்ற இலக்கணப்பயிற்சி அளிக்கப்படுவதால் ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக்கொள்ளலாம்.
3. இத்தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விவரங்களையும், எட்டு நயே பைசே (8-புதிய காசுகள்) தபால்தலை அனுப்பிப் பெறுக.

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி நல்ல முறையில், உலக மொழியாம் ஆங்கிலத்தைக் கற்க முன்வருக.

4-ம் பக்கத் தொடர்ச்சி

தேபர் இந்தக்கிழமை, தெற்கே வந்தார் — கோபிச்செட்டிபாளையம் காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார் — ஆனால், அவர் என்ன கருதுகிறார், திராவிடத்தைப்பற்றி? அமைச்சர்சரித்திரத்தை ஆதாரவுக்கெழுத்து, ஆரியத்துக்கு முன்னரே திராவிடர் எனபோர் சிறந்து விளங்கினார்கள் எனகிறார்! தேபரோ, இந்தியா முழுதுக்கும் தாய்மொழி 'சம்ஸ்கிருதம்'தான் எனகிறார்!!

உண்மையை ஒப்புக்கொண்டு; 'இருந்தாலும்......' என்கிற ரகத்தைச் சேர்த்தவர் கபீர்,

உண்மை எது என்றே சொல்ல விரும்பாது, தன் புகழையும் தன் மொழியையும் 'உயர்த்திடும்' ரகத்தவராகத் தெரிகிறார் தேபர்.

இரு இனம் உண்டு, எனினும் இரண்டும இப்போது கலந்துவிட்டது என்கிறார் அமைச்சர்! இல்லை இல்லை, எல்லாவற்றிற்கும் ஒரே தாய் சம்ஸ்கிருதம்தான், அது நாகரிகத்தை அளித்தது என்கிறார் காங்கிரசின் பெரிய தலைவர்!

வகையாக வாழ்ந்தோர், வாணிபம் நடாத்தியோர், தனி மொழி பெற்றோர், தழைத்து வாழ்ந்தோர், திராவிடர் என்கிறது சரிதம். அறிஞர்களும், ஆராய்ச்சியாளர்களும், உண்மையென்கின்றனர். கன்னடமும், தெலுங்கும், துளுவும், மலையாளமும், தமிழ் தந்த குழந்தைகள் என்பதிலே சந்தேகமில்லை — வடமொழியினை விட வாழ்ந்து வருகிற மொழி தமிழ், என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் தேபர் போன்றோரும், வடக்கே இருக்கின்றனர் தமிழினும் சிறந்தது வடமொழி எனும கருத்தோடு'!

அகமது அப்பாஸ் எனும் வடநாட்டு எழுத்தாளர் எழுதினரல்லவா, "தமிழ் எனருல் என்ன? அது ஒரு மொழியா! அது எங்கே இருக்கிறது?" என்று கேட்கக்கூடிய பட்டதாரிகள்கூட வடக்கே இருக்கிறார்கள் என்று. அந்தளவுக்கு நம்மைப்பற்றி அறியாதவர்களும், நமது மொழியினை ஏதோ ஒன்று என்று எண்ணக்கூடியவர்களும், ஏராளம் வடக்கில்.

இன்னும் நமது திருவள்ளுவருக்கு 'ஸ்டாம்பில்' ஒரு தடவை கூட இடமளித்தனரில்லையே!

அறியாதவர்கள் ஒருபுறம்; அறிந்தவர்களோ, கபீரைப்போல இரண்டும ஒன்ருகக்கலந்துவிட்டது எனகிறார்கள். ஆரியமும திராவிடமும் கலந்துவிட்டதாம்! இரண்டும் கலந்து, வேற்றுமைகளின்றி ஒன்ருக உளது எனின், பிரச்சினைகளே இல்லை. கலக்காததாலும், உயர்வு தாழ்வு கற்பிப்பதாலும் தான் இன்னும் பிரிவினைகளும், பேதங்களும் இருந்துகொண்டுள்ளன. எனினும், கபீர்போன்ற கற்றறிந்தோர் எங்கே திராவிடமுள்ளது, எங்கே ஆரியம் இருக்கிறது இரண்டும் ஒன்ருகிவிட்டது என்கின்றனர்!!

கபீர், பேசவேண்டாத இடத்தில், இதனைப்போய்ப் பேசுகிறார். அவர்போல எங்கெங்கு சந்தர்ப்பம் கிடைக்கிறதோ அந்த இடத்திலெல்லாம், இக்கருத்தை வலியுறுத்திக்கொண்டே இருக்க வேண்டும் என்போர் பலர். இதனல் பலன் கிடைக்கிறதோ இல்லையோ, தங்களைப்பற்றியாவது தப்பெண்ணம் வளராமலிருந்தால் சரி என்பதே இவர்தம் கருத்தாகும்! அதனலேயே, "கலந்துவிட்டது" என்பதற்கு சான்றுகளையும் கதைகளையும் அளிக்கவும் முன்வருகிறார்கள்!!

கபீர் சொல்கிறார்—இந்து மதம் ஆரம்பித்த காலத்திலேயே சமரசம் தோன்றியதாம், அந்தச் சன்மார்க்கத்தாலேயே ஆரியமும் திராவிடமும் ஒன்ருகிவிட்டதாம். இதைச் சாதாரணமாகச் சொன்னல் நம்ப மாட்டார்களென்று, புராணச் சான்றையும் தருகிறார், கபீர்! ஹுமாயூன்கபீர், இந்து மதப் புராணத்திலிருந்து எடுத்து அளிக்கிறார் விளக்கம்!!

"கிருஷ்ணபரமாத்மாவுடைய நிறம் கருப்பு! சிவபெருமானுடைய நிறமோ வெளுப்பு'—எனினும், இருவருக்கும் சம இடம்அளித்து, திராவிடஆரியக் கலப்பை வலியுறுத்துகிறது. இந்து மதம், இது தான், அதன் பெருமை."

எப்படி விளக்கம்! நிறைவேற்றுமையிருந்தும், இரண்டு கடவுள்களுக்கும் சம இடம் கொடுத்ததாம்,இந்துமதவேதங்கள். இந்தச் சமரசப்பான்மையைக்காணீர், என்கிறார், கபீர்! வாய்ப்புக் கிடைத்தால், நிறவெறி தாண்டவமாடும் ஆப்பிரிக்காவுக்கும் கூடப்போய், இந்தத்தத்துவத்தை விளக்கினலும் விளக்குவார்!!

இரண்டும் கலந்துவிட்டது— புராண இதிகாச காலத்திலேயே இது ஏற்பட்டுவிட்டது என்று நிலைநாட்டுவதில் அவ்வளவு ஆசையும் ஆர்வமும், இன்றுள்ள பேதங்களை நீக்கி, மனித இனத்தின் மாண்பை வளர்க்கும் விதத்தில் பயன்பட்டால்! திராவிட முன்னேற்றக் கழகம் அதைத்தான் விரும்புகிறது.

ஆனல், ஆரியமாவது திராவிடமாவது, அது எங்கேஇருக்கிறது, கலந்துவிட்டதே என்பதன்மூலம், தி. மு. க வின் குரல் வலிமையை ஒடுக்கிவிட்டோம் என்று எண்ணுகிறார்கள். திராவிடநாடு கோரிக்கைக்குத் தக்க பதில் சொல்லிவிட்டோம் என்று எண்ணுகிறார்கள்.

இனப்பிரிவினை மட்டுமல்ல, நாம் திராவிடநாடு கேட்பதற்கு! அவ்வளவு அறியாதவர்களல்ல நாம்!! பொருளியல்— அரசியல் —வரலாறு இப்படி எத்தனையோ, காரணங்களுண்டு, அவைகளுக்குத் தக்கபதில் சொல்ல முடியாதபோது, இப்படி இரண்டும் கலந்துவிட்டது' என்றுஏதேதோ சொல்கின்றனர் — அதன் மூலம் பெரிய சாதனையையும் தடையையும் போட்டு விட்டோம் என்று எண்ணுகின்றனர்.

ஒரு விதத்தில் நாம் மகிழத்தான் வேண்டும்—இந்தப்பிரச்சினை, இன்று, அலிகார் பல்கலைக்கழகக் கூடம் வரையில் செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டதே! ஒரு பத்தாண்டுகளுக்கு முன்பு இதைப்பற்றி, நினைத்ததாகக் கூடக்காட்டிக்கொண்டதில்லையே, கனம்கள்!!

★

குறுக்கு வழி

மின்சாரவிளக்கு இல்லையா?
—உடனே போடு!

நல்ல 'ரோடு' வேண்டுமா?
—குறித்துக்கொள்!

இவர்யார்? இந்த வட்டாரத்திலேயே செல்வாக்குள்ளவரா?
—என்ன 'லைசென்ஸ்' வேண்டும்? கேள்!!

கட்சிமாநாடு என்ருல் இலட்சம் தருவாரா?
—சரி! உடனே ஒரு கையெழுத்து வாங்கி மெம்பராக்கு!!

•

வெள்ளையன் வெளியேறி, சுதந்திர தேவி அரியாசனத்திலமர்ந்த இந்தப் பத்தாண்டுகளில், ஆட்சியிலமர்ந்த காங்கிரஸ் தலைவர்கள், தேர்தலில் எப்படியாவது வெற்றி பெற வேண்டும் என்பதற்காகச் செய்திடும் தில்லுமுல்லுகளை, நாடு அறியும்.

தேர்தல் சமயத்திலே, உறக்கத்தினின்று விழித்தவர்கள்போல, திடீர்திடீரென ரோடுகள் போடுவர், அதிகாரிகளுக்கு உடனுக்குடன் உத்தரவுகள் பிறப்பிப்பர், ரோடுகள் அமையும், மின்சாரம் ஓடிவரும். காஞ்சித் தொகுதியில், நடந்த தேர்தலின்போது, கண்டறியாதனவெலாம் கண்டோம்.

எப்படியாவது, இந்திய உபகண்டம் சுதந்திரம் பெறவேண்டும்! — இது அந்த நாள் இலட்சியம்.

இந்த நாள் இலட்சியம், எப்படியாவது, ஒவ்வொரு தேர்தலிலும் வெற்றிக் கொடி நாட்டவேண்டும்!!

இதனல், என்னென்ன தந்திரங்களையும் சாதுர்யங்களையும் செய்யவேண்டுமோ, அவ்வளவையும் கடைப்பிடிக்கத் தவறுவதில்லை, காங்கிரஸ்காரர்கள். அதிகாரம் கையிலிருப்பதால் அதைக்கொண்டு, வலைவீசிடும் வேலையைச் செய்யக் கொஞ்சமும் தவறுவதில்லை.

கண்சாடை காட்டுவது! ஓடி ஓடிச் சந்திப்பது! சலுகைகள் தருவது! பதவியாசையை ஊட்டுவது! இப்படிப் பலவித முறைகளையும் கையாளுவர்.

எதிர்க்கட்சிகளிடம் சரணகதி அடைவதும், குபேரனென்ருலும் கொள்கையில்லாதவனை இகழ்ந்த காலம்போய் அவனைத் தலைமேல் தூக்கிவைத்துக்கொண்டு கொண்டாடுவதும், மிட்டாதார்களையும் குட்டி ஜமீன்தார்களையும் வட்டமிட்டு வளைப்பதும், காசுதருகிறவன் யாராயிருந்தாலும் கையைக் காட்டி அழைப்பதும், இன்றைய காங்கிரஸ் தலைவர்களின் 'ராஜதந்திரமாகி'விட்டது.

"செச்சே! இதுவா, காங்கிரஸ்? இதுவா ஜனநாயகம்? அதிகாரத்தை ஒட்டு வேட்டைக்குச் செலவிடலாமா! தேர்தலுக்காக மானத்தை இழக்கலாமா!!' என்று எந்த பெரிய தலைவர்களும், மாநிலத் தலைவர்களைக் கண்டிப்பதில்லை. மாருக, கெட்டிக்காரர்! சாமர்த்தியசாலி! அடடா, ஏதோ செய்து எப்படியோ காங்கிரசுக்குப் பலத்த மெஜாரிடி ஏற்படச் செய்துவிட்டார்!! எனப் பாராட்டுகின்றனர்.

பொதுத்தேர்தல்களில் வெற்றி பெற்றுவிட காமராஜர் கையாளும் முறைகளை நாடு அறியும்! பெரியாரின் காலடி தொழுவார்— எஸ். எஸ். இராமசாமியை இழுப்பார்— எதிர்க்கட்சியிலிருந்துவிலகு, 'டிக்கட்' தருவேன் என்பார். இப்படி, மனிதனின சுயநல ஆசைகளையெல்லாம் தூண்டிவிட்டு, அதிகாரமூலம் அவைகளையெல்லாம கிடைக்கச் செய்வேன் எனும் ஆசையினைத் தூண்டி, எப்படியாவது வெற்றி பெறப் பார்ப்பார்!! நெடும்பலமா? சரி, பழையக் கோட்டையா? ஆகா. திராவிடகழகம்? இருந்தாலென்ன. பணம் கிடைக்குமா? பிறகென்ன? இதுவே அவரது தேர்தல் கொள்கைகளாகும். எப்படியோ, வெற்றி பெற்றுவிட வேண்டும் — இதுதான் அவரது இலட்சியம்!!

நல்லோர் கண்டிப்பர்; ஆனல், இன்று காமராஜருடைய போக்கு, அவருடைய தலைவர்களால், 'ராஜதந்திரம்' என்று புகழப்படுகிறது.

"ராஜதந்திரம் காட்டிட முனைந்தால், மூக்கை அறுத்துவிடுவார்கள் என் நாட்டு மக்கள்"

"அதிகாரத்தை உபயோகித்து பலம் பெற முயற்சித்தால். குப்புறக் கவிழ்த்து விடுவார்கள். சற்றும், யோசிக்க மாட்டார்கள்"

"கொள்கையைச் சொல்லு! —என்பார்களே ஒழிய, கோணல் வழியையும், குறுக்கு வழியில் பலம் தேடும் வித்தையையும் கொஞ்சமும் அனுமதிக்க மாட்டார்கள்"

என்கிறார், பிரபல அமெரிக்க வழக்கறிஞரான லிம்பாக்! சென்னைக்கு வந்துள்ள அவர் டிசம்பர் 5ந் தேதி காமன்வெல்த் பார்லிமெண்டரி சங்கச் சார்பில் பேசுகையில், இவ்விதம் வெளியிட்டுள்ளார்!!

"கடந்த தேர்தலின்போது, ஆளும் குடியரசுக் கட்சியின் பிரதிநிதிகளைக் குப்புறவிழச் செய்தார்கள் அமெரிக்க மக்கள்! ஏன் தெரியுமா? குடியரசுத் தலைவரும் துணைத்தலைவரும், ஆளும்கட்சிக்கு மக்களின் ஆதரவைத் திரட்டிட முயற்சித்தார்கள். புரிந்துகொண்ட மக்கள், கவிழ்த்துவிட்டார்கள்."

"இப்படி, குறுக்குவழியில் ஓட்டுப்பெற முயன்ருல், யாராயிருந்தாலும், எவ்வளவு பெரியவராயிருந்தாலும் அமெரிக்க மக்கள் அனுமதிக்கமாட்டார்கள். 1918ல் உட்ரோவில்சன் இப்படித்தான், பார்லிமெண்டில் தன் கட்சிக்காரர்கள் அதிகமாக இருந்தால் தனக்குத் தொல்லை வராது என்று எண்ணி, முயற்சித்தார். மக்கள் அவர் நிறுத்திய ஆட்களையெல்லாம் தோற்கடித்தனர்!!"

ஆட்சியிலிருப்போரின் நினைப்பு என்னவென்பதை, அறிந்து

கொள்ளுமளவுக்கு, அமெரிக்க மக்களிடையிலே அரசியல் விழிப்பு இருக்கிறது.

ஆள்வோரின் 'சுயநலத்தை' அனுமதிப்பதால் ஏற்படும் ஆபத்தினை அறியும் சக்தியும், அமெரிக்க மக்களுக்கு அதிகமாக இருக்கிறது.

எனவே, கவிழ்த்துவிடுகிருர்கள் —எவ்வளவு பெரியவராகஇருந்தாலும், கவலைப்படுவதில்லை — ஜனநாயக நெறியினை மீறுகிருர் என்ற சாடை தெரிந்தால் போதும், தோற்கடித்துக்காட்டிப் புத்தி புகட்டுகிருர்கள்.

இந்தச் சூழ்நிலை மலரும்போது தான், உண்மையான ஜனநாயகம் ஏற்படும்! அப்போதுதான் சுயநலம் ஒழிந்து, மக்களுக்காக,மக்கள் பிரதிநிதிகளால், நடைபெறும் மக்களாட்சி ஏற்படும்!!

இந்த விழிப்பு, அமெரிக்காவில் அதிகம் இருக்கிறது என்கிருர் லிம்பாக். பெருமையோடு சொல்லிக் கொள்கிருர்.

'ஜனநாயகம்' என்பதையே இப்போதுதான், சந்திக்கிருர்கள் இந்திய உபகண்டத்து மக்கள்! அவர்கள்தம் ஏழ்மையும், ஆண்டானுக்கு அடிமைப்படும் குணமும், வல்லான் காலில் விழும் சூழ்நிலையை மாற்றியமைக்க முடியவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, வேட்டையாடாமல், ஒழுங்கையும் உண்மையான ஜனநாயகப் பாங்கையும் உருவாக்கிக் காட்டவேண்டிய பொறுப்பு, மக்கள் தலைவர்களிடம் தான் உள்ளது. குறிப்பாக, ஆளும் கட்சியிடம்தான் அதிகம் இருக்கிறது.

ஆனல் என்ன நடக்கிறது இங்கே? தேர்தல்களில் 'ஜனநாயகத்தின்' அடிப்பீடமே ஊழல்களைக் கொண்டு நிறுவப்படுகிறது—அப்படியும் மீறி எதிர்க்கட்சிகள் வெற்றிபெற்ருல் அவர்களது தொகுதிகள் புறக்கணிக்கப்படுகின்றன — அடுத்த தடவை எப்படியாவது வராமற் செய்யவேண்டும் எனஇற எண்ணமே தலைதூக்குகிறது — எங்கெங்கு ஓட்டுகளைப் பெறமுடியுமோ, அங்கெல்லாம் வேண்டியதைச் செய் என்று முயற்சிக்கிருர்கள் — பலத்த மெஜாரிடி இருப்பதால், நல்லது சொனனலும், எதிர்க்கட்சியினர் சொல்லினரென்ருல், அதை ஏற்க மறுக்கிருர்கள் — எல்லாவற்றையும்விட ஆச்சரியம், அப்படி ஏற்க மறுப்பதற்குரிய காரணத்தையும் அவர்கள் பகிரங்கமாகச் சொல்லத் தவறுவதில்லை! 'சென்னை'க்குப் பதில் 'தமிழ் நாடு' என்று பெயரிடு என்று எல்லா எதிர்க்கட்சிகளும் கேட்டன—அமைச்சர் ஒருவர் சொன்னரல்லவா, இந்த எதிர்க் கட்சிகள் சொன்னதால் தான், நாங்கள் பெயர் மாற்றவில்லை என்று!!

அதிகாரம், ஒரு போதைப் பொருள்; ஆனல் போதை எப்போதுமே நெடுநேரம் நீடிக்காது. மக்கள் ஒருசமயம் இல்லாவிடினும் இன்னெரு சமயம் விழித்துக் கொள்ளாமற் போகார். என்ருலும், விழிப்பில்லாத மக்கள் மத்தியில், யார் நீதியை உருவாக்குகிருர்களோ அவர்கள்தான் உத்தமர்கள்! ஆனல் உத்தமனை இருந்தால் ஊராள முடியுமோ என்பார் காமராஜர்? என்ன செய்வது? இந்திய உபகண்டத்து அரசியலில், இன்றைய தினம் சுயநலக்கொடி தானே பறக்கிறது!

★

குறைந்த விலையில்! சிறந்த முறையில்!!

"திராவிட நாடு"

பொங்கல் மலர்

சி. என். ஏ. தரும் கருத்துப் படையல்கள்.

வண்ண முகப்புடன், எண்ணத் தொகுப்புகளுடன்

ஜனவரி 14-ந் தேதி எங்கும் கிடைக்கும்

விலை 8 அணுதான்!!

★

காஞ்சீபுரம், ௯௫, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்

திராவிடநாடு

1267

21—12—58 | வார வெளியீடு | விலை 16 காசு

1958 ... MADRAS

1267/4.58

எங்கள் மொழி

(கந்தையா)

இயற்கைமொழி இனியமொழி எங்கள்தமிழ் மொழியே!
எளியமொழி பழையமொழி எங்கள்தமிழ் மொழியே!
மயக்கமற நீதிசொல்லி மாண்புபெற்ற மொழியே!
மாநிலத்தை நானிலமாய் வகுத்ததெங்கள் மொழியே!

பொருளையகம் புறமென்று புகன்றதெங்கள் மொழியே!
புனிதமான ஒழுக்கநெறி போற்றிவந்த மொழியே!
வருமுயிர்கள் தமையொழுக்க வழியில்உயர் திணையும்,
மற்றும்அஃ றிணையுமாக வகுத்ததெங்கள் மொழியே!

விண்ணறிவும் மண்ணறிவும் விரும்புமருந் தறிவும்,
வேண்டுமளவும் கொண்டுபண்டே விளங்குமெங்கள் மொழியே
கண்ணறியக் கடவுளையும் கந்தழிஎன் றன்றே
கழறியதும் மெய்யறிவுக் கருவூலத் தமிழே!

பண்ணேடு பரதமுதற் பலகலையும் பாரோர்
பார்த்துவியப் படையமுன்பே பகர்ந்ததெங்கள் மொழியே!
எண்ணேடும் இயலோடும் வேறெதற்கும் இல்லா
எழுத்தோடும் குறளோடும் எழுந்ததெங்கள் மொழியே!

டிச. 7ந் தேதிய 'ஹோம்லண்ட்' இதழின் தலையங்கத்தின் கருத்தினைக் கொண்ட கட்டுரை.

புதிய 'ஜீயர்' புறப்படுகிறார்!

"பாபம்" என்பதற்கு ஜீயர்களும் சித்தர்களும் தந்துள்ள விளக்கங்கள் போதாதென்று, புதிய விளக்கந்தரப் புறப்பட்டிருக்கிறார் நம் நிதி அமைச்சர் சுப்ரமணியம்.

"தொழில் துவங்க, தனிப்பட்டவர்களுக்கு உதவி தருவது கூடாதென்று மறுப்பது பாபமாகும் என்று சட்ட சபையில் வலியுறுத்திக்கொண்டே வருகிறேன்"

"புதிய புனிதரே, வாழ்க" என்று அவர் பேசியதைக் கேட்ட பிரபுக்களும் பெரிய மனிதர்களும், ஆனந்தப்பட்டிருப்பார்கள். அவர் இந்த உரை வழங்கிய இடம், தென்னிந்திய வர்த்தக சபையிலாகும். பூரிப்புக்கொண்ட மனதுடனும் 'பரவாயில்லை இவர்' எனும் பாராட்டு நிறைந்த பார்வையுடனும் வர்த்தக வேந்தர்கள், கைதட்டி, ஆரவாரித்திருப்பார்கள். ஏனெனில் இவர் போன்றவர்கள், தங்களுக்காக வாதாடக் கிடைக்கவில்லையே என்று வியாபார வேந்தர்கள் வாட்டம்கொண்டு கிடக்கின்ற காலமல்லவா இது! பொது மேடைகளிலிருந்தும், பிற இடங்களிலிருந்தும் "தொழில்களைத் தேசியமாக்கு" எனும் குரல்கள் ஒலித்துக்கொண்டு இருப்பதைக் கேட்டுக்கேட்டு, இளர்ச்சிகொண்டு கிடக்கும் அவர்களுக்கு அமைச்சரின் உரை, ஆனந்தபரவசமளித்திருக்கும். வேண்டாமலே விளைந்த 'வரப்பிரசாதம்' என்று களித்திருப்பர். அதிலும் ஒரு நிதி அமைச்சர் வக்கீலாகிறார் என்றால் சாதாரணமா என்ன!!

"மூடுங்கள் வாயை! ஓ! ஆண்டவன் கட்டளையை மதிக்கும் அன்பரீர்! சீமான்களையும் பணதிபதிகளையும் பலபடப் பேசும் வாயை மூடுங்கள். அரசாங்கத்திடம் இருந்து அவர்கள் பெறும் பண உதவியைப்பற்றிப் பேசாதீர்கள். அது பாபம்!" என்கிறார் புதிய வக்கீல்! அழியும் கொள்கைக்கு ஆதரவு தேடும் வக்கீல்!!

இதோடு நிறுத்திக்கொள்ளவில்லை, "இன்றைக்கு என்றல்ல நீண்ட நாட்களாகவே சட்டசபையில் இதை வலியுறுத்தி வருகிறேன்" என்றும் சொல்லி, தன் வீரப்பிரதாபத்தை நிலைநாட்டிக் கொண்டிருக்கிறார்.

தோல்விக் கூடாரத்தை இழுத்துக்கட்டி நிறுத்தும் முயற்சி. எனினும், பதவி தரும் பலம் கொண்டு வெற்றி காணலாம் என்று விழைகிறார் போலும். வீண் முயற்சி என்பதை அமைச்சர் விரைவில் புரிந்துகொள்வார்.

சர்க்காரின் சலுகையில் தனிப்பட்டோர் வளர்வது சரியல்ல என்று நினைக்கிறார்கள் என்கிறாரே அமைச்சர் — என்னதான், எதிர்பார்க்கிறார் மக்களிடமிருந்து? கைகட்டி வாய்பொத்தி, "உத்தமர்காள்! உங்களது தியாக மனமும் சேவா உணர்ச்சியும் யாருக்கு வரும்?" என்று இந்த 'சீமான்களுக்கு' எதிரில் வாழ்த்துரை பாட வேண்டுமென்று அமைச்சர்கள் எதிர்பார்க்கின்றனரா? அவர்கள் தொழில்களை வளர்க்கிறார்களாம் — அதன் மூலம் ஏராளமானவர்களுக்கு வேலை கொடுக்கிறார்களாம். உண்மை! ஆனால், அவர்கள் அப்படிச் செய்வது ஏன்? தர்மசிந்தையாலா! அல்லது தயாள குணத்தினலா! ஆலைகளையும் தொழில்களையும் அரசாங்கத்தின் பண உதவிகொண்டு, ஆரம்பித்து நடத்தும் இந்தச் செல்வவான்கள், கொழுத்த இலாபம் பெருமலா இருக்கிறார்கள்? வியர்வை சிந்திப் பாடுபடும் உழைப்பாளிக்கு ஏதோ கொஞ்சம் கொடுத்துவிட்டு, கொள்ளை லாபம் அடிக்கும் கும்பல் இவர்கள் என்பதைத் தெரியாதவர்களும் உண்டோ? உழைப்பவனுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் ஒரு 'ஏஜண்டு'போல இருப்பதன்றி இந்தப் பெரிய மனிதர்கள் என்ன மகா சேவையைச் செய்கிறார்கள்?

அது மட்டுமல்ல, இந்தப்பெரிய மனிதர்கள் துவங்கும் தொழில்களுக்கு வாரிவாரிக் கொடுக்க முன்வருகிறதே அரசாங்கம்; அந்தப் பணம் யார் வீட்டுச் சொத்து? உழைத்து உழைத்து உலரும் மக்களிடமிருந்து, பற்பல வரிகள் மூலமாய்ப் பெற்ற பணம், தவிர வேறென்ன? மக்களின் பணத்தை மூலதனமாகப் பெற்று, அந்த மக்கள் மன்றத்தையே உழைக்கவும் செய்து, அதன் மூலம் வரும் வருமானத்தில் ஒரு சிறிதை உதிர்க்கிறார்களேயன்றி, வேறு என்ன!! இந்தப் புனித சேவைக்குத்தான், மக்கள் பூரிப்படைய வேண்டுமென்கிறார் அமைச்சர் — புளகாங்கிதம் அடையச் சொல்கிறார் — மரியாதை செலுத்தச் சொல்கிறார் — அவர்களை மதிக்காமலிருப்பது பாபம் என்றும் சொல்கிறார்!!

நிதியமைச்சருக்கு, புள்ளி விபரங்கள் கைவசமிருக்கக் கூடும். ஆனால் சமூகம் எதிர்பார்க்கும் விளைவுகள் வேறுவிதமானவை. பிற்போக்கெனும் கூண்டுக்குள்ளேயே, இன்னும் இருக்கிறார் அமைச்சர்.

ஒருகாலமிருந்தது, பணக்காரர்கள் என்றால் பயபக்தியுடன் நடந்துகொள்ளவேண்டும், அவர்களை அலட்சியமாக நடத்துவதென்பது பாபமாகும் என்று கருதப்பட்டகாலம். "அவன் ஏன் பணக்காரனாக இருக்கிறான் தெரியுமோ? அவன் வந்தவழி அது!" என்று கடவுள்மீது பாரத்தைப் போட்டுப் பேசியகாலம் அது. ஏன், நம்மை ஆண்டு சென்ற வெள்ளையர்கள்கூட, தாங்கள் இந்த நாட்டை ஆளக் காரணம், கடவுள் விருப்பமே என்று கருதிக் கொண்டிருந்ததுண்டு! அந்தப் 'பலூன்' வெடித்து நீண்ட நாட்களாய்விட்டது — அதையெல்லாம் நம்பும் நிலையில் இல்லை மக்கள் — இந்த நிலையில், அமைச்சர்

(4-ம் பக்கம் பார்க்க)

"ஹோம்லண்ட்" 21-ந் தேதி வரவேண்டிய இதழ், 28-12-58 அன்று வெளி வரும்.

நிர்வாகி.

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [21-12-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 23

இரண்டு எசமானர்களுக்கு!

இரண்டு எசமானர்களுக்கு நாம் அடிமை! — என்று சொன்னால், அதில் இந்திய விரும்பிகளுக்கு ஆத்திரம் வரும்.

மாகாண சர்க்கார்! மத்திய சர்க்கார்!!—இப்படி நாம் இரண்டு எசமானர்களை வைத்துக்கொண்டு வாழ வேண்டி இருக்கிறது.

இதனால், வரிகளை இரண்டு 'குடும்பத்துக்கு' தருகிறோம் என்பது மட்டுமல்ல, பல பிரச்னைகளில் சங்கடமும் சஞ்சலமும் அடைய நேரிடுகிறது.

இரண்டு சர்க்கார்களும் கட்டடங்கள், அதிகாரிகள், என்று ஏராளமான பணத்தை அழிக்கின்றன! ஒன்றுக்கு இரண்டு — என்று நமது வரிப்பணம் கரியாகிறது! — என்பது மட்டுமல்ல எத்தனையோ துறைகளில், நாம் வேதனைக்கு ஆளாகிறோம்.

ஆந்திர சட்டசபையில், இந்தக்கிழமை இப்படி இரண்டு எசமான்களுக்கிடையில் அகப்பட்டுக்கொண்டு விழிப்பதைப்பற்றி, ரசமான நிகழ்ச்சி ஒன்று நடந்திருக்கிறது. ஒரு எம். எல். ஏ. விசாகப்பட்டினத்திலுள்ள கப்பல்தளம் பற்றிய கேள்வி ஒன்று கேட்டார்! ஆந்திர மந்திரியோ, கப்பல்தள விவகாரம் மாகாணத்துடையது அல்ல, மத்திய அரசினுடையது என்றார். ஏன் மத்திய அரசைக் கேட்டுத் தகவல் பெறுவதுதானே?—என்றார், நாகிரெட்டி எனும் அந்த கம்யூனிஸ்டு எம். எல். ஏ. "கேட்டோம். இது உன் விஷயமல்ல மத்திய சர்க்கார் விஷயம். இதைப்பற்றி உனக்கென்ன?" என்று பதிலளித்துவிட்டார்கள் என்றுவெட்கத்தை மறைத்துக்கொண்டு சொன்னார் அமைச்சர்.

"அதெப்படி? மத்திய சர்க்கார் கேட்டால் நாம் எல்லாத் தகவல்களையும் தரும்போது, மாகாணம் கேட்கும் விபரங்களை மத்திய அரசு தரவேண்டியது தானே! இதுஒழுங்கா? நியாயமா?" என்றுகுமுறினார் எல்லமண்ட ரெட்டி எனும் கம்யூனிஸ்டு உறுப்பினர். "அதைத்தான் நானும் கேட்கிறேன். இப்படி மாகாணங்கள் என்றாலே மரியாதை காட்ட மறுக்கிறது டில்லி. பதிலுக்குப் பதில் நாமும் செய்ய வேண்டும். அப்போதுதான் புத்தி வரும். இனி, நாமும் மத்திய சர்க்கார் ஏதாவது விபரம் கேட்டால் சொல்லக்கூடாது!" என்றார், ஏக இந்தியா இருக்க வேண்டுமென்பதில் அசையாத உறுதிகொண்டுள்ள கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவரான சுந்தரய்யா.

ஆந்திர முதன்மந்திரி சஞ்சீவிரெட்டி எழுந்தார். என்ன பதிலைச் சொல்லமுடியும்? விசாகப்பட்டினம் ஆந்திராவிலிருப்பது! அதன் நலனைப்பற்றிய அக்கறை நிச்சயம் ஆந்திர சட்டசபை உறுப்பினருக்குண்டு!! ஆனால், அங்கேயுள்ள கப்பல் தளமோ, டில்லியின் அதிகாரத்திலுள்ளது. "சிக்கலான பிரச்னைதான். எப்படி நாம் நடந்துகொள்ளவேண்டுமென்று சபாநாயகர்தான் தீர்ப்பளிக்கவேண்டும்", என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தார் சஞ்சீவிரெட்டி.

சத்திரத்துச் சோற்றுக்குத் தாத்தையங்கார் உத்தரவா! என்பார்கள். விசாகை, ஆந்திராவின் சொத்து. ஆனால் அங்கேயுள்ள துறைமுகம், பெரிய எசமானின் சொத்து. சின்ன எசமான் ஏதாவது கேட்டால், இப்படி முறைக்கிறார் பெரிய எசமான்! நாளைக்கு விசாகை வளமானால், ஆந்திராவுக்குத் தான் நல்லது; வியாபாரம் கொழித்தால், ஆந்திர மக்களுக்குத்தான் வளம் பெருகும். ஏன் கப்பல் தளம் கட்டப்படவில்லை?—என்கிற விபரத்தை டில்லி தந்தால் என்ன? குடியா, முழுகிவிடும்? தராததற்குக் காரணம், தன் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் மாகாண சர்க்கார் தலையிடக்கூடாது என்பதே! மந்திரிக்கு, டில்லி அனுப்பியுள்ள பதிலில், இந்தக் குறிப்பும் தரப்பட்டிருக்கிறது!!

"உறவுக்கு டில்லி; உரிமையெல்லாம் எனக்கே" என்று ஒவ்வொரு பகுதியும் வாழ்ந்தால், இது போன்ற சிக்கல்கள், ஏற்பட வழியில்லையல்லவா? அவரவர்கள் சொத்தையும் சுகத்தையும் உரிமையோடு அனுபவித்துக்கொண்டு வாழலாமல்லவா! அந்த உரிமையைத்தானே 'தனிநாடு' எனும் பெயரில் கேட்கிறோம், நாம்!!

*

'முன்ஷி'யும் கூறுகிறார்!

*

தேசம்! தேசம்!! என்றால் என்ன? — யாராவது காங்கிரஸ்காரர்களைப் பார்த்துக் கேட்டால், பலவிதமாகப் பதில் சொல்வார்கள். முன்னாள் டில்லி மந்திரியும் கவர்னருமான, முன்ஷி சொல்கிறார், ஒரு தேசம் என்பது, நாமாக உருவாக்கிக்கொள்வதுதான், என்று. அதற்கு எந்த மொழி அதிகமாகப் பேசப்படுகிறது என்பதல்ல; அந்த வட்டாரத்திலிருக்கும் மக்கள் 'ஒரு தேசமாக' இருக்க விரும்புகிறார்களா என்பதுதான், முக்கியம் என்கிறார், ஒருகட்டுரையில். அப்படி ஒரு தேசமாயிருக்க மக்கள் விரும்பவேண்டும் என்றால் அவர்களிடம் ஒரேவித கலாச்சாரம் இருக்கவேண்டும் எனவும் சொல்கிறார்.

(13-ம் பக்கம் பார்க்க)

2-ம் பக்கத் தொடர்ச்சி

இளம்புகிறார், வீசியெறிந்ததை கையில் எடுத்து வைத்துக் கொண்டு, காலட்சேபம் செய்ய.

ஏழைத் தொழிலாளர்களைச் சுரண்டி அவர்தம் வியர்வையைக் கொண்டே மாடமாளிகைகளும் அங்கே மந்தகாச வாழ்வு அனுபவிப்போரும் உருவாகிறார்கள் என்கிற உண்மையை, அமைச்சர், சிந்திக்கவில்லை. உழைப்பவன் ஏன் உருக்குலைகிறான், உழைப்பவன் ஏன் உயரப்பறைகாமல் இன்னும் ஏழையாகவேயிருக்கிறான்; உழைக்காமல் அரசாங்கத்திடமிருந்து 'உதவி'யும், ஏழையிடமிருந்து உழைப்பையும் பெறும், உயரப்பர்கள் மட்டும், உயர உயரச் சென்று கொண்டிருக்கிறார்கள், என்கிற காரணத்தை நினைக்கவும் மறுக்கிறார், நிதியமைச்சர். பாபமாம்! பணம் படைத்தோருக்கு உதவி தந்து உயரப்பராக்காதே என்பது பாபமாம்!!

எல்லோரும் ஒரேவிதமாக வாழும் உரிமையை அளிப்பது தான், நாணயமான ஒரு அரசின், பொறுப்பாகும். எல்லோருக்கும் வேலைதந்து இன்புறச் செய்வது தான், ஒரு நாகரிகமான அரசின் கடமையாகும். இதற்காகத்தான், 'நாடுகள்' என்கிற எல்லைகள் உள்ளன! அவைகளை ஆள அரசாங்கங்கள் அமைக்கப்பட்டு, அந்த அரசுகளை நிர்வகிக்கும் அமைச்சர்களும் ஏற்படுத்தப்பட்டு, அவர்களுக்குச் சம்பளமும் தரப்படுகிறது. இந்த வேலையை—எல்லோருக்கும வேலைதந்து, வேலையில்லாக் கொடுமையை நீக்க வேண்டிய பொறுப்பினைக் கொண்டிருக்கிற ஒரு அரசு, இலாபவேட்டைக்காரர்களின் தயவை ஏன் நாடவேண்டும்? இந்த அடிப்படை வேலையைச் செய்ய, ஏன், இனனெரு கும்பலின் தாட்சண்யத்தை எதிர்பார்க்க வேண்டும்? இதன்றோ, மன்னிக்கமுடியாத பாபம்! இப்படிச் செய்யாதது மட்டுமின்றி, மேலும் மேலும் அதே நிலைமையை நீடிக்கச் செய்வது — அதுவும் சோஷியலிசமே எங்கள் பாதை என்று உலகத்துக்குப் பறைசாற்றிய பின்னரும் வக்கீலாகிப் பேசுவதன்றோ, கொடுமைகளிலெல்லாம் பெரிய கொடுமை!!

பாபம் என்றால் என்ன? எது, பாபம்? தனிப்பட்ட ஒரு மனிதனுக்கோ, அல்லது ஒரு சமூகத்துக்கோ, அல்லது ஆண்டவனுக்கோ, துரோகமிழைத்துத் துன்பம் தருவது, பாபம். இதன்படி பார்த்தால், இன்றைய உலகில் யார் பாபாத்மாக்கள்? தங்கத்தை இரும்புப் பெட்டியில் வைத்துவிட்டு, சாதாரண நிக்கல் நாணயத்தைப் பசித்தவனை நோக்கி எறிகிறவர்கள், பாபிகள். சுயநலமே பெரிதென்று, தன கணக்குப் புத்தகத்தை மட்டும் கவனத்தில் வைத்து வாழ்வோர் பாபிகள். இலட்சக்கணக்கானவர்களைக் கட்டாயப்படுத்தி உழைக்கச் செய்து, 'எதிர்த்தால், விரட்டுவோம்', 'உரிமைக்குரல் எழுப்பினால் வெளியில் தள்ளுவோம்' என்று தர்பார் நடத்துகிறவர்கள், பாபிகள். பல்லாயிரக்கணக்கான மக்களைப் பட்டினிபோடுகிறவர்கள் பாபிகள்! குடிசைகளில் நாயைவிடக் கேவலமாக வாழும்படி வைத்திருப்பவர்கள் பாபிகள்! கற்பிளந்து, மலைபிளந்து, கருவியெலாம் செய்துதந்து, உழைத்து, உலகத்தை வாழச்செய்து, 'தாங்கள் வாழமுடியாமல், அஞ்சி, பயந்து, நடுங்கி, வாழ்க்கையே ஒரு சுமையாக, எப்போதடா சாவோம என்று ஏங்கித் தவிப்பவர்களை உண்டாக்கியவர்கள் பாபிகள்!!

ஆண்டாண்டுகாலமாக, தங்கள் குறைகளை வாய்விட்டுச் சொல்லும வழி தெரியாமல், சங்கடத்தை அனுபவித்துக்கொண்டே வந்தனர், ஒடப்பர்கள். ஆண்டவன் காப்பாற்றுவார்— சொர்க்கத்தில் நல்ல இடம் கிடைக்கும் — என்ற எண்ணம் அவர்களை, உயிர்வாழச் செய்தது. இந்த நம்பிக்கையிலேயே, அவர்கள் வாய்மூடி மௌனியாக, தொல்லைகள் துளைத்த போதும், துயரங்கள் சுக்கு நூறாக்கியபோதும், சகித்துக்கொண்டு கிடந்தார்கள். எவரும், அவர்களுடைய குறைகளைச் சொல்லவோ, எடுத்து வாதாடவோ வரவில்லை! ஏனெனில், அப்படி முன் வருகிறவர்களுக்குத் தர, புன்னகையும நன்றியும் தவிர, வேறெதுவுமில்லை அவர்களிடம்!!

காலம் அரும்பிற்று — சிலர் கிளம்பினார்கள் - அவர்களுக்காகப் பேசினார்கள் - சோஷியலிசமே நல்ல பாதை எனும் கொள்கையைச் சொன்னார்கள்.

இந்தப் புதுயுகம் எனக்குத் தெரியாது! இதை நான புரிந்து கொள்ளவில்லை!! - என்று சொல்லாமற் சொல்லி, நம்மை நம்பச்சொல்லுகிறார் தோழர் சுப்ரமணியம்.

[16-ம் பக்கம் பார்க்க]

பொங்கலன்றுவெளிவருகிறது
அண்ணாவின் அணிவகுப்பில்
புதியதோர் படைக்கலன்!
தென்னகம்
(வார இதழ்)
ஆசிரியர்: K.A. மதியழகன்.
தனி இதழ் 16 காசு ... ஆண்டுசந்தா ரூ. 8.
முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள்தேவை
விபரங்கட்கு:
தென்னகம்: சென்னை.1

"ஏக இந்தியா"--ஒரு ஏமாற்று வித்தை!

(சா. சதாசிவம்)

"ஏக இந்தியா"—அது அரசியல் சந்தையிலே, அமைச்சர்களால் அடிக்கடி விளம்பரப்படுத்தப்படும் விலை போகாத சொல்! என்றைக்கும் இருந்திராத புதிய கண்டுபிடிப்பு!—அதன் பொருள் என்ன? அமெரிக்கா என்றுதான் இருக்கிறதே தவிர, "ஏக அமெரிக்கா" என்று இல்லை! "ஏக ரஷ்யா" என்று இல்லை! "ஏக ஜெர்மன்" என்று இல்லை! ஆனால் நமது "திறப்பு விழா" மந்திரிகள் எந்த இடத்திலும் ஏக இந்திய ஒற்றுமையைப்பற்றி ஓலமிட்டு கீழ்த்தர நடையிலே கூறுவதைத் தவிர, நாம் கூறும் கருத்துக்களுக்கோ, காட்டும் திட்டங்களுக்கோ, இதுவரைமறுப்புரைத் தந்தார்களில்லை!

ஒற்றுமை வேண்டியதுதான்—மறுக்கவில்லை நாம்! ஆனால் வேற்றுமைகளிருக்கும்போது ஒற்றுமைக்கு இடமெங்கே? நாம் கூறினால் அது குறுகிய மனப்பான்மை! பரந்த மனமும், விரிந்த நோக்கமுங் கொண்ட பாராளும் அமைச்சர்களே! பாருங்கள்—"நவ இந்தியா" வார மலரை! அதிலே ஒரு கேலிச் சித்திரம்! 'நாடற்ற இலங்கை இந்திய அகதி—என்று கூனிக் குறுகிக் கெஞ்சுகின்ற நிலையிலே ஒரு உருவம்! எதிர்த்தாற்போல் மத்திய அரசின் மாபெரும் உருவம்! அந்த உருவத்தின் ஆணவமொழிகள அங்கே! "ஹு! ஹு! நீ ஒரு இந்தியன் தானே. பாகிஸ்தானிலிருந்து வந்தவர்களைப்போல உன்னை எப்படி நடத்த முடியும்?"

பாகிஸ்தானிலிருந்து வந்தவர்கள் வடவர்கள்! — அவர்களுக்கு ஆதரவு தருவது எங்கள் கடமை! நீ இலங்கையிலிருந்து வந்தவன்—தென்னாட்டான்! செத்தாலென்ன?—செந்தணலில் வெந்தாலென்ன?—என்ற முறையிலே சொல்கிறது மத்திய அரசு, என்பதைக் கேலிச் சித்திரமாகத் தீட்டிக் காட்டுகிறது—"நவ இந்தியா" —அது நம்முடைய ஏடல்ல! ஒற்றுமையாம் ஒற்றுமை! எங்கே ஒற்றுமை? ஒருகண்ணுக்கு வெண்ணெய், ஒரு கண்ணுக்குச் சுண்ணாம்பு!—ஏன் இந்த வேற்றுமை? பாரபட்சம்? ஓரவஞ்சனை? எண்ணிப் பார்க்க வேண்டாமா?—யார் குறுகிய மனப்பான்மை படைத்தவர்கள்? வடநாட்டு அகதிகளுக்கு ஆதரவுக்கரம் நீட்டும் இந்திய சர்க்கார், தென்னாட்டு அகதிகளுக்கு ஆதரவுதர மறுப்பதேன்? ஏக இந்தியா என்போரே, ஏன் இந்த வேற்றுமைகள்? உங்களால் விடை கூற முடியும்!—ஆனால் கூறமாட்டீர்கள்! காரணம் பதவிப் பீடத்தின் பவுசிலே பைந்தமிழ் மரபை மறந்து, வடவர்களின் பிரதிநிதிகளாக வீற்றிருக்கும் உங்களுக்குப் பிறந்த மண்ணின் எண்ணம் எப்படி ஏற்படும்?

"தென்னாட்டார்கள் வடநாட்டில் பிச்சை எடுக்கிறார்கள்!" — மந்திரி பக்தவத்சலம் பேசியிருக்கிறார்! அம்மட்டோ? பிச்சையும் நிறையக் கிடைக்கிறதாம்! பிறகென்ன வேண்டும்? எச்சில் இலை—அதில் ஒட்டிக்கொண்டிருக்கும் பருக்கைகளைத் தின்று வயிறு வளர்க்கிறான் தென்னாட்டான்! ஐயகோ! வீரங்காத்த சேரமன்னா! நீதிகாத்த பாண்டியனே! வளங்காத்த சோழ மன்னா! உன் பரம்பரையைப் பார்! ஆண்ட இனத்தின் அழுகுரலைக் கேள்! தென்னாடான இலங்கையிலே கலங்குகிறான்! ஆதரவற்ற அகதியாக அழுது புலம்புகிறான்! பம்பாயில் செருப்புத்தைக்கிறான்! ஏன் இந்த இழிநிலை? இரந்தும் உயிர் வாழ வேண்டுமா?

பொன்னும் மணியும், மிளகும் சந்தனமும், ஏலமும், கராம்பும், நிலக்கரியும், நீர்வளமும் நிறைந்த நாடுநலிகிறது, ஏகஇந்தியா என்ற இணைப்பால்! எந்தக் காலத்தில் இந்தியா ஒன்றாக இருந்தது? இந்தியா என்பதே இடைச்செருகலாயிற்றே! இந்தியா என்பது ஒரே நாடல்ல! ஒரே இனமக்கள் இல்லை! ஒரே மொழி பேசும் நாடல்ல! பல நாடுகளின் கூட்டுச் சேர்க்கை! — பல இனங்களின் இணைப்பு!!—அந்த இணைப்பு என்றேனும் ஒரு நாள் துகள் துகளாக உடையத்தான் போகிறது! தென்னாடு தனியாகப் பிரியத்தான் போகிறது!

"திராவிடம்"-அது 'தீராவிடம்' என்று கேலி பேசுபவர்கள், ஒன்பது ஆண்டுகள் வளர்ந்து, பத்தாம் ஆண்டிலே அடியெடுத்து வைக்கும் கழகம் காட்டும் புள்ளி விவரங்களை உள்ளத்தில் கொள்ள வேண்டும்! தென்னாட்டில் வடநாட்டார் வட்டிக்கடை முதலாளிகளாகவும், ஆலை அரசர்களாகவும் ஆடம்பரமாக வாழும்போது, தென்னாட்டார் ஆமதாபாத்தில் ஆலைக் கூலிகளாகவும், பம்பாயில் செருப்புத் தைப்பவர்களாகவும் வதியும் காட்சியைச் சற்றேனும் சிந்தித்துப்பார்க்க வேண்டும்!—அப்பொழுதுதான் அவர்களுக்குப் புரியும். "அணைக்கட்டுகள் அங்கே! அப்பளத் தொழிற்சாலை இங்கே!" என்று நாம் சொல்லும் உண்மை.

"ஒரு நாட்டை அடிமைப்படுத்த வேண்டுமானால், முதலில் அதன் மொழியைச் சிதைத்துவிடு" என்றோர் பழமொழியுண்டு. அதைச் செயல்படுத்துகிறது — மத்திய அரசு! எங்கு நோக்கினும் இந்தி —அது செந்தமிழர் பண்பாட்டைக் குலைக்கவந்த செந்தீ!

ஏக இந்தியா என்ற ஏமாற்று வித்தையில் மயங்காமல், எண்ணிப் பார்த்து, எழில் நாட்டை மீட்டு, தாய்மொழியைக் காத்து, குறள் நெறி போற்றிக் குன்றாப் புகழுடன் வாழ்வோம்; ஆள்வோம்! அதற்கான அரும் பணியில் ஈடுபடுவோம்; வாகை சூடுவோம்!

★

அரைமூட்டை அமோனியா...!

இரண்டு நாட்களாய்ப் பெய்த மழை பூமியை மட்டும் குளிரச் செய்யவில்லை. எத்தனையோ ஏழை விவசாயிகளின் உள்ளங்களையும் நன்றாகக்குளிர வைத்திருந்தது. அப்பாசாமிக்குத் தலைகால் புரியவில்லை. அத்தனை மகிழ்ச்சி! ஆனந்தம்!! பொழுது சரியாக விடிவதற்குள்ளேயே படுக்கையை விட்டு எழுந்து கழனியைப் பார்க்க ஓடினான்.

நடவு நட்டதிலிருந்து மழையே இல்லாமல் வாடிக்கொண்டிருக்கும் நெற் பயிர், இந்த மழைக்குப் பிறகு எப்படியிருக்கிறதென்று பார்க்கவேண்டுமென்ற ஆசை அவனை அப்படி விரட்டியடித்துக் கொண்டிருந்தது. அவனைப் போலவே மற்ற விவசாயிகளும் கழனி வெளிக்கு விரைந்து கொண்டிருந்தார்கள்.

அப்பாசாமிக்கு அந்த ஒரு காணியைத் தவிர வேறு நிலம் கிடையாது. அவனும் அவன் குடும்பத்தினரும் அதை நம்பித்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். வாழ்ந்து கொண்டிருக்கிறார்களாவது மண்ணாவது; என்னவோ உயிரை உடலில் ஒட்டவைத்துக் கொண்டிருக்கிறார்கள்; அவ்வளவுதான்!

ஒரு நாளைக்காவது வயிறு நிறைய உண்டோம்--உறங்கினோம் என்பது கிடையாது. இதில் வாழ்வு என்ன வேண்டியிருக்கிறது!

அதற்காக அவர்கள் யாரையும் குறை கூறியதில்லை. கூறவும் தெரியாது. அந்த ஒரு காணி ஒழுங்காக விளைந்தால் போதும். அதற்குமேல் வேறு எதற்கும் அவர்கள் ஆசைப்பட்டதில்லை.

ஒவ்வொரு மகசூலுக்கும் எத்தனை இடையூறுகள்--கண்டங்கள்!

தரையைக் கீறினால் தண்ணீர் சுரக்கும் தஞ்சாவூர் மண்ணைப் போலவா தாழங்காட்டு நஞ்சை? நினைத்தபோது மடையைத் திறந்து தண்ணீர் பாய்ச்சிக்கொள்ள காவேரியா ஓடுகிறது தென்னாற்காடு மாவட்டத்தில்? நிறைய மழைபெய்து பம்பை ஆற்றில் வெள்ளம் போனால்தான் தாழங்காட்டு ஏரி நிரம்பும். ஏரி வழிந்தால்தான் அங்கே பயிர், பச்சை எல்லாம்.

கிணற்று நீரையும் ஏற்றத்தையும் நம்பி ஒன்றும் செய்யமுடியாது. என்னதான் விடாமல் நாள் முழுதும் ஏற்றத்தால் இறைத்தாலும், கால்காணிக்குப் பாயாது. அப்படியே பாய்ச்சலாம் என்றாலும் தொடர்ந்து இறைக்கக் கிணற்றில் சுரப்பு இருக்காது.

லால்குடி — கிருஷ்ணமூர்த்தி

ஒருமணி நேரத்திற்குப் பத்துசால்தான் ஊற்றுக் கிடைக்கும். அத்தனை மேடு. வளம் குறைந்த பூமி. முப்பது அடி தோண்டினாலும் மண்ணில் ஈரத்தைப் பார்க்கமுடியாது. வளர்த்துவானேன், காலத்தில் மழைபெய்யாவிட்டால் தாழங்காட்டில் பச்சையைப் பார்க்கமுடியாது. அவ்வளவுதான்!

நாற்றுவிட்டு நாற்பதாம் நாள் நடவு நடும் வரைக்கும் ஏரியில் தண்ணீர் இருந்தது. அதன்பிறகு ஏரி வடிந்து, பிறகு வரண்டும் விட்டது. மழையே இல்லை. இன்னும் ஒரு வாரம் வானம் இப்படியே காய்ந்தால். இந்த வருடம் சம்பா மகசூலை எதிர்பார்க்க முடியாது என்று ஏங்கிக்கொண்டிருந்த போதுதான் இந்த மழை பெய்து எல்லோருடைய வயிற்றிலும் பாலை வார்த்தது.

அப்பாசாமி தன் வயலைச்சுற்றிப் பார்த்தான். பரவாயில்லை. பயிர் தலைதூக்கியிருந்தது. ஆனால்! இன்னும் சரியான பசுமை பிடிக்கவில்லை. ஒரு மாதமாய்க் காய்ந்து கொண்டிருந்த பயிர், தண்ணீரை இப்பொழுதுதானே கண்டிருக்கிறது; இன்னும் இரண்டு நாட்களில் சரியாகிவிடும் என்று தனக்குத்தானே கூறிக்கொண்டு வீடு திரும்பினான்.

இரண்டு நாட்களுக்கு நான்கு நாட்களாகியும் பயிர் எதிர்பார்த்தபடி வளரவில்லை. பசுமையும் கொள்ளவில்லை. கதிர் வரும் நேரத்தில் கருமையோடித் தளதளவென்று இருக்கவேண்டிய பயிர் இப்படி வெளிறிக் கிடப்பது நல்லதல்லவே!

அப்பாசாமி சிந்தனையிலாழ்ந்தான். அவனுக்குத் தெரியும், பயிர் செழிப்பாக வளர என்ன செய்யவேண்டுமென்று. வேறொன்றுமில்லை. ஒரு அரைமூட்டை 'அமோனியா—உரம்' போட்டால் போதும். பயிரின்வாட்டம் பறந்துவிடும், பசுமை கொண்டுவிடும். ஆனால்! அதற்குப் பணம் தேவை. அதுதான் அவனிடம் இல்லை! என்ன செய்வது?

"என்னண்ணே! இப்படியிருக்கிறே, பார்த்துக்கிட்டே யிருந்தா பயிர்வளர்ந்துடுமா? போயி எப்படியாவது ஒரு அரைமூட்டை அமோனியாவைக் கொண்டு வந்துடு!"

பக்கத்துவயலின் சொந்தக்காரர் சிந்தனையிலிருந்த அப்பாசாமியை முடுக்கிவிட்டார்.

ஏதோ தீர்மானித்தவனாய் அப்பாசாமி வீடு சேர்ந்தான். எப்படியாவது அரைமூட்டை அமோனியா கொண்டுவர வேண்டும். இல்லாவிட்டால் பயிர் நாசமாகிவிடும். நெல்லுக்குப் பதில் வெறும் வைக்கோலைத்தான் அறுவடை செய்யவேண்டி வரும் என்பதை நன்றாகஉணர்ந்துவிட்டான். எப்பாடு பட்டாவது ஒரு இருபது ரூபாயைப் புரட்டித்தான் ஆகவேண்டும். இல்லையென்றால் அவனும் அவன் குடும்பமும் பட்டினியால் சாகவேண்டியதுதான்.

அவன் மனைவி முத்தம்மா நல்லவள்தான்! நெற்பயிரின் நிலையும் அதனால் தன் குடும்பத்திற்கு வரவிருக்கும் அபாயத்தையும் உணர்ந்தவள்தான். ஆனாலும்! அதற்காக கழற்றவே கூடாத தாலிச் சரட்டைக் கழற்றிக் கொடுப்பதென்றால் மனது கேட்கிறதா! ஆனால்! அதைத் தவிர வேறு வழியே இல்லையே! என்ன செய்வது? அதில்தானே கொஞ்சம் தங்கப் பசை ஒட்டிக்கொண்டிருக்கிறது.

அழுதுகொண்டே தாலியைக் கழற்றிக் கணவனிடம் கொடுத்தாள் முத்தம்மா! நிலத்திற்கு உரமிடத்தான்! ஆமாம்! அரைமூட்டை அமோனியா வாங்க!

அப்பாசாமி பக்கத்திலுள்ள நகரத்திற்கு ஓடினான். காசுக்கடைக்காரரின் உரைகல்லில் ஒட்டிக்கொண்டதுபோகப் பாக்கியிருந்த பொன்னைக் காசாக்கிக் கொண்டு கடைத்தெருவுக்கு வந்தான்.

"அரைமூட்டை அமோனியா வேண்டும்!"

"அமோனியாவா...!"

"ஆமாங்க!"

கடைக்காரர் சிரித்தார்.

"ஏங்க! சிரிக்கிறீங்க?"

"பின்னே சிரிக்காமே என்ன செய்வாங்க! நீ இந்த உலகத்திலே இருக்கிறயா... இல்லாட்டி...!"

"என்னங்க சொல்றீங்க...?"

"அமோனியா என்ன வீதியிலே கொட்டிக்கிடக்கு, வாரிக்கொண்டு போகலாம்னு வந்தியா?"

"முன்னேயெல்லாம் வீதியிலே கொட்டித்தானே வித்துக்கிட்டு இருந்தீங்க...!"

"ஆமாம்! அது அந்தக்காலம்! எல்லா வியாபாரிகளும் அமோனியா விற்கலாம்னு இருந்திச்சு, அப்போவீதியிலேமூட்டைமூட்டையாய்க் கொட்டி விற்றுக்கொண்டிருந்தோம்... இப்போ...!"

"உங்க கடையிலே இல்லீங்களா இப்போ!"

"என் கடையிலே மட்டுமா? யார் கடையிலேயும் கிடையாது. விற்கவும் கூடாது!"

"ஏனுங்க அப்படி?"

"அது ஏனோ! சர்க்கார் உத்தரவு!"

"அப்போ கிடைக்காதுங்களா?"

"உனக்கு எங்கே கிடைக்கப் போவுது, பெரிய பெரியவங்களெல்லாம் திணறும் பொழுது!"

"நீங்க சொல்றது ஒண்ணும் புரியல்லீங்களே!"

"அதோ கூட்டமா ஜனங்கள் நிற்கிறாங்க பாரு, அங்கே போய்க் கேளு"

"அங்கேதான் விற்கிறாங்களா?"

"ஆமாம்!"

"அது யார் கடைங்க?"

"சர்க்காருடையது...!"

"கிடைக்குங்களா அங்கே?"

"போய்க் கேட்டுப்பாரு!"

அரசாங்கத்தின் மத்திய உர விற்பனை நிலையத்தைப் பார்க்க ஓடினான் அப்பாசாமி. அங்கே ஏகக்கூட்டம். அவனைப்போலவே ஆயிரக்கணக்கான விவசாயிகள் அமோனியாவுக்காக அங்கே காத்துக்கிடந்தார்கள்.

சிலர் அன்று காலையிலிருந்து காத்திருப்பவர்கள், சிலர் இரண்டு நாட்களாக, பலர் ஒரு வாரமாக அமோனியா வாங்க அலைந்து கொண்டிருப்பவர்கள்.

ஏனெனில் நெற்பயிருக்கு அந்த நேரம் அமோனியா மிகவும் இன்றியமையாத மருந்து.

மேலும் அந்த வட்டாரத்து நெற்பயிர்களெல்லாம் கதிர்விடும் தறுவாயிலிருந்தன. நல்ல மழையும் பெய்து, ஏரி, குளங்கள் நிரம்பி விட்டன. இனித் தண்ணீர்ப் பஞ்சமில்லை; எப்படியாவது மகசூலைக் கண்டுவிடலாம் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் இருந்தார்கள். ஆனால்! வளரும் பயிருக்கு இந்தச் சமயம் கொஞ்சம் அமோனியாவைத் தூவினால்தான் நல்லது! பயிரும் செழிக்கும், கதிர்களும் கொழிக்கும். இது எல்லா விவசாயிகளுக்கும் தெரியும். அதனால்தான் அமோனியாவுக்காக இப்படி நெரிந்துகொண்டிருந்தார்கள்.

விற்பனை நிலையத்திற்குள் நிறைய அமோனியா மூட்டைகள் அடுக்கிவைக்கப்பட்டு இருந்தன.

ஆனால்! அதைவிற்க நிலையமானேஜருக்குக் கலெக்டரிடமிருந்து இன்னும் உத்தரவு வரவில்லை என்று சிலர் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"அமோனியாவை விற்க கலெக்டர் உத்தரவா?"

"ஆமாம்?"

"ஏன்?"

"அது ஏனோ?"

"உத்தரவு எப்ப வருமாம்?"

"காலையிலே பத்துமணிக்கு ஒருதரம் வந்தது. ஒரு மூட்டை அமோனியாவைப் பிரித்து ஆளுக்கு ஐந்துபடி கொடுத்தாங்க...ஐந்தாறு பேர் வாங்கிக்கொண்டாங்க!......அதற்குள்ளே அமோனியா கொடுக்காதேன்னு மறு உத்தரவு வந்ததாம்! உடனே நிறுத்திவிட்டு நாளைக்கு வாங்க என்கிறார்கள்...!"

"ஏன்?"

"யாருக்குத் தெரியுது இந்த இழவெல்லாம்! நாம் எல்லோரும் இங்கே அமோனியாவுக்காக நிற்கிறோம், உள்ளே மூட்டை இருக்குது. பக்கத்திலே டிப்போ மானேஜர் உட்கார்ந்துகொண்டிருக்கிறார். விற்க அவருக்கு உத்தரவு வரவில்லை. நம்மால் வாங்க முடியவில்லை. அமோனியா மூட்டைகள் நம்மைப்பார்த்துச் சிரித்துக்கொண்டு இருக்கின்றன. அரசாங்கமும் நடந்துகொண்டுதானிருக்கிறது...!"

"இது வேடிக்கையாக இருக்கிறதே...!"

"வேடிக்கையா இது! வேதனை! வேதனை! சமயத்தில் எரு வைக்காவிட்டால் நெல்லு, புல்லுதான்!"

"வேறு எங்கேயும் கிடைக்காதா?"

"கிடைக்க முடியாமல் செய்துவிட்டார்கள்!"

"யார்?"

"நமது அரசாங்கம்தான்!"

"ஏன்?"

"அதுதான்புரியவில்லை! எல்லா வியாபாரிகளும் விற்கலாம் என்றால், அது எந்தச் சீமையில் இருந்தாலும் கொண்டுவந்து விடுவார்கள்; விற்பார்கள்; நமக்கும் கிடைக்கும்; முன்பெல்லாம் அப்படித்தான் கிடைத்து வந்தது!"

"ஏன் தடுத்துவிட்டார்கள்?"

"அதிக விலைவைத்து விற்கிறார்கள் என்றுதான் தடுத்திருக்க வேண்டும். நமக்கு நன்மை செய்வதாக நினைத்துக்கொண்டு என்னவோ செய்துவிட்டார்கள். இந்த அலங்கோலத்தைப் பார்த்த பிறகாவது......!"

"இன்னும் இந்த ஊரில் இரண்டு வியாபாரிகளுக்கு அமோனியா விற்க அனுமதி கொடுத்திருக்கிறார்களாமே?"

"அப்படித்தான் சொல்லிக் கொள்கிறார்கள். அமோனியா விற்க அனுமதியோ, அல்லது கொள்ளையடிக்கவோ யார் கண்டார்கள்...!"

"எப்படி?"

"அது எப்படியோ? எப்பொழுது போய்க் கேட்டாலும் இல்லை என்கிறார்கள். சரக்கு வருவதற்கு முன்னமேயே நாற்பது ரூபாய் மூட்டையை ஐம்பத்தாறு ரூபாய்க்கு விற்பனை செய்து முடித்துவிடுவதாக வதந்தி...... நம்மைப் போன்றவர்கள் அவர்களை நெருங்கவே முடியாது! பெரிய பெரிய பண்ணைகள், கார்கள், லாரிகள் இவைகள்தான் அந்தப்பக்கம் உலவமுடியும்!"

"ஏன் அப்படி?"

"பேசிக்கொண்டே இருந்தால் நமக்கு வேறு வழி? — பொழுது சாய்ந்துவிட்டது!"

"இது நான்காம் நாள்! நாளைக்குக் காலை வந்து பார்க்கலாம்!"

"அப்பாசாமியின் காதுகளில் மேற்கண்ட உரையாடல் விழுந்தது. நம்பிக்கையோடு ஓடி வந்தவன் நிராசையுடன் வீடு திரும்பினான்.

மறுநாள் காலை நகரத்துக்கு வந்து அமோனியாக் கிடங்கின் வாயிலில் காத்துக்கிடந்தான். அவனைப்போல் இன்னும் அநேகர் அங்கு நின்றுகொண்டிருந்தார்கள். பத்துமணி சுமாருக்கு ஆளுக்கு ஐந்துபடி அமோனியா தருகிறார்கள் என்ற கூச்சல் கிளம்பியது. எல்லோரும் விழுந்தடித்துக்கொண்டு ஓடினார்கள். அடிதடி எல்லாம் நடந்தது. அரைமணி நேரத்தில் விற்பனை நிறுத்தப்பட்ட செய்தி தெரிந்தது.

அப்பாசாமி அன்றும் வெறுங் கையோடு திரும்பினான், ஒருவாரம் கழிந்தது. அப்பாசாமி நம்பிக்கை இழந்துவிட்டான்.

தாழங்காட்டு நாட்டாண்மைக்காரர் முத்துசாமி ஒரு புதுச் செய்தியைச் சொன்னார். "இப்படி அமோனியா வாங்குவது முடியாத காரியம். இதற்கு ஒரு வழியிருக்கிறது, அது என்னவென்றால், கிராமக் கணக்குப்பிள்ளை மூலமாக ஒரு விண்ணப்பம் தயாரித்து, சர்க்காரிடமிருந்து கடனாக அமோனியா வாங்குவது சுலபம்!" என்று விவரித்தார்.

அப்பாசாமி கர்ணத்திடம் ஓடினான். கர்ணம் என்ன சாதாரண மனிதரா, அப்பாசாமி போன்றவர்களுக்கு உடனே உதவி செய்ய; இரண்டு நாட்கள் நடக்கவைத்து, அவன் மடிக்கனத்தையும் சிறிது குறைத்து விண்ணப்பத்தைத் தயாரித்துக்கொடுத்தார்.

"விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்டு உரக்கடன் சிபாரிசு செய்வதற்காகப் பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டிருக்கும் கடன் (Loan) தாசில்தார், தாலுக்கா அலுவலகத்திற்கு இன்னும் இரண்டு நாட்களில் விஜயம் செய்யப்போகிறார்; அவரிடம் விண்ணப்பத்தைக் கொடுக்கவேண்டும்" என்ற செய்தியையும் தெரிவித்தார் கிராமக் கர்ணம்.

லோன் தாசில்தாரரைக் கண்டு விண்ணப்பத்தைக் கொடுப்பதற்குள் பத்து நாட்கள் உருண்டோடி விட்டன. அதோடு தாலிச் சரட்டை விற்றுவைத்திருந்த பணத்தில் பெரும்பகுதி கரைந்து விட்டது.

ஒருவாரம் வரை அதைப்பற்றிய தகவலே ஒன்றும் தெரியாததனால், மறுபடியும் தாலூக்கா அலுவகத்திற்குச் சென்றான் அப்பாசாமி. நல்லவேளையாக அன்று அந்த லோன் தாசில்தார் இருந்தார்.

"பயிர் முற்றிவிட்டதுங்க; உடனே அமோனியாவைக் கொடுக்கச் சொல்லுங்க!" என்று கெஞ்சினான்.

தாசில்தார் குமாஸ்தாவைக் கூப்பிட்டு, "விண்ணப்பம் சக்ர பூண்டி ரெவினியூ இன்ஸ்பெக்டருக்குப் போய்விட்டதா?" என்று கேட்டார்.

"இன்னும் அனுப்பவில்லை சார்!" என்றார் குமாஸ்தா.

"ஏன்?"

"எட்டாம் தேதி சனிக்கிழமை. ஒன்பது ஞாயிறு, பத்தும் பதினொன்றும் தீபாவளி விடுமுறை, செவ்வாய்க் கிழமை சர்வே நெம்பர்களெல்லாம் சரிபார்த்தேன். புதன் கிழமை ஹெட்கிளார்க்கு 'செக்' பண்ணினார். நாளைக்குத்தான் சக்ரபூண்டிக்கு அனுப்பணும்!"

சரி! உடனே அனுப்புங்கள்!" என்று கூறிவிட்டுத் தாசில்தார் தலையைக் கவிழ்த்துக் கொண்டார்.

அப்பாசாமி வீடு திரும்பினான்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு கிராமக்கர்ணம் அப்பாசாமியிடம் வந்து, சக்ரபூண்டிக்குப் போய் ரெவின்யூ இன்ஸ்பெக்டரைப் பார்த்து வரும்படி பணித்தார்.

அப்பாசாமி சக்ரபூண்டிக்கு ஓடினான். ரெவின்யூ இன்ஸ்பெக்டரைப் பேட்டி காண்பதற்குள் இன்னும் ஒருவாரம் ஓடிவிட்டது. பல நாட்களுக்குப் பிறகு; ஒரு நாள்:

அப்பாசாமி தன் நிலத்தைப் பார்க்கப் போயிருந்தான். பயிர் வளர்ந்து பழுத்துவிட்டிருந்தது. கதிர்களைக் காணோம். இங்கொன்றும் அங்கொன்றுமாக கதிர்களில் நெல்மணிகள் ஒட்டிக்கொண்டிருந்தன. வயலைப் பார்க்கப் பார்க்க அவன் வயிறு பற்றியெரிந்தது. நெஞ்சில் தாங்க முடியாத துயரம் வந்து அடைத்துக்கொண்டது. இன்னும் அவனுக்கு அமோனியா கிடைக்கவில்லை. இனிமேல் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அவனுக்கு ஒன்றுதான். காலங்கடந்துவிட்டது. இனி ஒன்றும் செய்யமுடியாது. நான்கு வண்டி நெல் கொடுக்கும் கழனியில் நாலு மரக்கால் தேறுவது சந்தேகம்தான்.

கழனியைப் பார்த்துக் கொண்டேயிருந்த அவன் கண்கள் விகாரமாக விரிந்தன. உடல் முழுதும் ஒருவித பயங்கர நடுக்கம் குமுறியது. அந்த வட்டாரமே அதிரும்படி ஒரு பேய்ச்சிரிப்புச் சிரித்தான் அப்பாசாமி.

"அரைமூட்டை அமோனியா! அரைமூட்டை அமோனியா!" என்று வாய்கிழியக் கத்தினான்.

ஊர் கூடிற்று.

"என்னப்பா இது?"

"ஏன் இப்படிக்கத்தறே!"

எல்லோரும் கேட்டார்கள்.

(11-ம் பக்கம் பார்க்க)

தியாகி!

நான் அவ்வூரிற் சென்று வேலை ஏற்று இரண்டு திங்கள் ஆகியிருந்தன. நான் நாடோறும் குளிக்கச் செல்லும் பாதை அதுதான். ஒவ்வொருநாளும், நான் அதிகாலையில் எழுந்து குளிக்கச் செல்லும்போது, ஒரு இளமங்கை — வாழ்க்கைப் படகைத் துணையுடன் செலுத்தத் தகுதி பெற்றவள் — எறும்புபோல் சுறுசுறுப்புடன் தினமும் தன் இல்லத்து வேலைகளைச் செவ்வனே செய்து வந்தாள்.

நான் குளிக்கச் செல்லும்போது வெறுமனே, குப்பை கூளங்களுடன் காட்சி தரும் முற்றம், திரும்பி வரும்பொழுது அழகான பாகற்கொடியைத் தாங்கிக்கிடக்கும். பாம்புகள் இரண்டு ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து சீறிக்கொண்டு நிற்கும் — இதுபோல் இன்னும் பல காட்சிகள். இவை அவள் தனது முற்றத்தைக் கோலத்தால், கோலம் செய்த காட்சி.

இத்தகு திறமைபெற்ற அவளை அடிக்கடி பார்க்க என் உள்ளம் விரும்பியது. ஆகையால் அலுவலகத்திற்குப் போகும்பொழுதும் வரும்போதும், அவ்வழியாகவே சென்று வந்தேன். அந்த வீடு வந்ததும், என்னை அறியாமலே என் கண்கள், அவளைத்தான் தேடும். அவளும் என்னைக் கண்டுபிடித்துவிட்டால், தன் பார்வையை வேறு திக்குநோக்கிச் செலுத்தவே மாட்டாள்.

இவ்வாறு — கண்ணோடு கண் நோக்குதலோடு—சின்னாட்கள் கழிந்தன.

இப்பொழுது இரவு நேரங்களில் என் உள்ளம் அமைதியிழந்தது.

எதிர்பாராத விதமாக அவள் வீட்டினை அடுத்துள்ள ஒரு வீடு காலியானது. நான் எனது தங்கும் வசதியை, அவ்வீட்டிற்கு மாற்றிக்கொண்டேன். ஆகையால் அவளை முன்னிலும் அதிகமாகப் பார்ப்பதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. என் உள்ளமும் சற்று அமைதி பெற்றது.

ஒரு நாள், அந்த வீட்டிலிருந்து எட்டு வயதினை உடைய ஒருவன்-- அவன் எறிந்த பந்து என் அறைக்கு வந்ததால் அதை எடுக்க வந்தான். நான் அவனை, அவள் தம்பி என்று தெரிந்து கொண்டேன். ஆகையால் அவனிடம் எனக்கு அன்பு பிறந்தது. அவனுடன் சிறு பிள்ளைபோல் விளையாடத் துவங்கினேன்— ஓய்வு நேரங்களில், நான் வீட்டில் இருக்கும்பொழுது.

அவளது தாய் இரவு வேளைகளில், சில சமயங்களில், என்னிடம் வந்து உரையாடிக்கொண்டிருப்பார்கள். ஒருநாள் அவர்கள், "தம்பி உலகத்தில் நல்லவங்க நூற்றுக்கு ஒருத்தர்தான்—நீ மிகவும் நல்லவன், நீ நல்லா இருக்கணும்" என்றுகூறி என்னை வாழ்த்தினார்கள்.

தென்னவன்

இவ்வாறாக நான், நாளாக நாளாக அவர்கள் குடும்ப நண்பன் ஆனேன். என்னுடன் வேலை பார்க்கும் என் நண்பர்களெல்லாம் என்னை, அவர்கள் உறவினர் என்றே எண்ணிவிட்டனர்.

ஒருநாள், அவள் செய்ததாக எனக்குச் சீடை உருண்டைகள் கொடுத்தனுப்பினாள்— தம்பியின் மூலம். முதலில் வாங்க மறுத்த நான், அவனது வற்புறுத்தலால் இறுதியில் வாங்கிக்கொண்டேன்.

அன்று ஒரு கடிதம் எழுதி, அவள் தம்பியிடம் கொடுத்து, "உன் அக்காவிடம் கொடு" என்றேன். இரு நாட்களாக அவளிடமிருந்து பதிலே வராததால் எனக்கு அச்சம் ஏற்பட்டது. அவளைப் பார்க்காமலே இருந்துவிட்டேன். நான்கு நாட்களுக்குப் பின்னர், என் அறையிலுள்ள சன்னலின் ஓரத்தில் ஒரு முடங்கல் கிடந்தது. ஆவலுடன் பிரித்தேன். அதில்:—

அன்புள்ள.....(பெயர், முறை எதுமில்லை) உங்களது துணிச்சலைக் கண்டு மிகவும் ஆச்சரியப்படுகின்றேன். உங்களுடைய விருப்பத்தைக் கண்டு உள்ளம் பூரிக்கிறேன். ஆனால் என் அம்மா இருக்கின்றாள். அதுபோல் உங்கட்கும் பெற்றோர்கள் இருப்பார்களென எண்ணுகின்றேன. இப்பெரியோர்களது விருப்பம் ஒத்திருந்தால், உங்கள் எண்ணத்தை மறுக்க மாட்டேன். தவிர, என் உறவை நீங்கள் என்றென்றும் விரும்புவீர்களா? எனும் ஐயம் எனக்கு ஏற்படுகின்றது. வெறும் எழுத்துக்களை மட்டும் நம்பி ஏமாந்துவிடக்கூடாதல்லவா! ஆகவே உங்களை நேரில் கண்டால்தான், என்னைப்பற்றிய உங்கள் நிலையை நான் புரிந்துகொள்ள இயலும்! என்றாலும், உங்களது எழுத்துப்போல், உள்ளமும் இருந்தால், நான் உங்களை மனமார விரும்புகின்றேன்."

இப்படிக்கு,
மேகலை.

இக்கடிதத்தைப் படித்ததும் என் உள்ளம், புள்ளி மான்போல் துள்ளிக் குதித்தது. "மேகலை'! எனும் காப்பியப் பெயர், மோகத்தில் ஆழ்த்தியது. நான் கொண்ட உவகைக்கு எல்லை இல்லவே இல்லை. இரவெல்லாம் இன்பக் கனவு ஒரு கோடி கண்டேன்.

காலம் வளர்ந்தது—என் உள்ளத்து எண்ணத்தை மெல்ல வளர்த்துக் கொண்டு.

சூழ் நிலையைக் கண்டு, அவளுடன் பேசப் பயந்த நான், அவளுக்கு முடங்கல் எழுதிப் பதில் முடங்கல் பெற்றேன். அவைகளிலிருந்து அவளை ஒரு சிறந்த பண்புள்ளவள் எனத்தெரிய முடிந்தது. அவள் எழுதிய முடங்கல்களில் காதல் இருந்தது. இன்பம்! கொள்ளை!! அறிவுரையும் சில

உண்டு. இத்தனை சிறந்த ஒரு பெண்ணை யான் வேறு எங்கும் காண முடியாதென்றே எண்ணினேன்.

அவளது தங்கத்தளிர் மேனியும்—முத்துப் பல் வரிசையும், மோகனப் பார்வையும்,மான்போல் துள்ளி ஓடும் வேகமான நடையும், என்னைக் கொள்ளை கொண்டன. அவளால் ஏவிவிடப்பட்ட காதல் பார்வை என்னைப் பலவாறு தாக்கிற்று. வேதனைப்பட்டேன் — நான்.

அன்றொரு நாள், நான் அலுவலகத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது, "தம்பி நான் பக்கத்தில் உள்ள என் உறவினர் ஒருவர் வீட்டுக்குப் போகிறேன். நாளைக் காலையில்தான் வருவேன். அதுவரை மேகலையையும், உன் சிறிய தம்பியையும் கவனித்துக் கொள்"-எனக் கூறிச் சென்றாள், அவள் அம்மா.

இரவு உணவை விடுதியில் முடித்துவிட்டு, இல்லம் வந்து, தினத்தாளைப் பிரித்தேன் படிக்க. ஆனால் என் உள்ளம் செய்தியைப் பின் தொடரவில்லை. மேகலையின் பின் தொடர்ந்தது.

அதே நேரம் என் அறிவும் தனது கடமையைச் செய்தது. "மனிதனுக்குப் பசி எப்படி இயற்கையாய்த் தோன்றுகின்றதோ, அதுபோலவே குறிப்பிட்டபருவத்தில் காதலுணர்வு — ஆம் இருபாலாரிடமும் அன்பு உணர்வு— தோன்றுகின்றது. பசி எடுத்தவுடன் மனிதன் தன்னை மறந்து, கையிலகப்பட்டதைத் தின்றுவிட மாட்டான்—களவாடியும் உண்ண மாட்டான். அதுபோலவே காதலுணர்வைத் தணிக்கவும் தகாத முறையில் நடக்காதே" என அறிவு, அறவுரை தந்தது.

உள்ளம், அறிவை அடக்கி, தனது ஆதிக்கத்தைச் செலுத்தியது. "நீ நாளெல்லாம் எண்ணிய எண்ணம் கைகூட இன்றுதான் நல்ல வாய்ப்பு உளது. எதையும் எண்ணாதே. உடனே எண்ணியதை முடி" என்றது.

"மனிதன் தவறக்கூடாத ஒரு கட்டம், அவனது வாழ்வில் எது என்றால், பிறபெண்களைப் பார்க்குமிடம்தான். யானைக்கும் அடிசறுக்கும் என்பதெல்லாம், பெண்ணைப் பார்த்துக்காதல்கொள்ளும் சமயங்களில் கூடாது" என்றது அறிவு.

இவ்வாறு உள்ளத்திற்கும், அறிவிற்கும் இடையே சிக்கித் தவித்துக் கொண்டிருந்த நான், எங்கள் இருவரது வீட்டிற்கும் இடையேயுள்ள சன்னற் கதவு திறக்கப்பட்ட ஒலி கேட்டுத்திடுக்கிட்டேன். அச்சன்னலின் வழி, ஒளி தெரிந்தது. எழுந்து சென்றேன்.

அவள், சன்னலின் அந்தப் பக்கம், ஒரு சிறு விளக்குடன் நின்றாள்.

"மேகலை" என்றேன்.

புன்னகை பூத்தாள்.

"மேகலை" — மீண்டும் அழைத்தேன், அதிகமான நாணத்துடன்-மிக மெல்லிய குரலில்.

சிரித்தாள்! பேசவில்லை!!

நான் அழைத்தது, அவளுக்குக் கேட்டிருக்காதெனஎண்ணி, சற்று அழுத்தமாக "மேகலை" என்றேன். இப்பொழுது அவளது முக மதியில், துன்பக் களங்கத்தைக் கண்டேன்.

இப்போது அவள் சிரிக்கக்கூடவில்லை.

"என்ன மேகலை—ஊமையா நீ? வாய் திறந்து பேசக்கூடாதா? இதற்குத் தானா இந்த நேரத்தில் கதவைத் திறந்தயாக்கும்?" என்றேன்.

அழுதாள்! எனக்கு ஒன்றும் புரியவில்லை. பல நாட்கள் கண்ணும் கண்ணும் பேசின. சில நாட்கள் — முடங்கல்கள் பேசின. இன்று இருஉள்ளங்களும் பேசும்; செவ்விதழ் வாய்களும் சந்தித்தும் தித்திக்கும் தேன் மொழி மேகலையின் வாயிலிருந்து வரவில்லையே என வருந்தினேன்.

அவள் இன்னும் அழுதாள். "மேகலை, உடல்நிலைசரியில்லையா?" என்றேன்.

அழுதாள். அழுதாள். மீண்டும் மீண்டும் அழுதாள்.

"நான் இதற்குத்தானா ஓடிவந்தேன்—உன் அருகே. "நீ உனது தமிழ்த்தேன் கூடாகிய வாய் திறந்து பேசுவாய், அப்போது செந்தமிழ்த் தேன் சிந்தும். அதைச் செவியால் குடித்து, மதிமயங்கலாம், மகிழலாம். பின்னர், நான் எனது உள்ளப் பெட்டகத்தில் உன்னைப்பற்றி நினைத்து வைத்திருக்கும் எண்ணமாகிய முத்துக்களைக் கொட்டி, உனது உறுதியான பதிலைப் பெறலாம்" என எண்ணியிருந்தேனே, என் எண்ணத்தில் மண்ணைக் கொட்டு வதுபோல், வாய்திறந்து "அத்தான்" என ஒரு தித்திப்பான சொற்கூடச் சொல்லாது, நாவடக்கம் செய்கின்றாயே மேகலை, என்றேன். சன்னலை அடைத்துவிட்டுப் போய்விட்டாள். ஆனால் அவளது அழுகைக்குரல் — ஆம் அந்த சோக ஒலி மாத்திரம் கேட்டது.

நான் எவ்வளவு நேரம் நின்றேனோ தெரியாது. என் தலை கனத்துவிட்டது. சிந்தனை குழம்பியது—மண்ணில் விழுந்த மழைநீர்போல் கால் கடுப்புத் தாங்க முடியாமல் படுக்கையில் இருந்தேன்—அல்ல விழுந்தேன். தலைப் பக்கம் இருந்த 'நேரம்காட்டி' மணி மூன்றெனக் காட்டியது. அவள் இன்னும் அழுதுகொண்டுதான் இருந்தாள்.

எங்கள் துயர நாடகத்தை முடிக்கவே, யாராலும் நியமிக்கப்படாத மக்கள் தொண்டன், "கொக்கரகோ" எனக் கூவி எழுப்பினான்—உலகோரை. என் மேகலையும் எழுந்து கடமையைச் செய்தாள்—ஒழுங்கு தவறாத கடமையாளி கதிரவன் போல. நான் சிறகொடிந்த பறவைபோல் படுக்கையிலேயே கிடந்தேன் — வேதனையுடன். என்னால் படுக்கையிலிருந்து எழுந்திருக்க இயலவில்லை. கண்கள் எரிந்தன. உடலும் வலித்தது.

என்மேல் விழுந்து விளையாடி, வழக்கமாக என்னை எழுப்பும், அவள் தம்பி, இன்றும் ஓடிவந்து என்மேல் சாய்ந்தான். உடனே, "என் உங்க ஒடம்பு சுடுது" என்றான் — அவனுக்குத் தெரிந்த மொழியில்.

"ஏனோ எனக்குத் தெரியாது", என்றேன்.

மேகலையிடம் சென்று கூறிவிட்டான். அது எனக்கும் கேட்டது. சிறிது நேரத்தில் சூடான சுவை நீர் கிடைத்தது இன்று விடுமுறை பெற்று, நன்கு தூங்கினேன்.

மறுநாள் ஒரு முடங்கல் பெற்றேன்—அவளிடமிருந்து. அதில்:-

அன்புள்ள மணி அத்தானுக்கு,

எனது ஆசை முத்தங்கள் பல. நீங்கள் நேற்று முன்தினம் கொஞ்சிப் பேசியதும் சிரித்தேன். ஆனால் உங்கள் காதல் பேச்சுக்குப் பதில் பேச்சு, என்னால் பேச முடியவில்லை. நீங்கள் பேச்சிற்

காக, "மேகலை ஊமையா நீ?" என்றீர்கள். அச்சொல் என் உள்ளத்தைச் சம்மட்டிபோல் தாக்கியது. அழுதேன். நான் உங்களைச் சந்திக்கு முன் என்னென்ன மனக்கோட்டைகள் கட்டியிருந்தேனோ, அவையெலாம், ஒரு நொடியில் இடிந்து விழுந்தது—கல்லடி பட்ட கண்ணாடிபோல். ஆகவே அழுதேன் அழுதேன். அழுது கொண்டே இருந்தேன்--இரவெல்லாம். நீங்கள் என்னைக் காப்பாற்றாவிட்டால், இனி என்றும் ஓயாது அழுவேன்.

உண்மையில் நான் ஊமைதான், அத்தான் ஊமைதான்! என்னை நீங்கள் மணமுடித்துக்கொண்டால், என்னுடன் இன்ப உரையாட முடியாது — ஏனையோரைப் போல். என்னிடம் நான் பேசும்—பேசவேண்டுமென நீங்கள் எண்ணும் இனி மொழியைக் கேட்க இயலாது. இப்பொழுது என்னை நீங்கள் காதலிக்கின்றீர்களா? இதற்குமேல் எனக்கு ஒன்றும் எழுத முடியவில்லை.

இப்படிக்கு,
அபலை, மேகலை

பட்டுக் கயிற்றினில் முத்தினைக் கோர்த்தது போலிருந்த எழுத்துக் கோர்வைகளைப் பெற்றுள்ள அவள் முடங்கலைப் படித்ததும் என் தலை சுற்றியது. கைகள் நடுங்கின. மேகலையைப்பற்றி எண்ணியிருந்த இன்ப நினைவுகள் மின்னலென மறைந்தன. துன்ப நினைவுகள் அவ்விடத்தை நிரப்பிப் பேயாட்டம் ஆடின. நெஞ்சு பிளந்துவிடும்போல் இருந்தது. அலைகடல் துரும்பெனத் தத்தளித்தேன்.

ஒருவாறு தெளிந்தேன். "மேகலை எட்டாம் வகுப்புப் படிக்கும் பொழுது, அவளுக்கு ஏற்பட்ட கொடிய அம்மை நோயினால் அவளது நாக்கு உள்ளே இழுக்கப்பட்டது. ஆகையால், முறை மாப்பிள்ளைகள் சிலர் இருந்தும் அவளைக் கட்ட மறுக்கின்றார்கள்" என்று அவள் அம்மா கூறினார்கள்—மிகவும் நொந்து.

மறுநாள், நான் எனது அம்மாவுக்கு ஒரு முடங்கலில், மேகலையைப்பற்றியும், நான் அவர்கள் குடும்பத்துடன் கொண்டுள்ள உறவைப்பற்றியும் எழுதி, என் அம்மாவின் நல்ல முடிவையும் கேட்டு எழுதினேன்.

மறுவாரம், என் அம்மாவே நேரில் வந்துவிட்டார்கள். நான் பயந்தேன். எங்கே திருமணம் நடைபெறாதுபோய்விடுமோ என.

ஆனால் என்னம்மாவிடம், நான் பலநாள் உணவு உண்ணும்போது பேசிய எனது கொள்கை இன்று வெற்றிபெற்றதைக் கண்டேன். "உன் இஷ்டம்போல் திருமணத்தை முடி" என்றனள்--என்னரும்தாய். அவர்கள் சாதி—குலம் உயர்வு—தாழ்வு எதுவும் பார்க்கவில்லை.

சரியான, எமகண்ட வேளையில், எங்கள் வாழ்க்கை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது.

இப்பொழுது எங்கள் குடும்பம்- ஆம், மணிமேகலையின் குடும்பம்— இன்பமாய்த் தொடருகின்றது.

★

8-ம் பக்கத் தொடர்ச்சி

அப்பாசாமி பதிலேபேசவில்லை. ஆனால்.

"அமோனியா! அமோனியா!" என்று அவன் வாய்மட்டும், ஓயாமல்பிதற்றிக்கொண்டேயிருந்தது.

ஆமாம்! அப்பாசாமிக்கு பைத்தியம் பிடித்துவிட்டது. தன் களத்துமேட்டிலேயே விழுந்து புரண்டான். முத்தம்மா ஓடிவந்தாள், அவன் குழந்தைகள் ஓடிவந்தன!

"முத்தம்மா அழுதாள்"

குழந்தைகள் "அப்பா! அப்பா!" என்று கதறின! அப்பாசாமியும் "அமோனியா! அமோனியா!" என்று அழுதான்.

அமோனியாவைக் காண்பித்தால் ஒருவேளை பைத்தியம் தெளிந்துவிடலாம் என்று யாரோ ஒருவர் கூறினார்.

நாட்டாண்மை முத்துசாமி, தான் வாங்கிவைத்திருந்த ஐந்து படி அமோனியாவை ஒரு கூடையில் கொட்டிக்கொண்டு ஓடிவந்தார்.

"அப்பாசாமி! இதோ பார் அமோனியா! கிடைத்துவிட்டது. பயிருக்குப்போடு!" என்று காண்பித்தார்.

அப்பொழுது யாரும் எதிர்பாராத விபரீதம் ஒன்று நடந்துவிட்டது. கூடையிலிருக்கும் சர்க்கரை போன்ற அமோனியாவைக் கண்டதும் அப்பாசாமிக்கு என்ன தோன்றிற்றோ என்னவோ.

"அமோனியாவா! அமோனியாவா! என்று கேட்டுக்கொண்டே கூடையில் கையைவிட்டு, பிடிப்பிடியாகவாரித் தன்வாயில் போட்டுக் கொண்டுவிட்டான். சுற்றியிருந்தவர்கள் இன்னது செய்வதென்று தெரியாமல் பிரமித்து நின்றுவிட்டார்கள்.

கூட்டத்தினரின் வியப்பு நீங்கி விழிப்பதற்குள் ஐந்தாறு முறை வாந்தியெடுத்துவிட்டான் அப்பாசாமி. பிறகு அவனால் நிற்கமுடியவில்லை. சுருண்டு தரையில் விழுந்துவிட்டான்.

பிறகு;

அவனை நகர ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்கள். டாக்டர் கையை விரித்துவிட்டார். சிறிது நேரத்தில் அப்பாசாமி இறந்துவிட்டான்.

அவனுடைய சவ ஊர்வலம் நகர வீதிவழியே வந்துகொண்டிருந்தது.

நகராட்சித் திடலில் யாரோ ஒரு பிரசங்கி, திட்டமிட்டு முன்னேறும் வழிகளைப்பற்றி அழகாக விவரித்துக்கொண்டிருப்பது ஒலிபெருக்கியின் மூலம் தெளிவாகக் கேட்டது!

அடுத்து, முனிசிபல் பூங்காவில் ஒரு கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதில் "வடக்காவது — தெற்காவது" என்பது பற்றி வெளுத்துக்கட்டிக்கொண்டிருந்தார்! ஒரு சொற்பொழிவாளர்.

சற்றுத் தூரத்தில் சாமாநாயகர் தோப்பில் நடைபெற்றுக் கொண்டிருந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில்,

"முதல் முழக்கம் செய்தவன் கட்டபொம்மனா, அல்லது—புலித்தேவனா?' என்பதுபற்றிக் காரசாரமாகப் பேசிக்கொண்டிருந்தார் ஒரு பேச்சாளர்.

அப்பாசாமியின் சவ ஊர்வலம், அமைதியாக நகர் எல்லையைக் கடந்து தாழங்காட்டுப் பாதையில் போய்க்கொண்டிருந்தது!

★

அறுபதுக்கறுபது

நா. புகழேந்தி

வயதுவந்த பெண்ணை வீட்டுக்குள்ளே வைத்துவிட்டு, நீங்கள் வாலிபராட்டம் ஊரைச் சுற்றிக்கொண்டு திரிகிறீர்கள். பெண்ணைப் பெற்ற நான், அடிவயிற்றிலே நெருப்பை அள்ளிக் கட்டிக்கொண்டமாதிரி] அவதிப்படுகிறேன். காலாகாலத்தில் அவளை ஒருவன் கையில் பிடித்துக்கொடுத்துவிட்டால், நம் சுமை நீங்கிவிடுமே என்ற எண்ணமும் இல்லை. நாளைக்கு ஒரு தப்புத் தண்டா நடந்துவிட்டால் நாலு பேர் கைகொட்டிச் சிரிப்பார்களே, என்ற கவலையும் இல்லை.

எவன் சொன்னான் கவலை இல்லை என்று? நானும் தினசரி இதே நினைவாகத்தான் இருக்கிறேன். தெருவிலே போகிறவனையும் வருகிறவனையும் அடி முதல் முடிவரை அலசித்தான் பார்க்கிறேன். இவன் நம்மசாதியாக இருக்கமாட்டானா...! இவன் கையில் நாலுகாசு நடமாடாதா...! நம்ம பெண்ணை இவனுக்குக் கட்டிக்கொடுத்துவிடலாமே, என்று துடியாத் துடிக்கிறேன். ஒருபயலாவது என்னிடம் என்ன ஏது என்று கேட்கட்டுமே! சீமையிலே இருந்து இறங்கிவந்த துரை மாதிரி நினைத்துக்கொண்டு தலைகால் தெரியாமல் நடக்கிறார்கள். பெண்ணையும் கொடுத்து, ஆயிரம், இரண்டாயிரம் என்று பொருளையும் கொண்டுபோய் அவர்கள் காலில்கொட்டவேண்டுமாம்! முடியுமா நம்மால்?

ஆமா......உங்களைக் கண்டதும் தெருவிலே போகிறவனும் வருகிறவனும் காலிலே விழுந்து கும்பிட்டு, மாமா உங்கள் மகளை எனக்குத் தரலாமா......? என்றுதான் கேட்கப்போகிறான்! உங்கள் மகள் முகரக்கட்டைக்கும், உங்கள் முசுறுபிடித்த குணத்துக்கும் ஒருவன் கூடப் பெண் கேட்க வரமாட்டான். மாப்பிள்ளைப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிற இந்தக் காலத்தில் ஏதோ ஆயிரத்துக்கு ஐந்நூறைத் தருகிறேன் என்று கூறி நமக்கு ஏற்றாப்போல் ஒரு மாப்பிள்ளையைத் தேட முடியவில்லை, வாய்ப் பேச்சு மட்டும் குறையவில்லை.

கோமதி! உனக்குக் கொஞ்சங்கூடப் புத்தியில்லை! மாப்பிள்ளை என்ன சந்தைமாடா...? சந்தைக்குப் போனோம், நொண்டிமாட்டுக்குத் தக்கபடி நொண்டிமாடு பிடித்துவந்தோம்என்றுதிருப்திப்பட. இது வாழ்க்கையடி வாழ்க்கை! அவசரப்பட்டு அகப்பட்டவனுக்குக் கட்டிக்கொடுத்துவிட்டு, நாளை அவள் கண்ணைக் கசக்கி அழுவதைப் பார்ப்பதைவிட இரண்டுபேரும் தூக்குப் போட்டுச் செத்துவிடலாமே!

உங்கள் கூட வேலைப்பார்த்தானே வேலப்பிள்ளை! ஒரு பெண்ணுக்கல்ல, மூன்று பெண்களுக்கும் கலியாணத்தை நடத்திவிட்டு இப்போ, மகனுக்குப் பெண்பார்க்கிறார், நீங்கள் ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு என்று வளர்த்த ஒரு மகளுக்குக் கலியாணம் நடத்த முடியாமல் இப்படி உபதேசம் பண்ணுகிறீர்கள். என் வயிறல்லவா தினம் தினம் குமுறுகிறது!

ஆமா! அந்த வேலப்பனைப் போல் அன்னமிட்ட வீட்டில் கன்னமிட்டு அகப்பட்டதைச் சுருட்டச் சொல்கிறாயா? இந்த ஆதிமூலம் அப்படிப்பட்ட ஆள் இல்லை! மானமே பெரிதென மதிக்கிறவன். உயிர் போவதாக இருந்தாலும் அப்படிப்பட்ட ஈனச் செயலில் இறங்கமாட்டான்!

இப்போது உங்களை யார் திருடச் சொன்னார்கள்? மானத்தைப் பற்றிப்பிரமாதமாகப்பேசுகிறீர்கள்; மானம் மானம் என்று கூப்பாடு போடத்தான்தெரிகிறதேயொழிய, இருபது வருடகாலமாகப் பாடுபட்டு என்னத்தைக் கண்டீர்கள்? ஒரு நன்செய் வாங்கினோமா? ஒரு புன்செய் வாங்கினோமா? குடியிருக்க பத்தடி நிலம் வாங்கினோமா?]அதுதான் இல்லை, வீட்டில் நல்ல சேலை உண்டா, சாப்பாடு உண்டா? ஒன்றுமே இல்லை! காலா காலத்தில் அவளுக்குக் கலியாணத்தை முடிக்கவேண்டும், அதற்காகவாவது முதலாளியிடம் பணம் கேளுங்க என்று, தினந்தோறும் சொல்லிக்கொண்டே வருகிறேன். உங்கள் காதில் ஏறினதாகத் தெரியவில்லை!

நாய் கண்ணைமூடிக்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு, அது தூங்குகிறது என்று நினைத்தானாம் ஒரு மூடன்! அதுபோல என்னையும் நினைக்கிறாய் நீ. நானும் தினசரி அவர் திரும்பும்போதெல்லாம் தலையைத் தலையைச் சொரிந்து காட்டி, காக்காய் பிடித்துக் கொண்டுதான் வருகிறேன். சாடை மாடையாகவும் சொல்லியிருக்கிறேன். எதுக்கும் இன்றைக்கும் நினைவுபடுத்தி விடுகிறேன் ஊட்டியிலே கலியாணம் நடக்கப்போகிறது. அந்த உல்லாசத்தில் இருபது வருடமாக உழைத்த என்னை மறந்துவிடவா போகிறார்?

ஊட்டியிலே கலியாணமா, பேரனுக்கா பேத்திக்கா?

அட பைத்தியம், பேரனுக்கும் இல்லை, பேத்திக்கும் இல்லை! எங்க முதலாளி கந்தசாமிக்குத்தான் அறுபதுக்கறுபது கலியாணம் நடக்கப்போகிறது! நான்கூட ஊட்டிக்குப் போகவேண்டியதிருக்கும்.

ஆமா, வீட்டிலே இருக்கிற வறுமை போகவில்லை. உங்களுக்கு ஊட்டி நினைவு வந்துவிட்டது. குடும்பம் உருப்பட்டமாதிரிதானே! கோபத்தோடு எழுந்து வீட்டிற்குள் சென்றாள் கோமதி. ஆதிமூலம் அடித்துவைத்த சிலைபோல் ஆடாமல் அசையாமல் அவளையே பார்த்தபடி வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்தார்!

ஆதிமூலமும் கோமதியும் கணவனும் மனைவியுமாவார்கள்! அவர்கள் பேச்சில் அடிபட்ட அவள்தான் மரகதம். அவர்களின் பெயரைச் சொல்லப்பிறந்த பெண்ணும் ஆண்மகனும அவள் ஒருவளேதான்! பருவமடைந்து பத்து வருடங்கள் ஆகின்றன! பார்க்கக் கவர்ச்சிகரமான அழகு இல்லாததாலும், பணம் இல்லாததாலும் மரகதத்தைத் தேடிவரும் மாப்பிள்ளைகள் நிலைமையை அறிந்து ஓடிவிடுவதும், அதனால் பெற்றவர்களுக்குள் வாய்ச்சண்டை முற்றிக் கைச்சண்டையில் முடிவதும், பின்னர் சமாதானமாகுவதும் அவர்களின் வழக்கமாகிவிட்டது. மரகதம் தன் நிலைமையை நினைத்துக் கண்ணீர் வடிக்காத நாளும் இல்லை!

திண்ணையில் அமர்ந்திருந்த ஆதிமூலத்தின் எண்ணமெல்லாம் மகள் கலியாணத்தைப்பற்றியதாக இருந்தாலும், அவர் செயலெல்லாம் முதலாளி கந்தசாமி கலியாணத்தில் ஈடுபட்டிருந்தது.

திருமந்திர நகரில் கந்தசாமியைப்பற்றித் தெரியாதார் யாருமே இல்லை என்று துணிந்து பந்தயம் கட்டிச் சொல்லலாம். சிறுவர்களானாலும் சரி, பெரியவர்களானாலும் சரி பெண்களானாலும் சரி, கந்தசாமி என்றால் "கார்காத்தார் மில் முதலாளியைத்தானே சொல்கிறீர்கள்" என்று கேட்பார்கள். அவ்வளவு பெயர் பெற்றவர். மில்லுக்கு மட்டுமல்ல, பரந்து விரிந்து கிடக்கும் பல ஏக்கர் நிலத்துக்கும் முதலாளி. பலசரக்கு நவதானியம் முதல் பஞ்சுவரை விற்பனை செய்யவும் வாங்கவும் பெயர் பெற்ற வணிகர்!

உல்லாசமாக உண்டு உறங்க நகரில் ஒரு பங்களா. ஊர்சுற்றிப் பார்த்துவர ஒரு அழகிய கார். இதுமட்டுமா? ஊருக்கு ஊர் ஒரு உல்லாச மாளிகை, அதில் ஒளியேற்ற, பொங்கிவரும் பெருநிலவு போன்ற எழில் முகமுடைய இளமங்கையர்கள்! இத்தனைக்கும் அவர் இளம் வயதினர் அல்லர். அறுபது வயதின் எல்லைக்கோட்டில் காலடி எடுத்துவைத்திருப்பவர். முதுமையின் கோலம் உடலெங்கும் முத்திரையிட அதைப் பணத்தால் மூடிமறைத்துக் கொண்டு திரிபவர்!

ஆதிமூலம் இருபது வருடங்களாகக் கந்தசாமியிடம் வேலை பார்த்து வருகிறார். வீட்டுக் கணக்கு எழுதுதல், வீட்டுக்கு வேண்டிய காய்கறிச் சாமான்கள் வாங்கிக்கொடுத்தல், முதலாளியின் தனிப்பட்ட கணக்குகளைச்சரி பார்த்து ஆபீசில் சேர்த்தல், இவைகள்தான் ஆதிமூலத்தின் அன்றாட அலுவல்கள். இதற்காக அவர் பெறும் சம்பளமோ மாதம் அறுபது ரூபாய். அன்று ஆதிமூலத்தின் முன்னால் மலைபோல் கலியாணப் பத்திரிகைகள் குவிந்துகிடந்தன. அத்தனையும் மில் முதலாளி கந்தசாமிக்கும் அவரின் அருமை மனைவி அமிர்தம்மாளுக்கும் ஊட்டியில் நடைபெறப்போகும் அறுபதுக் கறுபது கலியாண அழைப்புப் பத்திரிகைகள். ஒவ்வொன்றாக எடுத்து முகவரி எழுதி அஞ்சல் தலையும் ஒட்டிக்கொண்டிருந்தார் ஆதிமூலம். அப்போது எதிரே சோபாவில் சாய்ந்து படுத்தபடி அதைமேல் பார்த்துக்கொண்டிருந்தார் கந்தசாமி.

கலியாணப் பத்திரிகையை எடுத்து முகவரி எழுதி அஞ்சல் தலை ஒட்டி கட்டில் சேர்க்கும் பொழுதெல்லாம் ஆதிமூலத்தின் மனதில் மரகதத்தின் நினைவே மேலோங்கி நின்றது. அதைவிட மனைவியின் சூடான வார்த்தைகள் வேறு அவர் மனதைச் சுட்டுக்கொண்டிருந்தது. மெதுவாகத் தலையை நிமிர்த்தி முதலாளியைப் பார்த்தார். முதலாளி முகத்தில் ஆத்திரமோ, கோபமோ, கடுகடுப்போ துளிகூட இல்லை. அமைதி தவழ்ந்துகொண்டிருந்தது. இதுதான் சமயமென "அய்யாகிட்டே ஒன்று கேட்க விரும்புகிறேன்" என்ற பீடிகையோடு பேச்சை ஆரம்பித்தார். என்ன என்று கேட்பதுபோல எழுந்து உட்கார்ந்தார் கந்தசாமி.

என் மகள் மரகதம் பருவமடைந்து பத்து வருடங்கள் ஆகின்றன. அவளுக்கு ஒரு மாப்பிள்ளையைப் பார்த்துக்கலியாணத்தை நடத்துவிடலாம் என்று நானும் பத்து வருடங்களாக முயற்சி செய்துதான் பார்க்கிறேன். ஆனால் வருகிற மாப்பிள்ளையெல்லாம் ஆயிரத்தைக்கொடு இரண்டாயிரத்தைக்கொடு என்று கேட்கிறார்கள். என்னால் எப்படிக் கொடுக்கமுடியும்? பெண்ணை நாடிவந்தவர்கள் என் நிலைமையைப் புரிந்துகொண்டாலும் ஓடிவிடுகிறார்கள். இந்த வருடமாவது என்னைப்போல் ஒரு ஏழையைப் பார்த்துக் கட்டிக்கொடுக்கலாமென்று நினைத்திருக்கிறேன். அய்யா கொஞ்சம் தயவு வைத்துஉதவிசெய்யணும் என்று கூறிமுடித்தார் ஆதிமூலம்.

கடைசிவரை கேட்டுக்கொண்டிருந்த கந்தசாமியின் முகம் மாறு

3-ம் பக்கத் தொடர்ச்சி

நமது காங்கிரஸ்காரர்கள், "இந்தியா ஒரே தேசம்! அப்படி ஒன்றாகயிருக்கவேண்டுமானால் ஒரே மொழிதான் ஆட்சிமொழியாகயிருக்கவேண்டும்" என்கிறார்களல்லவா? அவர்களுக்குப் பதிலளிப்பது போல, 'மெயில்', ஏட்டில் தீட்டியுள்ள ஒரு கட்டுரையில் கேட்கிறார், "ஒரே மொழியும், ஒரே மதமும் இருப்பதாலேயே ஒரு தேசமாகிவிட முடியாது! ஸ்பிட்சர்லாந்திலும், கானடாவிலும் ஒரு மொழியல்ல; பல மொழிகள் உண்டு. பிரிட்டனிலும், அமெரிக்காவிலும், ஒரே மதம்தான் என்றாலும் இரண்டும் தனித்தனி நாடுகள். எனவே, வாழும் மக்களிடம் ஐக்கியமாக இருக்கவேண்டும் என்கிற உணர்வுதான் முக்கியம்" என்கிறார். இந்த உணர்வு ஓங்கினால் அந்நாடு வாழும்! மங்கும்போது, சிதறும்!! — என்றும் தெரிவிக்கிறார்.

இந்தியா ஒருதேசம்! — என்கிறார்களல்லவா, இங்கு, அந்த உணர்வு, சுதந்திரத்துக்குப் பிறகு வளர்ந்திருக்கிறதா, தேய்ந்திருக்கிறதா என்றால், அச்சம் தருமளவிலிருப்பதாகவும் குறிப்பிடுகிறார்.

ஒற்றுமையுணர்வு இருக்குமாயின் இன்னும் மராட்டியத்தில் புயல் வீசிக்கொண்டா இருக்கும்! குஜராத்தில் கொந்தளிப்பு அடங்கியிருக்க வேண்டுமே!!

வட்டாரத்துக்கு வட்டாரம் வளரும் ஒற்றுமை உணர்ச்சியைத்தானே காண்கிறோம்! இப்படி வளரும் உணர்ச்சிதான், ஐக்கியத்துக்கு ஆபத்து என்கிறார் முன்ஷி!!

என்ன செய்வது? பாசமும் உடன்பிறந்த இரத்தமும் எப்போதாவது ஒன்றுபடத்தானே செய்யும்! செயற்கைக் கூட்டால், இந்த அன்பைக்கொண்டு வந்துவிடமுடியுமா!!

★

பட்டது. "என்னைநம்பி உன் மகள் கலியாணத்தை நடத்த நினைக்காதே. நானே ஆயிரக்கணக்கான ரூபாய்களை என் கலியாணச்செலவுக்குப் போட்டுவிட்டு தவியாய்த் தவித்துக்கொண்டிருக்கிறேன். உன் மகள் கலியாணத்துக்கு என்னால் தரப்படுவது ஐம்பது ரூபாய் தான். அதற்குமேல் ஒரு சல்லிக் காசு கூட எதிர்பார்க்காதே......" என்று முகத்தில் அறைந்தாற் போல கூறிவிட்டு, நாளைக் காலையில் ஊட்டிக்குப் போகவேண்டும்; தயாராக இரு என்று உத்தரவும் போட்டுவிட்டு எழுந்து போய்விட்டார் கந்தசாமி.

ஊட்டியில் மில் முதலாளி கந்தசாமிக்கும், அவரின் அருமை மனைவி அமிர்தத்தம்மாளுக்கும் அறுபதுக்கறுபது கலியாணம் சிறப்பாக நடந்தது. மாநிலமெங்குமுள்ள மில் முதலாளிகளும் வணிகர்களும், பிரமுகர்களும் வந்து குழுமி வாழ்த்துக்களும்பரிசுகளும் வழங்கினார்கள். ஆதிமூலம் ஓடியாடிச்சில்லறைவேலைகளையும் வரவேற்புகளையும் கவனித்துக் கொண்டிருந்தார்.

கலியாணம் முடிந்தது. விருந்தினர்கள் தத்தம் ஊர்களுக்குச் சென்றுவிட்டனர். மில் முதலாளி கந்தசாமியும் ஆதிமூலமும் ஓய்வாக உட்கார்ந்துகொண்டு வந்திருந்த பரிசுப் பொருள்களை எழுதிக்கொண்டிருந்தார்கள். கலியாணத்துக்கு வந்த பரிசுப் பொருள்களைப் பார்த்தால் ஒரு வெள்ளி நகைக்கடையே வைத்து விடலாம். அந்த அளவுக்குவந்திருந்தது. மற்றும் தங்கங்களும் ரூபாய் நோட்டுகளும் முன்னால்குவிந்திருந்தன. "என்ன ஆதிமூலம் வந்த பரிசுகள் மொத்தமாக எவ்வளவு ரூபாய் மதிப்புபெறும்...? என்று கேட்டார் கந்தசாமி. கணக்கைச் சரிபார்த்துக்கொண்டிருந்த ஆதிமூலம் "ஒருஇலட்சத்துப்பத்தாயிர ரூபாய் மதிப்பாகிறது" என்று பதில் கூறினார். அப்போது அவர் மனதில் "இதில் நூற்றில் ஒரு பகுதி இருந்தாலும் போதும் மரகதத்தின் கலியாணத்தை நடத்திவிடலாமே" என்ற நினைப்பு எழாமல் இல்லை! "சார்! ஆதிமூலம் என்பது யார்" என்று கேட்டபடியே ஒரு தந்திச் சேவகன் வந்து நின்றான். "நான்தான் ஆதிமூலம்" என்று எழுந்தார் ஆதிமூலம்! அவர் கையில் ஒரு தந்தியைக் கொடுத்துவிட்டு அவன் போய்விட்டான். கரங்கள் நடுங்க, தந்தியை உடைத்துப் பார்த்தார். பரிசுப் பொருள்கள் அவரைப் பார்த்துக் கலகலவெனச் சிரிப்பது போலவும், மில் முதலாளி கந்தசாமி இடியெனச் சிரிப்பது போலும் தோன்றியது அவருக்கு. தலை சுற்றியது அப்படியே மயங்கிக் கீழே விழுந்தார் ஆதிமூலம்.

பத்து வருடங்களாக தனக்குக் கலியாணம் செய்துவைக்க முடியாமல் திண்டாடும் பெற்றோர்களுக்குப்பாரமாகஇருந்துதொல்லை கொடுக்க விரும்பாமல் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்து கொண்டாள் மரகதம் என்று தந்தியில் அடங்கியிருந்ததும்—ஆதிமூலத்தை அதிர்ச்சியடையச் செய்ததும் இந்த வார்த்தைகள் தான்!

❋

அவர் பேசினார்—அவரும் பேசினார்

தமிழன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுங்கள்.

சாதிவெறி, மூடநம்பிக்கைகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது.

காசுபணம் எதற்கு என்று பேசுகிற வேதாந்திகூட ஒரு ரூபாய் காணிக்கை வைத்தால்தான் அருள்வாக்குக் கொடுக்கிறார்.

தமிழ் நாட்டில் பிறந்திருக்கிறோம் என்று ஒவ்வொரு தமிழனும் நினைத்து மகிழ்ச்சி அடையவேண்டும்.

முதலில் தமிழன் என்ற எண்ணம்,

பிறகுதான் இந்தியன் என்ற எண்ணம்.

—ஏ. எஸ். பி. அய்யர்.

திருச்சி
16—12—58

ஆரியர்களும், திராவிடர்களும் ஒன்றிக் கலந்திருப்பதே இந்திய நாகரிகத்தின் அடிப்படை.

தென்னிந்தியர்கள் ஒரு தனி இனத்தவர் என்றும், தென்னிந்தியாவின் நாகரிகம், இந்திய நாகரிகத்திலிருந்து மாறுபட்ட ஒரு தனி நாகரிகம் என்றும் எடுத்துக் காட்டத் தற்போது நடந்து வரும் முயற்சி கண்டிக்கத் தக்கது.

இப்போதுள்ள நிலைமையில் இந்தப் பிரதேச கலாச்சாரங்கள் மொழிகளின் விசேஷ அம்சங்கள் நசுக்கப் படுமென்று பயப்படத் தேவையில்லை.

—எஸ். கணபதியா பிள்ளை.

அண்ணாமலை நகர்
12—12—58

மேலே குறிப்பிட்டுள்ள கருத்துக்களை வெளியிட்ட இருவரும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள்தான்.

12—12—58ல் அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியில் திரு. கணபதியா பிள்ளை அவர்களும்,

16—12—58ல் திருச்சியிலுள்ள இரண்டாம் வகுப்பு அதிகாரிகள் (என். ஜி. ஓ.) மத்தியில் திரு. ஏ. எஸ். பி. அய்யரும் பேசியிருப்பதன் சாரத்தையே இங்கு தந்துள்ளோம்.

இருவர் தந்துள்ள கருத்துகளும் ஒன்றை ஒன்று தழுவி நிற்கின்றனவா? அல்லது நழுவி விலகிப் போகின்றனவா?

இரு நீதிபதிகளின் கருத்துக்களையும் சீர்தூக்கிப் பார்த்துத் தீர்ப்பளிக்கும் பொறுப்பை வாசகர்களுக்கே விட்டுவிடுகிறோம்.

தற்பொழுதுகூட நேர்முக வகுப்புகளில் மட்டும் 700-க்கு மேற்பட்டவர்கள் இங்கிலீஷ் மொழிப் பயிற்சி பெறுகின்ற சென்னையின் மாபெருங் கல்வி அரங்கம்!

The School of English Learning

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.

KNOWLEDGE IS POWER

தமிழ்

எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி

அடிப்படையோடு இலக்கண ரீதியாக திருத்தமான முறையில்

இங்கிலீஷ் தபால் மூலம் கற்கலாம்

சேர்வதற்கு அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து

24–12–58-ந் தேதி

வரை அனுப்பலாம்.

அச்சிடப்பட்ட பாட விளக்கங்கள்

25–12–58-ந் தேதி

முதற்கொண்டு தொடர்ந்து அனுப்பப்பட்டு, கற்கும் போது ஏற்படும் சந்தேகங்களுக்கு முறைப்படி அவ்வப்போது தெளிவுரைகள் வழங்கப்படும்.

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்குவரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும்—சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும். "தபால் மூலம் அனுப்பப்படும் பாடங்கள் ஒரு நீண்ட தொடர் நாவலைப் படிப்பது போன்று ஆர்வத்தை ஊட்டுவதாக இருக்கும்" எனில் மிகைப்படுத்திச் சொல்வதாகாது.

முக்கிய அறிவிப்பு:—

1. 16-வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள்.
2. ஆதாரபூர்வமான ஒப்பற்ற இலக்கணப்பயிற்சி அளிக்கப்படுவதால் ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக்கொள்ளலாம்.
3. இத்தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விவரங்களையும், எட்டு நயே பைசே (8-புதிய காசுகள்) தபால்தலை அனுப்பிப் பெறுக.

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி நல்ல முறையில், உலக மொழியாம் ஆங்கிலத்தைக் கற்க முன்வருக.

4-ம் பக்கத் தொடர்ச்சி

நிதியமைச்சர், தனது 'பெரிய மனிதத் தன்மை'யை இந்தத் துறையில் காட்டவேண்டாம். உலகத்திலுள்ள எல்லோரும் அறிவார்கள்—எது பாபம், யார் பாபிகள் என்பதை! முதலாளித்துவ அமைப்பை எதிர்த்துக் குரல் எழுப்புவது பாபம்; அது பிற்போக்குவாதிகளின் பிதற்றல். இப்படிப் பேசுவதால், சமூகத்திலுள்ள உயரப்பர்களின் பிரியத்தை நிதியமைச்சர் பெறமுடியுமே தவிர வேறெந்தப்பலனும் கிடைக்காது. ஆனால் அந்த உயரப்பர்களைப் பற்றி இன்றைய உலகம் வாழ்த்தவில்லை, சபிக்கிறது என்பதை அவர் அறியவேண்டும். காலம் அவர்களுக்கு நீண்ட நிம்மதியைக் கொடுத்து வந்தது. இனி, நிலைக்காது. அவர்களே, விட்டுக் கொடுத்து, விடைபெற்றுக் கொள்ள வேண்டிய புதுயுகம் பூத்துவிட்டது.

கெஞ்சிக் கூத்தாடி, பணம் பெருத்தோரின் பாசத்தைப் பெற்று, அதன்மூலம் புதிய புதிய தொழில்களை உண்டாக்கி, நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிவிடமுடியும் என்று நிதியமைச்சர் நினைப்பாரேயானால், அவருக்காக நாம் பரிதாபப்படுகிறோம்! என்னதான், 'அப்பா, ஐயா' என்றாலும், 'உத்தமரே! நல்லவரே!' என்று கெஞ்சிக் கூத்தாடினாலும், கொழுத்த இலாபம் கிடைக்குமென்று தெரிந்தாலொழிய எதிலும் ஈடுபடமாட்டார்கள் அவர்கள்.

"இப்போதுள்ள தொழில் அமைப்பில், ஒரு தொழிலாளி எவ்வளவுதான் உற்பத்தி செய்தாலும், அதனால் அவனுக்கு எவ்வித நன்மையும் கிடைக்காது. எனவே உற்பத்தி அதிகமானால் அதன்மூலம் முதலாளி மட்டுமின்றி தொழிலாளியும் பலன்பெறக் கூடிய ஒரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். அதனால்தான் நான் சொன்னேன், இலாபத்தைப் பங்கு போட்டுக் கொள்வது போன்ற ஒருவழி தேவையென்று. இந்த யோசனையால் என்னென்ன பலாபலன்கள் ஏற்படுமென்பதை நினைவில்வைத்தே சொல்கிறேன்."

பத்தாண்டுகளுக்கு முன் புதுடில்லி பாராளுமன்றத்தில் பேசப்பட்ட மொழிகள் இவை. தொழில்கள் பெருகவேண்டும் என்று மன்றில் உற்சாகம் கொண்டு விட்டால் மட்டும் போதாது. தொழிலாளியும் நலன் அடைய வேண்டும் என்றார், இப்படிப் பேசியவர். பத்தாண்டுகள் ஓடிவிட்டன! இப்படிப் பேசியவர், இன்று அலங்காரமான நாற்காலியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்; அவரே இன்று முதலாளிகளுக்கு வக்கீலாகிறார்; எது பாபம் என்று புதிய விளக்கம் தரவும் முன்வருகிறார். பத்தாண்டுகளுக்கு முன் டில்லிப் பார்லிமெண்டில், தொழிலாளிக்கும் நியாயம் வேண்டும் என்று வாதாடியவர், இன்று இப்படிப் பேசும் இதே தோழர் சுப்ரமணியம்தான்!! அப்போது அவர், 'கனம்' தங்கிய அமைச்சரல்ல; அதனால், இலட்சக் கணக்கான மக்களின நன்மைகளை எதிரொலிக்கும்குரலாக இருந்தார். காலம் மாறிவிட்டது! காலம் மனிதர்களின் நடத்தையிலும் பேச்சிலும்தான், என்னென்ன விந்தைகளைச் செய்துவிடுகிறது!!

அமைச்சர், அன்று அப்படியும் இன்று இப்படியும் நாளை இன்னொரு விதமாகவும் பேசினாலும், ஒன்றுமட்டும் நிச்சயம் — அவர் இன்று கொண்டுள்ள கருத்து, வெற்றி பெறாது. வேலைத் தொல்லைகள் நிரம்பிய அவருக்கு, ஒரு கதையைக் கவனமூட்டுவோம்.

பழையகால சக்கரவர்த்தி! அவனெதிரில், ஒரு வேடிக்கை நிகழ்த்தப்பட்டது. ஒரு கட்டுக் குச்சிகளைக் கொண்டுவந்து, குறுக்கிலும் நெடுக்கிலும் இப்படியும அப்படியும் வைத்துவிட்டுப் போனான், ஒருவன். அடுத்தப்படிவந்த ஒருவன் குச்சிகளை ஒன்றின் பக்கத்தில் ஒன்றாக அடுக்கி வைத்தான். அடுத்தபடி ஒருவன் வந்தான், அவன் ஒரு குச்சியைக் கொளுத்திவிட்டுப்போனான். அவன் போனதும், சக்கரவர்த்தி, எரியும் தீயை அணைக்க வாளையுருவி வீசினான். விளைவு, இளறப்பட்ட குச்சிகள் முன்னைவிட அதிகமாக எரிந்தன. இதைக்கண்ட சக்கரவர்த்தியின் சிப்பந்தி, நெருப்பை எப்படி அணைக்கலாம் என்று இங்குமங்கும் பார்த்தான். அறைக்குள், இரண்டு தகரப் பீப்பாய்கள் இருப்பதைக் கண்டான். அவைகளில் ஒன்றில் எண்ணெயும் இன்னொன்றில் தண்ணீரும் இருந்தன. அவசரத்தில் அந்தச் சிப்பந்தி, தண்ணீர் என்று நினைத்து எண்ணெய்ப் பீப்பாயை எடுத்து, நெருப்பில் கொட்டினான். வானளாவ எரிந்த தீயைக்கண்டு, அந்த இடத்தைவிட்டு, தப்பித்தால் போதும் என்று ஓடினான்!!

★

குறைந்த விலையில்! ★ சிறந்த முறையில்!!

"திராவிட நாடு"

பொங்கல் மலர்

சி. என். ஏ. தரும்

கருத்துப் படையல்கள்.

வண்ண முகப்புடன்,

எண்ணத் தொகுப்புகளுடன்

ஜனவரி 14-ந் தேதி எங்கும் கிடைக்கும்

விலை 8 அணாதான்!!

காஞ்சிபுரம் [illegible] "திராவிடநாடு" அச்சகத்தில்

28–12–

வார வெளியீடு

விலை 16 காசு

OFFICE OF THE ... MADRAS
5 ... 1958
1268/4

சிந்தனை செய்திடுவீர்!

(அ. ஆரிது)

★

சிந்தை செய்திடு வீர் — திராவிடத்
　　திருநாட் டிடையுறை வீர்..........
நந்தமிழ் மலர்ந்த மொழிபிற நான்கும்
　　நமதென அறிந்திடு வீர்....... (இதைச்)

காவியம் நிறைந்தது வோ—மொழிதான்
　　கண்டினிற் கலந்தது வோ
பாவிய ரகன்ற நன்று டிதுவோ
　　பண்பேறி மூத்தது வோ....... (இதைச்)

ஆழியால் நல்லரண் படைத்தவளோ—பல்
　　ஆற்றினை அமுதா யுடையவளோ
தோழமை யாலிந்த உலகம் யாவிற்கும்
　　தூதனைத் தந்த தாயவளோ....... (இதைச்)

பண்டைய நாளில் வளர்ந்தவள்தான்—இன்று
　　பயந்தடி மைபோல் வளைந்துவிட்டாள்
அண்டையி லுள்ளான் தீயாக நம்மை
　　ஆண்டிட நாமிங் கொடுங்குவதோ (இதைச்)



சீச்சீ! இந்தப்பழம் புளிக்கும்

காலை ஒளியிலும், மாலை வெய்யிலிலும், மனங்கவர் தோட்டத்துப் பூக்களிலும், மழலைப் பேச்சிலும், மனைவியின் இதழோரச்சிரிப்பிலும் நர்த்தனமாடும் அழகினைக் கண்டு, அடடாவென மெய்சிலிர்ப்போருண்டு! வானமே, உன் வண்ணம் கண்டேன், மெய்மறந்தேன் என வர்ணிக்கும் கவிஞனின் காவிய அழகு, களைப்பையெல்லாம் போக்கிவிடுகிறது! இயற்கையின் அழகினை வண்ணத்தால் காட்டிடும் ஓவியனின் திறமையினைக் கண்டால், உள்ளத்தையே இழந்துவிடுகிறோம்! உலகத்தையே வாள்வலிமையால் அதிரச்செய்த ரோமாபுரி வீரன் ஜூலியஸ் சீசர் முதல், பிரஞ்சுநாட்டுச்சர்வாதிகாரி நெபோலியன் வரையில், அழகுக்கு ஆர்த்தியெடுத்தவர்கள் என்பதைச்சரிதம்சொல்லும். சுருள் கத்தி சுழற்றும் சுப்பன்கூட, அழகுக்கு அடிவருடாமல் போகமாட்டான்! நல்லபாம்புகூட, இசையின் அழகினைக் கேட்டு, மயங்கிவிடுகிறது! கோபத்தை மாற்றிவிடும் அழகு. புத்துயிரை உண்டாக்கும் நல்லழகு. முத்தும், முல்லையும், கத்தும் கடலும், பரந்த வானமும், சிந்து பாடும் சிற்றாறும், சிலிர்க்கும் மரக்காவும், பறக்கும் புறாவும், எழுத்தாளனைப் பைத்தியமாக்கியதுண்டு. சோகமும் சோர்வும் நிரம்பியபோது, இயற்கைக் காட்சிகளை ஒருமுறை கண்டால், இரண்டும் ஓடி, இதயம் களிப்புறும் என்கின்றனர் உளநூல்காரர்கள். உலகமே உருள்கிறது என்று சொன்னால், ஓரளவுக்கு அழகின் வசப்படுவதே காரணமெனலாம். அழகை வெறுத்தவன் எவனுமில்லை! அண்டமாமுனிவர் எல்லாம், அழகுக்கு அடிபணிந்ததாகப் புராணங்கள் சொல்லுகின்றன! தமிழறிஞர். தி. வி. க. முருகனைப்பற்றி விளக்கம் தரும்போது, "முருகு, என்றால் அழகு. அழகுக்குத் தெய்வம் முருகன். அழகைத் தெய்வமாக வழிபடும் உள்ளம் கொண்டவர்கள் தமிழர்கள்" என்கிறார். அழகு எந்த இடத்திலிருந்தாலும், எந்த உருவிலிருந்தாலும் மனிதன் பாராட்டத்தவறுவதில்லை. பக்கத்து வீட்டிலே பூத்த ரோஜா என்பதற்காக, அது அழகில்லை, என்று எவனும் கூறான். ஷேக்ஸ்பியர், ஆங்கிலேயர் என்பதற்காக அவரது கவிதையில் கூறும் அழகினை, இரசிக்காமற் விட்டுவிடமுடியாது. கலை, காவியம், இலக்கியம் இவைகளில் காணப்படும் அழகு, அலை கடல்களைத் தாண்டிச் சென்று புகழ்பெறும்; பொறாமைக்காரனைத் தவிர, யாவரும் அதனை ஏற்பர்; மகிழ்வர். ஆனால், அழகை, அமைச்சர் சுப்பிரமணியம் வெறுக்கிறார் — சபிக்கிறார் — கண்டிக்கிறார்! ஆம், நமது மாநிலக் கல்வியமைச்சர் 'கனம்' சுப்பிரமணியனார்தான், அழகைப் பழிப்பவர்- நீண்ட நாளாக 'அழகை' வெறுக்கிறார் எனினும், இந்தக் கிழமை, சென்னையிலே ஓரிடத்தில் பேசுகிற போது, "இப்போது சிலர், பேசுவது என்றால், அழகாகப் பேசவேண்டும் என்று அடுக்குச் சொல்லலங்காரத்தோடு பேசுகிறார்கள். விஷயம் இல்லாதவர்கள், கருத்துத் தெளிவு இல்லாதவர்கள்தான் அடுக்குமொழிப்பேச்சில் ஈடுபடவேண்டியிருக்கிறது", என்று கூறியிருக்கிறார்.

விஷயம் இல்லாதவர்கள், கருத்துத் தெளிவு இல்லாதவர்கள்தான் அழகுப் பேச்சில் ஈடுபடவேண்டியிருக்கிறதாம்! அமைச்சர், தெளிவு உள்ளவர்—விஷயம் இருப்பவர்—எங்கே அவர் கொஞ்சம் அழகுப் பேச்சைப் பேசிக்காட்டட்டுமே என்று கேட்கத் தோன்றும்!! கேட்டால் என்னிடம் 'விஷயம்' இருக்கிறது — எனவே, அழகுப் பேச்சுத் தேவையில்லை, என்று பதிலளிக்க முயலுவார். 'விஷயம்' இருப்பதாலேயே எதையும், எவனும் விரும்பிவிடுவதில்லை. சோறு சமைப்பாள் மனைவி — மிகமிக உதவிகரமாயிருப்பாள்—ஆனால், எப்போதும் முகத்தில் கரியைப்பூசிக்கொண்டும் வாரத்துக்கு ஒருதடவை உடலைக் கழுவிக்கொண்டும்தானிருப்பாள் என்றால், கட்டியவன் நிச்சயம் 'விவாகரத்து' செய்யத்தான் தவிப்பான். ஐந்தாண்டுத் திட்டம் என்கிறார்களே—அமைச்சர்கள் கூற்றுப்போல, அது 'தெளிவு நிரம்பியது' எனவே கொள்வோம் — ஆனால், அது பற்றி மக்களுக்குச் சொல்ல, ஏன், அழகு அழகான சுவரொட்டிகளும் விளம்பரங்களும் செய்கிறார்கள்? 'விஷயம் இருக்கிறது' என்று விட்டுவிடுவதுதானே! அழகாக, அடுக்குச் சொல்லலங்காரத்துடன், திராவிட முன்னேற்றக் கழகத்தார் பேசுவதை மட்டுமல்ல; மாநாடுகளுக்கும் கூட்டங்களுக்கும் அச்சடித்து ஒட்டும் சுவரொட்டிகளைக்கூட அமைச்சர், கேலிசெய்ததுண்டு. ஆனால், அவரை வரவேற்புக்கழகத் தலைவராகக்கொண்டு நடந்த கோபி காங்கிரஸ் மாநாட்டுக்கு, எத்தனை கலரில் 'போஸ்டர்' போட்டார்கள்? ஏன், வெறும் சுவரொட்டிகளைத் தயாரித்திருக்கக்கூடாது!!

(4-ம் பக்கம் பார்க்க)

★ பரிவு ★

17] ஆண்டு சந்தா ரூ. 8 [28 12 58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 24

அண்ணன், தம்பி, தோழன், நெருங்கிய தொடர்புடையவன் — என்கிற பாசமும் பரிவும், அரசுக் கட்டிலிலிருப்போருக்கு, இருத்தலாகாது என்பர். தாசியைப்போல, இருந்திடவேண்டியவர்களை, இவை சாய்த்துவிடும் என்பதாலேயே, உறவு முறைகளுக்கும் உத்தியோகத்துக்கும் தொடர்பு இருக்கக்கூடாது என்று சொல்லுவர்.

கொஞ்சலாம், குலவலாம், அசதியாடலாம், அரட்டையடிக்கலாம். இவை அனைத்தையும், பொறுப்புள்ளோர், இடமும் காலமுமறிந்து செய்ய வேண்டும். இல்லையெனில், அரசுக்கட்டிலில் அங்கம் வகிப்போர், ஏச்சுக்கும் பேச்சுக்கும் இலக்காக நேரும். கல்லோரைப்பற்றிப் பேசும்போதுகூட, நாவடக்கமும் வார்த்தைகளை வீசுவதில் எச்சரிக்கையும் வேண்டும் என்பர். இதனாலேயே, வெள்ளையர்கள் காலத்தில், எதனையும் முன்கூட்டியே எழுதிப்படிக்கும் பழக்கமிருந்தது. இந்த நாவடக்கம், நமது சுதந்திர அரசில் இல்லையென்பதை நீண்ட நாட்களாகக் கண்டு வருகிறோம்! வேண்டியவர்கள் என்றால், இடம் காலம் பற்றிக்கூடக் கவலைப்படாது புகழ்வதும், வேண்டாதவர்கள் என்றால் நாக்கில் நரம்பின்றி, அவர்களைப் பற்றிச் சரியான எடைபோடாது, 'நான்சென்ஸ்—முட்டாள்தனம்—காட்டுமிராண்டிகள்', என்று ஏசுவதும், காங்கிரஸ் தலைவர்களின் முறையாக இருந்து வருகிறது!!

சர்க்காரின் பணத்தை விரயம் செய்தது, விசயலட்சுமி பண்டிட்டாகவோ, வி. கே. கே. மேனனாகவோ இருந்தால், அதைப்பற்றிப் பேச்சு மூச்சுக் கிளம்புவதில்லை. எவராவது கேட்டிடினும், ஏதாவது பதில் சொல்வதோடு, அவர்களது புகழைப் பற்றியே அதிகம் பேசுவர். அதே தவறை, ஒரு கிராம முன்சீபு செய்துவிட்டும்—சட்டம் கொட்டும்! தண்டனை இட்டும்!!

வேண்டியவர்களை வெளிநாடுகளில் நியமிக்கிறார்கள்—நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் சலுகை தருகிறார்கள்—கருணைகடாட்சம் பெற்றவர்களுக்கு உத்தியோக உயர்வுகள் தாராளமாகக் கிடைக்கிறது —தேர்தலில் தோற்றவர்களாயினும், தோழர்கள் என்றால் கவர்னராகவாவது, ஏதாவதொரு கமிஷன் தலைவராகவாவது ஆக்கிவிடுகிறார்கள் — என்ற குற்றச்சாட்டுகள், சுதந்திரம் பெற்ற நாள் முதல், காங்கிரஸ் சர்க்கார்மீது வீசப்பட்டுவருகின்றன.

டி. டி. கிருஷ்ணமாச்சாரி, நிதியமைச்சராயிருந்தவர். அந்தப் பொறுப்பினைவிட்டு, அவர் விலகும்படியான நெருக்கடி எப்படி ஏற்பட்டதென்பதை நாடு அறியும். ஒருசில கோடிக்கணக்கான ரூபாய்கள், விரயமாயிற்று. அதன் காரணமாக, நிதியமைச்சர் பொறுப்பையே, அவர் இழக்கநேர்ந்தது. இன்னும், அரசியல் அரங்கில், சரியாக உலவ முடியாதபடி இருக்கிறார் அவர்! அவருடைய படத்தை, டில்லி உள்நாட்டமைச்சர் பந்த், இந்தக் கிழமை சென்னைவந்து திறந்து வைத்திருக்கிறார். படத்தைத் திறக்கட்டும், அவர் பலவிதமாக ஆற்றிய தொண்டுகளைக் குறிப்பிடட்டும், காங்கிரசுக்குச் செய்த சேவையை விளக்கட்டும்—யாருக்கும் கவலையில்லை. ஆனால், அவரைப்பற்றியும் அவர் விலகக் காரணமாயிருந்த முந்திரா தகராறு குறித்தும் ஓரிரு சொற்கள் உதிர்த்திருக்கிறார், பந்த். "நேரடியாக டி. டி. கேக்கு தொடர்பு, உண்டோ இல்லையோ......" என்கிற வாசகம்தான் அது. இப்படி, அந்தச்சம்பவம் பற்றிய விசாரணை இன்னும் முடிவடையாத கட்டத்திலிருக்கும்போது, பொறுப்புள்ள டில்லி உள் நாட்டமைச்சர் இப்படிப் பேசலாமா என்று பார்லிமெண்டிலே பலர் கேட்டிருக்கிறார்கள். டி. டி. கேயைப் பாராட்டவந்து, மீண்டும் அவர் தலை உருளும்படியான சூழ்நிலையை உருவாக்கிவிட்டார், பந்த்! உண்மையிலேயே, படத்திறப்பு விழாவுக்கு அவரை அழைத்தவர்களும், பேசிய அவரும் நமது அனுதாபத்துக்குரியவர்கள்!!

விழாவில், டி. டி. கேயின் புகழைப் பாடியது மட்டுமல்ல, விமானம் ஏறும்போதும் காமராஜரிடம், டி. டி. கேயைச் சுட்டிக்காட்டி, "இவர்மீது ஒரு கண் வைத்திருங்கள்!" என்றாராம், பந்த். அதாவது

காமராஜரே இவரைக்கைவிட்டுவிடாதீர்,எனும்பொருளில் சொன்னாராம், பந்த். சிரித்துக்கொண்டாராம், டி. டி. கே! தலையாட்டினாராம் காமராஜ்!! பந்த், கூறியதற்கு என்ன பொருள்? டி. டி. கேக்கு உரிய இடம் கொடுங்கள், என்பதுதானே! கட்சிவிவகாரம் எனின் நமக்குக் கவலையில்லை. பந்தும், காமராசரும் ஆட்சியிலிருப்பவர்கள். அவர்கள், இப்படியெல்லாம், பேசுவதும், புகழ் பாடுவதும் சரியா? வேண்டியவர்கள் என்றால் தேளும் தேனாகத் தோன்றும் என்பதைத் தானே காட்டுகிறது. அதிலும், ஆச்சாரியாரைப் போல அல்ல டி. டி. கே! இன்னும், குற்றவாளிக் கூண்டிலேயே நிற்பவர்!!

பழம் பெரும் அரசியல்வாதிகளில் ஒருவர், என்கிறார்கள் பந்தை. அவரே இப்படியென்றால், ஒவ்வொரு மாநிலத்திலும், ஆட்சிக்கு வந்தோர் வேண்டியவர்களிடம் பரிவும் பாசமும் காட்டப்படுவதாக அடிக்கடி வரும் புகார்களை, நம்பத்தானே செய்வார்கள் மக்கள்!!

★

தஞ்சையில்....!

தஞ்சையிலிருந்து, மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் செல்லும், எஸ். எம். டி. பஸ் தொழிலாளர்தம் போராட்டம் பற்றிய செய்திகளை நாட்டவர் அறிவர்.

300க்கு மேற்பட்டோர், சிறைவாசமும் தண்டனையும் பெற்றிருக்கின்றனர். திராவிட முன்னேற்றக் கழகமும் ஏனைய கட்சியினரும் ஒருங்கு நின்று போராடும், இந்தக் கிளர்ச்சியினை, மென்மேலும் தூண்டிவிடும் போக்கிலேயே பஸ் நிர்வாகிகள் நடப்பதும், அதற்கு எண்ணெய் ஊற்றும் போக்கில் அரசாங்கம் நடந்துகொள்வதும் விந்தையாகவே உள்ளது.

தனிப்பட்டவர்களின் காரியம் என்பதோ, வேண்டியவர்களின் விஷயம் என்பதோ, திராவிட முன்னேற்றக் கழகத்துக்குக் கிடையாது. சமநீதியும், அன்பு நோக்குமே நாம் விரும்பும் பாதைகளாகும். நிர்வாகிகளின் பிடிவாதம், இன்றுவரை, தளர்ந்ததாகத் தெரியவில்லை. அவர்கள், வெளிநாட்டிலிருந்துவிடுவதில்லை! நாளைக்குத் தஞ்சையிலேயே, இதே தொழிலாளர்களுக்கு மத்தியில், உறவுகொண்டு வாழப்போகிறவர்கள்தான்!! ஏனோ, இன்று வீம்புகாட்டுகின்றனர். ஏழை பாட்டாளியின் குரலுக்கு மதிப்பளிக்கும் கண்ணியமும், உதார குணமும் நீடித்து நிற்பவையாகும். பிடிவாதம் விடுத்து, தொழிலாளர்களுக்கான 'நீதி'யினை வழங்கும் வகையில், நிர்வாகிகள் முன்வருவார்களென எதிர்பார்க்கிறோம். தீ பரவுவது!—இருதரப்புக்கும் நல்லதல்ல.

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

அமைச்சர், அழகுப்பேச்சையும் அடுக்குச் சொல்லையும் கிண்டல் செய்கிறார். கருத்துத் தெளிவும், விஷயம் இல்லாதவர்களும்தான் அப்படிப் பேசுவார்கள் என்கிறார்; இதற்கான பதிலை, எத்தனையோ, தடவை சொல்லிவிட்டோம் — எவ்வளவுதான் அடுக்கியடுக்கி, பொருளின்றிப்பேசினாலும்'போடா பைத்யக்காரா!' என்று சொல்லி விடுவார்கள், தமிழ் மக்கள்! அமைச்சர் நினைக்கிற அளவுக்கு, தமிழை அறிந்துகொண்டுசுவைப்பதில், தமிழகம் தாழ்ந்துவிடவில்லை!! எனினும், தாவித்தாவி, தனக்குக் கிட்டவில்லையென்றதும் "ச்சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும்" என்றதாமே நரி, அதுபோல, தங்களால் அழகாக, அடுக்குச் சொல் கலந்து பேச முடியவில்லையென்றதும், பழிக்கிறார்! பழியும் போடுகிறார்!!

அமைச்சர்களுக்கு மட்டுமல்ல, அவர்களது கூடாரமாம் காங்கிரசில்கூட, அழகாகப் பேசும் அருமை பெற்றோர் இல்லை என்பதை, நாம் அல்ல, இன்னொரு அமைச்சரே சொல்கிறார்.

அன்பர் சுப்பிரமணியம், அழகாக அடுக்குச் சொல்லில் பேசுவதா, அது தெளிவில்லாதவர் செயலன்றோ என்கிறார், சென்னையில் நடைபெற்ற ஒரு பேச்சுப் போட்டியில் பேசுகிறபோது! இன்னொரு அமைச்சர், இதே கிழமை, மதுரைக்கு அருகிலுள்ள ஒரு சிற்றூரில் பேசுகிறபொழுது, காங்கிரஸ்காரர்களை பார்த்துச் சொல்லியிருக்கிறார், 'காங்கிரஸ் காரர்கள், மக்களைக் கவரும் வகையில், மேடையில் அழகாகப் பேசப் பழக வேண்டும்'' என்று.

அழகாகப்பேச, காங்கிரசாரைப் பழகிக்கொள்ளச் சொல்லுகிறார் இராமையா! அப்போதுதான், மக்களைக் கவரமுடியுமாம்!! ஆனால், சுப்ரமணியம் கூறுகிறார், அழகாக எதற்குப் பேசுவது, 'விஷயம்' இல்லாதவர்கள்தான், வீண் வார்த்தை அலங்காரம் செய்ய வேண்டுமென்று!!

கட்டிடம்தானே கட்டவேண்டுமென்பதற்காக, எந்த என்சினீயராவது, கன்னாபின்னாவென்று கட்டினால் விட்டுவிடாது அரசாங்கம். சென்னை போன்ற நகரங்களை எப்படி அழகுசெய்வது என்பது பற்றி, அடிக்கடி, ஆலோசனை நடத்தப்படுகிறது. அறிந்தவர்களுக்கு அழகு தேவையில்லையென்று, அமைச்சர்கள் இருந்துவிடுவதில்லை. எந்தக் கோயில்களுக்குப் போனாலும், அங்கேயுள்ள ஆண்டவனைப்பற்றிப் பேசுவதைவிட, அங்குள்ள கலையழகைத்தான் அதிகம் எடுத்துரைக்கிறார்கள். டில்லி சர்க்கார், அழகாக யார் சுவரொட்டிகள் தயாரிக்கிறார்கள்,என்று தேர்ந்தெடுத்துப் பரிசு தரவும் இருக்கிறார்கள் என்று சேதி சொல்கிறது! சில ஆண்டுகளுக்கு முன்பு வரையில்

(13-ம் பக்கம் பார்க்க)

அதிசயம் கண்டார்!

— பழநி —

சில இரசாயனப் பொருள்களைத் தரையில் வைத்துக் கொளுத்தினார்கள்-புகை வானமண்டலத்தை வட்டமிட்டது. அன்று முழுதும் நகரமெங்கும் பனிப்புயல் வீசியது — செயற்கை மூலம் பனியையும் புயலையும் உண்டாக்க முடியும் என்று சீன நாட்டு விஞ்ஞானிகள் கண்டுபிடித்துவிட்டார்கள். இதனைப் பெருமிதமாக அறிவிக்கிறது சீனச்சேதி! 180 அடி நீளமுள்ளது --காங்கிரீட்டால் கட்டப்பட்டது— பூமிக்குள் ஓடும் இரயில் நிலையத்துக்குள் போகும் மக்கள் வசதிக்காகச் செய்யப்பட்டது — நெருக்கமாக மக்கள் நடந்துசெல்லக் கஷ்டப்படுகிறார்கள் — கட்டப்பட்டுள்ள இந்த நடைபாதையில் நடந்துகூடச் செல்லவேண்டாம்—ஏறி நின்றால் போதும், மேலேயிருந்து பூமிக்குள் கொண்டுபோய் விட்டுவிடும்—இதன் பெயர் நடக்கும் பாதை—அரிய சாதனையான இதனை இலண்டனில் அமைத்துவிட்டார்கள் என்கிறது, இங்கிலாந்துச் சேதி! எத்தனை தடவையானாலும் சரி, தோல்விகள் தொடர்ந்து உண்டானாலும் சரி, எப்படியும் நாங்களும் 'குட்டிச் சந்திரனை' அனுப்பியே தீருவோம்; அதற்குள் இத்தடவை ஒரு குரங்கைவைத்து அனுப்பப்போகிறோம் என்கிறது அமெரிக்கச் சேதி! இதெல்லாம் ஒரு அதிசயமா — இதோ நான் தருகிறேன் ஒருசேதி- பாரீர் மக்களே என்று, சென்னை 'மெயில்' ஏடு, வெளியிட்டிருக்கிறது ஒரு புதுமை!!

செயற்கைப் பனி — நடக்கும் நடைபாதை—பறக்கும் சந்திரன், இவைகளைவிட, 'மெயில்' என்ன அதிசயமான சேதியைத் தர முடியும்? அவர்களையெல்லாம் மிஞ்சக் கூடிய அளவுக்கு 'அதிசயங்களை' கண்டுபிடிக்கக்கூடியவருமா இருக்கின்றனர் தமிழகத்தில்? என்று ஆச்சரியப்படக்கூடும். ஆமாம், தோழர்களே அவையெல்லாம் பெரிய அதிசயமா என்ன! வெறும் விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கும் சாதனைகள்!! அவைகளையெல்லாம் தோற்கடிக்கக்கூடிய அற்புதம்—இதுவரை உலகமே கண்டிராத அதிசயம்—கேட்டால் திகைத்து முச்சே நின்றுவிடக்கூடிய ஆச்சரிய நிகழ்ச்சி சென்னை விமான நிலையத்தில் நடந்திருக்கிறது — காஞ்சி காமகோடிபீடம் ஜகத்குரு சங்கராச்சாரியார் இந்தக் கிழமை, ஆகாய விமானம் ஒன்றைப் பார்த்துவிட்டார்!!!

இதுவரையில், ஒரு விமானம் எப்படிப் பறக்கிறதென்பதையும், விமான நிலையம் எப்படியிருக்குமென்பதையும் அவர் கண்டதில்லையாம். இந்தக்கிழமை, பார்ப்பதற்கென்றே, விமான நிலையத்துக்குப் போய், இவைகளைக் கண்டாராம். இதைப் பிரமாதப்படுத்தி, அதிசயத்திலும் அதிசயமாகப் போட்டிருக்கிறது, 'மெயில்' ஏடு.

சினிமா பார்க்காதே—நாகரிகங்களை விரும்பாதே —சந்தியாவந்தனத்தை மறக்காதே — பழைய முறைகளைத் துறக்காதே—வெளிநாட்டார் அஞ்ஞானிகள்—மெய்ஞ்ஞானிகள் நாம், என்று இப்படி, பிரசங்கமாரி செய்துவருகிறவர் சங்கராச்சாரியார்.

ஏதோ நாகரிகம் என்கிற பெயரால் உலகம் கெட்டுவிட்டது என்றும், அதனாலேயே மக்கள் சட்டை கோட்டுகளைப் போட்டுக்கொண்டு திரிகிறார்களென்றும், தன்னைத் 'தரிசிக்க'வந்தால் நாகரிக கோலத்துடன் எவரும் வரக்கூடாதென்பதற்காக ஆண்கள் சட்டையில்லாமலே (பெண்களுக்கு, இன்னும் இந்தவிதியைச் சங்கரர் அமுலாக்கவில்லை!!) தன்னெதிரில் வர வேண்டுமென்றும், சொல்லுகிறவர் சங்கராச்சாரியார்.

மணிக்கு அறுபது எழுபது மைல் வேகத்தில் போகக்கூடிய கார்களிருந்தும், அவை நாகரிகத்தின் சின்னங்கள் என்பதால், இன்னும் பல்லக்கிலேயே ஏழெட்டு மனிதர்கள் சுமக்க, காஞ்சியா—குடந்தையா—சென்னையா —தாம்பரமா என்று சுற்றிக்கொண்டு வருகிறவர் சங்கராச்சாரியார்.

அவருக்கு ஆசை வருகிறது, சிறுபிள்ளையைப் போல, விமானம் பறப்பதைப் பார்க்க! இச்சா சக்திகளையெல்லாம் துறந்தவர், பற்றற்றவர், பாச உணர்ச்சிகளைத் துண்டித்துக் கொண்டவர்—அவர் மனதில், 'ஆசை' எழலாமா! எழுந்தாலும், அடக்கிக்கொள்வதனறோ, ஞானியர் பண்பு?—என்பது ஒருபுறமிருக்க,விஞ்ஞானத்தின வலிவு எவரெவர் மனதையும் வளைத்துவிடும் என்பதையே உணர்த்த விரும்புகிறோம் நாம்.

சங்கராச்சாரியார் போன்ற மதவாதிகள், புதுமைக்கு எப்போதும் வரவேற்புக் கூறியவர்களல்ல! பூமி உருண்டை என்றவனையும், மேல் உலகம் இல்லை என்றவனையும், நட்சத்திரங்களும் பூமியைப் போன்றவைதான் என்றவனையும், அந்தந்த நாட்டு மதவாதிகள் என்னென்ன பாடுபடுத்தியிருக்கிறார்கள் என்பதை அறிவோம் நாம்,

அதுபோல, விஞ்ஞான சாதனைகள், இங்கே முளைக்கவில்லை! எனினும் கால ஓட்டத்தை எண்ணி, சமுகத்தில் கருத்துப் புரட்சியினை உண்டுபண்ணுவோர் உண்டு!! அவர்களுக்கு, சங்கராச்சாரியாரின் கும்பல், சாபத்தையே அளித்து வருகிறது. வர்ணாசிரம தர்மம் இருக்கவேண்டும் — நாலு சாதி முறை இருத்தல் வேண்டும்— முதல் சாதியாகப் பார்ப்பனரே விளங்கவேண்டும்-மூல மொழியாக வடமொழியே கொண்டாடப்பட வேண்டும்—பள்ளரும் பறையரும் இருக்கவேண்டும்—கலப்புத் திருமணம் தகாது, ஆகாது இப்படியெல்லாம் சொல்லுபவர், சங்கராச்சாரியார்.

இதெல்லாம், வேதத்துக்கு விரோதம்! நாகரிகம் என்பதும், விஞ்ஞானம் என்பதும், பழைமையை மீறும் செயல்! பழைமையை மீறுவது பாதகமானது!!- இதுதான், அவரது கோட்பாடாகும்.

அப்படிப்பட்டவர், இன்னும் இரயிலேருதவர், விமானத்தைப் பார்க்க மீனம்பாக்கம் போகிருர்! விமானம் கிளம்பும் வேடிக்கையை, கூடத்தில் நின்றபடி பார்த்தபிறகுதான், திரும்பினாம் — "அந்த விமானத்தில் இன்னின்ன சாதிதான் ஏறிப்போகலாம், என்று விதி இருக்கோன்னோ?" என்று கேட்டாரா என்பது தெரியவில்லை! மெயிலார், அவர், விமானத்தைப் பார்த்த அதிசயத்தை மட்டுமே நமக்குத் தந்திருக்கிருர்!!

விமானம் பறக்கப் பறக்க, அவர் மனமும் நிச்சயம் பறந்திருக்கும். ஏனெனில், இப்போதுதான், முதன் முதலில் அந்த விநோதத்தைப் பார்த்திருக்கிருர்! உபநிஷத்—வேதம்—ஆகமம் — புராணம்— அஷ்டதிக்குப் பாலகர்கள் —மூல தெய்வம் — விக்னேஸ்வரர் —சரஸ்வதி இலட்சுமி—முப்பத்து முக்கோடி தேவர்கள், எல்லாமிருந்தும், இது எதுவுமில்லாத நாட்டான் கண்டுபிடித்தது விமானம். அது மட்டுமா, இங்கே சங்கரர் உண்டு, மாத்துவர்உண்டு, இராமானுஜர் உண்டு, இவர்கள ஒவ்வொருக்குமென மடாலயங்கள் உண்டு. அங்கே 'மின்சார வெளிச்சம்' உண்டு! அந்த மின்சாரத்தைக் கண்டுபிடித்தவன், எவன்? சாதி பேசாதவன், சனாதனம் தெரியாதவன், சம்பிரதாயம்பேசாதவன் — அந்நியன்! வெளிநாட்டான்!!

அனுஷ்டானங்களும் ஆச்சார நியம நிஷ்டைகள் குறையாதவர்--ஆண்டவன் நாமத்தை இலட்சத்துக்கு மேல், வெள்ளையன் கண்டுபிடித்த பேப்பரில், வெளிநாட்டான் கண்டுபிடித்த பேனாவைக்கொண்டு, எழுதிக் கொடுத்தால் முத்திரைக் காசுகள் கொடுப்பவர் — அந்தளவுக்கு ஆண்டவன் பால் பக்தியும் பாசமும் கொண்டவர்—இவர் கனவில் தோன்றியாவது, ஆண்டவன் ஆகாய விமானம்கூட வேண்டாம் 'சைகிள்' செய்யக் கற்றுக்கொடுத்ததுண்டா! ஆதிகாலம் முதல், இவர்களுக்குத்தெரிந்திருப்பதெல்லாம் எபபடி நாமம் போடுவதென்பதும், எங்ஙனம் திருநீற்றினைச் சாற்றிக்கொள்வது என்பதும் தவிர வேறென்ன? அதற்குக்கூட ஆயிரம்சண்டைகள்! தத்துவார்த்தங்கள்! விளக்கங்கள்!

ஆகாயவிமானத்தை மட்டுமல்ல — அதே தாம்பரத்துக் கருகில் அமைந்திருக்கும் "இயந்திரத் தொழில் கல்லூரி"க்கும் போனாராம் சங்கரர். எப்படியெப்படி, நவீன சாதனங்களை இயக்குவதில், மாணவர்கள் பயிற்சி பெறுகிருர்கள் என்பதையும் பார்த்தாராம். பட்டிக்காட்டான் மிட்டாய்க் கடையைப் பார்த்ததுபோல, என்று சொல்வார்களே, அதுபோலத்தான் இவையெல்லாவற்றையும் பார்த்திருப்பார் சங்கராச்சாரியார்! இது அவர் குற்றமல்ல—இத்தனை நாளும், இவையெல்லாம் சமுக விரோதக் கண்டுபிடிப்புகள், உலகம் கெட்டுப்போவதற்கு அடையாளங்கள் என்றே கருதி வந்தவர் அவர்!! அதனல், ஆச்சரியமும், வியப்புமே அடைந்திருப்பார்!!

இத்தனை நாளும், பரப்பிரம்ம பூசையே வாழ்வின் இலட்சியம் என்றிருந்த இவர், இப்போது விஞ்ஞான ஒளியின் அற்புதத்தையெல்லாம் கண்டு மகிழும் ஆர்வம் பெற்றுப்,போய்ப்பார்த்திருக்கிருர். இனிமேலாவது, தன பாதையையும், போக்கையும் மாற்றிக்கொண்டு, வளரும் உலகின் புதுமைகளுக்கு வாழ்த்து அளிக்கக் கூடியவராக மாறுவாரா, என்று பேதை மனம் எண்ணச் சொல்கிறது.

அப்படி வந்தால், பிறகு மடம் இருக்குமா! அக்கார வடிசலும், ஆதிக்கப் போகமும் நிலைக்குமா!!- அவரை விமானத்திலும், தொழிற்கலைக்கூடத்திலும், அழைத்துச் சென்று காண்பித்தவர்களில் எத்தனை பேர், வாராவாரம் அவரது காலடிகளில் போய்விழுந்து வருகிறவர்களோ, யார் கண்டோம்? உலகத்துக்கே நீதி போதிப்பதும், நிமிடத்துக்குப் பல இதழ்களை அடித்துத்தள்ளும் அச்சியந்திரம் பெற்றிருப்பதுமான 'இந்து'வின் அதிபதி போன்ருேர், இன்னும், சங்கராச்சாரியாரைத் தரிசிப்பதே பாக்கியம் என்று கருதுகிறவர்கள் தானே!!

இந்த நாட்டிலுள்ள ஒரு அற்புதமே இதுதானே.

சங்கராச்சாரியார், விமானம் பறப்பதைப் பார்க்க ஆவலுடன் போகிருர்!

விமானம் ஏறி, ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் வாராவாரம் செல்லும் அறிஞர்களில் எத்தனை பேர், சங்கராச்சாரியாரைப் பார்த்துத் தரிசிக்க, ஆவலுடன் போகிருர்கள்!! ●

எஃகு உற்பத்தியையும், தான்யங்களின் அறுவடையையும் அதிகப்படுத்திக் காட்ட வேண்டும் என்று அறிவித்ததாம், செஞ்சின சர்க்கார். அதைக்கேட்ட சீன நாட்டுத் தொழிலாளர்கள், தூக்கத்தையும் மறந்தார்களாம்! "போங்கய்யா—போய் ஒழுங்காகச்சாப்பிடுங்கள் — சரியான நேரத்தில் போய்த்தூங்குங்கள்" என்று அவர்களைத் தொழில்நிபுணர்கள், வேண்டியும்கூட அவர்கள் கேட்கவில்லையாம். அப்படி வீராவேசத்துடன் பாடுபட்டார்கள் என்கிறது "மக்கள் செய்தி" எனும் சீன ஏடு. எப்போதுமே, தனது தன்னுடையதெனும் ஒருஉணர்வு உண்டாக்கப்பட்டுவிடுமாயின், அப்போது ஏற்படுகிற ஆர்வமே ஆர்வம்தான்! கூலிக்கு மாரடிப்பதினும் ஆர்வங்கொண்டுழைப்பதின் அருமை அருமைதானே!!

★ இந்தியத் தமிழர்களின் நிலை! ★

எழில் கொஞ்சும் ஈழ நாட்டிலே தமிழர்கள் யாரும் குழம்பாத ஆனந்த நித்திரையில் இருந்தனர். அண்மையில் நடந்த நிகழ்ச்சிகள் அவர்களை மிகப் பயங்கரமாகத் தட்டி எழுப்பிற்று! இந்தியத் தமிழர்களின கடந்த கால வரலாற்றை ஆராய்ச்சி செய்வதில் காலத்தை வீணுக்குவதைவிட, அவர்களின் எதிர்காலம் எப்படி இருக்கவேண்டுமெனத் திட்டமிடுவது அவசியமானது.

இந்த முயற்சியில் இந்தியர்கள், குறிப்பாகத் தமிழர்கள் கவனம் செலுத்துவதற்குத் தகுந்த நேரமும் இதுவாகும். இந்தச் சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்தாவிட்டால், நமது வருங்காலச் சந்ததியை இலங்கையின் நிரந்தர அடிமையாக்கினேம் என்ற குற்றச்சாட்டிற்கு இலக்காவதோடு, தமிழ்த்தாயை ஒருவாய்க் கஞ்சிக்காக விற்பனை செய்தோம் என ஈழத்தின் சரித்திரம் பறைசாற்றிக்கொண்டிருக்கும். நாம் ஒரு முடிவில்லாத குழப்ப நிலையிலிருக்கிறேம்! ஒரு வழி சுதந்திரத்தை நோக்கிச் செல்கிறது. மற்றது அடிமைத்தனத்தை நோக்கிச் செல்கிறது! மானமுள்ள மனிதர்களாக வாழ்வதா? அல்லது நிரந்தர அடிமைகளாக வீழ்ந்துகிடப்பதா? இவைகள் தான் கேள்விகள்

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக நாம்தான் இந்நாட்டின் பொருளாதாரத்துறையில் முதுகெலும்பு போன்றவர்களென்று, நமது சிங்களத் தோழர்களுக்குச் சொல்லியிருக்கிறேம். எங்களை அமைதியாக வாழவிட்டு இங்கிருந்து புறப்பட்டுச் செல்லுங்கள் என்று அவர்கள் இப்போது பதில்கொடுத்துள்ளார்கள். வெள்ளையர் இந்நாட்டைக் கைப்பற்று முன்னர் அவர்கள் சீரும், சிறப்புடனும் வாழ்ந்தனராம்! இந்நாட்டில் தேயிலை, இரப்பர், உற்பத்தி செய்து, குடியேற்ற நாட்டுப் பொருளாதார முறையில் வெள்ளையர் இந்நாட்டின் செல்வத்தைச் சுரண்டினர். சிங்களவர் குனிந்து வேலை செய்ய மறுத்தனர்! எனவே தென் இந்தியாவிலிருந்து ஆட்களை இறக்குமதி செய்தார்கள் வெள்ளையர்கள். தேயிலை, இரப்பர் மூலம் வந்த செல்வத்தை பிரிட்டனும், இந்தியாவும் பெற்றது! இந்த நாட்டை சுரண்டியவர்களில் இந்தியத் தமிழர்கள் முக்கியமானவர் எனக் குற்றம் சாட்டப்படுகிறது!

தமிழர்களின் உழைப்பின்றேல் இந்த நாடு சிந்துவாரற்றுப் போயிருக்குமென நாம் குன்றின் மீது நின்று உரத்த குரலில் கூவுகிறேம். "உழைப்புத்தேடி ஒரு சிங்களவனுவது வெளிநாடு செல்ல நாங்கள் அனுமதியோம்.

இராமச்சந்திரன்

தமிழர்கள் இந்த நாட்டைவிட்டுச் சென்றதும், நாங்கள் எங்கள் பழைய கிராமீய வாழ்க்கை முறையை அமைத்து அமைதியுடனும் நிம்மதியுடனும், வாழ்வோம். தற்போதைய பொருளாதாரம், இந்த நாட்டின் உண்மை விரோதிகளான, வெள்ளையர்களுக்கும், இந்தியத் தமிழர்களுக்கும் மட்டுமே நன்மை செய்வதாக இருக்கிறது" எனச் சிங்களவர்கள் கூறுகிருர்கள்.

இந்நாடு "ஈழமாக" இருந்து "ஸ்ரீலங்காவாக" மாறியதும் வெள்ளையரின் அரசியல் ஆதிக்கம் தானகவே விடைபெற்றுக்கொண்டது. அடுத்தபடி இங்கிருந்து விரட்டப்பட வேண்டியவர்கள் இந்தியத் தமிழர்கள் என்பது புரிந்தது! எனவே அதற்கேற்ப "பிரஜாவுரிமை"ச் சட்டம் தயாரிக்கப்பட்டது. தமிழர்களுக்குக் கிடைத்தது முதல் குத்து! இந்தத் திட்டத்தின்படி படிப்படியாகத் தமிழர்களை நாடு கடத்துவதென முடிவு செய்யப்பட்டு அதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது! சமீபத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய வர்த்தக அமைச்சர் இதை அப்பட்டமாகக் கூறிவிட்டார். "இந்நாட்டுக்கு வருபவர்களைத் தான் நாங்கள் தடைபோட்டு, கள்ளத் தோணிகளென்று கைது செய்கிறேமே தவிர, இந்த நாட்டிலிருந்துபோகிறவர்களுக்கு யாரும் தடைபோடவில்லை" என்று கூறியுள்ளார்.

இரண்டாவதாக தமிழர்களுக்குக் கிடைத்த குத்து...? இந்நாட்டை இலங்கையர்மயமாக்குதல். அதன்படி தோட்டத்திலுள்ள தொழிலாளர்களைப் படிப்படியாகத், தமிழர்களைக் குறைத்து, அதிலே சிங்களவர்களை அமர்த்துவது! அப்படிச் செய்யும்போது தோட்டத்தில் நிரந்தரமாக வாழ்ந்த (இந்தியா தெரியாத) தொழிலாளர்களின் பிள்ளைகளை இனிமேல் பதிவுசெய்யப்படமாட்டாது. இந்த உண்மையும் இப்போது வெளிச்சமாகிவிட்டது! சமீபத்தில் தொழில் அமைச்சர் வெளியிட்டுவிட்டார். இந்நிலையால் இனிமேல் உள்ள தொழிலாளர்களின்பிள்ளைகள் வேலையில்லாதவர்களாக ஆக்கப்படுகிருர்கள். 55-வயதிற்கு மேல் ஓய்வெடுக்கும் தொழிலாளர்களின் இடத்திற்குச் சிங்களவர்கள் நியமிக்கப்படுவார்கள். இது படிப்படியாக நடைமுறைக்கு வருமென்பதில் சிறிதளவேனும் சந்தேகமில்லை.

மூன்ருவதாக இந்நாட்டிலுள்ள வெள்ளையர்களிடமிருந்து தோட்டங்களைக் கைப்பற்றல். அதுபற்றி நமக்கு அக்கரை இல்லை என்று கூறமுடியாது. காரணம், "தேசியமயம்" என்ற போர்வையில், வகுப்புவாத தேசியமயமாக்குகிருர்கள். மேலும் இந்நாட்டைவிட்டு வெள்ளையர்கள் வெளியேறிஞல், கண்டிப்பாகத் தமிழர்களுக்கு இப்போதுள்ள சலுகைகள் கிடைக்கப்படமாட்டாது. தற்பொழுது வெள்ளையரிடமிருந்து சிங்கள முதலாளி கைக்கு மாற்றப்பட்டுள்ள தோட்டங்களில் தமிழர்களின் நிலை கண்கூடாகக் காணக்கிடக்கிறது!

அடுத்ததாகத் தமிழர்களுக்கு கிடைத்த சரியான அடி, மொழி பறித்தல். "நியாயமான அளவு தமிழ் உபயோகம்" இதனல் பாதிக்கப்படுபவர்கள் மலைநாட்டுத் தமிழர்களேயாகும். நியாயமான தமிழ் உபயோகம் வட கீழ், மாகாணங்களில்தானே தவிர, மலைநாட்டில் வாழும் இந்தியத் தமிழர்களென்று சொல்லப்படும் பத்து இலட்சம் தமிழர்கள் வாழும் பகுதியில் இல்லை. அரசியலாரின் திட்டப்படி 1960ம் ஆண்டு தொடக்கம் எல்லாத் தொடர்புகளும் சிங்களத்திலேயே நடைபெறும். எப்படியோ தமிழர்களை (இந்தியர் என்று சொல்பவர்களை) படிப்படியாக நாடு கடத்தும் திட்டம் நடைபெற்று வருகிறது.

எனவே, இனிமேலும் இலங்கை அரசியலாரை நம்பித் தமிழர்கள் வாழ்வதற்கில்லை. காடைத்தனத்தையும், கருங்காலிகளையும், அரசாங்கமே உற்பத்தி செய்கிறது! இது பட்டவர்த்தனமான உண்மையிலும் உண்மை. "தட்டிக்கேட்க ஆள் இல்லையேல் தம்பி சட்டப்பிரசண்டன்" என்பது போல் தமிழர்களை நாடற்றவர்கள் என்ற பட்டம் சூட்டி, அவர்களை எது வேண்டுமானுலும் செய்யலாமென்ற எண்ணத்துடன் அரசாங்கம் முடிவுகட்டிவிட்டது.

நேருபண்டிதர் உலகபவனி வருவதற்கே நேரமில்லை என்று சலித்துக்கொள்ளும்போது, தமிழர்களைப்பற்றிக் கவலைகொள்ள நேரமேது? நினைப்புத்தான் வருமா? இல்லை, சென்னையிலே கொலுவீற்றிருக்கும் தமிழக மந்திரிகளாவது இலங்கையிலுள்ள தமிழர்களைப்பற்றி அக்கரையோடு ஏதாவது முயற்சி எடுத்து அவர்களின் மேல் தங்களின் அன்பைச் செலுத்துவார்களா என்ருல் இல்லை. சிறுபிள்ளைகள் தான் சொல்லுவார்கள் "குன்னக்குடிக்குக் காவடி எடுத்தாலும் முடியாது" என்று. அதுபோல சென்னை மந்திரிகள் டில்லிக்கு காவடி தூக்கிஞலும் அதை இந்திவாலாக்கள் பொருட்படுத்துவதாக இல்லை.

சிங்கள நாட்டிலே கூலிகளாக, கேலிப் பொருட்களாக, நாடற்றவர்களாக, நாதியில்லாதவர்களாக, அடிபட்டு உதைபட்டு ஒண்ட இடமில்லாமல் ஓடத் திசைதெரியாமல் கற்பைக்காக்கக் கடலிலே விழுந்தோர் கணக்கில்லை! பள்ளிக்குச் சென்ற பாலகனை அள்ளி அணைக்கச் சென்ற கைகளை வெட்டிவீழ்த்திய வெறிச்செயல் கொண்ட சிங்களவனைத் தட்டிக்கேட்கத்தமிழகத்திலே ஆள் இல்லை. அப்படிப்பட்டவர்களைத் தமிழ் நாட்டு ஆட்சிப்பீடத்திலே அமர்த்தி இருக்கிருர்கள். திராவிடப்பெருங்குடி மக்களே! எங்கள் குறைகண்ட இனிமேலாவது உங்களுடன் பிறந்தவர்களின் வாழ்விற்கு வழிதேடமுன்வருவீர்களா? இலங்கையிலே இன்னல் பல அனுபவிக்கும் உங்கள் சகோதரர்களின் வாழ்விலே மறுமலர்ச்சி காண வேண்டியாவது நாட்டை ஆளக்கூடிய தகுதி வாய்ந்தவர்களுக்கு உங்களின் வாக்குரிமையைக் கொடுங்கள். இலங்கையிலே நாடற்றவர்களாக, நாதியற்றவர்களாக, நடைப்பிணங்களாகத் தமிழர்கள் வாழவேண்டுமா? நாடாள்வோர் நல்லவராய் இருந்திருந்தால் இலங்கைத் தமிழர்களுக்கு இந்த இன்னல்கள நேர்ந்திருக்குமா?

நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும். இனிநடப்பவை நல்லவைகளாக அமையட்டும். காந்தி செத்த அன்றே காங்கிரசும் செத்துவிட்டது! பிரியுங்கள் நாட்டை! அழையுங்கள் உழைத்து உழைத்து உரமேறிய இலங்கை வாழ் இந்தியாவைத் தாயகமாகக் கொண்ட தமிழர்களை! தேயிலையைக் கிள்ளிச் செல்வத்தை அள்ளிச் சிங்களவர்களுக்கு கொடுத்த கைகள், சேலத்திலே இரும்பையும் எஃகையும் தோண்டி எடுத்து திராவிட நாட்டுக்கு உரமாக்கட்டும்.

குறைந்த விலையில்! ★ சிறந்த முறையில்!!

"திராவிட நாடு" பொங்கல் மலர்

சி. என். ஏ. தரும்

கருத்துப் படையல்கள்.

வண்ண முகப்புடன், எண்ணத் தொகுப்புகளுடன்

ஜனவரி 14-ந் தேதி எங்கும் கிடைக்கும். விலை 8 அணதான்!!

"காதற் காட்சி"

—[அ. சுந்தரம்]—

வீதி வழியாக உலா வந்த பாண்டியனை நங்கையொருத்தி கண்டாள். கண்டதும் அவன் பேரில் காதல் கொண்டாள். அன்று முதல் ஒரே ஏக்கம். தாமரைபோன்ற அவளது முகம் வாடிப்போயிற்று. கைகள் மெலிந்துவிட்டன; தோள்கள் துவண்டுபோயின. இந்நிலையிலும் பாண்டியனை மறக்கவில்லை. மறக்கத்தான் முடியுமா?

மனச்சோர்வை—துயரத்தை—அகற்ற மலர்ச்சோலை சென்ருள்; மனத்துயரம் அதிகமாயிற்றே தவிர, குறைந்தபாடில்லை. மாலை போய் இரவு வந்ததும் வீடு வந்தாள். உணவுகூடச் சரியாக உண்ணுமல் உறங்குவதற்குச்சென்ருள். உறக்கமாவரும்? மீண்டும் பாண்டியனைப் பற்றியே சிந்தனை. நீண்ட நேரம் கழித்துச் சிறிது உறக்கம் வந்தது.

அந்தஇரவு, சந்தனம் மார்பைத் தழுவ-புதிய மலர்களால் தொடுக்கப்பட்ட தேஞறும் மாலையை அணிந்துள்ள பாண்டியன் அவள் அருகே வந்தான். உறவாடி உவகை பெறவேண்டுமென்று எண்ணி எண்ணி ஏங்கிய அந்த ஏந்திழையாள் பாண்டியனேடு ஊட ஆரம்பித்தாள். அவன் பலப்பல கூறிப் பார்த்தான். எதையும் அவள் பொருட்படுத்தவில்லை. எத்தனைநேரம் இப்படி இருப்பது? இருக்கத்தான் முடியுமா? ஊடுதல் இன்பந்தான்! ஆனல் அந்த இன்பத்திலும் இன்பம் கூடல்தானே! ஊடல் புரிந்த நங்கை அதைதொழித்து, அவன் அருகே சென்ருள். அவனே அவள் அருகில் வந்ததும் விலகிச் சென்ருன். அவள் எவ்வளவோ கூறியும் தெளியவில்லை. ஊடல் முடியவில்லை.

கனவு கலைந்தது. இரவு கழிந்து பகல் வந்தது. ஊடுதலும், ஊடல் நீங்கிக் கூடுவதிலும்தானே இன்பம் காணமுடியும்.

உறவாடி உவகை பெறவந்த ஊராள்வோனேடுதான் ஊடி நின்றதையும், மனம் மகிழ்விக்க வந்த மன்னவனை மனம் கலங்கச் செய்ததையும், கனிமொழி உதிர்த்த காவலன்மீது கணைகள் தொடுத்ததையும், குலவி இன்பம் பெற வந்த கொற்றவன் பேரில் கோபம் கொண்டதையும் எண்ணிஎண்ணி ஏங்குகிருள்.

ஊடுதலிலேயே இரவு கழிந்து போனதையும்; ஊடுதல் நீங்கிக் கூடி முயங்கப்பெறும் இன்பத்தைத் தான் இழந்துவிட்டதையும் நினைத்து வெட்கமும், வேதனையும் அடைகிருள்.

தோழி வந்தாள்! சோகமுற்றிருக்கும் தலைவியைக்கண்ட தோழிக்கு வியப்பு மேலிடுகிறது. நடந்தது என்ன என்பதை அறிய ஆவல் கொள்ளுகிருள். ஆனல் அந்த நிலைமையில் எவ்வாறு கேட்பது? என்ன கேட்பது? என்று நினைக்கிருள். தலைவியை அணுகி மெல்லக் கேட்கிருள் தோழி:—

ஏனம்மா! சோகமாகக்காணப்படுகிறீர்கள்! அப்படி என்னம்மா நடந்தது?

தலைவி:- போடி! போய் உன் வேலையைக் கவனி!

தோழி:- ஏன்? — வெறுப்போடு பேசுகிறீர்!

தலைவி:- என் வேதனை எனக்கு! உனக்கெப்படித்தெரியும்-எண்டி! நான்தான் அறிவும அனுபவமும் இல்லாதவள் ஆயிற்றே!

தோழி:- அது தங்கள் வாய்மொழியிலிருந்தே தெளிவாகத் தெரிகிறது! மனம் சஞ்சலம் அடையும் விதத்திலே அப்படி என்னம்மா நடந்தது?

தலைவி:- கேள் தோழி! என் முட்டாள்தனமான நடத்தையை என்னென்பேன்! என்னேடு கூடிச் சுகம் பெறுவதற்காக என அருகே அவர் வந்தார்!

தோழி:- வழுதிதானே? அம்மா!

தலைவி:- ஆமாம்! அவரேதான்!

தோழி:- அளவிலா மகிழ்ச்சி! நீண்டநாள் எண்ணம் நிறைவேறியது! இன்பந்தானே?

தலைவி:- முழுவதையும் கேட்காமல் இப்படிப் பேசுகிருயே!

தோழி:- என்னம்மா இது! மகிழ்ச்சிகொள்ளவேண்டிய நீங்கள் மனவேதனைப்படுவதா?

தலைவி:- மகிழ்ச்சியா? அதுதானே இல்லை! கேளடி! அவர் என் அருகே வந்தார் என்றேன் அல்லவா? அப்பொழுது நான் என்ன செய்தேன் தெரியுமா?

தோழி:- எனக்கெப்படித்தெரியும்!

தலைவி:- குறும்புக்காரியடி நீ! என் முட்டாள்தனத்தை என்னென்பது? நான்விலகி நின்றுகொண்டேன்!

தோழி:- என்ன!

தலைவி:- ஆமாமடி! கூடுதலுக்கு முதல் கட்டம் ஊடுதல்தானே! நான அதைச் செய்தேன். அப்பொழுது அவர் என்ன செய்தார் தெரியுமா?

தோழி:- நெருப்பாகிச் சுட்டெரித்தாரா?

தலைவி:- இல்லை! குளிர்புனலாஞர்! கனிமொழிகள் தேன்மாரி பொழிந்தார்.

தோழி:- தங்கள் மனம் இளகி...

தலைவி:- பாதகி நான்! அது போதும் இணங்காது மறுத்துவிட்டேன்.

தோழி:- குளிர்புனல் பொங்கு கனலாகி இருக்கும்! கனிமொழி கனல்மொழியாக மாறி இருக்கும்!

தலைவி:- இல்லையே! மீண்டும் அதே இன்மொழிகள்தான்! எவ்வளவு நேரம் என்ருல்தான் பொறுக்க முடியும்! என் மனமும் அவரோடு உறவாடி இன்பம் பெறுவதைத்தான் எதிர்பார்த்தது? — எனவே இணக்கத்தின் அறிகுறியாக அவர்

[11-ம் பக்கம் பார்க்க]

"பேசக் கற்றவர்கள்"

—[ஆரூர்ச் செல்வன்]—

"நன்றாகப் பேசக் கற்றவர்கள்" என்று அடிக்கடி சிலர் ஒரு சாராரைப்பார்த்துச்சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அதே நேரத்தில் "இவர்களைப்போல் பேசும்வன்மை படைத்தவர் நம்மிடையே இல்லையே" என்று மனதிற்குள் அங்கலாய்த்துக் கொள்கின்றார்கள். சில சமயம் பேசியும் பார்க்கின்றார்கள். வான்கோழி கொண்ட ஆசையைப் போல. பாவம்! அடிவயிற்றைத் தடவிப் பார்க்கும் மலடியைப் போலவும், எழில் வானைக்காண விழி திறக்க முயலும் குருடனைப் போலவுமான நிலையடைந்து விடுகிறார்கள்!

பல முள்வேலிகளைத் தாண்டி, மொய்க்கும் நச்சரவின் கூட்டத்தைக் கடந்து வானத்து நிலவாய் — வெண்கலத்து ஒலியாய் — தேனொத்த இசையாய் — தெவிட்டாத கருத்துக் கருவூலமாய் நிற்கும் தமிழ்ப் பேச்சு நடை, ஒரு சாராருக்கே சொந்தமா? என்றால் இல்லை! இல்லை! இத்தாலியினின்று இவண்போந்து கற்றுத் தெளிந்து கவிபாடிய தைரியநாதனெனும் வீரமாமுனிவர் கற்ற தமிழ்! யார் வேண்டுமானாலும் பேசலாம், படிக்கலாம், பயனெழுக, பண்பொழுக சொற்பெருக்காற்றலாம்.

இப்படி, புவிபோற்றும் பொற்குடமாய் — புல்லரையும் புகழும் தெள்ளு தமிழ் நடை—கண்ணெழுகப் பேசும் பேச்சு, ஒரு சாராருக்கே சொந்தமென்றால், மக்களின் உரிமைக் குரலை எழுப்பியபோதெல்லாம், மானங்காக்க அறப்போரில் ஈடுபடும் நேரத்திலெல்லாம்—ம்—என்றால் சிறைவாசம்—அம் என்றால் இன்னும் ஆறுமாசம் என்று பொறுமையினாலும் பொச்சரிப்பினாலும், "அழகாகப் பேசக் கற்றுக் கொண்டிருக்கின்றார்கள் - அடுக்கு மொழி வல்லுனர்கள் — இவர்கள் கொட்டத்தை ஒடுக்கவேண்டு"மென்று தொட்டதற்கெல்லாம் குற்றம் விளைவித்து, சிறையும், தண்டனையும் கொடுத்த வன்னெஞ்சர் பழிதுடைக்க, வளர்த்த மொழியின் முன்னேற்றம் — ஒரு பேச்சுக்கலை — தமிழரின் ஆட்சிக் கலை என்றுகூடச் சொல்லலாம். ஆளும் பெருங்கட்சியும் அரசியல் போராட்டத்திலே ஈடுபட்டது தானே— அணியணியாய்ச் சிறைவாசம் அனுபவித்தவர்கள் தானே, அவர்களுக்கு இட்டாத தமிழ்ப் பேச்சுக்கலை-- இவர்களுக்கு மட்டும் எப்படி எட்டியதென்ற ஐயப்பாடு எழலாம்! மலர் இருந்தாலல்லவா நாருக்கு மணம் ஏறும்! நாரும் மணம் பெறும்! ஆனால் இன்றோ, அழகு தமிழ்ப் பேச்சு—மிடுக்கான நடை—சொல்லலங்காரம் -- அலங்காரத்திலே ஆயுங்கருத்துக்கள்— கருத்துக்களை ஏற்றுக் கடலலையெனப் பினவரும தமிழர் பெருமக்கள்! இத்தகைய தலைவர்களை- தலைமையைச் சூழ்ந்த மக்களை சிறையிலும், தண்டனையிலும், அபராதம் விதித்தும் வந்தால், பேசக் கற்பவர்கள் வளராமல் பின்என்ன மோசக் கருத்துக்களை மொழிபவர்களாகவா வளருவார்கள்! மேலும் இவ்வாறு தண்டனை அடையும் உள்ளங்களின் குமுறல்கள் செந்தமிழாய்—தெவிட்டாத கருத்துப் பொழிவுகளாய்—வெளிவரத்தான் —வெளிவரும் வீர உரைகள் கோழைகளின் ஆட்சிக்குக் குண்டு மழையாய் — கூர் வேல்களாய் பாயத்தான் என்று நினைக்கும் போது, செந்தமிழ் ஆசான்—நள வெண்பா காவிய கர்த்தா புகழேந்தியின் காலத்து நிகழ்ச்சியொன்று நினைவிற்கு வருகிறது.

பாண்டியன் மகள் கற்பகவல்லியின் காதலில் மூழ்கிய சோழன் குலோத்துங்கன், தன் அவைக் களப் புலவர் ஒட்டக்கூத்தரை மணம் பேசிவரும்படி, பாண்டிய நாட்டிற்கு அனுப்பினான். பாண்டியன் அவையில் ஒட்டக்கூத்தருக்கும் புகழேந்தியாருக்கும் வீராப்பான உரையாடல் நடந்தது. அதில் ஒட்டக்கூத்தர் சிறிது தோல்வியுற்றார்! பேச்சால் வென்றபுகழேந்தியின்பால் அழுக்காறு கொண்டான் ஒட்டக்கூத்தன். இருப்பினும் மணவோலை பெற்றுவந்தான். சோழனுக்கும் கற்பகவல்லிக்கும் திருமணம் முடிந்தது.

பாண்டிய நாட்டில் பைங்கொடியாள் மையலில் மயங்கி வாழ்ந்த சோழமன்னன தன் ஆட்சியை ஒட்டக்கூத்தன்பால் ஒப்படைத்திருந்தான. அதுபோழ்து பாண்டிய நாட்டினின்று புகழேந்தியார் சோழநாடு சென்றார். வாய்த்தது வாய்ப்பு, கீழே தண்ணீர் குடித்த ஆட்டுக்குட்டியின்மேல் வீணாய்ப் பழிசுமத்திய ஓநாயைப்போல் புகழேந்தியின்மேல் குற்றம்சாட்டிச் சிறையிலடைத்தான ஒட்டக்கூத்தன! அதுமட்டுமா, தெருவிலே பாடிப் பிழைத்துக்கொண்டிருந்த குயவன் முதலிய எழுவரையும் ஏற்கனவே சிறையில் அடைத்திருந்தான் ஒட்டக்கூத்தன்! தமிழ்த் தலைவனைக் கண்ட எழுவரும் தாள்பணிந்து வருந்தினர். "நீங்கள் சிறை புகுந்தது ஏன்?" என்றார் தமிழாசான். "நாங்கள் பாடும் பாடல்களைக் குற்றமெனக் கூறுகிறான் கொடும்பாவி ஒட்டக்கூத்தன" என்றனர். "அப்படியா? நன்றாகப் பேசிவிட்டால், பாடிவிட்டால் போதும், பொறுமைப்படுகிறான் அந்தப் பாவி! இதோ நீங்கள் செந்தமிழ் யாப்பு முறைமை, சீர், அசை, தளைகளோடு, சொல், பொருள், அலங்காரத்தோடு கற்றுக் கொள்ளுங்கள். அவன் கர்வம் அடக்கும் சமயம் வாய்க்குமேயானால், சாடுங்கள் கவியால்! தேடுங்கள் புகழ்!" என்று அனைத்தையும் எழுவருக்கும் செவ்வனே பாடம் புகட்டினார் புகழேந்தி.

சோழன் நாடு திரும்பினான்; சிறைப்பட்டோர் சேதியறிந்தான்; கேட்டான் காரணத்தை; நாட்டுத் துரோகிகள் என்றான் ஒட்டக்கூத்தன். விசாரணை துவங்கட்டும் என்றான் மன்னன். மன்றம் கூடியது.

கேள்வியை அள்ளி வீசுகிறான் அதிகாரபோதையில் ஒட்டக்கூத்தன். 'தமிழென்ற யானையையே எதிர்த்தவன் நீ யாரடா?" என்றான் குயவனைப்பார்த்து. இதோ அவன் விடுத்த கேள்விப் பாட்டு,

"மோனை முத்தமிழ் மும்மதமும் பொழி
யானைமுன்நின்று எதிர்த்தவன் யாரடா?"

பார்த்தான் குயவன். தன் பாட்டையே பழித்தவனல்லவா கூத்தன். விடுத்தான் பதிலை "ஏ! மானேயே, நீ யானையென்றால், நான் அந்த யானையை அடக்கும் அங்குசம்! இல்லை, இல்லை, கூனையும், குண்டுசட்டிகளையும் செய்யுமங்குசப்பயல் நான்தான்" என்ற சொல்லம்பை, சிலேடைப் பொருளிலே சித்தரித்தான் அழகுச் சொற்களினால். இதோ அவன் பதில் பாட்டு:-

"கூனையுங் குடமும் குண்டு சட்டியும்
பானையுஞ் செயுமங் குசப்பயல் யான்"

"ஐயோ! பாவம்! பிழையாகப் பாடுவான் என்றிருந்தான் கூத்தன், கடல்மடை திறந்தாற்போன்று கவிமழையன்றோ பொழிகின்றான்" என்று கருத்தழிந்தான். பேச்சால் வென்ற குயவனுக்குப் பரிசளித்து விடுதலைநல்கினான் வேந்தன்.

சுருதி குறைந்ததுகூத்தனுக்கு! "ஐய! எம் அவையில் வந்த நீர் யார்?" என்றான் அடுத்து வந்த கொல்லனைப் பார்த்து கூத்தன். குறடுகொண்டு ஆணி பிடுங்கும் கொல்லனல்லவா! தன் பாட்டைப் பழித்துப் பாழ்சிறையில் தள்ளிய கூத்தனை, சிறையில் கற்ற செந்தமிழால் கூத்தனின் செருக்கொழிக்க எண்ணினான். விடுத்தான் பதிலை, "என் பெயர் செல்லப்ப ஆசாரி மகன் திருவேங்கடன்; தொழில் கருமான்; என் கவியைக் குறை சொல்லுவோரை பல்லைப்பிடுங்குவேன், பருந்திடம் இடைத்த கோழிக்குஞ்சுபோல் வருத்துவேன்; கவியென்ற இரும்பாணியினால் அல்லும் பகலும் அடிப்பேன" என்று திடத்துடன கூறினான். அக்கொல்லன் விடுத்த கவியைப் பாருங்கள்:—

"செல்வன் புதல்வன்
திருவேங்கடவன் செகத்குருவாங்
கொல்லன் கவியை
குறைசொல்வோரை குறடுகொண்டு
பல்லைப்பிடுங்கி பருந்தாட்ட
மாட்டிப் பகைவர்முன்னே
அல்லும் பகலும்
அடிப்பேன் காண்"

ஆகா! என்னே சொல்வளம். பேச்சுத்திறமை, கவித்திறமை, கவியை ஆணியாக்கி, மாற்றார் தூற்றலை பல்லாக்கி, சொல்லைக் குறடாக்கி அடிப்பானும் அல்லும் பகலும். பரிசடைந்து விடுதலை பெற்றான் கொல்லன்.

இங்ஙனமே மற்றையோரும் ஆட்சியின் கேள்வியை அடக்கினர் அழகு தமிழால். கவியைக் கேலி செய்து காராக்கிரகத்தில் அடைத்ததனால் கவிகற்று அடக்கினர் அன்று. தமிழினத்தை இகழ்ந்துரைக்காதே! ஏற்றத் தாழ்வு ஏன்? பாற்குடத்தில் பச்சை விஷம் ஏன்? என்று கேட்டால் பரிசாக காராக்கிரகமும், அபராதமும், கொடுமையும் பரிசளித்தால், புண்பட்ட உள்ளத்தினர் — உள்ளத்தின் நறகருத்தைப் பொதுமக்களுக்குச் சொல்வடிவமாக எடுத்துரைக்க, பேசக் கற்றுக்கொள்ளாமல் பின் என்ன ஏசவா கற்றுக்கொள்வார்கள்.

தமிழை விரும்பியவர்கள் சிறையகத்தும் பாடக்கற்றுக்கொண்டார்கள் அன்று. தண்டமிழை உயிரெனக்கொண்டவர்கள் தகாத ஆட்சியின் கீழ் பேசக் கற்றுக் கொண்டவர்கள் பெருகுகிறார்கள் இன்று. தமிழை விரும்பாதவர்களன்றோ, அழகுப் பேச்சையும், ஆயுங் கருத்துப பொழிவுகளையும் கேலி செய்வார்கள்! இப்படிப்பட்டவர்களைத் தமிழர்கள் என்றோ, தமிழ் பேசத் தெரிந்தவர்கள் என்றோ எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? ❋

வெளிவந்துவிட்டது

திராவிடர் நாட்குறிப்பு 1959

இந்த டைரியில், பக்கத்துக்கு ஒன்று விதம் உலகப் பேரறிஞர்களின் 365 பொன்மொழிகளும், தி. மு. கழக முழு விவரங்கள், இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட தி. மு. க. கிளைகளின் விவரம் சொற்பொழிவாளர் முகவரி அஞ்சல் செய்திகள் முதலியன உள்ளன

450-பக்கம் விலை ரூ. 1—2—0
கழிவு 20 சதம்

தி. மு க. தலைவர்கள் படம்

19-தி. மு. க. தலைவர்களின் உருவங்கள் நான்கு நிறத்தில் ஒரே தாளில் அச்சிடப்பட்டது. 15X20 அளவு.

படம் 1-க்கு விலை அணா 8.
மேற்படி படம் காலண்டருடன் அணா 9.
கழிவு 25 சதம்.

தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

மேலாளர், எண் 147, பவழக்காரத்தெரு, சென்னை-1.

9-ம் பக்கத் தொடர்ச்சி

அருகே நான் சென்றேன்! சென்றதும்......

தோழி:- ஆரத்தழுவி முத்தங்கள் ஆயிரம் தந்திருப்பார்.

தலைவி:- அதுதான் இல்லை! என்னென்பேன்! அனபோடு அணைத்துக்கொள்ளாதது மட்டும் அல்ல—விலகி நின்றார்!

தோழி:- உண்மையாகவா?

தலைவி:- ஆமாம்! நான் அருகே செல்லச்செல்ல அவர் விலகி விலகிச்சென்றார். நானோ இனைதென்று அறியாது திகைத்து நின்றேன்.

தோழி:- உங்கள்மீது அவருக்குக் கோபம். விரும்பி அவர் அழைத்தபோது......

தலைவி:- நான் என்ன செய்வேன்? நான்தான் ஏதோ தெரியாமல் நடந்துகொண்டேன். அதற்காக அவரும் அப்படி நடந்து கொள்ளவேண்டுமா? உனக்குத் தான் தெரியுமே என் இமல்பு! அவர்மீது எவ்வளவு அன்பு எனக்கு?......

தோழி:- பெண்களின் துயரம் ஆண்களுக்கு எங்கிருந்து தெரியப்போகிறது?

தலைவி:- எனக்குத் தெரிந்த அளவிலே அவரைப்போலவே நானும் பலப்பல கூறிப்பார்த்தேன். அதுபோதும அவர் தெளிவுபெறவில்லையடி! தேனூறும் மாலையணிந்த — சந்தனம் தவழும் அவரது மார்பைத் தழுவாமலேயே இரவு கழிந்துவிட்டதே! என் செய்வேன.

ஏக்கத்தோடு கூறி முடிக்கிறாள் தலைவி. ஆறுதல் கூறவல்லார் யார்? வேண்டுமானால் பாண்டியனால் முடியும்! அவனுக்கு இதுவா வேலை? — நாடுகாப்போன் ஆயிற்றே!

கற்பனை கலந்த இந்தக் காதற் காட்சி முத்தொள்ளாயிரத்திலே காணப்படுகிறது. அந்தச் சொல்லோவியத்தை—காதற காட்சியை நாமும் காண்போம்! இதோ:-

யானூடத் தானுணர்த்த யானுணரா
விட்டதற்பின்
தானூட யானுணர்த்த தானுணரான்-தேனூறு
கொய்தார் வழுதி குளிர்சாந் தணியகலம்
எய்தா திராக்கழிந்த வாறு.

★

வண்ணத்தில் வார்த்தைகள்

தி. தாயுமானசாமி

வானவில்லைக் கண்டவுடன் புலவனும் ஓவியனும் கற்பனைக் குதிரையைத் தட்டி ஓட்ட முயலுவர். நாமோ அதன் எழில் வண்ணங்களைக் கண்டு மகிழ்வோம். எழில் வண்ணங்கள் இல்லையேல் உலகில் அழகே இல்லை எனலாம். வண்ணங்கள் நம் உள்ளத்திற்குக் களிப்பை ஊட்டுவதுபோல் அதனால் அமைந்த சில வார்த்தைகள் மொழிக்கு அழகையும் சிறப்பையும் அளிக்கிறது.

"நீலக்கடல்" "நீலவானம்" "கருங்கூந்தல்" என்றெல்லாம் தீட்டுகிறோம். மாசற்ற மனதை "வெள்ளை உள்ளம்" என்றும், மிகவும் வெளிப்படையாகப் பேசுவதை "பச்சையாகப் பேசுவது" என்றெல்லாம் கூறுகிறோம். சில தொடர்கள் ஒவ்வொன்றும் தன்னுள் ஒரு வரலாற்றை அடக்கியிருக்கும். பெரும்பாலான வார்த்தைகளும், தொடர்களும் ஆங்கில மொழியில் ஏற்பட்டதென்றாலும், அவைகள் உலக மக்களால் தங்கள் மொழிகளிலும் தேவை, பயன் கருதி உபயோகப் படுத்தப்படுகிறது. அதிலும் செய்தித் தாட்கள் அடிக்கடி அந்தப் பதங்களைக் கையாளுவதால் அவற்றை அறிந்துகொள்வது பயன் தரும்.

இன்ன கொள்கை குறித்து அரசாங்கம் "வெள்ளை அறிக்கை" ஒன்று வெளியிட்டது என்று செய்திவரும். இதென்ன வெள்ளை அறிக்கை! இங்கிலாந்தில் பாராளுமன்றக் குழுக்களின் அறிக்கைகள் அரசாங்கக் கொள்கைகள் இவைகளை அச்சிட்டு விற்பனைக்கு வழங்கி வந்தனர். அவைகள் அதிகாரபூர்வமானவை. அதை "வெள்ளை அறிக்கை" என்று கூற முற்பட்டனர். அதிலிருந்தே அரசாங்கம் வெளியிடும் அதிகாரபூர்வமான அறிக்கைக்கு அப்படிப் பெயர் வந்தது.

பட்சட், மற்றும் சில குறிப்பிட்ட கொள்கை மாற்றங்கள் இவைகள் வெளியிடும்வரை இரகசியமாக வைக்கப்படவேண்டியவை. இவைகள் முன்னமேயே எப்படியோ தெரிந்துவிட்டால் செய்தித் தாட்கள் கண்டனக்குரல் எழுப்பும். அப்போது அவைகள் அந்த இரகசியங்கள் "புளு பிரிண்ட்" சமயத்தில் அம்பலமாகிவிட்டது என்று எழுதும். பதினேழாம் நூற்றுண்டில் இங்கிலாந்தில் பாராளுமன்றத்தில் கொண்டுவர இருக்கும் பொருள்களை அச்சிட்டு வழங்குகையில் அதற்கு ஊதா வர்ணத்தில் அட்டைபோட்டு வழங்குவார்களாம். அதை "புளுபுக்" என்று கூறுவர். ஊதா புத்தகத்தில் உள்ள பொருள்கள் அவைகள் வெளியிடும்வரை இரகசியமாக வைக்கப்பட வேண்டியவை.

சில நாட்டு அரசாங்கங்கள் தங்கள் அறிக்கை முதலானவற்றைக் குறிப்பிட்ட வர்ணத் தாட்களால் தான் அட்டை போடுவார்களாம்! சைனாவும், பிரான்சும், மஞ்சள் நிற அட்டையும், சப்பான் சாம்பல் நிற அட்டையும், ஸ்பெயின் சிவப்புநிற அட்டையும், போர்ச்சுகல் வெள்ளைநிற அட்டையும், இத்தாலியும், மெக்சிகோவும் பச்சைநிற அட்டையும் உபயோகப்படுத்துகின்றன.

அமெரிக்கா அயல் நாட்டுடன் தொடர்புகொள்ளும் வகையில் வரையும் கடிதங்கள் முதலானவற்றிற்கு சிவப்புநிற அட்டை போட்டு அனுப்புவார்களாம்!

"சிவப்புநாடா முறை" பலர் அறிந்ததே. அரசாங்க அலுவல்கள் பல அதிகாரிகள், அமைச்சர்கள், சட்டமன்றங்கள், பாராளுமன்றம் இவைகள் மூலம் முடிவெடுக்கப்படுவதால் தாமதமேற்படும். இந்த முறையை "சிவப்பு நாடா முறை" என்று கூறுவர். இப்படி இதை முதன் முதல் அழைத்தது ஆங்கில இலக்கிய மேதை சார்லஸ் டிக்கன்ஸ். பின் கார்லைல் அந்தப் பதத்தை அடிக்கடி தம் படைப்புகளில் உபயோகப்படுத்தி அதை உலகம் அறியும்படி செய்துவிட்டார்.

"மஞ்சள் பத்திரிகை" என்றவுடன் அதிர்வேட்டுச் செய்திகளும், அவதூறான புனைந்துரைகளும் எல்லோர் கவனத்திற்கு வரும். பொய்யோ, மெய்யோ அவைகளை அசிங்கமாகவும் அருவருக்கத் தகுந்த மொழியிலும் எழுதிவரும் பத்திரிகைகளை "மஞ்சள் பத்திரிகை" என்றழைக்கிறோம். பத்தொன்பதாம் நூற்றுண்டு இறுதியில் அமெரிக்காவில் சில பத்திரிகைள் இப்படிப்பட்ட செய்திகளை மஞ்சள் குறியிட்டு "அபாயம்" என்ற தலைப்பின்கீழ் வெளியிட்டன. மற்றும் சில பத்திரிகைகள் விலைமலிவு காரணமாக மஞ்சள் நிறத் தாட்களை உபயோகப்படுத்தி வந்தன. அப்போது அந்தப்பத்திரிகைகளை "மஞ்சள் பத்திரிகை" என்றழைக்க ஆரம்பித்து நாளடைவில் அது உலகறியும் பதமாக வந்துவிட்டது.

கலை அரங்கில் கலைஞர்கள் ஒதுங்கும் அறை "கிரீன் ரூம்" என்றழைக்கப்படுகிறது. முன் காலத்தில் பாரிசில் உள்ள அரங்

கங்களில், ஒளிமிகுந்த விளக்குகள் முன் ஆடும் கலைஞர்கள் ஒதுங்கும் அறைகள் தண்மையாக இருக்க உட்புறச் சுவர்களுக்குப் பச்சை வர்ணம் பூசப்பட்டிருக்குமாம். அதனால் அவ்வறைகளைப் பச்சை வர்ண அறை என அழைக்க ஆரம்பித்தனர்.

மேல்நாட்டினர் அதிர்ஷ்ட தினத்தை "சிவப்பு எழுத்து நாள்" என்று கூறுகின்றனர். காரணம் நாட்குறிப்புகளில் மத குருக்களின் பிறந்த நாட்கள் சிவப்புமையில் அச்சிடப்பட்டிருக்குமாம்.

ஒழுங்கீனர்களின் பட்டியலை "கரும்பட்டியல்" என்றழைப்பதுண்டு. உலகப் போரின்போது சர்மனியநாட்டின்மீது இங்கிலாந்து பொருளாதார முற்றுகையிட்டபோது நடுநிலை நாடுகளான நார்வே, ஸ்வீடன், ஸ்விர்ஸர்லாந்து நாடுகள் அதற்கு இணங்க மறுத்தன. அந்நாட்டு வர்த்தகக் குழுக்கள் எப்போதும்போல் சர்மனியுடன் வர்த்தகம் செய்தன. சீற்றங்கொண்ட இங்கிலாந்து அந்தக் குழுக்கள் அடங்கிய பட்டியல் ஒன்று வெளியிட்டு அதை "பிளாக் லிஸ்டு" என்று பெயரிட்டது. அந்தப் பட்டியலிலுள்ள குழுக்களுடன் ஆங்கிலேயர்கள் வர்த்தகத் தொடர்பு கொள்ளக் கூடாது என்று ஆணையிட்டது. அதிலிருந்துதான் "கரும்பட்டியல்" எழுந்தது.

"கருப்புச் சந்தை" "கருங்காலிகள்" இவைகள் அனைவரும் அறிந்ததே.

ஒருவனுடைய இரகசியம் ஒன்றைப் பயன்படுத்தி அவனை மிரட்டிச் சலுகைகள் பெறும் குற்றத்தை "பிளாக் மெயிலிங்" என்று கூறுவதுண்டு. இந்தக் குற்றத்தைத் தண்டிக்க ஆங்கில, அமெரிக்கச் சட்டங்களில் தனிப்பிரிவுகள் இருக்கின்றன.

பதினெட்டாம் நூற்றுண்டில் அமெரிக்காவில் கனக்டிகட், நியூ ஹேவன் குடியேற்றப் பகுதிகளில் மனிதனின் தனிப்பட்ட ஒழுக்க பழக்க வழக்கங்கள் இவைகளில் தலையிடும் வகையில் சில சட்டங்கள் இயற்றப்பட்டன. என்ன காரணம் கருதியோ அவைகளை "ஊதாச் சட்டம்" என்றழைத்தனர். இன்றும் அமெரிக்காவில் அதுமாதிரி ஏதாவது சட்டம் இயற்றினால் அதை "ஊதாச் சட்டம்" என்று கூறுகின்றனர். அமெரிக்காவில் மதுவிலக்குக் கொண்டுவந்த நேரத்தில் அதை "ஊதாச் சட்டம்" என்று கூறிக் கண்டித்தனர்.

"வண்ணங்கள்" முற்காலத்தில் வேற்று நாட்டுப் போர்ப்படைகளின் வேற்றுமைகளை உணர்த்தும், சொல்லாகப் பயன்பட்டது. நடைமுறையில் வழங்கும் (கொச்சை) சொல்லாக இருந்தாலும், இது உலகப்பெயர் பெற்ற சொல். ஒவ்வொரு நாடும் கொடிகள் ஏற்படுத்திக்கொள்வதற்கு முன் சில பல சின்னங்களை "வண்ணங்களாகக்" கொண்டிருந்தன. போரின்போது அந்த "வண்ணங்களைக்" காப்பதே கடமையாகும். மொகஞ்சாதாரோ புதைபொருளில் கூட உபயோகித்த சில வண்ணங்கள் உள்ளனவாம். இன்றும் சில முக்கிய தினங்களில் படைகள் அணிவகுத்து மன்னருக்கோ, குடியாட்சித் தலைவருக்கோ மரியாதை செலுத்தும் அணிவகுப்பை "வண்ணங்கள் அளித்தல்" என்று கூறுகின்றனர்.

தமிழில் "பச்சைப் பொய்" என்பதை ஆங்கிலத்தில் "வெள்ளைப் புளுகு" என்கிறார்கள். மேல் நாட்டினர் பேய், பிசாசு இவைகளைக் குறிப்பிட "வெள்ளை மாது" என்கிறார்கள். அதற்குப் பல புராணக் கதைகளும் கூறுகின்றனர். ஆனால் இதற்கும் நம் நாட்டில் கணவனை இழந்தவள் வெள்ளைச் சேலை கட்டுவதற்கும் சம்பந்தமில்லை! பொதுக் காரியங்களில் ஏற்பட்ட தவறுகளை மூடி மறைத்துவிட்டால் "வெள்ளை அடித்து" விட்டார்கள் என்றழைக்கிறோம்.

வண்ணங்கள் நம் கண்களுக்கு விருந்து. அவற்றால் வழங்கும் வார்த்தைகள் சில மொழிகளுக்கு விருந்து.

4-ம் பக்கத் தொடர்ச்சி

அழகுப் போட்டிக்குக்கூட, அரசு, ஆதரவு காட்டியதுண்டு!!

ஒரு நரிக்கு, வால் அறுந்துவிட்டதாம்—ஐயோ, பிற நரிகள் பார்த்தால் கேலி செய்யுமே என எண்ணிற்றும்-உடனே வாலுள்ள எந்த மிருகத்தைப் பார்த்தாலும் கேலி செய்ததாம்--தன்னைப்போல் வாலையறுத்துக் கொள்ளும்படி சொல்லிற்றும். அதுபோல, அமைச்சர் சுப்பிரமணியம், தங்களிடம் இல்லாததை மறைக்க, அலங்காரமாகப் பேசுவதையே கண்டிக்கிறார்.

அடுக்குச் சொல்லும், அழகுப் பேச்சும் — மொழியின் இருவிழிகளாகும்!! தமிழ்மொழியில் என்று மட்டுமல்ல, எம்மொழியிலும், இவைதான் அழகைத் தருவன. அவர், படித்திருக்கலாம், சிறுவயதில்:

Twinkle Twinkle little star
How wonder what yur are?

என்பன போன்ற வரிகளை! இதில் சொல் அடுக்கப்பட்டுத்தானிருக்கிறது? 'விஷயம்' இல்லாமலா இருக்கிறது!' ஆங்கிலத்தைவிட, அடுக்குச் சொல்லின் அழகினை அதிகம் பெற்றது, தமிழ்மொழியேயாகும். கவிதையில் மட்டுமல்ல உரைநடையிலும், அடுக்குச்சொல்லுக்கு ஒருஉன்னத இடம் உண்டு! ஓய்வு கிடைக்கும்போது, கல்வியமைச்சர், யாராவது ஒரு தமிழ்ப் புலவரிடம் பாடம் கேட்கவேண்டும் — அதைவிடுத்து, இப்படிப் பேசுவது அவருக்கல்ல, அவரை அமைச்சராகப் பெற்றிருக்கும் மாநிலத்துக்கே இழுக்கு.

"எஃகு தயாரிக்க வேண்டுமென்றால், நமக்கு பிலாய், துர்க்காபூர், ரூர்கலா போன்ற பெரிய பெரிய இடங்கள் தேவைப்படுகின்றன. சீனாவில், குடிசைத் தொழில்களில் ஒன்றாகவே, எஃகு தயாரிக்கப் பட்டு வருகிறது" என்று டில்லி தொழில் மந்திரி லால்பகதூர் சாஸ்திரியார் மிகவும் வேதனையுடன் வெளியிடுகிறார்! அப்படியெல்லாம் செய்வதை, வேண்டாமென்று கூறவில்லை. பம்பாய் அருகேயுள்ள பிம்பிரியில் நிறுவப்பட்டுள்ள பெனிசிலின் தொழிற்சாலையில் இந்த ஆண்டு மட்டும் நிகரலாபம் 30-இலட்சம் என்று டில்லி சர்க்கார் தெரிவிக்கிறது. சர்க்காரே ஏற்று நடத்தும் நிறுவனம், இது. தடுப்பவர்கள் யார்!!

புதிய ஒளி

சிறு நாடு! எனினும் சுதந்திரம் பெற்ற நாடு!!

அந்நாட்டின்பிரதமர்இந்தக் கிழமை, இந்த உபகண்டத்துக்கு வருகை தந்திருக்கிறார். அரசினர் தமது விருந்தாளியாகப் பெற்று மகிழ்கின்றனர். நேரு அவரைப் பெருமிதமாக வரவேற்கிறார். நேருவைப் போல அவரும் சுதந்திரத்துக்காகப் போராடியவர்! போராடியதோடன்றி, சுதந்திரமும் தந்நாட்டுக்குப் பெற்றவர்!

சுதந்திரப்பேறு சாமான்யமானதா—எனவேதான், அவரை ஆபிரிக்காவிலுள்ள 25 சுமார் சிறு நாடுகளும் தங்களது வழிகாட்டியாகக்கொண்டுள்ளன. சில திங்களுக்கு முன்பு, அந்த நாட்டுப் பிரதிநிதிகளையெல்லாம் ஒன்று திரட்டி, "ஆபிரிக்காவிலிருந்தே அந்நிய ஆதிக்கத்தை விரட்ட வேண்டும்" என்று அவரால் முழக்கமிடவும் முடிந்தது.

ஏனெனில் இப்போது அவரது பூமி, ஒரு சுதந்திர நாடு! சுதந்திர நாட்டின் பிரதமர் என்பதால் இன்று உலகம் அவரின் நடவடிக்கைகளையும் ஊர்ந்து கவனிக்க ஆரம்பித்திருக்கிறது — சமீப ஆண்டுகளில் முளைத்த நாசரைப் போல, இவரும் கருதப்படுகிறார்.

அவருடைய மண், பழமை வாய்ந்தது! பழைமையான பெயரும் கொண்டது! ஆனால் 15-ம் நூற்றாண்டில் வியாபாரிகளாக நுழைந்த போர்த்துகீசியர்கள் அந்த மண்ணில் கிடைக்கும் அற்புதப் பொருளைக் கொண்டு அதற்கு "கோல்டுகோஸ்டு" (தங்கம் படர்ந்த கடலருகேயுள்ள பூமி) என்று பெயரிட்டனர். இந்தப் பெயர்தான் நீடித்ததே ஒழிய, தங்கம் நிரம்பிய மண், விரைவில் தரித்திர பூமியாயிற்று! ஐரோப்பியர்கள் எல்லாம் அங்கே நுழைந்து, கொட்டமடிக்கலாயினர்! 500 மைல் நீளமுள்ள அந்த மண்ணின் கடற்கரையில், இன்றும் காணலாம், இடிந்து போன டச்சுக்காரர்களின் கோட்டைகளையும், ஸ்வீடிஷ் பிரிட்டானியர் போன்றோரின் மாடமாளிகையின் பிம்பங்களையும்! இவர்களெல்லாம் அங்கு நுழைந்து தங்கத்தைவிட மதிப்புள்ள, மனிதர்களைப் பிடித்து 'அடிமைகளாக' விற்றுப் பணம் சம்பாதித்தனர். 1844-மார்ச்சு இந்த மண், இராணி விக்டோரியாவின் ஆட்சியை ஏற்றது. அதே தேதியில் 113-ஆண்டுகளுக்கும் பிறகு, இந்த மண் இழந்த உரிமையைப் பெற்றது. ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, பெற்றிருந்த "கனா" எனும் பெயரையும், திரும்ப வைத்துக் கொண்டது. இன்று உலகிலுள்ள சுதந்திர நாடுகளில் ஒன்றாக விளங்குகிறது! தன்னைப்போல் அந்நியர் பிடியில் கிடக்கும் ஏனைய இடங்களையும் சுதந்திர மண்ணாக்கவேண்டுமெனும் ஆர்வத்தையும் தூண்டுகிறது!!

அங்கு விடுதலை எழுச்சி இரண்டாவது உலகப்போருக்குப் பின்னர், கொழுந்துவிட்டெரியக் காரணம், இன்று பிரதமராகி இங்கு வருகை தந்திருக்கும் டாக்டர் நிக்ருமாவாகும். விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்டோருக்கு வழங்கப்படும் 'பரிசு'கள், அவருக்கும் கிடைத்தன! அரசினை எதிர்த்தார் என்று 1950-ல் சிறைக்குள் பூட்டப்பட்டார்! ஆனால் மறு ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் அவரது கட்சி 38-க்கு 34-இடங்களைப்பெறவே, விடுவிக்கப்பட்டார். இப்போதும் 104-க்கு 78-இடங்கள் அந்தக் கட்சிதான் பெற்று ஆட்சி புரிகிறது.

1957ல் கனாவுக்குக்கிடைத்த சுதந்திரம் குறிப்பிடக்கூடியதாகும். அதைவிட அன்று, நிக்ருமா பேசிய "இழந்ததைப் பெற்றோம்! எங்கள் அரசைப் பெற்றோம்! நாங்களாகவே வாழ்வோம்!" என்கிற பேச்சு குறிப்பிடக்கூடியதாகும். அது முதல், ஆபிரிக்ககண்டத்திலுள்ள மக்களுக்கு நம்பிக்கையூட்டும் புது ஒளியாகக் கனா, விளங்கி வருகிறது.

கனாவுக்கும், இந்த உபகண்டத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. 400-க்கு மேற்பட்ட இந்தஉபகண்டத்து மக்கள் அங்கே வாழ்கிறார்கள்.

இங்கே வருகை தந்துள்ள இவ்விடுதலை வீரனை, நாம் அறிவோம்! நம்மை அவர் அறியும் வாய்ப்பில்லை. அந்த வாய்ப்பு ஏற்பட்டு, நாமும் அவரும் கை குலுக்கும் நாள், விரைவில் வருமாக. சுதந்திரம் பெற்ற திராவிடத்தின் குடிமகனைக் குலவும் நாள் விரையுமாக.

★

படமெடுத்துக் காட்டி....!

"படமெடுத்துக் காட்டி உங்களைப் பழிவாங்குவேன், உங்கள் மானத்தைக் கப்பலேற்றுவேன்."

—என்று பயமுறுத்தினான் அவன்!

எந்த நாடகத்திலே வருகிற கட்டம் இது, எனிந்த 'வில்லன்' இங்ஙனம் கர்ச்சிக்கிறான்! அவனிடம் அகப்பட்டுக்கொண்டு விழிக்கிற அந்தப் பரிதாபத்துக்குரியவன யார்? அவன், செய்த குற்றமென்ன. கொலைபாதகம் புரிந்தானா, கொள்ளையடித்திடத் துணிந்தானா? என்று இன்னோரன்ன கேள்விகளை எழுப்பிடத் தோன்றும் இந்த வாசகங்களைப் படிக்கிற எவருக்கும்.

ஆனால் நாடகத்திலே வருகிற வில்லனல்ல, இவ்வாறு கர்ச்சிப்பது—ஒரு நாட்டின் பொறுப்பான பதவியிலே இருப்பவர்! — தென்னாப்பிரிக்காவின் வெளிவிவகார இலாகாவின் தலைவர்!—எரிக் லோவ் என்பார்.

தென்னாபிரிக்கா என்றாலே நிற வெறியின் பிறப்பிடம், இருப்பிடம் என்பதனை உலகறியும்.

வெள்ளையரல்லாத ஏனையோருக்கும்—நீக்ரோவர்களுக்கும் அங்கே சென்று குடியேறியிருக்கிற இந்தியத் துணைக்கண்டத்தினருக்கும் — இழைக்கப்படுகிற அநீதிகள் அனந்தம்!

இவர்களுக்கு வாக்குரிமை தரப்படவில்லை என்பது மட்டுமல்ல — நாலாந்தர மக்களாக, வெள்ளையர்களின் ஆணைக்குக் கட்டுப்பட்டு அடங்கி நடக்க வேண்டியவர்களாக, ஏறக்குறைய அடிமைகளாக, நடத்தப்படுகின்றனர் இவர்கள்!

இந்த அவல நிலையினைப் போக்கிட நடத்தப்பெற்ற போராட்டங்கள் அநேகம்.

அமைதியான முறையிலே காந்தியார் நடத்திய போராட்டம், வெள்ளையம்மாள் என்ற ஒரு தமிழ் மாதைப் பலி கொடுத்தது!

அந்த மாதரசியின் வீர உணர்ச்சியையும் தியாகப் பண்பினையும் பாராட்டிக் காந்தியாரே கூட எழுதியிருக்கிறார்.

ஆயுதந்தாங்கிய போராட்டங்களும் நடைபெற்றன ஆங்காங்கே. அதன் பயனாகவே உயிர் நீத்தோர் பலர்! கைகால்கள் கண்கள் போய் அங்கம் குறைந்தவர்களாக ஆக்கப்பட்டோர், பலர்! சிறைக்கோட்டம் எய்தி வதைபடுகின்றோர் எண்ணிறந்தோர்.

இந்த இனவெறிக்கு எதிராக உலகத்தின் நாடுகள் பல கிளம்பின.

"இருபதாம் நூற்றாண்டிலா, அணுகுண்டு சகாப்தத்திலா,

M. S. **வெங்கடாசலம்**, M. A.,

வானத்தை எட்டிப்பிடிக்க மனிதன் முயன்று, அந்த முயற்சியில் ஓரளவு வெற்றியும் பெற்று வருகிற இந்த நாகரிக காலத்திலுமா நிறத்தாலே பேதம்?" என்ற கேள்வி எழுப்பப்பட்டது, உலகப் பேரவையான ஐக்கிய நாடுகள் அமைப்பில்.

மனிதப்பண்பிற்கு முரணான இத்தகு இழிநிலைக்கு எதிராக உலகின பெரும்பகுதி எழுந்தும், கண்டனக்குரல் எழுப்பியும தென் ஆப்பிரிக்க அரசு நீதிக்கும் மனித உணர்வுக்கும் கட்டுப்படுவதாக இல்லை!

"அது எங்கள் உள்நாட்டு விஷயம். நீங்கள யார் அதிலே தலையிட?" என்ற கேள்வியை எழுபபி, அந்தப் பிரச்சனை பற்றிப் பேசியோருக்கு வாய்ப்பூட்டுப் போட முயன்று வருகிறது இன்று வரை!

மூன்றாண்டுகளுக்கு முன்னாலே உலக அமைப்பில், தென்னாப்பிரிக்கப் பிரதிநிதி மிகத்திமிரோடு பதில் அளித்தார்.

"வெள்ளையர்கள், கறுப்பர்களை அண்ணன் தம்பிகளாக ஏற்பது இருக்கட்டும், அவர்களை அந்தரன்களாக்கிக் கொள்ளுங்களேன்".

இத்தகைய பதிலளித்த ஹாலோவே என்பார், பலராலே கண்டிக்கப்பட்டார் — ஆனாலும் சிலர் அவன் சொல்லுவதிலும் நியாயம் இருக்கிறது, வெள்ளையர்களுக்கும் மற்றோருக்குமிடையே பேதம் நீங்கத்தக்க முயற்சியிலே உலகம் இன்னமும் இறங்கிடாதது இந்த நாகரிகயுகத்தில், மறைக்கப் படமுடியாத குறைதானே, குற்றம்தானே என்றனர்!

இன்று தென்னாபிரிக்கா பிரச்சினை பற்றிய வாதப் பிரதிவாதங்களிலே, முன்பிருந்ததைவிடக் கொஞ்சம் சூடு பிடித்திருக்கிறது, தென்னாபிரிக்க இந்தியர்கள், தாங்கள் குடியிருக்கும பகுதிகளைவிட்டு வேறு இடங்களுக்கு அப்புறப் படுத்தப்படுவதற்கான முயற்சிகள் அந்த அரசாங்கத்தால் எடுக்கப்படுவது குறித்து!

இந்த நடவடிக்கை குடியிருப்பு நிலச் சட்டம் என்ற புதிதாக, அங்கே இயற்றப்பட்டிருக்கிற சட்டத்தின் மூலம், எடுக்கப்படுகிறது.

இது தகாத போக்கு, நியாயத்தின்பாற்பட்டதன்று. இடம்விட்டு இடம் மாற்றுவதனமூலம், குடியிருப்பு இடங்களைச் சுற்றியிருந்த நிலங்களின் மதிப்புக் குறைகிறது, இதனாலே இந்தத்துணைக்கண்டத்திலிருந்து அங்கு சென்றிருப்போர் நிலைவெகுவாகப்பாதிக்கபபடுகிறது என்று கண்டனக்குரல், காரண

காரிய விளக்கங்களோடு, எழுப்பப் படுகிறது பலரால்— அவர்களிலே ஒருவர் இப்போது இந்தத் துணைக் கண்டத்தில் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருக்கும் பாதர் என்பார்; நேட்டால் இந்தியர் சங்கத்தின் தலைவர்!

ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களின் நிலை இரங்கற்குரியது என்று உலகெங்கணும் செய்திடப்படும் பிரசாரத்தை முறியடிப்பதற்காகத்தான், "படமெடுத்துக் காட்டும்" போராட்டத்தில் இறங்கிடப் போவதாகக் கூறுகிறார் எரிக்லோவ்!

"எங்கள் நாட்டில் மட்டும்தான் குடிசைகள் இருக்கின்றன-குடிசை வாழ் மக்கள் அவதிக்கு ஆளாகிறார்கள் — ஆளாக்கப்படுகிறார்கள் என்பதல்ல! இந்த நிலை உலகத்தின் நாடுகள் பலவற்றில் இருக்கிறது என்பதனை உலகறியச் செய்திடும் பொருட்டு, அந்தந்த நாட்டின் நிலையினைப் படமெடுத்து, உலக அவையில் திரையிட்டுக் காட்டுகிறேன்" என்பது, தென் ஆப்பிரிக்க அரசாங்கத்தின் சார்பில் பேசுகிற எரிக்லோவ் என்பார் செப்புகிற வாதம் — செய்கின்ற முழக்கத்தின் சாரம்!

நாடகத்திலே வருகிற 'வில்லன்' கதாநாயகனையோ வேறொருவனையோ பார்த்து "உன் மானத்தைக் கப்பலேற்றுவேன்" என்று சொல்லுகிற கட்டத்தில், நாடகம் பார்க்கின்ற அனைவருக்கும், அந்த 'வில்லன்' மீது ஓரளவு அருவருப்புத் தோன்றுவது இயல்பு— அந்த நிலைக்கு ஆளாகியிருப்பவர் எரிக்லோவ்!

ஆனால் நாடகம் பார்த்திடுவோரின் உணர்வும் கருத்தும் அதோடு நின்றிடாது — வில்லனால் அச்சுறுத்தப்பட்டு அவதிப்படுபவன் மீது ஒரு பக்கம் பரிதாபம் ஏற்படும் — மற்றோர் பக்கம், இவன் என்ன தவறு செய்திருப்பான், குற்றமற்றவனால் அந்தக் கயவனது உளறலைக் கண்டு அஞ்சி நடுங்குவானேன், என்றும் எண்ணிடத் தோன்றும்!

அத்தகைய 'பரிதாபத்துக்கும்' 'சந்தேகத்துக்கும்' உரிய நிலைக்கு உள்ளாக்கப்படுகின்றன சில நாடுகள்— அவற்றிலொன்று இந்தத் துணைக் கண்டம்!

படமெடுத்துக் காட்டுவேன் என்று அவர் பகன்றவுடன், ஆகா செய்துகொள், அதனாலென்ன, எங்கள் நாட்டில் ஏழையர் இல்லை, குடிசைகளில் நலிவோர், குப்பி கழுவிட வழியற்றோர், இத்தகையோர் தேடிப்பிடித்தாலும் கிடைத்திடமாட்டார்கள், என்று சவால் விட முடியும்?

"உண்மைதான்... ஆனால்...!" என்று இழுத்தபடி எழுதிக்காட்டுகிறது "இந்து" இதழ்!

உண்மை, மறைக்கவோ மறுக்கவோ முடியாத உண்மை. அதுவும் பயங்கரமான உண்மை என்று கூறிடத் தோன்றுகிறது.

குடிசை வாழ்வோர் தொகை இந்த நாட்டில் ஏராளம். அவர்கள் நிலை பரிதாபத்துக்குரியது, பகர வொண்ணாதது, என்பது மட்டுமல்ல; தென்னாபிரிக்காவில் நடைபெறுவதைப்போல், குடிசைவாழ்வோர் வெற்றிடத்திற்கு, அவர்களின் எதிர்ப்பினையும் பொருட்படுத்திடாமல், வெளியேற்றப்படுகின்ற செயல், இங்கும் நடைபெறுவதனைக் காண்கிறோம் — நகர்களிலும் நாட்டுப்புறங்களிலும்!

சுகாதார அபிவிருத்திக்காக என்று காரணம் காட்டிச் செய்யப்படுகிற இந்தச் செயல், கட்சிக் கண்ணோட்டத்தோடும், தங்களுக்கு ஒட்டுப்போடாத பகுதியினரை ஆட்சியாளர் பழிவாங்கும் நோக்கத்தோடும், பற்பல இடங்களில் செய்யப்படுகின்றன என்பதனை அனைவரும் அறிவர்!

குடிசை வாழ்வோர் இந்த ஆட்சியாளரிடம் நன்மைகள் பெற முடியவில்லை என்பதோடு மட்டுமிருந்தால் சகித்துக்கொள்ளலாம்!

மாறாக அவர்கள், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளவர்கள் காரத்தில் பட்டுவரும் இன்னல்களை எண்ணிப் பார்ப்போர் எவருக்கும், எரிக்லோவ் சவால்விடுமளவுக்குத் துணிந்ததன் காரணம் நன்கு புரிந்திடும்!

காற்றுப் புகமுடியாத குடிசைகளில் சேறும சகதியுமான சுற்றுப்புறத்தில், பசியென்று குழவியர் பதைத்திட, பச்சிளங் குழந்தைக்குத் தந்திடப் பாலில்லையே என்று தாய் வருந்திக் கண்ணீர் விட, நானென்ன செய்வேன் நாள் முழுவதும்தான் உழைக்கிறேன், ஆனாலும நான் பெற்ற செல்வங்களின் பசியைப் போக்கிடக்கூடக் கஞ்சி இல்லை. என்று குடும்பத் தலைவன் பதறுகிற பரிதாப நிலையினைப் பார்க்கிறோம்-பற்பல இடங்களில் என்பதுகூடத் தவறு, நாட்டின் பெரும் பகுதியில்!

இதைவிட மோசமான நிலை, கல் மனத்தையும் கரையவைத்திடும் நிலை, இங்கு நடப்பதும் ஆட்சியா? ஏழையரின் அவலம் போக்கிட எத்தனிக்காதோரும ஆட்சியாளர்கள் தாமா? என்று ஆத்திரமும், அளவுகடந்த வெட்கமும கலந்த நிலையில் கேட்டிடத் தோன்றுகிறது. அளவுக்குமேல் மோசமான நிலை இங்கே இருந்திடுகின்றது.

குடிசையுமற்று, வானமே கூரையாய், வெண்மதியே விட்டு விளக்காய், கட்டாந்தரையே பஞ்சு மெத்தையாய், கருங்கல்லே தலையணையாய்ப் படுத்துறங்கும் பரிதாபத்துக்குரியோர், பல இலட்சக் கணக்கானோர்.

சென்னை நகரிலே மட்டும் குடிசை கூட இல்லாத குடும்பங்கள் 65,000-க்கு மேற்பட்டனவாம். பிளாட்பாரத்திலும், சைகில் ரிக்ஷாவிலும், மற்றும் கிடைத்த இடங்களிலும் படுத்துறங்குவோர் தொகை ஏறக்குறைய 3-இலட்சங்களாம்.

சென்னை நகரத்தின் மொத்த மக்கள் தொகை ஏறக்குறைய 18-இலட்சம். இதிலே வீடற்று, வீதியிலே 'குடும்பம்' நடாத்துவோர் 3-இலட்சம்—ஆறில் ஒரு பங்கு!

வெட்கம் பிய்த்துத் தின்ன வேண்டும், நாள்தோறும் விழாக்களிலும் விருந்து வைபவங்களிலும் கலந்துகொண்டு பவனி வருகிற ஆட்சியாளர்களுக்கு!

பாவம், என்ன பதிலளிப்பார்கள் "படமெடுத்துக்காட்டி உங்கள் மானத்தைக் கப்பலேற்றுகிறேன்" என்று லோவ் புரிந்திடுகிற கர்ச்சனைக்கு?